# திருக்குறள்
## ஆராய்ச்சிப் பதிப்பு

ஸ்ரீ விவேகானந்த சுவாமிகள் நூற்றாண்டு விழா வெளியீடு

பதிப்பாசிரியர் :
கி. வா. ஜகந்நாதன்

ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் வித்யாலயம்
கோவை ஜில்லா

ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் வித்தியாலய வெளியீடு
முதற் பதிப்பு: மார்ச்சு, 1963
உரிமை பதிவு

விலை ரூ. 18/-

விற்பனை உரிமை:
அமுத நிலையம் பிரைவேட் லிமிடெட்
தேனாம்பேட்டை, சென்னை-18

நாஷனல் ஆர்ட் பிரஸ், தேனாம்பேட்டை, சென்னை-18.



ஸ்ரீ விவேகானந்த சுவாமிகள்

# முகவுரை

திருக்குறள், உலக நீதி நூல்கள் அனைத்தினும் சிறப்புடையது. மக்களின் தினசரி வாழ்க்கைக்கு வழிகாட்டியாக, சென்ற பல ஆண்டுகளாக இருந்து வருகிறது. இதில் கூறப்பட்டிருக்கும் அறிவுரைகள், இது எழுதப்பட்ட அன்றுபோல் இன்றும் பேருண்மைகளாக இருப்பவை. எனவே, இது பல மொழிகளிலும் பெயர்க்கப்பட்டுள்ளது. பலர் இதற்கு உரைகளும் எழுதியிருக்கிறார்கள்.

பல பதிப்புக்களைப் பெற்றிருக்கும் இந்நூலுக்கு மீண்டும் இந்தப் பதிப்பு எதற்காக என்று கேட்கலாம். இந்த ஆராய்ச்சிப் பதிப்பு, பல முக்கியமான அம்சங்களைக் கொண்டு விளங்குகிறது. திருக்குறளுக்குப் பின் தோன்றிய பல இலக்கியங்களிலும் திருக்குறட் கருத்துக்கள் எடுத்தாளப்பட்டுள்ளன. அந்த ஒப்புமைப் பகுதிகள், அந்த அந்தக் குறளுக்குக் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. திருக்குறளின் பழைய உரையாசிரியர் பதின்மர் என்று சொல்வர். அவர்களுடைய உரைகளில் கிடைத்திருப்பவை சில. இந்நூலில் பரிமேலழகர் உரை முற்றும் கொடுக்கப்பட்டிருப்பதோடு, மற்ற உரையாசிரியர்கள் வேறுபட்ட பொருள்கொள்ளும் இடங்களில், அவ்வுரை வேறுபாடுகளும் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

பெரிய ஆங்கில நூல்கள் பலவற்றிலும் உள்ள பொருள் அகராதிகள் அந் நூல்களை நன்கு பயிலவும், குறிப்பிட்ட விஷயங்களைப் பற்றி எளிதில் பார்த்துத் தெரிந்துகொள்ளவும் உதவியாக இருப்பதை நாம் அறிவோம். தமிழ் நூல்களில் பாடல்களின் முதற் குறிப்பு அகராதிகள் இருக்கின்றனவேயொழிய, பொருள் அகராதிகளை வெளியிடுவதில்லை. இந்த ஆராய்ச்சிப் பதிப்பின் முக்கிய அம்சம் சொற்பொருள் அகராதி ஆகும். திருக்குறள் மூலத்திற்குத் தனியே ஓர் அகராதியும், அத்துடன் இப் புத்தகம் முழுவதற்கும் வேறு ஓர் அகராதியும் சேர்க்கப்பட்டுள்ளன. குறிப்பிட்ட விஷயங்களைப் பற்றித் தெரிந்துகொள்ளவும், திருக்குறள் ஆசிரியரின் உயர்ந்த கருத்துக்களைப் பல்வேறு கோணங்களிலிருந்து ஆராய்ச்சி செய்யவும் இவை மிகவும் பயன்படுமென்று நம்புகிறோம். இத்துடன் ஓர் அழகான ஆராய்ச்சி உரையும் இந்நூலை அலங்காரம் செய்கிறது. சிலர் எழுதியுள்ள கட்டுரைகளும் அதனை அடுத்துள்ளன.

1950-ஆம் ஆண்டில், நம் இந்தியக் குடியரசுத் தலைவரா இருந்த டாக்டர் ராஜேந்திரப் பிரசாத் அவர்களால் இந்த ஆராய்ச்சிப் பதிப்புத் தொடங்கப் பெற்றது. புத்தகம் நிறைவேறி இப்போது, நம் குடியரசுத் தலைவராக உள்ள டாக்டர் ராதாகிருஷ்ணன் அவர்கள் இந்தப் பதிப்பை வெளியிட்டுதவுகிறார்கள். அவர்களுடைய பேரன்புக்கு நம் நன்றி உரியது. சிரமம் பாராது பன்னிரண்டு ஆண்டுகளாகத் தொடர்ந்து முயற்சி செய்து இவ்வரிய நூலை வெளியிட உதவிய பெருமை, ஸ்ரீ கி. வா. ஜகந்நாதன் அவர்களுக்கு உரித்தாயது. இதற்காக, அவருக்குத் தமிழ் மக்கள் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

இந் நாட்டின் மறுமலர்ச்சிக்கும் விடுதலைக்கும் அடிகோலிய சுவாமி விவேகானந்தரின் நூறுவது ஆண்டு, 1964–ஆம் ஆண்டு ஜனவரி மாதம் பூர்த்தி பெறுகிறது. இம் மகத்தான ஆராய்ச்சிப் பதிப்பு, இவ்வுயர்ந்த மகானின் நூற்றாண்டு விழா வெளியீடாக வெளி வருவது சாலப் பொருத்தமாகும். ஸ்ரீ விவேகானந்த சுவாமிகளின் ஆண்மையும் வீரமும் திருக்குறளின் ஆழமும் அருங்கருத்துக்களும் தமிழ் மக்களை ஊக்குவித்து, எதிர்காலத்தில் அரும்பெருங் காரியங்களைச் சாதிக்க உதவியாக இருக்குமாக.

ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன்
வித்யாலயம்,
31—3—1963

தி. சு. அவினாசிலிங்கம்

# உள்ளுறை


1. முகவுரை i
2. பதிப்புரை iii
3. நூற்பெயர் முதலியவற்றின் முதற்குறிப்பு அகராதி xii
4. ஆராய்ச்சி உரை க—க0அ

1. பொது க

கீழ்க்கணக்கில் ஒன்று, க —பொதுநூல், உ—முப்பால் என்னும் பெயர், ௩—திருக்குறள் என்னும் பெயர், ச—வேறு பெயர்கள், ரு—பல வகைச் சிறப்பு, கூ—வேதமும் குறளும், கூ—காலமும் இடமும் கடந்தது, க௰—பொறுக்கு மணிகளில் ஒன்று, க௩—ஒப்பற்றது, கரு—கவிச்சுவை, கரு—சுட்டிய புலவர், கசு—சொற்பொருள் ஆட்சி, கஎ—குறளைப் பதித்து வைத்த நூல்கள், கஎ—பல உரைகள், கஅ—மொழி பெயர்ப்பு, கசு—மூன்றில் நான்கு, உ௰—அதிகாரமும் பாடல்களும், உக—இயல்கள், உக—பத்துக்குறள், உ௩—குறள் யாப்பு, உ௩

2. உள்ளுறை உஎ

பாயிரம், உஎ —கடவுள் வாழ்த்து, உஎ—மழையின் பெருமை, உஅ—துறவோர் பெருமை, உகூ—அறத்தின் சிறப்பு, உகூ—அறத்துப் பால், க௰—பொருட்பால், க௰—காமத்துப்பால், க௩—காமத்துப்பாலா இன்பப்பாலா, க௩—வேறுபாடு, கரு—தமிழ்நெறி வழக்கு, ககூ—இயல் வகை, கஎ—சில சிறப்புக்கள், ககூ—களவு வாழ்க்கை, சக—கற்பு வாழ்க்கை, ச௩

3. பொருள் வகை சஎ

கடவுள், சஎ—தெய்வங்கள், சஅ—துறக்கம், சகூ — அமிழ்தம், ரு௰—நரகம், ரு௰—இருவினை, ருக—வீடு, ருக—பிறப்பு அறுத்தல், ருஉ—சீவன் முத்தி, ரு௩—உயிரின் இயல்பு, ருச—மழையின் பெருமை, ருரு—துறவியர், ருகூ—அறத்தின் சிறப்பு, ருஎ—ஈகை, ருஅ—மக்கட் பேறு, கூக—தாயின் பெருமை, கூக—சத்தியமும் அகிம்சையும், கூஉ—பொறையும் சால்பும், கூ௩—கல்வி, கூச—நூல், கூரு—நட்பு, கூகூ—நாடும் அரணும், கூகூ—குடி மக்களின் வகை, கூஎ—அரசன் மலை நீர்நிலை, கூஅ—ஊரும் இடவகைகளும், கூகூ—ஆடையும் அணியும், எ௰—பண்டமும் உண்டியும், எ௰—தேர் முதலியன, எக—தொழிற் கருவிகள், எக—இசையும் கூத்தும், எஉ—இயல்பு பழக்க வழக்கங் கள், எ௩—விலங்குகள், அ௰—பறவைகள், அக—மரம் செடி கொடி, அக

4. இலக்கியப் பண்புகள் அச

மொழியில் அழகு, அச—மருமாலை, அரு—கவி இன்பம், அரு—முதற் குறள், அகூ—இரண்டாவது குறள், அஎ—வேறு சில எடுத்துக்

காட்டுகள், ௯௧—உவமை அணி, ௯௨—உருவகம், ௯௩—வேற்றுமை அணி, ௯௪—முரண்பாட்டு நயம், ௯௫—புகழ்வது போலப் பழித்தல், ௯௬—நவலா நவற்சி, ௯௭—பின்வருநிலை, ௯௮—உயர்வு நவிற்சி, ௯௯—சொல்லும் முறை, ௧௦௦—கூற்று வகை, ௧௦௧—கவிஞர் கூற்று, ௧௦௨—பாவி, ௧௦௩—இறுத்துரைக்கும் முறை, ௧௦௪—சொல்லாட்சி, ௧௦௫


5. திருக்குறள் வாழ்க்கைத் தத்துவம் — ௧௦௬
திரு தி. சு. அவிநாசிலிங்கம்

6. வள்ளுவரின் உளநூல் தத்துவம் — ௧௧௬
திரு க. ச. அருள்சக்தி

7. திருக்குறளின் தத்துவம் — ௧௨௧
திரு டாக்டர் டி. எம். பி. மகாதேவன்

8. திருவள்ளுவர் நீதி — ௧௩௨
அமரர் திரு டி. எஸ். கந்தசாமி முதலியார்

9. கவிதைப் பண்பு — ௧௪௦
திரு அ. ச. ஞானசம்பந்தன்

10. திருக்குறளில் காதல் — ௧௫௧
திரு டாக்டர் மு. வரதராசனார்

11. திருவள்ளுவரின் காலம் — ௧௬௮
திரு டாக்டர் மா. இராசமாணிக்கனார்

12. திருவள்ளுவர் — ௧௭௧

13. பரிமேலழகர் — ௧௭௬

14. திருக்குறள் மூலமும் உரையும் — 1—790

அறத்துப்பால்

| | | |
|---|---|---|
| 1. | கடவுள் வாழ்த்து | 3 |
| 2. | வான்சிறப்பு | 17 |
| 3. | நீத்தார் பெருமை | 25 |
| 4. | அறன் வலியுறுத்தல் | 35 |
| 5. | இல்வாழ்க்கை | 43 |
| 6. | வாழ்க்கைத் துணைநலம் | 50 |
| 7. | புதல்வரைப் பெறுதல் | 58 |
| 8. | அன்புடைமை | 65 |
| 9. | விருந்தோம்பல் | 72 |
| 10. | இனியவை கூறல் | 79 |
| 11. | செய்ந்நன்றி அறிதல் | 85 |
| 12. | நடுவுநிலைமை | 92 |
| 13. | அடக்கம் உடைமை | 98 |
| 14 | ஒழுக்கம் உடைமை | 105 |
| 15. | பிறனில் விழையாமை | 111 |
| 16. | பொறை உடைமை | 118 |
| 17. | அழுக்காறாமை | 124 |

18. வெஃகாமை 129
19. புறங்கூறாமை 134
20. பயனில சொல்லாமை 139
21. தீவினை அச்சம் 144
22. ஒப்புரவறிதல் 149
23. ஈகை 157
24. புகழ் 164
25. அருளுடைமை 172
26. புலால் மறுத்தல் 178
27. தவம் 183
28. கூடா ஒழுக்கம் 190
29. கள்ளாமை 196
30. வாய்மை 202
31. வெகுளாமை 207
32. இன்னா செய்யாமை 213
33. கொல்லாமை 219
34. நிலையாமை 225
35. துறவு 234
36. மெய் உணர்தல் 241
37. அவா அறுத்தல் 250
38. ஊழ் 256

பொருட்பால்

39. இறை மாட்சி 264
40. கல்வி 271
41. கல்லாமை 277
42. கேள்வி 284
43. அறிவு உடைமை 289
44. குற்றம் கடிதல் 295
45. பெரியாரைத் துணைக்கோடல் 300
46. சிற்றினம் சேராமை 306
47. தெரிந்து செயல்வகை 312
48. வலி அறிதல் 317
49. காலம் அறிதல் 321
50. இடன் அறிதல் 327
51. தெரிந்து தெளிதல் 332
52. தெரிந்து வினையாடல் 339
53. சுற்றம் தழால் 344
54. பொச்சாவாமை 350
55. செங்கோன்மை 357
56. கொடுங்கோன்மை 363
57. வெருவந்த செய்யாமை 369
58. கண்ணோட்டம் 374
59. ஒற்றாடல் 380
60. ஊக்கம் உடைமை 386
61. மடி இன்மை 391
62. ஆள்வினை உடைமை 396

| | | |
|---|---|---|
| 63. | இடுக்கண் அழியாமை | 401 |
| 64. | அமைச்சு | 406 |
| 65. | சொல்வன்மை | 412 |
| 66. | வினைத்தூய்மை | 418 |
| 67. | வினைத்திட்பம் | 423 |
| 68. | வினை செயல்வகை | 427 |
| 69. | தூது | 432 |
| 70. | மன்னரைச் சேர்ந்து ஒழுகல் | 437 |
| 71. | குறிப்பு அறிதல் | 442 |
| 72. | அவை அறிதல் | 447 |
| 73. | அவை அஞ்சாமை | 452 |
| 74. | நாடு | 456 |
| 75. | அரண் | 460 |
| 76. | பொருள் செயல்வகை | 466 |
| 77. | படைமாட்சி | 472 |
| 78. | படைச்செருக்கு | 478 |
| 79. | நட்பு | 484 |
| 80. | நட்பு ஆராய்தல் | 491 |
| 81. | பழமை | 496 |
| 82. | தீ நட்பு | 501 |
| 83. | கூடா நட்பு | 507 |
| 84. | பேதைமை | 512 |
| 85. | புல்லறிவாண்மை | 517 |
| 86. | இகல் | 522 |
| 87. | பகைமாட்சி | 525 |
| 88. | பகைத்திறம் தெரிதல் | 530 |
| 89. | உட்பகை | 535 |
| 90. | பெரியாரைப் பிழையாமை | 541 |
| 91. | பெண்வழிச் சேறல் | 547 |
| 92. | வரைவில் மகளிர் | 552 |
| 93. | கள் உண்ணாமை | 558 |
| 94. | சூது | 563 |
| 95. | மருந்து | 567 |
| 96. | குடிமை | 573 |
| 97. | மானம் | 580 |
| 98. | பெருமை | 586 |
| 99. | சான்றாண்மை | 593 |
| 100. | பண்புடைமை | 597 |
| 101. | நன்றியில் செல்வம் | 602 |
| 102. | நாண் உடைமை | |
| 103. | குடிசெயல்வகை | 85 |
| 104. | உழவு | 617 |
| 105. | நல்குரவு | 622 |
| 106. | இரவு | 627 |
| 107. | இரவு அச்சம் | 632 |
| 108. | கயமை | 638 |

வெளியீடாகக் கொண்டுவரும் பேருபகாரியாகிய திரு தி. சு. அவிநாசிலிங்கம் அவர்களுக்கு நன்றி கூற எனக்குச் சொற்கள் கிடைக்கவில்லை. எப்போதும் இத்தகைய நல்ல காரியங்களிலேயே கண்ணும் கருத்துமாக இருந்து பேருக்கத்துடன் வெற்றி காணும் அவருக்கு இறைவன் அருள் துணை நிற்கிறது என்பதில் ஐயம் இல்லை. இனியும் அந்தத் திருவருளின் வலிமையால் அவர் பல பெருஞ் செயல்கள் ஆற்றி யாவருக்கும் நலம் செய்து நீடு வாழவேண்டுமென்று உளம் கனிந்து வாழ்த்துகிறேன்.

எளியேனை இந்த இலக்கியப் பணியில் ஈடுபடச் செய்ததற்குக் காரணம் முருகனுடைய திருவருளும் என் ஆசிரியப்பிரானுடைய ஆசியும் என்று திண்ணமாக நம்புகிறேன். அவை இலையெனின் என் ஆற்றல் எங்கே, இத்தகைய இலக்கியப் பணிகள் எங்கே?

இந்தப் பதிப்பில் எவ்வளவோ குறைகள் இருக்கலாம். அவற்றைப் பொறுத்து நலங்களை ஏற்க வேண்டுமென்று தமிழ் மக்களை இறைஞ்சுகின்றேன்.

'காந்தமலை'<br>கல்யாண நகர்<br>சென்னை-28

கி. வா. ஜகந்நாதன்<br>31—3—'63

55. ...
56. கொடுங்...

இப்பதிப்பின் முதலில் விரிவான ஆராய்ச்சியுரை ஒன்று உள்ளது. 1. பொது, 2. உள்ளுறை, 3. பொருள்வகை, 4. இலக்கியப் பண்புகள் என்ற நான்கு பகுதிகளாக அமைந்திருப்பது இது. திருக்குறளைப் பற்றிய பொதுவான கருத்துக்களை முதல் பகுதியிலும், திருக்குறளில் அதிகார அடைவில் கூறியுள்ள உள்ளுறையைப் பற்றிய கருத்துக்களை இரண்டாம் பகுதியிலும், இந்நூலில் உள்ள பலவகைக் கருத்துக்களையும் பொருள்களையும் தொகுத்து வகைப்படுத்தித் தனித் தனித் தலைப்பில் அமைத்துக் காட்டும் ஆராய்ச்சியை மூன்றும் பகுதியிலும், கவிச்சுவை-சொல்லும் முறை-சொல்லாட்சி முதலிய இலக்கியப் பண்புகளை நான்காம் பகுதியிலும் காட்டி யிருக்கிறேன்.

இந்த ஆராய்ச்சியுரையின்பின் அறிஞர்கள் சிலர் எழுதி உதவிய கட்டுரைகள் இடம் பெறுகின்றன. திருக்குறள் வாழ்க்கைத் தத்துவம், வள்ளுவரின் உளநூல் தத்துவம், திருவள்ளுவர் நீதி, கவிதைப்பண்பு, திருக்குறளில் காதல், திருவள்ளுவரின் காலம் என்பன பற்றிய கட்டுரைகள் அவை.

இவற்றின்பின் திருவள்ளுவரைப் பற்றியும், பரிமேலழகரைப் பற்றியும் உள்ள கட்டுரைகளை எழுதிச் சேர்த்துள்ளேன். பரிமேலழகர் வரலாற்றோடு, அவர் உரையைப் பற்றிய ஆராய்ச்சியையும் இரண்டாவது கட்டுரையில் காணலாம்.

இந்தப் பதிப்பில் சேர்த்துக்கொண்டிருக்கும் கட்டுரைகளை எழுதி உதவிய, திரு தி. சு. அவிநாசிலிங்கம், திரு க. ச. அருள்நந்தி, திரு டாக்டர் டி. எம். பி. மகாதேவன், அமரர் திரு டி. எஸ். கந்தசாமி முதலியார், திரு அ. ச. ஞானசம்பந்தன், திரு டாக்டர் மு. வரதராசனர், திரு டாக்டர் மா. இராசமாணிக்கனர் ஆகியவர்கள் பால் மிக்க நன்றி பாராட்டுகிறேன்.

சில நூல்களிலிருந்து ஒப்புமைப் பகுதிகளை எடுத்து அளித்த தணிகைமணி திரு வ. சு. செங்கல்வராயப் பிள்ளை, திரு வித்துவான் ரா. நடேச நாயகர், திரு வித்துவான் வே. சிவசுப்பிரமணியன் முதலியவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தப் பதிப்பு வேலை நடந்துகொண் டிருக்கும்போதும், அகராதிகளைத் தொகுக்கும்போதும் எனக்கு வேண்டிய உதவிகளைச் செய்தவர்கள் திரு வே. சிவசுப்பிரமணியனும், திரு அனந்தனும் ஆவார்கள். இறைவன் திருவருளால் அவர்களுக்கு எல்லா நலன்களும் உண்டாக வேண்டுமென்று வாழ்த்துகிறேன்.

இந்தப் பெரிய பணியை என்பால் ஒப்பித்து அவ்வப்போது ஊக்கமூட்டி, இந்தப் பதிப்பை ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் வித்யாலய

றைத் தொகுக்க உதவி செய்தார்கள். திருக்குறள் முழுவதிலும் உள்ள சொல்லேயும் பொருளேயும் விடாமல் காட்டும் அகராதி இந்தப் பதிப்புக்கு இன்றியமையாதது என்று எண்ணி அதனேயும் எழுதித் தொகுத்தேன். எல்லாவற்றையும் பதிப்பித்த பிறகு, புத்தகம் முழுவதிலும் உள்ளவற்றைக் காட்டும் பொது அகராதி ஒன்றையும் அமைத்து இறுதியில் சேர்த்தேன்.

இந்தப் பதிப்பில் திருக்குறள் மூலம், பரிமேலழகர் உரை, உரை வேறுபாடு, ஒப்புமை, மேற்கோள் விளக்கம் என்பவை உள்ளன. உரை வேறுபாடு என்ற பகுதி பரிமேலழகர் உரையினின்றும் வேறுபடும் பிற உரைகளின் பகுதிகளே மட்டும் காட்டும். இப்பகுதியில் மணக்குடவர், பரிதியார், பரிப்பெருமாள், காளிங்கர், கவிராஜ பண்டிதர், எல்லிஸ் துரை என்பவர்களின் உரைகளிலுள்ள வேறு பாடுகளேக் காணலாம். ஒப்புமை என்ற பகுதியில் சொல்லாலும் பொருளாலும் திருக்குறட்பாக்களோடு ஒத்து நிற்கும் நூற்பகுதிகள் இருக்கின்றன. முன்பு சொன்னது போலக் கம்பராமாயண காலம் வரையிலுள்ள நூல்களின் ஒப்புமைகளே இப்பகுதியில் காணக் கிடைக்கும். சில பாடல்களுக்குப்பின் உள்ள மேற்கோள் விளக்கம் என்னும் பகுதியில், பழைய உரையாசிரியர்கள் தம் உரைகளில் திருக்குறளே மேற்கோளாகக் காட்டும் இடங்களில், பொருளே விளக்க உதவும் பகுதிகள் மாத்திரம் சேர்க்கப்பட்டுள்ளன.

அங்கங்கே உள்ள குறிப்புக்களும் அடிக்குறிப்புக்களும் நூலிலும் உரைகளிலும் உள்ள சொல்லேயும் பொருளேயும் விளக்குவதோடு, மேற்கோட் செய்யுட்களின் ஆகரங்களேயும் காட்டும்.

திருக்குறளுக்குப் பின் திருவள்ளுவ மாலேயும் அதன் உரையும் இருக்கின்றன.

இவற்றின் பின் இவ்விரண்டு நூல்களின் செய்யுள் முதற் குறிப்பகராதிகளும், திருக்குறள் - சொற்பொருளகராதியும், பொது அகராதியும் உள்ளன. பின் உள்ள இரண்டு அகராதிகளும் விரிவான முறையில் சொற்களேயும் பொருள்களேயும் தொகுத்து வகைப்படுத்திக் காட்டுகின்றன. திருக்குறளில் வரும் சொற்களேயும், அந்தச் சொற்கள் வெவ்வேறு பொருள்களில் வரும் இடங்களேயும் முதல் அகராதியில் காணலாம். ஒரு கருத்தைத் திருவள்ளுவர் எங்கெங்கே ஆளுகிருர் என்பதையும், ஒரு பொருளோடு தொடர்புடையவை யாக எவ்வளவு கருத்துக்களே எவ்வெவ்விடத்தில் சொல்கிருர் என்பதையும் அறிய இது துணேசெய்யும். திருக்குறளேப் பற்றிய ஆராய்ச்சியை விரிவாகச் செய்பவர்களுக்கு இது சிறந்த பயனுள்ள கருவியாக உதவும் என்று நம்புகிறேன். இப்படியே பொது அகராதியும் பல வகையில் பயன் தரும் என்பது என் கருத்து.

# பதிப்புரை

பல ஆண்டுகளுக்கு முன் ஸ்ரீ தி. சு. அவிநாசிலிங்கம் அவர்கள், "திருக்குறள் சம்பந்தமாகப் பெரிய வேலை ஏதாவது செய்ய வேண்டுமென்று தோன்றுகிறது; என்ன செய்யலாம்?" என்று கேட்டார். "மகாமகோபாத்தியாய டாக்டர் ஐயரவர்கள் திருக்குறள் ஆராய்ச்சிப் பதிப்பு ஒன்றைக் கொண்டுவர வேண்டும் என்ற எண்ணத்துடன் இருந்தார்கள். திருக்குறளுக்குக் கிடைக்கும் பழைய உரைகளை யெல்லாம் தொகுத்து ஒவ்வொரு குறளின் பின்னும் அமைத்து, இலக்கண இலக்கிய உரைகளில் குறளை மேற்கோளாகக் காட்டும் இடங்களை அங்கங்கே காட்டி, தொல்காப்பியம் முதல் இக் கால இலக்கியம் வரையில் குறளின் சொற்பொருள்களை எடுத்தாண்ட ஒப்புமைப் பகுதிகளையும் இணைத்து, வேண்டிய அடிக்குறிப்புக்களும் அகராதிகளும் ஆராய்ச்சியுரையும் சேர்த்து வெளியிட வேண்டும் என்பது அவர்களுடைய எண்ணம். அந்த எண்ணம் அவர்கள் காலத்தில் நிறைவேறவில்லை. அதைச் செய்யலாம்" என்றேன். "அப்படியே செய்யலாம்" என்று ஸ்ரீ அவிநாசிலிங்கம் அவர்கள் ஒப்புக் கொண்டு உடனே செயலாற்றப் புகுந்தார். பலர் சேர்ந்த ஒரு குழுவை அமைத்துச் சில கூட்டங்கள் போட்டு அன்பர்களின் யோசனையைக் கேட்டார். பதிப்புப் பற்றிய வேண்டுகோள் ஒன்று வெளியாயிற்று. 1950-ஆம் ஆண்டு இவ்வாராய்ச்சிப் பதிப்பு வேலையை அப்போது ராஷ்டிரபதியாக இருந்த அமரர் டாக்டர் ராஜேந்திரப்பிரசாத் அவர்கள் தொடங்கி வைத்தார்கள்.

இடையே தருமபுர ஆதீனத்தின் ஆதரவில் திரு வித்துவான் ச. தண்டபாணி தேசிகரவர்கள் மேலே சொன்ன முறையைப் பெரும்பாலும் பின்பற்றித் திருக்குறள் உரைவளம் என்ற பதிப்பை வெளியிட்டார். அதன்பின், இந்தப் பதிப்பில் பரிமேலழகர் உரையை முற்றும் பதிப்பித்து மற்ற உரைகளில் வேறுபட்ட இடங்களை மட்டும் வெளியிடுவதென்றும், ஒப்புமைப் பகுதியில் கம்பர் காலம் வரையில் உள்ளவற்றை மட்டும் இணைப்பதென்றும் தீர்மானம் ஆயிற்று.

இப்பதிப்பை உருவாக்கும் பொறுப்பை ஸ்ரீ அவிநாசிலிங்கம் அவர்கள் என்னிடம் ஒப்படைத்தார்கள். பல வேலைகளுக்கிடையே கிடைத்த ஓய்வு நேரங்களில் இந்தப் பதிப்புக்குரியவற்றைத் தொகுத்து வந்தேன். பல அன்பர்கள் ஒப்புமைப் பகுதி முதலியவற்

காமத்துப்பால்


| | | |
|---|---|---|
| 109. | தகையணங்குறுத்தல் | 645 |
| 110. | குறிப்பு அறிதல் | 653 |
| 111. | புணர்ச்சி மகிழ்தல் | 660 |
| 112. | நலம் புனைந்துரைத்தல் | 668 |
| 113. | காதற் சிறப்பு உரைத்தல் | 674 |
| 114. | நாணுத்துறவு உரைத்தல் | 680 |
| 115. | அலர் அறிவுறுத்தல் | 687 |
| 116. | பிரிவாற்றாமை | 693 |
| 117. | படர்மெலிந்து இரங்கல் | 700 |
| 118. | கண் விதுப்பழிதல் | 705 |
| 119. | பசப்புறு பருவரல் | 710 |
| 120. | தனிப்படர் மிகுதி | 716 |
| 121. | நினைந்தவர் புலம்பல் | 721 |
| 122. | கனவு நிலை உரைத்தல் | 727 |
| 123. | பொழுது கண்டு இரங்கல் | 732 |
| 124. | உறுப்பு நலன் அழிதல் | 738 |
| 125. | நெஞ்சொடு கிளத்தல் | 743 |
| 126. | நிறை அழிதல் | 748 |
| 127. | அவர்வயின் விதும்பல் | 753 |
| 128. | குறிப்பு அறிவுறுத்தல் | 760 |
| 129. | புணர்ச்சி விதும்பல் | 766 |
| 130. | நெஞ்சொடு புலத்தல் | 770 |
| 131. | புலவி | 775 |
| 132. | புலவி நுணுக்கம் | 780 |
| 133. | ஊடல் உவகை | 785 |

| | | |
|---|---|---|
| **15.** | **திருவள்ளுவ மாலை** | **791** |
| **16.** | **திருக்குறள் - செய்யுள் முதற்குறிப்பகராதி** | **817** |
| **17.** | **திருவள்ளுவ மாலை - செய்யுள் முதற்குறிப்பகராதி** | **829** |
| **18.** | **திருக்குறள் - சொற்பொருள் அகராதி** | **830** |
| **19.** | **பொது அகராதி** | **930** |

# நூற்பெயர் முதலியவற்றின்
## முதற்குறிப்பகராதி

அகநா - அகநானூறு
அங்க - திரு அங்கமாலை
அடியார் - அடியார்க்கு நல்லார் உரை
அத் - அத்தியாயம்
அதி - அதிகரணம், அதிகாரம்
அப்பர் - அப்பர் தேவாரம்
அவ - அவதாரிகை
அறநெறி, அறநெறிச் - அறநெறிச்சாரம்
ஆசாரக் - ஆசாரக் கோவை
இ. கொ - இலக்கணக் கொத்து
இ-ள் - இதன் பொருள்
இளம் - இளம்பூரணர் உரை
இறை, இறையனார் - இறையனார் அகப் பொருள்
இன்னா - இன்னா நாற்பது
இனியவை - இனியவை நாற்பது
உத்தர - உத்தர ராமாயணம்
எ-று - என்றவாறு
ஐங், ஐங்குறு - ஐங்குறு நூறு
கம்ப - கம்ப ராமாயணம்
கலி, கலித் - கலித்தொகை
கலிங்க - கலிங்கத்துப் பரணி
குண்டல - குண்டலகேசி
குறிஞ்சி, குறிஞ்சிப் - குறிஞ்சிப்பாட்டு
குறுந் - குறுந்தொகை
கைலைபாதி - கைலைபாதி காளத்தி பாதி அந்தாதி
கைவல்ய - கைவல்ய நவநீதம்
கோயில் நான்-கோயில் நான்மணிமாலை
சங்கர - சங்கர நமச்சிவாயர் உரை
சம்பந்தர்-திருஞான சம்பந்தர் தேவாரம்
சிலப் - சிலப்பதிகாரம்
சிவபெருமான் இரட்டை - சிவபெருமான் இரட்டைமணி மாலை
சிறப்புப் - சிறப்புப் பாயிரம்
சிறுபஞ்ச - சிறுபஞ்ச மூலம்
சிறுபாண் - சிறுபாணாற்றுப்படை
சீவக - சீவக சிந்தாமணி
சு - சுலோகம்
சுந்தரர் - சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரம்
சூ - சூத்திரம்
சூளா - சூளாமணி
தண்டி - தண்டியலங்காரம்
திரி - திரிகடுகம்
திருக்கலம் - திருக்கலம்பகம்
திருக்களிற்றுப் - திருக்களிற்றுப்படியார்
திருச்சிற் - திருச்சிற்றம்பலக் கோவையார்
திருநூற் - திருநூற்றந்தாதி
திருமந் - திருமந்திரம்
திருவள்ளுவ - திருவள்ளுவ மாலை
திருவா - திருவாசகம்
திருவாய் - திருவாய்மொழி
திருவிளை - திருவிளையாடற் புராணம்
தெய்வச் - தெய்வச்சிலையார் உரை
தொல் - தொல்காப்பியம்
தொல். விருத்தி - தொல்காப்பியச் சூத்திர விருத்தி
ந, நச் - நச்சினார்க்கினியர் உரை
நற் - நற்றிணை
நன் - நன்னூல்
நாலடி - நாலடியார்
நான்மணி, நான்மணிக் - நான்மணிக் கடிகை
நீதிநெறி - நீதிநெறி விளக்கம்
நெடுநல் - நெடுநல் வாடை
நேமி - நேமி நாதம்
ப, பக் - பக்கம்
பட்டினப் - பட்டினப்பாலை
பதிற், பதிற்று - பதிற்றுப் பத்து
பரி, பரிபா - பரிபாடல்
பரிமேல் - பரிமேலழகர் உரை
பழ - பழமொழி
பா-ம் - பாடபேதம்
பி-ம் - பிரதிபேதம்
பிரபு - பிரபுலிங்க லீலை
பு. வெ, புறப் - புறப்பொருள் வெண்பா மாலை
புறநா, புறம் - புறநானூறு
பெரிய - பெரிய புராணம்
பெரிய திரு - பெரிய திருமொழி
பெரியாழ்வார் - பெரியாழ்வார் திருமொழி
பெருங் - பெருங்கதை
பெருந் - பெருந்தேவனார் உரை, பெருந் தொகை
பெரும்பாண் - பெரும்பாணாற்றுப்படை
பெருமாள் - பெருமாள் திருமொழி
பேர் - பேராசிரியர் உரை
பொருந, பொருநர் - பொருநராற்றுப் படை
பொன் வண்ணத் - பொன்வண்ணத் தந்தாதி
மணி - மணிமேகலை
மதுரைக் - மதுரைக் காஞ்சி
மயிலை - மயிலைநாதர் உரை
மலைபடு - மலைபடு கடாம்
முதுமொழிக் - முதுமொழிக் காஞ்சி
முருகு - திருமுருகாற்றுப் படை
முல்லை - முல்லைப் பாட்டு
மேரு, மேருமந்தர - மேரு மந்தரபுராணம்
மேற் - மேற்கோள்
யசோதர - யசோதர காவியம்
யா. கா - யாப்பருங்கலக் காரிகை
யா. வி - யாப்பருங்கல விருத்தி
வி. பா., வில்லி - வில்லிபுத்தூராழ்வார் பாரதம்
வீர - வீர சோழியம்

# ஆராய்ச்சி உரை

## 1. பொது

### கீழ்க்கணக்கில் ஒன்று

தமிழில் உள்ள பழைய நூல்களை மூன்று வரிசையாகப் பகுத்துச் சொல்லுவது ஒரு வழக்கு. 'பாட்டினும் தொகையினும் கீழ்க்கணக்கினும்' என்று அம் மூன்றையும் குறிப்பிடுவார்கள். அவை முறையே பத்துப்பாட்டு, எட்டுத் தொகை, பதினெண் கீழ்க்கணக்கு என்பவை.[1] இந்த மூன்றில் பதினெண் கீழ்க்கணக்கு என்னும் வரிசையில் பதினெட்டுச் சிறு நூல்கள் அடங்கியுள்ளன. கணக்கு என்பது நூலுக்கு ஒரு பெயர். சிறு நூல்களைக் கீழ்க்கணக்கு என்று கூறினர். பத்துப் பாட்டையும் எட்டுத் தொகையையும் மேற்கணக்கு என்று சொல்லுவது உண்டு என்பது பன்னிரு பாட்டியலினால் தெரிய வருகிறது.

பதினெண் கீழ்க்கணக்கில் ஒன்று திருக்குறள். அந்த வரிசையில் நாலடியார், நான்மணிக் கடிகை, இன்னா நாற்பது, இனியவை நாற்பது, திருக்குறள், திரிகடுகம், ஆசாரக் கோவை, பழமொழி, சிறுபஞ்சமூலம், முதுமொழிக் காஞ்சி, ஏலாதி என்ற பதினொரு நீதி நூல்களும், கார்நாற்பது, திணைமொழி ஐம்பது, திணைமாலை நூற்றைம்பது, ஐந்திணை எழுபது, ஐந்திணை ஐம்பது, கைந்நிலை என்னும் ஆறு அகப்பொருள் நூல்களும், களவழி நாற்பது என்ற புறப்பொருளமைதியுள்ள நூல் ஒன்றும் உள்ளன. நீதி நூல்களுக்குள் சிறந்தவை நாலடியாரும் திருக்குறளும்; "நாலும் இரண்டும் சொல்லுக் குறுதி" என்ற பழமொழியால் இதை உணரலாம். அந்த இரண்டிலும் திருக் குறள் மிகச் சிறந்தது என்பது புலவர் பலரும் ஒப்புக்கொண்ட உண்மை யாகும்.

---

1. "..........முத்தோர்கள்
பாடி யருள்பத்துப் பாட்டும்[illegible]கையும்
கேடில் பதினெட்டுக் கீழ்க்கணக்கும்"

(தமிழ்விடு தூது, 55-6)

'ஐம்பெருங்காப்பியம், எண்பெருந்தொகை, பத்துப் பாட்டு, பதினெண் கீழ்க்கணக்கு என்னும் இவ் விலக்கியங்களுள்ளும்.'

(நன்னூல், 387, மயிலை நாதர் உரை.)

## பொது நூல்

திருக்குறள் அறம், பொருள், இன்பம் என்னும் மூன்று உறுதிப் பொருள்களையும் விரிவாக 133 அதிகாரங்களாக அமைந்த 1330 குறட்பாக் களால் சொல்வது; தெய்வப் புலமைத் திருவள்ளுவரால் இயற்றப் பெற்றது. தமிழ்ப் புலவர்கள் இந்த நூலுக்கு இணையான நூல் வேறு இல்லை என்று பாராட்டியுள்ளார்கள். இது உலகிலுள்ள யாவருக்கும் பொதுவான நீதிகளைச் சொல்லுவதனால் உலகம் முழுவதுக்கும் பயனைத் தருவது என்ற கருத்தைப் பாரதியார், "வள்ளுவன் றன்னை உலகினுக்கே தந்து, வான்புகழ் கொண்ட தமிழ் நாடு" என்பதில் கூறியுள்ளார். மேல் நாட்டு மொழிகளிலும் இந்தியா வில் உள்ள பிற மொழிகளிலும் பல அறிஞர்கள் இதனை மொழி பெயர்த்து அமைத்திருக்கிறார்கள். அதனாலும் இது உலகப் பொது நூல் என்பதை அறிந்து கொள்ளலாம்.

மக்களுக்கு வேண்டிய உறுதிப்பொருள்கள் நான்கு என்பது இமயம் முதல் குமரிவரையில் நிலவும் பாரத நாட்டுக் கொள்கை. அறம், பொருள் இன்பம், வீடு என்று தமிழிலும் தர்மம், அர்த்தம், காமம், மோட்சம் என்று வடமொழியிலும் அவற்றைக் கூறுவர். நூலுக்குப் பயன் இந்த நான்குமே என்றும் சொல்லுவதுண்டு; "அறம் பொருள் இன்பம் வீடடைதல் நூற் பயனே"[1] என்பது இலக்கணச் சூத்திரம். இந்த நான்கையும் பற்றித் தனித் தனியே நூல்கள் வடமொழியில் உள்ளன. திருவள்ளுவர் அறம், பொருள், இன்பம் என்னும் மூன்றைப்பற்றிய கருத்துக்களையும் தொகுத்து அடைவு படுத்தி மூன்று பகுதியாக்கி இந்த நூலை இயற்றினர். வீட்டைப்பற்றித் தனியே சொல்லாவிட்டாலும் அதற்குரிய நெறியை அறத்துப்பாலில் சொல்லி யிருக்கிறார்.

அறம், பொருள், இன்பம் என்னும் மூன்றையும் ஒரு கொத்தாக வழங்கு வது பாரத நாட்டு வழக்கு. வடமொழியில் அதைத் திரிவர்க்கம் என்பர். தமிழ் நூல்களில் அந்த மூன்றையும் ஒருங்கிசைக்கும் வழக்கத்தை,

> "இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு
> அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின்"
>
> (தொல்காப்பியம், களவு. 1)

> "அறனும் பொருளும் இன்பமும் மூன்றும்
> ஆற்றும் பெருமநின் செல்வம்"
>
> (புறநா. 28 : 15-6)

> "சிறப்புடை மரபிற் பொருளும் இன்பமும்
> அறத்துவழிப் படூஉம் தோற்றம் போல"
>
> (புறநா. 31 : 1-2)

என்பவற்றால் உணரலாம்.

திருக்குறளில் அந்த மூன்றையும் பற்றிய பகுதிகளைத் தனித்தனியே அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்று பெயரிட்டுச் சொன்னர் திருவள்ளுவர். இவ்வாறு மூன்று பால்களையும் உடைய இந்த நூலுக்குத் திருவள்ளுவர் வைத்த பெயர் முப்பால் என்று தெரிகிறது. குறட்பாவால் அமைந்த தனி நூல் பழங்காலத்தில் இல்லையாதலால் இதனைக் குறள் என்றும், பிறகு திருக்குறள் என்றும் வழங்கினர் என்று தோன்றுகிறது.

---

1. நன்னூல், 10.

## முப்பால் என்னும் பெயர்

இந்நூலின் பெயர் முப்பால் என்பதற்குரிய சான்றுகளை இங்கே ஆராய்வோம்.

பதினெண் கீழ்க்கணக்கையும் தொகுத்துச் சொல்லும் வெண்பா ஒன்று உண்டு.

> "நாலடி நான்மணி நானாற்ப தைந்திணைமுப்
> பால்கடுகம் கோவை பழமொழி மாமூலம்
> இன்னிலைய காஞ்சியோ டேலாதி என்பவே
> கைந்நிலைய வாங்கீழ்க் கணக்கு"

என்பது அது. அதில் திருக்குறளை முப்பால் என்றே அதைப் பாடியவர் குறித்திருக்கிறார்.

திருக்குறளின் சிறப்பைப் பாராட்டி ஐம்பத்து மூன்று பேர் பாடிய ஐம்பத்து மூன்று வெண்பாக்களையுடைய 'திருவள்ளுவ மாலை' என்ற நூல் ஒன்று உண்டு. அதில் திருக்குறளைப் பலவேறுவகையில் அப்புலவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். திருவள்ளுவருடைய வாக்கு என்பதை எண்ணி, "வள்ளுவன் வாய்ச்சொல்" (3), "வள்ளுவர் வாய்மொழி" (24), "வள்ளுவனர் சுரந்த பா" (29), "வள்ளுவர் வாயுறை வாழ்த்து" (35), "வள்ளுவர் வாய்மொழி" (42) என்று கூறியுள்ளார்கள். இந்நூல் குறட்பாவினால் அமைந்திருப்பதை எண்ணி, "வள்ளுவனர் வெள்ளைக் குறட்பா விரி" (5), "வள்ளுவர் தம் குறள் வெண்பா" (6), "தண்டமிழின் வெண்குறள்" (7), "வள்ளுவனர் தாம்கின் றளந்த குறள்" (14), "ஆயிரத்து முந்நூற்று முப்ப தருங்குறளும்" (16), "வள்ளுவர் இன்குறள் வெண்பா" (32), "வள்ளுவர் வெண்பா" (36), "வெண்குறளால்...ஓத" (37), "குறள் வெண்பாப் பன்னிய வள்ளுவனர்" (38), "இன்குறள் வெண்பா" (40,45,51, 52), "வள்ளுவனர் ஓது குறட்பா" (43), "வள்ளுவனர்வெள்ளைக் குறட்பா" (48), "திருவள்ளுவர் செப்பிய குறளால்" என்று பாராட்டியுள்ளார்கள். இவற்றில் நூலின் யாப்பைச் சுட்டிக் குறள் என்று கூறுவதையன்றி, அதன் பெயர் திருக்குறள் என்று திட்டவட்டமாகத் தெரிந்துகொள்ள எந்தக் குறிப்பும் இல்லை. ஒரு பாடல், "பொய்யா மொழி" (23) என்று கூறுகிறது.

ஆனால் பதினைந்து பாடல்களில் முப்பால் என்ற பெயர் வந்துள்ளது. "வள்ளுவனர் முப்பால் மொழிந்த மொழி" (9), "வள்ளுவர் முப்பால்" (10,11,31), "வள்ளுவனர் முப்பால்" (12, 15, 17), "முப்பால் மொழிந்த முதற்பாவலர்" (18), "முப்பாலின் நாற்பால் மொழிந்தவர்" (19), "வள்ளுவர் தாம் செப்ப வரும் முப்பால்" (30), "குறள் வெண்பாவிற் சிறந்திடு முப்பால்" (39), "முப்பால்" (44, 49), "வள்ளுவர் முப்பால் நூல்" (46), "வண்டமிழின் முப்பால்" (53) என்று வரும் இடங்களில் முப்பால் என்பது மூன்று பால்கள் என்ற பொருளைக் கருதாமல், முப்பால் என்னும் நூல் என்ற பொருளையே குறிப்பதாக அமைந்திருப்பது காண்க.

> "[illegible]முடைய மன்னர் தடமுடிமேல் தார்அன்றே
> [illegible]மறைதேர் வள்ளுவர்முப் பால்" (10)

என்ற பாட்டில், "[illegible]பால் அன்றோ?" என்று முடித்துப் பொருள் கொள்ளும் போது, முப்பால் எ[illegible]பது ஒருமையாக நிற்றல் காண்க. நூலைக் குறிப்பதா

தலின் ஒருமையாயிற்று. "வள்ளுவர் முப்பால் நூல் நயத்தின் பயன்" (46) என்னும் இடத்திலும், 'வள்ளுவர் இயற்றிய முப்பால் ஆகிய நூல்' என்று பொருள் கொள்ளும்படி அது அமைந்திருக்கிறது.

திருக்குறளைச் சிறப்பிக்க வந்த தனிப் பாடல்கள் பல. அவற்றிலும் முப்பால் என்ற பெயர் காணப்படுகிறது.

"தெறுகலிபைச்
செற்றவேல் மாற திருவள் ளுவனுர்வாய்ச்
சொற்றகுமுப் பாலைவாழ்த்துச் சொல்."[1]

திருக்குறளுக்கு உரை வகுத்தவர்கள் பதின்மர். அவருள் சிறந்த பரிமேலழகர் உரைக்கு ஒரு சிறப்புப்பாயிரம் உண்டு. அதில், 'திருக்குறளுக்கு ஒன்பது உரை இருந்தும் பொருள் விளங்காமல் யாவரும் ஐயுற்ற பொழுது, வள்ளுவன் மீண்டும் அவதரித்து இதற்கு இதுவே பொருள் என்று உரைத்தது போலப் பரிமேல்ழகன் தோன்றி உரை வகுத்தான்'[2] என்ற கருத்து வருகிறது. அங்கே,

"திருத்திய தமிழில் தெய்வப் புலமை
அருந்திறல் வள்ளுவன் ஆய்ந்துதன் வாக்கால்
அறம்பொருள் இன்பம் வீடென நான்கின்
திறந்தெரிந் துரைத்த செவ்விழுப் பாலுக்கு
ஒருரை இன்றி ஒன்பது சென்றும்
ஐயுற வாக வையுறு காலை"

என்று வரும் பகுதியில் திருக்குறளை முப்பால் என்றே அச்சிறப்புப்பாயிரம் கூறுகிறது. இப்படியே பரிப்பெருமாள் உரைக்குரிய சிறப்புப் பாயிரமும்,

"வள்ளுவனுர்
பொய்யற்ற முப்பால் பொருளுரைத்தான் தென்செழுவைத்
தெய்வப் பரிப்பெருமாள் தேர்ந்து"[3]

என்று திருக்குறளை முப்பால் என்றே குறிக்கிறது.

ஆகவே திருக்குறளுக்கு இயல்பாக அமைந்த பெயர் முப்பால் என்றே தோன்றுகிறது. பன்னிரு படலம் என்பது போல நூலின் பகுதியளவு கொண்டு அமைந்த பெயர் இது என்று கொள்ள வேண்டும்.

## திருக்குறள் என்னும் பெயர்

இப்போது திருக்குறள் என்ற பெயரே எங்கும் வழங்கி வருகிறது. நூலில் அமைந்த யாப்பினுல் வந்த பெயர் இது. எட்டுத் தொகையில் கலித்தொகை, பரிபாடல் என்னும் நூல்கள் பாவினுல் பெயர் பெற்றமை காண்க. தெய்வத் தன்மை வாய்ந்த பொருள்களுக்குத் திரு என்னும் அடை கொடுத்துச் சொல்வது இந்த நாட்டு மரபு. அந்த வகையில் இது திருக்குறள் என்று பெயர் பெற்றது. தெய்வப்புலமைத் திருவள்ளுவர் இயற்றியதாதலின் இந்நூலும் தெய்வத் தன்மை உடையதாயிற்று. சங்ககாலத்து நூலாகிய முருகாற்றுப்படை திருமுருகாற்றுப்படை என வழங்குவதைப் போன்ற

1. பெருந்தொகை, 1998.
2. ஷ. 1543., 3. ஷ. 1542.

வழக்கு இது. பிற்காலத்தில் பல நூல்களுக்குத் திருவாய்மொழி, திருவாசகம் என்பன போலத் திரு என்னும் அடை அமைந்திருக்கிறது. ஆனல் பழைய நூல்களில் திருமுருகாற்றுப்படை, திருக்குறள் என்ற இரண்டு மட்டும் இவ்வடையைப் பெற்று வழங்குகின்றன.

அடையின்றிக் குறள் என்றும், அடையுடன் திருக்குறள் என்றும் இந் நூலின் பெயரைப் புலவர்கள் எடுத்தாளுவதுண்டு.

"தேவர் குறளும்" (நல்வழி)
"முன்னுரைத்த தேவர்குறள்" (பெருந்தொகை, 1548)
"குறள் அனுகேம்" (ஷ 1981)
"தென்னுகுறட் செக்தேன்." (ஷ 2002)

இவற்றில் குறள் என்று வருதல் காண்க.

"திருக்குறளோ, கொங்குவேள் மாக்கதையோ" (பெருந்தொகை, 2013)
"ஐயேறக் திருக்குறள்" (மகாவித்துவான் மீனட்சிசுந்தரம் பிள்ளை)[1]
"வள்ளுவர்செய் திருக்குறளை மறுவறநன் குணர்ந்தோர்கள்." (மனேன்மணீயம்)

இவற்றில் திருக்குறள் என்று வந்தது காண்க.

## வேறு பெயர்கள்

முப்பால், திருக்குறள் என்னும் இரண்டு பெயர்களையன்றி வேறு சில பெயர்களாலும் புலவர் பெருமக்கள் இந்நூலைக் குறிப்பித்திருக்கிறார்கள். அவை வருமாறு:—

**இரண்டு :**

இரண்டடிகளால் அமைந்தமையால் குறிப்பாகத் திருக்குறளுக்கு இப் பெயர் அமைந்தது.

"பழகுதமிழ்ச், சொல்லருமை நாலிரண்டில்." (பெருந். 1128.)

**உத்தர வேதம் :**

பின்பு எழுந்த வேதம் என்ற பொருளுடையது இது. ஆறுமுக நாவலர் பதிப்பித்த திருக்குறட் பதிப்பு முதலியவற்றில் திருக்குறளுக்குரிய பெயர்கள் இன்னவென்று காட்டும்போது, இப் பெயரையும் காட்டினர்.

**எழுதுண்ட மறை :**

இதுவும் உத்தர வேதம் என்பது போன்ற பெயரே. பழைய மறையை எழுதாக் கிளவி என்பர். இது எழுதும் வேதம். தேவாரத்தைச் சேக்கிழார், "எழுதுமறை"[2] என்று சொல்வது இங்கே ஒப்பு நோக்குதற்குரியது. கம்பர் ஏரெழுபதில் திருக்குறளை இப் பெயரால் குறிக்கிறார்.

---

1. திருக்குறள், ஆறுமுக நாவலர் பதிப்பு, சிறப்புப் பாயிரம்.
2. பெரிய புராணம், திருஞான-75.

**தமிழ் மறை :**

இப்பெயரும் உத்தர வேதம், எழுதுண்ட மறை என்பன போன்றதே. இதுவும் ஆறுமுக நாவலர் முதலிய பதிப்பாசிரியர்கள் எடுத்துக் காட்டிய பெயர்களில் ஒன்று.

"திருக்குறள் என்னும் செந்தமிழ் வேதம்"[1]

என்று வித்துவான் தியாகராச செட்டியார் சிறப்பிப்பார்.

"ஆதிமுதல் வள்ளுவர்சொல் ஆரணமாம் செந்தமிழ்."

(சிவசிவ வெண்பா.)

**திருவள்ளுவப் பயன் :**

திருவள்ளுவரால் தமிழுலகுக்கு உண்டான பெரும் பயனாகிய நூல் என்பது இதன் பொருள்.

'காடு அரண் முதலாகக் கூறுவன வெல்லாம் திருவள்ளுவப் பயனிற் கண்டு கொள்க'[2]

என்று நச்சினார்க்கினியர் இப் பெயரை ஆள்வர்.

'திருவள்ளுவப் பயன் எல்லாம் குறள் வெண்பா'[3]

என்று பெருந்தேவனார் வீரசோழிய உரையில் குறிக்கிறார்.

'திருவள்ளுவப்பயன், காலடி நானூறு முதலாகிய கீழ்க்கணக்குள்ளும்'[4]

என்பது குணசாகரர் எழுதுவது.

**திருவள்ளுவர் :**

கருத்தா ஆகுபெயராய் நின்றது இப் பெயர்.

"பல்காற் பழகினும் தெரியா உளவேல்
தொல்காப் பியத்திரு வள்ளுவர் கோவையார்
மூன்றினும் முழங்கும்"[5]

என்பதில் சாமிநாத தேசிகர் இப் பெயரை ஆள்கிறார்.

கருத்தா ஆகுபெயருக்கு உதாரணமாக, இலக்கண நூலுக்கு உரையெழுதினர் பலரும் இச்சொல்லையே எடுத்துக் காட்டினர்.

**தெய்வ நூல் :**

தெய்வத்தன்மை வாய்ந்த நூல் என்று பொருள்படும். திருவள்ளுவர் தெய்வத் தன்மையுடையவரென மதிக்கப்படுதலின் அவர் இயற்றிய நூல் தெய்வ நூலாயிற்று. பழைய திருக்குறட் பதிப்பாசிரியர்கள் காட்டிய நூற் பெயர்களில் இது ஒன்று.

"திருக்குற ளென்னும் தெய்வ மாமறை"[6]

என்று சோடசாவதானம் சுப்பராய செட்டியார் போற்றுவது இக் கருத்தைத் தெளிவிக்கிறது.

---

1. திருக்குறள், ஆறுமுக நாவலர் பதிப்பின் சிறப்புப் பாயிரம்.
2. தொல். புறத். 21, உரை.
3. யாப்புப் படலம், 21, உரை.
4. யாப்பருங்கலக் காரிகை, 38, உரை.
5. இலக்கணக்கொத்து.
6. திருக்குறள், ஆறுமுக நாவலர் பதிப்பின் சிறப்புப் பாயிரம்.

**பழமொழி :**

பழமையுடையதும் பழமொழி போலச் சுருங்கிய உருவினதுமாதலின் இப் பெயர் பெற்றது.

"திருவளுவ தேவர் வாய்மைஎன் கின்ற
பழமொழியை ஓதி யேயுணர்ந்து"[1]

என்பது அருணகிரி நாதர் வாக்கு.

"கவிஞர்இயற்
பண்பால் உரைத்த பழமொழிமுன் ஈதுமொரு
வெண்பா வெனவிளங்க வே"

என்பது சிவசிவ வெண்பாவின் அவையடக்கம்.

GOVT. ORIENTAL MANUSCRIPTS LIBRARY ... OF THE CURATOR 19 JAN 1970 MADRAS

**பால்முறை :**

மூன்று பால்களையுடைய நூல் என்பது பொருள்.

"பன்னிய வள்ளுவனர் பால்முறை" (38)

என்பது கோவூர் கிழார் என்பவரது பாட்டாகத் திருவள்ளுவ மாலையில் உள்ள செய்யுட் பகுதி.

**பொது மறை :**

பலருக்கும் பொதுவாகிய விதிகளையும் விலக்குகளையும் எடுத்துரைப்பதனுல் இப்பெயர் வந்தது. பழைய பதிப்பாசிரியர்கள் எடுத்துக் காட்டும் பெயர்களில் ஒன்று இது.

**பொய்யாமொழி :**

பொய்யாகாத திருவாக்கு ஆதலின் இப்பெயர் பெற்றது. இதனை உரைத்த வள்ளுவரை, "பொய்யில் புலவன்"[2] என்று கூறியதையும் ஓர்க.

"திருவள் ளுவர்மொழிந்த பொய்யா மொழிக்கும்" (23)

என்பது திருவள்ளுவ மாலை.

**பொருளுரை :**

பொருள் என்பதற்கு உண்மையென்பது பொருள். உண்மையான கருத்துக்களைச் சொன்னமையால் இப்பெயர் வந்தது. 'பொய்யா மொழி' என்பதும் இக் கருத்தாலே வந்த பெயராதல் காண்க.

"பொய்யில் புலவன் பொருளுரை தேருய்"[3]

என்பர் சீத்தலைச் சாத்தனுர்.

**முதுமொழி :**

பழமொழி என்பதன் வேறு உருவம் இது. அறிவின் முதிர்ச்சியைக் காட்டும் மொழி என்றும் பொருள் கூறலாம்.

"முன்பறியச் சொன்ன முதுமொழிநூல்" (33)

என்பது திருவள்ளுவ மாலை.

1. திருப்புகழ், திருச்செந்தூர்.
2, 3. மணிமேகலை, 22: 61.

திருக்குறளைப் பிற்பகுதியில் வைத்துச் செய்த வெண்பா நூல்களில் முதுமொழிமேல் வைப்பு, சோமேசர் முதுமொழி வெண்பா என்னும் இரண்டு நூல்களின் பெயர்களிலும் உள்ள முதுமொழி என்பது திருக்குறளைக் குறித்து நிற்கின்றது.

**வள்ளுவ தேவன் வசனம் :**

திருவள்ளுவர் திருவாக்காதலின் இப்பெயர் பெற்றது.

"வள்ளுவ தேவன் வசனத்தை மெய்யாக
உள்ளுவ தேவன் உளன்"[1]

என்ற பாடலில் இது வருகிறது.

**வள்ளுவமாலை :**

திருவள்ளுவரால் கோவைப்பட வரிசையாக அதிகாரங்களை அமைத்துச் செய்யப் பெற்றமையின் இப்பெயர் அமைந்தது. இப்பெயர் பிரபந்த தீபிகை என்னும் நூலில் அதன் ஆசிரியராகிய வேங்கட சுப்ப பாரதியாரால் ஆளப் பெறுகிறது.[2]

**வள்ளுவர் :**

திருவள்ளுவர் என்பது போலக் கருத்தா ஆகுபெயராக அமைந்த பெயர் இது. உமாபதி சிவாசாரியர் பாடியதாக வழங்கும் பாட்டில்,

"வள்ளுவர்சீர் அன்பர்மொழி வாசகம்"

என வருவது காண்க.

**வள்ளுவர் வாய்மொழி :**

திருவள்ளுவர் திருவாக்கு என்னும் பொருளையுடையது. வாய் என்பதற்கு உண்மை யென்றும் பொருள் கொள்ளலாம்.

"வள்ளுவர் வாய்மொழி மாண்பு" (24)
"வள்ளுவர் வாய்மொழி மாட்டு" (42)

என்பன திருவள்ளுவ மாலைப் பாடற் பகுதிகள்.

"வசையில் வள்ளுவன் வாய்மொழிப் பொருளை"[3]

என்பது பரிமேலழகர் உரைச்சிறப்புப் பாயிரம்.

**வள்ளுவன் வாய்ச்சொல் :**

வள்ளுவன் வாய்மொழி யென்பதனோடு ஒத்த பொருளுடையது.

"மன்புலவன் வள்ளுவன்வாய்ச் சொல்."

(திருவள்ளுவ மாலை, 3.)

**வள்ளுவனர் வைப்பு :**

திருவள்ளுவர் அளித்த செல்வம் போன்ற நூல் என்ற பொருளுடைய பெயர் இது.

---

1. பெருந்தொகை, 2001.
2. பதினெண் கீழ்க்கணக்கு, முதல் தொகுதி, எஸ். ராஜம் பதிப்பு, பதிப்புரை, ப. 6.
3. பெருந்தொகை, 1539.

"வள்ளுவனார் வைப்பெமக்கு வாய்த்து"[1]

என்பது ஒரு பழம் பாடல்.

**வாயுறை வாழ்த்து:**

மருந்து போலப் பயன்தரும் ஓம்படைச் சொற்களையுடைய நூல் என்றபடி. வாயுறை – மருந்து.

"உள்ளி புணர உரைத்தாரே ஓதுசீர்
வள்ளுவர் வாயுறை வாழ்த்து" (35)

என்பது திருவள்ளுவ மாலை.

## பல வகைச் சிறப்பு

இந்த நூலுக்குப் பலவகைச் சிறப்புக்கள் உண்டு.

(1) குறளால் ஆன பழைய நூல் இது ஒன்றுதான்.

(2) தமிழின் முதல் எழுத்தாகிய அகரத்தில் தொடங்கி, இறுதி எழுத்தாகிய 'ன்' என்பதில் நூல் முடிகிறது.

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு" (1)

"ஊடுதல் காமத்துக் கின்பம் அதற்கின்பம்
கூடி முயங்கப் பெறின்." (1330)

(3) பத்துப் பேர் உரை எழுதிய நூல் வேறு இல்லை.

(4) சிறப்புப் பாயிரப் பாடல்கள் பல சேர்ந்து திருவள்ளுவமாலை என்று ஒரு நூலாகவே அமைந்திருக்கின்றன. இதுவும் இந்த நூலுக்கே வாய்த்த பெருமை.

(5) எல்லாச் சமயத்தினரும் போற்றும் பெருமையுடையது இது.

(6) பிறமொழிகளில் பெயர்க்கப்பட்ட தமிழ் நூல்களில் இதனைப் போலப் பல மொழிகளில் புகுந்த நூல் வேறு இல்லை.

(7) நீதி நூலாக இருப்பதோடு கவிச்சுவையும் உடையதாக விளங்கும் தன்மை இதற்கு மற்றொரு சிறப்பு.

## வேதமும் குறளும்

இந்த நாட்டில் மிகச் சிறந்த நூலென்று வேதத்தைக் கொண்டாடுவார்கள். வேறு நூலைச் சிறப்பிக்க வேண்டுமாயின் வேதமென்றும் வேதம் போன்றதென்றும் வேதப்பொருளை உடையதென்றும் கூறுவது மரபு. பாரதத்தை ஐந்தாம் வேதமென்றும், சைவத் திருமுறைகளைத் தமிழ் வேதமென்றும், திவ்யப்பிரபந்தத்தை வேதப்பொருளையுடைய தென்றும் சிறப்பித்துப் பேசுவார்கள். அவ்வாறே திருக்குறளையும் தமிழ் வேதம் என்றும், வேதப்பொருளை யுடையதென்றும் புலவர்கள் பாராட்டியிருக்கிறார்கள்.

"நான்மறையின் மெய்ப்பொருளை முப்பொருளா நான்முகத்தோன்
தான்மறைந்து வள்ளுவனாய்த் தந்துரைத்த—நூன்முறையை" (4)

1. பெருந்தொகை, 1999.

"சாற்றிய பல்கலையும் தப்பா அருமறையும்
போற்றி உரைத்த பொருள்எல்லாம்—தோற்றவே
முப்பால் மொழிந்த முதற்பாவலர்" (18)

"ஓதற் கெளிதாய் உணர்தற் கரிதாகி
வேதப் பொருளாய் மிகவிளங்கி" (24)

"ஏதமில் வள்ளுவர் இன்குறள்வெண் பாவினால்
ஓதிய ஒண்பொருள் எல்லாம் உரைத்ததனால்
தாதவிழ் தார்மாற தாமே தமைப்பயந்த
வேதமே மேதக் கன" (32)

"வேத விழுப்பொருளை வெண்குறளால் வள்ளுவனார்
ஓதஅழுக் கற்ற துலகு" (37)

"வேதப் பொருளை விரகால் விரித்துலகோர்
ஓதத் தமிழால் உரைசெய்தார்" (42)

என்று திருவள்ளுவ மாலையில் வரும் பகுதிகள் வேதப் பொருளையே திருக்குறள் சொல்கிறது என்பதைப் புலப்படுத்துகின்றன.

இது வேதத்தோடு ஒத்த சிறப்புடையது என்று சில புலவர் பாடினர்.

"ஆரியமும் செந்தமிழும் ஆராய்ந் திதனின்இது
சீரிய தென்றொன்றைச் செப்பரிதால்—ஆரியம்
வேதம் உடைத்துத் தமிழ்திரு வள்ளுவனார்
ஓது குறட்பா வுடைத்து" (43)

"எப்பொருளும் யாரும் இயல்பின் அறிவுறச்
செப்பிய வள்ளுவர்தாம் செப்பவரும்—முப்பாற்குப்
பாரதஞ்சீ ராம கதைமனுப் பண்டைமறை
நேர்வனமற் றில்லை நிகர்" (30)

என்பவற்றைக் காண்க.

சில காரணங்களால் திருக்குறள் வேதத்தினும் சிறந்தது என்று கூறிய புலவர்களும் உண்டு.

"ஆற்றல் அழியுமென் றந்தணர்கள் நான்மறையைப்
போற்றியுரைத் தேட்டின் புறத்தெழுதார்—ஏட்டெழுதி
வல்லுநரும் வல்லாரும் வள்ளுவனார் முப்பாலைச்
சொல்லிடினும் ஆற்றல்சோர் வின்று." (15)

"செய்யா மொழிக்கும் திருவள் ளுவர்மொழிந்த
பொய்யா மொழிக்கும் பொருள்ஒன்றே—செய்யா
அதற்குரியர் அந்தணரே ஆராயின் ஏனை
இதற்குரியர் அல்லாதார் இல்." (23)

## காலமும் இடமும் கடந்தது

திருக்குறள் எல்லாக் காலத்துக்கும் எல்லா நாட்டுக்கும் உரிய பொதுவான உண்மைகளையே பெரும்பாலும் தொகுத்துச் சொல்கிறது. தனிமனிதனுடைய வாழ்க்கையிலும் சமுதாய வாழ்க்கையிலும் கொள்ளத் தகுவன இவை, தள்ளத்தகுவன இவை என்று வரையறுக்கிறது. நீதி நூல்களின் இயல்பு இது. ஆனால் அவ்வந்நாட்டின் நீதி நூல்கள் தாம் எழுந்த

இடத்துக்கும் காலத்துக்கும் ஏற்பனவற்றை விரிவாகச் சொல்லும். திருக்குறளோ அவ்வாறு சொல்லாமல் மனித வாழ்வின் அடிப்படையான நலத்தைக் கருதி, என்றும் எங்கும் நலம் பயப்பவற்றை எடுத்துக் காட்டி, இவற்றைச் செய்க என்றும், என்றும் எங்கும் தீங்கு பயப்பவற்றை எடுத்துரைத்து, இவற்றைச் செய்யற்க என்றும் கூறுகிறது. இதனால் தான் இது எக்காலத்துக்கும் பொது நூலாகவும் எந்த நாட்டுக்கும் பொது வானதாகவும் மிளிர்கிறது.

இந்தப் பண்பைப் பழந்தமிழ்ப் புலவர்களும், பிற்காலத்தில் இதன் பால் ஈடுபட்ட பிறநாட்டுப் பேரறிஞர்களும் புலப்படுத்தியிருக்கிறார்கள்.

திருவள்ளுவ மாலையில் இறையனார் பாடியதாக அமைந்துள்ள செய்யுள், இந்நூல் காலம் கடந்து நிற்கும் ஆற்றல் உடையதென்பதைச் சொல்கிறது.

"என்றும் புலராது யாணர்நாட் செல்லுகினும்
நின்றலர்ந்து தேன்பிலிற்றும் நீர்மையதாய்—குன்றாத
செந்தளிர்க் கற்பகத்தின் தெய்வத் திருமலர்போன்ம்
மன்புலவன் வள்ளுவன்வாய்ச் சொல்." (3)

இப்படியே திருக்குறள் உலகப் பொதுநூல் என்பதைப் பின்வரும் பகுதிகள் தெளிவிக்கின்றன.

"வள்ளுவரும் தம்குறள்வெண் பாவடியால் வையத்தார்
உள்ளுவஎல் லாம்அளந்தார் ஓர்ந்து" (6)

"......................வள்ளுவனார்
சுரந்தபா வையத் துணை" (29)

"இன்பமும் துன்பமும் என்னும் இவையிரண்டும்
மன்பதைக் கெல்லாம் மனமகிழ—அன்பொழியா
துள்ளி புணர உரைத்தாரே" (35)

"உள்ளுநர் உள்ளும் பொருளெல்லாம் உண்டென்ப
வள்ளுவர் வாய்மொழி மாட்டு" (42)

"வள்ளுவனார் ஏற்றினார் வையத்து வாழ்வார்கள்
உள்ளிருள் நீக்கும் விளக்கு" (47)

"வள்ளுவர் இன்குறள் வெண்பா அகிலத்தோர்
உள்ளிருள் நீக்கும் ஒளி" (52)

"......உலகடைய உண்ணுமால்
வண்டமிழின் முப்பால் மகிழ்ந்து." (53)

எல்லாச் சமயத்தினருக்கும் பொதுவான உண்மைகளை இது சொல்வதனால் யாவரும் விரும்பிப் பாராட்டும் நிலை இந்நூலுக்கு அமைந்தது.

"ஒன்றே பொருளெனின் வேறென்ப வேறெனின்
அன்றென்ப ஆறு சமயத்தார்—நன்றென
எப்பா லவரும் இயைபவே வள்ளுவனார்
முப்பால் மொழிந்த மொழி" (9)

என்பது கல்லாடர் பெயரால் திருவள்ளுவ மாலையில் உள்ள பாட்டு. கல்லாடம் பாடிய கல்லாடனாரும் இதே கருத்தை,

"சமயக் கணக்கர் மதிவழி கூறாது
உலகியல் கூறிப் பொருள்இது என்ற
வள்ளுவன்"

என்று புலப்படுத்துகிறார்.

"சமயநூல் ஆறும்சம் வள்ளுவனார்
புக்தி மொழிந்த பொருள்" (44)

என்பது கலந்தூர் கிழார் பெயரால் அமைந்த பாடற் பகுதி.

மேலே சொன்ன கருத்துக்களை மேல்நாட்டு அறிஞர்களும் திருக்குறளைப் பற்றி எழுதும்போது சொல்லியிருக்கிறார்கள்.

'அவர் இனம், சாதி, வகுப்பு எல்லாவற்றிற்கும் அப்பாற்பட்டவர். அவர் அறிவுறுத்துவன மனித சாதிக்குப் பொதுவான ஒழுக்கமும் அறிவுமாகும். குறள் பிறந்த நாட்டில் நூற்றுக் கணக்கான ஆண்டுகளாக அதை மிகுதியாகப் படித்துப் பயின்று மக்கள் உயர்வாகப் போற்றி வந்ததோடன்றி, அதனைப் புறவுலகம் தெரிந்து கொண்டது முதல் மேல் நாட்டிலும் அதனைப் பாராட்டுபவர்கள் பலர் உண்டானார்கள் என்பது வியப்பே அன்று'

என்பது பேராசிரியர் எம். விண்ட்டர்நீட்ஸின் கருத்து.[1]

"ஆசிரியர், குறிப்பிட்ட சில வகுப்புக்கே உரியவற்றை விட்டுவிட்டு யாவருக்கும் பொதுவான கருத்துக்களையே சொல்கிறார்"

என்பது திருக்குறளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த ட்பிள்யூ. எச். ட்ரூவின் கருத்து.[2]

"குறளின் ஆசிரியர் சாதி, பல்வேறு மக்கள், நம்பிக்கைகள் ஆகியவற்றை எண்ணாமல் மனித சாதி அத்தனைக்கும் பொதுவானதைச் சொல்கிறார் என்பது வியப்புக்குரியது"

என்பது எம். ஏரியல் என்பவர் கூற்று.[3]

நம் நாட்டு அறிஞர்களில் இத்தகைய கருத்துக்களை எடுத்துரைத்தவர்கள் பலர்.

"குறள் அல்லது முப்பாலின் ஆசிரியர் என்ற புகழ் தமிழ் வாழுமளவும் நிலை நிற்கும்"

என்பது வி. கனகசபைப் பிள்ளையின் கருத்து.

"எல்லா நாட்டினருக்கும் எல்லா மதத்தினருக்கும் எல்லாக் கொள்கையினருக்கும் இன்றியமையாத வாழ்க்கை ஒழுக்கங்களை மிகவும் தெளிவாக எடுத்துக் கூறும் பெருமை வாய்ந்தது இந் நூல்"

என்பது டாக்டர். உ. வே. சாமிநாதையரவர்களின் பாராட்டு.

"இந்தப் பெரிய ஞானியினுடைய பரந்த மனப்பாங்கு அவ்வளவு சிறப்பானது; அவர் தமிழ் நாட்டில் பிறந்தவரானாலும் மனித குலமனைத்துக்குமே உரியவர்... திருவள்ளுவர் எந்தக் கொள்கையுடைய குலத்தில் பிறந்தவரானாலும் எல்லா வகுப்புக்களின் எல்லையையும் கடந்து சென்று யோகியின் ஒளி படைத்த வாழ்வை அடையச் சாதனை புரிந்தார்; அவருக்கு உண்மை, அறிவு, ஆனந்தம் என்றவற்றையன்றி வகுப்பு, சமயம் என்ற சார்புகள் இல்லை"

என்று எழுதுவார் வ. வே. ஸு. ஐயர் அவர்கள்.

---

1. Prof. M. Winternitz.
2. Rev. W. H. Drew.
3. M. Ariel.

தமிழ் நூல்கள் பல இருப்பினும் திருக்குறளைப்போலப் பண்டிதரும் பாமரரும் போற்றிப் பாராட்டும் அளவுக்கு உயர்ந்த நூல் வேறு ஒன்று இல்லை. அதற்கு இரண்டு காரணம்: ஒன்று: மனித வாழ்க்கையில் எண்ணும் எண்ணங்களும் எண்ண வேண்டிய எண்ணங்களும் பெரும்பாலும் இந்நூலில் இடம் பெறுகின்றன. இரண்டு: யாவரும் அறிந்து கூறும் பழமொழிகளுக்கு அடுத்தபடி சுருங்கிய உருவில் எளிதில் நினைவில் வைத்துச் சொல்வதற்கு ஏற்றனவாகக் குறட்பாக்கள் அமைந்திருக்கின்றன.

## பொறுக்கு மணிகளில் ஒன்று

தமிழ் நூல்களில் சிறந்தவை என்று சிலவற்றைத் தொகுத்துச்சொல்லும் பாடல்கள் சில தமிழில் வழங்குகின்றன. பிற நூல்களின் பெயர் அவற்றில் வந்தாலும் வராவிட்டாலும் திருக்குறள் அவ்வாறு தேர்ந்தெடுத்த நூல்களில் ஒன்றாக இருத்தல், அதன் சிறப்பை நன்றாகப் புலப்படுத்தும். இதனை மகாமகோபாத்தியாய டாக்டர் ஐயவரவர்கள் தாம் எழுதிய, "திருவள்ளுவரும் திருக்குறளும்" என்ற நூலில் எடுத்துக்காட்டியிருக்கிறார்கள்.

ஔவையார் நல்வழியில் ஏழு நூல்களை ஒருபாட்டில் எடுத்துச் சொல்கிறார். அவற்றில் முதலில் நிற்பது திருக்குறள்.

> " தேவர் குறளும் திருநான் மறைமுடிவும்
> மூவர் தமிழும் முனிமொழியும்—கோவை
> திருவா சகமும் திருமூலர் சொல்லும்
> ஒருவா சகமென் றுணர்."

இவற்றில் பெரும்பாலும் சைவ நூல்களையே தொகுத்துக் கூறினர்.

மற்றொருவர் 'தண்டமிழின் மேலாந் தரம்' என்று தெரிந்தெடுத்த ஆறு நூல்களைச் சொல்கிறார். அந்த வரிசையிலும் திருக்குறள் முதலில் வருகிறது.

> " வள்ளுவர்சீர் அன்பர்மொழி வாசகம்தொல் காப்பியமே
> தெள்ளுபரி மேலழகன் செய்தவுரை—ஒள்ளியசீர்த்
> தொண்டர் புராணம் தொகுசித்தி ஓராறும்
> தண்டமிழின் மேலாந் தரம்."

இதனைப் பாடியவர் உமாபதி சிவாசாரியார் என்பர்.

திருவள்ளுவ மாலையில் திருக்குறளுக்கு ஒப்பாக வடமொழியிலுள்ள பாரதம், இராமாயணம், மனுஸ்மிருதி, வேதம் என்னும் நான்கையும் உரைப்பர். ஆகவே எல்லாவற்றையும் ஒருசேர வைத்தால் ஐந்தாகும். அந்த ஐந்தில் ஒன்றாக விளங்குவது திருக்குறள்.

> " எப்பொருளும் யாரும் இயல்பின் அறிவுறச்
> செப்பிய வள்ளுவர்தாம் செப்பவரு—முப்பாற்குப்
> பாரதஞ்சீ ராம கதைமனுப் பண்டைமறை
> நேர்வனமற் றில்லை நிகர்."

இதைப் பாடியவர் பெயர் பாரதம் பாடிய பெருந்தேவனர் என்று திருவள்ளுவ மாலையால் தெரிகிறது.

வேறு ஒருவர் அரிய பொருள் ஏதும் வேண்டாம் என்று சொல்ல வந்தவர் நான்கு நூல்களின் பெயர்களைக் கூறுகிறார்.

" திருத்தக்க மாமுனிசிந் தாமணி கம்பர்
விருத்தக் கவித்திறமும் வேண்டேம்—உருத்தக்க
கொங்குவேள் மாக்கதையைக் கூறேம் நூறள்அனுகேம்
எங்கெழிலென் ஞாயி றெமக்கு."

இதைப் பாடியவர் கவிச்சுவையைத் தேர்பவர் என்று தெரிகிறது. இவர் கடைசியில் ஒதுக்குவது திருக்குறள். ஆதலின் அதுவே அவர் முதலில் விரும்புவது என்ற குறிப்பும் இதனால் பெறப்படும். இங்கே திருக்குறள் சிறந்த நான்கு நூல்களில் ஒன்றாக நிற்கிறது.

இலக்கணக் கொத்து ஆசிரியர் தமிழில் மூன்று நூல்களைச் சிறப்பித்துப் பேசுவார். அவை,

" தொல்காப்பி யம்திரு வள்ளுவர் கோவையார்
மூன்றினும் முழங்கும் ".

என்பன. இங்கே திருக்குறள் கால அடைவை நோக்கி நடுநாயகமாக நிற்கிறது.

திருவள்ளுவ மாலையில் நாமகள் பாடியதாக ஒரு பாட்டு இருக்கிறது. 'முற்காலத்தில் நான் நான்முகன் நாவிலிருந்து நான்மறைகளைப் பாடினேன்; இடைக்காலத்தில் (வியாசமுனி வாயிலாக) பாரதத்தைப் பாடினேன்; பிறகு வள்ளுவன் வாயினால் திருக்குறளைப் பாடினேன்' என்ற கருத்துடையது அது.

" நாடா முதல்நான் மறைநான் முகன்நாவில்
பாடா இடைப்பா ரதம்பகர்ந்தேன்—கூடாரை
எள்ளிய வென்றி இலங்கிலைவேல் மாற,பின்
வள்ளுவன் வாயதென் வாக்கு "

என்பது அந்தப் பாட்டு. மறை, பாரதம், குறள் என்ற மூன்றை வரிசைப் படுத்தி அவற்றில் ஒன்றாகத் திருக்குறளைக் கூறியிருத்தலைக் காண்க.

பழகு தமிழ்ச் சொல்லின் அருமையை இரண்டு நூல்களில் காணலாம் என்பது ஒரு தனிப்பாடல்,

" நிழலருமை வெய்யிலிலே நின்றறிமின் ஈசன்
கழலருமை வெவ்வினையிற் காண்மின்—பழகுதமிழ்ச்
சொல்லருமை நாலிரண்டில் சோமன் கொடையருமை
புல்லரிடத் தேயறிமின் போய் "

என்பதில் நாலு என்றும் இரண்டு என்றும் குறிப்பிடுபவை நாலடியாரும் திருக்குறளும் ஆகும். இப்படியே,

"ஆலும் வேலும் பல்லுக் குறுதி
நாலும் இரண்டும் சொல்லுக் குறுதி"

என்ற பழமொழியும் நாலடியாரையும் திருக்குறளையும் குறிக்கிறது. இவ்விரண்டில் திருக்குறள் ஒன்றாக நிற்கிறது.

## ஒப்பற்றது

இவ்வாறு ஏழில் ஒன்றாகவும், ஆறில் ஒன்றாகவும், ஐந்தில் ஒன்றாகவும், நான்கில் ஒன்றாகவும், மூன்றில் ஒன்றாகவும், இரண்டில் ஒன்றாகவும் புலவர்களால் எடுத்து அமைக்கப்பெறும் திருக்குறள், தனக்கு ஒப்பும் உயர்வும் இல்லாத தனிச் சிறப்புடைய நூலாகவும் சொல்லப் பெறுகிறது.

"அப்பால் ஒருபாவை ஆய்பவோ வள்ளுவனார்
முப்பால் மொழிமூழ்கு வார்" (12)

"ஆயிரத்து முந்நூற்று முப்ப தருங்குறளும்
பாயிரத்தி னோடு பகர்ந்ததற்பின் - போய்ஒருத்தர்
வாய்க்கேட்க நூலுளவோ? மன்னு தமிழ்ப்புலவ
ராய்க்கேட்க வீற்றிருக்க லாம்" (16)

"முப்பாலின் மிக்க மொழியுண் டெனப்பகர்வார்
எப்பா வலரினும் இல்" (17)

"முப்பால் மொழிந்த முதற்பா வலர்ஒப்பார்
எப்பா வலரினும் இல்" (18)

"பாவிற்கு வள்ளுவர்வெண் பா" (36)

"பன்னிய வள்ளுவர் பால்முறைநேர் ஒவ்வாதே
முன்னை முதுவோர் மொழி" (38)

"தேவிற் சிறந்த திருவள் ளுவர்குறள்வெண்
பாவிற் சிறந்திடுமுப் பால்."[1] (39)

## கவிச்சுவை

இவ்வாறு பலபடியாலும் சிறப்புற்று அமைந்த திருக்குறள் சிறந்த நீதி நூலாகவும், கவிச்சுவை அமைந்த பனுவலாகவும் விளங்குகிறது. நீதி நூல்கள் மனித சாதிக்கு நல்ல பயனைத் தருவன ஆயினும், அவற்றை மக்கள் விரும்பிப் படிப்பதில்லை. வாழ்க்கையின் இலக்கணத்தை வகுக்கும் திறத்தினால் இதுவும் இலக்கண நூல்களோடு வைத்து எண்ணுவதற்குரியது. இலக்கணமும் மக்களுக்கு நன்மை செய்தாலும் அதனை விரும்பிப் படிப்பவர் இல்லை. சொற்பொருட் சுவை அமைந்த கவிதையை யாவரும் விரும்பிப் படிப்பார்கள். திருக்குறட்பாக்கள் நீதியைச் சொல்லுவதன்றிக் கவிச்சுவையும் பெற்று இனியனவாக அமைந்திருப்பதனால் அவற்றை மக்கள் விரும்பிப் படித்து உள்ளத்தில் தேக்கிக் கொண்டார்கள்.

"நின்றலர்ந்து தேன்பிலிற்றும் நீர்மையதாய்" (3)

"உள்ளுதொ றுள்ளுதொ றுள்ளம் உருக்குமே" (24)

"பாவிற் சிறந்தமுப் பால்பகரார்—நாவிற்கு
உயவில்லை சொற்சுவை ஓர்வில்லை" (39)

"சிந்தைக் கினிய செவிக்கினிய வாய்க்கினிய
வந்த இருவினைக்கு மாமருந்து" (51)

---

1. இங்கே காட்டியவை யாவும் திருவள்ளுவ மாலைப் பாடல்கள்.

"வள்ளுவர் பாட்டின் வளமுரைக்கின் வாய்மடுக்கும்
தெள்ளமுதின் தீஞ்சுவையும் ஒவ்வாதால்" (53)

என்ற திருவள்ளுவ மாலைப் பாடற் பகுதிகள் திருக்குறட்பாவின் இனிமையை எடுத்துச் சொல்வதைக் காண்க.

## சுட்டிய புலவர்

திருக்குறட்பாக்களை வெளிப்படையாகவும் குறிப்பாகவும் சுட்டிப் போந்த புலவர் பலர்.

"தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் பெருமழை என்றஅப்
பொய்யில் புலவன் பொருளுரை தேறாய்"[1]

என்று சீத்தலைச் சாத்தனார் ஒரு குறளைக் குறித்தார்.

"அன்ன நடையார் அலரேச ஆடவர்மேல்
மன்னும் மடலூரார் என்பதோர் வாசகமும்
தென்னுரையில் கேட்டறிவ துண்டு"

என்று பெரிய திருமடலில் திருமங்கை மன்னன் தென்னுரை என்று குறிப்ப[...]
திருக்குறளை என்றே தோன்றுகிறது.

"கடலன்ன காமம் உழந்தும் மடலேறாப்
பெண்ணிற் பெருந்தக்க தில்" (1137

என்னும் குறளை எண்ணிப் பாடியது இது.

சேரமான் பெருமான் நாயனார் திருக்கைலாய ஞான உலாவில்,

"கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே உளவென்று—பண்டையோர்
கட்டுரையை மேம்படுத்தாள்" (173-4

என்ற இடத்தில் ஒரு குறளையே (1101) எடுத்தாண்டு அதனை, 'பண்டையோர்
கட்டுரை' என்று குறித்தார்.

"இகழ்ச்சியிற் கெடு வார்களை எண்ணுக
மகிழ்ச்சி யுள்மனம் மைந்துறும் போதெனப்
புகழ்ச்சி நூலுட் புகன்றனர் பூவினுள்
திகழ்ச்சி சென்றசெம் பொன்முடி மைந்தனே" (சீவ. 5

என்பது சூளாமணி. இதில்,

"இகழ்ச்சியிற் கெட்டாரை யுள்ளுக தாம்தம்
மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து"

என்ற குறளைப் பதித்து, அதைக் கூறும் திருக்குறளை, 'புகழ்ச்சி நூல்' [...]
அதன் ஆசிரியர் குறித்தார்.

கம்பர் தாம் இயற்றிய ஏரெழுபதில்,

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாரும்
தொழுதுண்டு பின்செல்வார் என்றேஇத் தொல்லுலகில்
எழுதுண்ட மறையன்றோ"

'எழுதுண்ட மறை' என்று சிறப்பிக்கிறார். வடமொழி வேதம் எழுதாக் கிளவி, திருக்குறள் எழுதியமறை என்ற எண்ணம் கம்பருக்கு இருத்தல் இதனால் புலனாகிறது.

"சமயக் கணக்கர் மதிவழி கூறாது
உலகியல் கூறிப் பொருளிது என்ற
வள்ளுவன்"

என்று பொதுவாகத் திருக்குறளைப் பாராட்டினார் கல்லாடனார்.

## சொற்பொருள் ஆட்சி

திருக்குறளில் உள்ள சொல்லையும் பொருளையும் எடுத்தாண்ட புலவர் பலர். திருக்குறளுக்குப்பின் தோன்றிய தமிழ்ப் புலவர்கள் அனைவரும் இவ்வாறு செய்துள்ளனர் என்றே கூறலாம். ஓதாது உணர்ந்தவர் களென்று அன்பர்கள் பாராட்டும் திருஞானசம்பந்தர், நம்மாழ்வார் என்னும் பெரியோர்களும் இவ்வாறு செய்துள்ளனர். ஒவ்வோர் எடுத்துக்காட்டு வருமாறு:

"மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்" (3)

என்ற திருக்குறளின் சொல்லையும் பொருளையும்,

"...நினைவொடு பதுமகன் மலரது மருவிய
சிவனது சிவபுரம் நினைபவர் செழுநில னினில்நிலை பெறுவரே"[1]

என்று சம்பந்தப் பெருமான் ஆள்வர்.

"ஊரவர் கௌவை எருவாக அன்னைசொல்
நீராக நீளும்இந் நோய்" (1147)

என்னும் குறளிலுள்ள சொல்லையும் பொருளையும்,

"ஊரவர் கவ்வை எருவிட்டு அன்னைசொல் நீர்ப்படுத்து
ஈரநெல் வித்தி முளைத்த நெஞ்சப் பெருஞ்செய்யுள்"[2]

என்று நம்மாழ்வார் திருவாய்மொழியில் எடுத்தாண்டிருக்கிறார். இப்பதிப்பி லுள்ள ஒப்புமைப் பகுதிகளைப் பார்த்தால் திருக்குறள் எத்தனை புலவர் களுடைய நெஞ்சிற் புகுந்து கலந்து அவர்களுடைய திருவாக்கில் வேறு உருவில் புறப்பட்டு வந்துள்ளது என்ற உண்மை புலனாகும்.

## குறளைப் பதித்துவைத்த நூல்கள்

வேதத்திலுள்ள ஏதேனும் ஓர் அடியைச் செய்யுள்தோறும் ஈற்றில் அமைத்து இயற்றிய நூல் ஒன்று வடமொழியில் உண்டு. அதற்கு வேதபாத ஸ்தவம் என்று பெயர். அதுபோலத் தமிழ் மறையாகிய திருக்குறட் பா ளைப் பிற்பகுதியில் வைத்து, முற்பகுதியில் அதற்கு விளக்கமாக வர றுகளைக் கூறும் செய்யுட்களையுடைய நூல்கள் பல தமிழில் உண்டு. இது ம் திருக்குறளின் தனிச் சிறப்பை வெளிப்படுத்தும். அவ்வாறு அமைந்த நூல்கள் வருமாறு:

1. முதல் திருமுறை, சிவபுரம். 2. திருவாய். 5. 3; 4.

(1) தினேந்திர வெண்பா: இதில் 1330 வெண்பாக்கள் உண்டென்று சொல்வர்.[1]

(2) இரங்கேச வெண்பா: பிறைசைச் சாந்த கவிராயர் இயற்றியது: இதில் 133 வெண்பாக்கள் உள்ளன; இதற்கு நீதி சூடாமணி என்றும் பெயர் உண்டு.

(3) தினகர வெண்பா: அதிகாரத்துக்கு ஒரு குறளாக எடுத்து அமைத்த வெண்பாக்களை உடையது; 16-ஆம் நூற்றாண்டின் இறுதியில் எழுந்தது.

(4) வடமலை வெண்பா: பாகை அழகப்பன் என்னும் புலவர் இயற்றியது; 133 வெண்பாக்களை உடையது.

(5) திருமலை வெண்பா: 133 வெண்பாக்களை உடையது.

(6) முதுமொழிமேல் வைப்பு: வெண்பா நூல்.

(7) திருப்புல்லாணி மாலை: 133 கட்டளைக் கலித்துறையாலானது.

(8) பழைய விருத்த நூல் ஒன்று: 133 பாடல்களை உடையது.[2]

(9) சோமேசர் முதுமொழி வெண்பா: சிவஞான சுவாமிகள் இயற்றியது; 133 வெண்பாக்களை உடையது.

(10) திருத்தொண்டர் மாலை: திருத்தொண்டர் வெண்பா என்றும் சொல்லப் பெறும்; குமாரபாரதி என்பவர் இயற்றியது; 100 வெண்பாக்களை உடையது.

(11) சிவசிவ வெண்பா: 18-ஆம் நூற்றாண்டில் சென்ன மல்லையர் என்பவரால் இயற்றப் பெற்றது; 133 வெண்பாக்களை உடையது.

(12) வள்ளுவர் நேரிசை: அரசஞ் சண்முகனர் இயற்றியது; வெண்பாக்களால் ஆனது. (19-ஆம் நூற்றாண்டு.)

(13) முருகேசர் முதுநெறி வெண்பா: சிதம்பரம் ஈசானிய மடத்து இராமலிங்க சுவாமிகள் 19-ஆம் நூற்றாண்டில் இயற்றியது; 133 வெண்பாக்களை உடையது.

(14) திருக்குறட் குமரேசவெண்பா: திரு ஜகவீர பாண்டியனர் இயற்றியது; 1330 வெண்பாக்களை உடையது.

## பல உரைகள்

திருக்குறளுக்குப் பல உரைகள் அமைந்திருப்பதும் அதன் பெருமையைக் காட்டும் அடையாளங்களில் ஒன்று. வேறு எந்த நூலுக்கும் இத்தனை உரைகள் தோன்றவில்லை. பரிமேலழகருக்கு முன்பு ஒன்பது உரைகள் தோன்றின என்றும், பரிமேலழகர் உரையோடு பத்து உரைகள் புலவர்களால் கணக்கிடப் பெற்றன என்றும் தெரியவருகிறது.

" தருமர் மணக்குடவர் தாமத்தர் நச்சர்
பரிமே லழகர் பருதி—திருமலையர்
மல்லர் பரிப்பெருமாள் காளிங்கர் வள்ளுவர்நூற்
கெல்லையுரை கண்டார் இவர் "

என்ற தனிப்பாடலில் பத்து உரையாசிரியர்களின் பெயர்கள் உள்ள[ன]. இவர்களில் ஏனைய ஒன்பதின்மரும் பரிமேலழகருக்கு முந்தி உ[ரை] செய்தவர்கள் என்பதை,

1. சிவசிவ வெண்பா, டாக்டர் ஐயரவர்கள் முகவுரை.
2. தினகர வெண்பா, எஸ். வையாபுரிப்பிள்ளை முகவுரை.

"திருத்திய தமிழில் தெய்வப் புலமை
அருந்திறல் வள்ளுவன் ஆய்ந்துதன் வாக்கால்
அறம்பொருள் இன்பம் வீடென நான்கின்
திறந்தெரிந் துரைத்த செவ்விமுப் பாலுக்
கோருரை இன்றி ஒன்பது சென்றும்
ஐயுற வாக கையுறு காலை"[1]

என்ற பரிமேலழகர் உரைச்சிறப்புப் பாயிரச் செய்யுளால் அறியலாம்.

மேலே சொன்ன பத்து உரைகளில் இப்போது கிடைப்பவை, மணக்குடவர், பருதி, பரிப்பெருமாள், காளிங்கர், பரிமேலழகர் என்னும் ஐவர் எழுதியவையே. இந்தப் பத்து உரைகளை யன்றி முற்காலத்தில் எழுந்த உரைகள் வேறு சிலவும் உண்டு. இக்காலத்தில் எழுந்த உரைகளோ பல.

## மொழி பெயர்ப்பு

பல மொழிகளில் மொழி பெயர்க்கப்பெற்ற பெருமையை உடையது திருக்குறள். பாரத நாட்டில் எழுந்த நூல்களில் பகவத்கீதைக்கு அடுத்த படியாக இதுவே பன்மொழிகளிலும் ஏறியிருக்கும் சிறப்புடையதென்று சொல்லலாம். லத்தீன் மொழியில் பெஸ்கிப் பாதிரியாரும்(Father Beschi), டாக்டர் கிரேளலும் (Dr. Graul) மொழி பெயர்த்துள்ளனர். ஜர்மன் மொழியில் ஏ. எப். காம்மர்ஸ் (A. F. Cammers) என்பவரும், ப்ரீட்ரிக் ருகர்ட் (Friedrich Ruckert) என்பவரும், டாக்டர் கிரேளலும் பெயர்த்திருக்கின்றனர். பிரெஞ்சுமொழியில் இ. ஏரியல் (E. Ariel) என்பவரும், டி டூமாஸ் (P. G. de Dumast) என்பவரும், எம். லெமரேஸ் என்பவரும், லூயி ஜெகோலியா (Louis Jacolliot) என்பவரும், பொண்டேனே (G. de Barrigue de Fontainieu) என்பவரும் பல பகுதிகளை மொழி பெயர்த்துள்ளனர்.

வடமொழியில் அப்பா தீட்சிதர் என்பவர் நீதி குசும மாலா என்ற பெயரில் மொழி பெயர்த்தார். ஹிந்தியிலும் தெலுங்கிலும் கன்னடத்திலும் மலையாளத்திலும் இந்நூலின் மொழி பெயர்ப்புகள் வந்துள்ளன.

ஆங்கிலத்தில் ஜி. யூ. போப்பின் (G. U. Pope) மொழி பெயர்ப்புப் பழமையானது. ஆங்கிலத்தில் திருக்குறள் முழுமையும் மொழி பெயர்த்தவர்களும், சில சில பகுதிகளை மொழி பெயர்த்தவர்களும் பலர். கிண்டர்ஸ்லி (Kindersley), எல்லிஸ் (F. W. Ellis), ட்ரூ (W. H. Drew), கவர் (C. E. Gover), ராபின்ஸன் (E. G. Robinson), லாசரஸ் (Rev. G. Lazarus), ஸ்காட் (T. M. Scott), பாப்லி (H. A. Popley) என்னும் மேனாட்டு அறிஞர்களும், ஸ்ரீ வி. கிருஷ்ணமாசாரியார், ஸ்ரீமதி திருநாவுக்கரசு, ஸ்ரீ ராஜாஜி ஸ்ரீ திருவாசகமணி கே. எம். சுப்பிரமணியம் முதலிய தமிழ்நாட்டு அறிஞர்களும் இத்துறையில் தொண்டாற்றியிருக்கின்றனர்.

இவற்றை யன்றி ஆங்கிலத்திலும் தமிழிலும் திருக்குறளைப் பற்றிய ஆராய்ச்சி நூல்கள் வந்து கொண்டே இருக்கின்றன. திருக்குறட் பதிப்புகள், திருக்குறள் உரைகள், திருக்குறள் வழி நூல்கள், திருக்குறள் மொழி பெயர்ப்புகள், திருக்குறள் ஆராய்ச்சிகள், திருக்குறள் உதாரணக் கதைகள் என்று திருக்குறள் தோன்றியதன் விளைவாக எழுந்த இலக்கியப்

1. பெருந்தொகை, 1543.

படைப்புகளுக்கு அளவே இல்லை. இத்தகைய பெருமை தமிழில் வேறு எந்த நூலுக்கும் அமையவில்லை என்பதை எண்ணுகையில், திருக்குறள் தனிச் சிறப்புள்ள நூல் என்று உறுதியாகப் பாராட்டலாம் அல்லவா?

## மூன்றில் நான்கு

திருக்குறள் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்னும் மூன்று பிரிவுகளை உடையது. மூன்று பாலாக இருந்தாலும் இந்த மூன்றிலும் அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்கு உறுதிப்பொருள் களையும் திருவள்ளுவர் கூறியுள்ளார். பரிமேலழகர்,

> 'மாந்தர்க்கு உறுதியென உயர்ந்தோரான் எடுக்கப்பட்ட பொருள் நான்கு. அவை அறம், பொருள், இன்பம், வீடு என்பன. அவற்றுள் வீடு என்பது சிந்தையும் மொழியும் செல்லா நிலைமைத்து ஆகலின், துறவறமாகிய காரண வகையால் கூறப்படுவதல்லது இலக்கண வகையால் கூறப் படாமையின், நூல்களால் கூறப்படுவன ஏனை மூன்றுமேயாம்'

என்று கூறுங்கால் வீட்டைத் துறவறமாகிய காரணவகையால் கூறினர் என்று குறிப்பித்தார். இவ்வாறே நச்சினார்க்கினியரும் தொல்காப்பிய உரையில்,

> 'வள்ளுவனாரும் முப்பாலாகக் கூறி, மெய்யுணர்தலான் வீடு பேற்றிற்கு நிமித்தம் கூறினர்'

என்று எழுதினர். திருவள்ளுவ மாலையில் திருவள்ளுவர் நாற்பொருளையும் பற்றிக் கூறியுள்ளார் என்ற செய்தியைப் பல பாடல்களில் காணலாம்.

" அறம்பொருள் இன்பம்வீ டென்னும்அந் நான்கின்
திறம்தெரிந்து செப்பிய தேவை" (8)

" முப்பாலின் நாற்பால் மொழிந்தவர்" (19)

" பேறலரிய, நாலும் மொழிந்தபெரு நாவலரே" (22)

" இன்பம் பொருள்அறம் வீடென்னும் இந்நான்கும்
முன்பறியச் சொன்ன முதுமொழிநூல்" (33)

" அறம்முதல் நான்கும் அகலிடத்தோர் எல்லாம்
திறமுறத் தேர்ந்து தெளிய" (38)

" மும்மையின், வீடவற்றின் நான்கின்
விதிவழங்க வள்ளுவனார் பாடினார்" (40)

" தருமம் முதல்நான்கும் சாலும்" (44)

" அறன்அறிந்தேம் ஆன்ற பொருள்அறிந்தேம் இன்பின்
திறன்அறிந்தேம் வீடு தெளிந்தேம்." (50)

பரிமேலழகர் உரையைப் பாராட்டும் பாடல்களாக உள்ள சிலவற்றிலும் இந்தக் கருத்தைக் காணலாம்.

" அருந்திறல் வள்ளுவன் ஆய்ந்துதன் வாக்கால்
அறம்பொருள் இன்பம் வீடென நான்கின்
திறம்தெரிந் துரைத்த செவ்விழுப் பாலுக்கு"[1]

" விரைத்தார் அலங்கல் திருவள் ளுவர்முனம் வெண்குறட்பா
நிரைத்தார் மிகுபொருள் நான்கும் விளங்க."[2]

1. பெருந்தொகை, 1543. 2. ஷ 1547.

## அதிகாரமும் பாடல்களும்

மூன்று பால்களிலும் உள்ள அதிகாரத் தொகை, நூற்று முப்பத்து மூன்று.

" ஐயாறும் நூறும் அதிகாரம் மூன்றுமாம் " (28)

என்ற திருவள்ளுவ மாலைப் பாட்டு, இதில் நூற்றுமுப்பத்து மூன்று பிரிவுகள் உண்டென்பதையும், அவை அதிகாரம் என்னும் பெயர் பெறும் என்பதையும் குறிப்பிக்கின்றது.

இந்த நூற்று முப்பத்து மூன்று அதிகாரங்களில் அறத்துப் பாலைச் சேர்ந்தன - 38; பொருட்பாலுக்கு உரியன - 70; காமத்துப் பாலைச் சேர்ந்தன - 25. இந்தக் கணக்கையும் திருவள்ளுவ மாலைச் செய்யுள் ஒன்று கூறுகிறது.

" அறம்முப்பத் தெட்டுப் பொருள்எழுப தின்பத்
திறம்இருபத் தைந்தால் தெளிய." (37)

குறட்பாக்களின் தொகை 1330 என்பதை,

" ஆயிரத்து முந்நூற்று முப்ப தருங்குறளும் " (16)

என்ற பாடலும்,

" எப்பாலும் ஏத்துவாம் இன்பம் பொருள்அறமாம்
முப்பாலும் ஆயிரத்து முந்நூற்று - முப்பதா
ஓரடி முக்கால் உரைத்ததிரு வள்ளுவனார்
ஈரடி முக்காலு மே "[1]

என்ற தனிப் பாடலும் உரைக்கின்றன.

## இயல்கள்

ஒவ்வொரு பாலும் பல இயல்களாகப் பிரிக்கப்பெற்றுள்ளன. இந்த இயல்களின் பெயர்கள், தொகை ஆகியவை பலபடியாக வழங்கி வந்தன என்று தெரிகிறது.

பாயிரம் - 4; அறம் - 33; ஊழ் - 1; பொருள் - 70; இன்பம் - 25 என்பது ஒரு வகை.

" வீடொன்று பாயிரம் நான்கு விளங்கறம்
நாடிய முப்பத்து மூன்றொன்றூழ் — கூடுபொருள்
எள்ளில் எழுப திருபதிற் றைந்தின்பம்
வள்ளுவர் சொன்ன வகை." [2]

எனவே அறத்துப்பாலில் பாயிரம், அறம், ஊழ் என்ற மூன்று பிரிவு இருப்பதாகத் தெரிகிறது.

ஒவ்வொரு பாலிலும் உள்ள இயல்களின் வகையைத் தொகுத்து ஒரு பாடல் சொல்கிறது.

---

1. பெருந்தொகை, 200.
2. திருவள்ளுவ மாலை 20.

" அறம்நான் கறிபொருள் ஏழ்ஒன்று காமத்
திறம்மூன் றெனப்பகுதி செய்து." (22)

இதன் விரிவைத் தனித்தனியே ஒவ்வொரு பாலுக்கும் ஒவ்வொரு பாடலாக மூன்று பாடல்கள் கூறுகின்றன.

மேலே சொன்ன அறத்துப்பாலுக்குரிய நான்கு இயல்களாவன: (1) பாயிரம் - *4*; (2) இல்லறவியல் - *20*; *(3)* துறவற இயல் - *13*; (4) ஊழ் – *1*.

பரிமேலழகரும் இவ்வாறே கூறுவர். அவர் துறவறவியலை விரதம், ஞானம் என்று இரண்டு கூறாகப் பிரித்துக் கூறுவர்.

பொருட்பாலின் இயல்கள் ஏழு; அவற்றிற்கு வகை: *(1)* அரசியல் - *25*; *(2)* அமைச்சியல் - *10*; (3) அரண் இயல் - *2*; *(4)* கூழ் இயல் - *1*; *(5)* படை இயல் – *2*; (6) நட்பியல் - *17*; *(7)* குடி இயல் - *13*.

" அரசியல் ஐயைந் தமைச்சியல் ஈரைந்
துருவல் அரண்இரண் டொன்றொண் கூழ்—இருவியல்
திண்படை நட்புப் பதினேழ் குடிபதின்மூன்
றெண்பொருள் ஏழாம் இவை." (26)

பரிமேலழகர் பொருட்பாலை மூன்று இயல்களாகப் பகுத்தார். அவை அரசியல் – *25*; அங்க இயல் - *32*; ஒழிபியல் - *13*.

காமத்துப்பாலை மூன்று பகுதியாக்கிக் கூறுகிறது திருவள்ளுவ மாலைப் பாட்டு ஒன்று. அதன்படி ஆண்பாற் கூற்றியல் - *7*; பெண்பாற் கூற்றியல் - *12*; இருபாற் கூற்றியல் – *6*.

" ஆண்பால்ஏழ் ஆறிரண்டு பெண்பால் அடுத்தன்பு
பூண்பால் இருபால்ஓ ராருக—மாண்பாய
காமத்தின் பக்கமொரு மூன்றாகக் கட்டுரைத்தார்
நாமத்தின் வள்ளுவனார் நன்கு." (27)

பரிமேலழகர் களவியல், கற்பியல் என்று இருகூறாக்கி அவற்றிற்கு முறையே ஏழும் பதினெட்டுமாகிய அதிகாரங்களை அமைத்தார். அவருடைய உரையின்படி தலைவன் கூற்றாக வருவன மூன்று அதிகாரங்கள் (109, *111*, *112*); தலைவி கூற்றாக வருவன ஒன்பது அதிகாரங்கள் (*117*, *118*, *119*, *120*, *122*, *123*, *124*, *125*, *126*); தலைவன் கூற்றும் தலைவி கூற்றும் கலந்து வருவன ஒன்பது அதிகாரங்கள் (*113*, *114*, *121*, *127*, *129*, *130*, *131*, *132*, *133*); தலைவன் கூற்றும் தோழி கூற்றும் வரும் அதிகாரம் ஒன்று *(110)*; தலைவி கூற்றும் தோழி கூற்றும் வருவது ஒன்று *(116)*; தலைவன், தலைவி, தோழி என்னும் மூவர் கூற்றும் வருவன இரண்டு (*115*, *128*).

மேலே சொன்ன இயல் வரையறைகளில் பிற உரையாசிரியர்கள் சிறிது சிறிது வேறுபடுகின்றனர்.

இந்த அமைப்புக்களைப் பார்க்கும்போது பால்களின் தொகை, அதிகாரங்களின் தொகை, பாடல்களின் தொகை ஆகியவற்றில் வேறுபாடு இல்லாமல் இருப்பினும், இயல் அமைக்கும் திறத்தில் பரிமேலழகர் பொருளடைவு கருதித் தாமாகவே ஒரு வரையறையைச் செய்துகொண்டார் என்றே தோன்றுகிறது. திருவள்ளுவர், அதிகாரங்களின் பெயர்களை மட்டும் குறிப்பிட்டிருக்க வேண்டும் என்றும், இயல்களின் வரையறை அவர் செய்தன அல்ல என்றும் புலனாகிறது.

## பத்துக் குறள்

ஒவ்வோர் அதிகாரத்துக்கும் பத்துப் பத்துக் குறளாக அமைத்து இந் நூலை இயற்றி யிருக்கிறார் திருவள்ளுவர். இத்தகைய வரையறையை நாலடியார், முதுமொழிக் காஞ்சி என்னும் இரண்டு நீதி நூல்களில் காணலாம்; நாலடியாரில் இந்த வரையறையைப் பின் வந்தவர்கள் செய்தார்கள் என்று தெரியவருகிறது.

ஒரு பொருளைக் குறித்துப் பத்துப் பாடல்களைப் பாடுவது இலக்கியங்களில் தொன்று தொட்டு வந்த மரபே ஆகும். சங்கநூல் வரிசைகளில் ஒன்றாகிய பத்துப்பாட்டு, பத்து நெடும் பாடல்கள் அமைந்த தொகுதி. அடுத்த வரிசை யாகிய எட்டுத்தொகையில் பதிற்றுப் பத்து என்பது பப்பத்துப் பாடல்கள் அமைந்த பத்துப் பகுதிகளை உடையது. திவ்யப்பிரபந்தத்திலும் சைவத் திரு முறைகளிலும் உள்ள பத்துக்களும் திருப்பதிகங்களும் பத்துப் பத்துப் பாடல் களைக் கொண்டுள்ளன; திருக்கடைக் காப்பாக வரும் பாடல் பதிகத்தின் புற வுறுப்பாகக் கொள்வதற்குரியது. பிற்காலப் பிரபந்த வகைகளில் ஒரு பா ஒருப∴து, பதிகம் என்பன பத்துப் பாடல்களைக் கொண்டு நடப்பவை.

பத்து என்ற தொகை இயற்கையாக எண்ணில் அமைந்த ஒரு பிரிவு. ஒன்று, பத்து, நூறு, ஆயிரம் என்று பத்தின் உறழ்ச்சியாக எண்ணுவதும், இக்காலத்தில் உலகில் பல இடங்களில் எல்லாவகை அளவுகளும் தசாம்சம் (Decimal) என்னும் முறையில் அமைவதும் இங்கே நினைவு கூர்தற்குரியன. மனிதன் எண்ணிப் பார்ப்பதற்குக் கருவியாக இருப்பவை கை விரல்கள். அவை இயல்பாகவே பத்தாக இருப்பதால், பத்து என்ற தொகை எண்ணும் போது வாய்ப்பாக அமைந்திருக்கிறது.

ஒவ்வோர் அதிகாரத்திலும் குறட்பாக்கள் அமைந்திருக்கும் வைப்பு முறையில் உரையாசிரியர்கள் வேறுபடுகின்றனர். தாம் கூறும் பொருள் தொடர்புக்கு ஏற்ற வகையில் அவற்றை ஒழுங்குபடுத்திக் கொண்டார்கள் போலும்!

திருவள்ளுவர் ஒரு பொருளை வற்புறுத்தப் பத்துக் குறளை ஆண்டார். இந்த வரையறையை வைத்துக்கொண்டதனால் சில அதிகாரங்களில் உள்ள பாடல்கள் மிகச் செறிவாகவும், சிலவற்றில் உள்ள பாடல்கள் நெகிழ்ச்சியாக வும் இருக்கின்றன என்று ஆராய்ச்சியாளர் கருதுவர்.

ஒரு கருத்தை உடம்பாட்டு முகத்தாலும் எதிர்மறை முகத்தாலும் வற் புறுத்தும் இயல்புடைய இவ்வாசிரியர் ஒரே அதிகாரத்தில் அவ்விருவகை அமைதியையுடைய குறள்களையும் பாடியுள்ளார். பொருள் விரிவுடையதானல் அவற்றை வெவ்வேறு அதிகாரமாக வைத்திருக்கிறார்; கல்வி, கல்லாமை என்பன போன்றவற்றைக் காண்க.

## குறள் யாப்பு

வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா என்னும் நால்வகைப் பாக் களிலும் முதலில் நிற்பது வெண்பா. பிற தளை விரவாமல் இருத்தலினால் அது தலைமை பெற்றது என்பர். வெண்பா வகையில் முன்னே நிற்பது குறள் வெண்பா. நூற்பா அல்லது சூத்திர யாப்புக்கு அடுத்தபடி சுருங்கிய வடி வத்தில் அமைந்தது அது. முதலடி நான்கு சீரும், இரண்டாம் அடி மூன்று

சீரும் அமைந்தமையின் இப்பாவை ஓரடி முக்கால்[1] என்று சொல்வதுண்டு. நூற்பாவைப் போலத் திட்பமும் நுட்பமும் செறிந்திருந்தால்தான் குறட்பா அமைவுடையதாக இருக்கும். அடியளவும் சீரளவும் மட்டும் பொருந்த அமைத்தல் போதாது.

இலக்கண நூல்களை நூற்பாவாகிய சுருங்கிய உருவத்தில் செறிவுபெற அமைத்தனர் ஆசிரியர்கள். வாழ்க்கைக்கு இலக்கணம் கூறும் முப்பாலைத் திருவள்ளுவர் சுருங்கிய உருவமுடைய குறட்பாவினுல் அமைத்தது பொருத்த மாக இருக்கிறது. பழங்காலத்தில் சில இலக்கண நூல்கள் குறட்பாவினுல் அமைந்திருத்தல் கூடும் என்று தோன்றுகிறது. யாப்பருங்கல விருத்தியுரையில் அவ்வுரையாசிரியர் மேற்கோளாகக் காட்டும் இலக்கணச் சூத்திரங்கள் பல குறட்பாக்களாகவே உள்ளன. சில உதாரணங்கள் வருமாறு:

"வணக்கம் அதிகாரம் என்றிரண்டும் சொல்லச்
சிறப்பென்னும் பாயிரம் ஆம்"[2]

"பால வழள இடையினம் என்ன
"மரபு பிழையாத வைப்பு"[3]

"திரண்டியற்சீர் பத்திற்கு நான்காம் நிலைமை
இரண்டாதி ஐந்தி றெழுத்து"[4]

"முக்கால் விரல்சாண் இரண்டுகை நான்குகோல்
ஐந்நூறு கூப்பீ டளவு."[5]

இவை யாப்பிலக்கணம், நீட்டலளவை இலக்கணம் முதலிய இலக்கணத் தைச் சார்ந்த சூத்திரங்களென்று தெரியவருகின்றன.

இப்படியே கூத்தின் இலக்கணத்தைச் சொல்லும் குறள் வெண்பாக்கள் சில மேற்கோளாக வருகின்றன.

"அல்லியம் மாயவன் ஆடல் அதற்குறுப்புச்
சொல்லினரா ருகத் துணிந்து"[6]

என்பனபோல் வருவன அவை. இச் சூத்திரங்களையே சிலப்பதிகார உரையில் அடியார்க்கு நல்லாரும் காட்டியுள்ளார்.[7]

புகை, விரை என்பன இன்னவென்று கூறும் குறள்வெண்பாக்களைக் காட்டுகிறார், அரும்பதவுரைகாரர்.[8]

"அஞ்சனக் கட்டி அரியாசம் பச்சிலை
ஆரம் அகிலுறுப்போ ரைந்து."

"கொட்டம் துருக்கம் தகரம் அகில்ஆரம்
ஒட்டிய ஐந்தும் விரை."

இவை குறள் வெண்பாக்களால் அமைந்த பழைய நூல்களிலிருந்து எடுத்துக் காட்டினவை என்று தோன்றுகின்றன. ஆனல் இவற்றைக் காட்டின உரையாசிரியர்கள், நூல்களின் பெயரைக் குறிப்பிடவில்லை.

---

1. "ஓரடி முக்கால் உரைத்ததிரு வள்ளுவனர்." (பெருந். 2000.)
2. யாப்பருங்கலவிருத்தி, பவானந்தம் பிள்ளை பதிப்பு, ப. 11.
3. ஷை. ப. 51.
4. ஷை. ப. 432. 5. ஷை. ப. 474. 6. ஷை. ப. 539.
7. சிலப். 3 : 14, உரை. 8. சிலப். 5 : 14, அரும்பதவுரை.

இவற்றையன்றி யாப்பருங்கல விருத்தியுரையில் வேறு பல குறள் வெண்பாக்கள் மேற்கோளாகக் காட்டப்பெற்றுள்ளன.

"ஏஎர் சிதைய அழாஅலே லாஅய்மின்
சேஎயரி சிந்தின கண்" [1]

என்பது போன்ற அகத்துறைப் பாடல்களும்,

"எஃஃ கிலங்கிய கையராய் இன்னுயிர்
வெஃஃகு வார்க்கில்லை வீடு" [2]

என்பது போன்ற பிற பாடல்களும் ஐம்பதுக்குமேல் உள்ளன. இவற்றில் சில, பழங்காலத்து உரையாசிரியர்கள் இலக்கணத்தை விளக்கத் தாமே அமைத்துக்கொண்ட உதாரணப் பாடல்கள் என்று கொண்டாலும், சில வேனும் வேறு நூல்களிலிருந்து எடுத்தவையாக இருக்கலாம்.

இவற்றால் பழங்காலத்தில் இலக்கண இலக்கிய நூல்கள் சில குறள் உருவத்தில் இருந்தன என்றே கொள்ள இடமுண்டு.

இப்போது குறட்பாவால் ஆகிய நூல்கள் சில வழக்கில் இருக்கின்றன.

1. அருங்கலச் செப்பு: சமந்த பத்திராசாரியார் என்னும் சைனப் பெரியார் இயற்றிய இரத்தின கரண்டகம் என்னும் நூலின் வழிநூலாக, இல்லறத்தாருக்குரிய ஒழுக்கங்களைக் கூறுவது; ஆசிரியர் பெயர் தெரியவில்லை. 181 குறட்பாக்கள் அடங்கிய நூல் இது. இந் நூலின் 178-ஆம் பாடலாக,

"காமம் வெகுளி மயக்கம் இவைமூன்றன்
நாமம் கெடக்கெடும் நோய்" (360)

என்னும் குறள் அமைந்திருக்கிறது.

2. திருவருட் பயன்: சித்தாந்த சாத்திரம் பதினான்கில் ஒன்று; கி. பி. பதினான்காம் நூற்றாண்டில் இருந்த உமாபதி சிவாசாரியார் இயற்றியது; இது காப்புடன் 101 குறள் வெண்பாக்களால் அமைந்தது.

3. சைவ சமய நெறி: சிதம்பரம் மறைஞான சம்பந்த நாயனார் இயற்றியது; 727 குறட்பாக்களால் ஆனது.

4. சித்தாந்த தரிசனம்: சிவஞான வள்ளலார் இயற்றிய இருபத்துநான்கு நூல்களுள் ஒன்று; 378 குறட்பாக்களால் அமைந்தது.

5. ஔவை குறள்: ஔவையார் பாடியதாக வழங்குவது; யோகத்தைப் பற்றிய கருத்துக்களைக் கூறுவது.

இவை பிற்காலத்தன. இவ்வளவு நூல்கள் முற்காலத்தும் பிற்காலத்தும் குறட்பாவால் அமைந்திருப்பினும் அவற்றில் ஒன்றேனும் திருக்குறளோடு ஒப்ப நிற்கும் சிறப்புடையது அல்ல.

திருக்குறளில் காணும் மூன்று பால்களில் ஒவ்வொன்றைப்பற்றியும் தனித்தனி நூல்கள் வடமொழியில் பல உண்டு. அறத்தைப் பற்றிய நூலைத்

---

1. யா. வி. ப. 33
2. ஷை. ப. 38; இச் செய்யுள் பிற இலக்கண உரைகளிலும் காட்டப் பெற்றுள்ளது.

தர்ம சாஸ்திரமென்றும், பொருளைப் பற்றிய நூலை அர்த்த சாஸ்திர மென்றும், இன்பம் பற்றிய நூலைக் காம சாஸ்திரம் என்றும் கூறுவர். அவ்வந்நூல்களில் கூறப்பெறும் பொருள்களை ஆசிரியர்கள் பல கூறுபடுத்திச் சொல்லி யிருக்கிறார்கள். திருவள்ளுவர் வகுத்திருக்கும் அதிகார அடைவு வேறு எந்த நூலிலும் காணப்படவில்லை.[1] ஆதலின் பொருட்கூறுபாட்டையும், அதிகார அடைவையும் தாமே சிந்தித்துத் திருவள்ளுவர் அமைத்துக் கொண்டிருக்கிறார் என்று புலனாகிறது. இத்தனை பொருள்களையும் ஒரு சேரச் சிந்தித்து அடைவுபடுத்தி ஒழுங்காக அமைத்து இந்த அழகிய உருவத்தில் தரும் ஆற்றல் மிகமிக அருமையானது; செயற்கரிய செயல் இது என்பதில் சிறிதும் ஐயம் இல்லை.

1. பிற்காலத்தில் தொகுக்கப்பெற்ற புறத்திரட்டில், பெரும்பாலும் திருக்குறளைப் பின்பற்றியே அதிகாரப் பிரிவு அமைந்திருக்கிறது.

# 2. உள்ளுறை

## பாயிரம்

இனி, திருக்குறளின் உள்ளுறையைப் பார்க்கலாம்.

அறத்துப்பாலின் முதற்பகுதி பாயிரம். இது கடவுள் வாழ்த்து, வான் சிறப்பு, நீத்தார் பெருமை, அறன் வலியுறுத்தல் என்ற நான்கு அதிகாரங்களை உடையது.* இவை போற்றுதற்குரிய நான்கு பொருள்களின் சிறப்பை எடுத்துரைப்பவை. அருகசரணம், சித்தசரணம், சாதுசரணம், தர்மசரணம் என்ற நான்குவகை வணக்கமாக இவற்றைக் கொள்ளவேண்டுமென்று சைன சமயப் புலவர்கள் கருதுவார்கள். தொல்காப்பியத்தில் சொல்லப் பெற்ற கடவுள் வாழ்த்தும், அதனோடு ஒத்து எண்ணப்பெறும் கந்தழி, கொடிநிலை, வள்ளி என்னும் வாழ்த்து முறைகளும் இந்நான்கிலும் உள்ளுறையாக அமைந்துள்ளன என்று சிலர் கொள்வர்.

இந்த நான்கும் நூல் முழுவதுக்கும் பொதுவாக அமைந்த பகுதி என்று தோன்றுகிறது. கடவுளும், அவனால் உலகம் வளம் பெற வழங்கப்பெறும் மழையும், தம் நலம் பேணாது பிறர் நலமே குறிக்கொண்டு வாழ்ந்து இறைவனை நினைப்பூட்டும் நீத்தாரும், நான்கு உறுதிப் பொருளிலும் மூலகாரணமான அறமும் எந்த நிலையினராலும் போற்றப் பெறும் தன்மையுடைமையின் இந்த நான்கின் சிறப்புக்களைக் கூறும் அதிகாரங்களை முன் வைத்தார்.

பாயிரம் திருவள்ளுவர் வாக்கன்று என்று சிலர் கூறுவர். "ஆயிரத்து முந்நூற்று முப்ப தருங்குறளும், பாயிரத்தி னோடு பகர்ந்ததற்பின்" என்ற திருவள்ளுவ மாலைப் பாட்டு, பாயிரத்தை எடுத்துக் கூறுவதோடு திருக்குறட் பாக்களின் தொகையையும் வரையறுக்கிறது. பாயிரம் இல்லையேல் இப் பாட்டுப் பொருளற்றதாகிவிடும்.

## கடவுள் வாழ்த்து

அறத்துப்பாலில் தனிமனிதனுடைய ஒழுக்கத்தையும், பொருட்பாலில் சமுதாயத்தின் ஒழுக்கத்தையும், காமத்துப்பாலில் காதலர்களின் ஒழுக்கத்தையும் விரித்துரைக்கப் புகுந்த வள்ளுவர், எந்த நிலையிலுள்ளவர்க்கும் இன்றியமையாத ஒழுக்கம் கடவுளை வழிபடுவதாதலின் அதனை முதலில் சொன்னார். கடவுள் வாழ்த்தின் முன்னுரையில், 'அஃதாவது, கவி தான் வழிபடும் கடவுளையாதல், எடுத்துக்கொண்ட பொருட்கு ஏற்புடைக் கடவுளை யாதல் வாழ்த்துதல்; அவற்றுள் இவ்வாழ்த்து ஏற்புடைக் கடவுளை என உணர்க' என்று பரிமேலழகர் எழுதினார். அது பொருத்தமாகத் தோன்றவில்லை. இது நூலுக்குரிய காப்புப்போல நூலுக்குப் புறவுறுப்பாக இருப்பதன்று; நூலின் முதலுறுப்பாக விளங்குவது இது. மக்களாகப் பிறந்தவர்கள் கடவுளை மனமொழி மெய்களால் வழிபடுவது இன்றியமையாதது என்பதை வற்புறுத்த வந்தது இவ்வதிகாரம்.

> " தனக்குவமை யில்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
> மனக்கவலை மாற்றல் அரிது " (7)

என்பதனால் மனத்தால் நினைப்பதையும்,

> " இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
> பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு " (5)

என்பதனால் மொழியால் புகழ்தலையும்,

> " கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான்
> தாளை வணங்காத் தலை " (9)

என்பதனால் உடம்பால் வணங்குதலையும் எடுத்துரைத்தார். மூன்று கரணங்களினும் மனிதனுக்கு வாய் சிறத்தலின் அச் சிறப்புப்பற்றி அதற்குரிய செயலால் 'கடவுள் வாழ்த்து' என்று பெயர் வைத்தார்.

இவ்வதிகாரத்தில் எவ்வகைச் சமயத்தோரும் வணங்கும் கடவுளை அனைவருக்கும் ஏற்புடைய பெயர்களால் கடவுளை உணர்த்துகிறார். அறவாழி அந்தணன், ஆதிபகவன், இறைவன், எண் குணத்தான், தனக்குவமை இல்லாதான், பொறிவாயில் ஐந்து அவித்தான், மலர்மிசை ஏகினான், வாலறிவன், வேண்டுதல் வேண்டாமை இலான் என்பன அவர் கூறும் பெயர்கள்.

இறைவன் எல்லாவற்றிற்கும் முதல்வனானவன்; அவனைத் தொழுவதே கற்றதற்குப் பயன்; அவனை வழிபடுபவர் வீடு பெறுவர்; அவன் அடியைப் பற்றினவர்களுக்குத் துன்பங்கள் இல்லை; அவர்களை இருவினைகள் சார்ந்து நலிவைத் தரா; அவர் இடையீடில்லாத இன்பவாழ்வைப் பெறுவர்; மனக்கவலையின்றி இருப்பர்; பொருள் இன்பம் என்பவற்றில் அமிழாது அவற்றைக் கடப்பர்; அவன் தாளைத் தலையால் வணங்கவேண்டும்; அவன் அடியைச் சேர்ந்தார் பிறவிப் பெருங்கடலைக் கடப்பர்—என்ற கருத்துக்களை இவ்வதிகாரத்தில் சொல்லுகிறார்.

இறைவனுக்கு உருவம் உண்டென்பது வள்ளுவருக்கு உடம்பாடு. குணமும் குறியும் கடந்த அவன் குணமும் உருவும் உடையவனாக உயிர்களுக்கு அருளும்பொருட்டு எழுந்தருள்வான். ஆதலின்,

> " கோளில் பொறியில் குணம்இலவே எண்குணத்தான்
> தாளை வணங்காத் தலை "

என்றார். எம்மதத்தாருக்கும் சம்மதமாக நூல் இயற்றப் புகுந்தவராதலின் கடவுளின் உருவத்தில் முகம் முதலியவற்றைச் சொல்லாமல், எல்லா உருவங்களுக்கும் பொதுவாக அமைந்த அடியையே ஏழு பாடல்களில் சொன்னார்.[1]

## மழையின் பெருமை

இரண்டாவது அதிகாரம் மழையின் பெருமையைக் கூறுவது. அது உடலோடு பொருந்தி வாழும் உயிர்க் கூட்டங்கள் இயங்குவதற்குக் காரணமாக இருத்தலால் அமிழ்தம் போன்றது; உணவுப் பொருள்களை உண்டாக்குவதற்கும் சமைப்பதற்கும் உதவுவதோடு, தானே உணவாகவும் நிற்கும் நீரைத் தருவது; மழை இல்லாவிட்டால் உலகத்தைப் பசி வருத்தும்; உணவை விளைவிக்கும் உழவு நடைபெறாது; பெய்யாமல் நின்று கெடுப்பதும் பெய்து

1. குறள், 2, 3, 4, 7, 8, 9, 10.

வளம் பெறச் செய்வதுமாக இருப்பது மழை; அது இன்றேல் பசும் புல்லும் முளையாது; கடலும் தன் இயல்பு குன்றிவிடும்; தேவர்களுக்குரிய நித்திய நைமித்திகங்கள் நடவா; தானமும் தவமும் நிலைபெரு; உலகம் நடப்பதற்கு நீர் இன்றியமையாததாதலின் அதனைத் தரும் மழையும் இன்றியமையாதது—என்று அதன் பெருமையை விரித்துரைப்பார்.

## துறவோர் பெருமை

மூன்ருவது அதிகாரம் துறவியராகிய பெரியவர்களின் பெருமையைச் சொல்வது. தாம் செய்யும் தவத்தால் கடவுளையும் மழையையும் போலப் பிறர் வாழச் செய்யும் தன்மையுடையாராதலின் அவ்விரு பொருளுக்கும் பின்பு இதனை வைத்தார்.

முற்றத் துறந்தவர்களின் பெருமையை நூல்கள் சிறப்பாக எடுத்துக் கூறும்; அவர்கள் பெருமை அளவிடற்கரியது; பிறப்பு வீடு என்னும் இரண்டன் இயல்பையும் உணர்ந்த அவர்கள் பெருமை உலகில் உயர்ந்தது. நெஞ்சத் திண்மையால் ஐம்பொறிகளையும் அவித்தவனது ஆற்றலுக்கு முனிவராற் சாபம் எய்திய இந்திரனே சான்று; செய்வதற்கரிய தவத்தைச் செய்பவர் பெரியவர்; அது செய்யாதவர் சிறியர்; ஐம்பொறிகளின் உணர்ச்சி வகையை ஆராய்ந்து அறிந்தவன் உலகத்தை அறிந்தவனுவான்; நிறைந்த மொழியையுடைய முனிவரது பெருமையை அவர் கூறிய ஆணையாகிய மந்திரங்கள் காட்டும்; நிறைகுணத்தவராகிய அவர்களுடைய சினம் சிறிதளவே நின்ருலும் தாங்குவதற்கரிது; எல்லா உயிர்க்கும் அருள்மலிந்த அவர்களே அந்தணர்—என்று நீத்தார் பெருமையை வகுத்துரைப்பர்.

## அறத்தின் சிறப்பு

அறன் வலியுறுத்தல் என்னும் நான்காவது அதிகாரத்தில் அறத்தின் சிறப்பைத் தெளிவாக்குகிருர்.

அறம், வீடு பேற்றையும் தந்து இம்மை மறுமைக்குத் துணையாய் நிற்றலால் அதைவிட வேறு ஆக்கம் உயிருக்கு இல்லை; அதனை மறப்பதை விடக் கேடு வேறு இல்லை; ஆதலின் இயன்ற வழிகளில் இடைவிடாமல் முக்கரணத்தாலும் அதனைச் செய்தல் வேண்டும்; மனத்தில் மாசின்றி அதைச் செய்யவேண்டும்; அழுக்காறு, அவா, வெகுளி, கடுஞ் சொல் என்பன இன்றிச் செய்ய வேண்டும்; பிறகு செய்யலாம் என்று எண்ணுது செய்தால் அது உயிர் போகும் காலத்தில் அழியாத துணையாக உதவும்; அறத்தின் பயன் இதுவென்று விளக்கிச் சொல்ல வேண்டாம்; சிவிகையைத் தாங்கிச் செல்பவனுக்கும் அதன்மேல் ஊர்ந்தானுக்கும் இடையேயுள்ள வேற்றுமையினுல் நன்கு உணரலாம்; வீணுகக் காலம் செல்லாமல் அறம் புரிந்தால் உலகிற் பிறந்து இறந்து வரும் ஓட்டத்தை அது அடைத்துவிடும்; அறத்தினுல் வருவதுதான் இன்பம்; அறமின்றி வருவது இன்பம் அன்று; அதனுல் புகழும் உண்டாகாது; ஒவ்வொருவனும் செய்யவேண்டுவது அறம்; அறமல்லாத செயல் புரிதலால் வரும் பழியினின்றும் ஒழிய வேண்டும்—என்று அறத்தின் நலத்தை விரித்துரைப்பர்.

## அறத்துப் பால்

இவற்றின்பின் இல்வாழ்க்கை முதல் புகழ் ஈருக இருபது அதிகாரங்களால் இல்லற வாழ்க்கையைப் பற்றிய இயல்புகளைச் சொல்கிருர். இல்வாழ்க்கையின் சிறப்பையும், அதற்கு உறுதுணையாகிய மனைவியின் இயல்பையும், அதற்கு அணிகலமாக உள்ள மக்கட்பேற்றின் உயர்வையும், மனைவி மக்களோடு வாழ்பவன் அன்பு செய்ய வேண்டிய இன்றியமையாமையையும், அவ்வன்பு காரணமாக விருந்தினரை ஓம்பவேண்டிய முறையையும், இனியவை கூறி, செய்க்கன்றி அறிந்து, நடுவுநிலையில் நின்று, அடக்கம் உடையவனுகி, ஒழுக்கத்திற் பிறழாது, பிறனில் விழையாமல், பொறையை உடையவனுகி, அழுக்காறு அற்றவனுகி, பிறர் பொருளை வெஃகாமல், புறங் கூருமல், பயனில சொல்லாமல், தீவினைகளுக்கு அஞ்சி, ஒப்புரவறிந்து, வறியவருக்கு ஈந்து, புகழ்பெற்றுச் சிறந்து வாழவேண்டுமென்பதையும் பல வகையாக விரித்துக் கூறுகிருர்.

அப்பால் துறவறத்தாரின் இயல்புகளை அருளுடைமை முதல் அவா அறுத்தல் ஈருகப் பதின்மூன்று அதிகாரங்களில் சொல்கிருர்.

துறவி அருளுடையவனுய், புலால் உண்ணுதலை மறுத்து, தவம்செய்து, கூடா ஒழுக்கத்தை விலக்கி, பிறர் உடைமையை மனத்தாலும் திருடாதவனுய், வாய்மையே பேசி, வெகுளாமல், இன்னு செய்யாமல், பிற உயிரைக் கொல்லாமல், செல்வம் முதலியவற்றின் நிலையாமையைத் தேர்ந்து, உள்ளத் துறவை உடையவனுய், மெய்ப் பொருளை உணர்ந்து, அவாவை அறுத்து, பேரா இயற்கையைப் பெற வேண்டும் என்னும் ஒழுகலாற்றைத் தலைமையாகக் கூறி, ஏற்பன, ஒழிவன ஆகியவற்றை விரிவாக விளக்குகிருர்.

முப்பத்தெட்டாவது அதிகாரம் ஆகூழ், போகூழ் என்று இருவகைப்படும் ஊழின் வலிமையைச் சொல்கிறது.

அறத்துப்பாலில் தனிமனிதன் நற்குண நற்செய்கையை உடையவனுய், மனைவிமக்களுடன் அன்பு செய்து வாழ்ந்து, செல்வம் முதலியவற்றின் நிலையாமையை உணர்ந்து, உள்ளத்துறவு பூண்டு புலன்களை அடக்கி அருளுடையவனுய் மெய்யுணர்ந்து விடுபேறு அடைய வேண்டும் என்ற கருத்து விளங்குகிறது.

## பொருட்பால்

இரண்டாவதாகிய பொருட்பால் சமுதாய வாழ்க்கையைப் பற்றிச் சொல்வது. முடியரசு, குடியரசு என்னும் இருவகையில் முடியரசே இந்த நாட்டில் தொன்றுதொட்டு வந்திருத்தலின் அரசனை முன்வைத்துச் சமுதாய வாழ்க்கையின் கூறுபாடுகளைச் சொல்கிருர் வள்ளுவர். இந் நாட்டில் தோன்றிய எல்லாப் பொருள் நூலுக்கும் பொதுவான பண்பு இது.

பொருள் நூல்களில் அரசியல், பொருளியல், சமுதாய ஒழுக்க இயல் முதலிய பலவும் சொல்லுதல் இந்நாட்டு அறிஞர்களின் மரபு. அந்த மரபைப் பின்பற்றியே வள்ளுவரும் பொருட்பாலை அமைத்தார். அரசனுக்குரியன என்று அவர் கூறும் தகுதிகளிற் பல சமுதாயம் முழுவதற்கும் பொதுவாக அமைய

வேண்டிய பண்புகளே ஆகும். ஆகவே, இந்தப் பகுதியில் அரசனுக்குக் கல்வி, கேள்வி முதலிய பண்புகள் இன்றியமையாதன என்று சொல்லும் கருத்துக்களை, மக்கள் தொகுதிக்கும் உரியனவென்று கொள்ள வேண்டும்.

பொருட்பால், அர்த்தசாஸ்திரம் என வகுக்கும் நூல்களையும், ராஜ நீதி சாஸ்திரம் என வகுக்கும் நூல்களையும் போல அரசியலையும், பொருளியலை யும் பற்றிய கருத்துக்களைச் சொல்கிறது.[1] மிகப் பழைய நூலாகிய பாரதத்தில் இந்தத் துறைகளைப் பற்றிய விதிவிலக்குகள் இருக்கின்றன. வள்ளுவர் அரசியலைப் பற்றிக் கூறுவதற்கு அவருடைய பிற பொருள் நூலறிவும் கேள்வியும் அநுபவமும் துணையாக இருந்திருக்க வேண்டும்.

பொருட்பாலை அரசியல், அங்கவியல், ஒழிபியல் என்று மூன்றாகப் பிரித்தார் பரிமேலழகர்.

> 'இல்லறத்தின் வழிப்படுவனவாய பொருள் இன்பங்களுள் இருமையும் பயப்பதாய பொருள் கூறுவான் எடுத்துக்கொண்டார். அது தன் துணைக் காரணமாய அரச நீதி கூறவே அடங்கும். அரச நீதியாவது காவலை நடாத்தும் முறைமை. அதனை அரசியல், அங்கவியல், ஒழிபியல் என மூவகைப் படுத்து, மலர்தலை உலகிற்கு உயிரெனச் சிறந்த அரசனது இயல்பு இருபத்தைந்து அதிகாரத்தால் கூறுவான் தொடங்கி'[2]

என்று அரசியலின் முதலிலும்,

> 'இனி முறையானே அரசியல் நடாத்துதற்கண் ஒன்றற்கு ஒன்று துணையாய அங்கங்களது இயல்பு முப்பத்திரண்டு அதிகாரத்தால் கூறுவான் எடுத்துக்கொண்டு, அவை ஆறனுள்ளும் காவற்சாகாடு கைத்தற்கண் அவ்வரசற்கு இணையாய அமைச்சனது இயல்பு பத்து அதிகாரத்தால் கூறுவான் தொடங்கி'[3]

என்று அங்க இயலின் தொடக்கத்திலும்,

> 'இனி, அவ்வரசனும் அமைச்சனும் கொண்டு உய்க்கப்படுவதாய். ஏனைய அரண் முதலிய அங்கங்கட்கு இன்றியமையாச் சிறப்பிற்றாய நாடு ஓர் அதிகாரத்தால் கூறுகின்றார்'[4]

என்றும்,

> 'இனிப் பெரும்பான்மையும் நாட்டானும் அரணும் ஆக்கவும் காக்கவும் படுவதாய பொருளைச் செய்தலின் திறம் இவ்வதிகாரத்தால் கூறுகின்றார்'[5]

என்றும்,

> 'இனி அப் பொருளினான் ஆவதாய் வெல்வதாய படை இரண்டு அதிகாரத்தால் கூறுவான் தொடங்கி'[6]

என்றும்,

---

1. The giving of the title of Wealth to this subject is no new invention of Tiruvalluvar. Already Koutilya had written in his immortal treatise on wealth. But even he is not the inventor of this nomenclature, for it is at least as old as the Mahabharata.

—V. V. S. Iyer in the preface to his translation of Kural.

2. பக்கம், 263. 3. பக்கம், 406. 4. பக்கம், 456. 5. பக்கம், 466, 6. பக்கம், 472.

'இனி அப்படை போல் அரசனுக்கு வினையிடத்து உதவுவதாய நட்பினை ஐந்து அதிகாரம் விதிமுகத்தானும் பன்னிரண்டு அதிகாரம் எதிர்மறை முகத்தானும் கூறுவான் தொடங்கி, விதிமுக அதிகாரம் ஐந்தனுள்ளும் முதற்கண் நட்புக் கூறுகின்றார்'[1]

என்றும் அங்க இயலின் இடையிலும்,

'இனி அவ்வரசியலினும் அங்க இயலினும் அடங்காது ஒழிந்தவற்றது இயல்பு பதின்மூன்று அதிகாரத்தால் கூறுவான் தொடங்கி முதற்கண் குடிமை கூறுகின்றார்'[2]

என்று ஒழிபியலின் தொடக்கத்திலும் அவர் இப்பாலில் உள்ள அதிகாரங்களின் இயைபை விளக்குகிறார்.

அரசனுக்குரிய இயல்புகளும், அவனுடைய் அங்கங்களுக்குரிய பாங்குகளும், குடிமக்களுக்குரிய பண்புகளுமாக மூன்று பிரிவாய் இப்பாலில் வருவனவற்றைப் பிரிக்கலாம். அவற்றையே அரசியல், அங்க இயல், ஒழிபியல் என்று பரிமேலழகர் பிரித்து அமைத்தார். இம்மூன்று இயலிலும் வருவன உடம்பாட்டு முகத்தானும் எதிர்மறை முகத்தானும் முறையே குணங்களை விதித்தும் குற்றங்களை விலக்கியும் கூறும் நீதிகளாம்.

திருவள்ளுவர் முதலில் பொது வகையில் அரசனது மாட்சியைத் தொகுத்து உரைத்து, பின்பு அவன் கல்வியுடையவனாய், கல்லாமையை ஒழித்தவனாய், கேள்வியிற் சிறந்து நின்று, இயல்பான அறிவைப் பெற்று, குற்றம் கடிந்து, பெரியாரைத் துணைக்கொண்டு, சிற்றினம் சேராமல் இருத்தல் வேண்டும் என்று விளக்குகிறார்; அப்பால் அரசன் தான் செய்யும் வினைகளை ஆராய்ந்து செய்து, வினைவலி தன்வலி மாற்றான்வலி துணைவலியாகியவற்றை அளந்தறிந்து, தக்க காலமும் இடமும் அறிந்து, தனக்குத் துணையாகும் அமைச்சர் முதலியோரை ஆராய்ந்து தெளிந்து, அவ்வாறு தெளிந்தவர்களை அவர் செய்யவல்ல வினைகளை அறிந்து அவற்றில் ஈடுபடுத்தி, தன் கிளைஞரைத் தழுவிக்கொண்டு வாழவேண்டும்; சோர்வு இல்லாமல், செங்கோல் ஓச்சி, கொடுங்கோன்மையை விடுத்து, குடிகள் அஞ்சுவதற்குரியவற்றைச் செய்யாமல், கண்ணோட்டம் உடையவனாகவேண்டும்; ஒற்றர்களைத் தக்கபடி ஆண்டு, ஊக்கம் உடையவனாய், சோம்புதல் இன்றி, இடைவிடாத முயற்சியோடு, எந்த இடுக்கண் வந்தாலும் தளராமல் ஆட்சியை நடத்த வேண்டும்.

இவற்றை அரசியலில் கூறினவர், மேலே அங்கவியலில் முதலில் அமைச்சனது இயல்பைப் பொது வகையால் கூறுகிறார். அவ்வமைச்சன் சொல்வன்மையுடையவனாய், செயலில் தூயவனாய், மனத்திண்மையுடன் வினையை ஆற்றும் ஆற்றல் பெற்றவனாய் விளங்கவேண்டும். இவ்வாறு அமைச்சன் இயல்பு கூறி, இடையே தூதுவர் இலக்கணத்தைப் பொதுவாகக் கூறுகிறார். தூதுவனும் அமைச்சரோடு ஒப்பவன். அமைச்சன் அரசனுக்கு ஏற்பப் பொருந்தி ஒழுகி, அவன் குறிப்பறிந்து பழகி, அவையின் இயல்பை அறிந்து பேசி, அவைக்கு அஞ்சாமல் இருக்கவேண்டும்.

இத்துணையும் அமைச்சர் இயல்பு கூறினவர் மேலே நாட்டின் இலக்கணத்தையும், அரணின் இலக்கணத்தையும், பொருளைச் செய்யும் திறத்தையும், படையின் சிறப்பையும் செருக்கையும் வகுக்கிறார்.

1. பக்கம், 484. 2. பக்கம், 573.

அரசனுக்கு நட்பாயினர் இன்னவாறு இருக்கவேண்டு மென்று கூறி, அவன் ஆராய்ந்து நண்பரைக் கொள்ளவேண்டும் என்கிறார். நண்பரின் பழமை யறிந்து பாராட்டி, தீ நட்பையும் கூடா நட்பையும் அகற்றவேண்டும்; பேதைமையையும் புல்லிய அறிவையும் நீத்து, வெகுளி காரணமாக வரும் இகலென்னும் மாறுபாட்டை ஒதுக்கி, பகைக்கு இடம் கொடாதவனாய், பகைவர்களின் திறத்தை ஆராய்ந்து ஆவன செய்து, உட்பகையைக் களைந்து, பெரியோரை அவமதியாமல் இருக்கவேண்டும்; காம மிகுதியால் பெண்ணின் வழியே ஒழுகுவதை மாற்றி, விலை மகளிரைச் சேராமல், கள் உண்ணாமல், சூது ஆடாமல், நோய் வராமல் தன்னைப் பாதுகாத்துக் கொண்டு விளங்க வேண்டும்.

இவ்வாறு அரசனுடைய இயல்புகளைச் சொன்னவர் அப்பால் குடிமக்கள் இயல்புகளைச் சொல்கிறார்.

முதலில் குடிப் பிறந்தாரது தன்மையைப் பொதுவாகக் கூறி மேலே அவர்களுடைய பண்புகளை விரித்துரைக்கின்றார். மானமும், நற்குணங்களால் அமைந்த பெருமையும், சான்றாண்மையும், எல்லார் இயல்புகளும் அறிந்து ஒத்து ஒழுகும் பண்பும் உடையார் அவர்; நன்மை பயவாத செல்வத்தை விரும்பார்; தவறான செயல்களைச் செய்ய நாணுவர்; தாம் பிறந்த குடியை உயரச் செய்வர்.

இவ்வாறு குடிமக்களின் பண்புகளைக் கூறி மேலே உழவின் பெருமையையும், வறுமையின் இழிவையும், மானம் தீரா இரவின் இயல்பையும், மானம் தீர வரும் இரவின் இழிவையும், குணம் யாதும் இல்லாத கயமையின் இயல்பையும் கூறிப் பொருட்பாலை நிறைவுறுத்துகிறார் வள்ளுவர்.

இந்தப் பாலில் அரசனோடும் ஆட்சியோடும் நேரான தொடர்பு இல்லாத பல பண்புகள் மக்கள் அனைவரிடமும் பொதுவாக அமையத்தக்கன. அறத்துப் பாலில் கூறிய பண்புகள் யாவும் தனிமனிதனுடைய உள்ளத்தை உயர்வாக்கி வானுறையும் தெய்வத்துள் ஒருவனாக வாழும் தகுதியை உண்டாக்குவன. பொருட்பாலில் கூறப்பட்ட பண்புகள் மனிதனைச் சமுதாயத்தில் சிறந்த உறுப்பாக, நல்ல குடிமகனாக ஆக்குவதற்கு உரியன. பிறனில் விழையாமையை அறத்துப்பாலில் வைத்தவர்; வரைவின் மகளிரைப் பொருட்பாலில் வைத்தார். பிறனில் விழைதலால் ஒருவன் தன் ஆன்ம குணத்தை இழக்கிறான்; வரைவின் மகளிரைச் சேர்வதால் அவன் தன் குடிமையை இழக்கிறான். கல்வி முதலியன, வளம் பெற்ற சமுதாயத்தை அமைக்க உதவுவன ஆதலின் பொருட்பாலில் வைத்தார்.

> 'இஃது அரசியலுள் வைக்கப்பட்டதாயினும், யாவர்க்கும் உறுதி பயத்தற் சிறப்புடைமையின் பொதுப்படக் கூறுகின்றார்'

என்று கல்வியென்னும் அதிகாரத்தின் முன்னுரையில் பரிமேலழகர் எழுதுவது இங்கே சிந்திப்பதற்குரியது.

## காமத்துப் பால்

### காமத்துப்பாலா, இன்பப்பாலா ?

அறம், பொருள், இன்பம் என்று வழங்கும் மூன்றில் முன் இரண்டுக்குரிய பால்களை அறத்துப்பால், பொருட்பால் என்று அமைத்த திருவள்ளுவர் மூன்றாவதாகிய இன்பத்தைச் சொல்லும் பகுதிக்குக் காமத்துப்பால் என்று

பெயர் வைத்தார். 'தருமப்பால், அருத்தப்பால் என்று முன் இரண்டையும் கூறுமல் தமிழால் கூறியவர், இதனையும் இன்பப்பால் என்றே கூறி யிருப்பார்; பிற்காலத்தவர் அதைக் காமத்துப்பால் ஆக்கிவிட்டனர்' என்று கூறுவார் சிலர்.

இன்பம் என்பது அறம், பொருள், இன்பம் என்று ஏனை இரண்டோடு சேர்த்துச் சொல்லும்போதுதான் இனம்பற்றிக் காமம் என்பதைக் குறிக் கும். அவ்வாறு இன்றித் தனியே இன்பம் என்று சொல்லும்போது பெரும்பாலும் துன்பத்துக்கு மறுதலையாகிய இன்பத்தையே குறிக்கும். சுக துக்கம் என்று வடமொழியிற் சொல்வதுபோல இன்ப துன்பம் என்று சேர்த்துச் சொல்வது தமிழிலும் உண்டு.

வள்ளுவர் இன்பம் என்ற சொல்லை இரண்டே இடங்களில் காமம் என்னும் உறுதிப் பொருளைக் குறிக்க வழங்குவர்.

" அறம்பொருள் இன்பம் உயிரச்சம் நான்கின்
திறந்தெரிந்து தேறப் படும்". (501)

" அறன்ஈனும் இன்பமும் ஈனும் திறன்அறிந்து
தீதின்றி வந்த பொருள்." (754)

இந்த இரண்டிடங்களிலும் அறம், பொருள் என்னும் இரண்டனேடும் வைத்தே இன்பத்தைச் சொல்லுகிருர். வேறு இடங்கள் பலவற்றில் (39, 65, 98, 156, 173, 228, 352, 369, 615, 628, 629, 630, 669, 738, 854, 869, 946, 1052, 1166, 1330) இன்பத்தையும் துன்பத்தையும் இணைத்தோ, இன் பத்தை மட்டுமோ சொல்கிருர். அவ்விடங்களிலெல்லாம் இன்பம் என்ற சொல் லுக்குக் காமம் என்ற பொருள் இல்லை; துன்பத்துக்கு மறுதலையாகிய இன் பத்தையே கொள்ளும்படி அமைத்திருக்கிருர். அன்றியும் காமத்தினின்றும் வேருக வைத்து இன்பம் என்னும் சொல்லை ஆண்ட இடங்கள் இரண்டு உண்டு.

" இன்பம் கடல்மற்றுக் காமம்." (1166)

" ஊடுதல் காமத்துக் கின்பம்" (1330)

என்பவற்றைக் காண்க.

காமம் என்ற சொல்லைக் காமத்துப்பாலில் பல இடங்களில் ஆளு கின்றுர். அவ்விடங்கள் வருமாறு:

109. தகையணங்குறுத்தல்: 1 இடம் (10)
110. குறிப்பறிதல்: 1 இடம் (2)
111. புணர்ச்சி மகிழ்தல்: 2 இடம் (9, 10)
114. நாணுத் துறவுரைத்தல்: 5 இடம் (1, 4, 7, 8 9)
115. அலரறிவுறுத்தல்: 3 இடம் (4, 5, 8)
116. பிரிவாற்ருமை: 1 இடம் (9)
117. படர்மெலிந்திரங்கல்: 4 இடம் (3, 4, 6, 7)
118. கண்விதுப் பழிதல்: 1 இடம் (5)
120. தனிப்படர் பகுதி: 2 இடம் (1, 6)
121. நினைந்தவர் புலம்பல்: 2 இடம் (1, 2)
122. கனவுநிலை யுரைத்தல்: 1 இடம் (4)
125. நெஞ்சொடு கிளத்தல்: 1 இடம் (7)
126. நிறையழிதல்: 6 இடம் (1, 2, 3, 4, 5, 7)
127. அவர்வயின் விதும்பல்: 1 இடம் (4)
128. குறிப்பறிவுறுத்தல்: 1 இடம் (10)

129. புணர்ச்சி விதும்பல் : 3 இடம் (1, 2, 9)
131. புலவி : 1 இடம் (6)
133. ஊடலுவகை : 2 இடம். (6, 10)

இப்படி முப்பத்தெட்டு இடங்களில் காமம் என்னும் சொல்லை ஆளுகின்றது காண்க

"இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு
அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின்
காமக் கூட்டம் காணுங் காலை"[1]

என்று தொல்காப்பியர் இச் சொல்லை ஆளுவர்.

"பொழுதிடை தெரியிற் பொய்யே காமம்"[2]
"காமம் காமம் என்ப"[3]

என்று சங்கத்துச் சான்றோரும் ஆளுதல் காண்க.

ஆதலின் காமத்துப்பால் என்பது திருவள்ளுவரே அமைத்த பெயர் என்பதிற் சிறிதும் ஐயம் இல்லை.

## வேறுபாடு

அறத்துப்பால் பொருட்பால் என்னும் இரண்டு பால்களைத் திருவள்ளுவர் அமைத்த முறைக்கும் காமத்துப்பாலை அமைத்த முறைக்கும் தெளிவான வேறுபாடு ஒன்று உண்டு. முன் இரண்டு பால்களும் பழங்காலத்திலும் பிற்காலத்திலும் பாரத நாட்டிலும் பிறநாடுகளிலும் வளர்ந்துவரும் நீதி நூல்களையும், அரசியல் பொருளாதார நூல்களையும் போன்ற முறையில் அமைந்தன. வடமொழியில் தர்ம சாஸ்திரங்களும், அர்த்த சாஸ்திரங்களும் உள்ளன. அவ்விரண்டிலும் பல பல துறைகள் உண்டு. பொதுவான நெறியில் நின்று தாமே அமைத்துக் கொண்ட அதிகாரங்களில் அறம் பொருள் என்னும் இரு பகுதிகளையும் விரிவாகச் சொல்லுகிறார் திருவள்ளுவர்.

நூல்களை இலக்கணம் இலக்கியம் என்று இருவகையாகப் பிரிக்கலாம். இவற்றையே ஸயன்ஸ் (Science), ஆர்ட் (Art) என்று ஆங்கிலத்தில் வகுக்கிறார்கள். வடமொழியில் சாத்திரம், சாகித்தியம் என்று கூறும் பிரிவும் அவைகளே. பழங்காலத்தில் தமிழில் இலக்கணத்தை நூல் என்றும், இலக்கியத்தைப் பாட்டென்றும் வழங்கும் வழக்கம் இருந்தது.

நீதி நூல்கள் சாத்திரம் அல்லது இலக்கணத்தைச் சார்ந்தவை. வாழ்க்கையின் இலக்கணத்தை வரையறுப்பனவாதலின் அவை இலக்கணமாயின. அவ்வாறு பார்த்தால் அறநூல், பொருள் நூல், அரசியல் நூல், சமுதாய நூல் என வரும் நூல் வகைகள் அத்தனையும் இலக்கணத்தில் அடங்குவன. திருவள்ளுவர் இயற்றிய அறத்துப்பாலும் பொருட்பாலும் விதிகளையும் விலக்குகளையும் சொல்லும் இலக்கணத்துள் அடங்கும். ஆனால் காமத்துப்பால் இலக்கணம் அன்று; அது இனிய கவிச்சுவை அமைந்த இலக்கியம்.

உறுதிப் பொருளில் மூன்றாவதாகிய காமத்தைப் பற்றி இலக்கண வகையில் கூறும் சாத்திரங்கள் முன்பும் உண்டு; பின்பும் உண்டு. வாத்ஸ்யாயனர் எழுதிய காம சூத்திரம் அத்தகையவற்றில் ஒன்று. அவை ஆண்

1. களவியல், 1. 2. குறுந். 32. 3. குறுந். 204.

பெண்பால்களின் உறவைப் பற்றியும், அதற்கு அடிப்படையான மன இயல்புகளைப் பற்றியும், அவற்றால் விளையும் செயல்களைப் பற்றியும், அவற்றினூடே வரும் இடையீடுகளைப் பற்றியும், இவைபோன்ற வேறு பலவற்றைப் பற்றியும் கூறுவன. திருக்குறளில் உள்ள காமத்துப்பால் அந்த வகையில் சாத்திரத்தைப்போல இலக்கணமாக அமையவில்லை.

அறத்துப்பாலிலும் பொருட்பாலிலும் திருவள்ளுவர் தம் காலத்தில் வழங்கிய அற நூல்களையும் பொருள் நூல்களையும் ஆராய்ந்து தெரிந்து கொண்ட பல கருத்துக்களை எடுத்தாண்டிருக்கிறார். அந்தக் கருத்துக்கள் இந்தியப் பழ நூல்களில் வெவ்வேறு இடங்களில் சிதறுண்டு கிடப்பன. ஆனால் காமத்துப்பாலின் திறத்தில் அவர் முழுக்க முழுக்கத் தமிழுக்கென்று அமைந்த தனிமுறையையே தழுவியிருக்கிறார். அவ்வாறு செய்வதிலும் தமக்கென்றே உள்ள புதிய அமைப்பு ஒன்றையும் மேற்கொண்டிருக்கிறார்.

## தமிழ்நெறி வழக்கு

பொருள் இலக்கணம் – அகப்பொருள், புறப்பொருள் என்பன-தமிழுக்கே சிறப்பாக அமைந்தது என்று சொல்லுவது வழக்கம். அதிலும் அகப்பொருள் மிகச் சிறந்தது. அது களவு, கற்பு என்ற இரண்டு பகுதிகளையுடையது. களவின்வழி வந்த கற்பு, களவின்வழி வாராக் கற்பு என்று அந்தக் கற்பு இரண்டு வகைபடும். அந்த இரண்டிலும் களவின்வழி வந்த கற்பே சிறந்தது.

"நான்மறை விரித்து நல்லிசை விளக்கும்
வாய்மொழிப் புலவீர் கேண்மின்; சிறந்தது
காதற் காமம்; காமத்துச் சிறந்தது
விருப்போ ரொத்து மெய்யுறு புணர்ச்சி;
............... ...............................
தள்ளாப் பொருளியல்பில் தண்டமிழாய் வந்திலார்
கொள்ளாரிக் குன்று பயன்" (9 : 12-26)

என்ற பரிபாடல் அடிகளும், அதற்கு டாக்டர் ஐயரவர்கள் எழுதிய,

"பொருள் இயல்பில் தண்டமிழ்: பொருள் இலக்கணம் தமிழுக்குச் சிறப்புடைய தென்பதையும், அதனுள் களவுப் புணர்ச்சி சிறப்புடையதென்பதையும் ஆரிய அரசன் பிரகத்தனைத் தமிழ் அறிவித்தற்கு வந்த கபிலர், களவுப் புணர்ச்சியைக் கூறும் குறிஞ்சிப் பாட்டைப் பாடியதும், இறையனாரகப் பொருளில் நுதலிய பொருளைக் கூறும்போது 'இந்நூல் என்னுதலிற்றோ வெனின் தமிழ் நுதலியது என்பது' (இறை. சூ. 1, உரை) என்பதும், பொருள் இலக்கணத்தைக் கூறும் ஒரு பழைய இலக்கண நூலுக்குத் தமிழ் நெறி விளக்கம் என்ற பெயர் அமைந்திருத்தலும் குறிப்பிக்கின்றன. 'இன்றமிழ் இயற்கை இன்பம்" (சீவக. 2063) என்பதும், 'இனிய தமிழ் கூறிய இயற்கைப் புணர்ச்சியாகிய இன்பம்' (ந.) என்னும் அதனுரையும் தமிழுக்கும் களவுப் புணர்ச்சிக்கும் உள்ள தொடர்பை விளக்கும். 'சிறப்பினாற் பெயர் பெற்றது களவியல் என்பது; என்னை? களவு கற்பு என்னும் கைகோள் இரண்டனுள் களவினைச் சிறப்புடைத் தென்று வேண்டும் இவ் வாசிரியன்' (இறை. சூ. 1, உரை)"[1]

என்னும் குறிப்பும் இங்கே சிந்திக்கத் தக்கன.

---

1. பரிபாடல், டாக்டர் ஐயரவர்கள் பதிப்பு, ப. 187.

"தமிழியல் வழக்கமெனத் தன்னன்பு மிகைபெருகிய
களவெனப் படுவது கந்தருவ மணமே"[1]

என்பது அவிநயச் சூத்திரம்.

இவ்வாறு காதலுணர்ச்சியையும் காதல் வாழ்வையும் ஒழுங்கு படுத்திப் பாவில் இனிமை பயக்க அமைப்பது தமிழுக்கே உரிய தனிச்சிறப்பு என்பதை நினைந்தே கம்பர்,

"தமிழ்நெறி வழக்கம் அன்ன தனிச்சிலை வழக்கு"[2]

என்று அதனை உவமையாக்கி இராமன் வீரத்தைப் புலப்படுத்துகிறார்.

திருவள்ளுவர் இந்தத் தமிழ் நெறி வழக்கை மேற்கொண்டே காமத்துப் பாலை இலக்கியமாக அமைத்தார். பத்துப்பாட்டு, எட்டுத் தொகை என்னும் சங்கநூல்களில் வரும் அகப்பொருட் பாடல்களும், பதினெண் கீழ்க்கணக்கிலுள்ள அகப்பொருள் பற்றிய நூல்களிலுள்ள பாடல்களும் காதல் நாடகத்தில் வரும் தலைவன், தலைவி, தோழி முதலியோர் கூற்றாகவே அமைந்திருப்பதைக் காணலாம். அவை யாவும் அகப்பொருள் இலக்கியம். தொல்காப்பியத்தில் அகத்திணை இயல், களவியல், கற்பியல், பொருளியல், மெய்ப்பாட்டியல் ஆகியவற்றுள் வருவன இலக்கணம். மெய்ப்பாட்டியலில் புணர்ச்சிக்கு முன்னும் பின்னுமாகத் தோன்றும் மெய்ப்பாடுகளை ஆசிரியர் விரித்துள்ளார். அதுபோன்ற வகையில்தான் காம சாத்திரங்கள் அமைந்துள்ளன. திருக்குறட் காமத்துப்பால் அவ்வாறு இன்றி, அந்த இலக்கணங்களை உள்ளீடாகக் கொண்ட இலக்கியமாக, கூற்றுவகைகளாய் அமைந்த பாடல்களின் தொகுதியாக, பொருளால் ஒருவாறு தொடர்பு பெற்ற காதற் கதையாக விளங்குகிறது.[3]

## இயல்வகை

காமத்துப்பாலைக் களவியல் கற்பியல் என்று இருவேறு பகுதியாகப் பிரிக்கிறார் பரிமேலழகர். கூற்று வகைப்படி ஆண்பாற் கூற்று, பெண்பாற் கூற்று, இருபாற் கூற்று என்று பிரிப்பவர்களும், ஐந்திணைக்குரிய உரிப் பொருள் வகைப்படி பிரிப்பவர்களும் உண்டு.

" ஆண்பால்ஏழ்; ஆறிரண்டு பெண்பால்; அடுத்தன்பு
பூண்பால் இருபால்ஓர் ஆறாக" (27)

என்னும் திருவள்ளு மாலைச் செய்யுள் கூற்று வகையால் மூன்றாகப் பிரிக்கிறது. காளிங்கர் தம் உரையில் அந்தக் கூறுபாட்டையே அமைத்துக் காட்டு

1. யாப்பருங்கல விருத்தி, 96, உரை, மேற்கோள்.
2. களங்காண் படலம், 61.
3. 'காமத்துப்பாலில் வரும் குறள் ஒவ்வொன்றும் நாடக நூலில் வரும் பேச்சுக்கள்போல யாரேனும் ஒருவர் கூற்றாக அமைந்திருப்பது வெள்ளிடை மலை. இதனால் இதனை நாடக நூல் என ஒரு வகையாகக் கூறலாம். நாடக வழக்கு எனத் தொல்காப்பிய மரபும், இறையனாரகப் பொருள் மரபும் கூறுவதனை உரையாசிரியர்கள் எடுத்துக் காட்டுகின்றனர் அல்லரோ? காமத்துப்பாலை இவ்வாறு அமைப்பதனைத் தமிழில் அன்றி வேறு எங்கேனும் கண்டதுண்டோ? வாத்ஸ்யாயனரோ, பப்ரவ்யரோ, நந்திகேசுவரரோ, உத்தாலகரோ, கொக்கோகரோ, பிறரோ இவ்வாறு கிளவிக் கோவையாக வடமொழியில் எழுதிய மரபினைக் கேட்டதேனும் உண்டோ?'—தென்காசித் திருவள்ளுவர் கழகத்து வெள்ளிவிழா மலர், திருக்குறள் - காமத்துப்பால், தெ. பொ. மீனாட்சி சுந்தரனார். (ப. 80.)

கிருர். மணக்குடவர், புணர்தலும் புணர்தல் நிமித்தமும், பிரிதலும் பிரிதல் நிமித்தமும், இருத்தலும் இருத்தல் நிமித்தமும், இரங்கலும் இரங்கல் நிமித்தமும், ஊடலும் ஊடல் நிமித்தமும் ஆகிய உரிப் பொருள்களையுடைய குறிஞ்சி, பாலை, முல்லை, நெய்தல், மருதம் என்னும் ஐந்திணைகளுக்கும் திணைக்கு ஐவைந்து அதிகாரமாக இருபத்தைந்து அதிகாரமாக்கி அமைத்தார் வள்ளுவர் என்று எழுதினர்.[1]

மூன்று வேறுவகையான பகுப்புக்கள் அதிகாரத்தைப் பொறுத்தமட்டில் அமைந்தாலும் பாடல்கள் யாவும் தலைவன் முதலியோர் கூற்ருக அமைந்தவை என்பதில் யாருக்கும் வேறுபாடு இல்லை. யாவும் காதல் நாடக பாத்திரங்களின் கூற்றுக்களாக அமைந்தனவேயன்றிக் கவியின் கூற்ருக ஒன்றும் இல்லை.

புணர்ச்சி முதலிய ஐந்து உரிப்பொருள்களும் இதன்கண் அமைந்துள்ளன என்பதைப் பரிமேலழகர் மறுக்கவில்லை.

> 'இது புணர்ச்சி, பிரிவு என இருவகைப்படும். ஏனை இருத்தல், இரங்கல், ஊடல் என்பனவோ எனின், இவர் பொருட்பாகுபாட்டினை அறம் பொருள் இன்பம் என வடநூல் வழக்குப்பற்றி ஓதுதலான், அவ்வாறே அவற்றைப் பிரிவின்கண் அடக்கினுர் என்க. இனி அவைதம்மையே தமிழ் நூல்களோடும் பொருந்தப் புணர்ச்சியைக் களவு என்றும், பிரிவைக் கற்பு என்றும் பெரும் பான்மைபற்றி வகுத்து, அவற்றைச் சுவைமிகுதி பயப்ப உலக நடையோடு ஒப்பும் ஒவ்வாமையும் உடையவாக்கிக் கூறினுர்'[2]

என்ருர். 'பிரிவின்கண் அடக்கினுர்' என்று கூறினுரேயன்றி, 'அவற்றை விலக்கினுர்' என்று கூறவில்லை. புணர்ச்சியைக் களவு என்றும், பிரிவைக் கற்பு என்றும் வகுத்ததாகப் பரிமேலழகர் கூறுவது ஆராய்தற்குரியது. களவுக் காலத்தில் இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற்கூட்டம், பாங்கியிற் கூட்டம், பகற்குறி, இரவுக்குறி என வருவனவெல்லாம் புணர்ச்சியின் வகைகளேயாம்.[3] ஒருவழித் தணத்தல் பிரிவு ஆகாது. கற்பில்தான் ஓதற் பிரிவு முதலிய பிரிவுகள் நிகழும். இவற்றை ஓர்ந்தே பரிமேலழகர் அவ்வாறு கூறினுர்.

> " அகறல் அறியா அணியிழை நல்லார்
> இகறலைக் கொண்டு துனிக்கும் தவறிலர்"[4]

என்ற பரிபாடலும்,

> 'அதனுல், இக் கற்பிற்போலத் தலைவர் நீங்குதல் அறியாத களவிற் புணர்ச்சியையுடைய மகளிர் அவரோடு மாறுகொண்டு துனிக்கும் குற்றம் உடையவர் அல்லர்'[5]

என்ற அதன் உரையும் இக் கொள்கையை அரண் செய்வது காண்க. இதனுல் புணர்ச்சியைக் களவென்றும் பிரிவைக் கற்பென்றும் வகுத்ததாகப் பரிமேலழகர் கூறுவது பழைய மரபோடு ஒட்டியதே என்பது பெறப்படும்.

---

1. வெள்ளி விழா மலர், ப. 74, 75. 2. காமத்துப்பால் உரை, தோற்றுவாய்.
3. 'நான்கு நிலத்தும் புணர்ச்சி நிகழுமேனும் முற்பட்ட புணர்ச்சியே புணர்தற் சிறப்புடைமையின் குறிஞ்சியென்று அதனை முற்கூறினுர். அவை இயற்கைப் புணர்ச்சியும், இடந்தலைப்பாடும், பாங்கற் கூட்டமும், தோழியிற் கூட்டமும் அதன் பகுதியாகிய இருவகைக் குறிக்கண் எதிர்ப்பாடும் போல்வன.' (தொல். அகத். 14, ந. உரை.)
4. பரிபாடல், 9: 23-4. 5. பரிமேலழகர் உரை.

## சில சிறப்புக்கள்

அகத்திணையில் மூன்று வகையான பொருள்கள் உண்டு. அவை முறையே முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என்பவை. நிலமும் காலமும் முதற்பொருள் ஆகும்; தெய்வம், உணவு, விலங்கு, மரம், பறவை, தொழில், யாழ் முதலியன கருப்பொருள் ஆகும்; புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் என்பனவும் அவற்றின் நிமித்தமும் உரிப்பொருள் ஆகும். இவற்றில் உரிப்பொருளே தலைமையானது. அகத்திணையில் கூற்றுக்குரியவர்கள் தலைவன், தலைவி, தோழி, பாங்கன், செவிலி, நற்றாய், கண்டோர் முதலிய பலராவர். அகப்பொருட் பாடல்களில் இந்த இலக்கண அமைதிகளைக் காணலாம்.

திருவள்ளுவர் சுருங்கிய உருவத்தில் குறட்பாக்களை அமைத்துள்ளார். முதற்பொருள், கருப்பொருள் ஆகியவற்றை விரிவாக அமைக்காமல் தலைமையாகிய உரிப்பொருளே சிறப்பாக அமையும்படி பாடியுள்ளார். முதற்பொருள்களில் நெய்தலுக்குரிய கடல் ஓரிடத்தில் மட்டும் வருகின்றது.[1] பிற நிலங்கள் வரவில்லை. பெரும் பொழுது ஒன்றும் வரவில்லை. சிறுபொழுதுகளில் மாலை[2] என்பதும், யாமம்[3] என்பதும், இரா[4] என்பதும் வருகின்றன. திணைக்குரிய தலைமக்களின் பெயராக இலக்கண இலக்கியங்களில் வரும் பலவற்றில் துறைவன் என்ற ஒன்றை மட்டும் இரண்டிடங்களில்[5] ஆளுகிறார்.

கூற்று வகைகளிலும் பலருடைய கூற்றுக்களை அமைக்காமல் தலைவன், தலைவி, தோழி என்னும் மூவருடைய கூற்றுக்களையே அமைத்துள்ளார். காதல் நாடகத்தில் மூன்று தலைமையான பாத்திரங்களாக அமைபவர்கள் இவர்கள். வேறு சில உரையாசிரியர்கள் சில பாக்களைச் செவிலி கூற்றாகச் சொல்வார்கள். நிலைக்களம் சுருங்கினாலும் உயிர் போன்ற கருத்துச் சுருங்காமல் நயமாகவும் ஓரளவு தொடர்புள்ளதாகவும் திருவள்ளுவர் இந்தக் காதற் கதையை உருவாக்கியுள்ளார்.

சங்க நூல்களில் உள்ள அகப் பொருட் பாக்களில் பல இடங்களில் நகிலும், அல்குலும் வரும். தலைவி தன்னைப்பற்றிச் சொல்லும் இடங்களிலும் அவ்விரண்டையும் குறித்த செய்திகள் வரும். ஆனால் திருவள்ளுவர் இரண்டே இடங்களில் முலை என்ற சொல்லை ஆளுகிறார். அவற்றில் ஒன்று அரசியலில் கல்லாமையென்னும் அதிகாரத்தில் உவமையில் வருகிறது;

> "கல்லாதான் சொற்கா முறுதல் முலையிரண்டும்
> இல்லாதாள் பெண்காமுற் றற்று." (402)

மற்ற ஒன்றுதான் காமத்துப் பாலில் தகையணங்குறுத்தல் என்னும் அதிகாரத்தில் வருகிறது;

> "கடாஅக் களிற்றின்மேற் கட்படாம் மாதர்
> படாஅ முலைமேல் துகில்." (1087)

ஆனால் மற்றொன்றை இவர் எங்கும் வெளிப்படையாகவோ, குறிப்பாகவோ சுட்டவே இல்லை.

---

1. குறள், 1200; உவமையாகவும் உருவகமாகவும் வரும் இடங்களை இதில் சேர்க்கவில்லை. 2. ஷை. 1135, 1221-30, 1268. 3. ஷை. 1136, 1167, 1252. 4. ஷை. 1168, 1169, 1329. ஷை. 5. 1157, 1277.

உரிப்பொருளில் ஒன்றாகிய ஊடல் மருதத்துக்கு உரியது. சங்க நூல்களில் மருதத் திணைக்குரிய பாடல்கள் பல உண்டு. தலைவி ஊடுதற்குக் காரணம் தலைவன் பரத்தையர்பால் சென்று உறவு கொள்வது. ஆதலின் மருதத் திணைச் செய்யுட்களில் பரத்தையரைப்பற்றிய செய்திகள் மிகுதியாக வரும். கற்புக் காலத்தில் நேரும் பிரிவுகளில் பரத்தையிற் பிரிவு என்பதும் ஒன்று. அது ஊடல் என்னும் அத்திணையின் உரிப்பொருளுக்குக் காரணமாக அமைவது; இன்றியமையாதது என்று கூடச் சொல்லலாம். அதைப்பற்றிய டாக்டர் ஐயரவர்களின் கருத்து இங்கே பயன்படும்;

> 'இங்ஙனம் பலவகையாலும் உயர்வுடையதாகிய அன்புடை வாழ்க்கை, பூவிற்குப் புல்லிதழ் வாய்த்தாற் போலவும், மதிக்கு மறு வாய்த்தாற் போலவும் பரத்தையிற் பிரிவென்னும் இழிந்த ஒழுக்கத்தினால் சிறிது கலக்கம் அடைகின்றது......இப்பரத்தையிற் பிரிவு உலகியலையே கருதி அமைத்தது போலும். தலைவியின் ஊடலுக்குக் காரணம் வேண்டும் என்பதற்காக இப்பரத்தையிற் பிரிவு அமைத்ததென்பது அத்துணைச் சிறந்த காரணமாகத் தோற்றவில்லை......எவ்வாறாயினும் பரத்தையிற் பிரிவு நல்லொழுக்கத்திற்கு இழுக்கு என்பதே சான்றோர் கொள்கை என்பதை வலியுறுத்தக் குறளிலுள்ள வரைவின் மகளிர் என்ற அதிகாரம் ஒன்றே போதியது.'[1]

இழிந்த ஒழுக்கமாகிய பரத்தையரது உறவை விலக்கும்படி ஓரதிகாரத்தால் அறிவுறுத்திய திருவள்ளுவர் காமத்துப்பாலில் பரத்தையிற் பிரிவைச் சொன்னால் அது முன்னுக்குப்பின் முரண்பாடு ஆகும். ஆதலின் அவர் புலவி, புலவி நுணுக்கம் என்னும் இரண்டு அதிகாரங்களில் ஊடலைப்பற்றி விரிவாகச் சொன்னாலும், அவ்வூடற்குக் காரணம் தலைமகன் பரத்தையரை நாடிச் சென்ற பிரிவு என்பதைச் சொல்லவில்லை. பரிமேலழகர் ஆறு பாடல்களுக்குத் துறை கூறும்பொழுது, 'பரத்தையிற் பிரிந்து வந்த தலைமகனோடு நிறையழிவால் கூடிய தலைமகள், நீ புலவாமைக்குக் காரணம் யாது என்ற தோழிக்குச் சொல்லியது'[2] என்றும், 'பரத்தையரிடத்து நின்றும் வந்த தலைமகனொடு தலைமகள் புலந்து சொல்லியது'[3] என்றும் எழுதினார். எனினும், ஊடலுக்குப் பரத்தையிற் பிரிவுதான் காரணம் என்று கொள்ளவேண்டியது அவசியம் அன்று. புலவி நுணுக்கத்தில் வேறு வகை நுட்பமான காரணங்களைக் காணலாம்.

ஒரு குறளில் திருவள்ளுவர், 'பரத்தன்' என்ற சொல்லை ஆளுகிறார்.

> "பெண்ணியலார் எல்லாரும் கண்ணிற் பொதுவுண்பர்
> நண்ணேன் பரத்தநின் மார்பு" (1311)

என்னும் தலைவி கூற்றில் அச்சொல் வருகிறது. அயல் மாதரால் விரும்பப் பெறுகிறவன் என்ற பொருளில் அங்கே அது அமைந்திருக்கிறது. பலர் காணச் சென்று வந்த ஒரு செயலைக் கருதியே தலைவி ஊடுகிறாள். ஆதலின் இங்கே தலைவன் பரத்தையர்பாற் சென்று வந்ததாகக் கொள்ள இடமே இல்லை.

சிறந்த ஒழுக்க நூலை உலகுக்கு வழங்கிய திருவள்ளுவர் முன்னுக்குப் பின் முரண்பாடின்றி, ஊடலைச் சொன்னாலும் அதற்குக் காரணமாகப் பரத்தையிற் பிரிவைச் சொல்லாமல் விட்டது மிகமிகப் பாராட்டுவதற்குரியது.

---

1. குறுந். டாக்டர் ஐயரவர்கள் பதிப்பு, நூலாராய்ச்சி, முதற்பதிப்பு, ப. 79.
2. குறள், 1257-60.
3. ஷை. 1303-4.

இவ்வாறு, பிற அகப்பொருள் நூல்களிலே காணற்கரிய சிறப்புக்களைக் காமத்துப்பால் தன்னிடத்தே கொண்டுள்ளது.

தலைவனும் தலைவியும் நடத்தும் இந்தக் காதல் வாழ்க்கையில் பலபல துறைகள் உண்டு. அவை எல்லாவற்றையும் சொல்லாது இன்றியமையாமல் உள்ளவற்றை மட்டும் ஒருவாறு தொடர்பு படுத்திக் கொள்ளும் வகையில் அமைத்துக் காமத்துப் பாலைப் பாடியுள்ளார், வள்ளுவர்.

### களவு வாழ்க்கை

இனி, அவர் கூறும் காதல் வாழ்க்கையை இங்கே பார்க்கலாம்.

தலைவியைத் தனியிடத்தில் அடுப்பாரும் கொடுப்பாரும் இன்றிக் காணும் தலைவன் அவளுடைய உருவம் முதலியன முன் கண்டு அறிவனபோல் இல்லாமல் சிறந்து விளங்கினமையின், 'இவள் தெய்வ மகளோ, அழகிய மயிலோ, மனிதப் பெண்தானோ?' என்று ஐயுறுகிறான்.[1] மனித மகள்தான் என்பதைத் தெளிந்து, அவள் பார்வை தன்னை வருத்துகிறது என்று கூறுகிறான்.[2] அவளுடைய நகிலாலும், நுதலாலும், அணி கலத்தாலும் உண்டான வருத்தத்தைக் கூறுகிறான்.[3] அவளுடைய குறிப்பை அறிந்து மகிழ்ச்சி அடைகிறான்.[4]

தலைவன் தலைவியினது குறிப்பை அவள் பார்வையினால் அறிந்து,[5] பிறகு அவள் கொண்ட நாணத்தாலும் அறிகிறான்.[6] அந்நாணத்தாலும் அவள் கொண்ட மகிழ்ச்சியினாலும் பின்னும் உணர்கிறான்.[7] தலைவி அயலார் போலப் பேசினாலும் அகத்தில் அன்புடையவள் என்று[8] கூறி, அவள் பைய நகுவது கண்டு மகிழ்கிறான்.[9] இவ்விருவருடைய நிலையையும் கண்ட தோழி, 'முன் அறியாதவரைப் போல ஒருவரை ஒருவர் பொது நோக்கத்தால் நோக்குவது காதலர்களின் இயல்பு. அவர்கள் கண்ணும் கண்ணும் பார்வையால் ஒன்றுபட்டால் அப்பால் வாய்ச்சொல்லுக்கு யாதொரு பயனும் இல்லை' என்று தனக்குள்ளே சொல்லிக் கொள்கிறாள்.[10]

பின்பு, தலைவனும் தலைவியும் ஒன்றுபடுகிறார்கள். முதற் கூட்டமாகிய இயற்கைப் புணர்ச்சியிலும், பிறகு வந்து கூடுவதாகிய இடந்தலைப்பாட்டிலும் அவன் மகிழ்ச்சி அடைகிறான்.[11] பாங்கன் அவன் நிலையைக் கண்டு, 'இவ்வாறு ஆதல் உனக்குத் தகாது' என்றபோது, 'இந்த இன்பத்தை விடத் திருமால் உலகம் இனியதோ?' என்று கேட்கிறான்.[12] பாங்கற் கூட்டத்திலும், தோழியிற் கூட்டத்திலும் பெற்ற புணர்ச்சியினால் மகிழ்ந்து[13] நின்ற அவனைத் தோழி, வரைந்துகொண்டு இல்லறம் நடத்துக என்று சொல்ல, அவன், 'இவளோடு கூடுதல் தம் இல்லில் இருந்து உரியவர்களுக்குப் பகுத்து அளித்துப் பிறகு உண்பது போன்ற இன்பத்தைத் தரும்' என்றும், 'பிரிவின்றி முயங்குவதே இனியது' என்றும் கூறி,[14] தான்பெற்ற இன்பத்தைத் தானே நினைந்து களிப்படைகிறான்.[15]

---

1. குறள், 1081. 2. ஷை. 1082-6. 3. 1087-9. 4. 1090. 5. 1091-2.
6. 1093. 7. 1094-5. 8. 1096-7. 9. 1098. 10. 1099-1100.
11. 1101-2. 12. 1103. 13. 1104-6 14. 1107-9. 15. 1110.

மற்ெருரு கால் தலைவியைக் கூடியபொழுது, அவளுடைய மெல்லிய இயல்பையும், அவள் கண்ணின் அழகையும், அவள் மேனி முதலியவற்றின் சிறப்பையும் பாராட்டுகிறான்.[1] அவள் பூவணிந்திருத்தலைக் கண்டு, 'இவள் இடை தாங்காதே' என்றும், இரவுக்குறியில் அவளைக் கண்டபோது, 'விண் மீனுக்கு இவள் முகத்துக்கும் மதிக்கும் வேறுபாடு தெரியவில்லை' என்றும், 'ஆயினும் மதியைப் போல இவள் முகத்துக்கு மறு இல்லை' என்றும் கூறி, 'இவள் முகம் போல ஒளிவிட வல்லையானால் நீ வாழ்க!' என்றும், 'நீ பலர் காணத் தோன்றாமல் யான் மட்டும் காணத்தோன்று; அப்போது இவள் முகத்துக்கு ஒப்பாவாய்' என்றும் அம் மதியை நோக்கிக் கூறுகிறான்.[2] 'நீ இவளை உடன் அழைத்துச் செல்வாயாக' என்று உரைத்த தோழிக்கு, 'இவள் அடி மிக மென்மையானது; பாலையில் நடந்து வரும் ஆற்ற லுடையதன்று' என்று கூறுகிறான்.[3]

பின்னும் தலைமகன் காதலியின் வாலெயிறு ஊறிய நீரின் இனிமையை யும், தம் இருவரிடையும் அமைந்த நட்பின் உரனையும் எடுத்துரைக்கிறான்.[4] அவள் தன் கண்மணி போன்றவள் என்றும், பிரிதற்கு அரியவள் என்றும் கூறுகிறான்.[5] ஒருவழித் தணந்து மீண்டும் அவன் வந்தபோது தோழி, 'எம்மை நீர் நினைத்ததுண்டோ?' என்று கேட்க, 'மறந்தால் அல்லவோ நினைக்கவேண்டும்?' என்று அவளை மறத்தற் கருமையைப் புலப்படுத்து கிறான்.[6]

தலைவன் பிரிந்த பிறகு தலைவி அவன் தன் கண்ணுள் நிற்பதையும், நெஞ்சத்துள் இருப்பதனையும் புலப்படுத்துகிறாள்.[7]

தலைவன் மீண்டும் தலைவியைக் காணவந்து தோழியினிடம் தன் குறை யைச் சொல்ல, அவள் பல காரணம் கூறி அவனை விலக்கப் பார்க்கிறாள். இவ் வாறு சேட்படுத்தப்பட்ட தலைவன் ஆற்றாதவனாகி, காணத்தை விட்டு, மடல் ஏறுதலே தக்க வழி என்று கூறுகிறான்.[8] தலைவி தனக்குக் காமம் மிக்கதை யும், பலரும் அலர் தூற்றும்படியான நிலை வந்ததையும் கூறுகிறாள்.[9] தன் உளம் அறியாமல் தோழி நகைக்க, அது கண்டு வருந்துகிறாள்.[10]

மீண்டும் ஒருநாள் வந்த தலைவனிடம் தோழி ஊரெல்லாம் அலரெழுந்த தைச் சொல்ல, அவன், 'அலர் எழுவதனால்தான் ஆருயிர் நிற்கிறது' என்றும் பிறவாறும் கூறி, அந்த நிலையை எண்ணி மகிழ்ச்சி அடைகிறான்.[11]

சில நாட்கள் தலைவனைக் காணப் பெறாமல் வாடிய தலைவி, அவன் மறைவில் வந்து நிற்கும்போது தோழிக்குச் சொல்பவளைப்போல, அலர் எங்கும் பரந்திருந்தலைக் கூறி, அவ்வலரால் காமநோய் நீளுவதையும், அதனை ஆற்ற முடியாமையையும் உரைக்கிறாள்.[12] அப்போது தோழி, 'ஊரில் அலர் பரவுதலால், காதலருடன் போதலை வேண்டின் அவர் அங்ஙனமே செய்வர்' என்று இயம்புகிறாள்.[13]

---

1. குறள், 1111-4. 2. ௸. 1115-9. 3. 1120. 4. 1121-2.
5. 1123-4. 6. 1125. 7. 1126-30. 8. 1131-7.
9. 1138-9. 10. 1140. 11. 1141-5. 12. 1146-9. 13. 1150.

## கற்பு வாழ்க்கை

இதுவரையில் உள்ளன களவியல் நிகழ்ச்சிகள். இனிக் கற்பியல் தொடங்குகிறது.

இல்லறம் நடத்தும் தலைவன் தன் கடமையை நிறைவேற்றும் பொருட்டுப் பிரிய நேரும்போது, 'விரைவில் போய்விட்டு வருவேன்' என்று தோழியிடம் கூற, அவள் பிரியின் தலைவி உயிர் வாழாள் என்பதைக் குறிப்பால் புலப் படுத்துகிறாள்.[1] அவன் பிரிவதைக் குறிப்பினால் உணர்ந்த தலைவி வருந்து கிறாள்.[2]

தலைவன் பிரிந்து செல்ல, அப் பிரிவை ஆற்றமாட்டாமல் தலைவி வருந்து கிறாள். தோழி, 'துன்பத்தை வெளிப்படுத்துவது நின் நாணத்துக்கு இழுக்கு' என்ற போது, 'நான் மறைத்தும் அது மிகுகின்றது' என்றும், 'இந்நோயை மறைக்கவும் முடியவில்லை; தூதனுப்பித் தலைவருக்கு உரைக்கவும் முடியவில்லை' என்றும், 'காமமும் நானும் ஒரு காவடியில் இருமருங்கும் தொங்கும் பொருள்களைப் போல் உள்ளன' என்றும், 'காமக்கடலுக்கு ஒரு புணை காணேன்' என்றும் நைகிறாள்.[3] தோழி தூதுவிட்டு நலம் செய்யாமல் இருப்பதைக் குறிப்பால் கடிந்துரைக்கிறாள்.[4] காமத்தால் வரும் இன்பத்தினும் துன்பம் பெரிதென்றும், அது கரை காணாக் கடல் போல இருக்கிறதென்றும், இரவில் ஒரு துணையுமின்றித் தனியாக இருக்கும் துன்பம் பெரிதென்றும், இரவுப் பொழுது நீள்கிறதென்றும், தன் கண்கள் பிரிவு காரணமாகக் கலுழ் கின்றன என்றும் உரைக்கிறாள்.[5]

முதலில் தலைவனைக் கண்ட கண்கள் இப்போது அவனைக் காணாமையால் கலுழ்ந்து, பிறரும் தன் நோயை அறிந்து கொள்ளும் வண்ணம் இருக்கிற தென்று தலைவி வருந்துகிறாள்.[6] பிரிவுத் துன்பத்தால் தனக்குப் பசலை உண்டாக அதனால் வருந்திய தலைமகள், 'அவர் பிரிந்து எனக்கு நோயையும் பசலையை யும் தந்து சென்றார்' என்றும் பிறவாறும் இனைகிறாள்.[7] தான் தலைவனைப் பிரிந்து துன்புற்றாலும் அவன் மீட்டும் வந்து ஒன்றி வாழும் வாழ்வு கிடைக்கும் என்றும், காதலர் இருவரும் ஒருவர்மேல் ஒருவர் அன்பு பூண்டு வாழ்வதே மிக்க இன்பத்தைப் பயப்பது என்றும் தலைவி கூறுகிறாள்.[8] தலைவனிடமிருந்து தூது ஏதும் வாராமையால் வருந்திப் பிறகு தன் நெஞ்சையே தூதுவிடக் கருதுகிறாள்.[9] காதலியைப் பிரிந்து தனியே வெளியூரில் இருக்கும் தலைவன் அவளை நினைந்து வருந்துகிறான்.[10] அப்படியே தலைவியும் வருந்துகிறாள்.[11]

பிரிந்திருந்த காலத்தில் தலைவன் தூது வந்ததாகவும், தலைவனைக் கண்டதாகவும், அவனோடு கூடியதாகவும் தலைவி கனவு கண்டு அதனைத் தோழிக்குச் சொல்கிறாள்.[12]

மாலைக்காலத்தில் தனிமைத் துயரம் மிகுகிறது. அப்போது தலைவி மாலையின் கொடுமையையும், அந்தப் போதில் காமநோய் மிகுவதையும் எடுத்துரைக்கிறாள்.[13]

---

1. குறள், 1151. 2. ஷ. 1152-60. 3. 1161-4. 4. 1165 5. 1166-70. 6. 1171-80. 7. 1181-90. 8. 1191-7. 9. 1198-1200. 10. 1201-2. 11. 1203-10. 12. 1211-20. 13. 1221-30.

பிரிவுத் துன்பத்தை ஆற்ற மாட்டாமல் தலைவி மெலிகிறாள். அவளுடைய கண் ஒளியிழந்து நீர் சொரிவதையும், தோள் மெலிவதையும், அதனால் தோள் வளைகள் நெகிழ்வதையும் கூறி வருந்துகிறாள் தோழி.[1] தலைவனைக் கொடியனென்று அவள் கூறக் கேட்ட தலைவி, 'அவ்வாறு கூறாதே' என்று அவளை நோக்கிச் சொல்லி, நெஞ்சிற்கும் சொல்லி வருந்துகிறாள்.[2] தான் சென்ற காரியத்தை முடித்துக்கொண்டு மீண்டு வந்த தலைவன் முன்பே நிகழ்ந்தவற்றை நினைத்துப் பார்க்கிறான். அணைத்த கைகளைச் சற்றே நெகிழ்த்தபோதும் சிறு காற்று நுழைந்து இடையீடுபட்ட போதும் அவள் வருந்தியதையும் தானே கூறிக்கொள்கிறான்.[3]

தலைவனது பிரிவினால் வருந்திய தலைவி தன் நெஞ்சை நோக்கிப் பல கூறி வருந்துகிறாள்.[4] அவள் தன் வேட்கை மிகுதியை அடக்கமாட்டாமல் வாய்விட்டுப் புலம்புகிறாள். நாணும் நிறையும் அழியாமல் நீ ஆற்றுதல் வேண்டும் என்று தோழி கூற, நிறையாகிய கதவைக் காமவேட்கையாகிய குந்தாலி உடைத்து விட்டது என்கிறாள்.[5] தலைவி காமம் தன் நெஞ்சத்தை அடக்கி மீதூர்கின்றதென்றும், அது மறைக்க இயலாமல் வெளிப்பட்டு விடுகின்றதென்றும், தலைவன் பிரிந்த பிறகு நிறையுடைமை நில்லாதென்றும், நாணம் தானே கழிவதென்றும், தலைவன் பிரியேன் என்று சொன்ன சொல் தன் நிறையை அழித்ததென்றும், தன் மனத்தை நிறுத்தும் ஆற்றல் தனக்கு இல்லை யென்றும் கூறுகிறாள்.[6]

தலைவன் பிரிந்த காலத்தில் அவனைக் காணும் விருப்பினால் அவன் வரும் வழி பார்த்துத் தலைவியின்கண் ஒளிமழுங்க, விரல் கோடிட்டுத் தேய்கிறது. அவனை மறந்தால் பின்னும் மெலிவு உண்டாகிறது. தலைவன் வருவான் என்னும் நம்பிக்கையால் அவள் உயிர் வைத்துக்கொண்டிருக்கிறாள். அவன் வரவை எண்ணி அவள் நெஞ்சு எழுச்சி பெறுகிறது. 'அவனைக் கண்ணாரக் கண்டால் பசலை முற்றும் நீங்கும்; அவன் வந்தால் என் வேட்கை தீர இன்பம் நுகர்வேன்' என்கிறாள்.[7]

அரசனுக்குத் துணையாகச் சென்ற தலைவன் தான் சென்ற காரியம் நீட்டித்தபொழுது, 'விரைவில் வேந்தன் வினையில் வெற்றி பெறுக! நாமும் வீடு சென்று விருந்து அயர்வேமாக' என்றும், 'நம்மைப் பிரிந்து வாழும் தலைவிக்கு ஒருநாள் ஏழு நாள் போல இருக்கும்' என்றும், 'அவள் உள்ளம் உடைவதற்கு முன்னே போய்ச் சேரவேண்டும்' என்றும் கூறுகிறான்.[8]

தலைவன் வந்து விடுகிறான். வந்து தலைவியொடு கூடி அவளைப் பல படியாகப் பாராட்ட, அது கண்டு அவள், 'மீட்டும் இவன் பிரிந்து போவதற்காக இப்படிச் செய்கிறானோ?' என்று அஞ்சுகிறாள். அப்போது தலைவன், 'நீ சொல்லாமல் மறைத்தாலும் உன் கண்கள் எதையோ சொல்ல முந்துகின்றன. அது என்ன?' என்று கேட்கிறான்.[9] நாணத்தால் அவள் சொல்லாமல் இருக்க, அவன் தோழியை நோக்கி, 'இந்த அழகியிடம் பெண்பாலாருக்குரிய மடமை நிறைந்திருக்கிறது' என்றும் பிறவாறும் தலைவியின் குறிப்பைப் பற்றிச் சொல்கிறான்.[10]

---

1. குறள், 1231-5. 2. ௸. 1236-7. 3. 1238-40. 4. 1241-50. 5. 1251.
6. 1252-60. 7. 1261-7. 8. 1268-70. 9. 1271. 10. 1272-45.

தலைவனது குறிப்பை அறிந்த தலைவி தன்னை அணுகிய தோழியிடம், 'காதலர் நம் துன்பத்தை ஆற்றிக் கூடுதல், பின்பு பிரியும் துன்பத்தைக் குறிப்பிக்கிறது' என்றும் பிறவாறும் அவனுடைய எண்ணம் இன்னதென்று கூறுகிறாள்.[1] அவளுடைய குறிப்பை அறிந்த தோழி, அவளும் உடன்வரும் எண்ணமுடையாள் என்பதைத் தலைவனுக்குக் குறிப்பினாலே கூற, அவன் தான் பிரியப்போவதில்லை என்பதைப் புலப்படுத்துகிறான்.[2]

'பிரியும் எண்ணத்தோடு இருக்கிறான் தலைவன் என்று அறிந்தும் நீ அவனோடு புலவாமல் இருக்கிறாயே; இது ஏன்?' என்று கேட்ட தோழிக்குத் தலைவி, 'நினைத்த அளவிலே களிப்பு எய்தலும், கண்ட அளவிலே மகிழ்ச்சி அடைதலும் கள்ளுண்டவர்களுக்கு இல்லை; காமம் உடையவர்களுக்கு உண்டு' என்றும், 'காமம் மிகுதியாக உண்டானால் சிறிதளவும் ஊடுதல் கூடாது' என்றும், 'தலைவன் தனக்கு விருப்பமானவற்றையே செய்து நம்மைப் புறக் கணித்தாலும் அவனைக் காணாமல் நம் கண் அமைதி பெறுவதில்லை' என்றும், 'ஊட முயன்றாலும் உள்ளம் கூடுதலிலே விருப்பம் கொள்கின்றது' என்றும், 'தலைவனைக் கண்டபோது அவனது பழி தோன்றுவதில்லை' என்றும், 'அவனைக் காணும்போது தவறு தோன்றுவதில்லை; காணாதபோது தவறு அல்லாதன தோன்றுவதில்லை' என்றும், 'புலவி முடிவுவரையில் நில்லாது' என்றும் கூறுகிறாள்.[3]

தலைவிக்குத் தலைவனோடு கூடுவதிலுள்ள பெருவேட்கையை அறிந்த தோழி, 'இன்னாதன செய்தாலும் விருப்பத்தை உண்டாக்கும் கள்ளைப் போலக் காதலுடையாருக்கு நின் மார்பு இருக்கிறது' என்று தலைவனிடம் சொல்கிறாள்.[4]

ஊடல் மிக்க தலைவியின் நிலை கண்டு தலைவன் வருந்துகிறான்.[5]

தலைவனிடத்தில் கோபம்கொண்டு புலக்கமாட்டாத நெஞ்சை நோக்கித் தலைவி வருந்திப் பல சொல்கிறாள்.[6] பின்பு அவனை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று வாயிலாகச் சென்ற தோழியிடம் தன் நெஞ்சின் இயல்பு இன்னதென்று சொல்கிறாள்.[7]

தலைவி புலப்பது கண்டு தலைவன் அதை மாற்ற முயன்றும் அவள் ஊடல் தெளியாமல் இருக்கிறாள். அது கண்டும் தலைவன் அவளோடு கூடுதற்குத் தன் நெஞ்சு விரும்புவதை எண்ணி, அதனோடு புலந்து சில கூறுகிறான்.[8]

புலந்த தலைவியினிடம் சென்ற தோழி அவளோடு நகையாடி, 'நீ புலவி நீங்கி அவரை அடையாதே; அவர் துன்பப்படுவதைச் சிறிது காண்போம்' என்று குறிப்பாகக் கூறிப் பிறகு வெளிப்படையாகப் புலவி நீட்டிப்பது முறை யன்று என்று சொல்கிறாள்.[9] தன்னை நோக்கி வந்த தலைவனோடு புலந்து தலைவி சில சொல்கிறாள்.[10] தலைவன் புலவியினால் இன்பம் மிகுவதைச் சொல் கிறான்.[11] அப்பால் புலவியை நீக்க முயலும்போது, அது மாறாமல் இருப் பது கண்டு மனம் வெம்பிச் சில சொல்கிறான்.[12]

---

1. குறள், 1276-8. 2. ஷ. 1279-80. 3. 1281-7. 4. 1288.
5. 1289-90. 6. 1291-4. 7. 1295-8. 8. 1299-1300.
9. 1301-2. 10. 1303-4. 11. 1305-7. 12. 1308-10.

புலப்பதற்குரிய காரணம் ஏதும் தலைமகனிடம் இல்லையானாலும், சில நுட்பமான எண்ணம் காரணமாகத் தலைவி புலக்கிறாள். 'நீ எல்லாப் பெண்களும் நின் மார்பைக் காணும்படி சென்று வந்தாய்; நான் அந்த மார்பைப் புல்லமாட்டேன்' என்று கூறுகிறாள்.[1] அவள் புலந்திருப்பதைக் கண்ட தலைவன் தும்முகிறான்; அது கண்டு வழக்கம்போல் 'நீடு வாழ்க' என்று தலைவி சொல்வாள் என்று எண்ணியே அவன் தும்முகிறான். இதைத் தலைவி அறிந்து தோழியிடம் சொல்கிறாள்.[2] மிகவும் நுட்பமான காரணங்களைக் காட்டித் தலைவி ஊடியதைத் தலைவன் தோழியிடம் கூறுகிறான்.[3]

தலைவி காரணம் இல்லாமலே ஊடுவதை அறிந்த தோழி, 'நீ ஏன் இவ்வாறு செய்கிறாய்?' என்று கேட்க அவள், 'அவரிடம் தவறு இல்லையானாலும் அவர் நமக்குத் தலையளி செய்வாரென்ற ஆசையால் ஊடுகிறேன்' என்றும், அவ்வாறு ஊடுதலால் பெருமை எய்துமென்றும், அதைவிட இன்பம் தருவது வேறு இல்லையென்றும், அவ்வாறு புலக்கும்போது தன் உள்ளத்தின் வன்மையை மாற்றும் செயல் தலைவனிடத்தே தோன்றுமென்றும்[4] கூறுகிறாள். தவறு இல்லாத விடத்தும் தலைவியர் ஊடும்போது ஒருவகை இன்பம் உண்டாகிறதென்றும், காமத்திற்குக் கூடுவதைவிட ஊடுதல் இன்பம் தருமென்றும், ஊடலில் தோற்றவர் வென்றார் என்றும், அது பின்பு கூடும் கூட்டத்தால் உணரலாகும் என்றும் கூறி, அத்தகைய ஊடலை அவாவுகிறான் தலைவன்.[5] இறுதியில், 'காம நுகர்ச்சிக்கு இன்பம் அதனை நுகர்வதற்குரிய காதலர் தம்முள் ஊடுதல்; அதனை அளவறிந்து நீங்கி ஒன்றுபடும் முயக்கம் அவ்வாறு ஊடுவதற்கு இன்பம்'[6] என்று கூறி இன்புறுகிறான்.

இவ்வாறு உருவும் திருவும் பிறவும் ஒத்த தலைவனும் தலைவியும் அடுப்பாரும் கொடுப்பாரும் இன்றி நல்லூழின் வயத்தால் ஒருவரை ஒருவர் கண்டு காமுற்றுக் களவுப் புணர்ச்சியால் இன்புற்றுத் தோழியின் துணைகொண்டு அவ்வொழுக்கத்தில் ஒழுகி, அப்பால் மணம் புரிந்துகொண்டு வாழுங்கால், தலைவன் தன் கடமையை நிறைவேற்றப் பிரிய, அப்போது காதலர் இருவரும் பிரிவுத் துன்பத்தால் வாடிப் பின்பு ஒன்றுபட்டு நிற்க, ஏதேனும் ஒரு காரணத்தால் தலைவி ஊடி நிற்க, அதனால் தலைவன் வருந்தி ஊடலை உணர்த்திக் கூடி முன்னையினும் மிக்க இன்பத்தைப் பெறுகிறான் என்ற உருவில் இந்தக் காதற்கதை படர்ந்து நிறைவெய்துகிறது.

---

1. குறள், 1311. 2. ஷை. 1312. 3. 1313-20.
4. 1321-4. 5. 1325-9. 6. 1330.

# 3. பொருள் வகை

திருவள்ளுவர் தம் நூலில் பல பல நுண் பொருள்களையும் பருப் பொருள்களையும், காட்சிப் பொருள்களையும் கருத்துப் பொருள்களையும் பற்றிக் கூறுகிறார். கடவுள், தேவர், பேய், மக்கள், விலங்கு, மரம், சடப் பொருள் முதலியவற்றைப்பற்றியும், அவற்றின் இயல், இயக்கம், நலந் தீங்குகள் ஆகியவை பற்றியும் பல செய்திகளை உரைக்கிறார். மனிதனுடைய வாழ்வின் பல துறைகளையும் ஆராய்ந்து அவற்றில் நல்லன இவை, அல்லன இவை என்று அறிவுறுத்துகிறார். அவர் கூறுவன அனைத்தையும் தொகுத்தும் வகுத்தும் கூறுவதென்பது மிக அரிய செயல். ஆதலின் அவற்றில் ஓரளவு வகைப்படுத்திப் பார்க்கலாம்.

### கடவுள்

கடவுளைப்பற்றி அவர் கூறும் கருத்துக்கள் உளங் கொள்வதற்குரியன. கடவுள் என்னும் சொல்லை அவர் ஆளவில்லை. யாவரும் பொதுவகையில் கூறும் இறைவன் என்னும் சொல்லையும்[1] இறை என்பதையும்[2] அவர் வழங்குகிறார். தெய்வம் என்னும் சொல்லையும் கடவுளைக் குறிக்கப் பயன் படுத்துகிறார்.[3] பொருள்,[4] செம்பொருள்,[5] மெய்ப்பொருள்[6] என்பவற் றாலும் என்றும் உண்மையான கடவுளைப் புலப்படுத்துகிறார்.

உலகத்துக்கு முதல்வனாக நிற்றலின் ஆதிபகவன் என்றும்,[7] தூய அறிவே வடிவாயிருத்தலின் வாலறிவன் என்றும்,[8] தன்னை நினைந்தவருடைய உள்ளத் தாமரையில் இருத்தலின் மலர்மிசை ஏகினன் என்றும்,[9] விருப்பு வெறுப்பற்றவ னாதலின் வேண்டுதல் வேண்டாமை யிலான் என்றும்,[10] பொறிகளுக்கு அப்பாற்பட்டு அவற்றின் தொடர்பின்றி யிருத்தலின் பொறி வாயில் ஐந்தவித்தான் என்றும்,[11] தனக்கு இணையில்லாத பெருமையுடைய னாதலின் தனக்குவமை இல்லாதான் என்றும்,[12] அறத்தின் இருப்பிடமாகவும் அருளாளனாகவும் இருத்தலின் அறவாழி அந்தணன் என்றும்,[13] எட்டுவகைக் குணம் கொண்டு அடியார்களுக்கு அருள் செய்தலின் எண்குணத்தான் என்றும்,[14] என்றும் உள்ளவனாதலின் உள்ளது என்றும்,[15] பற்று அற்று நிற்பவனாதலின் பற்றற்றான் என்றும்,[16] எவ்வுயிர்க்கும் நிலையான உண்மைச் சார்பாயிருத்தலின் சார்பு என்றும்,[17] வினையின் அளவறிந்து இன்ப துன்பங் களை வகுத்தலின் வகுத்தான்[18] என்றும் கூறுவர்.

இறைவன் குறி குணம் இறந்தவனாயினும் அடியார்களின் அன்புக்குக் கட்டுப்பட்டு அவை உடையவனாக எழுந்தருளும் ஆற்றலும் கருணையும் உடையவனாதலின் அவனை எண் குணத்தான் என்று கூறி, அவன் தாளை வணங்க வேண்டும் என்று அறிவுறுத்துகிறார்.[19]

---

1. குறள், 5, 10. 2. ஷை. 388. 3. 43,55,619,1023. 4. 351. 5. 358.
6. 249, 356. 7. 1. 8. 2. 9. 3. 10. 4.
11. 6. 12. 7. 13. 8. 14. 9. 15. 357.
16. 350. 17. 359. 18. 377. 19. 9.

அறிவிலே தெளிவு பெற்றவர்களும்,[1] நல்ல முறையில் கல்வியைக் கற்றவர்களும்[2] அந்த மெய்ப்பொருளை உணர்வார்கள். அப் பரம்பொருளை வழிபட்டவர்களுக்கு எங்கும் இடும்பையே இராது;[3] மனக்கவலை போகும்;[4] இருவினைகள் அவர்களைச் சாரா;[5] நீண்ட வாழ்வைப் பெறுவார்;[6] பிறவித் துன்பத்தினின்றும் நீங்குவார்கள்.[7] அவனைப் பற்றினர் பற்றினை அறுப்பர்.[8] தன் குடியை முன்னுக்கு வரச்செய்ய முயலும் ஒருவனுக்குத் தெய்வம் துணை செய்யும்.[9]

## தெய்வங்கள்

இவ்வாறு பொது வகையில் இறைவனைப் பற்றிய கருத்துக்களைச் சொன்ன வள்ளுவர் திருமால், இந்திரன் முதலிய மூர்த்திகளைப் பற்றியும் கூறுகிறார். திருமால் தாமரை போன்ற கண்களையுடைமையால் அவனைப் புண்டரீகாட்சன் என்பர். "தாமரைக் கண்ணன்" என்று அவனைக் கூறி அவனுடைய உலகு இன்பந் தருவது என்பதைக் குறிப்பினால் பெற வைக்கிறார்.[10] திருமாலின் தேவியும் செல்வத்துக்குத் தலைவியுமாகிய திருமகளைப் பலபாக்களிற் குறிக்கிறார். திரு என்றும்,[11] செய்யாள் என்றும்,[12] தாமரையினாள்[13] என்றும் கூறுகிறார். திருமகளின் தமக்கையாகிய மூதேவியைத் தவ்வை யென்றும்,[14] முகடி[15] என்றும் சொல்கிறார். திருமகள் செந்நிறத்தவள்; அவள் தவ்வை கருநிறத்தவள்.

அமரர் தலைவனை விசும்புளார் கோமான், இந்திரன்,[16] வேந்தன்[17] என்று கூறுகிறார். வேந்தன் என்னும் வழக்குப் பழையது. தொல்காப்பியனாரும்,

"வேந்தன் மேய தீம்புனல் உலகமும்"[18]

என்றார். அவன் ஐம்பொறியை அவிக்கும் ஆற்றல் இல்லாதவன்; அவ்வாற்றல் உடைய தவமுனிவரின் சினத்துக்கு ஆளானவன்; அவனுடைய அரச பதவி சிறந்தது.

உலகத்தைப் படைத்தவனாகிய பிரமனுக்குச் சாபம் கொடுக்கிறார் வள்ளுவர். 'ஒருவர் இரந்து உயிர் வாழவேண்டுமென்று விதிப்பானானால் அவ்வாறு செய்த பிரமன் பரந்து கெடுவானாக' என்கிறார். இங்கே உலகைப் படைக்கிறவனே விதியையும் வரையறுக்கிறவன் என்பதை உய்த்துணர வைக்கிறார்.[19]

காமன் மக்கள் உள்ளத்தே காமத்தை ஊட்டுபவன் என்ற கருத்து ஒரு குறளில் வருகிறது.[20] அவன் தலைவனை விட்டுவிட்டுத் தன்னை மட்டும் துன்புறுத்துவதாகத் தலைவி கூறுகிறாள்.

அறக்கடவுளை அறம் என்றே சொல்கிறார், திருவள்ளுவர். அன்பில்லாத உயிரை அக்கடவுள் துன்புறுத்தும்;[21] அடக்க முடையவனுக்குத் துணை நிற்கும்;[22] பிறனுக்குக் கேடு சூழ்வானுக்குக் கேட்டை உண்டாக்கும்.[23]

1. குறள், 249. 2. ஷ. 356. 3. 4. 4. 7. 5. 5.
6. 3, 6. 7. 10, 356, 357, 358, 359. 8. 350. 9. 1023.
10. 1103. 11. 179, 519, 920. 12. 84, 167. 13. 617.
14. 167. 15. 617, 936. 16. 25. 17. 899.
18. தொல்காப்பியம், அகத்திணை, 5. 19. 1062. 20. 1197.
21. 77. 22. 130. 23. 204.

இறக்கும் காலத்தில் உடம்பினின்றும் உயிரைப் பிரித்து எடுத்துச் செல்லுவதனால் காலனுக்குக் கூற்றுவன் என்னும் பெயர் வந்தது; கூறுபடுத்துவதனால் கூற்றுவன் ஆனான். அவனைக் கூற்றம் என்றும் கூற்று என்றும் வள்ளுவர் கூறுவர். கொல்லாமையை மேற்கொண்டு ஒழுகுபவனுடைய வாழ்நாளினிடையே கூற்றுவன் சென்று குறையாயுள் உடையவனுக்க மாட்டான்; அவன் பேராற்றல் உடையவன்; பெரியவர்களுக்கு இன்னாதன செய்வார் உயிரைக் கொள்ள விரைந்து வருவான்; தவம் செய்பவர்கள் அவனையும் வென்று விடுவார்கள். வறியவர்களை, "உப்பிற்கும் காடிக்கும் கூற்று" என்று உருவகம் செய்வதையும், தலைவிக்கும் அவள் கண்ணுக்கும் கூற்றை உவமையாக்குவதையும் சில குறட்பாக்களில் காணுகிறோம்.[1]

பூமியை நிலமென்னும் நல்லாள் என்று ஒரு குறள் கூறுகிறது;[2] பூமிதேவி என்னும் வழக்கை எண்ணி அவ்வாறு சொன்னார் போலும். பிதுரு தேவதைகளாகிய தென்புலத்தாரும், வருத்தும் தெய்வமாகிய அணங்கு அல்லது தாக்கணங்கும் சில இடங்களில் வருகிறார்கள்.[3] இல்லறத்தானாற் பேணப்படும் ஐந்து வகையினரில் தென்புலத்தார் ஒரு வகையினர். தெய்வமகளை அணங்கென்றும், தீண்டி வருத்தும் தெய்வத்தைத் தாக்கணங்கு[4] என்றும் சொல்வது மரபு. அச்சத்தைத் தரும் பேயாகிய அலகையை இரண்டு பாடல்களில் காணலாம்.[5]

தேவர்களைப் பற்றிய செய்திகள் பொதுவாகப் பல இடங்களில் வருகின்றன. அவர்களை அமரர், அவியுணவின் ஆன்றோர், தெய்வம், தேவர், புத்தேளிர், வானத்தவர், வானோர், விசும்புளார் என்று குறிப்பிக்கிறார். தேவர்களுக்கு நாள்தோறும் பூசனை நடக்கும்; சிறப்பாகிய விழாவும் அவ்வப்போது நடைபெறும்; அவர்களுக்குத் தலைவன் இந்திரன்; சிறந்த பொருள்கள் தேவர்களின் உலகத்தில் உள்ளன; அவர்கள் ஞானியரைப் போற்றுபவர்கள்; தாம் விரும்பியவற்றைச் செய்யும் உரிமை பெற்றவர்கள்; வேள்வியில் வழங்கும் அவியை உணவாக ஏற்றுக் கொள்வார்கள்.[6]

இம்மை, மறுமை, வீடு என்ற மூன்று நிலைகளைச் சொல்வது இந்நாட்டு மரபு. இம்மை என்பது இந்தப் பிறப்பு; மறுமை என்பன இப்பிறப்பின் பிறகு வரும் துறக்கமும் நரக வாழ்வும். இவ்விரண்டையும் திருவள்ளுவர் கூறுகிறார். இம்மையைத் தனியாகவும்,[7] மறுமையைத் தனியாகவும்[8] சொல்வதோடு, இம்மையையும் மறுமையையும் சேர்த்து இரண்டு குறள்களில் சொல்கிறார். இன்சொல் கூறுகிறவனுக்கு இம்மையிலும் மறுமையிலும் இன்பமுண்டாகும் என்றும், வறுமையால் துன்புறுகிறவர்கள் இம்மை வாழ்வும் மறுமை வாழ்வும் கெடும்படியான நிலையை அடைவார்கள் என்றும் கூறுகிறார்.[9]

### துறக்கம்

புண்ணியப் பயனை நுகர்பவன் மறுமையில் சொர்க்க பதவியைப் பெறுவான் என்றும், பாவப் பயனை நுகர்பவன் நரக பதவியைப் பெறுவான் என்றும் நூல்கள் கூறும். சொர்க்கம் என்பது தேவர்கள் உறையும்

---

1. 269, 326, 765, 894, 1050, 1083, 1085. 2. 1040. 3. 43; 918, 1081, 1082. 4. இக்காலத்தில் மோகினி என்று சொல்வது இதுதான் போலும். 5. 565, 850 6. 18, 25, 50, 86, 121, 213, 234, 290, 413, 702, 1073. 7. 1315. 8. 459, 904. 9. 98, 1042.

விண்ணுலகம். அது நிரம்பிய இன்பவாழ்வை உடையது. அமரருள், ஆண்டு, புத்தேள் உலகம், புத்தேள் நாடு, புத்தேளிர் வாழும் உலகு, மேல் உலகம், வான், வானகம், விசும்பு என்ற அதன் பெயர்கள் இந்த நூலில் வருகின்றன.

அது அரிய பொருள்களை உடையது; விழுச்செல்வங்களைப் பெற்றது; இன்பவாழ்வை உடையது.[1] வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவனும், தம் கணவர் உள்ளம் மகிழ நடக்கும் பெண்டிரும், விருந்தோம்புபவனும், அடக்க முடையவனும், ஈகையுடையவனும், கள்ளாமையுடையவனும் அந்த உலக இன்பத்தை அடைவார்கள்.[2] 'ஒப்புரவை விட நல்ல பிற பொருளைப் புத்தேளுலகத்தும் பெறுதல் அரிது'[3] என்று ஒரு குறள் கூறுகிறது. அதனால், அவ்வுலகத்தில் நல்லன பலவற்றைக் காணலாம் என்பது குறிப்பால் பெறப்படுகிறது. அப்படியே, 'வேண்டாமையைப் போன்ற விழுமிய செல்வம் இவ்வுலகில் இல்லை; அவ்வுலகமாகிய துறக்கத்திலும் இல்லை'[4] என்பது ஒரு குறளின் கருத்து. அதனூடே விழுமிய செல்வங்கள் பல துறக்கத்தில் உண்டு என்ற கருத்து மறைந்திருக்கிறது. புலவியினால் இன்பம் பெற்ற தலைவன், 'புலத்தலைவிட இன்பம் தரும் அமரர் உலகம் உண்டோ?'[5] என்று கேட்கிறான். அந்தக் கேள்வியினூடே புத்தேள் நாட்டில் இன்பம் உண்டு என்ற உண்மை புதைந்திருக்கிறது. 'அறம் கூறும் ஆக்கம்' என்றும், 'அரும் பயன்' என்றும் அந்த விண்ணுலக இன்பவாழ்வை[6] வள்ளுவர் புலப்படுத்துகிறார்.

### அமிழ்தம்

தேவர்கள் அமுதம் உண்டவர்கள். சுவை மிகுதிக்கு அமுதத்தை உவமிப்பது மரபு. சாவாமையைத் தருவது அது. அதனை அமிழ்தம், அமிழ்து, மருந்து, சாவா மருந்து[7] என்ற பெயர்களால் குறிப்பர். மழைக்கு அமிழ்தம் உவமையாகிறது. குழந்தை அளைந்த கூழ் இனிமையானது என்பதைச் சொல்ல வருகையில், அது அமிழ்தைவிட மிக இனியது என்று கூறுகிறார். விருந்தினர் புறத்தே இருந்தால் அமிழ்தாக இருந்தாலும் அது வேண்டுவதற்குரியதன்று என்று கூறுகையில், அதைச் சாவா மருந்து என்கிறார். தக்காரல்லாதார் உள்ள அவையில் சேர்ந்து சொல்லும் சொல் அங்கணத்துள் உகுக்கும் அமிழ்தைப் போல்வது என்கிறார். மானம் போகுங்கால் உயிரை விடுவது சிறந்தது என்பதைப் புலப்படுத்த விரும்பு பவர், 'இந்த உடம்பைப் பாதுகாக்கும் வாழ்க்கை சாவாமையைத் தடுக்கும் மருந்தோ?' என்று கேட்கிறார். தலைவியின் தோளுக்குத் தலைவன் அமிழ்தை உவமை கூறுகிறான்.

### நரகம்

தேவலோக வாழ்வையும், அதன் சிறப்பையும், புண்ணியம் செய் தாருக்கு அவ்வாழ்வு கிடைப்பதையும், அங்குள்ளார் நுகரும் அமிழ்தையும் சொல்லும் வள்ளுவர், சொர்க்கத்துக்கு மறுதலையாகிய நரகத்தைப் பற்றியும் கூறுகிறார். அதனை அளறு, ஆரிருள், இருள் சேர்ந்த இன்னா உலகம் என்று

1. குறள், 213,363,1323. 2. ஷ. 50,58,86,121,222,290. 3. 213. 4. 363.
5. 1323. 6. 183,198. 7. 11,64,720,1106,968;82.

வழங்குகிறார். அடங்காதாரும், ஊனுண்ணுவாரும், பேதையரும் நரகம் புகுவர் என்கிறார்.[1] அருளுடைய நெஞ்சினர் நரகத்தை அடையார்[2] என்று ஒரு குறள் கூறுகிறது. வரைவின் மகளிர் தோளை நரகமாக ஒரு குறள் உருவகம் செய்கிறது.[3]

### இரு வினை

துறக்க நிரயங்களை அடையக் காரணமானவை புண்ணிய பாவங்கள். அவ்விரண்டையும் இரு வினை என்பர். இரண்டுமே பிறவிக்குக் காரணம் ஆதலின், 'இருள்சேர் இருவினை'[4] என்று கூறுகிறார், வள்ளுவர். புண்ணியத்தை அறம்[5] என்றும் நல்வினை[6] என்றும் பொருள் என்றும்[7] கூறுவது வழக்கு. பாவத்தை மறம் என்றும் அறன்கடை என்றும் தீவினை என்றும் பொருளல்லது என்றும் அறம் அல்ல என்றும் அல்லவை என்றும் வழங்குவர்.[8] பாவத்தை ஒழித்தல் வேண்டும் என்பதை, தீவினையச்சம் என்று ஒரு தனி அதிகாரத்தால் அறிவுறுத்துகிறார். புண்ணியம் பாவம் இரண்டையும் சில குறள்கள் கூறுகின்றன.

"அல்லவை தேய அறம்பெருகும்"
"அறம்கூறுன் அல்ல செயினும்"
"பொருள்அல்ல தவ்வூன் நினல்"[9]

என்பவற்றைக் காண்க.

பாவம் என்ற சொல்லையே ஓரிடத்தில் ஆளுகிறார்;

"பகைபாவம் அச்சம் பழிஎன நான்கும்"[10]

என்ற குறளில் அந்தச் சொல் வருகிறது. பாக்கியம் என்ற சொல்லை,

"அலர்எழ ஆருயிர் நிற்கும் அதனைப்
பலர்அறியார் பாக்கியத் தால்"[11]

என்பதில் இணைத்திருக்கிறார். அது புண்ணியத்தால் வந்த பேறு என்னும் பொருளுடையது. அதற்குப் புண்ணியம் என்றே பொருள் எழுதுவர் மணக்குடவர்.

முன்னைப் பிறப்பிற் செய்த வினையை ஊழ் என்று கூறுவர்.

### வீடு

என்றும் நிலையான இன்ப வாழ்வைத் தருவது வீடு. அது பெறுதற்கரிய பயனாதலின் அரும் பயன் என்றும்,[12] இவ்வுலகத்தினின்றும் பிறிதாதலின் அவ்வுலகம் என்றும்,[13] இன்பமுடைமையின் இன்பம் என்றும்,[14] எல்லாவற்றினும் சிறந்ததாதலின் சிறப்பு என்றும்,[15] உயிர் புக்கு என்றும் இருக்கும் நிலையாதலின் புக்கில் என்றும்,[16] எல்லாவற்றிற்கும் மேற்பட்ட

1. குறள், 121, 255, 835. 2. ஷை, 243. 3 919.

4. குறள், 5. 'நல்வினையும் பிறத்தற்கு ஏதுவாகலான், "இருவினையும் சேரா" என்றும் கூறினார்' (பரிமேலழகர் உரை.)

5. குறள், 96. 6. ஷை. 335. 7. 254. 8. 76, 142, அதிகாரம், 21, குறள், 254, 181,96. 9. 96, 181, 254. 10. 146. 11. 1141. 12. 198. 13. 247. 14. 352. 15. 31. 16. 340.

தாதலின் வரன் என்னும் வைப்பு என்றும்,[1] சொர்க்கமாகிய வானவர் உலகத்துக்கும் மேற்பட்டதாதலின் வானோர்க்கு உயர்ந்த உலகம் என்றும்,[2] புவியினின்றும் வேறாய் மேலே இருப்பதால் வானம் என்றும்[3] அதனை வள்ளுவர் பலவாறு குறிப்பிட்டுச் செல்வார். மீண்டும் பிறவாத நிலையாதலின் அதற்குரிய நெறியை 'மற்றீண்டு வாரா நெறி'[4] என்பர்.

ஐந்து பொறிகளை அறிவினால் அடக்குபவரும், அறத்தினைச் செய்பவரும், அருளுடையவரும், யான் எனது என்னும் பற்றுக்களை ஒழிப்பவரும், அறியாமை நீங்கி ஞானம் பெற்றவரும், ஐயம் நீங்கித் தெளிவு பெற்றவரும், கற்று மெய்ப் பொருளைக் கண்டவரும் வீட்டின்பத்தைப் பெறுவார்கள்.

### பிறப்பு அறுத்தல்

இறப்பும் பிறப்பும் தொடர்ந்து வருவன. உறக்கமும் விழிப்பும் அடுத்தடுத்துத் தொடர்வதுபோல வருபவை அவை.[5] இந்தப் பிறப்புக்கு எல்லையே இல்லை. ஆதலின் பிறவிப் பெருங்கடல் என்பர்.[6] உண்மையல்லாதவற்றை உண்மையென்று உணரும் அறியாமை காரணமாகப் பிறப்பு வருகிறது.[7] அவ்வறியாமையே அவாவை உண்டாக்கி மேலும் பிறப்பதற்குரிய வினைகளைச் செய்ய ஏதுவாக நிற்கிறது.[8] அந்த அறியாமையாலேயே யான் எனது என்னும் பற்றுக்கள் உண்டாகின்றன.[9] காமம், வெகுளி, மயக்கம் என்பன இருக்கும் வரையில் பிறவித்துன்பம் இருக்கும்.[10]

ஒரு பிறவியில் செய்த செயலின் விளைவு ஏழு பிறப்புக்களில் தொடர்ந்து வரும்.[11] உயிர்கள் பிறக்கும் பிறப்பை ஏழாகப் பிரிப்பது ஒரு மரபு.[12]

பிறப்பு அறுப்பதே ஆருயிர்கள் பெறும் பயன்களில் முடிந்த முடிபானது பிறப்பற்ற இன்ப வாழ்வே வீடு என்பது. பிறவாமையை நாடி ஆவன செய்வது அறிவாளர் கடமை.

> " வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை "[13]

என்பர். பற்றும் அவாவும் அற்றாருக்கு அந்நிலை உண்டாகும்.

> " பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும் "[14]

என்றும்,

> " அவாஎன்ப எல்லா உயிர்க்குமெஞ் ஞான்றும்
> தவாஅப் பிறப்பீனும் வித்து "[15]

என்றும்,

> " வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை; மற்றது
> வேண்டாமை வேண்ட வரும் "[16]

என்றும் வருவனவற்றைக் காண்க. பற்றும் அவாவும் போக வேண்டுமாயின் இறைவனைப் பற்றிக் கொள்ள வேண்டும்.

---

1. குறள், 24. 2. ஷை. 346. 3. 353. 4. 356. 5. 339.
6. 10. 7. 351. 8. 358,361. 9. 346. 10. 360.
11. 107,126,398,538. 12. 62,107. 13. 362. 14. 349.
15. 361. 16. 362.

"பற்றுக பற்றற்றுன் பற்றினை; அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு." [1]

இதனுல், இறைவனைப் பற்றினுல் பற்றறுத்து வீடு அடையலாம் என்ற கருத்தைப் பெறலாம். இதை எண்ணியே,

"பிறவிப் பெருங்கடல் நீந்துவர், நீந்தார்
இறைவ னடிசேரா தார்" [2]

என்று கடவுள் வாழ்த்தில் கூறினர். இவ்வாறு செயலும் விளைவுமாகத் தொடர்ந்து வரும் பல செயல்கள் முடிவில் பிறப்பையறுக்க வழியாக அமைதலின் அவற்றையே பிறப்பறுக்கும் காரணமாகக் கூறுவது வள்ளுவர் இயல்பு. அந்த வகையில், வாழ்க்கையில் வீணைப் பொழுது போக்காமல் அறத்தைச் செய்கிறவரும், [3] மெய்யுணர்வு பெற்றவரும், [4] சிறப்பென்னும் செம்பொருளாகிய இறைவனைத் தியானம் செய்பவரும் [5] பிறப்பினின்றும் விடுபடுவர் என்று கூறுகிறார்.

## சீவன் முத்தி

இந்த உலகில் வாழும் போதே இன்ப துன்பமற்ற ஒரு நிலையை அடையலாம் என்பதை இந்த நாட்டுப் பெரியோர்கள் சொல்லியிருக்கிருர்கள். தமிழ் நாட்டில் பழங்கால முதற்கொண்டே அத்தகைய நிலை ஒன்று உண்டு என்ற நம்பிக்கை நிலவி வந்ததற்குச் சங்க நூல்களிலிருந்து சான்று காட்டலாம்.

"தவம்செய் மாக்கள் தம்உடம்பு இடாஅது
அதன்பயம் எய்திய அளவை மான" [6]

என்பது உடம்போடே தவப்பயனுகிய இன்பத்தைப் பெறுவதைக் குறிக்கிறது.

"நிலம்அமர் வையத்து ஒருதாம் ஆகி
உயர்நிலை உலகம் இவண்நின்று எய்தும்
அறநெறி பிழையா அன்புடை நெஞ்சிற்
பெரியோர்" [7]

என்பது அந்த நிலையை உடையோரைப்பற்றிச் சொல்கிறது. அந்த நிலையைச் சீவன் முத்தி என்று சொல்வது மரபு. அத்தகைய நிலை ஒன்று உண்டு என்பதை வள்ளுவர் வாய்மொழியும் உய்த்துணர வைக்கிறது.

"வேண்டுதல்வேண் டாமை இலான்அடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல" [8]

என்னும் குறள் இம்மையிலும் இடும்பை இல்லா நிலைமையைச் சொல்கிறது. "இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை" என்று அப்பர் சொல்லும் நிலை இதுதான்.

1. குறள், 350. 2. ஷ. 10. 3. 38. 4. 357. 5. 358.

6. பொருநர். 91-2; "இத்தேகமொடு காண்பனே" என்ற தாயுமானவர் வாக்கை ஒப்பு நோக்குக.

7. மதுரைக். 470-73; 'நால்வகை நிலங்கள் மேவிய உலகத்தில் தமக்கு ஒப்பார் இலராகி, உயர்ந்த நிலையையுடைய வீட்டை இவ்வுலகிலே இருந்து அடையும், அறநெறி மாருத அன்புடைய நெஞ்சைப் பெற்ற பெரியோர்' என்பது இதன் பொருள்; இவரைச் சீவன்முத்தர் என்று குறிப்பர் நச்சினர்க்கினியர்.

8. குறள், 4.

"இருள்சேர் இருவினையும் சேரா; இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு"[1]

என்பதும் புண்ணிய பாவ வினைத் தொடர்பு அற்று நிற்கும் ஒரு நிலையைக் குறிக்கிறது.

"இன்பம் இடையறா தீண்டும்; அவாஎன்னும்
துன்பத்துள் துன்பம் கெடின்"[2]

என்பதில் இடையறாது இன்பத்தை நுகரும் நிலை ஒன்றைக் கூறுகிறார்.

"ஆரா இயற்கை அவாநீப்பின் அந்நிலையே
பேரா இயற்கை தரும்"[3]

என்பதில் வரும் பேரா இயற்கை என்பதும் அதுவே. இது சிவன் முத்தியைக் குறிப்பது என்பது பரிமேலழகர் உரையாலும் பெறப்படும்;

'களிப்புக் கவற்சிகளும் பிறப்புப்பிணி மூப்பு இறப்புக்களும் இன்றி உயிர் நிரதிசய இன்பத்ததாய் நிற்றலின், வீட்டினைப் பேரா இயற்கை என்றும், அஃது அவா நீத்த வழிப் பெறுதல் ஒருதலையாகலின், அந்நிலையே தரும் என்றும் கூறினார். "கன்றாய் ஞானம் கடந்துபோய் நல்லிந் திரியம் எல்லாம்ஈர்த், தொன்றாய்க் கிடந்த அரும்பெரும்பாழ் உலப்பில் அதனை உணர்ந்துணர்ந்து, சென்றாங் கின்பத் துன்பங்கள் செற்றுக் களைந்து பசை யற்றால், அன்றே அப்போ தேவீடும் அதுவே வீடு வீடாமே" என்பதும் இக்கருத்தே பற்றி வந்தது. இந்நிலைமை உடையவனை வடநூலார் சீவன் முத்தன் என்ப'

என்பது காண்க.

## உயிரின் இயல்பு

இம்மை மறுமை வீட்டு வாழ்க்கைகளைப் பெறும் உயிர்கள் இவ்வுலகில் உடம்புடன் உலவுகின்றன. உயிர் வேறு, உடம்பு வேறு என்ற உணர்வை எழுத்தின் இலக்கணத்தை என்று தமிழர் வகுத்தனரோ அன்றே உணர்ந்திருந்தனர். உயிரெழுத்து வேறு, மெய்யெழுத்து வேறு என்ற உண்மையை மிகமிகப் பழங்காலத்திலேயே உணர்ந்துகொண்டவர்கள் அவர்கள். திருவள்ளுவர் உயிரைப் பற்றிய பல கருத்துக்களை உணர்த்துகிறார்.

உடம்பும் உயிரும் இணைந்து நிற்கின்றன. ஒரு வீட்டில் குடியிருப்பது போல உடம்பில் உயிர் நிற்கிறது.[4] அது என்றேனும் குடம்பையை விட்டுப் பறவை பறந்து ஓடுவதுபோலப் போய்விடும்.[5] உயிர் இருக்கும் இடம் ஆதலின் இவ்வுடலுக்கு உயிர்நிலை[6] என்ற பெயர் வந்தது. கூற்றுவன் உடலை விட்டு உயிரை எடுத்துச் செல்லுவதனால் உயிருண்ணும் கூற்று[7] என்பது ஒரு வழக்கு. உயிரை விட்டு உடலை உண்ணுவார் புலால் நுகர்பவர்கள்.[8] உயிரற்ற உடம்பு பிணமாகும்.[9] உயிரும் உடம்பும் சேர்ந்து வாழினும் அவ்வாழ்வை உடல் வாழ்தல் என்று சொல்லாமல் உயிர் வாழ்தல், உயிர் வாழ்க்கை என்றே சொல்லுவர்.[10] உயிரும் உடம்பும் ஒன்றிய உறவு மிகச் சிறந்ததாதலின் தலைவன் தலைவிக்கிடையே உள்ள காதலுக்கு

1. குறள், 5. 2. ஷை. 369. 3. 370. 4. 73, 1122. 5. 338.
6. 80, 255, 290. 7. 326, 1221. 8. 258, 259.
9. 913. 10. 78, 183, 214, 1062, 1124.

அதனை உவமை கூறுவர்.[1] உயிருக்கும் உடம்புக்கும் உள்ள ஒற்றுமையால் உடம்புடன் வாழும் மக்களையும்,[2] பிறவற்றையும்[3] உயிர் என்றே வழங்குவது மரபு. உயர்திணை யுயிர்களையும் அஃறிணை யுயிர்களையும் சேர்த்து 'எல்லா உயிரும்' என்றும் கூறுவதுண்டு.[4] உயிர்கள் பலவாதலின் பல்லுயிர்[5] என்பர்.

காமே உயிரானாலும் அதை வேருக வைத்துக் கூறுதல் உலக வழக்கிலும் செய்யுள் வழக்கிலும் உண்டு.

"தன்னுயிர் அஞ்சும் வினை"
"தன்உயிர் தான்அறப் பெற்றானை"
"தன்உயிர்க்கு இன்னாமை தான்அறிவான்"[6]

என்று படர்க்கையில் தான் வேறு, உயிர் வேறு என்பது போல வைத்து, 'தன் உயிர்' என்று கூறுதலும்,

"உண்டு என்உயிர்"
"என் மாயா உயிர்"[7]

என்று தன்மையில் வைத்து, 'என் உயிர்' என்று கூறுதலும் காண்க.

உயிர் நிலைபேறுடையது; ஆதலின் மன்னுயிர், மன்னும் உயிர் என்று அதனைக் கூறுவர்.[8] எல்லாப் பொருளினும் அருமை பெற்றதாதலின் ஆருயிர் என்பர்.[9] அது இனியது; எனவே இன்னுயிர் எனவும் வழங்கப் பெறும்.[10] அதனால் அதன்மேல் மிகுதியான காதல் இருப்பது அதை உடையவருக்கு இயல்பு.

"துன்பம் உழத்தொறூஉம் காதற்று உயிர்"
"உயிர்க்காதல் நெஞ்சு"[11]

என்பவற்றால் இந்த இயல்பு புலனாகின்றது. யாவரும் தம் உயிரைக் காத்து ஓம்புவர்.[12] உயிரை விட அஞ்சுவர்.[13] ஆயினும் மறவரும் மானம் உடையவரும் உயிரை விடத் துணிவார்கள்.[14]

## மழையின் பெருமை

பாயிரத்தில் கடவுள் வாழ்த்தை முதலில் வைத்து அதனை அடுத்து வான் சிறப்பை வைத்தார். முதலில் உள்ள அதிகாரத்தில் கடவுளைப் பற்றிச் சொல்வதோடு வேறு இடங்களிலும் இடையே கூறுவது போல, மழையின் பெருமையையும் வேறு பிற இடங்களிலும் கூறியுள்ளார். கற்புடை மங்கையர் சிறப்பைக் கூறப் புகுந்தவர், அவர்கள் பெய்யென்றால் மழை பெய்யும் என்கிறார். கற்புடைய மங்கையர் உள்ள இடத்தில் தவறாமல் மழை பெய்யும் என்பதே கருத்து.[15] அவ்வாறே செங்கோல் வேந்தன் நாட்டில் உரிய காலத்தில் மழை பெய்யும்;[16] அதற்கு மாறாகக் கொடுங்கோல் மன்னன் நாட்டில் மழை பெய்யாது;[17] செங்கோல் வேந்தன் தண்ணளியை நோக்கி வாழும்

1. குறள், 1122. 2. ஷை, 31, 122, 231, 334, 476, 848, 945, 1020, 1106, 1141. 3. 261, 322. 4. 30, 260, 361, 972, 1012, 1013. 5. 322. 6. 244, 268, 318. 7. 1213, 1230. 8. 68, 190. 9. 73. 10. 1209. 11. 940, 1298. 12. 131. 13. 244, 501. 14. 777, 778, 969. 15. 55. 16. 545. 17. 559.

குடிமக்களுக்கு வான்நோக்கி வாழும் உலகத்து உயிர்கள் உவமையாகின்றன;[1] அதன் மறுதலையாக, கொடுங்கோல் வேந்தன் அளியில்லாமைக்கு மழையின்மை உவமையாகின்றது.[2] கைம்மாறு வேண்டாமல் நலம் செய்கிறவர்களுக்கும்,[3] சீருடைச் செல்வரின் கொடைக்கும்,[4] விரும்பும் காதலரின் அளிக்கும்[5] மழையை உவமையாக ஆள்கிறார் வள்ளுவர்.

### துறவியர்

அகப்பற்றுப் புறப்பற்றுக்களை நீத்து, தாம் உற்ற துன்பங்களைப் பொறுத்து, பிற உயிர்களுக்குத் துன்பம் உண்டாக்காமல் எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டு ஒழுகுபவர்கள் இவ்வுலகிலேயே பேரா இயற்கை பெற்றவர்கள்; அவர்கள் தெய்வத்தோடு ஒத்தவர்கள். ஆதலின் மழைக்கு அடுத்தபடி அவர் பெருமையைக் கூறுகிறார். துறவற இயலில் அவருடைய குணங்களையும் செயல்களையும் அவர்கள்பெறும்பேற்றையும் விரிவாகச் சொல்கிறார். உள்ளத் துறவுடையவர்களையே சிறந்தவர்களாகப் பாராட்டும் இயல்புடையவர் திருவள்ளுவராதலின் புறக்கோலம் மட்டும் பூண்டு, உள்ளத் துறவின்றி வாழும் போலித் துறவிகளைக் கூடா ஒழுக்கம் என்னும் அதிகாரத்தில் கண்டிக்கிறார்.

> "மழித்தலும் நீட்டலும் வேண்டா, உலகம்
> பழித்த தொழித்து விடின்"[6]

என்று அவ்வதிகாரத்தின் இறுதியில் சொல்கிறார். அதனால் துறவிகள் எல்லோரையும் இகழ்ந்ததாகக் கொள்ளுதல் கூடாது. உள்ளத் துறவும் துறவுக் கோலமும் உடையவர்களை மிகச் சிறப்பாகவே வைத்துப் போற்றுகிறார்.

துறவியருக்கு அமையும் இயல்புகளை இல்லறத்தாரிலும் அகத்துறவுடையவர்களில் காணலாம் என்பது வள்ளுவர் கருத்து. நீத்தார் பெருமையில்,

> "உரன்என்னும் தோட்டியான் ஓரைந்தும் காப்பான்
> வரன்என்னும் வைப்பிற்கோர் வித்து"[7]
> "ஐந்தவித்தான்"[8]

என்றும், துறவு என்னும் அதிகாரத்தில்,

> "அடல்வேண்டும் ஐந்தன் புலத்தை"[9]

என்றும் ஐம்பொறியை அடக்கும் இயல்பைத் துறவியருக்கு இலக்கணமாக அமைக்கிறார். ஆனால் இதே இயல்பை இல்லறவியலில் வெஃகாமை என்னும் அதிகாரத்தில்,

> "இலம்என்று வெஃகுதல் செய்யார்; புலம்வென்ற
> புன்மையில் காட்சி யவர்"[10]

என்று கூறுகிறார்.

துறவியரை,

> "செயிரில் தலைப்பிரிந்த காட்சியார்"[11]
> "மருள்நீங்கி மாசறு காட்சியார்"[12]

என்று சொல்வார். இல்லற வியலில்,

---

1. குறள், 542. 2. ௸. 557. 3. 211. 4. 1010. 5. 1192.
6. 280. 7. 24. 8. 25. 9. 343. 10. 174.
11. 258. 12. 352.

"புலம்வென்ற புன்மையில் காட்சியவர்"[1]

என்றும்,

"மருள்நீர்ந்த மாசறு காட்சி யவர்"[2]

என்றும் இல்வாழ்வாரைக் கூறுகிறார். இவற்றால் இல்வாழ்வில் நின்றும் அகத் துறவு பூண்டிருப்பவர் உண்டு என்ற கருத்துத் தெளிவாகும், திருவள்ளுவரே அவ்வாறு வாழ்ந்தவர் என்பதை இங்கே நாம் நினைவு கூர்தல் வேண்டும்.

துறவைப்பற்றியும் துறவியரைப்பற்றியும் பழந் தமிழ் நூல்களில் பல செய்திகள் வருகின்றன. தொல்காப்பியமும் துறவுபற்றிக் கூறுகிறது. உள்ளத் தூய்மையுடன் துறவுக் கோலம் பூண்ட மெய்த் துறவிகளைப் போற்று வது தமிழ் நாட்டார் மரபு. அவர்களைக் கடவுள் என்றும் சொல்வது வழக்கம். கடவுளுக்கு அடுத்தபடி வைத்துப் போற்றும் சிறப்புடையவர்களாதலின் அப் பெயர் அமைந்தது. வள்ளுவர் இவற்றை நினைத்தே பாயிரத்தில் அவர் பெருமையைக் கூறினாரென்று தோன்றுகிறது.

துறவியர் தவம் செய்பவர்கள். நோற்றல் என்பது தவத்துக்கு ஒரு பெயர். அந்தச் சொல்லுக்குப் பொருள் பொறுத்தல் என்பது. துன்பங்களைப் பொறுப்பது தவத்தின் தலையாய இலக்கணம்.

"சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பம்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு"[3]

என்பதில் இதனை விளக்கமாகக் கூறுகிறார். தமக்கு வரும் துன்பத்தைப் பொறுப்பதோடு, பிற உயிர்களுக்குச் சிறிதும் துன்பம் செய்யாதது தவத் தின் இலக்கணம் என்பார்.[4] எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டு ஒழுகும் அந்தணர் அவர்கள்.[5] அருள் நிரம்பிய அவர்கள் கொல்லா நோன்பும் புலால் உண்ணா விரதமும் உடையவர்கள்.[6] தவ வலிமையால் பொல்லாதவர் களை ஒறுத்தலும், நல்லவர்களை வாழ்வித்தலும் செய்யவல்லவர்கள்.[7] அவர்கள் வாய்மொழி மறை மொழியாக, வாழவும் சாவவும் ஆணையிடும் மந்திரமாக உரம் பெறும்.[8] கூற்றின் வலியையும் கடக்கும் பேராற்றல் உடையவர்கள் அவர்கள்[9].

புறத் தூய்மைக்காகப் பல கால் நீராடுதலும்[10], உண்ணாமல் பட்டினி கிடந்து நோன்பு இருத்தலும்[11] அவர்களுக்கு இயல்பு. சில துறவியர் தம் தலையை மழித்திருந்தனர் என்றும், சிலர் தலை முடியை மழிக்காமல் வளர்த் திருந்தனர் என்றும் தெரியவருகிறது.[12]

## அறத்தின் சிறப்பு

பாயிரத்தில் வரும் அறன் வலியுறுத்தல் என்பது அறத்தின் பெரு மையைக் கூறுகிறது. அறம், பொருள், இன்பம் என்ற மூன்றிலும் அறம் உண்டு. அறத்தைக் கடவுளாகச் சொல்வதும் ஒரு மரபு. திருவள்ளுவரே அறக்கடவுளை அறம் என்று குறித்தலை முன்பு பார்த்தோம். ஆதலின் கடவுள் வாழ்த்தை முதலில் பெற்ற பாயிரத்தில் அறன் வலியுறுத்தலையும் வைத்தார்.

---

1. குறள், 174. 2. ஷை. 199. 3. 267. 4. 261. 5. 30.
6. அதிகாரம், 25, 26, 33. 7. குறள், 264. 8. ஷை. 28. 9. 269.
10. 278, 298. 11. 160, 225. 12. 280.

பொருள் இன்பங்களினும் அறம் அடிப்படையாக இருத்தலை[1] ஆய்ந்து தெளியும் வகையில், பொருள் இன்பங்களைச் சொல்லும் இடங்களிலும் அறத்தைப் பற்றிய பல கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்.

" அறன் இழுக்காது அல்லவை நீக்கி "[2]

என்பது அரசனுடைய இலக்கணங்களில் ஒன்று. அரசன் துணையாகக் கொள்ளும் பெரியார்,

" அறன்அறிந்து மூத்த அறிவுடையார் "[3]

ஆக இருக்கவேண்டும். அரசனுடைய செங்கோல்,

" அறத்திற்கும் ஆதியாய் நின்றது. "[4]

அரசனுக்குத் துணையாக நிற்கும் அமைச்சன்,

" அறன்அறிந்து ஆன்றமைந்த சொல்லான் "[5]

ஆக இருக்கவேண்டும். அவன் திறன் அறிந்து சொல்லும் சொல்லைவிட அறனும் பொருளும் வேறு இல்லை.[6] திறன் அறிந்து தீது இன்றி வந்த பொருள் அறனும் இன்பமும் ஒருங்கே ஈனும்.[7] பெண் ஏவல் செய்வானிடம் அறவினையும் பொருளும் பிற வினையும் இல்லை.[8]

இவ்வாறு பொருட்பாலில் பல இடங்களிலும் அறத்தின் தொடர்பை வலியுறுத்துகிறார். இன்பத்துக்கும் அறம் இன்றியமையாதது என்பதை,

" அறத்தான் வருவதே இன்பம்;மற் றெல்லாம்
புறத்த; புகழும் இல "[9]

என்ற குறள் தெளிவாகச் சொல்கிறது. ஆகவே அறத்தின் பெருமையை நன்குணர்ந்தே, போற்றும் பொருள் நான்கில் ஒன்றாக வைத்தார் திருவள்ளுவர்.

### ஈகை

நீத்தார் பெருமையைச் சிறப்பாக எடுத்துச் சொன்னாலும், நல்ல முறையில் இல்வாழ்பவனது பெருமையையும் எடுத்துக் காட்டுகிறார் வள்ளுவர். இல்வாழ்பவன் மற்ற ஆசிரமத்தில் உள்ளவர்களுக்குத் துணையாக இருப்பவன்.[10] இல்வாழ்க்கையை அறத்தின் வழியே நடத்தினால் அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்கு பயனையும் பெறலாமாதலின், பிறவகை வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டும் என்பது இல்லை.[11] அவ்வாறு வாழ்கிறவன் துறவியைவிடச் சிறந்தவனாவான்.[12] அந்த வாழ்க்கையே அறன் என்று சொல்வதற்கு ஏற்புடையது.[13] தக்கவாறு இல்வாழ்க்கை நடத்துபவன் தெய்வத்துக்கு ஒப்பானவன்.[14]

அறத்திற்கு உயிராக இருப்பது ஈகை. ஔவையார்,

" ஈதல் அறம் "

என்று பாடினார். இல்லறம், துறவறம் என்னும் நிலைகளை எண்ணாத

1. "சிறப்புடை மரபிற் பொருளும் இன்பமும், அறத்துவழிப் படூஉம் தோற்றம் போல." (புறநா. 31: 1-2.)

2. குறள், 384. 3. ஷை. 441. 4. 543. 5. 635. 6. 644. 7. 754. 8. 909. 9. 39. 10. 41. 11. 46. 12. 47, 48. 13. 49. 14. 50.

போது அறம் என்றால் ஈகையையே பெரும்பாலும் குறித்தலைக் காணுகிறோம். இந்தக் கருத்தை எண்ணியே,

> " தானம் தவம்இரண்டும் தங்கா வியன்உலகம்
> வானம் வழங்கா தெனின் " [1]

என்ற குறளின் உரையில்,

> ' தானமாவது, அறநெறியான் வந்த பொருள்களைத் தக்கார்க்கு உவகையோடும் கொடுத்தல். தவமாவது, மனம் பொறிவழியிற் போகாது நிற்றற் பொருட்டு விரதங்களால் உண்டி சுருக்கல் முதலாயின. பெரும்பான்மை பற்றித் தானம் இல்லறத்தின் மேலும், தவம் துறவறத்தின் மேலும் நின்றன '

என்று எழுதினர் பரிமேலழகர்.

இல்வாழ்வானுக்குரிய பண்புகளில் விருந்தோம்புதல், ஒப்புரவறிதல், ஈகை என்பன ஈதலாகிய செயல்களின் வெவ்வேறு நிலைகள். இம்மூன்றையும் தனித்தனியே கூறிய வள்ளுவர், அன்புடைமை என்னும் அதிகாரத்தில்,

> " அன்பிலார் எல்லாம் தமக்குரியர்; அன்புடையார்
> என்பும் உரியர் பிறர்க்கு " [2]

என்றும், இனியவை கூறல் என்னும் அதிகாரத்தில்,

> " முகத்தான் அமர்ந்தினிது நோக்கி அகத்தானும்
> இன்சொ லினதே அறம் " [3]

என்றும், அழுக்காறாமை என்னும் அதிகாரத்தில்,

> " கொடுப்ப தழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம்
> உண்பதூஉம் இன்றிக் கெடும் " [4]

என்றும், புகழ் என்னும் அதிகாரத்தில்,

> " ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்ல
> தூதியம் இல்லை உயிர்க்கு " [5]

> " உரைப்பார் உரைப்பவை எல்லாம் இரப்பார்க்கொன்
> றீவார்மேல் நிற்கும் புகழ் " [6]

என்றும் ஈதலைத் தொடர்புபடுத்தினர். செய்ந்நன்றி அறிதல் என்னும் அதிகாரத்திலும் ஈதல் குறிப்பாக நிற்றல் காண்க.

> " இன்மையுள் இன்மை விருந்தொரால் " [7]

என்பது பொறையுடைமையதிகாரத்தில் வருவது. காமத்துப்பாலில்,

> " தம்மில் இருந்து தமதுபாத் துண்டற்றால் " [8]

என்று கூறுவர்.

இவற்றையன்றித் துறவற இயலிலும் ஈதலைச் சொல்லும் இடங்கள் உண்டு.

---

1. குறள், 19. 2. ஷ. 72. 3. 93. 4. 166. 5. 231. 6. 232. 7. 153. 8. 1107.

"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை"[1]

"அற்கா இயல்பிற்றுச் செல்வம்; அதுபெற்றால்
அற்குப ஆங்கே செயல்"[2]

என்பனவற்றைக் காண்க.

பொருட்பாலில் ஈகையையும் அதனோடு தொடர்புடையவற்றையும் இடையிடையே சொல்கிறார்.

அரசனுக்குரிய நான்கு குணங்களில் ஈகை ஒன்று.[3] இன்சொல்லோடு ஈத்தளிக்கவல்ல அரசன் நலம் பெறுவான்.[4] வேந்தர்களில் சிறந்தவனுக்குரிய செயல் நான்கில் கொடையும் ஒன்று.[5] கொடுக்கும்போது அளவறிந்து கொடுக்கவேண்டும்.[6] அரசன் தன் சுற்றத்தைத் தழுவிக் கோடற்குக் கொடுத்தலும் இன்சொலும் உடையவனாதல் வேண்டும்.[7] பெருங் கொடையாளனாய் வெகுளியில்லாதவனாய் இருக்கும் அரசனுக்குச் சுற்றம் மிகுதியாகச் சேரும்.[8] காக்கையைப்போலச் சுற்றத்தாருக்கும் பகிர்ந்தளித்து நுகர வேண்டும்.[9] தாளாண்மையினால் பிறருக்கு உபகாரம் செய்யும் வலிமை உண்டாகும்; அது இல்லையெனில் பிறருக்கு உதவி செய்தல் இயலாது.[10] ஈதலுக்குக் காரணமாகிய அருள் பொருளால் வளரும்.[11] குடிப்பிறந்தவர் நட்பையும், அடுத்திருந்து மாணாத செய்வான் பகையையும் கொடுத்தும் கொளல் வேண்டும்.[12] பேதையர் பெருஞ் செல்வமுற்றால் அயலார் வயிறு நிரம்ப உண்ணவும் தமர்பசியால் வருந்தவும் நேரும்.[13] அறிவில்லாதவன் நெஞ்சு உவந்து ஈதல் பெறுபவனுடைய தவத்தின் பயன்.[14] குடிப்பிறந்தவனுக்குரிய நல்லியல்புகளில் ஒன்று ஈகை.[15] சான்றாண்மையைத் தாங்கும் தூண்களில் ஒன்று ஒப்புரவு.[16] ஈயாமல் உலோபியாக இருப்பதனால் இழிபிறப்பு உண்டாகும்.[17] ஈவதும் பிறகு நுகர்வதுமாகிய செயல்கள் இல்லாதவர்களுக்கு எவ்வளவு பெரிய செல்வம் இருந்தாலும் பயன் இல்லை.[18] தானும் நுகராமல் தக்கவர்களுக்கு ஒன்றை ஈயும் இயல்பும் இல்லாமல் இருப்பவனுக்குப் பெருஞ் செல்வம் துன்பத்தையே தரும்.[19] பிறரால் விரும்பப்படாதவனது செல்வம் ஊருக்கு நடுவே நச்சு மரம் பழுத்தது போலும்.[20] உழைத்து உழவைச் செய்பவர்கள் பிறரிடம் இரக்கமாட்டார்கள்; இரப்பவர்களுக்கு ஈவார்கள்.[21] கரவாமல் வழங்குவாரிடம் இரப்பதும் ஓர் அழகுடையது.[22] அத்தகையவர்களிடம் இரப்பதும் ஈவதைப் போல ஆகும்.[23] அத்தகையவர் இருத்தலினால் தான் இரவலர் இரப்பை மேற்கொள்கின்றனர்.[24] தம்மை அவமதித்து இழிவு சொல்லாமல் பொருள் கொடுப்பாரைக் கண்டால் இரப்பவரது உள்ளம் மகிழும்.[25] இரப்பவர் இல்லாவிட்டால் ஈவாருக்குப் புகழ் உண்டாகாது.[26] கயவர் தம்மைத் துன்புறுத்துவாருக்கன்றிப் பிறருக்கு ஈரக் கையையும் அசைக்கமாட்டார்.[27]

இவ்வாறு பல இடங்களில் ஈகையும் அதன் இனமாகிய பண்புகளும் விரவி நிற்கின்றன

1. குறள், 322. 2. ஷை. 333. 3. 382. 4. 387. 5. 390. 6. 477. 7. 525. 8. 526. 9. 527. 10. 613, 614. 11. 757. 12. 794, 867. 13. 837. 14. 842. 15. 953. 16. 983. 17. 1002. 18. 1005. 19. 1006. 20. 1008. 21. 1035. 22. 1053. 23. 1054. 24. 1055. 25. 1057. 26. 1059. 27. 1077

## மக்கட் பேறு

'இல்வாழ்வுக்கு மங்கலமாவது மனையாளின் மாட்சி; அதற்கு நல்ல அணிகலம் நன்மக்கட் பேறு' [1] என்று வாழ்க்கைத் துணை நலம் என்ற அதிகாரத்தில் தோற்றுவாய் செய்துகொண்டு, பின்பு மக்கட் பேற்றின் சிறப்பை ஓர் அதிகாரத்தால் சொல்கிறார் வள்ளுவர். இந்த நாட்டினர் வழி வழியே குலம் பெருகி வருதலைச் சிறந்த பேருகக் கருதுவர். எட்டுத் திருவில் ஒருத்தி சந்தான லட்சுமி என்று ஒரு வழக்கு உண்டு. இதனை எண்ணியே,

> "பெறுமவற்றுள் யாமறிவ தில்லை அறிவறிந்த
> மக்கட்பே றல்ல பிற" [2]

என்று 'புதல்வரைப் பெறுதல்' என்னும் அதிகாரத்தைத் தொடங்குகிறார். பழி சாராத பண்புடைய மக்களைப் பெறுபவருக்கு ஏழு பிறப்புகளில் தீங்கு வாராது; மக்கள், ஈட்டிய பொருளைப் போன்றவர்கள்; தம் மக்கள் கையால் துழாவியது கூழானாலும் அது அமிழ்தத்தைவிட இனியது; தம் மக்கள் மெய்யைத் தீண்டுதல் உடலுக்கு இன்பம்; அவர் சொல்லைக் கேட்டல் செவிக்கு இன்பம்; குழலொலியினும் யாழ் ஒலியினும் இனிது மழலைச் சொல்; தந்தை மகனை அவையில் முதல்வனாக இருக்கச் செய்யவேண்டும்; தம்மைவிடத் தம் மக்கள் அறிவிற் சிறந்தவராதல் பெற்றோருக்கு இனிமை தரும்; தன் மகனைச் சான்றோன் எனக் கேட்ட தாய் அவனை ஈன்ற பொழுதில் பெற்ற உவகையினும் மிக்க உவகையை அடைவாள்; இவன் தந்தை இவனைப் பெற என்ன தவம் செய்தானோ என்று பலரும் கூறும் வகையில் மகன் ஒழுகித் தந்தைக்குப் புகழ் தேடிக் கொடுக்கவேண்டும்.—இக் கருத்துக்களை அவ்வதிகாரத்தில் கூறுகிறார்.

வேறிடங்களிலும் மக்கட்பேற்றைப்பற்றிய செய்திகள் வருகின்றன. இல்வாழ்வான் ஓம்ப வேண்டிய ஐவரில் தென்புலத்தாரை முதலில் வைக்கிறார்.[3] அவர்களை ஓம்பும் செயல் குலம் இடையறாது தொடர்ந்துவந்தால்தான் நிகழும். ஆதலின் தமக்குப் பின் குலம் விளங்க நல்ல மக்கள் வேண்டும் என்று இந் நாட்டார் விரும்புவர். புண்ணியம் செய்தவர்களுக்கு நல்ல கால்வழி உண்டாகும் என்பது இந்நாட்டினர் நம்பிக்கை. வேறு பண்புகளைச் சொல்லும் இடங்களில் இந்தக் கருத்தை வள்ளுவர் எடுத்துரைக்கிறார்.

பழிக்கு அஞ்சிப் பொருளை ஈட்டி அதனைப் பலருக்கும் பகுத்து உண்ணும் ஒருவனுடைய கால்வழி என்றும் அறாமல் தொடர்ந்துவரும்; நடுவு நிலைமை பிறழாமல் நடப்பவனுடைய செல்வம் அவனுடைய வழிவருவார்க்கும் வலிமையைத் தரும்; நடுவு நிலைமை உடையவர், அது இல்லாதவர் என்னும் வேறுபாடு அவரவர்களுடைய மக்களால் அறியப்படும்; மனம் தூயவராக உள்ளவருக்கு நல்ல மக்கள் பிறப்பார்கள். [4]

## தாயின் பெருமை

தாயின் பெருமையைத் தனி அதிகாரத்தால் திருக்குறள் கூறாவிட்டாலும், வேறு கருத்துக்களைச் சொல்லும் இடங்களில் குறிப்பாக அன்னையின் அன்பு முதலியவற்றைப் புலப்படுத்துகிறது.

கருவுற்றிருந்த போதும் கருவுயிர்க்கும் போதும் பெற்ற துன்பத்தை மறந்து மகவைப் பெற்றபோது உவத்தல் அன்னையின் இயல்பு; தான்

---

1. குறள், 60. 2. ஷை. 61. 3. 43. 4. 44, 112, 114, 456.

பெற்ற மகன் பலராலும் சான்றோன் என்று புகழப்பெறுவதைக் காதாரக் கேட்கும்போது முன் சொன்ன உவகையினும் மிக்க உவகையைப் பெறுவாள்.

"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்"[1]

என்பதில் இவ்விருவகை உவகையையும் காண்கிறோம்.

தாயைத் தெய்வமாகப் போற்றி வாழவேண்டும். அவளுக்கு வேண்டுவன நல்கவேண்டும். அவள் இடரைத் தீர்க்க எது வேண்டுமானாலும் செய்யலாம். ஆயினும் சான்றோர் பழிக்கும் வினையைச் செய்தல் கூடாது.

"ஈன்றாள் பசிகாண்பா னாயினும் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை"[2]

என்பது குறள். ஈன்றாள் பசி கண்டால் மற்றச் சமயங்களில் செய்யக் கூடாதவற்றையும் செய்யலாம் என்ற கருத்து இக்குறளினூடே மறைந்து நிற்கிறது. இதன் உரையில்,

'ஈன்ற தாய் முதல் தெய்வம் என்று மறைமொழிதலானும், தன்னை ஈன்றாளை முன்னம் வணங்கி வழிபடுதல் யாவர்க்கும் கடன் ஆதலானும், மற்று இவள் பசி கண்டு இரங்கா நெஞ்சினன் ஆதல் மிகவும் தீவினை'

என்று காளிங்கர் எழுதுகிறார்.

"ஈன்றாள் முகத்தேயும் இன்னாதால்; என்மற்றுச்
சான்றோர் முகத்துக் களி"[3]

என்ற குறளிலும் தாயின் இயல்பைப் பற்றிய கருத்து வருகிறது. கள்ளுண்டு களித்தல் ஆகாது என்பதைச் சொல்ல வந்த இக் குறள், 'அன்னையின் முன்பும் அது இன்னாது' என்கிறது. அதனால் பிறர் முன்பு செய்யத்தகாதவற்றையும் அன்னை தன் முன்பு செய்தால் பொறுத்துக் கொள்வாள் என்னும் கருத்து உய்த்துணரக் கிடக்கிறது. இதன் உரையில் பரிமேலழகர், 'யாது செய்யினும் உவக்கும் தாய்' என்று எழுதினர்.

நல்குரவு என்னும் அதிகாரத்தில் ஈன்ற தாயை நினைக்கும் குறள் ஒன்று வருகிறது;

"அறம்சாரா நல்குரவு ஈன்றதா யானும்
பிறன்போல நோக்கப் படும்."[4]

ஈன்ற தாய் எந்த நிலையிலும் அன்புடையவள் ஆதலின், அவளாலும் புறக்கணிக்கப்படும் நிலையை அளவாகக் கூறி நல்குரவின் இழிதகைமையை வற்புறுத்துகிறது இக்குறள். பரிமேலழகர், 'சிறப்பும்மை அவளது இயற்கை அன்புடைமை விளக்கி நின்றது' என்று எழுதினர்.

### சத்தியமும் அகிம்சையும்

துறவறவியலில் தவத்தினருக்குரிய இயல்புகளைச் சொல்கிறவர் அவர்கள் பிற உயிர்க்குத் தீமை செய்யாதவர்கள் என்றும், துன்பத்தைப் பொறுத்து நோன்பு இயற்றுகிறவர்களென்றும் கூறுகிறார்.[5] உயிர் இரக்கம் தவத்தினருக்கு இன்றியமையாத பண்பு. அருளுடைமை, புலால் மறுத்தல்,

1. குறள், 69. 2. ஷை. 656. 3. 923. 4. 1047. 5. 261.

இன்னுசெய்யாமை, கொல்லாமை என்பன அதனேடு தொடர்புடைய பண்புகள். அவற்றைத் தனித்தனி அதிகாரங்களில் விரித்துரைக்கிருர்.

> " ஒன்ருக நல்லது கொல்லாமை; மற்றதன்
> பின்சாரப் பொய்யாமை நன்று " [1]

என்பது ஒரு குறள். பலவகைப் பண்புகளில் சிறந்தன என்று இவ்விரண்டையும் தெரிந்தெடுத்துச் சொன்னுர். பாரத நாட்டின் தந்தை யென்று இன்று நாம் போற்றும் காந்தியடிகளும் 'சத்தியமும் அகிம்சையும் தலைமையான பண்புகள்' என்று பலகாலும் சொல்லிப் போந்தார். திருக்குறளிலுள்ள கருத்தை அறிந்து அவர் சொல்லவில்லை. ஆயினும் பெரியோர்களின் கருத்து ஒத்தே இருக்கும் என்பதற்கு இது ஒரு சிறந்த எடுத்துக்காட்டு, திருக்குறள் காலத்தால் மங்காமல் ஒளிர்வது என்பதற்கும் இது ஒரு சான்ருக நிற்கிறது.

### பொறையும் சால்பும்

பிறர் தீங்கு புரிந்தால் அதற்கு எதிர் தீங்கு புரிதலே பெரும்பாலான மனித இயல்பு. 'பல்லுக்குப் பல், கண்ணுக்குக் கண்' என்று ஆங்கிலத்தில் சொல்வதுண்டு. ஆனல் இது மக்கட் பண்புக்கு உகந்ததன்று. "உன் இடக்கன்னத்தில் ஒருவன் அடித்தால் நீ அவனுக்கு வலக்கன்னத்தையும் காட்டு" என்று ஏசுநாதர் கூறியதை மிகச் சிறப்பாக உலகம் கொண்டாடுகிறது. இத்தகைய பண்பைத் திருவள்ளுவர் ஏறத் தாழ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சொல்லியிருப்பதை நோக்கினல் வியப்பு மீதூர்கிறது.

ஒருவன் தீங்கு செய்தால் அதன் எதிரே தீங்குசெய்யாமை நன்று என்று சில பாக்களில் கூறினர்.

> " அறிவினுள் எல்லாம் தலைஎன்ப, தீய
> செறுவார்க்கும் செய்யா விடல் " [2]

> " கறுத்தின்னு செய்தவக் கண்ணும் மறுத்தின்னு
> செய்யாமை மாசற்ருர் கோள் " [3]

என்று சொன்னவர், அதற்கு மேலும் ஒரு படி சென்று, அதனைப் பொறுக்க வேண்டுமென்றும், அதை அடியோடு மறந்துவிட வேண்டுமென்றும் சொல்கிருர்; அது பொறையுடையவருக்கு ஒரு வெற்றியாம்;

> " பொறுத்தல் இறப்பினை என்றும் அதனை
> மறத்தல் அதனினும் நன்று " [4]

> " மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாம்தம்
> தகுதியான் வென்று விடல் " [5]

என்பனவற்றைக் காண்க.

இதற்கு மேலும் செல்கிருர் வள்ளுவர். தீங்கு செய்தால் அதன் எதிரே தீங்கு செய்யாமை சிறந்த பண்பு; அதனைப் பொறுத்தலும் மறத்தலும் அதனினும் சிறந்த பண்பு. இந்த இரண்டுக்கும் மேற்பட்ட சீரிய பண்பு ஒன்று உண்டு; அதுதான் தீங்கு செய்தவனுக்கும் நன்மையே செய்தல். மனிதனைத் தெய்வமாக்கும் தன்மை இது என்று சொல்லலாம் அல்லவா?

---

1. குறள், 323. 2. ஷ. 203. 3. 312. 4. 152. 5. 158.

"இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல்"[1]

"இன்னாசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு"[2]

"நண்பாற்ற ராகி நயமில செய்வார்க்கும்
பண்பாற்றார் ஆதல் கடை"[3]

என்ற அரிய குறட்பாக்களில் இக் கருத்து ஒளிர்கின்றது.

### கல்வி

பொருட்பாலில் அரசருக்குரிய இலக்கணங்களாகப் பலவற்றைச் சொன்னாலும் அவற்றில் பல எல்லா மக்களுக்கும் உரிய பண்புகளாக இருத்தலை முன்பே கண்டோம். அந்தப் பண்புகளில் மிகச் சிறந்ததாகக் கல்வியைச் சொல்கிறார் திருவள்ளுவர். கல்வி, கேள்வி, அறிவு என்னும் மூன்றும் தொடர்புடையன. அவற்றை உடையவர்கள் சொல்வன்மை உடையவர்களாய், அவை அறிந்து பேசி, அவைக்கு அஞ்சாமல் தம் அறிவைப் பயன்படுத்துவார்கள். இத்தகைய பண்புகளுக்கு மறுதலையாகிய கல்லாமையும், பேதைமையும், புல்லறிவாண்மையும் கொள்ளத்தகாதன. எனவே, பொருட்பாலில் விதியாகவும் மறையாகவும் உள்ள கல்வி, கல்லாமை, கேள்வி, அறிவுடைமை, சொல்வன்மை, அவையறிதல், அவையஞ்சாமை, பேதைமை, புல்லறிவாண்மை[4] என்னும் ஒன்பது அதிகாரங்களும் ஒருவாறு தொடர்புள்ளன என்றே சொல்லலாம். அரசனது பொது இலக்கணத்தை அரசியலின் முதல் அதிகாரத்தில் இறைமாட்சி என்ற தலைப்பில் கூறிவிட்டு, அடுத்துக் கல்வி, கல்லாமை, கேள்வி, அறிவுடைமை என்பவற்றை வைத்திருப்பதனால் இவற்றின் தலைமையைத் தெரிந்து கொள்ளலாம். இறைமாட்சியில்,

"அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந்நான்கும்
எஞ்சாமை வேந்தற் கியல்பு"[5]

என்பதில் அறிவையும்,

"தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்
நீங்கா நிலனாள் பவர்க்கு"[6]

என்பதில் கல்வியையும் முன்னே கூறிக்கொண்டு பிறகே அவற்றை விரித்துரைக்கிறார்.

இந்த அதிகாரங்களை யன்றி வேறு பல குறள்களில் கல்வியோடு தொடர்புடைய பல கருத்துக்கள் இடம் பெறுகின்றன. திருக்குறளின் தொடக்கத்திலே கல்வியின் முதலையும் இறுதியையும் புலப்படுத்தும் இரண்டு குறள்கள் அமைந்துள்ளன. ஆதிபகவன் உலகத்துக்கு முதல்வன் என்ற கருத்தை உவமை முகத்தால் விளக்க வருகிறவர் எடுத்தவுடன்,

---

1. குறள், 314. 2. ஷை. 987. 3. 998.
4. அதிகாரங்கள், 40, 41, 42, 43, 65, 72, 73, 84, 85.
5. குறள், 382. 6. ஷை. 383.

"அகர முதல எழுத்தெல்லாம்"[1]

என்று தொடங்குகிறார். கல்வி கற்கத் தொடங்குவார் எந்த மொழியில் தொடங்கினாலும், முதலில் கற்றுக்கொள்வது அகரம். இவ்வாறு கல்வி கற்பார் முதலில் அறியும் எழுத்தைச் சொன்னவர், அடுத்த குறளில் கற்றதன் பயனாகிய இறுதியையும் சொல்லிவிடுகிறார்;

"கற்றதனால் ஆய பயன்என்கொல், வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்"[2]

என்பதில் கல்வியின் இறுதிப் பயன் வருகிறது அல்லவா?

கற்று அதனால் அடக்கம் பெற்றவரையும், மெய்ப்பொருள் கண்டாரையும், அரிய நூல்களைக் கற்று ஆசற்றாரையும் சில குறள்களில் சந்திக்கிறோம்.[3] அமைச்சருக்கும், தூதுவருக்கும், மருத்துவருக்கும் கல்வி இன்றியமையாதது என்பதை அறிகிறோம்.[4] எத்தனை கற்றாலும் உலகத்தோடு ஒட்ட ஒழுகுதலை யும் கற்கவேண்டும்.[5] சூதில் நாட்டமுடையவருக்குக் கல்வி ஏறாது.[6] கல்லாதவனை எளிதில் வென்றுவிடலாம்.[7] கல்லாரைச் சேர்த்துக்கொள்ளும் அரசன் உலகத்துக்குப் பாரம் ஆவான்.[8]

## நூல்

மதி நுட்பம் நூலோடு உடையாரைப் போற்றும் திருவள்ளுவர் அங்கங்கே வெளிப்படையாகவும் குறிப்பாகவும், 'நூல்கள் இவ்வாறு சொல்கின்றன' என்று உரைப்பதோடு, பலவகை நூலைக் கற்றோரைப் பற்றியும் பேசுகிறார்.

வேதத்தை அந்தணர் நூல்[9] என்றும், அறுதொழிலோர் பயிலும் நூல்[10] என்றும் சொல்வர். அறநூலை அறம் என்றே கூறுவர்;

"அறம்கூறும் ஆக்கம் தரும்."[11]

வெளிப்படையாகச் சொல்லாவிட்டாலும் கூறும் இடத்தைக் கொண்டு,

"விழுப்பத்து வேண்டும் பனுவல் துணிவு"[12]
"நூலோர் தொகுத்தவற்றுள் எல்லாம் தலை"[13]

என்பவற்றில் வரும் பனுவலும் நூலும் அறநூலையே குறிக்கின்றன என்று தெரிந்து கொள்ளலாம். பின்வருவன அரசியலுக்குரிய நீதி நூலைச் சுட்டுகின்றன:

"ஒற்றும் உரைசான்ற நூலும் இவைஇரண்டும்
தெற்றென்க மன்னவன் கண்."[14]
"ஏதிலார் நூல்."[15]
"மதிநுட்பம் நூலோ டுடையார்."[16]
"நூலாருள் நூல்வல்லன் ஆகுதல்."[17]
"இங்கான்கின், அமைவரண் என்றுரைக்கும் நூல்."[18]

மருத்துவ நூலை ஓரிடத்தில் குறிக்கிறார்.[19]

1. குறள், 1. 2. ஷை. 2. 3. 130, 356, 503. 4. 632, 684, 686, 949. 5. 140. 6. 939. 7. 870. 8. 570. 9. 543. 10. 560. 11. 183. 12. 21. 13. 322. 14. 581. 15. 440. 16. 636. 17. 683. 18. 743. 19. 941.

இவ்வாறன்றி வேறு பல வகை நூல்களையும் அங்கங்கே குறித்துச் செல்கிறார்.

"நுண்ணிய நூல்பல."[1]

"நிரம்பிய நூல்இன்றிக் கோட்டி கொளல்."[2]

"இலங்குநூல் கற்றார்."[3]

"எப்பால் நூலோர்க்கும் துணிவு."[4]

"நூலொடுடன்."[5]

"அவையகத் தஞ்சு மவன்கற்ற நூல்."[6]

"நவில்தொறும் நூல்நயம் போலும்."[7]

## நட்பு

பொருட்பாலில் கல்விக்கு அடுத்தபடி வற்புறுத்தப் பெறுவது நட்பு. நல்லோருடைய தொடர்பைப் பெற்று, அல்லாதாருடைய நட்பை விலக்குவதே நலம் தரும். நட்பு, நட்பு ஆராய்தல்[8] என்னும் இரண்டு அதிகாரமும் பெறவேண்டிய நட்பைப் பற்றிக் கூறுவன. பெரியாரைத் துணைக்கோடல், பெரியாரைப் பிழையாமை, சுற்றம் தழால், பழமை[9] என்பனவும் ஒருவகையில் நட்புக்கு இனமாகிய செய்திகளையே கூறுவன. விலக்க வேண்டியவை பற்றிய கருத்துக்களைச் சிற்றினம் சேராமை, தீநட்பு, கூடா நட்பு[10] என்னும் அதிகாரங்கள் கூறுகின்றன. இவ்வாறு ஒன்பது அதிகாரங்களில் நட்பைப் பற்றிய நீதிகளை விதியாகவும் மறையாகவும் கூறியிருக்கிறார்.

## நாடும் அரசனும்

நாடு நன்றாக இருந்தால் சமுதாய வாழ்க்கை சிறப்பாக விளங்கும். நாடு என்பது வெறும் நிலப்பரப்பின் பாங்கோடு அமைவது அன்று. இயற்கை வளமும், மக்கள் வளமும் சேர்ந்து அமைவதே சீரிய நாடு. நாடு என்ற அதிகாரத்தில்[11] இந்த இரண்டையும் சொல்கிறார். முதல் குறளிலேயே,

"தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்
செல்வரும் சேர்வது நாடு"[12]

என்று கூறுகிறார். தள்ளா விளையுள் இயற்கை வளம்; தக்காரும் செல்வரும் மக்கள் வளம். ஒரு நாடு வளம் பெறுமற் போவதற்கு மூன்று காரணங்கள் உண்டு. அவற்றை,

"உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேராது இயல்வது நாடு"[13]

என்பவற்றில் தொகுத்து உரைக்கிறார். பசி நீங்க உணவு வேண்டும். உழவினால் உணவு விளையும். ஆதலின் முதல் குறைபாட்டைப் போக்குவதற்குரிய உழவை ஓர் அதிகாரத்தால்[14] வற்புறுத்துகிறார். உழவினால் நாடு வளம் பெறும் என்பதை அரசன் மேல் ஏற்றி,

1. குறள், 373. 2. ஷை. 401. 3. 410. 4. 533. 5. 726. 6. 727. 7. 783. 8. அதிகாரம், 79, 80. 9. ஷை. 45, 90, 53, 81. 10. 46, 82, 83. 11. 74. 12. குறள், 731. 13. ஷை. 734. 14. அதி. 104.

" பலகுடை நீழலும் தம்குடைக்கீழ்க் காண்பர்
அலகுடை நீழ லவர் "[1]

என்று அமைக்கிறார். இரண்டாவது குறையாகிய பிணியை மாற்றற்குரிய கருத்துக்களை மருந்து[2] என்ற அதிகாரத்தில் கூறுகிறார். பகையைப் போக்கும் வழிகளைப் பலபடியாக அரண் முதலிய பல அதிகாரங்களில் புலப் படுத்துகிறார்.

முடியாட்சியையே அறிந்த காலமாதலின் நாடு எத்துணைச் சிறப்புடைய தாக இருந்தாலும் அதைக் காக்கும் அரசன் ஒருவன் வேண்டும் என்பதை வள்ளுவர் அறிவுறுத்துகிறார்.

" ஆங்கமை வெய்தியக் கண்ணும் பயமின்றே
வேந்தமை வில்லாத நாடு."[3]

அரசின் உயிராக இருப்பவன் அரசன். அமைச்சர், தூதுவர், ஒற்றர், படைத்தலைவர், சான்றோர் ஆகியவர்கள் அவனுக்குத் துணையாக நின்று தத் தமக்குரிய கடன்களை ஆற்றுவார்கள். குடிமக்கள் அரசனைத் தெய்வமாகப் போற்றுவார்கள். அரசன் செங்கோல் ஏந்தி ஆட்சி புரிவான். அவனுக்கு அறிவுரை கூறப் பலர் அடங்கிய அவைக்களம் இருக்கும். உடையார் இல்லாமல் வரும் பொருளும், சுங்கத்தால் வரும் பொருளும், பகைவர் திறையளக்கும் பொருளும் அரசனுக்கு உரியன.

### குடிமக்களின் வகை

குடிமக்களில் அந்தணர், வணிகர், வேளாளர் என்போர் தத்தமக்குரிய தொழில்களை நேர்மை தவறாமல் ஆற்றி வருவார்கள். அந்தணன் என்னும் சொல்லைப் பார்ப்பனர்களுக்கும், துறவியர்களுக்கும், இறைவனுக்கும்[4] வழங்குகிறார் திருவள்ளுவர். பார்ப்பான் என்ற சொல்லையும் ஆளுகிறார்.[5] அவர்கள் வேதத்தை ஓதுபவர்கள்; தமக்கு என்று அமைந்த சிறப்பான சில ஒழுக்கங்களை உடையவர்கள்; ஆறு தொழில்களை உடையவர்கள்; அரசன் அவர்களைக் காப்பாற்றும் கடப்பாடுடையவன்.[6] அவர்கள் எப்போதும் ஓதிக்கொண்டே இருத்தலின் வேதத்திற்கு ஒத்து என்ற பெயர் உண்டா யிற்று. வாணிகம் செய்வாரை ஒரு குறளில் காண்கிறோம். அவர்கள் பிற பொருளையும் தம்முடைய பொருளைப்போல் எண்ணி நேர்மையாக வாணிகம் செய்வார்கள்.[7]

வேளாளர் என்ற சொல்லைத் திருவள்ளுவர் ஆளவில்லை; ஆனால் பல இடங்களில் வேளாண்மை என்ற சொல்லைப் பெய்திருக்கிறார்.[8] அங்கெல்லாம் அதற்கு உபகாரம் என்ற பொருளே அமைந்திருக்கிறது. அதிலிருந்து பிற தொழில் செய்வார் அனைவருக்கும் இன்றியமையாத உணவுப் பொருளை வழங்கிப் பேருபகாரம் செய்தலின் வேளாளர் என்னும் பெயரைப் பெற்றார்கள் என்று தோன்றுகிறது.

" சுழன்றும்ஏர்ப் பின்ன துலகம்; அதனால்
உழந்தும் உழவே தலை "[9]

1. குறள், 1034. 2. அதி. 95. 3. குறள், 740. 4. ஷெ. 543, 30, 8; 5. ஷெ. 143
6. 134, 543, 560. 7. 120. 8. 81, 212, 613-4. 9. 1031.

"உழுவார் உலகத்தார்க் காணி"[1]

என்பவற்ருல் உழுதல் தொழிலின் சிறப்பும், உழுவாரின் தலைமையும் புலனுகின்றன. உழுவார், உழவினுர்[2] என்று வேளாளர்களைச் சொல்லு கிருர் வள்ளுவர்.

நல்ல குடியிற் பிறந்தவர்களை உயர்வாகக் கருதுவர். குடிமை[3] என்னும் அதிகாரத்தில் அவர்களின் சிறப்பைக் கூறுகிருர். குணங்கள் நிறைந் தவர்களைச் சான்ருேர் என்று கூறுவது தொன்று தொட்டு வந்த வழக்கு. கல்ச்சர் (Culture) என்ற ஆங்கிலச் சொல்லை இக்காலத்தில் பண்பாடு என்றும் கலாசாரம் என்றும் வழங்குவர். அதற்கு ஏற்ற சொல் சால்பு என்பது; அதனையே சான்ருண்மை என்றும் சொல்வர். சால்புக்கு அன்பும் நாணும் ஒப்புரவும் கண்ணுேட்டமும் வாய்மையும் இன்றியமையாத இலக்கணங்கள்.[4] சான்ருேர்களின் சால்பு இல்லையானுல் உலகம் தடுமாறிப் போகும்.[5] பிறருக்கு எளியராகி நலம் செய்யும் பண்புடையாரைத் தனியே பண்புடைமை என்னும் அதிகாரத்தில் போற்றுகிருர்.[6] பண்புடையார் வாழ்தலினுல்தான் உலகத்து மக்கள் வழி வழி வளர்ந்து வருகிருர்கள்; இல்லையானுல் மண்ணேடு மண்ணுக மாண்டு ஒழிவர்[7] என்பது ஒரு குறளின் கருத்து.

### அரண்—மலை—நீர்நிலை

இத்தகைய சிறந்தவர்கள் பலர் வாழும் நாட்டுக்கு இயற்கையரண், செற்கையரண் என்று இருவகை அரண்கள் உண்டு.

"மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழற்
காடும் உடைய தரண்"[8]

என்று அவற்றைக் கூறுவார். இதன் உரையில் பரிமேலழகர்,

'நீர் அரண், நிலவரண், மலையரண், காட்டரண் என இயற்கையும் செயற்கையுமாய இந்நான்கு அரணும் சூழப்படுவது அரண் என்பதாம்'

என்று எழுதினுர். நீர் நிலைகளும் மலையும் அமைந்திருந்தால் நாடு சிறப்படையும். ஆற்று நீர், ஊற்று நீர், வேற்று நீர் என்று நீரை மூன்று வகையாகப் பிரிப்பர். அவற்றைத் திருவள்ளுவர் குறிக்கிருர்.

"இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்
வல்அரணும் நாட்டிற் குறுப்பு"[9]

என்பதில் இருபுனல் என்றது, ஊற்று நீராகிய கீழ் நீரையும், வேற்று நீராகிய மேல் நீரையும். கிணறு, குளம், ஏரி முதலியவை கீழ்நீரைச் சார்வன. மழை நீரே வேற்று நீர் அல்லது மேல் நீர். வருபுனல் என்று வள்ளுவர் குறித்தது ஆற்றை.[10]

---

1. குறள், 1032. 2. ஷை. 1032, 1036. 3. அதி, 96. 4. குறள், 983. 5. 990. 6. அதி. 100. 7. குறள், 996. 8. 742. 9. 737.

10. பரிமேலழகர், மலையினின்றும் வருவதாய நீர் என்று உரை கூறினுர்; காளிங்கர் தெளிவாக ஆறு என்றே உரை எழுதினுர்.

மலை பெருமைக்கு அடையாளம். உயர்வுடையது அது. அதன் மேல் ஏறி யானைப்போர் பார்ப்பதை ஒரு குறளில் சொல்கிருர்.[1] குணநிறைவுக்கும் பெரியவர்களுக்கும் குன்றை உவமையாக ஆள்வர்.[2]

புனல் மூன்றில் மழையின் ,சிறப்பை வள்ளுவர் எவ்வாறெல்லாம் சொல்லுகிருர் என்பதை முன்பு பார்த்தோம்.

"ஆற்றின் நிலைதளர்ந் தற்றே"[3]

என்பதில் ஆற்றைக் குறிப்பதாகச் சிலர் உரையாசிரியர் கொள்வர்.

ஊற்றை அடிக்கடி இறைத்துத் தெளிவாக்கி நீர் கொள்வர் மக்கள். அது இறைக்க இறைக்க ஊறும்.[4] தோண்டத் தோண்ட ஊறுவது மணற்கேணி.[5] ஊரார் உண்ணும் நீரை உடைய குளத்துக்கு ஊருணி என்று பெயர். அதில் நீர் நிறைந்தால் பலருக்கும் பயன்படும்.[6] கரை நன்கு அமைந்த குளத்தில் நீர் நிரம்பி நிற்கும்.[7]

### ஊரும் இடவகைகளும்

இவ்வாறு நீர் நிலைகள் அமைந்த நாட்டில் பல ஊர்கள் இருக்கின்றன. ஊர்[8] என்றும், பதி[9] என்றும் அவற்றை வழங்குகிருர். ஊரின் உட்புறத்தை உள்ளூர் என்றும், நடுவூர் என்றும் சொல்வது வழக்கம்.[10] ஊரில் மறுகுகள்[11] உண்டு. பலரும் கூடும் இடம் மன்று; அங்கே ஊரார் அறியப் பல செய்திகள் வெளிப்படும்; நாலுபேர் கேட்கப் பழி கூறுகிறவர்கள் மன்றிலே அவ்வாறு செய்வார்கள்.[12] வட்டு முதலியவற்றை ஆடும் இடத்தை அரங்கு என்று கூறுவர்.[13] சான்றோர்களும் கற்றவர்களும் கூடும் இடம் அவை; அவையம் என்றும் சொல்வர்.[14] கூத்தாடும் இடத்துக்குக் கூத்தாட்டவை என்று பெயர்.[15] குற்றம் செய்வாரை அரசன் ஏவலின் மேல் கொலை செய்யும் இடம் கொலைக்களம்.[16] சூதாடும் இடம் கழகம்.[17] மக்களை வைத்துக் காவல் செய்யும் இடம் சிறை.

ஊர்களில் பல இல்லங்கள் உள்ளன; அவற்றை இல் என்றும், மனை என்றும்[18] வழங்குவர். சில காலம் தங்கிச் செல்லும் இல்லத்தைத் துச்சில் என்றும், எப்போதும் இருந்து வாழும் இல்லத்தைப் புக்கில் என்றும் சொல்வது ஒரு வழக்கு.[19]

திருக்குறளில் நாம் பார்க்கும் இல்லத்தில் அறை இருக்கிறது.[20] கதவும் அதற்குத் தாழும் இருக்கின்றன. கதவை அடைக்க அந்தத் தாழ் உதவுகிறது.[21] தூண்கள் கூரையைத் தாங்குகின்றன.[22] வீட்டின் வாயிலைக் கடை என்பர்.[23] சாக்கடையை அங்கணம் என்பர்.[24] மக்கள் நடக்கும்

1. குறள், 758. 2. ஷை. 898, 965. 3. 71629; பரிமேலழகர் நெறியென்று கொண்டார்; பரிதியார் ஆறு என்று உரை கூறினர். 4. 1161. 5. 396.
6. 215. 7. 523. 8. 397, 1008, 1129, 1130, 1142, 1143, 1150, 1158.
9. 1015, 1229. 10. 216, 1008. 11. 1139. 12. 820, 1138, 1254.
13. 401. 14. 711, 67. 15. 332. 16. 1224. 17. 935, 937.
18. 84, 1107; 51, 52, 820. 19. 340. 20. 913. 21. 71, 1251.
22. 615, 983. 23. 142. 24. 720.

வழிக்கு அதர், ஆறு என்ற பெயர்கள் வழங்கும்.[1] வழியை வினவிக் கொண்டு போவதும், வருவாரை வழியில் நின்று எதிர்பார்த்திருப்பதும் மக்களுக்கு இயல்பு.

### ஆடையும் அணியும்

ஆடவரும் மகளிரும் நல்லாடையும் அணியும் புனைந்துகொண்டு விளங்குகின்றனர். உடுக்கை, உடுப்பது, உடை என்பன உடுப்பது காரணமாக ஆடைக்கு வந்த பெயர்கள்.[2] மெல்லிய ஆடைக்குத் துகில் என்று பெயர். மூடும் உடைவகைக்குப் படாம் என்று பெயர்.[3] மடித்துக் கட்டுவதனால் இடையில் உடுக்கும் உடையை மடி என்பதும் உண்டு. ஏதேனும் செயலைச் செய்ய முந்தும்போது ஆடையை இறுகக் கட்டிக் கொண்டு புகுதல் ஆடவர் வழக்கம்.[4]

ஆடையின்பின் வருவன அணிகலன்கள். அணி,[5] அணிகலம்,[6] இழை,[7] கலம்[8] என்பன அணிகலன்களின் பொதுப் பெயர்கள். அவற்றை அழகுடையனவாகப் பூண்பதனால் அணியிழை என்றும், பொறுக்கி யெடுத்தவற்றை அணிதலால் ஆயிழை என்றும், ஒளிபெறப் புனைதலால் ஒளியிழை என்றும், செம்பொன்னாலான இழையை அணிதலால் சேயிழை என்றும், மாட்சிமைப்பட அணிதலால் மாணிழை என்றும் மகளிரை வழங்குவர்.[9]

மகளிர் கையில் வளையும், தோளில் தொடியும், காதில் குழையும் அணிவர்.[10] சிறிய பெண்கள் குறுந்தொடியை அணிவர்.[11] ஆய்தொடி, ஒண்டொடி, செறிதொடி, பைந்தொடி[12] என்று மகளிரைச் சிறப்பித்துச் சொல்வர். மணிகளை நூலில் கோத்து அணிவதும் உண்டு.[13] அணிகலனாகப் பயன்படும் முத்தை மகளிர் பல்லுக்கு உவமை கூறுவர்.[14] அணிகலன் செய்யும் பொன்னை உருக்கித் தூய்மை செய்வர். உருக்க உருக்க அது ஒளிவிடும். அதை மிகப் பாதுகாப்பாகப் பொதிந்து வைப்பர்.[15] மகளிர் தம் கண்ணுக்கு மையிட்டு அழகு செய்து கொள்வர்.[16] முகம்பார்க்கும் கண்ணாடியைப் பளிங்கு என்பர்.[17] வீரர் தம் காலில் கழலைக் கட்டிக்கொள்வர்.[18]

### பண்டமும் உண்டியும்

ஆடவரும் மகளிரும் இணைந்து வாழும் இல்லத்தில் பல பண்டங்கள் இருக்கின்றன. அவர்கள் படுக்கும் பள்ளியும், பால் வைக்கும் கலமும், மட்கலமும், கொள்கலமும்,[19] செப்பும்[20] இந்நூலில் வருகின்றன. இருள்போக ஏற்றும் விளக்கு உவமையாகவும் உருவகமாகவும் சுடர்கின்றது.[21]

உணவு வகை பல. சுடச்சுட உண்பது மக்கள் வழக்கம். ஆனால் ஒரு மங்கை, 'என் காதலர் என் நெஞ்சில் இருப்பதனால் சுடச்சுட உள்ள உணவை

---

1. குறள், 594, 130. 2. ஷை. 788; 166, 1079; 939, 1012. 3. 1087. 4. 1023. 5. 95, 115, 118, 701, 1014, 1089, 1273. 6. 575. 7. 1102, முதலியன. 8. 1262·9. 1102, 1124, 1262; 1329, 1110, 919, 1114. 10. 1157, 1277; 1235, 1236, 1275; 1081. 11. 1135. 12. 911, 1101, 1275, 1234, 1238. 13. 1273. 14. 1113. 15. 267, 155. 16. 1127, 1285. 17. 706. 18. 777. 19. 840, 1000, 660, 1029. 20. 887. 21. 299, 601, 753, 1186.

உண்ண அஞ்சுகிறேன்' என்கிறாள். அது அவரைச் சுட்டுவிடுமாம்.[1] தூய்மையான உணவை உண்ணவேண்டும். அதைத் துப்பாய துப்பு என்பர்.[2] எப்படி உணவை உண்ணவேண்டும் என்பதை ஆறு குறள்களால் மருந்து என்னும் அதிகாரத்தில் திருவள்ளுவர் சொல்கிறார். முன் உண்ட உணவு செரித்ததை அறிந்து உண்டால் மருந்து உண்ண வேண்டிய அவசியமே இராது. அப்படிச் செரித்த பிறகு எந்த அளவுக்கு உண்டால் நன்றாகச் செரிக்குமோ அந்த அளவுக்கு உண்ணவேண்டும்; அவ்வாறு செய்தால் இந்த உடம்பை நெடுநாள் வாழச் செய்யலாம். நன்றாகப் பசித்து உண்ணவேண்டும்; காலம், உடம்புநிலை முதலியவற்றுக்கு மாறுபாடு இல்லாத உணவைப் பிணிவாரா அளவுக்கு உண்ணவேண்டும்; அப்படி உண்டால் உயிருக்குத் துன்பம் உண்டாகாது. அளவறிந்து உண்பவனுக்கு இன்பமும் அளவுக்கு மிஞ்சி உண்பவனுக்கு நோயும் உண்டாகும். செரிக்கும் தீயின் அளவை அறிந்து உண்ணுவிட்டால் அளவற்ற நோய்கள் வளரும்.[3]

உண்ணற்கு இனிய தேனும் பாலும் குறளில் இடம் பெறுகின்றன. அவ்விரண்டையும் கலந்து உண்பர்.[4] உணவில் உப்பு அளவாக இருக்க வேண்டும். அது மிகுதியானல் உணவு சுவையற்றுப் போகும், மிகப் புளிப்பான காடியில் உப்பையிட்டு உண்ணுவர்.[5] எளியவர்கள் உணவாகிய கூழையும், புற்கையையும்[6] ஒவ்வோரிடத்தில் காண்கிறோம். உண்ணத் தகாதவை கள்ளும் புலாலும் என்பதைத் தனித்தனி அதிகாரங்களில் அறிவுறுத்துகிறார்.[7]

### தேர் முதலியன

சக்கரம் வலியதான நெடுந்தேரும், உருண்டு செல்லும் பெருந்தேரும் ஊர்ந்து செல்கின்றனர் மக்கள். அச்சாணி தேருக்கு இன்றியமையாதது.[8] அதனை ஆணி யென்றும் சொல்வதுண்டு.[9] பிறர் சுமக்கச் சிவிகையில் ஏறிச் செல்வார்கள் செல்வர்கள்.[10] பண்டங்களை வண்டிகளில் ஏற்றிச் செல்கின்றனர். அதைச் சாகாடு என்பர். அளவுக்கு மிஞ்சிப் பாரம் ஏற்றினல் அதன் அச்சு முறிந்து போகும்.[11]

கடலில் புணைகொண்டு நீந்திச் செல்வது வழக்கம்.[12] தோணியில் ஏறியும் செல்வர்; பாறை மோதினல் அது பிளந்து போகும்.[13] நாவாய் என்பதும் கலன் என்பதும் மரக்கலங்களுக்குப் பெயர். அவற்றை ஆழமான கடலில் விடுவார்கள்.[14]

### தொழிற் கருவிகள்

பலவகைத் தொழிலில் ஈடுபடுகிறவர்கள் ஆளும் கருவிகள் பலவற்றைத் திருக்குறள் நமக்குக் காட்டுகிறது. பொன் வாணிகர் பொன்னை உரைத்துப் பார்க்கும் கட்டளைக்கல்லும், கொல்லர்களுடைய பட்டடையும், அரமும் வருகின்றன.[15] கதவை உடைக்கும் கணிச்சியும், யானையை அடக்கும்

---

1. குறள், 1128. 2. ஷை, 12. 3. 942-7. 4. 1121. 5. 1302, 1050. 6. 64, 1065. 7. அதி. 93, 26. 8. குறள், 496, 667. 9. ஷை. 1032 10. 37. 11. 475. 12. 306, 1134, 1164. 13. 1068. 14. 496, 605. 15. 505, 821, 567, 997.

அங்குசமும், கட்டும் கயிறும், மீனைப் பிடிக்கும் தூண்டிலும், வலையும் இடம் பெறுகின்றன.[1] பண்டங்களை இருபுறமும் தொங்கவிட்டுச் சுமக்கும் காவும், உழும் ஏரும் உள்ளன.[2]

பல துறைகளிலும் ஈடுபட்டவர்கள் தாம் தாம் கொண்டு பயன்படுத்தும் பலவகைக் கோல்களை வள்ளுவர் சொல்கிறார். அரசனுடைய செங்கோல் அடுத்தடுத்துக் காட்சி தருகிறது.[3] வணிகர் ஒரு பொருளை நிறுக்கும் போது முதலில் சமனாக வைத்துப் பின்பு பண்டத்தை நிறுத்துப் பார்க்கும் துலாக்கோலும், நிலம் முதலியவற்றை அளக்கும் கோலும், ஊன்று கோலும், மகளிர் கண்ணுக்கு மையெழுதும் கோலும் இருக்கின்றன.[4]

படைக்கலன்களைப் பொதுவாகப் படை என்றும் எஃகு என்றும் கூறும் ஆசிரியர்,[5] வில்லையும், அம்பையும், வாளையும், வேலையும் அங்கங்கே சொல்கிறார். வில் வணக்கம் தீங்கை உண்டாக்கும் என்பர்; வீரர்களை வில்லேருழவர் என்பர்.[6] கணை வடிவினால் செவ்விதானாலும் செயலால் கொடியது; புதையம்பில் களிறு பட்டால் ஒரு வகையாக நிலைகொள்ளும்; முயலை அம்பால் எய்வது பெருஞ்சிறப்பன்று.[7] பேடி கையிலும் வன்கண்ணரல் லார் கையிலும் வாள் இருந்து பயன் இல்லை என்பர். நாளை உயிர் ஈரும் வாள் என்று உருவகம் செய்வர். வெளிப்படையாகப் போர் செய்யும் பகைவருக்கு வாளை உவமையாக்குவர்.[8]

எல்லாப் படைக்கலன்களிலும் சிறந்தது வேல், ஆதலின் அதைப் பல இடங்களில் நினைப்பூட்டுகிறார். படையிற் சிறந்த யானைப் படையை வெல்ல வேலே பயன்படும். யானையை வேலால் எறிந்து கொல்வார்கள்.[9] அரசர் வேலை ஏந்திப் போர் செய்வர்; வேலேந்திய வீரர் படையை உடையவராயிருப் பர்.[10] பகைவனையும் வேல் கொண்டு எறிவர்.[11] ஆறலை கள்வர் கையில் வேலை வைத்துக் கொண்டு அதைக் காட்டி அச்சுறுத்தி வழிப்பறி செய்வர்.[12] மகளிர் கண்ணுக்கு வேலை உவமையாகக் கூறுவது மரபு.[13]

### இசையும் கூத்தும்

இசைச் செய்திகளும் கூத்தைப் பற்றிய செய்திகளும் சில இடங்களில் வந்திருக்கின்றன.

பண்ணும் அதனைப் பெற்ற பாடலும் ஒன்றனோடு ஒன்று இயைந்திருக்க வேண்டும்.[14] இசைக் கருவிகளில் மிகச் சிறந்தன குழலும் யாழும். குழலை முதலில் வாசிக்க அதற்கு இணங்க யாழை வாசிப்பது மரபு.[15] இதனை எண்ணிக் குழலை முன் வைத்து அதன் பின்னே யாழை வைத்துச் சொல்கிறார் வள்ளுவர். யாழின் கோடு வளைந்தது.[16]

---

1. குறள், 1251, 24, 482, 931, 348. 2. ஷை. 1163, 1196; 14, 872, 1031, 1038. 3. 542-6, 552, 554, 558, 563, 570. 4. 118; 710, 796; 415; 1285. 5. 253, 828; 759. 6. 827, 872. 7. 279, 597, 772. 8. 614, 727, 726, 334, 882. 9. 500, 772, 774. 10. 546, 683. 11. 775. 12. 552. 13. 1113. 14. 573. 15. "குழல் வழி நின்றது யாழே" (சிலப்.) 16. 66, 279.

ஏதேனும் ஒரு செய்தியைப் பலருக்கும் தெரிவிக்க வேண்டுமாயின் பறை அறைந்து வெளியிடுதல் வழக்கம். இவ்வாறு அறைதலால் அப் பறையை அறைபறை என்பர்.

" அறைபறை அன்னர் கயவர் "[1]
" அறைபறை கண்ணார் "[2]

என்று அப்பறையை இரண்டு குறள்கள் கூறுகின்றன. சாப்பறையை ஒரு குறள் சொல்லுகிறது.

" அனிச்சப்பூக் கால்களையாள் பெய்தாள் ; நுசுப்பிற்கு
நல்ல படாஅ பறை "[3]

என்பதில் அப்பறையைக் கூறினர்.

கூத்தாடும் அரங்கத்துக்கு மக்கள் ஒவ்வொருவராக வந்து கூடுவார்கள்; கூத்து முடிந்தவுடன் ஒருங்கே போய்விடுவார்கள்.[4] பாவைக் கூத்து என்று ஒருவகைக் கூத்து உண்டு. அதில் மரப்பாவையைக் கயிற்றால் கட்டி ஆட்டுவார்கள். அது வருவது போலவும் போவது போலவும் தோற்றும்.[5] சுதை பூசிய பாவைகளும் உண்டு.[6]

வள்ளுவர் காலத்தில், நன்கு அமைந்த மனையில் வாழும் மக்கள் நல்லுடை உடுத்து, நல்லணி அணிந்து, நல்லுணவு உண்டு, தொழில் பல செய்து, கலையின்பம் நுகர்ந்து வாழ்ந்தார்கள் என்ற செய்தியை இதுகாறும் கூறியவற்றால் உணர்ந்து கொள்ளலாம்.

## இயல்பு - பழக்க வழக்கங்கள்

மக்களின் இயல்புகளும் பழக்க வழக்கங்களும், பிற பொருள்களின் இயல்புகளும், சில மரபுகளும் திருக்குறளில் விரவி வருகின்றன. அவற்றால் அக்கால வாழ்க்கையை ஓரளவு உணர முடிகிறது. அவை ஒருவாறு தொகுத்தும் வகுத்தும் அகராதி வரிசையில் கீழே கொடுக்கப்படுகின்றன.

**அரசன் :**

* அரசன் குடை நிழலில் உலகம் தங்குதல், *1034*
* கொடுங்கோலன் நாட்டில் மழை பெய்யாது, *564*
கோல் ஓச்சுதல், *545*

**அரம் :**

அரத்தால் அராவுதல், *567*
† கூர்மைக்கு அரத்தைக் கூறுதல், *997*

**அவை :**

கற்றோரை அவையில் முந்தி இருக்கச் செய்தல், 67

1. குறள், 1076. 2. ஷ. 1180. 3. 1115. 4. 332, 5. 1020, 1058; பாவைக் கூத்தை இக்காலத்தில் பொம்மலாட்டம் என்பர். 6. 407.

* இக்குறியிட்டன தொன்றுதொட்டு வந்த மரபு.
† இக் குறியிட்டவை கவிமரபு.

**அழுதல் :**

அல்லல்பட்டு ஆற்றுது அழுதல், 555

**அளவு :**

கோலை நீட்டி அளத்தல், 796 முதலியன
† சிறுமைக்கு எள்ளைக் கூறுதல், 889
† சிறுமைக்குக் குன்றிமணி, 965
† சிறுமைக்குத் தினை, 1282 முதலியன
† பெருமைக்குக் கடலைக் கூறுதல், 1175
† பெருமைக்கு ஞாலத்தைக் கூறுதல், 102
† பெருமைக்குப் பனை, 1282
† பெருமைக்கு மலை, 898
பொருள்களை எண்ணுதல், 22
விரலால் கோடிட்டு எண்ணுதல், 1261

**ஆடுதல் :**

அரங்கில் வட்டாடுதல், 401
அவையில் கூத்தாடுதல், 332

**ஆராய்தல் :**

நல்லதையும் பொல்லாததையும் ஆராய்தல், 169

**இரத்தல் :**

ஆவுக்கு நீர் என்று இரத்தல், 1066
இது செய்யாதீர் என்று இரத்தல், 1067

**இறப்பு :**

சாப்பறை கொட்டல், 1115
நாக்கு அடங்கி விக்கல் வருதல், 335
மண்ணிற் புக்கு மாய்தல், 996

**ஈர்தல் :**

வாளால் ஈர்தல், 334

**உயர்வு :**

உயர்ந்தார்பின் தாழ்ந்தார் போதல், 1031, 1033

**உலகம் :**

செல்வர் வேறு, அறிவுடையார் வேருதல், 374
பசியால் துன்புறுதல், 13
† பெருமைக்கு உவமையாதல், 102
மழையால் வழங்கி வருதல், 11
வளி வழங்குதல், 245
வறியார் பலர் ஆதல், 270
* வேந்தன் 'கவிகைக் கீழ்த் தங்குதல், 389

**ஊன் :**

உடம்பு பெருக்க உண்ணல், 251
விலைக்கு விற்றல், 256

**ஏறுதல் :**

குன்றின்மேல் ஏறி நிற்றல், 29
குன்றின்மேல் ஏறி யானைப் போர் காணுதல், 758
கோடுகொடு ஏறுதல், 1264
மரத்தின்மேல் ஏறுதல், 476

**கட்டுதல் :**

கயிற்றால் கட்டுதல், 482

**கடல் :**

ஒலித்தல், 763
† காதலரைப் பிரிந்த மகளிருக்குக் கடல் ஒலி துன்பம் செய்தல், 1200
தோணி பாறை தாக்கிப் பிளத்தல், 1068
நீந்திக் கடத்தல், 8, 10
† பெருமைக்குக் கடலை உவமை கூறுதல், 103
மேகம் கடலைக் குறைத்து முகத்தல், 17

**கல் :**

கல்லை ஓச்சி எறிதல், 562
வழியைக் கல்லால் அடைத்தல், 38

**கள் :**

உண்டவர்க்கு மகிழ்ச்சி தருதல், 1090
உண்டவர்க்கு மயக்கம் தருதல், 925
உண்பார் மேலும் மேலும் அதை விரும்புதல், 1145
காய்ச்சுதல், 1090

**கள்வர் :**

ஆறலை கள்வர் வேலோடு நின்று இடு என்றல், 552

**கால் :**

களரில் கால் ஆழ்தல், 500

**காவல் :**

சிறையினால் காத்தல், 57
தாழால் கதவை அடைத்துக் காத்தல், 71
விலங்கு இடுதல், 836
வேலி போட்டுக் காத்தல், 1016

**குடை :**

* வேந்தன் குடைக்கீழ் உலகம் தங்குதல், 389

**குழந்தை :**

செவிலியால் வளர்தல், 757
சோற்றைக் கையால் அளைதல், 64
* நோற்றுக் குழந்தை பெறுதல், 70
பெற்றோர் மெய்தீண்டி இன்புறல், 65

**குன்று :**

குன்றின்மேல் ஏறி நிற்றல், 29

**கூலி :**

வேலை செய்து கூலி பெறுதல், 619

**கேடு :**

உடுப்பதும் உண்பதும் இன்றிக் கெடுதல், 166

**கை :**

ஈரக் கையை அசைத்தல், 1077
உடுக்கை இழந்தவன் கை உடனே சென்று கட்டுதல், 788
கை கூப்பித் தொழுதல், 260
கையால் அள்ளிக் கொள்ளுதல், 1187
கையால் தொழுதல், 828
கையால் விளித்தல், 894
தொழுத கையில் படை ஒடுங்குதல், 828
நிலத்தில் அறைந்தான் கை துன்புறல், 307

**கொள்ளும் வகை :**

அள்ளிக் கொள்ளுதல், 1187
அளந்து கொடுத்துக் கொடுத்தபடியே வாங்கும் குறியெதிர்ப்பை, 221
இரந்தேனும் ஒன்றைக் கொள்ளுதல், 780
உறுப்பைக் கொடுத்தேனும் கொள்ளுதல், 703
ஒன்றைக் கொடுத்தேனும் கொள்ளுதல், 794, 867
தன்னை விற்றேனும் கொள்ளுதல், 220

**கொலையாளி :**

கொலைக்களத்தில் கொலைத்தண்டனையை நிறைவேற்றுதல், 1224

**தீ :**

சுடுதல், 896, 1104, 1159
சேர்ந்தாரைக் கொல்லுதல், 306
தீக் காய்வார் அகலாது அணுகாது காய்தல், 691
தீக்கு அஞ்சுதல், 202, 1049
தீச் சுட்டுப் புண் ஆதல், 129
தீயில் தோய்தல் இன்னாது, 308
தெறுதல், 674
நீரால் தீ அவிதல், 929
வைக்கோல் போரைத் தீ எரித்தல், 435

**தும்மல் :**

அடக்க அடக்கத் தோன்றுதல், *1253*
தும்மினுல் வாழ்க என்று பிறர் வாழ்த்துதல், *1312, 1317*
நினைக்கப்பட்டவருக்குத் தும்மல் வருதல், *1203, 1317, 1318*

**தொளைத்தல் :**

சலாகையால் தொளைத்தல், *418*

**நகைத்தல் :**

இழித்தல் காரணமாக நகுதல், *271, 1040*
பொய்யாக நகைத்தல், *182*
முகத்தளவில் நகைத்தல், *824*

**நாண் :**

பொம்மையை நாணுல் ஆட்டுதல், *1020*

**நிலம் :**

* நிலத்துக்குப் பாரம் என்றல், *570, 572, 990, 1003*
நிலம் தாங்குதல், *151, 189*
* பொல்லாதவர்களால் பயன் குன்றுதல், *239*
மண்ணை அகழ்தல், *151*

**நிழல் :**

அடியை விடாமல் தொடர்தல், *208*

**நீர் :**

ஆவுக்கு நீர் என்று இரத்தல், *1066*
இழுத்துச் செல்லும் என்று தெரிந்தும் நீரில் பாய்தல், *1287*
ஊற்றுநீர் இறைக்க இறைக்க ஊறுதல், *1161*
கீழ்நீரில் ஆழ்தல், *929*
குளத்தில் கரைபோட்டு நீரைத் தேக்குதல், *523*
நிலத்து இயல்பால் நீர் திரிதல், *452*
நிலமும் நீரும் இயைதல், *1323*
நீரில் புணை ஓடுதல், *1134*
நீரின் ஆழத்துக்கு ஏற்றபடி மலர் நீளுதல், *595*
பசுமண் கலத்தில் நீர் தங்காமை, *660*
பள்ளியுள் காலைக் கழுவிப் புகுதல், *840*
புறந்தூய்மைக்காக நீராடுதல், *298*
மணற்கேணி தோண்டத் தோண்ட ஊறுதல், *396*

**பட்டடை :**

பட்டடையில் ஒன்றை வைத்து அடித்தல், *821*

**பளிங்கு :**

அடுத்தது காட்டுதல், *706*

பால் :

கலத்தின் தீமையால் திரிதல், 1000

புலவர் :

உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல், 394
சொல்லை ஏராகக் கொண்டு உழுதல், 872
பல நூல் கற்றல், 373

பொருள் :

ஆக்கம் கருதி முதலிழத்தல் இல்லை, 463
ஊதியம் போகவிடுதல் இல்லை, 831
பொருளைச் சேமித்து வைத்தல், 229
முதல் இல்லார்க்கு ஊதியம் இல்லை, 449

பொன் :

பொன்னை அரத்தால் தேய்த்தல், 888
பொன்னை உருக்குதல், 267
பொன்னைப் பொதிந்து வைத்தல், 155

போர் :

அம்பினால் இலக்கத்தை எய்தல், 627
† இமைத்தால் தோல்வி யாதல், 775
இறந்த வீரருக்குக் கல் நாட்டுதல், 771
எஃகினால் அறுத்தல், 759
களிற்றை வேலால் எறிதல், 774
புறமுதுகு காட்டல் தோல்வி, 620
பேடி கையில் வாள் பயன் இன்றி ஒழிதல், 614, 727
மார்பினும் முகத்தினும் விழுப்புண் படுதல், 776
வில்லை வளைத்து அம்பு விடுதல், 827
வீரர் இறந்தால் அரசர் கண்ணீர் விடுதல், 780
வீரர் காலில் கழல் கட்டுதல், 777

மகளிர் :

கண்ணுக்கு மை எழுதுதல், 1127, 1285
* கற்புடை மகளிர் தெய்வம் தொழாமை, 55
* கற்புடை மகளிர் மழை பெய்வித்தல், 55
† காதலரைப் பிரிந்த மகளிர் கடலோசையால் துன்புறுதல், 1200
குமரியாக நின்று மூத்தவள் நலம் பயனின்றி ஒழிதல், 1007
† தோள் பசத்தல், 1265
நாணத்தால் நிலத்தை நோக்குதல், 1094
† பிரிவினால் பசலை உண்டாதல், 1181 - 90
பொது மகளிர் பொருளைப் பெறுதல், 813
மலரை அணிதல், 1115, 1313
† மேனியிற் பசலை உண்டாதல், 1182

**மடல் :**

† மடல் ஏறுதல், 1131 – 3, 1135 – 7

**மென்மை :**

† மென்மைக்கு அனிச்சத்தைக் கூறுதல், 1115
மென்மைக்கு மலரைக் கூறுதல், 1120, 1289

**மதி :**

நிறைந்து குறைதல், 782
* பாம்புபற்றிக் கிரகணம் உண்டாதல், 1146
மறு விளங்குதல், 957

**மருந்து :**

நோய்க்கு மருந்து உண்ணுதல், 1091, 1102

**வழி :**

வழியில் நிலை தளர்தல், 716
வழியில் நுழைந்து வருவாரைப் பார்த்தல், 130
வழியைக் கல்லால் அடைத்தல், 38
வழியைக் கேட்டுப் போதல், 594

**வறியவர் :**

இரந்து உயிர் வாழ்தல், 1062
உடையார்முன் ஏங்கி நிற்றல், 395

**விருப்பம் :**

* பருகுவது போன்ற விருப்பம், 811

**விருந்து :**

மகிழ்ச்சியால் விருந்து அயர்தல், 1268
விருந்தினர் முகம் திரிந்து நோக்கினல் வாடுதல், 90
விருந்தினரை எதிர் நோக்கி யிருத்தல், 86

**விளக்கு :**

இருள் போக்க விளக்கு ஏற்றல், 299, 753

**வெறுப்பு :**

ஒன்றைக் கொடுத்தும் வேண்டாததை நீக்குதல், 800
தலையின் இழிந்த மயிரை வெறுத்தல், 964
பதடியை இழித்தல், 196
வேண்டாததை நிலத்திற் புரள விடுதல், 755

**வேட்டுவன் :**

புதலில் மறைந்து புள்ளைப் பிடித்தல், 274

**வேள்வி :**

* அவி உணவைத் தேவர் கொள்ளுதல், *413*
அவி சொரிந்து வேட்டல், *259*

**வேளாண்மை :**

எரு விடுதல், *1037, 1038*
களர் நிலத்தில் ஒன்றும் விளையாமை, *406*
களை எடுத்தல், *550*
பாத்தியில் நீர் பாய்ச்சுதல், *465, 718, 1093*
புழுதியை உலரப் போடுதல், *1037*
வாடிய வள்ளியை முதல் அரிதல், *1304.*

### விலங்குகள்

பல விலங்குகளைப் பற்றிய செய்திகள் அங்கங்கே வருகின்றன. சிங்க நடை ஆடவர் நடைக்கு உவமையாகும்.[1] புலியைக் கண்டால் பிறர் அஞ்சுவார்கள்; அது புல்லைத் தின்னாது. அது யானையைத் தாக்கும்.[2]

யானையை அங்குசத்தால் அடக்குவர். போரில் கட்டாக அம்பு இருந்தாலும் அஞ்சாமல் நிலைகொள்வது அது. அதை வேலால் எறிவர். யானையை எறிந்தான் என்பது பெருமைக்குரிய செயல். அது கூரிய கொம்பை உடையது. புலிக்கு அஞ்சும். காட்டுயானையைப் பழக்கிய யானையைக் கொண்டு அகப்படுத்துவார்கள். காட்டில் யானைகள் ஒன்றோடு ஒன்று போரிடுவதும் உண்டு. களர் நிலத்தில் கால் புதைந்து நிற்கும். யானைக்குக் கட்படாம் அணிவது வழக்கம்.[3] குதிரை போரில் படையாக வரும்.[4]

ஆவைச் சிறந்ததாகக் கொள்வது இந்த நாட்டு மரபு. மழை இல்லாததனால் உண்டாகும் தீங்கைச் சொல்ல வந்த வள்ளுவர் ஆவுக்குரிய புல்லும் தோன்றாது என்கிறார். காவலன் தக்கபடி காவாவிடின் பல தீங்குகள் நேரும் என்பதைச் சொல்ல வந்தவர் முதலில், "ஆபயன் குன்றும்" என்கிறார். எவ்வளவு சிறந்த பயன் வருவதாக இருந்தாலும் இரத்தல் இழிவு என்பதைப் புலப்படுத்த வந்தவர், "ஆவுக்கு நீர் என்று இரப்பினும்" என்கிறார். இவற்றால் ஆவின் பெருமையை உய்த்துணர வைக்கிறார்.[5] அது புல் மேய்வதை ஒரு குறளும், பாரத்தை இழுக்கும் காளைமாடு எத்தகைய நிலத்திலும் தளராது செல்வதை ஒரு குறளும் கூறுகின்றன.[6]

ஆட்டை ஒன்றனோடு ஒன்று மோதவிட்டுச் சண்டை போடச் செய்வார்கள்; அப்போது அது தாக்குவதற்காகப் பின் வாங்கும்.[7]

களர் நிலத்தில் ஆழ்ந்த யானையை நரி கவ்வும். முயலை அம்பால் எய்வார்கள்.[8] கவரிமான் ஒரு மயிர் நீங்கினாலும் உயிரை விட்டுவிடும். பெண்மானின் கண் அழகாக இருக்கும்; ஆதலால் அதை மகளிர் கண்ணுக்கு உவமை கூறுவது வழக்கம். எலிக்கும் நாகத்துக்கும் பகை. நாகம் மூச்சு

---

1. குறள், 59. 2. 273, 599. 3. 24, 500, 597, 599, 678, 758, 772, 774, 1087. 4. 814. 5. 16, 560, 1066. 6. 273, 624. 7. 486. 8. 500, 772.

விட்டாலே எலிக்கூட்டம் ஓடிவிடும். வாழும் இடத்தில் பாம்பு இருந்தால் உயிருக்கு அழிவு நேரும். சந்திர கிரகணம் உண்டாகும் போது திங்களைப் பாம்பு கொண்டதாகச் சொல்வது வழக்கம்; பாம்பு என்பது ராகுவை.[1] புழு எலும்பு இல்லாதது; ஆதலின் வெயிலில் அது இறந்துவிடும்.[2]

முதலை தண்ணீரில் இருக்கும்போது வலிமையுடையதாக இருக்கும்; அதுவே வெல்லும். ஆனல் நீரினின்றும் வெளிவந்தால் மற்ற விலங்குகள் அதை வென்றுவிடும். ஐந்து உறுப்புக்களை அடக்கிக் கொள்ளும் இயல்புடையது ஆமை. மீன் தூண்டிலிலுள்ள இரும்புக்கொக்கியை விழுங்கி அகப்பட்டுக் கொள்ளும். கயல் மீன் பிறழும்; அதனல் அதை மகளிர் கண்களுக்கு உவமையாக்குவர்.[3]

மக்களைவிட விலங்கு தாழ்ந்தது. அதைக் கல்லாதவர்களுக்கு உவமையாகக் கூறுகிறர் திருவள்ளுவர்.[4]

## பறவைகள்

பறவைகளைப் பற்றிய கருத்துக்களும் வருகின்றன. பறவை முட்டையை உடைத்துக்கொண்டு வெளியே வந்து பறந்து போய் விடும். வேட்டுவன் செடி மறைவில் மறைந்து நின்று பறவைகளை வேட்டையாடுவான்.[5]

மயில் அழகிய பறவை; மென்மையானது; அதனல் அதன் சாயலை மகளிருக்கு உவமை கூறுவர். அதன் பீலி கனம் இல்லாதது. அன்னப் பறவையின் தூவி மிக மென்மையானது.[6]

கொக்கு நல்ல மீன் வருமளவும் சும்மா இருந்து, அது வரும்போது கொத்தும். காக்கை உணவு கிடைத்தால் கரைந்து இனத்தோடு அதனை உண்ணும்; பகலில் கூகையை அது வென்று விடும். கூகை இரவில் வலிமையுடையதாக இருக்கும்; பகலில் அதனை இழந்துவிடும்.[7]

## மரம் - செடி - கொடி

மரவுலகத்தின் இயல்புகளைப் பலவகையில் எடுத்து ஆளுகிறர் வள்ளுவர். கண்ணேட்டம் இல்லாதவரையும், ஊக்கம் இல்லாதவரையும், பண்பு இல்லாதவரையும் மரத்துக்கு ஒப்பாகச் சொல்கிறர்.[8] மரங்களில் பழம் தரும் பயன் மரம் உண்டு; மருந்தாகப் பயன்படும் மரமும் உண்டு; எட்டிபோன்ற நச்சு மரமும் உண்டு; முள் மரமும் உண்டு. முள் மரத்தை இளையதாக இருக்கும் போதே வெட்டி விடவேண்டும். வளர்ந்து விட்டால் எளிதில் வெட்ட இயலாது. பாலை நிலத்தில் மரம் வற்றிப்போய் உலர்ந்து நிற்கும்.[9] நன்ருக வளரும் மரம் கிளைகளும் வளாரும் விட்டுப் படரும்.[10] மரத்தின் தளிர் பார்க்க அழகியது; மகளிர் மேனிக்கு அதை உவமை கூறுவர். மரத்தின்மேல் ஏறுபவர்கள் நுனிக் கொம்பு வரையில்தான் ஏற முடியும்.[11]

---

1. குறள், 969, 1085, 1089, 763, 890, 1146. 2. ஷை 77. 3. 495, 126, 931, 1212. 4. 410. 5. 338, 274. 6. 1081, 475; 1120. 7. 490, 527, 481. 8. 576, 600, 997. 9. 216, 217, 1008, 879, 78. 10. 1264. 11. 1113, 476.

மரத்திற் பூக்கும் பூவைக் கோட்டுப் பூ என்று சொல்வது வழக்கம். அதையும் மகளிர் சூடுவதுண்டு. இளங்காயைக் கருக்காய் என்பர். காயைவிடக் கனி சிறந்தது. கருக்காயும் மிகுதியாகக் கனிந்துபோன கனியும் பயன்படா. சில பழங்கள் வித்தில்லாதனவாகவும் இருக்கும். வித்தைக் காழ் என்று சொல்வர்.[1] வித்து என்ற சொல்லையும் ஆசிரியர் ஆள்கிருர்.[2]

பனைமரத்தைப் பெரிய அளவுக்கு ஒரு வாய்பாடாகக் கூறுதல் மரபு.[3] அதன் மடலால் குதிரை போல உருவம் செய்து அதில் தான் விரும்பிய தலைவியைப் பெருத காதலன் ஊர்ந்து வருவதாகச் சொல்வது கவி மரபு. இவ்வாறு செய்வதை மடலேறுதல் என்று கூறுவர்.[4] மூங்கிலை அமை, காம்பு, வேய் என்று சுட்டுவர்; அது மகளிர் தோளுக்கு உவமையாக ஆளப்பெறும்.[5]

பல மரங்கள் அடர்ந்து நிழல் தரும் காடு ஒரு நாட்டுக்குரிய அரண்களில் ஒன்ருக விளங்கும். 'அணி நிழற் காடு' என்பர் ஆசிரியர்.[6]

அரும்பு போதாகிப் பின்பு மலரும். காமத்தை மலராக உருவகம் செய்யும் வள்ளுவர் இந்த மூன்று நிலையையும் இணைக்கிருர்;

"காலை அரும்பிப் பகலெல்லாம் போதாகி
மாலை மலரும்இக் நோய்."[7]

முகையில் மணம் வெளிப்படாமல் உள்ளே அடங்கியிருக்கும்.[8] மகளிர் கண்ணுக்குப் பொதுவகையில் மலரை உவமையாகச் சொல்வர்.[9] சிறப்பாகக் குவளை மலரைக் கூறுவர்.[10] மலர்களிற் சிறந்தது தாமரை. அடையின்றி மலர் என்ருல் அது தாமரையைக் குறிக்கும். மலரைப் போன்ற உள்ளத் தடத்தில் இறைவன் எழுந்தருளியிருக்கிருன்.[11] தாமரை மலரில் திருமகள் வீற்றிருக்கிருள்; அதனுல் தாமரையாள் என்ற பெயர் பெறுகிருள்.[12] நீர்ப் பூக்கள் நீரின் ஆழத்துக்கு ஏற்றபடி நீளும்.[13]

அனிச்ச மலரை மென்மைக்கு எடுத்துக் காட்டாக நான்கு இடங்களில் எடுத்தாளுகிருர்;

"மோப்பக் குழையும் அனிச்சம்; முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து."

"நன்னீரை வாழி அனிச்சமே, நின்னினும்
மென்னீரள் யாம்வீழ் பவள்,"

"அனிச்சப்பூக் கால்களையாள் பெய்தாள் நுசுப்பிற்கு
நல்ல படாஅ பறை."

"அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர்
அடிக்கு நெருஞ்சிப் பழம்."[14]

மணம் இல்லாத மலர்கள் சில உண்டு. தாம் கற்றதை அவைக் கண் பிறர் உணரும்படி விரித்து உரைக்கும் ஆற்றல் இல்லாதவர்களுக்கு அந்த மலர்கள் ஒப்பாகின்றன.[15] இக்காலத்தில் செடி என்று நாம் வழங்குவதைப் புதல் என்பது அக்கால வழக்கு. நெருஞ்சி முள்ளை நெருஞ்சிப் பழம் என்று

1. குறள், 1313, 1306, 100, 1191. 2. ஷை, 85, 138, 361. 3. 104, 433, 1282. 4. 1131-3, 1135-7. 5. 906, 1272, 1113. 6. 742. 7. 1227. 8. 1274. 9. 1112, 1119, 1142, 1231, 1305. 10. 1114. 11. 3. 12. 617. 13. 595. 14. 90, 1111, 1115, 1120. 15. 650.

கூறுகிறார்.[1] கொடியை வள்ளி யென்பர்.[2] ஆவுக்குரிய புல்லும், குன்றி மணியும் இந்நூலில் இடம் பெறுகின்றன.[3] குன்றிமணியைச் சிறுமைக்கு எடுத்துக்காட்டாக்குவார். அது கறுப்பும் சிவப்பும் உடையது. கொடியில் இருக்கும்போது அதன் மூக்கு மேல் தோலோடு ஒட்டிக்கொண்டிருத்தலின் அதன் சிவப்புப் பகுதி மாத்திரம் வெளியில் தெரியும். ஆதலின் அதைக் குன்றியின் புறம் என்கிறார்.

"புறம்குன்றி கண்டனைய ரேனும் அகம்குன்றி
முக்கிற் கரியார் உடைத்து"[4]

என்பதில் இதனைக் காண்க.

உணவுப் பொருளாகப் பயன்படும் பயிர்களைப் பற்றிய செய்திகளையும் இந்நூலில் காண்கிறோம். பயிர் விளைவை விளையுள் என்பர்.[5] பசிய பயிரைப் பைங்கூழ் என்பர்.[6] வித்து நல்ல நிலத்தில் இட்டால் அந்த நிலத்துக்கு ஏற்றபடி முளை எழும்பும்.[7] பாத்தி கட்டி நீர்விட்டால் நன்றாகப் பயிர் விளையும்.[8] பயிரினிடையே களை எழும்; அவற்றைக் களைந்து விடுவார்கள்.[9] நெற்கதிர் அலகு என்ற பெயர் பெறுகிறது.[10] பதர் நெல்லைப் பதடி என்பர்.[11] வைக்கோலை வை என்றும், அதன் போரைத் தூறு என்றும் வழங்குவர்.[12] கரும்பை வெட்டிப் பிழிந்து பயன்படுத்துவர்.[13] புன்செய்ப் பயிராகிய எள்ளும் தினையும் சிற்றளவுக்கு எடுத்துக்காட்டாக வருகின்றன.[14]

மரமும் செடியும் கொடியும், அரும்பும் போதும் பூவும், காயும் கனியும் வித்தும் விரவிய மரவுலகத்தின் பகுதிகளைத் திருவள்ளுவர் இவ்வாறு காட்டி அவற்றின் இயல்புகளையும், அவற்றை உவமையாக்கி வேறு பொருள்களின் தன்மைகளையும் தெளிய வைக்கிறார்.

---

1. குறள், 1120. 2. ஷை 1304. 3. 16; 277, 965. 4. 277.
5. 545, 731. 6. 550. 7. 959. 8. 718. 9. 550.
10. 1034. 11. 196. 12. 435. 13. 1078. 14. 889; 104, 433, 1282.

# 4. இலக்கியப் பண்புகள்

சிந்தனை உரமும் கற்பனை வளமும் பெற்ற கவிஞன் தனக்குத் தோற்றிய அரிய கருத்துக்களுக்கு உணர்ச்சியூட்டி அழகிய உருவம் கொடுத்துக் கவியாக்குகிறான். மொழியில் உள்ள எந்த உருவத்துக்கும், உரையானாலும், செய்யுளானாலும் இரண்டு உறுப்புக்கள் உண்டு. ஒன்று சொல்; மற்றொன்று பொருள். நாம் உரையாடும்போது அவ்வுரையில் வரும் சொற்களுக்குப் பொருள் உண்டு. உரைநடையில் பல கட்டுரைகளை எழுதுகிறோம்; அல்லது கடிதம் எழுதுகிறோம். அவற்றிலும் சொல்லும் பொருளும் உள்ளன. பொருள் இன்றிச் சொல் இல்லை.

### மொழியில் அழகு

மொழியின் பயன் அது தோற்றிய காலத்தில், ஒருவர் தம் கருத்தைப் பிறருக்குத் தெரிவிக்கும் கருவியாக நிற்பதே. ஆனால் நாளடைவில் அது அந்தச் செயலோடு நில்லாமல் இனிமையும் அழகும் பெறலாயிற்று. மானம் காப்பது உடை, பசியைப் போக்குவது உணவு என்று இருந்தாலும், மனிதன் நாகரிகம் அடைய அடைய உடையில் பல அழகிய உருவங்களையும், அமைப்புக்களையும் ஏற்றினான். அப்படியே உணவிலும் பல சுவைகளும் நிறம், வடிவு, மணம் ஆகியவையும் நன்கு அமையும்படி செய்தான். அவ்வண்ணமே பேசும் பேச்சு, அவ்வப்போது தான் குறிக்கும் ஒன்றைப் பிறனுக்குத் தெரிவிக்கும் கருவியாக நிற்பதோடு நில்லாமல், சொல்லிலும் பொருளிலும் அழகு பெறலாயிற்று. சிந்தனை மிகுதி ஆக ஆகப் பொருளில் அநுபவமும், உண்மைத் தன்மையும், நல்ல பயனும் செறிந்தன. சொற்களைப் புதியனவாக ஆக்கிக்கொண்டு அழகாக அமைக்கும் முறைகள் தோன்றின. மக்கள் உரையாடும்போதே இத்தகைய அழகுகள் அவர்கள் பேச்சில் புகுந்தன. 'நன்றாகப் பாடினாள்' என்று சொன்னால், அத்தொடர் ஒரு கருத்தை உள்ளது உள்ளபடியே வெளியிடுகிறது. 'குயில்போலப் பாடினாள்' என்றால், அது அங்கே இல்லாத பொருளை எண்ணி ஒப்புநோக்கச் செய்து இனிமை தருகிறது. 'இவள் பாட்டைக் கேட்டுக் குயிலும் உடல் கருகிவிட்டது' என்றால் ஒரு கற்பனையும் சேர்ந்து இனிமையைத் தருகிறது. பேச்சினிடையிலேயே இவ்வாறு இனிமையைப் புகுத்த முடிகிறது. கவிதையிலோ சொல்வளமும் பொருள்வளமும் படைத்த புலவர்கள் எத்தனை எத்தனையோ வகையில் இனிமையை ஊட்டி நுகரச் செய்கிறார்கள். அவர்கள் இனிமை உண்டாகும்படி ஆளும் உத்திகளுக்குக் கணக்குவழக்கே இல்லை. இந்த நாட்டில் செய்யுளியல் இயற்றிய புலவர்களும் அணியியல் அமைத்த புலவர்களும் மேல்நாட்டுத் திறனாய்வாளர்களும் கவிதைகளை ஆராய்ந்து, சொல்லின்பமும் பொருளின்பமும் இன்ன இன்ன முறையில் விளைகின்றன என்று ஒருவாறு சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் வகுக்கும் வரையறைக்கு அடங்காத பல உத்திகள் கவிஞர்களுடைய படைப்பில் உள்ளன. அவை எல்லாவற்றையும் ஒன்று விடாமல் எடுத்துச் சுட்டுவது இயலாத காரியம்; அவை அநுபவித்தே இன்புறற்குரியவை.

### மருமாலை

திருக்குறள் செய்யுள் உருவில் அமைந்த நூல். பொருளுக்கே சிறப்புத் தருவது. மனித வாழ்க்கையில் தனி மனிதனது உள்ளம், உரை, உடல் என்னும் மூன்று திறத்தோடும் தொடர்புடைய கருத்துக்களையும், சமுதாயத்தோடு தொடர்புடைய கருத்துக்களையும் சொல்வது. உரனுடைய கருத்துக்களாதலின் நாள் ஆக ஆக மங்காமல் சிறப்புப் பெற்றுப் பல நாடுகளிலும் பரவி வருகிறது. சிறந்த நீதி நூல் இது. நீதியை உள்ளது உள்ளபடியே சூத்திரத்தில் அமைப்பது போல அமைத்துச் சொல்லியிருந்தால் இந்த நூலில் கவிச் சுவையைக் காண இயலாது. ஆனல் திருவள்ளுவர் தாம் சொல்லும் கருத்தைப் பல வேறு பாங்கில் சொல்கிருர். எடுத்தாளும் சொற்களில் இனிமை தவழச் செய்கிருர். அதனல் இந்த நூல் வெறும் நீதி நூலாகமட்டும் இராமல் கவிதையாகவும் இலகுகிறது.

தொடர்நிலைச் செய்யுளாகவோ, வருணனை முதலியவற்றைச் சொல்லும் தனிநிலைச் செய்யுளாகவோ இருந்தால் கவியின்பத்தை மிகுதியாக வழங்கும் உத்திகளை ஆளும் வாய்ப்பு இருக்கும். இந்த நூலில் ஒவ்வொரு குறளும் சில சொற்களால் அமைந்து ஒவ்வொரு கருத்தைத் தனித்தனியே சொல்கிறது. ஆகவே காப்பியங்களிலே காணும் பெரு விருந்தாகிய கவி யின்பத்தை இதில் எதிர்பார்க்க இயலாது. ஆயினும் வெறும் நீதியை மட்டும் சுருக்கமாக உள்ளது உள்ளபடியே சொல்லிவிடவில்லை திருவள்ளுவர். சொல்லும் முறையில் இன்பம் உண்டாகச் செய்கிருர். சொல்லையும் பொருளையும் ஆளும் பாங்கில் சுவையைத் தேக்குகிருர். காப்பியங்களைப் பெரிய மலர் மாலையாகச் சொன்னல், நீதிநூல்களை இலையாகச் சொல்லலாம். திருக்குறள் மலர் மாலையும் அன்று; வெறும் இலையும் அன்று; மருவால் தொடுத்த மாலை என்று சொல்லலாம். மரு இலைதான்; ஆனல் அதற்கு மணம் உண்டு.

### கவியின்பம்

திருக்குறளில் கவியின்பம் உண்டு என்பதைக் குறிக்கும் திருவள்ளுவமாலைச் செய்யுட்களை முன்பு பார்த்தோம்.[1] ஆங்கிலத்தில் இந்நூலை மொழி பெயர்த்த மேல்நாட்டு அறிஞர்களும் இந்நாட்டு அறிஞர்களும் இந்த இயல்பைச் சுட்டிக் காட்டியிருக்கிருர்கள். சார்ல்ஸ் இ. கவர் என்பவர், 'குறள் ஓர் இலக்கியக் கருவூலம், கவிதைக் குரல் என்பதில் ஐயமே இல்லை. கிரேக்கர்களுக்கு ஹோமரது காவியம் எத்தகையதோ, அவ்வாறு சொற் சிறப்பும் நீதிச் சிறப்பும் மிகச் சிறந்த முறையில் அமைந்தது' என்று எழுதுகிருர்[2]. எம். ஏரியல் என்பவர், 'குறள் தமிழ் இலக்கியத்தின் சிறந்த படைப்பு. மனித சிந்தனையின் தூய வெளியீடு' என்கிருர்.[3] 'அதனுடைய உளம் கவர் பண்பை எந்த மொழி பெயர்ப்பும் கொள்ள இயலாது. அது வெள்ளித் தட்டில் வைத்த தங்கக் கனி'[4] என்கிருர் டாக்டர் கிரௌல் என்னும் அறிஞர். 'குறள் இவ்வளவு வியாபகமாக இருப்பதற்கு மிகுதியான காரணம் அது அற்புதமான கவியுருவில் அமைந்திருப்பதுதான்'[5] என்பது ஜி. யூ. போப்பின் கருத்து. 'இலக்கிய வளாகத்தில் நீதிச் செய்யுளைச் சேர்த்துக் கொள்வதற்குக்

1. ப. கரு. 2. Charles E. Gover in *Folk Songs of South India*.
3. M.Ariel. 4. Dr.Graul. 5. Rev. G. U. Pope.

கலைஞர்கள் ஒப்புவதில்லை. ஆனால் வேலைப்பாட்டின் சிறப்பும் கவிதைக் கனலின் ஒளியினால் அங்கங்கே நீதி யுபதேசத்தை ஒளிரச் செய்யும் தகைமை யும் இருக்குமாயின் எந்த நீதிச் செய்யுளையும் உண்மையான கவிதையாக ஏற்றுக்கொள்வது முறையாகும் என்றால் திருக்குறள் அத்தகைய கவிதை யாகும்'[1] என்று பி. டி. சீனிவாசையங்கார் எழுதினார். வ. வே. சு. ஐயர் தம்முடைய குறள் மொழி பெயர்ப்பு முகவுரையில் எழுதியுள்ளவை மிக மிக நன்றாக இந்தக் கருத்தை வெளியிடுகின்றன; 'மனிதனால் என்றும் வெளியிடப் படாத மிக ஆழமான கருத்துக்களைச் சுருக்கி இந்த ஆசிரியர் ஏழே சீர்களில் அமைத்திருக்கிறார். இந்தச் சிறிய இன்னிசைக் கருவியை அவர் சிறந்த இசை வல்லுநனைப் போல எவ்வளவு அழகாக வாசித்திருக்கிறார்! ஒளிவிடும் சாதுரியம், நகைச்சுவை, அழுத்தமாகச் சொல்லுதல், கற்பனை, முரண்பாட்டு நயம், வினவுதல், ஓவியம் போன்ற உவமைகள்—இப்படிக் கருவிலே திருவுடைய கலைஞன் ஆளும் ஆயிரம் உத்திகளில் ஒன்றையும் அவர் இந்த முழுமையான சிறந்த கலைப்படைப்பில் ஆளாமல் விட்டுவிடவில்லை'[2] என்று அவர் கூறுவது எவ்வளவு பொருத்தமான விமரிசனம்!

கவிஞர்கள் கவிதைச் சுவை உண்டாக்குவதற்கு எந்த எந்த உத்திகளை ஆள்வார்களோ அவற்றில் பலவற்றைத் திருவள்ளுவர் ஆண்டு சுவையூட்டி யிருக்கிறார் என்பதற்குப் பலபல எடுத்துக்காட்டுக்களைக் காட்டலாம்.

### முதற் குறள்

முதற் குறளே உவமையினால் பொருளை விளக்குகிறது. 'எழுத்துக்கள் எல்லாவற்றிற்கும் அகரம் முதலாக அமைந்திருப்பதுபோல உலகம் அனைத் திற்கும் கடவுளே முதலாக இருக்கிறான்' என்று அக் குறள் சொல்கிறது. தமிழ் எழுத்துக்களுக்கு அகரம் முதலாவதுபோல என்று உவமை கூறாமல், எல்லா எழுத்துக்களுக்கும் அகரம் முதலாக நிற்றல்போல என்று கூறுவது இவரது பரந்த அறிவையும் விரிந்த மனப்பான்மையையும் புலப்படுத்துகிறது. கடவுளே யாவற்றிற்கும் முதல்வன் என்பதைச் சொல்ல வருகிறவர் அந்த இலக்கணம் அவன் பெயரைக் கூறவே விளங்கும் என்பாரைப்போல, அந்த முதன்மையைக் காட்டும் ஆதிபகவன் என்ற பெயரால் கடவுளைக் கூறுகிறார்.

அகரத்தை இறைவனுக்கு உவமையாகச் சொன்னதைப் பலபடியாக விரித்துரைக்கிறார்கள் உரையாசிரியர்கள். அகரம் இயற்கையாக எதனது விகாரமாகவும் இன்றி நிற்றலைப்போல இறைவனும் சுதந்தரனாய் எந்தப் பொருளினுடைய விகாரமாகவும் இன்றி ஒளிர்கிறான். அகரம் எல்லா எழுத் துக்களினூடும் கரந்தும், தெரிந்தும் கலந்திருக்கிறது; தனியாகவும் இருக் கிறது. அ என்று சொன்னால், அது தனியே நிற்கிறது. ப என்று சொன்னால் பகர மெய்யோடு இணைந்தும், ஆனால் தன் உருவம் தோன்ற நிற்பதால் இணையாதும் இருக்கின்றது. உயிர்மெய் அகரம் அல்லாத எழுத்துக்கள் எல்லாவற்றிலும் அகரக் கூறு மறைவாக இருக்கிறது. இறைவனும் தனியாக வும், இணைந்தும் இணையாமலும், இணைந்தும் விளங்குகிறான்.

---

1. P. T. Srinivasa Iyengar in *History of Tamil*.

2. The Kūral or the Maxim of Tiruvalluvar—translated by V. V. S. Iyer **Introduction, p. xii.**

அ என்ற ஒலி ஒன்ருக இருந்தாலும் அதற்குரிய வரி வடிவங்கள் வெவ்வேறு மொழிகளிலும் வெவ்வேறு வகையாக இருக்கின்றன. அவ்வாறே இறைவன் ஒருவனேயாயினும் வெவ்வேறு பெயர்களும் உருவங்களும் கொள் கிருன். ஒலிக்கு எழுத்து அடையாளமாக நிற்றலைப்போல, இறைவனுக்குப் பலபலவாக நிறுவப்பெற்ற உருவங்களெல்லாம் அடையாளங்களாகும்.

"எழுத்துக்களில் நான் அகாரமாய் நிற்கிறேன்" என்று கண்ணபிரான் கீதையில் சொல்கிருன்.

"அகரவுயிர் போல அறிவாகி எங்கும்
நிகரில்இறை நிற்கும் நிறைந்து"

என்று சைவ சாத்திரம் கூறுகிறது.

இன்னும் இந்த உவமையை விரிக்க விரிக்கப் பெருகும். இந்த உவமையை ஆளாமல், "கடவுள் உலகத்துக்கு முதல்வன்" என்ற அளவில் சொல்லி முடித்திருந்தால், அது வெறும் நீதிச் செய்யுளாக நிற்கும்; கவிதை ஆகாது.

### இரண்டாவது குறள்

அடுத்த குறளிலும் இப்படியே சொல்லும் பான்மையில் சுவையை உண்டாக்குகிருர்.

"கற்றதனுல் ஆய பயன்என்கொல்? வாலறிவன்
நற்ருள் தொழாஅர் எனின்"

என்பது ஒரு வினு வடிவில் இருக்கிறது. 'கற்றதனுல் ஆய பயன் கடவுளின் தாளைத் தொழுதல்' என்று மட்டும் சொல்லி யிருந்தால் அது ஓர் உயர்ந்த கருத்தைச் சொல்லும் நீதிச் செய்யுளாக இருக்கும். ஆனுல் 'பயன் என் கொல்?' என்று ஒரு வினுவை எழுப்பியவுடன் சுவை தோன்றுகிறது.

'அந்தக் கோயில் நன்ருக இருக்கிறது' என்று சொல்வது செய்தி. அதில் சுவை ஏதும் இல்லை. 'அந்தக் கோயிலைப்போல நல்ல கோயில் வேறு இருக்கிறதா?' என்று கேள்வியாக வரும்போது அதற்கு ஒரு வகையான சுவை ஏறுகிறது.

இந்தக் குறள் கேள்வி வடிவில் இருப்பதே ஒரு நயம். அதற்குமேல் சொற்களின் சிறப்பும் அந்த நயத்தை மிகுதியாக்குகின்றது. கற்றதனுல் அறிவு வரும். அறிவுடையவன் சிறந்த தூய அறிவே வடிவாக உடையவனைப் போற்றுவதுதானே சிறப்பு? அதனுல் இங்கே இடத்திற்குப் பொருத்தமாக 'வாலறிவன்' என்ருர். அவன் தாள் நலம் தருவது என்பதை 'நற்ருள்' என்ற தொடர் காட்டுகின்றது. கற்றது நூலறிவு என்பதும், அதற்குமேல் இறைவனை வழிபட்டுப் பெறுவது வாலறிவு என்பதும், அந்த வாலறிவே எல்லாவற்றிற்கும் மேலான பயன் என்பதும் உய்த்துணரக் கிடக்கின்றன.

### வேறு சில எடுத்துக்காட்டுகள்

வறுமையின் கொடுமையைச் சொல்ல வருகிருர் திருவள்ளுவர். இன்மையைப் போலக் கொடியது ஏதேனும் உண்டா என்று கேட்ப வரைப்போல முதலில் ஒரு வினுவை எழுப்பிக்கொள்கிருர். அதைக் கேட்ட வுடன் நாம் பலவகை உவமைகளைச் சிந்திக்கத் தொடங்குகிருேம்.

"இன்மையின் இன்னாதது யாது ?"

என்பது அவர் கேள்வி. நாம் திட்டமாக இதுதான் இதற்கு உவமை என்று சொல்ல முடியாமல் யோசனையில் ஆழ்ந்திருக்கும்போது வள்ளுவர் தாமே அந்த வினாவுக்கு விடை அளிப்பவரைப் போலத் தொடங்குகிறார்.

"இன்மையின் இன்னாதது யாது?—எனின்."

ஆம்; திருவள்ளுவரே உவமை கூறப்புகுந்தால் அது அருமையாகத்தானே இருக்கும்! ஆகவே நாம் ஆவலோடு அவர் கூறும் உவமைக்காகக் காத்திருக்கிறோம். இதோ அவர் சொல்லத் தொடங்கிவிட்டார் என்றே தோன்றுகிறது.

"இன்மையின் இன்னாதது யாது, எனின்,
இன்மையின்..."

அவர் சொல்லும் உவமையைக் கேட்கும் ஆர்வம் நமக்கு மிகுகிறது. இந்த ஆவலைத் தூண்டிவிட்ட அவர், தாம் சொல்ல வந்ததைக் கூறி முடித்து விடுகிறார்.

அவர் கூறியது என்ன ?

"இன்மையின் இன்னாதது யாதெனின், இன்மையின்
இன்மையே இன்னா தது"

என்பதுதான் அவர் கூறியது. இன்மைக்கு உவமை காணப்புகுந்து, அதன் கொடுமைக்கு எதை எதையோ உவமையாக எண்ணி எண்ணி, அவற்றுள் ஒன்றும் அதன் கொடுமைக்கு அருகில் வர முடியாதென்பதை உணர்ந்து, இறுதியில் அதற்கு அதுவே ஒப்பு என்று சொல்லி முடித்துவிடுகிறார். 'இன்மை எல்லாவற்றிலும் கொடியது' என்று சொல்லியிருந்தால் இத்தனை ஆவலும் சுவையும் உண்டாகுமா ?

அறத்துப்பால், பொருட்பாற் பாடல்கள் எல்லாவற்றிலும் கவிச்சுவை அங்கங்கே ததும்பி நிற்கும். ஆனால் காமத்துப்பால் முழுவதும் கவிக்கனி குலுங்கும் பழத் தோட்டம் என்று சொல்லிவிடலாம்.

காதலன் தன் காதலியின் மென்மைத் தன்மையைக் கூறுகிறான். அவள் அடியின் மென்மையைச் சொல்கிறான். மெத்தென்ற பொருள் என்று உலகம் அநுபவத்தில் உணர்ந்து, மென்மைக்கு எடுத்துக்காட்டாகச் சொல்லும் பொருள்கள்கூட அவள் காலை உறுத்துமாம். அனிச்சமலரும், அன்னத்தின் அடிவயிற்றிலுள்ள மெல்லிய இறகும் மிக மிக மென்மையான பொருள்கள். அவை காதலியின் அடிக்கு நெருஞ்சி முள்ளைப்போல இருக்குமாம். இதைக் காதலன் சொல்கிறான்.

"அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர்
அடிக்கு நெருஞ்சிப் பழம்."

இது காதலன் ஒருவனுடைய கூற்று. முள்ளைப்போலக் குத்தும் என்று சொல்ல வருகிறவன், பொருள் குத்தினாலும் சொல்லளவிலாவது அதைக் கனியாக்கி மென்மையூட்டுவோமே என்றெண்ணுகிறான். "நெருஞ்சியின் முள்" என்னாது, "நெருஞ்சிப் பழம்" என்கிறான். தலைவனது உள்ளப் பாங்கை அந்தச் சொல் காட்டுகிறது.

ஒரு காதலன் தன் காதலியுடன் மகிழ்ந்து குலாவுகிறான். தம்மிடையே உள்ள காதலின் சிறப்பை எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறான். 'இது காறும் உலகில் தோன்றிய காதலன் காதலியருக்கிடையே இருந்த காதலைவிட நம்மிடையே உள்ள காதல் சிறந்தது; நாம் எல்லாக் காதலரையும் விடச் சிறந்த காதலையுடையேம்' என்கிறான்;

"யாரினும் காதலம்."

ஆனால் அதற்கு வேறு வகையாகப் பொருள் கொள்ளவும் வாய்ப்புண்டு. 'எல்லோரினும் உன்னிடத்தில் மிக்க காதலை உடையேம்' என்று தலைவன் கூறியதாகவும் கொள்ளலாம். தலைவிக்கு அவன் கருதிய பொருள் தெளிவாகத் தெரியவில்லை. இந்த இரண்டாவது பொருளே அவளுக்கு முதலில் தோற்றியது. தலைவனுக்குப் பல காதலியர் உள்ளார் என்றும், அவர்களுக்குள் தானே சிறந்தவள் என்றும் எண்ணி முடிவுகட்ட அவள் உள்ளம் மறுக்கிறது. ஆயினும் ஐயம் தீர்ந்தபாடில்லை. அதனால் அவளிடம் ஊடல் பிறக்கிறது. அந்த ஊடலின் விளைவாக அவள் என்ன செய்தாள்? பழம் கனிந்திருக்கிறதா, இல்லையா என்று அதுக்கிப் பார்க்கிறதுபோல, எந்தச் சொல் அவளுக்கு ஐயத்தை உண்டாக்கியதோ, அதை மீண்டும் மீண்டும் சொல்லி அதுக்கிப் பார்க்கிறாள்.

"யாரினும் காதலம் என்றேனா, ஊடினாள்
யாரினும் யாரினும் என்று."[1]

அவள் ஊடலை வெளிப்படுத்திய நுட்பத்தைப் பாராட்டுவதா, அந்த நுட்பத்தை உணர்ந்து கொண்ட தலைவன் மனப்பாங்கை வியப்பதா? புலவி நுணுக்கம் என்ற அதிகாரத்தில் வருகிறது இக்குறள். அதில் உள்ள ஒவ்வொரு குறளும் இவ்வாறே நுட்பமான பொருளை உடையதாக அமைந்திருக்கிறது.

இரவில் உறங்காமல் வருந்தும் தலைவி தன் தனிமைத் துன்பத்தை எடுத்துரைக்கிறாள். இலக்கியங்களில் 'கண்படை பெறாது கங்குல் நோதல்' பற்றிப் பல பல பாடல்கள் வருகின்றன. அந்தத் தனிமைத் துன்பத்தைப் படிப்படியாக எடுத்துக் காட்டுகிறது குறுந்தொகையிலுள்ள ஒரு பாட்டு.

"நள்ளென் றன்றே யாமம்; சொல்அவிந்து
இனிதடங் கினரே மாக்கள்; முனிவின்று
நனந்தலை உலகமும் துஞ்சும்;
ஓர்யான் மன்ற துஞ்சா தேனே."[2]

எங்கும் இருள் கப்பிக்கொண்டு யாமம் செறிவாக இருக்கிறது. பல வகையான பேச்சுக்களைப் பேசிக் கொண்டிருந்த மக்கள் ஒவ்வொருவராகத் துயில் கொள்ளச் செல்கிறார்கள். இவள் தனித்துத் துன்புறுகிறாளே என்ற பரிவின்றி மாக்களாகி அவர்கள் அடங்குகிறார்கள்; இனிது அடங்குகிறார்கள். நாய் முதலிய விலங்கினங்களும் ஒலியவிந்து முடங்குகின்றன. உலகமே வெறுப்பின்றி உறங்குகிறது. இப்படி யாவரும் யாவையும் உறங்குகின்ற யாமத்தில் அவள் மாத்திரம் துயிலாமல் தனி ஒருத்தியாக இருக்கிறாள். ஆம்! அவள் ஒருத்தி தான்; வேறு யாரும் இல்லை. (மன்ற என்பது இந்த உறுதியைக் காட்டுகிறது.)

1. குறள், 1314. 2. குறுந். 6.

மூன்று நிலைகளை முன்சொல்லிக் கடைசியில் தன் தனிமையை எடுத்துச் சொல்லும் போதுதான் அதன் அவலம் நன்கு புலனாகிறது. இவ்வாறு நான்கு அடிகளில் தனிமையவலத்தை அழகு பெறப் பாடியிருக்கிறார் புலவர்.

இவ்வளவு அழகான பாட்டோடு திருக்குறட்பா ஒன்றை வைத்து ஒப்பு நோக்கினால், குறள் பின்னும் சிறப்பாக அமைந்திருப்பதை உணரலாம்.

துயரத்தால் நலிகிறவர்களுக்குத் தம்மைக் காட்டிலும் மிகுதியான துயரை அடைந்தவர்களைக் கண்டால் தம் துயரம் மறந்து போகும். அறுபது பிராயத்தில் கணவனை இழந்து துன்புறும் பெண்மணி ஒருத்தி, இருபது பிராயத்தில் தன் கணவனை ஒருத்தி இழந்தாள் என்பதை உணரும்போது தன் துயரத்தை மறந்து அந்த இளம் பெண்ணுக்காக இரங்குவாள். இது மனித இயல்பு. அப்படி ஒரு நிலையை வைத்துக் காட்டுகிறார், திருவள்ளுவர். பிறருடைய துன்பத்தைக் கண்டு தலைவி தன் துன்பத்தை மறந்து அவருக்காக இரங்குகிறாள்.

தன் துன்பத்தை மறந்தவளாக அவள் கூற்றுச் சொல்கிறதேயன்றி, உண்மையில் அவள் தன்னைத் தானே ஏமாற்றிக் கொள்கிறாள். "ஐயோ பாவம்! எல்லோரையும் உறங்கப் பண்ணிவிட்டு, இந்த இரவு என்னையன்றி வேறு துணையில்லாமல் இருக்கிறது!" என்று அந்தத் தலைவி இரங்குகிறாள்; பிறருக்காக இரங்கித் தன் வருத்தத்தை மறந்தவள் போலப் பேசுகிறாள்.

> "மன்னுயிர் எல்லாம் துயிற்றி அளித்துஇரா!
> என்அல்லது இல்லை துணை"[1]

என்கிறாள். தன் தனிமையையே அவள் வேறு விதத்தில் சொல்கிறாள். இதில் முன் கண்ட குறுந்தொகைப் பாட்டைவிடச் சுவை மிகுகிறது. ஒரு குழந்தை தன் தாய் இறந்து கிடக்கிறாள் என்பது தெரியாமல் அவள்மேல் ஏறி விளையாடுவதைப் போன்ற போலி ஆறுதலாக இருப்பது இது. அவளுடைய அவலத்தை இது பின்னும் மிகுவித்துக் காட்டுகிறது.

### உவமை அணி

இவ்வாறு பல வேறு வகையில் கவிச்சுவை உண்டாகும்படி பல குறட்பாக்கள் அமைந்துள்ளன. கவிக்கு அழகு தரும் அணிநலன்கள் பொருந்திய பாடல்கள் பல. அணிகளுக்குள் தலைமையான உவமையையும் அதற்கு அடுத்தபடி வரும் உருவகத்தையும் திருவள்ளுவர் பல வகையில் ஆளுகிறார். உபமானம் என்ற வடசொல்லுக்கு நெருங்கிய அளவு என்பது பொருள். பிற அளவுகளால் தெளிவாக்க முடியாதவற்றை மிக நெருக்கமாக அணுகிக் காட்டுவது உவமை. அறிந்திராத பொருளுக்கு அறிந்த பொருளைக் கூறுவது உவமையில் ஒரு வகை;

> "அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
> பகவன் முதற்றே உலகு"[2]

என்பது அத்தகையது. உவமேயத்துக்கு இனமான பொருளையே உவமை கூறுவது ஒரு வகை;

---

1. குறள், 1168. 2. ௸ 1.

"கோளில் பொறியிற் குணமிலவே, எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை" [1]

என்பதில் உடம்பிலுள்ள உறுப்புக்கு உடலிலுள்ள பொறிகளையே உவமை கூறினர். இனமான பொருள்களுக்கு இனமான பொருள்களையே உவமையாக எடுத்தாள்வர்;

"இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று." [2]

யாரும் அறிந்த மரம் செடி கொடிகளையும் விலங்குகளையும் உவமையாக எடுத்துக் கூறுவர். அப்படிக் கூறுகையில் அவற்றின் நுட்பம் அறிந்து அமைக்கிறார். குன்றிமணி கொடியில் இருக்கும்போது அதன் மூக்குக் காயில் ஒட்டிக் கொண்டிருக்கும். அது கறுப்புப் பகுதி. கொடியில் காய் வெடித்துத் தோன்றும் குன்றிமணிகளைப் பார்த்தால் அவற்றின் புறப் பகுதியே சிவப்பாகத் தோன்றும். தனியாக உள்ள குன்றிமணியைப் பார்த்தால் எது அகம், எது புறம் என்று தெரியாது. காயில் இருக்கும் நிலையில் பார்த்தால்தான் காயோடு ஒட்டிக்கொண்டிருக்கும் கரிய மூக்கு அகம் என்றும், சிவப்பு நிறப் பகுதி புறமென்றும் தெரியவரும். இதனை நன்குணர்ந்த திருவள்ளுவர்,

"புறங்குன்றி கண்டனைய ரேனும் அகங்குன்றி
மூக்கிற் கரியா ருடைத்து" [3]

என்று உவமை கூறினர். நீர்ப் பூக்கள் வெள்ளம் பெருகப் பெருகத் தண்டு நீண்டு வருவதை ஒரு குறளில் உவமையாக்குகிறார்;

"வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனைய துயர்வு." [4]

குளிர் நிறைந்த பகுதியில் வாழும் கவரி மான்களுக்கு அக் குளிரைத் தாங்க இயற்கையாக அடர்ந்த மயிர் இருக்கிறது. மயிர் உதிர்ந்துவிட்டால் அது குளிர் தாங்காமல் இறந்துவிடும். இதனை உவமையாக்குகிறார்;

"மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னர்
உயிர்நீப்பர் மானம் வரின்." [5]

தாம் அறிந்த பொருளை உவமை கூறுதல் மக்களுக்கு இயல்பு. தலைவி தன் கண்ணுக்கு மைதீட்டும் கோலை உவமை கூறுகிறாள்.

"எழுதுங்கால் கோல்காணுக் கண்ணேபோல் கொண்கன்
பழிகாணேன் கண்ட விடத்து." [6]

ஒரு நீதிக்கு மற்றொரு நீதியை உவமை கூறுதல் திருவள்ளுவர் இயல்பு. ஒழுக்கம் இல்லாதவனுக்கு உயர்வில்லை என்பதற்கு அழுக்காறுடையானுக்கு ஆக்கம் இல்லை என்பதை உவமை கூறுகிறார்;

"அழுக்கா றுடையான்கண் ஆக்கம்போன் றில்லை
ஒழுக்க மிலான்கண் உயர்வு." [7]

வலிமையுட் சிறந்த வலிமை, அறியாத பேதையர் செய்யும் பிழைகளைப் பொறுக்கும் இயல்பு; வறுமையுள் மிக்க வறுமை, விருந்தினரைப் பேணாத இயல்பு என்று கூறி அதனை இதற்கு உவமையாக்குகிறார்.

1. குறள், 19. 2. ௸ 100. 3. 277. 4. 595. 5. 969. 6. 1285 7. 135.

"இன்மையுள் இன்மை விருந்தொரால்; வன்மையுள்
வன்மை மடவார்ப் பொறை."[1]

இப்படியே ஊன் தின்பவர்க்கு அருளாட்சி இல்லை என்ற கருத்துக்குப் போற்றாதார்க்குப் பொருளாட்சி இல்லை என்பதையும்,[2] களவறிந்தார் நெஞ்சில் கரவுக்கு அளவறிந்தார் நெஞ்சத்து அறத்தையும்,[3] மறதி புகழைக் கொல்லும் என்னும் நீதிக்கு வறுமை அறிவைக் கொல்லும் என்னும் நீதியையும்,[4] மறதியுடையவர்களுக்கு நன்மையில்லை என்பதற்கு அச்சமுடையாருக்கு அரண் இல்லை என்பதையும்[5] உவமையாக அமைக்கிறார். நவிலுந்தோறும் நூல் நயம் தருதலைப் பயிலுந்தோறும் பண்புடையாளர் தொடர்பு இனிமை தருவதற்கும்,[6] அளவறிந்து உண்பானுக்கு உண்டாகும் இன்பத்தைக் கழிபேரிரையானுக்கு உண்டாகும் நோய்க்கும்,[7] கொல்லா விரதத்தைப் பிறர் தீமை சொல்லாத சால்புக்கும்[8] உவமை கூறுகிறார்.

உவமையாக எடுத்தாளும் பொருள் உவமேயத்தை விட உயர்ந்ததாக இருப்பது மரபு.

"உயர்ந்ததன் மேற்றே உள்ளுங் காலை"[9]

என்பது தொல்காப்பியச் சூத்திரம். சில இடங்களில் சொல்லவரும் கருத்துக்கு ஒரு சிறந்த நீதியை உவமையாக்கி அதனால் அந்த நீதியின் சிறப்பை உணர்த்துகிறார்.[10]

தலைவியை முயங்கிய தலைவன் அந்த இன்பத்துக்கு உவமை கூற வருகிறான்;

"தம்இல் இருந்து தமதுபாத் துண்டற்றால்
அம்மா அரிவை முயக்கு"[11]

என்கிறான். இதனால் விருந்தினருக்குப் பகுத்து உண்ணும் இன்பத்தை வற்புறுத்துகிறார். அறிவில்லாதவன் தான் எல்லாம் அறிந்தவன் என்று எண்ணிக்கொண்டிருப்பான். உண்மையான அறிவாளியோ தான் தெரிந்து கொள்ள வேண்டியவை எவ்வளவோ உண்டு என்பதை, அறிவு வளர வளர உணர்ந்துகொண்டு வருவான். இந்த அரிய உண்மையை உவமையாக்கி, தலைவன் தான் தலைவியினால் பெறும் இன்பம் கணந்தோறும் புதியதாக இருப்பதை உணர்த்துகிறான்;

"அறிதோ றறியாமை கண்டற்றால், காமம்
செறிதோறும் சேயிழை மாட்டு."[12]

காமம் நுகர்வாருக்குப் புணர்தலைக் காட்டிலும் ஊடல் இனிதாக இருக்கும். இதற்கு ஒரு சிறந்த கருத்தை உவமையாக எடுத்து ஆள்கிறார்;

---

1. குறள், 153. 2. ஷை 252. 3. 288. 4. 532. 5. 534. 6. 783. 7. 946. 8. 984. 9. தொல்காப்பியம், உவம இயல், 3. 10. "இழத்தொறூஉம் காதலிக்கும் சூதேபோல் துன்பம், உழத்தொறூஉம் காதற் றுயிர்" (940) என்பதன் உரையில், 'உயிர்னது அறியாமை கூறுவார் போன்று சூதனது அறியாமை கூறுதல் கருத்தாகலின், அதனை யாப்புறுத்தற் பொருட்டு உவமமாக்கிக் கூறினர்' என்று பரிமேலழகர் எழுதியிருப்பது இங்கே நினைத்தற்குரியது.
11. குறள், 1107. 12. ஷை 1110.

"உணலினும் உண்ட தறல்இனிது ; காமம்
புணர்தலின் ஊடல் இனிது." [1]

ஊடலின் சிறப்பைச் சொல்லவந்த பாடலேயானாலும், உண்டது செரிப்பதனால் இன்பம் உண்டு என்ற கருத்தையும் வற்புறுத்தும் வகையில் அதனை உவமையாக அமைத்து அதற்கு ஏற்றம் உண்டாக்குகிறார்.

உருவகம்

பெரும்பாலும் ஏகதேச உருவகத்தையே இவர் அமைக்கிறார். தொடர்புடைய பொருள்களில் ஒன்றைமட்டும் உருவகம் செய்துவிட்டு, மற்றவற்றை உருவகப்படுத்தாமல் குறிப்பால் பெறவைப்பது அது.

"பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார்" [2]

என்பதில் பிறவியைக் கடலாக உருவகம் செய்தவர், அதை நீந்தும் புணையாக இறைவன் திருவடியை உருவகம் செய்யவில்லை; ஆனாலும் அது குறிப்பாலே பெறப்படுகிறது. அறிவைத் தோட்டியாக உருவகம் செய்தவர், அதனால் காக்கப் பெறும் ஐம்பொறிகளையும் யானைகளாக உருவகிக்கவில்லை;

"உரன்என்னும் தோட்டியான் ஓரைந்தும் காப்பான்
வரன்என்னும் வைப்பிற்கோர் வித்து" [3]

என்கிறார். ஆயினும் அவ்வைம் பொறியும் யானைகள் என்பதைக் குறிப்பால் நாம் உணர்கிறோம். இவ்வாறு வரும் இடங்கள் பல.

கற்றோர் முகத்தில் உள்ளவையே கண்கள்; கல்லார் முகத்தில்உள்ளவை புண்கள் என்கிறார்;

"கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்." [4]

கைப்பட்டால் எரியும் இயல்பு ஒன்றுமே உடைமையால் புண் என்று உருவகம் செய்தார். இது நுட்பமாக உணர்வதற்குரியது.

தொடர்புடைய இரண்டு பொருள்களைத் தொடர்புடைய வேறு இரண்டு பொருள்களாக உருவகம் செய்வதையும் இந்நூலில் காணலாம்.

"இரவென்னும் ஏமாப்பில் தோணி கரவென்னும்
பார்தாக்கப் பக்கு விடும்" [5]

என்பதில் இரத்தலைத் தோணியாகவும் கரத்தலைப் பாறையாகவும் உருவகம் செய்கிறார். இவ்வாறு இரண்டு பொருள்களை உருவகம் செய்யும்போது, ஒன்றன் உருவகத்தை மட்டும் சொல்லி அதற்கு ஏற்ற பொருளைச் சொல்லாமல் உய்த்துணர வைப்பதும் உண்டு.

"பொருள்என்னும் பொய்யா விளக்கம் இருள்அறுக்கும்
எண்ணிய தேயத்துச் சென்று" [6]

என்பதில் பொருளை விளக்காக உருவகம் செய்தவர், பகையென்னும் இருளை அறுக்கும் என்று சொல்லாமல் இருளறுக்கும் என்றுமட்டும் சொன்னார். தொடர்புடைய மூன்று பொருள்களை ஏற்ற வகையில் உருவகம் செய்கிறார்.

1. குறள், 1326. 2. ஷை 10. 3. 24 4. 393. 5. 1068. 6. 753.

நாணம் என்னும் தாழ் வீழ்த்துச் சாத்திய நிறையென்னும் கதவைக் காமம் என்னும் கணிச்சி உடைக்கும் என்கிறார்;

" காமக் கணிச்சி உடைக்கும் நிறைஎன்னும்
நாணுத்தாழ் வீழ்த்த கதவு."[1]

இப்படி மூன்று பொருளைச் சொல்லும் போது ஒன்றை வெளிப்படையாகச் சொல்லாமல் குறிப்பாகப் பெறவைப்பதும் உண்டு.

" அருள்என்னும் அன்பீன் குழவி பொருள்என்னும்
செல்வச் செவிலியால் உண்டு"[2]

என்ற குறளில் அருளைக் குழவியாகவும் பொருளைச் செவிலியாகவும் சொன்னவர் அன்பைத் தாயாகச் சொல்லாமல் உய்த்துணர வைத்தார்.

" ஊரவர் கௌவை எருவாக அன்னைசொல்
நீராக நீளும்இந் நோய்"[3]

என்பதில் கௌவையை எருவாகவும் அன்னைசொல்லை நீராகவும் உருவகம் செய்தவர் காம நோயைப் பயிராகச் சொல்லவில்லை; ஆனாலும் அது குறிப்பாகத் தோற்றுகிறது.

வரைவின் மகளிர் தோளை நரகமாக ஓரிடத்தில் உருவகம் செய்கிறார்;

" வரைவிலா மாண்இழையார் மென்றோள் புரையிலாப்
பூரியர்கள் ஆழும் அளறு."[4]

இவ்வாறு சொன்னவர், உள்ளம் ஒன்றிய காதலன் தன் காதலியின் தோளைப் பாராட்டுகையில் அது அமிழ்துபோல இருக்கிறதென்று சொல்வதாக அமைத்தார்;

" உறுதோ றுயிர்தளிர்ப்பத் தீண்டலால் பேதைக்
கமிழ்தின் இயன்றன தோள்."[5]

இரண்டையும் உடன்வைத்து நோக்கும்போது இந்த உருவக உவமைகளின் பொருத்தம் நன்கு புலனாகும்.

### வேற்றுமை அணி

ஒரு பொருளுக்கு ஒன்றை ஒப்பாக வைத்து, பின்பு அவற்றினுள் வேறுபாடு இருப்பதைச் சொல்வது ஓர் அழகு. இதனை வேற்றுமை அணி என்பார்கள். திருக்குறளில் இந்த அழகைப் பல இடங்களில் காணுகிறோம்.

தீயும் கொடுஞ்சொல்லும் சுடும் தன்மை உடையவை; இது ஒப்பு. ஆனால் தீயினால் சுட்ட புண் ஆறும்; நாவினால் சுட்ட வடு ஆறாது நிற்குமாம்; இது வேற்றுமை;

" தீயினால் சுட்டபுண் உள்ஆறும் ஆறாதே
நாவினால் சுட்ட வடு."[6]

கள்ளுக்கும் காமத்துக்கும் எல்லாவற்றையும் மறந்து மயங்கி நிற்கச் செய்யும் பொது இயல்பு உண்டு. அதனால் காமத்துக்குக்

---

குறள், 1. 1251. 2. ஷை 757. 3. 1147. 4. 919.
5. 1106. 6. 129.

களை ஒப்புமையாக்குவர். ஆயினும் இரண்டுக்கும் உள்ள வேற்றுமையை வெவ்வேறு வகையில் கூறுகிருர் திருவள்ளுவர்.

கள் உண்டால்தான் மகிழ்ச்சி தருவது. காமம் கண்ட அளவிலே மகிழ்ச்சி உண்டாக்குவது; நினைத்தாலும் பெரு மகிழ்ச்சியை உண்டாக்குவது. இந்த இரண்டும் கள்ளுக்கு இல்லை. இந்த வேற்றுமையை மூன்று குறள்களிலே சொல்கிருர்.

> " உண்டார்கண் அல்ல தடுகருக் காமம்போல்
> கண்டார் மகிழ்செய்தல் இன்று."[1]

> " உள்ளினும் தீராப் பெருமகிழ் செய்தலால்
> கள்ளினும் காமம் இனிது."[2]

> " உள்ளக் களித்தலும் காண மகிழ்தலும்
> கள்ளுக்கில் காமத்துக் குண்டு."[3]

இவ்வாறே காமத்துக்கும் தீக்கும் வேற்றுமை காட்டுவார். தீயானது தொட்டால் சுடும்; காமமோ விட்டால் சுடும்; அணுகினல் குளிர்ச்சியாக இருக்கும்;

> " நீங்கின் தெறூஉம் குறுகுங்கால் தண்ணென்னும்
> தீயாண்டுப் பெற்ருள் இவள்"[4]

> " தொடிற்சுடின் அல்லது காமநோய் போல
> விடிற்சுடல் ஆற்றுமோ தீ"[5]

என்பவற்றைக் காண்க.

## முரண்பாட்டு நயம்

பொதுவாக ஒன்றற்கு ஒன்று முரணுகத் தோன்றுவனவற்றைக் கூறி, பின்பு அவை இணைந்திருப்பதைப் புலப்படுத்துவது ஒரு நயம். இதை விரோதாபாசம் என்றும் முரண்விளைந்தழிவணி என்றும் சொல்வார்கள். வளர்வது, கெடுவது என்னும் இரண்டும் ஒன்றற்கு ஒன்று மாருனவை. அப்படியே உளதாவதும் சாக்காடும் மாருனவை. இவற்றை ஒருங்கே இணைத்து, வளர்ச்சியாகும் கேடு, உளதாம் சாவு என்று சொன்னல் முதலில் மயக்கம் உண்டாகிறது. ஆனல் அந்த முரண்பாடு பொருந்துவதை உணரும்போது இன்பம் உண்டாகிறது;

> " நத்தம்போற் கேடும் உளதாகும் சாக்காடும்
> வித்தகர்க் கல்லால் அரிது."[6]

நல்ல செயல்களைச் செய்யும் வித்தகர்களுக்கு வறுமை வந்தாலும் அவர்கள் செம்மை வளரும்; இறந்தாலும் புகழுடம்புடன் வாழ்வார்கள். இதையே இப்படி முரணுனவற்றை இணைத்து நயமாகப் புலப்படுத்தினர்.

களவுக் காதலர்களை 'உருஅர்போன்று உற்ருர்' என்று முரண்பாட்டு நயம் தோன்றச் சொல்கிருர். 'பின்னே இனிதாக விளைந்து முன்னே இன்னதாகத் தோற்றும் சொல்லும், உள்ளத்துக்குள் சினமின்றியே சினந்தவரைப்

1. குறள், 1090. 2. ஷை. 1201. 3. 1281. 4. 1104.
5. 1159. 6. 235.

போல நோக்கும் பார்வையும் காதல் இல்லாதவரைப் போலத் தோற்றிக் காதல் செய்வார்க் குள்ள குறிப்புகள்' என்று பாடுகிறார்;

"செறுஅச் சிறுசொல்லும் செற்றார்போல் நோக்கும்
உறுஅர்போன் றுற்றார் குறிப்பு."[1]

'பேதையார் கேண்மை மிகவும் இனிது' என்றால் முரண்பாடான கருத்தென்று தோன்றுகிறது; ஆனால் அதற்குக் காரணம் சொல்லும்போது பொருத்தமாக அமைகின்றது. 'பிரிவதால் அந்தக் கேண்மை துன்பத்தைத் தராது' என்பது அக்காரணம் ;

"பெரிதினிது பேதையார் கேண்மை; பிரிவின்கண்
பீழை தருவதொன் றில்."[2]

இவ்வாறே, "கல்லாதவரும் நனி நல்லர்" என்று ஒன்றை முதலிலே சொல்லிச் சற்றே திகைப்பை உண்டாக்கி, அப்பால் அதற்குக் காரணங் கூறிப் பொருந்தக் காட்டி இன்புறச் செய்கிறார்;

"கல்லா தவரும் நனிநல்லர், கற்றார்முன்
சொல்லா திருக்கப் பெறின்."[3]

தோல்வியும் வெற்றியும் மாறுபட்டவை. தோற்றவரை வென்றவராகச் சொன்னால் முரண்பாடாகவே தோன்றும். ஆனால் அதற்குக் காரணம் கூறிப் பொருத்தும்போது சுவை எழுகிறது ;

"ஊடலில் தோற்றவர் வென்றார்; அதுமன்னும்
கூடலில் காணப் படும்."[4]

**புகழ்வது போலப் பழித்தல்**

வெளிப்படையாக ஒன்றை இகழாமல், குறிப்பாக இகழ்வது ஒரு நயம். ஆனால் சொற்பொருளைக் கொண்டு மட்டும் நோக்கினால் புகழ்வதுபோலத் தோன்றி, கருத்தை நோக்கும்போது அதற்கு மாறாக இகழ்வதாய் முடிந்தால், அதனால் உண்டாகும் சுவை மிகப் பெரிது. தெற்கே காற்று அடிக்க வடக்கே ஓடத்தைச் செலுத்தும் ஆற்றல் வியப்பதற் குரியதல்லவா?

பெரிய அளவுக்கு உலகத்தைக் கூறுவது மரபு. "ஞாலத்தின் மாணப் பெரிது"[5] என்று திருவள்ளுவரே கூறியிருக்கிறார். வேறு ஓரிடத்தில் உலகத்தின் பெருமை இன்னதென்று சொல்கிறார்; பெருமை என்ற சொல்லையே ஆள்கிறார்;

"நெருநல் உளன்ஒருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்திவ் வுலகு."[6]

இது பெருமையா? உலகத்தின் நிலையாமையையே பெருமையென்று புகழ்வது போலப் பழித்தார்.

நன்மை இன்னது என்று தெரிந்தவர் அறிவுடையோர்; அவரை விடக் கயவர் சிறப்புடையவர்களாம்; அவர்களுக்கு எதைப்பற்றியும் கவலையே இல்லை அல்லவா?

"நன்றறி வாரிற் கயவர் திருவுடையார்
நெஞ்சத் தவலம் இலர்."[7]

---

1. குறள், 1097. 2. ௸ 839. 3. 403. 4. 1327. 5. 102. 6. 336. 7. 1072.

இதைவிட ஒரு படி மேலே சென்று கயவரை உயர்த்திப் பேசுகிறார்; 'அவர்கள் தேவருக்கு ஒப்பானவர்கள். தேவர் தம் மனம் விரும்பியபடியெல்லாம் ஒழுகும் சுதந்தரம் உடையவர்கள். கயவரும் அத்தகையவர்களே' என்று காரணத்தோடு சொல்கிறார்;

" தேவர் அனையர் கயவர்; அவரும்தாம்
மேவன செய்தொழுக லான்."[1]

'கயவர் நன்மை இன்னதென்று அறியும் அறிஞர்களைவிடச் சிறந்தவர், தேவரைப் போன்றவர்' என்று, சொற்பொருளைமட்டும் வைத்துத் தெரிந்துகொண்டு கயவரைப் போற்றுவதற்கா இவ்வாறு சொன்னார்? அவர்களைப் புகழ்வது போலப் பழிக்கும் நயம் இப்பாடல்களில் இருக்கிறது.

## நுவலா நுவற்சி

தாம் சொல்ல வேண்டிய பொருளைச் சொல்லாமல் அதற்கு உவமையாக உள்ள பொருளைமட்டும் சொல்லுதல் ஒருவகை அணி. அதை நுவலர் நுவற்சி என்றும், பிறிது மொழிதல் என்றும் கூறுவர். தம் பிள்ளை அயல் வீட்டுப் பிள்ளையோடு சேர்ந்து படிக்காமல் கெட்டுப் போவதைத் தந்தையார் சொல்ல வருகிறார். அதை நேரடியாகச் சொல்லாமல், "எருமை மாட்டோடு சேர்ந்து பசுமாடும் கெட்டுப்போகிறது" என்று சொல்கிறார். இது நுவலா நுவற்சி. இப்படிப் பல கருத்துக்களைக் குறிப்பாகத் திருவள்ளுவர் புலப்படுத்தியிருக்கிறார். அவ்விடங்களில், சொற்பொருளை மட்டும் பார்த்தால், எடுத்துக்கொண்ட பொருளுக்கும் சொன்னதற்கும் தொடர்பே இல்லையென்று தோன்றும். ஆனால் அதனூடே மறைந்து நிற்கும் கருத்தை உணரும்போது, கவிஞர் ஆளும் நயமான முறை தோன்றி, வியப்பையும் சுவையையும் உண்டாக்கும்.

ஒரு வண்டி நிறைய மயிற்பீலியை ஏற்றிக்கொண்டு போகிறான் ஒருவன். மயிற்பீலி கனம் அதிகம் இல்லாத பொருள். ஆனால் அளவுக்குமேல், இரண்டு வண்டிப்பாரத்தை ஒரு வண்டியில் ஏற்றினால் என்னகும்? வண்டி அச்சு முறிந்து விடும். இதை ஒரு குறள் சொல்கிறது;

" பீலிபெய் சாகாடும் அச்சிறும், அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின்."[2]

மயிற் பீலியைப் பற்றியோ வண்டியைப் பற்றியோ இந்த நீதி நூலில் சொல்ல வேண்டிய அவசியம் என்ன? "வலியறிதல்" என்ற அதிகாரத்தில் இந்தக் குறள் வருகிறது. திருவள்ளுவர் வெறும் நீதி நூலாக அமைத்திருந்தால், இக்குறள் இங்கே இருப்பது பொருத்தம் அன்று. அவர் நீதிநூலைக் கவிதை யாக்குகிறவர் அல்லவா? ஆதலின் கவிஞர் ஆளும் உத்திகளில் ஒன்றை, நுவலா நுவற்சி என்னும் அலங்காரத்தை, இங்கே அமைத்துப் பொருளைக் குறிப்பினால் பெறவைக்கிறார். 'பகைவர்கள் வலிமையில்லாதவர்கள் என்று எண்ணி அவர்களை எதிர்ப்பவன் வலியவனாக இருந்தாலும், அவர்கள் பலராகத் திரண்டு வந்து பொருதால் அவன் வலிமை அழியும்' என்ற கருத்தை உள்ளடக்கியது இது. தன் வலிமையின் அளவறிந்து வினை செய்

1. குறள், 1073. 2. ஷை 475.

யும் ஒருவன் ஊக்க மிகுதியால் அந்த அளவுக்கு மிஞ்சிப் போனால் அழிவான் என்ற கருத்தை, மரத்தின் நுனிக்கொம்புக்கும் மேலே போகிற வன் இறந்து படுவான் என்று சொல்லி உய்த்துணர வைக்கிறார்;

" நுனிக்கொம்பர் ஏறினார் அஃதிறந் தூக்கின்
உயிர்க்கிறுதி ஆகி விடும்." [1]

இடம் அறிந்து வினை செய்பவன் வெற்றி பெறுவதையும், அதனை அறிந்து செய்யாதவன் கெடுவதையும் முதலையின் செயலைச் சொல்லி உணர வைக்கிறார் ;

" நெடும்புன லுள் வெல்லும் முதலை ; அடும்புனலின்
நீங்கின் அதனைப் பிற." [2]

இவ்வாறே தேரையும் நாவாயையும் சொல்லி, சொல்லால் சொல்லாத கருத்து ஒன்றைப் புலப்படுத்துகிறார் ;

" கடல்ஓடா கால்வல் நெடுந்தேர் ; கடல்ஓடும்
நாவாயும் ஓடா நிலத்து." [3]

சொல்லும் சொல்லால் நரியையும் களிற்றையும் காட்டி, இடமறிந்து செயலாற்ற வேண்டும் என்ற கருத்தைச் சொல்லாமல் சொல்லிவிடுகிறார் ;

" கால்ஆழ் களரின் நரிஅடும், கண்அஞ்சா
வேலாள் முகத்த களிறு." [4]

ஊக்கமுடைமையின் சிறப்பைச் சொல்ல வந்தவர்,

" பரியது கூர்ங்கோட்ட தாயினும் யானை
வெரூஉம் புலிதாக் குறின்" [5]

என்று யானையும் புலியும் பொரும் கதையைச் சொல்கிறார். சொல்லில் யானையும் புலியும் இருந்தாலும், கருத்தில் ஊக்கம் இல்லாதவனும் ஊக்கம் உடையவனும் இருக்கிறார்கள்.

" ஒலித்தக்கால் என்ஆம் உவரி எலிப்பகை,
நாகம் உயிர்ப்பக் கெடும்" [6]

" இளைதாக முள்மரம் கொல்க ; களையுநர்
கைகொல்லும் காழ்த்த இடத்து" [7]

என்னும் குறள்களும் சொல்லாலே எலியையும் நாகத்தையும், முள் மரத்தையும் நுவன்றாலும், கருத்தால் வேறு கருத்துக்களைப் புலப்படுத்தி, நுவலா நுவற்சியாக நின்று இனிமை தருகின்றன.

### பின்வரு நிலை

ஒரே சொல் வேறு வேறு பொருளில் அடுத்தடுத்து வரும்படி வைப்பது ஓர் அழகு. அதைச் சொற்பின் வருநிலை என்னும் அணியாகக் கூறுவர்.

1. குறள், 476. 2. ஷை 495. 3. 496. 4. 500. 5. 599. 6. 763 7. 879.

" இறந்தார் இறந்தார் அனையர்; சினத்தைத்
துறந்தார் துறந்தார் துணை" [1]

என்பதில் இறந்தார், துறந்தார் என்னும் சொற்கள் வெவ்வேறு பொருளில் மீட்டும் மீட்டும் வந்தது காண்க.

" குன்றின் அனையாரும் குன்றுவர் குன்றுவ
குன்றி அனைய செயின் " [2]

என்பதில் குன்று என்பது வெவ்வேறு பொருளில் வந்தது.

ஒரே சொல்லை ஒரே பொருளில், வற்புறுத்தலைக் கருதிப் பன்முறை கூறுதல் ஒரு நயம். அதற்குச் சொற்பொருட் பின்வருநிலை யணி என்று பெயர்.

" துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉம் மழை." [3]

" பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று." [4]

" நோய்எல்லாம் நோய்செய்தார் மேலவாம்; நோய்செய்யார்
நோயின்மை வேண்டுபவர்." [5]

" பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு." [6]

இப்படியே பல இடங்களில் வருவதைக் காண்க.[7]

## உயர்வு நவிற்சி

ஒரு பொருளின் சிறப்பை எடுத்துக்காட்டச் சற்றே மிகைப்படுத்திச் சொல்லல் கவிஞர் மரபு. உலக வழக்கிலேகூட அதை நாம் பார்க்கிறோம். 'உப்பில்லாமல் கலக்கஞ்சி குடிப்பான்' என்று சொன்னால் சொல்லுக்குச் சொல் அப்படியப்படியே பொருள் செய்யலாமா? மிக்க சாமர்த்தியம் உடையவன் என்பதையே மிகைப்படுத்தி அப்படிக் கூறுகிறோம். அவ்வாறு திருவள்ளுவரும் சொல்கிறார். சொல்லும் பொருளின் பெருமையை அழுத்தமாகப் புலப்படுத்தும் உத்திகளில் இது ஒன்று.

" அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள்
சிறுகை அளாவிய கூழ் " [8]

என்று கூறுவதனால் மக்களின் சிறப்பை வற்புறுத்திச் சொல்லுகிறார். அமுதத்தைத் தாழ்த்தியதாகக் கொள்ளல்கூடாது.

விருந்தோம்புவானுடைய பெருமையை நன்கு தெரிவிக்க விரும்பியவர்,

" வித்தும் இடல்வேண்டுங் கொல்லோ, விருந்தோம்பி
மிச்சில் மிசைவான் புலம் " [9]

என்கிறார். அவன் தன் வயலில் வித்தே இடாமல் அது தானே விளையும் என்று நினைக்கலாமா?

1. குறள், 310. 2. ஷை, 965. 3. 12. 4. 297. 5. 320. 6. 350. 7. 202, 359, 428, 504, 553, 603, 623, 751, 948, 962, 973, 1041, 1194.
8. குறள், 64. 9. ஷை 85.

"கொல்லாமை மேற்கொண் டொழுகுவான் வாழ்நாள்மேற்
செல்லா துயிருண்ணுங் கூற்று"[1]

என்பது ஒரு பொருளைச் சிறப்பிக்கும் பொருட்டுக் கூறியது. இவ்வாறு காமத்துப் பாலில் வருவன பல.[2]

இப்படியே ஒன்றன் இழிவைப் புலப்படுத்தும் பொழுதும் மிகைப்படுத்திச் சொல்வது கவிஞர் இயல்பு;

"வசையிலா வண்பயன் குன்றும்; இசையிலா
யாக்கை பொறுத்த நிலம்"[3]

என்பது அத்தகையது.

இவ்வாறு பலவகையான அணிகள் அங்கங்கே அமைந்து இன்பூட்டும் திறத்தை விரித்துக்கொண்டே போகலாம்.

## சொல்லும் முறை

திருவள்ளுவர் உயர்ந்த உண்மைகளையும் சிறந்த நீதிகளையும் வகைப் படுத்திச் சொல்கிறார். அப்படிச் சொல்லுவதில் பல வேறு முறைகளை ஆள் கிறார். நல்லதைச் செய்யவேண்டுமென்றும், தீயதைச் செய்தல் கூடாது என்றும் கூறுவது நீதி நூல். இவற்றை முறையே விதியென்றும் விலக் கென்றும் கூறுவர். இவ்விரண்டையும் கூறும் நூல்களில் பாரதநாட்டின் பண்பாட்டுக்கு அடிப்படையான வேதம் மிகப் பழையது. வேதத்தைப்போல இன்னது செய்க என்று விதித்தும், இன்னது செய்யற்க என்று விலக்கியும் அறிவுறுத்துவதால் திருக்குறளை உத்தரவேதம் என்றும்தமிழ்வேதம் என்றும் வழங்கும் மரபு உண்டாயிற்று. அதிகாரம் முழுவதும் தனியே விதியாகவும் விலக்காகவும் அமைந்தவை பல. விருந்தோம்பல், இனியவை கூறல், செய்ந் நன்றியறிதல் என்பவை போன்றன விதி அதிகாரங்கள்; பிறனில் விழை யாமை, அழுக்காறாமை, வெஃகாமை என்பவை போன்றன விலக்கு அல்லது மறை அதிகாரங்கள்.

இவர் கருத்துக்களை அமைத்துச் சொல்லும் முறைகள் எல்லாவற்றையும் வகைப்படுத்திச் சொல்லுதல் அரிது. ஆயினும் சிலவற்றை இங்கே பார்க் கலாம்.

இது செய்க என்று வியங்கோளாகப் பல நீதிகளை விதிப்பார்;

"அன்றறிவாம் என்னா தறஞ்செய்க."[4]

"ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும்வாய் எல்லாம் செயல்."[5]

இது செய்யற்க என்று விலக்குவார்;

"மறவற்க மாசற்றார் கேண்மை; துறவற்க
துன்பத்துள் துப்பாயார் நட்பு."[6]

"பயனில்சொல் பாராட்டு வானை மகனெனல்."[7]

---

1. குறள், 326. 2. ௸ 239. 3. 1103, 1108, 1115, 1128.
4. குறள், 36. இங்கே காட்டும் உதாரணங்களைப் போன்றவை பல; விரிவஞ்சி ஓரிரண்டுதாரணங்கள் மட்டும் காட்டப்பெறும். 5. ௸ 33. 6. 106. 7. 196.

செய்யத்தக்க இதனைச் செய்யின் இன்ன நன்மை விளையும் என்றும்,[1] செய்யத்தக்க இதனைச் செய்யாவிடினும் செய்யத்தகாத இதனைச் செய்யினும் இன்ன தீமை விளையுமென்றும் கூறுவர்.[2] ஒரு கருத்தைத் தனித்தனியே உடம்பாட்டு வாய்பாட்டினும் எதிர்மறை வாய்பாட்டினும் சொல்லுவார். ஒரே குறளில் இரண்டையும் சேர்த்துச் சொல்வார்.[3] உவமை, உருவகம் முதலியவற்றால் கருத்தை விளக்குவார்.[4] வினவாக அமைத்துத் தம் கருத்தைப் புலப்படுத்துவார்.[5] ஒன்றன் இலக்கணத்தைக் கூறி அதனோடு தொடர்புள்ளவற்றைச் சொல்லப் புகுவார்.[6] இன்ன காரணத்தால் இது இத்தகையது, இது செய்தற்குரியது, இது செய்யத் தகாதது[7] என்பர். இதனினும் இது பெரிது, இதனினும் இது இனிது, இதனினும் இது தீது, இதனினும் இது நன்று, இதனினும் இது இன்னாதது, இதனினும் இது தலையாயது, இதனினும் இது சீரிது, இது கொளினும் இது கொள்ளற்க, இதனினும் இது பெருமையுடையது[8] என்று கூறுவர்.

இதனினுங்கு இல்லை என்றும், இன்னாரினும் இன்னார் சிறந்தார் என்றும், இதனினும் இது பின் என்றும், இது செய்யினும் இது செய்யற்க என்றும், இது ஆயினும் இது கடை என்றும், இது அன்று இது என்றும், இது ஆயினும் இது செய்யற்க என்றும், இது வரினும் இது செய்க என்றும் உரைப்பார்.[9]

வினவைக் கூறி விடையையும் அமைப்பார்.[10] ஒன்றன் சிறப்பை வற்புறுத்தும் பொருட்டு, ஒன்றை விற்றேனும், ஒரு பொருளைக் கொடுத்தேனும், இரந்தேனும் அதைக் கொளல் வேண்டும். என்று கூறுவார்.

" ஒப்புரவி னல்வரும் கேடெனின் அஃதொருவன்
விற்றுக்கோட் டக்க துடைத்து." [11]

" குறிப்பிற் குறிப்புணர் வாரை உறுப்பினுள்
யாது கொடுத்தும் கொளல்." [12]

" புரந்தார்கண் ணீர்மல்கச் சாகிற்பின் சாக்கா
டிரந்துகோட் டக்க துடைத்து." [13]

" குடிப்பிறந்து தன்கண் பழிநாணு வாரைக்
கொடுத்தும் கொளல்வேண்டும் நட்பு." [14]

" கொடுத்தும் கொளல்வேண்டும் மன்ற அடுத்திருந்து
மாணாத செய்வான் பகை." [15]

இவ்வாறே ஒன்றைக் கொடுத்தும் விலக்கவேண்டியதை விலக்கவேண்டும் என்றும் சொல்வார்;

" மருவுக மாசற்றார் கேண்மை;ஒன் றீத்தும்
ஒருவுக ஒப்பிலார் நட்பு." [16]

இதற்கு இது உபாயம் என்று அறிவுறுத்துவார்;

" கொன்றன்ன இன்னா செயினும் அவர்செய்த
ஒன்றுநன் றுள்ளக் கெடும்." [17]

---

1. குறள், 3. 2. ஷை 88, 166. 3. 51, 52, 53. 4. 1, 10. 5. 2. 6. 91. 7. 11, 31, 171. 8. 102, 181, 182, 183, 230, 657, 817, 872, 907. 9. 122, 159, 225, 327, 328, 618, 656, 669. 10. 178. 11. 220. 12. 703. 13. 780. 14. 794. 15. 867. 16. 800. 17. 109.

"வலியார்முன் தன்னை நினைக்கதான் தன்னின்
மெலியார்மேற் செல்லு மிடத்து."[1]

"இகழ்ச்சியிற் கெட்டாரை உள்ளுக தாம்தம்
மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து."[2]

"இடுக்கண் வருங்கால் நகுக அதனை
அடுத்தூர்வ தஃதொப்ப தில்."[3]

நம்முடைய அநுபவத்தைச் சுட்டிக்காட்டி இது செய்யற்க என்று அறிவுறுத்துவார்;

"இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன்கொலோ
வன்சொல் வழங்கு வது."[4]

"தன்னுயிர்க் கின்னாமை தான்அறிவான் என்கொலோ
மன்னுயிர்க் கின்னா செயல்."[5]

அறிவுடையாரும், பெரியாரும் இவ்வாறு செய்வார் என்று வெளிப்படையாகச் சொல்வார்.[6] என்ப என்ற அளவில் குறிப்பாகவும் புலப்படுத்துவார்.[7] ஒரு கருத்தைக் கூறி அதற்கு இது கரி என்பர்.[8]

இது செய்யின் இதுவரும் என்று எச்சரிக்கை செய்து அல்லவை செய்யாதிருக்க வழிகாட்டுவார்;

"கெடுவல்யான் என்ப தறிகதன் நெஞ்சம்
நடுவொரீஇ அல்ல செயின்."[9]

சிறந்த இன்பம் என்பதைப் புலப்படுத்த வருபவர் அதனை, "இன்பத்துள் இன்பம்"[10] என்று சிறப்பித்துச் சொல்வார். இந்த வாய்பாட்டில் இன்மையுள் இன்மை,[11] கற்றாருட் கற்றார்,[12] செல்வத்துட் செல்வம்,[13] துன்பத்துள் துன்பம்,[14] நன்றில் நன்று,[15] நூலாருள் நூல்வல்லன்,[16] பேதைமையுள் பேதைமை[17] என்று வேறு பலவற்றையும் ஆள்வர்.

இத்துணை மடங்கு பெரிதென்று ஒன்றன் சிறப்பைப் புலப்படுத்தும் போது ஏழு, பத்து, நூறு, ஆயிரம், கோடி, பத்துக் கோடி, எழுபது கோடி, அடுக்கிய கோடி என்னும் எண்களைக் கொண்டு சொல்வர்.

**ஒன்றுக்கு ஏழு:**

"ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்
கெழுமையும் ஏமாப் புடைத்து".[18]

**ஒன்றுக்குப் பத்து :**

"பல்லார் பகைகொளலிற் பத்தடுத்த தீமைத்தே
நல்லார் தொடர்கை விடல்."[19]

---

1. குறள், 250. 2. ஷெ 539. 3. 621. 4. 99. 5. 318. 6. 914, 104. 7. 60, 73 முதலியன. 8. 25, 1060. 9. 116; 204, 893, 922 என்பவற்றையும் பார்க்க. 10. 854. 11. 153, 841. 12. 722. 13. 241, 411. 14. 369, 629, 854. 15. 715. 16. 683. 17. 832. 18. 398, 126, 835, 1278 பார்க்க. 19. 450.

**ஒன்றுக்கு நூறு :**

"ஒன்றெய்தி நூறிழக்கும் சூதர்க்கும் உண்டாங்கொல்
நன்றெய்தி வாழ்வதோர் ஆறு." [1]

**ஒன்றுக்கு ஆயிரம் :**

"அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத் துண்ணாமை நன்று." [2]

**ஒன்றுக்குக் கோடி :**

"பேதை பெருங்கெழீஇ நட்பின் அறிவுடையார்
ஏதின்மை கோடி யுறும்." [3]

"கரவா துவந்தீயும் கண்ணன்னார் கண்ணும்
இரவாமை கோடி யுறும்." [4]

**ஒன்றுக்குப் பத்துக்கோடி :**

"நகைவகைய ராகிய நட்பிற் பகைவரால்
பத்தடுத்த கோடி யுறும்." [5]

**ஒன்றுக்கு எழுபது கோடி :**

"பழுதெண்ணும் மந்திரியிற் பக்கத்துட் டெவ்வோர்
எழுபது கோடி யுறும்." [6]

**ஒன்றுக்குப் பலகோடி :**

"அடுக்கிய கோடி பெறினும் குடிப்பிறந்தார்
குன்றுவ செய்தல் இலர்." [7]

"கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க் கடுக்கிய
கோடியுண் டாயினும் இல்." [8]

### கூற்று வகை

காமத்துப் பாலில் உள்ள ஒவ்வொரு குறளும் ஒவ்வொருவர் கூற்றாக இருப்பது பழைய மரபை ஒட்டிய முறை. அவற்றையன்றி பொருட் பாலில் வேறு இரண்டு இடங்களில் ஒருவருடைய கூற்றாக வைத்துச் சொல்லவேண்டியதைக் குறிப்பாகப் புலப்படுத்துகிறார் திருவள்ளுவர்.

ஒருவன் வீரத்தைப் புலப்படுத்த வரும்போது, அவன் பகைவரைக் கொன்று அவர்களைப் புதைத்த இடத்தில் கல் நடும்படி செய்தான் என்ற செய்தியைச் சொல்ல வருகிறார். அதை அத்தலைவனுடைய படையிலுள்ள வீரன் ஒருவனுடைய கூற்றாக வைத்துப் பாடுகிறார்;

"என்னைமுன் நில்லன்மின் தெவ்விர்; பலர்என்னை
முன்நின்று கல்நின்ற வர்." [9]

வறுமையின் கொடுமையை வற்புறுத்த வருபவர், முன்பு வறுமையினால் துன்புற்றான் ஒருவன் மீட்டும் அதனைக் கண்டு நடுங்கிச் சொல்லும் கூற்றாக ஒரு குறளை அமைக்கிறார்;

---

1. குறள், 932. 2. ௸ 259. 3. 816. 4. 1061. 5. 817. 6. 639. 7. 954. 8. 1005. 9. 771.

"இன்றும் வருவது கொல்லோ, நெருநலும்
கொன்றது போலும் நிரப்பு!" [1]

**கவிஞர் கூற்று**

திருவள்ளுவர் தம்முடைய கூற்றாக வைத்துத் தன்மையிடத்துச் சொற்களை ஆண்டு சில கருத்துக்களைக் கூறுகிறார். 'இரப்பவர்களையெல்லாம் கண்டு, கரப்பவர்களிடம் போய் இரவாதீர்கள் என்று யான் இரப்பேன்' என்று ஒரு குறளை அமைக்கிறார்;

"இரப்பன் இரப்பாரை எல்லாம், இரப்பின்
கரப்பார் இரவன்மின் என்று." [2]

இங்கே இரப்பன் என்ற தன்மை ஒருமைச் சொல், கவிஞர் தாமே கூறும் கூற்று இது என்பதைப் புலப்படுத்துகிறது.

யாம் என்ற தன்மைப் பன்மையைப் பெய்து கருத்துக்களை அறிவுறுத்தும் இடங்கள் மூன்று;

"பெறுமவற்றுள் யாம்அறிவ தில்லை, அறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற." [3]

"யாம்மெய்யாக் கண்டவற்றுள் இல்லை, எனைத்தொன்றும்
வாய்மையி னல்ல பிற." [4]

"மக்களே போல்வர் கயவர்; அவரன்ன
ஒப்பாரி யாம்கண்ட தில்." [5]

**பாவி**

இரண்டு குணங்களைப் பாவி என்று வைகிறார்;

"அழுக்கா றெனஒரு பாவி திருச்செற்றுத்
தீயுழி உய்த்து விடும்." [6]

"இன்மை எனஒரு பாவி மறுமையும்
இன்மையும் இன்றி வரும்." [7]

ஒரு குணத்துக்கு மற்றொரு குணம் இருப்பதாகச் சொல்வதோ, அக்குணத்தை வேறொரு குணமுள்ள குணியாகச் சொல்வதோ வழக்கம் அல்ல. ஆயினும் இத்தீய பண்புகளின் தீமையை நன்கு வற்புறுத்தும் பொருட்டே இவ்வாறு கூறினர். பரிமேலழகர், 'பண்பிற்குப் பண்பி இல்லையேனும், தன்னை ஆக்கினனை இருமையும் கெடுத்தற் கொடுமை பற்றி, அழுக்காற்றினைப் பாவி என்றார், கொடியானைப் பாவி என்னும் வழக்கு உண்மையின்' என்று எழுதுவது இதனை வலியுறுத்தும்.

**இழித்துரைக்கும் முறை**

தீய பண்பு உடையவர்களைத் திருவள்ளுவர் இழித்து உரைக்கும் முறை சில உண்டு. அவர்களை அறிவில்லார் என்று கூறுவர்;

1. குறள், 1048. 2. ௸ 1067. 3. 61. 4. 300. 5. 1071. 6. 168. 7. 1042.

"உடைமையுள் இன்மை விருந்தோம்பல், ஓம்பா
மடமை மடவார்கண் உண்டு." [1]

"உலகத்தோ டொட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்." [2]

மக்கட் பதடி என்றும், வன்கணவர் என்றும், மறுமையிலாளன் என்றும் வைவர்.[3] விலங்கு என்றும் மாக்கள் என்றும் இழித்துரைப்பர்.[4] மரம் என்றும் கூறுவர்.[5] நோய் என்றும் பேய் என்றும் பழிப்பர்.[6]

அவர்கள் பிறப்பதைவிடப் பிறவாமை நன்று என்பர்.[7] அவர்கள் இருப்பதைவிடச் சாவது நன்று என்பர்;

"புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலிற் சாதல்
அறங்கூறும் ஆக்கம் தரும்." [8]

அவர்கள் உயிரோடு இருந்தாலும் இல்லாதவரை ஒப்பர் என்பர்;

"உளர்என்னும் மாத்திரையர் அல்லால் பயவாக்
களர்அனையர் கல்லா தவர்." [9]

"உளர்எனினும் இல்லாரொ டொப்பர், களன்அஞ்சிக்
கற்ற செலச்சொல்லா தார்." [10]

"உயிர்ப்ப உளர்அல்லர் மன்ற, செயிர்ப்பவர்
செம்மல் சிதைக்கலா தார்." [11]

அவர்கள் இறந்தாருக்கு ஒப்பானவர் என்பர்;

"விளிந்தாரின் வேறல்லர் மன்ற, தெளிந்தார்இல்
தீமை புரிந்தொழுகு வார்" [12]

"இறந்தார் இறந்தார் அனையர், சினத்தைத்
துறந்தார் துறந்தார் துணை" [13]

"துஞ்சினார் செத்தாரின் வேறல்லர், எஞ்ஞான்றும்
நஞ்சுண்பார் கள்ளுண் பவர்" [14]

என்பவற்றைக் காண்க.

இத்தகையவர்கள் நிலத்துக்குப் பாரமாக இருப்பவர்கள் என்று கூறுவார்;

"கல்லார்ப் பிணிக்கும் கடுங்கோல் அதுவல்ல
தில்லை நிலக்குப் பொறை." [15]

"கண்ணோட்டத் துள்ள துலகியல்; அஃதிலார்
உண்மை நிலக்குப் பொறை." [16]

"ஈட்டம் இவறி இசைவேண்டா ஆடவர்
தோற்றம் நிலக்குப் பொறை." [17]

---

1. குறள், 89. 2. ஷை 140; 142, 873 என்பவற்றையும் காண்க. 3. 196; 228, 276; 904. 4. 410, 420. 5. 576, 600, 997. 6. 848, 850. 7. 236. 8. 183. 9. 406. 10. 730. 11. 880. 12. 143. 13. 310. 14 926. 15. 570. 16. 572. 17. 1003.

"அறன்நோக்கி ஆற்றுங்கொல் வையம், புறன்நோக்கிப்
புன்சொல் உரைப்பான் பொறை." [1]

அரிது, அறிவு, அற்று, இனிது, உடைத்து, உண்டு, உலகு, எனின், கடை, கண், கெடும், கொளல், செயல், செயின், சொல், தரும், தலை, துணை, தொடர்பு, நட்பு, நன்று, நாடு, நெஞ்சு, நோய், படின், பிற, பெறின், வரும், விடல், விடும், வினை என்பன முதலிய சொற்களில் ஒவ்வொன்றை ஈற்றில் கொண்ட குறட்பாக்கள் பல உண்டு.

### சொல்லாட்சி

நால்வகைச் சொற்களையும் பொருளறிந்து ஆளும் திருவள்ளுவர் பிற இடங்களில் காணற்கரியனவும் மிக அருகி வழங்குவனவுமாகிய சில சொற்களையும் தொடர்களையும் ஆண்டிருக்கிறார்.

அவ்வது - அவ்வாறு, அவ்வித்தல் - பொறாமையுடையராதல், அறிந்தக் கடைத்தும் - அறிந்த இடத்தும், இவக்காண் - இங்கே பார், உறை - ஆயுள், எவ்வது - எவ்வாறு, கற்றக் கடைத்தும் - கற்ற இடத்தும், நுதுத்தல் - அவித்தல், முயற்று – முயற்சி [2] என்பவற்றைக் காண்க.

வடமொழியிலுள்ள சில மரபுகளை இவர் ஆளுகிறார். கேடு இல்லாதவனை அருங்கேடன் என்பதும், கேடின்மையை அருங்கேடு என்பதும், செவ்வியின்மையை அருஞ்செவ்வி என்பதும் இதற்கு எடுத்துக்காட்டுகள். [3] 'நாணென்னும் நல்லாள்', 'நிலம் என்னும் நல்லாள்' [4] என்பன லஜ்ஜா, தரா என்று பெண்பாலால் அவற்றைக் கூறும் வடமொழி வழக்கைத் தழுவியவை என்பாரும் உளர்.

வடசொல்லும் தமிழ்ச் சொல்லும் இணைந்த தொடர் இரண்டை இவர் அமைத்துள்ளார். அதிநுட்பம், ஒருவந்தம் என்பன அவை. [5] இவற்றில் முறையே அதி என்னும் முன்மொழியும், அந்தம் என்னும் பின்மொழியும் வட சொற்கள்.

பின்வருவன திருக்குறளில் திரிந்தும் திரியாதும் வரும் வட சொற்கள்:

அமர், அமரர், அமிழ்தம், அமிழ்து, அமைச்சன், அமைச்சு, அரங்கு, அரசன், அரசு, அவம், அவி, அவை, அவையம், ஆசாரம், ஆசை, ஆதி, ஆயம், இந்திரன், இலக்கம், உரு, உருவம், உருவு, உலகம், உலகு, உவமை, ஏமம், கணம், கந்து, கருமம், கனம், காமம், காமன், காரணம், காரிகை, காலம், கானம், குடங்கர், குணம், குலம், குவளை, கோட்டி, கோடி, சமன், சலம், சாகாடு, சுதை, சூதர், சூது, சோகாத்தல், தண்டம், தவம், தானம், துலை, தூது, தெய்வம், தேயம், தேவர், நாகம், நாகரிகம், நாமம், நாவாய், நிச்சம், பக்கம், பகவன், படாம், பண்டம், பயன், பருவம், பாக்கியம், பாகம், பாவம், பாவி, பீழிக்கும், பீழை, புருவம், பூசனை, பூதம், மங்கலம், மணி, மதி, மந்திரி, மனம், மாத்திரையர், மாயம், மானம், முகம், முத்தம், யாமம், வஞ்சம், வரன், வள்ளி, வாணிகம், வித்தகர், வேலை.

திருக்குறளில் உள்ள அதிகாரப் பெயர்களில் சில ஒரே முடிவையுடையன. அவற்றை ஒருவாறு முடிவுக்கு ஏற்ப வரிசைப்படுத்தினால் பின்வருமாறு அமையும்.

---

1. குறள், 189. 2. ௸ 426, 167, 637, 1185, 564, 426, 823, 1148, 616.
3. 210, 732, 565. 4. 924, 1040. 5. 636, 563, 593.

**அச்சம்**

இரவச்சம்
தீவினையச்சம்

**அல்**

இனியவை கூறல்
நினைந்தவர் புலம்பல்
பசப்புறு பருவரல்
பெண்வழிச் சேறல்
பெரியாரைத் துணைக் கோடல்
மன்னரைச் சேர்ந் தொழுகல்
விருந்தோம்பல்

**அழிதல்**

உறுப்பு நலன் அழிதல்
கண் விதுப்பழிதல்
நிறை அழிதல்

**அறிதல்**

அவை அறிதல்
இடன் அறிதல்
ஒப்புர வறிதல்
காலம் அறிதல்
குறிப்பறிதல் (2)
செய்ந்நன்றி அறிதல்
வலி அறிதல்

**அறிவுறுத்தல்**

அலர் அறிவுறுத்தல்
குறிப்பறிவுறுத்தல்

**ஆடல்**

ஒற்றாடல்
தெரிந்து வினையாடல்

**ஆண்மை**

சான்றாண்மை
புல்லறிவாண்மை

**ஆமை**

அவையஞ்சாமை
அழுக்காறாமை
இடுக்கண் அழியாமை
கல்லாமை
கள்ளாமை
கள்ளுண்ணாமை
கொல்லாமை
சிற்றினம் சேராமை
நிலையாமை
பயனில சொல்லாமை
பிரிவாற்றாமை
பிறனில் விழையாமை
புறங்கூறாமை
பெரியாரைப் பிழை யாமை
பொச்சாவாமை
வெஃகாமை
வெகுளாமை

**ஆல்**

சுற்றம் தழால்

**இரங்கல்**

படர் மெலிந்திரங்கல்
பொழுதுகண் டிரங்கல்

**உ**

இரவு
உழவு
துறவு
நல்குரவு

**உடைமை**

அடக்கம் உடைமை
அருள் உடைமை
அறிவுடைமை
அன்புடைமை
ஆள்வினை உடைமை
ஊக்கம் உடைமை
ஒழுக்கம் உடைமை
நாண் உடைமை
பண்புடைமை
பொறை உடைமை

**உரைத்தல்**

நயம் புணர்ந்துரைத்தல்
நாணுத் துறவுரைத்தல்
கனவுநிலை உரைத்தல்
காதற் சிறப்புரைத்தல்

**உறுத்தல்**

அறன் வலியுறுத்தல்
தகையணங்குறுத்தல்

**ஒரு மொழி**

அமைச்சு
அரண்
இகல்
ஊழ்
சூது
தவம்
தூது
நட்பு
நாடு
புகழ்
மருந்து
மானம்

**கை**

இல்வாழ்க்கை
ஈகை
ஊடலுவகை

**கோன்மை**

கொடுங்கோன்மை
செங்கோன்மை

**செய்யாமை**

இன்னா செய்யாமை
வெருவந்த செய்யாமை

**செயல்வகை**

குடி செயல் வகை
தெரிந்து செயல் வகை
பொருள் செயல் வகை
வினை செயல் வகை

**தல்**

அவா அறுத்தல்
குற்றம் கடிதல்

தெரிந்து தெளிதல்
நட்பாராய்தல்
நெஞ்சொடு கிளத்தல்
நெஞ்சொடு புலத்தல்
பகைத்திறம் தெரிதல்
புணர்ச்சி மகிழ்தல்
புதல்வரைப் பெறுதல்
புலால் மறுத்தல்
மெய்யுணர்தல்

**தொடர் மொழி**

உட்பகை
கடவுள் வாழ்த்து
கண்ணோட்டம்
கூடா ஒழுக்கம்
தனிப்படர் மிகுதி
நன்றியில் செல்வம்
படைச் செருக்கு

புலவி நுணுக்கம்
வரைவின் மகளிர்
வாழ்க்கைத் துணைநலம்
வான்சிறப்பு
வினைத்திட்பம்

**நட்பு**

கூடா நட்பு
தீ நட்பு

**மாட்சி**

இறை மாட்சி
பகை மாட்சி
படை மாட்சி

**மை**

கயமை
குடிமை

சொல்வன்மை
நடுவு நிலைமை
நீத்தார் பெருமை
பழமை
பெருமை
பேதைமை
மடியின்மை
வாய்மை
வினைத் தூய்மை

**வி**

கல்வி
கேள்வி
புலவி

**விதும்பல்**

அவர் வயின் விதும்பல்
புணர்ச்சி விதும்பல்.

JAN 1970
MADRAS-5
GOVT. ORIENTAL MANUSCRIPTS LIBRARY

# திருக்குறள் வாழ்க்கைத் தத்துவம்

திரு தி. சு. அவினாசி லிங்கம்

திருக்குறள் சென்ற இரண்டாயிரம் வருஷங்களாகத் தமிழனுடைய உயர் வாழ்க்கைக்கு அடிப்படையாக விளங்கி வரும் நூல். தமிழனுடைய எதிர்காலப் பெருமை, அவன் அதன் வாழ்க்கைத் தத்துவத்தைத் தெளிவாக அறிந்து பின்பற்றுவதைப் பொறுத்திருக்கிறது. குறள் சில தத்துவங்களை மாத்திரம் சொல்லி அத்துடன் நிற்கவில்லை. சமய நூல்கள் போதிப்பதுபோல் இறைவனை வழிபடுவதைப் பற்றி மாத்திரமே அது சொல்லவில்லை; தினசரி வாழ்க்கையில் பின்பற்ற வேண்டியவைகளையே அதன் பெரும்பகுதி சொல்கிறது; மக்கள்முன் ஓர் அரிய லட்சியத்தைத் தோற்றுவாய் செய்து, அதை அடையும் நெறியையும் தெளிவாக்குகிறது. இந்த நெறி துறவை மேற்கொண்டவர்களுக்காக மாத்திரம் அல்ல; உலகியலில் பல துறைகளிலும் இருந்து வாழ்பவர்களுக்கும் அவர்கள் பற்பல சந்தர்ப்பங்களிலும் நிலைகளிலும் நடந்து கொள்ள வேண்டிய முறையைக் காட்டுகிறது. எனவே, அது தினசரி வாழ்க்கையில் பின்பற்ற வேண்டிய நூல். அது நமக்குச் சந்தேகம் வரும்போது, தெளிவு உண்டாக்கி வழிகாட்டியாக இருக்கத்தக்கது. எந்த நிலையிலும் நமக்கு ஒளி கொடுத்து, ஊக்கம் அளித்து, நம் வாழ்க்கையைத் திறம்பட நடத்துவதற்கு அளவு இல்லாத சக்தியை அளிப்பது திருக்குறள் ஆகும்.

அது உயர்ந்ததொரு வாழ்க்கைத் தத்துவத்தை நமக்குக் காட்டுகிறது. உயர்ந்ததோர் ஆண்மையைப் போதிக்கிறது. எதற்கும் அஞ்சாத தன்மையே ஆண்மை. 'இடுக்கண் வருங்கால் நகுக' என்று சொல்லுகிறது. ஏன்? அந்த இடுக்கண்களை வெல்வதற்கு அதுதான் உபாயம். 'இடும்பைக்கு இடும்பை படுப்பர், இடும்பைக்கு இடும்பை படாஅ தவர்'. எதற்கும் பயப்பட வேண்டாம்; பயப்பட வேண்டிய அவசியம் இல்லை. ஏனெனில், வெள்ளத்தனைய இடும்பை வரினும், அதை ஆண்மையுள்ள மனிதன் உறுதியுடன் எதிர்த்து நின்றால், அவ்விடும்பைகள் மறையும். இதுதான் வள்ளுவரின் அடிப்படையான போதனை.

ஆனால், எதிர்ப்புக்களைத் தகர்த்து வெற்றியடையும் திட்பம் எல்லோருக்கும் உண்டாகுமா என்ற ஐயம் நம் மனத்தில் தோன்றுவது இயல்பு. நம்மைப்போன்ற சாதாரண மக்களும் இந் நிலையை அடைய முடியுமா? வள்ளுவர் நமக்கு ஆறுதல் அளிக்கிறார்; 'அருமையுடைத்தென்று அசாவாமை வேண்டும், பெருமை முயற்சி தரும்'. நம் வாழ்க்கையைச் செப்பனிடுகிறவர்கள் நாமே. நாம் முன்செய்த வினைகளின் பயன், ஊழ் என்ற உருவத்தில் நம்மை ஓரளவு பாதிக்கிறது. எனினும் இன்பத்தை விழையாது, வினையிலே

கண்ணும் கருத்துமாய் இருப்பவன் கடைசியில் வெற்றி பெற்றே தீருவான். இங்ஙனம், 'உலேவின்றித் தாழாது உஞற்றுபவர், ஊழையும் உப்பக்கம் காண்பர்'. எனவே எவரும் தமக்கு இருக்கும் குறைகளை நினைத்து வருந்திக்கொண்டிருக்க வேண்டாம். அறிவோடு கூடிய இடைவிடாத முயற்சி அனைத்தையும் தரக்கூடியது. பொருள் இல்லாதவர்கள் மாத்திரம் அல்ல; கண், காது முதலியன இல்லாமலிருந்துங்கூடத் தங்கள் இடைவிடாத முயற்சியால் மேம்பட்டவர்கள் பலர். ஹெலன்கெல்லர் முதலியவர்கள் இதற்குச் சான்று. எனவே, செல்வம் இல்லை, செல்வாக்கு இல்லை, சில உறுப்புக்கள் இல்லை என்பதுகூட ஒருவனுக்குப் பழியாகாது. அது ஊழ்வினையால் ஏற்படுவது. ஆனல் 'அறிவறிந்து ஆள்வினை இல்லாமல் இருப்பதுதான்' மிகவும் பழிக்கத்தக்கது.

வள்ளுவருடைய லட்சியப்படி வாழும் உயர்ந்த மனிதன் எப்படி வாழ்வான் என்பதைப் பார்ப்போம். கீதையில் அர்ச்சுனன் கண்ணனைப் பார்த்து, ''அறிவு நிறைந்த ஞானி எப்படிப் பேசுகிருன்? எப்படி நடந்து கொள்ளுகிருன்?'' என்று கேட்கிருன். அதற்குக் கண்ணபிரான் சொல்லுகிருர்: ''அவன் மனத்தில் எழுந்த ஆசைகளை அகற்றி, ஆத்மாவில் திருப்தி அடைந்திருப்பான். துன்பத்தாலும் இன்பத்தாலும் பாதிக்கப்படாமல், பற்றும் அச்சமும் கோபமும் இன்றி உறுதியுடையவனுயும், ஆமை தன் அவயவங்களை அடக்கிக் கொள்வதுபோல் பொருள்களிலிருந்து தன் பொறிகளை உள் இழுத்துக்கொள்ள வல்லவனுயும் இருப்பான். ஆசையால் கோபமும், கோபத்தால் மனக்குழப்பமும், குழப்பத்தால் நினைவின்மையும், அது காரணமாகப் புத்தி நாசமும் உண்டாகின்றன. ஆனல் விருப்பு வெறுப்பற்று, ஆத்மாவில் ஈடுபட்டவன் மன அமைதி பெற்றுச் சாந்தியை அடைந்து உயர்ந்த ஆன்மிக நிலையை அடைகிருன்". இக் கருத்துக்களையே வள்ளுவர் தமக்கே உரிய அற்புதமான முறையில் மிக அழகாகச் சொல்லியிருக்கிருர்; 'தூஉய்மை யென்பது அவாவின்மை', 'காமம், வெகுளி, மயக்கம் இவை மூன்றன் நாமம் கெடக் கெடும் நோய்'. இங்ஙனம் செய்யப் 'பொறிவாயில் ஐந்தவித்து', 'ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கி' வாழவேண்டும். வெளித்தோற்றத்திற்கு அடக்கினல் மட்டும் போதாது. உண்மையில் 'பற்றுவிடற்கு, பற்றற்ருன் பற்றினைப் பற்றுக'. இங்ஙனம் இருப்பவர்கள் 'ஐயம் நீங்கித் தெளிவார்கள்'; 'இருள் நீங்கிப் பேரின்பம் பெறுவார்கள்'. ஆனல் வள்ளுவர் இத்துடன் நிற்கவில்லை. மனித வாழ்க்கையின் வெவ்வேறு நிலைகளில் எப்படி நடந்துகொள்கிருன், எப்படி நடந்து கொள்ளவேண்டும் என்பன பற்றி விளக்கமாகவும் விரிவாகவும் திருக்குறள் எடுத்துரைக்கிறது.

உயர்ந்த வாழ்க்கை யென்பது எந்த நிலையில் இருக்கும் மக்களும் பின்பற்றக்கூடியது. உயர்ந்த வாழ்க்கை மனிதன் இருக்கும் நிலையைப் பற்றியது அன்று; அவன் வாழ்க்கை முறையை ஒட்டியது. 'பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தம் தம், கருமமே கட்டளைக் கல்'. மக்கள் மதிக்கக்கூடிய அரிய ஸ்தானங்களில் இருக்கலாம். அவர்கள் தங்கள் கடமைகளைச் சரிவரச் செய்து வரவேண்டும். ஆனல் அவர்கள் தம் நிலையிலிருந்து கொண்டு இழிவான காரியங்களைச் செய்வார்களானல், அவர்கள் 'தலையின் இழிந்த மயிரனையர்' ஆவார்கள். ஆனல் எந்த நிலைமையில் இருப்பினும், தங்கள் கடமைகளை வழு

வாது செய்து, அடக்கமும் அன்பும் உடையவர்களானால், அவர்களுக்கு உயர்ந்த சக்தியுண்டாவதுடன், அவர்களின் தோற்றத்திலேயே பொலிவு உண்டாகும். 'நிலையில் திரியாது அடங்கியான் தோற்றம், மலையினும் மாணப் பெரிது'. 'குடிப்பிறந்தார், அடுக்கிய கோடி பெறினும் குன்றுவ' செய்ய மாட்டார்கள். அவர்களுக்குக் கெட்ட காலம் வந்தபோதும் 'சால்பு இல செய்ய மாட்டார்கள்'. இத்தகையவர்கள் எவ்விதச் செல்வங்களையும் பெருமைகளையும் பெற்றபோதும், அகங்காரம் கொள்ள மாட்டார்கள். உண்மைப் பெருமை பணியும்; சிறுமையுள்ளவர்களே தங்களைத் தாங்களே வியந்து கொள்ளுவார்கள்.

வாழ்க்கையில் பொதுவாக இருதரத்தார் இருக்கிறார்கள். மணம் செய்து கொண்டு வாழ்பவர்கள் பலர். அவர்கள் பின்பற்றும் அறவாழ்க்கை இல்லறம் ஆகும். தம் இல்லங்களை விட்டுத் துறவு மேற்கொண்டு ஒழுகுபவர் சிலர். இவற்றில் எது உயர்ந்தது, எது தாழ்ந்தது என்பது பற்றித் தொன்றுதொட்டு விவாதம் இருந்து வருகிறது. இது சம்பந்தமாக ஸ்ரீ விவேகானந்த சுவாமிகள் தாம் எழுதிய கர்ம யோகத்தில் ஒரு கதை சொல்லியிருக்கிறார்.

ஓர் அரசன் இல்லறம் பெரிதா அல்லது துறவறம் பெரிதா என்று வருபவர்களிடம் தர்க்கம் செய்துகொண்டிருந்தான். ஒரு பெரியவர் அவன் நாட்டிற்கு வந்தபோது அவரிடமும் இதே கேள்வியைக் கேட்டான். "நீ என்னோடு வா; இதற்குப் பதில் சொல்கிறேன்" என்று அவனை ஒரு காட்டிற்குள் அழைத்துச் சென்றார். இரவு வந்தது. அப்போது ஒரு மரத்தின்கீழ்த் தங்கினார்கள். அதில் ஒரு சிறு பறவையும் அதன் பேடையும் மூன்று குஞ்சுகளும் வசித்து வந்தன. ஆண் பறவை கீழே இருக்கும் இருவரையும் கண்டு, தன் மனைவியை நோக்கி, "என் அன்பே, நம் வீட்டிற்கு இரண்டு விருந்தினர்கள் வந்திருக்கிறார்கள். அவர்கள் பசித்திருக்கிறார்கள். அவர்களுக்கு உணவு கொடுக்க நம்மிடம் ஏதும் இல்லை. வீட்டிற்கு வந்தவர்களுக்கு விருந்தளிப்பது இல்வாழ்வாராகிய நம்முடைய கடமை அல்லவா? நம்மிடம் வேறு ஒன்றும் இல்லாததால், என் உடலையாவது இவர்களுக்குக் கொடுக்கிறேன்" என்று சொல்லி, அவர்கள் குளிர் காய்வதற்காக மூட்டியிருந்த நெருப்பில் விழுந்து இறந்தது. தன் நாயகன் இறந்ததைக் கண்ட பெண் பறவை, 'வந்திருக்கிற இரண்டு விருந்தினருக்கு ஒரு சிறு பறவையின் ஊன் எங்ஙனம் போதும்? என் நாதன் செய்த தர்மத்திற்குத் துணையாக நிற்பது என் கடமை' என்று அதுவும் தீயுள் விழுந்து இறந்தது. 'பெற்றோர் செய்த நற்கருமங்களை நிறைவேற்றுவது நம் கடமை' என்று குஞ்சுகளும் தீயினுள் விழுந்து மரித்தன. மரத்தின்கீழே இருந்த இருவரும் அப்பறவைக் குடும்பத்தின் தன்னலம் இல்லாக் கடமையுணர்ச்சியைக் கண்டு ஆச்சரியம் அடைந்தனர்.

அங்கிருந்து அப்பெரியார் அவ்வரசனை வேறு ஓர் இடத்திற்கு அழைத்துச் சென்றார். அங்கே அவ்வூர் அரசன் மகளுக்குச் சுயம்வரம் நடந்து கொண்டிருந்தது. பல அரசிளங் குமரர்கள் வந்திருந்தார்கள். அவ் வேடிக்கையைப் பார்க்கப் பெருங் கூட்டம் கூடியிருந்தது. அதில் ஓர் இளம் சந்நியாசியும் இருந்தான். அரசகுமாரிக்கு அங்கே கூடியிருந்த இளவரசர்களில் எவரும்

பிடிக்கவில்லை. தேசு நிறைந்த அந்த எளிய சாதுவின்மேல் அவள் மனம் சென்றது. உடனே அவனை வரித்து அவனுக்கு மாலையிட்டாள். அந்தச் சாதுவோ, மாலையைக் கழற்றி எறிந்து, தான் சந்நியாசியென்றும், மணம் செய்து கொள்ள விருப்பமில்லை யென்றும் தெரிவித்தான். இதைக் கண்ட அரசகுமாரி அவனையே மணம் செய்துகொள்ள வேண்டுமென்று புலம்பினள். அரசன் தன் புதல்வியை மணந்தால் தன் நாட்டையே அவனுக்குக் கொடுப்பதாகச் சொன்னன். சாதுவோ அதைச் சிறிதும் பொருட்படுத்தாமல் அவைகளை நிராகரித்துச் சென்முன்.

இதைப் பார்த்துக் கொண்டிருந்த அரசனை அப்பெரியார், "இவர்களில் யார் பெரியவர்? பறவையா அல்லது சந்நியாசியா?" என்று கேட்டார். அரசன் பதில் சொல்லத் தெரியாமல் திகைத்தபோது பெரியார் மீண்டும் சொன்னர்; "இருவரும் அவரவர்கள் நிலையில் பெரியவர்கள். இல்லறத்தில் இருந்தால் அப்பறவைக் குடும்பம்போல் இருக்க வேண்டும்; துறவறத்தில் இருந்தால் அந்த இளம் சந்நியாசிபோல் இருக்க வேண்டும்" என்றார்.

இக் கருத்தைத்தான் திருக்குறளும் வற்புறுத்துகிறது. இல்லறத்தைப் பற்றிக் கூறும்போது, 'அறம் எனப்பட்டதே இல்வாழ்க்கை', 'இயல்பினன் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான், முயல்வாருள் எல்லாம் தலை', 'இல் வாழ்க்கை நோற்பாரின் நோன்மை யுடைத்து', 'புறத்தாற்றில் போய் ஒருவன் பெறுவது என்ன இருக்கிறது?' என்றெல்லாம் திருவள்ளுவர் சொல்லுகிருர். அதேபோல் துறவைப் பற்றிக் கூறும்போது, உயர்ந்த வாழ்க்கை 'வேண்டின், உண்டாகத் துறக்க' என்றும், 'அடல் வேண்டும் ஐந்தன் புலத்தை விடல்வேண்டும், வேண்டிய வெல்லாம் ஒருங்கு' என்றும், 'பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும்' என்றும் பலவாருகச் சொல்லுகிருர். ஆனல் இதனுடன் சேர்த்து மகத்தான மற்றொரு கருத்தையும் எடுத்துரைக்கிருர். அவரவர்கள் எந்த எந்த நெறியில் நிற்கிருர்களோ அதற்குரிய கருமங்களையும் கடமைகளையும் அவர்கள் சரிவரச் செய்யவேண்டும். தங்கள் கடமைகளை விட்டு, வேறு நிலைக்குள்ள கருமங்களைச் செய்யப் போதல், இழிந்த நிலைமைக்கு ஒருவனைக் கொண்டுபோய் விடும். ஒருவனுக்குத் தவமே அவனுக்குரிய கடமைகளைச் சரிவரச் செய்தல்தான். ஒவ்வொரு மனிதனுக்கும் அவனவன் செய்ய வேண்டிய கடமைகள் உண்டு. 'தென்புலத்தார், தெய்வம், விருந்து, ஒக்கல், தான்' என்னும் ஐந்து வகையிலும் செய்யும் கடமைகள் அனைவரையும் சார்ந்தவை. இவைகளைத் தவிர மக்கள் தம் நிலைமைக்கு ஏற்பச் செய்ய வேண்டிய கடமைகளும் உள. சாதாரணமாக மக்கள் ஒருவருக்கொருவர் அன்புடனும் கருணையுடனும் நடந்துகொள்ள வேண்டும். போர் வீரனுக்குப் போர்முனையில் எதிரியைக் கொல்வதுதான் தர்மம் ஆகும். அதை விட்டு, அவன் கருணை காட்ட முன்வருவானுனல் தன் கடமையில் பிறழ்ந்தவன் ஆவான்; அவன் நாட்டிற்குத் துரோகம் செய்தவன் ஆவான். அப்படிப் பிறழ்வது பலவீனத்திற்கு அடையாளம். அது உண்மையில் கருணையின் அறிகுறி அல்ல; கோழைத்தனத்தின் அறிகுறி ஆகும். இதைத்தான் வள்ளுவர் வெகு அழகாக, 'தவம் செய்வார் தம் கருமம் (கடமை) செய்வார், மற்றல்லார் அவம் செய்வார் ஆசையுட்பட்டு' என்று எழுதியிருக்கிருர். ஒவ்வொருவரும் தங்கள் நிலையில் திரியாது, புலன்

கத்துடன், விருப்பு வெறுப்பற்று, தங்கள் நெறியில் நிலைநின்று தங்கள் மைகளைச் செய்வதே அறமெனப்படும். இத்தகைய வாழ்க்கை செயற்கரியது. இல்லறத்தில் இருப்பினும் சரி, துறவறத்தை மேற் கொள்ளினும் சரி, இத்தகைய செயற்கரிய வாழ்க்கையை நடத்துபவர்கள் தாம் பெரியவர்கள்; 'சிறியர் செயற்கரிய செய்கலாதார்'.

இக்கருத்தை விளக்கப் புராணங்களில் ஒரு கதை உண்டு. ஒரு சந்நியாசி ஓர் ஆற்றோரத்தில் அமர்ந்து நெடுங்காலம் ஆழ்ந்த தவத்தில் ஈடுபட்டிருந்தார். காலையிலும் மாலையிலும் குளித்து நெடுநேரம் தியானம் செய்வது அவர் வழக்கம். ஒருநாள் காலை அவர் கடன்களை முடித்து, குளித்துத் திருநீறிட்டு, ஒரு மரத்தடியில் தியானத்தில் அமர்ந்திருந்தபோது, ஒரு பறவையின் எச்சம் அவர்மேல் விழுந்தது. தாம் தியானம் செய்து கொண்டிருந்தபோது இவ்விதம் நேர்ந்தது அவருக்கு மிகுந்த கோபத்தை உண்டாக்கிற்று. கோபக் கனல் வீசும் கண்களால், இவ்விதம் செய்தது எதுவென்று அவர் மேலே பார்த்தார். அவர் கண்களிலிருந்து வந்த நெருப்புப் பொறி, அங்கே இருந்து எச்சமிட்ட கொக்கை எரித்தது. அதைப் பார்த்த சந்நியாசி தம் தவத்தால் தமக்கு வந்த சக்தியைக் கண்டு தம்மைத் தாமே வியந்து கொண்டார். மத்தியான்னம் வந்ததும் பிட்சைக்காகப் புறப்பட்டார். ஒரு வீட்டுக்குச் சென்று, "தாயே, அன்னம் போடுங்கள்" என்று கேட்டார். உள்ளிருந்து, "கொஞ்சம் பொறுங்கள்" என்று ஒரு பெண் குரல் வந்தது. உடனே, 'நம்மைக் காக்க வைக்க இப் பெண்ணுக்கு இவ்வளவு தைரியமா? நம்முடைய சக்தியை இவள் அறியாள் போலும்!' என்ற எண்ணம் அவர் மனத்தில் தோன்றியது. அத்தாய் மீண்டும், "கொக்கென்று நினைத்தனையோ கொங்கணவா?" என்று கேட்டாள். கொங்கணர் என்பதே அவர் பெயர். அவள் பேச்சு அவருக்குப் பெரிய வியப்பை உண்டாக்கியது. 'காலையில் எவரும் இல்லாத இடத்தில், நம்மைத் தவிர வேறு எவருக்கும் தெரியாமல் நிகழ்ந்த இது இவ்வனைக்கு எப்படித் தெரிந்தது' என்று ஆச்சரியமுற்றார். காத்திருந்தாவது இதைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற எண்ணம் அவருக்கு உண்டாயிற்று. அத் தாய் சிறிது நேரம் கழித்து வெளியே வரவும் சந்நியாசி, "தாயே, தாங்கள் எவ் விதம் இந்த நிகழ்ச்சியை அறிந்தீர்கள்? இச்சக்தியைப் பெறத் தாங்கள் என்ன தவம் செய்திருக்க வேண்டும்!" என்றார். அத் தாய், "நான் படிப்பு அறியாச் சாதாரணப் பெண். தவம் ஏதும் செய்தறியேன். நான் செய்த தவம், என் குடும்பத்தில் செய்யவேண்டிய கடமைகள் அனைத்தையும் பக்தியோடு அன்போடு வெறுப்பு விருப்பின்றிச் செய்து வந்ததே யாகும்" என்று சொல்லி, அச்சந்நியாசி அறியாத வேறு பல விஷயங்களையும் அவருக்கு உபதேசித்து அருளினாள். தன் தினசரிக் கடமைகளைச் சரிவரச் செய்வதே சிறந்த தவமாகும் என்பது இதன்மூலம் அறியக் கிடக்கிறது.

மக்கள் தங்கள் தினசரி வாழ்க்கைக்கு வழிகாட்டியாக இருக்கும் பொருட்டு, ஒவ்வொரு தரத்தாரும் எப்படி ஒழுக வேண்டுமென்பது பற்றிய கருத்துக்கள் திருக்குறளில் விரிவாக உள்ளன. இல்வாழ்பவனுடைய கடமைகள் முதலில் விவரிக்கப்பட்டிருக்கின்றன. கேவலம் ஸ்தூல இன்பம் அல்ல இல்வாழ்க்கையின் லட்சியம். 'துறந்தார்க்கும் துவ்வாதவர்க்கும் இறந்

தார்க்கும்' அவன் துணையாவான். அவன் வாழ்க்கையைச் சரிவர அவனுக்கு நல்ல குணங்கள் அமைந்த துணைவி மிக அவசியம். அத்தகை மாட்சிமையுள்ள மனைவி இல்லையாயின், 'வாழ்க்கை எனை மாட்சித்தாயினு இல்'. அவனுடைய எல்லாப் பெருமைகளுக்கும் அவளே அடிப்படை. 'புகழ் புரிந்த இல் இலார்க்கு, ஏறுபோல் பீடு நடை' இல்லை. அவன் பெறும் பேறுகளில் சிறந்தது நன்மக்கட் பேறு. அவன் தன் மக்களுக்குச் செய்யத் தக்க பெரிய உதவி, 'அவர்கள் அவையத்து முந்திருயிருப்பச் செயல்'. தந்தைமார்களுக்கு உயர்ந்த இன்பம், தம்மினும் தம் மக்களை அதிக அறிவு பெற்றுத் திகழக் காண்பதே. 'மகன் தந்தைக்கு ஆற்ற வேண்டிய கடமை, இவன் தந்தை என் நோற்றான்கொல் என்னும் சொல்'.

அவன் தன் குடும்பத்தாரிடமும் மற்ற எல்லோரிடமும் நிறைந்த அன்புடன் பழகவேண்டும். சுயநலத்திற்கு இயல்பு, மற்றவர்களிடம் ஊதியம் பெற விழைவது; அன்பிற்கு இயல்பு, கொடுப்பது. 'அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு'. அத்தகைய அன்பு, நட்பு என்னும் மதிக்கவொண்ணாத சிறப்பை அவர்கள் நாடாமலே கிடைக்கச் செய்யும். 'வையத்து இன்புற்றார் எய்தும் சிறப்பெல்லாம்' இத்தகைய அன்பு வாழ்க்கையில் ஏற்படுவதாகும். அன்புடையவர்கள் வரும் விருந்தினரை அன்புடன் உபசரிப்பார்கள். 'சாவா மருந்தெனினும், விருந்து புறத்ததாத் தாங்கள் உண்ண மாட்டார்கள்'. இத்தகைய 'நல் விருந்து ஓம்புவான் இல்லத்தில் அகன் அமர்ந்து செய்யாள் உறையும்'. அவர்கள் அனைவரிடத்தும் இனிமையாகப் பேசுவார்கள். இன்சொல் என்பது வெறும் செவிக்கினிய சொற்கள் அல்ல; 'அது ஈரம் அளைஇப் படிறு இலவாம், செம்பொருள் கண்டார் வாய்ச்சொல்'. 'முகன் அமர்ந்து இன்சொலனாகப் பெறின், அது அகன் அமர்ந்து ஈதலின் நன்று'. பணிவுடையனாகவும் இன்சொல்லனாகவும் ஆதலே ஒருவனுக்கு அணி. 'யா காவாராயினும் நா காக்க'. 'செல்லிடத்துக் காப்பான்தான் உண்மையில் சினம் காத்தவன்; அல்லிடத்துக் காக்கின் என்? காவாக்கால் என்?' என்கிறார் வள்ளுவர் பெருமான்.

உயர்வாழ்வுக்கு அடிப்படை ஒழுக்கம். ஆதலால், 'ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்'. 'ஒழுக்கமிலான்கண் உயர்வு இல்லை.' ஒழுக்கமுடைமை தான் குடிமை; அதாவது உயர்ந்த குடிப்பிறப்பு. அத்தகையவர்கள் வாயில் தீய வார்த்தைகள் வழுக்கியும் வாரா. மற்றவர்களோடு பொறுமையுடன் பழக வேண்டும். அதுதான் பலத்திற்கு அறிகுறி. 'வன்மையுள் வன்மை மடவார்ப் பொறை.' 'ஒறுத்தார்க்கு ஒரு நாளை இன்பம்; பொறுத்தார்க்குப் பொன்றுந் துணையும் புகழ்' அல்லவா? ஆதலால், 'மிகுதியால் மிக்கவை செய்தாரை, தாம் தம் தகுதியால் வென்றுவிட' வேண்டும். அழுக்காறு, வெகுளுதல், பிறர் பொருளை வெளவக் கருதுதல், புறங்கூறுதல் - இவை கெட்ட குணங்கள்; எனவே விலக்க வேண்டியவை. பயனில பேசும் பழக்கமும் நம்மைத் தாழ்த்தக் கூடியது. அதை எல்லோரும் எள்ளுவார்கள். அதன் மூலம் 'சீர்மை சிறப்பொடு நீங்கும்'. ஆதலால் எப்பொழுதும் 'சொல்லற்க சொல்லின் பயனிலாச் சொல்'. அங்ஙனமே 'தீயவை தீய பயத்தலால், தீயுவை தீயினும் அஞ்சப்படும்'.

உலக நடையினை அறிந்து மக்களுக்கு உதவியாக ஒழுகுதல் வாழ்க்கையில் வெற்றிக்கு அவசியம். 'உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பல கற்றும், கல்லார் அறிவிலாதார்.' நம்மிடம் இருக்கும் பொருள்களுக்கு நாம் சொந்தக்காரர்கள் அல்ல; பிறருக்கு அது உதவும்படி பயன்படுத்தத் தர்மகர்த் தாக்களாக நாம் இருக்க வேண்டும் என்று மகாத்மாஜி உபதேசித்தார் அல்லவா? அதையேதான் வள்ளுவரும் சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே உரைத்திருக்கிறார். 'தாளாற்றித் தந்த பொருள் எல்லாம் தக்கார்க்கு, வேளாண்மை செய்தற் பொருட்டு'. 'பேரறிவாளன் திரு, ஊருணி நீர் நிறைந்தற்று'. கொடுத்தல் என்றும் நல்லது. ஆனால் ஏற்பது இகழ்ச்சி. ஆதலால் 'நல்லாறு எனினும் கொளல் தீது; மேல் உலகம் இல் எனினும் ஈதலே நன்று'. பொருளுடையவருக்குக் கொடுப்பது ஈகையாகாது. அது ஒன்றை எதிர்பார்த்துச் செய்வதாகும். 'வறியார்க்கு ஒன்று ஈவதே ஈகை'. ஈகை என்பது மனிதனுக்கு வாய்க்கக்கூடிய அரிய குணங்களில் ஒன்றல்லவா? பலரிடத்தில் பொருள் இருக்கலாம். ஆயினும் பலர் அதைச் சேகரித்து வைத்து, காத்து, அதன் பயனை அடையாமல் இழப்பவரா கிறார்கள். அவர்கள் ஈத்துவக்கும் இன்பம் அறிய மாட்டார்கள். இங்ஙனம் ஈகையில் மிகுந்து, அன்பையும் ஆற்றலையும் அடிப்படையாகக் கொண்டவர் மாறாப் புகழுடன் வாழ்வர்.

துறவறத்தை மேற்கொள்பவர்களுக்கும் அவர்களுக்கு ஏற்ற கடமைகள் உண்டு. 'யாதனின் யாதனின் நீங்கியான் நோதல், அதனின் அதனின் இலன்'. ஆதலால் அவர்கள் முக்கியக் கடமை பற்றற்ற வாழ்க்கை வாழ்தல். அவர்கள் நிறைந்த தூய்மையுடையவர்களாக இருத்தல் வேண்டும். 'தூய்மை என்பது அவா இன்மை.' அவா ஒருவனை வஞ்சிக்கிறது; 'அவா இல்லார்க்கு இல்லாகும் துன்பம்.' அவா அறுத்தல் என்பது ஓர் எதிர்மறை நிலை அல்ல. அது இன்ப வாழ்க்கைக்கு அடிப்படை. 'அவா என்னும் துன்பத்தில் துன்பம் கெடின், இன்பம் இடையறாது ஈண்டும்.' இதைத்தான் வேதங் கள், உபநிடதங்கள், சாஸ்திரங்கள் முதலிய அனைத்தும் கூறுகின்றன. இதையே புத்த பகவான் முதலிய பல பெரியார்களும் சொல்லிப் போற்றி யிருக்கின்றனர். சடங்குகளும் வெளிச்சின்னங்களும் முக்கியம் அல்ல. 'மழித்தலும் நீட்டலும் வேண்டா, உலகம் பழித்தது ஒழித்துவிடின்'. உள்ளத் தூய்மையே அனைத்தினும் முக்கியமானது. 'மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்து அறன், ஆகுல நீர பிற.' இதுதான் துறவு வாழ்க்கையின் அடிப்படையான தத்துவம் ஆகும்.

இல்லறத்தில் இருப்பவர்களுக்கு நல்ல மனைவி அமைவது மிக அவசியம். அவர்கள் சேர்ந்து செல்வத்தை ஈட்டிப் பாதுகாத்து, விருந்தினரை ஓம்பி, தென்புலத்தார், தெய்வம், ஒக்கல் முதலியவர்களுக்குத் தாம் செய்ய வேண் டிய கடமைகளைச் செய்து, நற்புதல்வர்களைப் பெற்றெடுத்து, சிறப்பாக அவர்கள் வாழத்தக்க முறைகளை வகுத்து, அனைவருக்கும் பயன்தரத்தக்க வாழ்க்கை வாழ்வதே இல்லறத்தின் லட்சியமெனச் சொல்லப்பட்டது. ஆனால் சிறப்பாகத் துறவிகளுக்கென்று அமைந்த விதிகள் வேறு. அவர்கள் யாவரிடமும் அருள் உடையவர்களாக இருத்தல் வேண்டும். அவர்கள் புலாலை மறுத்து, கொல்லாமையை மேற்கொள்ள வேண்டும். 'தன்னுயிர்

நீப்பினும் செய்யற்க, தான் பிறிது இன் உயிர் நீக்கும் வினை.' அவர்கள் வாய்மையுடையவர்களாக இருக்க வேண்டும். ஆனால் இவை இரண்டில், 'ஒன்றாக நல்லது கொல்லாமை; மற்று அதன் பின் சாரப் பொய்யாமை நன்று' என்றார் வள்ளுவர்.

தவந்தான் துறவிகளுக்கு அடிப்படை. தவம் அனைத்தையும் அளிக்கும் சக்தியை உடையது. 'வேண்டிய வேண்டியாங்கு எய்தலால், செய்தவம் ஈண்டு முயலப்படும்.' தவத்திற்கு இரண்டு இலக்கணங்கள் உண்டு. அவை, 'உற்ற நோய் நோன்றல், உயிர்க்கு உறுகண் செய்யாமை' என்பன. தவத்தை மேற்கொள்வது எல்லோராலும் இயலாது. இடைவிடாத முயற்சி உள்ளவர்களுக்குத்தான் தவம் பலிதமாகும். அது இல்லாதவர்கள் அதை மேற்கொள்ளுவது அவமாக முடியும். 'நோற்றலின் ஆற்றல் தலைப்பட்ட வர்க்குக் கூற்றம் குதித்தலும் கைகூடும்.'

கொல்லாமையை வள்ளுவர் முதலில் வைத்தார். ஏனெனின் அது அன்பை அடிப்படையாகக் கொண்டது. 'அன்பின் வழியது உயிர்நிலை'. ஆதலால் அன்பு முதலில் வைக்கப்பட்டது. அதற்கு அடுத்தபடி வாய்மை. ஆனால் வாய்மைக்கு மிக உயர்ந்த இடம் கொடுக்கப்பட்டது. 'மனத்தொடு வாய்மை மொழியின், அது தவத்தொடு தானஞ் செய்வாரில் தலை'. ஏனெனில் 'உள்ளத்தாற் பொய்யாது ஒழுகின், அவன் உலகத்தார் உள்ளத்து எல்லாம் உளன்'. மகாத்மா காந்தியின் மகத்தான வாழ்க்கையே இதற்குப் பெரிய சான்றாகத் திகழ்கிறது. உண்மை வாய்மை யாருக்கும் கெடுதல் செய்யாது; ஏனெனின் 'வாய்மை எனப்படுவது யாதெனின், யாதொன்றும் தீமை இலாத சொலல்'. வள்ளுவர் இதற்கு மேலும் ஒரு படி சென்றார். 'புரை தீர்ந்த நன்மை பயக்குமானால், பொய்ம்மையும் வாய்மை இடத்த.' சுயநலம் சிறிதும் இன்றி, பரிசுத்தமான அன்பு வாழ்க்கையை மேற்கொண்டவர்களே இத்தகைய கருத்துக்களை ஓர்ந்து வாழ்க்கையை நடத்த முடியும்.

சினம் பலவீனத்தின் அறிகுறி. அதனால் தீய பிறத்தலால், யார் மாட்டும் வெகுளியை மறத்தல் வேண்டும். 'செல்லா இடத்துச் சினம் தீது; செல்லிடத்தும் அதைவிடத் தீது வேறு இல்லை.' ஒருவன் தன்னைத் தான் காக்க வேண்டுமானால், சினம் காக்க. இங்ஙனம் ஆசைகளை அகற்றி, சினத்தை வென்று, அன்பு வாழ்க்கையை மேற்கொண்டவர்கள் ஐயம் நீங்கித் தெளிவார்கள். அவர்கள் 'எப்பொருள் எத்தன்மைத்தாயினும், அப் பொருளின் மெய்ப்பொருளை' அறிவார்கள். அதுதான் உண்மையான அறிவாகும். அத்தகையவர்களுடைய வாழ்க்கையில் இருள் நீங்கி, மகத்தான இன்பம் உண்டாகும்.

திருக்குறள் ஆசிரியர் இல்லற துறவறங்களின் தன்மையையும், அவை இரண்டிற்கும் ஏற்பப் பின்பற்ற வேண்டிய முறைகளையும் அருளிச் செய்திருக்கிறார். இவை தவிர உலகத்தில் வாழ்பவர் அனைவரும் தங்கள் வாழ்க்கையின் பல அம்சங்களிலும் பின்பற்ற வேண்டிய விதிகளையும் சொல்லியிருக்கிறார். இதில் பல உயர்ந்த உண்மைகள், மிக அற்புதமான வார்த்தைகளில் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கின்றன. கோடிக்கணக்கான மக்கள், சென்ற இரண்டாயிரம் ஆண்டுகளில், இவைகளைப் பயின்று பலம் எய்தி, ஒளிபெற்று, தங்கள் வாழ்க்கையின் சிக்கல்களைத் தீர்த்துக்கொண்டிருக்கிறார்

கள். எனவே அவைகளையும் ஒரு சிறிதளவாவது இங்கே குறிப்பிடுவது அவசியமாகும்.

அறிவாளிகள், 'எப்பொருள் யார் யார்வாய்க் கேட்பினும், அப்பொருள் மெய்ப்பொருளை'க் காண்பார்கள். அவர்கள் எதிர்காலத்தில் வரக்கூடியதை அறிவார்கள். உலகத்தின் போக்கையும் அவர்கள் உணர்வார்கள். அறிவோடு அமையாத தைரியம் அழிவைத்தான் உண்டாக்கும். எனவே, அஞ்ச வேண்டியதற்கு அஞ்சல் அறிவார் தொழில். அங்ஙனம் செய்யாமை பேதைமையாகும். அறிவாளிகள் உலகத்தோடு ஒட்டி வாழ்வார்கள். அவர்கள் தாங்கள் சொல்வதை அனைவரும் புரிந்து கொள்ளும்படி சொல்லி, மற்றவர்கள் சொல்லும் வார்த்தைகளின் உண்மைப் பொருளையும் அறிந்து கொள்ளுவார்கள். ஒருவனுக்கும் விரோதிகள் வெளியில் இல்லை. செருக்கு, சினம், சிறுமை, இவறல், மாண்பிறந்த மானம், மாணு உவகை – இவை தாம் ஒருவனுக்கு மட்டில்லாத கெடுதல் செய்யக்கூடிய விரோதிகள். இவைகளை அகற்றவேண்டும். இதற்காக, 'அறன் அறிந்து மூத்த அறிவுடையார் கேண்மையைத்' தேர்ந்து கொள்ளுதல் அவசியம். ஒருவனுக்குத் 'தம்மிற் பெரியார் தமரா ஒழுகுதல், வன்மையுள் எல்லாம் தலை.' அவர்கள் இவன் குற்றம் செய்யும்போது இடித்துரைப்பவர்களாக இருக்க வேண்டும். 'மாந்தர்க்கு இனத்து இயல்பதாகும் அறிவு.' ஆதலால் சிற்றினத்தை அஞ்சிப் பெரியோரைத் துணையாகக் கொள்ளவேண்டும்.

எடுக்கும் காரியங்களைத் தேர்ந்து எண்ணித் துணியவேண்டும். துணிந்த பின்பு பின்வாங்குவது இழுக்காக முடியும். ஆலோசிக்காமல் செய்ய ஆரம்பிக்கும் காரியங்கள் பலவீனத்தையும் தோல்வியையும் கொடுக்கும். காரியங்களில் சில செய்ய வேண்டியவை; சில செய்யக் கூடாதவை. 'செய்தக்க அல்ல செயக்கெடும்; செய்தக்க செய்யாமை யானும் கெடும், ஒரு காரியம் செய்யும்போது 'வினை வலியும் தன் வலியும் மாற்றான் வலியும் துணை வலியும் தூக்கி'ச் செய்யவேண்டும். இங்ஙனம் ஆலோசியாமல், வெறும் உற்சாகத்தால் மாத்திரம் தூண்டப்பெற்று,'உடைத்தம் வலியறியார் ஊக்கத்தின் ஊக்கி, இடைக்கண் முறிந்தார் பலர்.' காலத்தையும், இடத்தையும் தன் காரியங்களைச் செய்யவேண்டிய ஆட்களையும் தேர்ந்தெடுத்து, அழைத்துக் கொள்ளுதல் மிக அவசியமாகும் 'தேராது யாரையும் தேறற்க.' ஆனால் ஒருதரம் தன் துணைவர்களையும், அலுவலாளர்களையும் தேர்ந்தெடுத்த பின், அவர்களை நம்ப வேண்டும். 'தேரான் தெளிவும், தெளிந்தான்கண் ஐயுறவும் தீரா இடும்பை தரும்.' வேலையில் இறங்கும்போது நல்ல மனத் தெளிவு வேண்டும். பதற்றமும் கோழைத்தனமும் இருப்பவர்களுக்குத் தெளிவு உண்டாகாது. 'அன்பு அறிவு தேற்றம் அவாவின்மை இந்நான்கும், நன்கு உடையான்கட்டே தெளிவு.' தெளிவுடன் ஆலோசித்து, இதனை இதனால் இவன் முடிக்கும் என்று ஆய்ந்து, அதனை அவன்கண் விட வேண்டும். அப்படி ஒருவனிடம் ஒப்படைத்தபின், அவன் செய்யும் காரியங்களில் அதிகம் பிரவேசிக்கலாகாது.

மனித வாழ்க்கையில் ஊக்கந்தான் அனைத்திலும் முக்கியமானது. அது செல்வம், செல்வாக்கு, கல்வி முதலிய அனைத்தையும் அளிக்கவல்லது. அதுதான் உள்ளத் திட்பத்தையும் அளிப்பது. எனவே 'உள்ளமுடைமை

(ஊக்கமுடைமை)தான் எல்லா உடைமைகளிலும் சிறந்தது. 'வெள்ளத் தனைய மலர்நீட்டம்; அதுபோல் மாந்தர்தம் உள்ளத்து அனையது உயர்வு'. எனவே, 'உள்ளுவதெல்லாம் உயர்வு உள்ள' வேண்டும். இது எளிதான காரியம் அல்ல; மிகக் கடுமையான காரியந்தான். எனினும் விடாமுயற்சி யுடன் இருந்தால், 'அது தள்ளினும் தள்ளாமை நீர்த்து'. ஏனெனில், 'உள்ளம் இலாதவர் எய்தார் உலகத்து வள்ளியம் என்னும் செருக்கு'. 'எண்ணியார் திண்ணியர் ஆகப்பெறின் அவர்கள் எண்ணியவற்றை எண்ணியாங்கு எய்துவார்கள்'. வெறும் பேச்சில் ஈடுபட்டவர்கள் காரியங்களைச் சாதிக்க மாட்டார்கள். 'கலங்காது, வினைக்கண் துளங்காது, தூக்கம் கடிந்து' மேற்கொண்ட காரியத்தில் ஒருமுகமாய் ஈடுபடவேண்டும்.

'எண்ணித் துணிய வேண்டும்'. ஆனால் எண்ணிக் கொண்டே இருப்பதில் பயன் இல்லை. சூழ்ச்சி (ஆலோசனை)யின் முடிவு துணிவெய்தல். அத்துணிவு, 'தாழ்ச்சியுள் தங்குதல் தீது'. அவசரப்படுவதிலும் பயன் இல்லை. 'தூங்குக தூங்கிச் செயற்பால, தூங்கற்க தூங்காது செய்யும் வினை'. பொருள், கருவி, காலம், வினை, இடம் இந்த ஐந்து அம்சங்களையும் இருள் தீர எண்ணி அவற்றுடன் 'முடிவும், இடையூறும். முற்றியாங்கு எய்தும் படுபயனும்' பார்த்துச் செயல்வேண்டும்.

எனவே, திருக்குறள் போதிக்கும் வாழ்க்கைத் தத்துவம் மக்களுக்கு ஆண்மையையும் தைரியத்தையும் ஊட்டக் கூடியது. பழங்காலத்துத் தமிழ் மக்கள் கோழைகள் அல்லர். அவர்கள் மகத்தான ஒரு நாகரிகத்திற்கு அடிகோலியிருந்தனர். நீராவி இல்லாத அக்காலத்திலும், இயற்கையின் கடுமைகளை எதிர்த்து வென்று திரைகடலோடித் திரவியம் தேடிவந்தனர். அவர்களுடைய உள்ளத்தில் சோர்வும் பயமும் இல்லை. அவர்கள் நம்பிக்கை நிறைந்து, எதையும் செய்ய முடியும் என்ற உறுதியுள்ளவர்களாக இருந்தனர். இறைவனிடத்தில் நிறைய நம்பிக்கை இருந்தது. விதியை உணர்ந்தார்கள்; ஆனால் அதையும் வெல்லக்கூடிய சக்தி மனித உள்ளத்தில் அமைந்திருப்பதையும் அறிந்தார்கள். அவர்களுடைய வாழ்க்கைத் தத்துவம் மிகுந்த வலிமை உடையதாக இருந்தது. அவர்கள் நல்ல குடும்ப வாழ்க்கை வாழ்ந்தார்கள். அவர்களின் இல்வாழ்க்கை அன்பும் அறமும் பரிமளிப்பதாக இருந்தது. அவர்கள் நிறையப் பொருள் ஈட்டினார்கள். ஆனால், அதைக் கேவலம் தங்கள் சொந்த நன்மைக்காக மட்டும் பயன்படுத்தவில்லை. அறிவுள்ள அவர்கள் திரு அனைவருக்கும் பயன்பட்டது. எனவே அவர்களுடைய வாழ்க்கையில் பணிவு மிக்கு, இன்பம் நிறைந்திருந்தது.

தற்காலத்திய தமிழர்களாகிய நாம் மறுபடியும் இத்தகைய சிறப்பைப் பெற வேண்டுமானால், திருக்குறளில் சொல்லப் பெற்றிருக்கும் ஆற்றல் மிகுந்த, சக்தி நிறைந்த, வாழ்க்கைத் தத்துவத்தை மறுபடியும் நம் தினசரி வாழ்க்கையில் பின்பற்ற வேண்டும்.

# வள்ளுவரின் உளநூல் தத்துவம்

திரு க. ச. அருள்நந்தி
(உளநூற் பேராசிரியர், இலங்கை)

தமிழ் மக்கள் மிகப் பழைய காலத்திலேயே உயர்ந்த பண்பாடுடைய ராக விளங்கினர் என்பதற்குத் தமிழிலக்கியம் ஒன்றே போதுமான சான்றாகும். இற்றைக்குப் பன்னூறு ஆண்டுகளுக்கு முன்னர் இயற்றப்பட்ட தமிழ் நூல்களுள், மறைந்துபோயின போக, மற்றவை வெளிப்படையாகவும் மறை பொருளாகவும் எடுத்துரைக்கும் ஆழ்ந்த அருங் கருத்துக்களும் போற்றும் பேரிலட்சியங்களும் பழைய அக் காலத்தே தமிழ் மக்களது உள்ளத்தில் நடமாடின. ஆதலின் அதற்கு முன்னர்ப் பன்னூறல்ல, பல்லாயிரம் ஆண்டுகளாக அவர்களது உள்ளம் விரிந்தோங்கி வளர்ந்து வந்திருத்தல் வேண்டும். ஒரு சில நூற்றாண்டுகளில் அவ்வளவு சீரோங்கிய நிலையைப் போக்குவரவு வசதி அரிதாக இருந்த அக் காலத்தில் மக்கட் குழுவினர் எவரும் எங்கேனும் அடைந்திருக்க முடியாது என்பது எவராலும் மறுக்கமுடியாத உண்மை. பழந்தமிழ் நூல்கள் எவைதாம் மறைந்தொழிந்த போதிலும், ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வள்ளுவர் ஆக்கி அளித்த திருக்குறள் மாத்திரம் அழிந்துபோகாது விளங்குமளவும், அது தனி நின்று தன்னொப்பிலாப் பெருமையினால் தமிழர் பழமையையும் பண்டைப் பெருமையையும் எடுத்தோதும்.

பல துறைகளில் புகுந்து பல தமிழ்ப் பேரறிஞர் குறளினைத் துருவித் துருவி ஆராய்ந்து அதனகத்துள்ள அருங் கருத்துக்கள் பலவற்றின் உயர் மாண்பினைக் கண்டு அறிந்து வெளிப்படுத்தியுளர். இவ்வாராய்ச்சிகள் ஒரு புறம் இருக்க, மேலைத் தேசங்களில் இந்த நூற்றாண்டில் கலாவிற்பன்னர் களும் நிபுணர்களும் சர்வகலாசாலைகளிலும் ஆராய்ச்சி நிலையங்களிலும் புதுப்புது முறைகளை மேற்கொண்டு உளநூல் ஆராய்ச்சியில் இடையறாது ஈடுபட்டு உழைத்து வருகின்றனர். அதன் விளைவாக வெளிவந்து உலகுக்குப் பயன்படும் பல அரிய உளதத்துவ உண்மைகள் உண்டு. இவ்வாறு சமீப காலத்தில் எழுந்த மேனாட்டு உளநூற் கலையின் கொள்கைகள் வள்ளுவரது கொள்கைகளைத் தாக்குகின்றனவா அன்றித் தாங்குகின்றனவா என்பதை ஈண்டு ஆராய்வாம்.

வள்ளுவருக்குப்பின் பல நூற்றாண்டுகளாக மக்கள் விருத்தி அடைந்து மனித உள்ளத்தின் தன்மையையும், அது தொழிற்படும் பான்மையையும் மேன்மேலும் உணர உணர, அப் பழங்காலத்துத் தமிழ்ப் பெருமகன் தன் ஆழ்ந்த உளத்தொளி (Intuition)யில் ஐயமறக் கண்டறிந்த சிறந்த உளதத்துவ உண்மைகளை அடிப்படையாகக்கொண்டு, மக்கள் பயன்பெற்று உய்யுமாறு குறளென்னும் குன்றாப் புகழ்படைத்த கோதிலா நூலை ஆக்கினன் என்பது நன்கு புலனாகின்றது. அவ்வுண்மைகளுள் சிலவற்றை ஆராயப் புகுமுன்னர், இக்கால உளநூலின்படி மனிதனுடைய உடல் உள அமைப்பு எத்தன்மையதென்றும், அவை எவ்வாறு தொழிற்படுகின்றன என்றும் சுருங்கக் கூறுவாம்.

பிறக்கும்பொழுது விவேகம் (Intelligence), உள்ளுணர்வாற்றல் (Emotionality), சித்தம் (Will), மனோவேகம் (Mental Speed) என்னும் சிறுதொகையான பொது ஆற்றல் (General Abilities)களும், அண்மை ஞாபகம் (Immediate or Short distance Memory), சேய்மை ஞாபகம் (Delayed or Long distance Memory), மொழியாற்றல் (Verbal or Language ability), கைத்திறன் (Manual dexterity) என்பன போன்ற படித்தரமான சிறப்புத் தன்மையுடைய பல தொகுதியாற்றல் (Group Factor or Special ability)களும், இந்திரியங்கள் அடிப்படையாகவுள்ள எண்ணிறந்த நுண்ணுற்றல் (Specific abilities)களும், இயல்பூக்கங் (Instinctive urge)களும் அமைந்துள்ள உளம்படைத்தவர்களாகப் பிறக்கின்றோம். உடலைப் பொறுத்த அளவில் நரம்பு மண்டலம் (Nervous System), இந்திரியங்கள் (Sense Organs), தாதகச் சுரப்பிகள் (Endocrine Glands or glands of internal secretion) எனும் இம் மூன்று அம்சங்களுமே முக்கியமானவை. உடல் உளம் இரண்டையும் சார்ந்த இவ்வம்சங்கள் யாவும் உற்பத்திக் காலத்தில் கருவுருவாயிருந்து படிப்படியாக விருத்தி அடைந்து அதனதற்குரிய பருவத்தில் முதிர்ச்சி அடைகின்றன. உடல் உளம் என்று இவ்வாறு பிரித்துக் கூறுவதனுல் அவை இரண்டும் தனித்தனி வெவ்வேருகத் தொழிற்படுகின்றனவென்று கருதல் கூடாது. அவை ஒன்றுபட்டு ஒத்தியங்கும் தன்மையின. ஒன்றில் எழும் மாற்றம் எதுவும் மற்றதைத் தாக்கும். உடலில் மாற்றம் ஏதேனும் எழுமாயின் அதுகாரணமாக உளநிலையும் மாறும் என்பதைப் பொதுமக்கள் அநுபவ வாயிலாக அறிவர். உளநிலையும் அதில் எழும் மாற்றங்களும் உடலையும் தாக்கி வாழ்க்கையையும் மாற்றுகின்ற விதத்தைப்பற்றிய ஆராய்ச்சிக்கு அத்திவாரம் இட்டவர் அண்மையில் காலஞ்சென்ற பிரோயிட் (Freud) என்னும் யூத வைத்திய நிபுணராவர். அவர் காட்டிய வழிச்சென்று மேல் நாட்டில் எத்தனையோ உளநூலாராய்ச்சிகள் எழுந்தன. இவ்வாராய்ச்சிகளின் விளைவாக ஒரு பெரிய உளத்தத்துவம் வெளியாக்கப்பட்டது. அது யாதெனில், நீர்மேல் மிகச் சிறிய பாகமும் நீரினுள் மிகப்பெரும் பாகமுமாகச் சமுத்திரத்தில் மிதந்து செல்லுகின்ற பனிமலையை ஒத்து, மனித உள்ளத்தின் நனவுப் பாகம் (Conscious Mind) மிகச் சிறிதாகவும், எஞ்சிய அதீத பாகம் (Unconscious Mind) மிகமிகப் பெரிதாகவும் அமைந்துள்ளன என்பதே. இவ்வதீத மனத்துள் மறைந்துறையும் சிந்தனைகளும் விருப்பு வெறுப்புக்களும் நனவு மனத்தையும் உடல் நிலையையும் ஊன்றித் தாக்கி நாம் அறியா விதமாக நம் வாழ்க்கையை ஆளுகின்றன. இதனுல் இருபாற்பட்ட நம் உள்ளம் எவ்வளவுக்கு மேம்பாடு எய்துகின்றதோ அவ்வளவுக்கு நமது வாழ்க்கையும் சிறக்கும் என்பது புலனுகின்றது. உள்ளத்தைச் சுகநிலையில் வைத்திருக்கும் வழியைப்பற்றிச் சிந்திக்குமுன் அது எவ்வாறு தொழிற்படுகின்றது என்பதை அறிதல் அவசியம்.

உலகில் நாம் உதித்த காலந்தொட்டு உலகுடன் பழகப் பழகப் பற்றுக்கள் எழுந்தும் மறைந்தும் மாறுபட்டும் வருகின்றன. இயற்கையாக உள்ள தேவைகளாகிய உணவுப் பொருள்கள் முதலானவற்றிலும், தாய் தந்தையர் உடன்பிறந்தார் ஆகியோரிலும், விளையாட்டுப் பொருள்களிலும் பற்றுக்கள் முதற்கண் தோன்றிக் காலம் செல்லச் செல்ல வலிமையில் மாற்றமும்

தொகையில் பெருக்கமும் எய்துகின்றன. இவ்வாறு செறிகின்ற உளப் பற்றுக்கள் பெரும்பான்மையும் பல்வேறு தரமான வேற்றுமை உடையன வாக, ஒன்றோடு ஒன்று முரண்படும் இயல்பினவாக, இருக்கின்றன. சராசரப் பொருள்களில் தொடங்கும் இப்பற்றுக்கள் பல நாளடைவில் தம் சிறப்புத் தன்மையை இழந்து பொதுத் தன்மை உடையனவாகவும் ஒரு சில கருத்துப் பொருட்பற்றுக்களாகவும் விளைகின்றன. ஆரம்பத்தில் தோன்றும் பற்றுக்கள் நிலை அற்றன. இன்று ஓராடையை இச்சிக்கின்ற இளம் பெண் ஒருத்தி நாளையே அதை மறந்து அல்லது வெறுத்துப் பிறிதோர் ஆடையை விரும்பு வதும், நேற்று ஒரு புலவனை உவந்து ஆதரித்த மன்னன் இன்று அவனை வெறுத்து வேறோர் புலவன்மீது பற்றை வைப்பதும் நாம் அறிந்தன அன்றோ?

"அன்ன விசாரம் அதுவே விசாரம் அதுஒழிந்தால்
சொன்ன விசாரம் தொலையா விசாரம்நற் றோகையரைப்
பன்ன விசாரம் பலகால் விசாரம்இப் பாவிநெஞ்சுக்கு
என்ன விசாரம்வைத் தாய்இறை வாகச்சி ஏகம்பனே"

என்று பட்டினத்தடிகள் பாடியபோது பற்றுக்களின் வலிமையையும் நிலையாமையையும் நன்கு உணர்ந்திருந்தனர் என்பது வெள்ளிடை. எனினும் தாய்ப்பற்று, மகவுப்பற்று, பெண்ணாசை, மண்ணாசை என்பன போன்ற சில பற்றுக்கள் அதனதனுக்கு ஆதாரமாக உள்ள இயல்பூக்கத்தின் வீறுடைமை யாலும் சூழலின் வலிமையாலும் எளிதில் நீங்காதனவாய் நிலைத்து நிற்கும் தன்மையின. ஒத்த பல பொருள்களில் பற்று வைப்பதனால் அப்பற்று நாள டைவில் பொதுத்தன்மை எய்தும். நாய்க்குட்டி, பூனைக்குட்டி, ஆட்டுக்குட்டி, ஆன்கன்று முதலிய பிராணிகளில் ஒவ்வொன்றாகப் பற்றுவைக்கும் சிறுவன் ஒருவனது உள்ளத்தில் விலங்கினத்தின்பால் பொதுவானவோர் பற்று விளையக் கூடும். ஈற்றில் அப்பற்றே சீவகாருணியமாக, உயிருள்ள எல்லாவற்றுக்கும் பொதுவான மிகப் பரந்த உளச் சார்பாகவன்றி ஓர் இலட்சியமாகவும் விளைந்து விளங்கவுங் கூடும். பற்றுக்களானவை இவ்வாறு எண்ணிலவாய் விருப்புக்கள் (Desires and Interests), உளச்சார்புகள் (Attitudes or Dispositions), ஆன்ற பற்றுக்கள் (Sentiments), இலட்சியங்கள் (Ideals) என்ற பலதரப்பட்ட பற்றுந்தன்மை உடையனவாக உளத்தில் உற்பவித்தும் வலிமையில் கூடிக் குறைந்தும் மறைந்தும் நிலைநின்றும் மனிதத் தன்மை (Personality) அல்லது மனுஷத்துவத்தின் பேரம்சமாக விளங்குகின்றன. நமது வாழ்க்கை சீரும் சிறப்பும் எய்தவேண்டுமெனின், சுயாதீனமாக அத னதன் இலக்கைச் சென்று அடைய நம்மை ஏவும் குணம்படைத்த பற்றுக்கள் எல்லாம், தக்கவோர் நெறிதிறம்பாப் படைத் தலைவனது ஆணையின்கீழ் செம்மையாக அணிவகுக்கப்பட்டுப் போரில் வெற்றிபெற்று நாட்டினுக்குப் புகழையும் பொலிவையும் தேடுதல் ஒன்றுமே குறிக்கோளாகக் கொண்டு மிளிருஞ் சேனையைப்போன்று, மேம்பட்ட தலைப்பற்று ஒன்றின் முதன்மைக்கு இசைந்து அதன்கீழ் ஒன்றுபட்டு அதன் தகுதிக்கும் பண்புக்கும் இணங்க மட்டுப்படுத்தப்பட்ட ஆதிக்கத்தை மாத்திரம் பெற்று நெறி பிறழாது ஒத் துழைக்கும் உளப்படையாக அமைதல் இன்றியமையாதது. சேனையானது பெரிதாகவும் பல உறுப்புக்கள் கொண்டதாகவும் உள்ளதெனின், முதன்மை வகிக்கும் படைத்தலைவன்கீழ் உப தலைவர்களும் படித்தரமான ஆட்சியுடைய பல அம்சத் தலைவர்களும் வேண்டும். வாழ்க்கைப் போர்த் தக்கவாறு

புரிந்து ஒழுகி ஈற்றில் வெற்றிபெறுவதற்கு இயல்பாக நமக்கென்று அமைந்துள்ள இவ்வுளப் படையும் அத்தன்மையதே. அதுபோல இதுவும் சீராக ஒழுங்குபடுத்தப்படுதல் வேண்டும். தலைவனின் தன்மையானது சேனையின் போர்த்திறனை மட்டுப்படுத்துதல் போன்று, முதன்மைப் பற்றின் மேன்மைத் தரம் அதன்கீழ் அணிவகுக்கப்படும் ஏனைய பற்றுக்களின் படைவலிக்கும் ஒழுக்கப் பேற்றுக்கும் எல்லையிடும். ஆதலின் முதன்மைப் பற்றென்பது மற்ற எல்லாப் பற்றுக்களினும் சிறந்ததும் பரந்ததுமாக விளங்கி, நமது வாழ்வின் பெரும்பயனென்று எதைக் கருதுகின்றேமோ அதை நாம் பெறுதற்கு ஒப்பிலா உறுதுணையாகத் துலங்கவேண்டும். இவ்விலக்கணத்துக்கு இலக்கியமாக உள்ள பற்று எதுவென்று நிச்சயிப்பது உளநூலுக்கு அப்பாற்பட்டது.

மேற்கூறிய உளத்தத்துவங்களின் சாராம்சத்தை நம் முன்னோர் நன்கு உணர்ந்து அறம் பொருள் இன்பம் என்னும் முப்பாற்பட்ட பெரும் பற்றினைப் பேரிலட்சியமாகக் கொண்டு அதன் வழியொழுகி வாழ முயன்றனர். பண்டைத் தமிழ் இலக்கியம் இதைப் பறைசாற்றுகின்றது. எனினும் அறம் என்பதை முதன்மைப் பற்ருக முன்வைத்து, அதற்கு ஆழ்ந்த அருங் கருத்தை அமைத்து, முன்பின் எவரும் எடுத்து ஆளாத தனி முறையில் தெளிவு, திட்பம், நுட்பம் இவையெல்லாம் ஒருங்கு பொருந்தி இலங்க வரையறுத்து விளக்கிப் போந்த விழுமிய தக்கோர் தனிப்பெருந் தமிழ் மகனராகிய வள்ளுவனர். இதனை, அவர் யாத்தருளிய குறள் என்னும் நூலினைக் கற்றுணர்ந்தார் எவரும் மறுக்கக் கனவிலும் கருதார். அறமென்பது புறவொழுக்கமாகிய செயலளவில் மாத்திரம் அநுட்டிக்கப்பட்டு நில்லாது, அகவொழுக்கம் ஆகிய சிந்தனைக்கும் அது உரியதாதல் வேண்டும். ஏனெனில், அகத்தூய்மை இல்லாதவிடத்தும் அறச்செயலின் வடிவில் தோற்றும் செயல் நிகழக் காணலாம். அகத்தூய்மை உண்டாயின் புறவொழுக்கம் தூயதாகவே தப்பிலாது அறத்தின் வழி நிகழும். "மனத்துக்கண் மாசில ளுதை லனைத்தறன்" என்று வள்ளுவர் இக்கருத்தினை நயம்படக் கூறிய கூற்றின் மாண்பினுக்கு ஒப்பாவதை யாண்டும் காண்பது அரிது. அறன் என்பது "தூய மனத்தனுதல்" என்னும் பொருளை நேராக எடுத்தோதாது, "மனத்துக்கண் மாசிலனுதல்" என்று ஏன் எதிர்மறையாகக் கூறிப் போந்தனரோ எனின், கூறுதும். பஞ்சேந்திரியங்களை உடைய உடலோடு தொடர்புடைய மனித உளத்துக்கு, "அழுக்காறு அவா வெகுளி இன்னுச்சொல்" என்ற மாசுகள் இயல்பாகவே உள்ளன. அம்மாசுகள் நீங்கிய நிலையில் மனம் தொழிற்படுமேல் அந்நிலையே அறநிலையாகும். ஆதலின் தூய மனத்தனுவதற்கு மாசில் மனத்தனுதல் வேண்டும். தாவர வித்தானது முளைத்து விருட்சமாக வளர்ந்து ஓங்குவதற்கு வாய்ந்த புலமும் உரமும் வேண்டப்படும். இஃது இங்ஙனமாதலின், முதன்மைப் பற்ருகிய அறப்பற்று முளைத்து எழுந்து வேரூன்றி மேலோங்கி வளர்ந்து விளங்குவதற்கு இன்றியமையாது வேண்டப்படும் பொருட்பற்று இன்பப்பற்று என்னும் இருபெரும் பற்றுக்களினது தன்மையையும், அறப்பற்றேடு அவை முரண்படாது ஒத்து ஒளிருமாற்றையும் ஆசிரியர் ஆய்ந்து உரைத்துள்ளார்.

விவேகம் என்பது நம்முடன் பிறந்த பொது ஆற்றல். அது ஆளுக்கு ஆள் அளவு வேறுபட்டு விளங்குகின்றது என்றும், அகவொழுக்க நிகழ்ச்சிகள் எல்லாவற்றிலும் அதனதனுக்கு வேண்டிய மட்டில் தொழிற்படுகின்றது

என்றும் இக்கால உளநூற்கலை சொல்லும். இதனை ஆசிரியர் நன்கு உணர்ந்திருந்தன ரென்பது, "மதி நுட்பம்" என்னும் மிகப் பொருத்தமான பெயரை அதற்கு அவர் அழகுற இட்டு,

"மதிநுட்பம் நூலோ டுடையார்க் கதிநுட்பம்
யாவுள முன்னிற் பவை"

என்று அதனோடு நூலறிவையும் உரைத்தவாற்றால் உவந்து நாம் உணரக் கிடக்கின்றது.

"அரம்போலுங் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
மக்கட்பண் பில்லா தவர்"

என்ற இடத்தும் (மனக்) கூர்மையென்று விவேகத்தையே சுட்டி, பண்புடைமை இன்றேல் விவேகத்தினால் பயன் யாதுமின்று என விளக்கினர். இவ்வுண்மையை மிகச் சமீப காலத்தில்தான் மேல் நாட்டு உளநூற்கலையுலகு நன்கு உணர்ந்து அங்கீகரித்துளது. மாணவரை அவரவர் ஆற்றல்களுக்குப் பொருந்தத் தெரிந்தெடுத்து, வெவ்வேறு விதமான கல்வியை அவர்களுக்குக் கற்பித்தல் வேண்டுமென்னும் புத்தியக்கம் எழுந்ததும், பொதுவாற்றலாகிய விவேகத்தையும் சிறப்பாற்றல்களாகிய மொழித்திறன், கணிதத்திறன், வெளித் தொடர்பு காண்திறன் (Ability to see spatial relations, Practical ability) ஆதியனவற்றையும் மாத்திரம் அளந்தறிந்து அவர்களை வகுத்தல் இழுக்குடைய முறையெனக் கண்டனர். கண்டதும், மாணவரது பண்புடைமை முதலிய குணங்களையும் அளந்தறிய முடியாதவிடத்து மதிப்பிட்டேறும் அக் குணங்களுக்கும் இணங்க அவர்களை வகுத்தல் வேண்டுமென்று உணர்ந்து, சேர்க்கைப் பதிவு (Cumulative record) நிறுவுதல் என்னும் நலஞ்சார் புது முறையினைப் பாடசாலைகளில் அண்மையிற் புகுத்தலாயினர். பாலன் பாடசாலைக்கு வந்த நாள் தொடங்கி ஆங்கு இருந்து அவன் வெளியேறுமட்டும் கிரமமாகவும் கவனமாகவும் அவனது பிறவிச் சொத்தாகிய ஆற்றல்களோடு, பிறவிக் குணங்களை ஆதாரமாகக் கொண்டு அவன் கல்விக் கழகங்களில் தேடிய தேட்டமாகிய நூலறிவை மாத்திரமன்றிச் சூழல் முழுமையிலுமிருந்து பெறும் அநுபவங்களால் உருப்படும் குணுகுணங்களையும் அளந்தறிந்து, அல்லது அளந்தறிதற்கேற்ற கருவிகளான பரீட்சைகளை ஆய்ந்து, ஆக்கப்பட்டிலாத விடத்துக் குணக்குறிகளைக் கூர்ந்து கவனித்துக் குணங்களை மதிப்பிட்டுப் பெறும் அளவுகளையும் மதிப்புக்களையும் ஆண்டுதோறும் தவறாது பதிந்துவர, வளர்ந்து வரும் பதிவுத் திரட்டானது, அன்று வள்ளுவர் வகுத்த நன்முறையின் விரிவுரை அன்றோ?

சித்தம் என்னும் பிறிதோர் பொது ஆற்றலைப் பற்றி வள்ளுவர் கொண்டுள்ள கருத்து,

"வினைத்திட்ப மென்ப தொருவன் மனத்திட்பம்
மற்றவை யெல்லாம் பிற"

"எணைத்திட்ப மெய்தியக் கண்ணும் வினைத்திட்பம்
வேண்டாரை வேண்டா துலகு"

என்பவற்றால் நன்கு விளங்குகின்றது. ஒருவன் புரியும் வினை எதுவும் திண்மை உடைத்தாய் முடிவுபெற வேண்டுமெனின் அவனிடத்தே மனத்திட்பம் விளங்கவேண்டுமெனவும், வினைத்திட்பத்தை விரும்பாதாரை உயர்ந்

தோர் மதியாரெனவும் உரைத்து மனத்திட்பத்தைச் சிறப்பித்தமை, அதற்கு ஆதாரமாக உள்ள அந்தக்கரணமாகிய சித்தத்தின் வலிமையின் அளவே ஆம் ஒழுக்கத்திண்மை என்பதை விளக்குகின்றது. சித்தம் சுயாதீனமாகத் தொழிற்படுகிறதா அல்லவா என்னும் வினவுக்கு இக்கால உளநூற் கலைஞர் மூவேறு வகையில் விடையிறுப்பர். பதிலியக்கவாதிகள் (Behaviourists) என்னும் அமெரிக்கக் குழுவினர் (American school), சித்தம் மாத்திரமன்று, மனம் என்பதுதானும் முயற்கோடு எனவும், அன்றேல் மனம் என்ற ஒன்று உள்ளபடி உண்டெனினும் மனித ஒழுக்கத்தை விளக்கவந்த உளநூற் கலைக்கு அது அநாவசியம் எனவும் கொண்டு, மனிதனை விலங்கினத்தோடு மயங்க வைத்துளர். வேறொரு சாரார், உண்மை எதுவாயின் என், உளநூற் கலையைப் பொறுத்த மட்டில் சித்தம் என்ற ஒன்று உண்டு எனவும், பிரதிபிம்பச் செயல்கள் (Reflex actions) ஒழிந்த எம் பிறசெயல்கள் எல்லாவற்றிலும் அது பங்குபெறுகின்றதெனவும் கொள்ளுதல் போதுமானதென்று கூறுவர். பிரேயிட்டைப் பின்பற்றும் இன்னும் வேறொரு சாராராகிய சங்கற்ப வாதிகள் (Determinists), சித்தத்துக்குச் சுயாதீனமே இல்லையென்று வாதிப்பர். வள்ளுவருடைய கொள்கையைப் பிரேயிட்டின் கொள்கை ஒத்திருப்பதை,

> "ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
> சூழினும் தான்முந் துறும்"

என்னும் பாவொடு முடிகின்ற ஊழியற்பாக்கள் பத்தும் பகரக் காணலாம். "மற்றொன்று" என்பதனால் இங்குக் கருதுவது சித்தமும், அருள் வைத்து அன்பர் ஆற்றுகின்ற ஊழோடுறழும் கருணைச் செயல்களுமாம். மருந்தும் இவற்றினுள் அடங்கும். விவேகமாதிய ஆற்றல்களை ஏன் குறிக்கின்றதில்லையோவெனின் அவற்றை வழிப்படுத்துவது சித்தமேயாதலின் என்க. மனமானது நனவு நிலைக்கு அப்பாற்பட்ட அதீத நிலையிலும் நின்று தொழிற்படும் இயல்புடையதென்னும் பிரேயிட்டாதியோரின் விசித்திரமான நவீனக் கொள்கை அவர்களது சங்கற்பவாதக் கொள்கையினுள் அடங்கும். எதையேனும் எய்துவதற்கோ தவிர்ப்பதற்கோ எண்ணி நாம் விரும்புற்றால் என், முயன்றாலும் என், நமது சிந்தனையும் சித்தமும் நனவுக்கு எட்டாது நின்று தொழிற்பட்டு ஊழின் வழியே செல்லும் நம்மைத் தெருட்டுகின்றது என்னும் நுண்கருத்து, "மற்றொன்று சூழினுந் தான்முந் துறும்" என்னும் வள்ளுவர் கூற்றினுள் மறைபொருளாகப் புதைந்து கிடக்கின்றது. இவ்வாறு இவ்விரு கொள்கைகளும் ஒற்றுமை உடையனவாயினும், மறுபிறவி உண்டு என்றும், முன் வினைப்பயனின் விளைவே இப்பிறவி என்றும் பிரேயிட் கொள்ளாதவராதலினால் பெரியதோர் வேற்றுமையும் உடையன. அஃது யாதெனின், பிரேயிட் கண்ட அதீத மனத்தின் உள்ளீட்டுக்கு இப்பிறவி எடுத்த பின் நாம் செய்யும் செயல்கள், சிந்திக்கும் சிந்தனைகள், அநுபவிக்கும் அநுபவங்கள் என்பனவற்றால் எல்லை வகுக்கப்படும் என்பதே. ஓர் இறைவனும் எண்ணிறந்த ஆன்மாக்களும் உண்டென்பதும், ஆன்மாக்கள் பிறப்பனவும் இறப்பனவுமாய் உழலுகின்றன என்பதும் இப்பிரபஞ்சத்து இயற்கையை விளக்கும் மூலாதாரக் கொள்கைகள் என்று கண்டு, அவற்றை வகுத்து ஒளிரும் தமிழ்ப் பண்பாட்டில் திளைத்துத் தெளிவுற்ற வள்ளுவர் உளத்தில் பிரேயிட் கட்சியாரின் குறுகிய இக்கொள்கைக்கு இடம் ஏது?

உள நலத்தையும் வாழ்க்கைச் சீரையும் விளக்க வந்த வள்ளுவர் உள நலத்துக்கு உடல் நலனும் வேண்டப்படும் என்பதையும் உணராதிருக்க வில்லை;

> "இழிவறிந் துண்பான்கண் இன்பம்போல் நிற்கும்
> கழிபே ரிரையான்கண் நோய்"

என்றதனால் உடல் நலன் வேண்டுமாயின் (அருந்தியது அற்றபின் அளவு அறிந்து மாறுபாடு இல்லாத உண்டியை) இழிவறிந்து மட்டாக உண்ணல் வேண்டுமென்றும், அவ்வாறு உண்டால் இன்பம் உண்டென்றும் கூறிப் போந்தனர். உள நலம் இன்றேல் இன்பம் தோற்றவும் நிலை நிற்கவும் மாட்டாதாதலின் உள நலத்துக்கு உடல் நலம் வேண்டும் என்பதும் வள்ளுவர் கருத்தேயாம். உள நலத்தால் உடல் நலம் சிறக்கும் என்பதையும், உளபங்கம் ஏதேனும் வந்து எய்தினல் உடல் அதனல் தாக்கப்படும் என்பதையும் வள்ளுவர் ஏன் எடுத்துக்கூற வில்லையோவெனின், உடல் நலமானது அதன் அளவில் வேண்டப்படுவதாகாமல் உள நலத்துக்கும் வாழ்க்கை நலத்துக்கும் துணையாக வேண்டப்படும் ஆதலினேயாம். மனத்தூய்மையை மறந்து உடல் நலத்தைத் தனியே விரும்பிப் பெறுவோர் அதனல் பெறும் இன்பத்தை இன்பம் எனக் கொள்ளுதல் வள்ளுவர்தம் முற்றிய தமிழ்ப் பண்பாட்டோடு இணங்காது என்பது தெளிவு.

மேல்நாட்டு உளநூற் கலை சென்ற ஐம்பது ஆண்டுகளுக்குள் இன்றுள்ள விருத்தியை யெய்திச் சிறந்து ஓங்கியதற்குக் காரணம் சாத்திரீய முறை (Scientific method)யை அது பின்பற்றியதே யாகும். இக்கலையை இன்றளவில் இவ்வளவுக்கு வளர்த்து உயர்த்தியது மாத்திரம் அல்ல, இன்னும் எத்தனையோ மடங்கு உயர்த்தக் கூடிய தன்மையும் வாய்ந்த இச் சாத்திரீய முறையே அதற்கு எல்லையும் வகுக்கும். இம்முறையை அநுட்டித்துப் பொறி வாயிலாகப் பெற்ற சாதனங்களை (Data) ஆதாரமாகக் கொண்டு, அநுமான அளவையினல் ஊகித்து அறியும் அறிவு தீர்க்கமான நேரறிவு ஆகமாட்டாது. அன்றிப் புறப் பொருள்களையும் நிகழ்ச்சிகளையும் பற்றி ஆராய்கின்ற பௌதிக சாத்திரங்களைப் போல் அல்லாது அகப்பொருள்களையும் நிகழ்ச்சிகளையும் பற்றி ஆராயும் உள நூலானது, சாத்திரீய முறையை ஒட்டி நிற்குமளவில் உளத்தை மக்கள் விலங்குகளின் புறச் செயல்களிலும் குறிகளிலுமிருந்து அநுமானித்து அறியுமன்றி நேராக அறியமாட்டாது. உள்ளதை உள்ளபடி உள்நோக்கி அறியவேண்டுமாயின் உள்ளொளியில் உளத்தை நோக்கும் ஆற்றல் வேண்டும். உள்ளொளி எவ்வளவுக்குப் பிரகாசிக்கின்றதோ அவ்வளவுக்கு உள் இரகசியங்கள் வெளியாகும். வள்ளுவரிடத்தே இவ்வுள்ளொளி மிக்க பிரபையோடு விளங்கிற்று என்பதற்கு வெளிப்படையாகவும் குறிப்பாகவும் ஐயப்பாடில்லாது அவர் எடுத்தாண்ட உளத் தத்துவ உண்மைகள் சாட்சி பகருகின்றன என்பது மேற்காட்டிய ஒரு சிலவற்றல் நன்கு விளங்கும்.

# திருக்குறளின் தத்துவம்

திரு டாக்டர் டி. எம். பி. மஹாதேவன், எம். ஏ., பிஎச். டி.
(தத்துவப்பேராசிரியர், பல்கலைக்கழகம், சென்னை)

திருக்குறள், உலகப் பேரிலக்கியங்களான பகவத்கீதை, தம்மபதம் ஆகியவற்றுடன் வைத்து எண்ணக்கூடிய பெருமை வாய்ந்த நூல். அவற்றைப் போலவே, திருக்குறளும் பல்வேறு கொள்கையினராலும் பின்பற்றப் படுகிறது. சமணரும், பௌத்தரும், வைணவரும், சைவரும் தம்மவரெனத் திருவள்ளுவரை உரிமை கொண்டாடிப் போற்றுவதே திருக்குறளின் பொதுமைக்குச் சான்றாகும். ஆன்மிக உலகில் குறுகிய மனப்பான்மை கொள்வது திருக்குறளின் போக்குக்குப் புறம்பு. காலதேச வரையறைக்குட் பட்ட உலகத்தின் குறைகளை நீக்கி, மனிதன் முழுநிறைவு எய்தவேண்டும் என்பதே திருக்குறள் மக்களுக்கு அறிவுறுத்தும் செம்பொருள்.

திருக்குறளின் மையக்கருத்து யாதாயினும், ஒரு குறிப்பிட்ட தத்துவக் கொள்கை அல்ல; அக்கருத்து, நல்வாழ்வு என்பது எது என்பது பற்றிய தாகும். நல்வாழ்வு என்பது நல்லொழுக்க வாழ்வு; அறத்தின் அடிப்படையில் அமைந்த வாழ்வு. இந்தியத் தத்துவ மரபு நால்வகை உறுதிப்பொருள்களை மனித வாழ்க்கையின் பயனாகக் கருதுகிறது. அவை அறம், பொருள், இன்பம், வீடு என்பனவாம். இவற்றுள் அரசியல் உள்ளிட்ட பொருளும், இன்பமும் முடிந்த பயன்கள் அல்ல. இவை நல்லொழுக்கத்திற்குக் கட்டுப்பட வேண்டும். அறவாழ்வு, வீடுபேற்றுக்கு–ஆன்மிக உரிமை வாழ்வுக்கு–வழிகோலுகிறது. திருவள்ளுவர் இயற்றிய நூல் முறையே அறம், பொருள், இன்பம் என்பவற்றைப்பற்றிப் பேசுகிறது. இதனால் திருவள்ளுவர் மனிதனுடைய இறுதிக் குறிக்கோளான வீட்டைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை யென்று கொள்ளக்கூடாது. வீடுபேறும், நிறைவு எய்தலும் மனித வாழ்க்கையின் முழுப்பயன் என்று வள்ளுவர் கூறாமல் இல்லை. உலக இன்பம், பொருட் செல்வம் ஆகியவற்றைப் பெறவும் நாட்டை ஆளவும் ஏற்ற வழிவகைகளை அவர் கூறுகின்றார். எனினும் அவருடைய தீர்ந்த நோக்கம், நல்வாழ்வுக்கு வழிகாட்டி அதன் மூலமாக மாறி மாறிப் பிறக்கும் தளையினின்றும் விடுதலை அடைய மக்களுக்குத் துணைபுரிவதே.

இதை விளக்குவதற்காக நாம் திருக்குறளைப் பகவத்கீதையோடு ஒப்பிட்டுப் பார்க்கலாம். பகவத்கீதையானது, உபநிஷதங்கள், பிரஹ்ம சூத்திரம் ஆகியவற்றோடு சேர்ந்து வேதாந்தத்திற்கு அடிப்படையான பிரஸ்தானத்ரயத்துள் ஒன்று என்று கருதப்படுகிறது என்பது உண்மைதான்; தத்துவ விசாரணை பற்றிய அறிவுரைகள் பகவத்கீதையில் இருக்கின்றன என்பதும் உண்மைதான். என்றாலும், பகவத்கீதை, தன்னலமற்றதும் கடப்பாட்டுணர்ச்சியோடு கூடியதுமான தொண்டினைத்தான் வற்புறுத்து கின்றது. பகவத்கீதையின் உள்ளீடான கருத்து நிஷ்காம கருமம்; தன்னலமற்ற தொண்டு. இவ்வாறே, பொது மக்களுக்கு உரிய திருமறையாக உள்ள திருக்குறளும் நல்வாழ்வுக்கு வேண்டியவற்றையே பெரிதும் வற்புறுத்து

கிறது; தத்துவக் கொள்கைகளை அல்ல. ஆனால் தத்துவக் கொள்கைகளும் இந்நூலில் இடம் பெறாமல் இல்லை. தத்துவத்தை நேராக விளக்கவில்லை யாயினும், திருக்குறள் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

"மெய்யுணர்தல்" என்ற முப்பத்தாறும் அதிகாரத்தில் தத்துவ ஆராய்ச்சியின் உயர்வைப் பற்றித் திருவள்ளுவர் பேசுகிறார். மெய்ப்பொருள் எது என்று தெரிந்து கொள்ளுவதுதான் தத்துவ விசாரணையில் முதல் வேலை. மெய்ப்பொருள் எது என்றும், தோற்றம் எது என்றும் சொல்லக் கூடியவனே தத்துவஞானி. இவற்றைப் பகுத்தறியாதிருப்பதற்குக் காரணம் அறியாமை. அறியாமையின் ஆட்சிக்கு உட்பட்டவர் மெய்யல்லாததை மெய்யெனத் தவறாகக் கொள்ளுகின்றனர். இதனால் பிறப்பு, இறப்பு என்னும் சுழலில் சிக்குகின்றனர். மெய்ப்பொருளைத் தெளிவாகத் தெரிந்து கொண்டவரோ, பிறப்பு இறப்புக்களினின்றும் விடுபட்டு மோட்சத்தை அடைகின்றனர். அவர்களை ஐயமும் திரிபுணர்ச்சியும் தாக்குவதில்லை. ஐம்புலங்களின் வழியே கிடைக்கும் அறிவையே நிறைவானதாகக் கொள்ளுவோர் யாதொரு நன்மையும் அடைவதில்லை. புலன்வழியே கிடைக்கும் அறிவால் பொருள்களின் உண்மை நிலையைத் தெரிந்து கொள்ள முடியாது. புலனறிவு, தோற்றம் என்னும் மாயவலையில் உண்மையை மறைத்து விடுவதால் இவ்வறிவு மயக்கத்தை உண்டுபண்ணுகிறது. பலவற்றில் ஒன்றையும், மாறுதல்களுக்குள்ளானவற்றில் மாறாததையும், நில்லாதனவற்றில் நிலைபேறானதையும் காண்பதே மெய்யறிவு. விசாரணை மூலமாகத்தான் மெய்யறிவைப் பெறலாம். இவ்விசாரணையில் மூன்று படிகள் உண்டு. அவையாவன: கேட்டல், சிந்தித்தல், தெளிதல்.

மெய்யறிவை நாடுவோன் ஓர் ஆசிரியனை அடுத்து, உண்மை எது என்று முதலில் தெரிந்துகொள்ள வேண்டும். பிறகு, தான் கேட்டறிந்ததைப்பற்றிச் சிந்திக்க வேண்டும். உண்மை எது என்று தானாக நினைத்துப் பார்த்து உறுதி பெறாமல், கேட்டதையெல்லாம் உண்மை என்று நம்பிவிடுவதால் மெய்யறிவு ஏற்படாது. உரை அளவையால் (சப்தப்பிரமாணத்தால்) அறிந்ததைத் தன் அறிவுகொண்டு ஆராய்ந்து தெளிவடையவேண்டும். இதனுடனும் நின்றுவிடக் கூடாது. வெறும் அறிவின் துணைகொண்டு உண்மையைத் தெரிந்து கொள்ளுவதும் ஓரளவுக்கு நன்மை தரும் என்பது உண்மைதான். ஆனால் இவ்விசாரணையின் முடிவு, அறிவால் தெரிந்துகொண்ட உண்மையை உள்ளுணர்வால் நேரிடையாக உணர்ந்து, வாழ்வையே உயர்வடையச் செய்து புதுவாழ்வு எய்துவதாகும். இந்த அநுபவம் தியானத்தால் ஏற்படுவது. சாட்சாத்காரம் ஏற்படும்போது அறியாமை அழிந்து விடுகிறது. மருளுணர்வு என்ற தூக்கத்தினின்றும் விழித்து எழுகிறோம். மெய்யுணர்வு எய்தியபோதுதான் சம்சாரம் ஏற்படுத்திய அடைப்பாசாரங்களை ஒழிக்க முடிகிறது. யாவற்றிற்கும் அடிப்படையான மெய்ப்பொருள் எது என்று உணர்ந்தவனே கர்மத்தளையினின்றும் விடுபடுகிறான். கர்மத்தால் உண்டாகும் துன்பம் அவனை வருத்துவதில்லை. அவனுக்கு விருப்பு, வெறுப்பு, மருளுணர்வு இல்லை. எனவே சம்சாரம் என்ற நோய் அவனைப் பீடிப்பதில்லை. உடலோடு இருக்கும்போதே அவன் விடுதலை பெற்றவனாகிறான்; அதாவது அவன் ஜீவன்முக்தனாகிறான்.

இதுவரையில் கூறப்பெற்ற முப்பத்தாறும் அதிகாரத்தின் பொழிப்புரையில் திருவள்ளுவர் இந்தியத் தத்துவ சாஸ்திரத்தின் சாராம்சத்தைத் தந்துள்ளார் என்று காண்கிறோம். தத்துவ விசாரணை, பொருள்களின் தோற்றத்தைக் காண்பதோடு அமைந்து விடுவது அன்று. தோற்றங்களைக் கடந்து சென்று அவற்றின் அடிப்படையாக உள்ள உண்மையை அறிய முயலுகிறது. பொருள்களின் வெளித்தோற்றத்தைக் காண்பதோடு அமைந்து விடுபவன் தத்துவ ஞானி யாகமாட்டான். புலனறிவும், அதன் துணைகொண்டு நிகழும் தர்க்க விசாரணையும் உலகத்திலுள்ள தனிப்பட்ட பொருள்களைப்பற்றிய அறிவைத்தான் தரும். மெய்ப்பொருளைப் பற்றிய உணர்வு பெறுவதற்கு மகான்களின் அநுபூதியை நாடிச் செல்ல வேண்டும். அவர்களுடைய அறிவுரையே தத்துவ விசாரணையின் முதல் படியாக இருக்கவேண்டும். ஆனால் தத்துவம் பயிலும் மாணவன், அவர்கள் கூறுவதைக் கண்மூடித் தனமாக ஒப்புக்கொள்ள வேண்டும் என்ற கட்டாயம் கிடையாது. மாணவன் தானாகவே ஆராய்ந்து உண்மையைக் கண்டறிய வேண்டும். தத்துவ விசாரணையின் நோக்கம் மனத்திற்கு மட்டும் திருப்தி உண்டாக்கவேண்டும் என்பது அல்ல. அதன் நோக்கம் அமரத்துவம் அடைய வேண்டும் என்பதே. பிறப்பு இறப்பு என்னும் சுழல்தான் ஆன்மாவைக் கட்டுப்படுத்திச் சிறுமையுறச் செய்கிறது. உள்ளதை மறைத்து இல்லாததைத் தோற்றுவிக்கும் அறியாமையால் இந்த விளைவு ஏற்படுகிறது. முழுமுதற் பொருளை உள்ளுணர்வால் உணர்ந்து கொள்ளும்போது அறியாமை மறைந்துவிடுகிறது. ஆன்மா, சிறுமை என்கிற பந்தத்தினின்றும் விடுதலை பெறுகிறது.

விடுதலையைத் தருகின்ற முழுமுதற் பொருள் எது என்ற கேள்விக்குப் பல விடைகள் கூறப்படுகின்றன. இவ்விடைகளை இருவகைச் சம்பிரதாயங்களுள் அடக்கலாம். அவை சகுணமார்க்கம், நிர்க்குணமார்க்கம் என்பவை. சகுணமார்க்கம், பரம்பொருளை உலகத்தின் தோற்றம், நிலைபேறு, மறைவு என்பவற்றின் காரணமான கடவுள் எனக் கொள்கிறது. எல்லா நற்குணங்களுக்கும் உறைவிடமானவர் கடவுளே. அவரே தம் அருளால் உயிர்களை உய்விக்கிறார். நிர்க்குண மார்க்கம் பரம்பொருளை நிர்க்குணப் பிரம்மமாகவும், இரண்டற்ற தனி முதலாகவும், முழு உண்மையாகவும் கொள்ளுகிறது. ஏனைய ஹிந்துமத சாஸ்திரங்களில் உள்ளபடியே திருக்குறளிலும் இவ்விருவகைக் கொள்கைகளையும் காணலாம்.

திருக்குறளின் முதல் அதிகாரமே கடவுள் வாழ்த்துத்தான். எழுத்துக்களுக்கு அகரம் எப்படியோ அப்படியே உலகத்திற்குக் கடவுளும். அவரே உலகத்திற்கு அடிப்படையும் முதலும் முடிவும் ஆவார். அவரிடத்தில் பொய்மை இல்லை. அவர் அறிவு எப்போதும் மெய்யறிவு. அவர் அனைத்தையும் அறிவார். அவர் அறிவுமயமானவர். அவர் எங்கும் இருப்பவர் எனினும் நல்லவர்கள், அறிவுடையோர் ஆகியவர்களின் இதயத்தாமரையில் இருப்பதாகப் பாவிக்கப்படுகிறார். தீயனவற்றைவிட நல்லனவற்றிலேயே அவர் மிகுதியாக விளங்குகிறார். எனினும் அவருக்கு விருப்பு, வெறுப்பு ஒன்றும் இல்லை. அவர் எல்லாவற்றிலும் ஒன்றாகவே இருக்கிறார். உயர்ந்தது, தாழ்ந்தது என்ற வேறுபாடு அவருக்கு இல்லை. விருப்பு, வெறுப்புப் போன்ற உணர்ச்சி வேகங்கள் அவருக்கு இல்லை. அவருக்கு நண்பர்களும் இல்லை, பகைவர்களும் இல்லை. புலன் விழைவுகள் அவருக்குக் கிடையா.

ஏனெனில் அவரே எல்லாம் நிறைந்த பொருள் ஆவார். அவரிடத்தில் குறைகள் இல்லை; அவர் மாசற்றவர். அவருக்கு ஒப்பாக ஒன்றும் இல்லை. ஏனெனில் அவரைத் தவிர வேறொரு மெய்ப்பொருள் கிடையாது. அவர் அறக்கடல்; அறவாழி அந்தணர்; தர்மத்திற்கு மூலமானவர். அவர் பின் வரும் எண்குணங்கள் உடையவரென்று சாஸ்திரங்கள் கூறுகின்றன: (1) தன்வயத்தனுதல், (2) தூய உடம்பினனுதல், (3) இயற்கை உணர் வினனுதல், (4) முற்று முணர்தல், (5) இயல்பாகவே பாசங்களின் நீங்குதல், (6) பேரருள் உடைமை, (7) முடிவிலாற்றல் உடைமை, (8) வரம்பில் இன்பம் உடைமை.

கடவுள் உலகத்திற்குத் தலைவராவார். அவரே உலக அமைப்புக்குக் காரணம்; அவரே அறக்காவலர்.

மெய்ப்பொருளை நிர்க்குணப் பிரம்மமாகவும் கொள்ளலாம். சற்றுமுன்னர் விளக்கப்பட்ட மெய்யுணர்தல் என்ற அதிகாரத்தில் நிர்க்குணத்தைக் குறிக்கும் மொழிகளையே திருவள்ளுவர் பெரிதும் ஆளுகிறார். முழுமுதல் எனப்படுவது உள்ளது (பொருள்); மெய்யாகவே உள்ளது (மெய்ப்பொருள்); நல்லதாக உள்ளது (செம்பொருள்). தத்துவ விசாரணையில் முடிவாகப் பார்க்கும்போது இருப்பு (பாவம்) என்பதற்கும், உண்மை (சத்) என்பதற்கும் வேற்றுமை இல்லை. பரம்பொருள் உண்மை (சத்), அறிவு (சித்), இன்பம் (ஆனந்தம்) ஆக உள்ளது. அதனுடைய தோற்றமே வியவகார உலகம்.

திருக்குறள் வெறும் தத்துவ விசாரணை நூல் மட்டும் அல்ல வாகையால் பிரபஞ்ச இயல்போன்ற விஷயங்களைப் பற்றிய கோவையான ஆராய்ச்சியை அங்கே காண்பதற்கில்லை. முப்பத்தேழாம் குறளில், உலகம் சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்ற ஐந்து தன்மாத்திரைகளினுல் ஆனது என்ற கருத்துக் கூறப் பெறுகிறது. ஆன்மாவைப்பற்றி ஹிந்துக்கள் கொண்டுள்ள கொள்கையே திருக்குறளில் காணப்படுகிறது. ஜீவாத்மா சம்சாரப்பிரவா கத்தில் அகப்பட்டுக் கொண்டிருக்கிறது. தன் கர்மத்தால் உந்தப்பட்டுப் பிறப்பினின்று இறப்புக்கும் இறப்பினின்று பிறப்புக்குமாகச் சென்று கொண்டிருக்கிறது. இந்த நிகழ்ச்சி அறியாமையால் ஏற்படுவது. ஆன்மா தன்னுடைய உண்மை நிலையை மறந்துவிட்டதால் அது சம்சாரத்திற்கும் துன்பத்திற்கும் ஆட்படவேண்டியதாகிறது. ஆனுல் நல்லொழுக்கம், இறை வனிடத்து அன்பு, மெய்யறிவு இவற்றின் வழியாக அது சம்சாரத்தினின்றும் விடுபட்டுத் தன் உண்மை நிலையை அடையலாம்.

திருக்குறளில் கூறப்பெறும் நடைமுறைக் கொள்கையே முக்கியத்துவம் வாய்ந்தது. இந்நூலில் இல்வாழ்வோர் கடமைகள், அரசியற் கடமைகள் ஆகியவையெல்லாம் விரிவாகப் பேசப் பெறுகின்றன. உலக இன்பங்களை அறவழியை மீருமல் அநுபவிப்பதற்குத் தெளிவான வழிவகைகள் கூறப் பெறுகின்றன. என்றுலும் திருவள்ளுவருடைய முழுநோக்கம் மக்களை மோட்சம் என்ற பரமபுருஷார்த்தத்திற்குச் செலுத்துவதுதான்; நிலையாத இன்பங்களை மக்கள் உறுதியாகப் பற்றிக்கொள்ள வேண்டுமென்பது அல்ல. பின்னது அவர் நோக்கமாயின் முழுமனத்தோடு உண்மையை நாடி உலகத் தைத் துறப்பவர்களின் அருமை பெருமைகளை அவர் சிறப்பாக எடுத்து ஓதி யிருக்கமாட்டார்.

நீத்தார் பெருமை என்ற அதிகாரத்தில் அற்ப விஷயங்களில் ஏற்படும் பற்றை ஒழித்துவிட்டவர்களின் பெருமை பேசப்பெறுகிறது. விருப்பற்ற நிலையில் உள்ளவர்களின் சிறப்புக்கு ஈடு ஒன்றும் கிடையாது. இவ்வுலகத்தில் பிறந்து இறந்தவர்களை எண்ணி அளவிட முடியாதது போலவே யான், எனது என்னும் இருவகைப் பற்றையும் விட்டவர்களுடைய பெருமையையும் அளவிட்டுக் கூறமுடியாது. விவேக ஞானத்தால் அவர்கள் துறவு கொள்ளுகிறார்கள். மாறி மாறிப் பிறத்தல், வீடு பேறு—இவைகளுக்குள்ள வேறுபாட்டை அவர்கள் உணர்வார்கள். இவற்றில் முன்னது துன்பத்தை விளைவிக்கிறது, பின்னது இன்பமயமாக உள்ளது என்று உறுதி கொள்ளுகிறார்கள். இதனால் உலக இன்பங்களில் விருப்பற்றவர்களாக இருக்கிறார்கள். புலன்கள் தரும் இன்பம் நிலையாதது என்று தெரிந்து, புலன்களை அடக்கி ஆளுகிறார்கள். மெய்யுணர்வை நாடுவதால் அவர்கள் புலன் இன்பத்தை ஒதுக்கி விடுகிறார்கள். புலன்களை அடக்குவது என்பது அரிய செயல்தான். புலன்களின் வேகத்தை ஒடுக்கி மடைமாற்றுவது எளிது அன்று. ஆனால் பெரியவர்கள் என்போர் செய்தற்கு அரியனவற்றைச் செய்பவர்கள்தாம். புலன்களை முழுதும் அடக்கி ஆளுபவர்களே வீரர்கள். அவர்கள் சொல்லே அளவற்ற ஆற்றல் உடையது. அவர்களுடைய இயற்கை நலம் குற்றமற்ற அவர்கள் ஒழுக்கத்தில் காணப்பெறும். அவர்கள் எல்லா உயிர்களிடத்தும் அருள் உடையவர்கள்.

இந்தியத் தத்துவ சாஸ்திரங்களில் பேசப் பெறும் ஞானம், பக்தி, கர்மம் ஆகிய மூன்று பிரதான மார்க்கங்களும் திருக்குறளிலும் காணப்படுகின்றன. தத்துவ விசாரணை மூலமாக மெய்யறிவு பெறுதலாகிய ஞானயோகத்தையும் இந்த மார்க்கத்தைப் பின்பற்றுதற்குத் துறவிகள் உரியவர்கள் என்பதையும் முன்பு குறிப்பிட்டோம். பரிமேலழகர் சொல்லுவதுபோல 'அவித்தையின்நீங்கி மெய்யுணர்வினை உடையராயினர்க்கு அம்மெய்யுணர்வு பிறப்பினை நீக்கி வீட்டினைக் கொடுக்கும்.' 'மெய்யுணர்தல்' என்ற அதிகாரத்தைச் சேர்த்து முன்பு விளக்கப்பட்ட பப்பத்துக் குறள்களைக் கொண்ட நாலு அதிகாரங்களில் திருவள்ளுவர் மெய்யுணர்வின் தன்மையையும் கூறுகளையும் விளக்குகிறார். துறவின் சிறப்பைக் கூறும் துறவறம் என்ற பகுதியில் இவ்வதிகாரங்கள் அமைந்திருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது. அருளுடைமை, வாய்மை போன்ற குணங்களும், குற்றமற்ற ஒழுக்கங்களான வெகுளாமை, புலால் மறுத்தல், கொல்லாமை, இன்னா செய்யாமை, கூடாவொழுக்கம், கள்ளாமை, தவம் போன்றவையும், சுருங்கக்கூறின், யம நியமங்கள்—விலக்குகளும் விதிகளும்—மெய்யுணர்வை நாடுவோர்க்குத் தேவையானவை என்கிறார். மெய்யுணர்வானது, உலகப்பொருள்களின் நிலையாமை, பொருள்களின் நிலையாமை நோக்கி அவற்றின்கண் பற்றறுதல், மெய்யுணர்தல், அவா அறுத்தல் என்ற பகுதிகளை உடையது. மனிதன் எதையாவது விரும்பவேண்டுமென்றால் அது விருப்பமின்றியிருக்கும் நிலையைத்தான். அவா அற்ற நிலைமை போன்ற சிறந்த செல்வம் இவ்வுலகில் இல்லை; வேறு எங்கும் அதற்கு நிகரானது ஒன்று இல்லை. ஏனெனில் அவா அற்ற நிலையே நிறைவுடையது; வீடு பேறு என்று சொல்லப்படுவது.

கடவுளினிடத்தில் அன்பு செலுத்த வேண்டுமென்பது பல இடங்களில் வற்புறுத்தப்படுகிறது. இறைவனையே புகலாகக் கொள்ள வேண்டும்;

அவன் அடிகளையே பற்றிக் கொள்ளவேண்டும். இம்மைச் செல்வமாயினும், மறுமை இன்பமாயினும், வீடு பேருயினும், நாம் வேண்டுவது யாதாயினும் அதைப் பெற அவன் அருளையே முதலில் நாடவேண்டும். இறைவனை வணங் காத தலையைத் தம் தொழில்களைச் செய்யாப் பொறிகளுக்கு ஒப்பிடுகிறுர் திருவள்ளுவர். அறவாழ்வுக்கு நற்செயல்கள் இன்றியமையாதன. ஊழ் என்று ஒன்று உண்டாயினும் அதற்காக அஞ்சி நடுங்க வேண்டியதில்லை. பழவினைகளாய புண்ணிய பாவங்களின் விளைவாக இன்பதுன்பங்கள் நிகழ்ந் தாக வேண்டும் (38-ஆம் அதிகாரம்). ஆனுல் தன்னலச் செயல்களையும் அவற் ருல் ஏற்படும் பந்தத்தையும் தாண்டிச் செல்லலாம். நல்ல வழியில் செய்யும் முயற்சி ஒருபோதும் வீண் போகாது. நன்முயற்சிகளில் ஈடுபடுவோரே பெரியோர். நன்மை விளைவிக்கும் ஊழ் இல்லாதிருத்தல் யார்க்கும் பழி அன்று; அறிய வேண்டியவற்றை அறிந்து முயற்சி செய்யாதிருத்தலே பழி யாவதாம் (62-ம் அதிகாரம்). முயற்சி எவ்வகையில் அமைய வேண்டும்? செயல்களை எவ்வாறு செய்ய வேண்டும்? தன்னலம், பொருமை, சினம் இவையில்லாமல் ஒவ்வொருவரும் தத்தம் கடமையைச் செய்யவேண்டும். கைம்மாறு கருதாமல் உழைத்தலும், பிறர் மனம் நோவாமல் தன்னலமின்றித் தொழிற்படுதலும், உள்ளத்தூய்மையோடு கடமையைச் செய்தலும் கர்ம யோக வழி நிற்பனவாகும்.

நாம் செல்லும் ஆன்மிக நெறி யாதாயினும் உண்மையான முன்னேற்றம் அடைவதற்கு நல்வாழ்க்கையே அடிப்படையாக உள்ளது. அறமே அனைத்தும்; அறமே அனைத்தும் தர வல்லது. உண்மை இன்பம் அறத்தானன்றிப் பிற வற்ருல் வருவதல்ல (அதி : 4). அடிப்படை அறங்கள் தம்முள் தொடர் புடையன. அவற்றில் ஒன்றைச் செய்வது ஏனையவற்றையும் செய்வதாகும். பிறர் நலம் பேணும் அறங்களைத் திருவள்ளுவர் வற்புறுத்துவது ஏற்புடைத்து. மிகவும் கவர்ச்சியான அதிகாரங்களில் ஒன்ருன அருளுடைமை (25-ஆம் அதி காரம்) என்பதில் அதன் சிறப்பை எடுத்தோதுகிறுர். அருட் செல்வமே செல்வத்துட் செல்வம். அது ஒருவனை உயர்த்துமே யன்றி ஒருபோதும் தாழ்த்தாது. அதனுல் தீமையோ துன்பமோ விளைவதில்லை. பொருட்செல்வம் இல்லாதவர்களுக்கு இவ்வுலக இன்பம் இல்லாதவாறு, அருள் இல்லாத வர்களுக்கு முத்தியுலக இன்பம் இல்லை. இங்கே ஒரு வேற்றுமையைக் காணவேண்டும். பொருட்செல்வம் இல்லாதவர்கள் அதைப் பின்னர் அடைய லாம். ஆனுல் அருட்செல்வம் இல்லாதவர்கள் எக்காலத்துமே மேம்பாடுறுவ தில்லை. ஞானம் இல்லாதவன் மெய்ப்பொருளை உணர முடியாததுபோல, அருள் இல்லாதவன் அறம் செய்ய முடியாது. அருளுடைமை—வேற்றுமை பாராது யார் மாட்டும் அன்புடைமை—இதுவே தலையாய அறம்.

திருவள்ளுவர் நூலில் உயிர்ப்புள்ள உண்மைப் பொதுமை நிலவு கின்றது. இனம், நிறம், கொள்கை, நாடு என்ற வேற்றுமைகள் பாராது அனைவர்க்கும் ஏற்றதாயுள்ளது, அவர் கூறும் அறவழி. இறவாத கவிதை நூலாகிய திருக்குறள் நல்வாழ்விற்கும் அழியாப் பேரின்பத்திற்கும் வழி காட்டியாக உள்ளது.

# திருவள்ளுவர் நீதி

அமரர் திரு. டி. எஸ். கந்தசாமி முதலியார்
(வழக்கறிஞர், சாத்தூர்)

மக்கள் அநாதியாகவே உலகத்து உளர் என்பர் சமயக் கணக்கர்; ஆதியாக ஒரு காலத்தே தோன்றினர் என்பர் விஞ்ஞானிகள். அவரும் பலப்பல நூறுயிரம் ஆண்டுகட்குமுன் தோன்றினர் என்பர். உண்மை எங்ஙனமாயினும் ஆகுக. பண்டைக் காலத்தே மக்கள் நாகரிகத்திலும், நல்லொழுக்கத்திலும் தாழ்ந்தவர்களாக வாழ்ந்து, பின் காலம் செல்லச்செல்ல நாகரிகத்தில் சிறந்தும், ஒழுக்கத்தில் ஆக்கமுற்றும் வருகின்றனர் என அறிஞர் கூறுவர். மக்களின் நல்லொழுக்கமும் பண்பாடும் அவர் வாழும் சமூகத்தின் நிலைமையையும், அரசின் நலத்தையும் சார்ந்துள்ளன. திருவள்ளுவர் தமிழகத்தில் தோன்றிய ஞான்று அரசு, திருத்தமும் சீர்மையும் பெற்று விளங்கியது. சமுதாயம் சீரும் சிறப்பும் பெற்றுப் பொலிவடைந்திருந்தது. தமிழர் நாகரிகத்தின் சிகரத்தை அடைந்திருந்தனர். அவர்கள் வாழ்க்கையில் பண்பாடும் அறமும் சுடர்விட்டு நின்றன. அரசியல் நீதிநெறியில் வழுவாது சென்றது. தமிழ் மொழியும் புலவர் பெருமக்களால் வீறுடன் வளர்க்கப்பட்டது. உயர்ந்த உள்ளமும் தொடர முடியாத உயரிய கருத்துக்களையும் உணர்ச்சியையும் மயக்கமின்றி இலாகவத்துடன் வெளிப்படுத்தும் ஆற்றல் மிக்க வியத்தகு கருவியாக அது விளங்கியது. இக்காலத்தே தான், திருந்திய தமிழர் சமூகத்தின் செல்வமாகவும், பல வளம் செறிந்த அறிவுப் பெருங் கடலில் விளைந்த அமுதமாகவும், தமிழகத்தின் தவப் புதல்வராகவும் திருவள்ளுவர் தோன்றியருளினர்.

திருவள்ளுவர் தாமே முழுதுணர்ந்தவர்; அக்காலத்து விளங்கிய பல கலைகளையும் கற்றுணர்ந்தவர்; பல நூல்களையும் கசடறக் கற்றவர்; "நூலோர் தொகுத்தவற்றுள் எல்லாம் தலை", "விழுப்பத்து வேண்டும் பனுவல் துணிவு", "நூலாருள் நூல்வல்ல ஞுகுதல்" என வரும் சொற்றொடர்களால் திருவள்ளுவர் கற்றுணர்ந்த கலைஞர் என்னும் உண்மை உணரப்படும். திருவள்ளுவர் இல்லறத்திற்கு வேராகிய கற்புடை நங்கையைத் தம் வாழ்க்கைத் துணையாகப் பெற்று மனையறத்தின் நன்கலமாகிய அறிவறிந்த மக்கட்பேறும் உடையராகிச் சிறந்து வாழ்ந்த இல்லற ஞானி. அவர் மக்கட்பேறு என்னும் அதிகாரத்தில், 'ஒருவன் பெறும் பேறுகளுள், அறிய வேண்டுவன அறிதற்குரிய மக்களைப் பெறுதலல்லது பிற பேறுகளை யாம் மதிப்பதில்லை' என்னும் பொருள் கொள்ளும்,

> "பெறுமவற்றுள் யாமறிவ தில்லை அறிவறிந்த
> மக்கட்பே றல்ல பிற"

என்னும் திருக்குறளை யாத்துள்ளார். அவர், தாம் கூறும் விதிகளுக்குத் தம் அறிவே வரம்பெனக் கூறுர். தம் அறிவைச் சம்பந்தப் படுத்தி மக்கட்பேறு அல்லாத பிற பேறுகளை யாம் மதிப்ப தில்லை யென ஈண்டுக் கூறும் திருவள்ளுவர் கருத்தை உன்னி நோக்கல் வேண்டும். அங்ஙனம் நோக்கின், இக்குறளைக் கூறிய ஆசிரியர் அறிவறிந்த மகப்பேறுடையராக இருந்த

காரணத்தால்தான் பிற பேறுகளை யாம் மதியோம் எனக் கூறினர் என்ற உண்மை உணர லாகும். செவிவழி வந்த செய்தியாலும் நாயனர், இல் லறத்தில் சிறந்து வாழ்ந்து தவநெறியில் வாழ்ந்தார், எய்திய செல்வ மெல்லாம் அடைந்து அமரரென வாழ்ந்தார் என்னும் உண்மை அறியப்படு கின்றது. இயற்கையில் அமைந்த நுண்ணறிவோடு, செயற்கையாகிய நூலறிவும் உடையராய், இல்லறத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து தாமே முழு துணர் மெய்யுணர்வும் உடையராகித் தூயராய், எக்காலத்தும் எந்நிலத்தும் விளங்குதற்குரிய ஒப்புயர்வற்று விளங்கும் ஞானப் பெரு நந்தா விளக்காகத் தமிழ் மறையை உலகிற்கு அளித்த வள்ளல் வள்ளுவ ராவர். இவ் வுண் மையை அறிந்தால், வள்ளுவரது நீதியின் உயர்வை அறிதல் கைகூடும்.

நீதி யென்னும் சொல், சிறப்பாக முதற்கண் அரச நீதியையே குறித்தது. வடமொழியில் அர்த்த சாத்திரங்களுள் ஒன்று 'சுக்கிர நீதி' என வழங்கப்படுதல் காண்க. அரச நீதி நிலைபெற்று லன்றி மக்கள் அறவொழுக் கத்தில் வாழ்தல் அமையாது என்னும் கருத்தை ஒட்டி, அச்சொல் பின்னர் மக்கள் அறவொழுக்கத்தையும் சுட்டிற்று. 'நயனொடு நன்றி' என நீதியை 'நயம்' என்றும், அறத்தை 'நன்று' என்றும் வெவ்வேருக ஆசிரியர் கூறியுள்ளார். நன்று என்னும் சொல் 'நன்றி' எனவும் உருவம் வேறுபட்டு வரும். "நன்றி மறத்தல் நன்றன்று" என்ற விடத்து நன்று என்னும் சொல் அறத்தைக் குறிக்கும். "நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்" என்ற இடத்தும் நன்றி என்னும் சொல் அறத்தைக் குறிக்கும். "நயனொடு நன்றி புரிந்த பயனுடையார், பண்புபா ராட்டும் உலகு" என்னும் குறளில் அச் சொற்கள் இரண்டும் வந்துள்ளன. ஒருவன் இடையரு நல்லொழுத்தில் நின் ருல், அந் நிலைபேறு அவனுக்கு அறத்தைத் தரும் என வள்ளுவர் கூறினர். ஈண்டு 'அறம்' புண்ணியமென்னும் பொருளை உணர்த்துகிறது. அறத்தில் வேரூன்றி நின்ற நெஞ்சினை உடையார் நல்லொழுக்கத்திலேயே நிற்பர். அவ்வாறு நின்ருெழுகில், அஃது அவர்க்கு அறத்தினைப் பயக்கும். அறம் தன் தன்மையாலும் பண்பாலும் தீதிலா நன்மையும் முழு நன்மையுமாகும். ஆத லால் அறம், தன்மையால் நன்றெனப்படும். நல்வினைகளும் நேரிய முறையில் செய்யப்படல் வேண்டும். அறம் உணர்ந்தார் நல்வினை செய்யுங்காலும் நேரிய முறையில் நேரிய நெறியில் நின்றே செய்வர். அவ்வறமே, செய்யப் படும் சீர்மையை நோக்கிச் செம்பொருள் எனப்படும். ஆதலால், "செம்பொருள் கண்டார் வாய்ச்சொல்" என்ற தொடரில், செம்பொருள் என்னும் சொல்லால் அறத்தைக் குறித்தனர் ஆசிரியர். செம்மை, நேர்மை யென்னும் பொருளை உடையது; 'கண்டார்' என்னுஞ் சொல் அநுபவத்தில் உணர்ந்தார் என்னும் பொருளைப் பயக்கும். அறம் என்னும் சொல் பண்டைச் சான்ருேர் சென்ற நெறி என்னும் மூலப் பொருளுடையது. ஆகவே, நல்லொழுக்கத்திற்குக் காரணமாகவும், அதன் பயனுகவும் இருப்பது அறம் எனல் சாலும்.

இனி 'அறம் யாது?' என ஆராய்தல் வேண்டும். மனு முதலிய நூல்கள் விதித்தன செய்தலும், விலக்கியன ஒழிதலும் அறம் என்பர் ஆசிரியர் பரிமேலழகர். மனு முதலாய நூல்கள், விதி விலக்குகளைத் தாமே தத்தமக்கு வேண்டியவாறெல்லாம் கற்பித்துக் காரணமின்றிக் கூறினவா? அல்லது அவையும் காரணங் கொண்டு விதிவிலக்குகளை நியமித்தனவா? காரணத்தின்

வழி நின்று அறம் உரைத்தனவாயின், அக் காரணம் யாது? திருவள்ளுவர் அறம் உரைக்குங்கால் காரணத்தின் வழி நின்று உரைத்தனரா? காரணம் பற்றிக் கூறினர் எனின், அக்காரணம் யாது? மனு முதலிய நூல்களிற் கண்ட விதிவிலக்குகளுள் காரணம் வெளிப்படையாக வேனும், குறிப்பாக வேனும் கூறப்படவில்லை என்பர் அறிஞர் பலர். அஃது எவ்வாருயினும், திருவள்ளுவர் இயற்றிய தமிழ் மறையில் விதி விலக்குகள் காரணம் பற்றியே விதிக்கப்பட்டுள்ளன. அக்காரணம் குறிப்பாகவும் சில இடங்களில் வெளிப்படையாகவும் கூறப்பட்டுள்ளது என்பர் சான்றோர்.

ஒழுக்க நூல் ஆராய்ச்சி செய்த கலைஞர் பெருமக்கள் பலர். ஒரு வினையை அறவினை எனக் கூறுவதற்குக் கட்டளைக் கல்லாக இருக்கும் கருத்து யாது என ஆராய்ந்த பெருமக்களும் பலர். அவர்கள் ஆராய்ச்சியில் கண்ட கொள்கைகளும் உண்மைகளும் பல. கட்டளைக் கல்லாக ஒரு கலைஞர் கூட்டத்தினர் கொண்டதை மற்றொரு கலைஞர் கூட்டத்தினர் அன்றெனெ மறுத்து, டீற்றொன்றையே கட்டளைக் கல்லாம் என்பர். அவ்வாறு பல கலைஞர் கூட்டத்தினரும் கண்ட வெவ்வேறு கட்டளைக் கற்களும் ஆசிரியர் திருவள்ளுவர் நூலில் காணப்படும். நுண்ணறிவு உடைய சான்றோர் பலரும் தனித்தனிக் காணும் கட்டளைக் கற்களை அவர்கள் காணுமுன்பே திருவள்ளுவர் கண்டு, ஆய்ந்து, சிக்கறுத்துத் தெளிந்து, தாம் கண்ட உரைகல்லையும் மயக்கமறக் கூறியுள்ளார். இவ்வுண்மையைத் தெளிந்து உணர்வார் எல்லாரும் வள்ளுவர் ஞானத்தின் மாட்சியை வியவா திரார்.

ஒருவன் தன் மனச்சான்றிற்கு ஒத்து ஒழுகின் அவன் ஒழுக்கம் அறமாம் என்பர் ஒரு சாரார். மனச்சான்றே அவர் கொண்ட கட்டளைக்கல். மனச்சான்று யாவர்க்கும் ஒன்ருக இல்லை; ஒவ்வொருவருக்கும் வெவ்வேருய் அமைந்துள்ளது. ஒரே பண்பும் உடையதாக இல்லை; உள்ளந்தோறும் வெவ்வேறு பண்புடன் அமைந்துள்ளது. கொலைஞன் உள்ளத்தும் மனச்சான்று உளது; துறவின் நலம் எல்லாம் அடைந்த துறவியிடத்தும் உளது. ஆயினும் இரண்டையும் ஒப்பு நோக்கின், அவ்விரண்டும் தம்முள் மாறுபடுகின்றன எனக் காணலாம். எவ்வகை மனச்சான்றும், அதனை உடையானைத் தீயன செய்யு முன்பு குறுக்கிட்டுத் தடுப்பதைக் காணேம்; செய்தபின் வருத்தும். மனச்சான்றும் ஒருவனை அறவழியில் நிறுத்தத் துணை செய்யும். ஆயினும், அது உரைகல்லாகாதென்பர் திருவள்ளுவர். இவ் வுண்மையைக் கருதியே ஆசிரியர்,

> "தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
> தன்னெஞ்சே தன்னைச் சுடும்."

என அருளினர். வேறு சிலர், தூய உள்ளமுடைமையே அறத்தின் அடிப்படை என்பர். தூய உள்ளம் உடைமை ஒன்றே அஃதுடையான் செயலை அறமாக்கும் தன்மையது என்பது அவர் கருத்து. அவ்வுடைமை அறத்திற்குக் காரணம் என்பது திருவள்ளுவர்க்கும் உடன்பாடு. ஆனல், தூய உள்ளம் உடையராய் மட்டும் இருந்து, அவர் அறத்தின் வழி நின்று சொல்லவும் செய்யவும் ஆற்றல் உடையரா யிருந்தும் அங்ஙனம் செய்யாராயின் அவர் அறம் உடையர் எனக் கூறல் அமையா தென்பர் வள்ளுவர். உலகிடைப் பிறந்து வாழ்ந்து பின் நரகிடைச் சென்ருருள், தூய உள்ளம் உடையரா

யிருந்தும் அறம் செய்யாது செத்தவரே பெரும்பாலர் என்னும் பொருளை யுடைய பழமொழி ஆங்கிலத்தில் வழங்குகிறது. திருவள்ளுவர் அறம் செய்ய வேண்டுமென வலியுறுத்தி,

"ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும்வா யெல்லாம் செயல்"

எனவும் அதனை யடுத்து,

"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற"

எனவும் விதித்துள்ளார். மனம் தூயராய் நின்று, இயலும் அறவினைகள் எல்லாவற்றையும், இடைவிடாது, இயலும் வழிகள் எல்லாவற்றினும், இயலும் கருவிகள் அனைத்தானும், இயலும் எல்லா இடங்களினும், இயலும் எல்லா உயிர்கள் மாட்டும் செய்க என விதித்த மாட்சிமை திருவள்ளுவருக்கே உரியது. இயலுமாயின் மனந்தூயரும் அறவினை செய்தலே வேண்டும் என்பர் ஆசிரியர்.

மற்றும் சில கலைஞர், மக்கள் விரும்புவது இன்பமே எனவும், தனி மிகுதியான எண்ணத்தினர்க்கு எவ்வினை தனிமிகுதி இன்பத்தைப் பயக்குமோ அவ்வினையே அறவினை எனவும் கூறுவர். வினைகள் இன்ப துன்பங்களைக் கலந்து பயக்குமாயின், அவற்றைக் கணக்கிட்டு, இன்ப மிகுதி பயக்கும் வினையே அறவினை என்பர் அவர். இன்ப துன்பங்கள் தன்மையால் ஏற்றத்தாழ்வு உடையனவாக இருக்குங்கால், அவற்றை எவ்வாறு வகைப்படுத்தி ஒன்றன் மிகுதியைக் காண்பதென வினவுவார்க்கு, அவர் விடையளித்தல் அமையாது. அறவினை இன்னே செய்தல் வேண்டுமென்ற நிலையில் நிற்கும் ஒருவர்முன் பல வினைகள் உளவாக, அவற்றில் ஒவ்வொன்றின் வழிவரும் இன்பதுன்பப் பயன்களை எவ்வாறு வகுத்து உணரல் முடியும்? அங்ஙனம் உணரும் காலம்வரை வினைசெய்ய வேண்டிய கடமை வாளா நிற்குமா? இன்ப துன்பங்களை எவ்வாறு தூக்கி ஆய்ந்து, ஒன்றன் மிகுதிப்பாடும், மிகுதிப்பாட்டின் அளவும் காணல் இயலும்? இன்னோரன்ன ஐயங்கள் எழுகின்றன. இவ் வையங்களைத் தீர்த்தல் அமையாதென அறிஞர் கருதுவர்.

"அறத்தான் வருவதே இன்பம்"

என்றும்,

"நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும்"

என்றும் தேவர் ஓதியருளி யுள்ளார். துன்பம் விரவா இன்பம் பயக்கும் வினையே அறவினை என்பது திருவள்ளுவர் கருத்து. இக்கருத்தை உட்கொண்டே அவர் நல்வினை தீவினைகளை வரையறை செய்துள்ளார். பிறரெல்லாம் நிகழ்ந்ததை நிகழ்ந்தாங்குக் கூறல் வாய்மை என்பர். வள்ளுவரோ, "வாய்மை எனப்படுவது யாதெனின், யாதொன்றும் தீமை இலாத சொலல்" என்றார். தீமை யென்பது துன்பம்.

"ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன்
பின்சாரப் பொய்யாமை நன்று"

என்னும் குறளை னன்றி நோக்கின், வள்ளுவரின் அறம்பற்றிய கருத்துப் புலனாகும். கொல்லாமை துன்பத்தை விலக்கிச் செல்லும் அறவினை; அதனை அகிம்சை யென்பர் வடவர். அஃதே எவற்றினும் மேலாகிய தனி அறவினை என்பர் அவர். வள்ளுவரும் அஃதே ஈடில்லாத அறவினை என்பர். பொய்யாமையும், கொல்லாமையைத் தழுவிச் செல்லுமாயின் அறவினை என்பர் அவர்.

அறத்தின் உண்மைத் தன்மையை வள்ளுவர் எவரும் தெள்ளிதின் உணர உரைத்துள்ளார். தீதிலா நன்மை அஃதெனக் கூறினர். அது நேர்மை உடையதெனவும் கூறினர். பகுத்துணர்வு உடையார்க் கெல்லாம் அதுவே நேர்மை உடைய தாதலின் அங்ஙனம் கூறினர். அதுவேதான் தூய இன்பம் தரும் எனவும் தெருட்டினர். இங்ஙனமெல்லாம் கூறிய பின்னும் எவ்வினையைச் செய்தல் வேண்டும், எவ்வினையைத் தவிர்தல் வேண்டுமென வினவுவாரும் உளராதலின், அவர் பொருட்டு வேறு தெளிவுரையும் தேவர் கூறியுள்ளார்.

> "செயற்பால தோரும் அறனே, ஒருவற்கு
> உயற்பால தோரும் பழி"

எனக் கூறினர். அறவினையைச் செய்து, தீவினையைச் செய்யாது விடுக என விளக்கினர். அவர் இப்பொருள் பற்றி மேலும் ஒரு தெளிவுரை கூறியுள்ளார், அஃதாவது,

> "அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
> இழுக்கா இயன்ற தறம்"

என்பது. 'பொறாமை, ஆசை, சினம் என்னும் மனத்தின்கண் தோன்றும் குற்றங்கள் மூன்றும், பொய், குறளை கடுஞ்சொல், பயனில் சொல் என்னும் சொல்லின் கண் நிகழும் குற்றங்கள் நான்கும் விரவப் பெறாது செய்யப்படும் செயல் அறமாகும்' என ஒரு வாய்பாடும் தேவர் நமக்கு அருளிச் செய்துளார். இவ்வாய்பாட்டை உள்ளத்து இருத்தி ஒருவன் ஒழுகின், அவன் செய்வன எல்லாம் அறமாம் என்பது அவர் கருத்து. அறவுணர்ச்சி ஒருவனை எஞ்ஞான்றும் இடையறாத நல்லொழுக்க நெறியில் நிறுத்தும்.

நாம் நல்வினையையும் உள்ளிச் செய்தல் வேண்டும். உள்ளாது செய்யின் அஃது அறமும் ஆகாது. மக்கள் தம் உள்ளத்தின் பண்பால் இரு வேறு இயற்கையுட் படுவர். சிலர், யாவரொடும் பழகி நண்பராய்க் கலந்து உலகத்தில் விருப்பம் வைத்து வாழ விரும்புவர். மற்றும் சிலர், மாந்தர்களோடு கலந்து வாழ விரும்பாது, அவரின் ஒருவி, உலகத்தில் பற்று வையாது தனித்து வாழ விரும்புவர். இவ் விருவேறு வகையினர்க்கும் இருவேறு நெறி வகுத்துளார் தேவர். ஒன்று இல்லறம்; மற்றையது துறவறம். ஆயினும் இவ்விரு நெறிகளுக்கும் உயிராய குணம் அன்பு. அன்பின் பெருக்கமே அருள். ஆதலின், 'அருள் என்னும் அன்பீன் குழவி' எனத் தமிழ்மறை விதித்துள்ளது. அன்பு நெறியே அறநெறி. அன்பு செயின் அறம் விளையும்; தீமை ஒழியும்.

> "அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
> பண்பும் பயனும் அது."

தன்பால் தான் அன்பு செய்தலை ஒழிந்து, பிற உயிர்பால் அன்பு செய்யின், அச்செயலே ஒருவற்குத் தன்பால் நிரம்பிய அன்பு செய்தலாகும்;

"தன்னைத்தான் காதல னாயின் எனைத்தொன்றும்
துன்னற்க தீவினைப் பால்."

என்பது குறள். அறம் செய்தற்கும், மறம் ஒழித்தற்கும் பெருந்துணை செய்வது அன்பு. அன்பின் வழி நின்று ஒழுகின் அறம் தானே விளையும். அன்புதான் யாதோ எனின், யாவர்மாட்டும் உளம் கசிந்து குழைந்து இரங்கி வாழும் விழுமிய கடவுட் குணம்; தன் உயிரினும் சிறந்தவராகப் பிறர் யாவரையும் மதித்து, அவருடன் கலந்து வாழும் கடவுட் குணம். இக் குணம் என்றும் நம்மிடம் தலையெடுத்து நின்று உள்ளத்தில் கோயில் கொண்டு உறைதல் வேண்டும். அவ்வண்ணம் தலையெடுத்து நிற்பின், அது நாளடைவில் முறுகி, ஆர்வமாகப் பெருகி வளரும்; பின்னரும் எல்லா உயிருக்கும் நட்பாயிருக்கும் தன்மையையும் தரும். இல்லறத்தில் வாழ்பவருக்குரிய கடமைகள் அனைத்தையும் இருபது அதிகாரங்களில் தேவர் விரித்துக் கூறியுளார். அவற்றை யெல்லாம் தொகுத்து நோக்கின், அவையெல்லாம் அன்பின் வழியினவாய பண்புகளைப் போற்றுக என விதித்தலும், அதற்கு மறுதலையாய குறைகளை ஒழிக என விலக்கலுமாக அமையும். துறவற இயல்கள் அன்பின் நிறைவாகிய அருள்வழியினவாகிய பண்புகளை வளர்த்தல் பற்றிய விதிகளும், அதற்கு மறுதலையாய குறைகளைத் தவிர்க என விலக்கும் விலக்குகளுமாக இருகூற்றின்கட் படும்.

அறிவு எனத் தேவர் சிறப்பித்துக் கூறுவது, ஒருவன் உள்ளம் தீயன விரும்புங்கால் அவ்வழி அதனைச் செய்யவிடாது தடுத்து நிறுத்தியும், நல்லனவற்றை விரும்பாது பின்னிடுங்கால் அவ்வழி அதனைச் செலுத்தி நிறுத்தியும் பெருந்துணை செய்யும் ஒழுக்க அறிவினைத்தான். அவ்வறிவு நூலறிவின் வழித்தாய்த் தானே வருவதொன்று அன்று; நல்லாரோடு இணங்கி வாழ்தலால்தான் வரும்.

இல்லறத்தில் வாழ்வான், மனைமாட்சியுடைய வாழ்க்கைத் துணைவியைப் பெற்று, அன்புடையனாகி, அதனால் அறத்தின் வழி நின்று, கடுஞ்சொல் நீக்கி, எவர்மாட்டும் இன்சொல் கூறி, புறங்கூறலின்றி, பொய்யுரை பேசாது, மெய்யே பேசி, பயனில சொல்லாது, பிறர் செய்த நன்றியை மறவாது, பிறர் ஆக்கங்கண்டு பொறாமை அடையாது, அவர் ஆக்கத்தை விரும்புதலும் செய்யாது, தீவினையை நினைத்தற்கும் அஞ்சி, மனத்தில் தீயன மறந்தும் தோன்றாவாறு, புலன்களை அடக்கி, நடுநிலை உடையனாகி, பிறர் தன்மாட்டுத் தீயன செயினும் அதனைப் பொறுத்தலோடு அமையாது முற்றும் மறந்து, விருந்தோம்பி, பிறர் மனை நோக்காத பேராண்மையுடையவனாகி, நல்வழியில் இடையறாது ஒழுகி, ஒப்புரவு செய்து, வறியார்க்கு ஈந்து, புகழ் பெற்று வாழ்தல் வேண்டுமென விதித்தனர் வள்ளுவர்.

துறவோர், எல்லா உயிர்களிடத்தும் அருளுடையராய், அருளின்மையைத் தரும் புலால் உண்ணுதலைச் செய்யாது, புலன்களை அடக்கித் தவத்தில் நின்று, வெகுளியைத் துறந்து, எவ்வுயிர்க்கும் இன்னா செய்யாது, பிறர் உடைமையைக் கனவிலும் விரும்புவது களவாய் முடியுமாதலால் அதனை அடைய விரும்புதலும் செய்யாது, வாய்மையே பேசி, யாக்கை செல்வம் முதலியன நிலையாமையை உணர்ந்து, பொருள்களின் பற்றை அறவே விட்டு, மெய்யுணர்வைத் தலைப்பட்டு, அவாவினை ஆற்ற அறுத்து; அதனால் தாம்

விரும்புவதே அறமாக நிற்கக் கண்டு, இடையரு இன்பம் இப்பிறவியிலேயே அடைந்து இன்புறுவர் என்று துறவின் பெற்றி தமிழ்மறையில் விளக்கப் பட்டுளது.

தீயனவற்றை உள்ளத்தில் உள்ளலும் தீது ஆதலின், தீயனவற்றை மனத்தினும் கருதற்க என விதித்த சிறப்பு வள்ளுவர்க்கே உரியது. பிறர், பெண் நயத்தலும் பிற பெண்ணுடன் கூடலே யாதலின் அதனை விரும்புதலும் செய்யற்க என ஏசுநாதர் விதித்தார் என்ப. எக்குற்றத்தை உள்ளினும், அவ்வுள்ளலும் செய்ததனோடு ஒப்பத் தீதாதலின் எக்குற்றத்தையும் உள்ளற்க எனவும், களவையும் கருதற்க எனவும் திருவள்ளுவர் விதித்தனர். உன் வலக் கன்னத்தில் அடித்தானுக்கு இடக் கன்னத்தையும் சாய்த்துக் கொடு என ஏசுநாதர் கூறினர் என்ப. வள்ளுவரோ,

> "இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
> நன்னயஞ் செய்து விடல்"

எனவும்,

> "இன்னாசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்
> என்ன பயத்ததோ சால்பு"

எனவும் பணித்தருளினர். 'தனக்குத் துன்பம் செய்தார்க்கும் கழிபெரு நன்மை செய்க. செய்தபின் அவர் தீமை செய்தார் என்பதையும், தான் அவர்க்கு நன்மை செய்ததையும் அறவே மறந்து விடுக' என வள்ளுவர் வகுத்த விதியின் மாட்சி அளத்தற்கரியது, 'உனக்கு மேலும் மேலும் இன்னாத பல செய்தார்க்கும் நீ மேலும் மேலும் இனியன பலவும் செய்யாவிடத்து உன் சான்றாண்மையால் விளையும் பயன் யாது?' என்னும் வள்ளுவர் வாய்மொழியின் தனிச் சிறப்பை உன்னுக.

வள்ளுவர் வகுத்த அறநெறிக்கண் வழுவாது ஒழுகும் மகன், வடிவில் மகனே யாயினும், பண்பால் அமரனே ஆவன். புலன் அடக்கம் ஒருவனை அமரருள் உய்க்கும். உலக மாந்தர் அனைவரும் புலன் அடங்கப் பெற்று வாழ்வாங்கு வாழ்ந்தால் இவ்வுலகம் பொன்னுலகம் ஆகும். அங்ஙனம் இவ்வுலகம் ஆதல் வேண்டும் என்பதே திருவள்ளுவ தேவர் விருப்பம். பரலோக ராஜ்யம் ஈண்டு வரவேண்டுமாயின் வையத்து மாந்தர் வள்ளுவர் நெறியில் வாழ்வாங்கு வாழ்க!

வள்ளுவர் அரச நீதியையும் எழுபது அதிகாரங்களில் வகுத்தருளி யுள்ளார். அரச நீதி கூறிய ஆசிரியர்கள் பலர். அவருள், தேவரே அறநெறியின் அடிப்பட்டு அரசு நெறியும் செல்லல் வேண்டும் என்றார். அரசுகள் பலவா யுள்ளவிடத்து, அவைகளுள் போர் நிகழும். அறத்துப் பாலில் கூறிய மக்கட் பண்புகள் எல்லாம் போரின்கண் நிலைபெறா அன்றோ? போரோ கொல்லாமை என்னும் அறத்தைச் சிதைப்ப தொன்றா மன்றோ? மாற்றரசு தீநெறிக்கட் சென்று வேற்றரசில் வாழ்வார்க்கும், தன்னரசில் வாழ்வார்க்கும் தீமை செய்யின், அதனை அவ்வழியில் செல்லவிட்டிருத்தல் அறமாகுமா? தீநெறிக்கண் செருக்குற்று அறம் திறம்பி, ஆருயிர்க்கு இன்னல் செய்ய எவ்வரசேனும் தலைப்பட்டால், அத் தீமையை ஒழித்தற்கண் போர் செய்தல் இன்றியமையாததாயின் போரும் செய்க என வழிவகுத்துள்ளார் வள்ளுவர். தன் அரசின்கீழ் வாழும் மக்கள் அனைவரும் நல்லொழுக்க நெறியில் வாழும்படி அவரை நிறுத்தல் அவ் வரசின் கடமை. நன்னடை நல்கல்

வேந்தர்க்குக் கடன். நீதியின் வழுவிய மாந்தர் சிந்தையில் திருத்த முற்று மீண்டும் நன்னெறிக்கட் சேர்ந்து வாழுமாறு அவருக்குத் தண்டனை செய்தல் வேண்டும். மக்கள் வாழ்விற்கே நஞ்சாகத் திரியும் குற்றமுடைய மாந்தர் நன்மக்கட் கெல்லாம் களையாயிருப்ப ராதலின் அவருக்குத் தண்டனை கொலைதான் எனவும் தேவர் வகுத்துள்ளார். அவர் 'கொடியார்'; அவரை 'ஆத தாயிகள்' என்பர் வடவர். ஓர் அரசு வேற்றரசுடன் நட்புக்கொண் டொழுகலும், வேறு சில அரசுடன் பகைமைகொண் டொழுகலும் நேரும். அங்ஙனம் நேருங்கால் தன் நட்பரசுகளைப் பகையரசுடன் சேராவண்ணம் தன்னுடன் சேர்த்துப் பிணித்துக் கொள்ளலும், பகையரசுடன் சேரும் பிற அரசையும் அதனுடன் சேராவண்ணம் பிரித்துத் தன்னுடன் பிணித்துக் கொள்ளலும் வேண்டும் என்றூர் வள்ளுவர். இவ்விடங்களிலும், இவைபோன்ற வேறு பிறவிடங்களிலும் அறத்தினின்று அரசுநெறி விலகுவதுபோலக் காணப்படும். பிற இடங்களிலெல்லாம் வள்ளுவர் அரசநீதி அறத்தின் சுவடுபற்றியே செல்லும். அரசின் கொற்றம் அறத்தில் வேரூன்றி நிற்றல் வேண்டும். அரசின் குடைக்கீழ் வாழும் மக்கள் அனைவரும் சீரொழுகு சான்றோராய், மாசிலா மாந்தராய், தீமையை மனத்தில் நினைக்கவும் மாட்டாத நாணம் உடையராய், நலம் செய்தற்கண் பெருங் காதலுடையராய், தம் செல்வமெல்லாம் மக்கள் அனைவர்க்கும் நலம் செய்யும் வகையில் ஒப்புர வாளராய், குணமென்னும் குன்றின்கண் நிற்பவராய், பிறருக்கு நலன் செய்வதே தம் கடமையாகக் கொண்டவராய் வாழல்வேண்டும் எனப் பணித் துள்ளார். அவருக்கு நல்லவை யெல்லாம் கடன்களாம்.

வள்ளுவர் வகுத்துள்ள குணங்களுட் சில 'நிறை குணங்கள்'. அக்குணங் களுள் யாதேனும் ஒன்றையே உறுதியாகக் கடைப்பிடித்து ஒருவன் ஒழுகின், அவன் அறத்தின் முழுநலத்தை அடைதல் ஆகும். அத்தகைய குணமே நிறை குணம்; 'நடுவு நிலைமை'யும் 'அடக்கமுடைமை'யும் நிறைகுணங்கள்.

கொல்லாமை யாகிய அறம் பல்லுயிரையும் ஓம்புதலாகிய உடன்பாட் டறத்தையும் தன்னகத்தேயுடைய தெனக் கருதி,

"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை"

எனக் கொல்லாமையில் அருளிச் செய்கின்றூர்.

பௌதிக உலகிலுள்ள நியதிகளை விஞ்ஞானிகள் கண்டு விதித்துள்ளனர். அறநெறியில் உள்ள நியதிகளை வள்ளுவர் கண்டு ஊழென வகுத்துள்ளார். அவ்வூழ் உயிரின் உரிமையைத் தடுப்பதொன்று அன்று. ஆருயிர்கள் நலம் தீங்குகளைச் செய்யும் ஆற்றலுடையன. ஆதலால்தான் வள்ளுவர் விதிவிலக்குகளை அருளிச் செய்துள்ளார்.

வள்ளுவர் வகுத்துள்ள விதிவிலக்குகளையும், பண்புகளையும், கடன் களையும் விதந்து கூற என் உள்ளம் விழையுமாயினும், விரிவஞ்சி அவ்விழை வின் வழிச் செல்லே ணுயினேன்.

அன்பே அறம்; அன்பே பொருள்; அன்பே இன்பம்; அன்பே வீடுபேறு.

"அன்புற் றமர்ந்த வழக்கென்ப வையகத்து
இன்புற்ரூர் எய்தும் சிறப்பு."

# கவிதைப் பண்பு

திரு. அ. ச. ஞானசம்பந்தன்

கவிதை என்று கூறியவுடன் நம்மில் பலருக்குப் பல வகையான எண்ணங்கள் தோன்றக் கூடும். அடிகள் நீண்ட பாடலையும் அவை குறைவாக அமைந்துள்ள பாடலையும் அவரவர் நினைத்தல் கூடும். கவிதை என்ற பெயரைக் கேட்டவுடன் அது முன்னரே அறியப்பட்ட ஒன்று என்பது மாத்திரம் தெரியுமே யன்றி, இதுதான் கவிதை என்று கவிதையின் இலக்கணம் கூறப் பலருக்கும் இயலாதுதான். 'சில்வகை எழுத்தில் பல்வகைப் பொருளைச் செறித்து இனிது விளக்குவது' என்றும், 'சுருங்கக் கூறி விளங்க வைப்பது' என்றும் ஓரளவாகக் கவிதையின் இயல்புகளைக் கூறலாமே யன்றித் திட்ட வட்டமாக இலக்கணம் வகுத்தல் கடினமானதுதான்.

கவிதை என்றால் என்ன என்பது பற்றிச் சிறிது ஆராய்வோம். மனிதன் பெற்றுள்ள பல்வேறு சிறப்புக்களுள் ஒன்று அவன் பேசும் மொழி. ஏனைய விலங்கினங்களிலிருந்து அவன் பிரித்து எண்ணப் படுவதற்கு உற்ற கருவியாக உள்ளது மொழியாகும். விலங்கினங்களுங்கூடத் தம்முடைய கருத்தை அறிவிக்க ஓசை உண்டாக்குகின்றன; எனினும், அவை தோற்றுவிக்கும் ஓசைக்கும் மனிதன் தோற்றுவிக்கும் ஓசைக்கும் வேற்றுமை மிகுதியும் உண்டு. விலங்குகளின் ஓசை சமய சந்தர்ப்பங்களுக்கு ஏற்ப அவற்றின் மன நிலையை ஓரளவு அறிவிப்பனவே ஆகும். மேலும் அவ் வோசைகளும் அவற்றின் பசி, இன்பம், துன்பம், கோபம் முதலிய உணர்ச்சிகளை வெளியிடும் சாதனங்களே யன்றி வேறில்லை. எனவே அவ்வோசைகள் எண்ணிக்கையில் குறைந்தன என்று கூறத் தேவை இல்லை. ஆனால் மனிதன் தோற்றுவிக்கும் ஒலியோ எண்ணற்றவையாய் உள்ளன; அன்றியும் அவனுடைய அடிப்படையான உணர்ச்சிகளை யன்றி எல்லா மன நிலைகளையும் எடுத்துக் காட்டும் இயல்பையும் பெற்றுள்ளன. விலங்குகள் உண்டாக்கும் ஒலிகள் திருத்தமான வடிவு பெறாதவை; அவ் வொலிகட்கு நல்ல வரம்பிட்ட அளவுகள் இல்லை. ஆனால் மனிதன் பேசும் மொழிகள் திருத்தமும் வடிவமும் பெற்று வரம்பிட்டுக் காணக் கூடிய இயல்புடையவை. எனவே இச் சொற்கள் பயனின்றித் தோன்றா என்பது பெறப்படுகிற தன்றோ? இது கருதியே இலக்கணம்,

''எல்லாச் சொல்லும் பொருள்குறித் தனவே''

என்று கூறிச் செல்கிறது. பொருள் குறித்தனவும், செம்மையான வடிவுடையனவும், வரம்புடையனவுமான இலக்கணங்களை உடையனவே மனிதன் பேசும் சொற்கள் என்று அறிய முடிகிறது.

இத்தகைய சொற்களுள்ளும் சிறந்த சொற்களையே கவிதை எடுத்து ஆளுகிறது. சொற்களுள் சிறந்த சொற்கள் என ஒரு பகுதி உண்டா என்றால், உள்ளன என்றே கூறவேண்டியுளது. ஒவ்வொரு சொல்லும் குறிப்பிட்ட ஒரு பொருளைக் குறிப்பதோடு நிற்பதில்லை. கூறுவோன் மனக் கருத்தை வெளியிட வருகின்ற சொல் இரண்டு வகையால் அத் தொழிலைச்

செய்கிறது. இவ் வியல்பு சொல்லுக்கு இயற்கையாக அமைந்துள்ளது. சொல் பொருளை நேரடியாகக் குறிப்பது முதல் வகை. தனக்குரிய பொருளால் பொருளை உணர்த்தும் இவ் வாற்றலைப் பொருளாற்றல்[1] என்பர். சொற்கள் பொருளால் பொருளைக் குறிப்பது மட்டும் அன்றித் தம் ஓசையாலும் பொருளைக் குறிக்கின்றன. இதனை நம்மில் பலர் அறியாவிடினும் செயல் அளவில் இத் தன்மையைப் பயன்படுத்தாமல் இருப்பதில்லை. ஒருவனை இழித்துப் பேசவேண்டிய நிலையில், "நீ மிகவும் நல்லவன்!" என்று கூடக் கூறுவதைக் கேட்கிறோம். இந் நிலையில் நல்லவன் என்ற சொல் நன்மை என்ற தனக்குரிய பொருளை விட்டுவிட்டுத் தீயவன் என்ற முற்றும் மாறான பொருளைக் குறிப்பதைப் பார்க்கிறோம். இவ்வாறு தனக்கு மாறான பொருளைச் சொல் எவ்வாறு குறித்தது? சொல்பவனுடைய குறிப்பு அதுதானாகலின் இப் பொருளைக் குறித்தது. தனது குறிப்புத் தீயவன் என்று இருக்கவும், சொல்பவன் வேறு பொருளுடைய இந்தச் சொல்லை அறியாமல் பயன்படுத்தினானா? அறிந்துதான் செய்தான். என்றால், இச் சொல் தனது ஓசையால் சொல்வோன் குறிப்பை நாம் அறியுமாறு செய்தது. இவ்வாறு சொற்கள் ஓசையால் பொருள் உணர்த்துவதை ஓசையாற்றல்[2] என்று மொழி நூலார் கூறுவர்.

இவ்வாறு சொல்லைப் பயன்படுத்துபவன் நேரடியாக நம்மிடம் பேசினால் அவன் குறிப்பை அவனுடைய ஓசையிலிருந்து அறிந்து கொள்ள முடியும். ஆனால் எழுத்தில் எழுதி விட்டால் எவ்வாறு ஓசையைக் கண்டு பிடிப்பது? அவ்வாறு கண்டாலும் ஓசையால் பொருள் மாறுபட்ட நிலையை எவ்வாறு உணர்வது? உரைநடையில் இந்த வேறுபாட்டை உணர்வது கடினமாயினும் கவிதையில் உணர்வது எளிது. காரணம், கவிதை ஓசையைப் பெரிதும் நம்பி வாழ்வதாகலின். கவிஞன் ஒரு சொல்லைப் பயன்படுத்தும் பொழுது அதனுடைய மேற்கூறிய இருவகை ஆற்றலையும் நன்கு அறிந்தே பயன்படுத்துகிறான். கவிதையைப் படித்து அநுபவிக்கும் பொழுது வாய்விட்டுப் படிக்க வேண்டும். அப்பொழுதுதான் கவிதையின் சிறப்பை நன்கு அறிய இயலும். சில சொற்களைத் தனியே கூறும்பொழுது எவ்விதமான சிறப்பும் தெரியாது. ஆனால் அந்தச் சொற்களே முன்னும் பின்னும் சில சொற்களுடன் கூடிவரும் பொழுது தமக்கென இயற்கையாக உள்ள ஒலியை விட்டுப் புதிய ஒலிகளைப் பெற்றுவருவது யாவரும் அறிந்த ஒன்றே. 'தா' என்ற எழுத்து வல்லினமாயினும் 'தாளம்' என்ற சொல்லிலும் 'செந்தாமரை' என்ற சொல்லிலும் இரண்டு வேறுபட்ட ஒலியைப் பெற்று வருதல் கண்கூடு. இத்தகைய வேறுபாட்டை மிகுதியும் தனது நுண்ணிய செவியால் உணர்ந்த கவிஞன் அவற்றை நன்கு பயன்படுத்துகிறான். நாம் வாய்விட்டுப் படிக்காவிட்டால் அதன்கண் அமைந்துள்ள ஒரு பகுதி அழகை அநுபவிக்க இயலாமற் போய்விடும். பாடல் சிறிதாயினும் பெரிதாயினும் எந்த இனத்தைச் சேர்ந்தவையாயினும் இப் பண்புகள் பொதுவானவை யாகும்.

எனவே பொருளாலும் ஓசையாலும் சிறப்புடைய சொற்களைக் கொண்டே கவிஞன் கவிதையைப் புனைகின்றனன் என்பது தெளிவு. கவிஞன்

1. Semantic meaning.
2. Phonetic meaning.

பயன்படுத்தும் சொற்கள் இவற்றோடன்றி மற்றோர் இயல்பையும் பெற்று விளங்க வேண்டும் என்பர். அவ்வியல்பை எண்ணவூட்டல் சக்தி[1] என்பர். ஒவ்வொரு சொல்லும் நம் காதில் விழுந்தவுடன் ஓர் எண்ணக் கோவையைத் தோற்றுவிக்கிறது. எல்லாச் சொற்களும் இவ்வாறு செய்யும் என்று கூறுவதற்கில்லை. எனினும் சில சொற்களைக் கவிஞன் தக்க இடத்தில் பயன் படுத்தி அவற்றிற்கு ஒரு புதிய மெருகை ஏற்றி விடுகிறான். இதனால் அச் சொல்லைப் பிறகு எங்குக் கண்டாலும் கவிஞன் கூறிய பொருள் ஆழம் நம் மனத்திடையே தோன்றுகிறது. இவற்றை யெல்லாம் உள்ளடக்கியே ஆசிரியர் தொல்காப்பியனார்,

"நுண்மையும் சுருக்கமும் ஒளியுடை மையும்
மென்மையும் என்றிவை விளங்கத் தோன்றிக்
குறித்த பொருளை முடித்தற்கு வருஉம்"

என்று கூறிப் போனார். இவ்வாறு கவிஞனால் ஆக்கப் பெற்ற கவிதை யில் ஒரு சொல்லைக் கூட மாற்றவோ, எடுத்துவிட்டுப் பிறிதொரு சொல்லை அமைக்கவோ நம்மால் இயலாது.

அடுத்துக் காணப்படும் கவிதைப் பண்பு, கற்பனை ஆகும். கற்பனை இது என்று அறுதியிட்டு இலக்கணம் வகுத்தல் கடினமாயினும், கற்பனையில் அமைந்த கவிதையை நன்கு கண்டு கொள்ளல் இயலும். நாம் அன்றாட வாழ்க்கையில் காணும் பொருளைத்தான் கவிஞனும் காண்கிறான். ஆனால் நாம் காணும் பார்வை வேறாகவும், கவிஞன் காணும் பார்வை வேறாகவும் பல சமயங்களில் இருக்கக் காண்கிறோம். நாம் பொருள்களைக் கண்டாலும் அவற்றின் இயல்பை உள்ளவாறு அறிவதில்லை. பொருள்களை மேலாகப் பார்த்துவிட்டு அமைந்துவிடுதலின் அவற்றின் உள் தன்மையை அறிதல் இயலாதாகிறது. இந் நிலையில் அதே பொருள்களைக் காணும் கவிஞன் அவற்றின் உட்பொருளையும் ஊடுருவி நோக்கும் வன்மையால் புறத்தில் காணப்படாத அவற்றின் இயல்புகள் பலவற்றையும் அறிய முடிகிறது. தொடர்பற்றனபோல் காணப்படும் இரண்டு பொருள்களைக் கவிஞன் தன் கற்பனையின் துணைகொண்டு தொடர்பு படுத்துகிறான். அவன் கண்ட கற்பனையை நாம் அநுபவிக்க வேண்டுமாயின் நாமும் உணர்வு உலகத்தில் புகுந்து அதனை அநுபவிக்க வேண்டுமே தவிர ஆராய்ச்சியில் இறங்கிப் பயன் இல்லை. உதாரணமாக,

"மாதர் முகம்போல் ஒளிவிட வல்லையேல்
காதலை வாழி மதி"

என்று வள்ளுவர் கூறினால், சந்திரன் ஒளியை அளந்து பார்த்து இத்தகைய ஒளி மாதர் முகத்தில் இல்லையே என்று கவல்வது தவறுடைத் தாகும். சொல்லப்போனால், இன்று நாம் எதனை ஒளி என்று குறிக்கிறோமோ அது மனிதர்களுடைய தோலும் சதையும் உடைய முகத்திற் காணப்படுவ தன்று. அவ்வாறு இருக்க வள்ளுவர் ஏன் அங்ஙனம் கூறினார்? கூறின தோடு மட்டும் அமையாமல் சந்திரனைக் காட்டிலும் முகத்திற்கு அதிக ஒளி உள்ளதுபோல் அல்லவா கூறுகிறார்? ஆம்! இதுவே கற்பனையிற் பிறந்த

1. Suggestive power of the word.

கவிதை. காதலன் கற்பனையில் காதலியின் முகம் நிலவிலும் மிக்க ஒளியுடையதாகவே காணப்படுகிறது.

மேலே கூறிய அனைத்து இலக்கணங்களும் மிகுதியும் பொருந்தி அமைந்த கவிதைகளை உடையது திருக்குறள். கவிதைக்குரிய இத்துணைச் சிறப்புக்களைப் பெற்றுள்ளதாயினும், குறள் வெண்பாக்கள் ஏனைய கவிதைகள் போல் அழகு மிகுவதற்குரிய வாய்ப்புக்கள் நிறைந்தவை அல்ல. காரணம் குறட் பாட்டின் தன்மை அத்தகையது என்பதுதான். உணர்ச்சியைத் தாங்கி வரும் கவிதைக்கு மிகவும் இடைஞ்சலான வடிவம் ஒன்று உண்டு என்றால் அதுதான் வெண்பா வடிவம். கவிஞன் விருப்பம்போல் வளைந்து கொடுக்கும் ஆற்றல் இல்லாமல் மிகுதியான கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு வரும் இயல்புடையது வெண்பா. நான்கடிகளும் பதினைந்து சீர்களும் பெற்ற வெண்பாவே கடினமான வடிவுடையது என்றால், ஒன்றே முக்கால் அடியையும் ஏழு சீர்களையும் கொண்டுவரும் குறள் வெண்பாவைப் பற்றிச் சொல்லத் தேவையில்லை. இந்தப் பெரிய இடுக்கண்ணையும் மீறிக் குறள் சிறந்த கவிதைகளைத் தன்னகத்தே பெற்றிருப்பின் இது கவிஞனின் சிறப்பைப் பன்மடங்கு நமக்கு எடுத்துக் காட்டுவதாகும்.

முன்னர்க் கண்ட அழகுகள் கவிதையில் வெளிப்பட வேண்டுமாயின் அவை பொள்ளெனத் தோன்றிய கவிதைகளாகவே இருத்தல் வேண்டும். பாடவேண்டும் என்ற கட்டுப்பாட்டில் பிறக்கும் பாடல்கள் மேற்கண்ட அழகுகளுடன் விளங்குவது அருமை. ஒவ்வோர் அதிகாரத்திற்கும் பத்துக் குறள்கள் பாடவேண்டும் என்ற நியதியால் குறள் உளம் கனிந்த போதெலாம் உவந்து உவந்து பாடியது அன்று என்பதையும் அறிவிக்கிறது. கவிதையின் பயன் இன்பம் ஊட்டல் என்னும் ஒன்றாகவே இருக்க முடியும் என்பர் கவிதைத் திறன் ஆய்வாளர்கள். அவ்வாறன்றி ஒழுக்கம் கற்பித்தல் முதலிய வேறு பயன் கருதி ஒரு கவிதை தோன்றுமாயின் அதில் கவிதையழகு விடை பெற்றுக்கொள்ளும் என்றும் கூறுவர். அவர்கள் கூற்று முற்றும் உண்மை என்று ஏற்றுக்கொள்ளப் படாவிடினும், அதில் பெரும் பகுதி உண்மை உண்டு என்பதை யாரும் மறுத்தற்கு இல்லை. பிற்காலத்தில் எழுந்த ஆசாரக் கோவை, திரிகடுகம் போன்ற நூல்களில் செய்யுள் உண்டே தவிரக் கவிதை இல்லை என்பதை, அவற்றை ஒருமுறை படித்தாரும் அறிய முடியும். இவ்வாறு ஒழுக்கம் கற்பித்தலைக் குறிக்கோளாகக் கொண்டு தோன்றும் நூல்களை மேல்நாட்டுத் திறனாய்வாளர் 'கற்பிக்கும் கவிதை'[1] என்ற தொகுப்பினுள் அடக்குவர். திருக்குறளும் இத் தொகுப்பிற் குரிய இலக்கணம் பொருந்தியதாயினும் சிறந்த கவிதைகளைப் பெற்று விளங்குகிறது. காரணம், திருவள்ளுவர் ஒப்பற்ற கவிஞர் என்பதுதான்.

மேலே கூறிய சிறந்த கவிதைக்குரிய பண்புகள் எவ்வளவு தூரம் திருக்குறளில் அமைந்திருக்கின்றன என்று காண்டல் வேண்டும். இங்கிலையில் மறவாது மனத்திற் பதிக்க வேண்டிய கருத்தும் ஒன்று உண்டு. திருக்குறளில் சிறந்த கவிதைகள் உண்டு என்று கூறினவுடன், அதிலுள்ள ஆயிரத்து முந்நூற்று முப்பத்து குறள்களும் சிறந்த கவிதைகள் என்ற முடிவுக்கு வரவேண்டியதில்லை. அவ்வாறு இவ்வுலகில் எந்த மொழியிலும், எந்த

1. Didactic poetry.

நூலும் இல்லை. எத்துணைச் சிறந்த பேரறிஞனால் இயற்றப்பட்ட நூலாயினும் நூல் முழுவதும் சிறந்திருக்க இயலாது. காரணம், அவனும் மனிதன் என்பதுதான். முக்குண வசப்பட்ட எந்த மனிதன் செய்யும் செயலும் முற்றும் ஒரே படித்தாக இருக்கும் என்று எதிர்பார்ப்பதும் தவறு. பின்னர் எவ்வாறு ஒன்றைச் சிறந்தது என்று கூறுகிறோம்? அதற்கும் வள்ளுவரே விடை கூறுகிறார்,

> "குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
> மிகைநாடி மிக்க கொளல்"

என்ற குறளால். கவிஞனின் சிறப்புக்கு ஏற்ப மிகுதியான குறள்கள் சிறப்பைப் பெற்று விளங்குகின்றன என்று கோடலே பொருத்த முடைத்து. அதிகாரப் பிரிவினை ஒன்றை மேற்கொண்டு, ஒவ்வோர் அதிகாரத்திற்கும் பத்துக் குறள் பாடவேண்டும் என்று வைத்துக் கொண்டமையாலேயே சில அதிகாரங்களில் கவிதைக்குப் பதிலாகச் செய்யுட்களைச் செய்து நிரப்ப வேண்டி வந்துவிடுகிறது. இன்னும் சில அதிகாரங்களில் பத்துக் குறள்கள் போதாமையின் அடுத்து எதிர்மறை முகத்தால் ஓர் அதிகாரம் செய்ய வேண்டி ஏற்படுகிறது. 'கல்வி' என்ற அதிகாரமும், 'கல்லாமை' என்ற அதிகாரமும் இத்தகைய நிலைமைக்கு உதாரணங்கள்.

பொருள் ஆழமும், ஓசை நயமும் உடைய சொற்களே சிறந்த கவிதை தோன்ற உதவுபவை என்று முன்னர்க் கூறப் பெற்றதைத் திருக்குறளில் காண்போம். நம்மில் பலரும் அறிந்து அடிக்கடி மேற்கோள் காட்டும் ஒரு குறளைப் பார்ப்போம்.

> "பெயக்கண்டும் நஞ்சுண்டு அமைவர் நயத்தக்க
> நாகரிகம் வேண்டு பவர்" [1]

என்ற இக் குறளின் பொருள் விளங்குவது அத்துணைக் கடினம் அன்று. "நஞ்சை வாயிலே கொணர்ந்து நண்பர் ஊட்டுபோதிலும் அச்சமில்லை" என்று பாரதியார் பாடியது இக்குறளின் அடிப்படையில்தான்.

> "முந்தை யிருந்து நட்டோர் கொடுப்பின்
> நஞ்சும் உண்பர் நனிநா கரிகர்" [2]

என்று சான்றோர் கூறியதும் இக்கருத்தைத் தான்; என்றாலும், கவிதையிற் சிறந்த திருக்குறள் பயன்படுத்தும் ஒவ்வொரு சொல்லும் ஒப்பற்ற பொருட் சிறப்பு உடையது. பெய்தல், ஊற்றல், வார்த்தல், சிந்துதல், கொட்டல் என்ற இத்தனை சொற்களும் ஏறத் தாழ ஒரே பொருளுடையனவாயினும், இந்தச் சந்தர்ப்பத்திற்கு ஏற்ற சொல் 'பெய்தல்' என்பதுதான். கொஞ்சம் கொஞ்சமாக ஊற்றும் செயலும், நிறையவே ஊற்றும் செயலும் 'பெய்தல்' என்ற சொல்லில் அமைந்து கிடக்கக் காண்கிறோம். கொடுக்கப்படுகிற நஞ்சு சொட்டுக்கணக்கில் இல்லாமல் மிகுதியும் இடப்பட்டிருத்தலை இச் சொல் அறிவிக்கிறது. பெய்தல் என்று இவ்விடத்தில் உள்ள சொல்லுக்கு 'இடுதல்' என்பது நேரடியான பொருளாயினும், அச்சொல் ஓசையால் மிகுதியும் பெய்யப்பட்ட ஒரு செயலை நம் எண்ணத்தில் தூண்டுகிறது. இதனைத்தான் முன்னர் எண்ண ஊட்டுச் சக்தி என்று குறிப்பிட்டோம்.

1. குறள், 530. 2. நற்றிணை, 355.

அடுத்துள்ள 'கண்டும்' என்ற சொல்லைக் காண்போம். நஞ்சிடு வதைக் காணுதவராயின் பாலென நினைத்து உண்டு மடிபவர் உண்டு. ஆனால் தாம் உண்ணப்போகும் உணவு என்று அறிந்து அதில் பிறர் நஞ்சை மிகுதியாகப் பெய்தலை யாரும் பார்த்துக்கொண்டு வாளா இருத்தல் இயலாத காரியம். ஏதோ தெரிந்தும் தெரியாமலுமாக ஐயத்தைத் தோற்று விக்கின்ற முறையில் கலக்கப்பெற்ற நஞ்சன்று; கண்களால் நன்கு கண்டு கொண்டிருக்கும்போதே அள்ளி ஊற்றப்பெற்றது என்பதை அறிவித்தற்குக் 'கண்டும்' என்ற சொல்லை ஆசிரியர் வைத்துள்ளார். அறிந்தும், தெரிந்தும் என்ற சொற்களால் சொல்லி இருப்பின் அது பிறர் கூற அறிந்ததாகவும், தெரிந்ததாகவும் இருக்கலாம் அன்றோ? பிறர் கூறிவிட்ட ஒரு காரணத்திற்காக ஒன்றை நம்பிவிடுதலும் நம்பாது விடுதலும் அத்துணைச் சிறந்தன அல்ல. அவ்வாறு பிறர் மூலம் அறிந்த செயல் அன்று நஞ்சு கலந்த செய்கை; தானே காணும்பொழுது கலக்கப் பெற்றது என்ற கருத்தை அறிவிக்கவே 'கண்டும்' என்ற சொல் ஆட்சி செய்யப்பெற்றுள்ளது. அச் சொல்லில் உள்ள 'உம்'மை மிகவும் அதிசயமான இச் செயலுக்கு ஓர் எல்லை வகுப்பதாய் அமைகிறது. மிகப் பெரியவர்களும் செயற்கரிய செயலாகும், தமக்கு உண்ணத் தருகிற உணவில் பிறர் தம் கண் எதிரேயே நஞ்சைப் பெய்யும் செயலைக் கண்டிருத்தல். சாதாரண இடங்களிலும் ஓசையை நிறைத்தற்காகவும் 'உம்'மை தருகிற இயல்பு குறளாசிரியரிடம் இல்லை. தாம் கருதிய பொருளுக்கு எல்லை வகுக்கும் அவ்வளவு உயர்வு அல்லது தாழ்வு காட்ட வேண்டிய இடத்திலேயே பெரும்பாலும் 'உம்'மை தந்து பேசுவார். அத் தகைய அற்புதமான இடங்களில் ஒன்று 'கண்டும்' என்ற சொல்லில் உள்ள உம்மை.

நஞ்சு என்பது அடுத்து உள்ள சொல். தமிழ் மொழியில் சில வியப்பான சொல்லாட்சிகள் உண்டு. கடுமையான பொருளை மென்மையான மொழி யாலும், மென்மையான பொருளை வன்மையான மொழியாலும் குறிப்பது இவ்வகையைச் சேர்ந்தது. உள்ளே ஒன்றும் இல்லாதவர்களை 'அற்பர்', 'கயவர்' என்று அழுத்தம் தந்து கூறுதலும், சொல்லும் தன்மை வாய்ந்த விடத்தை 'நஞ்சு' என்ற மெல்லோசை உடைய சொல்லால் குறித்தலும், அரிதல், அறிதல் என்பவைகளும் மேற்கண்ட சொல்லாட்சிக்கு உதாரணங்கள். ஆனால் 'நஞ்சு' என்ற சொல்லை ஆசிரியர் வேண்டுமென்றே அதனுடைய ஓசை நயம் கருதிப் பயன்படுத்துகிருர். நஞ்சை இடுபவர்கள் புறத்தோற்றத்தை நம் மனக்கண்முன் கொண்டு வருகிறது, மெல்லோசை யுடைய இச்சொல். 'சிரித்துக்கொண்டே கழுத்தை அறுத்தல்' என்ற செய்கையை நினைவூட்டுகிறது, 'நஞ்சு' என்ற சொல். அம்மட்டோடு இல்லை; நஞ்சைத் தருபவர்கள் மனம் கல்லாக இருந்தும் வெளிக்குக் காட்டாமல் எப்படி அதனைத் தந்தாலும் வாங்கி உண்ணுகிற நாகரிகமுடைய பெரியார்களின் மன நிலையையும் இச் சொல் குறிக்கிறது. தருபவர் எந்த மன நிலையில் தந்தாலும் உண்பவர், அதனை 'நஞ்சாயிற்றே; உண்டால் கொன்றுவிடுமே' என நினைப்பார்களாயின் பயன் இல்லையாய்விடும். உண்பதற்கு ஏற்ற இனிமையும், மென்மையும் உடைய பொருளாகவே உண்பவர்கள் அதனை நினைக்கிருர்கள் என்ற கருத்தையும் 'நஞ்சுண்டு' என்ற சொல்லில் உள்ள மெல்லோசை நினைவூட்டுகிறது.

அடுத்திருப்பது 'உண்டு' என்ற சொல். தின்னல், பருகல், நக்கல் முதலிய பல சொற்கள் இருப்பினும் 'உண்ணல்' என்ற சொல் பயன்படுத்தப் பெற்றுள்ளது நோக்கற்குரியது. பருகல் முதலிய சொற்கள் நீர் முதலிய வற்றையே குறிக்கும். நஞ்சு பருகி என்ருல், 'நீர்ப் பொருளாய் இருத்தலின் பருகிவிட்டார்; திடப்பொருளாயின் எவ்வாருே?' என்பது போன்ற ஐயங்கள் தோன்றுமாதலின், அவற்றைப் போக்கி, அன்ருட உணவை எவ்வளவு விருப்புடன் உண்ணுவார்களோ அத்துணை விருப்புடன் நஞ்சு கலந்த பொருளை உண்டனர் என்ற பொருளும் தொனிக்கவே 'நஞ்சு உண்டு' என்று ஆசிரியர் கூறியுள்ளார்.

இதனை அடுத்து வருகிற சொல்தான் மிக இன்றியமையாதது. அச் சொல்லைத் திருவள்ளுவர் மட்டுமே கூறக்கூடிய தகுதி வாய்ந்தவர். அத்தகைய சிறப்புடைய சொல்தான் அடுத்து நிற்கும் 'அமைவர்' என்ற அழகிய சொல். அமைவர் என்ற இச் சொற்கு, அவ்வாறு நஞ்சு கொடுத்தாரோடு பின்னும் 'மேவுவர்' என்று பொருள் கூறிச் சென்ருர், குறளினும் குறுகிய பொருள் எழுதவல்ல பரிமேலழகர். இனி இச் சொல்லின் ஆற்றலைச் சற்றுக் காண்போம். அமைதல், பொருந்தல், சேர்தல், ஒன்றல் என்பவை அநேகமாக இப்பொருள் தரும் சொற்களே. காலுக்கு ஏற்ற செருப்பைப் பெற்ருன் ஒருவன் செருப்புச் சரியாக இருக்கிறது என்பானே தவிர, 'இச் செருப்பு என் காலுக்கு அமைந்தது' என்று கூறமாட்டான். ஆனுல் ஒரு மணமகனுக்கு ஏற்ற மணமகள் கிடைத்தபொழுது, 'மணமகனுக்கு அமைந்த மணமகள்' என்று கூறக் கேட்கிருேம். அமைதல் என்ற சொல்லை வெறும் பொருத்தம் என்ற பொருளில் வழங்காமல், எல்லா வகையானும் பொருந்திய வழியே இன்றும் பயன்படுத்துகிருேம். எனவே 'அமைவர்' என்று ஆசிரியர் கூறுகையில் உண்டவரின் மனநிலையைப் படம் பிடித்துக் காட்டிவிடுகிருர். உற்ற நண்பராக இருப்பவர் தருகின்ற நஞ்சைக் கண்ணோட்டம் காரணமாகவோ, கர்வம் காரணமாகவோ வாங்கி உண்டு விடுபவர்களும் உண்டு. ஆனுல் முனைப்புக் காரணமாகச் செய்துவிட்ட பிறகு அந்த மன நிலையில் அச்சமும் வெறுப்பும் குடிபுகுந்துவிடும். செயற்கரிய செயலைச் சந்தர்ப்பம் காரணமாகச் செய்தவருங் கூடப் பின்னர் இருந்து பச்சாத்தாபப்படுதலை அறிவோம். ஏன் செய்தோம் என்று கழிந்ததற்கு இரங்கும் மனப்பான்மை மனித மனத்தின்பாற் பட்டதே ஆகும். அவ்வாறு கழிவிரக்கம் கொண்டவர் அதன் பயனுக அவ்வாறு தம்மைச் செய்யத் தூண்டியவர்கள்மாட்டு வெறுப்படைதல் இயற்கையே ஆகும். அந்த வெறுப்பைத் தூண்டிய அவர் அறியுமாறு வெளியிடுதலும் உண்டு; கொஞ்சம் பண்பட்டவராயின் வெளிக்காட்டாமல் மனம் புழுங்கி இருத்தலும் உண்டு. செயல் நிகழ்ந்துவிட்ட பிறகு வரும் இந்த மனநிலைக்கு அவர்களைக் குறை கூறுதலும் தகாது.

நஞ்சை உண்டவர்கள், உண்டு தீர்த்த பிறகு என்ன மனநிலையில் இருக்கிருர்களோ அதை வைத்துத்தான் அவர்கட்குப் பெயர் தரவேண்டும் என்பது குறளாசிரியர் கொள்கை. சூழ்நிலை காரணமாக நஞ்சை உண்பவர் களும் உண்டு; நஞ்சைப் பிறர் தம் எதிரே உணவில் கலந்துங்கூட அறியாமை காரணமாக உண்பவர்களும் உண்டு. ஆனுல் இவர்களை எல்லாம் நாகரிகர்

என்று அழைத்தல் அடாது. எனவே அப் பட்டம் பெறுவதற்குரிய தேர்வை இறுதியில் வைக்கிறார் ஆசிரியர். நஞ்சை உண்ட பிறகு உண்டவர் மனத்தில் கைவைத்துப் பார்க்கிறார். அம் மனம் அமைதியுடன் இருக்கிறதா? சிறிது வேகமாகக்கூட அடிக்காமல் நெஞ்சு இருத்தல் வேண்டும். நஞ்சைச் தந்தவர் மேல் சிறிதும் காழ்ப்புக்கொள்ளாமல் பழைய நட்பைப் பாராட்டும் பண்பாடு அங்கு இருக்கிறதா? நஞ்சு தந்தவரை வாயால் ஒன்றும் இழித்துப் பேச வில்லை எனினும் மனத்தாலும் அவரை ஏசாமல் இருக்கிறாரா? அவருடன் முன்னர்க் கொண்ட பொருந்திய நட்பை இன்னும் கொண்டுள்ளாரா? அவ்வாறு இருப்பின் அதனை அமைந்ததாகக் கூறலாம். அப்பொழுதுதான் 'அமைவர்' என்ற சொல் இந்த இடத்தில் பொருந்துவதாகும். பழைய சாக்ரட்டீசையும், திருநாவுக்கரசரையும் நினைந்துபார்க்க வேண்டிய இடம் இது. இவ்வாறு ஒருவர் தம் உற்ற நண்பர் மிகுந்த நஞ்சைத் தம் கண் எதிரே தமது உணவிற் கலந்து தரவும் வாங்கி விருப்பத்தோடு உண்டுவிட்டு, அவர்மேல் காழ்ப்போ வெறுப்போ பாராட்டாமல் இருப்பதுடன் பழைய நட்பையும் பாராட்டுவாரேயாயின் அவரே விரும்பத் தக்க நாகரிகம் உடையவர் என்று திருக்குறள் கூறுகிறது.

இவ்வளவு கருத்துக்களையும் ஒன்றே முக்கால் அடியில், ஏழு சீரில், ஏழு சொற்களில் கூறிய கவிதையை, 'கடுகைத் துளைத்து,' இல்லை! தவறு, 'அணுவைத் துளைத்து எழுகடலைப் புகட்டிய கவிதை' என்று ஏன் கூறக் கூடாது?

குறளின் பொருள் ஆழங்காண முற்பட்ட நாம் ஓசை நயமும் காண்டல் வேண்டும். எல்லாம் அந்த ஏழு சீருக்குள்தான். 'உழக்கில் கிழக்கு மேற்கா?' என்பது பழமொழி. ஆனால் உழக்கில் அன்று, வீசம் படியில் கிழக்கு மேற்கு மட்டும் அல்ல, எட்டுத் திசைகளையும் காட்டவல்லது குறள். ஓசை நயம் என்பது பல வழிகளில் கவிஞனால் பயன்படுத்தப்படுவதாகும். இன்பம் ஊட்டுவது ஒன்றே குறிக்கோளாகக் கொண்டும் இனிய ஓசை பயன்படுத்தப் பெறலாம்.

"குழல்இனிது யாழ்இனிது என்பதம் மக்கள்
மழலைச்சொல் கேளா தவர்"[1]

"மலர்காணின் மையாத்தி நெஞ்சே இவள்கண்
பலர்காணும் பூவொக்கும் என்று"[2]

என்ற குறள்களின் ஓசை நயம் வாய்விட்டு உரக்கப் படித்தால்தான் நன்கு விளங்கும்.

படிக்கும்பொழுது செவிக்கு இன்பம் ஊட்டுவது தவிர, இக் கவிதைகளில் கண்ட ஓசை நயம் செய்யும் தொழில் வேறு இல்லை. ஆனால் மற்றும் சில கவிதைகளில் ஓசை பொருளையே அறிவித்தலும் உண்டு. உலகத்தின் பற்றுக்கள் மனிதனை வலுவாகப் பற்றியுள்ளன. அவற்றிலிருந்து விடுதலை அடையவேண்டுமாயின் ஒரே வழிதான் உண்டு. மனித மனமோ ஏதாவது ஒன்றைப் பற்றிக்கொண்டுதான் நிற்குமே தவிரச் சும்மா இருப்பதில்லை. எனவே உலகப்பற்றை மனம் விட வேண்டுமாயின் கடவுட்பற்றைப் பிடித்துக் கொள்ள வேண்டும்; இல்லையேல் இப் பற்றை விட இயலாது. கடவுட் பற்றையும் அரைகுறையாகப் பற்றிக்கொண்டால் பயன் இல்லை. விடாப்பிடியாக

1. குறள், 66. 2. ஷை 1112.

அழுத்தமாகக் கடவுட் பற்றைப் பிடித்தவர்கள் உலகப் பற்றை விட முடியும். இத் துணை தூரம் கூறியதையும் கவிஞன் ஏழு சீர்களில் கூறவேண்டும். ஆகவே ஓசையைத் துணைக்கு அழைக்கிறார்;

" பற்றுக பற்றற்றான் பற்றினை, அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு." [1]

இக் கவிதையில் உள்ள வல்லோசைகளும் 'ற்று' என்ற எழுத்துக்களின் ஒலியும் எவ்வளவு வலுவாகப் பற்ற வேண்டும் என்பதை நமக்கு நினைவூட்டுகின்றன.

" கொக்கொக்க கூம்பும் பருவத்து ; மற்றதன்
குத்தொக்க சீர்த்த விடத்து " [2]

என்ற கவிதையில் கொக்கைப் பாராதவர்களும் அது குத்தும் வேகத்தை அறிய முடிகிறதன்றோ? ஒன்றும் அறியாமல் எல்லாம் அறிந்தவனாகத் தன்னை மதிக்கும் முட்டாளுக்கு உபதேசம் செய்யப்போனால், போனவன் முட்டாளாகி விடுவான். உபதேசம் செய்த பிறகும் அறியாமை உடையவன் பழைய அறியாமை உடையவனாகவே இருப்பான். இதனால் பயன் இருவருக்கும் ஒரு வகையான குழப்பந்தான். எஞ்சி நிற்கும் இக் குழப்பத்தை இதோ கவிதையின் திரண்ட ஓசை நமக்கு அறிவிக்கிறது ;

" காணாதாற் காட்டுவான் தான்காணான் காணாதான்
கண்டானாம் தான்கண்ட வாறு." [3]

பணம் முதலிய பொருள்களின் இழிவை விளக்க வருகிறார் கவிஞர். மிகவும் தாழ்ந்தவனைக் கூடப் பெரிய மனிதனாக ஆக்கும் அற்பத்தன்மை யுடையது பொருட் செல்வம். ஆகலின் அப் பொருளின் அற்பத் தன்மையை ஓசையில் காட்டுகிறார் ஆசிரியர்,

" பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லை பொருள்" [4]

என்ற குறளால்.

" என்னைமுன் நில்லன்மின் தெவ்விர் பலர்என்னை
முன்னின்று கன்னின்ற வர்" [5]

என்பன போன்ற குறள்களில் வீரச்சுவை காண்டல் கூடும்.

திருக்குறளில் பொதுவாகவும், காமத்துப்பாலில் சிறப்பாகவும், புலவி நுணுக்கம் போன்ற அதிகாரங்களில் மிகச் சிறப்பாகவும் கற்பனையைக் காண்டல் கூடும். கவிதைகளைக் கற்பவன் அநுபவ அளவுக்கு ஏற்ப அக்கவிதைகளின் கற்பனைச் சுவை மிகுதிப்படுதலை அறியலாம். 'அறிதோறு அறியாமை கண்டற்றால்' என்ற குறளே இந்த அநுபவத்தைப்பற்றிக் கூறுகிறது. சென்ற ஆண்டில் கற்ற குறளை மீட்டும் இப்பொழுது கற்பினும் புதிய முறையில் நமது மனத்தின் வளர்ச்சியளவிற்குப் பொருள் காண்டல் கூடும். இவை எல்லாம் குறளின் ஒப்பற்ற கவிதைப் பண்பின்பாற் படும். 'உடையார்' (395), கரப்பவர்க்கு (1070), எழுதுங்கால் (1285) என்பன போன்ற குறள்கள் சிறந்த கற்பனைக்கு உதாரணங்கள்.

1. குறள், 350. 2. ஷை 490. 3. 849. 4. 751. 5. 771.

ஒரு கவிஞனுடைய திறமையை உள்ளவாறு மதிப்பிட உதவுவது அவனுடைய உவமைத்திறன் என்று கூறினால் மிகையாகாது. நாம் அன்றாடம் கண்டும் காணாத பொருள்களினிடத்து உள்ள அரிய இயல்புகளைக் கவிஞன் கண்டு சமயம் வரும்பொழுது அவற்றைத் தக்கவாறு பயன்படுத்துகிறான். இவ்வாறு பயன்படுத்தும் உவமை அவனுடைய கல்வி, இயற்கை அறிவு, அநுபவம், பரந்த மனப்பான்மை, நுனித்துக் காணும் காட்சி முதலியவற்றிற்கு ஏற்பத் தோன்றும். 'மனிதன் தன் நிலையினின்று தாழாது இருக்கும் வரையில் மனிதனுக்குரிய மதிப்பைப் பெறுகிறான். அந்நிலையிலிருந்து ஒரு சிறிது கீழிறங்கினாலும் அம்மதிப்பை இழந்துவிடுகிறான்' என்ற கருத்தை விளக்க வருகிறார் ஆசிரியர். இப்படியே கூறிவிட்டால் ஓர் ஐயம் வரக் கூடும். 'அவன் இழைத்த தவற்றின் அளவாகத்தானே தாழ்வும் வரும்? சிறு தவறு இழைத்தால் பெருந் தாழ்வு வந்துவிடுமா?' என்ற ஐயமே அது. இத்தகைய ஐயத்திற்கு விடைகூற வேண்டும் கவிஞன். சிறு தவறாயினும் பெருந்தாழ்வு வரும் என்று நேரடியாகக் கூறிவிடலாம். ஆனால் அவ்வாறு கூறிவிட்டால் அது கவிதையாகாது. மேலும் பெருந்தாழ்வு என்பது ஒப்பு நோக்கல் சொல்தானே? அது எவ்வளவு என்பதைக் காட்டாதன்றோ? ஆகவே வீழ்ச்சியின் அளவைக் குறிக்க ஒரு சிறந்த வழியை உவமை மூலம் கையாள்கிறார் ஆசிரியர். தலையில் இருக்கின்றவரை வாசனை எண்ணெய் பூசப்பெற்று ஓயாது அலங்கரிக்கப்படும் மயிர் கீழே வீழ்ந்தவுடன் எவ்வளவு வெறுக்கப்படுகிறது! தலைஉயரத்திலிருந்து தோள்பட்டை அளவு வீழ்ந்தாலும் தரையளவு கீழே வீழ்ந்துவிட்டாலும் அதனிடம் காட்டப்பெறுகிற வெறுப்பு ஒன்றேதான். அதேபோல, மனிதன் தன் நிலையை விட்டுத் தவறான செயலைச் செய்தால், அத் தவறு சிறியதாயினும் பெரியதாயினும் ஒன்றுதான். அவன் பிறரால் எள்ளி நகையாடத் தக்க நிலையை அடைந்து விடுகிறான் என்ற உண்மையை ஒரே உவமையின் மூலம் எவ்வளவு அழகாகக் குறள் கூறுகிறது, "தலையின் இழிந்த மயிர்அனையர் மாந்தர், நிலையின் இழிந்தக் கடை"[1] என்ற கவிதையின் மூலம்! உவமை அழகுக்கெல்லாம் ஒப்பற்ற எடுத்துக்காட்டாக அமைய வில்லையா இந்த அரிய குறள்?

இவ்வாறு பொருள் ஆழம் நிறைந்த உவமை தரும் கவிதைகளை மிக்குடையது திருக்குறள். கீழ்வரும் மூன்று குறள்களிலும் ஏறத்தாழ ஒரே பொருள் பேசப்படுகிறது. என்றாலும் உவமைகளை மாற்றுவதன் மூலம் ஒன்றுக் கொன்று கடலனைய வேற்றுமையைப் பெற வைத்துவிடுகிறார் ஆசிரியர்;

"ஊருணி நீர்நிறைந் தற்றே உலகுஅவாம்
பேர்அறி வாளன் திரு."[2]

"பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்
நயன்உடை யான்கண் படின்."[3]

"மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
பெருந்தகை யான்கண் படின்."[4]

இவண் கூறிய மூவர் செல்வமும் பிறர்க்குப் பயன்படும் என்றுதான் கூறுகிறார். பேர் அறிவாளன் என்றால் உலகியல் அறிவு படைத்தவன் என்பது

1. குறள், 964. 2. ஷை 215. 3. 216. 4. 217.

பொருள்; நயன் உடையான் என்றால் ஒப்புரவு செய்பவன் என்றும், பெருந்தகையான் என்றால் பெருவள்ளல் என்றும் பொருள் அறிய வேண்டும். உலகியல் அறிவுடையான் செல்வம் ஊருணி நீர்போன்றது. ஊருணி நீர் யாவர்க்கும் பொதுவாயினும் கட்டுக்காவல் மிக்கது என்பதும், எல்லாவற்றிற்கும் பயன்படாது என்பதும், விலங்கினங்கள் அந்நீரை உண்ண முடியாது என்பதும் அறியப்படல் வேண்டும். எனவே உலகியல் அறிவு மிக்கவனது செல்வம் எல்லாருக்கும் பெரிதும் பயன் படாதபடி ஒரு சிலருக்கே ஓரளவு பயன்படும் என்பது பெற்றும். பயன் மரம் என்ற உவமையால் பிறர் யாரும் முயன்று நீர் ஊற்றுவிடினும், தன் மாட்டு ஏறிப் பறித்துக் கொள்ளும் முயற்சியைச் செய்பவர் யாவர்க்கும் பயன் தரும் என்பது பெறலாகும். அதேபோல ஒப்புரவு செய்வான் தன்னை விரும்பி வந்தடைந்தவர்க்குத் தப்பாது உதவுவான் என்பதைப் பெறவைத்தார். பயன் மரம் என்றமையால் அதில் உள்ள பழம் ஒன்றே பயன்படும் என்பதும், அது பழுக்கும் பருவம் ஒன்றில் மட்டுமே பிறர்க்கும் அதனைத் தரும் என்பதும் பெற்றும். மூன்றாவதாக உள்ள மருந்து மரம் மிகச் சிறந்த உவமையாய்ப் பாரிபோன்ற பெருவள்ளல்களின் வள்ளன்மைக்கு எடுத்துக் காட்டாய் நிற்பது. மருந்து மரம் என்றமையின் வேர் முதற் கொண்டு, பழம், விதை ஈறாக அனைத்தும் பிறர்க்குப் பயன்பட்டு நிற்கும் இயல்பை உவமையால் அறிவித்தார்.

> "முந்நூறு ஊர்த்தே தண்பறம்பு நன்னாடு
> முந்நூறு ஊரும் பரிசிலர் பெற்றனர்
> யாமும் பாரியும் உளமே"

என்று புலவரால் பாராட்டத்தக்க முறையில் அனைத்துப் பொருளையும் பரிசிலர்க்கு வழங்கி, அதனுடன் அமையாது தன்னையே வேண்டும் என்று கேட்டவர்க்கும் மறாமல் தன்னைப் பரித்தியாகம் செய்த பாரிவள்ளலைப் போன்றவர்களைக் குறிக்கக் கவிதை 'பெருந்தகையான்' என்ற சொல்லைப் பயன்படுத்திற்று. இம்மூன்று ஒப்பற்ற கவிதைகளிலும் ஒப்புரவு செய்வாரது ஏற்றம் கூறப்படினும், அற்புதமான உவமைகளைக் கையாள்வதன் மூலம் ஆசிரியர் உய்த்துணர வேண்டிய உண்மைப் பொருள் எவ்வளவு கூறிவிட்டார் என்பது அறிந்து மகிழ்தற் குரியது.

இதுகாறும் கூறியவற்றால் பாடல் வடிவில் இருப்பன எல்லாம் கவிதையாகா என்பதும், கவிதைக்குரிய இன்றியமையா இலக்கணம் இவை என்பதும், இவ்விலக்கணங்கள் மிகுதியும் அமையப்பெற்ற கவிதைகளையுடைய நூல்கள் மிகச் சிலவே என்பதும், அவற்றுள் திருக்குறள் தலையாய கவிதைகளை மிக்குடைய நூல் என்பதும் ஒருவாறு விளங்குவதுடன், சிறந்த கவிதைக்குரிய சொல்லாட்சி, ஓசை நயம், பொருள் ஆழம், கற்பனை, உவமை நயம் என்பவை மிகுதியும் காணப் பெறுவது குறளில் என்பதும் நன்கு விளங்கும்.

# திருக்குறளில் காதல்

திரு டாக்டர் மு. வரதராசனார்
(தமிழ்ப்பேராசியர், சென்னைப் பல்கலைக்கழகம்)

### பண்படுத்த வல்லது

தன் இன்பத்தை உணர்ந்து களித்தல், தன் துன்பத்தை உணர்ந்து வருந்துதல் ஆகிய இவை எந்த உயிர்க்கும் பொதுவான தன்மைகளாகும். பிற உயிரின் இன்பத்தை உணர்ந்து மகிழ்தல், பிற உயிரின் துன்பத்தை உணர்ந்து கலங்குதல் ஆகிய இவை மக்களுயிர்க்கே சிறப்பாக அமைந்த தன்மைகள். மற்றோர் உயிரின் துன்பத்தைத் தன் துன்பம்போல் உணர்ந்து போற்றாவிட்டால் அறிவால் பயன் இல்லை என்பது திருவள்ளுவர் கருத்து.[1] மக்களுக்கு நல்லறிவு வளர வளர, இந்தச் சிறந்த பண்பு வளர்கின்றது என்று அவர் கருதுகிறார். இத்தகைய பண்பு காதல் வாழ்க்கையில் நன்கு வளர்ந்து நிரம்புகின்றது. பிறர் துன்பத்தை உணர்ந்து உருகும் பயிற்சி காதலரின் வாழ்வில் எளிதில் அமைகின்றது எனலாம். ஒத்த அன்பும் பண்பும் அறிவும் வாய்ந்த காதலர் இருவர் வாழும் வாழ்க்கையில் ஒருவர் உறும் துன்பம் அவ்வளவும் மற்றவரும் உறுகின்றார். இதுமட்டும் அன்று. காதலர் உள்ளத்தின் பண்பு மேலும் வளர்ச்சி பெற்று உயர்கின்றது. அதாவது: காதலன் தன் துன்பத்திற்காக வருந்துவதைவிடக் காதலியின் துன்பத்திற்காகவே மிகுதியாக வருந்துகின்றான்; அவ்வாறே காதலி தன் துன்பத்திற்காக வருந்துவதைவிடக் காதலனுடைய துன்பத்திற்காகவே மிகுதியாக வருந்துகின்றாள். இதனினும் உயர்ந்த படி மற்றொன்று உள்ளது. அதுவே காதல் வாழ்வின் எல்லை எனலாம். அதாவது: காதலனோ காதலியோ தன் துன்பமெல்லாம் மறந்துவிட்டுத் தன் துணையின் துன்பத்திற்காகவே வருந்துதல்; தன் துணையின் பொருட்டாகவே உயிர்வாழ்தல். இவ்வாறு முதல் படியிலிருந்து மூன்றாம்படி வரையில் வளரும் வளர்ச்சியே காதலின் சிறப்பியல்பாகும். இதனாலேயே மக்களின் வாழ்க்கையைப் பண்படுத்தி உயர்த்த வல்ல ஆற்றல் காதலுக்கு அமைந்திருப்பதாகச் சான்றோர் அறிவுறுத்தி வருகின்றனர். தவம்,[2] நிலையாமை,[3] துறவு,[4] மெய்யுணர்வு,[5] அவாவறுத்தல்,[6] ஊழ்[7] முதலிய அரும்பொருள்களை வலியுறுத்திய திருவள்ளுவர் காதல் வாழ்க்கையையும் கலைச்சுவையுடன் விளக்கியுள்ள காரணம் இதுவே ஆகும்.

### நாடகக் காவியம்

அறம் பொருள் இன்பம் என நூற்பகுதிகளை அமைத்துக்கொண்ட திருவள்ளுவர், இன்பம் பற்றிய காமத்துப்பாலை இயற்றும்போது, கலையுள்ளம் படைத்த கவிஞராக விளங்கியுள்ளார். மற்றப் பகுதிகளை –

1. "அறிவினான் ஆகுவ துண்டோ பிறிதின்நோய், தன்நோய்போல் போற்றாக் கடை." (குறள் 315.)

2. குறள். அதி. 27. 3. ஷை 34. 4. 35. 5. 36. 6. 37. 7. 38.

அறத்துப்பாலையும் பொருட்பாலையும் – கற்கும்போது, குறளாசிரியர் உரைப்பவராகவும் கற்பவர் கேட்பவராகவும் இருத்தலைக் காணலாம். திருவள்ளுவர் ஆசிரியராக அமர்ந்து வழி வழியாக வரும் தமிழ்மக்களுக்கு அறவுரையும் அறிவுரையும் வழங்குவதை அந்தப் பகுதிகளில் காணலாம். இப் பொதுமுறைக்கு மாருக அவற்றில் அமைந்துள்ள ஒரு சில குறள் மணிகளும் உண்டு. அவை படைச்செருக்கு என்னும் அதிகாரத்தில் இரண்டு குறளும்[1], நல்குரவு என்னும் அதிகாரத்தில் இரண்டு குறளும்[2] ஆகும். படைச்செருக்கில் உள்ள அந்த இரண்டு குறளும், போர்க்களத்தில் மறம் மிக்க வீரன் ஒருவன் கூறும் கூற்றுக்களாக அமைந்துள்ளன. நல்குரவில் உள்ள இரண்டு குறளும், வறுமையால் வாடி நலியும் ஒருவன் கூறும் கூற்றுக்களாக உள்ளன. இந்தக் குறட்பாக்களைக் கற்கும்போது, திருவள்ளுவர் ஆசிரியராக இருந்து நமக்கு அறவுரையும் அறிவுரையும் கூறும் காட்சி மாறி, போர்க்களத்தில் வீரன் கூறும் காட்சியும் நல்குரவால் நைந்திடும் வறியவன் கூறும் காட்சியும் அமையக் காண்கின்றோம். காமத்துப் பாலாகிய மூன்றும் பகுதி முழுதும் இவ்வாறு மாறி அமைந்த அமைப்பே ஆகும்.

காமத்துப்பாலில் திருவள்ளுவர் பாக்களைத் தாம் கூறும் சொற்களாக அமைக்காமல், காதலர் இருவர் கூறும் கூற்றுக்களாகவே அமைத்துள்ளார். திருவள்ளுவர் காதல் நாடகக்களம் அமைத்து, அங்குக் காதலன் காதலி தோழி ஆகிய மூவரையும் பேசவிட்டு, அவர்களைப் பேசவைக்கும் கலைஞராக விளங்குகின்ருர். கற்பவர் நேரே அறவுரையோ, அறிவுரையோ பெறும் வாய்ப்பு இல்லாமல், நாடக மண்டபத்தில் அமர்ந்து ஒன்றன்பின் ஒன்ருகப் பல காட்சிகளைக் காணும் மக்களாக விளங்க நேர்கின்றது. சுருங்கக்கூறின், காமத்துப்பால் அறநூல் அல்லது அறிவுநூல் போன்றது அன்று; காவியம் போன்றது. காமத்துப்பாலைத் தனியே ஒரு நாடகக் காவியம் எனக் குறிப்பிடலாம்.

மோசி கீரனாரின் பெயரால் திருவள்ளுவ மாலையில் காணப்படும் பழைய வெண்பா ஒன்று இதனைத் தெளிவாக்குகின்றது. காமத்துப்பால் மூன்று பகுதியது என்றும், ஆண்பாற்கூற்று பெண்பாற்கூற்று இருபாற்கூற்று என்பவைகளே அம்மூன்று பகுதிகள் என்றும், ஆண்பாற் கூற்ருக – காதலன் கூறுவனவாக – ஏழு அதிகாரம் உள்ளன என்றும், பெண்பாற் கூற்ருக – காதலியும் தோழியும் கூறுவனவாக – பன்னிரண்டு அதிகாரம் உள்ளன என்றும், இருபாலாரும் கூறுவனவாக ஆறு அதிகாரம் உள்ளன என்றும் அவ்வெண்பா விளக்குகின்றது.

> "ஆண்பால்ஏழ் ஆறிரண்டு பெண்பால் அடுத்தன்பு
> பூண்பால் இருபால்ஓர் ஆருக—மாண்பாய
> காமத்தின் பக்கமொரு மூன்ருகக் கட்டுரைத்தார்
> நாமத்தின் வள்ளுவனார் நன்கு"[3]

பழைய அகப்பொருட் பாக்களுக்கும் திருக்குறளின் அகப்பொருட் பாக்களுக்கும் உள்ள வேறுபாடு ஒன்று இங்குக் கருதத் தக்கது.

---

1. குறள். 771, 772. 2. 1048, 1049. 3. திருவள்ளுவ மாலை, 27, மோசிகீரனார்.

தொல்காப்பியனுர் முதல் கரு உரி என வகுத்த முறையிலேயே[1] பழைய அகப்பாட்டுக்கள் நிலமும் பொழுதும்[2] அங்குள்ள புள் மரம் முதலியவைகளும்[3] பின்னணியாக விளங்கப் பாடப்பட்டுள்ளன. ஒரு சில பாட்டுக்களே இவை இல்லாமல் காதலுணர்வாகிய உரிப்பொருள் மட்டும் பெற்று விளங்குகின்றன. திருக்குறளின் அகப்பாட்டுக்களாகிய காமத்துப் பாலின் குறட்பாக்கள் எல்லாம், முதற்பொருளும் கருப்பொருளும் இல்லாமல் காதலுணர்வை மட்டும் புலப்படுத்தும் கூற்றுக்களாக அமைந்துள்ளன.

### களவியல்

நாடக முறையில் அமைந்த காமத்துப்பாலில் முதல் ஏழு அதிகாரங்கள், தலைவனும் தலைவியும் திருமணத்திற்குமுன் ஒருவர் மற்றொருவரிடத்து அன்பு பூண்டு வாழும் வாழ்வைப்பற்றிக் கூறுகின்றன. தலைவன் தலைவியைத் தனியே கண்டு அவளுடைய அழகால் மயங்கி வருந்திக் கூறும் பகுதி தகையணங் குறுத்தல்[4] என்பதாகும். தலைவியின் கண் பார்வையால் உள்ளம் அழிந்து கலங்கும் தலைவன் அவளுடைய கண்களைக் கூற்று என்று குறிப்பிடுகின்றான்.[5] தன் உள்ளத்தை அழிக்கும் ஆற்றல் வாய்ந்த அக் கண்களை அவ்வாறு குறிப்பிடும்போது அவற்றின் அழகை மறந்துவிடவில்லை.[6] காணுமளவில் மகிழ்ச்சி தரத்தக்க பெற்றி அவளிடம் இருத்தலைக் குறிப்பிடுகின்றான். அதனுல் அவளிடம் சென்ற நெஞ்சை நிறுத்தும் வல்லமை இல்லாதவனுய் நெகிழ்கின்றான். இயல்பாக நெகிழும் மெலிந்த தன்மை உடையவன் அல்லன் தலைவன்; மாறுக, வீரரும் அஞ்சும் வலிமை உடைய வீரன் அவன். 'போர்க்களத்திற்கு வந்து எதிர்க்காத பகைவரும் கேட்ட அளவில் அஞ்சத்தக்க என் பெருவலிமை இந்த மாதின் அழகிற்கு அழிந்து தோற்றதே!' என்று அவன் வருந்துகின்றான்;

> "ஒண்ணுதற்கு ஓஒ உடைந்ததே ஞாட்பினுள்
> நண்ணாரும் உட்குமென் பீடு."[7]

குறிப்பறிதல் என்னும் அடுத்த அதிகாரத்தில் தலைவனும் தலைவியும் ஒருவர் மற்றொருவரின் உள்ளக் குறிப்பை நோக்காலும்[8] செயலாலும்[9] அறியும் வகை கூறப்படுகின்றது. இருவரும் கூடி மகிழ்தல் அடுத்த பத்துக் குறளால் எடுத்துரைக்கப்படுகின்றது.[10] காதலின்பம் எத்தகையது என்பதை நினைந்து தன்னுள் மகிழும் தலைவன், பொருள்களை அறிவால் ஆராய்ந்து அறிய அறிய அறியாமை காணப்பட்டாற்போன்றது அது என்று சிறந்ததோர் உவமை வாயிலாகத் தன் அநுபவத்தைக் கூறுகின்றான்;[11]

---

1. "முதல்கரு உரிப்பொருள் என்ற மூன்றே, நுவலுங் காலை முறைசிறந் தனவே, பாடலுள் பயின்றவை நாடுங் காலை." (தொல்காப்பியம், அகத்திணையியல், 3.)

2. "முதல்எனப் படுவது நிலம்பொழுது இரண்டின், இயல்பென மொழிப இயல்புணர்ந் தோரே" (ஷை 4.)

3. "தெய்வம் உணாவே மாமரம் புள்பறை, செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ, அவ்வகை பிறவும் கருவென மொழிப." (ஷை, 18.)

4. குறள், அதி. 109. 5. குறள், 1083, 1085. 6. குறள். 1085, 1089. 7. 1088. 8. 1091 - 5, 1097, 1099, 1100, 9. 1096 - 1098, 10. அதி, 111. 11, 1110.

"அறிதோ றறியாமை கண்டற்றால் காமம்
செறிதோறும் சேயிழையார் மாட்டு."

தமக்கு உரிய வீட்டிலிருந்து இல்லறம் நடத்தித் தம் முயற்சியால் பெற்ற பொருளைப் பலர்க்கும் பகுத்தளித்துத் தம் பங்கை உண்பதைப் போன்ற தாகும் என்று மற்றோர் உவமையும் கூறுகின்றான்;[1]

"தம்இல் இருந்து தமதுபாத் துண்டற்றால்
அம்மா அரிவை முயக்கு."

இவ்வாறு காதலின்பத்தை விளக்குவதன் வாயிலாக, அறிவின் பெற்றியும் அறத்தின் பெற்றியும் விளங்கவைக்கும் திருவள்ளுவரின் நெஞ்சப் பாங்கு போற்றி யுணரத் தக்கதாகும்.

தலைவியின் அழகு மென்மை முதலிய பண்புகளைத் தலைவன் புனைந்து கூறும் பகுதி நலம் புனைந்துரைத்தல் என்பதாகும்.[2] தலைவன் உணர்ச்சி வயப்பட்டவனாய்க் கூறும் கூற்றுக்களாதலின், அனிச்ச மலர்,[3] நெஞ்சு,[4] மதி[5] இவற்றை விளித்துக் கூறுவனவாக நான்கு குறட்பாக்கள் உள்ளன. திருவள்ளுவர் சிறந்த கவிஞராக இருந்து இங்கு இயற்றியுள்ள பாக்கள் கற்பனை வளம் மிக்கு விளங்குகின்றன. தலைவியின் கண்கள் குவளை மலர்களைப் போன்றவை என எண்ணியவுடன், குவளை மலரினும் சிறந்த அழகுடையவை என்று புனைந்து மகிழ்கின்றான். உடனே அவன் அந்தக் குவளை மலர்கள் செருக்குக்கொண்டு வானை நோக்கிச் செம்மாந்து நிற்பதாக உணர்கின்றான். தம் அழகைத் தாமே உயர்வாக எண்ணும் செருக்கு அந்த மலர்களுக்கு உள்ளதுபோலும் என்று எண்ணுகின்றான். தலைவியின் கண்களைப் பற்றிய உண்மையை அவை உணர்ந்தால், வானை நோக்கிச் செம்மாந்திருப்பதை விட்டு, "இந்த மாதின் கண்களைப்போல் அவ்வளவு அழகாக இருக்க நம்மால் முடியவில்லையே!" என்று நாணத்தால் கவிழ்ந்து நிலத்தை நோக்கும் என்கின்றான்;

"காணின் குவளை கவிழ்ந்து நிலன்நோக்கும்
மாணிழை கண்ஒவ்வேம் என்று."[6]

இவ்வாறு தலைவியின் அழகை எடுத்துரைப்பதோடு, குவளை மலர்களுக்குக் காணும் ஆற்றல் இல்லை என்ற குறையையும் சுட்டிக்காட்டி, "காணும் ஆற்றல் இருந்தால் கவிழ்ந்து நிலம் நோக்கும்; அந்த ஆற்றல் இல்லாத மலர்கள், காணும் கண்களோடு ஒப்புமை கொள்வது எங்கே? காண இயலாத மலர்கள் நாணப்போவதும் இல்லை; செருக்கை விடப் போவதும் இல்லை" என்று எள்ளும் குறிப்புப் போற்றத் தக்கது. உள்ளதையே இவ்வாறு கலை மெருகேற்றித் தரும் ஆசிரியர், உயர்வு நவிற்சியாகப் புனைந்துரைக்கும் இடங்களும் பல உள்ளன. மதியைச் சுற்றி வரும் விண்மீன்கள், மண்ணுலகத்தில் மதிபோல் விளங்கும் தலைவியின் முகத்தைக் கண்டு, உண்மையான மதி எது என்று அறியாமல் கலங்கிக் கொண்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.[7] மதியை விளித்துத் தலைவன் கூறும் கூற்றுக்களும் கற்பனைச் சுவையுடன் அமைந்துள்ளன.[8]

1. குறள், 1107. 2. குறள். அதி. 112. 3. குறள், 1111. 4. 1112. 5. 1118, 1119. 6. 1114. 7. 1116. 8. 1118, 1119.

காதற் சிறப்புரைத்தல் என்பது அடுத்த அதிகாரம்.[1] தலைவன் தலைவி இருவர் கூறுவனவும் இதில் உள்ளன; உடம்போடு உயிர்க்கு உள்ள தொடர்பு போன்றது தலைவியிடம் தனக்கு உள்ள காதல் என்கின்றான் தலைவன்:

> "உடம்பொடு உயிரிடை என்னமற்று அன்ன
> மடந்தையொடு எம்மிடை நட்பு." [2]

இக்கருத்தை மேலும் தெளிவாக்கும் வகையில், "தலைவியின் உறவு என் உயிருக்கு வாழ்வு போன்றது; அவள் பிரிவோ அவ்வுயிர்க்குச் சாதல் போன்றது" என்கின்றான்;

> "வாழ்தல் உயிர்க்கன்னள் ஆயிழை; சாதல்
> அதற்கன்னள் நீங்கு மிடத்து." [3]

குயிற்பாட்டில் குயில் பாடுவதாக,

> "காதல் காதல் காதல்
> காதல் போயின் காதல் போயின்
> சாதல் சாதல் சாதல்" [4]

என்று பாரதியார் பாடியுள்ள அடிகள் இந்தக் குறட்பாக்களை அடிப்படையாகக் கொண்டவை எனலாம். இவ்வதிகாரத்தில் தலைவியின் கூற்றாக அமைந்துள்ள பாக்கள் கற்பனை நயம்பட அமைந்துள்ளன. தலைவன் பிரிந்து சென்றுள்ளபோது தலைவி நினைந்து கூறும் கூற்றுகளாக அவை அமைந்துள்ளன. தலைவனது உருவமே தன் கண்ணில் உள்ளது என்றும், தலைவனது நினைவே தன் நெஞ்சில் உள்ளது என்றும் தலைவி கூறுகின்றாள்; "எம் காதலர் எம் கண்ணுள்ளிருந்து நீங்கார்; அவர் உள்ளே இருத்தலை மறந்து யான் கண்ணிமைத்துவிட்ட போதிலும் அதனால் அவர் வருந்தார்; அத்தகைய நுண்மை உடையவர் அவர்", "எம் காதலர் கண்ணுள்ளே இருத்தலால் அவர் மறைந்துவிடுவாரோ என்று கருதிக் கண்ணுக்கு மைதீட்டாமல் இருப்போம்", "காதலர் நெஞ்சினுள்ளே இருத்தலால், அவர் வெம்மையுறுவாரே என்று கருதிச் சூடான உணவை உண்ணாமலிருப்போம்";

> "கண்ணுள்ளின் போகார் இமைப்பின் பருவரார்
> நுண்ணியர்எம் காத லவர்."

> "கண்ணுள்ளார் காத லவராகக் கண்ணும்
> எழுதேம் கரப்பாக் கறிந்து."

> "நெஞ்சத்தார் காத லவராக வெய்துண்டல்
> அஞ்சுதும் வேபாக் கறிந்து." [5]

இவற்றில் உலகியல் கடந்த கற்பனை இருந்த போதிலும், புதுமை குன்றாக் கவிதையின்பம் உள்ளது. அகப்பொருட் பாட்டுக்களில் இத்தகைய கற்பனை காண்பது அரிது.

காதல் மிகுதியால் நாணத்தின் எல்லை கடந்த தம் நிலையைத் தலைவனும் தலைவியும் தோழிக்கு எடுத்துரைக்கும் கருத்துக்கள் அடங்கிய அதிகாரம் நாணுத் துறவுரைத்தல் என்பது.[6] அதனுள் ஏழு குறட்பாக்கள்[7] தலைவன்

---

1. அதி. 113. 2. குறள், 1122. 3. 1124.
4. பாரதி நூல்கள், காவியங்கள், குயிற்பாட்டு. 5. குறள், 1126-8.
6. அதி. 114. 7. 1131-7.

மடல் ஏற விரும்பிக் கூறுவனவாகவும், மற்ற மூன்றும்[1] காவல் மிகுதியால் வருந்திய தலைவி கூறுவனவாகவும் அமைந்துள்ளன. உயிரினும் சிறந்தது என்று தொல்காப்பியனாரால்[2] போற்றப்பட்ட நாணத்தின் எல்லைக்குள் நிற்க இயலாமல் தலைவி வருந்தும் துயரம் நுட்பமாக எடுத்துரைக்கப்படுகின்றது.

களவொழுக்கம் எங்ஙனமேனும் பிறரால் அறியப்பட்டபோது, அவர் தலைவியைக் குறித்துத் தமக்குள் பேசி அலர் தூற்றுவர்.[3] அவ்வாறு தூற்றப் படும் அலரால் தலைவியின் உள்ளம் வருந்தும். "காதல் நோய், பிறர் பழித்துக் கூறும் சொற்களைக் கேட்டு அடங்குவது அன்று; அதற்கு மாறாக மேன்மேலும் வளர்வதே அதன் இயல்பு" என்கின்றாள் தலைவி. "அயலார் அலரால் காதலை அடக்கிவிடுவோம் என்று கருதுதல், நெய்யால் நெருப்பை அவித்து விடுவோம் என்று கருதுவதைப் போன்றது. ஊராரின் அலரே எருவாக, அன்னை கடிந்து கூறும் சொல்லே நீராகக் கொண்டு, இக் காதல் நோய் வளர் கின்றது" என்கின்றாள்;

"நெய்யால் எரிநுதுப்பேம் என்றற்றால் கௌவையால்
காமம் நுதுப்பேம் எனல்."

"ஊரவர் கௌவை எருவாக அன்னைசொல்
நீராக நீளுமிந் நோய்."[4]

நம்மாழ்வார் போன்ற சான்றோர்களின் உள்ளத்தில் இத்தகைய குறள் மணிகள் இடம்பெற்று வாழுமளவிற்கு ஆசிரியரின் கற்பனைத் திறன் சிறப் புற்றது. 'இன்பதுன்பங்கள் செற்றுக் களைந்து பசையற்ற' நம்மாழ்வார் தம் திருவாய்மொழியில் 'ஊரவர் கௌவை' என்ற குறளின் சொற்களை அவ்வாறே அமைத்துள்ளமை காணலாம்;

"ஊரவர் கவ்வை எருவிட்டு அன்னைசொல் நீர்படுத்து
ஈரநெல் வித்தி முளைத்த நெஞ்சப் பெருஞ்செய்யுள்
பேரமர் காதல் கடல்புரைய விளைவித்த
காரமர் மேனிநம் கண்ணன் தோழீ கடியனே."[5]

கடவுள் வழிபாட்டில் தோய்ந்த உள்ளத்தராகிய ஆழ்வார்களும் நாயன்மார்களும் பிறரும் இத்தகைய காதல் உணர்வுகளையே கடவுளன்பாக உயர்த்திக்கொண்டு வாழ்ந்தனர். இத்தகைய வழிபாடே 'நாயகநாயகி பாவம்' என்று சமயத்துறையில் குறிக்கப்படுவதாம். மேற்கு நாடுகளில் ஒரு சிலரிடம் மட்டும் காணப்படும் இவ்வகை வழிபாடு, இந்திய நாட்டில் எங்கும் பரவி யிருந்ததைக் காணலாம். தென்னிந்தியாவில் பரவிய ஆழ்வார்களின் அன்பு நெறியே வட இந்தியாவில் வைஷ்ணவ இயக்கமாகப் பரவியபின், அங்கும் காதல் முறையில் கடவுள் வழிபாடு பெருகிற்று. இந்திய நாட்டுக் கலைச் சிறப்புக்களை உலகிற்கு அறிமுகப்படுத்திய அறிஞர் ஆனந்த குமாரசாமி அவர்கள் இதனைப்பற்றித் தம் நூலில் குறிப்பிட்டுள்ளார்; "In India, the conditions of human love, from the first meeting of eyes to ultimate self-oblivion, have seemed spiritually significant, and

1. 1138-40. 2. "உயிரினும் சிறந்தன்று நாணே." 3. குறள், அதி. 115.
4. 1148, 1147. 5. திருவாய்மொழி, 5. 1. 3 : 4.

there has always been a free and direct use of sexual imagery in religious symbolism"[1] என்று அவர் கூறிய கருத்து இங்குப் போற்றி உணரத் தக்கதாகும். திருக்குறளின் காமத்துப்பாலில் உள்ள கருத்துக்களும் சொற்களும் பிற்காலத்துச் சான்றோர்களின் பக்திப்பாடல்களில் இடம் பெற்று வாழ்தலே இதற்கு ஒரு நற்சான்று ஆகும்.

அலர் தூற்றலை அறிந்து தலைவி இவ்வாறு வருந்தும்போது, இதற்கு மாறாகத் தலைவன் மகிழ்கின்றான். ஊரார் தூற்றும் அலர் இல்லையேல் தன் உயிர் நீங்கும் என்றும், அலர் இல்லையாயின் காதல் சுருங்கிப்போகும் என்றும், கள்ளுண்டு மயங்குந்தோறும் கள்ளுண்டல் மேலும் விரும்பப்படுதல் போல் காதலும் அலர் தூற்றப்படுந்தோறும் இனியதாகின்றது என்றும் தலைவன் மகிழ்ந்து கூறுகின்றான்;

"அலர்எழ ஆருயிர் நிற்கும்; அதனைப்
பலர்அறியார் பாக்கியத் தால்."
"கவ்வையாற் கவ்விது காமம்; அதுஇன்றேல்
தவ்வென்னும் தன்மை இழந்து."
"களித்தொறும் கள்ளுண்டல் வேட்டற்றால்; காமம்
வெளிப்படுந் தோறும் இனிது."[2]

அலர் தூற்றப்படுதல் இவ்வாறு தலைவிக்குத் துயரமும் தலைவனுக்கு உவகையும் விளைத்தலைக் காணலாம். இவ்வேறுபாட்டை மற்ற அகப்பொருள் நூல்கள் எடுத்துரைக்கவில்லை. இவ்வாறு அலர் ஒருவனுக்கு உவகையும் ஒருத்திக்குத் துயரமும் விளைவிக்கக் காரணம் என்ன? தலைவி தன் நாண் முதலிய பண்புகள் மாறுதலை நினைந்தும் பெற்றோரின் கவலையை நினைந்தும் வருந்துகிறாள். தலைவனோ, பெறுதற்கு அரியளாக இருந்த தலைவியைத் தான் பெற்றுவிட்டதாக அலர் சான்று கூறுவதை எண்ணி மகிழ்கின்றான். உளநூல் அறிஞர் ஆய்ந்துபோற்றத்தக்க நுண்ணிய உணர்வு வேறுபாடுகளை இங்குக் காணலாம்.

### கற்பியல் - பிரிவு

களவொழுக்கம் பற்றி ஏழு அதிகாரங்களில் சிறந்த கருத்துக்களை நாடக வாயிலாகப் புலப்படுத்திய ஆசிரியர், அடுத்த பதினெட்டு அதிகாரங்களில், திருமணமாகி இல்லறம் நடத்தும் தலைவியும் பிரிவு முதலிய காரணங்களால் உணரும் உணர்வுகளை விளக்குகிறார். ஆயின் களவொழுக்கத்தைத் தொடர்ந்து நிகழும் உடன்போக்கு, திருமணம்[3] முதலியன பற்றிய குறிப்பு ஒன்றும் காமத்துப்பாலில் இல்லை.

1. Ananda K. Coomaraswamy, The Transformation of Nature in Art, p. 44.
2. குறள், 1141, 1144-5.
3. "கற்பெனப் படுவது கரணமொடு புணரக்
கொளற்குரி மரபின் கிழவன் கிழத்தியைக்
கொடைக்குரி மரபினோர் கொடுப்பக்கொள் வதுவே."
(தொல்காப்பியம், கற்பியல், 1,)

"கொடுப்போர் இன்றியும் கரணம் உண்டே
புணர்ந்துடன் போகிய காலை யான." (ஷ. 2)

நாடகங்களில் துன்பியல் நாடகம் சிறந்து விளங்குகின்றது. காவியங்களில் அவலச் சுவையே உள்ளம் கவரும் சிறப்பு வாய்ந்து விளங்குகின்றது. காதல்பற்றிய பழந்தமிழ்ப் பாட்டுக்களிலும் காதலர் பிரிவாற்றுமையால் வருந்துதல் பற்றிய பாட்டுக்களே பலவாக உள்ளன. அகநானூறு என்று தொகுத்து அமைக்கப்பட்டுள்ள சங்கத்தொகை நூலில் ஒரு பாதியாகிய இருநூறு பாட்டுக்கள் பிரிவு என்னும் உரிப்பொருள் பற்றிய பாலைத்திணைப் பாட்டுக்களாகவே உள்ளன. மிடில்டன் முரி என்னும் ஆங்கில அறிஞர் ஆங்கிலப் பாட்டுக்களை ஆராய்ந்து கூறும் கருத்து, பொதுவாகவே காதற் பாட்டுகளில் மிகப் பெரும்பாலானவை பிரிவுத்துயர் பற்றியனவே என்பதை விளக்குகின்றது. ("Love poets are but seldom the singers of happiness in love; and the greatest love-poet of our own times Thomas Hardy, has given an expression that is immortal to the intolerable anguish of desiderium.") [1]

இதனை ஒட்டியே திருவள்ளுவர் கற்பியலில் பிரிவாற்றுமை, படர்மெலிந்திரங்கல், கண்விதுப்பழிதல், பசப்புறு பருவரல், தனிப்படர் மிகுதி, நினைந்தவர் புலம்பல், கனவுநிலை யுரைத்தல், பொழுதுகண் டிரங்கல், உறுப்புநலனழிதல், நெஞ்சொடு கிளத்தல், நிறையழிதல், அவர்வயின் விதும்பல் என்னும் பன்னிரண்டு அதிகாரங்களில் [2] பிரிவுபற்றிக் கூறுகின்றார். ஏனைய ஆறு அதிகாரங்களில் தலைவனும் தலைவியும் கூடி மகிழ்தல்பற்றி இரண்டு அதிகாரங்கள் [3] விளக்க, ஊடல்பற்றி நான்கு அதிகாரங்கள் [4] எடுத்துரைக்கின்றன. ஆக, கற்பியலின் மூன்றில் இரண்டு பங்கு பிரிவுத்துயர் பற்றியே அமைந்திருக்கக் காணலாம்.

பிரிவு பற்றிய பன்னிரண்டு அதிகாரங்களில் முதலில் உள்ளது பிரிவாற்றுமை. [5] தலைவன் இன்றியமையாக் கடமை காரணமாக வெளிநாட்டுக்குப் பிரிய நேரும்போது தோழியும் தலைவியும் ஆற்றுமை புலப்படக் கூறும் கூற்றுக்கள் இதில் அமைந்துள்ளன. தலைவன் பிரிந்தபின் தலைவி நினைந்து நினைந்து வருந்தும் நிலைமையை அடுத்த அதிகாரமாகிய படர்மெலிந்திரங்கல் [6] விளக்குகின்றது. துயரத்தைத் தன்னுள் தாங்கிக்கொள்ள இயலாமல் தலைவி சொல்லும் சொற்கள் ஆழ்ந்த துன்ப உணர்வைப் புலப்படுத்துகின்றன. ஒருபுறம் காதல்மிகுதியால் துயரம் வளர, மற்றொரு புறம் நாணம் அதைத் தடுக்கத் தலைவி வருந்துகிறுள். காதலும் நாணமும் உயிர் என்னும் காவடியின் இருபக்கமாக உள்ளன என்றும், உடம்பு அவற்றைத் தாங்க முடியாமல் அழிகின்றது என்றும் கூறுகிறுள்;

> "காமமும் நாணும் உயிர்காவாத் தூங்குமென்
> நோனா உடம்பி னகத்து." [7]

காதல் கடல்போன்றது என்றும், அதை நீந்தும் புணை இல்லையே என்றும் துயருறுகின்றுள்; இன்பம் விளைக்கும்போது காதல் கடல்போன்றது என்றும், துன்பம் தரும்போது அது கடலினும் பெரிது என்றும் கூறுகின்றுள்;

1. John Middleton Murry, Discoveries, p. 21.
2. குறள், அதி. 116 - 127. 3. 128, 129. 4. 130 - 133.
5. அதி. 116. 6. 117. 7. குறள், 1163.

"காமக் கடல்மன்னும் உண்டே அதுநீந்தும்
ஏமப் புணைமன்னும் இல்."

"இன்பம் கடல்மற்றுக் காமம் அஃதுஅடுங்கால்
துன்பம் அதனின் பெரிது." [1]

"இராக்காலம் எல்லா உயிர்களையும் துயிலுமாறு செய்துவிட்டு, தனியாய் நிற்கின்றதே! என்னைத் தவிரத் தனக்கு வேறு துணை இல்லாமல் நிற்கின்றதே!" என்று தலைவி கூறும் சொற்கள் அவள் துயிலின்றி வருந்தும் நிலையைத் தெரிவிக்கின்றன;

"மன்னுயிர் எல்லாம் துயிற்றி அளித்திரா
என்னல்லது இல்லை துணை." [2]

கண்விதுப் பழிதல் என்னும் அடுத்த அதிகாரத்தில் [3] உள்ள கூற்றுக்கள் தனிச்சிறப்பு உடையவை. தலைவனைக் காணாமல் கலங்கி அழும் கண்களைப் பற்றித் தலைவி இரக்கத்தோடு கூறும் சொற்கள் இதில் உள்ளன. இரக்கம் மட்டும் அன்று; தலைவனை முதலில் கண்டு தான் காதல் கொள்ளுமாறு செய்தவை கண்களே ஆதலால், இப்போது வருந்திக் கலங்குதல் தக்க தண்டனைதான் என்று இடித்துரைத்தலையும் காணலாம். "இந்தத் தணியாத காதல்நோய் ஏற்படுமாறு தலைவனை முதலில் எமக்குக் காட்டியவை இந்தக் கண்களே. அவ்வாறு காட்டித் துயர்விளைத்த கண்கள், இன்று தமக்கு அவரைக் காட்டச் சொல்லி அழுவது ஏன்? அன்று விளைவை ஆராய்ந்து உணராமல் அவரைக் கண்டு காதல்கொண்ட கண்கள் இன்று தம் குற்றம் உணராமல் துன்புறுவது ஏன்? அன்று தாமே காதலரை விரைந்து நோக்கிவிட்டு, இன்று தாமே அழுகின்றன; இது நகைக்கத்தக்க நிலைமையாகும்";

"கண்தாம் கலுழ்வது எவன்கொலோ தண்டாநோய்
தாம்காட்ட யாம்கண் டது."

"தெரிந்துணரா நோக்கிய உண்கண் பரிந்துணராப்
பைதல் உழப்பது எவன்."

"கதுமெனத் தாம்நோக்கித் தாமே கலுழும்
இதுநகத் தக்கது உடைத்து." [4]

"எமக்கு இந்தத் துன்பத்தை விளைவித்த கண்கள் தாமே இவ்வாறு அழுது வருந்தும் நிலை உற்றது மிக நல்லதுதான். அன்று விழைந்து உறவுகொண்டு அவரைக் கண்ட கண்கள், இன்று துன்பம் உழந்து உழந்து கண்ணீர் சொரிந்து நீரும் அற்றுப் போவனவாக";

"ஓஒ இனிதே எமக்கிந்நோய் செய்தகண்
தாஅம் இதற்பட் டது."

"உழந்துழந்து உண்ணீர் அறுக விழைந்திழைந்து
வேண்டி அவர்க்கண்ட கண்." [5]

தலைவியின் பிரிவாற்றுத் துயரத்தை முன்னே புலப்படுத்துவன கண்கள். அவற்றைப் பற்றிக் கூறியபின், வாடி மெலிந்த மேனியின் பசலைநிறம் பற்றி

1. 1164, 1166. 2. 1168. 3. அதி. 118. 4. 1171, 1172, 1173.
5. 1176, 1177.

எடுத்துரைக்கிறார். அதுவே பசப்புறு பருவரல்[1] என்பது. உணர்ச்சி மிகுதியால் உயர்வு நவிற்சியாகக் கூறும் கூற்றுக்கள் பல இதில் உள்ளன. எட்டுத்தொகையின் அகப்பொருட் பாட்டுக்களில் இவை போன்ற உயர்வு நவிற்சிக் கூற்றுக்கள் இல்லை. "அதோ எம் காதலர் போகின்றார். இதோ உடனே என் மேனியில் பசலை பரவுகின்றது." என்றும், "விளக்கு நீங்கும் நிலையைப் பார்த்திருந்து உடனே இருள் பரவுவதுபோல், கணவன் தழுவாத நிலையைப் பார்த்திருந்து பசலை பரவிவிடுகின்றது" என்றும் தலைவி கூறுவன அத்தகையன;

"உவக்காண்எம் காதலர் செல்வார்; இவக்காண்என்
மேனி பசப்பூர் வது."
"விளக்கற்றம் பார்க்கும் இருளேபோல் கொண்கன்
முயக்கற்றம் பார்க்கும் பசப்பு."[2]

தான்மட்டும் தலைவனை நினைந்து வருந்துவதாகவும், தலைவன் தன்னை நினைந்து அருள் செய்யவில்லை எனவும் தலைவி சிலபொழுது மிக நினைந்து வருந்துகிறாள். தனிப்படர் மிகுதி[3] என்னும் அதிகாரம் அதுபற்றிக் கூறுவதாகும். "காதல் ஒரு சார்பில் இருத்தல் துன்பம்; காவடியின் இரு பக்கமும் போல் இருசார்பிலும் ஒத்திருந்தால்தான் இனியதாகும்" என்கிறாள் தலைவி;

"ஒருதலையான் இன்னாது காமம்;காப் போல
இருதலை யானும் இனிது."[4]

பிரிந்த தலைவர் அருள் செய்யாமையால் தனித்து வருந்துவதற்குத் தலைவியின் நெஞ்சம் துணிகின்றது. ஆயின், வெளிநாட்டில் உள்ள அவரைப் பற்றி ஏதேனும் அறிய முடியுமா என்று அந்த அன்பு நெஞ்சம் அந்நிலையிலும் ஏங்குகின்றது. "அவர் அருள் செய்யாவிட்டாலும், அவரைப் பற்றி ஏதேனும் அறிய முடிந்தால் போதுமே; அவரைப் பற்றி அறிவிக்கும் அந்தச் சொற்கள் என் செவிக்கு இனியவையாக இருக்குமே" என்கின்றாள்;

"நசைஇயார் நல்கார் எனினும் அவர்மாட்டு
இசையும் இனிய செவிக்கு."[5]

இவ்வாறு தலைவி கூறும் கூற்று, உண்மைக் காதலின் பெற்றியைப் புலப்படுத்துவதாக அமைந்துள்ளது.

"நம்மை மறந்தாரை நாம்மறக்க மாட்டேமால்"[6]

என்று இளங்கோவடிகளின் கானல்வரி விளக்கும் காதல் நெஞ்சமே இங்கும் காணப்படுகின்றது.

நினைந்தவர் புலம்பல்[7] என்னும் அடுத்த அதிகாரம், தலைவனும் தலைவியும் ஒருவரை ஒருவர் நினைந்து வருந்துதலைப் பற்றியது. நினைப்பின் இயல்பைக் கூறும் உளநூல் விளக்கம்போல் அமைந்துள்ளன, இதனுள் உள்ள குறட்பாக்கள். பிறருடைய நினைப்புக்கும் நினைக்கப்பட்டவரின் தும்ம

1. அதி. 119. 2. குறள், 1185, 1186. 3. அதி. 120. 4. குறள், 1196. 5. 1199. 6. சிலப்பதிகாரம், புகார்க். 7. குறள். அதி. 121.

லுக்கும் தொடர்பு இருப்பதாகக் கருதிய பழங்கால நம்பிக்கை ஒரு குறளில் எடுத்துரைக்கப்படுகின்றது. தலைவிக்குத் தும்மல் எழுவதுபோல் இருந்து அடங்கிவிடுகின்றது; உடனே அவள் தன்னைத் தலைவன் நினைக்கத் தொடங்கியதால் தும்மல் எழுந்ததாகவும், அடுத்த நொடியில் மறந்து விட்டதால் அந்தத் தும்மல் அடங்கிவிட்டதாகவும் எண்ணி வருந்துகிருள்;

"நினைப்பவர் போன்று நினையார்கொல் தும்மல்
சினைப்பது போன்று கெடும்." [1]

(புலவி நுணுக்கத்தில் தும்மலைப் பற்றிக் கூறும் மூன்று குறளோடு [2] உடன் வைத்து, ஆராயத் தக்கது இது). தலைவனைப்பற்றிய நினைவு இருப்பதனால் தான் தான் உயிருடன் வாழ்வதாகவும், இல்லையேல் இறந்திருக்கக் கூடுமென வும் எண்ணுகிருள் தலைவி. நம்பிக்கையற்றுச் சோர்ந்துள்ள எல்லையிலும், தலைவனை மறவாத நெஞ்சமே தன் உயிரைக் காப்பதாகக் கருதுகிருள். தன் வாழ்வை முற்றும் பிறர்க்கு உரியதாக ஆக்கிவிட்ட தியாக மனப்பான்மை இத்தகைய காதலின் அடிப்படையில் உள்ளது;

"மற்றியான் என்உளேன் மன்னோ? அவரொடியான்
உற்றநாள் உள்ள உளேன்." [3]

நினைவைப்பற்றிக் கூறுவதை அடுத்து மிகப் பொருத்தமாக அமைந் துள்ளது, கனவைப்பற்றிய அதிகாரம்; கனவு நிலையுரைத்தல்.[4] நினைப்பால் உயிர் வாழ்வதாகக் கருதி நினைப்பைப் போற்றும் தலைவி, அவர் வரும் கனவை மிக மிகப் போற்றி உரைக்கின்ருள். அந்தக் கனவைக் குழந்தை மனத்தோடு வரவேற்று, அதற்கு விருந்து செய்யவேண்டும் என விழை கின்ருள்;

"காதலர் தூதொடு வந்த கனவினுக்கு
யாதுசெய் வேன்கொல் விருந்து?" [5]

நனவில் காண முடியாமல் பிரிந்து சென்ற தலைவனைக் கனவிலாவது காண் பதால்தான் இன்னும் உயிரோடு வாழ்கிருளாம்;

"நனவினன் நல்கா தவரைக் கனவினன்
காண்டலின் உண்டுஎன் உயிர்." [6]

பகல் முழுதும் வருந்தி ஆற்றியிருக்கும் தலைவி மாலைப் பொழுதில் தாங்கொணுத் துயர் உறுகின்ருள். பொழுது கண்டிரங்கல் [7] என்பது அத் தகைய நிலையில் மாலைப் பொழுதை நோக்கிக் கூறுவனவும், அதைப்பற்றிக் கூறுவனவும் கொண்ட அதிகார மாகும். உள்ளத்தின் துயருக்கும் பொழுது வேறுபாட்டுக்கும் என்ன தொடர்பு என்று வியப்புறலாம். தலைவியே அவ் வாறு வியப்புறுகின்ருள். காலையில் இவ்வளவு துயர் இல்லையே, மாலைப் பொழுது நெருங்கியதும் துயரம் மிகுகின்றதே என எண்ணுகின்ருள். "காலைப் பொழுதிற்கு யான் என்ன நன்மை செய்தேன்? மாலைப் பொழு திற்கு மட்டும் பகையான தீமை என்ன செய்தேன்? தலைவன் பிரிவதற்குமுன் இவ்வாறு மாலைப் பொழுது துன்பம் செய்ய வல்லதாக இருத்தலை அறியேன்.

1. குறள், 1203. 2. 1312, 1317, 1318. 3. 1206. 4. அதி. 122. 5. 1211. 6. 1213. 7. அதி. 123.

இந்தக் காதல்நோய் காலையில் அரும்பாக இருந்து, பகலெல்லாம் பேரரும்பாய் முதிர்ந்து, மாலையில் மலராகின்றது" என்கின்ருள்;

"காலைக்குச் செய்தநன்று என்கொல்? எவன்கொலோ
மாலைக்குச் செய்த பகை?"

"மாலைநோய் செய்தல் மணந்தார் அகலாத
காலை அறிந்த திலேன்."

"காலை அரும்பிப் பகலெல்லாம் போதாகி
மாலை மலரும்இந் நோய்." [1]

அடுத்த உறுப்பு நலனழிதல்[2] என்பதில் தலைவியின் கண் தோள் நுதல் முதலிய உறுப்புக்கள் பிரிவுத் துன்பத்தால் அழகு இழந்து வாடுதல் கூறப்படுகின்றது. நெஞ்சொடு கிளத்தல்[3] என்னும் அதிகாரத்தில் ஒன்பது குறளில் தலைவி உணர்ச்சி வயப்பட்டு நெஞ்சை விளித்துக் கூறும் சொற்கள் உள்ளன. நெஞ்சோடு கூறும் நிலையில் தலைவி வாய்விட்டுக் கூருமல் தன் உள்ளத்துள்ளே துயரை அடக்கவல்ல நிறை உடையவளாகக் காணப்படுகின்ருள். அந்த எல்லையும் கடந்து நிறை அழிந்து வாய்விட்டுக் கூறுவன, நிறையழிதல் [4] என்னும் அதிகாரத்தில் முதல் ஆறு குறளில் உள்ளன. எஞ்சிய நான்கு குறளும் தலைவனேடு ஊட வேண்டும் என்று முயலும் தலைவி தன் வயமாக நிற்காமல் நெஞ்சின் வழியே ஓடிக் கலங்குவதை எடுத்துரைக்கின்றன. இந்த அதிகாரத்தில் முற்பகுதி துயர்பற்றியதாகவும், பிற்பகுதி இன்பம் பற்றியதாகவும் வேறுபட்டிருந்தும், ஆசிரியர் இவ்விருபகுதியையும் ஒரே அதிகாரத்தில் அமைத்தது, இருவகை நிலையிலும் தலைவி நிறை அழிந்து கூறும் கூற்றுக்களாக இருத்தல் பற்றியே ஆகும்.

பிரிந்த தலைவன் மீண்டு வருவான் என்று நம்பிக்கை கொண்டு அவனது வரவை எதிர்பார்த்துக் காணத் துடிக்கும் நிலையை அவர்வயின் விதும்பல் [5] என்பது எடுத்துரைக்கின்றது.

காதலர் ஒருவர் மற்றொருவருக்குக் குறிப்பை அறிவித்தலும் ஒருவருடைய கண்தோள் முதலியவை அறிவித்தலும் பற்றியது குறிப்பறிவுறுத்தல். [6] இருவரும் கூட விழைந்து விரைதல் பற்றியது புணர்ச்சி விதும்பல். [7] ஊடுதல் வேண்டும் என்று முயலும் முயற்சி பயன்படாமற் போகுமளவிற்குக் காதல் மிக்கவளாய்த் தலைவி இருத்தலைப்பற்றி ஏழு குறட்பாக்கள் கூறுகின்றன. தலைவன் தன் எதிரில் இல்லாத போதெல்லாம் அவனுடைய குற்றங்களை நினைத்திருக்கும் தலைவி, அவனை நேரில் கண்டவுடன் அத்தனைக் குற்றங்களையும் மறந்துவிடுகின்ருள்; அவளுக்கே அது வியப்பாக உள்ளது;

"எழுதுங்கால் கோல்காணுக் கண்ணேபோல் கொண்கன்
பழிகாணேன் கண்ட விடத்து." [8]

பழிகாண இயலாத காதலை விளக்க முயன்ற ஆசிரியர் திருவள்ளுவர், அந்தத் தலைவி நன்ருக அறிந்த ஒன்றையே உவமையாக்கி அவள் வாயிலாகப் புலப்

1. 1225 - 7. 2. அதி. 124. 3. அதி. 125. 4. 126. 5. 127. 6. 128. 7. 129. 8. குறள், 1285.

படுத்துகின்றார். எழுதும் ஆசிரியர் தம்மை மறந்து கற்பனையுலகில் புகுந்து தலைவியாய் உணர்ந்து அவளுடைய வாழ்வின் அநுபவத்தால் அறிந்த ஒன்றையே உவமையாக்கிக் கூறுதல் கலைத்திறன் மிகுந்தவர்க்கே இயலும். இத் துறையில் சிறந்த வெற்றியைக் காமத்துப்பாலில் காண்கின்றோம். திருவள்ளுவரின் கற்பனைத் தலைவி, "கணவர் வந்துவிட்டபோது அவருடைய குற்றங்களைக் காணமுடிய வில்லையே! மை தீட்டும்போது, அஞ்சனக்கோலைக் காண முடியாத கண்போல் உள்ளேன்'' என்று கூறுவது நயம் செறிந்த உவமையாக உள்ளது. சிறு தூசு வரினும் விரைந்து மூடிக்கொள்ளும் இமைகளைப் பெற்று எதையும் எப்போதும் பார்த்திருந்து காத்துக்கொள்ளும் கண், தன்னை அழகுபடுத்த வரும் அஞ்சனக் கோலுக்குமட்டும் தடையின்றி விட்டுக்கொடுக்கின்றது. இதை உவமையாக்கிக் கூறுவதன் வாயிலாகவே, காதலுடன் தன்னை நெருங்கும் தலைவன் தன்மையையும், அவனுடன் ஊட முடியாமல் அன்பு மீதூர இசைந்துவிடும் தன் உள்ள நெகிழ்ச்சியையும் தலைவி புலப்படுத்துகின்ற திறம் போற்றத் தக்கது.

இவ்வாறு குழைந்துவிடும் நெஞ்சை நோக்கியும் அதன் மென்மையைக் குறித்தும் கூறும் கூற்றுக்கள் நெஞ்சொடு புலத்தல் [1] என்னும் அடுத்த அதி காரத்தில் அமைந்துள்ளன. நெஞ்சைத் தன் வயப்படுத்தி ஊடும் திறன் புலவி, புலவி நுணுக்கம், ஊடலுவகை[2] என்னும் இறுதி மூன்று அதிகாரங் களில் கூறப்படுகின்றது.

### கற்பியல்: ஊடல்

ஊடல் சங்கப் பாட்டுக்களில் அமைந்துள்ள முறை வேறு; திருக்குறளில் அமைந்துள்ள முறை வேறு. திருக்குறளில் வரும் ஊடலில் பரத்தை என ஒருத்தி இல்லை; தலைவன் பரத்தையை நாடிச் செல்வதும் இல்லை. சங்கப் பாட்டுக்களில் பரத்தை உண்டு; மனைவியை விட்டுப் பிரிந்து பரத்தையோடு தலைவன் மகிழ்வதும் உண்டு. பொருள் காரணமாக மகளிர் சிலர் ஒழுக் கத்தை விற்பதும் கூடாது, ஒழுக்கமற்ற அந்தப் பொருட்பெண்டிரை ஆடவர் நாடுவதும் கூடாது என்று பொருட்பாலில் வன்மையாகக் கடிந்துள்ளார் திருவள்ளுவர்.[3] வரைவின் மகளிர் என்ற அதிகாரம் திருவள்ளுவரின் சீர் திருத்தத்தை எடுத்துரைப்பது. சங்க காலத்துப் பாட்டுக்களில் இடம் பெற்று வந்த பரத்தையர்க்குத் திருக்குறளில் நல்ல இடம் இல்லை; வேண்டா என்று கடிந்து கூறப்படும் இடமே வாய்த்தது. ஆதலின் திருவள்ளுவர் ஊடலைப் பற்றி விளக்க நேர்ந்தபோதும், அதற்கு முன்னோர் வகுத்த இலக் கணத்தையும் [4] புறக்கணித்துக் காமத்துப்பாலில் பரத்தையர்க்கு இடம் இல்லாமல் செய்துள்ளார்; புலனெறி வழக்கம் [5] என்ற நூலோர் மரபையே கடந்து புதுவழி வகுத்துள்ளார்.

திருவள்ளுவர் கற்பனையில் படைத்துள்ள தலைவி ஊடுகின்றாள்; தலை வன் தவறு இல்லாதவன் என்று அறிந்தும் தவறு செய்ததாகக் கற்பனை செய்துகொண்டு விளையாட்டாக ஊடுகின்றாள்.

---

1. அதி. 130. 2. அதி. 131, 132, 133. 3. அதி. 92.
4. தொல்காப்பியம், கற்பியல்,6, 46.
5. தொல். அகத்திணையியல், 53.

தலைவி தலைவனை நோக்கி, "எல்லாப் பெண்களும் கண்ணால் உன்னைக் கண்டு உன் அழகை நுகர்கின்றார்கள். ஆகையால் நீ பரத்தன்—கற்பு இல்லாத ஆண்மகன். கற்பு உடைய நான் உன்னை நெருங்கமாட்டேன்" என்று ஊடுகின்றாள்;

"பெண்ணியலார் எல்லாரும் கண்ணின் பொதுஉண்பர்
நண்ணேன் பரத்தநின் மார்பு." [1]

தலைவன் ஒரு மாலையைச் சூடிச் செல்கின்றான். அந்த மாலை வேற்று நிலத்துக் கோட்டுப் பூக்களால் ஆகியது. அதைத் தலைவி கண்டதும் ஊடு கின்றாள்; "உன் காதலி யாரோ ஒருத்திக்கு இந்த அழகைக் காட்டவேண்டும் என்றுதான் சூடியிருக்கின்றாய்" என்கின்றாள்;

"கோட்டுப்பூச் சூடினும் காயும், ஒருத்தியைக்
காட்டிய சூடினீர் என்று." [2]

தலைவன் தன் அன்பு மிகுதியால், "காதலர் யாரையும்விட நாம் காதல் மிகுந்தவர்களாக இருக்கின்றோம்" என்றான். அதைக் கேட்டதும் தலைவி ஊடல் கொண்டு, "நீ பல மகளிரைக் காதலிக்கின்றாயோ? அவருள் என்னிடம் அன்பு மிகுதி என்கின்றாய். என்னைப்போல் உனக்குக் காதலியர் பலர் இருப்பதால்தான், யாரையும் விட என்னிடம் காதல் மிகுதி என்று ஒப்பிட்டுப் பேசுகின்றாய். அந்தக் காதலியர் யார்? யாரை விட? யாரை விட?" என்கின்றாள்;

"யாரினும் காதலம் என்றேனா; ஊடினாள்
யாரினும் யாரினும் என்று." [3]

"இந்தப் பிறப்பில் நாம் ஒருவரை ஒருவர் விட்டுப் பிரியமாட்டோம்" என்கின்றான் தலைவன். "ஓ! அப்படியா? இந்த ஒரு பிறப்புக்குமட்டும் நம் உறவா? மறு பிறப்பில் என்னை விட்டுப் பிரியக் கருதிவிட்டாய்" என்று தலைவி கண்கலங்குகின்றாள்;

"இம்மைப் பிறப்பில் பிரியலம் என்றேனாக்
கண்ணிறை நீர்கொண் டனள்." [4]

"பிரிந்து சென்றிருந்தபோது உன்னை அடிக்கடி நினைந்தேன்" என்கின்றான் தலைவன். "பிரிந்தவுடன் என்னை மறந்துவிட்டீர்கள் என்பது இப்போது தெரிகிறது. மறந்ததால்தான் மறுபடியும் நினைக்க நேர்ந்தது. என்னை மறந்துவிடும் அளவிற்குத்தான் என்னிடம் அன்பு உள்ளது!" என்று சொல்லித் தலைவி ஊடல் கொள்கின்றாள்;

"உள்ளினென் என்றேன்மற் றென்மறந்தீர் என்றென்னைப்
புல்லாள் புலத்தக் கனள்." [5]

இவ்வாறே ஒன்று விட்டு ஒன்று பற்றி ஊடல் நீட்டிக்கின்றது. தலைவனுக்குத் தும்மல் வருகின்றது, வழக்கம்போல் தலைவி "நூறாயுசு" என்கின்றாள். ஆனால் இவ்வாறு தன் வாயால் வாழ்த்துப் பெற வேண்டும் என்றும், இது கொண்டு ஊடலை முடிக்க வேண்டும் என்றும் தலைவன்

1. குறள், 1311. 2. 1313. 3. 1314. 4. 1315. 5. 1316.

சூழ்ச்சி செய்து செயற்கையாகத் தும்மியதாக ஊடுகிருள். ஊடல் முடிவது போய் மிகுதியாயிற்று. அடுத்த நொடியில் அவள் மனத்தில் வேருேர் எண்ணம் எழுந்தது; "யாராவது நினைத்தால்தான் ஒருவர்க்குத் தும்மல் வரும். இப்போது உம்மை யார் நினைத்திருப்பார்கள்? நினைக்கும் உரிமை உடையவள் நான் ஒருத்திதான் என்று எண்ணியிருந்தேனே! வேறு யாரோ காதலியாக இருக்கிருள். அவள் யார்?" என்கின்ருள். இதைக் கேட்டதும் தலைவன் அடுத்த தும்மலை வெளிப்படுத்தாமல் அடக்கிவிடுகின்ருன். உடனே தலைவி, "தெரிந்துவிட்டது, தெரிந்துவிட்டது! உம் காதலி உம்மை நினைக்கின்ருள் என்பதை எனக்குத் தெரியாதபடி மறைக்கின்றீர். அதனுல் தான் தும்மலை அடக்குகின்றீர்" என்று அழுகின்ருள்;

"ஊடி இருந்தேமாத் தும்மினுர், யாம்தம்மை
நீடுவாழ் கென்பாக்கு அறிந்து."

"வழுத்தினுள் தும்மினேன் ஆக அழித்தழுதாள்,
யார்உள்ளித் தும்மினீர் என்று."

"தும்முச் செறுப்ப அழுதாள், நுமர்உள்ளல்
எம்மை மறைத்திரோ என்று." [1]

தலைவனிடம் தவறு காணுமலே ஊடுகின்ருள் என்பதை அவளுடைய கூற்ருலேயே புலப்படுமாறு திருவள்ளுவர் அமைத்துள்ளார். "அவரிடத்தில் தவறு இல்லையாயினும் அவர் மேன்மேலும் செலுத்துகின்ற அன்பை விரும்பியே ஊடுகின்றேன். நிலமும் நீரும் போல் ஒன்றுபட்ட காதலர் வாழ்க்கையில் ஊடுதல் தனி இன்பமாகும். தேவருலகமும் அத்தகைய இன்பம் தருமோ?" என்கின்ருள் ;

"இல்லை தவறுஅவர்க்கு ஆயினும் ஊடுதல்
வல்லது அவர்அளிக்கு மாறு."

"புலத்தலின் புத்தேள்நாடு உண்டோ நிலத்தொடு
நீர்இயைந் தன்ன ரகத்து." [2]

இத்தகைய ஊடலுக்கு இயைந்து ஒழுகும் தலைவனுடைய கூற்ருலும் இந்த உண்மை விளங்குமாறு செய்துள்ளார் ஆசிரியர்; "தவறு ஒன்றும் இல்லாத போதும் ஊடலுக்கு ஆளாகித் தலைவியை நெருங்க முடியாமல் சிறிது நீங்கி நிற்கும்போது ஒரு தனிச் சிறப்புடைய இன்பம் உள்ளது" என்றும், "அவள் இன்னும் ஊடுவாளாக; ஊடும்போது யான் அவளுடைய அன்பை வேண்டி இரப்பேனுக; அவ்வாறு நீண்டநேரம் இரக்குமாறு இராக்காலம் நீட்டிப்பதாக!" என்றும் தலைவன் கூறும் கூற்றுக்கள் இதைத் தெளிவாக்குகின்றன ;

"தவறிலர் ஆயினும் தாம்வீழ்வார் மென்ருேள்
அகறலின் ஆங்கொன்று உடைத்து."

"ஊடுக மன்னே ஒளியிழை; யாம்இரப்ப
நீடுக மன்னே இரா." [3]

தவறு கண்டு ஊடும் பகுதியும் சில குறட்பாக்களில் திருவள்ளுவர் கூறுகின்ருர்; ஆயின் அது என்ன தவறு என்பதைக் கூறவில்லை. அது

1. குறள், 1312, 1317, 1318. 2. 1321, 1323. 3. 1325, 1329.

பரத்தையரிடம் தலைவன் தங்கிவந்த காரணத்தால் நிகழும் ஊடல் என்று சொல்வதற்கு இடம் இல்லை. வெளியுலக வாழ்க்கையில் கடமை பலவற்றை மேற்கொள்ளும் தலைவன், தலைவியை மறக்காவிட்டாலும் மறந்தவன்போல் வாழ நேரும் நாட்கள் சில உண்டு. அத்தகைய நாட்களில் அவனுடைய அன்பு மாறிவிட்டதாகக் கருதி வருந்தித் தலைவி ஊடுவதாகக் கொள்வது பொருந்தும். "பேணது பெட்பவே செய்யினும்"[1] என்றும், "காணுங்கால் காணேன் தவருய"[2] என்றும், "கொண்கன் பழிகாணேன்"[3] என்றும், "இளித்தக்க இன்ன செயினும்"[4] என்றும் தலைவி கூறும் இடங்களில் பேணமை, தவருய, பழி, இன்ன எனக் குறிப்பது இந்த நிலைமையையே ஆகும்.

## உயர்வு

காதல் துறை மக்கள் பெரும்பாலோர்க்கு இன்றியமையாததாக உள்ளது. ஒரு சிலரே இதனை அடியோடு துறந்து, உலகமே குடும்பமாகவும் உலகத்தொண்டே வாழ்க்கையாகவும் அமைத்துக்கொள்ள முடியும். மற்றப் பெரும்பாலோர்க்கு உரிய நல்வழியைக் காட்டுதல் அறிஞர்க்கும் கடமை; கலைஞர்க்கும் கடமை. திருவள்ளுவர் இல்வாழ்க்கை, வாழ்க்கைத் துணைநலம், பிறனில் விழையாமை என்னும் அறத்துப்பாலின் அதிகாரங்களில் அறவுரை கூறியுள்ளார்; பின்னர், பெண்வழிச் சேறல், வரைவின் மகளிர் என்னும் பொருட்பாலின் அதிகாரங்களில் அறிவுரையும் கூறியுள்ளார். அவற்றோடு அமையாமல், காமத்துப்பால் முழுதும் கலைஞராக விளங்கி உளவியல் உண்மைகளை நாடகப்போக்கில் புலப்படுத்தியுள்ளார்.

காதலைப் பற்றிக் கூறும் நூல்கள் பலவகைப்படும். இயற்றும் புலவருடைய மனநிலையின் உயர்வு தாழ்வுக்கு ஏற்ப, அந்நூல்கள் பலவாறு அமையும். ஆதலின் உயர்ந்த காதல் நூல்களும் சில உள்ளன; உயர்வற்ற காதல் நூல்களும் பல உள்ளன. உடலுறவைப் பற்றியும் உடலழகைப் பற்றியுமே எடுத்துரைத்துப் படிப்பவரின் உள்ளத்தே காமக்கிளர்ச்சியைத் தூண்டும் நூல்கள் இடைக்காலத்தே பல மொழிகளில் தோன்றின. இந்தத் தீய போக்கு எவ்வாறே தமிழ் மொழியிலும் இடைக்காலத்தில் சிறிது இடம் பெற்றது. ஆயினும் சங்க இலக்கிய அகப்பாட்டுக்களும் திருக்குறள் காமத்துப்பாலும் இவ்வகையில் மாசற்று விளங்குகின்றன.

ஆண் பெண் உடற்கூறு பற்றி அறிவியல் (Science) முறையில் எடுத்துரைக்கும் நூல்களைப் பற்றிக் குறைகூறுவதற்கில்லை. அவை அறியாமையைப் போக்கிக்கொள்ள முனைவார்க்கு உதவுவன. ஆயின், உடலுறவு உடலழகு ஆகியவற்றைக் கலையுணர்வோடு வருணிக்கும் நூல்கள் அத்தகையன அல்ல; அவை கடையாய நூல்கள் எனலாம். உடலுறவையும் உடலழகையும் பற்றிக் கூறுவதோடு உள்ளப் பண்பையும் எடுத்துரைப்பவை இடையாய நூல்கள் எனலாம். உடலுறவையும் உடலழகையும் அடியோடு மறந்து காதல் நூல் எழுதுதல் இயலாது; ஆகையால், அவற்றைச் சுட்டியுரைப்பதோடு நின்று உள்ளத்தின் போராட்டத்தையும் பண்பாட்டையும்

1. குறள், 1283. 2. 1286. 3. 1285. 4. 1288.

எடுத்துரைப்பதே முதல் நோக்கமாகக் கொண்டவை தலையாய நூல்கள் எனலாம். இத்தகைய சிறந்த நூல்களுள் உடல் பற்றிய வருணனை குறைவு; உடலுறவைப் பற்றிய குறிப்புக்கள் அருகிக் காணப்படும்; அந்தக் குறிப்புக் களும் சில சிறு சொற்களால் உயர்ந்த நாகரிக மனப்பான்மையோடு கூறப்படும். ஆயின், காதலரின் தன்னலம் இழப்பு, அன்பின் உயர்வு, துன்பம் தாங்கும் தவம், பிறர்க்கென வாழும் பெருநிலை முதலியவை நன்கு புலனாகுமாறு உள்ளத்தின் உணர்வுகளே பெரிதும் விளக்கப்படும். திருவள்ளுவரின் காமத்துப்பால் இந்நெறியில் தூய்மையோடு நின்று உலகை உய்விக்க எழுந்த கலைப்பகுதியாகும். சங்க இலக்கியத்தில் உள்ள பரத்தைமை என்னும் மாசும் புகாதவாறு திருவள்ளுவர் காமத்துப்பாலைத் தூய்மைப் படுத்தி யுள்ளமையால், சங்க இலக்கியத்தை விட இவ்வகையில் இது உயர்வு உள்ளது என்றும் கூறலாம். சங்ககாலத்து அகப்பாட்டுக்களில் ஆணைவிடப் பெண் பண்பாடு உடையவளாக, நெறி திறம்பாத உறுதி உள்ளவளாக விளங்குகிருள். திருக்குறளின் காமத்துப்பாலில், பெண்ணைப் போலவே ஆணும் நெறி திறம்பாத நல்லோனுகக் காட்சி அளிக்கின்ருன். இவ்வாறு காதல் நெறியைத் தூய்மைப்படுத்திக் கற்பை ஆண் பெண் இரு பாலார்க்கும் உரிமையாக்கிய தனிச்சிறப்பு உடையது திருவள்ளுவரின் காமத்துப்பால்.

# திருவள்ளுவர் காலம்

திரு டாக்டர் மா. இராசமாணிக்கனுர்
(சென்னைப் பல்கலைக் கழகம்)

**சங்க நூல்களின் இறுதிக் காலம்**

புறநானூறு முதலிய எட்டுத்தொகை நூல்களும் பத்துப்பாட்டும் சிலப்பதிகாரம் மணிமேகலை என்னும் காவிய நூல்களும் சங்க நூல்கள் என்று ஒருசார் அறிஞர் கூறுவர். எட்டுத்தொகை நூல்களும் பத்துப் பாட்டும் சங்க நூல்கள் என்றும், சிலப்பதிகாரமும் மணிமேகலையும் சங்க காலமாகிய கி.பி. முதலிரண்டு நூற்ருண்டுகளையும் அடுத்துச் செய்யப்பட்ட 'சங்கம் மருவிய' நூல்களென்றும் பிறிதொரு சார் ஆராய்ச்சியாளர் கூறுவர். கால ஆராய்ச்சியைப் புரிவோர் மறுக்க முடியாத வரலாற்று உண்மைகட்கு முதலிடம் தருதல் வேண்டும்; அடுத்து, நூலில் கூறப்படும் சமய உண்மை கட்கும் அகச்சான்றுகட்கும், புறச்சான்றுகட்கும் மதிப்பளித்தல் வேண்டும். இவ்வுண்மைகளை உளங்கொண்டு, மேற்சொன்ன இரு சார் அறிஞர் கூறும் நூல்களின் இறுதிக்கால எல்லை எதுவாக இருத்தல் கூடும் என்பதை ஈண்டு ஆராய்தல் நலமாகும்.

வட இந்தியாவில் கி. பி. நான்காம் நூற்ருண்டின் முற்பாதியில் பேரரசனுக இருந்த சமுத்ரகுப்தன் தட்சிணத்தின்மீது படையெடுத்து வந்து அரசர் பலரை வென்றனனென்றும், அவருள் காஞ்சியை ஆண்ட விஷ்ணுகோபன் என்ற பல்லவன் ஒருவன் என்றும், அக்குப்தனது அலகாபாத் தூண் கல்வெட்டுக் கூறுகின்றது.[1] அக்காலம் ஏறத்தாழக் கி. பி. 340–350 என்னலாம்.[2] இதனுல் கி. பி. 3-ஆம் நூற்ருண்டின் இறுதியில் தமிழகத்தின் வடபகுதியாகிய தொண்டைமண்டலம் பல்லவர் என்ற அரசமரபினர் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது என்பது திட்டமாகத் தெரிகிறது.[3]

காஞ்சியிலிருந்து முதல்முதல் பட்டயம் விடுத்த சிவஸ்கந்த வர்மன் என்ற முதற் பல்லவன் ஏறத்தாழக் கி. பி. 3-ஆம் நூற்ருண்டினன் என்று ஒருசார் ஆராய்ச்சியாளர் கூறுவர்.[4] பிறிதொரு சார் ஆராய்ச்சியாளர் வேறு சில காரணங்களைக் காட்டி, சிவஸ்கந்தவர்மனே காஞ்சியைக் கைப் பற்றிய குமார விஷ்ணு, அவன் காலம் ஏறத்தாழக் கி. பி. 325–350 என்பர்.[5] வேருெருசார் ஆராய்ச்சியாளர் வேறு சில காரணங்களைக் காட்டிச் சிவஸ்கந்தவர்மன் காலம் ஏறக்குறையக் கி. பி. 300–325 என்பர்.[6] இவை அனைத்தையும் காண, தொண்டை நாட்டில் பல்லவராட்சி ஏறத்தாழக் கி. பி. 300-இல் தொடங்கியிருக்கலாம் என்று கொள்வது பொருத்தமாகும்.

---

1. Pallavas of Kanchi by R. Gopalan, Appendix No. 7.
2. Ibid. p. 33. 3. Ibid. pp. 35—36. 4. Ibid. p. 36.
5. Studies in Pallava History by Fr. H. Heras, pp. 9—14, 22.
6. Successors of the Satavahanas by D. Sircar, pp. 164—166, 247—248.

சுமார் கி. பி. 300-இல் தொண்டை நாட்டைக் கைப்பற்றி ஆளத் தொடங்கிய பல்லவர் கி. பி. 900 வரை தென்னிந்தியாவில் பேரரசராக இருந்தனர்; அடிக்கடி சேர சோழ பாண்டியரோடும் போரிட்டனர் என்பன வரலாறு கண்ட உண்மைகள். ஏறத்தாழக் கி. பி. 575 முதல் 900 வரை அப்பல்லவர் பேரரசு கிருஷ்ணை முதல் காவிரிவரையும் பரவியிருந்தது.[1] இங்ஙனம் பல நூற்றாண்டுகளாகத் தமிழகத்தில் இருந்த பல்லவரைப் பற்றி மிகப் பழைய தமிழ் நூல்களென்று கருதப்படும் மேற்சொன்ன தொகை நூல்களிலும், காவியங்களிலும் ஒரு குறிப்பும் காணப்படவில்லை.[2] சிலப்பதிகாரம் மணிமேகலை என்னும் இரண்டு காவியங்களும் காஞ்சியைப் பற்றிப் பல இடங்களில் குறித்தாலும், பல்லவ அரசருள் ஒருவரைப் பற்றியேனும் குறிப்பிடாதது கவனிக்கத் தக்கது. இது ஒன்றே இக்காவியங்கள் பல்லவர்க்கு முற்பட்டவை என்பதை நன்கு விளக்குவதாகும்.[3]

கி. பி. 300 முதல் 550 வரையில் தென்னாட்டு வரலாற்றின் இருண்ட காலமென்று கூறலாம். இது சங்ககாலத்திற்குப் பிறகு ஏற்பட்ட இருண்ட காலம். இவ்விருண்ட காலத்தில் அளப்பரிய அதிராஜர்களை முடிதுறக்கச் செய்து களப்பிரர் என்னும் இனத்தார் தமிழகத்தைஆண்டதாகத் தெரிகிறது.[4] அவருள் அச்சுத விக்கந்தன் என்னும் அரசன் சோழ நாட்டை ஆண்டு பௌத்த சமயத்தை நன்கு ஆதரித்ததாக, ஏறத்தாழக் கி. பி. 450-இல் வாழ்ந்த புத்ததத்தர் என்ற பௌத்த நூலாசிரியர் தம் நூல்களில் குறித்துள்ளார். இவ்வாறு தமிழரசரை முடிதுறக்கச் செய்த களப்பிரர் ஆட்சி, வடக்கே சிம்மவிஷ்ணு பல்லவனாலும் தெற்கே கடுங்கோன் என்ற பாண்டியனாலும் கி. பி. 6-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தொலைக்கப்பட்டு, வடக்கே பல்லவர் ஆட்சியும் தெற்கே பாண்டியர் ஆட்சியும் ஏற்படுத்தப்பட்டன.[6] இக்களப்பிரரைப் பற்றிய குறிப்புச் சிறிதேனும் மேற்சொன்ன சங்ககால நூல்களில் இல்லை என்பது கவனிக்கத் தக்கது. இங்ஙனம் கி. பி. 300-க்குப் பிறகு தமிழகத்தில் நுழைந்து ஆதிக்கம் கொண்ட பல்லவரைப் பற்றியோ, களப்பிரரைப் பற்றியோ மேற்சொன்ன நூல்களில் ஒரு குறிப்பேனும் காணப்படாமை கொண்டே, அவை யாவும் கி. பி. 300-க்கு முற்பட்டன என்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெள்ளிதில் புலனாகும். சங்ககாலம் எதுவாயினும் ஆகுக; சங்கம் மருவிய காலம் எதுவாயினும் ஆகுக. இவ்விரு காலங்களும், மேற் சொன்ன வரலாற்றுண்மைகளால், கி. பி. 300-க்கு முற்பட்டவை என்பது தெளிவு.

**திருக்குறளும் மணிமேகலையும்**

மேற்கூறிய சங்கநூல்களில் காலத்தாற் பிற்பட்டவை சிலப்பதிகாரமும் மணிமேகலையும் என்பது அனைவரும் ஒப்புக்கொண்ட உண்மை. எனவே, மணிமேகலையும் சிலப்பதிகாரமும் சங்ககாலத்தின் இறுதிப் பகுதியில்

1. Pallavas of Kanchi, pp. 83—84 and 142.
2. Pandyan Kingdom by K. A. N. Sastry, p. 19.
3. V. R. R. Dikshitar's Int. to Silappadikaram by R. K. S., p. 13.
4. History of India by K. A. N. Sastary, Part I, p. 147.
5. History of Pali Literature by B. C. Law, Vol. II, pp. 384, 385 & 389.
6. History of India by K. A. N. Sastry, Part I, p. 148.

செய்யப்பட்ட பெரு நூல்கள் என்று கருதுதல் பொருந்தும். இவற்றுள் ஒன்ருன மணிமேகலையில் திருவள்ளுவரால் செய்யப்பட்ட திருக்குறட் பாக்களுள் ஒன்று அப்படியே எடுத்தாளப்பட்டுள்ளது காண்க.

> " தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
> பெய்யெனப் பெய்யும் மழை."[1]

இக்குறட்பா மணிமேகலையில்,

> " தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
> பெய்யெனப் பெய்யும் பெருமழை என்றவப்
> பொய்யில் புலவன் பொருளுரை தேருய்"[2]

என்று மணிமேகலை பாடிய மதுரைக் கூலவாணிகன் சாத்தனுரால் எடுத்தாளப் பட்டது. பரசுராமன் காலத்தில் வாழ்ந்த ககந்தன் என்ற பழைய சோழன் மகன் ஒருவன், மருதி என்ற பார்ப்பன மங்கையைக் காவிரிக் கரையில் கண்டு காம உணர்ச்சியால் அழைத்தான். அவள் மனம் கலங்கி, "உலகில் மழைவளந் தரும் பத்தினிப் பெண்டிர் பிறர் நெஞ்சு புகார். நான் இவன் உள்ளம் புகுந்தேன். இதற்குக் காரணம் யாது?" என்று சதுக்கப் பூதத்தை அணுகித் தன் மனக் கவலையை வெளியிட்டாள். அதற்கு அப்பூதம் மேற் சொன்ன மூன்று வரிகளையும் கூறியது என்பது வரலாறு.

இவ்வாறு திருக்குறட் செய்யுள் ஒன்றை வெளிப்படையாகத் தம் நூலில் கூறி, அதனைச் செய்த ஆசிரியரைப் 'பொய்யில் புலவன்' என்று வியந்து பாராட்டிய மணிமேகலை ஆசிரியர் காலம் யாது என்பதை முதற்கண் ஆராய்வோம்.

**மணிமேகலையின் காலம் :**

1. மணிமேகலை ஆசிரியரான சாத்தனுரும் சிலப்பதிகார ஆசிரியரான இளங்கோ அடிகளும் நண்பர்கள் என்பதும், செங்குட்டுவன் காலத்தவர் என்பதும், சிலப்பதிகாரக் காவியத்தின் தொடர்ச்சியே மணிமேகலைக் காவியம் என்பதும் இவ்விருநூல் பாயிரங்களாலும் சிலப்பதிகார அகச் சான்றுகளாலும் அறியலாம். இச் சாத்தனுர் வாய்மொழியால் கண்ணகியின் சிறப்பறிந்த செங்குட்டுவன் கண்ணகிக்குக் கோயில் கட்டி வழிபட்டதற்கும் அதற்கு இலங்கை அரசனுன கஜபாகு (கயவாகு) மன்னன் வந்திருந்தானென் பதற்கும் சிலப்பதிகாரமே சான்று பகர்கிறது. கயவாகு என்னும் பெய ருடைய அரசர் இருவர் முறையே கி. பி. இரண்டாம் நூற்றுண்டிலும் கி. பி. 12-ஆம் நூற்றுண்டிலும் ஆண்டனர் என்று இலங்கை வரலாறு கூறுகின்றது. இவற்றுள் கி.பி. இரண்டாம் நூற்றுண்டில் ஆண்ட கயவாகுவே (கி. பி. 171-193)[3] செங்குட்டுவன் காலத்து அரசனுதல் வேண்டும். அவனே பத்தினி விழாவில் கலந்துகொண்டு, தன் நாட்டிலும் பத்தினிக்குக் கோயில் கட்டியவனுவான். இன்றைக்கும் சிங்களவர் 'பத்தினி தெய்யோ' என்று கண்ணகியைக் கொண்டாடுகின்றனர். இலங்கையிலிருந்துதான் பத்தினியின் உருவச் சிலை லண்டன் பொருட்காட்சிச் சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டது.

---

1. குறள், 55. 2. மணி. 22: 59-61.
3. Archaeological Survey of Ceylon, xiii, 1896, pp. 47—48.

2. மணிமேகலை 27-ஆம் காதையில் 'கிருதகோடி' என்னும் உரையின் ஆசிரியர் வேத வியாசருடனும் சைமினி என்னும் ஆசிரியருடனும் பிரமாணங்கள் கூறும் இடத்தில் குறிக்கப்பட்டுள்ளார். கிருத கோடி என்பது மீமாம்சா சாத்திரமாகிய வேதாந்த சூத்திரத்திற்குப் போதாயனர் இயற்றிய உரை ஆகும் என்பது 'பிரபஞ்ச ஹிருதயம்' என்னும் வடமொழி நூலில் கூறப்பட்டுள்ளது. அந்நூலில், இவ்வுரை மிக விரிவாக இருந்தது பற்றி உபவர்ஷர் என்பவர் அதனைச் சுருக்கி அமைத்தனர் என்பதும் குறிக்கப் பட்டுள்ளது. இந்த உபவர்ஷர் கி. பி. 3-ஆம் நூற்றுண்டிற்கு முற்பட்டவர் என்பது ஆராய்ச்சியாளர் முடிவு. எனவே அவருக்கு முற்பட்ட 'கிருதகோடி' உரை எழுதிய போதாயனர் அவருக்கும் முற்பட்டவர், ஏறத் தாழக் கி. பி. முதல் நூற்றுண்டில் அல்லது இரண்டாம் நூற்றுண்டின் தொடக்கத்தில் வாழ்ந்தவராவர் என்று அறிஞர் கருகின்றனர்.[1] இதனால் 'கிருதகோடி' ஆசிரியரைக் குறிப்பிடுகின்ற மணிமேகலை, அவ்வுரை பெரிதும் வழக்கில் இருந்த கி. பி. முதல் அல்லது இரண்டாம் நூற்றுண்டில் இயற்றப் பட்டிருத்தல் வேண்டும் என்று கருத இடம் தருகிறது.[2]

3. மணிமேகலை 29-ஆம் காதையிலும் பிற காதைகளிலும் குறிக்கப் பட்டுள்ள பௌத்த சமயக் கொள்கைகள், ஏறத்தாழக் கி. பி. 200-250 ஆண்டுகட்கு இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்தவராக ஆராய்ச்சியாளரால் துணியப்படும் நாகார்ச்சுனரால் உண்டாக்கப்பட்ட மகாயான பௌத்த மதக் கொள்கைகள் அல்ல. அவை ஹீனயான பௌத்த மதக் கொள்கைகள். எனவே, மணிமேகலை காலத்தில் இருந்த தமிழகத்துப் பௌத்தம், ஹீனயானத் தைச் சேர்ந்த சௌத்ராந்திகப் பிரிவினது என்பது தெளிவாகும்.[3] எனவே, நாகார்ச்சுனர் கொள்கைகள் தமிழகத்தில் பரவுதற்கு முற்பட்ட காலத்தது மணிமேகலை என்று கருதுதல் பொருந்தும்.

4. பௌத்த சமயத்துச் 'சாத்தியசித்தி' பிரிவினரான அரிவர்மர் ஏறக்குறைய கி. பி. 250-இல் வெளிப்படுத்திய அனுத்ம வாதக்கொள்கை மணிமேகலையில் இல்லை. மணிமேகலையில் விஞ்ஞான வாதக் கொள்கைகளே குறிக்கப்பட்டுள்ளன. இந்த விஞ்ஞான வாதக் கொள்கைகளே ஏறத்தாழக் கி. பி. 400-இல் வாழ்ந்தவராகக் கருதப்படும் திந்நாகர் என்னும் புகழ்பெற்ற பௌத்த ஆசிரியரால் பரப்பப்பட்டன. மணிமேகலையில் கூறப்பட்டுள்ள பௌத்தக் கொள்கைகள் அனைத்தும் சௌத்ராந்திகப் பிரிவுக் கொள்கைகள் ஆகும்.[4]

5. மணிமேகலை ஆசிரியர் சாத்தனுர்க்கு நண்பனுன செங்குட்டுவன் பத்தினிச் சிலைக்குக் கல் எடுக்க வடநாடு சென்றுன் என்று சிலப்பதிகாரம் செப்புகின்றது. அவன் எவ்வித எதிர்ப்புமின்றிக் கங்கையைக் கடந்து உத்தரகோசலத்தில் மட்டும் ஆரிய அரசரை வென்றுன் என்று அந்நூல் கூறுகிறது. இங்ஙனம் தமிழரசனொருவன் வடக்கே படையெடுத்துச் செல்லத் தக்க வசதி கி. பி. முதலிரண்டு நூற்றுண்டுகளில் இருந்ததா? எனின்,

1. Vedanta Commentators before Sankaracharya by P. V. Kane, Proceedings, Fifth Oriental Conference, Vol. II.
2. Manimekalai in its Historical Setting by Dr. S. K. Ayyangar, pp. 61—67.
3. Buddhistic Studies compiled by B. C. Law, pp. 11—17.
4. Manimekalai in its Historical Setting, pp. 79—95.

ஆந்திரர் ஆட்சி குன்றிய கி.பி. 2, 3-ஆம் நூற்றுண்டுகளில் இப்படையெடுப்பு நிகழ்ந்திருக்கலாம்.[1] கி. பி. 163-இல் இறந்த கௌதமீபுத்ர சதகர்ணியின் மகனை புலுமாயிக்குப் பின் வந்த ஆந்திர அரசர் வலியற்றவர்[2] ஆதலின் கி. பி. 163 முதல் ஆந்திர அரசு மறைந்தவரை (கி. பி. 300 வரை) உள்ள இடைக்காலத்தில் செங்குட்டுவன் படையெடுப்பு நிகழ்ந்திருக்கலாம். கயவாகுவின் காலம் கி. பி. 171-193 ஆதலால் செங்குட்டுவன் படையெடுப்பும் இக் காலத்திலேயே நிகழ்ந்ததாதல் வேண்டும். இப் படையெடுப்பில் செங் குட்டுவன் நண்பரான நூற்றுவர் கன்னர்; அவன் கங்கையைக் கடக்க உதவி புரிந்தனர் என்று சிலப்பதிகாரம் கூறுகிறது. நூற்றுவர் கன்னர் என்பது 'சதகர்ணி' என்னும் வடமொழித் தொடரின் மொழிபெயர்ப்பு என்பதை எளிதில் உணரலாம். உணரவே, அக்காலத்து ஆந்திரப் பெருநாட்டை ஆண்ட சதகர்ணி அரசன் செங்குட்டுவனுக்கு நண்பன் என்பது பெறப்படும். அக் கால ஆந்திர அரசன் யக்ஞஸ்ரீ சதகர்ணி என்பவன். இவன் காலம் கி. பி. 166—196[3]. எனவே, சிலப்பதிகாரத்தில் குறிக்கப்பட்ட நூற்றுவர் கன்னர், வரலாற்றுப் புகழ்பெற்ற சதகர்ணி அரசர் என்பது அறியத்தக்கது. இங்ஙனம் வரலாறு கொண்டும், சமய உண்மைகள் கொண்டும் அறிஞர் கூறியுள்ள முடிவுகளைக் காணின், சிலப்பதிகாரமும் மணிமேகலையும் கி. பி. இரண்டாம் நூற்றுண்டின் பிற்பகுதியில் செய்யப்பட்டவாதல் வேண்டும் என்பது நன்குதெளிவாகும்.

### திருக்குறளின் பழமை

கி. பி. 2-ஆம் நூற்றுண்டில் செய்யப்பெற்றதாகத் துணியப்படும் மணிமேகலையில் திருக்குறள் ஆட்சி பெற்றது எனின், திருக்குறள் நூல் சாத்தனுர் போன்ற புலவர்கள் படித்தறியத் தக்க நிலையில் நாட்டில் பெருமை பெற்றிருந்தது என்பது தெளிவாகும். ஆசிரியர் இக்குறளை ஆண்டுள்ள இடம் நன்கு கவனித்தற்குரியது. சோழ அரசருள் மிகப் பழையவனை (கரிகாலனுக்கும் முற்பட்ட) ககந்தன் காலத்தில் காவிரிப்பூம்பட்டினத்தில் இருந்த சதுக்கப்பூதம் மருதி என்னும் பார்ப்பனியை நோக்கி,

> " தெய்வம் தொழாஅள்.........
> ..............................
> பொய்யில் புலவன் பொருளுரை தேருய் "

என்று கூறியதாகச் சாத்தனுர் கூறியுள்ளார். ஒரு சாதாரணப் பார்ப்பனப் பெண்ணுன மருதி, இத் திருக்குறளின் கருத்தை அறிந்திருக்க வேண்டுமென்று சதுக்கப்பூதம் எதிர்ப்பார்த்தது என்பது சாத்தனுர் கருத்தாதல் தெளியலாம். இவ்வாறு, ககந்தன் காலத்திலேயே திருக்குறள் அனைவராலும் அறியத்தகும் நிலையில் இருந்தது(அதாவது, மணிமேகலையின் காலத்துக்கு மிக முற்பட்டது திருக்குறள்) என்பதைச் சாத்தனுர் சதுக்கப் பூதத்தின் வாயிலாக நமக்கு உணர்த்தும் திறன் வியந்து பாராட்டற்குரியது அன்றே? சாத்தனுர் உணர்த்துவது உண்மை என்பதை, மணிமேகலைக்கு முற்பட்டனவாகக் கருதப்படும் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு முதலிய நூற் பாடல்களைக் கொண்டும் நன்கு அறியலாம்.

1. The Sangam Age by T. G. Aravamudan, pp. 56—57.
2. A History of India by C. S. Srinivasachari, p. 49.
3. Early History of India by V. A. Smith, p. 223.

தமிழகத்தில் கி. பி. 300-க்கு முற்பட்ட பல்வேறு காலங்களில் பல்வேறு ஊர்களில் வாழ்ந்த புலவர் பலர், பல்வேறு சந்தர்ப்பங்களில் பாடிய பாக்களின் தொகுதியே எட்டுத் தொகையும் பத்துப்பாட்டும் ஆகும். இவை கி. பி. மூன்றும் நூற்றுண்டுக்குள்ளேயோ, அல்லது அதற்குப் பிற்பட்ட காலத்திலேயோ தொகுக்கப்பெற்றவை. இப் பாடல்களைப் பாடிய புலவர் பலர் தம் பாக்களில் திருக்குறட் கருத்துக்களையும் சொற்களையும் சொற்றொடர் களையும் ஆண்டுள்ள உண்மை, சங்கநூற் பயிற்சியுடையார்க்கு நன்கு விளங்கும். இடச்சுருக்கம் கருதி, ஒவ்வொரு நூலுக்கும் சில எடுத்துக் காட்டுக்களைக் காட்டிச் செல்லுதலே சாலும்.

**நற்றிணை**

1. "நீரின் றமையா துலகெனின் யார்யாக்கும்
வானின் றமையா தொழுக்கு." —குறள், 20.

"நீரின் றமையா உலகம் போலத்
தம்மின் றமையா நந்நயந் தருளி." —நற்றிணை, 1.

2. "நாடாது நட்டலிற் கேடில்லை நட்டபின்
வீடில்லை நட்பாள் பவர்க்கு." —குறள், 791.

"......... ......... ......... பெரியோர்
நாடி நட்பி னல்லது
நட்டு நாடார்தம் மொட்டியோர் திறத்தே." —நற்றிணை, 32.

3. "பெயக்கண்டு நஞ்சுண் டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்." —குறள், 580.

"முந்தை யிருந்து நட்டோர் கொடுப்பின்
நஞ்சு முண்பர் நனிநா கரிகர்." —நற்றிணை, 355.

**குறுந்தொகை**

1. "மலரினும் மெல்லிது காமம் சிலரதன்
செல்வி தலைப்படு வார்." —குறள், 1289.

"ஐதே காமம்"—காமநோய் நுண்ணியது, மெல்லியது.
—குறுந்தொகை, 217.

2. "பேதைமை யொன்றோ பெருங்கிழமை யென்றுணர்க
நோதக்க நட்டார் செயின்." —குறள், 805.

"பேதை மையாற் பெருந்தகை கெழுமி
நோதகச் செய்ததொன் றுடையேன் கொல்லோ."
—குறுந்தொகை, 230.

3. "வாளற்றுப் புற்கென்ற கண்ணு மவர்சென்ற
நாளொற்றித் தேய்ந்த விரல்." —குறள், 1261.

"வீங்கிழை நெகிழ விம்மி யீங்கே
எறிகட் பேதுற லாய்கோ டிட்டுச்
சுவர்வாய் பற்றுநின் படர்..." —குறுந்தொகை, 358.

**பதிற்றுப்பத்து**

1. " நின் மறங்கூறு குழாத்தர்." —நான்காம் பத்து, 9.

வீரர், தம் தலைவரது வீரத்தையே எடுத்தோதி மேம்படுத்தல் இயல்பு. இதனை,

" என்னைமுன் நில்லன்மின் தெவ்விர் பலரென்னை
முன்னின்று கன்னின் றவர்"

என்று வீரர் தம் தலைவனது சிறப்பைக் கூறும் குறளில் (771) காண்க.

2. " தொலையாக் கொள்கைச் சுற்றம்." —ஏழாம் பத்து, 10.

தம்மால் சுற்றப்பட்ட தலைவன் செல்வம், வலிமை முதலியன அற்ற போதும் அவனை நீங்காது பழமை பாராட்டும் பண்பினர் ஆதலின் சுற்றத்தார் இங்ஙனம் சிறப்பிக்கப்பட்டனர். இக்கருத்தை,

" பற்றற்ற கண்ணும் பழமைபா ராட்டுதல்
சுற்றத்தார் கண்ணே யுள "

என்னும் குறளில் (521) காண்க.

3. " நனவினுன் நல்கா தவரைக் கனவினல்
காண்டலின் உண்டென் னுயிர்." —குறள், 1213.

" ...கனவினும் பிரியா வுறையுளொடு...
மீனெடு புரையுங் கற்பின்
வாணுதல் அரிவை..." —ஒன்பதாம் பத்து, 9.

**பரிபாடல்**

1. " காமக் கணிச்சி யுடைக்கும் நிறையென்னும்
நாணுத்தாழ் வீழ்த்த கதவு." —குறள், 1251.

" காமக் கணிச்சியாற் கையறவு வட்டித்துச்
சேமத் திரைவீழ்த்துச் சென்றமளி சேர்குவோர்."
—பரிபாடல், 10: 33-4.

2. " இலனென்னு மெவ்வ முரையாமை யீதல்
குலனுடையான் கண்ணே யுள." —குறள், 223.

" இல்லது நோக்கி இளிவரவு கூறுமு
னல்லது வெஃகி வினைசெய்வார்." —பரிபாடல், 10: 87-88.

3. " ஒற்று முரைசான்ற நூலு மிவையிரண்டும்
தெற்றென்க மன்னவன் கண்." —குறள், 581.

" புடைவரு சூழல் புலமாண் வழுதி
மடமயி லோரு மனையவ ரோடுங்
கடனறி காரியக் கண்ணவ ரோடுநின்
சூருறை குன்றிற் றடவரை யேறி." —பரிபாடல். 19: 20-23.

**கலித்தொகை**

7. " காமமும் நாணு முயிர்காவாத் தூங்குமென்
நோனு உடம்பி னகத்து." —குறள், 1163.

" நலிதரும் காமமுங் கௌவையு மென்றிவ்
வலிதின் உயிர்காவாத் தூங்கியாங் கென்னை
நலியும் விழுமம் இரண்டு." —கலி. 142.

" காம முழந்து வருந்தினர்க் கேம
மடலல்ல தில்லை வலி." —குறள், 1131.

" காமக் கடும்பகையிற் றோன்றினேற் கேம
மெழினுத லீத்தவிம் மா." —கலி, 139.

2. " குடிபுறங் காத்தோம்பிக் குற்றங் கடிதல்
வடுவன்று வேந்தன் றொழில்." —குறள், 549.

" குடிபுறங் காத்தோம்புஞ் செங்கோலான் வியன்றானை
விடுவழி விடுவழிச் சென்றாங்கு அவர்
தொடுவழித் தொடுவழி நீங்கின்றாற் பசப்பே." —கலி. 130.

3. " துஞ்சுங்காற் றோண்மேல ராகி விழிக்குங்கால்
நெஞ்சத்த ராவர் விரைந்து." —குறள், 1218.

" தெற்றெனக் கண்ணுள்ளே தோன்ற இமையெடுத்துப்
பற்றுவென் என்றியான் விழிக்குங்கால் மற்றுமென்
நெஞ்சத்துள் ளோடி யொளித்தாங்கே துஞ்சாநோய்
செய்யு மறனில் லவன்." —கலி. 144.

அகநானூறு

1. " மங்கல மென்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு." —குறள், 60.

" கடவுட் கற்பொடு குடிக்குவிளக் காகிய
புதல்வற் பயந்த புகழ்மிகு சிறப்பின்
நன்ன ராட்டி........." —அகநானூறு, 184.

2. " தாம்வீழ்வார் மென்றோட் டுயிலின் இனிதுகொல்
தாமரைக் கண்ணான் உலகு." —குறள், 1103.

" செய்வுறு விளங்கிழைப் பொலிந்த தோள்சேர்பு
எய்திய கனைதுயில் ஏற்றொறுந் திருகி
மெய்புகு வன்ன கைகவர் முயக்கின்
மிகுதிகண் டன்றோ இலனே." —அகநானூறு, 379.

3. " செல்லாமை யுண்டேல் எனக்குரை மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க் குரை." —குறள், 1151.

" வருவீர் ஆகுதல் உரைமின் மன்னோ
... ... ... ... ...
நின்றாங்குப் பெயருங் கானம்
சென்றோர் மன்னென இருக்கிற் போர்க்கே." —அகநானூறு, 387.

புறநானூறு

1. " சிறப்பீனும் செல்வமு மீனு மறத்தினூஉங்
காக்க மெவனோ உயிர்க்கு." —குறள், 31.

" அறத்தான் வருவதே இன்பமற் றெல்லாம்
புறத்த புகழு மில.'' —குறள், 39.

" சிறப்புடை மரபிற் பொருளும் இன்பமும்
அறத்து வழிப்படூஉம் தோற்றம் போல." —புறம். 31.

2. " எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டா முய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு.'' —குறள், 110.

" நிலம்புடை பெயர்வ தாயினும் ஒருவன்
செய்தி கொன்றோர்க் குய்தி யில்லென
அறம்பா டிற்றே ஆயிழை கணவ." —புறம். 34

3. " பொதுநோக்கான் வேந்தன் வரிசையா நோக்கின்
அதுநோக்கி வாழ்வார் பலர்." —குறள், 528.

" வரிசை யறிதலோ அரிதே பெரிதும்
ஈத லெளிதே மாவண் டோன்றல்
அதுநற் கறிந்தனை யாயிற்
பொதுநோக் கொழிமதி புலவர் மாட்டே.'' —புறம். 121.

**பத்துப்பாட்டு**

" பொதுநோக்கான் வேந்தன் வரிசையா நோக்கின்
அதுநோக்கி வாழ்வார் பலர்." —குறள், 528.

" வரிசை யறிதலும் வரையாது கொடுத்தலும்
பரிசில் வாழ்க்கைப் பரிசில ரேத்த.''
—சிறுபாணாற்றுப்படை, 217-218.

" ஈத லிசைபட வாழ்த லதுவல்ல
தூதிய மில்லை யுயிர்க்கு.'' —குறள், 231.

" உரைப்பா ருரைப்பவை யெல்லா மிரப்பார்க்கொன்
றீவார்மே னிற்கும் புகழ்.'' —குறள், 232.

" ......... ......... ......... விழுநிதி
ஈத லுள்ளமொ டிசைவேட் குவையே.''
—மதுரைக்காஞ்சி, 204-205.

3. " வித்தும் இடல்வேண்டுங் கொல்லோ விருந்தோம்பி
மிச்சின் மிசைவான் புலம்.'' —குறள், 85.

" விருந்துண் டெஞ்சிய மிச்சில் பெருந்தகை
நின்னோ டுண்டலும் புரைவதென் றாங்கு.''
—குறிஞ்சிப் பாட்டு, 206-207.

இங்ஙனம் குறட்பாக்களையும், அவற்றின் தொடர்களையும், கருத்துக்களையும் தம் பாக்களில் எடுத்தாண்டவர்கள் பல்வேறிடத்தவர், பல்வேறு காலத்தவர் ஆதலின், அவர்தம் காலத்திற்கும் முன்னரே திருக்குறள் அறப்பெருநூலாக நாட்டில் வழக்குப் பெற்றிருந்தது என்னும் உண்மை தெற்றென விளங்கும். இங்ஙனமே, சங்க காலத்திற்குப் பிற்பட்ட பெருங்கதை[1], இறையனார்

1. குணாட்டியர் பைசாச மொழியில் செய்த பிருகக் கதையைக் கி. பி. 6-ஆம் நூற்றாண்டின் இடையில் கங்க நாட்டு அரசனாக இருந்த துர்விநீதன் வடமொழியில் இயற்றினான்.

களவியலுரை, சைவத் திருமுறைகள், ஆழ்வார்களின் அருட்பாடல்கள் முதலிய அனைத்திலும் குறட்பாக்களும் அவற்றின் தொடர்களும் கருத்துக் களும் தாராளமாகக் கையாளப்பட்டுள்ளன. இவையனைத்தையும் நோக்க, இன்றுள்ள சங்கநூற் பாடல்கள் முதல், பின்னூல்கள் அனைத்திற்குமே திருக்குறள் போற்றத்தக்க அறநூலாக விளங்கி வந்தது என்பது எளிதிற் புலனாகும். ஆயினும், திருவள்ளுவர் ஏறக்குறைய எந்த நூற்றாண்டைச் சேர்ந்தவராக இருக்கலாம் என்னும் கேள்வி எழுதல் இயல்பு. இதற்கு ஒருவாறு விடைகாணல் நமது கடமையாகும்.

1. திருவள்ளுவர் காலம் சங்க காலத்தின் முற்பகுதியைச் சேர்ந்தது என்று கூறுவோரும், சங்க காலத்துக்குப் பிற்பட்ட காலத்தது என்று கூறு வோரும் இன்றுள்ள சங்கப் பாடல்களிற் பல ஏறத்தாழக் கி. பி. முதலிரண்டு நூற்றாண்டுகளைச் சேர்ந்தவை என்பதை ஒப்புகின்றனர். இதை நோக்க, திருவள்ளுவர் காலம் இம் முதலிரண்டு நூற்றாண்டுகட்கும் முற்பட்டதெனக் கருதலாம்.

2. ககந்தன் என்ற பழைய சோழ அரசன் காலத்திலேயே திருக்குறள் அறிவைப் பொது மக்களிடம் சதுக்கப்பூதம் எதிர்பார்த்தது என்று கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த சாத்தனார் கூறுவதால்,[1] திருக்குறளின் பழமை நன்கு புலனாகும். ஆகவே, வரலாற்றின் துணை கொண்டு காலம் கூறமுடியாத ககந்தனுக்கும் முற்பட்டது திருக்குறள் எனக் கருத இடமுண்டாகிறது.

3. திருக்குறளைப் பாராட்டிச் சங்கப் புலவர்கள் பாடியனவாகக் கருதப் படும். "திருவள்ளுவ மாலை ஆராய்ச்சிக்குரியது; அப்புலவர்கள் பாடிய தொகை நூற்பாக்களை ஆராயின், அவர்கள் பல்வேறு காலத்தவர் என்பது அறியக் கிடக்கின்றது. எனவே, பல்வேறு காலத்தில் வாழ்ந்த புலவர் பாடிய பாக்கள் பிற்காலத்தில் புறநானூறு போன்ற தொகை நூல்களாகத் தொகுக் கப்பட்டாற்போல, திருக்குறளைப் பாராட்டிப் பல்வேறு காலங்களிற் பல புலவர் பாடிய பாக்களையும் பிற்காலத்தவர் திருவள்ளுவ மாலை என்னும் தலைப்பில் தொகுத்தனர் என்றே கருதுதல் பொருந்தும். அத் திருவள்ளுவ மாலையில் காணப்படும் பழம் புலவர்க்கு வள்ளுவர் சமகாலத்தவர் என்று கொள்ளுதலினும், அவர்க்கு முற்பட்டவராகக் கொள்வதே சால்புடைத்தாம். புலவர் எவரும் தம் காலத்தவரால் தலைநின்ற தேவ நாவலராய் மதிக்கப்படும் வழக்கம் யாண்டும் இல்லை. பெரும்பாலும் சமகாலத்தவரால் அவமதிப்பும், தாம் இயற்றிய நூலின் மெய்ப்பெரு வலியால் பிற்காலத்தவரால் மேம்பாடும் அடைவதே புலவருலகு இயல்பு. தெய்வப் பாவலராக வள்ளுவரைச் சங்கப்

அதனைப் பின்பற்றியே கொங்கு வேளிர் என்பவர் தமிழில் பெருங்கதையைப் பாடியுள்ளார். எனவே, அந்நூலின் மேலெல்லை ஏறத்தாழக் கி. பி. 6 அல்லது 7-ஆம் நூற்றாண்டு என்னலாம்.

1. சாத்தனார் தாம் அறிந்த குறட்பாவைச் சதுக்கப் பூதத்தின் வாயிலாகத் தெரிவித்தாரே யன்றி வேறன்று எனக் கருதுவோரும் உளர். அங்ஙனம் கருதுதல் சாத்தனார் போன்ற பெருங்காவியப் புலவர்களுக்குக் கால வுணர்ச்சி இல்லை என்று கருதுதற்கு ஒப்பாகும்.

பழம் புலவர்கள் கூறுவதால், அவர்தமக்கு வள்ளுவர் நீண்ட காலத்துக்கு முற்பட்டவராகவும், அவர் அறநூலின் இறவாச் சிறப்பு அங்கீகரிக்கப்படுவதற்குப் போதிய அவகாசம் அக்குறளுக்கும் அதனடிகளைப் பாராட்டி எடுத்தாளும் சங்கப் பனுவல்களுக்கும் இடையே ஏற்பட்டிருத்தல் வேண்டும்." [1]

4. கி. மு. நான்காம் நூற்றாண்டில் வாழ்ந்த கௌடில்யர் இயற்றிய பொருள் நூலிற் கண்ட சில செய்திகளும் திருக்குறள் பொருட்பால் பகுதிகள் சிலவும் கருத்தில் ஒன்றுபட்டிருத்தலால், திருவள்ளுவர் கௌடில்யரது பொருள் நூலைப் படித்திருக்கலாம் என்று ஒருசார் ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர்; கருதித் திருவள்ளுவர் கி. மு. முதல் அல்லது இரண்டாம் நூற்றாண்டினர் எனக் கூறுவர். [2] 'வடமொழிச் சொற்களையே யன்றி வடமொழிக் கருத்துக் களையும் வள்ளுவர் எடுத்தாண்டுள்ளார்' என்று கூறி, அதற்கு எடுத்துக் காட்டாகக் காமந்தகம், அர்த்த சாஸ்திரம், காம சூத்திரம் என்பவற்றில் ஒரு சில கூற்றுக்களுக்கும் சிற்சில குறளுக்கும் ஏகதேச ஒற்றுமை உண்டென்று அவர்கள் காட்டுகிறார்கள்.

"கருத்துக்கள் ஒரு மொழிக்கும் சொந்தம் இல்லை; பல மொழியாளருக்கும் பொதுவுடைமை. ஒரு கருத்து இரு மொழி நூல்களில் வருவது இயல்பு. ஒரு நாட்டு இரு மொழி நூல்களில் ஒத்த கருத்து வருவது அருமையன்று. பிறநாட்டுப் பல மொழி நூல்களிலும் ஒத்த ஒரு கருத்து வருவதைக் காணலாமே! அது கொண்டு அவற்றிடைத் தொடர்புடைமை ஊகிக்க இயலாதே! இனி, அதற்குமேல் தமிழ்க் குறளின் காலத்தை ஒத்த கருத்துள்ள வடநூற்குப் பிறகென்று கருதுதற்கு இடன் உண்டோ?

"முதலில் அந்நூல்களின் காலத்தை வரலாற்று முறையில் ஆன்ற சான்று கொண்டு அளந்து அறுதியிடல் வேண்டும். பிறகு அவற்றிடை இன்றியமையாத தொடர்பியைபு துணிய வேண்டும். இவை எதுவும் இல்லாமல், வடமொழி நூல்களில் வருவதெல்லாம் தமிழ்ப் பனுவல்களுக்கு மூலமுதல் என்பது விதண்டையாகும்." [3]

"கௌடில்யர் காஞ்சிபுரத்தினர் ஆதலால் தமிழிலும் பயிற்சி பெற்றவராதல் வேண்டும். அவர் தம் காலத்தில் தமிழகத்தில் பெரு வழக்காக இருந்த திருக்குறளை நன்கு கற்றிருக்கலாம்; பின்னர் வடநாட்டு நிலைக்கேற்பப் பொருள் நூல் எழுதும்போது, எந்நாட்டு அரசியலுக்கும் ஒத்தவையான திருக்குறட் கருத்துக்களைத் தம் நூலில் ஆங்காங்கே அமைத்துக்கொண்டிருக்கலாம். கௌடில்யர் தமிழகத்தவராதலால் இம்முடிபு கொள்வதே பொருத்தமாகும்" என்று கூறும் ஆராய்ச்சியாளரும் நம்மிடையே உளர். இது பொருந்துவதாயின், திருவள்ளுவர் கி. மு. 4-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கௌடில்யருக்கு முற்பட்டவர் எனக் கூறுதல் தவறு ஆகாது.

---

1. நாவலர் சோமசுந்தர பாரதியார்: "திருவள்ளுவர்", ப. 4.
2. Studies in Tamil Literature and History by V. R. R. Dikshitar, pp. 133, 150—176.
3. ச. சோ. பாரதியார்: "செந்தமிழ்," தொகுதி, 45, ப. 29-30; "திருவள்ளுவர்" ப. 11-14.

இங்ஙனம் அறிஞர் பலர் காலக்கணக்கில் வேறுபடினும், திருவள்ளுவர் கிறிஸ்துபெருமானுக்கு முற்பட்ட காலத்தவர் என்றே கருதுகின்றனர்[1] என்பது கவனிக்கத்தக்கது.[2]

**திருக்குறளுக்கு மூல நூல்கள்**

'திருக்குறள் இன்றுள்ள சங்கப் பாக்கட்கு முற்பட்டதாயின், அதற்குரிய மூல நூல்கள் யாவை?' என்னும் கேள்வி அடுத்து எழுவதாகும். இதற்கு விடை காண்பதற்குமுன், இன்றுள்ள இலக்கண நூல்களுள் காலத்தால் முற்பட்ட தொல்காப்பியத்தின் காலத்தை அறிதல் நன்றாகும். தொல்காப்பியம் ஏறத்தாழ 1600 சூத்திரங்களைக் கொண்டது. அதனில் தொல்காப்பியர் நூற்றுக்குப் பதினறு இடங்கள் வீதம் (சுமார் 260 இடங்களில்) தமக்கு முன்னரும் சம காலத்திலும் வாழ்ந்த பல திறப்பட்ட இலக்கண ஆசிரியர்களைக் குறித்துள்ளார் என்பது அறியத்தகும். அறியவே, தொல்காப்பியம், பலர் நினைத்தல் போலத் தமிழ் இலக்கணத்தை விரித்துரைக்கும் நூலன்று, காலத்திற்கு ஏற்றாற் போலத் தொகுத்துக் கூறும் நூலே யாகும் என்பதை நன்குணரலாம்.[3] இத்தொல்காப்பியத்தின் காலத்தைப்பற்றி ஆராய்ந்த அறிஞர்கள் கீழ்வருமாறு கூறியுள்ளனர்: "இலக்கண ஆசிரியர்கள், தம் காலத்தனவும், முந்தியனவுமான செய்யுட்களைக் கொண்டு இலக்கணம் செய்தல் மரபு. பரணர், கபிலர், நக்கீரர் இவர்கட்குப் பிற்பட்டவர் தொல்காப்பியராயின் அவர்தம் பாடல்கட்கு முரணுக விதிகள் செய்திரார் அல்லவா? தொல்காப்பியச் சூத்திர விதிகட்கும் அப் புலவர்களின் செய்யுட்களில் காணப்படும் சொற்களுக்கும், சொற்றொடர்களுக்கும் சிறந்த இலக்கண மாறுபாடுகள் இருத்தல் ஒன்றே, தொல்காப்பியர் கடைச்சங்கப் புலவராய பரணர் முதலியோர்க்குப் பல நூற்றாண்டுகட்கு முற்பட்டவ ராவர்"[4], "இவர் செய்யுள் பற்றியும் வழக்குப் பற்றியும் கூறி

1. V. R. R. Dikshitar's Studies in Tamil Literature and History, pp. 133-135; ச. சோ. பாரதியார், "திருவள்ளுவர்", ப. 14. 'திருவள்ளுவர் கி. மு. இன்ன நூற்றாண்டினர் என்று உறுதியாகக் கூறத்தக்க சான்றுகள் கிடைக்கும் வரை, 'அவர் கிறிஸ்து பெருமானுக்கு முற்பட்ட காலத்தவர்' என்று கூறுதலே இன்றுள்ள சான்றுகளை நோக்கப் பொருத்தமாகத் தெரிகிறது.'

2. திருக்குறளில் காணப்படும் ஒரு சில சொற்களையும் வடமொழிச் சொற்களையும் தொடர்களையும் கொண்டும், குறளில் காணப்படும் கருத்துக்கள் சில வடமொழி நூல்களில் காணப்படுதல் கொண்டும், குறள் மேலே கூறப்பெற்ற சங்க காலத்திற்கும் பிந்தியது என்று ஒருசார் அறிஞர் கூறுவதனைத் தக்க சான்றுகள் காட்டிப் பேராசிரியர் சோமசுந்தர பாரதியார் அவர்களும், திருப்பதிக் கீழ்க்கலை ஆராய்ச்சிக் கூடத்துத் தமிழாராய்ச்சித்துறை அறிஞரான பழநியப்ப பிள்ளை அவர்களும் மறுத்து எழுதியுள்ள கட்டுரைகள் போதியன. ("செந்தமிழ்" vol. 45, pp. 21—30; திருக்குறள், பொருட்பால் Int. pp. 6—11; Journal of Sri Venkateswara Oriental Institute, 1949, "திருவள்ளுவர் கால ஆராய்ச்சிப் போக்கு," pp. 1—25). ஆதலால், ஈண்டுச்சொல்லாராய்ச்சியோ தொடர் ஆராய்ச்சியோ இடம் பெறவில்லை. இவற்றை யறிய விரும்புவோர், மேற்குறிக்கப்பெற்ற கட்டுரைகளைப் படித்துத் தெளிக.

3. "தமிழ்ப்பொழில்," துணர் 15, (1939) பக். 320—331. "மணிமலர்," (1941) ச. சோ. பாரதியார்: "தொல்காப்பியன்" ப. 22-33.

4. Paranar by V. V. Reddiar, pp. 172—173.

யுள்ள இலக்கணங்களில் பலவற்றிற்கு இலக்கியம் காட்டுதல் இப்போது வழங்கும் நூல்களைக் கொண்டு இயலாமையானும், இவர் கூறிய இலக்கணங்களின் வேருய்ச் சில சொற்களும் கொள்கைகளும் இந்நூல்களிற் காண்டலானும், இவர் இந்நூற்கெல்லாம் முந்தியவர் என்று துணிதல் ஒருதலையாயது"[1], "இவற்ருல் தொல்காப்பியனுர் தம் இலக்கணத்திற்குக் கருதிய இலக்கியங்கள் எத்துணையோ பல அவர்க்கு முன்னே இத்தமிழ் நாட்டு வழங்கியன என்றே ஒரு தலையாகத் துணியலாம்."[2]

இங்ஙனம், தொல்காப்பியத்திற்கு முன்னரும் சம காலத்திலும், இன்றுள்ள சங்கப்பாக்களுக்கு முன்னரே இலக்கண ஆசிரியர் பலர் இருந்தனர் என்பதையும் இலக்கிய நூல்கள் பல இருந்தன என்பதையும் அறிகின்ரேம். எள்ளிலிருந்து எண்ணெய் எடுக்கப்படுதல் போல இலக்கியத்திலிருந்து எடுபடுவது இலக்கணம். ஆதலால் தொல்காப்பியத்திற்கு முற்பட்ட இலக்கண நூல்களுக்குக் கருவூலங்களாகப் பல இலக்கிய நூல்கள் இருந்திருத்தல் வேண்டும் என்பது தேற்றம் அன்ரே? அவை பரந்துபட்ட காலத்தனவாதல் வேண்டும். அவற்றுட் சிலவே இறையனுர் களவியலுரை முதலியவற்றில் பெயரளவில் சுட்டப்படும் நூல்கள். அப்பழைய இலக்கிய நூல்களே, அறம், பொருள், இன்பம் பற்றிய பல குறிப்புகளைத் திருக்குறளுக்கு உதவியிருக்கலாம்.

மிகப் பல நூற்ருண்டுகளுக்கு முன்னிருந்து தமிழகத்தை ஆண்டு வந்த சேர சோழ பாண்டியருடைய ஆட்சி முறைகளைக் கொண்டும், சான்ருேர் வரைந்த மேற்சொன்ன பண்டை இலக்கியங்களைக் கொண்டும் உலகத்தார் அனைவரும் மனமுவந்து ஏற்றுக்கொள்ளும் முறையில் திருவள்ளுவர் தம் அற நூலைச் செய்து முடித்துள்ளார் என்று கொள்ளுதலே இதுகாறும் கண்ட உண்மைகளை நோக்கப் பொருத்தமாகக் காணப்படுகிறது.

1. தமிழ் வரலாறு, ரா. இராகவையங்கார், ப. 268.
2. ௸ ,, ப. 273.

# திருவள்ளுவர்

திருவள்ளுவர் வரலாற்றை வரையறையாகக் கூறும் நூல் ஏதும் இல்லை. அவருடைய பிறப்பு, குலம், தொழில், சமயம், காலம் ஆகிய வற்றைப்பற்றிப் பல வேறு கொள்கைகள் இருந்து வருகின்றன. நாளாக ஆக இந்தப் பன்மை மிகுகின்றதேயன்றி, இதுதான் துணிவு என்று கூறும் நிலை இன்னும் வரவில்லை. ஒன்றுமட்டும் உறுதியாகத் தெரிகிறது. திருவள்ளுவர் யாவராலும் மதிக்கப்பெறும் பெரும்புலவர் ஆதலின் அவரைத் தம் தமக்கு விருப்பமான நெறியைச் சார்ந்தவர் என்று சொல்லும் முயற்சி, அவருடைய வரலாற்றைக் கூறப்புகும் பலரிடையும் இருக்கிறது. குணங்குறி கடந்து நின்றும், 'சமயவாதிகளெலாம் தம் தெய்வம் எம் தெய்வம் என்று எங்கும் தொடர்ந்து எதிர் வழக்கிடவும்' நின்ற கடவுளைப் போலத் திருவள்ளுவர் இருக்கிறார் என்று ஒருவாறு கூறலாம்.

### பல பல கதைகள்

அவருடைய வரலாற்றுக்குரிய குறிப்புக்கள் திருவள்ளுவ மாலை, ஞானமிர்தம், கபிலர் அகவல், புலவர் புராணம், தமிழ் நாவலர் சரிதை முதலியவற்றில் கிடைக்கின்றன. அவை யாவுமே நம்புதற்குரியன என்று சொல்லல் இயலாது. திருவள்ளுவ மாலையில் சில பாடல்கள் திருவள்ளுவரை நான்முகன் அவதாரம் என்றும்,[1] கலைமகள் அவர் திருநாவிலிருந்து திருக்குறளைச் சொன்னாள்[2] என்றும் சொல்கின்றன. எந்தப் பெரியவரையும் ஒரு தெய்வத்தின் அவதாரம் என்று சொல்வது இந்த நாட்டில் உள்ள வழக்கம். ஆராய்ச்சி வகையால் அவர் பெருமையை நிலைநாட்டுவதை விட்டுவிட்டு, பொதுமக்கள் யாவரும் போற்றவேண்டும் என்ற ஒரே குறிக்கோளோடு இத்தகைய புனைந்துரைகளை வழங்கினார்கள்.

புலவர் புராணமும் கபிலர் அகவலும், திருவள்ளுவர் ஆதியென்னும் புலை மடந்தைக்கும் பகவன் என்னும் அந்தணனுக்கும் பிறந்தார் என்று கூறும். திருவள்ளுவரோடு ஔவை, கபிலர், வள்ளி, அதிகமான், உப்பை, உறுவை என்பவர்களும் பிறந்தார்கள் என்றும், அவர்களைப் பெற்றவுடனே அவர்கள் தந்தையாரின் சொற்படி அன்னை அங்கங்கே விட்டுச் சென்றன ளென்றும், அப்போது ஒவ்வொரு குழந்தையும் ஒவ்வொரு பாடலைப் பாடிய தென்றும் ஒரு வரலாறு உண்டு. முனிவர்களின் பிறப்பை இவ்வாறு கூறும் ஒரு முறையை எண்ணி யாரோ கட்டிவிட்ட கதை இது என்றே தோன்றுகிறது.

வள்ளுவர் மயிலாப்பூரில் வாழ்ந்தார் என்பது ஒரு வரலாறு. மதுரையில் இருந்தார் என்பதைத் திருவள்ளுவமாலைச் செய்யுள் ஒன்று குறிப்பிக்கிறது.[3] அவர் வாசுகி என்னும் கற்புடை மங்கையாரை மணந்தார் என்றும்,

---

1. திருவள்ளுவ மாலை, 4, 28. 2. ஷை, 2. 3. ஷை, 21.

தம் மனைவியாருடைய கற்பின் திறத்தைப் பல வகையில் சோதனை செய்து வெளிப்படுத்தினர் என்றும் சில கதைகள் வழங்குகின்றன. திருவள்ளுவர் நெய்தல் தொழிலைச் செய்து வந்தார் என்றும், ஒரு நாள் தேவர்கள் இறைவன் ஆடிய ஊர்த்துவ தாண்டவத்தின் நுட்பம் தெரியாமல் அவரை வந்து கேட்டுத் தெரிந்து கொண்டனரென்றும், அவர் அதை, "பூவில் அயனும்" என்ற வெண்பாவினல் தெரிவித்தனரென்றும் ஒரு கதை உண்டு. ஏலேல சிங்கன் என்னும் கப்பல் வாணிகன் ஒருவன் திருவள்ளுவரை வழிபட்டு மாணுக்கன் ஆனன் எனவும், அவன் அவர் சொன்னபடி யெல்லாம் ஒழுகினன் எனவும் கூறிச் சில அற்புதக் கதைகளையும் விரிப்பர் சிலர்.

திருவள்ளுவர் திருக்குறளை எடுத்துக் கொண்டு மதுரை சென்று அதனைத் தமிழ்ச்சங்கத்தில் அரங்கேற்ற விரும்பினராம்; முதலில் புலவர்கள் மறுத்தார்களாம். அப்பால் சங்கப் பலகையில் அதை வைக்கவே, அப்பலகை அந்நூல் ஒன்றனையே தாங்கி மற்றப் புலவர்களைக் கீழே தள்ளிவிட்டதாம். இப்படி ஒரு செய்தியும் உண்டு.

திருவள்ளுவருடைய பண்பைச் சிலர் சில வகையிலே சோதித்தார்களென்றும், அவர்களுக்கெல்லாம் தக்க வண்ணம் சொல்லாலும் செயலாலும் அவர் தெளிவு பிறக்கச் செய்தாரென்றும் கூறும் கதைகள் சில.

தம் மனைவி இறந்தபொழுது திருவள்ளுவர் வருந்திப் பாடியதாக, "அடிசிற் கினியாளே" என்று ஒரு பாடல் வழங்குகிறது.

திருவள்ளுவரை ஒரு சித்தரென்று வைத்து, ஞானவெட்டியான், திருவள்ளுவர் ஞானம் என்னும் நூல்களை அவர் தலையில் சிலர் ஏற்றினர். சைனர்களிடையே ஒரு கர்ண பரம்பரை வரலாறு வழங்குகிறது. திருப்பாதிரிப் புலியூரில் வாழ்ந்திருந்த குந்தகுந்தாசாரியார் அல்லது ஏலாசார்யர் என்னும் சைனத்துறவியினல் திருக்குறள் பாடப் பெற்றது என்று அவ் வரலாறு சொல்கிறது.

### பல வேறு கொள்கைகள்

இவருடைய சமயத்தைப் பற்றிப் பல கொள்கைகள் நிலவுகின்றன. இவர் வைதிக மதத்தினர் என்பாரும், சைவ சித்தாந்த நெறிக்கு அரண் செய்யும் கருத்துக்களை உடையவர் என்பாரும், திருமால்பால் அன்புடைய வைணவர் என்பாரும், சமரச நோக்குள்ள அத்துவைதி என்பாரும், சைனர் என்பாரும், பௌத்தமதச் சார்புடையர் என்பாரும், கிறிஸ்துவின் மாணவர் ஒருவரோடு தொடர்பு கொண்டவர் என்பாரும், வேதவிதிகளை மறுப்பவர் என்பாருமாகப் பலபடியாக எழுதிய அறிஞர்கள் இருக்கிறர்கள்.

இவ்வாறே இவர் வாழ்ந்த காலத்தைப் பற்றியும் வேறுபட்ட கொள்கையினர் சிலர். சங்க காலத்துக்கு முற்பட்டவர் என்றும், சங்க காலத்தில் வாழ்ந்தவர் என்றும், அக் காலத்தை அடுத்து வாழ்ந்தவர் என்றும், அக் காலத்துக்குச் சில நூற்றுண்டுகள் பிற்பட்டவர் என்றும் தமக்குத் தோற்றிய காரணங்களைக் கொண்டு தம் கருத்துக்களைச் சில அறிஞர்கள் எழுதியிருக்கிறர்கள்.

## பெயர்க் காரணம்

திருக்குறளை இயற்றிய ஆசிரியர் பெயர் திருவள்ளுவர் என்று வழங்கு கிறது. அதுவே அவருடைய இயற்பெயர் என்று சிலர் கூறுவர். ஆயினும் செய்தியை முரசறைந்து தெரிவிக்கும் ஒரு குலத்தினர் பெயர் அது என்றே தோன்றுகிறது. மதிப்புடையவர்களின் இயற்பெயரை வெளிப்படையாகச் சொல்வது இந்த நாட்டில் வழக்கமன்று. "ஊரைச் சொன்னாலும் பேரைச் சொல்லாதே" என்ற பழமொழி அந்த வழக்கத்தைக் குறிப்பிக்கிறது. வள்ளுவன் என்னும் பெயர் சங்ககாலத்துப் புலவர் ஒருவர் பெயரிலும், புரவலன் ஒருவனுடைய பெயரிலும் காணக்கிடைக்கிறது. குறுந்தொகை, 228-ஆம் பாடலைப் பாடிய புலவர் பெயர், செய்தி வள்ளுவன் பெருஞ்சாத்தன் என்று உள்ளது. புறநானூற்றில் பல பாடல்களைப் பெற்றவனாக நாஞ்சில் வள்ளுவன் என்பவன் வருகிறான். செய்தி வள்ளுவன் பெருஞ்சாத்தன் என்ற தொடர்மொழியிலிருந்து, அப் பெயருக்குரிய புலவரின் இயற்பெயர் பெருஞ்சாத்தன் என்பதும், அவர் வள்ளுவக் குலத்தினர் என்பதும், செய்தியை அறிவிக்கும் தொழிலை உடையவர் என்பதும் தெரிய வருகின்றன.

திருவள்ளுவரும் வள்ளுவர் குலத்தில் தோற்றியவர் என்றே தோன்று கிறது. அரசியல் செய்திகளை யானையின்மேல் இவர்ந்து முரசறைந்து தெரிவிக்கும் தொழிலுடையவர்கள் அக்குலத்தினர் என்பதும், அரசனுக்குரிய பல கருமங்களைச் செய்பவர்களில் அவர்களும் ஒரு வகையினர் என்பதும் பழைய நூல்களால் புலனாகின்றன. இன்றும் வள்ளுவர் என்ற குலத்தினர் தமிழ் நாட்டில் இருந்து வருகின்றனர். ஹரிஜனங்களிடையே குருமார்களாகவும், சோதிடம் முதலிய கலைகளில் வல்லுநர்களாகவும், நெய்தல் தொழிலைச் செய்பவராகவும் அவர்கள் இருப்பதைக் காணலாம். திருவள்ளுவமாலையில்,

> "அறம்பொருள் இன்பம்வீ டென்னும்அந் நான்கின்
> திறந்தெரிந்து செப்பிய தேவை—மறந்தேயும்
> வள்ளுவன் என்பான்ஓர் பேதை; அவன்வாய்ச்சொற்
> கொள்ளார் அறிவுடை யார்" [1]

என்று வரும் பாடல் திருவள்ளுவர் குலத்தைக் குறிப்பிக்கிறது. யாரோ ஒருவன் இவருடைய குலத்தைக் கூறி இழிவுரைத்தபோது சீறிச் சொன்னதுபோல அமைந்திருக்கிறது பாட்டு.

## இடம்

இவர் வாழ்ந்த இடம் மயிலாப்பூர் என்று சொல்வதற்குக் கர்ண பரம்பரைச் செய்தியையும், தொண்டை மண்டல சதகத்தையும், மயிலாப்பூரில் இப்போது திருவள்ளுவர் கோயில் ஒன்று இருப்பதையும் ஆதாரமாகக் காட்டுவார்கள். ஆனால் திருவள்ளுவ மாலையில் ஒரு செய்யுள் வள்ளுவரை, "புனற்கூடற்கு அச்சு" [2] என்று சொல்லுகிறது. திருவள்ளுவமாலை சங்க காலப் புலவர்களின் பெயரால் அமைந்த பல பாடல்களையுடையதாக இப்போது இருக்கிறது. ஆனால் அது பிற்காலத்தில் தோன்றிய

1. திருவள்ளுவ மாலை, 8.
2. ஷை 21.

நூல் என்பதே ஆராய்ச்சியாளர் துணிபு. அதில் வரும் எல்லாப் பெயர்களும் சங்ககாலப் புலவர்களின் பெயர்கள் என்று சொல்ல இயலாது. எனினும், அதன் பாட்டு ஒன்றை நேமி நாத உரையாசிரியர் மேற்கோள் காட்டுவதனுல் அது அவ்வுரையாசிரியர் காலத்துக்கு முந்தியதென்று கொள்ள வேண்டும். திருவள்ளுவரைப் பற்றிய குறிப்புகளைத் தரும் நூல்களில் அது பழையதென் பதில் ஐயம் இல்லை. திருவள்ளுவர் மதுரையில் இருந்தவர் என்று அந்நூலிற் காணும் செய்தி, மற்ற நூல்களில் உள்ளதைவிடப் பழமையான தென்றே கொள்வது பொருந்தும். ஆதலின் திருவள்ளுவர் ஊர் மதுரை யென்று சொல்வது ஏற்பதற்குரியது. பாண்டி மண்டல சதகம் அவரைப் பாண்டி நாட்டினர் என்று சொல்கிறது. திருவள்ளுவர் பாண்டிநாட்டில் பெரு வழக்காக உள்ள ஊருணி, கேணி என்னும் சொற்களை ஆண்டிருத்தலும் இந்தக் கருத்தை ஒருவாறு அரண் செய்யும்.

### காலம்

இவருடைய காலத்தைப்பற்றி இனிப் பார்க்கலாம். இவர் சங்க காலத்துக்கு முற்பட்டவர் என்பதற்குத் திருக்குறளில் உள்ள சொல்லும் பொருளும் சங்கநூல்களில் உள்ளவற்றேடு ஒத்திருக்கின்றதைச் சான்ருகக் காட்டுவார் உளர். சங்க நூல்களுக்குப் பின் திருக்குறள் எழுந்தது என்ப தற்கும் அவற்றையே சான்ருகக் காட்டலாம். ஆதலின் அது கருதிக் காலத்தை நிலை நிறுத்துதல் அத்துணைச் சிறப்பன்று. அந்த முறையே தக்கது என்ருல் தொல்காப்பியத்தில் வரும்,

> "நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
> மறைமொழி தானே மந்திரம் என்ப" [1]

என்ற சூத்திரமும்,

> "நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
> மறைமொழி காட்டி விடும்" [2]

என்னும் குறளும் சொல்லாலும் பொருளாலும் ஒத்து நிற்பதை நோக்கித் திருவள்ளுவர் தொல்காப்பியருக்கும் முந்தினவர் என்று சொல்லுதல் கூடுமா ?

மணிமேகலையில்,

> "தெய்வம் தொழாஅள் கொழுநற் றெழுதெழுவாள்
> பெய்யெனப் பெய்யும் பெருமழை என்றஅப்
> பொய்யில் புலவன் பொருள்உரை தேருய்" [3]

என்று வரும் இடத்தில் தெளிவாகத் திருக்குறட்பாவைக் காட்டித் திருவள்ளுவரை, 'பொய்யில் புலவன்' என்று அதன் ஆசிரியர் கூறுகிருர். இதனைக் கொண்டு தி[illegible]ள்ளுவர் மணிமேகலையாசிரியர் காலத்துக்கு முந்தியவர் என்று உறு[illegible]க் கூறலாம்.

1. தொல். செய்யு[illegible] 2. குறள், 28. 3. மணி. 22 : 59 - 61.

புறநானூற்றில் 34-ஆம் பாடலில் பின்வரும் அடிகள் உள்ளன:

"ஆன்முலை அறுத்த அறனி லோர்க்கும்
மாணிழை மகளிர் கருச்சிதைத் தோர்க்கும்
பார்ப்பார்த் தப்பிய கொடுமை யோர்க்கும்
வழுவாய் மருங்கிற் கழுவாயும் உளஎன
நிலம்புடை பெயர்வ தாயினும் ஒருவன்
செய்தி கொன்றோர்க்கு உய்தி இல்லென
அறம்பா டிற்றே ஆயிழை கணவ."

இந்தப் பகுதி,

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"[1]

என்னும் திருக்குறளைச் சுட்டிக் காட்டுகிற தென்றும், அறம் என்பது திருக்குறளாகிய அறநூலைச் சுட்டுகிறதென்றும், பாடிற்றே என்றதனால் செய்யுள் நூலையே அது சுட்டுகிற தென்றும் சிலர் கொள்வர். இது சற்றே ஆராய்வதற்குரியது.

அறம் என்பதற்குப் பழைய உரையாசிரியர் அறநூல் என்று பொருள் எழுதியுள்ளார். திருக்குறள் அறம் முதலிய மூன்று உறுதிப் பொருள்களையும் கூறுவதாதலின் அறம் என்று அதனைக் கூறுவது பொருந்துமா என்பது சிந்திப்பதற்குரியது. அற நூலை அறம் என்று வழங்குவதைத் திருக் குறளிலும்,

"அறம்கூறும் ஆக்கம் தரும்"[2]
"அறம்பொருள் கண்டார்கண் இல்"[3]

என்று வரும் இடங்களால் தெரிந்துகொள்ளலாம். அன்றியும் இப் புற நானூற்றுப் பாடலில் என என்பதை இரண்டிடங்களிற் பெய்திருக்கிறார் புலவர்; 'ஆன்முலையறுத்தவர் முதலியோர்க்குக் கழுவாயும் உள எனவும், செய்தி கொன்றோர்க்கு உய்தி இல் எனவும் அறம் பாடிற்று' என்று வருகிறது. ஆதலின் அப்புலவர் இங்கே குறிப்பிடும் மேற்கோளில் இந்த இரண்டு கருத்துக்களும் உள்ளன என்பது புலனாகும். "எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்" என்று வள்ளுவர் அவற்றைத் தொகுத்துச் சொன்னார் என்று கொள்ளலாமேயன்றி, 'எந்நன்றி' என்பதனைப் புற நானூற்றுப் புலவர் விரித்துரைத்தார் என்று சொல்லுதல் பொருந்துமா? இவ்விருவருக்கும் மேற்கோள் அறநூல் என்றும், அவ்வற நூலில் உள்ளதை அப்படியே எடுத்துப் புறநானூற்றுப் புலவர் பாட, திருவள்ளுவர் அதனைத் தொகுத்துச் சொன்னார் என்று சொல்வதே பொருந்தும். ஆதலின் இப்புற நானூற்றுப் பாடலுக்கு முந்தியது திருக்குறள் என்று நிறுவுவது உரமுடைய தன்று. பாடிற்றே என்பதற்குச் சொல்லிற்று என்று பொருள் கொள்ள வேண்டும். நன்னூல் உரையாசிரியர்கள், பாட்டு என்பது சொல் என்னும் பொருளில் வரும் உரிச்சொல் என்பதற்கு இவ்வடியை உதாரணம் காட்டியத னாலும் இது பெறப்படும்.

மணிமேகலையின் காலம் சங்ககாலத்தைச் சார்ந்த காலம் என்றும் அது கி. பி. மூன்றாம் நூற்றாண்டுக்குச் சற்று முன்பாகலாம் என்றும் கூறுவர். திருக்குறள் அக்காலத்துக்கு முந்தியது என்பதில் ஐயம் இல்லை.

1. குறள், 110. 2. ஷை, 183. 3. 141.

சங்ககாலத்து நூல்களைக் காட்டிலும் மிகுதியான வடசொற்களும் வட நூல் மரபும் திருக்குறளில் வந்துள்ளன. சங்கநூல்களில் செயப்பாட்டு வினைச்சொற்கள் அருகியே காணப்படும். திருக்குறளிலோ பல இடங்களில் படுசொல் வந்துள்ளது.

சங்ககால நூல்களில் கொல்லாமையையும் புலால் உண்ணாமையையும் வற்புறுத்தும் இடம் அரிது; இல்லை யென்றே சொல்லலாம். அதை வற்புறுத்துபவர்களாயின் ஊனைப்பற்றியும் ஊனுணவைப்பற்றியும் விரித்துச் சொல்லுவதற்கு அருவருப்புக் கொள்வர். சங்க நூல்களில் அவ்விரண்டைப் பற்றியும் பலபல செய்திகள் வருகின்றன. திருவள்ளுவரோ, "ஒன்றாக நல்லது கொல்லாமை" என்று கூறியதோடு புலால் உண்ணுதலைக் கடிகிறார்.

சங்கநூற் பாடல்களில் பெரும்பான்மையாக உள்ளவை அகப்பாடல்கள். அவற்றில் குஃறொடர் அன்மொழி பல இடங்களில் வரும்.

"திதலை யல்குலென் மாமைக் கவினே" [1]

என்று மகளிர் கூற்றில் வைத்தும் பாடுகின்றனர் புலவர். திருவள்ளுவர் அச் சொல்லை 250 குறட்பாக்கள் அடங்கிய காமத்துப்பாலில் ஓரிடத்திலும் எடுத்து ஆளவில்லை. அப்பாலில் ஒரே இடத்தில் நகிலைச் சொல்கிறார். சங்க நூல்களில் அவ்வுறுப்பைப் பல இடங்களில் எடுத்துரைத்துள்ளார்கள். ஊடலைச் சொல்லும் சங்ககாலத்து மருதத்திணைப் பாடல்களில் பரத்தையரைப் பற்றிய செய்திகள் பலபல வருகின்றன. திருக்குறளில் அவை இல்லை.

கடவுள் வாழ்த்திலும், புலால் உண்ணாமையைச் சொல்லும் அதிகாரத் திலும் இவர் சைனர்களுடைய பழக்கத்தால் அவர்கள் ஆளும் தொடர்களையும் கருத்தையும் தெரிந்து அமைத்திருக்கிறார் என்று தெரிவதனால், சைனர் மதுரைப்பக்கத்தில் மிகுதியாக வாழ்ந்த காலம் அது என்று கொள்ள இடம் உண்டு. இவற்றால் திருவள்ளுவர் சங்ககாலத்தின் இறுதியை ஒட்டி வாழ்ந்தவரென்று கொள்ள வேண்டும். அதாவது கி. பி. இரண்டாவது நூற்றாண்டின் இறுதியிலோ மூன்றாம் நூற்றாண்டின் முதலிலோ வாழ்ந்தவ ராகலாம்.

### சமயம்

இவருடைய சமயம் சைனம் என்று வாதித்துச் சிலர் எழுதியிருக் கிறார்கள். வேதம், வேள்வி, வினைக்கு ஏற்ப வகுக்கும் கடவுள் ஆகியவற்றை உடம்பாட்டு வகையில் எடுத்தாள்வதனால் இவர் சைனர் என்று சொல்வதற் கில்லை. ஆயினும் சைனர்களுடன் பழகியவராதலின் அவர்கள் அருகனுக்கு வழங்கும் பெயர்கள் சிலவற்றைக் கடவுள் வாழ்த்தில் அமைத்தார். பௌத்தர்களைச் சைனர்கள் கண்டிப்பதற்குப் பயன்படுத்தும் வாதங்களில் ஒன்றை,

"தினற்பொருட்டால் கொல்லா துலகெனின் யாரும்
விலைப்பொருட்டால் ஊன்தருவார் இல்" [2]

என்பதில் அமைத்தார்.

### மதிப்பு

எல்லாச் சமயத்தாரும் எல்லாச் சாதியினரும் மதிப்புடன் போற்றும் பெருமை உடையவர் இவர் என்பதை, இவரை யாவரும் பாராட்டும் முறை

1. குறுந். 27. 2. குறள், 256

யினல் உணரலாம். பரிமேலழகர் இவரைத் 'தெய்வப் புலமைத் திருவள்ளுவர்'[1] என்று தம் உரையின் தொடக்கத்தில் சொல்கிருர். திருவள்ளுவமாலையோ,

"திருத்தகு தெய்வத் திருவள்ளுவர்"
"தெய்வத் திருவள்ளுவர்"
"தெய்வத் திருவள்ளுவர் செப்பிய குறளால்" [2]

என்று பாராட்டும். சைவ சந்தான குரவர்களுள் ஒருவராகிய உமாபதி சிவாசாரியார் தாம் இயற்றிய நெஞ்சுவிடு தூதில்,

"தெய்வப் புலமைத் திருவள் ளுவர்மொழிந்த
மெய்வைத்த சொல்லை"

என்கிருர். பரிமேலழகர் உரையைச் சிறப்பிக்கும் பாடல்களில்,

"திருந்திய தமிழில் தெய்வப் புலமை
அருந்திறல் வள்ளுவன் ஆய்ந்துதன் வாக்கால்" [3]

என்றும்,

"திருத்தகுசீர்த் தெய்வத் திருவள்ளுவர்" [4]

என்றும்,

"தெய்வப் புலமைத் திருவள் ளுவர்குறளில்" [5]

என்றும் வருகின்றன.

தேவர், தேவு என்றும் திருவள்ளுவரைக் கூறுவர்.

"திறந்தெரிந்து செப்பிய தேவை"
"தேவிற் சிறந்த திருவள்ளுவர்"
"தேவர் திருவள்ளுவர்" [6]

என்பன திருவள்ளுவ மாலையில் உள்ளவை.

"வள்ளுவ தேவன்" [7]

என்று ஒரு தனிப்பாடல் கூறுகிறது.

"தேவர் குறள்" [8]

என்று அடையே யின்றித் திருவள்ளுவரைத் தேவர் என்றே குறிக்கும் பாடல்களும் உள்ளன.

இவர்பால் பெருமதிப்பினல் இவரைச் சைவர்கள் திருவள்ளுவ நாயனர் என்று பாராட்டினர்கள். சடைமுடி, உருத்திராட்சம் முதலியவற்ருேடு திருவுருவம் அமைத்து வழிபட்டார்கள். மயிலாப்பூரில் உள்ள திருவள்ளுவர் கோயிலில் சைவ முறைப்படி வழிபாடு நடந்து வருவதை இன்றும் காணலாம். நாயன்மார், ஆழ்வார், ஞானசிரியராகியவர்களுக்குத் தனிக் கோயில் உண்டு. ஆனல் ஒரு புலவருக்குத் தனியே கோயில் அமைத்து வழிபடும் பெருமையை இவ்வொரு புலவரே பெறுள்ளார்.

## அறிவுச் சிறப்பு

திருக்குறளைக் கொண்டு பார்த்தால் இவர் மதிநுட்பம் நூலோடுடையவர் என்று தெரியவரும். நூல்களை நன்ருகக் கற்றுப் பல பெரியோர்களிடம் பல

1. ப. 1. 2. திருவள்ளுவ மாலை, 1, 19, 49. 3. பெருந்தொகை, 1543.
4. ஷை, 1544. 5. ஷை. 1546. 6. திருவள்ளுவ மாலை, 8, 39, 41.
7. பெருந்தொகை, 2001. 8. நல்வழி, பெருந்தொகை, 1548.

வற்றைக் கேட்டுச் செவிச்செல்வத்தையும் சிறக்கப் பெற்றவர் இவர். அக் காலத்தில் வழங்கிய அறநூல், பொருள்நூல் முதலியவற்றை நன்கு ஆராய்ந்திருக்கிறார். அந் நூல்களைப் பற்றி இவர் குறிப்பதனால் இதனை உணரலாம்.

"பொச்சாப்பார்க் கில்லை புகழ்மை; அதுஉலகத்
தெப்பால்நூ லோர்க்கும் துணிவு" [1]

என்று இவர் கூறுவதனால் இவர் காழ்ப்புணர்ச்சி இல்லாமல் பல நூல்களையும் கற்றுணர்ந்தவர் என்று தெரிய வருகிறது. எந்த நாட்டினரும் எந்த ஊரினரும் பாராட்டும் வகையில் பல துறையிலும் அறிவு விரிந்திருக்க வேண்டும் என்பது இவர் கொள்கை. அதனால்தான்,

"யாதானும் நாடாமால் ஊராமால், என்ஒருவன்
சாந்துணையும் கல்லாத வாறு" [2]

என்கிறார். இயற்கையாக அமைவது மதி நுட்பம்; முயற்சியினால் அமைவது நூலறிவு; மேலும் முயன்று பெறுவது கேள்வி. இவற்றை உடைய திருவள்ளுவர் நன்கு ஆராய்ந்து பார்க்கும் நுட்பமாகிய கூர்மையையும், விரிந்த மன இயல்போடு பல நூல்களையும் கற்றதனால் அமைந்த விரிவையும் உடையவர்;

"அஃகி அகன்ற அறிவு" [3]

என்று அவ்விரண்டையும் இவர் சொல்கிறார். இந்நூலில் அறநூலையும்[4], பொருள் நூலையும்,[5] அரசியல் நூல்களையும்,[6] மருத்துவ நூலையும் [7] பற்றிச் சொல்கிறார். அதனால் அந்த நூல்களையும் பிறவற்றையும் கற்று வல்லவர் இவர் என்பதில் சிறிதும் ஐயம் இல்லை.

தம் காலத்தில் வழங்கிய தமிழ் நூல்களையும் பிறமொழி நூல்களையும் நன்கு ஆராய்ந்து, பல பேரறிவாளருடனும் அரசர் அமைச்சர் முதலியவர்களுடனும் பழகி அரசியல் முதலியவற்றை அறிந்து, தம் அநுபவத்தால் பலவற்றைத் தெரிந்து தேக்கிய அறிவுக் கருவூலத்தை வைத்துக்கொண்டு, பலகாலும் சிந்தித்துக் கருத்துக்களை வகை செய்து, சுருங்கிய சொல்லில் செறிவாகக் குறட்பாக்களால் இந்த அரும்பெரும் நூலை இயற்றினர் திருவள்ளுவர். அவருடைய மதியின் நுட்பமும் திட்பமும் விரிவும் உயர்வும் இந்நூலால் நன்கு வெளியாகின்றன. இப்படிப் பல துறைகளிலும் அறிவைச் செலுத்தித் தெளிந்து அழகும் பயனும் விளைய ஒரு நூலைச் செய்வது அரிதினும் அரிய செயல். செயற்கரிய செய்த இந்தப் பெரும் புலவரைத் தமிழகம் பெற்று உலகுக்குத் தந்திருக்கிறது என்பதை எண்ணி நாம் பெருமிதம் அடைய உரிமை உண்டு.

---

1. குறள், 533. 2. ௸, 397. 3. 175. 4. 141, 183, 322, 581.
5. 141. 6. 440, 581, 636, 683, 743. 7. 951.

# பரிமேலழகர்

## 1

### உரையின் சிறப்பு

திருக்குறள் எவ்வாறு கருத்தைச் சுருக்கமாகவும் செறிவாகவும் குறட்பாவில் வைத்துக் காட்டுகிறதோ அவ்வாறே அதற்கு உரை வகுத்த பரிமேலழகரும் சுருக்கமும் செறிவும் அமைந்த சொற்களாலே உரை எழுதினர். உமாபதி சிவாசாரியார் பாடியதென்று வழங்கும் ஒரு பாடல், தண்டமிழின் மேலாம் தரம் என்று ஆறு நூல்களைக் காட்டுகின்றது. அது,

“வள்ளுவர்சீர் அன்பர்மொழி வாசகம்தொல் காப்பியமே
தெள்ளுபரி மேலழகன் செய்தவுரை”

என்று அந்த ஆறில் ஒன்ருகப் பரிமேலழகர் உரையைக் காட்டுகிறது. திருக்குறளை ஒன்ருக வைத்துப் பின் அதன் உரையையும் அதற்கு இயைந்த ஒன்ருக வைத்ததும், மூல நூல்களோடு சார இவ்வுரையை வைத்ததும் இதன் பெருமையை நன்கு எடுத்துக் காட்டும். பரிமேலழகர் உரைச் சிறப்புப் பாயிரம், திருவள்ளுவரே மீண்டும் தோன்றி விளக்கியதுபோல உரை செய்தார் என்று சிறப்பிக்கிறது.[1]

“பாலெல்லாம் நல்லாவின் பாலாமோ பாரிலுள்ள
நூலெல்லாம் வள்ளுவர்செய் நூலாமோ—பாரில்
பரித்தவுரை யெல்லாம் பரிமே லழகன்
தெரித்தவுரை யாமோ தெளி”

என்ற பாடல் இவ்வுரையின் இணையிலாச் சிறப்பை எடுத்தோதுகிறது. மகாமகோபாத்தியாய டாக்டர் ஐயரவர்கள் தாம் உரையாடும்பொழுது பரிமேலழகர் உரையைப் பின்வருமாறு பாராட்டிச் சொல்வார்கள்: “ஏதேனும் ஒரு குறளை எடுத்துக்கொண்டு அதன் உரையைப் பாராமல் ஒரு மாதம் யோசித்து நாமாகவே உரைசெய்து, நயமும் பிறவும் எழுதி வைத்து, பிறகு பரிமேலழகர் உரையை எடுத்துப் பார்த்தால், அவர் நாம் நினைக்காத பல நுட்பங்களை எழுதியிருப்பதை அறிதல் கூடும்.”

### ஊர்

பரிமேலழகர் தொண்டை நாட்டில் காஞ்சீபுரத்தில் வாழ்ந்தவர் என்று தொண்டைமண்டல சதகத்தால் தெரிய வருகிறது;

“வள்ளல் சிலேப்பெரு மாள்கச்சர் சாத்தர் வழுதிமுதல்
தள்ளுவ ஞர்க்குத் தலையான பேரையும் தன்உரையை
விள்ளுவ ஞர்க்கும் திருக்காஞ்சி வாழ்பரி மேலழகன்
வள்ளுவ ஞர்க்கு வழிகாட்டி ஞன்தொண்டை மண்டலமே.”[2]

---

1. பெருந்தொகை, 1543.
2. 41-ஆம் செய்யுள்.

வேறு ஒரு பாடல் இவரை 'ஒக்கை காவலன்' என்றும், மற்றொன்று, 'தமிழ்க் கூடற் பரிமேலழகியனென்பான்' என்றும் கூறுகின்றன.[1]

### சமயம்

செவிவழியாக, இவர் காஞ்சிபுரத்தில் உள்ள உலகளந்த பெருமாள் கோயில் அர்ச்சகர் என்று ஒரு செய்தி வழங்குகிறது.[2] பரிபாடலுக்கு இவர் செய்த உரைக்குரிய பாயிரத்தில்,

> "நீணிலங் கடந்தோன் தாள்தொழு மரபிற்
> பரிமே லழகன்"

என்று, இவர் உலகளந்த பெருமாளை அர்ச்சிக்கும் மரபிற் பிறந்தவர் என்ற செய்தி வருகிறது,

திருக்குறள் 39-ஆம் அதிகாரத்தின் தோற்றுவாயில், 'உலகபாலர் உருவாய் நின்று உலகம் காத்தலின் இறை என்றார். "திருவுடை மன்னரைக் காணின் திருமாலைக் கண்டேனே என்னும்" என்று பெரியாரும் பணித்தார்' என்று எழுதுகிறார். தாம் காட்டும் மேற்கோள்களுக்கு ஆகரம் கூறும் வழக்கம் இவரிடம் இல்லை. தொல்காப்பியனார் என்றும், புறப்பாட்டு என்றும் இரண்டிடங்களில் மட்டும் குறித்துச் செல்கிறார். அத்தகையவர் நம்மாழ்வாரை எண்ணி, 'பெரியாரும் பணித்தார்' என்று கூறுதல் இவருக்கு அவ்வாழ்வாரிடத்தில் உள்ள பெருமதிப்பைக் காட்டுகிறது. வேறு இரண்டு இடங்களிலும் இவர் திருவாய்மொழியை மேற்கோளாகக் காட்டுகிறார்.[3]

மேலே சொன்ன தோற்றுவாயில் அரசனுக்கு இறை என்னும் பெயர் வந்ததற்குக் காரணம் கூறப் புகுந்தவர், காத்தல் தொழிலுடைமையால் அது வந்தது என்று சொல்லி, "திருமாலைக் கண்டேனே" என்பதைக் காட்டியதனால், இறை என்பதற்குத் திருமால் என்று பொருள் கொண்டார் என்பது உய்த்துணரப்படுகிறது. இக் கருத்தை உடையவர் இவர் என்பதை வெளிப்படையாகத் தெரிந்து கொள்வதற்குரிய இடம் ஒன்று உண்டு. "அடியளந்தான்" என்பதற்கு, 'தன் அடியளவானே எல்லா உலகையும் அளந்த இறைவன்'[4] என்று உரை வகுத்திருப்பது காண்க. இவை இவர் சமயத்தால் வைணவர் என்பதைப் புலப்படுத்தும் சான்றுகள்.

### காலம்

காமத்துப்பாலின் அவதாரிகையில்,

> 'இச் சிறப்புப் பற்றிப் போசராசனும் "சுவைபல வென்று கூறுவார் கூறுக; யாம் கூறுவது இன்பச்சுவை ஒன்றனையே" என இதனையே மிகுத்துக் கூறினான்'

என்று எழுதுகிறார். போசராசன் கூறியதென்று சுட்டிய கருத்து, 11-ஆம் நூற்றாண்டில் தாரா நகரத்தில் இருந்து ஆண்ட போஜன் இயற்றிய சிருங்காரப் பிரகாசம் என்னும் நூலில் முதற் பிரகாசத்தில் 6-ஆம் சுலோகத்தில் காணப்

1. பெருந்தொகை, 1547, 1548.
2. மு. இராகவையங்கார்: சாஸனத் தமிழ்க்கவி சரிதம், ப. 114.
3. குறள், 349, 370, உரை,
4. ஷை, 610, உரை.

பெறுகிறது.[1] இதனால் பரிமேலழகர் 11-ஆம் நூற்றாண்டிற்குப் பின் வந்தவர் என்பது புலனாகும்.

"வள்ளுவர்சீர்" என்னும் வெண்பாவை உமாபதி சிவாசாரியார் இயற்றியதாகக் கூறுவர். அவர் 13-ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 14-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் வாழ்ந்தவர்.[2] ஆகவே 14-ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டவர் பரிமேலழகர் என்பது தெளிவாகிறது.

இவர் நச்சினார்க்கினியருக்கு முற்பட்டவர் என்று மகாமகோபாத்தியாய டாக்டர் ஐயரவர்கள் கருதுவார்கள்.[3]

அருளாளப் பெருமாள் திருக்கோயிலில் உள்ள கல்வெட்டு ஒன்று, 'ஸ்ரீ விஜயகண்ட கோபால தேவர்க்கு யாண்டு 22-ஆவது கும்ப நாயற்று அமரபக்ஷத்துத் திருதியையும் புதன்கிழமையும் பெற்ற அத்தத்து நாள் ஜெயங்கொண்ட சோழ மண்டலத்து நகரம் காஞ்சிபுரத்துத் திருவத்தியூர் நின்றருளிய அருளாளப் பெருமாளுக்குப் புவியாளப் பிறந்த ஆமூர் நீலகங்கனேன் திருமாலைப் புறமாகக் கொடுத்த திருநந்தனமாவது' என்று தொடங்கி, அந்தத் திருமாலைப்புறத்திற்கு எல்லை வகுக்கிறது. 'வண்டு வரைப்பெருமாளான பரிமேலழகிய பெருமாள்தாதன்' திருநந்தவனத்தில் 500 குழியை விலைக்குப் பெற்று வழங்கியதாகச் சொல்கிறது.[4] இந்த நிலத்தை விலைக்கு விற்றவர் பரிமேலழகர் என்னும் உரையாசிரியராக இருத்தல் கூடும் என்பதை, பெயர் ஒற்றுமை, சாசனத்தின் இடம், காலம் ஆகியவற்றைக் கொண்டு தெளியலாம். இச் சாசனம் பிறந்த ஆண்டு கி. பி. 1272. ஆகவே பரிமேலழகர் பதின்மூன்றாவது நூற்றாண்டில் வாழ்ந்தவர் என்று கொள்ளலாம்.

இதிலிருந்து இவருடைய இயற்பெயர் வண்டுவரைப் பெருமாள் என்றும், இவர் தாஸ்யநாமம் பரிமேலழகிய பெருமாள் தாதர் என்றும் தெரிகின்றது. இவர் திருநாமத்தைப்பற்றி அமரர் மு. இராகவையங்கார் அவர்கள் பின்வருமாறு எழுதியுள்ளார்:[5]

> 'அஷ்டப் பிரபந்த ஆசிரியரான ஐயங்காருக்குப் பிள்ளைப் பெருமாள் என்பது இயற்பெயரும் அழகிய மணவாளதாதர் என்பது தாஸ்ய நாமமும் ஆதல்போல இதனைக் கொள்க. பரிமேலழகியன் என்பது, குதிரை நம்பிரான்மேல் அலங்காரத் திருக்கோலம் கொண்டருளியவர் என்ற பொருளதாய்க் கச்சி அருளாளப் பெருமானைக் குறிப்பதாம். அக் காஞ்சிபுரச் சாஸனமொன்றில் ஆனைமேலழகியான், வளையமழகியான் என வருதலும் ஒப்பிடத்தகும். சித்திராபௌர்ணிமை முதலிய திருவிழாக் காலங்களில் அப்பெருமான் பரிமேலழகியராகவும் ஆனைமேலழகியராகவும் காட்சி தரும் திருக்கோலம் இன்றும் தரிசிக்கத் தக்கது.'

---

1. சாஸனத் தமிழ்க்கவி சரிதம், ப. 115.
2. இவர், தாம் இயற்றிய சங்கற்ப நிராகரணம் என்னும் நூல் கி. பி. 1313-இல் இயற்றப் பெற்றதென்று அந்நூலுள் கூறுகிறார்.
3. பரிபாடல், பரிமேலழகர் வரலாறு.
4. தென்னிந்தியச் சாசனங்கள், தொகுதி 4, சாசனம், 854; திருக்குறள் உரைக் கொத்து, பொருட்பால் பதிப்பில் வித்துவான் திரு கே. எம். வேங்கடராமையா அவர்கள் காட்டியது.
5. சாஸனத் தமிழ்க்கவி சரிதம், ப. 117.

## பாராட்டுப் பாடல்கள்

முன்னே காட்டிய, "பாலெல்லாம்" என வரும் செய்யுளை யன்றிப் பரிமேலழகர் பெருமையைக் காட்டும் பிற பாடல்கள் வருமாறு :

"திருந்திய தமிழில் தெய்வப் புலமை
அருந்திறல் வள்ளுவன் ஆய்ந்துதன் வாக்கால்
அறம்பொருள் இன்பம் வீடென நான்கின்
திறந்தெரிந் துரைத்த செவ்விமுப் பாலுக்கு
ஓர் உரை இன்றி ஒன்பது சென்றும்
ஐயுற வாக வையுறு காலை
வள்ளுவன் மீளவும் வந்துதித் துலகோர்க்கு
உள்ளிய பொருளை உரைத்தனன் என்ன
எழுத்து முதல இலக்கண வகையும்
வழுத்துவே தாகம வகையதன் பயனும்
தங்கிய குறட்பாத் தமிழ்மனு நூலிற்கு
இதுவே உரைஎன் றியாவரும் வியப்பப்
பொழிப்பக லத்தொடு நுட்ப வெச்ச
விழுப்பொருள் தோன்ற விரித்தினி துரைத்தனன்,
வடநூல் துறையும் தென்திசைத் தமிழும்
விதிமுறை பயின்ற நெறியறி புலவன்
அன்பருள் நாணொப் புரவுகண் ணோட்டம்
நன்றறி வாய்மை நற்றவம் உடையோன்
இத்தகை யன்றி ஈசன தருளால்
உய்த்துணர் வுடையவோர் உண்மை யாளன்
பரிமே லழகன் எனப்பெயர் படைத்துத்
தரைமேல் உதித்த தலைமை யோனே."[1]

"திருத்தகுசீர்த் தெய்வத் திருவள் ளுவர்தம்
கருத்தமைதி தானே கருதி - விரித்துரைத்தான்
பன்னு தமிழ்தேர் பரிமே லழகனெனும்
மன்னும் உயர்நாமன் வந்து."[2]

"தெய்வப் புலமைத் திருவள் ளுவர்குறளில்
உய்விக்கும் நூல்எல்லாம் உள்ளதெனச்—செய்வித்தான்
தத்துவம்எல் லாம்உடம்பில் தந்துணர்வார் போல்உலகம்
ஒத்தபரி மேலழகன் ஓர்ந்து."[3]

"விரைத்தார் அலங்கல் திருவள் ளுவர்முன்னம் வெண்குறட்பா
நிரைத்தார் மிகுபொருள் நான்கும் விளங்க நெறிப்புலவோர்
உரைத்தார் பலரும் அதற்குரை தன்னை உலகறியக்
கருத்தான் வகுத்தமைத் தான்கலை தேர்ஒக்கை காவலனே."[4]

"முன்னுரைத்த தேவர்குறள் ...............
இன்னதிது வென்றுரைக்க எய்தினன்—முந்நூற்
புரிமேல் அழகியகோப் போற்றுதமிழ்க் கூடற்
பரிமே லழகியன்என் பான்."[5]

1. பெருந்தொகை, 1543. 2. ஷை, 1544. 3. ஷை 1546.
4. ஷை 1547. 5. ஷை 1548.

தருமர் முதலிய ஒன்பது பேரும் குறளுக்கு உரை இயற்றிய பின்னரே பரிமேலழகர் உரை வகுத்தார் என்ற செய்தி முதல் பாட்டால் தெரிய வருகிறது. பரிமேலழகர் உரையில் மறுத்துரைக்கும் பல கருத்துக்கள் அந்த ஒன்பது உரைகளுள் இப்போது கிடைப்பனவற்றில் காணப்படுவதனுலும் இது புலனுகும். பரிமேலழகர் வடமொழி வல்லுநர், தமிழ்ப் பெரும் புலவர், நற்குண நற்செய்கை உடையவர், இறைவன் அருளால் உய்த்துணர்ந்து பல நுட்பங்களை உரைப்பவர் என்னும் செய்திகளும் அந்தப் பாட்டால் கிடைக்கின்றன.

பரிமேலழகர் பரிபாடலுக்கும் உரை வகுத்திருக்கிருர். திருக்குறளுக்கு உரை வகுப்பதற்கு முன்பே அவ்வுரையை எழுதி யிருக்கவேண்டும்.

## 2

### நூலாசிரியரைப் பற்றிய இவர் கருத்து

இனி, திருக்குறளுக்கு இவர் எழுதிய உரையிலிருந்து நாம் அறியக் கிடக்கும் கருத்துக்களை இங்கே பார்க்கலாம்.

திருவள்ளுவரைத் தெய்வப் புலமைத் திருவள்ளுவர் என்று கூறுவார்.[1] 'எல்லா நூல்களிலும் நல்லன எடுத்து எல்லார்க்கும் பொதுப்படக் கூறுதல் இவர்க்கு இயல்பு'[2] என்பார். திருவள்ளுவர் பெரும்பாலும் வடநூல் முறையைத் தழுவியே திருக்குறளை இயற்றினுர் என்பது இவருடைய கொள்கை.

'அறமாவது மனுமுதலிய நூல்களில் விதித்தன செய்தலும் விலக்கியன ஒழிதலுமாம்.'[3]

'தேவர்க்கும் அசுரர்க்கும் அமைச்சுப் பூண்ட வியாழ வெள்ளிகளது துணிவு தொகுத்துப் பின் நீதி நூல் உடையார் கூறியவாறு கூறுகின்றமையின், ஈண்டு வினைத்தூய்மையும் உடன் கூறினுர்.'[4]

'இது புணர்ச்சி பிரிவு என இருவகைப் படும். ஏனை இருத்தல், இரங்கல், ஊடல் என்பவோ எனின், இவர் பொருட்பாகுபாட்டினை அறம் பொருள் இன்பம் என வடநூல் வழக்குப்பற்றி ஓதுதலான் அவ்வாறே அவற்றைப் பிரிவின்கண் அடக்கினுர் என்க.'[5]

'ஈண்டுப் பிரிவினை வடநூலார் மதம்பற்றிச் செலவு ஆற்ருமை விதுப்புப் புலவி என நால்வகைத் தாக்கிக் கூறினுர்.'[6]

### பன்னூல் அறிவு

இவருடைய உரையினுல் இவர் பரந்த நூலறிவுடையவர் என்பதும், தமிழ் இலக்கிய இலக்கணங்களில் ஆழ்ந்த பயிற்சியுடையவர் என்பதும், சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் ஆற்றலினர் என்பதும் புலனுகின்றன. இவருடைய பன்னூல் அறிவுக்கு எடுத்துக் காட்டாகப் பல பகுதிகளைக் காட்டலாம்.

1. ப. 1, 2. குறள், 322, உரை. 3. உரைப்பாயிரம், ப. 1. 4. 662, உரை. 5. காமத்துப்பால், உரை அவதாரிகை. 6. 1330, உரை..

'மிகப் பெரிய அறம் செய்தாரும் மிகப் பெரிய பாவம் செய்தாரும் முறையான் அன்றி இம்மைதன்னுள்ளே அவற்றின் பயன் அநுபவிப்பர் என்னும் அறநூல் துணிபு'[1]

'இறந்த மூப்பினராய இருமுது குரவரும் கற்புடை மனைவியும் குழவியும் பசியான் வருந்தும் எல்லைக்கண் தீயன பலவும் செய்தாயினும் புறந் தருக என்னும் அறநூல் பொதுவிதி'[2]

என்பன இவருடைய அறநூலறிவைக் காட்டும்.

நீதி நூலுடையார் இவை அரசர்க்கு உரியன என்று கூறும் செயல்களை ஓரிடத்தில் விரித்துக் கூறுகிறார்.[3] உபதைகள் நான்கினையும் விரிவாக விளக்குகிறார்.[4] இவற்றாலும், 'நீதி நூல் வழக்குப்பற்றி நாநலம் என்னும் நலன் என்றும் கூறினர்'[5] என்பதனாலும், பொருட்பாலில் அரசியலின் தொடர்புடைய பல பொருள்களை விரிக்கும் பகுதிகளாலும் இவருடைய நீதி நூற் புலமை தெளிவாகும். ஆயுள் வேத நூலிலும் இவர் ஓரளவு பயிற்சியுடையவர்;

'அவற்றை ஆயுள்வேத முடையார் நிதானம் என்ப. அவை நாடுதற் பயன் நோயினையும் வாயினையும் ஐயமறத் துணிதல். மருந்து செய்தல், உதிரம் களைதல், அறுத்தல், சுடுதல் முதலிய செயல்களெல்லாம் அடங்குதற்கு, அது தணிக்கும் வாய் என்றார்.'[6]

'ஆயுள் வேதம் உடையாரும் இவை கால்களாக நடக்கும் என்பதுபற்றிப் பாதம் என்றும், இவை மாறுபட்ட வழிச் சாத்தியமும் முதிர்ந்து அசாத்தியமாம் என்றும் கூறினர்.'[7]

கணித நூலாகிய ஏரம்பத்தையும், போசராசன் இயற்றிய அலங்கார நூலாகிய சிருங்காரப் பிரகாசத்திலுள்ள கருத்தையும் எடுத்துரைக்கிறார்.[8]

எல்லா ஆகமங்கட்கும் துணிபு இது என்று ஓரிடத்தில் சொன்னவர்,[9] தன் வயத்தனாதல் முதலிய எண் குணங்கள் இன்னவென்று காட்டி, 'இவ்வாறு சைவாகமத்துக் கூறப்பட்டது'[10] என்றார். வைணவராகிய இவர் பிற சமய நூல்களிலும் ஓரளவேனும் அறிவு பெற்றவரென்பதும், அந்நூற் கருத்துக்களை வேண்டியபோது எடுத்துக் கூறும் இயல்புடையவரென்பதும் இதனால் தெளிவாகும். ஆருகதர் கூறும் முறையையும்,[11] உலோகாயதர் கொள்கையையும்,[12] சாங்கிய நூல் கருத்தையும்,[13] வைசேடிகர் மதத்தையும்[14] அங்கங்கே கூறுகிறார்.

நிலையாமை என்னும் அதிகாரத்தின் அவதாரிகையில்,[15]

'மயங்கியவழிப் பேய்த் தேரில் புனல்போல் தோன்றி மெய் உணர்ந்தவழிக் கயிற்றில் அரவுபோலக் கெடுதலின் பொய் என்பாரும், நிலை வேறுபட்டு வருதலால் கணந்தோறும் பிறந்து இறக்கும் என்பாரும், ஒருவாற்றான் வேறுபடுதலும் ஒருவாற்றான் வேறுபடாமையும் உடைமையின் நிலையுதலும் நிலையாமையும் ஒருங்கே உடைய என்பாரும் எனப் பொருட்பெற்றி கூறுவார் பல திறத்தராவர்'

என்று எழுதுவார். இவை இவருடைய பல சமய நூல் உணர்வைக் காட்டும்.

1. குறள், 326, உரை. 2. ஷை 656, உரை. 3. 538. 4. 501. 5. 641. 6. 948. 7. 950. 8. 392, காமத்துப்பால் அவதாரிகை. 9. 358. 10. 9. 11. 286, 359. 12. 281. 13. 27. 14. 307. 15. அதி, 34.

இதிகாசங்களிலும் புராணங்களிலும் வரும் கதைகளை அங்கங்கே எடுத்துக்காட்டாக உரைப்பார். இந்த வகையில், இராமன் இராவணனை இன்று போய் நாளை வா என்றது, பாண்டவர் சூதினால் துன்புற்றது, இந்திரன் பிறன் மனை நயந்து சிறுமை எய்தியது, நகுடன் அகத்தியனால் சாபம் பெற்றது, சிபி புறவுக்கு உடலை அரிந்து ஈந்தது, திரிபுரம் சிவபிரானது ஆற்றலால் அழிந்தது ஆகியவை காட்டப் பெறுகின்றன.[1]

## தமிழ்நூல் அறிவு

இவருடைய தமிழ் நூலறிவின் பரப்புக்கு எல்லை இல்லை. இவ்வுரையில் தொல்காப்பியம், புறப்பொருள் வெண்பா மாலை ஆகிய இலக்கண நூற் சூத்திரங்களையும், பொருநராற்றுப்படை முதலிய இலக்கிய நூற் பாடல்களையும் அங்கங்கே மேற்கோளாகக் காட்டுகிறார். இவர் காட்டும் நூல்கள் வருமாறு: தொல்காப்பியம், பொருநர் ஆற்றுப்படை, நெடுநல்வாடை, பட்டினப்பாலை, நற்றிணை, குறுந்தொகை, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு, நாலடியார், நான்மணிக்கடிகை, திருக்குறள், திரிகடுகம், பழமொழி, சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி, வளையாபதி, திருவாய் மொழி, முத்தொள்ளாயிரம், திருக்கோவையார், புறப்பொருள் வெண்பா மாலை. இவர் காட்டிய சில பாடல்கள் இன்ன நூல்களில் உள்ளன என்று விளங்கவில்லை.[2]

தமிழ் நூல்களில் உள்ள பல அடிகளை உரையிடையே மடுத்து இவர் எழுதும் பகுதிகள், இவர் மனத்தில் அவை தேங்கி நின்று பயன்படுவதை உணர்த்தும். இவ்வாறு எழுதும் இடங்கள் பல. ஒவ்வொரு நூலுக்கும் ஓரிரண்டுதாரணம் இங்கே காணலாம்.

> 'நீரில் பலகால் மூழ்கல் முதலிய நாலிரு வழக்கில் தாபதப்பக்கம்.'[3]

இது தொல்காப்பியம்.

> 'பிறவும் தமபோற் செய்தலாவது, கொள்வது மிகையும் கொடுப்பது குறையு மாகாமல் ஒப்ப நாடிச் செய்தல்.'[4]

இது பட்டினப் பாலை.

> 'நன்றென உணரார் மட்டும் சென்றே நிற்கும்; யான் அறிவதொன்று அன்று என்பதாம்.'[5]

இது குறுந்தொகை.

கலித்தொகையில் உள்ளதை,

> 'ஒல்கிடத்துலப்பிலா உணர்விலார் தொடர்பாயிற்று, நின் தொடர்பு என்பதாம்'[6]

என்று உரையிடையே வைப்பர்.

---

1. குறள், 773, 935, 144, 899, 72, 900, உரை.
2. ஷை 62; 392, 566, 732, 1058, 1099, உரை பார்க்க,
3. 26; 402, 1017, 1241-ஆம் குறள்களின் உரையையும் காண்க.
4. 120. 5. 1255; 1225, பார்க்க. 6. 1293.

அகநானூற்று அடி,

' இத்தன்மைத்தாய அடி பாத்தியன்ன குடுமிக் கூர்ங்கற்களை யுடைய வெஞ்சுரத்தை யாங்ஙனம் கடக்கும்' [1]

என்பதனிடையே அமைந்துள்ளது.

' பெரிய அறங்களைச் சிதைத்தலாவது ஆன்முலை யறுத்தலும் மகளிர் கருவினைச் சிதைத்தலும் பார்ப்பார்த் தபுத்தலும் முதலிய பாதகங்களைச் செய்தல் '

' உணவின் பிண்டம் உண்டிமுதற்றாகலின் ஈதல் சிறந்தது '[2]

என்னும் இடங்களிலும் பிற இடங்களிலும் [3] புறநானூற்று அடிகள் இழைந்து ஓடுதலைக் காணலாம்.

நாலடியாரின் சொற்கள்,

' பொருளளவுதான் சிறிதாயினும் தக்கார்கைப் பட்டக்கால் வான் சிறிதாப் போர்த்துவிடும் ஆகலின் '

' ஈட்டிய ஒண்பொருளைக் காத்தலும் ஆங்கே கடுந்துன்பமாகலின் '[4]

என்னும் இடங்களிலும் பிற இடங்களிலும் [5] வந்தன.

இப்படியே நான்மணிக் கடிகை, திருக்குறள், மணிமேகலை, சீவக சிந்தாமணி என்னும் நூற்பகுதிகளையும் உரையிடையே இணைத்து எழுதுவர். [6]

இவ்வாறு வரும் நூல்களில் புறநானூற்றுப் பாடல்களை முப்பது இடங்களில் ஆளுகின்றார். மற்ற எல்லா நூல்களையும்விட அது இவர் உள்ளத்தில் நன்கு பதிந்திருந்ததென்பதை இதனால் உணரலாம்.

இத்தகைய நூற் பயிற்சி காரணமாக அந்நூல்களில் உள்ள பல வரலாறுகளை இடையிடையே எடுத்துக் காட்டுகிறார். கோச்சேரமான் யானைக் கட் சேஎய் மாந்தரஞ் சேரல் இரும்பொறை என்னும் அரசன் பெயரையும், சேரசோழ பாண்டியர் படைப்புக் காலந்தொட்டு மேம்பட்டு வரும் சிறப்பையும் கூறுகிறார்.[7] ஔவை நெல்லிக்கனி யுண்டதும், கோப்பெருஞ் சோழனும் பிசிராந்தையாரும் உணர்ச்சி ஒத்த நட்புடையராக இருந்ததும், சோழன் ஒருவன் மகனை முறை செய்ததும், பாண்டியன் ஒருவன் தன்கை குறைத்ததும் இவர் காட்டும் பழந்தமிழ் நாட்டு வரலாற்றைச் சார்ந்த நிகழ்ச்சிகள்.[8] கட்டியங்காரன், பதுமுகன் என்னும் இருவர் செயலைச் சுட்டிக்காட்டுகிறார்; அவை சீவக சிந்தாமணியிற் கண்டவை.[9]

### காலத்தின் மணம்

இவர் காலத்தில், பெண்கள் ஆண்களை விட அறிவிற் குறைந்தவர் என்ற எண்ணம் இருந்து வந்தது. பெண்களே பெண்களை இழித்துக் கூறும்

1. 1120; 1109, பார்க்க. 2. 110, 231. 3. 395, 399, 415, 451-அவதாரிகை, 582, 765, 970, பார்க்க. 4. 87, 88. 5. 157, 224, 391, 425, 797, 895, 960, பார்க்க. 6. நான்மணிக்கடிகை: 548; திருக்குறள்: 135, 263, 389, 716, 755, 896, 972, 1086, 1328; மணிமேகலை: 191 - அவதாரிகை, 451, அவ., 543; சீவக: 275, 407, 450, 624, 698. 7. குறள், 355, 955, உரை. 8. 100, 785, 547. 9. 514, 771.

அளவுக்கு அந்த எண்ணம் நிலவியதைப் பல பல சான்றுகளால் எடுத்துக் காட்டலாம்.

இந்த எண்ணத்தையுடையவர் பரிமேலழகர் என்பதை இவர் உரையினிடையே உள்ள சில பகுதிகள் தெரிவிக்கின்றன.

மக்கட்பேற்றின் சிறப்பைக் காட்டவந்த திருவள்ளுவர் ஓர் அதிகாரத்தால் அதனைக் கூறுகிறார். அறிவறிந்த மக்களே சிறந்தவர்கள் என்பது யாவரும் ஒப்புக்கொள்ளும் உண்மை. இதை உட்கொண்டு,

> " பெறுமவற்றுள் யாம்அறிவ தில்லை, அறிவறிந்த
> மக்கட்பே றல்ல பிற "[1]

என்று பாடினார். இதற்கு உரை வகுத்த பரிமேலழகர், 'அறிவறிந்த என்றதனன், மக்கள் என்னும் பெயர் பெண் ஒழித்து நின்றது' என்று விசேடவுரையில் எழுதுகிறார்.

அதே அதிகாரத்தில், புதல்வன் அறிவில் நிரம்பி யிருக்கவேண்டுமென்பதைச் சொல்லவந்த குறள், அதனைத் தாயின் உவகையைக் காட்டும் முகத்தாற் சொல்கிறது:

> " ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும், தன்மகனைச்
> சான்றோன் எனக்கேட்ட தாய்."[2]

தான் அறிந்தாலும் பிறர் வாயிலாகக் கேட்டலில் இன்பம் இருப்பதை உணர்ந்து கூறினார் வள்ளுவர், பிறர் பாராட்டுவதுதானே புகழ்? ஆனால் இங்கே பரிமேலழகர், 'பெண் இயல்பால் தானாக அறியாமையின் கேட்ட தாய் எனவும் கூறினார்' என எழுதுகிறார். பிறிதோரிடத்தில், 'அவை பெண்பாற்கும் உளவாயினும் சிறப்புப்பற்றி ஆண்பாற்கே கூறினார்'[3] என்று கூறுகிறார். இவை, எத்துணை அறிவுடையவர்களாயினும் தம் காலத்தே வழங்கும் கொள்கைகளின் வாசனை மாறாது என்பதைக் காட்டுகின்றன. பெண்ணின் உரிமையைப் பலபடியாகப் பாடிய பாரதியாரும்,

> " காணும் திறமையற்ற பெண்களின் கூட்டமடீ "
> " பெட்டைப் புலம்பல் "

என்று தம்மையும் மறந்து பாடிவிடுகிறார் அல்லவா?

## 3

### பொது

இனி இவர் உரை வகுக்கும் முறைகளைச் சிறிது ஆராய்வோம்.

நூலுக்கு முதலிலும், ஒவ்வொரு பாலின் தொடக்கத்திலும், ஒவ்வோர் அதிகாரத்தின் முதலிலும் தோற்றுவாயாகச் சிலவற்றைச் சொல்லிக் கொண்டு உரை வகுப்பது இவர் இயல்பு. அதிகாரத்தின் அவதாரிகையில் முன் உள்ள அதிகாரத்தோடு அதனை இயைபுபடுத்திக் காட்டுவார்.

---

1. குறள், 61. 2. ஷை. 69. 3. 336.

திருக்குறளுக்குரிய பதவுரையை முதலில் எழுதிப் பிறகு விசேட உரையை எழுதுவார். பதவுரையில் மூலத்திலுள்ள சொற்களுக்கு உரிய பொருள்களை, விரிக்கவேண்டிய சொற்களை இடையே பெய்து எழுதுவார். ‘இதன் பொருள்’ என்று தொடங்கி, ‘என்றவாறு’ என்று இப்பதவுரையை முடிப்பார்.

விசேட வுரையில், வருவித்த சொற்களையும் அப்படி வருவித்தற்குரிய காரணத்தையும் கூறுவார். முன் உள்ள சொல்லைப் பின் கூட்டியும் பின் உள்ளதை முன் கூட்டியும் உரை விரித்ததைக் காட்டுவார். தொகைகளையும், சொல்லெச்சம் குறிப்பெச்சம் முதலியவற்றையும் விரித்துச் சொல்வார். சொற்களின் அடைவையும் அமைப்பையும் குறிப்பிட்ட சொற்களை ஆண்ட காரணத்தையும் எடுத்துக் கூறிப் பதசாரம் எழுதுவார். இவரைப் போலப் பதசாரம் எழுதுபவர் தமிழ் உரையாசிரியர்களில் யாரும் இலரென்றே சொல்லவேண்டும்.

இலக்கணை, உபசார வழக்கு முதலியவற்றைச் சொல்வார். தெரிய வேண்டிய பொருள்களை விளக்கி மேற்கோளும் கூறுவார். சொல் முதலிய வற்றின் இலக்கணங்களை எடுத்துக் காட்டும்போது ஐந்திலக்கணப் பகுதிகளையும் கூறுவார். சொல்லுக்கும் கருத்துக்கும் விளக்கம் கூறிப் பழைய நூல்களை மேற்கோளாகக் காட்டுவார். சில இடங்களில் இரண்டு பொருள் கூறுவார்.

வேறு பாடம் இருந்தால் அதை வாளா கூறிவிடுவதும், சில இடங்களில் அதற்குப் பொருள் கூறுவதும், சில இடங்களில் அப் பாடம் தக்கதன்று என்று மறுப்பதும் இவருக்கு இயல்பு. அப்படியே, இவ்வாறு கூறுவாரும் உளர் என்று பிறர் உரையை வாளா கூறுவதும், தக்க காரணங்களைக் கூறி மறுப்பதும் உண்டு.

விசேட உரையின் இறுதியில் இதனல் இது பெறப்பட்டது, இதனல் இது கூறினர், இது கருத்து என்று உரைப்பார். சில இடங்களில் இரண்டு முதலிய பல குறட்பாக்களுக்குப் பின், இவற்றால் இது கூறப்பட்டது என்று தொகுத்துக் கூறுவார்.

இவ்வாறு பல வகையில் அமைந்த இவருடைய உரையின் அமைப்புக்குச் சில எடுத்துக்காட்டுக்களை இங்கே காணலாம்.

### பல் வகை

**உரை வகை**

ஈண்டுரைப்பிற் பெருகும் எனல், 467, 767
என்பதாயிற்று, 178, முதலியன.
என்பது கருத்து, 94, முதலியன.
சொல்லாமையே பெறப்பட்டது எனல், 176
சொல்லுதும் எனல், 39
சொன்னேம் எனல், 107, 161–அவ., 357, 398, 477
முன் உரைத்தபடி கொள்க எனல், 484, 721, 815, 1042

**கூட்டி உரைத்தல்**

தனித்தனி கூட்டுதல், [1] 567
முன் உள்ளதைப் பின் கூட்டுதல், 40, 678, 773, 978
பின் உள்ளதை முன் கூட்டுதல், 495, 834
உம்மையை மாற்றிக் கூட்டுதல், 460
உவமை அடையைப் பொருளுக்குக் கூட்டுதல், 486
பொருள் அடையை உவமைக்குக் கூட்டுதல், 100, 974
இரண்டின் அடைகளையும் மாறிக் கூட்டுதல், 118

**வருவித்தல்**

ஆக்கம் வருவித்தல், 529
எழுவாய் வருவித்தல், 69, 386
சுட்டு வருவித்தல், 131, 632, 1082
சொல் வருவித்தல், 156, 194
மறுதலைச் சொற்கள் வருவித்தல், 395, 496, 697, 1166

**வருவித்தற்குக் காரணம்**

அதிகாரம், 186, 323, 375, 435, 478, 582, 611, 1088
அவாய் நிலை, 15, முதலியன.

**ஆசிரியர் கூறும் முறைகள்**

ஆசங்கித்து விடை கூறுதல், 549
இன்னுரை நோக்கிக் கூறியதெனல், 454, 457, 618
இன்னுரை மறுத்ததெனல், 252, 255, 256
இன்னுரை மறுப்பார் போலக் கூறியதெனல், 707
இன்னுர் மதத்தை உடன்பட்டுக் கூறியதெனல், 41, 459
உபாயம் கூறல், 250, 314, 350
எதிர்மறை முகத்தாற் கூறியதெனல், 321, 459
பின் கூறுவர் என்றல், 559, 593, 604
முன் கூறினுர் என்றல், 868
விதி முகத்தானும் எதிர்மறை முகத்தானும் கூறியதெனல்,365, 460,946

**கூற்று வகைகள்** (காமத்துப்பால்)

அயன்மை தோன்றக் கூறல், 1219
உலகியல் கூறுவார்போல் கூறல், 1158
உலகியல்மேல் இட்டுக் கூறல், 1096, 1100
தன்னைப் பிறர்போற் கூறல், 1154

**பொருள் விளக்கம்**

அருள் அன்பு இன்ன என்பது, 757; அளவை விளக்கம், 242; உபதை நான்கு, 501; ஒல்லும் வகை, 33; ஒழுக்கத்து நீத்தல், 21; குணங்கள் எட்டு, 9; குற்றங்கள் ஐந்து, 38; சொல் வகை, 711; சொற்குணம், 643; சொற் சுவை பொருட் சுவை, 420; தத்துவம், 27; துன்ப வகை, 442; நட்பின் வகை, 781; நோய் முதலியன, 950; படை

1. பொது அகராதியினுலும் பிற இடங்களை அறியலாம்.

வகுப்பு, *767*; பிதிரர் முதலியோர், *43*; பிறப்பு எழு, *62*; புறத்துறுப்பு, *79*; பொருள் ஆறு, *307*; மனைத்தக்க மாண்பு, *51*; யோகம் எட்டு, *26*.

**தாற்பரியம்**

வேண்டாது கூறி வேண்டியது முடித்தல் என்பது ஓர் உத்தி. இதை வட மொழியில் தாற்பரியம் என்பர். இந்த உத்தியின்படி பல இடங்களில் விசேட உரையில் பொருளை எடுத்துரைத்தார்.

> "இன்சொலால் ஈரம் அளைஇப் படிறிலவாம்
> செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்"[1]

என்பதில், 'வாயென வேண்டாது கூறினர், தீய சொல் பயிலா என்பது அறிவித்தற்கு' என்றார்.

> "ஒழுக்கம் உடையவர்க் கொல்லாவே தீய
> வழுக்கியும் வாயாற் சொலல்"[2]

என்பதன் உரையில், 'சொல் எனவே அமைந்திருக்க, வாயால் என வேண்டாது கூறினர், நல்ல சொற்கள் பயின்றதெனத் தாம் வேண்டியதன் சிறப்பு முடித்தற்கு; இதனை வட நூலார் தாற்பரியம் என்ப' என்று எழுதினர்.

> "துறந்தாரிற் றூய்மை உடையர் இறந்தார்வாய்
> இன்னாச்சொல் நோற்கிற் பவர்"[3]

என்பதன் உரையில், 'வாய் என வேண்டாது கூறினர், தீய சொற்கள் பயின்றதெனத் தாம் வேண்டியதன் இழிபு முடித்தற்கு' என்றார். இப் படியே வேண்டாது கூறிய உள்ளம், நாணுடைப் பெண் என்பவற்றிற்குப் பொருள் உரைப்பார்.[4]

முறைவைப்பை விளக்குதல் : *18*, *98*, *363*, *381*, *431*, *605*, *636*, *741*, *939*, *1006*.

பன்மைக்குப் பொருள் : *139*, *223*, *325*, *476*, *556*, *782*, *816*, *824*, *1099*, *1122*.

**நயம் கூறுதல்** :

> "விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்
> துண்ணின் றுடற்றும் பசி"[5]

என்பதன் உரையில், 'கடலுடைத்தாயினும் அதனால் பயன் இல்லை என்பார், விரிநீர் வியனுலகத்து என்றார்' என்றுரைத்ததும்,

> "இமையாரின் வாழினும் பாடிலரே இல்லாள்
> அமையார்தோள் அஞ்சு பவர்"[6]

என்பதன் உரையில், 'அமையார் தோள் எனவே அஞ்சுதற் காரணத்தது எண்மை கூறியவாறு' என்று எழுதியதும்,

> "நன்னீரை வாழி அனிச்சமே நின்னினும்
> மென்னீரள் யாம்வீழ் பவள்"[7]

---

1. குறள். 91. 2. 139. 3. 159. 4. 282, 309, 907. 5. 13.
6. 906. ‘6. 1111.

என்பதன் உரையில், 'அதுபொழுது உற்று அறிந்தானாகலின், ஊற்றின் இனிமையையே பாராட்டினான்' என்று கூறியதும்,

"அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர்
அடிக்கு நெருஞ்சிப் பழம்"[1]

என்பதன் உரையில், 'முள் வலிதாதல் உடைமையின் பழம் என்றான்' என்று நயம் கூறியதும், இவைபோலப் பல நுட்பங்களை அங்கங்கே எடுத்துக் காட்டியனவும் அறிந்து இன்புறற்குரியன.

இரண்டு பொருள் கூறுதல் : *82, 421, 462, 583, 679.*

**உலக வழக்கு**

இது உலக வழக்கென்று உரைப்பார். உடையார் இல்லார் *(395)*, பாவி *(168)*, வெளிறு *(714)* என்பவற்றைப் பார்க்க.

**உவமைகள்**

இவர் பொருளை விளக்கும்போது தாமே சில உவமைகளைப் பெய்துரைப் பார்:

கடன்கொண்டான் தோன்றப் பொருள் தோன்றுமாறு போல *(693)*, குதிரையை நிலம் அறிந்து செலுத்தும் வாதுவன் போல *(422)*, தூவெள் அறுவைக்கண் மாசு போல *(1051)*, நெருப்பை நெருப்பாகவே கருதுக என்றாற்போல (602), பாகன் இல்லாத யானைபோல *(448)*, புலியை அடைத்த புல்வாய் போல *(571)*, மழைத்துளி போல (416), வெறிகமழ் சந்தனமும் வேங்கையும் வேமாறு போல *(797)*.

**கட்டுரைச் சுவை**

கட்டுரைச் சுவைபட உரைநடையை அமைக்கும் இடங்கள் சில :

'இந்திரன் முதலிய இறையவர் பதங்களும்
அந்தமில் இன்பத் தழிவில் வீடும்
நெறியறிந் தெய்துதற் குரிய மாந்தர்க்கு' (அவதாரிகை)

'சின்னாட் பல்பிணிச் சிற்றறி வினர்க்கு' (391)

'காமம் வெகுளி கடும்பற் றுள்ளம்
மானம் உவகை மதம்எனப் பட்ட
குற்றங்கள்' (44 - ஆம். அதி. அவதாரிகை)

'மூவிரு குற்றமும் முறைமையிற் கடிதலிற்
காவற் சாகாடு கைத்தற் குரியனாய
அரசன்' (45-ஆம் அதி. அவ.)

**சொல் வழக்கு**

இவர் வினையெச்சம் வரும் இடங்களில் அதனோடு, 'வைத்து' என்ற சொல்லையும் சேர்த்து எழுதுவர்.

'அநுமானத்தான் அறிந்து வைத்து' (318)
'தாழ்ந்த சாதிக்கட் பிறந்து வைத்தும்' (409)
'அடைவுபட எண்ணிவைத்து' (640)

என்பன போல் வரும் இடங்களைக் காண்க.

---

1. குறள், 1120.

## 4

### இலக்கணச் செய்திகள்

இவர் கூறும் ஐந்திலக்கணச் செய்திகள் பலப் பல. அவற்றுள் சிறப்பான சிலவற்றை இங்கே காணலாம்.

**தொகை**

பின் முன்னுகத் தொக்க ஆறும் வேற்றுமைத் தொகை, 476.

**பெயர் வகை**

அஃறிணைப் பன்மை வினுப் பெயர் (யா), 127; ஏதுப் பெயர், 30, சுட்டுப் பெயர் ஈறுதிரிந்தது (இஃதோ), 1161; வினைப்பெயர் (வேபாக்கு, கரப்பாக்கு), 1127, 1128.

**முற்றுவினை**

அல் : எதிர்மறை வியங்கோள் விகுதி, 196; காண்க, வருக, ஊடு, நீடுக: வியங்கோள் வேண்டிக்கோடற் பொருளில் வந்தன, 1265, 1266, 1329; தெற்றென்க: தெற்றென் என்பது முதனிலையாக வந்த வியங்கோள், 581.

**எச்ச வினை**

அமர்த்த: பெயரடியாகப் பிறந்த வினை, 1083; இலனுக என்பது இன்றி எனத் திரிந்தது, 754; கொண்டு என்பது கொள என்று திரிதல், 1244; செயின் என்னும் வாய்பாட்டு எச்சம் அருமையும் இன்மையும் தோன்ற நிற்றல், 111, 264, முதலியன; வாயின் : முதல்நிலைத் தொழிற் பெயரடியாக வந்த எச்சம், 536.

**வினை முடிவு**

பெயரெச்சம் குறிப்புப் பெயர் கொண்டது, 199; வினையெச்சம் எதிர் மறை வினையுள் முற்பகுதியுடன் முடிதல், 548; வினையெச்சம் குறிப்பு வினைப் பெயர் கொண்டது, 352; வினையெச்சம் தொழிற் பெயரின் தொழிலோடு முடிதல், 1149; வினையெச்சம் முதனிலைத் தொழிற்பெயர் கொண்டது, 93.

**இடைச்சொல்**

அரோ : அசைநிலை – ஆ : எதிர்மறை – ஆங்கு : அசைநிலை, உவம உருபு - ஆம் : அசைநிலை – ஆல் : அசைநிலை - உம் : அசைநிலை, இழிவு சிறப்பு, உயர்வு சிறப்பு, எச்சம், முற்று - உவக்காண், இவக்காண் : ஒட்டி நின்ற இடைச்சொற்கள் – உளி : மூன்றுவதன் பொருளில் வரும் இடைச் சொல் – ஏ : தேற்றம், பிரிநிலை – ஐ : அசைநிலை – ஒடு : எண் – ஒன்றே : எண்ணிடைச் சொல் – ஓ : அசைநிலை, இடைவிடாமையை உணர்த்தும் குறிப்பு, இரக்கக் குறிப்பு, எதிர்மறை, குறிப்பு, பிரிநிலை, மிகுதி, வியப்புக் குறிப்பு – ஓரும் : அசைநிலை – காண் : உரையசை – குரை : இசை நிறை – கொல் : அசை நிலை, ஐயம் – தான் : அசை – பிற : அசை நிலை – போல் : உரையசை – போலும் : உரையசை - மற்று : அசை நிலை, வினைமாற்று – மன் : அசைநிலை, ஒழியிசை – வாழி : அசைநிலை, உடன்பாட்டுக் குறிப்பு.

**விகுதி**

அது : பகுதிப் பொருள் விகுதி – அம் : பகுதிப்பொருள் விகுதி – அல் : பகுதிப் பொருள் விகுதி, வியங்கோள் எதிர்மறை விகுதி – அன் :

தனித்தன்மை விகுதி, படர்க்கை ஒருமை விகுதி – ஐ : முன்னிலைவினை விகுதி – து : பகுதிப்பொருள் விகுதி (கடைத்து.)

**சாரியை**

வேண்டா வழிக்கண் வந்த சாரியையை இவர் அல்வழிக்கண் வந்த சாரியை என்பர் (413, 1191).

**ஒரு சொல்**

சில சொற்கள் தொடர்மொழிகளைப் போலத் தோற்றும்; அவற்றை ஒரு மொழிகள் என்று விளக்குவார்: அழிந்துவிடும், அழுக்காறு, ஒத்தாங்கு, கையாறு, சோகாப்பர், தக்காங்கு, மையாத்தல்.

**ஒரு சொல் நீர்மைத்து**

பின்வரும் சொற்கள் இருசொற்களாகப் பிரிக்கும்படி அமைந்தாலும் பொருள் நோக்கி ஒரு சொல் நீர்மையன என வகுப்பர் : உய்த்துவிடும், எழுந்திருப்பர், ஒறுத்தாற்றும், ஓஒதல்வேண்டும், தலைப்பிரிதல், நீக்கிநிறுத்து, பொறுத்தாற்றும், வேண்டியிருப்பர்.

**ஒரு பெயராய் நிற்றல்**

இரு சொற்களாக இருப்பினும் முடிபை நோக்க ஒரு பெயராய் நிற்பன இவை : கெழுதகைமை வல்லார், படைத்தகை.

**வாளா பெயராய் நிற்றல்**

அடைகளுக்குரிய பொருள் வேறு சொற்களால் பெறப்பட்டமையின், அடையுடன் கூடிய தொடர்மொழி வாளா பெயராய் நின்றதென்பர்: அடியளந்தான், வெங்கோலன்.

**ஒரு பொருட் கிளவி**

பின்வரும் ஒரு பொருட் கிளவிகளை எடுத்துரைப்பர் :

ஊழ், பால், முறை, உண்மை, தெய்வம், நியதி, விதி என்பன, அதி. 38, அவ.

ஒருவந்தம், ஒருதலை, ஏகாந்தம் என்பன, 563

கேண்மை, நட்பு என்பன, 782

மருள், மயக்கம், விபரீத உணர்வு, அவிச்சை என்பன, 351.

**ஒரு பொருட் பன்மொழி**

கழிபெரும், 571: சிறப்புணர நின்றது; தஞ்சம் எளியன், 863 : மிகுதிப் பொருட்டு.

**அடுக்கு**

இடைவிடாமை, துணிவு, பன்மை பற்றி அடுக்கு வரும் என்பர்.

**குறிப்பு**

இகழ்ச்சிக் குறிப்பு : 1118, 1190; குறிப்பு மொழி, 1029; குறிப்பெச்சம், 1080, 1090 ; வெளிப்படை, 853, 1090.

**வழக்கு வகை**

அநுவாதம், ஆகுபெயர், இடக்கரடக்கு, இலக்கணை, உடம்பொடு புணர்த்தல், உபலட்சணம், சிங்க நோக்கு.

**உபசார வழக்கு**

ஒன்றை ஒன்ருகச் சொல்லுதலும், ஒன்றன் பண்பு முதலியவற்றை அவற்ரேடு தொடர்புடைய வேறு ஒன்றன்மேல் ஏற்றிச் சொல்லுதலும் போன்ற உபசார வழக்கைப் பலபல இடங்களில் எடுத்துக் காட்டுகிருர் :

ஏது பயனுக ஓதப்படல், கருவியே கருத்தா ஆதல், ஒன்றன் இயல்பை மற்ரென்றின்மேல் ஏற்றல், காரணத்தைக் காரியமாக உபசரித்தல், காரியத்தைக் காரணமாக உபசரித்தல்.

**அளவை முதலியன**

அநுமானம் (கருதலளவை), அருத்தாபத்தி, ஆகமம், காட்சியளவை, வாத செற்ப விதண்டைகள்.

**அகப்பொருள்**

சேயிடைப் பிரிவு, அதி. 127, அவதாரிகை; சேயிடையினும் ஆயிடையினும் பிரிதல், அதி. 116, அவ. ; தோழியை ஊர் என்றல், 1129, 1220; தோழிக்கும் தலைவிக்கும் வேற்றுமை இன்மை, 1151; பயன், 1152, 1156.

**புறப்பொருள்**

தழிஞ்சி, 773; நூழிலாட்டு, 774; நெடுமொழி வஞ்சி, 771.

**அணிகள்**

அணியை அலங்காரம் என்பர். இவர் காட்டும் அலங்காரங்கள் வருமாறு :

இறுதி விளக்கு - உவமை : இல்பொருளுவமை, எடுத்துக்காட்டுவமை, ஐயநிலையுவமை, தொழிலுவமை, பண்புவமை, பயனுவமம், பால் மாறுபட்ட உவமை, மறுதலை உவமை - உருவகம்: ஏகதேச உருவகம், குறிப்புருவகம் – குண அணி – சுவை – சொற்பின் வருநிலை – சொற்பொருட் பின்வருநிலை - எதிர் நிரல்நிறை, நிரல்நிறை, மயக்க நிரல்நிறை - பிறிது மொழிதல்: இதனை ஒட்டு என்றும், நுவலா நுவற்சி என்றும் கூறுவர் - புகழ்வார் போன்று பழித்தல் - வேற்றுமை.

**வடசொல்**

இவர் பல இடங்களில், இது வடமொழியில் இவ்வாறு வழங்கும் என்பர். அவ்வாறு காட்டியவை வருமாறு: அங்கம், அமாத்தியர், ஆததாயிகள், ஆயம், ஈதிவாதைகள், காகு, குடங்கம், சந்தி, சாமதான பேததண்டம், சீவன்முத்தன், தண்டம், தத்துவஞானம், தாற்பரியம், தானமும் சாமமும், பஞ்சக்கிலேசம், மௌலம், யுக்தி, வார்த்தை, விக்கிரகம்.

**வடநூல் மரபு**

இவர் காட்டும் வடநூல் மரபுகள் பல : 360, 434, 501, 631, 648, 687, 767, 961, 1081 - அவ. 1101, 1330, உரை பார்க்க.

இவற்றையெல்லாம் நோக்கும்போது பரிமேலழகர் பல பொருட் களஞ்சியம் என்றும், இலக்கண இலக்கியக் கடல் என்றும் நன்கு விளங்குகிறது.

# திருக்குறள்

## பரிமேலழகர் உரைப்பாயிரம்

இந்திரன் முதலிய இறையவர் பதங்களும் அந்தமில் இன்பத்து அழிவில் வீடும் நெறி அறிந்து எய்துதற்கு உரிய மாந்தர்க்கு உறுதியென உயர்ந்தோரான் எடுக்கப்பட்ட பொருள் நான்கு.[1] அவை அறம், பொருள், இன்பம், வீடு என்பன. அவற்றுள், வீடு என்பது சிந்தையும் மொழியும் செல்லா நிலைமைத்து ஆகலின், துறவறமாகிய காரண வகையால் கூறப் படுவது அல்லது இலக்கண வகையால் கூறப்படாமையின், நூல்களால் கூறப்படுவன ஏனை மூன்றுமே யாம்.[2]

அவற்றுள், அறமாவது மனு முதலிய நூல்களில் விதித்தன செய் தலும், விலக்கியன ஒழிதலுமாம். அஃது ஒழுக்கம், வழக்கு, தண்டம் என மூவகைப்படும்.[3]

அவற்றுள், ஒழுக்கமாவது அந்தணர் முதலிய வருணத்தார் தத் தமக்கு விதிக்கப்பட்ட பிரமசரியம் முதலிய நிலைகளில் நின்று[4] அவ்வவற் றிற்கு ஓதிய அறங்களின் வழுவாது ஒழுகுதல்.

வழக்காவது ஒரு பொருளைத் தனித்தனியே எனது எனது என்று இருப்பார்,[5] அது காரணமாகத் தம்முள் மாறுபட்டு அப் பொருள்மேற் செல்வது. அது கடன் கோடல் முதலிய பதினெட்டுப் பதத்ததாம்.[6]

தண்டமாவது அவ்வொழுக்க நெறியினும் வழக்கு நெறியினும் வழீஇயினாரை அந்நெறி நிறுத்துதற் பொருட்டு ஒப்ப நாடி அதற்குத் தக ஒறுத்தல்.[7]

---

1. இவற்றை வடநூலார் புருஷார்த்தம் என்பர்.

2. 'தொல்காப்பியர் வீடு கூறுரோ எனின் அகத்தியனாரும் தொல்காப்பிய னாரும் வீடு பேற்றுக்கு நிமித்தம் கூறுதல் அன்றி வீட்டின் தன்மை இலக்கணத்தால் கூறார் என்று உணர்க...இக்கருத்தானே வள்ளுவனாரும் முப்பாலாகக் கூறி மெய் உணர்தலான் வீடு பேற்றுக்கு நிமித்தம் கூறினார்.' (தொல். சிறப்புப். ந.)

3. ஆசாரம், விவகாரம், பிராயச்சித்தம் என்று இவற்றைக் கூறுவர் வடநூலார்.

4. நிலை-ஆசிரமம்.

5. "எனதென தென்றிருப்பன் யானும்" (நாலடியார், 276.)

6. பதினெட்டாவன: கடன் கோடல், உபநிதி, கூடிமேம்படல், நல்கியதை நல்காமை, ஒப்பிப் பணி செய்யாமை, கூலி கொடாமை, உடையன் அல்லான் விற்றல், விற்றுக் கொடாமை, கொண்டு உள்ளம் ஒப்பாமை, கட்டுப்பாடு கடத்தல், நில வழக்கு, மாதர் ஆடவர் தர்மம், தாய பாகம், வன்செய்கை, சொற்கொடுமை, தண்டக்கொடுமை, சூது, ஒழிபு என்பன.

7. "நீமெய் கண்ட தீமை காணின்
ஒப்ப நாடி அத்தக ஒறுத்தி" (புறநா. 10: 3-4.)

இவற்றுள் வழக்கும் தண்டமும் உலகநெறி நிறுத்துதற் பயத்த வாவதல்லது ஒழுக்கம் போல மக்கள் உயிர்க்கு உறுதி பயத்தற் சிறப்பு இலவாகலானும், அவைதாம் நூலானேயன்றி உணர்வு மிகுதியானும் தேய இயற்கையானும் அறியப்படுதலானும், அவற்றை ஒழித்து, ஈண்டுத் தெய்வப் புலமைத் திருவள்ளுவரால்[1] சிறப்புடைய ஒழுக்கமே அறம் என எடுத்துக் கொள்ளப்பட்டது.

அதுதான் நால்வகை நிலைத்தாய்[2] வருணந்தோறும் வேறுபாடு உடைமையின், சிறுபான்மையாகிய அச் சிறப்பியல்புகள் ஒழித்து, எல்லார்க்கும் ஒத்தலின் பெரும்பான்மையாகிய பொது இயல்புபற்றி இல்லறம் துறவறம் என இருவகை நிலையால் கூறப்பட்டது.

அவற்றுள், இல்லறமாவது இல்வாழ்க்கை நிலைக்குச் சொல்லுகின்ற நெறிக்கண் நின்று, அதற்குத் துணையாகிய கற்புடை மனைவியோடும் செய்யப்படுவதாகலின், அதனை முதற்கண் கூறுவான் தொடங்கி, எடுத்துக் கொண்ட இலக்கியம் இனிது முடிதற்பொருட்டுக் கடவுள் வாழ்த்துக் கூறுகின்றார்.

---

1. "தெய்வத் திருவள்ளுவர்", "தேவிற் சிறந்த திருவள்ளுவர்", "தேவர் திருவள்ளுவர்" (திருவள்ளுவ மாலை, 1, 19, 39, 41, 49.)

2. நால்வகை நிலையாவன: பிரமசரியம், கிருகஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் என்னும் நால்வகை ஆசிரமங்கள்.

# அறத்துப் பால்

### பாயிர இயல்

### முதல் அதிகாரம்

## கடவுள் வாழ்த்து

**பரிமேலழகர் :** அஃதாவது, கவி தான் வழிபடும் கடவுளையாதல் எடுத்துக் கொண்ட பொருட்கு ஏற்புடைக் கடவுளையாதல் வாழ்த்துதல். அவற்றுள், இவ் வாழ்த்து ஏற்புடைக் கடவுளை என உணர்க. என்னை? சத்துவம் முதலிய குணங்களால் மூன்றாகிய உறுதிப் பொருட்கு[1] அவற்றான் மூவராகிய[2] முதற் கடவுளரோடு இயைபு உண்டாகலான். அம் மூன்று பொருளையும் கூறலுற்றார்க்கு அம் மூவரையும் வாழ்த்துதல் முறையாகலின், இவ் வாழ்த்து அம் மூவர்க்கும் பொதுப்படக் கூறினார் என்று உணர்க.

### குறிப்பு

மக்கள் கடவுளை வாழ்த்தவேண்டும் என்று எடுத்துச் சொல்லும் அதிகாரம் இது. நூல் இனிது நிறைவேற வேண்டுமென்று நூலாசிரியர் வாழ்த்தியதாகக் கொள்வதைவிட இதுவே பொருத்தமானது.

1

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு. 1

**பரிமேலழகர் :** (இதன் பொருள்) எழுத்து எல்லாம் அகரம் முதல—எழுத்துக்கள் எல்லாம் அகரமாகிய முதலை உடையன; உலகு ஆதிபகவன் முதற்று-அதுபோல உலகம் ஆதிபகவனாகிய முதலை உடைத்து (என்றவாறு.)

இது தலைமைபற்றி வந்த எடுத்துக்காட்டுவமை. அகரத்திற்குத் தலைமை விகாரத்தான் அன்றி நாத மாத்திரையாகிய இயல்பாற் பிறத்தலானும், ஆதிபகவற்குத் தலைமை செயற்கை உணர்வான் அன்றி இயற்கை உணர்வான் முற்றும் உணர்தலானும் கொள்க. தமிழ் எழுத்திற்கேயன்றி வட எழுத்திற்கும் முதலாதல் நோக்கி, 'எழுத்தெல்லாம்' என்றார். ஆதிபகவன் என்னும் இருபெயரொட்டுப் பண்புத் தொகை வடநூல் முடிபு.[3] உலகு என்றது, ஈண்டு உயிர்கள்மேல் நின்றது. காணப்பட்ட உலகத்தால் காணப்படாத கடவுட்கு உண்மை கூறவேண்டுதலின், 'ஆதிபகவன் முதற்றே உலகு' என உலகின்மேல் வைத்துக் கூறினார்;[4] கூறினாரேனும்,

---

1. சத்துவத்தால் விளைவது அறம்; இராசதத்தால் விளைவது பொருள்; தாமசத்தால் விளைவது காமம்.

2. மூவர்-பிரமன், திருமால், உருத்திரன்.

3. தமிழ் முடிபாக இருப்பின் ஆதிப்பகவன் என்று வரவேண்டும்.

4. உலகின் இயல்பைக் கூறுவார் போன்று அதனை எழுவாயாக வைத்தமையின், 'உலகின்மேல் வைத்துக் கூறினார்' என்றார்.

உலகிற்கு முதல் ஆதிபகவன் என்பது கருத்தாகக் கொள்க. ஏகாரம் தேற்றத்தின்கண் வந்தது.

இப் பாட்டால், முதற் கடவுளது உண்மை கூறப்பட்டது.

## உரை வேறுபாடு

**பரிதியார் :** உயிர் எழுத்துப் பன்னிரண்டுக்கும் அகரம் முதல் எழுத்தாதல் முறைமை போல, ஆதியான பகவன் முதலாம் உலகத்திற்கு.

**காளிங்கர் :** அகரத்திலிருந்து ஏனைய சொற்களும் கலைகளும் பிரிந்தது போல, இறைவனிடத்திலிருந்து தன்மாத்திரைகளும், பூதங்களும், உயிர்களும், உலகங்களும் விரிந்தன.

## மேற்கோள் விளக்கம்

**சேனாவரையர் :** அதுபோல என்பது எஞ்சி நிற்றலின் இசையெச்சம் என்பர். (**தொல்.** சொல். 440.)

**நச்சினார்க்கினியர் :** அகரமுதல என்புழி அகரம் தனி உயிருமாய், ககர ஒற்று முதலியவற்றுக்கு உயிருமாய் வேறு நிற்றல். அவ்வகரம் தனியே நிற்றலானும், பல மெய்க்கண் நின்று அவ்வம் மெய்கட்கு இசைந்த ஓசைகளைப் பயந்தே நிற்றலானும், வேறுபட்டதாதலின் ஒன்றேயாயும், பலவேயாயும் நிற்பதோர் தன்மையை உடைத்தென்று கோடும். இறைவன் ஒன்றேயாய் நிற்கும் தன்மையும், பல உயிர்க்கும் தானேயாய் அவற்றின் அளவாய் நிற்கும் தன்மையும் போல. (**தொல்.** எழுத்து. 8.)

இங்ஙனம் மெய்க்கண் அகரம் கலந்து நிற்குமாறு கூறினாற்போலப் பதினோருயிர்க்கண்ணும் அகரம் கலந்து நிற்கும் என்பது ஆசிரியர் கூறாராயினார், அந்நிலைமை தமக்கே புலப்படுதலானும், பிறர்க்கு இவ்வாறு உணர்த்துதல் அரிதாகலானும் என்று உணர்க. இறைவன் இயங்குதிணைக்கண்ணும், நிலைத்திணைக்கண்ணும், பிறவற்றின்கண்ணும் அவற்றின் தன்மையாய் நிற்குமாறு எல்லார்க்கும் ஒப்ப முடிந்தாற்போல, அகரமும் உயிர்க்கண்ணும் தனிமெய்க் கண்ணும் கலந்து, அவற்றின் தன்மையாயே நிற்கும் என்பது சான்றோர்க்கெல்லாம் ஒப்ப முடிந்தது. 'அகர முதல' என்னும் குறளால் அகரமாகிய முதலையுடைய எழுத்துக்கள் எல்லாம், அதுபோல இறைவனாகிய முதலை யுடைத்து உலகம் என வள்ளுவனார் உவமை கூறியவாற்றானும்.........உணர்க. (**தொல்.** எழுத்து. 46.)

## ஒப்புமை

1. **ஆதிபகவன் :**

"அந்தமில் ஆதியம் பகவன்" (**திருவாய்மொழி**, 1.3:5.)
"முன்னவன் உலகுக்கு" (**அப்பர்.** திருமாற்பேறு, 8.)
"அருத்தனை ஆதிதேவன்"
"ஆதி பெருமான திடம்" (**சம்பந்தர்.** நெடுங்களம், 6, வேதவனம், 7.)

2. **முற்றும் :**

" ஆரும் அறியார் அகாரம் அவனென்று "
" அகார முதலா யனைத்துமாய் நிற்கும்." (**திருமந்.** 1751, 1753)
" அகர முதலானை அணிஆப்ப னூரானை " (**சம்பந்தர்.** ஆப்பனூர். 5)
" ஆனத்து முன்னெழுத்தாய் நின்றார் போலும் " (**அப்பர்.** ஆரூர். 5)

"அகரம்முதலின் எழுத்தாகி நின்றாய்"
(சுந்தரர். நெல்வாயில் அரத்துறை. 7.)

### குறிப்பு

பகவன் என்ற சொல் பகத்தை உடையவன் என்னும் பொருள் உடையது. ஐசுவரியம், வீரியம், புகழ், திரு, ஞானம், வைராக்கியம் என்ற ஆறையும் பகம் என்னும் சொல் குறிக்கும். பூதங்களின் உற்பத்தி, முடிவு, வரவு, செலவு, வித்தை, அவித்தை என்னும் ஆறையும் அறிபவன் பகன் என்று கூறுவதும் உண்டு. பகவன் என்ற சொல்லுக்குக் கேவல ஞானி என்று பொருள் உரைப்பர் அடியார்க்கு நல்லார். (சிலப். 10: 177.)

உலகுக்கு முதல்வன் இறைவன் என்று கூற வந்தவர், அதற்குப் பொருத்தமாக 'ஆதிபகவன்' என்ற பெயரைக் கூறினார். (1)

## 2

**கற்றதனால் ஆய பயன்என்கொல் வால்அறிவன்**
**நற்றாள் தொழாஅர் எனின்.** 2

**பரிமேலழகர்:** [1] கற்றதனால் ஆய பயன் என்-எல்லா நூல்களையும் கற்றவர்க்கு அக்கல்வியறிவா னுய பயன் யாது? வால் அறிவன் நற்றாள் தொழாஅர் எனின்-மெய்யுணர்வினை உடையானது நல்ல தாள்களைத் தொழாராயின்.

எவன் என்னும் வினாப்பெயர் என் என்றாய், ஈண்டு இன்மை குறித்து நின்றது. கொல் என்பது அசைநிலை.[2] பிறவிப் பிணிக்கு மருந்தாகலின், 'நற்றாள்' என்றார்.[3]

ஆகம அறிவிற்குப்[4] பயன் அவன் தாளைத் தொழுது பிறவி அறுத்தல் என்பது இதனால் கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** 'சொல்லினானே பொருள் அறியப்படுமாதலான் அதனைக் கற்கவே மெய்யுணர்ந்து வீடு பெறலாகும்; மீண்டும் வணக்கம் கூறியது எற்றுக்கு?' என்றார்க்கு இஃது, அதனால் பயன் இஃது என்பதூஉம், வேறு வேறு பயன் இல்லை என்பதூஉம் கூறிற்று. "கற்பக் கழிமடம் அஃகும்" (நான்மணிக். 28) என்றாரும் உளர்.

**காளிங்கர்:** வாலிமை என்பது வெண்மை; பெருமை என்றுமாம்.

**கவிராஜ பண்டிதர்:** வாலறிவன் - கேவல அறிவினையுடைய சுவாமி.

### ஒப்புமை

1. **வாலறிவு:**

"வாலுணர்வுமேல் முடுகினார்"
"வாலறிவற்கு" (கம்ப. தாடகை. 3, வேள்வி. 21.)

---

1. ஒவ்வொரு குறளின் உரையிலும் 'இதன் பொருள்' என்று தொடங்கி, 'என்றவாறு' என்று முடிப்பது மரபு. அந்த இரண்டும் இது முதல் விலக்கப்பட்டன.

2. என் என்பதே வினைப் பொருள் பயந்தமையின், கொல் இங்கே அசை நிலை ஆயிற்று.

3. "இழித்தன ஏழேழ் பிறப்பும் அறுத்தன......ஐயாறன் அடித்தலமே" (அப்பர். திருவையாறு, 2.)

4. ஆகம அறிவு – நூலறிவு.

2. முற்றும் :

"கற்றவர் தாந்தொழு தேத்தநின்றான்
காதலிக் கப்படும் காட்டுப்பள்ளி"
"பெற்றிகொள் பிறைநுத லீர்உமைப் பேணுதல்
கற்றறி வோர்கள்தங் கடனே"
(சம்பந்தர். கீழைத்திருக்காட்டுப்பள்ளி, 9, திருநெல்வெண்ணெய். 6.)

"கற்றாங்கவன் கழல்பேணினர்" (திருவாசகம், 508.)

"செய்யுள்நிகழ் சொற்றெளிவும் செவ்வியநூல் பலநோக்கும்
மெய்யுணர்வின் பயனிதுவே எனத்துணிந்து விளங்கிஒளிர்
மையணியும் கண்டத்தான் மலரடிக்கே ஆளானார்
பொய்யடிமை யில்லாத புலவரெனப் புகழ்மிக்கார்"
(பெரிய. பொய்யடிமை.)

"கண்டும் தெளிந்தும் கற்றார் கண்ணற் காளன்றி யாவரோ"
(திருவாய்மொழி, 7. 5:7.)

குறிப்பு

கற்றதன் பயன் அறிவு பெறுதல். அதன் பயன் இறைவனைத் தொழுதல். அறிவு பெற்றார் தொழுதற் குரியவன் என்பதற்குப் பொருத்தமாக 'வாலறிவன்' என்ற தொடரைக் கூறினார். கற்றலால் வருவது நூலறிவு; இறைவனைத் தொழுதலால் வருவது வாலறிவு. (2)

3

மலர்மிசை ஏகினான் மாண்அடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார். 3

பரிமேலழகர் : மலர்மிசை ஏகினான் மாண் அடி சேர்ந்தார் - மலரின் கண்ணே சென்றவனது மாட்சிமைப்பட்ட அடிகளைச் சேர்ந்தார், நிலமிசை நீடு வாழ்வார் - எல்லா உலகிற்கும் மேலாய வீட்டுலகின்கண்[1] அழிவின்றி வாழ்வார்.

அன்பால் நினைவாரது உள்ளக் கமலத்தின்கண் அவர் நினைந்த வடிவோடு விரைந்து சேறலின்,[2] 'ஏகினான்' என இறந்த காலத்தால் கூறினார்;[3] என்னை? "வாராக் காலத்தும் நிகழுங் காலத்தும், ஓராங்கு வரூஉம் வினைச்சொற் கிளவி, இறந்தகா லத்துக் குறிப்பொடு கிளத்தல், விரைந்த பொருள என்மனார் புலவர்"[4] என்பது ஓத்தாகலின். இதனைப் 'பூமேல் நடந்தான்' என்பதோர் பெயர்பற்றிப் பிறிதோர் கடவுட்கு[5] ஏற்றுவாரும் உளர். சேர்தல் - இடைவிடாது நினைத்தல்.

1. "வரன் என்னும் வைப்பு" (24) என்றும், "வானோர்க்கு உயர்ந்த உலகம்" (346) என்றும் வீட்டுலகத்தைத் திருவள்ளுவர் கூறுதல் காண்க.

2. "மனக்கோள் நினக்கென வடிவுவே றிலையே" (பரிபாடல், 4: 56) என்பதற்குப் பரிமேலழகர், 'அன்பர் மனத்திற் கொண்டனவன்றி நினக்கென வேறு வடிவு உடையை யல்லை' என்று எழுதியது இங்கே நினைப்பதற்குரியது.

3. மலர்மிசை ஏகுதல் மூன்று காலத்திற்கும் பொதுவாயினும், விரைவுபற்றி இறந்த காலத்தால் கூறினார் என்று விளக்கியபடி. (தொல். வினையியல், 44.)

5. பிறிதொரு கடவுள் என்றது அருகக் கடவுளை; "மலர்மிசை நடந்தோன்" (சிலப். 10: 204.)

## உரை வேறுபாடு

**மணக்குடவர் :** மலர்மிசை ஏகினன் - மலரின்மேல் நடந்தான். நில மிசை - நிலத்தின்மேல். நிலம் என்று பொதுப்படக் கூறிய அதனன் இவ் வுலகின் கண்ணும், மேல் உலகின் கண்ணும் என்று கொள்ளப்படும்.[1] தொழுதாற் பயன் என்னை என்றாற்குப் போகம் நுகர்தலும் வீடு பெறலும் என்று கூறுவார், முற்படப் போகம் நுகர்வார் என்று கூறினர்.

**பரிதியார் :** பக்த சனங்கள் இட்ட புஷ்பத்தின்மேல் எழுந்தருளி யிருக்கும் சிவன் ஸ்ரீபாதத்தை மனசிலே பற்றவைத்தார் பூமியின்கண்[2] சகல பாக்கியமும் அநுபவிப்பார்.

**காளிங்கர் :** .........நிலமிசை நீடுவாழ்வார் என்பது, நித்தியராய் உள்ளார். இந்நிலத்தின்கண் இவ்வாறு வணங்கி வழிபட்டு, எவ்வுயிர்க்கும் உயிராய் நின்ற இறைவனது குற்றம் தீர்ந்த அடியினைச் சேர்ந்தார் யாவர், மற்று அவரே முத்தராவர் என்றவாறு.

## மேற்கோள் விளக்கம்

"எல்லாச் சமயத் தோரானும் வணங்கப் பெறும் படைப்பு முதலிய ஐந்தொழிற்கும் உரிய எல்லாக் கடவுளாகியும் நின்றான் ஒருவனே என்பார், அருகனை நான்முகன் என்றும் கூறினர். இவ்வாறு வள்ளுவ நாயனாரும், 'மலர்மிசை.........வாழ்வார்' என வரையாது கூறுதல் காண்க" (**நன்.** 56) என்று **சங்கர நமச்சிவாயர்** கூறுவர். அவர் கருத்து, மலர்மிசை ஏகினன் என்றது நான்முகனைக் குறிக்கும் என்பது போலும்.

## ஒப்புமை

**1. மலர்மிசை ஏகினன் :**

"தாவின்றி எப்பொருளும் கண்டுணர்ந்து தாமரைப்
பூவின்மேற் சென்றான் புகழடியை"

(**அறநெறிச்.** கடவுள்.)

"மலர்மிசை எழுதரு பொருள்"
" .........  ஞானம்
புகலுடையோர் தம்உள்ளப் புண்டரிகத் துள்ளிருக்கும்
புராணர் கோயில்"

(**சம்பந்தர்.** சிவபுரம், 5, திருவீழிமிழலை, 6.)

"பொள்ளலிக் காயந் தன்னுள் புண்டரீ கத்தி ருந்த
வள்ளலை"
"புந்தியாய்ப் புண்டரிகத் துள்ளாய் போற்றி"

(**அப்பர்.** திருத்துருத்தி, 6, திருவீரட். 9.)

"போதுகந் தேறும் புரிசடையான்" (**திருமந்.** 632.)
"தண்டா மரைமலரின் மேல்நடந்தாய்" (**சூளாமணி,** துறவு. 71.)
"தெய்வக் காமர் நளினத் தமரர்
கைதொழ நடந்தாய்." (**திருக்கலம்.** 92.)

**2. முற்றும்:**

"......நினைவொடு பதுமநன் மலரது மருவிய
சிவனது சிவபுரம் நினைபவர் செழுநில னினில்நிலை பெறுவரே"

(**சம்பந்தர்.** சிவபுரம், 1.)

---

1. "மண்ணில்நல் லவண்ணம் வாழலாம் வைகலும், எண்ணில்நல் லகதிக்கு யாதுமோர் குறைவிலை" (**சம்பந்தர்.** கழுமலம். 1); "இம்மை யேதரும் சோறும் கூறையும் ஏத்த லாம்இடர் கெடலுமாம், அம்மை யேசிவ லோக மாள்வதற் கியாதும் ஐயுற வில்லையே." (**சுந்தரர்.** திருப்புகலூர். 1.)

2. "நீடுலகத் திருப்பாரே." (**சம்பந்தர்.** பெரும்புலியூர். 11.)

### குறிப்பு

சேர்ந்தார் என்று இறந்த காலத்தாற் கூறினாரேனும், முக்காலத்துக்கும் பொதுவாகக் கொள்க; உபலட்சணம் என்று கொண்டு ஏனை இரண்டு காலங்களுக்கும் பொருத்திக்கொள்ளலாம். நிலமிசை என்பதை நிலத்துக்கு மேலுள்ளது என்று கொண்டு வீட்டுலகம் என்று பொருள் கொள்ளலாம்; இங்கே மிசை என்பதைப் பெயராகக் கொள்க. (3)

## 4

வேண்டுதல்வேண் டாமை இலான்அடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல. 4

**பரிமேலழகர் :** வேண்டுதல் வேண்டாமை இலான் அடி சேர்ந்தார்க்கு-ஒரு பொருளையும் விழைதலும் வெறுத்தலும் இல்லாதவன் அடியைச் சேர்ந்தார்க்கு, யாண்டும் இடும்பை இல-எக்காலத்தும்[1] பிறவித் துன்பங்கள் உளவாகா.

பிறவித் துன்பங்க ளாவன : தன்னைப்பற்றி வருவனவும், பிற உயிர்களைப்பற்றி வருவனவும், தெய்வத்தைப்பற்றி வருவனவும் என மூவகையான் வரும் துன்பங்கள்.[2] அடி சேர்ந்தார்க்கும் அவ்விரண்டும் இன்மையின், அவை காரணமாக வரும் மூவகைத் துன்பங்களும் இலவாயின.

### உரை வேறுபாடு

**மணக்குடவர் :** யாண்டும்-எவ்விடத்தும். பொருளும், காமமும் ஆகா என்றற்கு வேண்டுதல் வேண்டாமை இலான் என்று பெயரிட்டார்.

**காளிங்கர்** யாண்டும்-எவ்விடத்தும்.

### ஒப்புமை

1. **வேண்டுதல் வேண்டாமை இலான் :**

"வேண்டாமை வேண்டுவதும் இல்லான் தன்னை"
(**அப்பர்.** திருவாவடுதுறை, 9.)

"கொள்கை கொளாமை இலாதான்
எள்கல் இராகம் இலாதான்." (**திருவாய்மொழி**, 1. 6 : 5.)

"வேண்டுதல் வேண்டாமை இல்லாத வீரன்." (**திருக்கலம்.** 58.)

"ஆழ்த்துதி ஆர்வமும் செற்றமும் நீக்கிய அச்சுதனே."
(**திருநூற்.** 20.)

2. **இடும்பை இல :**

"எங்கும் ஏத்திநின்றின்புறும் அடியரை
இடும்பைவந் தடையாதே."
(**சம்பந்தர்.** கடிக்குளம். 3.)

---

1. யாண்டும் என்பது இங்கே காலத்தைச் சுட்டியது போல, "யாண்டும் உகாஅமை" (**குறள்**, 585) என்னும் இடத்தும் சுட்டியது.

2. மூவகைத் துன்பங்களைத் தாபத்திரயம் என்பர் வட நூலார். அவை முறையே ஆதியாத்மிகம், ஆதிபௌதிகம், ஆதிதெய்விகம் எனப்படும். 442-ஆம் குறள் உரையில் பின் இரண்டு துன்பங்கள் இன்னவென்று **பரிமேலழகர்** உரைத்தார்.

### குறிப்பு

யாண்டும் என்பதற்கு இப்போது வாழும் நிலத்திலும் மறுமையில் அடையும் இடத்திலும் என்று பொருள் கொள்வதும் பொருந்தும்; "நரகத்தில் இடர்ப்படோம் நடலை இல்லோம்" (**அப்பர்**) என்பது காண்க.

முன் பாட்டும் இப் பாட்டும் இறைவனை மனத்தால் தியானிப்பதனுல் வரும் பயனைக் கூறின. *(4)*

### 5

இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு. 5

**பரிமேலழகர்:** இருள் சேர் இரு வினையும் சேரா-மயக்கத்தைப் பற்றி வரும் நல்வினை தீவினை என்னும் இரண்டு வினையும் உளவாகா, இறைவன் பொருள்சேர் புகழ் புரிந்தார்மாட்டு-இறைவனது மெய்ம்மை சேர்ந்த புகழை விரும்பினரிடத்து.

இன்ன தன்மைத்து என ஒருவராலும் கூறப்படாமையின் அவிச்சையை இருள் என்றும், நல்வினையும் பிறத்தற்கு ஏது வாகலான்[1] 'இரு வினையும் சேரா' என்றும் கூறினர். இறைமைக் குணங்கள்[2] இலராயினரை உடையர் எனக் கருதி அறிவிலார் கூறுகின்ற புகழ்கள் பொருள் சேரா ஆகலின், அவை முற்றும் உடைய இறைவன் புகழே பொருள் சேர் புகழ் எனப்பட்டது. புரிதல்-எப்பொழுதும் சொல்லுதல்.[3]

### உரை வேறுபாடு

**பரிதியார்:** மும்மல வித்தாகிய பாவமானது சிவ கீர்த்தி பாராட்டு வானிடத்து இல்லை.

**காளிங்கர்:** இறைவன் பொருள் சேர் புகழ் புரிந்தார் - அவ்விறைவனுல் பெற்ற உபதேசப் பொருளோடு பொருந்திப் புகழ் தங்கி நின்றவர்.

**கவிராஜ பண்டிதர்:** காதிவினை என்றும், அகாதிவினை என்றும் சொல்லப்படும் இரண்டு வினையும் சேரா.

### ஒப்புமை

1. **இருள்சேர் இருவினை:**

"இருள்புரி வினைகள் சேரா விறைவன தறத்தை எய்தின்"

(**யசோதர.** 309.)

2. **பொருள்சேர் புகழ் புரிந்தார்:**

"பொய்யஞ்சி வாய்மைகள் பேசிப் புகழ்புரிந் தார்க்கருள் செய்யும்"

(**அப்பர்.** திருவாரூர், 10.)

3. **புகழ்புரிதல்:** குறள், 59.

4. **முற்றும்:**

"இருமை வினையுமில ஏத்துமவை"

(**பரிபாடல்,** 13: 48.)

---

1. 'பிறப்பிற்குக் காரணமாகலான் நல்வினைப் பயனும் நோயெனப்பட்டது' (359, உரை) என்பர் பின்.

2. இறைமைக் குணங்களாவன பத்தாம் குறளில் சொல்லப்படும் எட்டுக் குணங்கள்.

3. புகழ்தல் வாயின் செயல் ஆதலின், இவ்வாறு உரை கூறினர்.

"………பெருமான்
ஆயபுகழ் ஏத்துமடி யார்கள்வினை யாயினவும் அகல்வதெளிதே."
(சம்பந்தர். மாகறல், 9.)

### குறிப்பு

இறைவன் புகழே பொருள்சேர் புகழாதலின், அவனே புகழுக்கு உரியவன்; "பூமிமேல் புகழ்தக்க பொருளே" என்பது **அப்பர்** வாக்கு. (பொது. தனித் திருத்தாண்டகம், 7.)

இறைவனை வாக்கால் புகழ்தலின் பயன் இதனால் கூறப்பட்டது. (5)

### 6

**பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க**
**நெறிநின்றார் நீடுவாழ் வார். 6**

**பரிமேலழகர்:** பொறிவாயில் ஐந்து அவித்தான் - மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் பொறிகளை வழியாக உடைய ஐந்து அவாவினையும் அறுத்தானது, பொய் தீர் ஒழுக்க நெறி நின்றார் - மெய்யான ஒழுக்க நெறியின்கண் வழுவாது நின்றார், நீடு வாழ்வார் - பிறப்பின்றி எக்காலத்தும் ஒரு தன்மையராய் வாழ்வார்.

புலன்கள் ஐந்தாகலான், அவற்றின்கண் செல்கின்ற அவாவும் ஐந்தாயிற்று.[1] ஒழுக்கநெறி ஐந்து அவித்தானால் சொல்லப் பட்டமையின்,[2] ஆண்டை ஆறனுருபு செய்யுட் கிழமைக்கண் வந்தது, 'கபிலரது பாட்டு' என்பது போல.

இவை நான்கு பாட்டானும் இறைவனை நினைத்தலும் வாழ்த்தலும் அவன் நெறி நிற்றலும் செய்தார் வீடு பெறுவர் என்பது கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்பொறிகளின் வழியாக வரும் ஊறு, சுவை, ஒளி, நாற்றம், ஓசை[3] என்னும் ஐந்தின் கண்ணும் செல்லும் மன நிகழ்ச்சியை அடக்கினனது பொய்யற்ற ஒழுக்க நெறியிலே நின்றார் அன்றே நெடிது வாழ்வார்.

இது சாவில்லை என்றது.

**பரிதியார்:** சத்த பரிச ரூப ரச கந்தம் என்கிற பொறியை வழியாக உடையவற்றிற்கு மனசைப் போக்காமல் காக்க வல்லார்[4] இகபரம் இரண்டிலும் நெறி நின்று அநேக காலம் வாழ்வர்.

**காளிங்கர்:** ஐம்பொறிகளையும் அகத்தடக்கிய இறைவனது உபதேச முறைமையாகின்ற நல்லொழுக்கத்தின்கண் வழிப்பட்டு நின்றவர் முத்தராவர்.

**தாமத்தர்:** நீடு வாழ்வார் - ஒரு காலமும் அழிவு இல்லாமல் இருக்கின்ற மோட்சத்திலே எக்காலமும் வாழ்வார்கள்.

**எல்லிஸ் துரை,** தம்முடைய ஆங்கில உரையில், பிறருடைய ஐம்பொறிகளை அவித்தான் என்றும் ஓர் உரை கூறுவர்.

---

1. "மெய்வாய் விழிநா சியொடுஞ் செவியாம், ஐவாய் வழிசெல் லுமவா வினையே" (**கந்தர் அநுபூதி,** 14.)
2. 'இறைவன் ஓதிய வீட்டு நெறியை' (350, உரை) என்பர் பின்.
3. **குறள்,** 27.
4. ஐந்தவித்தார் என்பது இவர் பாடம் போலும்.

### ஒப்புமை

1. **பொறிவாயில் ஐந்தவித்தான் :**

"ஐவரை வென்றோன்" (சிலப். 10:198.)

"அஞ்சொண் புலனும் அவைசெற்ற
மஞ்சன் மயிலா டுதுறையை
நெஞ்சொன் றிநினைந் தெழுவார்மேல்
துஞ்சும் பிணியா யினதானே"

"வென்றவன் புலன்ஐந்தும்"

"அஞ்சு புலங்களை விலங்கினை"

"புலங்கள் வென்றவன் எம்இறைவன்"

(**சம்பந்தர்.** திருமயிலாடுதுறை, 4, திருவல்லம், 10, திருப்புறம்பயம், 8, திருவெண்டுறை, 7.)

"வென்றானைப் புலன்ஐந்தும்"

"பொல்லாப் புலனைந்தும் போக்கி னான்காண்"

அறுத்தானும் அஞ்சும்"

(**அப்பர்.** உள்ளத்திருக். 7, திருக்காளத்தி, 6, திருக்கருகாவூர், 11.)

"பொறிவாயில் ஐந்தவித்த புனிதன் நீயே."

(சிவசம்போதனை, 1: 29.)

2. **பொறிவாயில் ஐந்து அவித்தல் :**

"பொறிவாயிலிவ்வைந்தனையும் அவியப் பொருது"

(**சுந்தரர்.** நெல்வாயில், 2)

3. **ஐந்தவித்தான் ஒழுக்கநெறி :**

"பிணக்கற அறுவகைச் சமயமும் நெறிஉள்ளி உரைத்த
கணக்கறு நலத்தினன்"

"அறிவினுற் குறைவில்லா அகல்ஞாலத் தவர்அறிய
நெறியெல்லாம் எடுத்துரைத்த நிறைஞானத் தொருமூர்த்தி."

(**திருவாய்மொழி**, 1. 3: 5, 4. 8: 6.)

### குறிப்பு

ஐந்தவித்தானை அடைவதற்குரியதும் பொய் தீர்ந்த ஒழுக்கத்தையுடையதுமாகிய நெறி என்று கொள்வது பொருந்தும்; "பொய்தான் தவிர்ந்துன்னைப் போற்றி சயசய போற்றிஎன்னும், கைதான் நெகிழ விடேன்" என்றும், "பொய்விட் டுடையான் கழல்புகவே" என்றும் (**திருவாசகம் 5,603**) வருதல் காண்க.

ஐந்தவித்தான் நெறி நிற்றலாவது, தாமும் ஐந்தவிக்கும் முயற்சியில் ஈடுபடுதல். ஐந்தவித்தலும் பொய்தீர்தலுமாகிய இரண்டையும் சேர்த்துச் சொல்லுதல் பெரியோர் மரபு; "ஓரைந்து, புலனொடு வென்று பொய்ம்மைகள் தீர்ந்த புண்ணியர்" (**சம்பந்தர்.** பேணு பெருந்துறை, 4.) (6)

### 7

**தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது.** 7

**பரிமேலழகர் :** தனக்கு உவமை இல்லாதான் தாள் சேர்ந்தார்க்கு அல்லால்-ஒருவாற்றானும் தனக்கு நிகர் இல்லாதவனது தாளைச் சேர்ந்தார்க்கு அல்லது, மனக்கவலை மாற்றல் அரிது-மனத்தின்கண் நிகழும் துன்பங்களை நீக்குதல் உண்டாகாது.

"உறற்பால, தீண்டா விடுதல் அரிது"[1] என்றாற் போல, ஈண்டு அருமை இன்மைமேல் நின்றது.[2] தாள் சேராதார் பிறவிக்கு ஏதுவாகிய காம வெகுளி மயக்கங்களை[3] மாற்ற மாட்டாமையின், பிறந்து அவற்றால் வரும் துன்பங்களுள் அழுந்துவர் என்பதாம்.

## உரை வேறுபாடு

**மணக்குடவர்:** வீடு பெறலாவது, "அவலக் கவலை கையாற்றின்"[4] நீங்கிப் புண்ணிய பாவம் என்னும் இரண்டினையும் சாராமல், சாதலும் பிறத்தலும் இல்லாததொரு தன்மையை எய்துதல். அது பெறும் என்பார் முற்படக் கவலை கெடும் என்றார், அதனால் எல்லாத் துன்பமும் வரும் ஆதலின்.

**காளிங்கர்:** தனக்கு உவமை இல்லாதான் - எவ்வுயிர்க்கும் உயிர்ப் பொருள் ஆகின்றவனாகிய முதற்பொருளாம் தன்மைக்கு இணையில்லாதான்.

## ஒப்புமை

*1.* **தனக்குவமை இல்லாதான்:**

" நின்னொடு, புரையுநர் இல்லாப் புலமையோய் " (முருகு. *279-80.*)
" தன்னேர்பிறர் இல்லானை " (**சம்பந்தர்.** மீயச்சூர், *3.*)
" மற்றாரும் தன்னொப்பார் இல்லா தானை "
" தன்னானைத் தன்னொப்பார் இல்லா தானை "
" ஓர் உவமனில்லி "
(**அப்பர்.** பெரியதிருத். 2, திருவாரூர், 2, வினாவிடை. 10.)
" தனையொப் பாரை இல்லாத் தனியை "
" ஒப்புனக் கில்லா ஒருவனே " (**திருவா.** *442, 538.*)
" தன்னைஒப் பாய்ஒன் றும் இல்லாத் தலைமகன் " (**திருமந்திரம்,** *7.*)
" ஒத்தார் மிக்காரை இலையாய மாமாயா. " (**திருவாய்.** *2. 3 : 2.*)

2. **முற்றும்:**

" வந்தனை அவன்கழல் வைத்த போதலால்
சிந்தைவெங் கொடுந்துயர் தீர்க லாதென்றான்."
(**கம்ப.** பள்ளியடை. *58.*)

## குறிப்பு

தனக்கு உவமை இல்லாதான் என்றது, தனக்கு மிக்காரும் இல்லாதான் என்னும் கருத்தையும் உட்கொண்டது. அவனை ஒப்பாரும் மிக்காரும் இருப்பின் அவர்பாற் சென்று கவலையைப் போக்கிக் கொள்ளலாம் என்ற எண்ணம் எழ இடம் உண்டு. அவ்வாறு யாரும் இன்மையின் அவன் ஒருவனே கவலையை மாற்றுவான் என்றபடி.

மனக் கவலையைக் கூறியமையின், சேர்தல் அதன் தொழிலாகிய நினைத்தலைக் குறித்தது. *(7)*

1. **நாலடியார்,** 109.
2. "அருங்கேடன்" (210), என்னும் குறள் உரையில், 'அருமை - இன்மை' என்று எழுதினர் இவ்வுரையாசிரியர்.
3. **குறள்,** 360.
4. "அவலக் கவலை கையா றழுங்கல்" (**மணிமேகலை,** 4 : 119.)

8

அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லால்
பிறவாழி நீந்தல் அரிது. 8

**பரிமேலழகர்:** அறஆழி அந்தணன் தாள் சேர்ந்தார்க்கு அல்லால் - அறக்கடலாகிய அந்தணனது தாளாகிய புணையைச்[1] சேர்ந்தார்க்கு அல்லது, பிற ஆழி நீந்தல் அரிது-அதனிற் பிறவாகிய கடல்களை நீந்தல் அரிது.

அறம், பொருள், இன்பம் என உடன் எண்ணப்பட்ட மூன்றனுள் அறத்தை முன்னர்ப் பிரித்தமையான், ஏனைப் பொருளும் இன்பமும் பிற எனப்பட்டன. பலவேறு வகைப்பட்ட அறங்கள் எல்லாவற்றையும் தனக்கு வடிவாக உடையனாகலின், அறவாழி அந்தணன் என்றார். அறவாழி என்பதனைத் தரும சக்கரமாக்கி, அதனை உடைய அந்தணன் என்று உரைப்பாரும் உளர். அப் புணையைச் சேராதார் கரைகாணாது அவற்றுள்ளே அழுந்துவராகலின், நீந்தல் அரிது என்றார். இஃது ஏகதேச உருவகம்.[2]

## உரை வேறுபாடு

**மணக்குடவர்:** இது காமமும் பொருளும் பற்றி வரும் அவலம் கெடும் என்றது.

**பரிதியார்:** பிறவாழி - பாவக் கடலை.

**காளிங்கர்:** அறமாகிய பெரு வெள்ளமாய் அனைத்துயிர்கட்கும் அழகிய தண்ணளியை உடையனாகிய இறைவனது தாளிணையை வணங்கி வழிபட்டார்க்கு அல்லது, மற்று யாவர்க்கும் பிறவிப் பெளவத்தைக்[3] கடத்தல் அரிது.

**கவிராஜ பண்டிதர்:** தரும சக்கரத்தை முத்திரையாக வுடைய சினேசுவரன் பாதங்களைச் சேர்ந்தவர்களுக்குப் பிறப்பெனும் கடலைக் கடக்கலாம்; சேராதவர்களுக்குப் பிறவிக் கடலைக் கடக்கப் போகாது.

**எல்லிஸ் துரை,** பிறஆழி என்பதற்குப் பாவக் கடல் என்று பொருள் கொண்டார்.

## ஒப்புமை

1. **அறவாழி:**

"அறவாழி யண்ணல்"
"ஒண்மணி அறவாழி" (சீவக. 1611, 3023.)
"அருளோடெழும் அறவாழி அப்பா"
"அறவாழி கொண்டே வென்ற அந்தணனே." (திருநூற். 5, 27.)

2. **அந்தணன்:**

"கொடிமாடச் செங்குன்றூர் நின்ற அந்தணன்"
(சம்பந்தர். கொடிமாடச். 1.)
"இமையோர் போற்றும் அந்தணனை." (அப்பர். ஆரூர், 4.)

3. **அறவாழி அந்தணன்:**

"அறவனை ஆழிப்படை அந்தணனை" (திருவாய். 1. 7 : 1.)

4. **அறவாழி அந்தணன் தாள் சேர்தல்:**

"அறவன் கழல்சேர்ந்து" (சம்பந்தர். அரிசிற். 11.)

---

1. புணை - தெப்பம்.
2. பிறவற்றை ஆழியாகக் கூறியதற்கேற்ப, தாட்புணை என்று கூறாமையின் ஏகதேச உருவகம் ஆயிற்று.
3. பிறவு - பிறவி; "பிறவாழிக் கரைகண் டாரே" (வில்லி. கிருட்டினன் தூது. 1.)

### குறிப்பு

பிறிது ஆழி என்று இருப்பின் அறமல்லாத மறமாகிய ஆழி என்று கொள்ளுதல் கூடும். பிறவாழி என்று பன்மையாகக் கூறியமையின் அறத்தின் இனமாகிய பொருள் இன்பக் கடல்கள் என்று உரை கூறுவதே பொருந்தும். பிற ஆழிகளைக் கடக்க ஓராழி உதவும் என்றது ஒரு நயம். (8)

## 9

**கோள்இல் பொறியிற் குணம்இலவே எண்குணத்தான்**
**தாளை வணங்காத் தலை.** 9

**பரிமேலழகர்:** கோள் இல் பொறியின் குணம் இல-தத்தமக்கு ஏற்ற புலன்களைக் கொள்கை இல்லாத பொறிகளைப் போலப் பயன் படுதலுடைய அல்ல, எண்குணத்தான் தாளை வணங்காத் தலை-எண் வகைப்பட்ட குணங்களை உடையானது தாள்களை வணங்காத தலைகள்.

எண் குணங்களாவன: தன் வயத்தனுதல், தூய உடம்பினனுதல், இயற்கை உணர்வினன் ஆதல், முற்றும் உணர்தல், இயல்பாகவே பாசங்களின் நீங்குதல், பேரருள் உடைமை, முடிவில் ஆற்றல் உடைமை, வரம்பில் இன்பம் உடைமை[1] என இவை. இவ்வாறு சைவாகமத்துக் கூறப்பட்டது. அணிமாவை முதலாக உடையன[2] எனவும், கடையிலா அறிவை முதலாக உடையன[3] எனவும் உரைப்பாரும் உளர். காணாத கண்[4] முதலியன போல வணங்காத தலைகள் பயன் இல வெனத் தலைமேல் வைத்துக் கூறினர்; கூறினரேனும், இனம் பற்றி வாழ்த்தாத நாக்களும் அவ்வாறே பயன் இல[5] என்பதூஉம் கொள்க.[6]

இவை மூன்று பாட்டானும் அவனை நினைத்தலும் வாழ்த்தலும் வணங்கலும்[7] செய்யாவழிப் படும் குற்றம் கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** அறிவில்லாத பொறிகளை உடைய பாவைகள் போல ஒரு குணமும் உடையன அல்ல, எட்டுக் குணத்தினை உடையவன் திருவடியினை வணங்காத தலையினை உடைய உடம்புகள்.

உயிர் உண்டாகில் வணங்கும் என்று இழித்து, உடம்புகள் என்றார்.

**பரிதியார்:** கோளாகிய நவக்கிரகங்களும், பொறியாகிய கண் வாய் மூக்குச் செவி மெய் என்னும் ஐம்புலன்களும் உண்டாகிலும் பயன் இல்லை; எட்டுக் குணங்கள் உடைய சிவன் சிவந்த தாளை வணங்காத தலை,

---

1. இவற்றை முறையே, சுதந்தரத்துவம், விசுத்த தேகம், நிராமயான்மா, சர்வக்ஞத்துவம், அநாதிபேதம், அநுபதசக்தி, அநந்தசக்தி, திருப்தி என்று வடநூலார் கூறுவர்.

2. அணிமா, மகிமா, கரிமா, லகிமா, பிராப்தி, பிராகாமியம், ஈசித்தை, வசித்தை என்னும் எட்டு வகைச் சித்திகள்; "சிறப்பீனும் செல்வமும்" (311) என்னுமிடத்து, 'யோகமாகிய சிறப்புத் தரும் அணிமா முதலிய செல்வங்கள்' என்பர் இவ்வுரைகாரர்.

3. இவ்வெட்டையும் **பரிதியார்** உரையில் காண்க.

4. "கரியவனைக் காணாத கண்ணென்ன கண்ணே" (**சிலப்.** 17 : 36); "ஆமாத்தூர் அம்மானைக், காணாத கண்ணெல்லாம் காணாத கண்களே" (**சம்பந்தர்.** ஆமாத்தூர், 4.)

5. 'நாராய ணவென்ன நாவென்ன நாவே" (**சிலப்.** 17: 37); "முற்ற, உணர்ந்தானைப் பாடாத நா அல்ல அல்ல, சிறந்தான்தாள், சேராத் தலை" (**அறநெறிச்.** 200); "நம்பன் நாமம் நவிலாதன நாவெனலாகுமே", "ஆரூத தீயாடி ஆமாத்தூர் அம்மானைக், கூருத நாவெல்லாம் கூருத நாக்களே" (**சம்பந்தர்.** அநேகதங். 3, ஆமாத்தூர், 7.)

6. இஃது உபலட்சணத்தின்பால் படும்.

7. மனம், வாக்கு, காயம் என்ற மூன்று கரணங்களின் செயல்கள்.

சித்திரத்தில் எழுதிய மரப் பாவைக்கு நிகராம். எட்டுக் குணமாவன: அநந்த ஞானம், அநந்த வீரியம், அநந்த குணம், அநந்த தரிசனம், நாமம் இன்மை, கோத்திரம் இன்மை, அவா வின்மை, அழியா இயல்பு என்பன.

**காளிங்கர்** : எண் குணத்தான்-எண்ணப்பட்ட குணங்களை யுடைய இறைவன்.

**கவிராஜ பண்டிதர்** : .........இந்த எட்டுக் குணங்களை யுடைய சருவக்கியன் பாதங்களை வணங்காத தலைகள் பிராணன் இல்லாமல் செத்துக் கிடக்கிற பிணத்தோடே சரி.

## ஒப்புமை

1. **எண் குணத்தான்** :

"பண்ணவன் எண்குணன்" (சிலப். 10 : 188.)

"எட்டுக் கொலாமவர் ஈறில் பெருங்குணம்"

"குணங்கள்தோள் எட்டு மூர்த்தி"

"கலைஞானிகள் காதல்எண் குணவன்காண்"

"எட்டு வான்குணத் தீசனெம்மான்"

(**அப்பர்**. விடந்தீர்த்த. 8, வன்னியூர், 7, தென்குரங்கு. 4, இடைமருது, 4.)

"இறையவனை மறையவனை எண்குணத்தி னானை"

(**சுந்தரர்**. கானாட்டு. 3.)

"எண்குணத் தீசனை" (**பொன்வண்ணத்**. 53.)

"எண்குண னும் கோட்பட்டு." (**சீவக**. 1469.)

2. **தலை வணங்குதல்** :

"தாளினன் கானப்பேர் தலையினால் வணங்குவார்"

"தலையி னால்வணங் கத்தவ மாகுமே"

(**சம்பந்தர்**. கானப்பேர். 8, மழபாடி, 4.)

"தலையே நீவணங்காய்" (**அப்பர்**. அங்க. 1.)

"வணங்கத் தலைவைத்து." (**திருவா**. 281.)

3. **முற்றும்** :

"தம்பத்தின் மேற்புழை ஏழுள ஆக்கித் தமித்துவைத்த
கும்பத்தி னோடு நிகரொக்கு மாம்குனிப் பின்றிஐந்தாம்
பம்பத்தி காயம் பணித்த பிரான்பசுந் தாமரைத்தாள்
செம்பத்தி யால்வணங் காச்சிறி யார்தம் சிரத்திரளே."

(**திருநூற்**. 23.)

## குறிப்பு

'எண் குணத்தான் தாள்' என்றமையின் திருவள்ளுவருக்கு உருவ வழிபாடு உடம்பாடு என்பது புலப்படும். குணமில்லாத கடவுள் குணமும் உருவும் உடையனாதல் மக்கள் வணங்கும் பொருட்டாதலின், 'எண் குணத்தான் தாளை வணங்கா' என்றார். (9)

## 10

பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார். 10

**பரிமேலழகர்** : இறைவன் அடி சேர்ந்தார் பிறவிப் பெருங்கடல் நீந்துவர்-இறைவன் அடி என்னும் புணையைச் சேர்ந்தார் பிறவியாகிய பெரிய கடலை நீந்துவர்; சேராதார் நீந்தார்-அதனைச் சேராதார் நீந்தமாட்டாராய் அதனுள் அழுந்துவர்.

காரண காரியத் தொடர்ச்சியாய்க்[1] கரையின்றி வருதலின், பிறவிப் பெருங்கடல் என்றார்.[2] சேர்ந்தார் என்பது சொல்லெச்சம்.

உலகியல்பை நினையாது இறைவன் அடியையே நினைப்பார்க்குப் பிறவி அறுதலும், அவ்வாறு அன்றி மாறி நினைப்பார்க்கு அஃது அருமையுமாகிய இரண்டும் இதனால் நியமிக்கப்பட்டன.

## உரை வேறுபாடு

**காளிங்கர்:** நீந்துவர்-கடந்து முத்தராவர்.

இனி இப்படி அருட்பெருங் கடவுளரை வழிபட்டு ஒழுகும் நன்னெறியாளர் உறையும் தேயத்து மழை வளம் குன்றாது வாய்ப்புடைத்தாம் என்பதனாலும், மற்று இவர் முதலாயினார் யாவர்க்கும் மழை இன்றியமையாமையாலும், மற்று இதன் பின்னரே மழை பெய்தற் சிறப்பினை அறிவிக்கிறது மேலை அதிகாரம்.

**கவிராஜ பண்டிதர்,** 'சேராதவர்' என்று பாடம் கொள்வர்.

## ஒப்புமை

1. **அடிசேர்ந்தார் பிறவிக் கடல் நீந்துதல்:**

"மறுபிறப் பறுக்கும் மாசில் சேவடி" (பரி. 3 : 2.)

"அறவியங் கிழவோன் அடியிணை யாகிய
பிறவி யென்னும் பெருங்கடல் விடூஉம்
அறவி நாவாய்" (மணி. 11 : 23-5.)

"பிறவியுமற விசிறுவர்......மணிமிடறன தடியிணை தொழுமவரே"
"உமதடி தொழும் இயலுளார் மறுபிறப் பிலரே"
(சம்பந்தர். சிவபுரம், 4, இன்னம்பர், 9.)

"அம்மை யேபிற வித்துயர் நீத்திடும்.........
இடைமரு தன்கழல்" (அப்பர். இடைமருது, 4.)

"......... அடியார்பால்
இணையில் பவங்கிளர் கடல்கள் இகந்திட இருதாளின்
புணையருள் அங்கணர்" (பெரிய. திருஞா. 83.)

"புணைவன் பிறவிக் கடல்நீந்து வார்க்கே" (திருவாய். 2. 8 : 1.)

"ஆழ்கடற் புணையி னன்ன அறிவரன் சரண்"

"......பிறவிக் கடலகத்துள்
பாத கமலம் தொழுவேங்கள் பசையாப் பவிழப் பணியாயே."
(சீவக. 380, 1242.)

2. **பிறவிக்கடல் நீந்துதல்:**

"அற்றார் பிறவிக் கடல்நீந்தி ஏறி" (சுந்தரர். நெல்வாயில், 3.)

3. **பிறவிப் பெருங்கடல்:**

"தனியனேன் பெரும்பிறவிப் பௌவத் தெவ்வத்
தடந்திரையா லெற்றுண்டு" (திருவா. 31.)

"பிறப்பென்னும் பெருங்கடல்" (கோயில்நான். 16.)

"பிறப்பெனும் பெருங்கடல்" (கம்ப. மந்திரப். 21.)

---

1. ஒரு பிறவியில் செய்த வினைகள் காரணமாக மறு பிறவியாகிய காரியம் வருதலின் இவ்வாறு கூறினார்.

2. "எறிதிரைப் பெருங்கடல்" (சிலப். 15 : 28) என்பதன் உரையில், 'கரை காணக் கடல் என்பார் பெருங்கடல் என்றார்' என்று விளக்கினார், அடியார்க்கு நல்லார்.

4. நீந்தார், இறைவனடி சேராதார் :
" இல்லை பிறவிக் கடலேறல்.........
சடையானைச் சாராதார் தாம்" (சிவபெருமான் இரட்டை. 5.)

5. முற்றும் :
" சுருங்கிடை யுன்னொரு துணைவன் தூயதாள்
ஒருங்குடை யுணர்வினர் ஓய்வில் மாயையின்
பெருங்கடல் கடந்தனர் பெயரும் பெற்றிபோல்
கருங்கடல் கடந்தனன் காலி னல்என்றான்."
(கம்ப. உருக்காட்டு. 97.)

குறிப்பு

பொருள், இன்பம் என்பவற்றையும் முன்பு கடலாக உரைத்தார்; ஆயினும் பிறவி யாவற்றினும் விரிந்ததென்பார், பெருங்கடல் என்றார். இறைவன்-எங்கணும் நிறைந்திருப்பவன்; இறை-தங்குதல்.

கடலில் வீழ்ந்தார் மேலே மிதந்து புணையைப் பற்றிக் கொண்டால் கரையேறுவது போலப் பிறவிப் பெருங்கடலில் வீழ்ந்தார் அதில் ஆழ்வதற்குமுன் இறைவன் அடியைப் பற்றிக் கொண்டால் நீந்திக் கரை யேறலாம். (10)

---

# 2. வான்சிறப்பு

**பரிமேலழகர் :** அஃதாவது அக்கடவுளது ஆணையான் உலகமும் அதற்கு உறுதியாகிய அறம் பொருள் இன்பங்களும் நடத்தற்கு ஏதுவாகிய மழையினது சிறப்புக் கூறுதல். அதிகார முறைமையும் இதனானே விளங்கும்.

**மணக்குடவர் :** வான் சிறப்பாவது மழையினது தலைமை கூறுதல். இது கடவுட் செய்கைத் தாதலால் அதன்பின் கூறப்பட்டது. இஃது ஈண்டுக் கூறியது என்னை எனின், பின் உரைக்கப்படுகின்ற இல்லறமும் துறவறமும் இனிது நடப்பது மழை உண்டாயின் என்றற்குப் போலும். அன்றியும் காலத்தின் பொருட்டுக் கூறினார் எனினும் அமையும்.

**11**

வானின் றுலகம் வழங்கி வருதலால்
தான்அமிழ்தம் என்றுணரற் பாற்று. 1

**பரிமேலழகர் :** வான் நின்று உலகம் வழங்கி வருதலால் - மழை இடையறாது நிற்ப உலகம் நிலைபெற்று வருதலான், தான் அமிழ்தம் என்று உணரற்பாற்று - அம் மழைதான் உலகத்திற்கு அமிழ்தமென்று உணரும் பான்மையை உடைத்து.

நிற்ப என்பது நின்று எனத் திரிந்து நின்றது.[1] உலகம் என்றது ஈண்டு உயிர்களை. அவை நிலைபெற்று வருதலாவது, பிறப்பு இடையறாமை யின்[2] எஞ்ஞான்றும் உடம்போடு காணப்பட்டு வருதல். அமிழ்தம் உண்டார் சாவாது நிலைபெறுதலின், உலகத்தை நிலைபெறுத்துகின்ற வானை அமிழ்தமென்று உணர்க என்றார்.

---

1. எச்சத்திரிபு; வழங்கி என்னும் வினை பிற வினைமுதல்வினையாதலின் எச்சத்திரிபு ஆயிற்று; நிற்ப என்று இருப்பின் வெண்டளை பிறழும்.

2. 'காரண காரியத் தொடர்ச்சியாய்க் கரை இன்றி வருதலின்' (10, உரை) என்று முன்பும் கூறினார்.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** உலகம்—உலகநடை. இஃது அறம் பொருள் இன்பங்களை உண்டாக்குதலானும், பலவகைப்பட்ட உணவுகளை நிலைநிறுத்தலானும் இம் மழையினை மற்றுள்ள பூத மாத்திரமாக[1] நினைக்கப்படாதென்ற நிலைமை கூறிற்று.

**காளிங்கர்,** இதனை இவ் வதிகாரத்தில் பத்தாவது குறளாகக் கொண்டு அடுத்த அதிகாரத்திற்கு இயைபு கூறுகிறார். 'இனி, மற்று இக்கடவுள் வணக்கமும் வான் சிறப்பும், துறவறம், இல்லறம் முதலாகிய எனைத் தொழுக்கத்திற்கும் இன்றியமையாப் பண்பினவாகலின் இவற்றின் பின்னர் அவ்விருவகை ஒழுக்கத்திற்கும் தொகைநிலைப்பாயிரம் உணர்த்துகின்றார். ஆகலான், அவற்றுள் முன்னர் அவ்வீட்டு நெறிக்கு இயல்பாகிய துறவு நெறிப்பாயிரம் அறிவிக்கின்றது, மேலை அதிகாரம் முற்றும்.'

**எல்லிஸ் துரை,** மழையையே உண்மை அமிழ்தமாகக் கொள்ள வேண்டும்; வேறு அமிழ்தம் இல்லை என்பது திருவள்ளுவர் கொள்கையாக இருக்கும் என்பர்.

### மேற்கோள் விளக்கம்

வானின்று என்பதை, ஐந்தாம் வேற்றுமை உருபாகிய 'நின்று' என்பதனை ஏற்ற சொல்லாகக் கொண்டனர் **வீரசோழிய** உரை ஆசிரியர். (சூ. 35.)

### ஒப்புமை

1. **வானால் உலகம் வழங்கி வருதல்:**

"பெய்தவன் பெருமழை உலகம் உய்யச்
செய்தவன்" (சம்பந்தர். திருவல்லம், 4.)

2. **வான் அமிழ்தம்:**

"அமிழ்துதிகழ் கருவிய கணமழை." (பதிற். 17: 11.) (11)

## 12

துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉம் மழை. 2

**பரிமேலழகர்:** துப்பார்க்குத் துப்பு ஆய துப்பு[2] ஆக்கி - உண்பார்க்கு நல்ல உணவுகளை உளவாக்கி, துப்பார்க்குத் துப்பு ஆயதூஉம் மழை - அவற்றை உண்கின்றார்க்குத் தானும் உணவாய் நிற்பதூஉம் மழை.

தானும் உணவாதலாவது தண்ணீராய் உண்ணப்படுதல். சிறப்புடைய உயர்திணைமேல் வைத்துக் கூறினமையின், அஃறிணைக்கும் இஃது ஒக்கும்.[3]

இவ்வாறு உயிர்களது பசியையும் நீர்வேட்கையையும் நீக்குதலின், அவை வழங்கி வருதலுடைய ஆயின என்பதாம்.

### உரை வேறுபாடு

**பரிதியார்:** உண்பாற்கு வேண்டின உணவை உண்டாக்குவதும், வலியாற்கு[4] வலி[5] உண்டாக்குவதும் மழை.

---

1. பூதம் - ஐம்பூதங்கள்.
2. துப்பு - நன்மை, உணவு.
3. இஃது உபலட்சணம்; 'மெலியாரெனச் சிறப்புடைய உயர்திணைமேல் கூறினாராயினும் ஏனை அஃறிணையும் கொள்ளப்படும்' (குறள், 250, பரிமேல்.)
4. 'துப்பாற்கு' என்பது இவர் பாடம் போலும்.
5. துப்பு - வலி என்று கொண்டார்.

**காளிங்கர்:** உண்பவர் யாவர்க்கும் உணவுப் பொருளாய், இன்னும் அவற்றை உளவாக உறுதி பண்ணிக் கொடுப்பதூஉம் செய்து.

### ஒப்புமை

**மழை உணவாதல்:**

"உணவெனப் படுவது நிலத்தொடு நீரே"
"நெல்லும் நீரும் எல்லார்க்கும் எளிய"
"இருமருந்து விளைக்கும் நன்னாட்டுப் பொருநன்"
"நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே."

(**புறநா.** 18: 21, 58: 10, 70: 9, 186: 1.)

### குறிப்பு

**துப்பார்** - உண்பார்; இது து என்ற வினையடியாகப் பிறந்த வினையாலணையும் பெயர்; து - உண். *(12)*

## 13

**விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்**
**துண்ணின் றுடற்றும் பசி.** 3

**பரிமேலழகர்:** விண் இன்று[1] பொய்ப்பின்—மழை வேண்டும் காலத்துப் பெய்யாது பொய்க்குமாயின், விரிநீர் வியன் உலகத்துள்—கடலாற் சூழப்பட்ட அகன்ற உலகத்தின்கண், நின்று உடற்றும் பசி—நிலைபெற்று உயிர்களை வருத்தும் பசி.

கடல் உடைத்தாயினும் அதனால் பயன் இல்லை[2] என்பார், 'விரிநீர் வியன் உலகத்து' என்றார். உணவின்மையின், பசியால் உயிர்கள் இறக்கும் என்பதாம்.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** வானமானது நிலை நிற்கப்[3] பொய்க்குமாயின்...... பொய்த்தல்-தன் தொழில் மறுத்தல். பசி என்று பொதுப்படக்கூறியவதனால் மக்களும் விலங்கும் பொருளும் காமமும் துய்க்கலாற்றாது துன்பமுறும் என்று கூறிற்று.

**பரிதியார்:** விண்ணின்று பொய்ப்பின்—கார்காலத்தில் மழை பொழியாவிடில்.

**காளிங்கர்:** விண்ணின்று பொய்ப்பின்—மழையானது நெடிதாக வறம் கூர்ந்து தப்புமாயின், உடற்றும் பசி-சுடுதலைச் செய்யும் பசியாகிய தீ.

**எல்லிஸ்:** நின்று - கடலிற் சென்று நீரை முகத்தல் முதலிய செயல்களை ஒழிந்து நின்று.

### ஒப்புமை

**முற்றும்:**

"............வானம்
துளிமாறு பொழுதினில் உலகம் போலும்"
"வறந்தெற மாற்றிய வானமும் போலும்" (**கலி.** 25: 27-8, 146: 14.)
"மன்னுயிர் மடிந்த மழைமா றமையம்" (**அகநா.** *31: 4.*)
"மாரிவளம் பொய்ப்பின் ஊர்க்கின்னா" (**இன்னா.** *21.*)
"புயல்மறந்து மீன்சனிபுக் கூன்சலிக்கும் காலம்."
(**சம்பந்தர்.** கழுமலம், *3.*)

---

1. இன்றி என்பது செய்யுளில் இன்று என நின்றது.
2. "உவர்க்கடல் அன்ன செல்வரும் உளரே" (**தனிப்பாடல்.**)
3. விண் நின்று என்று பிரித்துப் பொருள் கொண்டார்.

குறிப்பு

வியனுலகத்துள் நின்று என்று வகையுளியாகக் கொள்ளாமல், வியனுலகத்து உள் நின்று என்று பிரித்து, வியனுலகத்தில் உயிர்க் கூட்டத்தினுள் நின்று என்று பொருள் கொள்வது சிறப்பு. *(13)*

**14**

ஏரின் உழாஅர் உழவர் புயல்என்னும்
வாரி வளம்குன்றிக் கால். 4

**பரிமேலழகர் :** உழவர் ஏரின் உழாஅர் - உழவர் ஏரான் உழுதலைச் செய்யார், புயல் என்னும் வாரி வளம் குன்றிக்கால் - மழையென்னும் வருவாய் தன் பயன் குன்றின்.

'குன்றியக் கால்' என்பது குறைந்து நின்றது.[1]

உணவின்மைக்குக் காரணம் கூறியவாறு.

உரை வேறுபாடு

**காளிங்கர் :** வாரிவளம் - புனல்வளம்.

ஒப்புமை

**மழையால் உழவர் உழுதல்:**

" மழைதொழில் உதவ " (மதுரைக். 10.)

" இருங்கண் ஞாலத் தீண்டுதொழில் உதவிப்
பெரும்பெயல் பொழிந்த வழிநாள் " (நற். 157 : 1-2.)

" வானமும் வேண்டா வில்லே ருழவர். " (அகநா. 193 : 2.)

குறிப்பு

உழவருடைய செயற்கை முயற்சியால் வரும் வருவாய்க்கு முதலீடு போன்றதாதலின் புயல் என்னும் வாரி என்றார். "வாரி பெருக்கி" (குறள், 512) என்று பின்னும் வருவாய் என்னும் பொருளில் வாரி என்னும் சொல்லை அமைப்பர். குன்றியக்கால் என்பது ஒரு சொல்; வினையெச்சம். *(14)*

**15**

கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை. 5

**பரிமேலழகர் :** கெடுப்பதூஉம் - பூமியின்கண் வாழ்வாரைப் பெய்யாது நின்று கெடுப்பதூஉம், கெட்டார்க்குச் சார்வாய்[2] மற்று ஆங்கே எடுப்பதூஉம் - அவ்வாறு கெட்டார்க்குத் துணையாய்ப் பெய்து முன் கெடுத்தாற் போல எடுப்பதூஉம், எல்லாம் மழை - இவையெல்லாம் வல்லது மழை.

மற்று, வினை மாற்றின்கண் வந்தது. ஆங்கென்பது மறுதலைத் தொழில் உவமத்தின்கண் வந்த உவமச் சொல்.[3] கேடும்ஆக்கமும் எய்துதற்குரியார் மக்களாதலின், கெட்டார்க்கு என்றார். எல்லாம் என்றது, அம்மக்கள் முயற்சி வேறுபாடுகளால் கெடுத்தல் எடுத்தல்கள்தாம் பலவாதல் நோக்கி. வல்லது என்பது அவாய் நிலையான் வந்தது.

மழையினது ஆற்றல் கூறியவாறு.

---

1. தொகுக்கும் வழித் தொகுத்தல்.
2. சார்வு - கருமம் அல்லாச் சார்பு (தொல். சொல். 84.)
3. கெடுப்பது, எடுப்பது என்னும் இரண்டும் ஒன்றுக்கொன்று மறுதலை ஆயினமையின் இது மறுதலை உவமம் ஆயிற்று. மறுதலை ஆயினும் மழையால் செய்யப்படும் தொழில் என்னும் பொதுத் தன்மைபற்றி உவமை ஆயிற்று.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்** : கெடுப்பதூஉம் - பெய்யாது நின்று எல்லாப் பொருளை யும் கெடுப்பதூஉம்.

**காளிங்கர்** : தான் பருவத்து வழங்காது யாவரையும் கெடுப்பதூஉம், அங்ஙனம் கெட்டார்க்குப் பின்னும் செல்சார்வாகிய உறுதுணையாய் வந்து அப்பொழுதே உற்றூர்க்கு நட்டார்போல எடுத்துக்கொண்டு பாதுகாப் பதூஉம் எல்லாம் மழை.

**கவிராஜ பண்டிதர்** : பூமியிலே வாழ்கின்றவரைத் தான் அதிகமாகப் பெய்து கெடுத்தற்கும், கெட்டபேரைத் திருப்பிப் பிழைக்கத் தக்கவராகத் தான் அளவாகப் பெய்து இரட்சித்தற்கும் வல்லது மழை.

### மேற்கோள் விளக்கம்

கெடுப்பதூஉம் என்பது குறில் நெடிலாய் அளபெழுந்து அலகு பெற் றும் பெறுதும் இன்னிசை நிரப்ப வந்தது என்பர். (**நன்னூல்**. சங்கர. 91.)

### ஒப்புமை

*முற்றும்* :

" பெயின்நந்தி வறப்பிற்சாம் புலத்திற்குப் பெயல்போல் "

(**கலித்**. 78 : 19.)

### குறிப்பு

வல்லது என்ற அவாய் நிலையின்றியே முடிக்கவும் வாய்ப்பு உண்டு. கெடுப்பது என்பதைத் தொழிற் பெயராக்காமல் வினையாலணையும் பெய ராக்கிக் கெடுக்கும் ஆற்றலுடையதும் எடுக்கும் ஆற்றலுடையதும் ஆகிய எல்லாம் மழை என்று முடிக்கலாம்.

மழை, வேண்டிய காலத்துப் பெய்யாமலும் வேண்டாத காலத்துப் பெய்தும் அளவிறந்து பெய்தும் கெடுக்கும். வேண்டிய காலத்து வேண் டிய அளவு பெய்து எடுக்கும். (15)

## 16

**விசும்பிற் றுளிவீழின் அல்லால்மற் றாங்கே**
**பசும்புல் தலைகாண் பரிது.** 6

**பரிமேலழகர்** : விசும்பின் துளிவீழின் அல்லால் - மேகத்தில் துளி வீழின் காண்பதல்லது, மற்று ஆங்கே பசும்புல் தலைகாண்பு[1] அரிது - வீழா தாயின் அப்பொழுதே பசும்புல்லினது தலையையும் காண்டல் அரிது.

விசும்பு; ஆகுபெயர். மற்று; வினைமாற்றின்கண் வந்தது. இழிவு சிறப்பும்மை[2] விகாரத்தால் தொக்கது.

ஓரறிவுயிரும் இல்லை என்பதாம்.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்** : விசும்பிற்றுளி - வானின்று துளி. ஆங்கு என்பதை அசையாக்கினும் அமையும்.

**காளிங்கர்** : ஆங்கு - இவ்விடத்து.

### ஒப்புமை

***மழையால் புல் முதலியன உளவாதல்*** :

" பயிர் காட்டும் புயல்" (**சம்பந்தர்**. திருவெண்காடு. 1.)

" பைங்கூழ்க்கு வானே யன்ன " (**பெரிய**. சண்டேச. 24.)

1. காண்பு : தொழிற் பெயர்.
2. பசும்புற்றலையும் என்னும் உம்மை.

### குறிப்பு

மழை துளி துளியாகப் பெய்தலின் அதனை இங்கே துளி யென்முர்; "பலதுளி பெருவெள்ளம்" என்னும் பழமொழியையும், "குளத்துக்கு மழை குந்தாணிபோற் பெய்யுமா?" என்பதையும் ஓர்க. (16)

## 17

நெடுங்கடலும் தன்நீர்மை குன்றும் தடிந்தெழிலி
தான்நல்கா தாகி விடின். 7

**பரிமேலழகர் :** நெடுங் கடலும் தன்நீர்மை குன்றும் - அளவு இல்லாத கடலும் தன் இயல்பு குறையும், எழிலிதான் தடிந்து நல்காதாகி விடின் - மேகந்தான் அதனைக் குறைத்து அதன்கண் பெய்யாது விடுமாயின்.

உம்மை, சிறப்பும்மை[1]. தன் இயல்பு குறைதலாவது, நீர்வாழ் உயிர்கள் பிறவாமையும் மணி[2] முதலாயின படாமையுமாம்[3]. ஈண்டுக் குறைத்தல் என்றது முகத்தலை; அது, "கடல்குறை படுத்தநீர் கல்குறைபட எறிந்து"[4] என்பதனும் அறிக. மழைக்கு முதலாய கடற்கும் மழை வேண்டும் என்பதாம்.

இவை ஏழு பாட்டானும் உலகம் நடத்தற்கு ஏதுவாதல் கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**மணக்குடவர் :** நெடுங் கடலும் - நிலமேயன்றி நெடிய கடலும்.[5] தடிந்து - மின்னி. தடிந்து என்பதற்குக் கூறுபடுத்து என்று பொருள் உரைப்பாரும் உளர்.

**பரிதியார் :** பெருமையான கடலில் சங்கு, முத்து, பவழம் பிறவா, மழை பெய்யாவிடின்.

**காளிங்கர் :** தடிந்து - பருவங்களின் வந்து பூரித்து.

**கவிராஜ பண்டிதர் :** அளவில்லாமல் இருக்கிற சமுத்திரமும், மழை பெய்யாத காலத்திலே குறைந்துபோம்; மழை பெய்தால் நிறைந்திருக்கும்.

### ஒப்புமை

1. **மழையால் கடல் வளம் பெறுதல் :**

" வேட்டம்பொய் யாது வலைவளம் சிறப்பப்
பாட்டம் பொய்யாது " (நற். 38: 1-2.)

2. **எழிலி கடலைத் தடிந்து நல்குதல்:**

" நிறையுறும் பௌவம் குறைபட முகந்துகொண்டு....
கொண்மூ...... பொழிந்தென " (குறிஞ்சி. 47-53.)

" நீண்டொலி யழுவங் குறைபட முகந்துகொண்
டீண்டுசெலற் கொண்மூ வேண்டுவயிற் குழீஇப்
பெருமலை யன்ன தோன்றல சூல்முதிர்பு
உருமுரறு கருவியொடு பெயல்கட னிறுத்து."

(புறநா. 161 : 1-4.)

### குறிப்பு

நெடுங்கடல் என்பதில் உள்ள நெடுமை ஆழத்தைக் குறித்தது; "நெடும்புனலுள் வெல்லும்" (குறள், 495) என்று பின்னும் இந் நெடுமை வரும். (17)

---

1. உயர்வு சிறப்பும்மை.
2. மணி - முத்தும் பவழமும்.
3. படாமை – உண்டாகாமை.
4. **பரிபாடல்**, 20 : 1.
5. இறந்தது தழீஇய எச்சவும்மையாகக் கொண்டார்.

## 18

சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு. 8

**பரிமேலழகர் :** வானோர்க்கும் ஈண்டுச் சிறப்பொடு பூசனை செல்லாது- தேவர்கட்கும் இவ்வுலகில் மக்களால் செய்யப்படும் விழாவொடு கூடிய பூசை நடவாது, வானம் வறக்குமேல் - மழை பெய்யாதாயின்.

நைமித்திகத்தோடு கூடிய நித்தியமாகலின், செல்லாது என்றார்.[1] உம்மை சிறப்பும்மை[2]. நித்தியத்தில் தாழ்வு தீரச் செய்வது நைமித்திகம் ஆதலின், அதனை முற்கூறினர்.

### உரை வேறுபாடு

**மணக்குடவர் :** சிறப்பு - சிறப்புச் செய்யப்படுகிற விழவு. மழை பெய்யாக்கால் வரும் குற்றம் கூறுவார் முற்பட நான்கு வகைப்பட்ட அறங்களில் பூசை கெடும் என்றார்.

**காளிங்கர் :** தேவர் மாட்டும், பிதிரர்கள் மாட்டும் விசேஷித்துச் செய்யும் கருமங்களும், இங்ஙனம் ஒன்றை நிமித்தீகரித்துச் செய்தலன்றி உயர்ந்தோர் நாடோறும் செய்து வருகின்ற நற்கருமங்களும் மற்று இவை இரண்டும் சென்று தலைப்படா, மழையானது வறந்து போமாயின், தேவர் கட்கும் இவ்விடத்தில்.

**காளிங்கர் :** வானோர்க்கும் - சுவாமிகளுக்கும் தேவர்களுக்கும்.

### ஒப்புமை

1. **சிறப்பு :**

"சென்றுகை தொழுது சிறப்புச் செய்தலின்." (மணி. 10 : 72.)

2. **முற்றும் :**

"மண்ணின்மிசை வான்பொய்த்து நதிகள் தப்பி
மன்னுயிர்கள் கண்சாம்பி உணவு மாறி
விண்ணவர்க்கும் சிறப்பில்வரும் பூசை யாற்ற
மிக்கபெரும் பசியுலகில் விரவக் கண்டு."

(பெரிய. திருஞான. 562.)

### குறிப்பு

வானோர் சிறப்புறுதல் வானத்தும் உண்டாதலின் அதனை விலக்கி ஈண்டு என்றார்.

(18)

## 19

தானம் தவம்இரண்டும் தங்கா வியனுலகம்
வானம் வழங்கா தெனின். 9

**பரிமேலழகர் :** வியல் உலகம் தானம் தவம் இரண்டும் தங்கா - அகன்ற உலகின்கண் தானமும் தவமுமாகிய இரண்டு அறமும் உளவாகா, வானம் வழங்காது எனின் - மழை பெய்யாதாயின்.

தானமாவது, அறநெறியான் வந்த பொருள்களைத் தக்கார்க்கு உவகையோடும் கொடுத்தல்.[3] தவமாவது, மனம் பொறி வழி போகாது நிற்றற்

---

1. சிறப்பும் பூசனையும் எனின் செல்லா எனப் பன்மையாக முடிய வேண்டும்; இங்கே பூசனை என்பது எழுவாய்.
2. உயர்வு சிறப்பு.
3. "தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு, வேளாண்மை செய்தற் பொருட்டு." (குறள், 212.)

பொருட்டு, விரதங்களால் உண்டிசுருக்கல் முதலாயின.[1] பெரும்பான்மை பற்றித் தானம் இல்லறத்தின் மேலும், தவம் துறவறத்தின் மேலும் நின்றன.

### உரை வேறுபாடு

**பரிதியார் :** தானம், தன்மம், தவசு உண்டாகா, பூலோகத்தில் மழை வழங்காவிடில்.

**காளிங்கர் :** வானம் வழங்காதெனின் - விண்ணுலகமானது மழையை வழங்காதாயின்.

### ஒப்புமை

**தானம் தவம் :**

" தானமும் தவமும் தாம்செயல் அரிதே
தானமும் தவமும் தாம்செய்வ ராயின்
வானவர் நாடு வழிதிறந் திடுமே " (ஔவையார்.)

### குறிப்பு

வானம் என்பது இங்கே மேகம் எனக்கொண்டு, அது மழையை வழங்காவிடின் என்று பொருள் கொள்ளுதலும் பொருந்தும். பரிமேலழகர் வழங்குதல் என்பதற்குப் பெய்தல் என்று பொருள் கொண்டார். (19)

## 20

**நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும்**
**வானின் றமையா தொழுக்கு.** 10

**பரிமேலழகர் :** யார் யார்க்கும் நீர் இன்று[2] உலகு அமையாது எனின்-எவ்வகை மேம்பாட்டார்க்கும் நீரை இன்றி உலகியல் அமையாதாயின், ஒழுக்கு வான் இன்று அமையாது - அந் நீர் இடையறாது ஒழுகும் ஒழுக்கும் வானை இன்றி அமையாது.

பொருள் இன்பங்களை உலகியல் என்றார், அவை இம்மைக் கண்ணவாகலின். இடையறாது ஒழுகுதல், எக்காலத்தும் எவ்விடத்தும் உளதாகல். நீர் இன்று அமையாது உலகு என்பது எல்லாரானும் தெளியப்படுதலின், அதுபோல ஒழுக்கும் வானின்று அமையாமை தெளியப்படும் என்பார், நீர் இன்று அமையாது உலகு எனின் என்றார். இதனை நீரையின்றி அமையாது உலகாயின், எத்திறத்தார்க்கும் மழையையின்றி ஒழுக்கம் நிரம்பாதென உரைப்பாரும் உளர்.

இவை மூன்று பாட்டானும் அறம் பொருள் இன்பங்கள் நடத்தற்கு ஏதுவாதல் கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**மணக்குடவர் :** ஒழுக்கு - ஒழுக்கம், விரதம். இஃது ஆசாரம் கெடும் என்றது.

**பரிதியார் :** சர்வான்மாக்களுக்கும் செல்வம் இன்றியே உலகியல் நடவாததலால், மழையின்றி ஒரு காரணம் இல்லை.

**காளிங்கர் :** யார் யார்க்கும் - உயர்ந்தோர் யாவர்க்கும், இழிந்தோர் யாவர்க்கும். ஒழுக்கு - அவரவர் ஒழுகும் ஒழுக்கு.

---

1. தவம் என்னும் அதிகாரத்தின் அவதாரிகையில் இதனை விரிவாகக் கூறுவார்; "ஓவா திரண்டுவவும் அட்டமியும் பட்டினிவிட் டொழுக்கம் காத்தல், தாவாத் தவம்." (சீவக. 1547.)

2. இன்று - இன்றி.

ஒப்புமை

*நீரின் றமையாது உலகு :*

*" நீரின் றமையா உலகம் போல "* (*நற். 1 : 6.*)
*" நீரின் றமையா யாக்கைக் கெல்லாம் "* (*புறநா. 18 : 18.*)
*" மழையின்றி மாநிலத்தார்க் கில்லை. "* (*நான்மணி. 47.*)

(*20*)

# 3. நீத்தார் பெருமை

**பரிமேலழகர்:** நீத்தார் பெருமை என்பது முற்றத் துறந்த முனிவரது பெருமை கூறுதல்; அவ்வற முதற் பொருள்களை உலகிற்கு உள்ளவாறு உணர்த்துவார் அவராகலின், இது வான் சிறப்பின்பின் வைக்கப்பட்டது.

**மணக்குடவர்:** நீத்தார் பெருமையாவது, துறந்த முனிவரது பெருமையைக் கூறல். இது கடவுளை வணங்கினாற்போல் முனிவரையும் வணங்க வேண்டும் என்பதனானும், அவர் அதை அடக்கத் தக்கவர் என்ற கருத்தினானும் அவையிற்றின்பிற் கூறப்பட்டது.

**பரிதியார்:** நீத்தார் பெருமையாவது விரும்பார் செயம் என்றறிக.

## 21

**ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
வேண்டும் பனுவல் துணிவு.** 1

**பரிமேலழகர்:** ஒழுக்கத்து நீத்தார் பெருமை—தமக்குரிய ஒழுக்கத்தின் கண்ணே நின்று துறந்தாரது பெருமையை, விழுப்பத்து வேண்டும் பனுவல் துணிவு—விழுமிய பொருள்கள் பலவற்றுள்ளும் இதுவே விழுமிது என விரும்பும் நூல்களது துணிவு.

தமக்கு உரிய ஒழுக்கத்தின்கண்ணே நின்று துறத்தலாவது: தத்தம் வருணத்திற்கும் நிலைக்கும்[1] உரிய ஒழுக்கங்களை வழுவாது ஒழுக அறம் வளரும்; அறம் வளரப் பாவம் தேயும்;[2] பாவம் தேய அறியாமை நீங்கும்; அறியாமை நீங்க நித்த அநித்தங்களது வேறுபாட்டு உணர்வும் அழிதல் மாலையவாய இம்மை மறுமை இன்பங்களில் உவர்ப்பும் பிறவித் துன்பங்களும் தோன்றும்; அவை தோன்ற வீட்டின்கண் ஆசை உண்டாம்; அஃது உண்டாகப் பிறவிக்குக் காரணமாகிய பயனில் முயற்சிகள் எல்லாம் நீங்கி வீட்டிற்குக் காரணமாகிய யோக முயற்சி உண்டாம்;[3] அஃது உண்டாக மெய்யுணர்வு பிறந்து புறப்பற்றாகிய எனது என்பதும், அகப்பற்றாகிய யான்

---

1. நிலை—ஆசிரமம்.

2. "அல்லவை தேய அறம்பெருகும்" (**குறள்**, 96) என்னுமிடத்து, 'தேய்தல், தன் பகையாகிய அறம் வளர்தலின் தனக்கு நிலை இன்றி மெலிதல்' என்று உரைத்தார்.

3. நித்த அநித்தங்களது வேறுபாட்டு உணர்வு, இம்மை மறுமை இன்பங்களில் உவர்ப்பு, வீட்டின்கண் ஆசை, யோக முயற்சி என்பவை சாதன சதுட்டயம் எனப்படும். அவற்றை முறையே நித்தியா நித்திய வஸ்து விவேகம், இகாமுத்திரார்த்த பலபோக விராகம், முமூட்சுத்துவம், சமாதிசட்க சம்பத்து என்று கூறுவர் வடநூலார்; "நித்திய அநித்தி யங்கள் நிண்ணயம் தெரிவி வேகம், மத்திய இகபரங்கள் வருபோகங் களில்நி ராசை, சத்தியம் உரைக்க வேண்டும் சமாதியென் றாறு கூட்டம், முத்தியை விரும்பும் இச்சை மொழிவர்சா தனமிந் நான்கே" (**கைவல்ய. தத்துவ.** 8.)

என்பதும்[1] விடும்; ஆகலான் இவ்விரண்டு பற்றையும் இம்முறையே உவர்த்து விடுதல்[2] எனக் கொள்க. பனுவல் எனப் பொதுப்படக் கூறியவதனன், ஒன்றை ஒன்று ஒவ்வாத சமய நூல்கள் எல்லாவற்றிற்கும்[3] இஃது ஒத்த துணிவென்பது பெற்றும். செய்தாரது துணிவு பனுவல்மேல் ஏற்றப்பட்டது.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** ஒழுக்கத்தின் பொருட்டு எல்லாப் பொருளையும் துறந்தாரது பெருமையை நூல்களின் துணிவு விழுப்பத்தின் பொருட்டு வேண்டும்.

யாதானும் ஒரு பொய்யைச் சொல்லும் நூலும் தன்னை எல்லோரும் கொண்டாடுதற்காகத் துறந்தார் பெருமையை நன்கு மதித்துக் கூறும். அதனுனே யானும் சொல்கின்றேன் என்பது.

**பரிதியார்:** ஐம்புலன்களை அடக்கின ஒழுக்கத்திஞேர்க்குப் பெருமை எங்கே என்னில், தாங்கள் கற்ற சாத்திரத்தின் பெருமையினுல்.

**காளிங்கர்:** தாம் முன்னம் ஒழுகிய ஒழுக்கத்தினைப் பின்பு துறவு நெறி சொல்லுகின்ற ஒழுக்கத்தின்கண்ணே தாற்பரித்துவிட்டு நீங்கினுர் யாவர் சிலர், அவரது பெருந்தன்மைச் சிறப்பின் மாட்டே விரும்பி நின்றது, மறை முதலாகிய எல்லா நூல்களினும் ஆராய்ந்து துணிந்து நின்ற துணிவு நிலை.

**வேறு:** விழுப்பத்து என்பதற்கு மேலான பத்துத் தர்மங்கள் என்று கூறுவது கர்ண பரம்பரையான ஜைன உரை என்பர். அந்தப் பத்தாவன: தனக்குத் துன்பம் செய்தாரைப் பொறுத்து அவர் நன்மை அடையும்படி அறவுரை கூறும் உத்தம க்ஷமை, செருக்கின்றி வணக்கம் உடையவனுய் அனைத்துயிர்களிடத்தும் நடுநிலை உள்ளத்தோடு இருத்தலாகிய உத்தம மார்த்தவம், உள்ளும் புறமும் மேம்பட்ட பரிணுமத்தோடு இருத்தலாகிய உத்தம ஆர்ஜவம், உயிர்களுக்கு உறுதி பயக்கும் உண்மை மொழிகளையே பேசுதலாகிய உத்தம சத்தியம், மேன்மையான தூய அற இயல்பாகிய உத்தம சௌசம், அறுவகைப் பொறிவழிப் படர்ச்சி நீங்கி அறுவகைக் காயங்களை உடைய சீவர்களைத் தயவோடு உபசரித்தல் ஆகிய உத்தம சம்யமம், பன்னிரு வகைத் தவமாகிய உத்தம தபசு, எவ்வகை ஈட்டலின் மேலும் பற்றின்றித் துறப்பதாகிய உத்தம ஆகிஞ்சன்யம், பரமாகமங்களை விளக்கும் ஆற்றலாகிய உத்தமத் தியாகம், மகளிரைத் துதித்தலும் அவர்களை விரும்பிப் பார்த்தலும் அவர்களுடன் நகைத்தலும் ஆகியவற்றினின்றும் நீங்கித் தூய மனத்தோடு இருத்தலாகிய உத்தமப் பிரம்மசரியம் என்பவை. (**கவிராஜ பண்டிதர்** உரை, பதிப்பாசிரியரின் விளக்கவுரை.) (21)

## 22

துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்
திறந்தாரை எண்ணிக்கொண் டற்று. 2

**பரிமேலழகர்:** துறந்தார் பெருமை துணைக்[4] கூறின் - இருவகைப் பற்றினையும் விட்டாரது பெருமையை இவ்வளவு என்று எண்ணுல் கூறி அறியலுறின் அளவுபடாமையான், வையத்து இறந்தாரை எண்ணிக்கொண்டற்று-

1. "யானென தென்னும் செருக்கு" (**குறள்**, 346.)

2. உவர்த்து விடுதல்—வெறுத்து விடுதல்.

3. "பல்லாற்ருல் தேறினும்" (**குறள்**, 242) என்னுமிடத்தும், 'ஒன்றை ஒன்று ஒவ்வாத சமய நெறிகள் எல்லாவற்ருனும் ஆராய்ந்தாலும்' என்று உரை கூறினர்.

4. துணை-அளவு; "விருந்தின் துணைத்துணை" (**குறள்**, 87) என்னும் இடத்தும் அளவு என்னும் பொருளில் வந்தது.

இவ்வுலகத்துப் பிறந்து இறந்தாரை எண்ணி இத்துணையர் என அறிய லுற்றாற் போலும்.

முடியாதென்பதாம். கொண்டால் என்னும் வினையெச்சம் கொண்டு எனத் திரிந்து நின்றது.[1]

### உரை வேறுபாடு

**மணக்குடவர் :** துறந்தார் - காமம் முதலாகத் துறந்தார். இது பெருமைக்கு எல்லை கூறுதல் அரிதாயினும் சில சொல்லப் புகா நின்றேன் என்றது கருதிற்று.

**பரிதியார் :** காமக் குரோத லோப மோக மத மாச்சரியங்களையும் துறந்த பேருக்கு உவமை கூறில், பூமியில் இறந்த சனம் எத்தனை உண்டு, அத்தனை அறிந்தால் அவர்கள் பெருமை அறியலாம்.

**காளிங்கர் :** இறந்தாரை - துறவாதாராகப் பிறந்து இறந்தாரை.

### ஒப்புமை

*1.* **துறப்பதன் பெருமை :**

"வையமும் தவமும் தூக்கிற் றவத்துக்
கையவி அனைத்தும் ஆற்று தாகலின்
கைவிட் டனரே காதலர்" (புறநா. 358 : 3-5.)

2. **வையத்து இறந்தார் :**

"திரையிடு மணலினும் பலரே உரைசெல
மலர்தலை உலகம் ஆண்டுகழிந் தோரே" (மதுரைக். 236.-7.)

"நினைப்பான் புகில்கடல் எக்கரின் நுண்மணலி் பலர்
எனைத்தோ ருகங்களும் இவ்வுல காண்டு கழிந்தனர்"
(திருவாய்மொழி, 4. 1 : 4.)

"இறந்தனர் இறந்த காலத் தெண்ணிறந் தனர்கள் எல்லாம்."
(யசோதர. 36.) (22)

## 23

**இருமை வகைதெரிந் தீண்டறம் பூண்டார்
பெருமை பிறங்கிற் றுலகு. 3**

**பரிமேலழகர் :** இருமை வகை தெரிந்து-பிறப்பு வீடு என்னும் இரண்டனது துன்ப இன்பக் கூறுபாடுகளை ஆராய்ந்து அறிந்து, ஈண்டு அறம் பூண்டார் பெருமை-அப்பிறப்பு அறுத்தற்கு இப்பிறப்பின்கண் துறவறத்தைப் பூண்டாரது பெருமையே, உலகு பிறங்கிற்று-உலகின்கண் உயர்ந்தது.

"தெரிமாண் தமிழ்மும்மைத் தென்னம் பொருப்பன்"[2] என்புழிப்போல 'இருமை' என்றது ஈண்டு எண்ணின்கண் நின்றது.[3] பிரிநிலை ஏகாரம் விகாரத்தால் தொக்கது.[4] இதனால் திகிரி உருட்டி உலக முழுதாண்ட அரசர் முதலாயினார் பெருமை பிரிக்கப்பட்டது.

இவை மூன்று பாட்டானும் நீத்தார் பெருமையே எல்லாப் பெருமையினும் மிக்கதென்பது கூறப்பட்டது.

---

1. கொண்டாலற்று என்பது கொண்டற்று என நின்றது.

2. பரிபாடல் போலும்.

3. இருமை என்பதற்கு இரண்டாம் தன்மை என்பது பொருள்; இங்கே இரண்டு என்னும் பொருளில் வந்தது.

4. பெருமையே என்னும் ஏகாரம்.

### உரை வேறுபாடு

**பரிதியார்:** புண்ணிய பாவத்தின் வழி அறிந்து தன்மத்தின் வழி நின்றார் பெருமையினால் உலகம் விளங்கும்.

**காளிங்கர்:** கீழ்ச் சொன்ன பரிசே இம்மை மறுமை இரண்டினது குற்றத் தன்மையைத் தெரிந்து, மிக்கிருந்துள்ள அறப்பயனாகிய வீட்டின்பத்தை மேவியுள்ளாரது பெருந்தன்மையையே மிகுத்துக்கூறியது இவ்வுலகம்.

**கவிராஜ பண்டிதர்:** இருமை-சம்சாரம், மோக்ஷம்.

### ஒப்புமை

இருமை வகை தெரிந்தவர்:
"இருமை நோக்குறும் சான்றவர் குழாம்" (கம்ப. கிளைகண்டு. 82.)

## 24

**உரன்என்னும் தோட்டியான் ஓர்ஐந்தும் காப்பான்**
**வரன்என்னும் வைப்பிற்கோர் வித்து.** 4

**பரிமேலழகர்:** உரன் என்னும் தோட்டியான்[1] ஓர் ஐந்தும் காப்பான்-திண்மை யென்னும் தோட்டியால் பொறிகளாகிய யானை ஐந்தனையும் தத்தம் புலன்கள்மேற் செல்லாமல் காப்பான், வரன் என்னும் வைப்பிற்கு ஓர் வித்து-எல்லா நிலத்தினும் மிக்கது என்று சொல்லப்படும் வீட்டு நிலத்திற்கு ஓர் வித்தாம்.

இஃது ஏகதேச உருவகம்.[2] திண்மை, ஈண்டு அறிவின்மேற்று.[3] அந்நிலத்திற் சென்று முளைத்தலின், வித்து என்றார். ஈண்டுப் பிறந்து இறந்து வரும் மகன் அல்லன் என்பதாம்.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** அறிவாகிய தோட்டியானே பொறியாகிய யானை ஐந்தனையும் புலன்களிற் செல்லாமல் மீட்பவன், மேலாகிய இடத்தே ஆதற்கு இவ்விடத்தே இருப்பது ஒரு வித்து.

பெருமை சொல்லுவார், முற்பட மக்கள் தன்மையனாய் இவ்வுலகின் கண் வாழ்பவன் அல்லன், தேவருள் ஒருவன் என்று கூறினார்.

**காளிங்கர்:** ஒரு வழிப்பட்ட சித்தத்தின் அறிவென்னும் அங்குசத்தினால் தமது நெறிக்கு மிகைபடு பொறிகளிற் பரவாமை, ஐவகைப்பட்ட மெய் வாய் கண் மூக்குச் செவி என்கின்ற ஐம்புலன்களையும் பாதுகாத்து அடக்கி ஒழுகுவான் யாவனொருவன், அவனே முத்தி என்கின்ற முடிந்த நிலத்திற்கு முதற்காரணமாவான்.

**கவிராஜ பண்டிதர்:** உரன் என்னும் தோட்டி-மனம் என்னும் பலம்.

### மேற்கோள் விளக்கம்

இது முனிவரை வாழ்த்தியது. (தொல். செய்யுள். 109, நச்.)

---

1. தோட்டி—அங்குசம்.

2. உரன் என்னும் தோட்டி என்பதற்கு ஏற்ப, ஐந்து என்னும் யானை என்று கூறாமையின் ஏகதேச உருவகம் ஆயிற்று.

3. "உரம்ஒருவற்கு உள்ள வெறுக்கை" (600) என்னுமிடத்து 'உரம் என்பது அறிவாதல், "உரன்என்னும் தோட்டியான்" என்பதனாலும் அறிக' என்பர் பின். உரம் அறிவாதல், "உரவோர் உரவோ ராக, மடவ மாக மடந்தை நாமே" (குறுந். 20: 3–4), "உரவோர் எண்ணினும் மடவோர் எண்ணினும்" (பதிற். 73: 1) என்பவற்றாலும் பெறப்படும்.

ஒப்புமை

1. வரன் என்னும் வைப்பிற்கு வித்து :

"மறுமைக்கு வித்து" (நாலடி. 183.)

2. முற்றும்:

"மெய்வாய்கண் மூக்குச் செவியெனப் பேர்பெற்ற
ஐவாய வேட்கை அவாவினைக்-கைவாய்க்
கலங்காமல் காத்துய்க்கும் ஆற்ற லுடையான்
விலங்காது வீடு பெறும்" (நாலடி. 59.)

"தொண்டர் அஞ்சு களிறு மடக்கி" (சம்பந்தர். கேதாரம், 1.)

"முழுக்கி யெழுவன மும்மத வேழம்
அடக்க அறிவெனும் தோட்டியை வைத்தேன்." (திருமந். 2034.)

குறிப்பு

இம்மை, மறுமை, வீடு என்ற மூன்றிலும் உயர்ந்தது வீடாதலின் அதனை வரனென்னும் வைப்பு என்றார். "வானோர்க் குயர்ந்த உலகம்" (346) என்று கூறுதல் காண்க. (24)

## 25

ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்பு ளார்கோமான்
இந்திரனே சாலும் கரி. 5

**பரிமேலழகர்:** ஐந்து அவித்தான் ஆற்றல்-புலன்களில் செல்கின்ற அவா ஐந்தினையும் அடக்கினனது வலிக்கு, அகல் விசும்பு உளார் கோமான் இந்திரனே சாலும் கரி-அகன்ற வானத்து உள்ளார் இறைவனாகிய இந்திரனே அமையும் சான்று.

ஐந்தும் என்னும் முற்றும்மையும் ஆற்றற்கு என்னும் நான்கனுருபும் செய்யுள் விகாரத்தால் தொக்கன. தான் ஐந்து அவியாது சாபம் எய்தி நின்று அவித்தானது ஆற்றல் உணர்த்தினமையின்,[1] இந்திரனே சாலும் கரி என்றார்.

உரை வேறுபாடு

**மணக்குடவர்:** ஐந்து-நுகர்ச்சியாகிய ஐந்து. இந்திரன் சான்று என்றது இவ்வுலகின்கண் மிகத் தவம்செய்வார் உளரானால், அவன் தன் பதம் இழக்கின்றானாக நடுங்குமாதலான். இது தேவரினும் வலியன் என்றவாறு.

**காளிங்கர்:** மற்றிது என் சொல்லியவாறோ எனின், ஈண்டுத் தன் பதம் கருதித்தவம் செய்யும் நீத்தார் மாட்டுத் திலோத்தமை முதலிய தெய்வ மகளிரை விடுத்து, மற்று அத்தவம் அழித்து, தவம் அழியாமை நிலை நிற்கையாலும், தனது பதம் விரும்பாமையாலும் தானே சான்றாய் அமையும்.

**கவிராஜ பண்டிதர்:** ஐம்புலன்களையும் ஆசையின் வழியே போகாமல் அடக்கின ஜினனுடைய பெருமைக்கு.

ஒப்புமை

1. ஐந்தவித்தல்:

குறள், 6.

2. ஐந்தவித்தான்:

"ஐந்து புலங்களைக் கட்டவர் போற்ற"

(சம்பந்தர். திருப்புகலியும் திருவீழிமிழலையும், 8.)

---

1. இந்திரனைக் கௌதம முனிவர் சபித்த வரலாற்றை நினைந்தது.

**26**

**செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்**
**செயற்கரிய செய்கலா தார்.** 6

**பரிமேலழகர்:** செயற்கு அரிய செய்வார் பெரியர்-ஒத்த பிறப்பின ராய மக்களுள்[1] செய்தற்கு எளியவற்றைச் செய்யாது அரியவற்றைச் செய் வார் பெரியர்; செயற்கு அரிய செய்கலாதார் சிறியர்-அவ்வெளியவற்றைச் செய்து அரியவற்றைச் செய்ய மாட்டாதார் சிறியர்.

செயற்கு எளியவாவன மனம் வேண்டியவாறே அதனைப் பொறிவழி களால் புலன்களில் செலுத்தலும், வெஃகலும், வெகுடலும் முதலாயின. செயற்கு அரியவாவன இயமம் நியமம் முதலாய எண்வகை யோக உறுப்புக் கள்.[2] நீரில் பலகால் மூழ்கல் முதலாய நாலிரு வழக்கில் தாபத பக்கம்[3] என் பாரும் உளர்; அவை நியமத்துள்ளே அடங்கலின், நீத்தாரது பெருமைக்கு ஏலாமை அறிக.

**உரை வேறுபாடு**

**மணக்குடவர்:** சிறியர்-துறந்தாராயினும் சிறியோர். இவ்வதிகாரம் நீத்தார் பெருமை என்று கூறப்பட்டதாயினும், துறந்த மாத்திரத்தானே பெரியர் என்று கொள்ளப்படார், செயற்கு அரியன செய்வாரே பெரியர் என்று கொள்ளப்படுவர் என்று இது கூறிற்று.

**பரிதியார்:** ஒருவரானும் செயற்கரிய துறவறத்தைச் செய்வார் பெரியர்; சிறியவர், செய்யும் தொழிலாகிய இல்லறமும் செய்ய அறியார்.

**காளிங்கர்:** செயற்கரிய—யாவரானும் செய்தற்கரியவாகிய தவ நெறித் திறத்தை.

**கவிராஜ பண்டிதர்:** மனுஷ ஜன்மத்திலே பிறந்தும் செய்கிறதற்கு அருமையாய் இருக்கிற தானம், தருமம், விரதம், தபசு இவைகளைச் செய் கிறவர்கள் பெரியோர்; தானம் முதலியன செய்யாதவர்களும் எளியவாகிய சமுசார காரியங்களைச் செய்கிறவர்களும் சிறியர்.

செயற்கு அரியன, உட்பற்று, புறப்பற்று ஆகிய இருவகைத் தொடர்பாடுகளையும் நீக்கி, நற்சாட்சி, நன்ஞானம், நல்லொழுக்கம் ஆகிய வீட்டு நெறியில் பொருந்தி, முற்றும் துறந்த முனிவர்களுடைய தவ ஒழுக் கத்தைச் சிறிதும் பழுதின்றி அனுட்டித்தல்.

**ஒப்புமை**

**செயற்கரிய செய்வார்:**

"செயற்கரும் செய்கை செய்த தீரனே ஓலம் என்றான்"

(பெரிய. இயற்பகை. 29.) (26)

**27**

**சுவைஒளி ஊறோசை நாற்றமென் றைந்தின்**
**வகைதெரிவான் கட்டே உலகு.** 7

**பரிமேலழகர்:** சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்ற ஐந்தின் வகை-சுவையும் ஒளியும் ஊறும் ஓசையும் நாற்றமும் என்று சொல்லப்பட்ட

1. "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" (குறள், 972.)

2. இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை தியானம், சமாதி.

3. தொல். புறத்திணை. 20.

தன்மாத்திரைகள் ஐந்தனது கூறுபாட்டையும், தெரிவான் கட்டே உலகு- ஆராய்வான் அறிவின்கண்ணதே உலகம்.

அவற்றின் கூறுபாடாவன: பூதங்கட்கு முதலாகிய அவைதாம் ஐந்தும், அவற்றின்கண் தோன்றிய அப்பூதங்கள் ஐந்தும், அவற்றின் கூறாகிய ஞானேந்திரியங்கள் ஐந்தும், கன்மேந்திரியங்கள் ஐந்துமாக இருபதுமாம். வகைதெரிவான் கட்டென உடம்பொடு புணர்த்ததனால்,[1] தெரிகின்ற புருடனும் அவன் தெரிதற் கருவியாகிய மான்[2] அகங்கார மனங்களும் அவற்றிற்கு முதலாகிய மூலப்பகுதியும் பெற்றாம்.[3] தத்துவம் இருபத்தைந்தனையும் தெரிதலாவது, மூலப் பகுதி ஒன்றில் தோன்றியது அன்மையில் பகுதியே ஆவது அல்லது விகுதியாகாது எனவும், அதன்கண் தோன்றிய மானும் அதன்கண் தோன்றிய அகங்காரமும் அதன்கண் தோன்றிய தன்மாத்திரைகளுமாகிய ஏழும் தத்தமக்கு முதலாயவற்றை நோக்க விகுதியாதலும், தங்கண் தோன்றுவனவற்றை நோக்கப் பகுதியாதலும் உடையவெனவும், அவற்றின்கண் தோன்றிய மனமும் ஞானேந்திரியங்களும் கன்மேந்திரியங்களும் பூதங்களுமாகிய பதினாறும் தங்கண் தோன்றுவன இன்மையின் விகுதியேயாவது அல்லது பகுதியாகா எனவும், புருடன் தான்ஒன்றில் தோன்றாமையானும் தன்கண் தோன்றுவன இன்மையானும் இரண்டும் அல்லன் எனவும் சாங்கிய நூலுள் ஓதியவாற்றான் ஆராய்தல். இவ்விருபத்தைந்தும் அல்லது உலகெனப் பிறிதொன்று இல்லையென உலகினது உண்மை அறிதலின், அவன் அறிவின்கண்ண தாயிற்று.

இவை நான்கு பாட்டானும் பெருமைக்கு ஏது, ஐந்து அவித்தலும் யோகப் பயிற்சியும் தத்துவ உணர்வும் என்பது கூறப்பட்டது.

## உரை வேறுபாடு

**மணக்குடவர்**: எனவே இவற்றின் காரியம் வேறொன்றாகத் தோன்றுமன்றே; அதனை அவ்வாறு கூறுபடுத்துக் காணக் காரணம் தோன்றுமாதலால், காரியமான உலகம் அறிவான்கண்ணதாம் என்றவாறாயிற்று.

**பரிதியார்**: ஐம்புலன் வழியே மனசு போகாமல் காக்கும் அவர்களிடத்திலேயே பெரியோர் இருப்பர்.

**கவிராஜ பண்டிதர்**: ஐம்புலன்களின் வகை தெரிதலாவது: வாயினால் தேன், கள்; சாராயம், மாம்ஸம் முதலானவைகளைப் புசியாமல் நல்ல வஸ்துக்களைப் புசிக்க வேண்டும். கண்களினால் பரஸ்திரீ பரதனங்கள் முதலான பாபத்திற்குக் காரணமானவைகளைப் பாராமல், புண்ணியத்திற்குக் காரணமான தேவ பூஜை முனீசுவரர் முதலானவர்களைப் பார்க்கவேண்டும். கை கால்களினால் பாபத்திற்குக் காரணமான காரியங்களைச் செய்யாமல், புண்ணியத்திற்குக் காரணமான காரியங்களைச் செய்ய வேண்டும். காதுகளினாலே பாபத்துக்குக் காரணமான வார்த்தை, விகதை[4] முதலானவைகளைக் கேளாமல் புண்ணியத்திற்குக் காரணமான வார்த்தைகளையும், தர்மகதை முதலானவைகளையும், சுவாமி பேரிலே ஸ்தோத்திரங்களையும் கேட்க வேண்டும். மூக்கினாலே தெய்வ யோக்கியமான சுகந்தத்தை அறிய

---

1. வகைதெரிவானாகிய ஒருவன் என்று கூட்டாமல், அதனைப் புலப்பட வைத்தமையின் உடம்பொடு புணர்த்தலாயிற்று; உடம்பொடு புணர்த்தல் என்பது ஓர் உத்தி; இதனை உடம்படுபுணர்த்தல் என்றும் கூறுவர்.

2. மகத்தத்துவம்.

3. "பொங்கைம் புலனும் பொறிஐந்தும் கருமேந் திரியம் ஐம்பூதம், இங்கிவ் வுயிரேய் பிரகிருதி மானாங் கார மனங்களே" (**திருவாய்மொழி** 10. 7: 10.)

4. விகதை - தீய கதை.

வேண்டும்; துர்க்கந்தங்களை அறியவொண்ணுது. இப்படி நடக்கிறவர் களுக்காக மழை பெய்து உலகம் நிலைபெறும் என்பதாம்.

### ஒப்புமை

**சுவை யொளியூ றோசை நாற்றமென் றைந்து :**

"உன்னுருவிற் சுவையொளியூ றோசை நாற்றத்
துறுப்பினது குறிப்பாகும் ஐவீர்" (**அப்பர்.** திருஆரூர், 4.)

"ஆமே சுவையொளி யூறோசை கண்டவன்" (**திருமந்.** 1350.)

"சுவையொளி யூறோசை நாற்றம் தோற்றம்"

(**திருவொற்றியூர் ஒருபா ஒருபது**, 9: 23.)

"மன்னிய மோகச் சுவையொளி யூறோசை நாற்றமென்றிப்
பன்னிய ஐந்தின் பதங்கடந் தோர்க்கும்."

(**ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி**, 5.)

### குறிப்பு

என்ற ஐந்தின் என்பது தொகுக்கும்வழித் தொகுத்தலால் என்றைந் தின் என ஆயிற்று. (27)

## 28

**நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்.** 8

**பரிமேலழகர் :** நிறைமொழி மாந்தர்[1] பெருமை-நிறைந்த மொழியினை யுடைய துறந்தாரது பெருமையை, நிலத்து மறைமொழி[2] காட்டிவிடும்-நில வுலகத்தின்கண் அவர் ஆணையாகச் சொல்லிய மந்திரங்களே[3] கண்கூடாகக் காட்டும்.

நிறைமொழி என்பது, அருளிக் கூறினும் வெகுண்டு கூறினும்[4] அவ்வப் பயன்களைப் பயந்தேவிடும் மொழி.[5] காட்டுதல்-பயனுன் உணர்த்துதல்.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** நிறைமொழி மாந்தர்-நிரம்பிய கல்வியுடைய மாந்தர்.

1. 'சொல்லிய சொல்லின் பொருண்மை யாண்டும் குறைவின்றிப் பயக்கச் சொல்லும் ஆற்றலுடையார்.' (**தொல்.** செய்யுள். 178, **பேர்.**)

2. 'புறத்தார்க்குப் புலன் ஆகாமல் மறைத்துச் சொல்லும் சொற்றொடர்' ( . செய்யுள். 178, **பேர்.**)

3. "நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த, மறைமொழி தானே மந்திரம் என்ப." (**தொல்.** செய்யுள். 178.)

4. "அந்த ணாளர் முனியவும் ஆங்கவர்
சிந்தை யாலருள் செய்யவும் தேவரில்
நொந்து ளாரையும் நொந்துயர்ந் தாரையும்
மைந்த எண்ண வரம்புமுண் டாங்கொலோ" (**கம்ப.** மந்தரை சூழ்ச்சிப். 8.)

5. "நோன்பினோர்
சொல்லெனப் பிழைப்பிலாச் சூலம் தாங்கினன்"

"பாபமே யியற்றி னரைப் பன்னெடுங் காத மோடித்
தூபமே பெருகும் வண்ணம் எரியெழச் சுட்ட தன்றே
தீபமே யனைய ஞானத் திருமறை முனிவன் செப்பும்
சாபமே ஒத்த தம்பு தருமமே வலிய தம்மா."

(**கம்ப.** கும்பகர்ணன். 259, வருணனை.-81.)

**பரிதியார்:** ஐம்புலன் வழியே மனசை விடாமல் காக்கும் உபதேசத்தார் பெருமையை வேத ஒழுக்கம் சொல்லும்.

**காளிங்கர்:** ஐம்புலன்களையும் அடக்கி, இனியொரு கல்வி கேள்வியும் விரும்புதலின்றி, முத்தி இன்பத்தை முழுதுணர்ந்தமைந்த நீத்தோரது பெருமையை இவ்வுலகத்து வேதங்களும் மற்றுள்ள நூல்களுமாகிய இவை எல்லாம் எடுத்துக் காட்டிய மொழிகளே கூறும்.

**கவிராஜ பண்டிதர்:** மறைமொழி யென்பது மகா முனிகளால் அருளிச் செய்யப்பட்ட ஆகமம் ஆகும்.

### குறிப்பு

*நிறைமொழி - பயனால் நிறைந்த மொழி.* (28)

## 29

**குணம்என்னும் குன்றேறி நின்றார் வெகுளி**
**கணமேயும் காத்தல் அரிது.** 9

**பரிமேலழகர்:** குணம் என்னும் குன்று ஏறி நின்றார் வெகுளி-துறவு மெய்யுணர்வு அவாவின்மை முதலிய நற்குணங்களாகிய குன்றின் முடிவின்கண் நின்ற முனிவரது வெகுளி, கணமேயும்[1] காத்தல் அரிது-தான் உள்ள அளவு கணமே யாயினும் வெகுளப்பட்டாரால் தடுத்தல் அரிது.

சலியாமையும் பெருமையும்[2] பற்றிக் குணங்களைக் குன்றாக உருவகம் செய்தார். குணம்: சாதியொருமை. அநாதியாய் வருகின்றவாறு பற்றி ஒரோவழி வெகுளி தோன்றிய பொழுதே அதனை மெய்யுணர்வு அழிக்குமாதலின் கணமேயும் என்றும், நிறைமொழி மாந்தராகலின் காத்தல் அரிது என்றும் கூறினார்.

இவை இரண்டு பாட்டானும் அவர் ஆணை கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** குணமாகிய மலையை மேற்கொண்டு நின்றார் மாட்டு உளதாகிய வெகுளியால் வரும் தீமையைச் சிறிது பொழுதாயினும் வாராமல் காத்தல் அரிது.

நகுஷன் பெரும் பாம்பாயினான். இது வெகுளி பொறுத்தல் அரிது என்றது.

**காளிங்கர்:** ராசத தாமத சாத்துவிகம் என்கின்ற குணங்களும், காமவெகுளி மயக்கம் என்கின்ற குண விகாரங்களும், அழல் சீதம், இடர் இன்பம், மானம் அவமானம் என்று எண்ணப்படுகின்ற குணமனைத்தின் தொகையுமாகிய குன்றைக் கடந்து வீட்டின்பத்து நிலைநின்றோராகிய நீத்தோரை மற்று அவ்வெகுளியானது தன்மாட்டுச் சிறிதுபொழுது நிறுத்திக் கொண்டு நிற்கமாட்டாது.

**கவிராஜ பண்டிதர்:** தபசு, சத்தியம், ஆசையில்லாமை முதலிய நல்ல குணமான மலையின்மேலே ஏறி நின்ற முனிவர்களுக்குக் கோபம் வராது; அந்தக் கோபம் வந்தாலும் அவர்கள் ஆத்ம பாவனையில் ஒருவராகி இயலுதலால் ஒரு க்ஷண மாத்திரப் பொழுதும் அதில் பொறுத்திருக்க மாட்டார்கள்.

---

1. (பா-ம்.) கணமேனும்.
2. "அளக்க லாகா அளவும் பொருளும்
துளக்க லாகா நிலையும் தோற்றமும்
வறப்பினும் வளந்தரும் வண்மையும் மலைக்கே." (நன்னூல், பாயிரம், 28.)

### ஒப்புமை

1. குணம் என்னும் குன்றேறி நின்றார்:

"கோதி லாத குணப்பெருங் குன்றனார்" (பெரிய. திருக்கூட்டச். 7.)

"குன்றுபோற் குணத்தான்" (கம்ப. வேள்வி. 58.)

"மாயமில் குணக்குன் றன்ன மாதவர்க் கிறைவன் வந்தான்.

(யசோதர. 23.)

2. குணமுடையோர் வெகுளி சிறிதளவே நிற்றல்:

"நீர்கொண்ட வெப்பம்போல் தானே தணியுமே
சீர்கொண்ட சான்றோர் சினம்" (நாலடி. 68.)

"கலைவலார் நெஞ்சில் காமமே போன்றும்
கடவுளர் வெகுளியே போன்றும்
உலைவிலார் நில்லா தொருபக லுள்ளே
உருப்பவிர் வெஞ்சுரங் கடந்தார்." (சீவக. 2107.)

3. குணமுடையோர் வெகுளி காத்தல் அரிது:

"பொறுப்பரென் றெண்ணிப் புரைதீர்ந்தார் மாட்டும்
வெறுப்பன செய்யாமை வேண்டும்—வெறுத்தபின்
ஆர்க்கும் அருவி அணிமலை நன்னாட
பேர்க்குதல் யார்க்கும் அரிது"

"அருமை யுடைய அரண்சேர்ந்தும் உய்யார்
பெருமை யுடையார் செறின்" (நாலடி. 161, 164.)

"இனியொரு கற்பமுண் டென்னி னன்றியே
வனைகழல் வயங்குவார் வீரர் வல்லரோ
பனிவரும் கானிடைப் பழிப்பில் நோன்புடை
முனிவரர்வெகுளியின்முடிபென்றார்சிலர்." (கம்ப. மாரீசன். 34.)

(29)

## 30

அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான். 10

பரிமேலழகர்: எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டு ஒழுகலான்-எல்லா உயிர்கள்மேலும் செவ்விய தண்ணளியைப் பூண்டு ஒழுகலான், அந்தணர் என்போர் அறவோர்-அந்தணர் என்று சொல்லப்படுவார் துறவறத்தில் நின்றவர்.

பூணுதல்-விரதமாகக் கோடல். அந்தணர் என்பது அழகிய தட்பத்தினை உடையாரென ஏதுப் பெயராகலின், அஃது அவ்வருளுடையார்மேல் அன்றிச் செல்லாது என்பது கருத்து.

அவ்வாறு ஆணையுடையார்[1] ஆயினும் உயிர்கள்மாட்டு அருளுடையார் என்பது இதனால் கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

மணக்குடவர்: ......எல்லா உயிர்க்கும் செவ்விய தட்பம் செய்தலை மேற்கொண்டு ஒழுகலானே அந்தணர் என்போரும், துறந்தாராகக் கொள்ளப்படுவர்.[2]

---

1. குறள், 28.

2. அந்தணரையும் துறந்தாரையும் முனிவர் என்று கூறும் பழைய வழக்கு நினைத்தற்குரியது.

மேல் துறந்தவர்களினும் சிறியார் உளர் என்று கூறினர்; இதனுனே துறவாதாரினும் பெரியார் உளர் என்று கூறினர்.

**காளிங்கர்:** இனி மற்று இத்துறவறத்துக்குத் துணைக்காரணமாகிய பொது அறத்தினைத் தொகுத்து உணர்த்துகின்றது, மேலை அதிகாரமாகிய அறன் வலியுறுத்தல்.

**ஒப்புமை**

1. ***அந்தணர் அறவோர்:***

"அறந்த வாநெறி யந்தணர் தன்மையை." (**கம்ப.** *அகத்தியப்.* 19.)

2. ***முற்றும்:***

"அந்தண்மை பூண்ட அருமறை அந்தத்துச்
சிந்தைசெய் அந்தணர்..." (**திருமந்.** 234.) (30)

---

# 4. அறன் வலியுறுத்தல்

**பரிமேலழகர்:** அஃதாவது அம் முனிவரான் உணர்த்தப்பட்ட அம்மூன்றனுள் ஏனைப் பொருளும் இன்பமும் போலாது, அறன் இம்மை, மறுமை, வீடு என்னும் மூன்றனையும் பயத்தலான், அவற்றின் வலியுடைத்து என்பது கூறுதல். அதிகார முறைமையும் இதனுனே விளங்கும். "சிறப்புடை மரபில் பொருளும் இன்பமும், அறத்துவழிப் படூஉம் தோற்றம் போல"[1] என்ருர் பிறரும்.

**உரை வேறுபாடு**

***மணக்குடவர்:*** அறன் வலியுறுத்தலாவது, அறம் வலிமையுடைத்து என்பதனை அறிவித்தல். இதனுனே அறத்துப்பால் முற்கூறுதற்குக் காரணம் சொன்னருமாம். இது மேற்கூறிய முனிவரால் கொண்டு உய்க்கப் படுதலின் பிற்கூறப்பட்டது.

**பரிதியார்:** அஃதாவது தன்மத்தின் உறுதியை உரைத்தல்.

**கவிராஜ பண்டிதர்:** அஃதாவது மஹாமுனீசுவரர்களாலே சொல்லப் பட்டதாய் இம்மையிலே கீர்த்தியையும், மறுமையிலே மோட்சத்தையும் கொடுக்கப்பட்ட தருமத்தின் நன்மையைச் சொல்லுதலாம்.

**31**

**சிறப்பீனும் செல்வமும் ஈனும் அறத்தினூஉங்
காக்கம் எவனோ உயிர்க்கு.** 1

**பரிமேலழகர்:** சிறப்பு ஈனும்-வீடுபேற்றையும் தரும்; செல்வமும் ஈனும் - துறக்கம் முதலிய செல்வத்தையும் தரும்;[2] உயிர்க்கு அறத்தின் ஊங்கு ஆக்கம் எவன் - ஆதலான் உயிர்கட்கு அறத்தின் மிக்க ஆக்கம் யாது?

எல்லாப் பேற்றினும் சிறந்தமையின், வீடு சிறப்பு[3] எனப்பட்டது. ஆக்கம் தருவதனை ஆக்கம் என்ருர்.[4] ஆக்கம் - மேன்மேல் உயர்தல். ஈண்டு

---

1. **புறநா.** 31 : 1 - 2.

2. "அறம்பெரி தாற்றி யதன்பயன் கொண்மார், சிறந்தோ ருலகம் படருநர்" (**பரி.** 19: 10-11.)

3. "சிறப்பென்னும் செம்பொருள்" (**குறள்,** 358) என்பதற்கு, 'வீட்டிற்கு நிமித்த காரணமாய செவ்விய பொருள்' என்று உரை கூறினர். "சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே" (**தொல்.** கற்பு. 51) என்னுமிடத்துச் சிறந்தது என்பதற்கு, 'அறம் பொருளின்பத்திற் சிறந்த வீட்டின்பம்' என்று பொருள் எழுதினர் **நச்சினர்க்கினியர்.**

4. உபசார வழக்கு.

உயிர்கள் என்றது மக்கள் உயிரை, சிறப்பும் செல்வமும் எய்துதற்குரியது அதுவேயாகலின்.[1]

இதனால் அறத்தின் மிக்க உறுதியில்லை என்பது கூறப்பட்டது.

உரை வேறுபாடு

**மணக்குடவர்:** இது பொருளான் ஆக்கம் உண்டு என்பாரை மறுத்து அறன் வலியுடையது என்று கூறிற்று.

**பரிதியார் :** மறுமைக்குச் சிறப்பாகிய முத்தியும், இம்மைக்குச் சிறப்பாகிய செல்வமும் தரும் தன்மத்திலும் சிறந்த தெய்வம் ஏதோ ?

**காளிங்கர் :** அறமானது இவ்வுலகத்து நுகர்ச்சி இன்பக் காரணமாகிய செல்வத்தையும் தரும். மற்ற உலகத்து நுகர்ச்சி இன்பக் காரணமாகிய தேவர் பதத்தையும் தரும். அதனுன் மற்றிவ்வறத்தின் மேலாய் அழியாது நிற்கும் பொருள் யாதோ, இவ் வெழுவகைப் பிறவியினும் சிறந்த மானிடராயினர்க்கு ?

ஒப்புமை

**முற்றும் :**

"முன்புநின் றிசைநிறீஇ முடிவு முற்றிய
பின்புநின் றுறுதியைப் பயக்கும் பேரறம்"
"அருள்த ரும்திறத் தறனன்றி வலியதுண் டாமோ"
"உலைவிலா வகைஉழந்த தருமமென நினைத்தவெலாம்
உதவும் தச்சன்"

(கம்ப. தைலமாட்டு. 29, கரன்வதை. 88, மாரீசன். 2.)

" நிரக்கும் பொருட்குவை யாவையும் நீர்நினை யாதவெலாம்
சுரக்கும் சுரபிகண் டீர்பிண்டி நாதன்தன் தொல்லறமே."

(திருநூற். 37.) (31)

## 32

**அறத்தினூஉங் காக்கமும் இல்லை அதனை
மறத்தலின் ஊங்கில்லை கேடு.** 2

**பரிமேலழகர் :** அறத்தின் ஊங்கு ஆக்கமும் இல்லை - ஒருவனுக்கு அறம் செய்தலின் மேற்பட்ட ஆக்கமும் இல்லை; அதனை மறத்தலின் ஊங்கு கேடு இல்லை - அதனை மயக்கத்தான் மறத்தலின் மேற்பட்ட கேடும் இல்லை.

அறத்தினூஉங்கு ஆக்கமும் இல்லை என மேற் சொல்லியதனையே அநுவதித்தார்,[2] அதனால் கேடு வருதல் கூறுதற் பயன் நோக்கி.

இதனால் அது செய்யாவழிக் கேடு வருதல் கூறப்பட்டது.

உரை வேறுபாடு

**கவிராஜ பண்டிதர்,** "இல்லையாங் கேடு" என்று பாடம் கொள்வர்.

ஒப்புமை

1. **அறத்தை மறத்தல் கேடு :**

" வாழியாய் கேட்டியால் வாழ்வு கைம்மிக
ஊழிகாண் குறுநின துயிரை யோர்கிலாய்

1. "மனநலம் மன்னுயிர்க் காக்கம்" (குறள், 457) என்னுமிடத்தும், 'மன்னுயிரென்றது ஈண்டு உயர்திணைமேல் நின்றது' என்றார்.

2. அநுவதித்தல் - ஒரு பயன் நோக்கி, முன்பு கூறியதனை மீட்டும் எடுத்துக் கூறுதல்.

கீழ்மையோர் சொற்கொடு கெடுதல் நேர்தியோ
வாழ்மைதான் அறம்பிழைத் தவர்க்கு மாகுமோ."

(கம்ப. வீடணன். 11.)

2. **அறத்தினூங் காக்கம் இல்லை :**

" அளவிலா அறத்தின் மிக்க தியாதுமற் றில்லை யன்றே"

(நரிவிருத்தம், 14.)

" ஆய்வினை யுடைய ராகி யறம்பிழை யாதார்க் கெல்லாம்
ஏய்வன நலனே யன்றி யிறுதிவந் தடைவ துண்டோ?"

(கம்ப. வருணனை. 80.)

" ஆன்றநல் லறத்தைப் போலும் அரியதொன் றில்லை யென்றான்."

(மேருமந்தர. 117.)

3. **முற்றும் :**

" அறமுனக் கஞ்சியின் றளித்த தாலதன்
திறமுனம் உழத்தலின் வலியும் செல்வமும்
நிறமுனக் களித்ததங் கதனை நீக்கிநீ
இறமுனங் கியாருனை எடுத்து நாட்டுவார் "

(கம்ப. கும்பகருணன். 84.)

" அறத்தினூங் காக்க மில்லை என்பதும் இதனை ஆய்ந்து
மறத்தினூங் கில்லை கேடும் என்பதும் மதித்து."

(மேருமந்தர. 747.) (32)

## 33

**ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும்வாய் எல்லாம் செயல். 3**

**பரிமேலழகர் :** ஒல்லும் வகையான் - தத்தமக்கு இயலும் திறத்தான், அறவினை ஓவாதே செல்லும் வாய் எல்லாம் செயல்-அறமாகிய நல்வினையை ஒழியாதே அஃது எய்தும் இடத்தான் எல்லாம் செய்க.

இயலும் திறமாவது இல்லறம் பொருள் அளவிற்கு ஏற்பவும், துறவறம் யாக்கை நிலைக்கு ஏற்பவும் செய்தல். ஓவாமை-இடைவிடாமை. எய்தும் இடமாவன மனம் வாக்குக் காயம் என்பன. அவற்றால் செய்யும் அறங்களாவன முறையே நற் சிந்தையும் நற் சொல்லும் நற் செயலும் என இவை.

இதனால் அறம் செய்யுமாறு கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**மணக்குடவர் :** இயலும் திறம் என்பது மன மொழி மெய்களும், பொருளும். செல்லும் வாய் என்பது அறம் செய்தற்கு இடமாகிய பல இடங்களும்.

**கவிராஜ பண்டித்தர் :** "சக்திதஸ் தியாக தபஸ்" என்பது தத்வார்த்த சூத்திரம். அஃதாவது தியாகமும், தபசும் தன் சக்திக்குத் தக்கதாய் இருக்க வேண்டு மென்பதாம்.

### ஒப்புமை

**ஒல்லும் வகையான் அறம் செய்தல் :**

" ஒல்லும் வகையான், மருவுமின் மாண்டார் அறம் "

" இம்மி அரிசித் துணையானும் வைகலும்
நும்மில் இசைவ கொடுத்துண்மின் "

" மறுமையும் இம்மையும் நோக்கி ஒருவற்கு
உறுமா றிசைவ கொடுத்தல் "

" எத்துணை யானும் இயன்ற அளவினால்
சிற்றறம் செய்தார் தலைப்படுவர்"

(நாலடி. 36, 94, 95, 272.)

" ஆற்றுந் துணையால் அறஞ்செய்கை முன்னினிதே "

(இனியவை. 7.)

" ஆற்றும் துணையும் அறஞ் செய்க "
" ஒன்றும் வகையால் அறஞ்செய்க "

(பழமொழி, 137, 303.) (33)

## 34

மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற. 4

**பரிமேலழகர்:** மனத்துக் கண் மாசு இலன் ஆதல்[1]-அவ்வாற்றான் அறம் செய்வான் தன் மனத்தின்கண் குற்றமுடையன் அல்லனாக; அனைத்து அறன்-அவ்வளவே அறமாவது; பிற ஆகுல நீர-அஃது ஒழிந்த சொல்லும் வேடமும் அறம் எனப்படா; ஆரவார நீர்மைய.

குற்றம், தீயன சிந்தித்தல். பிறர் அறிதல் வேண்டிச் செய்கின்றன வாகலின், ஆகுல நீர என்றார். மனத்து மாசு உடையனாய வழி அதன் வழிய வாகிய மொழி மெய்களால் செய்வன பயன் இல என்பதூஉம் பெறப்பட்டது.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** ஒருவன் தன் மனத்தின்கண் குற்றமிலனாதலே எல்லா அறமுமாம். அதில் அழுக்குண்டாயின் மேற் செய்வன வெல்லாம் ஆரவார நீர்மைய என்றவாறு.

பிறர் அறிய வேண்டிச் செய்தானும் என்றவாறாயிற்று. மேல் நான்கு பொருளைக் கடிய வேண்டும் என்றார், அவை நான்கும் மனம் ஒன்றும் தூயதாகப் போம் என்று அதன்பின் இது கூறினார்.

**பரிதியார்:** மனத்திலும் பாவத்தை நினையாதொழிக. அது போதும்; தன்மஞ் செய்ய வேண்டாம்.

**காளிங்கர்:** ஒருவன் தனது நெஞ்சத்துக்கண் பாவக் கருத்து இலனாதலே அனைத் தறங்களும். ஒழிந்தன எல்லாம் துக்கத் தன்மையுடைத்து.

**கவிராஜ பண்டிதர்,** ஆகுல நீர்மை பிற என்று பாடம் கொண்டார்.

(34)

1. ஆதல் என்பதை வியங்கோளாகக் கொண்டனர் பரிமேலழகரும், பரிதியாரும்; ஏனையோர் தொழிற் பெயராகக் கொண்டனர்.

## 35

அழுக்கா றவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்ற தறம். 5

**பரிமேலழகர்:** அழுக்காறு-பிறர் ஆக்கம் பொறாமையும், அவா-புலன்கள்மேற் செல்லுகின்ற அவாவும், வெகுளி-அவை[1] ஏதுவாகப் பிறர்பால் வரும் வெகுளியும், இன்னாச் சொல்-அது பற்றி வரும் கடும் சொல்லுமாகிய, நான்கும் இழுக்கா இயன்றது அறம்-இந்நான்கினையும் கடிந்து இடையறாது நடந்தது அறமாவது.

இதனால் இவற்றோடு விரவி இயன்றது அறம் எனப்படாது என்பதூஉங் கொள்க.

இவை இரண்டு பாட்டானும் அறத்தினது இயல்பு கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**பரிதியார்:** பிறர் செல்வங்கண்டு நோகாமையும், வெஃகாமையும், கோபமில்லாமையும், புறங்கூறாமையும் போலத் தன்மம் இல்லை.

### ஒப்புமை

**அழுக்காறு அவா:**

'அழுக்காறு, அவா முதலியவற்றைக் கைவிட்டு அறநூல் முதலியவற்றை அறிந்து' (**சிலப்.** 10: 16, **அடியார்.**)

"பொய்குறளை வெளவல் அழுக்காறு இவைநான்கும்
ஐயந்தீர் காட்சியார் சிந்தியார்" (**ஆசாரக்.** 38.)

"அச்சம் வெகுளி அவாஅழுக்கா றிங்ஙனே மாண்டன."
(**பொன்வண்ணத்.** 99.) (35)

## 36

அன்றறிவாம் என்னா தறஞ்செய்க மற்றது
பொன்றுங்கால் பொன்றாத் துணை. 6

**பரிமேலழகர்:** அன்று அறிவாம் என்னாது அறம் செய்க-யாம் இது பொழுது இளையமாகலின் இறக்கும் ஞான்று செய்தும் எனக் கருதாது அறத்தினை நாள்தோறும் செய்க;[2] அது பொன்றுங்கால் பொன்றாத் துணை-அவ்வாறு செய்த அறம் இவ்வுடம்பினின்றும் உயிர் போங்காலத்து அதற்கு அழிவு இல்லாத துணையாம்.

மற்று என்பது அசைநிலை. பொன்றாத் துணை என்றார், செய்த உடம்பு அழியவும் உயிரோடு ஒன்றி ஏனை உடம்பினும் சேறலின்.[3]

இதனால் இவ்வியல்பிற்றாய அறத்தினை நிலையாத யாக்கை நிலையின பொழுதே செய்க என்பது கூறப்பட்டது.

---

1. அவை பொறாமையும் அவாவும்.

2. "மற்றறிவாம் நல்வினை யாம்இளையம் என்னாது, கைத்துண்டாம் போழ்தே கரவாது அறஞ்செய்ம்மின், முற்றி இருந்த கனியொழியத் தீவளியால், நற்காய் உதிர்தலும் உண்டு." (**நாலடி.** 19.)

3. "பெற்றி கருமம் பிழையாது செய்துறிற், பற்றின்கண் நில்லா தறஞ்செய்க-மற்றது, பொன்றாப் புகழ்நிறுத்திப் போய்ப்பிறந்த ஊர்நாடிக், கன்றுடைத் தாய்போல் வரும்." (**அறநெறிச்.** 59.)

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** துணை - பிறக்கும் இடத்திற்குத் துணையாம்.

**பரிதியார்:** நாம் வறியார் என்றும் தனம் இல்லை என்றும் விசாரித்துச் செல்வம் உண்டானபோது அறஞ் செய்வோம் என்னுமல், நினைத்த போதே தருமம் செய்க; அது மரணுந்த காலத்துக்குப் பெருந் துணையாம்.

**காளிங்கர்:** அறம் செய்கைக்கு அறிவல்லது என்றும் அறிவாவது என்றும் காலத்தைக் கழியாதே, கடிதாக அறத்தினைச் செய்து கொள்க. அதுவே அழியாத துணை.

**கவிராஜ பண்டிதர்:** நாம் வேற்றூருக்குச் செல்லும்போது அங்கே உதவியாக இருக்குமென்று பொதிசோறு கொண்டு போவது போல, சீவனுக்கும் மறு ஜன்மத்தில் உதவுவதற்காக ஈண்டு அறத்தைச் செய்தல் வேண்டும்.

இவர் 'அன்றறிவோம்' என்று பாடங் கொண்டார்.

### ஒப்புமை

1. **அறம் பொன்றுத் துணை:**

*"தெரியின் அறமே துணை"* (**அறநெறிச்.** 146.)

*"முன்புநின் றிசைநிறீஇ முடிவு முற்றிய*
*பின்புநின் றுறுதியைப் பயக்கும் பேரறம்"*

*"அறந்தலை நின்றார்க் கில்லை யழிவெனும் அறிஞர் வார்த்தை*
*சிறந்தது"* (**கம்ப.** தைலமாட்டு. 29, இந்திரசித்து வதை. 58.)

2. **அன்றறிவாம் என்னல்:**

*"மற்றறிவாம் என்றிருப்பார் மாண்பு"* (**நாலடி.** 332.)
*"பின்னை அறிவென்றல் பேதைமை."* (**அறநெறிச்.** 105.)

3. **முற்றும்:**

*"காலைச்செய் வோமென் றறத்தைக் கடைப்பிடித்துச்*
*சாலச்செய் வாரே தலைப்படுவார்--மாலைக்*
*கிடந்தா னெழுத லரிதான்மற் றென்கொல்*
*அறங்காலைச் செய்யாத வாறு"* (**அறநெறிச்.** 66.)

*"நாளைச் செய்குவம் அறம்எனில் இன்றே*
*கேள்வி நல்லுயிர் நீங்கினும் நீங்கும்*
*இதுவென வரைந்து வாழுநாள் உணர்ந்தோர்*
*முதுநீர் உலகின் முழுவதும் இல்லை"* (**சிலப்.** 28: 179-82.)

*"உம்பர்த முலகி னுய்க்கும் உலகினுக் கிறைமை யாக்கும்*
*வெம்பிய இறப்பின் வாங்கி வீட்டின்கண் வைக்கும் மெய்யே*
*நம்பிநல் லறத்தைப் போலும் துணையில்லை நமக்கு நாடின்."*
(**மேருமந்.** 968.) *(36)*

### 37

அறத்தா றிதுஎன வேண்டா சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தா னிடை. 7

**பரிமேலழகர்:** *அறத்து ஆறு இது என வேண்டா*-அறத்தின் பயன் இதுவென்று யாம் ஆகம அளவையான் உணர்த்தல் வேண்டா; *சிவிகை*

பொறுத்தானோடு ஊர்ந்தான் இடை-சிவிகையைக் காவுவானோடு[1] செலுத்துவானிடைக் காட்சியளவை தன்னானே உணரப்படும்.

பயனை ஆறு என்றார், பின்னதாகலின். எனவென்னும் எச்சத்தால் சொல்லாகிய ஆகம அளவையும், பொறுத்தானோடு ஊர்ந்தானிடை யென்றதனால் காட்சியளவையும் பெற்றாம். உணரப்படும் என்பது சொல்லெச்சம்[2].

இதனால் பொன்றாத் துணையாதல் தெளிவிக்கப்பட்டது.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** என - என்று அறிய.

### மேற்கோள் விளக்கம்

"சிவிகை பொறுத்தார் எனத் திருத்தினாரும் உளர்." (இ. கொ. சூ. 130.)

(37)

## 38

வீழ்நாள் படாஅமை நன்றாற்றின் அஃதொருவன்
வாழ்நாள் வழிஅடைக்கும் கல். 8

**பரிமேலழகர்:** வீழ்நாள் படாஅமை நன்று ஆற்றின்-செய்யாது கழியும் நாள் உளவாகாமல் ஒருவன் அறத்தைச் செய்யுமாயின், அஃது ஒருவன் வாழ்நாள் வழி அடைக்கும் கல் - அச்செயல் அவன் யாக்கையோடு கூடும் நாள் வரும் வழியை வாராமல் அடைக்கும் கல்லாம்.

ஐவகைக் குற்றத்தால் வரும் இருவகை வினையும் உள்ள துணையும் உயிர் யாக்கையோடும் கூடிநின்று அவ் வினைகளது இருவகைப் பயனையும் நுகருமாகலான், அந்நாள் முழுவதும் வாழ்நாள் எனப்பட்டது. குற்றங்கள் ஐந்தாவன: அவிச்சை, அகங்காரம், அவா, விழைவு, வெறுப்பு என்பன; இவற்றை வடநூலார் பஞ்சக் கிலேசம்[3] என்பர். வினை இரண்டாவன: நல்வினை தீவினை என்பன. பயன் இரண்டாவன: இன்பம் துன்பம் என்பன.

இதனால் அறம் வீடு பயக்கும் என்பது கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** வாழ்நாள் வழி - பிறப்பும் இறப்புமாகிய நாள் வருகின்ற வழி.

**கவிராஜ பண்டிதர்:** வாழ்நாள் வழி-மோக்ஷத்திற்கு ஏறுகிறதற்குத் தடையாகின்ற எமன் வருகின்ற வழி.

### ஒப்புமை

1. **வாழ்நாள் வழி அடைக்கும் கல்:**

"வாணாள் அடைக்கும் வழியது வாமே" (திருமந். 588.)

2. **வீழ்நாளும் வாழ்நாளும்:**

"வீழ்நாள் படாமைநீ துன்னம்பெய் யேயாக
வாழ்நாள் படுவ தறி." (அறநெறிச். 115.) (38)

---

1. காவுவான்—சுமப்பவன்.

2. ஊர்ந்தானிடை உணரப்படும் என்று வருவித்துப் பொருள் உரைக்க.

3. 'அநாதியாய அவிச்சையும், அதுபற்றி யானெனை மதிக்கும் அகங்காரமும், அதுபற்றி எனக்கு இது வேண்டுமென்னும் அவாவும், அதுபற்றி அப்பொருட்கண் செல்லும் ஆசையும், அதுபற்றி அதன் மறுதலைக்கண் செல்லும் கோபமும் என வடநூலார் குற்றம் ஐந்தென்றார்' (குறள், 360) என்பர் பின்.

## 39

அறத்தான் வருவதே இன்பம்மற் றெல்லாம்
புறத்த புகழும் இல. 9

**பரிமேலழகர்:** அறத்தான் வருவதே இன்பம் - இல்லறத்தோடு பொருந்தி வருவதே இன்பமாவது; மற்ற எல்லாம் புறத்த - அதனோடு பொருந்தாது வருவனவெல்லாம் இன்பமாயினும் துன்பத்தினிடத்த; புகழும் இல - அதுவேயுமன்றிப் புகழும் உடைய அல்ல.

ஆனுருபு ஈண்டு உடனிகழ்ச்சிக்கண் வந்தது, "தூங்கு கையா னோங்கு நடைய"[1] என்புழிப் போல. இன்பம் - காம நுகர்ச்சி; அஃதாமாறு காமத்துப் பாலின் முதற்கண் சொல்லுதும். இன்பத்திற் புறமெனவே துன்பமாயிற்று. பாவத்தான் வரும் பிறனில் விழைவு முதலாயின[2] அக்கணத்துள் இன்பமாய்த் தோன்றுமாயினும் பின் துன்பமாய் விளைதலின், புறத்த என்றார். அறத்தொடு வாராதன புகழும் இலவெனவே, வருவது புகழுடைத்தென்பது பெற்றாம்.

இதனான் அறஞ் செய்வாரே இம்மை யின்பமும் புகழும் எய்துவர் என்பது கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** அறத்தால் வருவது யாதொன்று அதுவே இன்பமும் புகழுமாம்; அதனாலன்றி வருவனவெல்லாம் துன்பமாம்; புகழுமிலவாம்.

**பரிதியார்:** புறத்த புகழும் இல - பொறையும் கீர்த்தியும் இல்லை.

### ஒப்புமை

**முற்றும்:**

"உருவமும் அழகுநல் ஒளியுங் கீர்த்தியும்
செருஇடை வெல்வலத் திறலும் சிந்தைசெய்
பொருளவை வருதலும் போக மும்நல்ல
திருவுடை யறத்தது செய்கை என்றனன்."

(மேருமந்தர. 447.) (39)

## 40

செயற்பால தோரும் அறனே ஒருவற்
குயற்பால தோரும் பழி. 10

**பரிமேலழகர்:** ஒருவற்குச் செயற்பாலது அறனே - ஒருவனுக்குச் செய்தற் பான்மையது நல்வினையே; உயற்பாலது பழியே - ஒழிதற்பான்மையது தீவினையே.

ஒரும் என்பன இரண்டும் அசைநிலை. தேற்றேகாரம் பின்னும் கூட்டப்பட்டது.[3] பழிக்கப்படுவதனைப் பழியென்றார்.

இதனால் செய்வதும் ஒழிவதும் நியமிக்கப்பட்டன.

---

1. **புறநா.** 22 : 1.

2. வரைவின் மகளிரோடு கூடிப் பெறும் இன்பமும் இழிகுல மகளிரோடு கூடிப் பெறும் இன்பமும் பாவத்தால் வருவனவாதலின் அவற்றையும் எண்ணி முதலாயின என்றார்; **குறள்**, 142, உரையைப் பார்க்க.

3. 'அறனே' என்பது தேற்றேகாரம். அது 'பழியே' என்று என்னும் கூட்டப்பட்டது.

### உரை வேறுபாடு

**காலிங்கர்:** ஈண்டுக் குறிக்கொண்டு செய்யத் தகுவதாகப் பெரியோர் கருதுகின்றது அறமானதொன்றுமே. தமக்கு நன்மையறிவார் ஒருவர்க்குப் பிறவித் துயரினின்றும் உய்யலாம்; அதனால் மிகவும் ஆராய்ந்து கொண்மின் பாவமாகிய பழியினை.[1] (40)

---

## இல்லற இயல்

**மணக்குடவர் :** இல்லறமாவது இல்லின்கண் இருந்து தானம் முதலாயின செய்தல். அது கூறிய அதிகாரம் இருபதினும் இல்வாழ்வான் வாழுந் திறம் ஓரதிகாரத்தானும் அதற்குத் துணையான மனைவி இலக்கணம் ஓரதிகாரத்தானும் கூறி, அதன்பின் இல்லறப் பகுதியான பிரமசரியம் காருகத்தம் என்னும் இரண்டினுள்ளும் பிரமசரியத்திற்கு ஆதாரமாகிய புதல்வரைப் பெறுதல் ஓரதிகாரத்தால் கூறி, காருகத்த இலக்கணம் கூறுவார் நல்கூர்ந்தார், நல்குரவின் நீங்கினர், செல்வர், வள்ளியோர் என்னும் நால்வரினும் அன்புடைமை முதலாக ஒழுக்க முடைமை ஈறாக நல்கூர்ந்தாரால் செய்யப்படுவன ஏழும், பிறனில் விழையாமை முதலாகத் தீவினையச்சம் ஈறாக இவரால் தவிரப் படுவன ஏழும் பதினான்கு அதிகாரத்தால் கூறி, இவற்றோடுங்கூட ஒப்புரவறிதல் நல்குரவின் நீங்கினாரால் செய்யப் படுமென்று கூறி, இவற்றோடுங்கூட ஈதல் செல்வரால் செய்யப் படுமென்று கூறினாராகக் கொள்ளப்படும். இவ்வறம் முற்படக் கூறியது, துறவறத்தில் நின்றாரையும் ஓம்புதல் இல்வாழ்வான் கண்ணது ஆதலான்.

# 5. இல்வாழ்க்கை

**பரிமேலழகர் :** அஃதாவது இல்லாளோடு கூடி வாழ்தலின் சிறப்பு. இல்நிலை அறம் செய்தற்குரிய இருவகை நிலையுள்[2] முதலாதலின், இஃது அறன் வலியுறுத்தலின்பின் வைக்கப்பட்டது.

**மணக்குடவர் :** இல்வாழ்க்கையாவது இல்லின்கண் இருந்து வாழும் திறன் கூறுதல். மேல் அறம் செய்க என்றார்; இது முதலாக அறம் செய்யு மாறு கூறுகின்றாராதலின், இது பிற் கூறப்பட்டது.

### 41

**இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்**
**நல்லாற்றின் நின்ற துணை.** 1

**பரிமேலழகர் :** இல்வாழ்வான் என்பான்-இல்லறத்தோடு கூடி வாழ்வானென்று சொல்லப்படுவான், இயல்பு உடைய மூவர்க்கும் நல்லாற்றின் நின்ற துணை-அறவியல்பினையுடைய ஏனை மூவர்க்கும் அவர் செல்லும் நல்லொழுக்க நெறிக்கண் நிலைபெற்ற துணையாம்.

இல்லென்பது ஆகுபெயர்[3]. என்பான் எனச் செயப்படுபொருள் வினை முதல் போலக் கூறப்பட்டது. ஏனை மூவராவார், ஆசாரியனிடத்தினின் றோதுதலும் விரதங்காத்தலுமாகிய பிரமசரிய ஒழுக்கத்தானும், இல்லை விட்டு வனத்தின்கண் தீயொடு சென்று மனையாள் வழிபடத் தவம்செய்யும் ஒழுக்கத்

---

1. இவர் 'ஒரும்' என்பதனைப் பொருளுடைய சொல்லாகவே கொண்டார்.
2. இருவகை நிலை—இல்லறம், துறவறம்.
3. இல்லறத்தைக் குறித்தமையின் ஆகுபெயராயிற்று.

தானும்,[1] முற்றத் துறந்த யோகவொழுக்கத்தானும்[2] என இவர்; இவருள் முன்னை இருவரையும் பிறர் மதம் மேற்கொண்டு கூறினர்.[3] இவர், இவ் வொழுக்க நெறிகளை முடியச் செல்லுமளவும் அச் செலவிற்குப் பசி நோய் குளிர் முதலியவற்றான் இடையூறு வாராமல் உண்டியும் மருந்தும் உறையுளும் முதலிய உதவி அவ்வந் நெறிகளின் வழுவாமற் செலுத்துதலான், 'நல்லாற்றின் நின்ற துணை' என்றார்.

### உரை வேறுபாடு

**கவிராஜ பண்டிதர்** : இயல்புடைய மூவர்-பிரம்மசாரி, க்ஷுல்லகன், மஹாமுனி. பிரம்மசாரி: இவன் ஆசாரியருடனே இருந்து பரமாகமங்களைக் கேட்கின்றவன். க்ஷுல்லகன்: இவன் முற்றும் துறந்த முனியைப் போலவே எல்லா விரதங்களையும் அநுட்டிக்கிறவன்; ஆனால் ஓராடையை மட்டும் உடுத்துக் கொண்டிருப்பவன். மஹாமுனி: இவன் யாதொரு பற்றும் இல்லாத துறவி.

### மேற்கோள் விளக்கம்

'எனப்படுவான் எனற்பாலது இல்வாழ்வான் என்பான் என்புழிப் படுவிகுதி தொக்கு நின்றது. இங்ஙனம் வருவனவற்றை வடநூலார் அந்தர்ப் பாவிதணிச் என்பர்.' **(தொல்காப்பியப் பாயிர விருத்தி.)**

### குறிப்பு

'இல்வாழ்வான் என்பான்' என்ற தொடரில்உள்ள என்பான் என்பது இல்வாழ்வானது சிறப்பைக் குறித்தது. "அன்பி னைந்திணைக் களவெனப் படுவது" (**இறை. சூ.** 1) என்பதன் உரையில், 'களவென்றற்குச் சிறப் புடைத்து என்றவாறு. "ஊரெனப் படுவது உறையூர்" என்ற இடத்துப் பிறவும் ஊருண்மை சொல்லி, அவற்றுளெல்லாம் உறையூர் சிறப்புடைமை சொல்லுப. இங்குப் பிறவும் களவுண்மை சொல்லி, அக்களவுகட் கெல்லாம் இக்களவு சிறப்புடைமை சொல்லும்; துறக்கம் வீடுபேறுகளை முடிக்குமாக லான் எனப்படுவது என்று சொல்லிச் சிறப்பிக்கப்பட்டது' என்று உரை யாசிரியர் எழுதுவது காண்க.

பின்னல் துறந்தார் முதலிய மூவரைக் கூறுவாராதலின், இங்கே அற இயல்பினராகிய நால்வருள் ஏனை மூன்று ஆசிரமத்தினரை 'இயல் புடைய மூவர்' என்றார். *(41)*

## 42

**துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்**
**இல்வாழ்வான் என்பான் துணை.** 2

**பரிமேலழகர்** : துறந்தார்க்கும் - களைகணுனவரால் துறக்கப்பட்டார்க் கும், துவ்வாதவர்க்கும்[4] - நல்கூர்ந்தார்க்கும், இறந்தார்க்கும் - ஒருவருமின்றித் தன்பால் வந்து இறந்தார்க்கும், இல்வாழ்வான் என்பான் துணை-இல்வாழ்வா னென்று சொல்லப்படுவான் துணை.

---

1. இவன் வானப்பிரஸ்தன்.

2. இவன் சந்நியாசி.

3. திருவள்ளுவர் பெரும்பான்மையாகிய பொது இயல்பு பற்றி இல்லறம் துறவறம் இரண்டையும் கூறுவர் என்ற கருத்தால் இவ்வாறு கூறினர்; உரைப் பாயிரம் பார்க்க.

4. துவ்வாதவர்-உண்ணாதவர்; இங்கே வறியவர்க்கு ஆயிற்று; "துன்புறூஉந் துவ்வாமை இல்லாகும்" (**குறள்**, 94) என்று பின்னும் வறுமையைத் துவ்வாமை என்பர்.

துறந்தார்க்குப் பாவமொழிய அவர் களைகணாய் நின்று வேண்டுவன செய்தலானும், துவ்வாதவர்க்கு உணவு முதலிய கொடுத்தலானும், இறந்தார்க்கு நீர்க்கடன் முதலிய செய்து நல்லுலகின்கண் செலுத்தலானும் துணை என்றார்.

இவை இரண்டு பாட்டானும் இல்நிலை எல்லா உபகாரத்திற்கும் உரித்தாதல் கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**மணக்குடவர் :** துறந்தார்க்கும்-வருணத்தினையும் நாமத்தினையும் துறந்தார்க்கும்.

**காலிங்கர்:** முன் சொன்னவர்களே யன்றி ஒருநியம் அற்றதால் உடன் துறந்தார்க்கும், கடவுளைப் பற்றி நாணினைத் துறந்தார்க்கும், குடிப் பிறந்தாரால் ஓரோர் காரணத்தினால் வெகுண்டு துறக்கப்பட்டார்க்கும், முற்பிறப்பின்கண் ஏற்றவர்க்கு ஈயாது இறந்த வறியோர்க்கும், கல்வியினால் மிக்கோர்க்கும், அநாதராய் இறந்தார்க்கும் மற்றும் இல்வாழ்வான் என்று சொல்லப்படுவானே துணையாவான்.

மற்றும் இறந்தாராவார் இவ்வுலகத்தின்கண் வறுமையைக் கடந்து மிக்க செல்வத்தை யுடையார். இவர்க்கும் துணையென்றுமாம்.

### மேற்கோள் விளக்கம்

'இதனுள் துணை என்னும் இறுதிச் சொல் மூன்றிடத்தும் பொருள் கொள்ள நின்றமையால் இறுதி விளக்காயிற்று.' (வீர. 152, உரை.) *(42)*

## 43

தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தான்என்றாங்
ஐம்புலத்தா றோம்பல் தலை. 3

**பரிமேலழகர் :** தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல் தான் என்ற-பிதிரர் தேவர் விருந்தினர் சுற்றத்தார் தானென்று சொல்லப்பட்ட, ஐம்புலத்து ஆறு ஓம்பல் தலை-ஐந்திடத்துஞ் செய்யும் அறநெறியை வழுவாமற் செய்தல் இல்வாழ்வானுக்குச் சிறப்புடைய அறமாம்.

பிதிரராவார் படைப்புக் காலத்து அயனாற் படைக்கப் பட்டதோர் கடவுட்சாதி[1]; அவர்க்கிடம் தென்திசையாதலின், தென்புலத்தார் என்றார். தெய்வம் என்றது சாதியொருமை. விருந்து என்பது புதுமை. அஃது ஈண்டு ஆகுபெயராய்ப் புதியராய் வந்தார்மேல் நின்றது. அவர் இருவகையர், பண்டு அறிவுண்மையிற் குறித்து வந்தாரும், அஃது இன்மையிற் குறியாது வந்தாருமென. ஒக்கல்-சுற்றத்தார். எல்லா அறங்களும் தான்உளனாய் நின்று செய்ய வேண்டுதலின், தன்னை ஓம்பலும் அறனாயிற்று. என்ற வென்பது விகாரமாயிற்று[2]. ஆங்கு: அசை. ஐவகையும் அறஞ் செய்தற் கிடனாகலின் ஐம்புல மென்றார்[3]. அரசனுக்கு இறைப் பொருள் ஆறிலொன்றாயிற்று, இவ் வைம்புலத்திற்கும் ஐந்து கூற வேண்டுதலான் என்ப தறிக.

---

1. தம் முன்னோர்களை நோக்கிச் செய்யும் கடன்களாலாய பயன்களை அவருக்கு உரியனவாகச் செய்யும் அதிகாரமுடையவர்கள் இவர்கள்.

2. என்ற ஆங்கு என்பன, என்றாங்கு என ஆயின; தொகுக்கும் வழித் தொகுத்தல்.

3. புலம்-இடம்.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** மேற்கூறிய அறுவரும்[1] விருந்தினது வகையினர் என்று கொள்ளப்படுவர்.

**கவிராஜ பண்டிதர்:** தென் புலத்தார் - உயிர் துறக்கும் தறுவாயில் உள்ள முதியவர்கள்.

### மேற்கோள் விளக்கம்

'இல்லறமென்பது கற்புடைய மனைவியோடு இல்லின்கண் இருந்து செய்யும் அறம். அதன் துறையாவன: தன்னை ஒழிந்த மூவர்க்கும், துறந்தார்க்கும், துவ்வாதவர்க்கும், இறந்தார்க்கும், தேவர்க்கும், முனிவர்க்கும், விருந்தினர்க்கும், சுற்றத்தார்க்கும், பிறர்க்கும் துணையாதலும், வேள்வி செய்தலும், சீலம் காத்தல் முதலியனவும், அருளும் அன்பும் உடையன் ஆதலும், பிறவும்' (*சிலப். 14 : 11, உரை*) என்று அடியார்க்கு நல்லார் 41, 42, 43-ஆம் குறட் பாக்களை நினைந்து எழுதுவர்.

### ஒப்புமை

**முற்றும்:**

" அரசுகொள் கடன்க ளாற்றி மிகுதிகொண் டறங்கள் பேணிப்
பரவரும் கடவுட் போற்றிக் குரவரும் விருந்தும் பண்பின்
விரவிய கிளையுந் தாங்கி விளங்கிய குடிகள் ஓங்கி
வரைபுரை மாடம் நீடி மலர்ந்துள பதிகள் எங்கும்."

(**பெரிய.** திருநாட். 26.) *(43)*

## 44

**பழிஅஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை**
**வழிஎஞ்சல் எஞ்ஞான்றும் இல். 4**

**பரிமேலழகர்:** பழி அஞ்சிப் பாத்து[2] ஊண் வாழ்க்கை உடைத்தாயின் - பொருள் செய்யுங்கால் பாவத்தை அஞ்சி ஈட்டி, அப்பொருளை இயல்புடைய மூவர் முதலாயினர்க்கும், தென்புலத்தார் முதலிய நால்வர்க்கும் பகுத்துத் தான் உண்டலை ஒருவன் இல்வாழ்க்கை உடைத்தாயின், வழி எஞ்ஞான்றும் எஞ்சல் இல்-அவன்வழி உலகத்து எஞ்ஞான்றும் நிற்றல் அல்லது இறத்தல் இல்லை.

'பாவத்தான் வந்த பிறன்பொருளைப் பகுத்துண்ணின், அறம் பொருளுடையார் மேலும், பாவம் தன்மேலுமாய் நின்று வழி எஞ்சும் ஆகலின், பழியஞ்சி என்றார்.[3] வாழ்வானது உடைமை வாழ்க்கைமேல் ஏற்றப்பட்டது.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** இல் வாழ்க்கையாகிய நிலை பழியையும் அஞ்சிப் பகுத்துண்டலையும் உடைத்தாயின் தனது ஒழுங்கு இடையறுதல் எக்காலத்தினும் இல்லை.

---

1. இயல்புடைய மூவர் (**குறள்**, 41), துறந்தார், துவ்வாதவர், இறந்தார் (42) என்னும் அறுவர்.

2. பகுத்து என்பது பாத்து என நின்றது, தொகுப்பு என்பது தோப்பு எனவும், மிகுத்து என்பது மீத்து எனவும் ஆயினாற் போல; "பாத்தரும் பசும்பொன்" (**சீவக.** 87) என்பதில் பாத்து என்பது பகுத்து என்ற பொருளில் வந்தது காண்க.

3. "தானத்திற்கு உரித்தும் அன்று தன்கிளைக் கீயின் சால, ஈனத்துள் உய்க்கும் நிற்கும் எச்சத்தை இழக்கப் பண்ணும், மானத்தை அழிக்கும் துய்க்கில் மற்றவர்க் கடிமை ஆக்கும், ஊனத்து நரகத் துய்க்கும் பிறன்பொருள் உவக்கின் வேந்தே." (**மேருமந்.** 308.)

**காளிங்கர்:** வழி எஞ்சல் - இவ்வில்லறத்தினது ஒழுகலாறு குறைபட்டு ஒழிதல்.

### ஒப்புமை

**பாத்தூண்:** குறள், 227; மணி. 17 : 1.

"பாத்துண்மின்." (நாலடி. 92.) (44)

## 45

**அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை**
**பண்பும் பயனும் அது.** 5

**பரிமேலழகர்:** இல்வாழ்க்கை அன்பும் அறனும் உடைத்தாயின் - ஒருவன் இல்வாழ்க்கை தன் துணைவிமேற் செய்யத்தகும் அன்பினையும் பிறர்க்குப் பகுத்துண்டலாகிய அறத்தினையும் உடைத்தாயின், அது பண்பும் பயனும் - அவ்வுடைமை அதற்குப் பண்பும் பயனுமாம்.

நிரல்நிறை. இல்லாட்கும் கணவற்கும் நெஞ்சு ஒன்றாகா வழி[1] இல்லறம் கடைபோகாமையின், அன்புடைமை பண்பாயிற்று; அறனுடைமை பயனாயிற்று.

இவை மூன்று பாட்டானும் இல்நிலையில் நின்றான் அறஞ்செய்யுமாறு கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** அன்பு - யாவர் மாட்டும் அன்பு செய்தல்.

பயன் வேறு வேண்டாம்; தனக்கும் பிறர்க்கும் உண்டான முக மலர்ச்சிதானே அமையும் என்பது. இது பழியொடு வாராத உணவை நுகர, ஏற்பார் மாட்டு அன்பு செய்ய வேண்டும் என்பதூஉம், சிலனுக்குக் கொடுக்கவேண்டும் என்பதூஉம் கூறிற்று.

**பரிதியார்:** நேசமும் தன்மமும் உண்டாகிய இல்லறம் இம்மைக்குச் செல்வம்; மறுமைக்கு மோட்சம் தரும்.

**காளிங்கர்:** மற்றிங்ஙனம் செலுத்துகின்ற இல்வாழ்க்கையானது செலுத்துமிடத்து மேன்மேலுந் தன்னெஞ்சத்து அன்புமற்று[2] அவனிடத்து இல்லையாயின் இல்வாழ்வு எவ்வகைப்பட்ட மாட்சிமையுடைத்தே யாயினும் யாதுமில்லை.

**கவிராஜ பண்டிதர்:** அறம் - யதிகளுக்குக் கொடுத்தலாகிற தர்மம்.

### ஒப்புமை

1. **அன்பும் அறனும்:**

"அன்பிலன் அறனிலன் எனப்படான்" (கலி. 74 : 6.)

2. **பண்பும் பயனும்:**

"பயனும் பண்பும் பாடறிந் தொழுகலும்." (நற். 160: 2.) (45)

## 46

**அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றில்**
**போஒய்ப் பெறுவ தெவன்.** 6

---

1. "காதல் இருவர் கருத்தொருமித்து - ஆதரவு, பட்டதே இன்பம்" (ஔவையார்.)

2. அன்பும் அறமும் என்று இருக்க வேண்டும்.

**பரிமேலழகர் :** இல்வாழ்க்கை அறத்தாற்றின் ஆற்றின் - ஒருவன் இல்வாழ்க்கையை அறத்தின் வழியே செலுத்துவனுயின், புறத்தாற்றில் போஒய்ப் பெறுவது எவன் - அவன் அதற்குப் புறமாகிய நெறியில் போய்ப் பெறும் பயன் யாது?

அறத்தாறு என்பது பழியஞ்சிப் பகுத்துண்டலும், அன்புடைமையு மென மேற்சொல்லிய ஆறு. புறத்தாறு - இல்லை விட்டு வனத்துச் செல்லும் நிலை. அந் நிலையின் இது பயனுடைத் தென்பார், 'போஒய்ப் பெறுவதெவன்' என்ருர்.

**உரை வேறுபாடு**

**மணக்குடவர் :** புறத்தாறு - புறநெறியாகிய தவம்.

மேல் சீலனுய்க் கொடுக்க வேண்டும் என்ருர்; அவ்வாறு செய்யின் தவப்பயனும் இதுதானே தரும்.

**பரிதியார் :** புறத்தாறு - பாவத்தின் வழி.

**கவிராஜ பண்டிதர் :** புறத்தாறு - மற்ற அதர்மமான வழி.

**ஒப்புமை**

**அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றுதல் :**

"அறந்தலைப் பிரியா தொழுகலும்." *(அகநா. 173 : 1.) (46)*

## 47

**இயல்பினுன் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்**
**முயல்வாருள் எல்லாம் தலை.** 7

**பரிமேலழகர் :** இல்வாழ்க்கை இயல்பினுன் வாழ்பவன் என்பான் - இல்வாழ்க்கைக்கண் நின்று அதற்குரிய இயல்போடு கூடி வாழ்பவனென்று சொல்லப்படுவான், முயல்வாருள் எல்லாம் தலை - புலன்களை விட முயல்வார் எல்லாருள்ளும் மிக்கவன்.

முற்றத் துறந்தவர் விட்டமையின், 'முயல்வார்' என்றது மூன்ரும் நிலையின்[1] நின்ருரை. அந் நிலைதான் பலவகைப்படுதலின் எல்லாருள்ளும் எனவும், முயலாது வைத்துப் பயனெய்துதலின் தலை எனவும் கூறிஞர்.

**உரை வேறுபாடு**

**மணக்குடவர் :** முயறல் - பொருளுக்கு முயறல்.

**பரிதியார் :** முயல்வார் - அறிய முயல்வார்.

தவம் செய்வார் ஆகாரம் நித்திரை முதலானவற்றை விட்டுச் சரீரத்தை ஒறுத்துத் தவம் செய்வார்; இவன் சரீரத்தை வருத்தாமல் இல்லறம் நடத்தி முத்தி பெறுவான்.

**காளிங்கர் :** முயல்வார் - மூன்ருெழுக்கத்திலும் முயல்கின்றவர்.

**கவிராஜ பண்டிதர் :** முயல்வார் - புலன்களையும் ஆசைகளையும் அடக்கித் தபசு பண்ணும் முனிவர்கள். *(47)*

## 48

**ஆற்றின் ஒழுக்கி அறனிழுக்கா இல்வாழ்க்கை**
**நோற்பாரின் நோன்மை உடைத்து.** 8

1. வானப்பிரஸ்தர்.

**பரிமேலழகர்:** ஆற்றின் ஒழுக்கி அறன் இழுக்கா இல்வாழ்க்கை - தவம்செய்வாரையும் தத்தம் நெறியின்கண் ஒழுகப் பண்ணித் தானும் தன் அறத்தில் தவறாத இல்வாழ்க்கை, நோற்பாரின் நோன்மை உடைத்து - அத் தவம் செய்வார் நிலையினும் பொறை யுடைத்து.

பசி முதலிய இடையூறு நீக்கலின், 'ஆற்றின் ஒழுக்கி' என்றார். 'நோற்பார்' என்பது ஆகுபெயர்.[1] நோற்பார் நிலைக்கு அவர் தம்மை உற்ற நோயல்லது[2] இல்வாழ்வார் நிலைபோற் பிறரை உற்ற நோயும் பொறுத்தல் இன்மையின், 'நோற்பாரின் நோன்மை யுடைத்து' என்றார்.

### உரை வேறுபாடு

**பரிதியார்:** அறத்தின் மேலாகிய இல்லறத்தின்மேல் நின்று தருமத் தைக் கைவிடாதார்க்குப் பிரமசாரி, வானப் பிரத்தன், சந்நியாசி இம் மூவரும் நிகரல்லர்.

### ஒப்புமை

**அறன் இழுக்கா இல்வாழ்க்கை:**

"அறநெறி பிழையா தாற்றின் ஒழுகி." (மதுரைக். 500.) (48)

## 49

அறன்எனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்
பிறன்பழிப்ப தில்லாயின் நன்று. 9

**பரிமேலழகர்:** அறன் எனப்பட்டது இல்வாழ்க்கையே - இருவகை அறத்தினும் நூல்களான் அறன் என்று சிறப்பித்துச் சொல்லப்பட்டது இல் வாழ்க்கையே;[3] அஃதும் பிறன் பழிப்பது இல்லாயின் நன்று - ஏனைத் துற வறமோவெனின், அதுவும் பிறனாற் பழிக்கப்படுவது இல்லையாயின், அவ் வில்வாழ்க்கையோடு ஒரு தன்மைத்தாக நன்று.

ஏகாரம் பிரிநிலைக்கண் வந்தது; இதனால் பிரிக்கப்பட்டது துறவற மாகலின், அஃது என்னும் சுட்டுப்பெயர் அதன்மேல் நின்றது. பிறன்பழிப்ப தென்றது கூடாவொழுக்கத்தை.[4] துறவறம், மனத்தையும் பொறிகளையும் ஒறுத்து அடக்கவல்ல அருமை உடைத்தாய வழியே அவற்றை ஒறுக்க வேண்டாது ஐம்புல இன்பங்களாரத் துய்க்கும் எண்மையுடைய இல்வாழ்க்கை யோடு அறமென ஒருங்கு எண்ணப்படுவ தென்றவாறு ஆயிற்று.

இவை நான்கு பாட்டானும் இல்நிலையே பயனுடைத்தென இதன் சிறப்புக் கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** அறனென்று சிறப்பித்துச் சொல்லப்பட்டது இல் வாழ்க்கையே; அதுவும் நன்றாவது பிறனொருவனால் பழிக்கப்படுவது ஒன்றை உடைத்தல்ல தாயின்.

---

1. நோற்பாரது நிலைக்கு ஆயிற்று.

2. "உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை, அற்றே தவத்திற் குரு." (குறள், 261.)

3. ஏகாரம் பிரித்துக் கூட்டப்பட்டது.

4. "மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம், பழித்த தொழித்து விடின்." (குறள், 280.)

பழிக்கப்படுவது என்றது இழிகுலத்தாளாகிய மனையாளை. இனி வாழ்க்கைத் துணைநலம் கூறுகின்றார் ஆகலின் இது கூறப்பட்டது.

**பரிதியார் :** தருமம் என்பது இல்லறம்; அது லோகம் பழியாமல் நீதியிலே நடக்குமாகில் நன்று.

**ஒப்புமை**

**முற்றும் :**

"மனைவாழ்க்கை முன்னினிது மாணாதா மாயின்
நிலையாமை நோக்கி நெடியார் துறத்தல்
தலையாகத் தானினிது நன்கு" (இனியவை. 3.)
"இல்லற மல்லது நல்லற மன்று." (கொன்றைவேந்தன்.) (49)

**50**

**வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்.** 10

**பரிமேலழகர் :** வாழ்வாங்கு வையத்துள் வாழ்பவன் - இல்லறத்தோடு கூடி வாழும் இயல்பினால் வையத்தின்கண் வாழ்பவன், வான் உறையும் தெய்வத்துள் வைக்கப்படும் - வையத்தானே யெனினும் வானின்கண் உறையும் தேவருள் ஒருவனாக வைத்து நன்கு மதிக்கப்படும்.

பின் தேவனாய் அவ்வறப்பயன் நுகர்தல் ஒருதலையாகலின், தெய்வத்துள் வைக்கப்படும் என்றார்.

இதனான் இல்நிலையது மறுமைப்பயன் கூறப்பட்டது. இம்மைப் பயன் புகழ்; அதனை இறுதிக்கண்[1] கூறுப. (50)

---

# 6. வாழ்க்கைத் துணைநலம்

**பரிமேலழகர் :** அஃதாவது அவ் வில்வாழ்க்கைக்குத் துணையாகிய இல்லாளது நன்மை. அதிகார முறைமையும் இதனானே விளங்கும்.

**மணக்குடவர் :** நலம் - பெண்மை இலக்கணம்.

**பரிதியார் :** வாழ்க்கைத்துணை நலமாவது இல்லறம் நடத்தும்போது பதிவிரதை வேணுமென்னும் முறையாலே உணர்த்துதல்,

**51**

**மனைத்தக்க மாண்புடையள் ஆகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை.** 1

**பரிமேலழகர்:** மனைத் தக்க மாண்பு உடையளாகித் தற்கொண்டான் வளத்தக்காள் - மனையறத்திற்குத் தக்க நற்குண நற்செய்கைகளை உடையளாய்த் தன்னைக் கொண்டவனது வருவாய்க்குத் தக்க வாழ்க்கையை உடையாள், வாழ்க்கைத் துணை - அதற்குத் துணை.

நற்குணங்களாவன: துறந்தார்ப்பேணலும், விருந்தயர்தலும், வறியார் மாட்டு அருளுடைமையும் முதலாயின[1]. நற்செய்கைகளாவன: வாழ்க்கைக்கு வேண்டும் பொருள்கள் அறிந்து கடைப்பிடித்தலும், அட்டில் தொழில் வன்மை

1. 24-ஆம் அதிகாரம்.

யும், ஒப்புரவு செய்தலும் முதலாயின. வருவாய்க்குத் தக்க வாழ்க்கையாவது, முதலை அறிந்து அதற்கு இயைய அழித்தல்.

அதனால் இவ்விரண்டு நன்மையும் சிறந்தனவென்பது கூறப்பட்டது.

**ஒப்புமை**

1. **மனைத் தக்க மாண்பு:**

"மனைமாட்சி"
"இல்லவள் மாண்பு" (குறள், 52, 53.)
"மாண்டஎன் மனைவி." (புறநா. 191:3.)

2. **தற்கொண்டான் வளத்தக்காள்:**

"வருவாய்க்குத் தக்க வழக்கறிந்து சுற்றம்
வெருவாமை வீழ்விருந் தோம்பி...
செய்வதே பெண்டிர் சிறப்பு." (சிறுபஞ்ச. 42.) (51)

## 52

**மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை
எனைமாட்சித் தாயினும் இல். 2**

**பரிமேலழகர்:** மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் - மனையறத்திற்குத் தக்க நற்குண நற்செய்கைகள் ஒருவன் இல்லாளிடத்து இல்லையாயின், வாழ்க்கை எனைமாட்சித்து ஆயினும் இல் - அவ் வில்வாழ்க்கை செல்வத்தான் எத்துணை மாட்சிமை உடைத்தாயினும் அஃது உடைத்தன்று.

இல்லையென்றார், பயன்படாமையின்.

**உரை வேறுபாடு**

**பரிதியார்:** இல்லறத்தில் நானுபதார்த்தம் உண்டாயிருக்கும் ஒன்றும் இல்லை.

**ஒப்புமை**

1. **மனைமாட்சி:**

குறள், 51, 53.
"மனையின் மாட்சியை அழித்திழி மாதவப் பன்னி."
(கம்ப. அகலிகை. 70.)

2. **முற்றும்:**

"விழைதக்க மாண்ட மனையாளை இல்லாதான் இல்அதர்
காண்டற் கரியதோர் காடு" (நாலடி. 361.)
"தாரம் மாணாதது வாழ்க்கை யன்று." (முதுமொழிக். 42.) (52)

## 53

**இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென்
இல்லவள் மாணாக் கடை.**

**பரிமேலழகர்:** இல்லவள் மாண்பு ஆனால் இல்லது என் - ஒருவனுக்கு இல்லாள் நற்குண நற்செய்கையள் ஆயினக்கால் இல்லாதது யாது? இல்லவள் மாணாக்கடை உள்ளது என் - அவள் அன்னள் அல்லாக்கால் உள்ளது யாது?

மாண்பெனக் குணத்தின் பெயர் குணிமேல் நின்றது[1].

இவை இரண்டு பாட்டானும் இல்வாழ்க்கைக்கு வேண்டுவது இல்லாளது மாட்சியே, பிற அல்ல வென்பது கூறப்பட்டது.

---

1. 'மாண்பினள்' என்னாமையின் இவ்வாறு உரைத்தார்.

உரை வேறுபாடு

**காளிங்கர்:** மாண்பாயின் என்பது இவர் பாடம். மாண்பாயின் - கற்பு என்னும் மாட்சிமை உடையளானால்.

ஒப்புமை

**இல்லவள் மாண்பு:** குறள், 51, 52. (53)

## 54

**பெண்ணிற் பெருந்தக்க யாஉள கற்பென்னும்**
**திண்மைஉண் டாகப் பெறின்.** 4

**பரிமேலழகர்:** பெண்ணின் பெருந்தக்க யா உள - ஒருவன் எய்தும் பொருள்களுள் இல்லாளின் மேம்பட்ட பொருள்கள் யாவை உள, கற்பு என்னும் திண்மை உண்டாகப் பெறின் - அவள்மாட்டுக் கற்பு என்னும் கலங்கா நிலைமை உண்டாகப் பெறின்?

கற்புடையாள்போல அறம் முதலிய மூன்றற்கும் ஏதுவாவன பிற இன்மையின், யாவுள என்றார்.

இதனால் கற்பு நலத்தது சிறப்புக் கூறப்பட்டது.

உரை வேறுபாடு

**மணக்குடவர்:** பெண்ணின் - பெண் பிறப்புப் போல.

**பரிதியார்:** ஸ்திரீசாதி யென்னும் பெரும்பாவக் கன்னியராயினும் பெண் பிறப்பு தெய்வப் பிறப்பு. அது ஏது எனில், பெண்ணிடத்தில் பதிவிரதா பாவகம் உண்டாகில்.

**காளிங்கர்:** கற்பென்னும் திண்மை - கற்பென்னும் திறமை.[1] (54)

## 55

**தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்**
**பெய்யெனப் பெய்யும் மழை.** 5

**பரிமேலழகர்:** தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுது எழுவாள் பெய் என - பிறதெய்வம் தொழாது தன் தெய்வமாகிய கொழுநனைத்[2] தொழாநின்று துயிலெழுவாள் பெய்யென்று சொல்ல, மழை பெய்யும் - மழை பெய்யும்.

தெய்வந் தொழுதற்கு மனம் தெளிவது துயிலெழுங்காலத் தாகலின், தொழுதெழுவாள் என்றார்.[3] தொழாநின் றென்பது தொழுதெனத் திரிந்து நின்றது.[4] தெய்வந்தான் ஏவல் செய்யுமென்பதாம்.

இதனால் கற்புடையவளது ஆற்றல் கூறப்பட்டது.

1. "தீதிலா வடமீனின் திறமிவள் திறமென்றும்" (சிலப். 1 : 27.)

2. "குலமகட்குத் தெய்வம் கொழுநனே." (நீதிநெறி. 27.)

3. "தொழுதெழுவார், வினைவளம் நீறெழ" (திருக்கோவையார், 118) என்பதில் அதன் உரை ஆசிரியர், தொழாநின்று என உரைகூறி, 'தொழு தெழுவார் என்றது துயில் எழும் காலத்து அல்லது முன்னுணர்வு இன்மையான், உணர்வுள்ள காலத்து மறவாது நினைவார் என்றவாறு' என விளக்கினர்.

4. இவ் வாக்கியத்தைக் கள்ளவுரை என்பர் நுண் பொருள் மாலையுடையார்.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள் - தெய்வத்தைத் தெய்வமென்று தொழாளாய் எல்லாத் தெய்வமும் தன் கணவன் என்றே கருதி, அவனை நாடோறுந் தொழுதெழு மவள். எழுதல் - உறங்கி எழுதல்.

**பரிதியார்:** தெய்வம் - குலதேவதை.

**கவிராஜ பண்டிதர்:** தொழுது - தோத்திரம் பண்ணிக் கொண்டு.

### மேற்கோள் விளக்கம்

கொழுநற் றொழு தெழுவாள் என்பது எழுந்து கொழுநற் றொழுவாள் என முன் பின்னாகப் பொருள்படும் என்பர் **பிரயோக விவேக** நூலார். (**திங்ஙுப்.** *5.*)

### ஒப்புமை

1. **கற்புடை மகளிர் தெய்வம் தொழாமை:**

'காமவேள் கோட்டம் தொழுதார் நன்மை பெறுவர்' என்ற விடத்துக் கண்ணகி "பீடன்று" என இருந்தாள் என்பர் இளங்கோவடிகள் (**சிலப்.** *9 : 60-64*); அதன் உரையில், 'தெய்வம் தொழுதல் எங்கட்கு இயல்பு அன்று' என உரைத்தார் அடியார்க்கு நல்லார்.

"கொண்டோன் அல்லது தெய்வமும் பேணாப், பெண்டிர்"
"கடவுட் பேணல் கடவியை ஆகலின்
மடவரல் ஏவ மழையும் பெய்யாது
நிறையுடைப் பெண்டிர் தம்மே போல"
(**மணி.** *8 : 101-2, 22 : 64-6.*)

"தங்கள்நா யகரில் தெய்வம் தான்பிறி தில்லென் றெண்ணும்
மங்கைமார்." (**கம்ப.** வேள்விப். *16.*)

2. **தெய்வத்தைத் தொழாமல் கணவனைத் தொழுதல்:**

"தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுவாளைத்
தெய்வம் தொழுந்தகைமை திண்ணிதால் - தெய்வமாய்
மண்ணக மாதர்க் கணியாய கண்ணகி
விண்ணகமா தர்க்கு விருந்து." (**சிலப்.** *23,* இறுதி வெண்பா.)

"காமனை யென்றும் சொல்லார் கணவர்க்கை தொழுது வாழ்வார்."
(**சீவக.** *1598.*)

3. **கணவனைத் தொழுதெழல்:**

"குறவர் மடமகளிர் தாம்பிழையார்
கேள்வர்த் தொழுதெழலால்." (**கலி.** *39: 16-7.*)

4. **கற்புடை மகளிர் மழை தருதல்:**

"வறனுேடின் வையகத்து வான்தரும் கற்பினுள்"
"அருமழை தரல்வேண்டின் தருகிற்கும் பெருமையளே."
(**கலி.** *16 : 20, 39 : 6.*)

"கொண்டான் குறிப்பறிவாள் பெண்டாட்டி......
இவர்மூவர் பெய்யெனப் பெய்யும் மழை"
"பெண்பால், கொழுநன் வழிச்செலவும் இம்மூன்றும்
திங்கள்மும் மாரிக்கு வித்து."
(**திரிகடுகம்,** *96, 98.*)

"வானம் பெய்யாது வளம்பிழைப் பறியாது
நீணில வேந்தர் கொற்றம் குறையாது
பத்தினிப் பெண்டிர் இருந்த நாடு" (சிலப். 15: 145-7.)
'பத்தினி மகளிர் பெய்யெனப் பெய்யும் மழைஎன்பதூஉம்'
(சிலப். பதிகம், 89, அரும்பத.)
"வான்தரு கற்பின் மனையுறை மகளிர்"
"புண்ணியம் முட்டாள் பொழிமழை தரூஉம்
அரும்பெறன் மகளிர்ப் பத்தினிப் பெண்டிரும்"
"மண்டிணி ஞாலத்து மழைவளம் தரூஉம்
பெண்டிர்"
"ஓங்கிரு வானத்து மழையும்நின் மொழியது."
(மணி. 15 : 77, 16 : 49-50, 22 : 45-6, 99.)
"நாடும் ஊரும் நனிபுகழ்ந் தேத்தலும்
பீடு றும்மழை பெய்கெனப் பெய்தலும்
கூட லாற்றவர் நல்லது கூறுங்கால்
பாடு சான்மிகு பத்தினிக் காவதே" (வளையாபதி.)
"மழைக்குதவும் பெருங்கற்பின் மனைவியார்" (பெரிய. மானக். 11.)
"மாதரார், அற்பின் நின்றன அறங்கள் அன்னவர்
கற்பின் நின்றன கால மாரியே." (கம்ப. நாட்டுப். 59.)

5. முற்றும் :

"தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் பெருமழை என்றஅப்
பொய்யில் புலவன் பொருளுரை தேறாய்." (மணி. 22: 59-61.) (55)

## 56

**தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற**
**சொற்காத்துச் சோர்விலாள் பெண்.** 6

**பரிமேலழகர்:** தன் காத்துத் தன் கொண்டான் பேணி - கற்பினின்றும் வழுவாமல் தன்னைக் காத்துத் தன்னைக் கொண்டவனையும் உண்டி முதலிய வற்றால் பேணி, தகைசான்ற சொல் காத்து - இருவர்மாட்டும் நன்மை அமைந்த புகழ் நீங்காமல் காத்து, சோர்வு இலாள் பெண் - மேற்சொல்லிய நற்குண நற்செய்கைகளிலும் கடைப்பிடி உடையாளே பெண்ணாவாள்.

தன்மாட்டுப் புகழாவது வாழும் ஊர் கற்பால் தன்னைப் புகழ்வது.[1] சோர்வு - மறவி.[2]

இதனால் கற்புடையவளது சிறப்புக் கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**பரிதியார்:** தன் கற்பையும் காத்து, தன் பத்தாவின் குணத்தையும் பேணி, இன்னாள் பதிவிரதை என்னும் சொல்லையும் காத்து, அசைவில்லாத கற்பினாள் வாழ்க்கைத் துணையாம்.

**காளிங்கர்:** பேணி - விரும்பி, வழிபட்டு; தகை சான்ற சொல் காத்து - தன் குலத் தகுதியோடு அமைந்த அடக்கச் சொல்லினையும் நாவிற் பேணி.

1. "வல்லாளாய் வாழுமூர் தற்புகழு மாண்கற்பின், இல்லா ளமர்ந்ததே யில்" (நாலடியார், 383); "தீதிலா வடமீனின் திறமிவள் திறம்என்றும், மாதரார் தொழுதேத்த" (சிலப். 1 : 27 – 8); "உன், உயர்புகழ்த் தேவியை யுதவற் பாலனால்" (கம்ப. கலன்காண். 11); "நாடும் ஊரும் நனிபுகழ்ந் தேத்தலும்" (வளையாபதி.)

2. குறள், 531.

இராமாநுச கவிராயர், தகை சான்ற சொற்காத்து என்பதற்கு[1], 'தன்னைக் கொண்டவனது நன்மை நிறைந்த சொல்லைக் கடவாமல் காத்து' என்பர். (56)

## 57

**சிறைகாக்கும் காப்பெவன் செய்யும் மகளிர்**
**நிறைகாக்கும் காப்பே தலை. 7**

**பரிமேலழகர் :** மகளிர் சிறை காக்கும் காப்பு எவன் செய்யும் - மகளிரைத் தலைவர் சிறையாற் காக்கும் காவல் என்ன பயனைச் செய்யும்? நிறை காக்கும் காப்பே தலை - அவர் தமது நிறையாற் காக்கும் காவலே தலையாய காவல்.

சிறை, மதிலும் வாயில்காவலும் முதலாயின. நிறை - நெஞ்சைக் கற்பு நெறியில் நிறுத்தல். காவல் இரண்டினும் நிறைகாவல் இல்வழி ஏனைச் சிறைகாவலால் பயன்இல்லை யென்பார், 'நிறை காக்கும் காப்பே தலை' என்றார். ஏகாரம் பிரிநிலைக்கண் வந்தது.

இதனால் தற்காத்தற் சிறப்புக் கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**மணக்குடவர் :** நிறை - கற்பு.

**பரிதியார் :** உட்காவல், புறக்காவல் மனைக்குத்தான். அவற்றாற் காவற் படுவது கற்பன்று; மடவார் பதிவிரதா பாவகத்தில் உண்டாவதே கற்பு.

**கவிராஜ பண்டிதர் :** காப்பு - வீடு, வாசல் காவற்காரர், கோட்டை, கொம்மை முதலானவைகளில் காக்கின்ற காவல்.

### மேற்கோள் விளக்கம்

காப்பு என்பது இருவகைத்து; நிறைகாவல், சிறை காவல் என. அவற்றுள் நிறைகாவல் என்பது காப்பன காத்துக் கடிவன கடிந்து ஒழுகும் ஒழுக்கம். (இறை. சூ. 29.)

### ஒப்புமை

**1. சிறை காக்கும் காப்புப் பயன்இல்லை :**

"நிறையான் மிகுகில்லா நேரிழை யாரைச்
சிறையான் அகப்படுத்த லாகா" (பழமொழி, 30.)

"உண்டியுட் காப்புண் டுறுபொருள் காப்புண்டு
கண்ட விழுப்பொருள் கல்விக்குக் காப்புண்டு
பெண்டிரைக் காப்ப திலமென்று ஞாலத்துக்
கண்டு மொழிந்தனர் கற்றறிந் தோரே." (வளையாபதி.)

**2. நிறை காக்கும் காப்பு:**

"கன்னிக் காவலும் கடியிற் காவலும்
தன்னுறு கணவன் சாவுறிற் காவலும்
நிறையிற் காத்துப் பிறர்பிறர்க் காணாது
கொண்டோ னல்லது தெய்வமும் பேணாப்
பெண்டிர்," (மணி. 18 : 98-102.)

"கட்டழ கமைந்த கண்ணாள் நிறையெனும் சிறையைக் கைபோய்"
(சீவக. 710.)

---

1. "கற்பெனப் படுவது சொற்றிறம் பாமை." (கொன்றை வேந்தன்.)

"பூவை கற்பெனும்
இருஞ்சிறை யிருதெனு விடரும் நீங்கினுன்"
"தருமமே காத்ததோ சனகன் நல்வினைக்
கருமமே காத்ததோ கற்பின் காவலோ."
(கம்ப. சடாயு உயிர். 144, காட்சிப். 57.)

3. முற்றும்:

"வழக்கெனைத்தும் இல்லாத வாள்வாய்க் கிடந்தும்
இழுக்கினைத் தாம்பெறுவ ராயின் - இழுக்கெனைத்தும்
செய்குறுப் பாணி சிறிதேஅச் சின்மொழியார்
கையுறுப் பாணி பெரிது."

(நாலடி. 362.) (57)

## 58

**பெற்றுற் பெறிற்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்**
**புத்தேளிர் வாழும் உலகு.** 8

**பரிமேலழகர்:** பெண்டிர் பெற்றுன் பெறின் - பெண்டிர் தம்மை எய்திய கணவனை வழிபடுதல் பெறுவராயின், புத்தேளிர் வாழும் உலகு பெருஞ்சிறப்புப் பெறுவர் - புத்தேளிர் வாழும் உலகின்கண் அவராற் பெருஞ் சிறப்பினைப் பெறுவர்.

வழிபடுதல் என்பது சொல்லெச்சம்.

இதனுல் தற்கொண்டாற் பேணிய மகளிர் புத்தேளிரால் பேணப் படுவர் என்பது கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** "பெற்றுர்ப் பெறின்" என்பது இவர் பாடம்.

பெண்டிரானவர் தம்மை மனைவியராகப் பெற்றவரையே தமக்குத் தலைவராகப் பெறின், தேவர் வாழும் பெரிய சிறப்பினையுடைய உலகத்தைப் பெறுவர்.

**பரிதியார்:** தன் பத்தாவும் பூலோகமும் இவள் பதிவிரதை என்று மனமகிழ்ந்த கற்பினுள் பெறுவள், தேவர்கள் செய்யும் சிறப்பை.
இதற்கு ஒப்பனைகள் கண்ணகியாரைக் கண்டுகொள்க.

**காளிங்கர்:** மற்று அவர் பெறுவர் இம்மை யாக்கமும், மிகவும் சிறப்புடைத்தாகிய தேவர்கள் வாழும் உலகினையும்.

### ஒப்புமை

**பெற்றுனைப் பெறுதல்:**
"பெற்றுற் பிழையாத பெண்டிரும்." (பரிபா. திரட்டு, 2 : 25.)

### குறிப்பு

"பெற்றுற் பெறிற் பெறுவர் பெண்டிர்" என்பது ஒருமை பன்மை மயக்கம், "ஏவல் இளையர் தாய்வயிறு கரிப்ப" என்புழிப் போல.

இம்மையில் பெரிய சிறப்பையும் மறுமையில் புத்தேளிர் வாழும் உலகையும் பெறுவர் என்று பொருளுரைப்பது சிறக்கும். (58)

## 59

புகழ்புரிந் தில்இலோர்க் கில்லை இகழ்வார்முன்
ஏறுபோல் பீடு நடை. 9

**பரிமேலழகர் :** புகழ் புரிந்த இல் இலோர்க்கு - புகழை விரும்பிய இல்லாளை இல்லாதார்க்கு, இகழ்வார் முன் ஏறுபோல் பீடு நடை இல்லை - தம்மை இகழ்ந்துரைக்கும் பகைவர்முன் சிங்க ஏறுபோல நடக்கும் பெருமித நடை இல்லை.

புரிந்த என்னும் பெயரெச்சத்து அகரம் விகாரத்தால் தொக்கது. பெருமிதம் உடையானுக்குச் சிங்க ஏறு நடையான் உவமமாகலின் ஏறுபோல் என்றார்.

இதனால் தகைசான்ற சொல் காவாவழிப் படும் குற்றம் கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**மணக்குடவர் :** புரிந்த - பொருந்தின. பீடுநடை - அசைவும் தலையெடுப்பும் பொருந்திய நடை.

**பரிதியார் :** 'இன்னாள் பதிவிரதை' என்று சொல்லும் சொல்பெருத மடவாரை மனையாளாக உடையான் தன்னை வேண்டார் முன்னே 'ரிஷபம் போலே திரிகின்றான்' என்று ஏசுதற்கு இடமாவான்.

**காளிங்கர் :** ஏறு போன்றுள்ளதோர் பெருமை ஒழுக்கம் இல்லை.

### ஒப்புமை

**நடைக்குச் சிங்கம் :**

"சிங்கம் நடப்பதுபோல் சேர்ந்து" (சீவக. 2608.)

"மாக மடங்கலும்......நாண நடந்தான்." (கம்ப. கார்முகப். 32.) (59)

## 60

மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு. 10

**பரிமேலழகர் :** மங்கலம் என்ப மனைமாட்சி - ஒருவற்கு நன்மையென்று சொல்லுவர் அறிந்தோர் மனையாளது நற்குண நற்செய்கைகளை; அதன் நன்கலம் நன்மக்கட் பேறு - அவைதமக்கு[1] நல்ல அணிகலமென்று சொல்லுவர் நல்ல புதல்வரைப் பெறுதலை.

அறிந்தோரென்பது எஞ்சி நின்றது. மற்று: அசைநிலை.

இதனால் வாழ்க்கைத் துணைக்கு ஆவதோர் அணிநலம் கூறி, வருகின்ற அதிகாரத்திற்குத் தோற்றுவாய் செய்யப்பட்டது.

### உரை வேறுபாடு

**மணக்குடவர் :** மங்கலம் - அழகு.

**காளிங்கர் :** நன்மக்கள் பேறு - சான்றோரால் மதிக்கப்பட்ட அறிவினையுடைய புதல்வரைப் பெறுதல்.

---

1. மாட்சி என்று ஒருமையாக இருத்தலின் அதன் நன்கலம் என்று ஒருமையாகவே கூறினர் வள்ளுவர்; மாட்சி என்பதற்கு நற்குண நற்செய்கைகள் என்று பொருள் உரைத்தமையின் அதற்கு ஏற்ப அவை என்று பன்மையாக உரை கூறினார்.

மற்று இப்படியாதலால் புதல்வரைப் பெற்ருள் சிறப்பு அறிவிக்கின்றது.

இனி மற்று அங்ஙனம் அன்புடையாளர்க்கே விருந்தினரைப் பேணி வழிபடலாவது என்பதனுல் இதன்பின் வந்தது விருந்தோம்பல் என்னும் அதிகாரம்.

ஒப்புமை

**முற்றும் :**

"ஒண்சுடர்ப் பாண்டிற் செஞ்சுடர் போல
மனைக்குவிளக் காயினள் மன்ற......
புறவணி நாடன் புதல்வன் தாயே" (ஐங். 405.)

"கடவுட் கற்பொடு குடிக்குவிளக் காகிய
புதல்வற் பயந்த புகழ்மிகு சிறப்பின்
நன்ன ராட்டி" (அகநா. 184 : 1-3.)

"மனைக்கு விளக்கம் மடவாள் மடவாள்
தனக்குத் தகைசால் புதல்வர்." (நான்மணி. 101.) (60)

# 7. புதல்வரைப் பெறுதல்

**பரிமேலழகர் :** அஃதாவது, இருபிறப்பாளர் மூவரானும்[1] இயல்பாக இறுக்கப்படுஉம் கடன் மூன்றனுள், முனிவர் கடன் கேள்வியானும், தேவர் கடன் வேள்வியானும், தென்புலத்தார் கடன் புதல்வரைப் பெறுதலானும்அல்லது இறுக்கப்படாமையின், அக் கடன் இறுத்தற்பொருட்டு நன்மக்களைப் பெறுதல்.[2] அதிகார முறைமை மேலே பெறப்பட்டது.

## 61

பெறும்அவற்றுள் யாம்அறிவ தில்லை அறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற. 1

**பரிமேலழகர் :** பெறும் அவற்றுள் - ஒருவன் பெறும் பேறுகளுள், அறிவு அறிந்த மக்கட்பேறு அல்ல பிற - அறிய வேண்டுவன அறிதற்குரிய மக்களைப் பெறுதலல்லது பிற பேறுகளை, யாம் அறிவது இல்லை - யாம் மதிப்பது இல்லை.

அறிவது என்பது அறிதலைச் செய்வதென அத் தொழில்மேல் நின்றது.[3] காரணமாகிய உரிமை காரியமாகிய அறிதலைப் பயந்தே விடுமாதலான், அத்துணிவுபற்றி அறிந்த என இறந்த காலத்தால் கூறினர். அறிவறிந்த என்றதனுன், மக்கள் என்னும் பெயர் பெண்ணொழித்து நின்றது.

இதனுல் புதல்வர்ப் பேற்றினது சிறப்புக் கூறப்பட்டது.

---

1. அந்தணர், அரசர், வணிகர்.
2. " வேள்வியிற் கடவு ளருத்தினை கேள்வி
உயர்நிலை யுலகத் தையரின் புறுத்தினை
வணங்கிய சாயல் வணங்கா வாண்மை
இளந்துணைப் புதல்வரின் முதியர்ப் பேணித்
தொல்கட னிறுத்த வெல்போ ரண்ணல்." (பதிற்றுப். 70:18-22.)
3. அறியும் பொருள் என்ப் பொருள் கொள்ளின் பிற என்னும் பன்மை பொருந்தாதாதலின் இங்ஙனம் கொண்டார்.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** அறிவது இல்லை-அவற்றினும் சிறந்தனவாக யாம் கண்டறிவதில்லை.

**காளிங்கர்:** அறிவது - கருதியிருப்பதொன்றும். அறிவறிந்த மக்கட் பேறு - அறிவினை முழுதும் அறிந்த நெறிக்குரியராகிய மக்கட்பேறு.

**கவிராஜபண்டிதர்:** அறிவுண்டாயிருக்கிற பிள்ளைகளைப் பெற்றால் அந்தப் பிள்ளைகளாலே இம்மையில் கீர்த்தியும் மறுமைக்கு உறுதியாகிய தன்ம போதனையும் உண்டாம்.

### ஒப்புமை

**முற்றும்:**

"ஆர்கலி உலகத்து மக்கட் கெல்லாம்
மக்கட் பேற்றிற் பெரும்பே றில்லை." (முதுமொழிக். 51.) (61)

## 62

எழுபிறப்பும் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின். 2

**பரிமேலழகர்:** எழுபிறப்பும் தீயவை தீண்டா - வினைவயத்தாற் பிறக்கும் பிறப்பு ஏழின்கண்ணும் ஒருவனைத் துன்பங்கள் சென்று அடையா, பழி பிறங்காப் பண்பு உடை மக்கள் பெறின் - பிறரால் பழிக்கப்படாத நற் குணங்களையுடைய புதல்வரைப் பெறுவானாயின்.

அவன் தீவினை வளராது, தேய்தற்குக் காரணமாகிய நல்வினை களைச் செய்யும் புதல்வரைப் பெறுவானாயின் என்றவாறு ஆயிற்று. பிறப்பு ஏழாவன: "ஊர்வ பதினொன்றும் ஒன்பது மானிடம், நீர்பறவை நாற்காலோர் பப்பத்துச் - சீரிய, பந்தமாந் தேவர் பதினா லயன்படைத்த, அந்தமில்சீர்த் தாவரநா லைந்து". தந்தை தாயர் தீவினை தேய்தற் பொருட்டு அவரை நோக்கிப் புதல்வர் செய்யும் தான தருமங்கட்கு அவர் நற்குணம் காரணமாக லின், பண்பென்னும் காரணப் பெயர் காரியத்தின்மேல் நின்றது.[1]

### உரை வேறுபாடு

**கவிராஜபண்டிதர்:** ஏழு பிறப்பாவன: ஓரறிவு உயிர் இரண்டு, ஈரறிவு உயிர் ஒன்று, மூவறிவு உயிர் ஒன்று, நாலறிவு உயிர் ஒன்று, ஐயறிவு உயிர் இரண்டு ஆக மொத்தம் ஏழு.

### ஒப்புமை

**முற்றும்:**

"உரிமை மைந்தரைப் பெறுகின்ற துறுதுயர் நீங்கி
இருமை யும்பெறற் கென்பது பெரியவர் இயற்கை"

"சொன்ம றுமகப் பெற்றவர் அருந்துயர் துறந்தார்."
(கம்ப. மந்திரப். 63, 68.) (62)

---

1. இங்கே பண்பென்றது அவற்றால் விளையும் செயல்களைக் குறித்ததாதலின் இங்ஙனம் எழுதினார்.

## 63

தம்பொருள் என்பதம் மக்கள் அவர்பொருள்
தம்தம் வினையான் வரும். 3

**பரிமேலழகர்:** தம் மக்கள் தம் பொருள் என்ப - தம் புதல்வரைத் தம்பொருள் என்று சொல்லுவர் அறிந்தோர், அவர் பொருள் தம் தம் வினையான் வரும் - அப்புதல்வர் செய்த பொருள் தம்மை நோக்கி அவர் செய்யும் நல்வினையானே தம்பால் வரும் ஆதலான்.

'தந்தம் வினை' என்புழித் தொக்குநின்ற ஆறும்வேற்றுமை, "முருகனது குறிஞ்சி நிலம்" என்புழிப்போல உரிமைப் பொருட்கண் வந்தது. பொருள் செய்த மக்களைப் பொருளென உபசரித்தார்.

இவை இரண்டு பாட்டானும் நன்மக்கட் பெற்றார் பெறும் மறுமைப் பயன் கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** அம் மக்களுடைய பொருள் தத்தம்முடைய வினையோடே கூட வருதலான்.

**பரிதியார்:** அந்தப் புதல்வர் என்னும் பேறு தாம்தாம் செய்த விதி வசத்தால் வரும்.

**காளிங்கர்:** குணச் செல்வம், குலச் செல்வம், பொருட் செல்வம், செவிச் செல்வம் என்றிவை முதலாக உலகத்து எண்ணி வருகின்ற செல்வங்கள் அனைத்தினும் இனிய செல்வமாவது அறிவுடைய புதல்வரைப் பெறுதல்; புதல்வர்க்குச் செல்வமாவது பெரிய தகைமையாகிய தவத்தினால் வருவது.

### ஒப்புமை

**மக்கள் பொருளாதல்:**

"பொன்போற் புதல்வனோடு" (ஐங். 265:4)
"பொன்போற் புதல்வர்ப் பெறாஅ தீரும்" (புறநா. 9 : 4)
"நம்பொருள்நம் மக்களென்று நச்சி"(**சம்பந்தர்.** சீகாழித் திருவிராகம்,1.)

### குறிப்பு

பொருள் என்னும் சொல்லுக்கே மகன் என்னும் பொருள் உண்டு; "தாரகனைப் பொருது பொன்றுவித்த பொருளினைமுன் படைத்துகந்த புனிதன்." (தேவாரம்.)
*(63)*

## 64

அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள்
சிறுகை அளாவிய கூழ். 4

**பரிமேலழகர்:** அமிழ்தினும் ஆற்ற இனிதே - சுவையான் அமிழ்தத்தினும் மிக இனிமை உடைத்து, தம் மக்கள் சிறு கை அளாவிய கூழ்- தம் மக்களது சிறு கையான் அளாவப்பட்ட சோறு.

சிறு கையால் அளாவலாவது, "இட்டுந் தொட்டுங் கவ்வியுந் துழந்தும், நெய்யுடை யடிசில் மெய்பட விதிர்த்தல்."[1]

1. **புறநானூறு**, 188 : 4–5.

### உரை வேறுபாடு

**காளிங்கர்:** தம் மக்கள் சிறுகை அளாவிய கூழ்-தம் புதல்வரானு விரகறியாப் பருவத்து அச்சிறு கையால் தாம் உண்ணும் காலத்து அங்கோடு இங்கோடு அளாவிய உணவானது.

### ஒப்புமை

1. **மக்கள் உணவை அளைதல்:**

"இன்னடிசில்
புக்களையும் தாமரைக்கைப் பூநாறும் செய்யவாய்
மக்களை." (நளவெண்பா.)

2. **முற்றும்:**

"வண்ணச் செஞ்சிறு கைவிரல் அனைத்தும்
வாரி வாய்க்கொண்ட அடிசிலின் மிச்சில்
உண்ணப் பெற்றிலேன்." (பெருமாள். 7 : 6.)

### குறிப்பு

சிறுகை என்றது மக்களின் குழவிப் பருவத்தை நினைந்து கூறியது.
(64)

## 65

**மக்கள்மெய் தீண்டல் உடற்கின்பம் மற்றவர்**
**சொற்கேட்டல் இன்பம் செவிக்கு.** 5

**பரிமேலழகர்:** உடற்கு இன்பம் மக்கள் மெய் தீண்டல்-ஒருவன் மெய்க்கு இன்பமாவது மக்களது மெய்யைத் தீண்டுதல்; செவிக்கு இன்பம் அவர் சொல் கேட்டல்-செவிக்கு இன்பமாவது அவரது சொல்லைக் கேட்டல்.

மற்று:வினைமாற்று. மக்களது மழலைச் சொல்லேயன்றி அவர் கற்றறிவுடையராய்ச் சொல்லும் சொல்லும் இன்பமாகலின், பொதுப்படச் சொல் என்றார். தீண்டல், கேட்டல் என்னும் காரணப் பெயர்கள் ஈண்டுக் காரியங்களின்மேல் நின்றன.[1]

### உரை வேறுபாடு

**காளிங்கர்:** இனிய புதல்வர் வளர்ந்தும் தளர்நடையிட்டும் வந்து ஏறி, மற்றவர் மெய்யினைத் தீண்ட, அதுவே இல்வாழ்வோர்க்கு உடற்கு இன்பமாவது; பின்பு அறிவுடையராயின விடத்து எழுத்தோடு புணர்ந்த சொல் பிறந்ததாயின் மற்றவர் எழுத்தோடு புணர்ந்த சொற்கேட்டல் முன்பினும் தமது செவிக்கு இனிய இன்பமாம்.

### ஒப்புமை

**மழலை இன்பம்:**

"அத்தத்தா என்னும்நின்
தேமொழி கேட்டல் இனிது." (கலி. 80:14-5.) (65)

## 66

**குழலினி தியாழினி தென்பதம் மக்கள்**
**மழலைச்சொல் கேளா தவர்.** 6

---

1. அவற்றால் பிறக்கும் இன்பத்துக்கு ஆயினமையின் இங்ஙனம் கூறினர்.

**பரிமேலழகர்:** குழல் இனிது யாழ் இனிது என்ப - குழலிசை இனிது யாழிசை இனிதென்று சொல்லுவர், தம் மக்கள் மழலைச்[1] சொல் கேளாதவர் - தம் புதல்வருடைய குதலைச் சொற்களைக் கேளாதவர்.

குழல், யாழ் என்பன ஆகுபெயர்.[2] கேட்டவர் அவற்றினும் மழலைச் சொல் இனிதென்ப ரென்பது குறிப்பெச்சம். இனிமை மிகுதிபற்றி மழலைச் சொல்லைச் சிறப்புவகையானும் கூறியவாறு.

இவை மூன்று பாட்டானும் இம்மைப்பயன் கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**காளிங்கர்:** பரதம் பற்றிய குழலின் ஓசையும் பண்ணினைப்பற்றிய யாழின் ஓசையும் மிக இனிது என்பர், குழவிப் பருவத்து இயல்பாகிய மழலைச் சொல்லைப் பெரிதும் செவிக்குச் சுவையாகக் கேட்டறியாத புல்லறிவாளர்.

### ஒப்புமை

1. **மழலையின் சிறப்பு:**

"யாழ்க்குமின் குழற்கும் இன்பம் அளித்தன இவையாம் என்னக்
கேட்குமென் மழலை"
"குழலும் வீணையும் யாழுமென் றினையன குழைய
மழலை மென்மொழி"
"பொருளும் யாழின் விளரியும் பூவையும்
மருள நாளும் மழலை வழங்குவாய்."
(கம்ப. உண்டாட்டு. 13, ஊர்தேடு. 6, நிந்தனை. 30.)

2. **சொல்லுக்குக் குழலும் யாழும் ஒவ்வாமை:**

"குழுவு நுண்டொளை வேயினும் குறிநரம் பெறிவுற்
றெழுவு தண்டமிழ் யாழினும் இனியசொற் கிளியே."
(கம்ப. சித்திரகூடப். 28.)

3. **முற்றும்:**

"யாழொடும் கொள்ளா பொழுதொடும் புணரா
பொருளறி வாரா வாயினும் தந்தையர்க்கு
அருள்வந் தனவால் புதல்வர்தம் மழலை."
(புறநா. 92 : 1-3.)

"அவர்மழலை கேட்டல் அமிழ்தின் இனிதே."
(இனியவை. 15.)

### குறிப்பு

குழலுக்குப் பின் யாழைச் சொல்வது ஒரு மரபு; "குழல்வழி நின்றது யாழே." (சிலப். 3 : 139.) (66)

## 67

**தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து**
**முந்தி இருப்பச் செயல்.** 7

**பரிமேலழகர்:** தந்தை மகற்கு ஆற்றும் நன்றி - தந்தை புதல்வனுக்குச் செய்யும் நன்மையாவது, அவையத்து முந்தி இருப்பச் செயல் - கற்றூர் அவையின்கண் அவரினும் மிக்கிருக்குமாறு கல்வி உடையன் ஆக்குதல்.

---

1. மழலை - எழுத்து வடிவு பெற்றுத் தோற்றும் இளஞ் சொல். (சீவக. 181.)
2. அவற்றின் இசைக்கு ஆயினமையின்.

பொருளுடையன் ஆக்குதல் முதலாயின துன்பம் பயத்தலின் நன்மை ஆகாவென்பது கருத்து.

இதனுல் தந்தை கடன் கூறப்பட்டது.

**உரை வேறுபாடு**

**பரிதியார்:** பாடம்: "ஆற்றும் உதவி அவைஐந்துள் முந்தி."

புதல்வற்குத் தந்தை செய்யும் உதவி ஐந்து வயதில் வாசிப்பிவித்துச் சமர்த்தனை பின்பு ஆஸ்தானத்தில் அழைத்து இருத்திக் கொள்ளும் படியாக அறிவுண்டாக்குதல்.

**ஒப்புமை**

**முற்றும்:**

"எச்சம் எனஒருவன் மக்கட்குச் செய்வன
விச்சைமற் றல்ல பிற." (நாலடி. 134.) (67)

## 68

**தம்மிற்றம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து**
**மன்னுயிர்க் கெல்லாம் இனிது.** 8

**பரிமேலழகர்:** தம் மக்கள் அறிவுடைமை-தம்மக்களது அறிவுடைமை, மா நிலத்து மன் உயிர்க்கெல்லாம் தம்மின் இனிது - பெரிய நிலத்து மன்னுநின்ற உயிர்கட்கெல்லாம் தம்மினும் இனிதாம்.

ஈண்டு அறிவென்றது, இயல்பாகிய அறிவோடுகூடிய கல்வியறிவினை. மன்னுயி ரென்றது, ஈண்டு அறிவுடையார்மேல் நின்றது, அறிவுடைமை கண்டு இன்புறுதற்கு உரியார் அவராகலின்.

இதனுல் தந்தையினும் அவையத்தார் உவப்பரென்பது கூறப்பட்டது.

**உரை வேறுபாடு**

**பரிதியார்:** தம்மிலும் புதல்வர் அறிவினராகில் உலகத்தார்க் கெல்லாம் இனிமையாம்.

**கவிராஜ பண்டிதர்:** தகப்பனைப் பார்க்கிலும் பிள்ளை நல்ல அறிவுடனே கூடியிருந்தால் பூமியிலே இருக்கப்பட்ட ஜனங்களுக்கு எல்லாம் நன்மையாம் என்பதாம். நன்மை யாகிறது, கல்வியை அறிந்து ஒருவருக்கும் தீங்கு செய்யாமல் இருக்கிறது. (68)

## 69

**ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்**
**சான்றோன் எனக்கேட்ட தாய்.** 9

**பரிமேலழகர்:** ஈன்ற பொழுதின் பெரிது உவக்கும் - தான் பெற்ற பொழுதை மகிழ்ச்சியினும் மிக மகிழும், தன் மகனைச் சான்றோன் எனக் கேட்ட தாய்-தன் மகனைக் கல்வி கேள்விகளான் நிறைந்தானென்று அறிவுடையார் சொல்லக் கேட்ட தாய்.

கவானின்கட் கண்ட[1] பொது உவகையினும் சால்புடையன் எனக் கேட்ட சிறப்பு உவகை பெரிதாகலின் பெரிதுவக்கும் எனவும், பெண்ணியல் பால் தானுக அறியாமையின் கேட்ட தாய் எனவும் கூறினர். அறிவுடையார்

1. கவான் - துடை.

என்பது வருவிக்கப்பட்டது, சான்றோனென்றற் குரியர் அவராகலின். தாய் உவகைக்கு அளவின்மையின் அஃது இதனால் பிரித்துக் கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**பரிதியார்** : ஈன்ற காலத்தில் ஆண்பிள்ளை என்று சொல்லக் கேட்ட மகிழ்ச்சியிலும் தன் பிள்ளை அறிவினால் பெரியவன் என்று கேட்ட தாய்க்கு அதிலும் மகிழ்ச்சி.

**காளிங்கர்** : சான்றோன் - சால்புடையான்.

**கவிராஜ பண்டிதர்** : சான்றோன் - நல்லவன்.

### ஒப்புமை

**முற்றும்** :

"வானரைக் கூந்தல் முதியோள் சிறுவன்
களிறெறிந்து பட்டன னென்னு முவகை
ஈன்ற ஞான்றினும் பெரிதே"
"படுமகன் கிடக்கை காணூஉ
ஈன்ற ஞான்றினும் பெரிதுவந் தனளே."
(புறநா 277 : 2-4, 278 : 8-9.)

"வையகமாம் குலமடந்தை மன்னபயன் தன்னுடைய மரபுகேட்டேற்
கையணையான் பெற்றெடுத்த அப்பொழுதும் இப்பொழுதொத்
திருந்த தில்லை." (கலிங்க. 197.) (69)

## 70

**மகன் தந்தைக் காற்றும் உதவி இவன் தந்தை
என்நோற்றான் கொல்எனும் சொல்.** 10

**பரிமேலழகர்** : தந்தைக்கு மகன் ஆற்றும் உதவி - கல்வி உடையனாக்கிய தந்தைக்கு மகன் செய்யும் கைம்மாறாவது, இவன் தந்தை என் நோற்றான் கொல் எனும் சொல் - தன் அறிவும் ஒழுக்கமும் கண்டார் இவன் தந்தை இவனைப் பெறுதற்கு என்ன தவம் செய்தான்கொல்லோ என்று சொல்லும் சொல்லை நிகழ்த்துதல்.

சொல் லென்பது நிகழ்த்துதலாகிய தன் காரணம் தோன்ற நின்றது. நிகழ்த்துதல், அங்ஙனம் சொல்ல ஒழுகல்.

இதனால் புதல்வன் கடன் கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்** : இது நெறியின் ஒழுகுவாரை உலகத்தார் புகழ்வார் ஆதலான் மகனும் ஒழுக்க முடையனாக வேண்டும் என்றது.

**காளிங்கர்** : தந்தைக்கு - தன்னைக் கல்வியாலும் மற்றறிவுடைமையாலும் உணர்வுடையனாக்கச் செய்த தந்தைக்கு.

**கவிராஜ பண்டிதர்** : பிள்ளையைக் கல்வியுடையனாகச் செய்த தகப்பனுக்குப் பிள்ளை செய்கின்ற நன்றியாவது: தான் நல்ல ஆசாரத்துடனேயும், வணக்கத்துடனேயும் நல்ல விரதத்துடனேயும் நடந்தால் அதைக் கண்டபேர், "இப்படிப்பட்ட பிள்ளையைப் பெற்ற தகப்பன் என்ன தபசு பண்ணினானோ?" என்று சொல்லிக் கொள்வார்கள்.

ஒப்புமை

1. என் நோற்ருன் கொல்எனும் சொல் :

" என்ன நோன்பு நோற்ருள்கொலோ
இவனைப் பெற்ற வயிறுடையாள்
என்னும் வார்த்தை எய்துவித்த
இருடீ கேசா" (பெரியாழ்வார். 2.2 : 6.)

" எத்துணைத் தவஞ்செய் தான்கொல்
என்றெழுந் துலகம் ஏத்த." (சீவக. 2567.)

2. தந்தை மகனுல் புகழ் பெறுதல் :

" வல்லை மைந்தவம் மன்னையும் என்னையும்
எல்லை யில்புக ழெய்துவித் தாய்என்ருன்."

(கம்ப. சடாயுகாண். 41.) (70)

---

# 8. அன்புடைமை

**பரிமேலழகர்:** அஃதாவது அவ் வாழ்க்கைத்துணையும் புதல்வரும் முதலிய தொடர்புடையார்கண் காதலுடையனுதல். அதிகார முறைமையும் இதனுனே விளங்கும். இல்லறம் இனிது நடத்தலும் பிற உயிர்கள்மேல் அருள் பிறத்தலும் அன்பின் பயனுகலின், இது வேண்டப்பட்டது. வாழ்க்கைத் துணைமேல் அன்பு இல்வழி இல்லறம் இனிது நடவாமை, "அறவோர்க் களித் தலும் அந்தணர் ஓம்பலும், துறவோர்க் கெதிர்தலுந் தொல்லோர் சிறப்பின், விருந்தெதிர் கோடலு மிழந்த வென்னை"[1] என்பதனுனும், அதனுன் அருள் பிறத்தல், "அருளென்னும் அன்பீன் குழவி"[2] என்பதனுனும் அறிக.

**பரிதியார்:** புதல்வரிடத்திலே அன்புடைமை, ஆத்மாக்களிடந் தோறும் உண்டாக வேணும். ஆதலால் அன்புடைமையாயிற்று.

### 71

**அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்**
**புன்கணீர் பூசல் தரும்.** 1

**பரிமேலழகர்:** அன்பிற்கும் அடைக்கும் தாழ் உண்டோ - அன்பிற்கும் பிறர்அறியாமல் அடைத்துவைக்கும் தாழ் உளதோ? ஆர்வலர் புன்கண் நீர் பூசல் தரும் - தம்மால் அன்பு செய்யப்பட்டாரது துன்பம் கண்டுழி அன்புடையார்கள் பொழிகின்ற புல்லிய கண்ணீரே உள்நின்ற அன்பினை எல்லாரும் அறியத் தூற்றும் ஆதலான்.

உம்மை, சிறப்பின்கண் வந்தது. ஆர்வலரது புன்மை, கண்ணீர்மேல் ஏற்றப்பட்டது. காட்சியளவைக்கு எய்தாதாயினும், அநுமான அளவையான் வெளிப்படும் என்பதாம்.

இதனுன் அன்பினது உண்மை கூறப்பட்டது.

**பரிதியார்:** பூசல் தரும் - காட்டிக் கொடுக்கும்.

---

1. சிலப். 16: 71-3.
2. குறள், 757.

## உரை வேறுபாடு

**காளிங்கர்:** புன்கணீர் பூசல் தரும் - மென் கண்மைதானே பலர் அறியும் பூசலைத் தரும். பூசலென்பது விசேஷம். புன்கண் என்பது கிருபை. கண்ணீர் என்பது பெருமை.

## ஒப்புமை

**ஆர்வலர் கண்ணீர்:**

"யாக்கைய தியல்பினும் அன்பினும் கொண்டுதன்
காட்சிக் கண்ணீர் கரந்தகத் தடக்கி" (பெருங். 1·36:147-8.)

"உன்னுபே ரன்புமிக் கொழுகியொத் தொண்கணீர்
பன்னுதா ரைகள்தரத் தொழுதெழும் பரதனை."
(கம்ப. எதிர்கோள். 26.) (71)

## 72

அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு. 2

**பரிமேலழகர்:** அன்பு இலார் எல்லாம் தமக்கு உரியர் - அன்பு இலாதார் பிறர்க்குப் பயன்படாமையின் எல்லாப் பொருளானும் தமக்கே உரியர்; அன்பு உடையார் என்பும் பிறர்க்கு உரியர் - அன்பு உடையார் அவற்றானேயன்றித் தம் உடம்பானும் பிறர்க்கு உரியர்.

ஆனுருபுகளும் பிரிநிலை ஏகாரமும் விகாரத்தால் தொக்கன.[1] என்பு: ஆகுபெயர். என்பும் உரியராதல், "தன்னகம் புக்க குறுநடைப் புறவின், தபுதி யஞ்சிச் சீரை புக்கோன்"[2] முதலாயினர்கட் காண்க.

## உரை வேறுபாடு

**மணக்குடவர்:** எல்லாம் - எல்லாப் பொருளையும். என்பும் - எலும்பினையும்.

**காளிங்கர்:** ஒருவர் மாட்டும் தம் நெஞ்சில் அன்பிலாதவர் யாவரே அவரே தம் உடம்பைப் பேணிப் பிறர்க்கும் ஈயாது பின்பும் நகைப்புக்கு உரியவராவார். மற்று இவ்வாறன்றிப் பிறர் மாட்டு அன்புடையார் தமது பொருளெல்லாம் கொடுப்பது மன்றித் தமது உடம்புதானும் பிறவுயிர்க்கு ஓர் இடுக்கண் வரின் ஈந்து புகழினைப் பெறுவர்.

**கவிராஜ பண்டிதர்:** தயை இல்லாதவர்கள் தாங்கள் தேடின பொருளெல்லாம் தங்களுக்கு உரியவாய் எண்ணிக் கொண்டிருப்பார்கள். அன்புடையார் தங்கள் பொருளும் சரீரமும் பிறருக்கு உரியராய் இருப்பர். சரீரம் பிறருக்கு உரியராய் இருக்கிறது, பொருளையும் கொடுத்துத் தங்கள் கையினாலே எடுக்கிறதும் பிடிக்கிறதும் செய்வது.

## ஒப்புமை

*1.* **உடம்பையே கொடுத்தல்:**

"பாரியும் பரிசிலர் இரப்பின்
வாரேன் என்னுன் அவர்வரை யன்னே". (புறநா. 108:5--6).

1. எல்லாவற்றானும், என்பானும் என்னும் உருபுகளும் தமக்கே உரியர் என்னும் ஏகாரமும் தொக்கன.

2. புறநா. 43:

2. **அன்புடையர் என்பும் பிறர்க்கு உரியராதல்:**

"நெகுதற் கொத்த நெஞ்சும் நேயத் தாலே யாவி
உகுதற் கொத்த வுடலும் உடையேன்." (கம்ப. நகர்நீங்கு. 60.)

## குறிப்பு

என்பும் உரியர் என்பது ததீசி முனிவருடைய வரலாற்றை நினைப்பிக்கின்றது. உம்மை, உயர்வு சிறப்பு. (72)

## 73

**அன்போ டியைந்த வழக்கென்ப ஆருயிர்க்**
**கென்போ டியைந்த தொடர்பு. 3**

**பரிமேலழகர்:** அரு உயிர்க்கு என்போடு இயைந்த தொடர்பு - பெறுதற்கரிய மக்கள் உயிர்க்கு உடம்போடு உண்டாகிய தொடர்ச்சியினை, அன்போடு இயைந்த வழக்கு என்ப - அன்போடு பொருந்துதற்கு வந்த நெறியின் பயன் என்று சொல்லுவர் அறிந்தோர்.

பிறப்பினது அருமை பிறந்த உயிர்மேல் ஏற்றப்பட்டது. 'இயைந்த' என்பது உபசார வழக்கு.[1] வழக்கு: ஆகுபெயர். உடம்போடு இயைந்தல்லது அன்பு செய்யலாகாமையின், அது செய்தற்பொருட்டு இத் தொடர்ச்சி உளதாயிற்றென்பதாம். ஆகவே, இத் தொடர்ச்சிக்குப் பயன் அன்புடைமை என்றாயிற்று.

## உரை வேறுபாடு

**மணக்குடவர்:** முற்பிறப்பின்கண் அன்போடு பொருந்தச் சென்ற செலவென்று சொல்லுவர், பெறுதற்கரிய உயிர்க்கு இப் பிறப்பின்கண் உடம்பொடு இடைவிடாத நட்பினை.

**பரிதியார்:** உடலாவது நவதாதுவினால் ஆதாரம் பெற்ற தன்மை போல உயிர்க்கும் அன்பினாலே ஆதாரம் பெறில் நிலைபெறும்.

**காளிங்கர்:** உலகத்தின்கண் பல உயிர்கட்குத் தான் வைத்த அன்பொடு பொருந்திய உயிரின் முறைமையென்று சொல்லுவர் சான்றோர்; அது எங்ஙனமெனின் அன்புடையாளனுக்குத் தன் உடம்பொடு பொருந்திய உயிரினது தொடர்ச்சியினைப் போல.

அல்லதூஉம் அன்புடைமை நிறைய வருமளவும், உடம்புக்கும் உயிருக்கும் உறவாய் நின்று பின்பு வீட்டின்பத்தைப் பெறும்.

**கவிராஜ பண்டிதர்:** பெறுதற்கு அரிய மனுஷ்ய சரீரத்தைப் பற்றி வருகிற தொடர்ச்சியை அன்பினாலே வந்ததென்று சொல்லுவர் அறிந்தோர். உயிர் உடம்போடு கூடினல்லது அன்பு பிறவாது. எலும்பும் சதையுமுடைய பஞ்சேந்திரிய ஜீவன்களுக்கே அன்பு பிறக்கும். மற்ற இந்திரிய ஜீவன்களுக்கு அன்பு பிறவாது. அந்த அன்பினாலே தொடர்ச்சி உண்டாம்.

## ஒப்புமை

**முற்றும்:**

"அன்புடை ஆருயிர் அரசர்க் கருளிய
என்புடை யாக்கை இருந்தது காணாய்" (மணி. 25: 170-71.)

"என்பென்ப தியாக்கை என்ப துயிரென்ப திவைகள் எல்லாம்
பின்பென்ப அல்ல வேனும் தம்முடை நிலையிற் பேரா
முன்பென்ப உளவென் றாலும் முழுவதும் தெரிந்த வாற்றால்
அன்பென்ப தொன்றின் தன்மை அமரரும் அறிந்த தன்றால்."
(கம்ப. மருத்து. 4.) (73)

1. பிரித்தலின்றி இயைவதற்குரியன அன்றாதலின் உபசார வழக்காயிற்று.

**74**

அன்பீனும் ஆர்வம் உடைமை அதுஈனும்
நண்பென்னும் நாடாச் சிறப்பு. 4

**பரிமேலழகர்:** அன்பு ஆர்வம் உடைமை ஈனும்-ஒருவனுக்குத் தொடர் புடையார்மாட்டுச் செய்த அன்பு அத் தன்மையால் பிறர்மாட்டும் விருப்பம் உடைமையைத் தரும்; அது நண்பு என்னும் நாடாச் சிறப்பு ஈனும்-அவ் விருப் பம் உடைமைதான் இவற்குப் பகையும் நொதுமலும் இல்லையாய் யாவரும் நண்பென்று சொல்லப்படும் அளவிறந்த சிறப்பினைத் தரும்.

உடைமை-உடையனும் தன்மை. யாவரும் நண்பாதல், எல்லாப் பொருளும் எய்துதற்கு ஏதுவாகலின், அதனை, 'நாடாச் சிறப்பு' என்றார்.

**உரை வேறுபாடு**

**மணக்குடவர்:** நாடாச் சிறப்பு-ஆராய்தல் இல்லாத சிறப்பு.

**பரிதியார்:** அன்பு ஆர்வமென்று சொல்லப்பட்ட ஞான நேயத்தைக் கொடுக்கும்; அந்த ஞானநேயம் பிறவா நெறியாகிய முத்தியைக் கொடுக்கும்.

**காளிங்கர்:** ஒருவன் தான் பல உயிரிடத்தும் வைத்த உள்ளன் பானது பகைவர் முதலாயவர்களாலும் விரும்பப்பட்ட உள்ளன்பினைத் தரும்; மற்ற அவ்வன்பானது நண்பென்று சொல்லப்படுகின்ற தேடுதற்கரிய சிறப்பினைத் தரும்.

**கவிராஜ பண்டிதர்:** அன்பு-தயை. ஆர்வம்-சந்தோஷம்.

**ஒப்புமை**

**அன்பும் ஆர்வமும்:**

"அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக."

*(இரண்டாந் திருவந்தாதி, 1.) (74)*

**75**

அன்புற் றமர்ந்த வழக்கென்ப வையகத்
தின்புற்றார் எய்தும் சிறப்பு. 5

**பரிமேலழகர்:** அன்பு உற்று அமர்ந்த வழக்கு என்ப - அன்புடைய ராய் இல்லறத்தோடு பொருந்திய நெறியின் பயனென்று சொல்லுவர் அறிந் தோர், வையகத்து இன்பு உற்றார் எய்தும் சிறப்பு - இவ்வுலகத்து இல்வாழ்க் கைக்கண் நின்று இன்பம் நுகர்ந்து அதன்மேல் துறக்கத்துச் சென்று எய்தும் பேரின்பத்தினை.

வழக்கு: ஆகுபெயர். இல்வாழ்க்கைக்கண் நின்று மனைவியோடும் மக்களோடும் ஒக்கலோடும் கூடி இன்புற்றார் தாம் செய்த வேள்வித் தொழி லால் தேவராய் ஆண்டும் இன்புறுவராகலின், 'இன்புற்றா ரெய்தும் சிறப்பு' என்றார்.

தவத்தால் துன்புற்றெய்தும் துறக்க இன்பத்தினை ஈண்டும் இன்புற்று எய்துதல் அன்பானன்றி இல்லை என்பதாம்.

**உரை வேறுபாடு**

**மணக்குடவர்:** முற்பிறப்பின்கண் பிறர்மேல் அன்பு வைத்துச் சென்ற செலவென்று சொல்லுவர், இப் பிறப்பின்கண் உலகத்து இன்ப முற்றார் அதன் மேலும் சிறப்பு எய்துதலை.

இது போகம் துய்ப்பர் என்றது.

**பரிதியார்** : எண்பத்து நான்கு நூறாயிரம் யோனி பேதத்தில் பிறவாமல் மானிட யாக்கையிலே பிறந்த தன்மை சென்ம சென்மங்களிலே தினையத்தனை அன்புண்டான பலன்.

**காளிங்கர்** : வையத்து அனைத்துயிர்க்கும் பொருந்திய முறையினால் மிக அன்பு செய்த அதுவே, இன்புற்றனராய் வாழ்கின்றவர் எய்தும் செல்வச் சிறப்பு.

**கவிராஜ பண்டிதர்** : அன்புடையவர்களே இல்லறத்தோடு பொருந்திய நெறியினை உடையவர்கள். உலகத்திலே சுகத்தினை அநுபவிக்கிற பேர் முந்தின ஜன்மத்தில் தயை உடையவர்களாய் இருந்தவர்கள் என்பதாம். தயை உடையவர்களுக்குப் பாவம் வாராது; புண்ணியமே வரும். புண்ணியத்தினால் நல்ல கதியை அடைவார்கள். (75)

## 76

அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை. 6

**பரிமேலழகர்** : அன்பு சார்பு அறத்திற்கே என்ப அறியார் - அன்பு துணையாவது அறத்திற்கே என்று சொல்லுவர் சிலர் அறியார்; மறத்திற்கும் அஃதே துணை - ஏனை மறத்திற்கும் அவ்வன்பே துணையாவது.

ஒருவன் செய்த பகைமைபற்றி உள்ளத்து மறம் நிகழ்ந்துழி, அவனை நட்பாகக் கருதி அவன்மேல் அன்பு செய்ய அது நீங்குமாகலின், மறத்தை நீக்குதற்கும் துணையாம் என்பார், 'மறத்திற்கு மஃதே துணை' என்றார், "துன்பத்திற் கியாரே துணையாவார்"[1] என்புழிப்போல.

இவை ஐந்து பாட்டானும் அன்பினது சிறப்புக் கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**பரிதியார்** : தன்மத்தில் பெரியது அன்புடைமை; அது, ஆத்துமாவை ரட்சிக்கும்; பரகெதி கொடுக்கும்; அறிவில்லார் செய்யும் மறத்தையும் அன்பு வெல்லும்.

**காளிங்கர்** : ஒருவன் அனைத்துயிர் மாட்டும் வைக்கின்ற உள்ளன்பானது தான் நடத்துகின்ற இல்லறத்தினுக்கே சால்பு அமைந்தது என்பர் அறியாதார். ஈண்டுப் பாவமாகிய மறத்திற்கும் அவ்வன்பே துணை.

**கவிராஜ பண்டிதர்** : பாவத்திற்கு அன்பு துணையாகிறது எப்படியென்றால், ஒருவன் செய்த பகையை மனத்திலே வைத்தால் பாவம் வரும். அவன்மேலே சிநேகம் பண்ணித் தயை வைத்தால் அந்தப் பகையும் பாவமும் போம்.

### மேற்கோள் விளக்கம்

'ஐந்திணைப் புறத்தவாகிய வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை என்பனவும் அன்பொடு புணர்ந்தனவாமோ எனின், அவை அன்புடையார் பலர்கூடி நிகழ்த்துபவை ஆதலின் அன்பொடு புணர்ந்தனவாம். "அறத்திற்கே...துணை" என்பதனாலும் கொள்க' (தொல். பொருள். 89) என்று **இளம்பூரணர்** எழுதுவர். மறம் என்பதற்கு வீரம் என்று அவர் பொருள் கொண்டார் போலும்.

1. குறள், 1299.

### ஒப்புமை

அறத்திற்கு அன்பு சார்பு:
"அற்பின் நின்றன அறங்கள்."

(கம்ப. நாட்டுப். 59.) (76)

## 77

என்பி லதனை வெயில்போலக் காயுமே
அன்பி லதனை அறம். 7

**பரிமேலழகர்:** என்பு இலதனை வெயில்போலக் காயும் - என்பு இல்லாத உடம்பை வெயில் காய்ந்தாற்போலக் காயும், அன்பு இலதனை அறம் - அன்பு இல்லாத உயிரை அறக்கடவுள்.

என்பில தென்றதனுன் உடம்பென்பதூஉம், அன்பில தென்றதனுன் உயிரென்பதூஉம் பெற்ரும். வெறுப்பின்றி எங்கும் ஒரு தன்மைத்தாகிய வெயிலின்முன் என்பில்லது தன் இயல்பாற் சென்று கெடுமாறுபோல, அத்தன்மைத்தாகிய அறத்தின்முன் அன்பில்லது தன் இயல்பாற் கெடும் என்பதாம். அதனைக் காயும் என வெயில் அறங்களின்மேல் ஏற்றினர், அவற்றிற்கும் அவ்வியல்பு உண்மையின். இவ்வாறு, "அல்லவை செய்வார்க் கறங் கூற்றம்"[1] எனப் பிறரும் கூறினர்.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** என்பிலதனை - என்பில்லாத சீவனை.

**பரிதியார்:** என்பிலதனை - என்பிலாத ஆத்துமாவை. அன்பிலதனை - அன்பிலாதாரை.

**காளிங்கர்:** தனக்குள் உறுதியில்லாது முழுதும் குழைந்து இருக்கும் உருவுடைத்தாகிய சிறு புழுவினை வெயிலானது உருவழியக் காயுமாப்போல் யாவர் மாட்டும் வைக்கப்பட்ட அன்பிலாததனை அறமானது காயும்.

**கவிராஜ பண்டிதர்:** அன்பில்லதனை அறக் கடவுள் காய்கிறது, தர்மம் தானம் சேராமல் பாவத்தையும் பழியையும் சேரப் பண்ணி நரகங்களிலே விழப் பண்ணும்.

### மேற்கோள் விளக்கம்

"அரைசியல் பிழைத்தோர்க் கறங்கூற் றுவதூம்" (சிலப். பதிகம், 55) என்பதன் உரையில் 'அறம் கொல்லும் என்பது, "என்பிலதனை......அறம்" என்பதனுன் உணர்க' என்று **அடியார்க்கு நல்லார்** உரைத்தார். அவர் காயும் என்பதற்குக் கொல்லும் என்று பொருள் கொண்டாரென்று தோற்றுகின்றது.

### குறிப்பு

உயிர்கள் அன்பு இல்லாமையினுல் துன்புறுகின்றனவே யன்றி, அறக்கடவுள்பால் குறையில்லை என்பது குறிப்பு. (77)

## 78

அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றல் மரம்தளிர்த் தற்று. 8

**பரிமேலழகர்:** அகத்து அன்பு இல்லா உயிர் வாழ்க்கை - மனத்தின்கண் அன்பு இல்லாத உயிர் இல்லறத்தோடு கூடி வாழ்தல், வன்பாற்கண்

1. நான்மணிக். 83.

வற்றல் மரம் தளிர்த்தற்று - வன்பாலின்கண் வற்றலாகிய மரம் தளிர்த்தாற் போலும்.

கூடாதென்பதாம். வன்பால் - வன்னிலம். வற்றல் என்பது பால் விளங்கா அஃறிணைப் படர்க்கைப் பெயர்.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்** : வன்பார் எனப் பாடம் கொண்டார். வற்றல் - உலர்ந்த மரம்.

**பரிதியார்** : வன்பார்-பாறை. வற்றல்-பட்ட மரம்.

**காளிங்கர்** : உயிர் வாழ்க்கை-உயிர் உடலொடு வாழ்கின்ற வாழ்க்கை. வன் பார்க்கண்-வற்கென்ற தரையின்கண்.

வெறும் தோற்றமே அன்றிப் பின் ஆக்கமில்லை என்பது கருத்து.

### மேற்கோள் விளக்கம்

உடம்போடு கூடிய உயிரின் குணம் அன்பு என்று கூறி, இதனை மேற்கோள் காட்டுவர் **மயிலைநாதர்**. (**நன்**. 451.) (78)

## 79

புறத்துறுப் பெல்லாம் எவன்செய்யும் யாக்கை
அகத்துறுப் பன்பி லவர்க்கு. 9

**பரிமேலழகர்** : யாக்கை அகத்து உறுப்பு அன்பு இலவர்க்கு-யாக்கை அகத்தின்கண் நின்று இல்லறத்திற்கு உறுப்பாகிய அன்புடையரல்லாதார்க்கு, புறத்து உறுப்பு எல்லாம் எவன் செய்யும் - ஏனைப் புறத்தின்கண் நின்று உறுப்பாவனவெல்லாம் அவ்வறம் செய்தற்கண் என்ன உதவியைச் செய்யும்?

புறத்துறுப்பாவன, இடனும், பொருளும், ஏவல் செய்வாரும் முதலாயின. துணையொடு கூடாதவழி அவற்றால் பயன் இன்மையின், 'எவன் செய்யும்' என்றார். உறுப்புப் போறலின் உறுப்பு எனப்பட்டன.

யாக்கையில் கண் முதலிய உறுப்புக்களெல்லாம் என்ன பயனைச் செய்யும், மனத்தின்கண் உறுப்பாகிய அன்புஇலாதார்க்கென்று உரைப்பாரும் உளர். அதற்கு இல்லறத்தோடு யாதும் இயைபில்லாமை அறிக.

### உரை வேறுபாடு

**பரிதியார்** : புறத்துறுப்பாகிய மெய், வாய், கண், மூக்குச் செவி அலங்காரமாயிருந்தும் என்ன பிரயோசனம், அகத்துறுப்பாகிய அன்பிலாதவர்க்கு? ஞானம் இல்லாதவனும் மரப் பாவையும் ஒக்கும்.

**காளிங்கர்** : ஒருவர், தமது யாக்கையினது புறத்துறுப்பாகிய மார்பும் தோளும் முகமும் மயிர் முடியும் பிறவும் சால நல்லன எனினும், அவை அங்ஙனம் தோன்றிக் கெடுத்த லல்லது அகத்துறுப்பாகிய அன்பு போல இவர்க்கு ஒரு நன்மை செய்வதில்லை.

### ஒப்புமை

**அகத்துறுப்பு அன்பு** :

"யாக்கைக்
கென்பிற்சிறந் தாயதோர் ஊற்றமுண் டென்னலாமே'

அன்பிற்சிறந் தாயதோர் பூசனை யார்கணுண்டே."

(கம்ப. கடல் தாவு. 61.) (79)

**80**

**அன்பின் வழிய துயிர்நிலை அஃதிலார்க்**
**கென்புதோல் போர்த்த உடம்பு. 10**

**பரிமேலழகர் :** அன்பின் வழியது உயிர்நிலை - அன்பு முதலாக அதன் வழி நின்ற உடம்பே உயிர்நின்ற உடம்பாவது; அஃது இலார்க்கு உடம்பு என்பு தோல் போர்த்த - அவ்வன்பு இல்லாதார்க்கு உளவான உடம்புகள் என்பினைத் தோலாற் போர்த்தனவாம்; உயிர் நின்றன ஆகா.

இல்லறம் பயவாமையின் அன்ன வாயின.

இவை நான்கு பாட்டானும் அன்பு இல்வழிப் படும் குற்றம் கூறப் பட்டது.

**உரை வேறுபாடு**

**மணக்குடவர் :** உயிர்க்கு நிலைபேறு அன்பின் வழியதாகிய அறத்தினான் வரும்; ஆதலால் அவ்வன்பில்லாதார்க்கு உளதாவது என்பின்மேல் தோலினால் போர்க்கப் பெற்ற உடம்பு.

இது வீடு பெறார் என்றவாறு.

**பரிதியார் :** அன்பின் வழியிலே நடப்பான் உயிர் நிலை நிற்கும்; அன்பில்லார் உயிர் என்பும் தோலும் போர்த்த உடம்பு.

**கவிராஜ பண்டிதர் :** தோலாலே போர்த்தது பிணம் என்பதாம். (80)

# 9. விருந்தோம்பல்

**பரிமேலழகர் :** அஃதாவது, இருவகை விருந்தினரையும்[1] புறந்தருதல். தென்புலத்தார் முதலிய ஐம்புலத்துள் முன்னைய இரண்டும் கட்புலனாகாதாரை நினைந்து செய்வன ஆகலானும், பின்னைய இரண்டும் பிறர்க்கீதல் அன்மையானும் இடைநின்ற விருந்தோம்பல் சிறப்புடைத்தாய் இல்லறங்கட்கு முதலாயிற்று. வேறாகாத அன்புடை இருவர் கூடியல்லது செய்யப்படாமையின், இஃது அன்புடைமையின்பின் வைக்கப்பட்டது.

**உரை வேறுபாடு**

**மணக்குடவர்:** விருந்தோம்பலாவது, உண்ணும் காலத்துப் புதியார் வந்தால் பகுத்து உண்ண வேண்டும் என்பது கூறல்.

**பரிதியார்:** விருந்தோம்பலாவது, தன் புதல்வரிடத்தில் வைத்த அன்பு போலவே பலரிடத்தும் அன்புவைத்து விருந்து உபசரித்தல்.

**81**

**இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி**
**வேளாண்மை செய்தற் பொருட்டு. 1**

1. பண்டறிவுண்மையிற் குறித்து வந்தாரும், அஃது இன்மையிற் குறியாது வந்தாரும். (குறள், 43, உரை.)

**பரிமேலழகர்:** இல் இருந்து ஓம்பி வாழ்வது எல்லாம் - மனைவியோடும் வனத்திற் செல்லாது இல்லின்கண் இருந்து பொருள்களைப் போற்றி வாழும் செய்கை எல்லாம், விருந்து ஓம்பி வேளாண்மை செய்தற்பொருட்டு- விருந்தினரைப் பேணி அவர்க்கு உபகாரம் செய்தற்பொருட்டு.

எனவே, வேளாண்மை செய்யாவழி இல்லின்கண் இருத்தலும் பொருள் செய்தலும் காரணமாக வரும் துன்பச் செய்கைகட்கெல்லாம் பயன் இல்லை என்பதாம்.

### உரை வேறுபாடு

**பரிதியார்:** இராத சரீரம் இருப்பதென்றும், நில்லாத செல்வம் நிற்பதென்றும் வாழ்வர்; இதனை அறியாமல் விருந்து செய்தல் வேளாண்மை செய்வதற்கு ஒக்கும்.

**கவிராஜ பண்டிதர்:** இருந்து ஓம்பி இல் வாழ்வது - துறவறத்தின் காரணமான இல்லறத்தில் இருந்து நீதியுடன் பொருள் தேடி வாழ்வது. *(81)*

## 82

விருந்து புறத்ததாத் தான்உண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று. 2

**பரிமேலழகர்:** சாவா மருந்து எனினும் - உண்ணப்படும் பொருள் அமிர்தமே எனினும், விருந்து புறத்ததாத் தான் உண்டல் - தன்னை நோக்கி வந்த விருந்து தன் இல்லின் புறத்ததாகத் தானே உண்டல், வேண்டற்பாற்று அன்று-விரும்புதல் முறைமை உடைத்தன்று.

சாவா மருந்து - சாவாமைக்குக் காரணமாகிய மருந்து. விருந்தின்றியே ஒருகால் தான் உண்டலைச் சாவா மருந்தென்பார் உளராயினும்,[1] அதனை ஒழிக என்று உரைப்பினும் அமையும்.

இவை இரண்டு பாட்டானும் விருந்தோம்பலின் சிறப்புக் கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**பரிதியார்:** விருந்து புறத்திலே இருக்கத் தான் உண்பது நன்றல்லது. நஞ்சாகிலுங் கூட விருந்தோடு புசிப்பது நன்று.

**காளிங்கர்:** சாவா மருந்து - சாவாப் பதம் தருவதாகிய அமரர் உலகத்து அமுதம்.

தான் உண்டு சாகின்ற சோற்றினை மற்று இல்லறத்திற்கு நல்வழிப் பாடாகிய விருந்து தன் கடைப் புறத்ததாகப் பெற்று வைத்து மற்று இதனைத் தானுண்டல் எக்கூற்றினிடத்ததோ அறிகின்றிலேன்.

### ஒப்புமை

**முற்றும்:**

"அமிழ்தம் இயைவ தாயினும் இனிதெனத்
தமியர் உண்டலும் இலரே". (புறநா. 182: 2-3.)

"மருந்தே யாயினும் விருந்தோ'டுண்க." (கொன்றைவேந்தன்) *(82)*

1. எனினும் என்பதற்கு, என்று சிலர் கூறினும் எனப் பொருள் கொள்ள வேண்டும்.

## 83

வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை
பருவந்து பாழ்படுதல் இன்று. 3

**பரிமேலழகர்:** வரு விருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை - தன்னை நோக்கி வந்த விருந்தை நாடோறும் புறந்தருவானது இல்வாழ்க்கை, பருவந்து[1] பாழ்படுதல் இன்று - நல்குரவான் வருந்திக் கெடுதல் இல்லை.

நாடோறும் விருந்தோம்புவானுக்கு அதனால் பொருள் தொலையாது. மேன்மேற் கிளைக்கும் என்பதாம்,

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** வாழ்க்கை பருவந்து பாழ்படுதல் இன்று - ஆக்கம் வருத்தமுற்றுக் கேடுபடுவதில்லை.

**பரிதியார்:** சரீரத்தில் ஒரு பரு வந்து விதனமான காலத்துச் சீப்பறிய விதனமாறுவது போல வருவிருந்து உபசரிக்கில் வினை அறும்.

**கவிராஜ பண்டிதர்:** வருவிருந்து - நாள்தோறும் வருகின்ற முனீந்திரர்.

### ஒப்புமை

**வருவிருந்து ஓம்புவான்:**

"...............வருவிருந் தயரும்
தண்குடி வாழ்நர் அங்குடிச் சீறூர்." (நற். 135: 3-4.) (83)

## 84

அகன்அமர்ந்து செய்யாள் உறையும் முகன்அமர்ந்து
நல்விருந் தோம்புவான் இல். 4

**பரிமேலழகர்:** செய்யாள் அகன் அமர்ந்து உறையும் - திருமகள் மன மகிழ்ந்து வாழாநிற்கும், முகன் அமர்ந்து நல்விருந்து ஓம்புவான் இல் - முகம் இனியனாய்த் தக்க விருந்தினரைப் பேணுவானது இல்லின்கண்.

மனம் மகிழ்தற்குக் காரணம் தன் செல்வம் நல்வழிப்படுதல். தகுதி, ஞான ஒழுக்கங்களால் உயர்தல்.[2] பொருள் கிளைத்தற்குக் காரணம் கூறிய வாறு.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** இது கேடின்மையேயன்றிச் செல்வமும் உண்டாம் என்றது.

**காளிங்கர்:** நல் விருந்து - நல் விருந்தினராகிய மறையோர்க்கும் வறியோர்க்கும்.

**கவிராஜ பண்டிதர்:** விருந்து - ரிஷீந்திரர். தானம் கொடுத்த புண்ணியத்தால் ஐசுவரியம் வளரும்.

### ஒப்புமை

1. **முகனமர்தல்:** குறள், 92, 93, முருகு. 251, நெடுநல். 183.

---

1. பருவா என்பது பகுதி. இதன் அடியாகப் பிறந்ததே பருவந்து என்னும் சொல்.

2. "ஞானம் முன்னிய நான்மறை யாளர்கைத்
தானம் என்னத் தழைத்தது." (கம்ப. ஆற்றுப். 5)

2. **முகனமர்ந்து விருந்தோம்புதல்:**

"முகனமர்ந்து..............
ஆனு விருப்பில் தானின் றூட்டி." (பெரும்பாண். 478-9.) (84)

## 85

**வித்தும் இடல்வேண்டும் கொல்லோ விருந்தோம்பி**
**மிச்சில் மிசைவான் புலம்.** 5

**பரிமேலழகர்:** விருந்து ஓம்பி மிச்சில் மிசைவான் புலம் - முன்னே விருந்தினரை மிசைவித்துப் பின் மிக்கதனைத் தான் மிசைவானது விளை புலத்திற்கு, வித்தும் இடல் வேண்டுமோ-வித்திடுதலும் வேண்டுமோ? வேண்டா.

கொல் என்பது அசைநிலை.[1] தானே விளையும் என்பது குறிப்பெச்சம்.

இவை மூன்று பாட்டானும் விருந்தோம்புவார் இம்மைக்கண் எய்தும் பயன் கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்;** பொருள் வருவாயாக இயற்றுமிடம் நன்றாகப் பயன் படும்.

**பரிதியார்:** விருந்து உபசரித்து மிஞ்சினதைப் புசிப்பது, கழனிக்கு எருப்போட்டு நீர் தேக்கினது போல் ஒன்று நூறாயிரம் விளையும்.

**கவிராஜ பண்டிதர்:** தான புண்ணியத்தால், தேவர்கள் இரத்தின மழை பொழிகிறதும், போக பூமியில் பிறக்கிறதும் முதலானவை ஆம்.

### ஒப்புமை

**விருந்தோம்பி மிச்சில் மிசைதல்:**

"...ஒழுகிய நெய்ம்மலி அடிசில்
வசையில் வான்திணைப் புரையோர் கடும்பொடு
விருந்துண் டெஞ்சிய மிச்சில் பெருந்தகை
நின்னொ டுண்டலும் புரைவதென் றாங்கு
அறம்புணை யாகத் தேற்றி" (குறிஞ்சிப். 204-8.)

"உயர்ந்தோர்க்கு
நீரொடு சொரிந்த மிச்சில்" (குறுந். 233: 4-5.)

"யாவரும் வருகவென் றிசைத்துடன் ஊட்டி
உண்டெழு மிச்சில் உண்டு." (மணி. 13: 113-4.) (85)

## 86

**செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்**
**நல்விருந்து வானத் தவர்க்கு.** 6

**பரிமேலழகர்:** செல் விருந்து ஓம்பி வரு விருந்து பார்த்து இருப்பான்-தன்கட் சென்ற விருந்தைப் பேணிப் பின் செல்லக் கடவ விருந்தைப் பார்த்துத் தான் அதனோடு உண்ண இருப்பான், வானத்தவர்க்கு நல் விருந்து - மறு பிறப்பில் தேவனாய் வானின் உள்ளார்க்கு நல்விருந்தாம்.

வருவிருந் தென்பது இடவழுவமைதி. நல்விருந்து - எய்தா விருந்து.

இதனான் மறுமைக்கண் எய்தும் பயன் கூறப்பட்டது.

---

1. ஓ என்னும் வினவெழுத்து வந்தமையின் 'கொல்' அசைநிலையாயிற்று.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** வரவு பார்த்தல், விருந்தின்றி உண்ணுமை.

**பரிதியார்:** செல்விருந்து ஓம்பி - விருந்தாற்றிப் போகிற பேர்க்கு உபசரித்து.

**கவிராஜ பண்டிதர்:** செல் விருந்து ஓம்பி – ரிஷீந்திரர்களுக்கு அசனம் இட்டு உபசரித்து.

### ஒப்புமை

1. **செல்விருந்து ஓம்புதல்:**

"செல்விருந் தாற்றி" (அகநா. 203: 16.)

"வருநர்க்கு வரையாது தருவனர் சொரிய" (புறநா. 177: 15.)

"வருவிருந் தோம்பி மனையறம் முட்டாப்
பெருமனைக் கிழத்தியர்" (சிலப் 22: 132-3.)

"அருவிலையிற் பெறுங்காசும் அவையே யாகி
அமுதுசெயத் தொண்டரள விறந்து பொங்கி
வருமவர்கள் எல்லார்க்கும் வந்தா ருக்கும்
மகிழ்ந்துண்ண இன்னடிசில் மாளா தாக."
(பெரிய. திருஞான. 571.)

2. **முற்றும்** :

"இல்லா இடத்தும் இயன்ற அளவினல்
உள்ள இடம்போற் பெரிதுவந்து மெல்லக்
கொடையொடு பட்ட குணனுடை மாந்தர்க்கு
அடையாவாம் ஆண்டைக் கதவு."

"நட்டார்க்கும் நள்ளா தவர்க்கும் உளவரையால்
அட்டது பாத்துண்டல் அட்டுண்டல்—அட்டது
அடைத்திருந் துண்டொழுகும் ஆவதின் மாக்கட்கு
அடைக்குமாம் ஆண்டைக் கதவு." (நாலடி. 91, 271.)

"இன்சொ லளாவல் இடமினிதூண் யாவர்க்கும்
வன்சொற் களைந்து வகுப்பானேல்— மென்சொல்
முருந்தேய்க்கும் முட்போல் எயிற்றினுய் நாளும்
விருந்தேற்பர் விண்ணோர் விரைந்து." (ஏலாதி. 7.)

"ஒன்றுக நல்ல துயிரோம்பல் ஆங்கதன்பின்
நன்றுய்ந் தடங்கினர்க் கீந்துண்டல்—என்றிரண்டு
குன்றுப் புகழோன் வருகென்று மேலுகம்
நின்றது வாயில் திறந்து." (அறநெறி. 62.) (86)

## 87

**இனைத்துணைத் தென்பதொன் றில்லை விருந்தின்
துணைத்துணை வேள்விப் பயன்.** 7

**பரிமேலழகர்:** வேள்விப்பயன் இனைத்துணைத்து என்பது ஒன்று இல்லை - விருந்தோம்பலாகிய வேள்வியின் பயன் இன்ன அளவிற்று என்பதோர் அளவுடைத்தன்று; விருந்தின் துணைத்துணை-அதற்கு அவ்விருந்தின் தகுதியளவே[1] அளவு.

1. "முட்டில் பெரும்பொருள் ஆக்கியக்கால் மற்றது, தக்குழி ஈதல் இனிது" (இனியவை. 20.)

ஐம்பெரு வேள்வியின் ஒன்றாகலின் வேள்வி என்றும், பொருளளவு, "தான்சிறி தாயினுந் தக்கார்கைப் பட்டக்கால், வான்சிறிதாப் போர்த்து விடும்"[1] ஆதலின், 'இனைத் துணைத் தென்பதொன் றில்லை' என்றும் கூறினர்.

இதனன் இருமையும் பயத்தற்குக் காரணம் கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**கவிராஜ பண்டிதர்:** விருந்தினரைப் போஷிக்கிறதாகிய யாகத்தின் பலன் இம்மாத்திரம் என்று பிரமாணம் சொல்லப் போகாது. வஸ்து கொஞ்சமானாலும் நல்லவர்களுக்குக் கொடுத்தால் அது தேவ லோகங்களை அடைவிக்கும் என்பதாம்.

### ஒப்புமை

முற்றும்:

"உறக்குந் துணையதோர் ஆலம்வித் தீண்டி
இறப்ப நிழற்பயந் தாஅங்கு—அறப்பயனும்
தான்சிறி தாயினும் தக்கார்கைப் பட்டக்கால்
வான்சிறிதாப் போர்த்து விடும்." (நாலடி. 38.)

"அறத்தின் ஈட்டிய ஒண்பொருள் அறவோன்
திறத்துவழிப் படூஉம் செய்கை போல"

"பெருந்தவர் கைப்பெய் பிச்சையின் பயனும்
நீரும் நிலமும் காலமும் கருவியும்
சீர்பெற வித்திய வித்தின் விளைவும்
பெருகிய தென்னப் பெருவளம் சுரப்ப"

(மணி. 17: 3-4, 28: 229-32.)

"நான்மறை யாளர்கைத்
தானம் என்னத் தழைத்தது நீத்தமே"

"வியர்ந்தவர் வெருக்கொள விசும்பின் ஓங்கினன்
உயர்ந்தவர்க் குதவிய உதவி ஒப்பவே."

(கம்ப. ஆற்றுப். 5, வேள்விப். 35.) (87)

## 88

பரிந்தோம்பிப் பற்றற்றேம் என்பர் விருந்தோம்பி
வேள்வி தலைப்படா தார். 8

**பரிமேலழகர்:** பரிந்து ஓம்பிப் பற்று அற்றேம் என்பர் - நிலையாப் பொருளை வருந்திக் காத்துப் பின் அதனை இழந்து இதுபொழுது யாம் பற்றுக்கோடு இலமாயினேம் என்று இரங்குவர், விருந்து ஓம்பி வேள்வி தலைப்படாதார் - அப்பொருளான் விருந்தினரை ஓம்பி வேள்விப் பயனை எய்தும் பொறியிலாதார்.[2]

"ஈட்டிய ஒண்பொருளைக், காத்தலும் ஆங்கே கடுந்துன்பம்"[3] ஆதலின் பரிந்தோம்பி என்றார். வேள்வி: ஆகுபெயர்.[4]

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** பரிந்தோம்பிப் பற்றற்றேம்—வருந்தி உடம்பொன்றையும் ஓம்பிப் பொருள் அற்றேம்.

1. நாலடி. 38.
2. பொறி - தலையெழுத்து.
3. நாலடி. 280.
4. வேள்விப் பயனுக்கு ஆயிற்று.

**பரிதியார்:** தனத்தைத் தேடிக் கொண்டு தன்மம் செய்யாதவர் இந்தச் செனனத்தில் தரித்திரராய் நமக்கு ஒருவர் துணையற்றும் என்று வியாகூலப்படுவர்; அதனால் தானமும் விருந்தும் செய்து உபசரிப்பதே நன்று.

**கவிராஜ பண்டிதர்:** நிச்சயம் இல்லாத திரவியங்களைத் தேடிப் புதைத்து வைத்துக் கொண்டிருக்கிறவர்கள் அந்தப் பொருளை இழந்து போய் விசாரப்படுவார்கள். விருந்தினருக்கு உபகாரம் செய்யாதவர்கள் பொருள் இழந்து போன பிறகு தாமே, 'தருமங்களைப் பண்ணமல் போனேமே' என்று நினைப்பார்கள். *(88)*

## 89

**உடைமையுள் இன்மை விருந்தோம்பல் ஓம்பா**
**மடமை மடவார்கண் உண்டு.** 9

**பரிமேலழகர்:** உடைமையுள் இன்மை விருந்தோம்பல் ஓம்பா மடமை - உடைமைக் காலத்து இன்மையாவது விருந்தோம்பலை இகழும் பேதைமை; மடவார்கண் உண்டு - அஃது அறிந்தார்மாட்டு உளதாகாது, பேதையார் மாட்டே உளதாம்.

உடைமை - பொருளுடையனும் தன்மை. பொருளாற் கொள்ளும் பயனை இழப்பித்து உடைமையை இன்மையாக்கலின், மடமையை இன்மையாக உபசரித்தார். பேதைமையான் விருந்தோம்பலை இகழிற் பொருள் நின்ற வழியும் அதனால் பயன் இல்லை என்பதாம்.

இவை இரண்டு பாட்டாலும் விருந்தோம்பாவழிப் படும் குற்றம் கூறப் பட்டது.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** விருந்தோம்பல் ஓம்பா மடமை - விருந்தினர்க்கு அளித்தலைப் போற்றாத பேதைமை.

**பரிதியார்:** செல்வத்துள் இல்லின் தன்மையாவது விருந்து ஓம்பல். அங்ஙனம் ஓம்பாத மடமை சில பெண்களிடம் உண்டு. ஸ்திரீயும் புருஷனும் ஒரு மனமாகச் செய்வது விருந்து; அல்லது பிரயோசனம் இல்லை.

### ஒப்புமை

**இன்மை:**

"இன்மையுள் இன்மை விருந்தொரால்." (குறள், 153.) *(89)*

## 90

**மோப்பக் குழையும் அனிச்சம் முகம்திரிந்து**
**நோக்கக் குழையும் விருந்து.** 10

**பரிமேலழகர்:** அனிச்சம் மோப்பக் குழையும் - அனிச்சப்பூ மோந்துழியன்றிக் குழையாது; விருந்து முகம் திரிந்து நோக்கக் குழையும் - விருந்தினர் முகம் வேறுபட்டு நோக்கக் குழைவர்.

அனிச்சம்: ஆகுபெயர்.[1] சேய்மைக்கட் கண்டுழி இன்முகமும், அதுபற்றி நண்ணிய வழி இன்சொல்லும், அதுபற்றி உடன்பட்டவழி நன்றாற்றலும் என விருந்தோம்புவார்க்கு இன்றியமையாத மூன்றனுள்[2] முதலாய இன்

1. அனிச்சப்பூவுக்கு ஆயிற்று; முதல் ஆகுபெயர்.
2. குறள், 93.

"பொழியும் கண்ணிற் புதுப்புன லாட்டினர்
மொழியும் இன்சொலின் மொய்ம்மலர் சூட்டினர்
அழிவில் அன்பெனும் ஆரமிர் தூட்டினர்
வழியின் வந்த வருத்தம் தணியவே." (கம்ப. கங்கைப். 14.)

முகம் இல்வழிச் சேய்மைக் கண்ணே வாடி நீங்குதலின், தீண்டிய வழியல்லது வாடாத அனிச்சப்பூவினும் விருந்ினர் மெல்லியர் என்பதாம்.

இதனான் விருந்தோம்புவார்க்கு முதற்கண் இன்முகம் வேண்டும் என்பது கூறப்பட்டது.

## உரை வேறுபாடு

**பரிதியார்:** முகம் திரிந்து நோக்க - பிரியம் இல்லாமல் பார்க்க.

**காளிங்கர்:** உலகத்து மலர்கள் பலவற்றினும் மென்மையாற் சிறந்த அனிச்ச மலர் ஒருவர் பறித்து மோப்ப வாடுமது போல், விருந்தை ஒருவர் முகம் மாறிப் பார்க்க மிகவும் வாடும்.

## ஒப்புமை

1. **அனிச்சத்தின் மென்மை:**

குறள், 1120.

"அனிச்சத்தம் போது போலத் தொடுப்பவே குழைந்து மாழ்கி."
(சீவக. 2939.)

2. **முகம் திரித்து நோக்கல்:**

"அகன்நக வாரா முகன்அழி பரிசில்." (புறநா. 207: 4.) (90)

---

# 10. இனியவை கூறல்

**பரிமேலழகர்:** அஃதாவது, மனத்தின்கண் உவகையை வெளிப்படுப்பனவாகிய இனிய சொற்களைச் சொல்லுதல். இதுவும் விருந்தோம்புவார்க்கு இன்றியமையாதாகலின், விருந்தோம்பலின்பின் வைக்கப்பட்டது.

**மணக்குடவர்:** இனியவை கூறலாவது கேட்டார்க்கு மனமகிழும் சொற்களைக் கூறுதல்.

## 91

**இன்சொலால் ஈரம் அளைஇப் படிறிலவாம்**
**செம்பொருள் கண்டார்வாய்ச் சொல். 1**

**பரிமேலழகர்:** இன்சொல் - இன்சொலாவன, ஈரம் அளைஇப் படிறு இலவாம் செம்பொருள் கண்டார் வாய்ச்சொல் - அன்போடு கலந்து வஞ்சனை இலவாயிருக்கின்ற அறத்தினை உணர்ந்தார் வாயிற் சொற்கள்.

ஆல்: அசைநிலை. அன்போடு கலத்தல், அன்புடைமையை வெளிப்படுத்தல். படிறின்மை-வாய்மை. மெய்யுணர்ந்தார் நெஞ்சிற்கெல்லாம் செம்மையுடைத்தாய்த் தோன்றலின், 'செம்பொருள்' எனப்பட்டது.[1] இலவாஞ் சொல்லென இயையும். வாய் என வேண்டாது கூறினார், தீய சொற் பயிலாவென்பது அறிவித்தற்கு.[2]

இதனான் இன்சொற்கு இலக்கணம் கூறப்பட்டது.

---

1. "செத்தும் பிறந்தும் செம்பொருள் காவா." (மணி. 21: 168.)

2. "தீய வழுக்கியும் வாயாற் சொலல்" (139) என்னுமிடத்து, 'சொல்லெனவே அமைந்திருக்க, வாயால் என வேண்டாது கூறினார், நல்ல சொற்கள் பயின்றதெனத் தாம் வேண்டியதன் சிறப்பு முடித்தற்கு. இதனை வடநூலார் தாற்பரியம் என்ப' என்று உரைத்தார்.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** இருவர் மாறுபடச் சொன்ன மாற்றத்தினது உண்மைப் பொருளைக் கண்டார் கூறும் மெய்யாகிய சொற்களும் இன்சொல் ஆதலானே அருளொடு பொருந்திக் குற்றமிலவாம்.

இஃது ஒருவனைக் கடிந்து சொல்ல வேண்டுமிடத்தும் இன்சொல் லாலே கடிய வேண்டும் என்றது.

**பரிதியார்:** உபதேசத்தோடே கூடிய நல்லோர் சொல் ஆபத்துக் காலத்துக்கு வைத்த உடைமைபோல் உதவும்.

**காளிங்கர்:** இனிய சொல்லுமாய்க் கேட்போர் செவிக்கு நீர்மை விராவிப் பொய் என்கிற பிற விகாரமும் இலவாம்; யாவையெனின் வீட்டின்பமாகிய மெய்ப் பொருளினை நோக்குதற்குரியவர் வாய்ச் சொற்கள்.

**கவிராஜ பண்டிதர்:** படிறிலவாம் - கொலையும், களவும், பொய்யும் இல்லை.

### ஒப்புமை

**அன்பு அளைந்த இன்சொல்:**

"அன்புடை நன்மொழி அளைஇ" (*முருகு. 292.*)
"ஈர நன்மொழி இரவலர்க் கீந்த" (*சிறுபாண். 93.*)
"அன்புடன் அளைஇய அருள்மொழி." (*மணி. 5:63.*) (*91*)

## 92

**அகன்அமர்ந் தீதலின் நன்றே முகன்அமர்ந்**
**தின்சொலன் ஆகப் பெறின்.** 2

**பரிமேலழகர்:** அகன் அமர்ந்து ஈதலின் நன்று - நெஞ்சு உவந்து ஒருவற்கு வேண்டிய பொருளைக் கொடுத்தலினும் நன்று, முகன் அமர்ந்து இன்சொலன் ஆகப் பெறின் - கண்டபொழுதே முகம் இனியனாய் அதனோடு இனிய சொல்லையும் உடையனாகப் பெறின்.

இன்முகத்தோடு கூடிய இன்சொல் ஈதல் போலப் பொருள்வயத்த தன்றித் தன்வயத்ததாயினும்,[1] அறநெஞ்சுடையார்க் கல்லது இயல்பாக இன்மையின், அதனினும் அரிதென்னும் கருத்தான், 'இன்சொலனாகப் பெறின்' என்றார்.

### உரை வேறுபாடு

**பரிதியார்:** ஈதலின் - சொர்ண தானம் கொடுப்பதைக் காட்டிலும்.

**கவிராஜ பண்டிதர்:** நல்ல வசனங்கள் இல்லாமல் கடின வசனங்களைச் சொல்லிக் கொடுக்கிறதனாலே பலன் இல்லை; நல்ல வசனம் சொல்லி அவர்க்குப் பிரியத்துடனே கொடுக்கிறதனாலேதான் பலன் உண்டாம்.

### ஒப்புமை

**முகன் அமர்தல்:**

**குறள்**, *84*, ஒப்புமை பார்க்க. (*92*)

---

1. "யாவர்க்கு மாம்பிறர்க் கின்னுரை தானே". (**திருமந்திரம்**, 252.)

2. செயின் என்னும் வாய்பாட்டெச்சம் அருமையைக் குறித்து வருமாதலின் இங்ஙனம் உரை எழுதினர்.

## 93

**முகத்தான் அமர்ந்தினிது நோக்கி அகத்தான்ஆம்**
**இன்சொ லினதே அறம். 3**

**பரிமேலழகர்:** முகத்தான் அமர்ந்து இனிது நோக்கி-கண்டபொழுதே முகத்தான் விரும்பி இனிதாக நோக்கி, அகத்தான் ஆம் இன் சொலினதே அறம் - பின் நண்ணியவழி மனத்துடனாகிய இனிய சொற்களைச் சொல்லுதலின் கண்ணதே அறம்.

நோக்கி என்னும் வினையெச்சம் இன்சொலென அடையடுத்து நின்ற முதனிலைத் தொழிற்பெயர் கொண்டது. ஈதலின் கண்ணதன்று என்றவாறு.

இவை இரண்டு பாட்டானும் இன்முகத்தோடு கூடிய இன்சொல் முன்னரே பிணித்துக்கோடலின் விருந்தோம்புதற்கட் சிறந்ததென்பது கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** இன்சொலினதே அறம் - இன்சொல் சொல்ல வல்லவனாயின் அதுதானே அறமாம்.

**காளிங்கர்:** கேட்டவர்க்குச் சில சொல்லுமிடத்துத் தம் முகத்தினால் இனிதாக நோக்கி, பதறாது தணிந்திருந்து இருவர் நெஞ்சமும் அமையாத இனிமையைத் தருவதாகிய இன்சொற்களைச் சொல்லின் மற்று அதுவே அறமாவது.

**கவிராஜ பண்டிதர்:** நல்ல வசனத்தினாலே புண்ணியம் உண்டு.

### ஒப்புமை

**முகத்தான் அமர்ந்து நோக்கல்:**

"விருந்துகண் டுள்ளம்
களிக்கு மங்கையர் முகமெனப் பொலிந்தன கமலம்."
(**கம்ப**. கார். 37.)

### குறிப்பு

நோக்கி ஆம் என்று வினைமுடிவு செய்தலும் பொருந்தும். (93)

## 94

**துன்புறூஉம் துவ்வாமை இல்லாகும் யார்மாட்டும்**
**இன்புறூஉம் இன்சொ லவர்க்கு. 4**

**பரிமேலழகர்:** யார்மாட்டும் இன்பு உறூஉம் இன்சொ லவர்க்கு-எல்லார் மாட்டும் இன்பத்தை மிகுவிக்கும் இன்சொல்லை உடையார்க்கு, துன்பு உறூஉம் துவ்வாமை இல் ஆகும்-துன்பத்தை மிகுவிக்கும் நல்குரவு இல்லையாம்.

நா முதலிய பொறிகள் சுவை முதலிய புலன்களை நுகராமையுடைமையின், 'துவ்வாமை' என்றார். யார்மாட்டும் இன்புறூஉம் இன்சொ லவர்க்குப் பகையும் நொதுமலுமின்றி உள்ளது நண்பே யாம்; ஆகவே, அவர் எல்லாச் செல்வமும் எய்துவர் என்பது கருத்து.

### உரை வேறுபாடு

**பரிதியார்:** துன்புறூஉம் துவ்வாமை இல்லாகும் - தோத்திர மேற்கொண்டு துயர் உறும் துன்பம் இல்லை. (94)

### 95

**பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்**
**கணிஅல்ல மற்றுப் பிற. 5**

**பரிமேலழகர்:** ஒருவற்கு அணி பணிவு உடையன் இன்சொலன் ஆதல் - ஒருவனுக்கு அணியாவது தன்னல் தாழப்படுவார்கண் தாழ்ச்சி உடையனுய் எல்லார்கண்ணும் இனிய சொல்லேயும் உடையனுதல்; பிற அல்ல - இவை இரண்டுமன்றி மெய்க்கு அணியும் பிற அணிகள் அணி ஆகா.

இன்சொலனுதற்கு இனமாகலின் பணிவுடைமையும் உடன் கூறினர். மற்று: அசைநிலே. வேற்றுமை உடைமையாற் பிற எனவும், இவைபோலப் பேரழகு செய்யாமையின் அணி அல்ல எனவும் கூறினர்.

இவை இரண்டு பாட்டானும் இனியவை கூறுவார்க்கு இம்மைப் பயன் கூறப்பட்டது.

#### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** அணி - அழகு.

**பரிதியார்:** வணக்கம் உடையவனுமாய் இனிய வசனம் சொல்ப வனுகில் அவனுக்கு நல்ல வாழ்க்கையே ஆபரணம்,

**காளிங்கர்:** அணி அல்ல மற்றுப் பிற - ஓர் அணிகலம் பெறுவதன்றி வேறு பிற நன்மைகளும் பெறுவர்.

**கவிராஜ பண்டிதர்:** பணி வுடையன் - தன்னை வணங்குகிறவர்களுக் குத் தான் வணங்கி. *(95)*

### 96

**அல்லவை தேய அறம்பெருகும் நல்லவை**
**நாடி இனிய சொலின். 6**

**பரிமேலழகர்:** நல்லவை நாடி இனிய சொலின் -பொருளால் பிறர்க்கு நன்மை பயக்கும் சொற்களை மனத்தான் ஆராய்ந்து இனியவாக ஒருவன் சொல்லுமாயின், அல்லவை தேய அறம் பெருகும் - அவனுக்குப் பாவங்கள் தேய அறம் வளரும்.

தேய்தல்-தன் பகையாகிய அறம் வளர்தலின் தனக்கு நிலேயின்றி மெலிதல். "தவத்தின்முன் நில்லாதாம் பாவம்"[1] என்பதூஉம் இப்பொருட்டு. நல்லவை நாடிச் சொல்லுங்காலும் கடியவாகச் சொல்லின் அறன் ஆகாது என்பதாம்.

இதனுன் மறுமைப்பயன் கூறப்பட்டது.

#### உரை வேறுபாடு

**காளிங்கர்:** நல்லவை - தனக்கும் பிறர்க்கும் இம்மை மறுமை பயக் கும் இனிய சொற்களை. *(96)*

### 97

**நயன்ஈன்று நன்றி பயக்கும் பயன்ஈன்று**
**பண்பிற் றலேப்பிரியாச் சொல். 7**

**பரிமேலழகர்:** நயன் ஈன்று நன்றி[2] பயக்கும் - ஒருவனுக்கு இம்மைக்கு நீதியையும் உண்டாக்கி மறுமைக்கு அறத்தையும் பயக்கும், பயன் ஈன்று

1. **நாலடியார்**, 51.
2. **பா-ம்**. நன்மை.

பண்பின் தலைப்பிரியாச் சொல் - பொருளால் பிறர்க்கு நன்மையைக் கொடுத்து இனிமைப் பண்பின் நீங்காத சொல்.

நீதி, உலகத்தோடு பொருந்துதல். பண்பு என்பது ஈண்டு அதிகாரத்தான் இனிமைமேல் நின்றது. தலைப்பிரிதல்: ஒரு சொல் நீர்மைத்து.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** பிறரால் விரும்பப்படுதலையும் பயந்து, பொருளையும் பயந்து, அறத்தினையும் பயக்கும், குணத்தினின்று நீங்காத சொல்.

**பரிதியார்:** இனிய வசனம் இம்மைக்கு நல்லோர் என்னும்; மறுமைக்கு முத்தியும் கொடுக்கும், விருந்துக்கு இனியவை சொல்வானாகில்.

**காளிங்கர்:** தாம் ஒழுகுகின்ற ஒழுக்கமும் நழுவாது நிலை பெற்று, மற்றும் உள்ள நன்மையும் பயக்கும்; அது யாதோ வெனில், தன் நாவானது பயன் இல்லாதனவற்றைச் சொல்லாமை பிறர்க்கு நிலைபெறு மதன் பொருட்டுப் பயனுன இனிய மரபுடையார் சொல்லானது.

### ஒப்புமை

**பயன், பண்பு:** குறள், 45. *(97)*

## 98

**சிறுமையுள் நீங்கிய இன்சொல் மறுமையும்**
**இம்மையும் இன்பம் தரும்.** 8

**பரிமேலழகர்:** சிறுமையுள் நீங்கிய இன்சொல்-பொருளால் பிறர்க்கு நோய் செய்யாத இனிய சொல், மறுமையும் இம்மையும் இன்பம் தரும் - ஒருவனுக்கு இருமையினும் இன்பத்தைப் பயக்கும்.

மறுமை இன்பம் பெரிதாகலின் முற் கூறப்பட்டது. இம்மை இன்பமாவது, உலகம் தன்வயத்ததாகலான் நல்லன எய்தி இன்புறுதல்.

இவை இரண்டு பாட்டானும் இருமைப் பயனும் ஒருங்கு எய்துதல் வலியுறுத்தப்பட்டது.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** சிறுமை - புன்மை.

**பரிதியார்:** பாவம் நீங்கிய புண்ணியத்து இன்சொல் இம்மைக்குச் செல்வமும் மறுமைக்கு முத்தியும் கொடுக்கும்.

**காளிங்கர்:** சிறுமை - குற்றம்

**கவிராஜ பண்டிதர்:** திரவிய வலுமையால் பிறருக்கு வாதை பண்ணுத நல்ல வார்த்தை, சொல்லுகிறவனுக்கு இம்மையில் கீர்த்தியையும் மறுமையிலே வெகுவான சுகத்தையும் கொடுக்கும்.

### குறிப்பு

**சி**றுமையுள் - சிறுமையினின்றும்; உருபு மயக்கம். *(98)*

## 99

**இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன்கொலோ**
**வன்சொல் வழங்கு வது.** 9

**பரிமேலழகர்:** இன்சொல் இனிது ஈன்றல் காண்பான் - பிறர் கூறும் இன்சொல் தனக்கு இன்பம் பயத்தலை அநுபவித்து அறிகின்றவன், வன்சொல் வழங்குவது எவன்கொல் - அது நிற்கப் பிறர்மாட்டு வன்சொல்லைச் சொல்லுவது என்ன பயன் கருதி?

இனி தென்றது வினைக்குறிப்புப்பெயர்.[1] கடுஞ்சொல் பிறர்க்கும் இன்னாதாகலின், அது கூறலாகாதென்பது கருத்து.

### உரை வேறுபாடு

**பரிதியார்:** நல்ல வசனம் நன்மையே தரும்; அது அறிந்து பொல்லாத வசனம் கூறுவான், அதே தெனில், பாவத்தின் வழி.

**காளிங்கர்:** காண்பான் - நூல்களில் கேட்டிருக்கையன்றி, இம்மையே காண்கின்றவன்.

எனவே, யாவதும் ஒரு பயனும் இல்லை என்றவாறு.

### ஒப்புமை

**முற்றும் :**

"புன்சொல்லும் நன்சொல்லும் பொய்யின் றுணர்கிற்பார்
வன்சொல் வழியராய் வாழ்தலும் உண்டாமோ." (**பழமொழி**, 277.)

### குறிப்பு

**எ**வன் கொலோ: கொல்லும் ஓவும் அசைநிலை. (99)

## 100

**இனிய உளவாக இன்னாத கூறல்**
**கனிஇருப்பக் காய்கவர்ந் தற்று.** 10

**பரிமேலழகர்:** இனிய உளவாக இன்னாத கூறல் - அறம் பயக்கும் இனிய சொற்களும் தனக்கு உளவாயிருக்க அவற்றைக் கூறாது பாவம் பயக்கும் இன்னாத சொற்களை ஒருவன் கூறுதல், கனி இருப்பக் காய் கவர்ந்தற்று - இனிய கனிகளும் தன் கைக்கண் உளவாயிருக்க அவற்றை நுகராது இன்னாத காய்களை நுகர்ந்ததனோடு ஒக்கும்.

கூறல் என்பதனால் சொற்களென்பது பெற்றாம். பொருளை விசேடித்து நின்ற பண்புகள் உவமைக் கண்ணும் சென்றன. இனிய கனிகள் என்றது, ஔவை உண்ட நெல்லிக் கனிபோல் அமிழ்தாவனவற்றை.[2] கடுஞ்சொல் சொல்லுதல் முடிவில் தனக்கே இன்னாது என்பதாம்.

இவை இரண்டு பாட்டானும் இன்னாத கூறலின் குற்றம் கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** பிறர்க்கு இனியவாகச் சொல்லும் சொற்கள் இன்பத்தைத் தருதலைக் கண்டவன் இனிய சொற்கள் இருக்கக் கடிய சொற்களைக் கூறுதல், பழமும் காயும் ஓரிடத்தே இருக்கக் கண்டவன் பழத்தைக் கொள்ளாது காயைக் கொண்ட தன்மைத்து.

---

1. குறிப்புவினையாலணையும் பெயர்.

2. அதிகமான் ஔவைக்கு நெல்லிக்கனி ஒன்று வழங்கினன் என்பது பழைய வரலாறு. அதனை, "நெல்லித் தீங்கனி" (**புறநா.** 91:9) என்று ஔவையாரும், "அமிழ்து விளை தீங்கனி" (**சிறுபாண்.** 100) என்று பிறரும் கூறுவர்.

**பரிதியார்:** காய் கவர்ந்தற்று-வேப்பங் காயைத் தின்பதற்கு ஒக்கும்.

**காலிங்கர்:** வேறொரு புறத்துப் போய் முயன்று தேட வேண்டாத படி, இனியவாகிய சொற்கள் தனது நாவகத்து உளவாயிருப்ப, மற்று இன்னாதவற்றைப் பிறர்க்குச் சூழ்ந்து சொல்லுதல் எத்தமைத்தெனின், நம் இல்லகத்து இனிய கனி உளவாயிருப்ப வன்காயைப் புறத்துச் சென்று நுகர்ந்து விரும்பினாற்போலும்.

**கவிராஜ பண்டிதர்:** கனி...கவர்ந்தற்று-நெல்லிக்கனி தன் கையில் இருக்க அதைத் தின்னாமல் எட்டிக் காயைத் தின்பது போலும்.

எட்டிக் காயைத் தின்றவன் பிராணன் இழந்தாற் போலப் பொல்லாத வார்த்தைகளைச் சொல்லுகிறவன் தானே தனக்குக் கேடு தேடிக் கொள்ளுவான்.

### ஒப்புமை

**கனியிருப்பக் காய் கவர்தல்:**

"கனியிருப்பக் காய்கவர்ந்த கள்வ னேனே." (*அப்பர். ஆரூர். 1.*)

### குறிப்பு

தனக்குக் கிடைக்கலாவதோர் கனி உரியதாக இருக்கவும், பிறர்க்கு உரிய காயை அவரறியாமல் கவர்தல் என்றார். கவர்தல் - உடையார் அறியாமல் பெறுதல். "காய்கவர்ந்த கள்வனேனே" என்ற அப்பர் வாக்கில் கள்வனேன் என்பது இக் கருத்தைப் புலப்படுத்துகிறது. *(100)*

---

# 11. செய்ந்நன்றி அறிதல்

**பரிமேலழகர்:** அஃதாவது, தனக்குப் பிறர் செய்த நன்மையை மறவாமை. இனியவை கூறி இல்லறம் வழுவாதார்க்கு உய்தியில்[1] குற்றம் செய்ந்நன்றி கோறலே ஆகலின் அதனைப் பாதுகாத்துக் கடிதற்பொருட்டு, இஃது இனியவை கூறலின்பின் வைக்கப்பட்டது.

**மணக்குடவர்:** செய்ந்நன்றியறிதலாவது பிறர் செய்த தீமையை மறந்து நன்மையை மறவாமை.

**பரிதியார்:** இனியவை கூறல்போல் ஒருவர் செய்த நன்றியை அறிய வேணும் என்பது.

### 101

**செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்**
**வானகமும் ஆற்றல் அரிது.** 1

**பரிமேலழகர்:** செய்யாமல் செய்த உதவிக்கு - தனக்கு முன் ஓர் உதவி செய்யாதிருக்க ஒருவன் பிறனுக்குச் செய்த உதவிக்கு, வையகமும் வானகமும் ஆற்றல் அரிது - மண்ணுலகும் விண்ணுலகும் கைம்மாறாகக் கொடுத்தாலும் ஒத்தல் அரிது.

1. உய்தி - பரிகாரம்.

கைம்மாறுகளெல்லாம் காரணம் உடையவாகலின், காரணம் இல்லாத உதவிக்கு ஆற்றுவாயின. செய்யாமைச் செய்த உதவி யென்று. பாடமோதி, மறித்து உதவமாட்டாமை உள்ள இடத்துச் செய்த உதவியென்று உரைப் பாரும் உளர்.

### உரை வேறுபாடு

**மணக்குடவர் :** ஆற்றல் - நிறையாற்றுதல்.

**கவிராஜ பண்டிதர் :** செய்யாமல் செய்த உதவிக்கு உதவியாவது, போக பூமியாயிருந்து கர்ம பூமியாய் மாறின காலத்து விவரம் அறியாத ஜனங்களுக்கு ஜீவனோபாயம், கல்வி, தானம் செய்கிறது முதலானவை கற் பித்தல் போல்வது என்பதாம்.

### ஒப்புமை

1. **வையகமும் வானகமும் :**

''விரிதிரைப் பெருங்கடல் வளைஇய உலகமும்
அரிதுபெறு சிறப்பிற் புத்தேள் நாடும்
இரண்டும் தூக்கிற் சீர்சா லாவே.'' *(குறுந். 101 : 1-3.)*

2. **முற்றும் :**

''பொன்னணி மார்பன் முன்வர் ஆற்றிய
நன்னர்க் குதவும் பின்உப காரம்
அலைதிரைப் பெளவம் ஆடை யாகிய
நிலமுழுது கொடுப்பினும் நேரோ என்மரும்'' *(பெருங். 3.20 : 186-9.)*

''சிறுவா யல்லலை யைய......
.........உதவிமா றுதவி யுண்டோ''

''உதவாமல் ஒருவன் செய்த உதவிக்குக் கைம்மா றாக
மதயானை அனைய மைந்த மற்றுமுண் டாக வற்றே''

''உலக மூன்று முதவற் கொருதனி
விலையி லாமையும் உன்னினென் மேலவை
நிலையி லாமை நினைந்தனன்.''
(**கம்ப.** கிட்கிந்தை. 55, 66, மீட்சிப். 28.) (103)

## 102

**காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது. 2**

**பரிமேலழகர் :** காலத்தினாற் செய்த நன்றி - ஒருவனுக்கு இறுதி வந்த எல்லைக்கண் ஒருவன் செய்த உபகாரம், சிறிது எனினும் ஞாலத்தின் மாணப் பெரிது-தன்னை நோக்கச் சிறிதாயிருந்ததாயினும் அக் காலத்தை நோக்க நிலவுலகத்தினும் மிகப் பெரிது.

அக் காலம் நோக்குவதல்லது பொருள் நோக்கலாகாது என்பதாம். காலத்தினால் என்பது வேற்றுமை மயக்கம்.

### உரை வேறுபாடு

**மணக்குடவர் :** உதவ வேண்டும் காலம் தப்பாமல் செய்த உதவி.

**பரிதியார் :** ஒருவர்க்கு ஆபத்துக் காலத்திலே செய்த உதவிக்கு மகா மேருவும் நிகர் அல்ல.

**காளிங்கர்:** தாம் இடருறும் காலத்தின்கண் தமக்கு ஒருவர் செய்த நன்மைப் பொருளானது சிறிதே யாயினும் அஃது இறுதிக்கண் உதவியது ஆகலான் ஞாலத்தினும் மாட்சிமைப்படப் பெரிது, செய்ந் நன்றி யறிவார்க்கு.

**ஒப்புமை**

1. **பெருமைக்கு உலகத்தைக் கூறுதல்:**

"நிலத்தினும் பெரிதே" *(குறுந். 3 : 1.)*

"மண்ணினும் வானினும் மற்றை மூன்றினும்
எண்ணினும் பெரியதோர் இடர்." *(கம்ப. அயோமுகி. 99.)*

2. **முற்றும்:**

"முன்னொருவன் செய்த உபகாரம் மூவுலகம்
தன்னைக் கொடுத்தாலும் சாலுமே." *(பாரத வெண்பா.) (102)*

## 103

**பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்**
**நன்மை கடலிற் பெரிது.** 3

**பரிமேலழகர்:** பயன் தூக்கார் செய்த உதவி நயன் தூக்கின்-இவர்க்கு இது செய்தால் இன்னது பயக்கும் என்று ஆராய்தல் இலராய்ச் செய்த உதவியாகிய ஈரமுடைமையை ஆராயின், நன்மை கடலின் பெரிது - அதன் நன்மை கடலினும் பெரிதாம்.

இவை மூன்று பாட்டானும் முறையே காரணமின்றிச் செய்ததூஉம், காலத்தினற் செய்ததூஉம், பயன்தூக்காராய்ச் செய்ததூஉம் அளவிலவாதல் கூறப்பட்டது.

**உரை வேறுபாடு**

**பரிதியார்:** கடலின் பெரிது - எழு கடலும் நிகரல்ல.

**ஒப்புமை**

**கடலிற் பெரிது:**

"நீரினும் ஆரள வின்றே" *(குறுந். 3 : 2.)*

"கடலினும் பெரிதெமக் கவருடை நட்பே." *(ஐங். 184: 4 ) (103)*

## 104

**தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்**
**கொள்வர் பயன்தெரி வார்.** 4

**பரிமேலழகர்:** தினைத்துணை நன்றி செயினும்-தமக்குத் தினையளவிற்றாய உபகாரத்தை ஒருவன் செய்தானாயினும், பனைத்துணையாக் கொள்வர் பயன் தெரிவார்-அதனை அவ்வளவிற்றாகக் கருதாது பனையளவிற்றாகக் கருதுவர், அக் கருத்தின் பயன் தெரிவார்.

தினை, பனை என்பன சிறுமை பெருமைகட்குக் காட்டுவன சில அளவை.[1] அக் கருத்தின் பயனாவது அங்ஙனம் கருதுவார்க்கு வரும் பயன்.

**உரை வேறுபாடு**

**மணக்குடவர்:** பயன் - அதன் பயனை. பனையளவு, அதன் உயர்ச்சி.

**காளிங்கர்:** பயன் - செய்ந்நன்றிப் பயன்.

1. "பனையென் அளவும்." (தொல். எழுத். 169.)

ஒப்புமை

1. தினைத்துணை நன்றி:
"தினைத்துணையும் நன்றி புரிகல்லா." (நாலடி. 323.)

2. தினையும் பனையும்:
குறள், 433, 1282.
"தினைத்துணைய ராகித்தந் தேசுள் ளடக்கிப்
பனைத்துணையார் வைகலும் பாடழிந்து வாழ்வர்" (நாலடி. 104.)
"தினையளவு போதாச் சிறுபுல்நீர் நீண்ட
பனையளவு காட்டும் படித்தால்." (திருவள்ளுவ. 5.)

3. தினை சிறுமைக்கு:
"தினைத்தனை உள்ளதோர் பூவினிற்றேன்."
(திருவாசகம். கோத்தும்பி, 3.)

4. முற்றும்:
"தினையனைத்தே ஆயினும் செய்தநன் றுண்டால்
பனைபனைத்தா உள்ளுவர் சான்றோர்." (நாலடி. 344.) (104)

**105**

**உதவி வரைத்தன் றுதவி உதவி
செயப்பட்டார் சால்பின் வரைத்து.** 5

**பரிமேலழகர்:** உதவி உதவி வரைத்து அன்று - கைம்மாறான உதவி காரணத்தானும் பொருளானும் காலத்தானும் ஆகிய மூவகையானும் முன் செய்த உதவியளவிற்றன்று; உதவி செயப்பட்டார் சால்பின் வரைத்து - அதனைச் செய்வித்துக் கொண்டவர்தம் அமைதி அளவிற்று.

சால்பு எவ்வளவு பெரிதாயிற்று, உதவியும் அவ்வளவு பெரிதாம் என்பார், சால்பின் வரைத்து என்றார்.[1]

இவை இரண்டு பாட்டானும் மூன்றும் அல்லாத உதவி மாத்திரமும் அறிவார்க்குச் செய்தவழிப் பெரிதாம் என்பது கூறப்பட்டது.

உரை வேறுபாடு

**பரிதியார்:** முன்னே ஓர் உதவி செய்யாமல் செய்த நன்றிக்குத்தான் ஒரு நன்றி செய்வோம் என்றால், அவனைக் கெடுக்க நினைவதற்கு ஒக்கும்; நினையாமற் செய்த நன்றியை நினைத்திருப்பதே நன்று.

**கவிராஜ பண்டிதர்:** சால்பு-நற்குணம்.

ஒப்புமை

1. உதவி செயப்பட்டார்க்கு ஏற்பச் சிறத்தல்:
"ஞான முன்னிய நான்மறை யாளர்கைத்
தானம் என்னத் தழைத்தது நீத்தமே." (கம்ப. ஆற்றுப். 5.)

2. முற்றும்:
"பெருந்தவர் கைப்பெய் பிச்சையின் பயனும்...
பெருகிய தென்னப் பெருவளம் சுரப்ப." (மணி. 22 : 229-32.)
"வியர்ந்தவர் வெருக்கொள விசும்பின் ஓங்கினன்
உயர்ந்தவர்க் குதவிய உதவி ஒப்பவே." (கம்ப. வேள்வி. 35.) (105)

---

1. "தான்சிறி தாயினும் தக்கார்கைப் பட்டக்கால்
வான்சிறிதாப் போர்த்து விடும்." (நாலடி. 38.)

106

மறவற்க மாசற்றார் கேண்மை துறவற்க
துன்பத்துள் துப்பாயார் நட்பு. 6

**பரிமேலழகர்:** துன்பத்துள் துப்பு ஆயார் நட்புத் துறவற்க-துன்பக் காலத்துத் தனக்குப் பற்றுக்கோடு ஆயினரது நட்பை விடாதொழிக; மாசு அற்றார் கேண்மை மறவற்க-அறிவு ஒழுக்கங்களில் குற்றமற்றாரது கேண்மையை மறவாதொழிக.

கேண்மை-கேளாம் தன்மை. இம்மைக்கு உறுதி கூறுவார் மறுமைக்கு உறுதியும் உடன் கூறினார்.[1]

**உரை வேறுபாடு**

**மணக்குடவர்:** துப்பாயார்-வலியாயினார்.

**காளிங்கர்:** இங்குச் சொன்ன இருவகைப்பட்ட நன்றியையும் மறவாதவர் இம்மையின்கண் இன்பமும் மறுமையின்கண் இன்பமும் பெறுவர்.

**கவிராஜ பண்டிதர்:** துப்பு-சிநேகம். மாசற்றார் - அறிவினாலும் ஆசாரத்தினாலும் குற்றமற்றார்.

**ஒப்புமை**

1. **மாசற்றார் கேண்மை :**

"மருவுக மாசற்றார் கேண்மை." (*குறள், 800.*)

2. **துன்பத்துள் துப்பாயார் நட்பு:**

"உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு." (*குறள், 788.*) (*106*)

107

எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கண்
விழுமம் துடைத்தவர் நட்பு. 7

**பரிமேலழகர்:** தம்கண் விழுமம் துடைத்தவர் நட்பு - தம்கண் எய்திய துன்பத்தை நீக்கினவருடைய நட்பினை, எழுமை எழு பிறப்பும் உள்ளுவர் - எழுமையினையுடைய தம் எழுவகைப் பிறப்பினும் நினைப்பர் நல்லோர்.

எழுமை என்றது வினைப்பயன் தொடரும் ஏழு பிறப்பினை. அது வளையாபதியுட் கண்டது. எழுவகைப் பிறப்பு மேலே உரைத்தாம்.[2] விரைவு தோன்றத் துடைத்தவரென்றார். நினைத்தலாவது, துன்பம் துடைத்தலான் அவர்மாட்டு உளதாகிய அன்பு பிறப்புத்தோறும் தொடர்ந்து அன்புடையராதல்.

இவை இரண்டு பாட்டானும் நன்றி செய்தாரது நட்பு விடலாகாதென்பது கூறப்பட்டது,

**உரை வேறுபாடு**

**பரிதியார்:** விழுமம்-மனக்கிலேசம்.

**காளிங்கர்:** எழுவகையாகத் தோன்றி வருகின்ற பிறப்புத் தோறும் தம் மாட்டு வந்து எய்தும் இடுக்கண் துடைத்தவர் நட்பை, ஈண்டுச் செய

1. மாசற்றார் கேண்மையால் மறுமைப்பயனும், துப்பாயார் நட்பினால் இம்மைப் பயனும் பெறப்படும் என்பது இவர் கருத்து.

2. **குறள்**, 62, உரை.

லாகும் நன்றியைக் கொண்டே பிறவிதோறும் இடருறும் காலத்துப் பெரியோர் செய்த நன்றிகளென்று, இங்ஙனம் எழுவகைப் பிறப்பினும் தமக்குச் செய்தார் செய்த நன்றிகளைச் சிந்திப்பர் செய்ந்நன்றி அறிவார்.

ஒப்புமை

1. எழுமை :
குறள், 126, 398.

2. எழுபிறப்பு :
குறள், 62. (107)

## 108

**நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல**
**தன்றே மறப்பது நன்று.** 8

**பரிமேலழகர்:** நன்றி மறப்பது நன்று அன்று - ஒருவன் முன் செய்த நன்மையை மறப்பது ஒருவற்கு அறன் அன்று; நன்று அல்லது அன்றே மறப்பது நன்று-அவன் செய்த தீமையைச் செய்தபொழுதே மறப்பது அறன்.

இரண்டும் ஒருவனாற் செய்யப்பட்டவழி மறப்பதும் மறவாததும் வகுத்துக் கூறியவாறு.

உரை வேறுபாடு

**மணக்குடவர்:** நன்று அன்று - என்றும் நன்றல்ல.

**காளிங்கர்:** நன்றி...அன்று-உலகத்து ஒருவர் செய்த நன்றி பெரும் பயனைத் தருமாதலால் தமக்கு ஒருவர் செய்த நன்மையைத் தாம் மறப்பது தமக்கு நன்மை அல்ல.

ஒப்புமை

1. நன்றி மறவாமை:
"உதவி செய்தோர்க் குதவா ராயினும்
மறவி யின்மை மாண்புடைத்து" (பெருங். 4. 3 : 13-4.)
"நன்றி மறவேல்." (ஆத்திசூடி.)

2. நன்றல்லதை மறத்தல்:
குறள், 152. (108)

## 109

**கொன்றன்ன இன்னா செயினும் அவர்செய்த**
**ஒன்றுநன் றுள்ளக் கெடும்.** 9

**பரிமேலழகர்:** கொன்றன்ன இன்னா செயினும் - தமக்குமுன் ஒரு நன்மை செய்தவர் பின் கொன்றால் ஒத்த இன்னாதவற்றைச் செய்தாராயினும், அவர் செய்த நன்று ஒன்று உள்ளக் கெடும் - அவையெல்லாம் அவர் செய்த நன்மை ஒன்றனையும் நினைக்க இல்லையாம்.

தினைத்துணை பனைத்துணையாகக் கொள்ளப்படுதலின்,[1] அவ்வொன்றுமே அவற்றையெல்லாம் கெடுக்கும் என்பதாம்.

இதனான் நன்றல்லது அன்றே மறக்கும் திறம் கூறப்பட்டது.

உரை வேறுபாடு

**காளிங்கர்:** ஒருவர் தம்மைக் கொல்லும் கொலைக்கு மேற்பட்டதோர் இன்னாமை இல்லை; மற்று அது போலவே [தத்தம்] பொல்லாங்கு

1. குறள், 104.

செயினும் அவர் முன்பு செய்தது ஒன்றேயாயினும் நன்றி உளதாயின் அதனைச் சிந்திக்கவே, எல்லாக் குற்றமும் தீரும் செய்ந்நன்றி அறிவார்க்கு.

**கவிராஜ பண்டிதர்:** இன்னா-பொல்லாங்கு.

### ஒப்புமை

**ஒன்று நன்று உள்ளுதல்:**

"ஒருநன் றுடைய ளாயினும் புரிமாண்டு
புலவி தீர அளிமதி" (குறுந். 115: 2-3.)

"சிறந்தொருவர்
செய்தநன் றுள்ளுவர் சான்றோர்"

"ஒருநன்றி செய்தவர்க் கொன்றி எழுந்த
பிழைநூறும் சான்றோர் பொறுப்பர்." (நாலடி. 356,357.) (109)

## 110

எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு. 10

**பரிமேலழகர்:** எந்நன்றி கொன்றார்க்கும் உய்வு உண்டாம் - பெரிய அறங்களைச் சிதைத்தார்க்கும் பாவத்தின் நீங்கும் வாயில் உண்டாம்; செய்ந்நன்றி கொன்ற மகற்கு உய்வு இல்லை - ஒருவன் செய்த நன்றியைச் சிதைத்த மகனுக்கு அஃது இல்லை.

பெரிய அறங்களைச் சிதைத்தலாவது, ஆன்முலை அறுத்தலும் மகளிர் கருவினைச் சிதைத்தலும் பார்ப்பார்த் தபுதலும் முதலிய பாதகங்களைச் செய்தல்.[1]

இதனால் செய்ந்நன்றி கோறலின் கொடுமை கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** எல்லா நன்மைகளையும் சிதைத்தார்க்கும் பின்பு ஒரு காலத்தே யாயினும் உய்வுண்டாம்; ஒருவன் செய்த நன்றியைச் சாவாக்கின மகனுக்கு உய்தல் இல்லை.

**காளிங்கர்:** அருள், அறம், வாய்மை முதலாகிய எல்லா நன்மைகளையும் கொன்ற பாவிக்கும் கொடு நரகத்தினின்றும் யாதானும் ஒரு காரணத்தினால் உய்வு உண்டாம்; மற்றுத் தனக்கு ஒருவர் செய்த செய்ந்நன்றியைக் கொன்ற மகனாகிய கொடும்பாவிக்கு, கொடிய நரகத்தினின்றும் ஒரு காலத்தும் உய்வு இல்லை.

**கவிராஜ பண்டிதர்:** பெரிய தர்மங்களைக் கெடுக்கிறதாவது, தான் பிறரை அபவாதம் பண்ணுகிறதும், பசுவின் முலையறுக்கிறதும், ஸ்திரீகள் கெர்ப்பத்தைக் கெடுக்கிறதும் முதலான பாதகங்களைச் செய்தல்.

### ஒப்புமை

**1. செய்ந்நன்றி கொல்லுதல்:**

" ... ... செய்ந்நன்றி
கொன்றாரிற் குற்றம் உடைத்து" (நாலடி. 111.)

"செய்ந்நன்றி கொல்லன்மின்" (சிலப். 30: 191.)

1. புறநா. 34: 1-3.

"நன்றியை மறந்திடும் நயமில் நாவினேன்
என்றிவர் உறுநர கென்ன தாகவே"

"நன்றி கொன்றரு நட்பினை நாரறுத்து."

(கம்ப. பள்ளியடை. 104, கிட்கிந்தை.3.)

2. நன்றி கொன்றவனுக்கு உய்வில்லை:

"உய்திர் போலும் உதவிகொன் றீர்என"

"உய்யநிற் கபய மென்று னுயிரைத்தன் னுயிரி னேம்பாக்
கையனு மொருவன் செய்த வுதவியிற் கருத்தி லோனும்
மையற நெறியி னேக்கி மாமறை நெறியி னின்ற
மெய்யினைப் பொய்யென் றானும் மீள்கிலா நரகில் வீழ்வார்."

(கம்ப. கிட்கிந்தை. 28, விபீடணன். 117.)

3. முற்றும்:

"ஆன்முலை அறுத்த அறனி லோர்க்கும்
மாணிழை மகளிர் கருச்சிதைத் தோர்க்கும்
பார்ப்பார்த் தப்பிய கொடுமை யோர்க்கும்
வழுவாய் மருங்கிற் கழுவாயும் உளவென
நிலம்புடை பெயர்வ தாயினும் ஒருவன்
செய்தி கொன்றோர்க் குய்தி இல்லென
அறம்பா டிற்றே ஆயிழை கணவ" (புறநா. 34: 1-7.)

"ஒற்கத்துள் உதவியார்க் குதவா தான் மற்றவன்
எச்சத்து ளாயினுமஃ தெறியாது விடாதேகாண்" (கலி. 149: 6-7.)

"சிதைவகல் காதற் றாயைத் தந்தையைக் குருவைத் தெய்வப்
பதவியந் தணரை ஆவைப் பாலரைப் பாவை மாரை
வதைபுரி குநர்க்கு முண்டாம் மாற்றலாம் ஆற்றல் மாயா
உதவிகொன் றார்க்கென் றேனும் ஒழிக்கலாம் உபாய முண்டோ."

(கம்ப. கிட்கிந்தை. 62.)

"நன்றி, செய்குநர்ப் பிழைத்தோர்க் குய்வில தென்னும்
குன்றா வாய்மை." (கல்லாடம், 4.) (110)

# 12. நடுவுநிலைமை

**பரிமேலழகர்:** அஃதாவது பகை நொதுமல்[1] நண்பு என்னும் மூன்று பகுதியினும் அறத்தின் வழுவாது ஒப்ப நிற்கும் நிலைமை. இது, நன்றி செய்தார்மாட்டு அந் நன்றியினை நினைத்தவழிச் சிதையுமன்றே; அவ்விடத்தும் சிதையலாகாது என்றற்கு, செய்ந்நன்றியறிதலின்பின் வைக்கப்பட்டது.

**பரிதியார்:** நடுவு நிலைமையாவது செய்ந்நன்றி அறிந்தது போலவே நிலைமையாக நிற்கவேணும் என்றவாறு.

111

**தகுதி எனஒன்று நன்றே பகுதியாற்**
**பாற்பட் டொழுகப் பெறின்.** 1

**பரிமேலழகர்:** தகுதி என ஒன்றே நன்று - நடுவுநிலைமை யென்று சொல்லப்படும் ஓரறமுமே நன்று;[2] பகுதியான் பாற்பட்டு ஒழுகப்பெறின் - பகை நொதுமல் நண்பு என்னும் பகுதிதோறும் தன் முறைமையை விடாது ஒழுகப் பெறின்.

1. பகையும் நட்பும் அல்லாத அயன்மை.
2. ஏகாரத்தைப் பிரித்துக் கூட்டினர்.

தகுதி உடையதனைத் தகுதி என்றார். "ஊரானோர் தேவகுலம்" என்பதுபோலப் பகுதியான் என்புழி ஆனுருபு தோறும் என்பதன் பொருட்டாய் நின்றது. பெறின் என்பது அவ்வொழுக்கத்து அருமை தோன்ற நின்றது.

இதனான் நடுவுநிலைமையது சிறப்புக் கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** பகுதியான் பாற்பட்டு - அவரவர் நிலைமைப் பகுதியோடே அறத்தின்பாற் பட்டு.

**பரிதியார்:** தகுதிப்பாடாகிய நடுவுநிலைமை உண்டாகில் அந்த நிலைமைக்குச் சரியாக ஒன்றும் இல்லை.

**காளிங்கர்:** நடுவுநிலைமைத் தகுதி எனப்படுகின்றது மனச் செற்றங் கொண்டு ஒருதலைச் சார்பாக நில்லாமை, மற்று அங்ஙனம் அறநூல் சொன்ன முறைமைப்பாட்டால் நடுவு நிலைமையின் ஒழுக்கத்தை வழுவாமல் நடத்தப்பெறின். *(111)*

## 112

செப்பம் உடையவன் ஆக்கம் சிதைவின்றி
எச்சத்திற் கேமாப் புடைத்து. 2

**பரிமேலழகர்:** செப்பம் உடையவன் ஆக்கம் - நடுவு நிலைமையை உடையவனது செல்வம், சிதைவு இன்றி எச்சத்திற்கு ஏமாப்பு உடைத்து - பிறர் செல்வம்போல் அழிவின்றி அவன் வழியில் உள்ளார்க்கும் வலியாதலை உடைத்து.

விகாரத்தால் தொக்க எச்சவும்மையான்[1] இறக்குந் துணையும் அவன் றனக்கும் ஏமாப்புடைத்து என்பது பெற்றும். அறத்தோடு வருதலின், அன்னதாயிற்று. தான் இறந்துழி எஞ்சி நிற்பதாகலின், எச்சம் என்றார்.[2]

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** நடுவு நிலைமையுடையார் செல்வம் அழியாது.

**பரிதியார்:** நடுவு நிலைமையாகிய செப்பத்திலே நிற்பான் வங்கிசம் தழைத்து ஆக்கம் பெருகும்.

**கவிராஜ பண்டிதர்:** தர்மத்துடனே கூட நடந்த படியாலே அழிவில்லாமல் நிற்கும் என்பதாம். *(112)*

## 113

நன்றே தரினும் நடுவிகந்தாம் ஆக்கத்தை
அன்றே ஒழிய விடல். 3

**பரிமேலழகர்:** நன்றே தரினும் - தீங்கன்றி நன்மையே பயந்ததாயினும், நடுவு இகந்து ஆம் ஆக்கத்தை அன்றே ஒழியவிடல் - நடுவு நிற்றலை ஒழிதலான் உண்டாகின்ற ஆக்கத்தை அப்பொழுதே ஒழியவிடுக.

நன்மை பயவாமையின், நன்றே தரினும் என்றார். இகத்தலான் என்பது இகந்து எனத் திரிந்து நின்றது.[3]

இவை இரண்டுபாட்டானும் முறையே நடுவுநிலைமையான் வந்த செல்வம் நன்மை பயத்தலும், ஏனைச் செல்வம் தீமை பயத்தலும் கூறப்பட்டன.

---

1. எச்சத்திற்கும் ஏமாப் புடைத்து எனக் கொள்ள வேண்டும்.
2. குறள், 114, 456.
3. நடு இகப்ப ஆம் ஆக்கத்தை என வரின் தளை பிழைபடும். ஆதலின் திரிந்தது.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** அன்றே - அவ்வாக்கம் வருதற்குத் தொடக்கமான அன்றே.

**பரிதியார்:** ஆக்கம் பெற்றாலும் வேண்டாம், மனம் வாக்குக் காயங்களைப் பாவத்தின் வழிச்செல்லாமல் நடுவுநிலைமை விட்டதாகில். அது எப்படி என்னில் நடுவு நிலைமை விட்ட காரியம் நில்லாது.

### ஒப்புமை

*முற்றும்:*

"செம்மையின் இகந்தொரீஇப் பொருள்செய்வார்க் கப்பொருள்
இம்மையும் மறுமையும் பகையாவ தறியாயோ." (**கலி.** 14: 14-5)

## 114

**தக்கார் தகவிலர் என்ப தவரவர்**
**எச்சத்தாற் காணப் படும்.** 4

**பரிமேலழகர்:** தக்கார் தகவிலர் என்பது - இவர் நடுவுநிலைமை உடையர், இவர் நடுவுநிலைமை இலர் என்னும் விசேடம், அவரவர் எச்சத்தால் காணப்படும் - அவரவருடைய நன்மக்களது உண்மையானும் இன்மையானும் அறியப்படும்.

தக்கார்க்கு எச்சம் உண்டாதலும் தகவிலார்க்கு இல்லையாதலும் ஒருதலையாகலின், இரு திறத்தாரையும் அறிதற்கு அவை குறியாயின.

இதனால் தக்காரையும் தகவிலாரையும் அறியுமாறு கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** செவ்வை யுடையார் செவ்வையிலர் என்பது அவரவர் ஆரவாரத் தொழிலினானே காணப்படும்.

இது தம்மளவிலே நிற்பதல்லது தம் மக்களையும் விடாதென்பது கூறிற்று.

**காளிங்கர்:** இவர் நடுவு நிலைமையாளர் என்பதும் மற்று அஃது இல்லாதவர் என்பதும் அவரவர் ஒழுக்கத்தால் காணப்படும்.

**கவிராஜ பண்டிதர்:** தக்கார் - தருமம் உடையவர். தகவிலர்-தருமம் இல்லாதவர்.

### மேற்கோள் விளக்கம்

வல்லின எதுகையும், கடையாகு எதுகையும் வந்ததற்கு மேற்கோள் (*யா. கா. 43.*)

### ஒப்புமை

*முற்றும்:*

"தக்கார் வழிகெடா தாகும் தகாதவர்
உக்க வழியரா யொல்குவார்—தக்க
இனத்தினா னாகும் பழிபுகழ் தத்தம்
மனத்தினா னாகும் மதி." (*சிறுபஞ்ச. 80.*) (*114*)

## 115

**கேடும் பெருக்கமும் இல்அல்ல நெஞ்சத்துக்**
**கோடாமை சான்றோர்க் கணி.** 5

**பரிமேலழகர்:** கேடும் பெருக்கமும் இல் அல்ல - தீவினையால் கேடும் நல்வினையால் பெருக்கமும் யாவர்க்கும் முன்னே அமைந்து கிடந்தன; நெஞ்சத்துக் கோடாமை சான்றோர்க்கு அணி - அவ்வாற்றை அறிந்து அவை காரணமாக மனத்தின்கட் கோடாமையே அறிவான் அமைந்தார்க்கு அழகாவது.

அவை காரணமாகக் கோடுதலாவது, அவை இப்பொழுது வருவனவாகக் கருதிக் கேடு வாராமையைக் குறித்தும் பெருக்கம் வருதலைக் குறித்தும் ஒருதலைக்கண் நிற்றல். அவற்றிற்குக் காரணம் பழவினையே, கோடுதலன்று என உண்மை உணர்ந்து[1] நடுவுநிற்றல் சால்பினை அழகு செய்தலின், சான்றோர்க்கு அணி என்றார்.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** கேடு வருதலும் ஆக்கம் வருதலும் உலகத்து இல்லையல்ல; அவ்விரண்டினுள்ளும் யாதானும் ஒன்று வந்த காலத்துத் தன் நெஞ்சு கோடாமல் ஒழுகல் சான்றோர்க்கு அழகாம்.

**பரிதியார்:** ஒரு காலத்திலே கேடும் நன்மையும் உண்டு; அப்போது விதனமும் பிரியமும் வரவொண்ணாது, எக்காலமும் ஒரு தன்மையாக இருப்பது அழகு.

**காளிங்கர்:** இல் அல்ல - உலகத்து இல்லாதன அல்ல.

**கவிராஜ பண்டிதர்:** கோடாமை - கேடு நினையாமல் இருக்கின்றது.

### ஒப்புமை

**கோடாமை சான்றோர்க் கணி:** குறள், *118.* *(115)*

## 116

கெடுவல்யான் என்ப தறிகதன் நெஞ்சம்
நடுவொரீஇ அல்ல செயின். 6

**பரிமேலழகர்:** தன் நெஞ்சம் நடுவு ஒரீஇ அல்ல செயின் - ஒருவன் தன் நெஞ்சம் நடுவுநிற்றலை ஒழிந்து நடுவு அல்லவற்றைச் செய்ய நினைக்குமாயின், யான் கெடுவல் என்பது அறிக - அந்நினைவை யான் கெடக்கடவேன் என்று உணரும் உற்பாதமாக அறிக.

நினைத்தலும் செய்தலோடு ஒக்குமாகலின், செயின் என்றார்.[2]

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** கெடுவல் யான் - அஃது ஏதுவாக எனக்குக் கேடு வரும்.

**பரிதியார்:** தனக்கு இறுதி வரும் என்ற காலம் நடுநிலைமையை விடும் என்றறிக.

**காளிங்கர்:** கெடுவல் யான் - செய்யப்பட்டார் கெடுவதன்றி யானே கெடுவன். *(116)*

## 117

கெடுவாக வையா துலகம் நடுவாக
நன்றிக்கண் தங்கியான் தாழ்வு. 7

---

1. "ஆக்கமும் கேடும் தாம்செய் அறத்தொடு பாவ மாய
நோக்கிவே றுண்மை தேறார்." (**கம்ப.** அரசியல். 36.
2. நெஞ்சம் செயின் என்றமையின் இங்ஙனம் கூறினார்.

**பரிமேலழகர்:** நடுவாக நன்றிக்கண் தங்கியான் தாழ்வு - நடுவாக நின்று அறத்தின்கண்ணே தங்கினவனது வறுமையை, கெடு ஆக வையாது உலகம் - வறுமையென்று கருதார் உயர்ந்தோர்.

கெடு என்பது முதனிலைத்தொழிற்பெயர்.[1] செல்வம் என்று கொள்ளுவர் என்பது குறிப்பெச்சம்.

இவை மூன்று பாட்டானும் முறையே கேடும் பெருக்கமும் கோடுதலான் வாரா என்பதூஉம், கோடுதல் கேட்டிற்கு ஏதுவாம் என்பதூஉம், கோடாதவன் தாழ்வு கேடன்று என்பதூஉம் கூறப்பட்டன.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** தாழ்வு - பொருட்கேடு.

**பரிதியார்:** தாழ்வு - விதனம்.

**காளிங்கர்:** தாழ்வு - காரியத் தாழ்வு,

**கவிராஜ பண்டிதர்:** நடுவு நிலைமை என்று சொல்லப்பட்ட தருமத்தின்கண்ணே நின்று தரித்திரப் பட்டவனைப் பெரியோர்கள் தரித்திரவானென்று சொல்லார்கள். *(117)*

## 118

**சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்தொருபால்**
**கோடாமை சான்றோர்க் கணி.** 8

**பரிமேலழகர்:** சமன் செய்து சீர்தூக்கும் கோல்போல்-முன்னே தான் சமனாக நின்று பின் தன்கண் வைத்த பாரத்தை வரையறுக்கும் துலாம்போல, அமைந்து ஒருபால் கோடாமை சான்றோர்க்கு அணி - இலக்கணங்களான் அமைந்து ஒரு பக்கத்துக் கோடாமை சான்றோர்க்கு அழகாம்.

உவமையடையாகிய சமன்செய்தலும் சீர்தூக்கலும் பொருட்கண்ணும், பொருளடையாகிய அமைதலும் ஒருபால் கோடாமையும் உவமைக்கண்ணும் கூட்டிச் சான்றோர் சீர்தூக்கலாவது தொடைவிடைகளால் கேட்டவற்றை ஊழான் உள்ளவாறுணர்தலாகவும்,[2] ஒருபால் கோடாமையாவது அவ்வுள்ளவாற்றை மறையாது பகை நொதுமல் நட்பு என்னும் மூன்று திறத்தார்க்கும் ஒப்பக் கூறுதலாகவும் உரைக்க. இலக்கணங்களான் அமைதல், இருவழியும் ஏற்பன கொள்க.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** ஒருபால் கோடாமை - வீக்கம் தாக்கம் அற்று ஒருவன் பக்கமாக நெஞ்சைக் கோடவிடாமை.

**பரிதியார்:** கழற்றுக்கோல் சமன்வாயிலே நின்று ஒரு பலம் இருபலமாகில் தன்அளவிலே நிற்கும் தன்மைபோல, தானும் அளவுக்களவாகச் சொல்லுதல் நடுவுநிலைமை.

---

1. "கெடுவில் நல்லிசை சூடி" (புறநா. 221: 12) என்னுமிடத்து அதன் உரையாசிரியர், 'கேடு என்பது கெடுவெனக் குறைந்து நின்றது' என எழுதினர்.

2. "தொடைவிடை ஊழாத் தொடைவிடை துன்னித்
தொடைவிடை யூழிவை தோலாத்-தொடைவேட்
டழிபட லாற்ற லறிமுறையேன் றெட்டின்
வழிபடர்தல் வல்ல தவை." (புறப். 173.)

தொடை - கேட்டல்; விடை-விடை கூறுதல்; ஊழ்-முறைமை.

**காளிங்கர்:** சமன் செய்து சீர்தூக்கும் கோல்போல்-கல்லோடு பொன்னோடு வாசியறச்[1] சமநிலை செய்து வழுவாமல் குறிக்கொண்டு சீர்தூக்கும் கோல்போல.

**கவிராஜ பண்டிதர்:** கோடாமை - ஒரு கேட்டையும் நினையாமல் இருக்கிறது.

### ஒப்புமை

*1.* **நடுநிலைக்குத் துலாக்கோல் உவமை:**

"சீலம் அல்லன நீக்கிச்செம் பொற்றுலைத்
தாலம் அன்ன தனிநிலை தாங்கிய
ஞால மன்னற்கு" (கம்ப. மந்தரை சூழ்ச்சிப். 19.)

"செற்றமு முவகையுஞ் செய்யாது காத்து
ஞெமன்கோ லன்ன செம்மைத் தாகி." (மதுரைக் 490-91.)

2. **கோடாமை சான்றோர்க்கணி :** குறள், 115.

*3.* **முற்றும்:**

"ஓர்வுற் றொருதிறம் ஒல்காத நேர்கோல்
அறம்புரி நெஞ்சத் தவன்" (கலித். 42:14-5.)

"தெரிகோல் ஞமன்ன் போல ஒருதிறம்
பற்றல் இலியரோ" (புறநா. 6 : 9-10.)

"காய்தல் உவத்தல் அகற்றி ஒருபொருட்கண்
ஆய்தல் அறிவுடையார் கண்ணதே-காய்வதன்கண்
உற்ற குணந்தோன்றா தாகும் உவப்பதன்கண்
குற்றமும் தோன்றா கெடும்." (அறநெறி, 22.) (118)

## 119

**சொற்கோட்டம் இல்லது செப்பம் ஒருதலையா
உட்கோட்டம் இன்மை பெறின். 9**

**பரிமேலழகர்:** செப்பம் சொல் கோட்டம் இல்லது - நடுவு நிலைமையாவது சொல்லின்கண் கோடுதல் இல்லாததாம்; உள் கோட்டம் இன்மை ஒருதலையாப் பெறின் - அஃது அன்னதாவது மனத்தின்கண் கோட்டம் இன்மையைத் திண்ணிதாகப் பெறின்.

சொல் - ஊழான் அறுத்துச் சொல்லும் சொல். காரணம்பற்றி ஒரு பாற் கோடாத மனத்தோடு கூடுமாயின், அறங்கிடந்தவாறு சொல்லுதல் நடுவுநிலைமையாம்; எனவே, அதனோடு கூடாதாயின் அவ்வாறு சொல்லுதல் நடுவுநிலைமை அன்று என்பது பெறப்பட்டது.

### உரை வேறுபாடு

**மணக்குடவர் :** இது நடுவுநிலைமையாவது செவ்வை சொல்லுதல் என்பதும், இருபொருட் பொதுமொழி கூறுதலன்று என்பதும் கூறிற்று.

**பரிதியார் :** வாக்கினில் குற்றம் நான்காவன பொய், கொடுஞ்சொல், பயனில சொல், குறளை. இந்த நான்கும் இல்லாத நெறி பெற்றாலும் மனத்திலே நடுவு நிலைமை பெரியது.

1. வாசி - வேற்றுமை

**கவிராஜ பண்டிதர்:** நடுவு நிலைமையாவது கொடுமையான வசனங்களைச் சொல்லாதது, அந்தக் கொடுமையான நினைவை மனத்திலே நினையாமல் இருக்கப் பெற்றால் அதுவே பெரிய தருமம். *(119)*

### 120

**வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப்**
**பிறவும் தமபோல் செயின்.** 10

**பரிமேலழகர்:** பிறவும் தமபோல் பேணிச் செயின்-பிறர் பொருளையும் தம் பொருள்போலப் பேணிச் செய்யின், வாணிகம் செய்வார்க்கு வாணிகம் - வாணிகம் செய்வார்க்கு நன்றாய வாணிகமாம்.

பிறவும் தமபோல் செய்தலாவது, கொள்வது மிகையும் கொடுப்பது குறையும் ஆகாமல் ஒப்ப நாடிச் செய்தல்.[1] இப்பாட்டு மூன்றனுள், முன்னைய இரண்டும் அவையத்தாரை நோக்கின; ஏனையது வாணிகரை நோக்கிற்று, அவ்விருதிறத்தார்க்கும் இவ்வறம் வேறாகச் சிறந்தமையின்.

#### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** தம போல் செயின் - தமது பொருள்போலப் பேணிச் சோர்வுபடாமல் செய்வாராயின். வாணிகம் - இலாபம்.

**பரிதியார்:** ஊதியம் செய்வார்க்கு ஊதியமாவன தன் காரியம் போலப் பிறர் காரியம் செய்வதாம்.

**காளிங்கர்:** உலகத்து வியாபாரம் செய்து ஒழுகுவார்க்கு இம்மையும் மறுமையும் பெறுவதாகிய ஊதியம் யாதோ எனின், பிறவாகிய பொருள்களையும் தம்முடையனவாகிய பொருள்களைப் போலத் தம் நெஞ்சு அறிய அழிவு சேராது பாதுகாத்துச் செய்யின் அதுவே தமக்கு அழியாத ஆக்கம்.

#### ஒப்புமை

**முற்றும்;**

"கொள்வதூஉம் மிகைகொளாது கொடுப்பதூஉம் குறைகொடாது
பல்பண்டம் பகர்ந்து வீசும்
தொல்கொண்டித் துவன்றிருக்கை." (பட்டினப். 210-12.) *(120)*

---

## 13. அடக்கம் உடைமை

**பரிமேலழகர்:** அஃதாவது மெய் மொழி மனங்கள் தீநெறிக்கண் செல்லாது அடங்குதல் உடையனாதல். அஃது ஏதிலார் குற்றம்போல் தன் குற்றமும் காணும்[2] நடுவுநிலைமை உடையாற்கு ஆதலின், இது நடுவுநிலைமையின்பின் வைக்கப்பட்டது.

### 121

**அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை**
**ஆரிருள் உய்த்து விடும்.** 1

**பரிமேலழகர்:** அடக்கம் அமரருள் உய்க்கும்- ஒருவனை அடக்கமாகிய அறம் பின் தேவர் உலகத்து உய்க்கும்; அடங்காமை அரு இருள் உய்த்து விடும் - அடங்காமையாகிய பாவம் தங்குதற்கரிய இருளின்கட் செலுத்தும்.

---

1. பட்டினப்பாலை, 209-10.
2. குறள், 190.

இருள் என்பது ஓர் நரக விசேடம்[1]. "எல்லாம், பொருளில் பிறந்து விடும்"[2] என்றாற்போல உய்த்துவிடும் என்பது ஒரு சொல்லாய் நின்றது.[3]

உரை வேறுபாடு

**மணக்குடவர்**: மேல் பலவாகப் பயன் கூறினாராயினும், ஈண்டு அடக்கத்திற்கும் அடங்காமைக்கும் இதுவே பயன் என்று தொகுத்துக் கூறினர்.

**பரிதியார்**: அடக்கம் அமரருள் உய்க்கும் - திரிவித கரணங்களையும் அடக்கில் இகபரத்துக்குப் பயன்படும்.

**காளிங்கர்**: மற்று அடங்காமை யாகின்ற இது நரகமாகிய இருள் வழிச் செலுத்தும்; அஃதன்றியும் நாய், கோழி, பன்றி, புல், புழு முதலிய பிறவியுள் செலுத்திவிடும்.

ஒப்புமை

**அடக்கம் அமரருள் உய்க்கும்:**

"இம்மை அடக்கத்தைச் செய்து புகழாக்கி
உம்மை உயர்கதிக் குய்த்தலான்." *(அறநெறி. 43.)* *(121)*

## 122

**காக்க பொருளா அடக்கத்தை ஆக்கம்**
**அதனினூஉங் கில்லை உயிர்க்கு.** 2

**பரிமேலழகர்**: உயிர்க்கு அதனின் ஊங்கு ஆக்கம் இல்லை - உயிர்கட்கு அடக்கத்தின் மிக்க செல்வம் இல்லை; அடக்கத்தைப் பொருளாக் காக்க-ஆகலான் அவ்வடக்கத்தை உறுதிப் பொருளாகக் கொண்டு அழியாமல் காக்க.

உயிர் என்பது சாதியொருமை. அஃது ஈண்டு மக்கள் உயிர்மேல் நின்றது, அறிந்து அடங்கிப் பயன்கொள்வது அதுவே யாகலின்.

உரை வேறுபாடு

**மணக்குடவர்**: உயிர்க்கு - அவன்உயிர்க்கு.

**பரிதியார்**: ஆக்கம் அதனினூங்கில்லை - ஆத்மாவுக்கு இதுபோலும் பயன் இல்லை.

**காளிங்கர்**: ஆக்கம் அதனினூங்கில்லை - மற்று அதுவே தமக்கு இம்மையாக்கமும் மறுமையாக்கமுமாகிய ஆக்கம். அவ்வடக்கத்தின் வழியாயிருப்பது மற்றொன்று மக்கட்கு உயிர்நிலை இல்லை. *(122)*

## 123

**செறிவறிந்து சீர்மை பயக்கும் அறிவறிந்**
**தாற்றின் அடங்கப் பெறின்.** 3

**பரிமேலழகர்**: அறிவு அறிந்து ஆற்றின் அடங்கப் பெறின் - அடங்குதலே நமக்கு அறிவாவது என்று அறிந்து நெறியானே ஒருவன் அடங்கப்

---

1. 'இருள் செறிந்த துன்பவுலக மென்றது, திணிந்த இருளை உடைத்தாய்த் தன்கண் புக்கார்க்குத் துன்பம் செய்வதோர் நரகத்தை' (குறள், 243, உரை) என்பர் பின்.

2. நான்மணிக். 5.

3. உய்ப்பதும் விடுதலும் ஆகிய இரண்டு தொழிலைக் குறியாமல், உய்த்தலையே கருதியதால் இவ்வாறு கூறினர்; "தவ்வையைக் காட்டி விடும்" (167) என்பது போல விடும் என்பது தனியே பொருள் தரும் இடமும் உண்டு.

பெறின், செறிவு அறிந்து சீர்மை பயக்கும் - அவ்வடக்கம் நல்லோரான் அறியப்பட்டு அவனுக்கு விழுப்பத்தைக் கொடுக்கும்.

இல்வாழ்வானுக்கு அடங்கும் நெறியாவது மெய்முதல் மூன்றும் தன் வயத்தவாதல்.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** அறியப்படுவனவும் அறிந்து, அடக்கப்படுவனவும் அறிந்து, நெறியினானே அடங்கப்பெறின், அவ்வடக்கம் நன்மை பயக்கும் என்றவாறு.

அறியப்படுவன, சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம்.[1] அடக்கப்படுவன மெய் வாய் கண் மூக்குச் செவி.

**பரிதியார்:** இன்னார் என்னும் கீர்த்தியும் உண்டாய், செல்வமும் தரும், அறிவறிந்த நெறியிலே அடங்குவனாகில்.

**காளிங்கர்:** இவ்வடக்கம் உடையானை நன்மையுந் தலையளியாது; அது தங்குதற்கு ஓராங்கு நின்று கருதி இகன்மாட்டு அறியத் தருவன வற்றையெல்லாம் குறிக்கொண்டு அறிந்து மற்று அங்ஙனம் அறிந்த நெறியின் வழுவாதே அடங்கி ஒழுகப் பெறின், மற்று அஃது எல்லா மேம்பாட்டையும் தரும்.

**கவிராஜ பண்டிதர்:** ஆற்றின் - சாத்திரத்தின் வழியே.

### ஒப்புமை

**முற்றும்:**

"தன்னைத்தா னெஞ்சங் கரியாகத் தானடங்கிற்
பின்னைத்தா னெய்தா நலனில்லை." *(அறநெறி. 206.) (123)*

## 124

நிலையிற் றிரியா தடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது. 4

**பரிமேலழகர்:** நிலையின் திரியாது அடங்கியான் தோற்றம் - இல்வாழ்க்கையாகிய தன் நெறியின் வேறுபடாது நின்று அடங்கினவனது உயர்ச்சி, மலையினும் மாணப் பெரிது-மலையின் உயர்ச்சியினும் மிகப் பெரிது.

திரியாது அடங்குதல்-பொறிகளாற் புலன்களை நுகரா நின்றே அடங்குதல். மலை: ஆகுபெயர்.[2]

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** நிலை - வன்னச்சிரம தன்மம்.

**பரிதியார்:** நிலையின் - தான் பிடித்த நிலைமையில். மலையினும் பெரிது - மகா மேருவும் நிகரல்ல.

**கவிராஜ பண்டிதர்:** நிலையின் திரியாது அடங்கியான் - தான் கொண்ட விரத சிலங்களின் வழியே நின்று அடங்கினவன்.

### ஒப்புமை

**நிலையில் திரியாது அடங்குதல்:**

"ஆன்றோர் போலத்

1. குறள், 27.
2. மலையின் உயர்ச்சிக்கு ஆயிற்று.

துளக்கம் இல்லாத் திருத்தகு நிலைமைய" (பெருங். 1.50 : 4-5.)
"மலையனைய நிலையுடைய மாதவர்கள்." (மேரு. சமவ. 49.)

### குறிப்பு

மலைக்கு நிலையிற் றிரியாமை மட்டும் உண்டன்றி அடங்குதல் இன்மையின் அதனினும் சிறந்ததாயிற்று. (124)

### 125

**எல்லார்க்கும் நன்றாம் பணிதல் அவருள்ளும்**
**செல்வர்க்கே செல்வம் தகைத்து. 5**

**பரிமேலழகர்:** பணிதல் எல்லார்க்கும் நன்றாம் - பெருமிதம் இன்றி அடங்குதல் எல்லார்க்கும் ஒப்ப நன்றே; எனினும், அவருள்ளும் செல்வர்க்கே செல்வம் தகைத்து - அவ் வெல்லாருள்ளும் செல்வம் உடையார்க்கே வேறொரு செல்வமாம் சிறப்பினை உடைத்து.

பெருமிதத்தினைச் செய்யும் கல்வியும்[1] குடிப்பிறப்பும் உடையார்[2] அஃதின்றி அவைதம்மானே அடங்கியவழி[3] அவ்வடக்கம் சிறந்து காட்டாதாகலின், செல்வர்க்கே செல்வந்தகைத்து என்றார். செல்வத்தகைத்து என்பது மெலிந்து நின்றது. பொது என்பாரையும் உடம்பட்டுச் சிறப்பாதல் கூறியவாறு.

இவை ஐந்து பாட்டானும் பொதுவகையான் அடக்கத்தது சிறப்புக் கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** செல்வம் - மிகுதி.

**பரிதியார்:** ஆரளவிலும் ஆங்காரம் அற்றுத் திரிவித கரணங்களையும் அடக்குவானாகில் நன்று; இந்தக் கிரமத்திற்கு நிகருண்டோ என்னில், குறைவறப் பெற்ற பாக்கியத்துக்கு நிகர்த்த பாக்கியம் அதுவே.

**காளிங்கர்:** யோகிகள், தவத்தோர், துறவா அறிவோர் முதலாகிய யாவர்க்கும் சால நன்மையேயாம் பணிதலாகிய அடக்கமுடைமை. அவருள்ளும் சிறப்பினை உடைய இல்வாழ்வார்க்கு மிகவும் அழகுத் தன்மை உடைத்து. (125)

### 126

**ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்**
**எழுமையும் ஏமாப் புடைத்து. 6**

**பரிமேலழகர்:** ஆமைபோல் ஒருமையுள் ஐந்து அடக்கல் ஆற்றின் - ஆமைபோல ஒருவன் ஒரு பிறப்பின்கண் ஐம்பொறிகளையும் அடக்க வல்லனாயின், எழுமையும் ஏமாப்பு உடைத்து-அவ் வன்மை அவனுக்கு எழு பிறப்பின் கண்ணும் அரணாதலை உடைத்து.

ஆமை ஐந்து உறுப்பினையும் இடர் புகுதாமல் அடக்குமாறுபோல, இவனும் ஐம்பொறிகளையும் பாவம் புகுதாமல் அடக்க வேண்டும் என்பார், ஆமைபோல் என்றார். ஒருமைக்கண் செய்த வினையின் பயன் எழுமையும் தொடரும் என்பது இதனான் அறிக.

---

1. பெருமிதத்தைச் செய்வதற்குக் கல்வி ஒரு காரணமாதலை, " கல்வி தறுகண்...பெருமிதம் நான்கே" (**தொல்.** மெய்ப். 9) என்பதனால் அறியலாம்.

2. "வலம்புரி முத்திற் குலம்புரி பிறப்பும்
திங்க ளன்ன கல்வியும்" (**தொல்.** பொதுப்பாயிரம்.)

3. "பணியுமாம் என்றும் பெருமை." (**குறள்**, 978.)

இதனுன் மெய்யடக்கம் கூறப்பட்டது.[1]

### உரை வேறுபாடு

**பரிதியார்:** ஆமையானது நாலு காலும் தலை ஒன்றும் மனுஷனைக் கண்டமாத்திரத்திலே அடங்கினுப்போலே இவனும் ஐம்புலன்களையும் அறிவினுல் அடக்கின் அவனுக்கு ஏழு சென்மத்திலும் துன்பம் இல்லையாம்.

**காளிங்கர்:** ஆமையானது முகம்முதலாகிய தன் உறுப்பு ஐந்தினையும் வேண்டுழி விரித்தும் வேண்டாக்கால் அடக்கியும் தன்னைப் பாதுகாத்துக் கொண்டு ஒழுகுமாப்போல் தன் ஒருவழிப்பட்ட உள்ளத்தினுலே இங்குச் சொன்ன ஐம்புலன்களையும் நன்னெறிக்கண் நடாத்தியும் தீநெறிக்கண் குவித்தும் இங்ஙனம் இவற்றை அடக்குதல் வல்லனுயின், அது அவ்வடக்குகின்ற ஒப்பிறந்தானுக்கு இம்மைக்கண்ணும் மறுமைக்கண்ணும் சேமமாகிய உறுதியைப் பெறுவிக்கும்.

### ஒப்புமை

1. **ஆமைபோல் ஐந்தடக்கல்:**

"அடங்கலால் ஆமை போன்றும்"

"ஐவகைப் பொறியும் வாட்டி ஆமையின் அடங்கி"

(சீவக. 1895, 2824.)

"ஒருமையுள் ஆமைபோல் உள்ளேங் தடக்கி" (திருமந். 133,)

"அடக்கும்ஐம் பொறியொடு கரணத் தப்புறம்
கடக்கும்வா லுணர்வினுக் கணுகும் காட்சியான்."

(கம்ப. தைலமாட்டு. 27.)

2. **எழுமையும் ஏமாப்புடைத்து:** குறள், 398

3. **ஐந்தடக்குவதற்கு ஆமை:**

"தாமரைக் கண்ணெடேர் தவத்தின் மாலையன்
ஆமையின் இருக்கையன்". (கம்ப. சடாயு உயிர்நீத்த. 23.) (126)

## 127

**யாகாவார் ஆயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்இழுக்குப் பட்டு.** 7

**பரிமேலழகர்:** யா காவார் ஆயினும் நா காக்க - தம்மால் காக்கப்படுவன எல்லாவற்றையும் காக்கமாட்டாராயினும் நா ஒன்றனையும் காக்க; காவாக்கால் சொல் இழுக்குப்பட்டுச்[1] சோகாப்பர் - அதனைக் காவாராயின் சொற் குற்றத்தின்கட் பட்டுத் தாமே துன்புறுவர்.

யா என்பது அஃறிணைப்பன்மை வினுப்பெயர்; அஃது ஈண்டு எஞ்சாமை உணர நின்றது. முற்றும்மை விகாரத்தால் தொக்கது.[2] சொற்குற்றம்-சொல்லின்கண் தோன்றும் குற்றம். அல்லாப்பர், செம்மாப்பர் என்பன போலச் சோகாப்பர்[3] என்பது ஒரு சொல்.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** இது சோகத்தின்மாட்டே பிணிக்கப்படுவர் என்றது.

---

1. ஐம்பொறிகளும் மெய்யில் இருப்பனவாகலின் இவ்வாறு உரைத்தார்.
2. யாவும் என்னும் முற்றும்மை.
3. சோகா என்பது பகுதி.

**பரிதியார்:** யா காவாராயினும் நா காக்க - வாக்கும் மனமும் காயமும் அடங்காதபோது வாக்கையாகிலும் பாதுகாக்க.

**கவிராஜ பண்டிதர்:** யா காவார் ஆயினும் - தங்களாலே காக்க வேண்டிய ஐம்பொறிகளையும் காக்க மாட்டா விட்டாலும்.

### மேற்கோள் விளக்கம்

வம்பப் பரத்தை ஒருத்தியும் வறுமொழியாளன் ஒருவனும் கண்ணகியையும் கோவலனையும் கண்டு வாய்காவாது தீ மொழி கூறக் கவுந்தியடிகள் அவர்களை நரியாகும்படி சபித்தனர். "அறியா மையினின் றிழிபிறப் புற்றோர்" (சிலப். 10: 241) என அவரை இளங்கோவடிகள் கூறுவர். அங்கே, அடியார்க்கு நல்லார், 'இன்று இழிபிறப் புற்றோ ரென்றது, நெடுங் காலம் தவம் செய்து பெற்ற மக்கட் பிறப்பை ஒரு வார்த்தையின் இழந்து இழிபிறப்புற்றார் என்றவாறு; எனவே யாகாவா ராயினும் நாகாத்தல் வேண்டும் என்பதாயிற்று' என்று இக்குறளை மனத்திற் கொண்டு உரை எழுதினர்.

### ஒப்புமை

1\. நாவைக் காத்தல்:

"ஆக்கப் படுக்கும் அருந்தளைவாய்ப் பெய்விக்கும்
போக்கப் படுக்கும் புலைநரகம் துய்ப்பிக்கும்
காக்கப் படுவன இந்தியம் ஐந்தினும்
நாக்கல்ல தில்லை நனிவெல்லு மாறே," (வளையாபதி.)

2\. நாவைக் காவாமை:

"காவா தொருவன்றன் வாய்திறந்து சொல்லும்சொல்" (நாலடி. 63.)

"காவா நாவிற் கனகனும் விசயனும்" (சிலப். 26: 159.)

"காவாதவள் கண்ணறச் சொல்லிய வெஞ்சொல்."
(சீவக. 1069.) (127)

### 128

ஒன்றானும் தீச்சொற் பொருட்பயன் உண்டாயின்
நன்றாகா தாகி விடும். 8

**பரிமேலழகர்:** தீச்சொல் பொருட்பயன் ஒன்றானும் உண்டாயின் - தீயவாகிய சொற்களின் பொருள்களால் பிறர்க்கு வரும் துன்பம் ஒன்றாயினும் ஒருவன்பக்கல் உண்டாவதாயின், நன்று ஆகாது ஆகிவிடும் - அவனுக்குப் பிற அறங்களான் உண்டான நன்மை தீதாய்விடும்.

தீயசொல்லாவன தீங்கு பயக்கும் பொய், குறளை, கடுஞ்சொல் என்பன.[1] 'ஒருவன் நல்லவாகச் சொல்லும் சொற்களின்கண்ணே ஒன்றாயினுந் தீச்சொற்படும் பொருளினது பயன் பிறர்க்கு உண்டாவதாயின்' என்று உரைப்பாரும் உளர்,

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** ஒரு சொல்லேயாயினும் கேட்டார்க்கு இனிதாயிருந்து தீய சொல்லின் பொருளைப் பயக்குமாயின், நன்மை ஆகாதாகியே விடும். இது சால மொழி கூறினும் தீதாம் என்றது.

1\. "பொய்யே குறளை கடுஞ்சொல் பயனில்
சொல்லெனச் சொல்லில் தோன்றுவ நான்கும்." (மணி. 24: 127-8.)

பரிதியார்: இல்லறத்தான் நடத்தும் ஒழுக்கம் தப்பி, ஒரு காரிய மாகிலும் குற்றம் வரில், நன்றாகாதாம்; ஆதலால் திரிவித கரணங்களும் பாபத்தில் செல்லாமல் காப்பது நன்று.

### மேற்கோள் விளக்கம்

ஆயினும் என்பது ஆனும் எனக் குறைந்து நின்றது.

(தொல். சொல். 230, ந.) (128)

## 129

தீயினால் சுட்டபுண் உள்ஆறும் ஆறாதே
நாவினால் சுட்ட வடு. 9

பரிமேலழகர்: தீயினால் சுட்ட புண் உள் ஆறும் - ஒருவனை ஒருவன் தீயினால் சுட்ட புண் மெய்க்கண் கிடப்பினும் மனத்தின்கண் அப்பொழுதே ஆறும்; நாவினால் சுட்ட வடு ஆறாது - அவ்வாறன்றி வெவ்வுரையுடைய நாவி னால் சுட்ட வடு அதன்கண்ணும் எஞ்ஞான்றும் ஆறாது.

ஆறிப்போதலால் தீயினால் சுட்டதனைப் புண் என்றும், ஆறாது கிடத்த லால் நாவினால் சுட்டதனை வடு என்றும் கூறினார். தீயும் வெவ்வுரையும் சுடுதல் தொழிலான் ஒக்குமாயினும், ஆறாமையான் தீயினும் வெவ்வுரை கொடிது என்பது போதரலின், இது குறிப்பான் வந்த வேற்றுமையலங்காரம்.

இவை மூன்று பாட்டானும் மொழியடக்கம் கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

பரிதியார்: தீயினால் சுட்ட புண் உள்ளே ஆறி மேலே வடுவாகி இருக்கும்; நாவினால் சுட்ட புண் மேலே ஆறி உள்ளே வடுவாகி இருக்கும். அதனால் ஒருவரையும் வாக்குத் தோஷம் சொல்லவேண்டாம்.

### ஒப்புமை

1. **நாவினால் சுட்ட வடு:**

"காவா தொருவன்தன் வாய்திறந்து சொல்லும்சொல்
ஓவாதே தன்னைச் சுடுதலால்—ஓவாதே
ஆய்ந்தமைந்த கேள்வி அறிவுடையார் எஞ்ஞான்றும்
காய்ந்தமைந்த சொல்லார் கறுத்து." (நாலடி. 63.)

2. **தீப்புண்ணும் இன்னாச்சொல்லும்:**

"எள்ளிப் பிறருரைக்கு மின்னாச்சொல் தன்னெஞ்சில்
கொள்ளிவைத் தாற்போல் கொடிதெனினும்—மெள்ள
அறிவென்னும் நீரால் அவித்தொழுகல் ஆற்றின்
பிறிதெனினும் வேண்டா தவம்." (அறநெறி. 100.) (129)

## 130

கதம்காத்துக் கற்றடங்கல் ஆற்றுவான் செவ்வி
அறம்பார்க்கும் ஆற்றின் நுழைந்து. 10

பரிமேலழகர்: கதம் காத்துக் கற்று அடங்கல் ஆற்றுவான் செவ்வி - மனத்தின்கண் வெகுளி தோன்றாமல் காத்துக் கல்வி உடையனாய் அடங்குதலை வல்லவனது செவ்வியை, அறம் பார்க்கும் ஆற்றின் நுழைந்து - அறக்கடவுள் பாராநிற்கும் அவனை அடையும் நெறியின்கண் சென்று.

அடங்குதல் - மனம் புறத்துப் பரவாது அறத்தின்கண்ணே நிற்றல். செவ்வி - தன் குறை கூறுவதற்கு ஏற்ற மன மொழி முகங்கள் இனியனும் காலம். இப் பெற்றியானை அறம் தானே சென்று அடையும் என்பதாம்.

இதனுன் மனஅடக்கம் கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** ஆற்றுவான் - அதனுல் வரும் பெருமிதமும் அடக்க வல்லவன் மாட்டு.

**பரிதியார்:** கோபத்தை விட்டுப் பல காவியம் கற்று, கற்றதன் வழியே அடக்கமுடைமையும் உண்டாமாகில் அவன் பக்கல் தன்மதேவதை வரும்.

### ஒப்புமை

**கற்றடங்கல்:**

"அறிவ தறிந்தடங்கி" (நாலடி. 74.)

"கற்றறிந்தார் கண்ட தடக்கம்" (பழமொழி, 243.)

"கற்றடங்கி னுன்அமிழ்து." (சிறுபஞ்ச. 3.) (130)

# 14. ஒழுக்கம் உடைமை

**பரிமேலழகர்:** அஃதாவது தத்தம் வருணத்திற்கும் நிலைக்கும் ஓதப்பட்ட ஒழுக்கத்தினை உடையராதல். இது, மெய் முதலிய அடங்கினர்க்கு அல்லது முடியாதாகலின், அடக்கம் உடைமையின்பின் வைக்கப்பட்டது.

**பரிதியார்:** ஒழுக்கம் உடைமையாவது தான் பிடித்த நன்னெறியை மறவாமல் மரணந்த மட்டும் கொண்டு ஒழுகுதல்.

### 131

**ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்**
**உயிரினும் ஓம்பப் படும்.** 1

**பரிமேலழகர்:** ஒழுக்கம் விழுப்பம் தரலான் - ஒழுக்கம் எல்லார்க்கும் சிறப்பினைத் தருதலான், ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும் - அவ்வொழுக்கம் உயிரினும் பாதுகாக்கப்படும்.

உயர்ந்தார்க்கும் இழிந்தார்க்கும் ஒப்ப விழுப்பம் தருதலின் பொதுப் படக் கூறினர். சுட்டு வருவிக்கப்பட்டது.

அதனுன் அங்ஙனம் விழுப்பம் தருவதாயது ஒழுக்கம் என்பது பெற்றும். உயிர் எல்லாப் பொருளினும் சிறந்ததாயினும் ஒழுக்கம்போல விழுப்பம் தாராமையின், உயிரினும் ஓம்பப்படும் என்ருர்.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** விழுப்பம் - சீர்மை.

**காளிங்கர்:** விழுப்பம் - இருமைக்கும் நன்மை.

**கவிராஜ பண்டிதர்:** பிராணன் எல்லாவற்றினும் பெரியதானுலும் ஆசாரத்தைப் போல மறுமைக்கு உதவி செய்யமாட்டாது.

ஒப்புமை

1. ஒழுக்கம் விழுப்பம் தருதல்:

"ஒழுக்கினும் குலத்தினும் விழுப்ப மிக்கமை." (பெருங். 3.22: 36.)

2. ஒழுக்கம் உயிரினும் சிறந்தது:

"ஒன்றுரைத் துயிரினும் ஒழுக்கம் நன்றெனப்
பொன்றில புரவலன் பொருவில் சேனையே." (கம்ப. கிளைகண்டு. 24.)

3. முற்றும்:

"......................மானம்
அழியா வொழுக்கத்தின் மிக்கதூஉம் இல்லை
பழியாமல் வாழுந் திறம்." (அறநெறி. 60.) (131)

## 132

**பரிந்தோம்பிக் காக்க ஒழுக்கம் தெரிந்தோம்பித்**
**தேரினும் அஃதே துணை.** 2

**பரிமேலழகர்:** ஒழுக்கம் ஓம்பிப் பரிந்து காக்க- ஒழுக்கத்தினை ஒன்றுனும் அழிவுபடாமல் பேணி வருந்தியும் காக்க; தெரிந்து ஓம்பித் தேரினும் துணை அஃதே - அறங்கள் பலவற்றையும் ஆராய்ந்து அவற்றுள் இருமைக்கும் துணையாவது யாதென்று மனத்தை ஒருக்கித் தேர்ந்தாலும் துணையாய் முடிவது அவ்வொழுக்கமே யாகலான்.

பரிந்தும் என்னும் உம்மை விகாரத்தால் தொக்கது.

இவை இரண்டு பாட்டானும் ஒழுக்கத்தது சிறப்புக் கூறப்பட்டது.

உரை வேறுபாடு

**பரிதியார்:** ஒழுக்கம் உடைமையைத் தன் பிராணனைப் போலே பாதுகாப்பின், அது இம்மைக்கும் மறுமைக்கும் துணையாம்.

**காளிங்கர்:** தாம் பொருள் முதலியவற்றைக் கொடாமல் காப்பதனிலும் விரும்பிக் குறிக்கொண்டு பரிகரிக்க ஒழுக்கத்தினை; எங்ஙனம் எனின், தமக்கு இதனை ஒப்பது மறைமுதலிய நூல்களால் மிகத் தெளிந்து குறிக்கொண்டாராயினும் பின்னும் அதுவே அதற்கு ஒப்பதாகிய துணை. (132)

## 133

**ஒழுக்கம் உடைமை குடிமை இழுக்கம்**
**இழிந்த பிறப்பாய் விடும்.** 3

**பரிமேலழகர்:** ஒழுக்கம் உடைமை குடிமை - எல்லார்க்கும் தத்தம் வருணத்திற்கு ஏற்ற ஒழுக்கம் உடைமை குலன் உடைமையாம்; இழுக்கம் இழிந்த பிறப்பாய்விடும் - அவ்வொழுக்கத்தில் தவறுதல் அவ்வருணத்தில் தாழ்ந்த வருணமாய்விடும்.

பிறந்த வருணத்துள் இழிந்த குலத்தராயினும் ஒழுக்கம் உடையராக உயர்குலத்தராவராகலின் குடிமையாம் என்றும், உயர்ந்த வருணத்துப் பிறந்தாராயினும் ஒழுக்கத்தில் தவறத் தாழ்ந்த வருணத்தராவராகலின் இழிந்த பிறப்பாய் விடும் என்றும் கூறினர். உள்வழிப்படும் குணத்தினும் இல்வழிப் படும் குற்றம் பெரிது என்றவாறு. பயன் இடையீடின்றி எய்துதலின், அவ் விரைவு பற்றி அவ்வேதுவாகிய வினைகளே[1] பயனாக ஓதப்பட்டன.

---

1. உடைமையும் இழுக்கமுமாகிய வினைகள்.

### உரை வேறுபாடு

**பரிதியார்:** ஒழுக்கம் உடைமையைப் பேணி வைத்தலைப் போலே ஒழுக்கத்தையும் பேணிக்கொண்டு வராதார் ஒழுக்கம், பலரும் இகழப்பட்டபடியினாலே அவன் கடையான பிறப்பு.

**காளிங்கர்:** ஒருவர்க்கு ஒழுக்கம் உடைமையாகிய செல்வமே குலப் பண்பாவது. மற்று அவர் தமது ஆசாரத்தின்கண் இழுக்கமானது எது? அதுவே இழிந்த பிறப்பாய் விடும்.

அல்லதூஉம் செல்வமும் பிறர்க்கு ஒன்றினை ஈதலும் அற்றாராயினும் அவரைக் குடிப்பிறப்பின்கண் கூட்டிக்கொளல் ஆகும்; குடிப்பிறந்தார் தமது ஆசாரத்தின்கண் வழுவின் தம் குடியில் கூட்டிக்கொளல் அரிது என்றும் ஆம்.

### மேற்கோள் விளக்கம்

'குடிமையாவது குடிப் பிறப்பிற்கு ஏற்ற ஒழுக்கம்'.

(தொல். சொல். 57, ந.)

### ஒப்புமை

**ஒழுக்கம் உடைமை குடிமை:**

"குலம்சுரக்கும் ஒழுக்கம் குடிக்கெலாம்."

(கம்ப. நாட்டுப். 38.) (133)

## 134

மறப்பினும் ஓத்துக் கொளல்ஆகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கம் குன்றக் கெடும். 4

**பரிமேலழகர்:** ஓத்து மறப்பினும் கொளல் ஆகும் - கற்ற வேதத்தினை மறந்தானாயினும் அவ்வருணம் கெடாமையின் பின்னும் அஃது ஓதிக்கொளலாம்; பார்ப்பான் பிறப்பு ஒழுக்கம் குன்றக் கெடும் - அந்தணனது உயர்ந்த வருணம் தன் ஒழுக்கம் குன்றக் கெடும்.

மறந்த வழி இழிகுலத்தனும் ஆகலின், மறக்கலாகாது என்னும் கருத்தான், மறப்பினும் என்றார். சிறப்புடை வருணத்திற்கு மொழிந்தமையின், இஃது ஏனைய வருணங்கட்கும் கொள்ளப்படும்.[1]

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** இஃது ஒழுக்கம் கல்வியினும் வலிதானவாறு கூறிற்று.

**பரிதியார்:** வேதம் ஓதி மறந்தாலும் பின்பு சந்தத்தை விட்டு ஓதிக்கொள்ளலாம்; ஒழுக்கம் கெட்டால் பிராயச்சித்தம் பண்ணினாலும் போகாது; செய்த தோஷம் அநுபவிக்க வேண்டும்.

### மேற்கோள் விளக்கம்

'மறப்பினும் என்னும் உம்மை மறக்கலாகாது என்னும் எதிர்மறைப் பொருள் தந்து நிற்றலின், இன்னோரன்னவையே எதிர்மறை உம்மையாம் என்பது.' (சிவஞான போதம், பாயிரம், சிவஞான.)

1. இஃது உபலட்சணத்தின்பாற் படும்.

### ஒப்புமை

1. **பார்ப்பான் வேதம் மறத்தல்:**

"வரிநவில் கொள்கை மறைநூல் வழுக்கத்துப்
புரிநூல் மார்பர் உறைபதி" (சிலப். 13: 38-9.)

"இன்னு, ஓத்தில்லாப் பார்ப்பான் உரை." (இன்னு.)

2. **ஓத்தும் ஒழுக்கமும்:**

"ஓத்தொடு புணர்ந்த காப்புடை ஒழுக்கின்
..............................
அந்தணர்." (பெருங். 3. 3: 83-7.) (134)

### 135

அழுக்கா றுடையான்கண் ஆக்கம்போன் றில்லை
ஒழுக்கம் இலான்கண் உயர்வு. 5

**பரிமேலழகர்:** அழுக்காறு உடையான்கண் ஆக்கம் போன்று-அழுக்காறு உடையான்மாட்டு ஆக்கம் இல்லாதாற்போல, ஒழுக்கம் இலான்கண் உயர்வு இல்லை - ஒழுக்கம் இல்லாதவன்மாட்டும் உயர்ச்சி இல்லை.

உவமையான் ஒழுக்கம் இல்லாதவன் சுற்றத்திற்கும் உயர்ச்சியில்லை என்பது பெற்றும்; என்னை? "கொடுப்பது அழுக்கறுப்பான் சுற்றமும்"[1] நல்கூர்தலின். உயர்வு-உயர் குலமாதல்.

#### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** உயர்வு – மிகுதி.

**பரிதியார்:** அழுக்கு மனம் உடையார்க்குச் செல்வம் கூடாது; அது போல நல்ல நெறி நடவாதார்க்குப் பெருமை இல்லை. (135)

### 136

ஒழுக்கத்தின் ஒல்கார் உரவோர் இழுக்கத்தின்
ஏதம் படுபாக் கறிந்து. 6

**பரிமேலழகர்:** ஒழுக்கத்தின் ஒல்கார் உரவோர் - செய்தற்கு அருமை நோக்கி ஒழுக்கத்திற் சுருங்கார் மனவலி உடையார், இழுக்கத்தின் ஏதம் படுபாக்கு அறிந்து-அவ்விழுக்கத்தால் தமக்கு இழிகுலமாகிய குற்றம் உண்டாமாற்றை அறிந்து.

ஒழுக்கத்தின் சுருக்கம் அதனை உடையார்மேல் ஏற்றப்பட்டது. கொண்ட விரதம் விடாமைபற்றி, உரவோர் என்றார்.

#### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** உரவோர் - அறிவுடையார்.

**பரிதியார்:** ஏதம் படுபாக் கறிந்து- பிராணச் சேதம் வந்ததற்கு ஒக்கும் என்று அறிந்து.

**கவிராஜ பண்டிதர்:** ஒல்கார் - விட்டுவிடார். (136)

---

1. குறள், 166.

## 137

ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்
எய்துவர் எய்தாப் பழி. 7

**பரிமேலழகர்:** ஒழுக்கத்தின் மேன்மை எய்துவர் - எல்லாரும் ஒழுக்கத்தானே மேம்பாட்டை எய்துவர்; இழுக்கத்தின் எய்தாப் பழி எய்துவர் - அதனினின்று இழுக்குதலானே தாம் எய்துவதற்கு உரித்தல்லாத பழியை எய்துவர்.

பகைபற்றி அடாப்பழி கூறியவழி அதனையும் இழுக்கம் பற்றி உலகம் அடுக்குமென்று கொள்ளுமாகலின், எய்தாப் பழி எய்துவர் என்றார்.

இவை ஐந்து பாட்டானும் ஒழுக்கம் உள்வழிப் படும் குணமும் இல்வழிப் படும் குற்றமும் கூறப்பட்டன.

### உரை வேறுபாடு

**காளிங்கர்:** ஒழுக்கம் - ஆசாரம்.

**கவிராஜ பண்டிதர்:** மேன்மை - பெருமையும் கீர்த்தியும்.

### ஒப்புமை

*முற்றும்:*

"இழுக்கத்தின் மிக்க இழிவில்லை இல்லை
ஒழுக்கத்தின் மிக்க உயர்வு." *(பழமொழி, 64.)* *(137)*

## 138

நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும். 8

**பரிமேலழகர்:** நல்லொழுக்கம் நன்றிக்கு வித்து ஆகும் - ஒருவனுக்கு நல்ல ஒழுக்கம் அறத்திற்குக் காரணமாய் இருமையினும் இன்பம் பயக்கும்; தீயொழுக்கம் என்றும் இடும்பை தரும் - தீய ஒழுக்கம் பாவத்திற்குக் காரணமாய் இருமையினும் துன்பம் பயக்கும்.

நன்றிக்கு வித்தாகும் என்றதனன் தீயொழுக்கம் பாவத்திற்குக் காரணமாதலும், இடும்பை தரும் என்றதனன் நல்லொழுக்கம் இன்பம் தருதலும் பெற்ரும், ஒன்று நின்றே ஏனையதை முடிக்குமாதலின்.

இதனற் பின்விளைவு கூறப்பட்டது,

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** நன்றி - முத்தி. தீய ஒழுக்கம் நாடோறும் துன்பத்தையே தரும். என்றும்-இம்மையின் கண்ணும்.

**பரிதியார்:** நல்லொழுக்கம் இம்மை மறுமைப் பாக்கியத்துக்கு விதையாம்; பொல்லா ஒழுக்கம் இம்மை மறுமைக்குத் தரித்திரம் காட்டும்.

**காளிங்கர்:** நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்-தனக்கு எல்லா நன்மைக்கும் துணைக்காரணமாகும், அது யாதோ எனின், நன்னெறியுடைய சான்றோரும் நூல்களும் நன்று என்று அவரவர்க்கு அடுப்பதாகச் சொன்ன ஆசாரமானது.

**கவிராஜ பண்டிதர்:** நன்றி - நன்மை. *(138)*

## 139

**ஒழுக்கம் உடையவர்க் கொல்லாவே தீய**
**வழுக்கியும் வாயாற் சொலல். 9**

**பரிமேலழகர்:** வழுக்கியும் தீய வாயால் சொலல்-மறந்தும் தீய சொற்களைத் தம் வாயால் சொல்லும் தொழில்கள், ஒழுக்கம் உடையவர்க்கு ஒல்லா-ஒழுக்கம் உடையவர்க்கு முடியா.

தீய சொற்களாவன பிறர்க்குத் தீங்கு பயக்கும் பொய் முதலியனவும்,[1] வருணத்திற்கு உரிய அல்லனவும் ஆம். அவற்றது பன்மையால் சொல்லுதல் தொழில் பலவாயின.[2] சொலல்: சாதியொருமை. சொலல் எனவே அமைந்திருக்க வாயால் என வேண்டாது கூறினர், நல்ல சொற்கள் பயின்றது எனத் தாம் வேண்டியதன் சிறப்பு முடித்தற்கு;[3] இதனை வடநூலார் தாற்பரியம் என்ப.[4]

### உரை வேறுபாடு

**பரிதியார்:** ஒழுக்கம் உடையார்க்குக் கனவிலும் தீமையான வார்த்தை பிறவாது.

### ஒப்புமை

**முற்றும்:**

"ஆக்கம் அழியினும் அல்லவை கூறுத
தேர்ச்சியில் தேர்வினிய தில்." (**இனியவை**. *29.*) *(139)*

## 140

**உலகத்தோ டொட்ட ஒழுகல் பலகற்றும்**
**கல்லார் அறிவிலா தார். 10**

**பரிமேலழகர்:** உலகத்தோடு ஒட்ட ஒழுகல் கல்லார் - உலகத்தோடு பொருந்த ஒழுகுதலைக் கல்லாதார், பல கற்றும் அறிவு இலாதார் - பல நூல்களையும் கற்றாராயினும் அறிவு இலாதார்.

உலகத்தோடு பொருந்த ஒழுகுதலாவது, உயர்ந்தோர் பலரும் ஒழுகிய வாற்றான் ஒழுகுதல். அறநூல் சொல்லியவற்றுள் இக் காலத்திற்கு ஏலாதன ஒழிந்து, சொல்லாதனவற்றுள் ஏற்பன கொண்டு வருதலான் அவையும் அடங்க உலகத்தோடொட்ட என்றும், கல்விக்குப் பயன் அறிவும் அறிவிற்குப் பயன் ஒழுக்கமும் ஆகலின் அவ் வொழுகுதலைக் கல்லாதார் பல கற்றும் அறிவிலாதார் என்றும் கூறினர். ஒழுகுதலைக் கற்றலாவது அடிப்படுதல்.

இவை இரண்டு பாட்டானும், சொல்லானும் செயலானும் வரும் ஒழுக்கங்களெல்லாம் ஒருவாற்றான் தொகுத்துக் கூறப்பட்டன.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** அறிவிலாதார் பல நூல்களைக் கற்றாலும் உயர்ந்தாரோடு பொருந்த ஒழுகுதலை அறியார்.

இஃது ஒழுக்கமாவது உயர்ந்தார் ஒழுகின நெறியில் ஒழுகுதல் என்பதூஉம், அவ்வொழுக்கம் கல்வியினும் வலியுடைத்து என்பதூஉம் கூறிற்று.[5]

---

1. பொய், குறளை, இன்னாச் சொல், பயனில் சொல் என்பன.
2. ஒல்லா என்ற பன்மை முற்றை நினைந்து சொன்னது.
3. **குறள்**, 91, 159, உரையைப் பார்க்க.
4. **குறள்**, 509, **பரிமேல்.** வேண்டாதன கூறி வேண்டியது முடித்தல்.
5. "ஓதலிற் சிறந்தன் றொழுக்க முடைமை." (**முதுமொழிக்.**)

**பரிதியார்:** பல கல்வியைக் கற்றும் கல்லார் அறிவிலார்க்கு நிகராம்; எப்படி என்றால், பல நூல் கற்றும் அதன் பயன் கொள்ளாதபடியினாலே.

**காளிங்கர்:** உயர்ந்தோராகிய அந்தணர் முதலாக எண்ணப்பட்ட பெருமரபினருள் ஒருவன் இவ்வில்லற மரபினனுகலான் மற்று இவன் தான் ஒழிந்த உயர்ந்தோர் கருத்தோடு பொருந்த, தன் மன ஒழுக்கத்தை ஒழுகுதல் சிறந்தது; மற்று அதனையும் அறிவிக்கின்ற மறைமுதலாகிய நூல்கள் பல வற்றையும் கற்றறிந்தும் தம் ஒழுக்கத்தை அறியாதார் உலகத்தறிவு கேடு.

**கவிராஜ பண்டிதர்:** பெரியோர்களோடு ஒக்க நடவாதவர்கள், பல நூல்களைக் கற்றாலும் அறிவில்லாதவர்கள்.

பெரியோர்களோடு ஒக்க நடக்கிறது கொலை, பொய் முதலான வற்றை விட்டுத் தர்மத்தின் வழியே நடக்கிறதாம்.

### ஒப்புமை

1. **உலகத்தோடு ஒட்ட ஒழுகல்:**

"பயனும் பண்பும் பாடறிந்தொழுகலும்." (நற். 160: 2.)

2. **முற்றும்: குறள், 426.**

"குலந்தவங் கல்வி குடிமைமூப் பைந்தும்
விலங்காமல் எய்தியக் கண்ணும்—நலஞ்சான்ற
மையறு தொல்சீர் உலகம் அறியாமை
நெய்யிலாப் பாற்சோற்றின் நேர்." (நாலடி. 333.) (140)

---

# 15. பிறனில் விழையாமை

**பரிமேலழகர்:** அஃதாவது காம மயக்கத்தால் பிறனுடைய இல்லாளை விரும்பாமை. இஃது, ஒழுக்கம் உடையார்மாட்டே நிகழ்வது ஆகலின், ஒழுக்கம் உடைமையின்பின் வைக்கப்பட்டது.

### 141

**பிறன்பொருளாட் பெட்டொழுகும் பேதைமை ஞாலத்**
**தறம்பொருள் கண்டார்கண் இல். 1**

**பரிமேலழகர்:** பிறன் பொருளாள் பெட்டு ஒழுகும் பேதைமை - பிறனுக்குப் பொருளாம் தன்மையை உடையாளைக் காதலித்து ஒழுகுகின்ற அறியாமை, ஞாலத்து அறம் பொருள் கண்டார்கண் இல்-ஞாலத்தின்கண் அறநூலையும் பொருள் நூலையும் ஆராய்ந்து அறிந்தார்மாட்டு இல்லை.

பிறன்பொருள்-பிறன் உடைமை.[1] அறம் பொருள் என்பன ஆகுபெயர். செவ்வெண்ணின்தொகை தொக்கு நின்றது. இன்பம் ஒன்றையே நோக்கும் இன்பநூல் உடையார் இத்தீயொழுக்கத்தையும் பரகீயம் என்று கூறுவாராதலின், அறம் பொருள் கண்டார்கண் இல் என்றார்; எனவே, அப்பேதைமை உடையார்மாட்டு அறமும் பொருளும் இல்லை என்பது பெறப்பட்டது.

1. மனைவியை உரிமை என்னும் வழக்கு இங்கே நினைத்தற்குரியது.

### உரை வேறுபாடு

**பரிதியார்:** பிறர் மனையாள் அழகு கண்டு விரும்புதல் பூமியில் தன்ம நெறியும் பொருள் நெறியும் கண்டாரிடத்து இல்லை; இன்பநெறி கண்டாரிடத்து உண்டாம்.

**காளிங்கர்:** பிறன் பொருளாள் - தனக்கு உரியாளன்றியே, தன் கணவனுக்கு உரியாளாகி ஒழுகுகின்ற கற்பினளை.

**கவிராஜ பண்டிதர்:** அறம் பொருள் கண்டார்கண் - தர்ம சாஸ்திரங்களையும், நீதிநூல்களையும் கற்று அறிந்தோரிடத்திலே. *(141)*

## 142

அறன்கடை நின்றாருள் எல்லாம் பிறன்கடை
நின்றாரிற் பேதையார் இல். 2

**பரிமேலழகர்:** அறன்கடை நின்றாருள் எல்லாம் - காமம் காரணமாகப் பாவத்தின்கண் நின்றார் எல்லாருள்ளும், பிறன் கடை நின்றாரின் பேதையார் இல் - பிறன் இல்லாளைக் காதலித்து அவன் வாயிற்கண் சென்று நின்றார் போலப் பேதையார் இல்லை.

அறத்தின் நீக்கப்பட்டமையின், அறன்கடை என்றார். அறன்கடை நின்ற பெண்வழிச் செல்வாரும் வரைவின் மகளிரோடும் இழிகுல மகளிரோடும் கூடி இன்பம் நுகர்வாரும் போல அறமும் பொருளும் இழத்தலேயன்றிப் பிறன்கடை நின்றார் அச்சத்தால்[1] தாம் கருதிய இன்பமும் இழக்கின்றாராகலின், பேதையார் இல் என்றார்; இன்பமும் இல்லை என்பது பெறப்பட்டது.

### உரை வேறுபாடு

**பரிதியார்:** கடையாகிய பாவத்தில் நிற்பவர்க்குள்ளே பிறன் மனையாளை விரும்புபவரைப் போலே பேதையார் இல்லை; தன்மத்தின் கண்ணே நின்றவர்க்குள்ளே பெரியவர் ஆர் எனில், பிறர் மனை நோக்காமல் இருப்பவரே.

### ஒப்புமை

1. **அறன்கடை:**

"அறன்கடைப் படாஅ வாழ்க்கை." *(அகநா. 155: 1.)*

2. **பிறன் கடை நின்றார்:**

"பிறன்கடை நின்றொழுகு வானும்." *(திரிகடுகம், 19)* *(142)*

## 143

விளிந்தாரின் வேறல்லர் மன்ற தெளிந்தார்இல்
தீமை புரிந்தொழுகு வார். 3

**பரிமேலழகர்:** தெளிந்தார் இல் தீமை புரிந்து ஒழுகுவார் - தம்மை ஐயுறாதார் இல்லாள்கண்ணே பாவம் செய்தலை விரும்பி ஒழுகுவார், விளிந்தாரின் வேறு அல்லர் மன்ற - உயிருடையரேனும் இறந்தாரே ஆவர்.

அறம் பொருள் இன்பங்களாகிய பயன் உயிர் எய்தாமையின், விளிந்தாரின் வேறல்லர் என்றும், அவர் தீமை புரிந்து ஒழுகுவது இல்லுடையவரது தெளிவுபற்றியாகலின் தெளிந்தார் இல் என்றும் கூறினர்.

1. குறள், 146, ஒப்புமை, 1, பார்க்க.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** அறம் பொருள் இன்பம் எய்தாமையின் பிணத்தோடு ஒப்பர்.

**கவிராஜ பண்டிதர்:** தெளிந்தார் - தம்மைச் சந்தேகப்படாமல் விசுவாசமாய் நம்பினவர்.

### ஒப்புமை

**விளிந்தாரின் வேறல்லர்:**
''செத்தாரின் வேறல்லர்.'' *(குறள், 926.)* *(143)*

## 144

எனைத்துணையர் ஆயினும் என்ஆம் தினைத்துணையும்
தேரான் பிறன்இல் புகல். 4

**பரிமேலழகர்:** எனைத்துணையர் ஆயினும் என் ஆம் - எத்துணைப் பெருமை உடையராயினும் ஒருவர்க்கு யாதாய் முடியும், தினைத்துணையும் தேரான் பிறன் இல் புகல்-காம மயக்கத்தால் தினையளவும் தம் பிழையை ஓராது பிறனுடைய இல்லின்கண் புகுதல்?

இந்திரன்போல[1] எல்லாப் பெருமையும் இழந்து சிறுமை எய்தல் நோக்கி, என்னும் என்றார். ''என்நீர் அறியாதீர் போல இவைகூறின், நின்நீர அல்ல நெடுந்தகாய்''[2] என்புழிப்போல உயர்த்தற்கண் பன்மையொருமை மயங்கிற்று.

தேரான் பிறன் என்பதனைத் தம்மை ஐயுறாத பிறன் என்று உரைப்பாரும் உளர்.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** எனைத்துணையராயினும் - எல்லா அமைதியினையும் உடையராயினும்.

பிறனில் விழைவால் வரும் குற்றம் கூறுவார் முற்பட எல்லாக் குணமும் இழியும் என்று கூறினர்.

**பரிதியார் :** குலத்தாலும் செல்வத்தாலும் பெரியவனுகிலும் ஏதாம், தன்ம நெறியைத் தினையத்தனையும் விசாரியாமல் பிறர் மனை விரும்புவானுகில்? நரகம் புகுவான்.

### மேற்கோள் விளக்கம்

'செறலில் பால் மயங்கியது.' *(நன். 378, மயிலை.)*

### ஒப்புமை

1. **பிறன் இல் புகல்:** **நாலடி.** *83.*

2. **முற்றும்:**

''அறனும் அறனறிந்த செய்கையுஞ் சான்றோர்
திறனுடையன் என்றுரைக்குந் தேசும்—பிறனில்

1. அகலிகையை விழைந்தது கருதியது.
2. **கலித்.** 6: 7-8.
3. எனைத்துணையர் என்னும் பன்மையும், தேரான் என்னும் ஒருமையும் இங்கே மயங்கின.

பிழைத்தான் என்பப் பிறராற் பேசப் படுமேல்
இழுக்காம் ஒருங்கே இவை.'' (அறநெறி. 148.) (144)

### 145

எளிதென இல்இறப்பான் எய்தும்எஞ் ஞான்றும்
விளியாது நிற்கும் பழி. 5

**பரிமேலழகர்:** எளிது என இல் இறப்பான் - எய்துதல் எளிது என்று கருதிப் பின்விளைவு கருதாது பிறன் இல்லின்கண் இறப்பான், விளியாது எஞ் ஞான்றும் நிற்கும் பழி எய்தும்-மாய்தல் இன்றி எஞ்ஞான்றும் நிலைநிற்கும் குடிப்பழியினை எய்தும்.

இல்லின்கண் இறத்தல், இல்லாள்கண் நெறிகடந்து சேறல்.

**உரை வேறுபாடு**

**பரிதியார்:** பிறர் மனையாள் இன்பம் எளிது என விரும்புவான் மரணந்தமட்டும் பழியும் பாவமும் எய்துவான்.

**ஒப்புமை**

1. **எளிதென இல் இறப்பான்:**

''வம்புலாங் கூந்தல் மனைவியைத் துறந்து
பிறர்பொருள் தாரம்என் றிவற்றை
நம்பினர்'' (பெரியதிரு. 1. 6: 4.)

''காதலாள் கரிந்து நையக் கடியவே கனைந்து கன்றி
ஏதிலான் தாரம் நம்பி எளிதென.'' (சீவக. 2769.)

2. **இல் இறப்பான் பழிபூணுதல்:**

''காணில் குடிப் பழியாம்'' (நாலடி. 84.)

''செய்தா யேனும் தீவினை யோடும் பழியல்லால்
எய்தா தெய்தாது''

''இச்சைத் தன்மையி னிற்பிற ரில்லினை
நச்சி நாளும் நகையுற நாணிலன்.''
(கம்ப. மாரீசன். 182, பிணிவீட்டு 99)

3. **முற்றும்:**

''ஆசில்பர தாரமவை யஞ்சிறை யடைப்பேம்
மாசில்புகழ் காதலுறு வேம்வளமை கூரப்
பேசுவது மானம்இடை பேணுவது காமம்
கூசுவது மானிடரை நன்றுநம கொற்றம்.''
(கம்ப. இராவணன் மந்திரப். 52.) (145)

### 146

பகைபாவம் அச்சம் பழிஎன நான்கும்
இகவாவாம் இல்இறப்பான் கண். 6

**பரிமேலழகர்:** இல் இறப்பான்கண்-பிறன்இல்லாள்கண் நெறிகடந்து செல்வானிடத்து, பகை பாவம் அச்சம் பழி என நான்கும் இகவாவாம்-பகையும் பாவமும் அச்சமும் குடிப்பழியும் என்னும் இந்நான்கு குற்றமும் ஒருகாலும் நீங்காவாம்.

எனவே, இருமையும் இழத்தல்[1] பெற்றும்.

இவை ஆறு பாட்டானும் பிறனில் விழைவான்கட் குற்றம் கூறப் பட்டது.

### உரை வேறுபாடு

**பரிதியார்:** பகையும் பாவமும் பயமும் அபகீர்த்தியும் மிக உண் டாம்; ஆதலால் இன்பம் என்ன? என்ன இன்பம் கொண்டான் என்று பல ராலும் இகழப்படுவன்.

**கவிராஜ பண்டிதர்:** இல் இறப்பான் கண் - பிறனுடைய இல்லாளை வஞ்சிக்கிறவனிடத்து.

### ஒப்புமை

1. **அச்சம்:**

"அச்சம் பெரிதால் அதற்கின்பம் சிற்றளவால்
நிச்ச நினையுங்காற் கோக்கொலையால்—நிச்சலும்
கும்பிக்கே கூர்த்த வினையாற் பிறன்றூரம்
நம்பற்க நாணுடை யார்."

"புக்க இடத்தச்சம் போதரும் போதச்சம்
துய்க்கும் இடத்தச்சம் தோன்றுமற் காப்பச்சம்
எக்காலும் அச்சம் தருமால் எவன்கொலோ
உட்கான் பிறனில் புகல்." (நாலடி. 81, 83.)

2. **முற்றும்:**

"பின்னி நின்ற பெருவினை மேல்வரும்
என்ன தாயினும் ஏதில்பெண் நீக்குமின்." (வளையாபதி.)

"..................பிறன்தாரம்
நச்சுவார்ச் சேரும் பகைபழி பாவம்என்று
அச்சத்தோ டிந்நாற் பொருள்."

"காணின் குடிப்பழியாம் கையுறின் கால்குறையு
மாணின்மை செய்யுமால் அச்சமாம்—நீணிரயத்
துன்பம் பயக்குமால் துச்சாரி நீகண்ட
இன்பம் எனக்கெனைத்தால் கூறு." (நாலடி. 82, 84.) (146)

## 147

**அறன்இயலான் இல்வாழ்வான் என்பான் பிறன்இயலாள்**
**பெண்மை நயவா தவன். 7**

**பரிமேலழகர்:** அறன் இயலான் இல்வாழ்வான் என்பான்-அறனாகிய இயல்போடு கூடி இல்வாழ்வான் என்று சொல்லப்படுவான், பிறன் இயலாள் பெண்மை நயவாதவன்-பிறனுக்கு உரிமை பூண்டு அவனுடைய இயல்பின் கண்ணே நிற்பாளது பெண்தன்மையை விரும்பாதவன்.

ஆன் உருபு ஈண்டு உடனிகழ்ச்சிக்கண் வந்தது. இல்லறம் செய்வான் எனப்படுவான் அவனே என்பதாம்.

### உரை வேறுபாடு

**காளிங்கர்:** மறைநூல் சொல்லுகின்ற இல்லற மரபினனே இல் வாழ்வான் என்று ஏத்தப்படுவான் யாவனோ எனின், பிறர் மனையின் மரபின் கண் தாழ்ந்து பெண்மைப் பருவத்தைச் சிறிதும் விரும்பாதவன்.

---

1. பகை அச்சம் பழி என்பவற்றால் இம்மையும், பாவத்தால் மறுமையும் இழப்பான்.

**கவிராஜ பண்டிதர்:** பெண்மை-அழகு.

### மேற்கோள் விளக்கம்

'பெண்மையாவது, கட்புலனாகியதோர் அமைதித் தன்மை. அது "பிறனியலாள் பெண்மை நயவாதவன்" என்பதனாலும் உணர்க.'

*(தொல். சொல். 57, ந.) (147)*

## 148

பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்
கறன்ஒன்றோ ஆன்ற ஒழுக்கு. 8

**பரிமேலழகர்:** பிறன்மனை நோக்காத பேர் ஆண்மை -பிறன் மனையாளை உட்கொள்ளாத பெரிய ஆண்தகைமை, சான்றோர்க்கு அறன் ஒன்றோ ஆன்ற ஒழுக்கு-சால்புடையார்க்கு அறனும் நிரம்பிய ஒழுக்கமும் ஆம்.

புறப்பகைகளை அடக்கும் ஆண்மை உடையார்க்கும் உட்பகையாகிய காமம் அடக்குதற்கு அருமையின், அதனை அடக்கிய ஆண்மையைப் பேராண்மை என்றார்.[1] ஒன்றோ என்பது எண்ணிடைச்சொல்.

செய்தற்கு அரிய அறனும் ஒழுக்கமும் இதனைச் செய்யாமையே பயக்கும் என்பதாம்.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** நோக்காத - பாராத.

**பரிதியார்:** சமர்க்களத்திலே வெட்டி மீண்டுவருகிறது ஆண்மை அல்ல; பிறர்மனையை நோக்காமல் இருப்பதே ஆண்மை. ஆதலால் தமக்கு ஒழுக்கம் அதுவே அறிவுடையோர்க்கு.

**காளிங்கர்:** ஒழுக்கு - ஆசாரம்.

**கவிராஜ பண்டிதர்:** நோக்காத பேராண்மை - விரும்பாதவனுடைய ஆண்மை.

### ஒப்புமை

**பிறன்மனை நோக்குவார் ஆணல்லர்:**

"பெரியவாள் தடங்கண் செவ்வாய்ப் பிறர்மனை பிழைக்கும் மாந்தர்
.....................................
ஆண்பிறந் தார்கள் அன்றே." *(சீவக. 2821.) (148)*

## 149

நலக்குரியார் யாரெனின் நாமநீர் வைப்பில்
பிறற்குரியாள் தோள்தோயா தார். 9

**பரிமேலழகர்:** நாம நீர் வைப்பில்-அச்சம் தரும் கடலால் சூழப்பட்ட உலகத்து, நலக்கு உரியார் யார் எனின்-எல்லா நன்மைகளும் எய்துதற்கு

1. "வெள்ளநீர் உலகினில் விண்ணில் நாகரில்
தள்ளரும் பகையெலாம் தவிர்த்து நின்றயான்
கள்ளரிற் கரந்துறை காமம் ஆதியாம்
உள்ளுறை பகைஞருக் கொதுங்கி வாழ்வெனோ." (கம்ப. மந்திரப். 18.)

உரியார் யாவர் எனின், பிறற்கு உரியாள் தோள் தோயாதார் - பிறன் ஒருவனுக்கு உரிமையாகியாளுடைய தோளைச் சேராதார்.

அகலம், ஆழம், பொருளுடைமை[1] முதலியவற்றான் அளவிடப்படாமையின், நாம நீர் என்றார். உரிச்சொல் ஈறு திரிந்து நின்றது.[2] நலத்திற்கு என்பது நலக்கு எனக் குறைந்து நின்றது.

இருமையினும் நன்மை எய்துவர் என்பதாம்.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** நாமநீர் வைப்பு - நினைத்ததைத் தருகின்ற நீர் சூழ்ந்த உலகத்தில். நலக்குரியார் - விரும்புதற்குரியார்.

**பரிதியார்:** நலக்குரியார் - நல்லவர் என்னும் பேர்பெறுவார்.

**கவிராஜ பண்டிதர்:** பரஸ்திரீகளைச் சேராதவர்களே இம்மையிலே கீர்த்தியும், மறுமையிலே தேவலோகமும் அடைவார்கள் என்பதாம். (149)

## 150

**அறன்வரையான் அல்ல செயினும் பிறன்வரையாள்**
**பெண்மை நயவாமை நன்று.** 10

**பரிமேலழகர்:** அறன் வரையான் அல்ல செயினும்-ஒருவன் அறத்தைத் தனக்கு உரித்தாகச் செய்யாது பாவங்களைச் செய்யுமாயினும், பிறன் வரையாள் பெண்மை நயவாமை நன்று - அவனுக்குப் பிறன் எல்லைக்கண் நிற்பாளது பெண்மையை விரும்பாமை உண்டாயின் அது நன்று.

இக் குணமே மேற்பட்டுத் தோன்றும் என்பதாம்.

இவை நான்கு பாட்டானும் பிறனில் விழையாதான்கண் குணம் கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** அறன் வரையான் அல்ல செயினும்-அறத்தை வரையாதே அறமல்லாதன செய்யினும்.

இஃது ஓரறமும் செய்திலனாயினும் நன்மை பயக்கும் என்றது.

**பரிதியார்:** தன்மத்தை நினையான் அதன்மமே செய்வானாகிலும் தோஷபரிகாரத்தால் பிழைப்பன், பிறர் மனை விரும்பாமல் இருப்பானாகில்.

**காளிங்கர்:** அறன் வரையான்-ஒருவன் தனக்கு அறத்தைத் துணையாக அணைத்துக்கொள்ள அறியானுமாய்.

**கவிராஜ பண்டிதர்:** 'நயவாமை நன்கு' எனப் பாடம்கொள்வர். சகல தர்மங்களிலும் பிறனுடைய பெண்சாதியை வஞ்சியாமல் இருப்பது பெரிய அறமாம். (150)

---

1. பொருள், பவளம் முத்து என்பன.

2. நாம் என்னும் உரிச்சொல்.

# 16. பொறை உடைமை

**பரிமேலழகர்:** அஃதாவது காரணம் பற்றியாதல் மடமையானுதல் ஒருவன் தமக்கு மிகை செய்தவழித் தாமும் அதனை அவன்கட் செய்யாது பொறுத்தலை உடையராதல். நெறியின் நீங்கிய செய்தாரையும் பொறுக்க வேண்டும் என்றற்கு, இது பிறனில் விழையாமையின்பின் வைக்கப்பட்டது.

**பரிதியார்:** மனத்தொழிலால் மெய்யின்பத்தினும் பெரியதாகையால் இது சொல்லப்பட்டது.

### 151

அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை. 1

**பரிமேலழகர்:** அகழ்வாரைத் தாங்கும் நிலம்போல-தன்னை அகழ்வாரை வீழாமல் தாங்கும் நிலம்போல, தம்மை இகழ்வார்ப் பொறுத்தல் தலை-தம்மை அவமதிப்பாரைப் பொறுத்தல் தலையாய அறம்.

இகழ்தல்-மிகையாயின செய்தலும், சொல்லுதலும்.

**உரை வேறுபாடு**

**மணக்குடவர்:** பொறுத்தானென்று இகழ்வார் இல்லை; அதனைத் தலையாகக் கொள்வார் உலகத்தார்.

**காளிங்கர்:** தனது உருவினைப் புண்பட அகழ்வாரைத் தான் தாங்கிப் பாதுகாக்கின்ற நிலத்தைப் போல, தமது உள்ளம் புண்படத் தம்மை வெஞ்சொல்லினுல் கூறி அவமதிப்பாரையும் தாம் அதை நெஞ்சில் கருதாது பொறுத்து ஒழுகுதல், தமக்குத் தலைமைப்பாடாவது.

**மேற்கோள் விளக்கம்**

தம் மாட்டுப் பிழைத்தோரைப் பொறுக்கும் ஏமம் வாகையின் பாற் படும் என்பதற்கு உதாரணம். (தொல். புறத்திணை. 17, இளம்.)

பிழைத்தோர்த் தாங்கும் காவல் என்னும் துறைக்கு இதனை உதாரணம் காட்டி, 'காவலாவது இம்மையும், மறுமையும் அவர்க்கு ஏதம் வாராமல் காத்தலாதலால் இஃது ஏனையோரின் வெற்றி ஆயிற்று' (தொல். புறத்திணை. 21, ந.) என்பர்.

**ஒப்புமை**

1. **பொறுமைக்கு நிலம்:**

"நோன்மை நாடின் இருநிலம்" (பரி. 2: 55.)

"நிலத்தோ ரன்ன நலத்தகு பெரும்பொறை." (பெருங். 1. 42:179.)

2. **தம்மை இகழ்வாரைப் பொறுத்தல்:**

**குறள், 579.**

"பொறைஎனப் படுவது போற்ருரைப் பொறுத்தல்" (கலி. 133: 14.)

"தம்மை இகழ்ந்தமை தாம்பொறுப்ப தன்றி" (நாலடி. 58.)

"கறுத்தாற்றித் தம்மைக் கடியசெய் தாரைப்
பொறுத்தாற்றிச் சேறல் புகழால்." (பழ. 19.) (151)

## 152

**பொறுத்தல் இறப்பினை என்றும் அதனை**
**மறத்தல் அதனினும் நன்று.** 2

**பரிமேலழகர்:** என்றும் இறப்பினைப் பொறுத்தல்-பொறை நன்றாகலால் தாம் ஒறுத்தற்கு இயன்ற காலத்தும் பிறர் செய்த மிகையைப் பொறுக்க; அதனை மறத்தல் அதனினும் நன்று-அதனை உட்கொள்ளாது அப்பொழுதே மறத்தல் பெறின் அப் பொறையினும் நன்று,

மிகை என்றது மேற்சொல்லிய இரண்டனையும்.[1] பொறுக்கும் காலும் உட்கொள்ளப்படுதலின், மறத்தலை அதனினும் நன்று என்றார்.

### உரை வேறுபாடு

**பரிதியார்:** பிறர் செய்த குற்றம் பொறுத்தலிற் புகழில்லை; அதனினும், பிறர் செய்த குற்றம் மறத்தலைப்போலே அறம் இல்லை.

**காளிங்கர்:** தம்மாட்டுச் சிலர் மரபினைக் கடந்த நெறியதாகிய கேட்டைச் செய்யினும், வெஞ்சொற்களைச் சொல்லினும் தாம் அதனை எஞ்ஞான்றும் பொறுத்தல் சால நன்று; மற்று இதனை யாம் பொறுத்தேம் என்று கருதாது அப் பொறுத்தமைதன்னையும் மறத்தல் சால நன்மையுடைத்து.

இறத்தல் என்பது கடத்தல்.

**கவிராஜ பண்டிதர்:** பொறுத்தாலும் மனத்திலே நினைவு இருக்கும்; ஆகையால் நினையாமல் இருப்பது நன்று.

### ஒப்புமை

**மறத்தல்:**

"......நன்றல்ல
தன்றே மறப்பது நன்று." (குறள், 108.) (152)

## 153

**இன்மையுள் இன்மை விருந்தொரால் வன்மையுள்**
**வன்மை மடவார்ப் பொறை.** 3

**பரிமேலழகர்:** இன்மையுள் இன்மை விருந்து ஒரால்-ஒருவனுக்கு வறுமையுள்வைத்து வறுமையாவது விருந்தினரை ஏற்றுக்கொள்ளாது நீக்குதல்; வன்மையுள் வன்மை மடவார்ப் பொறை - அது போல வன்மையுள் வைத்து வன்மையாவது அறிவின்மையான் மிகைசெய்தாரைப் பொறுத்தல்.

இ:்து எடுத்துக்காட்டுவமை. அறனல்லாத விருந்தொரால் பொருளுடைமை ஆகாதவாறுபோல, மடவார்ப்பொறையும் மென்மையாகாதே வன்மையாம் என்பது கருத்து.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** விருந்து ஒரால் - புதுமையை நீக்காமை. மடவார்ப் பொறை-அறியாதாரைப் பொறுத்தல்.

புதுமை யென்றது கேட்டறியாதது. நீக்காமை-பொறுமை.

**பரிதியார்:** வன்மையாவது மலையின் உச்சியின்மேலே ஒரு கல்லை ஏற்றல், கடுகிலே கடலை அடக்குதல் ஆகியன.

---

1. மிகையாயின செய்தலும், சொல்லுதலும்; குறள், 151, உரை பார்க்க.

**காளிங்கர்:** உலகத்தில் வாழ்வார்க்கு இன்மைகளில்[1] வைத்து மிகவும் இன்மையாவது விருந்தினரை விடாது பேணி வழிபடுதல்; மற்று இதுபோல் ஒருவர் தாம் செய்யவல்ல செய்திவலிமைகளில் வைத்துக்கொண்டு மிகவும் வலியாவது யாதோ எனில் அறிவுகேடாகிய அவம்திப்பைப் பொறுக்கும் பொறையுடைமையே.

அல்லதூஉம் இல்வாழ்வார்க்கு வறுமையுள் வைத்துக்கொண்டு மிகவும் வறுமையாவது விருந்து வந்தெய்தாமையும், எய்திய விருந்தினர் நுகரப்பெறுமையும், இவை இரண்டும் நீங்குதலும் இதுவே மிக வறுமை என்றுமாம். ஒரால் என்பது நீங்குதலல்லாமை என்றுமாம்.

**கவிராஜ பண்டிதர்:** விருந்து ஒரால்-விருந்தாய் வந்தவர்களுக்கு உபகாரம் பண்ணுமல் இல்லை என்கிறது.

### ஒப்புமை

**இன்மையுள் இன்மை விருந்தொரால் :**

"உடைமையுள் இன்மை விருந்தோம்பல் ஓம்பா
மடமை." (குறள், 89.) (153)

## 154

**நிறைஉடைமை நீங்காமை வேண்டின் பொறைஉடைமை
போற்றி ஒழுகப் படும். 4**

**பரிமேலழகர்:** நிறை உடைமை நீங்காமை வேண்டின் - ஒருவன் சால்புடைமை தன்கண் நின்று நீங்காமை வேண்டுவனுயின், பொறை உடைமை போற்றி ஒழுகப்படும் - அவனல் பொறைஉடைமை தன்கண் அழியாமல் காத்து ஒழுகப்படும்.

பொறை உடையாற்கு அல்லது சால்பு இல்லை என்பதாயிற்று.

இவை நான்கு பாட்டானும் பொறையுடைமையது சிறப்புக் கூறப் பட்டது.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** நிறையென்பது காப்பன காத்துக் கடிவன கடிந்து ஒழுகும் ஒழுக்கம்

**பரிதியார்:** எல்லார் குணத்திற்கும் அது அதுவாய் நிற்கும் நிறையுடைமை தன்னை விட்டுப் போகாமல் வேண்டுமாகில் பொறை உடைமை வேண்டும்.

**காளிங்கர்:** நிறையுடைமை-அடக்கமுடைமை.

### ஒப்புமை

1. **நிறையுடைமை பொறையுடைமை:**

"நிறையுடைமை நீர்மை யுடைமை கொடையே
பொறையுடைமை." (ஏலாதி, 6.)

2. **முற்றும்:**

"பெருமையும் வண்மை தானும் பேரெழில் ஆண்மை தானும்
ஒருமையின் உணர நோக்கின் பொறையின தூற்ற மன்றே."
(கம்ப. மகுடபங்கப். 31.) (154)

1. இன்மை என்பதற்கு இல்லறத்தின் தன்மையென்று பொருள்கொண்டார் போலும்.

## 155

ஒறுத்தாரை ஒன்றாக வையாரே வைப்பர்
பொறுத்தாரைப் பொன்போல் பொதிந்து. 5

**பரிமேலழகர்:** ஒறுத்தாரை ஒன்றாக வையார்-பிறன் தமக்குத் தீங்கு செய்தவழிப் பொறாது அவனை ஒறுத்தாரை அறிவுடையார் ஒரு பொருளாக மனத்துக் கொள்ளார்; பொறுத்தாரை பொன்போல் பொதிந்து வைப்பர்-அதனைப் பொறுத்தாரைப் பொன்போல் பொதிந்துகொள்வர்.

ஒறுத்தவர் தாமும் அத் தீங்கு செய்தவனோடு ஒத்தலின், ஒன்றாக வையார் என்றார். பொதிந்துவைத்தல்-சால்புடைமை பற்றி இடைவிடாது நினைத்தல்.

### உரை வேறுபாடு

**பரிதியார்:** பொறுமையில்லாதார் ஒன்றுக்கும் அல்லார்; பொறுமையுடையாரைப் பொன்போலே யாரும் தலைமேற் கொண்டிருப்பார்.

**காளிங்கர்:** இதனால் தமக்கு வரும் தீமையைக் கருதாது இவர் தமக்கு எளியவரென்று கருதிக்கொண்டு ஒறுத்தாரை இம்மை மறுமை இரண்டுக்கும் உரியதோர் ஆக்கமுடையராக வைத்து எண்ணார் சான்றோர். அதனால் சிலர் தம்மை ஒறுக்க ஒன்றாக உட்கொள்ளாது, உலகத்தார் பொன்னைக் குறிக்கொண்டு பேணிக்கொள்ளுமாப்போல் மற்று இவரைக் குறிக்கொண்டு பேணிக்கொள்வர் சான்றோர்.

**கவிராஜ பண்டிதர்:** பொன்போல் பொதிந்து-பொன்னைப்போலப் பிரியமாக எண்ணி. (155)

## 156

ஒறுத்தார்க் கொருநாளை இன்பம் பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ். 6

**பரிமேலழகர்:** ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம்-தமக்குத் தீங்கு செய்தவனை ஒறுத்தார்க்கு உண்டாவது அவ்வொருநாளை இன்பமே; பொறுத்தார்க்கு பொன்றும்துணையும் புகழ்-அதனைப் பொறுத்தார்க்கு உலகம் அழியுமளவும் புகழ் உண்டாம்.

ஒரு நாளை இன்பம்-அந்நாள் ஒன்றினும், "கருதியது முடித்தேம்" எனத் தருக்கியிருக்கும் பொய் இன்பம். ஆதாரமாகிய உலகம் பொன்றப் புகழும் பொன்றுமாகலின், ஏற்புடை உலகு என்னும் சொல் வருவித்து உரைக்கப் பட்டது.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** பொன்றும் துணையும்-தாம் சாமளவும்.

**காளிங்கர்:** இவ்வுலகத்துள் சூழ்ந்திருக்கும் கடல் வெள்ளம் வந்து கூடிப் பெருகுமளவும் புகழானது நசியாமல் நிற்கும்.

### ஒப்புமை

**பொறுத்தார்க்குப் புகழ் உண்டாதல்:**

"கறுத்தாற்றித் தம்மைக் கடியசெய் தாரைப்
பொறுத்தாற்றிச் சேறல் புகழால்." (பழ. 19.) (156)

157

திறன்அல்ல தற்பிறர் செய்யினும் நோநொந்
தறன்அல்ல செய்யாமை நன்று. 7

**பரிமேலழகர்:** திறன் அல்ல தன் பிறர் செய்யினும்-செய்யத் தகாத கொடியவற்றைத் தன்கண் பிறர் செய்தாராயினும், நோ நொந்து அறன் அல்ல செய்யாமை நன்று-அவர்க்கு அதனல் வரும் துன்பத்திற்கு நொந்து தான் அறன் அல்லாத செயல்களைச் செய்யாதிருத்தல் ஒருவனுக்கு நன்று.

உம்மை, சிறப்பும்மை. துன்பத்திற்கு நோதலாவது, "உம்மை எரிவாய் நிரயத்து வீழ்வர்கொல்"[1] என்று பரிதல்.

உரை வேறுபாடு

**மணக்குடவர்:** திறன் அல்ல-தகுதியல்லாதவற்றை.

**பரிதியார்:** திறன் அல்ல-தமக்குப் புகழல்லாத காரியத்தை.

**காளிங்கர்:** பொறையின் திறம் இதுவாகலால் செய்யப்படும் திறப்பாடல்லனவற்றைத் தன்னைக் குறித்துப் பிறர் செய்தாராகிலும் தான் அதற்கு எதிராக நெஞ்சம் நொந்து அறமல்லனவற்றைச் செய்யாமை சால நன்று.

**கவிராஜ பண்டிதர்:** அறன் அல்ல-பொல்லாங்கு. (157)

158

மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாம்தம்
தகுதியான் வென்று விடல். 8

**பரிமேலழகர்:** மிகுதியான் மிக்கவை செய்தாரை - மனச் செருக்கால் தங்கண் தீயவற்றைச் செய்தாரை, தாம் தம் தகுதியான் வென்று விடல்-தாம் தம்முடைய பொறையான் வென்றுவிடுக.

தாமும் அவர்கண் தீயவற்றைச் செய்து தோலாது, பொறையான் அவரின் மேம்பட்டு வெல்க என்பதாம்.

இவை நான்கு பாட்டானும் பிறர் செய்தன பொறுத்தல் சொல்லப்பட்டது.

உரை வேறுபாடு

**மணக்குடவர்:** மிகுதியான்-தமது செல்வமிகுதியாலே.

இது, பொறுத்தானென்பது தோல்வியாகாது; அதுதானே வெற்றியாம் என்றது.

**பரிதியார்:** மிகுதியான் - ஆங்காரத்தினலே.

**கவிராஜ பண்டிதர்:** மிகுதியான் - மன வலிமையினல்.

ஒப்புமை

**தகுதி உடையார் பொறுத்தல்:**

"தீமை கண்டோர் திறத்தும் பெரியோர்
தாமறிந் துணர்க என்ப மாதோ." (நற். 116: 1-2.)

"பிழைத்தவை பொறுக்கை எல்லாம் பெரியவர் கடமை போற்றி"

"பொறுப்பரன் றேபெரி யோர்சிறு நாய்கள்தம் பொய்யினையே."
(திருவா.70, 110.) (158)

1. நாலடி. 58.

## 159

துறந்தாரிற் றூய்மை உடையர் இறந்தார்வாய்
இன்னுச்சொல் நோற்கிற் பவர். 9

*பரிமேலழகர்:* துறந்தாரின் தூய்மை உடையர் - இல்வாழ்க்கைக்கண் நின்றேயும் துறந்தார்போலத் தூய்மை உடையார், இறந்தார்வாய் இன்னு சொல் நோற்கிற்பவர்-நெறியைக் கடந்தார் வாய் இன்னுத சொல்லைப் பொறுப்பவர்.

தூய்மை-மனமாசின்மை. வாய் என வேண்டாது கூறினர், தீய சொற்கள் பயின்றது எனத் தாம் வேண்டியதன் இழிபு முடித்தற்கு.[1]

### உரை வேறுபாடு

*மணக்குடவர்:* இறந்தார்-மிகையாய்ச் சொல்லுவாரது.

*பரிதியார்:* துறந்தார் பெரியோரானுலும் தவத்தின் பெருமையினுலே ஒருவரைச் சாபமிடுவர்; இவன் இல்லறத்திலே இருந்தும் தனக்கு ஒருவர் செய்த குற்றம் பொறுப்பவன்; ஆதலின் பெரியவன்.

*காளிங்கர்:* உலகத்து வாழ்வார் யாவரினும் மனம் வாக்குக் கருமம் என்னும் மூன்றினுலும் தூய்மை உடையராய் மனை வாழ்க்கைப் பெருந் துயரைத் துறந்தவரன்றே; மற்று அவரினும் தூய்மையுடையவர் யாவரோ எனில் பிறர் வாயில் வெஞ்சொற்களைப் பொறுக்கிற்பவர்.

*கவிராஜ பண்டிதர்:* துறந்தாரின்-துறந்தவர்களைப் பார்க்கிலும்.

### ஒப்புமை

**இறந்தார்வாய் இன்னுச்சொல் நோற்கிற்பவர்:**

"நேர்த்து நிகரல்லார் நீரல்ல சொல்லியக்கால்
வேர்த்து வெகுளார் விழுமியோர்"

"கல்லெறிந் தன்ன கயவர்வாய் இன்னுச்சொல்
எல்லாருங் காணப் பொறுத்துய்ப்பர்" (நாலடி. 64, 66.) (159)

## 160

உண்ணுது நோற்பார் பெரியர் பிறர்சொல்லும்
இன்னுச்சொல் நோற்பாரிற் பின். 10

*பரிமேலழகர்:* உண்ணுது நோற்பார் பெரியர்-விரதங்களான் ஊணைத் தவிர்ந்து உற்ற நோயைப் பொறுப்பார்[2] எல்லாரினும் பெரியர்; பிறர்சொல்லும் இன்னு சொல் நோற்பாரின் பின்-அவர் பெரியராவது தம்மைப் பிறர் சொல்லும் இன்னுத சொல்லைப் பொறுப்பாரின்பின்.

பிறர்-அறிவிலாதார். நோவாமைக்கு ஏதுவாகிய இருவகைப் பற்றொடு நின்றே நோற்றலின், இன்னுச் சொல் நோற்பாரிற் பின் என்றார்.

இவை இரண்டு பாட்டானும் பிறர் மிகைக்கச் சொல்லியன பொறுத்தல் கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

*பரிதியார்:* தம்மிடம் உள்ள சீவனை ஒறுத்துச் சருகு பொசித்துத் தபசுபண்ணுவார் பெரியரானுலும் அவர், கோபம் பிறந்து சாபம் இடுவார்;

---

1. இது தாற்பரியம் எனப்படும்; குறள், 91, 139, 509, உரை பார்க்க.
2. "உற்றநோய் நோன்றல்." (குறள், 261.)

இல்லறத்தான் பிறர் செய்த குற்றம் பொறுக்கின்றபடியினலே இவன் பெரியவன்.

**காளிங்கர்:** உலகத்து உண்டு தவம் பண்ணுவோர் யாவரினும் உண்ணுமைத் தவம் பண்ணுபவரே சாலப் பெரியர். மற்று அவரும் பிற ரால் சொல்லப்பட்ட இன்னுச் சொற்களைப் பொறுக்கும் பொறையுடை யாளரின்பின்.

**ஒப்புமை**

**இன்னுச்சொல் பொறுத்தல்:**

"அறிவெனப் படுவது பேதையார் சொல்நோன்றல்" (**கலி.** 133: 10.)

"தெரியா தவர்தம் திறனில்சொல் கேட்டால்
பரியாதார் போல இருக்க" (**பழ.** 135.)

"எள்ளிப் பிறருரைக்கும் இன்னுச்சொல் தன்னெஞ்சில்
கொள்ளிவைத் தாற்போல் கொடிதெனினும்—மெள்ள
அறிவென்னும் நீரால் அவித்தொழுக லாற்றின்
பிறிதொன்று வேண்டா தவம்." (**அறநெறி.** 100.) (160)

---

# 17. அழுக்காருமை

**பரிமேலழகர்:** இதனுள் அழுக்காறு என்பது ஒரு சொல். அதற்குப் பொருள் மேலே உரைத்தாம்.[1] அச்சொல் பின் அழுக்காற்றைச் செய்யாமை என்னும் பொருள்பட எதிர்மறை ஆகாரமும் மகர ஐகார விகுதியும் பெற்று அழுக்காருமை என நின்றது. இப் பொருமையும் பொறைக்கு மறுதலையாக லின், இதனை விலக்குதற்கு இது பொறையுடைமையின்பின் வைக்கப்பட்டது.

**மணக்குடவர்:** அழுக்காருமையாவது பிறர் ஆக்கம் முதலாயின கண்டு பொருமையால் வருகின்ற மனக்கோட்டத்தைச் செய்யாமை.

**பரிதியார்:** அழுக்காருமையாவது பிறர் செல்வம் கண்டு, "இவனுக்கு இந்தப் பாக்கியம் வந்ததே!" என்று சொல்லும் மன அழுக்கை விடுக என்றவாறு.

**161**

**ஒழுக்காருக் கொள்க ஒருவன்தன் நெஞ்சத்**
**தழுக்கா றிலாத இயல்பு.** 1

**பரிமேலழகர்:** ஒருவன் தன் நெஞ்சத்து அழுக்காறு இலாத இயல்பு-ஒருவன் தன் நெஞ்சத்தின்கண் அழுக்காறு என்னும் குற்றம் இல்லாத இயல் பினை, ஒழுக்காரு கொள்க-தனக்கு ஓதிய ஒழுக்க நெறியாகக் கொள்க.

இயல்பு-அறிவோடு கூடிய தன்மை. அத் தன்மையும் நன்மை பயத்த லின், ஒழுக்க நெறிபோல உயிரினும் ஓம்புக[2] என்பதாம்,

**உரை வேறுபாடு**

**பரிதியார்:** தன்மட்டில் அழுக்காறு இன்மையை ஒரு நியமமாக நடத்துக.

---

1. அழுக்காறு-பிறர் ஆக்கம் பொருமை. (**குறள்**, 35, உரை.)
2. **குறள்**, 131.

**கவிராஜ பண்டிதர்:** ஒழுக்காறு-காக்கப்பட்ட விரதங்கள்.

### மேற்கோள் விளக்கம்

'அழுக்காறாமையாவது பிறர் ஆக்கம் முதலாயின கண்டு பொறாமையால் வரும் மனக் கோட்டத்தைச் செய்யாமை' என்று கூறி இதனை மேற்கோள் காட்டுவர் இளம்பூரணர். (தொல். புறத். 17.) (161)

## 162

**விழுப்பேற்றின் அஃதொப்ப தில்லையார் மாட்டும்**
**அழுக்காற்றின் அன்மை பெறின். 2**

**பரிமேலழகர்:** யார்மாட்டும் அழுக்காற்றின் அன்மை பெறின்-யாவர் மாட்டும் அழுக்காற்றினின்று நீங்குதலை ஒருவன் பெறுமாயின், விழுபேற்றின் அஃது ஒப்பது இல்லை - மற்று அவன் பெறும் சீரிய பேறுகளுள் அப்பேற்றினை ஒப்பது இல்லை.

அழுக்காறு பகைவர்மாட்டும் ஒழிதற்பாற்று[1] என்பார், யார்மாட்டும் என்றார். அன்மை - வேறாதல்.

இவை இரண்டு பாட்டானும் அழுக்காறு இன்மையது குணம் கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**பரிதியார்:** பெருமை, கல்வி, அறிவுடைமைக்கு மனத்தில் அழுக்காகி ஒருவர்க்குப் பொல்லாங்கு செய்வோம் என்பதை விடுதல் நன்று.

## 163

**அறன்ஆக்கம் வேண்டாதான் என்பான் பிறன்ஆக்கம்**
**பேணா தழுக்கறுப் பான். 3**

**பரிமேலழகர்:** அறன் ஆக்கம் வேண்டாதான் என்பான்-மறுமைக்கும் இம்மைக்கும் அறமும் செல்வமும் ஆகிய உறுப்புக்களைத் தனக்கு வேண்டாதான் என்று சொல்லப்படுவான், பிறன் ஆக்கம் பேணாது அழுக்கறுப்பான்-பிறன் செல்வம் கண்டவழி அதற்கு உவவாது அழுக்காற்றைச் செய்வான்.

அழுக்கறுத்தல் எனினும் அழுக்காறு எனினும் ஒக்கும். அழுக்காறு செய்யின் தனக்கே ஏதமாம் என்பதாம்.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** அறன் ஆக்கம் - அறனாகிய வாழ்வு.

இஃது அழுக்காறுடையார்க்குப் புண்ணியம் இல்லையாம் என்று கூறிற்று.

**பரிதியார்:** அறன் ஆக்கம் - தன்மத்தின் ஆக்கமாகிய செல்வம்.

**கவிராஜ பண்டிதர்:** ஒருவன் ஐசுவரியத்தைக் கண்டு பொறுப்பற்றுப் பட்டால் தனக்கே கேடு வரும் என்பதாம். (163)

---

1. "மாற்றார் செல்வம் கண்டழிந்தால் வெற்றி யாக வற்றாமோ." (கம்ப. மாரீசன். 115.)

## 164

அழுக்காற்றின் அல்லவை செய்யார் இழுக்காற்றின்
ஏதம் படுபாக் கறிந்து. 4

**பரிமேலழகர்:** அழுக்காற்றின் அல்லவை செய்யார்-அழுக்காறு ஏதுவாக அறன் அல்லவற்றைச் செய்யார் அறிவுடையார், இழுக்கு ஆற்றின் ஏதம் படுபாக்கு அறிந்து-அத் தீநெறியால் தமக்கு இருமையினும் துன்பம் வருதலை அறிந்து.

அறன் அல்ல்வையாவன, செல்வம் கல்வி முதலியன உடையார்கண் திங்கு நினைத்தலும், சொல்லுதலும், செய்தலுமாம்.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** செய்யார்-செய்யார் நல்லோர். ஏதம்-குற்றம். *(164)*

## 165

அழுக்கா றுடையார்க் கதுசாலும் ஒன்னார்
வழுக்கியும் கேடீன் பது. 5

**பரிமேலழகர்:** ஒன்னார் வழுக்கியும் கேடு ஈன்பது - அழுக்காறு பகைவரை ஒழிந்தும் கேடு பயப்பது ஒன்றாகலின், அழுக்காறு உடையார்க்கு அது சாலும் - அவ்வழுக்காறு உடையார்க்குப் பகைவர் வேண்டா; கேடு பயத்தற்கு அதுதானே அமையும்.

அதுவே என்னும் பிரிநிலை ஏகாரம் விகாரத்தால் தொக்கது.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** இஃது உயிர்க்குக் கேடு வரும் என்று கூறிற்று.

**காளிங்கர்:** அவ்வழுக்காறுகின்றது எல்லா நன்மைகளையும் கெடுத்துக் கொடு நரகத்துய்க்கும் ஆகலான் மற்றிதனைத் தன் நெஞ்சத்துடையான் ஒருவனுக்கு அதுவே அமையும், பகைவர் வழுவியும் கேட்டைத் தருவதற்கு.

**கவிராஜ பண்டிதர்:** அழுக்காறுடையவர் செல்வம் உடையார்க்குப் பொல்லாங்கு செய்து அதனால் கெடுவர் என்பதாம்.

### ஒப்புமை

**முற்றும்:**

"அடுப்ப வரும்பழி செய்ஞ்ஞரு மல்லர்
கொடுப்பவர் முன்பு கொடேலென நின்று
தடுப்பவ ரேபகை தம்மைய மன்னர்
கெடுப்பவ ரன்னதோர் கேடிலை யென்றான்."

(கம்ப. வேள்விப். 31.) *(165)*

## 166

கொடுப்ப தழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம்
உண்பதூஉம் இன்றிக் கெடும். 6

**பரிமேலழகர்:** கொடுப்பது அழுக்கறுப்பான் சுற்றம் - ஒருவன் பிறர்க்குக் கொடுப்பதன்கண் அழுக்காற்றைச் செய்வானது சுற்றம், உடுப்பதும் உண்பதும் இன்றி கெடும் - உடுக்கப்படுவதும் உண்ணப்படுவதும் இன்றிக் கெடும்.

கொடுப்பதன்கண் அழுக்கறுத்தலாவது, கொடுக்கப்படும் பொருள் களைப் பற்றிப் பொறாமை செய்தல். சுற்றம் கெடும் எனவே, அவன் கேடு சொல்லாமையே பெறப்பட்டது. பிறர் பேறு பொறாமை தன் பேற்றையே யன்றித் தன் சுற்றத்தின் பேற்றையும் இழப்பிக்கும் என்பதாம்.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** கொடுப்பது அழுக்கறுப்பான் - பிறனொருவன் மற் றொருவனுக்குக் கொடுப்பதனை அழுக்காற்றினாலே விலக்குமவன்.

**பரிதியார்:** அழுக்கறுப்பான் சுற்றம் - உபகாரம் கண்டு பொறாத மனத்தனுக்கும், அவன் சுற்றத்தார்க்கும்.

**கவிராஜ பண்டிதர்:** கொடுப்பதழுக்கறுப்பான் சுற்றம் - ஒருவன் பிறருக்குக் கொடுப்பதைக் கண்டு அவர்களுக்கு ஏன் கொடுக்கிறான் என்று பொறாமைப் பட்டால் அவனும் அவன் சுற்றத்தாரும்.

### ஒப்புமை

1. **உடுப்பதும் உண்பதும்:** குறள், 1079.

2. **முற்றும் :**

"எடுத்தொரு வருக்கொருவர் ஈவதனின் முன்னந்
தடுப்பது நினக்கழகி தோதகவில் வெள்ளி
கொடுப்பது விலக்குகொடி யோய்உனது சுற்றம்
உடுப்பதுவும் உண்பதுவும் இன்றிவிடு கின்றாய்."

(**கம்ப.** வேள்வி. 33.) *(166)*

## 167

அவ்வித் தழுக்கா றுடையானைச் செய்யவள்
தவ்வையைக் காட்டி விடும். 7

**பரிமேலழகர்:** அழுக்காறு உடையானை - பிறர் ஆக்கம் கண்டவழிப் பொறாமை உடையானை, செய்யவள் அவ்வித்து தவ்வையை காட்டி விடும் - திருமகள் தானும் பொறாது தன் தவ்வைக்குக் காட்டி நீங்கும்.

தவ்வை - மூத்தவள். தவ்வையைக் காட்டி என்பது, "அறிவுடை அந்த ணன் அவளைக்காட் டென்றானே"[1] என்பது போல உருபு மயக்கம்.[2]

மனத்தைக் கோடுவித்து அழுக்காறுடையன் ஆயினானை என்று உரைப்பாரும் உளர்.

### மேற்கோள் விளக்கம்

ஐயும் குவ்வும் தடுமாறி வந்ததற்கு இதனை உதாரணமாகக் காட் டுவர் சிவஞான முனிவர். (**நன்.** 317.)

ஔவித்து எனப் பாடம் கொண்டு ஔகாரக் குறுக்கம் வந்த செய்யுள் என்பர். (**யா. வி.** 2, உரை.)

### ஒப்புமை

**அவ்வித் தழுக்காறுடையான்:**

"அவ்வித் தழுக்கா றுரையாமை முன்னினிதே." (**இனியவை.** 37.)

---

1. **கலி.** 72: 18
2. தவ்வைக்குக் காட்டி எனப் பொருள் கொள்ள வேண்டும்.

## 168

அழுக்கா றெனஒரு பாவி திருச்செற்றுத்
தீயுழி உய்த்து விடும். 8

**பரிமேலழகர்:** அழுக்காறு என ஒரு பாவி - அழுக்காறு என்று சொல்லப்பட்ட ஒப்பில்லாத பாவி, திரு செற்று தீயுழி உய்த்துவிடும் - தன்னை உடையானை இம்மைக்கண் செல்வத்தைக் கெடுத்து மறுமைக்கண் நரகத்தில் செலுத்திவிடும்.

பண்பிற்குப் பண்பி இல்லையேனும், தன்னை ஆக்கினானை இருமையும் கெடுத்தற் கொடுமைபற்றி, அழுக்காற்றினைப் பாவி என்றார், கொடியானைப் பாவி என்னும் வழக்கு உண்மையின்.[1]

இவை ஆறு பாட்டானும் அழுக்காறுடைமையது குற்றம் கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**பரிதியார்:** திருச்செற்று - தன்னிடத்தில் லட்சுமியையும் அகற்றி.

## 169

அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்
கேடும் நினைக்கப் படும். 9

**பரிமேலழகர்:** அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் - கோட்டத்தினைப் பொருந்திய மனத்தையுடையவனது ஆக்கமும், செவ்வியான் கேடும் நினைக்கப் படும் - ஏனைச் செம்மை உடையவனது கேடும் உளவாயின் அவை ஆராயப்படும்.

கோட்டம், ஈண்டு அழுக்காறு. உளவாயின் என்பது எஞ்சி நின்றது. ஆக்கக்கேடுகள் கோட்டமும் செம்மையும் ஏதுவாக வருதல் கூடாமையின் அறிவுடையரால் இதற்கு ஏதுவாகிய பழவினை யாதென்று ஆராயப்படுதலின், நினைக்கப்படும் என்றார். "இம்மைச் செய்தன யான்அறி நல்வினை, உம்மைப் பயன்கொல் ஒருதனி உழந்தித், திருத்தகு மாமணிக் கொழுந்துடன் போந்தது"[2] என நினைக்கப்பட்டவாறு அறிக.

### உரை வேறுபாடு

**பரிதியார்:** நினைக்கப் படும் - இமைப்பிற் கெடும்.

**காளிங்கர்:** அழுக்காறாகிய உட்கோட்டம் கிடந்த நெஞ்சத்தானது ஆக்கமும், மற்று அக் கோட்டமில்லாத செவ்வியானது கேடும் என்னும் இவை இரண்டும் விசாரிக்க, அவனுக்கு ஆக்கம் இல்லை, இவனுக்கு ஒரு கேடும் இல்லை என்பதூஉம் பொருளாயிற்று.

### மேற்கோள் விளக்கம்

'ஔவிய' எனப் பாடம் கொண்டு ஔகாரம் மொழிமுதற்கண் ஒன்றரை மாத்திரையாய் வந்தது என்பர் சிவஞான முனிவர். (**நன்.** *95.*) *(169)*

## 170

அழுக்கற் றகன்றாரும் இல்லைஅஃ தில்லார்
பெருக்கத்திற் றீர்ந்தாரும் இல். 10

1. "இன்மை எனஒரு பாவி" (**குறள்**, 1042) என்பதும் இங்கே நினைத்தற்குரியது.
2. **சிலப்.** 15: 91-3.

**பரிமேலழகர்:** அழுக்கற்று அகன்றாரும் இல்லை - அழுக்காற்றைச் செய்து பெரியர் ஆயினாரும் இல்லை; அஃது இல்லார் பெருக்கத்தின் தீர்ந்தாரும் இல் - அச் செயல் இலாதார் பெருக்கத்தின் நீங்கினாரும் இல்லை.

இவை இரண்டு பாட்டானும் கேடும் ஆக்கமும் வருவதற்கு ஏது ஒருங்கு கூறப்பட்டது.

**உரை வேறுபாடு**

**பரிதியார்:** மனத்தில் அழுக்குடையார் செல்வம் பெற்றதும் இல்லை; மனத்தில் அழுக்கில்லாதார் செல்வமாகிய லட்சுமியை நீங்கியதும் இல்லை.

**ஒப்புமை**

***அழுக்கற்று அகன்றார் இல்லை:***

"மாற்றார் செல்வம் கண்டழிந்தால் வெற்றி யாக வற்றாமோ."

(**கம்ப.** மாரீச. 115.) *(170)*

# 18. வெஃகாமை

**பரிமேலழகர்:** அஃதாவது பிறர்க்குரிய பொருளை வெளவக் கருதாமை. பிறர் உடைமை கண்டவழிப் பொறாமையே அன்றி அதனைத் தான் வெளவக் கருதுதலும் குற்றம் என்றற்கு இஃது அழுக்காறாமையின்பின் வைக்கப்பட்டது.

**பரிதியார்:** வெஃகாமையாவது, பிறர் வாழ்வு கண்டு, 'இந்தப் பாக்கியம் நமக்கு ஆகப்பெற்ற தில்லை' என்று மனத்தில் எண்ணாமல் இருப்பதே நன்று என்றவாறு.

## 171

**நடுவின்றி நன்பொருள் வெஃகின் குடிபொன்றிக்**
**குற்றமும் ஆங்கே தரும்.** 1

**பரிமேலழகர்:** நடுவு இன்றி நன் பொருள் வெஃகின்-பிறர்க்கு உரியன கோடல் நமக்கு அறன் அன்று என்னும் நடுவுநிலைமை இன்றி அவர் நன் பொருளை ஒருவன் வெஃகுமாயின், குடி பொன்றி குற்றமும் ஆங்கே தரும் - அவ் வெஃகுதல் அவன் குடியைக் கெடச்செய்து பல குற்றங்களையும் அப்பொழுதே அவனுக்குக் கொடுக்கும்.

குடியை வளரச்செய்து பல நன்மையும் பயக்கும் இயல்புபற்றி வெஃகின் என்பார், நன்பொருள் வெஃகின் என்றார். பொன்ற என்பது பொன்றி எனத் திரிந்து நின்றது; செய்து என்பது சொல்லெச்சம்.[1]

**உரை வேறுபாடு**

**மணக்குடவர்:** நடுவுநிலைமை இன்றி மிக்க பொருளை விரும்புவானாயின் அதனானே குலமும் கெட்டு அவ்விடத்தே குற்றமும் உண்டாம். இது சந்தான நாசம் உண்டாம் என்றது.

**பரிதியார்:** நடுவுநிலைமையை விட்டுப் பிறர் வாழ்வை விரும்புவானாகில், குடிகெட்டு மிடியனாகிக் குற்றமும் வரும்.

1. பொன்றி என்பதற்குப் பொன்றச் செய்து எனப் பொருள் உரைத்தமையின் அதற்கு ஏற்ற இலக்கணம் கூறினார்.

**காளிங்கர்:** நடுவு நிலைமைக்கு ஒத்த வழிபாடுடைய பொருளே பயனன்றித் தமக்கு மிகுதியாகப் பொருளை ஈட்டுதலை விரும்புவாராயின், மற்று இதனால் குற்றமாகிய ஏதம் வந்து குடிமரபும் பொன்றிப் பின்னும் அவ்வண்ணமே நரகத்தினையும் தரும்.

**மேற்கோள் விளக்கம்**

'குடியைப் பொன்றுவித்து' என்பர் சுவாமிநாத தேசிகர்.
*(இ. கொ. 71.)* *(171)*

## 172

**படுபயன் வெஃகிப் பழிப்படுவ செய்யார்**
**நடுவன்மை நாணு பவர்.** 2

**பரிமேலழகர்:** படு பயன் வெஃகி பழி படுவ செய்யார் - பிறர் பொருளை வௌவினால் தமக்கு வரும் பயனை விரும்பி அது வௌவுதற்குப் பழியின்கண்ணே படும் செயல்களைச் செய்யார், நடுவு அன்மை நாணுபவர் - நடுவு நிலைமை அன்மையை அஞ்சுபவர்.

நடுவு - ஒருவன் பொருட்குப் பிறன் உரியன் அல்லன் என்னும் நடுவு.

**உரை வேறுபாடு**

**பரிதியார்:** படு பயன் - செல்வத்தால் வரும் பயன்.

**காளிங்கர்:** நடுவு அன்மை நாணுபவர் - தமது நெறியின்கண் ஏற்றத்தாழ்வின்றி ஒத்துவரும் பொருளல்லாமையை நாணும் இயல்புடையார்.

**கவிராஜ பண்டிதர்:** பிறர் பொருளை வேண்டிப் பொல்லாங்குகளைச் செய்யார், பகை பழி பாவங்களுக்கு அஞ்சுகிற பேர்.

**மேற்கோள் விளக்கம்**

படு பயன் என்பதற்கு மிக்க பயன் என்று பொருள் கொள்வார் அரும்பத உரையாசிரியர். *(சிலப். 23 : 128.)* *(172)*

## 173

**சிற்றின்பம் வெஃகி அறன்அல்ல செய்யாரே**
**மற்றின்பம் வேண்டு பவர்.** 3

**பரிமேலழகர்:** சிற்றின்பம் வெஃகி அறன் அல்ல செய்யார் - பிறர் பால் வௌவிய பொருளால் தாம் எய்தும் நிலையில்லாத இன்பத்தை விரும்பி அவர்மாட்டு அறன் அல்லாத செயல்களைச் செய்யார், மற்றின்பம் வேண்டுபவர் - அறத்தான் வரும் நிலையுடைய இன்பத்தைக் காதலிப்பவர்.

பாவத்தான் வருதலின் அப்பொழுதே அழியும் என்பார், சிற்றின்பம் என்றார். மற்றை இன்பம் என்பது மற்றின்பம் என நின்றது.

**உரை வேறுபாடு**

**மணக்குடவர்:** மற்றின்பம் - பேரின்பமாகிய வீடு பேறு. இது வீடு பெற வேண்டுவார் செய்யார் என்றது.

**பரிதியார்:** மற்றின்பம் - பரலோகம்.

**கவிராஜ பண்டிதர்:** மற்றின்பம்-மறுமைக்கு நிலையான சுகம். *(173)*

## 174

இலம்என்று வெஃகுதல் செய்யார் புலம்வென்ற
புன்மைஇல் காட்சி யவர். 4

**பரிமேலழர்:** இலம் என்று வெஃகுதல் செய்யார் - யாம் வறியம் என்று கருதி அது தீர்தற்பொருட்டுப் பிறர் பொருளை விரும்புதல் செய்யார், புலம் வென்ற புன்மை இல் காட்சியவர் - ஐம்புலன்களையும் வென்ற குற்றம் இல்லாத காட்சியினை உடையார்.

வெல்லுதல் - பாவநெறிக்கண் செல்ல விடாமை. புலம் வென்ற புன்மை யில் காட்சியவர்க்கு வறுமை இன்மையின் வெஃகுதலும் இல்லை ஆயிற்று. புன்மை இல் காட்சி - பொருள்களைத் திரிபின்றி உணர்தல்.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** காட்சியவர் - தெளிவுடையார்.

**காளிங்கர்:** யாம் கைப்பொருள் இலம் என்று கருதி இழிவாகப் பிறர்மாட்டுச் சென்று விரும்புதலை எஞ்ஞான்றும் செய்யார்; யாரோ எனின் தமது ஒழுக்கநெறிக்கு மிகைப்படும் பொறிகண்மேல் செல்லாதவாறு ஐம் புலன்களை வென்ற புல்லிமை அற்ற நல்லறிவினை உடையோர்.

**கவிராஜ பண்டிதர்:** புன்மையில் காட்சியவர்-இருபத்தைந்து குற்றம் இல்லாத சம்யக் தரிசனம் உடையவர்கள். (174)

## 175

அஃகி அகன்ற அறிவென்னும் யார்மாட்டும்
வெஃகி வெறிய செயின். 5

**பரிமேலழகர்:** அஃகி அகன்ற அறிவு என் ஆம் - நுண்ணியதாய் எல்லா நூல்களிலும் சென்ற தம் அறிவு என்ன பயத்ததாம், வெஃகி யார் மாட்டும் வெறிய செயின் - பொருளை விரும்பி யாவர்மாட்டும் அறிவோடு படாத செயல்களை அறிவுடையார் செய்வாராயின்?

யார்மாட்டும் வெறிய செய்தலாவது, தக்கார் மாட்டும் தகாதார் மாட்டும் இழிந்தனவும் கடியனவும் முதலியன செய்தல். அறிவிற்குப் பயன் அவை செய்யாமையாகலின், அறிவு என்னும் என்றார்.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** வெறிய - ஈரம் இல்லாதன.

**பரிதியார்:** அஃகி அகன்ற அறிவு - குறையாமல் நிறைந்த அறி வுடைமை. வெறிய - பாவம்.

**காளிங்கர்:** சான்றோர்க்குக் கல்வி மிகுதியாகி அச்சிறந்த அறிவினால் நுண்ணியதாய்ப் பரந்த உணர்வு கொண்டு என்ன பயன் உளதாம், தமக்கு மரபினால் வரும் ஆக்கமன்றி மற்று யாவர்மாட்டும் அவரவரது பொருளை விரும்பி அதற்காகப் பிறர் வெருவத்தக்கன செய்வாராயின்? (175)

## 176

அருள்வெஃகி ஆற்றின்கண் நின்றான் பொருள்வெஃகிப்
பொல்லாத சூழக் கெடும். 6

**பரிமேலழகர்:** அருள் வெஃகி ஆற்றின்கண் நின்றான் - அருளாகிய அறத்தை[1] விரும்பி அதற்கு வழியாகிய இல்லறத்தின்கண் நின்றவன்,

1. அருளாகிய அறம் - துறவறம்.

பொருள் வெ:கி பொல்லாத சூழ கெடும் - பிறர் பொருளை அவாவி அதனை வருவிக்கும் குற்ற நெறிகளை எண்ணக் கெடும்.

இல்லற நெறியால் அறிவு முதிர்ந்துழி அல்லது துறக்கப்படாமையின், அதனைத் துறவறத்திற்கு ஆறு என்றார். கெடுதல் - இரண்டறமும் சேர இழத்தல். சூழ்ந்த துணையானே கெடும் எனவே, செய்தாற் கெடுதல் சொல்லாமையே பெறப்பட்டது.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** பொல்லாத - அறனல்லாதவற்றை.

**பரிதியார்:** முத்தியை விரும்பித் தன்மநெறியிலே நின்றார் பொன்னாசையை விரும்பி மனத்தில் அழுக்குடையராகில் கெடுவார்.

**காளிங்கர்:** தமது அறிவினால், 'நமக்கு வரும் இன்ப துன்பம் அனைவர்க்கும் ஒக்கும்' என்று அருளுவதோர் அருளினையே விரும்பி, நூல் சொல்லுகின்ற வழி நின்றவர், முறைமை யன்றிப் பிறனது பொருளை விரும்பி மற்று அது காரணமாகப் பொல்லாதனவற்றை நினைப்பக் கெடுவர்.

**கவிராஜ பண்டிதர்:** கெடும் - அந்தத் தருமம் கெட்டுப்போம். *(176)*

## 177

**வேண்டற்க வெஃகியாம் ஆக்கம் விளைவயின்**
**மாண்டற் கரிதாம் பயன்.** 7

**பரிமேலழகர்:** வெ:கி ஆம் ஆக்கம் வேண்டற்க - பிறர் பொருளை அவாவிக் கொண்டு அதனால் ஆகின்ற ஆக்கத்தை விரும்பாதொழிக, விளைவயின் பயன் மாண்டற்கு அரிது ஆம் - பின் அநுபவிக்குங்கால் அவ்வாக்கத்தின் பயன் நன்றாதல் இல்லை ஆகலான்.

விளை என்பது முதனிலைத் தொழிற்பெயர்.[1]

இவை ஏழு பாட்டானும் வெ:குதலின் குற்றம் கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**பரிதியார்:** தனக்கு வேண்டின மரபுவழிச் செல்வத்தை விரும்புவானாகில், அது அறமும் தரும்; முத்தியும் தரும். *(177)*

## 178

**அஃகாமை செல்வத்திற் கியாதெனின் வெஃகாமை**
**வேண்டும் பிறன்கைப் பொருள்.** 8

**பரிமேலழகர்:** செல்வத்திற்கு அ:காமை யாது எனின் - சுருங்கல் மாலைத்தாகிய செல்வத்திற்குச் சுருங்காமைக் காரணம் யாது என்று ஒருவன் ஆராயின், பிறன் வேண்டும் கைப்பொருள் வெ:காமை - அது பிறன் வேண்டும் கைப்பொருளைத் தான் வேண்டாமையாம்.

அ:காமை : ஆகுபெயர்.

வெ:காதான் செல்வம் அ:காது என்பதாயிற்று. *(178)*

1. விளைவயின் என்பதற்கு விளைவில் என்று பொருள் கொள்க.

## 179

அறன்அறிந்து வெஃகா அறிவுடையார்ச் சேரும்
திறன்அறிந் தாங்கே திரு. 9

**பரிமேலழகர்:** அறன் அறிந்து வெஃகா அறிவு உடையார்-இஃது அறன் என்று அறிந்து பிறர் பொருளை விரும்பாத அறிவு உடையாரை, திரு திறன் அறிந்து ஆங்கே சேரும் - திருமகள் தான் அடைதற்காம் கூற்றினை அறிந்து அக் கூற்றானே சென்று அடையும்.

அடைதற்காம் கூறு, காலமும் இடனும் செவ்வியும் முதலாயின.

இவை இரண்டு பாட்டானும் வெஃகாமையின் குணம் கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** திறன்-தகுதி. ஆங்கே - அப்போதே. அறன் அறிதல்-விரும்பாமை என்றறிதல். இது செல்வம் உண்டாம் என்றது.

**காளிங்கர்:** அறன் அறிந்து - நன்னெறியின் வந்த பொருளைக் கொண்டு வாழ்வதே நமக்கு அறமாவது என்று அறிந்து.

**கவிராஜ பண்டிதர்:** திறன் - வழி. மகாலட்சுமி சேருகிறது, தருமமும் நீதியும் உள்ள இடத்து என்பதாம். *(179)*

## 180

இறல்ஈனும் எண்ணாது வெஃகின் விறல்ஈனும்
வேண்டாமை என்னும் செருக்கு. 10

**பரிமேலழகர்:** எண்ணாது வெஃகின் இறல் ஈனும் - பின் விளைவது அறியாது ஒருவன் பிறன் பொருளை வெளவக் கருதின் அக் கருத்து அவனுக்கு இறுதியைப் பயக்கும்; வேண்டாமை என்னும் செருக்கு விறல் ஈனும் - அப் பொருளை வேண்டாமை என்னும் செல்வம்[1] வெற்றியைப் பயக்கும்.

பகையும் பாவமும் பெருக்கலின் இறலீனும் என்றும், அப் பொருளை வேண்டி உழல்வோர் யாவரையும் கீழ்ப்படுத்தலின் விறலீனும் என்றும் கூறினார். செருக்கு : ஆகுபெயர்.[2]

இதனால் அவ் விருமையும் ஒருங்கு கூறப்பட்டன.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** விறல் – ஆக்கம். செருக்கு - பெருமிதம்.

**பரிதியார்:** கேடாகிய விதனத்தைக் கொடுக்கும், பிறர் வாழ்வை ஆசைப் படுவானாகில்; அஃதன்றியிலே, போன சென்மாந்திரத்திலே விட்டதற்குத் தக்கதாகக் கூடுமென்று எண்ணுவானாகில், திருமாது வெற்றியைத் தரும். *(180)*

---

1. "வேண்டாமை அன்ன விழுச்செல்வம்." (குறள், 363.)
2. செருக்குக்குக் காரணமாகிய செல்வத்தைக் குறித்தது.

# 19. புறங்கூறாமை

**பரிமேலழகர்:** அஃதாவது காணாதவழிப் பிறரை இகழ்ந்து உரையாமை. மொழிக்குற்றம் மனக்குற்றம் அடியாக வருதலான், இஃது அழுக்காறாமை வெஃகாமைகளின்பின் வைக்கப்பட்டது.

**மணக்குடவர்:** புறங் கூறாமையாவது யாவரையும் இகழ்ச்சியானவற்றைப் புறத்து உரையாமை.

### 181

அறம்கூறான் அல்ல செயினும் ஒருவன்
புறம்கூறான் என்றல் இனிது. 1

**பரிமேலழகர்:** ஒருவன் அறம் கூறான் அல்ல செயினும் - ஒருவன் அறன் என்று சொல்லுவதும் செய்யாது பாவங்களைச் செய்யுமாயினும், புறம் கூறான் என்றல் இனிது - பிறனைப் புறங்கூறான் என்று உலகத்தாரால் சொல்லப் படுதல் நன்று.

புறம் கூறாமை அக் குற்றங்களான் இழிக்கப்படாது மேற்பட்டுத் தோன்றும் என்பதாம்.

இதனால் அவ்வறத்தினது நன்மை கூறப்பட்டது.

#### உரை வேறுபாடு

**பரிதியார்:** அறம் - புண்ணியம்.

**கவிராஜ பண்டிதர்:** புறங்கூறாதவன் பாவங்களான் அழிக்கப் படான் என்றவாறு.

#### ஒப்புமை

**முற்றும்:**

"புறங்கூற்றின் மூகையாய் நிற்பானேல் யாதும்
அறங்கூற வேண்டா அவற்கு" (நாலடி. 158.)

"இழிப்புறு நெஞ்சினன் ஆயினும் யார்கணும்
பழிப்புறம் சொல்லாப் பண்பினன்." (பெருங். 1.36 : 9-10.) (181)

### 182

அறன்அழீஇ அல்லவை செய்தலிற் றீதே
புறன்அழீஇப் பொய்த்து நகை. 2

**பரிமேலழகர்:** அறன் அழீஇ அல்லவை செய்தலின் தீது - அறன் என்பது ஒன்று இல்லை என அழித்துச் சொல்லி அதன்மேல் பாவங்களைச் செய்தலினும் தீமை உடைத்து, புறன் அழீஇ பொய்த்து நகை - ஒருவனைக் காணாத வழி இகழ்ந்துரையால் அழித்துச் சொல்லிக் கண்டவழி அவனோடு பொய்த்து நகுதல்.

உறழ்ச்சி, நிரல்நிறை வகையால் கொள்க. அழித்தல் - ஒளியைக்[1] கோறல்.

1. ஒளி - புகழ்.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** அறன் அழீஇ-அறத்தை அழித்து.

**பரிதியார்:** தன்மத்தை அழித்துப் பாவத்தைச் செய்கிறதற்கு ஒக்கும், ஒருவன் குற்றத்தைப் புறங்கூறுதல்.

**காளிங்கர்:** புறன் அழீஇ பொய்த்து நகை - புறத்துப் போந்து தான் அவனை முன்னம் சொல்லும் முறைமையன்றிச் சாலத் தப்பானவை சொல்லிப் பிறருடன் நகுகின்ற நகை. (182)

## 183

புறம்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலிற் சாதல்
அறம்கூறும் ஆக்கம் தரும். 3

**பரிமேலழகர்:** புறம் கூறி பொய்த்து உயிர் வாழ்தலின் - பிறனைக் காணாத வழி இகழ்ந்து உரைத்துக் கண்டவழி அவற்கு இனியனாகப் பொய்த்து ஒருவன் உயிர் வாழ்தலின், சாதல் அறம் கூறும் ஆக்கம் தரும் – அது செய்யாது சாதல் அவனுக்கு அறநூல்கள் சொல்லும் ஆக்கத்தைக் கொடுக்கும்.

பின் புறங்கூறிப் பொய்த்தல் ஒழிதலின், சாதல் ஆக்கம் தரும் என்றார். ஆக்கம் - அஃது ஒழிந்தார் மறுமைக்கண் எய்தும் பயன். அறம்: ஆகுபெயர். தரும் என்பது இடவழுவமைதி.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** சாதல் - புறங்கூறாதிருந்து நல்குரவினாற் சாதல்.

**பரிதியார்:** ஒருவன் குற்றத்தை அவற்கு வேண்டாதார்முன்கூடப் புறஞ்சொல்லி, அதனாலே பிரயோசனப்பட்டு வயிறு வளர்ப்பதில் சாதல் நன்று.

**காளிங்கர்:** ஆக்கம் - இம்மை மறுமையாகிய ஆக்கம்.

**கவிராஜ்பண்டிதர்:** பொய்த்து - பொய் உபசாரம் செய்து.

புறங்கூறாமல் இருந்தவன் மறுபிறப்பிலே வெகு செல்வத்தை உடையவன் ஆவான். (183)

## 184

கண்நின்று கண்அறச் சொல்லினும் சொல்லற்க
முன்இன்று பின்நோக்காச் சொல். 4

**பரிமேலழகர்:** கண் நின்று கண் அற சொல்லினும் - ஒருவன் எதிரே நின்று கண்ணோட்டமறச் சொன்னானாயினும், முன் இன்று பின் நோக்கா சொல் சொல்லற்க-அவன் எதிரின்றிப் பின் வரும் குற்றத்தை நோக்காத சொல்லைச் சொல்லா தொழிக.

பின் : ஆகுபெயர். சொல்வான் தொழில் சொல்மேல் ஏற்றப்பட்டது.

இவை மூன்று பாட்டானும் புறங்கூற்றினது கொடுமை கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** ஒருவன் கண்ணெதிரே நின்று கண் பார்த்தல் ஒழியச் சொல்லினும் அமையும்; பிற்காலத்து அவன் முன்னே நின்று எதிர்முகம் நோக்க ஒண்ணாத சொல்லைச் சொல்லாது ஒழிக.

இது புறங்கூறுதல் தவிர்க என்றது. இதனால் கடிய சொல் கூற லும் ஆகாது.

**காளிங்கர்:** முன்னின்று பின் நோக்கா சொல் - ஒருவன் தன் முன்பு இலனாகக் கண்டு மற்று அவனைப் பின்பு முகநோக்கத்தகாத சொல்லினை.

**கவிராஜ பண்டிதர்:** கண் அற சொல்லினும் - தயை இல்லாமல் இகழ்ந்து பேசினாலும்.

### ஒப்புமை

**கண்ணின்று சொல்லுதல்:**

"கண்ணின்று கூறுத லாற்று னவனாயின்" (கலி. 37:8.)

"கணமலை நன்னாட கண்ணின் றொருவர்
குணமேயும் கூறற் கரிதால்-குணனழுங்கக்
குற்ற முழைநின்று கூறும் சிறியவர்கட்
கெற்றால் இயன்றதோ நா." (நாலடி. 353.)

"காவா தவள்கண்ணறச் சொல்லிய வெஞ்சொல்." (சீவக. 1069.)

(184)

## 185

**அறம்சொல்லும் நெஞ்சத்தான் அன்மை புறம்சொல்லும்
புன்மையாற் காணப் படும்.** 5

**பரிமேலழகர்:** அறம் சொல்லும் நெஞ்சத்தான் அன்மை - புறம் சொல்லுவான் ஒருவன் அறனை நன்று என்று சொல்லினும் அது தன் மனத் தானாய்ச் சொல்லுகின்றான் அல்லன் என்பது, புறம் சொல்லும் புன்மையால் காணப்படும் - அவன் புறம் சொல்லுதற்குக் காரணமான மனப் புன்மை யானே அறியப்படும்.

மனம் தீதாகலின், அச் சொல் கொள்ளப்படாது என்பதாம்.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** ஒருவன் அறத்தை நினைக்கின்ற மனம் உடையன் அல்லாமை, அவன் பிறரைப் புறம் சொல்லும் புல்லிய குணம் ஏதுவாக அறியப்படும். இஃது இதனைச் சொல்லுவார் அறம் அறியார் என்றது.

**காளிங்கர்:** அறம் சொல்லும் நெஞ்சத்தான் அன்மை - ஒருவர் அற நூல் சொல்லுகின்ற தூய நெஞ்சத்தார் அல்லர் என்பதனை. (185)

## 186

**பிறன்பழி கூறுவான் தன்பழி யுள்ளும்
திறன்தெரிந்து கூறப் படும்.** 6

**பரிமேலழகர்:** பிறன் பழி கூறுவான் - பிறன் ஒருவன் பழியை அவன் புறத்துக் கூறும் அவன், தன் பழியுள்ளும் திறன் தெரிந்து கூறப்படும் - தன் பழி பலவற்றுள்ளும் உளையும் திறம் உடையவற்றைத் தெரிந்து அவனால் கூறப்படும்.

புறத்து என்பது அதிகாரத்தால் பெற்றும். இது வருகின்றவற்றிற்கும் ஒக்கும். திறன்: ஆகுபெயர். தன்னைப் புறங்கூறியவாறு கேட்டான் அக் கூறி

யாற்கு அவ்வளவன்றி அவன் இறந்துபட்டு உளையும் திறத்தனவாகிய பழிகளை நாடி எதிரே கூறுமாகலின், திறன் தெரிந்து கூறப்படும் என்றார்.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** திறன் தெரிந்து - சிலவற்றை வேறுபடத் தெரிந்து.

**பரிதியார்:** ஒருவன் குற்றத்தைப் புறஞ்சொல்லுவான், தன் குற்றத்தையும் விசாரித்துச் சொல்லவேணும்.

**கவிராஜ பண்டிதர்:** பிறன் பழியை எல்லாரும் அறியச் சொல்லுகிறவன் தன் பழியையும் ஆராய்ந்து, தனக்குக் குற்றம் வாராமல் பார்த்துக் கொண்டு சொல்லவேண்டும். *(186)*

## 187

**பகச்சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர் நகச்சொல்லி**
**நட்பாடல் தேற்று தவர்.** 7

**பரிமேலழகர்:** பக சொல்லி கேளிர் பிரிப்பர் - தம்மை விட்டு நீங்குமாற்றால் புறங்கூறித் தம் கேளிரையும் பிரியப் பண்ணுவர், நக சொல்லி நட்பு ஆடல் தேற்றுதவர் - கூடி மகிழுமாறு இனிய சொற்களைச் சொல்லி அயலாரோடும் நட்பாடலை அறியாதார்.

சிறப்பும்மை விகாரத்தால் தொக்கது. கேளிரையும் பிரிப்பர் என்ற கருத்தான் அயலாரோடு என்பது வருவித்து உரைக்கப்பட்டது. அறிதல், தமக்கு உறுதியென்று அறிதல். "கடியு மிடம்தேற்றாள் சோர்ந்தனள் கை"[1] என்புழிப் போலத் தேற்றாமை தன்வினையாய் நின்றது.

புறங்கூறுவார்க்கு யாவரும் பகையாவர் என்பது கருத்து.

### உரை வேறுபாடு

**பரிதியார்:** இரண்டு பேர் ஒரு மனமாகக் கூடியிருக்கின்ற சிநேகத்தைப் புறஞ்சொல்லிப் பிரித்துவிடுவார்; ஆர் என்னில், இரண்டு பேருக்கும் மனம் பிரியப்படச் சொல்லி உறவு பண்ண அறியாதவர்.

**காளிங்கர்:** நட்டோரையுங்கூட நட்புப் பிரிக்குமாறு சொல்லிப் பகுத்து விடுவர், பிறராகிய பகைவரையும் அவர் முகம் மலருமாறு பொருந்தச் சொல்லி நட்பினைச் செய்தல் அறியாதவர்.

**கவிராஜ பண்டிதர்:** நகச் சொல்லி நட்பாடல் தேற்றாதவர்-சந்தோஷமான வார்த்தை சொல்லித் தன்னோடு கூடி மகிழ்ந்தால் அவரை நம்ப ஒண்ணாது.

### ஒப்புமை

***நகச்சொல்லி நட்பாடல்:***

"........................மன்னரை
நயனுடி நட்பாக்கும் வினைவர்போல்." (கலி. 46 : 7-8.) (187)

## 188

**துன்னியார் குற்றமும் தூற்றும் மரபினார்**
**என்னைகொல் ஏதிலார் மாட்டு.** 8

1. கலி. 92 : 50.

**பரிமேலழகர்:** துன்னியார் குற்றமும் தூற்றும் மரபினர் - தம்மோடு செறிந்தாரது குற்றத்தையும்அவர்புறத்துத் தூற்றும் இயல்பினை உடையார், ஏதிலார்மாட்டு என்னைகொல் - அயலார் மாட்டுச் செய்வது யாது கொல்லோ?

தூற்றுதல் - பலரும் அறியப் பரப்புதல். அதனிற் கொடியது பிறிது ஒன்று காணாமையின், என்னைகொல் என்றார். செய்வது என்பது சொல் லெச்சம். என்னர்கொல் என்று பாடமோதி, எவ்வியல்பினர் ஆவர் என்று உரைப்பாரும் உளர்.

### உரை வேறுபாடு

**பரிதியார்:** ஒருவர் குற்றத்தைப் புறஞ்சொல்லித் திரிவார் தங்களை வேண்டாதார்முன் எப்படி ஆவரோ என்னில், பலர்க்கும் வேண்டாதார் ஆவர்.

**காளிங்கர்:** எஞ்ஞான்றும், நட்டாராகிய சுற்றத்தார் அற்றம் அடக்குதல் அறமாகக் கொள்ளாது, அதனைக் கைவிட்டு, அவரது குற்றமும் புறம்போந்து யாவரும் அறிய வெளியிடுகின்ற இயல்பினைஉடையார், இனிப் பகைவர்மாட்டு எங்ஙனேயோ? புறங்கூற்று என்பார்க்கு உதவியாக எனைத்து இடரும் செய்வாராவார். (188)

## 189

அறன்நோக்கி ஆற்றுங்கொல் வையம் புறன்நோக்கிப்
புன்சொல் உரைப்பான் பொறை. 9

**பரிமேலழகர்:** புறன் நோக்கி புன்சொல் உரைப்பான் பொறை-பிறர் நீங்கின அளவு பார்த்து அவர் பழித்துரையை உரைப்பானது உடற்பாரத்தை, வையம் அறன் நோக்கி ஆற்றுங்கொல் - நிலம் இக் கொடியது பொறுத்தலே எனக்கு அறமாவது எனக் கருதிப் பொறுக்கின்றது போலும்.

எல்லாவற்றையும் பொறுத்தல் இயல்பாயினும், இது பொறுத்தற்கு அரிது என்னும் கருத்தால், அறன் நோக்கி ஆற்றுங்கொல் என்றார்.

இவ்வைந்து பாட்டானும் புறங்கூறுவார்க்கு எய்தும் குற்றம் கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** புறன் நோக்கி - பிறன் இல்லாத இடம் பார்த்து.

**காளிங்கர்:** புறன் நோக்கி - ஒருவனது குற்றம் சொல்லுகைக்கு இடம் என்று குறிக்கொண்டு. (189)

## 190

ஏதிலார் குற்றம்போல் தம்குற்றம் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னும் உயிர்க்கு. 10

**பரிமேலழகர்:** ஏதிலார் குற்றம் போல் தம் குற்றம் காண்கிற்பின் - ஏதிலாரைப் புறங்கூறுவார் அதற்கு அவர் குற்றம் காணுமாறுபோலப் புறங்கூறலாகிய தம் குற்றத்தையும் காணவல்லராயின், மன்னும் உயிர்க்கு தீது உண்டோ - அவர் நிலைபேறுடைய உயிர்க்கு வருவதொரு துன்பம் உண்டோ?

நடுவுநின்று ஒப்பக் காண்டல் அருமை நோக்கிக் காண்கிற்பின் என்றும், கண்டவழி ஒழிதலின் பாவம் இன்றாம், ஆகவே வரும் பிறவிகளினும் துன்பம் இல்லை என்பது நோக்கி உயிர்க்குத் தீதுண்டோ என்றும் கூறினர்.

இதனால் புறங்கூற்று ஒழிதற்கு உபாயம் கூறப்பட்டது.

உரை வேறுபாடு

**பரிதியார்:** தான் ஒரு குற்றத்தை யாவர்க்கும் வேண்டாதார் முன்னே சொல்லுவதுபோலத் தனக்கு வேண்டாதாரும் தன் குற்றத்தைச் சொல்லுவார் என்று அறிவானாகில், அவனுக்கு ஒரு குற்றமும் இல்லை.

**கவிராஜ பண்டிதர்:** தாம் அறியாமல் செய்த குற்றங்களை நினைத்துப் பச்சாத்தாபப் பட்டாராகில் அவருக்குப் பாவம் இல்லை. (190)

---

# 20. பயனில சொல்லாமை

**பரிமேலழகர்:** அஃதாவது தமக்கும் பிறர்க்கும் அறம் பொருள் இன்பமாகிய பயன்களுள் ஒன்றும் பயவாத சொற்களைச் சொல்லாமை. பொய், குறளை, கடுஞ்சொல், பயனில் சொல் என வாக்கின்கண் நிகழும் பாவம் நான்கனுள்,[1] பொய் துறந்தார்க்கல்லது ஒருதலையாகக் கடியலாகாமையின் அஃதொழித்து, இல்வாழ்வாரால் கடியப்படும் ஏனை மூன்றனுள், கடுஞ்சொல் இனியவை கூறலானும், குறளை புறங்கூறாமையானும் விலக்கி, நின்ற பயனில் சொல் இதனை விலக்குகின்றாராகலின், இது புறங்கூறாமையின்பின் வைக்கப் பட்டது.

**மணக்குடவர்:** பயனில சொல்லாமையாவது கேட்டார்க்கும் தனக்கும் நற்பயன் படாத சொற்களைக் கூறுமை.

### 191

பல்லார் முனியப் பயன்இல சொல்லுவான்
எல்லாரும் எள்ளப் படும். 1

**பரிமேலழகர்:** பல்லார் முனிய பயன் இல சொல்லுவான் - அறிவு உடையார் பலரும் கேட்டு வெறுப்பப் பயன் இலவாகிய சொற்களைச் சொல்லுவான், எல்லாரும் எள்ளப்படும் - எல்லாரானும் இகழப்படும்.

அறிவுடையார் பலரும் வெறுப்பவே, ஒழிந்தாரானும் இகழப்படுதலின், எல்லாரும் எள்ளப்படும் என்றார். மூன்றன் உருபு விகாரத்தால் தொக்கது.[2]

உரை வேறுபாடு

**பரிதியார்:** தனக்கு வேண்டாதார் இகழும்படியாகப் பயனில சொல்வானைத் தனக்கு வேண்டின பேரும் வேண்டாத பேரும் இகழ்வர்.

ஒப்புமை

**பயனில சொல்லுதல்:**

"பயனில மொழிவாயோ." (*கலி. 69 : 11.*) (191)

---

1. "..................பொய்யே
குறளை கடுஞ்சொல் பயனில்சொல் நான்கும்
மறலையின் வாயினவா மற்று." (**ஏலாதி**, 28.)

2. எல்லாரானும் என்பதன் உருபு. இவ் விகாரம் செய்யுள் விகாரம். உருபு விரியின் தளை கெடும்.

**192**

**பயன்இல பல்லார்முன் சொல்லல் நயன்இல**
**நட்டார்கண் செய்தலிற் றீது.** 2

**பரிமேலழகர்:** பயன் இல பல்லார்முன் சொல்லல் - பயன் இலவாகிய சொற்களை அறிவுடையார் பலர்முன்பே ஒருவன் சொல்லுதல், நயன் இல நட்டார்கண் செய்தலின் தீது - விருப்பம் இலவாகிய செயல்களைத் தன் நட்டார்மாட்டுச் செய்தலினும் தீது.

விருப்பமில, வெறுப்பன. இச் சொல் அச் செயலினும் மிக இகழற்பாடு பயக்கும் என்பதாம்.

**உரை வேறுபாடு**

**மணக்குடவர்:** இது பயனில சொல்லல், இம்மை மறுமை இரண்டின் கண்ணும் தீமை பயக்கும் என்றது.

**கவிராஜ பண்டிதர்:** நயன் இல - நன்மை இல்லாத பொல்லாத காரியங்களை. (192)

**193**

**நயன்இலன் என்பது சொல்லும் பயன்இல**
**பாரித் துரைக்கும் உரை.** 3

**பரிமேலழகர்:** பயன் இல பாரித்து உரைக்கும் உரை - பயன் இலவாகிய பொருள்களை ஒருவன் விரித்து உரைக்கும் உரைதானே, நயன் இலன் என்பது சொல்லும் - இவன் நீதி இலன் என்பதனை உரைக்கும்.

உரையால் இவன் நயன் இலன் என்பது அறியலாம் என்பார், அதனை உரைமேல் ஏற்றி உரை சொல்லும் என்றார்.

**உரை வேறுபாடு**

**மணக்குடவர்:** இது பயனில சொல்வார் இம்மையின்கண் பிறரால் இயம்பப்படார் என்றது.

**கவிராஜ பண்டிதர்:** நயன் இலன் - அறிவும் நீதியும் இல்லாதவன்.

**ஒப்புமை**

**பாத்தல்:**

"பாரித்தேன் தரும நுண்ணூல்." (சீவக. 214.)

**குறிப்பு**

அவன் கருதிய பொருள் ஒன்றும் இன்மையின் பயனிலதாயிற்று; ஆயினும் அவன் கருதாத ஒன்றை அஃது உணர்த்தும் என்றபடி. (193)

**194**

**நயன்சாரா நன்மையின் நீக்கும் பயன்சாராப்**
**பண்பில்சொல் பல்லா ரகத்து.** 4

**பரிமேலழகர்:** பயன் சாரா பண்பு இல் சொல் பல்லாரகத்து - பயனோடு படாத பண்பில் சொற்களை ஒருவன் பலரிடைச் சொல்லுமாயின், நயன் சாரா நன்மையின் நீக்கும் - அவை அவர்மாட்டு நீதியொடு படாவாய் அவனை நற்குணங்களின் நீக்கும்.

பண்பு - இனிமையும் மெய்ம்மையும் முதலாய சொற்குணங்கள். சொல்லுமாயின் என்பதும், அவர் மாட்டு என்பதும் எச்சமாக வருவிக்கப் பட்டன.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** நயன் சாரா - நடுச் சாராது.

**பரிதியார்:** நயன் சாரா நன்மையின் நீக்கும் - நயம் சேராமல் திரு மாதும் போம்.

### குறிப்பு

சாரா : முற்றெச்சம். பயனில் சொல் சொல்வதற்குமுன் சொல்வார் பால் நன்மை உளதாயின், அதனையும் போக்கும் என்றபடி. (194)

## 195

சீர்மை சிறப்பொடு நீங்கும் பயன்இல
நீர்மை உடையார் சொலின். 5

**பரிமேலழகர்:** பயன் இல நீர்மை உடையார் சொலின்-பயன்இலவாகிய சொற்களை இனிய நீர்மை உடையார் சொல்லுவாராயின், சீர்மை சிறப்பொடு நீங்கும் - அவரது விழுப்பமும் அதனால் வரும் நன்குமதிக்கற்பாடும் உடனே நீங்கும்.

நீர்மை - நீரின் தன்மை. சொலின் என்பது சொல்லாமையை விளக்கிற்று.

### உரை வேறுபாடு

**பரிதியார்:** ஒழுக்கமும் செல்வமும் கெடும், பயன் இல்லாத வார்த்தையை நல்லோர்முன் சொல்லுவதால்.

**காளிங்கர்:** சீர்மை என்பது ஒழுக்கம். சிறப்பு என்பது ஆக்கம். நீர்மை என்பது தண்ணளி.

**கவிராஜ பண்டிதர்:** சிறப்பு - நற்குணங்கள்.

### ஒப்புமை

**சீர்மையும் சிறப்பும்:**

"சிறப்பும் சீரும் இன்றி." (அகநா. 369 : 22.)

### குறிப்பு

சீர்மை என்பது இயற்கையில் உள்ள பண்புகளினால் அமைந்த நலம்; சிறப்பு என்பது பிறரால் பெறும் மதிப்பு. (195)

## 196

பயன்இல்சொல் பாராட்டு வானை மகன்எனல்
மக்கட் பதடி எனல். 6

**பரிமேலழகர்:** பயன் இல் சொல் பாராட்டுவானை மகன் எனல் - பயன் இல்லாத சொற்களைப் பலகாலும் சொல்லுவானை மகன் என்று சொல்லற்க; மக்கள் பதடி எனல் - மக்களுள் பதர் என்று சொல்லுக.

அல் விகுதி வியங்கோள், முன் எதிர்மறையினும் பின் உடம்பாட்டினும் வந்தது. அறிவென்னும் உள்ளீடு இன்மையின், மக்கட்பதடி என்றார்.

இவை ஆறு பாட்டானும் பயன் இல்லாத சொற்களைச் சொல்லுதலின் குற்றம் கூறப்பட்டது.

**உரை வேறுபாடு**

**மணக்குடவர்:** பாராட்டுவானை - கொண்டாடுவானை.

**பரிதியார்:** பயன் இல்லாத சொல்லை நல்லோர்முன் பாராட்டுபவனை மனிதன் என்பது, நெல்லுடன் பிறந்த பதரை நெல் என்பது போலும்.

**மேற்கோள் விளக்கம்**

பதடியெனல் என்பதை வியங்கோளென்றும், மகனெனல் என்பதை எதிர்மறை ஒருமை ஏவலென்றும் கூறுவர், **சங்கர நமச்சிவாயர்.**

(நன். 338.) (196)

## 197

நயன்இல சொல்லினும் சொல்லுக சான்றோர்
பயன்இல சொல்லாமை நன்று. 7

**பரிமேலழகர்:** நயன் இல சான்றோர் சொல்லினும் சொல்லுக - நீதியோடு படாத சொற்களைச் சான்றோர் சொன்னாராயினும், அஃது அமையும்; பயன் இல சொல்லாமை நன்று - அவர் பயன் இலவற்றைச் சொல்லாமை பெறின் அது நன்று.

சொல்லினும் எனவே, சொல்லாமை பெறப்பட்டது. நயனிலவற்றினும் பயனில தீய என்பதாம்.

**உரை வேறுபாடு**

**பரிதியார்:** நயன் இல - நயம் இல்லாத வெட்டையான வார்த்தை.

**குறிப்பு**

நயமில்லாத வற்கென்ற சொற்களைச் சொல்லினும் பயன் இல்லாத சொற்களைச் சொல்லாமை நன்று என்பது சிறப்பு. சான்றோர் சிலபோழ்து பிறரைக் கடியுங்கால் வற்கென்ற சொற்களைச் சொல்லும் வாய்ப்பு நேர்தலும் கூடும். (197)

## 198

அரும்பயன் ஆயும் அறிவினர் சொல்லார்
பெரும்பயன் இல்லாத சொல். 8

**பரிமேலழகர்:** அரும் பயன் ஆயும் அறிவினர் - அறிதற்கரிய பயன்களை ஆராயவல்ல அறிவினையுடையார், பெரும் பயன் இல்லாத சொல் சொல்லார் - மிக்க பயனுடைய அல்லாத சொற்களைச் சொல்லார்.

அறிதற்கரிய பயன்களாவன, வீடுபேறும் மேற்கதிச் செலவும் முதலாயின. பெரும்பயன் இல்லாத எனவே, பயன் சிறிது உடையனவும் ஒழிக்கப்பட்டன.

**உரை வேறுபாடு**

**பரிதியார்:** அரும் பயன் ஆயும் - அரிய நூல் பல ஆராய்ந்த.

**காளிங்கர்:** ஆயும் அறிவினர் - பெறுதற்கருமையுடைய மறுமைப் பயனைத் தாம் பெறுதற்குத் தக்க நெறியினை ஆராயும் அறிவினையுடையோர். (198)

## 199

பொருள்தீர்ந்த பொச்சாந்தும் சொல்லார் மருள்தீர்ந்த
மாசறு காட்சி யவர். 9

**பரிமேலழகர்:** பொருள் தீர்ந்த பொச்சாந்தும் சொல்லார் - பயனின் நீங்கிய சொற்களை மறந்தும் சொல்லார், மருள் தீர்ந்த மாசு அறு காட்சியவர்- மயக்கத்தின் நீங்கிய தூய அறிவினை உடையார்.

தூய அறிவு, மெய்யறிவு. மருள் தீர்ந்த என்னும் பெயரெச்சம் காட்சி யவர் என்னும் குறிப்புப் பெயர் கொண்டது.

இவை மூன்று பாட்டானும் பயனில சொல்லாமையின் குணம் கூறப் பட்டது.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** காட்சி - தெளிவு.

**பரிதியார்:** பொச்சாந்தும் - விளையாட்டிலும்.

### ஒப்புமை

**மருள் தீர்ந்த மாசறு காட்சியவர்;**

"......................மருணீங்கி
மாசறு காட்சி யவர்க்கு." (குறள், 352.) (199)

## 200

சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயன்இலாச் சொல். 10

**பரிமேலழகர்:** சொல்லின் பயன் உடைய சொல்லுக - சொற்களில் பய னுடைய சொற்களைச் சொல்லுக; சொல்லின் பயன் இலா சொல் சொல்லற்க- சொற்களில் பயன் இல்லாத சொற்களைச் சொல்லாதொழிக.

சொல்லின் என்பது இருவழியும் மிகையாயினும், சொற்பொருட் பின்வருநிலை யென்னும் அணிநோக்கி வந்தது, "வைகலும் வைகல் வரக் கண்டும்"[1] என்பதுபோல,

இதனால் சொல்லப்படுவனவும் படாதனவும் நியமிக்கப்பட்டன.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்,** முதலில் வரும் சொல்லின் என்பதற்கு, சொல்லுவ துயின் என்று பொருள் கொண்டார்.

### குறிப்பு

ஒன்பது பாட்டினால் பயனில சொல்லாமையை வற்புறுத்தி, இதில் பயனுடைய சொல்லுவதையும் உடன் கூறினர். (200)

---

1. நாலடி. 39.

# 21. தீவினை அச்சம்

**பரிமேலழகர்:** அஃதாவது பாவங்களாயின செய்தற்கு அஞ்சுதல். இதனுன் மெய்யின்கண் நிகழும் பாவங்களெல்லாம் தொகுத்து விலக்குகின்ருர் ஆகலின், இது பயனில சொல்லாமையின்பின் வைக்கப்பட்டது.

**மணக்குடவர்:** தீவினை அச்சமாவது, தீவினைகளைப் பிறர்க்குச் செய்யாமை.

**பரிதியார்:** தீவினை அச்சமாவது, வாக்கினுற் செய்யும் குற்றமாகிய புறங்கூறல் பயனில சொல்லுதல் போல, மனத்தாலும் பாவத்தைப் பண்ணப் பயப்பட வேணும் என்றவாறு.

### 201

**தீவினையார் அஞ்சார் விழுமியார் அஞ்சுவர்**
**தீவினை என்னும் செருக்கு.** 1

**பரிமேலழகர் :** தீவினை என்னும் செருக்கு - தீவினை என்று சொல்லப் படும் மயக்கத்தை, தீவினையார் அஞ்சார் - முன் செய்த தீவினை உடையார் அஞ்சார்; விழுமியார் அஞ்சுவர் - அஃது இலராகிய சீரியார் அஞ்சுவர்.

தீவினை என்னும் செருக்கு எனக் காரியம் காரணமாக உபசரிக்கப் பட்டது.[1] மேற்ருெட்டுச் செய்து கைவந்தமையான் அஞ்சார் என்றும், செய் தறியாமையான் அஞ்சுவர் என்றும் கூறினர்.

**உரை வேறுபாடு**

**மணக்குடவர்:** தீவினையார் - தீத்தொழில் செய்வார். செருக்கு- களிப்பு. *(201)*

### 202

**தீயவை தீய பயத்தலால் தீயவை**
**தீயினும் அஞ்சப் படும்.** 2

**பரிமேலழகர்:** தீயவை தீய பயத்தலால் - தனக்கு இன்பம் பயத்தலைக் கருதிச் செய்யும் தீவினைகள் பின் அஃதொழித்துத் துன்பமே பயத்தலான், தீயவை தீயினும் அஞ்சப்படும் - அத் தன்மையவாகிய தீவினைகள் ஒருவனுல் தீயினும் அஞ்சப்படும்.

பிறிதொரு காலத்தும் பிறிதொரு தேயத்தும் பிறிதோர் உடம்பினும் சென்று சுடுதல்[2] தீக்கு இன்மையின், தீயினும் அஞ்சப்படுவதாயிற்று.

**உரை வேறுபாடு**

**பரிதியார்:** பாவம் பாவத்தையே விளைத்தலால்,[3] பாவத்தை நெருப் பினும் பெரிது என்றறிக; அது எப்படி என்ருல், நெருப்பு வேரைச் சுட மாட்டாது; பாவம் வேரளவாகச் சுட்டுப்போடும்.

---

1. தீவினை காரணமாக மயக்கம் விளைதலின் இரண்டும் வேருகும்; இங்கே உபசார வழக்கினுல் இரண்டையும் ஒன்ருகக் கூறினர்.

2. தீவினையின் பயன் மறுபிறவியிலும் வந்து சார்தலை நினைந்து கூறினர்.

3. 'தினை விதைப்பார் தினை அறுப்பார், வினை விதைப்பார் வினை அறுப்பார்' என்பது பழமொழி.

**கவிராஜ பண்டிதர்:** *தீவினையாகிய நெருப்போ மறு பிறப்பிலே பாதை பண்ணுகிறதனாலே நெருப்பைப் பார்க்கிலும் தீவினைக்கு அஞ்சவேண்டும்.* *(202)*

## 203

அறிவினுள் எல்லாம் தலையென்ப தீய
செறுவார்க்கும் செய்யா விடல். 3

**பரிமேலழகர்:** *அறிவினுள் எல்லாம் தலை என்ப - தமக்கு உறுதி நாடும் அறிவுகள் எல்லாவற்றுள்ளும் தலையாய அறிவு என்று சொல்லுவர் நல்லோர், செறுவார்க்கும் தீய செய்யா விடல் - தம்மைச் செறுவார்மாட்டும் தீவினைகளைச் செய்யாது விடுதலை.*

*விடுதற்குக் காரணமாகிய அறிவை விடுதல் என்றும், செயத்தகுழியும் செய்யாதொழியவே தமக்குத் துன்பம் வாராதென உய்த்துணர்தலின் அதனை அறிவினுள் எல்லாம் தலை என்றும் கூறினர். செய்யாது என்பது கடைக் குறைந்து நின்றது.*[1]

*இவை மூன்று பாட்டானும் தீவினைக்கு அஞ்ச வேண்டும் என்பது கூறப்பட்டது.*

**மணக்குடவர்:** *அறிவினுள் - எல்லா அறங்களையும் அறியும் அறிவு எல்லாவற்றுள்ளும்.* *(203)*

## 204

மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்
அறம்சூழும் சூழ்ந்தவன் கேடு. 4

**பரிமேலழகர்:** *பிறன் கேடு மறந்தும் சூழற்க - ஒருவன் பிறனுக்குக் கேடு பயக்கும் வினையை மறந்தும் எண்ணுதொழிக; சூழின் சூழ்ந்தவன் கேடு அறம் சூழும் - எண்ணுவனாயின் தனக்குக் கேடு பயக்கும் வினையை அறக் கடவுள் எண்ணும்.*

*கேடு என்பன ஆகுபெயர்.*[2] *சூழ்கின்றபொழுதே தானும் உடன்சூழ்தலின், இவன் பிற்படினும் அறக்கடவுள் முற்படும் என்பது பெறப்பட்டது. அறக்கடவுள் எண்ணுதலாவது அவன் கெடத் தான் நீங்க நினைத்தல்.*

*தீவினை எண்ணலும் ஆகாது என்பதாம்.*

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** *பிறனுக்குக் கேட்டை மறந்தும் சூழாதொழிக; சூழ்வனாயின், அவனால் சூழப்பட்டவன் அதற்கு மாறாகக் கேடு சூழ்வதன் முன்னே சூழ்ந்தவனுக்குக் கேட்டைத் தீமை செய்தார்க்குத் தீமை பயக்கும் அறம் தானே சூழும்.*

### ஒப்புமை

**தீவினை செய்தார் கேடுறல்:**

"விட்டனன் இலங்கை தன்மேல் விண்ணுற விரிந்த மாடம்
பட்டன பொடிக ளான பகுத்தன பாங்கு நின்ற
சுட்டன பொறிகள் பின்னைத் துளங்கினர் அரக்கர் தாமும்

1. செய்யுள் விகாரம்; தலைபிறழ்தல் நோக்கிக் குறைந்தது.
2. கேடு பயக்கும் வினைக்கு ஆயினமையின், காரியவாகுபெயர்.

கெட்டனர் வீரர் அம்மா பிழைப்பரோ கேடு சூழ்ந்தார்."

"ஈண்டிவ் வண்டத்துள் இராக்கதர் எனும்பெய ரெல்லாம்
மூண்டு வந்தது தீவினை முன்னின்று முடுக
மாண்டு வீழும்இன் றென்கின்ற தென்மதி வலியூழ்
தூண்டு கின்றதென் றடிமலர் தொழுதவன் சொன்னான்."

(கம்ப. பொழிலிறுத்த. 54, மூலபல. 33.) (204)

## 205

**இலன்என்று தீயவை செய்யற்க செய்யின்**
**இலன்ஆகும் மற்றும் பெயர்த்து.** 5

**பரிமேலழகர்:** இலன் என்று தீயவை செய்யற்க - யான் வறியன் என்று கருதி அது தீர்தற்பொருட்டுப் பிறர்க்குத் தீவினைகளை ஒருவன் செய்யாதொழிக; செய்யின் பெயர்த்தும் இலன் ஆகும் - செய்வனாயின் பெயர்த்தும் வறியன் ஆம்.

அத் தீவினையால் பிறவிதோறும் இலனாம் என்பதாம். அன் விகுதி முன் தனித்தன்மையினும், பின் படர்க்கை ஒருமையினும் வந்தது. தனித்தன்மை, "உளனாஎன் உயிரைஉண்டு"[1] என்பதனானும் அறிக. மற்று : அசைநிலை.[2] இலம் என்று பாடம் ஓதுவாரும் உளர். 'பொருளான் வறியன் எனக் கருதித் தீயவை செய்யற்க; செய்யின் அப் பொருளானேயன்றி நற்குண நற்செய்கைகளானும் வறியனாம்' என்று உரைப்பாரும் உளர்.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்,** 'இலமென்று' என்று பாடம் கொள்வர்.

**பரிதியார்:** (இவரும் இலமென்று பாடம் கொண்டார்.) தீயவை - பாவமான காரியத்தை.

### ஒப்புமை

**இலன் என்று தீயவை செய்யற்க:**

"இலமென்று வெஃகுதல் செய்யார்." (குறள், 174.) (205)

## 206

**தீப்பால தான்பிறர்கண் செய்யற்க நோய்ப்பால**
**தன்னை அடல்வேண்டா தான்,** 6

**பரிமேலழகர்:** நோய்ப்பால தன்னை அடல் வேண்டாதான் - துன்பம் செய்யும் கூற்றவாகிய பாவங்கள் தன்னைப் பின் வந்து வருத்துதலை வேண்டாதவன், தீப்பால தான் பிறர்கண் செய்யற்க - தீமைக் கூற்றவாகிய வினைகளைத் தான் பிறர்மாட்டுச் செய்யாதொழிக.

செய்யின் அப் பாவங்கள் அடுதல் ஒருதலை என்பதாம்.

### உரை வேறுபாடு

**பரிதியார்:** தம் ஆத்மா சுகசீவியாக இருக்க வேணுமாகில் வேறோர் ஆத்மாவை வருத்தஞ் செய்யாதொழிக. (206)

---

1. கலி. 58 : 7.

2. பெயர்த்து எனப் பின் வந்தமையின் மற்று அசை நிலையாயிற்று; அதன்கண் உள்ள உம்மையைப் பிரித்துப் பெயர்த்தும் என்று கூட்டிப் பொருளுரைத்தார்.

## 207

**எனைப்பகை உற்றாரும் உய்வர் வினைப்பகை**
**வீயாது பின்சென் றடும். 7**

**பரிமேலழகர்:** எனைப்பகை உற்றாரும் உய்வர் - எத்துணைப் பெரிய பகை உடையாரும் அதனை ஒருவாற்றால் தப்புவர்; வினைப்பகை வீயாது பின் சென்று அடும் - அவ்வாறன்றித் தீவினையாகிய பகை நீங்காது புக்குழிப் புக்குக் கொல்லும்.[1]

"வீயாது, உடம்பொடு நின்ற உயிரும் இல்லை"[2] என்புழியும் வீயாமை நீங்காமைக்கண் வந்தது.

### உரை வேறுபாடு

**பரிதியார்:** எனைப்பகை உற்றாரும் உய்வர்-யாருடன் பகைகொண்டாலும் நற்குணத்தினாலே உறவுபண்ணிக் கொள்ளலாம்.

### ஒப்புமை

*1.* **வினைப்பகை:**

"வினைப்பகையை வென்றான்." (**கம்ப.** ஊர்தேடு. *166.*)

*2.* **வினைப்பகை பின்சென்று அடுதல்:**

"செய்ததன் பயம்பற்று விடாது"

"சூள்வாய்த்த மனத்தவன் வினைபொய்ப்பின் மற்றவன்
வாள்வாய்நன் றாயினும்அஃ தெரியாது விடாதேகாண்"
(**கலி.** *59:25, 149: 10-11.*)

"உறற்பால நீக்கல் உறுவர்க்கும் ஆகா"

"வேண்டினும் வேண்டா விடினும் உறற்பால
தீண்டா விடுத லரிது" (**நாலடி.** *103, 109.*)

"ஊழ்வினை உருத்துவந் தூட்டும் என்பதூஉம்"

"ஒழிகென ஒழியா தூட்டும் வல்வினை" (**சிலப்.** பதிகம், *57, 10:171.*)

"உம்மை வினைவந் துருத்தல் ஒழியாது" (**மணி.** *26:32.*)

"ஒளிப்பினும் ஊழ்வினை ஊட்டாது கழியாது" (**இறை. சூ.** 2, உரை.)

"அவ்வினைக் கிவ்வினை யாமென்று சொல்லும் அஃதறிவீர்"
(**சம்பந்தர்.** திருநீலகண்டப். 1.)

"முன்னைச் செய்வினை யிம்மையில் வந்து மூடும்"

"முந்திச் செய்வினை இம்மைக்கண் நலிய"
(**சுந்தரர்.** புறம்பயம். 7, திருவிடைமருதூர், 4.)

"அல்லித்தா ளற்ற போது மறுதநூ லதனைப் போலத்
தொல்லைத்தம் முடம்பு நீங்கத் தீவினை தொடர்ந்து நீங்காப்
புல்லிக்கொண் டுயிரைச் சூழ்ந்து புக்குழிப் புக்குப் பின்னின்
றெல்லையி றுன்ப வெந்தீச் சுட்டெரித் திடுங்க ளன்றே"
(**சீவக.** 2876.)

"வெவ்வினை வந்தென வருவர் மீள்வரால்"

---

1. வினையென்பது நல்வினை தீவினை இரண்டுக்கும் பொதுவாயினும் பகை, அடும் என்பன தீவினை என்பதைக் குறிப்பித்தன.

2. **புறநானூறு,** 363:7-8; 208-ஆம் குறளினும் இச்சொல் இப் பொருளில் வருவது காண்க.

"நீயயன் முதற்குலம் இதற்கொருவன் நின்ருய்
ஆயிரம் மறைப்பொருள் உணர்ந்தறி வமைந்தாய்
தீவினை நயப்புறுதல் செய்தனை தெரிந்தால்
ஏயின வுறத்தகைய இத்துணைய வேயோ".

(கம்ப. கலன்காண். 30, இராவணன் மந்திரப். 48.)

"உயிர்புகும் சட்டகம் உழிதொறும் உழிதொறும்
பழவினை புகுந்த பாடகம் போல." (கல். 10 : 1-2.) (207)

## 208

**தீயவை செய்தார் கெடுதல் நிழல்தன்னை
வீயா தடிஉறைந் தற்று.** 8

**பரிமேலழகர்:** தியவை செய்தார் கெடுதல் - பிறர்க்குத் தீவினைகளைச் செய்தார் தாம் கெடுதல் எத்தன்மைத்தெனின், நிழல் தன்னை வீயாது அடி உறைந்தற்று - ஒருவன் நிழல் நெடிதாகப் போயும் அவன்றன்னை விடாது வந்து அடியின்கண் தங்கிய தன்மைத்து.

இவ்வுவமையைத் தன் காலம் வருந்துணையும் புலனாகாது உயிரைப் பற்றி நின்று, அது வந்துழி உருப்பதாய தீவினையைச் செய்தார், பின் அதனல் கெடுதற்கு உவமையாக்கி உரைப்பாரும் உளர். அஃது உரையன்று என்பதற்கு அடியுறைந்த நிழல் தன்னை வீய்ந்தற்று என்னது வீயாது அடி உறைந் தற்று என்ற பாடமே கரியாயிற்று. மேல் 'வீயாது பின்சென்று அடும்' என்ருர், ஈண்டு அதனை உவமையான் விளக்கினுர்.

### உரை வேறுபாடு

**காளிங்கர்:** ஒருவன் தான் செய்த தீவினைப்பயன் தன்னையே வந்துறும் இத்துணையல்லது வேறு பகுத்துக் கோடாற்குரியா ரில்லை என்பது போலே, நிழலுந் தன்னை விட்டு நீங்காது என்பதாம்.

### ஒப்புமை

1. **நிழல் தொடர்ந்து வருதல்:**

"நிழல்போற் றிரிதருவாய்
என்னீ பெருததீ தென்" (கலி. 61 : 8-9.)

"செல்வுழிச் செல்வுழி மெய்ந்நிழற் போல" (அகநா. 49:15.)

2. **முற்றும்:**

"செற்ருெருவரைச் செய்ததீமைகள் இம்மையேவரும் திண்ணமே"
(சுந்தரர். புறம்பயம். 4.)

"நீலமா மணிநிற நிருதர் வேந்தனை
மூலநா சம்பெற முடிக்கும் மொய்ம்பினுள்
மேலைநாள் உயிரொடும் பிறந்து தான்விளை
காலமோர்ந் துடனுறை கடிய நோயனுள்."

(கம்ப. சூர்ப்பனகை 8.) (208)

## 209

**தன்னைத்தான் காதல ஞயின் எனைத்தொன்றும்
துன்னற்க தீவினைப் பால்.** 9

1. குறள், 207.

**பரிமேலழகர்:** தன்னைத் தான் காதலன் ஆயின் - ஒருவன் தன்னைத் தான் காதல் செய்தல் உடையனாயின், தீவினைப்பால் எனைத்து ஒன்றும் துன்னற்க - தீவினையாகிய பகுதி எத்துணையும் சிறியதொன்றாயினும் பிறர் மாட்டுச் செய்யாது ஒழிக.

நல் வினை, தீவினை என வினைப்பகுதி இரண்டாகலின் தீவினைப்பால் என்றார். பிறர்மாட்டுச் செய்த தீவினை தன் மாட்டுத் துன்பம் பயத்தல் விளக்கினாராகலின், தன்னைத் தான் காதலனாயின் என்றார்.

இவை ஆறு பாட்டானும் பிறர்க்குத் தீவினை செய்யின் தாம் கெடுவர் என்பது கூறப்பட்டது.

**உரை வேறுபாடு**

**மணக்குடவர்:** தன்னைத் தான் காதலன் ஆயின் - தனக்குத் தான் நல்லவனாயின்.

**குறிப்பு**

தீய செயல் செய்யுங் காலத்துப் பிறருக்குத் துன்பம் உண்டாக்குவ தாகத் தோற்றினும் விளையுங்காலத்துத் தனக்கே துன்பந் தருதலின் அது விலக்குதற்குரியது என்றவாறு. (209)

**210**

அருங்கேடன் என்ப தறிக மருங்கோடித்
தீவினை செய்யான் எனின். 10

**பரிமேலழகர்:** மருங்கு ஓடித் தீவினை செய்யான் எனின்-ஒருவன் செந் நெறிக்கண் செல்லாது கொடுநெறிக்கண் சென்று பிறர்மாட்டுத் தீவினைகளைச் செய்யானாயின், அருங்கேடன் என்பது அறிக - அவனை அரிதாகிய கேட்டை யுடையன் என்பது அறிக.

அருமை, இன்மை. அருங்கேடன் என்பதனை, "சென்றுசேர் கல்லாப் புள்ள வுள்ளில், என்றூழ் வியன்குளம்"[1] என்பதுபோலக் கொள்க.[2] ஓடி என் னும் வினையெச்சம் செய்யான் என்னும் எதிர்மறைவினையுள் செய்தலோடு முடிந்தது.[3]

இதனால் தீவினை செய்யாதவன் கேடிலன் என்பது கூறப்பட்டது. (210)

---

# 22. ஒப்புரவறிதல்

**பரிமேலழகர்:** அஃதாவது உலக நடையினை அறிந்து செய்தல். உலக நடை வேத நடைபோல அற நூல்களுள் கூறப்படுவதன்றித் தாமே அறிந்து செய்யும் தன்மைத்தாகலின், ஒப்புரவறிதல் என்றார். மேல் மனமொழி மெய் களால் தவிரத் தகுவன கூறினர், இனிச் செய்யத் தகுவனவற்றுள் எஞ்சி நின்றன கூறுகின்றாராகலின், தீவினை அச்சத்தின்பின் வைக்கப்பட்டது.

**மணக்குடவர்:** ஒப்புரவறிதலாவது இல்லென இரந்து வந்தார் யாவர்க்கும் வரையாது கொடுக்கும் ஆற்றல் இலரெனினும், தம் அள

1. அகநானூறு, 42 : 8-9.

2. இது வடமொழி முடிவு.

3. மருங்கு ஓடிச் செய்தலைச் செய்யாதவன் என்று பொருள் கொள்ள வேண்டும்.

விற்கும் தம் வருவாய் அளவிற்கும் ஏற்கத் தக்கார்க்குத் தக்கன அறிந்து கொடுத்தல்.

**கவிராஜ பண்டிதர்:** அஃதாவது உலகத்திற்கு ஏற்ற நடத்தையை அறிந்து செய்வது. உலக நடத்தையாவது தரும சாஸ்திரங்களிலே சொல்லப்பட்ட தருமத்தின் வழியே நடப்பது.

## 211

கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்
டென்ஆற்றும் கொல்லோ உலகு. 1

**பரிமேலழகர்:** மாரிமாட்டு உலகு என் ஆற்றும்-தமக்கு நீர்உதவுகின்ற மேகங்களினிடத்து உயிர்கள் என்ன கைம்மாறு செய்யா நின்றன? கடப்பாடு கைம்மாறு வேண்டா-ஆகலான், அம் மேகங்கள் போல்வார் செய்யும் ஒப்புரவுகளும் கைம்மாறு நோக்குவன அல்ல.

என் ஆற்றும் என்ற வினுயாதும் ஆற்ரு என்பது தோன்ற நிற்றலின், அது வருவித்து உரைக்கப்படும். தவிரும் தன்மைய அல்ல என்பது கடப்பாடு என்னும் பெயரானே பெறப்பட்டது. செய்வாரது வேண்டாமையைச் செய்யப்படுவனமேல் ஏற்றினர்.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** ஒப்புரவு செய்யுங்கால் கைம்மாறு கருதிச் செய்ய வேண்டா; எல்லார்க்கும் நல்வழி சுரக்கின்ற மாரிக்கு உலகம் கைம்மாறு செய்தல் உண்டோ?

கடப்பாடு-ஒப்புரவு. இஃது, ஒப்புரவாவது கைம்மாறு வேண்டாத கொடை என்று கூறிற்று.

**பரிதியார்:** ஒருவன் முன்னே செய்த உதவிக்கு, இவன் தானும் ஓர் உதவி செய்வோம் என்றது எத்தன்மைக்கு ஒக்கும் என்ருல், பூலோகத்தை இரட்சிக்கிற மழைக்கு உதவி செய்வோம் என்பதற்கு நிகராம்.

**கவிராஜ பண்டிதர்:** செய்த உபகாரத்துக்குப் பதில் உபகாரம் வேணுமென்று நினைத்தால் கடன் கொடுத்து வாங்குவது போலேயாம்.

### ஒப்புமை

1. **கைம்மாறு இல்லாமை:**

"நம்மாட் டுதவிய நன்னர்க் கீண்டொரு
கைம்மா ருற்றுதல் என்றும் இன்மையின்" (*பெருங். 4. 3: 11-2.*)

"செயலருந் தவங்கள் செய்திச் செம்மலைத் தந்த செல்வத்
தயரதற் கென்ன கைம்மா றுடையம்யாம் தக்க தென்பார்."
(*கம்ப. கைகேசி சூழ்வினைப். 89.*)

2. **மாரிக்குக் கைம்மாறு இன்மை:**

"விருந்தெவன் செய்கோ தோழி...
மலையிமைப் பதுபோல் மின்னிச்
சிலைவ லேற்றெடு செறிந்தவிம் மழைக்கே." (*நற். 112: 1-9.*)

3. **முற்றும்:**

"ஆரிய னவனை நோக்கி யாருயி ருதவி யாதும்
காரிய மில்லான் போனன் கருணையோர் கடன்மை யீதால்

பேரிய லாளர் செய்கை ஊதியம் பிடித்து மென்னுர்
மாரியை நோக்கிக் கைம்மா றியற்றுமோ வைய மென்ருன்."

(கம்ப. நாகபாசப். 271) (211)

## 212

தாள்ஆற்றித் தந்த பொருள்எல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு. 2

**பரிமேலழகர்:** தக்கார்க்கு - தகுதிஉடையார்க்காயின், தாள் ஆற்றி தந்த பொருள் எல்லாம்-முயறலைச் செய்து ஈட்டிய பொருள் முழுதும், வேளாண்மை செய்தற்பொருட்டு-ஒப்புரவு செய்தற் பயத்தவாம்.

பிறர்க்கு உதவாதார் பொருள் போலத் தாமே உண்டற் பொருட்டும், வைத்து இழத்தற்பொருட்டும் அன்று என்பதாயிற்று.

### உரை வேறுபாடு

**கவிராஜ பண்டிதர்:** தாளாற்றி - நல்லவர்கள் நல்ல உத்தியோகங்களைப் பண்ணி. தக்கார்க்கு-சத்பாத்திரர்களாகிய முனிகளுக்கு.

### ஒப்புமை

**தாளாற்றித் தந்த பொருள்:**

"நோன்ருள் நசைவளன்"
"தாள்படு செல்வம்"
'தாளாற்றலால் செய்த பொருளை யாவர்க்கும் அளித்து.'

(புறநா. 148: 2, 161: 15, 125: 7-8, உரை.) (212)

## 213

புத்தேள் உலகத்தும் ஈண்டும் பெறல்அரிதே
ஒப்புரவின் நல்ல பிற. 3

**பரிமேலழகர் :** புத்தேள் உலகத்தும் ஈண்டும்-தேவர் உலகத்தும் இவ்வுலகத்தும், ஒப்புரவின் நல்ல பிற பெறல் அரிது - ஒப்புரவு போல நல்லன பிற செயல்களைப் பெறுதல் அரிது.

ஈவாரும் ஏற்பாரும் இன்றி எல்லோரும் ஒருதன்மையராதலின் புத்தேளுலகத்து அரிதாயிற்று.[1] யாவர்க்கும் ஒப்பது இதுபோல் பிறிது ஒன்று இன்மையின், இவ்வுலகத்து அரிதாயிற்று. பெறற்கரிது என்று பாடம் ஓதிப் பெறுதற்குக் காரணம் அரிது என்று உரைப்பாரும் உளர்.

இவை மூன்று பாட்டானும் ஒப்புரவினது சிறப்புக் கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**பரிதியார்:** ஒப்புரவுபோலே ஒத்த இன்பம், தெய்வ லோகத்திலும் இல்லை. அது எப்படி என்ருல், தெய்வ லோகத்தில் தானதன்மம், பரோபகாரம் இல்லை. இந்த உலகத்தில் செய்த தானதன்ம பலத்தை அங்கே அநுபவிப்பது உள்ளது என்றவாறு.

1. "ஈவாரும் கொள்வாரும் இல்லாத வானத்து, வாழ்வாரே வன்கணவர்" (குறள், 1058, பரிமேல். மேற்கோள்); புறநா. 38: 12-5; மணி. 14: 40-42.

**கவிராஜ பண்டிதர்:** தேவ லோகத்திலே பிறந்த பேர் திரும்பவும் தேவ லோகத்திலே பிறக்க மாட்டார். அது ஏனென்றால் தேவ ருலகத்தில் ஏற்கிற பேரும் இல்லை; இடுகிற பேரும் இல்லை. எல்லாரும் சரியாயிருக்கிற படியினலே தான தருமங்களைப் பண்ணுகிறதில்லை. தான தருமங்களைப் பண்ணின பேர்களுக்கல்லாமல், மற்றப் பேர்களுக்குத் தேவலோகம் இல்லை யானபடியினலே பூலோகத்திலே பிறந்தவர்கள் தான தருமங்களைப் பண்ண வேணும்.

### ஒப்புமை

**ஒப்புரவு நன்றுதல்:**

"ஒப்புர வறிதலிற் றகுவர வில்லை." (முதுமொழிக். 52.) *(213)*

## 214

ஒத்த தறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும். 4

**பரிமேலழகர்:** *உயிர் வாழ்வான் ஒத்தது அறிவான் - உயிரோடு கூடி வாழ்வானவான் உலக நடையினை அறிந்து செய்வான்; மற்றையான் செத்தாருள் வைக்கப்படும் - அஃது அறிந்து செய்யாதவன் உயிருடையனே யாயினும் செத்தாருள் ஒருவனகக் கருதப்படும்.*

உயிரின் அறிவும் செயலும் காணுமையின், செத்தாருள் வைக்கப் படும் என்றார்.

இதனல் உலகநடை வழு வேதநடை வழுப் போலத் தீர் திறன் உடைத் தன்று என்பது கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**காளிங்கர்:** நெஞ்சை எரிப்பது ஒத்ததாகிய ஒப்புரவு அறிகின்ற வன் யாவன்? மற்று அவனே உயிர் வாழ்கின்றவனவன்; மற்றையான் செத் தாருள் ஒருவனக வைத்து எண்ணப்படுவது எங்ஙனமெனின், பிறர் முக மறிந்து உபகரிக்கும் அன்றே; அதனல் அஃது இல்லாதானும் உயிரும் உணர்வும் உடையான் ஒருவன் அல்லன்; வெறும் நடைப்பிணமே என்று பொருளாயிற்று என்றவாறு. *(214)*

## 215

ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு. 5

**பரிமேலழகர்:** *உலகு அவாம் பேரறிவாளன் திரு-உலக நடையை விரும்பிச் செய்யும் பெரிய அறிவினை உடையவனது செல்வம், ஊருணி நீர் நிறைந்தற்று-ஊரின் வாழ்வார் தண்ணீர் உண்ணும் குளம் நீர் நிறைந்தாற் போலும்.*

நிறைதல் என்னும் இடத்து நிகழ்பொருளின் தொழில் இடத்தின்மேல் ஏற்றப்பட்டது. பாழ்போகாது நெடிது நின்று எல்லார்க்கும் வேண்டுவன தப்பாது உதவும் என்பதாம்.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** உலகு அவாம் பேரறிவாளன் திரு - உலகத்தாரெல் லாராலும் நச்சப்படுகின்ற பெரிய ஒப்புரவு அறிவானது செல்வம்.

**பரிதியார்:** ஊருணி - வானேரி.

**காளிங்கர்:** ஊருணியாகிய பேரேரியும் பெருங்குளமும் முதலிய நீர் புகுந்து நிறைந்து நின்ற அவ்வத் தன்மைத்தே, உலகத்து யாவரும், 'இப் பொருள் நமது' என்று சூழ்ந்துகொள்ளும் தன்மைத்தாகிய பேரறிவாளனது செல்வம். அவாவுதல்-சூழ்தல்.

**கவிராஜ பண்டிதர்:** ஊருணி - நல்ல தண்ணீர்க் குளம்.

### ஒப்புமை

*1.* **ஊருணி நீர் நிறைதலால் பலர் பயன் பெறுதல்:**

"என்றாழ் வியன்குளம் நிறைய வீசிப்
பெரும்பெயல் பொழிந்த ஏம வைகறைப்
பல்லோர் உவந்த உவகை." (அகநா. 42:9-11.)

"ஊருணி நிறையவும்......மறுக்கின் றார்கள்யார்" (கம்ப. மந்திரப். 82.)

2. **நல்லவர் செல்வம் பலருக்குப் பயன்படுதல்:**

"வள்ளிய ராயோர் செல்வம் மன்னுயிர்க் குதவு மன்றே?"
(கம்ப. சேதுபந்தன. 24.)

3. **முற்றும்:**

"ஏரி நிறைந்தனைய செல்வன் கண்டாய்" (அப்பர். மறைக்காடு. 5.)

"ஊருணி யுற்றவர்க்கு." (திருக்கோவையார், 400.) (215)

## 216

**பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்
நயன்உடை யான்கட் படின். 6**

**பரிமேலழகர்:** செல்வம் நயன் உடையான்கண் படின் - செல்வம் ஒப்புரவு செய்வான்கண்ணே படுமாயின், பயன்மரம் உள் ஊர் பழுத்தற்று- அது பயன்படும் மரம் ஊர் நடுவே பழுத்தாற் போலும்.

உலகநீதி பலவற்றுள்ளும் ஒப்புரவு சிறந்தமையின், அதனையே நயன் என்றார். எல்லார்க்கும் எளிதில் பயன் கொடுக்கும் என்பதாம்.

### உரை வேறுபாடு

**பரிதியார்:** பயன்படும் மாமரம், பலாமரம், பனைமரம் ஒருவன் சுதந்தரம் அற்றதாகத் தன்னிலே பழுத்தற்கு ஒக்கும், நல்லோர் செல்வம்.

**கவிராஜ பண்டிதர்:** நயன் உடையான்-அறிவு உடையவன்.

### ஒப்புமை

*1.* **பயன் மரம்:**

"பார்கெழு பழுமரம் பழுத்தற் றாகவும்" (கம்ப. மந்திரப். 82.)

2. **முற்றும்:**

"முன்னூர்ப் பழுனிய கோளியா லத்துப்
புள்ளார் யாணர்த் தற்றே யென்மகன்
வளனுஞ் செம்மலு மெமக்கென நாளும்" (புறநா. 254: 7-9.)

"நடுவூருள் வேதிகைச் சுற்றுக்கோள் புக்க
படுபனை யன்னர் பலர்நச்ச வாழ்வார்"

"—துன்னிக்
குழைகொண்டு தாழ்ந்த குளிர்மரம் எல்லாம்
உழைதங்கண் சென்றார்க்கு ஒருங்கு"

"—பழுமரம்போல்
பல்லார் பயன்துய்ப்பத் தான்வருந்தி வாழ்வதே
நல்லாண் மகற்குக் கடன்" (நாலடி. 96, 167, 202.)

"ஞால நல்லறத் தோர் உண்ணும் பொருள்
போல நின்று பொலிவது பூம்பொழில்
சீல மங்கையர் வாயெனத் தீங்கனி
கால மின்றிக் கனிவது காண்டிரால்." (கம்ப. நாடவிட்ட. 18.) (216)

## 217

மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
பெருந்தகை யான்கட் படின். 7

**பரிமேலழகர்:** செல்வம் பெருந்தகையான்கண் படின்-செல்வம் ஒப்புரவு செய்யும் பெரிய தகைமையை உடையான்கண்ணே படுமாயின், மருந்து ஆகி தப்பா மரத்தற்று-அஃது எல்லா உறுப்பும் பிணிகட்கு மருந்தாய்த் தப்பாத மரத்தை ஒக்கும்.

தப்புதலாவது கோடற்கரிய இடங்களில் நின்றுதல், மறைந்து நின்றுதல், காலத்தான் வேறுபட்டாதல் பயன்படாமை. தன் குறை நோக்காது எல்லார் வருத்தமும் தீர்க்கும் என்பதாம்.

இவை மூன்று பாட்டானும் கடப்பாட்டாளனுடைய பொருள் பயன்படுமாறு கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** தப்பா மரம்-தேடுவார்க்கு மறைதல் இல்லாத மரம்.

**கவிராஜ பண்டிதர்:** பெருந்தகையான் - அறிவு உடையவன்.

### ஒப்புமை

1. **மருந்து மரம்:**

"மரஞ்சா மருந்தும் கொள்ளார் மாந்தர்" (நற். 226: 1.)
"மருந்துகொள் மரத்தின் வாள்வடு மயங்கி" (புறநா. 180: 5.)
"மரமுதல் சாய மருந்துகொண் டாங்கு." (பெருங். 1. 37: 188.)

2. **முற்றும்:**

"வள்ளன்மை பூண்டான்கட் செல்வமும்...
பொத்தின்றிக் காய்த்த மரம்." (திரிகடுகம், 75.) (217)

## 218

இடன்இல் பருவத்தும் ஒப்புரவிற் கொல்கார்
கடன்அறி காட்சி யவர். 8

**பரிமேலழகர்:** இடன் இல் பருவத்தும் ஒப்புரவிற்கு ஒல்கார்-செல்வம்[1] சுருங்கிய காலத்தும் ஒப்புரவு செய்தற்குத் தளரார், கடன் அறி காட்சியவர்-தாம் செய்யத் தகுவனவற்றை அறிந்த இயற்கை அறிவுடையார்.

1. இடன்-செல்வம்; குறள், 910, பதிற். 32: 6, கலி. 2: 19.

பிற எல்லாம் ஒழியினும், இஃது ஒழியார் என்பதாம்.

### உரை வேறுபாடு

**காளிங்கர்:** தமக்கு ஒன்றும் தருதற்கு இடம் இல்லாதவாறு வறுமை வந்துற்ற காலத்தும், ஒப்புரவு செய்தற்கு ஒதுங்குதல் இலர்; யாரெனின், ஒப்புரவு என்னும் கடப்பாட்டினை அறிந்த அறிவினையுடையார்.

கடப்பாடு என்பது முறைப்பாடு. காட்சி என்பது அறிவு.

**கவிராஜ பண்டிதர்:** ஆகமப் பொருளின் தன்மையை அறிந்து குற்றத்தின் நீங்கிய நற் காட்சியுடையவர் தகுதியில்லாத காலத்தும் தான தருமம் செய்யத் தளரார்.

### ஒப்புமை

*முற்றும்:*

"இல்லா இடத்தும் இயன்ற அளவினால்
உள்ள இடம்போற் பெரிதுவந்து மெல்லக்
கொடையொடு பட்ட குணனுடை மாந்தர்க்கு
அடையாவாம் ஆண்டைக் கதவு."

"எற்றொன்றும் இல்லா இடத்தும் குடிப்பிறந்தார்
அற்றுத்தற் சேர்ந்தார்க் கசைவிடத் தூற்றுவர்
அற்றக் கடைத்தும் அகல்யா றகழ்ந்தக்கால்
தெற்றெனத் தெண்ணீர் படும்."

"உறைப்பருங் காலத்து மூற்றுநீர்க் கேணி
இறைத்துணினு மூராற்று மென்பர்—கொடைக்கடனும்
சாஅயக் கண்ணும் பெரியோர்போல் மற்றையார்
ஆஅயக் கண்ணு மரிது."

"உறுபுன றந்துல கூட்டி யறுமிடத்தும்
கல்லூற் றுழியூறு மாறேபோற் செல்வம்
பலர்க்காற்றிக் கெட்டுலந்தக் கண்ணும் சிலர்க்காற்றிச்
செய்வர் செயற்பா லவை." (நாலடி. 91, 150, 184, 185.)

"கூஉய்க் கொடுப்பதொன் றில்லெனினுஞ் சார்ந்தார்க்குத்
தூஉய்ப் பயின்றூரே துன்பந் துடைக்கிற்பார்"

"ஈட்டிய வொண்பொருள் இன்றெனினும் ஒப்புரவு
ஆற்றும் மனைப்பிறந்த சான்றவன்" (பழமொழி, 162, 217.)

"செல்வ மேவிய நாளி லிச்செயல் செய்வ தன்றியு மெய்யினால்
அல்லல் நல்குர வான போதிலும் வல்லர்" (பெரிய. இளையான்குடி. 6.)

"வெள்ளநெடு வாரியற வீசியுள வேனும்
கிள்ளவெழு கின்றபுனல் கேளிரின் விரும்பித்
தெள்ளுபுன லாறுசிறி தேயுதவு கின்ற
உள்ளது மருதுதவும் வள்ளலையு மொத்த."

"தாமுத லோடுங் கெட்டா லொழிவரோ வண்மை தக்கோர்."
(கம்ப. வரைக் காட்சி. 23, சேதுபந்தனப். 18.) (218.)

### 219

**நயன்உடையான் நல்கூர்ந்தான் ஆதல் செயும்நீர
செய்யா தமைகலா வாறு.**

**பரிமேலழர்:** நயன் உடையான் நல்கூர்ந்தான் ஆதல் - ஒப்புரவு செய்தலை உடையான் நல்கூர்ந்தான் ஆதலாவது, செயும் நீர செய்யாது அமைகலா ஆறு-தவிராது செய்யும் நீர்மையை உடைய அவ்வொப்புரவுகளைச் செய்யப் பெறாது வருந்துகின்ற இயல்பாம்.

தான் நுகர்வன நுகரப்பெறாமை அன்று என்பதாம்.

இவை இரண்டு பாட்டானும் வறுமையான் ஒப்புரவு ஒழிதற்பாற்று அன்று என்பது கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**பரிதியார்:** ஒப்புரவாளன் மிடித்தாலும் அற்பமாகிலும் ஒப்புரவு செய்வான். அது எது போலும் எனில், பெருக்காறு விளைவித்து வற்றின தறுவாய்க்கு ஊற்று நீர் கொடுப்பதுபோல.

**காளிங்கர்:** இல்லொழுக்கம் உடையோன் தான் பிறர்க்குச் செய்யத் தகும் ஒப்புரவுகளைச் செய்யாது நல்கூர்ந்தானாவது எப்போது எனில், தனது யாக்கை முடியுமிடத்தல்லது ஒப்புரவுக்கு ஒல்கானாதலால் ஒப்புரவு ஒழியுங் காலத்து உயிர்வாழான். அது எங்ஙனமெனில் பால் புளித்தலும் பகல் இருளாதலும் இல்லையாதலால், நயனுடையான் ஒப்புரவுக்கு இளையான் என்பது கருத்து.

**கவிராஜ பண்டிதர்:** உலக இயற்கையை அறிந்து செய்யாதவர்கள் செல்வம் உடையவராய் இருந்தாலும் தரித்திரவான்கள் ஆவார்கள்.

### ஒப்புமை

**ஒப்புரவின்மையே வறுமை யாதல்:**

"புரப்போர் புன்கண் கூர
இரப்போர்க் கீயா இன்மையான் உறவே."

(புறநா. 72: 17-8.) (219)

## 220

ஒப்புரவி னால்வரும் கேடெனின் அஃதொருவன்
விற்றுக்கோள் தக்க துடைத்து. 10

**பரிமேலழகர்:** ஒப்புரவினால் கேடு வரும் எனின் - ஒப்புரவு செய்தலான் ஒருவனுக்குப் பொருட்கேடு வரும் என்பார் உளராயின், அஃது ஒருவன் விற்றுக்கோள் தக்கது உடைத்து - அக் கேடு தன்னை விற்றாயினும் கொள்ளும் தகுதியை உடைத்து,

தன்னை விற்றுக்கொள்ளப்படுவதொரு பொருள் இல்லை யன்றே; இஃதாயின் அதுவும் செய்யப்படும் என்றது புகழ் பயத்தல் நோக்கி.

இதனால் ஒப்புரவினால் கெடுவது கேடன்று என்பது கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** ஒருவன் ஒப்புரவு செய்தலினாலே பொருட்கேடு வரும் என்று சொல்லின் அக் கேட்டைக் கேடாகச் சேர்த்துக் கொள்ளல் கூடாது; அஃது ஒன்றை விற்று ஒன்றைக் கொள்ளுகின்ற வாணிகமாகக் கொள்ளும் தகுதியுடைத்து.

கேடாயினும் அதனை ஆக்கமாகக் கொள்ளல் தகும், பிற்பயப்பின நன்மையாதலான்.

ஒப்புமை

முற்றும்:

"அடுத்தொன் றிரந்தார்க்கொன் றீந்தாரைக் கொண்டார்
படுத்தேழை யாமென்று போகினும் போக."
(பழமொழி, 218.) (220)

---

## 23. ஈகை

**பரிமேலழகர்:** அஃதாவது வறியராய் ஏற்றார்க்கு மாற்றாது கொடுத்தல். இது மறுமை நோக்கியது ஆகலின், இம்மை நோக்கிய ஒப்புரவறிதலின்பின் வைக்கப்பட்டது.

**மணக்குடவர்:** ஈகையாவது இல்லென இரந்து வந்தார் யாவர்க்கும் வரையாது கொடுத்தல்.

**பரிதியார்:** ஈகையாவது, ஒப்புரவாகிய மேன்முறைமையிலும் கொடுத்தல் விசேஷம் என்றவாறு.

### 221

வறியார்க்கொன் றீவதே ஈகைமற் றெல்லாம்
குறியெதிர்ப்பை நீர துடைத்து. 1

**பரிமேலழகர்:** வறியார்க்கு ஒன்று ஈவதே ஈகை - ஒரு பொருளும் இல்லாதார்க்கு அவர் வேண்டியது ஒன்றைக் கொடுப்பதே பிறர்க்குக் கொடுத்தலாவது; மற்றெல்லாம் குறியெதிர்ப்பை நீரது உடைத்து-அஃது ஒழிந்த எல்லாக் கொடையும் குறியெதிர்ப்பை கொடுக்கும் நீர்மையை உடைத்து.

ஒழிந்த கொடைகளாவன வறியர் அல்லாதார்க்கு ஒரு பயன் நோக்கிக் கொடுப்பன. குறியெதிர்ப்பையாவது அளவு குறித்து வாங்கி அவ் வாங்கிய வாறே எதிர்கொடுப்பது. நீரது என்புழி அது என்பது பகுதிப்பொருள் விகுதி. பின்னும் தன்பால் வருதலின், குறியெதிர்ப்பை கொடுக்கும் நீர துடைத்து என்றார்.

இதனான் ஈகையது இலக்கணம் கூறப்பட்டது.

#### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** ஒன்று - யாதானும் ஒன்று.

**பரிதியார்:** வறியவர்க்குக் கொடுப்பதே கொடை; மற்றதெல்லாம் வட்டிக்குக் கொடுப்பதை ஒக்கும்.[1]

**காளிங்கர்:** வறியவர்க்கு எஞ்ஞான்றும் யாதானும் ஒன்றினைக் கொடுப்பதே கொடையாவது; மற்று இம்மைப் பயனும் மறுமைப்பயனும் கருதிக் கொடுப்பன எல்லாம் தமக்கோர் ஊதியம் குறித்துக் கொடுக்கின்றமையின் அது கொடை அன்று.

#### ஒப்புமை

1. **வறியார்க் கொன்று ஈவதே ஈகை:**

"ஆற்றுத லென்பதொன் றலந்தவர்க் குதவுதல்" (கலி. 133: 6.)

---

1. "இம்மைச் செய்தது மறுமைக் காமெனும்
அறவிலை வணிகன் ஆய் அலன்." (புறநா. 134: 1-2.)

'வறுமையுற்ற எங்களுக்கு ஒன்றை இடுவோரன்றே பயன் கருதாது பிறர்க்கு இடுமவர்களாவார்'

"வறுமைநோக் கின்றவன் கைவண் மையே"

(புறநா. 136, உரை, 141: 15.)

"ஏற்றகை மாற்றாமை யென்னானும் தாம்வரையார்
தாற்றாதார்க் கீவதா மாண்கடன்." (நாலடி. 98.)

2. குறியெதிர்ப்பை:

"நெடுங்குறி யெதிர்ப்பை நல்கி யோர்க்கும்"

"குறித்துமா றெதிர்ப்பை பெறாமையின்" (புறநா. 163: 4, 333: 11.)

"கூற்றுங் குறியெதிர்ப்பை கொள்ளுந் தகைமைத்தே."

(முத்தொள்ளாயிரம்.) (221)

## 222

நல்லா றெனினும் கொளல்தீது மேல்உலகம்
இல்எனினும் ஈதலே நன்று. 2

**பரிமேலழகர்:** கொளல் நல் ஆறு எனினும் தீது - ஏற்றல் வீட்டுலகிற்கு நல்ல நெறி என்பார் உளராயினும் அது தீது; மேல் உலகம் இல் எனினும் ஈதலே நன்று-ஈந்தார்க்கு அவ்வுலகு எய்துதல் இல்லை என்பார் உளராயினும் ஈதலே நன்று.

எனினும் என்பது இருவழியும் அங்ஙனம் கூறுவார்இன்மை விளக்கி நின்றது. பிரிநிலை ஏகாரத்தால் பிற அறங்களின் ஈதல் சிறந்தது என்பது பெற்றாம். நல்லது கூறுவார் தீயதும் உடன்கூறினர்.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** கொள்வோர் அமைதி அறிந்து கொடுக்கவேண்டும் எனினும், இது வரையாது கொடுத்தலாதலால், யாதொருவாற்றானும் கொடை நன்று என்பது கூறிற்று.

**பரிதியார்:** இவர் கையாலே ஏற்றால் புண்ணியம் உண்டு என்று சொன்னாலும் ஏற்பது பொல்லாது;[1] இவர் கையிலே கொடுத்தால் நரகம் என்றாலும் கொடுத்தலே நன்று.

### ஒப்புமை

1. கொளல் தீது:

"ஈஎன இரத்தலோ அரிதே." (புறநா. 154: 8.)

2. முற்றும்:

"ஈஎன இரத்தல் இழிந்தன்று...
கொள்எனக் கொடுத்தல் உயர்ந்தன்று" (புறநா. 204: 1-3.)

"இன்னுயி ரேனும், கொள்ளுதல் தீது கொடுப்பது நன்றால்."

(கம்ப. வேள்வி. 29.) (222)

## 223

இலன்என்னும் எவ்வம் உரையாமை ஈதல்
குலன்உடையான் கண்ணே உள. 3

**பரிமேலழகர்:** இலன் என்னும் எவ்வம் உரையாமை-யான் வறியன் என்று இரப்பான் சொல்லும் இளிவரவைத் தான் பிறர்கட் சொல்லாமையும்,

1. 'நல்லார் எனினும்' என்பது இவர் கொண்ட பாடம்.

ஈதல்-அதனைத் தன்கண் சொன்னார்க்கு மாற்றாது ஈதலும், உள குலன் உடையான்கண்ணே-இவை இரண்டும் உளவாவன குடிப்பிறந்தான்கண்ணே.

மேல் தீது என்றது ஒழிதற்கும், நன்று என்றது செய்தற்கும் உரிய வனை உணர்த்தியவாறு. இனி, 'இலனென்னும் எவ்வம் உரையாமை ஈதல்' என்பதற்கு, அவ் விளிவரவை ஒருவன் தனக்குச் சொல்வதற்கு முன்னே அவன் குறிப்பறிந்து கொடுத்தல் எனவும்,[1] அதனைப் பின்னும் பிறன் ஒருவன்பாற் சென்று அவன் உரையா வகையால் கொடுத்தல் எனவும்,[2] யான் இதுபொழுது பொருளுடையேன் அல்லேன் எனக் கரப்பார் சொல்லும் இளிவரவைச் சொல்லாது கொடுத்தல் எனவும்[3] உரைப்பாரும் உளர். அவர் ஈதல் என்பதனைப் பொருட்பன்மைபற்றி வந்த பன்மையாக உரைப்பர்.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** இரந்து வந்தார்க்கு இலன் என்னாநின்ற துன்பத்தைக் கூறாது ஈதலும் குடிப்பிறந்தான்மாட்டே உளதாம். இது கொடுக்குங்கால் மாறாது கொடுக்கவேண்டும் என்றது.

**பரிதியார்:** தன்னிடத்திலே ஏற்றவன் பிறத்தியிலே போய் எனக்கு என்று சொல்லாதவாறு மிடிதீரக் கொடுப்பது குடிப் பிறந்தார்க்கு வருகிற வித்தை.

**காளிங்கர்:** மற்று எவ்வாற்றானும் தம்மாட்டு வந்தோர் யாவர், மற்று அவர், "எமக்கு வகையிலோம்" என்று சொல்லும் இத்துயருறு சொல்லினைச்

---

1. **காளிங்கர்** கொண்ட உரை இது.

"இல்லது நோக்கி இளிவரவு கூறாமுன்
நல்லது வெஃகி வினைசெய்வார்" (**பரிபா.** 10: 87-8.)

'இரப்பதன்முன்னே அவன் குறிப்பை முகத்தான் உணர்ந்து இதனைக் கொள்வாயாக என்று சொல்லித்தான் இரந்து கொடுத்தல்'
(**புறநா.** 204: 3, **உரை.**)

"இரவாமல் ஈந்த இறைவர்போல்." (**பு. வெ.** 194.)

2. **பரிதியார்** இவ்வாறே உரை கூறினர்.

"நிற்பாடிய அலங்குசெந்நாப்
பிறரிசை நுவலாமை
ஓம்பா தீயும் ஆற்றல் எங்கோ"
"பிறன்கடை மறப்ப நல்குவன் செலினே"

"இரவி னானே யீத்தோன் எந்தை
அன்றை ஞான்றினொடு இன்றி னூங்கும்
இரப்பச் சிந்தியேன்" (**புறநா.** 22: 31-3, 68: 19; 376: 16-8.)

"செருமான வேற்சென்னி தென்னுறந்தை யார்தம்
பெருமான் முகம்பார்த்த பின்னர்—ஒருநாளும்
பூதலத்தோர் தம்மைப் பொருள்நசையாற் பாராவாம்
காதலித்துத் தாழ்ந்திரப்போர் கண்." (**தண்டி.** 20, **மேற்.**)

3. **மணக்குடவர்** கொண்ட உரை இது.

"எமக்கில் என்னார்நின் மறங்கூறு குழாத்தர்" (**பதிற்.** 39: 2.)

"இல்லென்னு தென்றும்
அறப்பயன் யார்மாட்டும் செய்க." (**நாலடி.** 99.)

"இன்மையால் சென்றிரந்தார்க் கில்லையென்னு தீந்துவக்கும்
தன்மையார் ஆக்கூரில் தான்தோன்றி மாடமே."
(**சம்பந்தர்.** ஆக்கூர். 9.)

செவி கேட்பச் சொல்லுதற்கு முன்னமே கொடுத்தல் யாவர் மாட்டுளவோ எனில், குலமரபுடையோன்மாட்டே உளவாம்.

எவ்வம் என்பது துயரம்.

**கவிராஜ பண்டிதர்:** ஞான தியானம், பொருள், பந்துக்கள் முதலியன இல்லையே எனத் துன்பத்தோடு மொழியாத தன்மை ஈகையினால் வரும். அதுவும் உயர்ந்த குலம் உடையவர்களிடமே உளது. (223)

## 224

இன்னா திரக்கப் படுதல் இரந்தவர்
இன்முகம் காணும் அளவு. 4

**பரிமேலழகர்:** இரக்கப்படுதல் இன்னாது - இரத்தலே யன்றி இரக்கப் படுதலும் இனிதன்று, இரந்தவர் இன்முகம் காணும் அளவு - ஒரு பொருளை இரந்தவர் அது பெற்றதனால் இனிதாகிய அவர் முகம் காணும் அளவும்.

எச்சவும்மையும் முற்றும்மையும் விகாரத்தால் தொக்கன.[1] இரக்கப் படுதல்-இரப்பார்க்கு ஈவல் என்று இருத்தல். அதனை இன்னாதென்றது, "எல்லாம்-இரப்பார்க்கொன் றீயாமை"[2] கூடுங்கொல்லோ என்னும் அச்சம் நோக்கி. எனவே, எல்லாப் பொருளும் ஈதல் வேண்டும் என்பது பெறப் பட்டது.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** இது, கொடுக்குங்கால் தாழாது கொடுக்க வேண்டும் என்றது.

**பரிதியார்:** தேகி என்பது பொல்லாது; எவ்வளவும் என்னில், தாதாவானவன் அவன் முகம் காணுமளவும். தேகியின் நகைமுகங் கண்டால் துயரம் கெடும் என்பதாம்.

**கவிராஜ பண்டிதர்:** கருணையுடைய இனிய முகத்தினின்று கூறும் தரும வசனமுடைய அதிதி வருமளவும் பரிதாபம்உடையவர் போலே மனம் இரங்கக் காட்டி முனிகள் வந்தால் பக்தியில்லாது இருக்கிறது பொல்லாங்கு. பிறர் மெச்ச மாயத்தால் காட்டுகின்றது பாபமும் துர்க்கதியும் ஆம்.

### ஒப்புமை

*முற்றும்:*

"பாடுபெறு பரிசிலன் வாடினன் பெயர்தல்என்
நாடிழந் ததனினும் நனியின் னாதென." (புறநா. 165: 10-11.) (224)

## 225

ஆற்றுவார் ஆற்றல் பசிஆற்றல் அப்பசியை
மாற்றுவார் ஆற்றலிற் பின். 5

**பரிமேலழகர்:** ஆற்றுவார் ஆற்றல் பசி ஆற்றல்-தவத்தான் வலியார்க்கு வலியாவது தம்மை உற்ற பசியைப் பொறுத்தல்;[3] அப் பசியை மாற்றுவார் ஆற்றலின் பின்-அவ் வலிதான் அங்ஙனம் பொறுத்தற்கு அரிய பசியை ஈகையால் ஒழிப்பாரது வலிக்குப்பின்.

---

1. இரக்கப்படுதலும் என்பது இறந்தது தழீஇய எச்சவும்மை; காணும் அளவும் என்பது முற்றும்மை.

2. நாலடி. 145.

3. "உண்ணாது நோற்பார் பெரியர்." (குறள், 160.)

தாமும் பசித்துப் பிறரையும் அது தீர்க்கமாட்டாதார் ஆற்றலின், தாமும் பசியாது பிறரையும் அது தீர்ப்பார் ஆற்றல் நன்று என்பதாம்.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** ஆற்றுவார் ஆற்றல் பசியாற்றல் - பெரியாரது பெருமையாவது பசியைப் பொறுத்தல்.

**பரிதியார்:** ஆற்றுவார் பசி ஆற்றலே பெரிது; அவன் சருகு பொசித்துத் தவசு பண்ணுவாரினும் பெரியனும்; எப்படி என்றால் சருகு பொசிப்பார், ஒருவரையும் பசி யாற்ற மாட்டார்; தம் ஆத்துமாவையும் ஒறுப்பார். ஆகையால் இவனுக்கு அவர்கள் சரியல்லர்.

**காளிங்கர்:** தவம் மானம் முதலாகிய அனைத்துக் காரணங்களையும் தாம் இயற்றுகின்ற அறநெறிக்கு வழுவுதல் உண்டாகாமே அவற்றின் மதங்களை ஆற்றி ஒழுகுவாருடைய ஆற்றலின் மிக்க தவமாவது யாதோ எனின், பசியை ஆற்றலாகின்ற பெருந்தவமானது வறியவர் வந்தால் அப் பசிப்பிணிக்கு மருந்தாகிய அமுதம் கொடுத்து மற்று அதனை ஒழிப்பாரது புண்ணியத்திற்குப் பின்.

**கவிராஜ பண்டிதர்:** அப் பசியை மாற்றுவார் ஆற்றலின் பின் - அத்தகைய உத்தமர்களுக்குக் கொடுத்ததான புண்ணியத்திற்குப் பிறகே மற்றத் தருமங்கள்.

### ஒப்புமை

**ஆற்றுவார் ஆற்றல்:** குறள், 891, 985. *(225)*

## 226

அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி. 6

**பரிமேலழகர் :** அற்றார் அழி பசி தீர்த்தல் - வறியாரது மிக்க பசியை[1] அறன் நோக்கித் தீர்க்க; பொருள் பெற்றான் ஒருவன் வைப்புழி அ∴து- பொருள்பெற்றான் ஒருவன் அதனைத் தனக்கு உதவ வைக்கும் இடம் அவ் வறமாகலான்.

எல்லா நன்மைகளும் அழிய வருதலின்,[2] 'அழிபசி' என்றார். 'அறன் நோக்கி' என்பது எஞ்சி நின்றது. அற்றார் அழிபசி தீர்த்த பொருள் பின் தனக்கே வந்து உதவும் என்பதாம்.

---

1. அழி என்பது மிகுதியைக் குறித்தல், 'அழிதரு கம்பலை-மிகுதியைத் தருகின்ற ஓசை' (**மதுரைக்.** 544, **ந.**), 'அழியும்-பெருகும்' (**சீவக.** 1193, **ந.**) என்பவற்றாலும் புலப்படும்.

2. "தொல்வரவுந் தோலுங் கெடுக்குந் தொகையாக
நல்குர வென்னும் நசை" (**குறள்,** 1043.)

"அறிவுகெட நின்ற நல்கூர் மையே" (**புறநா.** 266: 13.)

"குடிப்பிறப் பழிக்கும் விழுப்பங் கொல்லும்
பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉம்
நாணணி களையும் மாணெழில் சிதைக்கும்
...................................
பசிப்பிணி யென்னும் பாவி" (**மணி.** 11: 76-80.)

"மானம் குலம்கல்வி வண்மை அறிவுடைமை
தானம் தவம்முயற்சி தாளாண்மை—தேனின்
கசிவந்த சொல்லியர்மேற் காமுறுதல் பத்தும்
பசிவந் திடப்போம் பறந்து." (**ஔவையார்.**)

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** அழி பசி - குணங்களை அழிக்கும் பசி.

### ஒப்புமை

1. **அழிபசி:**

"அழிபசி வருத்தம்." (*சிறுபாண். 140.*)

2. **முற்றும்:**

"வைத்ததனை வைப்பென் றுணரற்க தாமதனைத்
துய்த்து வழங்கி யிருபாலும்—அத்தகத்
தக்குழி நோக்கி யறம்செய்யின் அஃதன்றே
எய்ப்பினில் வைப்பென் பது." (*பழமொழி, 37.*) (*226*)

## 227

பாத்தூண் மரீஇ யவனைப் பசிஎன்னும்
தீப்பிணி தீண்டல் அரிது. 7

**பரிமேலழகர்:** பாத்து ஊண் மரீஇயவனை-எஞ்ஞான்றும் பகுத்து உண்டல் பயின்றவனை, பசி என்னும் தீ பிணி தீண்டல் அரிது - பசி என்று சொல்லப்படும் தீய நோய் தீண்டுதல் இல்லை.

இவ்வுடம்பினின்று ஞான ஒழுக்கங்களை அழித்து அதனால் வரும் உடம்புகட்கும் துன்பம் செய்தலின், தீப்பிணி எனப்பட்டது. தனக்கு மருத்துவன் தானாகலின், பசிப்பிணி நணுகாது என்பதாம்.

இவை ஆறு பாட்டானும் ஈதலின் சிறப்புக் கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** இஃது ஒருவன் பிறர்க்கு ஈயாது ஒழிகின்றமை, 'ஈந்தால் பொருள் குறையும்; அதனாலே பசியுண்டாம்' என்று அஞ்சியன்றே? அவ்வாறு நினைத்தல் வேண்டா, பகுத்துண்ணப் பசி வராது என்று கூறிற்று.

**பரிதியார்:** பசித்தவர் உண்டோ என்று பார்த்துக் கூட்டிக் கொண்டு வந்து பசியாற்றுவானை இம்மை மறுமைக்கும் பசிப்பிணி தீண்டாது.

### ஒப்புமை

**பாத்தூண்:**

"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்"

"தம்மில் இருந்து தமதுபாத் துண்டற்றால்" (*குறள், 322, 1107.*)

"நட்டார்க்கும் நள்ளா தவர்க்கும் உளவரையால்
அட்டது பாத்துண்டல் அட்டுண்டல்." (*நாலடி. 271.*) (*227*)

## 228

ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல் தாம்உடைமை
வைத்திழக்கும் வன்க ணவர். 8

**பரிமேலழகர்:** தாம் உடைமை வைத்து இழக்கும் வன்கணவர்-தாம் உடைய பொருளை ஈயாது வைத்துப் பின் இழந்துபோம் அருளிலாதார், ஈத்து

உவக்கும் இன்பம் அறியார்கொல்-வறியார்க்கு வேண்டியவற்றைக் கொடுத்து அவர் உவத்தலான் அருள் உடையர் எய்தும் இன்பத்தினைக் கண்டறியார் கொல்லோ?

உவக்கும் என்பது காரணத்தின்கண் வந்த பெயரெச்சம். அஃது இன்பம் என்னும் காரியப்பெயர் கொண்டது. அறிந்தாராயின், தாமும் அவ்வின்பத்தை எய்துவதல்லது வைத்து இழவார் என்பது கருத்து.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** ஈத்து உவக்கும் இன்பம் - கொடுத்த கொடையினால் பெற்றவர்க்கு வரும் முகமலர்ச்சி.

இஃது இடார் இழப்பர் என்றது.

### ஒப்புமை

1. **ஈத்துவக்கும் இன்பம்:**

"ஈதல் இன்பம் வெஃகி" (அகநா. 69: 5.)

"இன்மையாற் சென்றிரந்தார்க் கில்லையென்று தீந்துவக்கும்
தன்மையார் ஆக்கூரில் தான்தோன்றி மாடமே."
(சம்பந்தர். ஆக்கூர். 9)

2. **வைத்து இழத்தல்:**

"செல்வத்துப் பயனே ஈதல்
துய்ப்பேம் எனினே தப்புந பலவே." (புறநா. 189: 7-8.)

"கொன்னே
வழங்கான் பொருள்காத் திருப்பானேல் அஆ
இழந்தானென் றெண்ணப் படும்"

"கொடாஅது
வைத்தீட்டி னார்இழப்பர்." (நாலடி. 9, 10.) (228)

## 229

இரத்தலின் இன்னாது மன்ற நிரப்பிய
தாமே தமியர் உணல். 9

**பரிமேலழகர்:** நிரப்பிய தாமே தமியர் உணல் - பொருட்குறை நிரப்ப வேண்டி வறியார்க்கு ஈயாது தாமே தனித்து உண்டல், இரத்தலின் இன்னாது மன்ற - ஒருவருக்குப் பிறர்பாற் சென்று இரத்தலினும் இன்னாது, ஒருதலையாக.

பொருட்குறை நிரப்பலாவது, ஒரோ எண்களைக் குறித்து இத்துணை ஈட்டுதும் என ஈட்டத்தையே மேற்கொண்டு இவறிக் கூட்டுதல். தனித்தல், பிறரை ஒழித்தல். இரத்தற்குள்ளது அப்பொழுதை இளிவரவே, பின் நல்குரவு இல்லை; தமியர்உண்டற்கு அவை இரண்டும் உளவாமாகலின், 'இரத்தலின் இன்னாது' என்றார். நிரப்பிய என்பதற்குத் தேடிய உணவுகளை என்று உரைப்பாரும் உளர்.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** இரத்தலின் - இரத்தல் போல. தமியராய் என்றது, ஒருவரும் காணமல் என்றது.

**பரிதியார்:** தேகி என்பது பொல்லாது; அதிலும் பொல்லாது தான் பெற்ற செல்வத்தைத் தானே போசித்தல்; அது எப்படி என்றால் தேகி

என்பவன், கொடுப்பார்க்குப் புண்ணியத்தைக் கொடுத்தான்; இவன் தனக்குப் பாவமே தேடினுன்; ஆகையால் இவனுக்குச் சரி அல்ல.

**ஒப்புமை**

1. **இரத்தல் இன்னுது ஆதல்:**

"என்னை இரவூக்கும் இன்னு இடும்பைசெய்தாள்." (கலி. 141: 13-4.)

2. **தமியர் உணல்:**

"இனியவை பெறினே தனிதனி நுகர்கேம்" (பதிற். 38: 13.)

"தமியர் உண்டலும் இலரே." (புறநா. 182: 3.) (229)

## 230

**சாதலின் இன்னுத தில்லை இனிததூஉம்**
**ஈதல் இயையாக் கடை.** 10

**பரிமேலழகர்:** சாதலின் இன்னுதது இல்லை - ஒருவற்குச் சாதல் போல இன்னுதது ஒன்று இல்லை; அதூஉம் ஈதல் இயையாக்கடை இனிது - அத்தன்மைத்தாகிய சாதலும் வறியார்க்கு ஒன்று ஈதல் முடியாதவழி இனிது.

பிறர்க்குப் பயன்படாத உடற்பொறை நீங்குதலான் இனிது என்றுர்.

இவை மூன்று பாட்டானும் ஈயாமையின் குற்றம் கூறப்பட்டது.

**உரை வேறுபாடு**

**மணக்குடவர்:** சாதலின் - சாதலின் மிக்க.

**ஒப்புமை**

1. **சாதல் இன்னுதது:**

"சாதல் அன்ன பிரிவு." (அகநா. 339: 14.)

2. **முற்றும்:**

"இன்மை யுரைத்தார்க் கதுநிறைக்க லாற்ருக்கால்
தன்மெய் துறப்பான் மலை" (கலி. 43: 26-7.)

"உள்கூர் பசியால் உழைநசைஇச் சென்ருர்கட்
குள்ளூர் இருந்தும்ஒன் ருற்ருதான்—உள்ளூர்
இருந்துயிர் கொன்னே கழியாது தான்போய்
விருந்தினன் ஆதலே நன்று." (நாலடி. 288.)

"தூண்டும் இன்னலும் வறுமையும் தொடர்தரத் துயரால்
ஈண்டு வந்துனை யிரந்தவர்க் கிருநிதி யவளை
வேண்டி யீதியோ வெள்குதி யோவிம்மல் நோயால்
மாண்டு போதியோ மறுத்தியோ வெங்ஙனம் வாழ்தி."
(கம்ப. மந்தரை. 72.) (230)

---

# 24. புகழ்

**பரிமேலழகர்:** அஃதாவது இல்வாழ்க்கை முதல், ஈகை ஈருகச் சொல்லப்பட்ட இல்லறத்தின் வழுவாதார்க்கு இம்மைப் பயனுகி இவ் வுலகின்கண் நிகழ்ந்து இறவாது நிற்கும் கீர்த்தி. இது பெரும்பான்மையும் ஈதல் பற்றி வருதலின் அதன்பின் வைக்கப்பட்டது.

## 231

ஈதல் இசைபட வாழ்தல் அதுஅல்ல
தூதியம் இல்லை உயிர்க்கு. 1

**பரிமேலழகர்:** ஈதல் - வறியார்க்கு ஈக; இசைபட வாழ்தல் - அதனால் புகழ் உண்டாக வாழ்க; அது அல்லது உயிர்க்கு ஊதியம் இல்லை-அப் புகழ் அல்லது மக்கள்உயிர்க்குப் பயன் பிறிது ஒன்று இல்லை ஆகலான்.

இசைபட வாழ்தற்குக் கல்வி ஆண்மை முதலிய பிற காரணங்களும் உளவேனும், 'உணவின் பிண்டம் உண்டி முதற்று'[1] ஆகலின் ஈதல் சிறந்தது என்பதற்கு ஞாபகமாக 'ஈதல்' என்றார். உயிர்க்கு என்பது, பொதுப்படக் கூறினரேனும் விலங்குயிர்கட்கு ஏலாமையின், மக்கள் உயிர்மேல் நின்றது.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** புகழ்பட வாழ்தலாவது கொடுத்தல்; அக் கொடையான் அல்லது உயிர்க்கு இலாபம் வேறு ஒன்று இல்லை. இது புகழுண்டாமாறு கூறிற்று.

### ஒப்புமை

1. **ஈதலும் இசையும்:**

"ஈவார்மேல் நிற்கும் புகழ்" (*குறள்*, 232.)

"ஈதல் உள்ளமொ டிசைவேட் குவையே" (*மதுரை*. 205.)

"நசைதர வந்தோர் இரந்தவை
இசைபடப் பெய்தல் ஆற்று வோரே" (*அகநா*. 377: 14-5.)

"இட்டிசை கொண்டறன் எய்த முயன்றோர்." (*கம்ப*. வேள்வி. 32.)

2. **முற்றும்:**

"எய்தற் கரிய தியன்றக்கால் அந்நிலையே
செய்தற் கரிய செயலென்று-வையகத்து
ஈதல் இசைபட வாழ்தல் அதுஅல்லது
ஊதிய மில்லை உயிர்க்கு." (*யா. வி.* 60 மேற்.) (231)

## 232

உரைப்பார் உரைப்பவை எல்லாம் இரப்பார்க்கொன்
றீவார்மேல் நிற்கும் புகழ். 2

**பரிமேலழகர்:** உரைப்பார் உரைப்பவை எல்லாம் - உலகத்து ஒன்று உரைப்பார் உரைப்பன எல்லாம், இரப்பார்க்கு ஒன்று ஈவார்மேல் நிற்கும் புகழ் - வறுமையான் இரப்பார்க்கு அவர் வேண்டியது ஒன்றை ஈவார்கண் நிற்கும் புகழாம்.

புகழ்தான் உரையும் பாட்டும்[2] என இருவகைப் படும். அவற்றுள் உரைப்பார் உரைப்பவை என எல்லார்க்கும் உரிய வழக்கினையே எடுத்தாராயினும், இனம்பற்றிப் புலவர்க்கே உரிய செய்யுளும் கொள்ளப்படும்; பாடவே, பாடுவார் பாடுவன எல்லாம் புகழாம் என்பதூஉம்[3] பெற்றாம். ஈதற்

1. *புறநா*. 18: 20.
2. "உரையும் பாட்டும் உடையோர் சிலரே." (*புறநா*. 27: 5.)
3. "மாட மதுரையும் தருகுவ னெல்லாம்
பாடுகம் வம்மினோ பரிசின் மாக்கள்." (*புறநா*. 32: 5-6.)

காரணம் சிறந்தமை இதனுள்ளும் காண்க. இதனை, 'பிறர்மேலும் நிற்கும் என்பார் எல்லாம் சொல்லுக; புகழ் ஈவார்மேல் நிற்கும்' என்று உரைப்பாரும் உளர். அது புகழது சிறப்பு நோக்காமை அறிக.

### உரை வேறுபாடு

**காளிங்கர்:** உரைப்பார் உரைப்பவையான சுருதியும் மிருதிபுராணமும் கலைகளும் பிறவும் மற்றும் உலகத்தார் நர்வில் பிறக்கும் நல்ல சொற்களும் இவை எல்லாம் வறியோர்க்கு ஒன்று ஈவார்மேல் நிற்கும் புகழ் எனச் சொல்லும்.

**கவிராஜ பண்டிதர்:** உலகத்தார் புராணத்துக்கீர்த்தியாகச் சொல்லுகிறது எல்லாம் அதிதிகளுக்குத் தானம் கொடுத்துத் தான் தேடிய பொருளைப் புத்திரனுக்குக் கொடுத்துத் துறந்து போகி யதி ஆகின்றதே. அதுவே பெருமை; அந்தப் புகழே நிலையானது.

### ஒப்புமை

1. **உரைப்பார் உரைப்பவை:**

"உரைப்பார் உரையுகந்து." (**சுந்தரர்.** அவிநாசி, 4.)

2. **ஈவார்மேல் புகழ் நிற்றல்:**

"ஈவாரைக் கொண்டாடி ஏற்பாரைப் பார்த்துவக்கும்
சேய்மாடக் கூடல்" (**பரிபா.** திரட்டு. 11.)

"கொடைப்பெரும் புகழார்" (**திருவாய்.** 8. 4: 9.)

"இருள்பொழியும் குற்றம் பலவரினும் யார்க்கும்
பொருள்பொழிவார் மேற்றே புகழ்." (**தண்டி.** 47, மேற்.) (232)

## 233

ஒன்றா உலகத் துயர்ந்த புகழ்அல்லால்
பொன்றாது நிற்பதொன் றில். 3

**பரிமேலழகர்:** ஒன்றா உயர்ந்த புகழ் அல்லால் - தனக்கு இணையின்றாக ஓங்கிய புகழல்லது, உலகத்து பொன்றாது நிற்பது ஒன்று இல் - உலகத்து இறவாது நிற்பது பிறிது ஒன்று இல்லை.

இணையின்றாக ஓங்குதலாவது, கொடுத்தற்கரிய உயிர் உறுப்புப் பொருள்களைக் கொடுத்தமைபற்றி வருதலால் தன்னோடு ஒப்பது இன்றித் தானே உயர்தல். அத் தன்மைத்தாகிய புகழே செய்யப்படுவது என்பதாம். இனி, ஒன்றா என்பதற்கு ஒரு வார்த்தையாகச் சொல்லின் எனவும், ஒரு தலையாகப் பொன்றாது நிற்பது எனவும் உரைப்பாரும் உளர்.

இவை மூன்று பாட்டானும் புகழது சிறப்புக் கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**காளிங்கர்:** நிலையாததாகிய இவ் வுலகத்தின்கண் கெடாது நிலை நிற்பது யாதோ எனின், ஓங்கிய புகழ் ஒன்றுமே யல்லது வேறொன்றும் இல்லை.

### மேற்கோள் விளக்கம்

'இனி ஒருவர்க்கு இம்மை மறுமைகட்கு இன்பத்தைத் தந்து பூமி உள்ளளவும் நிற்பது புகழ் என்னலுமாம்' என்று கூறி இதனை மேற்கோள் காட்டுவர் **அடியார்க்கு நல்லார்** (சிலப். 11: 112); இதனால் பொன்றாது நிற்கும்

என்பதற்கு, 'பூமி உள்ளளவும் நிற்கும்' என்று அவர் பொருள் கொண்டார் என்று தெரிகிறது.

ஒப்புமை

**புகழ் நிற்றல்:**

"நில்லா வுலகத்து நிலைமை தூக்கி" (பொருந. 176.)

"பழியும் அஞ்சும் பயமலை நாடன்
நில்லா மையே நிலையிற் றாகலின்
நல்லிசை வேட்ட நயனுடை நெஞ்சில்" (குறுந். 143: 2-4.)

"மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர்
தம்புகழ் நிறீஇத் தாம்மாய்ந் தனரே" (புறநா. 165: 1-2.)

"பொன்றா இயற்கைப் புகழது பெருமையும்" (பெருங். 2: 8: 10.)

"நிலையிலா வுலகில் நின்றவண் புகழை
வேட்டவன் நிதியமே போன்றும்" (சீவக. 2107.)

"ஒருவன திரண்டி யாக்கை ஊன்பயில் நரம்பு போர்த்த
உருவமும் புகழு மென்றாங் கவற்றினூழ் காத்து வந்து
மருவிய உருவம் இங்கே மறைந்துபோம் மற்றை யாக்கை
திருவமர்ந் துலக மேத்தச் சிறந்துபின் நிற்கு மன்றே."

"பொன்று மிவ்வுட லின்பொருட்
டென்று நிற்கும் இரும்புகழ்
இன்று நீர்கழிந் தீர்களாற்
குன்றின் மேற்குடை வேந்திர்காள்."
(சூளா. சீயவதை. 204, அரசியல். 226.)

"பேதைமை யுரைத்தாய் மைந்த வுலகெலாம் பெயரப் பேராக்
காதையென் புகழி னோடும் நிலைபெற."

"வென்றில னென்ற போதும் வேதமுள் ளளவும் யானும்
நின்றுள னன்றோ மற்றவ் விராமன்பேர் நிற்கு மாயின்
பொன்றுத லொருகா லத்தும் தவிருமோ பொதுமைத் தன்றோ
இன்றுளார் நாளை மாள்வார் புகழுக்கு மிறுதி யுண்டோ."
(கம்ப. இந்திரசித்து. 9, 10.) (233)

## 234

**நிலவரை நீள்புகழ் ஆற்றிற் புலவரைப்
போற்றாது புத்தேள் உலகு.** 4

**பரிமேலழகர்:** நில வரை நீள் புகழ் ஆற்றின் - ஒருவன் நில எல்லைக்கண்ணே பொன்றாது நிற்கும் புகழைச் செய்யுமாயின், புத்தேள் உலகு புலவரைப் போற்றாது - புத்தேள் உலகம் அவனை அல்லது தன்னை எய்தி நின்ற ஞானிகளைப் பேணாது.

புகழ் உடம்பான் இவ்வுலகும் புத்தேளுடம்பான் அவ்வுலகும்[1] ஒருங்கே எய்தாமையின், புலவரைப் போற்றாது என்றார். அவன் இரண்டு உலகும் ஒருங்கு எய்துதல், "புலவர் பாடும் புகழுடையோர் விசும்பின், வலவ னேவா வான வூர்தி, எய்துப என்பதஞ் செய்வினை முடித்து"[2] எனப் பிறராலும் சொல்லப்பட்டது.

---

1. "இவணிசை யுடையோர்க் கல்ல தவண
தயர்நிலை யுலகத் துறையு ளின்மை." (புறநா. 50: 14-5.

2. புறநா. 27: 7-8.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** புலவரென்றார் தேவரை, அவர் புலன் உடையாராதலான்.

**பரிதியார்:** பூமியிலே பிறந்தார் புகழுடனே வாழ்வாராயின், தேவர்களைத் தெய்வலோகத்தார் போற்றார், பூமியில் உள்ளாரைப் போற்றுவர். புலவர்-தேவர்கள்.

**காளிங்கர்:** புலவர்-துறவறத்தின்கண் நின்ற புலவராகிய அறிவுடையோர்.

**கவிராஜ பண்டிதர்:** பூமி எல்லையிலே தன்னுடைய கீர்த்தியே அதிகம் என்று சொல்லும் யதியைத் தேவர்கள் துதிக்க மாட்டார்கள்; இகழ்ச்சி பண்ணுவார்கள். தன்னைத் தான் மெச்சுவது கெர்வம்; அந்த யதி நல்ல கதியும் இல்லாது கெடுவான் என்பதாம்.

### ஒப்புமை

**நிலவரை புகழாற்றல்:**

"தொலையா நல்லிசை உலகமொடு நிற்ப" (மலைபடு. 70.)

"மண்ணின்மேல் வான்புகழ் நட்டானும்." (திரி. 16.) (234)

## 235

நத்தம்போல் கேடும் உளதாகும் சாக்காடும்
வித்தகர்க் கல்லால் அரிது.

**பரிமேலழகர்:** நத்தம் (ஆகும்) கேடும் - புகழுடம்பிற்கு ஆக்கமாகும் கேடும், உளது ஆகும் சாக்காடும் - புகழுடம்பு உளதாகும் சாக்காடும், வித்தகர்க்கு அல்லால் அரிது - சதுரப்பாடு உடையார்க்கு அல்லது இல்லை.

நந்து என்னுந் தொழிற்பெயர் விகாரத்தால் நத்து என்றாய், பின் அம் என்னும் பகுதிப்பொருள் விகுதி பெற்று, நத்தம் என்று ஆயிற்று. போல் என்பது ஈண்டு உரையசை. ஆகும் என்பதனை முன்னும் கூட்டி, அரிது என்பதனைத் தனித் தனி கூட்டி யுரைக்க.[1] ஆக்கமாகும் கேடாவது புகழுடம்பு செல்வம் எய்தப் பூதவுடம்பு நல்கூர்தல். உளதாகும் சாக்காடாவது புகழுடம்பு நிற்கப் பூதவுடம்பு இறத்தல். நிலையாதனவற்றான் நிலையின எய்துவார் வித்தகராகலின், வித்தகர்க்கல்லால் அரிது என்றார்.

இவை இரண்டு பாட்டானும் புகழுடையார் எய்தும் மேன்மை கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**பரிதியார்:** சங்கு ஆயிரம் சூழ்ந்த வலம்புரிபோலே, கிளையானது தன்னைச் சூழ வாழ்வது கீர்த்திமானுக்குக் கைவரும்.

**காளிங்கர்:** வலம்புரிச்சங்கானது தன் நிலை குலைந்து பிறர் கைப் படினும் தன் பெருமை குன்றாதது போல, இல்லறம் இயற்றும் நல்லறிவாளர் தாம் வாழும் இடத்தும் கெடும் இடத்தும் தம் புகழ் விளங்கக் கெடுவதோர் கேடும் அதுவே அன்றி மற்று இறந்துபடினும் விரிபுகழ் விளைக்கும் அல்லது மற்றுளோர்க்கு என்றும் அரிது.

---

1. கேடும் சாக்காடும் அரிது என்று முடிப்பின் பன்மை ஒருமை மயக்கம் வருதலின் இங்ஙனம் கூறினர்.

**கவிராஜ பண்டிதர்:** அரிய கேடும் சாக்காடும் வந்தாலும், இராத்திரி போலச் சரீரமும் செல்வம் முதலியவும் நிலையில்லை யென்று சந்தோஷமாக நினைத்துப் போகிறது பெரியோர்க்கு ஆகும். ஜீவ ஸ்வரூபம் தவிர மற்ற வைகளை நிச்சயமாக நினையார்கள்.

### ஒப்புமை

**உளதாகும் சாக்காடு:**

"மண்ணின்மேல் வான்புகழ் நட்டானும்...
சாவா வுடம்பெய்தி னார்" (திரி. 16.)

"மாய்ந்தவர் மாய்ந்தவ ரல்லர்கள் மாயா
தேந்திய கைகொடிரந்தவ ரெந்தாய்
வீந்தவர் என்பவர் வீந்தவ ரேனும்
ஈந்தவ ரல்ல திருந்தவர் யாரே."

"பைந்தா ரெங்கள் இராமன் பத்தினி
செந்தாள் வஞ்சி திறத்தி றந்தவன்
மைந்தா வெம்பி வரம்பில் சீர்த்தியோ
டுய்ந்தா னல்ல துலந்த துண்மையோ."

(கம்ப. வேள்வி. 30, சம்பாதி. 44.) (235)

## 236

தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று. 6

**பரிமேலழகர்:** தோன்றின் புகழொடு தோன்றுக - மக்களாய்ப் பிறக்கின் புகழுக்கு ஏதுவாகிய குணத்தோடு பிறக்க; அஃது இலார் தோன்றலின் தோன்றாமை நன்று - அக்குணம் இல்லாதார் மக்களாய்ப் பிறத்தலின் விலங் காய்ப் பிறத்தல் நன்று.

புகழ்: ஈண்டு ஆகுபெயர்.[1] அஃது இலார் என்றமையின் மக்களாய் என்பதூஉம், மக்களாய்ப் பிறவாமை என்ற அருத்தாபத்தியான் விலங் காய்ப் பிறத்தல் என்பதூஉம் பெற்றாம். இகழ்வார் இன்மை நன்று என்றார்.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** புகழொடு தோன்றுக - புகழுண்டாகப் பிறக்க.

**பரிதியார்:** தோன்றின் புகழொடு தோன்றுக - பிறந்தால் புகழுடன் வாழவேணும்.

**காளிங்கர்:** ஒருவர் தம் புகழ் பரப்புவதாகப் பழியினை நீக்கிப் புகழ் பெறுதலே தோற்றமாவது; அஃதிலார் நானிலத்தின்கண் தாம் மக்கள் உருவு கொண்டு தோன்றுதலின் இறந்து படுதலே பெரிதும் நன்மை யுடைத்து.

### ஒப்புமை

**முற்றும்:**

"துறந்தா யாகில் தூயையு மாதி யுலகத்தே
பிறந்தா யாதி யீதல தில்லைப் பிறிதென்றான்"

1. புகழுக்கு ஏதுவாகிய குணத்துக்கு ஆயினமையின் காரியவாகு பெயர். பிறக்கும் பொழுதே புகழொடு தோன்றுதல் இயலாதாதலின் இவ்வாறு பொருள் கொண்டார்.

"மற்றில தாயினும் மலேந்த வானரம்
இற்றில தாகிய தென்னும் வார்த்தையும்
பெற்றிலம் பிறந்திலம் என்னும் பேரலால்
முற்றுவ தென்னினிப் பழியின் மூழ்கினோம்."

"அறந்தலே ... ... ... ...
மறந்தும்நன் புகழலால் வாழ்வு வேண்டலன்."
(கம்ப. பள்ளியடை. 86, மந்திரப். 14, விபீடணன். 18.) (236)

## 237

புகழ்பட வாழாதார் தம்நோவார் தம்மை
இகழ்வாரை நோவ தெவன். 7

**பரிமேலழகர்:** புகழ்பட வாழாதார் - தமக்குப் புகழ் உண்டாக வாழ மாட்டாதார், தம் நோவார் - அதுபற்றிப் பிறர் இகழ்ந்த வழி இவ்விகழ்ச்சி நம் மாட்டாமையான் வந்தது என்று தம்மை நோவாதே, தம்மை இகழ்வாரை நோவது எவன் - தம்மை இகழ்வாரை நோவது என் கருதி?

புகழ்பட வாழலாயிருக்க அது மாட்டாத குற்றம் பற்றிப் பிறர் இகழ்தல் ஒருதலே யாகலின், இகழ்வாரை என்ருர்.

### உரை வேறுபாடு

**பரிதியார்:** புகழ்பட வாழாதார் - புகழ்பெற வாழவேணும் என்று விரதங்களே நோற்காதவர்கள்.

**காளிங்கர்:** தம்மை இகழ்வாரை - மற்ருெருவர்க்கு ஈயாத பாவியர் என்று இங்ஙனம் தம்மை இகழ்ந்து உரைப்பாரை. (237)

## 238

வசைஎன்ப வையத்தார்க் கெல்லாம் இசைஎன்னும்
எச்சம் பெருஅ விடின். 8

**பரிமேலழகர்:** இசை என்னும் எச்சம் பெருவிடின் - புகழ் என்னும் எச்சம் பெறலாயிருக்க அது பெருது ஒழிவாராயின், வையத்தார்க்கு எல்லாம் வசை என்ப - வையகத்தோர்க்கெல்லாம் அதுதானே வசை என்று சொல்லுவர் நல்லோர்.

எச்சம் என்ருர், செய்தவர் இறந்துபோகத் தான் இறவாது நிற்றலின்.[1] இகழப்படுவதற்குப் பிறிதொரு குற்றம் வேண்டா என்பது கருத்து.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** இசை என்னும் எச்சம் - புகழாகிய ஒழிபு.

**பரிதியார்:** கீர்த்தியுடனே வாழ அறியாதார் பெறுவது எது என்னில், வசை.

**காளிங்கர்:** எச்சம் - பெருஞ்செல்வம். (238)

## 239

வசைஇலா வண்பயன் குன்றும் இசைஇலா
யாக்கை பொறுத்த நிலம். 9

1. குறள், 233, ஒப்புமை பார்க்க.

**பரிமேலழகர்:** இசை இலா யாக்கை பொறுத்த நிலம் - புகழ் இல்லாத உடம்பைச் சுமந்த நிலம், வசை இலா வண் பயன் குன்றும் - பழிப்பு இல்லாத வளப்பத்தையுடைய விளையுள் குன்றும்.

உயிர் உண்டாயினும் அதனல் பயன் கொள்ளாமையின் யாக்கை எனவும், அது நிலத்திற்குப் பொறையாகலின் பொறுத்தல் எனவும் கூறினர். விளையுள் குன்றுதற்கு ஏது பாவயாக்கையைப் பொறுக்கின்ற வெறுப்பு. குன்றும் என இடத்து நிகழ் பொருளின் தொழில் இடத்தின்மேல் நின்றது.

இவை நான்கு பாட்டானும் புகழ் இல்லாதாரது தாழ்வு கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**காளிங்கர்:** இசை இலா யாக்கை - புகழ் இயற்றுதல் இல்லாத ஆக்கையை உடைய மூர்க்கன். *(239)*

## 240

வசைஒழிய வாழ்வாரே வாழ்வார் இசைஒழிய
வாழ்வாரே வாழா தவர். 10

**பரிமேலழகர்:** வசை ஒழிய வாழ்வாரே வாழ்வார்-தம்மாட்டு வசை உண்டாகாமல் வாழ்வாரே உயிர் வாழ்வார் ஆவர்; இசை ஒழிய வாழ்வாரே வாழாதவர் - புகழ் உண்டாகாமல் வாழ்வாரே இறந்தார் ஆவர்.

வசை ஒழிதலாவது இசை என்னும் எச்சம் பெறுதல் ஆயினமையின், இசை ஒழிதலாவது வசை பெறுதலாயிற்று. மேல் இசையிலா யாக்கை என்றதனை விளக்கியவாறு. இதனல் இவ்விரண்டும் உடன் கூறப்பட்டன.

மறுமைப் பயன், "வானுறையுந் தெய்வத்துள் வைக்கப்படும்"[1] என மேலே கூறப்பட்டது. படவே, இல்லறத்திற்கு இவ்வுலகில் புகழும், தேவருலகில் போகமும் பயன் என்பது பெற்றும்.

இனி, மனு முதலிய அறநூல்களால் பொதுவாகக் கூறப்பட்ட இல்லறங்களெல்லாம் இவர் தொகுத்துக் கூறிய இவற்றுள்ளே அடங்கும். அஃது அறிந்து அடக்கிக் கொள்க; யாம் உரைப்பின் பெருகும்.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** இது புகழ் இல்லார் பிணத்தோடு ஒப்பர் என்றது.

**பரிதியார்:** வசை யில்லாமல் வாழ்கின்றது வாழ்வுக்கு லட்சணம்; அதுவன்றியே வித்தையும் புத்தியுடனும் வாழ்கின்றது, அதிலும் பெரியது.

**காளிங்கர்:** ஏற்பவர்க்கு ஈயாப் பெரும்பாவியர் இவர் என்று சொல்லும் வழுவுரை தமக்கு இலதாக வாழ்வாரே ஈண்டு உயிர் வாழ்வார் என்று யாவராலும் சொல்லப்படுவார்; ஆதலால் யாவர்க்கும் உபகரிக்கும் பெரும் புகழாளர் இவர் என்று யாவரும் சொல்லும் புகழ்க்துரை தமக்கு இலதாமாறு வாழ்வாரே ஈண்டு உயிர்வாழாத நடைப்பிணம்.

### ஒப்புமை

1. புகழொடு வாழ்வார்:
"வாழ்வார் வாழ்வெய்தி ஞாலம் புகழவே." (திருவாய். 3. 3:11.)

1. குறள், 50.

2. முற்றும்:

"வழிகெட வரினும் தத்தம் வாழ்க்கைதேய்ந் திறினும் மார்பம்
கிழிபட அயில்வேல் வந்து கிழிப்பினும் சான்ஞேர் கேட்கும்
மொழிகொடு வாழ்வ தல்லால் முறைகெடப் புறநின் ருர்க்குப்
பழிபட வாழ்கிற் பாரும் பார்த்திப ருளரோ பாவம்."

(கம்ப. மாயாசனகப். 66.) (240)

---

## துறவற இயல்

பரிமேலழகர்: இனி முறையானே துறவறம் கூறத் தொடங்கினர். துறவறமாவது மேற்கூறிய இல்லறத்தின் வழுவாது ஒழுகி அறிவுடையராய்ப் பிறப்பினை அஞ்சி வீடுபேற்றின் பொருட்டுத் துறந்தாருக்கு உரித்தாய அறம். அதுதான் வினைமாசு தீர்ந்து அந்தக்கரணங்கள் தூய ஆதற் பொருட்டு அவரால் காக்கப்படும் விரதங்களும், அவற்ருன் அவை தூயவாய வழி உதிப்பதாய ஞானமும் என இருவகைப்படும்.

### விரதம்

அவற்றுள் விரதங்களாவன இன்ன அறஞ்செய்வல் எனவும், இன்ன பாவம் ஒழிவல் எனவும் தம் ஆற்றலுக்கு ஏற்ப வரைந்து கொள்வன. அவை தாம் வரம்பிலவாகலின் பெருகுமென்று அஞ்சி, அவை தம்முள்ளே பலவற் றையும் அகப்படுத்து நிற்கும் சிறப்புடையன சிலவற்றை ஈண்டுக் கூறுவான் தொடங்கி, முதற்கண் அருளுடைமை கூறுகின்ருர்.

# 25. அருளுடைமை

பரிமேலழகர்: தொடர்பு பற்ருது இயல்பாக எல்லா உயிர்கள் மேலும் செல்வதாகிய கருணை. இல்லறத்திற்கு அன்புடைமை போல இது துறவத் திற்குச் சிறந்தமையின் முற்கூறப்பட்டது.

மணக்குடவர்: அருளுடைமையாவது யாதானும் ஓர் உயிர் இடர்ப் படின் அதற்குத் தன்னுயிர்க்கு உற்ற துன்பத்தினுல் வருந்துமாறுபோல வருந்தும் ஈரமுடைமை.

பரிதியார்: அருளுடைமையாவது வானப்பிரஸ்தம்.

காளிங்கர்: இனி மற்று இவ் வில்லறத்தின் பின்னரே துறவறம் அறிவிப்பான் எடுத்துக்கொண்டார்; அஃதாவது மேல் வருகின்ற துறவறத் துக்கெல்லாம் முதற்காரணம் ஒருவன் தன் நெஞ்சத்து அருளுடைமை யாகலானும், அனைத்துயிர்க்கும் ஒப்ப நிகழ்வதாகிய அருள் இல்வழி மற்று அவர் செய்யும் தவம் வஞ்சனை உடைத்தாய் அஞ்சத்தக்கது ஆகலானும், துறவறம் பூண்பார்க்கு நிறையருள் வேண்டும் என்பதனுனும் அதனை அறிவிக்கின்றது அருளுடைமை என்னும் அதிகாரம்.

### 241

**அருட்செல்வம் செல்வத்துட் செல்வம் பொருட்செல்வம்
பூரியார் கண்ணும் உள. 1**

பரிமேலழகர்: செல்வத்துள் செல்வம் அருள் செல்வம் - செல்வங்கள் பலவற்றுள்ளும் ஆராய்ந்து எடுக்கப்பட்ட செல்வமாவது அருளான் வரும்

செல்வம், பொருள் செல்வம் பூரியார்கண்ணும் உள - அ∴து ஒழிந்த பொருளான் வரும் செல்வங்கள் இழிந்தார்கண்ணும் உளவாம் ஆகலான்.

அருளான் வரும் செல்வமாவது, உயிர்களை ஓம்பி அவ்வறத்தான் மேம்படுதல். உயர்ந்தார்கண்ணே யல்லது இல்லாத அருட்செல்வமே சிறப்புடைய செல்வம்; ஏனை நீசர்கண்ணும் உளவாம் பொருட்செல்வங்கள் சிறப்பில என்பதாம்.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** இஃது அருள்நிலை கூறிற்று.

**பரிதியார்:** செல்வமாவது, மெய் வாய் கண் மூக்குச் செவி என்க; இதிற் பெரிய செல்வம் அருட்செல்வம் என்க. பொருட் செல்வம் அறிவிலாதவரிடத்தும் உண்டென்று அறிக.

**காளிங்கர்:** பொருளாகிய செல்வம் உலகத்து, குலமக்கட்கும் கீழ் மக்கட்கும் மற்று அறிவுடையோர்க்கும் அறிவுகேடர்க்கும் ஒப்பதாக வந்து எய்துமாதலால் மற்று இது சிற்றின்பம் பயக்குமதுவே யாதலால் கற்றுணர்ந்தோர் இதனைச் செல்வம் என்று கருதார்; இனி அருட்செல்வமானது அளவிறந்த இன்பம் பயப்பதொன்று ஆதலான் இதனை என்றும் அழியாத செல்வம் என்று கொள்வர் அறிவுடையோர்.

### மேற்கோள் விளக்கம்

'அருளுடைமையாவது யாதாவது ஓர் உயிர் இடர்ப்படுமிடத்துத் தன் உயிர் வருந்தினாற் போல வருந்தும் ஈரம் உடைமை' என்று கூறி இதனை மேற்கோள் காட்டுவர் **இளம்பூரணர்** (**தொல்.** பொருள். 75.)

### ஒப்புமை

**முற்றும்:**

"பொருளினி யுணர வேறு புறத்துமொன் றுண்டோ புந்தித்
தெருளினை யுடைய ராகிற் செயலருங் கருணைச் செல்வம்."

(**கம்ப.** நாகபாசப். 268.) (241)

## 242

நல்லாற்றான் நாடி அருள்ஆள்க பல்லாற்றான்
தேரினும் அஃதே துணை. 2

**பரிமேலழகர்:** நல்லாற்றான் நாடி அருள் ஆள்க - அளவைகளானும் பொருந்துமாற்றானும் நன்றான நெறியிலே நின்று நமக்குத் துணையாம் அறம் யாதென்று ஆராய்ந்து அருளுடையராக; பல்லாற்றான் தேரினும் துணை அ∴தே - ஒன்றை ஒன்று ஒவ்வாத சமயநெறிகள்[1] எல்லாவற்றானும் ஆராய்ந்தாலும் துணையாவது அவ்வருளே; பிறிது இல்லை.

அளவைகளாவன பொறிகளாற் காணும் காட்சியும், குறிகளான் உய்த்துணரும் அநுமானமும், கருத்தாமொழியாகிய ஆகமமும் என மூன்று. ஒப்புப்பற்றி உணரும் உவமையும், இங்ஙனம் அன்றாயின் இது கூடாது என்றுணரும் அருத்தாபத்தியும், உண்மைக்கு மாறாய இன்மையும் என இவற்றைக் கூட்டி ஆறு என்பாரும் உளர்.[2] இவையும் ஒருவாற்றான் அவற்றுள்ளே அடங்குதலின், மூன்றென்றலே கருத்து. பொருந்துமாறாவது இது கூடும், இது

1. **குறள்**, 21, உரை பார்க்க.

2. இவற்றை வட மொழியில் பிரத்தியட்சம், அநுமானம், சாப்தம், திருஷ்டாந்தம், அருத்தாபத்தி, அநுபலத்தி என்பர்.

கூடாது எனத் தன்கண்ணே தோன்றுவது; இதனை வடநூலார் யுத்தி என்ப. ஆற்றான் என்பது வேற்றுமை மயக்கம். ஒன்றை ஒன்று ஒவ்வாமையாவது, மத வேறுபாட்டான் அளவைகளும் பொருள்களும் தம்முள் மாறுகோடல்; அன்னவாயினும் அருள் துணை என்றற்கண் ஒக்கும் என்பதாம். உயிரை விட்டு நீங்காது இருமையினும் உதவலின், துணை என்றார்.

இவை இரண்டு பாட்டானும் அருளினது சிறப்புக் கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** நல்லாற்றான் நாடி அருள் ஆள்க என்றது அருளுடைமை உண்டாகப் பல அறங்களையுஞ் செய்க; இஃது அருளுடைமை வேண்டும் என்றது.

**பரிதியார்:** நல்ல நெறி எதுவாகும் என்று விசாரிக்கில், எல்லார்க்கும் கிருபை பாலித்தலே பெரியது. (242)

## 243

அருள்சேர்ந்த நெஞ்சினார்க் கில்லை இருள்சேர்ந்த
இன்னா உலகம் புகல். 3

**பரிமேலழகர்:** இருள் சேர்ந்த இன்னா உலகம் புகல் - இருள் செறிந்த துன்ப உலகத்துள் சென்று புகல், அருள் சேர்ந்த நெஞ்சினார்க்கு இல்லை - அருள் செறிந்த நெஞ்சினை உடையார்க்கு இல்லை.

இருள் செறிந்த துன்ப உலகம் என்றது, திணிந்த இருளையுடைத்தாய்த் தன்கட் புக்கார்க்குத் துன்பம் செய்வதோர் நரகத்தை; அது கீழ் உலகத்துள் ஓரிடமாகலின் உலகம் எனப்பட்டது.[1]

### உரை வேறுபாடு

**பரிதியார்:** சர்வரிடத்திலும் கிருபை ஆள்பவர்க்கு நரக லோகம் இல்லை; தெய்வலோகம் சித்திக்கும்,

**காளிங்கர்:** இருள் சேர்ந்த இன்னா உலகம் - உணராமை காரணமாக வந்து சேர்ந்த இன்னாங்குடைய உலகங்கள். (243)

## 244

மன்உயிர் ஓம்பி அருள்ஆள்வாற் கில்என்ப
தன்உயிர் அஞ்சும் வினை. 4

**பரிமேலழகர்:** மன் உயிர் ஓம்பி அருள் ஆள்வாற்கு - நிலைபேறுடைய உயிர்களைப் பேணி அவற்றின்கண் அருளுடையன் ஆவானுக்கு, தன் உயிர் அஞ்சும் வினை இல் என்ப - தன் உயிர் அஞ்சுதற்கு ஏதுவாகிய தீவினைகள் உளவாகா என்று சொல்லுவர் அறிந்தோர்.

உயிர்களெல்லாம் நித்தமாகலின், மன்னுயிர் என்றார். அஞ்சுதல்-துன்பம் நோக்கி அஞ்சுதல். அன்ன அறத்தினேன் கொலை முதலிய பாவங்கள் செய்யான்; எனவே மறுமைக்கண் நரகம் புகாமைக்கு ஏது கூறியவாறாயிற்று.

1. குறள், 121, உரை பார்க்க.

உரை வேறுபாடு

**பரிதியார்:** தம் உயிர் போலே எல்லாரையும் பரிந்து பார்த்து நடப் பார்க்கு, எந்தக் காலத்திலும் வினை இல்லை.

**காளிங்கர்:** தன் உயிர் அஞ்சும் வினை - தனது உயிர் விட்டின்பத் தின்கண் செல்லுமிடத்துத் தான் அஞ்சுவதோர் காரியம். (244)

## 245

அல்லல் அருள்ஆள்வார்க் கில்லை வளிவழங்கும்
மல்லல்மா ஞாலம் கரி. 5

**பரிமேலழகர்:** அருள் ஆள்வார்க்கு அல்லல் இல்லை - அருள் உடை யார்க்கு இம்மையினும் ஒரு துன்பம் உண்டாகாது; வளி வழங்கும் மல்லல் மா ஞாலம் கரி - அதற்குக் காற்று இயங்குகின்ற வளப்பத்தை உடைய பெரிய ஞாலத்து வாழ்வார் சான்று.

சான்றாவார், தாம் கண்டு தேறிய பொருளைக் காணாதார்க்குத் தேற்று தற்கு உரியவர். அருள்ஆள்வார்க்கு அல்லல் உண்டாக ஒரு காலத்தும் ஓரிடத் தும் ஒருவரும் கண்டறிவார் இன்மையின், இன்மை முகத்தான் ஞாலத்தார் யாவரும் சான்று என்பார், 'வளிவழங்கும் மல்லன்மா ஞாலம் கரி' என்றார். எனவே, இம்மைக்கண் என்பது பெற்றாம். ஞாலம்: ஆகுபெயர்.

இவை மூன்று பாட்டானும் அத் துணை யுடையார்க்கு இருமையினும் துன்பம் இல்லாமை கூறப்பட்டது.

உரை வேறுபாடு

**மணக்குடவர்:** இஃது அருளுடையார்க்கு அல்லல் இன்மை உலகத் தார்மாட்டே காணப்படும் என்றது.

**கவிராஜ பண்டிதர்:** ஞாலம் கரி - பெரிய பூமிகளிலே வாழ்கிறவர் களும் அருகனும் சாட்சி. (245)

## 246

பொருள்நீங்கிப் பொச்சாந்தார் என்பர் அருள்நீங்கி
அல்லவை செய்தொழுகு வார். 6

**பரிமேலழகர்:** அருள் நீங்கி அல்லவை செய்து ஒழுகுவார் - உயிர் கண்மாட்டுச் செய்யப்படும் அருளைத் தவிர்ந்து தவிரப்படும் கொடுமைகளைச் செய்து ஒழுகுவாரை, பொருள் நீங்கி பொச்சாந்தார் என்பர் - முன்னும் உறுதிப் பொருளைச் செய்யாது தாம் துன்புறுகின்றமையை மறந்தவர் என்று சொல்லுவர் நல்லோர்.

உறுதிப்பொருள், அறம். துன்புறுதல், பிறவித் துன்பம் மூன்றனையும் அநுபவித்தல்.[1] மறந்திலராயின், அவ்வாறு ஒழுகார் என்பது கருத்து.

உரை வேறுபாடு

**மணக்குடவர்:** பொருள் நீங்கிப் பொச்சாந்தார் - இப்பிறப்பின்கண் பொருளினின்று நீங்கி மறவியும் உடையவர்.

---

1. 'பிறவித் துன்பங்களாவன தன்னைப் பற்றி வருவனவும், பிற உயிர்களைப் பற்றி வருவனவும், தெய்வத்தைப் பற்றி வருவனவும் என மூவகையான் வரும் துன் பங்கள்.' (குறள், 4, பரிமேல்.)

**காளிங்கர்:** மெய்ப்பொருளாகிய இதனை நீங்கி மற்று இதனை இகழ்ந்துவிடுவார் என்று சொல்லுவர் சான்றோர்; யாரை எனின், அருள் நீங்கி அஃது அல்லனவற்றையே செய்து பின்னும் மீட்சி விகாரமின்றியே மறித்து அதன்கண்ணே ஒழுகுகின்ற அறிவில்லாதாரை. பொச்சாப்பு என்பது இகழ்ச்சி. *(246)*

## 247

அருள்இல்லார்க் கவ்வுலகம் இல்லை பொருள்இல்லார்க்
கில்வுலகம் இல்லாகி யாங்கு. 7

**பரிமேலழகர்:** அருள் இல்லார்க்கு அவ்வுலகம் இல்லை - உயிர்கள்மேல் அருள் இல்லாதார்க்கு வீட்டுலகத்து இன்பம் இல்லை, பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல் ஆகி ஆங்கு - பொருள் இல்லார்க்கு இவ்வுலகத்து இன்பம் இல்லையாயினாற்போல.

அவ்வுலகம், இவ்வுலகம் என்பன ஆகுபெயர். இவ்வுலகத்து இன்பங் கட்குப் பொருள் காரணம் ஆனாற்போல, அவ்வுலகத்து இன்பங்கட்கு அருள் காரணம் என்பதாயிற்று.

### உரை வேறுபாடு

**பரிதியார்:** அவ்வுலகம் - தெய்வலோகம்.

### ஒப்புமை

**பொருள் இல்லார்க்கு இவ்வுலக இன்பம் இன்மை:**

"இன்மை எனஒரு பாவி மறுமையும்
இம்மையும் இன்றி வரும்." *(குறள், 1042.)*

"இல்லோன் இன்பம் காமுற் றாஅங்கு" *(குறுந். 120: 1.)*

"ஒத்த குடிப்பிறந்தக் கண்ணும்ஒன் றில்லாதார்
செத்த பிணத்திற் கடை" *(நாலடி. 281.)*

"மாடு தான தில்லெனின் மானுடர்
பாடு தான்செல்வா ரில்லை" *(அப்பர். கொண்டீச்சரம், 3.)*

"எட்டானும் பத்தானும் இல்லாதார்க் கிவ்வுலகில் இன்ப மேபோல்
ஒட்டாவே கண்டீர்." *(சீவக. 1549.) (247)*

## 248

பொருள்அற்றார் பூப்பர் ஒருகால் அருள்அற்றார்
அற்றார்மற் றாதல் அரிது. 8

**பரிமேலழகர்:** பொருள் அற்றார் ஒரு கால் பூப்பர் - ஊழான் வறியர் ஆயினார் அது நீங்கிப் பின் ஒரு காலத்துச் செல்வத்தால் பொலிவர்; அருள் அற்றார் அற்றார் மற்று ஆதல் அரிது - அவ்வாறு அன்றி அருள் இல்லாதார் பாவம் அருமையின் அழிந்தாரே; பின் ஒரு காலத்தும் ஆதல் இல்லை.

மற்று, வினைமாற்றின்கண் வந்தது. மேல் பொருள் இன்மையோடு ஒருவாற்றான் ஒப்புமை கூறினாராகலின், அது மறுத்து, பிறவாற்றான் அதனினும் கொடிது என்பது கூறியவாறு.

### உரை வேறுபாடு

**பரிதியார்:** அருள் அற்றார் அற்றார் - அருளற்றார் நரகத்து மாக்கள் ஆவர்.

## 249

தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்றால் தேரின்
அருளாதான் செய்யும் அறம். 9

**பரிமேலழகர் :** அருளாதான் செய்யும் அறம் தேரின் - உயிர்கள் மாட்டு அருள் செய்யாதவன் செய்யும் அறத்தை ஆராயின், தெருளாதான் மெய் பொருள் கண்டு அற்று - ஞானம் இல்லாதவன் ஒருகால் மெய்ப்பொருளை உணர்ந்தாற்போலும்.

மெய்ப்பொருள் - மெய்ந்நூலில் சொல்லும் பொருள். நிலைபெற்ற ஞானம் இல்லாதவன் இடையே மெய்ப்பொருளை உணர்ந்தால் அதனைத் தன் ஞானம் இன்மையால் தானே அழித்துவிடும்; அதுபோல அருளாதான் இடையே அறம் செய்தால் அதனைத் தன் அருளாமையால் தானே அழித்து விடும் என்பதாயிற்று. ஆகவே, பிற அறங்கட்கெல்லாம் அருளுடைமை மூலம் என்பது பெற்றும்,

இவை நான்கு பாட்டானும் அத்துணை இல்லாதார்க்கு வரும் குற்றம் கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**பரிதியார் :** குழந்தை கையில் மாணிக்கம் என்று அறிக, அறிவில்லா தான் செய்யும் தன்மம்.

**காளிங்கர்:** மெய்ப்பொருள் - வீட்டின்ப மென்னும் மெய்ப்பொருள், அறம் - துறவறம். (249)

## 250

வலியார்முன் தன்னை நினைக்கதான் தன்னின்
மெலியார்மேல் செல்லும் இடத்து. 10

**பரிமேலழகர்:** வலியார் முன் தன்னை நினைக்க - தன்னின் வலியார் தன்னை நலிய வரும் பொழுது அவர்முன் தான் அஞ்சி நிற்கும் நிலையினை நினைக்க, தான் தன்னின் மெலியார்மேல் செல்லும் இடத்து - அருள் இல்லாதவன் தன்னின் எளியார்மேல் தான் நலியச் செல்லும் பொழுது.

மெலியார் எனச் சிறப்புடைய உயர்திணைமேல் கூறினாராயினும், ஏனை அஃறிணையும் கொள்ளப்படும். அதனை நினைக்கவே, இவ்வுயிருக்கு அவ்வாறே அச்சமாம் என்று அறிந்து அதன்மேல் அருள்உடையன் ஆம் என்பது கருத்து.

இதனால் அருள் பிறத்தற்கு உபாயம் கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**பரிதியார் :** தான் தனக்கு எளியார்மேல் கோபிக்கும் கோபத்தைத் தனக்கு வலியாரிடத்திலே சென்று அறிக.

**காளிங்கர்:** தன்னை நினைக்க - அவரால் உறும் துயர், இழிவு, எளிமை, இவையிற்றை நினைத்துக் கொள்க. (250)

---

# 26. புலால் மறுத்தல்

**பரிமேலழகர்:** அஃதாவது ஊன் உண்டலை ஒழிதல். கொலைப் பாவத்தைப் பின்னும் உளதாக்கலின் அதற்குக் காரணம் ஆதலையும், முன்னும் அதனான் வருதலின் அதன் காரியம் ஆதலையும் ஒருங்கு உடைத்தாய ஊன் உண்டல் அருள் உடையார்க்கு இயைவது அன்று; ஆகலின் அதனை விலக்குதற்கு, இஃது அருளுடைமையின் பின் வைக்கப்பட்டது.

**மணக்குடவர்:** புலால் தின்றால் அருள் இல்லையாம் என்பதனால் புலாலை விடுக.

**பரிதியார்:** சர்வாத்மாக்களிடத்திலும் அருள் உண்டாகில் புலால் மறுக்கவேணும்.

**கவிராஜ பண்டிதர்:** தயை இல்லாதவன் என்ன தர்மம் பண்ணினாலும், தானம் தபசு பண்ணினாலும் ஒரு பலனும் இல்லாமல் சாம்பலிலே வார்த்த நெய் போலாம் என்பதாம்.

### 251

தன்ஊன் பெருக்கற்குத் தான்பிறி தூன்உண்பான்
எங்ஙனம் ஆளும் அருள். 1

**பரிமேலழகர்:** தன் ஊன் பெருக்கற்கு தான் பிறிது ஊன் உண்பான் - தன் உடம்பை வீக்குதற் பொருட்டுத் தான் பிறிது ஓர் உயிரின் உடம்பைத் தின்பவன், எங்ஙனம் ஆளும் அருள் - எவ்வகையான் நடத்தும் அருளினை?

பயன் இல்லாத ஊன் பெருக்கலைப் பயன் எனக் கருதி இக் கொடுமை செய்வானே அறிவு இலாத கொடியோன் என்றவாறு ஆயிற்று. எங்ஙனம் ஆளும் அருள் என்பது, ஆளான் என்பது பயப்ப நின்ற இகழ்ச்சிக் குறிப்பு.

#### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** 'ஊன் உண்ண அருள் கெடுமோ?' என்றார்க்கு, இது கூறப்பட்டது.

**காளிங்கர்:** பிறிது ஊன் - பிறிது ஒன்றினது ஊன்.

**கவிராஜ பண்டிதர்:** ஒரு பலனும் இல்லாத உடம்பைப் பருக்க வேண்டுமென்று கொடிய பாவங்களைச் செய்கிறவனே அறிவு இல்லாதவன்.

#### ஒப்புமை

**தன் ஊன் பெருக்கற்குத் தான் பிறிது ஊன் உண்ணுதல்:**
*"ஊனைத்தின் றூனைப் பெருக்காமை முன்னினிதே"* (**இனியவை. 5.**)
*"ஊனைத்தின்று ஊனைப் பெருக்கல்முன் இன்னா"* (**இன்னா.**)
*"ஓர்த்துடம்பு பேருமென் றூனவாய் உண்ணுனேல்"* (**சிறுபஞ்ச. 18.**)
*"ஊன்சுவைத் துடம்பு வீக்கி நரகத்தில் உறைதல்."*
(**சீவக. 1235.**) (251)

### 252

பொருள்ஆட்சி போற்றாதார்க் கில்லை அருள்ஆட்சி
ஆங்கில்லை ஊன்தின் பவர்க்கு. 2

**பரிமேலழகர்:** பொருள் ஆட்சி போற்றாதார்க்கு இல்லை - பொருளால் பயன் கோடல் அதனைப் பாதுகாவாதார்க்கு இல்லை; ஆங்கு அருள் ஆட்சி ஊன் தின்பவர்க்கு இல்லை - அதுபோல அருளால் பயன்கோடல் ஊன் தின்பவர்க்கு இல்லை.

பொருட்பயன் இழத்தற்குக் காரணம் காவாமை போல, அருட்பயன் இழத்தற்கு ஊன் தினல் காரணம் என்பதாயிற்று.

ஊன் தின்றாராயினும் உயிர்கட்கு ஒரு தீங்கும் நினையாதார்க்கு அருளாடற்கு இழுக்கு இல்லை என்பாரை மறுத்து, அஃது உண்டென்பது இவை இரண்டு பாட்டானும் கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** இஃது ஊன் உண்ண அருட்கேடு வரும் என்றது.

**பரிதியார்:** போற்றாதார்க்கு - செலவழிப்பார்க்கு.

**காளிங்கர்:** ஊன் தின்பவர்க்கு - பிறிதொன்றன் நோவு அறியாது தின்பவருக்கு.

### ஒப்புமை

**பொருளைப் போற்றுதல்:**

"பொருள்தனைப் போற்றிவாழ்." *(ஆத்திசூடி.) (252)*

## 253

**படைகொண்டார் நெஞ்சம்போல் நன்றூக்கா தொன்றன்**
**உடல்சுவை உண்டார் மனம்.** 3

**பரிமேலழகர்:** படை கொண்டார் நெஞ்சம் போல் - கொலைக் கருவியைத் தம் கையில் கொண்டவர் மனம் அதனால் செய்யும் கொலையையே நோக்குவது அல்லது அருளை நோக்காதவாறு போல, ஒன்றன் உடல் சுவை உண்டார் மனம் நன்று ஊக்காது - பிறிதோர் உயிரின் உடலைச் சுவைபட உண்டவர் மனம் அவ் வூனையே நோக்குவதல்லது அருளை நோக்காது.

சுவைபட உண்டல், காயங்களான் இனிய சுவைத்தாக்கி உண்டல்.

இதனால் ஊன் தின்றார் மனம் தீங்கு நினைத்தல் உவம அளவையால் சாதித்து, மேலது வலியுறுத்தப்பட்டது.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** நன்று - நன்மை.

**பரிதியார்:** அரிவாளும் கையும் பிடித்தவர் மனம் கொலை மேலே நினைப்பது போலப் புலால் உண்டார் மனமும் கொலையை நினைக்கும்.

**காளிங்கர்:** அந்தணராயினும் ஆயுதத்தைக் கைப்பற்றினால் அதனைச் சுற்றுதல், எறிதல், நீட்டுதல், நிமிர்த்தல், வெட்டுதல் செய்வர்; மற்று அதுபோல நன்றிக்கண் செல்லாது யாது எனில், ஓர் உயிர் வாழ் சாதியின் ஊனின் சுவை கருதி உண்டாரது நெஞ்சம்.

### ஒப்புமை

**ஊன் உண்டார் மனம் நன்று நினையாமை:**

"கொலைநின்று தின்றொழுகு வானும்......
யாதும் கடைப்பிடியா தார்." *(திரி. 74.) (253)*

## 254

அருளல்ல தியாதெனின் கொல்லாமை கோறல்
பொருளல்ல தவ்வூன் தினல். 4

**பரிமேலழகர்:** அருள் யாது எனின் கொல்லாமை - அருள் யாதெனின் கொல்லாமை; அல்லது (யாது எனின்) கோறல் - அருள் அல்லது யாதெனின் கோறல்; அவ்வூன் தினல் பொருள் அல்லது - ஆகலான், அக் கோறலான் வந்த ஊனைத் தின்கை பாவம்.

உபசார வழக்கால் கொல்லாமை கோறலாகிய காரியங்களை அருள், அல்லது எனக் காரணங்களாக்கியும், ஊன் தின்கையாகிய காரணத்தைப் பாவம் எனக் காரியம் ஆக்கியும் கூறினர். அருளல்லது - கொடுமை. சிறப்புப் பற்றி அறமும் பொருளெனப்படுதலின் பாவம் பொருளல்லது எனப்பட்டது. கோறல் என முன் நின்றமையின் அவ்வூன் என்றார். இனி இதனை இவ் வாறன்றி அருளல்லது என்பதனை ஒன்றாக்கி, கொல்லாமை கோறல் என்ப தற்குக் கொல்லாமை என்னும் விரதத்தை அழித்தல் என்று உரைப்பாரும் உளர்.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** அருளல்லது யாதெனின், கொல்லாமையைச் சிதைத்தல்.

**பரிதியார்:** பொருள் அல்லது அவ்வூன் தினல் - உபதேசமும், உப தேசம் இல்லாமையும் யாவை என்னில், உபதேச நெறியே புலால் மறுத்தல்; உபதேச நெறியல்லாமை புலால் உண்டல். *(254)*

## 255

உண்ணாமை உள்ள துயிர்நிலை ஊன்உண்ண
அண்ணாத்தல் செய்யா தளறு. 5

**பரிமேலழகர்:** உயிர்நிலை ஊன் உண்ணாமை உள்ளது - ஒரு சார் உயிர் உடம்பின்கண்ணே நிற்றல் ஊன் உண்ணாமை என்கின்ற அறத்தின்கண்ணது; உண்ண அளறு அண்ணாத்தல் செய்யாது - ஆகலான், அந்நிலை குலைய ஒருவன் அதனை உண்ணுமாயின் அவனை விழுங்கிய நிரயம் பின் உமிழ் தற்கு அங்காவாது.

உண்ணப்படும் விலங்குகள் அதனால் தேய்ந்து சிலவாக, ஏனைய பல வாய் வருதலின், உண்ணாமை உள்ளது உயிர்நிலை என்றார். உண்ணின் என்பது உண்ண எனத் திரிந்து நின்றது. ஊன் உண்டவன் அப் பாவத் தான் நெடுங்காலம் நிரயத்துள் அழுந்தும் என்பதாம்.

கொலைப்பாவம் கொன்றார்மேல் நிற்றலின் பின் ஊன் உண்பார்க்குப் பாவம் இல்லை என்பாரை மறுத்து, அஃது உண்டு என்பது இவ்விரண்டு பாட் டானும் கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** உண்ணாமை உள்ளது உயிர் நிலை - உயிர் நிலையைப் பெறுதல் ஊனை உண்ணாமையினால் உள்ளது.

**பரிதியார்:** புலால் விடுத்தல் உயிர் நிலை பெறுதல்; புலால் உணவு, நரகத்தை விட்டு மேல் ஏறவொட்டாது.

ஒப்புமை

ஊன் உண்பார் நரகம் பெறுதல்:

"ஊன்சுவைத் துடம்பு வீக்கி நரகத்தில் உறைதல்."

(சீவக. 1235.) (255)

## 256

தினற்பொருட்டால் கொல்லா துலகெனின் யாரும்
விலைப்பொருட்டால் ஊன்தருவார் இல். 6

**பரிமேலழகர்:** *தினல் பொருட்டால் உலகு கொல்லாது எனின் - பேதைமை காரணமாக அல்லது ஊன் தின்கை காரணமாக உலகம் கொல்லா தாயின், விலை பொருட்டு ஊன் தருவார் யாரும் இல் - பொருள் காரணமாக ஊன் விற்பார் யாவரும் இல்லை.*

*உலகு என்பது ஈண்டு உயிர்ப்பன்மைமேல் நின்றது. பின் நிகழும் தின்கை முன் நிகழும் கொலைக்குக் காரணம் ஆகாமையின் தின்பார்க்குக் காரணத்தான் வரும் பாவம் இல்லை என்ற வாதியை நோக்கி, அருத்தாபத்தி யளவையால் காரணமாதல் சாதித்தலின், இதனுன் மேலது வலியுறுத்தப் பட்டது.*

உரை வேறுபாடு

**மணக்குடவர்:** *இது கொன்று தின்னுது விலைக்குக் கொண்டு தின் பார்க்குக் குற்றம் என்னை என்றூர்க்கு, அதனுலும் கொலைப் பாவம் வரும் என்று கூறிற்று.*

**பரிதியார்:** *தின்பது பொருட்டாகப் புலால் விற்பார்கள்; புலால் விட்டாரிடத்தில், புலால் விற்பார் இல்லை; அதெப்படி என்றூல், அகரத் திலே[1] மாங்கிசம் விற்பாரில்லை என்றறிக.* (256)

## 257

உண்ணுமை வேண்டும் புலாஅல் பிறிதொன்றன்
புண்அ துணர்வார்ப் பெறின். 7

**பரிமேலழகர்:** *பிறிது ஒன்றன் புண் - புலாலாவது பிறிவோர் உடம் பின் புண்; அது உணர்வார் பெறின் உண்ணுமை வேண்டும் - அது தூயது அன்மை அறிவாரைப் பெறின் அதனை உண்ணுது ஒழியல்வேண்டும்.*

*'அஃது' என்னல் வேண்டும் ஆய்தம் விகாரத்தால் தொக்கது. அம் மெய்ம்மை உணராமையின், அதனை உண்கின்றூர் என்பதாம்.*

*பொருந்து மாற்றூனும் புலால் உண்டல் இழிந்தது என்பது இதனுல் கூறப்பட்டது.*

உரை வேறுபாடு

**பரிதியார்:** *புலாலைத் தின்னுமை வேண்டும்; அது எது எனில், தன் உடம்பின் புண்ணைத் தானே தின்னுன், அதுபோல் பிறிதொன்றன் புண்.*

**காளிங்கர்:** *உணர்வார் பெறின் - தனது உண்ணுமைத் தன்மையை ஓர்ந்து உணர்வாரைப்பெறின்.*

1. அகரம் - அக்கிரகாரம்.

ஒப்புமை

புலால் பிறிதொன்றன் புண் ஆதல்:

"தம்புண் கழுவி மருந்திடுவர் தாம்பிறிதின்
செம்புண் வறுத்த வறைதின்பர்." (அறநெறி. 96.) (257)

## 258

செயிரிற் றலைப்பிரிந்த காட்சியார் உண்ணார்
உயிரிற் றலைப்பிரிந்த ஊன். 8

பரிமேலழகர்: செயிரின் தலைப்பிரிந்த காட்சியார் - மயக்கமாகிய குற்றத்தின் நீங்கிய அறிவினை உடையார், உயிரின் தலைப்பிரிந்த ஊன் உண்ணார் - ஓர் உயிரின் நீங்கி வந்த ஊனை உண்ணார்.

தலைப்பிரிவு என்பது ஒரு சொல். பிணம் என ஊனின் மெய்ம்மை தாமே உணர்தலின், உண்ணார் என்றார்.

உரை வேறுபாடு

பரிதியார்: செயிர் - அசுத்தம்.

காளிங்கர்: செயிர் - பாவம். (258)

## 259

அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத் துண்ணாமை நன்று. 9

பரிமேலழகர்: அவி சொரிந்து ஆயிரம் வேட்டலின் - தீயின்கண் நெய் முதலிய அவிகளைச் சொரிந்து ஆயிரம் வேள்வி வேட்டலினும், ஒன்றன் உயிர் செகுத்து உண்ணாமை நன்று - ஒரு விலங்கின் உயிரைப் போக்கி அது நின்ற ஊனை உண்ணாமை நன்று.

அவ் வேள்விகளான் வரும் பயனினும் இவ் விரதத்தான் வரும் பயனே பெரிது என்பதாம்.

உரை வேறுபாடு

காளிங்கர்: அவி சொரிந்து - வேள்வித்தீக்கு உரித்தாயுள்ள நெய்யும் அசனமும் முதலாகிய ஓமத் திரவியங்களைக் குறைவறச் சொரிந்து. (259)

## 260

கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும். 10

பரிமேலழகர்: கொல்லான் புலாலை மறுத்தானை - ஓர் உயிரையும் கொல்லாதவனுமாய்ப் புலாலையும் உண்ணாதவனை, எல்லா உயிரும் கை கூப்பி தொழும் - எல்லா உயிரும் கைகுவித்துத் தொழும்.

இவ்விரண்டு அறமும் ஒருங்குடையார்க்கல்லது ஒன்றே உடையார்க்கு அதனால் பயன் இல்லை ஆகலின், கொல்லாமையும் உடன் கூறினார். இப் பேரருள் உடையான் மறுமைக்கண் தேவரின் மிக்கானும் என அப் பயனது பெருமை கூறியவாறு.

இவை மூன்று பாட்டானும் ஊன் உண்ணாமையது உயர்ச்சி கூறப்பட்டது.

உரை வேறுபாடு

**மணக்குடவர்:** மேல் எல்லாப் புண்ணியத்திலும் இது நன்று என்றார். அது யாதினைத் தரும் என்றார்க்கு, கொல்லாதவன் தேவர்க்கும் மேலாவன் என்று கூறினார்.

**கவிராஜ பண்டிதர்:** மறுத்தானை - ஜினனை. (260)

---

## 27. தவம்

**பரிமேலழகர்:** அஃதாவது மனம் பொறிவழி போகாது நிற்றற்பொருட்டு விரதங்களான் உண்டி சுருக்கலும், கோடைக்கண் வெயில்நிலை நிற்றலும், மாரியினும் பனியினும் நீர்நிலை நிற்றலும் முதலிய செயல்களை மேற்கொண்டு, அவற்றால் தம் உயிர்க்கு வரும் துன்பங்களைப் பொறுத்து, பிற உயிர்களை ஓம்புதல். புலால் மறுத்து உயிர்கள்மேல் அருள் முதிர்ந்துழிச் செய்யப்படுவதாகலின், இது புலால் மறுத்தலின்பின் வைக்கப்பட்டது.

**மணக்குடவர்:** தவமாவது ஊணும் உறக்கமும் குறைத்தலும், வெயிலும் பனியும் தாங்கலும், தேவர் வழிபாடு முதலாயினவும் மேற்கொண்டு முயறல்.

### 261

**உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை**
**அற்றே தவத்திற் குரு.** 1

**பரிமேலழகர்:** தவத்திற்கு உரு - தவத்தின் வடிவு, உற்ற நோய் நோன்றல் உயிர்க்கு உறுகண் செய்யாமை அற்றே - உண்டிசுருக்கல் முதலியவற்றால் தம் உயிர்க்கு வரும் துன்பங்களைப் பொறுத்தலும், தாம் பிற உயிர்கட்குத் துன்பம் செய்யாமையுமாகிய அவ்வளவிற்று.

மற்று உள்ளன எல்லாம் இவற்றுள்ளே அடங்குதலின், அற்றே எனத் தேற்றேகாரம் கொடுத்தார். தவத்திற்கு உரு அற்று என்பது, யானையது கோடு கூரிது என்பதனை, யானைக்குக் கோடு கூரிது என்றாற்போல ஆறுவதன் பொருட்கண் நான்காவது வந்த மயக்கம்.

இதனால் தவத்தினது இலக்கணம் கூறப்பட்டது.

உரை வேறுபாடு

**பரிதியார்:** உற்ற நோய் நோன்றல் - பிறர் நோவுக்கு இரங்கல்.

ஒப்புமை

**முற்றும்:**

"உயிர்நோய்செய் யாமை யுறுநோய் மறத்தல்
செயிர்நோய் பிறர்கண்செய் யாமை—செயிர்நோய்
விழைவு வெகுளி இவைவிடுவா னயின்
இழிவன் றினிது தவம்." (சிறுபஞ்ச. 31.) (261)

## 262

தவமும் தவம்உடையார்க் காகும்அவம் அதனை
அஃதிலார் மேற்கொள் வது. 2

**பரிமேலழகர்:** தவமும் தவம் உடையார்க்கு ஆகும் - பயனே அன்றித் தானும் உண்டாவது முன் தவம் உடையார்க்கே; அதனை அ∴து இலார் மேற்கோள்வது அவம் - ஆகலான், அத்தவத்தை அம் முன் தவம் இல்லாதார் முயல்வது பயன் இல் முயற்சியாம்.

பரிசயத்தால் அறிவும் ஆற்றலும் உடையராய் முடிவு போக்கலின் தவம் உடையார்க்கு ஆகும் என்றும், அ∴து இல்லாதார்க்கு அவை இன்மையின் முடிவு போகாமையின் அவமாம் என்றும் கூறினர்.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** தவம் உடையார் - முன்பு நல்வினை செய்தவர்.

**பரிதியார்:** இளமையிலே தவம் செய்கிறோம் என்றாலும் தவத்துக்கு இடையூறு ஆச்சும். போன சென்மத்தில் விட்ட குறை உண்டாகில் அத் தவத்தை முயலப்பண்ணி முடிப்பிக்கும்.

### ஒப்புமை

*தவமும் தவமுடையார்க் காகும்:*

"முன்முறை செய்தவத்தின் இம்முறை இயைந்தேம்"
(பரிபாடல். 11: 138.)

"மேலைத் தவத்தால் தவம்செய்யா தார்." (நாலடி. 31.) (262)

## 263

துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி மறந்தார்கொல்
மற்றை யவர்கள் தவம். 3

**பரிமேலழகர்:** மற்றையவர்கள் - இல்லறத்தையே பற்றி நிற்பார், துறந்தார்க்கு துப்புரவு வேண்டி தவம் மறந்தார்கொல் - துறந்தார்க்கு உண்டியும் மருந்தும் உறையுளும் உதவலை விரும்பித் தாம் தவம் செய்தலை மறந்தார் போலும்!

துப்புரவு - அநுபவிக்கப்படுவன. "வேண்டிய வேண்டியாங்கு எய்தற்"[1] பயத்ததாகலின் யாவராலும் செய்யப்படுவதாய தவத்தைத் தாம் செய்யும் தானத்தின்மேல் விருப்ப மிகுதியான் மறந்தார்போலும் எனவே, தானத்தின் தவம் மிக்கது என்பது பெற்றும்.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** துப்புரவு - உணவு கொடுத்தல். இது தானத்தினும் தவம் மிகுதியுடைத்து என்றது.

**பரிதியார்:** மற்றையவர்கள் - ஸ்திரீ பர்த்தாக்கள். (263)

## 264

ஒன்னார்த் தெறலும் உவந்தாரை ஆக்கலும்
எண்ணின் தவத்தான் வரும். 4

1. குறள், 265.

**பரிமேலழகர்:** ஒன்னார் தெறலும் - தம் அறத்திற்குப் பகையாய் அழிவு செய்தாரைக் கெடுத்தலும், உவந்தாரை ஆக்கலும் - அதனை உவந்தாரை உயர்த்தலும் ஆகிய இவ்விரண்டையும், எண்ணின் தவத்தான் வரும் - தவஞ்செய்வார் நினைப்பராயின் அவர் தவவலியான் அவை அவர்க்கு உளவாம்.

முற்றத் துறந்தார்க்கு ஒன்னாரும் உவந்தாரும் உண்மை கூடாமையின் தவத்திற்கு ஏற்றி உரைக்கப்பட்டது. எண்ணின் என்றதனன், அவர்க்கு அவை எண்ணுமை இயல்பு என்பது பெற்றும். ஒன்னர் பெரியராயினும், உவந்தார் சிறியராயினும் கேடும் ஆக்கமும் நினைந்த துணையானே வந்து நிற்கும் எனத் தவஞ்செய்வார் மேலிட்டுத் தவத்தினது ஆற்றல் கூறியவாறு.

## உரை வேறுபாடு

**மணக்குடவர்:** இவ்விடத்துப் பகைவரைத் தெறுதலும், நட்டோரை ஆக்குதலுமாகிய வலி ஆராயின், முன் செய்த தவத்தினலே வரும்.

இது பிறரை ஆக்குதலும், கெடுத்தலும் தவத்தினலே வரும் என்றது.

**கவிராஜ பண்டிதர்:** தங்கள் தவத்திற்குப் பகையாய் அழிவு செய்தார் கேடு உறுதலும், அந்தத் தவசுக்குச் சந்தோஷப்பட்டவர்கள் ரக்ஷிக்கப்படுதலும் ஆராயின் அந்தத் தவத்தால் வரும். முற்றுந் துறந்த மகா முனிகளுக்கு இகழ்தலும் புகழ்தலும் ஒன்றே யாதலின் அவர்கள் இகழ்ந்தாரைக் கெடுக்கவும், புகழ்ந்தாரை ரக்ஷிக்கவும் நினையார். ஏனெனில் அவர்கள் உத்தம க்ஷமை முதலிய பரிணமங்களாகிய பத்துத் தர்ம குணங்களோடு பொருந்தி மோக்ஷத்தை அடைவிக்கும் தவசில் நிற்பராம்.

## ஒப்புமை

**ஒன்னர்த் தெறல் தவத்தான் வருதல்:**

"இழைத்ததீ வினையையும் கடக்க எண்ணுதல்
தழைத்தபே ரருளுடைத் தவத்தி னுகுமேல்"

"தேவ ரென்பவர் யாரும்இத் திருநகர்க் கிறைவற்
கேவல் செய்கிலார் ஏவரே...இவன் முயன்ற
தாவின் மாதவ மல்லது பிறிதொன்று தருமே."

(கம்ப. மந்திரப். 25, ஊர்தேடு. 12.) *(264)*

## 265

**வேண்டிய வேண்டியாங் கெய்தலால் செய்தவம்
ஈண்டு முயலப் படும்.** 5

**பரிமேலழகர்:** வேண்டிய வேண்டியாங்கு எய்தலால் - முயன்றால் மறுமைக்கண் தாம் வேண்டிய பயன்கள் வேண்டியவாறே பெறலாம்; ஆதலால், செய் தவம் ஈண்டு முயலப்படும் - செய்யப்படுவதாய தவம் இம்மைக்கண் அறிவுடையோரான் முயலப்படும்.

ஈண்டு என்பதனன் மறுமைக்கண் என்பது பெற்றும். மேற்கதி, வீடு பேறுகள் தவத்தானன்றி எய்தப்படா என்பதாம்.

இவை நான்கு பாட்டானும் தவத்தது சிறப்புக் கூறப்பட்டது.

## உரை வேறுபாடு

**மணக்குடவர்;** விரும்பியன விரும்பினபடியே வருதலால், தவம் செய்தலை இவ்விடத்தே முயல வேண்டும். இது போக நுகர்ச்சியும் இதனுல் வரும் என்றது.

**பரிதியார்:** வேண்டிய - தான் வேண்டிய காமியம்.

**காளிங்கர்:** வேண்டிய - அணிமாதியாகிய சித்திகளும், சுவர்க்கமும், முத்தியும் என்பனவற்றுள் தாம் விரும்பியவை. முயலப்படும் - உலக மக்களுள் சிறந்தாரால் செய்ய அடுக்கும்.

## ஒப்புமை

1. **தவத்தால் வேண்டிய வேண்டியாங்கு எய்தல்:**

"தவம்செய் மாக்கள் தம்முடம் பிடாஅது
அதன்பயம் எய்திய அளவை மான...
வேண்டுவ முகந்துகொண்டு" (பொருந. 91-128.)

"அருந்தவம் ஆற்றியார் நுகர்ச்சிபோல்" (கலி. 30: 1.)

"நோற்ருர்க்குச் சோற்றுள்ளும் வீழும் கறி"

"முற்பெரிய நல்வினை முட்டின்றிச் செய்யாதார்
பிற்பெரிய செல்வம் பெறலாமோ" (பழமொழி. 150, 312.)

"பெருந்தவம் உள்வழி விரும்புபு செல்லும்
பொருளும் போகமும் புகழும் போல" (பெருங். 2. 8: 126-7.)

"ஒருமுழுமும் சேறலில ரேனும்பொரு ளூர்க்கே
வரும்வழி வினையுழந்து வாழ்கதவம் மாதோ"
"விழுப்பொருள் பரவை ஞாலம், நோற்பவர்க் குரிய வாகும்"
(சீவக. 2556, 2986.)

"வேண்டிய விளைத்துக் கொள்ளும் விழுத்தவம் விளைத்து வந்தான்'
(சூளா. சுயம். 113.

"தவமொக்கும் நலம்பயப்பில்"

"வேண்டின வேண்டினர்க் களிக்கும் மெய்த்தவம்"

"சொன்னன் நிருதர்க்கிறை அம்மொழி சொல்ல லோடும்
அந்நாளின் நிரம்பிய அம்மதி ஆண்டொர் வேலை
முந்நாளின் இளம்பிறை யாகி முளைத்த தென்ருல்
எந்நாளும் அருந்தவ மன்றி இயற்ற லாமோ."

"கூட்டமொத் திருந்த வீரர் குறித்ததோர் பொருட்கு முன்னள்
ஈட்டிய தவமும் பின்னர் முயற்சியும் இயைந்த தொத்தார்"

"மரம டங்கலும் கற்பகம் மணியெலாம் கனகம்
அரம டந்தையர் சிலதியர் அரக்கியர்க் கமரர்
உரம டங்கிவந் துழையரா யுழல்பவர் ஒருவர்
தரம டங்குவ தன்றிது தவம்செய்த தவமால்."
(கம்ப. அரசியல். 4; அகத்திய. 8, மாரீசன். 133, மராமர. 60, ஊர்தேடு. 19.)

2. **தவம் ஈண்டு முயலப்படும்:**

"தவநெறி அருளெமக்கே" (சம்பந்தர். புகலி, 3.)

"உனை வேண்டிக் கொள்வேன் தவநெறியே."
(சுந்தரர். துறையூர். 1-10.) (265)

## 266

தவம்செய்வார் தம்கருமம் செய்வார்மற் றல்லார்
அவம்செய்வார் ஆசையுட் பட்டு. 6

**பரிமேலழகர் :** தம் கருமம் செய்வார் தவம் செய்வார்-தம் கருமம் செய்வாராவார் துறந்து தவத்தைச் செய்வார்; மற்று அல்லார் ஆசையுள் பட்டு அவம் செய்வார் - அவரை ஒழிந்த பொருள் இன்பங்களைச் செய்வார் அவற்றின்கண் ஆசையாகிய வலையுட்பட்டுத் தமக்குக் கேடு செய்வார்.

அநித்தமாய் மூவகைத் துன்பத்ததாய் உயிரின் வேறாய உடற்கு வருத்தம் வரும் என்று ஒழியாது தவத்தினைச் செய்யப் பிறப்புப் பிணி மூப்பு இறப்புக்களான் அநாதியாகத் துன்பம் எய்தி வருகின்ற உயிர் ஞானம் பிறந்து வீடு பெறும் ஆகலின், தவம் செய்வாரைத் தம் கருமம் செய்வார் என்றும், கணத்துள் அழிவதாய சிற்றின்பத்தின் பொருட்டுப் பல பிறவியும் துன்புறத்தக்க பாவம் செய்துகோடலின், அல்லாதாரை அவம் செய்வார் என்றும் கூறினர். மற்று, வினைமாற்றின் கண் வந்தது.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** அவம் - பயன் இல்லாதன. இது தவம் பண்ணவேண்டும் என்றவாறு.

**பரிதியார்:** நிலையாமை, நோய், மூப்பு, சாக்காடு என்று எண்ணித் தலையாவார் தம் கருமம் செய்வர்; தம் கருமமாவன தவம், பூசை, நியதி, தானம், தன்மம் என்பன. மற்றுஅல்லாதார் செனனவழி தேடி ஆசைவிலங்கிட்டு அவம் செய்வார்.

### ஒப்புமை

1. **தவம் செய்வார் தம் கருமம் செய்வார்:**

"தாவில் கொள்கைத் தந்தொழில் முடிமார்" (முருகு. 89.)

"தலையாயார் தங்கருமம் செய்வார்" (நாலடி. 52.)

"வேம்க டங்கள்மெய் மேல்வினை முற்றவும்
தாங்கள் தங்கட்கு நல்லன வேசெய்வார்
வேங்க டத்துறை வார்க்கு நமஎன்னல்
ஆம்கடமை அதுசுமந் தார்கட்கே." (திருவாய். 3. 3:6.)

"என்னுயிர்க் குறுவதும் செய்ய எண்ணினேன்"

"ஈட்டுவார் தவம லான்மற் றீட்டினால் இயைவ தின்மை
காட்டினர் விதியார்." (கம்ப. மந்திரப். 15, ஊர்தேடு. 104.)

2. **ஆசையுட்பட்டு அவம் செய்வார்:**

"தவத்திறம் பூண்டோள் தன்மேல் வைத்த
அவத்திறம் ஒழிகென் றவன்வயின் உரைத்தபின்." (மணி. 7: 13-4.)

3. **முற்றும்:**

"இழைத்தநதி வினையையும் கடக்க எண்ணுதல்
தழைத்தபே ரருளுடைத் தவத்தி னுகுமேல்
குழைத்ததோ ரமிர்தினைக் கோடல் நீக்கிவே
றழைத்ததீ விடத்தினை அருந்த லாகுமே."
(கம்ப. மந்திரப். 25.) (266)

## 267

சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பம்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு. 7

**பரிமேலழகர்:** சுட சுடரும் பொன்போல் - தீயின்கண் ஓடும் பொன்னுக்கு அது சுடச்சுடத் தன்னேடு கலந்த குற்றம் நீங்கி ஒளி மிகுமாறு போல, நோற்கிற்பவர்க்கு துன்பம் சுட சுட ஒளி விடும் - தவம் செய்ய வல்லார்க்கு அதனுன் வரும் துன்பம் வருத்த வருத்தத் தம்மோடு கலந்த பாவம் நீங்கி ஞானம் மிகும்,

சுடச்சுடரும் பொன்போல் என்ருராயினும், கருத்து நோக்கி இவ்வாறு உரைக்கப்பட்டது. ஒளிபோலப் பொருள்களை விளக்கலின் ஒளி என்ருர்.

### உரை வேறுபாடு

**பரிதியார்:** சுடவைத்த பொன் களங்கமற்றது போலக் கன்மம் விடும் தவம் செய்கையினுலே, விக்கினம் வந்தால் அந்த விக்கினத்தைப் பாராமல் தவம் பண்ணுவார்க்கு.

**காளிங்கர்:** தீப்பெற்று நின்று ஒளிவிட்டு விளங்கும் பொன்னைப் போல விளங்கா நிற்கும்; யாதோவெனில், வீட்டின்பமாகிய ஒரு பெரும் பொருள்; யார்க்கு எனின், முன் தம்மாட்டுவந்து மயங்கிக் கிடக்கின்ற அவங்களானவற்றை உருவழியச் சுடுமாறு பல யாண்டும் பயிலக் குறிக்கொண்டு நோற்றலை வல்லாற்கு.

### ஒப்புமை

**முற்றும்:**

"கொள்கைக் கட்டழல் உள்ளுற மூட்டி
மாசுவினை கழித்த மாதவர் போலத்
தீயகத் திலங்கித் திறல்விடு கதிரொளி
சேடுறக் கிடந்த செம்பொன்" (பெருங். 2. 19: 62-5.)

"ஆரழல் முளரி யன்ன அருந்தவம்." (சீவக. 2632.) (267)

## 268

தன்உயிர் தான்அறப் பெற்றானை ஏனைய
மன்உயிர் எல்லாம் தொழும். 8

**பரிமேலழகர்:** தன் உயிர் தான் அற பெற்றானை - தன்உயிரைத் தான் தனக்கு உரித்தாகப் பெற்றவனை, ஏனைய மன் உயிர் எல்லாம் தொழும் - பெருதனவாகிய மன்னுயிர்கள் எல்லாம் தொழும்.

தன்க்கு உரித்தாதல், தவமாகிய தன் கருமம் செய்தல். அதனினுங் குப் பெறுதற்கரியது இன்மையின், பெற்றானை என்ருர். அது பெருதன என்றது ஆசையுட்பட்டு அவம் செய்யும் உயிர்களை. சாபமும் அருளுமாகிய இரண்டாற்றலும் உடைமையின், தொழும் என்ருர்.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** தன் உயிரானது தான் என்று கருதும் கருத்து அறப் பெற்றவனை, ஒழிந்தனவாகிய நிலைபெற்ற உயிர்கள் எல்லாம் தொழும்.

உயிர் என்றது சலிப்பற்ற அறிவை; தான் என்றது சீவனுகி நிற்கின்ற நிலைமையை; தான் அறுதலாவது அகங்காரம் அறுதல்.

**பரிதியார்:** தன் ஆத்மா ஈடேறப் பார்ப்பானை, "இவனுலே நாமும் ஈடேறுவோம்" என்று சகல ஆத்மாவும் தொழும்.

**கவிராஜ பண்டிதர்:** தன் உயிரைத் தனக்கு உரித்தாகப் பெறுதலாவது, தவத்தின் முக்கியத்திஞல் கருமம் தேய்தல். அதிலும் பெரிய காரியம் இல்லை. தபசு பண்ணிஞல் ஜீவனைத் துர்க்கதி போகாமல் சுபகதி அடைவிக்கும். (268)

## 269

கூற்றம் குதித்தலும் கைகூடும் நோற்றலின்
ஆற்றல் தலைப்பட் டவர்க்கு. 9

**பரிமேலழகர் :** கூற்றம் குதித்தலும் கைகூடும் - கூற்றத்தைக் கடத்தலும் உண்டாவதாம், நோற்றலின் ஆற்றல் தலைப்பட்டவர்க்கு - தவத்தான் வரும் ஆற்றலைத் தலைப்பட்டார்க்கு.

சிறப்பும்மை அது கூடாமை விளக்கிற்று; மன்னுயிரெல்லாம் தொழுதலேயன்றி இதுவும் கை கூடும் என எச்சவும்மையாக உரைப்பினும் அமையும். ஆற்றல் - சாப அருள்கள்.

இவை நான்கு பாட்டானும் தவம் செய்வாரது உயர்ச்சி கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** குதித்தல் - தப்புதல்; இது மார்க்கண்டேயன் தப்பினுற்போல என்றது.

**பரிதியார்:** தலையெழுத்து முடிந்த நாள் வர அப்போது கூற்றுவனையும் வெல்லலாம், தவத்திற் பெரியோர்க்கு. அதற்கு, நந்திகேசுவர தேவனையும் மார்க்கண்டேயனையும் கண்டு கொள்க.

### ஒப்புமை

1. **கூற்றம் குதித்தல்:**

"கூற்றம் குதித்துய்ந்தார்" (நாலடி. 6.)

"கூற்றம், குதித்துய்ந் தறிவாரோ இல்" (பழமொழி, 183.)

"கூழைமை பயின்ற கூற்ற வரசனைக் குதிக்கும் சூழ்ச்சி" (சூளா. துறவு. 18.)

"கூற்றன் வருங்கால் குதிக்கலு மாமே". (திருமந். 172.)

2. **முற்றும்:**

"சாவாதவர் பிறவாதவர் தவமேமிக வுடையார்
மூவாதபன் முனிவர்தொழும் முதுகுன் றடைவோமே".
(சம்பந்தர். முதுகுன்றம், 6.) (269)

## 270

இலர்பலர் ஆகிய காரணம் நோற்பார்
சிலர்பலர் நோலா தவர். 10

**பரிமேலழகர்:** இலர் பலர் ஆகிய காரணம் - உலகத்துச் செல்வர்கள் சிலராக நல்கூர்வார் பலர் ஆதற்குக் காரணம் யாது எனின், நோற்பார் சிலர் நோலாதவர் பலர் - அது தவம்செய்வார் சிலராக அது செய்யாதார் பலராதல்.

செல்வம் நல்குரவு என்பன ஈண்டு அறிவினது உண்மை இன்மைகளையும் குறித்து நின்றன; என்னை? "நுண்ணுணர் வின்மை வறுமை அஃதுடைமை, பண்ணப் பணைத்த பெருஞ்செல்வம்"[1] என்றாராகலின்: நோற்பார் சிலர் எனக் காரணம் கூறினமையான், காரியம் வருவித்து உரைக்கப்பட்டது.

தவம் செய்யாதார்க்கு இம்மை இன்பமும் இல்லை என இதனால் அவரது தாழ்வு கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** இலர் - பொருள் இல்லாதார்.

**பரிதியார்:** பாக்கியவான்கள் சிறிதாக மிடியாளர் பெருத்ததாகிய காரியம்.

**காளிங்கர்:** இவ்வுலகத்து இவ்வாறு தமது பேரிடர் நீங்கிப் பெரும் பயனுறுதலைப் பலரும் இலராதற்குக் காரணம் யாதோ எனின், உலகத்தில் ஞானம் பெற நோற்பார் சிலர்; மற்று நோலாதார் அளவிறந்தாராவர்.

### ஒப்புமை

**இலர் பலராகிய காரணம்:**

"புறங்கடை பற்றி
மிகத்தாம் வருந்தி யிருப்பரே மேலைத்
தவத்தால் தவம்செய்யா தார்". (நாலடி. 31.) (270)

---

## 28. கூடா ஒழுக்கம்

**பரிமேலழகர்:** அஃதாவது தாம் விட்ட காம இன்பத்தை உரன் இன்மையின் பின்னும் விரும்புமாறு தோன்ற அவ்வாறே கொண்டு நின்று தவத்தோடு பொருந்தாததாய தீய ஒழுக்கம். அது விலக்குவதற்கு இது தவத்தின் பின் வைக்கப்பட்டது.

### 271

**வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்**
**ஐந்தும் அகத்தே நகும்.** 1

**பரிமேலழகர்:** வஞ்ச மனத்தான் படிறு ஒழுக்கம் - வஞ்சம் பொருந்திய மனத்தை உடையவனது மறைந்த ஒழுக்கத்தை, பூதங்கள் ஐந்தும் அகத்தே நகும் - உடம்பாய் அவனோடு கலந்து நிற்கின்ற பூதங்கள் ஐந்தும் கண்டு தம்முள்ளே நகும்.

காமம் தன்கண்ணே தோன்றி நலியாநிற்கவும் அதனது இன்மை கூறிப் புறத்தாரை வஞ்சித்தலின் வஞ்சமனம் என்றும், அந் நலிவு பொறுக்க

1. நாலடி. 251.

மாட்டாது ஒழுகும் களவொழுக்கத்தைப் படிற்றொழுக்கம் என்றும், உலகத்துக் களவுடையார் பிறர் அறியாமல் செய்வனவற்றிற்கு ஐம்பெரும் பூதங்கள் சான்றாகலின், அவ்வொழுக்கத்தையும் அவன் மறைக்கின்றவாற்றையும் அறிந்து அவன் அறியாமல் தம்முள்ளே நகுதலின், 'அகத்தே நகும்' என்றும் கூறினார். செய்த குற்றம் மறையாது ஆகலின் அவ்வொழுக்கம் ஆகாது என்பது கருத்து.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** பூதங்கள் என்றது அவையிற்றின் காரியமாகிய பொறிகளை.

**பரிதியார்:** தவநெறி செய்கையிலே, அவநெறி செய்வானை ஐந்து பூதமும் நகைக்கும் என்றது. அது எது எனில், இவன் அவநெறி செய்ய, நாம் நரகத்திலே வீழ ஏதுவானோம் என்பதால்.

**காளிங்கர்:** இங்ஙனம் கூடா ஒழுக்கமாகத் தவநெறி ஒழுகுகின்ற வஞ்சமனத்தானது பொய்யான ஆசாரத்தினைக் கண்டு யாவரும் அச்சம் உறுவர்.[1] மற்று அஃதன்றித் தம்முள்ளே இகழ்ந்து சிரிப்பதும் செய்வார்கள். படிற்று ஒழுக்கம் என்பது பொய்யான ஆசாரம்.

### ஒப்புமை

**ஐந்தும் அகத்தே நகும்:**

"மனத்தொடு நகையா." (பெருங் 4. 13: 213.) (271)

## 272

**வான்உயர் தோற்றம் எவன்செய்யும் தன்நெஞ்சம்**
**தான்அறி குற்றப் படின். 2**

**பரிமேலழகர்:** வான் உயர் தோற்றம் எவன் செய்யும் - ஒருவனுக்கு வான்போல் உயர்ந்த தவவேடம் என்ன பயனைச் செய்யும், தான் அறி குற்றம் தன் நெஞ்சம் படின் - தான் குற்றம் என்று அறிந்த அதன்கண்ணே தன் நெஞ்சு தாழுமாயின்?

'வானுயர் தோற்றம்' என்பது "வான்தோய் குடி"[2] என்றாற்போல இலக்கணை வழக்கு. அறியாது செய்த குற்றமல்லது அறிந்து வைத்துச் செய்த குற்றம் கழுவப்படாமையின் நெஞ்சு குற்றத்ததாயே விடும்; விடவே, நின்ற வேடமாத்திரத்துக்குப் புறத்தாரை வெருட்டுதலே அல்லது வேறு பயன் இல்லை என்பதாம்.

### உரை வேறுபாடு

**பரிதியார்:** தான் அறி குற்றம் படின் - தன் ஆத்துமா அறிய அவநெறி செய்வானாகில்.

**காளிங்கர்:** வான் உயர் தோற்றம் - இவ்வுலகத்து ஒருவர் தம் பெயர் தேவர் அறியுமாறு விளங்கிற்றாயினும்.

### ஒப்புமை

**1. வானத்தின் உயர்வு:**

"வானினும் உயர்ந்தன்று" (குறுந். 3: 1.)

---

1. இவர் 'அஞ்சும்' என்று பாடம் கொண்டார்.
2. நாலடி. 142.

"மண்ணினும் வானினும் மற்றை மூன்றினும்
எண்ணினும் பெரியதோர் இடர்." (கம்ப. அயோமுகி. 99.)

2. வானுயர் தோற்றம்:

"மறித்தொரு மாற்றம் கூருன் வானுயர் தோற்றத் தன்னன்"

"மைந்த ரைப்பெற்று வானுயர் தோற்றத்து மலர்ந்தார்."
(கம்ப. கிஷ். அரசியல். 45, மீட்சி. 119.) (272)

## 273

வலியில் நிலைமையான் வல்உருவம் பெற்றம்
புலியின்தோல் போர்த்துமேய்ந் தற்று. 3

**பரிமேலழகர்:** வலி இல் நிலைமையான் வல் உருவம் - மனத்தைத் தன் வழிப்படுத்தும் வலி இல்லாத இயல்பினை உடையான் வலியார் வேடத்தைக் கொண்டு தான் அதன் வழிப்படுதல், பெற்றம் புலியின் தோல் போர்த்து மேய்ந்தற்று - பசு காவலர் கடியாமல் புலியின் தோலைப் போர்த்துப் பைங் கூழை மேய்ந்தாற்போலும்.

இல்பொருள் உவமை. 'வலிஇல் நிலைமையான்' என்ற அடையானும், 'மேய்ந்தற்று' என்னும் தொழிலுவமையானும், வல்லுருவத்தோடு மனவழிப் படுதல் என்பது பெற்றும். காவலர் கடியாமை புலி புல் தின்னது என்பத னுனும், அச்சத்தானும் ஆம்; ஆகவே வல்லுருவம் கோடற்குப் பயன் அன்ன காரணங்களான் உலகத்தார் அயிராமை ஆயிற்று. இவ்வாறு தனக்குரிய இல்லாளையும் துறந்து, வலியும் இன்றிப் பிறர் அயிராத வல்லுருவமும் கொண்டு நின்றவன் மனவழிப்படுதலாவது, தன் மனம் ஓடிய வழியே ஓடி மறைந்து பிறர்க்குரிய மகளிரை விழைதலாம். அவ்வாருதல், பெற்றம் தனக்கு உரிய புல்லை விட்டுப் பிறர்க்கு உரிய பைங்கூழை மேய்ந்தாற்போலும் என்ற உவமையான் அறிக.

### உரை வேறுபாடு

**காளிங்கர்:** இவ்வுலகத்துத் தான் கொண்டதோர் தன் குறைமுடிப்ப தொரு கோட்பாட்டு வலி தன் நெஞ்சத்து இல்லாத தன்மையான் அவன் மாட்டுத் தவநெறி வலிபெற்று நின்றது போலத் தோன்றுகின்ற கோல மானது யாதினை ஒக்குமோ எனில், புலி போல்வதோர் மனத்திட்பம் இல் லாத பசுவானது திட்பமுள்ளது போலப் புலியினது தோலினைப் போர்த்து நடித்தும், பண்டைப் புல்லினையே பின்னும் மேய்ந்த அத்தன்மைத்து.

## 274

தவம்மறைந் தல்லவை செய்தல் புதல்மறைந்து
வேட்டுவன் புட்சிமிழ்த் தற்று. 4

**பரிமேலழகர்:** தவம் மறைந்து அல்லவை செய்தல் - அவ்வலி இல் நிலைமையான் தவவேடத்தின் கண்ணே மறைந்து நின்று தவம் அல்லவற்றைச் செய்தல், வேட்டுவன் புதல் மறைந்து புள் சிமிழ்த்தற்று - வேட்டுவன் புதலின்கண்ணே மறைந்து நின்று புட்களைப் பிணித்தாற் போலும்.

தவம்: ஆகுபெயர். தவம் அல்லவற்றைச் செய்தலாவது, பிறர்க்குரிய மகளிரைத் தன்வயத்தாக்குதல். இதுவும் இத் தொழில் உவமையான் அறிக.

உரை வேறுபாடு

**மணக்குடவர்:** அர்ச்சுனன் தவம் மறைந்து அல்லவை செய்தான்.

**காளிங்கர்:** வேட்டுவன் புள் சிமிழ்த்தற்று - வேட்டுவனானவன் புதலினுள் மறைந்து நின்று பேடை சேவல் என்னும் புள் விரும்பி வாய்மேல் விரலால் எற்றிப் பயில விளித்த அத்தன்மைத்து. புதல் என்பது சிறு செடி. சிமிழ்த்தல் என்றது அவன் வாய்மேல் விரலெற்றி அது 'பட' விளித்தல்.

ஒப்புமை

**தவம் மறைந்து அல்லவை செய்தல்:**

"தவம்மறைந் தல்ல செய்வார்." (பெரிய. திருஞான. 697.) (274)

## 275

பற்றற்றேம் என்பார் படிற்றொழுக்கம் எற்றெற்றென்
றேதம் பலவும் தரும். 5

**பரிமேலழகர்:** பற்று அற்றேம் என்பார் படிறு ஒழுக்கம் - தம்மைப் பிறர் நன்கு மதிக்கற்பொருட்டு யாம் பற்று அற்றேம் என்று சொல்வாரது மறைந்த ஒழுக்கம், எற்று எற்று என்று ஏதம் பலவும் தரும் - அப்பொழுது இனிதுபோலத் தோன்றுமாயினும், பின் என் செய்தேம் என் செய்தேம் என்று தாமே இரங்கும் வகை அவர்க்குப் பல துன்பங்களையும் கொடுக்கும்.

சொல்லளவு அல்லது பற்று அறுமையின், 'பற்றற்றேம் என்பார்' என்றும், சிறியதாய்க் கணத்துள்ளே அழிவதாய இன்பத்தின்பொருட்டுப் பெரிதாய் நெடுங்காலம் நிற்பதாய பாவத்தைச் செய்வார் அதன் விளைவின் கண், "அந்தோ வினையேஎன் றழுவ"[1]ராகலின், 'எற்று எற்று' என்றும் கூறினார்.

இவை ஐந்து பாட்டானும் கூடா ஒழுக்கத்தின் இழுக்கம் கூறப்பட்டது.

உரை வேறுபாடு

**மணக்குடவர்:** எல்லாரும் எற்று எற்று என்று சொல்லும்படி; எற்று என்பது திசைச் சொல். இது தீமை பயக்கும் என்றது.

**பரிதியார்:** மூன்று வகை ஆசை குடிகொண்டிருக்கவும், பற்று அற்றோம் என்று வார்த்தையினாலே சொல்லி நடக்கிறதெல்லாம் அதிக்கிரமமே செய்வார்க்குக் குற்றம் வெகுவிதமாக வரும். (275)

## 276

நெஞ்சிற் றுறவார் துறந்தார்போல் வஞ்சித்து
வாழ்வாரின் வன்கணார் இல். 6

**பரிமேலழகர்:** நெஞ்சின் துறவார்-நெஞ்சால் பற்று அறாது வைத்து, துறந்தார்போல் வஞ்சித்து வாழ்வாரின் - பற்று அற்றார் போன்று தானம் செய்வாரை வஞ்சித்து வாழுமவர் போல், வன்கணார் இல் - வன்கண்மையை உடையார் உலகத்து இல்லை.

தானம் செய்வாரை வஞ்சித்தலாவது, யாம் மறுமைக்கண் தேவராதற் பொருட்டு இவ் வருந்தவர்க்கு இன்னது ஈதும் என்று அறியாது ஈந்தாரை

1. சீவக. 2625.

அதுகொண்டு இழிபிறப்பினர் ஆக்குதல். அவர் இழிபிறப்பினராதல், "அடங்கலர்க் கீந்த தானப் பயத்தினல் அலறு முந்நீர்த், தடங்கடல் நடுவுள் தீவு பலவுள அவற்றுள் தோன்றி, உடம்பொடு முகங்கள் ஒவ்வார் ஊழ்கனி மாந்தி வாழ்வர், மடங்கலஞ் சீற்றத் துப்பின் மானவேல் மன்னர் ஏறே"[1] என்பதனுன் அறிக. தமக்கு ஆவன செய்தார்க்கு ஆகாதன விளைத்தலின் வன்கணர் இல் என்றார்.

### உரை வேறுபாடு

**பரிதியார்:** மனத்தில் மூன்று ஆசையும் இருக்க ஆசையை விட்டோம் என்பார் வஞ்சகர்க்குள் வஞ்சகர்.

**கவிராஜ பண்டிதர்:** வன்கணர் - கடின சித்தர். *(276)*

## 277

புறங்குன்றி கண்டனைய ரேனும் அகம்குன்றி
மூக்கில் கரியார் உடைத்து. 7

**பரிமேலழகர் :** குன்றி புறம் கண்டு அனையரேனும்-குன்றியின் புறம் போல வேடத்தால் செம்மை உடையராயினும், குன்றி மூக்கின் அகம் கரியார் உடைத்து - அதன் மூக்குப் போல மனம் இருண்டிருப்பாரை உடைத்து உலகம்.

குன்றி: ஆகுபெயர். செம்மை கருமை என்பன பொருளின்கண் நிறத்தை விட்டுச் செப்பத்தினும் அறியாமையினும் சென்றனவாயினும், பண்பால் ஒத்தலின் இவை பண்புவமை. "கூழின் மலிமனம் போன்றிருளாநின்ற கோகிலமே"[2] என்பதும் அது.

### ஒப்புமை

**அகம் கரியதாதல்:**

"மந்தரை யுரையெனும் கடுவின் மட்கிய
சிந்தையின் இருண்டது"

"மைக்கரு மனத்தொரு வஞ்சன்."

(கம்ப. தைலமாட்டு. 5, கரன். 124.) *(277)*

## 278

மனத்தது மாசாக மாண்டார்நீர் ஆடி
மறைந்தொழுகும் மாந்தர் பலர். 8

**பரிமேலழகர் :** மாசு மனத்தது ஆக-மாசு தம் மனத்தின் கண்ணதாக, மாண்டார் நீர் ஆடி - பிறர்க்குத் தவத்தான் மாட்சிமை உடையராய் நீரில் மூழ்கிக்காட்டி, மறைந்து ஒழுகும் மாந்தர் பலர் - தாம் அதன்கண்ணே மறைந்து செல்லும் மாந்தர் உலகத்துப் பலர்.

மாசு - காம வெகுளி மயக்கங்கள். அவை போதற்கன்றி மாண்டாரென்று பிறர் கருதுதற்கு நீராடுதலான், அத் தொழிலை அவர் மறைதற்கு இடனாக்கினார். இனி, மாண்டார் நீராடி என்பதற்கு மாட்சிமைப்பட்டாரது நீர்மையை உடையராய் என உரைப்பாரும் உளர்.

1. சீவக. 2842.
2. திருக்கோவையார், 322.

இவை மூன்று பாட்டானும் அவ்வொழுக்கம் உடையாரது குற்றமும், அவரை அறிந்து நீக்கல் வேண்டும் என்பதும் கூறப்பட்டன.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** மாண்டார் நீர் ஆடி - மாட்சிமைப்பட்டாரது நீர்மையைப் பூண்டு.

**பரிதியார்:** மனத்திலே மாசாகிய குற்றம் பெருகி மாண்டாராகி இருக்கவும் மார்கழித் தீர்த்தம் என்றும், மகாதீர்த்தம் என்றும் ஆடி அதிலே மறைந்தொழுகும் மாந்தரும் உண்டு. (278)

## 279

கணைகொடிது யாழ்கோடு செவ்விதாங் கன்ன
வினைபடு பாலால் கொளல். 9

**பரிமேலழகர்:** கணை கொடிது யாழ் கோடு செவ்விது - அம்பு வடிவால் செவ்விதாயினும், செயலால் கொடிது; யாழ் கோட்டால் வளைந்ததாயினும், செயலால் செவ்விது; ஆங்கு அன்ன வினைபடு பாலால் கொளல் - அவ்வகையே தவம் செய்வோரையும் கொடியர் செவ்வியர் என்பது, வடிவால் கொள்ளாது அவர் செயல்பட்ட கூற்றானே அறிந்துகொள்க.

கணைக்குச் செயல் கொலை. யாழுக்குச் செயல் இசையால் இன்பம் பயத்தல். அவ்வகையே செயல் பாவமாயின் கொடியர் எனவும், அறமாயின் செவ்வியர் எனவும் கொள்க என்பதாம்.

இதனான் அவரை அறியுமாறு கூறப்பட்டது. (279)

## 280

மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்த தொழித்து விடின். 10

**பரிமேலழகர்:** மழித்தலும் நீட்டலும் வேண்டா - தவம் செய்வார்க்குத் தலைமயிரை மழித்தலும் சடையாக்கலுமாகிய வேடமும் வேண்டா, உலகம் பழித்தது ஒழித்துவிடின் - உயர்ந்தோர் தவத்திற்கு ஆகாது என்று குற்றங் கூறிய ஒழுக்கத்தைக் கடிந்துவிடின்.

பறித்தலும்[1] மழித்தலுள் அடங்கும். மழித்தல் என்பதே தலைமயிரை உணர்த்தலின், அது கூறாராயினர்.

இதனால் கூடாவொழுக்கம் இல்லாதார்க்கு வேடமும் வேண்டா என அவரது சிறப்புக் கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** உலகம் பழித்தது - உலகத்தார் கடிந்தவையிற்றை.

**பரிதியார்:** உலகம் பழித்தது - மூன்று வகை ஆசை.

**காளிங்கர்:** நெஞ்சினால் துறவறம் பேணக் கருதுவார் வெறுந் தலை முண்டித்தலும் சடைவளர்த்தலும் மற்று உம்மையால் தண்டு தரித்தலும் துவராடையுடுத்தலும் பிறவுமாகிய புறக்கோலம் புனைய வேண்டுவது

1. பறித்தல், சைனத்துறவியர் செயல்.

இல்லை; உலகத்து உயர்ந்தோராகிய தமது உணர்வினாலும் தாம் கற்று உணர்ந்த நூலினாலும் இவை இவை தகா என்று ஓரீஇயவற்றைத் தாமும் அவ்வாறு ஒழித்துவிடின்.

ஒப்புமை

**நீட்டலும் வேண்டா:**

"வீடு வேண்டி விழுச்சடை நீட்டல்... இன்னவை
பீடி லாப்பிற விக்குவித்து என்பவே". (சீவக. 1427.) (280)

---

# 29. கள்ளாமை

**பரிமேலழகர்:** அஃதாவது பிறர் உடைமையாய் இருப்பது யாதொரு பொருளையும் அவரை வஞ்சித்துக் கொள்ளக் கருதாமை. கருதுதலும் செய்த லோடு ஒத்தலின், கள்ளாமை என்றார். இல்வாழ்வார்க்காயின் தமரோடு விளையாட்டுவகையால் அவரை வஞ்சித்துக் கோடற்கு இயைந்த பொருள் களை அங்ஙனம் கொள்ளினும் அமையும்; துறந்தார்க்காயின் அதனைக் கருதிய வழியும் பெரியதோர் இழுக்காம்; ஆகலின், இது துறவறமாயிற்று. புறத்துப் போகாது மடங்கி ஒருதலைப்பட்டு உயிரையே நோக்கற்பாலதாய அவர் மனம் அஃது ஒழிந்து புறத்தே போந்து பஃறலைப்பட்டு உடம்பின் பொருட்டுப் பொருளை நோக்குதலே அன்றி, அது தன்னையும் வஞ்சித்துக் கொள்ளக் கருது தல் அவர்க்குப் பெரியதோர் இழுக்காதல் அறிக. இவ்வாறு வாய்மை முதல் கொல்லாமை ஈறாய நான்கு அதிகாரத்திற்கும் ஒக்கும். பொருள்பற்றி நிகழும் குற்றத்தை விலக்குகின்ற தாகலின், இது காமம் பற்றி நிகழ்வதாய கூடா ஒழுக்கத்தின்பின் வைக்கப்பட்டது.

**பரிதியார்:** கள்ளாமையாவது கபட புத்தியை விடுதல்.

**கவிராஜ பண்டிதர்:** இல்வாழ்கிற சம்சாரியானாலும், சுற்றத்தார் களுடனே விளையாட்டிற்காகவும் ஒரு பொருளைத் திருடி வைக்கிறதும் பாபத்திற்குக் காரணமாதலால், அதுவும் செய்யலாகாது; தபசியான பேர் களுக்குக் களவை நினைத்தாலும் பாபம் வரும். ஆதலால், களவு ஒருத்தருக் கும் ஆகாதென்றவாறு.

## 281

**எள்ளாமை வேண்டுவான் என்பான் எனைத்தொன்றும்**
**கள்ளாமை காக்கதன் நெஞ்சு.** 1

**பரிமேலழகர்:** எள்ளாமை வேண்டுவான் என்பான்-வீட்டினை இகழாது விரும்புவான் இவனென்று தவத்தோரான் நன்கு மதிக்கப்படுவான், எனைத்து ஒன்றும் கள்ளாமை தன் நெஞ்சு காக்க - யாதொரு பொருளையும் பிறரை வஞ்சித்துக் கொள்ளக் கருதாவகை தன் நெஞ்சினைக் காக்க.

எள்ளாது என்னும் எதிர்மறை வினையெச்சம் எள்ளாமை எனத் திரிந்து நின்றது. வீட்டினை இகழ்தலாவது காட்சியே அளவை யாவ தென்றும், நிலம், நீர், தீ, வளி எனப் பூதம் நான்கே என்றும், அவற்றது புணர்ச்சி விசேடத்தால் தோன்றிப் பிரிவான் மாய்வதாய உடம்பின் கண்ணே அறிவு மதுவின்கண் களிப்புப் போல வெளிப்பட்டு அழியும் என்றும், இறந்த உயிர் பின் பிறவாது என்றும், இன்பமும் பொருளும் ஒருவ

ஞல் செய்யப்படுவன என்றும் சொல்லும் உலோகாயதம் முதலிய மயக்க நூல்களைத் தெளிந்து, அவற்றிற்கு ஏற்ப ஒழுகுதல். ஞானத்திற்கு ஏதுவாய மெய்ந்நூற் பொருளையேனும் ஆசிரியனை வழிபட்டன்றி அவனை வஞ்சித்துக் கொள்ளின், அதுவும் களவாமாகலின் எனைத் தொன்றும் என்றார். நெஞ்சு கள்ளாமற் காக்க எனவே துறந்தார்க்கு விலக்கப்பட்ட கள்ளுதல், கள்ளக் கருதுதல் என்பது பெற்றும்.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** எள்ளாமை வேண்டுவான் - பிறரால் இகழப்படாமையை வேண்டுவான்.

**பரிதியார்:** பரசமயத்தார் தந்த வசை இகழாமல் வேண்டுமாகில் கபடுள்ளது விடுக.

**காளிங்கர்:** எள்ளாமை வேண்டுவான் - அறநூலாலும் சான்றோராலும் எஞ்ஞான்றும் இகழாமை வேண்டுவான்.

**கவிராஜ பண்டிதர்:** பிறரை வஞ்சித்துக் கொள்ளக் காரணம் காரியம் என்று இரண்டு விதக் களவையும் நினையாமல் இருக்கிறவன். (281)

## 282

உள்ளத்தால் உள்ளலும் தீதே பிறன்பொருளைக்
கள்ளத்தால் கள்வேம் எனல். 2

**பரிமேலழகர்:** உள்ளத்தால் உள்ளலும் தீது - குற்றங்களைத் தம் நெஞ்சால் கருதுதலும் துறந்தார்க்குப் பாவம்; பிறன் பொருளை கள்ளத்தால் கள்வேம் எனல் - ஆதலால், பிறன் ஒருவன் பொருளை அவன் அறியா வகையால் வஞ்சித்துக் கொள்வேம் என்று கருதற்க.

உள்ளத்தால் என வேண்டாது கூறினர், அவர் உள்ளம் ஏனையோர் உள்ளம் போலாது சிறப்புடைத்து என்பது முடித்தற்கு. உள்ளலும் என்பது இழிவு சிறப்பும்மை. அல் விகுதி வியங்கோள் எதிர்மறைக்கண் வந்தது.

இவை இரண்டு பாட்டானும் இந் நடைக்குக் களவாவது இது என்பதூஉம், அது கடியப்படுவது என்பதூஉம் கூறப்பட்டன.

### உரை வேறுபாடு

**பரிதியார்:** தவம் செய்வார்க்குப் பர்த்தாக்கள் இரங்கிக் கொடுக்கும் பொருள் அன்றியிலே, ஒரு திருப்பணிபோலே காட்டி வாங்குதல் கனவிலும் நினைப்பது அல்ல. (282)

## 283

களவினால் ஆகிய ஆக்கம் அளவிறந்
தாவது போலக் கெடும். 3

**பரிமேலழகர்:** களவினால் ஆகிய ஆக்கம் - களவினால் உளதாகிய பொருள், ஆவது போல அளவு இறந்து கெடும் - வளர்வதுபோலத் தோன்றித் தன் எல்லையைக் கடந்து கெடும்.

ஆக்கத்திற்கு ஏதுவாகலின் ஆக்கம் எனப்பட்டது. எல்லையைக் கடந்து கெடுதலாவது, தான் போங்கால் பாவத்தையும் பழியையும் நிறுத்திச் செய்த அறத்தையும் உடன்கொண்டு போதல். 'அளவறிந்து' என்று பாடம் ஓதி,

அவன் பயன் கொள்ளும் அளவு அறிந்து அவ்வளவிற்கு உதவாது கெடும் என்று உரைப்பாரும் உளர்.

உரை வேறுபாடு

**பரிதியார்:** கபடத்தினல் பெற்ற செல்வம் ஆகிருப்போலே அழிந்து போம்.

**காளிங்கர்:** தமது உரனினல் ஆகிய ஆக்கமன்றிப் பிறர் பொருளைக் களவினல் விரும்பிய ஆக்கம் உளதாகில் அப்பொழுதைக்கு ஆவதுபோலக் காட்டி, பின்பு விளையும் காலத்து உயிர்க்கேடும் பொருட்கேடும் உறுப்புக் கேடும் என இவை முதலான கேடும் வந்து, பின்பு நரகத்தில் தள்ளும்.

ஒப்புமை

**ஆவது போலக் கெடும்:**

"தீயன, ஆவதே போன்று கெடும்." (பழமொழி, 173.) (283)

## 284

களவின்கண் கன்றிய காதல் விளைவின்கண்
வீயா விழுமம் தரும். 4

**பரிமேலழகர்:** களவின்கண் கன்றிய காதல் - பிறர் பொருளை வஞ்சித்துக் கோடற்கண்ணே மிக்க வேட்கை, விளைவின்கண் வீயா விழுமம் தரும் - அப்பொழுது இனிதுபோலத் தோன்றித் தான் பயன் கொடுக்கும்பொழுது தொலையாத இடும்பையைக் கொடுக்கும்.

கன்றுதலான் எஞ்ஞான்றும் அக் களவையே பயில்வித்து அதனல் பாவமும் பழியும் பயந்தேவிடுதலின், 'வீயா விழுமம் தரும்' என்ருர்.

இவை இரண்டு பாட்டானும் அது கடியப்படுவதற்குக் காரணம் கூறப்பட்டது.

உரை வேறுபாடு

**மணக்குடவர்:** இது நரகம் புகுத்தும் என்றது.

**பரிதியார்:** கபடபுத்தி இருக்கையிலே எத்தனை தன்ம தானம் பண்ணினும், உவர்நிலத்தில் இட்ட பயிராம்.

**காளிங்கர்:** வீயா விழுமம் - எஞ்ஞான்றும் ஒழியாத நரகத்துள் வீழ்ந்து அழும் துன்பம்.

ஒப்புமை

1. **விளைவின்கண் வீயா விழுமம் தருதல்:**

"வினைப்பயன் விளையும் காலை உயிர்கட்கு
மனப்பே ரின்பமும் கவலையும் காட்டும்." (மணி. 30 : 62-3.)

2. **முற்றும் :**

"முளரிமுக நாகமுளை யெயிறுழுது கீற
அளவில்துயர் செய்வரிவண் மன்னரத னுலும்
விளைவரிய மாதுயரம் வீழ்கதியுள் உய்க்கும்
களவுகட னுகக் கடிந்திடுதல் சூதே." (சீவக. 2870.)

"களவின் ஆகிய காரறி வுள்ளன்மின்
விளைவில் வெவ்வினை வீவில் கதிகளுள்
உளைய வுள்ளழித் தொன்றல வேதனை
வளைய வாங்கி வருத்தம் உறுக்குமே." (சூளா.[1])

1. புறத்திரட்டு, 308.

"பீடில் செய்திக ளாற்கள வில்பிறர்
வீடில் பல்பொருள் கொண்ட பயன்எனக்
கூடிக் காலொடு கைகளைப் பற்றிவைத்
தோட லின்றி உலையக் குறைக்குமே." (வளையாபதி.) (284)

### 285

அருள்கருதி அன்புடையர் ஆதல் பொருள்கருதிப்
பொச்சாப்புப் பார்ப்பார்கண் இல். 5

**பரிமேலழகர்:** அருள் கருதி அன்பு உடையர் ஆதல் - அருளினது உயர்ச்சியை அறிந்து அதன்மேல் அன்புடையராய் ஒழுகுதல், பொருள் கருதி பொச்சாப்பு பார்ப்பார்கண் இல் - பிறர்பொருளை வஞ்சித்துக் கொள்ளக் கருதி அவரது சோர்வு பார்ப்பார்மாட்டு உண்டாகாது.

தமக்குரிய பொருளையும் அதனது குற்றம் நோக்கித் துறந்து போந்தவர், பின் பிறர்க்குரிய பொருளை நன்கு மதித்து அதனை வஞ்சித்துக் கோடற்கு அவரது சோர்வு பார்க்கும் மருட்சியராயின், அவர்மாட்டு உயிர்கண்மேல் அருள்செய்தல் நமக்கு உறுதி என்று அறிந்து அவ் வருளின் வழுவாது ஒழுகும் தெருட்சி கூடாது என்பதாம்.

#### உரை வேறுபாடு

**பரிதியார்:** பிறவா நெறி வேண்டி அன்பு பெறும் கருத்தை அறியார் மூன்றுவகை ஆசை மிகுத்துப் பொய் நெறியிலே நிற்பார். (285)

### 286

அளவின்கண் நின்றொழுகல் ஆற்றார் களவின்கண்
கன்றிய காத லவர். 6

**பரிமேலழகர்:** அளவின்கண் நின்று ஒழுகல் ஆற்றார் - உயிர் முதலியவற்றை அளத்தலாகிய நெறியின்கண் நின்று அதற்கு ஏற்ப ஒழுக மாட்டார், களவின்கண் கன்றிய காதலவர் - களவின்கண்ணே மிக்க வேட்கையை உடையார்.

உயிர் முதலியவற்றை அளத்தலாவது, காட்சி முதலாகச் சொல்லப்பட்ட அளவைகளான் உயிர்ப்பொருளையும், அதற்கு அநாதியாய் வருகின்ற நல்வினை தீவினைக் குற்றவிளைவுகளையும், அவற்றான் அது நாற்கதியுள் பிறந்து இறந்து வருதலையும், அது செய்யாமல் அவற்றைக் கெடுத்தற்கு உபாயமாகிய யோக ஞானங்களையும், அவற்றான் அஃது எய்தும் வீட்டினையும் அளந்து உள்ளவாறு அறிதல். இதனை ஆருகதர் தருமத்தியானம் என்ப. அதற்கு ஏற்ப ஒழுகுதலாவது, அவ் வளக்கப்பட்டனவற்றுள் தீயனவற்றின் நீங்கி நல்லனவற்றின்வழி நிற்றல்.

#### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** அளவின்கண் நின்று ஒழுகலாற்றார் - நேரின்கண் நின்று ஒழுகுதலைச் செய்யமாட்டார்.

**பரிதியார்:** தவநெறியிலே நிற்கமாட்டார் கபடபுத்தியிலே மிகுத்தவர்.

**காளிங்கர்:** அளவின்கண் - தமக்கு ஒத்த நீதியின் மரபிலே.

கவிராஜ பண்டிதர்: அளவின்கண் நின்று ஒழுகலாற்ருர் - ஜீவனுக்கு ஈடேற்றமாகிய விரத சீலங்களிலே நின்று நடக்க மாட்டார். (286)

## 287

களவென்னும் காரறி வாண்மை அளவென்னும்
ஆற்றல் புரிந்தார்கண் இல். 7

பரிமேலழகர்: களவு என்னும் கார் அறிவு ஆண்மை - களவு என்று சொல்லப்படுகின்ற இருண்ட அறிவினை உடையராதல், அளவு என்னும் ஆற்றல் புரிந்தார்கண் இல் - உயிர் முதலியவற்றை அளத்தல் என்னும் பெருமையை விரும்பினர்கண் இல்லை.

இருள், மயக்கம். காரியத்தைக் காரணமாக உபசரித்து, 'களவு என்னும் காரறிவாண்மை' என்றும், காரணத்தைக் காரியமாக்கி, 'அளவு என்னும் ஆற்றல்' என்றும் கூறினர்.

களவும் துறவும் இருளும் ஒளியும் போலத் தம்முள் மாருகலின், ஒருங்கு நில்லா என்பது இவை மூன்று பாட்டானும் கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

மணக்குடவர்: கார் அறிவாண்மை - களவாகிய பொல்லா அறிவுடைமை.

பரிதியார்: அளவு என்னும் ஆற்றல் - அளவாகிய யாக்கை நிலையாமை.

காளிங்கர்: துறவு நெறி உடையார்மாட்டு யாதானும் ஒரு காரணத்தால் ஒருகால் ஒரு களவியல் கருதத் துணியுமாயின் மற்று அது பெரிதும் அறிவின்மை ஆகலான் மற்று அக் களவினைக் கருதுகின்ற அறியாமையானது அளவு என்கின்ற நன்னெறியுடையார் மாட்டு எஞ்ஞான்றும் இல்லை.

கவிராஜ பண்டிதர்: காரறிவாண்மை - கபட மனசு.

### ஒப்புமை

களவென்னும் காரறிவாண்மை:

"களவின் ஆகிய காரறிவு." (சூளா.) (287)

## 288

அளவறிந்தார் நெஞ்சத் தறம்போல நிற்கும்
களவறிந்தார் நெஞ்சில் கரவு. 8

பரிமேலழகர்: அளவு அறிந்தார் நெஞ்சத்து அறம்போல நிற்கும் - அவ் வளத்தலையே பயின்றவர் நெஞ்சத்து அறம் நிலை பெற்ருற்போல நிலை பெறும், களவு அறிந்தார் நெஞ்சில் கரவு - களவையே பயின்றவர் நெஞ்சத்து வஞ்சனை.

உயிர் முதலியவற்றை அளந்து அறிந்தார்க்குத் துறவறம் சலியாது நிற்கும் என்பது இவ் வுவமையால் பெற்ரும். களவோடு மாறின்றி நிற்பது இதனல் கூறப்பட்டது.

உரை வேறுபாடு

**பரிதியார் :** அளவு அறிந்தார் - யாக்கை நிலையாமை கண்டவர்.

**காளிங்கர்:** அளவு அறிந்தார் - நீதியின் ஒத்த மரபு உணர்ந்தோர். (288)

## 289

அளவல்ல செய்தாங்கே வீவர் களவல்ல
மற்றைய தேற்றா தவர். 9

**பரிமேலழகர் :** அளவு அல்ல செய்தாங்கே வீவர் - அவ் வளவு அல்லாத தீய நினைவுகளை நினைத்தபொழுதே கெடுவர், களவு அல்ல மற்றைய தேற்றாதவர் - களவு அல்லாத பிறவற்றை அறியாதவர்.

தீய நினைவுகளாவன பொருள் உடையாரை வஞ்சிக்குமாறும், அவ் வஞ்சனையால் அது கொள்ளுமாறும், கொண்ட அதனால் தாம் புலன்களை நுகருமாறும் முதலாயின. நினைத்தலும் செய்தலாகலின் செய்து என்றும், அஃது உள்ள அறங்களைப் போக்கிக் கரந்த சொற்செயல்களைப் புகுவித்து அப்பொழுதே கெடுக்குமாகலின் ஆங்கே வீவர் என்றும் கூறினர். மற்றைய ஆவன, துறந்தார்க்கு உணவாக ஓதப்பட்ட காய் கனி கிழங்கு சருகு முதலாயினவும், இல்வாழ்வார் செய்யும் தானங்களும் ஆம். தேற்றாமை, அவற்றையே நுகர்ந்து அவ்வளவான் நிறைந்திருத்தலை அறியாமை.

இதனால் கள்வார் கெடுமாறு கூறப்பட்டது.

உரை வேறுபாடு

**மணக்குடவர்:** நேர் ஆகாதன செய்து அவ்விடத்தே கெடுவார், களவு அல்லாத மற்றைய அறங்களைத் தெளியாதவர்.

இது கள்வாரை அரசர் கொல்வர் என்றது.

**பரிதியார்:** தவத்திற்கு ஏலாத காரியஞ் செய்து நரகத்திலே வீழ்வர், கபட புத்தியல்லது ஞானவழியை அறியாதார்.

**காளிங்கர்;** செய்யத்தகும் தகவுகேடாகிய மிகைநடைகளைச் செய்து அப்பொழுதே கெடுவர்; யாவரோ எனில் களவு அல்லனவாகிய நன்மரபுகளைத் தெளியாதவர். (289)

## 290

கள்வார்க்குத் தள்ளும் உயிர்நிலை கள்ளார்க்குத்
தள்ளாது புத்தேள் உலகு. 10

**பரிமேலழகர் :** கள்வார்க்கு உயிர்நிலை தள்ளும் - களவினைப் பயில்வார்க்குத் தம்மின் வேறு அல்லாத உடம்பும் தவறும்; கள்ளார்க்கு புத்தேள் உலகு தள்ளாது - அது செய்யாதார்க்கு நெடுஞ்சேணதாகிய புத்தேள் உலகும் தவறாது.

உயிர் நிற்றற்கு இடனாகலின், உயிர்நிலை எனப்பட்டது. சிறப்பு உம்மைகள் இரண்டும் விகாரத்தால் தொக்கன. இம்மையினும் அரசனால் ஒறுக்கப்படுதலின், 'உயிர்நிலையும் தள்ளும்' என்றும், மறுமையினும் தேவராதல் கூடுதலின், 'புத்தேளுலகும் தள்ளாது' என்றும் கூறினர். "மற்றது தள்ளினும் தள்ளாமை நீர்த்து"[1] என்புழியும் தள்ளுதல் இப்பொருட்டாதல் அறிக. இதற்குப் பிறவாறு உரைப்பாரும் உளர்.

இதனான் இருவர் பயனும் ஒருங்கு கூறப்பட்டது.

---

1. குறள், 596.

உரை வேறுபாடு

**மணக்குடவர்:** உயிர் நிலை தள்ளும் - உயிர் நிலையாகிய வீடு பெறுதல் தப்பும்.

**பரிதியார்:** கபடியர்க்கு அற்பாயுசுவாய்ச் சுவர்க்கம் இல்லை. களவு இல்லாதார்க்குத் தீர்க்காயுசு உண்டாய் மறுமைக்கும் சுவர்க்கம் உண்டு.

**காளிங்கர்:** அருளுடைமை முதலாக வருகின்ற அதிகாரப் புறநடைக் கருத்தாகிய துறவியற்றுவார் இடையிலே களவு இயற்றுவாராயின் முத்தியினை நீங்குவார்; அதனால் களவு இயற்றாது இத்துறவு இயற்றுவார்க்குக் கடவுளர் யாவரும் சான்றோராதலால் அதனை நீக்கார்; தாமும் அதற்கு அருளுதவி செய்வார். *(290)*

---

# 30. வாய்மை

**பரிமேலழகர்:** அஃதாவது மெய்யினது தன்மை. பெரும்பான்மையும் காமமும் பொருளும் பற்றி நிகழ்வதாய பொய்ம்மையை விலக்கலின், இது கூடா ஒழுக்கம் கள்ளாமைகளின்பின் வைக்கப்பட்டது.

**மணக்குடவர்:** வாய்மையாவது பொய் சொல்லாமை.

### 291

**வாய்மை எனப்படுவ தியாதெனின் யாதொன்றும்**
**தீமை இலாத சொலல்.** 1

**பரிமேலழகர்:** வாய்மை என படுவது யாது எனின் - மெய்ம்மை என்று சிறப்பித்துச் சொல்லப்படுவது யாது என்று வினவின், தீமை யாது ஒன்றும் இலாத சொலல் - அது பிறிதோர் உயிர்க்குத் தீங்கு சிறிதும் பயவாத சொற்களைச் சொல்லுதல்.

தீமை யாது ஒன்றும் இலாத என இயையும். எனப்படுவது என்பது, 'ஊரெனப்படுவது உறையூர்' 'என்றாற்போல நின்றது. இதனன் நிகழ்ந்தது கூறல் என்பது நீக்கப்பட்டது. அதுதானும், தீங்கு பயவாதாயின் மெய்ம்மையாம், பயப்பின் பொய்ம்மையாம் என்பது கருத்து.

உரை வேறுபாடு

**பரிதியார்:** உண்மையே சொல்வதற்குச் சரி யாவர்க்கும் தோஷ வார்த்தை சொல்லாமல் இருப்பது.

**காளிங்கர்:** தீமை இலாத - தமக்கும் பிறர்க்கும் ஒரு தீங்கும் இல்லாதனவாகிய தூய சொற்கள். *(291)*

### 292

**பொய்ம்மையும் வாய்மை இடத்த புரைதீர்ந்த**
**நன்மை பயக்கும் எனின்.** 2

**பரிமேலழகர்:** புரை தீர்ந்த நன்மை பயக்கும் எனின் - பிறர்க்குக் குற்றம் தீர்ந்த நன்மையைப் பயக்குமாயின், பொய்ம்மையும் வாய்மை இடத்த - பொய்ம்மைச் சொற்களும் மெய்ம்மைச் சொற்களின்பாலவாம்.

---

1. வாய்மையின் சிறப்பைக் குறித்தபடி; 'ஊர் எனப்படுவது உறையூர் என்ற இடத்து, பிறவும் ஊருண்மை சொல்லி அவற்றுளெல்லாம் உறையூர் சிறப்புடைமை சொல்லுப.' (இறை. 1, உரை.)

குற்றந் தீர்ந்த நன்மை, அறம்; அதனைப் பயத்தலாவது, கேடாதல் சாக்காடாதல் எய்த நின்றதோர் உயிர் அச் சொற்களின் பொய்ம்மையானே அதனின் நீங்கி இன்புறுதல். நிகழாதது கூறலும் நன்மை பயவாதாயின் பொய்ம்மையாம், பயப்பின் மெய்ம்மையாம் என்பது கருத்து.

இவை இரண்டு பாட்டானும் தீங்கு பயவாத நிகழ்ந்தது கூறலும் நன்மை பயக்கும் நிகழாதது கூறலும் மெய்ம்மை எனவும், நன்மை பயவாத நிகழாதது கூறலும் தீங்கு பயக்கும் நிகழ்ந்தது கூறலும் பொய்ம்மை எனவும் அவற்றது இலக்கணம் கூறப்பட்டது.

**மேற்கோள் விளக்கம்**

மூன்றும் எழுத்து ஒன்றி வந்த எதுகை.[1] (யா. கா. 43.) (292)

**293**

தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்னெஞ்சே தன்னைச் சுடும். 3

**பரிமேலழகர்:** தன் நெஞ்சு அறிவது பொய்யற்க - ஒருவன் தன் நெஞ்சு அறிவது ஒன்றனைப் பிறர் அறிந்திலர் என்று பொய்யாது ஒழிக; பொய்த்தபின் தன் நெஞ்சே தன்னை சுடும் - பொய்த்தானாயின் அதனை அறிந்த தன் நெஞ்சே அப் பாவத்திற்குக் கரியாய் நின்று தன்னை அதன் பயனாய துன்பத்தை எய்துவிக்கும்.

நெஞ்சு கரியாதல், "கண்டவர் இல்லென வுலகத்துள் உணராதார், தங்காது தகைவின்றித் தாஞ்செய்யும் வினைகளுள், நெஞ்சறிந்த கொடியவை மறைப்பவு மறிபவர், நெஞ்சத்திற் குறுகிய கரியில்லை யாகலின்"[2] என்பதனானும் அறிக.

பொய் மறையாமையின், அது கூறலாகாது என்பது இதனால் கூறப் பட்டது.

**உரை வேறுபாடு**

**மணக்குடவர்:** சுடும் - ஒறுக்கும். சுடுதலாவது, அதனால் பிறர்க்கு உளதாகும் தீமையைக் கண்டு, 'என் செய்தோம் யாம்' என்று வருந்து வித்தல்.

**பரிதியார்:** மனம் அறிந்த பொய்யைச் சொல்ல வேண்டாம்; சொன்னால், ஆத்மா விதனப்படும்; அது எது எனில், வாக்கு என்கிற புலன் பொய்சொல்ல, நாம் நரகத்துக்கு ஏதுவாகிறோம் என்று, நின்ற புலன்கள் விதனப்படும்.

**காளிங்கர்:** தன் நெஞ்சே - உள்ளறி கருவியாகிய தன் நெஞ்சுதானே.

**மேற்கோள் விளக்கம்**

நெஞ்சு சுடுதல் என்பது இயற்றாதவற்றை இயற்றியவைபோல வைத்துச் சொல்லும் மரபுவழுவமைதியின்பாற் படும். (நன். 408, மயிலை.)

**ஒப்புமை**

**தன் நெஞ்சு அறிவது பொய்த்தல்:**

"அறிகரி பொய்த்தலின் ஆகுமோ வதுவே" (நற். 196 : 9.)

---

1. 'பொய்ம்மையும்' என்று பாடம் கொண்டார்.
2. கலி. 125 : 1.

"அறிகரி பொய்த்தல் ஆன்றோர்க் கில்லை" (குறுந். 184 : 1.)
"தன்னைத்தன் நெஞ்சம் கரியாகத் தானடக்கிற்
பின்னைத்தான் எய்தா நலனில்லை." (அறநெறி. 206.) (293)

## 294

**உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார்**
**உள்ளத்துள் எல்லாம் உளன். 4**

**பரிமேலழகர்:** உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் - ஒருவன் தன் உள்ளத்திற்கு ஏற்பப் பொய் கூறாது ஒழுகுவானாயின், உலகத்தார் உள்ளத்துள் எல்லாம் உளன் - அவன் உயர்ந்தோர் உள்ளத்தின்கண் எல்லாம் உளனாம்.

உள்ளத்தால் என்பது வேற்றுமை மயக்கம். பொய் கூறாது ஒழுகுதலாவது மெய் கூறி ஒழுகுதல். அவனது அறத்தினது அருமை நோக்கி உயர்ந்தோர் எப்பொழுதும் அவனையே நினைப்பர் என்பதாம்.

இதனான் இம்மைப் பயன் கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** இது பொய்யை நினையாதாரை எல்லாரும் போற்றுவர் என்றது.

**பரிதியார்:** மனம் பொருந்த மெய் சொல்லுவானாகில் சர்வேசுவரனுக்கு நிகராகையால் உலகத்தார் ஆத்துமாவில் இருப்பன். (294)

## 295

**மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தொடு**
**தானம்செய் வாரின் தலை. 5**

**பரிமேலழகர்:** மனத்தொடு வாய்மை மொழியின் - ஒருவன் தன் மனத்தொடு பொருந்த வாய்மையைச் சொல்வானாயின், தவத்தொடு தானம் செய்வாரின் தலை - அவன் தவமும் தானமும் ஒருங்கு செய்வாரினும் சிறப்பு உடையன்.

மனத்தொடு பொருந்துதல், மனத்திற்கு ஏறுதல். புறமாகிய மெய்யால் செய்யும் அவற்றினும் அகமாகிய மனமொழிகளால் செய்யுமது பயன் உடைத்து என்பதாம்.

### உரை வேறுபாடு

**பரிதியார்:** மனமும் வாக்கும் கூடிச் சத்தியமே சொல்வானாகில் தனத்தாலே தசதானம் பண்ணுவாரிலும் பெரியன்.

### ஒப்புமை

1. **தவமும் தானமும்:**

"தானம் தவம்இரண்டும்" (குறள், 19.)
"தவமெளிது தானம் அரிது" (ஏலாதி, 3.)
"தவத்தொடு தானம்." (அறநெறி. 143.)

2. **முற்றும்:**

"வாய்மை யுடைமை வனப்பாகும்-தீமை
மனத்தினும் வாயினும் சொல்லாமை மூன்றும்
தவத்தில் தருக்கினர் கோள்." (திரி. 78.) (295)

## 296

பொய்யாமை அன்ன புகழ்இல்லை எய்யாமை
எல்லா அறமும் தரும். 6

**பரிமேலழகர் :** பொய்யாமை அன்ன புகழ் இல்லை - ஒருவனுக்கு இம்மைக்குப் பொய்யாமையை ஒத்த புகழ்க்காரணம் இல்லை; எய்யாமை எல்லா அறமும் தரும் - மறுமைக்கு மெய்வருந்தாமல் அவனுக்கு எல்லா அறங்களையும் தானே கொடுக்கும்.

புகழ்: ஈண்டு ஆகுபெயர். இல்லறத்திற்குப் பொருள் கூட்டல் முதலியவற்றானும் துறவறத்திற்கு உண்ணாமை முதலியவற்றானும் வருந்தல் வேண்டுமன்றே; அவ் வருத்தங்கள் புகுதாமல் அவ் விருவகைப் பயனையும் தானே தரும் என்பார், 'எய்யாமை எல்லா அறமும் தரும்' என்றார்.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** எய்யாமை - அவன் அறியாமல்.

**பரிதியார்:** சத்தியத்தைப் போலே புகழ் இல்லை; இந்த நிலைமையிலே நிற்பானாகில் சிவ புண்ணியம், பசு புண்ணியம் எல்லாம் உண்டாம்.

**காளிங்கர்:** ஒருவர்க்கு வாய்மையை ஒத்ததோர் வண் புகழ் இல்லை; இனி மற்று அதனினும் அரியது ஒன்று உண்டாவது யாதோ எனில், யான் வாய்மைக்குணம் உடையேன் என்று மதித்திராமையும் உடையனாயின்; மற்று அது தான் வருந்தாதிருக்க எல்லா அறத்தின் பயனையும் தரும்.

எய்யாமை என்பது முயலாமை; அறியாமை என்பாரும் உளர்.

### ஒப்புமை

**பொய்யாமை எல்லா அறமும் தருதல்:**

"வாய்மையின் வழாஅது மன்னுயிர் ஓம்புநர்க்
கியாவதும் உண்டோ எய்தா அரும்பொருள்'' *(சிலப். 11: 158-9.)*
"பொய்கடிந் தறத்தின் வாழ்வார்." *(பெரிய. திருநீல. 2.) (296)*

## 297

பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று. 7

**பரிமேலழகர் :** பொய்யாமை பொய்யாமை ஆற்றின் - ஒருவன் பொய்யாமையே பொய்யாமையே செய்ய வல்லனாயின், பிற அறம் செய்யாமை செய்யாமை நன்று - அவன் பிற அறங்களைச் செய்யாமையே செய்யாமையே நன்று.

அடுக்கு இரண்டனுள் முதலது இடைவிடாமைமேற்று; ஏனையது துணிவின்மேற்று. பல அறங்களையும் மேற்கொண்டு செய்தற்கு அருமையான் சில தவறின் குற்றப்படுதலின், அவை எல்லாவற்றின் பயனையும் தானே தரவற்றாய இதனையே மேற்கொண்டு தவறாமற் செய்தல் நன்று என்பார், 'செய்யாமை செய்யாமை நன்று' என்றார். இதனை இவ்வாறன்றி, பொய்யாமையைப் பொய்யாமல் செய்யின் பிற அறம் செய்கை நன்றெனப் பொழிப்பாக்கி, பொய் கூறிற் பிற அறம் செய்கை நன்றாகாது என்பது அதனாற் போந்த பொருளாக்கி உரைப்பாரும் உளர்.

பிற அறங்களெல்லாம் தரும் பயனைத் தானே தரும் ஆற்றலுடைத்து என மறுமைப்பயனது மிகுதி இவை மூன்று பாட்டானும் கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** பொய்யாமையைப் பொய்யாமல் செலுத்துவனுயின், பிற அறங்களைச் செய்தல் நன்ரும்; அல்லது தீதாம்.

**காளிங்கர்:** பொய்யாமையாகிய வாய்மையைச் செலுத்தும் இடத்து இடையிடையே பொய் புகுந்து வழுங்காமல் நடத்த வல்லனுகில், அதுவே அறம். இதற்கு வேருகிய பாவங்களை மேற்கொண்டு செய்யாமையாகிய தவிர்தலை உடைய செயல்களே நன்று.

செய்யாமை செய்யாமை என்றது ஒருவன் அறம் செய்யக் கருதும் இடத்துப் பொய்யுரையாகிய பாவங்களையும் தவிருவான் என்பது பொருள் ஆயிற்று என அறிக. இப்படியன்றி இடையே பொய்புகின் அறமும் நன்ருகாது என்றவாறு. (297)

## 298

புறம்தூய்மை நீரான் அமையும் அகம்தூய்மை
வாய்மையால் காணப் படும். 8

**பரிமேலழகர்:** புறம் தூய்மை நீரான் அமையும் - ஒருவனுக்கு உடம்பு தூய்தாம் தன்மை நீரானே உண்டாம்; அகம் தூய்மை வாய்மையான் காணப்படும் - அதுபோல மனம் தூய்தாம் தன்மை வாய்மையான் உண்டாம்.

காணப்படுவது உள்ளதாகலின் உண்டாம் என்று உரைக்கப்பட்டது. உடம்பு தூய்தாதல், வாலாமை நீங்குதல். மனம் தூய்தாதல், மெய்யுணர்தல். புறம் தூய்மைக்கு நீரல்லது காரணம் இல்லாதாற்போல, அகம் தூய்மைக்கு வாய்மையல்லது காரணம் இல்லை என்றவாருயிற்று.

இதனுனே துறந்தார்க்கு இரண்டு தூய்மையும் வேண்டும் என்பதூஉம் பெற்ரும்.

### ஒப்புமை

**வாய்மையால் அகம் தூய்மை யாதல்:**

"வாய்மையே தூய்மை யாக...பூசனை ஈச ஞர்க்கு"
(**அப்பர்**, பொது. 4.)

"வாய்மை யென்னுமீ தன்றி வையகம்
தூய்மை யென்னுமொன் றுண்மை சொல்லுமோ."
(**கம்ப.** கிஷ்கிந்தா. 115.) (298)

## 299

எல்லா விளக்கும் விளக்கல்ல சான்ருேர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு. 9

**பரிமேலழகர்:** எல்லா விளக்கும் விளக்கு அல்ல - புறத்து இருள் கடியும் உலகத்தார் விளக்குகள் எல்லாம் விளக்கு ஆகா; சான்ருேர்க்கு விளக்கு பொய்யா விளக்கே - துறவான் அமைந்தார்க்கு விளக்காவது மனத்து இருள் கடியும் பொய்யாமையாகிய விளக்கே.

உலகத்தார் விளக்காவன ஞாயிறு, திங்கள், தீ என்பன. இவற்றிற் குப் போகாத இருள் போகலின், பொய்யா விளக்கே விளக்கு என்ருர். அவ் விருளாவது அறியாமை.[1] பொய்யாத விளக்கு என்பது குறைந்து நின்றது.

1. "வெங்கதிர்க்கும் செந்தீ விரிசுடர்க்கும் நீங்காது, பொங்கு மதியொளிக் கும் போகாது - தங்கும், வளமையான் வந்த மதிமருட்சி மாந்தர்க், கிளமையான் வந்த இருள்." (**தண்டி.** 49, மேற்.)

பொய்கூறுமையாகிய விளக்கு என்றவாறு. இனி இதற்குக் கல்வி முதலிய வற்ருன் வரும் விளக்கமெல்லாம் விளக்கம் அல்ல, அமைந்தார்க்கு விளக்க மாவது பொய்யாமையான் வரும் விளக்கமே என்று உரைப்பாரும் உளர்.

**உரை வேறுபாடு**

**மணக்குடவர்:** சான்ருேர்க்கு எல்லா அறத்திஞலும் உண்டான ஒளியும் ஒளி அல்ல; பொய்யாமையால் உண்டான ஒளியே ஒளியாகும். இ:து, பொய்யாவிளக்குச் சான்ருேர்க்கு இன்றியமையாதது என்று கூறிற்று.

**பரிதியார்:** எல்லா விளக்காவன தானம், தன்மம், கல்வி, ஞானம், பூசை என்பன. இந்த விளக்கிலும் பொய் சொல்லாததே விளக்கு.

**மேற்கோள் விளக்கம்**

இடையின எதுகை வந்தது. (தொல். செய். 94, ந.)

**ஒப்புமை**

**பொய்யாமையாகிய விளக்கு:**

"புகழ்செய்யும் பொய்யா விளக்கம்" (நான்மணி. 22.)

"பொய்யா நாவதனுற் புகழ்வார்கள் மனத்தினுள்ளே
மெய்யே நின்றெரியும் விளக்கே யொத்த தேவர்பிரான்."
(சுந்தரர். கழிப்பாலை, 9.) (299)

## 300

**யாம்மெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்தொன்றும்
வாய்மையின் நல்ல பிற.** 10

**பரிமேலழகர்:** யாம் மெய்யா கண்டவற்றுள் - யாம் மெய்ந்நூல் களாகக் கண்ட நூல்களுள், எனைத்து ஒன்றும் வாய்மையின் நல்ல பிற இல்லை - யாதொரு தன்மையானும் வாய்மையின் மிக்கனவாகச் சொல்லப் பட்ட பிற அறங்கள் இல்லை.

மெய் உணர்த்துவனவற்றை மெய் என்ருர். அவையாவன தங்கண் மயக்கம் இன்மையின் பொருள்களை உள்ளவாறு உணரவல்லராய்க் காம வெகுளிகள் இன்மையின் அவற்றை உணர்ந்தவாறே உரைக்கவும் வல்லராய இறைவர், அருளான் உலகத்தார் உறுதி எய்துதற்பொருட்டுக் கூறிய ஆக மங்கள். அவை எல்லாவற்றினும் இ:து ஒப்ப முடிந்தது என்பதாம்.

இவை மூன்று பாட்டானும் இவ் வறத்தினது தலைமை கூறப்பட்டது.

**உரை வேறுபாடு**

**பரிதியார்:** ஆத்மாவைச் செனனத்திலே தள்ளாமல் திருவடியிலே சேர்ப்பது சத்தியவாக்கியம் அன்றி, வேறொன்றும் கண்டிலோம். அசத்தியம் சொன்ன தருமபுத்திரன் நரகம் கண்டான்; சத்தியம் சொன்ன அரிச்சந்திரன் ஸ்ரீ பரமேசுவரன் பாதம் கண்டு சிவலோகம் சேர்ந்தான். (300)

---

# 31. வெகுளாமை

**பரிமேலழகர்:** அ:தாவது சினத்தைச் செய்வதற்குக் காரணம் ஒருவன்மாட்டு உளதாய இடத்தும் அதனைச் செய்யாமை. இது பொய்ம்மை பற்றி நிகழ்வதாய வெகுளியை விலக்கலின், வாய்மையின்பின் வைக்கப் பட்டது.

**பரிதியார்:** வெகுளாமையாவது, வாக்கினல் பொய் சொல்லாதது போலே, மனத்தினுல் குற்றமாகிய கோபத்தையும் விடுக என்றவாறு.

### 301

**செல்லிடத்துக் காப்பான் சினம்காப்பான் அல்லிடத்துக்**
**காக்கின்என் காவாக்கால் என்.** 1

**பரிமேலழகர்:** சினம் செல் இடத்து காப்பான் காப்பான் - தன் சினம் பலிக்கும் இடத்து அதனை எழாமல் தடுப்பவனே அருளால் தடுப்பானுவான்; அல் இடத்து காக்கின் என் காவாக்கால் என் - ஏனைப் பலியாத இடத்து அதனைத் தடுத்தால் என்? தடாது ஒழிந்தால் என்?

செல்லிடம் என்றது, தவத்தால் தன்னின் மெலியாரையும் வலியாரையும். வலியார்மேல் காவாவழியும் அதனுன் அவர்க்கு வருவதோர் தீங்கு இன்மையின் காத்த வழியும் அறன் இல்லை என்பார், 'காக்கின் என் காவாக்கால் என்' என்ருர்.

இதனுன் வெகுளாமைக்கு இடம் கூறப்பட்டது.

**உரை வேறுபாடு**

**பரிதியார்:** செல்லிடத்து - தனக்குக் கை செல்லும் இடத்தில். *(301)*

### 302

**செல்லா இடத்துச் சினம்தீது செல்லிடத்தும்**
**இல்அதனின் தீய பிற.** 2

**பரிமேலழகர்:** சினம் செல்லா இடத்து தீது - ஒருவன் வெகுளி தன்னின் வலியார்மேல் எழின் தனக்கே தீதாம்; செல் இடத்தும் அதனின் தீய பிற இல் - மற்றை எளியார்மேல் எழினும் அதனின் தீயன பிற இல்லை.

செல்லா இடத்துச் சினம் பயப்பது இம்மைக்கண் அவரான் வரும் ஏதமே; ஏனைய து இம்மைக்கண் பழியும் மறுமைக்கண் பாவமும் பயத்தலின், அதனின் தீயன பிற இல்லை என்ருர். ஓரிடத்தும் ஆகாது என்பதாம்.

**ஒப்புமை**

**செல்லா இடத்துச் சினம் தீதாதல்:**
"...சுருக்குக, செல்லா இடத்துச் சினம்." (**நான்மணி.** *87.*) *(302)*

### 303

**மறத்தல் வெகுளியை யார்மாட்டும் தீய**
**பிறத்தல் அதனுன் வரும்.** 3

**பரிமேலழகர்:** யார் மாட்டும் வெகுளியை மறத்தல் - யாவர் மாட்டும் வெகுளியை ஒழிக, தீய பிறத்தல் அதனுன் வரும் - ஒருவர்க்குத் தீயன எல்லாம் உளவாதல் அதனுன் வரும் ஆகலான்.

வலியார், ஒப்பார், எளியார் என்னும் மூவர்மாட்டும் ஆகாமையின், 'யார் மாட்டும்' என்றும், மனத்தால் துறந்தார்க்கு ஆகாதனவாகிய தீச்சிந்தைகள் எல்லாவற்றையும் பிறப்பித்தலின், 'தீய பிறத்தல் அதனுன் வரும்' என்றும் கூறினுர். *(303)*

## 304

நகையும் உவகையும் கொல்லும் சினத்திற்
பகையும் உளவோ பிற. 4

**பரிமேலழகர்:** நகையும் உவகையும் கொல்லும் சினத்தின் - துறந்தார்க்கு அருளான் உளவாய முகத்தின்கண் நகையையும் மனத்தின்கண் உவகையையும் கொன்றுகொண்டு எழுகின்ற சினமேயல்லது, பிற பகையும் உளவோ - அதனின் பிறவாய பகைகளும் உளவோ? இல்லை.

துறவால் புறப்பகை இலராயினும் உட்பகையாய் நின்று அருள் முதலிய நட்பினையும் பிரித்துப் பிறவித் துன்பமும் எய்துவித்தலான், அவர்க்குச் சினத்தின் மிக்க பகை இல்லை ஆயிற்று.

இவை மூன்று பாட்டானும் வெகுளியது தீங்கு கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** இஃது இன்பக்கேடு வரும் என்றது. (304)

## 305

தன்னைத்தான் காக்கின் சினம்காக்க காவாக்கால்
தன்னையே சொல்லும் சினம். 5

**பரிமேலழகர்:** தன்னை தான் காக்கின் சினம் காக்க - தன்னைத் தான் துன்பம் எய்தாமல் காக்க நினைத்தானாயின் தன் மனத்துச் சினம் வராமல் காக்க; காவாக்கால் சினம் தன்னையே கொல்லும் - காவானாயின் அச் சினம் தன்னையே கெடுக்கும் கடுந் துன்பங்களை எய்துவிக்கும்.

வேண்டிய வேண்டியாங் கெய்தற்[1] பயத்ததாய தவத்தைப் பிறர் மேல் சாபம் விடுதற்காக இழந்து அத்தவத் துன்பத்தோடு பழைய பிறவித் துன்பமும் ஒருங்கு எய்துதலின், 'தன்னையே கொல்லும்' என்றார். ''கொல்லச் சுரப்பதாம் கீழ்''[2] என்புழிப்போலக் கொலைச்சொல் ஈண்டுத் துன்பமிகுதி உணர்த்தி நின்றது.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** இஃது உயிர்க்குக் கேடு வரும் என்றது. (305)

## 306

சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும்
ஏமப் புணையைச் சுடும். 6

**பரிமேலழகர்:** சினம் என்னும் சேர்ந்தாரை கொல்லி - சினம் என்னும் நெருப்பு, இனம் என்னும் ஏமம் புணையை சுடும் - தனக்கு இடமானவரையேயன்றி அவர்க்கு இனமாகிய ஏமப்புணையையும் சுடும்.

சேர்ந்தாரைக் கொல்லி என்பது ஏதுப்பெயர்; தான் சேர்ந்த இடத்தைக் கொல்லும் தொழிலது என்றவாறு. சேர்ந்தாரை என உயர்திணைப் பன்மைமேல் வைத்து ஏனை நான்கு பாலும் தம் கருத்தோடு கூடிய பொருளாற்றலால் கொண்டார், ஈண்டு உருவகம் செய்கின்றது துறந்தார் மனத்தையே ஆகலின். சினமென்னும் நெருப்பு என்ற விதப்பு, உலகத்து நெருப்புச்

---

1. குறள், 265. 2. நாலடி. 279.

சுடுவது தான் சேர்ந்த இடத்தையே, இந்நெருப்புச் சேராத இடத்தையும் சுடுமென்னும் வேற்றுமை தோன்ற நின்றது. ஈண்டு இனம் என்றது, முற்றத் துறந்து தவஞானங்களால் பெரியராய்க் கேட்டார்க்கு உறுதிமொழிகளை இனியவாகச் சொல்லுவாரை. உருவகம் நோக்கிச் சுடும் என்னும் தொழில் கொடுத்தாராயினும், அகற்றும் என்பது பொருளாகக் கொள்க. ஏமப்புணை-ஏமத்தை உபதேசிக்கும் புணை. இனம் என்னும் ஏமப்புணை என்ற ஏகதேச உருவகத்தால் பிறவிக்கடலுள் அழுந்தாமல் வீடு என்னும் கரையேற்றுகின்ற என வருவித்துரைக்க. எச்சவும்மை விகாரத்தால் தொக்கது.[1] தன்னையும் வீழ்த்து எடுப்பாரையும் அகற்றும் என்பதாம்.

### உரை வேறுபாடு

**காளிங்கர்**: உலகத்துச் சான்றோரால் கொடியனவற்றுள் மிகவும் கொடியது இது என்று எடுத்துச் சொல்லப்பட்ட அடைந்தாரைக் கொல்லியாகிய கொடுந்தீயானது மற்று இத்துறவோர்க்குத் துணையாகிய அருளும் பொறையும் ஆசாரமும் முதலிய சேமமாகிய தெப்பத்தைச் சுட்டுவிடும்.

**கவிராஜ பண்டிதர்**: இனமென்னும் ஏமப்புணையைச் சுடும் - அவனுக்கு இனமான பேரையும் கெடுத்துப் பகையாக்கும்.

### ஒப்புமை

*1.* சினத்துக்குத் தீ:

"சினக்கொ டுந்திறற் சீற்றவெந் தீயினன்." (கம்ப. கிளைகண்டு. 3.)

2. முற்றும்:

"மூங்கிலிற் பிறந்து முழுங்குதீ மூங்கில்
முதலற முருக்குமா போலத்
தாங்கருஞ் சினத்தீத் தன்னுளே பிறந்து
தன்னுறு கிளையெலாம் தகிக்கும்
ஆங்கதன் வெம்மை அறிந்தவர் கமையால்
அதனையுள் ளடக்கவும் அடங்கா
தோங்கிய கோபத் தீயினை ஒக்கும்
உட்பகை உலகில்வே றுண்டோ." (உத்தர. இலவணன். 29.)

(306)

## 307

சினத்தைப் பொருள்என்று கொண்டவன் கேடு
நிலத்தறைந்தான் கைபிழையா தற்று. 7

**பரிமேலழகர்**: சினத்தை பொருள் என்று கொண்டவன் கேடு - சினத்தைத் தன் ஆற்றல் உணர்த்துவதோர் குணம் என்று தன்கண் கொண்டவன் அவ்வாற்றல் இழத்தல், நிலத்து அறைந்தான் கை பிழையாதற்று - நிலத்தின்கண் அறைந்தவன் கை அந் நிலத்தை உறுதல் தப்பாதவாறு போலத் தப்பாது.

வைசேடிகர் பொருள், பண்பு, தொழில், சாதி, விசேடம், இயைபு என்பனவற்றை அறுவகைப் பொருள் என்றாற்போல, ஈண்டுக் குணம் பொருள் எனப்பட்டது. பிழையாததற்று என்பது குறைந்து நின்றது,

இவை மூன்று பாட்டானும் வெகுண்டார்க்கு வரும் தீங்கு கூறப்பட்டது.

---

1. ஏமப்புணையையும் என்னும் உம்மை.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** இது பொருட்கேடு வரும் என்றது.

**காளிங்கர் :** இம்மை மறுமை இரண்டினையும் கெடுப்பதாகிய சினத்தைப் பொருளெனவே கைக் கொண்டவனது கேடானது சிறிதும் தப்பாது என்பது எங்ஙனமெனில் நிலத்தை இலக்காகக் குறித்துக் கொண்டு மற்று அந்நிலத்தின்கண் கண் புதைத்து எறியினும் கை பிழையாது.

### ஒப்புமை

**சினத்தைப் பொருள் என்கை:**

"கதம்எனும் பொருண்மையிலர்." (கம்ப. மாராம. 10.) (307)

## 308

இணரெரி தோய்வன்ன இன்னா செயினும்
புணரின் வெகுளாமை நன்று. 8

**பரிமேலழகர்:** இணர் எரி தோய்வு அன்ன இன்னா செயினும் - பல சுடரை உடைத்தாய பேரெரி வந்து தோய்ந்தால் ஒத்த இன்னாதவற்றை ஒருவன் செய்தானாயினும், வெகுளாமை புணரின் நன்று - அவனை வெகுளாமை ஒருவற்குக் கூடுமாயின் அது நன்று.

இன்னாமையின் மிகுதி தோன்ற இணரெரி என்றும், அதனை மேன் மேலுஞ் செய்தல் தோன்ற இன்னா என்றும், அச்செயல் முனிவரையும் வெகுள்விக்கும் என்பது தோன்றப் புணரின் என்றும் கூறினார்.

இதனான் வெகுளாமையது நன்மை கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** இணரெரி - தொடர்வுபட்ட நெருப்பு.

மேல் வலியவன் பொறுக்கவேண்டும் என்றார். அவன் பொறுக்குங்கால் தீமை செய்யினும் பொறுக்க வேண்டும் என்றார்.

**பரிதியார்:** பூங்கொத்தை அக்கினியில் இட்டாற்போலே ஒருவர் தனக்குப் பொல்லாங்கு செய்தாலும் அவ்விடத்தும் கோபம் விடுகை நன்று.

**கவிராஜ பண்டிதர்:** மெத்த எரிகிற நெருப்பிலே விழுந்தாற் போலொத்த பொல்லாங்குகளை ஒருவன் செய்தாலும் அவனைக் கோபித்துக் கொள்ளாமல் இருக்கிறதே நல்லது.

### மேற்கோள் விளக்கம்

இசையெச்சத்துக்கு இக் குறளை உதாரணம் கூறி உரை விரிப்பார் **சங்கர நமச்சிவாயர் (நன். 360.)** அது வருமாறு: 'பிற உயிர்க்கு இன்னா செயின், அவை பிழையாது தமக்கு வருதல் கருதித் தம்மாட்டு அன்பும், பிற உயிர்கண் மாட்டு அருளும், இன்னா செய்தலான் மேன்மேல் வளரும் பிறப்பு இறப்பின் அச்சமும், "நம்மால் இன்னா செய்யப்பட்டாரை நாம் அடைந்து இரத்தல் கூடினும் கூடும்; அதனால் யார்மாட்டும் இன்னா செய்யக் கடவேம் அல்லம்" என்னும் வருங்கால உணர்ச்சியும் இலராய், ஒருவர் தன்னால் ஆற்றல் கூடாத இன்னாதனவற்றைத் தன்கட் செய்தாராயினும், அவர் தமக்கு வேண்டுவதொரு குறைமுடித்தல் கருதி நாணாது தன்னை அடைந்தாராயின், அவர் செய்த இன்னாமை கருதி அவரை வெகுளாது,

அவற்றை மறந்து அவர் வேண்டும் குறைமுடித்து, முன் செய்த இன்னுமை யால் அவர் கூசி ஒழுகுதல் தவிர்தற்குக் காரணமாகிய மெய்ப்பாடு முதலியன தன்கண் குறிப்பின்றி நிகழ, அவர்க்கு இனியனுயிருத்தல் தன் சால்புக்கு நன்று.'

**ஒப்புமை**

1. **துன்பத்துக்குத் தீ:**

"கட்டழல் எவ்வம்." (சீவக. 360.)

2. **இன்னு செயினும் புணரின் வெகுளாமை:**

"பெரிய தப்புந ராயினும் பகைவர்
பணிந்துதிறை பகரக் கொள்ளுநை" (பதிற்று. 17: 2-3.)

"இறப்பச் சிறியவர் இன்னு செயினும்
பிறப்பினுன் மாண்டார் வெகுளார்" (பழமொழி, 370.)

"பொறையின் ஆற்றலால்
மூண்டெழு வெகுளியை முதலின் நீங்கினுர்
ஆண்டுறை அரக்கரால் அலேப்புண் டாரரோ."
(கம்ப. அகத்தியப். 8.) (308)

## 309

**உள்ளிய தெல்லாம் உடன்எய்தும் உள்ளத்தால்
உள்ளான் வெகுளி எனின்.** 9

**பரிமேலழகர்:** உள்ளத்தால் வெகுளி உள்ளான் எனின் - தவம் செய்யுமவன் தன் மனத்தால் வெகுளியை ஒருகாலும் நினையானுயின், உள்ளியது எல்லாம் உடன் எய்தும் - தான் கருதிய பேறு எல்லாம் ஒருங்கே பெறும்.

உள்ளத்தால் என வேண்டாது கூறிய அதனுன், அருளுடை உள்ளம் என்பது முடிந்தது. அதனுன் உள்ளாமையாவது அவ்வருளாகிய பகையை வளர்த்து அதனுன் முற்றக் கடிதல். இம்மை மறுமை வீடு என்பன வேறு வேறு திறத்தனவாயினும், அவையெல்லாம் இவ்வொன்றுனே எய்தும் என்பார், 'உள்ளியது எல்லாம் உடன் எய்தும்' என்றுர்.

இதனுன் வெகுளாதார்க்கு வரும் நன்மை கூறப்பட்டது.

**உரை வேறுபாடு**

**மணக்குடவர்:** ஒருங்கே - ஒரு காலத்தே.

**காளிங்கர்:** ஈண்டு தன் துணையாக் கீழ்ச்சொல்லிய அருள் முதலிய வற்றுூம் குறைபாடு இன்றி அளவில்லாத இன்பம் எய்துவன் என்பது பொருள். (309)

## 310

**இறந்தார் இறந்தார் அனையர் சினத்தைத்
துறந்தார் துறந்தார் துணை.** 10

**பரிமேலழகர்:** இறந்தார் இறந்தார் அனையர் - சினத்தின்கண்ணே மிக்கார் உயிர் உடையராயினும் செத்தாரோடு ஒப்பர்; சினத்தைத் துறந்தார் துறந்தார் துணை - சினத்தைத் துறந்தார் சாதல் தன்மையராயினும் அதனை ஒழிந்தார் அளவினர்.

மிக்க சினத்தை உடையார்க்கு ஞானம் எய்துதற்குரிய உயிர் நின்ற தாயினும் கலக்கத்தான் அ∴து எய்தாமை ஒருதலையாகலின் அவரை இறந் தார் அனையர் என்றும், சினத்தை விட்டார்க்குச் சாக்காடு எய்துதற்குரிய யாக்கை நின்றதாயினும் ஞானத்தான் வீடுபெறுதல் ஒருதலையாகலின் அவரை வீடுபெற்ருரோடு ஒப்பர் என்றும் கூறினர்.

இதனன் அவ்விருவர் பயனும் ஒருங்கு கூறப்பட்டது.

**உரை வேறுபாடு**

**மணக்குடவர்:** சினத்தைத் துறந்தார் துறந்தார் துணை - அதனை ஒழிந்தார் எல்லாப் பொருளையும் துறந்தாரோடு ஒப்பர். இது வெகுளாதார் பெரியர் என்றது.

**பரிதியார்:** மாண்டார்க்குச் சரியான சினத்தைத் துறந்தார்க்கு நிக ராவது, தொண்ணூற்ருறு தத்துவத்தையும் உடலோடே இருக்கையிலே புளியம் பழமும் ஓடும்போலே துறந்தார் நிகராம். (310)

---

# 32. இன்னு செய்யாமை

**பரிமேலழகர்:** அ∴தாவது தனக்கு ஒரு பயன் நோக்கியாதல், சோர் வானுதல் ஒருயிர்க்கு இன்னுதவற்றைச் செய்யாமை. இன்னு செய்தல் வெகுளி ஒழியவும் நிகழும் என்பது அறிவித்தற்கு இது வெகுளாமையின்பின் வைக்கப் பட்டது.

**பரிதியார்:** இன்னு செய்யாமையாவது, முனி கோபத்தினுலே ஒரு வரைச் சபிக்க ஒண்ணுது என்றவாறு.

**கவிராஜ பண்டிதர்:** அஃதாவது தனக்கு ஒரு பலனை நோக்கியாதல் கோபம் பற்றியாதல் ஒருசீவனுக்கும் பொல்லாப்புச் செய்யாமல் இருக்கிறது.

### 311

சிறப்பீனும் செல்வம் பெறினும் பிறர்க்கின்னு
செய்யாமை மாசற்ருர் கோள். 1

**பரிமேலழகர்:** சிறப்பு ஈனும் செல்வம் பெறினும் - யோகமாகிய சிறப் புத் தரும் அணிமா முதலிய செல்வங்களைப் பிறர்க்கு இன்னு செய்து பெறலா மாயினும், பிறர்க்கு இன்னு செய்யாமை மாசு அற்ருர் கோள் - அதனைச் செய்யாமை ஆகமங்கள் கூறியவாற்ருன் மனம் தூயாரது துணிவு.

உம்மை, பெருமை மேற்று. சிறப்புடையதனைச் சிறப்பு என்றும், அதன் பயிற்சியான் வாயுவை வென்று எய்தப்படுதலின் எட்டுச் சித்திகளை யும் சிறப்பீனும் செல்வம் என்றும், காமம் வெகுளி மயக்கம் என்னும் குற்றங் கள் அற்றமையான் மாசற்ருர் என்றும் கூறினர்.

இதனல் தமக்கு ஒரு பயன் நோக்கிச் செய்தல் விலக்கப்பட்டது.

**உரை வேறுபாடு**

**மணக்குடவர்:** சிறப்பு ஈனும் செல்வம் - மிகுதியைத் தருகின்ற செல்வம்.

இது பழி வாராத செல்வம் பெறினும் தவிர வேண்டும் என்றது.

**பரிதியார்:** சிறப்பு ஈனும் செல்வம் - எட்டுவகைப் போகந் தருகின்ற செல்வம்.

**காளிங்கர்:** மறுமைக்கு முத்தியையும் இம்மைக்குச் செல்வத்தையும் பெறினும் தம் நெஞ்சு அறியத் துயருறுவதைப் பிறர்க்குச் செய்யாது ஒழிதல் உட்குற்றமற்ற உணர்வுடைத் துறவோரது நெஞ்சின் கோட்பாடு.

சிறப்பு என்பது முத்தி. செல்வம் என்பது திரு. (311)

## 312

கறுத்தின்னா செய்தவக் கண்ணும் மறுத்தின்னா
செய்யாமை மாசற்றார் கோள். 2

**பரிமேலழகர்:** கறுத்து இன்னா செய்த அ கண்ணும் - தம்மேற் செற்றம் கொண்டு ஒருவன் இன்னாதவற்றைச் செய்த இடத்தும், மறுத்து இன்னா செய்யாமை மாசு அற்றார் கோள் - மீண்டு தாம் அவனுக்கு இன்னாதவற்றைச் செய்யாமையும் அவரது துணிவு.

இறந்தது தழீஇய எச்சவும்மை விகாரத்தால் தொக்கது. அவ்வின்னாதவற்றை உட்கொள்ளாது விடுதல் செயற்பாலது என்பதாம்.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** கறுத்து - தாம் செய்த குற்றத்தினாலே வெகுண்டு.

**காளிங்கர்:** மாசற்றார் - உள்ளழுக்கற்ற உணர்வுடைய துறவோர்.

**கவிராஜ பண்டிதர்:** தம்மேல் கோபத்தினால் தமக்குப் பொல்லாத காரியங்களைச் செய்தவனுக்குத் தாம் திரும்பவும் பொல்லாத காரியங்களைச் செய்யாமல் இருக்கிறது குற்றமற்றவர்கள் செயல்.

### ஒப்புமை

**முற்றும் :**

"ஆற்றாமை
நேர்த்தின்னா மற்றவர் செய்தக்கால் தாமவரைப்
பேர்த்தின்னா செய்யாமை நன்று" (நாலடி. 67.)

"கறுத்தாற்றித் தம்மைக் கடியசெய் தாரைப்
பொறுத்தாற்றிச் சேறல் புகழால்"

"இறப்பச் சிறியவர் இன்னா செயினும்
பிறப்பினான் மாண்டார் வெகுளார்". (பழமொழி, 19, 370.) (312)

## 313

செய்யாமல் செற்றார்க்கும் இன்னாத செய்தபின்
உய்யா விழுமம் தரும். 3

**பரிமேலழகர்:** செய்யாமல் செற்றார்க்கும் இன்னாத செய்தபின் - தான் முன்பு ஓர் இன்னாமை செய்யாதிருக்கத் தன்மேல் செற்றம் கொண்டவர்க்கும் இன்னாதவற்றைத் துறந்தவன் செய்யுமாயின், உய்யா விழுமம் தரும் - அச் செயல் அவனுக்குக் கடக்க முடியாத் இடும்பையைக் கொடுக்கும்.

அவ் விடும்பையாவது தவம் இழந்து பழியும் பாவமும் எய்தல்.

உரை வேறுபாடு

**மணக்குடவர்:** இது, காரணமின்றி இன்னாதன செய்தவர்க்கும் பொல்லாங்கு செய்தலைத் தவிரவேண்டும் என்றது.

**பரிதியார்:** உய்யா விழுமம் - பிழைப்பில்லாத நரகம். (313)

## 314

இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல். 4

**பரிமேலழகர்:** இன்னா செய்தாரை ஒறுத்தல்-தமக்கு இன்னாதவற்றைச் செய்தாரைத் துறந்தார் ஒறுத்தலாவது, அவர் நாண நன்னயம் செய்து விடல்-அவர் தாமே நாணுமாறு அவர்க்கு இனிய உவகைகளைச் செய்து அவ்விரண்டனையும் மறத்தல்.

மறவாவழிப் பின்னும் வந்து கிளைக்கும் ஆகலின், மறக்கற்பாலவாயின. அவரை வெல்லும் உபாயம் கூறியவாறு.

இவை மூன்று பாட்டானும் செற்றம்[1] பற்றிச் செய்தல் விலக்கப்பட்டது.

உரை வேறுபாடு

**மணக்குடவர்:** இஃது ஒறுக்கும் நெறி கூறியது.

**பரிதியார்:** நன்னயம் - நன்மை.

**காளிங்கர்:** நன்னயம் - நல்லருள்.

**கவிராஜ பண்டிதர்:** நன்மையே என்று பாடம் கொண்டார்.

ஒப்புமை

1. **நாண நன்னயம் செய்தல்:**

"காஞ்சி யூரன் கொடுமை
கரந்தனள் ஆகலின் நாணிய வருமே." (குறுந். 10: 4-5.)

2. **முற்றும்:**

"உபகாரம் செய்ததனை ஓராதே தங்கண்
அபகாரம் ஆற்றச் செயினும்—உபகாரம்
தாம்செய்வ தல்லால் தவற்றினால் தீங்கூக்கல்
வான்தோய் குடிப்பிறந்தார்க் கில்." (நாலடி. 69.) (314)

## 315

அறிவினான் ஆகுவ துண்டோ பிறிதின்நோய்
தம்நோய்போல் போற்றாக் கடை. 5

**பரிமேலழகர்:** அறிவினான் ஆகுவது உண்டோ - துறந்தார்க்கு உயிர் முதலியவற்றை உள்ளவாறு அறிந்த அறிவினான் ஆவதொரு பயன் உண்டோ, பிறிதின் நோய் தம் நோய்போல் போற்றா கடை - பிறிதோர் உயிர்க்கு வரும் இன்னாதவற்றைத் தம் உயிர்க்கு வந்தனபோலக் குறிக்கொண்டு காவாவிடத்து?

குறிக்கொண்டு காத்தலாவது நடத்தல், இருத்தல், கிடத்தல், நிற்றல், உண்டல் முதலிய தம் தொழில்களானும் பிறவாற்றானும் உயிர்கள் உறுவன

1. செற்றம் - நீண்டு நிற்கும் சினம்.

வற்றை முன்னே அறிந்து உறாமல் காத்தல். இது பெரும்பான்மையும் அஃறிணைக்கண் நுண்ணிய உடம்புடையவற்றைப் பற்றி வருதலின் பொதுப்படப் பிறிதின் நோய் என்றும், மறப்பான் அது துன்புறினும் நமக்கு இன்னா செய்தலாம் என்று அறிந்து காத்தல் வேண்டும் ஆகலின் அது செய்யாவழி அறிவால் பயன் இல்லை என்றும் கூறினர்.

இதனான் சோர்வால் செய்தல் விலக்கப்பட்டது.

உரை வேறுபாடு

**பரிதியார்:** அறிவென்னும் பொருளைக் கொண்டிருக்க வல்லவன் பிறர் நோவையும் தன் நோவு என்று போற்றுவானாகில் அவன் கேடிலாத கதியினை அடைவான்.

**கவிராஜ பண்டிதர்:** அறிவினான் ஆகுவதுண்டோ-துறந்து வருத்தப்பட்டு அறிந்த ஞானத்தினாலே பலன் என்ன உண்டாம்?

ஒப்புமை

**பிறிதினோய் தம் நோய்போற் போற்றுதல் :**

"பிறர்நோயும் தந்நோய்போற் போற்றி யறனறிதல்
சான்றவர்க் கெல்லாம் கடன்." (கலி. 139: 2-3.) (315)

## 316

**இன்னா எனத்தான் உணர்ந்தவை துன்னாமை**
**வேண்டும் பிறன்கண் செயல். 6**

**பரிமேலழகர்:** இன்னா என தான் உணர்ந்தவை - இவை மக்கட்கு இன்னாதன என அநுமானத்தால் தான் அறிந்தவற்றை, பிறன்கண் செயல் துன்னாமை வேண்டும் - பிறன்மாட்டுச் செய்தலை மேவாமை துறந்தவனுக்கு வேண்டும்.

இன்பத்துன்பங்கள் உயிர்க்குணமாகலின், அவை காட்சியளவையான் அறியப்படாமை அறிக. அறமும் பாவமும் உளவாவது மனம் உளவாய வழியாகலான், உணர்ந்தவை என்றார்.

உரை வேறுபாடு

**பரிதியார்:** பிறன்கண் - தனக்கு வேண்டாதார்க்கும்.

ஒப்புமை

**முற்றும் ;**

"வினைப்பயன் ஒன்றின்றி வேற்றுமை கொண்டு
நினைத்துப் பிறர்பனிப்பச் செய்யாமை வேண்டும்"
(பழமொழி, 266.)

"தன்னுயிர் தான்பரிந் தோம்பு மாறுபோல்
மன்னுயிர் வைகலும் ஓம்பி வாழுமேல்." (சீவக. 3107.) (316)

## 317

**எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தானாம்**
**மாணாசெய் யாமை தலை. 7**

**பரிமேலழகர்:** மனத்தான் ஆம் மாணா - மனத்தோடு உளவாகின்ற இன்னாத செயல்களை, எஞ்ஞான்றும் யார்க்கும் எனைத்தானும் செய்யாமை தலை - எக்காலத்தும் யாவர்க்கும் சிறிதாயினும் செய்யாமை தலையாய அறம்.

ஈண்டு மனத்தான் ஆகாதவழிப் பாவம் இல்லை என்பது பெற்றும். ஆற்றல் உண்டாய காலத்தும் ஆகாமையின் எஞ்ஞான்றும் என்றும், எளியார்க்கும் ஆகாமையின் யார்க்கும் என்றும், செயல் சிறிதாயினும் பாவம் பெரிதாகலின் எனைத்தானும் என்றும் கூறினர்.

உரை வேறுபாடு

**மணக்குடவர்:** யாதொன்ருயினும் எல்லா நாளும் யாவர்மாட்டும் இன்னுதவற்றை மனத்தினலும்[1] செய்யாமை நன்று.

**காளிங்கர்:** ஒருவன் உலகத்து யாவர்க்கும் எஞ்ஞான்றும் எத்துணையும் சிறிதாயினும் இன்னுதனவற்றைத் தன் மனத்தினுலும் கருதுதல் செய்யாமையும், வாக்கினல் உரைத்தல் செய்யாமையும், காயத்தாற் செயல் செய்யாமையுமே தலைமைப்பாடாவன.

**கவிராஜ பண்டிதர்:** தலை - முந்தின தருமம். *(317)*

## 318

தன்உயிர்க் கின்னுமை தான்அறிவான் என்கொலோ
மன்உயிர்க் கின்னு செயல். 8

**பரிமேலழகர்:** தன் உயிர்க்கு இன்னுமை தான் அறிவான் - பிறர் செய்யும் இன்னுதன தன் உயிர்க்கு இன்னுவாம் தன்மையை அநுபவித்து அறிகின்றவன், மன் உயிர்க்கு இன்னு செயல் என்கொல் - நிலைபேறுடைய பிற உயிர்கட்குத் தான் அவற்றைச் செய்தல் என்ன காரணத்தான்?

இவ்வாறே இவை பிற உயிர்க்கும் இன்னு என்பது அநுமானத்தான் அறிந்து வைத்துச் செய்கின்ற இப் பாவம் கழுவப்படாமையின், இன்னுதன யான் வருந்தப் பின்னே வந்து வருத்தும் என்பது ஆகமத்தானும் அறிந்து ஒழியற்பாலன் என்பது தோன்றத் தான் என்றும், அத் தன்மையான் ஒழியாமைக்குக் காரணம் மயக்கம் என்பது தோன்ற என்கொலோ என்றும் கூறினர்.

இவை மூன்று பாட்டானும் பொதுவகையான் விலக்கப்பட்டது.

உரை வேறுபாடு

**மணக்குடவர்:** தான் அறிவான் - உயிர் இல்லாப் பொருள்கள்போல அறியாது கிடத்தலன்றித் தான் அறியுமவன்.

**காளிங்கர்:** மன் உயிர்க்கு - உலகத்துப் பிறந்து இறந்து இங்ஙனம் நிலைபெற்று வருகின்ற உயிர்கட்கு.

**கவிராஜ பண்டிதர்:** மன் உயிர்க்கு இன்னு செயல் என்கொலோ - தன்னைப்போல் ஒத்த உயிர்களுக்குத் தான் பொல்லாங்கு செய்கிறது என்ன காரியம்?

ஒப்புமை

**முற்றும் :**

"இறப்ப நுமக்கடுத்த எவ்வநோய் யாவும்
பிறர்க்குமஃ தாமென்று கொண்மின்—உறக்கருதி
எவ்வா றுமக்குறுதி யெண்ணுதிர்நீ ரெல்லார்க்கும்
அவ்வாறே யெண்ணல் அறம்" *(பாரதவெண்பா.)*

"தனக்கின்னு இன்னு பிறர்க்கு." *(பழமொழி, 266.) (318)*

1. 'மனத்தானும்' என்று பாடம் கொண்டார்.

## 319

பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா
பிற்பகல் தாமே வரும். 9

**பரிமேலழகர்:** பிறர்க்கு இன்னா முன் பகல் செய்யின் - துறந்தவர் பிறர்க்கு இன்னாதனவற்றை ஒரு பகலது முற்கூற்றின்கண் செய்வாராயின், தமக்கு இன்னா பின் பகல் தாமே வரும் - தமக்கு இன்னாதன அதன் பிற் கூற்றின்கண் அவர் செய்யாமல் தாமே வரும்.

முற்பகல் பிற்பகல் என்பன, பின் முன்னாகத் தொக்க ஆறும் வேற்றுமைத் தொகை. தவம் அழிதலின், அங்ஙனம் கடிதினும் எளிதினும் வரும்; அதனான் அவை செய்யற்க என்பதாம். இனித் தானே வரும் என்பது பாடமாயின், அச்செயல்தானே தமக்கு இன்னாதனவாய் வரும் என உபசார வழக்காக்கி ஆக்கம் வருவித்து உரைக்க.

### உரை வேறுபாடு.

**பரிதியார்:** பிற்பகல் - பிறகு.

**காளிங்கர்:** முற்பகல் பிற்பகல் என்றது முற்காலம் பிற்காலம் என்றது.

**கவிராஜ பண்டிதர்:** முற்பகல் - காலத்தால். பிற்பகல் - அந்திக்கு.

### ஒப்புமை

1. **பிறர்க்கு இன்னாதன செய்தல் தீயது :**

"பிறர்க்கின்னா செய்வது நன்றாமோ மற்று" (கலி. 62:8.)
"பிறர்க்கின்னா செய்தலிற் பேதைமை இல்லை." (அறநெறி. 94.)

2. **முற்றும்:**

"முற்பகல் கண்டான் பிறன்கேடு தன்கேடு
பிற்பகல் கண்டு விடும்" (பழமொழி, 130.)
"முற்பகல் செய்தான் பிறன்கேடு தன்கேடு
பிற்பகல் காண்குறூஉம் பெற்றியகாண்" (சிலப். 21:3-4.)
"முற்பகல் செய்வினை பிற்பகல் உறுநரின்" (பெருங். 1. 56: 259.)
"செற்றொருவரைச் செய்த தீமைகள்
இம்மை யேவரும் திண்ணமே." (சுந்தரர். புறம்பயம், 4.) (319)

## 320

நோய்எல்லாம் நோய்செய்தார் மேலவாம் நோய்செய்யார்
நோய்இன்மை வேண்டு பவர். 10

**பரிமேலழகர்:** நோய் எல்லாம் நோய் செய்தார் மேலவாம் - இன்னாதன எல்லாம் பிறிதோர் உயிர்க்கு இன்னாதன செய்தார் மேலவாம்; நோய் இன்மை வேண்டுபவர் நோய் செய்யார் - அதனால் தம் உயிர்க்கு இன்னாதன வேண்டாதார் பிறிதோர் உயிர்க்கு இன்னாதன செய்யார்.

உயிர்நிலத்து வினைவித்திட்டார்க்கு விளைவும் அதுவே யாகலின்[1] நோயெல்லாம் நோய்செய்தார் மேலவாம் என்றார். இது சொற்பொருட் பின்வருநிலை.

இவை இரண்டு பாட்டானும் அது செய்தார்க்கு வரும் தீங்கு கூறப்பட்டது.

---

1. 'வினைவிதைத்தார் வினைவிளைப்பர்' என்பது பழமொழி.

உரை வேறுபாடு

**மணக்குடவர்:** இக் காலத்து நுகர்கின்ற துன்பமெல்லாம் முற்காலத்துப் பிறர்க்குத் துன்பம் செய்தார்மாட்டே உளவாம்; ஆதலால், இக்காலத்துப் பிறர்க்குத் துன்பத்தைச் செய்யார் வருங்காலத்துத் தமக்குத் துன்பம் வராமையை வேண்டுபவர்.

**பரிதியார்:** ஒருவர்க்குத் தாம்செய்த விதனம் பின்பு தமக்கு வருகிற படியினாலே, ஒருவர்க்கும் தாங்கள் விதனம் செய்யார்.

அது எப்படி என்றால், பிரம்மராட்சதன் ஒரு ராசாவின் மகளைப் பற்றிநின்றுசந்தியாவந்தனை செய்ய ஆற்றங்கரையிலே வந்து நின்ற அளவில், பிராமணப் பிள்ளையின் பிள்ளை வாசிக்கின்றவனுக்கு அன்றையிற் பாடம் இந்தக் குறள் ஆகையால் அவன் முகசுத்தி பண்ண வந்தவன், இந்தக் குறளைப் பாடமாகச் சொல்லிக்கொண்டு வந்தான். இத்தை, பிரம்ம ராட்சதன் கேட்டுத் தான் ஒரு பிராமண வடிவாய், இந்தப் பிள்ளை வாய்ப் பாடத்தை இரண்டு பிரகாரங் கேட்டு, "நாம் இராசாவின் மகளை நோய் செய்தோமே! நமக்கு அந்த விதனம் பிறகே வரும்" என்று பயப்பட்டு, இந்தப் பிள்ளை முன்னிலையாக, இராசகுமாரத்தியை விட்டுப் போச்சு என்றவாறு. *(320)*

---

# 33. கொல்லாமை

**பரிமேலழகர்:** அஃதாவது ஐயறிவுடையன முதல் ஓரறிவுடையன ஈறாய உயிர்களைச் சோர்ந்தும் கொல்லுதலைச் செய்யாமை. இது, மேற்கூறிய அறங்கள் எல்லாவற்றினும் சிறப்புடைத்தாய்க் கூறாத அறங்களையும் அகப் படுத்து நிற்றலின், இறுதிக்கண் வைக்கப்பட்டது.

**மணக்குடவர்:** கொல்லாமையாவது யாதோர் உயிரையும் கொல்லாமை. இது வெகுளி முதிர்ந்துழி நிகழ்வதொன்றாதலின், அதன்பின் கூறப் பட்டது.

### 321

**அறவினை யாதெனின் கொல்லாமை கோறல்**
**பிறவினை எல்லாம் தரும்.** 1

**பரிமேலழகர்:** அறவினை யாது எனின் கொல்லாமை - அறங்கள் எல்லாமாகிய செய்கை யாது என்று வினவின் அஃது ஓர் உயிரையும் கொல்லாமையாம், கோறல் பிற வினை எல்லாம் தரும் - அவற்றைக் கொல்லுதல் பாவச் செய்கைகள் எல்லாவற்றையும் தானே தரும் ஆகலான்.

அறம்: சாதியொருமை. விலக்கியது ஒழிதலும் அறம் செய்தலாம் ஆகலின், கொல்லாமையை அறவினை என்றார். ஈண்டுப் பிறவினை என்றது அவற்றின் விளைவை. கொலைப்பாவம் விளைக்கும் துன்பம் ஏனைப் பாவங்கள் எல்லாம் கூடியும் விளைக்கமாட்டா என்பதாம். கொல்லாமை தானே பிற அறங்கள் எல்லாவற்றின் பயனையும் தரும்[1] என்று மேற்கோள் கூறி அதற்கு ஏது எதிர்மறைமுகத்தால் கூறியவாறாயிற்று.

உரை வேறுபாடு

**பரிதியார்:** வினை - விதனம். *(321)*

---

1. "கொல்லாமை எத்தனை குணக்கேட்டை நீக்கும்." (**தாயுமானவர்.**)

## 322

பகுத்துண்டு பல்உயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை. 2

**பரிமேலழகர்:** பகுத்து உண்டு பல் உயிர் ஓம்புதல் - உண்பதனைப் பசித்த உயிர்கட்குப் பகுத்துக் கொடுத்து உண்டு ஐவகை உயிர்களையும் ஓம்புதல், நூலோர் தொகுத்தவற்றுள் எல்லாம் தலை - அறநூலுடையார் துறந்தார்க்குத் தொகுத்த அறங்கள் எல்லாவற்றினும் தலையாய அறம்.

பல்லுயிரும் என்னும் முற்றும்மை விகாரத்தால் தொக்கது. ஓம்புதல்- சோர்ந்தும் கொலை வராமல் குறிக்கொண்டு காத்தல். அதற்குப் பகுத்து உண்டல் இன்றியமையா உறுப்பாகலின், அச் சிறப்புத் தோன்ற அதனை இறந்தகால வினையெச்சத்தால் கூறினர். எல்லா நூல்களிலும் நல்லன எடுத்து எல்லார்க்கும் பொதுப்படக் கூறுதல் இவர்க்கு இயல்பாகலின், ஈண்டும் பொதுப்பட நூலோர் என்றும், அவர் எல்லார்க்கும் ஒப்ப முடிதலான் இது தலையாய அறம் என்றும் கூறினர்.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** இஃது எல்லாச் சமயத்தாருக்கும் நன்று என்றது.

**காளிங்கர்:** இவன் இடாமையால் பிறர் சாவினும் கொலையாம் என்பது கருத்து.

### ஒப்புமை

**பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்**

"மணங்கமழ் பாக்கத்துப் பகுக்கும்
வளங்கெழு தொண்டி" (அகநா. 10:12.)
"தீதிகந், தொல்வதுபாத் துண்ணும் ஒருவனும்." (திரி. 70.) (322)

## 323

ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன்
பின்சாரப் பொய்யாமை நன்று. 3

**பரிமேலழகர்:** ஒன்றாக நல்லது கொல்லாமை - நூலோர் தொகுத்த அறங்களுள் தன்னோடு இணைப்பது இன்றித் தானேயாக நல்லது கொல்லாமை; பொய்யாமை அதன் பின் சார நன்று - அஃது ஒழிந்தால் பொய்யாமை அதன் பின்னே நிற்க நன்று.

நூலோர் தொகுத்த அறங்கள் என்பது அதிகாரத்தான் வந்தது. அதிகாரம் கொல்லாமையாயினும் மேல் பொய்யாமை யாற்றின் எனவும், யாம் மெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனவும் கூறினராகலின், இரண்டு அறத்துள்ளும் யாது சிறந்தது என்று ஐயம் நிகழுமன்றே; அது நிகழாமைப் பொருட்டு, ஈண்டு அதன் பின்சாரப் பொய்யாமை நன்று என்றார், முற்கூறியது வலியுடைத்தாகலின். அதனைப் [1]பின்சார நன்றென்றது, நன்மை பயக்கும் வழிப் பொய்யும் மெய்யாயும், தீமை பயக்கும் வழி மெய்யும் பொய் யாயும் திரிந்து வருதலான்' என உணர்க.

இவை மூன்று பாட்டானும் இவ் வறத்தினது சிறப்புக் கூறப் பட்டது.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** இது சொல்லிய அறத்தினும் பொய்யாமை நன்று; அதனினும் நன்று கொல்லாமை என்றது.

---

1. 'பொய்யாயும் இதனைப் பற்ற அது திரிந்து வருதலான்' என்பது பிரதி பேதம்.

**காளிங்கர்:** அனைத்து அறங்களினும் தனக்கு இணையின்றித் தானேயாகச் சிறந்தது யாதோ எனின், கொல்லாமையாகிய அறம் ஒன்றுமே; அதனால் இனிக் கொல்லாமை மேற்கொண்டு ஒழுகுவான் ஒருவன் இனி இதன்பின் செய்யவேண்டுவதும் ஒன்று உண்டு; அஃதாவது எஞ்ஞான்றும் பொய்யாமையைத் தப்பாமல் குறிக்கொள்ளல். அங்ஙனம் குறிக்கொண்டால் அது சாலத் தகைமை உடைத்து.

ஒப்புமை

**ஒன்றாக நல்லது கொல்லாமை:**

"ஒன்றாக நல்ல துயிரோம்பல்." (அறநெறி. 62.) (323)

## 324

நல்லா றெனப்படுவ தியாதெனின் யாதொன்றும்
கொல்லாமை சூழும் நெறி. 4

**பரிமேலழகர்:** நல்லாறு எனப் படுவது யாது எனின் - மேற்கதி வீடு பேறுகட்கு நல்ல நெறி என்று சொல்லப்படுவது யாது என்று வினவின், யாது ஒன்றும் கொல்லாமை சூழும் நெறி - அஃது யாதோர் உயிரையும் கொல்லாமையாகிய அறத்தினைக் காக்கக் கருதும் நெறி.

யாதொன்றும் என்றது, ஓரறிவுயிரையும் அகப்படுத்தற்கு. காத்தல், வழுவாமற் காத்தல்.

இதனால் இவ் வறத்தினை உடையதே நன்னெறி என்பது கூறப்பட்டது.

உரை வேறுபாடு

**பரிதியார்:** பெரியோர் இவர் என்றது, ஓர் உயிர்வதை செய்யாமலும் பொய் சொல்லாமலும் மாங்கிஷம் புசியாமலும் கோபம் தவிர்தலும், செபம் தவம் தான தன்மம் செய்தலும் ஆகிய குணங்கள் உடையாரே.

**காளிங்கர்:** எனப்படுவது - நூல்களால் எடுத்துச் சொல்லப்படுவது. (324)

## 325

நிலைஅஞ்சி நீத்தாருள் எல்லாம் கொலைஅஞ்சிக்
கொல்லாமை சூழ்வான் தலை. 5

**பரிமேலழகர்:** நிலை அஞ்சி நீத்தாருள் எல்லாம் - பிறப்பு நின்ற நிலையை அஞ்சிப் பிறவாமைப் பொருட்டு மனைவாழ்க்கையைத் துறந்தார் எல்லாருள்ளும், கொலை அஞ்சி கொல்லாமை சூழ்வான் தலை - கொலைப் பாவத்தை அஞ்சிக் கொல்லாமையாகிய அறத்தை மறவாதவன் உயர்ந்தவன்.

பிறப்பு நின்ற நிலையாவது, இயங்குவ நிற்ப என்னும் இருவகைப் பிறப்பினும் இன்பம் என்பது ஒன்று இன்றி உள்ளன எல்லாம் துன்பமே ஆய நிலைமை.[1] துறவு ஒன்றேயாயினும், சமய வேறுபாட்டால் பலவாம் ஆகலின், நீத்தாருள் எல்லாம் என்றார்.

இதனான் இவ் வறம் மறவாதவன் உயர்ச்சி கூறப்பட்டது.

1. "பிறந்தோர் உறுவது பெருகிய துன்பம்." (மணி. 2: 64.)

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** *நிலை அஞ்சி - மனைவாழ்க்கையில் நிற்றலை அஞ்சி.*

**பரிதியார்:** *நிலை அஞ்சி நீத்தார் - யாக்கை நிலையாமை அறிந்து துறந்தார்.*

**காளிங்கர்:** *வினைவழி எய்தி வருகின்ற பிறவித்தன்மையை அஞ்சிப் பிறவாமைக்குக் காரணமாகிய தவநெறி இயற்றுவார் எல்லாரினும் மற்று இக்கொலைத் தொழிலை உயிரழிவு என்று அஞ்சி மற்று இதனால் எஞ்ஞான்றும் கொல்லாமையைக் குறிக் கொள்பவனே பெரிதும் தலைமைப்பாடு உடையவன்.*

### ஒப்புமை

**முற்றும்:**

*"கொன்றான் நுகரும் கொடுமையை யுண்ணினைந்*
*தன்றே யொழிய விடுவானேல்—என்றும்*
*இடுக்கண் எனவுண்டோ இல்வாழ்க்கைக் குள்ளே*
*படுத்தானும் தன்னைத் தவம்."* (அறநெறி. 61.) (325)

## 326

**கொல்லாமை மேற்கொண் டொழுகுவான் வாழ்நாள்மேல்**
**செல்லா துயிர்உண்ணும் கூற்று. 6**

**பரிமேலழகர்:** கொல்லாமை மேற்கொண்டு ஒழுகுவான் வாழ்நாள் மேல் - கொல்லாமையை விரதமாக மேற்கொண்டு ஒழுகுவானது வாழ்நாளின்மேல், உயிர் உண்ணும் கூற்று செல்லாது - உயிர் உண்ணும் கூற்றுச் செல்லாது.

*மிகப் பெரிய அறம் செய்தாரும் மிகப் பெரிய பாவம் செய்தாரும் முறையானன்றி இம்மைதன்னுள்ளே அவற்றின் பயன் அநுபவிப்பர் என்னும் அறநூல் துணிபுபற்றி, இப் பேரறம் செய்தான் தானும் கொல்லப்படான்; படானாகவே, அடியிற் கட்டிய வாழ்நாள் இடையூறின்றி எய்தும் என்பார், வாழ்நாள்மேல் கூற்றுச் செல்லாது என்றார். செல்லாதாகவே காலம் நீட்டிக்கும்; நீட்டித்தால் ஞானம் பிறந்து உயிர் வீடு பெறும் என்பது கருத்து.*

*இதனான் அவர்க்கு வரும் நன்மை கூறப்பட்டது.*

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** *பிறவாமை உண்டாமாதலால் கூற்றுச் செல்லாது என்றார்.*

### ஒப்புமை

**முற்றும்:**

*"வேள்விவாய்க் கண்படுத்தும் வெவ்வினைசெய் ஆடவர்கை*
*வாளின்வாய்க் கண்படுத்தும் வாரணத்தின் ஈருரிபோல்*
*கோளிமிழ்ப்பு நீள்வலைவாய்க் கண்படுத்தும் இன்னணமே*
*நாளுலப்பித் திட்டார் நமரலா தார்எல்லாம்."* (சீவக. 2787.)

*"கூற்றம் இல்லையோர் குற்றம் இலாமையால்."* (கம்ப. நாட்டுப். 39.)
(326)

## 327

தன்உயிர் நீப்பினும் செய்யற்க தான்பிறி
தின்உயிர் நீக்கும் வினை. 7

**பரிமேலழகர்:** தன் உயிர் நீப்பினும் - அது செய்யாவழித் தன் உயிர் உடம்பின் நீங்கிப் போம் ஆயினும், தான் பிறிது இன்உயிர் நீக்கும் வினை செய்யற்க - தான் பிறிதோர் இன்னுயிரை அதன் உடம்பின் நீக்கும் தொழிலைச் செய்யற்க.

தன்னை அது கொல்லினும் தான் அதனைக் கொல்லற்க என்றது, பாவம் கொலையுண்டவழித் தேய்தலும் கொன்றவழி வளர்தலும் நோக்கி. இனித் தன் உயிர் நீப்பினும் என்பதற்குச் சாந்தியாகச் செய்யாதவழித் தன் உயிர் போமாயினும் என்று உரைப்பாரும் உளர்; பிற செய்தலும் ஆகாமையின், அஃது உரையன்மை அறிக.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** உயிர்க்குக் கேடு வரும் காலத்து நோய்க்கு மருந்தாகக் கொல்லுதல் குற்றம் அன்று என்பார்க்கு இது கூறப்பட்டது.

**பரிதியார்:** தன்னுயிர் துறக்கும் காலமாகினும், இது பிழைக்கும் என்று, ஆடு, கோழி, பன்றியினைப் பிரார்த்தனை செய்வான் அல்லன்; அது எது எனில், அந்தப் பிராணனாலே, தன் பிராணன் பிழைப்பதாவது. தனக்குள்ள வாணாள் தப்பாதே தான் வீண் பாவம் எய்தவேண்டாம் என்றவாறு. *(327)*

## 328

நன்றாகும் ஆக்கம் பெரிதெனினும் சான்றோர்க்குக்
கொன்றாகும் ஆக்கம் கடை. 8

**பரிமேலழகர்:** நன்று ஆகும் ஆக்கம் பெரிது எனினும் - தேவர் பொருட்டு வேள்விக்கண் கொன்றால் இன்பம் மிகும் செல்வம் பெரிதாம் என்று இல்வாழ்வார்க்குக் கூறப்பட்டதாயினும், சான்றோர்க்கு கொன்று ஆகும் ஆக்கம் கடை - துறவான் அமைந்தார்க்கு ஓர் உயிரைக் கொல்ல வரும் செல்வம் கடை.

இன்பம் மிகும் செல்வமாவது தாமும் தேவராய்த் துறக்கத்துச் சென்று எய்தும் செல்வம். அது சிறிதாகலானும், பின்னும் பிறத்தற்கு ஏதுவாகலானும் வீடாகிய ஈறில் இன்பம் எய்துவார்க்குக் கடை எனப்பட்டது. துறக்கம் எய்துவார்க்கு ஆமாயினும் வீடு எய்துவார்க்கு ஆகாது என்றமையின், விதிவிலக்குகள் தம்முள் மலையாமை விளக்கியவாறாயிற்று. இஃது இல்லறம் அன்மைக்குக் காரணம்.

இவை இரண்டு பாட்டானும் கொலையது குற்றம் கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** நன்று - நன்மை.

**காளிங்கர்:** எனினும் - என்று அறநூல் சொல்லினும்.

### ஒப்புமை

**முற்றும்:**

"......நன்குணர்ந்தார்
என்பெறினுங் கொல்லார் இயைந்து." (சிறுபஞ்ச. 47.) (328)

### 329

கொலைவினையர் ஆகிய மாக்கள் புலைவினையர்
புன்மை தெரிவார் அகத்து. 9

**பரிமேலழகர்:** கொலை வினையர் ஆகிய மாக்கள் - கொலைத் தொழிலை உடையராகிய மாந்தர், புன்மை தெரிவார் அகத்து புலை வினையர் - அத் தொழிலின் கீழ்மையை அறியாத நெஞ்சத்தாராயினும் அறிவார் நெஞ்சத்துப் புலைத் தொழிலினர்.

கொலைவினையர் என்றதனுன், வேள்விக்கண் கொலையன்மை அறிக. புலைவினையர் என்றது, தொழிலால் புலையர் என்றவாறு. இம்மைக்கண் கீழ்மை எய்துவர் என்பதாம்.

#### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** இவரை உலகத்தார் கன்மசண்டாளர் என்று சொல்லுவார்.

**பரிதியார்:** கொலை செய்வாரும் புலையரும் நிகராம்; பாவத்தின் சொரூபமாவது புலையர் என்றவாறு.

**காளிங்கர்:** புன்மை தெரிவார் - முறைமையான நூல்களில் குற்றங்கள் ஆராயும் சான்றோர். (329)

### 330

உயிர்உடம்பின் நீக்கியார் என்ப செயிர்உடம்பின்
செல்லாத்தீ வாழ்க்கை யவர். 10

**பரிமேலழகர்:** செயிர் உடம்பின் செல்லா தீ வாழ்க்கையவர் - நோக்கலாகா நோயுடம்புடனே வறுமை கூர்ந்த இழிதொழில் வாழ்க்கையினை உடையாரை, உயிர் உடம்பின் நீக்கியார் என்ப - இவர் முற்பிறப்பின்கண் உயிர்களை அவை நின்ற உடம்பினின்று நீக்கினவர் என்று சொல்லுவர் வினை விளைவுகளை அறிந்தோர்.

செல்லா வாழ்க்கை, தீவாழ்க்கை எனக் கூட்டுக. செயிருடம்பினர் ஆதல், "அக்கேபோல் அங்கை யொழிய விரலழுகித், துக்கத் தொழுநோய் எழுபவே"[1] என்பதனுனும் அறிக. மறுமைக்கண் இவையும் எய்துவர் என்பதாம்.

இவை இரண்டு பாட்டானும் கொல்வார்க்கு வரும் தீங்கு கூறப்பட்டது.

அருளுடைமை முதல் கொல்லாமை யீருகச் சொல்லப்பட்ட இவற்றுள்ளே சொல்லப்படாத விரதங்களும் அடங்கும்; அஃது அறிந்து அடக்கிக் கொள்க. ஈண்டு உரைப்பின் பெருகும்.

#### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** முற் பிறப்பின்கண் உயிரை உடம்பினின்று நீக்கினுர் இவர் என்று பெரியோர் கூறுவர், குற்றமான உடம்பினையும், ஊணுஞ் செல்லாத தீய மனை வாழ்க்கையினையும் உடையாரை.

1. *நாலடி.* 123.

**காளிங்கர்:** செல்லாத் தீ வாழ்க்கை யவர் - தாம் உறும் துயரமானது உடம்பினின்றும் ஒருகாலும் நீங்காத கொடு நரகத்துள் வாழும் வாழ்க்கையினை உடையோரை.

**கவிராஜ:** சீவன்களைக் கொன்றபேர் பார்க்கப் போகாத வியாதியுடையவர்களாய், கைகால் குறைந்து போகிற பெருவியாதியுடையோர்களும் நீசமான தொழில்களை உடையவருமாய்ப் பிறப்பார்கள்.

### ஒப்புமை

**முற்றும்:**

"அக்கேபோல் அங்கை யொழிய விரலழுகித்
துக்கத் தொழுநோய் எழுபவே—அக்கால்
அலவனைக் காதலித்துக் கால்முரித்துத் தின்ற
பழவினை வந்தடைந்தக் கால்." (நாலடி. 123.) (330)

---

### ஞானம்

**பரிமேலழகர்:** இனி அவற்றின் பயனாகிய ஞானம் கூறிய தொடங்கினர். ஞானமாவது வீடு பயக்கும் உணர்வு. அது நிலையாமை முதல் அவா அறுத்தல் இறுதியாக நான்கு அதிகாரத்துள் அடக்கப்பட்டது.

# 34. நிலையாமை

**பரிமேலழகர்:** அவற்றுள் நிலையாமையாவது தோற்றம் உடையன யாவும் நிலையுதல் இலவாம் தன்மை. மயங்கியவழிப் பேய்த்தேரின் புனல் போலத் தோன்றி, மெய் உணர்ந்தவழிக் கயிற்றில் அரவுபோலக் கெடுதலின் பொய் என்பாரும், நிலை வேறுபட்டு வருதலால் கணந்தோறும் பிறந்திறக்கும் என்பாரும், ஒருவாற்றான் வேறுபடுதலும் ஒருவாற்றான் வேறுபடாமையும் உடைமையான் நிலையுதலும் நிலையாமையும் ஒருங்கே உடைய என்பாரும் எனப் பொருட் பெற்றி கூறுவார் பல திறத்தர் ஆவர்; எல்லார்க்கும் அவற்றது நிலையாமை உடம்பாடாகலின், ஈண்டு அதனையே கூறுகின்றார். இஃது உணர்ந்துழி யல்லது பொருள்களின் பற்று விடாதாகலின், இது முன் வைக்கப்பட்டது.

**மணக்குடவர்:** நிலையாமையாவது மயக்கத்தினால் தான் என்று நினைத்திருக்கின்ற யாக்கையும் தனது என்று நினைத்திருக்கின்ற பொருளும் நிலைநில்லாமையைக் கூறல்.

**கவிராஜ பண்டிதர்:** புத்திர மித்திர களத்திராதிகளை நன்றாய் விசாரித்துப் பார்த்தால் ஒன்றும் நிலையாய் இருக்கிறது இல்லை. இவைகளை நிலை அல்ல என்று அறிந்தாலல்லாமல் ஞானம் பிறவாது. ஞானமாகிய அறிவு பிறந்தாலல்லாமல் பற்று விட்டு நீங்கி வீடு பெற முடியாது. ஆதலால் சகல வஸ்துக்களையும் நிச்சயம் அல்ல என்று எண்ணவேண்டும்.

### 331

**நில்லா தவற்றை நிலையின என்றுணரும்**
**புல்லறி வாண்மை கடை.** 1

**பரிமேலழகர்:** நில்லாதவற்றை நிலையின என்று உணரும் புல் அறிவு ஆண்மை - நிலையுதல் இலவாகிய பொருள்களை நிலையுதல் உடைய என்று கருதுகின்ற புல்லிய அறிவினை உடையராதல், கடை - துறந்தார்க்கு இழிபு,

தோற்றம் உடையவற்றைக் கேடில என்று கருதும் புல்லறிவால் அவற்றின்மேல் பற்றுச் செய்தல் பிறவித் துன்பத்திற்கு ஏதுவாகலின், அது வீடு எய்துவார்க்கு இழுக்கென்பது இதனுல் கூறப்பட்டது.

இனிப் புல்லறிவாளர் பெரும்பான்மையும் பற்றுச் செய்வது சிற்றின்பத்துக்கு ஏதுவாகிய செல்வத்தின்கண்ணும் அதனை அநுபவிக்கும் யாக்கையின்கண்ணுமாகலின், வருகின்ற பாட்டுக்களான் அவற்றது நிலையாமையை விதந்து கூறுப.

## உரை வேறுபாடு

**மணக்குடவர்:** எனவே, பொருள்களை உள்ளவாறு காண ஒட்டாத மயக்கத்தைக் கடிய வேண்டும் என்றவாருயிற்று.

**பரிதியார்:** நில்லாதவற்றை – நில்லாத யாக்கையை.

**காளிங்கர்:** இவ்வுலகத்தின்கண் உண்மை நோக்கில் யாவையும் நிலையாவாயிருக்க, அங்கனம் நில்லாதனவற்றை நிலையுடையன என்று கருதும் அறியாமை, இயல்பு உணர்வோர்க்கு எஞ்ஞான்றும் சாலக் கடை.

**கவிராஜ பண்டிதர்:** நிலை இல்லாத புத்திர மித்திர களத்திராதிகளையும் செல்வங்களையும் நிச்சயம் என்றும், தனக்கு உதவும் என்றும் நினைக்கிறவர்கள் அறிவில்லாத மூடர்கள்.

## ஒப்புமை

**முற்றும்:**

"பொய்த்தன்மைத் தாய மாயப் போர்வையை மெய்யென்
[றெண்ணும்
வித்தகத் தாய வாழ்வு வேண்டிநான் விரும்ப கில்லேன்"
(சுந்தரர். ஆரூர், 9.)

"நின்றும் சென்றும் வாழ்வன யாவும் நிலையாவால்
பொன்றும் என்றும் மெய்ம்மை யுணர்ந்தாம் புலையாடற்
கொன்றும் உன்னுய்." (கம்ப. மாரீசன். 187.) (331)

## 332

கூத்தாட் டவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்
போக்கும் அதுவிளிந் தற்று. 2

**பரிமேலழகர்:** பெரும் செல்வம் கூத்தாட்டு அவை குழாத்து அற்று– ஒருவன்மாட்டுப் பெரிய செல்வம் வருதல் கூத்தாடுதல் செய்கின்ற அரங்கின்கண் காண்போர் குழாம் வந்தாற்போலும்; போக்கும் அது விளிந்தற்று - அதனது போக்கும் அக் கூத்தாட்டு முடிந்தவழி அக் குழாம் போயினாற்போலும்.

பெருஞ் செல்வம் எனவே துறக்கச் செல்வமும் அடங்கிற்று. போக்கும் என்ற எச்சவும்மையான், வருதல் என்பது பெற்றும். அக்குழாம் கூத்தாட்டுக் காரணமாக அரங்கின்கண் பல்திறத்தால் தானே வந்து, அக் காரணம் போயவழித் தானும் போமாறு போல, செல்வமும் ஒருவன் நல்வினை காரணமாக அவன்மாட்டுப் பல்திறத்தால் தானே வந்து, அக்காரணம்போய வழித் தானும் போம் என்றதாயிற்று.

## உரை வேறுபாடு

**பரிதியார்:** சந்தையிற் கூட்டம் நாலு பேரும் ஆறு பேரும் வந்து சந்தையில் காரியம் கண்டு மீண்டும் போவார்கள்; அப்படி அல்ல செல்வம்.

எப்படி என்றால், கூத்தாடல் பார்க்க நாலு பேரும் ஆறு பேரும் வந்து கூத்துக் கண்டு, கூத்துக் குலைந்தபோது ஒருகாலே பிரிந்து ஓடுவார்கள். அதற்கு ஒக்குமே செல்வத்தின் கூட்டம்; எப்படி என்றால், இவன் செய்த புண்ணியத்திற்குத் தக்கதாக லட்சுமி இருப்பாள்; இவன் தவசு மாறி, லட்சுமி போன பின்பு அக்கினி, கள்ளர், இராசா, ஆறு இவையிற்றினாலே செல்வம் போம்; இது அறிந்து உள்ள பொழுதே தன்மம் செய்வான்.

**காளிங்கர்:** கூத்து என்பதோர் காரணமாக மக்கள் ஈட்டம் வந்து கூடினாற்போலச் சிறிது நல்வினை என்பதோர் காரணமாகப் பொருளீட்டம் வந்துளதாய் மற்றுக் கூத்து ஒழிவின் பின்னரே மக்கட் கூட்டம் பிரிந்தாற் போலச் செய் தவத்து இறுதிப் பின்னரே மற்று அப் பொருள் அழிந்து ஒழிதலும் அத் தன்மைத்து.

ஒப்புமை

**வந்து போதலுக்குக் கூத்தாட்டு உவமை:**

"கோடியர் நீர்மை போல முறைமுறை
ஆடுநர் கழியும்இவ் வுலகம்." (புறநா. 29:23-4.) (332)

## 333

**அற்கா இயல்பிற்றுச் செல்வம் அதுபெற்றால்
அற்குப ஆங்கே செயல்.** 3

**பரிமேலழகர்:** அற்கா இயல்பிற்று செல்வம் - நில்லாத இயல்பினை உடைத்துச் செல்வம்; அது பெற்றால் அற்குப ஆங்கே செயல் - அதனைப் பெற்றால், செய்யப்படும் அறங்களை அப் பெற்ற பொழுதே செய்க.

அல்கா என்பது திரிந்து நின்றது. ஊழுள்ள வழி அல்லது துறந்தாரால் பெறப்படாமையின் அது பெற்றால் என்றும்; அஃது இல்வழி நில்லாமையின் ஆங்கே என்றும் கூறினார். அதனால் செய்யப்படும் அறங்களாவன பயன் நோக்காது செய்யப்படும் கடவுள் பூசையும் தானமும் முதலாயின. அவை ஞான ஏதுவாய் வீடு பயத்தலின், அவற்றை அற்குப என்றும், செயல் என்றும் கூறினார்.

இவை இரண்டு பாட்டானும் செல்வம் நிலையாமை கூறப்பட்டது.

உரை வேறுபாடு

**மணக்குடவர்:** நிலையாமை மூன்று வகைப்படும், செல்வம் நிலையாமை, இளமை நிலையாமை, யாக்கை நிலையாமை என.

**பரிதியார்:** செல்வம் ஓர் இடத்தில் தங்காது; தன் இடத்தில் செல்வம் வந்தபோதே தன் ஆத்மாவுக்குத் தங்கும்படியாக அன்னதானம் செய்வான்.

**காளிங்கர்:** அற்குப - நிலைபேறுடையவாகிய மறுமைக் காரணங்கள்.

ஒப்புமை

1. **செல்வம் நில்லாமை:**

"கிழவர் இன்னோர் என்னாது பொருள்தான்
பழவினை மருங்கின் பெயர்புபெயர் புறையும்" (கலி. 21:10.)

"கச்சையங் கடகரிக் கழுத்தின் கண்ணுறப்
பிச்சமும் கவிகையும் பெய்யும் இன்னிழல்
நிச்சயம் அன்று." (கம்ப. மந்திரப். 26.)

2. முற்றும்:

"துகடீர் பெருஞ்செல்வம் தோன்றியக்கால் தொட்டுப்
பகடு நடந்தகூழ் பல்லாரோ டுண்க
அகடுற யார்மாட்டும் நில்லாது செல்வம்
சகடக்கால் போல வரும்."

"யானை யெருத்தம் பொலியக் குடைநிழற்கீழ்ச்
சேனைத் தலைவராய்ச் சென்றோரும்—ஏனை
வினையுலப்ப வேறாகி வீழ்வர்தாம் கொண்ட
மனையாளை மாற்றார் கொள." (நாலடி. 2, 3.)

"நில்லாது செல்வம் நிலவார் உடம்படைந்தார்
செல்லா தொருங்கென்று சிந்தித்து—நல்லார்
அருளுளம் புரிகுவ ராயின்
இருளறு சிவகதி எய்தலோ எளிதே." (யா. வி. 55, மேற்.) (333)

## 334

நாள்என ஒன்றுபோற் காட்டி உயிர்ஈரும்
வாளது உணர்வார்ப் பெறின். 4

**பரிமேலழகர்:** நாள் என ஒன்றுபோல் காட்டி ஈரும் வாளது உயிர் - நாளென்று அறுக்கப்படுவதொரு காலவரையறைபோலத் தன்னைக் காட்டி ஈர்ந்து செல்கின்ற வாளினது வாயது உயிர், உணர்வார் பெறின் - அஃது உணர்வாரைப் பெறின்.

காலம் என்னும் அருவப்பொருள் உலகியல் நடத்தற்பொருட்டு ஆதித்தன் முதலிய அளவைகளால் கூறுபட்டதாக வழங்கப்படுவதல்லது தானாகக் கூறுபடாமையின் நாளென ஒன்றுபோல் என்றும், அது தன்னை வாளென்று உணரமாட்டாதார், 'நமக்குப் பொழுது போகா நின்றது' என்று இன்புறுமாறு நாளாய் மயக்கலின் காட்டி என்றும், இடைவிடாது ஈர்தலான் வாளின் வாயது என்றும், அஃது ஈர்கின்றமையை உணர்வார் அரியராகலின் உணர்வார்ப் பெறின் என்றும் கூறினார். உயிரென்னும் சாதி ஒருமைப் பெயர் ஈண்டு உடம்பின்மேல் நின்றது, ஈரப்படுவது அதுவேயாகலின். வாள் என்பது ஆகு பெயர்.

இனி இதனை நாளென்பதொரு பொருள்போலத் தோன்றி உயிரை ஈர்வதொரு வாளாம் என்று உரைப்பாரும் உளர். என என்பது பெயரன்றி இடைச் சொல்லாகலானும், ஒன்றுபோற் காட்டி என்பதற்கு ஒரு பொருட் சிறப்பு இன்மையானும், அது என்பது குற்றியலுகரம் அன்மையானும் அஃது உரையன்மை அறிக.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** நாள் என்பது இன்பம் தருவதொன்றுபோலக் காட்டி உயிரை ஈர்வதொரு வாளாம், அதனை அறிவாரைப் பெறின்.

இஃது உயிரீரும் என்றமையால், இளமை நிலையாமை கூறிற்று.

**பரிதியார்:** நாளெனப் பேர் பெற்றிருக்கிற உயிர் அறுக்கும் ஈர்வாள் அறிவின்கண்ணால் பார்த்தால் ஈர்வாளாம்; அல்லது, ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி என்று தோன்றும் நாள்.

**காளிங்கர்:** உலகத்தோர்க்கு நாளென்று கொண்டு வேறே ஒன்று உளதுபோல் ஒரு நெறி காட்டிச் செல்கின்றது யாதோ எனில், மற்றுஅது

மரத்தினது உருபு வேறுபட்டுக் கழியுமாறு அதனை ஈர்ந்து கொல்லும் ஈர் வாளாம்; எவ்விடத்து எனில் இதன் உண்மைப் பாட்டினை உற்றுணர் வாரைப் பெற்ற இடத்து.

**கவிராஜ பண்டிதர்:** நாழிகை, நாள், மாதம், வருஷம் என்று சொல்லப்பட்டது ஆதித்தனுடைய பிரமாணத்தினாலே அந்த நாள் என் கிறதைக் காட்டி உலகத்திலே உள்ள சீவன்களுடைய சரீரங்களை வாளாலே அறுத்துக் கொண்டு போகிறானென்று எண்ணிக் கொள்வார்கள், அறிவுள் ளோர்கள்.

**மேற்கோள் விளக்கம்**

நாள் என ஒன்று போல் காட்டி என்பதில் என என்னும் இடைச் சொல் பெயர் குறித்து நின்றது என்பர் **தெய்வச்சிலையார்.** (**தொல்.** சொல். *254.*)

**ஒப்புமை**

*1.* **காலத்துக்கு வாள்:**

"வாள்போல் வைகறை வந்தன்றால்." (**குறுந்.** *157 : 4.*)

*2.* **நாளென ஒன்றுபோற் காட்டி உயிரீரும் வாள்:**

"தோற்றம்சால் ஞாயிறு நாழியா வைகலும்
கூற்றம் அளந்துநும் நாளுண்ணும்" (**நாலடி,** *7.*)

"வாள்க ளாகி நாள்கள் செல்ல" (**திருச்சந்த விருத்தம்,** *112.*)

"நாளடி யிடுதல் தோன்று நம்முயிர் பருகும் கூற்றின்
வாளின்வாய்த் தலைவைப் பாக்குச் செல்கின்றோம்
வாழ்கின்றோமே." (**குண்டல.**) (*334*)

## 335

நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை
மேற்சென்று செய்யப் படும். 5

**பரிமேலழகர்:** நா செற்று விக்குள் மேல் வாராமுன் - உரையாடா வண்ணம் நாவை அடக்கி விக்குள் எழுவதற்கு முன்னே, நல்வினை மேல் சென்று செய்யப்படும் - வீட்டிற்கு ஏதுவாகிய அறம் விரைந்து செய்யப் படும்.

மேல்நோக்கி வருதல் ஒருதலையாகலானும், வந்துழிச் செய்தலேயன்றிச் சொல்லலும் ஆகாமையானும் வாராமுன் என்றும், அதுதான் இன்ன பொழுது வரும் என்பது இன்மையின்[1] மேற்சென்று என்றும் கூறினர். மேற்சேறல், மண்டுதல். நல்வினை செய்யுமாற்றின்மேல் வைத்து நிலையாமை கூறியவாறு.

**உரை வேறுபாடு**

**மணக்குடவர்:** மேற்சென்று - மேல் விழுந்து.

**காளிங்கர்:** நல்வினை மேற்சென்று செய்யப்படும் - நல்வினைக் கண்ணே நெஞ்சு ஒருப்பட்டு மற்று அதனைக் காயத்தினாலும் மனத்தினாலும் வாக்கினாலும் மேலாகிய துறவறத்தின்கண் நின்று ஒழுகப்படும்.

1. "யார் அறிவார் சாநாளும் வாழ்நாளும்." (**சம்பந்தர்.** சாய்க்காடு, 3.)

ஒப்புமை

முற்றும் :

"இளமையும் நிலையாவாம் இன்பமும் நின்றவல்ல
வளமையும் அஃதேபோல் வைகலும் துன்பவெள்ளம்
உளவென நினையாதே செல்கதிக் கென்றும்என்றும்
விளைநிலம் உழுவார்போல் வித்துநீர் செய்துகொண்மின்."
(வளையாபதி.)

"கனைகொள் இருமல் சூலைநோய்......
எய்திவந்து நலியாமுன்......கோவலூர்
வீரட்டானஞ் சேர்துமே" (சம்பந்தர். கோவலூர், 4.)

"புறந்திரைந்து நரம்பெழுந்து நரைத்துநீ யுரையால் தளர்ந்து
அறம்புரிந்து நினைப்ப தாண்மை அரிதுகாண்"
(சுந்தரர். புறம்பயம், 3.)

"வைத்த நாள்வரை எல்லை குறுகிச்சென்று
எய்த்தி ளைப்பதன் முன்னம் அடைமினோ
பைத்த பாம்பணை யான்திரு வேங்கடம்." (திருவாய். 3. 3 : 10.)
(335)

### 336

நெருநல் உளன்ஒருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்திவ் வுலகு. 6

**பரிமேலழகர்.** ஒருவன் நெருநல் உளன் இன்று இல்லை என்னும் பெருமை உடைத்து - ஒருவன் நெருநல் உளனாயினான், அவனே இன்று இல்லையாயினான் என்று சொல்லும் நிலையாமை மிகுதி உடைத்து, இவ் வுலகு - இவ் வுலகம்.

ஈண்டு உண்மை பிறத்தலையும், இன்மை இறத்தலையும் உணர்த்தி நின்றன. அவை பெண்பாற்கும் உளவாயினும், சிறப்புப்பற்றி ஆண்பாற்கே கூறினார். இந் நிலையாமையே உலகின் மிக்கது என்பதாம்.

உரை வேறுபாடு

**காளிங்கர்:** ஒருவன் நேற்று இருந்தவன் நேற்று இல்லை என்றும், இன்று இருந்தவன் இன்று இல்லை என்றும் உரைக்கப்பட்ட நிலையாமையின் பெருமை உடைத்து இவ்வுலகம்; ஆதலால் மற்று இக் காயம் இறப்பதன் முன்னர்ப் பிறப்பறுத்தற்கு ஏதுவாகிய துறவறம் இயற்றுக என்பது கருத்தாயிற்று.

ஒப்புமை

**நெருநல் உளனொருவன் இன்றில்லை:**

"இன்றுளார் நாளை யில்லை யெனும்பொருள்
ஒன்றும் ஓரா துழிதரும் ஊமர்காள்" (அப்பர். காட்டுப்பள்ளி, 9.)

"மின்னின் நிலையில மன்னுயிர் யாக்கைகள்." (திருவாய். 1. 2: 2.)

"பிறந்தார் பெயருந் தன்மை பிறரால் அறிதற் கெளிதோ"
'பொன்றுதல் ஒருகா லத்தும் தவிருமோ பொதுமைத் தன்றோ
இன்றுளார் நாளை மாள்வார் புகழுக்கும் இறுதி யுண்டோ."
(கம்ப. நகர்நீங்கு. 36, இந்திரசித்து. 10.)

## 337

ஒருபொழுதும் வாழ்வ தறியார் கருதுப
கோடியும் அல்ல பல. 7

**பரிமேலழகர்:** ஒரு பொழுதும் வாழ்வது அறியார் - ஒரு பொழுதளவும் தம் உடம்பும் உயிரும் இயைந்திருத்தலைத் தெளியமாட்டார்; கோடியும் அல்ல பல கருதுப - மாட்டாது வைத்தும் கோடியளவும் அன்றி அதனினும் பலவாய நினைவுகளை நினையாநிற்பர் அறிவிலாதார்.

இழிவுசிறப்பும்மையால் பொழுது என்பது ஈண்டுக் கணத்தின் மேல் நின்றது. காரணமாகிய வினையின் அளவே வாழ்தற்கும் அளவாகலின் அஃது அறியப்படாதாயிற்று. பலவாய நினைவுகளாவன, பொறிகளான் நுகரப்படும் இன்பங்கள் தமக்கு உரியவாமாறும், அதற்குப் பொருள் துணைக்காரண மாமாறும், அது தம் முயற்சிகளான் வருமாறும், அவற்றைத் தாம் முயலுமாறும், அவற்றிற்கு வரும் இடையூறுகளும், அவற்றை நீக்குமாறும், நீக்கி அப் பொருள் கடைக்கூட்டுமாறும், அதனைப் பிறர் கொள்ளாமல் காக்குமாறும், அதனல் நட்டாரை ஆக்குமாறும், நள்ளாரை அழிக்குமாறும், தாம் அவ்வின்பங்கள் நுகருமாறும் முதலாயின. அறிவிலாரது இயல்பின்மேல் வைத்து நிலையாமை கூறியவாறு.

இனிக் கருதுப என்பதனை அஃறிணைப் பன்மைப் பெயராக்கி உரைப்பாரும் உளர்.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** கருதுப கோடியும் அல்ல பல - தமது வாழ்நாளைக் கோடியும் அல்ல, பலவாகக் கருதுபவர் உலகத்தார்.

**காளிங்கர்:** இமைப்பொழுதளவில் சாதலும் பிறத்தலும் உயிர்களின் நிலையாமைக்கு இயல்பு எனினும் இவற்றின் இடைப்படு காலம் பெரிதாம் எனின், மற்று அது தானும் உடம்போடு உயிர்வாழுங் காலம் ஒரு பொழுதும் ஒருமாத்திரமும் துணிதல் அறியார்; மற்று இதன் நிலைமை இவ்வாறுயினும் அளவிறந்த காலமெல்லாம் இருந்து வாழ்வதற்குச் செய்து கொள்ளக் கருதுவன ஒரு கோடியும் அல்ல; பின்னும் பல; எனவே இக் கருத்துக் கொண்டு உண்டு வாழ்தல் அரிது.

### ஒப்புமை

**ஒருபொழுதும் வாழ்வ தறியார்:**
"யாரறிவார்
சாநாளும் வாழ்நாளும்." (**சம்பந்தர்.** சாய்க்காடு, 3.) *(337)*

## 338

குடம்பை தனித்தொழியப் புள்பறந்தற்றே
உடம்போ டுயிரிடை நட்பு. 8

**பரிமேலழகர்:** குடம்பை தனித்து ஒழிய புள் பறந்தற்று - முன் தனியாத முட்டை தனித்துக் கிடப்ப அதனுள் இருந்த புள்ளுப் பருவம் வந்துழிப் பறந்து போன தன்மைத்து, உடம்போடு உயிரிடை நட்பு - உடம்பிற்கும் உயிர்க்கும் உளதாய நட்பு.

தனித்து ஒழிய என்றதன், முன் தனியாமை பெற்றும். அஃதாவது கருவும் தானும் ஒன்ருய்ப் பிறந்து வேருந்துணையும் அதற்கு ஆதாரமாய் நிற்றல்; அதனல் அஃது உடம்பிற்கு உவமை ஆயிற்று. அதனுள் வேற்றுமையின்றி நின்றே பின் புகாமல் போகலின், புள் உயிர்க்கு உவமை ஆயிற்று.

முட்டையுள் பிறப்பன பிறவும் உளவேனும், புள்ளையே கூறினர் பறந்து போதல் தொழிலான் உயிரோடு ஒப்புமை எய்துவது அதுவேயாகலின். நட்பு என்பது ஈண்டுக் குறிப்புமொழியாய் நட்பின்றிப் போதல் உணர்த்தி நின்றது. சேதனமாய் அருவாய் நித்தமாய உயிரும், அசேதனமாய் உருவாய் அநித்தமாய உடம்பும் தம்முள் மாறுகலின், வினைவயத்தால் கூடியதல்லது நட்பில என்பது அறிக.

இனிக் குடம்பை என்பதற்குக் கூடு என்று உரைப்பாரும் உளர்; அது புள்ளுடன் தோன்றுமையானும், அதன்கண் அது மீண்டு புகுதல் உடைமையானும், உடம்பிற்கு உவமை ஆகாமை அறிக.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** குடம்பை - கூடு.

**பரிதியார்:** பட்சி முட்டையிட்டு வாழ்கிற கூடும் முட்டையும் போலும் உடலும் உயிரும்; ஆகையினாலே, யாக்கை உள்ள பொழுதே தன்மம் செய்வான்.

**காளிங்கர்:** குடம்பை என்பது புள் இயற்றும் கூடு.

### ஒப்புமை

1. **உடம்போ டுயிரிடை நட்பு:**

"உடம்பொ டுயிரிடை நட்பறி யாதார்." (திருமந். 2148.)

2. **முற்றும்:**

"..........பராரை
அலங்க லஞ்சினைக் குடம்பை புல்லெனப்
புலம்பெயர் மருங்கிற் புள்ளெழுந் தாங்கு
மெய்யிவண் ஒழியப் போகியவர்
செய்வினை மருங்கிற் செலீஇயர்என் உயிரே." (அகநா. 113 : 23-7.)

"கேளாதே வந்து கிளைகளாய் இல்தோன்றி
வாளாதே போவரான் மாந்தர்கள்—வாளாதே
சேக்கை மரனொழியச் சேணீங்கு புட்போல
யாக்கை தமர்க்கொழிய நீத்து." (நாலடி. 30.)

"இங்கோர் பார்ப்பெனப்
பாண னேன்படிற் றுக்கையை விட்டுனைப்
பூணு மாறுஅறி யேன்புலன் போற்றியே." (திருவா: 48.) (338)

## 339

**உறங்குவது போலும் சாக்கா டுறங்கி
விழிப்பது போலும் பிறப்பு. 9**

**பரிமேலழகர்:** சாக்காடு உறங்குவது போலும் – ஒருவனுக்குச் சாக்காடு வருதல் உறக்கம் வருதலோடு ஒக்கும்; பிறப்பு உறங்கி விழிப்பது போலும் - அதன்பின் பிறப்பு வருதல் உறங்கி விழித்தல் வருதலோடு ஒக்கும்.

உறங்குதலும் விழித்தலும் உயிர்கட்கு இயல்பாய்க் கடிதின் மாறி மாறி வருகின்றாற்போலச் சாக்காடும் பிறப்பும் இயல்பாய்க் கடிதின் மாறி மாறி வரும் என்பது கருத்து. நிலையாமையே நிலைபெற்றவாறு அறிவித்தற்குப் பிறப்பும் உடன் கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** இது போன உயிர் மீண்டும் பிறக்கும் என்பதூஉம் இறத்தலும் பிறத்தலும் உறங்குதலும் விழித்தலும் போல மாறி வரும் என்பதூஉம் கூறிற்று.

### ஒப்புமை

1. **உறங்கி விழிப்பது போலும் பிறப்பு:**

"விழித்திமைக்கும் மாத்திரை யன்றோ ஒருவன்
அழித்துப் பிறக்கும் பிறப்பு" (நாலடி. 302.)

"உறங்கி விழித்தா லொக்கும்இப் பிறவி." (சுந்தரர். நெல்வாயில். 4.)

2. **முற்றும்:**

"பிறந்தவர் சாதலும் இறந்தவர் பிறத்தலும்
உறங்கலும் விழித்தலும் போன்ற துண்மையின்"
(மணி. 16 : 86-7.)

"கட்டுயில் அனந்தர் போலக் கதிகளுள் தோன்று மாறும்
விட்டுயிர் போகு மாறும் வீடுபெற் றுயரு மாறும்."
(சீவக. 1097.) (339)

## 340

**புக்கில் அமைந்தின்று கொல்லோ உடம்பினுள்
துச்சில் இருந்த உயிர்க்கு. 10**

**பரிமேலழகர்:** உடம்பினுள் துச்சில் இருந்த உயிர்க்கு - வாதம் முதலியவற்றின் இல்லாய உடம்புகளுள் ஒதுக்கிருந்தே போந்த உயிர்க்கு, புக்கில் அமைந்தின்று கொல் - எஞ்ஞான்றும் இருப்பதோர் இல் இதுகாறும் அமைந்தது இல்லை போலும்!

அந் நோய்கள் இருக்க அமைந்தஞான்று இருந்தும் வெகுண்ட ஞான்று போயும் ஓர் உடம்பினும் நிலைபெறுது வருதலால், துச்சில் இருந்த என்றார். பின் புறப்படாது புக்கே விடும் இல் அமைந்ததாயின், பிறர் இற்களுள் ஒதுக்கிராது என்பதாம்; ஆகவே உயிரோடு கூடி நிற்பதோர் உடம்பும் இல்லை என்பது பெறப்பட்டது.

இவை ஏழு பாட்டானும் முறையே யாக்கைகட்கு வரைந்த நாள் கழிகின்றவாறும், கழிந்தால் உளதாய நிலையாமையும், அவை ஒரோவழிப் பிறந்த அளவிலே இறத்தலும், ஒரு கணமாயினும் நிற்கும் என்பது தெளியப்படாமையும், உயிர் நீங்கியவழிக் கிடக்குமாறும், அவற்றிற்கு இறப்பும் பிறப்பும் மாறி மாறி வருமாறும், அவைதாம் உயிர்க்குரிய அன்மையும் என்று இவ்வாற்றால் யாக்கை நிலையாமை கூறியவாறு கண்டு கொள்க.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** தனது அல்லாத உடம்பினுள்ளே ஒதுக்குக் குடியாக இருந்த உயிர்க்குப் போய் இருப்பதற்கு இடம் அமைந்தது இல்லையோ? அமைந்ததாயின், இதனுள் இராது.

புக்கில் என்பது முத்தி ஸ்தானம். இது மேற்கூறியவற்றால் உயிர் மாறிப் பிறந்து வரினும் ஓரிடத்தே தவறும் என்பது கூறிற்று.

**காளிங்கர்:** உடம்புகள்தோறும் குடியிருந்துவருகின்ற உயிர்க்கு மற்று இன்னும் இங்கனம் புக்குப் புக்கு ஒழிகின்ற யாக்கையானது நிலை பெறுது, ஐயோதான்!

இதனுல் என்சொல்லியவாறே எனில், உலகத்து அளவிறந்த காலமெல்லாம் அளவிறந்த யாக்கைகள் தோறும் பிறந்தும் இறந்தும் உழன்று திரிதற்குக் காரணமாகிய பேதைமை நீங்கும் உணர்வு பெறுதற்கு உறு தவம் இயற்றும் ஒருப்பாடே இனித் தகுவது என்று பொருளாயிற்று,

**கவிராஜ பண்டிதர்:** எந்த உடலை எடுத்தாலும் சரீரம் நாசமாகிப் போம்; சிவனுக்கு நாசம் இல்லை. *(340)*

---

# 35. துறவு

**பரிமேலழகர்:** அஃதாவது புறமாகிய செல்வத்தின்கண்ணும் அகமாகிய யாக்கையின்கண்ணும் உளதாம் பற்றினை, அவற்றது நிலையாமை நோக்கி விடுதல். அதிகார முறைமையும் இதனுனே விளங்கும்.

**மணக்குடவர்:** துறவாவது ஒருவன் தவம் பண்ணுநின்ற காலத்து யாதாயினும் ஒரு தொடர்ப்பாடு உளதாயினும், அதனைப் பற்றறத் துறத்தல். இது மயக்கம் அற்றார்க்கு வருவது ஒன்றுதலின், அதன்பின் கூறப்பட்டது.

**பரிதியார்:** நிலையாமை அறிந்தால் மூன்றுவகை ஆசையும் விட்டுத் துறவறத்திலே நிற்க வேணும்,

### 341

**யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்**
**அதனின் அதனின் இலன்.** 1

**பரிமேலழகர்:** யாதனின் யாதனின் நீங்கியான் - ஒருவன் யாதொரு பொருளின் யாதொரு பொருளின் நீங்கினுன், அதனின் அதனின் நோதல் இலன் - அவன் அப்பொருளால் அப்பொருளால் துன்பம் எய்துதல் இலன்.

அடுக்குக்கள் பன்மை குறித்து நின்றன. நீங்குதல் - துறத்தல். ஈண்டுத் துன்பம் என்றது, இம்மைக்கண் அவற்றைத் தேடுதலானும் காத்தலானும் இழத்தலானும் வருவனவும், மறுமைக்கண் பாவத்தான் வருவனவுமாய இருவகைத் துன்பங்களையும் ஆம். எல்லாப் பொருளையும் ஒருங்கே விடுதல் தலை; அஃதன்றி ஒரோ ஒன்ருக விடினும் அவற்றுன் வரும் துன்பம் இலனும் என்பது கருத்து.

### உரை வேறுபாடு

**காளிங்கர்:** உலகத்து மக்கட் பண்புடையான் ஒருவன் இருவினையுள்ளும் தீவினை நீங்கி நூல்நெறி மரபாகிய நல்வினை இயற்றும் அன்றே; மற்று அவை தம்முளும் அரசு பொருள் மக்கள் அமரருலகு என்னும் சிறு சுவை விளைப்பனவாகிய வினைகள் யாதொன்றினின்றும் தொடர்பு நீங்கித் துறவிக்கண்[1] சென்றுன் மற்று அவன் அந்த அந்தப் பயனைப்பற்றித் துயருறுதல் அதனின் அதனின் இலன்; எனவே அந்த அந்தப் பயன் விளைத்

1. துறவி - துறவு.

தற்குக் காரணமாகிய அந்த அந்த வினைகளின் முயற்சியை உடையனுதல் இல்லையாதலால் அவன் துறவியின்கண் முயல்வானும் என்று பொருளாயிற்று. (341)

## 342

**வேண்டின்உண் டாகத் துறக்க துறந்தபின்**
**ஈண்டியற் பால பல. 2**

**பரிமேலழகர்:** துறந்தபின் ஈண்டு இயல் பால பல- எல்லாப் பொருள்களையும் துறந்தால் ஒருவர்க்கு இம்மைக்கண்ணே உளவாம் முறைமையை உடைய இன்பங்கள் பல; வேண்டின் உண்டாக துறக்க - அவ்வின்பங்களை வேண்டின் அவற்றைக் காலம்பெறத் துறக்க.

அவ் வின்பங்களாவன அப் பொருள்கள் காரணமாக மனமொழி மெய்கள் அலையாது நிற்றலானும், அவை நன்னெறிக்கண் சேறலானும் வருவன. இளமைக்கண் துறந்தான் அவற்றை நெடுங்காலம் எய்துமாகலின், உண்டாகத் துறக்க என்ருர். இன்பங்கள் என்பதும் காலம் என்பதும் வருவிக்கப்பட்டன. இம்மைக்கண் துன்பங்கள் இலவாதலேயன்றி இன்பங்கள் உளவாதலும் உண்டு என்பதாம்.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** தன் உயிருக்கு ஆக்கம் உண்டாக வேண்டின், தன் உடைமை எல்லாவற்றையும் துறக்க; துறந்தபின் இவ்விடத்தே இயலும் பகுதியின பல.

**பரிதியார்:** வேண்டின செல்வம் உண்டாயிருக்கத் துறக்க வேணும்; துறந்தபின் செனனம் இல்லை.

**காளிங்கர்:** முதற்சொன்ன நிலையாமையைக் குறிக்கொண்டு பிறவிக்கு வித்தாகிய வினையும் பயனும் என்பனவற்றை நுமக்கு இயன்ற விடுத்தலை விரும்புவிராயின் அதனையும் முற்சொன்ன உண்மையாகத் துறக்க; இங்கனம் துறந்ததற்பின் இவ்விடத்து மற்று அத் துறவற முயற்சியான் ஈண்டு ஆகற்பாலன பல.

**கவிராஜ பண்டிதர்:** சகல வஸ்துக்களையும் துறந்து விட்டால் அவனுக்கு இம்மையிலே அந்த வஸ்துக்களாலே உண்டாகப்பட்ட பலனிலும் பத்துக்கோடி அத்தனைப் பலன் உண்டாம் மறுமையிலே. (342)

## 343

**அடல்வேண்டும் ஐந்தன் புலத்தை விடல்வேண்டும்**
**வேண்டிய எல்லாம் ஒருங்கு. 3**

**பரிமேலழகர்:** ஐந்தன் புலத்தை அடல் வேண்டும் - வீடு எய்துவார்க்குச் செவி முதலிய ஐம்பொறிகட்கு உரியவாய ஓசை முதலிய ஐம்புலன்களையும் கெடுத்தல் வேண்டும்; வேண்டிய எல்லாம் ஒருங்கு விடல் வேண்டும் - கெடுக்குங்கால் அவற்றை நுகர்தற்பொருட்டுத் தாம் படைத்த பொருள் முழுதையும் ஒருங்கே விடுதல் வேண்டும்.

புலம் என்றது அவற்றை நுகர்தலை; அது மனத்தைத் துன்பத்தானும் பாவத்தானுமன்றி வாராத பொருள்கள்மேலல்லது வீட்டுநெறியாகிய யோக ஞானங்களில் செலுத்தாமையின் அதனை அடல் வேண்டும் என்றும், அஃது அப் பொருள்கண்மேல் செல்லின் அந் நுகர்ச்சி விறகுபெற்ற தழல்போல் முறுகுவதல்லது அடப்படாமையின், வேண்டிய எல்லாம் ஒருங்கு விடல் வேண்டும் என்றும் கூறினர்.

உரை வேறுபாடு

**பரிதியார்:** வேண்டிய எல்லாம் - ஐம்புலன் உணர்வுகளை.

**காளிங்கர்:** இனி இதனுள் கருவியாகிய ஐம்புலன்களையும் துறவு நெறிக்குப் புறவழியாகிய ஐம்பொறிகளின் நுகர்ச்சியைப் பரவாமல் தனது உள்ளத்தால் செறுத்தல் வேண்டும்; மற்று அங்ஙனம் செறுத்தபின் அவ்வுள்ளத்தான் முன்னின்று விரும்புவதாகிய வேட்கைகளெல்லாம் ஒரு தன்மைப்பட விடுதல் வேண்டும். எனவே அவ்வுள்ளமானது தானும் ஒரு வழிப்பட்டு நிற்க வேண்டும் என்பது பொருளாயிற்று.

ஒப்புமை

1. *ஐம்புலத்தை அடுதல்:*

"மெய்வாய்கண் மூக்குச் செவியெனப் பேர்பெற்ற
ஐவாய வேட்கை யவாவினைக்—கைவாய்க்
கலங்காமற் காத்துய்க்கும் ஆற்றல் உடையான்
விலங்காது வீடு பெறும்." (நாலடி. 59.)

"கசட்டுறு வினைத்தொழிற் கள்வ ராயுழல்
அசட்டர்கள் ஐவரை அறுவ ராக்கிய
வசிட்டன்"

"ஐந்தொ டாகிய முப்பகை மருங்கற அகற்றி
உய்ந்து போயினர்"

"மிடலுறு புலன்கள் வென்ற மெய்த்தவர்"

"அடக்கிஐம் புலன்கள் வென்ற தவப்பயன்."

(கம்ப. திருவவதார. 77, மந்திர. 64, கடல்தாவு. 11, 29.)

2. **ஒருங்கு விடுதல்:**

"விடுமின் முற்றவும்." (திருவாய். 1. 2: 1.) (343)

## 344

**இயல்பாகும் நோன்பிற்கொன் றின்மை உடைமை**
**மயல்ஆகும் மற்றும் பெயர்த்து.** 4

**பரிமேலழகர்:** ஒன்று இன்மை நோன்பிற்கு இயல்பு ஆகும் - பற்றப்படுவது ஒரு பொருளும் இல்லாமை தவம் செய்வார்க்கு இயல்பாம்; உடைமை பெயர்த்து மற்றும் மயல் ஆகும் - அஃதன்றி, ஒன்றுயினும் உடைமை அத்தவத்தைப் போக்குதலான் மீண்டும் மயங்குவதற்கு ஏதுவாம்.

இழிவுசிறப்பு உம்மை[1] விகாரத்தால் தொக்கது. நோன்பு என்பதூஉம் மயல் என்பதூஉம் ஆகு பெயர். பெயர்த்தலான் என்பது திரிந்து நின்றது. நோன்பைப் பெயர்த்தலான் என வேற்றுமைப்படுத்துக் கூட்டுக. எல்லாப் பொருள்களையும் விட்டு ஒரு பொருளை விடாதவழியும், அது சார்பாக விட்டன எல்லாம் மீண்டு வந்து தவத்திற்கு இடையீடாய் மனக்கலக்கம் செய்யும் என்பது கருத்து.

இவை நான்கு பாட்டானும் எனது என்னும் புறப்பற்று விடுதல் கூறப்பட்டது.

உரை வேறுபாடு

**மணக்குடவர்:** மயலாகும் - மீண்டும் பிறத்தற்குக் காரணமான மயக்கத்தைத் தரும்.

1. ஒன்றும் இன்மை என்னும் உம்மை.

**கவிராஜ பண்டிதர்:** மயக்கம் வந்து தபசும் கெட்டுப் போய்த் தாழ்ந்த கதியிலே பிறந்து துக்கப்படுவார்கள். *(344)*

### 345

மற்றும் தொடர்ப்பா டெவன்கொல் பிறப்பறுக்கல்
உற்றூர்க் குடம்பும் மிகை. 5

**பரிமேலழகர்:** *பிறப்பு அறுக்கல் உற்றூர்க்கு உடம்பும் மிகை* - பிறப் பறுத்தலை மேற்கொண்டார்க்கு அதற்குக் கருவியாகிய உடம்பும் மிகையாம்; *மற்றும் தொடர்ப்பாடு எவன்* - ஆனபின் அதற்கு மேலே இயைபில்லனவும் சில தொடர்ப்பாடு உளவாதல் என்னும்?

உடம்பு என்ற பொதுமையான், உருவுடம்பும் அருவுடம்பும் கொள்ளப் படும். அவற்றுள், அருவுடம்பாவது பத்து வகை இந்திரிய உணர்வோடும் ஐவகை வாயுக்களோடும் காமவினை விளைவுகளோடும் கூடிய மனம்; இது நுண்ணுடம்பு எனவும் படும். இதன்கண் பற்று நிலையாமை உணர்ந்த துணையான் விடாமையின், விடுதற்கு உபாயம் முன்னர்க் கூறுப.[1] இவ் வுடம்புகளால் துன்பம் இடையறுது வருதலை உணர்ந்து இவற்றுனை கட்டினை இறைப்பொழுதும் பொறுது வீட்டின்கண்ணே விரைதலின், உடம்பும் மிகை என்றூர். இன்பத் துன்பங்களான் உயிரோடு ஒற்றுமை எய்துதலின், இவ் வுடம்புகளும் யான் எனப்படும்.

இதனுன் அகப்பற்று விடுதல் கூறப்பட்டது.

#### உரை வேறுபாடு

**பரிதியார்:** மூன்று வகை ஆசையும் விட்டு என்ன பயன்? தேகம் அன்றோ தபசுக்கு அநேகம் பகையாவது?

**காளிங்கர்:** மற்று இப் பிறவியென்னும் துயரினை மறுத்தலை முயன் றுள்ளார்க்குக் கீழ்ச்சொன்னவை அனைத்திலும் உள்ள தொடர்ச்சியை இனி இது அன்றி வேறும் ஒரு தொடர்ச்சிப்பாடு யாது கொல்லோ? எனவே இது வன்றி மற்றும் யாதும் இல்லை; அஃது யாதோ எனின் தமது உடம்பு சீவர்க்கு மிகை.

#### ஒப்புமை

*1.* **உடம்பும் மிகையாதல்:**

"உடலமும் மிகையென் றெண்ணுவீர்"
"உடற்பொறை துறந் துயர்பதம் புக்க."

*(கம்ப. சடாயு உயிர்நீத்த. 51, மராமர. 50.)*

*2.* **முற்றும்:**

"மற்றுந் தொடர்ப்பா டெவன்கொல் பிறப்பறுக்கல்
உற்றூர்க் குடம்புமிகை இசையுள்வழி." *(வளையாபதி.) (345)*

### 346

யான்என தென்னும் செருக்கறுப்பான் வானோர்க்
குயர்ந்த உலகம் புகும். 6

**பரிமேலழகர்:** *யான் எனது என்னும் செருக்கு அறுப்பான்* - தான் அல்லாத உடம்பை யான் என்றும் தன்னோடு இயைபு இல்லாத பொருளை

1. குறள், 350.

எனது என்றும் கருதி அவற்றின்கண் பற்றுச் செய்தற்கு ஏதுவாகிய மயக்கத்தைக் கெடுப்பான், வானோர்க்கு உயர்ந்த உலகம் புகும் - வானோர்க்கும் எய்தற்கு அரிய வீட்டுலகத்தை எய்தும்.

மயக்கம், அறியாமை. அதனைக் கெடுத்தலாவது தேசிகர்பால் பெற்ற உறுதி மொழிகளானும் யோகப் பயிற்சியானும் அவை யான் எனது அன்மை தெளிந்து, அவற்றின்கண் பற்றை விடுதல். சிறப்பும்மை[1] விகாரத்தால் தொக்கது.

இதனான் இவ்விருவகைப் பற்றினையும் விட்டார்க்கே வீடுளது என்பது கூறப்பட்டது.

உரை வேறுபாடு

**பரிதியார்:** உலகம் - சிவலோகம்.

**காளிங்கர்:** இங்குச் சொன்ன உடலும் புலன்களும் உள்ளமும் ஆகிய ஒரு தொகைப்பாட்டினை யான் என்று மயங்கும் மயக்கமும் இனி மற்று இதனையும் கீழ்ச்சொன்ன மனைமக்கள் செல்வம் முதலியவற்றையும் எனது என்று மயங்கும் மயக்கமும் என இவ்விரண்டு மயக்கத்தையும் சேர்ந்து உணர்ந்து செலவற விடுக்கும் அவனே வானோராகிய கடவுளர்க்கெல்லாம் மேற்பட்ட முழுப் பேரின்பமாகிய முத்தியைப் பெறுவன்.

ஒப்புமை

முற்றும்:

"நீர்நும தென்றிவை
வேர்முதல் மாய்த்திறை
சேர்மின்." (திருவாய். 1.2: 3.) (346)

347

பற்றி விடாஅ இடும்பைகள் பற்றினைப்
பற்றி விடாஅ தவர்க்கு. 7

**பரிமேலழகர்:** பற்றினை பற்றி விடாஅதவர்க்கு - இருவகைப் பற்றினையும் இறுகப் பற்றி விடாதாரை, இடும்பைகள் பற்றி விடாஅ - பிறவித் துன்பங்கள் இறுகப்பற்றி விடா.

இறுகப்பற்றுதல், காதல்கூர்தல். விடாதவர்க்கு என்பது வேற்றுமை மயக்கம்.

இதனான் இவை விடாதவர்க்கு வீடு இல்லை என்பது கூறப்பட்டது.

உரை வேறுபாடு

**மணக்குடவர்:** பற்றி - பொருள்களைப் பற்றி.

**பரிதியார்:** மூன்று வகை ஆசையும் துறந்து, தவசு பண்ணும்போது தவசு சடுதியிலே பலிக்கும்; அல்லது தவசு பலியாது.

ஒப்புமை

முற்றும்:

"பெரிய இன்பத்
துறவியார்க் கல்லது துன்பம்நீங் காதென"
"தந்தைதாய் தன்னுடன் தோன்றினர் புத்திரர் தாரமென்னும்
பந்தம்நீங் காதவர்க் குய்ந்துபோக் கில்லெனப் பற்றினையே."
(சம்பந்தர். ஆரூர், 5, 9.) (347)

---

1. வானோர்க்கும் என்ற உம்மை.

### 348

தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி
வலைப்பட்டார் மற்றை யவர். 8

**பரிமேலழகர்:** *தீர துறந்தார் தலைப்பட்டார் - முற்றத் துறந்தார் வீட்டினைத் தலைப்பட்டார்; மற்றையவர் மயங்கி வலைப்பட்டார் - அங்ஙனம் துறவாதார் மயங்கிப் பிறப்பாகிய வலையுட் பட்டார்.*

முற்றத் துறத்தலாவது, பொருள்களையும் இருவகை உடம்பினையும் உவர்த்துப் பற்றற விடுதல்; அங்ஙனம் துறவாமையாவது அவற்றுள் யாதானும் ஒன்றன்கட் சிறிதாயினும் பற்றுச் செய்தல். துணிவுபற்றித் தலைப்பட்டார் என்றும், பொய்ந்நெறி கண்டே பிறப்புவலையுள் அகப்படுதலின் மயங்கி என்றும் கூறினர்.

#### உரை வேறுபாடு

**பரிதியார்:** ஞானத்தாலே மேற்பட்டவர் மூன்று வகை ஆசையும் துறந்தார்; ஞானம் இல்லாதார் மயங்கி ஆசை வலைப்பட்டார்.

#### ஒப்புமை

**முற்றும்:**

"இறப்பெனும் மெய்ம்மையை இம்மை யாவர்க்கும்
மறப்பெனும் அதனின்மேற் கேடு மற்றுண்டோ
துறப்பெனும் தெப்பமே துணைசெ யாவிடின்
பிறப்பெனும் பெருங்கடல் பிழைக்க லாகுமோ."

(கம்ப. மந்திரப். 21.) *(348)*

### 349

பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும் மற்று
நிலையாமை காணப் படும். 9

**பரிமேலழகர்:** *பற்று அற்ற கண்ணே பிறப்பு அறுக்கும் - ஒருவன் இருவகைப்பற்றும் அற்ற பொழுதே, அப் பற்றறுதி அவன் பிறப்பை அறுக்கும்; மற்று நிலையாமை காணப்படும் - அவை அறாத பொழுது அவற்றால் பிறந்து இறந்து வருகின்ற நிலையாமை காணப்படும்.*

காரணம் அற்றபொழுதே காரியமும் அற்றதாம் முறைமைபற்றி, பற்றற்ற கண்ணே என்றார்; "அற்றது பற்றெனில் உற்றது வீடு"[1] என்பதூஉம் அதுபற்றி வந்தது.

இவை இரண்டு பாட்டானும் அவ்விருமையும் ஒருங்கு கூறப்பட்டன.

#### உரை வேறுபாடு

**பரிதியார்:** ஒன்றிரண்டு துறந்தாலும், பிறப்பு உண்டு; கீழ்ப்படுத்தாதுமேற்படுத்தும்.

**காளிங்கர்:** இங்கனமே பற்றற்ற இடத்து மற்று அப்பொழுதே அப்பற்றறுதியாகிய நல் துறவு தன் பிறப்பறுக்கும்; எனவே முத்தியை எய்தும். மற்று ஏனைய எல்லாம் பற்றோடு வருதலால் அந்தஅந்தப் பொருள் பற்றி நின்ற நெஞ்சோடும் பிறந்தும் இறந்தும் திரிந்து உழலவேண்டுதலால் இந்த நிலையாமையே எப்பொழுதும் காணப்படும் இவனால்; எனவே, என்ஞான்றும் முத்தியின்பம் காணமாட்டான் என்பது பொருள் ஆயிற்று.

1. *திருவாய்மொழி*, 1. 2: 5.

**கவிராஜ பண்டிதர்:** மற்று நிலையாமை காணப்படும் - அந்த ஆசையை விடாத போது நிலையில்லாததாகிய பிறவிச் சமுத்திரத்தைக் காண்பான்.

### ஒப்புமை

**முற்றும் :**

"பற்றவா வேரொடும் பகையறப் பிறவிபோய்
முற்றவா வுணர்வுமேன் முடுகினர்." (கம்ப. தாடகை. 3.) *(349)*

## 350

**பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்**
**பற்றுக பற்று விடற்கு.** 10

**பரிமேலழகர் :** பற்று அற்றான் பற்றினை பற்றுக - எல்லாப் பொருளையும் பற்றிநின்றே பற்று அற்ற இறைவன் ஓதிய வீட்டு நெறியை இதுவே நன்னெறி என்று மனத்துக் கொள்க; அப் பற்றை பற்றுக பற்று விடற்கு - கொண்டு, அதன்கண் உபாயத்தை அம் மனத்தால் செய்க, விடாது வந்த பற்று விடுதற்கு.

கடவுள் வாழ்த்திற்கு ஏற்ப ஈண்டும் பொதுவகையால் பற்றற்றான் என்றார். பற்றற்றான் பற்று என்புழி ஆறுவது செய்யுட்கிழமைக்கண் வந்தது. ஆண்டுப் பற்று என்றது பற்றப்படுவதனை. அதன்கண் உபாயம் என்றது தியான சமாதிகளை. விடாது வந்த பற்று என்பது அநாதியாய் வரும் உடம்பிற் பற்றினை. அப் பற்று விடுதற்கு உபாயம் இதனால் கூறப் பட்டது.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** பற்று அறுத்தானது பற்றினைப் பற்றுக. அதனைப் பற்றுங்கால், பயன் கருதிப் பற்றாது பற்று விடுதற்காகப் பற்றுக.

**பரிதியார்:** காரணவுபாதி எழுகாரியத்தில் பற்றற்றான் ஸ்ரீ பாதத்தைப் பற்றுக; இந்தப் பற்றினையே உறுதியாய்ப் பற்றுக, ஆத்மாவுக்கு உபாதியாகிய காரியமும் உபாதி ஏழும் விடவேண்டில்.

**காளிங்கர்:** ஒருவர் தமது உள்ளத்தால் பற்று உடையராக வேண்டும், மற்று யாதினை எனின் முன்னஞ் சொன்ன முறைமையின் எப்பற்றும் அற்றான் யாதோர் இன்பத்தைப்பற்றி நின்றான்; மற்று அதனைத் தானும் உறுதற்கு. மற்று இனி முன்னம் தனது உள்ளத்தினால் முயல்வதாக வந்து பற்றினானன்றே, அதன் பயன் முற்றுந்துணையும் அதனை முறுகநின்று முயலுக; யாதற்கோ எனின் மற்று இதனால் வரும் இன்பம் அன்றி மற்று எப்பற்றும் விடுதற்கு.

### ஒப்புமை

**முற்றும்:**

"உற்ற உதிரம் ஒழிப்பான் கலிங்கத்தை
மற்றது தோய்த்துக் கழுவுதல் என்னெக்கும்
பற்றினு ளாகிய பாவத்தை மீட்டும்
பற்றொடு நின்று பறைக்குறு மாறே." (வளையாபதி.)

"மணஞ்சேரி, பற்றாக வாழ்பவர் மேல்வினை பற்றாவே"
"திருஆப்ப னூரானைப் பற்றும் மனமுடை யார்வினை
பற்றறுப் பாரே."

"பலவும்பய னுள்ளன பற்றும் ஒழிந்தோம்
கலவம்மயில் காமுறு பேடையொ டாடிக்
குலவும்பொழில் சூழ்ந்த குரங்கணில் முட்டம்
நிலவும்பெரு மானடி நித்தல் நினைந்தே."

"காழி அமர்கோயில்
பற்றினைப் பற்றிநின் றார்க்கில்லை பாவமே."

"பாடு வாரிசை பல்பொருட் பயனுகந் தன்பால்
கூடு வார்துணைக் கொண்டதம் பற்றறப் பற்றித்
தேடு வார்பொருள் ஆனவன் செறிபொழில் தேவூர்
ஆடு வான்அடி அடைந்தனம் அல்லல்ஒன் றிலமே."

"கோழம்பம் பற்றினைப் பற்றுவார் மேல்வினை பற்றுவே."
(**சம்பந்தர்.** மணஞ்சேரி, 10, ஆப்பனூர், 1, குரங்கணில் முட்டம், 6, சீகாழி, 4, தேவூர், 5, கோழம்பம், 8.)

"பற்றது பற்றில் பரமனைப் பற்றுமின்." (திருமந். 298.) (350)

# 36. மெய் உணர்தல்

**பரிமேலழகர்:** அஃதாவது பிறப்பு வீடுகளையும் அவற்றின் காரணங்களையும் விபரீத ஐயங்களானன்றி உண்மையான் உணர்தல். இதனை வடநூலார் தத்துவஞானம் என்ப. இதுவும் பற்றற்றான் பற்றினைப் பற்றிய வழி உளதாவது ஆகலின், அக் காரண ஒற்றுமைபற்றித் துறவின்பின் வைக்கப் பட்டது.

**மணக்குடவர்:** மெய் உணர்தலாவது எக் காலத்திலும் எவ்விடத்திலும் அழியாது நிற்கும் பொருள் இது என உணர்தல். இது பற்றறத் துறந்தாரது உள்ள நிகழ்ச்சியாதலான், அதன்பின் கூறப்பட்டது.

## 351

பொருள்அல்ல வற்றைப் பொருள்என் றுணரும்
மருளான்ஆம் மாணாப் பிறப்பு. 1

**பரிமேலழகர்:** பொருள் அல்லவற்றை பொருள் என்று உணரும் மருளான் ஆம் - மெய்ப்பொருள்அல்லவற்றை மெய்ப்பொருள் என்று உணரும் விபரீத உணர்வானே உளதாம், மாணா பிறப்பு - இன்பம் இல்லாத பிறப்பு.

அவ் விபரீத உணர்வாவது மறுபிறப்பும் இருவினைப் பயனும் கடவுளும் இல்லை எனவும், மற்றும் இத்தன்மையவும் சொல்லும் மயக்கநூல் வழக்குக்களை மெய்ந்நூல் வழக்கு எனத் துணிதல். குற்றியை மகன் என்றும், இப்பியை வெள்ளி என்றும் இவ்வாறே ஒன்றனைப் பிறிதொன்றாகத் துணிதலும் அது. மருள், மயக்கம், விபரீத உணர்வு, அவிச்சை என்பன ஒரு பொருட் கிளவி. நரகர், விலங்கு, மக்கள், தேவர் என்னும் நால்வகைப் பிறப்பினும் உள்ளது துன்பமேயாகலின், மாணாப் பிறப்பு என்றார்.

இதனால் பிறப்புத் துன்பம் என்பதூஉம் அதற்கு முதற்காரணம் அவிச்சை என்பதூஉம் கூறப்பட்டன.

### உரை வேறுபாடு

**பரிதியார்:** பொருள் அல்லவற்றை - உபதேச நிலையல்லாதவற்றை.

**கவிராஜ பண்டிதர்:** பொருளல்லவற்றை - மெய்ப் பொருள் அல்லாத புத்திரர், மித்திரர், களத்திரம், தனம், தானியம், வஸ்து, ஆபரணங்கள் இவை முதலானவைகளை.

### ஒப்புமை

**பொருள் அல்லவற்றைப் பொருள் என்று உணர்தல்:**

"பொள்ள லிவ்வுட லைப்பொரு ளென்று
பொருளும் சுற்றமும் போகமும் ஆகி
மெள்ள நின்றவர் செய்வன வெல்லாம்" (சுந்தரர், ஆரூர், 6.)

"மருளொடு தெருளுறும் நிலையர் மங்கையர்
தெருளுறும் மெய்ப்பொருள் தெளிந்தி லாரினே."
(கம்ப. மாரீசன். 128.) (351)

## 352

**இருள்நீங்கி இன்பம் பயக்கும் மருள்நீங்கி**
**மாசறு காட்சி யவர்க்கு.** 2

**பரிமேலழகர்:** மருள் நீங்கி மாசு அறு காட்சியவர்க்கு - அவிச்சையின் நீங்கி மெய் உணர்வுடையராயினர்க்கு, இருள் நீங்கி இன்பம் பயக்கும் - அம் மெய்யுணர்வு பிறப்பினை நீக்கி வீட்டினைக் கொடுக்கும்,

இருள் - நரகம். அஃது ஆகுபெயராய்க் காரணத்தின்மேல் நின்றது. நீங்கி எனத் தொடைநோக்கி மெலிந்து நின்றது; நீங்க என்பதன் திரிபு எனினும் அமையும். மருள் நீங்கி என்னும் வினையெச்சம் காட்சியவர் என்னும் குறிப்புவினைப் பெயர் கொண்டது, மாசறு காட்சி என்றது கேவல உணர்வினை.

இதனுன் வீடாவது நிரதிசய இன்பம் என்பதூஉம், அதற்கு நிமித்த காரணம் கேவலப் பொருள் என்பதூஉம் கூறப்பட்டன.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** மயக்கத்தினின்று நீங்கிக் குற்றமற்ற அறிவுடையார்க்கு, அறியாமையாகிய இருள் நீங்க முத்தியாகிய இன்பம் உண்டாம்.

### ஒப்புமை

**முற்றும்:**

"மருளில் வண்குரு கூர்வண் சடகோபன்
தெருள்கொள்ளச் சொன்ன ஓரா யிரத்துள்" (திருவாய். 2.10:11.)

"தீவினை நல்வினை என்னத் தேற்றிய
பேர்வினைப் பொருள்தனை யறிந்து பெற்றதோர்
ஆய்வினை மெய்யுணர் வணுக வாசுறு
மாயையின் மாய்ந்தது மாரிப் பேரிருள்." (கம்ப. கார்காலப். 105.)
(352)

## 353

**ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்**
**வானம் நணிய துடைத்து.** 3

**பரிமேலழகர்:** ஐயத்தின் நீங்கி தெளிந்தார்க்கு - ஐயத்தினின்று நீங்கி மெய் உணர்ந்தார்க்கு, வையத்தின் வானம் நணியது உடைத்து-எய்தி

நின்ற நிலவுலகத்தினும் எய்தக் கடவதாய வீட்டுலகம் நணித்தாதல் உடைத்து.

ஐயமாவது பலதலையாய உணர்வு. அஃதாவது மறுபிறப்பும், இருவினைப் பயனும், கடவுளும் உளவோ இலவோ என ஒன்றில் துணிவு பிறவாது நிற்றல்; பேய்த்தேரோ புனலோ, கயிறோ அரவோ எனத் துணியாது நிற்பதும் அது. ஒருவாற்ருன் பிறர் மதம் களைந்து தம் மதம் நிறுத்தல் எல்லாச் சமய நூல்கட்கும் இயல்பாகலின், அவை கூறுகின்ற பொருள்களுள் யாது மெய்யென நிகழும் ஐயத்தினை யோக முதிர்ச்சி உடையார் தம் அநுபவத்தான் நீக்கி மெய் உணர்வாராகலின், அவரை ஐயத்தின் நீங்கித் தெளிந்தார் என்றும், அவர்க்கு அவ் வநுபவ உணர்வு அடிப்பட்டு வரவரப் பண்டை உலகியல்உணர்வு தூர்ந்துவருமாகலின், அதனைப் பயன்மேலிட்டு வையத்தின் வானம் நணியது உடைத்து என்றும் கூறினர்; கூறவே, ஐய உணர்வும் பிறப்பிற்குக் காரணமாதல் கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** துணிந்த அறிவின்கண்ணது எல்லா உலகும் ஆதலின், அவ்வறிவுடையார்க்கு உலகம் ஒருங்கு தோற்றுதலின், நணித்தாம். இது மெய்யுணர்வு எவ்விடமும் அறியும் என்றது.

**பரிதியார்:** சந்தேகமற்ற உபதேசத்தில் நிலைமை கண்டார்க்குப் பூமியிலே இருக்கையிலே முத்தி பெற்றதற்கு ஒக்கும்.

**காளிங்கர்:** வையத்தின் - இவ்வையத்தின் நணுமைபோல்.

**கவிராஜ பண்டிதர்:** வானம் - தேவலோகம்.

### ஒப்புமை

**ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்:**

"ஐயம் நீங்கிஎம் அறிவுமதித் தொழுகிய." (பெருங். 4. 8 : 68.)

(353)

## 354

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயம்இன்றே
மெய்உணர் வில்லா தவர்க்கு. 4

**பரிமேலழகர்:** ஐ உணர்வு எய்திய கண்ணும் பயம் இன்றே - சொல்லப்படுகின்ற புலன்கள் வேறுபாட்டான் ஐந்தாகிய உணர்வு அவற்றை விட்டுத் தம் வயத்ததாய வழியும், பயம் இன்றே - அதனுல் பயன் இல்லையேயாம், மெய்உணர்வு இல்லாதவர்க்கு - மெய்யினை உணர்தல் இல்லாதார்க்கு.

ஐந்தாகிய உணர்வு, மனம். அஃது எய்துதலாவது மடங்கி ஒருதலைப்பட்டுத் தாரணைக்கண் நிற்றல். அங்ஙனம் நின்றவழியும் வீடு பயவாமையின், பயம் இன்று என்ருர். சிறப்பும்மை எய்துதற்கு அருமை விளக்கி நின்றது.

இவை இரண்டு பாட்டானும் மெய் உணர்வுடையார்க்கே வீடுளது என மெய் உணர்வின் சிறப்புக் கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** ஐ உணர்வு எய்தியக் கண்ணும் - மெய் முதலாகிய பொறிகள் ஐந்தினும் அறியப்படுவன எல்லாம் அறிந்தவிடத்தும்.

**பரிதியார்:** மெய் உணர்வு - மெய்யுணர்வாகிய சிவஞானம்.

**காளிங்கர்:** ஓசை முதலாகிய ஐம்புலன்களைத் தனித்தனி அறிந்து வருகின்ற செவி முதலாகிய பொறி ஐந்தும் மற்று ஈண்டு அருந்தவம் இயற்றி அமருலகு ஆளும் அமரர்க்கும் அவர் எய்துதல் அரிதாதலால், சிறிது நாள் சிற்றின்பத்தாராகிய மக்களாகப் பிறந்தார்க்கு எவ்வாற்றானும் எய்தாது அன்றே; அஃதன்றி இவர்க்கு அவை நிறைய எய்தியக் கண்ணும் மற்று உண்டு ஒழிவன ஆதலால் யாதும் ஒரு பயன் இல்லையே; யார்க்கு எனின் மெய்ப்பொருளை உணரும் உணர்வில்லாத விரகு இல்லார்க்கு.

**கவிராஜ பண்டிதர்:** சக்ஷு பஞ்சேந்திரிய சீவனுகித் தர்ம க்ஷேத்திரத்திலே பிறந்தும் நல்ல ஞானமும் தரிசனமும் இல்லாவிட்டால் பிரயோசனம் இல்லை.

### ஒப்புமை

**ஐயுணர்வும் மெய்யுணர்வும்:**

"ஆறினர் பொய்யகத் தையுணர் வெய்திமெய்
தேறினர் வழிபடுந் தென்குடித் திட்டையே"
(**சம்பந்தர்**, தென்குடித் திட்டை, 6.)

"அடக்கும்ஐம் பொறியொடு கரணத் தப்புறம்
கடக்கும்வா லுணர்வினுக் கணுகும் காட்சியான்."
(**கம்ப**, தைலமாட்டு. 27.) *(354)*

## 355

**எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்**
**மெய்ப்பொருள் காண்ப தறிவு.** 5

**பரிமேலழகர்:** எப் பொருள் எத் தன்மைத்து ஆயினும் - யாதொரு பொருள் யாதோர்இயல்பிற்றாய்த் தோன்றினும், அப் பொருள் மெய் பொருள் காண்பது அறிவு - அத்தோன்றியவாற்றைக் கண்டொழியாது அப்பொருளின் கண் நின்று மெய்யாகிய பொருளைக் காண்பதே மெய் உணர்வாவது.

பொருள்தோறும் உலகத்தார் கற்பித்துக்கொண்டு வழங்குகின்ற கற்பனைகளைக் கழித்து, நின்ற உண்மையைக் காண்பது என்றவாறாயிற்று. அஃதாவது கோச்சேரமான் யானைக்கட் சேஎய் மாந்தரஞ் சேரல் இரும்பொறை என்றவழி, அரசன் என்பதோர் சாதியும், சேரமான் என்பதொரு குடியும், வேழ நோக்கினை உடையான் என்பதோர் வடிவும், சேய் என்பதோர் இயற்பெயரும், மாந்தரஞ் சேர லிரும்பொறை என்பதோர் சிறப்புப் பெயரும் ஒரு பொருளின் கற்பனையாகலின், அவ்வாறு உணராது நிலமுதல் உயிரீறாகிய தத்துவங்களின் தொகுதி என உணர்ந்து, அவற்றை நிலம்முதலாகத் தத்தம் காரணங்களுள் ஒடுக்கிக்கொண்டு சென்றால் காரண காரியங்கள் இரண்டும் இன்றி முடிவாய் நிற்பதனை உணர்தலாம். எப்பொருள் என்ற பொதுமையான் இயங்குதிணையும் நிலைத்திணையுமாகிய பொருள்களெல்லாம் இவ்வாறே உணரப்படும்.

இதனன் மெய்உணர்வினது இலக்கணம் கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** மெய் என்பதூஉம் அறிவு என்பதூஉம் ஒன்று: என்னை? எக்காலத்தும் எவ்விடத்தும் ஒரு தன்மையாக அழியாது நிற்றலின் மெய்யாயிற்று; எல்லாப் பொருளையும் காண்டலால், அறிவாயிற்று.

**பரிதியார்:** எப்பொருள் எது சொன்னாலும் அந்தப் பொருளை உபதேசமாகக் காண்பது அறிவு.

**காளிங்கர்:** உலகத்து யாதானும் ஒரு பொருள் உண்மை நிகழாது வேறுபாடு உடையதாயினும் அப் பொருளை மெய்யென்று கருதாது மற்று அப் பொருளை உண்மைப் பொருளாகக் காண வல்லது யாது? மற்று அதுவே ஒருவர்க்கு அறிவானது.

**கவிராஜ பண்டிதர்:** சீவாதி பொருள்கள் பல விதமாக இருந்தாலும், அவற்றுள் சுத்தாத்ம ஸ்வரூபமும் கேவலக்ஞானமுமே உபாதேயமாகையால், ஞானதரிசன சாரித்திரத்தால் அடையும் மோக்ஷத்தை இச்சிப்பது மெய்யறிவாகும். *(355)*

### 356

**கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்**
**மற்றீண்டு வாரா நெறி.** 6

**பரிமேலழகர்:** ஈண்டு கற்று மெய் பொருள் கண்டார் - இம் மக்கட் பிறப்பின்கண்ணே உபதேச மொழிகளை அநுபவமுடைய தேசிகர்பால் கேட்டு அதனன் மெய்ப்பொருளை உணர்ந்தவர், மற்று ஈண்டு வாரா நெறி தலைப் படுவர் - மீண்டு இப் பிறப்பின்கண் வாராத நெறியை எய்துவர்.

கற்று என்றதனல் பலர்பக்கலினும் பலகாலும் பயிறலும், ஈண்டு என்றதனல் வீடு பேற்றிற்குரிய மக்கட் பிறப்பினது பெறுதற்கு அருமையும் பெற்றும். ஈண்டு வாரா நெறி - வீட்டுநெறி. வீட்டிற்கு நிமித்த காரணமாய முதற் பொருளை உணர்தற்கு உபாயம் மூன்று; அவை கேள்வி, விமரிசம், பாவனை என்பன. அவற்றுள் கேள்வி இதனல் கூறப்பட்டது.

#### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** கல்வியறிவால் அறிவை அறியப் பிறப்பறும் என்றது.

**பரிதியார்:** ஞான சாஸ்திரமே கற்று ஈண்டு உண்மை தெரிசித்து நிலைமையிலே நின்ருர், பிறவா நெறி பெறுவர்.

#### ஒப்புமை

*1. ஈண்டு வாராமை:*

"மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே." (திருவா. சிவ. 87.)

2. *முற்றும்:*

"அறிவிற் கறிவாவ தென்னின் மறுபிறப்பு
மற்றீண்டு வாரா நெறி" (அறநெறி. 125.)

"யாவரும் எவையுமாய் இருதுவும் பயனுமாய்ப்
பூவுநல் வெறியுமொத் தொருவரும் பொதுமையாய்
ஆவனீ யாவதென் றறிவினர் அருளினர்
தாவரும் பதமெனக் கருமையோ தனிமையோ."

"ஊன முற்றிடை மண்ணின் உதித்தவர்
ஞானம் முற்றுபு நண்ணினர் வீடென."

(கம்ப. வாலி. 124, பொழில் இறுத்த. 23.) *(356)*

### 357

**ஓர்த்துள்ளம் உள்ள துணரின் ஒருதலையாப்**
**பேர்த்துள்ள வேண்டா பிறப்பு.** 7

**பரிமேலழகர்:** உள்ளம் ஒருதலையா ஓர்த்து உள்ளது உணரின் - அங்ஙனம் கேட்ட உபதேச மொழிப்பொருளை ஒருவன் உள்ளம் அளவைகளானும்

பொருந்துமாற்றானும் தெளிய ஆராய்ந்து அதனன் முதற்பொருளை உணருமாயின், பேர்த்து பிறப்பு உள்ள வேண்டா - அவனுக்கு மாறிப் பிறப்பு உளதாக நினைக்க வேண்டா.

ஒருதலையா ஓர்த்து என இயையும். அளவைகளும் பொருந்துமாறும் மேலே உரைத்தாம்.[1]

இதனால் விமரிசம் கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**பரிதியார்:** அறிவின் வெள்ளத்தைத் திருவடியிலே செலுத்துமாகில் அவனுக்குப் பிறப்பு இல்லை.

### ஒப்புமை

**முற்றும்:**

"இருவினையும் இடைவிடா எவ்வினையும் இயற்றாதே
இமையோரேத்தும்
திருவினையும் இடுபதந்தேர் சிறுமையையு முறையொப்பத்
தெளிந்து நோக்கிக்
கருவினைய திப்பிறவிக் கென்றுணர்ந்தங் கதுகளையும்
கடையின் ஞானத்
தருவினையின் பெரும்பகைஞர் ஆண்டுளர்ஈண் டிருந்துமடி
வணங்கற் பாலார்." (கம்ப. நாடவிட்ட. 27.) (357)

## 358

**பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்**
**செம்பொருள் காண்ப தறிவு.** 8

**பரிமேலழகர்:** பிறப்பு என்னும் பேதைமை நீங்க - பிறப்பிற்கு முதற் காரணமாய அவிச்சை கெட, சிறப்பு என்னும் செம்பொருள் காண்பது அறிவு - வீட்டிற்கு நிமித்த காரணமாய செவ்விய பொருளைக் காண்பதே ஒருவர்க்கு மெய் உணர்வாவது.

பிறப்பென்னும் பேதைமை எனவும், சிறப்பு என்னும் செம்பொருள் எனவும் காரியத்தைக் காரணமாக உபசரித்தார். ஐவகைக் குற்றங்களுள்[2] அவிச்சை ஏனைய நான்கிற்கும் காரணமாதல் உடைமையின், அச்சிறப்புப் பற்றி அதனையே பிறப்பிற்குக் காரணமாக்கிக் கூறினர். எல்லாப் பொருளினும் சிறந்தது ஆகலால், வீடு சிறப்பு எனப்பட்டது. தோற்றக் கேடுகள் இன்மையின் நித்தமாய், நோன்மையால் தன்னை ஒன்றுங் கலத்தல் இன்மையின் தூய்தாய், தான் எல்லாவற்றையும் கலந்து நிற்கின்ற முதற்பொருள் விகாரமின்றி எஞ்ஞான்றும் ஒருதன்மைத்தாதல்பற்றி, அதனைச் செம்பொருள் என்றார். மேல் மெய்ப்பொருள் எனவும் உள்ளது எனவும் கூறியதூஉம் இதுபற்றி யென உணர்க. அதனைக் காண்கையாவது உயிர் தன் அவிச்சை கெட்டு அதனோடு ஒற்றுமையுற இடைவிடாது பாவித்தல். இதனைச் சமாதி எனவும் சுக்கிலத்தியானம் எனவும் கூறுப. உயிர் உடம்பின் நீங்குங் காலத்து அதனால் யாதொன்று பாவிக்கப்பட்டது, அஃது அதுவாய்த் தோன்றும் என்பது எல்லா ஆகமங்கட்கும் துணிபு ஆகலின், வீடெய்துவார்க்கு அக் காலத்துப் பிறப்பிற்கு ஏதுவாய பாவனை கெடுதற்பொருட்டுக் கேவலப் பொருளையே பாவித்தல் வேண்டுதலான் அதனை முன்னே பயிறலாய இதனின் மிக்க உபாயம் இல்லை என்பது அறிக.

இதனால் பாவனை கூறப்பட்டது.

---

1. 242, உரை பார்க்க.
2. 360, உரை பார்க்க.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** பிறப்பாகிய அறியாமையினின்று நீங்கப் பிறவாமை யாகிய செவ்விய பொருளைக் காண்பது அறிவாம்.

பிறவாமை சிறந்ததாதலின், சிறப்பு என்னப்பட்டது. தான் பிறந்தானாகவும் செத்தானாகவும் கருதுகின்ற அறியாமையை விட்டுத் தனக்குச் சாவு இல்லையாகவும் பிறப்பு இல்லையாகவும் தான் நிற்கின்ற நிலைமையைக் காண வேண்டும் என்றவாறாயிற்று.

**பரிதியார்:** செனன மரண பேதைமை போம்படிக்கு ஞானம் என்னும் சிறப்பைக் காண்பது இயல்பு.

**காளிங்கர்:** உலகத்து மக்களும் தேவரும் பிறவுமாகிய பிறப்பு என்பது ஒன்றுளது என்று கருதும் அறியாமை நீங்குமாறு உலகத்தோர் நல்லனவாகக் கருதி வருகின்ற யாவையினும் தான் சிறந்தும் மற்றும் தன்னிற் சிறந்தும் பிறிதொன்று இன்மையான் அதுவே சிறப்பு உடையது என்று மறைநூல்களும் மற்றும் பிறவும் இவை முழுதும் உணர்ந்தவரும் முனிவர் உள்ளிட்டோரும் எடுத்துச் சொல்லுகின்ற மெய்ப்பொருளினை இப்படிக் காணவல்லது யாது மற்று அதுவே அறிவாவது.

### ஒப்புமை

1. **பிறப்பென்னும் பேதைமை:**

"பேதைமைத் தாய்வரும் பிறப்பை நீக்குவான்"
"துறத்தல் ஆற்றுறு ஞானமாக் கடுங்கணை தொடர
அறத்த லாதுசெல் லாதுநல் லறிவுவந் தணுகப்
பிறத்த லாற்றுறும் பேதைமை பிணிப்புறத் தம்மை
மறத்த லாற்றந்த மாயையின் மாய்ந்ததம் மாயம்."

(*கம்ப.* மந்திரப். 31, இராவணன் வதை. 124.)

2. **முற்றும்:**

"அருஞ்சிறப் பமைவரும் துறவும் அவ்வழி
தெரிஞ்சுற வெனவரும் தெளிவு மாய்வரும்
பெருஞ்சிறை யுளவெனிற் பிறவி யென்னுமிவ்
விருஞ்சிறை கடத்தலின் இனிய தியாவதே."

(*கம்ப.* மந்திரப். 22.) (358)

## 359

**சார்புணர்ந்து சார்பு கெடஒழுகின் மற்றழித்துச்**
**சார்தரா சார்தரும் நோய்.** 9

**பரிமேலழகர்:** சார்பு உணர்ந்து சார்பு கெட ஒழுகின் - ஒருவன் எல்லாப் பொருட்கும் சார்பாய அச் செம்பொருளை உணர்ந்து இருவகைப் பற்றும் அற ஒழுகவல்லனாயின், சார்தரும் நோய் அழித்து மற்று சார்தரா - அவனை முன் சாரக் கடவனவாய் நின்ற துன்பங்கள் அவ்வுணர்வு ஒழுக்கங்களை அழித்துப் பின் சாரமாட்டா.

ஆகுபெயரால் சாரும் இடத்தையும் சார்வனவற்றையும் சார்பு என்றார். ஈண்டு ஒழுக்கம் என்றது யோகநெறி ஒழுகுதலை. அஃது இயமம், நியமம், இருப்பு, உயிர் நிலை, மனவொருக்கம், தாரணை, தியானம், சமாதி என எண் வகைப்படும். அவற்றின் பரப்பெல்லாம் ஈண்டுரைப்பின் பெருகும்; யோக நூல்களுள் காண்க. மற்றுச் சார்தரா என இயையும். சாரக் கடவனவாய் நின்ற துன்பங்களாவன, பிறப்பு அநாதியாய் வருதலின் உயிரான் அளவின்றி ஈட்டப்பட்ட வினைகளின் பயன்களுள் இறந்த உடம்புகளான் அநுபவித்தனவும்

பிறந்தஉடம்பான் முகந்து நின்றனவும் ஒழியப் பின்னும் அநுபவிக்கக் கடவன வாய்க் கிடந்தன.[1] அவை விளக்கின்முன் இருள்போல் ஞானயோகங்களின் முன்னர்க் கெடுதலான், அழித்துச் சார்தரா என்றார். இதனை ஆருகதர் உவர்ப்பு என்ப. பிறப்பிற்குக் காரணம் ஆகலான், நல்வினைப் பயனும் நோயெனப்பட்டது

மேல் மூன்று உபாயத்தானும் பரம்பொருளை உணரப் பிறப்பு அறும் என்றார்; அஃதுஅறும்வழிக் கிடந்த துன்பங்களெல்லாம் என் செய்யும் என்னும் கடாவை ஆசங்கித்து, அவை ஞானயோகங்களின் முதிர்ச்சியுடைய உயிரைச் சாரமாட்டாமையானும் வேறு சார்பு இன்மையானும் கெட்டுவிடும் என்பது இதனால் கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** தன்னைச் சார்வனவற்றை அறிந்து அவையிற்றின் சார்வுகெட ஒழுகுவனாயின், அவ் வொழுக்கத்தினை அழித்துச் சார்தலைச் செய்யா, சாரக் கடவனவாய துன்பங்கள்.

சார்பு - வினைச்சார்பு. கெட ஒழுகல் - காமம் வெகுளி மயக்கமின்றி மெய்யுணர்ச்சியான் ஒழுகுதல். இஃது உண்மையைக் கண்டு அக்காட்சி யைத் தப்பாமல் முடிய நிற்பனாயின், சாரக் கடவதாய் நிற்கின்ற வினை சாராதே விட்டுப் போம் என்றது.

**கவிராஜ பண்டிதர்:** சார்பு உணர்ந்து - ஒருவன் எல்லாப் பொருளுக் கும் முதலாய் இருக்கப்பட்ட தரும நெறிகளை அறிந்து.

### ஒப்புமை

1. **சார்புணர்ந்து சார்பு கெடல்:**

"இறைவற் பேணிச் சார்பறுத் துய்தி" (சீவக. 1221.)
"பிணியறியார்...சாய்க்காட் டெந்தலைவன் தாள்சேர்ந் தாரே."
"நக்க னார்அவர் சார்வலால் நல்கு சார்விலோம் நாங்களே"
"உமைச் சார்பவர் வசையறுமது வழிபாடே."
(**சம்பந்தர்.** சாய்க்காடு, 1, அறையணிநல்லூர், 8, சிறுகுடி, 8.)
"தரியேன் இனியுன் சரணந் தந்தென் சன்மம் களையாயே."
"மாறிமாறிப் பலபிறப்பும் பிறந் தடியையடைந்துள்ளந் தேறி
ஈறில் இன்பத் திருவெள்ளம் யான் மூழ்கினன்."
(**திருவாய்.** 5. 8: 7, 2. 6: 8.)

2. **முற்றும்:**

"சார்புணர்ந்து சார்பு கெடஒழுகின் என்றமையால்
சார்புணர்வு தானே தியானமுமாம்—சார்பு
கெடஒழுகின் நல்ல சமாதியுமாம் சேதப்
படவருவ தில்லைவினைப் பற்று." (**திருக்களிற்றுப்.** 34.) (359)

## 360

**காமம் வெகுளி மயக்கம் இவைமூன்றன்**
**நாமம் கெடக்கெடும் நோய்.** 10

**பரிமேலழகர்:** காமம் வெகுளி மயக்கம் இவை மூன்றன் நாமம் கெட - ஞானயோகங்களின் முதிர்ச்சி உடையார்க்கு விழைவு வெறுப்பு அவிச்சை

1. இவை சஞ்சிதம், ஆகாமியம் என்பன.

என்னும் இக் குற்றங்கள் மூன்றனுடைய பெயரும் கூடக்கெடுதலான், நோய் கெடும் - அவற்றின் காரியமாய வினைப்பயன்கள் உளவாகா.

அநாதியாய அவிச்சையும், அதுபற்றி யான் என மதிக்கும் அகங்காரமும், அதுபற்றி எனக்கு இது வேண்டும் என்னும் அவாவும், அதுபற்றி அப்பொருட்கண் செல்லும் ஆசையும், அதுபற்றி அதன் மறுதலைக்கண் செல்லும் கோபமும் என வடநூலார் குற்றம் ஐந்து என்றார். இவர் அவற்றுள் அகங்காரம் அவிச்சைக் கண்ணும், அவாவுதல் ஆசைக்கண்ணும் அடங்குதலான் மூன்று என்றார். இடையறுத ஞான யோகங்களின் முன்னர் இக் குற்றங்கள் மூன்றும் காட்டுத்தீ முன்னர்ப் பஞ்சுத்துய் போலும் ஆகலின், அம் மிகுதி தோன்ற இவை மூன்றன் நாமம் கெட என்றார். இழிவு சிறப்பும்மை[1] விகாரத்தால் தொக்கது. கெட என்பது எச்சத் திரிபு. நோய் என்பது சாதி யொருமை.

காரணமாய அக் குற்றங்களைக் கெடுத்தார் காரியமாகிய இருவினைகளைச் செய்யாமையின், அவர்க்கு வரக்கடவ துன்பங்களும் இல்லை என்பது இதனால் கூறப்பட்டது. முன் கிடந்த துன்பங்களும் மேல் வரக்கடவ துன்பங்களும் இலவாதல் மெய்யுணர்வின் பயனாகலின், இவை இரண்டு பாட்டும் இவ்வதிகாரத்த வாயின. இவ்வாற்றானே மெய்யுணர்ந்தார்க்கு நிற்பன எடுத்த உடம்பும், அதுகொண்ட வினைப்பயன்களுமே[2] என்பது பெற்றாம்.

### உரை வேறுபாடு

**பரிதியார்:** மயக்கம் - அஞ்ஞானம். நோய் - செனனம்.

**காளிங்கர்:** மயக்கம் - மோகம். நோய் - பிறப்பு என்னும் அனைத்து நோய்.

**கவிராஜ பண்டிதர்:** கெடும் நோய் - அந்தக் குற்றங்களாலே வரும் வாதை அவனுக்கு உண்டாகாது.

### ஒப்புமை

1. **காமம் வெகுளி:**

"தருவனத்துள் யானியற்றும் தவவேள்விக் கிடையூறாத்
தவஞ்செய் வோர்கள்
வெருவரச்சென் றடைகாம வெகுளியென."

(**கம்ப.** கையடைப். 10.)

2. **காமம் வெகுளி மயக்கம் இவை கெடுதல்:**

"யாம்மேல் உரைத்த பொருள்கட் கெல்லாம்
காமம் வெகுளி மயக்கம் காரணம்
அநித்தம் துக்கம் அநான்மா அசுசியெனத்
தனித்துப் பார்த்துப் பற்றறுத் திடுதல்
மைத்திரி கருணு முதிதையென் றறிந்து
திருந்துநல் லுணர்வால் செற்றமற் றிடுக
சுருதி சிந்தனு பாவனு தரிசனை
கருதி யுய்த்து மயக்கம் கடிக."

(**மணி.** 30: 252-9.)

"காமம் வெகுளி மயக்கம் இவைகடிந்
தேமம் பிடித்திருந் தேனுக்கு."

(**திருமந்.** 2436.)

"காமமும் வெகுளியும் களிப்பும் கைத்தெழு, கோமுனி."
"காமம் முதலா, முக்குறும்பற வெறிந்த வினை."

(**கம்ப.** திருஅவதாரப். 48, விராதன். 3.)

---

1. நாமமும் என்னும் உம்மை.
2. இவை பிராரத்தம் எனப்படும்.

3. **முற்றும்:**

"முக்குற்றம் நீக்கி முடியும் அளவெல்லாம்
துக்கத்துள் நீக்கி விடும்" (நாலடி. 190.)

"ஐந்தொ டாகிய முப்பகை மருங்கற வகற்றி
உய்ந்து போயினர்"

"கொடுநாலொ டிரண்டு குலப்பகை குற்ற மூன்றும்
சுடுஞானம் வெளிப்பட வுய்த்த துயக்கி லார்போல்."
(கம்ப. மந்திரப். 64, கடல்தாவு. 51.) *(360)*

---

# 37. அவா அறுத்தல்

**பரிமேலழகர்:** அஃதாவது முன்னும் பின்னும் வினைத் தொடர்பு அறுத்தார்க்கு நடுவு நின்ற உடம்பும், அது கொண்ட வினைப்பயன்களும் நின்ற மையின், வேதனைபற்றி ஒரோவழித் துறக்கப்பட்ட புலன்கள்மேற் பழைய பயிற்சி வயத்தான் நினைவு செல்லுமன்றே, அந் நினைவும் அவிச்சை எனப் பிறவிக்கும் வித்தாம் ஆகலின், அதனை இடைவிடாது மெய்ப்பொருள் உணர்வான் அறுத்தல்; அதிகார முறைமையும் இதனானே விளங்கும்,

### 361

**அவாஎன்ப எல்லா உயிர்க்கும்எஞ் ஞான்றும்
தவாஅப் பிறப்பீனும் வித்து.** 1

**பரிமேலழகர்:** எல்லாஉயிர்க்கும் எஞ்ஞான்றும் தவாஅ பிறப்பு ஈனும் வித்து - எல்லா உயிர்கட்கும் எக்காலத்தும் கெடாது வருகின்ற பிறப்பினை விளைவிக்கும் வித்து, அவா என்ப - அவா என்று சொல்லுவர் நூலோர்,

உடம்பு நீங்கிப் போம் காலத்து அடுத்த வினையும், அது காட்டும் கதி நிமித்தங்களும், அக்கதிக்கண் அவாவும் உயிரின்கண் முறையே வந்து உதிப்ப, அறிவை மோகம் மறைப்ப, அவ் வுயிரை அவ்வவா அக் கதிக்கண் கொண்டு செல்லுமாகலான், அதனைப் பிறப்பு ஈனும் வித்து என்றும், கதிவயத்தான் உளதாய அவ் வுயிர் வேறுபாட்டினும் அவை தன்மை திரியும் உற்சர்ப்பிணி அவசர்ப்பிணி[1] என்னும் காலவேறுபாட்டினும் அது வித்தாதல் வேறுபடாமை யின் எல்லா உயிர்க்கும் எஞ்ஞான்றும் என்றும், இஃது எல்லாச் சமயங்கட்கும் ஒத்தலான் என்ப என்றும் கூறினர்.

இதனால் பிறப்பிற்கு அவா வித்தாதல் கூறப்பட்டது.

#### உரை வேறுபாடு

**காளிங்கர்:** இவ்வுலகத்து நல்வினைப் பயன்களை அவாவிச் செய்யும் இடத்து நல்லனவும் மற்று இது ஒழிந்த கொலை களவு கள் காமம் குறளை பொய் வஞ்சனை முதலிய தீயனவுமாய் இங்கனம் வருகின்ற எல்லா உயிர்க் கும் எக்காலமும் பிறிது ஒன்றினாலும் கேடு இல்லாத பிறவியை ஈனும் அவா வாகிய வித்து எனவே, இதனைக் கருதற்குக் காரணம் மற்று இது ஒன்றுமே பிறிது இல்லை என்றவாறு. *(361)*

### 362

**வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது
வேண்டாமை வேண்ட வரும்.** 2

---

1. வாழ்நாளும் இன்பமும் வளரும் காலம் உற்சர்ப்பிணி என்றும், அவை குறையும் காலம் அவசர்ப்பிணி என்றும் கூறப்படும்.

**பரிமேலழகர்:** வேண்டும் கால் பிறவாமை வேண்டும்-பிறப்புத் துன்ப மாதல் அறிந்தவன் ஒன்றை வேண்டின் பிறவாமை வேண்டும்; அது வேண்டாமை வேண்ட வரும் - அப் பிறவாமை தான் ஒரு பொருளையும் அவா வாமையை வேண்ட அவனுக்குத் தானே உண்டாம்.

அநாதியாகத் தான் பிறப்புப் பிணி மூப்பு இறப்புக்களால் துன்ப முற்று வருகின்றமையை உணர்ந்தவனுக்கு ஆசை இன்பத்தின்கண்ணேயாக லின் பிறவாமையே வேண்டும் என்றும், ஈண்டைச் சிற்றின்பம் கருதி ஒரு பொருளை அவாவின் அது பிறப்பு ஈனும் வித்தாய்ப் பின்னும் முடிவு இல்லாத துன்பமே விளைத்தலின் அது வேண்டாமை வேண்ட வரும் என்று கூறினர். பிறவாமையின் சிறப்புக் கூறிப் பின் அது வரும்வழி கூறத் தொடங்குகின்ற மையின், மற்று வினைமாற்றின்கண் வந்தது.

### ஒப்புமை

**பிறவாமையை வேண்டுதல்:**

"கேட்பதெல்லாம் பிறவாமை கேட்டொழிந்தேன்"
"எங்கோனே உனைவேண்டிக் கொள்வேன் பிறவாமையே"
(சுந்தரர். கச்சித்திருமேற்றளி, 2, அவிநாசி, 3.)

"இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டு கின்றார்
பிறவாமை வேண்டும்.........என்றார்" (பெரிய. காரைக்கால். 60.)

"வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை என்றமையால்
வேண்டின்அஃ தொன்றுமே வேண்டுவது—வேண்டினது
வேண்டாமை வேண்டவரும் என்றமையால் வேண்டிடுக
வேண்டாமை வேண்டும்அவன் பால்." (திருக்களிற்றுப். 40.)

(362)

## 363

**வேண்டாமை அன்ன விழுச்செல்வம் ஈண்டில்லை**
**ஆண்டும் அஃதொப்ப தில்.** 3

**பரிமேலழகர்:** வேண்டாமை அன்ன விழு செல்வம் ஈண்டு இல்லை - ஒரு பொருளையும் அவாவாமையை ஒக்கும் விழுமிய செல்வம் காணப்படுகின்ற இவ்வுலகின்கண் இல்லை; ஆண்டும் அஃது ஒப்பது இல் - இனி அவ்வளவே அன்று; கேட்கப்படுகின்ற துறக்கத்தின்கண்ணும் அதனை ஒப்பது இல்லை.

மக்கள் செல்வமும் தேவர் செல்வமும் மேன்மேல் நோக்கக் கீழாத லுடைமையின், தனக்கு மேல் இல்லாத வேண்டாமையை விழுச்செல்வம் என்றும், அதற்கு இரண்டு உலகினும் ஒப்பது இல்லை என்றும் கூறினர். ஆகம அளவைபோலாது காட்சி அளவை எல்லாரானும் தெளியப்படுதலின், மக்கள் செல்வம் வகுத்து முற்கூறப்பட்டது.

பிறவாமைக்கு வழியாம் எனவும் விழுச்செல்வமாம் எனவும் வேண்டா மையின் சிறப்பு இவ்விரண்டு பாட்டானும் கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**காளிங்கர்:** அவா என்னப்பட்ட யாதொன்றினையும் விரும்பாமை யாகிய இதனை ஒப்பதோர் விழுமிய செல்வம் இவ்விடத்து இல்லை; அது வேயும் அன்றி மற்றும் எவ்விடத்தும்[1] அதனை ஒப்பது ஒன்றும் இல்லை,

1. 'யாண்டும்' என்று பாடம் கொண்டார்.

ஒப்புமை

வேண்டாமை செல்வமாதல்:

"கேடும் ஆக்கமும் கெட்ட திருவினர்

................................

வீடும் வேண்டா விறலின் விளங்கினர்." (பெரிய. திருக்கூட்டச். 8.)

(363)

## 364

தூஉய்மை என்ப தவாவின்மை மற்றது
வாஅய்மை வேண்ட வரும். 4

**பரிமேலழகர்:** தூஉய்மை என்பது அவா இன்மை - ஒருவர்க்கு வீடு என்று சொல்லப்படுவது அவா இல்லாமை; அது வாஅய்மை வேண்ட வரும்- அவ்வவா இல்லாமைதான் மெய்ம்மையை வேண்டத் தானே உண்டாம்.

வீடாவது உயிர் அவிச்சை முதலிய மாசு நீங்குதலாகலின் அதனைத் தூய்மை என்றும், காரணத்தைக் காரியமாக உபசரித்துத் தூய்மை என்பது அவாவின்மை என்றும், மெய்ம்மையுடைய பரத்தை ஆகுபெயரான் மெய்ம்மை என்றும் கூறினர். மற்று: மேலையதுபோல வினைமாற்றின்கண் வந்தது. வேண்டுதல் - இடைவிடாது பாவித்தல்.

அவா அறுத்தல் வீட்டிற்குப் பரம்பரையான் அன்றி நேரே ஏது என்பதூஉம் அது வரும்வழியும் இதனுல் கூறப்பட்டன.

உரை வேறுபாடு

**மணக்குடவர்:** தூஉய்மை - அழுக்கறுத்தல்.

**பரிதியார்:** உபதேசமுறுவதில் பெறுவது ஆசையை விடுதல்; உபதேசம் உண்மையாகில் ஆசை வேண்டினது தரும்.

**காளிங்கர்:** தூஉய்மை - மனத்தூய்மை.

**கவிராஜ பண்டிதர்:** மற்றது வாஅய்மை வேண்ட வரும்-அந்த மோக்ஷம் வேண்டிச் சத்தியமாய் நடந்தால் தானே வரும். (364)

## 365

அற்றவர் என்பார் அவாஅற்ருர் மற்றையார்
அற்ருக அற்ற திலர். 5

**பரிமேலழகர்:** அற்றவர் என்பார் அவா அற்ருர் - பிறவி அற்றவர் என்று சொல்லப்படுவார் அதற்கு நேரே ஏதுவாகிய அவா அற்றவர்கள்; மற்றையார் அற்ருக அற்றது இலர்- பிற ஏதுக்கள் அற்று அஃது ஒன்றும் அருதவர்கள், அவற்ருல் சில துன்பங்கள் அற்றதல்லது அவர்போல் பிறவி அற்றிலர்.

இதனுல் அவா அறுத்தாரது சிறப்பு விதிமுகத்தானும் எதிர்மறை முகத்தானும் கூறப்பட்டது.

உரை வேறுபாடு

**மணக்குடவர்:** அற்றவர் - பற்றற்றவர் என்பார்.

**காளிங்கர்:** மற்று ஈண்டுள்ள பொருள் மாடு பெண்டிர் புதல்வர் சுற்றம் நட்டோர் முதலாகிய அனைத்தினும் உள்ள அவா அற்றனர் என்று சான்ருேரால் சொல்லப்படுவார் யாரோ எனில் மற்று எப்பற்றும் காரணமாகிய அவாவினை அற்றவரே ஆசை அற்றவராவார்; மற்றையார் துறவு மேற்கொண்டு அவா அருதார்.

**கவிராஜ பண்டிதர்:** மற்றையார் - ஆசையை விடாமல் மனைவாழ்க்கை முதலானவைகளைத் துறக்காத பேர். (365)

## 366

**அஞ்சுவ தோரும் அறனே ஒருவனை
வஞ்சிப்ப தோரும் அவா.** 6

**பரிமேலழகர்:** ஒருவனை வஞ்சிப்பது அவா - மெய்யுணர்தல் ஈறுகிய காரணங்களெல்லாம் எய்தி அவற்றான் வீடு எய்தற்பாலனாய ஒருவனை மறவி வழியால் புகுந்து பின்னும் பிறப்பின்கண்ணே வீழ்த்துக் கெடுக்கவல்லது அவா; அஞ்சுவதே அறன் - ஆதலான் அவ்வவாவை அஞ்சிக் காப்பதே துறவறமாவது.

ஓரும் என்பன அசைநிலை. அநாதியாய்ப் போந்த அவா, ஓரோவழி வாய்மை வேண்டலை ஒழிந்து பராக்கால் காவானாயின், அஃது இடமாக அவன் அறியாமல் புகுந்து பழைய இயற்கையாய் நின்று பிறப்பினை உண்டாக்குதலான், அதனை வஞ்சிப்பது என்றார். காத்தலாவது வாய்மை வேண்டலை இடைவிடாது பயின்று அது செய்யாமல் பரிகரித்தல்.

இதனான் அவாவின் குற்றமும் அதனைக் காப்பதே அறம் என்பதூஉம் கூறப்பட்டன.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** ஒருவனை வஞ்சனை செய்வது ஆசை; ஆதலால் அதனை அஞ்சுவதே அறம். வஞ்சனை செய்தல், நன்றி செய்வாரைப் போல முன்னே நின்று பின்னே தீக்கதியுள் உய்த்தல்.

**பரிதியார்:** ஆசையை நினைத்தபோது பயப்படும் அறிவுடைமை. ஒருவர்க்குக் கொடுக்கின்றபோது வஞ்சனை செய்யும் ஆசை.

**கவிராஜ பண்டிதர்:** ஒருவனை வஞ்சிப்பது அவா - அந்த ஆசை சகல தரும விரதங்களையும் பண்ணினாலும், ஆசையுடையவனா யிருக்கிறவன் பிறவித் துன்பங்களிலே அழுந்துவான். (366)

## 367

**அவாவினை ஆற்ற அறுப்பின் தவாவினை
தான்வேண்டும் ஆற்றான் வரும்.** 7

**பரிமேலழகர்:** அவாவினை ஆற்ற அறுப்பின் – ஒருவன் அவாவினை அஞ்சித் துவரக் கெடுக்க வல்லனாயின், தவா வினை தான் வேண்டும் ஆற்றான் வரும் - அவனுக்குக் கெடாமைக்கு ஏதுவாகிய வினை தான் விரும்பும் நெறியானே உண்டாம்.

கெடாமை, பிறவித் துன்பங்களான் அழியாமை. அதற்கு ஏதுவாகிய வினை என்றது, மேற்சொல்லிய துறவறங்களை. வினை: சாதியொருமை. தான் விரும்பும் நெறி, மெய்வருந்தா நெறி. அவாவினை முற்ற அறுத்தானுக்கு வேறு அறம் செய்ய வேண்டா, செய்தன எல்லாம் அறமாம் என்பது கருத்து.

இதனான் அவாவறுத்தற் சிறப்புக் கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**பரிதியார்:** ஆத்மாவுக்கு வினையான ஆசையை விடுப்பானாகில் தவமான காரியம் தான் நினைத்தபடியே வரும்.

காளிங்கர்: அவாவினை ஒன்றின்கண் வளராது, ஒன்றின்கண் தவிராது, மற்று அவையும் இங்குச் செய்தவினை இறுதிக்கண் கெடும் என்பது கருதி மற்று அதனால் கேடில்லாத தேர்ச்சியாகிய தெளிவுணர்வானது பின்பு ஒரு வருத்தம் இன்றித் தான் நினைத்தாங்கே வந்தெய்தும்.

ஆற்ற என்பது மிகவும்; தவா வினை என்பது கெடாத விசாரம்.

கவிராஜ பண்டிதர்: தவாவினை - ஒரு காலத்திலும் அழியாத வினையாகிய மோக்ஷம். (367)

## 368

அவாஇல்லார்க் கில்லாகும் துன்பம்அஃ துண்டேல்
தவாஅது மேன்மேல் வரும். 8

பரிமேலழகர்: அவா இல்லார்க்கு துன்பம் இல் ஆகும் - அவா இல்லாதார்க்கு வரக்கடவதொரு துன்பமும் இல்லை; அஃது உண்டேல் தவாது மேல் மேல் வரும் - ஒருவற்குப் பிற காரணங்களெல்லாம் இன்றி அஃது ஒன்றும் உண்டாயின், அதனானே எல்லாத் துன்பங்களும் முடிவின்றி இடைவிடாமல் வரும்.

உடம்பு முகந்துநின்ற துன்பம் முன்பே செய்து கொண்டதாகலின் ஈண்டுத் துன்பம் என்றது இதுபொழுது அவாவால் செய்துகொள்வனவற்றை. தவாது மேன்மேல் வரும் என்றதனான், மூவகைத் துன்பங்களும்[1] என்பது பெற்றாம்.

இதனான் அவாவே துன்பத்திற்குக் காரணம் என்பது கூறப்பட்டது. (368)

## 369

இன்பம் இடையறா தீண்டும் அவாஎன்னும்
துன்பத்துள் துன்பம் கெடின். 9

பரிமேலழகர்: அவா என்னும் துன்பத்துள் துன்பம் கெடின் - அவா என்று சொல்லப்படுகின்ற மிக்க துன்பம் ஒருவற்குக் கெடுமாயின், ஈண்டும் இன்பம் இடையறாது - அவன் வீடு பெற்ற வழியேயன்றி உடம்போடு நின்ற வழியும் இன்பம் இடையறாது.

துன்பத்துள் துன்பம் - ஏனைத் துன்பங்களெல்லாம் இன்பமாக வரும் துன்பம். வினைவின்கண்ணேயன்றித் தோற்றத்தின்கண்ணும் துன்பம் ஆகலின், இவ்வாறு கூறப்பட்டது. காரணத்தைக் காரியமாக உபசரித்து அவா என்னும் துன்பத்துள் துன்பம் என்றும், அது கெட்டார்க்கு மனம் தடுமாறாது நிரம்பி நிற்றலான் ஈண்டும் இன்பம் இடையறாது என்றும் கூறினார். இனி ஈண்டும் என்பதற்குப் பெருகும் என்று உரைப்பாரும் உளர்.

இதனால் அவா அறுத்தார் வீட்டின்பம் உடம்பொடு நின்றே எய்துவர்[2] என்பது கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

மணக்குடவர்: ஈண்டும் - மிகும்.

பரிதியார்: ஈண்டும் - உயரும்.

காளிங்கர்: இன்பம் - வீட்டின்பம்.

1. ஆதியாத்மிகம், ஆதிபௌதிகம், ஆதிதெய்விகம் என்பன.
2. இதனைச் சீவன் முக்திநிலை என்பர்.

**கவிராஜ பண்டிதர்:** இன்பம் இடையறுது ஈண்டும் - சுகம் குறைவு படாமல் எந்நாளும் உண்டாம்.

### ஒப்புமை

**துன்பத்துள் துன்பம்;**

"துன்பத்துள் துன்பம் உழப்பர் துறந்தெய்தும்
இன்பத் தியல்பறியா தார்." (அறநெறி. 133.) (369)

## 370

**ஆரா இயற்கை அவாநீப்பின் அந்நிலையே
பேரா இயற்கை தரும்.** 10

**பரிமேலழகர்:** ஆரா இயற்கை அவா நீப்பின் - ஒரு காலும் நிரம்பாத இயல்பினையுடைய அவாவினை ஒருவன் நீக்குமாயின், அந் நிலையே பேரா இயற்கை தரும் - அந் நீப்பு அவனுக்கு அப்பொழுதே எஞ்ஞான்றும் ஒரு நிலைமையனும் இயல்பைக் கொடுக்கும்.

நிரம்பாமையாவது, தாமேயன்றித் தம்பயனும் நிலையாமையின் வேண்டாதனவாய பொருள்களை வேண்டி மேன்மேல் வளர்தல். அவ் வளர்ச்சிக்கு அளவின்மையின், நீத்தலே தக்கதென்பதுகருத்து. களிப்புக் கவற்சிகளும், பிறப்புப் பிணி மூப்பு இறப்புக்களும் முதலாயின இன்றி உயிர் நிரதிசய இன்பத்ததாய் நிற்றலின், வீட்டினைப் பேரா இயற்கை என்றும், அஃது அவா நீத்தவழிப் பெறுதல் ஒருதலையாகலின் அந் நிலையே தரும் என்றும் கூறினார். "நன்றாய் ஞானம் கடந்துபோய் நல்லிந் திரியம் எல்லாம்ஈர்த், தொன்றாய்க் கிடந்த அரும் பெரும்பாழ் உலப்பில் அதனை உணர்ந்துணர்ந்து, சென்றாங் கின்ப துன்பங்கள் செற்றுக் களைந்து பசைஅற்றால், அன்றே அப்போ தேவீடும் அதுவே வீடு வீடாமே"[1] என்பதும் இக் கருத்தே பற்றி வந்தது. இந்நிலைமை உடையவனை வடநூலார் சீவன்முத்தன் என்ப.

இதனால் வீடாவது இது என்பதூஉம், அஃது அவா அறுத்தார்க்கு அப்பொழுதே உளதாம் என்பதூஉம் கூறப்பட்டன.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** பேரா இயற்கை - அழியாத இயல்பு.

**பரிதியார்:** அளவு காணப்படாத ஆசையை அளவு காண்பானாகிய அறிவு குலையாது இன்பமே வரும்.

**காளிங்கர்:** பேரா இயற்கை-இடைபெயராது ஒருபடிப்பட்ட முத்தியின் இயல்பு.

**கவிராஜ பண்டிதர்:** பேரா இயற்கை - ஒரு காலத்திலேயும் பிரியாத நிலையாய் எந்நாளும் சரியாய் இருக்கப்பட்ட பெரிய இன்பத்தை.

### ஒப்புமை

1. **ஆரா இயற்கை அவா:**

"வேட்கை விரும்பி நுகர்ச்சிஆ ராமை." (மணி. 30: 91.)

2. **பேரா இயற்கை:**

"சிறுகா லையிலா நிலையோ திரியா
குறுகா நெடுகா குணம்வே றுபடா
உறுகால் கிளர்பூ தமெலா முகினும்
மறுகா நெறியெய் துவென்வா னுடையாய்." (கம்ப. சரபங்கர். 20.)

(370)

---

1. திருவாய். 8. 8: 6.

# 38. ஊழ்

**பரிமேலழகர்:** அஃதாவது இருவினைப் பயன் செய்தவனையே சென்று அடைதற்கு ஏதுவாகிய நியதி. ஊழ், பால், முறை, உண்மை, தெய்வம், நியதி, விதி என்பன ஒரு பொருட் கிளவி. இது பொருள் இன்பங்கள் இரண்டற்கும் பொதுவாய் ஒன்றனுள் வைக்கப்படாமையானும், மேற்கூறிய அறத்தோடு இயைபுடைமையானும், அதனது இறுதிக்கண் வைக்கப்பட்டது.

**மணக்குடவர்:** ஊழாவது முன்பு செய்த வினை பின்பு விளையும்முறை. மேற்கூறிய அறப்பகுதியும் இனிக் கூறுகின்ற பொருட் பகுதியும் இன்பப் பகுதியும் முன் செய்த நல்வினையால் வருதலையும், இவற்றிற்கு மாறான பாவமும் வறுமையும் துன்பமும் தீவினையால் வருதலையும் அறியாதே அவை உலகத்தில் மக்கள் பலர் தமது முயற்சியால் வந்தன என்பரன்றே. அதற்காக இது கூறப்பட்டது. ஒருவன் செய்த வினை தனது பயனை வழுவின்றிப் பயத்தல் அறத்தின் ஆகுமாதலான் இஃது அறத்தின் இறுதிக்கண் கூறப்பட்டது.

### 371

ஆகூழால் தோன்றும் அசைவின்மை கைப்பொருள்
போகூழால் தோன்றும் மடி. 1

**பரிமேலழகர்:** கை பொருள் ஆகு ஊழால் அசைவு இன்மை தோன்றும்- ஒருவற்குக் கைப்பொருளாதற்குக் காரணமாகிய ஊழான் முயற்சி உண்டாகும்; போகு ஊழால் மடி தோன்றும் - அஃது அழிதற்குக் காரணமாகிய ஊழான் மடி உண்டாம்.

ஆகூழ் போகூழ் என்னும் வினைத்தொகைகள் எதிர்காலத்தான் விரிக்கப்பட்டுக் காரணப் பொருளவாய் நின்றன. அசைவு - மடி. பொருளின் ஆக்க அழிகட்குத் துணைக் காரணமாய முயற்சி மடிகளையும் தானே தோற்றுவிக்கும் என்பது கருத்து.

#### உரை வேறுபாடு

**பரிதியார்:** ஊழாவது, போன சென்மத்தில் செய்த நல்வினை தீவினை என்க. அது இரண்டு வகைப்படும். அவையாவன ஆகிற ஊழ் என்றும், அழிக்கிற ஊழ் என்றும் கொள்க. ஆகிற ஊழ் புத்தியைத் தரும்; அழிக்கிற ஊழ் சோம்பினைக் கொடுக்கும். ஆகையால் ஆகிற ஊழைக் கொள்க.

**கவிராஜ பண்டிதர்:** ஆகூழ் - முன் செய்த புண்ணியம்; போகூழ் - முன் செய்த வினை.

#### ஒப்புமை

**ஆகூழால் அசைவின்மை தோன்றுதல்:**

"இரவி தன் புதல்வன்............அவன்பாற் செல்வம்
வருவதோர் அமைவின் வந்திர்." (கம்ப. மராமர. 25.) (371)

### 372

பேதைப் படுக்கும் இழவூழ் அறிவகற்றும்
ஆகல்ஊழ் உற்றக் கடை. 2

இழவு ஊழ் (உற்றக்கடை) அறிவு பேதை படுக்கும் - ஒருவனுக்கு எல்லா அறிவும் உளவாயினும் கைப் பொருள் இழத்தற்கு ஏதுவாகிய ஊழ்

வந்து உற்றவிடத்து அஃது அவனைப் பேதையாக்கும்; ஆகல் ஊழ் உற்ற கடை அகற்றும் - இனி அவன் அறிவு சுருங்கியிருப்பினும் கைப்பொருளாதற்கு ஏதுவாகிய ஊழ் வந்து உற்றவிடத்து அஃது இதனை விரிக்கும்.

கைப் பொருள் என்பது அதிகாரத்தான் வந்தது. இழவூழ், ஆகலூழ் என்பன இரண்டும் வேற்றுமைத் தொகை. உற்றக் கடை என்பது முன்னும் கூட்டப்பட்டது. இயற்கையான் ஆய அறிவையும் வேறுபடுக்கும் என்பதாம்.

**உரை வேறுபாடு**

**பரிதியார்:** ஆகிற ஊழ் அதிக புத்தியைத் தரும்; அழிக்கிற ஊழ் கெடு புத்தியைக் கொடுக்கும். (372)

## 373

**நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன்**
**உண்மை அறிவே மிகும்.** 3

**பரிமேலழகர்:** நுண்ணிய நூல் பல கற்பினும் - பேதைப்படுக்கும் ஊழுடையான் ஒருவன் நுண்ணிய பொருள்களை உணர்த்தும் நூல் பலவற்றையும் கற்றானாயினும், மற்றும் தன் உண்மை அறிவே மிகும் - அவனுக்குப் பின்னும் தன் ஊழானாகிய பேதைமை உணர்வே மேற்படும்.

பொருளின் நுண்மை நூலின்மேல் ஏற்றப்பட்டது. மேற்படுதல், கல்வியறிவைப் பின் இரங்குதற்கு ஆக்கிச் செயலுக்குத் தான் முற்படுதல். "காதன் மிக்குழிக் கற்றவும் கைகொடா, ஆதல் கண்ணகத் தஞ்சனம் போலுமால்"[1] என்பதும் அது. செயற்கையானாகிய அறிவையும் கீழ்ப்படுத்தும் என்பதாம்.

**உரை வேறுபாடு**

**மணக்குடவர்:** உண்மை அறிவே - இயல்பாகிய அறிவே.

மேல் அறிவிற்குக் காரணம் ஊழ் என்றார்; 'அஃது எற்றுக்கு? கல்வியன்றே காரணம்?' என்றார்க்கு, ஈண்டுக் கல்வி உண்டாயினும் ஊழானாகிய அறிவு வலியுடைத்து என்றார்.

**பரிதியார்:** சென்மாந்திர வினையாகிற ஆகிற ஊழ், அழிகிற ஊழைக் கல்வியினாலே வெல்லப்படாது; அது எப்படி என்றால், அழிகிற ஊழாகில் எத்தனை கற்றாலும் அற்ப புத்தியைக் காட்டும்.

**ஒப்புமை**

**முற்றும்:**

"கனம்பொதிந்த நூல்விரித்துக் காட்டினும் கீழ்தன்
மனம்புரிந்த வாறே மிகும்" (நாலடி. 341.)

"பொறியின் வகைய கருமம் அதனால்
அறிவினை யூழே அடும்." (பழமொழி, 203.) (373)

## 374

**இருவே றுலகத் தியற்கை திருவேறு**
**தெள்ளியர் ஆதலும் வேறு.** 4

**பரிமேலழகர்:** உலகத்து இயற்கை இரு வேறு - உலகத்து ஊழினான் ஆய இயற்கை இரண்டு கூறு; திரு வேறு தெள்ளியர் ஆதலும் வேறு - ஆதலால் செல்வமுடைய ராதலும் வேறு; அறிவுடைய ராதலும் வேறு,

1. சீவக. 1632.

செல்வத்தினைப் படைத்தலும் காத்தலும் பயன்கோடலும் அறிவுடையார்க்கல்லது இயலா அன்றே; அவ்வாறன்றி அறிவுடையார் வறியராகவும் ஏனையார் செல்வராகவும் காண்டலான், அறிவு உடையராதற்கு ஆகும் ஊழ் செல்வம் உடையராதற்கு ஆகாது. செல்வமுடையர் ஆதற்கு ஆகும் ஊழ் அறிவுடையராதற்கு ஆகாது என்றதாயிற்று.

ஆகவே, செல்வம் செய்யுங்கால் அறிவாகிய துணைக் காரணமும் வேண்டா என்பது பெற்றாம்.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** செல்வம் உடையராதலும், தெள்ளியார் ஆதலும் வேறு வேறு ஊழினால் வரும்.

**பரிதியார்:** இரண்டு வகைப்படும் செல்வம்; எப்படியென்றால், எட்டு வகையான செல்வமும், கல்வியும்.

**காளிங்கர்:** இரு கூறுபட்டிருக்கும் உலகத்தார் ஊழாம் இயற்கை; எங்கனம் எனில் செல்வம் உண்டாதலும் ஒரு நல்லூழின் கூறு. கல்வியால் தெளிந்த நல்லறிவு உடையாராதலும் மற்றொரு நல்விதிக்கு அமைந்த கூறு. எனவே முன்னமே இல்லறத்தான் ஆகலும் துறவறம் இயற்றிய வழித் தெளிந்த நல்லறிவுடைய ஞானத்தான் ஆகலும் என இங்கனம் இரண்டு கூறுபடும்.

**கவிராஜ பண்டிதர்:** உலகத்திலே ஊழ்வினை இரண்டு வகைப்படும். அவை யாவையெனில், ஐசுவரியம் உண்டாக வேண்டும் என்று நல்வினை செய்கிறதும், அறிவுண்டாக வேண்டும் என்று நல்வினை செய்கிறதுமாம். செல்வம் உண்டாக வேண்டும் என்று செய்தவர்களுக்கு அறிவு வாராது. அறிவு வேண்டிச் செய்தவர்க்குச் செல்வம் வாராது. ஆனபடியினாலே, செல்வமும் அறிவும் என்ற இரண்டையும் வேண்டித் தவம் செய்ய வேண்டும்.

### ஒப்புமை

**முற்றும்:**

"புணர்கடல்சூழ் வையத்துப் புண்ணியமோ வேறே
உணர்வ துடையார் இருப்ப—உணர்விலா
வட்டும் வழுதுணையும் போல்வாரும் வாழ்பவே
பட்டும் துகிலும் உடுத்து."

"நல்லார் நயவர் இருப்ப நயம்இலாக்
கல்லார்க்கொன் றாகிய காரணம்—தொல்லை
வினைப்பயன் அல்லது வேல்நெடுங் கண்ணாய்
நினைப்ப வருவதொன் றில்." (நாலடி. 264, 265.)

"உரைசான்ற சான்றோர் ஒடுங்கி யுறைய
நிரையுளர் அல்லார் நிமிர்ந்து பெருகல்". (பழமொழி, 125.) (374)

## 375

**நல்லவை எல்லாஅம் தீயவாம் தீயவும்**
**நல்லவாம் செல்வம் செயற்கு.** 5

**பரிமேலழகர்:** செல்வம் செயற்கு - செல்வத்தை ஆக்குதற்கு, நல்லவை எல்லாம் தீய ஆம் - நல்லவை யெல்லாம் தீயவாய் அழிக்கும்; தீயவும் நல்ல ஆம் - அதுவேயன்றித் தீயவைதாமும் நல்லவாய் ஆக்கும், ஊழ்வயத்தான்.

நல்லவை தீயவை என்பன காலமும், இடனும், கருவியும், தொழிலும் முதலாயவற்றை. ஊழான் என்பது அதிகாரத்தால் பெற்றும். அழிக்கும் ஊழ் உற்றவழிக் காலம் முதலிய நல்லவாயினும் அழியும், ஆக்கும் ஊழ் உற்றவழி அவை தீயவாயினும் ஆகும் என்பதாயிற்று.

ஆகவே, காலம் முதலிய துணைக் காரணங்களையும் வேறுபடுக்கும் என்பது பெற்றும்.

### உரை வேறுபாடு

**பரிதியார்:** *ஆகிற ஊழ் வருங் காலம், அழிகிற காரியத்தை ஆக்கும். அழிகிற ஊழ் ஆகிற காரியத்தை அழிக்கும்.*

### ஒப்புமை

**நல்லவை தீய ஆதல்:**

"நன்மையும் தீமை யன்றோ நாசம்வந் துற்ற போது."
(கம்ப. மாரீசன். 202.) *(375)*

## 376

பரியினும் ஆகாவாம் பால்அல்ல உய்த்துச்
சொரியினும் போகா தம. 6

**பரிமேலழகர்:** பால் அல்ல பரியினும் ஆகா ஆம் - தமக்கு ஊழ் அல்லாத பொருள்கள் வருந்திக் காப்பினும் தம்மிடத்து நில்லா ஆம்; தம உய்த்து சொரியினும் போகா - ஊழால் தமவாய பொருள்கள் புறத்தே கொண்டு போய்ச் சொரிந்தாலும் தம்மை விட்டுப் போகா.

பொருள்களின் நிலையும் போக்கும் ஊழினன் ஆவதல்லது காப்பு இகழ்ச்சிகளான் ஆகா என்பதாம்.

இவை ஆறு பாட்டானும் பொருட்குக் காரணமாகிய ஊழின் வலி கூறப்பட்டது.

### ஒப்புமை

**1. ஊழ் ஆகாமற் செய்தல்:**

"மிடுக்குற்றுப் பற்றினும் நில்லாது செல்வம்
விடுக்கும் வினையுலந்தக் கால்" (நாலடி. 93.)

"தருவது விதியே யென்றால் தவம்பெரி துடைய ரேனும்
வருவது வருநா ளன்றி வந்துகை கூட வற்றோ."
(கம்ப. மாரீசன். 80.)

**2. ஊழால் உரியவை போகாமை:**

"உறற்பால நீக்கல் உறுவர்க்கும் ஆகா"
"ஈண்டுநீர் வையத்துள் ...நல்லதை
வேண்டினும் வேண்டா விடினும் உறற்பால
தீண்டா விடுதல் அரிது"
"உறற்பால யார்க்கும் உறும்" (நாலடி. 103, 109, 117.)
"உறற்பால யார்க்கும் உறும்"
"விழுமிய
வேண்டினும் வேண்டா விடினும் உறற்பால
தீண்டா விடுதல் அரிது" (பழமொழி, 15, 62.)
"நாட்டுங் கால்நெடு நல்லறத் தின்பயன்
ஊட்டுங் காலத் திகழ்வ துறுங்கொலோ." (கம்ப. நிந்தனைப். 34.)

3. **முற்றும்:**

"ஆகும் சமயத்தார்க் காள்வினையும் வேண்டாவாம்
போகும் பொறியார் புரிவும் பயமின்றே
ஏகல் மலைநாட என்செய்தாங் கென்பெறினும்
ஆகாதார்க் காகுவ தில்." (பழமொழி, 127.)

"ஆம்பொருள்கள் ஆகும்அவை யார்க்கும்அழிக கொண்ணுப்
போம்பொருள்கள் போகும்அவை பொறியின்வகை வண்ணம்"

"பெருமுழங்கு திரைவரைகள் நீந்திப்பிணி யுறினும்
திருமுயங்கல் இல்லையெனில் இல்லைபொரு ளீட்டம்
ஒருமுழமும் சேறலில ரேனும்பொரு ளூர்க்கே
வரும்வழிவி னையுழந்து வாழ்கதவம் மாதோ."
(சீவக. 848, 2556.)

"ஆகுவ தாகுங் காலத் தழிவதும் அழிந்து சிந்திப்
போகுவ தயலே நின்று போற்றினும் போதல் செய்யும்."
(கம்ப. கும்பகர்ணன். 165.) (376)

## 377

**வகுத்தான் வகுத்த வகைஅல்லால் கோடி**
**தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது.** 7

**பரிமேலழகர்:** கோடி தொகுத்தார்க்கும் - ஐம்பொறிகளான் நுகரப் படும் பொருள்கள் கோடியை முயன்று தொகுத்தார்க்கும், வகுத்தான் வகுத்த வகை அல்லால் துய்த்தல் அரிது - தெய்வம் வகுத்த வகையான் அல்லது நுகர்தல் உண்டாகாது.

ஒருயிர் செய்த வினையின் பயன் பிறிதோர் உயிரின்கண் செல்லாமல் அவ்வுயிர்க்கே வகுத்தலின், வகுத்தான் என்றார். "இசைத்தலும் உரிய வேறிடத் தான"[1] என்பதனுன் உயர்திணையாயிற்று. படையாதார்க்கே யன்றிப் படைத்தார்க்கும் என்றமையால், உம்மை எச்சவும்மை. வெறும் முயற்சிகளால் பொருள்களைப் படைத்தலல்லது நுகர்தலாகாது, அதற்கு ஊழ் வேண்டும் என்பதாயிற்று.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** வகுத்தான் - விதானம் பண்ணினவன்.

**காளிங்கர்:** அதனுல் முன்னம் செய்தார் செய்த வினை வகையால் துய்த்தலல்லது மற்றுக் கோடிபொருள் ஈட்டினுர்க்கும் அது கொண்டு துய்த்தல் அரிது. எனவே, அங்ஙனம் ஈட்டுதற்கு உரியர் தானம் முதலிய நல்வினை முன் செய்து மற்று அது கொண்டு தான் நுகர்தற்கு வேண்டும் நல்வினை முன்னம் செய்யாரேல் ஈட்டினரேயாயினும் குறைவறத் துய்த்தல் அரிது.

### ஒப்புமை

**முற்றும்:**

"வளம்பட வேண்டாதார் யார்யாரும் இல்லை
அளந்தன போகம் அவரவ ராற்றுன்" (நாலடி. 107.)

"அளந்துதாங் கொண்டு காத்த அருந்தவ முடைய நீரார்க்
களந்தன போக மெல்லாம் அவரவர்க் கற்றை நாளே
அளந்தன வாழு நாளும்." (சீவக. 213.)

1. தொல். கிளவி. 59.

## 378

துறப்பார்மன் துப்புர வில்லார் உறற்பால
ஊட்டா கழியும் எனின். 8

**பரிமேலழகர்:** துப்புரவு இல்லார் துறப்பார் - வறுமையால் நுகர்ச்சி இல்லாதார் துறக்கும் கருத்து உடையராவர், உறல்பால ஊட்டா கழியும் எனின் - ஊழ்கள் உறுதற்பாலவாய துன்பங்களை உறுவியாது ஒழியுமாயின்.

துறப்பார் என்பது ஆரீற்று எதிர்கால முற்றுச்சொல். தம்மால் விடப் பெறுவன தாமே விடப்பெற்று வைத்தும் கருத்து வேறுபாட்டால் துன்பம் உறுகின்றது ஊழின் வலியான் என்பது எஞ்சி நிற்றலின், மன் ஒழியிசைக் கண் வந்தது.

### உரை வேறுபாடு

**பரிதியார்:** அழிகிற ஊழாயின காலத்திலே, பொருள் மேலே ஆசை யறப்பண்ணித் துறவறத்தில் நிற்கப்பண்ணும். உடனே அழிகிற ஊழ் வந்தால் அத் துறவறத்தைக் கெடுத்து இல்லறமாக்கும்; ஆகையால், ஆகிற ஊழ் அழிகிற ஊழ் என்று பாராமல் எப்போதும் போலிருப்பான். *(378)*

## 379

நன்றாங்கால் நல்லவாக் காண்பவர் அன்றாங்கால்
அல்லற் படுவ தெவன். 9

**பரிமேலழகர்:** நன்று ஆம் கால் நல்லவா காண்பவர் - நல்வினை விளையுங்கால் அதன் விளைவாய இன்பங்களைத் துடைக்குந் திறன் நாடாது இவை நல்ல என்று இயைந்து அநுபவிப்பார், அன்று ஆம் கால் அல்லல் படுவது எவன் - ஏனைத் தீவினை விளையுங்கால் அதன் விளைவாய துன்பங்களை யும் அவ்வாறு அநுபவியாது துடைக்கும் திறன் நாடி அல்லல் உழப்பது என் கருதி?

தாமே முன்செய்து கொண்டமையானும், ஊட்டாது கழியாமையானும், இரண்டும் இயைந்து அநுபவிக்கற்பால; அவற்றுள் ஒன்றற்கு இயைந்து அநுபவித்து ஏனையதற்கு அது செய்யாது வருந்துதல் அறிவன்று என்பதாம்.

இவை மூன்று பாட்டானும் இன்பத்துன்பங்கட்குக் காரணமாய ஊழின் வலி கூறப்பட்டது.

### ஒப்புமை

1. **தீங்கு விளைகையில் அல்லலுறுதல் ஏன்?**

"சிறுகா பெருகா முறைபிறழ்ந்து வாரா
உறுகாலத் தூற்றாகா ஆமிடத்தே ஆகும்
சிறுகாலைப் பட்ட பொறியும் அதனால்
இறுகாலத் தென்னை பரிவு." (நாலடி. *110.*)

"சாதலும் பிறத்தல் தானும் தம்வினைப் பயத்தின் ஆகும்
ஆதலும் அழிவும் எல்லாம் அவைபொருட் கியல்பு கண்டாய்
நோதலும் பரிவும் எல்லாம் நுண்ணுணர் வின்மை யன்றே
பேதைநீ பெரிதும் பொல்லாய் பெய்வளைத் தோளி யென்றான்." (சீவக. *269.*)

"முடியுநாள் தானே வந்து முற்றினன் துன்ப முந்நீர்
படியுமாம் சிறியோர் தன்மை நினக்கிது பழியிற் றாமால்." (கம்ப. மாயாசீதைப். *65.*)

2. *முற்றும்:*

"இன்பம்வந் துறுமெனின் இனிய தாயிடைத்
துன்பம்வந் துறுமெனின் துறக்க லாகுமோ."
(**கம்ப.** தைலமாட்டு. *29.*) *(379)*

**380**

**ஊழிற் பெருவலி யாஉள மற்றென்று**
**சூழினும் தான்முந் துறும். 10**

**பரிமேலழகர்:** மற்று ஒன்று சூழினும் தான் முந்துறும் - தன்னை விலக்குதற்பொருட்டுத் தனக்கு மறுதலையாவதோர் உபாயத்தைச் சூழினும் தான் அவ்வுபாயமேயானும் பிறிது ஒன்றானும் வழியாக வந்து அச் சூழ்ச்சியின் முற்பட்டு நிற்கும்; ஊழின் பெருவலி யா உள - அதனால் ஊழ்போல மிக்க வலியுடையன யாவை உள?

பெருவலி; ஆகுபெயர். சூழ்தல் - பலருடனும் பழுதற எண்ணுதல். செய்தற்கேயன்றிச் சூழ்தற்கும் அவதி கொடாது என்றமையின், உம்மை எச்சவும்மை. எல்லாம் வழியாக வருதல் உடைமையின், ஊழே வலியது என்பதாம்.

இதனான் அவ்விருவகை ஊழின் வலியும் பொதுவாகக் கூறப்பட்டது.

**உரை வேறுபாடு**

**மணக்குடவர்:** தான் முந்துறும் - தான் முற்பட அவ்வாராய்ச்சிக்கு உடன்பட்டு நிற்கும்.

**ஒப்புமை**

1. **ஊழ் பெருவலி யாதல்:**

"மெய்யே பெற்றொழிந்தேன் விதிவாய்க்கின்று காப்பாரார்"
"எம்மா பாவியர்க்கும் விதிவாய்க்கின்று வாய்க்கும் கண்டீர்"
(**திருவாய்.** *5. 1: 1, 7.*)

"விதியது வலியினும் இசைந்தார்"
"விதியது வலியி னானும்"
"வெஞ்சின விதியினை வெல்ல வல்லமோ"
"ஊழ்முறை யல்லது வலியதொன் றில்லென"
(**கம்ப.** மந்திரப். 33, மாரீசன். 86, சடாயு. 15, ஊர்தேடு, 205.)

2. *முற்றும்:*

"பொறியின் வகைய கருமம் அதனால்
அறிவினை யூழே அடும்" (**பழமொழி**, *203.*)
"சூழ்வினை நான்முகத் தொருவற் சூழினும்
ஊழ்வினை ஒருவரால் ஒழிக்கற் பாலதோ"
"விதிவயம் என்பதை மேற்கோ ளாவிடின்
மதிவலி யான்விதி வெல்ல வல்லமோ"
"பிரிவுசெய் துலகெலாம் பெறுவிப் பான்தலை
அரிவுசெய் விதியினுக் கரிதுண் டாகுமோ"
"அரிது போகவோ விதிவலி கடத்தல்என் றஞ்சி."
(**கம்ப.** நகர்நீங்கு. 163, சடாயு. 193, 194,) காட்சி. 9.

# பொருட்பால்

## அரசியல்

**பரிமேலழகர்:** இனி, இல்லறத்தின் வழிப்படுவனவாய பொருள் இன்பங்களுள் இருமையும் பயப்பதாய பொருள் கூறுவான் எடுத்துக் கொண்டார். அது தன் துணைக்காரணமாய அரச நீதி கூறவே அடங்கும். அரச நீதியாவது காவலை நடாத்தும் முறைமை. அதனை அரசியல், அங்கவியல், ஒழிபியல் என மூவகைப்படுத்து, மலர்தலை உலகிற்கு உயிரெனச் சிறந்த அரசனது[1] இயல்பு இருபத்தைந்து அதிகாரத்தால் கூறுவான் தொடங்கி, முதற்கண் இறைமாட்சி கூறுகின்றார்.

**மணக்குடவர்:** பொருட்பாலாவது பொருளின் பகுதி என்று கொள்ளப்படும். பொருள் என்றது மக்களை உடைத்தாகிய நிலம்; பகுதி யாவது அந் நிலத்தை ஆளுதற்குரிய அரசரது தன்மையும், அவர் ஆளுதற்குச் செய்யும் திறன்களும், அதற்குத் துணையான அமாத்தியர் இலக்கணமும், அவர் செய்யும் திறன்களும், அவ் விருவரானும் உண்டாக்கப்பட்ட நாடும் அரணும் பொருளும் படையும் ஆகிய இவற்றினது திறன்களும், அறம் பொருள் இன்பம் என்னும் மூன்றற்கும் துணையாகிய நட்பினது திறன்களும், அவ்வாறு உண்டாகிய பொருட்கும் பொருள் உடையார்க்கும் கேடுவரும் திறன்களும், அந்நிலத்து உண்டான மக்களது இயல்பும், அவர் பொருள் செய்யுமாறும் கூறுதல். இவையெல்லாம் அரசியலும், அமைச்சியலும், நட்பியலும், துன்பவியலும், குடியியலும் என அடங்கும். படையியல், அரணியல் என வகுத்தார் உளரால் எனின், அவையெல்லாம் ஒருவனால் ஆக்கப்படும் பொருள் ஆதலின் பொருளியல் என அடங்கும். துன்பவியல் என்றது எற்றுக்கு? அதனையும் நட்பியலுள் அடக்கினார் உளரால் எனின், அவை யெல்லாம் நட்கப்படாது என்னும் கருத்தினால் கூறினார்கள். ஆயினும் அவற்றினிடைக் கிடந்த பேதைமை புல்லறிவாண்மை என்னும் அதிகாரங்கள் நட்கப்படாததும் நட்கப்படுவதும் அன்றி, ஒருவற்குத் துன்பத்திற்குக் காரணம் ஆம் என்று கூறுதலால், துன்பவியல் என வேண்டும் என்க.

இதனுள் இறைமாட்சி முதலாக இடுக்கணழியாமை ஈறாகக் கூறிய அதிகாரம் இருபத்தைந்தும் பெரும்பான்மையும் அரசர்க்கு உரியவாதலின் அரசியல் என்றும், அமைச்சு முதலாக அவையஞ்சாமை ஈறாகக் கூறிய அதிகாரம் பத்தும் பெரும்பான்மையும் அமைச்சர்க்கு உரியவாதலின் அமைச்சியல் என்றும், நாடு முதலாகப் படைச் செருக்கு ஈறாகக் கூறிய அதிகாரம் ஐந்தும் பொருட்பகுதியாதலின் பொருளியல் என்றும், நட்பு முதலாகக் கூடா நட்பீறாகக் கூறிய அதிகாரம் ஐந்தும் நட்பின் பகுதியாதலின் நட்பியல் என்றும், பேதைமை முதலாக மருந்து ஈறாகக் கூறிய அதிகாரம் பன்னிரண்டும் கேட்டுக்குக் காரணமாதலின் துன்பவியல் என்றும், குடிமை முதலாகக் கயமை யீறாகக் கூறிய அதிகாரம் பதின்மூன்றும் மக்களது இயல்பு கூறுதலின் குடியியல் என்றும் அப் பொருட்பால் கூறிய அதிகாரம் எழுபதும் ஆறு பகுதியாயின.

அவற்றுள் அரசியலாவது அரசர் செய்யும் திறன் கூறுதல். அஃது யாங்ஙனம் கூறினர் எனின், அது கூறிய அதிகாரம் இருபத்தைந்தினும்

1. "மன்ன னுயிர்த்தே மலர்தலை யுலகம்." (புறநா. 186 : 2.)

முற்பட அரசரால் உண்டாக்கவேண்டும் பொருளும், அவர்க்கு இன்றி யமையாத துணையும், காலம் இடம் வலி முதலியன அறிதலும் தெரிந்து தெளிதலும் வினையாடலும் முதலியனவும், செங்கோன்மை முதலிய பிறவும் முறையாக உணர்த்தப்படுகின்றன.

# 39. இறைமாட்சி

**பரிமேலழகர்:** அஃதாவது அவன் தன் நற்குண நற்செய்கைகள். உலக பாலர் உருவாய் நின்று உலகம் காத்தலின், இறை என்றார். "திருவுடை மன்னரைக் காணின் திருமாலைக் கண்டேனே என்னும்"[1] என்று பெரியாரும் பணித்தார்.

**மணக்குடவர்:** இதனுள், இறைமாட்சியாவது இறைவனது உண்மை கூறுதல். இவ்வதிகாரத்துள் உரைக்கின்ற பொருள் அரசரை நோக்கிற் றுதலானும், அரசன் மக்களிற் சிறந்தானுதலானும் இவ்வதிகாரம் முன் கூறப்பட்டது.

**பரிதியார்:** இறைமாட்சியாவது ராசநீதியைச் சொல்லுதல்.

**காளிங்கர்:** இப்பால் பொருட்பகுதிதான் மலிகடல் உலகத்து மக்கட் கெல்லாம் நலிவற நடாத்தல் நன்கெனின் அதூஉம் அவ்வரசர் செய்பொருள் முதலாகக் கொண்டு, மற்று அவர் வழிப் பிறர் பொருள் அமைப்பதன் பொருட்டாக மற்று இவை அனைத்திற்கும் அன்னவர் மாட்சி முறைப் படவேண்டும் முறைமை நோக்கி இறைமாட்சிமை அறிவிக்கின்றது.

### 381

படைகுடி கூழ்அமைச்சு நட்பரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு. 1

**பரிமேலழகர்:** படை குடி கூழ் அமைச்சு நட்பு அரண் ஆறும் உடையான் - படையும் குடியும் கூழும் அமைச்சும் நட்பும் அரணும் என்று சொல்லப் பட்ட ஆறு அங்கங்களையும் உடையவன், அரசருள் ஏறு - அரசருள் ஏறு போல்வான்.

ஈண்டுக் குடி என்றது அதனை உடைய நாட்டினை. கூழ் என்றது அதற்கு ஏதுவாய பொருளை. அமைச்சு, நாடு, அரண், பொருள், படை, நட்பு என்பதே முறையாயினும் ஈண்டுச் செய்யுள் நோக்கிப் பிறழ வைத்தார், ஆறும் உடையான் என்றதனால், அவற்றுள் ஒன்று இல்வழியும் அரச நீதி செல்லாது என்பது பெற்றாம். வடநூலார் இவற்றிற்கு அங்கம் எனப் பெயர் கொடுத்ததூஉம் அது நோக்கி. ஏறு என்பது உபசார வழக்கு.

இதனால் அரசற்கு அங்கமாவன இவை என்பதூஉம், இவை முற்றும் உடைமையே அவன் வெற்றிக்கு ஏது என்பதூஉம் கூறப்பட்டன.

#### உரை வேறுபாடு

**பரிதியார்:** அரசருள் ஏறு - அரசர் என்னும் பசுக்களுக்கு ஒரு ரிஷபம்.

**கவிராஜ பண்டிதர்:** அரசருள் ஏறு - அரசர்களுக்குள் சிங்கத்தைப் போன்றவன்.

---

1. திருவாய். 4. 4 : 8.

ஒப்புமை

முற்றும் :

"பத்திமை சான்ற படையும் பலர்தொகினும்
எத்திசையும் அஞ்சா எயிலரணும்—வைத்தமைந்த
எண்ணின் உலவா விழுநிதியும் இம்மூன்றும்
மண்ணாளும் வேந்தர்க் குறுப்பு."

"கோலஞ்சி வாழும் குடியும் குடிதழீஇ
ஆலம்வீழ் போலும் அமைச்சனும்—வேலின்
கடைமணிபோல் திண்ணியான் காப்புமிம் மூன்றும்
படைவேந்தன் பற்று விடல்." (திரி. 100, 33)

"தாழுஞ்செய லின்றொரு மன்னவன் தாங்க வேண்டும்
சூழுங் குடியும் முதலாயின கொள்கைத் தேனும்
சூழும் படைமன்னவன் தோளிணைக் காவலின்றி
வாழும் தகைத்தன் றிந்த வையகம் என்று சொன்னார்."

(பெரிய. மூர்த்தி. 28.) (381)

## 382

அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந்நான்கும்
எஞ்சாமை வேந்தற் கியல்பு. 2

**பரிமேலழகர்:** வேந்தற்கு இயல்பு - அரசனுக்கு இயல்பாவது, அஞ்சாமை ஈகை அறிவு ஊக்கம் இந் நான்கும் எஞ்சாமை-திண்மையும் கொடையும் அறிவும் ஊக்கமும் என்னும் இந் நான்கு குணமும் இடைவிடாது நிற்றல்.

ஊக்கம்-வினைசெய்தற்கண் மனவெழுச்சி. இவற்றுள் அறிவு ஆறங்கத்திற்கும் உரித்து; ஈகை படைக்கு உரித்து; ஏனைய வினைக்கு உரிய. உயிர்க் குணங்களுள் ஒன்று தோன்ற ஏனைய அடங்கி வரும். அவற்றுள் இவை அடங்கின் அரசற்குக் கெடுவன பலவாமாகலின், இவை எப்பொழுதும் தோன்றி நிற்றல் இயல்பாக வேண்டும் என்பார், எஞ்சாமை வேந்தற்கு இயல்பு என்றார்.

உரை வேறுபாடு

**பரிப்பெருமாள்:** வேந்தற்கு இயல்பு - இவை நான்கும் இயற்கையாக வேண்டும் என்றது.

**காளிங்கர்:** அஞ்சாமை என்பது தறுகணாண்மை. ஈண்டு ஈகை என்பது கீழ்ச்சொன்ன இல்லறத்து இயல்பாகிய கொடைநெறிக்கு அடங்காது தனது பெரும்பொருட்கும் பெருந்தன்மைக்கும் ஏற்குமாறு மற்று அந்தணர் முதலாக இழிகுலத்தாராகிய புலையர் ஈறாக அனைவர்க்கும் வரம்பற வழங்கும் வண்மை என அறிக. அறிவு என்பது மற்று இத் தகுதியும் அல்லதும் உணர்வு என்றவாறு. ஊக்கம் என்பது உள்ளமானது மேம்படக் கருதும் தெரிந்து மேற்கோள் என்றவாறு. எஞ்சாமை என்பது ஒழியாமை என்பது. இவை நான்கும் எஞ்ஞான்றும் இடைவிடாது இருத்தலே அரசருக்கு மரபு என்றவாறு.

ஒப்புமை

1. அரசனுக்கு அஞ்சாமை வேண்டும்:

"அஞ்சாமை அல்லால் துணைவேண்டா எஞ்சாமை
எண்ணி இடத்தாற் செயின்." (குறள், 497.)

2. முற்றும்:

"அஞ்சும் அறியான் அமைவிலன் ஈகலான்
தஞ்சம் எளியன் பகைக்கு." (குறள், 863.)

"ஆதிம் மதியும் அருளும் அறனும் அமைவும்
ஏதின் மிடல்வீரமும் ஈகையும் எண்ணில் யாவும்
நீதிந் நிலேயும் இவை நேமியி னேர்க்கு நின்ற
பாதிம் முழுதும் இவற்கே பணிகேட்ப மன்னே."

(கம்ப. அரசியல். 2.) (382)

## 383

தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்
நீங்கா நிலன்ஆள் பவற்கு. 3

**பரிமேலழகர்:** நிலன் ஆள்பவற்கு - நிலத்தினை ஆளும் திருவுடையாற்கு, தூங்காமை கல்வி துணிவு உடைமை இம் மூன்றும் நீங்கா - அக் காரியங்களில் விரைவுடைமையும், அவை அறிதற்கு ஏற்ற கல்வியுடைமையும், ஆண்மையுடைமையும் ஆகிய இம் மூன்று குணமும் ஒருகாலும் நீங்கா.

கல்வியது கூறுபாடு முன்னர்க் கூறப்படும். ஆண்மையாவது ஒன்றனையும் பாராது கடிதிற் செய்வது ஆகலின் அஃது ஈண்டு உபசார வழக்கால் துணிவு எனப்பட்டது. உம்மை, இறந்தது தழீஇய எச்சவும்மை. இவற்றுள் கல்வி ஆறு அங்கத்திற்கும் உரித்து; ஏனைய வினைக்கு உரிய. நீங்கா என்பதற்கு மேல் 'எஞ்சாமைக்கு'[1] உரைத்தாங்கு உரைக்க.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** துணிவுடைமை - ஒரு பொருளை ஆராய்ந்து துணிதலுடைமை.

**பரிப்பெருமாள்:** இது முதலாகச் செயற்கைக் குணம் கூறுகின்றார். உலகத்துக் குற்றமும் குணமும் ஆராயுங்கால் மயங்கக் காணாது உண்மை ஆராய்ந்து துணிதல் ஒருதலையாக நிலன் ஆள்பவர்க்கு வேண்டும் என்பதனானும், அதுதான் கல்வியானல்லது ஆராய்தல் அரிது ஆகலானும், அக் கல்வி மடியின்மையான் அல்லது வாராது ஆகலானும் சிறப்பு நோக்கி, முற்பட இம் முறையே கூறினர்.

**பரிதியார்:** தூங்காமை கல்வி துணிவுடைமை - ஆலசிய புத்தியின்மையும், கல்வியுடைமையும், திடமான புத்தியும்.

**காளிங்கர்:** துணிவுடைமை - தாம் செய்யும் கருமத்து மனத் திட்பம். (383)

## 384

அறன்இழுக்கா தல்லவை நீக்கி மறன்இழுக்கா
மானம் உடைய தரசு. 4

**பரிமேலழகர்:** அறன் இழுக்காது - தனக்கு ஓதிய அறத்தின் வழுவாது ஒழுகி, அல்லவை நீக்கி - அறனல்லவை தன் நாட்டின் கண்ணும் நிகழாமல் கடிந்து, மறன் இழுக்கா மானம் உடையது அரசு - வீரத்தின் வழுவாத தாழ்வின்மையினை உடையான் அரசன்.

அவ்வறமாவது ஓதல் வேட்டல் ஈதல் என்னும் பொதுத் தொழிலிலும், படைக்கலம் பயிறல் பல்லுயிர் ஓம்பல் பகைத்திறந் தெறுதல் என்னும் சிறப்புத் தொழிலிலும் வழுவாது நிற்றல். "மாண்ட, அறநெறி முதற்றே அரசின் கொற்றம்"[2] என்பதனால் இவ்வறம் பொருட்குக் காரணமாதல் அறிக. அல்

1. குறள், 382, உரை.
2. புறநா. 55: 9-10.

லவை, கொலை களவு முதலாயின. குற்றமாய மானத்தின் நீக்குதற்கு, மறன் இழுக்கா மானம் என்றார். அஃதாவது,

"வீறின்மையின் விலங்காம்என மதவேழமும் எறியான்
ஏறுண்டவர் நிகராயினும் பிறர்மிச்சில்என் றெறியான்
மாறன்மையின் மறம்வாடும்என் றிளையாரையும் எறியான்
ஆறன்மையின் முதியாரையும் எறியான்அயில் உழவன்"[1]

எனவும், "அழியுநர் புறக்கொடை அயில்வேல் ஓச்சான்"[2] எனவும் சொல்லப் படுவது. அரசு - அரசனது தன்மை. அஃது உபசார வழக்கால் அவன்றன் மேல் நின்றது.

### உரை வேறுபாடு

**கவிராஜ பண்டிதர்:** மறன் இழுக்கா மானம் உடையது அரசு - சவுரியத்திலே குறைபடாமல் இருக்கிறவனே அரசன்.

### ஒப்புமை

**மறன் இழுக்கா மானம்:**

"மின்போன் மிளிர்வா ளொடுதோள் விழவும்
தன்போர் தவிரா தவனைச் சலியா
என்போ லியர்போ ரெனின்அன் றிதுவோர்
புன்போ ரெனநின் றயல்போ யினனால்."

(கம்ப. படைத்தலைவர். 83.) (384)

## 385

இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு. 5

**பரிமேலழகர்:** இயற்றலும் - தனக்குப் பொருள்கள் வரும் வழிகளை மேன்மேல் உளவாக்கலும், ஈட்டலும் - அங்ஙனம் வந்தவற்றை ஒருவழித் தொகுத்தலும், காத்தலும் - தொகுத்தவற்றைப் பிறர் கொள்ளாமல் காத்தலும், காத்த வகுத்தலும் - காத்தவற்றை அறம் பொருள் இன்பங்களின் பொருட்டு விடுத்தலும், வல்லது அரசு - வல்லவனே அரசன்.

ஈட்டல், காத்தல், வகுத்தல் என்றவற்றிற்கு ஏற்ப இயற்றல் என்பதற்குச் செயப்படுபொருள் வருவிக்கப்பட்டது. பொருள்களாவன மணி, பொன், நெல் முதலாயின. அவை வரும் வழிகளாவன பகைவரை அழித்தலும், திறைகோடலும், தன் நாடு தலையளித்தலும் முதலாயின. பிறர் என்றது பகைவர், கள்வர், சுற்றத்தார், வினைசெய்வார் முதலாயினாரை. கடவுளர் அந்தணர் வறியோர் என்றிவர்க்கும் புகழிற்கும் கொடுத்தலை அறப் பொருட்டாகவும், யானை குதிரை படை நாடு அரண் என்றிவற்றிற்கும், பகையொடு கூடலின் பிரிக்கப்படுவார்க்கும், தன்னிற் பிரிதலின் கூட்டப்படுவார்க்கும் கொடுத்தலைப் பொருட்பொருட்டாகவும், மண்டபம் வாவி செய்குன்று இளமரக்கா முதலிய செய்தற்கும், ஐம்புலன்களான் நுகர்வனவற்றிற்கும் கொடுத்தலை இன்பப் பொருட்டாகவும் கொள்க. இயற்றல் முதலிய தவறுமற் செய்தல் அரிதாகலின் வல்லது என்றார்.

இவை நான்கு பாட்டானும் மாட்சியே கூறப்பட்டது. (385)

---

1. சீவக. 2261.
2. பு. வெ. 55.

## 386

காட்சிக் கெளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்
மீக்கூறும் மன்னன் நிலம். 6

**பரிமேலழகர்:** காட்சிக்கு எளியன் - முறை வேண்டினர்க்கும் குறை வேண்டினர்க்கும்[1] காண்டற்கு எளியனாய், கடும் சொல்லன் அல்லனேல் - யாவர்மாட்டும் கடுஞ்சொல்லன் அல்லனுமாயின், மன்னன் நிலம் மீக்கூறும் - அம் மன்னனது நிலத்தை எல்லா நிலங்களினும் உயர்த்துக் கூறும் உலகம்.

முறை வேண்டினர், வலியரால் நலிவெய்தினர். குறைவேண்டினர், வறுமையுற்று இரந்தார்; காண்டற்கு எளிமையாவது, பேரத்தாணிக்கண் அந்தணர் சான்றோர் உள்ளிட்டாரோடு செவ்வி உடைய னயிருத்தல். கடுஞ் சொல் - கேள்வியினும் வினையினும் கடியவாய சொல். நிலத்தை மீக்கூறும் எனவே, மன்னனை மீக்கூறுதல் சொல்ல வேண்டாவாயிற்று. மீக்கூறுதல் - இவன் காக்கின்ற நாடு, பசி பிணி பகை[2] முதலிய இன்றி, யாவர்க்கும் பேரின்பம் தருதலின் தேவருலகினும் நன்று என்றல்.[3] உலகம் என்னும் எழுவாய் வருவிக்கப்பட்டது.

### உரை வேறுபாடு

**கவிராஜ பண்டிதர்:** மீக்கூறும் மன்னன் நிலம் - எல்லா இராச்சியங்களிலும் அதிகம்.

### ஒப்புமை

1. **காட்சிக் கெளியனாதல்:**
"முறைவேண்டு பொழுதில் பதன்எளியோர்." (புறநா. 35: 15.)
"காட்சிக் கெளியானும் ஆம்." (அப்பர், கருகாவூர். 4.)

2. **காட்சிக்கெளியன் கடுஞ்சொல்ல னல்லன் ஆதல்:**
"இன்சொல் எண்பதத்தை யாகுமதி பெரும." (புறநா. 40: 9.)

3. **நிலத்தை மீக்கூறுதல்:**
"நகுதக் கனரே நாடுமீக் கூறுநர்." (புறநா. 72: 1.) (386)

## 387

இன்சொலால் ஈத்தளிக்க வல்லாற்குத் தன்சொலால்
தான்கண் டனைத்திவ் வுலகு. 7

**பரிமேலழகர்:** இன்சொலால் ஈத்து அளிக்க வல்லாற்கு - இனிய சொல்லுடனே ஈதலைச் செய்து அளிக்கவல்ல அரசனுக்கு, இவ்வுலகு தன் சொலால் தான் கண்டனைத்து - இவ்வுலகம் தன் புகழோடு மேவித் தான் கருதிய அளவிற்றாம்.

இன்சொல் - கேள்வியினும் வினையினும் இனியவாய சொல். ஈதல் - வேண்டுவார்க்கு வேண்டுவன கொடுத்தல். அளித்தல் - தன் பரிவாரத்தானும் பகைவரானும் நலிவுபடாமல் காத்தல். இவை அரியவாகலின் வல்லாற்கு என்றும், அவன் மண்முழுதும் ஆளுமாகலின் இவ்வுலகு என்றும் கூறினர். கருதிய அளவிற்றாதல், கருதிய பொருளெல்லாம் சுரத்தல்.

---

1. பெரும்பாண். 443.
2. "பசியும் பிணியும் பகையும் நீங்கி." (சிலப். 5: 72.)
3. "மாந்தரஞ் சேரல் இரும்பொறை ஓம்பிய நாடே
புத்தே ளுலகத் தற்றெனக் கேட்டுவந்து." (புறநா. 22: 34-5.)

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** தன்சொலால் தான் கண்டனைத்து இவ்வுலகு - தன் ஏவலாலே இவ்வுலகம் தான் கண்டாற்போலும் தன் வசத்தே கிடக்கும்.

**பரிப்பெருமாள்:** தலையளியாவது வரிசை கொடுத்தல். அவ்வரிசை பெற்றவர் அரசனுக்கு நல்லர் ஆதலாலே, தாம் இருந்த இடம் எல்லாம் அரசன் இருந்தானாகக் கொண்டு இராச காரியத்தைத் தப்பாமல் செய்வர்; ஆதலால் தான் கண்டால் ஒக்கும் என்றது. இஃது அமாத்தியருக்கு அரசன் செய்யும் திறன் கூறிற்று.

**பரிதியார்:** தன் சொலால் தான் கண்டனைத்து இவ் வுலகு - தன் சொல்லினாலே தானே உலகத்தைப் படைத்துத் தானே உலகத்தைக் காத்தற்கு ஒக்கும்.

**காளிங்கர்:** இன்சொல்லாலே குடிகளைக் காப்பாற்றிப் பின் வந்து எய்தும் மக்கள் யாவர்க்கும் கீழ்ச்சொன்ன முறைமையானே இன்சொல்லால் சில வழங்குதலேயு மன்றி மற்றுத் தன் நெஞ்சினாலும் தண்ணளி செய்ய வல்ல அரசர்க்கு இங்ஙனம் சொல்லுகின்ற தனது சொல்நலத்தினாலே தான் படைத்த அத்தன்மைத்து இவ்வுலகு. எனவே, மற்று இவ்வுலகில் வாழ்வார் யாவரும் தன்வசத்து ஒழுகுவர்.

### ஒப்புமை

1. **இன்சொல்லோடு ஈத்தளித்தல்:**

"ஈயுநர் இன்மொழிக் கம்பலும்."
"இன்னுரை அமிழ்தமொடு மன்னவன் ஈத்து."

(**பெருங்.** 2. 2: 75, 4. 3: 31.)

"............இனிய கூறல்
மெய்சொலல் வழங்கல்." (**கம்ப.** அரசியல். 31.)

2. **முற்றும்:**

"இனிய சொல்லினன் ஈகையன் எண்ணினன்...
அனைய மன்னற் கழிவும்உண் டாங்கொலோ."

(**கம்ப.** மந்தரை. 18.) (387)

## 388

**முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்**
**கிறைஎன்று வைக்கப் படும். 8**

**பரிமேலழகர்:** முறைசெய்து காப்பு ஆற்றும் மன்னவன் - தான் முறை செய்து பிறர் நலியாமல் காத்தலையும் செய்யும் அரசன், மக்கட்கு இறை என்று வைக்கப்படும் - பிறப்பான் மகனே ஆயினும், செயலான் மக்கட்குக் கடவுள் என்று வேறு வைக்கப்படும்.

முறை - அற நூலும் நீதி நூலும் சொல்லும் நெறி. பிறர் என்றது, மேற்சொல்லியாரை.[1] வேறு வைத்தல், மக்களிற் பிரித்து உயர்த்து வைத்தல்.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** மக்கட்கு இறை - மனிதர்க்கு நாயகன்.

1. பகைவர், கள்வர், சுற்றத்தார், வினை செய்வார் முதலாயினர். (**குறள்**, 385, உரை.)

**பரிதியார்:** மக்கட்கு இறை - உலகத்தை இரட்சிக்கிற பரமேசுவரன்.

### ஒப்புமை

**முறை செய்தல்:**

"அரசுமுறை செய்க." (ஐங். 8: 2.) (388)

### 389

**செவிகைப்பச் சொல்பொறுக்கும் பண்புடை வேந்தன்**
**கவிகைக்கீழ்த் தங்கும் உலகு.** 9

**பரிமேலழகர்:** சொல் செவி கைப்ப பொறுக்கும் பண்பு உடை வேந்தன் - இடிக்கும் துணையாயினர்[1] சொற்களைத் தன் செவி பொறாதாகவும் விளைவு நோக்கிப் பொறுக்கும் பண்புடைய அரசனது, கவிகைக்கீழ் தங்கும் உலகு - குடைநிழற்கண்ணே தங்கும் உலகம்.

செவி கைப்ப என்றதற்கு ஏற்ப, இடிக்கும் துணையார் என்பது வருவிக்கப்பட்டது. நாவின் புலத்தைச் செவிமேல் ஏற்றிக் கைப்ப என்றார். பண்புடைமை - விசேட உணர்வினன் ஆதல். அற நீதிகளில் தவறாமையின் மண்முழுதும் தானே ஆளும் என்பதாம்.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** தன் செவி வெறுக்கும்படியாகப் பிறர் செய்த குற்றங்களைக் கேட்டு வைத்தும், அதனைப் பொறுக்கவல்ல குணமுடைய வேந்தனது குடைக்கீழே உலகு தங்கும்.

சொற்பொறுக்கும் என்பதற்குப் புரோகிதர் தன்னிடத்துச் சொல்லும் சொற்களைப் பொறுக்க வல்ல என்பாரும் உளர்.

**பரிப்பெருமாள்:** வேறு ஒரு நிழல் தேடாது என்று ஆயிற்று. இஃது அமாத்தியர் குற்றம் செய்தார் என்று பலரும் சொல்லுங்கால், பலவாற்றானும் பொறுக்க வேண்டும் என்றது.

**பரிதியார்:** பொறுத்தற்கரிய சொல்லைக் குடியான பேர் வாசலிற் பதினெட்டுப் பேர் சொன்னாலும் குற்றம் பாராட்டாமல் பொறுப்பான் குடைநிழலிலே இராச்சியம் அடங்கும்.

**காளிங்கர்:** நெறி அல்ல செய்வோர் ஆகிய மறமக்களும், கொடுங்கோன்மை செய்வோர் ஆகிய மற மன்னரும் தனது செவிகைப்பச் சொல்லுவன எல்லாம் வரையாது பொறுத்து ஒழுகும் மரபுடை மன்னவன். (389)

### 390

**கொடைஅளி செங்கோல் குடிஓம்பல் நான்கும்**
**உடையானாம் வேந்தர்க் கொளி.** 10

**பரிமேலழகர்:** கொடை - வேண்டுவார்க்கு வேண்டுவன கொடுத்தலும், அளி - யாவர்க்கும் தலையளி செய்தலும், செங்கோல் - முறை செய்தலும், குடி ஓம்பல் - தளர்ந்த குடிகளைப் பேணலும் ஆகிய, நான்கும் உடையான் - இந்நான்கு செயலையும் உடையவன், வேந்தர்க்கு ஒளி ஆம் - வேந்தர்க்கு எல்லாம் விளக்காம்.

---

1. குறள், 447.

தலையளி, முகமலர்ந்து இனியவை கூறல். செவ்விய கோல் போறலின், செங்கோல் எனப்பட்டது, குடியோம்பல் என எடுத்துக் கூறினமையால் தளர்ச்சி பெற்றும்; அஃதாவது ஆறில் ஒன்றாய பொருள்தன்னையும் வறுமை நீங்கியவழிக் கொள்ளல் வேண்டின் அவ்வாறு கோடலும், இழத்தல் வேண்டின் இழத்தலுமாம். சாதி முழுதும் விளக்கலின் விளக்கு என்றார். ஒளி: ஆகுபெயர்,

இவை ஐந்து பாட்டானும் மாட்சியும் பயனும் உடன்கூறப்பட்டன.

**உரை வேறுபாடு**

**பரிதியார்:** வேந்தர்க்கு ஒளி - இராச சூரியன்.

**ஒப்புமை**

***அரசன் குடியோம்பல்:***

"சாலக் குடியோம்பல் வல்லான் அரசன்." (திரி. 13.) (390)

---

# 40. கல்வி

**பரிமேலழகர்:** அஃதாவது அவ்வரசன் தான் கற்றற்குரிய நூல்களைக் கற்றல். அவையாவன அற நூலும், நீதி நூலும், யானை குதிரை தேர் படைக்கலம் என்ற இவற்றின் நூல்களும் முதலாயின. அரசன் அறிவுடையன் ஆயக்கால் தன் உயிர்க்கே அன்றி மன்னுயிர்க்கும் பயன்படுதல் நோக்கி இஃது அரசியலுள் வைக்கப்பட்டதாயினும், யாவர்க்கும் உறுதி பயத்தற் சிறப்புடைமையின் பொதுப்படக் கூறுகின்றார். மேல், "தூங்காமை கல்வி"[1] எனத் தோற்றுவாய் செய்த மாட்சியை விரித்துக் கூறுகின்றமையின் இஃது இறைமாட்சியின்பின் வைக்கப்பட்டது.

**மணக்குடவர்:** கல்வியாவது, கல்வியாமாறும் அதனினாகிய பயனும் கூறுதல். இது முதலாகப் பொருள்வரவு இயற்றும் திறம் கூறுகின்றார் ஆதலின், அஃது இயற்றுங்கால் கல்வி முந்துற வேண்டும்; அதனால், இது முன் கூறப்பட்டது.

**பரிதியார்:** கல்வியாவது அரசற்கு மனு சாஸ்திரம் மந்திர சாஸ்திரம் தொண்ணூற்றெட்டு ஆயுதக் கல்வி வேணும்.

### 391

**கற்க கசடறக் கற்பவை கற்றபின்**
**நிற்க அதற்குத் தக. 1**

**பரிமேலழகர்:** கற்பவை கசடு அற கற்க - ஒருவன் கற்கப்படும் நூல்களைப் பழுதறக் கற்க; கற்றபின் அதற்கு தக நிற்க - அங்ஙனம் கற்றால் அக் கல்விக்குத் தக அவை சொல்லுகின்ற நெறிக்கண்ணே நிற்க.

கற்பவை என்றதனான், அறம் பொருள் இன்பம் வீடு என்னும் உறுதிப் பொருள் உணர்த்துவன அன்றிப் பிற பொருள் உணர்த்துவன சின்னாட் பல் பிணிச் சிற்றறிவினர்க்கு ஆகா என்பது பெற்றாம். கசடறக் கற்றலாவது விபரீத ஐயங்களை நீக்கி, மெய்ப்பொருளை நல்லோர் பலருடனும் பலகாலும் பயிறல். நிற்றலாவது இல்வாழ்வு, "கருமமும் உள்படாப் போகமும் துவ்

1. குறள், 383.

வாத், தருமமும் தக்கார்க்கே செய்'''தலினும், துறந்துழித் தவத்தான் மெய் யுணர்ந்து அவா அறுத்தலினும் வழுவாமை.

சிறப்புடை மகற்காயின் கற்றல் வேண்டும் என்பதூஉம், அவனல் கற்கப்படும் நூல்களும், அவற்றைக் கற்குமாறும், கற்றதனற் பயனும் இதனல் கூறப்பட்டன.

### ஒப்புமை

*1. கற்க கற்பவை:*

"கல்வி கரையில கற்பவர் நாள்சில
மெல்ல நினைப்பிற் பிணிபல—தெள்ளிதின்
ஆராய்ந் தமைவுடைய கற்பவே நீரொழியப்
பாலுண் குருகிற் றெரிந்து." (நாலடி. 135.)

*2. முற்றும்:*

"எப்பிறப் பாயினும் ஏமாப் பொருவற்கு
மக்கட் பிறப்பில் பிறிதில்லை—அப்பிறப்பில்
கற்றலும் கற்றவை கேட்டலும் கேட்டதன்கண்
நிற்றலும் கூடப் பெறின்." (அறநெறி. 141.) (391)

## 392

**எண்என்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்என்ப வாழும் உயிர்க்கு. 2**

**பரிமேலழகர்:** எண் என்ப ஏனை எழுத்து என்ப இவ்விரண்டும் - அறியாதார் எண் என்று சொல்லுவனவும் மற்றை எழுத்து என்று சொல்லுவனவும் ஆகிய கலைகள் இரண்டினையும், வாழும் உயிர்க்கு கண் என்ப - அறிந்தார் சிறப்புடை உயிர்கட்குக் கண் என்று சொல்லுவர்.

எண் என்பது கணிதம். அது கருவியும் செய்கையும் என இருவகைப் படும். அவை ஏரம்பம் முதலிய நூல்களுட் காண்க. எழுத்தெனவே, அத னேடு ஒற்றுமையுடைய சொல்லும் அடங்கிற்று. இவ் விருதிறமும், அறம் முதற் பொருள்களைக் காண்டற்குக் கருவியாகலின், கண் எனப்பட்டன. அவை கருவியாதல்,

"ஆதி முதலொழிய அல்லா தனஎண்ணி
நீதி வழுவா நிலைமையவான்—மாதே
அறமார் பொருளின்பம் வீடென் றிவற்றின்
திறமாமோ எண்ணிறந்தாற் செப்பு"

"எழுத்தறியத் தீரும் இழிதகைமை தீர்ந்தான்
மொழித்திறத்தின் முட்டறுப்பா னாகும்—மொழித்திறத்தின்
முட்டறுத்த நல்லோன் முதனூற் பொருளுணர்ந்து
கட்டறுத்து வீடு பெறும்"

இவற்ருன் அறிக. என்ப என்பவற்றுள் முன்னைய இரண்டும் அஃறிணைப் பன்மைப் பெயர்; பின்னது உயர்திணைப் பன்மை வினை. அறியாதார் அறிந் தார் என்பன வருவிக்கப்பட்டன. சிறப்புடை உயிர் என்றது மக்கள் உயிருள் ளும் உணர்வு மிகுதி உடையதனை.

இதனல் கற்கப்படும் நூல்கட்குக் கருவியாவனவும், அவற்றது இன்றி யமையாமையும் கூறப்பட்டன.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** வாழும் உயிர்க்கு - உலகின்கண் வாழும் உயிர்களுக்கு.

1. நாலடியார், 250.

பரிதியார்: எழுத்து - எழுத்து முதலாகிய அஞ்சு லட்சணமும்.

காளிங்கர்: எண் என்றது இருமை இன்பமும் தமது உள்ளத்தால் தெரிந்து பிரித்து எண்ணிக் கொள்வது. எழுத்து என்றது தாம் கற்கும் கல்விக்குத் துணையுறுப்பாகிய எழுத்து என்று ஆயிற்று. மற்று இவ் வாறன்றிக் கணக்கு நிலை ஆகிய சிற்றெண்ணும், பேரெண்ணும், நிறை எண்ணும், நிலவெண்ணும், பிறவும் ஆகிய நுண்குறி எண் என்றும், மற்று இவற்றின் அறிகுறி எழுத்தாய் அடிப்பட வருகின்ற தொகை விரி எழுத்தும் என்றும் இவை இரண்டும் கண் என்ப வாழும் உயிர்க்கு எனலுமாம்.

கவிராஜ பண்டிதர்: கண் என்ப - எண்ணும் எழுத்தும் முதற் பொருளாகிய பரப்பிரமத்தைக் காக்கிறதற்கு வழியானபடியினாலே கண் களென்று சொல்லப்பட்டன.

### மேற்கோள் விளக்கம்

எழுத்து என்பதற்கு இயற்றமிழ் என்று உரை கூறி இதனை மேற் கோள் காட்டுவர் சிவஞான முனிவர். (தொல். பாயிரவிருத்தி.)

### ஒப்புமை

1. எண்ணும் எழுத்தும்:

"எண்ணும் எழுத்தும் குறியும் அறிபவர்" (அப்பர். வேதிகுடி, 6.)

"அண்ணலும் நூலும் பொருளும் நிகழ்வும் இவைஎனலும்
எண்ணினும் ஏனை எழுத்தினும் மிக்காங் கிருந்தவர்."
(நீலகேசி, 679.)

2. முற்றும்:

"கண்ணுங்காற் கண்ணும் கணிதம் எழுத்து" (சிறுபஞ்ச. 93.)

"கண்ணெனப் படுவ மூன்று காவலன் கல்வி காமர்
விண்ணினைச் சுழல ஓடும் வெய்யவன் என்னும் பேர்."
(சூளா. மந்திர. 30.) (392)

## 393

**கண்உடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்உடையர் கல்லா தவர். 3**

பரிமேலழகர்: கண் உடையர் என்பவர் கற்றோர் - கண்ணுடையர் என்று உயர்த்துச் சொல்லப்படுவார் கற்றவரே; கல்லாதவர் முகத்து இரண்டு புண் உடையர் - மற்றைக் கல்லாதவர் முகத்தின்கண் இரண்டு புண் உடையர்; கண் இலர்.

தேயம் இடையிட்டவற்றையும், காலம் இடையிட்டவற்றையும் காணும் ஞானக்கண் உடைமையின் கற்றாரைக் கண்ணுடையர் என்றும், அஃதின்றி நோய் முதலியவற்றான் துன்பம் செய்யும் ஊனக்கண்ணே உடைமையின் கல்லாதவரைப் புண்ணுடையர் என்றும் கூறினர். மேல் கண் அன்மை உணர நின்ற ஊனக்கண்ணின் மெய்ம்மை கூறியவாற்றான், பொருள் நூல்களையும் கருவி நூல்களையும் கற்றாரது உயர்வும், கல்லாதாரது இழிவும் இதனால் தொகுத்துக் கூறப்பட்டன.

### ஒப்புமை

1. கண் புண்ணாதல்:

"கண்ணிற் கணிகலம் கண்ணோட்டம் அஃதின்றேற்
புண்ணென் றுணரப் படும்." (குறள், 575.)

2. கண்ணுடையர் என்பவர் கற்றோர்:

"கல்லாது முதிர்ந்தவன் கண்ணில்லா நெஞ்சம்." (கலி. 130: 6.)

"கண்ணில்புன் மாக்கள்." (நாலடி. 44.)

"கைப்பொருள் கொடுத்தும் கற்றல் கற்றபின் கண்ணும் ஆகும்."
(சீவக. 1595.) (393)

### 394

உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில். 4

**பரிமேலழகர்:** உவப்ப தலைக்கூடி உள்ள பிரிதல் அனைத்தே - யாவரையும் அவர் உவக்குமாறு தலைப்பெய்து இனி இவரை யாம் எங்ஙனம் கூடுதும் என நினையுமாறு நீங்குதலாகிய அத் தன்மைத்து, புலவர் தொழில் - கற்றறிந்தாரது தொழில்.

தாம் நல்வழி ஒழுகல், பிறர்க்கு உறுதி கூறல் என்பன இரண்டும் தொழில் என ஒன்றாய் அடங்குதலின், அத்தன்மைத்து என்றார். அத்தன்மை, அப் பயனைத் தரும் தன்மை. நல்லொழுக்கம் காண்டலானும், தமக்கு மதுரமும் உறுதியுமாய கூற்றுக்கண் நிகழ்வு எதிர்வுகளின் இன்பம் பயத்தலானும் கற்றார்மாட்டு எல்லாரும் அன்புடையர் ஆவர் என்பதாம்.

இதனால் கற்றாரது உயர்வு வகுத்துக் கூறப்பட்டது.

#### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** மக்கள் இருவர் உவக்குமாறு கூடி, அவர் நினைக்குமாறு பிரிதல்போலும் கற்றோர் செய்யும் தொழில்.

இஃது இன்பம் நுகரினும், வினை செய்யினும் தமக்கும் பிறர்க்கும் இன்பம் பயக்கச் செய்தல் கல்வியாலாம் என்றது.

**பரிதியார்:** நல்லோரும் நல்லோரும் மனப்பூர்வமாகக் கூடியிருந்து பிரிகிறபோது, ஒருவரை ஒருவர் அனவரத காலமும் நினைந்திருப்பர்; அது போல, கற்கும்போதும் பிரியத்துடனே கற்க; கற்று விட்டால் கற்ற கல்வியை மறவாது அதிகரிக்க.

**கவிராஜ பண்டிதர்:** எல்லாரும் வந்து தன்னைச் சேருமாறு தயை பண்ணி அவர்கள் பிரிந்து போகிறோமென்றால் இனி அவர்களை எங்கே காணப் போகிறோம் என்று நினைத்து விசாரப்படுகிறதே வித்துவான்கள் தொழில்.

#### ஒப்புமை

உவப்பத் தலைக்கூடுதல்:

"தவலரும் தொல்கேள்வித் தன்மை யுடையார்
இகலிலர் எஃகுடையார் தம்முட் குழீஇ
நகலின் இனிதாயிற் காண்பாம் அகல்வானத்
தும்பர் உறைவார் பதி." (நாலடி. 137.) (394)

### 395

உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றும் கற்றார்
கடையரே கல்லா தவர். 5

**பரிமேலழகர்** : உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றும் கற்ருர் - "பிற்றைநிலை முனியாது கற்றல் நன்று"[1] ஆதலான், செல்வர்முன் நல்கூர்ந் தார் நிற்குமாறு போலத் தாமும் ஆசிரியர்முன் ஏக்கற்று நின்றும் கற்ருர் தலையாயினர்; கல்லாதவர் கடையரே - அந் நிலைக்கு நாணிக் கல்லாதவர் எஞ் ஞான்றும் இழிந்தாரே ஆவர்.

உடையார் இல்லார் என்பன உலக வழக்கு. ஏக்கறுதல் - ஆசையால் தாழ்தல். கடையர் என்றதனன் அதன் மறுதலைப் பெயர் வருவிக்கப் பட்டது. பொய்யாய மானம் நோக்கி மெய்யாய கல்வி இழந்தார் பின் ஒரு ஞான்றும் அறிவுடையர் ஆகாமையின், கடையரே என்ருர்.

இதனல் கற்ருரது உயர்வும் கல்லாதாரது இழிவும் கூறப்பட்டன. (395)

## 396

**தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்**
**கற்றனைத் தூறும் அறிவு.** 6

**பரிமேலழகர்** : மணல் கேணி தொட்டனைத்து ஊறும் - மணலின்கட் கேணி தோண்டிய அளவிற்ருக ஊறும்; மாந்தர்க்கு அறிவு கற்றனைத்து ஊறும் - அதுபோல மக்கட்கு அறிவு கற்ற அளவிற்ருக ஊறும்.

ஈண்டுக் கேணி என்றது அதன்கண் நீரை. அளவிற்ருக என்றது, அதனளவும் செல்ல என்றவாறு. சிறிது கற்ற துணையான் அமையாது மேன்மேல் கற்றல் வேண்டும் என்பதாம். இஃது ஊழ் மாறுகொள்ளா வழி யாகலின், மேல், "உண்மை அறிவே மிகும்"[2] என்றதனேடு மலையாமை அறிக.

### மேற்கோள் விளக்கம்

தொட்டது கற்றது என்பன தொட்டு, கற்று என்று வந்து செய் யுள் விகாரமாயின என்பர். (நன். 155, சங்கர.)

### ஒப்புமை

**கற்றனைத் தூறும் அறிவு:**

"நூல்வரைத் தொடர்ந்து பயத்தொடும் பழகி
நுணங்கிய நுவலரும் உணர்வே." (கம்ப. நகரப். 8.) (396)

## 397

**யாதானும் நாடாமால் ஊராமால் என்ஒருவன்**
**சாந்துணையும் கல்லாத வாறு.** 7

**பரிமேலழகர்** : யாதானும் நாடு ஆம் ஊர் ஆம் - கற்றவனுக்குத் தன் நாடும் ஊருமேயன்றி யாதானும் ஒரு நாடும் நாடாம்; யாதானும் ஓர் ஊரும் ஊராம்; ஒருவன் சாம் துணையும் கல்லாதவாறு என் - இங்ஙனமாயின் ஒருவன் தான் இறக்குமளவும் கல்லாது கழிகின்றது என் கருதி?

உயிரோடு சேறலின் சாந்துணையும் என்ருர்[3]. பிறர் நாடுகளும் ஊர் களும் தமபோல் உற்றுப் பொருட்கொடையும் பூசையும் உவந்து செய்தற்கு ஏதுவாகலின் கல்விபோலச் சிறந்தது பிறிதில்லை; அதனையே எப்பொழுதும் செய்க என்பதாம்.

---

1. புறநா. 183: 2.
2. குறள், 373.
3. குறள், 398; 'உயிரோடு செல்லும் கல்வியுயர்ச்சி' (குறள், 409, உரை.)

### உரை வேறுபாடு

**பரிதியார்:** ஊர் ஆமால் - மாலூராகிய வைகுண்டப்பதம் மறுமைக்காம்.

### ஒப்புமை

**கற்றோர்க்கு யாதானும் நாடும் ஊரும் ஆதல்:**

"யாதும் ஊரே யாவரும் கேளிர்"
"மரங்கொல் தச்சன் கைவல் சிறார்
மழுவுடைக் காட்டகத் தற்றே
எத்திசைச் செலினும் அத்திசைச் சோறே"
(புறநா. 192:1, 206 : 11-3.)

"ஆற்றவும் கற்றார் அறிவுடையார் அஃதுடையார்
நாற்றிசையும் செல்லாத நாடில்லை அந்நாடு
வேற்றுநா டாகா தமவேயாம் ஆயினல்
ஆற்றுணா வேண்டுவ தில்." (பழமொழி, 55.) (397)

## 398

**ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்
கெழுமையும் ஏமாப் புடைத்து.** 8

**பரிமேலழகர்:** ஒருவற்கு – ஒருவனுக்கு, தான் ஒருமைக்கண் கற்ற கல்வி - தான் ஒரு பிறப்பின்கண் கற்ற கல்வி, எழுமையும் ஏமாப்பு உடைத்து - ஏழு பிறப்பினும் சென்று உதவுதலை உடைத்து.

வினைகள் போல உயிரின்கட் கிடந்து அது புக்குழிப் புகுமாகலின், எழுமையும் ஏமாப்புடைத்து என்றார். எழுமை மேலே[1] கூறப்பட்டது,

### உரை வேறுபாடு

**காளிங்கர் :** ஒரு பிறப்பின்கண் நல்வழிக்கு உரிய கல்விகளைத் தன் நெஞ்சத்து ஒருப்பாட்டுடனே தான் கற்ற கல்வியானது, அங்ஙனம் கற்ற இணையிறந்த இறைவற்கு, இம்மைக்கண் உளதாய நீதிப் பொருளாகிய இன்ப உறுதியே அன்றிப் பின்பு நிகழும் மறுமையாகிய இனிய சேம உறுதியை உடைத்து.

### ஒப்புமை

**எழுமையும் ஏமாப் புடைத்து:** குறள், 126. (398)

## 399

**தாம்இன் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்.** 9

**பரிமேலழகர்:** தாம் இன்புறுவது உலகு இன்புற கண்டு - தாம் இன்புறுதற்கு ஏதுவாகிய கல்விக்கு உலகம் இன்புறுதலால் அச் சிறப்பு நோக்கி, கற்று அறிந்தார் காமுறுவர் - கற்றறிந்தார் பின்னும் அதனையே விரும்புவர்.

தாம் இன்புறுதலாவது, நிகழ்வின்கண் சொற்பொருள்களின் சுவை நுகர்வானும், புகழ்பொருள் பூசை பெறுதலானும், எதிர்வின்கண் அறம் வீடு பயத்தலானும் அதனன் இடையறாத இன்பம் எய்தல். உலகு இன்புறுதலாவது, இம் மிக்காரோடு தலைப்பெய்து அறியாதன எல்லாம் அறியப் பெற்றேம்

1. குறள், 62, உரை.

என்றும், "யாண்டுபல வாக நரையிலம்"[1] ஆயினேம் என்றும் உவத்தல். செல்வமாயின், ஈட்டல் காத்தல் இழத்தல் என்றிவற்றால் துன்புறுதலும் பலரையும் பகையாக்கலும் உடைத்து என அறிந்து அதனைக் காமுறுமையின் கற்றறிந்தார் என்றும், கரும்பு அயிறற்குக் கூலிபோலத்[2] தாம் இன்புறுதற்கு உலகு இன்புறுதல் பிறவாற்றான் இன்மையின் அதனையே காமுறுவர் என்றும் கூறினர்.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** தாம் இனிதாக நுகர்வதொன்றை உலகத்தார் நுகர்ந்து இன்புறுவாராகக் கண்டால் அதற்கு இன்புறுவர் கற்றறிந்தவர்.[3]

இஃது அழுக்காறு செய்யாது இன்புறுதல் அறமாதலின் அது, கல்வி யானே வரும் என்றது. *(399)*

## 400

**கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு**
**மாடல்ல மற்றை யவை.** 10

**பரிமேலழகர்:** ஒருவற்கு கேடு இல் விழு செல்வம் கல்வி - ஒருவனுக்கு அழிவு இல்லாத சீரிய செல்வமாவது கல்வி; மற்றையவை மாடு அல்ல-அஃது ஒழிந்த மணியும் பொன்னும் முதலாயின செல்வம் அல்ல.

அழிவின்மையாவது தாயத்தார், கள்வர், வலியர், அரசர் என்றிவ ரால் கொள்ளப்படாமையும், வழிபட்டார்க்குக் கொடுத்துழிக் குறையாமை யும் ஆம்.[4] சீர்மை, தக்கார் கண்ணே நிற்றல். மணி பொன் முதலியவற்றிற்கு இவ்விரண்டும் இன்மையின், அவற்றை மாடல்ல என்றார்.

இவை ஐந்து பாட்டானும் கல்வியது சிறப்புக் கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**பரிதியார்:** மாடல்ல மற்றை யவை - அழிஞ்சுபோகிற செல்வம் செல்வம் அல்ல.

### ஒப்புமை

**முற்றும்:**

"கைப்பொருள் கொடுத்தும் கற்றல் கற்றபின் கண்ணு மாகும்
மெய்ப்பொருள் விளக்கும் நெஞ்சின் மெலிவிற்கோர் துணையு மாகும்
பொய்ப்பொருள் பிறகள் பொன்னும் புகழுமாம் துணைவி யாக்கும்
இப்பொருள் எய்தி நின்றீர் இரங்குவ தென்னை யென்றான்."

(சீவக. *1595*.) *(400)*

---

# 41. கல்லாமை

**பரிமேலழகர்:** அஃதாவது கற்றலைச் செய்யாமை; என்றது அதனினாய இழிபினை. கல்விச்சிறப்பு மேல் விதிமுகத்தால் கூறிய துணை

---

1. **புறநா.** 191 : 1.
2. 'கரும்பு தின்னக் கூலி கொடுத்தது போல' (**பழமொழி.**)
3. "நான் பெற்ற இன்பம் பெறுகஇவ் வையகம்" (**திருமந்.** 85.)
4. "வைப்புழிக் கோட்படா வாய்த்தீயிற் கேடில்லை, மிக்க சிறப்பின் அரசர் செறின்வவ்வார்." (**நாலடி.** 134.)

யான் முற்றுப் பெருமை நோக்கி, எதிர்மறை முகத்தானும் கூறுகின்றது ஆகலின், இது கல்வியின்பின் வைக்கப்பட்டது.

## 401

அரங்கின்றி வட்டாடி அற்றே நிரம்பிய
நூல்இன்றிக் கோட்டி கொளல். 1

**பரிமேலழகர்:** அரங்கு இன்றி வட்டு ஆடி அற்று - அரங்கினை இழையாது வட்டாடினாற்போலும், நிரம்பிய நூல் இன்றி கோட்டி கொளல் - தான் நிரம்புவதற்கு ஏதுவாகிய நூல்களைக் கல்லாது ஒருவன் அவையின் கண் ஒன்றனைச் சொல்லுதல்.

அரங்கு - வகுத்த தானம். வட்டு ஆடல் - உண்டை உருட்டல். இவை, "கட்டளை யன்ன வட்டரங்கு இழைத்துக், கல்லாச் சிறுஅர் நெல்லிவட்டாடும்"[1] என்பதனான் அறிக. நிரம்புதல் - அறிய வேண்டுவன எல்லாம் அறிதல். கோட்டி என்பது ஈண்டு ஆகுபெயர், "புல்லா எழுத்திற் பொருள் இல் வறுங்கோட்டி"[2] என்புழிப்போல.

சொல்லும் பொருளும் நெறிப்படா என்பதாம்.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** அரங்கு - கொம்மை (சூது.)

**பரிதியார்:** அரங்கின்றி வட்டு ஆடி அற்று - சதுரங்கக் கோடு இல்லாமல் சதுரங்கம் ஆடுவோம் என்பதற்கு ஒக்கும். கோட்டி கொளல் - ஆஸ்தானத்தைப் பிரியப்படுத்துவோம் என்பது.

**கவிராஜ பண்டிதர்:** அரங்கின்றி வட்டாடி அற்று - ஒருவன் எல்லை குறியாமல் செண்டாடினாற் போலும்.

### ஒப்புமை

1. **வட்டாடுதல்:**

"வல்லான் ஆடிய மணிவட்டு." (சீவக. 983.)

2. **நிரம்பிய நூல் இன்றிக் கோட்டி கொளல்:**

"இன்னா, கல்லாதான் கோட்டி கொளல்." (இன்னா. 29.)

3. **கோட்டி கொளல்:** குறள், 720. (401)

## 402

கல்லாதான் சொல்கா முறுதல் முலைஇரண்டும்
இல்லாதாள் பெண்காமுற் றற்று. 2

**பரிமேலழகர்:** கல்லாதான் சொல் காமுறுதல் - கல்விஇல்லாதான் ஒருவன் அவையின்கண் ஒன்று சொல்லுதலை அவாவுதல், முலை இரண்டும் இல்லாதாள் பெண் காமுற்றற்று - இயல்பாகவே முலை இரண்டும் இல்லாதாள் ஒருத்தி பெண்மையை அவாவினாற் போலும்.

---

1. நற். 3: 3-4.
2. நாலடி. 155.

"இனைத்தென அறிந்த சினை"[1] ஆகலின், தொகையொடு முற்றும்மை கொடுத்தார். சிறிதும் இல்லாதாள் என்பதாம். அவாவியவழிக் கடை போகாது, போகினும் நகை விளைக்கும் என்பதாயிற்று.

### உரை வேறுபாடு

**காளிங்கர்:** பெண் காமுற்றற்று - மற்று அம்முலை வனப்புறாஉம் திருவுடையாட்டியது பெண்மை கொண்டு இன்புறுதற்குத் தானும் காதலித்த அத் தன்மைத்து.

### ஒப்புமை

**நகில் இல்லாதாள் பெண்மை விரும்புதல்:**
"இன்னா முலையில்லாள் பெண்மை விழைவு." (இன்னா. 13.) (402)

## 403

கல்லா தவரும் நனிநல்லர் கற்றார்முன்
சொல்லா திருக்கப் பெறின். 3

**பரிமேலழகர்:** கல்லாதவரும் நனி நல்லர் - கல்லாதாரும் மிக நல்லராவர், கற்றார்முன் சொல்லாது இருக்க பெறின் - தாமே தம்மை அறிந்து கற்றார் அவையின்கண் ஒன்றனையும் சொல்லாதிருத்தல் கூடுமாயின்.

உம்மை, இழிவு சிறப்பு உம்மை. தம்மைத் தாம் அறியாமையின் அது கூடாது என்பார் பெறின் என்றும், கூடின் ஆண்டுத் தம்மை வெளிப்படுத்தாமையானும், பின் கல்வியை விரும்புவராகலானும் 'நனி நல்லர்' என்றும் கூறினர்.

இவை மூன்று பாட்டானும் கல்லாதார் அவைக்கண் சொல்லுதற்கு உரியரன்மை கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** இது, கல்லாதார்க்கு உபாயம் இது என்றது. (403)

## 404

கல்லாதான் ஒட்பம் கழியநன் றாயினும்
கொள்ளார் அறிவுடை யார். 4

**பரிமேலழகர்:** கல்லாதான் ஒட்பம் கழிய நன்று ஆயினும் - கல்லாதவனது ஒண்மை ஒரோவழி மிக நன்றாயிருப்பினும், அறிவு உடையார் கொள்ளார் - அறிவுடையார் அதனை ஒண்மையாகக் கொள்ளார்.

ஒண்மை, அறிவுடைமை. அது நன்றாகாது; ஆயிற்றாயினும் ஏரலெழுத்துப்[2] போல்வதோர் விழுக்காடு ஆகலின், நிலை பெற்ற நூல் அறிவுடையார் அதனை மதியார் என்பதாம்.

### உரை வேறுபாடு

**பரிதியார்:** கல்லாதவன் வயதால் பெரியவனாகிலும் அறிவுடையார் கொள்ளார்கள்.

---

1. "இனைத்தென அறிந்த சினைமுதற் கிளவிக்கு, வினைப்படு தொகுதியின் உம்மை வேண்டும்." (தொல். கிளவி. 33.)

2. ஏரலெழுத்து-நத்தை ஊரும்போது உண்டாகும் வரி வடிவு; "ஆகுமோ நந்துழுத வெல்லாம் கணக்கு." (பழமொழி, 245.)

**காளிங்கர்:** கொள்ளார் - அதனை ஓர் அறிவாகக் கைக்கொள்ளார்.

**கவிராஜ பண்டிதர்:** கல்வி இல்லாதவனுடைய உறவு நன்றாயிருந்தாலும் அறிவுடையார் அவனுடனே சிநேகம் பண்ணார்கள். கல்வியில்லாதவனுக்கு நுண்மையான அறிவு இல்லையான படியினாலே, அறிவுடையவர்கள் அறிவில்லாதவனுடனே சிநேகம் பண்ணார்.

### ஒப்புமை

**முற்றும்:**

''அறிவில்லான் மெய்த்தலைப் பாடு பிறிதில்லை
நாவற்கீழ்ப் பெற்ற கனி.''
''கல்லாதான் கண்ட கழிநுட்பம் காட்டரிதால்.''
(பழமொழி, 138, 367.)

''கல்லாதான் தான்காணும் நுட்பமும்...
நல்லார்கள் கேட்பின் நகை.'' (சிறுபஞ்ச. 4.) (404)

## 405

**கல்லா ஒருவன் தகைமை தலைப்பெய்து**
**சொல்லாடச் சோர்வு படும். 5**

**பரிமேலழகர்:** கல்லா ஒருவன் தகைமை - நூல்களைக் கல்லாத ஒருவன் அறிவுடையேன் எனத் தன்னை மதிக்கும் மதிப்பு, தலைப்பெய்து சொல் ஆட சோர்வு படும் - அவற்றைக் கற்றவன் கண்டு உரையாடக் கெடும்.

'கற்றவன்' என்பது வருவிக்கப்பட்டது. யாதானும் ஓர் வார்த்தை சொல்லும் துணையுமே நிற்பது, சொல்லிய வழி வழுப்படுதலின், அழிந்துவிடும் என்பதாம்.

இவை இரண்டு பாட்டானும் கல்லாதாரது இயற்கை அறிவின் குற்றம் கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** தகைமை - பெருமை.

**பரிதியார்:** தலைப்பெய்து சொல் ஆட - களரியேறி வார்த்தை சொல்ல.

**காளிங்கர்:** தனது செல்வத் தகைமையும் பிறவும் கொண்டு என்ன பயன்? தலைப் பெய்து - கற்றுவல்ல சான்றோருழைச் சென்று.

### ஒப்புமை

**முற்றும்:**

''கல்லாதான் கண்ட கழிநுட்பம் கற்றார்முன்
சொல்லுங்கால் சோர்வு படுதலால்.'' (பழமொழி, 2.)

''அயர்வில் கேள்விசால் அறிஞர் வேலைமுன்
பயில்வில் கல்வியார் பொலிவில் பான்மைபோல்.''
(கம்ப. மராமர. 70.) (405)

## 406

உளர்என்னும் மாத்திரையர் அல்லால் பயவாக்
களர்அனையர் கல்லா தவர். 6

**பரிமேலழகர்**: கல்லாதவர் - கல்லாதவர், உளர் என்னும் மாத்திரையர் அல்லால் - காணப்படுதலான் இலர் அல்லர் உளர் என்று சிலர் சொல்லும் அளவினர் ஆதல் அன்றி, பயவா களர் அனையர் - தமக்கும் பிறர்க்கும் பயன்படாமையால் விளையாத களர் நிலத்தோடு ஒப்பர்.

களர் தானும் பேணற்பாடு அழிந்து உயிர்கட்கும் உணவு முதலிய உதவாதது போலத் தாமும் நன்குமதிக்கற்பாடு அழிந்து பிறர்க்கும் அறிவு முதலிய உதவார் என்பதாம்.

இதனால் கல்லாதாரது பயன்படாமை கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**பரிதியார்**: கல்வி இல்லாதார் செல்வம் பெற்றார்களாகில், பெருமை பெறுவர்; அது எப்படி என்றால் விளை நிலத்தின் முன்னே உவர்நிலம் போல.

**காளிங்கர்**: உளர் என்னும் மாத்திரையர் - கல்லாதார் வெறும் பிணம் ஆதலன்றிச் சிறிது உயிரோடு நடைபெறுதலை உடையரென்று சொல்லிக்கொள்ளும் அளவன்றி. (406)

## 407

நுண்மாண் நுழைபுலம் இல்லான் எழில்நலம்
மண்மாண் புனைபாவை அற்று. 7

**பரிமேலழகர்**: நுண் மாண் நுழை புலம் இல்லான் எழில் நலம் - நுண்ணிதாய் மாட்சிமைப்பட்டுப் பல நூல்களினும் சென்ற அறிவு இல்லாதவனுடைய எழுச்சியும் அழகும், மண் மாண் புனை பாவை அற்று - சுதையான் மாட்சிமைப்படப் புனைந்த பாவையுடைய எழுச்சியும் அழகும் போலும்.

அறிவிற்கு மாட்சிமையாவது பொருள்களைக் கடிதிற் காண்டலும் மறவாமையும் முதலாயின. பாவை: ஆகுபெயர். "உருவின் மிக்கதோர் உடம்பது பெறுதலும் அரிது"[1] ஆகலான் எழில் நலங்களும் ஒரு பயனே எனினும், நூலறிவு இல்வழிச் சிறப்பில என்பதாம்.

இதனான் அவர் வடிவழகால் பயன் இன்மை கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**காளிங்கர்**: பாவை அற்று - பாவையைப் போல உறுப்பழகு உண்டு; உணர்வழகு இல்லை. நுழைதல் என்பது எஃகுதல்.

**கவிராஜ பண்டிதர்**: புனைபாவை அற்று - மரப்பாவைக்குப் பூட்டின ஆபரணங்கள் போலே யாம்.

### ஒப்புமை

**அறிவில்லானது அழகு பயன்படாமை**:

"குஞ்சி அழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்சள் அழகும் அழகல்ல—நெஞ்சத்து
நல்லம்யாம் என்னும் நடுவு நிலைமையாற்
கல்வி அழகே அழகு." (நாலடி. 131.)

1. சீவக. 2752.

"மயிர்வனப்பும் கண்கவரும் மார்பின் வனப்பும்
உகிர்வனப்பும் காதின் வனப்பும்—செயிர்தீர்ந்த
பல்லின் வனப்பும் வனப்பல்ல நூற்கியைந்த
சொல்லின் வனப்பே வனப்பு." (சிறுபஞ்ச. 36.)

"இடைவனப்பும் தோள்வனப்பும் ஈடின் வனப்பும்
நடைவனப்பும் நாணின் வனப்பும்—புடைசால்
கழுத்தின் வனப்பும் வனப்பல்ல எண்ணோ
டெழுத்தின் வனப்பே வனப்பு." (ஏலாதி, 74.) (407)

## 408

நல்லார்கண் பட்ட வறுமையின் இன்னாதே
கல்லார்கண் பட்ட திரு. 8

**பரிமேலழகர்:** நல்லார்கண் பட்ட வறுமையின் இன்னாது - கற்றார் மாட்டு நின்ற வறுமையினும் இன்னாது, கல்லார்கண் பட்ட திரு - கல்லாதார் மாட்டு நின்ற செல்வம்.

இழிவு சிறப்பும்மை விகாரத்தால் தொக்கது. தம் தம் நிலையின் அன்றி மாறி நிற்றலால் தாம் இடுக்கண் படுதலும் உலகிற்குத் துன்பம் செய்தலும் இரண்டற்கும் ஒக்குமாயினும், திருக் கல்லாரைக் கெடுக்க, நல்லாரைக் கெடாது நிற்றலான், 'வறுமையினும் திரு இன்னாது' என்றார்.

இதனான் அவர் திருவின் குற்றம் கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** நல்லார்மாட்டு உண்டாகிய வறுமை போல, பிறர்க்கு இன்னாமையைச் செய்யும் கல்லாதார்மாட்டு உண்டாய செல்வம்.

இது செல்வம் உண்டாயின், பிறரைத் துன்பமுறுவிப்பர் என்றது.

**பரிதியார்:** நல்லோரிடத்தில் வறுமை மிடைப்படும்; அதுபோலே மிடைப்படும் கல்லாதாரிடத்தில் செல்வம்.

### மேற்கோள் விளக்கம்

தெரிதரு தேற்ற உவமை வந்தது. (தண்டி. 30, உரை.)

### ஒப்புமை

**முற்றும்:**

"மிகப்பேர் எவ்வம் உறினும் எனைத்தும்
உணர்ச்சி இல்லோர் உடைமை உள்ளேம்
நல்லறி வுடையோர் நல்குரவு
உள்ளுதும் பெருமயாம் உவந்துநனி பெரிதே" (புறநா. 197:15-8.)

"எறிநீர்ப் பெருங்கடல் எய்தி இருந்தும்
அறுநீர்ச் சிறுகிணற் றூறல்பார்த் துண்பர்
மறுமை அறியாதான் ஆக்கத்திற் சான்றோர்
கழிநல் குரவே தலை." (நாலடி. 275.)

"சிறியவர் எய்திய செல்வத்தின் மாணப்
பெரியவர் நல்குரவு நன்றே." (பழமொழி, 70.) (408)

## 409

மேற்பிறந்தார் ஆயினும் கல்லாதார் கீழ்ப்பிறந்தும்
கற்ருர் அனைத்திலர் பாடு. 9

**பரிமேலழகர்:** கல்லாதார் மேல் பிறந்தார் ஆயினும் - கல்லாதார் உயர்ந்த சாதிக்கண் பிறந்தாராயினும், கீழ் பிறந்தும் கற்ருர் அனைத்து பாடு இலர் - தாழ்ந்த சாதிக்கண் பிறந்து வைத்தும் கற்ருரது பெருமை அளவிற்ருய பெருமை இலர்.

உடலோடு ஒழியும் சாதி உயர்ச்சியினும் உயிரோடு செல்லும் கல்வி உயர்ச்சி சிறப்புடைத்து என்பதாம்.

இதனுன், அவர் சாதி உயர்ச்சியால் பயன் இன்மை கூறப்பட்டது.

### ஒப்புமை

*முற்றும்:*

"வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளும்
கீழ்ப்பால் ஒருவன் கற்பின்
மேற்பால் ஒருவனும் அவன்கட் படுமே" (புறநா. *183: 8-10.*)

"களர்நிலத் துப்பிறந்த உப்பினைச் சான்ருேர்
விளைநிலத்து நெல்லின் விழுமிதாக் கொள்வர்
கடைநிலத்தோ ராயினும் கற்றறிந் தோரைத்
தலைநிலத்து வைக்கப் படும்."

"தோணி இயக்குவான் தொல்லை வருணத்துக்
காணின் கடைப்பட்டான் என்றிகழார்—காணுய்
அவன்துணையா வாறுபோ யற்றேநூல் கற்ற
மகன்துணையான் மிக்க கொளல்." (நாலடி. *133, 136.*)

"திரியழல் காணின் தொழுப விறகின்
எரியழல் காணின் இகழ்ப—ஒருகுடியில்
கல்லாத மூத்தோனைக் கைவிடுப கற்ருன்
இளமைபா ராட்டும் உலகு." (நான்மணி. *64.*) *(409)*

## 410

விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்ருரோ டேனை யவர். 10

**பரிமேலழகர்:** விலங்கொடு மக்கள் அனையர் - விலங்கொடு நோக்க மக்கள் எத்துணை நன்மை உடையர் அத்துணைத் தீமை உடையர், இலங்கு நூல் கற்ருரோடு ஏனையவர் - விளங்கிய நூலைக் கற்ருரோடு நோக்கக் கல்லாதவர்.

விலங்கு, நூல்: சாதிப் பெயர், விளங்குதல், மேம்படுதல். விலங்கின் மக்கட்கு ஏற்றமாய உணர்வு மிகுதி காணப்படுவது கற்ருர்கண்ணே யாகலின், கல்லாதாரும் அவரும் ஒத்த பிறப்பினர் அல்லர் என்பதாம். மயக்க நிரல்நிரை.[1]

இதனுன் அவர் மக்கட்பிறப்பால் பயன் எய்தாமை கூறப்பட்டது.

1. எதிர்நிரனிறை.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** விலங்குச் சாதியோடும் மக்களோடும் உள்ள வேறுபாடு உடையர், விளங்கின நூல்களைக் கற்றவரோடு கல்லாதவர்,

இது கல்லாதார் விலங்கு என்றது.

### ஒப்புமை

**இழிவுபற்றி மக்களுக்கு விலங்கை உவமை கூறுதல்:**

"வென்றிப் பொருட்டால் விலங்கொத்து மெய்கொள்ளார்"
(நாலடி. 315.)

"ஆமகன் ஆதற் கொத்தனை அறியா
நீமகன் அல்லாய்" (மணி. 13: 61-2.)

"நன்று தீதென் றியல்தெரி நல்லறி
வின்றி வாழ்வதன் றேவிலங் கின்னிடை
நின்ற நன்னெறி நீயறி யாநெறி
ஒன்று மின்மையுன் வாய்மை யுணர்த்துமால்."

"தக்க வின்ன தகாதன வின்னவென்
றொக்க வுன்னல ராகி னுயர்ந்துள
மக்க ளும்விலங் கேமனு வின்நெறி
புக்க வேல்அவ் விலங்கும்புத் தேளிரே."
(கம்ப. வாலி. 111, 112.) (410)

---

# 42. கேள்வி

**பரிமேலழகர்:** அஃதாவது கேட்கப்படும் நூற்பொருள்களைக் கற்றறிந்தார் கூறக் கேட்டல். கற்ற வழி அதனினும் அறிவை வலியுறுத்தலானும், கல்லாத வழியும் அதனை உண்டாக்குதலானும் இது கல்வி, கல்லாமைகளின்பின் வைக்கப்பட்டது.

**மணக்குடவர்:** கேள்வியாவது, கேள்வியாமாறும் அதனுனாகிய பயனும் கூறுதல். நூல்களைக் கற்க மாட்டாதார் அவற்றைக் கற்றார் மாட்டுக் கேட்டலும் அறிவுக்குக் காரணமாம் என்பதனால், அதன்பின் இது கூறப்பட்டது.

**பரிதியார்:** கேள்வியாவது கல்வி இல்லாதபோது கேள்வி வேணும்.

### 411

**செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்துள் எல்லாம் தலை.** 1

**பரிமேலழகர்:** செல்வத்துள் செல்வம் செவி செல்வம் - ஒருவருக்குச் சிறப்புடைய செல்வமாவது செவியான் வரும் செல்வம், அச் செல்வம் செல்வத்துள் எல்லாம் தலை - அச் செல்வம் பிற செல்வங்கள் எல்லாவற்றினும் தலையாகலான்.

செவியான் வரும் செல்வம், கேள்வியான் எல்லாப் பொருளையும் அறிதல். பிற செல்வங்கள் பொருளான் வருவன. அவை நிலையாவாகலானும், துன்ப விளைவின வாகலானும் இது தலையாயிற்று. அவற்றை ஒழித்து இதனையே செய்க என்பது குறிப்பெச்சம்.

### உரை வேறுபாடு

**பரிதியார்:** செல்வமாவது, செவி, மெய், வாய், கண், மூக்கு இவற்றுள் செவியான் விளையும் உணர்வு பெரியது. அது எட்டுவகைச் செல்வத்திலும் பெரியது.

**காலிங்கர்:** அச் செல்வம் - தனது செவியினுன் மறுமைக்கு ஆக்கம் இனிதுறக் கேட்கும் கேள்வி. *(411)*

## 412

**செவிக்குண வில்லாத போழ்து சிறிது**
**வயிற்றுக்கும் ஈயப் படும்.** 2

**பரிமேலழகர்:** செவிக்கு உணவு இல்லாத போழ்து - செவிக்கு உணவாகிய கேள்வி இல்லாதபொழுது, வயிற்றுக்கும் சிறிது ஈயப்படும் - வயிற்றுக்கும் சிறிது உணவு இடப்படும்.

சுவை மிகுதியும் பிற்பயத்தலும் உடைய கேள்வி உள்ள பொழுது வெறுக்கப்படுதலான், 'இல்லாத போழ்து' என்றும், பெரிதாய வழித் தேடும் துன்பமேயன்றி நோயும்[1] காமமும்[2] பெருகுதலான், 'சிறிது' என்றும், அது தானும் பின் இருந்து கேட்டற் பொருட்டாகலான்; 'ஈயப்படும்' என்றும் கூறினர். ஈதல்: வயிற்றது இழிவு[3] தோன்ற நின்றது.

இவை இரண்டு பாட்டானும் கேள்வியது சிறப்புக் கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**பரிப்பெருமாள்:** இஃது ஒருகால் கேட்டுவிட அமையுமே என்று ஐயுற்றார்க்கு எல்லாக் காலமும் கேட்க வேண்டும் என்பது கூறப்பட்டது.

**பரிதியார்:** வயிற்றுக்கும் ஈயப்படும் - வயிருகிய எறும்புக்கும் ஈயவிதனப்படும்.

**கவிராஜ பண்டிதர்:** சிறிது வயிற்றுக்கும் ஈயப் படும் - வயிற்றுக்குச் சாப்பிடுகிறதிலே சிறிது விட்டுவிட வேணும். *(412)*

## 413

**செவிஉணவிற் கேள்வி உடையார் அவிஉணவின்**
**ஆன்றாரோ டொப்பர் நிலத்து.** 3

**பரிமேலழகர்:** செவி உணவின் கேள்வி உடையார் - செவி உணவாகிய கேள்வியினை உடையார், நிலத்து அவி உணவின் ஆன்றாரோடு ஒப்பர் - நிலத்தின் கண்ணர் ஆயினும் அவிஉணவினை உடைய தேவரோடு ஒப்பர்.

செவி உணவு - செவியான் உண்ணும் உணவு. அல்வழிக்கண் வந்த இன்சாரியையது னகரம் வலிந்து நின்றது. அவியாகிய உணவு, தேவர்க்கு வேள்வித் தீயில் கொடுப்பன. அறிவான் நிறைந்தமையான் ஆன்றார் என்றும், துன்பம் அறியாமையான் தேவரோடு ஒப்பர் என்றும் கூறினர்.

இதனுன் அதனை உடையாரது சிறப்புக் கூறப்பட்டது.

---

1. உணவு மிகுதியால் நோயுண்டாதல்: **குறள்**, 946, 947.
2. காமம் உண்டாதல்: "புகாப்பெருக ஊட்டிற் புலன்கள்மீக் கூறி, அவாப் பெருகி அற்றந் தருமால்." (**அறநெறிச்.** 121.)
3. "அவற்றுள், ஈயென் கிளவி இழிந்தோன் கூற்றே." (**தொல். எச்ச.** 49.

### உரை வேறுபாடு

**பரிதியார்:** செவியிற் கேள்வி உள்ள பேர் பூலோகத்திலே இருந்தும் தேவரோடு ஒப்பாவர். அது எப்படி என்றால் தெய்வ லோகத்திலே இருந்தும் பூலோகத்திலே அவிப்பாகங் கொள்ளும் முறைமைபோல.

### ஒப்புமை

1. **கேள்விக்கு அமுதம்:**

"மருந்தினும் இனிய கேள்வி செவியுற மாந்து வாரும்."

(கம்ப. நாட்டுப். 15.)

2. **அவியுணவின் ஆன்றோர்:**

"அவியுணவினோர் புறங்காப்ப." (புறநா. 377 : 5.) (413)

## 414

**கற்றிலன் ஆயினும் கேட்க அஃதொருவற்**
**கொற்கத்தின் ஊற்றாம் துணை.** 4

**பரிமேலழகர்:** கற்றிலன் ஆயினும் கேட்க - உறுதி நூல்களைத் தான் கற்றிலனாயினும் அவற்றின் பொருள்களைக் கற்றறிந்தார் சொல்லக் கேட்க; அஃது ஒருவற்கு ஒற்கத்தின் ஊற்று ஆம் துணை - அக் கேள்வி ஒருவனுக்குத் தளர்ச்சி வந்துழிப் பற்றுக்கோடாம் துணை ஆகலான்.

உம்மை, கற்க வேண்டும் என்பது பட நின்றது. தளர்ச்சி, வறுமை யானாதல் அறிவின்மையானாதல் இடுக்கட்பட்டுழி மனம் தளர்தல். அதனைக் கேள்வியானய அறிவு நீக்குமாகலின், ஊற்றாந் துணை என்றார். ஊன்று என்னும் ஆகுபெயரின் னகரம் திரிந்து நின்றது.

### உரை வேறுபாடு

**காளிங்கர்:** ஒற்கத்தின் ஊற்றாம் துணை - மற்று அக் கேள்வியானது அங்ஙனம் கேட்ட ஒப்பிறந்தோனுக்கு நரகினுட் சென்று விழாது மறுமை நெறிச் செல்லுதற்குப் பெரியதோர் உறுதித் துணை. ஒற்கம் என்பது நரகம்.

### ஒப்புமை

**கற்றிலன் ஆயினும் கேட்க:**

"உணற்கினிய இன்னீர் பிறிதுழிஇல் லென்னும்
கிணற்றகத்துத் தேரைபோல் ஆகார்—கணக்கினை
முற்றப் பகலும் முனியா தினிதோதிக்
கற்றலிற் கேட்டலே நன்று." (பழமொழி, 61.) (414)

## 415

**இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல் அற்றே**
**ஒழுக்கம் உடையார்வாய்ச் சொல்.** 5

**பரிமேலழகர்:** இழுக்கம் உடை உழி ஊற்று கோல் அற்று - வழுக்கு தலையுடைய சேற்றுநிலத்து இயங்குவார்க்கு ஊன்றுகோல் போல் உதவும், ஒழுக்கம் உடையார் வாய் சொல் - காவற்சாகாடு கைப்பார்க்கு[1] ஒழுக்கம் உடையார் வாயிற் சொற்கள்,

1. "காவற் சாகாடு கைப்போன் மாணின்" (புறநா. 185:2); நாடு காவலாகிய வண்டியைச் செலுத்துபவர் என்பது பொருள்.

அவாய்நிலையான் வந்த உவமையடையாற் பொருளடை வருவிக்கப் பட்டது. ஊற்றாகிய கோல்போல் உதவுதல், தளர்ந்துழி அதனை நீக்குதல். கல்வி உடையரேனும் ஒழுக்கம் இல்லாதார் அறிவிலர் ஆகலின், அவர் வாய்ச் சொல் கேட்கப் படாது என்பது தோன்ற, 'ஒழுக்கமுடையார் வாய்ச் சொல்' என்றார். வாய் என்பது, தீச்சொல் அறியாமையாகிய சிறப்புணர நின்றது. அவற்றைக் கேட்க என்பது குறிப்பெச்சம். (415)

## 416

எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும். 6

**பரிமேலழகர் :** எனைத்தானும் நல்லவை கேட்க - ஒருவன் சிறிதாயினும் உறுதிப்பொருள்களைக் கேட்க, அனைத்தானும் ஆன்ற பெருமை தரும் - அக் கேள்வி அத்துணையாயினும் நிறைந்த பெருமையைத் தரும் ஆகலான்.

எனைத்து அனைத்து என்பன, கேட்கும் பொருள்மேலும் காலத்தின் மேலும் நின்றன. அக் கேள்வி மழைத் துளிபோல வந்து ஈண்டி[1] எல்லா அறிவுகளையும் உளவாக்கலின், சிறிது என்று இகழற்க என்பதாம்.

### உரை வேறுபாடு

**காளிங்கர்:** ஆன்ற பெருமை தரும் - அமைந்த பெருமையவாகிய முத்தியைக் கொடுக்கும். (416)

## 417

பிழைத்துணர்ந்தும் பேதைமை சொல்லார் இழைத்துணர்ந்
தீண்டிய கேள்வி யவர். 7

**பரிமேலழகர்:** பிழைத்து உணர்ந்தும் பேதைமை சொல்லார் - பிறழ உணர்ந்தவழியும் தமக்குப் பேதைமை பயக்கும் சொற்களைச் சொல்லார், இழைத்து உணர்ந்து ஈண்டிய கேள்வியவர் - பொருள்களைத் தாமும் நுண்ணிதாக ஆராய்ந்து அறிந்து அதன்மேலும் ஈண்டிய கேள்வியினை உடையார்.

பிழைப்ப என்பது திரிந்து நின்றது. பேதைமை: ஆகுபெயர். ஈண்டுதல்-பலவாற்றான் வந்து நிறைதல். பொருள்களின் மெய்ம்மையைத் தாமும் அறிந்து, அறிந்தாரோடு ஒப்பிப்பதும் செய்தார் தாமத குணத்தான் மயங்கினராயினும், அவ்வாறு அல்லது சொல்லார் என்பதாம்.

இவை நான்கு பாட்டானும் கேட்டார்க்கு வரும் நன்மை கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**காளிங்கர்:** பிழைத்துணர்ந்தும் - இவ்வுலகின்கண் தப்பியும் குறிக் கொண்டும். இழைத்துணர்ந்து - யாம் சான்றோருழைச் சென்று நல்லன கேட்க வேண்டும் என்று கருதிக் கொண்டு பல நாளும் கேட்டு.

### ஒப்புமை

**முற்றும் :**

"உறழா மயங்கி உறழினும் என்றும்
பிறழா பெரியோர்வாய்ச் சொல்." (பு. வெ. 167.) (417)

1. 'பலதுளி பெருவெள்ளம்' என்பது பழமொழி.

### 418

கேட்பினும் கேளாத் தகையவே கேள்வியால்
தோட்கப் படாத செவி. 8

**பரிமேலழகர்:** கேட்பினும் கேளா தகையவே - தம் புலமாய ஓசை மாத்திரத்தைக் கேட்குமாயினும் செவிடாம் தன்மையவே ஆம், கேள்வியால் தோட்கப்படாத செவி - கேள்வியால் துளைக்கப்படாத செவிகள்.

ஏகாரம், தேற்றத்தின்கண் வந்தது. ஓசைமாத்திரத்தான் உறுதி எய்தாமையின் கேளாத் தகையது என்றும், மனத்தின்கண் நூற்பொருள் நுழைதற்கு வழியாக்கலின் கேள்வியைக் கருவியாக்கியும் கூறினர். பழைய துளை துளைஅன்று என்பதாம்.

#### உரை வேறுபாடு

**காளிங்கர்:** கேள்வியால் தோட்கப் படாத - சான்றோருழைச் சென்று தாம் கேட்கும் கேள்வியாகின்ற கூரிய கடைகோலான் இரண்டாவது துளை இடப்படாத.

#### ஒப்புமை

*முற்றும்:*

"எய்கணை விழுத்துளை அன்றே செவித்துளை
மையறு கேள்வி கேளா தோர்க்கே" (**இரும்பல் காஞ்சி.**)

"..........இரும்பிற் போர்த்த
பழுதெண்ணும் வன்மனத்தார் ஓட்டைமரச் செவியர்
.........கேளார்" (*சீவக. 1552.*)

"...கேள்வியாற் செவிகள் முற்றும்
தோட்டவர் உணர்வின் உண்ணும்
அமுதத்தின் சுவையாய் நின்றான்." (**கம்ப.** சவரி. 7.) (*418*)

### 419

நுணங்கிய கேள்வியர் அல்லார் வணங்கிய
வாயினர் ஆதல் அரிது. 9

**பரிமேலழகர்:** நுணங்கிய கேள்வியர் அல்லார் - நுண்ணிதாகிய கேள்வி உடையர் அல்லாதார், வணங்கிய வாயினர் ஆதல் அரிது - பணிந்த மொழியினை உடையராதல் கூடாது.

கேட்கப்படுகின்ற பொருளினது நுண்மை கேள்விமேல் ஏற்றப்பட்டது. வாய்: ஆகுபெயர். பணிந்த மொழி, பணிவைப் புலப்படுத்திய மொழி. கேளாதார் உணர்வு இன்மையால் தம்மை வியந்து கூறுவர் என்பதாம். அல்லால் என்பதூஉம் பாடம்.

#### ஒப்புமை

1. **நுணங்கிய கேள்வி:**

"நெடுநுண் கேள்வி" (**பதிற்.** 7-ஆம் பத்து, பதிகம்.)

"நுணங்கிய நூலவர் உணர்வே போல்"

"நுணங்கிய கேள்வியாய்"

"நுட்புலன் நுணங்கு கேள்வி நுழைவின ரெனினும் நோக்கும்
கட்புலன் வரம்பிற் றாமே காட்சியும் கரையிற் றாமே"

"நூற்பெருங்கடல் நுணங்கிய கேள்வியன்"

"வணங்கிய சென்னியன் மறைத்த வாயினன்
நுணங்கிய கேள்வியன் நுவல்வ தாயினுன்."

(**கம்ப.** நகர. 114, தாடகை. 24, கடல்தாவு 94, ஊர்தேடு. 206, விபீடணன். 87.)

2. **வணங்கிய வாயினர்:**

"பணிவா யுள்ள நன்கெழு நாவிற் பக்தர்கள்."

(**சம்பந்தர்.** பேணு பெருந்துறை, 5.) *(419)*

### 420

**செவியிற் சுவைஉணரா வாய்உணர்வின் மாக்கள்
அவியினும் வாழினும் என்.** 10

**பரிமேலழகர்:** செவியின் சுவை உணரா வாய் உணர்வின் மாக்கள் - செவியான் நுகரப்படும் சுவைகளை உணராத வாய் உணர்வினையுடைய மாந்தர், அவியினும் வாழினும் என் - சாவினும் வாழினும் உலகிற்கு வருவது என்னை?

செவியான் நுகரப்படும் சுவைகளாவன சொற்சுவையும், பொருட் சுவையும். அவற்றுள் சொற்சுவை குணம்,[1] அலங்காரம் என இருவகைத்து. பொருட்சுவை காமம், நகை, கருணை, வீரம், உருத்திரம், அச்சம், இழிப்பு, வியப்பு, சாந்தம் என ஒன்பது வகைத்து. அவையெல்லாம் ஈண்டு உரைப் பின் பெருகும். வாயுணர்வு என்பது இடைப்பதங்கள் தொக்கு நின்ற மூன்றும் வேற்றுமைத் தொகை. அது வாயான் நுகரப்படும் சுவைகளை உணரும் உணர்வு என விரியும். அவை கைப்பு, காழ்ப்பு, புளிப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, தித்திப்பு என ஆறும். செத்தால் இழப்பதும் வாழ்ந்தால் பெறு வதும் இன்மையின், இரண்டும் ஒக்கும் என்பதாம். வாயுணவின் என்று பாடம் ஓதுவாரும் உளர்.

இவை மூன்று பாட்டானும் கேளாதவழிப் படும் குற்றம் கூறப் பட்டது.

**உரை வேறுபாடு**

**காளிங்கர்:** 'வாயுணவின்' என்று பாடம் கொண்டார். *(420)*

---

## 43. அறிவு உடைமை

**பரிமேலழகர்:** அஃதாவது கல்வி கேள்விகளின் ஆய அறிவோடு உண்மை அறிவு உடையன் ஆதல். அதிகார முறைமையும் இதனானே விளங்கும்.

### 421

**அறிவற்றம் காக்கும் கருவி செறுவார்க்கும்
உள்அழிக்கல் ஆகா அரண்.** 1

**பரிமேலழகர்:** அறிவு அற்றம் காக்கும் கருவி - அரசர்க்கு அறிவு என்பது இறுதி வாராமல் காக்கும் கருவி ஆம்; செறுவார்க்கு அழிக்கல் ஆகா

1. இவை குணவணி அல்லது பொதுவணி என்று சொல்லப்பெறும்.

உள் அரணும்[1] - அதுவேயும் அன்றிப் பகைவர்க்கும் அழிக்கலாகாத உள்அரணும் ஆம்.

காத்தல் – முன் அறிந்து பரிகரித்தல். உள் அரண் - உள்ளாய அரண்; உள் புக்கு அழிக்கலாகா அரண் என்றும் ஆம்.

இதனன் அறிவினது சிறப்புக் கூறப்பட்டது.

உரை வேறுபாடு

**மணக்குடவர்:** அற்றம் - குற்றம். *(421)*

## 422

சென்ற இடத்தால் செலவிடா தீதொரீஇ
நன்றின்பால் உய்ப்ப தறிவு. 2

**பரிமேலழகர்:** சென்ற இடத்தால் செல விடா - மனத்தை அது சென்ற புலத்தின்கண் செல்ல விடாது, தீது ஒரீஇ நன்றின்பால் உய்ப்பது அறிவு - அப்புலத்தின் நன்மை தீமைகளை ஆராய்ந்து தீயதனின் நீக்கி நல்ல தன்கண் செலுத்துவது அறிவு.

வினைக்கு ஏற்ற செயப்படுபொருள் வருவிக்கப்பட்டது. ஓசை, ஊறு, ஒளி, சுவை, நாற்றம்[2] எனப் புலம் ஐந்தாயினும், ஒரு காலத்து ஒன்றின் கண் அல்லது செல்லாமையின் இடத்தால் என்றார். 'விடாது' என்பது கடைக் குறைந்து நின்றது. குதிரையை நிலம் அறிந்து செலுத்தும் வாதுவன் போல வேறாக்கி மனத்தைப் புலம் அறிந்து செலுத்துவது அறிவு என்றார், அஃது உயிர்க்குணம் ஆகலின்.

உரை வேறுபாடு

**மணக்குடவர்:** உள்ளம் சென்ற இடத்தே உடம்பையும் செல்ல விடாது, தீமையை நீக்கி, நன்மைப் பகுதியிலே செலுத்துவது அறிவாவது.

ஒப்புமை

**முற்றும்:**

"விழையா உள்ளம் விழையும் ஆயினும்
கேட்டவை தோட்டி யாக மீட்டாங்
கறனும் பொருளும் வழாஅமை நாடித்
தற்றக வுடைமை நோக்கி மற்றதன்
பின்னா கும்மே முன்னியது முடித்தல்." *(அகநா. 286: 8-12.)*

*(422)*

## 423

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு. 3

**பரிமேலழகர்:** எப்பொருள் யார் யார் வாய் கேட்பினும் - யாதொரு பொருளை யாவர் யாவர் சொல்லக் கேட்பினும், அப் பொருள் மெய் பொருள் காண்பது அறிவு - அப் பொருளின் மெய்யாய பயனைக் காண வல்லது அறிவு.

1. செறுவார்க்கும் என்பதில் உள்ள உம்மையைப் பிரித்துக் கூட்டினர்.

2. குறள், 27.

குணங்கள் மூன்றும் மாறி மாறி வருதல் யாவருக்கும் உண்மையின், உயர்ந்த பொருள் இழிந்தார் வாயினும், இழிந்த பொருள் உயர்ந்தார் வாயினும், உறுதிப் பொருள் பகைவர் வாயினும், கெடுபொருள் நட்டார்வாயினும் ஒரோ வழிக் கேட்கப்படுதலான், 'எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும்,' என்றார். அடுக்கு, பன்மை பற்றி வந்தது.[1] 'வாய்' என்பது அவர் அப் பொருளின்கண் பயிலாமை உணர நின்றது. மெய்யாதல், நிலைபெறுதல்.

சொல்வாரது இயல்பு நோக்காது அப் பொருளின் பயன் நோக்கிக் கொள்ளுதல் ஒழிதல் செய்வது அறிவு என்பதாம்.

### உரை வேறுபாடு

**பரிதியார்:** எந்தப் பொருளாகிலும் யார் வாக்கிலே கேட்டாலும் அந்தப் பொருளை மெய்ப்பொருளாகக் காண்பது அறிவு.

**காளிங்கர்:** யாதானும் ஒரு பொருளைக் கீழ்ச்சொன்ன தம் மரபின் உயர்ந்தோர் மாட்டுக் கேட்பினும் கேட்க; மற்று ஏனை இழிந்தோரிடத்துக் கேட்பினும் கேட்க; நாம் கேட்கின்ற பெரும் பொருளின்கண் சிறிதும் குல வேற்றுமை இல்லாமையான், அவர் உரைக்கும் பெரும்பொருளின் உண்மையைத் தெரியக் காண்பதும், மற்று ஏனைய சிறு பொருளை விரும்பாது விடுத்தலுமே அறிவினது இயல்பு.

**கவிராஜ பண்டிதர்:** காண்பது - கைக்கொண்டு நடக்க வல்லது.

### ஒப்புமை

**மெய்ப்பொருள் காண்பது அறிவு:**

"எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு." (குறள், 355.)

"நீயும் கண்டு நுமரோடும் எண்ணி
அறிவறிந் தளவல் வேண்டும்" (நற்றிணை, 32 : 5-6.)

"உள்பொருள் இதுவென உணர்தல் ஞானமாம்". (சீவக. 2845.)

(423)

## 424

**எண்பொருள வாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்**
**நுண்பொருள் காண்ப தறிவு. 4**

**பரிமேலழகர் :** தான் எண் பொருள ஆக செல சொல்லி - தான் சொல்லும் சொற்களை அரிய பொருள ஆயினும் கேட்பார்க்கு எளிய பொருள ஆமாறு மனம் கொளச் சொல்லி, பிறர் வாய் நுண் பொருள் காண்பது அறிவு - பிறர்வாய்க் கேட்கும் சொற்களின் நுண்ணிய பொருள் காண அரிதாயினும் அதனைக் காண வல்லது அறிவு.

உடையவன் தொழில் அறிவின்மேல் ஏற்றப்பட்டது. சொல்லுவன வழுவின்றி இனிது விளங்கச் சொல்லுக என்பார் சொல்மேல் வைத்தும், கேட்பன வழுவினும் இனிது விளங்கா ஆயினும் பயனைக் கொண்டொழிக என்பார் பொருள்மேல் வைத்தும் கூறினர்.

### ஒப்புமை

**நுண்பொருள் காண்பது:**

"நுண்பொருள் அன்று நால்வர்முன் கேட்க"

(சம்பந்தர். ஆமாத்தூர். 6.) (424)

1. "கடும்பொடும் கடும்பொடும் பரவுதும்" (பரி. 2:75) என்னும் இடத்தில், 'அடுக்குப் பன்மைக்கண் வந்தது' என்று இவ்வுரையாசிரியர் எழுதினர்.

### 425

உலகம் தழீஇய தொட்பம் மலர்தலும்
கூம்பலும் இல்ல தறிவு. 5

**பரிமேலழகர்:** உலகம் தழீஇயது ஒட்பம் - உலகத்தை நட்பாக்குவது ஒருவனுக்கு ஒட்பமாம்; மலர்தலும் கூம்பலும் இல்லது அறிவு - அந் நட்பின்கண் முன் மலர்தலும் பின் கூம்புதலும் இன்றி ஒரு நிலையனவது அறிவாம்.

தழீஇயது, இல்லது என்பன அவ்வத் தொழில்மேல் நின்றன. உலகம் என்பது ஈண்டு உயர்ந்தோரை. அவரோடு கயப்பூப்போல வேறுபடாது கோட்டுப் பூப்போல ஒரு நிலையே நட்பாயினன் எல்லா இன்பமும் எய்தும் ஆகலின்,[1] அதனை அறிவு என்றார். காரியங்கள் காரணங்களாக உபசரிக்கப்பட்டன. இதனைச் செல்வத்தில் மலர்தலும் நல்குரவில் கூம்பலும் இல்லது என்று உரைப்பாரும் உளர்.

#### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** ஒருவனுக்கு ஒள்ளிமையாவது உலகத்தோடு பொருந்தினது; அதனை நீர்ப்பூப்போல மலர்தலும் குவிதலும் இன்றி, ஒரு தன்மையாகச் செலுத்துதல் அறிவு.

இஃது உயர்ந்தாரோடு நட்புப் பண்ணுதலும் அறிவு என்றது.

**பரிதியார்:** உலகமாகிய பெரியோர்க்குப் பொருந்திய ஒழுக்கத்தில் குறையாமல் ஒரு தகைமையாக நிற்பது அறிவு.

**காளிங்கர்:** உலகத்தாருள் முனிவராகிய பெரியோர் மறை முதலிய நூல்கள் பலவற்றுானும் தெரிந்துகொண்டதாய ஒட்பம் யாதொன்று, மற்று அதனின் விரிதலும் குவிதலும் என்னும் இரண்டு இல்லது யாது? மற்று அதுவே அறிவாவது.

தழீஇயது என்பது பெரியோர் தழுவியது. ஒட்பம் என்பது ஒள்ளிமை. *(425)*

### 426

எவ்வ துறைவ துலகம் உலகத்தோ
டவ்வ துறைவ தறிவு. 6

**பரிமேலழகர்:** உலகம் எவ்வது உறைவது - உலகம் யாதொரு வாற்றான் ஒழுகுவதாயிற்று, உலகத்தோடு அவ்வது உறைவது அறிவு - அவ் வுலகத்தோடு மேவித் தானும் அவ்வாற்றான் ஒழுகுவது அரசனுக்கு அறிவு.

'உலகத்தை யெல்லாம் யான் நியமித்தலான் என்னை நியமிப்பார் இல்லை' எனக் கருதித் தான் நினைத்தவாறே ஒழுகின் பாவமும் பழியும் ஆகலான், அவ்வாறு ஒழுகுதல் அறிவு அன்று என விலக்கியவாறு ஆயிற்று.

இவை ஐந்து பாட்டானும் அதனது இலக்கணம் கூறப்பட்டது.

#### உரை வேறுபாடு

**காளிங்கர்:** இவ் வுலகத்து நீதிப்பொருள் உடையராகிய நாற்பெருங் குலத்தோர் எவ்வகையது ஆகிய நயத்தோடு ஒழுகுவது.

1. "கோட்டுப்பூப் போல மலர்ந்துபிற் கூம்பாது, வேட்டதே வேட்டதாம் நட்பாட்சி." (**நாலடி.** 215)

ஒப்புமை

**உலகத்தோடு உறைவது:**

"உலகத்தோ டொட்ட ஒழுகல்" (குறள், 140.)
"தேசத்தோ டொத்துவாழ்."
"நாடொப் பனசெய்". (ஆத்திசூடி.) (426)

## 427

அறிவுடையார் ஆவ தறிவார் அறிவிலார்
அஃதறி கல்லா தவர். 7

**பரிமேலழகர்:** அறிவு உடையார் ஆவது அறிவார் - அறிவுடைய ராவார் வரக்கடவதனை முன் அறியவல்லார்; அறிவு இலார் அஃது அறிகல்லா தவர் - அறிவிலராவார் அதனை முன் அறிய மாட்டாதார்.

முன் அறிதல், முன்னே எண்ணி அறிதல். அஃது அறிகல்லாமை ஆவது, வந்தால் அறிதல். இனி, 'ஆவது அறிவார்' என்பதற்குத் தமக்கு நன்மை அறிவார் என்று உரைப்பாரும் உளர்.

உரை வேறுபாடு

**பரிதியார்:** அறிவுடையவர், ஆகும் காரியம் அறிவார். அறிவில்லா தவர், தமக்கான காரியமும் அறியார்.

**காளிங்கர்:** உலகத்து அறிவுடையோர் என்று சொல்லத் தகுவார் யாரோ எனின், கீழ்ச்சொன்ன வழி வேற்றுமைகள் எல்லாவற்றுனும் தெரிந்து, தமக்கு இருமை ஆக்கமும் ஆவதனை அறிந்து ஒழுகுவாரே. ஆதலால் அதனை அங்ஙனம் தெரிந்து அறிய வல்லாதார் யாவர்? மற்று அவரே பெரிதும் அறிவிலாதார். (427)

## 428

அஞ்சுவ தஞ்சாமை பேதைமை அஞ்சுவ
தஞ்சல் அறிவார் தொழில். 8

**பரிமேலழகர்:** அஞ்சுவது அஞ்சாமை பேதைமை - அஞ்சப்படுவதனை அஞ்சாமை பேதைமையாம்; அஞ்சுவது அஞ்சல் அறிவார் தொழில் - அவ் வஞ்சப்படுவதனை அஞ்சுதல் அறிவார் தொழிலாம்.

பாவமும் பழியும் கேடும் முதலாக அஞ்சப்படுவன பலவாயினும், சாதிபற்றி அஞ்சுவது என்றார். அஞ்சாமை - எண்ணாது செய்து நிற்றல், அஞ்சுதல் - எண்ணித் தவிர்தல். அது காரியம்அன்றென்று இகழப்படாது என்பார், அறிவார் தொழில் என்றார். அஞ்சாமை[1] இறைமாட்சியாகச் சொல்லப்பட்டமையின், ஈண்டு அஞ்சவேண்டும் இடம் கூறியவாறு,

இவை இரண்டு பாட்டானும் அதனை உடையார் இலக்கணம் கூறப்பட்டது.

உரை வேறுபாடு

**பரிதியார்:** பாவத்தின் வழிச் செல்லப் பயப்படும் அறிவுடைமை; ஒருவற்கு ஏதொன்றும் கொடாமல் வஞ்சிக்கும் அறிவில்லாமையின் குணம்.

1. குறள், 382.

காளிங்கர். கீழ்ச் சொன்ன இருவகை மரபின் புறத்தன எல்லாம் பெரிதும் அஞ்சத் தகும் அன்றே; மற்று அதனை அஞ்சாமை பேதைமை; எனவே, அதன்கண் சேறலே அறியாமையாவது. இனி அஞ்சத் தகுந்தவனைப் பெரிதும் அஞ்சுவது அறிவார் தொழில்; எனவே அதனிற் செல்லாது மரபிற் சேறலே அறிவுடையாரது செய்தி.

ஒப்புமை

1. அஞ்சுவது அஞ்சாமை பேதைமை:

"அஞ்சுவ தஞ்சா அறனிலி." (கலி. 42 : 26.)

2. அஞ்சுவ தஞ்சல்:

"துஞ்சலும் இலர்பிறர் அஞ்சுவ தஞ்சி" (புறநா. 182:4.)

"அறிவ தறிந்தடங்கி அஞ்சுவ தஞ்சி
உறுவ துலகுவப்பச் செய்து." (நாலடி. 74.) (428)

## 429

எதிரதாக் காக்கும் அறிவினார்க் கில்லை
அதிர வருவதோர் நோய். 9

பரிமேலழகர்: எதிரதா காக்கும் அறிவினர்க்கு - வரக் கடவதாகிய அதனை முன்அறிந்து காக்கவல்ல அறிவினை உடையார்க்கு, அதிர வருவது ஓர் நோய் இல்லை - அவர் நடுங்க வருவதொரு துன்பமும் இல்லை

நோய் என வருகின்றமையின், வாளா எதிரதா என்றார். இதனால், காக்கலாம் காலம் உணர்த்தப்பட்டது. காத்தல் - அதன் காரணத்தை விலக்குதல்.

அவர்க்குத் துன்பம் இன்மை இதனால் கூறப்பட்டது. (429)

## 430

அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்
என்உடைய ரேனும் இலர். 10

பரிமேலழகர்: அறிவு உடையார் எல்லாம் உடையார் - அறிவுடையார் பிறிது ஒன்றும் இலராயினும் எல்லாம் உடையராவர்; அறிவு இலார் என் உடையரேனும் இலர் – அறிவு இலாதார் எல்லாம் உடையராயினும் ஒன்றும் இலராவர்.

செல்வங்கள் எல்லாம் அறிவால் படைக்கவும், காக்கவும் படுதலின் அஃது உடையாரை எல்லாம் உடையார் என்றும், அவை எல்லாம் முன்னே அமைந்து கிடப்பினும் அழியாமல் காத்தற்கும், தெய்வத்தான் அழிந்துழிப் படைத்தற்கும் கருவி உடையர் அன்மையின் அஃது இல்லாதாரை, 'என்னுடையரேனும் இலர்' என்றும் கூறினார். என்னும் என்புழி உம்மை விகாரத்தால் தொக்கது.

இதனான் அவரது உடைமையும் ஏனையாரது இன்மையும் கூறப்பட்டன.

ஒப்புமை

முற்றும்:

"நுண்ணுணர் வின்மை வறுமை அஃதுடைமை
பண்ணப் பணைத்த பெருஞ்செல்வம்" (நாலடி. 251.)

"அறிவினுல் மாட்சிஒன் றில்லா ஒருவன்
பிறிதினுல் மாண்ட தெவனும் - பொறியின்
மணிபொன் னும் சாந்தமும் மாலையும் இன்ன
அணிஎல்லாம் ஆடையின் பின்." (பழமொழி, 271.) (430)

---

# 44. குற்றம் கடிதல்

**பரிமேலழகர் :** அஃதாவது காமம், வெகுளி, கடும்பற்றுள்ளம், மானம், உவகை, மதம்[1] எனப்பட்ட குற்றங்கள் ஆறனையும் அரசன் தன்கண் நிகழாமல் கடிதல், இவற்றை வடநூலார் பகைவர்க்கம்[2] என்ப. இவை குற்றம் என்று அறிதலும் கடிதலும் அறிவுடையார்க்கல்லது கூடாமையின் அதன்பின் வைக்கப்பட்டது.

### 431

செருக்கும் சினமும் சிறுமையும் இல்லார்
பெருக்கம் பெருமித நீர்த்து. 1

**பரிமேலழகர்:** செருக்கும் சினமும் சிறுமையும் இல்லார் பெருக்கம் - மதமும் வெகுளியும் காமமுமாகிய குற்றங்கள் இல்லாத அரசரது செல்வம் பெருமித நீர்த்து - மேம்பாட்டு நீர்மையினை உடைத்து.

மதம், செல்வக் களிப்பு. சிறியோர் செயலாகலின், அளவிறந்த காமம் சிறுமை எனப்பட்டது. இவை நீதியல்லன செய்வித்தலான் இவற்றைக் கடிந்தார் செல்வம் நல்வழிப்பாடும் நிலைபேறும் உடைமையின் மதிப்புடைத்து என்பதாம். மிகுதிபற்றி இவை முற்கூறப்பட்டன.

#### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** செருக்கும் - பிறர் மனை நயத்தலும். பிறர் மனை விரும்புதல் செருக்கினுல் வருதலின் செருக்கு என்ருர்.

**பரிப்பெருமாள்:** சினம், குரோதத்தால் வருதல். சிறியார் செய்வன செய்தலாவது காமநுகர்ச்சியும், சூதும், கள்ளும், வேட்டையும் முதலானவற்றின் மிக்கொழுகுதல். இதனை வடநூலார் இந்திரிய சயமின்மை என்பர். இவை பெரியாரால் கடியப்படுதலின் சிறுமை என்ருர். இவை மூன்று குற்றமும் இல்லாதார் ஆக்கம் உடையர் என்றதனுலே இவை உடையார்க்குக் கேடு வரும் என்றவாருயிற்று. பிறர்மனை நயத்தலால் கெட்டான் இராவணன். வெகுளியால் கெட்டான் சனமேசயன். நுகர்ச்சியால் கெட்டான் சச்சந்தன். (431)

### 432

இவறலும் மாண்பிறந்த மானமும் மாணு
உவகையும் ஏதம் இறைக்கு. 2

**பரிமேலழகர் :** இவறலும் - வேண்டும்வழிப் பொருள் கொடாமையும், மாண்பு இறந்த மானமும் - நன்மையின் நீங்கிய மானமும், மாணு உவகையும் - அளவிறந்த உவகையும், இறைக்கு ஏதம் - அரசனுக்குக் குற்றம்.

---

1. காமக் குரோத லோப மோக மத மாச்சரியம் என்பர் வட நூலார்.
2. அரிஷட்வர்க்கம்.

மாட்சியான மானத்தின் நீக்குதற்கு, 'மாண்பிறந்த மானம்' என்றார். அஃதாவது, "அந்தணர் சான்றோர் அருந்தவத்தோர் தம்முன்னோர், தந்தை தாய்"[1] என்றிவரை வணங்காமையும், முடிக்கப்படாதாயினும் கருதியது முடித்தே விடுதலும் முதலாயின. அளவிறந்த உவகையாவது கழி கண்ணோட்டம், பிறரும், "சினனே காமம் கழிகண் ணோட்டம்" என்றிவற்றை, "அறந்தெரி திகிரிக்கு வழியடை யாகும் தீது"[2] என்றார்,

இவை இரண்டு பாட்டானும் குற்றங்களாவன இவை என்பது கூறப் பட்டது.

### உரை வேறுபாடு

**பரிப்பெருமாள்:** உலோபம் இரண்டு வகைத்து. தனக்கு முறைமை அல்லாத பொருளை விரும்புதலும், உண்டான பொருளை விடாமை யும். அஃதாமாறு பின்னே கூறப்படும். மாண்பு இறந்த மானமாவது தொடங்கின வினை நன்மை பயவாதாயினும் அதனை விடாதொழிதல். இதனாற் கெட்டான் துரியோதனன். மாணா உவகையாவது எளியாரை அடர்க்கையால் பிறந்ததொரு மகிழ்ச்சியால் வலியார்மாட்டும் செல்லுதல். இதனால் கெட்டான் வாதாபி.

**காளிங்கர்:** மாணா உவகையும் - தகாதவற்றைக் காதலித்தலும்.

### ஒப்புமை

1. **இவறல் இன்மை:**

"ஈதலிற் குறைகாட்டா தறனறிந் தொழுகிய
தீதிலான் செல்வம்போல்" (கலி. 27:1-2.)

"அறத்தாற்றின் ஈயாத தீகையன்று" (முதுமொழிக்காஞ்சி, 48.)

"செய்வன செய்தல் யாண்டும் தீயன சிந்தி யாமல்
வைவன வந்த போதும் வசையில வினிய கூறல்
மெய்யன வழங்கல் யாவும் மேவின வெஃக லின்மை
உய்வன வாக்கித் தம்மோ டுயர்வன உயர்ந்த தோளாய்"

"………ஒன்றீக லான்பொருள்
காத்தவன் புகழ்எனத் தேயுங் கற்பினாள்."
(கம்ப. அரசியல். 31, சூர்ப்பனகை. 26.)

2 **மாண்பிறந்த மானம்:**

"துயரஞ்செய் மானங்களாய்." (திருவாய். 7.8:7.) (432)

## 433

**தினைத்துணையாம் குற்றம் வரினும் பனைத்துணையாக்
கொள்வர் பழிநாணு வார்.** 3

**பரிமேலழகர்:** பழி நாணுவார் - பழியை அஞ்சுவார், தினை துணை ஆம் குற்றம் வரினும் பனை துணையா கொள்வர் - தம்கண் தினையின் அளவாம் குற்றம் வந்ததாயினும் அதனை அவ்வளவாக அன்றிப் பனையின் அளவாகக் கொள்வர்.

குற்றம்: சாதிப்பெயர். தமக்கு ஏலாமையின் சிறிது என்று பொறார், பெரிதாகக் கொண்டு வருந்திப் பின்னும் அது வாராமல் காப்பர் என்பதாம். (433)

1. பு.வெ. 221. 2. பதிற். 22:1-4.

### 434

குற்றமே காக்க பொருளாகக் குற்றமே
அற்றம் தரூஉம் பகை 4

*பரிமேலழகர் :* அற்றம் தரூஉம் பகை குற்றமே - தனக்கு இறுதி பயக்கும் பகை குற்றமே ; குற்றமே பொருளாக காக்க - ஆகலான் அக் குற்றம் தன்கண் வாராமையே பயனுகக் கொண்டு காக்க வேண்டும்.

இவைபற்றி அல்லது பகைவர் அற்றம் தாராமையின், இவையே பகை யாவன என்னும் வட நூலார் மதம் பற்றி, 'குற்றமே அற்றம் தரூஉம் பகை' என்றும், இவற்றது இன்மையே குணங்களது உண்மையாகக்கொண்டு என்பார், 'பொருளாக' என்றும் கூறினர். 'குற்றமே காக்க' என்பது, "அரும் பண்பினன் தீமை காக்க"[1] என்பதுபோல நின்றது.

**உரை வேறுபாடு**

*பரிதியார் :* குற்றமே காக்க பொருளாக - தன் பேரிலே குற்றம் வாராமல் அறிவுடைமையைத் தனம்போல் பாதுகாப்பான்.

*காளிங்கர் :* குற்றமே அற்றம் தரூஉம் பகை - மற்று இதுதானே பொருளாகக் கொண்டு ஒழுகின் அக் குற்றந்தானே தமக்கு ஆபத்தைத் தருவதாகிய பகை. *(434)*

### 435

வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும். 5

*பரிமேலழகர் :* வரு முன்னர் காவாதான் வாழ்க்கை - குற்றம் வரக்கடவதாகின்ற முற்காலத்திலே அதனைக் காவாத அரசன் வாழ்க்கை, எரி முன்னர் வை தூறுபோல கெடும் - அது வந்தால் எரிமுகத்து நின்ற வைக் குவைபோல[2] அழிந்துவிடும்.

குற்றம் என்பது அதிகாரத்தான் வந்தது. முன்னர் என்ற ஈற்றது பகுதிப்பொருள் விகுதி.[3] வரும் என்னும் பெயரெச்சம் முன்னர் என்னும் காலப் பெயர் கொண்டது; அதனல் காக்கலாம் காலம் பெறப்பட்டது. குற்றம் சிறிதாயினும் அதனல் பெரிய செல்வம் அழிந்தே விடும் என்பது உவமையால் பெற்றும்.

**ஒப்புமை**

**வருமுன்னர்க் காவாதான் :**

" மேல்வர வறியாதோன் தற்காத்தல் பொய்." (**முதுமொழி**. 7.) *(435)*

### 436

தன்குற்றம் நீக்கிப் பிறர்குற்றம் காண்கிற்பின்
என்குற்றம் ஆகும் இறைக்கு. 6

---

1. குற்றத்தை வாராமற் பாதுகாக்க என்றபடி ; குற்றத்தைப் பொருளாக வைத்துக் காப்பதன்று; "தீச்சொல்லே காமின்" (**சிறுபஞ்ச**. 25) என்பது காண்க.
2. வைக்குவை - வைக்கோற் போர்.
3. அர் என்பது பகுதிப்பொருள் விகுதி.

**பரிமேலழகர் :** தன் குற்றம் நீக்கி பிறர் குற்றம் காண்கிற்பின் - முன்னர்த் தன் குற்றத்தைக் கண்டு கடிந்து பின்னர்ப் பிறர் குற்றம் காணவல்லனயின், இறைக்கு ஆகும் குற்றம் என் - அரசனுக்கு ஆகக் கடவ குற்றம் யாது?

'அரசனுக்குத் தன் குற்றம் கடியாவழியே பிறர் குற்றம் கடிதல் குற்றமாம்; அது கடிந்த வழி முறைசெய்தலாம்' என்பார், 'என் குற்றம் ஆகும்' என்றார் ; எனவே தன் குற்றம் கடிந்தவனே முறை செய்தற்கு உரியவன் என்பதாயிற்று.

இவை நான்கு பாட்டானும் அவற்றது கடிதற்பாடு பொதுவகையால் கூறப்பட்டது. இனிச் சிறப்பு வகையால் கூறுப.

### உரை வேறுபாடு

**மணக்குடவர் :** இது தன்மாட்டுள்ள குற்றத்தை நீக்குதலேயன்றிப் பிறர் மாட்டுள்ள குற்றத்தையும் கடிய வேண்டும் என்பது.

### ஒப்புமை

**முற்றும் :**

" தங்குற்றம் நீக்கல ராகிப் பிறர்குற்றம்
எங்கேனும் தீர்த்தற் கிடைப்புகுதல்." (பழமொழி, 124.) (436)

## 437

செயற்பால செய்யா திவறியான் செல்வம்
உயற்பால தன்றிக் கெடும். 7

**பரிமேலழகர்:** செயல் பால செய்யாது இவறியான் செல்வம் - பொருளால் தனக்குச் செய்துகொள்ளப்படும் அவற்றைச் செய்து கொள்ளாது அதன்கண் பற்றுள்ளம் செய்தானது செல்வம், உயல் பாலது அன்றி கெடும் - பின் உளதாம் பான்மைத்து அன்றி வறிதே கெடும்.

செயற்பால ஆவன, அறம் பொருள் இன்பங்கள். பொருளாற் பொருள் செய்தலாவது, பெருக்குதல் ; அது, "பொன்னின் ஆகும் பொருபடை அப் படை, தன்னின் ஆகும் தரணி தரணியில், பின்னை ஆகும் பெரும்பொருள் அப்பொருள், துன்னும் காலைத்துன் னுதன இல்லையே"[1] என்பதனான் அறிக, அறம் செய்யாமையானும் பொருள் பெருக்காமையானும் 'உயற்பால தன்றி' என்றும், இன்பப் பயன் கொள்ளாமையின், 'கெடும்' என்றும் கூறினர். 'உயற்பாலதின்றி' என்று பாடம் ஓதுவாரும் உளர்.

### உரை வேறுபாடு

**பரிதியார் :** செய்யும் முறைமை அறிந்து செய்யாதான் செல்வம் தன்னைச் சத்துருக்கள் கெடுக்காமல் தானே கெடும்.

### ஒப்புமை

**முற்றும் :**

" உண்ணான் ஒளிநிறான் ஓங்கு புகழ்செய்யான்
துன்னருங் கேளிர் துயர்களையான்—கொன்னே
வழங்கான் பொருள்காத் திருப்பானேல் அஆ
இழந்தானென் றெள்ளப் படும்." (நாலடி. 9.)

1. சீவக. 1923.

" மேகமா மலைகளின் புறத்து வீதலான்
மாகயா றியாவையும் வாரி யற்றன
ஆகையாற் றகவிழந் தழிவி னன்பொருள்
போகவா றொழுகலான் செல்வம் போன்றவே."

(கம்ப. கார்கால. 108.) (437)

## 438

**பற்றுள்ளம் என்னும் இவறன்மை எற்றுள்ளும்**
**எண்ணப் படுவதொன் றன்று. 8**

**பரிமேலழகர் :** பற்றுள்ளம் என்னும் இவறன்மை - பொருளை விடத் தகும் இடத்து விடாது பற்றுதலைச் செய்யும் உள்ளமாகிய உலோபத்தினது தன்மை, எற்றுள்ளும் எண்ணப்படுவது ஒன்று அன்று - குற்றத் தன்மைகள் எல்லாவற்றுள்ளும் வைத்து எண்ணப்படுவது ஒன்று அன்று; மிக்கது.

இவறலது தன்மையாவது, குணங்கள் எல்லாம் ஒருங்கு உளவாயினும் அவற்றைக் கீழ்ப்படுத்துத் தான் மேற்படவல்ல இயல்பு. ஒழிந்தன அது மாட்டாமையின், ' எற்றுள்ளும் எண்ணப்படுவதொன்று அன்று ' என்றார். 'எவற்றுள்ளும்' என்பது இடைக்குறைந்து நின்றது.

இவை இரண்டு பாட்டானும் உலோபத்தின் தீமை கூறப்பட்டது.

### ஒப்புமை

**உலோபம் தீதாதல் :**

" உளப்பரும் பிணிப்பறு வுலோபம் ஒன்றுமே
அளப்பரும் குணங்களை அழிக்கு மாறுபோல் "

" உட்டெறு வெம்பகை யாவது லோபம்
விட்டிட." (கம்ப. தாடகை. 43, வேள்வி. 32.) (438)

## 439

**வியவற்க எஞ்ஞான்றும் தன்னை நயவற்க**
**நன்றி பயவா வினை. 9**

**பரிமேலழகர்:** எஞ்ஞான்றும் தன்னை வியவற்க - தான் இறப்ப உயர்ந்த ஞான்றும் மதத்தால் தன்னை நன்கு மதியாது ஒழிக; நன்றி பயவா வினை நயவற்க - தனக்கு நன்மை பயவா வினைகளை மானத்தால் விரும்பாது ஒழிக.

தன்னை வியந்துழி இடமும் காலமும் வலியும் அறியப்படாமையானும், அறனும் பொருளும் இகழப்படுதலானும், 'எஞ்ஞான்றும் வியவற்க' என்றும், 'கருதியது முடித்தே விடுவல்' என்று அறம் பொருள் இன்பங்கள் பயவா வினைகளை நயப்பின் அவற்றால் பாவமும் பழியும் கேடும் வருமாகலின், அவற்றை 'நயவற்க' என்றும் கூறினார்.

இதனான் மத மானங்களின் தீமை கூறப்பட்டது.

### ஒப்புமை

**வியவற்க எஞ்ஞான்றும் தன்னை :**

" தன்னை வியந்தான் விரைந்து கெடும் " (குறள், 474.)

" எம்மை அறிந்திலிர் எம்போல்வார் இல்லென்று
தம்மைத்தாங் கொள்வது கோளன்று—தம்மை
அரியரா நோக்கி அறனறியும் சான்றோர்
பெரியராக் கொள்வது கோள்."

" கற்றனவும் கண்ணகன்ற சாயலும் இற்பிறப்பும்
பக்கத்தார் பாராட்டப் பாடெய்தும் தானுரைப்பின்
மைத்துனர் பல்கி மருந்தில் தணியாத
பித்தன்என் றெள்ளப் படும்." (நாலடி. 165, 340.) (436)

### 440

**காதல காதல் அறியாமை உய்க்கிற்பின்**
**ஏதில் ஏதிலார் நூல்.** 10

**பரிமேலழகர் :** காதல காதல் அறியாமை உய்க்கிற்பின் - தான் காதலித்த பொருள்களை அவர் அக் காதல் அறியாமல் அநுபவிக்க வல்லனாயின், ஏதிலார் நூல் ஏதில - பகைவர் தன்னை வஞ்சித்தற்கு எண்ணும் எண்ணம் பழுதாம்.

அறிந்தவழி அவை வாயிலாகப் புகுந்து வஞ்சிப்பர் ஆகலின், அறியாமல் உய்த்தால் வாயில் இன்மையின் வஞ்சிக்கப்படான் என்பதாம்.

காமம், வெகுளி, உவகை என்பன முற்றக் கடியும் குற்றம் அன்மையின், இதனுள் பெரும்பான்மைத்தாகிய காமம் நுகருமாறு கூறி, ஏனைச் சிறுபான்மையவற்றிற்குப் பொதுவகை விலக்கினையே கொண்டொழிந்தார்.

**உரை வேறுபாடு**

**காளிங்கர் :** ஏதில ஏதிலார் நூல் - இதுவும் அன்றிப் புறத்தனவாகியே போம். யாவை எனின், மற்றுத் தாம் தாற்பரித்த பொருளைத் தலையழித்தற்கு ஏதிலார் எண்ணிய எண்ணங்கள்,

**கவிராஜ பண்டிதர் :** காதல காதல் அறியாமை - தன்னால் விரும்பப்பட்ட ஸ்திரீ முதலான பொருள்களை அவர்கள் அவ்வாசை அறியாமல்.

**ஒப்புமை**

1. **ஏதில ஏதிலார் நூல் :**

" அயல அயலவர் நூல்." (ஏலாதி, 14.)

2. **முற்றும் :**

" .......................உட்கா தொழுகின்
பகைவர் எண்ணம் பயமில வென்னும்
நீதிப் பெருமைநூல் ஓதியும் ஓராய்" (பெருங். 2. 1 : 24-6.)

" வேந்தர்தாம் விழைபவெல்லாம் வெளிப்படார் மறைத்தல் கண்டாய்
நாந்தக உழவர் ஏறே நன்பொரு ளாவ தென்றான்."
(சீவக. 2910.) (440)

---

# 45. பெரியாரைத் துணைக்கோடல்

**பரிமேலழகர்:** அஃதாவது மூவிரு குற்றமும் முறைமையிற் கடிதலின் காவற் சாகாடுகைத்தற்கு உரியனாய அரசன் தீநெறி விலக்கி நன்னெறிச் செலுத்தும் பேரறிவுடையாரைத் தனக்குத் துணையாகக் கோடல். அதிகார முறைமையும் இதனானே விளங்கும். பேரறிவு உடையராவார், அரசர்க்கும் அங்கங்கட்கும் மானிடத் தெய்வக் குற்றங்கள் வாராமல் காத்தற்கு உரிய அமைச்சர், புரோகிதர்.

**மணக்குடவர்:** பெரியாரைத் துணைக் கோடலாவது தம்மின் முதிர்ந்த அறிவுடையாரைத் தமக்குத் துணையாகக் கொள்ளுதல்.

## 441

அறன்அறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை
திறன்அறிந்து தேர்ந்து கொளல். 1

**பரிமேலழகர்** : அறன் அறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை- அறத்தினது நுண்மையை அறிந்து தன்னின் மூத்த அறிவுடையாரது கேண்மையை, தேர்ந்து திறன் அறிந்து கொளல் - அரசன் அதனது அருமையை ஓர்ந்து கொள்ளும் திறம் அறிந்து கொள்க.

அறநுண்மை நூலானேயன்றி உய்த்துணர்வானும் அறியவேண்டுதலின், 'அறன் அறிந்து' என்றார். மூத்தல் - அறிவானும், சீலத்தானும், காலத்தானும் முதிர்தல். அறிவு உடையார் - நீதியையும் உலக இயலையும் அறிதலை உடையார். திறன் அறிதலாவது நன்கு மதித்தல், உயரச் செய்தல், அவர்வரை நிற்றல் என்பன முதலாக அவர் பிணிப்புண்ணும் திறன் அறிந்து செய்தல்.

### உரை வேறுபாடு

**காளிங்கர்**: இவ்வாறு பெரியோரை இவ்வரசர் தமக்குத் துணை கொள்ளும் இடத்துப் பல அறநூல்களாலே அறநெறிகளை அறிந்து முதிர்ந்த உணர்வுடைய பெரியோரது நட்பின் திறப்பாட்டினை அறிந்து, மற்று இதற்குக் குறைபடாதவாறு தேர்ந்து கைக்கொள்க.

### ஒப்புமை

**முற்றும்:**
"சிறியவர் அறிவினின் மிக்க விருத்தரை
அடிவீழ்ந் திடம்புகும் வீழிமிழலை." (**சம்பந்தர்.** வீழிமிழலை. 3.)
(441)

## 442

உற்றநோய் நீக்கி உறுஅமை முற்காக்கும்
பெற்றியார்ப் பேணிக் கொளல். 2

**பரிமேலழகர்** : உற்ற நோய் நீக்கி - தெய்வத்தானுக மக்களானுகத் தனக்கு வந்த துன்பங்களை நீக்குமாறு அறிந்து நீக்கி, உறுஅமை முன் காக்கும் பெற்றியார் - பின் அப்பெற்றியன வாராவண்ணம் முன் அறிந்து காக்கவல்ல தன்மையினை உடையாரை, பேணி கொளல் - அரசன் அவர் உவப்பன செய்து துணையாகக் கொள்க.

தெய்வத்தான் வரும் துன்பங்களாவன: மழையினது இன்மை மிகுதிகளானும், காற்று, தீ, பிணி என்று இவற்றானும் வருவன. அவை கடவுளரையும் தக்கோரையும் நோக்கிச் செய்யும் சாந்திகளான் நீக்கப்படும், மக்களான் வரும் துன்பங்களாவன: பகைவர், கள்வர், சுற்றத்தார், வினைசெய்வார் என்றிவர்களான் வருவன. அவை சாம பேத தான தண்டங்கள் ஆகிய நால்வகை உபாயத்துள் ஏற்றதனான் நீக்கப்படும். முற்காத்தலாவது. தெய்வத்தான் வருவனவற்றை உற்பாதங்களான் அறிந்து, அச் சாந்திகளாற் காத்தலும், மக்களான் வருவனவற்றை அவர் குணம், இங்கிதம், ஆகாரம், செயல் என்பனவற்றான் அறிந்து அவ் வுபாயங்களுள் ஒன்றால் காத்தலும் ஆம்; ஆகவே புரோகிதரையும் அமைச்சரையும் கூறியவாறாயிற்று. இங்கிதம், குறிப்பால் நிகழும் உறுப்பின் தொழில். ஆகாரம், குறிப்பின்றி நிகழும் வேறுபாடு. உவப்பன, நன்கு மதித்தல் முதலியன.

இவை இரண்டு பாட்டானும் பெரியாரது இலக்கணமும் அவரைத் துணையாகக் கோடல் வேண்டும் என்பதூஉம் கொள்ளுமாறு கூறப்பட்டன.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** இது மந்திரிகளைக் கூட்டுமாறு கூறிற்று.

### ஒப்புமை

**முற்றும்.**

"தன்னை அடைந்தார் வினைதீர்ப்ப தன்றோ
தலையாயவர் தங்கட னாவதுதான்" (அப்பர். அதிகை. 4.)

"பெரியாரைத் துணைக்கொள்." (ஆத்திசூடி.) (442)

## 443

**அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப்**
**பேணித் தமராக் கொளல்.** 3

**பரிமேலழகர்:** பெரியாரை பேணி தமரா கொளல் - பெரியவர்களை அவர் உவப்பன அறிந்து செய்து தமக்குச் சிறந்தாராகக் கொள்ளுதல், அரியவற்றுள் எல்லாம் அரிது - அரசர்க்கு அரிய பேறுகள் எல்லாவற்றுள்ளும் பெரிது.

உலகத்து அரியனவெல்லாம் பெறுவதற்கு உரிய அரசர்க்கு இப்பேறு சிறந்தது என்றது, இதனால் அவையெல்லாம் உளவாதல் நோக்கி.

### உரை வேறுபாடு

**பரிதியார்:** அரியவற்றுள் எல்லாம் அரிதே - அரிதான காரியம் ஒரு மலையை எடுத்து ஒரு மலைமேலே வைத்தல்; ஒரு கடுகிலே எழுகடலை அடக்கல். இதிலும் பெரியது.

**காளிங்கர்:** அரியவற்றுள் எல்லாம் அரிதே - கீழ்ச்சொன்ன கல்வியும் கேள்வியும் அறிவுடைமையும் குற்றங் கடிதலும் பிறவும் ஆகிய செயற்கரிய எல்லாவற்றுள்ளும் பெரிதும் அரிது.

### ஒப்புமை

**முற்றும்:**

"பொலந்தார் இராமன் துணையாத்தான் போந்த
இலங்கைக் கிழவற் கிளையான்—இலங்கைக்கே
பேர்ந்திறை யாயதூஉம் பெற்றான் பெரியாரைச்
சார்ந்து கெழீஇயிலார் இல்." (பழமொழி, 92.)

"தீர்வில் அன்பு செலுத்தலிற் செவ்வியோர்
ஆர்வ மன்னவற் காயுதம் ஆவதே." (கம்ப. மந்தரை. 20.) (443)

## 444

**தம்மிற் பெரியார் தமரா ஒழுகுதல்**
**வன்மையுள் எல்லாம் தலை.** 4

**பரிமேலழகர்:** தம்மின் பெரியார் தமரா ஒழுகுதல் - அறிவு முதலியவற்றால் தம்மின் மிக்கார் தமக்குச் சிறந்தாராகத் தாம் அவர் வழி நின்று ஒழுகுதல், வன்மையுள் எல்லாம் தலை - அரசர்க்கு எல்லா வலியுடைமையினும் தலை.

பொருள், படை, அரண்களான் ஆய வலியினும் இத் துணைவலி சிறந்தது என்றது, இவர் அவற்றான் நீக்கப்படாத தெய்வத்துன்பம் முதலியனவும் நீக்குதற்கு உரியர் ஆகலின். (444)

### 445

சூழ்வார்கண் ஆக ஒழுகலான் மன்னவன்
சூழ்வாரைச் சூழ்ந்து கொளல். 5

**பரிமேலழகர்:** சூழ்வார் கண் ஆக ஒழுகலான் – தன் பாரம் அமைச்சரைக் கண்ணாகக் கொண்டு நடத்தலான், மன்னவன் சூழ்வாரை சூழ்ந்து கொளல் - அரசன் அத் தன்மையராய அமைச்சரை ஆராய்ந்து தனக்குத் துணையாகக் கொள்க.

இரண்டாவது விகாரத்தால் தொக்கது. தானே சூழ வல்லனாயினும் அளவிறந்த தொழில்களான் ஆகுலம் எய்தும் அரசன் பாரம் அதுவே தொழிலாய அமைச்சரானல்லது இனிது நடவாமைபற்றி, அவரைக் கண்ணாகக் கூறினார். ஆராய்தல், அமைச்சியலுள் சொல்லப்படும் இலக்கணத்தினர் என்பதனை ஆராய்தல்.

இவை மூன்று பாட்டானும் பெரியாரைத் துணைக்கோடலின் சிறப்புக் கூறப்பட்டது.

#### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** மன்னவன் சூழ்வாரை சூழ்ந்து கொளல் - அரசன் தன்னைச் சூழ்ச்சியாற் கொல்ல நினைப்பாரைத் தானும் சூழ்ச்சியால் கொல்ல வல்லவனாதல்.

**பரிப்பெருமாள்:** பகைவர் சூழ்ச்சியால் அவரைத் தோள் வலியாற் கோடல் அரிதாம் ஆகலான் சூழ்வார் கண்ணாக ஒழுக வேண்டும்.

**பரிதியார்:** தன்னிற் பெரிய பலமான அரசரைத் தான் உறவு கொள்ள வேண்டினால் அவருக்கு இஷ்டமான பேரைத் துணையாகப் பண்ணிக் கொள்வான்.

#### ஒப்புமை

**சூழ்வார் கண்ணாக ஒழுகல்:**

"கற்றார் பலரைத்தம் கண்ணாக இல்லாதான்" (பழமொழி, 228.)

"கண்போற் காதலின் கழிபே ரமைச்சன்"

"உற்றது முடிக்கும் உறுதிநாட் டத்துக்
கற்றுப் பொருள்தெரிந்த கண்போற் காட்சி
அருமதி அமைச்சர்" (பெருங். 2.11:166, 3.3:93-5.)

"கற்ற மாந்தரைக் கண்ணெனக் கோடலும்......
கொற்றம் கொள்குறிக் கொற்றவற் கென்பவே" (சீவக. 1921.)

"மற்றவன் மனமும் கண்ணும் வாழ்க்கையும் வலிய சால்பும்
அற்றமில் புகழும் கோலும் ஆபவர் அமைச்ச ரன்றே"
"மந்திரக் கிழவர் கண்ணா." (சூளாமணி. மந்திர. 6, தூது. 135.) (445)

### 446

தக்கார் இனத்தனாய்த் தான்ஒழுக வல்லானைச்
செற்றார் செயக்கிடந்த தில். 6

**பரிமேலழகர்:** தக்கார் இனத்தனாய் தான் ஒழுக வல்லானை - தக்காராகிய இனத்தை உடையனாய்த் தானும் அறிந்து ஒழுகவல்ல அரசனை, செற்றார் செய கிடந்தது இல் - பகைவர் செய்யக் கிடந்ததொரு துன்பமும் இல்லை.

தக்கார் - அறிவு ஒழுக்கங்களால் தகுதி உடையார். ஒழுகுதல்-அறநீதி களின் நெறி வழுவாமல் நடத்தல். வஞ்சித்தல், கூடினரைப் பிரித்தல், வேறு பகைவிளைத்தல் என்று இவற்றானும், வலியானும், பகைவர் செய்யுந் துன்பங் கள் பலதிறத்த ஆயினும், தானும் அறிந்து அறிவார் சொல்லும் கொண் டொழுகுவான்கண் அவற்றுள் ஒன்றும் வாராது என்பார், 'செற்றார் செயக் கிடந்தது இல்' என்றார்.

### உரை வேறுபாடு

**பரிப்பெருமாள்:** தகுதியுடையார்க்கு இனவன் ஆதலாவது, தன்னோடு ஒத்த வரிசை அவர்க்கு உண்டாக்குதலும் தன்னைக்கண்டாற்போல அவரை உலகத்தார் மதிக்கப் பண்ணுதலும்.

### ஒப்புமை

**முற்றும்:**

"கொல்லை இரும்புனத்துக் குற்றி அடைந்தபுல்
ஒல்காவே ஆகும் உழவர் உழுபடைக்கு
மெல்லியரே ஆயினும் நற்சார்வு சார்ந்தார்மேற்
செல்லாவாம் செற்றார் சினம்." (நாலடி. 178.)

".........தோள்வலி தாங்கின ராயினும்
அமைச்சர் சொல்வழி யாற்றுதல் ஆற்றலே" (கம்ப. மந்தரை. 15,)

"சான்றோ ரினத்திரு." (ஆத்திசூடி.) (446)

## 447

இடிக்கும் துணையாரை ஆள்வரை யாரே
கெடுக்கும் தகைமை யவர். 7

**பரிமேலழகர்:** இடிக்கும் துணையாரை ஆள்வாரை - தீயன கண்டால் நெருங்கிச் சொல்லும் துணையாம் தன்மையை உடையாரை இவர் நமக்குச் சிறந்தார் என்று ஆளும் அரசரை, கெடுக்கும் தகைமையவர் யார் - கெடுக்கும் பெருமை உடைய பகைவர் உலகத்து யாவர்?

தீயன, பாவங்களும் நீதியல்லனவும். துணையாம் தன்மையாவது, தமக்கு அவையின்மையும் அரசன்கண் அன்புடைமையும் ஆம். அத் தன்மை உடையார் நெறியின் நீங்க விடாமையின், அவரை ஆளும் அரசர் ஒருவரானும் கெடுக்கப் படார் என்பதாம்.

நெருங்கிச் சொல்லும் அளவினோரை என்று உரைப்பாரும் உளர்.

இவை இரண்டு பாட்டானும் அதன் பயன் கூறப்பட்டது.

### ஒப்புமை

**இடிக்கும் துணையார்:**

"இடிக்குங் கேளிர்." (குறுந். 58.)

"மேனின்று மெய்கூறும் கேளிர்." (கலி. 3:21.) (447)

## 448

இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பார் இலானும் கெடும். 8

**பரிமேலழகர்:** இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன் - கழறுதற்கு உரியாரைத் தனக்குத் துணையாகக் கொள்ளாமையின் காவலற்ற அரசன், கெடுப்பார் இலானும் கெடும் - பகையாய்க் கெடுப்பார் இல்லையாயினும் தானே கெடும்.

இல்லாத, ஏமரா என்பன பெயரெச்ச அடுக்கு. கெடுப்பார் உளராவர் என்பது தோன்ற, இலானும் என்றார். தானே கெடுதலாவது, பாகன் இல்லாத யானைபோல நெறியல்லா நெறிச் சென்று கெடுதல்.

ஒப்புமை

**முற்றும்:**

"கடிக்கும்வா ளரவும் கேட்கும் மந்திரம் களிக்கின் றோயை
அடுக்கும்ஈ தடாதென் றுன்ற வேதுவோ டறிவு காட்டி
இடிக்குநர் இல்லை நீயே யெண்ணிய தெண்ணி யுன்னை
முடிக்கின்ற போது முன்னின் முடிவன்றி முடிவ துண்டோ."

"உளவன வெனினும் மெய்ம்மை யுணர்ந்தவர் முற்றும் ஓர்ந்தார்
விளைவன சொன்ன போதும் கொள்கிலை விடுதல் கண்டாய்
கிளைதரு சுற்றம் வெற்றி கேண்மைநம் கல்வி செல்வம்
களைவரு தானை யோடும் கழிவது காண்டி யென்றான்."

(கம்ப. நிந்தனை 59, கும்பகருணன். 33.) (448)

### 449

முதல்இலார்க் கூதியம் இல்லை மதலையாம்
சார்பிலார்க் கில்லை நிலை. 9

**பரிமேலழகர்:** முதல் இலார்க்கு ஊதியம் இல்லை - முதற்பொருள் இல்லாத வணிகர்க்கு அதனால் வரும் ஊதியம் இல்லையாம்; மதலை ஆம் சார்பு இல்லார்க்கு நிலை இல்லை - அதுபோலத் தம்மைத் தாங்குவதாம் துணைஇல்லா அரசர்க்கு அதனான் வரும் நிலை இல்லை.

முதலைப் பெற்றே இலாபம் பெறவேண்டுமாறுபோலத் தாங்குவாரைப் பெற்றே நிலைபெற வேண்டும் என்பதாம். நிலை - அரசர் பாரத்தோடு சலியாது நிற்றல்.

உரை வேறுபாடு

**பரிதியார்:** மதலையாம் சார்பு இலார்க்கு இல்லை நிலை - முதற்பொருள் இல்லார்க்கு லாபம் இல்லாதது போலப் பிள்ளை இல்லாதார்க்கு நிலைமை இல்லை.

ஒப்புமை

1. **முதலிலார்க் கூதியம் இல்:** (பழமொழி, 312.)

2. **முற்றும்:**

"கணையுலாம் சிலையி னீரைக் காக்குந ரில்லை யேனும்......
துணையிலா தவர்க்கும் இன்னா பகைப்புலம் தொலைத்து நீக்கல்."

(கம்ப. கவந்தப். 54.) (449)

### 450

பல்லார் பகைகொளலின் பத்தடுத்த தீமைத்தே
நல்லார் தொடர்கை விடல். 10

**பரிமேலழகர்:** பல்லார் பகை கொளலின் பத்து அடுத்த தீமைத்து - தான் தனியனாய் வைத்துப் பலரோடும் பகைகொள்ளுதலின் பதிற்று மடங்கு தீமை உடைத்து, நல்லார் தொடர் கை விடல் - அரசன் பெரியாரோடு நட்பினைக் கொள்ளாதொழிதல்.

பலர் பகை ஆயக்கால், "மோதி முள்ளொடு முட்பகை கண்டிடல், பேது செய்து பிளந்திடல்"[1] என்பவையல்லது, ஒருங்கு வினையாக் குறித்துச்

1. சீவக. 1920.

செய்தாலும் ஒருவாற்ருன் உய்தல்கூடும். நல்லார் தொடர்கை விட்டால் ஒருவாற்ருனும் உய்தல் கூடாமையின், இது செய்தல் அதனினும் தீது என்பதாம்.

இவை மூன்று பாட்டானும் அது செய்யாதவழிப் படும் குற்றம் கூறப்பட்டது.

**ஒப்புமை**

**நல்லார் தொடர் கைவிடல் தீமை:**

"பெரியாரோடு யாத்த தொடர்விடுதல் இன்னு." (இன்ஞ. 27.)

*(450)*

---

# 46. சிற்றினம் சேராமை

**பரிமேலழகர்:** அஃதாவது, சிறிய இனத்தைப் பொருந்தாமை. சிறிய இனமாவது, "நல்லதன் நலனும் தீயதன் தீமையும், இல்லென் போரும்"[1] விடரும், தூர்த்தரும், நடரும்[2] உள்ளிட்ட குழு. அறிவைத் திரித்து இருமையும் கெடுக்கும் இயல்பிற்றுய அதனைப் பொருந்தின் பெரியாரைத் துணைக் கோடல் பயன் இன்று என்பது உணர்த்தற்கு இஃது அதன்பின் வைக்கப் பட்டது.

**பரிதியார்:** சிற்றினம் சேராமையாவது-அறிவுக்கீனனுடன் சேராமை.

**451**

சிற்றினம் அஞ்சும் பெருமை சிறுமைதான்
சுற்றமாச் சூழ்ந்து விடும். 1

**பரிமேலழகர்:** பெருமை சிற்றினம் அஞ்சும் - பெரியோர் இயல்பு சிறிய இனத்தை அஞ்சா நிற்கும்; சிறுமை தான் சுற்றமா சூழ்ந்து விடும் - ஏனைச் சிறியோர் இயல்பு அதுசேர்ந்தபொழுதே அதனைத் தனக்குச் சுற்றமாக எண்ணித் துணியும்.

தத்தம் அறிவு திரியுமாறும் அதனுல் தமக்கு வரும் துன்பமும் நோக்கலின் அறிவுடையார் அஞ்சுவார் என்றும், அறிவு ஒற்றுமையான் பிறிது நோக்காமையின் அறிவு இலாதார் தமக்குச் சுற்றமாகத் துணிவர் என்றும் கூறினர். பொருளின் தொழில்கள் பண்பின்மேல் நின்றன.

இதனுன் சிறிய இனம் பெரியோர்க்கு ஆகாது என்பது கூறப் பட்டது.

**உரை வேறுபாடு**

***கவிராஜ பண்டிதர் :*** சிறுமைதான் சுற்றமாச் சூழ்ந்துவிடும் - அந்தச் சிறிய இனங்களைச் சேரவே அப்பொழுதே அவர்களையே சுற்றமாக்கிப் பெரியோர்கள் சேரார்கள்.

---

1. புறநா. 29 : 11.

2. விடர் - தீய நடையையுடைய காமுகர். தூர்த்தர் - பரத்தையை நுகரும் காமுகர். நடர் - கூத்தாடுவார். 'நகைவகையராகிய நட்பினராவார் விடரும் தூர்த்தரும் வேழம்பரும் போன்று பலவகையில் நகுவித்துத் தாம் பயன்கொண்டு ஒழிவார்' (குறள், 817, உரை); "விடரும் தூர்த்தரும் விட்டேற் ருளரும்", "மெலித்துகு நெஞ்சின் விடரும் தூர்த்தரும்." (மணி. 14:61, 15:60.)

ஒப்புமை

சிற்றினம் அஞ்சும் பெருமை:

"தெளிந்த சிந்தைய ரும்சிறி யார்களோடு
அளிந்த போதறி தற்கெளி தாவரோ"
"சிற்றினத் தவரொடும் செறிதல் சீரிதோ."
(கம்ப. ஊர்தேடு. 154, விபீடணன். 74.) (451)

## 452

நிலத்தியல்பான் நீர்திரிந் தற்றாகும் மாந்தர்க்
கினத்தியல்ப தாகும் அறிவு. 2

பரிமேலழகர்: நிலத்து இயல்பான் நீர் திரிந்து அற்று ஆகும் - தான் சேர்ந்த நிலத்தினது இயல்பானே நீர் தன்மை திரிந்து அந்நிலத்தின் தன்மைத் தாம்; மாந்தர்க்கு இனத்து இயல்பு அறிவு அது ஆகும் - அதுபோல மாந்தர்க்கு தாம் சேர்ந்த இனத்தின் இயல்பானே அறிவும் தன் தன்மை திரிந்து அவ் வினத்தின் தன்மைத்தாம்.

எடுத்துக்காட்டு உவமை. விசும்பின்கண் தன் தன்மைத்தாய நீர் நிலத் தோடு சேர்ந்தவழி நிறம், சுவை முதலிய பண்புகள் திரிந்தாற்போல, தனி நிலைக்கண் தன் தன்மைத்தாய அறிவு பிற இனத்தோடு சேர்ந்தவழிக் காட்சி முதலிய தொழில்கள் திரியும் என இதனான் அதனது காரணம் கூறப் பட்டது.

உரை வேறுபாடு

பரிதியார்: இனத்தியல்ப தாகும் அறிவு - இனத்துக்குத் தக்கதாக அறிவு உண்டாம்.

கவிராஜ பண்டிதர்: இனத்தியல்ப தாகும் அறிவு - அந்த இனங்களி னுடைய அறிவே வர்த்திக்கும்.

ஒப்புமை

1. நிலத்தியல்பால் நீர் திரிதல்:

" செம்புலப் பெயல்நீர் போல." (குறுந். 40:4.)

2. முற்றும்:

"புலத்தியன் வழிமுதல் வந்த பொய்யறு
குலத்தியல் பழிந்தது கொற்ற முற்றுமோ
வலத்தியல் அழிவதற் கேது மையறு
நிலத்தியல் நீரியல் என்னும் நீரதால்." (கம்ப. கும்பகர்ணன். 82.)
(452)

## 453

மனத்தான்ஆம் மாந்தர்க் குணர்ச்சி இனத்தான்ஆம்
இன்னான் எனப்படும் சொல். 3

பரிமேலழகர்: மாந்தர்க்கு உணர்ச்சி மனத்தான் ஆம் - மாந்தர்க்குப் பொது உணர்வு தம் மனம் காரணமாக உண்டாம்; இன்னான் எனப்படும் சொல் இனத்தான் ஆம் - இவன் இத் தன்மையன் என்று உலகத்தாரான் சொல்லப்படும் சொல் இனம் காரணமாக உண்டாம்.

இயற்கையாய புலன்உணர்வு மாத்திரத்திற்கு இனம் வேண்டாமை யின், அதனை 'மனத்தான் ஆம்' என்றும், செயற்கையாய விசேட உணர்வு

பற்றி நல்லன் என்றாக, தீயன் என்றாக நிகழும் சொற்கு இனம் வேண்டுதலின் அதனை, 'இனத்தான் ஆம்' என்றும் கூறினர்.

உவமையளவை கொள்ளாது, 'அத் திரிபும் மனத்தான் ஆம்' என்பாரை நோக்கி இதனான் அது மறுத்துத் கூறப்பட்டது.

## உரை வேறுபாடு

**மணக்குடவர்:** இன்னான் - இனியன் அல்லன்.

**பரிதியார்:** மனத்தானும் மாந்தர்க்கு உணர்ச்சி-மன அழுக்கு அற்றால் அறிவு உண்டாம்.

**காளிங்கர்:** தமது மனத்தின் நன்மை எவ்வளவு? மற்று அவ்வளவும் உளதாம் மக்கட்கு அறிவானது. மற்று இதனுடனே மனத்தின் தூய்மை எவ்வளவு? மற்று அவ்வளவு நன்மைகளை உடையர் என்னும் புகழ்ச்சி யாவராலும் எடுத்து உரைக்கப்படும்.

## ஒப்புமை

1. **இனத்தான்ஆம் இன்னான் எனப்படும் சொல்:**

"முயலவோ வேண்டா முனிவரை யானும்
இயல்பின்னர் என்ப தினத்தால் அறிக." (**பழமொழி**, 237.)

2. **முற்றும்:**

"மனத்தான் மறுவில ரேனும்தாம் சேர்ந்த
இனத்தான் இகழப் படுவர்—புனத்து
வெறிகமழ் சந்தனமும் வேங்கையும் வேமே
எறிபுனம் தீப்பட்டக் கால்."

"கடல்சார்ந்தும் இன்னீர் பிறக்கும் மலைசார்ந்தும்
உப்பீண் டுவரி பிறத்தலால் தத்தம்
இனத்தனைய ரல்லர் எறிகடல்தண் சேர்ப்ப
மனத்தனையர் மக்களென் பார்." (**நாலடி**. 180, 244, 245.)

"வேம்பின் இலையுட் கனியினும் வாழைதன்
தீஞ்சுவை யாதும் திரியாதாம் ஆங்கே
இனம்தீ தெனினும் இயல்புடையார் கேண்மை
மனம்தீதாம் பக்கம் அரிது."

"தக்கார் வழிகெடா தாகும் தகாதவர்
உக்க வழியராய் ஒல்குவார்—தக்க
இனத்தினான் ஆகும் பழியும் புகழும்
மனத்தினான் ஆகும் மதி." (**சிறுபஞ்ச**. 80.) (453)

## 454

**மனத்துளது போலக் காட்டி ஒருவற்**
**கினத்துள தாகும் அறிவு.** 4

**பரிமேலழகர்:** அறிவு - அவ் விசேட உணர்வு, ஒருவற்கு மனத்து உளது போல காட்டி - ஒருவற்கு மனத்தின்கண்ணே உளதாவது போலத் தன்னைப் புலப்படுத்தி, இனத்து உளது ஆகும் - அவன் சேர்ந்த இனத்தின்கண்ணே உளதாம்.

மெய்ம்மை நோக்காமுன் மனத்துளது போன்று காட்டியும், பின் நோக்கிய வழிப் பயின்ற இனத்துளதாயும் இருத்தலின், காட்டி என இறந்த காலத்தாற் கூறினர்.

'விசேட உணர்வுதானும் மனத்தின்கண்ணே அன்றே உளதாவது' என்பாரை நோக்கி, ஆண்டுப் புலப்படும் துணையே உள்ளது, அதற்கு மூலம் இனம் என்பது இதனாற் கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**பரிதியார்:** மனத்துள்ளது அறிவுபோலக் காட்டும்; தான் சேர்ந்த இனத்தின் தொழிலே செய்யும்.

**காளிங்கர்:** இனத்துள தாகும் அறிவு - ஓர் இனத்தினளவே உள தாகும் அறிவானது.

**கவிராஜ பண்டிதர்:** நல்ல விசேஷமாகிய அறிவுடன் கூடியிருந்த பேர்களிடத்தில் சிற்றினமாகிய தூர்த்தர் கூடவே, இவருடைய நல்ல அறிவும் அந்த இனங்கள் அறிவுடனே கூடிவிடும். (454)

## 455

மனம்தூய்மை செய்வினை தூய்மை இரண்டும்
இனம்தூய்மை தூவா வரும். 5

**பரிமேலழகர்:** மனம் தூய்மை செய்வினை தூய்மை இரண்டும் - அவ் விசேட உணர்வு புலப்படுதற்கு இடனாய மனம் தூயனாதல் தன்மையும் செய்யும் வினை தூயனாதல் தன்மையும் ஆகிய இரண்டும், இனம் தூய்மை தூவா வரும் - ஒருவற்கு இனம் தூயனாதல் தன்மை பற்றுக்கோடாக உளவாம்.

மனம் தூயனாதலாவது, விசேட உணர்வு புலப்படுமாறு இயற்கையாய அறியாமையின் நீங்குதல். செய்வினை தூயனாதலாவது, மொழி மெய்களால் செய்யும் நல்வினை உடையனாதல். தூவென்பது அப்பொருட்டாதல், "தூவறத் துறந்தாரை"[1] என்பதனானும் அறிக.

ஒருவன் இனம் தூயனாகவே அதனோடு பயிற்சி வயத்தான் மனம் தூயனாய் அதன்கண் விசேட உணர்வு புலப்பட்டு அதனால் சொல்லும் செயலும் தூயனாம் என, இதனான் இனத்து உள்ளவாமாறு கூறப்பட்டது.

### ஒப்புமை

**1. மனம் தூய்மை இனம் தூய்மை தூவா வரும்:**

"............ நெடுமனம்
தூயையா வுடைமையால் உறவினைத் துணிகுவார்."
(**கம்ப.** மராமரப். 52.)

**2. முற்றும்:**

"மிக்குப் பெருகி மிகுபுனல் சேர்ந்தாலும்
உப்பொழிதல் செல்லா ஒலிகடல்போல் மிக்க
இனநலம் நன்குடைய வாயினும் என்றும்
மனநலம் ஆகாவாம் கீழ்." (**பழமொழி**, 11.)

"தீயவர்ச் சேர்தல் செய்தார்
தூயவர் அல்லர் சொல்லில் தொன்னெறி தொடர்ந்தோர் என்றான்."
(**கம்ப.** சடாயு. 54.) (455)

## 456

மனம்தூயார்க் கெச்சம்நன் றாகும் இனம்தூயார்க்
கில்லைநன் றாகா வினை. 6

1. கலி. 118:9.

**பரிமேலழகர்:** மனம் தூயார்க்கு எச்சம் நன்று ஆகும் - மனம் தூயராயினர்க்கு மக்கட்பேறு நன்று ஆகும்; இனம் தூயார்க்கு நன்று ஆகா வினை இல்லை - இனம் தூயராயினர்க்கு நன்றாகாத வினை யாதும் இல்லை.

காரியம் காரணத்தின் வேறுபடாமையின் எச்சம் நன்று ஆகும் என்றும், நல்லினத்தோடு எண்ணிச் செய்யப்படுதலின் எல்லா வினையும் நல்லவாம் என்றும் கூறினர்.

**உரை வேறுபாடு**

**மணக்குடவர் :** எச்சம் - பின்பு நிற்கும் காணம் முதலான பொருள்கள். *(456)*

## 457

**மன நலம் மன்உயிர்க் காக்கம் இன நலம்**
**எல்லாப் புகழும் தரும்.** 7

**பரிமேலழகர்:** மன் உயிர்க்கு மனநலம் ஆக்கம் (தரும்) - நிலைபெற்ற உயிர்கட்கு மனத்தது நன்மை செல்வத்தைக் கொடுக்கும்; இன நலம் எல்லா புகழும் தரும் - இனத்தது நன்மை அதனோடு எல்லாப் புகழையும் கொடுக்கும்.

மன் உயிர் என்றது ஈண்டு உயர்திணை மேல் நின்றது. தரும் என்னும் இடவழுவமைதிச் சொல் முன்னும் கூட்டப்பட்டது. உம்மை, இறந்தது தழீஇய எச்சவும்மை. மனம் நன்றாதல்தானே அறம் ஆகலின் அதனை, 'ஆக்கம் தரும்' என்றும், புகழ் கொடுத்தற்கு உரிய நல்லோர் தாமே இனமாகலின், 'இனநலம் எல்லாப் புகழும் தரும்' என்றும் கூறினர்.

மேல், 'மனநன்மை இனநன்மைபற்றி வரும்' என்பதனை உட்கொண்டு, அஃது இயல்பாகவே உடையார்க்கு அவ்வின நன்மை வேண்டா என்பாரை நோக்கி, 'அதுவேயன்றி அத்தன்மைய பலவற்றையும் தரும்' என அவர்க்கு இது வேண்டும் என்பது இவ்விரண்டு பாட்டானும் கூறப்பட்டது.

**உரை வேறுபாடு**

**பரிதியார்:** ஆக்கம் - தீர்க்கமான ஆயுசு.

**ஒப்புமை**

**இனத்தால் நன்மை வருதல்:**

"ஆன தூயவ ரோடுடன் ஆடினர்
ஞான நீரவர் ஆகுவர்." (**கம்ப.** நீர் விளையாட்டு. 20.) (457)

## 458

**மன நலம் நன்குடையர் ஆயினும் சான்றோர்க்**
**கின நலம் ஏமாப் புடைத்து.** 8

**பரிமேலழகர்:** மனநலம் நன்கு உடையர் ஆயினும் - மனநன்மையை முன்னை நல்வினையால் தாமே உடையராயினும், சான்றோர்க்கு இனநலம் ஏமாப்பு உடைத்து - அமைந்தார்க்கு இனநன்மை அதற்கு வலியாதலை உடைத்து.

நன்கால் என்னும் மூன்றன் உருபு விகாரத்தால் தொக்கது. அந் நல்வினை உள்வழியும் மனநலத்தை வளர்த்து வருதலின், அதற்கு ஏமாப் புடைத்தாயிற்று.

உரை வேறுபாடு

**மணக்குடவர்:** ஏமாப்பு - காப்பு. (458)

## 459

மன நலத்தின் ஆகும் மறுமைமற் றஃதும்
இன நலத்தின் ஏமாப் புடைத்து. 9

**பரிமேலழகர்:** மனநலத்தின் மறுமை ஆகும் - ஒருவற்கு மன நன்மை யானே மறுமை இன்பம் உண்டாம்; மற்று அஃதும் இனநலத்தின் ஏமாப்பு உடைத்து - அதற்கு அச் சிறப்புத்தானும் இன நன்மையான் வலிபெறுதலை உடைத்து.

'மனநலத்தின் ஆகும் மறுமை' என்பது, 'மறுமை பயப்பது மனநன்மை தானே; பிறிதொன்று அன்று' என்னும் மதத்தை உடம்பட்டுக் கூறியவாறு. மற்று: வினைமாற்று. உம்மை, இறந்தது தழீஇய எச்ச உம்மை. ஒரோ வழித் தாமதகுணத்தான் மனநலம் திரியினும், நல்லினம் ஒப்ப நிறுத்தி மறுமை பயப்பிக்கும் என நிலைபெறச் செய்யுமாறு கூறப்பட்டது.

இவை ஐந்து பாட்டானும் சிற்றினம் சேராமையது சிறப்பு நல்லினம் சேர்தலாகிய எதிர்மறைமுகத்தால் கூறியவாறு அறிக.

உரை வேறுபாடு

**மணக்குடவர்:** ஏமாப்பு - காவலாதல்.

**பரிதியார்:** ஆகும் மறுமை - வருகிற சென்மம் நல்ல சென்மமாம். ஏமாப்பு - பெருமை. (459)

## 460

நல்லினத்தி னூங்கும் துணைஇல்லை தீயினத்தின்
அல்லல் படுப்பதூஉம் இல். 10

**பரிமேலழகர்:** நல்லினத்தி னூங்கு துணையும் இல்லை - ஒருவற்கு நல் லினத்தின் மிக்க துணையும் இல்லை; தீயினத்தினூங்கு அல்லல் படுப்பதூஉம் இல் - தீய இனத்தின் மிக்க பகையும் இல்லை,

ஐந்தன் உருபுகள் உறழ்பொருள்களின் வந்தன. 'ஊங்கு' என்பது பின்னும் கூட்டி உம்மை மாற்றி உரைக்கப்பட்டது. நல்லினம் அறியாமை யின் நீக்கித் துயர் உறாமல் காத்தலின் அதனைத் துணை என்றும், தீயினம் அறிவின் நீக்கித் துயர் உறுவித்தலின் அதனைப் பகை என்றும் கூறினர். 'அல்லற் படுப்பது' என்பது ஏதுப்பெயர்.

இதனான் விதிஎதிர்மறைகள் உடன்கூறப்பட்டன.

உரை வேறுபாடு

**பரிதியார்:** சற்புருஷர் துணைபோலச் சுகம் இல்லை.

ஒப்புமை

1. **நல்லினத்தினூங்குத் துணையில்லை:**

''தெருண்ட மேலவர் சிறியவர்ச் சேரினும் அவர்தம்
மருண்ட தன்மையை மாற்றுவர்''. (**கம்ப.** வரைக்காட்சி. 8.)

2. **முற்றும்:**

''உணர உணரும் உணர்வுடை யாரைப்
புணரப் புணருமாம் இன்பம்—புணரின்
தெரியத் தெரியும் தெரிவிலா தாரைப்
பிரியப் பிரியுமாம் நோய்.'' (**நாலடி.** 247.) (460)

# 47. தெரிந்து செயல்வகை

**பரிமேலழகர்:** அஃதாவது அரசன் தான் செய்யும் வினைகளை ஆராய்ந்து செய்யும் திறம். அச் செயல் பெரியாரைத் துணைக்கோடல் பயனுடைத்தாயவழி அவரோடும் செய்யப்படுவது ஆகலின், இது சிற்றினம் சேராமையின் பின் வைக்கப்பட்டது.

**பரிதியார்:** தெரிந்து செயல்வகையாவது புண்ணியமும் பாவமும் அறிந்து தனக்கு ஆன காரியம் செய்வான்.

### 461

அழிவதூஉம் ஆவதூஉம் ஆகி வழிபயக்கும்
ஊதியமும் சூழ்ந்து செயல். 1

**பரிமேலழகர்:** அழிவதூஉம் - வினை செய்யுங்கால் அப்பொழுது அதனுன் அழிவதனையும், ஆவதூஉம் - அழிந்தால் பின் ஆவதனையும், ஆகி வழி பயக்கும், ஊதியமும் - ஆய் நின்று பிற்பொழுது தரும் ஊதியத்தையும், சூழ்ந்து செயல் - சீர்தூக்கி உறுவதாயின் செய்க.

உறுவதாவது, நிகழ்வின்கண் அழிவதனின் ஆவது மிக்கு, எதிர் வினும் அது வளர்ந்து வருதல். அழிவது இன்மையின், எதிர்வின்கண் வரும் ஆக்கத்தை ஊதியம் என்றார். எனவே, அவ்வூதியம் பெறின் நிகழ்வின்கண் அழிவதும் ஆவதும் தம்முள் ஒத்தாலும் ஒழிதற்பாற்று அன்று என்பது பெற்றும்.

இரண்டு காலத்தும் பயன் உடைமை தெரிந்து செய்க என்பதாம்.

#### உரை வேறுபாடு

**பரிப்பெருமாள்:** வழிபயக்கும் ஊதியமாவது முன்பு நன்றாகத் தோற்றிப் பின்பு தீதாகாத வினை.

**பரிதியார்:** ஒருவனால் வருகிற ஆக்கமும் சேதமும் விசாரித்து, தொன்றுதொட்டு வருகிற ஊதியமும் விசாரித்துச் செய்வான். (461)

### 462

தெரிந்த இனத்தொடு தேர்ந்தெண்ணிச் செய்வார்க்
கரும்பொருள் யாதொன்றும் இல். 2

**பரிமேலழகர்:** தெரிந்த இனத்தொடு தேர்ந்து எண்ணி செய்வார்க்கு- தாம் தெரிந்துகொண்ட இனத்துடனே செய்யத் தகும் வினையை ஆராய்ந்து பின் தாமேயும் எண்ணிச் செய்து முடிக்கவல்ல அரசர்க்கு, அரும்பொருள் யாது ஒன்றும் இல் - எய்துதற்கு அரிய பொருள் யாதொன்றும் இல்லை.

ஆராயப்படுவன எல்லாம் ஆராய்ந்து போந்த இனம் என்றுமாம். செய்வார்க்கு என்றதனுன், வினை என்னும் செயப்படுபொருள் வருவிக்கப் பட்டது. வினையாவது, மேற்சேறல் முதல் வேறல்[1] ஈறாய தொழில். பொருள் கட்கு ஏதுவாய அதனின் தவறாமையின் அரிய பொருள்கள் எல்லாம் எளிதின் எய்துவர் என்பதாம்.

இவை இரண்டு பாட்டானும் செய்யத்தகும் வினையும் அது செய்யு மாறும் கூறப்பட்டன.

1. வேறல் - வெற்றிபெறுதல்.

உரை வேறுபாடு

**மணக்குடவர்:** அமாத்தியர் பலருள் ஆராய்ந்து கூட்டிக் கொள்ளப் பட்ட மந்திரிகளாகிய இனம். (462)

## 463

**ஆக்கம் கருதி முதல்இழக்கும் செய்வினை**
**ஊக்கார் அறிவுடை யார். 3**

**பரிமேலழகர்:** ஆக்கம் கருதி முதல் இழக்கும் செய்வினை - மேல் எய்தக் கடவ ஊதியத்தினை நோக்கி முன் எய்தி நின்ற முதல்தன்னையும் இழத்தற்கு ஏதுவாய செய்வினையை, அறிவு உடையார் ஊக்கார்-அறிவுடையார் மேற்கொள்ளார்.

கருதி என்னும் வினையெச்சம், இழக்கும் என்னும் பெயரெச்ச வினை கொண்டது. எச்ச உம்மை விகாரத்தால் தொக்கது. ஆக்கமே அன்றி முதலையும் இழக்கும் வினைகளாவன, வலியும் காலமும் இடனும் அறியாது பிறர் மண் கொள்வான் சென்று தம் மண்ணும் இழத்தல் போல்வன. முன் செய்து போந்த வினையாயினும் என்பார், 'செய்வினை' என்றார்.

ஒப்புமை

**முற்றும்:**

"வாணிகம் ஒன்றும் தேற்றாய் முதலொடும் கேடு வந்தால்
ஊணிகந் திட்டப் பட்ட ஊதிய ஒழுக்கின் நெஞ்சத்து
ஏணிகந் திலேசு நோக்கி இருமுதல் கெடாமை கொள்வார்."
(சீவக. 770.) (463)

## 464

**தெளிவி லதனைத் தொடங்கார் இளிவென்னும்**
**ஏதப்பா டஞ்சு பவர். 4**

**பரிமேலழகர்:** தெளிவு இலதனைத் தொடங்கார் - இனத்தோடும் தனித்தும் ஆராய்ந்து துணிதல் இல்லாத வினையைத் தொடங்கார், இளிவு என்னும் ஏதப்பாடு அஞ்சுபவர் - தமக்கு இளிவரவு என்னும் குற்றம் உண்டாதலை அஞ்சுவார்.

தொடங்கின் இடையின் மடங்கலாகாமையின், தொடங்கார் என்றார். இளிவரவு, அவ் வினையால் பின் அழிவு எய்தியவழி, அதன்மேலும் அறிவும் மானமும் இலர் என்று உலகத்தார் இகழும் இகழ்ச்சி. அஃது உண்டாதல் ஒருதலையாகலின், தெளிவு உள்வழித் தொடங்குக என்பதாம்.

உரை வேறுபாடு

**பரிதியார்:** உலகத்துக்குப் பொருந்தாக் காரியம் செய்வார் உலகத்துக்கு இழிவான காரியம் செய்யப் பயப்படுபவர்கள்.

ஒப்புமை

**தெளிவு இலதனைத் தொடங்கார்:**

"தேற்றம்இல் லாதான் துணிவின்னா" (இன்னா. 8.)
"ஒன்றாக்கி ஒன்றிழைத்தல் உணர்வுடைமைக் குரித்தன்றால்."
(கம்ப. ஊர்தேடு. 221.) (464)

## 465

**வகைஅறச் சூழா தெழுதல் பகைவரைப்**
**பாத்திப் படுப்பதோர் ஆறு. 5**

**பரிமேலழகர்:** வகை அற சூழாது எழுதல் - சென்றால் நிகழும் திறங்களை எல்லாம் முற்ற எண்ணாது சில எண்ணிய துணையானே அரசன் பகைவர் மேல் செல்லுதல், பகைவரை பாத்தி படுப்பது ஓர் ஆறு - அவரை வளரும் நிலத்திலே நிலைபெறச் செய்வது ஒரு நெறி ஆம்.

அத் திறங்களாவன வலி, காலம், இடன் என்று இவற்றால் தனக்கும் பகைவர்க்கும் உளவாம் நிலைமைகளும், வினை தொடங்குமாறும், அதற்கு வரும் இடையூறுகளும், அவற்றை நீக்குமாறும், வெல்லுமாறும், அதனால் பெறும் பயனும் முதலாயின. அவற்றுள் சில எஞ்சினும் பகைவர்க்கு இடனும் ஆகலான், முற்றுப் பெற எண்ண வேண்டும் என்பதாம்.

இவை மூன்று பாட்டானும் ஒழியத்தகும் வினையும், ஒழியாவழிப் படும் இழுக்கும் கூறப்பட்டன.

### உரை வேறுபாடு

**பரிதியார்:** ஒரு சத்துருவைச் செயிக்க வேண்டினால் அவனுக்கு அடுத்த பேரைக் கூட்டிக்கொண்டு அவர் துணையாலே இராசகாரியம் காண்பானல்லது சத்துருவை அசைவறத் தாவிப்பதாம்.

### ஒப்புமை

**முற்றும்:**

"பின்னின்றார் இனைய ரென்றும் உணர்கிலம் பிடித்த மாயம்
என்னென்றும் தெளிதல் தேற்றாம் யாவதீ தென்றும் ஓராம்
முன்னின்றார் முறையின் நின்றார் முனிந்துள வேட்டம் முற்றல்
பொன்னின்ற வயிரத் தோளாய் புகழுடைத்தாமன் றென்றான்".

(கம்ப. மாரீசன். 234.) *(465)*

## 466

செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க
செய்யாமை யானும் கெடும். 6

**பரிமேலழகர்:** செய்தக்க அல்ல செய கெடும் - அரசன் தன் வினைகளுள் செய்யத் தக்கன அல்லவற்றைச் செய்தால் கெடும்; செய்தக்க செய்யாமையானும் கெடும் - இனி அதனானே அன்றிச் செய்யத் தக்கனவற்றைச் செய்யாமைதன்னானும் கெடும்.

செய்யத்தக்கன அல்ல ஆவன பெரிய முயற்சியினவும், செய்தால் பயன் இல்லனவும், அது சிறிதாயினவும், ஐயமாயினவும், பின் துயர்விளைப்பனவும் என இவை. செய்யத் தக்கன ஆவன அவற்றின் மறுதலை ஆயின. இச் செய்தல் செய்யாமைகளான் அறிவு, ஆண்மை, பெருமை என்னும் மூவகை ஆற்றலுள் பொருள், படை என இருவகைத்தாய பெருமை சுருங்கிப் பகைவர்க்கு எளியனும் ஆகலான், இரண்டும் கேட்டிற்கு ஏது ஆயின.

இதனான், செய்வன செய்து, ஒழிவன ஒழிக என இரு வகையனவும் உடன் கூறப்பட்டன. *(466)*

## 467

எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவம் என்ப திழுக்கு. 7

**பரிமேலழகர்:** கருமம் எண்ணி துணிக - செய்யத்தக்க கருமமும் முடிக்கும் உபாயத்தை எண்ணித் தொடங்குக, துணிந்தபின் எண்ணுவம் என்பது இழுக்கு - தொடங்கி வைத்துப் பின் எண்ணக் கடவம் என்று ஒழிதல் குற்றம் ஆகலான்.

துணிவுபற்றி நிகழ்தலின், துணிவு எனப்பட்டது. சிறப்பும்மை விகாரத்தால் தொக்கது.[1] உபாயம் என்பது அவாய் நிலையான் வந்தது. அது கொடுத்தல், இன்சொல் சொல்லல், வேறுபடுத்தல், ஒறுத்தல் என நால் வகைப்படும். இவற்றை வடநூலார் தான, சாம, பேத, தண்டம் என்ப. அவற்றுள் முன்னைய இரண்டும் ஐவகைய. ஏனைய மூவகைய. அவ் வகைகளெல்லாம் ஈண்டு உரைப்பின் பெருகும். இவ்வுபாயம் எல்லாம் எண்ணாது தொடங்கின் அவ் வினை மாற்றுனால் விலக்கப்பட்டு முடியாமையானும், இடையின் ஒழிதல் ஆகாமையானும் அரசன் துயருறுதலின், அவ் வெண்ணாமையை இழுக்கு என்றார். செய்வனவற்றையும் உபாயம் அறிந்தே தொடங்குக என்பதாம்.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** எண்ணி - அதனால் வரும் பயனை எண்ணி.
**பரிதியார்:** எண்ணி - மேல் எண்ணி எண்ணி.

### ஒப்புமை

*1.* **எண்ணித் துணிக கருமம்:**

"அடுத்தவும் எண்ணிச் செய்தல் அண்ணலே அமைதி யன்றோ."
(கம்ப. மாரீசன். 236.)

2. **முற்றும்:**

"பேதாய் பிழைசெய் தனைபே ருலகின்
மாதா அனையா ளைமனக் கொடுநீ
யாதா கநினைத் தனைஎண் ணம்இலாய்
ஆதா ரம்நினக் கினியா ருளரோ."

"ஆலம்பார்த் துண்டவன்போ லாற்றலமைந் துளரெனினும்
சீலம்பார்க் குரியோர்கள் எண்ணாது செய்பவோ."
(கம்ப. சடாயு. 95, ஊர்தேடு. 222.) (467)

## 468

**ஆற்றின் வருந்தா வருத்தம் பலர்நின்று**
**போற்றினும் பொத்துப் படும்.** 8

**பரிமேலழகர்:** ஆற்றின் வருந்தா வருத்தம் - முடியும் உபாயத்தால் கருமத்தை முயலாத முயற்சி, பலர் நின்று போற்றினும் பொத்துப்படும் - துணைவர் பலர் நின்று புரை படாமல் காப்பினும் புரைபடும்.[2]

முடியும் உபாயத்தான் முயறலாவது கொடுத்தலைப் பொருள்நசையாளன் கண்ணும், இன்சொலைச் செப்பம் உடையான், மடியாளன், முன்னே பிறரோடு பொருது நொந்தவன் என இவர்கண்ணும், வேறுபடுத்தலைத் துணைப்படையாளன், தன்பகுதியோடு பொருந்தாதான் என இவர்கண்ணும், ஒறுத்தலை இவற்றில் வாராதவழி இவர்கண்ணும், தேறப்படாத கீழ்மக்கள் கண்ணும் செய்து, வெல்லுமாற்றான் முயறல். புரைபடுதல், கருதிய நன்மையன்றிக் கருதாத தீமை பயத்தல்.

உபாயத்தது சிறப்புக் கூறியவாறு.

### உரை வேறுபாடு

**காளிங்கர்:** அரசராவார் தமது நீதியால் முயன்று ஈட்டாத நெடும் பொருளைச் சான்றோர் பலரும் கூடி மற்று இது நன்று என்று கொண்டாடினும் சாலக் குற்றப்படும்.

1. கருமமும் என்ற சிறப்பும்மை. 2. புரை - குற்றம்.

ஒப்புமை

**முற்றும்:**

"வீங்குதோட் செம்பியன் சீற்றம் விறல்விசும்பில்
தூங்கும் எயிலும் தொலைத்தலால்—ஆங்கு
முடியும் திறத்தால் முயல்கதாம் கூரம்
படியிழுப்பின் இல்லை அரண்."

"தற்றூக்கித் தன்துணையுந் தூக்கிப் பயன்தூக்கி
மற்றவை கொள்வ மதிவல்லார்—அற்றன்றி
யாதானும் ஒன்றுகொண் டியாதானும் செய்தக்கால்
யாதானும் ஆகி விடும்." (பழமொழி, 49, 321.) (468)

## 469

**நன்றாற்ற லுள்ளும் தவறுண் டவரவர்**
**பண்பறிந் தாற்றாக் கடை.** 9

**பரிமேலழகர்:** நன்று ஆற்றலுள்ளும் தவறு உண்டு - வேற்றுவேந்தர் மாட்டு நன்றான உபாயம் செய்தற்கண்ணும் குற்றம் உண்டாம், அவர் அவர் பண்பு அறிந்து ஆற்றாக்கடை - அவரவர் குணங்களை ஆராய்ந்து அறிந்து அவற்றிற்கு இயையச் செய்யாவிடின்.

நன்றான உபாயமாவது கொடுத்தலும், இன்சொல் சொல்லுதலுமாம். அவை யாவர்கண்ணும் இனிய ஆதற் சிறப்புடைமையின், உம்மை சிறப்பும்மை. அவற்றை அவரவர் பண்பு அறிந்து ஆற்றாமையாவது, அவற்றிற்கு உரியர் அல்லாதார்கண்ணே செய்தல். தவறு - அவ்வினை முடியாமை.

உரை வேறுபாடு

**பரிதியார்:** ஒருவற்குத் தான் நல்ல காரியம் செய்தாலும் குற்றம் உண்டு, அவரவர் இயற்கை அறிந்து காரியம் செய்யானாகில்.

**காளிங்கர்:** அந்தணர் முதலிய குடிப்பிறந்தோர்க்கும் பிறர்க்கும் அரசரானவர் தாம் பல நன்மைகளைச் செய்யுமிடத்துக் குற்றம் உண்டாம்; மற்று எப்பொழுது எனின், அவை செய்கின்ற இடத்து மற்று அவரவர் மரபு அறிந்து தக்காங்குக் குறிக்கொண்டு நீதியைச் செய்யா இடத்து. (469)

## 470

**எள்ளாத எண்ணிச் செயல்வேண்டும் தம்மொடு**
**கொள்ளாத கொள்ளா துலகு.** 10

**பரிமேலழகர்:** தம்மொடு கொள்ளாத உலகு கொள்ளாது - அரசர் வினை முடித்தற்பொருட்டுத் தம் நிலைமையோடு பொருந்தாத உபாயங்களைச் செய்வராயின் உலகம் தம்மை இகழாநிற்கும்; எள்ளாத எண்ணி செயல் வேண்டும் - ஆகலான் அஃது இகழா உபாயங்களை நாடிச் செய்க.

தம் என்பது ஆகுபெயர். தம் நிலைமையோடு பொருந்தாத உபாயங்களைச் செய்தலாவது தாம் வலியராய்வைத்து மெலியார்க்குரிய கொடுத்தல் முதலிய மூன்றனைச் செய்தலும், மெலியராய்வைத்து வலியார்க்குரிய ஒறுத்தலைச் செய்தலுமாம். இவை இரண்டும் அறிவிலார் செய்வனவாகலின், உலகம் கொள்ளாது என்றார். அஃது எள்ளாதன செய்தலாவது அவற்றைத் த்தம் வன்மை மென்மைகட்கு ஏற்பச் செய்தல். மேல் இடவகையான் உரிமை கூறிய உபாயங்கட்கு வினைமுதல்வகையான் உரிமை கூறியவாறு.

இவை நான்கு பாட்டானும் செய்வனவற்றிற்கு உபாயமும், அதனது உரிமையும் கூறப்பட்டன. (470)

# 48. வலி அறிதல்

**பரிமேலழகர்:** அஃதாவது அவ் வுபாயங்களுள் ஒறுத்தல் குறித்த அரசன் நால்வகை வலியையும் அளந்து அறிதல். அதிகார முறைமையும் இத னுனே விளங்கும்.

**மணக்குடவர்:** வலி அறிதலாவது தனக்குள்ள வலியும் பிறர்க்குள்ள வலியும் அறிதல். செய்யத்தக்க வினையை எண்ணினுலும் அதனைச் செய்து முடிக்குங்கால் வலி அறிந்து செய்ய வேண்டுதலின், அதன்பின் இது கூறப் பட்டது.

**பரிதியார்:** வலி அறிதலாவது மாற்றுன் சத்துவத்தை அறிய வேண்டும்.

## 471

வினைவலியும் தன்வலியும் மாற்றுன் வலியும்
துணைவலியும் தூக்கிச் செயல். 1

**பரிமேலழகர்:** வினை வலியும் - தான் செய்யக் கருதிய வினைவலியை யும், தன் வலியும் - அதனைச் செய்து முடிக்கும் தன் வலியையும், மாற்றுன் வலியும் - அதனை விலக்கலுறும் மாற்றுன் வலியையும், துணை வலியும் – இரு வர்க்கும் துணையாவார் வலியையும், தூக்கி செயல் - சீர்தூக்கித் தன் வலி மிகுமாயின் அவ் வினையைச் செய்க.

இந் நால்வகை வலியுள் வினைவலி அரண் முற்றலும் கோடலும் முதலிய தொழிலானும், ஏனைய மூவகை ஆற்றலானும் கூறுபடுத்துத் தூக்கப் படும். 'தன்வலி மிகலின்கண் செய்க' என்ற விதியால், தோற்றல் ஒரு தலை யாய குறைவின்கண்ணும், வேறல் ஐயமாய ஒப்பின்கண்ணும் ஒழிக என்பது பெற்றும்.

### உரை வேறுபாடு

**பரிதியார்:** வலி - சத்துவம். துணைவலி - தனக்குத் துணையானவர்கள் சத்துவம்.

### ஒப்புமை

*முற்றும்:*

''தற்றூக்கித் தன்துணையும் தூக்கிப் பயன்தூக்கி
மற்றவை கொள்வ மதிவல்லார்.'' (பழமொழி, 321.) (471)

## 472

ஒல்வ தறிவ தறிந்ததன் கண்தங்கிச்
செல்வார்க்குச் செல்லாத தில். 2

**பரிமேலழகர்:** ஒல்வது அறிவது அறிந்து - தமக்கு இயலும் வினையை யும் அதற்கு அறிய வேண்டுவதாய வலியையும் அறிந்து, அதன்கண் தங்கி செல்வார்க்கு - எப்பொழுதும் மன மொழி மெய்களை அதன்கண் வைத்துப் பகைமேல் செல்லும் அரசர்க்கு, செல்லாதது இல் - முடியாத பொருள் இல்லை.

ஒல்வது எனவே வினைவலி முதலாய மூன்றும் அடங்குதலின் ஈண்டு அறிவது என்றது துணைவலியே ஆயிற்று. எல்லாப் பொருளும் எய்துவர் என்பதாம்.

இவை இரண்டு பாட்டானும் வலியின் பகுதியும் அஃது அறிந்து மேற் செல்வார் எய்தும் பயனும் கூறப்பட்டன.

### உரை வேறுபாடு

**பரிதியார்:** தன் சத்துவம் அறிந்து மந்திரி வார்த்தைகள் கேட்டு நடப்பானாகில் அவன் நினைத்த காரியம் முடியாதது இல்லை. (472)

## 473

உடைத்தம் வலிஅறியார் ஊக்கத்தின் ஊக்கி
இடைக்கண் முரிந்தார் பலர். 3

**பரிமேலழகர்:** உடை தம் வலி அறியார் - கருத்தா ஆதலையுடைய தம் வலியின் அளவு அறியாதே, ஊக்கத்தின் ஊக்கி - மன எழுச்சியால் தம்மின் வலியாரோடு வினை செய்தலைத் தொடங்கி, இடைக்கண் முரிந்தார் பலர் - அவர் அடர்த்தலான் அது செய்து முடிக்கப் பெறாது இடையே கெட்ட அரசர் உலகத்துப் பலர்.

உடைய என்பது அவாய் நின்றமையின், செயப்படுபொருள் வருவிக்கப்பட்டது. மூவகை ஆற்றலுள்ளும் சிறப்புடைய அறிவுடையார் சிலராதலின், 'முரிந்தார் பலர்' என்றார். அதனால் தம் வலி அறிந்தே தொடங்குக என்பது எஞ்சி நின்றது.

### ஒப்புமை

**முற்றும்:**

"ஆற்றா ராகில் தம்மைக்கொண் டடங்கா ரோஎன் னுருயிர்க்குக்
கூற்றாய் நின்ற குலச்சனகி குவளை மலர்ந்த தாமரைக்குத்
தோற்றாய் அதனான் அகங்கரிந்தாய் மெலிந்தாய்
வெதும்பத் தொடங்கினாய்
மாற்றார் செல்வம் கண்டழிந்தால் வெற்றி யாக வற்றாமோ."
(கம்ப. மாரீசன். 115.) (473)

## 474

அமைந்தாங் கொழுகான் அளவறியான் தன்னை
வியந்தான் விரைந்து கெடும். 4

**பரிமேலழகர்:** ஆங்கு அமைந்து ஒழுகான் - அயல் வேந்தரோடு பொருந்தி ஒழுகுவதும் செய்யாது, அளவு அறியான் - தன் வலியளவு அறிவதும் செய்யாது, தன்னை வியந்தான் - தன்னை வியந்து அவரோடு பகைத்த அரசன், விரைந்து கெடும் - விரையக் கெடும்.

காரியத்தைக் காரணமாக உபசரித்து, 'வியந்தான்' என்றார். 'விரைய' என்பது திரிந்து நின்றது. நட்பாய் ஒழுகுதல், வலி அறிந்து பகைத்தல் என்னும் இரண்டனுள் ஒன்றன்றே அயல் வேந்தரோடு செயற்பாலது? இவையன்றித் தான் மெலியனாய் வைத்து அவரோடு பகை கொண்டானுக்கு ஒரு பொழுதும் நிலையின்மையின், 'விரைந்து கெடும்' என்றார்.

இவை இரண்டு பாட்டானும் தன் வலி அறியாவழிப் படும் இழுக்குக் கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**பரிதியார்:** மந்திரிகள் புத்திக்குள்ளே அடங்கி ஒழுகாத அரசன் தன் சத்துவம் அறியாமல் தன்னை வியந்துகொள்வானாகில் சடுதியிலே கெடுவன்.

**காளிங்கர்:** யாதானும் ஒரு பொருள் முற்றுப் பெற்றது யாங்கு, மற்று ஆங்கு அதற்கு ஏறக் கடவானுமாய் மற்றுத் தன்விதி வரம்பினை உணராதானுமாய் வறிதே தன்னைப் பெரிதும் மேலாக மதிக்கின்றான்

யாவன், மற்று அம் மதிப்புக்குத் தக்காங்கு நடக்க வேண்டினதால் விரைந்து கெடும்.

### ஒப்புமை

**தன்னை வியந்தான் விரைந்து கெடுதல்:**

"ஒன்னார் அடநின்ற போழ்தின் ஒருமகன்
தன்னை எனைத்தும் வியவற்க" (பழமொழி, 306.)
"அரக்கனஃ துரைத்த லோடும் அறிந்தனன் அடங்கி நெஞ்சம்
தருக்கினர் கெடுவ ரென்னும் தத்துவம் நிலையிற் றன்றோ"
"களித்தவர் கெடுதல் திண்ணம்."
(கம்ப. மாரீசன். 201, சம்பாதி. 59.) (474)

## 475

**பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்**
**சால மிகுத்துப் பெயின்.** 5

**பரிமேலழகர்:** பீலி பெய் சாகாடும் அச்சு இறும் - பீலி ஏற்றிய சகடமும் அச்சு முறியும், அப் பண்டம் சால மிகுத்து பெயின் – அப் பீலியை அது பொறுக்கும் அளவன்றி மிகுத்து ஏற்றின்.

உம்மை, சாகாட்டது வலிச்சிறப்பே[1] அன்றிப் பீலியது நொய்மைச் சிறப்பும் தோன்ற நின்றது. இறும் என்னும் சினைவினை முதல்மேல் நின்றது. 'எளியர் என்று பலரோடு பகை கொள்வான் தான் வலியனே ஆயினும் அவர் தொக்க வழி வலி அழியும்' என்னும் பொருள் தோன்ற நின்றமையின், இது பிறிது மொழிதல் என்னும் அலங்காரம்; இதனை நுவலா நுவற்சி என்பாரும், ஒட்டு என்பாரும் உளர்.

ஒருவன் தொகுவார் பலரோடு[2] பகைகொள்ளற்க என்றமையின், இதனுன் மாற்றான் வலியும் அவன் துணை வலியும் அறியாவழிப் படும் இழுக்குக் கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**பரிதியார்:** பலம் இல்லாதார் பலர் கூடினாலும் சத்துவமாம். ஆகையால் அரசன் வீரராகாத பேரையும் கனம்பெறக் கூட்டிக் கொள்வான்.

### ஒப்புமை

**முற்றும்:**

"துன்னினார்
நன்மை யிலராய் விடினும் நனிபலராம்
பன்மையிற் பாடுடைய தில்." (பழமொழி, 306.) (475)

## 476

**நுனிக்கொம்பர் ஏறினார் அஃதிறந் தூக்கின்**
**உயிர்க்கிறுதி ஆகி விடும்.** 6

**பரிமேலழகர்:** கொம்பர் நுனி ஏறினார் அஃது இறந்து ஊக்கின் - ஒரு மரக் கோட்டினது நுனிக்கண்ணே ஏறி நின்றார் தம் ஊக்கத்தால் அவ் வளவினைக் கடந்து மேலும் ஏற ஊக்குவராயின், உயிர்க்கு இறுதி ஆகி விடும் - அவ் வூக்கம் அவர் உயிர்க்கு இறுதியாய் முடியும்.

1. (பி-ம்.) வலிச்சிறப்பேயும் அன்றி. 2. (பி-ம்.) ஒருவன் பலரோடு.

'நுனிக்கொம்பர்' என்பது 'கடைக்கண்' என்பது போலப் பின் முன்னாகத் தொக்க ஆறும் வேற்றுமைத் தொகை. பன்மை, அறிவின்மை பற்றி இழித்தற்கண் வந்தது. இறுதிக்கு ஏது ஆவதனை இறுதி என்றார். 'பகைமேற் செல்வான் தொடங்கித் தன்னால் செல்லலாமளவும் சென்று நின்றான், பின் அவ்வளவின் நில்லாது மன எழுச்சியான் மேலும் செல்லுமாயின், அவ்வெழுச்சி வினை முடிவிற்கு ஏது ஆகாது அவன் உயிர் முடிவிற்கு ஏதுவாம்' என்னும் பொருள் தோன்ற நின்றமையின், இதுவும் மேலை அலங்காரம்.

'அளவு அறிந்து நிற்றல் வேண்டும்' என்றமையின், இதனான் வினை வலி அறியாவழிப் படும் இழுக்குக் கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**பரிதியார்:** அடிப்பணையிலே நின்று மரத்தில் பழம் பறியாமல் நுனிக் கொம்பிலே ஏறினார் போல, கெட்ட புத்தியை எண்ணாமல் உறுதியான காரியத்தை விசாரிக்கில் அக் காரியம் பலிக்கும்.

### ஒப்புமை

**முற்றும்:**
"நெடுமரம் நீள்கோட் டுயர்பாய்தல் இன்னா." (இன்னா. 31.) *(476)*

## 477

ஆற்றின் அளவறிந் தீக அதுபொருள்
போற்றி வழங்கும் நெறி. 7

**பரிமேலழகர்:** ஆற்றின் அளவு அறிந்து ஈக - ஈயும் நெறியானே தமக்கு உள்ள பொருளின் எல்லையை அறிந்து அதற்கு ஏற்ப ஈக; அது பொருள் போற்றி வழங்கும் நெறி - அங்ஙனம் ஈதல் பொருளைப் பேணிக் கொண்டு ஒழுகும் நெறியாம்.

ஈயும் நெறி மேல் இறைமாட்சியுள், "வகுத்தலும் வல்ல தரசு"[1] என்புழி உரைத்தாம். எல்லைக்கு ஏற்ப ஈதலாவது, ஒன்றான எல்லையை நான்கு கூறாக்கி அவற்றுள் இரண்டனைத் தன் செலவாக்கி, ஒன்றனை மேல் இடர் வந்துழி அது நீக்குதற் பொருட்டு வைப்பாக்கி, நின்ற ஒன்றனை ஈதல். பிறரும், "வருவாயுட் கால்வழங்கி வாழ்தல்"[2] என்றார். பேணிக்கொண்டு ஒழுகுதல், ஒருவரோடு நட்பு இல்லாத அதனைத் தம்மோடு நட்புண்டாக்கிக் கொண்டு ஒழுகுதல். முதலில் செலவு சுருங்கின் பொருள் ஒருகாலும் நீங்காது என்பதாம்.

### உரை வேறுபாடு

**பரிதியார்:** அரசன் இவர்கள் தனக்கு உதவியாவர் என்று அறிந்து பொருள் கொடானாகில் அப் பொருளும் கெடும்; மனிதரும் கூடார்.

**காளிங்கர்:** பொருள் வரலாற்றினது சிறுமை பெருமை அளவு அறிந்து அதற்குத் தக்காங்கு அரசர் யாவர்க்கும் ஈந்து ஒழுகுக; மற்று அங்ஙனம் செய்யின், அஃது அப்பொருளினைக் காக்கும் இடம் காத்து வழங்கும் வழி வழங்கும் முறைமையாவது. எனவே யாவரும் தத்தம் பொருள் வரலாற்றுக்குத் தக்காங்குக் காக்கும் இடம் காத்தும் ஈயுமிடம் ஈத்தும் சேறலே கடன். *(477)*

## 478

ஆகா றளவிட்டி தாயினுங் கேடில்லை
போகா றகலாக் கடை. 8

1. குறள், 385. 2. திரிகடுகம், 21.

**பரிமேலழகர்:** ஆகு ஆறு அளவு இட்டிது ஆயினும் கேடு இல்லை - அரசர்க்குப் பொருள் வருகின்ற நெறி அளவு சிறிதாயிற்றாயினும் அதனால் கேடு இல்லையாம், போகு ஆறு அகலா கடை - போகின்ற நெறி அளவு அதனிற் பெருகாதாயின்.

'இட்டிது' எனவும் 'அகலாது' எனவும் வந்த பண்பின் தொழில்கள் பொருள்மேல் நின்றன. பொருள் என்பது அதிகாரத்தான் வருவித்து, அளவு என்பது பின்னும் கூட்டி உரைக்கப் பட்டன. முதலும் செலவும் தம்முள் ஒப்பினும் கேடு இல்லை என்பதாம். *(478)*

**479**

அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல
இல்ஆகித் தோன்றாக் கெடும். 9

**பரிமேலழகர்:** அளவு அறிந்து வாழாதான் வாழ்க்கை - தனக்குள்ள பொருளின் எல்லையை அறிந்து அதற்கு ஏற்ப வாழமாட்டாதான் வாழ்க்கைகள், உள போல இல்ஆகி தோன்றா கெடும் - உள்ளனபோலத் தோன்றி மெய்ம்மையான் இல்லையாய்ப் பின்பு அத்தோற்றமும் இன்றிக் கெட்டுவிடும்.

அவ் வெல்லைக்கு ஏற்ப வாழ்தலாவது, அதனிற் சுருக்கக் கூடாதாயின் ஒப்பவாயினும் ஈத்தும் துய்த்தும் வாழ்தல். தொடக்கத்தில் கேடு வெளிப்படாமையின், 'உளபோலத் தோன்றி' என்றார். முதலில் செலவு மிக்கால் வரும் ஏதம் கூறியவாறு.

உரை வேறுபாடு

**காளிங்கர்:** வாழ்க்கை - ஒழுக்கமானது. *(479)*

**480**

உளவரை தூக்காத ஒப்புர வாண்மை
வளவரை வல்லைக் கெடும். 10

**பரிமேலழகர்:** உள வரை தூக்காத ஒப்புரவு ஆண்மை - தனக்குள்ள அளவு தூக்காமைக்கு ஏதுவாய ஒப்புரவாண்மையால், வள வரை வல்லை, கெடும் - ஒருவன் செல்வத்தின் எல்லை விரையக் கெடும்.

'ஒப்புரவே ஆயினும் மிகலாகாது' என்றமையான், இதுவும் அது.

இவை நான்கு பாட்டானும் மூவகை ஆற்றலுள் பெருமையின் பகுதியாய பொருள்வலியறிதல் சிறப்பு நோக்கி வகுத்துக் கூறப்பட்டது.

உரை வேறுபாடு

**கவிராஜ பண்டிதர்:** ஒப்புரவாண்மை - கீர்த்தி. *(480)*

---

# 49. காலம் அறிதல்

**பரிமேலழகர்:** அஃதாவது வலியான் மிகுதி உடையானாய்ப் பகைமேல் சேறலுற்ற அரசன் அச் செலவிற்கு ஏற்ற காலத்தினை அறிதல். அதிகார முறைமையும் இதனானே விளங்கும்.

**மணக்குடவர்:** காலம் அறிதலாவது வினை செய்தற்காம் காலம் அறிதல். வினை செய்யும் காலமும் அறிந்து செய்ய வேண்டுதலின், அதன் பின் இது கூறப்பட்டது.

## 481

பகல்வெல்லும் கூகையைக் காக்கை இகல்வெல்லும்
வேந்தர்க்கு வேண்டும் பொழுது. 1

**பரிமேலழகர்:** கூகையை காக்கை பகல் வெல்லும் - தன்னின் வலி தாய கூகையைக் காக்கை பகற்பொழுதின்கண் வெல்லாநிற்கும்; இகல் வெல்லும் வேந்தர்க்கு பொழுது வேண்டும் - அதுபோல, பகைவரது இகலை வெல்லக் கருதும் அரசர்க்கு அதற்கு ஏற்ற காலம் இன்றியமையாது.

எடுத்துக்காட்டு உவமை, காலம் அல்லாவழி வலியால் பயன் இல்லை என்பது விளக்கி நிற்கின்றது. இனிக் காலமாவது வெம்மையும் குளிர்ச்சியும் தம்முள் ஒத்து நோய் செய்யாது தண்ணீரும் உணவும் முதலிய உடைத்தாய்த் தானை வருந்தாது செல்லும் இயல்பினதாம்.

இதனால் காலத்தது சிறப்புக் கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** பகல்வெல்லும் கூகையைக் காக்கை - இராப்பொழுது வெல்லும் கூகையைக் காக்கை பகற்பொழுது வெல்லும்.

**பரிதியார்:** பகற்காலம் கூகையைக் காக்கை வெல்லும். இராக் காலம் காக்கையைக் கூகைவெல்லும். அத்தன்மை போலக் காலம் அறிந்து செய்யில் வெல்லலாம்.

**காளிங்கர்:** கூகையாகிய புள்ளினை எறியுமிடத்துத் தனக்கு வாய்த்த காலமாகிய பகற்பொழுதின்கண் சென்று அடர்த்து வெல்லும் காக்கையானது. மற்று அங்ஙனமே வெல்லும் காக்கையை எறியுமிடத்துத் தனக்கு வாய்த்த காலமாகிய இருட்பொழுதின்கண் சென்று அடர்த்து வெல்லும் கூகையானது.

### ஒப்புமை

1. **பகல்வெல்லும் கூகையைக் காக்கை :**

"கடத்திடைக் காக்கை யொன்றே யாயிரம் கோடி கூகை
இடத்திடை அழுங்கச் சென்றுங் கின்னுயிர் செகுத்த தன்றே"
(சீவக. 1927)

"வேந்தர், அற்காக்கை கூகையைக்கண்
டஞ்சினவாம் எனஅகன்றார்"
(கம்ப. கார்முகப். 23.)

2. **காலம் வெற்றி தருதல்:**

"காது கொற்ற நினக்கலாமை பிறர்க்கெவ்வாறு கலக்குமோ......
போது பிற்படல் உண்டி தோர்பொருள் அன்றியின்று
புணர்த்தியேல்
யாதுனக்கிய லாத தெந்தை வருந்தல் என்ன இயம்பினான்."
(கம்ப. கார்காலப். 69.) 481

## 482

பருவத்தோ டொட்ட ஒழுகல் திருவினைத்
தீராமை ஆர்க்கும் கயிறு. 2

**பரிமேலழகர்:** பருவத்தோடு ஒட்ட ஒழுகல் - அரசன் காலத்தோடு பொருந்த வினை செய்து ஒழுகுதல், திருவினை தீராமை ஆர்க்கும் கயிறு - ஒருவர்கண்ணும் நில்லாது நீங்கும் செல்வத்தைத் தன்கண் நீங்காமல் பிணிக்கும் கயிறும்.

காலத்தோடு பொருந்துதல், காலம் தப்பாமல் செய்தல். தீராமை என்றதனால், தீர்தல் மாலையது என்பது பெற்றும். வினைவாய்த்து வருத லான், அதனின் ஆகும் செல்வம் எஞ்ஞான்றும் நீங்காது என்பதாம்.

**உரை வேறுபாடு**

**மணக்குடவர்**: இனிக் காலம் அறிந்ததனால் வரும் பயன் கூறுவார் முற்படச் செல்வம் கெடாது என்றார்.

**பரிதியார்** : தாயம் வருமட்டும் பார்த்திருந்து காலமறிந்து காரியம் கொள்வானாகில், அது திருமாது தன்னை விட்டு நீங்காமல் கட்டின கயிறு.

**ஒப்புமை**

1. **பருவத்தோ டொட்ட ஒழுகல்** :
" பருவத்தோ டொத்துவாழ். " (ஆத்திசூடி.)

2. **திருவினைத் தீராமை ஆர்க்கும் கயிறு** :
" நல்வினை ஆர்க்கும் கயிறு." (திரி. 23.) (482)

## 483

அருவினை என்ப உளவோ கருவியாற்
காலம் அறிந்து செயின். 3

**பரிமேலழகர்** : அருவினை என்ப உளவோ - அரசரால் செய்தற்கு அரிய வினைகள் என்று சொல்லப்படுவன உளவோ, கருவியான் காலம் அறிந்து செயின் - அவற்றை முடித்தற்கு ஏற்ற கருவிகளுடனே செய்தற்கு ஆம் காலம் அறிந்து செய்வராயின் ?

கருவிகளாவன, மூவகை ஆற்றலும்[1] நால்வகை உபாயங்களுமாம்.[2] 'அவை உளவாய வழியும் காலம் வேண்டும்' என்பது அறிவித்தற்கு, 'கருவி யான்' என்றார். எல்லா வினையும் எளிதின் முடியும் என்பதாம்.

**ஒப்புமை**

**முற்றும்** :
"ஞால மன்னற்கு நல்லவர் நோக்கிய
காலம் அல்லது கண்ணும்உண் டாகுமோ."
(கம்ப. மந்தரை. 19.) (483)

## 484

ஞாலம் கருதினும் கைகூடும் காலம்
கருதி இடத்தாற் செயின். 4

**பரிமேலழகர்** : ஞாலம் கருதினும் கைகூடும் - ஒருவன் ஞாலம் முழு தும் தானே ஆளக் கருதினனாயினும் அஃது அவன் கையகத்ததாம், காலம் கருதி இடத்தான் செயின் - அதற்குச் செய்யும் வினையைக் காலம் அறிந்து இடத்தோடு பொருந்தச் செய்வனாயின்.

'இடத்தான்' என்பதற்கு மேல் 'கருவியான்' என்பதற்கு உரைத் தாங்கு உரைக்க. கைகூடாதனவும் கைகூடும் என்பதாம்.

இவை மூன்று பாட்டானும் காலம் அறிதற்பயன் கூறப்பட்டது.

---

1. மூவகை ஆற்றலாவன அறிவு, ஆண்மை, பெருமை என்பன; 461, 891-உரை பார்க்க.

2. சாம தான பேத தண்டம்; 467-உரை பார்க்க.

### உரை வேறுபாடு

**காளிங்கர்:** வேந்தரானோர் சில நாள் ஆண்டிருத்தலே அன்றி இவ்வுலகம் முழுவதும் ஒருவர்தாமே ஆளக் கருதினும் கைகூடும். எங்ஙனமோ எனின், தான் செய்யும் காரியத்துக்கு ஏற்ற பருவத்தைக் குறிக் கொண்டிருந்து மற்று அது வந்து எய்திய பொழுது பழுதுபடாமல் பருவத்தின் கண்ணே வினை செய்யின். *(484)*

## 485

காலம் கருதி இருப்பர் கலங்காது
ஞாலம் கருது பவர். 5

**பரிமேலழகர் :** கலங்காது ஞாலம் கருதுபவர் - தப்பாது ஞாலம் எல்லாம் கொள்ளக் கருதும் அரசர், காலம் கருதி இருப்பர் - தம் வலி மிகுமாயினும் அது கருதாது அதற்கு ஏற்ற காலத்தையே கருதி அது வரும் துணையும் பகைமேல் செல்லார்.

தப்பாமை, கருதிய வழியே கொள்ளுதல். வலிமிகுதி, 'காலம் கருதி' என்றதனால் பெற்றும், அது கருதாது செல்லின் இருவகைப் பெருமையும் தேய்ந்து வருத்தமும் உறுவராகலின், 'இருப்பர்' என்றார். இருத்தலாவது நட்பாக்கல், பகையாக்கல், மேற்சேறல், இருத்தல், பிரித்தல், கூட்டல்[1] என்னும் அறுவகைக் குணங்களுள் மேற்செலவிற்கு மாறாயது.

இதனால் காலம் வாராவழிச் செய்வது கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** கலங்காது - அசைவின்றி.

**பரிப்பெருமாள்:** இது காலம் வரவு பார்த்து இருக்குங்கால் பின்பு செய்யும் வினை புலப்படாமல் இருக்கவேண்டும் என்றது.

**பரிதியார்:** காலங்களை அறிந்து இருப்பானாகில் அவன் கலங்காமல் ஞாலமும் ஆளப்பெறுவன்.

**காளிங்கர்:** கலங்காது - வையம் தமது கையகத்தாய நெறி தளராமல்.

### ஒப்புமை

1. **காலம் கருதிச் செய்தல் :**

"காலம் ஈதெனக் கருதிய இராவணன் காதல்."
(கம்ப. பிரமாத்திரப். *164.*)

2. **முற்றும் :**

"இடத்தொடு பொழுதும் நாடி எவ்வினைக் கண்ணும் அஞ்சார்
மடப்பட லின்றிச் சூழும் மதிவல்லார்க் கரிய துண்டோ"
(சீவக. *1927.*)

"கருத்துற நோக்கிப் போந்த காலமும் நன்று காதல்
அருத்தியும் அரசின் மேற்றே அறிவினுக் கவதி யில்லை."
(கம்ப. வீபீடணன். *107.*) *(485)*

---

1. இவற்றை முறையே சந்தி, விக்கிரகம், யானம், அசனம், துவைதம், ஆசிரயம் என்பர் வட நூலார்.

### 486

**ஊக்கம் உடையான் ஒடுக்கம் பொருதகர்**
**தாக்கற்குப் பேரும் தகைத்து.** 6

*பரிமேலழகர் :* ஊக்கம் உடையான் ஒடுக்கம் - வலிமிகுதி உடைய அரசன் பகைமேற் செல்லாது காலம் பார்த்திருக்கின்ற இருப்பு, பொரு தகர் தாக்கற்கு பேரும் தகைத்து - பொருகின்ற தகர் தன் பகை கெடப் பாய்தற் பொருட்டுப் பின்னே கால்வாங்கும் தன்மைத்து.

உவமைக்கண் 'தாக்கற்கு' என்றதனுன், பொருளினும் 'வென்றி எய்தற்பொருட்டு' என்பது கொள்க.

இதனுன் அவ் விருப்பின் சிறப்புக் கூறப்பட்டது.

#### உரை வேறுபாடு

*பரிதியார்:* ஊக்கம் உடையான் - விசாரம் உள்ளவன்.

#### ஒப்புமை

1. **ஊக்கம் உடையான் ஒடுக்கம்:**

"அடங்கவும் வல்லீர் காலம தன்றேல் அமர்வந்தால்
மடங்கல் முனிந்தா லன்ன வலத்தீர்." (கம்ப. மகேந்திரப். 17.)

2. **முற்றும்:**

"பாடுபெயர்ந் திடிக்கு மேடகம் போல
அகன்றுபெயர்ந் தழிக்கும் அரும்பெறல் சூழ்ச்சி."
(பெருங். 3. 1: 30-31.) (486)

### 487

**பொள்ளென ஆங்கே புறம்வேரார் காலம்பார்த்**
**துள்வேர்ப்பர் ஒள்ளி யவர்.** 7

*பரிமேலழகர் :* ஒள்ளியவர் - அறிவுடைய அரசர், ஆங்கே பொள்ளென புறம் வேரார் - பகைவர் மிகைசெய்த பொழுதே அவர் அறியப் புறத்து வெகுளார்; காலம் பார்த்து உள் வேர்ப்பர் - தாம் அவரை வெல்லுதற்கு ஏற்ற காலத்தினை அறிந்து அது வரும்துணையும் உள்ளே வெகுள்வர்.

'பொள்ளென' என்பது குறிப்பு மொழி. வேரார், வேர்ப்பர் எனக் காரணத்தைக் காரியமாக உபசரித்தார். அறிய வெகுண்டுழித் தம்மைக் காப்பராகலின், 'புறம்வேரார்' என்றும், வெகுளி ஒழிந்துழிப் பின்னும் மிகை செய்யாமல் அடக்குதல் கூடாமையின், 'உள்வேர்ப்பர்' என்றும் கூறினர்.

#### உரை வேறுபாடு

*பரிதியார்:* சடுதியிலே தம்முடைய நினைவைப் புறத்திலே சொல்லார், காலம் பார்த்துக் காரியத்தை மனத்திலே கொண்டிருப்பார்.

#### ஒப்புமை

**பொள்ளென வேர்த்தல்:**

"பொள்ளென வியர்த்து." (சீவக. 256.) (487)

## 488

செறுநரைக் காணின் சுமக்க இறுவரை
காணின் கிழக்காம் தலை. 8

*பரிமேலழகர்:* செறுநரை காணின் சுமக்க - தாம் வெல்லக் கருதிய அரசர் பகைவருக்கு இறுதிக் காலம் வருந்துணையும் அவரைக் கண்டால் பணிக; இறு வரை காணின் தலை கிழக்கு ஆம் - பணியவே அக் காலம் வந்து இறும்வழி அவர் தகைவின்றி இறுவர்.

'பகைமை ஒழியும் வகை மிகவும் தாழ்க' என்பார், 'சுமக்க' என்றும், அங்ஙனம் தாழவே அவர் தம்மைக் காத்தல் இகழ்வர் ஆகலின் தப்பாமல் கெடுவர் என்பார், 'அவர் தலை கீழாம்'[1] என்றும் கூறினர். தலைமேற் கொண்டதொரு பொருளைத் தள்ளுங்கால் அது தன் தலை கீழாக விழுமாக லின், அவ்வியல்பு பெறப்பட்டது.

இவை இரண்டு பாட்டானும் இருக்கும்வழிப் பகைமை தோன்றாமல் இருக்க என்பது கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

*மணக்குடவர்:* பகைவரைக் கண்டானாயின், தலையினால் சுமக்க. இறுமளவாயின் தலைகீழாய் விடலாம்.

*பரிப்பெருமாள்:* பகைவரைக் கண்டு வாளாதே இருப்பது ஆண்மை அல்ல என்று கருத வேண்டா. அவரைக் கண்டால் தலையிலே கொண் டாற்போலத் தாழ்ச்சி செய்து, பின்பு அவர் இகழ்ச்சியாலே தலையினின்று விழ விட்டாற்போல வினை செய்யலாம் என்று கூறப்பட்டது.

*பரிதியார்:* சத்துருக்கள் காலமானால் அவர்களைச் சுமந்து கொள்க; தனக்குக் காலமானால் தலைகீழாகப் போடுக. *(488)*

## 489

எய்தற் கரிய தியைந்தக்கால் அந்நிலையே
செய்தற் கரிய செயல். 9

*பரிமேலழகர்:* எய்தற்கு அரியது இயைந்தக்கால் - பகையை வெல்லக் கருதும் அரசர் தம்மால் எய்துதற்கு அரிய காலம் வந்து கூடியக் கால், அந் நிலையே செய்தற்கு அரிய செயல் - அது கழிவதற்கு முன்பே அது கூடாவழித் தம்மால் செய்தற்கு அரிய வினைகளைச் செய்க.

ஆற்றல் முதலியவற்றால் செய்துகொள்ளப்படாமையின் எய்தற்கு அரியது என்றும், அது தானே வந்து இயைதல் அரிதாகலின் இயைந்தக் கால் என்றும், இயைந்தவழிப் பின் நில்லாது ஓடுதலின் அந்நிலையே என்றும், அது பெறுவழிச் செய்யப்படாமையின் செய்தற்கு அரிய என்றும் கூறினர்.

இதனான் காலம் வந்துழி விரைந்து செய்க என்பது கூறப்பட்டது.

### ஒப்புமை

*முற்றும்:*

"எய்தற் கரிய தியைந்தக்கால் அந்நிலையே
செய்தற் கரிய செயலென்று—வையத்து."

*(யா. வி. சூ. 60, மேற்கோள்)* *(489)*

---

1. கிழக்கு - கீழ்; "கிளைஇய மென்குரல் கிழக்குவீழ்ந் தனவே."
(குறுந். 337:2.)

### 490

கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த இடத்து. 10

**பரிமேலழகர்:** கூம்பும் பருவத்து கொக்கு ஒக்க - வினைமேற் செல்லா திருக்கும் காலத்துக் கொக்கு இருக்குமாறுபோல் இருக்க; மற்று சீர்த்த இடத்து அதன் குத்து ஒக்க - மற்றைச் செல்லும் காலம் வாய்த்தவழி அது செய்து முடிக்குமாறு போலத் தப்பாமல் செய்து முடிக்க.

மீன்கோடற்கு இருக்கும்வழி அது வந்து எய்தும் துணையும் முன் அறிந்து தப்பாமற் பொருட்டு உயிர்இல்லது போன்று இருக்கும் ஆகலானும்,[1] எய்தியவழிப் பின் தப்புவதற்கு முன்பே விரைந்து குத்தும் ஆகலானும் இருப்பிற்கும் செயலிற்கும் கொக்கு உவமையாயிற்று. 'கொக்கொக்க' என்றாராயினும், அது கூம்புமாறுபோலக் கூம்புக என்றும், 'குத்தொக்க' என்றாராயினும் அது குத்துமாறுபோலக் குத்துக என்றும் உரைக்கப்படும், இது தொழிலுவமம் ஆகலின். உவமை முகத்தான் இருப்பிற்கும் செயலிற்கும் இலக்கணம் கூறியவாறாயிற்று.

**ஒப்புமை**

**கொக்கு ஒடுங்கி இருத்தல்:**

"ஒடுங்கி இருந்தே உன்னியது முடிக்கும்
கொடுங்கால் கொக்கின் கோளின மாகிச்
சாய்ப்பிட மாகப் போர்ப்படை பரப்பி
வலிகெழு வேந்தனை வணக்குதும்." (பெருங். *3. 17: 61-4.*) *(490)*

---

# 50. இடன் அறிதல்

**பரிமேலழகர்:** அ∴தாவது வலியும் காலமும் அறிந்து பகைமேற் செல்வான் தான் வெல்லுதற்கு ஏற்ற நிலத்தினை அறிதல். அதிகார முறைமையும் இதனானே விளங்கும்.

**மணக்குடவர்:** இடன் அறிதலாவது வினை செய்யும் இடம் அறிதல்.

### 491

தொடங்கற்க எவ்வினையும் எள்ளற்க முற்றும்
இடங்கண்ட பின்அல் லது. 1

**பரிமேலழகர்:** முற்றும் இடம் கண்ட பின் அல்லது - பகைவரை முற்றுதற்கு ஆவதோர் இடம் பெற்றபின் அல்லது, எவ்வினையும் தொடங்கற்க - அவர் மாட்டு யாதொரு வினையையும் தொடங்கா தொழிக; எள்ளற்க - அவரைச் சிறியர் என்று இகழாதொழிக.

முற்றுதல் - வளைத்தல். அதற்கு ஆம் இடமாவது, வாயில்களானும் நூழைகளானும்[2] அவர் புகலோடு போக்கு ஒழியும் வகை அரணினைச்

---

1. "ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும், வாடி யிருக்குமாம் கொக்கு." (வாக்குண்டாம், 16.)

2. நூழை - நுழைந்து செல்லும் குறுகிய வழி.

சூழ்ந்து ஒன்றற்கு ஒன்று துணையாய்த் தம்முள் நலிவிலாத பல படை இருப்பிற்கும், மதிலும் அகழும் முதலிய அரண் செய்யப்பட்ட அரசிருப்பிற்கும் ஏற்ற நிலக்கிடக்கையும் நீரும் உடையது. அது பெற்றால் இரண்டும் செய்க என்பதாம்.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** முடியுமிடம் கண்டாலல்லது, யாதொரு வினையும் தொடங்காது ஒழிக; எளிது என்று இகழாது ஒழிக.

**பரிப்பெருமாள்:** பகைவர் இடம் சிறிது என்று இகழலாகாது.

**பரிதியார்:** யாதொரு காரியமும் எடுத்துக்கொள்ளக் கடவான் அல்லன்; எடுத்துக்கொண்டால் காரியம் நிறைவேறுமட்டும் சோரவிடக் கடவானல்லன்.

**காளிங்கர்:** உலகத்து மன்னர் முதலாக மாந்தர் யாவரும் அவையிற்றுக்கு இயைந்த இடம் கண்டபின் அல்லது போர்த்தொழில் முதலாய எல்லாத் தொழிலினும் யாதானும் ஒன்று தொடங்குவது செய்யற்க; மற்று இது நமக்கு எளிது எனக் கொண்டு யாவையும் இகழ்வது செய்யற்க; மற்று அதனால் எவ்வினையும் இடம் குறிக்கொண்டே இயற்றுக.

### ஒப்புமை

எள்ளற்க:

"வெள்ளம்போல் தானை வியந்து விரவாரை
எள்ளி யுணர்தல் இயல்பன்று." (பு. வெ. 166.) (491)

## 492

முரண்சேர்ந்த மொய்ம்பி னவர்க்கும் அரண்சேர்ந்தாம்
ஆக்கம் பலவும் தரும். 2

**பரிமேலழகர்:** முரண் சேர்ந்த மொய்ம்பினவர்க்கும் - மாறுபாட்டோடு கூடிய வலியினை உடையார்க்கும், அரண் சேர்ந்து ஆம் ஆக்கம் பலவும் தரும் - அரணைச் சேர்ந்து ஆகின்ற ஆக்கம் பல பயன்களையும் கொடுக்கும்.

மாறுபாடாவது ஞாலம் பொது எனப் பொறா அரசர்[1] மனத்தின்கண் நிகழ்வதாகலானும், வலியுடைமை கூறிய அதனானும் இது பகைமேற் சென்ற அரசர் மேற்றாயிற்று. உம்மை, சிறப்பும்மை. அரண் சேராது ஆம் ஆக்கமும் உண்மையின், ஈண்டு ஆக்கம் விசேடிக்கப்பட்டது. ஆக்கம் என்றது அதற்கு ஏதுவாய முற்றினை; அது கொடுக்கும் பயன்களாவன பகைவரால் தமக்கு நலிவின்மையும், தாம் நிலை பெற்று நின்று அவரை நலிதலும் முதலாயின.

### உரை வேறுபாடு

**கவிராஜ பண்டிதர்:** முரண் சேர்ந்தவர்களாவது, பூமி இராச்சியம் எல்லார்க்கும் பொதுவென் றெண்ணுமல் நம்முடையது போகிற தென்கிற மனசுடையவர்களாம். (492)

1. " தண்டமிழ் பொதுவெனப் பொறாஅன். " (புறநா. 51 : 5.)

## 493

ஆற்ருரும் ஆற்றி அடுப இடன்அறிந்து
போற்ருர்கண் போற்றிச் செயின். 3

**பரிமேலழகர்:** ஆற்ருரும் ஆற்றி அடுப - வலியர் அல்லாதாரும் வலியராய் வெல்வர், இடன் அறிந்து போற்றி போற்ருர்கண் செயின் - அதற்கு ஏற்ற இடத்தினை அறிந்து தம்மைக் காத்துப் பகைவர் மாட்டு வினை செய்வராயின்.

வினை என்பதூஉம், தம்மை என்பதூஉம் அவாய் நிலையான் வந்தன. காத்தல், பகைவரான் நலிவு வாராமல் அரணுனும் படையானும் காத்தல்.

இவ்வாற்ருன் வினை செய்வராயின் மேற்சொல்லிய வலியின்றியும் வெல்வர் என்பதாம்.

### உரை வேறுபாடு

*பரிதியார்:* போற்ருர்கண் போற்றி செயின் - சத்துருக்கள் எண்ணம் அறிந்து செய்ய வல்லராயின். *(493)*

## 494

எண்ணியார் எண்ணம் இழப்பர் இடன்அறிந்து
துன்னியார் துன்னிச் செயின். 4

*பரிமேலழகர்:* இடன் அறிந்து துன்னியார் - தாம் வினை செய்தற்கு ஏற்ற இடத்தினை அறிந்து சென்ற அரசர், துன்னி செயின் - அரணைப் பொருந்தி நின்று அதனைச் செய்வராயின், எண்ணியார் எண்ணம் இழப்பர் - அவரை வெல்வதாக எண்ணி இருந்த பகைவர் அவ் வெண்ணத்தினை இழப்பர்.

அரண் என்பது அவாய்நிலையான் வந்தது. எண்ணம் என்றது எண்ணப்பட்ட தம் வெற்றியை. அதனை இழப்பர் என்ருர், அவர் வினை செய்யாமல் தம்மைக் காத்தமையின். இதனுன், அவர் பகைவர் தோற்பர் என்பதாயிற்று.

இவை நான்கு பாட்டானும் பகைவர் அரணின் புறத்து இறுப்பார் அதற்கு ஆம் இடம் அறிதல் கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

*மணக்குடவர்:* தன்னைக் கெடுத்தற்கு எண்ணினவர் தங்கள் எண்ணம் இழப்பர், வினை செய்யும் இடம் அறிந்து நட்டோரானவர் மனம் பொருந்திச் செய்வாராயின். *(494)*

## 495

நெடும்புனலுள் வெல்லும் முதலை அடும்புனலின்
நீங்கின் அதனைப் பிற. 5

**பரிமேலழகர்:** முதலை நெடும்புனலுள் (பிற) வெல்லும் - முதலை ஆழமுடைய[1] நீரின் கண் ஆயின் பிறவற்றை யெல்லாம் தான் வெல்லா நிற்கும்;

---

1. நெடும் புனல்-ஆழமான புனல்; "நெடுங்கடலும்" (குறள், 17); "நெடுநீராம்பல்." (குறுந். 352: 1.)

புனலின் நீங்கின் அதனை பிற அடும் - அப் புனலின் நீங்குமாயின் அதனைப் பிற எல்லாம் வெல்லா நிற்கும்.

எனவே, எல்லாரும் தம் நிலத்து வலியர் என்பது கூறப்பட்டது. பிற என்பது முன்னும் கூட்டப்பட்டது. 'நிலைப்படா நீரின்கண் பிற நிற்றலாற்றாமையின் அவை யெல்லாம் முதலைக்கு எளியவாம்; அவை இயங்குவதற்குரிய நிலத்தின்கண் அஃது - இயங்கலாற்றாமையின் அஃது அவற்றிற்கெல்லாம் எளிதாம்' என்றது, 'மேற்செல்லும் அரசர் பகைவர் நிற்றலாற்றா இடன் அறிந்து செல்வராயின் அவர் தமக்கு எளியராவரன்றித் தாம் நிற்கலாற்றா இடத்துச் செல்வராயின் அவர்க்கு எளியராவார்' என்னும் பொருள் தோன்ற நின்றமையின், இது பிறிது மொழிதல் என்னும் அலங் காரம். அவரை அவர் நிற்றலாற்றாவிடத்துச் சென்று வெல்க என்பதாம்.

### மேற்கோள்

'தமது நிலத்தில் எளியவர் நின்றாலும் பிறரது நிலத்தில் வலியார் எளியராவர் என்னும் பொருண்மையை இச் சொல் தானே உணர்த்தலின் சொல்லெச்சமாயிற்று.' (தொல். சொல். 433, தெய்வச்.)

### ஒப்புமை

1. **தம் இடத்தில் தாம் வெல்லுதல்:**

"வான்சேரின் புள்ளஞ்சா வல்லரில் சுற்றிய
கான்சேரின் மானின் கணம்அஞ்சா—வான்சேர்
சிகர வரைசேரின் தேன்அஞ்சா அஞ்சா
மிகுநீர்க் கயஞ்சேரின் மீன்." (பாரத வெண்பா.)

"மோட்டும் முதுநீர் முதலைக்கு வலியதுண் டேடல்
காட்டுள் நமக்கு வலியாரையும் காண்டும்" (சீவக. 446.)

"கூருடை யெயிற்றுக் கோண்மாச் சுறவினம் எறிந்து கொல்லப்
போருடை யரியும் வெய்ய புலிகளும் யாளிப் போத்தும்
நீரிடைத் தோற்ற வன்றே தந்நிலை நீங்கிற் றென்றால்
ஆரிடைத் தோலார் மேலோர் அறிவிடை நோக்கின் அம்மா."
(கம்ப. சேது. 23.)

2. **இடம் நீங்கினல் பிற அடுதல்:**

"உளையச் சிலைக்கும் உழுவையும் தான்தன்
அளையில்தீர்ந் தூரடைந்த தாக—இளிவந்
துயிரிழப்ப தென்றால் உறுமிடநீத் தென்கொல்
செயிருழக்கும் தீங்கு செயல்." (பாரதவெண்பா.)

"கல்லிடை யிட்ட காட்டகம் கடந்து
வெள்ளிடைப் புகுந்த வேட்டுவப் படையினை
ஆட்டுதும் சென்றெனை." (பெருங். 3.27: 22-4.) (495)

## 496

**கடல்ஓடா கால்வல் நெடுந்தேர் கடல்ஓடும்**
**நாவாயும் ஓடா நிலத்து. 6**

பரிமேலழகர்: கால் வல் நெடுந்தேர் கடல் ஓடா - நிலத்தின்கண் ஓடும் கால்[1] வலிய நெடிய தேர்கள் கடலின்கண் ஓட மாட்டா; கடல் ஓடும் நாவாயும் நிலத்து ஓடா - இனி அக் கடலின்கண் ஓடும் நாவாய்கள் தாமும் நிலத்தின் கண் ஓட மாட்டா.

1. கால் - சக்கரம்.

'கடல் ஓடா' என்ற மறுதலை அடையான், 'நிலத்து ஓடும்' என்பது வருவிக்கப்பட்டது. 'கால்வல் நெடுந்தேர்' என்பது, ஓடுதற்கு ஏற்ற காலும் பெருமையும் உடையவாயினும் என்பது பட நின்றது. 'மேற்சென்றார் பகைவர் இடங்களை அறிந்து அவற்றிற்கு ஏற்ற கருவிகளான் வினை செய்க' என்பது தோன்ற நின்றமையின் இதுவும் மேலை அலங்காரம் ஆயிற்று.

**மேற்கோள்**

குறிப்பெச்சம் என்பர் மயிலைநாதர். (நன். 359.) (496)

**497**

**அஞ்சாமை அல்லால் துணைவேண்டா எஞ்சாமை**
**எண்ணி இடத்தாற் செயின். 7**

**பரிமேலழகர்:** எஞ்சாமை எண்ணி இடத்தான் செயின் - பகையிடத்து வினை செய்யும் திறங்களை எல்லாம் ஒழியாது எண்ணி அவற்றை அரசர் இடத்தொடு பொருந்தச் செய்வராயின், அஞ்சாமை அல்லால் துணை வேண்டா - அச் செயற்குத் தம் திண்மை அல்லது பிறிதொரு துணை வேண்டுவது இல்லை.

'திண்ணியராய் நின்று செய்து முடித்தலே வேண்டுவது அல்லது துணை வேண்டா' என்றார், அவ்வினை தவறுதற்கு ஏது இன்மையின்.

இவை மூன்று பாட்டானும் வினை செய்தற்கு ஆம் இடன் அறிதல் கூறப்பட்டது. (497)

**498**

**சிறுபடையான் செல்இடம் சேரின் உறுபடையான்**
**ஊக்கம் அழிந்து விடும். 8**

**பரிமேலழகர்:** உறு படையான் - பெரும்படை உடைய அரசன், சிறு படையான் செல் இடம் சேரின் - ஏனைச் சிறுபடை உடையானை அழித்தல் கருதி அவன் புகலைச் சென்று சாருமாயின், ஊக்கம் அழிந்து விடும் - அவனால் தன் பெருமை அழியும்.

செல் இடம் - அவனுக்குச் செல்லும் இடம். 'அழிந்துவிடும்' என்பது 'எழுந்திருக்கும்' என்றாற் போல ஒரு சொல்.[1] ஊக்கத்தின் அழிவு, உடையான்மேல் ஏற்றப்பட்டது. தன் படைப்பெருமை நோக்கி இடன் நோக்காது செல்வான் ஆயின் அஃது அப் படைக்கு ஒருங்கு சென்று வினைசெயல் ஆகாமையானும், பயிற்சி இன்மையானும் அப் பெருமையால் பயன் இன்றித் தான் அழிந்துவிடும் என்பதாம்.

**ஒப்புமை**

*முற்றும்:*

"உறுபடை மன்னர் தம்மை உடற்றிஒன் றானும் இன்றிச்
சிறுபடை யவர்கள் வென்று செகுப்பவோ என்ன வேண்டா
செறிஎயிற் றாளி வேழப் பேரினம் செகுத்த தன்றே
உறுபுலி ஒன்று தானே கலையினம் உடற்றிற் றன்றே."
(சீவக. 814.) (498)

---

1. அழிதல் விடுதல் என்னும் இரண்டு செயல்களைக் குறியாமையால் 'அழிந்துவிடும்' என்பது ஒரு சொல் ஆயிற்று; எழுதல் இருத்தலாகிய இரு செயல்களைக் குறியாமையால், 'எழுந்திருக்கும்' என்பதும் ஒரு சொல் ஆயிற்று.

499

சிறைநலனும் சீரும் இலர்எனினும் மாந்தர்
உறைநிலத்தோ டொட்டல் அரிது. 9

**பரிமேலழகர்:** சிறை நலனும் சீரும் இலர் எனினும் - அரண் அழித்தற்கு அருமையும் பெருமையாகிய ஆற்றலும் உடையர் அல்லராயினும், மாந்தர் உறை நிலத்தோடு ஒட்டல் அரிது - வினைக்கு உரிய மாந்தரை அவர் உறைகின்ற நிலத்தின்கண் சென்று தாக்குதல் அரிது.

நிலத்தோடு என்பது வேற்றுமை மயக்கம். ஆண்மை உடையாரைச் சிறுமை நோக்கி இருப்பின்கண் சென்று தாக்கின் அவர் அது விட்டுப் போதல் துணிவினரன்றிச் சாதல் துணிவினர் ஆவர். ஆகவே அவர்க்குப் பெரும்படை உடையும் என்பதாம். *(499)*

500

கால்ஆழ் களரின் நரிஅடும் கண்அஞ்சா
வேலாள் முகத்த களிறு. 10

**பரிமேலழகர்:** கண் அஞ்சா வேலாள் முகத்த களிறு - பாகர்க்கு அடங்காவுமாய் வேலாட்களைக் கோத்த கோட்டவுமாய களிறுகளை, கால் ஆழ் களரின் நரி அடும் - அவை கால் ஆழும் இயல்பிற்றாய சேற்று நிலத்துப் பட்டுழி நரி கொல்லும்.

முகம்: ஆகுபெயர். ஆண்மையும் பெருமையும் உடையாரும் தமக்கு ஏலா நிலத்துச் செல்லின் அவற்றால் பயன் இன்றி மிகவும் எளியரால் அழிவர் என்பது தோன்ற நின்றமையின், இதுவும் அவ் வலங்காரம். 'வேலாழ் முகத்த' என்று பாடம் ஓதுவாரும் உளர்; வேற்படை குளித்த முகத்தவாயின் அதுவும் நரி அடுதற்கு ஏதுவாய் முடிதலின், அது பாடம் அன்மை அறிக.

இவை மூன்று பாட்டானும் பகைவரைச் சார்தலாகா இடனும், சார்ந்துழிப் படும் இழுக்கும் கூறப்பட்டன.

உரை வேறுபாடு

**மணக்குடவர்:** கண் அஞ்சா வேல் ஆழ் முகத்த களிறு - கண்ணஞ்சாத வேல் அழுத்தப்பட்ட முகத்தினையுடைய களிற்றை.

**காளிங்கர்:** கண் அஞ்சா வேல் ஆழ் முகத்த களிறு - தன் சினம் தணியாத தறுகண்மை பெரிதும் உடைத்தாய் மேலவர் எறியவும் கீழவர் குத்தவும் பிறவும் ஆகிய வேல் அழுந்திய வடு அறாத முகத்தை உடைய கடுங்களிறானது.

மேற்கோள்

சொல்லெச்சம் வந்தது. *(தொல். சொல் 443, தெய்வச்.)* *(500)*

---

# 51. தெரிந்து தெளிதல்

**பரிமேலழகர்:** அஃதாவது அமைச்சர் முதலாயினாரைப் பிறப்பு, குணம், அறிவு என்பவனவற்றையும் செயலையும் காட்சி, கருத்து, ஆகமம்

என்னும் அளவைகளான்[1] ஆராய்ந்து தெளிதல். வலி முதல் மூன்றும்[2] அறிந்து பகைமேல் செல்வானுக்குத் தானே வினையுற்றுச் செய்தற் பொருட்டும் அறைபோகாமற் பொருட்டும் இது வேண்டுதலின், அவற்றின்பின் வைக்கப்பட்டது.

**பரிதியார்:** தெரிந்து தெளிதலாவது யாதொரு காரியமும் பதருமல் விசாரித்துச் செய்யவேணும்.

**கவிராஜ பண்டிதர்:** அஃதாவது மந்திரிகள், புரோகிதர்கள், சேனுபதிகள் முதலானவர்களுடைய பிறப்பு, குணம், வலி முதலானவைகளையும், செயல்களையும் ஆராய்ந்து தெளிதல்.

## 501

அறம்பொருள் இன்பம் உயிர்அச்சம் நான்கின்
திறம்தெரிந்து தேறப் படும். 1

**பரிமேலழகர்:** அறம் பொருள் இன்பம் உயிர் அச்சம் - அரசனல் தெளியப்படுவான் ஒருவன், அறமும் பொருளும் இன்பமும் உயிர்ப் பொருட்டான் வரும் அச்சமும் என்னும், நான்கின் திறம் தெரிந்து தேறப்படும் - உபதை[3] நான்கின் திறத்தான் மன இயல்பு ஆராய்ந்தால் பின்பு தெளியப் படும்.

அவற்றுள், அற உபதையாவது: புரோகிதரையும் அறவோரையும் விட்டு அவரால், 'இவ் வரசன் அறவோன் அன்மையின் இவனைப் போக்கி அறனும் உரிமையும் உடையான் ஒருவனை வைத்தற்கு எண்ணினம்; இது தான் யாவர்க்கும் இயைந்தது; நின் கருத்து என்னை?' எனச் சூளுறவோடு சொல்லுவித்தல்; பொருள் உபதையாவது: சேனைத் தலைவனையும் அவனோடு இயைந்தாரையும் விட்டு அவரால், 'இவ்வரசன் இவறன்மாலையன் ஆகலின்[4] இவனைப் போக்கிக் கொடையும் உரிமையும் உடையான் ஒருவனை வைத்தற்கு எண்ணினம்; இதுதான் யாவர்க்கும் இயைந்தது; நின் கருத்து என்னை?' எனச் சூளுறவோடு சொல்லுவித்தல்; இன்ப உபதையாவது: தொன்றுதொட்டு உரிமையொடு[5] பயின்றுள் ஒரு தவமுது மகளை விட்டு அவளால், 'உரிமையுள் இன்னுள் நின்னைக் கண்டு வருத்தமுற்றுக் கூட்டுவிக்க வேண்டும் என்று என்னை விடுத்தாள்; அவளைக் கூடுவையாயின் நினக்குப் பேரின்பமே யன்றிப் பெரும் பொருளும் கைகூடும்' எனச் சூளுறவோடு சொல்லுவித்தல்; அச்ச உபதையாவது: ஒரு நிமித்தத்தின் மேலிட்டு ஓரமைச்சனல் ஏனையோரை அவன் இல்லின்கண் அழைப்பித்து, 'இவர் அறை போவான் எண்ணற்குக் குழீஇயினர்' என்று தான் காவல் செய்து, ஒருவனல், 'இவ்வரசன் நம்மைக் கொல்வான் சூழ்கின்றமையின் அதனை நாம் முற்படச் செய்து நமக்கு இனிய அரசன் ஒருவனை வைத்தல் ஈண்டை யாவர்க்கும் இயைந்தது; நின் கருத்து என்னை?' எனச் சூளுறவோடு சொல்லுவித்தல். இந் நான்கினும் திரிபிலனுயவழி எதிர்காலத்தும் திரிபிலன் எனக் கருத்தளவையால் தெளியப்படும் என்பதாம். இவ் வடநூற் பொருண்மையை உட்கொண்டு இவர் ஓதியது அறியாது பிறரெல்லாம் இதனை உயிரெச்சம் எனப் பாடம் திரித்துத் தத்தமக்குத் தோன்றியவாறே உரைத்தார்.

---

1. பிரத்தியட்சப் பிரமாணம், அநுமானப் பிரமாணம், ஆகமப் பிரமாணம் என்பன.

2. வலி, காலம், இடம்.

3. உபதை - சோதனை.

4. உலோபி.

5. உரிமை - மனைவியர்.

### உரை வேறுபாடு

**பரிதியார்:** தன்மம், அர்த்தம், காமம், மோட்சம் என்னும் நாலு காரியமும் விசாரித்து யாதொரு காரியமும் செய்வான்.

**காளிங்கர்:** மறைமுதலாகிய நூல் யாவற்றினும் சொன்ன அறம் பொருள் இன்பம் வீடு என வகுத்த நால்வகை யாகலின், அவற்றுள் அற மானது பாவம் அனைத்தையும் பற்று அறுப்பது என்றும், இருமை இன்பம் எய்துவிப்பது என்றும், அவற்றுள் பொருளானது பலவகைத் தொழிலினும் பொருள் வருமேனும் தமக்கு அடுத்த தொழிலினாகிய பொருளே குற்றமற்ற நற்பொருள் என்றும், மற்று இனி இன்பமாவது கற்பின் திருந்திய பொற் புடையாட்டி இல்லறத் துணையும் இயல்புடை மக்களும் இரு தலையானும் இயைந்த இன்பம் என்றும், மற்றும் இவற்றுள் உயர்ந்த வீடாவது பேதை மையுற்ற பிறப்பு இறப்பு என்னும் வஞ்சப் பெருவலைப்பட்டு மயங்காது நிலைபெற நிற்கும் வீடு இது என்றும் இங்ஙனம் இவை நான்கின் திறம் தெரிந்து, பின் தமக்கு அடுத்தது ஒன்றினைத் தலைத்தேறித் தெளிய அடுக் கும் அரசர்க்கு.

உயிரெச்சம் என்பது முத்தி என்றது. *(501)*

## 502

குடிப்பிறந்து குற்றத்தின் நீங்கி வடுப்பரியும்
நாண்உடையான் கட்டே தெளிவு. 2

**பரிமேலழகர்:** குடி பிறந்து – உயர்ந்த குடியில் பிறந்து, குற்றத்தின் நீங்கி - குற்றங்களினின்று நீங்கி, வடு பரியும் நாண் உடையான்கட்டே தெளிவு - நமக்கு வடு வருங்கொல் என்று அஞ்சாநிற்கும் நாணுடையவன் கண்ணதே அரசனது தெளிவு.

குற்றங்களாவன, மேல் அரசனுக்குச் சொல்லிய வகையாறும்,[1] மடி மறப்பு பிழைப்பு என்றிவை முதலாயவுமாம். நாண் - இழிதொழில்களில் மனம் செல்லாமை. இவை பெரும்பான்மையும் தக்கோர்வாய்க் கேட்டலாகிய ஆகம அளவையால் தெரிவன. இந் நான்கும் உடையவனையே தெளிக என்பதாம்.

### உரை வேறுபாடு

**பரிப்பெருமாள்:** இது சுக்கிரர் மதம்.

**காளிங்கர்:** குடிப்பிறந்து - தம்மொடும் அருந்துதற்கு அமைந் தோனாகிய நற்குடிப் பிறந்து. ஈண்டுப் பரியும் என்பது அறுக்கும் என்றாயிற்று.

**கவிராஜ பண்டிதர்:** குற்றங்களாவன: பொய், களவு, கள், காமம்.

### ஒப்புமை

**குடிப்பிறந்து நாணுவான்:**

"குடிப்பிறந்து தன்கட் பழிநாணு வானை." *(குறள், 794.)* *(502)*

## 503

அரியகற் றாசற்றார் கண்ணும் தெரியுங்கால்
இன்மை அரிதே வெளிறு. 3

1. குற்றங் கடிதல் என்னும் அதிகாரத்தின் அவதாரிகையில் கூறினர்.

**பரிமேலழகர்:** அரிய கற்று ஆசு அற்ருர் கண்ணும் - கற்றற்கு அரிய நூல்களைக் கற்று மேல் சொல்லிய குற்றங்கள் அற்ருர் மாட்டும், தெரியுங்கால் வெளிறு இன்மை அரிது - நுண்ணிதாக ஆராயுமிடத்து வெண்மை இல்லாமை அரிது.

வெண்மை, அறியாமை.[1] அஃது அவர்மாட்டு உளதாவது மனத்தது நிலையாமையான் ஒரோவழியாகலின், தெரியுங்கால் என்ருர். காட்சி அளவையான் தெரிந்தால் அதுவும் இல்லாதாரே தெளியப்படுவர் என்பது குறிப்பெச்சம்.

இவ் வளவைகளான் இக் குணமும் குற்றமும் தெரிந்து குணம் உடையாரைத் தெளிக என்பது இவை மூன்று பாட்டானும் கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**பரிப்பெருமாள்:** கல்வியுடையார் உள்ளும் புறம்பும் தூயாரைத் தேறலாம் என்பது துரோணசாரியர் மதம். அவ்வளவில் தேறலாகாது என்று இது கூறப்பட்டது.

**பரிதியார்:** நல்ல கல்வி கற்ருர் குற்றமற்ருர்; விசாரித்தால் குற்றப் படுமாகையால் அவர்களைக் குற்றமுடையாரென்று கைவிடுவான் அல்லன்.

**கவிராஜ பண்டிதர்:** அறிவு உள்ளவர்களையே தெளிக.

### ஒப்புமை

**முற்றும்:**

"விற்ருங்கு வெற்பன்ன விலங்குெழில் தோள மெய்ம்மை
உற்ருர் சிலர்அல்லவ ரேபலர் என்ப துண்மை
பெற்ரு ருழைப்பெற்ற பயன்பெறும் பெற்றி யல்லால்
அற்ருர் நவையென் றலுக் காகுநர் ஆர்கொல் என்ருன்."

(**கம்ப.** வாலி. 35.) *(503)*

## 504

குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல். 4

**பரிமேலழகர்:** குணம் நாடி - குணம் குற்றங்களுள் ஒன்றே உடையார் உலகத்து இன்மையின்[2] ஒருவன் குணங்களை ஆராய்ந்து, குற்றமும் நாடி - ஏனைக் குற்றங்களையும் ஆராய்ந்து, அவற்றுள் மிகை நாடி - பின் அவ் விரு பகுதியுள்ளும் மிக்கவற்றை ஆராய்ந்து, மிக்க கொளல் - அவனை அம் மிக்கவற்ருனே அறிக.

மிகை உடையவற்றை மிகை என்ருர். அவையாவன தலைமையாகுக, பன்மையாகுக உயர்ந்தன. அவற்ருன் அறிதலாவது குணம் மிக்கதாயின் வினைக்கு உரியன் என்றும், குற்றம் மிக்கதாயின் அல்லன் என்றும் அறிதல். குணமே உடையார் உலகத்து அரியராகலின், இவ்வகை யாவரையும் தெளிக என்பது இதனுல் கூறப்பட்டது.

1. வெளிறு - அறியாமை; "வெளிறிலாக் கேள்வி யான்." (**சீவக.** 200, 1617.); "வெளிறு தீரத் தொழுமின்." (**சுந்தர.** தே.)

2. "குணனடங்கக் குற்ற முளானும்...இல்." (**சிறுபஞ்ச.** 30.

### உரை வேறுபாடு

**பரிப்பெருமாள்:** இது கௌடில்யர் மதம். காரியம் பல ஆதலின் அது செய்வாரும் பலர் வேண்டும். ஆதலால், அவர் எல்லோரையும் நற்குணத்தாராகத் தேடுதல் அரிது என்பது இதனல் கூறப்பட்டது.

**கவிராஜ பண்டிதர்:** குற்றம் உடையவனை நம்ப ஒண்ணாது. *(504)*

## 505

பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல். 5

**பரிமேலழகர்:** பெருமைக்கும் ஏனை சிறுமைக்கும் கட்டளை கல் - பிறப்பு குணம் அறிவு என்பனவற்றான் மக்கள் எய்தும் பெருமைக்கும் மற்றைச் சிறுமைக்கும் உரைகல்லாவது, தத்தம் கருமமே - தாம் தாம் செய்யும் கருமமே; பிறிது இல்லை.

இஃது ஏகதேச உருவகம். மக்களது பெருமையும் சிறுமையும் தப்பாமல் அறியலுறுவார்க்குப் பிற கருவிகளும் உளவாயினும், முடிந்த கருவி செயல் என்பது தேற்றேகாரத்தால் பெற்றும்.

இதனல் குணங்குற்றங்கள் நாடற்குக் கருவி கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** இஃது ஒருவனை ஒரு காரியத்திலே முற்பட விட்டு, அவன் செய்யவல்ல அளவும் கண்டு, பின்னைப் பெரியனுக்க அமையும் என்றது. இது குற்றம் கூருமை பலவற்றிற்கும் உள்ள வேறுபாடென்று கொள்ளப்படும்.

**பரிப்பெருமாள்:** நாரதர் மதம். இது குற்றம் கூருமையால் யாவர்க்கும் உடம்பாடு என்று கொள்ளப்படும்.

### ஒப்புமை

1. **கருமம் கட்டளைக்கல்:**

"தருமம் பற்றிய தக்க வர்க்கெலாம்
கருமம் கட்டளை யென்றல் கட்டதோ." *(கம்ப. அரசியல். 16.)*

2. **முற்றும்:**

"நன்னிலைக்கண் தன்னை நிறுப்பானும் தன்னை
நிலைகலக்கிக் கீழிடு வானும்—நிலையினும்
மேன்மேல் உயர்த்தி நிறுப்பானும் தன்னைத்
தலையாகச் செய்வானும் தான்." *(நாலடி. 248.)*

"..............................தன்னை
இறைவனுச் செய்வானும் தானேதான் தன்னைச்
சிறுவனுச் செய்வானும் தான்"

"தானே தனக்குப் பகைவனும் நட்டானும்
தானே தனக்கு மறுமையும் இம்மையும்
தானேதான் செய்த வினைப்பயன் துய்த்தலால்
தானே தனக்குக் கரி." *(அறநெறி. 171, 172.)*

"கோதில் நல்வினை செய்தவர் உயர்குவர் குறித்துத்
தீது செய்தவர் தாழ்குவர் இது மெய்ம்மை தெரியின்."
*(கம்ப. இரணியன். 53.)* *(505)*

## 506

அற்றாரைத் தேறுதல் ஓம்புக மற்றவர்
பற்றிலர் நாணார் பழி. 6

**பரிமேலழகர் :** அற்றாரை தேறுதல் ஓம்புக - சுற்றம் இல்லாதாரைத் தெளிதலை ஒழிக; அவர் மற்று பற்று இலர் - அவர் உலகத்தோடு தொடர்பு இலர்; பழி நாணார் - ஆகலான் பழிக்கு அஞ்சார்.

பற்றிலர் என்பதனால், சுற்றம் என்பது வருவிக்கப்பட்டது. உலகத்தார் பழிப்பன ஒழிதற்கும் புகழ்வன செய்தற்கும் ஏதுவாகிய உலக நடை இயல்பு சுற்றம் இல்லாதார்க்கு இன்மையின், அவர் தெளியப்படார் என்பதாம்.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** அற்றாரை - ஒழுக்கம் அற்றாரை.

**பரிப்பெருமாள்:** அரசனோடு ஒத்த மறைந்த குற்றம் உடையாரைத் தேறலாம், அவர் தம் குற்றம் மறைக்குமாறு போல அவர் குற்றமும் மறைப்பர் ஆதலான் என்பது மகேச்சுரர் மதம். அது குற்றம் என்று இது கூறப்பட்டது.

**பரிநியார்:** அற்றாரை - பொருளும் கிளையும் கல்வியும் அற்றாரை.

**காளிங்கர்:** அற்றாரை - உலகத்துச் சிலரோடு நண்பும் நயமும் அற்று ஒழுகுவாரை. *(506)*

## 507

காதன்மை கந்தா அறிவறியார்த் தேறுதல்
பேதைமை எல்லாம் தரும். 7

**பரிமேலழகர் :** காதன்மை கந்தா அறிவு அறியார் தேறுதல் - அன்புடைமை பற்றுக்கோடாகத் தமக்கு அறிய வேண்டுவன அறியாதாரைத் தெளிதல், பேதைமை எல்லாம் தரும் - அரசனுக்கு எல்லா அறியாமையையும் கொடுக்கும்.

தன்னோடு அவரிடை நின்ற அன்பு பற்றி அரசன் அறிவிலார்மேல் வினையை வைப்பின், அஃது அவர் அறிவின்மையால் கெடும்; கெட்டால் அவர்க்கு உளதேயன்றி, வினைக்கு உரியாரை அறியாமை, மேல்விளைவு அறியாமை முதலாக அவனுக்கு அறியாமை பலவும் உளவாம் என்பதாம்.

### உரை வேறுபாடு

**பரிப்பெருமாள்:** அரசர் அன்புடையாரைத் தேறலாம் என்பது பராசரர் மதம். இஃது இவ்வளவினால் தேறலாகாது என்றது.

**பரிநியார்:** காதன்மை கந்தா அறிவு அறியார் தேறுதல்-வெகுளியை ஆதாரமாக ஒருவரை நம்புவானாகில்.

**கவிராஜ பண்டிதர்:** காதன்மை - தயை.

### ஒப்புமை

**முற்றும் :**

"சுற்றத்தார் நட்டார் எனச்சென் றொருவரை
அற்றத்தால் தேறார் அறிவுடையார்—கொற்றப்புள்
ஊர்ந்துலகம் தாவிய அண்ணலே யாயினும்
சீர்ந்தது செய்யாதார் இல்." (பழமொழி, 67.) *(507)*

## 508

தேரான் பிறனைத் தெளிந்தான் வழிமுறை
தீரா இடும்பை தரும். 8

**பரிமேலழகர் :** பிறனை தேரான் தெளிந்தான் - தன்னோடு இயைபுடையன் அல்லாதானைப் பிறப்பு முதலியவற்றானும் செயலானும் ஆராயாது தெளிந்த அரசனுக்கு, வழிமுறை தீரா இடும்பை தரும் - அத் தெளிவு தன் வழி முறையினும் நீங்காத துன்பத்தைக் கொடுக்கும்.

இயைபு, தன் குடியொடு தொடர்ந்த மரபு. இதனானே அதுவும் வேண்டும் என்பது பெற்றும். தெளிதல் - அவன்கண்ணே வினையை வைத்தல். அவ் வினை கெடுதலால் தன் குலத்துப் பிறந்தாரும் பகைவர் கைப்பட்டுக் கீழாய் விடுவர் என்பதாம். நான்கன் உருபு விகாரத்தால் தொக்கது.[1]

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** பிறனை ஆராயாதே வழிமுறை யென்று தெளிந்தவனுக்கு அத் தெளிவு, தீர்தல் இல்லாத துன்பம் உண்டாக்கும். இது தன் குலத்தில் உள்ளாருள் அமாத்தியராயினும் வழியின் உள்ளாரைத் தேறலாம் என்றது.

**பரிப்பெருமாள்:** வழிமுறை என்றது தன் வழியில் உள்ளார்க்கு அவன் வழியின் உள்ளார் அமாத்தியராய்ப் போந்த முறைமை. குலத்தின் உள்ளார்க்கு அமாத்தியர் ஆயினும் வழியின் உள்ளாரைத் தேறலாம் என்பது வியாதன் மதம். அது குற்றம் என்று இது கூறப்பட்டது.

**கவிராஜ பண்டிதர்:** ஆனபடியினாலே சினேகமும் தெளிவும் இரண்டு வகையும் வேண்டும். (508)

## 509

தேறற்க யாரையும் தேராது தேர்ந்தபின்
தேறுக தேறும் பொருள். 9

**பரிமேலழகர் :** யாரையும் தேராது தேறற்க - யாவரையும் ஆராயாது தெளியாதொழிக; தேர்ந்தபின் தேறும் பொருள் தேறுக - ஆராய்ந்தபின் தெளியும் பொருள்களை ஐயுறாதொழிக.

தேறற்க என்ற பொதுமையான் ஒரு வினைக்கண்ணும் தெளியலாகாது என்பது பெற்றும். ஈண்டு, தேறுக என்றது தாற்பரியத்தால் ஐயுறவினது விலக்கின்மேல் நின்றது. தேறும் பொருள் என்றது அவரவர் ஆற்றற்கு ஏற்ற வினைகளை. பொருள்: ஆகுபெயர்.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** தேர்ந்தபின் தேறுக தேறும் பொருள் - ஆராய்ந்த பின்பு அவரால் தேறப்படும் பொருளைத் தேறுக.

**பரிதியார்:** தேர்ந்தபின் தேறுக தேறும் பொருள் - நம்பின பின் சந்தேகம் பண்ணக் கடவான் அல்லன்.

**கவிராஜ பண்டிதர்:** தெளிந்த பிறகு சந்தேகப்பட்டால் தீராத குற்றம் வரும். (509)

---

1. தெளிந்தானுக்கு என்ற உருபு.

### 510

தேரான் தெளிவும் தெளிந்தான்கண் ஐயுறவும்
தீரா இடும்பை தரும். 10

**பரிமேலழகர்:** தேரான் தெளிவும் - அரசன் ஒருவனை ஆராயாது தெளிதலும், தெளிந்தான்கண் ஐயுறவும் - ஆராய்ந்து தெளிந்தவன் மாட்டு ஐயப்படுதலும் இவ்விரண்டும், தீரா இடும்பை தரும் - அவனுக்கு நீங்காத துன்பத்தைக் கொடுக்கும்.

வினை வைத்தபின் ஒரு தவறு காணாது வைத்து ஐயுறுமாயின், அதனை அவன் அறிந்து, 'இனி இது நில்லாது' என்னும் கருத்தான் அவ் வினையை நெகிழ்த்து விடும்; அதுவே யன்றிப் பகைவரால் எளிதில் பிரிக்கவும் படும்; ஆகலான் தெளிந்தான்கண் ஐயுறவும் ஆகாததாயிற்று. தெளிவிற்கு எல்லை கூறியவாறு.

இவை ஐந்து பாட்டானும், தெளியப்படாதார் இவர் என்பதூஉம், அவரைத் தெளிந்தாற் படும் இழுக்கும், தெளிவிற்கு எல்லையும் கூறப்பட்டன.

#### உரை வேறுபாடு

**பரிப்பெருமாள்:** முன்பு ஒரு வினை செய்து அறியாதாரைத் தேற லாம், அவர்கள் வறியர் ஆதலான் என்பது உத்தவாசாரியார் மதம். அது குற்றம் என்று இது கூறப்பட்டது.

#### ஒப்புமை

1. **தேரான் தெளிவு இடும்பை தருதல்:**

"அளிந்தார்க ணாயினும் ஆராயா னாகித்
தெளிந்தான் விரைந்து கெடும்"
"தெற்ற ஒருவரைத் தீதுரை கண்டக்கால்
இற்றே அவரைத் தெளியற்க." (பழமொழி, 42, 11 4

2. **தெளிந்தான்கண் ஐயுறவு தீரா இடும்பை தருதல்:**

"உறுமக்க ளாக ஒருவரை நாட்டிப்
பெறுமாற்றம் இன்றிப் பெயர்த்தே யொழிதல்
சிறுமைக் கமைந்ததோர் செய்கை." (பழமொழி, 172.) (510)

---

# 52. தெரிந்து வினையாடல்

**பரிமேலழகர்:** அஃதாவது அத் தெளியப்பட்டாரை அவர் செய்ய வல்ல வினைகளை அறிந்து அவற்றின்கண்ணே ஆளும் திறம். அதிகார முறைமையும் இதனானே விளங்கும்.

**பரிதியார்:** தெரிந்து வினையாடலாவது நன்மையும் தீமையும் நாடி அறிவது.

### 511

நன்மையும் தீமையும் நாடி நலம்புரிந்த
தன்மையான் ஆளப் படும். 1

**பரிமேலழகர்:** நன்மையும் தீமையும் நாடி - அரசன் முதற்கண் ஒரு வினையைத் தன்கண் வைத்தால் அதன்கண் ஆவனவும் ஆகாதனவுமாய

செயல்களை ஆராய்ந்தறிந்து, நலம் புரிந்த தன்மையான் - அவற்றுள் ஆவன வற்றையே விரும்பிய இயல்பினை உடையான், ஆளப்படும் - பின் அவனால் சிறந்த வினைகளிலே ஆளப்படும்.

தன்னை உரிமை அறிதற்பொருட்டு அகம்புறங்கட்கு நடுவாயதோர் வினையை அரசன் தன்கண் வைத்தவழி, அதன்கண் ஆம் செயல்களையே செய்தவன் பின்னும் அவ்வியல்பினன் ஆதல் பற்றி அகமாய வினைக்கண்ணே ஆளப்படுவன் என்பதாயிற்று. புரிந்த என்ற இறந்த காலத்தான், முன் உரிமை அறிதற்பொருட்டு வைத்த வினையாதல் பெற்றும்.

### உரை வேறுபாடு

**பரிப்பெருமாள்:** இது பெரும்பான்மையும் அற ஆராய்ச்சிக்குக் கடவாரை நோக்கிற்று.

**கவிராஜ பண்டிதர்:** எனவே, சேனைகளை அறிந்து ஏவ வேணும்.

### ஒப்புமை

முற்றும்:

"நல்லவும் தியவும் நாடிப் பிறருரைக்கும்
நல்ல பிறவும் உணர்வாரைக் கட்டுரையின்
வல்லிதின் நாடி வலிப்பதே புல்லத்தைப்
புல்லம் புறம்புல்லு மாறு." (பழமொழி, 104.)

"நல்லவும் ஒன்றே தீயவும் நாடி நவைதீரச்
சொல்லவும் வல்லீர் காரியம் நீரே துணிவுற்றீர்."
(கம்ப. மகேந்திரப். 11.) *(511)*

## 512

**வாரி பெருக்கி வளம்படுத் துற்றவை**
**ஆராய்வான் செய்க வினை.** 2

**பரிமேலழகர்:** வாரி பெருக்கி - பொருள் வரு வாயில்களை விரியச் செய்து, வளம்படுத்து - அப்பொருளான் செல்வங்களை வளர்த்து, உற்றவை ஆராய்வான் - அவ்வாயில்கட்கும் பொருட்கும் செல்வங்கட்கும் உற்ற இடையூறுகளை நாடோறும் ஆராய்ந்து நீக்க வல்லவன், வினை செய்க - அரசனுக்கு வினைசெய்க.

வாயில்களாவன மேல் இறைமாட்சியுள், 'இயற்றலும்' என்புழி உரைத்தனவும், உழவு பசுக்காவல் வாணிகம் என்னும் வார்த்தையுமாம்.[1] செல்வங்களாவன ஆண்டுப் பொருளும் இன்பமுமாக உரைக்கப்பட்டன. இடையூறுகளாவன அரசன், வினை செய்வார், சுற்றத்தார், பகைவர், கள்வர் என்ற இவரான் வரும் நலிவுகள்.[2]

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** பொருள் வருதற்கு இடமாவது, நிலம் முதலான இடம். அதனைப் பெருக்குதல் பொருளும் இன்பமும் உண்டாகச் செய்தல்.

**கவிராஜ பண்டிதர்:** செல்வமாவன, முன் வந்த செல்வமும் மேல்வரக் கடவன ஆகிய திரவியமும் ஆம். *(512)*

1. வட்டித் தொழில், உழவுத் தொழில், பண்டமாற்று, பசுவோம்பல் முதலியவை வார்த்தை யென்று சொல்லப்படும். (சுக்கிரநீதி, அத். 1, சு. 156.)

2. "மாநிலங்கா வலனாவான் மன்னுயிர்காக் குங்காலைத், தான் அதனுக் கிடையூறு தன்னால்தன் பரிசனத்தால், ஊன்மிகு பகைத்திறத்தால் கள்வரால் உயிர் தம்மால், ஆனபயம் ஐந்துந்தீர்த் தறங்காப்பா னல்லனோ". (பெரிய. திருநகரச். 36.)

### 513

அன்பறிவு தேற்றம் அவாஇன்மை இந்நான்கும்
நன்குடையான் கட்டே தெளிவு. 3

**பரிமேலழகர்:** அன்பு - அரசன்மாட்டு அன்பும், அறிவு - அவனுக்கு ஆவன அறியும் அறிவும், தேற்றம் - அவை செய்தற்கண் கலங்காமையும், அவா இன்மை - அவற்றான் பொருள் கையுற்றவழி அதன்மேல் அவா இன்மையும் ஆகிய, இந் நான்கும் உடையான்கட்டே தெளிவு - இந் நான்கு குணங்களையும் நிலை பெற உடையான்மேலதே வினையை விட்டிருக்கும் தெளிவு.

இந் நான்கும் நன்குடைமை, இவன் செய்கின்ற வினைக்கண் யாதும் ஆராய வேண்டுவது இல்லை என்று அரசன் தெளிதற்கு ஏதுவாகலின், அவனை அதன் பிறப்பிடனாக்கிக் கூறினார்.

இவை மூன்று பாட்டானும் ஆடற்கு உரியானது இலக்கணம் கூறப்பட்டது.

#### உரை வேறுபாடு

**பரிப்பெருமாள்:** இது பெரும்பான்மையும் காரிய ஆராய்ச்சிக்கு அதிபதியை நோக்கிற்று.

**கவிராஜ பண்டிதர்:** தேற்றம் - சனங்கள் சொல்கிறதைச் செய்கிறதற்கு உள்ளாகாமை. *(513)*

### 514

எனைவகையான் தேறியக் கண்ணும் வினைவகையான்
வேறாகும் மாந்தர் பலர். 4

**பரிமேலழகர்:** எனைவகையான் தேறியக்கண்ணும் - எல்லா வகையானும் ஆராய்ந்து தெளிந்து வினை வைத்த பின்னும், வினைவகையான் வேறு ஆகும் மாந்தர் பலர் - அவ் வினையின் இயல்பானே வேறுபடும் மாந்தர் உலகத்துப் பலர்

கட்டியங்காரன்போல[1] அரச இன்பத்தினை வெஃகி விகாரப்படுவதல்லது, அதனைக் குற்றம் என்று ஒழிந்து தம் இயல்பின் நிற்பார் அரியர் ஆகலின் வேறாகும் மாந்தர் பலர் என்றார். வினை வைப்பதற்குமுன் எல்லாக் குணங்களும் உடையராய், வைத்தபின் விகாரப்படுவாரை இடையாயதொரு வினையை வைத்து அறிந்து ஒழிக்க என்பதாம்.

இதனான் ஒரு வகையால் ஒழிக்கப்படுவார் இவர் என்பது கூறப்பட்டது.

#### உரை வேறுபாடு

**பரிதியார்:** நான வகையினாலும் ஒருவனை விசாரித்து நம்பினால் அவனிடம் உறவின்முறை இல்லாதவன் வேறுபடும். *(514)*

### 515

அறிந்தாற்றிச் செய்கிற்பாற் கல்லால் வினைதான்
சிறந்தான்என் றேவற்பாற் றன்று. 5

**பரிமேலழகர்:** அறிந்து ஆற்றி செய்கிற்பாற்கு அல்லால் - செய்யும் உபாயங்களை அறிந்து செயலானும் இடையூறுகளானும் வரும் துன்பங்களைப்

1. **சீவக சிந்தாமணி**யைப் பார்க்க.

பொறுத்து முடிவு செய்ய வல்லானை அல்லது, வினைதான் சிறந்தான் என்று ஏவற்பாற்று அன்று - வினைதான் இவன் நம் மாட்டு அன்புடையான் என்று பிறன் ஒருவனை ஏவும் இயல்பு உடைத்து அன்று.

செய்கிற்பாற்கு என்பது வேற்றுமை மயக்கம். அறிவு ஆற்றல்களான் அல்லது அன்பான் முடியாது என இதனான் வினையினது இயல்பு கூறப்பட்டது.

### ஒப்புமை

முற்றும்:

"தெற்ற அறிவுடையார்க் கல்லால் திறனில்லா
முற்றலை நாடிக் கருமம் செயவையார்
கற்றென் றறிந்து கசடற்ற காலையும்
அற்றதன் பாற்றேம்பல் நன்று." (பழமொழி, 373.) (515)

## 516

செய்வானை நாடி வினைநாடிக் காலத்தோ
டெய்த உணர்ந்து செயல். 6

பரிமேலழகர்: செய்வானை நாடி - முதற்கண்ணே செய்வானது இலக்கணத்தை ஆராய்ந்து, வினை நாடி - பின் செய்யப்படும் வினையினது இயல்பை ஆராய்ந்து, காலத்தோடு எய்த உணர்ந்து செயல் - பின் அவனையும் அதனையும் காலத்தோடு படுத்துப் பொருந்த அறிந்து அவனை அதன்கண் ஆடலைச் செய்க.

செய்வானது இலக்கணமும், வினையினது இயல்பும் மேலே கூறப்பட்டன. காலத்தோடு எய்த உணர்தலாவது, இக்காலத்து இவ் விலக்கணம் உடையான் செய்யின் இவ் வியல்பிற்றாய வினை முடியும் என்று கூட்டி உணர்தல்.

### உரை வேறுபாடு

பரிப்பெருமாள்: மேல் வினையினது இயல்பு கூறினர், இது செய்விக்குமாறு பொதுவாகக் கூறிற்று. (516)

## 517

இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்
ததனை அவன்கண் விடல். 7

பரிமேலழகர்: இதனை இதனால் இவன் முடிக்கும் என்று ஆய்ந்து - இவ் வினையை இக் கருவியால் இவன் முடிக்க வல்லன் எனக் கூறுபடுத்து ஆராய்ந்து, அதனை அவன்கண் விடல் - மூன்றும் தம்முள் இயைந்தவழி அவ் வினையை அவன்கண்ணே விடுக.

கருவி, துணைவரும் பொருளும் முதலாயின. வினைமுதலும் கருவியும் வினையும் தம்முள் இயைதலாவது, ஒரொன்றோடு ஏனைய இரண்டற்கும் பொருத்தம் உண்டாதல். விடுதல் - அதற்கு அவனை உரியன் ஆக்குதல்.

### உரை வேறுபாடு

மணக்குடவர்: இது பெரும்பான்மையும் சேனாபதியை நோக்கிக் கூறப்பட்டது.

கவிராஜ பண்டிதர்: இதனால் - இந்த வகையால்.

ஒப்புமை

*முற்றும்:*

"உற்றான் உறுஅன் எனல்வேண்டா ஒண்பொருளைக்
கற்றானை நோக்கியே கைவிடுக—கற்றான்
கிழவன் உரைகேட்கும்." (பழமொழி, 38.) *(517)*

## 518

விளைக்குரிமை நாடிய பின்றை அவனை
அதற்குரியன் ஆகச் செயல். 8

**பரிமேலழகர்:** வினைக்கு உரிமை நாடிய பின்றை - ஒருவனை அரசன் தன் வினை செய்தற்கு உரியனாக ஆராய்ந்து துணிந்தால், அவனை அதற்கு உரியன் ஆக செயல் - பின் அவனை அதற்கு உரியனுமாறு உயரச் செய்க.

உயரச் செய்தலாவது, அதனைத் தானே செய்து முடிக்கும் ஆற்றல் உடையன் ஆக்குதல். அது செய்யாக்காலும் கெடும் என்பது கருத்து.

உரை வேறுபாடு

**மணக்குடவர்:** இஃது, ஒழிந்த காரியங்களின் வினை செய்வாரை ஆக்குமது கூறிற்று. *(518)*

## 519

வினைக்கண் வினைஉடையான் கேண்மைவே றாக
நினைப்பானை நீங்கும் திரு. 9

**பரிமேலழகர்:** வினைக்கண் வினை உடையான் கேண்மை - எப்பொழுதும் தன் வினையின்கண்ணே முயறலை உடையான் அவ் வுரிமையால் தனக்குக் கேளாய் ஒழுகுகின்ற தன்மையை, வேறாக நினைப்பானை திரு நீங்கும் - அது பொறாதார் சொற்கேட்டு அரசன் மாறுபடக் கருதுமாயின் திருமகள் அவனை விட்டு நீங்கும்.

கேளாய் ஒழுகுகின்ற தன்மையாவது, தான் பிறனாய் நில்லாது கேளிர் செய்யும் உரிமையெல்லாம் செய்து ஒழுகுதல். அவனை அவமதிப்பாகக் கொண்டு செறக் கருதுமாயின் பின் ஒருவரும் உட்பட்டு முயல்வார் இல்லையாம்; ஆகவே, தன் செல்வம் கெடும் என்பது கருத்து.

இந் நான்கு பாட்டானும் ஆடற்கு உரியானை ஆளும் திறம் கூறப்பட்டது.

உரை வேறுபாடு

**பரிப்பெருமாள்:** இதுவினை செய்ய வல்லாரை அருள் பண்ண வேண்டும் என்பதூஉம், அவருடன் மாறுபட ஒழுகின் பொருட்கேடு வரும் என்பதூஉம் கூறிற்று.

ஒப்புமை

*முற்றும்:*

"போயின மனிசரைக் குரங்கைப் பூமியில்
தேயுமின் கைகளால் தின்மின் என்றெமை
ஏயினை இருக்குவ தன்றி என்னினி
ஆயும தெம்வயின் அயிர்ப்புண் டாங்கொலோ."

*(கம்ப. இராவணன் மந்திரப். 29.) (519)*

### 520

நாடோறும் நாடுக மன்னன் வினைசெய்வான்
கோடாமை கோடா துலகு. 10

*பரிமேலழகர்:* வினை செய்வான் கோடாமை உலகு கோடாது - வினை செய்வான் கோடாதொழிய உலகம் கோடாது; மன்னன் நாடோறும் நாடுக - ஆதலான் அரசன் அவன் செயலை நாடோறும் ஆராய்க.

அஃது ஒன்றனையும் ஆராயவே, அதன் வழித்தாய உலகமெல்லாம் ஆராய்ந்தானாம்; அதனால் அவன் உரிமை அழியாமல் தன்னுள்ளே ஆராய்ந்து போதுக என்பதாம்.

இதனான் ஆண்டவழிச் செய்வது கூறப்பட்டது. (520)

---

# 53. சுற்றந் தழால்

*பரிமேலழகர்:* அஃதாவது அரசன் தன் கிளைஞரைத் தன்னின் நீங்காமல் அணைத்தல். வினை செய்வாரைக் கூறி ஏனைச் சுற்றம் கூறுகின்றாராகலின் இது தெரிந்து வினையாடலின்பின் வைக்கப்பட்டது.

### 521

பற்றற்ற கண்ணும் பழமைபா ராட்டுதல்
சுற்றத்தார் கண்ணே உள 1

*பரிமேலழகர்:* பற்று அற்ற கண்ணும் பழமை பாராட்டுதல் - ஒருவன் செல்வம் தொலைந்து வறியனாய வழியும் விடாது தம்மோடு அவனிடைப் பழமையை எடுத்துக் கொண்டாடும் இயல்புகள், சுற்றத்தார் கண்ணே உள - சுற்றத்தார் மாட்டே உள ஆவன.

சிறப்பும்மை வறியனாயவழிப் பாராட்டப்படாமை விளக்கி நின்றது. பழமை - பற்று அறாக் காலத்துத் தமக்குச் செய்த உபகாரம். பிறர் எல்லாம் அவன் பற்றுஅற்ற பொழுதே தாமும் அவனோடு பற்று அறுவர் ஆதலின், ஏகாரம் தேற்றத்தின்கண் வந்தது.

இதனான் சுற்றத்தது சிறப்புக் கூறப்பட்டது.

#### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** இஃது இல்லாக் காலத்தினும் விடார் என்றது.

**கவிராஜ பண்டிதர்:** பற்றற்ற கண்ணும் பழமை பாராட்டுதல் - அவன் தரித்திரன் ஆனபோதும் உபகாரம் செய்வர் சுற்றத்தார்.

#### ஒப்புமை

**முற்றும்;**

"காலாடு போழ்தில் கழிகிளைஞர் வானத்து
மேலாடு மீனிற் பலராவர்—ஏலா
இடரொருவர் உற்றக்கால் ஈர்ங்குன்ற நாட
தொடர்புடையேம் என்பார் சிலர்." (நாலடி. *113.*)

"அல்லல் ஒருவர்க் கடைந்தக்கால் மற்றவர்க்கு
நல்ல கிளைகள் எனப்படுவார்—நல்ல
வினைமரபின் மற்றதனை நீக்கும் அதுவே
மனைமர மாய மருந்து."
"முன்னின்னா ராயினும் மூடும் இடர்வந்தால்
பின்னின்னா ராகிப் பிரியார் ஒருகுடியார்." (பழமொழி, 53, 66.)
(521)

## 522

**விருப்பறாச் சுற்றம் இயையின் அருப்பறா**
**ஆக்கம் பலவும் தரும்.** 2

**பரிமேலழகர்:** விருப்பு அறா சுற்றம் இயையின் - அன்பு அறாத சுற்றம் ஒருவற்கு எய்துமாயின், அருப்பு அறா ஆக்கம் பலவும் தரும் - அஃது அவற்குக் கிளைத்தல் அறாத செல்வங்கள் பலவற்றையும் கொடுக்கும்.

உட்பகையின் நீக்குதற்கு விருப்பறாச் சுற்றம் என்றும், தானே வளர்க்கும் ஒருதலையாய செல்வத்தின் நீக்குதற்கு அருப்பறா ஆக்கம் என்றும் விசேடித்தார். தொடை நோக்கி விகாரமாயிற்று.[1] இயையின் என்பது, அதன் அருமை விளக்கி நின்றது. ஆக்கம் என்பது ஆகுபெயர். பலவும் என்றது அங்கங்கள் ஆறனையும் நோக்கி. பலர் கூடி வளர்த்தலின் அவை மேன்மேற் கிளைக்கும் என்பது கருத்து.

### உரை வேறுபாடு

**பரிப்பெருமாள்:** பிள்ளைகளை வேறு வேறு இடத்து நிறுத்த வேண்டும் என்பது சில ஆசாரியர் மதம். அதனை மறுத்து மக்களை ஓரிடத்தே கொண்டிருக்க வேண்டும் என்பதூஉம், அதனானே குலம் வளரும் என்பதூஉம் கூறிற்று. (522)

## 523

**அளவளா வில்லாதான் வாழ்க்கை குளவளாக்**
**கோடின்றி நீர்நிறைந் தற்று.** 3

**பரிமேலழகர்:** அளவளாவு[2] இல்லாதான் வாழ்க்கை - அச் சுற்றத்தோடு நெஞ்சு கலத்தல் இல்லாதவன் வாழ்க்கை, குளவளா கோடு இன்றி நீர் நிறைந்தற்று - குளப்பரப்புக் கரையின்றி நீர் நிறைந்தாற் போலும்.

சுற்றத்தோடு உசாவுதலான் வருவதாகலின், அளவளாவு என்பது ஆகுபெயர். வாழ்க்கை என்றதூஉம் அதற்கு ஏதுவாய செல்வங்களை. நிறைதல் என்னும் இடத்துநிகழ் பொருளின் தொழில் இடத்தின்மேல் நின்றது. சுற்றம் இல்லாதான் செல்வங்கள் தாங்குவார் இன்மையின் புறத்துப் போம் என்பதாம்.

### உரை வேறுபாடு

**பரிதியார்:** அளவுக்கு அளவாகச் செலவழியாதான் பெற்ற செல்வம் கட்டுக்கரையும் கொடியும் காவலும் இல்லாத குளம் நீர் நிறைந்ததற்கு ஒக்கும். (523)

---

1. விருப்பறா என்பதனோடு எதுகைத்தொடை நயம் பொருந்தலின் அரும்பு என்றது அருப்பு என நின்றது.
2. 'அன்பு மிகுதியின் அளவளா யவளை' என்று **திருக்கோவையா**ரில் வரும் கொளுவுக்கு (165) அந்நூலின் உரையாசிரியர், 'அளவளாய் என்பது மிகுதிகளை இரட்டித்து வந்தது' என்று எழுதிய குறிப்பு இங்கே நினைத்தற்குரியது.

## 524

சுற்றத்தால் சுற்றப் படஒழுகல் செல்வம்தான்
பெற்றத்தால் பெற்ற பயன். 4

**பரிமேலழகர்:** செல்வம் பெற்றத்தால் பெற்ற பயன் - செல்வம் பெற்ற அதனுல் ஒருவன் பெற்ற பயனுவது, சுற்றத்தால் தான் சுற்றப்பட ஒழுகல் - தன் சுற்றத்தால் தான் சூழப்படும் வகை அதனைத் தழீஇ ஒழுகுதல்.

பெற்ற என்பதனுள் அகரமும், அதனுல் என்பதனுள் அன்சாரியையும் தொடை நோக்கி விகாரத்தால் தொக்கன.[1] இவ்வொழுக்குப் பகையின்றி அரசாடற்கு ஏதுவாகலின், இதனைச் செல்வத்திற்குப் பயன் என்றார்.

இவை மூன்று பாட்டானும் சுற்றந்தழால் செல்வத்திற்கு ஏதுவும் அரணும் பயனும் ஆம் என்பது கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** இது சுற்றம் சூழ்ந்து வருவதாக ஒழுகவேண்டும் என்றது.

**கவிராஜ பண்டிதர்:** தன் செல்வம் பலர்க்கும் பயன்பட்டால், இம்மையிலே கீர்த்தியும் மறுமையிலே அதிக போகமும் உண்டு.

### மேற்கோள் விளக்கம்

'உயர்ந்த செல்வமாவது சுற்றத்தால் சுற்றப்பட ஒழுகல்' (சிலப். 1: 32) என்று அரும்பதவுரையாசிரியர் இக்குறளை நினைவிற்கொண்டு உரை எழுதினர்.

### ஒப்புமை

**சுற்றத்தைப் பாதுகாத்தல்:**

"தொலையாக் கொள்கைச் சுற்றம் சுற்ற" (பதிற். 70 : 17.)

"சிறியவன் செல்வம்போல் சேர்ந்தார்க்கு நிழலின்றி" (கலி. 10 : 2.)

"நடுக்குற்றுத் தற்சேர்ந்தார் துன்பம் துடையார்
கொடுத்துத்தான் துய்ப்பினும் ஈண்டுங்கால் ஈண்டும்
மிடுக்குற்றுப் பற்றினும் நில்லாது செல்வம்
விடுக்கும் வினையுலந்தக் கால்."

"செல்வம் உடையாரும் செல்வரே தற்சேர்ந்தார்
அல்லல் களைப வெனின்"

"அழல்மண்டு போழ்தின் அடைந்தவர்க் கெல்லாம்
நிழல்மரம் நேரொப்பத் தாங்கிப்—பழுமரம்போற்
பல்லார் பயன்துய்ப்பத் தான்வருந்தி வாழ்வதே
நல்லாண் மகற்குக் கடன்." (நாலடி. 93, 170, 202.)

"மல்லற் பெருஞ்செல்வம் மாண்டவர் பெற்றக்கால்
செல்வுழியும் ஏமாப்பச் செய்வதாம்"

"தமக்குற்ற தேயாகத் தம்மடைந்தார்க் குற்ற
தெமக்குற்ற தென்றுணரா விட்டக்கால் என்னும்"
(பழமொழி, 289, 368.)

---

1. பெற்ற அதனுல் என்பது பெற்றத்தால் என்று ஆயிற்று என்றபடி; பெற்றதனுல் என்பது பெற்றத்தால் என்று ஆயிற்றென்பர் சிவஞான முனிவர் (சிவஞானபோதம், சூ. 12 - உரை.)

"செல்வத்தைப் பெற்ருல் சினங்கடிந்து செவ்வியராய்ப்
பல்கிளையும் வாடாமற் பாத்துண்டு—நல்லதாம்
தானம் மறவாத தன்மையரேல் அஃதென்பர்
வானகத்து வைப்பதோர் வைப்பு." (அறநெறி. 76.)

"ஆரியன் அருளில் போயவ் வகன்மலை யகத்த னுன
சூரியன் மகனும் மானத் துணைவரும் கிளையும் சுற்ற"

"அடைந்தவர்க் கருளா னுயின் அறமென்னும் ஆண்மையென்னும்."
(கம்ப, அரசியல். 52, விபீடணன். 111.) (524)

## 525

**கொடுத்தலும் இன்சொலும் ஆற்றின் அடுக்கிய**
**சுற்றத்தால் சுற்றப் படும்.** 5

**பரிமேலழகர்:** கொடுத்தலும் இன்சொலும் ஆற்றின் - ஒருவன் சுற்றத்திற்கு வேண்டுவன கொடுத்தலையும் இன்சொல் சொல்லுதலையும் வல்லனுயின், அடுக்கிய சுற்றத்தால் சுற்றப்படும் - தம்மில் தொடர்ந்த பல வகைச் சுற்றத்தானே சூழப்படும்.

இரண்டும் அளவறிந்து ஆற்றுதல் அரிது என்பது தோன்ற, ஆற்றின் என்ருர். தம்மின் தொடர்தலாவது சுற்றத்தது சுற்றமும் அதனது சுற்றமுமாய் அவற்ருல் பிணிப்புண்டு வருதல். இவ்வுபாயங்களை வடநூலார் தானமும் சாமமும் என்ப.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** அடுக்கிய சுற்றத்தால் சுற்றப்படும் - தனக்கு முன்னதாகியும் பின்னுகியும் வருகின்ற சுற்றத்தாராலே சூழப்படுவன். (525)

## 526

**பெருங்கொடையான் பேணுன் வெகுளி அவனின்**
**மருங்குடையார் மாநிலத் தில்.** 6

**பரிமேலழகர்:** பெருங்கொடையான் வெகுளி பேணுன் - ஒருவன் மிக்க கொடையை உடையனுமாய் வெகுளியை விரும்பானுமாயின், அவனின் மருங்கு உடையார் மா நிலத்து இல் - அவன்போலக் கிளை உடையார் இவ்வுலகத்து இல்லை.

மிக்க கொடை, ஒன்ருனும் வறுமை எய்தாமல் கொடுத்தல். விரும்பாமை, இஃது அரசற்கு வேண்டுவதொன்று என்று அளவு இறந்து செய்யாமை.

### உரை வேறுபாடு

**பரிதியார்:** கொடையினுலே பெரியவன் கோபம் இல்லாதவனுகில் அந்த அரசனைப்போலே சுற்றம் இல்லை. (526)

## 527

**காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமும்**
**அன்னநீ ரார்க்கே உள.** 7

**பரிமேலழகர்:** காக்கை கரவா கரைந்து உண்ணும் - காக்கைகள் தமக்கு இரையாயின கண்டவழி மறையாது இனத்தை அழைத்து அதனே

டும்கூட உண்ணுநிற்கும்; ஆக்கமும் அன்ன நீரார்க்கே உள - சுற்றத்தான் எய்தும் ஆக்கங்களும் அப் பெற்றித்தாய இயல்பினை உடையார்க்கே உள ஆவன.

அவ் வாக்கங்களாவன : பகை இன்மையும், பெருஞ்செல்வம் உடைமையும் முதலாயின. எச்சவும்மையான் அறமும் இன்பமுமேயன்றிப் பொருளும் எய்தும் என்பது பெறுதும். அப் பெற்றித்தாய இயல்பென்றது, தாம் நுகர்வன எல்லாம் அவரும் நுகருமாறு வைத்தல்.

### உரை வேறுபாடு

**பரிப்பெருமாள்:** இது மக்கள் பலர் உண்டானல் எல்லார்க்கும் பகுத்து உண்ணக் கொடுக்கவேண்டும் என்றது. (527)

## 528

பொதுநோக்கான் வேந்தன் வரிசையா நோக்கின்
அதுநோக்கி வாழ்வார் பலர். 8

**பரிமேலழகர்:** பொது நோக்கான் வேந்தன் வரிசையா நோக்கின் - எல்லாரையும் ஒரு தன்மையராக நோக்காது அரசன் தத்தம் தகுதிக்கு ஏற்ப நோக்குமாயின், அது நோக்கி வாழ்வார் பலர் - அச் சிறப்பு நோக்கி அவனை விடாது வாழும் சுற்றத்தார் பலர்.

உயர்ந்தார் நீங்குதல் நோக்கிப் பொதுநோக்கை விலக்கி, எல்லாரும் விடாது ஒழுகுதல் நோக்கி வரிசை நோக்கை விதித்தார்.

இந் நான்கு பாட்டானும் சுற்றம் தழுவும் உபாயம் கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** அரசன் எல்லாரையும் பொதுவாகப் பாராதே ஒருவனைத் தலைமையாலே பார்ப்பானுயின் அப் பார்வை நோக்கி அவனை விடாது வாழும் சுற்றத்தார் பலர்.

இஃது ஒருவனை இளவரசாக்க வேண்டும் என்றது.

**பரிப்பெருமாள்:** மக்கள் பலர் உண்டானல் எல்லாரையும் ஒக்கப் பாராது நீதிமான் ஒருவனை இளவரசு ஆக்க வேண்டும் என்றது.

**பரிதியார்:** அரசன் உறவின்முறையரான பதினெட்டுப் பேர் முதலான பேரை, எல்லாரும் ஒக்கும் என்று விசாரியாமல் தராதர பாவனை அறிந்து பார்ப்பானுகில் அது நோக்கி அரசனைச் சூழ்ந்து இருப்பார் பலர்.

**காளிங்கர்:** இதனைப் படிமரபாகக் கொண்டு யாவரும் தம்தம் சுற்றம் ஓம்புவார்.

**கவிராஜ பண்டிதர்:** எல்லாரையும் சரியாய்ப் பார்த்தால் பெரியவர்கள் விட்டுப் போவார்களானபடியினுலே, அவரவர்கள் மரியாதை அறிந்து நடப்பிக்க வேணும்.

### ஒப்புமை

1. **வரிசையா நோக்கல்:**

"வரிசை யறிதலும் வரையாது கொடுத்தலும்" (**சிறுபாண்.** 217.)

"பரிசில் மாக்கட்கு வரிசையின் நல்கி"

"வரிசைக்கு வருந்தும்இப் பரிசில் வாழ்க்கை" (**புறநா.** 6 : 16, 47 : 6.)

"தத்தம் வரிசையான் இன்புறூஉம் மேல்." (**நான்மணி.** 66.)

2. முற்றும் :

"ஒருதிசை ஒருவனை உள்ளி நாற்றிசைப்
பலரும் வருவர் பரிசில் மாக்கள்
வரிசை அறிதலோ அரிதே பெரிதும்
ஈதல் எளிதே மாவண் தோன்றல்
அதுநற் கறிந்தனை யாயின்
பொதுநோக் கொழிமதி புலவர் மாட்டே." (புறநா. 121.) (528)

## 529

**தமர்ஆகித் தற்றுறந்தார் சுற்றம் அமராமைக்
காரணம் இன்றி வரும்.** 9

**பரிமேலழகர்:** தமர் ஆகி தன் துறந்தார் சுற்றம் - முன் தமராய் வைத்துத் தன்னோடு அமராது யாதானும் ஒருகாரணத்தால் தன்னைப் பிரிந்து போயவர் பின்னும் வந்து சுற்றமாதல், அமராமை காரணம் இன்றி வரும் - அவ் வமராமைக் காரணம் தன் மாட்டு இல்லையாகத் தானே உளதாம்.

அமராமைக்காரணம் இன்றி என்றதனுன், முன் அஃது உண்டாய்த் துறத்தல் பெற்றும். அஃதாவது அரசன் தான் நெறிகெட ஒழுகல், வெறுப்பன செய்தல் என்றிவை முதலியவற்றுன் வருவது. ஆக்கம் வருவிக்கப்பட்டது.[1] இயற்கையாகவே அன்புடையராய சுற்றத்தார்க்குச் செயற்கையான் வந்த நீக்கம் அதனை ஒழிய ஒழியும், ஒழிந்தால் அவர்க்கு அன்பு செய்து கொள்ளவேண்டா, பழைய இயல்பாய் நிற்கும் என்பார், வரும் என்ருர்.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** இது தன்னை விட்டுப் போன இராஜபுத்திரரைக் கூட்டிக்கொள்ளுமாறு கூறிற்று.

**பரிப்பெருமாள்:** இது விட்டுப் போன புத்திரனைக் கூட்டிக் கொள்ளுமாறு கூறிற்று.

**பரிதியார்:** உறவின் முறையான காரியம் கண்டு சேர்த்தலும் காரியம் கண்டு பிரித்தலும் செய்வானுகில் அந்தச் சுற்றம் ஓரிடத்திலும் நிலை பெறுதலின்மை காரணமின்றியே வரும்.

**காளிங்கர்:** குரவர் முதலிய மூத்தோர் யாவர், மற்று இவர் தாம் தகாதன செய்யின் தகாது என்று அடித்தலும், கல்லாது இகழின் கல் லென்று கழறலும் செய்தால் நமக்கு இவை உபதேசம் என்றும் கொள்ளாது செய்யின் மற்று அச் சுற்றத்தாரது பொருந்தாமையால் தம்மைக் கைவிடுதல் காரணம் இன்றி வரும்.

தமராகி என்பது தமக்கு உரியராகி என்றது. தன் துறந்தார் என்பது தன்னைத் துறந்தார் என்றது. கல்லுதலாவது அடித்துச் சொல்லுதல். அமராமை என்பது பொருந்தாமை. (529)

## 530

**உழைப்பிரிந்து காரணத்தின் வந்தானை வேந்தன்
இழைத்திருந் தெண்ணிக் கொளல்.** 10

**பரிமேலழகர்:** உழை பிரிந்து காரணத்தின் வந்தானை - காரணம் இன்றித் தன்னிடத்து நின்றும் பிரிந்துபோய்ப் பின் காரணத்தான் வந்த சுற்றத்

1. சுற்றமாதல் என்னும் ஆக்கம்.

தானை, வேந்தன் இழைத்து இருந்து எண்ணி கொளல் - அரசன் அக் காரணத்தைச் செய்து வைத்து ஆராய்ந்து தழீஇக் கொள்க.

வாளா உழைப்பிரிந்து என்றமையின், பிரிதற்குக் காரணம் இன்மை பெற்றும். வருதற் காரணத்தைச் செய்யாவழிப் பிரிந்து போய்ப் பகையோடு கூடுமாகலின் இழைத்திருந்து என்றும், அன்பின்றிப் போய்ப் பின்னும் காரணத்தான் வந்தமையின் எண்ணிக்கொளல் என்றும் கூறினர்.

பிரிந்து போய சுற்றத்தாருள் தீமை செய்யப் போய் அதனை ஒழிய வருவானும் அது செய்யாமற் போய்ப் பின் நன்மை செய்ய வருவானும் தழுவப்படுமாகலின், தழுவுமாறு முறையே இவ் விரண்டு பாட்டானும் கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**பரிப்பெருமாள்:** எண்ணிக் கோடலாவது அவன் வந்த காரணத்தை எண்ணுதலும், ஒருவனுகில் அதற்குத் தக்கவும் பலர் உண்டாகில் அதற்குத் தக்கவும் எண்ணுதலும். இது மீண்டு வந்த இராஜபுத்திரனோடு செய்யும் திறன் கூறிற்று.

**பரிதியார்:** அரசனிடத்திலே பலனுண்டாகில் சூழ்ந்திருந்து, பலனற்றால் கைவிட்டுப் போய் மீண்டுவந்தும் இப்படியே உள்ள பேரையும் அறிக.

**காளிங்கர்:** தன் முதுகுரவர் மாட்டினின்று நீங்கி மற்று யாதானும் ஒரு காரணத்தினுல் தன் மாட்டு வந்தான் ஒருவனை, மற்று அம் மன்னனுனவன் யாது செய்யற் பாலதோ எனின், அவன் தன்மையைப் பலபடியும் ஆராய்ந்து அமைந்து பின்னையும் கடிதின் தேருது கசடற விசாரித்து, தகும் எனின் தன் சுற்றத்தோடு ஒக்கத் தழீஇக் கொள்ளினும் கொள்க; அல்ல எனின் அது செய்யா தொழிக.

உழைப்பிரிந்து என்பது தன் முது குரவர் மாட்டினின்று நீங்கி என்றது. *(530)*

---

# 54. பொச்சாவாமை

**பரிமேலழகர்:** அ∴தாவது, உருவும் திருவும் ஆற்றலும் முதலாயவற்றுன் மகிழ்ந்து தற்காத்தலினும் பகை அழித்தல் முதலிய காரியங்களினும் சோர்தலைச் செய்யாமை. மேற்சொல்லிய சுற்றத்தாரால் பயனுள்ளது இச் சோர்வு இல்வழி யாகலின், இது சுற்றம் தழாலின்பின் வைக்கப்பட்டது.

**மணக்குடவர்:** பொச்சாவாமையானது மறவியின்றி ஒழுகுதல். அது தனது சோர்வு பார்த்துப் பிறர் வஞ்சகம் செய்யும் இடங்களினும், அறம் பொருள் இன்பங்கள் செய்யவேண்டும் இடங்களினும் மறத்தல் இன்மை. பொச்சாப்பு எனினும், மறவி எனினும், இகழ்ச்சி எனினும் ஒக்கும்.

**பரிப்பெருமாள்:** மேல் அமாத்தியர் மாட்டும் சுற்றத்தார் மாட்டும் ஒழுகும் திறன் கூறினர்; அதனுல் பயன் உண்டாவது தன்னைத் தான் கடைப்பிடித்து ஒழுகின் என்று அதன்பின் கூறப்பட்டது.

**பரிதியார்:** பொச்சாவாமையாவது செல்வம் பெற்றேம் என்னும் ஆங்காரத்தினுல் அறிவிலன் ஆதல்.

### குறிப்பு

பொச்சாவாமை என்பது பொச்சாத்தல் என்பதன் எதிர் மறை. அதன் பகுதி பொச்சா என்பது; "பொருள் தீர்ந்த பொச்சாந்தும்

சொல்லார்", "பொருள்நீங்கிப் பொச்சாந்தார் என்ப" என்று அதனடியாக வந்த சொற்களை முன்பும் ஆண்டார் (குறள். 199, 246.)

## 531

இறந்த வெகுளியின் தீதே சிறந்த
உவகை மகிழ்ச்சியிற் சோர்வு. 1

**பரிமேலழகர்:** சிறந்த உவகை மகிழ்ச்சியின் சோர்வு - மிக்க உவகைக் களிப்பான் வரும் மறவி, இறந்த வெகுளியின் தீது - அரசனுக்கு அளவு இறந்த வெகுளியினும் தீது.

மிக்க உவகை பெருஞ்செல்வம், பேரின்பம், பெருமிதம் என்றிவற்றான் வருவது. அளவு, பகைவரை அடர்த்தற்கும் கொடியோரை ஒறுத்தற்கும் வேண்டுவது. இறந்த வெகுளி ஒரோவழிப் பகைவரையும் கொல்லும்; இஃது அன்னதன்றித் தன்னையே கோறலின், அதனினும் தீதாயிற்று.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** தனக்குச் சிறந்த உவகை தன் மகிழ்ச்சியால் சோரும் சோர்வு என்றும், உய்க்க வேண்டுமவரிடத்து உய்க்கும் உவகை என்றுமாம்.

**பரிப்பெருமாள்:** இது காமத்தின்கண்ணும் வெகுட்சியின் கண்ணும் கடைப்பிடித்தல் கூறிற்று. (531)

## 532

பொச்சாப்புக் கொல்லும் புகழை அறிவினை
நிச்ச நிரப்புக்கொன் றாங்கு. 2

**பரிமேலழகர்:** புகழை பொச்சாப்பு கொல்லும் - ஒருவன் புகழினை அவன் மறவி கெடுக்கும், அறிவினை நிச்சம் நிரப்பு கொன்றாங்கு - அறிவினை நிச்சநிரப்புக் கெடுக்குமாறு போல.

நிச்சநிரப்பு - நாடோறும் இரவான் வருந்தித் தன் வயிறு நிறைத்தல். அஃது அறிவுடையான்கண் உண்டாயின் அவற்கு இளிவரவானும் பாவத்தானும் எள்ளற்பாட்டினை விளைத்து அவன் நன்கு மதிப்பினை அழிக்கும்; அதுபோல மறவியும் புகழுடையான்கண் உண்டாயின் அவற்குத் தற்காவாமையானும் காரியக் கேட்டானும் எள்ளற்பாட்டினை விளைத்து, அவன் நன்கு மதிப்பினை அழிக்கும் என்பதாயிற்று.

இவை இரண்டு பாட்டானும் பொச்சாப்பினது குற்றம் கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**பரிப்பெருமாள்:** புகழ்பட வாழுங்கால் தன் அளவை மறந்து கொடுப்பன் ஆயின் தான் கருதின புகழும் முடியச் செல்லாது அளவிலே நின்று சாம், இயற்கையாகிய அறிவு நல்குரவினால் சாமாறுபோல.

**காளிங்கர்:** உலகத்துத் தாம் பிறரை இகழும் இகழ்ச்சியாவது, மற்று அது தம் புகழினைத் தலையழிக்கும்; என்போல எனின், ஒருவரது அறிவுடைமையைச் சிலர் மாட்டு நாள்தோறும் சென்று இரக்கும் இரப்பானது தலையழித்தாற்போல.

### ஒப்புமை

**அறிவினை வறுமை கொல்லுதல்:**

"அறிவுகெட நின்ற நல்கூர் மையே" (புறநா. 266 : 13.)

"குடிப்பிறப் பழிக்கும் விழுப்பம் கொல்லும்
பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉம்
நாணணி களையும் மாணெழில் சிதைக்கும்
பூண்முலை மாதரொடு புறங்கடை நிறுத்தும்
பசிப்பிணி என்னும் பாவி" (மணி. 11 : 76-80.)

"பிறந்த குலம்மாயும் பேராண்மை மாயும்
சிறந்ததங் கல்வியும் மாயும்—கறங்கருவி
கன்மேற் கழூஉங் கணமலை நன்னாட
இன்மை தழுவப்பட் டார்க்கு."

"நீர்மையே யன்றி நிரம்ப எழுந்ததம்
கூர்மையும் எல்லாம் ஒருங்கிழப்பர்—கூர்மையின்
முல்லை அலைக்கும் எயிற்றாய் இரப்பென்னும்
அல்லல் அடையப்பட் டார்." (நாலடி. 285, 289.) (532)

## 533

பொச்சாப்பார்க் கில்லை புகழ்மை அதுஉலகத்
தெப்பால்நூ லோர்க்கும் துணிவு. 3

**பரிமேலழகர்** : பொச்சாப்பார்க்கு புகழ்மை இல்லை - பொச்சாந்து ஒழுகுவார்க்குப் புகழ் உடைமை இல்லை; அது உலகத்து எப்பால் நூலோர்க்கும் துணிவு - அவ்வின்மை இந் நீதிநூல் உடையார்க்கே அன்றி உலகத்து எவ்வகைப்பட்ட நூல் உடையார்க்கும் ஒப்ப முடிந்தது.

அரசர்க்கே அன்றி அறம் முதலிய நான்கினும் முயல்வார் யாவர்க்கும் அவை கைகூடாமையின் புகழ் இல்லை என்பது தோன்ற, எப்பால் நூலோர்க்கும் துணிவு என்றார்.

### உரை வேறுபாடு

**பரிதியார்**: மதப்பட்டால் அறிவு இல்லாதாற்குப் புகழ் இல்லை; அது எல்லாச் சமயத்தார் சொல்லும் சாத்திரத்திலும் கேட்க.

**காளிங்கர்** : தத்தம் கோட்பாட்டால் பெறும் பயன் வேறுபடுத்து அமைக்கும் அறுவகைச் சமயத்தோர்க்கும் அவை கடந்த அப்பாலோர்க்கும் பிறரை அமைதி பண்ணி இகழாது ஆற்றல் உடையராதலே தத்தம் பெறு பயனுக்கு உறுதி நெறி என்பது; தாம் கற்ற நூல்களில் பெறுபயன் அறியும் பிற நூல்களிலும் இக்குற்றம் நன்று என்பார் யாரும் இல்லை.

### ஒப்புமை

**பொச்சாப்பார்க்கில்லை புகழ்மை :**

"பொச்சாப் பிலாத புகழ்வேள்வித் தீப்போல
எச்சாரும் மின்னும் மழை." (கார் நாற்பது, 7.) (533)

## 534

அச்சம் உடையார்க் கரண்இல்லை ஆங்கில்லை
பொச்சாப் புடையார்க்கு நன்கு. 4

**பரிமேலழகர்** : அரண் அச்சம் உடையார்க்கு இல்லை - காடு மலை முதலிய அரண்களுக்குள்ளே நிற்பினும், மனத்தின்கண் அச்சம் உடையார்க்கு அவற்றால் பயன் இல்லை; ஆங்கு நன்கு பொச்சாப்பு உடையார்க்கு இல்லை - அதுபோலச் செல்வமெல்லாம் உடையராயினும் மனத்தின்கண் மறவியை உடையார்க்கு அவற்றால் பயன் இல்லை.

நன்மைக்கு ஏதுவாகலின் நன்கு என்றார். அச்சம் உடையார் நின்ற அரண் அழியுமாறு போல, மறவி உடையாருடைய செல்வங்களும் அழியும் என்பதாயிற்று.

### உரை வேறுபாடு

**பரிப்பெருமாள்:** நன்கு - நன்மை.

**பரிதியார்:** பேடியான[1] பேர்க்கு அரண் இல்லை. அதுபோலப் பொய்யாகிய மதம் பெற்றார்க்கு ஆக்கம் இல்லை. *(534)*

## 535

**முன்னுறக் காவா திழுக்கியான் தன்பிழை**
**பின்னூ றிரங்கி விடும். 5**

**பரிமேலழகர்:** முன்னுறக் காவாது இழுக்கியான் - தன்னால் காக்கப்படும் துன்பங்களை அவை வருவதற்கு முன்னே அறிந்து காவாது மறந்திருந்தான், பின் ஊறு தன் பிழை இரங்கி விடும் - பின் வந்துற்ற காலத்துக் காக்கலாகாமையின் அப் பிழைப்பினை நினைந்து இரங்கிவிடும்.

காக்கப்படும் துன்பங்களாவன, சோர்வு பார்த்துப் பகைவர் செய்வன. ஊற்றின்கண் என்புழி உருபும் சாரியையும் உடன் தொக்கன. உற்ற காலத்துக் காக்கலாகாமையின், இரங்கிவிடும் என்றார்.

இவை மூன்று பாட்டானும் பொச்சாப்புடையார்க்கு வரும் ஏதம் கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**பரிதியார்:** தனக்கு ஒரு விதனம் வருமுன்னே காவாதான், விதனம் வந்தால் ஒரு விதனம் நூறு விதனமாக இரங்கிவிடும்.

**காளிங்கர்:** பின் எண் இறந்த பல ஆவதும் செய்து மற்றும் துயர் ஆற்றாது பெரிதும் சோதித்துக் கெட்டு விடும்.

பின்னூறு என்பது நூறு வகையால் இரக்கத்தைத் தரும் என்றது.

**கவிராஜ பண்டிதர்:** காக்கப்படும் துன்பங்களாவன : மறந்திருக்கிற வேளை பார்த்துப் பகைவர், கள்வர் இவர்களாற் செய்யப்படுவன.

### ஒப்புமை

**முன்பு காவாதார் பின்பு வருந்துதல் :**

"முன்னை உடையது காவா திகழ்ந்திருந்து
பின்னையஃ தாராய்ந்து கொள்குறுதல்—இன்னியற்
பைத்தகன்ற அல்குலாய் அஃதாதல் வெண்ணெய்மேல்
வைத்து மயில்கொள்ளு மாறு." *(பழமொழி, 325.)* *(535)*

## 536

**இழுக்காமை யார்மாட்டும் என்றும் வழுக்காமை**
**வாயின் அஃதொப்ப தில். 6**

**பரிமேலழகர்:** இழுக்காமை யார்மாட்டும் என்றும் வழுக்காமை வாயின் - அரசர்க்கு மறவாமைக் குணம் யாவர்மாட்டும் எக்காலத்தும் ஒழி

1. பேடியான - அஞ்சின; மலைநாட்டு வழக்கு.

வின்றி வாய்க்குமாயின், அஃது ஒப்பது இல்[1] - அதனை ஒக்கும் நன்மை பிறிது இல்லை.

வினை செய்வார் சுற்றத்தார் என்னும் தம் பாலார்கண்ணும் ஒப்ப வேண்டுதலின் யார்மாட்டும் என்றும், தாம் பெருகிய ஞான்றும் சுருங்கிய ஞான்றும் ஒப்ப வேண்டுதலின் என்றும் என்றும், எல்லாக் காரியங்களினும் ஒப்ப வேண்டுதலின் வழுக்காமை என்றும் கூறினர். வாயின் என்பது முதனிலைத் தொழிற்பெயர் அடியாக வந்த வினையெச்சம். வாய்த்தல் - நேர் படுதல்.

உரை வேறுபாடு

**மணக்குடவர்:** இது முறைமை செய்யுங்கால் கடைப்பிடித்துச் செய்ய வேண்டும் என்றது.

**பரிதியார்:** தான் பிடித்த நெறி குலையாமல் யார்க்கும் ஒரு தன்மை யான குணம் பெற்றால் அதுபோல ஒரு குணமும் இல்லை.

**காளிங்கர்:** உலகத்து மன்னரானவர் ஒருவர்மாட்டு ஒருவரை இகழாமையாகிய குணம் உளதாயினும் ஒருபடிப்பட நிற்றல் யாவர்க்கும் அரிது. மற்று இங்ஙனம் வழுவாமை வாய்ப்பின் அதனை ஒப்பதோர் நன்மை உலகத்து யாதும் இல்லை.

இழுக்காமை என்பது வழுக்காமை; இகழாமை என்றுமாம். *(536)*

## 537

அரியஎன் றாகாத இல்லைபொச் சாவாக்
கருவியாற் போற்றிச் செயின். 7

**பரிமேலழகர்:** அரிய என்று ஆகாத இல்லை - இவை செய்தற்கு அரியன என்று சொல்லப்பட்டு ஒருவற்கு முடியாத காரியங்கள் இல்லை, பொச்சாவா கருவியான் போற்றி செயின் - மறவாத மனத்தானே எண்ணிச் செய்யப்பெறின்.

பொச்சாவாத என்பதன் இறுதிநிலை விகாரத்தால் தொக்கது. அந்தக் கரணமாகலின் கருவி என்றார். இடைவிடாத நினைவும் தப்பாத சூழ்ச்சியும் உடையார்க்கு எல்லாம் எளிதின் முடியும் என்பதாம்.

இவை இரண்டு பாட்டானும் பொச்சாவாமையது சிறப்புக் கூறப் பட்டது.

உரை வேறுபாடு

**காளிங்கர்:** பொச்சாவா கருவியான் போற்றி செயின் - உலகத்து நல்லோரையும் நல்லனவற்றையும் இகழ்ந்து அவமதி பண்ணுமையாகின்ற இந்தச் சாதனமாகிய உபாயத்தினைக் குறிக்கொண்டு செய்யுங் காலத்து. *(537)*

## 538

புகழ்ந்தவை போற்றிச் செயல்வேண்டும் செய்யா
திகழ்ந்தார்க் கெழுமையும் இல். 8

**பரிமேலழகர்:** புகழ்ந்தவை போற்றி செயல்வேண்டும் - நீதி நூல் உடையார் இவை அரசர்க்கு உரியன என்று உயர்த்துக் கூறிய செயல்களைக் கடைப்பிடித்துச் செய்க, செய்யாது இகழ்ந்தார்க்கு எழுமையும் இல் -

1. (பி - ம்.) அதுவொப்பதில்.

அங்ஙனம் செய்யாது இகழ்ந்தவர்க்கு எழுமையினும் நன்மை இல்லை ஆகலான்.

அச் செயல்களாவன : மூவகை ஆற்றலும், நால்வகை உபாயமும், ஐவகைத் தொழிலும், அறுவகைக் குணமும் முதலாய செயல்கள்.[1] சாதி தருமமாகிய இவற்றின் வழிஇயோர்க்கு உள்ளது நிரயத் துன்பமேயாகலின், எழுமையும் இல் என்றார். எழுமை : ஆகுபெயர்.

இதனான் பொச்சாவாது செய்யவேண்டுவன கூறப்பட்டன.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** இஃது அறத்தின்கண் இகழாமல் செய்வது கூறிற்று.

**காளிங்கர்:** தொல்கலையும் தொல் சான்றோரும் இவை இவை நல்ல என்று புகழ்ந்தவற்றை நீரும் குறிக்கொண்டு செய்தலை விரும்புமின். என்னை எனின், இங்ஙனம் செய்யாது அவற்றை இகழ்ந்தவர்க்கு இம்மை ஆக்கமும் அன்றி மறுமை ஆக்கமும் இல்லை. எழுமை என்பது மறுமை.(538)

## 539

**இகழ்ச்சியிற் கெட்டாரை உள்ளுக தாம்தம்**
**மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து. 9**

**பரிமேலழகர்:** தம் மகிழ்ச்சியின் தாம் மைந்து உறும் போழ்து - அரசர் தம் மகிழ்ச்சிக்கண் தாம் வலியுறும்பொழுது, இகழ்ச்சியின் கெட்டாரை உள்ளுக - முற்காலத்து அதனினுய சோர்வால் கெட்டவர்களை நினைக்க.

காரணங்களோடு அவர்க்கு உளதாய உரிமையை மகிழ்ச்சிமேல் ஏற்றித் தம் மகிழ்ச்சியின் என்றும், இகழ்ச்சியும் கேடும் உடன் தோன்றும் ஆகலின் மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து என்றும் கூறினர். கெட்டாரை உள்ளவே, நாமும் அவ்வாறே கெடுதும் என்று அதன்கண் மைந்துறார் என்பது கருத்து. எண்ணுக என்று பாடம் ஓதுவாரும் உளர்.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** இகழ்ச்சியின் கெட்டாரை உள்ளுக - அரசர் குறித்து உணரும் உணர்ச்சி இன்மையாலே முன்பு கெட்ட அரசரை நினைக்க.

இஃது உண்பவை, உடுப்பவை, பூசுபவை சோதித்துக் கொள்க என்றது.

**பரிப்பெருமாள்:** இதனால் சொல்லியது : வலியாரைப் பகைவர் வெல்லுங்கால் அவரைச் சோர்வு பார்த்துக் களவினால் கொல்வார். ஆதலால் தன் வலியை நினையாது பகை உண்டாகும் என்று நினைத்துக் கோயிலும், அந்தப்புரமும், நீர் விளையாட்டு ஆடும் இடமும், இளமரக்காவும், வேட்டை யாடும் காடும், உண்பனவும், பூசுமவையும் இகழாது சோதித்துக் கொள்க.

**காளிங்கர்:** இதற்குப் பாரதத்தில் நூற்றுவரையும், இராமாயணத்தில் இராவணனையும் பிறரையும் எண்ணிக்கொள்க.

---

1. மூவகை ஆற்றல்: அறிவு, ஆண்மை பெருமை. நால்வகை உபாயம்: கொடுத்தல், இன்சொற் சொல்லல், வேறுபடுத்தல், ஒறுத்தல். ஐவகைத் தொழில்: மேற்சேறல், அரண் முற்றல், கோடல், பொருதல், வெற்றி கொள்ளுதல். அறுவகைக் குணம் : நட்பாக்கல், பகையாக்கல், மேற்சேறல், இருத்தல், பிரித்தல், கூட்டல்.

### ஒப்புமை

முற்றும்:

"செம்மாந்து செல்லும் செறுநரை அட்டவர்
தம்மேல் புகழ்பிறர் பாராட்டத்—தம்மேல்தாம்
வீரம்சொல் லாமையே வீழ்க களிப்பினும்
சோரப் பொதியாத வாறு." (பழமொழி, 131.)

"இகழ்ச்சியின் விட்ட இறைவன் போல
மகிழ்ச்சி யெய்தி மணிமுடி வேந்தன்"

"மகிழ்ச்சி யெய்தி மாற்றார் இல்லெனும்
இகழ்ச்சி ஏதம் தலைத்தது எனக்கு"
(பெருங். 1. 44 : 65-6, 3. 24 : 164-5 )

"இகழ்ச்சி யிற்கெடு வார்களை யெண்ணுக
மகிழ்ச்சி யுண்மதி மைந்துறும் போதெனப்
புகழ்ச்சி நூலுட் புகன்றனர் பூவினுள்
திகழ்ச்சி சென்றசெம் பொன்முடி மன்னனே."
(சூளா. சீயவதை. 56.)

"அரசியற் பாரம் பூரித் தயர்ந்தனை யிகழா தையன்
மரைமலர்ப் பாதம் நீங்கா வாழுதி"

"மூவரை வென்றுமூன் றுலகு முற்றுறக்
காவலின் னின்றுதம் களிப்புக் கைம்மிக
விவது முடிவென விந்த தல்லது
தேவரை வென்றவர் யாவர் தீமையோர்."
(கம்ப. வாலி. 137, இராவணன் மந்திரப். 70.) (539)

## 540

**உள்ளிய தெய்தல் எளிதுமன் மற்றுந்தான்**
**உள்ளிய துள்ளப் பெறின்.** 10

**பரிமேலழகர்:** தான் உள்ளியது எய்தல் எளிது மன் - அரசனுக்குத் தான் எய்த நினைத்த பொருளை அந் நினைத்த பெற்றியே எய்துதல் எளிதாம், மற்றும் உள்ளியது உள்ள பெறின் - பின்னும் அதனையே நினைக்கக் கூடுமாயின்.

அது கூடாதென்பது ஒழிந்து நின்றமையின், மன் ஒழியிசைக்கண் வந்தது. அதனையே நினைத்தலாவது, மறவியின்றி அதன்கண்ணே முயறல்.

இவை இரண்டு பாட்டானும் பொச்சாவாமைக்கு உபாயம் கூறப் பட்டது.

### உரை வேறுபாடு

**காளிங்கர்:** 'இவ்வுலகத்து ஒருவரும் தன்னை அவமதி பண்ணாது மதித்தல் வேண்டித் தான் கருதியிருப்பது பிறர்க்கும் இவ்வாறே கருதப் பெறின்.

உலகத்தார் செய்யும் வினையின் விளைவு வித்தியது விளைதலோடு ஒக்கும்; ஆதலால் பிறர்மாட்டு இகழ்ச்சியின்றி நன்மை கருதுவார்க்கும் வந்து விளைவது நன்மை. (540)

# 55. செங்கோன்மை

**பரிமேலழகர்:** அஃதாவது, அரசனால் செய்யப்படும் முறையினது தன்மை. அம் முறை ஒருபால் கோடாது செவ்விய கோல்போறலின் செங்கோல் எனப்பட்டது. வடநூலாரும் தண்டம் என்றார். அது சோர்வு இல்லாத அரசனால் செயற்பாலது ஆகலின், இது பொச்சாவாமையின்பின் வைக்கப் பட்டது.

**மணக்குடவர்:** செங்கோன்மையாவது செவ்விதாகிய முறை செய்தல் உடைமை. குற்றமும் குணமும் தூக்கி ஆராய்தலால் கோல் என்றார். அது கோடாமையால் செங்கோல் ஆயிற்று. மேல் அமாத்தியர் மாட்டும் சுற்றத் தார்மாட்டும் தன்மாட்டும் செய்யும் திறம் கூறினர், உலகத்தார்மாட்டும் செய்யும் திறம் கூறுகின்றார் ஆதலான், அதன்பின் இது கூறப்பட்டது.

### 541

ஓர்ந்துகண் ணோடா திறைபுரிந் தியார்மாட்டும்
தேர்ந்துசெய் வஃதே முறை. 1

**பரிமேலழகர்:** ஓர்ந்து - தன்கீழ் வாழ்வார் குற்றம் செய்தால் அக் குற்றத்தை நாடி, யார்மாட்டும் கண்ணோடாது - யாவர்மாட்டும் கண்ணோடாது, இறைபுரிந்து - நடுவுநிலைமையைப் பொருந்தி, தேர்ந்து - அக் குற்றத்திற்குச் சொல்லிய தண்டத்தை நூலோரோடும் ஆராய்ந்து, செய்வஃதே முறை - அவ் வளவிற்றாகச் செய்வதே முறையாம்.

நடுவு நிற்றல் இறைக்கு இயல்பு ஆகலின் அதனை இறை என்றும், உயிரினும் சிறந்தார்கண்ணும் என்பார் யார்மாட்டும் என்றும் கூறினர். இறைமை இறை எனவும், செய்வது செய்வஃதெனவும் நின்றன.

இதனான் செங்கோன்மையது இலக்கணம் கூறப்பட்டது.

#### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** கண்ணோடாது இறை புரிந்து - நட்டோர் என்று கண்ணோடாது தலைமையைப் பொருந்தி.

**காளிங்கர்:** ஓர்ந்து - வேந்தனானவன் தனக்குத் தகுதியும் தகுதி அல்லாமையும் ஆராய்ந்து.

#### ஒப்புமை

1. **கண்ணோடாது செய்தல் முறை:**

"முறைஎனப் படுவது கண்ணோடாது உயிர்வௌவல்"
*(கலி. 133:13.)*

"கறவைக்கன் றூர்ந்தானைத் தந்தையும் ஊர்ந்தான்
முறைமைக்கு மூப்பிளமை இல்" *(பழமொழி, 93, 322.)*

"எங்கண் ணனையர் எனக்கருதின் ஏதமால்
தங்கண்ணே யானும் தகவில கண்டக்கால்
வன்கண்ண னாகி ஒறுக்க, ஒறுக்கல்லா
மென்கண்ணன் ஆளான் அரசு."

2. **தேர்ந்து செய்வதே முறை:**

"நீமெய் கண்ட தீமை காணின்
ஒப்ப நாடி அத்தக வொறுத்தி" *(புறநா. 10: 3-4.)*

"ஏமம் வேண்டுவோன் முறைசெயல் தண்டான்."
*(முதுமொழிக். 10 : 9.)* (541)

## 542

வான்நோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன்
கோல்நோக்கி வாழும் குடி. 2

பரிமேலழகர்: உலகு எல்லாம் வான் நோக்கி வாழும் - உலகத்து உயிரெல்லாம் மழை உளதாயின் உளவாகா நிற்குமே எனினும், குடி மன்னவன் கோல் நோக்கி வாழும் - குடிகள் அரசன் செங்கோல் உளதாயின் உளவாகா நிற்கும்.

நோக்கி வாழ்தல், இன்றியமையாமை. வானின் ஆய உணவை வான் என்றும், கோலின் ஆய ஏமத்தைக் கோல் என்றும் கூறினர். அவ்வேமம் இல்வழி உணவு உளதாயினும் குடிகட்கு அதனால் பயன் இல்லை என்பதாம்.

### உரை வேறுபாடு

மணக்குடவர்: வாழும் - இன்புற்று நிற்பர்.

காளிங்கர்: வாழும் - அஞ்சாது வாழும்.

### மேற்கோள் விளக்கம்

'வான் நோக்கி வாழும்என்புழி வானைநோக்கி வாழும் என விரியும்வழி, வானான் ஆய பயனைக் கருதி உயிர் வாழும் எனவும், வானின் ஆய பயனைக் கருதி உயிர் வாழும் எனவும் செயப்படுபொருளும் ஏதுவும் ஒப்பப் பிறந்து நிற்றல் இச் சூத்திரத்திற்குக் கருத்து.' (தொல். சொல். 94, ந.)

'நோக்கு என்பது மன எழுச்சி விசேடத்தை' என்பர் சிவஞான முனிவர் (சிவஞான போதம், சூ. 9, உரை.)

### ஒப்புமை

1. உலகம் வானை நோக்கி வாழுதல்:

"வித்திவான் நோக்கும் புன்புலம்" (புறநா. 18: 24.)

"மழையின்றி மாநிலத்தார்க்கு இல்லை" (நான்மணி. 47.)

"எத்தனையும் வான்மறந்த காலத்தும் பைங்கூழ்கள்
மைத்தெழுந்த மாமுகிலே பார்த்திருக்கும்."
(பெருமாள் திருமொழி, 5 : 7.)

2. குடி மன்னவன் கோல் நோக்கி வாழுதல்:

"தான்நோக்கா தெத்துயரம் செய்திடினும் தார்வேந்தன்
கோல்நோக்கி வாழும் குடிபோன் றிருந்தேனே." (பெருமாள். 5: 3.)

3. முற்றும்:

"கோல்நோக்கி வாழும் குடிஎல்லாம் தாய்முலையின்
பால்நோக்கி வாழும் குழவிகள்—வானத்
துளிநோக்கி வாழும் உலகம்." (நான்மணி. 27.) (542)

## 543

அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய்
நின்றது மன்னவன் கோல். 3

பரிமேலழகர்: அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய் நின்றது - அந்தணர்க்கு உரித்தாய வேதத்திற்கும் அதனால் சொல்லப்பட்ட அறத்திற்கும் காரணமாய் நிலைபெற்றது, மன்னவன் கோல் - அரசனால் செலுத்தப்படுகின்ற செங்கோல்.

அரசர் வணிகர் என்னும் ஏனையோர்க்கும் உரித்தாயினும், தலைமை பற்றி அந்தணர் நூல் என்றார். "மாதவர் நோன்பும் மடவார் கற்பும், காவலன் காவல்"[1] அன்றித் தம் காவலான் ஆகலின், ஈண்டு அறம் என்பது அவை ஒழிந்தவற்றை. வேதமும் அறனும் அநாதியாயினும் செங்கோல் இல்வழி நடவா ஆகலின், அதனை அவற்றிற்கு ஆதி என்றும், அப் பெற்றியே தனக்கு ஆதியாவது பிறிது இல்லை என்பார் நின்றது என்றும் கூறினார்.

இவை இரண்டு பாட்டானும் செங்கோலது சிறப்புக் கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**பரிப்பெருமாள்:** இது கல்வியும் அறமும் வளரும் என்றது.

**காளிங்கர்:** மற்றும் அறநூல் என்று இங்ஙனம் ஒன்று சொல்லாது அந்தணர் நூல் என்றது, அரசர் நெறியாகிய செங்கோலும் நால் வருணத்தார் நடையுள் ஒரு நடை ஆகலானும், அவை யாவையும் பிறவும் துறவுமாகிய அனைத்தினையும் பழுது அற உரைப்பது பார்ப்பார் ஓதியும் ஓதுவித்தும் இங்ஙனம் விளங்க நடைபெற்று வருகின்ற வேதம் ஆகலான்.

**கவிராஜ பண்டிதர்:** அரசன் நீதியாய் நடத்தினால், வேதமும் சாஸ்திரமும் தருமமும் வர்த்திக்கும். *(543)*

## 544

குடிதழீஇக் கோல்ஓச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு. 4

**பரிமேலழகர்:** குடி தழீஇ கோல் ஓச்சும் மாநில மன்னன் அடி - தன் குடிகளையும் அணைத்துச் செங்கோலையும் செலுத்தும் பெருநில வேந்தன் அடியை, தழீஇ நிற்கும் உலகு - பொருந்தி விடார் உலகத்தார்.

அணைத்தல், இன் சொல் சொல்லுதலும், தளர்ந்துழி வேண்டுவன கொடுத்தலும் முதலாயின. இவ் விரண்டினையும் வழுவாமல் செய்வான் நிலம் முழுதும் ஆளும் ஆகலின் அவனை மாநில மன்னன் என்றும், அவன்மாட்டு யாவரும் நீங்கா அன்பினர் ஆவர் ஆகலின் அடி தழீஇ நிற்கும் உலகு என்றும் கூறினார்.

### ஒப்புமை

1. **குடி தழீஇக் கோல் ஓச்சுதல்:**

"நாயகன் அல்லன் நம்மை நனிபயந் தெடுத்து நல்கும்
தாயென இனிது பேணத் தாங்குதி." (**கம்ப.** அரசியல். 34.)

2. **முற்றும்:**

"முறையறிந் தவாவை நீக்கி முனிவுழி முனிந்து வெஃகும்
இறையறிந் துயிர்க்கு நல்கும் இசைகெழு வேந்தன் காக்கப்
பொறைதவிர்ந் துயிர்க்கும் தெய்வப் பூதலம்."
(**கம்ப.** நாட்டுப். 20.) (544)

## 545

இயல்புளிக் கோல்ஓச்சும் மன்னவன் நாட்ட
பெயலும் விளையுளும் தொக்கு. 5

**பரிமேலழகர்:** பெயலும் விளையுளும் தொக்கு - பருவ மழையும் குன்றாத விளைவும் ஒருங்கு கூடி, இயல்புளி கோல் ஓச்சும் மன்னவன் நாட்ட - நூல்

1. மணிமேகலை, 22 : 208-9.

கள் சொல்லிய இயல்பால் செங்கோலைச் செலுத்தும் அரசனது நாட்டின் கண்ணவாம்.

உளி என்பது மூன்றுவதன் பொருள்படுவதோர் இடைச் சொல்.[1] வானும் நிலனும் சேரத் தொழிற்பட்டு வளம் சுரக்கும் என்பதாம்.

ஒப்புமை

1. இயல்புளிக் கோலோச்சும் மன்னவன்:

"இன்னவை தகைமை யென்ப வியல்புளி மரபின் எண்ணி
மன்னர சியற்றி"

"உருளுடை நேமியால் உலகை யோம்பிய
பொருளுடை மன்னவன் புதல்வ." (கம்ப. அரசியல். 37, அகத்திய. 16.)

2. முற்றும் :

"முறைவேண்டு பொழுதில் பதனெளி யோர்ஈண்டு
உறைவேண்டு பொழுதில் பெயல்பெற் றோர்"

"கோலல் செம்மையின் சான்றோர் பல்கிப்
பெயல்பிழைப் பறியாப் புன்புலத் ததுவே"
(புறநா. 35 : 15-6, 117: 6-7.)

"வெஞ்சின வேந்தன் முறைநெறியிற் சேர்தலும்
திங்கள்மும் மாரிக்கு வித்து." (திரி. 98.) (545)

## 546

**வேல்அன்று வென்றி தருவது மன்னவன்**
**கோல்அதூஉம் கோடா தெனின்.** 6

**பரிமேலழகர்:** மன்னவன் வென்றி தருவது வேல் அன்று கோல் - மன்னவனுக்குப் போரின்கண் வென்றியைக் கொடுப்பது அவன் எறியும் வேல் அன்று, கோல்; அதூஉம் கோடாது எனின் - அஃதும் அப் பெற்றித்தாவது தான் கோடாதாயின்.

கோல் செவ்விதாயவழியே வேல் வாய்ப்பது என்பார் வேல்அன்று என்றார். "மாண்ட, அறநெறி முதற்றே அரசின் கொற்றம்"[2] என்றார் பிறரும். கோடான் என்பது பாடமாயின் கருவியின் தொழில் வினைமுதல்மேல் நின்றதாக உரைக்க. (546)

## 547

**இறைகாக்கும் வையகம் எல்லாம் அவனை**
**முறைகாக்கும் முட்டாச் செயின்.** 7

**பரிமேலழகர்:** வையகம் எல்லாம் இறை காக்கும் - வையகத்தை எல்லாம் அரசன் காக்கும்; அவனை முறை காக்கும் - அவன்தன்னை அவனது செங்கோலே காக்கும், முட்டா செயின் - அதனை முட்ட வந்துழியும் முட்டாமற் செலுத்துவன் ஆயின்.

---

1. 'இயல்புளிக் கோலோச்சும் மன்னவன் என்புழி முறைமையிலே செங்கோல் நடாத்தும் என ஏழுன் உருபு விரிதலால் உளி என்பது மூன்றன் உருபின் பொருள்பட வந்தது அன்று; பகுதிப் பொருள் விகுதியாய் நின்று தனக்கு ஏற்ற உருபை ஏற்று நின்றது' என்பர் நச்சினார்க்கினியர். (தொல். சொல். 252.)

2. புறநா. 55: 9-10.

முட்டாமல் செலுத்தியவாறு மகனை முறை செய்தான் கண்ணும், தன் கை குறைத்தான் கண்ணும் காண்க.[1] முட்டாது என்பதன் இறுதிநிலை விகாரத்தால் தொக்கது.

இவை நான்கு பாட்டானும் அதனைச் செலுத்தினான் எய்தும் பயன் கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**பரிதியார்:** உலகத்தைச் செங்கோல் முறையாலே அரசன் காப்பானாகில் அரசனை உலகம் காக்கும்.

**காளிங்கர்:** இவ் வையகத்து வாழும் மக்கள் முதலாகிய உயிர்கள் அனைத்தையும் மன்னனானவன் ஒன்றனை ஒன்று நலியாமல் பாதுகாத்து ஒழுகும். (547)

## 548

**எண்பதத்தான் ஓரா முறைசெய்யா மன்னவன்**
**தண்பதத்தான் தானே கெடும். 8**

**பரிமேலழகர்:** எண் பதத்தான் ஓரா முறை செய்யா மன்னவன் - முறை வேண்டினார்க்கு எளிய செவ்வியை உடையனாய் அவர் சொல்லியவற்றை நூலோர் பலரோடும் ஆராய்ந்து நின்ற உண்மைக்கு ஒப்ப முறை செய்யாத அரசன், தண் பதத்தான் தானே கெடும் - தாழ்ந்த பதத்திலே[2] நின்று தானே கெடும்.

எண்பதத்தான் என்னும் முற்றுவினை யெச்சமும், ஓரா என்னும் வினையெச்சமும் செய்யா என்னும் பெயரெச்ச எதிர்மறையுள் செய்தல்வினை கொண்டன. தாழ்ந்த பதம், பாவமும் பழியும் எய்தி நிற்கும் நிலை. "அல்லவை செய்தார்க்கு அறம் கூற்றம்"[3] ஆகலின், பகைவர் இன்றியும் கெடும் என்றார்.

இதனான் முறை செலுத்தாதானது கேடு கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** தண்பதமாவது குறையைச் சொல்லுவதற்குத் தாழ்க்கும் காலம்.

**பரிதியார்:** தெய்வ சகாயத்தினாலே எளிதாகக் கெடுவன்.

**கவிராஜ பண்டிதர்:** தாழ்ந்த இடமாவது முறையிடுகிறவர்கள் காணாத இடம் என்பதாம்.

### ஒப்புமை

**அரசன் எண்பதத்தான் ஆதல்:**

"காட்சிக் கெளியன்" (குறள், 386.)

"முறை வேண்டு பொழுதில் பதன்எளியோர்"

(புறநா. 35: 15.) (548)

---

1 மகனை முறை செய்தான் மனுநீதிச் சோழன்; தன் கை குறைத்தான் பொற்கைப் பாண்டியன்.

2. தண்பதம் - தாழ்ந்த பதம்; தண்மை இழிவைக் குறித்தல், "தாழுடைத் தண்பணிபத்து" (பட்டினப். 164) என்பதனாலும் பெறப்படும்.

3. நான்மணிக். 83.

## 549

குடிபுறம் காத்தோம்பிக் குற்றம் கடிதல்
வடுஅன்று வேந்தன் தொழில். 9

**பரிமேலழகர்:** குடி புறம் காத்து ஓம்பி குற்றம் கடிதல் - குடிகளைப் பிறர் நலியாமல் காத்துத் தானும் நலியாது பேணி அவர்மாட்டுக் குற்றம் நிகழின் அதனை ஒறுப்பான் ஒழித்தல், வேந்தன் வடு அன்று தொழில் - வேந்தனுக்குப் பழி அன்று, தொழில் ஆகலான்.

துன்பம் செய்தல், பொருள் கோடல், கோறல் என ஒறுப்பு மூன்று. அவற்றுள் ஈண்டைக்கு எய்துவன முன்னைய என்பது குற்றம் கடிதல் என்பதனால் பெற்றாம். தன் கீழ் வாழ்வாரை ஒறுத்தல் அறன் அன்மையின் வடுவாம் என்பதனை ஆசங்கித்து, அஃதாகாது, அரசனுக்கு அவரை அக் குற்றத்தின் நீக்கித் தூயர் ஆக்குதலும் சாதி தருமம் என்றார்.

### உரை வேறுபாடு

**பரிப்பெருமாள்:** பிறர்க்கு இன்னா செய்தல் அறம் அல்ல என்றார் ஆகலின், ஈண்டுக் கூறுகின்றது அறம் அல்லவாம் பிற என்று ஐயுற்றார்க்கு இது கூறப்பட்டது.

**காளிங்கர்:** தமது அகம்காவல் குடிகட்கே இயல்பானது; அதனால் தனது கோல்கீழ் வாழும் குடிமக்களைப் புறம்காவல் காத்து மற்று அப் பாதுகாவற்கு இடையில் சோர்வு வராமல் செலுத்துமிடத்து, குடிமக்கட்குச் சோர்வு முதலிய குற்றம் உளதாயின் அதனைக் கடியுமாறு கடிந்து ஒழுகுதல் கொடுங்கோன்மை அன்று; அரசர்க்குச் செங்கோன் முறைமை.

### ஒப்புமை

1. குடி புறம் காத்து ஓம்பல்:

"குடிபுறம் காத்தோம்பும் செங்கோலான்" (கலி. 130:19.)

"கிளர்வேந்தன் தன்னாடு
வாட்டான்நன் றென்றல் வனப்பு" (சிறுபஞ்ச. 8.)

"குடிபுறம் காத்து" (பெருங். 5.8:20.)

"குடிபுறம் காத்து." (மணி. 23:11.)

2. முற்றும் :

"நாயகன் அல்லன் நம்மை நனிபயந் தெடுத்து நல்கும்
தாயென இனிது பேணத் தாங்குதி தாங்கு வாரை
ஆயது தன்மை யேனும் அறவரம் பிகவா வண்ணம்
தீயன வந்த போது சுடுதியால் தீமை யோரை."

(கம்ப. அரசியல். 34.) (549)

## 550

கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனொடு நேர். 10

**பரிமேலழகர்:** வேந்து கொடியாரை கொலையின் ஒறுத்தல் - அரசன் கொடியவர்களைக் கொலையான் ஒறுத்துத் தக்கோரைக் காத்தல், பைங்கூழ் களைகட்டதனொடு நேர் - உழவன் களையைக் களைந்து பைங்கூழைக் காத்ததனோடு ஒக்கும்.

கொடியவர் என்றது தீக்கொளுவுவார், நஞ்சிடுவார், கருவியில் கொல்வார், கள்வர், ஆறலைப்பார், சூறை கொள்வார், பிறனில் விழைவார் என்று

இவர் முதலாயினுரை. இவரை வடநூலார் ஆததாயிகள் என்ப. இப் பெற்றியரைக் கண்ணேடிக் கொல்லாவழிப் புல் களைக்கு அஞ்சாநின்ற பைங்கூழ் போன்று நலிவு பல எய்தி உலகு இடர்ப்படுதலின், கோறலும் அரசற்குச் சாதி தருமம் என்பதாயிற்று.

இவை இரண்டு பாட்டானும் செங்கோல் செலுத்தும் வெண்குடை வேந்தற்குத் தியார்மாட்டு மூவகை ஒறுப்பும் ஒழியற்பால அல்ல என்பது கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** *கொடியாராவார் கள்வர், ஆறலைப்பார், சூறைகொள்வார்.*

### ஒப்புமை

*முற்றும் :*

*"ஆவா என்னு துலகத்தை அலைக்கும் அசுரர் வாழ்நாள்மேல்*
*தீவாய் வாளி மழைபொழிந்த சிலையா திருமா மகள்கேள்வா"*

*(திருவாய். 6. 10:4.)*

*"......அறவரம் பிகவா வண்ணம்*
*தீயன வந்த போது சுடுதியால் தீமை யோரை"*

*"நன்றி கொன்றரு நட்பினை நார்அறுத்*
*தொன்று மெய்ம்மை சிதைத்துரை பொய்த்துளார்க்*
*கொன்று நீக்குதல் குற்றத்தின் நீங்குமால்*
*சென்று மற்றவன் சிந்தையைத் தேர்குவாய்."*

*"நஞ்சம் அன்ன வரைநலிந் தாலது*
*வஞ்சம் அன்று மனுவழக் காதலால்."*

(கம்ப. அரசியல். 34, கிட்கிந்தை. 3, 5.) *(550)*

---

# 56. கொடுங்கோன்மை

**பரிமேலழகர் :** அஃதாவது. அம் முறையினது கோடுதல் தன்மை. ஈண்டும் உவமையின் பெயர் பொருள்மேல் ஆயிற்று. செங்கோன்மைக்கு மாறு ஆகலின், இஃது அதன்பின் வைக்கப்பட்டது.

**மணக்குடவர்:** கொடுங்கோன்மையாவது கொடுங்கோன்மையால் வரும் குற்றம் கூறுதல். அது முறைமை செய்யாமையும், அருள் செய்யாமையும், பிறர் நலியாமல் காவாமையும், முறைகெடச் செய்தலும், குடிகளுக்குத் தண்டனை ஆராயாது செய்தலும், அல்லவை செய்தலும், குடிகளை இரத்தலும் எனப் பல வகைப்படும். இது, கூறிய செங்கோன்மையின் மாறுபட்டு வருதலின், அதன்பின் கூறப்பட்டது.

**பரிதியார்:** கொடுங்கோன்மையாவது கொடிய வசனமும் கொடிய தண்டமும் இரண்டும் தவிர வேணும்.

### 551

**கொலைமேற்கொண் டாரின் கொடிதே அலைமேற்கொண்**
**டல்லவை செய்தொழுகும் வேந்து.** 1

**பரிமேலழகர் :** கொலை மேற்கொண்டாரின் கொடிது - பகைமை பற்றிக் கொல்லுதல் தொழிலைத் தம் மேற்கொண்டு ஒழுகுவாரினும் கொடியன்,

அலை மேற்கொண்டு அல்லவை செய்து ஒழுகும் வேந்து - பொருள் வெ.:கிக் குடிகளை அலைத்தல் தொழிலைத் தன்மேற் கொண்டு முறை அல்லவற்றைச் செய்து ஒழுகும் வேந்தன்.

அவர் செய்வது ஒரு பொழுதைத் துன்பம், இவன் செய்வது எப் பொழுதும் துன்பம் ஆம் என்பது பற்றி, அவரினும் கொடியன் என்றார். பான்மயக்குறழ்ச்சி.[1] வேந்து என்பது உயர்திணைப் பொருட்கண் வந்த அ.:றிணைச் சொல். அலை கொலையினும் கொடிது என்ப தாயிற்று.

### உரை வேறுபாடு

**பரிதியார்:** கொலைத்தொழிற்கு மேலான வேடரினும் கொடியன், குடிகளை மிடைசெய்யும் அரசன் என்று அறிக. எப்படி என்றால், வேடன் பறித்துக்கொண்டு விட்டுவிடுவன்; இவன் தண்டம் கொண்டும் பிழைக்கிற வாக்கிலே போக ஒட்டாமல் காவல் செய்கையால்.

### மேற்கோள் விளக்கம்

'கொலைமேற் கொண்டாரிற் கொடிதே-என்றவிடத்து, மேல் என்ற இடைச்சொல் தான் சேர்ந்த வினையைச் சிறப்பித்துப் பொருட்கு உபகாரப் பட்டு வந்தது' என்பர் **சிவஞான முனிவர்.** *(கம்ப. விருத்தி.)* *(551)*

## 552

**வேலொடு நின்றான் இடுஎன் றதுபோலும்**
**கோலொடு நின்றான் இரவு.** 2

**பரிமேலழகர்:** வேலொடு நின்றான் - ஆறலைக்கும் இடத்துத் தனியே வேல் கொண்டு நின்ற கள்வன், இடு என்றது போலும் - ஆறு செல்வானை நின் கைப்பொருள் தா என்று வேண்டுதலோடு ஒக்கும், கோலொடு நின்றான் இரவு - ஒறுத்தல் தொழிலோடு நின்ற அரசன் குடிகளைப் பொருள் வேண்டுதல்.

வேலொடு நின்றான் என்றதனால் பிறரோடு நில்லாமையும், இரவு என்றதனால் இறைப்பொருள் அன்மையும் பெற்றாம். தாராக்கால் ஒறுப்பல் என்னும் குறிப்பினன் ஆகலின், இரவாற் கோடலும் கொடுங்கோன்மை ஆயிற்று.

இவை இரண்டு பாட்டானும் கொடுங்கோன்மையது குற்றம் கூறப் பட்டது.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** கோலொடு நிற்றல் - செவ்வை செய்வாரைப் போன்று நிற்றல். நிச்சயித்த கடமைக்குமேல் வேண்டுகோளாகக் கொள்ளி னும், அது வழியில் பறிப்பதனோடு ஒக்கும் என்றவாறு.

**காளிங்கர்:** மற்றும் தாம் உலகத்துக்குச் சிலர் வேறு பலி வேண்டுத லும் இடுபலி அடுதலும் முறைமை யாகலான், அதுபோல அரசரும், தாம் பெறு கடன் வேண்டுதலும், இடு கடன் இடுதலும் முறைமை ஆகலான், இவ்வாறு அன்றி ஒருவன் வந்து வலிதின் அடர்த்தலும், பிறர் அஞ்சி வந்து ஒன்று இடுதலும் போலும் ஆறில் ஒன்றாகிய செங்கோல்நெறி அன்றி அயிதம் கொள்ளும் கொடுங்கோன்மையும் என்பது பொருளாயிற்று என அறிக.

**கவிராஜ பண்டிதர்:** கொடாவிட்டால் கொல்லுவன் என்பதாயிற்று.

---

1. வேந்து என்ற ஒன்றன்பாற் சொல்லுக்கு ஏற்பக் கொண்டதின் என்னா மல், பலர்பாற் சொல்லாக மேற்கொண்டாரின் என்று உறழ வைத்தலின் இவ்வாறு கூறினார்.

ஒப்புமை

கோலொடு நின்றான் இரவு:
''குடிபுர விரக்கும் கூரில் ஆண்மைச்
சிறியோன்.'' (புறநா.75: 4-5.) (552)

## 553

நாடொறும் நாடி முறைசெய்யா மன்னவன்
நாடொறும் நாடு கெடும். 3

**பரிமேலழகர்:** நாள்தொறும் நாடி முறை செய்யா மன்னவன் - தன் நாட்டு நிகழும் தீமைகளை நாள்தோறும் ஆராய்ந்து அதற்கு ஒக்க முறைமையைச் செய்யாத அரசன், நாள்தொறும் நாடு கெடும் - நாள்தொறும் நாடு இழக்கும்.

அரசனுக்கு நாடு உறுப்பாகலின், அதன் வினை அவன்மேல் நின்றது. இழத்தல், பயன் எய்தாமை. மன்னவன் நாடு நாள்தோறும் கெடும் என்று உரைப்பாரும் உளர்.

உரை வேறுபாடு

**பரிதியார்:** நாடி - குடிகள் செய்கிற கிரமங்களை விசாரித்து.

ஒப்புமை

முறை செய்யா மன்னவனது நாடு கெடுதல்:
''ஆர்கலி உலகத்து மக்கட் கெல்லாம்
முறையில் அரசன் நாடுநல் கூர்ந்தன்று'' (முதுமொழிக். 9: 1.)

''நாடோறும் மன்னவன் நாட்டில் தவநெறி
நாடோறும் நாடி அவநெறி நாடானேல்
நாடோறும் நாடு கெடுமூட நண்ணுமால்
நாடோறும் செல்வம் நரபதி குன்றுமே.'' (திருமந். 239.)

''பழிபடர் மன்னவன் பரித்த நாட்டினூஉங்
கழிவதென் காரணம் அறிஞ கூறென்றான்.'' (கம்ப. தாடகை. 20.)
(553)

## 554

கூழும் குடியும் ஒருங்கிழக்கும் கோல்கோடிச்
சூழாது செய்யும் அரசு. 4

**பரிமேலழகர்:** சூழாது கோல் கோடி செய்யும் அரசு-மேல் விளைவது எண்ணாது முறைதப்பச் செய்யும் அரசன், கூழும்[1] குடியும் ஒருங்கு இழக்கும்-அச் செயலால் முன் ஈட்டிய பொருளையும் பின் ஈட்டுதற்கு ஏதுவாகிய குடிகளையும் சேர இழக்கும்.

கோட என்பது திரிந்து நின்றது. முன் ஈட்டிய பொருள் இழத்தற்கு ஏது வருகின்ற பாட்டால் கூறுப.

உரை வேறுபாடு

**பரிதியார்:** கூழும் குடியும் ஒருங்கு இழக்கும் - மழையும் மற்றுக் குடியும் இழப்பன்.

1. கூழ் - பொருள்; குறள், 381.

காளிங்கர்: கூழும் குடியும் ஒருங்கு இழக்கும் - இவ்வாறு அன்றிப் பின்னும் தனது நாட்டுள் வாழும் குடிகளையும் அக் குடிகளால் உளவாகும் உணவுப் பொருள்களையும் உடனே இழப்பன்.

ஒப்புமை

முற்றும்:

"கோல்நிலை திரிந்திடின் கோள்நிலை திரியும்
கோள்நிலை திரிந்திடின் மாரிவறம் கூரும்
மாரிவறம் கூரின் மன்னுயிர் இல்லை" (மணி. 7 : 8-10.)

"கோள்நிலை திரிந்து நாழி குறைபடப் பகல்கள் மிஞ்சி
நீள்நில மாரி இன்றி விளைவஃகிப் பசியும் நீடிப்
பூண்முலை மகளிர் பொற்பின் கற்பழிந் தறங்கள் மாறி
ஆணையிவ் வுலகு கேடாம் அரசுகோல் கோடின் என்றான்."
(சீவக. 255.) (554)

555

அல்லற்பட் டாற்ற தழுதகண் ணீர்அன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை. 5

பரிமேலழகர்: அல்லல் பட்டு ஆற்றாது அழுத கண்ணீர் அன்றே - அரசன் முறை செய்யாமையால் குடிகள் துன்பமுற்று அதனைப் பொறுக்க மாட்டாது அழுத கண்ணீரன்றே, செல்வத்தை தேய்க்கும் படை - அவன் செல்வத்தைக் குறைக்குங் கருவி.

அழுத கண்ணீர்-அழுதலான் வந்த கண்ணீர். செல்வமாகிய மரத்தை என்னுமையின், இஃது ஏகதேச உருவகம். அல்லற்படுத்திய பாவத்தது தொழில் அதற்கு ஏதுவாகிய கண்ணீர்மேல் நின்றது. அக் கண்ணீரிற் கொடிது பிறிது இன்மையின், செல்வம் கடிதில் தேயும் என்பது கருத்து.

ஒப்புமை

அழுத கண்ணீர் தீங்கை உண்டாக்குதல்:

"தோற்றத்தால் பொல்லார் துணையிலார் நல்கூர்ந்தார்
மாற்றத்தால் சென்றார் எனவலியர் ஆட்டியக்கால்
ஆற்றாது அவரழுத கண்ணீர் அவையவர்க்குக்
கூற்றமாய் வீழ்ந்து விடும்." (பழமொழி, 166.)

"கண்ணில்நீர்
கொல்ல உயிர்கொடுத்த கோவேந்தன் வாழியரோ."
(சிலப். 29: 13.) (555)

556

மன்னர்க்கு மன்னுதல் செங்கோன்மை அஃதின்றேல்
மன்னாவாம் மன்னர்க் கொளி. 6

பரிமேலழகர் : மன்னர்க்கு மன்னுதல் செங்கோன்மை - அரசர்க்குப் புகழ்கள்தாம் நிலைபெறுதல் செங்கோன்மையான் ஆம்; அஃது இன்றேல் மன்னர்க்கு ஒளி மன்னா ஆம் - அச் செங்கோன்மை இல்லையாயின் அவர்க்கு அப் புகழ்கள்தாம் உளஆகா.

விகாரத்தால் தொக்க மூன்றுவது விரித்து ஆக்கம் வருவித்து உரைக்கப்பட்டது.[1] மன்னுதற்கு ஏது புகழ் ஆதல், "இந்நிலத்து, மன்னுதல் வேண்டின் இசைநடுக"[2] என்பதனுனும் அறிக. மன்னுமை - ஒரு காலும் நிலையாமை. பழிக்கப்பட்டால் ஒளி மன்னுவாம். ஆகவே, தாமும் மன்னுர் என்பதாயிற்று. வென்றி, கொடை முதலிய ஏதுக்களால் புகழ் பகுதிப்படுதலின், பன்மையால் கூறினர். அவையெல்லாம் செங்கோன்மைஇல்வழி இலவாம் என்பதாம்.

இவை நான்கு பாட்டானும் கொடுங்கோலன் ஆயினுன் எய்தும் குற்றம் கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** முறை செய்யாமையால் அவன் நிலை பெறுதல் அருமை எனக் குற்றம் கூறுவார், முற்படப் புகழ் இல்லையாம் என்ருர்.

**பரிதியார்:** அரசற்குச் செங்கோல் செயம் கொடுக்கும்; மன்னவர் புகழ் பெறுவர். கொடுங்கோலாகில் செயமும் இல்லை; புகழும் இல்லை.

**காளிங்கர்:** ஒளி என்பது குலமும் குணனும் கல்வியும் உணர்வும் மரபும் பிறவும் ஆகிய ஒளிகளான பெறுபொருள்கள் என அறிக. *(556)*

## 557

**துளிஇன்மை ஞாலத்திற் கெற்றற்றே வேந்தன்**
**அளிஇன்மை வாழும் உயிர்க்கு. 7**

**பரிமேலழகர்:** துளி இன்மை ஞாலத்திற்கு எற்று - மழை இல்லாமை வையத்து வாழும் உயிர்கட்கு எவ்வகைத் துன்பம் பயக்கும்? அற்றே வேந்தன் அளி இன்மை வாழும் உயிர்க்கு - அவ்வகைத் துன்பம் பயக்கும், அரசன் தன் அளி இல்லாமை அவன் நாட்டு வாழும் குடிகட்கு.

சிறப்புப் பற்றித் துளி என்பது மழைமேல் நின்றது. உயிர் என்பது குடிகள் மேல் நின்றது. மேல் வானேக்கி வாழும் என்றதனை[3] எதிர்மறை முகத்தால் கூறியவாறு.

### உரை வேறுபாடு

**கவிராஜ பண்டிதர்:** மழை இல்லாத போழ்து பசியாலும் வெயிலினுலும் வருந்துகிறுப்போலே, அரசன் நீதியாய் நடத்தாவிட்டால் குடிகளுக்கு எல்லாத் துக்கமும் உண்டாம்.

### ஒப்புமை

**மழை இன்மையால் உயிர்கள் துன்புறுதல்:**

"வானம் துளிமாறு பொழுதினில் உலகம்"

"பெயின்நந்தி வறப்பிற்சாம் புலத்திற்குப் பெயல்போல்"

(கலி. *25: 28, 78:19.*)

"வறன்உழக்கும் பைங்கூழ்க்கு வான்சோர்வு இனிதே."

(இனியவை. *16.*) (557)

## 558

**இன்மையின் இன்னு துடைமை முறைசெய்யா**
**மன்னவன் கோல்கீழ்ப் படின். 8**

1. 'செங்கோன்மையான் ஆம்' என்று உரை கூறியதை எண்ணியது.
2. நான்மணிக். 15.
3. குறள், 542.

*பரிமேலழகர்;* முறை செய்யா மன்னவன் கோல் கீழ் படின் - முறை செய்யாத அரசனது கொடுங்கோலின்கீழ் வாழின், இன்மையின் உடைமை இன்னாது - யாவர்க்கும் பொருளினது இன்மையினும் உடைமை இன்னாது.

தனக்குரிய பொருளோடு அமையாது மேலும் வெஃகுவோனது நாட்டுக் கைந்நோவ யாப்புண்டல்[1] முதலிய வருவது பொருள் உடையார்க்கே ஆகலின், அவ்வுடைமை இன்மையினும் இன்னாது ஆயிற்று.

இவை இரண்டு பாட்டானும் அவன் நாட்டு வாழ்வார்க்கு வரும் குற்றம் கூறப்பட்டது.

**உரை வேறுபாடு**

*மணக்குடவர்:* இது பொருளுடையாரும் துன்பம் உறுவர் என்றது. *(558)*

### 559

முறைகோடி மன்னவன் செய்யின் உறைகோடி
ஒல்லாது வானம் பெயல். 9

*பரிமேலழகர்:* மன்னவன் முறை கோடி செய்யின் - மன்னவன் தான் செய்யும் பொருளை முறைதப்பச் செய்யுமாயின், உறை கோடி வானம் பெயல் ஒல்லாது - அவன் நாட்டுப் பருவமழை இன்றும் வகை மேகம் பொழிதலைச் செய்யாது.

இரண்டிடத்தும்கோட என்பன திரிந்துநின்றன. உறை கோடுதலாவது, பெய்யும் காலத்துப் பெய்யாமை. அதற்கு ஏது வருகின்ற பாட்டால் கூறுப.

**ஒப்புமை**

**கொடுங்கோல் மன்னன் நாட்டில் மழை இன்மை:**

"கொண்மூ
மழைகால் ஊன்று வளவயல் விளையா
கொடுங்கோல் வேந்தன் காக்கும் நாடே" (ஆசிரியமாலை.)
"கொள்பொருள் வெஃகிக் குடியலைக்கும் வேந்தனும்...
வல்லே மழை அருக்கும் கோள்." (திரி. 50.) (559)

### 560

ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூல்மறப்பர்
காவலன் காவான் எனின். 10

*பரிமேலழகர்:* காவலன் காவான் எனின் - காத்தற்குரிய அரசன் உயிர்களைக் காவான் ஆயின், ஆ பயன் குன்றும் - அறன் இல்லாத அவன் நாட்டுப் பசுக்களும் பால் குன்றும்; அறு தொழிலோர் நூல் மறப்பர் - அந்தணரும் நூல்களை மறந்துவிடுவர்.

ஆ பயன் - ஆவால் கொள்ளும் பயன். அறுதொழிலாவன ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என இவை. பசுக்கள் பால் குன்றியவழி அவி இன்மையானும், அது கொடுத்தற்கு உரியார் மந்திரம் கற்பம்[2] என்பன ஓதாமையானும், வேள்வி நடவாதாம்; ஆகவே வானம் பெயல் ஒல்லாது என்பதாயிற்று.

இவை இரண்டு பாட்டானும் அவன் நாட்டின்கண் நிகழும் குற்றம் கூறப்பட்டது. *(560)*

---

1. யாப்புண்டல் - கையைக் கட்டப்பெறுதல்.

2. மந்திரம் என்றது வேதத்தை. கற்பம்: வேதாங்கங்கள் ஆறினுள் ஒருவகையாகிய கல்ப சூத்திரங்கள்; இவை வேத மந்திரங்களுள் இன்ன மந்திரம் இன்ன கருமத்தில் வழங்குவதற்குரியது என்பதைக் கூறும்.

# 57. வெருவந்த செய்யாமை

**பரிமேலழகர்:** அ∴தாவது, குடிகள் அஞ்சுவதும் பகுதி[1] அஞ்சுவதும் தான் அஞ்சுவதும் ஆய தொழில்களைச் செய்யாமை. அவை செய்தல் கொடுங்கோன்மைப்பாற் படுதலின், இ∴து அதன்பின் வைக்கப்பட்டது.

**பரிதியார்:** வெருவந்த செய்யாமையாவது குடியானவன் வெருவுவது செய்யும் தொழில் செய்யாமை.

### 561

**தக்காங்கு நாடித் தலைச்செல்லா வண்ணத்தால்**
**ஒத்தாங் கொறுப்பது வேந்து.** 1

**பரிமேலழகர்:** தக்காங்கு நாடி - ஒருவன் தன்னின் மெலியார்மேல் சென்றவழி அதனை நடுவாக நின்று ஆராய்ந்து, தலைச்செல்லா வண்ணத்தால் ஒத்தாங்கு ஒறுப்பது வேந்து - பின்னும் அது செய்யாமற்பொருட்டு அவனை அக் குற்றத்திற்கு ஒப்ப ஒறுப்பானே அரசன் ஆவான்.

தக்காங்கு, ஒத்தாங்கு என்பன ஒரு சொல். தகுதி யென்பது நடுவு நிலைமையாதல், "தகுதி எனவொன்று நன்றே"[2] என்பதனானும் அறிக. இதனானே தக்காங்கு நாடாமையும், பிறிது ஓர் காரணம் பற்றி மிக ஒறுத்தலும் குடிகள் அஞ்சும் வினை ஆதல் பெற்றாம்.

**உரை வேறுபாடு**

**மணக்குடவர்:** குற்றத்திற்குத் தக ஆராய்ந்து, ஒருவர்மேற் செல்லாமை காரணமாக உலகத்துப் பொருந்துமாறு ஒறுப்பவன் அரசன்.

**பரிப்பெருமாள்:** இது செங்கோன்மை யன்றோ எனின், ஒக்கும். முறை செய்யுங்கால் அரசன் வெகுட்சி உடையனாய் உலகத்தார் அஞ்சுமாறு செய்யாது, இம் முறை செய்யாக்கால் ஒருவர் ஒருவரை அடர்ப்பர் என்று உலகத்தார் தாமே இசையச் செய்யவேண்டும் என்றற்கு வேறு படுத்துக் கூறப்பட்டது. இவ்வாறு செய்தல் வெருவந்த செய்யாமை என்றது.

**பரிதியார்:** குடிக்குத் தக்க கடமை நீதியாலே கொண்டு தனக்குத் தலைசெல்லாத மாற்றுரை வெல்பவன் அரசன்.

**காளிங்கர்:** எனவே அது செய்யாவிடத்து எல்லாம் நல்லளி செய்தலே அரசர்க்கு அழகு. *(561)*

### 562

**கடிதோச்சி மெல்ல எறிக நெடிதாக்கம்**
**நீங்காமை வேண்டு பவர்.** 2

**பரிமேலழகர்:** கடிது ஓச்சி - அவ்வொத்தாங்கு ஒறுத்தல் தொடங்குங்கால் அளவு இறப்பச் செய்வார்போல் தொடங்கி, மெல்ல எறிக - செய்யுங்கால் அளவு இறவாமல் செய்க, ஆக்கம் நெடிது நீங்காமை வேண்டுபவர் - ஆக்கம் தங்கண் நெடுங்காலம் நிற்றலை வேண்டுவார்.

1. பகுதி - அமைச்சர் முதலியோர்.
2. குறள், 111.

கடிது ஓச்சல் குற்றம் செய்வார் அதனை அஞ்சுதற் பொருட்டும், மெல்ல எறிதல் யாவரும் வெருவாமைப் பொருட்டும் ஆம். தொடங்கின அள வில் குறைதல்பற்றி மென்மை கூறப்பட்டது. ஓச்சுதல், எறிதல் என்பன இரண்டும் உவமைபற்றி வந்தன.

இவை இரண்டு பாட்டானும் குடிகள் வெருவந்த செய்யாமையது இயல்பு கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** இது குற்றத்திற்குத் தக்க தண்டத்தைக் குறையச் செய்ய வேண்டும் என்றது. *(562)*

## 563

**வெருவந்த செய்தொழுகும் வெங்கோலன் ஆயின்**
**ஒருவந்தம் ஒல்லைக் கெடும்.** 3

**பரிமேலழகர்:** வெருவந்த செய்து ஒழுகும் வெம் கோலன் ஆயின் - குடிகள் வெருவிய செயல்களைச் செய்து நடக்கும் வெங்கோலன் ஆம் ஆயின், ஒருவந்தம் ஒல்லை கெடும் - அரசன் ஒருதலையாகக் கடிதில் கெடும்.

வெங்கோலன் என்பது ஈண்டு வாளா பெயராய் நின்றது.[1] ஒருவந்தம், ஒருதலை, ஏகாந்தம் என்பன ஒரு பொருட்கிளவி. அச் செயல்களும் கேடுகளும் முன்னர்க் கூறப்படும்.

### உரை வேறுபாடு

**பரிப்பெருமாள் :** இது நாடும் நகரமும் பொறுப்பினும் தெய்வத் தினால் கெடுவன் என்றது.

**காளிங்கர்:** எனவே ஒருவரைத் தண்டிக்கும் காலத்தும் இதற்குத் தகுதி என்று முன்னோர் சொன்ன முறைநூல் வழியால், மற்று அவன் மனம் பொருந்தக் காட்டிய வழக்கு உடையான் ஆதலே மன்னர்க்கு இயல்பு. *(563)*

## 564

**இறைகடியன் என்றுரைக்கும் இன்னாச்சொல் வேந்தன்**
**உறைகடுகி ஒல்லைக் கெடும்.** 4

**பரிமேலழகர் :** இறை கடியன் என்று உரைக்கும் இன்னா சொல் வேந்தன் - குடிகளான் நம் இறைவன் கடியன் என்று சொல்லப்படும் இன்னாத சொல்லையுடைய வேந்தன், உறை கடுகி ஒல்லை கெடும் - ஆயுளும் குறைந்து செல்வமும் கடிதின் இழக்கும்.

நெஞ்சு நொந்து சொல்லுதலான், இன்னாமை பயப்பதாய சொல்லை இன்னாச்சொல் என்றார். உறை என்பது முதனிலைத் தொழிற் பெயர்; அஃது ஈண்டு ஆகுபெயராய் உறைதலைச் செய்யும் நாள்மேல் நின்றது. அது குறைத லாவது அச் சொல் இல்லாதார்க்கு உள்ளதில் சுருங்குதல்.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** உறை கடுகி - உறையும் இடம் வெகுளப்பட்டு.

---

1. வெருவந்த செய்தொழுகுதலாலே வெங்கோன்மை பெறப்படுதலின் இவ்வாறு கூறினார்.

இது, நாடும் உறையும் இடமும் பொறுப்பினும் தெய்வத்தினுற் கெடுவன் என்றது.

**பரிதியார்:** குடிக்கடமையை வாங்குதற்கு வலியன், குடியைக் காக்க எளியன் என்னும் அரசன் சடுதியிலே நகர் இழப்பான்.

**காளிங்கர்:** உறை கடுகி ஒல்லை கெடும் - நாடும் ஊரும் விரையக் கெட்டுவிடும்.

உறை என்பது இடம். இறை என்பது கடமை. *(564)*

## 565

**அரும்செவ்வி இன்னு முகத்தான் பெரும்செல்வம்**
**பேஎய்கண் டன்ன துடைத்து.** 5

**பரிமேலழகர்:** *அரும் செவ்வி இன்னு முகத்தான் பெரும் செல்வம் - தன்னைக் காண வேண்டுவார்க்குக் காலம் அரியனுய்க் கண்டால் இன்னுத முகத்தினை உடையானது பெரிய செல்வம், பேஎய் கண்டன்னது உடைத்து - பேயால் காணப்பட்டால் போல்வது ஒரு குற்றம் உடைத்து.*

எனவே, இவை இரண்டும் வெருவந்த செய்தல் ஆயின. இவை செய்வானைச் சார்வார் இன்மையின், அவனது செல்வம் தனக்கும் பிறர்க்கும் பயன் படாது என்பது பற்றிப் பேஎய் கண்டன்ன துடைத்து என்றார், காணுதல் - தன்வயம் ஆக்குதல்.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** *பேஎய் கண்டன்னது உடைத்து - பேயைக் கண்டது ஒக்க அச்சம் தருதல் உடைத்து.*

**காளிங்கர்:** பேயினது நோக்கம் தாக்கிய உருவானது எத்தன்மை உடைத்து, மற்று அத்தன்மைத்து ஆம்; எனவே, பேய் தாக்கிய உருவு பெண்ணுருவு ஆயினும் ஆணுருவு ஆயினும் உருவு ஒன்று இருந்து உள் ஓய்ந்துவிடும். அதுபோல் இங்கும் செல்வம் உள்ளதுபோன்று இருந்து உள் உடைந்துவிடும். *(565)*

## 566

**கடும்சொல்லன் கண்இலன் ஆயின் நெடும்செல்வம்**
**நீடின்றி ஆங்கே கெடும்.** 6

**பரிமேலழகர்:** *கடும் சொல்லன் கண் இலன் ஆயின்-அரசன் கடிய சொல்லையும் உடையனுய்க் கண்ணோட்டமும் இலன் ஆயின், நெடும் செல்வம் நீடு இன்றி ஆங்கே கெடும் - அவனது பெரிய செல்வம் நீடுதல் இன்றி அப்பொழுதே கெடும்.*

"வேட்டம் கடுஞ்சொல் மிகுதண்டம் சூதுபொருள்-ஈட்டம்கள் காமமோ டேழு"[1] எனப்பட்ட விதனங்களுள் கடுஞ் சொல்லையும் மிகுதண்டத்தையும் இவர் இவ் வெருவந்த செய்தலுள் அடக்கினர். கண் : ஆகுபெயர். இவை செய்தபொழுதே கெடும் சிறுமைத் தன்றாயினும் என்பார், நெடுஞ்செல்வம் என்றார். நீடுதல் - நீட்டித்தல்.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** *நெடும் செல்வம் - தொன்றுதொட்டு வருகின்ற செல்வம்.*

---

1. பு. வெ. பாடாண், 37, உரை, மேற்.

**கவிராஜ பண்டிதர்:** நெடும் செல்வமாவது அநேக நாள் தொட்டு வர்த்தித்து வருகிற செல்வம். (566)

## 567

**கடுமொழியும் கைஇகந்த தண்டமும் வேந்தன்**
**அடுமுரண் தேய்க்கும் அரம்.** 7

**பரிமேலழகர்:** கடுமொழியும் கை இகந்த தண்டமும் - கடிய சொல்லும் குற்றத்தின் மிக்க தண்டமும், வேந்தன் அடு முரண் தேய்க்கும் அரம் - அரசனது பகை வெல்லுதற்கு ஏற்ற மாறுபாடாகிய இரும்பினைத் தேய்க்கும் அரமாம்.

கடுமொழியால் தானையும் கை இகந்த தண்டத்தால் தேசமும் கெட்டு முரண் சுருங்கி வருதலின் அவற்றை அரமாக்கி, திண்ணிதாயினும் தேயும் என்றற்கு அடுமுரணை இரும்பு ஆக்கினர்; ஏகதேச உருவகம். அரம் என்பதனைத் தனித்தனி கூட்டுக. இவை ஐந்து பாட்டானும் செவ்வி இன்மை, இன்னா முகம் உடைமை, கண்ணோட்டம் இன்மை, கடுஞ்சொல் சொல்லல், கையிகந்த தண்டம் என்று இவைகள் குடிகள் அஞ்சும் வினை என்பதூஉம், இவை செய்தான் ஆயுளும் அடுமுரணும் செல்வமும் இழக்கும் என்பதூஉம் கூறப்பட்டன.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** அடு முரண் - பகைவரை வெல்லும் வலி.

**காளிங்கர்:** வேந்தன் அடு முரண் தேய்க்கும் அரம் - மன்னவன் மாற்றாரைக் கொல்லும் வலியாகிய பொருள்வலி, படைவலி, துணைவலி, மற்று அரண்வலி, தன் வலி முதலிய அனைத்து வலியையும் பொடிபடத் தேய்த்துவிடும்.

கை என்பது ஒழுக்கம்; ஆவது நீதி.

### ஒப்புமை

**கை இகந்த தண்டம் வேந்தனுக்கு ஆகாமை:**

"சினனே காமம் கழிகண் ணோட்டம்
அச்சம் பொய்ச்சொல் அன்புமிக வுடைமை
தெறல்கடு மையொடு பிறவும்இவ் வுலகத்து
அறந்தெரி திகிரிக்கு வழியடை ஆகும்
தீது." (பதிற். 22 : 1-5.) (567)

## 568

**இனத்தாற்றி எண்ணாத வேந்தன் சினத்தாற்றிச்**
**சீறின் சிறுகும் திரு.** 8

**பரிமேலழகர்:** இனத்து ஆற்றி எண்ணாத வேந்தன் - காரியத்தைப் பற்றி வந்த எண்ணத்தை அமைச்சர்மேல் வைத்து அவரோடு தானும் எண்ணிச் செய்யாத அரசன், சினத்து ஆற்றி சீறின் - அப் பிழைப்பால் தன் காரியம் தப்பியவழித் தன்னைச் சினமாகிய குற்றத்தின்கண்ணே செலுத்தி அவரை வெகுளுமாயின், திரு சிறுகும் - அவன் செல்வம் நாள்தோறும் சுருங்கும்.

அரசர் பாரம் பொறுத்து உய்த்தல் ஒப்புமையான் அமைச்சரை இனம் என்றும், தான் பின் பிழைப்பாதல் அறிந்து அமையாது அதனை அவர்மேல் ஏற்றி வெகுளின் அவர் வெரீஇ நீங்குவர்; நீங்கவே அப்பிழைப்புத்

தீருமாறும் அப் பாரம் இனிது உய்க்குமாறும் இலனும் என்பது நோக்கித் திருச்சிறுகும் என்றும் கூறினர்.

இதனல் பகுதி அஞ்சும் வினையும் அது செய்தான் எய்தும் குற்றமும் கூறப்பட்டன.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** பிறர் செய்த குற்றத்தைத் தனக்கு இனம் ஆனாரோடே அமைந்து ஆராயாத அரசன் கடிய சொல்லனுமாய்க் கண்ணோட்டமும் இலன் ஆயின், அவனது செல்வம் நாடோறும் சுருங்கும்.

ஆராயாத அரசன் சின்னெறியில் தீரானாயின், அவன் செல்வம் குறையும் என்றவாறு. இனம் - மந்திரி, புரோகிதர்.

**பரிதியார்:** தன்னைச் சேர்ந்த துன்மந்திரிகளையும் மற்றுமுள்ள பேரையும் வாழவைத்துக் குடிகளை மிடைபண்ணும் அரசன் சினம் மேற்கொண்டால் அச் செல்வமும் சிறுகும். (568)

## 569

செருவந்த போழ்தில் சிறைசெய்யா வேந்தன்
வெருவந்து வெய்து கெடும். 9

**பரிமேலழகர்:** சிறை செய்யா வேந்தன் - செரு வருதற்கு முன்னே தனக்குப் புகல் ஆவதோர் அரண் செய்து கொள்ளாத அரசன், செரு வந்த போழ்தில் வெருவந்து வெய்து கெடும் - அது வந்த காலத்து ஏமம் இன்மையான் வெருவிக் கடிதில் கெடும்.

பகையை வெருவிச் சேர்ந்தார் நீங்குதலின் தமியனாய்த் தானும் வெருவி அப் பகைவயத்தன் ஆம் என்பதாம்.

இதனல் தான் அஞ்சும் வினையும் அது செய்தான் எய்தும் பயனும் கூறப்பட்டன.

### உரை வேறுபாடு

**பரிதியார்:** குடிக் கடமையை அன்பினாலே வாங்கி மாற்றார் வந்தால் அக் குடியைக் காட்டிக் கொடுக்கும் மன்னவன் சடுதியிலே கெடும்.

**காளிங்கர்:** முன்னமே மதிற்சிறை முதலிய வன்சிறை நான்கும் வில் அரணும் வேல் அரணும் தோல் அரணும் துர்க்க அரணும் உளவாகிய வியூகச் சிறையும் உடையரேனும், மற்று அச் சிறை நீங்கிச் செருத் தொழில் புரியச் சென்ற தேயத்துப் புறத்திறை மன்னரால் போரழிவு வந்த காலம் நோக்கிய இடத்து இயையும் சிறை பலவும் செய்து கொள்ளாத மன்னனானவன் முனையெதிர் படை போந்து முற்றிய காலத்து வெருவுதல் கடிதின் கெட்டுவிடும். (569)

## 570

கல்லார்ப் பிணிக்கும் கடுங்கோல் அதுஅல்ல
தில்லை நிலக்குப் பொறை. 10

**பரிமேலழகர்:** கடும் கோல் கல்லார் பிணிக்கும் - கடுங்கோலனாய அரசன் நீதிநூல் முதலிய கல்லாதாரைத் தனக்குப் பகுதியாகக் கூட்டாநிற்கும்; அது அல்லது நிலக்கு பொறை இல்லை - அக் கூட்டம் அல்லது நிலத்திற்கு மிகையாய பாரம் பிறிது இல்லை.

கடுங்கோல் என்பது ஈண்டு மிக்க தண்டத்தின்மேற்று அன்றி, அதனைச் செய்வான் மேற்று ஆயிற்று. அவன் அது செய்தற்கு இயைவாரை அல்லது கூட்டாமையின் கல்லார்ப் பிணிக்கும் என்றும், ஏனையவற்றை எல்லாம் பொறுக்கின்றது இயல்பாகலின் நிலத்திற்குப் பொறை அதுவல்லது இல்லை என்றும் கூறினர். நிலக்கு என்பது செய்யுள் விகாரம்.[1]

இதனான் வெருவந்த செய்தலின் குற்றம் கூறப்பட்டது.

**உரை வேறுபாடு**

**பரிப்பெருமாள்:** அறிவில்லாதார் அமாத்தியர் ஆனால் அவரானே உலகம் அச்சம் உறும். அதற்காகக் கடுங்கோல் அரசன் அவரைக் கூட்ட அவனை நிலம் பொறுது என்றது.

**பரிதியார்:** பூமிக்கு எட்டு மலையும் ஏழு கடலும் பாரமல்ல; கொடுங்கோல் மன்னவன் பாரம். (570)

---

# 58. கண்ணோட்டம்

**பரிமேலழகர்:** அஃதாவது, தன்னொடு பயின்றாரைக் கண்டால் அவர் கூறியன மறுக்க மாட்டாமை. இஃது அவர்மேல் கண் சென்றவழி நிகழ்வது ஆகலின், அப்பெயர்த்து ஆயிற்று. மேல் வெருவந்த செய்யாமையுள் கூறிய அதனையே சிறப்புப் பற்றி விரித்துக் கூறுகின்றமையின் இஃது அதன்பின் வைக்கப்பட்டது.

**மணக்குடவர்:** கண்ணோட்டமாவது கண்ணால் காணப்பட்டாரை அருள் செய்தல். குற்றம் செய்தாரை ஒறுக்குங்கால் உலகத்தார் இசைய வேண்டும் என்றார்; ஆயினும் அவ்வாறு செய்தாரைத் தமது கண்முன்னாகக் கண்டால் அதனைப் பொறுத்தலும் வேண்டும் என்று அதன்பின் இது கூறப்பட்டது. இது பெரும்பான்மையும் முன்பு கண்டு பழகினார்மேற்று.

### 571

**கண்ணோட்டம் என்னும் கழிபெரும் காரிகை**
**உண்மையான் உண்டிவ் வுலகு.** 1

**பரிமேலழகர்:** கண்ணோட்டம் என்னும் கழி பெரும் காரிகை உண்மையான் - கண்ணோட்டம் என்று சொல்லப்படுகின்ற சிறப்புடைய அழகு அரசர் மாட்டு உண்டு ஆகலான், இவ்வுலகு உண்டு-இவ்வுலகம் உண்டாகாநின்றது.

கழிபெரும் காரிகை என்புழி, ஒரு பொருட் பன்மொழி[2] இவ்வுயிர் அழகது சிறப்பு உணர நின்றது. இவ்வழகு அதற்கு உறுப்பாகலின், உண்மையான் என நிலைபேறும் கூறினர். இன்மை வெருவந்த செய்தல் ஆகலின், அவர் நாட்டு வாழ்வார் புலியை அடைந்த புல்வாய் இனம் போன்று ஏமம் சாராமைபற்றி, இவ்வுலகு உண்டு என்றார்.

**உரை வேறுபாடு**

**மணக்குடவர்:** உலகு - உலக நடை.

---

1. நிலத்திற்கு என வரவேண்டுவது நிலக்கு என வந்தது.
2. கழி, பெரும் என்னும் இரண்டையும் சுட்டியபடி.

**பரிப்பெருமாள்:** செங்கோன்மை கூறுகின்றவழிக் கண்ணோடாது முறை செய்க என்று கூறி, ஈண்டுக் கண்ணோடுக என்று கூறுதல் மாறு படக் கூறுதலாம் பிற எனின், அற்றன்று; அது முறை செய்யும் திறன் கூறிற்று; இஃது உலகத்தார் பலர் ஆதலால் குற்றம் செய்வார் மிகுந்திருப்பர், அதற்கெல்லாம் தண்டம் செய்யின் உலகம் என்பது ஒன்று இல்லையாம்; அதற்காகப் பொறுக்க வேண்டுவன பொறுக்கவேண்டும் என்று கூறிற்று.

**பரிதியார்:** காரிகை - திருமாது.

**காளிங்கர்:** காரிகை - நன்மை. (571)

## 572

**கண்ணோட்டத் துள்ள துலகியல் அஃதிலார்**
**உண்மை நிலக்குப் பொறை.** 2

**பரிமேலழகர்:** உலகியல் கண்ணோட்டத்து உள்ளது - உலகநடை கண்ணோட்டத்தின்கண்ணே நிகழ்வது; அஃது இலார் உண்மை நிலக்கு பொறை - ஆகலான், அக் கண்ணோட்டம் இல்லாதார் உளர் ஆதல் இந் நிலத்திற்குப் பாரம் ஆதற்கே; பிறிதொன்றற்கு அன்று.

உலக நடையாவது ஒப்புரவு செய்தல், புறந்தருதல், பிழைத்தன பொறுத்தல் என்று இவை முதலாயின. அவை நிகழாமையால் தமக்கும் பிறர்க்கும் பயன்படார் என்பதுபற்றி, 'நிலக்குப் பொறை' என்றார். ஆதற்கு என்பது சொல்லெச்சம்.

இவை இரண்டு பாட்டானும் கண்ணோட்டத்தது சிறப்புக் கூறப் பட்டது.

### உரை வேறுபாடு

**பரிதியார்:** கிருபைக்கண் ஆகிய மன்னவன் பூமிபாரம் சுமந்தவன்; கொடுங்கோல் மன்னவன் பூமிக்குப் பாரம். (572)

## 573

**பண்என்னும் பாடற் கியைபின்றேல் கண்என்னும்**
**கண்ணோட்டம் இல்லாத கண்.** 3

**பரிமேலழகர்:** பண் என் ஆம் பாடற்கு இயைபு இன்றேல் - பண் என்ன பயத்ததாம் பாடல் தொழிலோடு பொருத்தம் இன்றாயின்? கண் என் ஆம் கண்ணோட்டம் இல்லாத கண் - அதுபோலக் கண் என்ன பயத்ததாம் கண்ணோட்டம் இல்லாத விடத்து?

பண் கண் என்பன சாதிப் பெயர். பண்களாவன பாலை யாழ் முதலிய நூற்று மூன்று. பாடல் தொழில்களாவன; யாழின்கண் வார்தல் முதலிய எட்டும்,[1] பண்ணல் முதலிய எட்டும்[2], மிடற்றின்கண் எடுத்தல், படுத்தல், நலிதல், கம்பிதம், குடிலம் என்னும் ஐந்தும்[3], பெருவண்ணம், இடைவண்ணம்,

1. வார்தல், வடித்தல், உந்தல், உறழ்தல், உருட்டல், தெருட்டல், எள்ளல், பட்டடை என்பன; இவற்றை இசைக் கரணம் என்பர்; "எட்டு வகையின் இசைக்கரணத்து" (சிலப். 7: 15.)

2. பண்ணல், பரிவட்டணை, ஆராய்தல், தைவரல், செலவு, விளையாட்டு, கையூழ், குறும்போக்கு என்பன; இவற்றைக் குறிக்கோள் என்பர் (சிலப். 7:5-7.)

3. இவை, கிரியைகள் எனப்படும் எட்டில் முதலில் உள்ள ஐந்தாகக் காணப் படுகின்றன; சிலப். 3:26, உரை பார்க்க.

வனப்புவண்ணம் முதலிய வண்ணங்கள் எழுபத்தாறும் ஆம்.[1] இவற்றோடு இயையாத வழிப் பண்ணால் பயன் இல்லாதவாறுபோலக் கண்ணோட்டத்து இயையாதவழிக் கண்ணால் பயன் இல்லை என்பதாம். கண் சென்றவழி நிகழ்தல்பற்றி அதனை இடமாக்கினார். இறுதிக்கண் கண் என்பதனை, ''கண்ணகன் ஞாலம்''[2] என்புழிப் போலக் கொள்க.

### உரை வேறுபாடு

*பரிப்பெருமாள்:* பாடலாவது பாடுதல் தொழில். அஃதாவது மந்தம், உச்சம், சமம், குடிலம் முதலாயின. அதனோடு பொருத்தம் இன்மையாவது, எடுத்துக்கொண்ட பண், இவ்விடங்களில் ஒவ்வாது நின்று கேட்டார்க்கு இன்பம் பயவாமை.

*காளிங்கர்:* இலக்கண முறையான் இசை அறியாது மயக்க மாந்தர் தமது இயற்கைச் செவியினால் கேட்டு மற்று இது மிகவும் இனியது ஓர் பண் என்றார் ஆயினும், அதனை யாம் பண் என்று சொல்லோம்; என்னையோ எனின் பாடல் தூக்கு ஆகிய இசைத் தொடர்பின்கண் தான் வந்து மேவி நின்று அவ்விசை நூல் யாப்பிற்கு இனிது இயைபு இன்றி நிற்குமாயின். மற்று அதுபோல ஈண்டு நுண்ணுணர்வு இல்லோர் கண் என்றார் ஆயினும், அதனைக் கண் என்று சொல்லோம், கண்ணோட்டம் இல்லாத கண்ணினை.

*கவிராஜ பண்டிதர்:* இராகம் பாடுகிறவன் பாடுகிறதினுடைய லட்சணங்களை அறியாவிட்டால், அந்த இராகத்தால் என்ன பலன் உண்டாம்?
(573)

## 574

**உளபோல் முகத்தெவன் செய்யும் அளவினால்**
**கண்ணோட்டம் இல்லாத கண்.** 4

*பரிமேலழகர்:* முகத்து உளபோல் எவன் செய்யும் - கண்டார்க்கு முகத்தின்கண் உளபோல் தோன்றல் அல்லது வேறு என்ன பயனைச் செய்யும், அளவினால் கண்ணோட்டம் இல்லாத கண் - அளவு இறவாத கண்ணோடுதலை உடைய அல்லாத கண்கள்?

தோன்றல் அல்லது என்னும் சொற்கள் அவாய்நிலையான் வந்தன. கழி கண்ணோட்டத்தின் நீக்குதற்கு அளவினான் என்றார்.[3] ஒரு பயனையும் செய்யா என்பது குறிப்பெச்சம்.

### உரை வேறுபாடு

*மணக்குடவர்:* அளவினால் - அவரவர் வாழ்வு காரணமாக; அளவு என்றது தகுதியை.
(574)

## 575

**கண்ணிற் கணிகலம் கண்ணோட்டம் அஃதின்றேல்**
**புண்என் றுணரப் படும்.** 5

1. வண்ணம் ஒருவகையால் பெருவண்ணம், இடைவண்ணம், வனப்பு வண்ணம் என்று மூன்று வகைப்படும் என்றும், அவை ஒவ்வொன்றும் முறையே ஆறு, இருபத்தொன்று, நாற்பத்தொன்பதாய் வரும் என்றும் கூறுவர். (**சிலப்**, 3:13, **அடியார்.**)

2. **திரிகடுகம், காப்பு**; கண் - இடம்.

3. ''மாணா உவகையும் ஏதம் இறைக்கு'' (432) என்றவிடத்துக் கழி கண்ணோட்டத்தை மாணா உவகை என்று கூறி அது விலக்குதற்குரியது என்றார்.

**பரிமேலழகர்:** கண்ணிற்கு அணிகலம் கண்ணோட்டம் - ஒருவன் கண்ணிற்கு அணியும் கலமாவது கண்ணோட்டம்; அஃது இன்றேல் புண் என்று உணரப்படும் - அக் கலம் இல்லையாயின் அஃது அறிவுடையாரால் புண் என்று அறியப்படும்.

வேறு அணிகலம் இன்மையின்[1] கண்ணிற்கு அணிகலம் என்றும், கண்ணைத் தோன்றினும் நோய்களானும் புலன் பற்றலானும் துயர் விளைத்தல் நோக்கிப் புண்ணென்று உணரப்படும்[2] என்றும் கூறினர்.

இவை மூன்று பாட்டானும் ஓடாது நின்ற கண்ணின் குற்றம் கூறப்பட்டது.

ஒப்புமை

1. **கண்ணிற்கு அணிகலம் கண்ணோட்டம்:**
"கண்ணுக் கணிகலம் கண்ணோட்டம்" (திரி. 52.)
"கண்வனப்புக் கண்ணோட்டம்." (சிறுபஞ்ச. 8.)

2. **கண்ணோட்டம் இன்றேல் கண் புண் ஆதல்:**
"ஒன்று நரம்பென்கோ ஒன்றுாத என்பென்கோ
இன்றசை தானென்கோ யாதென்கோ - மென்றொடையாழ்ப்
பண்ணோட்டும் இன்சொல் பணைத்தோளாய் சேர்ந்தவர்பால்
கண்ணோட்டம் இல்லாத கண்." (பாரதவெண்பா.) (575)

## 576

மண்ணோ டியைந்த மரத்தனையர் கண்ணோ
டியைந்துகண் ணோடா தவர். 6

**பரிமேலழகர்:** கண்ணோடு இயைந்து கண் ஓடாதவர் - ஓடுதற்குரிய கண்ணோடு பொருந்தி வைத்து அஃது ஓடாதவர், மண்ணோடு இயைந்த மரத்து அனையர் - இயங்கா நின்றாராயினும் மண்ணோடு பொருந்தி நிற்கின்ற மரத்தினை ஒப்பர்.

ஓடாதவர் என்புழிச் சினைவினை முதல்மேல் நின்றது. மரமும் கண்ணோடு இயைந்து கண் ஓடாமையின், இது தொழில் உவமம். இதனைச் சுதை மண்ணோடு கூடிய மரப்பாவை என்று உரைப்பாரும் உளர்.[3] அஃது உரையன்மை, காணப்படும் கண்ணுள் அன்றி அதனுள் மறைந்து நிற்கின்ற ஒரு சார் உள்ளீட்டால் கூறினமையானும், "மரக்கண்ணோ மண்ணுள்வார் கண்ணென், றிரக்கண்டாய்"[4] என்பதனும் அறிக.[5]

---

1. "மின்னுமணி, பூணும் பிறவுறுப்புப் பொன்னே அதுபுனையாக், காணும் கண் ஒக்குமோ காண்." (**நன்னெறி**, 40.)
2. **குறள்**, 393, உரையையும் காண்க.
3. இவ்வாறே மணக்குடவர் உரை வகுத்தார். "கண்ணுள் வினைஞரும் மண்ணீட் டாளரும்" (**சிலப்.** 5 : 30) என்பதன் உரையில், 'மண்ணீட்டாளர் - சுதையால் பாவையுள்ளிட்டன பண்ணுவார்; மண் - சுதை; "மண்ணோ டியைந்த மரத்தனையர்" என்றாராகலின்; குயவரும் ஆம்' என்று **அரும்பத உரை** யாசிரியரும், 'மண்ணீட் டாளர் - சிற்பாசாரிகள்; அன்றிச் சுதையாற் பாவையுள்ளிட்டன பண்ணுவார் என்றும் ஆம்; குயவரும் என்ப; மண் - ஈண்டுச்சுதை; "மண்ணோ டியைந்த மரத் தனையர்" என்றாராகலின்' என்று **அடியார்க்கு நல்லாரும்** எழுதுவதிலிருந்து அவர்களும் இக் குறளில் வரும் மண் என்பதற்குச் சுதையென்றே பொருள் கொண் டனர் என்று தெரிகிறது.
4. **முத்தொள்ளாயிரம்.**
5. மரப்பாவையில் மரம் உள்ளே மறைந்திருக்கிறது. மரத்தின் கண் வெளிப் படக் காணும் வண்ணம் இருக்கிறது. கண்ணோட்டம் இல்லாதவர் கண் புறத்தே காண்பாருக்குக் கண்போலத் தோற்றினும் அது மாட்சிமை உடையதன்று என்ற கருத்துக்கு, புறத்தே தோற்றுவதாயினும் மரக்கண் காணும் இயல்பின்றி யிருப்பதையே உவமை கூறல் பொருத்தம் என்பது பரிமேலழகர் கூறும் நியாயம். பயன் இல்லாத கண்ணுக்கு மரக்கண்ணை உவமை கூறுவது மரபு; "கண்ணிணையும், மரமாம்தீ வினையி னேற்கே." (**திருவா.** திருச்சதகம், 21); "மரக்கண்வன் கள்வ னேன்." (**கம்ப.** மருத்துமலை. 78.)

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** மண்ணோடு இயைந்த மரத்தனையர்-சுதை மண்ணோடு கூடிச் செய்த மரப்பாவையோடு ஒப்பர்.

**பரிதியார்:** மண்ணோடு இயைந்த சித்திரத்தில் எழுதிப் பழுத்த மாமரத்துக்கு நிகரானவன் கிருபைக்கண் இல்லாத அரசன்.

**காளிங்கர் :** வண்ணம் எழுதா வகைத்து உருவாகிய மண்மேல் எழுதிய கற்பகதரு முதலிய மரத்தைப் போல்பவர்; யார் எனின், செய்ய வாயும் செவ்வரிக் கண்ணும் கரிய குழலும் வெளிய நகையும் பிறவும் ஆகிய வகையமை உறுப்பின் வனப்பு வேற்றுமை தகைபெற உடைய தன்மைய ரேனும் கண்ணுறுப்புக்கு நுண்ணுறுப்பாகிய கண்ணோட்டம் இல்லாத கடுவினையாளர். (576)

## 577

கண்ணோட்டம் இல்லவர் கண்இலர் கண்உடையார்
கண்ணோட்டம் இன்மையும் இல். 7

**பரிமேலழகர் :** கண்ணோட்டம் இல்லவர் கண் இலர் – கண்ணோட்டம் இல்லாதவர் கண் உடையரும் அல்லர்; கண் உடையார் கண்ணோட்டம் இன்மையும் இல் - கண் உடையவர் கண்ணோட்டம் இலராதலும் இல்லை.

கண்ணுடையர் ஆயின் காட்சிக்கண்ணே அஃது ஒடும் என்பது பற்றிக் கண்ணோட்டம் இல்லவர் கண்ணிலர் எனக் கூறிப் பின் அதனை எதிர்மறை முகத்தான் விளக்கினர். உம்மை, இறந்தது தழீஇய எச்சவும்மை.

இவை இரண்டு பாட்டானும் கண்ணோடாதாரது இழிபு கூறப்பட்டது. (577)

## 578

கருமம் சிதையாமல் கண்ணோட வல்லார்க்
குரிமை உடைத்திவ் வுலகு. 8

**பரிமேலழகர்:** கருமம் சிதையாமல் கண்ணோட வல்லார்க்கு - முறை செய்தலாகிய தம் தொழில் அழியாமல் கண்ணோடவல்ல வேந்தர்க்கு, உரிமை உடைத்து இவ் வுலகு - உரித்தாம் தன்மை உடைத்து இவ் வுலகம்.

தம்மொடு பயின்றார் பிறரை இடுக்கண் செய்துழி, அவரைக் கண்ணோடி ஒறுதார்க்கு முறை சிதைதல் மேல், "ஓர்ந்து கண்ணோடாது"[1] என்ற முறை யிலக்கணத்தானும் பெறும். முறை சிதைய வரும்வழிக் கண்ணோடாமையும் வாராவழிக் கண்ணோடலும் ஒருவற்கு இயல்பாதல் அருமையின், கண்ணோட வல்லார்க்கு என்றும், அவ்வியல்பு உடையார்க்கு உலகம் முழுதும் நெடுங் காலம் சேறலின் உரிமை உடைத்து என்றும் கூறினர்.

இதனல் கண்ணோடுமாறு கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** இது, நற்குணமாவது கண்ணோட்டமாயினும், அரசர்க்குப் பொருட்கேடு வாராமல் கண்ணோடவேண்டும் என்று கூறிற்று.

**பரிதியார்:** இராசகாரியம் குன்றாமல் அதுவே கண்ணாக இருக்கும் அரசற்கும் பூமிக்கும் உரிமை உடைத்தாம். (578)

1. குறள், 541.

## 579

ஒறுத்தாற்றும் பண்பினர் கண்ணும்கண் ணோடிப்
பொறுத்தாற்றும் பண்பே தலை. 9

**பரிமேலழகர்:** ஒறுத்தாற்றும் பண்பினர் கண்ணும் - தம்மை ஒறுக்கும் இயல்பு உடையாரிடத்தும், கண்ணோடிப் பொறுத்தாற்றும் பண்பே தலை - கண்ணோட்டம் உடையராய்க் குற்றத்தைப் பொறுக்கும் இயல்பே அரசர்க்குத் தலையாய இயல்பாவது.

பண்பினர் என்றதனால் அவர் பயிற்சி பெற்றாம். ஒறுத்தாற்றும், பொறுத்தாற்றும்[1] என்பன ஈண்டு ஒருசொன்னீர.

### உரை வேறுபாடு

**பரிப்பெருமாள்:** பிறருக்குக் குற்றம் செய்தாரையே அன்றித் தமக்குக் குற்றம் செய்தாரையும் பொறுக்க வேண்டும் என்றது.

### ஒப்புமை

முற்றும்:

"தீமை கண்டோர் திறத்தும் பெரியோர்
தாமறிந் துணர்க என்ப மாதோ" (நற். 116 : 1-2.)

"பகைவர் தேஎத் தாயினும்
சினவா யாகுதல் இறும்பூதாற் பெரிதே"
"பகைவர் ஆரப் பழங்கண் அருளி." (பதிற். 32:16-7, 37:3.) (579)

## 580

பெயக்கண்டும் நஞ்சுண் டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர். 10

**பரிமேலழகர்:** நஞ்சு பெய கண்டும் உண்டு அமைவர் - பயின்றார் தமக்கு நஞ்சு இடக் கண்டுவைத்தும் கண் மறுக்கமாட்டாமையின் அதனை உண்டு பின்னும் அவரோடு மேவுவர், நயத்தக்க நாகரிகம் வேண்டுபவர் - யாவரானும் விரும்பத்தக்க கண்ணோட்டத்தினை வேண்டுபவர்.

நாகரிகம் என்பது கண்ணோட்டமாதல், "முந்தையிருந்து நட்டோர் கொடுப்பின், நஞ்சும் உண்பர் நனிநா கரிகர்"[2] என்பதனானும் அறிக.

அரசர் அவரை ஒருது கண்ணோடற்பாலது தம்மாட்டுக் குற்றம் செய்துழி என்பது இவ்விரண்டு பாட்டானும் கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** நாகரிகம் - அறம் பொருள் இன்பத்தின்கண் நற்குணங்கள் பலவும் உடைமை.

**பரிதியார்:** மாற்றார் தமக்கு நஞ்சிட்டாலும் இது அமிர்தம் என்று இருப்பர், காரியத்தினாலே சுவர்க்கம் வேண்டியும் இந்தப் பூமி வேண்டியும் மன்னவர்.

**காளிங்கர்:** ஒருவர் தமக்கு இன்மையால் கொணர்ந்து இடக் கண்டு வைத்தும் அவர் இட்ட நஞ்சினைத் தாம் உண்டு உயிர் வாழ்க்கை

---

1. ஒறுத்தல் ஆற்றல், பொறுத்தல் ஆற்றல் என இருவேறு வினைகளைக் குறியாமையின் ஒருசொன்னீர ஆயின.

2. நற்றிணை, 355 : 6-7.

சமைந்து விடுவர். யார் எனின், பெரியோரால் விரும்பத்தக்க உம்பர் உலகினுள் சிறப்புடைய உத்தரகுருவினைத் தாம் எய்தி இனிது வாழ்ந்திருக்க வேண்டும் அவர்.

ஒப்புமை

முற்றும்:

"நஞ்சுயிர் செகுத்தலும் அறிந்துண்டாங் களியின்மை
கண்டும்நின் மொழிதேறும் பெண்டிரும்." (கலி. 74:8.) (580)

---

# 59. ஒற்றாடல்

**பரிமேலழகர்:** அஃதாவது, பகை, நொதுமல், நட்பு என்னும் மூன்று திறத்தார் மாட்டும் நிகழ்ந்தன அறிதற்கு ஒற்றரை ஆளுதல். மேற் சொல்லிய இலக்கணத்தனைய அரசனுக்குத் தன் நாடு செலுத்துங்காலும் பிறர் நாடு கொள்ளுங்காலும் வேண்டுவன கூறுகின்றார் ஆகலின், அவ் விருமைக்கும் இன்றியமையாதாய இது முன் வைக்கப்பட்டது.

## 581

**ஒற்றும் உரைசான்ற நூலும் இவைஇரண்டும்**
**தெற்றென்க மன்னவன் கண். 1**

**பரிமேலழகர்:** ஒற்றும் உரை சான்ற நூலும் இவை இரண்டும் - ஒற்றும் புகழ் அமைந்த நீதி நூலும் ஆகிய இவை இரண்டனையும், மன்னவன் கண் தெற்றென்க - அரசன் தன் இரண்டு கண்ணுமாகத் தெளிக.

ஒற்றுத் தன் கண் செல்லமாட்டாத பரப்பெலாம் சென்று கண்டு ஆண்டு நிகழ்ந்தன எல்லாம் உணர்த்தலானும், நூல் அந் நிகழ்ந்தவற்றிற்குத் தன் உணர்வு செல்ல மாட்டாத வினைகளையெல்லாம் சொல்லி உணர்த்தலானும் இவ்விரண்டனையுமே தனக்கு ஊனக்கண்ணும் ஞானக்கண்ணும் ஆகத் துணிந்துகொண்டு ஒழுகுக என்பதாம். ஒற்றனை ஒற்று என்றார், வேந்தனை வேந்து என்றாற் போல. தெற்றென்க என்பது தெற்றென் என்பது முதனிலையாக வந்த வியங்கோள். அது தெற்றென என்னும் செயவென் எச்சத்தான் அறிக.

இதனால் ஒற்றினது சிறப்புக் கூறப்பட்டது.

உரை வேறுபாடு

**மணக்குடவர்:** ஒற்றும் முறை சான்ற நூலும்[1] - ஒற்றினையும் முறையமைந்த நூலினையும். அரசர்க்குக் கல்வி இன்றியமையாததுபோல ஒற்றும் இன்றியமையாதது.

**பரிப்பெருமாள்:** மறைந்தவை காணுங்கால் ஒற்றானுதல், நூலினுதல் காண வேண்டும் ஆதலின், அதற்காக இரண்டினையும் தெளிய அறிக. ஐயம் ஆகிய பொருள் உண்மை தோற்றாது என்று ஆயிற்று. ஈண்டு நூல் கூறியது எற்றுக்கு எனின், அரசனுக்குக் கல்வி இன்றியமையாது என்றற்கு.

---

1. மணக்குடவர் கொண்ட பாடம், 'முறைசான்ற நூலும்' என்பது.

**பரிதியார்:** உரைசான்ற நூலும் - மனுநீதி நூலும்.

**காளிங்கர்:** தெற்றென்க மன்னவன் கண் - தெளிவுற்று நிற்க மன்னவனிடத்து.

### ஒப்புமை

*1.* **ஒற்று மன்னவன் கண் போலுதல்:**

"கடனறி காரியக் கண்ணவ ரோடு." (*பரி. 19:22.*)

2. **உரைசான்ற நூல் மன்னவன் கண் போலுதல்:**

"மண்ணியன் மன்னர்க்குக் கண்ணென வகுத்த
நீதி நன்னூல்" (**பெருங்.** *4. 10 : 13-4.*)

"காதிவேல் மன்னர் தங்கள் கண்ணென வைக்கப் பட்ட
நீதிமேற் சேறல் தேற்றாய்." (*சீவக. 233.*) (*581*)

## 582

**எல்லார்க்கும் எல்லாம் நிகழ்பவை எஞ்ஞான்றும்**
**வல்அறிதல் வேந்தன் தொழில்.** **2**

**பரிமேலழகர்:** எல்லார்க்கும் நிகழ்பவை எல்லாம் எஞ்ஞான்றும் வல் அறிதல் - எல்லார்கண்ணும் நிகழ்வன எல்லாவற்றையும் நாள் தோறும் ஒற்றான் விரைந்து அறிதல், வேந்தன் தொழில் - அரசனுக்கு உரிய தொழில்.

எல்லார்க்கும் என்றது மூன்று திறத்தாரையும்.[1] நான்காவது ஏழாவ தன் பொருட்கண் வந்தது. நிகழ்வன எல்லாம் என்றது நல்லவும் தீயவும் ஆய சொற்களையும் செயல்களையும். அவை நிகழ்ந்தபொழுதே அவற்றிற்குத் தக்க அளியாகத் தெறலாகச்[2] செய்ய வேண்டுதலின் வல்அறிதல் என்றும், அவ் விரு தொழிற்கும் அறிதல் காரணமாகலின் அதனையே உபசார வழக் கால் தொழில் என்றும் கூறினார்.ஒற்றான் என்பது அதிகாரத்தான் வந்தது.

இதனான் ஒற்றின் ஆய பயன் கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** பகைவராகியும் நட்டாராகியும் மத்திமராகியும் உதாசினராகியும் இருக்கின்ற அரசர்க்கும், அவர் சுற்றத்திற்கும், தம் சுற்றத்திற்கும், அறம் பொருள் இன்பங்களைப் பற்றி நிகழ்பவை எல்லா வற்றையும் நாள்தோறும் பிறர் அறிவதன் முன்னர்த் தான் ஒற்றால் விரைந்து அறிதல் வேந்தனது தொழில்.

**காளிங்கர்:** எல்லார்க்கும் - அகத்தோரும் புறத்தோரும் அருகலரும் ஆகிய அனைவர்க்கும். (*582*)

## 583

**ஒற்றினான் ஒற்றிப் பொருள்தெரியா மன்னவன்**
**கொற்றம் கொளக்கிடந்த தில்.** **3**

**பரிமேலழகர்:** ஒற்றினான் ஒற்றி பொருள் தெரியா மன்னவன் - ஒற்றி னானே எல்லார்கண்ணும் நிகழ்ந்தவற்றை ஒற்றுவித்து அவற்றான் எய்தும் பயனை ஆராயாத அரசன், கொற்றம் கொள கிடந்தது இல் - வென்றி அடையக் கிடந்தது வேறொரு நெறி இல்லை.

---

1. "ஏவரும் இனிய நண்பர் அயலவர் விரவார் என்று
மூவகை இயலோர் ஆவர்." (**கம்ப.** அரசியல். 30.)

2. "வளியும் தெறலும் அளியும் உடையோய்." (**புறநா.** 2 : 8.)

அந் நிகழ்ந்தனவும் பயனும் அறியாது பகைக்கு எளியன் ஆதல் பிறிதின் தீராமையின் கொற்றம் கொளக் கிடந்தது இல் என்றார். இதற்குக் கொளக் கிடந்தது ஒரு வென்றி இல்லை என்று உரைப்பினும் அமையும்.

இதனான் அத் தொழில் செய்யாதவழி வரும் குற்றம் கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**காளிங்கர்:** தனது நாட்டகத்து வாழ்வாரது வன்மையும் மென்மையும் வேற்றரசர்மாட்டுள்ள வன்மையும் மென்மையும் ஒற்றுளரை உழல விட்டு மற்று அவர்களான் ஒற்றுவித்துப் பின்னும் அவர் உரைப்பதன்கண் பொருட் கருத்தும் தெரிந்து உணரவல்லாத மன்னனானவன் அரசியல் திறமை கோடற்கு இயைபாவது யாதும் இல்லை.

### ஒப்புமை

ஒற்றினான் ஒற்றிப் பொருள் தெரிதல்:

"ஒற்றினான் ஒற்றிப் பொருள்தெரிதல் முன்னினிதே."

(இனியவை. 36.) (583)

## 584

**வினைசெய்வார் தம்சுற்றம் வேண்டாதார் என்றாங்**
**கனைவரையும் ஆராய்வ தொற்று. 4**

**பரிமேலழகர்:** தம் வினை செய்வார் சுற்றம் வேண்டாதார் என்ற அனைவரையும் ஆராய்வது - தம் காரியம் செய்வார், சுற்றத்தார், பகைவர் என்று சொல்லப்பட்ட அனைவரையும் சொல் செயல்களான் ஆராய்வானே, ஒற்று - ஒற்றன் ஆவான்.

தம் என்றது அரசனோடு உளப்படுத்தி. அவனுக்குக் காரியம் செய்வார் செய்வனவும், சுற்றத்தார் தன்னிடத்தும் நாட்டிடத்தும் செய்வனவும், பகைவர் தன் அற்றம் ஆராய்தலும் மேல் தேறப்படுதலும் முன்னிட்டுத் தன்னிடத்துச் செய்வனவும் அறிந்து, அவற்றிற்கு ஏற்றன செய்ய வேண்டுதலின் இம் மூவகையாரையும் எஞ்சாமல் ஆராயவேண்டும் என்பார், 'அனைவரையும் ஆராய்வது ஒற்று' என்றார். (584)

## 585

**கடாஅ உருவொடு கண்ணஞ்சா தியாண்டும்**
**உகாஅமை வல்லதே ஒற்று. 5**

**பரிமேலழகர்;** கடாஅ உருவொடு - ஒற்றப்பட்டார் கண்டால் ஐயுறாத வடிவோடு பொருந்தி, கண் அஞ்சாது - அவர் ஐயுற்று அறியலுறின் செயிர்த்து நோக்கிய அவர் கண்ணிற்கு அஞ்சாது நின்று, யாண்டும் உகாஅமை வல்லதே ஒற்று - நான்கு உபாயமும் செய்தாலும் மனத்துக் கொண்டவற்றை உமிழாமை வல்லவனே ஒற்றன் ஆவான்.

கடா என்பது கடுக்கும் என்னும் பெயரெச்சத்து எதிர்மறை. ஐயுறாத வடிவாவன பார்ப்பார், வணிகர் முதலாயினோர் வடிவு.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** கடாஅ உருவொடு - வினவப்படாத வடிவோடே கூடி.

**பரிப்பெருமாள்:** வினவப்படாத வடிவாவது வணிகரும் பார்ப்பாரும் ஆகி ஆற்றற்குத் தக, எவ்விடத்தும் சோர்வு இன்றியே நடக்கவல்லவன் ஒற்றன் ஆவன்.

**பரிதியார்:** கடவுதலை யுடைய வடிவோடு நின்று மனத்தில் கலக்கம் இன்றி எவ்விடத்தும் சேராமை வல்லது ஒற்று.

**காளிங்கர்:** அறவோர் வேடமும் துறவோர் வேடமும் வறியோர் வேடமும் பிறவும் ஆகிய நல்லுறவு கொண்டு ஒற்றும் இடத்து அமைச்சரும் பிறரும் ஆகிய அறிவுடையாளருள் யாவரேனும் தன்னைக் கண்டு ஐயுற்று,'இவ் விடை வந்து எய்திய நீ யாரோதான்?' என்று வினவுதல் செய்யாதபடி உரு வேடத்தோடு திரிதலும், மற்று இங்ஙனம் திரியுமிடத்தும் ஐயுற்றுக் கைப்பற்றியும் சிறைப்படுத்தியும் வருத்தம் செய்யுமிடத்தும் சிறிதும் நெஞ்சு அஞ்சாது நிறை உரம் செய்தலும், மற்றுத் தான் தகைந்து உட்கொண்ட மறைபொருளினை வேறு ஓரிடத்தும் சோரவிடாமையும் வல்லது யாது? மற்று அதுவே அரசர்க்கு ஒற்றுவது.

மற்றும் தனது தந்தை தாயர் நட்டோர் சுற்றம் என்னும் இவர் மாட்டும் சோரவிடாமை ஒற்று என அறிக.

### ஒப்புமை

**ஒற்றர் உருவம் மாறுதல்:**

"இற்றது கால மாக இலங்கையர் வேந்தன் ஏவ
ஒற்றர்வந் தளவு நோக்கிக் குரங்கென உழல்கின் றுரை"

"தாயினும் பழகி னுரும் தன்னிலை தெரிக்க லாகா
மாயைவல் லுருவத்தான்." (கம்ப. ஒற்றுக். 24, அணிவகுப்பு. 3.)

(585)

## 586

துறந்தார் படிவத்தர் ஆகி இறந்தாராய்ந்
தென்செயினும் சோர்வில தொற்று. 6

**பரிமேலழகர்:** துறந்தார் படிவத்தர் ஆகி இறந்து ஆராய்ந்து-முற்றத் துறந்தாராயும் விரத ஒழுக்கினராயும் உள்புகுதற்கு அரிய இடங்கள் எல்லாம் உள்புக்கு ஆராய வேண்டுவன ஆராய்ந்து அறிந்து, என் செயினும் சோர்வு இலது ஒற்று - ஆண்டையார் ஐயுற்றுப் பிடித்து எல்லாத் துன்பமும் செய்து கேட்டாலும் தன்னை வெளிப்படுத்தாதவனே ஒற்றன் ஆவான்.

விரத ஒழுக்கம், தீர்த்த யாத்திரை முதலாயின. செயினும் என்பது அறவோர் என்று செய்வார் இன்மை விளக்கி நின்றது. மேல் நால்வகை உபாயத்தினும் சோர்வு இன்மை சொல்லி வைத்து ஈண்டும் தண்டத்தைப் பிரித்துக் கூறியது, அதனது பொறுத்தற்கு அருமைச் சிறப்பு நோக்கி. இதனுள் படிவம் என்றதனை வேடம் ஆக்கித் துறந்தார் வேடத்தார் ஆகி என்று உரைப்பாரும் உளர்.

### உரை வேறுபாடு

**காளிங்கர்:** இறந்து ஆராய்ந்து என் செயினும் - பிறர் தன்னையும் பற்றி ஆராய்ந்து கட்டுதல், கடுத்தல், எற்றுதல், எறிதல் முதலிய இடரால் இடர்ப்படுத்திக் கடாவினும்.

**கவிராஜ பண்டிதர்:** விரத ஒழுக்கங்கள் உள்ளவர்களே கபடஞ் செய்யார் என்று துன்பம் செய்யாது விடுவர்.

### ஒப்புமை

**1. ஒற்றர் துறந்தார் படிவத்தர் ஆதல்:**

"படிவ ஒற்றின் பட்டாங்கு உணர்ந்து" (பெருங். 3. 25 : 8.)

"பாத்தில்சீர்ப் பதுமுகன் படிவவொற் றுளர்சொல்." (சீவக. 1845.)

2. ஒற்றர் என்செயினும் சோர்வில்லாது இருத்தல்:

"கல்விக்கண் மிக்கோன் சொல்லக் கருமன நிருதக் கள்வர்
வல்விற்கை வீர மற்றிவ் வானரர் வலியை நோக்கி
வெல்விக்கை அரிதென் றெண்ணி வினையத்தால் எம்மை யெல்லாம்
கொல்விக்க வந்தான் மெய்ம்மை குரங்குநாம் கொள்க என்றூர்."
(கம்ப. ஒற்றுக். 30.) (586)

## 587

மறைந்தவை கேட்கவற் ருகி அறிந்தவை
ஐயப்பா டில்லதே ஒற்று. 7

**பரிமேலழகர்:** மறைந்தவை கேட்க வற்று ஆகி - ஒற்றப்பட்டார் மறையச் செய்த செயல்களை அவர்க்கு உள்ளாயினூரால் கேட்க வல்லனாய், அறிந்தவை ஐயப்பாடு இல்லதே ஒற்று - கேட்டறிந்த செயல்களில் பின் ஐயப்படாது துணியவல்லவனே ஒற்றன் ஆவான்.

மறைந்தவை சொல்லுவாரை அறிந்து, அவர் அயிராமல் சென்று ஒட்டித் தாமே சொல்லும் வகை அதற்கு ஏற்ற சொல்லாக, செயலாக முன்னே விளைத்து, அத் தொடர்பால் கேட்குங்காலும் உருதார் போன்று நின்று கேட்க வேண்டுதலின் கேட்க வற்ருகி என்றும், கேட்டு அறிந்தவற்றைத் தானே ஐயுற்று வந்து சொல்லின் அரசனல் அவற்றிற்கு ஏற்ற வினை செய்யல் ஆகாமையின் ஐயப்பாடு இல்லதே என்றும் கூறினூர்.

இவை நான்கு பாட்டானும் ஒற்றினது இலக்கணம் கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**காளிங்கர்:** வேந்தரிடத்தும் பிறரிடத்தும் மிகவும் மறைபொருளாகிய வினைச்சூழ்ச்சிகளை வினவியும் விடுத்தும் நட்பினும் நகையினும் பிறவினும் தெரிந்து, விளங்கக் கேட்டு உணர வல்லனும் ஆகி, அங்ஙனம் அறிந்தவைதம்பால் சிறிதும் ஐயப்பாடு இன்றித் தெளிவுற உரைக்கும் திறமை உள்ளது யாது? மற்று அதுவே அரசற்கு ஒற்ருவது.

### ஒப்புமை

அறிந்தவை ஐயப்பாடு இல்லதே ஒற்று:

"எள்ளப் படுமரபிற் ருகலும் உள்பொருளைக்
கேட்டு மறவாத கூர்மையும் முட்டின்றி
உள்பொருள் சொல்லும் உணர்ச்சியும் இம்மூன்றும்
ஒள்ளிய ஒற்ருள் குணம்."
(திரி. 85.) (587)

## 588

ஒற்றெற்றித் தந்த பொருளையும் மற்றுமோர்
ஒற்றினூல் ஒற்றிக் கொளல். 8

**பரிமேலழகர்:** ஒற்று ஒற்றி தந்த பொருளையும் - ஓர் ஒற்றன் ஒற்றி வந்து அறிவித்த காரியந்தன்னையும், மற்றும் ஓர் ஒற்றினூல் ஒற்றி கொளல் - பிறன் ஓர் ஒற்றனூலும் ஒற்றுவித்து ஒப்புமை கண்டு கொள்க.

ஒற்றப்பட்டாரோடு ஒத்து நின்று மாறுபடக் கூறலும் கூடும் ஆகலின், ஒருவன் மாற்றம் தேறப்படாது என்பதாம்.

ஒப்புமை

முற்றும் :

"ஒற்றுஒற் றியவரை ஒற்றின் ஆய்ந்தும்"
"ஒற்று மாக்களை ஒற்றின் ஆயா" (பெருங். 3.23:53, 25:48.)

"ஒற்றர் தங்களை ஒற்றின் ஆய்தலும்......
கொற்றங் கொள்குறிக் கொற்றவர்க் கென்பவே."
(சீவக. 1921.) (588)

## 589

ஒற்றெற் றுணராமை ஆள்க உடன்மூவர்
சொற்றொக்க தேறப் படும். 9

**பரிமேலழகர்:** ஒற்று ஒற்று உணராமை ஆள்க - ஒற்றரை ஆளும் இடத்து ஒருவனை ஒருவன் அறியாமல் ஆள்க; உடன் மூவர் சொல் தொக்க தேறப்படும் - அங்ஙனம் ஆண்ட ஒற்றர் மூவரை ஒரு பொருள்மேல் வேறு வேறு விட்டால் அம் மூவர் சொல்லும் பயனால் ஒத்தன ஆயின் அது மெய் என்று தெளியப்படும்.

ஆயின் என்பது வருவிக்கப்பட்டது. ஒருவனை ஒருவன் அறியின் தம்முள் இயைந்து ஒப்பக் கூறுவர் ஆகலின், உணராமை ஆள்க என்றும், மூவர்க்கும் நெஞ்சு ஒற்றுமைப் படுதலும் பட்டால் நீடு நிற்றலும் கூடாமையின் தேறப்படும் என்றும் கூறினார்.

இதனானே அஃது ஒத்திலவாயின் பின்னும் ஆராய்க என்பதூஉம் பெற்றாம்.

ஒப்புமை

**ஒற்றரை ஆளும் வகை:**

"அறிந்தஒற் றாளர் செறிந்தனர் உரைப்ப
ஒற்று மாக்களை ஒற்றின் ஆயா
முன்தனக் குரைத்த மூவர் வாயவும்
ஒத்தது நோக்கி மெய்த்தகத் தேறி" (பெருங். 3.25 : 47-50.)

"ஒன்றிமுன் விடுத்தவர் மூவரொற் றாட்கள்வந்
தின்றிதாற் பட்டதென் றியம்புகின் றார்களே."
".........ஒற்றாளர்சொல்
கோத்தெனக் கொடுத்தனன் கொழுநிதி." (சீவக. 1829, 1845.)
(589)

## 590

சிறப்பறிய ஒற்றின்கண் செய்யற்க செய்யின்
புறப்படுத்தான் ஆகும் மறை. 10

**பரிமேலழகர்** : ஒற்றின்கண் சிறப்பு அறிய செய்யற்க - மறைந்தவை அறிந்து கூறிய ஒற்றின்கண் செய்யும் சிறப்பினை அரசன் பிறர் அறியச் செய்யாதொழிக; செய்யின் மறை புறப்படுத்தான் ஆகும் - செய்தானாயின் தன் அகத்து அடக்கப்படும் மறையைத் தானே புறத்து இட்டானாம்.

மறையாவது அவன் ஒற்றன் ஆயதூஉம், அவன் கூறியஉதூம் ஆம். சிறப்புப்பெற்ற இவன் யாவன் என்றும், இது பெறுதற்குக் காரணம் யாது என்றும் வினவுவாரும் இறுப்பாரும் அயலார் ஆகலின், புறப்படுத்தான் ஆகும் என்றார்.

இவை மூன்று பாட்டானும் ஒற்றரை ஆளுமாறும், அவரால் நிகழ்ந்தன அறியுமாறும், அறிந்தால் சிறப்புச் செய்யுமாறும் கூறப்பட்டன.

உரை வேறுபாடு

காளிங்கர். இங்ஙனம் அகத்தும் புறத்தும் அருமையும் பெருமையும் நுட்பமும் ஒட்பமும் ஓர்ந்து உணர்ந்த இடத்தும் ஒற்றர்க்கு அரசர் செய்யும் சிறப்புப் பலவும் உள அன்றே; அவற்றுள் யாதானும் ஒரு சிறப்பினையும் பிறர் அறியுமாறு தாம் செய்யாது ஒழிக. *(590)*

---

# 60. ஊக்கம் உடைமை

பரிமேலழகர்: அஃதாவது, மனம் மெலிதல் இன்றி, வினைசெய்தற்கண் கிளர்ச்சி உடைத்தாதல். ஒற்றரான் நிகழ்ந்தன அறிந்து அவற்றிற்கு ஏற்ற வினை செய்வானுக்கு இஃது இன்றியமையாமையின், ஒற்றாடலின்பின் வைக்கப் பட்டது.

மணக்குடவர்: ஊக்கம் உடைமையாவது அதனைச் செய்யுமிடத்துக் காலத்து அருமையை ஓராது இவ்வாறு செய்யக் கடவேன் என்று கருதும் கருத்து உடைமை. பிறர் நாடு கொள்ளும் காலத்து அவ்விடத்துள்ள செய்தியை ஒற்றரால் அறிந்தபின்பு அதனையே அறிந்துகொள்ளக் கடவேன் என்று நினைக்கும் கருத்து வேண்டுதலின், அதன்பின் இது கூறப்பட்டது.

பரிதியார்: ஊக்கம் உடைமையாவது எப்போதும் விசாரம் உடைமை.

## 591

உடையர் எனப்படுவ தூக்கம்அஃ தில்லார்
உடைய துடையரோ மற்று. 1

பரிமேலழகர்: உடையர் என படுவது ஊக்கம் - ஒருவரை உடையர் என்று சொல்லச் சிறந்தது ஊக்கம்; அஃது இல்லார் மற்று உடையது உடையரோ - அவ்வூக்கம் இல்லாதார் வேறு உடையது தானும் உடையர் ஆவரோ? ஆகார்.

வேறு உடையது என்றது முன் எய்திநின்ற பொருளை. உம்மை விகாரத்தால் தொக்கது. காக்கும் ஆற்றல் இலர் ஆகலின், அதுவும் இழப்பர் என்பதாம்.

உரை வேறுபாடு

மணக்குடவர்: உடையர் எனப்படுவது ஊக்கம் - ஒற்றரை உடைமை என்று சொல்லப்படுவது ஊக்கம் உடைமை.

பரிதியார்: அரசன் செல்வன் என்று சொல்லப்படும், விசாரம் உள்ளவனுகில்; விசார ஈனனுகில் அரசற்கு எத்துணைச் செல்வம் உண்டாகிலும் இல்லையாம்.

ஒப்புமை

உடையர் எனப்படுவது ஊக்கம்:

"ஊக்கமது கைவிடேல்." *(ஆத்திசூடி.)* *(591)*

## 592

உள்ளம் உடைமை உடைமை பொருள்உடைமை
நில்லாது நீங்கி விடும். 2

**பரிமேலழகர்:** உள்ளம் உடைமை உடைமை - ஊக்கம் உடைமையே ஒருவனுக்கு நிலைநின்ற உடைமையாவது; பொருள் உடைமை நில்லாது நீங்கி விடும் - மற்றைப் பொருள் உடைமை நிலைநில்லாது நீங்கிப் போம்.

உள்ளம்: ஆகுபெயர். ஊக்கம் உள்ளத்துப் பண்பாகலின் அதற்கு நிலை நிற்றலும், பொருள் உடம்பினும் வேறாய் அழிதல் மாலைத்து ஆகலின் அதற்கு நிலைநில்லாமையும் கூறினார். கூறவே, அஃது உடைமை அன்று என்பது பெறப் பட்டது.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** பொருள் உடையார்க்கு எல்லாம் உண்டாம் என்பார்க்கு இது கூறப்பட்டது.

**பரிதியார்:** பொருள் - எட்டு வகைச் செல்வம்.

### ஒப்புமை

1. **உள்ளம் உடைமை உடைமை:**

"உள்ளமுடை யான்முயற்சி செய்யஒரு நாளே
வெள்ளநிதி வீழும்விளை யாததனின் இல்லை." *(சீவக. 496.)*

2. **முற்றும் :**

"அருவிலை மாண்கலனும் ஆன்ற பொருளும்
திருவுடைய ராயின் திரிந்தும் வருமால்
பெருவரை நாட பிரிவின் றதனால்
திருவினும் திட்பமே நன்று." (பழமொழி, 136.) *(592)*

## 593

ஆக்கம் இழந்தேம்என் றல்லாவார் ஊக்கம்
ஒருவந்தம் கைத்துடை யார். 3

**பரிமேலழகர்:** ஆக்கம் இழந்தேம் என்று அல்லாவார் - இழந்தாராயினும் யாம் கைப்பொருளை இழந்தேம் என்று அலமரார், ஒருவந்தம்[1] ஊக்கம் கைத்து உடையார் - நிலைபெற்ற ஊக்கத்தைக் கைப் பொருளாக உடையார்.

ஆக்கம்: ஆகுபெயர். ஒருவந்தமாய ஊக்கம் என்க. கைத்து - கையகத்தாய பொருள். "கைத்துண்டாம் போழ்தே கரவா தறஞ்செய்ம்மின்"[2] என்றார் பிறரும். அல்லாவாமைக்கு ஏது வருகின்ற பாட்டால் கூறுப.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** ஒருவந்தம் - ஒருதலையாக.

**காளிங்கர்:** ஒருவந்தம் என்பது பெருஞ் செல்வம் என்றது. கைத்து உடையார் என்பது தம்மிடத்து உடையவர் என்றது.

---

1. "ஒருவந்தம் ஒல்லைக் கெடும்" (563) என்ற இடத்து, 'ஒருதலையாக' என்று உரைத்தார்.

2. நாலடி. 19; "கைப்பொருள் கொடுத்தும் கற்றல் கற்றபின் கண்ணு மாகும்" (சீவக. 1595.) என்பதில் பொருளைக் கைப்பொருள் என்றது காண்க.

கவிராஜ பண்டிதர்: நிச்சயமான அறிவைக் கைப் பொருளாக உடையர். (593)

## 594

ஆக்கம் அதர்வினய்ச் செல்லும் அசைவிலா
ஊக்கம் உடையான் உழை. 4

பரிமேலழகர்: அசைவு இலா ஊக்கம் உடையான் உழை - அசைவு இல்லாத ஊக்கத்தை உடையான்மாட்டு, ஆக்கம் அதர் வினய் செல்லும் - பொருள் தானே வழி வினவிக்கொண்டு செல்லும்.

அசைவு இன்மை-இடுக்கண் முதலியவற்றால் தளராமை. வழி வினவிச் சென்று சார்வார்போலத் தானே சென்று சாரும் என்பார், 'அதர் வினய்ச் செல்லும்' என்றார். எய்தி நின்ற பொருளினும் அதற்குக் காரணமாய ஊக்கம் சிறந்தது என்பது இவை நான்கு பாட்டானும் கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

மணக்குடவர்: நினைத்ததனாலே ஆக்கம் உண்டாமோ என்றார்க்கு இது கூறப்பட்டது.

பரிதியார்: ஆக்கம் - இலட்சுமி.

காளிங்கர்: ஆக்கம் - இருமைக்கும் உரிய ஆக்கமானது

கவிராஜ பண்டிதர்: அசைவில்லாத ஊக்கமாவது, வறுமை முதலான வற்றால் தளராமை.

### ஒப்புமை

1. அசைவிலா ஊக்கம்:

"அசைவில் நோன்தாள்"
"தாழ்வில் உள்ளம்." (அகநா. 29:1,4.)

2. ஊக்கம் உடையவனுக்கு ஆக்கம் உண்டாதல்:

"மடியிலா மன்னவன் எய்தும் அடியளந்தான்
தாஅய தெல்லாம் ஒருங்கு."
"முயற்சி திருவினை யாக்கும்."
"மடியிலான், தாள்உளாள் தாமரையினாள்" (குறள், 610, 616, 617.)
"மடியிலான் செல்வம்போல் மரம்நந்த" (கலி. 35.)
"ஊக்க வேந்தன் ஆக்கம் போல." (பெருங். 3. 5:20.)

3. ஆக்கம் அதர் வினய்ச் செல்லுதல்:

"பொருள் ஊர்க்கே, வரும்வழி வினய்உழந்து." (சீவக. 2556.)
(594)

## 595

வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனைய துயர்வு. 5

பரிமேலழகர்: வெள்ளத்து அனைய மலர் நீட்டம் - நின்ற நீரின் அள வினவாம் நீர்ப்பூக்களின் தாளினது நீளங்கள்; மாந்தர் தம் உள்ளத்து அனையது உயர்வு - அதுபோல் மக்கள்தம் ஊக்கத்து அளவினதாம் அவர் உயர்ச்சி.

மலர்: ஆகுபெயர். நீர் மிக்க துணையும் மலர்த்தாள் நீளும் என்பதுபட, வெள்ளத்தனைய என்றார். இவ்வுவமை ஆற்றலான் ஊக்கம் மிக்க துணையும் மக்கள் உயர்வர் என்பது பெறப்பட்டது. உயர்தல், பொருள் படைகளான் மிகுதல்.

### உரை வேறுபாடு

மணக்குடவர்: நீட்டம் - வளர்ச்சி.

பரிதியார்: உள்ளம் - கல்வி.

காளிங்கர்: உள்ளம் - நெஞ்சு ஒருப்பாடு. (595)

## 596

உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல் மற்றது
தள்ளினும் தள்ளாமை நீர்த்து. 6

**பரிமேலழகர்:** உள்ளுவது எல்லாம் உயர்வு உள்ளல் - அரசராயினர் கருதுவது எல்லாம் தம் உயர்ச்சியையே கருதுக; அது தள்ளினும் தள்ளாமை நீர்த்து - அவ்வுயர்ச்சி பால்வகையால் கூடிற்றில்லை ஆயினும், அக் கருத்துத் தள்ளாமை நீர்மை உடைத்து.

உம்மை, தள்ளாமை பெரும்பான்மையாதல் விளக்கிற்று. தள்ளிய வழியும் தாளாண்மையில் தவறு இன்றி நல்லோரால் பழிக்கப்படாமையின், தள்ளா இயற்கைத்து என்பதாம். மேல் உள்ளத்தனைய துயர்வு என்றதனையே வற்புறுத்தியவாறு.

### உரை வேறுபாடு

மணக்குடவர்: தள்ளாமை நீர்த்து-முயன்று பெற்றதனோடு ஒக்கும்.

இது தப்பினும் பழிக்கப்படாது என்றது. (596)

## 597

சிதைவிடத் தொல்கார் உரவோர் புதைஅம்பிற்
பட்டுப்பா டூன்றும் களிறு. 7

**பரிமேலழகர்:** களிறு புதை அம்பின் பட்டு பாடு ஊன்றும் - களிறு புதையாகிய அம்பால் புண்பட்டவிடத்துத் தளராது தன் பெருமையை நிலை நிறுத்தும்; உரவோர் சிதைவிடத்து ஒல்கார் - அதுபோல ஊக்கம் உடையார் தாம் கருதிய உயர்ச்சிக்குச் சிதைவு வந்தவிடத்துத் தளராது தம் பெருமையை நிலைநிறுத்துவர்.

புதை - அம்புக்கட்டு; பன்மை கூறியவாறு. பட்டால் என்பது பட்டு எனத் திரிந்து நின்றது. ஒல்காமை களிற்றுடனும், பாடூன்றுதல் உரவோருடனும் சென்று இயைந்தன. தள்ளினும் தவறாது உள்ளியது முடிப்பர் என்பதாம்.

இவை மூன்று பாட்டானும் ஊக்கம் உடையாரது உயர்ச்சி கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

மணக்குடவர்: புதை அம்பின் - மெய் புதைந்த அம்பினுள். (597)

## 598

உள்ளம் இலாதவர் எய்தார் உலகத்து
வள்ளியம் என்னும் செருக்கு. 8

**பரிமேலழகர்:** உள்ளம் இலாதவர் - ஊக்கம் இல்லாத அரசர், உலகத்து வள்ளியம் என்னும் செருக்கு எய்தார் - இவ்வுலகத்தாருள் யாம் வண்மை உடையேம் என்று தம்மைத் தாம் மதித்தலைப் பெறார்.

ஊக்கம் இல்லையாகவே, முயற்சி, பொருள், கொடை, செருக்கு இவை முறையே இலவாம் ஆகலின், செருக்கு எய்தார் என்றார். கொடை வென்றியின் ஆய இன்பம் தமக்கு அல்லது பிறர்க்குப் புலன் ஆகாமையின் தன்மையால் கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** செருக்கு - களிப்பு. இஃது உள்ளமிகுதி இல்லாதார்க்குப் பொருள்வரவு இல்லையாம், ஆதலான் அவர் பிறர்க்கு ஈயமாட்டார் என்றது. (598)

## 599

பரியது கூர்ங்கோட்ட தாயினும் யானை
வெரூஉம் புலிதாக் குறின். 9

**பரிமேலழகர்:** பரியது கூர்ம் கோட்டது ஆயினும் - எல்லா விலங்கினும் தான் பேருடம்பினது, அதுவேயும் அன்றிக் கூரிய கோட்டையும் உடையது ஆயினும், யானை புலி தாக்குறின் வெரூஉம் - யானை தன்னைப் புலி எதிர்ப்படின் அதற்கு அஞ்சும்.

பேருடம்பான் வலிமிகுதி கூறப்பட்டது. புலியின்மிக்க மெய்வலியும் கருவிச் சிறப்பும் உடைத்தாயினும் யானை ஊக்கம் இன்மையான் அஃது உடைய அதற்கு அஞ்சும் என்ற இது, பகைவரின் மிக்க மெய்வலியும் கருவிச் சிறப்பும் உடையர் ஆயினும், அரசர் ஊக்கம் இலர் ஆயின் அஃது உடைய அரசர்க்கு அஞ்சுவர் என்பது தோன்ற நின்றமையின், பிறிது மொழிதல்.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** இஃது உள்ளம் உடைமை இல்லாதார் பெரியராயினும் கெடுவார் என்றது.

**பரிதியார்:** அங்கபாரமும் கூரிய கொம்பும் யானைக்கு உண்டாகிலும் மனோபலம் இல்லாதபடியினாலே புலிக்குப் பயந்ததுபோல, மனோபலம் இல்லாதார் ஒரு கண் ஒற்றினால் விசாரம் தாழ்வு வந்தாலும் அதனால் குறை இல்லை. அது என்போல் என்னில் அம்பிலே நொந்த யானை பின்பும் அதன் பெலம் பெற்ற தன்மைபோலும்.

### ஒப்புமை

1. **யானை புலிக்கு வெருவுதல்:**

"கொடுவரி தாக்கி வென்ற வருத்தமொடு
நெடுவரை மருங்கில் துஞ்சும் யானை
நனவில் தான்செய்தது மனத்த தாகலின்
கனவில் கண்டு கதுமென வெரீஇ." (கலி. 49:1-4.)

2. **கருத்து:**

"அரண்தரு திரள்தோள் சால உளவெனின் ஆற்ற லுண்டோ
.................................
திரண்டதோள் வனத்தை யெல்லாம் சிறியதோர் பருவம் தன்னில்
இரண்டுதோள் ஒருவ னன்றோ மழுவினால் எறிந்த தென்றான்."
(கம்ப. சடாயு உயிர். 63.) (599)

600

உரம்ஒருவற் குள்ள வெறுக்கைஅஃ தில்லார்
மரம்மக்கள் ஆதலே வேறு. 10

**பரிமேலழகர்:** ஒருவற்கு உரம் உள்ள வெறுக்கை – ஒருவற்குத் திண்ணிய அறிவாவது ஊக்கமிகுதி; அஃது இல்லார் மரம் - அவ்வூக்க மிகுதி இல்லாதார் மக்கள் ஆகார்; மரங்கள் ஆவர்; மக்கள் ஆதலே வேறு-சாதி மரங்களோடு இம் மரங்களிடை வேற்றுமை, வடிவு மக்கள் வடிவே; பிறிது இல்லை.

உரம் என்பது அறிவாதல், "உரனென்னும் தோட்டியான்"[1] என்பதனும் அறிக. மரம் என்பது சாதியொருமை. மக்கட்கு உள்ள நல்லறிவும் காரிய முயற்சியும் இன்மைபற்றி மரம் என்றும்,[2] மரத்திற்குள்ள பயன்பாடு இன்மைபற்றி, 'மக்களாதலே வேறு' என்றும் கூறினர். பயன் பழம் முதலியவும், தேவர் கோட்டம், இல்லம், தேர், நாவாய்கட்கு உறுப்பாதலும் முதலிய.

இவை மூன்று பாட்டானும் ஊக்கம் இல்லாதாரது இழிபு கூறப்பட்டது.

உரை வேறுபாடு

**பரிதியார்.** உரம் ஒருவற்கு உள்ள வெறுக்கை - அரசற்குச் சத்துவமாவது விசாரம்.

**காளிங்கர்:** மரம்மக்கள் ஆதலே வேறு-மரமானது மக்களுள் உருவு கொண்டது எத்தன்மைத்து, அத்தன்மைத்து.

வெறுக்கை என்பது செல்வம் என்றும், வெறுப்பு என்றும் சொல்லுவாரும் உளர்.

ஒப்புமை

**உள்ள வெறுக்கை:** குறள், *971.* *(600)*

---

# 61. மடி இன்மை

**பரிமேலழகர்:** அஃதாவது, கருதியன செய்யுங்கால் சோம்புதல் இல்லாமை. ஊக்கம் உடையார்க்கு ஒரோவழிக் குணவயத்தான் மடி வருதல் நோக்கி இஃது ஊக்கம் உடைமையின்பின் வைக்கப்பட்டது.

601

குடிஎன்னும் குன்றா விளக்கம் மடிஎன்னும்
மாசூர மாய்ந்து கெடும். 1

**பரிமேலழகர்:** குடி என்னும் குன்றா விளக்கம் - தான்பிறந்த குடியாகிய நந்தா விளக்கு, மடி என்னும் மாசு ஊர மாய்ந்து கெடும் – ஒருவன் மடியாகிய இருள் அடர நந்திப் போம்.

---

1. **குறள்,** 24.

2. 'அறிவென்னும் உள்ளீடு இன்மையின் மக்கட்பதடி என்றார்' என்று உரைத்தது காண்க. (**குறள்,** 196, உரை.)

உலக நடை உள்ள துணையும் இடையறுது தன்னுள் பிறந்தாரை விளக்குதலின் குடியைக் குன்ரு விளக்கம் என்றும், தாமத குணத்தான் வருதலின் மடியை மாசு என்றும், அஃது ஏனைய இருள் போலாது அவ் விளக்கைத் தான் அடர்ந்து மாய்க்கும் வலியுடைமையின் மாசு ஊர மாய்ந்து கெடும் என்றும் கூறினர். கெடுதல்-பெயர் வழக்கமும் இல்லையாதல்.

உரை வேறுபாடு

**பரிதியார்:** குடி - செல்வக் குடி.

ஒப்புமை

மடியால் குடி கெடுதல்:

குறள், *603, 604.*

"தாளிலான் குடியேபோல் தமியவே தேயுமால்." *(கலி. 149:9.)*

*(601)*

## 602

**மடியை மடியா ஒழுகல் குடியைக்**
**குடியாக வேண்டு பவர். 2**

**பரிமேலழகர்:** குடியை குடியாக வேண்டுபவர்-தாம் பிறந்த குடியை மேன்மேல் உயரும் நற்குடியாக வேண்டுவார், மடியை மடியா ஒழுகல் - மடியை மடியாகவே கருதி முயற்சியோடு ஒழுகுக.

முயற்சியோடு என்பது அவாய் நிலையான் வந்தது. நெருப்பில் கொடியது பிறிது இன்மைபற்றி நெருப்பை நெருப்பாகவே கருதுக என்ருற்போல, மடியில் தீயது பிறிது இன்மைபற்றிப் பின்னும் அப் பெயர் தன்னனே கூறினர். அங்ஙனம் கருதியதனைக் கடிந்து முயன்று ஒழுகவே தாம் உயர்வர்; உயரவே குடி உயரும் என்பார், குடியைக் குடியாக வேண்டுபவர் என்ருர். அங்ஙனம் ஒழுகாக்கால் குடி அழியும் என்பது கருத்து. இனி மடியா என்பதனை வினையெச்சமாக்கிக் கெடுத்தொழுகுக என்று உரைப்பாரும் உளர்.

உரை வேறுபாடு

**மணக்குடவர்:** மடியா - மடித்து.

**பரிதியார்:** மடியா - மடியப்பார்க்க வேணும்.

**கவிராஜ பண்டிதர்:** மடிய ஒழுகல் - கெட்டுப் போக நடக்கவேணும்.

*(602)*

## 603

**மடிமடிக் கொண்டொழுகும் பேதை பிறந்த**
**குடிமடியும் தன்னினும் முந்து. 3**

**பரிமேலழகர்:** மடி மடி கொண்டு ஒழுகும் பேதை பிறந்த குடி - விடத் தகுவதாய மடியைத் தன்னுள்ளே கொண்டு ஒழுகும் அறிவு இல்லாதான் பிறந்த குடி, தன்னினும் முந்து மடியும் - அவன் தன்னினும் முந்துற அழியும்.

அழிவு தருவதனை அகத்தே கொண்டு ஒழுகுதலின் பேதை என்றும், அவனல் புறந்தரப்படுவது ஆகலின் குடி தன்னினும் முந்துற அழியும் என்றும் கூறினர். ஆக்கத்தில் பிற்படினும் அழிவின் முற்படும் என்பதாம்.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** மடிக் கொண்டு - வினையின்கண் மடித்தலைச் செய்து.

**பரிதியார்:** மடித்த புத்தி உள்ளவன் கெடுவதற்கு முன்னே அவன் உறவின் முறை முந்தக் கெடும்.

**கவிராஜ பண்டிதர்:** மடிக்கொண்டு ஒழுகும் பேதை - தன் மனசிலே வைத்திருக்கப்பட்ட அறிவு இல்லாதவன். *(603)*

## 604

குடிமடிந்து குற்றம் பெருகும் மடிமடிந்து
மாண்ட உஞற்றி லவர்க்கு. 4

**பரிமேலழகர்:** மடி மடிந்து மாண்ட உஞற்று இலவர்க்கு - மடியின் கண்ணே வீழ்தலால் திருந்திய முயற்சி இலர் ஆயினர்க்கு, குடி மடிந்து குற்றம் பெருகும் - குடியும் மடிந்து குற்றமும் பல்கும்.

மடிந்து எனத் திரிந்துநின்ற வினையெச்சம் இலவர் என்னும் குறிப்பு வினைப்பெயர் கொண்டது. குற்றங்கள் முன்னர்க் கூறுப.

இவை நான்கு பாட்டானும் மடியின் தீமை கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**காளிங்கர் :** குடி மடிந்து குற்றம் பெருகும் - தன் கோல்கீழ் வாழும் குடிகளும் தத்தம் வினைச்செயலைச் செய்யாது மடிந்து பின்னும் தமக்கும் குற்றம் பெருகும்.

குடி மடிந்து என்பது குடிகள் வினைமடிந்து என்றது. குடிமடிந்து என்பதனைச் சுற்றத்தார் மாய்ந்து என்பாரும் உளர்.

### மேற்கோள் விளக்கம்

குடிமடிந்து என்பதற்குக் குடியை மடிவித்து என்று பொருள் கொள்ள வேண்டுமென்றும், வி என்னும் விகுதி தொக்கு நின்றது என்றும் கூறுவர் சிவஞானமுனிவர் (தொல். விருத்தி.) *(604)*

## 605

நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும்
கெடுநீரார் காமக் கலன். 5

**பரிமேலழகர்:** மடி நெடுநீர் மறவி துயில் நான்கும் - மடியும் விரைந்து செய்வதனை நீட்டித்துச் செய்யும் இயல்பும் மறப்பும் துயிலும் ஆகிய இந்நான்கும், கெடு நீரார் காமக் கலன் - இறக்கும் இயல்பினை உடையார் விரும்பி ஏறும் மரக்கலம்.

முன் நிற்கற்பாலதாய மடி செய்யுள் நோக்கி இடைநின்றது. நெடுமையாகிய காலப்பண்பு அதன்கண் நிகழ்வதாய செயல்மேல் நின்றது. காலநீட்டத்தையுடைய செயல்முதல் மூன்றும் தாமத குணத்தில் தோன்றி உடன் நிகழ்வன ஆகலின், மடியோடு ஒருங்கு எண்ணப்பட்டன. இறக்கும் இயல்பு, நாள் உலத்தல். இவை துன்புறும் நீரார்க்கு இன்புறுத்துவபோன்று காட்டி, அவர் விரும்பிக் கொண்டவழித் துன்பத்திடை வீழ்த்தலின், நாள் உலந்தார்க்கு ஆக்கம் பயப்பது போன்று காட்டி அவர் விரும்பி ஏறியவழிக் கடலிடை வீழ்க்கும் கலத்தினை ஒக்கும் என்னும் உவமைக் குறிப்புக் காமக் கலன் என்னும் சொல்லால் பெறப்பட்டது. இதற்கு விரும்பிப் பூணும் ஆபரணம் என்று உரைப்பாரும் உளர்.

### உரை வேறுபாடு

**பரிதியார்.** நெடுநீர் - முடியாத காரியத்தை முயலுதல்.

### ஒப்புமை

**துயில் கெடும் நீரார் காமக்கலன்:**

"உறக்கமுற்றார் என்னுற்றார் எனும்உணர்வி னெடும்ஒதுங்கி."
(கம்ப. நாடவிட்ட. 30.) (605)

## 606

**படிஉடையார் பற்றமைந்தக் கண்ணும் மடிஉடையார்**
**மாண்பயன் எய்தல் அரிது.** 6

**பரிமேலழகர்:** படி உடையார் பற்று அமைந்தக்கண்ணும் - நிலம் முழுதும் ஆண்டாரது செல்வம் தானே வந்து எய்திய இடத்தும், மடி உடையார் மாண் பயன் எய்தல் அரிது - மடி உடையார் அதனால் மாண்ட பயனை எய்துதல் இல்லை.

உம்மை, எய்தாமை விளக்கிநின்றது. மாண் பயன் - பேரின்பம். அச் செல்வம் அழியாமல் காக்கும் முயற்சி இன்மையின் அழியும்; அழியவே தம் துன்பம் நீங்காது என்பதாம். இதற்கு நிலம் முழுதும் உடைய வேந்தர் துணையாதல் கூடியவிடத்தும் என்று உரைப்பாரும் உளர்.

### உரை வேறுபாடு

**காளிங்கர்:** படி உடையார் பற்று அமைந்தக் கண்ணும் - மண் ஆளும் வேந்தரானவர் தம்மினும் வலிய வேந்தரைப்பற்றி வாழ்தல் முற்றும் பெற்ற இடத்தும். *(606)*

## 607

**இடிபுரிந் தெள்ளும்சொல் கேட்பர் மடிபுரிந்து**
**மாண்ட உஞற்றி லவர்.** 7

**பரிமேலழகர்:** மடி புரிந்து மாண்ட உஞற்று இலவர் - மடியை விரும்புதலான் மாண்ட முயற்சி இல்லாதார், இடி புரிந்து எள்ளும் சொல் கேட்பர்- தம் நட்டார்முன் கழறுதலை மிகச் செய்து அதனால் பயன் காணாமையின் பின் இகழ்ந்து சொல்லும் சொல்லைக் கேட்பர்.

இடி என்னும் முதனிலைத் தொழிற்பெயரான், நட்டார் என்பது பெற்றாம். அவர் இகழ்ச்சி சொல்லவே, பிறர் இகழ்ச்சி சொல்லாமையே முடிந்தது. அவற்றிற்கெல்லாம் மாறு சொல்லும் ஆற்றல் இன்மையின் கேட்பர் என்றார்.

### உரை வேறுபாடு

**பரிதியார்:** இடி புரிந்து எள்ளும் சொல் கேட்பர் - மாற்றார் தம்மை இகழ்ச்சி சொல்வது கேட்பர். *(607)*

## 608

**மடிமை குடிமைக்கண் தங்கின்தன் ஒன்னார்க்**
**கடிமை புகுத்தி விடும்.** 8

**பரிமேலழகர்:** மடிமை குடிமைக்கண் தங்கின் - மடியினது தன்மை குடிமை உடையான்கண்ணே தங்குமாயின், தன் ஒன்னார்க்கு அடிமை புகுத்தி

விடும் - அஃது அவனைத் தன் பகைவர்க்கு அடியனும் தன்மையை அடைவித்து விடும்.

மடியினது தன்மை, காரியக்கேடு. குடிமை - குடி செய்தல் தன்மை. அஃது அதனையுடைய அரசன் மேற்று ஆதல், தன் ஒன்னார்க்கு என்றதனுன் அறிக. அடியனும் தன்மை, தாழ்ந்து நின்று ஏவல் கேட்டல்.

இவை நான்கு பாட்டானும் மடிமைக் குற்றங்கள் கூறப்பட்டன.

### உரை வேறுபாடு

**காளிங்கர்:** மடிமை - தனக்கு உரிய அரசர் வாழ்க்கைக்கு உரியன வற்றை முயலாது மடிந்து ஒழுகும் மடித் தன்மையும், தன்கோல்கீழ் வாழும் குடிகளது குணமும் குற்றமும் ஆராயாமல் மடிதலும் மற்றுப் பருவம் வழு வாமல் ஆங்கு உழவு முதலிய முயற்சியின் மடிதலும். (608)

## 609

குடிஆண்மை யுள்வந்த குற்றம் ஒருவன்
மடிஆண்மை மாற்றக் கெடும். 9

**பரிமேலழகர்:** ஒருவன் மடி ஆண்மை மாற்ற - ஒருவன் தன் மடி யாளும் தன்மையை ஒழிக்கவே, குடி ஆண்மையுள் வந்த குற்றம் கெடும் - அவன் குடியுள்ளும் ஆண்மையுள்ளும் வந்த குற்றங்கள் கெடும்.

மடியாளும் தன்மை, மடி உடைமைக்கு ஏதுவாய தாமதகுணம். குடி யாண்மை என்பது உம்மைத்தொகை. அவற்றின்கண் வந்த குற்றம் என்பது மடியான்அன்றி முன்னே பிற காரணங்களான் நிகழ்ந்தவற்றை. அவையும் மடியாண்மையை மாற்றி முயற்சி உடையனுகை நீங்கும் என்பதாம்.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** குடியாண்மை - குடியை ஆளுதல் உடைமை. குற்றம்- குடிக்கு வேண்டுவன செய்யாமையால் வரும் குற்றம். (609)

## 610

மடிஇலா மன்னவன் எய்தும் அடிஅளந்தான்
தாஅய தெல்லாம் ஒருங்கு. 10

**பரிமேலழகர்:** அடி அளந்தான் தாஅயது எல்லாம் - தன் அடி அள வானே எல்லா உலகையும் அளந்த இறைவன் கடந்த பரப்பு முழுதையும், மடி இலா மன்னவன் ஒருங்கு எய்தும் - மடி இலாத அரசன் முறையான் அன்றி ஒருங்கே எய்தும்.

அடி அளந்தான் என்றது வாளா பெயராய் நின்றது.[1] தாவியது என்பது இடைக்குறைந்து நின்றது. எப்பொழுதும் வினையின்கண்ணே முய றலின், இடையீடு இன்றி எய்தும் என்பதாம்.

இவை இரண்டு பாட்டானும் மடி இலாதான் எய்தும் பயன் கூறப் பட்டது.

### ஒப்புமை

1. **திருமால் தாவி அடிஅளந்தது:**

"மண்ணும் விண்ணும் தாய அடியளந்தான்"
(**சம்பந்தர்.** தூங்கானை மாடம், 9.)

1. தாஅயது என்பதில் அளத்தல் பெறப்படுதலின் இவ்வாறு கூறினர்.

"தாள்ப ரப்பிமண் தாவிய ஈசனை" (திருவாய். 3.3: 11.)

"நாலினோ டுலக மூன்றும்..............விண்டு
காலினால் அளந்த வான முகட்டையும்." (கம்ப. கடல்தாவு. 33.)

2. முற்றும்:

"இனியாரும் இல்லா தார் எம்மிற் பிறர்யார்
தனியேம்யாம் என்றொருவர் தாம்மடியல் வேண்டா
முனிவிலர் ஆகி முயல்க முனிவில்லார்
முன்னிய தெய்தாமை இல்." (பழமொழி, 161.) (610)

---

# 62. ஆள்வினை உடைமை

பரிமேலழகர்: அஃதாவது, இடைவிடாது மெய்ம்முயற்சி உடையன் ஆதல். அஃது ஆளும் வினையெனக் காரியத்தால் கூறப்பட்டது. மடி கெடுத்தாலும் வினை முயற்சியான் அன்றி ஆளப்படாமையின், இது மடி இன்மையின்பின் வைக்கப்பட்டது.

### 611

அருமை உடைத்தென் றசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும். 1

பரிமேலழகர்: அருமை உடைத்து என்று அசாவாமை வேண்டும் - தம் சிறுமை நோக்கி நாம் இவ் வினைமுடித்தல் அருமை உடைத்து என்று கருதித் தளராதொழிக; பெருமை முயற்சி தரும் - அது முடித்தற்கு ஏற்ற பெருமையைத் தமக்கு முயற்சி உண்டாக்கும்.

சிறுமை நோக்கி என்பது பெருமை தரும் என்றதனானும், வினைமுடித்தல் என்பது அதிகாரத்தானும் வருவிக்கப்பட்டன. விடாது முயலத் தாம் பெரியர் ஆவர்; ஆகவே, அரியனவும் எளிதில் முடியும் என்பதாம்.

#### ஒப்புமை

முற்றும்:

"இசையா தெனினும் இயற்றியோ ராற்றான்
அசையாது நிற்பதாம் ஆண்மை-இசையுங்கால்
கண்டல் திரையலைக்கும் கானலம் தண்சேர்ப்ப
பெண்டிரும் வாழாரோ மற்று." (நாலடி. 194.)

"பெருமை உடையதன் அருமை பழியார்" (முதுமொழிக். 3. 3.)

"முயற்சியின் முடியாக் கருமம் இல்லெனா." (பெருங்.5. 4 : 14.)
(611)

### 612

வினைக்கண் வினைகெடல் ஓம்பல் வினைக்குறை
தீர்ந்தாரின் தீர்ந்தன் றுலகு. 2

பரிமேலழகர்: வினை குறை தீர்ந்தாரின் உலகு தீர்ந்தன்று - வினையாகிய குறையைச் செய்யாது விட்டாரை உலகம் விட்டது; வினைக்கண் வினைகெடல் ஓம்பல் - ஆதலால், செய்யப்படும் வினைக்கண் தவிர்ந்து இருத்தலை ஒழிக.

குறை - இன்றியமையாப் பொருள். அது, "பயக்குறை இல்லைத்தாம் வாழு நாளே"[1] என்பதனுனும் அறிக. இதற்கு வினை செய்ய வேண்டும் குறையை நீங்கினரின் நீங்கிற்று என்று உரைப்பாரும் உளர்.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** வினைசெய்யும் காலத்து வினைகெடுதலைத் தவிர்க்க; வினைக்குறையை முடித்தாரினின்றும் உலகம் விடப்பட்டதன்று.

**பரிதியார்:** தீர்ந்தன்று உலகு - உலகம் கைவிடாது.

**காளிங்கர்:** வினைக்குறை தீர்ந்தாரின் தீர்ந்தன்று உலகு - வினைக் குறைபாடு நீங்கிய பெரியோர்மாட்டே தெளிவுற நிலைபெற்றது இவ்வுலகம்.

**கவிராஜ பண்டிதர்:** வினைக் குறையாவது - தாம் வாழ்நாள் குறை படாமல் நிற்கும் வண்ணம் புண்ணியத்தைச் செய்தல். *(612)*

## 613

தாளாண்மை என்னும் தகைமைக்கண் தங்கிற்றே
வேளாண்மை என்னும் செருக்கு. 3

**பரிமேலழகர்:** தாளாண்மை என்னும் தகைமைக்கண் தங்கிற்று - முயற்சி என்று சொல்லப்படுகின்ற உயர்ந்த குணத்தின்கண்ணே நிலை பெற்றது, வேளாண்மை என்னும் செருக்கு - எல்லார்க்கும் உபகாரம் செய்தல் என்னும் மேம்பாடு.

பொருள் கைகூடுதலான் உபகரித்தற்கு உரியார் முயற்சி உடையார் என்பார் அவ்வக் குணங்கள்மேல் வைத்தும், அது பிறர்மாட்டு இல்லை என்பார் தங்கிற்றே என்றும் கூறினர்.

இவை மூன்று பாட்டானும் முயற்சியது சிறப்புக் கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** இஃது அறம் செய்தலும் இதனானே ஆகும் என்றது.
**பரிதியார்:** செருக்கு - பிரியம்.

### ஒப்புமை

1. **தாளாண்மையும் வேளாண்மையும்:**

"தாளாண்மை யில்லாதான் வேளாண்மை." (குறள், 614.)

2. **முற்றும்:**

"வேளாளர் என்றவர்கள் வள்ளன்மையான் மிக்கிருக்கும்
தாளாளர்." (**சம்பந்தர்.** ஆக்கூர்த் தான்தோன்றி மாடம், 3.)
*(613)*

## 614

**தாளாண்மை இல்லாதான் வேளாண்மை பேடிகை**
**வாள்ஆண்மை போலக் கெடும்.** 4

**பரிமேலழகர்:** தாளாண்மை இல்லாதான் வேளாண்மை - முயற்சி இல்லாதவன் உபகாரியாம் தன்மை, பேடி கை வாள் ஆண்மை போல கெடும் - படை கண்டால் அஞ்சும் பேடி அதனிடைத் தன் கையில் வாளை ஆளுதல் தன்மை போல இல்லையாம்.

---

1. **புறநா.** 188:7.

ஆள் என்பது முதனிலைத் தொழிற் பெயர்.[1] பேடி வாளைப் பணி கோடல் கருத்து உடையள் ஆயினும் அது தன் அச்சத்தால் முடியாதவாறு போல, முயற்சி இல்லாதான் பலர்க்கும் உபகரித்தல் கருத்து உடையன் ஆயினும் அது தன் வறுமையால் முடியாது என்பதாம். வாளாண்மை என்பதற்கு வாளாற் செய்யும் ஆண்மை என்று உரைப்பாரும் உளர்.

இதனான் அஃது இல்லாதானது குற்றம் கூறப்பட்டது.

**உரை வேறுபாடு**

**காளிங்கர்:** பேடிகை வாளாண்மை போல கெடும் - உறையகத்து இருந்த வாளாண்மை போலக் கெடும். பேடிகை என்பது வாளினது உறை. *(614)*

## 615

இன்பம் விழையான் வினைவிழைவான் தன்கேளிர்
துன்பம் துடைத்தூன்றும் தூண். 5

**பரிமேலழகர்:** இன்பம் விழையான் வினை விழைவான் - தனக்கு இன்பத்தை விரும்பானாகி வினை முடித்தலையே விரும்புவான், தன் கேளிர் துன்பம் துடைத்து ஊன்றும் தூண் - தன் கேளிராகிய பாரத்தின் துன்பத்தினை நீக்கி அதனைத் தாங்கும் தூணும்.

இஃது ஏகதேச உருவகம். ஊன்றும் என்றது அப் பொருட்டாதல், "மதலையாய் மற்றதன் வீழூன்றி யாங்கு"[2] என்பதனானும் அறிக. சுற்றத்தார் நட்டாரது வறுமையும் தீர்த்து அவர்க்கு ஏமம் செய்யும் ஆற்றலை உடையனும் எனவே தன்னைக் கூறவேண்டா ஆயிற்று. காரியத்தை விழையாது காரணத்தை விழைவான் எல்லாப் பயனும் எய்தும் என்றதனால், காரணத்தை விழையாது காரியத்தை விழைவான் யாதும் எய்தான் என்பது பெற்றாம்.

இதனால் அஃது உடையானது நன்மை கூறப்பட்டது.

**உரை வேறுபாடு**

**காளிங்கர்:** தன் கேளிர் - கேளிராகிய நட்டோர்க்கும் சுற்றத்தார்க்கும் சான்றோர் முதலிய அனைவர்க்கும்.

**ஒப்புமை**

1. **வினை விழைவான்:**

"வினையே ஆடவர்க் குயிரே" *(குறுந். 135. 1.)*

"வினைநன் றாதல் வெறுப்பக் காட்டி" *(அகநா. 33. 1.)*

2. **இன்பம் விழையான் துன்பம் துடைப்பான்:**

"இன்பம்வெய் யோர்க்குத் துன்பம் எளிது." *(முதுமொழிக். 8:6.)*

*(615)*

## 616

முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும். 6

**பரிமேலழகர்:** முயற்சி திருவினை ஆக்கும் - அரசர் மாட்டு உளதாய முயற்சி அவரது செல்வத்தினை வளர்க்கும்; முயற்று இன்மை இன்மை புகுத்தி விடும் - அஃது இல்லாமை வறுமையை அடைவித்துவிடும்.

---

1. வாளாண்மை என்பதில் உள்ள ஆண்மையை ஆள் மை என்று பிரித்து ஆளுதல் தன்மை என்று உரை கூறியது காண்க.

2. நாலடி. 197.

செல்வம், அறுவகை அங்கங்கள். வறுமை, அவற்றுன் வறியராதல். அதனை அடைவிக்கவே, பகைவரான் அழிவர் என்பது கருத்து.

### ஒப்புமை

**முயற்சி இன்மையால் திரு நீங்குதல்:**

"செய்வினை மடிந்தோர்ச் சேர்ந்துறை விலளே
மையறு தாமரை மலர்மகள்." (பெருங். 2.17:39-40.) (616)

## 617

**மடிஉளாள் மாமுகடி என்ப மடிஇலான்**
**தாள்உளாள் தாமரையி னுள்.** 7

**பரிமேலழகர்:** மா முகடி மடி உளாள் - கரிய சேட்டை ஒருவன் மடியின்கண்ணே உறையும்; தாமரையினுள் மடி இலான் தாள் உளாள் என்ப - திருமகள் மடி இலாதானது முயற்சிக்கண்ணே உறையும் என்று சொல்லுவர் அறிந்தோர்.

பாவத்தின் கருமை அதன் பயனுய முகடிமேல் ஏற்றப்பட்டது. மடியும் முயற்சியும் உடையார்மாட்டு நிலையை அவைதம்மேல் வைத்துக் கூறினர்.

இவை இரண்டு பாட்டானும் அவ் விருமைக்கும் ஏது கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** மடி - சோம்பலின்கண்ணே.

### ஒப்புமை

**மடியிலான் தாள்உளாள் தாமரையினுள்:**

"மடியிலா அரசினுன் மார்புளா ளோவளர்
முடியுளா ளோதெரிந் துணர்கிலா முளரியாள்."
(கம்ப. எதிர்கோட். 8.) (617)

## 618

**பொறிஇன்மை யார்க்கும் பழிஅன் றறிவறிந்**
**தாள்வினை இன்மை பழி.** 8

**பரிமேலழகர்:** பொறி இன்மை யார்க்கும் பழிஅன்று - பயனைத் தருவதாய விதி இல்லாமை ஒருவற்கும் பழி ஆகாது; அறிவு அறிந்து ஆள்வினை இன்மை பழி - அறிய வேண்டுமவற்றை அறிந்து வினை செய்யாமையே பழியாவது.

அறிய வேண்டுவன, வலி முதலாயின. தெய்வம் இயையா வழி ஆள்வினை உடைமையால் பயன் இல்லை என்பாரை நோக்கி, உலகம் பழவினை பற்றிப் பழியாது, ஈண்டைக் குற்றமுடைமைபற்றியே பழிப்பது என்ருர். அதனுல் விடாது முயல்க என்பது குறிப்பெச்சம்.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** பொறியின்மை - புண்ணியம் இன்மை. அறிவு - காரிய அறிவு.

**பரிதியார்:** மெய் வாய் கண் மூக்குச் செவி குறைந்தது பங்கம் அல்ல.

ஒப்புமை

**பொறியும் ஆள்வினையும்:**

"கூட்டமொத் திருந்த வீரர் குறித்ததோர் பொருட்கு முன்னுள்
ஈட்டிய தவமும் பின்னர் முயற்சியும் இயைந்த தொத்தார்."
(கம்ப. மாரமரப். 60.) (618)

## 619

**தெய்வத்தான் ஆகா தெனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்.** 9

**பரிமேலழகர்:** தெய்வத்தான் ஆகாது எனினும் - முயன்ற வினை பால் வகையால் கருதிய பயனைத் தாராது ஆயினும், முயற்சி தன்மெய் வருத்தக் கூலி தரும் - முயற்சி தனக்கு இடமாய உடம்பு வருந்திய வருத்தத்தின் கூலி யளவு தரும்; பாழ் ஆகாது.

தெய்வத்தான் ஆயவழித் தன் அளவின் மிக்க பயனைத் தரும் என்பது உம்மையால் பெற்றாம். இருவழியும் பாழாகல் இன்மையின் தெய்வம் நோக்கி இராது முயல்க என்பது கருத்து.

உரை வேறுபாடு

**பரிதியார்:** தெய்வ சகாயத்தினாலே ஆகிற காரியம் தன் முயற்சி யாலே ஒன்று பாதி பலிக்கும்.

**கவிராஜ பண்டிதர்;** மெய் வருந்த[1] - தன் உடம்பு வருந்தினால்.
(619)

## 620

**ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழா துஞற்று பவர்.** 10

**பரிமேலழகர்:** ஊழையும் உப்பக்கம் காண்பர் - பயனை விலக்குவ தாய ஊழினையும் புறம் காண்பர், உலைவு இன்றித் தாழாது உஞற்றுபவர் - அவ் விலக்கிற்கு இளையாது வினையைத் தாழ்வு அற முயல்வார்.

தாழ்வு அறுதல், சூழ்ச்சியினும், வலி முதலிய அறிதலினும், செயலி னும் குற்றம் அறுதல். ஊழ் ஒருகாலாக இருகாலாக அல்லது விலக்கல்ஆகா மையின் பலகால் முயல்வார் பயன் எய்துவர் என்பார் உப்பக்கம் காண்பர் என்றார்.

தெய்வத்தான் இடுக்கண் வரினும் முயற்சி விடற்பாலது அன்று என்பது இவை மூன்று பாட்டானும் கூறப்பட்டது.

ஒப்புமை

**ஊழையும் உப்பக்கம் காண்டல்:**

"உற்றது கொண்டு............
மற்றது வினையின் வந்த தாயினும் மாற்ற லாற்றும்
பெற்றியர்"

"உதிக்கும் உலை...............
விதிக்கும் விதியாகும்என் விற்றொழில்."
(கம்ப. மந்திரப். 7, நகர் நீங்கு. 134.) (620)

---

1. பி - ம். 'மெய் வருந்த.'

# 63. இடுக்கண் அழியாமை

*பரிமேலழகர்:* அஃதாவது வினையின்கண் முயல்வான் தெய்வத்தான் ஆக, பொருள் இன்மையான் ஆக, மெய்வருத்தத்தான் ஆகத் தனக்கு இடுக்கண் வந்துழி, அதற்கு மனம் கலங்காமை. அதிகார முறைமையும் இதனானே விளங்கும்.

### 621

இடுக்கண் வருங்கால் நகுக அதனை
அடுத்தூர்வ தஃதொப்ப தில். 1

*பரிமேலழகர்;* இடுக்கண் வரும் கால் நகுக - ஒருவன் வினையால் தனக்கு இடுக்கண் வரும் இடத்து அதற்கு அழியாது உள்மகிழ்க, அதனை அடுத்து ஊர்வது அஃது ஒப்பது இல் - அவ் விடுக்கணை மேன்மேல் அடர வல்லது அம் மகிழ்ச்சிபோல்வது பிறிது இல்லை ஆகலான்.

வினை இனிது முடிந்துழி நிகழற்பாலதாய மகிழ்ச்சியை அதற்கு இடையே இடுக்கண் வருவழிச் செய்யவே, அவன் அழிவு இன்றி மன எழுச்சியான் அதனைத் தள்ளி அக் குறை முடிக்கும் ஆற்றல் உடையனும் ஆகலின், அதனை அடுத்தூர்வது அஃதொப்பது இல் என்றார்.

**ஒப்புமை**

*நகுதலால் இடுக்கணை வெல்லுதல்:*

''இடுக்கண்வந் துற்ற காலை எரிகின்ற விளக்குப் போல
நடுக்கமொன் றானு மின்றி நகுகதாம் நக்க போழ்தவ்
விடுக்கணை யரியு மெஃகாம்.'' *(சீவக. 509.) (621)*

### 622

வெள்ளத் தனைய இடும்பை அறிவுடையான்
உள்ளத்தின் உள்ளக் கெடும். 2

*பரிமேலழகர்:* வெள்ளத்து அனைய இடும்பை - வெள்ளம் போலக் கரையிலவாய இடும்பைகள் எல்லாம், அறிவு உடையான் உள்ளத்தின் உள்ள கெடும் – அறிவு உடையவன் தன் உள்ளத்தான் ஒன்றனை நினைக்க அத்துணையானே கெடும்.

இடும்பையாவது உள்ளத்து ஓர் கோட்பாடே அன்றிப் பிறிது இல்லை என்பதூஉம், அது மாறுபடக்கொள்ள நீங்கும் என்பதூஉம் அறிதல் வேண்டுதலின் அறிவுடையான் என்றும், அவ்வுபாயத்து எண்மை தோன்ற, 'உள்ளத்தின் உள்ள' என்றும் கூறினார்.

இவை இரண்டு பாட்டானும் ஊழினான் ஆய இடுக்கணால் அழியாமைக்கு உபாயம் கூறப்பட்டது.

**உரை வேறுபாடு**

**மணக்குடவர்:** உள்ள - வினைப்பயன் என்று நினைக்க.

**காளிங்கர்:** அறிவுடையார் உள்ளத்தின் உள்ள கெடும் - அறிவுடையாளராகிய அரசர் தம் அறிவினால் உள்ளத்து உணர்ந்து யாம் முன்

1. 'துன்பந்தானும் உயிர்க்கு இயல்பு அன்றிக் கணிகமாய் மனத்திடை நிகழ்வதோர் கோட்பாடாகலின்' (630, உரை) என்பர் **பின்.**

செய்த வினைப்பயனே எய்திய இன்பமும் இடரும் ஆகலான் இவை, இனிப் பகுத்துக் கோடல் பிறர்க்கு அரிது என்று இங்ஙனம் உண்மை உணரவே, எய்திய இடுக்கண் தானே கெட்டுவிடும்.

**கவிராஜ பண்டிதர்:** ஒன்றை நினைக்கிறது, முன் செய்த தீவினை என்பது.

ஒப்புமை

முற்றும்:

"சொற்றார்கள் சொற்றதொகை யல்லதுணை யொன்றே
முற்று முடிந்தநெடு வானினிடை முந்நீர்
இற்றுவி எற்றெனினும் யான்இனி இலங்கை
உற்றால் விலங்கும்இடை யூறென உணர்ந்தான்."

"ஊறுகடி தூறுவன வூறிலறம் முன்னுத்
தேறிலி அரக்கர்புரி தீமையவை தீர
ஏறுவகை யாண்டைய இராமனென வெல்லாம்
மாறுமதின் மாறுபிறி தில்லென வலித்தான்."

(கம்ப. கடல்தாவு. *88, 89.*) *(622)*

### 623

**இடும்பைக் கிடும்பை படுப்பர் இடும்பைக்**
**கிடும்பை படாஅ தவர்.** 3

**பரிமேலழகர்:** இடும்பைக்கு இடும்பை படாஅ தவர் - வினை செய்யுங்கால் அதற்கு இடையே வந்த துன்பத்திற்கு வருந்ாதவர், இடும்பைக்கு இடும்பை படுப்பர் - அத் துன்பந் தனக்குத் தாம் துன்பம் விளைப்பர்.

வருந்துதல், இளைத்துவிட நினைத்தல். மனத்திட்பம் உடையராய் விடாது முயலவே வினை முற்றுப்பெற்றுப் பயன் படும்; படவே, எல்லா இடும்பையும் இலவாம் ஆகலின், இடும்பைக்கு இடும்பை படுப்பர் என்றார். வருகின்ற பாட்டு இரண்டினும் இதற்கு இவ்வாறே கொள்க. சொற் பொருட் பின்வருநிலை.[1]

ஒப்புமை

**இடும்பைக்கு இடும்பை செய்தல்:**

"இடையூற்றிற் கிடையூறாய் யான்காப்பென்."(கம்ப. கையடைப்.*12.*) *(623)*

### 624

**மடுத்தவாய் எல்லாம் பகடன்னான் உற்ற**
**இடுக்கண் இடர்ப்பா டுடைத்து.** 4

**பரிமேலழகர்:** மடுத்த வாய் எல்லாம் பகடு அன்னான் - விலங்கிய இடங்கள் எல்லாவற்றினும் சகடம் ஈர்க்கும் பகடுபோல வினையை எடுத்துக் கொண்டு உய்க்கவல்லானை, உற்ற இடுக்கண் இடர்ப்பாடு உடைத்து - வந்து உற்ற இடுக்கண் தானே இடர்ப்படுதலை உடைத்து.

மடுத்த வாய் எல்லாம் என்பது பொதுப்பட நின்றமையின், சகடத்திற்கு அளற்று நிலம் முதலியவாகவும், வினைக்கு இடையூறுகளாகவும்

1. இடும்பை என்னும் சொல் ஒரே பொருளில் பின்னும் பின்னும் வந்தது.

கொள்க. பகடு மருங்கு ஒற்றியும், மூக்கு ஊன்றியும், தாள் தவழ்ந்தும்[1] அரி தின் உய்க்குமாறுபோலத் தன் மெய்வருத்தம் நோக்காது முயன்று உய்ப் பான் என்பார் பகடு அன்னன் என்றார்.

### உரை வேறுபாடு

**பரிதியார்:** மடுத்தவாய் எல்லாம் பகடு அன்னன் - மேடு என்றும் பள்ளம் என்றும் பாராமல் நடக்கின்ற வண்டில் போலே.

### ஒப்புமை

**மடுத்தவாய் எல்லாம் பகடு தாங்குதல்:**

''அள்ளல் தங்கிய பகடுறு விழுமம்
கள்ளார் களமர் பெயர்க்கும் ஆர்ப்பே'' *(மதுரைக். 259-60.)*

''கழியுப்பு முகந்து கல்நாடு மடுக்கும்
ஆரைச் சாகாட்டு ஆழ்ச்சி போக்கும்
உரனுடை நோன்பகட் டன்ன வெங்கோன்''

''அச்சொடு தாக்கிப் பாருற்று இயங்கிய
பண்டச் சாகாட் டாழ்ச்சி சொல்லிய
வரிமணல் ஞெமரக் கற்பக நடக்கும்
பெருமிதப் பகட்டுக்குத் துறையும் உண்டோ''
*(புறநா. 60: 7-9, 90:6-9.)*

''குண்டுதுறை இடுமணல் கோடுற அழுந்திய
பண்டிதுறை ஏற்றும் பகட்டிணைப் போல'' *(பெருங். 1.53:53-4.)*

''நிரம்பாத நீர்யாற் றிடுமணலுள் ஆழ்ந்து
பெரும்பார ஆடவர்போல் பெய்பண்டம் தாங்கி
மருங்கொற்றி மூக்கூன்றித் தாள்தவழ்ந்து வாங்கி
உரங்கெட் டுறுப்பழுகிப் புல்லுண்ணு பொன்றும்.''
*(சீவக. 2784.) (624)*

## 625

**அடுக்கி வரினும் அழிவிலான் உற்ற**
**இடுக்கண் இடுக்கண் படும். 5**

**பரிமேலழகர்:** அடுக்கி வரினும் - இடைவிடாது மேன்மேல் வந்தன ஆயினும், அழிவு இலான் உற்ற இடுக்கண் இடுக்கண் படும் - தன் உள்ளக் கோட்பாடு விடாதான் உற்ற இடுக்கண் தாம் இடுக்கணிலே பட்டுப் போம்.

ஒன்றே பலகால் வருதலும் வேறுபட்டன விராய்வருதலும் அடங்க, அடுக்கி வரினும் என்றார். அழிவு என்னும் காரணப் பெயர் காரியத்தின்மேல் நின்றது.

இவை மூன்று பாட்டானும் தெய்வத்தான் ஆயதற்கு அழியாமை கூறப்பட்டது. *(625)*

## 626

**அற்றேமென் றல்லல் படுபவோ பெற்றேமென்**
**றோம்புதல் தேற்றா தவர். 6**

**பரிமேலழகர்:** அற்றேம் என்று அல்லல் படுபவோ - வறுமைக் காலத்து யாம் வறியம் ஆயினேம் என்று மனத்தால் துயர் உழப்பரோ, பெற் றேம் என்று ஓம்புதல் தேற்றாதவர் - செல்வக்காலத்து இது பெற்றேம் என்று இவறுதலை அறியாதார்?

1. ''மருங்கொற்றி மூக்கூன்றித் தாள்தவழ்ந்து'' (சீவக. 2784.)

பெற்றவழி இவருமை நோக்கி அற்ற வழியும் அப் பகுதி விடாது ஆகலின், அல்லற்பாடு இல்லை ஆயிற்று. இதனன் பொருள் இன்மையான் ஆயதற்கு அழியாமையும் அதற்கு உபாயமும் கூறப்பட்டன.

உரை வேறுபாடு

மணக்குடவர்: ஓம்புதல் தேற்ருதவர் - போற்றி வைத்தலை நன்று என்று தெளியாதவர்.

பரிதியார்: பொருளும் கிளையும் அற்றேம் என்று விதனப்படார், பொருளும் கிளையும் நிலையில்லை என்று அறிந்திருப்பார்.

கவிராஜ பண்டிதர்: ஓம்புதல் தேற்ருதவர் - சந்தோஷப் படாத பேர். (626)

## 627

இலக்கம் உடம்பிடும்பைக் கென்று கலக்கத்தைக்
கையாருக் கொள்ளாதாம் மேல். 7

பரிமேலழகர்: உடம்பு இடும்பைக்கு இலக்கம் என்று - நாற்கதியினும் உள்ள உடம்புகள் இடும்பை என்னும் வாளுக்கு இலக்கு என்று தெளிந்து, கலக்கத்தை கையாறு கொள்ளாதாம் மேல் - தம்மேல் வந்த இடும்பையை இடும்பையாகக் கொள்ளார் அறிவுடையார்.

ஏகதேச உருவகம். உடம்பு: சாதிப்பெயர். கலக்கம் என்னும் காரியப் பெயர் காரணத்தின்மேல் நின்றது. கையாறு என்பது ஒருசொல். இதற்கு ஒழுக்க நெறி என்று உரைப்பாரும் உளர். இயல்பாகக் கொள்வர் என்பது குறிப்பெச்சம்.

உரை வேறுபாடு

மணக்குடவர்: இது மேல் என்றமையால் தவம் செய்யுங்கால் வரும் துன்பத்திற்கு அழியாதாரைக் கூறிற்று.

பரிதியார்: உடம்பு துன்பத்துக்கு இலக்கு என்று துன்பத்தால் துன்பப்படார். உடம்புக்கு அடுத்த கன்மம் அநுபவிக்கும் என்று எண்ணுவார்.

காளிங்கர்: கலக்கத்தை கையாறு கொள்ளாதாம் - மனம் கலங்கு வதோர் கலக்கத்தைத் தமது ஒழுக்க நெறிக்கு உரியதாகக் கொண்டிடார்.

கவிராஜபண்டிதர்: அறிவுடையவன் சரீரம் அநித்தியம் என்று துக்கத்துக்கு விசாரப் படான். (627)

## 628

இன்பம் விழையான் இடும்பை இயல்பென்பான்
துன்பம் உறுதல் இலன். 8

பரிமேலழகர்: இன்பம் விழையான் இடும்பை இயல்பு என்பான் - தன் உடம்பிற்கு இன்பம் ஆயவற்றை விரும்பாதே வினையால் இடும்பை எய்துதல் இயல்பு என்று தெளிந்திருப்பான், துன்பம் உறுதல் இலன் - தன் முயற்சியால் துன்பம் உறான்.

இன்பத்தை விழையினும், இடும்பையை இயல்பு என்றது காக்கக் கருதினும், துன்பம் விளைதலின் இவ் விரண்டும் செய்யாதானைத் துன்பம் உறுதல் இலன் என்றார்.

ஒப்புமை

இடும்பை இயல்பு:

"இன்பம் உண்டேல் துன்பம் உண்டு ஏழை மனைவாழ்க்கை"
(சுந்தரர். எதிர்கொள்பாடி. 8.)

"அல்லலும் உள இன்பம் அணுகலும் உளவன்றே."
(கம்ப. வனம்புகு. 27.) (628)

### 629

இன்பத்துள் இன்பம் விழையாதான் துன்பத்துள்
துன்பம் உறுதல் இலன். 9

**பரிமேலழகர்:** இன்பத்துள் இன்பம் விழையாதான்-வினையால் தனக்கு இன்பம் வந்துழி அதனை அனுபவியாநின்றே மனத்தான் விரும்பாதான், துன்பத்துள் துன்பம் உறுதல் இலன் - துன்பம் வந்துழியும் அதனை அனுபவியா நின்றே மனத்தால் வருந்தான்.

துன்பம் - முயற்சியான் வரும் இடுக்கண். இரண்டையும் ஒரு தன்மையாகக் கோடலின், பயன்களும் இல ஆயின.

உரை வேறுபாடு

**மணக்குடவர்:** இன்பம் நுகரும் இடத்து அதனை விரும்பாமையாவது அவ்விடத்துத் தான் அழிந்து நில்லாமை. இது காமத்தால் வரும் துன்பத்திற்கு அழியாதாரைக் கூறிற்று. (629)

### 630

இன்னாமை இன்பம் எனக்கொளின் ஆகும்தன்
ஒன்னார் விழையும் சிறப்பு. 10

**பரிமேலழகர்:** இன்னாமை இன்பம் என கொளின் - ஒருவன் வினை செய்யும் இடத்து முயற்சியான் வரும் துன்பந்தன்னையே தனக்கு இன்பமாகக் கற்பித்துக்கொள்வான் ஆயின், தன் ஒன்னார் விழையும் சிறப்பு ஆகும் - அதனால் தன் பகைவர் நன்கு மதித்தற்கு ஏதுவாய உயர்ச்சி உண்டாம்.

துன்பந்தானும் உயிர்க்கு இயல்பு அன்றிக் கணிகமாய்[1] மனத்திடை நிகழ்வதோர் கோட்பாடு ஆகலின், அதனை மாறுபடக் கொள்ளவே,[2] அதற்கு அழிவின்றி மனமகிழ்ச்சி உடையனாய் அதனால் தொடங்கிய வினை முடித்தே விடும் ஆற்றல் உடையனும் என்பது கருத்து.

இவை நான்கு பாட்டானும் மெய்வருத்தத்தான் ஆயதற்கு அழியாமையும், அதற்கு ஓர் உபாயமும் கூறப்பட்டன.

உரை வேறுபாடு

**காளிங்கர்:** தனக்கு ஓர் இன்பம் வந்த இடத்து அதனையும், செய்தியின் வந்த சிற்றின்பம் ஆகலான் இன்னாத் தன்மையது என இங்ஙனம் இறைவன் கருதிக் கொள்வனாயின் மற்று அது தெவ்வரும் தன்னை விரும்பும் சிறப்புடைத்தாகும்.

---

1. கணிகம் - கணப்பொழுது நிற்பது.

2. 'என் குடி முழுதும் இன்புற்று உயரவே நான் இருமையும் எய்துதலின் இம்மெய் வருத்தமாத்திரம் எனக்கு நன்றென்று முயலும் அறிவுடையான்' என்று துன்பத்தை இன்பமாகக் கொள்வதைப் பின் ஓரிடத்தில் விளக்குவர். (குறள், 1029, உரை.)

அன்றியும் உலகத்து இனிமை செய்தோர் இனியார் ஆதலும் மற்றும் இன்னாமை செய்தோர் இன்னாதார் ஆதலும் இயல்பு அன்றே. அதனால் ஒருவர் தம் கருத்தால் இன்னாமை செய்யினும் அதனை இவர் எமக்கு இதின் அடுக்கும் எனக்கருதிக் கொள்வராயின் தாம் அவர்க்கு இனியர் ஆம் அத்துணை அல்லது இன்னாராதல் இன்று என்பதுவும் கூறியவாறு. *(630)*

---

## அங்க இயல்

**பரிமேலழகர்:** இனி முறையானே அரசியல் நடாத்துதற்கண் ஒன்றற்கு ஒன்று துணையாய அங்கங்களது இயல்பு முப்பத்திரண்டு அதிகாரத்தால் கூறுவான் எடுத்துக்கொண்டு, அவை ஆறனுள்ளும்[1] காவற் சாகாடு கைத்தற்கண்[2] அவ்வரசற்கு இணையாய அமைச்சனது இயல்பு பத்து அதிகாரத்தால் கூறுவான் தொடங்கி, முதற்கண் அமைச்சுக் கூறுகின்றார்.

---

# 64. அமைச்சு

**பரிமேலழகர்:** அஃதாவது அமைச்சனது தன்மை; என்றது அவன்தன் குணங்களையும் செயல்களையும்.

**மணக்குடவர்:** அமைச்சாவது அமைச்சர் செய்யும் திறம் கூறுதல். அஃதாவது அது கூறிய அதிகாரம் பத்தினும் முற்பட அமைச்சர்க்கு இன்றியமையாக் குணங்கள் எல்லாம் ஓர் அதிகாரத்தானும், வாத மண்டலத்திலிருந்து செய்யவேண்டுவன நான்கு அதிகாரத்தானும், புறமண்டலத்திற்குப் போம் தூதர் இலக்கணம் ஓர் அதிகாரத்தானும், அவர் செய்யும் திறன் நான்கு அதிகாரத்தானும் கூறினார் என்று கொள்ளப்படும். மேல் அரசர் செய்யும் திறன் கூறினார்; இனி ஒரு வினைசெய்து முடிக்குங்கால் அமைச்சு வேண்டுதலின், அதன்பின் இது கூறப்பட்டது.

### 631

கருவியும் காலமும் செய்கையும் செய்யும்
அருவினையும் மாண்ட தமைச்சு. 1

**பரிமேலழகர்:** கருவியும் - வினை செய்யுங்கால் அதற்கு வேண்டும் கருவிகளும், காலமும் - அதற்கு ஏற்ற காலமும், செய்கையும் - அது செய்யும் ஆறும், செய்யும் அருவினையும்-அவ்வாற்றின் செய்யப்படும் அவ் வரிய வினைதானும், மாண்டது அமைச்சு - வாய்ப்ப எண்ண வல்லவனே அமைச்சன் ஆவான்.

கருவிகள் - தானையும் பொருளும். காலம் - அது தொடங்கும் காலம். செய்கை எனவே, அது தொடங்கும் உபாயமும், இடையூறு நீக்கி முடிவு போக்குமாறும் அடங்கின. சிறிய முயற்சியால் பெரிய பயன் தருவது என்பார், அரு வினை என்றார்.

இவை ஐந்தனையும் வடநூலார் மந்திரத்திற்கு அங்கம் என்ப.

#### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** செய்தற்கு அரிய வினையாவது மறுமண்டலம் கோடல். கருவியாவது யானை, குதிரை முதலிய படை. காலமாவது நீரும் நிழலும் உள்ள காலம். செய்தலாவது மடியின்றிச் செய்தல்.

---

1. படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண் என்னும் ஆறு. (குறள், 381.)
2. "காவற் சாகாடு கைப்போன்." (புறநா. 185:2.)

**கவிராஜ பண்டிதர்:** செய்யும் அருவினையும் - காரியத்தால் பெறும் பலனும்.

### ஒப்புமை

**அமைச்சர் இயல்பு:**

"காலமும் இடனும் ஏற்ற கருவியும் தெரியக் கற்ற
நூலுற நோக்கித் தெய்வம் நுனித்தறம் குணித்த மேலோர்
சீலமும் புகழ்க்கு வேண்டும் செய்கையும் தெரிந்து கொண்டு
பால்வரும் உறுதி யாவும் தலைவற்குப் பயக்கும் நீரார்."

(கம்ப. மந்திரப். 8.) (631)

## 632

வன்கண் குடிகாத்தல் கற்றறிதல் ஆள்வினையோ
டைந்துடன் மாண்ட தமைச்சு. 2

**பரிமேலழகர்:** வன்கண் - வினை செய்தற்கண் அசைவு இன்மையும், குடிகாத்தல் - குடிகளைக் காத்தலும், கற்று அறிதல் - நீதி நூல்களைக் கற்றுச் செய்வன தவிர்வன அறிதலும், ஆள்வினை - முயற்சியும், ஐந்துடன் மாண்டது அமைச்சு - மேற்சொல்லிய அவ் வங்கங்கள் ஐந்துடனே திருந்த உடையானே அமைச்சன் ஆவன்.

எண் ஒடு நீண்டது. அவ் வைந்து எனச் சுட்டு வருவிக்க. இந் நான்கனையும் மேற்கூறியவற்றோடு தொகுத்துக் கூறியது, அவையும் இவற்றோடு கூடியே மாட்சிமைப்பட வேண்டுதலானும், அவற்றிற்கு ஐந்து என்னும் தொகை பெறுதற்கும். இனி இதனை ஈண்டு எண்ணியவற்றிற்கே தொகையாக்கிக் குடிகாத்தல் என்பதனைக் குடிப் பிறப்பும் அதனை ஒழுக்கத்தால் காத்தலும் எனப் பகுப்பாரும், கற்றறிதல் என்பதனைக் கற்றலும் அறிதலும் எனப் பகுப்பாரும் உளர். அவர் உடன் என்பதனை முற்றும்மைப் பொருட்டாக்கியும், குடி என்பதனை ஆகுபெயர் ஆக்கியும் இடர்ப்படுப.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** வன்கண் குடிகாத்தல் - அஞ்சாமையும், குடிகாத்தலும், இந்திரியங்களைக் காத்தலும்.

**பரிதியார்:** தறுகண் ஆண்மை, குடிகாத்தல், கல்வி, அறிவுடைமை, உத்தியோகம் என்னும் அஞ்சு குணம் உள்ளவன் மந்திரி.

**காளிங்கர்:** வன்கண்ணதாகிய தறுகண்மையும், தன் அரசன் கோற்கீழ் வாழும் குடிகளது வன்மை மென்மை வழக்கு அறிதலும், காத்தலாகிய நாடு காவலும், காடு காவலும், நாடிச் சொல்லுதலும், கற்றறிதல் ஆகிய பெரும் பொருள் நூல் கற்று உணர்ந்து அறிதலும், ஆள்வினை என்னும் அரசியல் முயற்சியும் அமைச்சியல் முயற்சியும் இவை ஐந்தும் ஒருதலைப்பட ஆராய்ந்தவன் அமைச்சன் ஆவன்.

**கவிராஜ பண்டிதர்:** ஆள்வினை - உற்சாகம்.

### மேற்கோள் விளக்கம்

கற்றறிதல் என்பதனை இரண்டாக்குவர் பேராசிரியர்.

(தொல். பொருள். 273.)

### ஒப்புமை

1. *அமைச்சர் கற்றறிதல் உடைமை:*

"குலமுதல் தொன்மையும் கலையின் குப்பையும்
பலமுதற் கேள்வியும் பயனும் எய்தினர்." (கம்ப. மந்திரப். 6.)

2. *முற்றும் :*

"குடியோம்பல் வன்கண்மை நூல்வன்மை கூடம்
மடியோம்பும் ஆற்றல் உடைமை—முடியோம்பும்
நாற்றம் சுவைகேள்வி நல்லார் இனம்சேர்தல்
தேற்றுனேல் தேறும் அமைச்சு." (ஏலாதி, 17.) (632)

## 633

பிரித்தலும் பேணிக் கொளலும் பிரிந்தார்ப்
பொருத்தலும் வல்ல தமைச்சு. 3

**பரிமேலழகர்** : பிரித்தலும் - வினை வந்துழிப் பகைவர்க்குத் துணையாயினாரை அவரின் பிரிக்க வேண்டின் பிரித்தலும், பேணி கொளலும் - தம்பாலாரை அவர் பிரியாமல் கொடை இன்சொற்களால்[1] பேணிக் கொள்ளுதலும், பிரிந்தார் பொருத்தலும் - முன்னே தம்மினும் தம்பாலாரினும் பிரிந்தாரை மீண்டும் பொருத்த வேண்டின் பொருத்தலும், வல்லது அமைச்சு - வல்லவனே அமைச்சன் ஆவான்

இவற்றுள், அப்பொழுதை நிலைக்கு ஏற்ற செயல் அறிதலும், அதனை அவர் அறியாமல் ஏற்ற உபாயத்தால் கடைப்பிடித்தலும் அரியவாதல் நோக்கி வல்லது என்றார். வட நூலார் இவற்றுள் பொருத்தலைச் சந்தி என்றும், பிரித்தலை விக்கிரகம் என்றும் கூறுப.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** பிரித்தலும் - மாற்றரசரிடத்து உள்ளாரையும் அவர்க்கு நட்பாகிய அரசரையும் அவரிடத்தினின்று பிரித்தலும்.

**காளிங்கர்:** பிரித்தலும் - தம் அரசர்க்குப் பகைவேந்தரானோர் இருவருள் ஒருவரைப் பிரிக்கவல்லது. (633)

## 634

தெரிதலும் தேர்ந்து செயலும் ஒருதலையாச்
சொல்லலும் வல்ல தமைச்சு. 4

**பரிமேலழகர்** : தெரிதலும் - ஒரு காரியச் செய்கை பலவாற்றான் தோன்றின் அவற்றுள் ஆவது ஆராய்ந்துஅறிதலும், தேர்ந்து செயலும் - அது செய்யுங்கால் வாய்க்கும் திறன் நாடிச் செய்தலும், ஒருதலையா சொல்லலும் - சிலரைப் பிரித்தல் பொருத்தல் செயற்கண் அவர்க்கு இதுவே செயற்பாலது என்று துணிவு பிறக்கும் வகை சொல்லுதலும், வல்லது அமைச்சு - வல்லவனே அமைச்சன் ஆவான்.

தெரிதல் செயல் மேலதாயிற்று, வருகின்றது அதுவாகலின்.

### உரை வேறுபாடு

**பரிதியார்:** தெரிதலும் - காரியத்தை நாலு வகையாக விசாரித்தலும்.

---

1. "கொடுத்தலும் இன்சொலும் ஆற்றின் அடுக்கிய, சுற்றத்தால் சுற்றப் படும்." (குறள், 525.)

ஒப்புமை

1. அமைச்சர் தெரிதல் உடைமை :

"ஆற்றலால் அடுத்த தெண்ணும் அமைச்சரை."
(கம்ப். மாரீசன். 167.)

2. முற்றும்:

"தன்னிலையும் தாழாத் தொழில்நிலையும் துப்பெதிர்ந்தார்
இன்னிலையும் ஈடில் இயல்நிலையும்—துன்னி
அளந்தறிந்து செய்வான் அரசமைச்சன் யாதும்
பிளந்தறியும் பேராற்ற லான்." (சிறுபஞ்ச. 57.)

"செறிந்தவர் தெளிந்த நூலால் சிறந்தன தெரிந்து கூறி
அறிந்தவை ஆற்ற கிற்கும் அமைதியான் அமைச்சன்"
(சூளா. மந்திரப். 9.)

"செம்மையில் திறம்பல் செல்லாத் தேற்றத்தார் தெரியுங் காலம்
மும்மையும் உணர வல்லார் ஒருமையே மொழியும் நீரார்."
(கம்ப. மந்திரப். 9.) (634)

## 635

அறன்அறிந் தான்றமைந்த சொல்லான்எஞ் ஞான்றும்
திறன்அறிந்தான் தேர்ச்சித் துணை. 5

**பரிமேலழகர்** : அறன் அறிந்து ஆன்று அமைந்த சொல்லான் - அரசனால் செய்யப்படும் அறங்களை அறிந்து தனக்கு ஏற்ற கல்வியான் நிறைந்து அமைந்த சொல்லை உடையனை, எஞ்ஞான்றும் திறன் அறிந்தான் - எக்காலத்தும் வினை செய்யும் திறங்களை அறிந்தான், தேர்ச்சி துணை - அவர்க்குச் சூழ்ச்சித் துணையாம்.

தன் அரசன் சுருங்கிய காலத்தும், பெருகிய காலத்தும், இடை நிகராய காலத்தும் என்பார் எஞ்ஞான்றும் என்றார். சொல்லான் என்பதனை ஒடு உருபின் பொருட்டாய ஆன் உருபாக்கி உரைப்பாரும் உளர்.

இவை ஐந்து பாட்டானும் அமைச்சரது குணத்தன்மை கூறப்பட்டது.

உரை வேறுபாடு

**பரிதியார் :** ஆன்று அமைந்த சொல் - ஒழுக்கம் பொருந்திய சொல்லும்.

**காளிங்கர்:** இராச தன்மத்து இயல்பு அறிந்த அறிவினை உடையனுமாய், அதற்கு ஏற்ற சமைவு என்கிற நிறைவினை உடையனுமாய், மற்று அரசன் விருப்புற்றுக் கேட்குமாறு அரிய சொல்லாளனுமாய், நாட்டகத்தும் புறவிடத்தும் வாழ்வோர் வினைத்திறம் அனைத்தும் நெறிப்பட அறிந்து அறிவு நிறைவு ஓர்ப்புக் கடைப்பிடி என்னும் நாற்பெருங்குணனும் நன்குற அமைந்த அமைச்சனே அரசனது கருமத்திற்கு அமைந்த துணை ஆவான்.
(635)

## 636

மதிநுட்பம் நூலோ டுடையார்க் கதிநுட்பம்
யாஉள முன்நிற் பவை. 6

**பரிமேலழகர்** : மதி நுட்பம் நூலோடு உடையார்க்கு - இயற்கையாகிய நுண்ணறிவைச் செயற்கையாகிய நூல் அறிவோடு உடையராய

அமைச்சர்க்கு, அதி நுட்பம் முன் நிற்பவை யா உள - மிக்க நுட்பத்தை யுடைய சூழ்ச்சிகளாய் முன் நிற்பன யாவை உள?

மதி நுட்பம் என்பது தெய்வம் தர வேண்டுதலின் முற் கூறப்பட்டது. நூல் என்பதூஉம், அதி நுட்பம் என்பதூஉம் ஆகுபெயர். அதி என்பது வட சொல்லுள் மிகுதிப் பொருளதோர் இடைச் சொல். அது திரிந்து நுட்பம் என்பதனோடு தொக்கது.[1] முன்நிற்றல், மாற் றார் சூழ்ச்சியாயின தம் சூழ்ச்சியால் அழியாது நிற்றல். இனி அதினுட்பம் என்று பாடம் ஓதி, அதனின் நுட்பம் யா என்று உரைப்பாரும் உளர். அவர், சூழ்ச்சிக்கு இனமாய் முன் சுட்டப்படுவது ஒன்று இல்லாமையும், சுட்டுப் பெயர் ஐந்தாம் உருபு ஏற்றவழி அவ்வாறு நில்லாமையும் அறிந்திலர். பகை வர் சூழ்வனவற்றைத் தாம் அறிந்து அழித்து அவர் அறிந்து அழியாதன தாம் சூழ்வர் என்பது கருத்து.

இதனால் அவரது சிறப்புக் கூறப்பட்டது.

ஒப்புமை

**அமைச்சர் மதி நுட்பம் நூலோடு உடையார் ஆதல்:**

"ஒன்றுநன் றெனஉணர் ஒருவன் கொள்ளுமேல்
அன்றதென் றொருவனுக் கறிவு தோன்றுமால்
நின்றதொன் றுண்டுகேள் நீதி நூலினோ
டொன்றினின் றவரொடும் உணர்க ஒட்டியே."

(சூளா. இரதநூ. 118.) (636)

### 637

**செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்**
**தியற்கை அறிந்து செயல்.** 7

**பரிமேலழகர்:** செயற்கை அறிந்த கடைத்தும் - நூல் நெறியான் வினை செய்யும் திறங்களை அறிந்த இடத்தும், உலகத்து இயற்கை அறிந்து செயல் - அப்பொழுது நடக்கின்ற உலக இயற்கையை அறிந்து அதனோடு பொருந்தச் செய்க.

கடைத்தும் என்புழி து பகுதிப்பொருள் விகுதி. நூல் நெறியே ஆயினும் உலக நெறியோடு பொருந்தாதன செய்யற்க, செய்யின் அது பழிக்கும் என இயற்கை அறிவால் பயன் கூறியவாறு.

உரை வேறுபாடு

**மணக்குடவர்:** உலகநடை அறிதலாவது அரசர் சீலமும் பரிவாரத் தில் உள்ளார் நிலைமையும் அறிதல். இவை அறியாது செய்யின் குற்றம் ஆம் என்றவாறு. (637)

### 638

**அறிகொன் றறியான் எனினும் உறுதி**
**உழைஇருந்தான் கூறல் கடன்.** 8

**பரிமேலழகர்:** அறி கொன்று அறியான் எனினும் - அறிந்து சொல்லியாரது அறிவையும் அழித்து அரசன் தானும் அறியானே ஆயினும், உறுதி கூறல் உழை இருந்தான் கடன் - அக் குற்றம் நோக்கி ஒழியாது அவ னுக்கு உறுதியாயின கூறுதல் அமைச்சனுக்கு முறைமை.

1. "அதிகுணம் நல்ல நல்ல", "உமை அதிகுணர் புகழ்வதும் அழகே." (சம்பந்தர், கோளறு. 4, திருவீழி. 2.)

அறி என்பது முதனிலைத் தொழிற் பெயர். கோறல், தான் கொள்ளாமை; மேலும் இகழ்ந்து கூறுதல். உழை இருந்தான் எனப் பெயர் கொடுத்தார், அமாத்தியர் என்னும் வடமொழிப் பெயர்க்கும் பொருண்மை அதுவாகலின். உறுதி கூருக்கால் அவனது இறுதி எய்தல் குற்றத்தை உலகம் தன்மேல் ஏற்றும் என்பார், கூறல் கடன் என்றார்.

இவை இரண்டு பாட்டானும் அவர் செயல் கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** அறிகொன்று அறியான்[1] எனினும் - அரசன் அமைச்சன் கூறிய பொருளை அறிக; அவன் ஒன்று அறியான் ஆயினும்.

**பரிதியார்:** எல்லாம் அறிவுள்ள ராசா அறிகிற தறுவாயில் அறியாத போது.

### ஒப்புமை

**அமைச்சன் இலக்கணம்:**

"உலப்பில் உலகத்து உறுதியே நோக்கிக்
குலைத்தடக்கி நல்லறம் கொள்ளார்க் கொளுத்தல்
மலைத்தழு துண்ணுக் குழவியைத் தாயர்
அலைத்துப்பால் பெய்து விடல்." (பழமொழி. 212.)

"மூரித்தேன் தாரி னுய்நீ முனியினும் உறுதி நோக்கிப்
பாரித்தேன் தரும நுண்ணூல் வழக்கது வாதல் கண்டே" (சீவக. 214.)

"அற்றமின் றுலகம் காக்கும் அருந்தொழில் புரிந்து நின்றான்
கற்றவர் மொழிந்த வாறு கழிப்பது கடன தாகும்
மற்றவர்க் குறுதி நோக்கி வருபழி வழிகள் தூரச்
செற்றவர்ச் செருக்கும் சூழ்ச்சி தெருண்டவர் கண்ட தன்றே." (சூளா. மந்திர. 8.)

"கதங்கொள் சீற்றத்தை ஆற்றுவான் இனியன கழறிப்
பதங்கொள் பாகனும் மந்திரி ஒத்தனன் பன்னூல்
விதங்க ளாலவன் மெல்லென மெல்லென விளம்பும்
இதங்கள் கொள்கிலா இறைவனை ஒத்ததோர் யானை."

"தம்முயிர்க் குறுதி யெண்ணார் தலைமகன் வெகுண்ட போதும்
வெம்மையைத் தாங்கி நீதி விடாதுநின் றுரைக்கும் வீரர்." (கம்ப. வரைக்காட்சி. 4, மந்திரப். 9.) (638)

## 639

பழுதெண்ணும் மந்திரியிற் பக்கத்துள் தெவ்வோர்
எழுபது கோடி உறும். 9

**பரிமேலழகர்:** பக்கத்துள் பழுது எண்ணும் மந்திரியின் - பக்கத்து இருந்து பிழைப்ப எண்ணும் அமைச்சன் ஒருவனின், ஓர் எழுபது கோடி தெவ் உறும் - அரசனுக்கு எதிர் நிற்பார் ஓர் எழுபது கோடி பகைவர் உறுவர்.

எழுபது கோடி என்றது மிகப் பலவாய எண்ணிற்கு ஒன்று காட்டியவாறு.[2] வெளிப்பட நிற்றலான் அவர் காக்கப்படுவர், இவன் உட்பகையாய் நிற்றலான் காக்கப்படான் என்பது பற்றி இவ்வாறு கூறினர். எழுபது கோடி மடங்கு நல்லர் என்று உரைப்பாரும், எழுபது கூறு தலை என்று பாடம் ஓதுவாரும் உளர்.

1. அறிக, ஒன்று அறியான் என்று பிரித்துப் பொருள் கொண்டார்.
2. இதனை அநந்த வாசி என்பர் வடநூலார்.

உரை வேறுபாடு

**மணக்குடவர்:** குற்றப்பட எண்ணும் அமைச்சரில் எழுபது கோடி மடங்கு நல்லர், உட்பகையாய்த் தன் அருகில் இருப்பவர்.

காளிங்கர்: பலரே ஆயினும் பகைவர் என்று அறிதலால் பரிகரிக்கவும் கூடுமன்; மற்று உழை இருந்துழி உரைத்தற்கு உரியான் ஒருவன் உணர்வு முதலிய குணம் இலன் ஆயின், மற்று அவன் உரைக்கும் உரையினை நம்பி ஒழுகும் அரசனும் கெடும்; அவ்வரசன் ஆளும் நாடும் கெட்டு விடும். *(639)*

### 640

முறைப்படச் சூழ்ந்தும் முடிவிலவே செய்வர்
திறப்பா டிலாஅ தவர். 10

**பரிமேலழகர்:** முறை பட சூழ்ந்தும் முடிவு இலவே செய்வர் - செய்யப்படும் வினைகளை முன் அடைவுபட எண்ணி வைத்துச் செய்யுங்கால் அவை முடிவிலவாகவே செய்யா நிற்பர், திறப்பாடு இலாதவர் - முடித்தற்கு ஏற்ற கூறுபாடு இல்லாதார்.

அக் கூறுபாடாவன: வந்த இடையூறுகட்கு ஏற்ற ஏற்ற பரிகாரம் அறிந்து செய்தலும், தாம் திண்ணியர் ஆதலும் ஆம். பிழையாமல் எண்ண வல்லராய் வைத்தும் செய்து முடிக்க மாட்டாரும் உளர் என்பதாம்.

இவை இரண்டு பாட்டானும் அமைச்சருள் விடப்படுவாரது குற்றம் கூறப்பட்டது.

உரை வேறுபாடு

**கவிராஜ பண்டிதர்:** திறப்பாடு - திறமை. *(640)*

---

## 65. சொல்வன்மை

**பரிமேலழகர்:** அஃதாவது, தான் கருதிய வினை முடியுமாற்றால் அமைச்சியல் நடத்தற்கு ஏதுவாய சொற்களைச் சொல்ல வல்லன் ஆதல். மேல், "ஒரு தலையாச் சொல்லலும் வல்லது"[1] என்றதனையே சிறப்புப் பற்றி விரித்து உரைக்கின்றமையின், இஃது அமைச்சின்பின் வைக்கப் பட்டது.

### 641

நாநலம் என்னும் நலன்உடைமை அந்நலம்
யாநலத் துள்ளதூஉம் அன்று. 1

**பரிமேலழகர்:** நா நலம் என்னும் நலன் உடைமை - அமைச்சர்க்கு இன்றியமையாக் குணமாவது சான்றோரான் நாநலம் என்று சிறப்பித்துச் சொல்லப்படும் நலத்தினை உடையர் ஆதல்; அந் நலம் யா நலத்து உள்ளதூஉம் அன்று - அந் நலம் பிறர்க்கும் பிற நலம் எல்லாவற்றுள்ளும் அடங்குவ தன்றி மிக்கதாகலான்.

---

1. குறள், 634.

நாவால் உளதாய நலம் என விரியும். இந் நலம் உலகத்தைத் தம் வயத்து ஆக்கும் அமைச்சர்க்கு வேருக வேண்டும் என்னும் நீதி நூல் வழக்குப் பற்றி நாநலம் என்னும் நலன் என்றும், பிறர்க்கும் இது போல் சிறந்தது பிறிது இன்மையான் அந்நலம் யாநலத்து உள்ளதூஉம் அன்று என்றும் கூறினர். பிரித்தல் பொருத்தல் முதலிய தொழில் இல்லாதார்க்கும் இஃது இன்றியமையாதாய பின் அத் தொழிலார்க்குக் கூற வேண்டுமோ என்பது கருத்து.

### உரை வேறுபாடு

**பரிப்பெருமாள்:** இஃது, எல்லா அழகினும் மிகுந்த அழகு என்றமையான் இன்பமும் பயக்கும் என்றது. சொல்வலை வேட்டுவன் என்ருரும் உளர்.

### ஒப்புமை

**சொல் நலம்:**

"மயிர் வனப்பும் கண்கவரும் மார்பின் வனப்பும்
உகிர்வனப்பும் காதின் வனப்பும்—செயிர்தீர்ந்த
பல்லின் வனப்பும் வனப்பல்ல நூற்கியைந்த
சொல்லின் வனப்பே வனப்பு." *(சிறுபஞ்ச. 36.)* *(641)*

## 642

ஆக்கமும் கேடும் அதனுல் வருதலால்
காத்தோம்பல் சொல்லின்கண் சோர்வு. 2

**பரிமேலழகர்:** ஆக்கமும் கேடும் அதனுல் வருதலால் - தம் அரசற்கும் அங்கங்கட்கும் ஆக்க அழிவுகள் தம் சொல்லான் வரும் ஆகலான், சொல்லின்கண் சோர்வு காத்து ஓம்பல் - அப் பெற்றித்தாய சொல்லின்கண் சோர்தலை அமைச்சர் தங்கண் நிகழாமல் போற்றிக் காக்க.

ஆக்கத்திற்கு ஏதுவாய நற்சொல்லையும், கேட்டிற்கு ஏதுவாய தீச்சொல்லையும் சொல்லாதல் ஒப்புமை பற்றி அதனுல் என்ருர். செய்யுளாகலின், சுட்டுப்பெயர் முன்வந்தது. பிற சோர்வு போலாது உயிர்கட்கெல்லாம் ஒருங்கு வருதலால், காத்தோம்பல் என்ருர்.

இவை இரண்டு பாட்டானும் இஃது இவர்க்கு இன்றியமையாது என்பது கூறப்பட்டது.

### ஒப்புமை

**சொல் சோர்வு காத்தோம்பல்:**

"சொல்லுங்கால் சோர்வின்றிச் சொல்லுதல் மாண்பினிதே"
*(இனியவை. 35.)*

சொற்சோர் வுடைமையின் எச்சோர்வும் அறிப"
*(முதுமொழிக். 2 : 8.)*

"சொற் சோர்வு படேல்." *(ஆத்திசூடி.)*
*(642)*

## 643

கேட்டார்ப் பிணிக்கும் தகைஅவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாம் சொல். 3

**பரிமேலழகர்:** கேட்டார் பிணிக்கும் தகை அவாய் - நட்பாய் ஏற்றுக் கொண்டாரைப் பின் வேறுபடாமல் பிணிக்கும் குணங்களை அவாவி, கேளாரும் வேட்ப மொழிவது - மற்றைப் பகையாய் ஏற்றுக்கொள்ளாதாரும் பின் அப் பகைமை ஒழிந்து நட்பினை விரும்பும் வண்ணம் சொல்லப் படுவதே, சொல் ஆம் - அமைச்சர்க்குச் சொல்லாவது.

அக் குணங்களாவன: வழுவின்மை, சுருங்குதல், விளங்குதல், இனிதாதல், விழுப்பயன் தருதல் என்று இவை முதலாயின. அவற்றை அவாவுதலாவது சொல்லுவான் குறித்தனவே அன்றி வேறு நுண்ணுணர்வு உடையோர் கொள்பவற்றின் மேலும் நோக்குடைத்தாதல். அவாய் என்னும் செய்தென் எச்சம் மொழிவது என்னும் செயப்பாட்டு வினை கொண்டது. இனிக் கேட்டார் கேளார் என்பதற்கு நூல் கேட்டார் கேளாதார் எனவும், வினவியார் வினவாதார் எனவும் உரைப்பாரும் உளர். தகையவாய் என்பதற்கு எல்லாரும் தகுதியையுடையவாய் என்று உரைத்தார்; அவர் அப்பன்மை, மொழிவது என்னும் ஒருமையோடு இயையாமை நோக்கிற்றிலர்.

இதனால் சொல்லினது இலக்கணம் கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** வினவினாரைப் பிணித்துக் கொள்ளும் தகையவாய், வினவாதாரும் விரும்புமாறு சொல்லுதல் சொல்லாவது.

**பரிப்பெருமாள்:** கேட்டார் என்பதனைக் கேள்வியுடையார் எனினும் அமையும். சொல்லக் கேட்டார் எனினும் அமையும். கேளாமையும் அவ்வாறே கொள்ளப்படும். இது நயம்படக் கூறவேண்டும் என்றது.

**காளிங்கர்:** பல வகைப்பட்ட நூல்களையும் பாடம் ஓதி அவற்றின் பொருட்பயன் தெளியக் குரவரை வழிபட்டுக் கேட்ட குற்றம் அற்ற சான்றோரையும் தம்மாட்டுப் பிணித்துக் கொள்ளும் தகுதியை உடையதுமாய்ப்[1] பின்னும் அங்ஙனம் பொருந்தக் கேளாது புவியிடைத் திரியும் புல்லறிவாளரும் யாமும் இவ்வாறு கேட்டு ஒன்று அறிய வேண்டும் என்னும் விருப்பம் உளதாகச் சொல்லுவது அமைச்சரது சொல்வன்மை.

### ஒப்புமை

1. **சொல் கேட்டார்ப் பிணித்தல் :**

"கேட்டார்க்கு இனியவாய்ச் சொல்லானேல்" (**தகடூர் யாத்திரை.**)

"நகைசால் வாய்மொழி." (**பதிற்று. 55: 12.**)

2. **கேளாரும் வேட்ப மொழிதல் :**

"செறுநரும் விழையும் செயிர்தீர் காட்சி." (**அகநா. 66: 3.**)

### மேற்கோள் விளக்கம்

'கேட்டல் - பொருளாகக் கோடல்' என்று கூறி, "கேளாரும் வேட்ப மொழிவதாம்" என்பதை மேற்கோளாகக் காட்டுவர் **சிவஞான முனிவர்.**

(**சிவஞான போதம்,** உரை.) (643)

## 644

திறன்அறிந்து சொல்லுக சொல்லை அறனும்
பொருளும் அதனினூஉங் கில். 4

**பரிமேலழகர் :** சொல்லை திறன் அறிந்து சொல்லுக - அப் பெற்றித்தாய சொல்லை அமைச்சர் தம்முடையவும் கேட்பாருடையவும் ஆய திறங்களை அறிந்து சொல்லுக, அதனின் ஊங்கு அறனும் பொருளும் இல் - அங்ஙனம் சொல்லுதற்கு மேற்பட்ட அறனும் பொருளும் இல்லை ஆகலான்.

அத் திறங்களாவன: குடிப்பிறப்பு, கல்வி, ஒழுக்கம், செல்வம், உருவம், பருவம் என்பனவற்றான் வரும் தகுதி வேறுபாடுகள். அவற்றை அறிந்து சொல்லுதலாவது, அவற்றால் தமக்கும் அவர்க்கும் உளவாய ஏற்றத் தாழ்வு

---

1. 'தகையதாய்' என்பது இவர் பாடம் போலும்.

களை அறிந்து அவ்வம் மரபால் சொல்லுதல். அஃது உலகத்தோடு ஒட்ட ஒழுகலையும் இனிமையையும் பயத்தலின் அறன் ஆயிற்று. தம் காரியம் முடித்தலின் பொருள் ஆயிற்று. அறனும் பொருளும் எனக் காரணத்தைக் காரியமாக்கிக் கூறினர்.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** திறன் அறியவே புறங் கூறுமையும் பயனில சொல்லாமையும் பொய் கூறுமையும் உளவாம் ஆதலான் அறன் ஆயிற்று. அரசன் மாட்டும் ஏனையோர் மாட்டும் தகுதி அறிந்து சொல்லுதலான், பொருள் ஆயிற்று. என்னை? அதனானே ஆக்கமும் கேடும் ஆதலான். இஃது அறனும் பொருளும் பயக்கும் என்றது.

**காளிங்கர்:** அரசர்க்கு அமைச்சராளேர் ஒன்று சொல்லும் காலத்து அமைவு உடையராய்ச் சொல்லும் திறப்பாட்டினை அறிந்து கீழ்ச் சொல்லிப் போந்த இல்லறம் முதலிய அறமும், மற்று இங்குச் சொல்லுகின்ற பொருள் நெறியும், மற்று உம்மையான் மேல் சொல்லுவதாகிய இன்ப நெறியும் எல்லாம் அவரவர் மரபின் திறப்பாடு அறிந்து சொல்லுக.

### ஒப்புமை

**திறன் அறிந்து மொழிதல் :**

"............திறனன்று மொழியினும்
வறிது பெயர்குந ரல்லர்." (புறநா. 124: 2-3.) (644)

## 645

சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை
வெல்லும்சொல் இன்மை அறிந்து. 5

**பரிமேலழகர்:** சொல்லை பிறிது ஓர் சொல் வெல்லும் சொல் இன்மை அறிந்து - தாம் சொல்லக் கருதிய சொல்லைப் பிறிதோர் சொல்லாய் வெல்ல வல்லது ஒரு சொல் இல்லாமை அறிந்து, அச் சொல்லை சொல்லுக - பின் அச் சொல்லைச் சொல்லுக.

பிறிது ஓர் சொல் - மாற்றாரது மறுதலைச் சொல். வெல்லுதல் - குணங்களான் மிகுதல். அதுவே வெல்லச் சொல்லுக என்பதாம். இனிப் பிறிதோர் சொல், வெல்லும் சொல் எனச் செவ்வெண் ஆக்கி, ஒத்த சொல்லும் மிக்க சொல்லும் உளவாகாமல் சொல்லுக என்று உரைப்பாரும் உளர்.

இது சொற்பொருட் பின்வரு நிலை. (645)

## 646

வேட்பத்தாம் சொல்லிப் பிறர்சொல் பயன்கோடல்
மாட்சியின் மாசற்றார் கோள். 6

**பரிமேலழகர்:** வேட்ப தாம் சொல்லி பிறர் சொல் பயன் கோடல் - பிறர்க்குத் தாம் சொல்லுங்கால் அவர் பின்னும் கேட்டலை விரும்புமாறு சொல்லி அவர் தமக்குச் சொல்லுங்கால் அச்சொல்லின் பயனைக் கொண்டு ஒழிதல், மாட்சியின் மாசு அற்றார் கோள் - அமைச்சியலுள் குற்றம் அற்றாரது துணிபு.

பிறர் சொற்களுள் குற்றம் உளவாயினும் அவை நோக்கி இகழார் என்பதாம். வல்லாரை இகழ்தல் வல்லுநர்க்குத் தகுதி அன்மையின், இதுவும் உடன் கூறினர்.

இவை மூன்று பாட்டானும் அதனைச் சொல்லுமாறு கூறப்பட்டது.

ஒப்புமை

1. பிறர் வேட்பத் தாம் சொல்லுதல்:

"கேட்பாரை நாடிக் கிளக்கப் படும்பொருட்கண்
வேட்கை அறிந்துரைப்பர் வித்தகர்." (பழமொழி, 4.)

2. முற்றும் : குறள், 424. (646)

## 647

சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை
இகல்வெல்லல் யார்க்கும் அரிது. 7

**பரிமேலழகர் :** சொலல் வல்லன் - தான் எண்ணிய காரியங்களைப் பிறர்க்கு ஏற்பச் சொல்லுதல் வல்லனாய், சோர்வு இலன் - அவை மிகப் பல வாய வழி ஒன்றினும் சோர்வு இலனாய், அஞ்சான் - அவைக்கு அஞ்சான் ஆயினான் யாவன், அவனை இகல் வெல்லல் யார்க்கும் அரிது - அவனை மாறு பாட்டின்கண் வெல்லுதல் யாவர்க்கும் அரிது.

ஏற்பச் சொல்லுதல், அவர்க்கு அவை காரியம் அல்ல ஆயினும் ஆம் எனத் துணியும் வகை சொல்லுதல். சோர்வு - சொல்ல வேண்டுவதனை மறப் பான் ஒழிதல்.

இம் மூன்று குணமும் உடையானை மாற்றாராய்ப் பிரித்தல் பொருத் தல் செய்து வெல்வார் இல்லை என்பதாம்.

உரை வேறுபாடு

**காளிங்கர்:** அஞ்சான் - அரசனைக் கழற வேண்டும் இடத்துக் கழற் றுரை கூறக் கண்ணஞ்சானுமாய்.

மேற்கோள்

'வல்லன் இலன் என்னும் சொற்கள் பெயர்ப் பொருளை ஒழித்து வினைக்குறிப்புப் பொருளைக் குறிப்பான் உணர்த்தின' என்பர் சங்கர நமச்சிவாயர். (நன். 269.) (647)

## 648

விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின். 8

**பரிமேலழகர் :** தொழில் நிரந்து இனிது சொல்லுதல் வல்லார் பெறின் - சொல்லப்படும் காரியங்களை நிரல்படக் கோத்து இனிதாகச் சொல் லுதல் வல்லாரைப் பெறின், ஞாலம் விரைந்து கேட்கும் - உலகம் அவற்றை விரைந்து ஏற்றுக்கொள்ளும்.

தொழில்: சாதி யொருமை. நிரல்படக் கோத்தல், முன்சொல்வனவும் பின்சொல்வனவும் அறிந்து அம் முறையே வைத்தல். இனிதாதல், கேட் டார்க்கு இன்பம் பயத்தல். சொல்லுதல் வல்லான் நூறாயிரவருள் ஒருவன்[1] என்ற வடமொழி பற்றிப் பெறின் என்றார். ஈண்டும் கேட்டல், ஏற்றுக் கோடல்.

இவை இரண்டு பாட்டானும் அவ்வாற்றான் சொல்லுதல் வல்லாரது சிறப்புக் கூறப்பட்டது.

---

1. "ஆர்த்தசபை நூற்றொருவர் ஆயிரத்தொன் றாம்புலவர், வார்த்தை பதினா யிரத்தொருவர்." (ஔவை பாடல்.)

உரை வேறுபாடு

**பரிதியார்:** கேட்பார் செவியும் மனமும் புலப்பட வார்த்தை சொல்லும் மந்திரிக்கு மண்டலம் சொல்வழி கேட்கும். *(648)*

## 649

பலசொல்லக் காமுறுவர் மன்றமா சற்ற
சிலசொல்லல் தேற்ரு தவர். 9

**பரிமேலழகர் :** மாசு அற்ற சில சொல்லல் தேற்ருதவர்[1] - குற்றம் அற்றனவாய்ச் சிலவாய வார்த்தைகளை அவ்வாற்ருல் சொல்லுதலை அறியாதார், பல சொல்ல காமுறுவர் - பலவாய வார்த்தைகளைத் தொடுத்துச் சொல்ல விரும்புவர்.

குற்றம், மேற் சொல்லிய குணங்கட்கு மறுதலை ஆயின. இடைவிடாது பல சொல்லுதலையும் சொல்வன்மை என்று விரும்புவாரும் உளர்; அவர் இவ்வாறு சொல்லமாட்டாதாரே; வல்லார் அது செய்யார் என யாப்புறுப்பார், மன்ற என்ருர்.

உரை வேறுபாடு

**மணக்குடவர்:** மன்ற - தெளிய.

ஒப்புமை

1. **சில சொல்லல்:**

"சொல்லிய சொல்லோ சிலவே"
"சிலசொல்லாற் பலகேள்வியர்" (புறநா. 305: 4, 360: 2.)
"சில்லெழுத்தி ஞனே பொருளடங்கக் காலத்தால்
சொல்லுக செவ்வி அறிந்து." (ஆசாரக். 76.)

2. **முற்றும்:**

"சொற்ருற்றுக் கொண்டு சுனைத்தெழுதல் காமுறுவர்
கற்ருற்றல் வன்மையுந் தாந்தேருர்—கற்ற
செலவுரைக்கும் ஆறறியார் தோற்ப தறியார்
பலவுரைக்கும் மாந்தர் பலர்." (நாலடி. 313.) *(649)*

## 650

இணர்ஊழ்த்தும் நாரு மலர்அனையர் கற்ற
துணர விரித்துரையா தார். 10

**பரிமேலழகர் :** கற்றது உணர விரித்து உரையாதார் - கற்று வைத்த நூலைப் பிறர் அறியும் வண்ணம் விரித்து உரைக்க மாட்டாதவர், இணர் ஊழ்த்தும் நாரு மலர் அனையர் - கொத்தின்கண்ணே மலர்ந்து வைத்தும் நாருத பூவை ஒப்பர்.

செவ்வி பெற மலர்ந்து வைத்தும் நாற்றம் இல்லாத பூச் சூடப்படாதவாறு போல, நூலைக் கற்று வைத்தும் சொல்ல மாட்டாதார் நன்கு மதிக்கப்படார் என்றமையின் இது தொழில் உவமம் ஆயிற்று.

இவை இரண்டு பாட்டானும் அது மாட்டாதாரது இழிபு கூறப்பட்டது.

1. தேற்ருதவர்: குறள், 187.

உரை வேறுபாடு

**பரிப்பெருமாள்:** இது சுருங்கச் சொல்லுதலே அன்றி வேண்டும் இடத்து விரித்தும் சொல்ல வேண்டும் என்றது.

**பரிதியார்:** நாறு மலர் அனையர் கற்றது உணர விரித்து உரையாதார் - மணம் இல்லாத முருக்கம் பூவோடு ஒப்பர், கற்ற கல்வியைச் செவிக்குப் புலப்படச் சொல்லாதார்.

**காளிங்கர்:** நறுமலர்ப் பூங்கொத்து உடையவாகிய சண்பகம் புன்னை முதலியபோலத் தானும் பெரிதும் இணர்கொண்டு மலரப் பெற்று வைத்தும் அவை போல மணம் நாறப்பெறாத பிற மரத்தை ஒப்பர்; யார் எனின், தாம் கற்ற சொல் மலரினைக் கேட்ட அரசர் முதலானவர்க்கு மற்று அதன் பொருள் நய மணம் தோன்ற விரித்துச் சொல்ல மாட்டாத அமைச்சர்.

ஒப்புமை

**முற்றும்:** குறள், 730. (650)

---

# 66. வினைத்தூய்மை

**பரிமேலழகர்:** அஃதாவது, செய்யப்படும் வினைகள் பொருளே அன்றி அறமும் புகழும் பயந்து நல்ல ஆதல். சொல்லே அன்றிச் செயலும் நன்றாக வேண்டும் என்கின்றமையின், இது சொல்வன்மையின்பின் வைக்கப் பட்டது.

### 651

**துணை நலம் ஆக்கம் தரூஉம் வினை நலம்**
**வேண்டிய எல்லாம் தரும்.** 1

**பரிமேலழகர்:** துணை நலம் ஆக்கம் தரூஉம் - ஒருவனுக்குத் துணையது நன்மை செல்வம் ஒன்றனையும் கொடுக்கும்; வினை நலம் வேண்டிய எல்லாம் தரும் - அவ்வளவன்றி வினையது நன்மை அவன் வேண்டியன யாவற்றையும் கொடுக்கும்.

வேண்டிய எல்லாம் என்றது, இம்மைக்கண் அறம் பொருள் இன்பம் முதலாயவற்றையும், மறுமைக்கண் தான் விரும்பிய பதங்களையும். இதனால் காணப்படும் துணைநன்மையினும் கருதப்படும் வினைநன்மை சிறந்தது என வினைத்தூய்மையது சிறப்புக் கூறப்பட்டது. (651)

### 652

**என்றும் ஒருவுதல் வேண்டும் புகழொடு**
**நன்றி பயவா வினை.** 2

**பரிமேலழகர்:** புகழொடு நன்றி பயவா வினை - தம் அரசனுக்கு இம்மைக்கண் புகழும் மறுமைக்கண் அறமும் பயவாத வினைகளை, என்றும் ஒருவுதல் வேண்டும் - அமைச்சர்க்கு எக்காலத்தும் ஒழிதல் வேண்டும்.

பெருகல், சுருங்கல், இடை நிற்றல் என்னும் நிலை வேறுபாடு காலத்தான் வருதலின், என்றும் என்றார். வேண்டும் என்பது ஈண்டு இன்றியமையாது என்னும் பொருட்டு.

உரை வேறுபாடு

**பரிதியார்:** நன்றி - ஆக்கம்.

**காளிங்கர்:** நன்றி - நன்மை. (652)

## 653

ஓஒதல் வேண்டும் ஒளிமாழ்கும் செய்வினை
ஆஅதும் என்னும் அவர். 3

**பரிமேலழகர்:** ஆஅதும் என்னும் அவர் - மேலாகக் கடவேம் என்று கருதுவார், ஒளி மாழ்கும் வினை செய் ஓஒதல் வேண்டும் - தம் ஒளி கெடுதற்குக் காரணமாய வினையைச் செய்தலைத் தவிர்க.

ஓஒதல்வேண்டும் என்பது ஒரு சொல் நீர்மைத்து. ஓவுதல் என்பது குறைந்து நின்றது. ஒளி - தாம் உள காலத்து எல்லாரானும் நன்கு மதிக்கப்படுதல்.[1] செய் என்னும் முதனிலைத் தொழிற்பெயர் மாற்றப்பட்டது. அன்றிச் செய்வினை என வினைத்தொகை யாக்கியவழிப் பொருள் இன்மை அறிக. ஒளி கெட வருவது ஆக்கம் அன்று என்பதாம்.

உரை வேறுபாடு

**பரிதியார்:** அரசர்க்கு ஆகாத காரியம் கண்டால் ஓவென்று நொந்து கொண்டு அந்தக் காரியத்தைக் கைவிடுவான்.

**கவிராஜ பண்டிதர்:** ஒளி - கீர்த்தி. (653)

## 654

இடுக்கண் படினும் இளிவந்த செய்யார்
நடுக்கற்ற காட்சி யவர். 4

**பரிமேலழகர்:** இடுக்கண் படினும் இளிவந்த செய்யார் – தாம் இடுக்கணிலே பட வரினும் அது தீர்தற்பொருட்டு முன் செய்தார்க்கு இளிவந்த வினைகளைச் செய்யார், நடுக்கு அற்ற காட்சியவர் – துளக்கம் அற்ற தெளிவினை உடையார்.

சிறிது போழ்தில் கழிவதாய இடுக்கண் நோக்கி எஞ்ஞான்றும் கழியாத இழிவு எய்தற்பாலது அன்று என்பதூஉம், அஃது எய்தினும் வருவது வரும் என்பதூஉம் தெளிவர் ஆகலால், செய்யார் என்றார்.

உரை வேறுபாடு

**கவிராஜ பண்டிதர்:** நடுக்கற்ற காட்சியவர் - நல்ல நெறிகளை உடையவர். (654)

## 655

எற்றென் றிரங்குவ செய்யற்க செய்வானேல்
மற்றன்ன செய்யாமை நன்று. 5

**பரிமேலழகர்:** எற்று என்று இரங்குவ செய்யற்க - யான் செய்தது எத்தன்மைத்து என்று பின் தானே இரங்கும் வினைகளை ஒருகாலும் செய்

1. ஒளி என்பதற்கு, 'புகழ் வடிவு' என்றும், 'தான் உளனாய காலத்து மிக்குத் தோன்றுத லுடைமை' என்றும் உரை கூறுவர் பின். (குறள், 970, 971.)

யாது ஒழிக; செய்வானேல் மற்று அன்ன செய்யாமை நன்று - அன்றி ஒரு கால் மயங்கி அவற்றைச் செய்யும் தன்மையன் ஆயினன் ஆயின் பின் இருந்து அவ் விரங்கல்களைச் செய்யாதொழிதல் நன்று.

இரங்குவ என முன்வந்தமையின் பின் அன்ன எனச் சுட்டி யொழிந்தார். அவ் வினைகளது பன்மையான், இரக்கமும் பலவாயின. அச் செயற்குப் பின்னிருந்து இரங்குவானாயின், அது தீரும் வாயில் அறிந்திலன் எனவும், திட்பம் இலன் எனவும், பயன் இல்லன செய்கின்றான் எனவும், தன் பழியைத் தானே தூற்றுகின்றான் எனவும் எல்லாரும் இகழ்தலின் பின் இரங்காமை நன்று என்றார். இதுவும் வினைத் தூயார் செயல் ஆகலின் உடன் கூறப்பட்டது. பிறரொடர்க்கு, செய்வானாயின் அவை போல்வனவும் செய்யாமை நன்று எனப் பிறர் எல்லாம் இயைபு அற உரைத்தார்.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** செய்வானேல் மற்று அன்ன செய்யாமை நன்று - வினை செய்வானாயின் அவை போல்வனவும் செய்யாமையே நல்லது.

### மேற்கோள் விளக்கம்

எற்றம் என்ற உரிச்சொல் துணிவுப் பொருளில் வந்ததென்று இதனை மேற்கோள் காட்டுவர் தெய்வச் சிலையார். (தொல். உரி. 41.)

### ஒப்புமை

எற்றென்று இரங்குவ செய்யற்க:

"செய்துபின் னிரங்கா வினையொடு." (அகநா. 268: 13.)

"செய்திரங் காவினை." (புறநா. 10: 11.)

"கற்றார்முன் தோன்றா கழிவிரக்கம்." (நான்மணி. 8.) (655)

## 656

ஈன்றாள் பசிகாண்பான் ஆயினும் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை. 6

**பரிமேலழகர்:** ஈன்றாள் பசி காண்பான் ஆயினும் - தன்னைப் பயந்தாளது பசியை வறுமையான் கண்டு இரங்கும் தன்மையன் ஆயினன் எனினும், சான்றோர் பழிக்கும் வினை செய்யற்க - அது சுட்டி அறிவுடையார் பழிக்கும் வினைகளை ஒருவன் செய்யாதொழிக.

இறந்த மூப்பினர் ஆய இரு முது குரவரும் கற்புடை மனைவியும் குழவியும் பசியான் வருந்தும் எல்லைக்கண் தீயன பலவும் செய்தாயினும் புறந்தருக என்னும் அறநூற் பொது விதி, பொருள் நூல் வழி ஒழுகுதலும் அரசர் தொழிற்கு உரியராதலும் நன்கு மதிக்கற்பாடும் உடைய அமைச்சர்க்கு எய்தாமைபற்றி இவ்வாறு கூறினர்.

இவை ஐந்து பாட்டானும் பாவமும் பழியும் பயக்கும் வினை செய்யற்க என்பது கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**காளிங்கர்:** ஈன்ற தாய் முதல் தெய்வம் என்று மறை மொழிதலானும், தன்னை ஈன்றாளை முன்னம் வணங்கி வழிபடுதல் யாவர்க்கும் கடன் ஆகலானும், மற்று இவள் பசி கண்டு இரங்கா நெஞ்சினன் ஆதல் மிகவும் தீவினை. மற்று அது யாம் கண்டு பொறுத்திருப்பதும் அன்று.

அதனால் முழுதும் உணர்ந்த சான்றோர் பழிக்கும் பழிதரு வினைகளைச் செய்தலே மிகவும் தீது. (656)

## 657

பழிமலைந் தெய்திய ஆக்கத்திற் சான்றோர்
கழிநல் குரவே தலை. 7

**பரிமேலழகர்:** பழி மலைந்து எய்திய ஆக்கத்தின் - சாலாதார் தீய வினைகளைச் செய்து அதனால் பழியைத் தம் மேற்கொண்டு பெற்ற செல்வத்தின், சான்றோர் கழி நல்குரவே தலை - அது மேற்கொள்ளாத சான்றோர் அனுபவிக்கும் மிக்க நல்குரவே உயர்ந்தது.

நிலையாத செல்வத்தின்பொருட்டு நிலையின பழியை மேற்கோடல் சால்போடு இயையாமையின், 'சான்றோர் கழிநல் குரவே தலை' என்றார்.

### உரை வேறுபாடு

**கவிராஜ பண்டிதர்:** சான்றோர் - அறிஞர்.

### ஒப்புமை

*முற்றும்:*

"சிறியவர் எய்திய செல்வத்தின் மாணப்
பெரியவர் நல்குரவு நன்றே—தெரியின்
மதுமயங்கு பூங்கோதை மாணிழாய் மோரின்
முதுநெய்தீ தாகலோ இல்." (பழமொழி.) (657)

## 658

கடிந்த கடிந்தொரார் செய்தார்க் கவைதாம்
முடிந்தாலும் பீழை தரும். 8

**பரிமேலழகர்:** கடிந்த கடிந்து ஓரார் செய்தார்க்கு - நூலோர் கடிந்த வினைகளைத் தாமும் கடிந்து ஒழியாது பொருள் நோக்கிச் செய்த அமைச்சர்க்கு, அவை தாம் முடிந்தாலும் பீழை தரும் - அவை தூய அன்மையின் முடியா; ஒருவாற்றான் முடியினும் பின் துன்பத்தையே கொடுக்கும்.

முடிதல் - கருதிய பொருள் தருதல். பீழை தருதலாகிய பொருளின் தொழில், அதற்குக் காரணமாய வினைகள்மேல் ஏற்றப்பட்டது.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** கடிந்த - நல்லோரால் கடியப்பட்டவற்றை.

**பரிப்பெருமாள்:** உம்மையால், முடிவதன் முன்னும் பீழை தரும் என்றது.

**பரிதியார்:** கடிந்த - காரியமல்லாத காரியத்தை. (658)

## 659

அழக்கொண்ட எல்லாம் அழப்போம் இழப்பினும்
பிற்பயக்கும் நற்பா லவை. 9

**பரிமேலழகர்:** அழ கொண்ட எல்லாம் அழ போம் - ஒருவன் தீவினைகளைச் செய்து பிறர் இரங்கக் கொண்ட பொருள் எல்லாம் இம்மையிலே

அவன்ருன் இரங்கப் போகா நிற்கும்; நல் பாலவை இழப்பினும் பின் பயக்கும் - மற்றைத் தூய வினையான் வந்த பொருள்கள் முன் இழந்தானுயினும் அவனுக்குப் பின்னர் வந்து பயன் கொடுக்கும்.

பின் எனவே மறுமையும் அடங்கிற்று.

பொருள்களான் அவற்றிற்குக் காரணமாய வினைகளது இயல்பு கூறியவாறு.

**உரை வேறுபாடு**

**காளிங்கர்:** அழ கொண்ட - தாம் பிறரைச் செறுத்தும் உறுத்தும் அவர் நெஞ்சு புழுங்கி அழுமாறு வலியினல் வவ்விக்கொண்ட பொருள். *(659)*

## 660

சலத்தால் பொருள்செய்தே மார்த்தல் பசுமண்
கலத்துள்நீர் பெய்திரீஇ யற்று. 10

**பரிமேலழகர்:** சலத்தால் பொருள் செய்து ஏம் ஆர்த்தல் - அமைச்சன் தீய வினைகளால் பொருள் படைத்து அதனல் அரசனுக்கு ஏமம் செய்தல், பசு மண் கலத்துள் நீர் பெய்து இரீஇயற்று - பசிய மண்கலத்துள்ளே நீரைப் பெய்து அதற்கு ஏமம் செய்ததனேடு ஒக்கும்.

முன் ஆக்கம் பயப்பனபோல் தோன்றிப் பின் அழிவே பயத்தலால், அவை சலம் எனப்பட்டன. ஏமம் ஆர்த்தல் என்பது ஏமார்த்தல் என்று ஆயிற்று; ஏமத்தை அடையப் பண்ணுதல் என்றவாறு. இருத்துதல், நெடுங்காலம் இருப்பச் செய்தல். அரசனும் பொருளும் சேரப் போம் என்ப தாம். பிறரெல்லாம் ஏமாத்தல் என்று பாடம் ஓதி, அதற்கு மகிழ்தல் என்றும், இரீஇயற்று என்பதற்கு வைத்தாற்போலும் என்றும் உரைத்தார். அவர் அவை தன் வினையும் பிறிதின் வினையுமாய் உவமையிலக்கணத்தோடு மாறுகோடல் நோக்கிற்றிலர்.

இவை நான்கு பாட்டானும் அதற்குக் காரணம் கூறப்பட்டது.

**உரை வேறுபாடு**

**மணக்குடவர்:** ஏமார்த்தல் - மகிழ்ந்திருத்தல்.

**காளிங்கர்:** ஏமார்த்தல் - இறுமாந்திருத்தல்.

**கவிராஜ பண்டிதர்:** ஏமாக்கல் என்று பாடம் கொண்டார்.

**ஒப்புமை**

**பசுமண் கலத்துள் நீர்பெய்தல்:**

"ஈர்மண் செய்கை நீர்படு பசுங்கலம்
பெருமழைப் பெயற்கேற் ருங்கு" (நற். 308: 9-10.)

"பெயனீர்க் கேற்ற பசுங்கலம் போல" (குறுந். 29: 2.)

"எழிலையாழ் செய்கைப் பசுங்கலன் விசும்பின்
இன்றுளி படநனைந் துருகி."
(திருவிசைப்பா, கருவூர். திருவிடைமரு. 7.) *(660)*

# 67. வினைத்திட்பம்

**பரிமேலழகர்:** அஃதாவது, அத் தூய வினை முடிப்பானுக்கு வேண்டுவதாய மனத்திண்மை. அதிகார முறைமையும் இதனனே விளங்கும்.

## 661

**வினைத்திட்பம் என்ப தொருவன் மனத்திட்பம்**
**மற்றைய எல்லாம் பிற.** 1

**பரிமேலழகர்:** வினை திட்பம் என்பது ஒருவன் மன திட்பம் - வினை செய்தற்கண் திண்மை என்று சொல்லப்படுவது அதனை முடித்தற்கு உரியான் ஒருவன் மனத்தினது திண்மை; மற்றைய எல்லாம் பிற - அஃது ஒழிந்தன எல்லாம் அதற்குத் திண்மை என்று சொல்லப்படா.

ஒழிந்தன ஆவன: படை, அரண், நட்பு முதலியவற்றின் திண்மைகள். அவையும் அதற்கு வேண்டுவனவாய் இனம் ஆகலின் மற்றைய என்றும், வேண்டினும் அஃது இல்வழிப் பயன் இல ஆகலின் பிற என்றும் கூறினர்.

இதனல் வினைத்திட்பமாவது இன்னது என்பது கூறப்பட்டது.

**உரை வேறுபாடு**

**மணக்குடவர்:** மற்றவை என்றது கருவியும் உபாயமும்.

**கவிராஜ பண்டிதர்:** திட்பம் - கெட்டி. (661)

## 662

**ஊறொரால் உற்றபின் ஒல்காமை இவ்விரண்டின்**
**ஆறென்பர் ஆய்ந்தவர் கோள்.** 2

**பரிமேலழகர்:** ஆய்ந்தவர் கோள் - முன் நீதி ஆராய்ந்த அமைச்சரது துணிபு, ஊறு ஒரால் உற்ற பின் ஒல்காமை இவ்விரண்டின் ஆறு என்பர் - பழுதுபடும் வினைகளைச் செய்யாமையும் செய்யும் வினை தெய்வத்தால் பழுதுபட்ட வழி அதற்குத் தளராமையும் ஆகிய இவ்விரண்டன் வழி என்பர் நூலோர்.

தேவர்க்கும் அசுரர்க்கும் அமைச்சுப் பூண்ட வியாழ வெள்ளிகளது துணிபு தொகுத்துப் பின் நீதிநூல் உடையார் கூறியவாறு கூறுகின்றமையின், ஈண்டு வினைத்தூய்மையும் உடன் கூறினர். உறுதலுடையதனை முன் ஊறு என்றமையின், உற்றபின் என்றும், இவ்விரண்டின்கண்ணே பட்டது என்பார் இரண்டின் ஆறு என்றும் கூறினர். ஊறொரார் என்று பாடம் ஓதுவாரும் உளர். அஃது ஒல்காமை என்னும் எண்ணேடும் இரண்டு என்னும் தொகையோடும் இயையாமை அவர் அறிந்திலர்.

**உரை வேறுபாடு**

**கவிராஜ பண்டிதர்:** செய்த பிறகு விசாரப் பட்டால், அது தீர்க்கும் வகை அறியான் என்று பிறர் இகழ்வர். (662)

## 663

**கடைக்கொட்கச் செய்தக்க தாண்மை இடைக்கொட்கின்**
**எற்ரு விழுமம் தரும்.** 3

**பரிமேலழகர்:** கடை கொட்க செய்தக்கது ஆண்மை - செய்யப்படும் வினையை முடிவின்கண் புலப்படும்வகை முன் எல்லாம் மறைத்துச் செய்வதே திட்பமாவது; இடை கொட்கின் எற்றா விழுமம் தரும் - அங்ஙனம் அன்றி இடையே புலப்படுமாயின் அப் புலப்பாடு செய்வானுக்கு நீங்காத இடும்பையைக் கொடுக்கும்.

மறைத்துச் செய்வதாவது அங்கம் ஐந்தும்[1] எண்ணியவாறு பிறர் அறியாமலும், தான் அறிந்ததூஉம், தன் இங்கிதம், வடிவு, செயல், சொற்களான் அவர் உய்த்து உணராமலும் அடங்கிச் செய்தல். அத் திட்பம், ஆண் தன்மையான் வருதலின் ஆண்மை எனப்பட்டது. எற்றா விழுமம் ஆவன: பகைவர் முன் அறிந்து அவ் வினையை விலக்குதல் செய்வாரை விலக்குதல் செய்வர் ஆகலின், அவற்றான் வருவன. விழுமம்: சாதிப் பெயர்.

இவை இரண்டு பாட்டானும் அதனது பகுதி கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** ஒரு வினையைத் தொடங்கினால், முடிவிலே சென்று மீளல் செய்வது ஆண்மையாவது; இடையிலே மீள்வனாயின், அது மிகுதியைக் கொடாது நோயைக் கொடுக்கும்.

சென்று மீளல் சுழல்தல் ஆயிற்று. இது தொடங்கின வினையை முடியச் செய்யவேண்டும் என்றது.

**பரிதியார்:** இடை கொட்கின் - இடையிலே விக்கினம் வருமாகில்.

**காளிங்கர்:** கடைகொட்க - கடைபோக. (663)

## 664

சொல்லுதல் யார்க்கும் எளிய அரியஆம்
சொல்லிய வண்ணம் செயல். 4

**பரிமேலழகர்:** சொல்லுதல் யார்க்கும் எளிய - யாம் இவ்வினையை இவ்வாற்றான் செய்தும் என நிரல்படச் சொல்லுதல் யாவர்க்கும் எளிய; சொல்லிய வண்ணம் செயல் அரிய ஆம் - அதனை அவ்வாற்றானே செய்தல் யாவர்க்கும் அரிய ஆம்.

சொல்லுதல் செயல் என்பன சாதிப்பெயர். அரியவற்றை எண்ணிச் சொல்லுதல் திட்பம் இல்லாதார்க்கும் இயறலின், எளிய என்றார்.

இதனான் அதனது அருமை கூறப்பட்டது.

### ஒப்புமை

1. **சொல்லுதல் யார்க்கும் எளிய ஆதல்:**

"நெடுமொழி மன்னர் நினைக்குங் காலை"
"ஞாங்கர் நெடுமொழி பயிற்றி." (புறநா. 54:9, 376:22.)

2. **முற்றும்:**

"எறிபடை மயங்கிய வெருவரு ஞாட்பிற்
கள்ளுடைக் கலத்தர் உள்ளூர்க் கூறிய
நெடுமொழி மறந்த சிறுபே ராளர்" (புறநா. 178:7-9.)

"உரைசெயற் கெளிது மாகி யரிதுமாம் ஒழுக்கில்."
(கம்ப. அரசியல். 44.) (664)

---

1. குறள், 631, உரையைக் காண்க.

## 665

வீறெய்தி மாண்டார் வினைத்திட்பம் வேந்தன்கண்
ஊறெய்தி உள்ளப் படும். 5

**பரிமேலழகர்:** வீறு எய்தி மாண்டார் வினை திட்பம் - எண்ணத்தால் சிறப்பு எய்திப் பிற இலக்கணங்களாலும் மாட்சிமைப்பட்ட அமைச்சரது வினைத்திட்பம், வேந்தன்கண் ஊறு எய்தி உள்ளப்படும் - வேந்தன்கண்ணே உறுதலை எய்தலான் எல்லாராலும் நன்கு மதிக்கப்படும்.

வேந்தன்கண் ஊறு எய்தல், எடுத்த வினை அதனால் முற்றுப்பெற்றுச் செல்வமும் புகழும் அவன்கண்ண ஆதல். எய்தலான் என்பது திரிந்து நின்றது. உள்ளல் - மதிப்பான் மறவாமை.

இதனால் அதன் சிறப்புக் கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**காளிங்கர்:** வேந்தன் கோலிக்கொண்ட வினைத்திட்பமானது பின்பு ஓர் இடையூறு வந்து எய்தின், அறிவு மாட்சிமை உடைய அமைச்சரானோர் அதனை வெல்லும் உபாயத்தை விருப்புற்று விசாரிக்க, மற்று அவ்விடையூறானது கெட்டுவிடும்.

**கவிராஜ பண்டிதர்:** வேந்தன்கண் ஊறு எய்தி உள்ளப்படும் - அரசனாலே சந்தோஷப்பட்டு எந்நாளும் நினைக்கப்படும். *(665)*

## 666

எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின். 6

**பரிமேலழகர்:** எண்ணிய எண்ணியாங்கு எய்துப - தாம் எய்த எண்ணிய பொருள்கள் எல்லாவற்றையும் அவ் வெண்ணியவாறே எய்துவர், எண்ணியார் திண்ணியர் ஆக பெறின் - எண்ணியவர் அவற்றிற்கு வாயிலாகிய வினைக்கண் திண்மை உடையராகப் பெறின்.

எளிதின் எய்துப என்பார், எண்ணியாங்கெய்துப என்றார். அவர் அவ்வாறல்லது எண்ணுமையின்[1] திண்ணியராகவே வினை முடியும், அது முடிய அவை யாவையும் கை கூடும் என்பது கருத்து.

இதனான் அஃது உடையார் எய்தும் பயன் கூறப்பட்டது.

### ஒப்புமை

முற்றும்:

"இனியாரும் இல்லாதார் எம்மில் பிறர்யார்
தனியேம்யாம் என்றொருவர் தாமடியல் வேண்டா
முனிவில ராகி முயல்க முனிவில்லார்
முன்னிய தெய்தாமை இல்." (பழமொழி, 161.) *(666)*

## 667

உருவுகண் டெள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்
கச்சாணி அன்னார் உடைத்து. 7

**பரிமேலழகர்:** உருள் பெரும் தேர்க்கு அச்சு ஆணி அன்னார் உடைத்து - உருளாநின்ற பெரிய தேர்க்கு அச்சின்கண் ஆணிபோல வினைக்கண் திண்ணி

1. எய்தற்குரியவற்றையே எண்ணுவர் என்றபடி.

யாரை உடைத்து உலகம்; உருவு கண்டு எள்ளாமை வேண்டும் - அதனால் அவரை வடிவின் சிறுமை நோக்கி இகழ்தலை ஒழிக.

சிறுமை, எள்ளாமை வேண்டும் என்பதனானும் உவமையானும் பெற்றாம். அச்சு - உருள் கோத்த மரம். ஆணி - உருள் சுழலாது அதன் கடைக்கண் செருகுமது. அது வடிவால் சிறிதாய் இருந்தே பெரிய பாரத்தைக் கொண்டுஉய்க்கும்திட்பம் உடைத்து. அதுபோல, வடிவால்சிறியராய் இருந்தே பெரிய வினைகளைக் கொண்டுஉய்க்கும் திட்பம் உடைய அமைச்சரும் உளர், அவரை அத் திட்பம் நோக்கி அறிந்துகொள்க என்பதாம்.

இதனான் அவரை அறியுமாறு கூறப்பட்டது.

### மேற்கோள் விளக்கம்

'உருவு...உடைத்து' என்பதனுள் அவர் செய்கை வன்மை கூறாராயினும், அச்சாணி என்று உவமப்பொருள்தானே அச்செய்கை வன்மை கூறிற்று.' (தொல். பொருள். 295, பேர்.)

### ஒப்புமை

**உருவுகண் டெள்ளாமை வேண்டும்:**

"பலகற்றேம் யாமென்று தற்புகழ்தல் வேண்டா
அலர்கதிர் ஞாயிற்றைக் கைக்குடையும் காக்கும்
சிலகற்றார் கண்ணும் உளவாம் பலகற்றார்க்
கச்சாணி யன்னதோர் சொல்." (அறநெறி. 42.)

"மாணியாம் படிவ மன்று மற்றிவன் வடிவம் மைந்த
ஆணியிவ் வுலகுக் கெல்லாம் என்னலாம் ஆற்றற் கேற்ற
சேணுயர் பெருமை தன்னைச் சிக்கறத் தெளிந்தேன் பின்னர்க்
காணுதி மெய்ம்மை யென்று தம்பிக்குக் கழறிக் கண்ணன்."
(கம்ப. மராமரப். 21.) (667)

## 668

கலங்காது கண்ட வினைக்கண் துளங்காது
தூக்கம் கடிந்து செயல். 8

**பரிமேலழகர்:** கலங்காது கண்ட வினைக்கண் - மனம் தெளிந்து செய்வதாகத் துணிந்த வினையின்கண், துளங்காது தூக்கம் கடிந்து செயல் - பின் அசைதல் இன்றி நீட்டித்தலை ஒழிந்து செய்க.

கலங்கியவழி ஒழிவதும் செய்வதுபோல் தோன்றும் ஆகலின், தெளிந்து பலகால் ஆராய்ந்து தாம் செய்வதாக ஓர்த்த வினையைக் கலங்காது கண்ட வினை என்றார். துளங்காமை – திட்பம் உடைமை.

### உரை வேறுபாடு

**கவிராஜ பண்டிதர்:** மனசு கலங்கினால் செய்வதும் தவிர்வதும் அறியப் போகாது; தெளிந்த காரியத்தை ஆலஸ்யம் பண்ணினால் பின்பு நிறைவேறாது. (668)

## 669

துன்பம் உறவரினும் செய்க துணிவாற்றி
இன்பம் பயக்கும் வினை. 9

**பரிமேலழகர்:** துன்பம் உற வரினும் - முதற்கண் மெய்ம் முயற்சியால் தமக்குத் துன்பம் மிக வருமாயினும், இன்பம் பயக்கும் வினை துணிவு ஆற்றி செய்க - அது நோக்கித் தளராது முடிவின்கண் இன்பம் பயக்கும் வினையைத் திட்பம் உடையராய்ச் செய்க.

துணிவு-கலங்காமை; அஃது உடையார்க்கல்லது கணிகமாய முயற்சித் துன்பம்[1] நோக்காது நிலையுதல் உடைய பரிணும இன்பத்தை[2] நோக்கிச் செய்தல் கூடாமையின், துணிவாற்றிச் செய்க என்றார்.

இவை இரண்டு பாட்டானும் அவர் வினை செய்யுமாறு கூறப்பட்டது. (669)

### 670

எனைத்திட்பம் எய்தியக் கண்ணும் வினைத்திட்பம்
வேண்டாரை வேண்டா துலகு. 10

**பரிமேலழகர் :** வினை திட்பம் வேண்டாரை - வினைத் திட்பத்தை இது நமக்குச் சிறந்தது என்று கொள்ளாத அமைச்சரை, எனை திட்பம் எய்தியக் கண்ணும் - ஒழிந்த திட்பங்கள் எல்லாம் உடையராய இடத்தும், வேண்டாது உலகு - நன்கு மதியார் உயர்ந்தோர்.

மனத்தின்கண் திட்பம் இல்லாதார்க்குப் படை, அரண், நட்பு முதலிய வற்றின் திட்பங்கள் எல்லாம் உளவாயினும், வினை முடியாதாம். ஆகவே, அவை எல்லாம் கெடும் என்பதுபற்றி உலகு வேண்டாது என்றார்.

இதனுன் வினைத்திட்பம் இல்லாதாரது இழிபு கூறப்பட்டது.

**உரை வேறுபாடு**

**பரிதியார்:** எனை திட்பம் எய்தியக் கண்ணும் - செல்வம் கல்வி உறவு இந்தத் திடம் பெற்றாலும். (670)

---

## 68. வினைசெயல்வகை

**பரிமேலழகர் :** அஃதாவது, அத் திட்பம் உடைய அமைச்சன் அவ் வினையைச் செய்யும் திறம். அதிகார முறைமையும் இதனுனே விளங்கும்.

### 671

சூழ்ச்சி முடிவு துணிவெய்தல் அத்துணிவு
தாழ்ச்சியுள் தங்குதல் தீது. 1

**பரிமேலழகர்:** சூழ்ச்சி முடிவு துணிவு எய்தல் - விசாரத்திற்கு எல்லை யாவது விசாரிக்கின்றான் இனி இது தப்பாது என்னும் துணிவினைப் பெறுதல்; அத் துணிவு தாழ்ச்சியுள் தங்குதல் தீது - அங்ஙனம் துணிவு பெற்ற வினை பின் நீட்டிப்பின்கண் தங்குமாயின் அது குற்றம் உடைத்து.

சூழ்ச்சி முடிவு துணிவெய்தல் எனவே, துணிவு எய்தும் அளவும் சூழ வேண்டும் என்பது பெற்றாம். பின்னர்த் துணிவு, ஆகுபெயர். நீட்டிப்பு, செய் யும் காலத்துச் செய்யாமை அஃது உள்வழிக் காலக் கழிவு ஆகலானும், பகை வர் அறிந்து அழித்தலானும் முடியாமையின் அதனைத் தீது என்றார். (671)

### 672

தூங்குக தூங்கிச் செயற்பால தூங்கற்க
தூங்காது செய்யும் வினை. 2

---

1. குறள், 630, உரை.
2. முடிவில் விளையும் இன்பம்.

**பரிமேலழகர்:** தூங்கி செயல்பால தூங்குக - நீட்டித்துச் செய்யும் பகுதியவாய வினைகளுள் நீட்டிக்க; தூங்காது செய்யும் வினை தூங்கற்க - நீட்டியாது செய்யும் வினைகளுள் நீட்டியா தொழிக.

இருவழியும் இறுதிக்கண் தொக்க ஏழாவது விரிக்கப்பட்டது. இரு வகை வினைகளும் வலியானும் காலத்தானும் அறியப்படும்; மாறிச் செய்யின், அவை வாயா என்பது கருத்து. மேல் தூங்காமை என்றார், ஈண்டு அதனைப் பகுத்துக் கூறினர்

இவை இரண்டு பாட்டானும் பொது வகையால் வினை செய்யும் திறம் கூறப்பட்டது.

ஒப்புமை

**முற்றும் :**

"மற்றிக் காலத் தல்லது மேற்சென்று
வெற்றிக் காலத்து வீட்டுதல் அரிதென."*(பெருங் 4.8: 53-4.)* (672)

## 673

ஒல்லும்வாய் எல்லாம் வினை நன்றே ஒல்லாக்கால்
செல்லும்வாய் நோக்கிச் செயல். 3

**பரிமேலழகர் :** ஒல்லும் வாய் எல்லாம் வினை நன்று - வினை செய்யுங் கால் இயலும் இடத்து எல்லாம் போரால் செய்தல் நன்று; ஒல்லாக்கால் செல்லும் வாய் நோக்கி செயல் - அஃது இயலாஇடத்து ஏனை மூன்று உபாயத் துள்ளும் அது முடிவதோர் உபாயம் நோக்கிச் செய்க.

இயலும் இடம், பகையில் தான் வலியனாய காலம். அக் காலத்துத் தண்டமே நன்று என்றார், அஞ்சுவது அதற்கே ஆகலின். இயலா இடம், ஒத்த காலமும் மெலியனாய காலமும். அவ் விரண்டு காலத்தும் சாம பேத தானங் களுள் அது முடியும் உபாயத்தால் செய்க என்றார், அவை ஒன்றற்கு ஒன்று வேறுபாடு உடையவேனும் உடம்படுத்தற் பயத்தால் தம்முள் ஒக்கும் ஆகலின்.

இதனான் வலியான், ஒப்பான், மெலியான் என நிலை மூவகைத்து என்பதூஉம், அவற்றுள் வலியது சிறப்பும் கூறப்பட்டன.

உரை வேறுபாடு

**மணக்குடவர்:** வாய் - இடம்.

**காளிங்கர்:** ஒல்லாக்கால் செல்லும் வாய் நோக்கி செயல் - மற்று இய லாதபின்னும் அவ் வினைகள் செலவுபடும் வழி எல்லாம் ஓர்ந்து பார்த்துச் செய்துகொள்க. *(673)*

## 674

வினைபகை என்றிரண்டின் எச்சம் நினையுங்கால்
தீஎச்சம் போலத் தெறும். 4

**பரிமேலழகர்;** வினை பகை என்ற இரண்டின் எச்சம் - செய்யத் தொடங்கிய வினையும் களையத் தொடங்கிய பகையும் என்று சொல்லப்பட்ட இரண்டனது ஒழிவும், நினையுங்கால் தீ எச்சம் போல தெறும் - ஆராயுங்கால் தீயினது ஒழிவு போலப் பின் வளர்ந்து கெடுக்கும்.

இனி இக் குறை என் செய்வது என்று இகழ்ந்து ஒழியற்க, முடியச் செய்க என்பதாம். பின் வளர்தல் ஒப்புமை பற்றிப் பகை எச்சமும் உடன் கூறினர்.

இதனான் வலியான் செய்யும் திறம் கூறப்பட்டது.

### ஒப்புமை

*1. வினை எச்சம்:*

''பணிக்குறை வருத்தம்.'' (குறுந். 333:5.)

*2. பகை எச்சத்துக்குத் தீ எச்சம்:*

''கருப்பை போற்குரங் கெற்றக் கதிர்சுழல்
பொருப்பை ஒப்பவர் தாமின்று பொன்றினர்
அருப்பம் என்று பகையையும் ஆரழல்
நெருப்பை யும்இகழ்ந் தால்அது நீதியோ.'' (கம்ப. முதற்போர். 92.)
(674)

## 675

பொருள்கருவி காலம் வினை இடனொ டைந்தும்
இருள்தீர எண்ணிச் செயல் 5

*பரிமேலழகர்:* பொருள் கருவி காலம் வினை இடனொடு ஐந்தும் - **வினை** செய்யுமிடத்துப் பொருளும் கருவியும் காலமும் வினையும் இடனும் ஆகிய இவ் வைந்தனையும், இருள் தீர எண்ணி செயல் - மயக்கம் அற எண்ணிச் செய்க.

எண் ஒடு பிற வழியும் கூட்டப்பட்டது. பொருள் - அழியும் பொருளும் ஆகும் பொருளும். கருவி-தன் தானையும் மாற்றார்தானையும். காலம் - தனக்கு ஆம் காலமும் அவர்க்கு ஆம் காலமும். வினை - தான் வல்ல வினையும் அவர் வல்ல வினையும். இடம் - தான் வெல்லும் இடமும் அவர் வெல்லும் இடமும். இவற்றைத் தான் வென்றி எய்தும் திறத்தில் பிழையாமல் எண்ணிச் செய்க என்பதாம்.

### ஒப்புமை

*முற்றும்:*

''காலமும் இடனும் ஏற்ற கருவியும் தெரியக் கற்ற
நூலுற நோக்கித் தெய்வம் நுனித்தறம் குணித்த மேலோர்.''
(கம்ப. மந்திரப். 8.) (675)

## 676

முடிவும் இடையூறும் முற்றியாங் கெய்தும்
படுபயனும் பார்த்துச் செயல். 6

*பரிமேலழகர்:* முடிவும் - வினை செய்யுங்கால் அது முடிதற்கு உள தாம் முயற்சியும், இடையூறும் - அதற்கு வரும் இடையூறும், முற்றியாங்கு எய்தும் படு பயனும் - அது நீங்கி முடிந்தால் தான் எய்தும் பெரும்பயனும், பார்த்து செயல் - சீர்தூக்கிச் செய்க.

முடிவு: ஆகுபெயர். முயற்சி இடையூறுகளது அளவில் பயனது அளவு பெரிதாயின் செய்க என்பதாம்.

### ஒப்புமை

*முற்றும்:*

''தற்றாக்கித் தன்துணையும் தூக்கிப் பயன்தூக்கி
மற்றவை கொள்வ மதிவல்லார்—அற்றன்றி
யாதானும் ஏன்றுகொண் டியாதானும் செய்தக்கால்
யாதானும் ஆகி விடும்.'' (பழமொழி, 321.)

"நல்லவும் தீயவும் நாடி நாயகற்
கெல்லையின் மருத்துவன் இயல்பின் எண்ணுவார்
ஒல்லைவந் துறுவன உற்ற பெற்றியின்
தொல்லைநல் வினையென உதவும் சூழ்ச்சியார்."

(கம்ப. மந்திரப். 10.) (676)

## 677

செய்வினை செய்வான் செயல்முறை அவ்வினை
உள் அறிவான் உள்ளம் கொளல். 7

**பரிமேலழகர்:** செய்வினை செய்வான் செயல்முறை - அவ்வாற்றால் செய்யப்படும் வினையைத் தொடங்கினன் செய்யும் முறைமையாவது, அவ் வினை உள் அறிவான் உள்ளம் கொளல் - அதனது உளப்பாட்டினை அறிவான் கருத்தினைத் தான் அறிதல்.

அவ்வாறு என்றது பொருள் முதலிய எண்ணலையும் முடிவு முதலிய தூக்கலையும். உள் அறிவான்-முன்செய்து போந்தவன். அவன் கருத்து, அவன் செய்து போந்த உபாயம். அதனை அறியவே, தானும் அதனைச் செய்து பயன் எய்தும் என்பதாம்.

இவை மூன்று பாட்டானும் ஒப்பான் செய்யும் திறம் கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**பரிதியார்:** ஒருவன் ஒரு காரியத்துக்கு வல்லவன் ஆகில் அந்தக் காரியத்தையும், அவன் காரியம் செய்யும் முறைமையையும் தான் கவரப் பண்ணிக் கொள்ளவேணும்.

**காளிங்கர்:** யாதானும் ஒரு கருமம் செய்யும் இடத்துச் செய்கருமந் தானும், அக் கருமம் தலைக்கொண்டு செய்யும் அவனும், மற்று அது முடியக் கற்று அதனை நாள்தோறும் செய்து ஒழுகும் முறைமைப்பாடும் என்று சொல்லப்பட்ட இவை மூன்றும் இனி இவற்றின் உளப்பாடு அறிந்து நடாத்தும் உபாயம் உடையோனும் என்னும் இவை இத்தனையும் நெஞ்சு கைக் கொண்டு செய்கை வினைசெயல்வகையாவது.

### ஒப்புமை

**அவ் வினை உள் அறிவான் உள்ளம் கொளல்:**

"மெய்ந்நீர ராகி விரியப் புகுவார்க்கும்
பொய்ந்நீர ராகிப் பொருளை முடிப்பார்க்கும்
எந்நீர ராயினும் ஆக அவரவர்
தந்நீர ராதல் தலை."

(பழமொழி, 395.) (677)

## 678

வினையான் வினை ஆக்கிக் கோடல் நனைகவுள்
யானையால் யானையாத் தற்று. 8

**பரிமேலழகர்:** வினையான் வினை ஆக்கிகோடல் - செய்கின்ற வினையாலே அன்னது பிறிதும் ஓர் வினையை முடித்துக்கொள்க; நனை கவுள் யானையால் யானை யாத்தற்று - அது மதத்தால் நனைந்த கபோலத்தினை உடைய யானையாலே அன்னது பிறிதும் ஓர் யானையைப் பிணித்ததனோடு ஒக்கும்.

பிணித்தற்கு அருமை தோன்ற நனைவுகள் என்பது பின்னும் கூட்டப் பட்டது. தொடங்கிய வினையானே பிறிதும் ஓர் வினையை முடித்தற்கு உபாயம் ஆமாறு எண்ணிச் செய்க; செய்யவே, அம் முறையான் எல்லா வினையும் எளிதில் முடியும் என்பதாம்.

உரை வேறுபாடு

**மணக்குடவர்:** கோடல் - செய்து கொள்வது.

இது, தமக்கு ஒரு பகைவர் தோன்றினால் அவர்க்குப் பகையாயினரை அவரோடு பகைக்குமாறு பண்ணுவார்பக்கல் பகையாய் வருவார் இல்லை என்றது.

ஒப்புமை

1. **வினையால் வினை ஆக்கிக் கோடல்:**

"தெள்ளி உணரும் திறனுடையார் தம்பகைக்
குள்வாழ் பகைவர்ப் பெறுதல் உறுதியே
கள்ளினால் கள்ளறுத்தல் காண்டும் அதுவன்றோ
முள்ளினால் முள்களையு மாறு." (பழமொழி, 54.1)

2. **யானையால் யானை யாத்தற்று:**

"ஆண முடைய அறிவினர் தங்நலம்
மாணும் அறிவி னவரைத் தலைப்படுத்தல்
மானமர் கண்ணாய் மறங்கெழு மாமன்னர்
யானையால் யானையாத் தற்று." (பழமொழி, 223.) (678)

## 679

**நட்டார்க்கு நல்ல செயலின் விரைந்ததே**
**ஒட்டாரை ஒட்டிக் கொளல்.** 9

**பரிமேலழகர்:** நட்டார்க்கு நல்ல செயலின் விரைந்ததே - வினை செய்வானால் தன் நட்டார்க்கு இனியவற்றைச் செய்தலினும் விரைந்து செய்யப்படும், ஒட்டாரை ஒட்டி கொளல் - தன் பகைவரோடு ஒட்டாரைத் தனக்கு நட்பாக்கிக் கோடல்.

அவ் வினை வாய்த்தற் பயத்தவாய இவ்விரண்டும் பகைவர்க்குத் தன் மெலிவு புலன் ஆதலின் முன்னே செய்க என்பார், விரைந்தது என்றார்; விரைந்து செய்யப்படுவது என்றவாறு. வினை செய்யும் திறம் ஆகலின் பகைவரோடு ஒட்டார் ஆயிற்று. தன் ஒட்டார் பிறருள் கூடாமல் மாற்றி வைத்தல் எனினும் அமையும்.

உரை வேறுபாடு

**மணக்குடவர்:** ஒட்டாரை - பகைவரை.

**பரிப்பெருமாள்:** இது, சுற்றத்திற்கு நல்லவை செய்தலினும் வேண்டுவன விரைந்து செய்யவேண்டும் அன்றே. அதனினும் பகை கொள்ளாமை விரைந்து செய்தல்வேண்டும், அவரும் தம்மொடு ஒத்த வலியுடையார் ஆயின் என்றவாறு.

**காளிங்கர்:** பகைவரானோரை ஒருவாற்றால் பகை தீர்த்து இங்ஙனம் பொருத்திக் கொள்வாராயின் பகை எச்சம் இல்லை.

ஒப்புமை

**ஒட்டாரை ஒட்டிக் கொள்ளுதல்:**

"நட்டார்க்கு நல்ல செயல்இனி தெத்துணையும்
ஒட்டாரை ஒட்டிக் கொளல்அதனின் முன்னினிதே."
(இனியவை, 18.) (679)

### 680

உறைசிறியார் உள்நடுங்கல் அஞ்சிக் குறைபெறின்
கொள்வர் பெரியார்ப் பணிந்து. 10

**பரிமேலழகர்:** உறை சிறியார் - ஆளும் இடம் சிறியராய அமைச்சர், உள் நடுங்கல் அஞ்சி - தம்மின் வலியார் எதிர்ந்த வழித் தம் பகுதி நடுங்கலை அஞ்சி, குறை பெறின் பெரியார் பணிந்து கொள்வர் - அந்நிலைக்கு வேண்டுவதாய சந்து கூடுமாயின் அவரைத் தாழ்ந்து அதனை ஏற்றுக் கொள்வர்.

இடம், நாடும் அரணும். அவற்றது சிறுமை ஆள்வார்மேல் ஏற்றப் பட்டது. மெலியாரோடு சந்திக்கு வலியார் இயைதல் அரிது ஆகலின், பெறின் என்றார். அடியிலே மெலியர் ஆயினர் தம் பகுதியும் அஞ்சி நீங்கின் முதலொடும் கெடுவர் ஆகலின் அது வாராமல் சிறிது கொடுத்தும் சந்தினை ஏற்றுக்கொள்க என்பதாம். பணிதல் மானம் உடையார்க்குக் கருத்து அன்மையின், கொள்வர் என உலகியலால் கூறினர்.

இவை மூன்று பாட்டானும் மெலியான் செய்யும் திறம் கூறப்பட்டது.

**உரை வேறுபாடு**

**பரிதியார்:** பெலவீனனான ராசா தன்னை வந்து அடைந்தால் அவன் காரியத்தைப் பார்ப்பது மந்திரி தத்துவம். *(680)*

---

# 69. தூது

**பரிமேலழகர்:** அஃதாவது, சந்தி விக்கிரகங்கட்கு வேற்று வேந்தரிடைச் செல்வாரது தன்மை. அவ்விரண்டனையும் மேல் வினை செயல்வகை என்றமையின், இஃது அதன்பின் வைக்கப்பட்டது. தான் வகுத்துக் கூறுவான், கூறியது கூறுவான் எனத் தூது இருவகைப்படும். அவருள் முன்னோன் அமைச்சனோடு ஒப்பான் ஆகலானும், பின்னோன் அவனில் காற்கூறு குணம் குறைந்தோன் ஆகலானும் இஃது அமைச்சியல் ஆயிற்று.

**உரை வேறுபாடு**

**பரிதியார்:** தூதாவது தானுதிபதி சொல்லும் முறைமை சொல்லுதல்.

### 681

அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் வேந்தவாம்
பண்புடைமை தூதுரைப்பான் பண்பு. 1

**பரிமேலழகர்:** அன்பு உடைமை - தன் சுற்றத்தார் மாட்டு அன்பு உடையான் ஆதலும், ஆன்ற குடி பிறத்தல் - அமைச்சுப்பூணற்கு அமைந்த குடியின்கண் பிறத்தலும், வேந்து அவாம் பண்பு உடைமை - அரசர் சாதி விரும்பும் பண்பு உடையன் ஆதலும், தூது உரைப்பான் பண்பு - தூது வார்த்தை சொல்வானுக்கு இலக்கணம்.

முன்னைய இரண்டனாலும், முறையே சுற்றத்தார்க்குத் தீங்கு வாராமல் தான் பேணி ஒழுகலும், தன் முன்னோர் தூதியல் கேட்டு அறிதலும் பெற்றும். வேந்தவாம் பண்புடைமை, முன்னர் மன்னரைச் சேர்ந்தொழுகற்கண் பெறப்படும். அதனால் வேற்றரசரும் அவன் வயத்தார் ஆதல் பெறுதும்.

உரை வேறுபாடு

**மணக்குடவர்:** அன்புடைமை - அரசன்மாட்டு அன்புடைமை.

ஒப்புமை

*தூதன் இலக்கணம்:*

"அன்புடைமை ஆய்ந்த அறிவுடைமை இற்பிறப்பு
நன்குடைமை நல்ல நயனுடைமை—நன்கமைந்த
சுற்ற முடைமை வடிவுடைமை சொல்வன்மை
கற்றடங்கல் தூதின் கடன்." (பாரத வெண்பா.) (681)

## 682

**அன்பறி வாராய்ந்த சொல்வன்மை தூதுரைப்பார்க்
கின்றி யமையாத மூன்று.** 2

**பரிமேலழகர்:** அன்பு - தம் அரசன் மாட்டு அன்பு உடைமையும், அறிவு - அவனுக்கு ஆவன அறியும் அறிவு உடைமையும், ஆராய்ந்த சொல் வன்மை - அவற்றை வேற்று அரசரிடைச் சொல்லுங்கால் ஆராய்ந்து சொல்லுதல் வன்மையும் என, தூது உரைப்பார்க்கு இன்றி அமையாத மூன்று-தூது உரைக்க உரியார்க்கு இன்றியமையாத குணங்கள் மூன்று.

ஆராய்தல் - அவற்றிற்கு உடம்படும் சொற்களைத் தெரிதல். இன்றி யமையாத மூன்று எனவே, அமைச்சர்க்குச் சொல்லிய பிற குணங்களும் வேண்டும் என்பது பெற்றும்.

இவை இரண்டு பாட்டானும் இரு வகையார்க்கும் பொது இலக்கணம் கூறப்பட்டது.

ஒப்புமை

*முற்றும்:*

"மாண்டமைந்தார் ஆய்ந்த மதிவனப்பே வன்கண்மை
ஆண்டமைந்த கல்வியே சொல்லாற்றல்—பூண்டமைந்த
காலம் அறிதல் கருதுங்கால் தூதுவர்க்கு
ஞாலம் அறிந்த புகழ்." (ஏலாதி, 26.) (682)

## 683

**நூலாருள் நூல்வல்லன் ஆகுதல் வேலாருள்
வென்றி வினைஉரைப்பான் பண்பு.** 3

**பரிமேலழகர்:** வேலாருள் வென்றி வினை உரைப்பான் பண்பு - வேலை யுடைய வேற்று அரசரிடைச் சென்று தன் அரசனுக்கு வென்றி தரும் வினை யைச் சொல்லுவானுக்கு இலக்கணமாவது, நூலாருள் நூல் வல்லன் ஆகுதல்- நீதி நூலை உணர்ந்த அமைச்சரிடைத் தான் அந் நூலை வல்லன் ஆதல்.

கோறல் மாலையர் என்பது தோன்ற வேலார் என்றும், தூது வினை இரண்டும் அடங்க வென்றிவினை என்றும் கூறினர். வல்லன் ஆகுதல்-உணர்வு மாத்திரம் உடையராய அவர்முன் வகுக்கும் ஆற்றல் உடையன் ஆதல்.

உரை வேறுபாடு

**காளிங்கர்:** எனவே, அரசரும் யாவையும் மற்றுளோரும் அனைத்தும் அறிந்த தன்மையர் ஆகலான் அவர்மாட்டுச் சென்று உரைக்கும் இடத்துக் கல்வியும் திருத்தம் வேண்டும் என்பது கருதி இவர்க்கு நூல்வன்மை

எடுத்து உரைத்தது என அறிக. சூழ்ச்சியாளரில் சூழ்ச்சி பெரிது உடையன் ஆதல் என்றும் ஆம். (683)

## 684

அறிவுரு ஆராய்ந்த கல்விஇம் மூன்றன்
செறிவுடையான் செல்க வினைக்கு. 4

**பரிமேலழகர்:** அறிவு - இயற்கையாகிய அறிவும், உரு - கண்டார் விரும்பும் தோற்றப் பொலிவும், ஆராய்ந்த கல்வி - பலரோடும் பலகாலும் ஆராயப்பட்ட கல்வியும் என, இம் மூன்றன் செறிவு உடையான் - நன்கு மதித்தற்கு ஏதுவாய இம் மூன்றனது கூட்டத்தை உடையான், வினைக்கு செல்க - வேற்று வேந்தரிடைத் தூது வினைக்குச் செல்க.

இம் மூன்றும் ஒருவன்பால் கூடுதல் அரிது ஆகலின், செறிவு உடையான் என்றார். இவற்றான் நன்கு மதிப்புடையன் ஆகவே, வினை இனிது முடியும் என்பது கருத்து. (684)

## 685

தொகச்சொல்லித் தூவாத நீக்கி நகச்சொல்லி
நன்றி பயப்பதாம் தூது. 5

**பரிமேலழகர் :** தொக சொல்லி - வேற்றரசர்க்குப் பல காரியங்களைச் சொல்லும்வழிக் காரணவகையால் தொகுத்துச் சொல்லியும், தூவாத நீக்கி நக சொல்லி - இன்னாத காரியங்களைச் சொல்லும் வழி வெய்ய சொற்களை நீக்கி இனிய சொற்களான் மனம் மகிழச் சொல்லியும், நன்றி பயப்பது தூது ஆம் - தன் அரசனுக்கு நன்மையைப் பயப்பவனே தூதன் ஆவான்.

பல காரியங்கட்கு உடம்படாதார் பரம்பரையான் அவற்றிற்குக் காரணமாயது ஒன்றைச் சொல்ல, அதனால் அவை விளையுமாறு உய்த்து உணர அருமையானும் சுருக்கத்தானும் உடம்படுவர்; இன்னாதவற்றிற்கு உடம்படாதார்தம் மனம் மகிழச் சொல்ல, அவ் வின்னாமை காணாது உடம்படுவர் ஆதலின், அவ் விரு வாற்றானும் தன் காரியம் தவறாமல் முடிக்கவல்லான் என்பதாம். எண் உம்மைகள் விகாரத்தால் தொக்கன.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** தொக சொல்லி - சுருங்கச் சொல்லி.

**காளிங்கர்:** தூவாத நீக்கி - பயன்படாத சொல்லினை நீக்கி.

### ஒப்புமை

**தூது தொகச் சொல்லுதல்:**

"வயலைக் கொடியின்............
சொல்லிய சொல்லோ சிலவே அதற்கே
ஏணியும் சீப்பும் மாற்றி
மாண்வினை யானையும் அணிகளைந் தனவே." (புறநா. 305.) (685)

## 686

கற்றுக்கண் அஞ்சான் செலச்சொல்லிக் காலத்தால்
தக்க தறிவதாம் தூது. 6

**பரிமேலழகர்:** கற்று - நீதி நூல்களைக் கற்று, செல சொல்லி - தான் சென்ற கருமத்தைப் பகை வேந்தர் மனம் கொளச் சொல்லி, கண் அஞ்சான்-

அவர் செயிர்த்து நோக்கின் அந் நோக்கிற்கு அஞ்சாது, காலத்தால் தக்கது அறிவது தூது ஆம் - காலத்தோடு பொருந்த அது முடிக்கத் தக்க உபாயம் அறிவானே தூதன் ஆவான்.

அவ் வுபாயம் அறிதற்பொருட்டு நீதிநூல் கல்வியும், அதனுன் அன்றிப் பிறிது ஒன்றான் முடியும் காலம் வரின் அவ்வாறு முடிக்க வேண்டுதலின் காலத்தால் தக்கது அறிதலும் இலக்கணம் ஆயின.

உரை வேறுபாடு

**மணக்குடவர்:** கற்று - தன் அரசன் சொன்ன மாற்றத்தைச் சொல்லுங்கால் பகை அரசன் வெகுண்டானுயின் அது மாற்றுதற்காம் உபாயத்தைக் கற்று.

**பரிப்பெருமாள்:** தக்கது அறிதலாவது, சொல்லிய வார்த்தையைச் சொல்லாமல் போதலும், வினைசெய்து போதலும். இஃது இவ்விடத்திற்கு ஆவன செய்யவேண்டும் என்றது. (686)

## 687

கடன்அறிந்து காலம் கருதி இடன்அறிந்
தெண்ணி உரைப்பான் தலை. 7

**பரிமேலழகர்:** கடன் அறிந்து - வேற்று அரசரிடத்துத் தான் செய்யும் முறைமை அறிந்து, காலம் கருதி-அவர் செவ்வி பார்த்து, இடன் அறிந்து-சென்ற கருமம் சொல்லுதற்கு ஏற்ற இடம் அறிந்து, எண்ணி - சொல்லு மாற்றை முன்னே விசாரித்து, உரைப்பான் தலை - அவ்வாறு சொல்லுவான் தூதரின் மிக்கான்.

செய்யும் முறைமையாவது, அவர் நிலையும் தன் அரசன் நிலையும் தன் நிலையும் தூக்கி அவற்றிற்கு ஏற்பக் காணும் முறைமையும் சொல்லும் முறைமையும் முதலாயின. செவ்வி, தன் சொல்லை ஏற்றுக்கொள்ளும் மன நிகழ்ச்சி; அது காலவயத்தது ஆகலின் காலம் என்றார். இடம் - தனக்குத் துணையாவார் உடன் ஆய இடம். எண்ணுதல்-தான் அது சொல்லுமாறும், அதற்கு அவர் சொல்லும் உத்தரமும், அதற்குப்பின் தான் சொல்லுவனவும் ஆக இவ்வாற்றான் மேன்மேல் தானே கற்பித்தல். வடநூலார் இவ் விருவகையாருடன் ஓலை கொடுத்து நிற்பாரையும் கூட்டித் தூதரைத் தலை, இடை, கடை என்று வகுத்துக் கூறினர் ஆகலின், அவர் மதமும் தோன்றத் தலை என்றார். தூது என்பது அதிகாரத்தான் வந்தது.

இவை ஐந்து பாட்டானும் தான் வகுத்துக் கூறுவானது இலக்கணம் கூறப்பட்டது.

உரை வேறுபாடு

**பரிப்பெருமாள்:** தலை, இடை, கடை என மூன்று வகையாருள் மேற் கூறின எல்லாம் இடையும் கடையும் ஆகிய தூதர் இயல்பு கூறினர். இது தலையான தூதர் இலக்கணம் கூறிற்று. தலையான தூதன் தானே காரியம் அறிந்து சொல்லும். இடையான தூதன் சொன்ன மாற்றத்தைச் சொல்லும். கடையான தூதன் ஓலை காட்டும்.

ஒப்புமை

1. **தூதர் காலம் கருதி உரைத்தல்:**

"காலம் அறிதல் கருதுங்கால் தூதுவர்க்கு
ஞாலம் அறிந்த புகழ்." (ஏலாதி, 26.)

2. முற்றும்:

"செல்லுங்கால் தேயத் தியல்தெரிந்து சென்றக்கால்
புல்லிய சுற்றம் புணர்வறிந்து—புல்லார்
மனத்தால் பிரித்து வலியால் உதவும்
இனத்தால் தெரிவது தூது." (பாரத வெண்பா.) (687)

## 688

**தூய்மை துணைமை துணிவுடைமை இம்மூன்றின்**
**வாய்மை வழிஉரைப்பான் பண்பு.** 8

**பரிமேலழகர்;** வழி உரைப்பான் பண்பு - தன் அரசன் வார்த்தையை அவன் சொல்லியவாறே வேற்று அரசர்க்குச் சென்று சொல்லுவானது இலக்கணமாவன, தூய்மை - பொருள் காமங்களால் தூயன் ஆதலும், துணைமை - தனக்கு அவர் அமைச்சர் துணையாம் தன்மையும், துணிவு உடைமை - துணிதல் உடைமையும், இம் மூன்றின் வாய்மை - இம்மூன்றோடு கூடிய மெய்ம்மையும் என இவை.

பொருள் காமங்கள் பற்றி வேறுபடக் கூறாமைப் பொருட்டுத் தூய்மையும், தன் அரசனுக்கு உயர்ச்சி கூறியவழி எம்மனோர்க்கு அஃது இயல்பு எனக் கூறி அவர் வெகுளி நீக்குதற்பொருட்டுத் துணைமையும், இது சொல்லின் இவர் ஏதம் செய்வர் என்று ஒழியாமைப்பொருட்டுத் துணிவு உடைமையும், யாவரானும் தேறப்படுதற்பொருட்டு மெய்ம்மையும் வேண்டப்பட்டன. இன், ஒடுவின் பொருட்கண் வந்தது.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** துணைமை - சுற்றம் உடைமை. தூய்மை - மெய்யும் மனமும் தூயன் ஆதல். இதன் மெய்ம்மையாவது பிறர்க்கு வேண்டிச் செய்யாது தனக்கு வேண்டிச் செய்தல். சுற்றத்தார்மாட்டும் பொய் கூறாமை பகைவர்மாட்டுப் பொய்கூற வேண்டுதலின் இது பின் கூறப்பட்டது. துணிவு - துணிந்த பின்பு ஐயம் தோற்றாமல் துணிதல். வழி உரைப்பார் என்றார், அரசன் சொன்ன மாற்றத்தையே சொல்லுதலால்.

**பரிதியார்:** வினைத்தூய்மை, உதவிக்கட்டு, திடபுத்தி இம் மூன்றும் உள்ளவனை ஒருவழிப்பட்ட வார்த்தை சொல்வான் தானாபதி.

**காளிங்கர்:** குலத்தூய்மை, குணத்தூய்மை, மனத்தூய்மை, வாய்மொழித் தூய்மை முதலிய தூய்மையும், இருபாலும் சென்று சொல்லுங்கால் தன் அரசற்கும் அவன் கருமத்திற்கும் பெரிதும் துணைமைப்பாடு உடையன் ஆதலும், அரசர் முன்னர்ச் சொல்லுமிடத்துக் கலங்காது சொல்லும் தெளிவுடைமையும் இம்மூன்றினுடைய வஞ்சனையற்ற வண்மைப் பாடுடையது யாது, மற்று அது தூது நடந்து சொல்லுவான் மரபாவது. (688)

## 689

**விடுமாற்றம் வேந்தர்க் குரைப்பான் வடுமாற்றம்**
**வாய்சோரா வன்க ணவன்.** 9

**பரிமேலழகர்:** விடு மாற்றம் வேந்தர்க்கு உரைப்பான் - தன் அரசன் சொல்லிவிட்ட வார்த்தையை வேற்று அரசர்க்குச் சென்று சொல்ல உரியான், வடு மாற்றம் வாய் சோரா வன்கணவன் - தனக்கு வரும் ஏதத்திற்கு அஞ்சி அவனுக்குத் தாழ்வான வார்த்தையை வாய் சோர்ந்தும் சொல்லாத திண்மையை உடையான்.

தாழ்வு சாதிதருமம் அன்மையின் வடு என்றார். வாய் சோரா எனக் காரியம் காரணத்துள் அடக்கப்பட்டது.

**ஒப்புமை**

**முற்றும்:**

"தடுமாற்றம் இன்றித் தகைசான்ற சொல்லான்
வடுமாற்றம் வாய்சோரா னுகி—விடுமாற்றம்
எஞ்சாது கூறி இகல்வேந்தன் சீறுங்கால்
அஞ்சா தமைவது தூது." (பாரத வெண்பா.) (689)

**690**

இறுதி பயப்பினும் எஞ்சா திறைவற்
குறுதி பயப்பதாம் தூது. 10

**பரிமேலழகர்:** இறுதி பயப்பினும் எஞ்சாது - அவ் வார்த்தை தன் உயிர்க்கு இறுதி தரும் ஆயினும் அதற்கு அஞ்சி ஒழியாது, இறைவற்கு உறுதி பயப்பது தூது ஆம் - தன் அரசன் சொல்லியவாறே அவனுக்கு மிகுதியை வேற்று அரசரிடைச் சொல்லுவானே தூதன் ஆவான்.

இறுதி பயப்பினும் என்றதனுல், ஏனைய பயத்தல் சொல்ல வேண்டா ஆயிற்று.

இவை மூன்று பாட்டானும் கூறியது கூறுவானது இலக்கணம் கூறப்பட்டது. (690)

---

# 70. மன்னரைச் சேர்ந்து ஒழுகல்

**பரிமேலழகர்:** அஃதாவது, அமைச்சர் அரசரைப் பொருந்தி ஒழுகுமாறு. இது, வேந்து அவாம் பண்புடைமை[1] என மேலே வேண்டப்பட்டமையின், தூதின்பின் வைக்கப்பட்டது,

**691**

அகலா தணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார். 1

**பரிமேலழகர்:** இகல் வேந்தர் சேர்ந்து ஒழுகுவார் - மாறுபடுதலை உடைய அரசரைச் சேர்ந்து ஒழுகும் அமைச்சர், அகலாது அணுகாது தீ காய்வார் போல்க - அவரை மிக நீங்குவதும் மிகச் செறிவதும் செய்யாது தீக்காய்வார் போல இடைநிலத்திலே நிற்க.

கடிதின் வெகுளும் தன்மையர் என்பது தோன்ற இகல்வேந்தர் என்றார். மிக அகலின் பயன் கொடாது மிக அணுகின் அவமதிபற்றித் தெறும் வேந்தர்க்கு, மிக அகலின் குளிர் நீங்காது மிக அணுகின் சுடுவதாய தீயோடு உளதாய தொழில் உவமம் பெறப்பட்டது.

**உரை வேறுபாடு**

**கவிராஜ பண்டிதர்:** மெத்தச் சேர்ந்து இருந்தால் எண்ணிக்கை இல்லாமல் போம்.

1. குறள், 681.

ஒப்புமை

1. அகலாது ஒழுகுதல்:

"விடலைமை செய்ய வெருண்டகன்று நில்லா
துடலரு மன்னர் உவப்ப ஒழுகின்." (பழமொழி, 225.)

2. மன்னர் தீயினைப் போல்வர்:

"அளையுறை பாம்பும் அரசும் நெருப்பும்
முழையுறை சீயமும் என்றிவை நான்கும்
இளைய வெளிய பயின்றனவென் றெண்ணி
இகழின் இழுக்கம் தரும்." (ஆசாரக். 84.)

"தீண்டி னார்தமைத் தீச்சுடும் மன்னர்தீ
ஈண்டு தங்கிளை யோடும் எரித்திடும்" (சீவக. 250.)

"மன்னரென்பார்
எரியெனற் குரியார் என்றே எண்ணுதி." (கம்ப. வாலிவதைப். 137.)

(691)

## 692

மன்னர் விழைப விழையாமை மன்னரான்
மன்னிய ஆக்கம் தரும். 2

பரிமேலழகர்: மன்னர் விழைப விழையாமை – தம்மால் சேரப்பட்ட மன்னர் விரும்புவனவற்றைத் தாம் விரும்பாது ஒழிதல், மன்னரான் மன்னிய ஆக்கம் தரும் – அமைச்சர்க்கு அவரானே நிலைபெற்ற செல்வத்தைக் கொடுக்கும்.

ஈண்டு விழைப என்றது அவர்க்குச் சிறப்பாக உரியவற்றை; அவை நுகரப்படுவன, ஒப்பனை, மேன்மை என்று இவை முதலாயின. இவற்றை ஒப்பிற்கு அஞ்சித் தாம் விழையாது ஒழியவே, அவ் வச்சம் நோக்கி உவந்து அவர்தாமே எல்லாச் செல்வமும் நல்குவர் என்பது கருத்து; எனவே, அவற்றை விரும்பின் கேடு தரும் என்பதாம்.

ஒப்புமை

முற்றும்:

"பெரியார் உவப்பன தாம் உவவார்"

"அறத்தொடு கல்யாணம் ஆள்வினை கூரை
இறப்பப் பெருகியக் கண்ணும்—திறப்பட்டார்
மன்னரின் மேம்படச் செய்யற்க செய்பவேல்
மன்னிய செல்வம் கெடும்." (ஆசாரக். 68, 85.) (692)

## 693

போற்றின் அரியவை போற்றல் கடுத்தபின்
தேற்றுதல் யார்க்கும் அரிது. 3

பரிமேலழகர்: போற்றின் அரியவை போற்றல் - அமைச்சர் தம்மைக் காக்கக் கருதின் அரிய பிழைகள் தங்கண் வாராமல் காக்க, கடுத்தபின் தேற்றுதல் யார்க்கும் அரிது - அவற்றை வந்தனவாகக் கேட்டு அவ் வரசர் ஐயுற்றால் அவரைப் பின் தெளிவித்தல் யாவர்க்கும் அரிது ஆகலான்.

அரிய பிழைகளாவன: அவரால் பொறுத்தற்கு அரிய அறைபோதல், உரிமையொடு[1] மருவல், அரும்பொருள் வௌவல் என்று இவை முதலாயின.

1. உரிமை - மனைவி.

அவற்றைக் காத்தலாவது, ஒருவன் சொல்லியக்கால், தகுமோ என்று ஐயுருது தகாது என்றே அவர் துணிய ஒழுகல். ஒருவாற்ருல் தெளிவித்தாலும் கடன் கொண்டான் தோன்றப் பொருள் தோன்றுமாறு போலக் கண்டுழி எல்லாம் அவை நினைக்கப்படுதலின், யார்க்கும் அரிது என்ருர்.

இவை மூன்று பாட்டானும் அது பொதுவகையால் கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**பரிப்பெருமாள்:** இது பெரும்பான்மையும் பெண்டிர்மாட்டே வரும்.

**பரிதியார்:** கடுத்தபின் - மனம் சலித்தால்.

**காளிங்கர்:** கடுத்தபின் - முகம் கடுத்தபின்.

### ஒப்புமை

**கடுத்தபின் தேற்றுதல் யார்க்கும் அரிது:**

"பொறுப்பரென் றெண்ணிப் புரைதீர்ந்தார் மாட்டும்
வெறுப்பன செய்யாமை வேண்டும்—வெறுத்தபின்
ஆர்க்கும்அருவி அணிமலை நன்னாட
பேர்த்தாதல் யார்க்கும் அரிது." (நாலடி. 161.)

"நீர்த்தன் ரொருவர் நெறியன்றிக் கொண்டக்கால்
பேர்த்துத் தெருட்டல் பெரியார்க்கும் ஆகாதே." (பழமொழி, 195.)

(693)

## 694

செவிச்சொல்லும் சேர்ந்த நகையும் அவித்தொழுகல்
ஆன்ற பெரியார் அகத்து. 4

**பரிமேலழகர்:** ஆன்ற பெரியார் அகத்து - அமைந்த அரசர் அருகு இருந்தால், செவி சொல்லும் சேர்ந்த நகையும் அவித்து ஒழுகல் - அவர் காண ஒருவன் செவிக்கண் சொல்லுதலையும் ஒருவன் முகம் நோக்கி நகுதலையும் தவிர்ந்து ஒழுகுக.

சேர்தல் - பிறனேடு சேர்தல். செய்து ஒழுகின், தம் குற்றம் கண்டு செய்தனவாகக் கொள்வர் என்பது கருத்து.

### உரை வேறுபாடு

**காளிங்கர்:** செவி சொல்லும் சேர்ந்த நகையும் - அவர் தம்மொடு சொல்லும் செவிச்சொல் அன்றிப் பிறரொடு பறையும் செவிச்சொல்லும், இனி மற்று அவரோடாயினும் பிறரோடாயினும் அங்குக் கூடி நகும் நகையும்.

### ஒப்புமை

1. **செவிச்சொல் அவித்து ஒழுகல்:**

"செவிச்சொல்லும் கொள்ளார் பெரியா ரகத்து"
"பிறரொடு மந்திரம் கொள்ளார் இறைவனைச்
சாரார் செவியோரார் சாரில் பிறிதொன்று
தேர்வார்போல் நிற்க திரிந்து." (ஆசாரக். 75, 78.)

2. **நகை அவித்தொழுகல்:**

"நகையொடு மந்திரம் நட்டார்க்கு வாரம்
பகையொடு பாட்டுரைஎன் றைந்தும்—தொகையொடு

மூத்தோர் இருந்துழி வேண்டார் முதுநூலுள்
யாத்தார் அறிந்தவர் ஆய்ந்து.'' (சிறுபஞ்ச. 84.) (694)

### 695

எப்பொருளும் ஓரார் தொடரார்மற் றப்பொருளை
விட்டக்கால் கேட்க மறை. 5

பரிமேலழகர்: மறை - அரசனுக்குப் பிறரோடு மறை நிகழ்வுழி, எப் பொருளும் ஓரார் - யாதொரு பொருளையும் செவி கொடுத்துக் கேளாது, தொடரார் - அவனை முடுகி வினவுவதும் செய்யாது, அப் பொருளை விட்டக் கால் கேட்க - அம் மறைப் பொருளை அவன் தானே அடக்காது சொல்லியக் கால் கேட்க.

ஓர்தற்கு ஏற்கும் பொருள் ஆயினும் என்பார், எப்பொருளும் என்றார். மற்று: வினைமாற்றின்கண் வந்தது.

#### உரை வேறுபாடு

மணக்குடவர்: யாதொரு பொருளையும் செவிகொடுத்து ஓராது, தொடர்ந்து கேளாது, அப் பொருளை மறைத்தல் தவிர்ந்தால் பின்பு கேட்க. (695)

### 696

குறிப்பறிந்து காலம் கருதி வெறுப்பில
வேண்டுப வேட்பச் சொலல். 6

பரிமேலழகர்: குறிப்பு அறிந்து - அரசனுக்குக் காரியம் சொல்லுங் கால் அப்பொழுது நிகழ்கின்ற அவன் குறிப்பினை அறிந்து, காலம் கருதி - சொல்லுதற்கு ஏற்ற காலத்தையும் நோக்கி, வெறுப்பு இல வேண்டுப வேட்ப சொலல் - வெறுப்பு இலவுமாய் வேண்டுவனவும் ஆய காரியங்களை அவன் மனம் விரும்பும் வகை சொல்லுக.

குறிப்புக் காரியத்தின்கண் அன்றிக் காம வெகுளிஉள்ளிட்டவற்றில் நிகழ்வுழியும் அதற்கு ஏலாக் காலத்தும் சொல்லுதல் பயனின்று ஆகலின் குறிப்பு அறிந்து காலம் கருதி என்றும், அவன் உடம்படாதன முடிவு போகா மையின் வெறுப்பில என்றும், பயன் இல்லவும் பயன் சுருங்கியவும் செய் தல் வேண்டாமையின் வேண்டுப என்றும், அவற்றை இனியவாய்ச் சுருங்கி விளங்கிய பொருளவாய சொற்களால் சொல்லுக என்பார் வேட்பச் சொலல் என்றும் கூறினர். (696)

### 697

வேட்பன சொல்லி வினைஇல எஞ்ஞான்றும்
கேட்பினும் சொல்லா விடல். 7

பரிமேலழகர்: வேட்பன சொல்லி - பயன் பெரியனவுமாய் அரசன் விரும்புவனவுமாய காரியங்களை அவன் கேட்டிலனாயினும் சொல்லி, எஞ் ஞான்றும் வினை இல கேட்பினும் சொல்லா விடல் - எஞ்ஞான்றும் பயன் இல ஆயவற்றைத் தானே கேட்டாலும் சொல்லாது விடுக.

வினையில எனவும் கேட்பினும் எனவும் வந்த சொற்களான், அவற் றின் மறுதலைச் சொற்கள் வருவிக்கப்பட்டன. வினையான் வருதலின் வினை என்றும், வறுமைக் காலமும் அடங்க எஞ்ஞான்றும் என்றும் கூறினர்.

சொல்லுவனவும் சொல்லாதனவும் வகுத்துக் கூறியவாறு.

இவை நான்கு பாட்டானும் சிறப்பு வகையால் கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** சொல்லாது விடலாவது, தூதனை, "அரசர்க்குப் படை எவ்வளவு உண்டு?" என்று பகையரசன் வினவினால், "நீ அறியாத தொன்றோ?" என்று அளவு கூறாமை.

**பரிப்பெருமாள்:** கேட்பினும் சொல்லாவிடல் - தன் அரசன் பெண்டிர் முதலாயினாரைக் கேட்டாருக்குச் சொல்லாமை. (697)

## 698

இளையர் இனமுறையர் என்றிகழார் நின்ற
ஒளியோ டொழுகப் படும். 8

**பரிமேலழகர்:** இளையர் இன முறையர் என்று இகழார் - இவர் எம்மின் இளையர் என்றும் எமக்கு இன்ன முறையினை உடையர் என்றும் அரசரை அவமதியாது, நின்ற ஒளியோடு ஒழுகப்படும் - அவர்மாட்டு நின்ற ஒளியோடு பொருந்த ஒழுகுதல் செயப்படும்.

ஒளி - உறங்கா நிற்கவும் தாம் உலகம் காக்கின்ற அவர் கடவுள் தன்மை.[1] அதனோடு பொருந்த ஒழுகலாவது அவர் கடவுளரும் தாம் மக்களுமாய் ஒழுகுதல். அவ்வொளியால் போக்கப்பட்ட இளமையும் முறையும் பற்றி இகழ்வர் ஆயின், தாமும் போக்கப்படுவர் என்பது கருத்து.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** ஒளி - தலைமை.

**பரிதியார்:** இனையர் இன முறையர் என்று இகழார் - இவர்க்கும் நமக்கும் இப்படி நட்பு,[2] இவர் நமக்கு இன்ன முறையாம் என்று இப்படி அரசரை அவமதியாது.

### ஒப்புமை

1. **இளையன் என்னல்:**

"இளையன் இவன்என உளையக் கூறி"
"நம்மிற், பொருநனும் இளையன்." (புறநா. 72:2, 78:5-6.)

2. **இளையன் என்று இகழுதல் ஆகாமை:**

"அளையுறை பாம்பும் அரசும் நெருப்பும்
முழையுறை சீயமும் என்றிவை நான்கும்
இளைய எளிய பயின்றனவென் றெண்ணி
இகழின் இழுக்கம் தரும்." (ஆசாரக். 84.)

"சீர்த்தகு மன்னர் சிறந்தனைத்தும் கெட்டாலும்
நேர்த்துரைத் தெள்ளார் நிலைநோக்கிச்—சீர்த்த
கிளையின்றிப் போஒய்த் தனித்தாயக் கண்ணும்
இளைதென்று பாம்பிகழ்வா ரில்." (பழமொழி, 383.)

3. **மன்னவர் ஒளி:**

"வலிகெழு தடக்கை மாவண் கிள்ளி
ஒளியொடு வாழி ஊழிதோ றூழி." (மணி. 19:127-8.) (698)

---

1. "உறங்கு மாயினும் மன்னவன் தன்ஒளி, கறங்கு தெண்டிரை வையகம் காக்குமால்." (சீவக. 248.)

2. 'இனையர்' என்பது இவர் பாடம் போலும்.

### 699

கொளப்பட்டேம் என்றெண்ணிக் கொள்ளாத செய்யார்
துளக்கற்ற காட்சி யவர். 9

**பரிமேலழகர்:** கொளப்பட்டேம் என்று எண்ணி கொள்ளாத செய்யார் -அரசனால் யாம் நன்கு மதிக்கப்பட்டேம் என்று கருதி அவன் விரும்பாதவற்றைச் செய்யார், துளக்கு அற்ற காட்சியவர்-நிலைபெற்ற அறிவினை உடையார்.

கொள்ளாதன செய்து அழிவு எய்துவார் கொளப்பாட்டிற்குப் பின் தம்மை வேறு ஒருவராகக் கருதுவர் ஆதலின், முன்னையராகவே கருதி அஞ்சி ஒழுகுவாரைத் துளக்கற்ற காட்சியவர் என்றார்.

**உரை வேறுபாடு**

**மணக்குடவர்:** கொளப்பட்டேம் - அரசனாலே கைக்கொள்ளப் பட்டோம். *(699)*

### 700

பழையம் எனக்கருதிப் பண்பல்ல செய்யும்
கெழுதகைமை கேடு தரும். 10

**பரிமேலழகர்:** பழையம் என கருதி பண்பு அல்ல செய்யும் கெழுதகைமை - அரசனுக்கு யாம் பழையம் எனக் கருதித் தமக்கு இயல்பு அல்லா தவற்றைச் செய்யும் உரிமை, கேடு தரும் - அமைச்சர்க்குக் கேட்டினைப் பயக்கும்.

அவன் பொறுது செறும் பொழுதின் அப் பழமை நோக்கிக் கண்ணோடாது உயிரை வௌவுதலான், அவன் வேண்டாதன செய்தற்கு ஏதுவாய கெழுதகைமை கேடு தரும் என்றார்.

இவை மூன்று பாட்டானும் பொறுப்பர் என்று அரசர் வெறுப்பன செய்யற்க என்பது[1] கூறப்பட்டது.

**ஒப்புமை**

**முற்றும்:**

"விழைவு நீங்கிய மேன்மையோ ராயினும்
கீழ்மையோர் வெகுளுற்றால்
பிழைகொல் நன்மைகொல் பெறுவதென் றையுறு
பீழையாற் பெருந்தென்றல்
உழையர் கூவப்புக் கேதெனப் பெயர்வதோர்
ஊசலின் உளதாகும்
பழையம் யாமெனப் பண்பில செய்வரோ
பருணிதர் பயனோர்வார்." (கம்ப. ஊர்தேடு. 198.) (700)

---

# 71. குறிப்பு அறிதல்

**பரிமேலழகர்:** அஃதாவது, அரசர் கருதிய அதனை அவர் கூறாமல் அறிதல். இது மன்னரைச் சேர்ந்து ஒழுகற்கு இன்றியமையாதாகலின் அதன் பின் வைக்கப்பட்டது.

---

1. "பூவுட்கும் கண்ணாய் பொறுப்ப ரெனக்கருதி, யாவர்க்கே யாயினும் இன்னா செயல்வேண்டா." (**பழமொழி**, 335.)

## 701

கூறாமை நோக்கிக் குறிப்பறிவான் எஞ்ஞான்றும்
மாறாநீர் வையக் கணி. 1

*பரிமேலழகர்*: குறிப்பு கூறாமை நோக்கி அறிவான்-அரசனால் குறித்த கருமத்தை அவன் கூற வேண்டாவகை அவன் முகத்தானும் கண்ணானும் நோக்கி அறியும் அமைச்சன், எஞ்ஞான்றும் மாறா நீர் வையக்கு அணி - எஞ்ஞான்றும் வற்றாத நீரால் சூழப்பட்ட வையத்து உள்ளார்க்கு ஓர் ஆபரணம் ஆம்.

ஒட்பம் உடையனாய் எல்லார்க்கும் அழகு செய்தலான் வையக்கு அணி என்றார். குறிப்பும் வையமும் ஆகுபெயர். வையத்திற்கு என்பது விகாரப் பட்டு நின்றது.

### ஒப்புமை

**கூறாமல் நோக்கிக் குறிப்பறிதல்:**

"சொல்லாமை நோக்கிக் குறிப்பறியும் பண்பு" (பழமொழி, 255.)

"திண்டிறல் அவன்செயல் தெரிய நோக்கினன்
வண்டுறை யோதியும் வலியள் மற்றிவன்
கண்டதும் உண்டவள் கற்பும் நன்றெனக்
கொண்டனன் குறிப்பினால் உணரும் கொள்கையான்."
(கம்ப. திருவடிதொழுத. 56.) (701)

## 702

ஐயப் படாஅ தகத்த துணர்வானைத்
தெய்வத்தோ டொப்பக் கொளல். 2

*பரிமேலழகர்*: அகத்தது ஐயப்படாஅது உணர்வானை - ஒருவன் மனத்தின்கண் நிகழ்வதனை ஐயப்படாது ஒருதலையாக உணர வல்லானை, தெய்வத்தோடு ஒப்ப கொளல் - மகனே ஆயினும் தெய்வத்தோடு ஒப்ப நன்கு மதிக்க.

உடம்பு முதலியவற்றான் ஒவ்வான் ஆயினும் பிறர் நினைத்தது உணரும் தெய்வத்தன்மை உடைமையின் தெய்வத்தோடு ஒப்ப என்றார். (702)

## 703

குறிப்பிற் குறிப்புணர் வாரை உறுப்பினுள்
யாது கொடுத்தும் கொளல். 3

*பரிமேலழகர்*: குறிப்பின் குறிப்பு உணர்வாரை - தம் குறிப்பு நிகழுமாறு அறிந்து அதனால் பிறர் குறிப்பு அறியும் தன்மையாரை, உறுப்பினுள் யாது கொடுத்தும் கொளல் - அரசர் தம் உறுப்புக்களுள் அவர் வேண்டுவது ஒன்றனைக் கொடுத்தாயினும் தமக்குத் துணையாகக் கொள்க.

உள் நிகழும் நெறி யாவர்க்கும் ஒத்தலின், பிறர் குறிப்பு அறிதற்குத் தம் குறிப்புக் கருவி ஆயிற்று. உறுப்புக்களாவன: பொருளும் நாடும் யானை குதிரைகளும் முதலிய புறத்து உறுப்புக்கள். இதற்குப் பிறர் முகக்குறிப்பானே அவர் மனக்குறிப்பு உணர்வாரை என்று உரைப்பாரும் உளர்.

இவை மூன்று பாட்டானும் குறிப்பு அறிவாரது சிறப்புக் கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** குறிப்பின் குறிப்பு உணர்வாரை - முகக் குறிப்பினாலே உள்ளக் கருத்தை அறியுமவர்களை.

ஒப்புமை

கொடுத்தும் கொளல்: குறள், 794. (703)

## 704

குறித்தது கூருமைக் கொள்வாரோ டேனை
உறுப்போ ரனையரால் வேறு. 4

**பரிமேலழகர்:** குறித்தது கூருமை கொள்வாரோடு - ஒருவன் மனத்துக் கருதிய அதனை அவன் கூற வேண்டாமல் அறிய வல்லாரோடு, ஏனை உறுப்பு ஓர் அனையர் - மற்றை மாட்டாதார் உறுப்பால் ஒரு தன்மையராக ஒப்பார் ஆயினும், வேறு - அறிவான் வேறு.

கொள்ளாதார் என்பதூஉம், ஆயினும் என்பதூஉம் அவாய் நிலையான் வந்தன. சிறந்த அறிவு இன்மையின் விலங்கு என்னும் கருத்தான் வேறு என்றார். (704)

## 705

குறிப்பிற் குறிப்புணரா ஆயின் உறுப்பினுள்
என்ன பயத்தவோ கண். 5

**பரிமேலழகர்:** குறிப்பின் குறிப்பு உணரா ஆயின் - குறித்தது காண வல்ல தம் காட்சியால் பிறர் குறிப்பினை உணரமாட்டா ஆயின், உறுப்பினுள் கண் என்ன பயத்தவோ - ஒருவன் உறுப்புக்களுள் சிறந்த கண்கள் வேறு என்ன பயனைச் செய்வன?

முதற்கண் குறிப்பு, ஆகுபெயர். குறிப்பதற்கண் துணையாதல் சிறப்புப் பற்றி உயிரது உணர்வு கண்மேல் ஏற்றப்பட்டது. அக் கண்களால் பயன் இல்லை என்பதாம்.

இவை இரண்டு பாட்டானும் குறிப்பு அறியாரது இழிபு கூறப்பட்டது.

உரை வேறுபாடு

**மணக்குடவர்:** குறிப்பின் குறிப்பு உணரா ஆயின் - ஒருவன் முகக் குறிப்பினானே அவன் மனக்குறிப்பை அறியமாட்டா ஆயின்.

ஒப்புமை

**கண் குறிப்புணர்தல்:**
"கணையினும் கூரியவாம் கண்." (பழமொழி, 174.) (705)

## 706

அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம். 6

**பரிமேலழகர்:** அடுத்தது காட்டும் பளிங்குபோல் - தன்னை அடுத்த பொருளது நிறத்தைத் தானே கொண்டு காட்டும் பளிங்குபோல், நெஞ்சம் கடுத்தது முகம் காட்டும் - ஒருவன் நெஞ்சத்து மிக்கதனை அவன் முகம் தானே கொண்டு காட்டும்.

அடுத்தது என்பது ஆகுபெயர். கடுத்தது என்பது கடி என்னும் உரிச்சொல் அடியாய் வந்த தொழிற்பெயர். உவமை, ஒரு பொருள் பிறிதொரு பொருளின் பண்பைக் கொண்டு தோற்றுதலாகிய தொழில்பற்றி வந்தது.

### உரை வேறுபாடு

**பரிப்பெருமாள்:** மேல் முகம் அறிவிக்கும் என்றார்; அஃது அறிவிக்குமாறு என்னை என்றார்க்கு, வெகுட்சி உண்டாயின் கருகியும், மகிழ்ச்சி உண்டாயின் மலர்ந்தும் காட்டும் என்றது.

### ஒப்புமை

1. **அடுத்தது காட்டும் பளிங்கு:**

"ஈர்ந்தநுண் பளிங்கெனத் தெளிந்த வீர்ம்புனல்
பேர்ந்தொளிர் நவமணி படர்ந்த பித்திகை
சேர்ந்துழிச் சேர்ந்துழி நிறத்தைச் சேர்தலான்
ஓர்ந்துணர் வில்லவர் உள்ளம் ஒப்பது." (கம்ப. பம்பைப். 2.)

2. **நெஞ்சத்தில் மிக்கதை முகம் காட்டுதல்:**

"முன்னம் காட்டி முகத்தின் உரையா" (அகநா. 5:19.)
"முன்னம்முகத்தின் உணர்ந்தவர்" (புறநா. 3:25.)
"முன்னம், முகம்போல முன்னுரைப்ப தில்"
"ஒருத்தன், முகனுரைக்கும் உள்நின்ற வேட்கை"
(நான்மணி. 46, 69.)
"ஒளிப்பினும் உள்ளம், பரந்ததே கூறும் முகம்"
"நோக்கி, முகனறிவார் முன்னம் அறிப" (பழமொழி, 4, 301.)
"அகத்ததை எல்லாம் முகத்தினி துணர்ந்து" (பெருங். 3. 14:238.)
"அற்றந்தான், மனங்கள் போல முகமும் மறைக்குமே"
"நல்லவன் முகமே நம்பி நடந்திலன் என்னும் மாற்றம்
சொல்லலும்"
"சிந்தனை முகத்தில் தேக்கி"
"உள்ளத்தின் உள்ளதை உறையின் முந்துற
மெள்ளத்தம் முகங்களே விளம்பு மாதலால்"
"அழிந்தது பிறவி யென்னும் அகத்தியல் முகத்திற் காட்ட."
(கம்ப. உலாவியல். 29, தைலமாட்டு. 59, குகப். 35, விபீடணன். 91, 141.)
(706)

## 707

முகத்தின் முதுக்குறைந்த துண்டோ உவப்பினும்
காயினும் தான்முந் துறும். 7

**பரிமேலழகர்:** உவப்பினும் காயினும் தான் முந்துறும் - உயிர் ஒருவனை உவத்தலானும் காய்தலானும் உறின் தான் அறிந்து அவற்றின் கண் அதனின் முற்பட்டு நிற்கும் ஆகலான், முகத்தின் முதுக்குறைந்தது உண்டோ - முகம்போல அறிவு மிக்கது பிறிது உண்டோ? இல்லை.

'உயிர்க்கே அறிவு உள்ளது; ஐம்பூதங்களால் இயன்ற முகத்திற்கு இல்லை' என்பாரை நோக்கி, உயிரது கருத்து அறிந்து அஃது உவக்குறின் மலர்ந்தும் காய்வுறின் கருகியும் வரலான் உண்டு என மறுப்பார் போன்று குறிப்பு அறிதற்குக் கருவி கூறியவாறு. (707)

## 708

முகம்நோக்கி நிற்க அமையும் அகம்நோக்கி
உற்ற துணர்வார்ப் பெறின். 8

**பரிமேலழகர்:** அகம் நோக்கி உற்றது உணர்வார் பெறின் - குறையுறுவானும் தன் மனத்தைக் குறிப்பான் அறிந்து தான் உற்ற அதனைத்

தீர்ப்பாரைப் பெறின், முகம் நோக்கி நிற்க அமையும் - அவர் தன் முகம் நோக்கும் வரை தானும் அவர் முகம் நோக்கி அவ் வெல்லைக்கண் நிற்க அமையும்.

உணர்வார் எனக் காரியத்தைக் காரணம் ஆக்கிக் கூறினர். அவ் வெல்லையைக் கடந்து சொல்லுமாயின் இருவருக்கும் சிறுமையாம் ஆகலின், அது வேண்டா என்பதாம். குறையுறுவான் இயல்பு கூறுவார் போன்று கருவி கூறியவாறு.

இவை மூன்று பாட்டானும் குறிப்பு அறிதல் கருவி முகம் என்பது கூறப்பட்டது.

உரை வேறுபாடு

**பரிதியார்:** மனத்தின் நினைவை அறியும் மந்திரிக்கு அரசன் முகம் பார்க்கத் தெரியும்.

ஒப்புமை

**முற்றும்:**

"ஆர்த்தியும் உற்றதும் அறிஞர்க் கற்றந்தான்
வார்த்தையின் உணர்த்துதல் அரிதன் றேமனம்
வேர்த்தனள் வெதும்பினள் மெலிந்து சோர்ந்தனள்
பார்த்தனள் ஒருத்திதன் பாங்க னேயே."

"கண்டபின் இளைய வீரன் முகத்தினுற் கருத்தை யோர்ந்த
புண்டரீ கக்க ணனும்." (கம்ப. உண்டாட்டு. 54, உருக்காட்டு. 76.)

(708)

## 709

**பகைமையும் கேண்மையும் கண்உரைக்கும் கண்ணின்**
**வகைமை உணர்வார்ப் பெறின். 9**

**பரிமேலழகர்:** கண்ணின் வகைமை உணர்வார் பெறின் - வேந்தர் தம் நோக்கு வேறுபாட்டின் தன்மையை அறியவல்ல அமைச்சரைப் பெறின், பகைமையும் கேண்மையும் கண் உரைக்கும் - அவர்க்கு மனத்துக் கிடந்த பகைமையையும் ஏனைக் கேண்மையையும் வேற்று வேந்தர் சொல்லிற்றிலராயினும் அவர் கண்களே சொல்லும்.

இறுதிக்கண் கண் ஆகு பெயர். நோக்குவேறுபாடாவன, வெறுத்த நோக்கமும் உவந்த நோக்கமும். உணர்தல் - அவற்றை அவ்வக் குறிகளான் அறிதல்.

உரை வேறுபாடு

**மணக்குடவர்:** இது கண்கண்டு குறிப்பு அறிதல் நுண்ணறியார்க்கு அல்லது பிறர்க்கு அரிது என்றது.

ஒப்புமை

**முற்றும்:**

"ஆற்றும் துணையும் அறிவினை உள்ளடக்கி
ஊக்கம் உரையார் உணர்வுடையார் - ஊக்கம்
உறுப்பினுல் ஆராயும் ஒண்மை உடையார்
குறிப்பின்கீழ்ப் பட்ட துலகு." (நாலடி. 196.)

"திருத்திய பளிக்கு வேதித் தெள்ளிய வேல்கள் என்னக்
கருத்தியல் புரைக்கும் உண்கண்"

"வண்டுளர் அலங்கலாய் வஞ்சர் வாண்முகம்
கண்டபோர் பொழுதினில் தெரியும் கைதவம்
உண்டெனின் அஃதவர்க் கொளிக்க வொண்ணுமோ
விண்டவர் நம்புகல் மருவி வீழ்வரோ."

(கம்ப. ஊர்தேடு. 107, விபீடணன். 90.) (709)

### 710

நுண்ணியம் என்பார் அளக்கும்கோல் காணுங்கால்
கண்அல்ல தில்லை பிற. 10

**பரிமேலழகர்:** நுண்ணியம் என்பார் அளக்கும் கோல் - யாம் நுண்ணறிவுடையேம் என்று இருக்கும் அமைச்சர் அரசர் கருத்தினை அளக்கும் கோலாவது, காணும்கால் கண் அல்லது பிற இல்லை - ஆராயும் இடத்து அவர் கண் அல்லது பிற இல்லை.

அறிவின் நுண்மை அஃது உடையார்மேல் ஏற்றப்பட்டது. இங்கிதம், வடிவு, தொழில், சொல் என்பன முதலாகப் பிறர் கருத்து அளக்கும் அளவைகள் பல. அவையெல்லாம் முன் அறிந்த வழி அவரான் மறைக்கப்படும், நோக்கம் மனத்தொடு கலத்தலான் ஆண்டு மறைக்கப்படாது என்பது பற்றி அதனையே பிரித்துக் கூறினர். இனி, அலைக்கும் கோல் என்று பாடமோதி, நுண்ணியம் என்று இருக்கும் அமைச்சரை அரசர் அலைக்கும் கோலாவது கண் என உரைத்து, தன் வெகுளி நோக்கால் அவர் வெகுடல் குறிப்பு அறிக என்பது கருத்து ஆக்குவாரும் உளர்.

இவை இரண்டு பாட்டானும் நுண்கருவி நோக்கு என்பது கூறப்பட்டது.

**உரை வேறுபாடு**

**மணக்குடவர்:** அளக்கும் கோல் - பிறரை அளக்கும் கோலாவது.

**பரிதியார்:** அளக்கும் கோல் - கூரிய காரியத்தை அளக்கும் கோல். (710)

---

# 72. அவை அறிதல்

**பரிமேலழகர்:** அஃதாவது, அரசனோடு இருந்த அவையினது இயல்பை அறிதல். காரியம் சொல்லுங்கால் அவன் குறிப்பு அறிதலே அன்றி, இதுவும் வேண்டுதலின், இஃது அதன்பின் வைக்கப்பட்டது.

### 711

அவைஅறிந் தாராய்ந்து சொல்லுக சொல்லின்
தொகைஅறிந்த தூய்மை யவர். 1

**பரிமேலழகர்:** சொல்லின் தொகை அறிந்த தூய்மையவர் - சொல்லின் குழுவினை அறிந்த தூய்மையினை உடையார், அவை அறிந்து ஆராய்ந்து சொல்லுக - தாம் ஒன்று சொல்லுங்கால் அப்பொழுதை அவையினை அறிந்து ஆராய்ந்து சொல்லுக.

சொல்லின் குழு எனவே, செஞ்சொல், இலக்கணச் சொல், குறிப்புச் சொல் என்னும் மூவகைச் சொல்லும் அடங்கின. தூய்மை - அவற்றுள் தமக்கு ஆகாதன ஒழித்து ஆவன கோடல். அவை என்றது ஈண்டு அதன் அளவை. அது மிகுதி, ஒப்பு, தாழ்வு என மூவகைத்து. அறிதல் - தம்மொடு தூக்கி அறிதல். ஆராய்தல் - இவ் வவைக்கண் சொல்லும் காரியம் இது, சொல்லும் ஆறு இது, சொன்னால் அதன் முடிவு இது என்று இவை உள்ளிட்டன ஆராய்தல்.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** தொகை அறிதல் - திறன் அறிதல்.

### ஒப்புமை

முற்றும் :

"கேட்பாரை நாடிக் கிளக்கப் படும்பொருட்கண்
வேட்கை அறிந்துரைப்பார் வித்தகர்—வேட்கையால்
வண்டு வழிபடரும் வாட்கண்ணாய் தோற்பன
கொண்டு புகாஅர் அவை." (பழமொழி, 4.) 711

## 712

**இடைதெரிந்து நன்குணர்ந்து சொல்லுக சொல்லின்
நடைதெரிந்த நன்மை யவர்.** 2

**பரிமேலழகர்:** சொல்லின் நடை தெரிந்த நன்மையவர் - சொற்களின் நடையினை ஆராய்ந்து அறிந்த நன்மையினை உடையார், இடை தெரிந்து நன்கு உணர்ந்து சொல்லுக - அவைக்கண் ஒன்று சொல்லுங்கால் அதன் செவ்வியை ஆராய்ந்து வழுப்படாமல் மிகவும் தெளிந்து சொல்லுக.

சொற்களின் நடையாவது, அம் மூவகைச் சொல்லும் செம்பொருள், இலக்கணைப் பொருள், குறிப்புப் பொருள் என்னும் பொருள்களைப் பயக்கு மாறு. செவ்வி, கேட்டற்கண் விருப்பு உடைமை. வழு, சொல் வழுவும் பொருள் வழுவும்.

இவை இரண்டு பாட்டானும் ஒன்று சொல்லுங்கால் அவை அறிந்தே சொல்லவேண்டும் என்பது கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** சொன்னால் அதற்கு வரும் குற்றத்தை ஆராய்ந்து, நன்மையாமவற்றை அறிந்து சொல்லுக, சொல்லினது வழக்கு ஆராய்ந்த நன்மை உடையார்.

**பரிதியார்:** சொல்லின் இடையூறும் நன்மையும் அறிந்து சொல்லுக, சொல்லும் சாதுரியம் அறிந்த மந்திரி. (712)

## 713

**அவைஅறியார் சொல்லல்மேற் கொள்பவர் சொல்லின்
வகைஅறியார் வல்லதூஉம் இல்.** 3

**பரிமேலழகர்:** அவை அறியார் சொல்லல் மேல்கொள்பவர் சொல்லின் வகை அறியார் - அவையினது அளவை அறியாது ஒன்று சொல்லுதலைத் தம்மேல் கொள்வார் அச் சொல்லுதலின் கூறுபாடும் அறியார்; வல்லதூஉம் இல் - கற்றுவல்ல கலையும் அவர்க்கு இல்லை.

அம் மூவகைச் சொற்களால் வரும் சொல்லுதல் வகைமை கேட்பாரது உணர்வு வகைமைபற்றி வருதலான் சொல்லின் வகை அறியார் என்றும், இஃது அறியார் யாதும் அறியார் என்று எல்லாரானும் இகழப்படுதலின் வல்லதூஉம் இல் என்றும் கூறினர்.

இதனான் அவை அறியாக்கால் வரும் குற்றம் கூறப்பட்டது. (713)

## 714

ஒளியார்முன் ஒள்ளியர் ஆதல் வெளியார்முன்
வான்சுதை வண்ணம் கொளல். 4

**பரிமேலழகர்:** ஒளியார் முன் ஒள்ளியர் ஆதல் - ஒள்ளியார் அவைக்கண் தாமும் ஒள்ளியராக; வெளியார் முன் வான் சுதை வண்ணம் கொளல் - ஏனை வெள்ளைகள் அவைக்கண் தாமும் வாலிய சுதையின் நிறத்தைக் கொள்க.

ஒள்ளியார் என்றது, மிக்காரையும் ஒத்தாரையும். அது விகாரத்தால் ஒளியார் என நின்றது. ஒள்ளியர் ஆதல் - தம் நூல் அறிவும் சொல் வன்மையும் தோன்ற விரித்தல். அவை அறியாத புல்லரை வெளியார் என்றது, வயிரம் இல் மரத்தை வெளிறு என்னும் வழக்குப்பற்றி. அவர் மதிக்கும் வகை அவரினும் வெண்மை உடையராக என்பார், வான்சுதை வண்ணம் கொளல் என்றார்.

அவை அளவு அறிந்தார் செய்யும் திறம் இதனால் தொகுத்துக் கூறப்பட்டது; முன்னர் விரித்துக் கூறுப.

### உரை வேறுபாடு

**காளிங்கர்:** சுதை என்பது மணலும் நீறும் கூடிய சுண்ணம்பு.

**கவிராஜ பண்டிதர்:** சுதை வண்ணம் கொளல் - அறியாமையை மேற்கொளல். *(714)*

## 715

நன்றென் றவற்றுள்ளும் நன்றே முதுவருள்
முந்து கிளவாச் செறிவு. 5

**பரிமேலழகர்:** நன்று என்றவற்றுள்ளும் நன்றே - ஒருவர்க்கு இது நன்று என்று சிறப்பித்துச் சொல்லப்பட்ட குணங்கள் எல்லாவற்றுள்ளும் நன்றே, முதுவருள் முந்து கிளவா செறிவு - தம்மின் மிக்கார் அவைக்கண் அவரின் முற்பட்டு ஒன்றனைச் சொல்லாத அடக்கம்.

தம் குறைவும் அவர் மிகுதியும் முந்து கிளந்தால் படும் இழுக்கும் கிளவாக்கால் எய்தும் நன்மையும் அறிந்தே அடங்கினமையின், அவ் வடக்கத்தினை, நன்று என்றவற்றுள்ளும் நன்று என்றார். முன் கிளத்தலையே விலக்கினமையின், உடன்கிளத்தலும் பின் கிளத்தலும் ஆம் என்பது பெற்றாம்.

இதனான் மிக்கார் அவைக்கண் செய்யும் திறம் கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** முதுவர் - தவத்தானும் குலத்தானும் கல்வியானும் பிற யாதானும் முதிர்ந்தார்.

**பரிதியார்:** நன்மை என்றதற்குள் நன்மையாவது ஆஸ்தானத்துக்கு நடுவே இருந்து தன் சொல் மேற்படச் சொல்லுதல். *(715)*

## 716

ஆற்றின் நிலைதளர்ந் தற்றே வியன்புலம்
ஏற்றுணர்வார் முன்னர் இழுக்கு. 6

**பரிமேலழகர்:** ஆற்றின் நிலை தளர்ந்தற்று - வீடு எய்தற் பொருட்டு நன்னெறிக்கண் நின்றான் ஒருவன் அந் நெறியினின்றும் நிலை தளர்ந்து வீழ்ந்

தால் ஒக்கும், வியன் புலம் ஏற்று உணர்வார் முன்னர் இழுக்கு - அகன்ற நுண் பொருள்களை உட்கொண்டு அவற்றின் மெய்ம்மை உணரவல்லார் அவைக்கண் வல்லான் ஒருவன் சொல் இழுக்குப் படுதல்.

நிலை தளர்ந்து வீழ்தல், உரன் என்னும் தோட்டியான் ஓர் ஐந்தும் காத்து ஒழுகியான்[1] பின் இழுக்கிக் கூடா ஒழுக்கத்தன் ஆதல். பயன் இழத்தலே அன்றி இகழவும் படும் என்பதாம்.

இதனுன் அதன்கண் இழுக்கியவழிப் படும் குற்றம் கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** ஒரு நெறியின்கண் நின்ருர் அந் நிலைமை குலைந்தாற் போல இகழப்படும், அகன்ற கல்வியைக் கேட்டு அறியவல்லார் முன்னர்த் தப்புதல்.

**பரிதியார்:** ஆற்றுக்குள்ளே நிலைத்துக் கரையேறுவான் அவன் நீச்சிலே விழுந்ததற்கு ஒக்கும், பெரியோர் இருந்த சமயத்திலே மந்திரி சொல் தட்டுப்படுதல்.

**காளிங்கர்:** தொன்று தொட்டுத் தாம் ஒழுகி வருகின்ற ஒழுக்க நிலையின் தவறியது எத்தன்மைத்து, அவ்வளவு அன்றி அதனினும் சாலக் குற்றம் உடைத்து; யாது எனின், தம் கல்வியால் பரந்த அறிவினைத் தாம் ஒன்று சொல்லும்போது எதிர் ஏற்று அறிவோர் கூட்டமாகிய அவை முன்னர்த் தமது சொல்லின் இழுக்கம்.

**கவிராஜ பண்டிதர்:** வியன்புலம் ஏற்று-பெரிய நூல்களைக் கற்று.

(716)

## 717

கற்றறிந்தார் கல்வி விளங்கும் கசடறச்
சொல்தெரிதல் வல்லார் அகத்து. 7

**பரிமேலழகர்:** கசடு அற சொல் தெரிதல் வல்லார் அகத்து - வழுப் படாமல் சொற்களை ஆராய்தல் வல்லார் அவைக்கண் சொல்லின், கற்று அறிந்தார் கல்வி விளங்கும் - பல நூல்களையும் கற்று அவற்றின் ஆய பயனை அறிந்தாரது கல்வி யாவர்க்கும் விளங்கித் தோன்றும்.

சொல்லின் என்பது அவாய்நிலையான் வந்தது. ஆண்டே சொல்லுக என்பதாம்.

### உரை வேறுபாடு

**பரிதியார்:** பல நூல் கற்ற அறிவுடையார் கல்வி பிரகாசிக்கும், பழுதற்ற மந்திரியினிடத்து. (717)

## 718

உணர்வ துடையார்முன் சொல்லல் வளர்வதன்
பாத்தியுள் நீர்சொரிந் தற்று. 8

**பரிமேலழகர்:** உணர்வது உடையார் முன் சொல்லல் - பிறர் உணர்த்தல் இன்றிப் பொருள்களைத் தாமே உணரவல்ல அறிவினை உடையார் அவைக்கண் கற்ருர் ஒன்றனைச் சொல்லுதல், வளர்வதன் பாத்தியுள் நீர் சொரிந்தற்று - தானே வளர்வதொரு பயிர் நின்ற பாத்திக்கண் நீரினைச் சொரிந்தாற் போலும்.

---

1. குறள், 24.

தானேயும் வளர்தற்குரிய கல்வி மிக வளரும் என்பதாம்.

இவை இரண்டு பாட்டானும் ஒத்தார் அவைக்கண் எவ் வழியும் சொல்லுக என்பது கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**பரிதியார்:** வளர்வதன் பாத்தி - பூந்தோட்டப் பாத்தி. *(718)*

## 719

**புல்லவையுள் பொச்சாந்தும் சொல்லற்க நல்லவையுள்**
**நன்கு செலச்சொல்லு வார்.** 9

**பரிமேலழகர்:** நல் அவையுள் நன்கு செல சொல்லுவார் - நல்லார் இருந்த அவைக்கண் நல்ல பொருள்களை அவர் மனம் கொள்ளச் சொல்லுதற்கு உரியார், புல் அவையுள் பொச்சாந்தும் சொல்லற்க - அவை அறியாத புல்லர் இருந்த அவைக்கண் அவற்றை மறந்தும் சொல்லாது ஒழிக.

சொல்லின், தம்மை அவை அறியாமை நோக்கி நல்லவையும், பொருள் அறியாமையால் புல்லவைதானும் இகழ்தலின், இரண்டு அவைக்கும் ஆகார் என்பது கருதிப் பொச்சாந்தும் சொல்லற்க என்றார்.

### ஒப்புமை

1. **புல்லவையுள் மறந்தும் சொல்லாமை :**

"கைஞ்ஞானங் கொண்டொழுகுங் காரறி வாளர்முன்
சொன்ஞானஞ் சோர விடல்" (நாலடி. *311.*)

"கல்லா தவரிடைக் கட்டுரையின் மிக்கதோர்
பொல்லாத தில்லை ஒருவற்கு." (பழமொழி, *64.*)

2. **நல்லவையுள் நன்கு செலச் சொல்லுவார் :** குறள், *728.* *(719)*

## 720

**அங்கணத்துள் உக்க அமிழ்தற்றால் தம்கணத்தர்**
**அல்லார்முன் கோட்டி கொளல்.** 10

**பரிமேலழகர்:** தம் கணத்தர் அல்லார் முன் கோட்டி கொளல் - நல்லார் தம் இனத்தார் அல்லார் அவைக்கண் ஒன்றனையும் சொல்லற்க; அங்கணத்துள் உக்க அமிழ்தற்று - சொல்லின் அது தூய்து அல்லாத முற்றத்தின்கண் உக்க அமிழ்தினை ஒக்கும்.

கொள் என்னும் முதனிலைத் தொழிற்பெயர் முன் நின்று பின் எதிர்மறை அல் விகுதியோடு கூடி மகன் எனல்[1] என்பதுபோல் நின்றது. சொல்லின், அது என்பன அவாய் நிலையான் வந்தன. பிறர் எல்லாம் கொளல் என்பதனைத் தொழிற்பெயர் ஆக்கி உரைத்தார். அவர் அத்தொழில் அமிழ்து என்னும் பொருள் உவமையோடு இயையாமை நோக்கிற்றிலர். சாவா மருந்து ஆதல் அறிந்து நுகர்வார் கையினும் படாது, அவ் வங்கணத்துக்கும் இயைபு இன்றிக் கெட்டவாறு தோன்ற, 'உக்க அமிழ்து' என்றார். அச் சொல் பயனில் சொல்லாம் என்பது ஆயிற்று.

இவை இரண்டு பாட்டானும் தாழ்ந்தார் அவைக்கண் ஒரு வழியும் சொல்லற்க என்பது கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**கவிராஜ பண்டிதர்:** அங்கணம் - சாக்கடை.

1. குறள், 196.

ஒப்புமை

1. அங்கணத்துள் உக்க அமிழ்து :

"புல்லிடை உகுத்தமு தேயும் போல்." (கம்ப. மந்தரை. 62.)

2. தம் கணத்தர் அல்லார்முன் கோட்டி கொளல் பயனின்று:

"பன்றிக்கூழ்ப் பத்தரில் தேமா வடித்தற்றால்
நன்றறியா மாந்தர்க் கறத்தா றுரைக்குங்கால்
குன்றின்மேல் கொட்டும் தறிபோல் தலைதகர்ந்து
சென்றிசையா வாகும் செவிக்கு." (நாலடி. 257.)

"கல்வியி னுய கழிநுட்பம் கல்லார்முன்
சொல்லிய நல்லவும் தியவாம்." (பழமொழி, 3.)

3. கோட்டி கொளல் : குறள், 401. (720)

---

# 73. அவை அஞ்சாமை

**பரிமேலழகர்:** அஃதாவது, சொல்லுதற்கு உரிய அவையினை அறிந்து சொல்லுங்கால் அதற்கு அஞ்சாமை. அதிகார முறைமையும் இதனானே விளங்கும்.

**பரிதியார்:** அவை அஞ்சாமையாவது நல்லோர் கூட்டம் கண்டால் அஞ்சாமை.

## 721

**வகைஅறிந்து வல்லவை வாய்சோரார் சொல்லின்
தொகைஅறிந்த தூய்மை யவர்.** 1

**பரிமேலழகர் :** வகை அறிந்து வல்லவை வாய் சோரார் - கற்று வல்ல அவை அல்லா அவை என்னும் அவை வகையினை அறிந்து வல்ல அவைக்கண் ஒன்று சொல்லுங்கால் அச்சத்தான் வழுப்படச் சொல்லார், சொல்லின் தொகை அறிந்த தூய்மையவர் - சொல்லின் தொகை எல்லாம் அறிந்த தூய்மையினை உடையார்.

இருந்தாரது வன்மை அவைமேல் ஏற்றப்பட்டது. வல்லவை என்பதற்குத் தாம் கற்று வல்ல நூற் பொருள்களை என்று உரைப்பாரும் உளர். அச்சத்தான் என்பது அதிகாரத்தான் வந்தது. சொல்லின் தொகை, தூய்மை என்பனவற்றிற்கு மேல் உரைத்தாங்கு உரைக்க.[1]

உரை வேறுபாடு

**மணக்குடவர்:** வகை அறிந்து - தப்பினால் வரும் குற்ற வகையை அறிந்து.

**பரிதியார்:** வகை அறிந்து - சொல்லின் திடப்பாடு அறிந்து. (721)

## 722

**கற்றாருள் கற்றார் எனப்படுவர் கற்றார்முன்
கற்ற செலச்சொல்லு வார்.** 2

**பரிமேலழகர் :** கற்றாருள் கற்றார் என படுவர் - கற்றார் எல்லாரினும் இவர் நன்கு கற்றார் என்று உலகத்தாரால் சொல்லப்படுவார், கற்றார் முன்

1. குறள், 711, உரை பார்க்க.

கற்ற செல சொல்லுவார் - கற்றார் அவைக்கண் அஞ்சாதே தாம் கற்றவற்றை அவர் மனம் கொள்ளும்வகை சொல்ல வல்லார்.

உலகம் அறிவது அவரையே ஆகலின், அதனால் புகழப்படுவாரும் அவர் என்பதாம்.

உரை வேறுபாடு

**பரிதியார்:** கற்றோர் கூடின கூட்டத்திலே தாம் கற்ற கல்வியைச் செலுத்துதல், அமிர்தமானதை நல்லோர் முன்னே வைத்ததற்கு ஒக்கும்; கல்லார் முன் சொல்லுதல் மரப்பாவைமுன் வைத்ததற்கு ஒக்கும்.

ஒப்புமை

**கற்ற செலச் சொல்லுதல்** : குறள், 724. (722)

## 723

பகையகத்துச் சாவார் எளியர் அரியர்
அவையகத் தஞ்சா தவர். 3

**பரிமேலழகர்:** பகை அகத்துச் சாவார் எளியர் - பகையிடை அஞ்சாது புக்குச் சாவ வல்லார் உலகத்துப் பலர்; அவை அகத்து அஞ்சாதவர் அரியர் - அவையிடை அஞ்சாது புக்குச் சொல்லவல்லார் சிலர்.

அஞ்சாமை சாவார் என்பதனோடும் கூட்டி, அதனால் சொல்லவல்லார் என்பது வருவித்து உரைக்கப்பட்டது.

இவை மூன்று பாட்டானும் அவை அஞ்சாரது சிறப்புக் கூறப்பட்டது. (723)

## 724

கற்றார்முன் கற்ற செலச்சொல்லித் தாம்கற்ற
மிக்காருள் மிக்க கொளல். 4

**பரிமேலழகர்:** கற்றார் முன் கற்ற செல சொல்லி - பல நூல்களையும் கற்றார் அவைக்கண் தாம் கற்றவற்றை அவர் மனம் கொள்ளுமாற்றால் சொல்லி, தாம் கற்ற மிக்க மிக்காருள் கொளல் - அவற்றின் மிக்க பொருள்களை அம் மிகக் கற்றாரிடத்து அறிந்து கொள்க.

எல்லாம் ஒருவர்க்குக் கற்றல் கூடாமையின் வேறு வேறாய கல்வி உடையார் பலர் இருந்த அவைக்கண் தாம் கற்றவற்றை அவர்க்கு ஏற்பச் சொல்லுக; சொல்லவே அவரும் அவையெல்லாம் சொல்லுவர் ஆகலான், ஏனைக் கற்கப் பெறாதன கேட்டு அறியலாம் என்பது ஆயிற்று.

இதனான் அதனது ஒருசார் பயன் கூறப்பட்டது. (724)

## 725

ஆற்றின் அளவறிந்து கற்க அவைஅஞ்சா
மாற்றம் கொடுத்தற் பொருட்டு. 5

**பரிமேலழகர்:** ஆற்றின் அளவு அறிந்து கற்க - சொல் இலக்கண நெறியானே அளவை நூலை அமைச்சர் உட்பட்டுக் கற்க, அவை அஞ்சா மாற்றம் கொடுத்தல் பொருட்டு - வேற்று வேந்தர் அவையிடை அஞ்சாது அவர் சொல்லிய சொற்கு உத்தரம் சொல்லுதற் பொருட்டு.

அளவை நூல் சொல் நூல் கற்றே கற்கவேண்டுதலின், அதற்கு அ:்து ஆறு எனப்பட்டது. அளக்கும் கருவியை அளவு என்றார், ஆகு பெயரான். அவர் சொல்லை வெல்வது ஒரு சொல் சொல்லலாவது, நியாயத்து வாத செற்ப விதண்டைகளும் சல சாதிகளும் முதலிய கற்றார்க்கே ஆகலின், அவற்றைப் பிழையாமல் கற்க என்பதாம்.

இதனான் அதன் காரணம் கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** நூல் கற்றலாவது மெய் ஆராய்ச்சி ஆகிய நூலைக் கற்றலும், வேதமும் ஆகமும் கற்றலும், உழவும் வாணிகமும் கற்றலும், படை வழங்கல் மநுநீதி முதலியன கற்றலும் என நான்கு வகைப்படும்.

**பரிப்பெருமாள்:** நூல்கள் நான்கினும் பின் கூறிய இரண்டும் சொல்லாண்மை அன்மையானும், வேதம் கேட்டல் சொல்லாதே அமைத லானும், அவையிற்றைக் கூறாது தர்க்கம் கற்றார்க்கு அல்லது மறுமாற்றம் சொல்லுதல் அரிது ஆதலின் அதனைக் கற்கவேண்டும் என்று இது கூறப் பட்டது. அளவு - பிரமாணம். (725)

## 726

வாளொடென் வன்கண்ணர் அல்லார்க்கு நூலொடென்
நுண்அவை அஞ்சு பவர்க்கு. 6

**பரிமேலழகர்:** வன் கண்ணர் அல்லார்க்கு வாளொடு என் - வன் கண்மையுடையர் அல்லாதார்க்கு வாளொடு என்ன இயைபு உண்டு? நுண் அவை அஞ்சுபவர்க்கு நூலொடு என் - அதுபோல நுண்ணியாரது அவையை அஞ்சுவார்க்கு நூலொடு என்ன இயைபு உண்டு?

இருந்தாரது நுண்மை அவைமேல் ஏற்றப்பட்டது. நூற்கு உரியர் அல்லர் என்பதாம்.

### ஒப்புமை

1. **வன்கண்ணர் அல்லார்க்கு வாளால் பயன் இல்லை :**

"ஆற்றல் இலாதான் பிடித்த படைஇன்னா." (இன்னா. 8.)

2. **அவை அஞ்சுவானுக்கு நூலால் பயன் இல்லை :**

"பல்லவையுள், அஞ்சுவான் கற்ற அருநூலும் இம்மூன்றும்
துஞ்சுமன் கண்ட கனா." (திரி. 7.)

3. **அவை அஞ்சுபவர் : குறள், 729.** (726)

## 727

பகையகத்துப் பேடிகை ஒள்வாள் அவையகத்
தஞ்சும் அவன்கற்ற நூல். 7

**பரிமேலழகர்:** பகை அகத்து பேடி கை ஒள் வாள் - எறியப்படும் பகை நடுவண் அதனை அஞ்சும் பேடி பிடித்த கூர் வாளை ஒக்கும், அவை அகத்து அஞ்சும் அவன் கற்ற நூல் - சொல்லப்படும் அவை நடுவண் அதனை அஞ்சுமவன் கற்ற நூல்.

பேடி - பெண் இயல்பு மிக்கு ஆண் இயல்பும் உடையவள். களமும் வாய்த்துத் தானும் நன்றாய் இருந்ததே ஆயினும் பிடித்தவள் குற்றத்தால் வாள் சிறப்பு இன்று ஆயினாற்போல, அவையும் வாய்த்துத் தானும் நன்றாய் இருந்ததே ஆயினும் கற்றவன் குற்றத்தால் நூல் சிறப்பு இன்று ஆயிற்று.

உரை வேறுபாடு

மணக்குடவர்: பகை அகத்து பேடி - பகையின்கண் அஞ்சுவோன்.

ஒப்புமை

முற்றும் :

"நல்லவை கண்டக்கால் நாச்சுருட்டி நன்றுணராப்
புல்லவையுள் தம்மைப் புகழ்ந்துரைத்தல்—புல்லார்
புடைத்தறுகண் அஞ்சுவான் இல்லுள்வில் லேற்றி
இடைக்கலத் தெய்து விடல்." (பழமொழி, 249.) (727)

### 728

பல்லவை கற்றும் பயம்இலரே நல்அவையுள்
நன்கு செலச்சொல்லா தார். 8

பரிமேலழகர்: நல் அவையுள் நன்கு செல சொல்லாதார் - நல்லார் இருந்த அவைக்கண் நல்ல சொற்பொருள்களைத் தம் அச்சத்தான் அவர்க்கு ஏற்கச் சொல்லமாட்டாதார், பல்லவை கற்றும் பயம் இலரே - பல நூல்களைக் கற்றூர் ஆயினும் உலகிற்குப் பயன்படுதல் இலர்.

அறிவார்முன் சொல்லாமையின் கல்வியின் நுண்மை அறிவார் இல்லை என்பதாம். இனிப் பயம் இலர் என்பதற்குக் கல்விப் பயன் உடையர் அல்லர் என்று உரைப்பாரும் உளர். (728)

### 729

கல்லா தவரிற் கடைஎன்ப கற்றறிந்தும்
நல்லார் அவைஅஞ்சு வார். 9

பரிமேலழகர்: கற்று அறிந்தும் நல்லார் அவை அஞ்சுவார் - நூல்களைக் கற்று வைத்தும் அவற்றூல் பயன் அறிந்து வைத்தும் நல்லார் இருந்த அவையினை அஞ்சி ஆண்டுச் சொல்லாதாரை, கல்லாதவரின் கடை என்ப - உலகத்தார் கல்லாதவரினும் கடையர் என்று சொல்லுவர்.

அக் கல்வி அறிவுகளான் பயன் தாமும் எய்தாது பிறரை எய்துவிப்பதும் செய்யாது கல்வித் துன்பமே எய்தி நிற்றலின் கல்லாதவரிற் கடையென உலகம் பழிக்கும் என்பதாம்.

ஒப்புமை

முற்றும் :

"கழறும் அவைஅஞ்சான் கல்வி இனிதே." (இனியவை. 13.) (729)

### 730

உளர்எனினும் இல்லாரோ டொப்பர் களன்அஞ்சிக்
கற்ற செலச்சொல்லா தார். 10

பரிமேலழகர்: களன் அஞ்சி கற்ற செல சொல்லாதார் - அவைக் களத்தை அஞ்சித் தாம் கற்றவற்றை அதற்கு ஏற்கச் சொல்லமாட்டாதார், உளர் எனினும் இல்லாரோடு ஒப்பர் - உயிர் வாழ்கின்றூர் ஆயினும், உலகத்தாரால் எண்ணப்படாமையின் இறந்தாரோடு ஒப்பர்.

ஈண்டுக் களன் என்றது, ஆண்டு இருந்தாரை.

இவை ஐந்து பாட்டானும் அவை அஞ்சுவாரது இழிவு கூறப்பட்டது.

உரை வேறுபாடு

**கவிராஜ பண்டிதர்:** அவர் கற்ற கல்வி பிரகாசம் இல்லாத படியினுல் நடைப்பிணம் என்று இகழப்படுவர்.

ஒப்புமை

உளராயினும் இறந்தாரை ஒத்தல் : குறள், 406. (730)

---

# 74. நாடு

**பரிமேலழகர்:** இனி, அவ் வரசனுலும் அமைச்சனுலும் கொண்டு உய்க்கப்படுவதாய், ஏனைய அரண் முதலிய அங்கங்கட்கு இன்றியமையாச் சிறப்பிற்றுய நாடு ஓர் அதிகாரத்தால் கூறுகின்ருர்.

### 731

தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்
செல்வரும் சேர்வது நாடு. 1

**பரிமேலழகர்:** தள்ளா விளையுளும் - குன்ருத விளையுளைச் செய்வோரும், தக்காரும் - அறவோரும், தாழ்வு இலா செல்வரும் - கேடு இல்லாத செல்வம் உடையோரும், சேர்வது நாடு - ஒருங்கு வாழ்வதே நாடாவது.

மற்றை உயர்திணைப் பொருள்களோடும் சேர்தல் தொழிலோடும் இயையாமையின், விளையுள் என்பது உழவர்மேல் நின்றது. குன்ருமை, எல்லா உணவுகளும் நிறைய உளவாதல். இதனுன் வாழ்வார்க்கு வறுமையின்மை பெறப்பட்டது. அறவோர், துறந்தோர் அந்தணர் முதலாயினுர். ''நற்றவம்செய் வார்க்கிடம் தவம்செய் வார்க்கும் அஃதிடம்'' என்ருர் பிறரும்.[1] இதனுன் அழிவின்மை பெறப்பட்டது. கேடு இல்லாமை, வழங்கத் தொலையாமை. செல்வர் - கலத்தினும் காலினும் அரும்பொருள் தரும் வணிகர்.[2]

இதனுன் அரசனுக்கும் வாழ்வார்க்கும் பொருள் வாய்த்தல் பெறப்பட்டது.

உரை வேறுபாடு

**மணக்குடவர்:** தள்ளா விளையுள் - மழை இல்லாத காலத்தினும் சாவி போகாத நிலம்.

**பரிப்பெருமாள்:** தக்கார் - குலத்தாலும் குணத்தாலும் அமைந்தார்,

**கவிராஜ பண்டிதர்:** தக்கார் - பெரியோர்கள்; நீதிமார்க்கம் தப்பாமல் நடக்கிறவர்கள். கெடாத செல்வர் - சத்தியத்துடனே தேடின திரவியம் உடையவர்கள். (731)

### 732

பெரும்பொருளால் பெட்டக்க தாகி அருங்கேட்டால்
ஆற்ற விளைவது நாடு. 2

**பரிமேலழகர்:** பெரும் பொருளால் பெட்டக்கது ஆகி - அளவிறந்த பொருள் உடைமையால் பிற தேயத்தாரானும் விரும்பத்தக்கதாய், அரும்

---

1. சீவக. 77.
2 ''கலத்தினும் காலினும் தருவனர் ஈட்ட.'' (சிலப். 2 : 7.)

கேட்டால் ஆற்ற விளைவது நாடு - கேடின்மையோடு கூடி மிக விளைவதே நாடாவது.

அளவிறப்பு, பொருள்களது பன்மைமேலும் தனித்தனி அவற்றின் மிகுதிமேலும் நின்றது. கேடாவது மிக்க பெயல், பெயல் இன்மை, எலி, விட்டில், கிளி, அரசண்மை என்ற இவற்றான் வருவது. "மிக்கபெய லோடு பெய லின்மையெலி விட்டில்கிளி, அக்கண்ர சண்மையோ டாறு." இவற்றை வடநூலார் ஈதிவாதைகள் என்ப.[1] இவற்றுள் முன்னையவற்றது இன்மை அரசன் அறத்தானும், பின்னையது இன்மை அவன் மறத்தானும் வரும். இவ்வின்மைகளான் மிக விளைவதாயிற்று.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** பெரும் பொருள் - நெல். (732)

## 733

**பொறைஒருங்கு மேல்வருங்கால் தாங்கி இறைவற்**
**கிறைஒருங்கு நேர்வது நாடு.** 3

**பரிமேலழகர்:** பொறை ஒருங்கு மேல் வரும் கால் தாங்கி - பிற நாடுகள் பொறுத்த பாரம் எல்லாம் ஒருங்கே தன்கண் வருங்கால் அவற்றைத் தாங்கி, இறைவற்கு இறை ஒருங்கு நேர்வது நாடு - அதன்மேல் தன் அரசனுக்கு இறைப்பொருள் முழுவதையும் உடம்பட்டுக் கொடுப்பதே நாடாவது.

பாரங்கள் மக்கள் தொகுதியும், ஆன் எருமை முதலிய விலங்குத் தொகுதியும். தாங்குதல் - அவை தத்தம் தேயத்துப் பகை வந்து இறுத்த தாக, அரசு கோல் கோடியதாக, உணவு இன்மையானாகத் தன்கண் வந்தால் அவ்வத் தேயங்களைப்போல இனிது இருப்பச் செய்தல். அச் செயலால் இறையைக் குறைபடுத்தாது தானே கொடுப்பது என்பார், இறை ஒருங்கு நேர்வது என்றார்.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** குடிமை செய்தால், ஒரு காலத்திலே பல குற்றம் தன்னிடத்து வரினும் அதனைப் பொறுத்து, நிச்சயித்த கடமையை அரசனுக்கு ஒருங்கு கொடுக்க வல்லது நாடு.

**பரிதியார்:** நாட்டாண்மைக்காரர்க்குச் சேதம் வந்தால் தளராமல் இறைக்கடமை ஒருகாலே கொடுப்பது நாடு. (733)

## 734

**உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்**
**சேரா தியல்வது நாடு.** 4

**பரிமேலழகர்:** உறு பசியும் - மிக்க பசியும், ஓவா பிணியும் - நீங்காத நோயும், செறு பகையும் சேராது - புறத்து நின்று வந்து அழிவு செய்யும் பகையும் இன்றி, இயல்வது நாடு - இனிது நடப்பதே நாடாவது.

உறுபசி, உழவர் உடைமையானும் ஆற்ற விளைதலானும் சேராதாயிற்று. ஓவாப்பிணி, தீக் காற்று மிக்க குளிர் வெப்பங்களும் நுகரப்படு

1. "தொட்டியர் கள்வர் சோனைப் பெரும்பெயல், விட்டில் கிளியே நால்வாய் ஏனம், நட்டம் நாட்டேழ் குற்ற மாகும்", "விட்டில் கிளிநால்வாய் வேற்றரசு தன்னரசு, நட்டம் பெரும்பெயல்காற் றெட்டு" என்று பிறவாறு கூறுவாரும் உளர்.

மவற்றது தீமையும் இன்மையின் சேராதாயிற்று. செறு பகை, அரசன் ஆற்றலும் நிலைப்படையும் அடவியும் அரணும் உடைமையின் சேராதாயிற்று.

### ஒப்புமை

முற்றும்:

"பசியும் பிணியும் பகையும் நீங்கி
வசியும் வளனும் சுரக்கென வாழ்த்தி" (சிலப். 5 : 72-3.)

"பொன்றுக பசியும் நோயும் பொருந்தலில் பகையு மென்ன."
(சீவக. 2375.) (734)

## 735

**பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும் வேந்தலைக்கும்**
**கொல்குறும்பும் இல்லது நாடு.** 5

பரிமேலழகர்: பல் குழுவும் - சங்கேத வயத்தான் மாறுபட்டுக் கூடும் பல கூட்டமும், பாழ் செய்யும் உள்பகையும் - உடன் உறையா நின்றே பாழாகச் செய்யும் உட்பகையும், வேந்து அலைக்கும் கொல் குறும்பும் இல்லது நாடு - அளவு வந்தால் வேந்தனை அலைக்கும் கொல்வினைக் குறும்பரும் இல்லாததே நாடாவது.

சங்கேதம், சாதி பற்றியும் கடவுள் பற்றியும் பலர்க்கு உளதாம் ஒருமை. உட்பகை - ஆறலைப்பார், கள்வர், குறளை கூறுவார் முதலிய மக்களும் பன்றி, புலி, கரடி முதலிய விலங்குகளும். உட்பகை, குறும்பு என்பன ஆகுபெயர். இம் மூன்றும் அரசனாலும் வாழ்வாராலும் கடியப்பட்டு நடப்பதே நாடு என்பதாம்.

### உரை வேறுபாடு

பரிதியார்: பல குடியைச் சேதம் பண்ணும் தாயாதிகளும் ராசாவுடன் பகை செய்யும் கூட்டமும் இல்லாதது நாடு.

காளிங்கர்: மறப்படை மாக்கள் பெருகக் கூடும் கூட்டமும், செல்வம் உடையோர் தம் செல்வத்தைத் தேய்க்கும் உட்பகையும், நாடு பற்றி வாழும் பெருநெறி வேந்தனைக் காடுபற்றி நிற்கச் செய்யும் கொல்வினைக் குறும்பும் இல்லது யாது? மற்று அதுவே நாடாவது. (735)

## 736

**கேடறியாக் கெட்ட இடத்தும் வளம்குன்றா**
**நாடென்ப நாட்டில் தலை.** 6

பரிமேலழகர்: கேடு அறியா - பகைவரால் கெடுதல் அறியாததாய், கெட்ட இடத்தும் வளம் குன்றா நாடு - அரிதில் கெட்டதாயினும் அப்பொழுதும் தன் வளம் குன்றாத நாட்டினை, நாட்டின் தலை என்ப - எல்லா நாட்டினும் தலை என்று சொல்லுவர் நூலோர்.

அறியாது, குன்றாத என்னும் எச்சங்களின் இறுதி நிலைகள் விகாரத்தால் தொக்கன. கேடு அறியாமை, அரசன் ஆற்றலானும் கடவுட் பூசை அறங்கள் என்று இவற்றது செயலானும் வரும். வளம், ஆகரங்களில் படுவனவும் வயலினும் தண்டலையினும் விளைவனவும். குன்றாமை, அவை செய்ய வேண்டாமல் இயல்பாகவே உளவாயும் முன் ஈட்டப்படும் குறை அறுதல்.

இவை ஆறு பாட்டானும் நாட்டது இலக்கணம் கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**பரிதியார்:** பிறர் நாட்டில் போய் ஏதொன்றும் தேடாமலும், பகை வரால் கெடுதல் வராததாயும், வாழ்ந்தார் கெட்டால் நாட்டாண்மைக் காரணைச் செல்வன் ஆக்குவதும் நாட்டுக்குச் சிகாமணி. (736)

## 737

**இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்**
**வல்அரணும் நாட்டிற் குறுப்பு. 7**

**பரிமேலழகர்:** இரு புனலும் - கீழ் நீர் மேல் நீர் எனப்பட்ட தன்கண் நீரும், வாய்ந்த மலையும் - வாய்ப்புடைத்தாய மலையும், வரு புனலும் - அதனினின்றும் வருவதாய நீரும், வல் அரணும் - அழியாத நகரியும், நாட்டிற்கு உறுப்பு - நாட்டிற்கு அவயவம் ஆம்.

ஈண்டுப் புனல் என்றது துரவு கேணிகளும் ஏரிகளும் ஆறுகளும் ஆகிய ஆதாரங்களை; அவயவம் ஆதற்கு உரியன அவையே ஆகலின். அவற்றுள் வானம் வறப்பினும் வளன் உடைமை பெறப்பட்டது. இடையது அன்றி ஒருபுடையது ஆகலும் தன் வளம் தருதலும் மாரிக்கண் உண்ட நீர் கோடைக்கண் உமிழ்தலும் உடைமை பற்றி வாய்ந்த மலை என்றார். அரண்: ஆகுபெயர்.

இதனான் அதன் அவயவம் கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**காளிங்கர்:** வருபுனல் என்றது கூடிக் கூடிப் பல இடத்தும் மலை முதலாகக் கடல் ஈறுக வழித் தொடர்பு அறுது வருபுனல் உடைய ஆறு களும்; வாய்ந்த மலை என்றது வாய்ப்புடை மலைகளும்; இருபுனலும் என் றது சிறிது கல்லிய இடத்துக் கீழ்நீரும் மேல் தெளியும் குளநீரும். (737)

## 738

**பிணிஇன்மை செல்வம் விளைவின்பம் ஏமம்**
**அணிஎன்ப நாட்டிற்கிவ் வைந்து. 8**

**பரிமேலழகர்:** பிணி இன்மை செல்வம் விளைவு இன்பம் ஏமம் இவ் வைந்து - நோய் இன்மையும் செல்வம் விளைதல் இன்பம் காவல் என்று இவை உடைமையும் ஆகிய இவ் வைந்தினையும், நாட்டிற்கு அணி என்ப - நாட்டிற்கு அழகு என்று சொல்லுவர் நூலோர்.

பிணி இன்மை, நில நலத்தான் வருவது. செல்வம், மேல் சொல்லியன. இன்பம், விழவும் வேள்வியும் சான்றோரும் உடைமையானும், நுகர்வன உடைமையானும், நிலம் நீர்களது நன்மையானும் வாழ்வார்க்கு உள் நிகழ்வது. காவல் எனவே அரசன் காவலும், வாழ்வோர் காவலும், அரண் காவலும் அடங்கின.

பிற தேயங்களின் உள்ளாரும் விழைந்து பின் அவை உள்ளாமைக்கு ஏதுவாய அதன் அழகு இதனால் கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**பரிப்பெருமாள்:** செல்வம் - பொன்னும் பசுவும் பலவாயின மிகுதல். விளைவாவது, பல தானியங்களும் பொலிவு உடைமை. இன்பமாவது, கண்டும் கேட்டும் உண்டும் உயிர்த்தும் உற்றும் இன்புறப்படும் பொருள்

களை உடைமை, காவலாவது, மாற்றரசனானும் தன் அரசனானும் நலிவு இன்மை. மேல், நாட்டிற்கு அங்கம் ஆவன கூறினர்; இஃது அழகு ஆவன கூறிற்று.

**பரிதியார்:** விளைவு - பதினாறு தானியமும் விளைவு.

**கவிராஜ பண்டிதர்:** இன்பம் - நல்ல ருசிகளை உடைய வஸ்துக்கள். (738)

### 739

நாடென்ப நாடா வளத்தன நாடல்ல
நாட வளந்தரும் நாடு. 9

**பரிமேலழகர்:** நாடா வளத்தன நாடு என்ப - தங்கண் வாழ்வார் தேடி வருந்தாமல் அவர்பால் தானே அடையும் செல்வத்தை உடையவற்றை நூலோர் நாடு என்று சொல்லுவர்; நாட வளம் தரும் நாடு நாடு அல்ல - ஆதலால் தேடி வருந்தச் செல்வம் அடைவிக்கும் நாடுகள் நாடு ஆகா.

நாடுதல், இருவழியும் வருத்தத்தின்மேல் நின்றது. "பொருள்செய் வார்க்கும் அஃதிடம்"[1] என்றார் பிறரும். நூலோர் விதிபற்றி எதிர்மறை முகத்தால் குற்றம் கூறியவாறு. இவ்வாறு அன்றி, என்ப என்பதனைப் பின்னும் கூட்டி இரு பொருள்பட உரைப்பின் அனுவாதம் ஆம்.

#### உரை வேறுபாடு

**பரிப்பெருமாள்:** இஃது எல்லா நிலத்தினும் உள்ள பண்டம் கலத்தினாலாதல் காலினாலாதல் தன்னிடத்தே உடைத்தாதலும், தன் நிலத்தில் உள்ள பண்டத்தை மிகுதியாக உடைத்தாதலும் வேண்டும் என்றது. (739)

### 740

ஆங்கமை வெய்தியக் கண்ணும் பயம்இன்றே
வேந்தமை வில்லாத நாடு. 10

**பரிமேலழகர்:** வேந்து அமைவு இல்லாத நாடு - வேந்தனோடு மேவுதல் இல்லாத நாடு, ஆங்கு அமைவு எய்தியக்கண்ணும் பயம் இன்றே - மேல் சொல்லிய குணங்கள் எல்லாவற்றானும் நிறைந்து இருந்தது ஆயினும் அவற்றால் பயன் உடைத்தன்று.

வேந்து அமைவு எனவே, குடிகள் அவன்மாட்டு அன்பு உடையர் ஆதலும், அவன்தான் இவர் மாட்டு அருள் உடையன் ஆதலும் அடங்கின. அவை இல்வழி வாழ்வோர் இன்மையின், அவற்றால் பயன் இன்று ஆயிற்று.

இவை இரண்டு பாட்டானும் அதன் குற்றம் கூறப்பட்டது. (740)

---

# 75. அரண்

**பரிமேலழகர்:** இனி, அந் நாட்டிற்கு உறுப்பாய் அடங்கும் ஆயினும் பகைவரால் தொலைவு வந்துழி அதுதனக்கும் அரசன்தனக்கும் ஏமம் ஆதல் சிறப்புப்பற்றி பிறிது ஓர் அங்கமாக ஓதப்பட்ட அரண் இவ்வதிகாரத்தால் கூறுகின்றார்.

1. சீவக. 77.

## 741

ஆற்று பவர்க்கும் அரண்பொருள் அஞ்சித்தற்
போற்று பவர்க்கும் பொருள். 1

பரிமேலழகர்: ஆற்றுபவர்க்கும் அரண் பொருள் - மூவகை ஆற்றலும் உடையராய்ப் பிறர்மேல் செல்வார்க்கும் அரண் சிறந்தது; அஞ்சி தன் போற்றுபவர்க்கும் (அரண்) பொருள் - அவை இன்றிக் தம்மேல் வருவார்க்கு அஞ்சித் தன்னையே அடைவார்க்கும் அரண் சிறந்தது.

பிறர்மேல் செல்லுங்கால் உரிமை, பொருள் முதலியவற்றைப் பிறன் ஒருவன் வெளவாமல் வைத்துச் செல்லவேண்டும் ஆதலானும், அப் பெருமை தொலைந்து இறுதி வந்துழிக் கடல் நடுவண் உடைகலத்தார் போன்று ஏமம் காணாது இறுவர் ஆகலானும், ஆற்றுபவர்க்கும் போற்றுபவர்க்கும் அரண் பொருள் ஆயிற்று. ஆற்றல் உடையர் ஆயினும் அரண் இல்வழி அழியும் பாலராகலின், அவரை முற் கூறினர்.

இதனான் அரணினது சிறப்புக் கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

பரிதியார்: வீரர்க்கும் அரணே பொருள்; பொருள் படைத்தார்க்கும் அரணே பொருள்.

### ஒப்புமை

முற்றும்:

"............பலர் தொகினும்
எத்திசையும் அஞ்சா எயில்அரணும்.........
...........மண்ணாளும் வேந்தர்க் குறுப்பு." (திரி. 100.) (741)

## 742

மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழற்
காடும் உடைய தரண். 2

பரிமேலழகர்: மணி நீரும் மண்ணும் மலையும் அணி நிழல் காடும் உடையது அரண் - மணிபோலும் நிறத்தினை உடைய நீரும் வெள்ளிடை நிலமும் மலையும் குளிர்ந்த நிழலை உடைய காடும் உடையதே அரணாவது.

எஞ்ஞான்றும் வற்றாத நீர் என்பார் மணிநீர் என்றும்,[1] நீரும் நிழலும் இல்லா மருநிலம் என்பார் மண் என்றும், செறிந்த காடு என்பார் அணி நிழற் காடு என்றும் கூறினர். மதிற்புறத்து மருநிலம் பகைவர் அரண் பற்றாமைப் பொருட்டு. நீர் அரண், நிலவரண், மலையரண்,[2] காட்டரண் என இயற்கையும் செயற்கையுமாய இந் நான்கு அரணும் சூழப்படுவது அரண் என்பதாம்.

### உரை வேறுபாடு

பரிப்பெருமாள்: மலை அரண் என்றும், காடு அரண் என்றும் கூறுப. சேற்று அரண் என்பதும் ஒன்று உண்டு. அதுவும் இவற்றினுள் அடங்கும். இஃது அரண் செய்யும் இடம் கூறிற்று.

---

1. "மண்ணுற ஆழ்ந்த மணிநீர்க் கிடங்கின்" (மதுரைக். 351) என்பதற்கு, 'மண் உள்ள அளவும் ஆழ்ந்த நீல மணிபோலும் நீரையுடைய கிடங்கினையும்' என்று பொருள் உரைத்தார் நச்சினார்க்கினியர்.

2 'மலையுள்ள இடங்களிலே அம் மலைதானே மதிலாகவும், மலை இல்லாத இடங்களில் மதிலே அரணாகவும்.' (பதிற். 16 : 1, உரை.)

**காளிங்கர்:** மணி நீரும் என்றது பளிங்கு போலத்[1] தெளிந்து ஆழம் உடைமையும் வற்றுமையும்.

**ஒப்புமை**

1. **மணிநீர் :**

"மணிநீர் வைப்பு மதிலொடு பெயரிய" (சிறுபாண். 152.)

"மண்ணுற வாழ்ந்த மணிநீர்க் கிடங்கின்" (மதுரைக். 351.)

"மணிநீர கயநிற்ப." (கலித். 35 : 5.)

2. **முற்றும்:**

"நீண்டநீர் காடு களர்நிவந்து விண்தோயும்
மாண்ட மலைமக்கள் உள்ளிட்டு—மாண்டவர்
ஆய்ந்தன ஐந்தும் அரணு உடையானை
வேந்தனு நாட்டல் விதி." (சிறுபஞ்ச. 48.) (742)

## 743

உயர்வகலம் திண்மை அருமைஇந் நான்கின்
அமைவரண் என்றுரைக்கும் நூல். 3

**பரிமேலழகர்:** உயர்வு அகலம் திண்மை அருமை இந் நான்கின் அமைவு - உயர்ச்சியும் அகலமும் திண்மையும் அருமையும் என்று சொல்லப் பட்ட இந் நான்கின் மிகுதியையுடைய மதிலை, அரண் என்று உரைக்கும் நூல் - அரண் என்று சொல்லுவர் நூலோர்.

அமைவு, நூல் என்பன ஆகுபெயர். உயர்வு - ஏணி எய்தாதது. அகலம் - புறத்தோர்க்கு அகழலாகா அடி யகலமும், அகத்தோர்க்கு நின்று வினை செய்யலாம் தலை யகலமும். திண்மை - கல் இட்டிகைகளால் செய்தலின் குத்தப்படாமை. அருமை - பொறிகளான் அணுகற்கு அருமை; பொறிகளாவன: "வளைவிற் பொறியு மயிற்செறி நிலையும், கருவிர லூகமுங் கல்லுமிழ் கவணும், பரிவுறு வெந்நெயும் பாகடு குழிசியும், காய் பொன் னுலையும் கல்லிடு கூடையும், தூண்டிலுந் துடக்கும் ஆண்டலை யடுப்பும், கவையுங் கழுவும் புதையும் புழையும், ஐயவித் துலாமுங் கைபெய ரூசியும், சென்றெறி சிரலும் பன்றியும் பணையும், எழுவுஞ் சீப்பு முழுவிறற் கணைய மும், கோலும் குந்தமும் வேலும் சூலமும்"[2] என்று இவை முதலாயின.

**உரை வேறுபாடு**

**பரிப்பெருமாள்:** அருமையாவது, முதலையும் கிடங்கும் அடியொட்டி யும் முதலாயினவற்றால் கிட்டுதற்கு அருமை. (743)

## 744

சிறுகாப்பிற் பேரிடத்த தாகி உறுபகை
ஊக்கம் அழிப்ப தரண். 4

**பரிமேலழகர்:** சிறு காப்பின் பேர் இடத்தது ஆகி - காக்க வேண்டும் இடம் சிறிதாய் அகன்ற இடத்தை உடைத்தாய், உறு பகை ஊக்கம் அழிப்பது அரண் - தன்னை வந்து முற்றிய பகைவரது மன எழுச்சியைக் கெடுப்பதே அரணாவது.

1. "பளிங்குசொரி வன்ன பாய்சுனை" (குறிஞ்சிப். 57) என்பதும். "மணி மருள் தெண்ணீர்" (மலைபடு. 250) என்பதற்கு, 'பளிங் கென்று மருளும் தெளிந்த நீர்' என்று நச்சினார்க்கினியர் எழுதிய உரையும் இங்கே நினைத்தற்குரியன.

2. சிலப். 15 : 207 - 16.

வாயிலும் வழியும் ஒழிந்த இடங்கள் மலை, காடு, நீர்நிலை என்று இவற்றுள் ஏற்பன உடைத்தாதல் பற்றிச் சிறு காப்பின் என்றும், அகத்தோர் நலிவு இன்றி இருத்தல் பற்றிப் பேரிடத்ததாகி என்றும், தம் வலி நோக்கி இது பொழுதே அழித்தும் என்று வரும் பகைவர் வந்து கண்டால் அவ்வூக்கம் ஒழிதல்பற்றி ஊக்கம் அழிப்பது என்றும் கூறினர்.

## உரை வேறுபாடு

**பரிதியார்:** *உள்ளிடம் உள்ளதாய் வாசல் சிறிதாகிப் பகையை வெல்விப்பது அரண்.* (744)

## 745

கொளற்கரிதாய்க் கொண்டகூழ்த் தாகி அகத்தார்
நிலைக்கெளிதாம் நீர தரண். 5

**பரிமேலழகர்:** கொளற்கு அரிதாய் - புறத்தாரால் கோடற்கு அரிதாய், கொண்ட கூழ்த்து ஆகி - உட்கொண்ட பலவகை உணவிற்றாய், அகத்தார் நிலைக்கு எளிது ஆம் நீரது அரண் - அகத்தாரது போர் நிலைக்கு எளிதாய நீர்மையை உடையதே அரணாவது.

கோடற்கு அருமை, இளை[1] கிடங்குகளானும் பொறிகளானும் இடம் கொள்ளுதற்கு அருமை. உணவு தலைமை பற்றிக் கூறினமையின் மற்றுள்ள நுகரப்படுவனவும் அடங்கின. நிலைக்கு எளிதாம் நீர்மையாவது, அகத்தார் விட்ட ஆயுதம் முதலிய புறத்தார்மேல் எளிதில் சேறலும், அவர் விட்டன அகத்தார்மேல் செல்லாமையும், பதணப்[2] பரப்பும் முதலாயின.

## உரை வேறுபாடு

**பரிப்பெருமாள்:** அஃதாவது, அரணுக்கு நீங்குகிற்பதோர் ஆற்றினின்றும் பிறர்க்குத் தோன்றாமல் சுருங்கையாகப் படுத்து உள்ளே நீர் புகுதலும், மதிலை முற்றினார்க்கு அணைய நீர் இன்மையும், இன்னும் அதனானே வெற்றிலையும் பூவும் உள்ளே உண்டாக்குதலும் பிறவும் ஆம்.

**காளிங்கர்:** பகைவேந்தர் முற்றி இருந்தும் கொளற்கு அரிதாய், அகத்தோர் நெடிது ஆண்டு இருப்பினும் உணற்கு எளிதாகப் பெரிதும் ஈட்டிக்கொண்ட நெல் அரிசி கொள்ளுப்பயிர் முதலிய உணவுப் பொருள்களையும் உடைத்தாய், நாற்பெருஞ் சேனையும் விட்டு உலாவுதற்கு வேண்டும் வீதியும் பூவும் சாந்தும் நீரும் நிழலும் பொதுவியர்க்கு உரிய மகளிரும் பிறவும் உடையது யாது? மற்று அதுவே அரண் ஆவது.

## ஒப்புமை

**அரண் உணவு உடையதாய் இருத்தல்:**

''ஒன்றே, சிறியிலை வெதிரின் நெல்விளை யும்மே
இரண்டே, தீஞ்சுளைப் பலவின் பழம்ஊழ்க் கும்மே
மூன்றே, கொழுங்கொடி வள்ளிக் கிழங்குவீழ்க் கும்மே
நான்கே, அணிநிற வோரி பாய்தலின் மீதழிந்து
திணிநெடுங் குன்றம் தேன்சொரி யும்மே'' (புறநா. 109 : 4 - 8.)

''பற்பல தானியத்த தாகிப் பலருடையும்
மெய்த்துணையும் சேரல் இனிது.'' (இனியவை. 18.) (745)

1. இளை - காவற்காடு.
2. பதணம் - மதிலுள் மேடை.

### 746

எல்லாப் பொருளும் உடைத்தாய் இடத்துதவும்
நல்ஆள் உடைய தரண். 6

**பரிமேலழகர்:** எல்லா பொருளும் உடைத்தாய் - அகத்தோர்க்கு வேண்டும் பொருள்கள் எல்லாவற்றையும் உள்ளே உடைத்தாய், இடத்து உதவும் நல்ஆள் உடையது அரண் - புறத்தோரால் அழிவு எய்தும் எல்லைக் கண் அஃது எய்தாவகை உதவிக் காக்கும் நல்ல வீரரையும் உடையதே அரணாவது.

அரசன் மாட்டு அன்பும் மானமும் மறமும் சோர்வின்மையும் முதலிய நற்குணங்கள் உடைமைபற்றி நல் ஆள் என்றார்.

#### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** எல்லாப் பொருளுமாவன, நுகர வேண்டுவனவும் படைக்கலங்களும். (746)

### 747

முற்றியும் முற்று தெறிந்தும் அறைப்படுத்தும்
பற்றற் கரிய தரண். 7

**பரிமேலழகர்:** முற்றியும் - புகலொடு போக்கு ஒழியும்வகை நெருங்கிச் சூழ்ந்தும், முற்றுது எறிந்தும் - அங்ஙனம் சூழாது நெகிழ்ந்த இடன் நோக்கி ஒரு முகமாகப் பொருதும், அறைப்படுத்தும் - அகத்தோரை அவர் தெளிந்தோரை விட்டுக் கீழறுத்துத் திறப்பித்தும், பற்றற்கு அரியது அரண் - புறத்தோரால் கொள்ளுதற்கு அரியதே அரணாவது.

இம் மூன்று உபாயத்துள்ளும் முதலாவது எல்லாப் பொருளும் உடைமையானும், ஏனைய நல்லாள் உடைமையானும் வாயா ஆயின.

#### உரை வேறுபாடு

**கவிராஜ பண்டிதர்:** அறைப்படுத்தும் - உள்ளே இருக்கிறவர்களுக்கு இலஞ்ச பரிதானங்கள் கொடுத்து உபாய கற்பனை பண்ணியும். (747)

### 748

முற்றாற்றி முற்றி யவரையும் பற்றாற்றிப்
பற்றியார் வெல்வ தரண். 8

**பரிமேலழகர்:** முற்று ஆற்றி முற்றியவரையும் - தானைப் பெருமை யால் சூழ்தல் வல்லராய் வந்து சூழ்ந்த புறத்தோரையும், பற்றியார் பற்று ஆற்றி வெல்வது அரண் - தன்னைப் பற்றிய அகத்தோர் தாம் பற்றிய இடம் விடாதே நின்று பொருது வெல்வதே அரணாவது.

உம்மை, சிறப்பும்மை. பற்றின் கண்ணே ஆற்றி என விரியும். பற்று: ஆகுபெயர். வெல்வது என உடையார் தொழில் அரண்மேல் நின்றது. பெரும்படையானைச் சிறுபடையான் பொறுத்து நிற்கும் துணையே அன்றி வெல்லும் இயல்பினது என்பதாம். இதற்குப் பிறிது உரைப்பாரும் உளர்.

இவை ஏழு பாட்டானும் அதனது இலக்கணம் கூறப்பட்டது. (748)

### 749

முனைமுகத்து மாற்றலர் சாய வினைமுகத்து
வீறெய்தி மாண்ட தரண். 9

**பரிமேலழகர்:** முனைமுகத்து மாற்றலர் சாய வினைமுகத்து வீறு எய்தி - போர் தொடங்கின அளவிலே பகைவர் கெடும் வண்ணம் அகத்தோர் செய்யும் வினைவேறுபாடுகளான் வீறு பெற்று, மாண்டது அரண் - மற்றும் வேண்டும் மாட்சியை உடையதே அரணாவது.

தொடக்கத்தில் கெட்டார் பின்னும் கூடிப் பொருதல் கூடாமையின், 'முனைமுகத்துச் சாய' என்றார். வினை வேறுபாடுகளாவன: பகைவர் தொடங்கிய போரினை அறிந்து எய்தல், எறிதல், குத்துதல், வெட்டுதல் என்று இவை முதலாய வினைகளுள் அதனைச் சாய்ப்பன செய்தல். மற்றும் வேண்டும் மாட்சி என்றது, புறத்தோர் அறியாமல் புகுதல் போதல் செய்தற்குக் கண்ட சுருங்கை வழி முதலாயின உடைமை.

#### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** அஃதாவது அட்டாலகமும் மதிற்பொறியும் முதலாயின மதில் தலையில் அமைத்தல்.

**பரிப்பெருமாள்:** இது மதில் தலையில் கருவிகள் அமைக்கவேண்டும் என்றது.

**காளிங்கர்:** புறத்து அரசன் கடைப்புறத்துப் போர் தொடங்கிய அளவிலே தலைசாய்ந்து ஓடுமாறு அகத்தோர் இயந்திரம் முதலிய கல் பொறியும் பாம்பும் கனலும் கடிகுரங்கும் வில் பொறியும் வேலும் வெந்தீவட்டும் காய்ச்சிய மணலும் கவவும் இருப்பு உலக்கையும் வீச்சுறு தூண்டிலும் விசைத்தெறி கவணும் ஆகிய வினைத்தொழில் உடைய மாட்சிமைப்பட்டது யாது? மற்று அதுவே அரணாவது. (749)

### 750

எனைமாட்சித் தாகியக் கண்ணும் வினைமாட்சி
இல்லார்கண் இல்ல தரண். 10

**பரிமேலழகர்:** அரண் - அரண், எனை மாட்சித்து ஆகியக்கண்ணும் - மேற்சொல்லப்பட்ட மாட்சி எல்லாம் உடைத்தாய இடத்தும், வினைமாட்சி இல்லார்கண் இல்லது - வினைசெய்தற்கண் மாட்சி இல்லாதார் மாட்டு அவை இலதாம்.

வாளா இருத்தலும், அளவு அறியாது செய்தலும், ஏலாதது செய்தலும் எல்லாம் அடங்க, வினைமாட்சி இல்லார் என்றும், ஏற்ற வினையை அளவு அறிந்து செய்து காவாக்கால் அம்மாட்சிகளால் பயன் இன்றி அழியும் என்பார் அவை உடைத்தன்று என்றும் கூறினார்.

இவை இரண்டு பாட்டானும் காப்பாரை இன்றி அமையாது என்பது கூறப்பட்டது. (750)

---

# 76. பொருள்செயல் வகை

**பரிமேலழகர் :** இனிப் பெரும்பான்மையும் நாட்டானும் அரணுனும் ஆக்கவும் காக்கவும் படுவதாய பொருளைச் செய்தலின் திறம் இவ்வதிகாரத்தால் கூறுகின்ருர்.

**பரிதியார்:** பொருள் செயல் வகையாவது மூன்று வகைப் பொருள் தேடும் முறைமை சொல்வது.

### 751

பொருள்அல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருள்அல்ல தில்லை பொருள். 1

**பரிமேலழகர் :** பொருள் அல்லவரை பொருளாக செய்யும் பொருள் அல்லது - ஒரு பொருளாக மதிக்கப்படாதாரையும் படுவாராகச் செய்யவல்ல பொருளை ஒழிய, பொருள் இல்லை - ஒருவனுக்குப் பொருளாவது இல்லை.

மதிக்கப்படாதார், அறிவில்லாதார் இழிகுலத்தார். இழிவுசிறப் பும்மை விகாரத்தால் தொக்கது.[1] மதிக்கப்படுவாராகச் செய்தல், அறி வுடையாரும் உயர்குலத்தாரும் அவர்பாற் சென்று நிற்கப் பண்ணுதல். அதனல் ஈட்டப்படுவது அதுவே, பிறிது இல்லை என்பதாம்.

#### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** இது வடிவில்லாதாரைப் பெண்டிர் இகழ்வார், பொருள் உடையாரை யாவரும் நன்ருக மதிப்பர் என்றது.

**பரிப்பெருமாள்:** மேல் இன்பம் எளிதாக வரும் என்ருர். அஃது எளிதாக வரும் ஆறு என்னை? வடிவு இல்லாதாரைப் பெண்டிர் இகழ்வர் ஆதலின், நன்னெறி உற்ருர்க்குப் பொருள் உடையாரை யாவரும் நன்கு மதிப்பர் என்று கூறப்பட்டது.

**காளிங்கர்:** சத்துருக்களையும் மித்துருக்களையும் தமக்கு உறுதி பண்ணிக் கொடுக்கும் பொருளானது இது அன்றிப் பொருளாக மதிக்கலாவது ஒன்றும் இல்லை.

#### ஒப்புமை

**பொருளின் இயல்பு:**

"பொருளல்லால் பொருளும் உண்டோ" (கலி. 14:10.)

"வென்றி ஆக்கலும் மேதக வாக்கலும்
அன்றி யும்கல்வி யோடழ காக்கலும்
குன்றி ஞர்களைக் குன்றென ஆக்கலும்
பொன்றுஞ் சாகத்தி ஞய்பொருள் செய்யுமே." (சீவக. 1922.)

"குலம்தரும் கல்வி கொணர்ந்து முடிக்கும்
அலந்த கிளைகள் அழிபசி தீர்க்கும்......
புலம்பில் பொருள்தரப் புன்கண்மை உண்டோ."
(வளையாபதி.) (751)

---

1. பொருளல்லவரையும் என்னும் உம்மை.

## 752

இல்லாரை எல்லாரும் எள்ளுவர் செல்வரை
எல்லாரும் செய்வர் சிறப்பு. 2

**பரிமேலழகர்:** இல்லாரை எல்லாரும் எள்ளுவர் - எல்லா நன்மையும் உடையவராயினும் பொருள் இல்லாரை யாவரும் இகழ்வர்; செல்வரை எல்லாரும் சிறப்பு செய்வர் - எல்லாத் தீமையும் உடையோராயினும் அஃது உடையாரை யாவரும் உயரச் செய்வர்.

உயரச் செய்தல், தாம் தாழ்ந்து நிற்றல். இகழ்தற்கண்ணும் தாழ்தற்கண்ணும் பகைவர், நட்டார், நொதுமலர் என்னும் மூவகையாரும் ஒத்தலின், யாவரும் என்றார். பின்னும் கூறியது அதனை வலியுறுத்தற்பொருட்டு.

### உரை வேறுபாடு

**கவிராஜ பண்டிதர்:** செய்வர் சிறப்பு - புகழ்வர்.

### ஒப்புமை

1. **இல்லாரை எல்லாரும் எள்ளுதல்:**

"இலாஅர்க் கில்லைத் தமர்"
"வாழாதார்க் கில்லைத் தமர்" (நாலடி. 283, 290.)

"மாடு தானது இல்லெனின் மானுடர்
பாடு தான்செல்வா ரில்லை" (அப்பர். கொண்டீச்சரம், 3.)

"மறுமை கண்டமெய்ஞ் ஞானியர் ஞாலத்து வரினும்
வெறுமை கண்டபின் யாவரும் யாரென விரும்பார்."
(கம்ப. வருணனை. 14.)

2. **செல்வரை எல்லாரும் சிறப்புச் செய்தல்:**

"அருளுடைய யாரும்மற் றல்லா தவரும்
பொருளுடை யாரைப் புகழாதார் இல்லை." (பழமொழி, 269)

3. **முற்றும்:**

"உண்டாய போழ்தின் உடைந்துழிக் காகம்போல்
தொண்டா யிரவர் தொகுபவே—வண்டாய்த்
திரிதரும் காலத்துத் தீதிலிரோ என்பார்
ஒருவரும் இவ்வுலகத் தில்." (நாலடி, 284.)

"முட்டின் றொருவர் உடைய பொழுதின்கண்
அட்டிற்றுத் தின்பவர் ஆயிரவர் ஆபவே
கட்டலர்தார் மார்ப கலியூழிக் காலத்துக்
கெட்டார்க்கு நட்டாரோ இல்." (பழமொழி, 59.)

"பொருள்கை யுண்டாய்ச் செல்லக் காணின்
போற்றியென் றேற்றெழுவர்
இருள்கொள் துன்பத் தின்மை காணின்
என்னேஎன் பாரும் இல்லை" (திருவாய். 9. 1:3.)

"செல்வர்க்கே சிறப்புச் செய்யும் திருந்துநீர் மாந்தர் போல
அல்குற்கும் முலைக்கும் ஈந்தார் அணிகல மாய வெல்லாம்
நல்கூர்ந்தார்க் கில்லை சுற்றம் என்று நுண் ணுசுப்பு நைய
ஒல்கிப்போய் மாடம் சேர்ந்தா ரொருதடங் குடங்கைக் கண்ணார்."
(சீவக. 2535.)

"இல்லாரை எல்லாரும் எள்ளுவர் செல்வரை
எல்லாரும் செய்வர் சிறப்பென்னும்—சொல்லாலே."
(ஆதி உலா, 136.) (752)

## 753

பொருள்என்னும் பொய்யா விளக்கம் இருள்அறுக்கும்
எண்ணிய தேயத்துச் சென்று. 3

**பரிமேலழகர்:** பொருள் என்னும் பொய்யா விளக்கம் - பொருள் என்று எல்லாரானும் சிறப்பிக்கப்படும் நந்தா விளக்கு, எண்ணிய தேயத்து சென்று இருள் அறுக்கும் - தன்னைச் செய்தவர்க்கு அவர் நினைத்த தேயத்துச் சென்று பகை என்னும் இருளைக் கெடுக்கும்.

எல்லார்க்கும் எஞ்ஞான்றும் இன்றியமையாததாய் வருதல் பற்றி, பொய்யா விளக்கம் என்றும், ஏனை விளக்கோடு இதனிடை வேற்றுமை தோன்ற, எண்ணிய தேயத்துச் சென்று என்றும் கூறினர். ஏகதேச உருவகம்.

இவை மூன்று பாட்டானும் பொருளது சிறப்புக் கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**பரிப்பெருமாள்:** இருள் ஆவது ஒளி இல்லாத இடம். பொருள் உண்டாகப் புகழ் உண்டாம்; புகழ் உண்டாக ஒளி எங்கும் பரக்கும் என்றது. அரசன் பொருள் உடையன் ஆயின் தான் கருதின தேயம் எல்லாவற்றினும் தன் ஆணை நடக்கும் என்றும் ஆம்.

**காளிங்கர்:** நெறியினால் ஈட்டிய பொருள் என்று சொல்லப்படுகின்ற கெடாத விளக்கானது பிறவியில் இனிய மறுமை உலகமும் பிறவி நீங்கிய முத்தியும் தாம் கருதிய வண்ணம் பெறலாவதும் செய்து, கொலை களவு கள் காமம் பொய் சினம் சூது முதலியவற்றில் செல்லுகின்ற அறியாமையாகிய இருளை நீக்கி நன்மை பயக்கும் எண்ணிய தேயத்து எய்துமாறு.

**கவிராஜ பண்டிதர்:** எண்ணிய தேயத்து - தன்னைச் சத்தியத்துடனே தேடினவர்களுக்கு அவர்கள் நினைத்த தேசத்திலே. (753)

## 754

அறன்ஈனும் இன்பமும் ஈனும் திறன்அறிந்து
தீதின்றி வந்த பொருள். 4

**பரிமேலழகர்:** திறன் அறிந்து தீது இன்றி வந்த பொருள் - செய்யும் திறத்தினை அறிந்து அரசன் கொடுங்கோன்மை இலனாக உளதாய பொருள், அறன் ஈனும் இன்பமும் ஈனும் – அவனுக்கு அறத்தையும் கொடுக்கும்; இன்பத்தையும் கொடுக்கும்.

செய்யும் திறம், தான் பொருள் செய்தற்குரிய நெறி. இலனாக என்பது இன்றியெனத் திரிந்து நின்றது. செங்கோலனென்று புகழப்படுதலானும் கடவுட் பூசை தானங்களால் பயன் எய்தலானும் அறன் ஈனும் என்றும், நெடுங்காலம் நின்று துய்க்கப்படுதலான் இன்பமும் ஈனும் என்றும் கூறினர். அதனன் அத்திறத்தான் ஈட்டுக என்பதாம்.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** தீது இன்றி வந்த பொருள் - நியாயமாகத் தேடிய பொருள்.

**கவிராஜ பண்டிதர்:** திறன் அறிந்து தீது இன்றி வந்த பொருள் - செய்கிற காரியத்தைப் பொல்லாங்கு இல்லாமல் நல்ல வழியிலே செய்து தேடின பொருள்.

ஒப்புமை

1. பொருள் அறனும் இன்பமும் ஈனுதல்:

"அதனால், அறனும் பொருளும் இன்பமும் மூன்றும்
ஆற்றும் பெருமநின் செல்வம்" (புறநா. 28:15-6.)

"வடுவிலா வையத்து மன்னிய மூன்றில்
நடுவண தெய்த இருதலையும் எய்தும்" (நாலடி. 114.)

"ஐயமில்லை இன்பம்அற னோடவையும் ஆக்கும்
பொய்யில்பொரு ளேபொருள்மற் றல்லபிற பொருளே"

"அப்பொருள், துன்னுங் காலைத்துன் னுதன வில்லையே."
(சீவக. 497, 1923.)

2. தீதின்றி வந்த பொருள்:

"அறத்தின் ஈட்டிய ஒண்பொருள் அறவோன்
திறத்து வழிப்படூஉம் செய்கை போல." (மணி. 17:3-4.) (754)

## 755

அருளொடும் அன்பொடும் வாராப் பொருள்ஆக்கம்
புல்லார் புரள விடல். 5

பரிமேலழகர்: அருளொடும் அன்பொடும் வாரா பொருள் ஆக்கம் - தாம் குடிகள் மாட்டுச் செய்யும் அருளொடும் அவர் தம் மாட்டுச் செய்யும் அன்பொடும் கூடி வாராத பொருள் ஈட்டத்தை, புல்லார் புரள விடல் - அரசர் பொருந்தாது கழிய விடுக.

அவற்றோடு கூடி வருதலாவது ஆறில் ஒன்றாய் வருதல். அவ்வாறு வாராத பொருளீட்டம், "பசுமட் கலத்துள்நீர்"[1] போலச் செய்தானையும் கொண்டு இறத்தலின், அதனைப் புல்லார் என்று ஒழியாது புரள விடல் என்றும் கூறினர்.

உரை வேறுபாடு

மணக்குடவர்: இது பொருள் தேடுங்கால் பிறர் வருத்தத்திற்கு உபகரியாதும், பயின்றார்மாட்டுக் காதல் இல்லாமலும் பொருள் தேடுதலைத் தவிர்க்க என்றது.

ஒப்புமை

அருளொடும் அன்பொடும் வாராப் பொருளாக்கம்:

"அருளும் அன்பும் நீக்கித் துணைதுறந்து
பொருள்வயிற் பிரிவோர் உரவோ ராயின்." (குறுந். 20:1-2.)
(755)

## 756

உறுபொருளும் உல்கு பொருளும்தன் ஒன்னார்த்
தெறுபொருளும் வேந்தன் பொருள். 6

பரிமேலழகர்: உறு பொருளும் - உடையார் இன்மையின் தானே வந்து உற்ற பொருளும், உல்கு பொருளும் - சுங்கமாகிய பொருளும், தன் ஒன்னார் தெறு பொருளும் - தன் பகைவரைத் திறையாகக் கொள்ளும் பொருளும், வேந்தன் பொருள் - அரசனுக்குரிய பொருள்கள்.

1 குறள், 660.

உறு பொருள் - வைத்தார் இறந்துபோக நெடுங்காலம் நிலத்தின்கட கிடந்து பின் கண்டெடுத்ததூஉம், தாயத்தார் பெருததூஉம் ஆம். சுங்கம், கலத்தினும் காலினும் வரும் பண்டங்கட்கு இறையாயது. தெறு பொருள் - தெறுதலான் வரும் பொருளென விரியும். ஆறில் ஒன்று ஒழியவும் உரியன கூறியவாறு.

இவை மூன்று பாட்டானும் அஃது ஈட்டும் நெறி கூறப்பட்டது.

உரை வேறுபாடு

**பரிப்பெருமாள்:** உறுபொருள் - கால்[1] அற்ற பொருள்.

**பரிதியார்:** உறுபொருள் - குடிக்கடமை.

**காளிங்கர்:** உறுபொருள் - நாடு இறுக்கும் முறைமையின் பெறும் பொருள்.

ஒப்புமை

**முற்றும்:**

"கால்கலத்தால் சேர்பொருளும் கண்ணுற்றூர் தேர்பொருளும்
நாலிரண்டால் கூடும் நலப்பொருளும்—கோல்தாங்கிக்
கோடும் அரசிற் குறியாமே தொல்புவிக்கீழ்
ஆடும் பொருளோ டணைந்து." (இன்னிலை, 17.) (756)

## 757

அருள்என்னும் அன்பீன் குழவி பொருள்என்னும்
செல்வச் செவிலியால் உண்டு. 7

**பரிமேலழகர்:** அன்பு ஈன் அருள் என்னும் குழவி - அன்பினல் ஈனப்பட்ட அருள் என்னும் குழவி, பொருள் என்னும் செல்வ செவிலியால் உண்டு- பொருள் என்று உயர்த்துச் சொல்லப்படும் செல்வத்தையுடைய செவிலி யான் வளரும்.

தொடர்பு பற்றுதே வருத்தமுற்றூர்மேற் செல்வதாய அருள், தொடர்பு பற்றிச் செல்லும் அன்பு முதிர்ந்துழி உளதாவ தாகலின், அதனை அன்பீன் குழவி என்றும், அது வறியார்மேற் செல்வது அவ்வறுமை களைய வல்லார்க்கு ஆதலின் பொருளை அதற்குச் செவிலி என்றும், அஃது உலகிற் செவிலியர் போலாது தானே எல்லாப் பொருளும் உதவி வளர்த்தலின் செல்வச் செவிலி என்றும் கூறினர்.

உரை வேறுபாடு

**மணக்குடவர்:** இது பொருளுடையார்க்கே அறம் செய்தலாவது என்பது கூறிற்று.

**பரிதியார்:** அன்பு ஈன் - அன்பு என்னும் கற்பினுள் பெற்ற.

ஒப்புமை

1. அருளும் அன்பும்:

"அருளொடும் அன்பொடும்" (குறள், 755.)

"அருளும் அன்பும் நீக்கி." (குறுந். 20:1.)

2. பொருள் என்னும் செல்வச் செவிலி:

"..................உண்ணீர்
அறியின் அருஞ்செவிலி மாண்பொருளே." (இன்னிலை, 13.) (757)

---

1. கால் - தனக்குப்பின் நுகரும் உரிமையுடையோர்.

## 758

குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்தொன்
றுண்டாகச் செய்வான் வினை. 8

**பரிமேலழகர்:** தன் கைத்து உண்டாக ஒன்று செய்வான் வினை - தன் கையதாகிய பொருள் உண்டாக ஒரு வினையை எடுத்துக் கொண்டான் அதனைச் செய்தல், குன்று ஏறி யானை போர் கண்டற்று - ஒருவன் மலை மேல் ஏறி நின்று யானைப்போரைக் கண்டால் ஒக்கும்.

ஒன்று என்பது வினையாதல் செய்வான் என்றதனால் பெற்றாம். குன்றேறியான் அச்சமும் வருத்தமும் இன்றி நிலத்திடை யானையும் யானையும் பொரு போரைத் தான் இனிது இருந்து காணுமதுபோலக் கைத்துண்டாக வினையை மேற்கொண்டானும் அச்சமும் வருத்தமும் இன்றி வல்லாரை ஏவித் தான் இனிது இருந்து முடிக்கும் என்பதாம்.

### உரை வேறுபாடு

**காளிங்கர்:** எனவே பாவமும் பகையும் தன்னை நணுகாமல் பரிகரித்து இனிது வாழும் பொருளுடையோன் என்பது பொருளாயிற்று என அறிக. 758

## 759

செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கும்
எஃகதனிற் கூரிய தில். 9

**பரிமேலழகர்:** பொருளை செய்க - தமக்கு ஒன்று உண்டாகக் கருதுவார் பொருளை உண்டாக்குக; செருநர் செருக்கு அறுக்கும் எ:கு – தம் பகைவர் தருக்கினை அறுக்கும் படைக்கலம் அதுவாம்; அதனின் கூரியது இல் - அதற்கு அது போலக் கூரிய படைக்கலம் பிறிது இல்லை.

அதுவாம், அதற்கு என்பன அவாய் நிலையான் வந்தன. பொருளைச் செய்யவே பெரும்படையும் நட்பும் உடையர் ஆவர்; ஆகவே, பகைவர் தருக்கு ஒழிந்து தாமே அடங்குவர் என்பார், 'செறுநர் செருக்கறுக்கும் எ:கு' என்றும், ஏனை எ:குகள் அது போல அருவப் பொருளை அறுக்கமாட்டாமையின், 'அதனிற் கூரியது இல்' என்றும் கூறினர்.

### உரை வேறுபாடு

**பரிதியார்:** செறுநர் செருக்கு அறுக்கும் - சத்துருக்கள் என்னும் காட்டை வெட்டுதற்கு.

**கவிராஜ பண்டிதர் :** அறுக்கும்-கொஞ்சமாக்கிப் போடும்.

### ஒப்புமை

**முற்றும்:**

''பெரிதாய பகைவென்று பேணாரைத் தெறுதலும்
..................தருமெனப்
பிரிவெண்ணிப் பொருள்வயிற் சென்றநங் காதலர்''
(கலி. 11:2-4.)

''செறுவோர் செம்மல் வாட்டலும்......
இல்லிருந் தமைவோர்க் கில்லென் றெண்ணி'' (அகநா. 231: 1-3.)

''நண்ணார்த் தெறுதலும்
தற்செய்வான் சென்றார்த் தரூஉம்'' (கார்நாற்பது, 7.)

"தெருளா தொழுகும் திறவிலா தாரைப்
பொருளா லறுத்தல் பொருளே—பொருள்கொடுப்பின்
பாணித்து நிற்கிற்பார் யாருளரே வேற்குத்திற்
காணியின் குத்தே வலிது." (பழமொழி, 32.)

"செய்கபொருள் யாரும் செறுவாரைச் செறுகிற்கும்
எஃகுபிறி தில்லை." (சீவக. 497.) (759)

### 760

ஒண்பொருள் காழ்ப்ப இயற்றியார்க் கெண்பொருள்
ஏனை இரண்டும் ஒருங்கு. 10

**பரிமேலழகர்:** ஒண் பொருள் காழ்ப்ப இயற்றியார்க்கு - நெறியான் வரும் பொருளை இறப்ப மிகப் படைத்தார்க்கு, ஏனை இரண்டும் ஒருங்கு எண் பொருள் - மற்றை அறனும் இன்பமும் ஒருங்கே எளிய பொருள்களாம்.

காழ்த்தல் - முதிர்தல். பயன் கொடுத்தல்லது போகாமையின் ஒண் பொருள் என்றும், ஏனை இரண்டும் அதன் விளைவாகலின் தாமே ஒரு காலத் திலே உளவாம் என்பார், எண்பொருள் என்றும் கூறினர்.

இவை நான்கு பாட்டானும் அதனன் வரும் பயன் கூறப்பட்டது.

**ஒப்புமை**

**முற்றும்:** குறள், 754, ஒப்புமை, 1, பார்க்க. (760)

---

## 77. படைமாட்சி

**பரிமேலழகர்:** இனி, அப்பொருளினன் ஆவதாய் வெல்வதாய படை இரண்டு அதிகாரத்தால் கூறுவான் தொடங்கி, முதற்கண் படைமாட்சி கூறு கின்றார். அஃதாவது படையினது நன்மை. அதிகார முறைமை இதனுள் விளங்கும்.

### 761

உறுப்பமைந் தூறஞ்சா வெல்படை வேந்தன்
வெறுக்கையுள் எல்லாம் தலை. 1

**பரிமேலழகர்:** உறுப்பு அமைந்து ஊறு அஞ்சா வெல் படை - யானை முதலிய நான்கு உறுப்பானும் நிறைந்து போரின்கண் ஊறுபடுதற்கு அஞ் சாது நின்று பகையை வெல்வதாய படை, வேந்தன் வெறுக்கையுள் எல்லாம் தலை - அரசன் செல்வங்கள் எல்லாவற்றுள்ளும் தலையாய செல்வம்.

ஈண்டுப் படை என்றது அந்நான்கன் தொகுதியை. ஊறு அஞ்சிய வழி வேறல் கூடாமையின் ஊறஞ்சா என்றும், ஒழிந்த அங்கங்கட்கும் அரசன் தனக்கும் காவலாகலின், வெறுக்கையுள் எல்லாந் தலை என்றும் கூறினர்.

**உரை வேறுபாடு**

**காளிங்கர்:** பாதாதி கேசமாக ஓர் ஆள் என்றதற்குத் தக உறுப்பி னல் முற்றுப் பெற்றுக் கணை கருவி முதலியவற்றன் வந்து உற்ற வடுப் பாட்டிற்கும் சிறிதும் கண்ணஞ்சாத வீரப்படை.

ஒப்புமை

**படை வேந்தனுக்குத் தலையாதல்:**

"பத்திமை சான்ற படை.........
மண்ணுளும் வேந்தர்க் குறுப்பு" (திரி. 100.)

"படையறின், மன்னர்சீர் வாடி விடும்." (நான்மணி. 42.) (761)

### 762

உலைவிடத் தூறஞ்சா வன்கண் தொலைவிடத்துத்
தொல்படைக் கல்லால் அரிது. 2

**பரிமேலழகர்:** தொலைவு இடத்து உலைவு இடத்து ஊறு அஞ்சா வன் கண் - தான் சிறியதாய வழியும் அரசற்குப் போரின்கண் உலைவு வந்தால் தன்மேல் உறுவதற்கு அஞ்சாது நின்று தாங்கும் வன்கண்மை, தொல் படைக்கு அல்லால் அரிது - அவன் முன்னோரைத் தொடங்கி வரும் படைக்கு அல்லது உளதாகாது.

இழிவு சிறப்பும்மை, விகாரத்தால் தொக்கது. மூலப் படை, கூலிப் படை, நாட்டுப்படை, காட்டுப்படை, துணைப்படை, பகைப்படை என்னும் அறு வகைப் படையுள்ளும்[1] சிறப்புடையது மூலப்படையாகலான், அதனை அரசன், "வெல்பொறியும் நாடும் விழுப்பொருளும் தண்ணடையும் - கொல்களிறும் மாவும் கொடுத்தளிக்க"[2] என்பது குறிப்பெச்சம்.

இப் படையை வடநூலார் மௌலம் என்ப.

உரை வேறுபாடு

**பரிதியார்:** அரசன் படை சாய்ந்த இடத்துத் தன் சேவனைப் பாராத வீரர் தான் சேவகனை அரசனுக்கல்லது மற்றையோர்க்கு இல்லை.

ஒப்புமை

*முற்றும்:*

"ஒற்கம் வந்துத வாம லுறுகென
விற்கொள் வெம்படை வீரரை யேவினன்"

"அழிபடை தாங்க லாற்றும் ஆடவர்."
(கம்ப. முதற்போர், 93, கும்பகலை. 163.) (762)

### 763

ஒலித்தக்கால் என்ஆம் உவரி எலிப்பகை
நாகம் உயிர்ப்பக் கெடும். 3

**பரிமேலழகர்:** எலி பகை உவரி ஒலித்தக்கால் என் ஆம் - எலியாய பகை திரண்டு கடல் போல ஒலித்தால் நாகத்திற்கு என்ன ஏதம் வரும்? நாகம் உயிர்ப்ப கெடும் - அந் நாகம் உயிர்த்த துணையானே அதுதானே கெடும்.

உவமைச் சொல் தொக்கு நின்றது. இத்தொழில் உவமத்தால் திரட்சி பெற்றும். வீரர் அல்லாதார் பலர் திரண்டு ஆர்த்தால் அதற்கு வீரன் அஞ் சான், அவன் கிளர்ந்த துணையானே அவர்தாம் கெடுவர் என்பது தோன்ற நின்றமையின், இது பிறிது மொழிதல் என்னும் அலங்காரம். வீரரல்லாதார் பலரினும் வீரன் ஒருவனை ஆள்தல் நன்று என்பதாம்.

---

1. "உறவின் மிக்கவர் பகையின் எய்த்தவர் உதவும் அப்படை குடைநிழல், செறித லத்தினில் வளர் நகர்ப்படை திரள்வ னப்படை பொருள்விலைத், தறுகண் மெய்ப்படை உறுதி யில்பொரு தமத கப்படை எனவிராய், அறுவ கைப்படை களும்வ குத்தன அணிகள் உட்கின பணிகளே." (வி. பா. அணிவகுப்பு. 12.)

2. பு. வெ. 128.

இவை மூன்று பாட்டானும் முறையே அரசனுக்குப் படை ஏனை அங்கங்களுள் சிறந்தது என்பதூஉம், அதுதன்னுள்ளும் மூலப்படை சிறந்தது என்பதூஉம், அதுதன்னுள்ளும் வீரன் சிறந்தான் என்பதூஉம் கூறப்பட்டன.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** இது படை மிகுத்தது வெல்லும் என்று கருதாது வீரரைத் தெளிந்து ஆளல் வேண்டும் என்றது.

### ஒப்புமை

1. **வீரர் அல்லாதார் பலர் திரண்டு ஆர்த்தால் அதற்கு வீரன் அஞ்சாமை:**

"வம்ப மள்ளரோ பலரே
எஞ்சுவர் கொல்லோ"

"பலம்என் றிகழ்தல் ஓம்புமின்" (புறநா. 79:5-6, 301·11.)

"மறுமனத்த னல்லாத மாநலத்த வேந்தன்
உறுமனத்த னாகி ஒழுகின் - செறுமனத்தார்
பாயிரங் கூறிப் படைதொக்கால் என்செய்ப
ஆயிரங் காக்கைக்கோர் கல்." (பழமொழி, 165.)

2. **எலியும் நாகமும்:**

"பைவிரி நாகத் தைவாய்ப் பிறந்த
ஒலிப்புயிர் பெற்ற எலிக்கணம் போல
ஒழிந்தோர் ஒழிய" (பெருங். 1.56: 273-5.)

"எலியெலாம் இப்படை அரவம் யானென
ஒலியுலாம் சேனையை உவந்து கூயினான்"

"அரவின் நாமத்தை எலிஇருந் தோதினா லதற்கு
விரவும் நன்மையென்"

"புற்றி னின்றுவல் லரவினம் புறப்படப் பொருமி
இற்ற தெம்வலி யெனவிரைந் திரிதருமெலி."
(கம்ப. குகப். 10, இரணியன். 50, மூலபல. 27.) (763)

## 764

அழிவின் றறைபோகா தாகி வழிவந்த
வன்க ணதுவே படை. 4

**பரிமேலழகர்:** அழிவு இன்று - போரின்கட் கெடுதலின்றி, அறைபோகாது ஆகி - பகைவரால் கீழறுக்கப்படாததாய், வழிவந்த வன்கணதுவே படை - தொன்று தொட்டு வந்த தறுகண்மையை உடையதே அரசனுக்குப் படையாவது.

அழிவின்மையான் மறமானங்கள் உடைமையும், அறைபோகாமையான் அரசன்மாட்டு அன்புடைமையும் பெறப்பட்டன. வழிவந்த வன்கண்மை: "கன்னின்ற னெந்தை கணவன் களப்பட்டான், முன்னின்று மொய்யவிந்தார் என்னையர் - பின்னின்று, கைபோய்க் கணையுதைப்பக் காவலன் மேலோடி, எய்போற் கிடந்தானென் ஏறு"[1] என்பதனான் அறிக. குற்றியலுகரத்தின் முன்னர் உடம்படு மெய் விகாரத்தான் வந்தது.[2] இது வருகின்ற பாட்டுள்ளும் ஒக்கும்.

1. பு. வெ. 176.
2. வன்கணதுவே என்பதைக் கருதியது.

உரை வேறுபாடு

**மணக்குடவர்:** வழி வருதல் - வீரன் மகன் வீரன் ஆகுதல். (764)

## 765

கூற்றுடன்று மேல்வரினும் கூடி எதிர்நிற்கும்
ஆற்ற லதுவே படை. 5

**பரிமேலழகர்:** கூற்று உடன்று மேல் வரினும் - கூற்றுவன் தானே வெகுண்டு மேல் வந்தாலும், கூடி எதிர் நிற்கும் ஆற்றலதுவே படை - நெஞ்சு ஒத்து எதிர் நின்று தாங்கும் ஆற்றலை உடையதே படையாவது.

"மருந்தில் கூற்"[1]றாகலின் உம்மை சிறப்பும்மை. மிகப் பலர் நெஞ்சு ஒத்தற்குக் காரணம் அரசன்மேல் அன்பு. ஆற்றல் - மனவலி.

உரை வேறுபாடு

**மணக்குடவர்:** கூடி - சிதறுதலின்றி.

ஒப்புமை

**கூற்றுக்கும் அஞ்சா ஆற்றல்:**

"கூற்றுவெகுண்டு வரினும் மாற்றுமாற் றலையே" (பதிற். 14:10.)
"கூற்றம் வரினும் தொலையான்" (கலி. 43:10.)
"அருநவை நமனு மாற்றான்" (சீவக. 1114.)
"மறலியஞ் சுறுவிறலர்"
"கூற்றுவன் தன்னொடிவ் வுலகம் கூடிவந்
தேற்றன வென்னினும் வெல்ல வேற்றுள
மாற்றவன் தம்பி"
"கூற்றையும் கட்பொறி குறுகக் காண்பரேல்
ஊற்றுறு குருதியோ டுயிரும் உண்பரால்"
"கூற்றம் உன்னெதிர் வந்துயிர் கொள்வதோர்
ஊற்றம் தானுடைத் தன்று"
"கூற்றின்வாய் உற்றால் வீரங் குறைவரே இறைமை கொண்டார்"
"கூற்றும் இவருடன் பகைக்க வற்றே."

(கம்ப. மராமரப். 10, விபீடணன். 68, இலங்கை கேள்வி. 22, இராவணன் சோகப். 22, மூலபல. 46, 51.) (765)

## 766

மறம்மானம் மாண்ட வழிச்செலவு தேற்றம்
எனநான்கே ஏமம் படைக்கு. 6

**பரிமேலழகர்:** மறம் மானம் மாண்ட வழி செலவு தேற்றம் என நான்கே - தறுகண்மையும் மானமும் முன் வீரர் ஆயினார் சென்ற நன்னெறிக் கண் சேறலும் அரசனால் தேறப்படுதலும் என இந் நான்கு குணமுமே, படைக்கு ஏமம் - படைக்கு அரணாவது.

இவற்றான் முறையே பகைவரைக் கடிதிற் கொன்று நிற்றலும், அரசனுக்குத் தாழ்வு வாராமல் காத்தலும், "அழியுநர் புறக்கொடை அயில்வாள்[2]

1. "மருந்தில் கூற்றம்." (புறநா. 3: 12.)
2. பு. வெ. 55.

ஒச்சா" மை முதலியவும், அறை போகாமையுமாகிய செய்கைகள் பெறப் பட்டன. இச் செய்கையார்க்குப் பகைவர் கணுகாராகலின், வேறு அரண் வேண்டா என்பதாம்.

உரை வேறுபாடு

**காலிங்கர்:** தன் நெஞ்சிற்கு இயல்பாயது ஓர் மறமும், சேவகத் தாழ்ச்சிக்கு மாளிப்பது ஓர் வாசிப்பாடும், மாட்சிமைப்பட்ட வழிச்செலவு என்னும் அரசர்க்கு ஏவல்வழிப் பிழையாது செல்லலும், எதிர்கண்ட விடத்துத் தடுத்து ஏறி நிற்கும் திறமையும் என்னும் இந்நான்குமே படைக் குச் சேம உறுதிப்பாடு. (766)

767

தார்தாங்கிச் செல்வது தானை தலைவந்த
போர்தாங்கும் தன்மை அறிந்து. 7

**பரிமேலழகர்:** தலைவந்த போர் தாங்கும் தன்மை அறிந்து-மாற்றரால் வகுக்கப்பட்டுத் தன்மேல் வந்த படையின் போரை விலக்கும் வகுப்பு அறிந்து வகுத்துக்கொண்டு, தார் தாங்கி செல்வது தானை-அவர் தூசியைத்[1] தன்மேல் வாராமல் தடுத்துத் தான் அதன்மேல் செல்வதே படையாவது.

படை வகுப்பாவது வியூகம்; அது எழுவகை உறுப்பிற்றாய்,[2] வகையான் நான்காய், விரியான் முப்பதாம். உறுப்பு ஏழாவன: உரம் முதற் கோடி ஈறு யின. வகை நான்காவன: தண்டம், மண்டலம், அசங்கதம், போகம்[3] என இவை. விரி முப்பதாவன: தண்ட விரி பதினேழும்,[4] மண்டல விரி இரண்டும்,[5] அசங்கத விரி[6] ஆறும், போக விரி[7] ஐந்தும் என இவை. இவற்றின் பெயர் களும் இலக்கணமும் ஈண்டு உரைப்பிற் பெருகும்; அவை எல்லாம் வடநூல் களுள் கண்டு கொள்க.

இவை நான்கு பாட்டானும் படையினது இலக்கணம் கூறப்பட்டது.

உரை வேறுபாடு

**மணக்குடவர்:** இது முந்திச் செல்ல வேண்டும் என்பதூஉம், செல்லுங்கால் இடம் அறிந்து செல்ல வேண்டும் என்பதூஉம் கூறிற்று.

**பரிதியார்:** வெட்சி முதலான எட்டு வகை மாலை சூடிப் போர் செய் வது மாற்றானைக் கண்ட படை. (767)

---

1. தூசி - முன்னால் நிற்கும் படை.

2. உறுப்பு ஏழாவன: மார்பு, இரண்டு பக்கங்கள், நடுப் பகுதி, அதற்குப் பின் உள்ளது, பின்படை, கோடி என்பன.

3. தண்டம் - சேனையைக் குறுக்காக நிறுத்துவது; மண்டலம் - பாம்பு சூழ் வதுபோல வட்டமாகப் படையை நிறுத்துவது; அசங்கதம் - படையை வேறு வேறாக நிறுத்துவது; போகம் - நால்வகைப் படைகளையும் ஒன்றன்பின் ஒன்றாக வகுத்த மைத்தல்.

4. தண்டவிரி பதினேழு: பிரதரம், திருடகம், சியாவஸ்தம், குக்ஷி, பிரதிட் டம், சுப்பிரதிட்டம், சியேநம், விஜயம், சஞ்சயம், விசாலம், கிஜயம், சூசீ, ஸ்தூணா, கர்ணம், சமூமுகம், ரதாஸ்யம், வலயம்.

5. மண்டல விரி இரண்டு: சர்வதோபத்ரம், துர்ஜயம்.

6. அசங்கத விரி ஆறு: அர்த்த சந்திரம், உத்தானம், சிருங்காடம், கர்க் கடக சிருங்காரி, காகபாரி, கோதிகா.

7. போக விரி ஐந்து: கோமூத்திரிகை, கிம்சகம், சஞ்சாரி, சகடம், பந்தம்.

## 768

அடல்தகையும் ஆற்றலும் இல்எனினும் தானை
படைத்தகையால் பாடு பெறும். 8

பரிமேலழகர்: தானை - தானை, அடல் தகையும் ஆற்றலும் இல் எனினும் - பகைமேல் தான் சென்று அடும் தறுகண்மையும் அது தன்மேல் வந்தால் பொறுக்கும் ஆற்றலும் இல்லை ஆயினும், படை தகையால் பாடு பெறும் - தன் தோற்றப் பொலிவானே பெருமை எய்தும்.

இல்லெனினும் எனவே, அவற்றது இன்றியமையாமை பெறப் பட்டது. படைத்தகை என்றது ஒருபெயர் மாத்திரமாய் நின்றது. தோற்றப் பொலிவாவது அலங்கரிக்கப்பட்ட தேர் யானை குதிரைகளுடனும், பதாகை கொடி குடை பல்லியம் காகளம் முதலியவற்றுடனும் அணிந்து தோன்றும் அழகு. பாடு-கண்ட அளவிலே பகைவர் அஞ்சும் பெருமை.

### உரை வேறுபாடு

பரிதியார்: வெற்றிப்பாடும் சத்துவமும் இல்லாதபோதும் அரசன் போற்றுதலாலே சிறப்புப் பெறும். (768)

## 769

சிறுமையும் செல்லாத் துனியும் வறுமையும்
இல்ஆயின் வெல்லும் படை. 9

பரிமேலழகர்: சிறுமையும் செல்லா துனியும் வறுமையும் இல் ஆயின் - தான் தேய்ந்து சிறிதாகலும் மனத்தினின்று நீங்காத வெறுப்பும் நல்குரவும் தனக்கு இல்லை ஆயின், படை வெல்லும் - படை பகையை வெல்லும்.

விட்டுப்போதலும், நின்றது நல்கூர்தலும் அரசன் பொருள் கொடா மையான் வருவன. செல்லாத் துனியாவது மகளிரை வெளவல், இளிவர வாயின செய்தல் முதலியவற்றான் வருவது. இவை உள்வழி அவன்மாட்டு அன்பு இன்றி உற்றுப் பொராமையின், இல்லாயின் வெல்லும் என்றார்.

### உரை வேறுபாடு

பரிப்பெருமாள்: சிறுமை உறுதலாவது இழிந்தார் பெற்ற சிறப்பு உயர்ந்தார் பெறுமை. போகாத் துன்பமாவது பெண்டிரைக் கைக்கொள்ளு தலும் இளிவரவு செய்தலும் போல்வன. வறுமையாவது கொடாமை. இது படைக்கு அரசன் செய்யும் திறன் கூறிற்று. (769)

## 770

நிலைமக்கள் சால உடைத்தெனினும் தானை
தலைமக்கள் இல்வழி இல். 10

பரிமேலழகர்: நிலை மக்கள் சால உடைத்து எனினும் - போரின்கண் நிலையுடைய வீரரை மிக உடைத்தே ஆயினும், தலைமக்கள் இல்வழி தானை இல் - தனக்குத் தலைவராகிய வீரர் இல்லாத வழித் தானை நில்லாது.

படைத்தலைவர் நிலையுடையரன்றிப் போவாராயின், காண்போர் இல் லெனப் பொராது தானும் போம் என்பார், தலை மக்கள் இல்வழி என்றார்.

இவை மூன்று பாட்டானும் முறையே படைத்தகை இன்மையானும், அரசன் கொடைத் தாழ்வுகளானும், தலைவர் இன்மையானும் தாழ்வு கூறப் பட்டது. (770)

---

# 78. படைச்செருக்கு

**பரிமேலழகர்:** அஃதாவது, அப்படையது மறமிகுதி. அதிகார முறைமையும் இதனுனே விளங்கும்.

**பரிதியார்:** படைச் செருக்காவது, படையின் வெற்றிப்பாடு கூறுதல்.

### 771

என்ஊே முன் நில்லன்மின் தெவ்விர் பலர்என்ஊே
முன்நின்று கல்நின்ற வர். 1

**பரிமேலழகர்:** தெவ்விர் என் ஐ முன் நின்று கல் நின்றவர் பலர் - பகைவீர், இன்றினூங்கு என் தலைவனெதிர் போர் ஏற்று நின்று அவன் வேல்வாய் வீழ்ந்து பின் கல்லின்கண்ணே நின்ற வீரர் பலர்; என் ஐ முன் நில்லன்மின் - நீவிர் அதன்கண் இன்றி நும் உடற்கண் நிற்றல் வேண்டின், என் தலைவனெதிர் போர் ஏற்று நிற்றலை ஒழிமின்.

என்னை எனத் தன்னெடு தொடர்பு படுத்துக் கூறினமையின், அவன் வேல்வாய் வீழ்தல் பெற்றும். கல் - நடுகல். "நம்பன் சிலைவாய் நடக்குங்கணை மிச்சி லல்லால், அம்பொன் முடிப்பூண் அரசும்மிலை"[1] எனப் பதுமுகன் கூறினற்போல, ஒரு வீரன் தன் மறம் அரசன்மேல் வைத்துக் கூறியவாறு.

இப் பாட்டு நெடுமொழி வஞ்சி.[2]

#### உரை வேறுபாடு

**காளிங்கர்:** வறிதே என்முன் வந்து நில்லன்மின்.

#### மேற்கோள் விளக்கம்

அரும்பகை தாங்கும் ஆற்றலுக்கு மேற்கோள். (**தொல்.** புறத். 17, **இளம்.**)

என்னை என்னும் முறைப் பெயர் அகத்திற்கேயன்றிப் புறத்திற்கும் வரும். (**தொல்.** பொருள். 50, **இளம்.**)

#### ஒப்புமை

1. **என்னை முன் நில்லன்மின் தெவ்விர்:**

"களம்புகல் ஓம்புமின் தெவ்விர்." (புறநா. 87:1.)

2. **முற்றும்**

"போற்றுமின் மறவீர் சாற்றுதும் நும்மை
ஊர்க்குறு மாக்கள் ஆடக் கலங்கும்
தாட்படு சின்னீர்க் களிறட்டு வீழ்க்கும்
ஈர்ப்புடைக் கராஅத் தன்ன வென்னை" (புறநா. 104:1-4.)

"யாரே னுந்தா னுகுக யானென் தனியாண்மை
பேரேன் நின்றே வென்றி முடிப்பென் புகழ்பெற்றேன்
நேரே செல்லும் கொல்லுமெ னிற்ரு னிமிர்வென்றி
வேரே நிற்கும் மீள்கிலன் என்ன விடலுற்ருன்."
(கம்ப. இராவணன் வதை. 136.) (771.)

---

1. சீவக. 809.
2. பகைவருடைய படையை அணுகித் தன் ஆண்மைத் தன்மையை உயர்த்திச் சொல்லுவது. (பு. வெ. 47.)

## 772

கான முயல்எய்த அம்பினில் யானை
பிழைத்தவேல் ஏந்தல் இனிது. 2

**பரிமேலழகர்:** கான முயல் எய்த அம்பினில் - கானத்தின்கண் ஓடும் முயலைப் பிழையாமல் எய்த அம்பை ஏந்தலினும், யானை பிழைத்த வேல் ஏந்தல் இனிது - வெள்ளிடை நின்ற யானையை எறிந்து பிழைத்த வேலை ஏந்துதல் நன்று.

கானமுயல் என்றதனுன் வெள்ளிடை நின்ற என்பதும், பிழைத்த என்றதனுன் பிழையாமல் என்பதும், முயற்குத் தக எய்த என்றதனுன் யானைக்குத் தக எறிதலும் வருவிக்கப் பட்டன.

இது மாற்றரசன் படையொடு பொருதான் ஓர் வீரன், அது புறங் கொடுத்ததாக நாணிப் பின் அவன்றன்மேல் செல்லலுற்றுனது கூற்று.

### உரை வேறுபாடு

**கவிராஜ பண்டிதர்:** முயலை எய்கிறதிலும் யானை முன்னே நிற்றல் அரிது என்பதாம்.

### ஒப்புமை

**முற்றும்:**

"நரிமா உளம்கிழித்த அம்பினில் தீதோ
அரிமாப் பிழைப்பெய்த கோல்." (நாலடி. 152.) (772)

## 773

பேராண்மை என்ப தறுகண்ஒன் றுற்றக்கால்
ஊராண்மை மற்றதன் எஃகு. 3

**பரிமேலழகர்:** தறுகண் பேர் ஆண்மை என்ப-பகைவர்மேல் கண்ணோடாது செய்யும் மறத்தை நூலோர் மிக்க ஆண்தன்மை என்று சொல்லுவர்; ஒன்று உற்றக்கால் ஊராண்மை அதன் எ.்கு (என்ப) - அவர்க்கு ஒரு தாழ்வு வந்ததாயின் கண்ணோடி அது தீர்த்துக்கோடற்பொருட்டு ஊராண்மை செய்தலை நூலோர் அதற்குக் கூர்மை என்று சொல்லுவர்.

என்ப என்பது பின்னும் இயைந்தது. ஊராண்மை - உபகாரியாம் தன்மை, அ.்தாவது இலங்கையர் வேந்தன் போரிடைத் தன் தானை முழுதும் படத் தமியனாய் அகப்பட்டானது நிலைமை நோக்கி, அயோத்தியர் இறை மேற்செல்லாது, "இன்றுபோய் நாளை நின் தானையோடு வா"[1] என விட்டால் போல்வது.

இவை இரண்டு பாட்டும் தழிஞ்சி.[2]

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** ஒன்று உற்றக்கால் அஞ்சாமையை ஒருவனுக்குப் பெரிய ஆண்மை என்று சொல்லுவர். உலகியல் அறிந்து செய்தலை அவ்வாண்மைக்குப் படைக்கலம் என்று சொல்லுவர்.

1. "ஆளை யாஉனக் கமைந்தன மாருதம் அறைந்த, பூளை ஆயின கண்டனை இன்றுபோய்ப் போர்க்கு, நாளை வாஎன நல்கினன் நாகிளங் கமுகின், வாளை தாவுறு கோசல நாடுடை வள்ளல்." (கம்ப. முதற்போர். 256.)

2. தோற்று ஓடுவார் முதுகுப்புறத்துப் படை ஏவாத மறப்பண்பு. (பு. வெ. 55.)

ஒப்புமை

முற்றும்:

"தெற்றப் பகைவர் இடர்ப்பாடு கண்டக்கால்
மற்றுங்கண் ணோடுவர் மேன்மக்கள்—தெற்ற
நவைக்கப் படுந்தன்மைத் தாயினும் சான்றோர்
அவைப்படிற் சாவாது பாம்பு." (பழமொழி, 313.)

"படைது றந்து மயங்கிய பண்பினான்
இடைதெ றும்படி பார்த்திகல் நீதியின்
நடைது றந்துயிர் கோடலும் நன்மையோ
கடைது றந்தது போரென் கருத்தென்றான்"

(கம்ப. இராவணன்வதை. 175.) (773)

## 774

கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும். 4

**பரிமேலழகர்** : கை வேல் களிற்றொடு போக்கி வருபவன் - தன் கைப் படையாய வேலைத் தன்மேல் வந்த களிற்றொடு போக்கி வருகின்ற களிற்றுக்கு வேல் நாடித் திரிவான், மெய் வேல் பறியா நகும் - தன் மார்பின்கண் நின்ற வேலைக் கண்டு பறித்து மகிழும்.

களிற்றொடு போக்கல் - களிற்றினது உயிரைக் கொடுபோமாறு விடுதல். மகிழ்ச்சி, தேடியது எய்தலான். இதனுள் களிற்றை அல்லது எறியான் என்பதூஉம், சினமிகுதியான் வேல் இடை போந்தது அறிந்திலன் என்பதூஉம், பின்னும் போர்மேல் விருப்பினன் என்பதூஉம் பெறப்பட்டன.

நூழிலாட்டு.[1]

### உரை வேறுபாடு

**காளிங்கர்:** நகும் என்றது வெறுங்கையாளனை எறிந்தவன் என்ன வீரனோ என்று ஒரு நகையும், வெறுங்கைக்கு அம்மா ஒரு வேல் வந்தது என்று ஒரு நகையும் என அறிக.

### மேற்கோள் விளக்கம்

தானைநிலை என்னும் துறை வந்தது. (தொல். பொருள். 72, இளம்.)

'கய் வேல்' என்று பாடம் கொண்டு, 'செய்யுட்கண் தொடை நோக்கி ஐகாரம் நின்ற நிலைக்களத்துப் போலி வந்தவாறு காண்க' என்பர் **சங்கர நமச்சிவாயர்.** (நன். 125.)

### ஒப்புமை

**1. கைவேல் களிற்றொடு போக்குதல்:**

"களிறெறிந்து முரிந்த கதுவாய் எஃகு" (பதிற். 45: 4.)

"பெருந்தகை மறவன்
மேல்வருங் களிற்றொடு வேல்துரந் தினியே
தன்னும் துரக்குவன் போலும்" (புறநா. 274:2-4.)

1. களத்தில் பகைவர் சேனைகெடத் தன் மார்பில் பாய்ந்த வேலைப் பறித்து எறிதல். (பு. வெ. 142.)

2. மெய்வேல் பறித்து நகுதல்:

"அகலத்து...அழுத்திய சத்தி வாங்கி...திருத்தி" (பெருங். 3. 20: 62-5.)

"புண்ணிடங் கொண்ட எஃகம் பறித்தலின்"
"நெஞ்சகம் நுழைந்த வேலைப் பறித்து...
மிறைக்கொளி" (சீவக. 284, 2293.)

"மொய்யகத்து மன்னர் முரண் இனி என்னுங்கொல்
கையகத்துக் கொண்டான் கழல்விடலை—வெய்ய
விடுசுடர் சிந்தி விரையகலம் போழ்ந்த
படுசுடர் எஃகம் பறித்து." (பு. வெ. 142.) (774)

### 775

விழித்தகண் வேல்கொண் டெறிய அழித்திமைப்பின்
ஓட்டன்றோ வன்க ணவர்க்கு. 5

**பரிமேலழகர்:** விழித்த கண் - பகைவரை வெகுண்டு நோக்கிய கண், வேல் கொண்டு எறிய அழித்து இமைப்பின் - அவர் வேலைக் கொண்டு எறிய அஃது ஆற்றாது அந் நோக்கை அழித்து இமைக்குமாயின், வன்கணவர்க்கு ஒட்டு அன்றோ - அது வீரர்க்குப் புறங்கொடுத்தலாம்.

அவ் வெகுளிநோக்கம் மீட்டலும் போரின்கண் மீட்சி எனக் கருதி அதுவும் செய்யார் என்பதாம்.

#### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** மாற்றாரோடு எதிர்த்துச் சிவந்து நோக்கின கண்ணிலே ஒரு வேலினாலே எறிய, அதற்கு மீண்டும் இமைப்பாராயின், அஃது அஞ்சாதார்க்குக் கெட்டதனோடு ஒக்கும்.

**கவிராஜ பண்டிதர்:** ஓட்டு - தோல்வி.

#### ஒப்புமை

இமைத்தலும் தோல்வியாதல்:

"எடுத்தெறி ஞாட்பின் இமையான்" (புறநா. 290:4.)

"வேலும் கணையமும் வீழினும் இமையார்
வீரியத் தறுகணர்"
"இகலிடை இமையா எரிமலர்த் தடங்கண்"
(பெருங். 1.46:17-8, 4.5:60.)

"வீரர்எறி வெம்படைகள் வீழஇமை யானுய்"
"ஏந்தல்தன் கண்கள் வெய்ய இமைத்திட எறித லோம்பி
நாந்தக உழவன் நாணி நக்குநீ அஞ்சல் கண்டாய்."
(சீவக. 288, 2258.) (775)

### 776

விழுப்புண் படாதநாள் எல்லாம் வழுக்கினுள்
வைக்குந்தன் நாளை எடுத்து. 6

**பரிமேலழகர்:** தன் நாளை எடுத்து - தனக்குச் சென்ற நாள்களை எடுத்து எண்ணி, விழு புண் படாத நாள் எல்லாம் வழுக்கினுள் வைக்கும்-அவற்

றுள் விழுப்புண் படாத நாள்களை எல்லாம் பயன்படாது கழிந்த நாளுள்ளே வைக்கும் வீரன்.

விழு புண் - முகத்தினும் மார்பினும் பட்ட புண். போர் பெற்றிருக்கவும் அது பெறாத நாள்களோடும் கூட்டும் என்பதாம்.

இவை மூன்று பாட்டானும் ஊறு அஞ்சாமை கூறப்பட்டது.

**உரை வேறுபாடு**

**பரிதியார்:** விழுப்புண் - புதுமைப்புண்.

**ஒப்புமை**

**விழுப்புண்:**

"ஒளிறுவாள் விழுப்புண் காணிய" (நெடுநல். 172.)

"பெருந்தகை விழுப்புண் பட்ட மாறே"

"இரும்புசுவைக் கொண்ட விழுப்புண்"

"போரடு தானை எவ்வி மார்பின்
எஃகுறு விழுப்புண் பலவென."

(புறநா. 93:15, 180:4, 233:6-7.) (776)

### 777

சுழலும் இசைவேண்டி வேண்டா உயிரார்
கழல்யாப்புக் காரிகை நீர்த்து. 7

**பரிமேலழகர்:** சுழலும் இசை வேண்டி வேண்டா உயிரார் - துறக்கத்துத் தம்மொடு செல்லாது வையத்தைச் சூழ்ந்து நிற்கும் புகழை வேண்டி உயிர் வாழ்தலை வேண்டாத வீரர், கழல் யாப்பு காரிகை நீர்த்து - கழல் கட்டுதல் அலங்கார நீர்மையை உடைத்து.

வையத்தைச் சூழுமெனவே, அதன் பெருமை பெற்றும். செயப்படுபொருள் வருவிக்கப்பட்டது.[1] சூழ்தல் - அகத்திடல். துறக்கமும் புகழும் எளிதின் எய்துவர் ஆகலின், ஆபரணமாவது அதுவே என்பதாம்.

**உரை வேறுபாடு**

**பரிதியார்:** கழல்யாப்பு காரிகை நீர்த்து - கட்டின வீரகடகம் அழகு பெறும்.

**காளிங்கர்:** காரிகை நீர்த்து - ஆண்மைக் கட்டளைப்பாடு உடைத்து. (777)

### 778

உறின்உயிர் அஞ்சா மறவர் இறைவன்
செறினும்சீர் குன்றல் இலர். 8

**பரிமேலழகர்:** உறின் உயிர் அஞ்சா மறவர் - போர் பெறின் தம் உயிர்ப்பொருட்டு அஞ்சாது அதன்மேல் செல்லும் வீரர், இறைவன் செறினும் சீர் குன்றல் இலர் - தம் இறைவன் அது வேண்டா என்று முனியினும் அவ் வீரமிகுதி குன்றார்.

1. வையத்தை என்ற செயப்படுபொருள்.

போர் பெற்று அறியாமையின், அது பெற்றால் அரசன் தடுப்பினும் நில்லார் என்பதாம். பிறரும், "போரெனிற் புகலும் புனைகழல் மறவர்"[1] என்றும், "புட்பகைக், கேவா னாகலிற் சாவேம் யாமென, நீங்கா மறவர் வீங்கு தோள் புடைப்ப"[2] என்றும் கூறினர்.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** இறைவன் செறினும் - தம் அரசனால் செறுக்கப் பட்டாராயினும்.

**பரிதியார்:** அரசர்க்கு ஒரு தறுவாயான இடத்திலே தன்னை உதாரம் பண்ணும் சுத்த வீரனை அரசன் வெறுத்தாலும் தன் சேவகம் குன்றான்.

### ஒப்புமை

**வீரர்கள் போரை விரும்பியிருத்தல்:**

"மண்டமர் நசையொடு கண்படை பெறாது" (முல்லை. 67.)

"பொதுவிற் றூங்கும் விசியுறு தண்ணுமை
வளிபொரு தெண்கண் கேட்பின்
அதுபோர் என்னும் என்னையும் உளனே." (புறநா. 89:7-9.)

(778)

## 779

இழைத்த திகவாமைச் சாவாரை யாரே
பிழைத்த தொறுக்கிற் பவர். 9

**பரிமேலழகர்:** இழைத்தது இகவாமை சாவாரை - தாம் கூறின வஞ்சினம் தப்பாமற்பொருட்டுச் சென்று சாவ வல்ல வீரரை, பிழைத்தது ஒறுக்கிற்பவர் யார் - அது தப்பியவாறு சொல்லி எள்ளுதற்கு உரியார் யாவர்?

இழைத்தல் - இன்னது செய்யேனாயின் இன்னன் ஆகுக எனத் தான் வகுத்தல். சொல்லி என்பது அவாய் நிலையான் வந்தது. வஞ்சினம் முடிப்பான் புக்கு முன்னே சாவினும் தொலைவன்மையின், அது முடித்தாராவர் எனச் சாதற் சிறப்புக் கூறியவாறு.

### மேற்கோள் விளக்கம்

தொல்லுயிர் வழங்கிய அவிப்பலிக்கு இதனை மேற்கோள் காட்டுவர் **இளம்பூரணர்.** (தொல். புறத். 17.)

### ஒப்புமை

**இழைத்த திகவாமைச் சாவார்:**

"இழைத்த திறவா தவரை." (பழமொழி. 176.) (779)

## 780

புரந்தார்கண் நீர்மல்கச் சாகிற்பின் சாக்கா
டிரந்துகோள் தக்க துடைத்து. 10

**பரிமேலழகர்:** புரந்தார் கண் நீர் மல்க சாகிற்பின் - தமக்குச் செய்த நன்றிகளை நினைந்து ஆண்ட அரசர் கண்கள் நீர் மல்கும் வகை போரிடைச் சாவப் பெறின், சாக்காடு இரந்து கோள் தக்கது உடைத்து - அச் சாக்காடு இரந்தாயினும் கொள்ளும் தகுதியை உடைத்து.

---

1. புறநா. 31:9. 2. புறநா. 68:11-3.

மல்குதலாகிய இடத்து நிகழ்பொருளின் தொழில் இடத்தின்மேல் நின்றது. இனி அழ இல்லிடை நோயால் விளிவார் பழவினைப் பயனே எய்த லின், அடுத்த வினையால் துறக்கம் எய்தும் சாதலை இறந்துகோள்தக்க துடைத்து என்றார்.

இவை நான்கு பாட்டானும் உயிர் ஓம்பாமை கூறப்பட்டது.

**உரை வேறுபாடு**

**மணக்குடவர்:** ஆண்டவனுக்குக் கேடுவரின் படவேண்டும் என்றது.

**பரிதியார்:** அரசன் கண்ணீர் மல்கச் சாகிற சாக்காடு தரவேணும் என்று தெய்வ சந்நிதியிலே வேண்டிக்கொள்வான்.

**ஒப்புமை**

*முற்றும்:*

"நீர்க்கோல வாழ்வை நச்சி நெடிதுநாள் வளர்த்துப் பின்னைப்
போர்க்கோலம் செய்து விட்டாற் குயிர்கொடா தங்குப் போகேன்"
"ஒருத்தரின் முன்னம் சாதல் உண்டவர்க் குரிய தம்மா."
(கம்ப. கும்பகர்ணன். 154, 156.) (780)

# 79. நட்பு

**பரிமேலழகர்:** இனி, அப் படைபோல அரசனுக்கு வினையிடத்து உதவுவதாய நட்பினை ஐந்து அதிகாரம் விதிமுகத்தானும் பன்னிரண்டு அதி காரம் எதிர்மறை முகத்தானும் கூறுவான் தொடங்கி, விதிமுக அதிகாரம் ஐந்தனுள்ளும் முதற்கண் நட்புக் கூறுகின்றார். அஃதாவது இன்னது என்ப தூஉம் அதிகார முறைமையும் இதனுள் விளங்கும்.

**781**

**செயற்கரிய யாஉள நட்பின் அதுபோல்**
**வினைக்கரிய யாஉள காப்பு.** 1

**பரிமேலழகர்:** நட்பின் செயற்கு அரிய யா உள - நட்புப் போலச் செய்து கோடற்கு அரிய பொருள்கள் யாவை உள? அதுபோல் வினைக்கு அரிய காப்பு யா உள - செய்துகொண்டால் அதுபோலப் பகைவர் செய்யும் வினைக்குப் புகற்கு அரிய காவலாவன யாவை உள?

நட்புச் செய்தற்கு ஆவாரைப் பெறுதலும், பெற்றால் செய்யும் உபாய மும், செய்தால் திரிபின்றி நிற்றலும் முதலிய அரியவாகலின் நட்பிற் செயற்கு அரியன இல்லை என்றும், செய்தால் பகைவர் அஞ்சி வினை தொடங்காராதலின், அதுபோல் வினை வாராமைக்கு அரிய காவல் இல்லை என்றும் கூறினர். நட்புத்தான் இயற்கை செயற்கை என இருவகைப்படும். அவற்றுள், இயற்கை பிறப்பு முறையான் ஆயதூஉம் தேய முறையான் ஆயதூஉம் என இருவகைப்படும். அவற்றுள் முன்னையது சுற்றமாகலின், அது சுற்றந் தழாலின் அடங்கிற்று, ஏனையது பகையிடையிட்ட தேயத்ததாக லின், அது துணை வலி என வலி அறிதலுள் அடங்கிற்று. இனி, ஈண்டுச் சொல்லப்படுவது முன் செய்த உதவிபற்றி வரும் செயற்கையே ஆகலின், அதன் சிறப்பு இதனால் கூறப்பட்டது.

உரை வேறுபாடு

**மணக்குடவர்:** வினைக்கு - பிற நல்வினை செய்தற்கு. (781)

## 782

நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்
பின்நீர பேதையார் நட்பு. 2

**பரிமேலழகர்:** நீரவர் கேண்மை பிறை நிறை நீர - அறிவுடையார் நட்புக்கள் பிறை நிறையும் தன்மைபோல நாள்தோறும் நிறையும் தன்மைய வாம்; பேதையார் நட்பு மதி பின் நீர - மற்றைப் பேதைமை உடையார் நட்புக்கள் நிறைந்த மதி பின் குறையும் தன்மை போல நாள்தோறும் குறையும் தன்மையவாம்.

நீரவர் என்றார் இனிமைபற்றி. கேண்மை, நட்பு என்பன ஒரு பொருட்கிளவி. செய்தாரது பன்மையான் நட்பும் பல ஆயின. அறிவுடையாரும் அறிவுடையாரும் செய்தன முன் சுருங்கிப் பின் பெருகற்கும் பேதையாரும் பேதையாரும் செய்தன முன் பெருகிப் பின் சுருங்கற்கும் காரணம் தம்முள் முன் அறியாமையும் பின் அறிதலுமாம்.

ஒப்புமை

1. பெருகுதலுக்குப் பிறை உவமை:

"குடமுதல் தோன்றிய தொன்றுதொழு பிறையின்
வழிவழிச் சிறக்கநின் வலம்படு கொற்றம்"
(மதுரைக். 193-4.)

"வளர்பிறை போல வழிவழிப் பெருகி" (குறுந். 289:1.)

"ஆநாள் நிறைமதி யலர்தரு பக்கம்போல்
நாளின் நாளின் நளிவரைச் சிலம்புதொட்டு
நிலவுப் பரந்தாங்கு நீர்நிலம் பரப்பி" (பரி. 11:31-3.)

"சுடர்ப்பிறை போலப், பெருக்கம் வேண்டி." (பெருங். 2, 6:35-6.)

2. மதி குறைதல் குறைதலுக்கு உவமை:

"குணமுதல் தோன்றிய ஆரிருள் மதியின்
தேய்வன கெடுகநின் தெவ்வர் ஆக்கம்" (மதுரைக். 195-6.)

"மதி நிறைவுபோல் நிலையாது" (கலி. 17:7.)

"முறைமையின் தேயும் நிறைமதி நீர்மை
நண்பு." (பெருங். 1. 46:309-10.)

3. நீரவர் கேண்மை:

"சான்றவர் கேண்மை சிதைவின்றாய் ஊன்றி
வலியாகிப் பின்னும் பயக்கும்" (ஐந்திணையெழுபது, 5.)

"ஒருபகல் பூசின் ஓராண் டொழிவின்றி விடாது நாறும்
பெரியவர் கேண்மை போலும் பெறற்கரும் வாசம்" (சீவக. 2737.)

"கொட்புறு கலினப் பாய்மா......மேலோர்
நட்பினின் இடைய றுவாய்" (கம்ப. மிதிலைக் காட்சி. 13.)

4. பேதையார் நட்பு:

"பின்இன்னு பேதையார் நட்பு" (பழமொழி, 113.)

"பெருகுவது போலத் தோன்றிவைத் தீப்போல்
ஒருபொழுதும் செல்லாதே நந்தும்.........
பந்தமி லாளர் தொடர்பு" (நாலடி. 234.)

"சிறியார் கொண்ட தொடர்பில்
செல்லச் செல்ல அஃகும் நெறி." (சீவக. 1416.)

5. நீரவர் கேண்மையும் பேதையார் நட்பும்:

"கணைகடல் தண்சேர்ப்ப கற்றறிந்தார் கேண்மை
நுனியில் கரும்புதின் றற்றே - நுனிநீக்கித்
தூரில்தின் றன்ன தகைத்தரோ பண்பிலா
ஈரமி லாளர் தொடர்பு."

"நளிகடல் தண்சேர்ப்ப நாள்நிழற் போல
விளியும் சிறியவர் கேண்மை—விளிவின்றி
அல்கு நிழற்போல் அகன்றகன் றோடுமே
தொல்புக ழாளர் தொடர்பு."

"உலகறியத் தீரக் கலப்பினும் நில்லா
சிலபகலாம் சிற்றினத்தார் கேண்மை—நிலைதிரியா
நிற்கும் பெரியோர் நெறியடைய நின்றணைத்தால்
ஒற்கமி லாளர் தொடர்பு"

"கருத்துணர்ந்து கற்றறிந்தார் கேண்மைஎஞ் ஞான்றும்
குருத்திற் கரும்புதின் றற்றே—குருத்திற்
கெதிர்செலத்தின் றன்ன தகைத்தரோ என்றும்
மதுரமி லாளர் தொடர்பு." (நாலடி. 138, 166, 204, 211.)

6. முற்றும்:

"பெரியவர் கேண்மை பிறைபோல நாளும்
வரிசை வரிசையா நந்தும்—வரிசையால்
வானூர் மதியம்போல் வைகலும் தேயுமே
தானே சிறியார் தொடர்பு." (நாலடி. 125.) (782)

### 783

நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு. 3

பரிமேலழகர்: பண்பு உடையாளர் தொடர்பு பயில்தொறும் (நயம்) - நற்குணமுடைய மக்கள் தம்முட் செய்த நட்புப் பயிலுந்தோறும் அவர்க்கு இன்பம் செய்தல், நூல் நவில் தொறும் நயம் போலும் - நூற்பொருள் கற்குந் தோறும் கற்றூர்க்கு இன்பம் செய்தலை ஒக்கும்.

நயத்தினைச் செய்தலான், நயம் எனப்பட்டது; இருமையினும் ஒரு காலைக்கு ஒருகால் மிகும் என்பதாம்.

இவை இரண்டு பாட்டானும் அச் சிறப்பிற்கு ஏது கூறப்பட்டது.

உரை வேறுபாடு

மணக்குடவர்: அறிவு தரும்.

ஒப்புமை

*1. பண்புடையாளர் தொடர்பு பயில்தொறும் இனித்தல்:*

"நின்ற சொல்லர் நீடுதோ றினியர்" (நற். 1:1.)

"கனைகடல் தண்சேர்ப்ப கற்றறிந்தார் கேண்மை
நுனியில் கரும்புதின் றற்றே"

"கருத்துணர்ந்து கற்றறிந்தார் கேண்மைஎஞ் ஞான்றும்
குருத்திற் கரும்புதின் றற்றே." (நாலடி. 138, 211.)

*2. முற்றும்:*

"நவில்தொறும் இனிய ஞானம் போலப்
பயில்தொறும் இனியநின் பண்புடைக் கிழமை
உள்ளுதொ றுள்ளுதொ றுள்ளம் இன்புற."
(பெருங். 5.7:148-50.) (783)

## 784

நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்
மேற்சென் றிடித்தற் பொருட்டு. 4

**பரிமேலழகர்:** நட்டல் நகுதல் பொருட்டு அன்று - ஒருவனோடு ஒருவன் நட்புச் செய்தல் தம்முள் நகுதற்கு இயைந்தன சொல்லி நகையாடற் பொருட்டு அன்று; மிகுதிக்கண் மேல்சென்று இடித்தல் பொருட்டு - அவர்க்கு வேண்டாத செய்கை உளதாயவழி முற்பட்டுக் கழறுதற்பொருட்டு.

பழியும் பாவமும் தரும் செய்கை துன்பமே பயத்தலான் வேண்டப்படு வதன்மையின் அதனை மிகுதி என்றும், அது செய்தற்கு முன்னே மீட்டல் வேண்டுதலின் மேற்சென்று என்றும், இன்சொற்கு மீளாமையின் இடித்தற் பொருட்டு என்றும் கூறினர்.

இதனால் நட்பின் பயன் கூறப்பட்டது.

உரை வேறுபாடு

**பரிதியார்:** இடுக்கண் வந்தால் நிந்தித்துச் சிரிக்கவும் நன்றான காலத்து மகிழ்ந்து சிரிக்கவும் அல்லது துன்பம் வருமுன்னே பரிகாரம் பண்ணுவது நட்பு.

ஒப்புமை

*1. நண்பர் மிகுதிக்கண் மேற்சென்று இடித்தல்:*

"இடிக்கும் கேளிர்" (குறுந். 58.1.)

"மேல்நின்று மெய்கூறும் கேளிர்"
"தன்திமை பலகூறிக் கழறலின்" (கலி. 3:21, 45:21.)

"காய உரைத்துக் கருமம் சிதையாதார்
தூயரோ டொவ்வாரோ தக்கார்க்கு" (அறநெறி. 47.)

"கடிக்கும்வல் லரவும் கேட்கும் மந்திரம் களிக்கின் றோயை
அடுக்குமீ தடாதென் றுன்ற வேதுவோ டறிவு காட்டி
இடிக்குந ரில்லை நீயே யெண்ணிய தெண்ணி யுன்னை
முடிக்கின்ற போது மேன்மேல் முடிவன்றி முடிவ துண்டோ."
(கம்ப. நிந்தனைப். 59.)

2 இடித்தல்: குறள், 447, 448. (784)

### 785

புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்
நட்பாம் கிழமை தரும்.[1] 5

**பரிமேலழகர்:** புணர்ச்சி பழகுதல் வேண்டா - ஒருவனேடு ஒருவன் நட்பாதற்குப் புணர்ச்சியும் பழகுதலும் ஆகிய காரணங்கள் வேண்டுவதில்லை; உணர்ச்சிதான் நட்பு ஆம் கிழமை தரும்-இருவர்க்கும் ஒத்த உணர்ச்சிதானே நட்பாம் உரிமையைக் கொடுக்கும்.

புணர்ச்சி - ஒரு தேயத்தாராதல்; "இன்றே போல்க நும் புணர்ச்சி" என்றதும் அதனை. பழகுதல் - பலகால் கண்டும் சொல்லாடியும் மருவுதல். இவ்விரண்டும் இன்றிக் கோப்பெருஞ் சோழனுக்கும் பிசிராந்தையார்க்கும் போல உணர்ச்சி ஒப்பின்.[2] அதுவே உடனுயிர் நீங்கும் உரிமைத்தாய நட்பினைப் பயக்கும் என்பதாம். நட்பிற்குப் புணர்ச்சி, பழகுதல், உணர்ச்சி ஒத்தல் என்னும் காரணம் மூன்றனுள்ளும் பின்னது சிறப்புடைத்து என்பது இதனல் கூறப்பட்டது.

#### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** நட்பாதற்குப் பலநாள் பழகுதல் வேண்டா, ஒருநாள் கண்டாராயினும் உணர்வுடையார்க்கு அவ்வுணர்வுடைமைதானே நட்பாகும் உரிமையைத் தரும்.

**பரிப்பெருமாள்:** மேல் குணவானெடு கொண்ட நட்பு அறிவு உண்டாக்கும் என்றூர்; இஃது ஒத்த அறிவு உடையார்க்கும் அவ்வறிவுடைமை தானே நட்பு ஆக்கும் என்று கூறப்பட்டது.

#### ஒப்புமை

முற்றும்:

"கேட்டல் மாத்திரை அல்ல தியாவதும்
காண்டல் இல்லா தியாண்டுபல கழிய
வழுவின்று பழகிய கிழமையர்" (புறநா. 216:1-3.)

"செல்வுழிக் கண்ணொருநாள் காணினும் சான்றவர்
தொல்வழிக் கேண்மையில் தோன்றப் புரிந்தியாப்பர்" (நாலடி. 154.)

"காண்டகைமை இன்றியும்முன் கலந்தபெரும் கேண்மையினர்" (பெரிய. திருநா. 203.)

"தொல்லருங் கால மெல்லாம் பழகினும் தூய ரல்லார்
புல்லல ருள்ளம் தூயார் பொருந்துவ ரெதிர்ந்த ஞான்றே
ஒல்லைவந் துணர்வு மொன்ற இருவரு மொருநா ளுற்ற
எல்லியும் பகலும் போலத் தழுவின ரெழுவிற் றோளார்." (கம்ப. விபீடணன். 123.) (785)

### 786

முகம்நக நட்பது நட்பன்று நெஞ்சத்
தகம்நக நட்பது நட்பு. 6

**பரிமேலழகர்:** முகம் நக நட்பது நட்பு அன்று - கண்டவழி அகம் ஒழிய முகம் மாத்திரமே மலரும் வகை நட்குமது நட்பு ஆகாது; நெஞ்சத்து அகம் நக நட்பது நட்பு - அன்பால் அகமும் மலர நட்குமதே நட்பு ஆவது.

1. புறநா. 58:28.
2. புறநா. 217, பார்க்க.

நெஞ்சின்கண் நிகழ்வதனை நெஞ்சு என்றார். இறந்தது தழீஇய எச்ச வும்மை விகாரத்தால் தொக்கது.

இதனுன் இரண்டும் ஒருங்கே மலரவேண்டும் என்பது பெற்றும்.

### உரை வேறுபாடு

**பரிதியார்:** முகம் மலரவும் காரியம் கெடவும் செய்வது நட்பு அல்ல. மனம் மகிழவும் காரியம் ஆகவும் கூடுவது நட்பு. (786)

## 787

அழிவின் அவைநீக்கி ஆறுய்த் தழிவின்கண்
அல்லல் உழப்பதாம் நட்பு. 7

**பரிமேலழகர்:** அழிவின் அவை நீக்கி ஆறு உய்த்து - கேட்டினைத் தரும் தீநெறிகளைச் செல்லுங்கால் விலக்கி ஏனைய நன்னெறிகளைச் செல்லாக் கால் செலுத்தி, அழிவின்கண் அல்லல் உழப்பது நட்பு ஆம் - தெய்வத்தால் கேடு வந்துழி அது விலக்கப்படாமையின் அத் துன்பத்தை உடன் அநுபவிப் பதே ஒருவனுக்கு நட்பாவது.

ஆறு என வருகின்றமையின், அழிவினைத்தருமவையென்று ஒழிந்தார். "தெருண்ட அறிவி னவர்"[1] என்புழிப்போல இன் சாரியை நிற்க இரண்டன் உருபு தொக்கது. இனி நவை என்று பாடமோதி, அதற்குப் போர் அழிவி னும் செல்வ அழிவினும் வந்த துன்பங்கள் என்றும், அழிவின்கண் என்ப தற்கு யாக்கை அழிவின்கண் என்றும் உரைப்பாரும் உளர்.

### ஒப்புமை

**அழிவின்கண் அல்லல் உழப்பது நட்பு:**

"ஒருபகல் பழகினர் உயிரை ஈவரால்"

"அறமன் னுனுடன் எம்பி யன்பினே
டுறவுன் னுவுயி ரொன்றை யோவினுன்
பெறவொண் ணுததோர் பெற்றி பெற்றவற்
கிறலென் னும்இதின் இன்பம் யாவதோ."

(கம்ப. சடாயு உயிர். 13, சம்பாதி. 45.) (787)

## 788

உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு. 8

**பரிமேலழகர்:** உடுக்கை இழந்தவன் கைபோல - அவையிடை ஆடை குலைந்தவனுக்கு அப்பொழுதே கை சென்று உதவி அவ்விளிவிரல் களையுமாறு போல, ஆங்கே இடுக்கண் களைவது நட்பு ஆம் - நட்டவனுக்கு இடுக்கண் வந் துழி அப்பொழுதே சென்று உதவி அதனைக் களைவதே நட்பாவது.

அற்றம் காத்தற்கண் கை தன் மனத்தினும் முற்படுதலின் அவ்விரைவு இடுக்கண் களைவுழியும் அதற்கு ஒத்த தொழிலுவமையினும் வருவிக்க. உடை யவன் தொழில் நட்பின்மேல் ஏற்றப்பட்டது.

### உரை வேறுபாடு

**பரிப்பெருமாள்:** இது கழறுதலே அன்றித் துன்பம் துடைக்கவும் வேண்டும் என்றது.

1. நாலடி. 301.

### ஒப்புமை

1. **நண்பனுக்குக் கை உவமை:**

"தோளூற்றோர் தெய்வம்" (சீவக. 10.)

"தோள்முதல் தோழனை." (பெருங். 2.13:43.)

2. **முற்றும்:**

"உடையழி காலை உதவிய கைபோல்
நடலை தீர்த்தல் நண்பன தியல்பென."

(பெருங். 5.3:39-40.) (788)

## 789

**நட்பிற்கு வீற்றிருக்கை யாதெனின் கொட்பின்றி
ஒல்லும்வாய் ஊன்றும் நிலை.** 9

**பரிமேலழகர்:** நட்பிற்கு வீற்றிருக்கை யாது எனின் - நட்பினுக்கு அரசிருக்கை யாதுஎனின், கொட்பு இன்றி ஒல்லும்வாய் ஊன்றும் நிலை - அது எஞ்ஞான்றும் திரிபின்றி இயலும் எல்லை எல்லாம் அறம் பொருள்களில் தளராமைத் தாங்கும் திண்மை.

ஒருஞான்றும் வேறுபடாது மறுமை இம்மைகட்கு உறுதியாய அறம் பொருள்களில் தளர்ந்துழி அத் தளர்ச்சி நீக்கி அவற்றின்கண் நிறுத்துதற்கு மேல் ஒரு செயலும் இன்மையின், அதனை நட்பிற்கு முடிந்த எல்லை என்றார்.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** கொட்பு இன்றி - ஐயுறவின்றி,

**பரிப்பெருமாள்:** மேல் கூறின எல்லாம் ஒத்தார்மாட்டும் மிக்கார் மாட்டும் செய்யும் திறன் கூறிற்று. இது செல்வக் குறைபாட்டினால் தம்மில் தாழ்ந்தார்மாட்டுச் செய்யும் திறன் கூறிற்று.

### ஒப்புமை

**முற்றும்:**

"மேலோர் நட்பினின் இடையறுவாய்"

"காக்கவும் கிற்றிலன் காதல் நண்பரைப்
போக்கவும் கிற்றிலன் ஒருவன் போய்ப்பிணி
ஆக்கவும் கிற்றிலன் வென்றி யாருயிர்
நீக்கவும் கிற்றிலன் என்று நின்றதால்."

(கம்ப. மிதிலைக் காட்சி. 13, பிரமாத்திரப் 40.) (789)

## 790

**இனையர் இவர்எமக் கின்னம்யாம் என்று
புனையினும் புல்லென்னும் நட்பு.** 10

**பரிமேலழகர்:** இவர் எமக்கு இனையர் யாம் இன்னம் என்று புனையினும் - இவர் நமக்கு இத்துணை அன்பினர் யாம் இவர்க்கு இத்தன்மையம் என்று ஒருவரை ஒருவர் புனைந்து சொல்லினும், நட்பு புல் என்னும் - நட்புப் புல்லிதாய்த் தோன்றும்.

இவர்க்கு என்பது வருவிக்கப்பட்டது. தாம் அவர் என்னும் வேற்றுமை இன்றி வைத்துப் புனைந்து உரைப்பினும் வேற்றுமை உண்டாம் ஆகலின், நட்புப் புல்லென்னும் என்றார்.

இவை ஐந்து பாட்டானும் நட்பினது இலக்கணம் கூறப்பட்டது.

**உரை வேறுபாடு**

**பரிதியார்:** இவர் நமக்குச் சுற்றத்தினாலே இன்ன முறைமையாவார் என்று சொல்லி நட்பு வைத்தல் நட்பு அல்ல.

**ஒப்புமை**

**முற்றும்:**

"முகனமர் கிளவி முன்னின் றுரைப்பின்
ஏதின்மை ஈனும் ஏனோர் மாட்டெனை." (பெருங். 4. 8:6-7.) (790)

---

# 80. நட்பு ஆராய்தல்

**பரிமேலழகர்:** அஃதாவது, மேற்சொல்லிய இலக்கணத்தாரை ஆராய்ந்து அறிந்தே நட்க வேண்டுதலின், அவரை ஆராயும் திறம். அதிகார முறைமையும் இதனானே விளங்கும்.

**791**

**நாடாது நட்டலிற் கேடில்லை நட்டபின்
வீடில்லை நட்பாள் பவர்க்கு.** 1

**பரிமேலழகர்:** நட்பு ஆள்பவர்க்கு நட்டபின் வீடு இல்லை - நட்பினை விரும்பி அதன் கண்ணே நிற்பார்க்கு ஒருவனோடு நட்புச் செய்தபின் அவனை விடுதல் உண்டாகாது; நாடாது நட்டலின் கேடு இல்லை - ஆகலான் ஆராயாது நட்புச் செய்தல்போலக் கேடு தருவது பிறிது இல்லை.

ஆராய்தல், குணம் செய்கைகளது நன்மையை ஆராய்தல். கேடு: ஆகுபெயர். நட்கின் தாம் அவர் என்னும் வேற்றுமை இன்மையின் வீடில்லை என்றும், அவ்வேற்றுமை இன்மையான் அவன்கட் பழி பாவங்கள் தமவாம் ஆகலின் இருமையும் கெடுவர் என்பது நோக்கி நாடாது நட்டலிற் கேடில்லை என்றும் கூறினர்.

**ஒப்புமை**

1. **நாடாது நட்டல்:**

"...........பனிநீர்ச் சேர்ப்பனொடு
நாடா தியைந்த நண்பின தளவே." (நற். 378:11-2.)

2. **நட்டபின் பிரிய இயலாமை:**

"மரீஇப் பலரோடு பன்னாள் முயங்கிப்
பொரீஇப் பொருட்டக்கார்க் கோடலே வேண்டும்
பரீஇ உயிர்செகுக்கும் பாம்பொடும் இன்னா
மரீஇப் பின்னைப் பிரிவு." (நாலடி. 220.)

"கெழீஇக் கலந்தபிற் கீழ்காணார்" (சிறுபஞ்ச. 37.)

"பெரியோர் நண்படைந்தார் பெயர்பவோ." (சீவக. 2589.)

3. **முற்றும்:**

"நாடி நட்பின் அல்லது
நட்டு நாடார்தம் ஒட்டியோர் திறத்தே." (நற். 32:8-9.) (791)

## 792

ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை
தான்சாம் துயரம் தரும். 2

**பரிமேலழகர்:** ஆய்ந்து ஆய்ந்து கேண்மை கொள்ளாதான் - குணமும் செய்கையும் நல்லன் என்பது பலகாலும் பலவாற்ருனும் ஆராய்ந்து ஒருவனேடு நட்புக் கொள்ளாதவன், கடை முறை தான் சாம் துயரம் தரும் - முடிவில் தான் சாதற்கு ஏதுவாய துன்பத்தினைத் தன் மாற்ருர் விளைக்க வேண்டாமல் தானே விளைக்கும்.

கடைமுறைக்கண் என இறுதிக்கண் தொக்க ஏழாவது விரிக்க. குணமும் செயலும் தீயாஞெடு கொள்ளின் அவற்கு வரும் பகைமை எல்லாம் தன் மேலவாய்ப் பின் அவற்ருன் இறந்துவிடும் என்பதாம்.

இவை இரண்டு பாட்டானும் ஆராயாவழிப் படும் இழுக்குக் கூறப் பட்டது.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** குற்றமும் ஆய்ந்து குணமும் ஆய்ந்து கொள்ளாதான் கொண்ட நட்பு, பிற்காலத்துத் தான் சாதற்கு ஏதுவான துன்பத்தைத் தரும்.

### ஒப்புமை

**முற்றும்:**

"அளிந்தார்கண் ஆயினும் ஆராயா னுகித்
தெளிந்தான் விளிந்து விடும்." (பழமொழி, 42.) (792)

## 793

குணனும் குடிமையும் குற்றமும் குன்ருு
இனனும் அறிந்தியாக்க நட்பு. 3

**பரிமேலழகர்:** குணனும் குடிமையும் குற்றமும் குன்ருு இனனும் அறிந்து - ஒருவன் குணத்தினையும் குடிப்பிறப்பினையும் குற்றத்தினையும் குறைவற்ற சுற்றத்தினையும் ஆராய்ந்து அறிந்து, நட்பு யாக்க - அவனேடு நட்புச் செய்க.

குற்றம் இல்லாதார் உலகத்து இன்மையின் உள்ளது பொறுக்கப் படுவதாயின் அவர் நட்பு விடற்பாற்று அன்று என்பார் குற்றமும் என்றும், சுற்றப் பிணிப்புடையார் நட்டாரோடும் பிணிப்புண்டு வருதலின் குன்ருு இனனும் என்றும், விடப்படின் தம் குறையாம் என்பார் அறிந்தியாக்க என்றும் கூறினர்.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** இவையெல்லாம் ஒத்தனவாயின், உறவு நீளச் செல்லும் என்றவாறும்.

**கவிராஜ பண்டிதர்:** இனன் - சிநேகிதர்.

### ஒப்புமை

**குணனும் குற்றமும் நட்பின் ஆய்தல்:**

"குற்றமும் ஏனைக் குணமும் ஒருவனை
நட்டபின் நாடித் திரிவேனேல்—நட்டான்
மறைகாவா விட்டவன் செல்வுழிச் செல்க
அறைகடல்சூழ் வையம் நக." (நாலடி. 230.) (793)

### 794

குடிப்பிறந்து தன்கண் பழிநாணு வானைக்
கொடுத்தும் கொளல்வேண்டும் நட்பு. 4

**பரிமேலழகர்:** குடி பிறந்து தன்கண் பழி நாணுவானை - உயர்ந்த குடியின்கண் பிறந்து தன்மாட்டு உலகர் சொல்லும் பழிக்கு அஞ்சுவானை, கொடுத்தும் நட்பு கொளல் வேண்டும் - சில கொடுத்தாயினும் நட்புக் கோடல் சிறந்தது.

குடிப்பிறப்பால் தான் பிழை செய்யாமையும், பழிக்கு அஞ்சலால் பிழைத்தன பொறுத்தலும் பெற்றும். இவை இரண்டும் உடையானைப் பெறுதல் அருமையின், அவன் நட்பை விலைகொடுத்தும் கொள்க என்பதாம்.

**உரை வேறுபாடு**

**பரிதியார்:** கொடுத்தும் - அவனுக்கு வேண்டுவன கொடுத்தும்.

**காளிங்கர்:** கொடுத்தும் - சிறந்தன கொடுத்தும்.

**ஒப்புமை**

**கொடுத்தும் கொளல்:** குறள், *703.* *(794)*

### 795

அழச்சொல்லி அல்ல திடித்து வழக்கறிய
வல்லார்நட் பாய்ந்து கொளல். 5

**பரிமேலழகர்:** அல்லது அழ சொல்லி - தாம் உலகவழக்கல்லது செய்யக் கருதின் சோகம் பிறக்கும்வகை சொல்லி விலக்கியும், இடித்து - செய்தக்கால் பின்னும் செய்யாவகை நெருக்கியும், வழக்கு அறிய வல்லார் - அவ் வழக்குச் செய்யாவழிச் செய்விக்கவும் வல்லாரை, ஆய்ந்து நட்பு கொளல் - ஆராய்ந்து நட்புக் கொள்க.

அழச்சொல்லி, இடித்து என வந்த பரிகார வினைகளான் அவற்றிற்கு ஏற்ற குற்ற வினைகள் வருவிக்கப்பட்டன. வழக்கு - உலகத்தார் அடிப்படச் செய்துபோந்த செயல். தம்மோடு நட்டாரும் அறியும் வகை அறிவித்தல் அரிதாகலின், அறிய வல்லார் என்றார். இரண்டாவது இறுதிக்கண் தொக்கது.

**ஒப்புமை**

**அழச்சொல்லுதல்:**

"உளைய உரைத்து விடினும்." (பழமொழி, *299.*) *(795)*

### 796

கேட்டினும் உண்டோர் உறுதி கிளைஞரை
நீட்டி அளப்பதோர் கோல். 6

**பரிமேலழகர்:** கிளைஞரை நீட்டி அளப்பது ஓர் கோல் - ஒருவனுக்குக் கேடு என்பது தன் நட்டாராகிய புலன்களை எஞ்சாமல் அளப்பதோர் கோல்; கேட்டினும் ஓர் உறுதி உண்டு - ஆகலின் அதன்கண்ணும் அவனால் பெறப்படுவதோர் நல்லறிவு உண்டு.

தத்தம் நட்பு எல்லைகள் சுருங்கி இருக்கவும் செல்வக்காலத்துப் புறத்துத் தோன்றுமல் போந்தார் பின் கேடு வந்துழிச் செயல் வேறுபடுதலின், அக் கேட்டால் அவை வரையறுக்கப்படும் என்பது பற்றிக் கேட்டினைக் கோல்

ஆக்கியும், அதனால் அவரை அளந்து அறிந்தால் ஆவாரையே கோடலின் அவ்வறிவை உறுதி என்றும் கூறினர். கிளைஞர் : ஆகுபெயர். இஃது ஏகதேச உருவகம்.

இவை நான்கு பாட்டானும் ஆராயுமாறும், ஆராய்ந்தால் நட்கப்படுவார் இவர் என்பதூஉம் கூறப்பட்டன.

### உரை வேறுபாடு

**கவிராஜ பண்டிதர்:** கிளைஞரை - சுற்றத்தார் மனதுகளை. சிநேகிதன் மனத்தையும் செயல்களையும் ஆராய்ந்தால், இவனுக்கு நல்லறிவும் அவனுக்கு அடக்கமும் வரும்.

### ஒப்புமை

**முற்றும்:**

"..........நிலையாத நிலையுடையேன் நேய நெஞ்சின்,
நலங்காண நடந்தனையோ நாயகனே தீவினையேன் நண்பி னின்றும்
விலங்கானேன் ஆதலினுன் விலங்கினேன் இன்னுமுயிர் விட்டி
லேனுல்"

(கம்ப. சடாயுகாண். 22.) (796)

## 797

ஊதியம் என்ப தொருவற்குப் பேதையார்
கேண்மை ஒரீஇ விடல். 7

**பரிமேலழகர்:** ஒருவற்கு ஊதியம் என்பது - ஒருவனுக்குப் பேறு என்று சொல்லப்படுவது, பேதையார் கேண்மை ஒரீஇ விடல் - அறிவிலாரோடு நட்புக் கொண்டானாயின் அதனை ஒழிந்து அவரின் நீங்குதல்.

நட்பு ஒழிந்தாலும் நீங்காக்கால், "வெறிகமழ் சந்தனமும் வேங்கையும் வேமாறு"[1] போலத் தீங்கு வருதலின் விடல் என்றும், நீங்கியவழித் தீங்கு ஒழிதலே அன்றி இருமை இன்பத்திற்கும் உரிமை எய்தலும் உடைமையின் அதனை ஊதியம் என்றும் கூறினர்.

### ஒப்புமை

**பேதையார் கேண்மை நீங்கல்:**

"தீயவரொ டொன்றிய திறத்தரு நலத்தோர்
ஆயவரை யந்நிலை அறிந்தனர் துறந்தாங்கு."

(கம்ப. வரைக்காட்சி. 20.) (797)

## 798

உள்ளற்க உள்ளம் சிறுகுவ கொள்ளற்க
அல்லற்கண் ஆற்றறுப்பார் நட்பு. 8

**பரிமேலழகர்:** உள்ளம் சிறுகுவ உள்ளற்க - தம் ஊக்கம் சுருங்குதற்குக் காரணமாய வினைகளைச் செய்ய நினையாதொழிக; அல்லற்கண் ஆற்றறுப்பார் நட்பு கொள்ளற்க - அதுபோலத் தமக்கு ஒரு துன்பம் வந்துழிக் கைவிடுவார் நட்பினைக் கொள்ளாதொழிக.

---

1. "மனத்தான் மறுவில ரேனுந்தாம் சேர்ந்த, இனத்தான் இகழப் படுவர்-புனத்து, வெறிகமழ் சந்தனமும் வேங்கையும் வேமே, எறிபுனம் தீப்பட்டக் கால்." (நாலடி. 180.)

உள்ளம் சிறுகுவ ஆவன, தம்மின் வலியாரோடு தொடங்கியனவும் பயன் இல்லனவுமாம். ஆற்று என்பது முதல்நிலைத் தொழிற்பெயர். முன் எல்லாம் வலியராவார் போன்று ஒழிதலின், வலி அறுப்பார் என்றார். எடுத்துக் காட்டுவமை. கொள்ளின் அழிந்தே விடும் என்பதாம்.

### உரை வேறுபாடு

**பரிதியார் :** உள்ளம் சிறுகுவ - தன் செல்வம் குறையும் காரியத்தை.

**காளிங்கர்:** சிறுமை உள்ளனவற்றை எஞ்ஞான்றும் உள்ளம் கருதற்க.

### ஒப்புமை

**ஆற்றறுத்தல்:**

"அமரகத் தாற்றறுக்கும்." (குறள், 814.) (798)

## 799

கெடுங்காலைக் கைவிடுவார் கேண்மை அடுங்காலை
உள்ளினும் உள்ளம் சுடும். 9

**பரிமேலழகர்:** கெடும் காலை கைவிடுவார் கேண்மை - ஒருவன் கெடும் காலத்து அவனை விட்டு நீங்குவார் முன் அவனோடு செய்த நட்பு, அடும் காலை உள்ளினும் உள்ளம் சுடும் - தன்னைக் கூற்று அடும் காலத்து ஒருவன் நினைப்பினும் அந் நினைத்த உள்ளத்தைச் சுடும்.

நினைத்த துணையானே இயைபு இல்லாத பிறனுக்கும் கூற்றினும் கொடிதாம் எனக் கைவீடு எண்ணிச் செய்த நட்பின் கொடுமை கூறியவாறு. இனி அவன்தானே ஆக்கிய கேடு தன்னை அடுங்காலை உள்ளினும் அக்கேட்டினும் சுடும் என்று உரைப்பாரும் உளர்.

இவை மூன்று பாட்டானும், ஆராய்ந்தால் நட்கப்படாதார் இவர் என்பது கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** அடும் காலை - தன்னைப் பிறர் கொல்லும் காலத்து.

### ஒப்புமை

**1. உள்ளினும் உள்ளம் சுடும்:**

குறள், 1207.

"உள்ளின் உள்ளம் வேமே" (நற். 184:6.)

"உள்ளின் உள்ளம் வேமே"

"உள்ளின் உண்ணோய் மல்கும்" (குறுந். 102:1, 150:4.)

"கருதின்வேம் உள்ளமும்"

"நினையும் நெஞ்சமும் சுடுவது." (கம்ப. தாடகை. 5. வனம்புகு. 38.)

**2. முற்றும்:**

"இடர்ஒருவர் உற்றக்கால் ஈர்ங்குன்ற நாட
தொடர்புடையேம் என்பார் சிலர்" (நாலடி. 113.)

"இன்னா, கெடுமிடம் கைவிடுவர் நட்பு" (இன்னா. 37.)

"மிக்க மிகுபுகழ் தாங்குபவோ தற்சேர்ந்தார்
ஒற்கம் கடைப்பிடியா தார்" (ஐந்திணையைம்பது, 48.)
"கெட்ட காலை விட்டன ரென்னுது
நட்டோர் என்பது நாட்டினை." (பெருங். 2. 9 : 118-9.) (799)

## 800

மருவுக மாசற்றார் கேண்மைஒன் றீத்தும்
ஒருவுக ஒப்பிலார் நட்பு. 10

**பரிமேலழகர்:** மாசு அற்றார் கேண்மை மருவுக - உலகோடு ஒத்துக் குற்றம் அற்றார் நட்பினையே பயில்க; ஒப்பு இலார் நட்பு ஒன்று ஈத்தும் ஒருவுக - உலகோடு ஒத்தல் இல்லார் நட்பினை அறியாது கொண்டாராயின் அவர் வேண்டியது ஒன்றனைக் கொடுத்தாயினும் விடுக.

உலகோடு ஒத்தார் நட்பு இருமை இன்பமும் பயத்தலின் மருவுக என்றும், அதனோடு மாறாயினார் நட்புத் துன்பமே பயத்தலின் அதன் ஒழிவை விலை கொடுத்தும் கொள்க என்றும் கூறினார்.

இதனான் அவ்விருமையும் தொகுத்துக் கூறப்பட்டன.

### உரை வேறுபாடு

**பரிதியார்:** குற்றமற்றார் நட்பு வேண்டினது கொடுத்தும் கூட்டிக் கொள்க.

**கவிராஜ பண்டிதர்:** குற்றமற்றவர்களுடைய நட்பு இம்மையிலே கீர்த்தியும் மறுமையிலே புண்ணியமும் உண்டாக்கும்.

### ஒப்புமை

முற்றும்: குறள், 106. (800)

---

# 81. பழமை

**பரிமேலழகர்:** அஃதாவது, நட்டாரது பழையராம் தன்மைபற்றி அவர் பிழைத்தன பொறுத்தல். காரணப் பெயர் காரியத்திற்கு ஆயிற்று. ஆராய்ந்து நட்கப்பட்டார் எனினும் பொறுக்கப்படும் குற்றம் உடையராகலானும் ஊழ்வகையானும் நட்டார் மாட்டுப் பிழை உளதாம் என்பது அறிவித்தற்கு இது நட்பு ஆராய்தலின் பின் வைக்கப்பட்டது.

**மணக்குடவர்:** பழமையாவது நட்டோரது உரிமை கூறுதல். இஃது அவர் உரிமையால் செய்தனவற்றிற்குப் பொறுக்க வேண்டும் என்று அதன் பின் கூறப்பட்டது,

## 801

பழமை எனப்படுவ தியாதெனின் யாதும்
கிழமையைக் கீழ்ந்திடா நட்பு. 1

**பரிமேலழகர்:** பழமை என படுவது யாது எனின் - பழமை என்று சொல்லப்படுவது யாது என்று வினவின், கிழமையை யாதும் கீழ்ந்திடா நட்பு - அது பழமையோர் உரிமையால் செய்வனவற்றைச் சிறிதும் சிதையாது[1] அவற்றிற்கு உடம்படும் நட்பு.

---

1. கீழ்தல் - சிதைத்தல்; "பழம்விழுந்து, பாண்டில் எடுத்தபஃ றாமரை கீழும் பழனங்களே." (திருச்சிற். 249.)

கிழமை: ஆகுபெயர்; கெழுதகைமை என வருவனவும் அது. உரிமையால் செய்வன ஆவன: கருமமாயின செய்யுங்கால் கேளாது செய்தல், கெடும் வகை செய்தல், தமக்கு வேண்டியன தாமே கோடல், பணிவு அச்சங்கள் இன்மை என்று இவை முதலாயின. சிதைத்தல், விலக்கல்.

இதனால் பழமையாவது காலம் சென்றதன்று, இப் பெற்றித்தாய நட்பு என்பது கூறப்பட்டது.

**உரை வேறுபாடு**

**மணக்குடவர்:** இது பழையவன் செய்த உரிமையைச் சிறிதும் சிதையாது உடன்படுதல் நட்பாவது என்றது.

**கவிராஜ பண்டிதர்:** கிழமையை - செய்யவேண்டிய காரியத்தை. செய்யவேண்டியவை: சிநேகிதனுக்கு வேண்டிய காரியத்தைத் தானே செய்தலும், அவன் பொருளைத் தன் பொருளாகவே பார்க்கிறதும், வணக்கமும் பயமும் இல்லாமல் இருக்கிறதும் ஆம். (801)

## 802

நட்பிற் குறுப்புக் கெழுதகைமை மற்றதற்
குப்பாதல் சான்றோர் கடன். 2

**பரிமேலழகர்:** நட்பிற்கு உறுப்பு கெழுதகைமை - நட்பிற்கு அவயவம் ஆவன நட்டார் உரிமையால் செய்வன; அதற்கு உப்பு ஆதல் சான்றோர் கடன் - அதனால் அவ்வுரிமைக்கு இனியராதல் அமைந்தார்க்கு முறைமை.

வேறன்மை தோன்ற உறுப்பு என்றார். உறுப்பு என்பது ஈண்டு இலக்கணை அடியாக வந்த குறிப்புச் சொல்[1]. அவயவமாதல் அறிந்தே இனியவர் ஆவர் என்பது தோன்றச் சான்றோர்மேல் வைத்தார்.

**உரை வேறுபாடு**

**மணக்குடவர்:** இது பேய்ச்சுரைக்காய்க்குப் பல காயம் அமைத்தாலும் இனிமை உண்டாகாததுபோல, உடன்படாராயின் இனிமை உண்டாகாது ஆதலான் உடன்படல் வேண்டும் என்றது.

**பரிதியார்:** நட்புக்கு அலங்காரம் கூட்டுறவு உண்டாயிருப்பது. இது சான்றோர் ஒழுக்கம். (802)

## 803

பழகிய நட்பெவன் செய்யும் கெழுதகைமை
செய்தாங் கமையாக் கடை. 3

**பரிமேலழகர்:** கெழுதகைமை செய்தாங்கு அமையா கடை - தாம் உடம்படாதனவேனும் நட்டார் உரிமையால் செய்தனவற்றிற்குத் தாம் செய்தாற்போல உடம்படாராயின், பழகிய நட்பு எவன் செய்யும் - அவரோடு பழையதாய் வந்த நட்பு என்ன பயனைச் செய்யும்?

செய்தாற்போல உடம்படுதலாவது, தாமும் அவரிடத்து உரிமையால் உடம்படுதல்.

இவை இரண்டு பாட்டானும் பழமையான் வரும் உரிமையது சிறப்புக் கூறப்பட்டது.

---

1. நட்பு என்னும் பண்பை உறுப்புடையதுபோல வைத்து உறுப்பென்றமையின் இலக்கணைக் குறிப்புச் சொல் ஆயிற்று.

உரை வேறுபாடு

**மணக்குடவர்:** இது மறுமையில் பயன்படான் என்றது.

**பரிதியார்:** பழமையான நட்பு என்ன செய்யும், பழமைக்குத் தக்க நல்ல நெறியில் நடவானுகில்?

**கவிராஜ பண்டிதர்:** நல்ல காரியங்களைச் செய்கிறதற்குத் தன்னுல் கூடாவிட்டாலும், தன்னுடைய சிநேகிதர் தனக்குச் செய்யும் நல்ல காரியங்களுக்குத் தான் உடன்படாவிட்டால், அவனுடைய சிநேகம் என்ன பலனும்? *(803)*

## 804

விழைதகையான் வேண்டி இருப்பர் கெழுதகையால்
கேளாது நட்டார் செயின். 4

**பரிமேலழகர்:** நட்டார் கெழுதகையால் கேளாது செயின் – தன் கருமத்தை நட்டார் உரிமையால் கேளாது செய்தாராயின், விழை தகையான் வேண்டி இருப்பர் - அச் செயலது விழையப்படும் தன்மை பற்றி அதனை விரும்புவர் அறிவுடையார்.

ஒருவர்க்குத் தம் கருமம் தாம் அறியாமல் முடிந்திருத்தலினூஉங்கு நன்மை இன்மையின், அச் செயல் விழையத் தக்கது ஆயிற்று. அதனை அவ்வாறு அறிந்து விரும்புதல் அறிவுடையார்க்கு அல்லது இன்மையின், அவர் மேல் வைத்துக் கூறினர். வேண்டியிருப்பர் என்பது எழுந்திருப்பர் என்பது போல ஒரு சொல் நீர்மைத்து. இதனன் கேளாது செய்துழி அதனை விரும்புக என்பது கூறப்பட்டது.

உரை வேறுபாடு

**மணக்குடவர்:** விழைதகையான் வேண்டியிருப்பர் - அதனையும் தாம் விரும்பும் தன்மையோடே கூட விரும்பி இருப்பர் மிக்கார்.

ஒப்புமை

முற்றும்:

" கிழமையிற் செய்தனன் கெழுதகை தருமென."

(பெருங். 4.8:76.) (804)

## 805

பேதைமை ஒன்ருே பெருங்கிழமை என்றுணர்க
நோதக்க நட்டார் செயின். 5

**பரிமேலழகர்:** நோதக்க நட்டார் செயின் – தாம் வெறுக்கத் தக்கன வற்றை நட்டார் செய்தாராயின், பேதைமை ஒன்ருே பெருங் கிழமை என்று உணர்க - அதற்கு காரணம் ஒன்றிற் பேதைமை என்ருதல் ஒன்றின் மிக்க உரிமை என்ருதல் கொள்க.

ஒன்ருே என்பது எண்ணிடைச்சொல். செயின் எனவே தம் இயல்பால் செய்யாமை பெற்றும். இது வருகின்றவற்றுள்ளும் ஒக்கும். இழவூழான் வரும் பேதைமை[1] யாவர்க்கும் உண்மையின் தமக்கு ஏதம் கொண்டார் என்ருதல், ஊழ்வகையான் எம்மின் வரற்பாலது ஒற்றுமை மிகுதிபற்றி அவரின் வந்தது என்ருதல் கொள்வதல்லது அன்பின்மை என்று கொள்ளப்படாது என்பதாம். கெடும் வகை செய்யின் அதற்குக் காரணம் இதனல் கூறப்பட்டது.

1. "பேதைப் படுக்கும் இழவூழ்." (குறள், 372.)

உரை வேறுபாடு

**கவிராஜ பண்டிதர்:** பகையால் செய்தான் என்று நினைக்கப் போகாது.

ஒப்புமை

**முற்றும்:**

"பேதை மையாற் பெருந்தகை கெழுமி
நோதகச் செய்ததொன் றுடையேன் கொல்லோ"
(குறுந். 230:3-4.)

"இறப்பவே தீய செயினும்தன் நட்டார்
பொறுத்தல் தகுவதொன் றன்றோ...
ஒருவர் பொறைஇருவர் நட்பு" (நாலடி. 223.)

"தந்தீமை யில்லவர் நட்டவர் தீமையையும்
எந்தீமை என்றே உணர்பதாம்—அந்தண்
............ஒருவர் பொறைஇருவர் நட்பு." (பழமொழி, 247.) (805)

## 806

எல்லைக்கண் நின்றார் துறவார் தொலைவிடத்தும்
தொல்லைக்கண் நின்றார் தொடர்பு. 6

**பரிமேலழகர்:** எல்லைக்கண் நின்றார் - நட்பு வரம்பு இகவாது அதன் கண்ணே நின்றவர், தொல்லைக்கண் நின்றார் தொடர்பு தொலைவு இடத்தும் துறவார் - தம்மொடு பழமையின் திரியாது நின்றாரது நட்பினை அவரால் தொலைவு வந்த இடத்தும் விடார்.

பழமையின் திரியாமை, உரிமை ஒழியாமை. தொலைவு - பொருட் கேடும் போர்க் கேடும்.

உரை வேறுபாடு

**மணக்குடவர்:** எல்லைக்கண் நின்றார்-ஒழுக்கத்தின்கண்ணே நின்றார்.

**பரிப்பெருமாள்:** எல்லையாவது வரம்பு; அஃது ஒழுக்கம் ஆயிற்று.

**பரிதியார்:** எல்லைக்கண் நின்றார் - இன்னார் என்னும் தகுதி மிகுதி பெற்றார்.

**காளிங்கர்:** தம்மொடு நட்பினால் பழமைக்கண் நிலை நின்றார் தொலை யும் இடத்தும் அப்படிப் பழமை வரம்பின்கண் நின்றார் யாவர்? மற்று இவர் இவரோடு உண்டாகிய தொடர்பினை என்றும் கைவிடார்.

**கவிராஜ பண்டிதர்:** தொலைவிடத்தும் - சிநேகம் விட்டுப் போகிறோம் என்றாலும். (806)

## 807

அழிவந்த செய்யினும் அன்பறார் அன்பின்
வழிவந்த கேண்மை யவர். 7

**பரிமேலழகர்:** அழி வந்த செய்யினும் அன்பு அறார் - நட்டார் தமக்கு அழிவு வந்தவற்றைச் செய்தாராயினும் அவர் மாட்டு அன்பு ஒழியார், அன்பின் வழி வந்த கேண்மையவர் - அன்புடனே பழையதாய் வந்த நட்பினை உடையார்.

அழி என்பது முதல் நிலைத் தொழிற்பெயர். அழிவு - மேற்சொல்லிய கேடுகள்.[1]

இவை இரண்டு பாட்டானும் கேடு செய்தக்கண்ணும் நட்பு விடற்பாற்று அன்று என்பது கூறப்பட்டது.

**ஒப்புமை**

*முற்றும்:*

"நல்லார் எனத்தாம் நனிவிரும்பிக் கொண்டாரை
அல்லார் எனினும் அடக்கிக் கொளல்வேண்டும்"
"............இன்னா செயினும்
கலந்து பழிகாணார் சான்றோர்"
"தமரென்று தாங்கொள்ளப் பட்டவர் தம்மைத்
தமரன்மை தாமறிந்தார் ஆயின் அவரைத்
தமரினும் நன்கு மதித்துத் தமரன்மை
தம்முள் அடக்கிக் கொளல்." (நாலடி. 221, 227, 229.)

"நண்பொன்றித் தம்மாலே நாட்டப்பட் டார்களைக்
கண்கண்ட குற்றம் உளவெனினும் காய்ந்தீயார்." (பழமொழி, 16.)
(807)

## 808

**கேள்இழுக்கம் கேளாக் கெழுதகைமை வல்லார்க்கு
நாள்இழுக்கம் நட்டார் செயின். 8**

**பரிமேலழகர்:** கேள் இழுக்கம் கேளா கெழுதகைமை வல்லார்க்கு - நட்டார் செய்த பிழையைத் தாமாகவேயன்றிப் பிறர் சொன்னாலும் கொள்ளாத உரிமை அறியவல்லார்க்கு, நட்டார் இழுக்கம் செயின் நாள் - அவர் பிழை செய்வாராயின் அது பயன்பட்ட நாளாம்.

பிழையாவன: சொல்லாது நற்பொருள் வௌவல், பணியாமை, அஞ்சாமை முதலாயின. கேட்டல், உட்கோடல். கெழுதகைமை வல்லார் என்பது ஒரு பெயராய்க் கேளாத என்னும் எச்சத்திற்கு முடிபாயிற்று. செய்து போந்துழி அல்லது அவ்வுரிமை வெளிப்படாமையின், செய்யாதன நாள் அல்ல ஆயின.

இதனால் பிழை பொறுத்தற் சிறப்புக் கூறப்பட்டது.

**உரை வேறுபாடு**

**பரிதியார்:** நட்பினால் குற்றத்தைக் கேளாத உறவை வல்லவர்க்கு நாள் போல நன்மை நட்டாராலே உண்டாம்.

**காளிங்கர்:** அவருடன் நட்டார் பின்னும் நட்பிடைக் குற்றம் செய்யின், அற்றை நாள் தமது வாணாள்வரையுள் இழந்த நாள் ஆகும்.

**ஒப்புமை**

*முற்றும்:*

"தன்னடியார் திறத்தகத்துத் தாமரையா ளாகிலும்
சிதகு ரைக்குமேல்
என்னடியா ரதுசெய்யார் செய்தாரேல் நன்றுசெய்தார்
என்பர் போலும்."
(பெரியாழ்வார் திருமொழி, 4. 9:2.) (808)

1. பொருட்கேடு, போர்க்கேடு. (குறள், 806, உரை.)

809

கெடாஅ வழிவந்த கேண்மையார் கேண்மை
விடாஅர் விழையும் உலகு. 9

**பரிமேலழகர்:** கெடாஅ வழிவந்த கேண்மையார் கேண்மை - உரிமை அருது பழையதாய் வந்த நட்பினை உடையாரது நட்பினை, விடாஅர் உலகு விழையும் - அவர் பிழைநோக்கி விடுதல்செய்யாதாரை உலகம் நட்புக் குறித்து விரும்பும்.

கெடாது என்பதன் இறுதிநிலை விகாரத்தால் தொக்கது. விடாதாரை எனவே, விடுதற்காரணம் கூறப்பட்டது. நம்மாட்டும் இவர் இத்தன்மையர் ஆவர் என்று யாவரும் தாமே வந்து நட்பாவர் என்பதாம். கெடாஅர் என்று பாடமோதி, நட்புத்தன்மையிற் கெடாராகி என்று உரைப்பாரும் உளர்.

உரை வேறுபாடு

**மணக்குடவர்:** கெடாஅர் வழி வந்த - கெடாராய்க் குலத்தின் வழி வந்த. (809)

810

விழையார் விழையப் படுப பழையார்கண்
பண்பிற் றலைப்பிரியா தார். 10

**பரிமேலழகர்:** பழையார்கண் பண்பின் தலைப்பிரியாதார் - பழைய நட்டார் பிழை செய்தாராயினும் அவர்மாட்டுத் தம் பண்பின் நீங்காதார், விழையார் விழையப்படுவ - பகைவரானும் விரும்பப்படுவர்.

தம் பண்பாவது, செய்யாத முன்போல அன்புடையர் ஆதல். மூன்றன் உருபும் சிறப்பும்மையும் விகாரத்தால் தொக்கன. அத் திரிபின்மை நோக்கிப் பகைவரும் நட்டார் ஆவர் என்பதாம்.

இவை இரண்டு பாட்டானும் பழமை அறிவார் எய்தும் பயன் கூறப் பட்டது.

உரை வேறுபாடு

**பரிதியார்:** தாம் ஒன்றை விரும்பார் தம்மை எல்லாரும் விரும்பப் படுவார்; பழையாரை நட்பு விடாதார் குணம். (810)

---

# 82. தீ நட்பு

**பரிமேலழகர்:** இனிப் பொறுக்கப்படாத குற்றம் உடைமையின் விடற் பாலதாய நட்பு, நட்பு ஆராய்தற்கண் சுருங்கச் சொல்லிய துணையான் அடங்காமையின், அதனை இருவகைப்படுத்து இரண்டு அதிகாரத்தால் கூறு வான் தொடங்கி, முதற்கண் தீநட்புக் கூறுகின்றார். அதாவது தீக் குணத்தா ரோடு உளதாய நட்பு. குணத்தின் தீமை ஒற்றுமைபற்றி உடையார்மேற்றாய், அது பின் அவரோடு செய்த நட்பின்மேற்று ஆயிற்று. அதிகார முறைமை கூறுமையே விளங்கும்.

**மணக்குடவர்:** தீ நட்பாவது தீய குணத்தாராகிய மாந்தரோடு நட் டதனால் வரும் குற்றம் கூறுதல்.

பரிப்பெருமாள்: மேல் நட்பு ஆராய்தல் கூறுகின்றுழி நட்கப்படாதாரைக் கூறி ஈண்டும் கூறுதல் கூறியது கூறலாம், பிற எனின் அற்றன்று; அதனுள் நட்கப்படாதாரைக் கூறினர்; இதனுள் அவரால் பயன் இன்மை கூறினராதலின் வேறுபடுத்துக் கூறப்பட்டது என்க.

## 811

பருகுவார் போலினும் பண்பிலார் கேண்மை
பெருகலிற் குன்றல் இனிது. 1

பரிமேலழகர்: பருகுவார் போலினும் பண்பு இலார் கேண்மை - காதல் மிகுதியால் பருகுவார் போன்றாராயினும் தீக்குணம் உடையார் நட்பு, பெருகலின் குன்றல் இனிது - வளர்தலின் தேய்தல் நன்று.

"பருகு வன்ன அருகா நோக்கமொடு"[1] என்றார் பிறரும். நற்குணம் இல்லார் எனவே, தீக்குணம் உடையார் என்பது அருத்தாபத்தியான் வந்தது. பெருகினல் வரும் கேடு குன்றினல் வாராமையின், குன்றல் இனிது என்றார்.

இதனல் தீநட்பினது ஆகாமை பொதுவகையால் கூறப்பட்டது. இனிச் சிறப்பு வகையால் கூறுப.

### உரை வேறுபாடு

பரிப்பெருமாள்: இது குணம் இல்லாதார் நட்புத் தீது என்றது.

காளிங்கர்: குன்றல் இனிது - தம் கருமம் குறைபடுதல் சால இனிது.

### ஒப்புமை

பருகுவார் போன்ற காதல்:

"பருகு வன்ன காதல்" (அகநா. 305 : 6, 399:4.)

"பருகு காதலிற் பாடி ஆடினர்." (சீவக. 1765.) (811)

## 812

உறின்நட் டறின்ஒரூஉம் ஒப்பிலார் கேண்மை
பெறினும் இழப்பினும் என். 2

பரிமேலழகர்: உறின் நட்டு அறின் ஒரூஉம் ஒப்பு இலார் கேண்மை - தமக்குப் பயன் உள்வழி நட்புச் செய்து அஃது இல்வழி ஒழியும் ஒப்பிலாரது நட்பினை, பெறினும் இழப்பினும் என் - பெற்றால் ஆக்கம் யாது? இழந்தால் கேடு யாது?

தமக்கு உற்றன பார்ப்பார் பிறரோடு பொருத்தம் இலராகலின், அவரை ஒப்பிலார் என்றார். அவர் மாட்டு நொதுமல் தன்மையே அமையும் என்பதாம்.

### உரை வேறுபாடு

பரிப்பெருமாள்: மக்களுள் இவரோடு ஒத்த இழிவு உடையார் இன்மையால் ஒப்பு இலாதார் என்றவாறு; அன்றியும் தன்னேடு பொருத்தம் இல்லாதார் என்றும் ஆம். இது கால புருடர் நட்புத் தீது என்றது.

கவிராஜ பண்டிதர்: ஒப்பு இலார் கேண்மை - அறிவில்லாதாருடைய உறவை.

---

1. பொரு ந 77.

**ஒப்புமை**

**உறின் நட்டு அறின் ஒரூஉம் ஒப்பிலார்:**
குறள், 752, ஒப்புமை பார்க்க. *(812)*

## 813

உறுவது சீர்தூக்கும் நட்பும் பெறுவது
கொள்வாரும் கள்வரும் நேர். 3

**பரிமேலழகர்:** உறுவது சீர் தூக்கும் நட்பும் - நட்பு அளவு பாராது அதனால் வரும் பயன் அளவு பார்க்கும் நட்டாரும், பெறுவது கொள்வாரும் - கொடுப்பாரைக் கொள்ளாது விலையைக் கொள்ளும் பொதுமகளிரும், கள்வரும் - பிறர் கேடு நோக்காது அவர் சோர்வு நோக்கும் கள்வரும், நேர் - தம்முள் ஒப்பர்.

நட்பு: ஆகுபெயர். பொருளையே குறித்து வஞ்சித்து ஒழுகலின், கணிகையர் கள்வர் என்று இவரோடு ஒப்பர் என்பதாயிற்று.

இவை இரண்டு பாட்டானும் தமக்கு உறுவது பார்ப்பார் நட்பின் தீமை கூறப்பட்டது.

**மேற்கோள் விளக்கம்**

நேர் என்னும் முதல்நிலைத் தனிவினை வினைமுற்றாயிற்று. (**நன்** 351, **சிவஞான.**)

**ஒப்புமை**

1. **பெறுவது கொள்வார்:**

"பெறுவது கொள்பவர்." (**நாலடி.** 317.)

2. **முற்றும்:**

"...............வாய்பணிந்து
உள்ளம் உருக உரைத்துப் பொருள்கொள்வார்
கள்ளரோ டொவ்வாரோ தாம்." (**அறநெறி.** 47.)
(813)

## 814

அமரகத் தாற்றறுக்கும் கல்லாமா அன்னார்
தமரின் தனிமை தலை. 4

**பரிமேலழகர்:** அமர் அகத்து ஆற்று அறுக்கும் கல்லா மா அன்னார் தமரின் - அமர் வாராத முன் எல்லாம் தாங்குவது போன்று வந்துழிக் களத்திடை வீழ்த்துப் போம் கல்வி இல்லாத புரவி போல்வாரது தமர்மையின், தனிமை தலை - தனிமை சிறப்புடைத்து.

கல்லாமை: கதி ஐந்தும்; சாரி பதினெட்டும்,[1] பொருமுரண் ஆற்றலும் அறியாமை. துன்பம் வாராத முன் எல்லாம் துணையாவார் போன்று வந்துழி

1. "ஐந்து கதியும் பதினெட்டுச் சாரியையும், கந்தும் மறமும் கறங்குளைமா" (பு. வெ. 355); 'விக்கிதம், வற்கிதம், உபகண்டம், ஜவம், மாஜவம் என்னும் இப்பஞ்ச தாரையையும் பதினெட்டு வகைப்பட்ட சுற்றுவரவினையும்...உடைய குதிரை.' (ஷை உரை) ஐந்துகதி: மல்லகதி, மயூரகதி, வானரகதி, சசகதி, சரகதி (**திவாகரம்**); தௌரிதகம், ஆக்கிரக்திதம், வற்கிதம், இரேசிதம், புலுதம் என்பாரும் உளர். கதி பத்து என்றும் ஒரு சாரார் கூறுவர். (**திருவிளை.** நரிபரியாக்கிய.)

விட்டு நீங்குவர் என்பது உவமையால் பெற்றும். அவர் தமரானல் வரும் இறுதி தனியானல் வாராமையின், தனிமையைத் தலை என்றார், எனவே அதுவும் தீதாதல் பெறுதும்.

### உரை வேறுபாடு

**பரிப்பெருமாள்:** தனிமை தீது என்பது முன்பே அமைந்து கிடந்தது. இந் நட்பின் கொடுமை அதுவும் நன்று ஆயிற்று. தீமைக்கு அளவு இன்மை யின் இவ்வாறு கூறினர். இது கயவர் நட்புத் தீமை பயக்கும் என்றது.

### ஒப்புமை

1. **இடையில் விடுவார்:**

"பாப்புக் கொடியாற்குப் பால்மேனி யான்போலத்
தாக்கி அமருள் தலைப்பெய்யார்—போக்கி
வழியரா நட்டார்க்கு மாதவம்செய் வாரே
கழிவிழாத் தோளேற்று வார்." (பழமொழி, 13, 291.)

"எய்ப்புழி வைப்பாம் எனப்போற்றப் பட்டவர்
உற்றுழி ஒன்றுக் குதவலராய்ப் பைந்தொடீஇ
அச்சிடை இட்டுத் திரியின் அதுவன்றே
மச்சேற்றி ஏணி களைவு."

2. **ஆற்றறுத்தல்:** குறள், 798. *(814)*

## 815

செய்தேமம் சாராச் சிறியவர் புன்கேண்மை
எய்தலின் எய்தாமை நன்று. 5

**பரிமேலழகர்:** செய்து ஏமம் சாரா சிறியவர் புன்கேண்மை - செய்து வைத்தாலும் அரண் ஆகாத கீழ்மக்களது தீ நட்பு, எய்தலின் எய்தாமை நன்று - ஒருவர்க்கு உண்டாதலின் இல்லை ஆதல் நன்று.

சிறப்பும்மை விகாரத்தால் தொக்கது. அரணுகாமை, தொலைவின்கண் விட்டு நீங்குதல். எய்தலின் எய்தாமை நன்று என்பதற்கு மேல் உரைத் தாங்கு உரைக்க. சாராத என்னும் பெயரெச்சம் கேண்மை என்னும் பெயர் கொண்டது. சிறியவர் என்பதனைக் கொள்ளின், செய்தென்பது நின்று வற்றும்.

இவை இரண்டு பாட்டானும் தொலைவில் துணையாகாத நட்பின் தீமை கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**பரிப்பெருமாள்:** செய்து - நட்புச் செய்து. இது சிறியார் நட்புத் தீமை பயக்கும் என்றது. சிறியாராவார் சூதர், வேட்டைக்காரர், பெண்டிர் போல்வார்.

**கவிராஜ பண்டிதர்:** செய்து - உபசாரங்களைச் செய்திருந்தும். *(815)*

## 816

**பேதை பெருங்கெழீஇ நட்பின் அறிவுடையார்**
**ஏதின்மை கோடி உறும். 6**

**பரிமேலழகர்:** பேதை பெருங் கெழீஇ நட்பின் - அறிவிலானது மிகச் செறிந்த நட்பின், அறிவு உடையார் ஏதின்மை கோடி உறும் - அறிவுடையானது பகைமை கோடி மடங்கு நன்று.

கெழீஇய என்பதன் இறுதிநிலை விகாரத்தால் தொக்கது. பன்மை உயர்த்தற்கண் வந்தது. அறிவுடையான் பகைமை ஒரு தீங்கும் பயவாமையானும், பேதை நட்பு எல்லாத் தீங்கும் பயத்தலானும் கோடியுறும் என்றார். பெருங்கழி நட்பு என்று பாடம் ஓதுவாரும் உளர்.

**உரை வேறுபாடு**

**பரிப்பெருமாள்:** இது பேதையார் நட்புத் தீமை பயக்கும் என்றது.

**ஒப்புமை**

**முற்றும்:**

"இசைந்த சிறுமை இயல்பிலா தார்கண்
பசைந்த துணையும் பரிவாம்—அசைந்த
நகையேயும் வேண்டாத நல்லறிவி னுர்கண்
பகையேயும் பாடு பெறும்." (நாலடி. *187.*)

"இழிந்த மாக்களொ டின்பம் ஆர்தலின்
உயர்ந்த மாக்களொ டுறுபகை இனிது." (பெருங். *4:4:21-2.*) *(816)*

## 817

**நகைவகையர் ஆகிய நட்பின் பகைவரால்**
**பத்தடுத்த கோடி உறும். 7**

**பரிமேலழகர்:** நகை வகையர் ஆகிய நட்பின் - தாம் அறிதல் வகையர் ஆகாது நகுதல் வகையர் ஆதற்கு ஏதுவாகிய நட்பான் வருவனவற்றின், பகைவரால் பத்து அடுத்த கோடி உறும் - பகைவரான் வருவன பத்துக்கோடி மடங்கு நல்ல.

நட்பு: ஆகுபெயர். அந் நட்பாவது, விடரும்[1] தூர்த்தரும் வேழம்பரும் போன்று[2] பலவகையால் நகுவித்துத் தாம் பயன்கொண் டொழிவாரோடு உளதாயது. பகைவரால் என்பது அவாய்நிற்றலின், வருவன என்பது வருவிக்கப்பட்டது. பத்தடுத்த கோடி - பத்தாகத் தொகுத்த கோடி. அந்நட்பான் வரும் இன்பங்களின் அப் பகைவரான் வரும் துன்பங்கள் இறப்ப நல்ல என்பதாம்.

இதற்குப் பிறர் எல்லாம் சொல் இலக்கணத்தோடு மாறு கொள உரைத்தார்.

**உரை வேறுபாடு**

**மணக்குடவர்:** நகைவகையர் - காமுகர் வேழம்பர் முதலாயினோர்.

**பரிப்பெருமாள்:** நகைவகையர் நட்பாகிய அதனினும் பகைவராதல் நன்மை பயக்கும் என்று பொருள் உரைக்கினும் அமையும். பின் கூடா

1. (பி-ம்.) விடமரும்.
2. 46-ஆம் அதிகாரம், அவதாரிகை பார்க்க.

நட்புக் கூறுவாராதலின் இவர்களும் அதற்கு உரியர் என்பதற்கு ஈண்டு உரைத்தது என்க.

**பரிதியார்:** தம்மில் குற்றத்தைத் தமக்கு வேண்டாதாரிடத்திலே தூற்றுபவர் உறவின் பத்துக்கோடி பகை அழகு.

**காளிங்கர்:** இவர் நகையராகி நட்டு ஒழுகலின் இவர் மாட்டு ஓர் அயிர்ப்பு இல்லை. அதனுல் பல கோடி படைவரினும் அவை புறத்தின் நின்று வருவன ஆகலான், அதனிடை ஓர் உபாயம் சிந்தித்து உய்யவும் கூடும். மற்று இவர் கூட நின்றே குடிமுழுதும் கெடுப்பர் என்பது பொருள். *(817)*

## 818

ஒல்லும் கருமம் உடற்று பவர்கேண்மை
சொல்லாடார் சோர விடல். 8

**பரிமேலழகர்:** ஒல்லும் கருமம் உடற்றுபவர் கேண்மை - தம்மான் முடியும் கருமத்தை முடியா தாக்கிச் செய்யாதாரோடு கொண்ட நட்பினை, சொல்லாடார் சோர விடல் - அது கண்டால் அவர் அறியச் சொல்லாதே சோர விடுக.

முடியாது ஆக்குதல், முடியாதாக நடித்தல்[1] சோரவிடல் - விடுகின்ற வாறு தோன்ருமல் ஒரு காலைக்கு ஒருகால் ஓய விடுதல். அறியச் சொல்லினும் விடுகின்றவாறு தோன்றினும் அதுபொழுது பரிகரித்துப் பின்னும் நட்பாய் ஒழுகக் கருதுவாராகலின், சொல்லாடார் என்றும் சோரவிடல் என்றும் கூறினர்.

இவை மூன்று பாட்டானும் முறையே பேதையார், நகுவிப்பார், இயல்வது செய்யாதார் என்றிவர்கள் நட்பின் தீமை கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**பரிப்பெருமாள்:** இஃது அழுக்காறு உடையார் நட்புத் தீது என்றது.

**கவிராஜ பண்டிதர்:** உடற்றுபவர் - முடியாதென்று சொல்லி ஆலஸ்யம் பண்ணுகிறவர்கள். *(818)*

## 819

கனவினும் இன்னது மன்னோ வினைவேறு
சொல்வேறு பட்டார் தொடர்பு. 9

**பரிமேலழகர்:** வினை வேறு சொல் வேறு பட்டார் தொடர்பு - வினையும் சொல்லும் ஒவ்வாது வேறு வேருய் இருப்பார் நட்பு, கனவினும் இன்னது - நனவின்கண்ணே அன்றிக் கனவின்கண்ணும் இன்னது.

வினைசொற்களது ஒவ்வாமை முதல்மேல் ஏற்றப்பட்டது. அஃதாவது வினையிற் பகைவராய்ச் சொல்லின் நட்டாராய் இருத்தல். நிகழ்வின்கண் உளதாய் இருத்தலால், கனவினும் இன்னது என்ருர். உம்மை, எச்ச உம்மை; இழிவு சிறப்பும்மையுமாம். மன்னும், ஒவும் அசை நிலை.

### உரை வேறுபாடு

**பரிப்பெருமாள்:** இது பொய் கூறுவார் நட்புத் தீது என்றது.

1. (பி-ம்.) முடியாதாகக் கடத்தல்.

ஒப்புமை

**வினையும் சொல்லும் வேறுபடுதல்:**

"யாஅர் ஒருவர் ஒருவர்தம் உள்ளத்தைத்
தேரும் துணைமை உடையவர்—சாரல்
கனமணி நின்றிமைக்கும் நாடகேள் மக்கள்
மனம்வேறு செய்கையும் வேறு." (நாலடி. 127.) (819)

820

**எனைத்தும் குறுகுதல் ஓம்பல் மனைக்கெழீஇ**
**மன்றிற் பழிப்பார் தொடர்பு.** 10

**பரிமேலழகர்:** மனை கெழீஇ மன்றில் பழிப்பார் தொடர்பு - தனியே மனைக்கண் இருந்துழி நட்பாடிப் பலரோடு மன்றின்கண் இருந்துழிப் பழி கூறுவார் நட்பு, எனைத்தும் குறுகுதல் ஓம்பல் - சிறிதாயினும் தம்மை நணுகு தலைப் பரிகரிக்க.

மனைக்கண் கெழுமலும் மன்றின்கண் பழித்தலும் தீயனவாகலின், அவர் ஒரு காலும் தம்மை நணுகாவகை குறிக்கொண்டு காக்க என்பார், அவர் நட்பின்மேல் வைத்துக் கூறினர்.

இவை இரண்டு பாட்டானும் வஞ்சகர் நட்பின் தீமை கூறப்பட்டது.

உரை வேறுபாடு

**பரிப்பெருமாள்:** இது குற்றம் கூறுவார் நட்புத் தீது என்றது. *(820)*

---

# 83. கூடா நட்பு

**பரிமேலழகர்:** இனி, ஏனைக் கூடா நட்புக் கூறுகின்றார். அஃதாவது பகைமையான் அகத்தால் கூடாதிருந்தே தமக்கு வாய்க்கும் இடம் பெறும் துணையும் புறத்தால் கூடி ஒழுகுவார் நட்பு.

**மணக்குடவர்:** கூடா நட்பாவது, சுற்றத்தாராயினும் பிறராயினும் மனத்தின் நள்ளாது நட்டாரைப் போல ஒழுகுவாரது இயல்பும் அவர் மாட்டு ஒழுகும் திறமும் கூறுதல். தமக்கு இனம் இன்றிக் கருமம் காரண மாக நட்பாரும், பகைவராய் நட்பாரும் என அவ்விரு வகையாரையும் தீ நட்புப் போலக் கடிய வேண்டும் ஆதலின், அதன்பின் இது கூறப்பட்டது.

**பரிதியார்:** கூடா நட்பாவது புரையறக் கூடியும் பிரிவான்.

821

**சீர்இடம் காணின் எறிதற்குப் பட்டடை**
**நேரா நிரந்தவர் நட்பு.** 1

**பரிமேலழகர்:** நேரா நிரந்தவர் நட்பு - கூடாதிருந்தே தமக்கு வாய்க் கும் இடம் பெறும் துணையும் கூடி ஒழுகுவார் நட்பு, சீர் இடம் காணின் எறி தற்கு பட்டடை - அது பெற்றால் அற எறிதற்குத் துணையாய பட்டடை ஆம்.

எறியும் எல்லே வாராமுன் எல்லாம்தாங்குவதுபோன்றுஇருந்துவந்துழி அற எறிவிப்பதாய பட்டடைக்கும்,[1] அத்தன்மைத்தாய நட்பிற்கும் தொழில் ஒப்புமை உண்மையான், அதுபற்றி அந் நட்பினைப் பட்டடையாக உபசரித்தார். தீர்விடம் என்று பாடம் ஓதி, முடிவிடம் என்று உரைப்பாரும் உளர்.

**உரை வேறுபாடு**

**மணக்குடவர்:** இது கருமங் காரணமாக நட்டாரோடு கூடும் திறம் கூறிற்று.

**கவிராஜ பண்டிதர்:** பட்டடை - ஒன்றை வைத்து ஒன்றாலே நறுக்குகிற பட்டடை. (821)

## 822

**இனம்போன் றினம்அல்லார் கேண்மை மகளிர்**
**மனம்போல வேறு படும்.** 2

**பரிமேலழகர்:** இனம் போன்று இனம் அல்லார் கேண்மை - தமக்கு உற்றார் போன்று உறுதாரோடு உளதாய நட்பு, மகளிர் மனம் போல வேறு படும் - இடம் பெற்றால் பெண்பாலார் மனம்போல வேறுபடும்.

அவர் மனம் வேறுபடுதல், "பெண்மனம் பேதின் றொருப்படுப்பேன் என்னும்,எண்ணி லொருவன்"[2] என்பதனானும் அறிக. நட்பு வேறுபடுதலாவது பழைய பகையே ஆதல்.

இவை இரண்டு பாட்டானும் கூடா நட்பினது குற்றம் கூறப்பட்டது.

**உரை வேறுபாடு**

**மணக்குடவர்:** இது நட்பாய் ஒழுகுவாரது உள்ளக்கருத்து அறிய வேண்டும் என்றது.

**பரிதியார்:** இருமனப் பெண்டிர்[3] போலும்.

**காளிங்கர்:** பொது மகளிர் என்னாது மகளிர் எனப் பொதுவகையால் கூறியது, குலமகளிரும் குணம் கெடுதல் கூடும் என்பது குறிப்பு என்று அறிக.

**ஒப்புமை**

1. **இனம் போன்று இனம் அல்லார் கேண்மை:**

"உள்ளத்தால் நள்ளா துறுதித் தொழிலராய்க்
கள்ளத்தால் நட்டார் கழிகிளைமை...
மனத்துக்கண் மாசாய் விடும்." (நாலடி. 128.)

2. **மகளிர் மனம்:**

குறள், 920.

"அன்னவள் உரைத்த லோடும் ஐயனும் அறிதற் கொவ்வா
நன்னுதல் மகளிர் சிந்தை"
"குன்றிடை யிவரும் மேகக் குழுவிடைக் குதிக்கும்
....................நிதிவழி நேயம் நீட்டும்
மன்றலங் கோதை மாதர் மனம்எனப் போயிற் றம்மா"
"வருமுலை விலைக்கென மதித்தனர் வழங்கும்
தெரிவையர் மனமெனக் கறங்கெனத் திரிந்தான்."
(கம்ப. சூர்ப்பணகை. 44, மாரீசன். 243, சம்புமாலி. 35.) (822)

---

1. பட்டடை - பட்டடைக் கல்.
2. வளையாபதி.
3. குறள், 920.

### 823

பலநல்ல கற்றக் கடைத்தும் மனம்நல்லர்
ஆகுதல் மாணர்க் கரிது. 3

பரிமேலழகர்: நல்ல பல கற்றக்கடைத்தும் - நல்லன பல நூல்களைக் கற்ற இடத்தும், மனம் நல்லர் ஆகுதல் மாணர்க்கு அரிது - அதனன் மனம் திருந்தி நட்பாதல் பகைவர்க்கு இல்லை.

நல்லன, மனக்குற்றம் கெடுப்பன. மனம் நல்லர் எனச் சினை வினை முதல்மேல் நின்றது; நல்லர் ஆகுதல் - செற்றம் விடுதல். உள்ளே செற்றம் உடையாரைக் கல்வியுடைமை பற்றி நட்பு என்று கருதற்க என்பதாம். (823)

### 824

முகத்தின் இனிய நகாஅ அகத்தின்னா
வஞ்சரை அஞ்சப் படும். 4

பரிமேலழகர்: முகத்தின் இனிய நகாஅ அகத்து இன்னா வஞ்சரை - கண்டபொழுது முகத்தால் இனியவாகச் சிரித்து எப்பொழுதும் மனத்தால் இன்னாராய வஞ்சரை, அஞ்சப்படும் - அஞ்சல் வேண்டும்.

நகையது வகைபற்றி இனிய என்றும், அகத்துச் செற்றம் நிகழவும் அதற்கு மறுதலையாய நகையைப் புறத்து விளைத்தலின், வஞ்சர் என்றும், அச் செற்றம் குறிப்பறிதற் கருவியாய் முகத்தானும் தோன்றாமையின் அஞ்சுதல் செய்யப்படும் என்றும் கூறினர்.

இவை இரண்டு பாட்டானும் குற்றத்திற்கு ஏதுவாய அவர் கொடுமை கூறப்பட்டது.

#### உரை வேறுபாடு

பரிப்பெருமாள்: மேல் நட்பாய் ஒழுகுவாரது உள்ளக் கருத்து அறிய வேணும் என்றார். இஃது அறியுங்கால் குறிப்பினாதல், சொல்லினாதல் அறிய வேண்டும் அன்றே; அவை எல்லாவற்றானும் அறிதல் அரிது என்பார் முற்படக் குறிப்பினான் அறிதல் அரிது என்றார்.

பரிதியார்: முகத்தில் சிரிப்பும் மனத்தில் கறுப்பும் உண்டான பேரை எமனிலும் அஞ்சப்படும்.

#### ஒப்புமை

முற்றும்:

"முன்னின் றொருவன் முகத்தினும் வாயினும்
கன்னின் றுருகக் கலந்துரைத்துப்—பின்னின்
றிழித்துரைக்கும் சான்றோரை அஞ்சியே தேவர்
விழித்திமையா நின்ற நிலை." (அறநெறி. 48.) (824)

### 825

மனத்தின் அமையா தவரை எனைத்தொன்றும்
சொல்லினால் தேறற்பாற் றன்று. 5

பரிமேலழகர்: மனத்தின் அமையாதவரை - மனத்தால் தம்மொடு மேவாதாரை, எனைத்து ஒன்றும் சொல்லினால் தேறல் பாற்று அன்று -

யாதொரு கருமத்தினும் சொல்லால் தெளிதல் முறைமைத்து அன்று நீதி நூல்.[1]

நீதி நூல் என்பது அவாய்நிலையான் வந்தது. பகைமை மறைத்தற் பொருட்டுச் சொல்லுகின்ற வஞ்சனைச் சொல்லைச் செவ்விய சொல்லெனக் கருதி, அவரைக் கருமங்களில் தெளிதல் நீதிநூல் முறைமை அன்று என்பதாம். (825)

## 826

நட்டார்போல் நல்லவை சொல்லினும் ஒட்டார்சொல்
ஒல்லை உணரப் படும். 6

**பரிமேலழகர்:** நட்டார் போல் நல்லவை சொல்லினும் - நட்டார் போன்று நன்மை பயக்கும் சொற்களைச் சொன்னாராயினும், ஒட்டார் சொல் ஒல்லை உணரப்படும் - பகைவர் சொற்கள் அது பயவாமை அச் சொல்லிய பொழுதே அறியப்படும்.

சொல்லினும் எனவே சொல்லாமையே பெற்றும். ஒட்டாராதலால் தீமை பயத்தல் ஒருதலை என்பார், ஒல்லை உணரப்படும் என்றார்.

### உரை வேறுபாடு

**கவிராஜ பண்டிதர்;** நட்டார் - உறவின்முறையார். (826)

## 827

சொல்வணக்கம் ஒன்னார்கண் கொள்ளற்க வில்வணக்கம்
தீங்கு குறித்தமை யான். 7

**பரிமேலழகர்:** வில் வணக்கம் தீங்கு குறித்தமையான் - வில்லினது வணக்கம் ஏற்றவர்க்குத் தீமை செய்தலைக் குறித்தமையால், ஒன்னார்கண் சொல்வணக்கம் கொள்ளற்க - பகைவர்மாட்டுப் பிறக்கும் சொல்லினது வணக்கத்தையும் தமக்கு நன்மை செய்தலைக் குறித்தது என்று கருதற்க.

தம் வணக்கம் அன்றென்பது தோன்றச் சொல்வணக்கம் என்றும், வில்வணக்கம் வேறாயினும் வணங்குதல் ஒப்புமைபற்றி அதன் குறிப்பை ஏது வாக்கியும் கூறினர். வில்லியது குறிப்பு அவனிறைய வில்வணக்கத்தின் மேலது ஆயிற்று. இதுவும் தீங்கு குறித்த வணக்கம் என்றே கொண்டு அஞ்சிக் காக்க என்பதாம்.

இவை மூன்று பாட்டானும் அவரைச் சொல்லால் தெளியற்க என்பது கூறப்பட்டது. (827)

## 828

தொழுதகை யுள்ளும் படைஒடுங்கும் ஒன்னார்
அழுதகண் ணீரும் அனைத்து. 8

**பரிமேலழகர்:** ஒன்னர் தொழுத கையுள்ளும் படை ஒடுங்கும்-ஒன்னார் குறிப்பை உணரவல்லார்க்கு அவர் தொழுத கையகத்தும் படைக்கலம் மறைந்திருக்கும்; அழுத கண்ணீரும் அனைத்து - அவர் அழுத கண்ணீரும் அவ்வாறே அது மறைந்திருத்தற்கு இடனும்.

---

1. "நகையேயும் வேண்டற்பாற் றன்று" (குறள், 871) என்னுமிடத்தும், 'விளையாட்டின் கண்ணேயாயினும் விரும்புதல் இயற்கைத் தன்று நீதிநூல்' என்று உரைத்தது காண்க.

தாம் நட்பு என்பதனைத் தம் கையானும் கண்ணானும் தேற்றிப் பின் கோறற்கு வாங்க இருக்கின்ற படைக்கலம் உய்த்துணர்வுழித் தேற்றுகின்ற பொழுதே அவற்றுள்ளே தோன்றும் என்பார், ஒடுங்கும் என்றார். பகைவர் தம் மென்மை காட்டித் தொழினும் அழினும், அவர் குறிப்பையே நோக்கிக் காக்க என்பதாம்.

இதனான் அவரைச் செயலால் தெளியற்க என்பது கூறப்பட்டது.

**மேற்கோள் விளக்கம்**

'அரசர்க்கு ஒரு துன்பம் வந்த இடத்து அவர் நட்புடையோர் போல அழுத கண்ணீரும் கொலை சூழ்தலின் கண்ணீரிலும் படை ஒடுங்கிற்றாம்' என்று கூறி, "ஒன்னார் அழுதகண் ணீரும் அனைத்து" என்பதை மேற்கோள் காட்டுவர் நச்சினார்க்கினியர். (சீவக. 1891 )

**ஒப்புமை**

**தொழுத கையிலும் படை இருத்தல்:**

"வழிபடு வோரை வல்லறி தீயே" (புறநா. 10: 1.)

"தொழுததங் கையி னுள்ளும் துறுமுடி அகத்தும் சோர
அழுதகண் ணீரி னுள்ளும் அணிகலத் தகத்து மாய்ந்து
பழுதகண் ணரிந்து கொல்லும் படையுடன் ஒடுங்கும் பற்றா
தொழிகயார் கண்ணும் தேற்றம் தெளிகுற்றார் விளிகுற் றாரே."
(சீவக. 1891.) (828)

## 829

மிகச்செய்து தம்எள்ளு வாரை நகச்செய்து
நட்பினுட் சாப்புல்லற் பாற்று 9

**பரிமேலழகர்:** மிக செய்து தம் எள்ளுவாரை - பகைமை தோன்றாமல் புறத்தின்கண் நட்பினை மிகச் செய்து அகத்தின்கண் தம்மை இகழும் பகைவரை, நட்பினுள் நக செய்து சாப்புல்லல் பாற்று - தாமும் அந்நட்பின் கண்ணே நின்று புறத்தின்கண் அவர் மகிழும் வண்ணம் செய்து அகத்தின் கண் அது சாம்வண்ணம் பொருந்தற்பான்மை உடைத்து அரச நீதி.

நின்று என்பதூஉம் அரசநீதி என்பதூஉம் அவாய் நிலையான் வந்தன. அகன் ஒன்று புறன் ஒன்றுதல் ஒருவர்க்குத் தகாது எனினும், பகைவர் மாட்டாயின் தகும் என்பது நீதிநூல் துணிபு என்பார், அதன்மேல் வைத்துக் கூறினார். சாவ என்பதன் இறுதிநிலை விகாரத்தால் தொக்கது, "கோட்டின்வாய்ச் சாக்குத்தி"[1] என்புழிப்போல. எள்ளுவாரைப் புல்லல் எனக் கூட்டுக.

**உரை வேறுபாடு**

**காளிங்கர்:** நட்பினுள் சாப்புல்லற் பாற்று என்பது, தாம் அவரொடு நட்பின்கண் சாவப் புல்லுதல் என்பது. உள் புல்லற் பாற்று அன்று - தாம் அவரொடு உள்ளுற அணைக்கும் பகுதியினை உடைத்து அன்று. (829)

## 830

பகைநட்பாம் காலம் வருங்கால் முகம்நட்
டகநட் பொரீஇ விடல். 10

**பரிமேலழகர்:** பகை நட்பு ஆம் காலம் வரும் கால் - தம் பகைவர் தமக்கு நட்டாராய் ஒழுகும் காலம் வந்தால், முகம் நட்டு அகம் நட்பு ஒரீஇ

1. கலி, 105:35.

விடல் - தாமும் அவரோடு முகத்தால் நட்புச் செய்து அகத்தால் அதனை விட்டுப் பின் அதுவும் தவிர்க.

அக்காலமாவது தம்மானும் பகை என்று வெளிப்பட நீக்கலாகாத அளவு. இதனானே ஆம் அளவெல்லாம் நீக்குக என்பது பெற்றும்.

இவை இரண்டு பாட்டானும் அந் நட்பிடை ஒழுகுமாறு கூறப்பட்டது.

ஒப்புமை

முற்றும்:

"புகையுடைத் தென்னின் உண்டு பொங்கனல் அங்கென் றுன்னும்
மிகையுடைத் துலக நூலோர் வினையமும் வேண்டற் பாற்றே
பகையுடைச் சிந்தை யார்க்கும் பயனுறு பண்பில் தீரா
நகையுடை முகத்தை யாகி இன்னுரை நல்கு நாவால்."

*(கம்ப. அரசியல். 29.)* (830)

---

# 84. பேதைமை

**பரிமேலழகர்:** இனி, அந் நட்பினை எதிர்மறுத்துப் பகைமுகத்தால் கூறிய தொடங்கினுர். அப் பகைதான் முற்றக் கடியும் குற்றம் அன்மையின் உளவாய வெகுளியானும் காமத்தானும்[1] வருவதாம். அவற்றுள் வெகுளியான் வருவன ஐந்து அதிகாரத்தானும் காமத்தான் வருவன ஐந்து அதிகாரத்தானும் கூறுவார், அவ்விரண்டற்கும் அடியாய மயக்கத்தை இருவகைப் படுத்து இரண்டு அதிகாரத்தால் கூறுவான் தொடங்கி, முதற்கண் பேதைமை கூறுகின்றுர். அஃதாவது, யாதும் அறியாமை.

**மணக்குடவர்:** பேதைமையாவது கேட்டிற்குக் காரணமாகியவற்றை அறியாதார் இயல்பு கூறுதல். இறைமாட்சி முதலாக் கூடா நட்பு ஈருகப் பொருட்பகுதியாகிய அமைச்சும், நாடும், அரணும், பொருளும், படையும், நட்பும் என்று சொல்லப்பட்ட ஆறு உறுப்பும் கூறினுர்; இனி அவ்வரசர்க்கும் அவரால் ஆக்கப்பட்ட பொருட்கும் கேடுவரும் நெறியை அறிந்து காக்குமாறு கூறவேண்டுமாதலின், அதன்பின் இது கூறப்பட்டது.

## 831

பேதைமை என்பதொன் றியாதெனின் ஏதம்கொண்
டூதியம் போக விடல். 1

**பரிமேலழகர்:** பேதைமை என்பது ஒன்று - பேதைமை என்று சொல்லப்படுவது ஒருவனுக்கு ஏனைக் குற்றங்கள் எல்லாவற்றினும் மிக்கது ஒன்று; யாது எனின் ஏதம் கொண்டு ஊதியம் போக விடல் - அதுதான் யாதுஎன்று வினவின் தனக்குக் கேடு பயப்பனவற்றைக் கைக்கொண்டு ஆக்கம் பயப்பனவற்றைக் கைவிடுதல்.

கேடு: வறுமை, பழி பாவங்கள். ஆக்கம்: செல்வம், புகழ், அறங்கள். தானே தன் இருமையும் கெடுத்துக் கோடல் என்பதாம்.

உரை வேறுபாடு

**காளிங்கர்:** அல்லதூஉம் பேதைமை என்று சொல்லப்படுவதாகிய தீக்குணம் ஒன்று உண்டு; அஃது யாதோ எனின் பிறர் குற்றம் முழுவதும் கைக் கொண்டு மற்று அவர் தமது நற்குணம் அனைத்தும் கழிய விடுதல். *(831)*

---

1. குறள். 440, உரை.

## 832

**பேதைமையுள் எல்லாம் பேதைமை காதன்மை**
**கைஅல்ல தன்கண் செயல்.** 2

**பரிமேலழகர்:** பேதைமையுள் எல்லாம் பேதைமை - ஒருவனுக்குப் பேதைமை எல்லாவற்றுள்ளும் மிக்க பேதைமையாவது, கை அல்லதன்கண் காதன்மை செயல் - தனக்கு ஆகாத ஒழுக்கத்தின்கண் காதன்மை செய்தல்.

இருமைக்கும் ஆகா என்று நூலோர் கடிந்த செயல்களை விரும்பிச் செய்தல் என்பதாம்.

இவை இரண்டு பாட்டானும் பேதைமையது இலக்கணம் கூறப்பட்டது.

**ஒப்புமை**

**காதன்மை:** குறள், 507. (832)

## 833

**நாணாமை நாடாமை நார்இன்மை யாதொன்றும்**
**பேணாமை பேதை தொழில்.** 3

**பரிமேலழகர்:** நாணாமை - நாணவேண்டும் அவற்றுக்கு நாணாமையும், நாடாமை - நாட வேண்டும் அவற்றை நாடாமையும், நார் இன்மை - யாவர் மாட்டும் முறிந்த சொற்செயல் உடைமையும், யாது ஒன்றும் பேணாமை - பேணவேண்டும் அவற்றுள் யாதொன்றனையும் பேணாமையும், பேதை தொழில் - பேதையது தொழில்.

நாண வேண்டுமவை, பழி பாவங்கள். நாட வேண்டுமவை, கருமங்களில் செய்வன தவிர்வன. முறிதல், கண்ணறுதல். பேணவேண்டுமவை, குடிப்பிறப்பு கல்வி ஒழுக்கம் முதலாயின. இவை பேதைக்கு எஞ்ஞான்றும் இயல்பாய் வருதலின் தொழில் என்றார்.

**உரை வேறுபாடு**

**மணக்குடவர்:** நார் இன்மை - ஈரம் இன்மை.

**பரிதியார்:** நார் இன்மை - கிருபை இன்மை. (833)

## 834

**ஓதி உணர்ந்தும் பிறர்க்குரைத்தும் தான்அடங்காப்**
**பேதையிற் பேதையார் இல்.** 4

**பரிமேலழகர்:** ஓதி - மனம் மொழி மெய்கள் அடங்குதற்கு ஏதுவாகிய நூல்களை ஓதியும், உணர்ந்தும்-அவ்வடக்கத்தான் வரும் பயனை உணர்ந்தும், பிறர்க்கு உரைத்தும் - அதனை அறியலுறப் பிறர்க்கு உரைத்தும், தான் அடங்கா பேதையின் - தான் அவை அடங்கி ஒழுகாத பேதைபோல, பேதையார் இல் - பேதையார் உலகத்து இல்லை.

உம்மை முன்னும் கூட்டப்பட்டது. இப் பேதைமை தனக்கு மருந்தாய இவற்றால் தீராமையானும், வேற்று மருந்து இன்மையானும் பேதையிற் பேதையார் இல் என்றார்.

இவை இரண்டு பாட்டானும் பேதையது தொழில் பொதுவகையால் கூறப்பட்டது. இனிச் சிறப்பு வகையால் கூறுப.

### ஒப்புமை

1. **தான் அடங்காமை:**

"தந்தையே ஆயினும் தானடங்கான் ஆகுமேல்." (*இனியவை. 8.*)

2. **ஓதி உணர்தல்:**

"ஓதலும் ஓதி உணர்தலும்." (*அறநெறி. 147*)

3. **முற்றும்:**

"..................பேதைக்
குரைத்தாலும் செல்லா துணர்வு" (*சிறுபஞ்ச. 22.*)

"நற்பெருங் கல்விச் செல்வம் நவையறு நெறியை நண்ணி
முற்பயன் உணர்ந்த தூயோர் மொழியொடும் பழகி முற்றிப்
பிற்பயன் உணர்தல் தேற்றுப் பேதை." (கம்ப. களியாட்டு. 6.)

*(834)*

## 835

**ஒருமைச் செயல்ஆற்றும் பேதை எழுமையும்**
**தான்புக் கழுந்தும் அளறு.** 5

**பரிமேலழகர்:** பேதை - பேதை ஆயினன், எழுமையும் தான் புக்கு அழுந்தும் அளறு - வரும் பிறவிகள் எல்லாம் தான் புக்கு அழுந்தும் நிரயத்தினை, ஒருமை செயல் ஆற்றும் - இவ்வொரு பிறப்புள்ளே செய்து கொள்ள வல்லனும்.

எல்லாப் பிறப்பும் ஏழாய் அடங்குதல் அறியப்பட்டமையின், முற்றும்மை கொடுத்தார். அழுந்துதற்கு இடனாய நிரயம். ஈண்டைப் பிறப்புக்களினும் கொடுவினை வயத்தால் அந்நிரயத் துன்பமே உழந்து வருதலின், 'எழுமையுந் தான்புக் கழுந்தும் அளறு' என்றார். முடிவில் காலமெல்லாம் தான் நிரயத் துன்பம் உழத்தற்கு ஏதுவாம் கொடுவினைகளையே அறிந்து சில காலத்துள்ளே செய்து கோடல் பிறர்க்கு அரிதாகலின் ஆற்றும் என்றார்.

இதனான் அவன் மறுமைச்செயல் கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**பரிப்பெருமாள்:** எனவே அதற்குக் காரணமாயின் செய்யும் என்றவாறாயிற்று. எழுபிறப்பினும் என்றது ஒருகால் அதன் அகத்திலே பிறந்தால் அவ்வுடம்பு நீங்கினாலும் பின்னும் அதன் உள்ளே பிறந்து அகலாதுறப் பேதை அறம் செய்யுமாறு கூறிற்று.

**பரிதியார்:** ஒரு சென்மத்திலே பேதைக் குணம் பெற்றால் ஏழு சென்மும் நரகம் புகுவான்.

### மேற்கோள் விளக்கம்

ஒருமை என்பது குணியைக் குணமாகக் கூறுவதொரு மரபு வழுவமைதி என்பர் சங்கரநமச்சிவாயர். (*நன். 162.*) *(835)*

## 836

**பொய்படும் ஒன்றோ புனைபூணும் கைஅறியாப்**
**பேதை வினைமேற் கொளின்.** 6

**பரிமேலழகர்:** கை அறியா பேதை வினை மேல் கொளின் - செய்யும் முறைமை அறியாத பேதை ஒரு கருமத்தை மேற்கொள்வனாயின், பொய் படும் ஒன்றோ புனை பூணும் - அதுவும் புரைபடும்; தானும் தளை பூணும்.

புரை படுதல் - பின் ஆகாவகை உள்அழிதல். ஒன்றோ என்பது எண்ணிடைச்சொல். அதனையும் கெடுத்துத் தானும் கெடும் என்பதாம். இதனன் அவன் செல்வம் படைக்குமாறு கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**பரிப்பெருமாள்:** பொய்படும் ஒன்றோ புனைபூணும்-ஒன்றில் தப்பும்; ஒன்றில் செய்ய வல்லாரைத் தேடும்; அல்லது தான் செய்து முடிக்க மாட்டான்.

**பரிதியார் :** பேதை பொய் சொல்லுவான் என்றதும் ஒன்றோ, உன்னை நம்போம், வேறே யாம் புனையாகச் சொல்லி வை என்று வார்த்தையும் கேட்பர், பேதை ஒரு காரியம் செய்யப்புகின்.

### ஒப்புமை

**முற்றும்:**

"பொல்லாத சொல்லி மறைந்தொழுகும் பேதைதன்
சொல்லாலே தன்னைத் துயர்ப்படுக்கும்." *(பழமொழி, 184.)*

*(836)*

## 837

ஏதிலார் ஆரத் தமர்பசிப்பர் பேதை
பெருஞ்செல்வம் உற்றக் கடை. 7

**பரிமேலழகர்:** பேதை பெரும் செல்வம் உற்றக்கடை - பேதை ஆயினன் பெரிய செல்வத்தைத் தெய்வத்தான் எய்திய வழி, ஏதிலார் ஆர தமர் பசிப்பர் - தன்னோடு ஓர் இயைபும் இல்லாதார் நிறைய எல்லா இயைபும் உடைய தமராயினர் பசியா நிற்பர்.

எல்லா நன்மையும் செய்து கோடற் கருவி என்பது தோன்றப் பெருஞ் செல்வம் என்றும், அதனைப் படைக்கும் ஆற்றல் இல்லாமை தோன்ற உற்றக் கடை என்றும், எல்லாம் பெறுதல் தோன்ற ஆர என்றும், உணவும் பெருமை தோன்றப் பசிப்பர் என்றும் கூறினர்.

### உரை வேறுபாடு

**கவிராஜ பண்டிதர்:** தமர் - உரிமையானவர்கள். பெரும் செல்வம் உற்றக்கடை - முன் செய்த புண்ணியத்தாலே ஐசுவர்யம் வந்தால்.

### ஒப்புமை

**முற்றும்:**

"பொன்னிறச் செந்நெற் பொதியொடு பீள்வாட
மின்னொளிர் வானம் கடலுள்ளும் கான்றுகுக்கும்
வெண்மை உடையார் விழுச்செல்வம் எய்தியக்கால்
வண்மையும் அன்ன தகைத்து." *(நாலடி. 269.)*

"விரும்பி அடைந்தார்க்கும் சுற்றத் தவர்க்கும்
வருந்தும் பசிகளையார் வம்பர்க் குதவல்."

*(பழமொழி, 286,)* *(837)*

## 838

மையல் ஒருவன் களித்தற்ருல் பேதைதன்
கைஒன் றுடைமை பெறின். 8

**பரிமேலழகர்:** பேதை தன் கை ஒன்று உடைமை பெறின் - பேதை ஆயினன் தன் கைக்கண்ணே ஒன்றனை உடைமையாகப் பெற்ருனயின், மையல் ஒருவன் களித்தற்று - அவன் மயங்குதல் முன்னே பித்தினை உடையான் ஒருவன் அம் மயக்கத்தின்மேலே மது உண்டு மயங்கினுற்போலும்.

பெறின் எனவே, தெய்வத்தான் அன்றித் தன்னல் பெருமை பெற்ரும், பேதையும் செல்வக் களிப்பும் ஒருங்குடைமையால் அவன் செய்வன மையலும் மதுக் களிப்பும் ஒருங்கு உடையான் செய்வன போல் தலை தடுமாறும் என்பதாம்.

இவை இரண்டு பாட்டானும் அவன் செல்வம் எய்தியவழிப் பயன் கொள்ளுமாறு கூறப்பட்டது. *(838)*

## 839

பெரிதினிது பேதையார் கேண்மை பிரிவின்கண்
பீழை தருவதொன் றில். 9

**பரிமேலழகர்:** பிரிவின்கண் தருவது பீழை ஒன்று இல் - பின் பிரிவு வந்துழி அஃது இருவர்க்கும் தருவது ஒரு துன்பம் இல்லை; பேதையார் கேண்மை பெரிது இனிது - ஆகலான் பேதை ஆயினர் தம்முள் கொண்ட நட்பு மிக இனிது.

நாடோறும் தேய்ந்து வருதலின் துன்பம் தாராதாயிற்று. புகழ்வார் போன்று பழித்தவாறு. இதனன் அவரது நட்பின் குற்றம் கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**கவிராஜ பண்டிதர்:** ஆனல், அறிவுடையவர் சிநேகம் விட்டுப் பிரிந்தால் வெகு துக்கம் வரும். *(839)*

## 840

கழாஅக்கால் பள்ளியுள் வைத்தற்ருல் சான்ருேர்
குழாஅத்துப் பேதை புகல். 10

**பரிமேலழகர்:** சான்ருேர் குழாஅத்துப் பேதை புகல் - சான்ருேர் அவையின்கண் பேதை ஆயினன் புகுதல், கழாஅ கால் பள்ளியுள் வைத்தற்று - தூய அல்ல மிதித்த காலை இன்பம் தரும் அமளிக்கண்ணே வைத்தாற் போலும்.

கழுவாக்கால் என்பது இடக்கரடக்கு. அதனல் அவ்வமளியும் இழிக்கப்படுமாறு போல, இவனல் அவ்வவையும் இழிக்கப்படும் என்பதாம். இதனன் அவன் அவையிடை இருக்குமாறு கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**பரிதியார்:** பெரியோர் கூட்டத்தில் பேதை சென்று நடுப்பட இருக்கில் ஒரு பெரியோன் வந்தகாலத்துத் தலையில் வைத்த காலுடன் வாங்குவது போல இவனை எழுப்பி, அவரை இருத்துவர்.

### மேற்கோள் விளக்கம்

எதிர்தொடங்கிப் பொருள் கொள்ளும் எதிர்ப் பெயர் நிரல் நிறை வந்தது என்பர் **மயிலைநாதர்**. *(நன். 413.)* (840)

---

# 85. புல்லறிவாண்மை

**பரிமேலழகர்:** இனி, ஏனைப் புல்லறிவாண்மை கூறுகின்றார். அது புல்லிய அறிவினை ஆடல் தன்மை என விரியும். அஃதாவது, தான் சிற்றறிவினனாய் இருந்தே தன்னைப் பேரறிவினனாக மதித்து உயர்ந்தோர் கூறும் உறுதிச் சொல் கொள்ளாமை.

### 841

அறிவின்மை இன்மையுள் இன்மை பிறிதின்மை
இன்மையா வையா துலகு. 1

**பரிமேலழகர்:** இன்மையுள் இன்மை அறிவு இன்மை - ஒருவனுக்கு இல்லாமை பலவற்றுள்ளும் மிக்க இல்லாமையாவது அறிவு இல்லாமை; பிறிது இன்மை இன்மையா வையாது உலகு - மற்றைப் பொருள் இல்லாமையோ எனின் அதனை அப் பெற்றித்தாய இன்மையாகக் கொள்ளார் உலகத்தார்.

அறிவு என்பது ஈண்டுத் தலைமைபற்றி நல்லறிவின்மேல் நின்றது. புல்லறிவாளர் செல்வம் எய்திய வழியும் இம்மை மறுமைப் பயன் எய்தாமையின் அதனை இன்மையுள் இன்மை என்றும், நல்லறிவாளர் வறுமை எய்திய வழியும் அஃது இழவாமையின் அதனை இன்மையா வையாது என்றும் கூறினார். இதனால் புல்லறிவினது குற்றம் கூறப்பட்டது.

#### ஒப்புமை

முற்றும்:

குறள், *430.*

"நுண்ணுணர் வின்மை வறுமை அஃதுடைமை
பண்ணப் பணைத்த பெருஞ்செல்வம்" (நாலடி. *251.*)

"அறிவினால் மாட்சியொன் றில்லா ஒருவன்
பிறிதினால் மாண்ட தெவனாம்." (பழமொழி, *271.*) *(841)*

### 842

அறிவிலான் நெஞ்சுவந் தீதல் பிறிதியாதும்
இல்லை பெறுவான் தவம். 2

**பரிமேலழகர்:** அறிவு இலான் நெஞ்சு உவந்து ஈதல் - புல்லறிவுடையான் ஒருவனுக்கு மனம் உவந்து ஒன்று கொடுத்தல் கூடிற்றாயின், பெறுவான் தவம் பிறிது யாதும் இல்லை - அதற்குக் காரணம் பெறுகின்றவன் நல்வினையே; வேறு ஒன்றும் இல்லை.

ஓரோவழி நெஞ்சு உவந்து ஈதல் கூடலின் புல்லறிவாளரும் நல்வினை செய்ப என்பார்க்கு, பெறுவான் வீழ்பொருள் எய்தியான் போல்வது அல்லது இம்மை நோக்கியாக மறுமை நோக்கியாக ஈகின்றார் அல்லர் எனக் கூறியவாறு. கூடிற்றாயின், அதற்குக் காரணம் என்னும் சொற்கள் அவாய் நிலையான் வந்தன.

இதனான் அஃது உடையார் தம்மாட்டு நல்லன செய்தல் அறியாமை கூறப்பட்டது.

#### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** இது கொடுத்தானாயினும் வரிசை அறியாது கொடுக்குமாதலின் அது புல்லறிவு என்றது. (842)

### 843

அறிவிலார் தாம்தம்மைப் பீழிக்கும் பீழை
செறுவார்க்கும் செய்தல் அரிது. 3

பரிமேலழகர்: அறிவு இலார் தாம் தம்மை பீழிக்கும் பீழை - புல்லறிவுடையார் தாமே தம்மை வருத்தும் வருத்தம், செறுவார்க்கும் செய்தல் அரிது - அது செய்தற்கு உரியராய தம் பகைவர்க்கும் செய்தல் அரிது.

பகைவர் தாம் அறிந்தது ஒன்றனைக் காலம் பார்த்திருந்து செய்வதல்லது வறுமை, பழி, பாவம் முதலிய பலவற்றையும் எக்காலத்தும் செய்ய மாட்டாமையின், அவர்க்கும் செய்தல் அரிது என்றார். இதனான் அவர் தம் மாட்டும் தீயன செய்தல் அறிவர் என்பது கூறப்பட்டது.

ஒப்புமை

முற்றும்:

"............காமநோய் கல்வி நோக்கா
மதியிலி மறையச் செய்த தீமைபோல் வளர்ந்த தன்றே."
(கம்ப மாரீசன் 86.) (843)

### 844

வெண்மை எனப்படுவ தியாதெனின் ஒண்மை
உடையம்யாம் என்னும் செருக்கு. 4

பரிமேலழகர்: வெண்மை என படுவது யாது எனின் - புல்லறிவுடைமை என்று சொல்லப்படுவது யாது என்று வினவின், யாம் ஒண்மை உடையம் என்னும் செருக்கு - அது தம்மைத் தாமே யாம் நல்லறிவு உடையம் என்று நன்கு மதிக்கும் மயக்கம்.

வெண்மையாவது அறிவு முதிராமை. ஒண்மை எனக் காரியப் பெயர் காரணத்திற்கு ஆயிற்று. உலகத்தார் இகழ்தல் அறிந்து வைத்தும் அவ்வாறு மதித்தலான், மயக்கம் என்றார்.

ஒப்புமை

ஒண்மை:

"ஒண்மை உடையார்" (நாலடி. 196.)
"ஒண்மையும் நிறையும்" (பெருங். 1.34:151.)
"ஒப்பின் மாநகர் ஒண்மை." (சீவக. 535.) (844)

### 845

கல்லாத மேற்கொண் டொழுகல் கசடற
வல்லதூஉம் ஐயம் தரும். 5

பரிமேலழகர்: கல்லாத மேற்கொண்டு ஒழுகல் - புல்லறிவாளர் தாம் கல்லாத நூல்களையும் கற்றாராகத் தாம் மேலிட்டுக்கொண்டு ஒழுகுதல், கசடு அற வல்லதூஉம் ஐயம் தரும் - கசடு அறக் கற்றது ஒரு நூல் உண்டாயின் அதன்கண்ணும் பிறர்க்கு ஐயத்தை விளைக்கும்.

வல்லது என ஏழாவது இறுதிக்கண் தொக்கது. உண்டாயின் என்பது அவாய்நிலையான் வந்தது. ஐயம் - அது வல்லர் என்பதூஉம் இவ்வாறு கொல்லோ என்பது.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** இது கல்லாதானை மேற்கொள்ளுதல் புல்லறிவு என்றது.

**கவிராஜ பண்டிதர்:** சந்தேகமாவது, கல்லாத நூலைக் கற்றோம் என்று சொல்லக் கேட்டு, அதனைப் பரீட்சை செய்து கேட்கிறபோது வாராதபடியினாலே, அந்நூலில் வல்லவர் என்று சொல்வதும் இங்ஙனந்தான் இருக்குமோ, என்று எண்ணுவது. (845)

## 846

**அற்றம் மறைத்தலோ புல்லறிவு தம்வயின்**
**குற்றம் மறையா வழி.** 6

**பரிமேலழகர்:** தம் வயின் குற்றம் மறையா வழி - புல்லறிவாளர் தங்கண் நிகழும் குற்றங்களை அறிந்து கடியாராயின், அற்றம் மறைத்தலோ புல்லறிவு - ஆடையால் அற்றம் மறைத்தாராகத் தம்மைக் கருதுதலும் புல்லறிவாம்,

குற்றம் மறைத்தலாவது, அவற்றை இலவாக்குதல். மறைக்கப் படுவன பலவற்றுள்ளும் உயர்ந்தவற்றை எல்லாம் மறையாது தாழ்ந்தது ஒன்றனையே மறைத்து அவ்வளவால் தம்மையும் உலக ஒழுக்கினராக மதித்தலும் புல்லறிவு என்பதாம்.

இவை மூன்று பாட்டானும் அவர் தம்மை வியத்தற்குற்றம் கூறப் பட்டது.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** அற்றம் மறைத்தலோ புல் அறிவு - பிறர் காணுமல் மறைக்க வேண்டும் உறுப்பை ஆடையால் மறைத்தலும் புல்லறிவு. எனவே அதுவும் மறையானுயின் குற்றம் நாடுவார் இல்லை என்றவாறாயிற்று. இது குற்றம் மறையாமை புல்லறிவு என்றது.

**காளிங்கர்:** அற்றம் மறைத்தலோ புல்லறிவு என்பது தமக்குப் பொருள் அற்றம் தீர்த்தல் சாலப் புல்லறிவு என்றது. தமக்கு வறுமையை நீக்குவதாகக் குற்றம் செய்தலே புல்லறிவு என்று ஆயிற்று. எனவே ஒருவர் விரைந்து மறைத்தற்கு முயல்வது இவ்வற்றம் அல்லது பொருள் அற்றம் மறைத்தலன்று என்பது பொருள் ஆயிற்று.

### ஒப்புமை

**அற்றம் மறைத்தல்:**
குறள், *980.* (846)

## 847

**அருமறை சோரும் அறிவிலான் செய்யும்**
**பெருமிறை தானே தனக்கு.** 7

**பரிமேலழகர்:** அரு மறை சோரும் அறிவு இலான் - பெறுதற்கு அரிய உபதேசப் பொருளைப் பெற்றும் உட்கொள்ளாது போக்கும் புல்லறிவாளன், தானே தனக்கு பெரு மிறை செய்யும் - அவ்வுறுதி அறியாமையால் தானே தனக்கு மிக்க வருத்தத்தைச் செய்து கொள்ளும்.

சோரும் என இடத்துநிகழ் பொருளின் தொழில் இடத்தின்மேல் நின்றது மிக்க வருத்தம், பொறுத்தற்கரிய துன்பங்கள். இனி, அருமறை

சோரும் என்பதற்குப் பிறரெல்லாம், உள்ளத்து அடக்கப்படும் எண்ணத்தை வாய் சோர்ந்து பிறர்க்கு உரைக்கும் என்று உரைத்தார்; அது பேணுமை என்னும் பேதைமையாவதன்றிப் புல்லறிவாண்மை அன்மை அறிக.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** அறிவு இல்லாதவன் அரிதாக எண்ணின மறைப் பொருளைச் சோரவிடுவன்; அதுவேயுமன்றி, தனக்குத் தானே பெரிய துன்பத்தினையும் செய்து கொள்வன்.

சோரவிடுதல் - பிறர்க்குச் சொல்லுதல். இது பொருட்கேடும் உயிர்க் கேடும் தானே செய்யும் என்றது,

**பரிதியார்:** பெருமிறை - மிடி.

### ஒப்புமை

**அருமறை சோராமை:**

"கண் போல்வார்............
சொல்லார்க் கருமறை சோராமை." (ஏலாதி, 15.) (847)

## 848

ஏவவும் செய்கலான் தான்தேறான் அவ்வுயிர்
போஒம் அளவும்ஓர் நோய். 8

**பரிமேலழகர்:** ஏவவும் செய்கலான் - புல்லறிவாளன் தனக்கு உறுதி ஆயவற்றை அறிவுடையார் சொல்லா நிற்கவும் செய்யான்; தான் தேறான் - அதுவன்றித் தானாகவும் இவை செய்வன என்று அறியான்; அவ்வுயிர் போஒம் அளவும் ஓர் நோய் - அவ்வுயிர் யாக்கையின் நீங்கும் அளவும் நிலத்திற்குப் பொறுத்தற்கு அரியதொரு நோயாம்.

உயிர்தான் உணர்தல் தன்மைத்தாயிருந்தும், நின்ற யாக்கை வயத்தான் மருடல் தன்மைத்தாய் வேறுபடுதலின் அவ்வுயிர் என்றும், அதனின் நீங்கியபொழுதே அதற்கு இரண்டனுள் ஒன்று கூடுதலின் போஒம் அளவும் என்றும், குலமலை முதலிய பொறுக்கின்ற நிலத்திற்குப் பாவயாக்கை பெரும் பொறையாய்த் துன்பம் செய்தலின் ஒரு நோய் என்றும் கூறினர்.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** இஃது ஈட்டின பொருளைக் கொடுத்தலும் தொகுத்தலும் செய்யாமை புல்லறிவு என்றது.

### மேற்கோள் விளக்கம்

இழிப்பின்கண் உயர்திணை அஃறிணை ஆயிற்று. (நன் 378, மயிலை.)
செறலின்கண் அவ்வாறு ஆயிற்று என்பர் சங்கர நமசிவாயர். (நன். 379.)
(848)

## 849

காணாதாற் காட்டுவான் தான்காணான் காணாதான்
கண்டானாம் தான்கண்ட வாறு. 9

**பரிமேலழகர்:** காணாதான் காட்டுவான் தான் காணான் - தன்னை எல்லாம் அறிந்தானாக மதித்தலால் பிறரால் ஒன்று அறியும் தன்மை இலாதானை அறிவிக்கப் புகுவான் அவனால் பழிக்கப்பட்டுத் தான் அறியானாய் முடியும்; காணாதான் தான் கண்டவாறு கண்டான் ஆம் - இனி அவ்வறியும் தன்மை

இல்லாதான் கொண்டது விடாமையால் தான் அறிந்தவாற்றால் அதனை அறிந்தானாய் முடியும்.

புல்லறிவாளர்க்கு நல்லறிவு கொளுவுதல் ஒருவாற்றானும் இயைவது அன்று என்பதாம்.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** இது கொண்டது விடாமை புல்லறிவு என்றது.

**காளிங்கர்:** தான் கற்றது ஒன்றின் மெய்ப்பொருளைக் காண அறியாத புல்லறிவாளன் தான் கண்டவற்றையே குறித்து ஒன்றைக் கசடு அறக் காட்டக் கருதுவான் யாவன்? அவன் தானும் மற்று அன்னனே ஆம். என்னை எனின், தான் காட்டும் மெய்ப்பொருள் காணுதானாகிய புல்லறிவாளன் தான் கண்டவற்றையே கண்டானாய் விடும் இத்துணை அல்லது, ஓர்ந்து கைக்கொள்ளும் கருத்தினன் அல்லன்.

### ஒப்புமை

*முற்றும்:*

''ஓர்த்த கருத்தும் உலகும் உணராத
மூர்க்கற் குறுதி மொழியற்க—மூர்க்கன்றான்
கொண்டதே கொண்டு விடானாகும்; ஆகாதே
உண்டது நீலம் பிறிது.'' (பழமொழி, 168.)

''..................பேதைக்கு
உரைத்தாலும் செல்லா துணர்வு.'' (சிறுபஞ்ச. 22.) (849)

## 850

**உலகத்தார் உண்டென்ப தில்என்பான் வையத்**
**தலகையா வைக்கப் படும்.** 10

**பரிமேலழகர்:** உலகத்தார் உண்டு என்பது இல் என்பான் - உயர்ந்தோர் பலரும் உண்டு என்பதோர் பொருளைத் தன் புல்லறிவான் இல்லை என்று சொல்லுவான், வையத்து அலகையா வைக்கப்படும் - மகன் என்று கருதப்படான்; வையத்துக் காணப்படுவதோர் பேய் என்று கருதப்படும்.

கடவுளும் மறுபிறப்பும் இருவினைப் பயனும் முதலாக அவர் உள என்பன பலவேனும் சாதிபற்றி உண்டென்பது என்றும், தானே வேண்டிய கூறலால் ஒப்பும், வடிவால் ஒவ்வாமையும் உடைமையின் தன் யாக்கை கரந்து மக்கள் யாக்கையுள் தோன்றுதல் வல்ல அலகை என்றும் கூறினார்.

இவை நான்கு பாட்டானும் உறுதிச்சொல் கொள்ளாமையது குற்றம் கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** இது உயர்ந்தோர் உண்டு என்பதனை இல்லை என்றல் புல்லறிவு என்றது.

**பரிதியார்:** வையத்து அலகையா வைக்கப்படும் - பூமியில் பசாசாய்த் திரிவன்.

### ஒப்புமை

**உலகத்தார் உண்டென்பது இல்லென்பான்:**

''மையற நெறியின் நோக்கி மாமறை நெறியின் நின்ற
மெய்யினைப் பொய்யென் றானும் மீள்கிலா நரகில் வீழ்வார்.''
(கம்ப. வீபீடணன். 117.) (850)

---

# 86. இகல்

**பரிமேலழகர்:** இனி, அவற்றுன் வரும் வெகுளி காமங்களுள் அரசர்க்கு வெகுளி பெரும்பான்மைத்தாகலின், அதனுன் வருவன கூறுவான் தொடங்கி, முதற்கண் இகல் கூறுகின்றுர். அஃதாவது, இருவர் தம்முள் பொருது வலி தொலைதற்கு ஏதுவாய மாறுபாடு.

## 851

இகல்என்ப எல்லா உயிர்க்கும் பகல்என்னும்
பண்பின்மை பாரிக்கும் நோய். 1

**பரிமேலழகர்:** எல்லா உயிர்க்கும் பகல் என்னும் பண்பு இன்மை பாரிக்கும் நோய் - எல்லா உயிர்கட்கும் பிற உயிர்களோடு கூடாமை என்னும் தீக்குணத்தை வளர்க்கும் குற்றம், இகல் என்ப - இகல் என்று சொல்லுவர் நூலோர்.

மக்களையும் விலங்குகளோடு ஒப்பிப்பது என்பது தோன்ற எல்லா உயிர்க்கும் என்றும், பகுதிக் குணத்தை இடைநின்று விளைத்தலின் பகலென்னும் பண்பின்மை என்றும் கூறினர். நற்குணம் இன்மை அருத்தாபத்தியால் தீக்குணம் ஆயிற்று. *(851)*

## 852

பகல்கருதிப் பற்றா செயினும் இகல்கருதி
இன்னுசெய் யாமை தலை. 2

**பரிமேலழகர்:** பகல் கருதி பற்றா செயினும் - தம்மொடு கூடாமையைக் கருதி ஒருவன் வெறுப்பன செய்தான் ஆயினும், இகல் கருதி இன்னு செய்யாமை தலை - அவனேடு மாறுபடுதலைக் குறித்துத் தாம் அவனுக்கு இன்னுதவற்றைச் செய்யாமை உயர்ந்தது.

செய்யின் பகைமை வளரத் தாம் தாழ்ந்து வரலானும், ஒழியின் அப் பற்றுதன தாமே ஓய்ந்துபோகத் தாம் ஓங்கி வரலானும் செய்யாமை தலை என்றுர். பற்றுதன என்பது விகாரம் ஆயிற்று.

### உரை வேறுபாடு

**கவிராஜ பண்டிதர்:** இவனும் பொல்லாங்கு செய்தால், பகை வளர்ந்து, இரண்டு பேரும் கெடுவர். *(852)*

## 853

இகல்என்னும் எவ்வநோய் நீக்கின் தவல்இல்லாத்
தாவில் விளக்கம் தரும். 3

**பரிமேலழகர்:** இகல் என்னும் எவ்வ நோய் நீக்கின் - மாறுபாடு என்று சொல்லப்படுகின்ற துன்பத்தைச் செய்யும் நோயை ஒருவன் தன் மனத்தினின்று நீக்குமாயினுன், தவல் இல்லா தா இல் விளக்கம் தரும் - அவனுக்கு அந் நீக்குதல் எஞ்ஞான்றும் உளதாதற்கு ஏதுவாய புகழைக் கொடுக்கும்.

தவல் இல்லாமை அருத்தாபத்தியான் அப் பொருட்டு ஆயிற்று. தாவில் விளக்கம்: வெளிப்படை. யாவரும் நண்பர் ஆவர்; ஆகவே எல்லாச் செல்வமும் எய்திக் கொடை முதலிய காரணங்களால் புகழ் பெறும் என்பதாம்,

உரை வேறுபாடு

*மணக்குடவர்:* தவல் - கேடு. தா - குற்றம்.

*காளிங்கர்:* தா - வருத்தம். (853)

## 854

இன்பத்துள் இன்பம் பயக்கும் இகல்என்னும்
துன்பத்துள் துன்பம் கெடின். 4

*பரிமேலழகர்:* இகல் என்னும் துன்பத்துள் துன்பம் கெடின் - மாறுபாடு என்று சொல்லப்படுகின்ற துன்பங்கள் எல்லாவற்றினும் மிக்க துன்பம் ஒருவனுக்கு இல்லையாயின், துன்பத்துள் இன்பம் பயக்கும் - அவ்வின்மை அவனுக்கு இன்பங்கள் எல்லாவற்றினும் மிக்க இன்பத்தினைக் கொடுக்கும்.

துன்பத்துள் துன்பம் - பலரொடு பொருது வலி தொலைதலான் யாவர்க்கும் எளியனாய் உறுவது. அதனை இடையின்றியே பயத்தலின், இகல் என்னும் என்றார். இன்பத்துள் இன்பம் - யாவரும் நட்பாகலின் எல்லாப் பயனும் எய்தி உறுவது.

உரை வேறுபாடு

*மணக்குடவர்:* எல்லா இன்பத்தின் மிக்க வீடு பேற்றின்பம் எய்தும் என்றவாறு.

*பரிதியார்:* இன்பம் வந்த காலம் இன்பம் வந்தது என்று மகிழாதவன், துன்பம் வந்த காலத்தும் துன்பப்படான். (854)

## 855

இகல்எதிர் சாய்ந்தொழுக வல்லாரை யாரே
மிகல்ஊக்கும் தன்மை யவர். 5

*பரிமேலழகர்:* இகல் எதிர் சாய்ந்து ஒழுக வல்லாரை - தம் உள்ளத்து மாறுபாடு தோன்றியவழி அதனை ஏற்றுக்கொள்ளாது சாய்ந்து ஒழுக வல்லாரை, மிகல் ஊக்கும் தன்மையவர் யார் - வெல்லக் கருதும் தன்மை உடையார் யாவர்?

இகலை ஒழித்து ஒழுகல் வேந்தர்க்கு எவ்வாற்றானும் அரிதாகலின் வல்லாரை என்றும், யாவர்க்கும் நண்பாகலின் அவரை வெல்லக் கருதுவார் யாவரும் இல்லை என்றும் கூறினார்.

இவை நான்கு பாட்டானும் இகலாதார்க்கு வரும் நன்மை கூறப்பட்டது.

உரை வேறுபாடு

*காளிங்கர்:* மிகல் என்பது மேம்பாடு. ஊக்குதல் என்பது தள்ளுதல்.

*கவிராஜ பண்டிதர்:* சாய்ந்து ஒழுக வல்லாரை - அதனைப் பேணா அதிகமாக்காமல் தள்ளிப் போடுகிறவர்களை. (855)

## 856

இகலின் மிகல்இனி தென்பவன் வாழ்க்கை
தவலும் கெடலும் நணித்து. 6

பரிமேலழகர்: இகலின் மிகல் இனிது என்பவன் வாழ்க்கை - பிறரொடு மாறுபடுதற்கண் மிகுதல் எனக்கு இனிது என்று அதனைச் செய்வானது உயிர் வாழ்க்கை, தவலும் கெடலும் நணித்து - பிழைத்தலும் முற்றக் கெடுதலும் சிறிது பொழுதுள் உளவாம்.

மிகுதல் - மேன்மேல் ஊக்குதல். இனிது என்பது, தான் வேறல் குறித்தல். பிழைத்தல், வறுமையான் இன்னாதாதல். முற்றக் கெடுதல், இறத்தல். இவற்றோடு நணித்து என்பதனைத் தனித்தனி கூட்டி,[1] உம்மைகளை எதிரதும் இறந்ததும் தழீஇய எச்சவும்மைகளாக உரைக்க. பொருட்கேடும் உயிர்க்கேடும் அப்பொழுதே உளவாம் என்பதாம்.

**ஒப்புமை**

*முற்றும்:*

"பகைநேர் வார்உள ரான பண்பினால்
உகநேர் சிந்தி உலந்த பூழிந்ததால்
மகனே கண்டிலை யோநம் வாழ்வெலாம்." (கம்ப. அரசியல். 15.)

(856)

## 857

மிகல்மேவல் மெய்ப்பொருள் காணார் இகல்மேவல்
இன்னா அறிவி னவர். 7

பரிமேலழகர்: இகல் மேவல் இன்னா அறிவினவர் - இகலோடு மேவுதலையுடைய இன்னாத அறிவினை உடையார், மிகல் மேவல் மெய் பொருள் காணார் - வெற்றி பொருந்துதலையுடைய நீதிநூற் பொருளை அறியமாட்டார்.

இன்னா அறிவு - தமக்கும் பிறர்க்கும் தீங்கு பயக்கும் அறிவு; வெற்றி வழி நின்றார்க்கு உளதாவது. காணப்படும் பயத்ததாகலின் மெய்ந்நூல் எனப்பட்டது. இகலால் அறிவு கலங்குதலின், காணார் என்றார்.

இவை இரண்டு பாட்டானும் இகலினார்க்கு வரும் தீங்கு கூறப்பட்டது.

**உரை வேறுபாடு**

மணக்குடவர்: மெய்ப் பொருள் - உண்மைப் பொருள்.

பரிப்பெருமாள்: கல்வியின்கண் -தருக்கத்தினால் மாறுபடுவாரை நோக்கிற்று.

பரிதியார்: மிகவும் பெருமை உள்ளவன் என்கிற குணம் காணார்.

காளிங்கர்: இகல்மேவல் இன்னா அறிவினவர் - சில சமயவேற்றுமை பற்றி நின்று அதன்கண் மேவுதல் பண்பிற்று ஆகிய இப்பெரியது ஓர் இன்னாத அறிவினர்.

(857)

## 858

இகலிற் கெதிர்சாய்தல் ஆக்கம் அதனை
மிகலூக்கின் ஊக்குமாம் கேடு. 8

பரிமேலழகர்: இகலிற்கு எதிர் சாய்தல் ஆக்கம்-தன் உள்ளத்து மாறுபாடு தோன்றியவழி அதனை எதிர்தலை ஒழிதல் ஒருவனுக்கு ஆக்கமாம்; அதனை மிகல் ஊக்கின் கேடு ஊக்குமாம் - அது செய்யாது அதன்கண் மிகுதலை மேற்கொள்வானாயின் கேடும் தன்கண் வருதலை மேற்கொள்ளும்.

---

1. நணித்து என்பது ஒருமையாதலின் தனித்தனி கூட்டுக என்றார்.

எதிர்தல் - ஏற்றுக்கோடல். சாய்ந்தபொழுதே வருதலின், சாய்தல் ஆக்கம் என்றார். இகலிற்கு எனவும் அதனை எனவும் வந்தன வேற்றுமை மயக்கம். (858)

## 859

இகல்காணான் ஆக்கம் வருங்கால் அதனை
மிகல்காணும் கேடு தரற்கு. 9

**பரிமேலழகர்:** ஆக்கம் வரும் கால் இகல் காணன் - ஒருவன் தன்கண் ஆக்கம் வரும்வழிக் காரணம் உண்டாயினும் இகலை நினையான், கேடு தரற்கு அதனை மிகல் காணும் - தனக்குக் கேடுசெய்து கோடற்கண் காரணம் இன்றியும் அதன்கண் மிகுதலை நினைக்கும்.

இகலான் வரும் கேடு பிறரான் அன்றென்பது தோன்றத் தரற்கு என்றார். நான்காவதும் இரண்டாவதும் ஏழாவதன்கண் வந்தன. ஆக்கக் கேடுகட்கு முன் நடப்பன இகலினது இன்மை உண்மைகள் என்பதாம். (859)

## 860

இகலான்ஆம் இன்னாத எல்லாம் நகலான்ஆம்
நன்னயம் என்னும் செருக்கு. 10

**பரிமேலழகர்:** இகலான் இன்னாத எல்லாம் ஆம் - ஒருவனுக்கு மாறுபாடு ஒன்றானே இன்னாதன எல்லாம் உளவாம்; நகலான் நன்னயம் என்னும் செருக்கு ஆம் - நட்பு ஒன்றானே நல்ல நீதி என்னும் பெரும் செல்வம் உளதாம்.

இன்னாதன - வறுமை, பழி, பாவம் முதலாயின. நகல் - மகிழ்தல். நகல் என்பதூஉம் செருக்கு என்பதூஉம் தத்தம் காரணங்கட்கு ஆயின. நயம் என்னும் செருக்கு எனக் காரியத்தைக் காரணமாக உபசரித்தார்.

இவை மூன்று பாட்டானும் அவ்விருமையும் கூறப்பட்டன,

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** உடன்பட்டு நகுதலாலே நல்ல நயமாகிய உள்ளக் களிப்பு உண்டாம்.

**பரிதியார்:** மாறுபாடு கண்டு சிரித்துப் பொறுப்பானாகில் ஆக்கமும் கெடாது; வெற்றியும் உண்டாம்.

**காளிங்கர்:** நன்னயம் என்னும் செருக்கு - நல்ல ஆசாரம் என்று சொல்லப்படுகின்ற யாவரும் மகிழும் மகிழ்ச்சி. (860)

---

# 87. பகைமாட்சி

**பரிமேலழகர்:** அஃதாவது, அறிவின்மை முதலிய குற்றங்கள் உடைமையால் பகையை மாட்சிப்படுத்தல். அரசர்க்கு எவ்வாற்றானும் பகை இன்மை கூடாமையின் மேற் பொதுவகையான் விலக்கப்பட்ட இகலை, ஈண்டுச் சிறப்பு வகையான் விதிக்கின்றார் ஆகலின், இஃது அதன்பின் வைக்கப்பட்டது.

**மணக்குடவர்:** பகைமாட்சியாவது பகைகொள்ளுங்கால் தனக்கு நன்மை பயக்குமாறு கொள்ளுதல்.

**பரிதியார்:** பகைமாட்சியாவது பகை வாரா வழியைச் சொல்வது.

## 861

வலியார்க்கு மாறேற்றல் ஓம்புக ஓம்பா
மெலியார்மேல் மேக பகை. 1

**பரிமேலழகர்:** வலியார்க்கு மாறு ஏற்றல் ஓம்புக - தம்மின் வலி யார்க்குப் பகையாய் எதிர்தலை ஒழிக; மெலியார் மேல் பகை ஓம்பா மேக - ஏனை மெலியார்க்குப் பகை ஆதலை ஒழியாது விரும்புக.

வலியார் என்புழித் துணைவலியும் அடங்கலின், மெலியார் என்புழித் துணைவலி இன்மையும் கொள்ளப்படும். அத் துணைதான் படைபொருள் முதலிய வேற்றுமைத்துணையும், நல்லறிவுடைமை நீதி நூல் வழி ஒழுகல் முதலிய ஒற்றுமைத் துணையும் என இரண்டாம். அவ்விரண்டும் இல்லாரை வெல்வார்க்கு வலி தொலையாமையின், அவரோடு பகைத்தல் விதிக்கப்பட்டது. சிங்க நோக்காகிய இதனுள் பகைமாட்சி பொதுவகையால் கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**பரிதியார்:** தன்னில் வலியார்மேலே மாறுகொள்வதை விடுக; தன்னில் எளியார்மேலும் பகையை விடுக.

**பரிப்பெருமாள்:** ஓம்பா மெலியார் - வல்லாத மெலியார்.

**காளிங்கர்:** ஓம்பா மெலியார் - தம்மைப் போற்றாத எளியார்.

### ஒப்புமை

**வலியாரைப் பகையாமை:**

"மிக்குடையர் ஆகி மிகமதிக்கப் பட்டாரை
ஒற்கப் படமுயறல் என்றல் இழுக்காகும்
நற்கெளி தாகி விடினும் நளிவரைமேல்
கற்கிள்ளிக் கையுய்ந்தார் இல்."

"ஆற்றப் பெரியார் பகைவேண்டிக் கொள்ளற்க
போற்றாது கொண்டரக்கன் போரின் அகப்பட்டான்
நோற்ற பெருமை யுடையாரும் கூற்றின்
புறம்கொம்மை கொட்டினர் இல்."

"வலியாரைக் கண்டக்கால் வாய்வாளா ராகி
மெலியாரை மீதூரும் மேன்மை யுடைமை"

"அமர்நின்ற போழ்தின்கண் ஆற்றுவா ரேனும்
நிகரொன்றின் மேல்விடுதல் ஏதம்............
கல்லொடு கைஎறியு மாறு." (பழமொழி, 36, 126, 157, 382.)

(861)

## 862

அன்பிலன் ஆன்ற துணைஇலன் தான்துவ்வான்
என்பரியும் ஏதிலான் துப்பு. 2

**பரிமேலழகர்:** அன்பு இலன் - ஒருவன் தன் சுற்றத்தின்மேல் அன் பிலன்; ஆன்ற துணை இலன் - அதுவே அன்றி வலிய துணையிலன்; தான் துவ்வான் - அதன்மேல் தான் வலி இலன்; ஏதிலான் துப்பு என் பரியும் - அப்பெற்றியான் மேல்வந்த பகைவன் வலியினை யாங்ஙனம் தொலைக்கும்?

சுற்றமும் இருவகைத் துணையும் தன்வலியும் இலனாகலின், அவன் மேற் செல்வார்க்கு வலி வளர்வதன்றித் தொலையாது என்பதாம். துவ்வான் - துவ்வினைச் செய்யான்.

### உரை வேறுபாடு

**பரிதியார்:** எல்லாரிடத்தும் பகை உள்ளவன், தனக்கு உதவியும் இல்லாதவன், இவன் கொடையும் அறியானுகில் மாற்ருரை எப்படி வெல்வன்?

**காளிங்கர்:** பகைகொளின் அல்லது யாவர்மாட்டும் அன்பு இலன்; மற்றும் தனக்கு அமைந்த துணைவலியிலன்; பின்னும் தான் ஒன்றுக்கு ஓர் துப்பிலாதான் யாவன்? அவன் என்பினையும் அரியும் ஏதிலான் கைக்கருவி.

ஏதிலான் துப்பு என்பது பகைவன் படைக்கலம்.

**கவிராஜ பண்டிதர்:** தான் துவ்வான் - சண்டைத் தொழிலும் கல்லாமல் இருக்கிறவன். என் பரியும் ஏதிலான் துப்பு - வெல்லுகிறவனுக்குப் பலம் எந்த விதத்திலேயும் கெடாது.

நல்ல துணைவரும் தயையும் சண்டைத் தொழில் வல்லமையும் இல்லாதவனை வெல்லலாம். *(862)*

## 863

அஞ்சும் அறியான் அமைவிலன் ஈகலான்
தஞ்சம் எளியன் பகைக்கு. 3

**பரிமேலழகர்:** அஞ்சும் - ஒருவன் அஞ்சவேண்டாதவற்றிற்கு அஞ்சா நிற்கும்; அறியான் – அறியவேண்டும் அவற்றை அறியான்; அமைவு இலன் – பிறரோடு பொருத்தம் இலன்; ஈகலான் – இவற்றின் மேலும் யாவர் மாட்டும் இவறன்மாலையன்; பகைக்குத் தஞ்சம் எளியன் – இப்பெற்றியான் பகைவர்க்கு மிக எளியன்.

தஞ்சம் எளியன்[1] என்பன ஒரு பொருட்பன்மொழி.[2]

இந்நான்கு குற்றமும் உடையான் பகையின்றியும் அழியும் ஆகலின் தஞ்சம் எளியன் என்ருர்.

### உரை வேறுபாடு

**பரிதியார்:** அஞ்சுதல் அறியான், அடக்கமும் அறியான், ஆகில் மாற்ருர்க்கு இவனை வெல்லல் எளிது.

**பரிப்பெருமாள்:** அறியான் - பகைவன் வலிமை அறியான்.

**காளிங்கர்:** ஒருவன் தனக்கு எதிர்காணின் அஞ்சுவது செய்யும்; பின் உற்ற வினைக்கண் கட்டும் கழறியும் அறிவது செய்யான்; அன்றியும் தன்னைச் சமைத்துக் கொள்வது ஓர் நிறைவும் இலன்; இதன்மேலும் கொடைக்கடன் அறிந்து தணிப்பதும் செய்யான் யாவன்? அவன் பிறர்க்கு மிகவும் எளியன் பகைமைக்கு. *(863)*

## 864

நீங்கான் வெகுளி நிறைஇலன் எஞ்ஞான்றும்
யாங்கணும் யார்க்கும் எளிது. 4

**பரிமேலழகர்:** வெகுளி நீங்கான் – ஒருவன் வெகுளியின் நீங்கான்; நிறை இலன்[3] - அதுவே அன்றித் தான் நிறை உடையன் அல்லன்; எஞ்

1. (பி-ம்.) 'தஞ்சம் எளிமை என்பன.'
2. "தஞ்சக் கிளவி எண்மைப் பொருட்டே" (தொல். இடை. 18.)
3. (பி-ம்.) 'நிறைவிலன்,'

ஞான்றும் யாங்கனும் யார்க்கும் எளிது - அவன்மேற் சேறல் எக்காலத்தும் எவ்விடத்தும் யார்க்கும் எளிது.

நிறை – மறைபிறர் அறியாமை[1]. வெகுடல் மாலையன் ஆகலானும் மறை வெளிப்படுத்தலானும் மேற் செல்வார்க்குக் காலமும் இடனும் வலியும் அறிந்து சேறல் வேண்டாதாயிற்று. இனி, இனிது என்று பாடம் ஓதி அவன் பகைமை இனிது என்று உரைப்பாரும் உளர்.

### உரை வேறுபாடு

**பரிதியார்:** நிறை இலன் - பொறுமை இல்லான்.

**காளிங்கர்:** நிறைவிலன் என்று பாடம் கொண்டார்.

**கவிராஜ பண்டிதர்:** நிறை - நல்ல புத்தி. (864)

## 865

வழிநோக்கான் வாய்ப்பன செய்யான் பழிநோக்கான்
பண்பிலன் பற்றார்க் கினிது. 5

**பரிமேலழகர்:** வழி நோக்கான் - ஒருவன் நீதி நூலை ஓதான்; வாய்ப்பன செய்யான் – அது விதித்த தொழில்களைச் செய்யான்; பழி நோக்கான் - தனக்கு வரும் பழியைப் பாரான்; பண்பு இலன் - தான் பண்பு உடையன் அல்லன்; பற்றார்க்கு இனிது - அவன் பகைவர்க்கு அப் பகைமை இனிது.

தொல்லோர் அடிப்பட வழங்கி வந்ததாகலான் வழி என்றும், தப்பாது பயன்படுதலின் வாய்ப்பன என்றும், இக் குற்றங்கள் உடையான் தானே அழிதலின் பற்றார்க்கு இனிது என்றும் கூறினர்.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** ஒரு வினை செய்யத் தொடங்குங்கால் பின் வருவன பாரான், பயன்படுவனவற்றைச் செய்யான், அதனால் உறும் பழியைப் பாரான், குணம் இலன்; இவன் பகைமை பகைவர்க்கு இனிதாம்.

**பரிதியார்:** ஆகிற வழியான் உலகம் பொருந்தின காரியம் செய்யான், அபகீர்த்தியும் பாரான், பண்பு இல்லாதான் ஆகில் அவனை வெல்லுதற்கு மாற்றார்க்குப் பிரியம்.

**பரிப்பெருமாள்:** வழி - பின் வருவன. வாய்ப்பன - பயன் படுவன வற்றை. (865)

## 866

காணாச் சினத்தான் கழிபெருங் காமத்தான்
பேணாமை பேணப் படும். 6

**பரிமேலழகர்:** காணா சினத்தான் - தன்னையும் பிறரையும் தான் அறியாமைக்கு ஏதுவாகிய வெகுளியை உடையான் யாவன்? கழிபெருங் காமத்தான் - மேன்மேல் வளராநின்ற மிக்க காமத்தை உடையான் யாவன்? பேணாமை பேணப்படும் – அவரது பகைமை விரும்பிக் கொள்ளப்படும்.

காணாத சினம் என்பது விகாரம் ஆயிற்று. முன்னோனுக்கு யாவரும் பகையாகலானும், ஏனோனுக்குக் காரியம் தோன்றாமையானும், தாமே அழிவர் என்பதுபற்றி, இவர் பேணாமை பேணப்படும் என்றார்.

1. "நிறையெனப் படுவது மறைபிறர் அறியாமை." (கலி. 133:12.)

உரை வேறுபாடு

**மணக்குடவர்:** காணாச் சினத்தான் - மீண்டு பாராத சினத்தன்.

**பரிதியார்:** அளவுபடாத கோபத்தை உள்ளவன், மோகாக்கினி உள்ளவன், ஆரிடத்திலும் உதாசீனம் உள்ளவன் சடுதியிலே கெடுதல் தப்பாது.

**காளிங்கர்:** பேணாமை பேணப்படும் - நெறிப்பட்டு வருவன ஒழியப் பேணாமை ஆகிய நெறிகெட வரூஉம் தனம் முதலியவற்றைக் காமித்துச் சொல்வோனுமாய் இதனால் பகையை விரும்பிக் கைக் கொள்ளப்படும்.

**கவிராஜ பண்டிதர்:** கழிபெருங் காமத்தான் - வெகுவாக வாஞ்சையை உடையவன். (866)

## 867

கொடுத்தும் கொளல்வேண்டும் மன்ற அடுத்திருந்து
மாணாத செய்வான் பகை. 7

**பரிமேலழகர்:** அடுத்து இருந்து மாணாத செய்வான் பகை - வினையைத் தொடங்கியிருந்து அதற்கு ஏலாதன செய்வான் பகைமையை, கொடுத்தும் கொளல் மன்ற வேண்டும் - சில பொருள் அழியக் கொடுத்தாயினும் கோடல் ஒருதலையாக வேண்டும்.

ஏலாதன: மெலியனாய் வைத்துத் துணிதலும், வலியனாய் வைத்துத் தணிதலும் முதலாயின. அப்பொழுது அதனால் சில பொருள் அழியினும் பின் பல பொருள் எய்தற்கு ஐயம் இன்மையின், கொளல் வேண்டும் மன்ற என்றார்.

இவை ஆறு பாட்டானும் அது சிறப்பு வகையால் கூறப்பட்டது.

உரை வேறுபாடு

**மணக்குடவர்:** அடுத்திருந்தும் - பகையை உற்றிருந்தும்.

**காளிங்கர்:** கொடுத்தும் - தமக்குச் சிறந்தது யாதானும் கொடுத்தும். (867)

## 868

குணன்இலனாய்க் குற்றம் பலஆயின் மாற்றார்க்
கினன்இலனாம் ஏமாப் புடைத்து. 8

**பரிமேலழகர்:** குணன் இலனாய் குற்றம் பல ஆயின் இனன் இலன் ஆம் - ஒருவன் குணன் ஒன்றும் இலனாய் உடைய குற்றம் பலவாய வழி அவன் துணை இலன் ஆம்; மாற்றார்க்கு ஏமாப்பு உடைத்து - அவ்விலன் ஆதல் தானே அவன் பகைவர்க்குத் துணை ஆதலை உடைத்து.

குணம் - இறைமாட்சியுட் சொல்லியன. குற்றம் - இவ்வதிகாரத்துச் சொல்லியனவும் மற்றும் அத் தன்மையனவும். துணை: சுற்றம், நட்பு, பொருள், படை முதலாயின. பகைவர்க்கு இவற்றான் உளதாம் பயன் தானே உளதாம் ஆகலின், ஏமாப்புடைத்து என்றார். இலனாய் என்னும் செய்தென் எச்சம் உடைய என வந்த பெயரெச்சக் குறிப்புக் கொண்டது.[1]

உரை வேறுபாடு

**பரிதியார்:** மாற்றார்க்கு இனன் இலன் - மாற்றார்க்கு இன்பம் இல்லாதவனாகில்.

---

1. ஆய் என்பது தன் வினைமுதல் வினையோடு முடியும் வினையெச்சமாதலின் இங்ஙனம் முடிவு கூறினார்.

காளிங்கர்: ஏமாப்பு - சேம உறுதி. இனனிலன் என்பது இணை இலன் என்றது. (868)

869

செறுவார்க்குச் சேண்இகவா இன்பம் அறிவிலா
அஞ்சும் பகைவர்ப் பெறின். 9

பரிமேலழகர்: அறிவு இலா அஞ்சும் பகைவர் பெறின் - நீதியை அறிதல் இல்லாத அஞ்சும் பகைவரைப் பெற்றால், செறுவார்க்கு சேண் இன்பம் இகவா - அவரைச் செறுவார்க்கு உயர்ந்த இன்பங்கள் நீங்கா.

உபாயம் அறிதலும் அறிந்தால் செய்து முடிக்கும் திண்மையும் இல்லாதாரே பகைவராதல் கூடாமையின் பெறின் என்றும் அவரை, அறிந்து மேற்சென்ற பொழுதே பகையின்மையும் செல்வமும் ஒருங்கே எய்தலின் சேணுடை இன்பங்கள் இகவா என்றும் கூறினர். (869)

870

கல்லான் வெகுளும் சிறுபொருள் எஞ்ஞான்றும்
ஒல்லானை ஒல்லா தொளி. 10

பரிமேலழகர்: கல்லான் வெகுளும் சிறு பொருள் ஒல்லானை – நீதி நூலைக் கல்லாதானொடு பகைத்தலான் வரும் எளிய பொருளை மேவாதானை, எஞ்ஞான்றும் ஒளி ஒல்லாது - எஞ்ஞான்றும் புகழ் மேவாது.

சிறு பொருள்-முயற்சி சிறிதாய பொருள். நீதி அறியாதானை வேறல் எளிதாயிருக்கவும் அது மாட்டாதானை வெற்றியான் வரும் புகழ் கூடாது என்பதாம்; ஆகவே, இச்சிறிய முயற்சியால் பெரிய பயன் எய்துக என்றவாறாயிற்று. இதற்குப் பிறர் எல்லாம் அதிகாரத்தோடு மாறுதல்மேலும் ஒரு பொருள் தொடர்பு படாமல் உரைத்தார்.

இவை மூன்று பாட்டானும் அதனின் ஆய பயன் கூறப்பட்டது.

உரை வேறுபாடு

மணக்குடவர்: கல்லாதானுமாய், வெகுளி உடையானுமாய், சிறு பொருளாளனு மாகிய பகைவனை எல்லா நாளும் ஒளி பொருந்தாது (870)

---

# 88. பகைத்திறம் தெரிதல்

பரிமேலழகர்: அஃதாவது, மாணாத பகையை ஆக்குதற் குற்றமும், முன் ஆகி நின்ற பகையுள் நட்பு ஆக்கற்பாலதும், நொதுமல் ஆக்கற்பாலதும், அவற்றின்கண் செய்வதும், எனைக் களைதற்பாலதன்கண் செய்வனவும், களையும் பருவமும், களையாக்கால் படும் இழுக்கும் என்று இத் திறங்களை ஆராய்தல். இரட்டுற மொழிதல் என்பதனால் பகையது திறமும், பகையிடத்து ஆக்கும் திறமும் என விரிக்கப்பட்டது.

இவையெல்லாம் மாணாப் பகை ஆகலின் இது பகைமாட்சியின் பின் வைக்கப்பட்டது.

871

பகைஎன்னும் பண்பி லதனை ஒருவன்
நகையேயும் வேண்டற்பாற் றன்று. 1

பரிமேலழகர்: பகை என்னும் பண்பு இலதனை-பகை என்று சொல்லப் படும் தீமை பயப்பதனை, ஒருவன் நகையேயும் வேண்டற்பாற்று அன்று-

ஒருவன் விளையாட்டின்கண்ணே யாயினும் விரும்புதல் இயற்கைத்தன்று, நீதி நூல்.

மாணாத பகையை ஆக்கிக்கோடல் எவ்வாற்றானும் தீமையே பயத்தலின் பண்பிலது என்றும், அதனை விளையாட்டின்கண் வேண்டினும் செற்றமே விளைந்து மெய்யாம் ஆகலின் நகையேயும் என்றும், வேண்டாமை தொல்லை யோரது துணிவு என்பார் நீதிநூல்மேல் வைத்தும் கூறினர். அப் பெயர்[1] அவாய் நிலையான் வந்தது. (871)

## 872

வில்லேர் உழவர் பகைகொளினும் கொள்ளற்க
சொல்லேர் உழவர் பகை. 2

**பரிமேலழகர்:** வில் ஏர் உழவர் பகை கொளினும் – ஒருவன் வில்லை ஏராக உடைய உழவரோடு பகைகொண்டா னாயினும், சொல் ஏர் உழவர் பகை கொள்ளற்க – சொல்லை ஏராக உடைய உழவரோடு பகை கொள்ளா தொழிக.

சொல்: ஆகுபெயரான் நீதிநூல்மேல் நின்றது. வீரம் சூழ்ச்சி என்னும் ஆற்றல்களுள் வீரமே உடையாரோடு பகைகொண்டால் கேடுவருதல் ஒருதலை யன்று; வந்ததாயினும் தனக்கே யாம்; ஏனைச் சூழ்ச்சி உடையாரோடாயின், தன் வழியின் உள்ளார்க்கும் தப்பாது வருதலின் அது கொள்ளினும் இது கொள்ளற்க என்றார். உம்மையான் அதுவும் ஆகாமை பெறுதும். இரண்டும் உடையாரோடு கொள்ளலாகாமை சொல்ல வேண்டாவாயிற்று. உருவக விசேடம்.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** இஃது அரசரோடு பகை கொள்ளினும் அமைச்ச ரோடு பகை கொள்ளலாகாது என்றது.

**காளிங்கர்:** சொல்லேருழவர் என்பது, கற்றுணர்ந்த சான்றோர் என்றது.

### ஒப்புமை

1. **வில்லேர் உழவர்:**

"வில்லே ருழவர் வெம்முனைச் சீறூர்" (நற். 3:5.)

"வில்லுழு துண்மார்"
"வில்லேர் வாழ்க்கை"
"வில்லேர் உழவின்நின் நல்லிசை" (புறநா. 170:4, 331:2, 371:13.)

"வில்லேர் வாழ்க்கை விழுத்தொடை மறவர்"
"வானம் வேண்டா வில்லேர் உழவர்" (அகநா. 35:6, 193:2.)

"மாரி வளம்பெறு வில்லே ருழவர்" (சிலப். 11:210.)

"வில்லேர் உழவர்" (பெருங். 1. 52:26.)

2. **வில்லேர் உழவர், சொல்லேர் உழவர்:**

"வரிசிலை யுழவனும் மறையுழ வனை" (கம்ப. சரபங்கர். 38.) (872)

---

1. ஈண்டு அப் பெயர் என்றது நீதிநூலை.

## 873

ஏமுற் றவரினும் ஏழை தமியனாய்ப்
பல்லார் பகைகொள் பவன். 3

**பரிமேலழகர்:** தமியனாய் பல்லார் பகை கொள்பவன் தான் தனியனாய் வைத்துப் பலரோடு பகை கொள்வான், ஏமுற்றவரினும் ஏழை - பித்துற்றாரினும் அறிவிலன்.

தனிமை: சுற்றம் நட்பு படை முதலிய இன்மை. மயக்கத்தால் ஒப்பாராயினும் ஏமுற்றவர் அதனால் தீங்கு எய்தாமையின், தீங்கு எய்துதலுமுடைய இவனை அவரினும் ஏழை என்றார். தீங்காவது துணையுள் வழியும் வேறல் ஐயமாயிருக்க, அஃது இன்றியும் பலரோடு பகைகொண்டு அவரால் வேறு வேறு பொருதற்கண்ணும் ஒருங்கு பொருதற்கண்ணும் அழிந்தே விடுதல்.

இவை மூன்று பாட்டானும் பகைகோடற் குற்றம் பொதுவினும் சிறப்பினும் கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**பரிதியார்:** ஏமுற்று ஏழையாய்த் திரிவன்.

**காளிங்கர்:** ஏமுற்றவர் - பேய் கொண்டவர். (873)

## 874

பகைநட்பாக் கொண்டொழுகும் பண்புடை யாளன்
தகைமைக்கண் தங்கிற் றுலகு. 4

**பரிமேலழகர்:** பகை நட்பா கொண்டு ஒழுகும் பண்புடையாளன் தகைமைக்கண் - வேண்டியவழிப் பகையை வேறுபடுத்துத் தனக்கு நட்பாகச் செய்துகொண்டு ஒழுகும் இயல்பினை உடைய அரசனது பெருமையுள்ளே, தங்கிற்று உலகு – அடங்கிற்று இவ் வுலகு.

வேண்டிய வழியென்பது ஆக்கத்தான் வந்தது. வேறு படுத்தல்: பகைநிலைமையின் நீக்குதல். ஒழுகல் - நீதிவழி ஒழுகல். பெருமை: பொருள், படையென இருவகைத்தாய ஆற்றல். அதன் வழித்தாதற்கு எஞ்ஞான்றும் திரிபு இன்மையின், அத் துணிவு பற்றித் தங்கிற்று என்றார்.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** பகைவரை நட்புப் போலக் கொண்டொழுக வல்ல பண்புடையவன்.

**காளிங்கர்:** பகை நட்பாக் கொண்டொழுகும் - பகை தானே வந்து மென்மை செய்யுங்காலத்து இரங்கிப் பின் தான் ஒருவன் பகைமை செய்யாது நட்பாகக் கொண்டு ஒழுகும். உலகு என்பது ஒழுக்கம். (874)

## 875

தன்துணை இன்றால் பகைஇரண்டால் தான்ஒருவன்
இன்துணையாக் கொள்கவற்றின் ஒன்று. 5

**பரிமேலழகர்:** தன் துணை இன்று – தனக்கு உதவும் துணையோ எனின் இல்லை; பகை இரண்டு - நலிவு செய்யும் பகையோ எனின் இரண்டு; ஒருவன் தான் அவற்றின் ஒன்று இன் துணையா கொள்க - அங்ஙனமாய் நின்றவழி ஒருவனாகிய தான் அப்பகை இரண்டனுள் பொருந்தியது ஒன்றை அப்பொழுதைக்கு இனிய துணையாகச் செய்துகொள்க.

பொருந்தியது: ஏனையதனை வேறற்கு ஏற்றது. அப்பொழுது: அவ் வெல்லும் பொழுது. திரிபின்றாகச் செய்துகொள்க என்பார், இன் துணையா என்றார். ஆல், கள்: அசை.

இவை இரண்டு பாட்டானும் நட்பு ஆக்கற்பாலது கூறப்பட்டது.

**உரை வேறுபாடு**

**பரிதியார்:** தனக்குத் துணை இல்லாதபோது தன் மாற்றார்க்கு இரண்டு பகை உண்டாகில் அவர்களில் பலவானானவனைத் தனக்குத் துணையாகக் கொள்வன். (875)

## 876

தேறினும் தேறா விடினும் அழிவின்கண்
தேறான் பகாஅன் விடல். 6

**பரிமேலழகர்:** தேறினும் தேறாவிடினும் - பகைவனை முன் தெளிந்தான் ஆயினும் தெளிந்திலன் ஆயினும், அழிவின்கண் தேறான் பகாஅன் விடல் - தனக்குப் புறத்தொரு வினையால் தாழ்வு வந்துழிக் கூடாது நீக்காது இடையே விட்டு வைக்க.

முன் தெளிந்தானாயினும் அப்பொழுது கூடாதொழிக என்றது, உள்ளாய் நின்று கெடுத்தல் நோக்கி. தெளிந்திலனாயினும் அப்பொழுது நீக்காதொழிக என்றது, அவ் வழிவிற்குத் துணையாதல் நோக்கி. இதனான் நொதுமல் ஆக்கற்பாலது கூறப்பட்டது.

**உரை வேறுபாடு**

**பரிதியார்:** அறிந்தும் அறியான், அழிந்த பேரைக் கண்டும் அறியான், புத்தியும் கேளான், அவனைக் கைவிடுக.

**காளிங்கர்:** பகை என்று தேறினும் தேறாவிடினும் ஒருவர் இடரின்கண் பெரிதும் தேறும் பண்பிலனுமாகித் தம்மைவிட நீங்காதானும் ஆயின், மற்று அவன் திறம் தெரிந்து அவனைக் கைவிடுக. எனவே, இவனும் ஒருவர்க்கு உள்ளுறு பகை என்பது பொருளாயிற்று. (876)

## 877

நோவற்க நொந்த தறியார்க்கு மேவற்க
மென்மை பகைவ ரகத்து. 7

**பரிமேலழகர்:** நொந்தது அறியார்க்கு நோவற்க - நொந்ததனைத் தாமாக அறியாத நட்டார்க்குத் தன் நோவு சொல்லற்க; மென்மை பகைவர் அகத்து மேவற்க - வலியின்மை பார்த்திருக்கும் பகைவர்மாட்டு அவ் வலியின்மையை மேலிட்டுக் கொள்ளற்க.

நோ என்னும் முதல்நிலைத் தொழிற்பெயர் ஈண்டு அது சொல்லுதற்கண் ஆயிற்று. பகைவர்கண் தவிர்வது கூறுவார், நட்டார்கண் தவிர்வதும் உடன்கூறினார். இதனான் அவ் விருபகுதிக்கண்ணும் செய்வது கூறப்பட்டது.

**உரை வேறுபாடு**

**காளிங்கர்:** தம் துயர்க்கு ஒருவர் நொந்தது மதியாதாரும் பகைவரின் ஒரு கூற்றரே வேறு அல்லர் என்பதனால் இதனை எடுத்து ஓதினார் என அறிக. என்னை? காஞ்சிரம் பிஞ்சும் காஞ்சிர மரமும் இத்துணை அல்லது பிறிதொன்று ஆகாதாற் போல. (877)

## 878

**வகைஅறிந்து தற்செய்து தற்காப்ப மாயும்**
**பகைவர்கண் பட்ட செருக்கு.** 8

**பரிமேலழகர்:** வகை அறிந்து தன் செய்து தன் காப்ப - தான் வினை செய்யும் வகையை அறிந்து அது முடித்தற்கு ஏற்பத் தன்னைப் பெருக்கி மறவி புகாமல் தன்னைக் காக்கவே, பகைவர்கண் பட்ட செருக்கு மாயும் - தன் பகைவர்மாட்டு உளதாய களிப்புக் கெடும்.

வகை-வலியனுயத் தான் எதிரே பொருமாறும், மெலியனுய அளவில் போர் விலக்குமாறும் முதலாயின. பெருக்கல்: பொருள் படைகளால் பெருகச் செய்தல். களிப்பு: இவற்றுன் வேறும் என்று எண்ணி மகிழ்ந்திருத்தல். இவ் விறுகுதல் அறிந்து தாமே அடங்குவர் என்பதாம்.

இதனுன் களைதற்பாலதன்கண் செய்வன கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**பரிதியார்:** தனக்குப் பகையாகிய பகைவற்குப் பகைவனுகிய பெரியோனிடத்தில் சேரில்.

### ஒப்புமை

**முற்றும்:**

"பகடுபுறந் தருநர் பாரம் ஓம்பிக்
குடிபுறந் தருகுவை யாயின்நின்
அடிபுறந் தருகுவர் அடங்கா தோரே" **(புறநா. 35: 32-4.)**

"உற்றதற் கெல்லாம் உரஞ்செய்தல் வேண்டுமோ
கற்றறிந்தார் தம்மை வெகுளாமைக் காப்பமையும்
நெற்செய்யப் புற்றேய்ந்தாற் போல நெடும்பகை
தற்செய்யத் தானே கெடும்." *(பழமொழி, 83.)*

"நேர்ஓ டுங்கலில் பகையினை நீதியால் வெல்லும்
சோர்வி டம்பெறு வுணர்வினன் சூழ்ச்சியே போல."
*(கம்ப. வரைக்காட்சி. 2.)* (878)

## 879

**இளைதாக முள்மரம் கொல்க களையுநர்**
**கைகொல்லும் காழ்த்த இடத்து.** 9

**பரிமேலழகர்:** முள் மரம் இளைது ஆக கொல்க - களையவேண்டுவதாய முள் மரத்தை இளைதாய நிலைமைக்கண் களைக; காழ்த்த இடத்து களையுநர் கை கொல்லும் - அன்றியே முதிர்ந்த நிலைமைக்கண் களையலுறின் களைவார் கையினை அதுதான் களையும்.

களையப்படுவதாய தம் பகையை அது மெலிதாய காலத்தே களைக, அன்றியே வலிதாய காலத்துக் களையலுறின் தம்மை அதுதான் களையும் என்பது தோன்ற நின்றமையின், இது பிறிது மொழிதல்.

இதனுல் களையும் பருவம் கூறப்பட்டது.

ஒப்புமை

முற்றும்:

"எதிர்த்த பகையை இளைதாய போழ்தே
கதித்துக் களையின் முதிராதே தீர்த்து
நனிநயப்பச் செய்தவர்" (பழமொழி, 390.)

"மற்றிக் காலத் தல்லது மேற்சென்று
வெற்றிக் காலத்து வீட்டுதல் அரிதென" (பெருங். 4.8: 53-4.)

"பஞ்சியின் மெல்லி தேனும் பகைசிறி தென்ன வேண்டா
அஞ்சித்தற் காத்தல் வேண்டும் அரும்பொரு ளாக என்றான்"
(சீவக. 1894.)

"எரியும் தீத்திரள் எட்டுணை யாயினும்
கரியச் சுட்டிடும் காந்திக் கனலுமேல்
தெரியில் தொல்பகை தான்சிறி தாயினும்
விரியப் பெற்றபின் வென்றிடு கிற்குமே."

"முட்கொள் நச்சு மரமுளை யாகவே
உட்க நீக்கின் உகிரினும் நீக்கலாம்
வட்க நீண்டதன் பின்மழுத் தள்ளினும்
கட்கொ டாமன்ன யார்களை கிற்பவே."
(சூளாமணி, சீயவதை. 71, 72.)

"அருப்பம் என்று பகையையும் ஆரழல்
நெருப்பை யும்இகழ்ந் தால்அது நீதியோ."
(கம்ப. முதற்போர். 92.) (879)

880

**உயிர்ப்ப உளர்அல்லர் மன்ற செயிர்ப்பவர்**
**செம்மல் சிதைக்கலா தார். 10**

பரிமேலழகர்: செயிர்ப்பவர் செம்மல் சிதைக்கலாதார் - தம்மொடு பகைப்பாரது தருக்கினைக் கெடுக்கலாயிருக்க இகழ்ச்சியான் அது செய்யாத அரசர், உயிர்ப்ப உளர் அல்லர் மன்ற - பின் உயிர்க்கும் மாத்திரத்திற்கும் உளர்அல்லர் ஒருதலையாக.

அவர் வலியராய்த் தம்மைக் களைதல் ஒருதலையாகலின், இறந்தாரே ஆவர் என்பதாம். அவர் உயிர்த்த துணையானே தாம் இறப்பர் எனினும் அமையும். இதனால் களையாவழிப் படும் இழுக்குக் கூறப்பட்டது.

உரை வேறுபாடு

மணக்குடவர்: இது பகை கொள்ளுங்கால் வலியாரோடு பகை கொள்ளல் ஆகாது என்றது. (880)

---

# 89. உட்பகை

பரிமேலழகர்: அஃதாவது, புறப்பகைக்கு இடனாக்கிக் கொடுத்து அது வெல்லுந் துணையும் உள்ளாய் நிற்கும் பகை. இதுவும் களையப்படுவதன் பாலதாகலின் பகைத்திறம் தெரிதலின்பின் வைக்கப்பட்டது.

**மணக்குடவர்:** உட்பகையாவது உடனே வாழும் பகைவர் செய்யும் திறம் கூறுதல்.

## 881

நிழல்நீரும் இன்னாத இன்னா தமர்நீரும்
இன்னாஆம் இன்னா செயின். 1

**பரிமேலழகர்:** நிழல் நீரும் இன்னாத இன்னா - ஒருவனுக்கு அநுபவிக்க வேண்டுவனவாய நிழலும் நீரும் முன் இனியவேனும் பின் நோய் செய்வன இன்னாவாம்; தமர் நீரும் இன்னா செயின்[1] இன்னாஆம் - அதுபோலத் தழுவ வேண்டுவனவாய தமர் இயல்புகளும் முன் இனியவேனும் பின் இன்னா செய்வன இன்னாவாம்.

நோய்: பெருங்கால், பெருவயிறு முதலாயின. தமர் என்றதனால் உட்பகையாதற்கு உரியராய ஞாதியர் என்பது அறிக. இன்னா செயல்-முன் வெளிப்படாமை நின்று துணைபெற்றவழிக் கெடுத்தல்.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** நிழலகத்து நீர் இனிதேயாயினும் அவற்றுள் இன்னாத செய்யும் நீர் இன்னாதாகும். அதுபோல, சுற்றத்தார் நன்மை இனிதாயினும் அவர் இன்னாதவற்றைச் செய்வாராயின், அஃது இன்னாதாயே விடும்.

**பரிதியார்:** நிழல் சேர்ந்தநீர் அழகு ஆனாலும் வியாதியைத் தருவது போல, உறவின் முறையும் நல்லவர்களாகில் நன்மையைத் தரும்; அல்லது கேட்டைத் தரும்.

**காளிங்கர்:** உலகத்துப் பொதுவகையாக நிழலும் நீரும் இனிய எனினும் சில நச்சுமரமும் நச்சுப் பொய்கையும் என்பன உள அன்றே; மற்று அவை ஏனை நிழலும் நீரும் போன்று இருந்தும், இருந்தோரும் அருந்தினோரும் இறந்துபடும் திறம் விளையும். *(881)*

## 882

வாள்போல் பகைவரை அஞ்சற்க அஞ்சுக
கேள்போல் பகைவர் தொடர்பு. 2

**பரிமேலழகர்:** வாள்போல் பகைவரை அஞ்சற்க - வாள்போல எறிதும் என்று வெளிப்பட்டு நிற்கும் பகைவர் பகையினை அஞ்சாதொழிக; கேள்போல் பகைவர் தொடர்பு அஞ்சுக - அங்ஙனம் நில்லாது கேள் போல மறைந்து நிற்கும் பகைவர் நட்பினை அஞ்சுக.

பகைவர்: ஆகுபெயர். முன்னே அறிந்து காக்கப்படுதலான் அஞ்சற்க என்றும், அங்ஙனம் அறியவும் காக்கவும் படாமையின் கெடுதல் ஒருதலை என்பது பற்றி அஞ்சுக என்றும் கூறினர். பின் செய்யும் பகையினும் கொடிதாகலானும், காக்கலாகாதது ஆகலானும் அஞ்சப்படுவது முன் செய்த அவர் தொடர்பாயிற்று.

இவை இரண்டு பாட்டானும் உட்பகை ஆகாதென்பது கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** கேள்போல் பகைவர் - முகம் நட்டாரைப்போல மனத்தினால் பகைத்திருப்பார்.

---

1. (பி - ம்.) செயல்,

ஒப்புமை

1. கேள்போல் பகைவர்:

"கண்ணின் மணியேபோல் காதலராய் நட்டாரும்
உண்ணும் துணையும் உளராய்ப் பிறராவர்
எண்ணி உயிர்கொள்வான் ஏன்று திரியினும்
உண்ணும் துணைகாக்கும் கூற்று." (பழமொழி, 89,)

2. முற்றும்:

"இம்மைப் பழியும் மறுமைக்குப் பாவமும்
தம்மைப் பரியார் தமர்போல் அடைந்தாரின்
செம்மைப் பகைகொண்டு சேராதார் தீயரோ
மைம்மைப்பின் நன்று குருடு." (பழமொழி, 188.)

"நண்ணின மனிசரை நண்பு பூண்டனை
எண்ணினை செய்வினை என்னை வெல்லுமா
றுன்னினை அரசின்மேல் ஆசை யூன்றினை
திண்ணிதுன் செயல்பிறர் செறுநர் வேண்டுமோ."
(கம்ப. விபீடணன். 6.) (882.)

## 883

**உட்பகை அஞ்சித்தற் காக்க உலைவிடத்து**
**மட்பகையின் மாணத் தெறும்.** 3

**பரிமேலழகர்:** உட்பகை அஞ்சி தன் காக்க-உட்பகை ஆயினரை அஞ்சித் தன்னைக் காத்துக்கொண்டு ஒழுகுக; உலைவிடத்து மண்பகையின் மாண தெறும் - அங்ஙனம் ஒழுகாத வழித் தனக்கு ஓர் தளர்ச்சி வந்தவிடத்துக் குயவன் மட்கலத்தைஅறுக்கும் கருவிபோல அவர் தப்பாமல் கெடுப்பர்.

காத்தல் - அவர் அணையாமலும் அவர்க்கு உடம்படாமலும் பரிகரித்தல். மண்ணைப் பகுக்கும் கருவி மட்பகை எனப்பட்டது. பகைமை தோன்றாமல் உள்ளாயிருந்தே கீழறுத்தலின், கெடுதல் தப்பாது என்பதாம்.

உரை வேறுபாடு

**காளிங்கர்:** என் எனின் தனக்கு ஓர் தளர்ச்சி வந்த இடத்தே கரை படக் கட்டிய மண் உறுதிக்கு ஒரு தளர்ச்சிவந்த இடத்து மற்று அதனை முழுவதும் முரித்து எறியும் வெள்ளம்போல்[1] இதுவும் தன் குடி முழுதும் குலைத்து எறிந்துவிடும்.

ஒப்புமை

உட்பகை :

"..................இன்னுதே
ஒற்றுமை கொள்ளாதார் நட்பு." (நாலடி. 237.) (883)

## 884

**மனம்மாணு உட்பகை தோன்றின் இனம்மாணு**
**ஏதம் பலவும் தரும்.** 4

**பரிமேலழகர்:** மனம் மாணு உள் பகை தோன்றின் – புறம் திருந்தியது போன்று அகம் திருந்தாத உட்பகை அரசனுக்கு உண்டாவதாயின், இனம்

1. மட்பகை என்பதற்கு வெள்ளம் என்று பொருள் கொண்டார்.

மாணு ஏதம் பலவும் தரும் - அஃது அவனுக்குச் சுற்றம் வயம் ஆகாமைக்கு ஏதுவாகிய குற்றம் பலவற்றையும் கொடுக்கும்.

அவை சுற்றத்தாரை உள்ளாய் நின்று வேறு படுத்தலும், அதனல் அவர் வேறுபட்டவழித் தான் தேருமையும், பின் அவற்ருன் விளைவனவும் ஆம்.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** இனம் மாணு - தனக்கு இனமாயினர் நல்லராகார்.

**பரிதியார்:** மனப் பொல்லாங்கினுலே உட்பகை தோன்றலின் இனத்தைக் கெடுத்துப் பேதையாகிய சிறுமை தரும் உட்பகையாவது உறவின் முறையார் பகை என அறிக.

**கவிராஜ பண்டிதர்:** உள்ளுறவு இல்லாதவர்கள் காலம் பார்த்துக் கொண்டு கெடுப்பர்.

### ஒப்புமை

**மனம் மாணு உட்பகை:**

"தமரல் லவரைத் தலையளித்தக் கண்ணும்
அமராக் குறிப்பவர்க் காகாதே தோன்றும்
சுவர்நிலம் செய்தமைத்துக் கூட்டியக் கண்ணும்
உவர்நிலம் உட்கொதிக்கு மாறு." (பழமொழி, 144.) (884)

## 885

உறல்முறையான் உட்பகை தோன்றின் இறல்முறையான்
ஏதம் பலவும் தரும். 5

**பரிமேலழகர்:** உறல் முறையான் உள் பகை தோன்றின் - புறத்து உறவுமுறைத் தன்மையோடு கூடிய உட்பகை அரசனுக்கு உண்டாவதாயின், இறல் முறையான் ஏதம் பலவும் தரும் - அஃது அவனுக்கு இறத்தல் முறையோடு கூடிய குற்றம் பலவற்றையும் கொடுக்கும்.

அவை, புறப்பகை துணையாய் நின்றே அது தோன்ருமல் கோறல் முதலிய வஞ்சனை செய்தலும், அமைச்சர் முதலிய உறுப்புகளைத் தேய்த்தலும் முதலாயின.

### உரை வேறுபாடு

**பரிதியார்:** ஏதம் - விதனம்.

### ஒப்புமை

**உறன் முறையால் உட்பகை தோன்றல்:**

"வேறும் என்னெடு தரும்பகைபிறிதினி வேண்டலென் வினையத்தால்
ஊறி என்னுளே உதித்தது குறிப்பினி உணர்குவ துளதன்ருல்
ஈறில் என்பெரும் பகைஞனுக் கன்புசால் அடியென்யான்
என்கின்ருன்." (கம்ப, இரணியன். 80.) (885)

## 886

ஒன்ருமை ஒன்றியார் கட்படின் எஞ்ஞான்றும்
பொன்ருமை ஒன்றல் அரிது. 6

**பரிமேலழகர்:** ஒன்றாமை ஒன்றியார்கண் படின் - பகைமை தனக்கு உள்ளாயினர் மாட்டே பிறக்குமாயின், பொன்றாமை ஒன்றல் எஞ்ஞான்றும் அரிது - அரசனுக்கு இறவாமை கூடுதல் எஞ்ஞான்றும் அரிது.

பொருள் படை முதலிய உறுப்புக்களால் பெரியன ஆய காலத்தும் என்பார், எஞ்ஞான்றும் என்றார்.

இவை நான்கு பாட்டானும் அதனால் தனக்கு வரும் தீங்கு கூறப் பட்டது. (886)

## 887

**செப்பின் புணர்ச்சிபோல் கூடினும் கூடாதே**
**உட்பகை உற்ற குடி.** 7

**பரிமேலழகர்:** செப்பின் புணர்ச்சிபோல் கூடினும் – செப்பினது புணர்ச்சிபோலப் புறத்து வேற்றுமை தெரியாமல் கூடினாராயினும், உள்பகை உற்ற குடி கூடாது - உட்பகை உண்டாய குடியில் உள்ளார் அகத்துத் தம்முள் கூடார்.

செப்பினது - புணர்ச்சி செப்பு மூடியோடு புணர்ந்த புணர்ச்சி. உட் பகையான் மனம் வேறுபட்டமையின் புறப்பகை பெற்றுழி வீற்று வீற்றாவர் என்பதாம். குடி கூடாது என்பதனை நாடு வந்தது என்பதுபோலக் கொள்க. உட்பகை தான் உற்ற குடியோடு கூடாதென்றும், உட்பகை உண்டாய குடி அப் பகையோடு கூடாது என்றும் உரைப்பாரும் உளர்.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** உட்பகையும் அஃது உற்ற குடியும், செப்பும் மூடியும் பொருந்தினாற்போலப் பொருந்தினவாயினும், பொருத்தம் இல்லவாம்.

உட்பகை உற்றார் செப்பும் மூடியும் ஒன்றுபட்டாற்போல இருந்து செப்பகத்துப் பொருள் வாங்குவார்க்கு மூடி துணையாய் அகன்று நிற்குமது போல அகன்று நிற்பர் என்றவாறு.

**பரிப்பெருமாள்:** செப்பிற்கு உவமை குடி; மூடிக்கு உவமை உட்பகை.

**பரிதியார்:** செப்பும் மூடியும் போலக் கூடியிருந்தும் செப்பு இரண் டானாற் போலே உட்பகையும் இப்படி இருந்தும் பிரிந்தவர். (887)

## 888

**அரம்பொருத பொன்போலத் தேயும் உரம்பொரு**
**துட்பகை உற்ற குடி.** 8

**பரிமேலழகர்:** உள் பகை உற்ற குடி - முன் வளர்ந்து வந்ததாயினும் உட்பகை உண்டாய குடி, அரம் பொருத பொன் போல பொருது உரம் தேயும் - அரத்தால் பொரப்பட்ட இரும்பு போல அதனால் பொரப்பட்டு வலி தேயும்.

பொருது என்னும் செயப்பாட்டு வினையெச்சம் தேயும் என்னும் வினை கொண்டது. அஃது உரத்தின் தொழிலாயினும் குடிமேல் ஏற்றுதலின், வினை முதல் வினையாயிற்று. காரியம் செய்வது போன்று பொருந்தி மெல்ல மெல்லப் பிரிவித்தலான், வலி தேய்ந்து விடும் என்பதாம்.

இவை இரண்டு பாட்டானும் அவன் குடிக்கு வரும் தீங்கு கூறப் பட்டது.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** பொன்போல - பொன்னைப் போல. (888)

## 889

எட்பக வன்ன சிறுமைத்தே ஆயினும்
உட்பகை உள்ள தாம் கேடு. 9

**பரிமேலழகர்:** உட்பகை எள் பகவு அன்ன சிறுமைத்தே ஆயினும் - அரசனது உட்பகை அவன் பெருமையை நோக்க எள்ளின் பிளவை ஒத்த சிறுமை உடைத்தே ஆயினும், கேடு உள்ள தாம் - பெருமை யெல்லாம் அழிய வரும் கேடு அதன் அகத்ததாம்.

எத்துணையும் பெரியதாய கேடு தனக்கு எல்லை வருந்துணையும் எத் துணையும் சிறிதாய உட்பகையுள்ளே அடங்கியிருந்து, வந்தால் வெளிப்பட்டு நிற்கும் என்பதாம். இதனன் அது சிறிதென்று இகழப்படாது என்பது கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**பரிதியார்:** எட்பகவு - எள்ளின் பாதி. *(889)*

## 890

உடம்பா டிலாதவர் வாழ்க்கை குடங்கருள்
பாம்போ டுடன்உறைந் தற்று. 10

**பரிமேலழகர்:** உடம்பாடு இலாதவர் வாழ்க்கை - மனப் பொருத்தம் இல்லாதாரோடு கூட ஒருவன் வாழும் வாழ்க்கை, குடங்கருள் பாம்போடு உடன் உறைந்தற்று-ஒரு குடிலுள்ளே பாம்போடு கூட உறைந்தாற்போலும்.

குடங்கம் என்னும் வடசொல் திரிந்து நின்றது. இடச் சிறுமையானும் பயிற்சியானும் பாம்பால் கோட்படல் ஒருதலையாம்; ஆகவே, அவ்வுவமையால் அவன் உயிர்க்கு இறுதி வருதல் ஒருதலை என்பது பெற்றும். இதனன் கண்ணோடாதவரைக் கடிகவென்பது கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**பரிதியார்:** ஒரு குடத்திலே பாம்பும் கருடனும் இருப்பதற்கு ஒக்கும்.

**காளிங்கர்:** குடங்கர் - பெரும்பேழை.

### ஒப்புமை

*1.* **உடம்பாடு இலாதவர் வாழ்க்கை தீது:**

"நாணுர் பரியார் நயனில செய்தொழுகும்
பேணு அறிவிலா மாக்களைப் பேணி
ஒழுக்கி அவரோ டுடனுறை செய்தல்
புழுப்பெய்து புண்பொதியு மாறு." (பழமொழி, *142.*)

2. **குடங்கருள் பாம்போடு உடனுறைதல்:**

"பாம்போடு ஒருகூரையிலே பயின்றாற்போல்"
(பெரிய திருமொழி. *11. 8:3.*)

3. முற்றும்:

"பாம்புறையும் புற்றன்னர் புல்லறிவினர்" (நான்மணி. 56.)

"தலைமை கருதும் தகையாரை வேந்தன்
நிலைமையான் நேர்செய் திருத்தல்—மலைமிசைக்
காம்பனுக்கு மென்தோளாய் அஃதாலவ் வோரறையுட்
பாம்போ டுடனுறையு மாறு." (பழமொழி, 349.)

"கவ்வர வதுவென இருத்திர் கற்பெனும்
அவ்வரம் பழித்துமை அகத்து ளேவைத்த
வெவ்வரம் பொருதவேல் அரசை வேரறுத்
திவ்வரங் கொண்டநீர் இனியென் கோடிரோ."

"வாழ்மனை புகுந்த தாண்டோர் மாசுணம் வரக்கண் டன்ன
கோளுறக் கொதித்து விம்மி யுழையரைக் கூவிச் சொன்னன்."
(கம்ப. பள்ளியடை. 75, மாரீசன். 164.) (890)

---

# 90. பெரியாரைப் பிழையாமை

**பரிமேலழகர்:** அஃதாவது, பெரியராயினரை அவமதித்து ஒழுகாமை. இரட்டுற மொழிதல் என்பதனல் பெரியாரென்பது ஆற்றலாற் பெரியாராய வேந்தர்மேலும் தவத்தால் பெரியாராய முனிவர்மேலும் நின்றது. மேல் சொல்லாது எஞ்சி நின்றதாகலின், இது வெகுளியான் வருவனவற்றது இறுதிக்கண் வைக்கப்பட்டது.

**மணக்குடவர்:** பெரியாரைப் பிழையாமையாவது, தம்மிற் பெரிய அரசரையும் முனிவரையும் அறிஞரையும் பிழைத்து ஒழுகாமை. மேல், பகையும் பகையின்கண் செய்யும் திறமும் கூறினர், இது தம்மிற் பெரியார் தம்மைப் பகையாகக் கொள்ளாராயினும் தமது இகழ்ச்சி அவரால் தீமை பயக்குமாதலின் அதன்பின் இது கூறப்பட்டது.

**பரிதியார்:** பெரியாரைப் பிழையாமையாவது பெரியவர்க்கு ஒரு குற்றமும் செய்யாமை.

**891**

**ஆற்றுவார் ஆற்றல் இகழாமை போற்றுவார்**
**போற்றலுள் எல்லாம் தலை.** 1

**பரிமேலழகர்:** ஆற்றுவார் ஆற்றல் இகழாமை - எடுத்துக்கொண்டன யாவும் முடிக்க வல்லாருடைய ஆற்றல்களை அவமதியாமை, போற்றுவார் போற்றலுள் எல்லாம் தலை - தங்கண் தீங்கு வராமல் காப்பார் செய்யும் காவல்கள் எல்லாவற்றினும் மிக்கது.

ஆற்றல் என்பது பெருமை, அறிவு, முயற்சி என்னும் மூன்றன் மேலும்[1] நிற்றலின் சாதியொருமை. இகழ்ந்தவழிக் களைய வல்லார் என்பது தோன்ற ஆற்றுவார் என்றும், அரண், படை, பொருள், நட்பு முதலிய பிற காவல்கள் அவரான் அழியுமாகலின் அவ் விகழாமையைத் தலையாய காவல் என்றும் கூறினர். பொது வகையால் அவ்விரு திறத்தாரையும் பிழையாமையது சிறப்பு இதனல் கூறப்பட்டது.

---

1. 'அறிவு, ஆண்மை, பெருமை என்னும் மூவகையாற்றலுள்' என்றார் முன்னும் (466, உரை.)

உரை வேறுபாடு

**பரிதியார்:** போற்றுதற்கரிய காரியமான தன்மத்திலும் பெரிய காரியம். *(891)*

## 892

பெரியாரைப் பேணா தொழுகிற் பெரியாரால்
பேரா இடும்பை தரும். 2

**பரிமேலழகர்:** பெரியாரைப் பேணாது ஒழுகின் - ஆற்றல்களால் பெரியார் ஆயினாரை வேந்தர் நன்கு மதியாது அவமதித்து ஒழுகுவாராயின், பெரியாரால் பேரா இடும்பை தரும் - அவ்வொழுக்கம் அப் பெரியாரால் அவர்க்கு எஞ்ஞான்றும் நீங்காத துன்பங்களைக் கொடுக்கும்.

அத் துன்பங்களாவன, இருமையினும் இடையறாது வரும் மூவகைத் துன்பங்களும்[1] ஆம். அவையெல்லாம் தாமே செய்து கொள்கின்றனரென்பது தோன்ற, ஒழுக்கத்தை வினை முதலாக்கியும் பெரியாரைக் கருவியாக்கியும் கூறினார். பொதுவகையால் அவரைப் பிழைத்தற்குற்றம் இதனால் கூறப் பட்டது. இனிச் சிறப்பு வகையால் கூறுப.

உரை வேறுபாடு

**காளிங்கர்:** பேரா - பேணிக்கோடற் கரிதாகிய பெரிய.

**கவிராஜ பண்டிதர்:** நீங்காத துன்பங்களாவன, இம்மையிலே தீரா மல் மறுமையிலேயும் அநுபவிக்கிற நரக துன்பங்களாம்.

ஒப்புமை

**முற்றும்:**

"பொறுப்பர்என் றெண்ணிப் புரைதீர்ந்தார் மாட்டும்
வெறுப்பன செய்யாமை வேண்டும்—வெறுத்தபின்
.........பேர்க்குதல் யார்க்கும் அரிது" (நாலடி. 161.)

"தீயன கொடியவள் செய்த செய்கையை
நாயினேன் உணரின்நன் னெறியில் நீங்கலாத்
தூயவர்க் கிடரிழைத் துழலும் தோமுடை
ஆயவர் வீழ்கதி அதனில் வீழ்கயான்." (கம்ப. பள்ளியடை. 116.)
(892)

## 893

கெடல்வேண்டிற் கேளாது செய்க அடல்வேண்டின்
ஆற்று பவர்கண் இழுக்கு. 3

**பரிமேலழகர்:** அடல் வேண்டின் ஆற்றுபவர்கண் இழுக்கு - வேற்று வேந்தரைக் கோறல் வேண்டிய வழி அதனை அப்பொழுதே செய்ய வல்ல வேந்தர்மாட்டுப் பிழையினை, கெடல் வேண்டின் கேளாது செய்க - தான் கெடுதல் வேண்டினானாயின் ஒருவன் நீதி நூலைக் கடந்து செய்க.

அப் பெரியாரை, "காலனுங் காலம் பார்க்கும் பாராது, வேலீண்டு தானை விழுமியோர் தொலைய, வேண்டிடத் தடூஉம் வெல்போர் வேந்தர்"[2] என்றார் பிறரும். நீதிநூல் செயலாகா தென்று கூறலின், கேளாது என்றார்.

1. மூவகைத் துன்பங்கள்: குறள், 4, உரையைப் பார்க்க.
2. புறநா. 41 : 1-3.

உரை வேறுபாடு

**மணக்குடவர் :** தான் கெடுதல் வேண்டுவானாயின் பெரியாரைக் கேளாதே ஒரு வினையைச் செய்க; தன்னைக் கொல்ல வேண்டுமாயின் வலியுடையார் மாட்டே தப்புச் செய்க.

**பரிப்பெருமாள்:** கேளாது செய்தல் என்பதனை மந்திரி புரோகிதரைக் கேளாது செய்தல் என்று கொள்ளப்படும். அவ்வாறு செய்தால் அவரை அவமதித்தலாம் ஆதலின் ஈண்டுக் கூறப்பட்டது. அறிவாரைக் கேளாது செய்தலும் வலியார்க்குத் தப்புச் செய்தலும் குற்றம் என்றது.

**பரிதியார்:** தான் கெடவேண்டினால் பெரியோர் வார்த்தை கேளாதிருப்பது; வாழவேண்டினால் பெரியோர் வார்த்தை கேட்பது. (893)

## 894

**கூற்றத்தைக் கையால் விளித்தற்றால் ஆற்றுவார்க்**
**காற்றாதார் இன்னா செயல்.** 4

**பரிமேலழகர்:** ஆற்றுவார்க்கு ஆற்றாதார் இன்னா செயல் - மூவகை ஆற்றலும் உடையார்க்கு அவை இல்லாதார் தாம் முற்பட்டு இன்னாதவற்றைச் செய்தல், கூற்றத்தை கையால் விளித்தற்று - தானேயும் வரற்பாலனைய கூற்றுவனை அதற்கு முன்னே கைகாட்டி அழைத்தால் ஒக்கும்.

கையால் விளித்தல்: இகழ்ச்சிக்குறிப்பிற்று. தாமேயும் உயிர் முதலிய கோடற்கு உரியாரை அதற்கு முன்னே விரைந்து தம்மேல் வருவித்துக் கொள்வார். இறப்பினது உண்மையும் அண்மையும் கூறியவாறு.

இவை இரண்டு பாட்டானும் வேந்தரைப் பிழைத்தலின் குற்றம் கூறப்பட்டது.

உரை வேறுபாடு

**காலிங்கர்:** ஆற்றுவார்க்கு - தவநெறியாளராகிய பெரியோர்க்கு.

ஒப்புமை

1. **ஆற்றுவார்க்கு ஆற்றாதார் இன்னா செயல் :**

"வெஞ்சின மன்னவன் வேண்டாத செய்யினும்
நெஞ்சத்துக் கொள்வ சிறிதும் செயல்வேண்டா
என்செய் தகப்பட்டக் கண்ணும் எழுப்புபவோ
துஞ்சு புலியைத் துயில்."

"எல்லாத் திறத்தும் இறப்பப் பெரியாரைக்
கல்லாத் துணையார்தாம் கைப்பித்தல்—சொல்லின்
.........எருக்கு, மறைந்தியானை காய்ந்து விடல்."

(பழமொழி, 33, 376.)

2. **கூற்றத்தைக் கையால் விளித்தல்:**

"காலனை அளியன் தானே கையினால் விளிக்கும் என்னா"

(சீவக. 2148.) (894)

## 895

**யாண்டுச்சென் றியாண்டும் உளராகார் வெந்துப்பின்**
**வேந்து செறப்பட் டவர்.** 5

**பரிமேலழகர்:** வெம் துப்பின் வேந்து செறப்பட்டவர் - பகைவர்க்கு வெய்தாய வலியினையுடைய வேந்தனால் செறப்பட்ட அரசர், யாண்டு சென்று யாண்டும் உளர் ஆகார் - அவனைத் தப்பி எங்கே போய் உளராவர்? ஓரிடத்தும் உளராகார்.

இடைவந்த சொற்கள் அவாய்நிலையான் வந்தன. வெந்துப்பின் வேந்தாகலான் தன் நிலம் விட்டுப் போயவர்க்கு இடம் கொடுப்பார் இல்லை; உளராயின் இவர் இனி ஆகார் என்பது நோக்கி அவனோடு நட்புக் கோடற் பொருட்டும் தானே வந்து எய்திய அவர் உடைமை வெளவுதற்பொருட்டும் கொல்வர், அன்றெனின் உடனே அழிவர் என்பன நோக்கி, 'யாண்டுச்சென்றியாண்டு முளராகார்' என்றார். இதனால் அக் குற்றமுடையார் அருமையுடைய அரண் சேர்ந்தும் உய்யார்'[1] என்பது கூறப்பட்டது.

### ஒப்புமை

முற்றும்:

"வேந்தொடு மாறு கோடல் விளிகுற்றார் தொழில தாகும்."
(சீவக. 1089.) (895)

## 896

எரியாற் சுடப்படினும் உய்வுண்டாம் உய்யார்
பெரியார்ப் பிழைத்தொழுகு வார். 6

**பரிமேலழகர்:** எரியால் சுடப்படினும் உய்வு உண்டாம் - காட்டிடைச் சென்றான் ஒருவன் ஆண்டைத் தீயால் சுடப்பட்டானாயினும் ஒருவாற்றான் உயிர் உய்தல் கூடும்; பெரியார் பிழைத்து ஒழுகுவார் உய்யார் - தவத்தால் பெரியாரைப் பிழைத்து ஒழுகுவார் எவ்வாற்றானும் உயிர் உய்யார்.

தீ முன் உடம்பினைக் கதுவி அது வழியாக உயிர்மேற் சேறலின் இடையே உய்யவும் கூடும்; அருந்தவர் வெகுளி அன்னதன்றித் தான் நிற்பது கணமாய் அதற்குள்ளே யாவர்க்கும் காத்தலரிதாகலின்,[2] அது கூடாதாகலான் அதற்கு ஏதுவாய பிழை செய்யற்க என்பதாம்.

### உரை வேறுபாடு

**பரிதியார்:** நெருப்புப் பற்றின மரம் வேர் உண்டாய்ப் பதினைந்து நாளையில் கிளைக்கும்.

### ஒப்புமை

**பெரியாரைப் பிழைப்பவர் உய்யார்:**

"இன்னா, பெரியார்க்குத் தீய செயல்"

"பெருமை யுடையாரைப் பீடழித்தல் இன்னா" (இன்னா, 27, 28.)

"ஆமாலோ வென்று பெரியாரை முன்னின்று
தாமாச் சிறியார் தறுகண்மை செய்தொழுகல்
போமா றறியார் புலன்மயங்கி யூர்புக்குச்
சாமாகண் காணாத வாறு." (பழமொழி, 233.) (896)

---

1. "அருமை யுடைய அரண்சேர்ந்தும் உய்யார், பெருமை யுடையார் செறின்." (நாலடி. 164.)

2. குறள், 29.

## 897

வகைமாண்ட வாழ்க்கையும் வான்பொருளும் என்ஆம்
தகைமாண்ட தக்கார் செறின். 7

**பரிமேலழகர்:** தகை மாண்ட தக்கார் செறின் - சாப அருள்கட்கு ஏதுவாய பெருமை மாட்சிமைப்பட்ட அருந்தவர்[1] அரசனை வெகுள்வராயின், வகை மாண்ட வாழ்க்கையும் வான்பொருளும் என் ஆம் - உறுப்பழகு பெற்ற அவன் அரசாட்சியும் ஈட்டி வைத்த பெரும்பொருளும் என் பட்டு விடும்?

உறுப்பு: அமைச்சு, நாடு, அரண், படையென இவை. செறின் என்பது அவர் செறுமை தோன்ற நின்றது. இவ்வெச்சத்தான் முன் வருவனவற்றிற்கும் இஃது ஒக்கும். அரசர் தம் செல்வக் களிப்பான் அருந்தவர் மாட்டுப் பிழை செய்வராயின், அச் செல்வம் அவர் வெகுளித்தீயான் ஒரு கணத்துள்ளே வெந்துவிடும் என்பதாம்.

### உரை வேறுபாடு

**காளிங்கர்:** வகை - நூல் வகுத்த வகை அனைத்தும். தகை - தவமும் ஞானமும் ஒழுக்க நெறியும். (897)

## 898

குன்றன்னார் குன்ற மதிப்பிற் குடியொடு
நின்றன்னார் மாய்வர் நிலத்து. 8

**பரிமேலழகர்:** குன்று அன்னார் குன்ற மதிப்பின் - குன்றத்தை ஒக்கும் அருந்தவர் கெட நினைப்பாராயின், நிலத்து நின்றன்னார் குடியொடு மாய்வர் - அப்பொழுதே இந் நிலத்து நிலைபெற்றாற் போலும் செல்வர் தம் குடியொடும் மாய்வர்.

வெயில் மழை முதலிய பொறுத்தலும் சலியாமையும் உள்ளிட்ட குணங்களுடைமையின், குன்றன்னார் என்றார். "மல்லன் மலையனைய மாதவர்"[2] என்றார் பிறரும். நிலை பெற்றாற் போறலாவது, இறப்பப் பெரியராகலின் இவர்க்கு எஞ்ஞான்றும் அழிவில்லை என்று கண்டாரால் கருதப்படுதல்.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** குன்ற - குறைய. குன்ற மதித்தல் - அவமதித்தல்.

**பரிப்பெருமாள்:** இது மந்திரி புரோகிதரைப் பிழைத்து ஒழுகினால் அவர் அவமதிப்பாராயின் தாமும் தம்கீழ் வாழும் குடியும் மாய்வர் என்று கூறிற்று.

**காளிங்கர்:** குன்ற - குறைபட.

### ஒப்புமை

**குன்று அன்னார்:**

"மாதவக் குன்றினை யெதிர்ந்தனன்." (கம்ப. திருவவ. 49.) (898)

## 899

ஏந்திய கொள்கையார் சீறின் இடைமுரிந்து
வேந்தனும் வேந்து கெடும். 9

1. குறள், 28, உரை.
2. சீவக, 2789.

**பரிமேலழகர்:** ஏந்திய கொள்கையார் சீறின் - காத்தற்கு அருமையான உயர்ந்த விரதங்களை உடையார் வெகுள்வாராயின், வேந்தனும் இடைவேந்து முரிந்து கெடும் - அவர் ஆற்றலான் இந்திரனும் இடையே தன் பதம் இழந்து கெடும்.

"வேந்தன் மேய தீம்புனல் உலகமும்"[1] என்றார் பிறரும். நகுடன் என்பான் இந்திரன் பதம் பெற்றுச் செல்கின்ற காலத்துப் பெற்ற களிப்பு மிகுதியான் அகத்தியன் வெகுள்வதோர் பிழை செய, அதனால் சாபம் எய்தி அப் பதம் இடையே இழந்தான் என்பதனை உட்கொண்டு, இவ்வாறு கூறினார்.

இவை நான்கு பாட்டானும் முனிவரைப் பிழைத்தலின் குற்றம் கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**பரிதியார்:** வேந்தனும் - வேந்தனுகினும்.

### ஒப்புமை

1. ஏந்திய கொள்கை:

"கொள்கையினால் உயர்ந்த, நிறையுடையார்."

*(சம்பந்தர். நெடுங்களம், 1.)*

2. வேந்தனும் வேந்து கெடும்:

"நினக்கொலா தாகின் ஐய நீள்நிலத் தியாவ ரேனும்
மனக்கினி யாரை நாடி வகுப்பல்யான் வேள்வி யென்னச்
சினக்கொடுந் திறலோய் முன்னம் தேசிகற் பிழைத்து வேறோர்
நினக்கிதன் நாடி நின்றாய் நீசனாய் விடுதி என்றான்."

"......பொருள் எய்திச்
செருக்கி இடையே திருவிழந்த சிறியோர் போன்ற."

(கம்ப. மிதிலைக்காட்சி. 109, மாரீசன். 117.) (899.)

## 900

இறந்தமைந்த சார்புடையர் ஆயினும் உய்யார்
சிறந்தமைந்த சீரார் செறின். 10

**பரிமேலழகர்:** சிறந்து அமைந்த சீரார் செறின் - கழிய மிக்க தவத்தினை உடையார் வெகுள்வராயின், இறந்து அமைந்த சார்பு உடையர் ஆயினும் உய்யார் - அவரான் வெகுளப்பட்டார் கழியப் பெரிய சார்பு உடையராயினும் அதுபற்றி உய்யமாட்டார்.

சார்பு - அரண், படை, பொருள், நட்பென இவை. அவையெல்லாம் வெகுண்டவரது ஆற்றலால் திரிபுரம்போல அழிந்து விடுமாகலின், உய்யார் என்றார். சீருடையது சீர் எனப்பட்டது.

இதனால் அக் குற்றம் உடையார் சார்பு பற்றியும் உய்யார் என்பது கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**பரிப்பெருமாள்:** எல்லையற்ற சார்வாகிய உறவு, தன்மம், கல்வி, தவம், தானம் உண்டாகிலும்.

**காளிங்கர்:** சீர்மைப்பாட்டினை உடையார் யாவர்? மற்று அவர் குணம், கல்வி, கேள்வி, அறிவுடைமை முதலியவற்றான் மிக்கு அமைந்த சார்பினை உடையார் ஆயினும் உய்ந்து கரை ஏறார்.

1. தொல். அகத்திணை. 5.

ஒப்புமை

முற்றும்:

"விரிசிற நாகம் விடருள தேனும்
உருமின் கடுஞ்சினம் சேணின்றும் உட்கும்
அருமை யுடைய அரண்சேர்ந்தும் உய்யார்
பெருமை யுடையார் செறின்." (நாலடி. 164.) (900)

---

# 91. பெண்வழிச் சேறல்

**பரிமேலழகர்:** இனிக் காமத்தான் வருவன நேரே பகை அல்ல வாயினும் ஆக்கம் சிதைத்தல் அழிவு தலைத்தருதல் என்னும் தொழில்களால் பகையோடு ஒத்தலின் பகைப்பால் படுவனவாம்; ஆகலான், அவற்றைப் பகைப் பகுதியது இறுதிக்கண் கூறுவான் தொடங்கி, முதற்கண் பெண்வழிச் சேறல் கூறுகின்றார்; அஃதாவது, தன் வழி ஒழுகற்பாலளாய இல்லாள் வழியே தான் ஒழுகுதல்.

**மணக்குடவர்:** இனித் தன்னால் வரும் துன்பப் பகுதியாவது இன்பம் காரணமாக மனையாள்வழி ஒழுகுதலும், கணிகையரோடு கூடி ஒழுகு தலும், நறவுண்டு களித்தலும், சூதாடுதலும், தீய உண்டி மிக உண்டலும் என ஐந்து வகைப்படும்; அவற்றுள் பெண்வழிச் சேறலாவது மனைவியர் வழி ஒழுகுதலினால் வரும் குற்றம் கூறுதல். இது மூன்று வகைப்படும், மனையாளை அஞ்சுதலும், அவள் சொன்னது செய்தலும், அறத்தினும் பொருளினும் சாராத காதலினும் மிக்க காதலும் என.

**பரிதியார்:** பெண்வழிச் சேறலாவது மனையாள் வார்த்தை கேட்டல்.

### 901

மனைவிழைவார் மாண்பயன் எய்தார் வினைவிழைவார்
வேண்டாப் பொருளும் அது. 1

**பரிமேலழகர்:** மனை விழைவார் மாண் பயன் எய்தார் - இன்பம் காரணமாகத் தம் மனையாளை விழைந்து அவள் தன்மையராய் ஒழுகுவார் தமக்கு இன் துணையாய அறத்தினை எய்தார்; வினை விழைவார் வேண்டா பொருளும் அது - இனிப் பொருள் செய்தலை முயல்வார் அதற்கு இடையீடு என்று இகழும் பொருளும் அவ் வின்பம்.

மனையும் விழைதலும் பயனும் ஆகுபெயர். அவ் வின்பம்: அவள் தன்மையராதற்கு ஏதுவாய இன்பம். அஃது அவளாற் பயனுய அறத் தினும் அவ்வறத்திற்கும் தனக்கும் ஏதுவாய பொருளினும் செல்ல விடாமை யின், விடற்பாற்று என்பதாம்.

உரை வேறுபாடு

**மணக்குடவர்:** மனையாளைக் காதலித்து ஒழுகுவார் நற்பயனைப் பெறார். யாதானும் ஒரு வினையைச் செய்து முடிக்க வேண்டுவார் விரும் பாத பொருளும் அவரை விழையாமையே.

**பரிதியார்:** பெண் ஏவல் செய்வார் பெரியர் ஆகார். பெண் சொல் கேளாதவர் பெரியவர்.

**காளிங்கர் :** மாண்பயன் - மறுமைப்பயன். வினை விழைவார் வேண்டா பொருளும் அது - தம் கருமம் விரும்பிச் செல்வார் யாவரும் வேண்டாப் பொருளும் அவ்விழுப்பந்தானே.

### ஒப்புமை

***மனை விழைவார் மாண்பயன் எய்தார் :***

"தையல்சொல் கேளேல்." (ஆத்திசூடி.)

"மங்கையர் பொருட்டால் எய்தும் மாந்தர்க்கு மரணம் என்றல்
சங்கையின் றுணர்தி வாலி செய்கையால் சாலும் இன்னும்
அங்கவர் திறத்தி னுனே அல்லலும் பழியும் ஆதல்
எங்களிற் காண்டி யன்றே இதற்குவே றேதி யாதோ."
(கம்ப. அரசியல். 33.) (901)

## 902

பேணுது பெண்விழைவான் ஆக்கம் பெரியதோர்
நாணுக நாணுத் தரும். 2

**பரிமேலழகர் :** பேணுது பெண் விழைவான் ஆக்கம் - தன் ஆண்மையை விட்டு மனையாளது பெண்மையை விழைவான் எய்தி நின்ற செல்வம், பெரியது ஓர் நாண் ஆக நாணு தரும் - இவ்வுலகத்து ஆண்பாலார்க்கு எல்லாம் பெரியதோர் நாண் உண்டாகத் தனக்கும் நாணுதலைக் கொடுக்கும்.

எய்தி நின்றதாயிற்று, படைக்கும் ஆற்றல் இலனுகலின்.[1] அச் செல்வத்தால் ஈதலும் துய்த்தலும் முதலிய பயன்கொள்வாள் அவளாகலின், அவ்வாண்மைச் செய்கை அவள் கண்ணதாயிற்று என்று ஆண்பாலார் யாவரும் நாண, அதனல் தன் ஆண்மை இன்மை அறிந்து பின் தானும் நாணும் என்பது நோக்கி, 'பெரியதோர் நாணுக நாணுத் தரும்' என்றுர்.

இவை இரண்டு பாட்டானும் மனை விழைதற் குற்றம் கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** பேணுது - அறத்தினையும் பொருளினையும் பேணுது.

**பரிப்பெருமாள்:** அவன் செல்வத்திற்குப் பயன் நாணமாய் முடியும். என்னை ? அச் செல்வம் அவற்றுல் பின்பு என்ன செய்வோம் என்று நாணுவன் ஆதலின். சச்சந்தன் திறம் காண்க.

**பரிதியார்:** பேணுது - தன்மத்தை வேண்டாம் என்று.

**காளிங்கர்:** பேணுது - தான் ஒழுகும் தகுதியைப் பொருளாக விரும்பாது.

### ஒப்புமை

**பேணுது பெண் விழைவான் :**

"பெண்விழைவார்க் கில்லைப் பெருந்தூய்மை."

(அறநெறி. 114.) (902)

---

1. 'படைக்கும் ஆற்றல் இலனுதல் தோன்றப் பெற்ற என்றும்......கூறினர்.' (குறள், 1000, உரை.)

## 903

இல்லாள்கண் தாழ்ந்த இயல்பின்மை எஞ்ஞான்றும்
நல்லாருள் நாணுத் தரும். 3

**பரிமேலழகர்:** இல்லாள்கண் தாழ்ந்த இயல்பு இன்மை - ஒருவன் இல்லாள்மாட்டுத் தாழ்தற்கு ஏதுவாய அச்சம், நல்லாருள் நாணு எஞ்ஞான்றும் தரும் - அஃது இலராகிய நல்லாரிடைச் செல்லுங்கால் நாணுதலை அவனுக்கு எக்காலத்தும் கொடுக்கும்.

அவள் தான் அஞ்சி ஒழுகுதல் இயல்பாகலின், அவளை அஞ்சுதல் இயல்பின்மை ஆயிற்று. அங்ஙனம் அஞ்சி ஒழுகுதலின், அவளை நியமிப்பார் இல்லையாம்; ஆகவே, எல்லாக் குற்றமும் விளையும் என்பது நோக்கி, 'எஞ்ஞான்றும் நாணுத் தரும்' என்றார்.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** மனையாள்மாட்டுத் தாழ்ந்து ஒழுகும் இயல்பாகிய எல்லா நாளும் நல்லாரிடத்து நாணுதலைத் தரும்.

**பரிப்பெருமாள்:** மனையாளை அஞ்சித் தாழ்ந்து ஒழுகுவனாயின், அவளைக் கடியும் தன்மை இலன் ஆவான். அதனானே நல்லார் முன்பு நாணி நிற்கும். ஆதலால் காம நுகர்ச்சியும் பெறான் என்றது.

**காளிங்கர்:** இயல்பின்மை - மரபுக் கேடு. (903)

## 904

மனையாளை அஞ்சும் மறுமை யிலாளன்
வினைஆண்மை வீறெய்தல் இன்று. 4

**பரிமேலழகர்:** மனையாளை அஞ்சும் மறுமை இலாளன் - தன் மனையாளை அஞ்சி ஒழுகுகின்ற மறுமைப்பயன் இல்லாதானுக்கு, வினை ஆண்மை வீறு எய்தல் இன்று - வினையை ஆளும் தன்மை உண்டாய வழியும் நல்லோரால் கொண்டாடப்படாது.

உண்டாயவழியும் என்பது அவாய்நிலையான் வந்தது. இல்லறம் செய்தற்குரிய நன்மை இன்மையின் மறுமையிலாளன் என்றும், வினையை ஆளும் தன்மை தன் தன்மை இல்லாத அவனுன் முடிவு போகாமையின் வீறெய்தல் இன்று என்றும் கூறினார்.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** வீறெய்தல் இன்று – பெருமை எய்துதல் இல்லை.

**பரிதியார்:** அவனுக்கு மறுமையும் இல்லை; இம்மைக்குப் புகழும் இல்லை.

**காளிங்கர்:** வீறெய்தல் இன்று - ஒரு நன்மை பெறுதல் இல்லை. (904)

## 905

இல்லாளை அஞ்சுவான் அஞ்சும்மற் றெஞ்ஞான்றும்
நல்லார்க்கு நல்ல செயல். 5

**பரிமேலழகர்:** இல்லாளை அஞ்சுவான் - தன் மனையாளை அஞ்சுவான், நல்லார்க்கு நல்ல செயல் எஞ்ஞான்றும் அஞ்சும் - தான் தேடிய

பொருளே ஆயினும் அதனால் நல்லார்க்கு நல்லன செய்தலை எஞ்ஞான்றும் அஞ்சா நிற்கும்.

நல்லார் - தேவர், அருந்தவர், சான்றோர், இருமுது குரவர் முதலாயி னோரும் நல்விருந்தினரும். நல்லன் செய்தல் - அவர் விரும்புவன கொடுத்தல். அது செய்யவேண்டும் நாட்களினும் என்பார், 'எஞ்ஞான்றும்' என்றார். ''இல்லாளை அஞ்சி விருந்தின்முகங் கொன்ற நெஞ்சிற், புல்லாள ளுகை''[1] என்றார் பிறரும். (905)

## 906

இமையாரின் வாழினும் பாடிலரே இல்லாள்
அமையார்தோள் அஞ்சு பவர். 6

**பரிமேலழகர்:** இல்லாள் அமை ஆர் தோள் அஞ்சுபவர் - தம் இல் லாளுடைய வேய்போலும் தோளினை அஞ்சுவார், இமையாரின் வாழினும் பாடு இலர் - வீரத்தால் துறக்கம் எய்திய அமரர் போல இவ்வுலகத்து வாழ்ந்தாராயினும் ஆண்மை இலர்.

அமரர் போல வாழ்தலாவது, பகைத்த வீரர் தோள்களை யெல்லாம் வேறலான் நன்கு மதிக்கப்பட்டு வாழ்தல். அது கூடாமையின் வாழினும் என்றார். அமையார் தோள் எனவே, அஞ்சுதற் காரணத்தது எண்மை கூறியவாறு. வீரர் தோள்களை வென்றாராயினும் இல்லாள் தோள்களை அஞ்சுவார் ஆண்மை இலர் என்பதாம்.

இவை நான்கு பாட்டானும் அவளை அஞ்சுதற் குற்றம் கூறப் பட்டது.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** பாடு - பெருமை. (906)

## 907

பெண்ஏவல் செய்தொழுகும் ஆண்மையின் நாணுடைப்
பெண்ணே பெருமை உடைத்து. 7

**பரிமேலழகர்:** பெண் ஏவல் செய்து ஒழுகும் ஆண்மையின் - நாண் இன்றித் தன் இல்லாளது ஏவல்தொழிலைச் செய்து திரிகின்றவனது ஆண் தன்மையின், நாண் உடை பெண்ணே பெருமை உடைத்து - நாணினை உடைய அவள் பெண் தன்மையே மேம்பாடு உடைத்து.

'நாணுடைப் பெண்' என வேண்டாது கூறியது அவள் ஏவல் செய் வானது நாணின்மை முடித்தற்காதலின், அம்மறுதலைத் தொழில் வருவிக்கப் பட்டது. ஏவல்: ஆகுபெயர். இறுதிக்கண் பெண் என்பதூஉம் அது[2] ஏவல் செய்வித்துக் கோடற் சிறப்புத் தோன்றப் பெண்ணே எனப் பிரித் தார்.

### உரை வேறுபாடு

**காளிங்கர்:** நாணுடைப் பெண்ணே பெருமை உடைத்து - அதனால் அவ்வாண்மை படைப்பதில் ஆண்மகற்கு உள் அஞ்சும் நாணத்தை யுடைய நன்னெறிப் பெண்ணே அவர்க்கு மிக்க பெருமையைக் கொடுக்கும். (907)

1. சீவக. 2319.
2. ஆகுபெயர்.

## 908

நட்டார் குறைமுடியார் நன்றாற்றார் நன்னுதலாள்
பெட்டாங் கொழுகு பவர். 8

**பரிமேலழகர் :** நல் நுதலாள் பெட்டாங்கு ஒழுகுபவர் - தாம் வேண்டியவாறன்றித் தம் மனையாள் வேண்டியவாறு ஒழுகுவார், நட்டார் குறை முடியார் - தம்மொடு நட்புச் செய்தார் உற்ற குறை முடிக்க மாட்டார்; நன்று ஆற்றார் – அதுவேயன்றி மறுமைக்குத் துணையாய அறம் செய்யவும் மாட்டார்.

நன்னுதலாள் என்பதனை, 'அமையார்தோள்'[1] என்புழிப் போலக் கொள்க. அவள் தானே அறிந்து ஏவலும் பொருள் கொடுத்தலும் கூடாமையின், இருமைக்கும் வேண்டுவன செய்யமாட்டார் என்பதாம்.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** நன்று ஆற்றார் - அவர்க்கு நல்லது செய்யவும் மாட்டார்.

**காளிங்கர்:** நன்று ஆற்றார் - இனி அதுவேயும் அன்றிக் கல்வியும் கேள்வியும் நன்கு செய்தலும் மாட்டார்.

### ஒப்புமை

*முற்றும்:*

"மண்மேல் வைத்த காதலின் மாதா முதலோர்க்கும்
புண்மேல் வைத்த தீநிகர் துன்பம் புகுவித்தேன்
பெண்மேல் வைத்த காதலின் இப்பே றுகள்பெற்றேன்
எண்மேல் வைத்த வென்புகழ் நன்றால் எளியேனே."

(கம்ப. பிரமாத்திரப். 212.) *(908)*

## 909

அறவினையும் ஆன்ற பொருளும் பிறவினையும்
பெண்ஏவல் செய்வார்கண் இல். 9

**பரிமேலழகர் :** அறவினையும் - அறச்செயலும், ஆன்ற பொருளும் - அது முடித்தற்கு ஏதுவாய பொருட்செயலும், பிற வினையும் - அவ்விரண்டின் வேறாய இன்பச் செயல்களும், பெண் ஏவல் செய்வார்கண் இல் - தம் மனையாள் ஏவல் செய்வார் மாட்டு உள ஆகா.

புலன்கள் ஐந்தாகலின், பிற வினை எனப் பன்மையாயிற்று.[2] அவை நோக்கி அறச்செயல் பொருட்செயல்கள் முன்னே ஒழிந்தார்க்குத் தலைமை அவள்கண்ணதாகலின், பின் அவை தாமும் இலவாயின என்பது தோன்ற, அவற்றைப் பிரித்துக் கூறினர்.

இவை மூன்று பாட்டானும் அவள் ஏவல் செய்தற்குற்றம் கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** பிற வினையும் – ஒழிந்த காமம் நுகர்தலும். *(909)*

1. குறள், 906.
2. குறள், 1101.

### 910

எண்சேர்ந்த நெஞ்சத் திடன்உடையார்க் கெஞ்ஞான்றும்
பெண்சேர்ந்தாம் பேதைமை இல். 10

**பரிமேலழகர்:** எண் சேர்ந்த நெஞ்சத்து இடன் உடையார்க்கு - கருமச் சூழ்ச்சிக்கண் சென்ற நெஞ்சத்தினையும் அதனின் ஆய செல்வத்தினையும் உடையராய வேந்தர்க்கு, பெண் சேர்ந்து ஆம் பேதைமை எஞ்ஞான்றும் இல் - மனையாளைச் சேர்தலான் விளையும் பேதைமை எக்காலத்தும் உண்டாகாது.

"இடனில் பருவத்தும்"[1] எனவும், "இடனின்றி இரந்தோர்க்கு"[2] எனவும் வந்தமையான், இடன் என்பது அப்பொருட்டாதல் அறிக. இளமைக் காலத்தும் என்பார், எஞ்ஞான்றும் என்றார். அப் பேதைமையாவது: மேற் சொல்லிய விழைதல், அஞ்சல், ஏவல் செய்தல் என்னும் மூன்றற்கும் காரணமாயது. எதிர்மறைமுகத்தான் அம் மூன்றும் இதனால் தொகுத்துக் கூறப்பட்டன.

#### உரை வேறுபாடு

**பரிதியார்:** எண் சேர்ந்த நெஞ்சத்து இடன் உடையார் - மோட்சம் இச்சையான மனத்தார்.

**காளிங்கர்:** எண் - அறம், பொருள், இன்பம், வீடு என நான்கின் திறம் தெரிந்து எண்ணும் எண். (910)

---

## 92. வரைவில் மகளிர்

**பரிமேலழகர்:** அஃதாவது, தம் நலம் விலை கொடுப்பார் யாவர்க்கும் விற்பதல்லது, அதற்கு ஆவார் ஆகாதார் என்னும் வரைவு இலாத மகளிரது இயல்பு; ஆதலால் தமக்கு உரிய மகளிரான் வரும் குற்றத்தின்பின் வைக்கப் பட்டது.

### 911

அன்பின் விழையார் பொருள்விழையும் ஆய்தொடியார்
இன்சொல் இழுக்குத் தரும். 1

**பரிமேலழகர்:** அன்பின் விழையார் பொருள் விழையும் ஆய்தொடியார் - ஒருவனை அன்பு பற்றி விழையாது பொருள் பற்றி விழையும் மகளிர், இன் சொல் இழுக்கு தரும் - அது கையுறுந்துணையும் தாம் அன்பு பற்றி விழைந்தாராகச் சொல்லும் இனிய சொல் அவனுக்குப் பின் இன்னாமையைப் பயக்கும்.

பொருள் என்புழி இன் விகாரத்தால் தொக்கது. ஆய்ந்த தொடியினை உடையார் என்றதனானும், இனிய சொல் என்றதனானும் அவர் கருவி கூறப்பட்டது. அச் சொல் அப்பொழுதைக்கு இனிது போன்று பின் வறுமை பயத்தலின், அது கொள்ளற்க என்பதாம்.

#### உரை வேறுபாடு

**பரிதியார்:** இழுக்கு தரும் - நல்லோர்முன் இழுக்கு உண்டாம்.

**கவிராஜ பண்டிதர்:** பரஸ்திரீகள் முதலில் அமுதம் போலே இருந்து கைப்பொருள் ஆண்ட பிறகு, விஷம் போல ஆவார்கள்.

---

1. குறள், 218. 2. கலி, 2: 19.

ஒப்புமை

**அன்பின் விழையார் பொருள் விழையும் ஆய்தொடியார்:**

"ஈதில் நெஞ்சத்துக் காதல் கொள்ளாப்
பல்லிருங் கூந்தல் மகளிர்
ஒல்லா முயக்கிடைக் குழைகஎன் தாரே" (புறநா. 73: 12-4.)

"அவரன்பும், வாரி யறவே அறும்"

"அவரன்பும், கையற்ற போதே அறும்"

"அங்கோட் டகலல்குல் ஆயிழையாள் நம்மோடு
செங்கோடு பாய்துமே என்றாள்மன்—செங்கோட்டின்
மேற்காணம் இன்மையான் மேவா தொழிந்தாளே
காற்கால்நோய் காட்டிக் கலுழ்ந்து."

"கொடுப்பதொன் றில்லாரைக் கொய்தளி ரன்னார்
விடுப்பர்தங் கையால் தொழுது"

"ஆணமில் நெஞ்சத்து அணிநீலக் கண்ணார்க்குக்
காணமில் லாதார் கடுவனையர்"

(நாலடி. 370, 371, 372, 373, 374.)

"நறுந்தா துண்டு நயனில் காலை
வறும்பூத் துறக்கும் வண்டு போல்குவம்."

"வண்டிற் றுறக்கும் கொண்டி மகளிரை"

(மணி. 18: 19-20, 109.)

"பருகு வாரிற் புல்லிப் பயங்கள் மாறத் துறக்கும்
முருகு விம்மு குழலார்" (சீவக. 1415.)

"கள்ளூறு செவ்வாய்க் கணிகைகாண் கைகேயி
உள்ளூறு காத லிலள்போலென் றுள்ளழிந்தார்."

(கம்ப. நகர்நீங்கு. 109.) (911)

## 912

பயன்தூக்கிப் பண்புரைக்கும் பண்பில் மகளிர்
நயன்தூக்கி நள்ளா விடல். 2

**பரிமேலழகர்:** பயன் தூக்கி பண்பு உரைக்கும் பண்பு இல் மகளிர் - ஒருவனுக்கு உள்ள பொருளை அளந்தறிந்து அஃது எய்துந்துணையும் தம் பண்புடைமை சொல்லும் பண்பு இல்லாத மகளிரது, நயன் தூக்கி நள்ளா விடல் - ஒழுகலாற்றினை ஆராய்ந்து அறிந்து அவரைப் பொருந்தாது விடுக.

பண்பு சொல்லின்க ணல்லது தங்கண் கிடவாமை தோன்றப் பண்பில் மகளிர் என்றும், அவர்க்கு அது சாதி தருமம் ஆதல் நூலானே யன்றி அவர் செயலானும் அறிந்தென்பார் நயன் தூக்கி என்றும், அவ்வறிவு அவரை விடுதற்கு உபாயம் என்பது தோன்றப் பின் நள்ளாவிடல் என்றும் கூறினர்.

உரை வேறுபாடு

**காளிங்கர்:** பண்பு உரைக்கும் - புறமே நெறிப்பட உரைக்கும்.

ஒப்புமை

**பண்பில் மகளிரை விடுதல்:**

"மைவிழியார் மனை அகல்." (ஆத்திசூடி.) (912)

## 913

பொருட்பெண்டிர் பொய்ம்மை முயக்கம் இருட்டறையில்
ஏதில் பிணம்தழீஇ அற்று. 3

**பரிமேலழகர்:** பொருள் பெண்டிர் பொய்ம்மை முயக்கம் - கொடுப்பாரை விரும்பாது பொருளையே விரும்பும் பொது மகளிரது பொய்ம்மையை உடைய முயக்கம், இருட்டு அறையில் ஏதில் பிணம் தழீஇ அற்று - பிணம் எடுப்பார் இருட்டறைக்கண்ணே முன் அறியாத பிணத்தைத் தழுவினாற் போலும்.

பொருட்கு முயங்கும் மகளிர் கருத்தும் செயலும் ஆராயாது சாதியும் பருவமும் ஒவ்வாதானை முயங்குங்கால் அவர் குறிப்புக் கூலிக்குப் பிணம் எடுப்பார் காணப்படாததோர் இடத்தின்கண் இயைபு இல்லாததோர் பிணத்தை எடுக்குங்கால் அவர் குறிப்போடு ஒக்கும் எனவே, அகத்தால் அருவரா நின்றும் பொருள் நோக்கிப் புறத்தால் தழுவுவர்; அதனை ஒழிக என்பதாம்.

இவை மூன்று பாட்டானும் அவர் சொல்லும் செயலும் பொய் என்பது கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** *பிணம் தழீஇ அற்று* - பிணத்தைக் கூலிக்குத் தழுவியது போலும்.

**பரிப்பெருமாள்:** கேடு வரினும் இன்பம் தருமாயின் புணர்ச்சியான் வரும் குற்றம் என்னை என்றார்க்கு, அவர் இவ்வாறு வருந்துவர் ஆகலான் இன்பம் இல்லை என்று கூறப்பட்டது.

**பரிதியார்:** *ஏதில் பிணம் தழீஇ அற்று* - கல்பிணத்தைக் கட்டி அழுபவர்க்கு ஒக்கும். *(913)*

## 914

பொருட்பொருளார் புன்னலம் தோயார் அருட்பொருள்
ஆயும் அறிவி னவர். 4

**பரிமேலழகர்:** பொருள் பொருளார் புல் நலம் - இன்பமாகிய பொருளை இகழ்ந்து பொருளாகிய பொருளையே விரும்பும் மகளிரது புல்லிய நலத்தை, அருள் பொருள் ஆயும் அறிவினவர் தோயார் – அருளோடு கூடிய பொருளை ஆராய்ந்து செய்யும் அறிவினை உடையார் தீண்டார்.

அறம் முதலிய நான்கும் பொருள் எனப்படுதலின், பொருட் பொருள், அருட் பொருள் என விசேடித்தார். புன்மை - இழிந்தார்க்கே உரித்தாதல். தாம் விரும்புகின்ற அறத்திற்கு அவர் மெய்ந்நலம் மறுதலையாகலின் தோயார் என்பதாம்.

### உரை வேறுபாடு

**பரிதியார்:** *அருள் பொருள் ஆயும் அறிவினவர்* - பிறவா நெறியான இன்பம் விரும்புபவர்.

**காளிங்கர்:** எனவே இவ் வஞ்சமகளிர்க்குக் கொடுக்கும் பொருளை வறியோர்க்கு ஈதல் தமக்கு வாய்ப்பதே என்று ஆயும் அறிவினவர் கருத்து என அறிக.

### ஒப்புமை

**முற்றும்:**

"மகளிர் தோள் சேர்வார்......வெள்ளறிவினர்"

"..............மாணேக்கின்
தந்நெறிப் பெண்டிர் தடமுலை சேராரே
செந்நெறிச் சேர்தும்என் பார்." (நாலடி. 375, 378.) (914)

## 915

**பொதுநலத்தார் புன்னலம் தோயார் மதிநலத்தின்**
**மாண்ட அறிவி னவர். 5**

**பரிமேலழகர்:** மதி நலத்தின் மாண்ட அறிவினர் – இயற்கையாகிய மதிநன்மையான் மாட்சிமைப்பட்ட செயற்கை அறிவினை உடையார், பொது நலத்தார் புல் நலம் தோயார் - பொருள் கொடுப்பார்க்கெல்லாம் பொது வாய ஆசையினை உடைய மகளிரது புல்லிய நலத்தைத் தீண்டார்.

மதி நன்மை: முற்பிறப்புக்களிற் செய்த நல்வினைகளான் மனம் தெளிவுடைத்தாதல். அதனுனன்றிக் கல்வியறிவு மாட்சிமைப் படாமையின், 'மதி நலத்தின் மாண்ட அறிவினவர்' என்றும், அவ்வறிவு உடையார்க்கு அவர் ஆசையது பொதுமையும் மெய்ந்நலத்தது புன்மையும் விளங்கித் தோன்றலின், தோயார் என்றும் கூறினர்.

### உரை வேறுபாடு

**பரிதியார்:** எல்லார்க்கும் பொதுவான இன்பம் கொள்ளார் மதியினல் பெரியவர்; பலர் எச்சில் என்று கழிப்பர். (915)

## 916

**தம்நலம் பாரிப்பார் தோயார் தகைசெருக்கிப்**
**புன்னலம் பாரிப்பார் தோள். 6**

**பரிமேலழகர்:** தகை செருக்கி புல் நலம் பாரிப்போர் தோள் - ஆடல் பாடல் அழகு என்பனவற்ருல்[1] களித்துத் தம் புல்லிய நலத்தை விலை கொடுப்பார் யாவர் மாட்டும் பரப்பும் மகளிர் தோளினை, தம் நலம் பாரிப்பார் தோயார் - அறிவு ஒழுக்கங்களானுய தம் புகழை உலகத்துப் பரப்புதற் குரிய உயர்ந்தோர் தீண்டார்.

ஆடல் முதலிய மூன்றும் உடைமை அவர்க்கு மேம்பாடாகலின், தகை என்றும், தோயின் அறிவொழுக்கங்கள் அழியுமாகலின், அவற்ருல் புகழ் பரப்புவார் தோயார் என்றும் கூறினர். தம் நலம் என்புழி நலம், ஆகுபெயர்.

இவை மூன்று பாட்டானும் அவரை உயர்ந்தோர் தீண்டார் என்பது கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**பரிப்பெருமாள்:** புல்லிய நலன் என்ருல் வனப்பு உடையராயினும் இழிந்தார் மாட்டும் பரப்புதலின்.

**காளிங்கர்:** புன்னலம் - வஞ்சனையாகிய புல்லிய ஆசையை. (916)

## 917

**நிறைநெஞ்சம் இல்லவர் தோய்வர் பிறநெஞ்சின்**
**பேணிப் புணர்பவர் தோள். 7**

1. "ஆடலும் பாடலும் அழகும் என்றிக், கூறிய மூன்றின்." (சிலப். 3:8-9.)

**பரிமேலழகர் :** நெஞ்சின் பிற பேணி புணர்பவர் தோள் - நெஞ்சினால் பிறவற்றை ஆசைப்பட்டு அவை காரணமாகக் கொடுப்பாரை மெய்யால் புணரும் மகளிர் தோள்களை, நிறை நெஞ்சம் இல்லவர் தோய்வர் - நிறையால் திருந்திய நெஞ்சம் இல்லாதார் தோய்வர்.

பொருளும் அதனால் படைக்கப்படுவனவும் விரும்பும் நெஞ்சு அவற்றின் மேலதாகலின், புணர்வது உடம்பு மாத்திரம் என்பது அறிந்து, அதுவழி ஓடாது நிற்கும் நெஞ்சினை உடையார் தோயாமையின், அஃது இலார் தோய்வர் என்றார்.

### உரை வேறுபாடு

**பரிதியார்:** தம் மனத்துக்கு உவந்த நாயகரை மனத்திலே வைத்து, இவரை மரப்பாவை போலப் புணர்வார்.[1]

**காளிங்கர்:** நிறை நெஞ்சம் - நற்குணம் நிறைவுடைய நெஞ்சம். பிற என்ற பன்மை, பொன்னும் ஆடையும் பூவும் சாந்தும் முதலியன என அறிக.

### ஒப்புமை

**பிற நெஞ்சில் பேணிப் புணர்பவர்:**

"உள்ளம் ஒருவன் உழையதா ஒண்ணுதலார்
கள்ளத்தாற் செய்யும் கருத்தெல்லாம்" (**நாலடி.** 380.)

"விலைநினைந் துளவழி விலங்கும் வேசையர்
உலைவுறும் மனமென." (**கம்ப.** கார்காலப். 12.) (917)

## 918

**ஆயும் அறிவினர் அல்லார்க் கணங்கென்ப**
**மாய மகளிர் முயக்கு.** 8

**பரிமேலழகர் :** மாய மகளிர் முயக்கு - உருவு சொல் செயல்களான் வஞ்சித்தலை வல்ல மகளிரது முயக்கத்தை, ஆயும் அறிவினர் அல்லார்க்கு அணங்கு என்ப - அவ் வஞ்சனை ஆராய்ந்து அறியும் அறிவுடையர் அல்லார்க்கு அணங்குதாக்கு[2] என்று சொல்லுவர் நூலோர்.

அணங்கு - காம நெறியான் உயிர்கொள்ளும் தெய்வமகள்; தாக்கு: தீண்டல், இவ் வுருவகத்தான் முன் இனிது போன்று பின் உயிர்கோடல் பெற்றாம். இது நூலோர் துணிவு என்பது தோன்ற அவர்மேல் வைத்துக் கூறினார். அப்பெயர் அவாய் நிலையான் வந்தது.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** அணங்கு - வருத்தம்.

**பரிதியார்:** அணங்கு என்ப - அவர்களைத் தெய்வமாகக் கொள்வர்.

### ஒப்புமை

**மாய மகளிர் முயக்கு:**

"பல்லிருங் கூந்தல் மகளிர்
ஒல்லா முயக்கு." (**புறநா.** 73: 13-4.) (918)

1. 'பிறர் நெஞ்சின்' என்று பாடம் கொண்டார்.
2. தாக்கணங்கு: **குறள்**, 1082.

## 919

வரைவிலா மாண்இழையார் மென்தோள் புரைஇலாப்
பூரியர்கள் ஆழும் அளறு. 9

**பரிமேலழகர்:** வரைவு இலா மாண் இழையார் மென் தோள் - உயர்ந்தோர் இழிந்தோர் என்னாது விலை கொடுப்பார் யாவரையும் முயங்கும் மகளிரது மெல்லிய தோள்கள், புரை இலா பூரியர்கள் ஆழும் அளறு - அக் குற்றத்தை அறியும் அறிவு இல்லாத கீழ் மக்கள் புக்கு அழுந்தும் நிரயம்.

உயர்தற்கு ஏதுவாகலின், புரை[1] எனப்பட்டது. சாதியான் இழிந்தாரின் நீக்குதற்குப் 'புரையிலாப் பூரியர்கள்' என்றும், அவர் ஆழ்தற்கு ஏது உருவம் முதலிய மூன்றும்[2] என்பது தோன்ற, 'மாணிழையார் மென்றோள்' என்றும், அவர்க்கு அளற்றினை இடையின்றிப் பயக்கும் என்பது தோன்ற உருவகமாக்கியும் கூறினார்.

### உரை வேறுபாடு

**காலிங்கர்:** அளறு – கும்பிநரகம்.

### ஒப்புமை

*முற்றும்:*

"கைக்கரி மதத்தவிலை மாதர்கலை யல்குல்
புக்கவரை ஒத்தன புனற்சிறைகள் ஏழு."

(கம்ப. வரைக்காட்சி. 26.) *(919)*

## 920

இருமனப் பெண்டிரும் கள்ளும் கவறும்
திருநீக்கப் பட்டார் தொடர்பு. 10

**பரிமேலழகர்:** இரு மன பெண்டிரும் கள்ளும் கவறும் - கவர்த்த மனத்தினை உடைய மகளிரும் கள்ளும் சூதும் என இம் மூன்றும், திரு நீக்கப் பட்டார் தொடர்பு - திருமகளால் துறக்கப்பட்டார்க்கு நட்பு.

இரு மனம் – ஒருவனோடு புணர்தலும் புணராமையும் ஒரு காலத்தே உடைய மனம். கவறு: ஆகுபெயர். ஒத்த குற்றத்தவாகலின் கள்ளும் சூதும் உடன் கூறப்பட்டன. வடநூலாரும் இக் கருத்தான் விதனம் என உடன் கூறினார். வருகின்ற அதிகார முறைமையும் இதனான் அறிக. திணைவிராய் எண்ணியவழிப் பன்மை பற்றி முடிபு கோடலின், ஈண்டு அஃறிணையாற் கொண்டது. திரு நீக்கப்பட்டமை இக் குறிகளான் அறியப்படும் என்பதாம்.

இவை நான்கு பாட்டானும் சேர்வார் இழிந்தோர் என்பது கூறப்பட்டது.

### ஒப்புமை

1. **இருமனப் பெண்டிர்:**

"ஒருபால் படாதோர் உள்ளம் போல" *(பெருங். 1. 49: 40.)*

"மகளிர் நெஞ்சமே, போற்பல கவர்களும்." *(சீவக. 1212.)*

---

1. புரை - உயர்வு.
2. உரு, சொல், செயல்.

2. கள் திருநீக்கப் பட்டார் தொடர்பு:
"கஞ்சமெல் லணங்கும் தீரும் கள்ளினுல்." (கம்ப. கிட்கிந்தை. 95.)

3. முற்றும்:
"புலேமயக்கம் வேண்டிப் பொருட்பெண்டிர்த் தோய்தல்
கலமயக்கம் கள்ளுண்டு வாழ்தல்—சொலேமுனிந்து
பொய்மயக்கம் சூதின்கண் தங்கல் இவைமூன்றும்
நன்மையி லாளர் தொழில்." (திரி. 39.) (920)

---

# 93. கள் உண்ணுமை

**பரிமேலழகர்:** இனி ஒழுக்கமும் உணர்வும் அழித்தற்கண் அவ் வரைவில் மகளிரோடு ஒப்பதாய கள்ளினை உண்ணுமையது சிறப்பு எதிர்மறை முகத்தால் கூறுகின்றார்.

**மணக்குடவர்:** இது கணிகையர் கூட்டத்தினுல் வருதலின் அதன் பின் கூறப்பட்டது.

## 921

உட்கப் படாஅர் ஒளிஇழப்பர் எஞ்ஞான்றும்
கட்காதல் கொண்டொழுகு வார். 1

**பரிமேலழகர்:** கள் காதல் கொண்டு ஒழுகுவார் - கள்ளின்மேல் காதல் செய்து ஒழுகும் அரசர், எஞ்ஞான்றும் உட்கப்படாஅர் - எஞ்ஞான்றும் பகைவரான் அஞ்சப்படார்; ஒளி இழப்பர் - அதுவேயன்றி முன் எய்தி நின்ற ஒளியினையும் இழப்பர்.

அறிவின்மையால் பொருள் படை முதலியவற்றுல் பெரியராய காலத்தும் பகைவர் அஞ்சார், தம் முன்னோரான் எய்திநின்ற ஒளியினையும் இகழற்பாட்டான் இழப்பர் என்பதாம்.

இவை இரண்டானும் அரசு இனிது செல்லாது என்பது இதனுல் கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** உட்கப்படாஅர் - பிறரால் மதிக்கவும் படார்.

**பரிதியார்:** உட்கப்படாஅர் – நல்லோரால் நினைக்கப்படார். ஒளி– கீர்த்தி.

**காளிங்கர்:** உட்கப்படாஅர் - பெரியோர் என்று மதிக்கப்படார்.

**கவிராஜ பண்டிதர்:** உட்கப்படாஅர் – தமக்கு வருகிற நன்மை தீமைகளை அறியார்.

### ஒப்புமை

கள்காதல் கொண்டொழுகுவார் ஒளி இழத்தல்:
"ஒளியும் ஒளிசான்ற செய்கையும் சான்றோர்
தெளிவுடையன் என்றுரைக்கும் தேசும்—களிஎன்னும்
கட்டுரையால் கோது படும்." (அறநெறி. 144.) (921)

## 922

உண்ணற்க கள்ளை உணில்உண்க சான்றோரான்
எண்ணப் படவேண்டா தார். 2

**பரிமேலழகர்:** கள்ளை உண்ணற்க - அறிவுடையார் ஆயினர் அஃது இலராதற்கு ஏதுவாய கள்ளினை உண்ணுதொழிக; உணில் சான்றோரான் எண்ணப்பட வேண்டாதார் உண்க - அன்றியே உண்ணல் வேண்டுவார் உளராயின் நல்லோரால் எண்ணப்படுதலை வேண்டாதார் உண்க.

பெறுதற்கரிய அறிவைப் பெற்று வைத்தும் கள்ளான் அழித்துக் கொள்வாரை இயல்பாகவே அஃது இல்லாத விலங்குகளுடனும் எண்ணுராகலின், 'சான்றோரான் எண்ணப்பட வேண்டாதார் உண்க' என்றார்.

### உரை வேறுபாடு

**காளிங்கர்:** எண்ணப்பட வேண்டாதார் – மற்று இவரும் எம்மில் ஒருவர் என்று உடன் எண்ணப்படுதலை வேண்டாதவர். (922)

## 923

ஈன்றாள் முகத்தேயும் இன்னுதால் என்மற்றுச்
சான்றோர் முகத்துக் களி. 3

**பரிமேலழகர்:** ஈன்றாள் முகத்தேயும் களி இன்னுது - யாது செய்யினும் உவக்கும் தாய் முன்பாயினும் கள் உண்டு களித்தல் இன்னுதாம்; மற்று சான்றோர் முகத்து என் - ஆனபின் குற்றம் யாதும் பொருத சான்றோர் முன்பு களித்தல் அவர்க்கு யாதாம்?

மன மொழி மெய்கள் தம் வயத்த அன்மையான் நாண் அழியும்; அழியவே, ஈன்றாட்கும் இன்னுதாயிற்று; ஆனபின், கள் இருமையும் கெடுத்தல் அறிந்து சேய்மைக்கண்ணே கடியும் சான்றோர்க்கு இன்னுதாதல் சொல்ல வேண்டுமோ என்பதாம். (923)

## 924

நாண்என்னும் நல்லாள் புறம்கொடுக்கும் கள்என்னும்
பேணுப் பெருங்குற்றத் தார்க்கு. 4

**பரிமேலழகர்:** கள் என்னும் பேணு பெரும் குற்றத்தார்க்கு - கள் என்று சொல்லப்படுகின்ற யாவரும் இகழும் மிக்க குற்றத்தினை உடையாரை, நாண் என்னும் நல்லாள் புறம் கொடுக்கும் - நாண் என்று சொல்லப்படுகின்ற உயர்ந்தவள் நோக்குதற்கு அஞ்சி அவர்க்கு எதிர்முகம் ஆகாள்.

காணுதற்கும் அஞ்சி உலகத்தார் சேய்மைக்கண்ணே நீங்குவர் ஆகலின் பேணு என்றும், பின் ஒருவாற்றானும் கழுவப்படாமையின் பெருங் குற்றம் என்றும், இழிந்தோர்பால் நில்லாமையின் நல்லாள் என்றும் கூறினர். பெண்பால் ஆக்கியது வடமொழி முறைமையைப் பற்றி.[1]

இவை மூன்று பாட்டானும் ஒளி இழத்தற் காரணம் கூறப்பட்டது.

### ஒப்புமை

**கள் குடித்தலால் நாண் அழிதல்:**

"காணுமை உண்ட கடுங்கள்ளை மெய்கூர
நாணுது சென்று நடுங்க உரைத்தாங்கு." (கலி. 115: 2-3.) (924)

1. நாணத்தைக் குறிக்கும் லஜ்ஜா என்னும் வடசொல் பெண்பால்.

## 925

கைஅறி யாமை உடைத்தே பொருள்கொடுத்து
மெய்அறி யாமை கொளல். 5

**பரிமேலழகர் :** பொருள் கொடுத்து மெய் அறியாமை கொளல் - ஒருவன் விலைப்பொருளைக் கொடுத்துக் கள்ளால் தனக்கு மெய்ம்மறப்பினைக் கொள்ளுதல், கை அறியாமை உடைத்து - அவன் பழவினைப் பயனாய செய்வது அறியாமையைத் தனக்குக் காரணமாக உடைத்து.

தன்னை அறியாமை சொல்லவே, ஒழிந்தன யாவும் அறியாமை சொல்லல் வேண்டா ஆயிற்று. கை அப் பொருட்டாதல், "பழனுடைப் பெருமரம் வீங்தெனக் கையற்று"[1] என்பதனானும் அறிக. அறிவார் விலை கொடுத்து ஒன்றனைக் கொள்ளுங்கால் தீயது கொள்ளாமையின், மெய்யறியாமை கொளல் முன்னை அறியாமையான் வந்தது என்பதாம்.

### ஒப்புமை

**மணக்குடவர்:** கை - பயன்.

**பரிப்பெருமாள்:** மெய் என்பது தாம் என்பதும், ஒன்று என்பதும் அறத்துப்பாலில் கூறப்பட்டது. அன்றியும் பொருளில் உண்மை அறியாமை என்றும் ஆம்.

**காளிங்கர்:** கை அறியாமை - ஒழுக்கம் அறியாமை. (925)

## 926

துஞ்சினார் செத்தாரின் வேறல்லர் எஞ்ஞான்றும்
நஞ்சுண்பார் கள்ளுண் பவர். 6

**பரிமேலழகர் :** துஞ்சினார் செத்தாரின் வேறு அல்லர் - உறங்கினார் செத்தாரின் வேறுதல் உடையரேனும் அக் காலத்து அறிவின்மையான் வேறு எனப்படார்; கள் உண்பவர் எஞ்ஞான்றும் நஞ்சு உண்பார் - அவ்வாறே கள் உண்பார் நஞ்சு உண்பாரின் வேறுதல் உடையரேனும் எக் காலத்தும் அறிவின்மையான் வேறு எனப்படார்; அவர் தாமே ஆவர்.

உறங்கினார்க்கும் கள்ளுண்பார்க்கும் வேற்றுமை உயிர்ப்பு நிற்றல். வேறுதலும் வேறன்மையும் உடைமை காட்டற்கு உவமை புணர்க்கப்பட்டது. இதனை நிரல் நிறையாக்கி, 'திரிக்கப்படுதலால் உறங்கினாரும் நஞ்சு உண்பாரும் ஒப்பர்; கைவிடப்படுதலால் செத்தாரும் கள்ளுண்பாரும் ஒப்பர் என்று உரைப்பாரும் உளர். அதிகாரப் பொருள் பின்னதாயிருக்க யாதும் இல்லாத நஞ்சு உண்பார்க்கு உவமை புணர்த்து ஈண்டுக் கூறல் பயன் இன்றாகலானும், சொற்கிடக்கை நிரல் நிறைக்கு ஏலாமையானும் அஃது உரையன்மை அறிக.

இவை இரண்டு பாட்டானும் அவரது அறிவு இழத்தற் குற்றம் கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**கவிராஜ பண்டிதர்:** தூங்குகிறவனும் செத்தவனும் கள்ளைக் குடித்தவனும் நஞ்சு தின்றவனும் இந்த நாலு பேரும் சரி; ஆனாலும் தூங்குகிறவனை எழுப்பினால் எழுந்திருப்பான்; செத்தவன் சுவாசம் இல்லாமல் சும்மா கிடப்பான், விஷம் தின்றவன் மணிமந்திர ஔஷதங்களினாலே பிழைப்பான்; கள்ளுக் குடிக்கிறவன் இவர்களைப் போலச் சும்மா இராமல் நல்லோர்கள் பெரியோர்கள் முதலான பேரை உபத்திரவம் பண்ணுவான்; ஆனபடியினாலே சரியல்ல.

1. புறநா. 209 : 9.

ஒப்புமை

1. செத்தாரின் வேறல்லர்:

"விளிந்தாரின் வேறல்லர்." (குறள், 143.)

2. கள் உண்பவருக்கு நஞ்சுண்பார்:

"வஞ்சமும் களவும் பொய்யும் மயக்கமும் மரபில் கொட்பும்
தஞ்சமென் றூரை நீக்கும் தன்மையும் களிப்பும் தாக்கும்
கஞ்சமெல் லணங்கும் தீரும் கள்ளினுல் அருந்தி னூரை
நஞ்சமும் கொள்வ தல்லால் நரகினை நல்கா தன்றே."

(கம்ப, கிட்கிந்தை. 95.) (926)

## 927

உள்ஒற்றி உள்ளூர் நகப்படுவர் எஞ்ஞான்றும்
கள்ஒற்றிக் கண்சாய் பவர். 7

**பரிமேலழகர்:** கள் ஒற்றி[1] கண் சாய்பவர் - கள்ளை மறைந்து உண்டு அக் களிப்பால் தம் அறிவு தளர்வார், உள் ஊர் உள் ஒற்றி எஞ்ஞான்றும் நகப்படுவர் - உள்ளூர் வாழ்பவரான் உள் நிகழ்கின்றது உய்த்துணர்ந்து எஞ்ஞான்றும் நகுதல் செய்யப்படுவர்.

உள்ளூர்: ஆகுபெயர். உண்டு என்பது அவாய்நிலையான் வந்தது. உய்த்து உணர்தல்: தளர்ச்சியால் களிப்பினை உணர்ந்து அதனுல் கள் உண்டது உணர்தல்.

உரை வேறுபாடு

**காளிங்கர்:** உள் ஒற்றி என்பது, நெஞ்சினுல் அயிர்த்து ஆராய்ந்து என்றது. கள் ஒற்றி என்பது, கள் உளவழி ஆராய்ந்து என்றது. கண் சாய்பவர் என்பது கண்ணேடித் திரிபவர் என்றது. (927)

## 928

களித்தறியேன் என்பது கைவிடுக நெஞ்சத்
தொளித்ததூஉம் ஆங்கே மிகும். 8

**பரிமேலழகர்:** களித்து அறியேன் என்பது கைவிடுக - மறைந்து உண்டு வைத்து யான் கள் உண்டறியேன் என்று உண்ணுதபொழுது தம் ஒழுக்கம் கூறுதலை ஒழிக, நெஞ்சத்து ஒளித்ததூஉம் ஆங்கே மிகும் – அவ் வுண்டபொழுதே பிறர் அறியின் இழுக்காம் என்று முன் நெஞ்சத்து ஒளித்த குற்றமும் முன்னையளவின் மிக்கு வெளிப்படுதலான்.

களித்தறியேன் எனக் காரியத்தால் கூறினர்.

இவை இரண்டு பாட்டானும் அது மறைக்கப்படாது என்பது கூறப்பட்டது.

உரை வேறுபாடு

**மணக்குடவர்:** உளம் கெடாது என்பார்க்கு இது கூறப்பட்டது.

(928)

1. ஒற்றி - மறைந்து.

### 929

களித்தானைக் காரணம் காட்டுதல் கீழ்நீர்க்
குளித்தானைத் தீத்துரீஇ யற்று. 9

பரிமேலழகர்: களித்தானை காரணம் காட்டுதல் - கள் உண்டு களித்தான் ஒருவனை இஃது ஆகாது என்று பிறன் ஒருவன் காரணம் காட்டித் தெளிவித்தல், நீர்க்கீழ் குளித்தானை தீ துரீஇ அற்று - நீருள் மூழ்கினான் ஒருவனைப் பிறன் ஒருவன் விளக்கினால் நாடுதலை ஒக்கும்.

களித்தானை என்னும் இரண்டாவது, "அறிவுடை அந்தணன் அவளைக் காட் டென்றானே"[1] என்புழிப் போல நின்றது. நீருள் விளக்குச் செல்லா தாற்போல அவன் மனத்துக் காரணம் செல்லாது என்பதாம்.

இதனான் அவனைத் தெளிவித்தல் முடியாது என்பது கூறப்பட்டது.

#### உரை வேறுபாடு

பரிப்பெருமாள்: துருவுதல்: திசைச்சொல்.

பரிதியார்: கள் உண்டு களித்தவனுக்கு அறிவு சொல்லுதல் நீரிலே முழுகிக் கிடக்கிறவனைக் கொள்ளிகொண்டு சுடுகிறதற்கு ஒக்கும்.

#### மேற்கோள் விளக்கம்

கீழ்நீர் என்பது முன் பின்னாகத் தொக்க ஆறாம் வேற்றுமைத் தொகை (சிவஞான போதம், சூ. 10, அதி. 2) என்பர் சிவஞான முனிவர். (929)

### 930

கள்உண்ணாப் போழ்தில் களித்தானைக் காணுங்கால்
உள்ளான்கொல் உண்டதன் சோர்வு. 10

பரிமேலழகர்: கள் உண்ணா போழ்தில் களித்தானை - கள் உண்பான் ஒருவன் தான் அஃது உண்ணாது தெளிந்திருந்த பொழுதின்கண் உண்டு களித்த பிறனைக் காணுமன்றே; காணுங்கால், உண்டதன் சோர்வு உள்ளான் கொல் - காணுங்கால் தான் உண்டபொழுது உளதாம் சோர்வினை அவன் சோர்வால் அதுவும் இற்று என்று கருதான் போலும்!

சோர்வு - மன மொழி மெய்கள் தன் வயத்த அல்லவாதல். கருதலளவையான் அதன் இழுக்கினை உய்த்துணரின் ஒழியும் என, இதனான் அஃது ஒழிதற் காரணம் கூறப்பட்டது.

#### ஒப்புமை

**கள் உண்பான் சோர்வு பெறுதல்:**

"கள்ளுண்போன் சோர்வின்மை பொய்." (முதுமொழிக். 7: 3.) (930)

---

1. கலி. 72: 18. அவளைக் காணப்பண் என்று நச்சினார்க்கினியர் பொருள் எழுதுவார்; இங்கே, களித்தானைக் காரணம் காணப் பண்ணுதல் என்று பொருள் கொள்ள வேண்டும்.

# 94. சூது

பரிமேலழகர்: இனி, அக் கள்ளுண்டல்போல அறம் பொருள் இன்பங்கட்கு இடையீடாகிய சூதாடலும் பிணி உழத்தலும் கூறுவான் தொடங்கி, முதற்கண் சூதினது இயல்பு கூறுகின்றார்.

## 931

வேண்டற்க வென்றிடினும் சூதினை வென்றதூஉம்
தூண்டிற்பொன் மீன்விழுங்கி யற்று. 1

பரிமேலழகர்: வென்றிடினும் சூதினை வேண்டற்க - தான் வெல்லும் ஆற்றல் உடையனாயினும் சூதாடலை விரும்பாதொழிக; வென்றதூஉம் தூண்டில் பொன் மீன் விழுங்கி அற்று - வென்று பொருள் எய்துவார் உளரால் எனின் அவ் வென்ற பொருள்தானும் இரையான் மறைந்த தூண்டில் இரும்பினை[1] இரையெனக் கருதி மீன் விழுங்கினாற் போலும்.

வேறல் ஒருதலை அன்மையின் வென்றிடினும் என்றும், கருமங்கள் பலவும் கெடுதலின் வேண்டற்க என்றும் கூறினார். எய்திய பொருள் சூதாடுவார் நீங்காமைக்கு இட்டதோர் தளை என்பதூஉம், அதனால் பின் துயர் உழத்தலும் உவமையால் பெறும்.

### உரை வேறுபாடு

பரிப்பெருமாள்: உம்மையான், வெல்லான் என்பது துணிபு. (931)

## 932

ஒன்றெய்தி நூறிழக்கும் சூதர்க்கும் உண்டாங்கொல்
நன்றெய்தி வாழ்வதோர் ஆறு. 2

பரிமேலழகர்: ஒன்று எய்தி நூறு இழக்கும் சூதர்க்கும் - அத் தூண்டிற் பொன் போன்ற ஒன்றனை முன் பெற்று இன்னும் பெறுதும் என்னும் கருத்தால் நூற்றினை இழந்து வறியராம் சூதர்க்கும், நன்று எய்தி வாழ்வது ஓர் ஆறு உண்டாங்கொல் - பொருளால் அறனும் இன்பமும் எய்தி வாழ்வதொரு நெறி உண்டாமோ? ஆகாது.

அவ்வாற்றால் பொருள் இழந்தே வருதலான், அதனான் எய்தும் பயனும் அவர்க்கு இல்லை என்பதாம்.

### உரை வேறுபாடு

பரிதியார் 'சூதிற்கும்' என்று பாடம் கொண்டார். (932)

## 933

உருள்ஆயம் ஓவாது கூறின் பொருள்ஆயம்
போஒய்ப் புறமே படும். 3

பரிமேலழகர்: உருள் ஆயம் ஓவாது கூறின் - உருளும் கவற்றின் கட் பட்ட ஆயத்தை இடைவிடாது கூறிச் சூதாடுமாயின், பொருள் ஆயம் போஒய் புறமே படும் - அரசன் ஈட்டிய பொருளும் அவன் பொருள் வருவாயும் அவனை விட்டுப் போய்ப் பகைவர்கண்ணே தங்கும்.

---

1. தூண்டில் இரும்பு - தூண்டிலின் நுனியிலுள்ள முள்.

கவற்றினது உருட்சியை அதனினுய ஆயத்தின்மேல் ஏற்றியும், சூதாடலை அது கூறலாகிய காரணத்தின் மேலிட்டும் கூறினர். பொருளாயம் என்பது உம்மைத் தொகை. ஆயம்: வடமொழித் திரிசொல். காத்தற்கண்ணும் இயற்றற்கண்ணும் கருத்திலனுகலின் அவை இரண்டும் பகைவர்பாற் செல்லும் என்பதாம்.

### உரை வேறுபாடு

**பரிதியார்:** கவறு விழுந்த இலக்கம் எப்போதும் பேசுவார்க்குப் பொருளாயமும் புறத்திற் படும்.

**காளிங்கர்:** வாய்மையும் வழக்கும் கல்வியும் முதலிய தன் நாவினுல் கூறும் நயம் இன்றி, என்றும் கவறு புரட்சியில் தோன்றும் தாயப் பெயர்களையே ஒழியாது கூறின், திரட்டிய பொருள்தொகை அனைத்தும் தம் இடத்தினின்றும் போய்க் கெட்டுவிடும்.

உருள்தல் என்பது புரளுதல் என்றது. ஆயம் என்பது கவறு புரட்சியின் தாயம் என்றது. பொருளாயம் என்பது பொருள் கூட்டம் என்றது. படும் என்பது கெடும் என்றது.

### ஒப்புமை

**உருளாயம், பொருளாயம்:**

"பொருளாயம் எய்துதற்குப் புகழ்க்குடந்தை அம்பலத்தே
உருளாயச் சூதாடி." (பெரிய. மூர்க்க. 8.) *(933)*

## 934

**சிறுமை பலசெய்து சீர்அழிக்கும் சூதின்**
**வறுமை தருவதொன் றில்.** 4

**பரிமேலழகர்:** சிறுமை பல செய்து சீர் அழிக்கும் சூதின் - தன்னை விழைந்தார்க்கு முன் இல்லாத துன்பங்கள் பலவற்றையும் விளைத்து உள்ள புகழையும் கெடுக்கும் சூதுபோல், வறுமை தருவது ஒன்று இல் - நல்குரவினைக் கொடுக்க வல்லது பிறிது ஒன்று இல்லை.

அத் துன்பங்கள் முன்னர்க் கூறுப. நல்வினைகளையும் நல்லினத்தையும் நீக்கித் தீவினைகளையும் தீயினத்தையும் கூட்டுதலால், சீரழிக்கும் என்றார். வறுமைக்கு எல்லையாவர் என்பதாம்.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** சீர் – *தலைமை.*

### ஒப்புமை

**முற்றும்:** குறள், *920.*

"சூது முந்துறச் சொல்லிய மாத்துயர்
நீதி மைந்த நினக்கிலை யாயினும்
ஏதம் என்பன யாவையும் எய்துதற்
கோது மூலம் அவையென ஓர்தியே." (கம்ப. மந்தரை. 12.) *(934)*

## 935

**கவறும் கழகமும் கையும் தருக்கி**
**இவறியார் இல்லாகி யார்.** 5

பரிமேலழகர்: இல்லாகியார் - முற்காலத்துத் தாம் உளராகியே இலராகி ஒழுகினர், கவறும் கழகமும் கையும் தருக்கி இவறியார் - கவற்றினையும் அஃது ஆடும் களத்தினையும் அவ்வாடற்கு வேண்டும் கைத்தொழிலினையும் மேற்கொண்டு கைவிடாத வேந்தர்.

கைத்தொழில்: வெல்லும் ஆயம் படப் பிடித்து எறிதல், அவ் விவறுதலால் பாண்டவர் தம் அரசு விட்டு வனத்திடைப் போய் ஆண்டு மறைந்து ஒழுகினரென அனுபவம் காட்டியவாறு.

இவை ஐந்து பாட்டானும் அதனது வறுமை பயத்தற்குற்றம் கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

மணக்குடவர்: கவறு - நெத்தம், கழகம் - உண்டை உருட்டும் இடம். கைத்தொழில் - கவடி பிடித்தல்.

காளிங்கர்: இவையே நெருங்கப் பயின்று மற்று இது அல்லது பிறர்க்கு ஒன்று ஈயாது இறுகி நிற்கும் உலோபம் உடையார்.

கழகம் என்பது சூதாடு களம். கை என்பது இதற்கு ஏற்ற ஒழுக்கம். தருக்குதல் என்பது நெருக்குதல். இவறல் என்பது உலோபம். (935)

## 936

அகடாரார் அல்லல் உழப்பர்சூ தென்னும்
முகடியான் மூடப்பட் டார். 6

பரிமேலழகர்: சூது என்னும் முகடியான் மூடப்பட்டார் - தன் பெயர் சொல்லல் மங்கலம் அன்மையின் சூது என்று சொல்லப்படும் முகடியான் விழுங்கப்பட்டார், அகடு ஆரார் அல்லல் உழப்பர் - இம்மைக்கண் வயிறு ஆரப் பெறார்; மறுமைக்கண் நிரயத்துன்பம் உழப்பர்.

செல்வம் கெடுத்து நல்குரவு கொடுத்தல்தொழில் வேறுபடாமையிற் சூதென்னும் முகடி என்றும், வெற்றி தோல்விகள் நோக்கி ஒரு பொழுதும் விடாராகலின் ஈண்டு அகடாரார் என்றும், பொய்யும் களவும் முதலிய பாவங்கள் ஈட்டலின் ஆண்டு அல்லல் உழப்பர் என்றும் கூறினர். வயிறு ஆராமை சொல்லவே, ஏனைப் புலன்கள் நுகரப்பெறாமை சொல்ல வேண்டா ஆயிற்று. உழப்பர் என்பது எதிர்கால வினை.

### உரை வேறுபாடு

மணக்குடவர்: அகடு ஆரார் – தமக்கு உளவாகிய இந்திரியங்களும் மனமும் இன்புற்று நிறையப்பெறார். மூடப்பட்டார் - மறைக்கப்பட்டார்; மறைத்தல்: நற்குணங்களைத் தோன்றாமல் மறைத்தல்.

காளிங்கர்: அல்லல் - பெருந்துயரம். (936)

## 937

பழகிய செல்வமும் பண்பும் கெடுக்கும்
கழகத்துக் காலை புகின். 7

பரிமேலழகர்: காலை கழகத்து புகின் - அறம் பொருள் இன்பங்கட்கு அடைத்த காலம் அரசனுக்குச் சூதாடு களத்தின்கண் கழியுமாயின், பழகிய செல்வமும் பண்பும் கெடுக்கும் - அக் கழிவு தொன்றுதொட்டு வந்த அவன் செல்வத்தினையும் நற்குணங்களையும் போக்கும்.

பழகிய என்பது பண்புடனும் இயையும். தான் செய்து கொள்ளும் அறம் முதலியவேயன்றி, முன்னோரைத் தொடங்கி வருகின்ற செல்வமும், முன் செய்த நல்வினையின் பயனாய பண்பும் இலவாம் என்பதாம்.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** *காலை - காலைப்பொழுது.* (937)

## 938

**பொருள்கெடுத்துப் பொய்மேற் கொளீஇ அருள்கெடுத்**
**தல்லல் உழப்பிக்கும் சூது.** 8

**பரிமேலழகர்:** சூது - சூது, பொருள் கெடுத்து - தன்னைப் பயின்றவன் பொருளைக் கெடுத்து, பொய் மேல் கொளீஇ - பொய்யை மேற்கொள்ளப் பண்ணி, அருள் கெடுத்து - மனத்து எழும் அருளைக் கெடுத்து, அல்லல் உழப்பிக்கும் - இவ்வாற்றான் அவனை இருமையினும் துன்பம் உறுவிக்கும்.

இத் தொழில்கள் மூன்றற்கும் சூதுவினை முதலாகவும், தோல்வி, வெற்றி, செற்றம் என்பன முறையே கருவிகளாகவும் கொள்க. முன்னதனான் இம்மையினும், ஏனையவற்றான் மறுமையினும் ஆம். பொருள் கொடுத்து என்பது பாடமாயின், அவ்வெச்சத்திற்கு முடிவு, மேற்கொளீஇ என்புழி மேற்கோடலாகிய வினைமுதல் வினை. (938)

## 939

**உடைசெல்வம் ஊண்ஒளி கல்விஎன் றைந்தும்**
**அடையாவாம் ஆயம் கொளின்.** 9

**பரிமேலழகர்:** ஆயம் கொளின் - அரசன் சூதினைத் தனக்கு வினோதத் தொழிலாக விரும்புமாயின், ஒளி கல்வி செல்வம் ஊண் உடை என்று ஐந்தும் அடையாவாம் - அவனை ஒளியும் கல்வியும் செல்வமும் ஊணும் உடையும் என்று இவ்வைந்தும் சாராவாம்.

ஆயம்: ஆகுபெயர். இச் சிறப்பு முறை செய்யுள் நோக்கிப் பிறழ நின்றது. செல்வம் - அறுவகை உறுப்புக்கள்.[1] ஊண் உடை என்பன வற்றால் துப்புரவுகளெல்லாம்[2] கொள்ளப்படும். காலமும் கருத்தும் பெருமையின், இவை உளவாகா என்பதாம்.

இவை நான்கு பாட்டானும் சிறுமை பல செய்து அவற்றான் இருமையும் கெடுத்தல் கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** செல்வம் - பொன்னும் மணியும் பூமியும் அடிமையும் முதலாயின.

### ஒப்புமை

*முற்றும்:*

"ஓதலும் ஓதி உணர்தலும் சான்றோரால்
மேதை எனப்படும் மேன்மையும்—சூது
பொருமென்னும் சொல்லினால் புல்லப் படுமேல்
இருளாம் ஒருங்கே இவை." **(அறநெறி. 147.)** (939)

1. குறள், 381. 2. துய்க்கும் போகங்கள்.

940

இழத்தொறூஉம் காதலிக்கும் சூதேபோல் துன்பம்
உழத்தொறூஉம் காதற் றுயிர். 10

**பரிமேலழகர்:** இழத்தொறூஉம் காதலிக்கும் சூதேபோல் - சூதாடலான் இருமைப் பயன்களையும் இழக்குந்தோறும் அதன்மேல் காதல் செய்யுஞ் சூதன் போல, துன்பம் உழத்தொறூஉம் காதற்று உயிர் - உடம்பான் மூவகைத் துன்பங்களையும் அனுபவிக்குந்தோறும் அதன்மேல் காதலை உடைத்து உயிர்.

சூது: ஆகுபெயர். உயிரினது அறியாமை கூறுவார் போன்று சூதனது அறியாமை கூறுதல் கருத்தாகலின், அதனை யாப்புறுத்தற் பொருட்டு உவமமாக்கிக் கூறினர். இதன் எதிர்மறை முகத்தால் சூதினை வெறுத் தொழிவானை ஒக்கும் உடம்பினை வெறுத்தொழியும் உயிர் எனவும் கொள்க. இதனன் அஃது ஒழிதற்கு அருமையும் ஒழிந்தாரது பெருமையும் கூறப் பட்டன.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** இழத்தொறூஉம் - பொருளை இழக்குந்தோறும்.

**காளிங்கர்:** இவனை ஒரு மகன் என்று கூறுதற்கு நாணி உயிர் என்றது. *(940)*

---

## 95. மருந்து

**பரிமேலழகர்:** பழவினையானும் காரணங்களானும் மக்கட்கு வாதம் முதலிய பிணிகள் வரும்; அவற்றுள் பழவினையான் வருவன அதன் கழிவின் கண் அல்லது தீராமையின் அவை ஒழித்து, ஏனைக் காரணங்களான் வருவன வற்றைத் தீர்க்கும் மருந்தின் திறம் கூறுகின்றார். காரணங்களாவன உணவு செயல்களது ஒவ்வாமை யாகலின், பிணிகளும் காரணத்தான் வருவன ஆயின.

**மணக்குடவர்:** மருந்தாவது யாக்கை நோயுறாமல் செய்யும் திறம் கூறுதல். மேல் கடியப்படுவன கூறினர்; இனிக் கடியப்படாத உணவும் தன் அளவில் மிகுமாயின் துன்பம் பயக்குமாதலான், அதுவும் அளவறிந்து உண்ணவேண்டும் என்று அதன்பின் இது கூறப்பட்டது.

941

மிகினும் குறையினும் நோய்செய்யும் நூலோர்
வளிமுதலா எண்ணிய மூன்று. 1

**பரிமேலழகர்:** மிகினும் குறையினும் - உணவும் செயல்களும் ஒருவன் பகுதிக்கு ஒத்த அளவினவன்றி அதனின் மிகுமாயினும் குறையுமாயினும், நூலோர் வளி முதலா எண்ணிய மூன்று நோய் செய்யும் - ஆயுள்வேத முடையாரால் வாதம் முதலாக எண்ணப்பட்ட மூன்று நோயும் அவனுக்குத் துன்பம் செய்யும்.

நூலோர் எண்ணிய எனவே, அவர் அவற்றான் வகுத்த வாதப் பகுதி, பித்தப் பகுதி, ஐப்பகுதி என்னும் பகுதிப்பாடும் பெற்றாம். அவற்றிற்கு உணவு ஒத்தலாவது, சுவை வீரியங்களானும் அளவானும் பொருந்துதல்,

செயல்கள் ஒத்தலாவது, மனம் மொழி மெய்களால் செய்யும் தொழில்களை அவை வருந்துவதற்கு முன்னே ஒழிதல். இவை இரண்டும் இங்ஙனமன்றி மிகுதல் குறைதல் செய்யின், அவை தத்தம் நிலையின் நில்லாவாய் வருந்தும் என்பதாம். காரணம் இரண்டும் அவாய் நிலையான் வந்தன. முற்றும்மை விகாரத்தால் தொக்கது.

இதனான் யாக்கைகட்கு இயல்பாகிய நோய் மூவகைத்து என்பதூஉம், அவை துன்பம் செய்தற்குக் காரணம் இருவகைத்து என்பதூஉம் கூறப்பட்டன. இன்பம் செய்தற்குக் காரணம் முன்னர்க் கூறுப.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** மிகினும் குறையினும் - உணவும் உறக்கமும் இணை விழைச்சும் தன் உடம்பின் அளவிற்கு மிகினும் குறையினும்.

**பரிதியார்:** ஆகாரம் மிகுந்தாலும் குறைந்தாலும். *(941)*

## 942

மருந்தென வேண்டாவாம் யாக்கைக் கருந்திய
தற்றது போற்றி உணின். 2

**பரிமேலழகர்:** அருந்தியது அற்றது போற்றி உணின் - ஒருவன் முன் உண்டது அற்றபடியைக் குறிகளான் தெளிய அறிந்து பின் உண்ணுமாயின், யாக்கைக்கு மருந்து என வேண்டாவாம் - அவன் யாக்கைக்கு மருந்து என்று வேறு வேண்டாவாம்.

குறிகளாவன: யாக்கை நொய்ம்மை, தேக்கின்[1] தூய்மை, கரணங்கள் தொழிற்குரிய ஆதல், பசி மிகுதல் என இவை முதலாயின. பிணிகள் யாக்கையவாகலின், யாக்கைக்கு என்றார். உணின் என்பது அதன் அருமை தோன்ற நின்றது.

### உரை வேறுபாடு

**பரிதியார்:** செரித்தால் சாமம் பார்த்து அன்னம் இரண்டு கூறும் தண்ணீர் ஒரு கூறும் வாயு சஞ்சரிக்க ஒரு கூறும் வாத பித்த சிலேட்டுமத்திற்கு வேண்டாக் கறியை விட்டு அசனம் பண்ணக்கடவன்.

**காளிங்கர்:** மருந்து என - வேறு மருந்து என்று நாவினால் சொல்லலும். *(942)*

## 943

அற்றால் அளவறிந் துண்க அஃதுடம்பு
பெற்றான் நெடிதுய்க்கும் ஆறு. 3

**பரிமேலழகர்:** அற்றால் அளவு அறிந்து உண்க - முன் உண்டது அற்றால் பின் உண்பதனை அறும் அளவு அறிந்து அவ்வளவிற்றாக உண்க, உடம்பு பெற்றான் நெடிது உய்க்கும் ஆறு அஃது - இறப்பவும் பலவாய பிற யாக்கைகளில் பிழைத்துப் பெறற்கரிய இம் மானுட யாக்கையைப் பெற்றான் அதனை நெடுங்காலம் கொண்டு செலுத்தும் நெறி அதுவாகலான்.

இம்மை மறுமை வீடுபேறுகள் எய்தற்பாலது ஈது ஒன்றுமேயாகலின் உடம்பு பெற்றான் என்றும், அது நெடிது நின்றுழி அவை பெருகச் செய்து கொள்ளலாமாகலின் நெடிதுய்க்குமாறு என்றும் கூறினார். பெற்றால் என்று பாடம் ஓதுவாரும் உளர்.

---

1. தேக்கு – ஏப்பம்.

### உரை வேறுபாடு

**காளிங்கர்:** அளவறிந்து உண்க - அவ்வளவுதான் பொய்ப் பசியோ மெய்ப் பசியோ என்று சிறிது தாழ்க்க நின்று, ஓர்ந்து தெளிந்த பின்னர் உண்க. *(943)*

## 944

அற்ற தறிந்து கடைப்பிடித்து மாறல்ல
துய்க்க துவரப் பசித்து. 4

**பரிமேலழகர் :** அற்றது அறிந்து - முன் உண்டது அற்ற படியை அறிந்து, துவர பசித்து - பின் மிகப் பசித்து, மாறு அல்ல கடைப்பிடித்து துய்க்க - உண்ணுங்கால் மாறுகொள்ளாத உணவுகளைக் குறிக்கொண்டு உண்க.

அற்றதறிந்து என்னும் பெயர்த்துரை[1] அதனை யாப்புறுத்தற் பொருட்டு. உண்டது அற்றாலும் அதன் பயனாகிய இரதம் அறாதாகலான் அதுவும் அறல் வேண்டும் என்பார், மிகப் பசித்து என்றார். பசித்தல் வினை, ஈண்டு உடையான்மேல் நின்றது. மாறுகொள்ளாமையாவது உண்பான் பகுதியோடு மாறுகொள்ளாமையும், கால இயல்போடு மாறுகொள் ளாமையும், சுவை வீரியங்களான் தம்முள் மாறுகொள்ளாமையும் ஆம். அவையாவன: முறையே வாத பித்த ஐகளானய பகுதிக்கு அடாதவற்றைச் செய்வனவாதலும், பெரும்பொழுது சிறுபொழுது என்னும் கால வேறுபாடு களுள் ஒன்றற்கு ஆவன பிறிதொன்றற்கு ஆகாமையும், தேனும் நெய்யும் தம்முள் அளவு ஒத்து நஞ்சாதல் போல்வனமும் ஆம். அவற்றைக் குறிக் கொள்ளாது மனம் பட்டவாற்றால் துய்ப்பின் அதனானே நோயும் மரணமும் வருதலின், கடைப்பிடித்து என்றார்.

### உரை வேறுபாடு

**பரிதியார்:** அசனம் செரித்ததும் அசனம் பண்ணினவன் நோய் அறுப்பான். நித்தியம் ஒருபொழுது அசனம் பண்ணி வருவானாகில் அவ னுக்கு வியாதி இல்லை.

**கவிராஜ பண்டிதர்:** மிகப் பசித்த பிறகு சாப்பிட வேண்டும் என் றது, தான் கொண்ட விரத நியமங்கள் தப்பாமல் நடந்த பிறகு சாப்பிட வேணும். *(944)*

## 945

மாறுபா டில்லாத உண்டி மறுத்துண்ணின்
ஊறுபா டில்லை உயிர்க்கு. 5

**பரிமேலழகர் :** மாறுபாடு இல்லாத உண்டி மறுத்து உண்ணின் - அம் மூவகை மாறுகோளும் இல்லாத உணவைத் தன் உள்ளம் வேண்டிய அளவினனன்றிப் பிணி வாரா அளவினன் ஒருவன் உண்ணுமாயின், உயிர்க்கு ஊறுபாடு இல்லை - அவன் உயிர்க்குப் பிணிகளால் துன்பம் விளைதல் உண் டாகாது.

உறுவதனை ஊறு என்றார்; அஃது இன்பத்தில் செல்லாதாயிற்று, இல்லை என்பது தொடர்பாகலின். துன்பம் உறுவது உயிரே ஆதலின் அதன்மேல் வைத்துக் கூறினர். மாறுபாடு இல்வழியும் குறைதல் நன்று என்பதாம்.

---

1. பெயர்த்துரை - மீட்டும் ஒரு பயன் கருதிக் கூறுதல்; வடமொழியார் அநுவாதம் என்பர்.

இவை நான்கு பாட்டானும் உண்ணப்படுவனவும், அவற்றது அளவும், காலமும், பயனும் கூறப்பட்டன.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** சுவையும் வீரியமும் மாறுபாடு இல்லாத உணவை. மாறுபாடு - பலாப்பழம் தின்றால் சுக்குத் தின்றல்.

**பரிதியார்:** தன் சரீரத்திற்கு மாறுபாடு இல்லாத உண்டியை.

**காளிங்கர்:** கைப்பு, புளிப்பு, தித்திப்பு, காழ்ப்பு, உவர்ப்பு, துவர்ப்பு என்று சொன்ன அறுவகைச் சுவையும் இப்படி மாறுபட வகுத்து உண்ணுது ஒருபடியே உண்ணும் சில்சுவை உண்டியை ஒழித்து, மருத்து நூல் கூறியாங்கு உண்ணப்பெறின் ஓர் இடையூறு படுதல் இல்லை மக்கட்கு.

(945)

## 946

இழிவறிந் துண்பான்கண் இன்பம்போல் நிற்கும்
கழிபே ரிரையான்கண் நோய். 6

**பரிமேலழகர்:** இழிவு அறிந்து உண்பான்கண் இன்பம்போல் - அக் குறைதலை நன்று என்று அறிந்து அவ்வாறே உண்பவன்மாட்டு இன்பம் நீங் காது நிலைநிற்குமாறு போல், கழி பேர் இரையான்கண் நோய் நிற்கும் - மிகப் பெரிய இரையை விழுங்குவான்மாட்டு நோய் நீங்காது நிலை நிற்கும்.

அவ்வாறே உண்டல்: உண்ணலாம் அளவிற் சிறிது குறைய உண் டல். இன்பமாவது வாதம் முதலிய மூன்றும் தத்தம் நிலையில் திரியாமை யின் மனம் மொழி மெய்கள் அவன் வயத்தவாதலும், அதனான் அறம் முதலிய நான்கும் எய்தலுமாம். இரையை அளவின்றி எடுத்து அதனான் வருந்தும் விலங்கோடு ஒத்தலின், இரையான் என்றார். விதி எதிர்மறைகளை உவமமும் பொருளும் ஆக்கியது இரண்டானும் பெறுதற்கு. (946)

## 947

தீஅள வன்றித் தெரியான் பெரிதுண்ணின்
நோய்அள வின்றிப் படும். 7

**பரிமேலழகர்:** தெரியான் தீ அளவு அன்றி பெரிது உண்ணின் - தன் பகுதியும் அதற்கு ஏற்ற உணவும் காலமும் ஆராயாது வேண்டியதோர் உணவை வேண்டியதோர் காலத்து வயிற்றுத் தீயளவன்றி ஒருவன் மிக உண்ணுமாயின், நோய் அளவு இன்றி படும் - அவன் மாட்டு நோய்கள் எல்லையற வளரும்.

தெரியாமை வினைக்குச் செய்யப்படுபொருள்கள் அதிகாரத்தான் வந்தன. நோய்: சாதியொருமை.

இவை இரண்டு பாட்டானும் அவ்வகை உண்ணுவழிப் படும் இழுக்குக் கூறப்பட்டது.

### ஒப்புமை

**உண்டியும் நோயும்:**

"உண்டிவெய் யோர்க்கு உறுபிணி எளிது."

(முதுமொழிக். 8: 7.) (947)

## 948

நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல். 8

**பரிமேலழகர் :** நோய் நாடி - மருத்துவனுயினன் ஆதுரன்மாட்டு[1] நிகழ்கின்ற நோயை அதன் குறிகளான் இன்னதென்று துணிந்து, நோய் முதல் நாடி - பின் அது வருதற்காரணத்தை ஆராய்ந்து தெளிந்து, அது தணிக்கும் வாய் நாடி - பின் அது தீர்க்கும் உபாயத்தினை அறிந்து, வாய்ப்ப செயல் - அதனைச் செய்யும்வழிப் பிழையாமல் செய்க.

காரணம்: உணவு செயல் என முற்கூறிய இரண்டும். அவற்றை ஆயுள் வேதம் உடையார் நிதானம் என்ப. அவை நாடுதற்பயன் நோயினை யும் வாயினையும் ஐயமறத் துணிதல். மருந்து செய்தல், உதிரம் களைதல், அறுத்தல், சுடுதல் முதலிய செயல்களெல்லாம் அடங்குதற்கு, 'அது தணிக் கும் வாய்' என்றார். "கழுவாயுமுள"[2] என்றார் பிறரும். பிழையாமை; பழைய மருத்துவர் செய்து வருகின்ற முறைமையில் தப்பாமை.

### ஒப்புமை

1. **நோய்முதல் நாடுதல்:**

"நோய்முதல் நாடின்"
"நோய்முதல் உரைப்ப." *(பெருங். 1.35: 58, 36: 294.)*

2. **முற்றும்:**

"அரும்பிணி உறுநர்க்கு வேட்டது கொடாது
மருந்தாய்ந்து கொடுத்த அறவோன் போல" **(நற். 136: 2-3.)**
"நோயைத் துணிந்தே உறுநோய்முதல் நாடி அங்நோய்க்கு
ஆய மருந்தே அறிந்தூட்டும்." *(நீலகேசி. 723.) (948)*

## 949

உற்றான் அளவும் பிணிஅளவும் காலமும்
கற்றான் கருதிச் செயல். 9

**பரிமேலழகர் :** கற்றான் - ஆயுள் வேதத்தினைக் கற்ற மருத்துவன், உற்றான் அளவும் பிணி அளவும் காலமும் கருதி செயல் - அவ்வுபாயத்தினைச் செய்யுங்கால் ஆதுரன் அளவினையும் அவன்கண் நிகழ்கின்ற நோயின் அள வினையும் தன் செயற்கு ஏற்ற காலத்தினையும் அந் நூல் நெறியால் நோக்கி அவற்றோடு பொருந்தச் செய்க.

ஆதுரன் அளவு: பகுதி, பருவம், வேதனை, வலிகளின் அளவு. பிணி யளவு: சாத்தியம், அசாத்தியம், யாப்பியம்[3] என்னும் சாதி வேறுபாடும், தொடக்கம் நடு ஈறு என்னும் அதன் பருவ வேறுபாடும், வன்மை மென்மை களும் முதலாயின. காலம்: மேற்சொல்லியன.[4] இம் மூன்றும் பிழையாமல் நூல் நெறியானும் உணர்வு மிகுதியானும் ஆராய்ந்து செய்க என்பார், 'கற்றான் கருதிச் செயல்' என்றார்.

இவை இரண்டு பாட்டானும் அவ் விழுக்குட்பட்டுழி மருத்துவன் தீர்க்கு மாறு கூறப்பட்டது.

---

1. ஆதுரன் - நோயாளி. 2. புறநா. 34: 4.
3. சாத்தியம் - தீர்க்கத் தக்கது; அசாத்தியம் - தீர்க்கத் தகாதது; யாப் பியம் - பெரும்பான்மை தீர்க்கத் தக்கதும் சிறுபான்மை தீர்க்கத் தகாததும்.
4. குறள், 944, உரை.

### உரை வேறுபாடு

**காளிங்கர் :** நோய் உற்றவனது வன்மையும், மென்மையும், அவனுக்குச் சென்ற வயது அளவு ஆம் பிறவும், அவன் உற்ற நோயாவது அவன் அநுபவத்திற்கு வந்து அடிக்கொண்ட முகமோ என்றும், இடம் கொண்ட நோய் தலைசாய்ந்த முகமோ என்றும், இந்நோய் நிலை அளவு அறிந்தும், காலம் கார், கூதிர், முன்பனி, பின்பனி, சிரிளவேனில், வேனில் என்னும் அறுவகைப் பருவத்துள்ளும், 'இப்பருவத்து இந்நோய்க்கு இம்மருந்து செய்தால் தீரும், விகற்பிக்கும்' என அறிதலும் யாரோ எனின், வாகடம் முதலிய மருத்துவ நூல்களை மாசு அறக் கற்றவரே ; இத்துணையும் குறிக்கொண்டு மற்று இதன் பின்னரே மருந்தினைச் செய்வானாக. *(949)*

### 950

உற்றவன் தீர்ப்பான் மருந்துழைச் செல்வான்என்
றப்பால்நாற் கூற்றே மருந்து. 10

**பரிமேலழகர் :** மருந்து - பிணிக்கு மருந்தாவது, உற்றவன் - அதனை உற்றவன், தீர்ப்பான் - அதனைத் தீர்க்கும் மருத்துவன், மருந்து - அவனுக்குக் கருவியாகிய மருந்து, உழை செல்வான் என்ற அப்பால் நால் கூற்று - அதனைப் பிழையாமல் இயற்றுவான் என்று சொல்லப்பட்ட நான்கு பகுதியை உடைய நான்கு திறத்தது.

நான்கு என்னும் எண் வருகின்றமையின், அதுநோக்கி அப்பால் என்று ஒழிந்தார். நாற்கூற்றது என்பது விகாரம் ஆயிற்று.

அவற்றுள் உற்றவன் வகை நான்காவன: பொருளுடைமை, மருத்துவன் வழி நிற்றல், நோய் நிலை உணர்த்தல் வன்மை, மருத்துத் துன்பம் பொறுத்தல் என இவை. தீர்ப்பான் வகை நான்காவன: நோய் கண்டு அஞ்சாமை, ஆசிரியனை வழிபட்டு ஓதிய கல்வியும் நுண்ணறிவும் உடைமை, பல காலும் தீர்த்து வருதல், மனம் மொழி மெய்கள் தூயவாதல் என இவை. மருந்தின் வகை நான்காவன: பல பிணிகட்கும் ஏற்றல், சுவை வீரியம் விளைவாற்றல்களான் மேம்படுதல், எளிதின் எய்தப்படுதல், பகுதியோடு பொருந்துதல் என இவை. இயற்றுவான் வகை நான்காவன: ஆதுரன்மாட்டு அன்புடைமை, மனம் மொழி மெய்கள் தூயவாதல், சொல்லியன அவ்வாறே செய்தல் வன்மை, அறிவுடைமை என இவை. இவையெல்லாம் கூடியவழியல்லது பிணி தீராமையின், இத் தொகுதியையும் மருந்து என்றார். ஆயுள் வேதம் உடையாரும், இவை கால்களாக நடக்கும் என்பது பற்றிப் பாதம் என்றும், இவை மாறுபட்ட வழிச் சாத்தியமும் முதிர்ந்து அசாத்தியமாம் என்றும் கூறினர்.

இதனான் அதனைத் தீர்த்தற்கு வேண்டுவனவெல்லாம் தொகுத்துக் கூறப்பட்டன.

### உரை வேறுபாடு

**பரிதியார்:** வியாதி கொண்டவர்க்கும் பண்டிதர்க்கும் மருந்திற்கும் பரிகாரம் பண்ணுவார்க்கும் நந்நான்கு குணம் உண்டு. அது ஏதென்றால், வியாதியாளர் குணம்: திடவான், பதார்த்தவான், கிரமத்திலே வருபவன், கிளையுள்ளவன் ஆக நான்கு. வைத்தியன் குணம்: கற்றவன், தெய்வ சகாயம் உள்ளவன், கண்ணுனி உள்ளவன், கோவணசுத்தம் உள்ளவன் ஆக நான்கு. மருந்தின் குணம்: எளிதாய், ஒரு மருந்தாய், சுத்தம் உள்ளதாய், தப்பாமல் அறுப்பதாய் உள்ள நான்கு. பரிகாரம் பண்ணுவிப்பான் குணம்: வியாதியாள்பவன் மேல் பத்தி, வைத்தியன் சொன்ன கிரமத்திலே வருபவன், சோம்பின்மை உள்ளவன், கொடை உள்ளவன் ஆக நான்கு. இந்த நான்கு பேருக்கும் பதினறு குணம் வேணும், மருந்து என்னும் அதிகாரம்.

**காளிங்கர்.** நோயினை உற்றோன் தானும், இந்நோயான் இடர் உறக் கடவோம் அல்லேம் என்று மற்று இது தீருமளவும் முயற்சியும் உணவும் குறியும் முதலிய இவ்வாறு மொழிவேம் என்னும் அறிவு உடையோன் தானேயும் ஒரு மருந்து ஆகும். இது அல்லது மருந்தாவது ஒரு நோய்க்குப் பல மருந்து உளவாயினும் உற்றான் அளவும் பின் அளவும் காலமும் நோக்கினால் இவற்றுடன் பொருந்தினது யாது மற்று அதுவும் தனி மருந்து ஆகும். இது அல்லது உழைச்செல்வான் அவனது தாயினும் இனிய தன்மையன் ஆகி உற்ற இடத்து உதவும் பெற்றியோன் யாவன் மற்று அவன் தானும் ஒரு மருந்து ஆகும். எனவே, இந்நான்கு பகுதியும் உடையது யாது, மற்று அதுவே மருந்து என்று இயம்பப்படுவது. ஆதலால் இந்நான்கினுள் ஒன்று உதவான் ஆயின் மற்று அதுவே கூற்றம் (950)

---

## ஒழிபியல்

**பரிமேலழகர்:** இனி, அவ்வரசியலினும் அங்க இயலினும் அடங்காது ஒழிந்தவற்றது இயல்பு பதின்மூன்று அதிகாரத்தால் கூறுவான் தொடங்கி, முதற்கண் குடிமை கூறுகின்றார்.

**மணக்குடவர்:** குடி இயலாவது[1] அரசரும், அமைச்சரும், வீரரும் அல்லாத மக்களது இயல்பு கூறுதல்.

**பரிப்பெருமாள்:** அஃது யாங்ஙனம் கூறினர் எனின், அது கூறிய அதிகாரம் பதின்மூன்றினும் முற்படக் குடிப்பிறந்தார் இலக்கணம் ஓர் அதிகாரத்தானும், மானம் உடையார் இயல்பும் சான்றோர் இயல்பும் நான்கு அதிகாரத்தானும், பண்பு இன்றிப் பொருள் ஈட்டினார்க்கு உள தாகும் குற்றம் கூறுதலும் அந்தக் குற்றத்துக்கு அஞ்சி ஒழுகுதலாகிய நாண் உடைமையும் அந்நாண் உடையார் தம் குடும்பத்தை நோக்குமாறும் அவர் குடும்பத்தை நோக்குதற்குப் பொருள் வரும் நெறி பலவற்றுள்ளும் சிறப்புடைத்தாகிய உழவினது இயல்பும் நான்கு அதிகாரத்தானும், பொருள் இல்லாத மக்களது இயல்பும் அவர் பொருள் தேடுமாறும் மூன்று அதிகாரத்தானும், மக்களில் இழிந்தார் இலக்கணம் ஓர் அதிகாரத்தானும் கூறப்பட்டது.

# 96. குடிமை

**பரிமேலழகர்:** அஃதாவது உயர்ந்த குடியின்கட் பிறந்தாரது தன்மை. உயர்ந்த குடிப் பிறப்பு நால்வகை வருணத்தார்க்கும் இன்றியமையாதாக லின், அச் சிறப்புப் பற்றி இது முன் வைக்கப்பட்டது.

### 951

**இற்பிறந்தார் கண்அல்ல தில்லை இயல்பாகச்**
**செப்பமும் நாணும் ஒருங்கு.** 1

**பரிமேலழகர்:** செப்பமும் நாணும் ஒருங்கு - செம்மையும் நாணும் சேர, இல் பிறந்தார்கண் அல்லது இயல்பாக இல்லை - குடிப்பிறந்தார்மாட் டல்லது பிறர்மாட்டு இயற்கையாக உள ஆகா.

---

1. இவர் இவ்வியலைக் குடிஇயல் என்று கொண்டார்.

இல் குடி குலம்[1] என்பன ஈண்டு உயர்ந்தவற்றின் மேல. செம்மை: கருத்தும் சொல்லும் செயலும்[2] தம்முள் மாருகாமை.[3] நாண் – பழி பாவங்களின் மடங்குதல். இவை இற்பிறந்தார்க்கு ஆயின் ஒருவர் கற்பிக்க வேண்டாமல் தாமே உளவாம்; பிறர்க்கு ஆயின் கற்பித்த வழியும் நெடிது நில்லா என்பதாம்.

**உரை வேறுபாடு**

**மணக்குடவர்:** செப்பமும் - நடுவுநிலைமையும்.

**ஒப்புமை**

**முற்றும்:**

"நல்லவை செய்யின் இயல்பாகும்.........
............குடிப்பிறப்பின் ஊதியம் என்னே."

(நாலடி. 144,) (951)

## 952

**ஒழுக்கமும் வாய்மையும் நாணும்இம் மூன்றும்**
**இழுக்கார் குடிப்பிறந் தார்.** 2

**பரிமேலழகர்:** குடி பிறந்தார் - உயர்ந்த குடியின்கண் பிறந்தார், ஒழுக்கமும் வாய்மையும் நாணும் இம் மூன்றும் இழுக்கார் - தமக்குரிய ஒழுக்கம் மெய்ம்மை நாண் எனப்பட்ட இம் மூன்றன்கண்ணும் கல்வி யானன்றித் தாமாகவே வழுவார்.

ஒழுக்கம் முதலியன மெய்ம் மொழி மனங்களின் ஆகலின், அம் முறைய ஆயின. இழுக்குதல் அறியாது வருகின்றமையின், இழுக்கார் என்றார்.

**உரை வேறுபாடு**

**கவிராஜ பண்டிதர்:** ஒழுக்கம் - ஆசாரம்.

**ஒப்புமை**

**முற்றும்:**

"சான்ருண்மை சாயல் ஒழுக்கம் இவைமூன்றும்
வான்தோய் குடிப்பிறந்தார்க் கல்லது—வான்தோயும்
மைதவழ் வெற்ப படாஅ பெருஞ்செல்வம்
எய்தியக் கண்ணும் பிறர்க்கு."

(நாலடி. 142.) (952)

## 953

**நகைஈகை இன்சொல் இகழாமை நான்கும்**
**வகைஎன்ப வாய்மைக் குடிக்கு.** 3

---

1. இல் என்பது ஒரு குறளிலும் (951), குடி என்பது ஐந்து குறள்களிலும் (952, 953, 954, 955, 957), குலம் என்பது நான்கு குறள்களிலும் (956, 958, 959, 960) இவ்வதிகாரத்தில் ஒரு பொருட் கிளவிகளாய் வந்தது காண்க.

2. இம் மூன்றையும் அடுத்த குறளில் கூறுவார்.

3. "நெஞ்சத்துக் கோடாமை" (115), "சொற்கோட்ட மில்லது செப்பம்" (119), "பிறவும் தமபோற் செயின்" (120) என மூன்று காரணங்களாலும் செப்பம் அமைதலைக் கூறினர்.

**பரிமேலழகர் :** வாய்மை குடிக்கு - எக்காலத்தும் திரிபு இல்லாத குடியின்கண் பிறந்தார்க்கு, நகை ஈகை இன்சொல் இகழாமை நான்கும் வகை என்ப - வறியார் சென்றவழி முகமலர்ச்சியும், உள்ளன கொடுத்தலும், இன்சொல் சொல்லுதலும், இகழாமையும் ஆகிய இந் நான்கும் உரிய கூறு என்று சொல்லுவர் நூலோர்.

பொய்ம்மை திரிபுடைமையின் திரிபின்மையை வாய்மை என்றும், "இல்லாரை எல்லாரும் எள்ளுவர்"[1] ஆகலின் இகழாமையை அவர் கூறுக்கியும் கூறினர். குடி: ஆகுபெயர். நான்கின் வகை என்பது பாடமாயின், வாய்மைக் குடிப்பிறந்தார்க்குப் பிறரின் வேறுபாடு இந் நான்கான் உளதாம் என்று உரைக்க.

இவை மூன்று பாட்டானும் குடிப்பிறந்தாரது இயல்பு கூறப்பட்டது.

## உரை வேறுபாடு

**பரிப்பெருமாள்:** தொகை என்பது பிண்டத்தின் பெயர் ஆதலின், வகை என்பது உறுப்பிற்குப் பெயர் ஆயிற்று. மெய்ம்மைக் குடி என்றதனனே, எஞ் ஞான்றும் தப்பு இல்லாக் குடி என்று சொல்லப்படும்.

## ஒப்புமை

*மு[illegible]ம்:*

"இ[illegible]ன்மை இன்சொலொன் றீதல்மற் றேனை
மன[illegible]ன்மை என்றிவை எல்லாம்.........
இற்பிறந்தார் கண்ணே உள." (நாலடி. 146.) (953)

# 954

அடுக்கிய கோடி பெறினும் குடிப்பிறந்தார்
குன்றுவ செய்தல் இலர். 4

**பரிமேலழகர்:** அடுக்கிய கோடி பெறினும் - பலவாக அடுக்கிய கோடி அளவிற்றாய பொருளைப் பெற்றாராயினும், குடி பிறந்தார் குன்றுவ செய்தல் இலர் - உயர்ந்த குடியின்கண் பிறந்தார் தம் ஒழுக்கம் குன்றும் தொழில்களைச் செய்யார்.

அடுக்கிய கோடி என்பது, ஈண்டு எண்ணப்படும் பொருள்மேல் நின்றது.[2] குன்றும் தொழில்கள்: குன்றுதற்கு ஏதுவாய தொழில்கள்.

## உரை வேறுபாடு

**மணக்குடவர்:** இது மானம் விடார் என்றது.

## ஒப்புமை

1. **அடுக்கிய கோடி:** குறள், 1005.
2. **குன்றுவ செய்தல் இலர்:**

"......தெள்ளி, வடுவான வாராமல் காத்தல்." (திரி. 77.) (954)

1. குறள், 752.
2. "அடுக்கிய கோடியுண் டாயினும்" (1005) என்னும் இடத்தும் இவ்வாறே எழுதினர்.

## 955

வழங்குவ துள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி
பண்பின் தலைப்பிரிதல் இன்று. 5

**பரிமேலழகர் :** பழங்குடி - தொன்றுதொட்டு வருகின்ற குடியின்கண் பிறந்தார், வழங்குவது உள் வீழ்ந்தக்கண்ணும் - தாம் கொடுக்கும் பொருள் பண்டையிற் சுருங்கிய இடத்தும், பண்பின் தலைப்பிரிதல் இன்று - தம் பண்புடைமையின் நீங்கார்.

தொன்றுதொட்டு வருதல் : சேர சோழ பாண்டியர் என்றாற் போலப் படைப்புக் காலம் தொடங்கி மேம்பட்டு வருதல். அவர்க்கு நல்குரவாவது, வழங்குவது உள்வீழ்வது ஆகலின், அதனையே கூறினர்.

### உரை வேறுபாடு

**கவிராஜ பண்டிதர்:** பண்பின் தலைப்பிரிதல் இன்று - நல்ல குணங்களினின்று நீங்காமல் நல்ல வார்த்தை சொல்வார்கள்.

### ஒப்புமை

*முற்றும்:*

"உடுக்கை உலறி உடம்பழிந்தக் கண்ணும்
குடிப்பிறப் பாளர்தம் கொள்கையிற் குன்றார்"

"எவ்வம் உழந்தக் கடைத்தும் குடிப்பிறந்தார்
செய்வர் செயற்பா லவை"

"செல்லாமை செவ்வனேர் நிற்பினும் ஒப்புரவிற்கு
ஒல்கார் குடிப்பிறந் தார்"

"செல்லா இடத்தும் குடிப்பிறந்தார் செய்வன"

"எற்றொன்றும் இல்லா இடத்தும் குடிப்பிறந்தார்
அற்றுத்தற் சேர்ந்தார்க் கசைவிடத் தூற்றுவர்"

"கொடைக் கடனும்
சாஅயக் கண்ணும் பெரியார்போல் மற்றையார்
ஆஅயக் கண்ணும் அரிது"

"செல்வம், பலர்க்காற்றிக் கெட்டுலந்தக் கண்ணும் சிலர்க்காற்றிச்
செய்வர் செயற்பா லவை"

"ஏட்டைப் பருவத்தும் இற்பிறந்தார் செய்வன"

*(நாலடி. 141, 147, 148, 149, 150, 184, 185, 358.)*

"பீடில்லாக் கண்ணும் பெரியார் பெருந்தகையர்"

"ஒற்கந்தாம் உற்ற விடத்தும் உயர்ந்தவர்
நிற்பவே நின்ற நிலையின்மேல்" *(பழமொழி, 96, 119.)*

"மறம்தி றம்பினும் வரன்முறை திறம்புதல் வழக்கோ."

(கம்ப. மந்தரை. 66.) (955)

## 956

சலம்பற்றிச் சால்பில செய்யார்மா சற்ற
குலம்பற்றி வாழ்தும்என் பார். 6

**பரிமேலழகர்:** மாசு அற்ற குலம் பற்றி வாழ்தும் என்பார் – வசையற்று வருகின்ற நம் குடிமரபினேடு ஒத்து வாழக்கடவேம் என்று கருதி அவ்வாறு வாழ்வார், சலம் பற்றி சால்பு இல செய்யார் – வறுமை உற்ற வழியும் வஞ்சனையைப் பொருந்தி அமைவிலவாய தொழில்களைச் செய்யார்.

அமைவின்மை: அம்மரபிற்கு ஏலாமை.

இவை மூன்று பாட்டானும் அவர் வறுமையுற்ற வழியும் அவ்வியல்பின் வேறுபடார் என்பது கூறப்பட்டது.

## உரை வேறுபாடு

**மணக்குடவர்:** சலம் - பொய்.

**பரிதியார்:** சலம் - கோபம்.

## ஒப்புமை

**முற்றும்:**

"நரம்பெழுந்து நல்கூர்ந்தா ராயினும் சான்றோர்
குரம்பெழுந்து குற்றம்கொண் டேறுர்—உரங்கவரு
உள்ளமெனும் நாரினல் கட்டி உளவரையால்
செய்வர் செயற்பா லவை."

"வடுப்பட வைதிறந்தக் கண்ணும் குடிப்பிறந்தார்
கூருர்தம் வாயிற் சிதைத்து."

"கள்ளார்கள் ளுண்ணுர் கடிவ கடிந்தொரீஇ
எள்ளிப் பிறரை இகழ்ந்துரையார்—தள்ளியும்
வாயிற்பொய் கூருர் வடுவறு காட்சியார்
சாயிற் பரிவ திலர்." (நாலடி. 153, 156, 157.)

"அடர்ந்து வறியராய் ஆற்ருத போழ்தும்
இடங்கண் டறிவாம்என் றெண்ணி யிராஅர்
.........சான்ருேர், கடங்கொண்டும் செய்வார்கடன்."
(பழமொழி, 216.) (956)

## 957

குடிப்பிறந்தார் கண்விளங்கும் குற்றம் விசும்பின்
மதிக்கண் மறுப்போல் உயர்ந்து. 7

**பரிமேலழகர்:** குடி பிறந்தார்கண் குற்றம் - உயர்ந்த குடியின்கண் பிறந்தார் மாட்டு உளதாம் குற்றம், விசும்பில் மதிக்கண் மறுபோல் உயர்ந்து விளங்கும் - தான் சிறிதே ஆயினும் விசும்பின்கண் மதியிடத்து மறுப்போல ஓங்கித் தோன்றும்.

உயர்குடி முதலிய பொருள் வகை மூன்றற்கும் விசும்பு முதலிய உவமை வகை ஒத்துப்[1] பால் மாறுபட்டது. குடியது உயர்ச்சியானும் மதி போன்ற அவர் நற்குணங்களோடு மாருதலானும் உலகெங்கும் பரந்து வெளிப்படும் என்பதாம்.

## ஒப்புமை

**1. குடிப்பிறந்தார் குற்றம் விளங்கித் தோன்றுதல்:**

"......பெரியோர்கண் தீமை
கருநரைமேல் சூடேபோல் தோன்றும்" (நாலடி. 186.)

1. குடிக்கு விசும்பும் குடிப்பிறந்தார்க்கு மதியும் குற்றத்துக்கு மறுவும் உவமைகள்.

"நிரைதொடி தாங்கிய நீடோள்மாற் கேயும்
உரையொழியா வாகும் உயர்ந்தோர்கட் குற்றம்
......மாயா, நரையான் புறத்திட்ட சூடு"

"ஒன்றுய் விடினும் உயர்ந்தார்ப் படும்குற்றம்
குன்றின்மேல் இட்ட விளக்கு." (பழமொழி, 48, 204.)

2. முற்றும்:

"அங்கண் விசும்பின் அகனிலாப் பாரிக்கும்
திங்களும் சான்றோரும் ஒப்பர்மன் — திங்கள்
மறுவாற்றும் சான்றோரஃ தாற்றார் தெருமந்து
தேய்வர் ஒருமா சுறின்." (நாலடி. 151.)

"பதிப்பட வாழ்வார் பழியாய செய்தல்
மதிப்புறத்துப் பட்ட மறு" (பழமொழி, 258.)

"பதிப்பட்டு வாழ்வார் பழியாய செய்தல்
மதிப்புறத்தில் பட்ட மறு" (அறநெறி. 161.)

"வந்து தோன்றிய மலர்கதிர் மண்டிலம்
சான்றோர் தங்கண் எய்திய குற்றம்
தோன்றுவழி விளங்கும் தோற்றம் போல
மாசறு விசும்பின் மறுநிறம் கிளர" (மணி. 6: 2-5.)

"காரி யன்ற களங்க நிறத்தொன்மை
ஊரி யன்ற மதிக்குள தாமெனச்
சூரி யன்மர புக்குமோர் தொன்மறு
ஆரி யன்பிறந் தாக்கினை யாமரோ."

(கம்ப. வாலிவதை. 87.) *(957)*

## 958

**நலத்தின்கண் நார்இன்மை தோன்றின் அவனைக்
குலத்தின்கண் ஐயப் படும்.** 8

**பரிமேலழகர் :** நலத்தின்கண் நார் இன்மை தோன்றின் - குலநலம் உடையனாய் வருகின்றவன்கண்ணே ஈரம் இல்லைமை உளதாமாயின், அவனை குலத்தின்கண் ஐயப்படும் - அவனை அக் குலப்பிறப்பின்கண்ணே ஐயப் படும் உலகம்.

நலமும் குலமும் ஆகுபெயர். நார் இன்மையால் கொடாமையும் கடுஞ் சொல்லும் முதலிய கூறப்பட்டன. தோன்றின் என்பது தோன்றுமை விளக்கி நின்றது. நலன் உடையனாய் வருதலினிடையே இவை தோன்றலின், உள்ளது ஐயமாயிற்று. உலகம் என்பது அவாய் நிலையான் வந்தது. ஐயப்படல் என்பது பாடமாயின், ஐயப்படுக என விதியாக்கி உரைக்க.

இவை இரண்டு பாட்டானும் வேறுபட்டவழிப் படும் இழுக்குக் கூறப் பட்டது.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** நார் இன்மை - நீர்மை இன்மை.

**பரிதியார்:** நார் இன்மை தோன்றின் - கிருபையற்றவனாகில்.

**கவிராஜ பண்டிதர்:** நார் - தயை.

### ஒப்புமை

1. *குலத்தின்கண் ஐயம் உண்டாதல்:*

"கைவண் தோன்றல் ஐயம் உடையேன்
ஆர்புனை தெரியல்நின் முன்னோர் எல்லாம்
பார்ப்பார் நோவன செய்யலர்; மற்றிது
நீர்த்தோ நினக்கென வெறுப்பக் கூறி." (புறநா. 43: 12-5.)

2. *முற்றும்:*

"ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லாம்
பேரில் பிறந்தமை ஈரத்தின் அறிப" (முதுமொழிக். 2: 1-2.)

"வாய்மையும் மரபும் காத்து மன்னுயிர் துறந்த வள்ளல்
தூயவன் மைந்த னேநீ பரதன்முன் தோன்றி னுயே."

(கம்ப. வாலிவதை. 76.) (958)

## 959

நிலத்தில் கிடந்தமை கால்காட்டும் காட்டும்
குலத்தில் பிறந்தார்வாய்ச் சொல். 9

**பரிமேலழகர்:** நிலத்தில் கிடந்தமை கால் காட்டும் - நிலத்தின் இயல்பை அதன்கண் முளைத்த முளை காட்டும்; குலத்தில் பிறந்தார் வாய் சொல் காட்டும் - அதுபோலக் குலத்தின் இயல்பை அதன்கட் பிறந்தார் வாயில் சொல் காட்டும்.

கிடந்தமை - உள்ளபடி. முளைத்த மாத்திரத்தானே நன்மையும் தீமையும் தெரிதலின், இலைமுதலிய கூறாராயினர். ஆகவே பொருளினும் செயல் முதலியன வேண்டாவாயின.

குலத்து இயல்பு அறிதற்கருவி கூறுவார் போன்று, இன்சொல் வேண்டும் என்றவாறு ஆயிற்று.

### உரை வேறுபாடு

**பரிதியார்:** கிடந்தமை - கிடந்த விதையை; கால் காட்டும் - இன்ன விதையென்று அங்குரம் காட்டும். (959)

## 960

**நலம்வேண்டின் நாணஉடைமை வேண்டும் குலம்வேண்டின்
வேண்டுக யார்க்கும் பணிவு.** 10

**பரிமேலழகர்:** நலம் வேண்டின் நாண் உடைமை வேண்டும் - ஒருவன் தனக்கு நலன் உடைமையை வேண்டுவனுயின் தான் நாண் உடையனுதலை வேண்டுக; குலம் வேண்டின் யார்க்கும் பணிவு வேண்டுக - குலன் உடைமையை வேண்டுவனுயின் பணியப்படுவார் யாவர்மாட்டும் பணிதலை வேண்டுக.

நலம் - புகழ் புண்ணியங்கள். வேண்டும் என்பது விதிப்பொருட்டாய் நின்றது,[1] "வினைப்படு தொகுதியி னும்மை வேண்டும்"[2] என்புழிப்

---

1- 'தொழிற் பெயராய்த் தேற்றப் பொருள்பட்டு வரும் வேண்டும் என்னும் சொல்லின் சொற்குணம் அறியாது பரிமேலழகர், வேண்டுமென்பது விதிப் பொருட்டாய் நின்றதெனக் கூறிச் செல்வர்' என்பர் சுவாமிநாத தேசிகர். (இ. கொ. 85.)

2. தொல். கிளவி. 33.

போல. "அந்தணர் சான்றோர் அருந்தவத்தோர் தம்முன்னோர், தந்தைதா யென்றிவர்"[1] எல்லாரும் அடங்க யார்க்கும் என்றார். பணிவு - இருக்கை யெழலும் எதிர்செலவும் முதலாயின.[2]

இவை இரண்டு பாட்டானும் குடிமைக்கு வேண்டுவன கூறப்பட்டன.

### உரை வேறுபாடு

**கவிராஜ பண்டிதர்:** வேண்டுக யார்க்கும் பணிவு - தன்னை வணங்கி னவர்களுக்குத் தானும் வணக்கமுடையவனா யிருக்கவேணும்.

### ஒப்புமை

1. **நலம் வேண்டின் நாணுடைமை வேண்டும்:**

"நலனுடை மையின் நாணுச் சிறந்தன்று." (முதுமொழிக். 6.)

2. **குலம் வேண்டின் பணிவு வேண்டுக:**

"இருக்கை எழலும் எதிர்செலவும் ஏனை
விடுப்ப ஒழிதலோடு இன்ன—குடிப்பிறந்தார்
குன்றா ஒழுக்கமாக் கொண்டார்"

"........நல்கூர்ந்த மக்கட்கு
அணிகலம் ஆவது அடக்கம்—பணிவில்சீர்
மாத்திரை யின்றி நடக்குமேல் வாழும்ஊர்
கோத்திரம் கூறப் படும்." (நாலடி. 143, 241.) (960)

---

# 97. மானம்

**பரிமேலழகர்:** இனிக் குடிப்பிறந்தார்க்கு உரியவாய குணங்கள் கூறு வான் தொடங்கி, முதற்கண் மானம் கூறுகின்றார். அஃதாவது எஞ்ஞான் றும் தம் நிலையில் தாழாமையும், தெய்வத்தால் தாழ்வு வந்துழி உயிர் வாழாமையும் ஆம். இஃது, அக் குடிப்பிறப்பினை நிறுத்துதல் உடைமை யின் அச் சிறப்புப் பற்றி முன் வைக்கப்பட்டது.

**மணக்குடவர்:** மானமாவது எக் காலத்தினும் தமது நிலைமையில் திரியாமை. இது குடிப்பிறந்தார்க்கு இன்றியமையாமையின் அதன்பின் கூறப்பட்டது. இது மூன்று வகைப்படும், தமது தன்மை குன்றுவன செய்யாமையும், இகழ்வார்மாட்டுச் செய்யாமையும், இளிவரவு பொறாமை யும் என.

### 961

இன்றி அமையாச் சிறப்பின ஆயினும்
குன்ற வருப விடல். 1

**பரிமேலழகர்:** இன்றி அமையா சிறப்பின ஆயினும் – செய்யாத வழித் தாம் அமையாத சிறப்பினை உடையவே எனினும், குன்ற வருவ விடல்- தம் குடிப்பிறப்புத் தாழ வரும் செயல்களை ஒழிக.

அமையாமை - இறத்தல். குடிப்பிறப்பு என்பது அதிகார முறை மையான் வந்தது. இறப்ப வருவழி இளிவந்தன செய்தாயினும் உய்க

1. பு. வெ. 221. 2. நாலடி. 143.

என்னும் வடநூல் முறைமையை[1] மறுத்து, உடம்பினது நிலையின்மையையும், மானத்தினது நிலையுடைமையையும் தூக்கி அவை செய்யற்க என்பதாம்.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** இது பொருளும் இன்பமும் மிகினும், தன்மை குறைவன செய்யற்க என்றது.

**பரிதியார்:** அளவில்லாத சிறப்பும் செல்வமும் வருமாயினும் குற்றம் வருமாகில் அந்தக் காரியத்தைக் கைவிடுக.

**கவிராஜ பண்டிதர்:** இன்றி அமையாச் சிறப்பின வாயினும் - தாழ்வில்லாத பெரிய செல்வம் வருமானாலும்.

### ஒப்புமை

முற்றும்:

"கடுங்கட் கேழல் இடம்பட வீழ்ந்தென
அன்றவண் உண்ணா தாகி வழிநாள்
பெருமலை விடரகம் புலம்ப வேட்டெழுந்
திருங்களிற் றொருத்தல் நல்வலம் படுக்கும்
புலிபசித் தன்ன மெலிவில் உள்ளத்
துரனுடை யாளர்" (புறநா. 190: 6-11.)

"தொடங்குவினை தவிரா அசைவில் நோன்தாள்
கிடந்துயிர் மறுகுவ தாயினும் இடம்படின்
வீழ்களிறு மிசையாப் புலியினும் சிறந்த
தாழ்வில் உள்ளம்" (அகநா. 29: 1-4)

"ஈனமாய் இல்லிருந் தின்றி விளியினும்
மானம் தலைவருவ செய்பவோ—யானை
வரிமுகம் புண்படுக்கும் வள்ளுகிர் நோன்தாள்
அரிமா மதுகை யவர்."

"கடமான் தொலைச்சியர் கானுறை வேங்கை
இடம்வீழ்ந்த துண்ணா திறக்கும்—இடமுடைய
வானகம் கையுறினும் வேண்டார் விழுமியோர்
மானம் அழுங்க வரின்." (நாலடி. 198, 300.) (961)

## 962

சீரினும் சீர்அல்ல செய்யாரே சீரொடு
பேராண்மை வேண்டு பவர். 2

**பரிமேலழகர்:** சீரினும் சீர் அல்ல செய்யார் - புகழ் செய்யும் இடத்தும் தம் குடிமைக்கு ஒவ்வாத இளிவரவுகளைச் செய்யார், சீரொடு பேராண்மை வேண்டுபவர் - புகழுடனே மானத்தை நிறுத்துதலை விரும்புவார்.

எவ்விடத்தும் நிலை குலையாத திண்மையான் உளதாதல் பற்றிப் பேராண்மை எனப்பட்டது. நிலையுடைய புகழின் பொருட்டாகவும் செய்யார் என்பதாம்.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** சீரொடு பேராண்மை வேண்டுபவர் - தலைமையோடே கூடப் பெரிய ஆண்மையை விரும்புவார்.

**பரிதியார்:** சீரொடு பேராண்மை - நன்மையும் மேன்மையும். (962)

---

1. மனுஸ்மிருதி, அத். 10, சு. 104.

## 963

பெருக்கத்து வேண்டும் பணிதல் சிறிய
சுருக்கத்து வேண்டும் உயர்வு. 3

**பரிமேலழகர்:** பெருக்கத்து பணிதல் வேண்டும் - குடிப்பிறந்தார்க்கு நிறைந்த செல்வம் உளதாயவழி யாவர்மாட்டும் பணிவு வேண்டும்; சிறிய சுருக்கத்து உயர்வு வேண்டும் - குறைந்து நல்குரவு உளதாயவழிப் பணியாமை வேண்டும்.

பணியாமை: தாழ்வு வாராமல் பழைய உயர்ச்சிக்கண்ணே நிற்றல். செல்வக்காலை அஃது உயர்ச்சி செய்யத் தாம் தாழ்தலும், அல்லற்காலை அது தாழ்வு செய்யத் தாம் உயர்தலும் வேண்டும் என்பதாம்.

இவை மூன்று பாட்டானும் தாம் தாழ்தற்கு ஏதுவாயின செய்யாமைச் சிறப்புக் கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**பரிப்பெருமாள்:** இது திரு உடையார் பணிவு புகழப்படும்; திரு இலாதார் பணிதல் இகழப்படும்; ஆதலான் நல்கூர்ந்த காலத்தும் தன்மை குறைவன செய்யற்க என்றது.

**கவிராஜ பண்டிதர்:** வேண்டும் உயர்வு - வணங்காமல் விரத சீலங்களுடனே கூடியிருக்க வேணும்.

### ஒப்புமை

**பெருக்கத்துப் பணிதல்:**

"பணியுமாம் என்றும் பெருமை." (குறள், 978.) (963)

## 964

தலையின் இழிந்த மயிர்அனையர் மாந்தர்
நிலையின் இழிந்தக் கடை. 4

**பரிமேலழகர்:** மாந்தர் - குடிப்பிறந்த மாந்தர், நிலையின் இழிந்தக் கடை - தம் உயர்ந்த நிலையை விட்டு அதனினின்றும் தாழ்ந்தவழி, தலையின் இழிந்த மயிர் அனையர் – தலையை விட்டு அதனினின்றும் வீழ்ந்த மயிரினை ஒப்பர்.

அந் நிலையை விடாது நின்றவழிப் பேணப்படுதலும்,[1] விட்டுத் தாழ்ந்தவழி இழிக்கப்படுதலும் உவமையால் பெற்றும்.

### உரை வேறுபாடு

**கவிராஜ பண்டிதர்:** தலையிலே மயிர் இருக்கிறபோது கோதவும் முடிக்கவும் படும்; தாழ விழுந்தால் கையாலும் தீண்டாமல் இகழப்படும்; அதுபோலே ஆசாரத்தை விட்டவனும் இகழப்படுவன்.

### ஒப்புமை

**மாந்தர் நிலையின் இழியாமை வேண்டும்:**

"நிலையில் பிரியேல்." (ஆத்திசூடி.) (964)

---

1. மயிரைப் பேணுதல்: "மத்தக மயிரென வளர்த்த கைவினைச், சித்திரக் கா." (சீவக. 3026.)

## 965

குன்றின் அனையாரும் குன்றுவர் குன்றுவ
குன்றி அனைய செயின். 5

**பரிமேலழகர்:** குன்றின் அனையாரும் - குடிப்பிறப்பால் மலைபோல உயர்ந்தோரும், குன்றுவ குன்றி அனைய செயின் குன்றுவர் - தாழ்தற்கு ஏதுவாகிய செயல்களை ஒரு குன்றியளவாயினும் செய்வராயின் தாழ்வர்.

குன்றி அனையவும் என்னும் இழிவு சிறப்பும்மை விகாரத்தால் தொக்கது. தாழ்தற்கு ஏதுவாய செயல்களாவன, இளிவந்தன. சொற்பின் வருநிலை.[1] (965)

## 966

புகழ்இன்றால் புத்தேள்நாட் டுய்யாதால் என்மற்
றிகழ்வார்பின் சென்று நிலை. 6

**பரிமேலழகர்:** இகழ்வார்பின் சென்று நிலை - மானத்தை விட்டுத் தன்னை அவமதிப்பார் பின்னே ஒருவன் சென்று நிற்கின்ற நிலை, புகழ் இன்று - இவ்வுலகத்துப் புகழ் பயவாது; புத்தேள் நாட்டு உய்யாது - ஏனைப் புத்தேளுலகத்துச் செலுத்தாது; மற்று என் - இனி அவனுக்கு அது செய்வது யாது?

புகழ் பயப்பதனைப் புகழ் என்றார். பயனுய இவ்விரண்டும் இன்றிக் கொன்னே மானம் கெடுகின்றது என்னை என்பதாம்.

இவை மூன்று பாட்டானும் அவை செய்தற்குற்றம் கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**பரிதியார்:** புகழ் இன்றால் புத்தேள் நாட்டு உய்யாதால் - புகழில்லாதார்க்குத் தெய்வ லோகம் இல்லை.

### ஒப்புமை

**இகழ்வார்பின் சென்று நில்லாமை நன்று:**

"என்பாய் உகினும் இயல்பில்லார் பின்சென்று
தம்பா டுரைப்பரோ தம்முடையார்—தம்பாடு
உரையாமை முன்னுணரும் ஒண்மை யுடையார்க்கு
உரையாரோ தாமுற்ற நோய்."

"இம்மையும் நன்றாம் இயல்நெறியும் கைவிடாது
உம்மையும் நல்ல பயத்தலால்—செம்மையின்
நானம் கமழும் கதுப்பினுய் நன்றேகாண்
மானம் உடையார் மதிப்பு." (நாலடி. 292, 294.) (966)

## 967

ஒட்டார்பின் சென்றொருவன் வாழ்தலின் அந்நிலையே
கெட்டான் எனப்படுதல் நன்று. 7

**பரிமேலழகர்:** ஒட்டார்பின் சென்று ஒருவன் வாழ்தலின் - தன்னை இகழ்வார் பின்னே சென்று பொருள் பெற்று அதனுல் ஒருவன் உயிர் வாழ்

1. குன்று என்பது வெவ்வேறு பொருளில் வந்தமையின் சொற்பின் வருநிலையாயிற்று.

தலின், அந் நிலையே கெட்டான் எனப்படுதல் நன்று - அது செய்யாது இறந்தான் என்று சொல்லப்படுதல் அவனுக்கு நன்று.

ஒட்டுதல் - பொருந்துதல். அந்நிலையே என்றது, செல்லாத முன்னை நிலைக்கண்ணே நின்று என்றவாறு; அப்பொழுதே என்றுமாம். புகழும் புத்தேள் நாடும் பயவாதேனும்[1] பொருள் பெற்று உயிர் வாழ்வாம் என்பாரை நோக்கிக் கூறியது.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** அந்நிலையே கெட்டான் - அந்நிலையே நின்று கெட்டான்.

### ஒப்புமை

**ஒட்டார்பின் செல்லல் தீமை:**

"வற்றிமற் றுற்றப் பசிப்பினும் பண்பிலார்க்கு
அற்றம் அறிய உரையற்க"

"என்பாய் உகினும் இயல்பில்லார் பின்சென்று
தம்பாடு உரைப்பரோ." (நாலடி. 78, 292.) (967)

## 968

மருந்தோமற் றூன்ஓம்பும் வாழ்க்கை பெருந்தகைமை
பீடழிய வந்த இடத்து. 8

**பரிமேலழகர்:** பெருந்தகைமை பீடு அழிய வந்த இடத்து - உயர் குடிப்பிறப்புத் தன் வலியாகிய மானம் அழிய வந்துழி, ஊன் ஓம்பும் வாழ்க்கை மற்று மருந்தோ - இறத்தல் ஒழிந்து பயன் இல்லாத உடம்பினைக் காக்கும் வாழ்க்கை பின்னும் இறவாமைக்கு மருந்தாமோ?

மற்று என்பது மேற்சொல்லிய இறப்பினை மாற்றி நின்றது. நற்குணங்கட்கெல்லாம் இடனாதற் சிறப்புப் பற்றிப் பெருந்தகைமை என்றும், அவை எல்லாவற்றுள்ளும் அதற்கு வலியாதற் சிறப்புப் பற்றிப் பீடு என்றும், அஃது அழிந்தால் நின்ற வெற்றுடம்பு இழிக்கப்படுதலின் அதனை ஊன் என்றும், பின்னும் இறத்தல் ஒருதலை என்பார் மருந்தோ என்றும் கூறினர். மானத்தின் தொழில் அதற்கு இடனாகிய குடிப்பிறப்பின்மேல் நின்றது.

### உரை வேறுபாடு

**காளிங்கர்:** மருந்து என்றது அமுதம்.

### ஒப்புமை

1. **ஊன் ஓம்பும் வாழ்க்கை:**

"மான அருங்கலம் நீக்கி இரவென்னும்
ஈன இளிவினால் வாழ்வேன்மன்"

"இழித்தக்க செய்தொருவன் ஆர வுணலின்." (நாலடி. 40, 302.)

2. **முற்றும்:**

"வானகம் கையுறினும் வேண்டார் விழுமியோர்
மானம் அழுங்க வரின்" (நாலடி. 300.)

---

1. குறள், 966.

"தனக்குத் தகவல்ல செய்தாங்கோ ராற்ருல்
உணற்கு விரும்பும் குடரை—வனப்பற
ஆம்பற்ருள் வாடலே போல அகத்தடக்கித்
தேம்பத்தாம் கொள்வ தறிவு." (அறநெறி. 156.)

"புன்னுனே நீரின் நொய்தாய்ப் போதலே புரிந்து நின்ற
இன்னுயிர் இழத்தல் அஞ்சி இற்பிறப் பழிதல் உண்டே."
(கம்ப. சடாயு உயிர்நீத்த. 70.) (968)

## 969

மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னர்
உயிர்நீப்பர் மானம் வரின். 9

**பரிமேலழகர் :** மயிர் நீப்பின் வாழா கவரி மா அன்ஞர் - தன் மயிர்த் திரளின் ஒரு மயிர் நீங்கினும் உயிர் வாழாத கவரி மாவை ஒப்பார், மானம் வரின் உயிர் நீப்பர் - உயிர் நீக்கத்தான் மானம் எய்தும் எல்லே வரின் அதனைத் தாங்காது இறப்பர்.

இழிவு சிறப்பும்மை விகாரத்தால் தொக்கது. உயிரும் மானமும் உடன் நில்லாமைக்கண், பின்னும் போவதாய உயிரை நீத்து, என்ஞான்றும் நிற்பதாய மானத்தை எய்துவர் என்பதாம். உவமை அவர்க்கு அ∴து இயல்புஎன்பது விளக்கி நின்றது.

### ஒப்புமை

1. **கவரிமா மயிர் நீப்பின் வாழாமை:**

"வான்மயிர் துடக்கின் தானுயிர் வாழாப்
பெருந்தகைக் கவரி." (பெருங். 1. 35: 233-4.)

2. **மானம் வரின் உயிர் நீத்தல்:**

"குழவி யிறப்பினும் ஊன்தடி பிறப்பினும்
ஆளன் றென்று வாளில் தப்பார்
தொடர்ப்படு ஞமலியின் இடர்ப்படுத் திரீஇய
கேளல் கேளிர் வேளாண் சிறுபதம்
மதுகை யின்றி வயிற்றுத்தீத் தணியத்
தாமிரந் துண்ணும் அளவை
ஈன்ம ரோஇவ் வுலகத் தானே." (புறநா. 74.)

"ஈனமாய் இல்லிருந் தின்றி விளியினும்
மானம் தலைவருவ செய்பவோ"

"வானகம் கையுறினும் வேண்டார் விழுமியோர்
மானம் அழுங்க வரின்" (நாலடி. 198, 300.)

"உள்ளம், குறைபட வாழார் உரவோர்" (நான்மணி. 2.)

"மானம் அழிந்தபின் வாழாமை முன்னினிதே"

"மானம் படவரின் வாழாமை முன்னினிதே" (இனியவை. 14, 28.)

"தோல்வற்றிச், சாயினும் சான்ருண்மை குன்ருமை." (திரி. 27.)

3. *முற்றும்:*

''மானம் நோக்கின் கவரிமான் அனைய நீரார்''

''வருந்தலின் மானமா அனைய மாட்சியர்.''

(கம்ப. மந்திரப். 7, உருக்காட்டு. 19.) *(969)*

**970**

**இளிவரின் வாழாத மானம் உடையார்**
**ஒளிதொழு தேத்தும் உலகு.** 10

**பரிமேலழகர்:** இளி வரின் வாழாத மானம் உடையார் ஒளி - தமக்கு ஓர் இழிவு வந்துழிப் பொறுத்து உயிர் வாழாது அதனை நீத்த மானம் உடையாரது புகழ் வடிவினை, தொழுது ஏத்தும் உலகு - எஞ்ஞான்றும் தொழுது துதியாநிற்பர் உலகத்தார்.

''புலவர் பாடும் புகழுடையோர் விசும்பின், வலவ னேவா வான வூர்தி, எய்துவர்'' [1] ஆகலின் துறக்கச்செலவு சொல்ல வேண்டாவாயிற்று.

இவை நான்கு பாட்டானும் மானப்பொருட்டாய இறப்பினது சிறப்புக் கூறப்பட்டது.

ஒப்புமை

*முற்றும்:*

''செல்வப் பெரும்புனல் மருங்கற வைகலும்
நல்கூர் கட்டழல் நலிந்துகை யறுப்ப
மானம் வீடல் அஞ்சித் தானம்
தளராக் கொள்கையொடு சால்பகத் தடக்கிக்
கன்னி காமம் போல உள்ள
இன்மை உரையா இடுக்க ணாளர்.'' (பெருங். *4.2: 20-23.*) *(970)*

---

# 98. பெருமை

**பரிமேலழகர்:** அஃதாவது, செயற்கரிய செய்தல், தருக்கு இன்மை, பிறர் குற்றம் கூறாமை என்றிவை முதலிய நற்குணங்களால் பெரியாரது தன்மை. நிலையினும் மேன்மேல் உயர்த்தற் பயத்தவாய இவை உளவாவது நிலையில் தாழாமை உள்வழியாகலின், இது மானத்தின்பின் வைக்கப்பட்டது.

**மணக்குடவர்:** பெருமையாவது மேன்மை; அஃதாவது சிறியார் செய்யாமை.

**கவிராஜ பண்டிதர்:** (பரிமேலழகர் கூறியவற்றோடு பின்வருவன வற்றையும் சேர்ப்பர்.) முன் இருந்த நிலையினும் அதிகமான ஆசாரமாய் நடக்கிறதும், முன் இருந்த ஆசாரங்களிலே குறைபடாமல் இருக்கிறதும் ஆகிய நற்குணங்களால் பெரியாரது தன்மை.

---

1. புறநா. 27 : 7-9.

## 971

ஒளிஒருவற் குள்ள வெறுக்கை இளிஒருவற்
கஃதிறந்து வாழ்தும் எனல். 1

**பரிமேலழகர் :** ஒருவற்கு ஒளி உள்ள வெறுக்கை - ஒருவனுக்கு ஒளியாவது பிறரால் செயற்கரிய செய்வேம் என்று கருதும் ஊக்க மிகுதி; ஒருவற்கு இளி அஃது இறந்து வாழ்தும் எனல் - ஒருவனுக்கு மாசாவது அச் செயலை ஒழிந்தும் உயிர் வாழக் கடவேம் என்று கருதுதல்.

ஒளி - தான் உளனாய காலத்து மிக்குத் தோன்றுதல் உடைமை.[1] "ஒளிநிறான் ஓங்கு புகழ்செய்யான்"[2] என்றார் பிறரும். மேலும், "செயற்கரிய செய்வார் பெரியர்"[3] என்றாராயினும், ஈண்டு அவை அளவிறந்த ஒப்புரவு ஈகை முதலியவாம். அவற்றின் ஆய பெருமையை அதன் காரணத்தின் மேலிட்டு, உள்ள வெறுக்கை என்றும், அது தன்னையே அதன் காரியமாகிய ஒளியாக்கியும் கூறினார். இவ்வாறு இதன் எதிர்மறைக் கண்ணும் ஒக்கும்.

இதனால் பெருமையின் சிறப்புக் கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** உள்ள வெறுக்கை – மனப்பெருமை. இது பெருமை யாவது நிறையுடைமை என்று கூறிற்று.

**பரிதியார்:** புகழாவது தருமம். அது இல்லையாயின் அபகீர்த்தி பெறுவார்.

**கவிராஜ பண்டிதர்:** செய்தற்கு அருமையாவன: தருமம், தானம், விரதம், சீலாசாரம் முதலியன.

### ஒப்புமை

**உள்ள வெறுக்கை:** குறள், 600. (971)

## 972

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான். 2

**பரிமேலழகர் :** எல்லா உயிர்க்கும் பிறப்பு ஒக்கும் - எல்லா மக்கள் உயிர்க்கும் பொதுவாகிய பிறப்பு இயல்பு ஒக்குமே எனினும், சிறப்பு ஒவ்வா செய் தொழில் வேற்றுமையான் - பெருமை சிறுமை எனப்பட்ட சிறப்பு இயல்புகள் ஒவ்வா, அவை செய்யும் தொழில்களது வேறுபாட்டான்.

வேறுபாடு: நல்லனவும், தீயனவும், இரண்டுமாயினவும், இரண்டும் அல்லவாயினவும் ஆய அளவிறந்த பாகுபாடுகள். வினைவயத்தால் பஞ்ச பூத பரிணாமமாகிய யாக்கையைப் பொருந்தி நின்று அதன் பயன் அநுபவித்தல் எல்லா வருணத்தார்க்கும் ஒத்தலின் பிறப்பொக்கும் என்றும்,

---

1. குறள், 653, 698, உரையையும் பார்க்க; 'ஒளி யென்பது தான் உள காலத்து ஒப்புரவு. புகழென்பது தான் இறந்த காலத்தும் உளதாம் உரை.' (நாலடி. 9, பதுமனார்.)
2. நாலடி. 9.
3. குறள், 26.

பெருமை சிறுமைகட்குக் கட்டளைக் கல்லாகிய தொழிற் பாகுபாடுகள்[1] வருணந்தோறும் யாக்கைதோறும் வேறுபடுதலின் சிறப்பு ஒவ்வா என்றும் கூறினர்.

### உரை வேறுபாடு

**பரிதியார்:** நற்குலத்தராவர் என்றதால் இழிதொழிலாலே இழிகுலமாவர் என்பதாம்.

### மேற்கோள் விளக்கம்

'குடிமையாவது அந்தணர் அரசர் முதலிய அக் குலத்தின் உள்ளாரெல்லாம் சிறப்பாக ஒவ்வாமையின் அச் சிறப்பாகிய ஒழுக்கம் பற்றிய குடி வரவு. குடிவரவைக் குடிமை என்றார், "பிறப்பொக்கும்......வேற்றுமையான்" எனப் பிறரும் குலத்தின்கண்ணே சிறப்பு என்பது ஒன்று உண்டென்று கூறினராகலின்' என்பர் **இளம்பூரணர்.** (தொல். பொருள். 90.)

### ஒப்புமை

**செய்தொழில் வேற்றுமையால் சிறப்பு ஒவ்வாமை:**

"இனைய தாதலின் எக்குலத்து யார்க்கும்
வினையி னல்வரும் மேன்மையும் கீழ்மையும்."

(கம்ப. வாலிவதை. 115.) *(972)*

## 973

மேல்இருந்தும் மேல்அல்லார் மேல்அல்லர் கீழ்இருந்தும்
கீழ்அல்லார் கீழ்அல் லவர். 3

**பரிமேலழகர்:** மேல் அல்லார் மேல் இருந்தும் மேல் அல்லர் - செயற்கரிய செய்கலாது சிறியராயினர்[2] உயர்ந்த அமளி முதலியவற்றின்மிசை இருந்தாராயினும் பெரியார் ஆகார்; கீழ் அல்லவர் கீழ் இருந்தும் கீழ் அல்லார் - அவை செய்து பெரியராயினர் தாழ்ந்த வறுநிலத்து இருந்தாராயினும் சிறியர் ஆகார்.

மேல் இருத்தல் கீழ் இருத்தல்களால் செல்வ நல்குரவுகளும், மேல் கீழ்களால்[3] பெருமை சிறுமைகளும் கருதப்பட்டன.

இவை இரண்டு பாட்டானும் முறையே குடிமை மாத்திரத்தானும் செல்வ மாத்திரத்தானும் அஃது உளதாகாமை கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**காளிங்கர்:** மணியும் மாடும் பொருளும் பூமியும் முதலியவற்றான் மேலாயினாரும் தம் குலமும் ஒழுக்கமும் குணமும் ஞானமும் முதலியவற்றான் மேம்பாடு உடையர் அல்லாதார் யாவர்? அவர் எஞ்ஞான்றும் சாலச் சிறியரே. இனி மற்று அம் மணியும் மாடும் முதலியவற்றால் கீழ்ப்பட்டிருந்தும் அக் குலமும் ஒழுக்கமும் முதலியவற்றால் சிறிதும் கீழ்மைப்பாடு உடையர் அல்லாதார் யாவர்? மற்று அவர் அஞ்ஞான்றும் கீழ் அல்லர். எனவே, அவரே சாலப் பெருமையர் என்பது பொருளாயிற்று. *(973)*

---

1. குறள், 505. 2. குறள், 26. 3. குறள், 978.

## 974

ஒருமை மகளிரே போலப் பெருமையும்
தன்னைத்தான் கொண்டொழுகின் உண்டு. 4

**பரிமேலழகர் :** ஒருமை மகளிரே போல – கவராத[1] மனத்தினை யுடைய மகளிர் நிறையின் வழுவாமல் தம்மைத் தாம் காத்துக் கொண்டு ஒழுகுமாறு போல,[2] பெருமையும் தன்னை தான் கொண்டு ஒழுகின் உண்டு - பெருமைக் குணனும் ஒருவன் நிறையின் வழுவாமல் தன்னைத் தான் காத்துக் கொண்டு ஒழுகுவானாயின் அவன்கண் உண்டாம்.

பொருளின் தொழில் உவமையினும் வந்தது. கற்பு உண்டாதல் தோன்ற நின்றமையின், உம்மை எச்சவும்மை. ஒழுகுதல் - மனம் மொழி மெய்களை ஒடுக்கி ஒப்புரவு முதலிய செய்துபோதல்.

இதனால் அஃது உளதாமாறு கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**பரிப்பெருமாள்:** தன்னைப் பிறர் விரும்பும் காலத்தினும், தன் உள்ளம் பிறரை விரும்பும் காலத்தினும் வேண்டியவாறு ஒழுகாத கற்புடைய மகளிரைப் போலப் பாதுகாத்து ஒருவன் ஒழுகுவனாயின் பெருமை உண்டாம்; அல்லது இல்லையாம்.

**காளிங்கர்:** ஒருமை மகளிரே போல - பிற மதில்காவலும் மக்கள் காவலும் அன்றித் தம் மனக்காவல் ஆகிய நெஞ்சு ஒருமைப்பாட்டால் கொண்டானைப் பிழையாத மகளிரைப் போல.

**கவிராஜ பண்டிதர்:** ஒருமை மகளிர் – கபடம் இல்லாத மனத்தை யுடைய ஸ்திரீகள்.

### ஒப்புமை

1. **ஒருமை மகளிர்:**

"தருமமே காத்ததோ சனகன் நல்வினைக்
கருமமே காத்ததோ கற்பின் காவலோ
அருமையே அருமையே யாரி தாற்றுவார்
ஒருமையே எம்மனோர்க் குரைக்கற் பாலதோ." (கம்ப. காட்சி. 75.)

2. **பெருமையும் தன்னைத்தான் கொண்டொழுகின் உண்டு:**

"நன்னிலைக்கண் தன்னை நிறுப்பானும் தன்னை
நிலைகலக்கிக் கீழிடு வானும்—நிலையினும்
மேன்மேல் உயர்த்து நிறுப்பானும் தன்னைத்
தலையாகச் செய்வானும் தான்." (நாலடி. 248.) (974)

## 975

பெருமை உடையவர் ஆற்றுவார் ஆற்றின்
அருமை உடைய செயல். 5

**பரிமேலழகர் :** பெருமை உடையவர் - அவ்வாற்றால் பெருமை உடையராயினார், அருமை உடைய செயல் ஆற்றின் ஆற்றுவார் - தாம் வறியராய

---

1. சிதறுண்ணாத.
2. "தற்காத்து......சோர்விலாள் பெண்." (குறள், 56.)

வழியும் பிறரால் செய்தற்கு அரியவாய தம் செயல்களை விடாது அவை செய்யும் நெறியால் கடைபோகச் செய்தலை வல்லராவர்.

வறியராய வழியும் என்பது, முன் செய்து போந்தமை தோன்றப் பெருமை உடையவர் என்றதனானும், ஆற்றுவார் என்றதனானும் பெற்றாம்.

இதனால் அதனை உடையார் செய்தி கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**கவிராஜ பண்டிதர்:** நல்ல நடக்கைகளை விட்டால் பெருமை போம்.

### ஒப்புமை

**முற்றும்:** குறள், *26*.

"இசையும் எனினும் இசையா தெனினும்
வசைதீர எண்ணுவர் சான்றோர்" (நாலடி. *152*.)

"பெருமையோ ராயினும் பெருமை பேசலார்
கருமமே யல்லது பிறிதென் கண்டது."
(கம்ப. கலன்காண். 16.) *(975)*

## 976

**சிறியார் உணர்ச்சியுள் இல்லைப் பெரியாரைப்**
**பேணிக்கொள் வேம்என்னும் நோக்கு.** 6

**பரிமேலழகர்:** பெரியாரை பேணி கொள்வேம் என்னும் நோக்கு - அப் பெற்றியராய பெரியாரை வழிபட்டு அவர் இயல்பினை யாம் கோடும் என்னும் கருத்து, சிறியார் உணர்ச்சியுள் இல்லை - மற்றைச் சிறியராயினர் மனத்தின்கண் உளதாகாது.

குடிமை, செல்வம், கல்வி என்று இவற்றது உண்மை மாத்திரத்தால் தம்மை வியந்திருப்பார்க்கு அவை நமக்கு இயல்பென்று அமைந்திருப்பாரை வழிபட்டு அஃது உடையராதல் கூடாது என்பதாம்.

### உரை வேறுபாடு

**காளிங்கர்:** பெரியாரை பேணி கொள்வேம் என்னும் நோக்கு - பெரியோரைப் பொருள் எனக் கருதி நமக்கு இது வேண்டும் என்று விரும்பிக் கைக்கொள்வோம் என்னும் விசாரம். *(976)*

## 977

**இறப்பே புரிந்த தொழிற்றும் சிறப்புந்தான்**
**சீரல் லவர்கண் படின்.** 7

**பரிமேலழகர்:** சிறப்பு தானும் - தனக்கு ஒக்கும் பெரியாரிடத்து அமைந்திருத்தலைச் செய்வதாய சிறப்புத்தானும், சீர் அல்லவர்கண் படின் - தனக்கு ஒவ்வாத சிறியாரிடத்துப் படுமாயின், இறப்பே புரிந்த தொழிற்றும் - அதனை ஒழிந்து தருக்கின்கண்ணே மிக்க[1] செயலை உடைத்தாம்.

---

1. "புரிந்த தகையினன்" (பரி. 7: 51) என்பதற்கு, 'மிக்க தகைமையை யுடைய அவன்' என்று உரை எழுதுவர் இவ்வுரையாசிரியர்.

தருக்கினை மிகச் செய்யும் என்பதாயிற்று. சிறப்பு - குடிமை செல்வம், கல்விகளினுய மிகுதி.

இவை இரண்டு பாட்டானும் அஃது இலார் செய்தி கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** செல்வமானது தனக்கு நிகர் இல்லாதார் மாட்டே நிற்குமாயின், நிதியை இறப்பாரிடத்தே பொருந்தின தொழிலை உடைத்தாம். (977)

## 978

பணியுமாம் என்றும் பெருமை சிறுமை
அணியுமாம் தன்னை வியந்து. 8

**பரிமேலழகர்:** பெருமை என்றும் பணியும் - பெருமை உடையார் அச் சிறப்பு உண்டாய ஞான்றும் தருக்கின்றி அமைந்து ஒழுகுவர்; சிறுமை (என்றும்) தன்னை வியந்து அணியும் - மற்றைச் சிறுமை உடையார் அஃது இலாத ஞான்றும் தம்மை வியந்து புனையாநிற்பர்.

பொருளின் தொழில்கள் பண்பின்மேல் ஏற்றப்பட்டன.[1] இஃது, "அற்ற மறைக்கும் பெருமை"[2] என்புழியும் ஒக்கும். என்றும் என்பது பின்னும் வந்து இயைந்தது. ஆம் என்பன இரண்டும் அசை. புனைதல்: பிறரின் தமக்கோர் மிகுதியை ஏற்றிக்கோடல். இதற்கு உயர்ந்தார் தாழ்வார், தாழ்ந்தார் உயர்வார், இஃது ஒரு விரோதம் இருந்தவாறு என்னென உலகியலை[3] வியந்து கூறிற்றுக்குவாரும் உளர். (978)

## 979

பெருமை பெருமிதம் இன்மை சிறுமை
பெருமிதம் ஊர்ந்து விடல். 9

**பரிமேலழகர்:** பெருமை பெருமிதம் இன்மை - பெருமைக் குணமாவது காரணம்[4] உண்டாய வழியும் அஃது இயல்பாதல் நோக்கித் தருக்கின்றி இருத்தல்; சிறுமை பெருமிதம் ஊர்ந்து விடல் - சிறுமைக் குணமாவது அஃது இல்வழியும் அதனை ஏற்றிக்கொண்டு தருக்கின் முடிவின் கண்ணே நின்று விடுதல்.

அளவறத் தருக்குதல் என்பதாயிற்று. விடும் என்று பாடம் ஓதுவாரும் உளர். முற்றுத் தொடரும் எழுவாய்த் தொடரும் தம்முள் இயையாமையின் அது பாடம் அன்மை உணர்க.

---

1. பெருமை சிறுமை என்னும் இரண்டும் வரும் பிற இடங்களினும் இவ்வாறு உரைத்தார். (451, 980.)

2. **குறள்**, 380.

3. "தாழ்ந்தோ ருயர்வ ரென்றுமிக வுயர்ந்தோர் தாழ்வ ரென்றுமறம், சூழ்ந்தோ ருரைக்கு முரைகண்டாம்." (**பிரபு**, மாயை உற். 14.)

4. பெருமிதத்துக்குரிய காரணம், "கல்வி தறுகண் இசைமை கொடையெனச், சொல்லப் பட்ட பெருமிதம் நான்கே" (**தொல்.** மெய்ப். 10) என்பதனுல் உணரலாம்; 'பெருமிதத்தினைச் செய்யும் கல்வியும் குடிப்பிறப்பு முடையார்' (**குறள்**, 125, உரை) என்று **பரிமேலழகர்** முன்னர் உரைத்தார்.

### உரை வேறுபாடு

**கவிராஜ பண்டிதர்:** பெருமை பெருமிதம் இன்மை - பெருமைக் குணமாவது, செல்வம் உண்டானாலும் வறுமை வந்தாலும் இது முன் செய்த வினை என்று மகிழாமல் இருக்கிறது.

### ஒப்புமை

1. பெருமை பெருமிதம் இன்மை:

"பெருமையோ ராயினும் பெருமை பேசலார்."

(கம்ப. கலன்காண். 16.)

2. சிறுமை பெருமிதம் ஊர்ந்துவிடல்:

"சிற்றில் பிறந்தமை பெருமிதத்தின் அறிப."

(முதுமொழிக். 2:6.) (979)

## 980

அற்றம் மறைக்கும் பெருமை சிறுமைதான்
குற்றமே கூறி விடும். 10

**பரிமேலழகர்:** பெருமை அற்றம் மறைக்கும் - பெருமை உடையார் பிறர் மானத்தையே கூறி அவமானத்தை மறையா நிற்பர்; சிறுமை குற்றமே கூறிவிடும் - மற்றைச் சிறுமை உடையார் பிறர் குணத்தை மறைத்துக் குற்றத்தையே கூறிவிடுவர்.

மறைத்தலும் கூறலும் ஏனை இடத்தும் இயைந்தன. அற்றம்: ஆகு பெயர். தான் என்பது அசை.

இவை மூன்று பாட்டானும் இருவர் செயலும் ஒருங்கு கூறப் பட்டன.

### உரை வேறுபாடு

**பரிதியார்:** பெரியரானோர் சிறியோர் செய்த குற்றத்தை மறைப் பர்; சிறியோர் பலர் செய்த குற்றத்தைத் தூற்றுவர்.

**காளிங்கர்:** சிறுமையானது என்றும் தான் செய்யும் நெறி அற்றங் களை அடக்கிக்கொண்டு ஒழுகும். மற்றுப் பெருமையானது தான் அதனைக் குற்றமாகக் கொண்டு விடும்.[1] எனவே அதனை ஒருபொழுதும் தன்கண் அடக்க நிலை இல்லை என்பது பொருள் ஆயிற்று. இவ்வாறன்றி, "அற்ற மறைக்கும் பெருமை சிறுமைதான், சுற்றமாச் சூழ்ந்து விடும்" என்பது பாடமாயின், தன்கண் ஓர் நெறி அற்றமாகிய குற்றம் வந்து உளதா மாயின், அதனை அப்பொழுதே மாய்த்து விடும் பெருமையானது; மற்று இனிச் சிறுமைதான் தன் நட்பின் இனிய கிளையாகக் கொண்டு ஒழுகும். இன்னும் பிறவாறு பாடம் ஓதுவாரும் உளர்.

### ஒப்புமை

1. பெரியோர் பிறர் குறையை மறைத்தல்: குறள், 984.
2. அற்றம் மறைத்தல்: குறள், 846.

---

1. 'குற்றமாக் கொண்டு விடும்' என்பது இவர் பாடம்.

3. முற்றும்:

"பிழைத்தல் பொறுத்தல் பெருமை சிறுமை
இழைத்ததீங் கெண்ணி யிருத்தல்." (சிறுபஞ்ச. 15.) (980)

---

# 99. சான்றாண்மை

**பரிமேலழகர்:** அஃதாவது, பல குணங்களானும் நிறைந்து அவற்றை ஆள்தல் தன்மை. பல குணங்களானும் என்பது சாலுதல் தொழிலால் பெறப்படுதலின், அவற்றை என்பது வருவிக்கப்பட்டது. பெருமையுள் அடங்காத குணங்கள் பலவற்றையும் தொகுத்துக் கொண்டு நிற்றலின், இஃது அதன்பின் வைக்கப்பட்டது.

**பரிதியார்:** சான்றாண்மையாவது குல ஒழுக்க நெறியிலே நிற்க வேண்டும்.

### 981

கடன்என்ப நல்லவை எல்லாம் கடன்அறிந்து
சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு. 1

**பரிமேலழகர்:** கடன் அறிந்து சான்றாண்மை மேற்கொள்பவர்க்கு - நமக்குத் தகுவது இது என்று அறிந்து சான்றாண்மையை மேற்கொண்டு ஒழுகுவார்க்கு, நல்லவை எல்லாம் கடன் என்ப - நல்லனவாய குணங்கள் எல்லாம் இயல்பாயிருக்கும் என்று சொல்லுவர் நூலோர்.

சில குணங்கள் இலவாய வழியும், உள்ளன செய்துகொண்டனவாய வழியும் சான்றாண்மை என்னும் சொற்பொருள் கூடாமையின், நூலோர் இவ்வேதுப் பெயர் பற்றி அவர் இலக்கணம் இவ்வாறு கூறுவர் என்பதாம்.

#### உரை வேறுபாடு

**கவிராஜ பண்டிதர்:** சில குணங்கள் இல்லாவிட்டாலும், சாந்த குணம் உடையவர்களுக்கு எல்லாக் குணங்களும் உண்டு எனப்படும். (981)

### 982

குணநலம் சான்றோர் நலனே பிறநலம்
எந்நலத் துள்ளதூஉம் அன்று. 2

**பரிமேலழகர்:** சான்றோர் நலன் குண நலனே—சான்றோர் நலமாவது குணங்களானாய நலமே; பிற நலம் எந்நலத்தும் உள்ளது அன்று - அஃது ஒழிந்த உறுப்புக்களானாய நலம் ஒரு நலத்தினும் உள்ளது அன்று.

அகநலத்தை முன்னே பிரித்தமையின் ஏனைப் புறநலத்தைப் பிற நலம் என்றும், அது குடிப்பிறப்பும் கல்வியும் முதலாக நூலோர் எடுத்த நலங்களுட்[1] புகுதாமையின், 'எந்நலத் துள்ளதூஉ மன்று' என்றும் கூறினர்.

---

1. இந் நலங்களாவன: குடிப்பிறப்பு, கல்வி, குணம், வாய்மை, தூய்மை, நடுச்சொல், அழுக்காறின்மை, அவாவின்மை என்பன. (பு. வெ. 173, மேற். பார்க்க.)

இவை இரண்டு பாட்டானும் சால்பிற்கு ஏற்ற குணங்கள் பொது வகையால் கூறப்பட்டன.

### உரை வேறுபாடு

**காளிங்கர்:** குணம் என்பது உள்ளத்து அமைவுடைமை.

**கவிராஜ பண்டிதர்:** பிற நலம் - அவயவங்கள் நலமும் செல்வ நலமும். *(982)*

## 983

அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொ
டைந்துசால் பூன்றிய தூண். 3

**பரிமேலழகர்:** அன்பு - சுற்றத்தார்மேலே அன்றிப் பிறர் மேலும் உளதாய அன்பும், நாண் – பழி பாவங்களின் நாணலும், ஒப்புரவு - யாவர் மாட்டும் ஒப்புரவு செய்தலும், கண்ணோட்டம் - பழையார்மேற் கண்ணோடலும், வாய்மை - எவ்விடத்தும் மெய்ம்மை கூறலும் என, சால்பு ஊன்றிய தூண் ஐந்து - சால்பு என்னும் பாரத்தைத் தாங்கிய தூண்கள் ஐந்து.

எண் ஒடு முன்னவற்றோடும் கூடிற்று. இக் குணங்கள் இல்வழிச் சால்பு நிலைபெறுமையின், இவற்றைத் தூண் என்றார்; ஏகதேச உருவகம்.

### உரை வேறுபாடு

**கவிராஜ பண்டிதர்:** கண்ணோட்டம் - பழையவர்கள்மேலே சிநேகம் விடாமல் இருக்கிறது. *(983)*

## 984

கொல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை
சொல்லா நலத்தது சால்பு. 4

**பரிமேலழகர்:** நோன்மை கொல்லா நலத்தது - பிற அறங்களும் வேண்டுமாயினும் தவம் ஓர் உயிரையும் கொல்லாத அறத்தின்கண்ணதாம்; சால்பு பிறர் தீமை சொல்லா நலத்தது - அதுபோலப் பிற குணங்களும் வேண்டுமாயினும் சால்பு பிறர் குற்றத்தைச் சொல்லாத குணத்தின் கண்ணதாம்.

நலம் என்னும் ஆகுபெயர்ப் பொருள் இரண்டினையும் தலைமை தோன்ற இவ்விரண்டற்கும் அதிகாரமாக்கிக் கூறினர். தவத்திற்குக் கொல் லாவறம் சிறந்தாற்போலச் சால்பிற்குப் பிறர் குற்றம் சொல்லாக் குணம் சிறந்தது என்பதாம்.

### உரை வேறுபாடு

**பரிதியார்:** கொல்லாமையான விரதத்திலும் பெரியது இல்லை. அதினும் பெரியது தனக்கு ஒருவன் செய்த குற்றத்தைச் சொல்லா திருப்பது.

### ஒப்புமை

**நோன்மை கொல்லா நலத்தது:** குறள், *261.* *(984)*

## 985

ஆற்றுவார் ஆற்றல் பணிதல் அதுசான்றோர்
மாற்றாரை மாற்றும் படை. 5

**பரிமேலழகர்:** ஆற்றுவார் ஆற்றல் பணிதல் - ஒரு கருமத்தைச் செய்து முடிப்பாரது ஆற்றலாவது அதற்குத் துணையாவாரைத் தாழ்ந்து கூட்டிக் கொள்ளுதல்; சான்றோர் மாற்றாரை மாற்றும் படை அது - இனிச் சால்புடையார் தம் பகைவரைப் பகைமை ஒழிக்கும் கருவியும் அது.

ஆற்றல் – அது வல்லராம் தன்மை. இறந்தது தழீஇய எச்ச உம்மை விகாரத்தால் தொக்கது. சால்பிற்கு ஏற்ற பணிதற் குணத்தது சிறப்புக் கூறுவார், ஏனையதும் உடன் கூறினர்.

### உரை வேறுபாடு

**பரிப்பெருமாள்:** இது சான்றவர்க்கு வலியாவது தாழ்ந்து ஒழுகுதல் என்றது.

**காளிங்கர்:** ஐம்புலன்களின் வேகத்தை ஆற்றுவாரது ஆற்றலாவது யாதோ எனின், தாம் யாவர் மாட்டும் பணிவு உடையர் ஆதல். மற்று அது அச் சான்றோர் தம்மொடு மாறுபடும் பகைவரை எதிர் ஆற்றும் கருவி.

### ஒப்புமை

**ஆற்றுவார் ஆற்றல்:** குறள், *225, 891.* *(985)*

## 986

**சால்பிற்குக் கட்டளை யாதெனின் தோல்வி**
**துலையல்லார் கண்ணும் கொளல்.** 6

**பரிமேலழகர்:** சால்பிற்கு கட்டளை யாது எனின் – சால்பாகிய பொன்னின் அளவு அறிதற்கு உரைகல்லாகிய செயல் யாது எனின், தோல்வி துலை அல்லார்கண்ணும் கொளல் - அது தம்மின் உயர்ந்தார் மாட்டுக் கொள்ளும் தோல்வியை இழிந்தார்மாட்டும் கோடல்.

துலை - ஒப்பு. எச்ச உம்மையான் இருதிறத்தார்கண்ணும் வேண்டுதல் பெற்றும். கொள்ளுதல் - வெல்லும் ஆற்றல் உடையராயிருந்தே ஏற்றுக் கொள்ளுதல். இழிந்தாரை வெல்லுதல் கருதித் தம்மோடு ஒப்பித்துக்கொள்ளாது தோல்வியான் அவரின் உயர்வராயின், அதனால் சால்பளவு அறியப்படும் என்பதாம். (986)

## 987

**இன்னாசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்**
**என்ன பயத்ததோ சால்பு.** 7

**பரிமேலழகர்:** இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால் - தமக்கு இன்னாதவற்றைச் செய்தார்க்கும் சால்புடையார் இனியவற்றைச் செய்யாராயின், சால்பு என்ன பயத்தது - அச் சால்பு வேறு என்ன பயனை உடைத்து?

சிறப்பும்மை அவர் இன்னா செய்தற்கிடனாதல் விளக்கி நின்றது. ஓகாரம், அசை. வினா, எதிர்மறைப்பொருட்டு. தாமும் இன்னா செய்வராயின், சால்பால் ஒரு பயனும் இல்லை என்பதாம்.

இவை ஐந்து பாட்டானும் சிறப்பு வகையால் கூறப்பட்டது.

### ஒப்புமை

**முற்றும்:**

"உபகாரம் செய்ததனை யோராதே தன்கண்
அபகாரம் ஆற்றச் செயினும்—உபகாரம்
தாம்செய்வ தல்லால் தவற்றினால் தீங்கூக்கல்
வான்தோய குடிப்பிறந்தார்க் கில்." (நாலடி. 69.) *(987)*

## 988

இன்மை ஒருவற் கிளிவன்று சால்பென்னும்
திண்மைஉண் டாகப் பெறின். 8

**பரிமேலழகர் :** சால்பு என்னும் திண்மை உண்டாக பெறின் - சால்பு என்று சொல்லப்படும் வலி உண்டாகப்பெறின், ஒருவற்கு இன்மை இளிவு அன்று - ஒருவனுக்கு நல்குரவு இளிவு ஆகாது.

தளராமை நாட்டுதலின், வலியாயிற்று. இன்மையான் வருவதனை இன்மைதானாக உபசரித்துக் கூறினர். சால்புடையார் நல்கூர்ந்தவழியும் மேம்படுதல் உடையர் என்பதாம்.

### உரை வேறுபாடு

**கவிராஜ பண்டிதர்:** இளிவு - குற்றம். *(988)*

## 989

ஊழி பெயரினும் தாம்பெயரார் சான்றாண்மைக்
காழி எனப்படு வார். 9

**பரிமேலழகர் :** சான்றாண்மைக்கு ஆழி எனப்படுவார் – சால்புடைமையாகிய கடற்குக் கரை என்று சொல்லப்படுவார், ஊழி பெயரினும் தாம் பெயரார் - ஏனைக் கடலும் கரையுள் நில்லாமல் காலம் திரிந்தாலும் தாம் திரியார்.

சான்றாண்மையது பெருமை தோன்ற அதனைக் கடலாக்கியும், அதனைத் தாங்கிக்கொண்டு நிற்றலின் அஃது உடையாரைக் கரையாக்கியும் கூறினர். "பெருங்கடற் காழி யனையன் மாதோ"[1] என்றார் பிறரும். ஏக தேச உருவகம்.

### உரை வேறுபாடு

**பரிப்பெருமாள்:** ஆழி - கடல்.

### ஒப்புமை

**முற்றும்:**

குறள், 955, ஒப்புமை பார்க்க.

"சான்றோர், கடன்நிலை குன்றலும் இலர்." *(நற். 327: 4-5.)*

"தோல்வற்றிச், சாயினும் சான்றாண்மை குன்றாமை." *(திரி. 27.)*

"......தம்மின்,
உறழா மயங்கி உறழினும் என்றும்
பிறழா பெரியோர்வாய்ச் சொல்." *(பு. வெ. 167.) (989)*

## 990

சான்றவர் சான்றாண்மை குன்றின் இருநிலந்தான்
தாங்காது மன்னோ பொறை. 10

1. புறநா. 330: 3-4.

**பரிமேலழகர் :** சான்றவர் சான்றாண்மை குன்றின் - பல குணங் களானும் நிறைந்தவர் தம் தன்மை குன்றுவராயின், இரு நிலந்தான் பொறை தாங்காது - மற்றை இரு நிலந்தானும் தன் பொறையைத் தாங்காதாய் முடியும்.

தானும் என்னும் எச்சவும்மை விகாரத்தால் தொக்கது. அவர்க்கு அது குன்றுமையும் அதற்கு அது தாங்கலும் இயல்பாகலான், அவை எஞ் ஞான்றும் உளவாகா என்பது தோன்ற நின்றமையின், மன் ஒழியிசைக்கண் வந்தது. ஓகாரம், அசை. இதற்கு இருநிலம் பொறை தாங்குவது சான் றவர் துணையாக வருதலான், அதுவும் அது தாங்கலாற்றுது என்று உரைப் பாரும் உளர்.

இவை மூன்று பாட்டானும் அவற்றான் நிறைந்தவரது சிறப்புக் கூறப்பட்டது.

**உரை வேறுபாடு**

**பரிப்பெருமாள்:** அவர்களும் தானுமாய்ப் பொறுக்கின்றதனைத் தனிப் பொறுக்கல் ஆகாது என்று ஆயிற்று. மேல் ஊழி பெயரினும் சான் ரேூர் நிலை குலையார் என்றூர்; இது சான்ரேூர் நிலை குலையின் ஊழி பெயரும் என்றது. *(990)*

---

# 100. பண்புடைமை

**பரிமேலழகர் :** அஃதாவது, பெருமை சான்றாண்மைகளில் தாம் வழு வாது நின்றே எல்லார் இயல்புகளும் அறிந்து ஒத்து ஒழுகுதல்; "பண்பெனப் படுவது பாடறிந் தொழுகல்"[1] என்றூர் பிறரும். அதிகார முறைமையும் இதனனே விளங்கும்.

**பரிப்பெருமாள்:** பண்புடைமையாவது யாவர்மாட்டும் அவரோடு ஒத்த அன்பினராய்க் கலந்து ஒழுகுதலும், அவரவர் வருத்தத்திற்குப் பரிதலும், பகுத்து உண்டலும், பழி நாணலும் முதலான நற்குணங்கள் பலவும் உடைமை. இது பெரும்பான்மையும் பொருளினுல் தலையளி செய் வாரை நோக்கிற்று. ஆதலான் பின் கூறப்பட்டது.

**991**

எண்பதத்தால் எய்தல் எளிதென்ப யார்மாட்டும்
பண்புடைமை என்னும் வழக்கு. 1

**பரிமேலழகர் :** யார்மாட்டும் எண் பதத்தால் - யாவர்மாட்டும் எளிய செவ்வியராதலால், பண்புடைமை என்னும் வழக்கு எய்தல் எளிது என்ப - அரிதாய பண்புடைமை என்னும் நன்னெறியினை எய்துதல் எளிது என்று சொல்லுவர் நூலோர்.

குணங்களான் நிறைந்து செவ்வி எளியரும் ஆயக்கால் பண்புடைமை தானே உளதாமாகலின் எண்பதத்தால் எய்தல் எளிதென்றும், அஃது உலகத்தை யெல்லாம் வசீகரித்தற் பயத்ததாகலின் அதனைத் தொல்லோர் சென்ற நன்னெறி ஆக்கியும், அதனை எளிதின் எய்துதற்கு இது நூலோர் ஓதிய உபாயம் என்பார் அவர்மேல் வைத்தும் கூறினர்.

1. **கலி.** 133: 8; "பாடறிந் தொழுகும் பண்பி னரே." (**புறநா.** 197: 14.)

### உரை வேறுபாடு

**பரிதியார்:** பண்புடைமை என்பது சரீரத்தை மாய்க்கவேண்டாம்; பொருள் சேதப்பட வேண்டாம்; பொறுமையையும் சொல்லினாலே தேடலாம். *(991)*

## 992

அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் இவ்விரண்டும்
பண்புடைமை என்னும் வழக்கு. 2

**பரிமேலழகர்:** அன்புடைமை ஆன்ற குடி பிறத்தல் இவ்விரண்டும் - பிறர்மேல் அன்புடையனாதலும் உலகத்தோடு அமைந்த குடியின்கட் பிறத்தலும் ஆகிய இவ்விரண்டும், பண்புடைமை என்னும் வழக்கு - ஒருவனுக்குப் பண்புடைமை என்று உலகத்தார் சொல்லும் நன்னெறி.

அமைதல் : ஒத்து வருதல். குடிப்பிறத்தல் என்பது பிறந்தார் செயலை. தனித்த வழி ஆகாது, இரண்டும் கூடியவழியே ஆவதென்பது தோன்ற முற்றும்மை கொடுத்தார். காரணங்கள் காரியமாக உபசரிக்கப் பட்டன.

இவை இரண்டு பாட்டானும் பண்புடையராதற் காரணம் கூறப் பட்டது.

### உரை வேறுபாடு

**பரிப்பெருமாள் :** அன்பு உடையனாகப் பிறர் வருத்தத்திற்குப் பரிதலும், கலந்து ஒழுகுதலும், கொடுத்தலும் முதலாயின உளவாம். குடிப்பிறப்பினானே பழிப்படுவ செய்யாமையும் புறங்கூறாமையும் முதலாயின உளவாம். ஆதலான் இவ்விரண்டினையும் உடைமை பண்புடைமை என்று கூறப்பட்டது.

### ஒப்புமை

அன்பும் குடிப்பிறப்பும்: குறள், 681. *(992)*

## 993

உறுப்பொத்தல் மக்கள்ஒப் பன்றால் வெறுத்தக்க
பண்பொத்தல் ஒப்பதாம் ஒப்பு. 3

**பரிமேலழகர்:** உறுப்பு ஒத்தல் மக்கள் ஒப்பு அன்று – செறியத் தகாத உடம்பால் ஒத்தல் ஒருவனுக்கு நன்மக்களோடு ஒப்பாகாமையின் அது பொருந்துவது அன்று; ஒப்பதாம் ஒப்பு வெறுத்தக்க[1] பண்பு ஒத்தல் - இனிப் பொருந்துவதாய ஒப்பாவது செறியத் தக்க பண்பால் ஒத்தல்.

வடநூலார் அங்கம் என்றமையின், உறுப்பு என்றார். ஒருவனுக்கு நன்மக்களோடு பெறப்படும் ஒப்பாவது உயிரின் வேறாய் நிலையுதல் இல்லா உடம்பொத்தல் அன்று, வேறன்றி நிலையுதலுடைய பண்பு ஒத்தலாகலான், அப் பெற்றித்தாய அவர் பண்பினை உடையனாக என்பதாம். (993)

## 994

நயனொடு நன்றி புரிந்த பயன்உடையார்
பண்புபா ராட்டும் உலகு. 4

---

1. வெறுத்தக்க - செறியத் தக்க; வெறுப்பு - செறிவு; "விறப்பு முறப்பும் வெறுப்பும் செறிவே." (தொல். உரி. 51.)

பரிமேலழகர்: நயனொடு நன்றி புரிந்த பயன் உடையார் பண்பு - நீதியையும் அறத்தையும் விரும்புதலால் பிறர்க்கும் தமக்கும் பயன்படுத லுடையாரது பண்பினை, உலகு பாராட்டும் - உலகத்தார் கொண்டாடா நிற்பர்.

புரிந்த என்னும் பெயரெச்சம் ஈண்டுக் காரணப்பொருட்டு. நயனொடு நன்றி புரிதலும் பயன் உடைமையும் பண்பு காரணமாக வந்தமையின், அதனைப் பாராட்டும் என்றார்.

### உரை வேறுபாடு

பரிப்பெருமாள்: நயன் - பிறரால் விரும்பப்படுதல்.

காளிங்கர்: நயனொடு நன்றி - ஒழுக்கத்துடனே நல்லறமும். (994)

## 995

நகையுள்ளும் இன்னா திகழ்ச்சி பகையுள்ளும்
பண்புள பாடறிவார் மாட்டு. 5

பரிமேலழகர்: இகழ்ச்சி நகையுள்ளும் இன்னாது - தன்னை இகழ்தல் ஒருவற்கு விளையாட்டின்கண்ணும் இன்னாது; பாடு அறிவார் மாட்டு பகையுள்ளும் பண்பு உள - ஆகலான் பிறர்பாடு அறிந்து ஒழுகுவார்மாட்டுப் பகைமை உள்வழியும் அஃது உளதாகாது; இனியவாய பண்புகளே உளவாவன.

பாடறிவார் எனவே, அவ்வின்னாமை அறிதலும் பெற்றாம். அதனை அறிந்தவர் பின் அது செய்யார், இனியவே செய்வார் என்பது கருத்து. இதற்குப் பிறர் எல்லாம் இரண்டு தொடரும் தம்முள் இயையாமல் உரைப்பாரும், இன்னாது என்னும் சொற்குப் பிறவாது என்று உரைப்பாரும் ஆயினர்.

### உரை வேறுபாடு

கவிராஜ பண்டிதர்: பிறர் குணங்களை அறிந்தவர் பொல்லாங்கு செய்யாமல் நன்மையே செய்வார்கள். அதனாலே பகையும் உறவா யிருக்கும்.

### ஒப்புமை

நகையுள்ளும் இன்னாதிகழ்ச்சி:

"நகையினும் பொய்யா வாய்மைப் பகைவர்."

(பதிற்று. 70: 12.) (995)

## 996

பண்புடையார்ப் பட்டுண் டுலகம் அதுஇன்றேல்
மண்புக்கு மாய்வது மன். 6

பரிமேலழகர்: பண்பு உடையார் பட்டு உலகம் உண்டு - பண்பு உடையார்கண்ணே படுதலால் உலகியல் எஞ்ஞான்றும் உண்டாய் வாரா நின்றது; இன்றேல் அது மண் புக்கு மாய்வது - ஆண்டுப் படுதல் இல்லை யாயின், அது மண்ணின்கண் புக்கு மாய்ந்து போவதாம்.

பட என்பது திரிந்து நின்றது. உலகு: ஆகுபெயர். மற்றைப் பண் பில்லார் சார்பன்மையின் ஓர் சார்பும் இன்றி மண்ணின்கண் புக்கு மாயுமது வேண்டாவாயிற்று என்பது நின்றமையின், மன் ஒழியிசைக்கண் வந்தது.

இவை நான்கு பாட்டானும் அதனை உடையாரது உயர்ச்சி கூறப் பட்டது.

### உரை வேறுபாடு

**பரிப்பெருமாள்.** பண்புடையார் பட்டு உண்டு உலகம் - பண்பு உடையாரைத் தோற்றி உலகமாகிய பலவகை உயிரும் உண்டாயிற்று.

**பரிதியார்:** பண்புடைமையாலே உலகம் என்றும், பெரியோர் என்றும் பெயராயிற்று.

**காளிங்கர்:** மக்கட்பண்பு உண்டாகிய மரபு உடையாளரைப் பெற்று உண்டாயிற்று ஒழுக்கம் என்று மறைநூலும் பிறவும் வகுத்து உரைக்கின்ற அனைத்து ஒழுக்கத்திற்கும் காரணமாகிய அம் மக்கட்பண்பு என்பது ஈண்டு இல்லையாயின், பிறந்தார் யாவரும் பெரும்பாவிகளே ஆனார்; ஆதலால் அந்தப் பூமிக்கும் பெரும்பாரமே யாகும்; இதனைத் தரிக்க மாட்டாது.

### ஒப்புமை

1. **பண்புடையாரால் உலகம் இருத்தல்:**

"உண்டால் அம்மஇவ் வுலகம்......
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே." (புறநா. 182.)

2. **முற்றும்:**

"ஓய்ந்துளன் வீரன் என்னின் உலகமோ ரேழும் ஏழும்
தீய்ந்துறும் இரவி பின்னும் திரியுமே தெய்வம் என்னும்
வீய்ந்துறும் எண்க ணுன்முன் னுயிரெலாம் வெருவல் அன்னை
ஆய்ந்தவை யுள்ள போதே அவருளர் அறமும் உண்டால்."
(கம்ப. பிராட்டிகளங்காண். 26.) (996)

## 997

அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
மக்கட்பண் பில்லா தவர். 7

**பரிமேலழகர்:** மக்கள் பண்பு இல்லாதவர் - நன்மக்கட்கே உரிய பண்பு இல்லாதவர், அரம்போலும் கூர்மையரேனும் - அரத்தின் கூர்மை போலும் கூர்மையை உடையரே ஆயினும், மரம் போல்வர் - ஓரறிவிற்றாய மரத்தினை ஒப்பர்.

அரம்: ஆகுபெயர். ஓரறிவு: ஊற்றினை அறிதல். உவமை இரண்டனுள் முன்னது தான் மடிவின்றித் தன்னை உற்ற பொருள்களை மடிவித்தலாகிய தொழில்பற்றி வந்தது. ஏனையது விசேட அறிவின்மையாகிய பண்புபற்றி வந்தது. அவ் விசேட அறிவிற்குப் பயனாய மக்கட்பண்பு இன்மையின், அதுதானும் இல்லை என்பதாயிற்று.

### உரை வேறுபாடு

**பரிப்பெருமாள்:** அரம்போலும் தனக்கு உள்ள கூர்மை, பிறர் மாட்டு மடியாமையும் தான் பிறரைக் கூரியர் ஆக்குதலும் ஆம். இஃது உணர்வு உடையார் ஆயினும் உணர்வு இல்லாத மரத்தை ஒப்பர் என்றது. என்னை? உணர்வால் பயன் இன்மையின்.

**கவிராஜ பண்டிதர்:** அரமானது தன்னுடனே சேர்ந்தவற்றைப் பொடி யாக்குவது போலே, கூர்மையான புத்தி இருந்தாலும் தயை இல்லாத பேர் தங்களைச் சேர்ந்தவர்களைக் கெடுப்பர். (997)

## 998

நண்பாற்ருர் ஆகி நயம்இல செய்வார்க்கும்
பண்பாற்ருர் ஆதல் கடை. 8

**பரிமேலழகர்:** நண்பு ஆற்ருர் ஆகி நயம் இல செய்வார்க்கும் - தம்மொடு நட்பினைச் செய்யாது பகைமையைச் செய்து ஒழுகுவார்மாட்டும், பண்பு ஆற்ருர் ஆதல் கடை - தாம் பண்புடையராய் ஒழுகாமை அறிவுடையார்க்கு இழுக்காம்.

நயம் - ஈரம். சிறப்பும்மை அவர் பண்பாற்ருமைக்கு இடனுதல் தோன்ற நின்றது. அதனைச் செய்யின் தாமும் அவர் தன்மையர் ஆவர் என்பார் கடை என்ருர். *(998)*

## 999

நகல்வல்லர் அல்லார்க்கு மாயிரு ஞாலம்
பகலும்பாற் பட்டன் றிருள். 9

**பரிமேலழகர்:** நகல் வல்லர் அல்லார்க்கு - பண்பின்மையான் ஒருவரோடும் கலந்து உண்மகிழ்தல் மாட்டார்க்கு, மாஇரு ஞாலம் பகலும் இருள் பால் பட்டன்று - மிகவும் பெரிய ஞாலம் இருள் இல்லாத பகற்பொழுதினும் இருளின்கண் கிடந்ததாம்.

எல்லாரோடும் கலந்து அறியப் பெருமையின் பண்பில்லார்க்கு உலகியல் தெரியாது என்பார், உலகம் இருளின்கண் பட்டது என்ருர். பாழ் பட்டன்று இருள் என்று பாடம் ஓதி, இருள் நீங்கிற்றன்று என்று உரைப்பாரும் உளர்.

### உரை வேறுபாடு

**பரிதியார்:** நகல் வல்லர் அல்லார்க்கு - தீவினைப் பயன் வந்தால் சிரித்து இதற்கெல்லாம் நான் கலங்கேன் என்று சொல்ல மாட்டாதார்க்கு.

**காளிங்கர்:** மக்கட் பண்பு இல்லாதவர்க்கு இவ்வுலக நீதி யாதும் தெரியாது இருண்டே கிடக்கும். *(999)*

## 1000

பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வம் நன்பால்
கலந்தீமை யால்திரிந் தற்று. 10

**பரிமேலழகர்:** பண்பு இலான் பெற்ற பெருஞ்செல்வம் - பண்பு இல்லாதவன் முன்னை நல்வினையான் எய்திய பெரிய செல்வம் அக் குற்றத்தால் ஒருவற்கும் பயன்படாது கெடுதல், நன்பால் கலம் தீமையால்[1] திரிந்தற்று - நல்ல ஆன்பால் ஏற்ற கலத்தின் குற்றத்தால் இன்சுவைத்தாகாது கெட்டாற் போலும்.

கலத்தீமை யென்பது மெலிந்து நின்றது. தொழிலுவமம் ஆகலின் பொருளின்கண் ஒத்த தொழில் வருவிக்கப்பட்டது. படைக்கும் ஆற்றல் இலனுதல் தோன்றப் பெற்ற என்றும், எல்லாப் பயனும் கோடற்கு ஏற்ற இடன் உடைமை தோன்றப் பெருஞ்செல்வம் என்றும் கூறினர். அச்செல்வமும் பயன்படாது என்ற இதனன் வருகின்ற அதிகாரப் பொருண்மையும் தோற்றுவாய் செய்யப்பட்டது.

இவை நான்கு பாட்டானும் அஃது இல்லாரது இழிவு கூறப்பட்டது.

1. (பி - ம்.) 'கைதீமை.'

உரை வேறுபாடு

**காளிங்கர்:** முந்நிரைப் பாலினும்[1] நன்பால் ஆவது ஆன்பால் அன்றே?

**கவிராஜ பண்டிதர்:** நல்ல பாலைக் காயாத பானையில் வார்த்தால் அது கெட்டுப் போவது போலே. *(1000)*

---

# 101. நன்றியில் செல்வம்

**பரிமேலழகர்:** அஃதாவது, ஈட்டியாற்கும் பிறர்க்கும் பயன்படுதல் இல்லாத செல்வத்தினது இயல்பு. உடையானது குற்றம் செல்வத்தின்மேல் ஏற்றப்பட்டது. அதிகார முறைமை மேல் தோற்றுவாய் செய்த அதனால் பெறும்.

**மணக்குடவர்:** நன்றியில் செல்வமாவது அறத்தையும் இன்பத்தையும் பயவாத செல்வத்தின் இயல்பு கூறுதல்.

## 1001

**வைத்தான்வாய் சான்ற பெரும்பொருள் அஃதுண்ணான்**
**செத்தான் செயக்கிடந்த தில்.** 1

**பரிமேலழகர்:** வாய் சான்ற பெரும் பொருள் வைத்தான் அஃது உண்ணான் - தன் மனை அகலம் நிறைதற்கு ஏதுவாய பெரும் பொருளை ஈட்டி வைத்து உலோபத்தால் அதனை உண்ணாதவன், செத்தான் செய கிடந்தது இல் - உளனாயினும் செத்தானாம், அவனால் செயக் கிடந்தது ஓர் உரிமை இன்மையான்.

வைத்தான் என்பது முற்றெச்சம். உண்ணுதல் - அதனான் ஐம்புலன்களையும் நுகர்தல்.

வாய் சான்ற பெரும் பொருளை வைத்தான் ஒருவன் அதனை உண்ணாது செத்தவழி அதன்கண் அவனால் செயக்கிடந்தது ஓர் உரிமை இல்லை யாகலான், வையாது பெற்றபொழுதே நுகர்க என்று உரைப்பினும் அமையும். இதற்குச் செத்தான் என்பது எச்சம்.

இதனால் ஈட்டியானுக்குப் பயன்படல் இன்மை கூறப்பட்டது.

ஒப்புமை

முற்றும்:

"கொடுத்தலும் துய்த்தலும் தேற்றா இடுக்குடை
உள்ளத்தான் பெற்ற பெருஞ்செல்வம் இல்லத்
துருவுடைக் கன்னியரைப் போலப் பருவத்தால்
ஏதிலான் துய்க்கப் படும்." (நாலடி. 274.)

"வழங்கலும் துய்த்தலும் தேற்றாதான் பெற்ற
முழங்கு முரசுடைச் செல்வம்—தழங்கருவி
வேய்முற்றி முத்துதிரும் வெற்ப அதுவன்றோ
நாய்பெற்ற தெங்கம் பழம்."

---

1. முந்நிரை - பசு, எருமை, ஆடு என்பன.

"படரும் பிறப்பிற்கொன் றீயார் பொருளைத்
தொடரும்தம் பற்றினால் வைத்திறப் பாரே
அடரும் பொழுதின்கண் இட்டுக் குடரொழிய
மீவேலி போக்கு பவர்." (பழமொழி, 151, 379.) (1001)

## 1002

பொருளான்ஆம் எல்லாம்என் றீயா திவறும்
மருளான்ஆம் மாணாப் பிறப்பு. 2

**பரிமேலழகர்:** பொருளான் எல்லாம் ஆம் என்று - பொருள் ஒன்றும் உண்டாக அதனால் எல்லாம் உண்டாம் என்று அறிந்து அதனை ஈட்டி, ஈயாது இவறும் மருளான் - பின் பிறர்க்கு ஈயாது பற்றுள்ளம் செய்யும் மயக்கத் தாலே, மாணா பிறப்பு ஆம் - ஒருவனுக்கு நிறைதல் இல்லாத பேய்ப் பிறப்பு உண்டாம்.

இருமையினும் எய்தும் இன்பங்கள் பலவும் அடங்க எல்லாம் என்றும், ஈட்டுதற்குமுன் உண்டாய அறிவு பின் மயங்குதலின் மருள் என்றும், பொருள் உண்டாயிருக்கப் பிறர் பசி கண்டு இருந்த தீவினை பற்றி உணவுகள் உளவாயிருக்கப் பசித்து வருந்தும் பிறப்பு உளதாம் என்றும் கூறினர்.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** இது தீக்கதியுள் உய்க்கும் என்றது.

**பரிதியார்:** ஈயாத குணத்தினாலே பிறப்பு உண்டாம்.

**காளிங்கர்:** நரக யோனியும் திருக்கும்[1] பிறவும் ஆகிய கடையான பிறப்பு உளதாம், இவர் ஈட்டிய பொருள் வெறும் பாவப் படைப்பு ஆகலான்.

### ஒப்புமை

மருளானும் மாணாப் பிறப்பு: குறள், 351. (1002)

## 1003

ஈட்டம் இவறி இசைவேண்டா ஆடவர்
தோற்றம் நிலக்குப் பொறை. 3

**பரிமேலழகர்:** ஈட்டம் இவறி இசை வேண்டா ஆடவர் தோற்றம் - யாம் பிறரின்மிக ஈட்டுதும் என்று பொருளினது ஈட்டல் மாத்திரத்தையே விரும்பி அதன் பயனாய புகழை விரும்பாத மக்களது பிறப்பு, நிலக்கு பொறை - நிலத்திற்குப் பாரமாம் அத்துணையே.

இசை, இருமைக்கும் உறுதியாய அறமாகலின் ஈகையான் அதனையே வேண்டல் செய்யாது ஈட்டல் துன்பத்தையும் காத்தல் துன்பத்தையும் வேண்டிய அறிவின்மை பற்றி நிலக்குப் பொறை என்றார். பிறப்பு என்றது, அதற்கு உரிய உடம்பினை.

### ஒப்புமை

1. ஈட்டம் இவறி இசைவேண்டா ஆட்வர்:

"......... ஒன்றீக லான்பொருள்
காத்தவன் புகழெனத் தேயும் கற்பினாள்." (கம்ப. சூர்ப்பனகை. 26.)

2. நிலக்குப் பொறை: குறள், 572. (1003)

---

1. திருக்கு - விலங்கு.

## 1004

எச்சம்என் றென்எண்ணுங் கொல்லோ ஒருவரான்
நச்சப் படாஅ தவன். 4

**பரிமேலழகர் :** ஒருவரான் நச்சப்படாதவன் – பொருளும் ஈந்து அறியாமையின் ஒருவராலும் நச்சப்படுதல் இல்லாதவன், எச்சம் என்று என் எண்ணும் கொல் - தான் இறந்தவழி ஈண்டு ஒழிந்து நிற்பதாக யாதனைக் கருதுமோ?

ஈண்டு ஒழிந்து நிற்கும் புகழ் ஈவான்மேல் அன்றி நில்லாமையின்,[1] அவனுக்கு அதனோடு யாதும் இயைபு இல்லை என்பார், என் எண்ணுங் கொல்லோ என்றார். ஓகாரம், அசை.

இவை மூன்று பாட்டானும் பிறர்க்குப் பயன்படல் இன்மை கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** இது புகழ் இல்லையாம் என்றது.

**காளிங்கர்:** இங்ஙனம் யாவராலும் யாது ஒன்றும் நச்சப்படாதவனிடத்துக் குலமும் உருவும் குணமும் ஒழுக்கமும் புதல்வரும் பொருளும் பூமியும் என்னும் எவ்வெச்சமும் இவனிடத்து இவை எல்லாம் உளவேனும் ஒன்றும் உளது என்று கருதார் உலகத்தோர், ஒரு பயன் இல்லாமையினன். *(1004)*

## 1005

கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க் கடுக்கிய
கோடிஉண் டாயினும் இல். 5

**பரிமேலழகர் :** கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க்கு - பிறர்க்கு ஈவதும் தாம் நுகர்வதுமாய[2] இரண்டு செய்கையும் உடையர் அல்லாதார்க்கு, அடுக்கிய கோடி உண்டாயினும் இல் - பலவாக அடுக்கிய கோடிப்பொருள் உண்டாயினும் ஒன்றும் இல்லை.

இன்பத்தினும் அறம் சிறந்தமையின், கொடுத்தல் தொழில் முற்கூறப்பட்டது. அடுக்கிய கோடி என்றது, ஈண்டு எண்ணப்படும் பொருள் மேல் நின்றது. ஒன்றும் இல்லார் போலப் பயன் இரண்டும் இழத்தலின், இல் என்றார்.

### ஒப்புமை

அடுக்கிய கோடி: குறள், *954*. *(1005)*

## 1006

ஏதம் பெருஞ்செல்வம் தான்துவ்வான் தக்கார்க்கொன்
றீதல் இயல்பிலா தான். 6

**பரிமேலழகர் :** தான் துவ்வான் தக்கார்க்கு ஒன்று ஈதல் இயல்பு இலாதான் - தான் நுகரானாய் அதன் மேலும் தகுதி உடையார்க்கு அவர்

---

1. குறள், 232.

2. கொடுப்பது மறுமைக்கும் துய்ப்பது இம்மைக்கும் ஆவன; 'ஈயாமையானும் துவ்வாமையானும் அவை (மறுமை இம்மை) இலவாயின' என்பர் பின் (1042, உரை.)

வேண்டியது ஒன்றை ஈதல் இயற்கை இலன் ஆயினன், பெரும் செல்வம் ஏதம் - இரண்டும் செய்தற்கு இடன் உடைத்தாய செல்வத்திற்கு ஒரு நோய்.

தகுதி - தானம் கோடற்கு ஏற்புடைமை. ஏதம்: ஆகுபெயர். நுகரப் படுதலும் ஈயப்படுதலுமாகிய தொழிற்கு உரியதனை அன்றாக்கினமையின், நோய் என்றார். ஈதல் இயல்பு இலாதானது பெருஞ்செல்வம் அவனுக்கு ஈட்டல் காத்தல் முதலியவற்றால் துன்பமே ஆம் என்று உரைப்பாரும் உளர்.

இவை இரண்டு பாட்டானும் அவ் விருமையும் உடன் கூறப்பட்டன.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** ஏதம் - குற்றம்.

**பரிதியார்:** ஏதம் - பெருந்துயரம்.

**காளிங்கர்:** ஏதம் - பெரும்பாவத் திரள்.

### ஒப்புமை

**ஏதம் பெருஞ்செல்வம்:**

"ஈட்டலும் துன்பம்மற் றீட்டிய ஒண்பொருளைக்
காத்தலும் ஆங்கே கடுந்துன்பம்—காத்தல்
குறைபடில் துன்பம் கெடில்துன்பம் துன்பக்
குறைபதி மற்றப் பொருள்." (நாலடி. *280.*)

"...ஒண்பொருள், செய்வம்என் பார்க்கும் துயில்இல்லை அப்பொருள்
காப்பார்க்கும் இல்லை துயில்." (நான்மணி. *7.*) (*1006*)

## 1007

**அற்றார்க்கொன் றாற்றாதான் செல்வம் மிகநலம்**
**பெற்றாள் தமியள்மூத் தற்று. 7**

**பரிமேலழகர்:** அற்றார்க்கு ஒன்று ஆற்றாதான் செல்வம் - ஒரு பொருளும் இலர் ஆயினர்க்கு அவர் வேண்டியது ஒன்றனைக் கொடாதானது செல்வம் கொன்னே கழிதல், மிக நலம்[1] பெற்றாள் தமியள் மூத்தற்று - பெண்டிரின் மிக்க நலத்தினைப் பெற்றாள் ஒருத்தி கொடுப்பார் இன்மையின் கொழுநன் இன்றித் தமியளாய் மூத்த தன்மைத்து.

நலம் - வடிவின் நன்மையும் குணத்தின் நன்மையும். இரண்டும் ஒருங்கு பெறுதல் அரிதாகலின், பெற்றாள் என்றார். கொடுப்பாரும் கொழுநனுமே அன்றித் தானும் பயன் இழந்து கழிந்த குமரியோடு உவமை கூறினமையின், தானும் ஏற்பானுமே அன்றிச் செல்வமும் பயன் இழந்து கழியும்[2] என்பதாயிற்று.

### உரை வேறுபாடு

**கவிராஜ பண்டிதர்:** காலம் கழிந்தால் அது பின்னை வாராது; பொருள் உடையவனுக்கும் தன் பலம் போய் வயசு முதிர்ந்தால் பிறகு கொடுக்கக்கூடாது. (*1007*)

1. (பி -ம்.) 'மிகு நலம்.'
2. "குமரி மூத்த என் பாத்திரம்" (மணி, 14: 77) என்பதையும், 'ஒரு கன்னிப் பெண் வறிதே மூத்தாற் போன்ற எனது பாத்திரம்; கொடுப்போரும் கொழுநனுமே யன்றித் தானும் பயனிழந்து கழிந்த குமரியை ஈண்டு உவமை கூறினமையின் தானும் ஏற்பாருமே யன்றிப் பாத்திரமும் பயனிழந்து கழிந்ததே என்று ஆபுத்திரன் கூறி இரங்கியவாறாயிற்று; "அற்றார்க்கு...அற்று" ' என்ற ஐயரவர்கள் உரையையும் காண்க.

## 1008

நச்சப் படாதவன் செல்வம் நடுஊருள்
நச்சு மரம்பழுத் தற்று. 8

**பரிமேலழகர் :** நச்சப்படாதவன் செல்வம் – வறியார்க்கு அணியனுயிருந்தும் ஒன்றும் கொடாமையின் அவரான் நச்சப்படாதவன் செல்வம் எய்துதல், ஊர் நடுவுள் நச்சுமரம் பழுத்தற்று - ஊரிடை நிற்பதோர் நச்சு மரம் பழுத்தாற் போலும்.

நடு ஊர் என்பது பின் முன்னுகத் தொக்க ஆரும் வேற்றுமைத் தொகை. அண்மை உடைமைகளால் பயன் இல்லை என்பதாம்.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** இது நச்சு மரப்பழம் தமது ஆசையாலே தின்பார் உண்டாயின், அவரைக் கொல்லும் என்றது.

**பரிதியார்:** நச்சு மரம் - எட்டிமரம்.

### ஒப்புமை

முற்றும்:

"அருகல தாகிப் பலபழுத்தக் கண்ணும்
பொரிதாள் விளவினை வாவல் குறுகா
பெரிதணிய ராயினும் பீடிலார் செல்வம்
கருதும் கடப்பாட்ட தன்று." (நாலடி. 261.) (1008)

## 1009

அன்பொரீஇத் தற்செற் றறம்நோக்கா தீட்டிய
ஒண்பொருள் கொள்வார் பிறர். 9

**பரிமேலழகர் :** அன்பு ஒரீஇ - ஒருவன் கொடாமைப் பொருட்டுச் சுற்றத்தார் நட்டார்கண் அன்பு செய்தலை ஒழிந்து, தன் செற்று - வேண்டுவன நுகராது தன்னைச் செறுத்து, அறம் நோக்காது - வறியார்க்கு ஈதல் முதலிய அறத்தை நினைப்பதும் செய்யாது, ஈட்டிய ஒண் பொருள் கொள்வார் பிறர் - ஈட்டிய ஒள்ளிய பொருளைக் கொண்டு போய்ப் பயன் பெறுவார் பிறர்.

பயனுய அறனும் இன்பமும் செய்து கொள்ளாதானுக்குப் பொருளான் உள்ளது ஈட்டல் துன்பமே என்பது தோன்ற ஈட்டிய என்றும், அவன் வழியின் உள்ளார்க்கும் உதவாது என்பது தோன்றப் பிறர் என்றும் கூறினர்.

### உரை வேறுபாடு

**பரிப் பெருமாள்:** பிறர் என்றது தன் வழியில் உள்ளார் அல்லாதாரை.

**கவிராஜ பண்டிதர்:** பிறர் - ஈவார், அரசர், கள்ளர், அன்னியர் என்பவர்.

### ஒப்புமை

ஒண்பொருள் கொள்வார் பிறர்:

"கொடுத்தலும் துய்த்தலும் தேற்ரு இடுக்குடை
உள்ளத்தான் பெற்ற பெருஞ்செல்வம்.........
ஏதிலான் துய்க்கப் படும்." (நாலடி. 274.) (1009)

**1010**

சீருடைச் செல்வர் சிறுதுனி மாரி
வறங்கூர்ந் தனைய துடைத்து. 10

**பரிமேலழகர் :** சீர் உடை செல்வர் சிறு துனி - புகழ் உடைத்தாய செல்வத்தினை உடையவரது நிற்கும் காலம் சிறிதாய வறுமை, மாரி வறம் கூர்ந்தனையது உடைத்து - உலகத்தை எல்லாம் நிலைநிறுத்தும் மேகம் வறுமை மிக்காற் போல்வதோர் இயல்பினை உடைத்து.

துனி - வெறுப்பு; அதனைச் செய்தலால், துனி எனப்பட்டது. யாவர்க்கும் பயன்பட்டார் அதனன் வறியராயவழியும் அவ்வறுமை கடிதின் நீங்குதலின் பின்பும் செல்வராய்ப் பயன்படுவர் என்பது உவமையால் பெறப்பட்டது. படவே, நன்றி இல்லாத செல்வம் எஞ்ஞான்றும் பயன் படாது என்பதாயிற்று.

இதற்கு, சீர்உடைச் செல்வர் இரவலரோடு வெறுக்கும் நிலையில் வெறுப்பு மாரி வறங்கூர்ந்தனைய தன்மையை உடைத்து என அதிகாரத் தோடு பொருந்தாமைமேலும் ஓர் பொருள் தொடர்புபடாமல் உரைப்பாரும் உளர்.

இவை நான்கு பாட்டானும் அச் செல்வத்தது குற்றம் கூறப்பட்டது,

**உரை வேறுபாடு**

**மணக்குடவர்:** சீருடைச் செல்வர் சிறு துனியால் ஈயாதொழிதல், மாரி பெய்யாமை மிக்காற்போலும்.

மேற்கூறிய நன்றியில் செல்வம் உடையாரன்றி நற்செல்வம் உடையாரும் பிறர்க்கு ஈயாராயின், மழை பெய்யாதாயின் உலகம் துன்பம் உறுமாறு போல அவர் துன்பம் உறுவர் என்றது.

**கவிராஜ பண்டிதர்:** புகழுடைத்தாய செல்வத்தினை உடையவர் கொடுக்கிறதனாலே தரித்திரம் வாராது; வந்தாலும் கொப்பெனத் தீரும்; அது எதுபோல எனின் உலகத்தை யெல்லாம் நிலைநிறுத்தும் மழை ஒரு வேளை இல்லாமற்போனாலும் கொஞ்ச நாளையிலே வெகு மழை பெய்யும்.
*(1010)*

---

# 102. நாண் உடைமை

**பரிமேலழகர் :** அஃதாவது மேற்சொல்லிய சால்பு பண்பு முதலிய குணங்களான் உயர்ந்தோர் தமக்கு ஒவ்வாத கருமங்களில் நாணுதல் உடையராம் தன்மை. அதிகார முறைமையும் இதனனே விளங்கும்.

**மணக்குடவர்:** நாண் உடைமையாவது அறம் பொருள் இன்பங் களில் பிறர் பழியாமல் ஒழுகுதல்.

**பரிதியார்:** நாண் உடைமையாவது நீதி அல்லாதது கண்டால் நாணுதல்.

**1011**

கருமத்தான் நாணுதல் நாணுத் திருநுதல்
நல்லவர் நாணுப் பிற. 1

**பரிமேலழகர் :** நாணு கருமத்தால் நாணுதல் - நன்மக்கள் நாணுவது இழிந்த கருமம் காரணமாக நாணுதல்; பிற திரு நுதல் நல்லவர் நாணு - அஃதன்றி மனம் மொழி மெய்களது ஒடுக்கத்தான் வருவனவோ எனின் அவை அவர் அளவல்ல, அழகிய நுதலினை உடைய குலமகளிர் நாண்கள்.

பிற குலமகளிர் நாண் என்றதனுன் ஏனையது நன்மக்கள் நாண் என்பதும், நாணுதல் என்றதனல் கருமத்தது இழிவும் பெற்றும். திருநுதல் நல்லவர் என்பது புகழ்ச்சிக் குறிப்பு. ஏதுப்பன்மை பற்றிப் பிற என்றார்.

இனி அற்றம் மறைத்தல் முதலியன பொது மகளிர் நாணோடு ஒக்கும் என்று உரைப்பாரும் உளர். அவர்க்கு நாண் கேடு பயக்கும் என விலக்கப் பட்டமையானும், அவர் பெயரால் கூறப்படாமையானும் அஃது உரை யன்மை அறிக.

இதனுன் நாணினது இலக்கணம் கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** திருநுதல் நல்லவர் - அழகிய நுதலினுலே நல்லா ராகிய கணிகையர்.

**பரிதியார்:** கருமத்தால் நாணுதல் - மனத்து ஒன்றும் நினையாமல் கருமப்படியே நாணுதல்.

### ஒப்புமை

**கருமத்தால் நாணுதல் நாண்:**

"பெண்ணென உற்ற பெரும்பழிக்கு நாணும்."

(**கம்ப.** கைகேசிசூழ்வினை, 15.) *(1011)*

## 1012

ஊண்உடை எச்சம் உயிர்க்கெல்லாம் வேறல்ல
நாண்உடைமை மாந்தர் சிறப்பு. 2

**பரிமேலழகர் :** ஊண் உடை எச்சம் உயிர்க்கு எல்லாம் வேறு அல்ல - ஊணும் உடையும் அவை ஒழிந்தனவும் மக்கள் உயிர்க்கு எல்லாம் பொது; மாந்தர் சிறப்பு நாண் உடைமை - நன்மக்கட்குச் சிறப்பாவது நாண் உடைமையே; அவை அல்ல.

ஒழிந்தன, உறக்கமும் அச்சமும் காமமும். சிறப்பு - அவ் வுயிர் களின் வேறுபாடு. அச்சம் என்று பாடம் ஓதுவாரும் உளர்.[1]

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** உணவும் உடையும் ஒழிந்தனவும் புன்மக்கள் எல் லார்க்கும் வேண்டும்; தலைமக்களுக்கு விசேடமாக வேண்டுவது நாண் உடைமை.

**பரிதியார்:** தேவர் கதி மக்கள் கதி விலங்கின் கதி பட்சி கதி இவை யெல்லாம் நவதாதுவினுல் எடுத்த சரீரம்; அதில் மானிடர் விசேஷம்; அது எப்படி என்றால் நாணம் என்னும் மனப்பயம் உண்டாகில்.

**காளிங்கர் :** உணவின் உடையது அச்சம் உலகத்து உயிர்கட்கு எல்லாம் வேறுபாடு உடைய அல்ல. எனவே உணவின் குறைபாட்டுக்கு அஞ்சுவது ஓர் அச்சம் எவ்வுயிர்க்கும் ஒக்கும். மற்று யாதோ மக்கள்

1. காளிங்கர் கொண்ட பாடம் இது.

வேற்றுமை எனின் தமது முறைமைக் குறைபாட்டிற்கு உள் அஞ்சி நாணு வது ஓர் நாணம் உடைமையே மக்கட் பிறந்தார்க்குச் சிறந்தது.

**கவிராஜ பண்டிதர்:** சிறப்பு – அழகு. *(1012)*

## 1013

ஊனைக் குறித்த உயிர்எல்லாம் நாண்என்னும்
நன்மை குறித்தது சால்பு. 3

**பரிமேலழகர்:** உயிர் எல்லாம் ஊனை குறித்த - எல்லா உயிர்களும் உடம்பினைத் தமக்கு நிலைக்களனாகக் கொண்டு அதனை விடா; சால்பு நாண் என்னும் நன்மை குறித்தது - அதுபோலச் சால்பு நாண் என்னும் நன்மைக் குணத்தைத் தனக்கு நிலைக்களனாகக் கொண்டு அதனை விடாது.

உடம்பு என்பது சாதியொருமை. நன்மை: ஆகுபெயர். உயிர் உடம்போடு கூடியல்லது பயன் எய்தாதவாறு போலச் சால்பு நாணோடு கூடியல்லது பயன் எய்தாது என்பதாம். ஊணைக் குறித்த என்று பாடம் ஓதுவாரும் உளர்.[1]

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** உண்டியைக் கருதிற்று.

**காளிங்கர்:** தத்தம் உடம்பை வளர்த்தற்பொருட்டு ஊணை நத்தி வாழும் உயிர் அவை. *(1013)*

## 1014

அணிஅன்றோ நாண்உடைமை சான்றோர்க்கஃ தின்றேல்
பிணிஅன்றோ பீடு நடை. 4

**பரிமேலழகர்:** சான்றோர்க்கு நாண் உடைமை அணிஅன்றோ - சான்றோர்க்கு நாண் உடைமை ஆபரணமாம்; அஃது இன்றேல் பீடுநடை பிணி அன்றோ - அவ் வாபரணம் இல்லையாயின் அவர் பெருமிதத்தை உடைய நடை கண்டார்க்குப் பிணியாம்.

அழகு செய்தலின் அணி என்றும், பொறுத்தற்கு அருமையின் பிணி என்றும் கூறினர். ஓகார இடைச்சொற்கள் எதிர்மறைக்கண் வந்தன.

இவை மூன்று பாட்டானும் அதன் சிறப்புக் கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**பரிதியார்:** பீடு நடை - மதயானை போல ரிஷபம்போல நடக்கிற நடை.[2] *(1014)*

## 1015

பிறர்பழியும் தம்பழியும் நாணுவார் நாணுக்
குறைபதி என்னும் உலகு. 5

**பரிமேலழகர்:** பிறர் பழியும் தம் பழியும் நாணுவார் - பிறர்க்கு வரும் பழியையும் தமக்கு வரும் பழியையும் ஒப்ப மதித்து நாணுவாரை,

1. மணக்குடவர், காளிங்கர் கொண்ட பாடம்.
2. "ஏறுபோற் பீடு நடை." (குறள், 59.)

உலகு நாணுக்கு உறைபதி என்னும் - உலகத்தார் நாணுக்கு உறைவிடம் என்று சொல்லுவர்.

ஒப்ப மதித்தல்: அதுவும் தமக்கு வந்ததாகவே கருதுதல். அக் கருத்து உடையார் பெரியராகலின், அவரை உயர்ந்தோர் யாவரும் புகழ்வர் என்பதாம்.

இதனான் அதனை உடையாரது சிறப்புக் கூறப்பட்டது.

ஒப்புமை

பிறர் பழியும் தம்பழியும் நாணுவார்: குறள், 1011. (1015)

## 1016

நாண்வேலி கொள்ளாது மன்னோ வியன்ஞாலம்
பேணலர் மேலா யவர். 6

**பரிமேலழகர்:** மேலாயவர் - உயர்ந்தவர், வேலி நாண் கொள்ளாது - தமக்கு ஏமமாக நாணினைக் கொள்வதன்றி, வியன் ஞாலம் பேணலர் - அகன்ற ஞாலத்தைக் கொள்ள விரும்பார்.

பழிபாவங்கள் புகுதாமல் காத்தலின், வேலி என்றார். நாணும் ஞாலமும் தம்முள் மாறாயவழி அந் நாணினைக் கொள்வதல்லது அவை புகுதும் நெறியாய ஞாலத்தினைக் கொள்ள விரும்பார் என்பதாம். மன்னும் ஓவும் அசை.

நாணாகிய வேலியைப் பெற்றல்லது ஞாலம் பெற விரும்பார் என்று உரைப்பாரும் உளர்.

உரை வேறுபாடு

**பரிப்பெருமாள்:** இது நாணம் அழிய வரும் பொருள் கொள்ளார் என்றது. (1016)

## 1017

நாணால் உயிரைத் துறப்பர் உயிர்ப்பொருட்டால்
நாண்துறவார் நாண்ஆள் பவர். 7

**பரிமேலழகர்:** நாண் ஆள்பவர் - நாணினது சிறப்பு அறிந்து அதனை விடாது ஒழுகுவார், நாணால் உயிரை துறப்பர் - அந் நாணும் உயிரும் தம் முள் மாறாயவழி நாண் சிதையாமற் பொருட்டு உயிரை நீப்பர்; உயிர் பொருட்டு நாண் துறவார் - உயிர் சிதையாமற் பொருட்டு நாணினை நீக்கார்.

உயிரினும் நாண் சிறந்தது என்பதாம்.[1]

இவை இரண்டு பாட்டானும் அவர் செயல் கூறப்பட்டது.

ஒப்புமை

1. நாணால் உயிரைத் துறத்தல்:

"நாணில் வாழ்க்கை பசித்தலில் துவ்வாது" (முதுமொழி. 4: 3.)

1. "உயிரினும் சிறந்தன்று நாணே." (தொல். களவு. 23.)

"ஈன்றவர் இடர்ப்பட எம்பி துன்புறச்
சான்றவர் துயருறப் பழிக்கும் சார்வுமாய்த்
தோன்றலின் என்னுயிர் துறந்த போதலால்
ஊன்றிய பெரும்பழி துடைக்க ஒண்ணுமோ." (கம்ப. கவந்தப். 25.)

2. **குற்றம் வரின் உயர்ந்தோர் உயிரைத் துறத்தல்:**
குறள், *969.* *(1017)*

## 1018

பிறர்நாணத் தக்கது தான்நாணன் ஆயின்
அறம்நாணத் தக்க துடைத்து. 8

**பரிமேலழகர் :** பிறர் நாண தக்கது தான் நாணன் ஆயின் - கேட்டாரும் கண்டாரும் நாணத்தக்க பழியை ஒருவன் தான் நாணாது செய்யுமாயின், அறம் நாண தக்கது உடைத்து - அந் நாணமை அவனை அறம் விட்டு நீங்கத் தக்க குற்றத்தினை உடைத்து.

தான் எனச் செய்வானைப் பிரிக்கின்றார் ஆகலின் பிறர் என்றார். நாணோடு இயைபு இல்லாதானை அறம் சாராது என்பதாம்.

### உரை வேறுபாடு

**காளிங்கர்:** எனவே அறம் முதலாகிய நாற்பெரும் பொருளுள் அறம் என்னும் பெரும் பொருளும் தன்னை அணுகாது.

### ஒப்புமை

*முற்றும்:*

"அஞ்சலள் ஐயன தல்லல் கண்டும் உள்ளம்
நஞ்சிலள் நாணிலள் என்ன நாண மாமால்."
(கம்ப. கைகேசி சூழ்வினைப். 17.) *(1018)*

## 1019

குலம்சுடும் கொள்கை பிழைப்பின் நலம்சுடும்
நாண்இன்மை நின்றக் கடை. 9

**பரிமேலழகர் :** கொள்கை பிழைப்பின் குலம் சுடும் - ஒருவனுக்கு ஒழுக்கம் பிழைக்குமாயின் அப் பிழைப்பு அவன் குடிப்பிறப்பு ஒன்றனையும் கெடுக்கும்; நாண்இன்மை நின்றக்கடை நலம் சுடும் - ஒருவன் மாட்டு நாண் இன்மை நின்றவழி அந்நிலை அவன் நலம் யாவற்றையும் கெடுக்கும்.

நிற்றல் - ஒருபொழுதும் நீங்காமை. நலம், சாதியொருமை யாகலின், பிறப்பு, கல்வி, குணம், செயல், இனம் என்றிவற்றான் வந்தன எல்லாம் கொள்ளப்படும். ஒழுக்க அழிவினும் நாண் அழிவு இறப்பத் தீது என்பதாம்.

### ஒப்புமை

**கொள்கை பிழைப்பின் குலம் சுடுதல்:** குறள், ***133.***

"கலத்தினிற் பிறந்தமா மணியிற் காந்துறு
நலத்தினிற் பிறந்தது நடந்த நன்மைசால்
குலத்தினிற் பிறந்திலை கோளில் கீடம்போல்
நிலத்தினிற் பிறந்தமை நிரப்பி னுயரோ."
(கம்ப. மீட்சி. 65.) *(1019)*

### 1020

நாண்அகத் தில்லார் இயக்கம் மரப்பாவை
நாணல் உயிர்மருட்டி யற்று. 10

**பரிமேலழகர்:** அகத்து நாண் இல்லார் இயக்கம் - தம் மனத்தின்கண் நாண் இல்லாத மக்கள் உயிர் உடையார் போன்று இயங்குகிற இயக்கம், மரப்பாவை நாணல் உயிர் மருட்டியற்று - மரத்தால் செய்த பாவை இயந்திரக் கயிற்றின் ஆய தன் இயக்கத்தால் உயிர் உடைத்தாக மயக்கினாற் போலும்.

கருவியே கருத்தா ஆயிற்று. நாண் இல்லாத மக்கள் இயக்கம் நாண் உடைய பாவை இயக்கம் போல்வது அல்லது உயிர் இயக்கம் அன்று என்பதாம்.

இவை மூன்று பாட்டானும் நாண் இல்லாரது இழிவு கூறப்பட்டது.

ஒப்புமை

நாண்அகத்து இல்லாருக்கு மரப்பாவை:

"மரந்தான் என்னும் நெஞ்சினள் நாணள்."

(கம்ப. கைகேசி சூழ்வினை. 34.) (*1020*)

---

# 103. குடி செயல் வகை

**பரிமேலழகர்:** அஃதாவது ஒருவன் தான் பிறந்த குடியை உயரச் செய்தலின் திறம். இது தாழ்வின்கண் நாணுதல் உடையார்க்கு உளதாவது ஆகலின் நாண் உடைமையின்பின் வைக்கப்பட்டது.

### 1021

கருமம் செயஒருவன் கைதூவேன் என்னும்
பெருமையின் பீடுடைய தில். 1

**பரிமேலழகர்:** கருமம் செய கைதூவேன் என்னும் பெருமையின் - தன்குடி செய்தற் பொருட்டுத் தொடங்கிய கருமம் முடியாமையின் எண்ணிய கருமம் செய்தற்கு யான் கையொழியேன் என்னும் ஆள்வினைப் பெருமை போல, ஒருவன் பீடு உடையது இல் - ஒருவனுக்கு மேம்பாடு உடைய பெருமை பிறிது இல்லை.

குடிசெய்தற்கு என்பது அதிகாரத்தான் வந்தது. பல வகைத்தாய கருமச் செயலால் செல்வமும் புகழும் எய்திக் குடி உயரும் ஆகலின், பீடுடையது இல் என்றார்.

குடிசெய்தற் கருமமே நடத்தலால் தன் கருமம் செய்ய என்றும், பிறர் கருமம் செய்ய என்றும் உரைப்பாரும் உளர். தன் கருமமும் அதுவே ஆகலானும், பிறர் ஏவல் செய்தல் தலைமை அன்மையானும் அவை உரையன்மை அறிக.

உரை வேறுபாடு

**மணக்குடவர்:** ஒருவன் கை கருமம் செய்தலினாலே உண்ணேன் என்று சொல்லுகின்ற பெருமைபோலப் பெருமை உடையது பிறிது இல்லை.

**பரிதியார்:** என் உறவின் முறையார் கிளை பெருத்து வாழ, நான் அவர்களுக்குக் கொடாமல் இருக்க என்னும் பெருமையில் பெருமை இல்லை.

ஒப்புமை

**கருமம் செயக் கைதூவல் :**

"கருமம் மறுத்த கைதூ அமையத்து."

(பெருங். 1. 36: 42.) (1021)

## 1022

ஆள்வினையும் ஆன்ற அறிவும் எனஇரண்டின்
நீள்வினையான் நீளும் குடி. 2

**பரிமேலழகர்:** ஆள்வினையும் ஆன்ற அறிவும் என இரண்டின் நீள் வினையான் - முயற்சியும் நிறைந்த அறிவும் என்று சொல்லப்பட்ட இரண் டினையும் உடைய இடையறாத கருமச் செயலால், குடி நீளும் - ஒருவன் குடி உயரும்.

நிறைதல்: இயற்கை யறிவு செயற்கை யறிவோடு கூடி நிரம்புதல். ஆள்வினை, மடி புகுதாமற் பொருட்டு. ஆன்ற அறிவு, உயர்தற்கு ஏற்ற செயல்களும் அவை முடிக்கும் திறமும் பிழையாமல் எண்ணுதற்பொருட்டு.

இவை இரண்டு பாட்டானும் அச் செயற்குக் காரணம் கூறப்பட்டது.

உரை வேறுபாடு

**பரிப்பெருமாள்:** வளருகின்ற வினையாவது, ஒரு வினையைச் செய்து முடித்தால் அவ்வளவிலே நின்று அமையாது பின்னும் ஒரு வினையைத் தொடங்குதல். (1022)

## 1023

குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும். 3

**பரிமேலழகர்:** குடி செய்வல் என்னும் ஒருவற்கு - என் குடியினை உயரச் செய்யக் கடவேன் என்று கொண்டு அதற்கு ஏற்ற கருமங்களில் முயலும் ஒருவனுக்கு, தெய்வம் மடி தற்று தான் முந்துறும் - தெய்வம் ஆடையைத் தற்றுக்கொண்டு தான் முந்துற்று நிற்கும்.

முயற்சியை அதன் காரணத்தால் கூறினர். தற்றுதல் - இறுக உடுத்தல். முன் நடப்பார் செயல் நியதிமேல் ஏற்றப்பட்டது.

உரை வேறுபாடு

**மணக்குடவர்:** மடி தற்றல் - தொழில் செய்வார் ஆடையை இறுக உடுத்தல்.

**பரிப்பெருமாள்:** சுற்றத்தார் நல்வினை இலர் ஆயின் ஓம்பும் ஆறு என்னை என்றார்க்குத் தெய்வம் அருள் செய்யும் என்று கூறப்பட்டது.

**காளிங்கர்:** ஒருவற்கு - ஒப்பிறந்தோர்க்கு. (1023)

## 1024

சூழாமல் தானே முடிவெய்தும் தம்குடியைத்
தாழா துஞற்று பவர்க்கு. 4

**பரிமேலழகர்:** தம் குடியை தாழாது உஞற்றுபவர்க்கு - தம் குடிக்கு ஆம் வினையை விரைந்து முயல்வார்க்கு, சூழாமல் தானே முடிவு எய்தும் - அவ்வினை முடிக்கும் திறம் அவர் சூழவேண்டாமல் தானே முடிவு எய்தும்.

குடி: ஆகுபெயர். தெய்வம் முந்துறுதலால் பயன் கூறியவாறு.

இவை இரண்டு பாட்டானும் அதற்குத் தெய்வம் துணையாதல் கூறப் பட்டது.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** தம் குடியைத் தாழச் செய்யாதே உயரச் செய்யக் கருதுவார்க்கு அவ் வுயர்ச்சி எண்ணுமல் தானே முடிவுபெறும். *(1024)*

## 1025

குற்றம் இலனய்க் குடிசெய்து வாழ்வானைச்
சுற்றமாச் சுற்றும் உலகு. 5

**பரிமேலழகர்:** குற்றம் இலனய் குடி செய்து வாழ்வானை - குற்ற மாயின செய்யாது தன் குடியை உயரச் செய்து ஒழுகுவானை, சுற்றமா சுற்றும் உலகு - அவனுக்குச் சுற்றமாகவேண்டித் தாமே சென்று சூழ்வர் உலகத்தார்.

குற்றமாயின, அறநீதிகட்கு மறுதலையாய செயல்கள். தாமும் பயன் எய்தல் நோக்கி யாவரும் சென்று சார்வர் என்பதாம்.

### உரை வேறுபாடு

**காளிங்கர்:** எனவே தன் குடி தாங்கலே அன்றித் தன்னை அடைந் தோர் அனைவரும் தாங்கும் தன்மையவன் என்பது பொருள். *(1025)*

## 1026

நல்லாண்மை என்ப தொருவற்குத் தான்பிறந்த
இல்லாண்மை ஆக்கிக் கொளல். 6

**பரிமேலழகர்:** ஒருவற்கு நல் ஆண்மை என்பது - ஒருவனுக்கு நல்ல ஆண்மை என்று உயர்த்துச் சொல்லப்படுவது, தான் பிறந்த இல் ஆண்மை ஆக்கிக்கொளல் - தான் பிறந்த குடியினை ஆளும் தன்மையைத் தனக்கு உளதாக்கிக் கோடல்.

போர்த் தொழிலின் நீக்குதற்கு நல்லாண்மை என விசேடித்தார். குடியினை ஆளும் தன்மை: குடியின் உள்ளாரை உயரச் செய்து தன்வழிப் படுத்தல். அதனைச் செய்து கோடல் நல்லாண்மையாமாறு வருகின்ற பாட் டால் பெறப்படும்.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** ஆளுதல் உடைமை: குடியோம்புதலை எப்பொழுதும் சிந்தித்தல் *(1026)*

### 1027

அமரகத்து வன்கண்ணர் போலத் தமரகத்தும்
ஆற்றுவார் மேற்றே பொறை. 7

**பரிமேலழகர் :** அமரகத்து வன்கண்ணர் போல - களத்தின்கண் சென்றார் பலராயினும் போர்தாங்குதல் வன்கண்ணர்மேலது ஆனாற்போல, தமரகத்தும் பொறை ஆற்றுவார்மேற்றே - குடியின்கண் பிறந்தார் பலராயினும் அதன் பாரம் பொறுத்தல் அது வல்லார் மேலதாம்.

பொருட்கு ஒக்க வேண்டும் சொற்கள் உவமைக்கண் வருவிக்கப் பட்டன. நன்கு மதிக்கப்படுவார் அவரே என்பதாம்.

இவை மூன்று பாட்டானும் அதுசெய்வார் எய்தும் சிறப்புக் கூறப் பட்டது.

#### உரை வேறுபாடு

**பரிப்பெருமாள்:** இஃது ஒரு குடிப்பிறந்தார் பலர் உளர் ஆயினல் அவருள் மூத்தவருக்குக் கடனே, எல்லார்க்கும் கடனே என்று ஐயுற் றார்க்குக் கூறப்பட்டது. *(1027)*

### 1028

குடிசெய்வார்க் கில்லை பருவம் மடிசெய்து
மானம் கருதக் கெடும். 8

**பரிமேலழகர் :** மடி செய்து மானம் கருத கெடும் - தம் குடியினை உயரச் செய்வார் அச் செயலையே நோக்காது காலத்தை நோக்கி மடியினைச் செய்துகொண்டு மானத்தையும் கருதுவராயின் குடிகெடும்; குடி செய்வார்க்கு பருவம் இல்லை - ஆகலான் அவர்க்குக் காலநியதி இல்லை.

காலத்தை நோக்கி மடி செய்தல்: வெயில் மழை பனி என்பன உடைமை நோக்கிப் பின்னர்ச் செய்தும் என்று ஒழிந்திருத்தல். மானம் கருதுதல் - இக் குடியிலுள்ளார் யாவரும் இன்பமுற இக்காலத்துத் துன்ப முறுவேன் யானே என்று உட்கோடல். மேல், "இகல் வெல்லும் வேந்தர்க்கு வேண்டும் பொழுது"[1] என்றது உட்கொண்டு இவர்க்கும் வேண்டுமோ என்று கருதினும், அது கருதற்க என்று மறுத்தவாறு.

#### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** இது குடிசெய்வார் இன்பநுகர்ச்சியை விரும்பார் என்றது.

**காளிங்கர்:** இவ்வுலகத்துப் பயிர் செய்வார்க்குப் பருவம் வேண்டி னாற்போலக் குடிசெய்வார்க்கு ஒரு பருவம் பார்த்து இருக்க வேண்டுவது இல்லை. *(1028)*

### 1029

இடும்பைக்கே கொள்கலங் கொல்லோ குடும்பத்தைக்
குற்றம் மறைப்பான் உடம்பு. 9

**பரிமேலழகர் :** குடும்பத்தை குற்றம் மறைப்பான் உடம்பு - மூவகைத் துன்பமும் உறற் பாலதாய தன் குடியை அவை உறாமற் காக்க முயல்வானது உடம்பு, இடும்பைக்கே கொள்கலங்கொல் - அம்முயற்சித் துன்பத்திற்கே

1. குறள், 481.

கொள்கலமாம் அத்துணையோ? அஃது ஒழிந்து இன்பத்திற்கு ஆதல் இல்லையோ?

"உறைப்பெயல் ஒலை போல, மறைக்குவன் பெருமநிற் குறித்துவரு வேலே"[1] என்புழியும் மறைத்தல் இப்பொருட்டாயிற்று. என் குடிமுழுதும் இன்புற்று உயரவே நான் இருமையும் எய்துதலான் இம் மெய்வருத்தம் மாத்திரம் எனக்கு நன்று என்று முயலும் அறிவுடையான் அஃது ஒருஞான்றும் ஒழியாமை நோக்கி, 'இடும்பைக்கே கொள்கலங் கொல்லோ?' என்றார். இது குறிப்பு மொழி,

இவை இரண்டு பாட்டானும் அவர் அது செய்யும் இயல்பு கூறப் பட்டது.

### ஒப்புமை

முற்றும்:

"நெடும்பல் மால்வரை தூர்த்து நெருக்கவும்
துடும்பல் வேலை துளங்கிய தில்லையால்
இடும்பை யெத்தனை யும்படுத் தெய்தினும்
குடும்பந் தாங்கும் குடிப்பிறந் தாரினே."
(கம்ப. சேதுபந்தன. 53.) (1029)

## 1030

இடுக்கண்கால் கொன்றிட வீழும் அடுத்தூன்றும்
நல்லாள் இலாத குடி. 10

பரிமேலழகர்: இடுக்கண் கால் கொன்றிட வீழும் - துன்பமாகிய நவியம் புகுந்து தன் முதலை வெட்டிச் சாய்க்க ஒரு பற்று இன்றி வீழா நிற்கும், அடுத்து ஊன்றும் நல் ஆள் இலாத குடி - அக்காலத்துப் பற்றுவன கொடுத்துத் தாங்கவல்ல நல்ல ஆண்மகன் பிறவாத குடியாகிய மரம்.

முதல்: அதன் வழிக்கு உரியார். வளர்ப்பாரைப் பெற்றுழி வளர்ந்து பயன்படுதலும் அல்லாவழிக் கெடுதலும் உடைமையின், மரம் ஆக்கினர். "தூங்குசிறை வாவலுறை தொல்மரங்கள் அன்ன, ஓங்குகுலம் நைய அத னுட்பிறந்த வீரர், தாங்கல் கடன்"[2] என்றார் பிறரும். இது குறிப்பு உருவகம்.

இதனான் அவர் இல்லாத குடிக்கு உளதாம் குற்றம் கூறப்பட்டது.

### ஒப்புமை

நல்லாள் உள்ள குடி இடுக்கண்கால் கொன்றிட வீழாமை:

"இவனே,
முழுமுதல் தொலைந்த கோளி யாலத்துக்
கொழுநிழல் நெடுஞ்சினை வீழ்பொறுத் தாங்குத்
தொல்லோர் மாய்ந்தெனத் துளங்கல் செல்லாது
நல்லிசை முதுகுடி நடுக்கறத் தழீஇ" (புறநா. 58: - 5.)

"சிதலை தினப்பட்ட ஆல மரத்தை
மதலையாய் மற்றதன் வீழூன்றி யாங்குக்
குதலைமை தந்தைக்கண் தோன்றில்தான் பெற்ற
புதல்வன் மறைப்பக் கெடும்." (நாலடி. 197.) (1030)

1. புறநா. 290: 7-8.
2. சீவக. 498.

# 104. உழவு

**பரிமேலழகர்:** அஃதாவது சிறுபான்மை வாணிகர்க்கும் பெரும்பான்மை வேளாளர்க்கும் உரித்தாய உழுதல் தொழில்; செய்விக்குங்கால் ஏனையோர்க்கும் உரித்து. இது, மேல் குடி உயர்தற்கு ஏது என்ற ஆள்வினைவகையாகலின், குடிசெயல்வகையின்பின் வைக்கப்பட்டது.

**மணக்குடவர்:** உழவாவது உழவின் திறனும் அதனால் வரும் பயனும் கூறுதல்.

**பரிப்பெருமாள்:** இது குடி செய்வார்க்கு இன்றியமையாமையின் அதன்பின் கூறப்பட்டது.

உழவு, தொழில், வரைவு, வாணிகம், சிற்பம், வித்தை என்று சொல்லப்பட்ட அறுவகைத் தொழிலும் குடி செய்வார்க்கு வேண்டும் அன்றே? அவை எல்லாவற்றின் இயல்பும் கூறாதார் உழவு ஒன்றும் கூறியது எற்றுக்கு எனின், அவற்றுள் கல்வி பொருள் தரும் என்பது முன்பே கூறப்பட்டது. தொழிலாவது ஒருவன் ஏவல் செய்தல். அரசர் ஏவலால் அமைச்சர் செய்யும் தொழில் அமைச்சியலுள் கூறப்பட்டது. ஏனையோர் செய்யும் தொழிலும் வரைவும் வாணிகமும் சிற்பமும் மேலே அதிகாரத்தில் ஆள் வினையும் ஆன்ற அறிவும் என இரண்டின் நீள் வினையால் நீளும் குடி" என்றதனாலே சொன்னாராம். என்னை? அவை எல்லாம் முயற்சியானும் அறிவானும் வருதலின். ஆயின் உழவும் அதனுள் அடங்காதோ எனின், அடங்கும்; அஃது ஈண்டுத் தொழிலை நோக்கிக் கூறப்பட்டது அன்று. முயன்று பொருள் ஈட்டினார் எல்லாரும் குடி ஓம்புங்கால், தானியத்தால் ஓம்ப வேண்டுதலின் அதனை உண்டாக்க வேண்டும் என்று கூறப்பட்டது.

### 1031

சுழன்றும்ஏர்ப் பின்ன துலகம் அதனால்
உழந்தும் உழவே தலை. 1

**பரிமேலழகர்:** சுழன்றும் ஏர் பின்னது உலகம் - உழுதலான் வரும் மெய்வருத்தம் நோக்கிப் பிற தொழில்களைச் செய்து திரிந்தும் முடிவில் ஏருடையார் வழியது ஆயிற்று உலகம்; அதனால் உழந்தும் தலை உழவே - ஆகலான் எல்லா வருத்தம் உற்றும் தலையாய தொழில் உழவே.

ஏர்: ஆகுபெயர். பிற தொழில்களால் பொருள் எய்திய வழியும் உணவின்பொருட்டு உழுவார்கண் செல்லவேண்டுதலின், 'சுழன்றும் ஏர்ப் பின்னது உலகம்' என்றும், வருத்தம் இலவேனும் பிற தொழில்கள் கடை என்பது போதர, 'உழந்தும் உழவே தலை' என்றும் கூறினர்.

இதனான் உழவினது சிறப்புக் கூறப்பட்டது.

#### உரை வேறுபாடு

**பரிதியார்:** பூமியைப் பிரதட்சிணம் பண்ணின தர்மமும், உழவு செய்து கொடுத்த தர்மத்திற்கு நிகர் இல்லை.

**காளிங்கர்:** கடல் ஓடியும் மலை ஏறியும் காடு மண்டியும் நாடு பரந்தும் ஓடித் திரிதலே அன்றியும், உண்பான் பொருட்டு இதனைப் பிற பிற முயன்று அலம்வந்தும் அதனால் ஒரு பயனும் இல்லை. ஆதலால் ஏர் கொண்டு வாழ்வார் தமது வழிச்சேறலே பயன் உள்ள வாழ்வாம்; மற்று அது எங்ஙனம் எனின், உழுகைப் பொருட்டாக உழு கருவிக்குக் காடு புக்கு மரம் தடிதலும், கனவிய கொழுவும் அதற்கு ஏற்ற பல கருவியும் வன்புலம்

மென்புல வடிவத்து இயற்றலும், படைக்கால் அமைத்தலும் முதலிய பலவகைப் பயிர்வளம் முற்றிய அவை அனைத்தும் உழந்தும் உழவு இயற்றலே தலைமைப்பாடு ஆவது. (1031)

## 1032

உழுவார் உலகத்தார்க் காணிஅஃ தாற்றா
தெழுவாரை எல்லாம் பொறுத்து. 2

**பரிமேலழகர்:** அஃது ஆற்றாது எழுவாரை எல்லாம் பொறுத்து - அவ் வுழுதலைச் செய்யமாட்டாது பிற தொழில்கள்மேற் செல்வார் யாவரையும் தாங்குதலால், உழுவார் உலகத்தார்க்கு ஆணி - அது வல்லார் உலகத்தாராகிய தேர்க்கு அச்சாணி ஆவர்.

"காடுகொன்று நாடாக்கிக் குளந்தொட்டு"[1] என்றாற்போல, உழுவார் என்றது உழுவிப்பார்மேலும் செல்லும். உலகத்தார் என்றது ஈண்டு அவரை ஒழிந்தாரை. கலங்காமல் நிறுத்தற்கண் ஆணி போறலின், ஆணி என்றார். பொறுத்தலான் என்பது திரிந்து நின்றது. ஏகதேச உருவகம். 'அஃது ஆற்றார் தொழுவாரே எல்லாம் பொறுத்து' என்று பாடம் ஓதி, அது மாட்டாதார் புரப்பார் செய்யும் பரிபவம் எல்லாம் பொறுத்து அவரைத் தொழுவாரே ஆவர் என்று உரைப்பாரும் உளர்.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** இஃது உழுவார் தம்மையும் அரசரையும் பெரியர் ஆக்குதலன்றி உலகத்தையும் தாங்குவர் என்பதாம்.

**பரிதியார்:** உழவுத் தொழில் அன்றோ உலகம் அசையாமல் தாங்குகிற ஆணி? உழவு இல்லாதார் தொழுது, வயிறு வளர்ப்பவர். (1032)

## 1033

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர். 3

**பரிமேலழகர்:** உழுது உண்டு வாழ்வாரே வாழ்வார் - யாவரும் உண்ணும் வகை உழுதலைச் செய்து அதனால் தாமும் உண்டு வாழ்கின்றாரே தமக்கு உரியராய் வாழ்கின்றவர்; மற்று எல்லாம் தொழுது உண்டு பின்செல்பவர் – மற்றையார் எல்லாம் பிறரைத் தொழுது அதனால் தாம் உண்டு அவரைப் பின் செல்கின்றவர்.

மற்று என்பது வழக்குப்பற்றி வந்தது. தாமும் மக்கட் பிறப்பினராய் வைத்துப் பிறரைத் தொழுது அவர் சில கொடுப்பத் தம் உயிர் ஓம்பி அவர்பின் செல்வார் தமக்கு உரியர் அல்லர் என்பது கருத்து.

### மேற்கோள் விளக்கம்

"வீழ்குடி உழவரொடு." (சிலப். இந்திரவிழவூர். 43.)

'உழவிற்கு மேல் விரும்பும் குடிகளோடும், உழவரோடும் யாவரும் விரும்பும் குடியென்றுமாம். "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம், தொழுதுண்டு பின்செல்பவர்" என்பதனால் கொள்க.' (அடியார்க்கு நல்லாருரை.) (1033)

1. பட்டினப். 283-4.

## 1034

பலகுடை நீழலும் தம்குடைக்கீழ்க் காண்பர்
அலகுடை நீழ லவர். 4

**பரிமேலழகர்:** அலகு உடை நீழலவர் - உழுதல் தொழிலான் நெல்லினை உடையராய தண்ணளி உடையோர், பல குடை நீழலும் தம் குடைக்கீழ் காண்பர் - பலவேந்தர் குடை நிழலதாய மண் முழுதினையும் தம் வேந்தர் குடைக்கீழே காண்பர்.

அலகு - கதிர்; அ∴து ஈண்டு ஆகுபெயராய் நெல்மேலதாயிற்று. உடைய என்பது குறைந்து நின்றது. நீழல் போறலின், நீழல் எனப்பட்டது. நிழலவர் என்றது இரப்போர்க்கெல்லாம் ஈதல் நோக்கி; ஒற்றுமைபற்றித்[1] தம் குடை என்றார். குடை நீழல் என்பதூஉம் ஆகுபெயர். "ஊன்றுசால் மருங்கின் ஈன்றதன் பயனே"[2] என்றதனால் தம் அரசனுக்குக் கொற்றம் பெருக்கி மண் முழுதும் அவனதாகக் கண்டிருப்பர் என்பதாம். "இரப்போர் சுற்றமும் புரப்போர் கொற்றமும், உழவிடை விளைப்போர்"[3] என்றார் பிறரும்.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** அலகுடை நீழலவர் - குடையில்லா நிழலை உடையவர்; குடையில்லா நிழலாவது பைங்கூழ் நிழல்.

**காளிங்கர்:** தம் கொடைக்கீழ் - தாம் கொடுக்கும் கொடைவழி.[4] அலகுடை நீழல் - கலப்பைத் தண் நிழலினை. அலகு என்பது கலப்பை.

**கவிராஜ பண்டிதர்:** இரக்கிறவர்களுக்கு உறவும், பூமி ஆளுகிறவனுக்குச் செல்வமும் உழவரே. *(1034)*

## 1035

இரவார் இரப்பார்க்கொன் றீவர் கரவாது
கைசெய்தூண் மாலை யவர். 5

**பரிமேலழகர்:** கைசெய்து ஊண் மாலையவர் இரவார் - தம் கையால் உழுது உண்டலை இயல்பாக உடையார் பிறரைத் தாம் இரவார்; இரப்பார்க்கு ஒன்று கரவாது ஈவர் - தம்மை இரப்பார்க்கு அவர் வேண்டியது ஒன்றனைக் கரவாது கொடுப்பர்.

செய்து என்பதற்கு உழுதலை என வருவிக்க. 'கைசெய்தூண் மாலையவர்' என்பது ஒருஞான்றும் அழிவு இல்லாத செல்வம் உடையர் என்னும் ஏதுவை உட்கொண்டு நின்றது.

### ஒப்புமை

**கரவாது ஈதல்:**

"இரப்போர்க்குக் கரப்பிலார்." (சம்பந்தர். புகலி. 8.)

"கைவினை கரவேல்." (ஆத்திசூடி.) *(1035)*

---

1. மன்னருக்கும் உழவாருக்கும் உள்ள ஒற்றுமை.

2. "பொருபடை தரூஉம் கொற்றமும் உழுபடை, ஊன்றுசால் மருங்கின் ஈன்றதன் பயனே." (புறநா. 35: 25-6.)

3. சிலப். 10: 149-50.

4. 'தங்கொடைக் கீழ்' என்பது இவர் பாடம்.

## 1036

**உழவினார் கைம்மடங்கின் இல்லை விழைவதூஉம்**
**விட்டேமென் பார்க்கு நிலை. 6**

**பரிமேலழகர்:** உழவினார் கை மடங்கின் - உழுதலை உடையார் கை அதனைச் செய்யாது மடங்குமாயின், விழைவதூஉம் விட்டேம் என்பார்க்கு நிலை இல்லை – யாவரும் விழையும் உணவும் யாம் துறந்தோம் என்பார்க்கு அவ் வறத்தின்கண் நிற்றலும் உளவாகா.

உம்மை, இறுதிக்கண்ணும் வந்து இயைந்தது. உணவு இன்மையால், தாம் உண்டலும் இல்லறம் செய்தலும் யாவர்க்கும் இல்லை ஆயின. அவர் உறுப்பு மாத்திரமாய கை வாளா இருப்பின் உலகத்து இம்மை மறுமை வீடு என்னும் பயன்கள் நிகழா என்பதாம். 'ஒன்றனை மனத்தால் விழைதலும் ஒழிந்தேம் என்பார்க்கு' [1] என உரைப்பாரும் உளர்.

இவை ஐந்து பாட்டானும் அதனைச் செய்வாரது சிறப்புக் கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** விழைவதூஉம் விட்டேம் என்பார்க்கு - யாதொரு பொருளின் கண்ணும் விரும்புவதனையும் விட்டேம் என்பார்க்கு. எனவே துறவறத்தின்கண் நிற்பாரை நிறுத்துதல் உழவர்கண்ணது என்றது.

*(1036)*

## 1037

**தொடிப்புழுதி கஃசா உணக்கின் பிடித்தெருவும்**
**வேண்டாது சாலப் படும். 7**

**பரிமேலழகர்:** தொடி புழுதி கஃசா உணக்கின் – ஒரு நிலத்தினை உழுதவன் ஒரு பலப் புழுதி கஃசாம் [2] வண்ணம் அதனைக் காயவிடுவானாயின், பிடித்து எருவும் வேண்டாது சால படும் - அதன்கண் செய்த பயிர் ஒரு பிடியின்கண் அடங்கிய எருவும் இடவேண்டாமல் பணைத்து விளையும்.

பிடித்து – பிடியின்கண்ணது; பிடித்த என்பதன் விகாரம் என்பாரும் உளர். வேண்டாமல், சான்று என்பன திரிந்து நின்றன.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** மேற்கூறிய உழவு செய்யும் திறன் கூறுவார் முற்படப் புழுதி உணக்கவேண்டும் என்றார்.

**காளிங்கர்:** எண் கழஞ்சும் இருகழஞ்சாக. தொடி என்பது ஒரு பலம் என்றது. கஃசா என்பது கால் பலமாக என்றது. *(1037)*

## 1038

**ஏரினும் நன்றால் எருஇடுதல் கட்டபின்**
**நீரினும் நன்றதன் காப்பு. 8**

**பரிமேலழகர்:** ஏரினும் எரு இடுதல் நன்று - அப் பயிர்க்கு அவ்வுழுதலினும் எருப்பெய்தல் நன்று; கட்டபின் அதன் காப்பு நீரினும் நன்று - இவ்விரண்டும் செய்து களைகட்டால் அதனைக் காத்தல் அதற்கு நீர்கால்யாத்தலினும் நன்று.

---

1. மணக்குடவர் உரை.
2. கஃசு - கால் பலம்.

ஏர்: ஆகுபெயர். காத்தல்-பட்டி[1] முதலியவற்ருன் அழிவு எய்தாமல் காத்தல். உழுதல், எருப்பெய்தல், களைகட்டல், நீர்கால்யாத்தல்,[2] காத்தல் என்று இம்முறையவாய இவ் வைந்தும் வேண்டும் என்பதாம்.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** இது பலகால் உழவேண்டும் என்பதூஉம், எருவிட வேண்டும் என்பதூஉம், களைபறிக்க வேண்டும் என்பதூஉம், பசுப் புகுதாமல் காக்க வேண்டும் என்பதூஉம் கூறிற்று.

**பரிதியார்:** உழவினும் எருக்கட்டு நன்று; அதனினும் தண்ணீர் கட்டுதல் நன்று; அதனினும் வேலி இடுதல் நன்று.

**காளிங்கர்:** கூறிய புழுதி உழவாயினும் சேற்று உழவாயினும் உழு சால் எப்பற்றும் ஒழியாமல் செல்லும் ஏர் மிகுதியினும் மிக நன்று. மற்று அதனினும் நன்று, அந்த நிலத்திற்கு ஏற்ற எருக் கொணர்ந்து இடுதல். இனி, அதனினும் நன்று, ஆண்டு எழு பைங்கூழ் அருகு எழு களை கட்டல். அங்ஙனம் களைதலின் நன்மையே அன்றிப் பின்னும் சால நன்று, நீர் முறை பிழையாமை நீர் பெய்தல். மற்று அதனினும் சால நன்று, அங்ஙனம் சிறந்த பயிர்ப்பயன் பழுதுபடாமல் முன்னுறக்கொண்டே கடிந்து காப்பது ஓர் காப்பு.

### ஒப்புமை

**நீரினும் நன்றதன் காப்பு :**

"பைங்கூழ், விளைவின்கண் போற்ருன் உழவும்."

*(திரி. 59.) (1038)*

## 1039

செல்லான் கிழவன் இருப்பின் நிலம்புலந்
தில்லாளின் ஊடி விடும். 9

**பரிமேலழகர்:** கிழவன் செல்லான் இருப்பின் - அந் நிலத்திற்கு உரியவன் அதன்கண் நாள்தோறும் சென்று பார்த்து அடுத்தன செய்யாது மடிந்து[3] இருக்குமாயின், நிலம் இல்லாளின் புலந்து ஊடிவிடும் - அஃது அவன் இல்லாள்போலத் தன்னுள்ளே வெறுத்துப் பின் அவனேடு ஊடிவிடும்.

செல்லுதல்: ஆகுபெயர். பிறரை ஏவியிராது தானே சேறல் வேண்டும் என்பது போதர, கிழவன் என்ருர். தன்கண் சென்று வேண்டுவன செய்யாது வேறிடத்து இருந்தவழி மனையாள் ஊடுமாறுபோல என்றது அவன் போகம் இழத்தல் நோக்கி.

இவை மூன்று பாட்டானும் அது செய்யுமாறு கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**காளிங்கர்:** தன் நிலக்கிழத்தியைப் பயிர்முகத்துத் தான் சென்று பல நாளும் விழி ஓட்டிப் பாரானுகில், அந் நிலமடந்தை அவனை என்றும் மேவாளாகித் தனக்கு அலங்காரம் ஆகிய பயிர்க்கோலம் அழிந்து தன்னேடு பொருந்தி வாழாளாகிப் புலந்து இவன் வாழ்க்கையைப் புரள விடும்.

*(1039)*

1. பட்டி - அடங்காத மாடு. 2. தண்ணீர் கட்டுதல்.
3. மடிந்து - சோம்பி.

### 1040

இலம்என் றசைஇ இருப்பாரைக் காணின்
நிலம்என்னும் நல்லாள் நகும். 1

பரிமேலழகர்: இலம் என்று அசைஇ இருப்பாரை காணின் - யாம் வறியேம் என்று சொல்லி மடிந்திருப்பாரைக் கண்டால், நிலம் என்னும் நல்லாள் நகும் - நிலமகள் என்று உயர்த்துச் சொல்லப்படுகின்ற நல்லாள் தன்னுள்ளே நகாநிற்கும்.

உழுதல் முதலிய செய்வார் யாவர்க்கும் செல்வம் கொடுத்து வருகின்றவாறு பற்றி நல்லாள் என்றும், அது கண்டு வைத்தும் அது செய்யாது வறுமை உறுகின்ற பேதைமை பற்றி நகும் என்றும் கூறினர். இரப்பாரை என்று பாடம் ஓதுவாரும் உளர்.

இதனான், அது செய்யாதவழிப் படும் இழுக்குக் கூறப்பட்டது. வருகின்ற அதிகார முறைமைக்குக் காரணமும் இது.

உரை வேறுபாடு

காளிங்கர்: வறுமையால் கால் தளர்ந்து ஒருவர்பால் சென்று, பெரிதும் இல்லா ஆளரோம் என்று இங்ஙனம் தம் நாவினால் இளிவந்த சொல்லி இரப்பாரை.[1] (1040)

---

## 105. நல்குரவு

பரிமேலழகர்: அஃதாவது நுகரப்படுவன யாவும் இல்லாமை.

மணக்குடவர்: நல்குரவாவது பொருள் இல்லாதார்க்கு உளதாகும் குற்றம் கூறுதல்.

### 1041

இன்மையின் இன்னாத தியாதெனின் இன்மையின்
இன்மையே இன்னா தது. 1

பரிமேலழகர்: இன்மையின் இன்னாதது யாது எனின் - ஒருவனுக்கு வறுமை போல இன்னாதது யாது என்று வினவின், இன்மையின் இன்னாதது இன்மையே - வறுமை போல இன்னாதது வறுமையே; பிறிது இல்லை.

இன்னாதது – துன்பம் செய்வது. ஒப்பது இல்லை எனவே, மிக்கது இன்மை சொல்ல வேண்டாவாயிற்று.

ஒப்புமை

*முற்றும்:*

"அரிதுமன் றம்ம இன்மைய திளிவே" (நற். 262: 10.)

"எற்றுள்ளும் இன்மையின் இன்னாத தில்லை."

(நான்மணி. 30.) (1041)

### 1042

இன்மை எனஒரு பாவி மறுமையும்
இம்மையும் இன்றி வரும். 2

---

1. மணக்குடவரும் இவ்வாறே உரைகொண்டார். 'இரப்பாரை' என்பது இவரும் மணக்குடவரும் கொண்ட பாடம்.

**பரிமேலழகர்:** இன்மை என ஒரு பாவி - வறுமை என்று சொல்லப் படுவது ஒரு பாவி, மறுமையும் இம்மையும் இன்றி வரும் - ஒருவனுழை வருங்கால் அவனுக்கு மறுமை இன்பமும் இம்மை இன்பமும் இல்லையாக வரும்.

'இன்மை என ஒரு பாவி' என்பதற்கு மேல், "அழுக்காறென ஒரு பாவி"[1] என்புழி உரைத்தாங்கு உரைக்க. மறுமை இம்மை என்பன ஆகு பெயர். ஈயாமையானும் துவ்வாமையானும் அவை இலவாயின. 'இன்றி விடும்' என்று பாடம் ஓதிப் பாவியால் என விரித்துரைப்பாரும் உளர்.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** தன்மம் பண்ணுமையால், மறுமையின்கண்ணும் நுகர்ச்சி இல்லாமை ஆயிற்று.[2]

### ஒப்புமை

1. **ஒரு பாவி:**

"பசிப்பிணி என்னும் பாவி." (மணி. 11: 80.)

2. **இன்மையினுல் இம்மை இலதாதல்:**

"பொருளில்லார்க், கிவ்வுலக மில்லாகி யாங்கு" (குறள், 247.)
"ஈதலும் துய்த்தலும் இல்லோர்க் கில்"
"இல்லோன் இன்பம் காமுற் றுஅங்
கரிதுவேட் டனையால்." (குறுந். 63:1, 120:11-2.) (1042)

## 1043

**தொல்வரவும் தோலும் கெடுக்கும் தொகையாக**
**நல்குர வென்னும் நசை.** 3

**பரிமேலழகர்:** நல்குரவு என்னும் நசை – நல்குரவு என்று சொல்லப் படும் ஆசை, தொல் வரவும் தோலும் தொகையாக கெடுக்கும் – தன்னல் பற்றப்பட்டாருடைய பழைய குடிவரவினையும் அதற்கு ஏற்ற சொல்லினையும் ஒருங்கே கெடுக்கும்.

நசை இல்வழி நல்குரவும் இல்லையாகலின் நல்குரவையே நசையாக்கி, அஃது அக் குடியின் தொல்லோர்க்கு இல்லாத இழிதொழில்களையும் இளி வந்த சொற்களையும் உளவாக்கலான் அவ் விரண்டனையும் ஒருங்கு கெடுக்கும் என்றார். "குடிப்பிறப் பழிக்கும் விழுப்பம் கொல்லும்"[3] என்றார் பிறரும். தோலாவது, "இழுமென் மொழியான் விழுமியது நுவறல்"[4] என்றார் தொல் காப்பியனாரும். இதற்கு உடம்பு என்று உரைப்பாரும் உளர். அஃது அதற்குப் பெயராயினும் உடம்பு கெடுக்கும் என்றற்கு ஓர் பொருட்சிறப்பு இல்லாமை அறிக.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** தோலும் - வடிவழகினையும். தோல் : ஆகுபெயர்.

**பரிதியார்:** பெருமையும் சரீரமும் கெடுக்கும் நல்குரவு.

**காளிங்கர்:** தோல் - வலி.

---

1. குறள், 168.
2. 'இம்மையும் இன்றி விடும்' என்பது இவர் பாடம்.
3. மணி. 11; 76. 4. தொல். செய்யுள். 230.

### ஒப்புமை

*முற்றும்:*

"பிறந்த குலம்மாயும் பேராண்மை மாயும்
சிறந்ததம் கல்வியும் மாயும்—கறங்கருவி
கன்மேல் கழூஉம் கணமலை நன்னாட
இன்மை தழுவப்பட் டார்க்கு." (நாலடி. 285.)

"நலனும் இளமையும் நல்குரவின் கீழ்ச்சாம்" (நான்மணி. 81.)

"குடிப்பிறப் பழிக்கும் விழுப்பம் கொல்லும்
பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉம்
நாணணி களையும் மாணெழில் சிதைக்கும்
பூண்முலை மாதரொடு புறங்கடை நிறுத்தும்
பசிப்பிணி என்னும் பாவி." (மணி. 11: 76-80.) (1043)

## 1044

இற்பிறந்தார் கண்ணேயும் இன்மை இளிவந்த
சொற்பிறக்கும் சோர்வு தரும். 4

*பரிமேலழகர்:* இல் பிறந்தார் கண்ணேயும் - இளிவந்த சொற் பிறவாத குடிப்பிறந்தார் மாட்டேயும், இளிவந்த சொல் பிறக்கும் சோர்வு இன்மை தரும் – அது பிறத்தற்கு ஏதுவாகிய சோர்வினை நல்குரவு உண்டாக்கும்.

சிறப்பும்மை, அவர்மாட்டு அது பிறவாமை தோன்ற நின்றது. இளி வந்த சொல் - இளிவருதற்கு ஏதுவாகிய சொல்; அஃதாவது எமக்கு ஈய வேண்டும் என்றல். சோர்வு - தாம் உறுகின்ற துன்பமிகுதிபற்றி ஒரோவழித் தம் பிறப்பினை மறந்து அது சொல்லுவதாக நினைத்தல்.

### உரை வேறுபாடு

**கவிராஜ பண்டிதர்:** பொல்லாத வசனங்களைச் சொல்லாத நல்ல குடி யிலே பிறந்தவர்களுக்குத் தரித்திரம் வந்தால் அது பொல்லாத வசனங் களைச் சொல்லத் தக்கதால் நல்ல குணங்களை மறப்பிக்கும். (1044)

## 1045

நல்குர வென்னும் இடும்பையுள் பல்குரைத்
துன்பங்கள் சென்று படும். 5

*பரிமேலழகர்:* நல்குரவு என்னும் இடும்பையுள் – நல்குரவு என்று சொல்லப்படும் துன்பம் ஒன்றனுள்ளே, பல் துன்பங்கள் சென்று படும் - பல துன்பங்களும் வந்து விளையும்.

குரை: இசைநிறை. செலவு: விரைவின் கண் வந்தது. துன்பமும் தானும் உடனே நிகழ்தலின் நல்குரவைத் துன்பமாக்கியும், அத் துன்பம் அடியாகச் செல்வர் கடை நோக்கிச் சேறல் துன்பமும், அவரைக் காண்டல் துன்பமும், கண்டால் மறுத்துழி நிகழும் துன்பமும், மறுவழியும் அவர் கொடுத்தது வாங்கல் துன்பமும், அது கொடுவந்து நுகர்வன கூட்டல் துன்பமும் முதலாயின, நாள்தோறும் வேறுவேறாக வருதலின் எல்லாத் துன் பங்களும் உளவாம் என்றும் கூறினர்.

இவை ஐந்து பாட்டானும் நல்குரவின் கொடுமை கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** பல்குரைத் துன்பம் - இரப்பார்க்கு உரைக்கத் துன்பம்.

**காளிங்கர்:** பல தன்மையாகிய துயரமாவது தான் இனிது உண்ணப் பெறாத துயரமும், தன் சுற்றம் ஓம்பப்பெறாத துயரமும், சான்றோர்க்கு உதவப்பெறாத துயரமும், வருவிருந்து ஓம்பப்பெறாத துயரமும், பிறவும் சென்று சேரும். (1045)

## 1046

**நற்பொருள் நன்குணர்ந்து சொல்லினும் நல்கூர்ந்தார்**
**சொற்பொருள் சோர்வு படும். 6**

**பரிமேலழகர்:** நல் பொருள் நன்கு உணர்ந்து சொல்லினும் - மெய்ந் நூற் பொருளைத் தெளிய அறிந்து சொன்னாராயினும், நல்கூர்ந்தார் சொல் பொருள் சோர்வு படும் - நல்கூர்ந்தார் சொல்லும் சொல் பொருள் இன்மையைத் தலைப்படும்.

பொருள் இன்மையைத் தலைப்படுதலாவது, "யாம் இவர் சொல்லியன விரும்பிக் கேட்டுமாயின் கண்ணோடி இவர் உறுகின்ற குறைமுடிக்க வேண்டும்" என்று அஞ்சி யாவரும் கேளாமையின் பயனில் சொல்லாய் முடிதல். கல்வியும் பயன்படாது என்பதாம்.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** இது கல்வி கெடும், சுற்றத்தாரும் கைவிடுவர் என்பது.

### ஒப்புமை

**முற்றும்:**

"நல்லாவின் கன்றாயின் நாகும் விலைபெறூஉம்
கல்லாரே யாயினும் செல்வர்வாய்ச்-சொல்செல்லும்
புல்லீரப் போழ்தின் உழவேபோல் மீதாடிச்
செல்லாவாம் நல்கூர்ந்தார் சொல்." (நாலடி. 115.)

"இல்லார்வாய்ச் சொல்லின் நயம்இன்று." (இன்னா. 29.) (1046)

## 1047

**அறம்சாரா நல்குர வீன்றதா யானும்**
**பிறன்போல நோக்கப் படும். 7**

**பரிமேலழகர்:** அறம் சாரா நல்குரவு - அறத்தோடு இயைபு இல்லாத நல்குரவு உடையான், ஈன்ற தாயானும் பிறன்போல நோக்கப்படும்– தன்னை ஈன்ற தாயானும் பிறனைக் கருதுமாறு போலக் கருதி நோக்கப்படும்.

அறத்தோடு கூடாமை: காரண காரியங்களுள் ஒன்றானும் இயையாமை. நல்குரவு: ஆகுபெயர். சிறப்பும்மை அவளது இயற்கை அன்புடைமை விளக்கி நின்றது. கொள்வது இன்றாதலேயன்றிக் கொடுப்பது உண்டாதலும் உடைமையின், அது நோக்கிச் சுற்றத்தார் யாவரும் துறப்பர் என்பதாம்.

### உரை வேறுபாடு

**பரிப்பெருமாள்:** அறம் சாரா நல்குரவாவது பொருளும் இன்பமும் சிந்தித்து நல்கூர்தல்.

ஒப்புமை

**முற்றும்:**

"இலாஅஅர்க் கில்லை தமர்"

"வாழாதார்க் கில்லை தமர்" (நாலடி. 283, 290.)

"பெண்டிர் மதியார் பெருங்கிளை தானது
கொண்ட விரகர் குறிப்பினின் அஃகுப
வெண்டறை நின்று வெறுக்கை இலராயின்
மண்டினர் போவர்தம் மக்களும் ஒட்டார்." (வளையாபதி.)

"சுற்றமும் துணையும் மனைவாழ்க் கையும்
அற்ற போதணை யாரவர்." (அப்பர், காட்டுப்பள்ளி, 5.) *(1047)*

### 1048

இன்றும் வருவது கொல்லோ நெருநலும்
கொன்றது போலும் நிரப்பு. 8

**பரிமேலழகர்:** நெருநலும் கொன்றதுபோலும் நிரப்பு - நெருநற்றும் கொன்றது போன்று எனக்கு இன்னாதவற்றைச் செய்த நல்குரவு, இன்றும் வருவதுகொல் - இன்றும் என்பால் வரக்கடவதோ? வந்தால் இனி யாது செய்வேன்!

அவ் வின்னாதனவாவன, மேற் சொல்லிய துன்பங்கள்.[1] நெருநல் மிக வருந்தித் தன் வயிறு நிறைத்தான் ஒருவன் கூற்று.

உரை வேறுபாடு

**மணக்குடவர்:** இது நாடோறும் அச்ச முறுத்தும் என்று கூறிற்று. *(1048)*

### 1049

நெருப்பினுள் துஞ்சலும் ஆகும் நிரப்பினுள்
யாதொன்றும் கண்பா டரிது. 9

**பரிமேலழகர்:** நெருப்பினுள் துஞ்சலும் ஆகும் - மந்திரம் மருந்துகளான் ஒருவனுக்கு நெருப்பிடையே கிடந்து உறங்கலும் ஆம்; நிரப்பினுள் யாது ஒன்றும் கண்பாடு அரிது - நிரப்பு வந்துழி யாதொன்றானும் உறக்கம் இல்லை.

நெருப்பினும் நிரப்புக் கொடிது என்றவாறாயிற்று. இதுவும் அவன் கூற்று.

இவை நான்கு பாட்டானும் நல்கூர்ந்தார்க்கு உளதாம் குற்றம் கூறப்பட்டது. *(1049)*

### 1050

துப்புர வில்லார் துவரத் துறவாமை
உப்பிற்கும் காடிக்கும் கூற்று. 10

**பரிமேலழகர்:** துப்புரவு இல்லார் துவர துறவாமை – நுகரப்படும் பொருள்கள் இல்லாதார் தம்மால் செயற்பாலது முற்றத் துறத்தலே ஆகவும் அது செய்யாது ஒழிதல், உப்பிற்கும் காடிக்கும் கூற்று - பிறர் இல்லின் உளவாய உப்பிற்கும் காடிக்கும் கூற்றாம்.

---

1. குறள், 1045, உரை.

மானம் அழியாமையின் செயற்பாலது அதுவே ஆயிற்று. முற்றத் துறத்தல், சுற்றந்தானே விட்டமையின் ஒருவாற்ருல் துறந்தாராயினுர் நின்ற தம் உடம்பினையும் துறத்தல். அது செய்யாது கொண்டிருத்தல் இரண்டினையும் மாளப்பண்ணுதலின், அதனை அவற்றிற்குக் கூற்று என்ருர்.

இனி, முற்றத் துறத்தலாவது துப்புரவு இல்லாமையின் ஒருவாற்ருல் துறந்தாராயினுர் பின் அவற்றை மனத்தால் துறவாமை என்று உரைப்பாரும் உளர்.

இதனுன் அஃது உளதாயவழிச் செய்வது கூறப்பட்டது.

**உரை வேறுபாடு**

**காளிங்கர்:** தாம் யாவர் மாட்டும் இனிது ஒழுகும் இனிமைக்கும் தமது நடுவு நிலைமைக்கும் ஒரு கூற்று.

இதில் உப்பு என்பது இனிமை. காடி என்பது நடுவுநிலைமை. அஃதாவது சிறு மக்கள் பலர் கண் புதைத்து நகையாடும் இடத்து அவருள் ஒருவனை இவன் காடிச்சால் என்று நடு இருத்துவர்; நடுநிலை ஆக வழக்கு என்பது அறிக. துப்புரவு இல்லாதார் என்பது, உண்டிக்கு உரம் ஆகிய கைப்பொருள் இல்லாதார் என்பது. துவரத் துறவாமை என்றது முற்றத் துறவாமை. *(1050)*

# 106. இரவு

**பரிமேலழகர்:** இனி மானம் தீரா இரவு இரவாமையோடு ஒத்தலின், அதனுனும் வீடு எய்தற் பயத்ததாய உடம்பு ஓம்பப்படும் என்னும் அறநூல் வழக்குப்பற்றி மேல் எய்திய துவரத் துறத்தல் விலக்குதற்பொருட்டு இரவு கூறுகின்ருர். அதிகார முறைமையும் இதனுனே விளங்கும்.

## 1051

இரக்க இரத்தக்கார்க் காணின் கரப்பின்
அவர்பழி தம்பழி அன்று. 1

**பரிமேலழகர்:** இரத்தக்கார் காணின் இரக்க - நல்கூர்ந்தார் இரத்தற்கு ஏற்புடையாரைக் காணின் அவர்மாட்டு இரக்க, கரப்பின் அவர் பழி தம் பழி அன்று - இரந்தால் அவர் கரந்தாராயின் அவர்க்குப் பழியாவது அல்லது தமக்குப் பழி ஆகாமையான்.

இர என்னும் முதல்நிலைத் தொழிற்பெயரது இறுதிக்கண் நான்கன் உருபு விகாரத்தால் தொக்கது. இரத்தற்கு ஏற்புடையர் ஆவார் உரையாமை முன் உணரும் ஒண்மை உடையராய் மாற்ருது ஈவார். அவர் உலகத்து அரியராகலின் காணின் என்றும், அவர்மாட்டு இரந்தார்க்கு இரவான் வரும் இழிவு இன்மையின் இரக்க என்றும், அவர் ஈதலின் குறைகாட்டாமையின் கரப்பின் என்றும், காட்டுவாராயின் அப் பழி தூவெள்ளறுவைக்கண் மாசு போல அவர்கண் கடிது சேறலின் அவர்பழி என்றும், ஏற்பிலார்மாட்டு இரவு அன்மையின் தம் பழி அன்று என்றும் கூறினுர்.

**ஒப்புமை**

**இரத்தக்கார்க் காணின் இரக்க:**

"தெற்றப் பரிந்தொருவர் தீர்ப்பர் எனப்பட்டார்க்
குற்ற குறையை உரைப்ப." (பழமொழி, 88.) (1051)

## 1052

இன்பம் ஒருவற் கிரத்தல் இரந்தவை
துன்பம் உறாஅ வரின். 2

**பரிமேலழகர்:** ஒருவற்கு இரத்தல் இன்பம்–ஒருவற்கு இரத்தல்தானும் இன்பத்திற்கு ஏதுவாம், இரந்தவை துன்பம் உறாஅ வரின் - இரந்த பொருள்கள் ஈவாரது உணர்வு உடைமையான் தான் துன்புறாமல் வருமாயின்.

இன்பம்: ஆகுபெயர். உறாமல் என்பது கடைக்குறைந்து நின்றது. துன்பம்: சாதியொருமைப் பெயர். அவையாவன, ஈவார்கண் காலமும் இடனும் அறிந்து சேறலும், அவர் குறிப்பு அறிதலும், அவரைத் தம் வயத்தர் ஆக்கலும், அவர் மனம் நெகிழ்வன நாடிச் சொல்லலும் முதலிய வற்றான் வருவனவும், மறுத்துழி வருவனவும் ஆம். அவை உறாமல் வருத லாவது அவர் முன்உணர்ந்து ஈயக்கோடல். 'இரந்தவர் துன்பம்உறாஅ வரின்' என்று பாடம் ஓதி, இரக்கப்பட்டவர் பொருள் இன்மை முதலியவற்றால் துன் புறாது எதிர்வந்து ஈவாராயின் என்று உரைப்பாரும் உளர்.

இவை இரண்டு பாட்டானும் நல்குரவான் உயிர் நீங்கும் எல்லைக் கண் இளிவு இலா இரவு விலக்கப்படாது என்பது கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**பரிதியார்:** தேகி என்பார்க்கு மகிழ்ச்சி எய்தும், தாதாவிடத்திலே தயவு உண்டாகில்.

**காளிங்கர்:** அங்ஙனம் ஒருவர்மாட்டு இரந்தவர்[1] பின்பு எஞ்ஞான்றும் ஒரு வறுமைத் துயர் உறுவாறு வாய்ப்பப் பெற்று வருவாராயின்.

### ஒப்புமை

**இரத்தல் இன்பம் ஆதல்:**

"வேளாண் வாயில் வேட்பக் கூறி" (பொருந. 75.)

'தான் உபகரித்தற்கு வழியாகிய இரப்பினையே யான் எப்பொழுதும் விரும்பும்படி உபசாரங்களைக் கூறி.' (ஷை ந.) (1052)

## 1053

கரப்பிலா நெஞ்சிற் கடன்அறிவார் முன்நின்
றிரப்பும்ஓர் ஏஎர் உடைத்து 3

**பரிமேலழகர்:** கரப்பு இலா நெஞ்சின் கடன் அறிவார்முன் நின்று இரப்பும் - கரத்தல் இல்லாத நெஞ்சினை உடைய மானம் அறிவார் முன்னர் நின்று அவர்மாட்டு ஒன்று இரத்தலும், ஓர் ஏஎர் உடைத்து - நல்கூர்ந்தார்க்கு ஓர் அழகு உடைத்து.

"சிறிய சுருக்கத்து வேண்டும் உயர்வு"[2] என்றதனான், அவர்க்கு அது கடன் எனப்பட்டது. அதனை அறிதல், சொல்லுதலுற்று உரைக்கலாகா மைக்கு ஏதுவாய அதன் இயல்பினை அறிதல். அவ் வறிவுடையார்க்கு முன் நிற்றல் மாத்திரமே அமைதலின் முன் நின்று என்றும், சொல்லுதலான் வரும் சிறுமை எய்தாமையின் ஓர் ஏஎருடைத்து என்றும் கூறினார். உம்மை, அதன் இழிபு விளக்கி நின்றது.

---

1. 'இரந்தவர்' என்பது இவர் பாடம்.
2. குறள், 963.

உரை வேறுபாடு

**பரிப்பெருமாள் :** ஏர் - யாமும் இவ்வாறு செய்ய வேண்டும் என்று கருதுதல்.

ஒப்புமை

**முற்றும்:**

"தொடுத்தும் கொள்ளாது அமையலென் அடுக்கிய
பண்ணமை நரம்பின் பச்சை நல்யாழ்
மண்ணமை முழவின் வயிரியர்
இன்மை தீர்க்கும் குடிப்பிறந் தோயே."

(புறநா. 164: 10-4.) (1053)

## 1054

**இரத்தலும் ஈதலே போலும் கரத்தல்
கனவிலும் தேற்றுதார் மாட்டு.** 4

**பரிமேலழகர் :** கரத்தல் கனவிலும் தேற்றுதார்மாட்டு இரத்தலும் - தமக்கு உள்ளது கரத்தலைக் கனவின்கண்ணும் அறியாதார்மாட்டுச் சென்று ஒன்றனை இரத்தலும், ஈதலே போலும் - வறியார்க்கு ஈதலே போலும்.

உம்மை, ஈண்டும் அவ்வாறு நின்றது. தான் புகழ் பயவாதாயினும் முன் உளதாய புகழ் கெட வாராமையின், ஈதலே போலும் என்றார். ஏகாரம், ஈற்றசை.

மேற்கோள் விளக்கம்

**தே**ற்றுதார் என்பது தன்வினைப் பொருள்பட நின்றது என்பர் **சிவஞான முனிவர்.** (சிவஞான. 9, அதி. 2.)

ஒப்புமை

**கரத்தல் கனவினும் தேற்றுதார்:**

" இரந்தோர்க் கெந்நாளும், காலம் பகராதார்"

"புயல்மறந்து மீன்சனிபுக் கூன்சலிக்கும் காலந் தானும்
கலங்கலிலா மனப்பெருவண் கையுடைய மெய்யர்."

(சம்பந்தர். சீகாழி, 9 கழுமலம், 3.) (1054)

## 1055

**கரப்பிலார் வையகத் துண்மையான் கண்ணின்
றிரப்பவர் மேற்கொள் வது.** 5

**பரிமேலழகர் :** கண்நின்று இரப்பவர் மேற்கொள்வது - சொல்லுதல் மாட்டாது முன் நிற்றல் மாத்திரத்தான் இரப்பார் உயிர் ஓம்பற்பொருட்டு அதனை மேற்கொண்டு போதுகின்றது, கரப்பு இலார் வையகத்து உண்மை யான் - அவர்க்கு உள்ளது கரவாது கொடுப்பார் சிலர் உலகத்து உளராய தன்மையானே; பிறிதொன்றுன் அன்று.

அவர் இல்லையாயின், மானம் நீக்கமாட்டாமையின் உயிர் நீப்பர் என்பதாம்.

உரை வேறுபாடு

**பரிதியார் :** தேகி என்றால் நாஸ்தி என்னாத பேர் பூமியில் இருக்கை யினாலே இரப்போர் பெரியவர். (1055)

## 1056

கரப்பிடும்பை இல்லாரைக் காணின் நிரப்பிடும்பை
எல்லாம் ஒருங்கு கெடும். 6

பரிமேலழகர்: கரப்பு இடும்பை இல்லாரை காணின் - உள்ளது கரத்தலாகிய நோய் இல்லாரைக் கண்டால், நிரப்பு இடும்பை எல்லாம் ஒருங்கு கெடும் - மானம் விடாது இரப்பார்க்கு நிரப்பான் வரும் துன்பங்கள் எல்லாம் சேரக் கெடும்.

கரத்தல் ஒருவற்கு வேண்டுவதொன்று அன்மையின் அதனை நோய் என்றும், அஃது இல்லாத இரக்கத்தக்காரைக் கண்டபொழுதே அவர் கழி உவகையர் ஆவர் ஆகலின் எல்லாம் ஒருங்கு கெடும் என்றும் கூறினர். இடும்பை: ஆகுபெயர். முழுதும் கெடும் என்று பாடம் ஓதி, எஞ்சாமல் கெடும் என்று உரைப்பாரும் உளர்.

### உரை வேறுபாடு

பரிப்பெருமாள்: கரப்பும் இடும்பையும் இல்லாதாரை. *(1056)*

## 1057

இகழ்ந்தெள்ளா தீவாரைக் காணின் மகிழ்ந்துள்ளம்
உள்ளுள் உவப்ப துடைத்து. 7

பரிமேலழகர்: இகழ்ந்து எள்ளாது ஈவாரை காணின் - தம்மை அவமதித்து இழிவு சொல்லாது பொருள் கொடுப்பாரைக் கண்டால், உள்ளம் மகிழ்ந்து உள்ளுள் உவப்பது உடைத்து - அவ் விரப்பாரது உள்ளம் மகிழ்ந்து உள்ளுள்ளே உவக்கும் தன்மை உடைத்து.

இகழ்ந்து எள்ளாது எனவே, நன்கு மதித்தலும் இனியவை கூறலும் பெறுதும். நிரப்பு இடும்பை கெடுதலளவேயன்றி ஐம்புலன்களானும் பேரின்பம் எய்தினராகக் கருதலான், உள்ளுள் உவப்பது உடைத்து என்றார்.

இவை ஐந்து பாட்டானும் அவ் விரத்தக்காரது இயல்பு கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

பரிதியார்: கேளாது கொடுப்பவரிடத்திலே தேகி என்பது பிடி கெட்டுச் சந்தோஷமாகும்.

### ஒப்புமை

இகழ்ந்து எள்ளாது ஈவார்:

"எளியர் இவர்என் றிகழ்ந்துரையா ராகி
ஒளிபட வாழ்தல் இனிது" (இனியவை. 30.)

"நம்மாலே ஆவர்இந் நல்கூர்ந்தார் எஞ்ஞான்றும்
தம்மாலாம் ஆக்கம் இலரென்று—தம்மை
மருண்ட மனத்தார்." (நாலடி. 301.) (1057)

## 1058

இரப்பாரை இல்லாயின் ஈர்ங்கண்மா ஞாலம்
மரப்பாவை சென்றுவந் தற்று. 8

பரிமேலழகர்: இரப்பார் இல்லாயின் - வறுமையுற்று இரப்பார் இல்லையாயின், ஈர்ங்கண் மா ஞாலம் - குளிர்ந்த இடத்தையுடைய பெரிய ஞாலத்துள்ளார் செலவு வரவுகள், மரப்பாவை சென்று வந்தற்று - உயிர் இல்லாத மரப்பாவை இயந்திரக் கயிற்றால் சென்று வந்தாற்போலும்.

ஐகாரம், அசைநிலை. ஞாலம் என்னும் ஆகுபெயர்ப்பொருட்கு உவமையோடு ஒத்த தொழில் வருவிக்கப்பட்டது. ஞாலத்துள்ளார் என்றது அவரை ஒழிந்தாரை. அவர்க்கு ஈதலைச் செய்து புகழும் புண்ணியமும் எய்தாமையின், உயிருடையர் அல்லர் என்பதாம். "ஈவாரும் கொள்வாரும் இல்லாத வானத்து, வாழ்வாரே வன்க ணவர்" என்றார் பிறரும்.[1] இத் தொடையின்பம் நோக்காது இரப்பவர் இல்லாயின் என்று பாடம் ஓதுவாரும் உளர்.

### உரை வேறுபாடு

**பரிதியார்:** தேகி என்பார் இல்லாத நாட்டில், தாதாக்கள் மரப் பாவை விளையாடுதற்கு ஒக்கும்.

**காளிங்கர்:** ஈன்கண் மாஞாலம்[2] என்பது இடம் மிகவும் பெரிய உலகம் என்பது.

### ஒப்புமை

*முற்றும்:*

"பொலம்பூங் காவின் நன்னாட் டோரும்
செய்வினை மருங்கின் எய்தல் அல்லதை
உடையோர் ஈதலும் இல்லோர் இரத்தலும்
கடவ தன்மையிற் கையற வுடைத்து."

(புறநா. 38: 12-5.) (1058)

## 1059

**ஈவார்கண் என்உ ண்டாம் தோற்றம் இரந்துகோள்**
**மேவார் இலாஅக் கடை.** 9

**பரிமேலழகர்:** இரந்துகோள் மேவார் இலாஅ கடை - அவர்பாற் சென்று ஒன்றனை இரந்துகோடலை விரும்புவார் இல்வழி, ஈவார்கண் தோற்றம் என் உண்டாம் - கொடுப்பார்மாட்டு என்ன புகழ் உண்டாம்? யாதும் இல்லை.

தோற்றம்: ஆகுபெயர். மேவுவார் என்பது விகாரம் ஆயிற்று.[3] கொடுத்தல் வன்மை வெளிப்படாமையின், அதனால் புகழ் எய்தார்[4] என்பதாம்.

இவை இரண்டு பாட்டானும் உலகிற்கு இரப்பார் வேண்டும் என்பது கூறப்பட்டது.

### ஒப்புமை

*முற்றும்:*

"பரப்புநீர் வையத்துப் பல்லுயிர்கட் கெல்லாம்
இரப்பாரில் வள்ளல்களும் இல்லை—இரப்பவர்
இம்மைப் புகழும் இனிச்செல் கதிப்பயனும்
தம்மைத் தலைப்படுத்த லால்." (அறநெறி. 219.) (1059)

---

1. 'ஈவாரும் ஏற்பாருமின்றி எல்லாரும் ஒரு தன்மையராதலின், புத்தே ளுலகத்து அரியதாயிற்று' என்றார் முன்னும். (குறள், 213, உரை.)

2. 'ஈன்கண்மா ஞாலம்' என்பது இவர் பாடம்.

3. தொடை நயம் நோக்கி மேவார் எனச் செய்யுள் விகாரமாக நின்றது.

4. குறள், 231, 232.

### 1060

இரப்பான் வெகுளாமை வேண்டும் நிரப்பிடும்பை
தானேயும் சாலும் கரி. 10

**பரிமேலழகர் :** இரப்பான் வெகுளாமை வேண்டும் - ஈவானுக்குப் பொருள் உதவாவழி இவன் எனக்கு ஈகின்றிலன் என்று அவனை இரப்பான் வெகுளா தொழிதல் வேண்டும்; நிரப்பு இடும்பை தானேயும் கரி சாலும் - அது வேண்டியபொழுது உதவாது என்பதற்கு வேறு சான்று வேண்டா; நிரப்பாகிய தன் இடும்பை தானேயும் சான்றுதல் அமையும்.

யாவர்க்கும் தேட வேண்டுதலும் நிலையின்மையும் முதலிய பிற சான்றும் உண்டு என்பது பட நின்றமையின், உம்மை எச்ச உம்மை. தனக்கே அன்றி மற்றை இரந்தார்க்கும் அற்றைக்கு அன்று பொருள் கடைக் கூட்டற்கு அவன் உறும் துன்பத்தைத் தனக்கே ஆக வைத்துத் தான் உறும் துன்பம் தான் அறிந்து வெகுளற்க என்பதாம்.

இதனான் அவர்க்கு இன்றியமையாததோர் இயல்பு கூறப்பட்டது.

#### உரை வேறுபாடு

**காளிங்கர்:** இரப்பு என்னும் இளிவுநோய் கொண்டவன் யாவன்? அவன் பின்னும் ஒருவரோடு வெகுளாமை வேண்டும்; என்னை காரணம் எனின், முன்னும் பிறர்மாட்டு இரந்து வெகுளி கொலை முதலிய கொடுவினை செய்து தனக்கு இக்குற்றம் புகுந்ததனால் தான் இக்காலத்து அநுபவிக் கின்ற இரப்பு என்னும் பேரிடும்பை தானேயும் அமையும் இதற்குச் சான்று.

#### ஒப்புமை

1. **இரப்பான் வெகுளாமை:**
"பிச்சைபுக் குண்பான் பிளிறாமை முன்னினிதே." (**இனியவை.** 40.)
2. **சாலும் கரி:** குறள், 25. *(1060)*

---

# 107. இரவு அச்சம்

**பரிமேலழகர் :** அஃதாவது மானம் தீர வரும் இரவிற்கு அஞ்சுதல். அதிகார முறைமையும் இதனானே விளங்கும்.

**மணக்குடவர்:** இரவு அச்சமாவது இரத்தலைத் தவிர வேண்டும் என்று கூறுதல். மேல் நல்கூர்ந்தார் ஈவார்மாட்டே இரத்தல் அமையும் என்று பொதுப்படக் கூறினாராயினும், மேலாயினார்க்கு அது தகுதி அன்று என்பது குறித்து இவ்வதிகாரம் கூறப்பட்டது.

### 1061

கரவா துவந்தீயும் கண்அன்னார் கண்ணும்
இரவாமை கோடி உறும். 1

**பரிமேலழகர் :** கரவாது உவந்து ஈயும் கண் அன்னார்கண்ணும் இரவாமை – தமக்கு உள்ளது கரவாது இவர் வரப்பெற்றேம் என்று உள் மகிழ்ந்து கொடுக்கும் கண்போலச் சிறந்தார்மாட்டும்[1] இரவாதே ஒருவன் வறுமை கூர்தல், கோடி உறும் - இரந்து செல்வம் எய்தலின் கோடி மடங்கு நன்று.

---

1. கண்போலச் சிறந்தார் என்றது நண்பரை.

நல்குரவு மறைக்கப்படாத நட்டார்மாட்டும் ஆகாது என்பது பட நின்றமையின், உம்மை உயர்வு சிறப்பின்கண் வந்தது. அவ்விரவான் மானம் தீராது என்னும் துணையல்லது அதற்கு மிகுதி கூடாமையின், வல்லதோர் முயற்சியான் உயிர் ஓம்பலே நல்லது என்பது கருத்து.

**உரை வேறுபாடு**

**பரிதியார்:** ஈனக்குணம் பண்ணுமல் கொடுக்கிற தாதாஅல்லாதாரிடத்திலே கேளாதிருப்பது கோடி தனம் பெறும்.

**ஒப்புமை**

1. **உவந்தீதல்:** குறள், 228.

"ஈந்துவக்கும் தன்மையார்." (சம்பந்தர். ஆக்கூர். 9.)

2. **கண்ணன்னுர்:**

"கண்போல் நண்பின் கேளிர்" (புறநா. 71:15.)
"கண்ணே தோழர்"
"கண்புரை தோழன்"
"கண்போற் காதலர்." (பெருங். 2.10:101, 17:161, 4.3:61.)

3. **முற்றும்:**

"மறுமையும் இம்மையும் நோக்கி ஒருவர்க்கு
உறுமா றியைவ கொடுத்தல்—வறுமையால்
ஈதல் இசையா தெனினும் இரவாமை
ஈதல் இரட்டி யுறும்."

"கரவாத திண்ணன்பிற் கண்ணன்னுர் கண்ணும்
இரவாது வாழ்வதாம் வாழ்க்கை—இரவினை
உள்ளுங்கால் உள்ளம் உருகுமால் என்கொலோ
கொள்ளுங்கால் கொள்வார் குறிப்பு." (நாலடி. 95, 304.) (1061)

## 1062

**இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து**
**கெடுக உலகியற்றி யான்.** 2

**பரிமேலழகர்:** உலகு இயற்றியான் இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் - இவ் வுலகத்தைப் படைத்தவன் இதன்கண் வாழ்வார்க்கு முயன்று உயிர்வாழ்தலை அன்றி இரந்தும் உயிர்வாழ்தலை வேண்டி விதித்தானுயின், பரந்து கெடுக - அக் கொடியோன் தானும் அவரைப் போன்று எங்கும் அலமந்து கெடுவானுக.

மக்கள் உயிர்க்கெல்லாம் வாழ்நாளும், அதற்கு வேண்டுவதாய உண்டியும், அதற்கு ஏதுவாய செய்தொழிலும், பழவினைவயத்தான் கருவொடு கலந்த அன்றே அவன் கற்பிக்கும் அன்றே? அவற்றுள் சில உயிர்க்கு இரத்தலையும் ஒரு செய்தொழிலாகக் கற்பித்தானுயின் அத் தீவினையால் தானும் அத் துன்பம் உறல் வேண்டும் என்பதாம்.

இவை இரண்டு பாட்டானும் அவ் விரவின் கொடுமை கூறப்பட்டது.

**ஒப்புமை**

**உலகு இயற்றியவனைக் குறைகூறுதல்:**

"ஐதே கம்மஇவ் வுலகுபடைத் தோனே" (நற். 240:1.)
"படைத்தோன் மன்றஅப் பண்பி லாளன்."
(புறநா. 194:5.) (1062)

## 1063

**இன்மை இடும்பை இரந்துதீர் வாம்என்னும்**
**வன்மையின் வன்பாட்ட தில். 3**

**பரிமேலழகர் :** இன்மை இடும்பை இரந்து தீர்வாம் என்னும் வன்மையின் - வறுமையான் வரும் துன்பத்தை முயன்று நீக்கக் கடவேம் என்று கருதாது இரந்து நீக்கக் கடவேம் என்று கருதும் வன்மைபோல, வன்பாட்டது இல் - வலிமைப்பாடு உடையது பிறிது இல்லை.

நெறியாய முயற்சி நிற்க நெறி அல்லாத இரவால் தீர்க்கக் கருதுதலின், வன்மை ஆயிற்று. வன்பாடு - முருட்டுத் தன்மை; அஃதாவது ஓராது செய்து நிற்றல்.

இதனான் வறுமை தீர்தற்கு நெறி இரவு அன்று என்பது கூறப்பட்டது.

**உரை வேறுபாடு**

**பரிதியார்:** மலையை எடுத்து மயிரிற் கட்டலும் கடுகில் எழுகடலை அடக்கலும் ஆகிய அவை அருமை அல்ல; தன் மிடியை இரந்து தீர்ப்பேன் என்பது அருமை.

**ஒப்புமை**

**வன்மையின் வன்பாட்டதில்:**

"............இலம்என்னும்
வன்மையின் வன்பாட்ட தில்." (நான்மணி. 30.) (1063)

## 1064

**இடம்எல்லாம் கொள்ளாத் தகைத்தே இடம்இல்லாக்**
**காலும் இரவொல்லாச் சால்பு. 4**

**பரிமேலழகர் :** இடம் இல்லாக்காலும் இரவு ஒல்லா சால்பு - நுகர வேண்டுவன இன்றி நல்கூர்ந்தவழியும் பிறர்பாற் சென்று இரத்தலை உடம்படாத அமைதி, இடம் எல்லாம் கொள்ளா தகைத்து - எல்லா உலகும் ஒருங்கு இயைந்தாலும் கொள்ளாத பெருமை உடைத்து.

அவ் விரத்தலைச் சால்பு விலக்குமாகலின், இரவு ஒல்லாமை அதன் மேல் ஏற்றப்பட்டது. இதனான் அந் நெறியல்லதனைச் சால்புடையார் செய்யார் என்பது கூறப்பட்டது.

**உரை வேறுபாடு**

**மணக்குடவர்:** இடம் இல்லாக்காலும் - தம் சுற்றத்தளவு உணவுக்கு வருவாய் இல்லாக் காலத்திலும். (1064)

## 1065

**தெண்ணீர் அடுபுற்கை ஆயினும் தாள்தந்த**
**துண்ணலின் ஊங்கினிய தில். 5**

**பரிமேலழகர் :** தாள் தந்தது தெள் நீர் அடு புற்கைஆயினும் - நெறியாய முயற்சி கொடுவந்தது தெளிந்த நீர்போலும் அடு புற்கையே ஆயினும், உண்ணலின் ஊங்கு இனியது இல் - அதனை உண்டற்கு மேல் இனியது இல்லை.

தாள் தந்த கூழ் செறிவு இன்றித் தெண்ணீர் போன்றது ஆயினும் இழிவாய இரவான் வந்ததன்றித் தம் உடைமை ஆகலின், அமிழ்தத்தோடு ஒக்கும் என்பதாம்.

இதனான் நெறியினன் ஆயது சிறிதேனும், அது செய்யும் இன்பம் பெரிது என்பது கூறப்பட்டது.

உரை வேறுபாடு

**மணக்குடவர்:** தெண்ணீர் அடுபுற்கை ஆயினும் - மோரிலும் காடியிலும் அடப்பெறாது தெளிந்த நீரினாலே அடப்பட்ட புற்கையாயினும்.

**பரிப்பெருமாள்:** இரந்துகொண்டு அக்காரம் பாலோடு அயிறலின் புற்கை அயிறல் இனிது என்பது.

**கவிராஜ பண்டிதர்:** புற்கை – புல்லரிசிக் கூழ்.

ஒப்புமை

**முற்றும்:**

"பெருமுத் தரையர் பெரிதுவந் தீயும்
கருனைச்சோ றார்வர் கயவர்—கருனையைப்
பேரும் அறியார் நனிவிரும்பு தாளாண்மை
நீரும் அமிழ்தாய் விடும்." (நாலடி. 200.) (1065)

## 1066

**ஆவிற்கு நீர்என் றிரப்பினும் நாவிற்**
**கிரவின் இளிவந்த தில்.** 6

**பரிமேலழகர்:** ஆவிற்கு நீர் என்று இரப்பினும் - தண்ணீர் பெறாது இறக்கும் நிலைமைத்தாயதோர் ஆவினைக் கண்டு அறம் நோக்கி இதற்குத் தண்ணீர் தரல்வேண்டும் என்று இரந்து சொல்லுங்காலும், இரவின் நாவிற்கு இளிவந்தது இல் - அவ்விரவுபோல ஒருவன் நாவிற்கு இளிவந்தது பிறிது இல்லை.

ஆ காத்தோம்பல் பேரறம் ஆகலின் ஆவிற்கு என்றும், பொருள் கொடுத்துக் கொள்ளவேண்டாத எண்மைத்தாகலின் நீர் என்றும், இரக்கின்றானுக்கு இளிவு அச் சொல் அளவே ஆகலின் நாவிற்கு என்றும், அதுதான் எல்லா இளிவினும் மேற்படுதலின் இளிவந்தது இல் என்றும் கூறினார்.

இதனான் அறனும் முயன்று செய்வதல்லது இரந்து செய்யற்க என்பது கூறப்பட்டது.

உரை வேறுபாடு

**மணக்குடவர்:** இஃது அறத்திற்காக இரத்தலும் ஆகாது என்றது.

ஒப்புமை

**முற்றும்:**

"இரத்தலின் ஊங்கு இளிவரல் இல்லை" (முதுமொழிக். 6:9.)

"ஏற்ப திகழ்ச்சி." (ஆத்திசூடி)

"ஒன்றும் வேண்டல ராயினும் ஒருவர்பால் ஒருவர்
சென்று வேண்டுவ ரேலவர் சிறுமையின் தீரார்."
(கம்ப. வருணனை வழிவேண்டு. 9.) (1066)

## 1067

**இரப்பன் இரப்பாரை எல்லாம் இரப்பின்**
**கரப்பார் இரவன்மின் என்று.** 7

பரிமேலழகர்: இரப்பாரை எல்லாம் இரப்பன் – இரப்பாரை எல்லாம் யான் இரவாநின்றேன், இரப்பின் கரப்பார் இரவன்மின் என்று - யாது சொல்லியெனின், நுமக்கு இரக்க வேண்டுமாயின் தமக்கு உள்ளது கரப்பாரை இரவாதொழிமின் என்று சொல்லி.

இரண்டாவது விகாரத்தால் தொக்கது. இவ் விளிவந்த செயலான் ஊட்டியவழியும் உடம்பு நில்லாதாகலின் இது வேண்டா என்பது தோன்ற இரப்பன் என்றார்.

இதனான் மானம் தீர வரும் இரவு விலக்கப்பட்டது.

**ஒப்புமை**

**இரப்பின் கரப்பாரை இரவன்மின்:**

"கரவலாளர் தம்மனைக் கடைகள் தோறும் கால்நிமிர்த்
திரவலாழி நெஞ்சமே."

(சம்பந்தர், கோவலூர் வீரட்டம், 2.) *(1067)*

## 1068

இரவென்னும் ஏமாப்பில் தோணி கரவென்னும்
பார்தாக்கப் பக்கு விடும். 8

பரிமேலழகர்: இரவு என்னும் ஏமாப்பு இல் தோணி - இவ் வறுமை என்னும் கடலை இதனால் கடத்தும் என்று கருதி ஒருவன் ஏறிய இரவு என்னும் சேமம் அற்ற தோணி, கரவு என்னும் பார் தாக்க பக்கு விடும் - அதன்கண் ஓடுங்கால் கரத்தல் என்னும் வன்னிலத்தோடு தாக்குமாயின் பிளந்து போம்.

முயற்சியால் கடப்பதனை இரவால் கடக்கலுற்றான் அதன் கரை காணாமையின், ஏமாப்பில் தோணி என்றார். ஏமாப்பு இன்மை தோணிமேல் ஏற்றப்பட்டது. அது கடத்தற்கு ஏற்றது அன்மையானும், நிலம் அறியாது செலுத்தியவழி உடைதலானும் அதன்கண் ஏறற்க என்பதாம்.

இஃது அவயவ உருவகம். *(1068)*

## 1069

இரவுள்ள உள்ளம் உருகும் கரவுள்ள
உள்ளதூஉம் இன்றிக் கெடும். 9

பரிமேலழகர்: இரவு உள்ள உள்ளம் உருகும் - உடையார்முன் இல்லார் சென்று இரந்து நிற்றலின் கொடுமையை நினைந்தால் எம் உள்ளம் கரைந்து உருகாநிற்கும்; கரவு உள்ள உள்ளதூஉம் இன்றி கெடும் - இனி அந் நிலையைக் கண்டுவைத்தவர் இல்லை என்றலின் கொடுமையை நினைந்தால் அவ் வுருகும் அளவுதானும் இன்றிப் பொன்றிவிடும்.

"இரவினை, உள்ளுங்கால் உள்ளம் உருகுமால் என்கொலோ, கொள்ளுங்கால் கொள்வார் குறிப்பு"[1] என்றார் பிறரும். இரவினும் கரவு கொடிது என்பதாம். இதற்குப் பிறர் எல்லாம் இரக்கின்றவர் உள்ளம் உருகும் என்று உரைத்தார்.

**உரை வேறுபாடு**

பரிதியார்: தேகி என்பார்க்கு உள்ளம் உருகிப்போம்; இல்லை என்று கரப்பவர்க்கு நெஞ்சு எப்படி உருகுமோ அப்படி.

1. நாலடி 304.

**காளிங்கர்:** அறிவு உடையோர்க்கு இரவு என்பது தம் குடிமைக்கு ஒரு வடு என்று இங்ஙனம் கருதுப அன்றே? அதனால் அவ்வின்னா இரவினை உள்ளவே தமது உள்ளம் சால்பு உடையும், இனி நாம் ஒருவர்பால் இரந்து சென்றால், அவர் இல்லை போ என்றதனையும் தாம் உள்ளவே பின்னைப் பண்டு உள்ள தூஉம் இன்றிக் கெடும். *(1069)*

## 1070

கரப்பவர்க் கியாங்கொளிக்குங் கொல்லோ இரப்பவர்
சொல்லாடப் போஒம் உயிர். 10

**பரிமேலழகர்:** சொல்லாட இரப்பவர் உயிர் போம் - கரப்பார் இல்லை என்று சொல்லாடிய துணையானே இரப்பார்க்கு உயிர் போகாநின்றது; கரப்பவர்க்கு யாங்கு ஒளிக்குங்கொல் - இனிச் சொல்லாடுகின்ற அவர் தமக்கு உயிர் பின்னும் நிற்றலான் அப்பொழுது எப் புரையுள் புக்கு ஒளித்து நிற்கும்?

உயிர் போதலாவது, இனி யாம் என்செய்தும் என்று இரங்கிச் செயலற்று நிற்றல். "அங்கிலையே, மாயானோ மாற்றி விடின்"[1] என்றார் பிறரும். கேட்டாரைக் கொல்லவற்றாய சொல் சொல்வாரைக் கோறல் சொல்ல வேண்டாவாயினும், அது காண்கின்றிலம், இஃது என்னோ என்பதாம். 'வறுமை உற்றுழி மறையாது இரக்கப் படுவாராய கேளிர்கட்கும் அதனைச் சொல்லாட உயிர்போம்; ஆனபின் மறைக்கப்படுவாராய பிறர்க்குச் சொல்லாடியக்கால் போகாது எங்கே ஒளித்து நிற்கும். இரண்டானும் போமே அன்றோ?' என இரவு அஞ்சினான் ஒருவன் கூற்றாக்கி உரைப்பாரும் உளர்.

இவை மூன்று பாட்டானும் அவ்விரவின் குற்றமும் கரவின் குற்றமும் ஒருங்கு கூறப்பட்டன.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** இது பிணத்தை ஒப்பர் என்றது.

**பரிதியார்:** நாஸ்தி என்பார்க்கு எப்படியோ தெரியாது; இரப்பவர்க்குத் தேகி என்று கேட்க உயிர் விடும்.

**கவிராஜ பண்டிதர்:** கரப்பவர்க்கு யாங்கு ஒளிக்குங் கொல்லோ- இரப்பவன் தா என்று கேட்டபொழுது ஒளிக்கிறவன் பிராணனும் போகாநிற்கும்; பிராணன் போனால் பின்னை இல்லையென்று எப்படிச் சொல்வான் என்றால், ஏழு புரையிலே ஒரு புரைக்குள்ளே ஒளித்திருக்கும்.

ஒளித்திருக்கிறதாவது, இரக்கிறவன் கேட்டதற்கு என்ன சொல்லுவோம் என்று ஏங்கியிருத்தலாம்.

### ஒப்புமை

**இரப்பவர் சொல்லாட உயிர் போதல்:**

"புறத்துத்தன் இன்மை நலிய அகத்துத்தன்
பின்ஞானம் நீக்கி நிறீஇ ஒருவனை
ஈயாய் எனக்கென் றிரப்பானேல் அங்கிலையே
மாயானோ மாற்றி விடின்." (நாலடி. 307.) *(1070)*

---

1. நாலடி. 307.

# 108. கயமை

பரிமேலழகர் : அஃதாவது மேல் அரசியலுள்ளும் அங்க இயலுள்ளும் சிறப்பு வகையால் கூறப்பட்ட குணங்களுள் ஏற்புடையன குறிப்பினால் யாவர்க்கும் எய்த வைத்தமையின், ஆண்டுக் குறிப்பால் கூறியனவும் ஈண்டு ஒழிபியலுள் வெளிப்படக் கூறியனவும் ஆய குணங்கள் யாவும் இலராய கீழோரது தன்மை. அதனான் இஃது எல்லாவற்றிற்கும் பின் வைக்கப் பட்டது.

மணக்குடவர் : கயமையாவது இழிகுணத்தாராகிய மாந்தர் இயல்பு கூறுதல்.

### 1071

மக்களே போல்வர் கயவர் அவர்அன்ன
ஒப்பாரி யாம்கண்ட தில். 1

பரிமேலழகர்: மக்களே போல்வர் கயவர் = வடிவான் முழுதும் மக்களை ஒப்பர் கயவர்; அவர் அன்ன ஒப்பாரி யாம் கண்டது இல் – அவர் மக்களை ஒத்தால் போன்ற ஒப்பு வேறு இரண்டு சாதிக்கண் யாம் கண்டதில்லை.

முழுதும் ஒத்தல் தேற்றேகாரத்தால் பெற்றும். அவர் என்றது அவர் மாட்டு உளதாய ஒப்புமையை. மக்கட்சாதிக்கும் கயச்சாதிக்கும் வடிவு ஒத்தலின் குணங்களது உண்மை இன்மைகளான் அல்லது வேற்றுமை அறியப்படாது என்பதாம்.

இதனான் கயவரது குற்றமிகுதி கூறப்பட்டது. (1071)

### 1072

நன்றறி வாரிற் கயவர் திருஉடையர்
நெஞ்சத் தவலம் இலர். 2

பரிமேலழகர்: நன்று அறிவாரின் கயவர் திரு உடையர் – தமக்கு உறுதியாவன அறிவாரின் அவை அறியாத கீழ்மக்கள் நன்மை உடையர், நெஞ்சத்து அவலம் இலர் - அவர்போல அவை காரணமாகத் தம் நெஞ்சத்தின்கண் கவலை இலர் ஆகலான்.

நன்று என்பது சாதியொருமை. உறுதிகளாவன, இம்மை மறுமை வீடுகட்கு உரியவாய புகழ் அற ஞானங்கள். இவற்றை அறிவார் இவை செய்யாநின்றே மிகச் செயப்பெறுகின்றிலேம் என்றும், செய்கின்ற இவை தமக்கு இடையூறு வருங்கொல் என்றும், இவற்றின் மறுதலையாய பழிபாவம் அறியாமை என்பனவற்றுள் யாது விளையுமோ என்றும் இவ் வாற்றால் கவலை எய்துவர்; கயவர் அப் புகழ்முதலிய ஒழித்துப் பழிமுதலிய செய்யா நின்றும் யாதும் கவலை உடையரல்லராகலான் திருவுடையர் எனக் குறிப்பால் இகழ்ந்தவாறு.

இதனான் பழி முதலியவற்றிற்கு அஞ்சார் என்பது கூறப்பட்டது.

#### உரை வேறுபாடு

காளிங்கர் : நன்னெறி ஆகிய கல்வியும், அறிவும், ஆசாரமும், குலமும், தருமமும், தவமும், பிறவும் குறைபடாமல் கொண்டு மேற்பட வேண்டும் என்றும், குறைபடும் ஆயின் குடிமைக்கு அது வடு என்றும் இங்ஙனம் நெஞ்சம் அஞ்சி அவலிக்கும் அவலம் எஞ்ஞான்றும் இலர். (1072)

## 1073

தேவர் அனையர் கயவர் அவரும்தாம்
மேவன செய்தொழுக லான். 3

**பரிமேலழகர்:** தேவர் அனையர் கயவர் - தேவரும் கயவரும் ஒரு தன்மையர், அவரும் தாம் மேவன செய்து ஒழுகலான் – அஃது யாதினென் எனின், தேவரைப்போன்று தம்மை நியமிப்பார் இன்றிக் கயவரும் தாம் விரும்புவனவற்றைச் செய்து ஒழுகலான்.

உயர்ச்சியும் இழிவுமாகிய தம் காரண வேறுபாடு குறிப்பால் தோன்ற நின்றமையின், இது புகழ்வார் போன்று பழித்தவாறாயிற்று.

இதனான் விலக்கற்பாடின்றி வேண்டிய செய்வர் என்பது கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**பரிதியார்:** தேவர்க்கு நிகர் கயவர்; அது எப்படி என்னில், தெய்வமும் பத்தி பண்ணுவார்க்கு நன்மை தரும், அல்லாதார்க்குத் தீமை தரும். அதுபோல, கயவரும் தமக்கு இதம் செய்வார்களுக்கு இதமும் அகிதம் செய்வார்களுக்கு அகிதமும் செய்வர். *(1073)*

## 1074

அகப்பட்டி ஆவாரைக் காணின் அவரின்
மிகப்பட்டுச் செம்மாக்கும் கீழ். 4

**பரிமேலழகர்:** கீழ் - கீழாயினான், அகப்பட்டி ஆவாரை காணின்- தன்னிற் சுருங்கிய பட்டியாய் ஒழுகுவாரைக் கண்டானாயின், அவரின் மிக பட்டு செம்மாக்கும் - அவ் வொழுக்கத்தின்கண் அவரின் தான் மேம்பட்டு அதனான் தன் மிகுதி காட்டி இறுமாக்கும்.

அகப்பட்டி - அகமாகிய பட்டி. பட்டிபோன்று வேண்டியவாறே ஒழுகலின், பட்டி என்றார். "நோதக்க செய்யும் சிறுபட்டி"[1] என்றார் பிறரும்.

இதனான் அவர் மேம்படுமாறு கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** மனையகத்திருந்து பொற்பு இலராகிய பெண்டிரைக் காணின், அவரினும் மிகப் பொற்பு இலராயவரைப் பெற்றேம் என்று இறுமாப்பர் கயவர்.

இது நிறையிலர் என்றது.

**பரிதியார்:** துர்ச்சனமான பேரைக் கண்டால் அவர்களுடனே கூடிக்கொண்டு நல்லோரைக் கெடுப்பார்கள்.

**காளிங்கர்:** மனையினின்றும் புறப்பட்டால் பட்டி புக்குப் பயிர் அழிக்கும் பட்டி மாட்டினை ஒத்தார் சிலரைத் தான் காணின், 'இதற்கு இவரினும் பெரியேன் ஆக வேண்டும் யான்' என்று மற்று அவரது பட்டிமையினும் மிகப்பட்டு இறுமாக்கும் கீழ் ஆனது; எனவே தானும் நெறி கெட ஒழுகும்; பிற நெறிகேடரைக் காணினும் நமக்குத் துணையும் உண்டு என்று பெரிதும் இறுமாக்கும் கீழ் என்பது பொருள். அகப்பட்டி என்பது மனையுள் வாழும் பட்டிமாடு என்றது. *(1074)*

---

1. கலி. 51: 4; இங்கே சிறுபட்டி என்பதற்கு, 'சிறியனாகிய காவல் இல்லாதவன்' என்று உரை எழுதினர் நச்சினார்க்கினியர்.

## 1075

அச்சமே கீழ்கள தாசாரம் எச்சம்
அவாவுண்டேல் உண்டாம் சிறிது. 5

**பரிமேலழகர் :** கீழ்களது ஆசாரம் அச்சமே - கயவரதாய ஆசாரம்[1] கண்டது உண்டாயின் அதற்குக் காரணம் அரசனன் ஏதம் வரும் என்று அஞ்சும் அச்சமே; எச்சம் அவா உண்டேல் சிறிது உண்டாம் - அஃது ஒழிந்தால் தம்மால் அவாவப்படும் பொருள் அதனல் உண்டாமாயின் சிறிது உண்டாம்.

ஆசாரத்தின் காரணத்தை ஆசாரம் என்றும், அவாவப்படுவதனை அவா என்றும் கூறினர். எச்சத்தின்கண் என்னும் ஏழாவது இறுதிக்கண் தொக்கது. பெரும்பான்மை அச்சம், சிறுபான்மை பொருட்பேறு இவ் விரண்டானும் அன்றி இயல்பாக உண்டாகாது என்பதாம்.

வேண்டிய செய்தலே இயல்பு, ஆசாரம் செய்தல் இயல்பன்று என்பது இதனற் கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**காளிங்கர் :** பிறர் தம்மைச் செறுத்தும் சிறைசெய்தும் நெருக்கின் என்னை என்று இங்ஙனம் அஞ்சும் அச்சமே அதற்குக் காரணம்.

**கவிராஜ பண்டிதர் :** துர்ச்சனருடைய ஆசாரம் கண்டால், பயம் வரும்; அது ஏனென்ருல் அவர்கள் மனதிலே கபடம் எண்ணிக்கொண்டு ஆசாரம் பண்ணுவார்கள்; அது தெளிய அறிந்து, கபடம் இல்லாவிட்டால், சில நாள் ஆசாரமாய் நடந்து பிறகு கெட்டுப் போவார்கள்.

துர்ச்சனருடைய ஆசாரத்தை மெய்யென்று நம்ப வேண்டாம்.
*(1075)*

## 1076

அறைபறை அன்னர் கயவர் தாம்கேட்ட
மறைபிறர்க் குய்த்துரைக்க லான். 6

**பரிமேலழகர் :** தாம் கேட்ட மறை உய்த்து பிறர்க்கு உரைக்கலான் - தாம் கேட்ட மறைகளை இடந்தோறும் தாங்கிக்கொண்டு சென்று பிறர்க்குச் சொல்லுதலான், கயவர் அறை பறை அன்னர் - கயவர் அறையப்படும் பறையினை ஒப்பர்.

மறை - வெளிப்படின் குற்றம் விளையும் என்று பிறரை மறைத்து ஒருவன் சொல்லிய சொல். பிறர் - அம் மறைத்தற்குரியார். உய்த்து என்ருர், அவர்க்கு அது பெரும்பாரமாதல் நோக்கி. பறை ஒருவன் கையால் தன்னை அறிவித்ததொன்றனை இடந்தோறும் கொண்டு சென்று யாவரையும் அறிவிக்குமாகலான், இது தொழில் உவமம்.

இதனன் அவரது செறிவின்மை கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**காளிங்கர் :** ஒருவன் தான் வாய்க்கொண்டு ஒக்கடித்து உணர்ந்த தாளப் பகுதியைப் பிறர்க்கு அவ்வாறு உரைவழி புலப்படாமைக் குறிக்கொண்டு தன் கைகொண்டு அதன்கண் உற வைத்த இடத்து, மற்று அஃது அதனை யாவர்க்கும் புலப்படச் சாற்றும் பறைக் கருவியை ஒப்பர்.

1. ஆசாரம் - ஒழுக்கம்.

### ஒப்புமை

**கயவர் மறை காவாமை:**

"பெருமலை நாட பிறரறிய லாகா
அருமறையை ஆன்றோரே காப்பர்-அருமறையை
நெஞ்சில் சிறியார்க் குரைத்தல் பனையின்மேல்
பஞ்சிவைத் தெஃகிவிட் டற்று."

"..............................சான்றோர்
கயவர்க் குரையார் மறை." (பழமொழி. 91, 229.) (1076)

## 1077

**ஈர்ங்கை விதிரார் கயவர் கொடிறுடைக்கும்**
**கூன்கையர் அல்லாத வர்க்கு.** 7

***பரிமேலழகர்:*** கயவர் கொடிறு உடைக்கும் கூன் கையர் அல்லாத வர்க்கு - கயவர் தம் கதுப்பினை நெரிப்பதாக வளைந்த கையினை உடையர் அல்லாதார்க்கு, ஈர்ங்கை விதிரார் - தாம் உண்டு பூசிய கையைத் தெறித்தல் வேண்டும் என்று இரந்தாலும் தெறியார்.

வளைந்த கை: முறுக்கிய கை. மெலிவார்க்கு யாதும் கொடார், நலிவார்க்கு எல்லாம் கொடுப்பர் என்பதாம்.

### உரை வேறுபாடு

***மணக்குடவர்:*** ஈரக் கை - கழுவின கை.

***பரிதியார்:*** ஈகிற கை விதிர்த்துக் கொள்ளார் கயவர்; கொறடாலே அடிப்பவர்க்குக் கொடுப்பர்.

***காளிங்கர்:*** கொடிறுபோல இடுக்கிப் பிடித்து உடர்பை உடைக்கும் திறமையால் கூனிய கையினை உடையோர்.

### ஒப்புமை

1. **ஈர்ங்கை:**

"ஈர்ங்கை மறந்தவென் இரும்பே ரொக்கல்." (புறநா. 393:10.)

2. **முற்றும்:**

"இட்டக் கடைத்தரார் ஈண்டும் பலிமரீஇப்
பட்ட வழங்காத பான்மையார்—நட்ட
சுரிகையாற் கானும் சுலாக்கோலாற் கானும்
சொரிவதாம் ஆபோல் சுரந்து." (அறநெறி. 183.) (1077)

## 1078

**சொல்லப் பயன்படுவர் சான்றோர் கரும்புபோல்**
**கொல்லப் பயன்படும் கீழ்.** 8

***பரிமேலழகர்:*** சொல்ல பயன்படுவர் சான்றோர் – மெலியார் சென்று தம் குறையைச் சொல்லிய துணையானே இரங்கிப் பயன்படுவர் மேலாயினர்; கீழ் கரும்புபோல் கொல்ல பயன்படும் - மற்றைக் கீழாயினர் கரும்புபோல வலியார் நைய நெருக்கிய வழிப் பயன்படுவர்.

பயன்படுதல் - உள்ளது கொடுத்தல். கீழாயினரது இழிவு தோன்ற, மேலாயினரையும் உடன் கூறினர்.

இவை இரண்டு பாட்டானும் அவர் கொடுக்குமாறு கூறப்பட்டது.

### ஒப்புமை

**கீழ்மக்கள் வருத்தினால் ஈதல்:**

"இரவலர் கன்றாக ஈவார்ஆ வாக
விரகிற் சுரப்பதாம் வண்மை—விரகின்றி
வல்லவர் ஊன்ற வடிஆபோல் வாய்வைத்துக்
கொல்லச் சுரப்பதாம் கீழ்."

"தளிர்மேலே நிற்பினும் தட்டாமல் செல்லா
உளிநீரர் மாதோ கயவர்—அளிநீரார்க்கு
என்னானும் செய்யார் எனைத்தானும் செய்பவே
இன்னாங்கு செய்வார்ப் பெறின்." (நாலடி. 279, 355.) (1078)

## 1079

உடுப்பதூஉம் உண்பதூஉம் காணின் பிறர்மேல்
வடுக்காண வற்றாகும் கீழ். 9

**பரிமேலழகர்:** உடுப்பதூஉம் உண்பதூஉம் கீழ் காணின் - பிறர் செல்வத்தால் பட்டும் துகிலும் உடுத்தலையும் பாலோடு அடிசில் உண்டலையும் கீழாயினன் காணுமாயின், பிறர்மேல் வடு காண வற்று ஆகும் - அவற்றைப் பொறாது அவர்மாட்டு வடு இல்லையாகவும் உண்டாக்க வல்லன் ஆம்.

உடுப்பது உண்பது என்பன ஈண்டு அவ்வத் தொழில்மேல் நின்றன.[1] அவற்றால், பூண்டல் ஊர்தல் முதலிய பிற தொழில்களும் கொள்ளப்படும். அவற்றைக் கண்ட துணையானே பொறாமை எய்தலின் காணின் என்றும், கேட்டார் இது கூடும் என்று இயையப் படைத்தல் அரிது ஆகலின் வற்றாகும் என்றும் கூறினர்.

இதனான் பிறர்செல்வம் பொறாமை கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**காளிங்கர்:** முன் நின்ற நிலையினும் மேற்பட உடுக்கும் ஆடையும் உண்ணும் சோறும் சிறிது மிகக் காணின் மற்று அப்பொழுதே பிறரைக் கெடுப்பது ஓர் வடுக் காண வற்றாகும் கீழ். (1079)

## 1080

எற்றிற் குரியர் கயவர்ஒன் றுற்றக்கால்
விற்றற் குரியர் விரைந்து. 10

**பரிமேலழகர்:** கயவர் ஒன்று உற்றக்கால் விரைந்து விற்றற்கு உரியர் - கயவர் தம்மை யாதானும் ஒரு துன்பம் உற்றக்கால் அதுவே பற்றுக்கோடாக விரைந்து தம்மைப் பிறர்க்கு விற்றற்கு உரியவர்; எற்றிற்கு உரியர் - அதுவன்றி வேறு எத்தொழிற்கு உரியர்?

1. "உடுப்பதூஉம் உண்பதூஉம் இன்றிக் கெடும்" (குறள், 166) என்புழி, 'உடுக்கப்படுவதும் உண்ணப்படுவதும்' என்று பொருள் கொள்ளும்படி அமைந்தது; இங்கே அவ்வாறன்மையின் இவ்வாறு கூறினர்.

உணவு இன்மையாக, பிறிதாக ஒன்று வந்து உற்ற துணையான் என்பது தோன்ற ஒன்று உற்றக்கால் என்றும், கொள்கின்றார் தம் கயமை அறிந்து வேண்டா என்றற்கு முன்னே விற்று நிற்றலின் விரைந்து என்றும் கூறினார். ஒரு தொழிற்கும் உரியர் அல்லர் என்பது குறிப்பெச்சம்.

இதனான் தாம் பிறர்க்கு அடிமையாய் நிற்பர் என்பது கூறப்பட்டது.

### உரை வேறுபாடு

**காளிங்கர்:** கடியவராய் உள்ளார் வந்து மருவினால் ஒருவர்க்கு இடுக்கண் வந்து உற்ற இடத்து மற்று அதுவே பட்டடையாக உயிர்க்கு ஈறு, பொருட்கு இறுதி வருமாறு விரைந்து எற்றுதற்கு உரியார்; அஃது இயையாது எனின் உற்ற இடத்து உதவாது விரைந்து நீங்குதற்கு உரியார்; ஆதலால் எவ்வாற்றானும் கயவரோடு குடிப்பண்பு உடையோர் மருவாது ஒழிக என்பது பொருளாயிற்று.

எற்றிற்கு என்பது எற்றுதற்கு என்பது. விற்றற்கு என்பது வேறுபட்டு நீங்குதற்கு என்றது; வீற்றற்கு எனற்பாலது விற்றற்கு எனக் குறுகி நின்றது. (1080)

# காமத்துப் பால்

## 1. களவியல்

**பரிமேலழகர்:** இனி, அப் பொருளைத் துணைக் காரணமாக உடைத்தாய் இம்மையே பயப்பதாய இன்பம் கூறுவான் எடுத்துக்கொண்டார். ஈண்டு இன்பம் என்றது ஒரு காலத்து ஒரு பொருளான் ஐம்புலனும் நுகர்தற் சிறப்புடைத்தாய காம இன்பத்தினை;[1] இச்சிறப்புப் பற்றி வட நூலுட் போசராசனும், 'சுவை பலவென்று கூறுவார் கூறுக; யாம் கூறுவது இன்பச்சுவை ஒன்றனையுமே' என இதனையே மிகுத்துக் கூறினன்.[2] இது புணர்ச்சி பிரிவு என இரு வகைப்படும். ஏனை இருத்தல், இரங்கல், ஊடல் என்பனவோ எனின், இவர் பொருட் பாகுபாட்டினை அறம் பொருள் இன்பம் என வடநூல் வழக்குப் பற்றி ஓதுதலான் அவ்வாறே அவற்றைப் பிரிவின்கண் அடக்கினர் என்க.

இனி, அவைதம்மையே தமிழ் நூல்களோடும் பொருந்தப் புணர்ச்சியைக் களவென்றும் பிரிவைக் கற்பென்றும் பெரும்பான்மை பற்றி வகுத்து, அவற்றைச் சுவை மிகுதி பயப்ப உலக நடையோடு ஒப்பும் ஒவ்வாமையும் உடையவாக்கிக் கூறுகின்றார். அக் கைகோள் இரண்டனுள்ளும் களவாவது பிணி மூப்பு இறப்புக்கள் இன்றி எஞ்ஞான்றும் ஒரு தன்மையராய் உருவும் திருவும் பருவமும் குலனும் அன்பும் முதலியவற்றால் தம்முள் ஒப்புமையுடையராய[3] தலைமகனும் தலைமகளும் பிறர் கொடுப்பவும் அடுப்பவும் அன்றிப் பால்வகையால்[4] தாமே எதிர்ப்பட்டுப் புணர்ந்து வருவது. அதனை ஏழு அதிகாரத்தால் கூறுவான் தொடங்கி, முதற்கண் **தகையணங்குறுத்தல்** கூறுகின்றார்.

**பரிப்பெருமாள்:** காமத்துப் பாலாவது மைந்தர்க்கும் மகளிர்க்கும் கலவியான் ஆகிய இன்பப் பகுதி கூறுதல். அஃது யாங்ஙனம் கூறினர் எனின்: ஒருவனுக்கு இன்பம் நுகர்தற்கு இடம் கன்னியரும் கணிகையரும் பிறர் தாரமும் என மூவகையல்லது இல்லை. அவற்றுள் பிறர்மனைக் கூட்டம் பாவம் தரும் என்று அறத்துப்பாலுள் கூறிக் கணிகையர் கூட்டம் பொருட்கேடு தரும் என்று பொருட்பாலுள் கூறினராதலின் அறனும் பொருளும் இன்பமும் வழுவாமல் வருவது கன்னியர் கூட்டம் என்று அது ஈண்டுக் கூறப்பட்டதென்க. அதுதான் எட்டு வகைப்படும், பிரமம், பிராசாபத்தியம், ஆரிடம், தெய்வம், காந்தர்வம், அசுரம், இராக்கதம், பைசாசம் என. அவற்றுள் அசுரம் முதலான மூன்றும் ஒருதலைக் காமம் ஆகலானும், பிரமம் முதலான நான்கும் ஒப்பில்கூட்டம் ஆகலானும், அவையிற்றுக்கு இன்பச் சிறப்பு இன்மையின் காந்தருவ நெறியே ஈண்டுக் கூறப்பட்டது என்று கொள்ளப்படும். என்னை? "முன்னைய மூன்றும் கைக்கிளைக் குறிப்பே, பின்னர் நான்கும் பெருந்திணை பெறுமே"[5] என்றும்,

1. குறள், 1101.

2. சிருங்காரப் பிரகாசம் என்னும் நூலில் இங்ஙனம் கூறினன்.

3. ஒத்த பிறப்பு, ஒத்த ஒழுக்கம், ஒத்த ஆண்மை, ஒத்த பிராயம், ஒத்த உருவம், ஒத்த அன்பு, ஒத்த நிறை, ஒத்த அருள், ஒத்த அறிவு, ஒத்த செல்வம் எனப் பத்துக் கூறுவர்; தொல். மெய்ப். 25.

4. பால்வகை-நல்லூழின் திறம்; "ஒன்றே வேறே என்றிரு பால்வயின், ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப." (தொல். களவு. 2.)

5. தொல். களவு. 14.

"காமக் கூட்டம் காணுங்காலை, மறையோர் தேஎத்து மன்றல் எட்டனுள், துறையமை நல்யாழ்த் துணைமையோர் இயல்பே"[1] என்றும் இலக்கணம் கூறுதலின். அஃதாவது கொடுப்போரும் அடுப்போரும் இன்றி ஒத்தார் இருவர் தாமே கூடும் கூட்டம்; என்னை? "அதுவே, தானே அவளே தமியர் காணக், காமப் புணர்ச்சி இருவயின் ஒத்தல்"[2] என்பவாகலின். இச்சூத்திரம் நாடக வழக்கிற்குக் கூறியது ஆகலின், ஈண்டு உரைக்கின்ற காமமும் நாடக வழக்கோ எனின், இச்சூத்திரம் கூறுகின்றுழி உரையாசிரியர் உலகத்தோடு ஒத்தும் ஒவ்வாதும் வரும் என்று பொதுப்படக் கூறினார் ஆதலின், இஃது உலக வழக்கை நோக்கி எடுத்துக் காட்டப்பட்டது என்க.

இக் காமப்புணர்ச்சியை வட நூலாசிரியர் அராகத்தார் கூடும் கூட்டம் என்ப. இதுதான் மூவகைப்படும், அருமையிற் கூடலும், பிரிந்து கூடலும், ஊடிக் கூடலும் என. அருமையிற் கூடுதலாவது, கூடுதற்கு எளிது அன்மையால் ஒருவர் ஒருவரைக் கண்ட காலந்தொட்டும் ஒத்த நினைவினராய் நின்று கூடுதல். பிரிந்து கூடுதலாவது, இவ்வாறு கூடினார் பின்பு ஒரு காரணத்தால் பிரிந்து அதன்பின் கூடுதல். ஊடிக் கூடலாவது, தலைமகன்மாட்டுத் தவறு கண்டு புலந்த தலைமகளைப் புலவி நீக்கிக் கூடுதல்.

இவை மூன்று கூட்டமும் இவற்றது நிமித்தமும் இக்காமத்துப் பாலுள் கூறுவது தமிழ் நடையன்றாதலின் இதற்கு இலக்கணம் யாங்கனம் பெறுதும் எனின், இவ்விலக்கணம் தமிழ் நடையாயின், அகப்புறம் என்று கூறுதல் வேண்டும். அவ்வாறு கூறாது அறம், பொருள், இன்பம் என வடநூல் வழியே கூறினார் ஆதலின் இதற்கு இலக்கணம் வாத்ஸ்யாயனம் என்னும் காம தந்திரத்துச் சுரதவிகற்பம் என்னும் அதிகரணத்துள் கண்டு கொள்க. அன்றியும், "புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல், ஊடல் இவற்றின் நிமித்தம் என்றிவை, தேருங் காலைத் திணைக்குரிப் பொருளே"[3] என்றாராதலின். அவற்றுள் இருத்தலும் இரங்கலும் பிரிந்துழி நிகழு மன்றே. அவற்றைப் பிரிவினுள் அடக்கிப் புணர்தலும் பிரிதலும் ஊடலும் எனத் தமிழ் நடையிற் கூறினும் இழுக்காது.

இதனுள் தகையணங்குறுத்தல் முதலாகப் புணர்ச்சி மகிழ்தல் ஈறாக அருமையிற் கூடலும் அதற்கு நிமித்தமும் ஆகிய அதிகாரம் மூன்றும், நலம் புனைந்துரைத்தல் முதலாகப் புணர்ச்சி விதும்பல் ஈறாகப் பிரிந்து கூடலும் அதற்கு நிமித்தமுமாகிய அதிகாரம் பதினெட்டும், நெஞ்சொடு புலத்தல் முதலாக ஊடலுவகை ஈறாக ஊடிக் கூடலும் அதற்கு நிமித்தமுமாகிய அதிகாரம் நான்கும் ஆக இருபத்தைந்து அதிகாரம் கூறப்பட்டன. அவற்றுள் முன்பு கண்டறியா அருமையிற் கூடலைப் புணர்ச்சி மகிழ்தல் என்றும், அதனை அறிதலால் பிரிந்து கூடலைப் புணர்ச்சி விதும்பல் என்றும், கலாம் தீர்ந்து கூடுதலால் ஊடிக்கூடலை ஊடலுவகை என்றும் கூறினார் என்று கொள்ளப்படும்.

# 109. தகையணங்குறுத்தல்

**பரிமேலழகர் :** அஃதாவது, பொழில் விளையாட்டு விருப்பான் ஆயம் நீங்க, அதன்கண் தமியளாய் நின்றாளை, வேட்ட விருப்பான் இளையார் நீங்கத் தமியனாய் வந்து கண்ணுற்ற தலைமகன், அவள் வனப்புத் தன்னை வருத்தம்

1. தொல். களவியல், 1.
2. இறையனார். 2.
3. தொல். அகத். 14.

உறுவித்தலைச் சொல்லுதல்.[1] இது, கண்ணுற்றபொழுதே நிகழ்வதாகலின், முதற்கண் கூறப்பட்டது.

**பரிப்பெருமாள்:** தகையணங் குறுத்தலாவது தலைமகனும் தலைமகளும் எதிர்ப்பட்ட இடத்துத் தலைமகளது கவின் தலைமகனை வருத்துதலும், தலைமகனது கவின் தலைமகளை வருத்துதலும். இது முதலாகக் காமம் நிகழுமாதலின் இது முற்பாடு கூறப்பட்டது.

**பரிதியார்:** தகையணங்குறுத்தலாவது நாயகியை நாயகன் கண்டு அநுபவித்தல்.

## 1081

அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை
மாதர்கொல் மாலும்என் நெஞ்சு. 1

(தலைமகள் உருவு முதலியன முன்கண்டறிவனவன்றிச் சிறந்தமையின் தலைமகன் ஐயுற்றது.)

**பரிமேலழகர்:** கனம் குழை - இக் கனவிய குழையை உடையாள், அணங்குகொல் - இப்பொழிற்கண் உறைவாளோர் தெய்வ மகளோ? ஆய் மயில்கொல் - அன்றி ஒரு மயில் விசேடமோ? மாதர்கொல் – அன்றி ஒரு மானுட மாதரோ? என் நெஞ்சு மாலும் - இவளை இன்னள் என்று துணிய மாட்டாது என் நெஞ்சு மயங்காநின்றது.

ஓ: அசை. ஆய் மயில் - படைத்தோன் விசேடமாக ஆய்ந்து படைத்த மயில்; மயிற்சாதியுள் தெரிந்தெடுத்த மயில் என்றுமாம். கனங்குழை: ஆகுபெயர். கணங்குழை என்று பாடம் ஓதிப் பலவாய்த் திரண்ட குழை என்று உரைப்பாரும் உளர். எழுதலாகா உருவும் தன் வருத்தமும் பற்றி அணங்குகொல் என்றும், சாயலும் பொழில்வயின் நிற்றலும் பற்றி ஆய் மயில்கொல் என்றும், தன் நெஞ்சம் சென்றமையும் அவள் எதிர் நோக்கிய வாறும் பற்றி மாதர்கொல் என்றும் கூறினன்.

### உரை வேறுபாடு

**பரிப்பெருமாள்:** எனக்குத் தெரிகின்றதில்லை என்றவாறு ஆயிற்று. கணங்குழை: ஆகுபெயர். ஆய்தல் என்பது தெரிதல். பலவற்றினும் தெரியப்படுதலின் நல்லது என்று பொருளாயிற்று. மக்களும் தேவரும் ஒரு நீர்மையர் ஆதலின், தெய்வமோ மக்களோ என்று ஐயுறுக. மயிலோ என்றது என்னை எனின், இம்மணம் காந்தருவம் அன்றே? தலைமகளைத் தலைமகன் எதிர்ப்படுங்கால் யாரும் இல்லாததோர் பொழிலகத்தே எதிர்ப்படுதல் வேண்டும். ஆயிடை எதிர்ப்பட்ட தலைமகள் இப்பெற்றியாள் இவ்விடைத் தனிவருதல் கூடாதாகலான் ஈண்டு உறைவதோர் தெய்வமோ என்று ஐயுற்றான். அதன்பின் பொழிலகத்து வாழ்வன மயில்கள் பலவும் உள; அவற்றுள் இஃதொரு மயில் விசேடமோ என்று ஐயுற்றான் என்று கொள்ளப்படும்.

இதனுள் காட்சி சொல்லி ஐயம் சொல்லுதலன்றே இலக்கணம்; அது கூறாதது என்னை? எனின், கண்ட காலத்துப் புணர்ச்சி வேட்கை தோற்றுகையும் தோற்றுமையும் நிகழும் ஆதலான், அதனை ஒழித்து அதற்குக் காரணமாகிய ஐயம் முதலாகச் சொன்னார் என்க. இது தலைமகன் தலைமகளை எதிர்ப்பட்டுழி ஐயுற்றது.

1. தகை-அழகு. தகையணங்குறுத்தல் என்பது கோவை நூல்களில் வேறு ஒரு துறைக்குப் பெயராக வரும்.

**பரிதியார்:** தெய்வ மகளோ? நடமாடும் மயிலோ? கனத்த குழை யுடைய பூமகளோ? என்றன் சிந்தையை மயக்குற்றவள் என்றவாறு.

**காளிங்கர்:** செய்குன்றும் இளமரக்காவும் ஆகிய யாரும் இல்ல தோர் சிறையிடத்து மற்று இவண் வல்லிப்பூக் கொய்துகொண்டு ஆங்கு இனிது நின்ற தலைமகளை நிரம்ப முன் தான் செய்த தவப்பயனாகிய விதி வகையால் ஓர் வேட்டம் போந்து விளையாடுகின்ற தலைமகன் ஒரு மான் தொடர்ந்து வந்து எய்திக் கண்டான். கண்டபின் தன் நெஞ்சிற்குச் சொல்லியது. இங்ஙனம் யாரும் இல்லதோர் சிறையிடத்து நின்றும் இவ்வணி அணிந்த உருவுடையதோர் தெய்வ வடிவாங்கொல்லோ என்றும், மைக்கோலமும் வளரிளஞ் சாயலும் வனப்பும் உடையதோர் அழகிய மயிலாங்கொல்லோ என்றும் தக்க செல்வக் குலத்துள் பிறந்த மக்களுள் ஒருத்தி கொல்லோ என்றும் இங்ஙனம் மயக்குறும் என் நினைவு என்று தன் நெஞ்சிற்குச் சொல்லித் தளர்வுற்றான் தலைமகன் என்பது பொருள். கணங்குழை என்றது மகரக்குழை. மாலும் என்றது மயங்கும் என்றது.

**கவிராஜ பண்டிதர்:** இதுமுதல் 113-ஆம் அதிகாரம் முடியக் குறிஞ்சித் திணை என்பர்.

கனங்குழை-நீண்ட காதணியை உடையவள்.

### மேற்கோள் விளக்கம்

வெண்பா யாப்பான் வந்த அகப்புறக் கைக்கிளை என்பர் நச்சினார்க் கினியர். (தொல். செய். 118.) *(1081)*

## 1082

நோக்கினாள் நோக்கெதிர் நோக்குதல் தாக்கணங்கு
தானைக்கொண் டன்ன துடைத்து. 2

(மானுட மாதராதல் தெளிந்த தலைமகன் அவள் நோக்கினான் ஆய வருத்தம் கூறியது.)

**பரிமேலழகர்:** நோக்கினாள் நோக்கு எதிர் நோக்குதல் - இப்பெற்றித் தாய வனப்பினை உடையாள் என் நோக்கிற்கு எதிர்நோக்குதல், தாக்கு அணங்கு தானை கொண்டன்னது உடைத்து - தானே தாக்கி வருத்துவதோர் அணங்கு தாக்குதற்குத் தானையையும் கொண்டு வந்தாற் போலும் தன்மையை உடைத்து.

மேலும், "அணங்குகொல் ஆய்மயில்கொல்" என்றமையான், இகரச் சுட்டு வருவிக்கப்பட்டது. எதிர் நோக்குதல் என்றமையின், அது குறிப்பு நோக்காயிற்று.[1] வனப்பால் வருந்துதல்மேலும் குறிப்பு நோக்கால் வருந் துதல் கூறியவாறு. நோக்கினாள் என்பதற்கு என்னால் நோக்கப்பட்டாள் என்று உரைப்பாரும் உளர்.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** தெய்வத்திற்கு உவமை வடிவு. தானைக்கு உவமை நோக்கம்.

**பரிதியார்:** பார்த்த பார்வைக்கு எதிராகப் பார்த்த பார்வை தாக்கப் பட்ட அணங்காகிய தெய்வப் பெண்ணின் கூட்டத்தைக் கண்டதற்கு[2] ஒக்கும்.

1. குறிப்பு நோக்காவது தன்பால் கொண்ட அன்பை உணர்த்தும் பார்வை; மற்றையது பொது நோக்கு.

2. 'தானைக் கண்டன்ன தகைத்து' என்பது இவர் பாடம்.

காளிங்கர்: தாக்கு அணங்கு - அனைத்துயிரையும் விதிவழி வந்து தாக்குவதாகிய கூற்று.

### மேற்கோள் விளக்கம்

வழிநிலைக் காட்சியில் புகுமுகம் புரிதல் என்பர் நச்சினார்க்கினியர் (தொல். களவியல். 5.)

### ஒப்புமை

1. நோக்கெதிர் நோக்குதல்:

"நோக்குங்கால் நோக்கின் அணங்காக்கும்" (கலி. 131:5.)

"அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்"
"நோக்கிய நோக்கெனும்." (கம்ப. மிதிலைக்காட்சி. 35, 36.)

2. தாக்கணங்கு: குறள், 918.

"தாக்கணங் காவ தெவன்கொல் அன்னாய்" (ஐங்குறு. 23.)
"தாக்குணங் கனையார் நோக்குவலைப் பட்டு" (சிலப். 14; 160.)
"மூப்புடை முதுமைய தாக்கணங் குடைய" (மணி. 3: 57.)
"தாக்கணங் கனையவள் தனத்தில் தைத்தவே."
(கம்ப. மிதிலைக்காட்சி. 36.) (1082)

## 1083

பண்டறியேன் கூற்றென் பதனை இனிஅறிந்தேன்
பெண்தகையால் பேரமர்க் கட்டு. 3

(இதுவும் அது.)

பரிமேலழகர்: கூற்று என்பதனை பண்டு அறியேன் - கூற்று என்று நூலோர் சொல்வதனைப் பண்டு கேட்டு அறிவதல்லது கண்டு அறியேன்; இனி அறிந்தேன் - இப்பொழுது கண்டு அறிந்தேன்; பெண் தகையால் பேர் அமர் கட்டு - அது பெண் தகையுடனே பெரியவாய் அமர்த்த கண்களை உடைத்து.

பெண்தகை - நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்னும் குணங்கள்; அவை அவ்வக்குறிகளான் அறியப்பட்டன. அமர்த்தல் - அமர்செய்தல்; பெயரடியாய வினை. பெண்தகையால் இன்பம் பயத்தலும் உண்டேனும் துன்பம் பயத்தல் மிகுதி பற்றிக் கூற்றாக்கிக் கூறினான்.

### உரை வேறுபாடு

மணக்குடவர்: இது நம்மை வருத்துதற்குத் தக்காள் என்னும் குறிப்பு.

### ஒப்புமை

முற்றும்.

"வேண்டுருவம் கொண்டதோர் கூற்றங்கொல்" (கலி. 56: 9.)

"பல்லுயிர் பருகும் பகுவாய்க் கூற்றம்
ஆண்மையில் திரிந்துதன் அருந்தொழில் திரியாது
நாணுடைக் கோலத்து நகைமுகம் கோட்டிப்
பண்மொழி நரம்பில் திவவியாழ் மிழற்றிப்
பெண்மையில் திரியும் பெற்றியும் உண்டெனா."
(சிலப். 5: 219-23.)

"வலைவாழ்நர் சேரி......வேண்டுருவம் கொண்டுவேறோர்
கொலைவேல் நெடுங்கண் கொடுங்கூற்றம் வாழ்வது"

"கடுங்கூற்றம் காணீர் கடல்வாழ்நர் சீறூர்க்கே
மடங்கெழுமென் சாயல் மகளா யதுவே"

(சிலப். 7: 10, 12.)

"கோமகள் உருவமாய்க் கூற்றம் போந்தது"

"கண்ணினால் இன்று கண்டாம் கூற்றினை .........
பெண்ணுடைப் பேதை நீர்மைப் பெருந்தடங் கண்ணிற் றம்மா"

(சீவக. 2451, 2458.)

"வண்ண மேகலைத் தேரொன்று வாணெடும்
கண்ணி ரண்டு கதிர்முலை தாமிரண்
டுண்ணி வந்த நகையும்உண் டாம்எனில்
எண்ணும் கூற்றினுக் கித்தனை வேண்டுமோ."

(கம்ப. மிதிலைக்காட்சி. 144.) (1083)

## 1084

கண்டார் உயிர்உண்ணும் தோற்றத்தால் பெண்தகைப்
பேதைக் கமர்த்தன கண். 4

(இதுவும் அது.)

**பரிமேலழகர்:** பெண் தகை பேதைக்கு கண் - பெண்தகையை உடைய இப் பேதைக்கு உளவாய கண்கள், கண்டார் உயிர் உண்ணும் தோற்றத்தான் அமர்த்தன - தம்மைக் கண்டார் உயிர்உண்ணும் தோற்றத்துடனே கூடி அமர்த்திருந்தன.

அமர்த்தல் - மாறுபடுதல்; குணங்கட்கும் பேதைமைக்கும் ஏலாது கொடியனவாய் இருந்தன என்பதாம்.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** அமர்த்தன - ஒத்தன. அமர்தல் - மேவல். இது பேதையோடு ஒத்த தொழிலுடைத்து என்று கண்ணின் கொடுமையை உட்கொண்டு கூறியது. (1084)

## 1085

கூற்றமோ கண்ணோ பிணையோ மடவரல்
நோக்கம்இம் மூன்றும் உடைத்து. 5

(இதுவும் அது.)

**பரிமேலழகர்:** கூற்றமோ - என்னை வருத்துதல் உடைமையால் கூற்றமோ? கண்ணோ - என்மேல் ஓடுதல் உடைமையால் கண்ணோ? பிணையோ - இயல்பாக வெருவுதல் உடைமையால் பிணையோ? அறிகின்றிலேன்; மடவரல் நோக்கம் இம் மூன்றும் உடைத்து - இம் மடவரல் கண்களின் நோக்கம் இம் மூன்றன் தன்மையையும் உடைத்தாய் இரா நின்றது.

இன்பமும் துன்பமும் ஒருங்கு செய்யாநின்றது என்பதாம். தொழில் பற்றி வந்த ஐயநிலை உவமம்.

### உரை வேறுபாடு

**பரிதியார்:** கூற்றம் போலவும் மான் போலவும் விளங்கா நின்றது இவள் கண்.

**காளிங்கர்:** குளிர்ந்த நோக்குடைமையின் கண்ணுருவுதானேயோ?

ஒப்புமை

**கண் கூற்றம்:**

"எறிவளைகள் ஆர்ப்ப இருமருங்கும் ஓடும்
கறைகெழுவேற் கண்ணோ கடுங்கூற்றம்" (சிலப். 7: 12.)

"ஒன்றே உயிரை உடையீர் ஒருவிப் போமின் இவள்கண்
அன்றே கூற்ற மாகி அருளாது ஆவி போழ்வது" (சீவக. 917.)

"கொல்லும் வேலும் கூற்றமும் என்னும் இவையெல்லாம்
வெல்லும் வெல்லும் என்ன மதர்க்கும் விழிகொண்டாள்"

"கூற்றுறழ் நயனங்கள்."

(கம்ப. மிதிலைக் காட்சி, 32, உண்டாட்டு. 21.) (1085)

## 1086

கொடும்புருவம் கோடா மறைப்பின் நடுங்கஞர்
செய்யல மன்இவள் கண். 6

(இதுவும் அது.)

**பரிமேலழகர்:** கொடும் புருவம் கோடா மறைப்பின் - பிரியா நட்பாய கொடும் புருவங்கள் தாம் செப்பம் உடையவாய் விலக்கினவாயின், இவள் கண் நடுங்கு அஞர் செய்யல - அவற்றைக் கடந்து இவள் கண்கள் எனக்கு நடுங்கும் துயரைச் செய்யமாட்டா.

நட்டாரைக் கழறுவார்க்குத் தாம் செம்மை உடையராதல் வேண்டலின் கோடா என்றும், செய்கின்ற அவற்றிற்கும் உறுகின்ற தனக்கும் இடைநின்று விலக்குங்காலும் சிறிது இடைபெறின் அது வழியாக வந்து அஞர் செய்யுமாகலின் மறைப்பின் என்றும் கூறினன். நடுங்கு அஞர் - நடுங்கற்கு ஏதுவாய அஞர். தாம் இயல்பாகக் கோடுதல் உடைமையான் அவற்றை மிகுதிக்கண் மேற்சென்று இடிக்க[1] மாட்டா ஆயின என்பது படநின்றமையின், மன், ஒழியிசைக்கண் வந்தது.

உரை வேறுபாடு

**மணக்குடவர்:** இது மேல் தலைமகன் கூறிய சொற்கேட்டுத் தலைமகள் தலை இறைஞ்சிய வழி, கண்ணை மறைத்துத் தோற்றிய புருவ முறிவு கண்டு அவன் கூறியது.

**பரிதியார்:** வளைந்த புருவம் அழகு செய்து விரகம் விளைத்த படியாலே காமுகர் நடுங்கத்தக்க துன்பம் விளைத்தது கண். (1086)

## 1087

கடாஅக் களிற்றின்மேல் கட்படாம் மாதர்
படாஅ முலைமேல் துகில். 7

(அவள் முலைகளின் ஆய வருத்தம் கூறியது.)

**பரிமேலழகர்:** மாதர் படாஅ முலைமேல் துகில் - இம் மாதர் படா முலைகளின்மேல் இட்ட துகில், கடாஅம் களிற்றின்மேல் கண்படாம் - அவை கொல்லாமல் காத்தலின், கொல்வதாய மதக்களிற்றின்மேல் இட்ட முக படாத்தினை ஒக்கும்.

கண்ணை மறைத்தல்பற்றிக் கட்படாம் என்றான். துகிலான் மறைத்தல் நாணுடை மகளிர்க்கு இயல்பாகலின், அத் துகிலூடே அவற்றின் வெம்மையும்

1. குறள், 784.

பெருமையும் கண்டு இத் துணை ஆற்றல் உடையன இனி எஞ்ஞான்றும் சாய்வு இல எனக் கருதிப் படாஅ முலை என்றான். உவமை, சிறிது மறையா வழி உவை கொல்லும் என்பது தோன்ற நின்றது.

### உரை வேறுபாடு

**மணக்குடவர் :** மாதர் - மாதரே!

### ஒப்புமை

*முற்றும்:*

"அமிழ்துபெய் செப்பின் அன்ன வெம்முலை
நுகர்பூங் காமத்து நுதிமுகம் உரிஞ்சிக்
கடாஅ யானைக் கண்ணகம் மறைத்த
படாஅத் தன்ன படிவத் தாகிய
வடகப் போர்வையை வனப்பொடு திருத்தி."
(பெருங். *1. 45: 6-10.*) (*1087*)

## 1088

**ஒண்ணுதற் கோஒ உடைந்ததே ஞாட்பினுள்**
**நண்ணாரும் உட்கும்என் பீடு.** 8

(நுதலின் ஆய வருத்தம் கூறியது.)

**பரிமேலழகர் :** ஞாட்பினுள் நண்ணாரும் உட்கும் என் பீடு - போர்க்களத்து வந்து நேராத பகைவரும் நேர்ந்தார்வாய்க் கேட்டு அஞ்சுதற்கு ஏதுவாய என் வலி, ஒள் நுதற்கு உடைந்ததே - இம் மாதரது ஒள்ளிய நுதல் ஒன்றற்குமே அழிந்துவிட்டது.

மாதர் என்பது அதிகாரத்தான் வந்தது. ஞாட்பினுள் என்றதனால் பகைவராதல் பெற்றாம். பீடு என்ற பொதுமையான் மனவலியும் காயவலியும் கொள்க. ஓவென்னும் வியப்பின்கண் குறிப்பு அவ் வலிகளது பெருமையும், நுதலது சிறுமையும் தோன்ற நின்றது. கழிந்ததற்கு இரங்கலின் தற்புகழ்தல் அன்றாயிற்று.

### உரை வேறுபாடு

**மணக்குடவர் :** இது மேற்கூறிய சொல் கேட்ட தலைமகள் மிகவும் கவிழ்ந்து நிலம் நோக்கியவழிப் புருவத்தின்மேல் தோற்றிய நுதல் கண்டு கூறியது.

**கவிராஜ பண்டிதர் :** பயப்படுகிறது, மதி அழிகிறதாம்.

### ஒப்புமை

*1. பீடு ஒண்ணுதற்கு உடைதல் :*

"கதுப்பயல் விளங்கும் சிறுநுதல்
புதுக்கோள் யானையின் பிணித்தற்றால் எம்மே"
"பிறையென, மதிமயக் குறூஉம் நுதலும்."
(குறுந். *129: 5-6, 226: 2-3.*)

*2. முற்றும்:*

"நீரோ ரன்ன சாயல்
தீயோ ரன்னவென் னுரனவித் தன்றே" (குறுந். *95: 4-5.*)

"போருள், அடல்மாமேல் ஆற்றுவேன் என்னை மடல்மாமேல்
மன்றம் படர்வித் தவள்" (கலி. *141: 8-10.*)

"ஈசனே முதலா மற்றை மாவிடர் இறுதி யாகக்
கூசமூன் றுலகுங் காக்கும் கொற்றத்தென் வீரக் கோட்டி
பேசுவார் ஒருவற் காவி தோற்றலென் பெண்பால் வைத்த
ஆசைநோய் கொன்ற தென்று லாண்மைதான் மாசுண் ணுதோ.
(கம்ப. மாயாசனகப். 13.) *(1088)*

1089

பிணையேர் மடநோக்கும் நாணும் உடையாட்
கணிஎவனோ ஏதில தந்து. 9

(அணிநலத்தான் ஆய வருத்தம் கூறியது.)

**பரிமேலழகர் :** பிணை ஏர் மடநோக்கும் நாணும் உடையாட்கு - புறத்து மான்பிணை ஒத்த மடநோக்கினையும் அகத்து நாணினையும் உடையளாய இவட்கு, ஏதில தந்து அணி எவன் - ஒற்றுமையுடைய இவ்வணிகளே அமைந்திருக்க வேற்றுமையுடைய அணிகளைப் படைத்து அணிதல் என்ன பயன் உடைத்து?

மடநோக்கு - வெருவுதலுடைய நோக்கு. இவட்குப் பாரமாதலும் எனக்கு அணங்காதலும் கருதாமையின், அணிந்தார் அறிவிலர் என்பதாம்.

உரை வேறுபாடு

**மணக்குடவர் :** அவளைக் கொடுமை கூறுவான் போல நலம் பாராட்டியது.

**பரிப்பெருமாள் :** மேல் தலைமகன் கூறிய சொற் கேட்டு நாணுற்ற தலைமகள் வாளாது நிற்றல் ஆற்றாது தன் அணிகலனைத் தொட்டுழி, அதனை நோக்கி இத் தன்மையாட்கு இதனையும் அணிதல் வேண்டுமோ என்று தமரைக் கொடுமை கூறுவான் போல நலம் பாராட்டியது. *(1089)*

1090

உண்டார்கண் அல்ல தடுநறாக் காமம்போல்
கண்டார் மகிழ்செய்தல் இன்று. 10

*(தலைமகள் குறிப்பு அறிதலுற்றான் சொல்லியது.)*

**பரிமேலழகர் :** அடு நறா - அடப்படும் நறா, உண்டார்கண் அல்லது - தன்னை உண்டார்மாட்டு மகிழ்ச்சியைச் செய்வதல்லது, காமம்போல் கண்டார் மகிழ் செய்தல் இன்று - காமம்போலக் கண்டார்மாட்டு மகிழ்ச்சியைச் செய்தல் உடைத்தன்று.

அடு நறா: வெளிப்படை. காமம் என்றது ஈண்டு அது நுகர்தற்கு இடனாகியாரை. கண்டார்கண் என்னும் ஏழாவது, இறுதிக்கண் தொக்கது. மகிழ்செய்தற்கண் காமம் நறவினும் சிறந்ததே எனினும் இவள் குறிப்பு ஆராய்ந்து அறியாமையின் யான் அது பெற்றிலேன் எனக் குறிப்பெச்சம் வருவித்துரைக்க; "அரிமயிர்த் திரண்முன்கை"[1] என்னும் புறப்பாட்டில் குறிப்புப் போல.

உரை வேறுபாடு

**மணக்குடவர் :** இது தலைமகள் தலைமகனைக் கண்டுழி வருத்த முற்றுக் கருதியது.

1. புறநா. 11:1

மேற்கோள் விளக்கம்

தலைவனைக் கண்ட தலைவி மாட்டுக் குறிப்பினாற் காட்சி முதலியன சிறிது நிகழ்வதற்குக் காட்டுவர் இளம்பூரணர். (தொல். களவு. 4.)

ஒப்புமை

முற்றும்: குறள், *1281.* *(1090)*

---

# 110. குறிப்பு அறிதல்

**பரிமேலழகர்:** அஃதாவது, தலைமகன் தலைமகள் குறிப்பினை அறிதலும், தோழி குறிப்பினை அறிதலும், அவள்தான்[1] அவ்விருவர் குறிப்பினையும் அறிதலுமாம். தகையணங்குற்ற தலைமகன் தலைமகளைக் கூடுங்கால் இது வேண்டுமாகலின், தகையணங்குறுத்தலின்பின் வைக்கப் பட்டது.

**மணக்குடவர்:** குறிப்பு அறிதலாவது தலைமகள் உள்ளக் குறிப்பினைத் தலைமகன் அறிதல்.

**பரிப்பெருமாள்:** இது தலைமகற்கே உரித்து. பெண்டிர் நாணம் உடையரன்றே. அவரது உள்ளக் கருத்து வெளிப்படுமாறு என்னை எனின், மேலை அதிகாரத்துத் தலைமகனைக் கண்ட தலைமகள், 'காமம்போல் கண்டார் மகிழ்செய்தல் இன்று'[2] என்று நினைத்தாளாகக் கூறினாரன்றே; அதனானே கண்ணும் முகமும் வேறுபடும். அதனானே அறியலாகும். 'மனக்குறிப்பு அறிதல் கூறியது எற்றுக்கு? பிறவாற்றானும் கூடுதற்கு நெறியுளவால்' எனின்; பிறவாற்றால் கூடுங்கால், குரவரால் கூடின் பெருந்திணையாம்; பொருள் கொடுத்துச் சாரின் அசுரமாம்; வலியில் சாரின் இராக்கதமாம்; மறவியில் சாரின் பசாசமாம். ஆதலின் இக் கூட்டத்துக்குக் குறிப்பு அறிந்தே புணர வேண்டுதலின் இது கூறப்பட்டது. மேலதனோடு இயைபும் இது. இது தலைமகற்கு உரித்தன்றோ எனின், அவன் வெளிப்பட இரத்தலான் வேண்டா என்க.

**1091**

இருநோக் கிவள்உண்கண் உள்ள தொருநோக்கு
நோய்நோக்கொன் றந்நோய் மருந்து. 1

(தலைமகன் தலைமகள் உளப்பாட்டுக் குறிப்பினை அவள் நோக்கினான் அறிந்தது.)

**பரிமேலழகர்:** இவள் உண்கண் உள்ளது இரு நோக்கு - இவளுடைய உண்கண் அகத்ததாய நோக்கு இதுபொழுது என்மேல் இரண்டு நோக்கு ஆயிற்று; ஒரு நோக்கு நோய் நோக்கு ஒன்று அந் நோய் மருந்து-அவற்றுள் ஒரு நோக்கு என்கண் நோய் செய்யும் நோக்கு; ஏனையது அந் நோய்க்கு மருந்தாய நோக்கு.

உண்கண் -- மையுண்ட கண். நோய் செய்யும் நோக்கு – அவள் மனத்தினைய காமக் குறிப்பினை வெளிப்படுக்கின்ற நோக்கு. மருந்தாய நோக்கு – தன்கண் நிகழ்கின்ற அன்பு நோக்கு. நோய் செய்யும் நோக்கினைப்

---

1. அவள்தான் - தோழி.

2. குறள், 1090.

பொது நோக்கென்பாரும் உளர்.[1] அது நோய் செயின் கைக்கிளையாவது அல்லது அகம் ஆகாமை அறிக. இவ் வருத்தம் தீரும் வாயிலும் உண்டாயிற்று என்பதாம்.

### உரை வேறுபாடு

**பரிப்பெருமாள்:** இது, நாணி நோக்குதல் உடம்படுதலாம் என்றது.

**காளிங்கர்:** எனவே, எங்கும் ஓடும்போது நோக்கின், தனக்கு ஒரு பயன் இன்மையின் நோயது என்றும், இனித் தன்வயிற் சென்ற நோக்குத் தனது உயிர் ஆற்றற்கு ஓர் தண்ணளி ஆகையால் இடர்தணி நோக்கு என்றும் இங்ஙனம் இவள் நோக்கினைப் பிரித்துக்கொண்டு அவள் உட்குறிப்பு அறிந்தான் என்பது கருத்து.

### ஒப்புமை

1. நோய் நோக்கு:

"செவ்வனேர், நோக்கிலும் நோய்நோக்கம் நோக்காள்."

(திருக்கைலாய ஞானவுலா, 78–9.)

2. முற்றும்:

"………நஞ்சும் அமிர்தமுமே
போல்குணத்த பொருகயற்கண்" (சீவக. 167.)

"பிணியும் அதற்கு மருந்தும் பிறழப் பிறழமின்னும்
பணியும் புரைமருங் குற்பெருந் தோளி படைக்கண்களே."

(திருக்கோவையார், 5.) (1091)

## 1092

கண்களவு கொள்ளும் சிறுநோக்கம் காமத்தில்
செம்பாகம் அன்று பெரிது. 2

(இதுவும் அது.)

**பரிமேலழகர்:** கண் களவு கொள்ளும் சிறு நோக்கம் – இவள் கண்கள் யான் காணாமல் என்மேல் நோக்குகின்ற அருகிய நோக்கம், காமத்தில் செம்பாகம் அன்று பெரிது - மெய்யுறு புணர்ச்சியின்[2] ஒத்த பாதி அளவு அன்று; அதனினும் மிகும்.

தான் நோக்கிய வழி நாணி இறைஞ்சியும், நோக்காவழி உற்று நோக்கியும்[3] வருதலால் களவு கொள்ளும் என்றும், அஃது உளதாம் காலம் சிறிதாகலின் சிறுநோக்கம் என்றும், அஃது உளப்பாடு உள்வழி நிகழ்வது ஆகலின் இனிப் புணர்தல் ஒருதலை என்பான் செம்பாகம் அன்று, பெரிது என்றும் கூறினன்.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** காமம் - வேண்டப்பட்ட பொருள்.

**பரிப்பெருமாள்:** களவு கொள்ளும் சிறு நோக்கம் - சோர்வு பார்த்து நோக்கும் நோக்கம். சிறு நோக்கமாவது பார்த்ததும் மீளுதல். இது மறைய நோக்குதல் உடம்பாடு என்றது.

**பரிதியார்:** சிறு நோக்கம் – கடைக்கணித்துப் பார்த்த பார்வை.

---

1. பொது நோக்கு: குறள், 1099.
2. காமம்-மெய்யுறு புணர்ச்சி; "காமம் ஒழிவ தாயினும்." (குறுந். 42: 1.)
3. குறள், 1094.

### ஒப்புமை

**கண்களவு கொள்ளும் சிறு நோக்கம்:**

"காசில் காமம் செப்பிக் கண்ணினல் இரப்பார்."

*(சீவக. 2549.)* *(1092)*

## 1093

நோக்கினள் நோக்கி இறைஞ்சினள் அஃதவள்
யாப்பினுள் அட்டிய நீர். 3

*(நோக்கினனும் நாணினனும் அறிந்தது.)*

**பரிமேலழகர்:** நோக்கினள் - யான் நோக்கா அளவில் தான் என்னை அன்போடு நோக்கினள்; நோக்கி இறைஞ்சினள் – நோக்கி ஒன்றனை உட்கொண்டு நாணி இறைஞ்சினள்; அஃது யாப்பினுள்[1] அட்டிய நீர் – அக்குறிப்பு இருவேமிடையும் தோன்றிய அன்புப்பயிர் வளர அதன்கண் அவள் வார்த்த நீர் ஆயிற்று.

அஃது என்னும் சுட்டுப்பெயர் அச் செய்கைக்கு ஏதுவாய குறிப்பின் மேல் நின்றது. யாப்பினன் ஆயதனை யாப்பு என்ருர்; ஏகதேச உருவகம்.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** தலைமகள் நாண் போகாமைக்குக் காரணம் கூறிய வாறும்.

**பரிப்பெருமாள்:** பந்தம் என்பதனை யாப்பு என்று கூறினர்.

**பரிதியார்:** யாப்பு - கட்டிய கட்டு.

### ஒப்புமைப் பகுதி

**யாப்பினுள் அட்டிய நீர்:**

"வளர்வதன், பாத்தியுள் நீர்சொரிந் தற்று." (குறள், 718.)

### குறிப்பு

யாப்பு - பாத்தி என்று கொள்வது பொருத்தம்.

*(1093)*

## 1094

யான்நோக்கும் காலை நிலன்நோக்கும் நோக்காக்கால்
தான்நோக்கி மெல்ல நகும். 4

*(நாணினனும் மகிழ்ச்சியினனும் அறிந்தது.)*

**பரிமேலழகர்:** யான் நோக்கும் காலை நிலன் நோக்கும் - யான் தன்னை நோக்குங்கால் தான் எதிர் நோக்காது இறைஞ்சி நிலத்தை நோக்கா நிற்கும்; நோக்காக்கால் தான் நோக்கி மெல்ல நகும் - அஃது அறிந்து யான் நோக்காக்கால் தான் என்னை நோக்கித் தன்னுள்ளே மகிழா நிற்கும்.

மெல்ல - வெளிப்படாமல். மகிழ்ச்சியால் புணர்தற் குறிப்பு இனிது விளங்கும். மெல்ல நகும் என்பதற்கு முறுவலிக்கும் என்று உரைப்பாரும் உளர்.

---

1. யாப்பு - அன்பு.

### மேற்கோள் விளக்கம்

புகுமுகம் புரிதல் என்னும் மெய்ப்பாடு வந்தது. (தொல். மெய்ப். 13, பேர்.)

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** மெல்ல நகுதல் - முகிழ்முகிழ்த்தல்.

**பரிப்பெருமாள்:** எதிர் நோக்காமல் உடன்படுதலாம் என்றது.

**பரிதியார்:** நகும் - சிரிக்கும்.

**காளிங்கர்:** நகும் - ஓர் புன்முறுவல் செய்யும்.

### ஒப்புமை

1. **தலைவன் நோக்குங்காலைத் தலைவி நிலன் நோக்குதல்:**

"இலங்குவளை செறியா இகுத்த நோக்கமொடு
நிலங்கிளை நினைவினை நின்றநிற் கண்டு" (அகநா. 39: 17-8.)

"தன்னையான் முகத்தை நோக்கின் தான்முலை முகத்தை நோக்கும்."
(சீவக. 1626.)

2. **முற்றும்:**

"பல்லூழ் பெயர்ந்தென்னை நோக்குமற் றியானோக்கின்
மெல்ல இறைஞ்சுந் தலை." (கலி. 61: 5-6.) (1094)

## 1095

குறிக்கொண்டு நோக்காமை அல்லால் ஒருகண்
சிறக்கணித்தாள் போல நகும். 5

(இதுவும் அது.)

**பரிமேலழகர் :** குறிக்கொண்டு நோக்காமை அல்லால் - நேரே குறிக்கொண்டு நோக்காத் துணையல்லது, ஒரு கண் சிறக்கணித்தாள் போல நகும் - ஒரு கண்ணைச் சிறங்கணித்தாள் போல என்னை நோக்கிப் பின் தன்னுள்ளே மகிழாநிற்கும்.

சிறக்கணித்தாள் என்பது செய்யுள் விகாரம். சிறங்கணித்தல் - சுருங்குதல். அதுதானும் வெளிப்பட நிகழாமையின், போல என்றான். நோக்கி என்பது சொல்லெச்சம். இனி இவளை எய்துதல் ஒருதலை என்பது குறிப்பெச்சம்.

### மேற்கோள் விளக்கம்

தன்கண் தோன்றிய மடம் நிலைக்களனாக நகை என்னும் மெய்ப்பாடு பிறந்தது. (தொல்.மெய்ப்.4, பேர்.)

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** சிறக்கணித்தாள் - உடம்பட்டாள்.

**பரிதியார்:** பராமுகம் பண்ணுமாப் போல ஒரு கண் கீழ்க்கணித்து நோக்கி.

**காளிங்கர்:** சிறக்கணித்தாள் போல - கடைக்கணித்தாள் போல.

**கவிராஜ பண்டிதர்:** ஒருகண் சிறக்கணித்தாள் போல-ஒரு கண்ணைச் சிமிட்டினாற்போல.

(1095)

## 1096

உருஅ தவர்போல் சொலினும் செருஅர்சொல்
ஒல்லை உணரப் படும். 6

(தோழி சேட்படுத்தவழி அவள் குறிப்பு அறிந்த தலைமகன் தன்னுள்ளே சொல்லியது.)

**பரிமேலழகர்:** உருஅதவர் போல் சொலினும் - புறத்து நொதுமலர் போலக் கடுஞ்சொல் சொன்னாராயினும், செருஅர் சொல் ஒல்லை உணரப் படும் - அகத்துச் செறுதல் இலாதார் சொல் பின்பயத்தல் குறையுற்றரால் கடிதின் அறியப்படும்.

கடுஞ் சொல் என்பது, 'இவ்விடம் காவல் மிகுதியுடைத்து; வரற்பாலிர் அல்லீர்' என்றல் முதலாயின. செருஅர் எனவே, அருளுடைமை பெறப்பட்டது. தன் குறை முடிக்கக் கருதியே சேட்படுக்கின்றமை குறிப்பான் அறிந்து உலகியல்மேல் இட்டுக் கூறியவாறு.

இது வருகின்ற பாட்டிற்கும் ஒக்கும்.

### மேற்கோள் விளக்கம்

பாங்கியிற் கூட்டத்தில் கிழவோன் ஆற்றுதலுக்கு மேற்கோள். (நம்பி. 146.)

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** இஃது உறுப்பினுல் இசைவுகாட்டி, உரையினுல் மறுப்பினும் உடன்படுதலாம் என்றது.

**பரிதியார்:** அயலார் போலே பார்த்தாலும் இன்பம் உள்ள ஆசைப் பார்வையாலே கூடுதற்கு இட்டம் என்று அறிக. (1096)

## 1097

செருஅச் சிறுசொல்லும் செற்றர்போல் நோக்கும்
உருஅர்போன் றுற்றர் குறிப்பு. 7

(இதுவும் அது.)

**பரிமேலழகர்:** செருஅ சிறு சொல்லும் - பின் இனிதாய் முன் இன்னதாய சொல்லும், செற்றர்போல் நோக்கும் - அகத்துச் செருதிருந்தே புறத்துச் செற்றர் போன்ற வெகுளி நோக்கும், உருஅர் போன்று உற்றர் குறிப்பு - நொதுமலர் போன்று நட்பாயினர்க்கு ஒரு குறிப்புப்பற்றி வருவன.

குறிப்பு: ஆகுபெயர். இவை உள்ளே ஒரு பயன் குறித்துச் செய்கின்றன; இயல்பு அல்ல ஆகலான், இவற்றிற்கு அஞ்ச வேண்டா என்பதாம்.

### உரை வேறுபாடு

**பரிப்பெருமாள்:** மேல் தலைமகன் கூறிய கடுஞ்சொல்லும் அதன்பின் கடுத்து நோக்கின நோக்கமும் குறித்து இவ்வாறு செய்யினும் அன்பு இன்மை தோற்றம் இல்லாமையின் உடம்பாடு என்று தேறியது.

**கவிராஜ பண்டிதர்:** செருஅ சிறுசொல் – பிறகு சிநேகம் பண்ண வேணுமென்று மனத்திலே நினைத்து முந்திக் கடின வார்த்தைகளைச் சொன்னது.

ஒப்புமை

**செற்றார் போல் நோக்கு:**

"ஊடிய மனத்தினர் உறுத நோக்கினர்......
ஆடவர் உயிரென அருகு போயினர்."

(கம்ப. எழுச்சிப். 22.) (*1097*)

**1098**

**அசையியற் குண்டாண்டோர் ஏஎர்யான் நோக்கப்
பசையினள் பைய நகும்.** 8

(தன்னை நோக்கி மகிழ்ந்த தலைமகளைக் கண்டு
தலைமகன் கூறியது.)

**பரிமேலழகர்:** யான் நோக்க பசையினள் பைய நகும் - என்னை அகற்றுகின்ற சொற்கு ஆற்றாது யான் இரந்து நோக்கிய வழி அஃது அறிந்து நெகிழ்ந்து உள்ளே மெல்ல நகாநின்றாள்; அசை இயற்கு ஆண்டு ஓர் ஏர் உண்டு - அதனால் நுடங்கிய இயல்பினை உடையாட்கு அந் நகையின் கண்ணே தோன்றுகின்றதோர் நன்மைக் குறிப்பு உண்டு.

ஏர்: ஆகுபெயர். அக் குறிப்பு இனிப் பழுதாகாது என்பதாம்.

உரை வேறுபாடு

**மணக்குடவர்:** ஏர் - அழகு. அழகு, தன்வடிவினுள் மிக்க குணம். பைய நகுதல் - ஓசைப்படாமல் நகுதல்.

**பரிதியார்:** அசை இயல் - அசைந்தாடும் மயில் போன்ற சாயலை உடையாள். (*1098*)

**1099**

**ஏதிலார் போலப் பொதுநோக்கு நோக்குதல்
காதலார் கண்ணே உள.** 9

(தோழி மதியுடம்படுவாள் தன்னுள்ளே சொல்லியது.)

**பரிமேலழகர்:** ஏதிலார் போல பொதுநோக்கு நோக்குதல் - முன் அறியாதார் போல ஒருவரை ஒருவர் பொது நோக்கத்தால் நோக்குதல், காதலார்கண்ணே உள்ள - இக் காதலை உடையார் கண்ணே உளவாகாநின்றன.

பொது நோக்கு - யாவர்மாட்டும் ஒருதன்மைத்தாய நோக்கு. நோக்குதல் தொழில் ஒன்றேயாயினும் இருவர்கண்ணும் நிகழ்தலானும், ஒருவன்கண் தானும் குறிப்பு வேறுபாட்டாற் பலவாமாகலானும், உள எனப் பன்மையால் கூறப்பட்டது. இருவரும், "மதுமறைந் துண்டோர் மகிழ்ச்சி போல, உள்ளத் துள்ளே மகிழ்"[1] தலின் அதுபற்றிக் காதலார் என்றும், அது புறத்து வெளிப்படாமையின் ஏதிலார் போல என்றும் கூறினள்.

உரை வேறுபாடு

**காளிங்கர்:** நெஞ்சமே, இங்ஙனம் குறிக்கொண்டு நோக்காது அயலார் போலப் பொதுநோக்கு நோக்குதலும் மற்று உள்ளத்துக் காதலுடையோர் மாட்டேயும் உள என்பது கண்டனம். அதனுள் முன்னர் ஒரு

1. இறையனார், 7, உரை, மேற்.

நோக்கு நோய் நோக்கன்றி யாம் அஞ்சியதூஉம் இனிமைக் கூறு என்பது சிறிது பயின்ற இடத்துத் தெளிந்தனம் என்று ஆற்ருமை சிறிது நீங்கினுன் தலைமகன். (*1099*)

## 1100

**கண்ணெடு கண்இணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்**
**என்ன பயனும் இல.** 10

*(இதுவும் அது.)*

**பரிமேலழகர் :** கண்ணெடு கண் இணை நோக்கு ஒக்கின் - காமத்திற் குரிய இருவருள் ஒருவர் கண்களொடு ஒருவர் கண்கள் நோக்கால் ஒக்குமாயின், வாய் சொற்கள் என்ன பயனும் இல - அவர் வாய்மை தோன்றச் சொல்லுகின்ற வாய்ச்சொற்கள் ஒரு பயனும் உடைய அல்ல.

நோக்கால் ஒத்தல், காதல் நோக்கினவாதல். வாய்ச்சொற்கள் - மனத்தின்கண் இன்றி வாயளவில் தோன்றுகின்ற சொற்கள். இருவர் சொல்லும் கேட்டு உலகியல்மேல் வைத்துக் கூறியவாறு. இருவர் சொல்லு மாவன: அவள் புனங்காவல்மேலும் அவன் வேட்டத்தின்மேலும் சொல்லுவன.

பயனில் சொற்களாகலின், இவை கொள்ளப்படா என்பதாம்.

### மேற்கோள் விளக்கம்

அகத்து நிகழ் வேட்கை கண்ணினுல் அறியக் கிடந்தது. (**தொல்.** களவு. 6, ந.)

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** இது சார்தலுறுகின்ற தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லியது.

**காளிங்கர்:** இதனுல் இயற்கைப்புணர்ச்சி எய்தினுன் தலைமகன் என்பதூஉம், மற்று அவள் இன்சொல் கேட்ட கருத்துண்மையும் புலப் பட்டவென அறிக.

### ஒப்புமை

*1.* **நோக்கு ஒத்தல்:**

"கண்ணெடு கண்ணிணை கௌவி ஒன்றைஒன், றுண்ணவும்."
(**கம்ப.** மிதிலை. 35.)

2. **வாய்ச் சொற்களால் பயன் இன்மை:**

"சொல்லும் ஆடுப கண்ணி னுனே." (**தொல்.** களவு. 23, ந. மேற்.)

"தூதுசெய் கண்கள்கொண் டொன்று பேசித்
தூமொழி இசைகள் கொண்டொன்று நோக்கி."
(**திருவாய்.** *9. 9: 9.*)

"கூற்றம் போலுங் கொலைக்கண்ணி னுலன்றி
மாற்றம் பேசுகி லாளை." (**கம்ப.** எழுச்சிப். 36.) (*1100*)

# 111. புணர்ச்சி மகிழ்தல்

**பரிமேலழகர்:** அஃதாவது, அங்ஙனம் குறிப்பறிந்து புணர்ந்த தலைமகன் அப்புணர்ச்சியினை மகிழ்ந்து கூறல். அதிகார முறைமையும் இதனானே விளங்கும்.

**பரிப்பெருமாள்:** இது தலைமகட்கு உரித்தன்றோ எனின், அவட்கும் ஒக்குமாயினும் அவள்மாட்டுக் குறிப்பினால் நிகழின் அல்லது கூற்றினால் நிகழாது என்க.

**1101**

கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியும் ஐம்புலனும்
ஒண்தொடி கண்ணே உள. 1

(இயற்கைப்புணர்ச்சி இறுதிக்கண் சொல்லியது.)

**பரிமேலழகர்:** கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று அறியும் ஐம்புலனும் - கண்ணால் கண்டும் செவியால் கேட்டும் நாவால் உண்டும் மூக்கால் மோந்தும் மெய்யால் தீண்டியும் அநுபவிக்கப்படும் ஐம்புலனும், ஒண் தொடி கண்ணே உள - இவ்வொள்ளிய தொடியை உடையாள்கண்ணே உளவாயின.

உம்மை, முற்றும்மை. தேற்றேகாரம், வேறிடத்து இன்மை விளக்கி நின்றது. வேறு வேறு காலங்களில் வேறு வேறு பொருள்களான் அநுபவிக்கப்படுவன ஒரு காலத்து இவள்கண்ணே அநுபவிக்கப்பட்டன என்பதாம். வடநூலார் இடக்கர்ப் பொருளவாகச் சொல்லிய புணர்ச்சித் தொழில்களும் ஈண்டு அடக்கிக் கூறப்பட்டன.

உரை வேறுபாடு

**பரிதியார்:** விளக்குக் கண்டு அழிந்த விட்டிலும், யாழ்கேட்டு அழிந்த அசுணமும், இரை கண்டு அழிந்த மீனும், செண்பகமணம் உண்டு அழிந்த வண்டும், மெய்யின்பம் கண்டு அழிந்த யானையும் ஒவ்வொரு புலனால் அழிந்தன. ஐம்புலனும் ஓரிடத்திலே கூடியதால் என் செய்யாது?

ஒப்புமை

**முற்றும்:**

"வாயினும் செவியினும் கண்ணினும் மூக்கினும்
மேதகு மெய்யினும் மோதல் இன்றி
உண்டும் கேட்டும் கண்டும் நாறியும்
உற்றும் மற்றிவை அற்றம் இன்றி
ஐம்புல வாயிலும் தம்புலம் பெருக
வைகல் தோறும் மெய்வகை தெரிவார்"

(பெருங். 3. 15: 64-9.)

"ஏலங் கமழ்குழல் ஏழை யவரன்ன
ஆலைக் கரும்பின் அகநா டணைந்தான்" (சீவக. 1613.)

'மகளிரைப் போலே ஐம்புலனுக்கும் வேண்டும்
பொருள்களை உடைய மத்திம தேசத்தைச் சேர்ந்தான் என்க.'
(ஷை ந. உரை.)

"கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே உளவென்று–பண்டையோர்
கட்டுரையை மேம்படுத்தாள்"
(திருக்கைலாய ஞானவுலா, 173-4.)

"கண்டுகேட் டுற்றுமோந் துண்டுழலும் ஐங்கருவி
கண்ட இன்பம் தெரிவரிய அளவில்லாச் சிற்றின்பம்"
(திருவாய். 4. 9: 10.)

"பண்டுநிகழ் பான்மையினால் பசுபதிதன் அருளாலே
வண்டமர்பூங் குழலாரை மணம்புணர்ந்த வன்றொண்டர்
புண்டரிகத் தவள்வனப்பைப் புறங்கண்ட தூநலத்தைச்
கண்டுகேட் டுண்டுயிர்த்துற் றமர்ந்திருந்தார் காதலினால்."
(பெரிய. 3426.)

"பொன்னின் சோதி போதினி னாற்றம் பொலிவேபோல்
தென்னுண் டேனிற் றீஞ்சுவை செஞ்சொற் கவியின்பம்
கன்னிம் மாடத் தும்பரின் மாடே களிபேடோ
டன்னம் மாடும் முன்றுறை கண்டங் கயனின்றார்."
(கம்ப. மிதிலைக்காட்சி. 23.) (1101)

## 1102

பிணிக்கு மருந்து பிறமன் அணிஇழை
தன்நோய்க்குத் தானே மருந்து. 2

(இடந்தலைப்பாட்டின்கண் சொல்லியது.)

**பரிமேலழகர்:** பிணிக்கு மருந்து பிற - வாதம் முதலிய பிணிகட்கு மருந்தாவன அவற்றிற்கு நிதானமாயினவன்றி மாறாய இயல்பினை உடையன வாம்; அணி இழை தன் நோய்க்கு மருந்து தானே - அவ்வாறன்றி இவ்வணி யிழையினை உடையாள் தன்னின் ஆய பிணிக்கு மருந்தும் தானே ஆயினாள்..

இயற்கைப் புணர்ச்சியை நினைந்து முன் வருந்தினான் ஆகலின் தன் னோய் என்றும், அவ் வருத்தம் தமியாளை இடத்து எதிர்ப்பட்டுத் தீர்ந்தான் ஆகலின் தானே மருந்து என்றும் கூறினான். இப் பிணியும் எளியவாய வற்றால் தீரப் பெற்றிலம் என்பது பட நின்றமையின், மன் ஒழியிசைக்கண் வந்தது.

### மேற்கோள் விளக்கம்

கு என்னும் நான்காம் வேற்றுமை உருபு பகைப் பொருளில் வந்தது. (நன். 297, மயிலை.)

### ஒப்புமை

**அணியிழை தன்னோய்க்குத் தானே மருந்து:**

"பெருந்தோட் குறுமகள் அல்லது
மருந்துபிறி தில்லையான் உற்ற நோய்க்கே"

"அருந்துயர் அவலம் தீர்க்கும்
மருந்துபிறி தில்லையான் உற்ற நோய்க்கே"
(நற். 80: 8-9, 140: 10-11.)

"கனைநர் இல் நோய்செய்யும் கவின்"

"நின்முகம் தான்பெறின் அல்லது கொன்னே
மருந்து பிறிதியாதும் இல்லேன்" (கலி. 58: 9, 60: 20-21.)

"மென்பனி எரிந்த தென்றல் இவனிலை விளம்ப லாமோ
அன்பெனும் விடமுண் டாரை ஆற்றலாம் மருந்து முண்டோ."

"மந்திரம் இல்லை வேறோர் மருந்தில்லை மையல் நோய்க்குச்
சுந்தரக் குமுதச் செவ்வாய் அமுதலால் அமுதச் சொல்லீர்.'
(கம்ப. மாரீசன். 100, மாயாசனகப். 16.) (1102)

## 1103

தாம்வீழ்வார் மென்றோள் துயிலின் இனிதுகொல்
தாமரைக் கண்ணான் உலகு. 3

(நிரதிசய இன்பத்திற்குரிய நீ இச் சிற்றின்பத்திற்கு இன்னை ஆதல் தகாது என்ற பாங்கற்குச் சொல்லியது.)

**பரிமேலழகர்:** தாம் வீழ்வார் மென் தோள் துயிலின் இனிது கொல் - ஐம்புலன்களையும் நுகர்வார்க்குத் தாம் விரும்பும் மகளிர் மெல்லிய தோளின் கண் துயிலும் துயில்போல வருந்தாமல் எய்தலாமோ, தாமரைக்கண்ணான் உலகு - அவற்றைத் துறந்த தவயோகிகள் எய்தும் செங்கண்மால் உலகம்?

ஐம்புலன்களையும் நுகர்வார் என்னும் பெயர் அவாய் நிலையான் வந்தது. இப் பெற்றித்தாய துயிலை விட்டுத் தவயோகங்களான் வருந்த வேண்டுதலின், எம்மனோர்க்கு ஆகாது என்னும் கருத்தால் இனிதுகொல் என்றான். இந்திரன் உலகு என்று உரைப்பாரும் உளர். தாமரைக் கண்ணான் என்பது அவனுக்குப் பெயரன்மையின், அஃது உரையன்மை யறிக.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** தாமரைக் கண்ணான் உலகு - இந்திரனது சுவர்க்கம்.

**காலிங்கர்:** தாமரைக் கண்ணான் உலகு - ஆயிரம் வேள்வியின் எய்துவாராக அருமறை கூறும் அயனுலகு ஆண்டு உறும் இன்பம்.

தாமரைக் கண்ணான் என்பது தாமரையிடத்தான் என்றது.

**கவிராஜ பண்டிதர்:** தாமரைக் கண்ணான் உலகு - சுவர்க்க லோகம்.

### ஒப்புமை

1. *தாம் வீழ்வார்:*

"தாம்வீழ்வார் ஆகம் தழுவுவோர்." (பரி. 10: 31.)

2. *தோள் துயில்:*

"வேய்புரை மென்தோள் இன் துயில்" (குறிஞ்சிப். 242.)

"அரிவை தோளிணைத் துஞ்சி" (குறுந். 323: 6.)

"வேயுறழ் மென்றோள் துயில்பெறும்" (கலி. 104: 24.)

"தோள்புலம் பகலத் துஞ்சி"

"முருந்தேர் முறுவல் இளையோள்
பெருந்தோள் இன்றுயில் கைவிடு கலனே."
(அகநா. 187: 1, 193: 13-4.)

3. முற்றும்:

"விரிதிரைப் பெருங்கடல் வளைஇய வுலகமும்
அரிதுபெறு சிறப்பிற் புத்தேள் நாடும்
இரண்டும் தூக்கிற் சீர்சா லாவே
பூப்போல் உண்கண் பொன்போன் மேனி
மாண்வரி யல்குற் குறுமகள்
தோண்மாறு படூஉம் வைகலொ டெமக்கே."

(குறுந். 101.) (1103)

## 1104

நீங்கின் தெறூஉம் குறுகுங்கால் தண்ணென்னும்
தீயாண்டுப் பெற்றாள் இவள். 4

(பாங்கற் கூட்டத்துக்கு இறுதிக்கண் சொல்லியது.)

**பரிமேலழகர்:** நீங்கின் தெறூஉம் குறுகுங்கால் தண் என்னும் தீ - தன்னை அகன்றுழிச் சுடாநிற்கும் அணுகுறின் குளிராநிற்கும் இப்பெற்றித் தாய தீயை, இவள் யாண்டு பெற்றாள் - என்கண் தருதற்கு இவள் எவ்வுலகத்துப் பெற்றாள்?

கூடாமுன் துன்புறுதலின் நீங்கின் தெறூஉம் என்றும், கூடிய பின் இன்புறுதலின் குறுகுங்கால் தண்ணென்னும் என்றும், இப் பெற்றியதோர் தீ உலகத்து இல்லையாம் ஆகலின் யாண்டுப் பெற்றாள் என்றும் கூறினான். தன் காமத்தீத்தன்மையே அவள் தந்தாளாகக் கூறினான், அவளான் அது வெளிப்படுதலின்.

### உரை வேறுபாடு

**பரிப் பெருமாள்:** இரண்டாம் கூட்டத்துக் கூடலுற்ற தலைமகன் தலைமகள் கேட்பது பயனாகத் தனது வேட்கை தோன்றச் சொல்லியது.

### மேற்கோள் விளக்கம்

இடந்தலைப் பாட்டில் தலைவியை நீங்கியவழிப் பிறந்த வருத்தம் தலைவன் கூறியது. (தொல். களவு. 11, ந.)

### ஒப்புமை

**காமத்தீ நீங்கில் தெறுதல்:**

குறள், 1159.

"அகலினும் அகலா தாகி
இகலுந் தோழிநங் காமத்துப் பகையே" (குறுந். 257: 5-6.)

"நீரின் தண்மையும் தீயின் வெம்மையும்
சாரச் சார்ந்து
தீரத் தீரும்
சார லுடன் கேண்மை
சாரச் சாரச் சார்ந்து
தீரத் தீரத் தீர்பொல் லாதே." (பழம்பாடல்.)

"நீருட், குளிப்பினும் காமம் சுடுமேகுன் றேறி
ஒளிப்பினும் காமம் சுடும்." (நாலடி. 90.)

"கவவிற் கமைந்த காமக் கனலி
அவவுறு நெஞ்சத் தகல்விடத் தழற்ற." (பெருங். 2. 18: 8-9.)

"நின், பிரிவி னும்சுடு மோபெருங் காடென்றாள்."

(கம்ப. நகர்நீங்கு. 226.) (1104)

## 1105

வேட்ட பொழுதின் அவைஅவை போலுமே
தோட்டார் கதுப்பினாள் தோள். 5

(தோழியிற் கூட்டத்து இறுதிக்கண் சொல்லியது.)

**பரிமேலழகர்:** வேட்ட பொழுதின் அவை அவை போலுமே - மிக இனியவாய பொருள்களைப் பெறாது அவற்றின்மேல் விருப்பம் கூர்ந்த பொழுதின்கண் அவை அவை தாமே வந்து இன்பம் செய்யுமாறு போல் இன்பம் செய்யும்; தோடு ஆர் கதுப்பினாள் தோள் - எப்பொழுதும் பெற்றுப் புணரினும், பூவினை அணிந்த தழைந்த கூந்தலினை உடையாள் தோள்கள்.

தோடு: ஆகுபெயர். இயற்கைப்புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற் கூட்டத்துக்கண் முன்னரே நிகழ்ந்திருக்கப் பின்னரும் புதியவாய் நெஞ்சம் பிணித்தலின், அவ் வாராமை பற்றி இவ்வாறு கூறினான்; தொழில் உவமம்.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** தோட்டாழ் கதுப்பினாள் - தோளின்கண் தாழ்ந்த கூந்தலினை உடையவள். தோள் தாழ் கதுப்பு[1] - புணர்ச்சிக்காலத்து அசைந்து தாழ்ந்த கூந்தல்.

**பரிதியார்:** ஆயிரம் யாகம் வேட்ட இன்பத்துக்கு அளவு என்றாலும் அதற்கு அகப்படா இன்பந்தான் நாயகியான் ஆயது.

### ஒப்புமை

1. *தோட்டார் கதுப்பினாள்:*

"தோட்டார் கதுப்பின்என் தோழி" (கலி. 117: 10.)

"தோட்டார் குழலியொடு." (சிலப். 15: 198.)

2. *முற்றும்:*

"வேட்டார்க்கு வேட்டனவே போன்றினிய வேய்மென்தோள்
பூட்டார் சிலைநுதலாட் புல்லா தொழியேனே."
(சீவக. 1042.) (1105)

## 1106

உறுதோ றுயிர்தளிர்ப்பத் தீண்டலால் பேதைக்
கமிழ்தின் இயன்றன தோள். 6

(இதுவும் அது.)

**பரிமேலழகர்:** உயிர் உறுதோறு தளிர்ப்ப தீண்டலால் - தன்னைப் பெறாது வாடிய என் உயிர் பெற்று உறுந்தோறும் தளிர்க்கும் வகை தீண்டுதலான், பேதைக்கு தோள் அமிழ்தின் இயன்றன - இப் பேதைக்குத் தோள்கள் தீண்டப்படுவதோர் அமிழ்தினால் செய்யப்பட்டன.

ஏதுவாகலான் தீண்டல் அமிழ்திற்கும் எய்திற்று. வாடிய உயிரைத் தளிர்ப்பித்தல் பற்றி, அவை அமிழ்தின் இயன்றன என்றான். தளிர்த்தல் - இன்பத்தால் தழைத்தல்.

---

1. தோட்டாழ் கதுப்பினாள் என்பது இவர் கொண்ட பாடம்.

மேற்கோள் விளக்கம்

எவ்வுறுப்பைத் தொட்டானேனும் தோள் தீண்டினன் என்றல். (தஞ்சை. 8, சொக்கப்ப நாவலர்.)

உரை வேறுபாடு

**பரிதியார்:** தென்றற் கொடுமையாலும் சந்திரன் கொடுமையாலும் வற்றின சரீரத்தை நாயகி தீண்டச் சரீரம் தளிர்க்கையினலே, நாயகிக்கு அமுதினல் பண்ணின தோள்.

ஒப்புமை

**தோளின் தன்மை:**

"நோயும் நெகிழ்ச்சியும் வீடச் சிறந்த
வேய்வனப் புற்ற தோளை நீயே." (நற். 82: 1-2.) (1106)

1107

தம்இல் இருந்து தமதுபாத் துண்டற்றல்
அம்மா அரிவை முயக்கு. 7

(இவளை நீ வரைந்துகொண்டு உலகோர் தம் இல் இருந்து தமது பாத்துண்ணும் இல்லறத்தோடு படல்வேண்டும் என்ற தோழிக்குச் சொல்லியது.)

**பரிமேலழகர்:** அம் மா அரிவை முயக்கு - அழகிய மாமை நிறத்தையுடைய[1] அரிவையது முயக்கம், தம் இல் இருந்து தமது பாத்து உண்டற்று - இன்பம் பயத்தற்கண் தமக்குரிய இல்லின்கண் இருந்து உலகோர் தம் தாளான் வந்த பொருளைத் தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல்கட்குப் பகுத்துத் தம் கூற்றை உண்டாற்[2] போலும்.

தொழிலுவமம். இல்லறம் செய்தார் எய்தும் துறக்கத்து இன்பம் எனக்கு இப் புணர்ச்சியே தரும் என வரைவுடன்பட்டான் கூறியவாறாயிற்று.

உரை வேறுபாடு

**பரிப்பெருமாள்:** உணவினும் அதனின் மிக்க இன்பம் தருவது இல்லை, புணர்ச்சியின் இதனின் மிக்க இன்பம் தருவது இல்லை என்று அதன் இனிமை கூறியது.

ஒப்புமை

1. **தம்மில் இருந்து தமது பாத்து உண்ணல்:**

"தம்மில் தமதுண் டன்ன" (குறுந். 83: 3.)

"தந்தமில் இருந்து தாமும் விருந்தொடும் தமரினேடும்
அந்தணர் முதலோர் உண்டி அயில்வுறும் அமலைத் தெங்கும்."
(கம்ப. நாட்டுப். 19.)

2. **அம்மா அரிவை:**

"அம்மா அரிவையும் வருமோ" (குறுந். 63: 3.)

"அரிமதர் மழைக்கண் அம்மா அரிவை."
(புறநா. 349: 5.) (1107)

1. மாமை - பெண்களுக்கு அழகு தரும் ஒரு நிறம்.
2. குறள், 43.

## 1108

வீழும் இருவர்க் கினிதே வளியிடை
போழப் படாஅ முயக்கு. 8

(ஒத்த அன்புடைய நுமக்கு ஒருபொழுதும் விடாத முயக்கமே இனியது என வரைவு கடாய தோழிக்குச் சொல்லியது.)

**பரிமேலழகர்:** நீ சொல்லுகின்றது ஒக்கும்; வளி இடை போழப்படாஅ முயக்கு - ஒரு பொழுதும் நெகிழாமையின் காற்றால் இடையறுக்கப்படாத முயக்கம், வீழும் இருவர்க்கு இனிதே - ஒருவரை ஒருவர் விழைவார் இருவர்க்கும் இனிதே.

முற்றும்மை விகாரத்தால் தொக்கது.[1] ஏகாரம் தேற்றத்தின்கண் வந்தது. ஈண்டு இருவர் இல்லை; இன்மையான் இஃது ஒவ்வாது என்பது கருத்து.

களவிற் புணர்ச்சியை மகிழ்ந்து வரைவுடன்படான் கூறியவாறு.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** இது புணர்ச்சி விருப்பினால் கூறினமையால் புணர்ச்சி மகிழ்தலாயிற்று. இது குறிப்பினால் புகழ்ந்தது.

**பரிப்பெருமாள்:** என்றது இடையறுதல் இல்லாத முயக்கம் என்றவாறாயிற்று. தோழியிற் கூடிய தலைமகன் பகற்குறியாயினும் இரவுக் குறியாயினும் ஒழுகா நின்றுழிக் காவலர் கடுகுதல், நிலவு வெளிப்பாடு, அல்ல குறி முதலாயினவற்றால் இடையீடுபட்ட தலைமகட்குத் தன்வயின் உரிமையும் அவன்வயிற் பரத்தமையும் தோற்ற ஊடற்குறிப்பினால் தலைமகன் கூறியது.

### ஒப்புமை

இடை போழப்படாத முயக்கு:

"மெய்யில் தீரா மேவரு காமம்."

"வார்முலை முற்றத்து நூலிடை விலங்கினும்
கவவுப்புலந் துறையும் கழிபெருங் காமத்து"

(அகநா. *28:1, 361: 5-6.*) *(1108)*

## 1109

ஊடல் உணர்தல் புணர்தல் இவைகாமம்
கூடியார் பெற்ற பயன்.

(கரத்தல் வேண்டாமையின் இடையறவு இல்லாத கூட்டமே இன்பப் பயன் உடைத்து என வரைவு கடாவியாட்குச் சொல்லியது.)

**பரிமேலழகர்:** ஊடல் உணர்தல் புணர்தல் இவை - புணர்ச்சி இனிதாதற் பொருட்டு வேண்டுவதாய ஊடலும், அதனை அளவறிந்து நீங்குதலும், அதன்பின் நிகழ்வதாய அப்புணர்ச்சி தானும் என இவை யன்றே, காமம் கூடியார் பெற்ற பயன் - வரைந்துகொண்டு காமத்தை இடைவிடாது எய்தியவர் பெற்ற பயன்கள்?

---

1. இருவர்க்கும் என்னும் உம்மை.

ஆடவர்க்குப் பிரிவு என்பதொன்று உளதாதல் மேலும், அதுதான் பரத்தையர்மாட்டாதலும் அதனை அறிந்து மகளிர் ஊடி நிற்றலும் அவ் வூடலைத் தவறு செய்தவர் தாமே தம் தவறின்மை கூறி நீக்கலும் பின்னும் அவ்விருவரும் ஒத்த அன்பினராய்க் கூடலுமன்றே முன் வரைந்தெய்தினர் பெற்ற பயன்? அப் பயன், இருதலைப் புள்ளின் ஓருயிராய[1] உழுவலன் புடைய எமக்கு வேண்டா என அவ் வரைந்தெய்தலை இகழ்ந்து கூறிய வாறு.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** ஊடற் குறிப்புத் தோன்ற நின்ற தலைமகளை ஊடல் தீர்த்துப் புணர்ந்த தலைமகன் அதனால் வந்த மகிழ்ச்சி கூறியது.

**பரிப்பெருமாள்:** இவையெல்லாம் தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லியனவும் தலைமகளே கேட்பது பயனாகச் சொல்லியனவும் என்று கொள்ளப்படும்.

### ஒப்புமை

முற்றும்:

"கட்கினியாள் காதலன் காதல் வகைபுனைவாள்
உட்குடையாள் ஊராண் இயல்பினாள்—உட்கி
இடனறிந்து ஊடி இனிதின் உணரும்
மடமொழி மாதராள் பெண்." (நாலடி. *384.*) *(1109)*

## 1110

**அறிதோ றறியாமை கண்டற்றால் காமம்**
**செறிதோறும் சேயிழை மாட்டு. 10**

**(புணர்ந்துடன் போகின்றான் தன்னுள்ளே சொல்லியது.)**

**பரிமேலழகர்:** அறிதோறு அறியாமை கண்டற்று - நூல்களானும் நுண்ணுணர்வானும் பொருள்களை அறிய அறிய முன்னை அறியாமை கண்டாற்போலக் காணப்படா நின்றது, சேயிழை மாட்டு செறிதோறும் காமம் - சிவந்த இழையினை உடையாளை இடைவிடாது செறியச் செறிய இவள் மாட்டுக் காதல்.

களவொழுக்கத்தில் பல இடையீடுகளான் எய்தப்பெறாது அவா வுற்றான் இதுபொழுது நிரந்தரமாக எய்தப் பெற்றமையின், செறிதோறும் என்றான். அறிவிற்கு எல்லையின்மையான் மேன்மேல் அறிய அறிய முன்னை அறிவு அறியாமையாய் முடியுமாறு போலச் செறிவிற்கு எல்லையின்றி மேன்மேல் செறியச் செறிய முன்னைச் செறிவு செறியாமையாய் முடியா நின்றது எனத் தன் ஆராமை கூறியவாறு. இப் புணர்ச்சி மகிழ்தல் தலை மகட்கும் உண்டேனும் அவள்மாட்டுக் குறிப்பான் நிகழ்வதல்லது கூற்றால் நிகழாமை அறிக.

### உரை வேறுபாடு

**காளிங்கர்:** நெஞ்சே, யாம் பலவகைப்பட்ட நூல்களையும் கற்று, அவற்றின் கருத்து அறியுந்தோறும் அறியுந்தோறும் மற்றது ஒழிந்த நன்னூலும் அவ்வாறு கற்று இனிது அறியப் பெருமையாகிய விரும்புதலை நெஞ்சில் கண்டு செல்கின்ற அதுவே போலும்.

1. அகநா. 12: 5.

ஒப்புமை

1. *அறிதோறு அறியாமை காண்டல்:*

"சொற்றொறும் சோர்வு படுதலால் சோர்வின்றிக்
கற்றொறும் கல்லாதேன் என்று வழியிரங்கி
உற்றொன்று சிந்தித்து உழன்றொன் றறியுமேல்
கற்றொறுந்தான் கல்லாத வாறு." *(பழமொழி, 332.)*

2. *முற்றும்:*

"உணர்ந்தார்க் குணர்வரி யோன்தில்லைச் சிற்றம் பலத்தொருத்தன்
குணந்தான் வெளிப்பட்ட கொவ்வைச்செவ் வாயிக்
கொடியிடைதோள்
புணர்ந்தாற் புணருந் தொறும்பெரும் போகம்பின் னும்புதிதாய்
மணந்தாழ் புரிகுழ லாளல்குல் போல வளர்கின்றதே."
(திருக்கோவையார், 9.) *(1110)*

# 112. நலம் புனைந்துரைத்தல்

**பரிமேலழகர்:** அஃதாவது, தலைமகன் தலைமகள் நலத்தைப் புனைந்து சொல்லியது. இது புணர்ச்சி மகிழ்ந்துழி நிகழ்வதாகலின், புணர்ச்சி மகிழ்தலின்பின் வைக்கப்பட்டது.

**மணக்குடவர்:** புனைந்துரை எனினும், பாராட்டு எனினும், கொண்டாட்டு எனினும், மகிழ்ச்சி எனினும் ஒக்கும்.

**பரிப்பெருமாள்:** புணர்ச்சியால் மகிழ்வுற்ற தலைமகன் பிரியக் கருதின காலத்துப் புணராதமுன் நின்ற வேட்கை புணர்ந்த பின்னும் அப் பெற்றியே நிற்றலின், 'இத் தன்மையாளை யாங்ஙனம் பிரிந்து ஆற்றுகேம்!' என்னும் கவர்ச்சியால் நெஞ்சுமிக்கது வாய் சோர்ந்து தன்னை அவள் காணுமல், தான் அவளைக் காண்பதோர் அணுமைக்கண் நின்று பாராட்டுகின்றானதலின் பிற் கூறப்பட்டது. இவ்வாறு கூறுதலானே தலைமகற்குச் சிறிது வேட்கை தணியும். இதனைத் தலைமகள் கேட்டலினாலே, 'இவன் அன்புடையன் கொல்லோ?' என்றும், 'இப் புணர்ச்சி இன்னும் கூடுமோ?' என்றும் சொல்கின்ற கவர்ச்சி நீங்கும்.

### 1111

**நன்னீரை வாழி அனிச்சமே நின்னினும்**
**மென்னீரள் யாம்வீழ் பவள். 1**

(இயற்கைப் புணர்ச்சி இறுதிக்கண் சொல்லியது.)

**பரிமேலழகர்:** அனிச்சமே வாழி நல் நீரை - அனிச்சப்பூவே, வாழ்வாயாக; மென்மையால் நீ எல்லாப் பூவினும் நல்ல இயற்கையை உடையை; **யாம் வீழ்பவள் நின்னினும் மெல் நீரள்** - அங்ஙனமாயினும், எம்மால் விரும்பப்பட்டவள் நின்னினும் மெல்லிய இயற்கையை உடையள்.

அனிச்சம்: ஆகுபெயர். வாழி என்பது உடன்பாட்டுக் குறிப்பு. இனி யானே மெல்லியன் என்னும் தருக்கினை ஒழிவாயாக என்பதாம். அது பொழுது உற்றறிந்தான் ஆகலின், ஊற்றினிமையையே பாராட்டினான். இன்னீரள் என்று பாடம் ஓதுவாரும் உளர்.

மேற்கோள் விளக்கம்

அஃறிணை யிடத்துக் கேளாதவற்றைக் கேட்பன போலச் சொல்வது மரபு. (நன். 408, மயிலை.)

உரை வேறுபாடு

மணக்குடவர்: இஃது உடம்பினது நுண்மை கூறிற்று. (1111)

1112

மலர்காணின் மையாத்தி நெஞ்சே இவள்கண்
பலர்காணும் பூஒக்கும் என்று. 2

(இடந்தலைப்பாட்டின்கண் சொல்லியது.)

பரிமேலழகர்: நெஞ்சே - நெஞ்சே, இவள் கண் பலர் காணும் பூ ஒக்கும் என்று - யானே காணப்பெற்ற இவள் கண்களைப் பலரானும் காணப் படும் பூக்கள் ஒக்கும் என்று கருதி, மலர் காணின் மையாத்தி - தாமரை, குவளை, நீலம் முதலிய மலர்களைக் கண்டால் மயங்கா நின்றாய்; நின் அறிவு இருந்தவாறு என்!

மையாத்தல் - ஈண்டு ஒவ்வாதவற்றை ஒக்கும் எனக் கோடல்; இறுமாத்தல், செம்மாத்தல் என்பன போல ஒருசொல். இயற்கைப் புணர்ச்சி நீக்கம் முதலாகத் தலைமகள் கண்களைக் காணப்பெறுமையின் அவற்றோடு ஒருபுடை ஒக்கும் மலர்களைக் கண்டுழி யெல்லாம் அவற்றின்கண் காதல் செய்து போந்தான், இதுபொழுது அக் கண்களின் நலம் முழுதும் தானே தமியாளை இடத்து எதிர்ப்பட்டு அநுபவித்தான் ஆகலின், அம் மலர்கள் ஒவ்வாமை கண்டு ஒப்புமை கருதிய நெஞ்சை இகழ்ந்து கூறியவாறு.

மேற்கோள் விளக்கம்

புகழ்தலுவமை வந்தது. (வீரசோழியம், 156, பெருந்.)

உரை வேறுபாடு

மணக்குடவர்: இது கண் பூவினது நிறம் ஒக்குமாயினும், குணம் ஒவ்வாது என்று கூறிற்று.

பரிதியார்: நெஞ்சே, தாமரை செங்கழுநீர் இவற்றைக் கண்டால் மயங்குகின்றாய். அவைகள் நாயகி கண்ணைக் கண்டால் நாணும். நாயகி கண்போலே வண்ணம் பெற்றோம், விரகப்பார்வை அறியோம் என்று தலையிறக்கிடும். (1112)

1113

முறிமேனி முத்தம் முறுவல் வெறிநாற்றம்
வேல்உண்கண் வேய்த்தோ ளவட்கு. 3

(கூட்டுதலுற்ற பாங்கற்குத் தலைமகன் தலைமகளது இயல்பு கூறியது.)

பரிமேலழகர்; வேய்த்தோளவட்கு - வேய்போலும் தோளினையுடைய வட்கு, மேனி முறி - நிறம் தளிர் நிறமாய் இருக்கும்; முறுவல் முத்தம் - பல்லு முத்தமாய் இருக்கும்; நாற்றம் வெறி - இயல்பாய நாற்றம் நறுநாற்றமாய் இருக்கும்; உண் கண் வேல் - உண்கண்கள் வேலாய் இருக்கும்.

பெயர் அடையானும் ஓர் இயல்பு கூறப்பட்டது.[1] முறி, முறுவல் என்பன ஆகுபெயர். உருவக வகையால் கூறினமையின் புனைந்துரை ஆயிற்று.

நின்னல் கருதப்பட்டாளை அறியேன் என்று சேட்படுத்த தோழிக்குத் தலைமகன் சொல்லியதூஉம்ஆம்.

### உரை வேறுபாடு

**பரிதியார்:** வெறி நாற்றம் - தாமரைப்பூ நாற்றம்.

**காளிங்கர்:** நெஞ்சுக்குக் கூறியதாகக் கொள்வர்.

### மேற்கோள் விளக்கம்

'வேய்த் தோளாட்கு முறிபோலும் மேனி; முத்தம் போலும் முறுவல்; தெய்வ மணம் போலும் இயற்கை நாற்றம்; வேல் போலும் கண்' என விரித்தால் உணராதானை, 'இதன் பொருள் வேய்த் தோளாட்குத் தளிரினது நிறத்தை ஒக்கும் நிறம்; முத்தினது நிறத்தை ஒக்கும் பல்லு; தெய்வ மணத்தை ஒக்கும் இயல்பான நாற்றம்; வேலினது கொலைத் தொழிலை ஒக்கும் கண் என்றவாறு காண்' என ஒப்பு என்னும் வழக்கு வாசகத்தால், செய்யும் என்னும் குறிப்பு முற்று வாசகம் தோன்ற உணர்த்துக. இனி முறிமேனி முதலியன உருவகமாம் எனின், ஆசிரியர்க்கு உருவகமும் உவமையாமாறு ஆண்டு உணர்க. (தொல். எச்ச. 18, ந.)

### ஒப்புமை

முறி மேனி:

"நறிய நல்லோள் மேனி
முறியினும் வாய்வது."

"துளிதலைத் தலைஇய தளிரன் னோளே."

(குறுந். 62: 4-5, 222: 7.) (1113)

## 1114

காணின் குவளை கவிழ்ந்து நிலன்நோக்கும்
மாணிழை கண்ஒவ்வேம் என்று. 4

(பாங்கற்கூட்டத்துச் சென்று சார்தலுறுவான் சொல்லியது.)

**பரிமேலழகர் :** குவளை - குவளைப் பூக்கள்தாமும், காணின் - காண்டல் தொழிலை உடையவாயின், மாண் இழை கண் ஒவ்வேம் என்று கவிழ்ந்து நிலன் நோக்கும் - மாண்ட இழையினை உடையாள் கண்களை யாம் ஒவ்வேம் என்று கருதி அந் நாணினால் இறைஞ்சி நிலத்தினை நோக்கும்.

பண்பானேயன்றித் தொழிலானும் ஒவ்வாது என்பான் காணின் என்றும், கண்டால் அவ்வொவ்வாமையால் நாணுடைத்தாம் என்பது தோன்றக் கவிழ்ந்து என்றும் கூறினான். காட்சியும் நாணும் இன்மையின் செம்மாந்து வானை நோக்கின என்பதாம். (1114)

1. வேய்த்தோளவள் என்பதனால் அவள் தோள் மூங்கிலைப் போன்றது என்ற இயல்பு பெறப்பட்டது.

### 1115

அனிச்சப்பூக் கால்களையாள் பெய்தாள் நுசுப்பிற்கு
நல்ல படாஅ பறை. 5

(பகற்குறிக்கண் பூவணி கண்டு சொல்லியது.)

**பரிமேலழகர் :** அனிச்சப்பூ கால் களையாள் பெய்தாள் - இவள் தன் மென்மை கருதாது அனிச்சப்பூவை முகிழ் களையாது சூடினள்; நுசுப்பிற்கு நல்ல பறை படா - இனி இவள் இடைக்கு நல்ல பறைகள் ஒலியா.

அம் முகிழ்ப்பாரம் பொறாமையின் இடை முரியும்; முரிந்தால் அதற்குச் செத்தார்க்குரிய நெய்தற்பறையே படுவது என்பதாம். மக்கட்குரிய சாக்காடும் பறைபடுதலும் இலக்கணைக் குறிப்பால் நுசுப்பின்மேல் ஏற்றப் பட்டன.

#### குறிப்பு

அனிச்சம்பூ மிக மென்மையானது; அதன் காம்பு அவளுக்குப் பாரம் ஆயிற்று என்று இடையின் நுட்பத்தை வியந்தான். *(1115)*

### 1116

மதியும் மடந்தை முகனும் அறியா
பதியிற் கலங்கிய மீன். 6

(இரவுக் குறிக்கண் மதி கண்டு சொல்லியது.)

**பரிமேலழகர் :** மீன் - வானத்து மீன்கள், மதியும் மடந்தை முகனும் அறியா - வேறுபாடு பெரிதாகவும் தம் மதியினையும் எம் மடந்தை முகத்தினையும் இது மதி இது முகம் என்று அறிய மாட்டாது, பதியின் கலங்கிய - தம் நிலையினின்றும் கலங்கித் திரியாநின்றன.

ஓரிடத்து நில்லாது எப்பொழுதும் இயங்குதல் பற்றிப் பதியின் கலங்கிய என்றான். வேறுபாடு, வருகின்ற பாட்டால் பெறப்படும். இனி இரண்டனையும் பதியின் கலங்காத மீன்கள் அறியும் அல்லது கலங்கின மீன்கள் அறியா என்று உரைப்பினும் அமையும்.

#### உரை வேறுபாடு

**பரிதியார்:** பதியின் கலங்கிய - பதியிலும் வேறேயாய் அலைந்தன.

**காளிங்கர்:** மீன்களானவை அம் மதியைப் போல மதியில.

**கவிராஜ பண்டிதர்:** மதியும் - தங்களுக்குப் பதியாயிருக்கிற சந்திரனையும். *(1116)*

### 1117

அறுவாய் நிறைந்த அவிர்மதிக்குப் போல
மறுஉண்டோ மாதர் முகத்து. 7

(இதுவும் அது.)

**பரிமேலழகர் :** அம் மீன்கள் அங்ஙனம் கலங்குதற்குக் காரணம் யாது? அறு வாய் நிறைந்த அவிர் மதிக்கு போல-முன் குறைந்த இடம் வந்து நிரம்பியே விளங்கும் மதிக்கண் போல, மாதர் முகத்து மறு உண்டோ - இம் மாதர் முகத்து மறு உண்டோ?

இடம் - கலை. மதிக்கு என்பது வேற்றுமை மயக்கம். தேய்தலும் வளர்தலும் மறுவுடைமையும் இன்மை பற்றி வேறுபாடு அறியலாய் இருக்க, அறிந்திலை என இகழ்ந்து கூறியவாறு.

**மேற்கோள் விளக்கம்**

உவமையைப் பழித்தலால் பழிப்புவமை என்னும் அணி வந்தது. (விர. *156*, பெருந்.)

**ஒப்புமை**

மறுவில்லா மதி முகத்துக்கு:

"மையின் மதியின் விளங்கும் முகத்தாரை" *(கலி. 62: 14.)*

"முயற்க ருங்கறை நீங்கிய மொய்ம்மதி
அயர்க்கும் வாண்முகத் தாரமு தன்னவர்."
*(கம்ப. ஊர்தேடு. 168.)* ***(1117)***

**1118**

மாதர் முகம்போல் ஒளிவிட வல்லையேல்
காதலை வாழி மதி. 8

*(இதுவும் அது.)*

**பரிமேலழகர்:** மதி வாழி - மதியே, வாழ்வாயாக! **மாதர் முகம்போல்** ஒளிவிட வல்லையேல் காதலை - இம் மாதர் முகம்போல யான் மகிழும் வகை ஒளி வீச வல்லையாயின், நீயும் என் காதலை உடையை ஆதி.[1]

'மறுவுடைமையின் அது மாட்டாய்; மாட்டாமையின் என்னால் காத லிக்கவும் படாய்' என்பதாம். வாழி என்பது இகழ்ச்சிக் குறிப்பு.

**மேற்கோள் விளக்கம்**

ஒவ்வாது எனக் கூறுதலும் உவமையின் வகை. (தொல். உவம. 33, பேர்.)

**உரை வேறுபாடு**

**மணக்குடவர்:** வாழி : அசை.

**காளிங்கர்:** காதலை - சால அழகியை. *(1118)*

**1119**

மலர்அன்ன கண்ணாள் முகம்ஒத்தி ஆயின்
பலர்காணத் தோன்றல் மதி. 9

*(இதுவும் அது.)*

**பரிமேலழகர்:** மதி - மதியே, மலர் அன்ன கண்ணாள் முகம் ஒத்தி ஆயின் - இம் மலர்போலும் கண்ணினை உடையாள் முகத்தை நீ ஒக்க வேண்டுதியாயின், பலர் காண தோன்றல் - இதுபோல யான் காணத் தோன்று; பலர் காணத் தோன்றாதொழி.

தானே முகத்தின் நலம் முழுதும் கண்டு அநுபவித்தானாகலின் ஈண்டுப் பலர் காணத் தோன்றலை இழித்துக் கூறினான். தோன்றின் நினக்கு அவ் வொப்பு உண்டாகாது என்பதாம்.

---

1. ஆதி - ஆவாய்.

உரை வேறுபாடு

**மணக்குடவர்:** இது மதி ஒளியும் வடிவும் ஒத்ததாயினும், குணத்தினாலே ஒவ்வாது என்றது.

**பரிதியார்:** மலர் அன்ன - செங்கழுநீர் போலும்.

**காளிங்கர்:** மலர் - குவளை மலர்.

ஒப்புமை

**மலரன்ன கண்ணாள்:** குறள், *1142.* *(1119)*

## 1120

அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர்
அடிக்கு நெருஞ்சிப் பழம். 10

(உடன்போக்கு உரைத்த தோழிக்கு அதனது
அருமை கூறி மறுத்தது.)

**பரிமேலழகர்:** அனிச்சமும் அன்னத்தின் தூவியும் - உலகத்தாரான் மென்மைக்கு எடுக்கப்பட்ட அனிச்சப்பூவும் அன்னப் புள்ளின் சிறகும் ஆகிய இரண்டும், மாதர் அடிக்கு நெருஞ்சிப் பழம் - மாதர் அடிக்கு நெருஞ்சிப்பழம் போல வருத்தம் செய்யும்.

முள் வலிதாதல் உடைமையின் பழம் என்றான். இத் தன்மைத்தாய அடி, "பாத்தி யன்ன குடுமிக் கூர்ங்கற்"[1] களையுடைய வெஞ்சுரத்தை யாங்ஙனம் கடக்கும் என்பது குறிப்பால் பெறப்பட்டது. செம்பொருளேயன்றிக் குறிப்புப் பொருளும் அடிநலன் அழியாமையாகலின், இதுவும் இவ் வதிகாரத்த தாயிற்று.

உரை வேறுபாடு

**காளிங்கர்:** நெஞ்சை நோக்கிக் கூறியதென்பர்.

ஒப்புமை

1. **மகளிர் அடிகள் அனிச்ச மலரினும் மெல்லியவை:**

"அனித்த மிதிப்பினும் பனித்தல் ஆனா
ஒளிச்செஞ் சீறடி" (பெருங். *1:53, 162-3.*)

"............தில்லைத் தண் அனிச்சப்
பூமேல் மிதிக்கின் பதைத்தடி பொங்கும் நங்காய்"
(திருச்சிற். *228.*)

"ஐயவாம் அனிச்சப் போதின் அதிகமும் நொய்ய
...........பாதம்"

"தாருடை மலரினும் ஒதுங்கத் தக்கிலா
வாருடை முலையொடு." (கம்ப. கோலங்காண். 14, தைலமாட்டு. 22.)

2. **மகளிர் அடிகள் அனிச்சமலர், அன்னத்தூவி இரண்டினும் மெல்லிய வாதல்:**

"அம்மெல் அனிச்ச மலரும் அன்னத் தூவியும்
வெம்மை யாமென் றஞ்சி மெல்ல மிதியாத
பொம்மென் நிலவப் பூம்போ தனளின் அடி" (சீவக. *2454.*)

3. **அனிச்சம் மகளிர் அடிக்கு நெருஞ்சிப் பழமாதல்:**

"பஞ்சியட ரனிச்சம் நெருஞ்சி யீன்ற பழமாலென்
றஞ்சுமல ரடிகள்." (சீவக. *341.*) *(1120)*

---

1. அகநா. 5:13.

# 113. காதற் சிறப்பு உரைத்தல்

பரிமேலழகர்: அஃதாவது, தலைமகன் தன் காதல் மிகுதி கூறலும், தலைமகள் தன் காதல் மிகுதி கூறலும் ஆம். இது புணர்ச்சியும் நலனும் பற்றி நிகழ்வது ஆகலின், புணர்ச்சி மகிழ்தல், நலம் புனைந்து உரைத்தல் களின்பின் வைக்கப்பட்டது.

1121

பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
வால்எயி றூறிய நீர். 1

(இயற்கைப் புணர்ச்சி இறுதிக்கண் தலைமகன்
தன் நயப்பு உணர்த்தியது.)

பரிமேலழகர்: பணிமொழி வால் எயிறு ஊறிய நீர் - இம் மெல்லிய மொழியினை உடையாளது வாலிய எயிறு ஊறிய நீர், பாலொடு தேன் கலந் தற்று - பாலுடனே தேனைக் கலந்த கலவை போலும்.

கலந்ததற்று என்பது விகாரம் ஆயிற்று.[1] கலக்கப்பட்டது என்ற வாறு. பாலொடு தேன் என்ற அதனால் அதன் சுவை போலும் சுவையினை உடைத்து என்பது ஆயிற்று. 'எயிறு ஊறிய' என இடத்து நிகழ் பொருளின் தொழில் இடத்தின்மேல் நின்றது. வேறு வேறு அறியப்பட்ட சுவையவாய பாலும் தேனும் கலந்துழி அக் கலவை இன்னது என்று அறிய லாகாத இன்சுவைத்தாம் ஆகலின், அது பொருளாகிய நீர்க்கும் எய்துவிக்க.

உரை வேறுபாடு

மணக்குடவர்: பணிமொழி - இனிமை தரும் புகழினையுடையாளது. இது புணர்ச்சி யுண்மையும் காதல் மிகுதியும் தோன்றத் தலைமகன் கூறியது.

பரிப்பெருமாள்: இஃது இரந்து பின்னின்ற தலைமகனை நோக்கி, நீர் பெரியீர் ஆதலானே எமது புணர்ச்சி நுமக்கு இன்பம் தரவற்றோ என்ற தோழிக்குத் தனது புணர்ச்சி யுண்மையும் காதல் மிகுதியும் தோற்றத் தலைமகன் கூறியது.

ஒப்புமை

1. பாலொடு தேன் கலத்தல்:

"பிரசங் கலந்த வொண்சுவைத் தீம்பால்"
"தேனொடு தீம்பால்" (நற். 110:1, 179:5-6.)
"தேன்மயங்கு பாலினும்" (ஐங். 203:2.)
"தேன்பெய்து, அளவுறு தீம்பால்"
"தேன்கலந் தளைஇய தீம்பால்" (அகநா. 89:19-20, 207:14.)
"பால்மடுத்துத் தீங்தேன் பருகுவாள்"
"தேனிற் பாலென" (சீவக. 1044, 1761.)
"தேனும் பாலும் கலந்தன்னவர்." (பெரிய திருமொழி. 5. 4:8.)

1. 'எண்ணிக் கொண்டற்று' (குறள், 22) என்னுமிடத்தில் கொண்டா லென்னும் வினையெச்சம் கொண்டெனத் திரிந்து நின்றது என்று எழுதினர். 'கவர்ந் தற்று' (100) என்னுமிடத்தில் 'கவர்ந்ததனோடு ஒக்கும்' என்று உரைத்தார்.

2. வாலெயிறூறிய நீர்:

"வாலெயி றூறிய வசையில் தீநீர்" (குறுந். 267:4.)

"வாலெயி றூறிய நீரே." (அகநா. 237:17.)

3. முற்றும்:

"பானிலத் துறையும் தீங்தேன் அனையவாய் அமிர்தம் ஊற
மானலங் கொண்ட நோக்கி மகன்மன மகிழச் சொன்னாள்."
(சீவக. 1915.) (1121)

**1122**

உடம்பொ டுயிரிடை என்னமற் றன்ன
மடந்தையொ டெம்மிடை நட்பு. 2

(பிரிவு அச்சம் கூறியது.)

பரிமேலழகர்: உடம்பொடு உயிரிடை என்ன அன்ன - உடம்போடு உயிரிடை உளவாய நட்புக்கள் எத்தன்மைய அத்தன்மைய, மடந்தையொடு எம்மிடை நட்பு - இம் மடந்தையோடு எம்மிடை உளவாய நட்புக்கள்.

என்ன எனப் பன்மையால் கூறியது, இரண்டும் தொன்று தொட்டு வேற்றுமை இன்றிக் கலந்து வருதல்,[1] இன்பத் துன்பங்கள் ஒக்க அநுபவித்தல், இன்றியமையாமை என்று இவற்றை நோக்கி. தெய்வப் புணர்ச்சி ஆகலான் அதுபொழுது உணர்ச்சி இலளாகியாள் பின் உடையளாமன்றே; ஆயவழி, இவன் யாவன்கொல் எனவும், என்கண் அன்புடையன்கொல் எனவும் அவள் மனத்தின்கண் நிகழும்; அந் நிகழ்வனவற்றைக் குறிப்பான் அறிந்து அவை தீரக் கூறியவாறு.

என்னை என்று பாடம் ஓதுவாரும் உளர்.

உரை வேறுபாடு

காளிங்கர்: இது வினவிய பாங்கற்குத் தலைமகன் கூறியது.

ஒப்புமை

உடம்பொ டுயிரிடை நட்பு: குறள், 338. (1122)

**1123**

கருமணியில் பாவாய்நீ போதாய்யாம் வீழும்
திருநுதற் கில்லை இடம். 3

(இடந்தலைப்பாட்டின்கண் தலைமகன் நீக்கத்துச் சொல்லியது.)

பரிமேலழகர்: கருமணியில் பாவாய் நீ போதாய் - என் கண்ணின் கருமணியின்கண் உறையும் பாவாய், நீ அங்குநின்றும் போதருவாயாக; யாம் வீழும் திருநுதற்கு இடம் இல்லை - போதராது இருத்தியாயின் எம்மால் விரும்பப்பட்ட திருநுதலை உடையாட்கு இருக்க இடம் இல்லையாம்.

யான் காணாது அமையாமையின், இவள் புறத்துப் போகற்பாலள் அன்றி என்கண்ணுள் இருக்கற்பாலள்; இருக்குங்கால் நின்னோடு ஒருங்கு இருக்க இடம் போதாமையின் நின்னினும் சிறந்த இவட்கு அவ் விடத்தைக் கொடுத்து நீ போதுவாயாக என்பதாம்.

---

1. தலைவன் தலைவியிடையே உள்ள நட்புத் தொன்றுதொட்டு வருவதென்பதை, "பயிலியது கெழீஇய நட்பின்" (குறுந். 2) என்பதனாலும் உணரலாம்.

உரை வேறுபாடு

பரிப் பெருமாள்: இஃது இரண்டாம் கூட்டத்து எதிர்ப்பட்ட தலைமகன் தலைமகளது நாணம் நீங்குதற்பொருட்டு அவளது கவின் தனது கண் நிறைந்தது என்று தலைமகள் கேட்பச் சொல்லியது.

ஒப்புமை

கருமணியிற் பாவை:

"மணிவாழ் பாவை நடைகற் றன்ன" (நற். 184:7.)

"பாவை மாய்த்த பனிநீர்" (அகநா. 5:21.)

"கண்ணிற் கருமணியே மணியாடு பாவாய்."
(அப்பர். ஆவடுதுறை, 1.) (1123)

1124

வாழ்தல் உயிர்க்கன்னள் ஆயிழை சாதல்
அதற்கன்னள் நீங்கும் இடத்து. 4

(பகற்குறிக்கண் புணர்ந்து நீங்குவான் சொல்லியது.)

பரிமேலழகர்: ஆய் இழை உயிர்க்கு வாழ்தல் அன்னள் - தெரிந்த இழையினை உடையாள் எனக்குப் புணரும் இடத்து உயிர்க்கு உடம்போடு கூடி வாழ்தல் போலும்; நீங்கும் இடத்து அதற்கு சாதல் அன்னள் - பிரியும் இடத்து அதற்கு அதனின் நீங்கிப் போதல் போலும்.

எனக்கு என்பதும் புணரும் இடத்து என்பதும் அவாய்நிலையான் வந்தன. வாழுங் காலத்து வேற்றுமை இன்றி வழிநிற்றலானும், சாம் காலத்து வருத்தம் செய்தலானும் அவற்றை அவள் புணர்வு பிரிவுகட்கு உவமையாக்கினன்.

உரை வேறுபாடு

மணக்குடவர்: இஃது இரண்டாம் கூட்டத்துப் புணர்ந்து நீங்கான் என்று கருதிய தலைமகள் கேட்பத் தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லியது. (1124)

1125

உள்ளுவன் மன்யான் மறப்பின் மறப்பறியேன்
ஒள் அமர்க் கண்ணாள் குணம். 5

(ஒருவழித் தணந்துவந்த தலைமகன், 'நீயிர் தணந்தஞான்று எம்மை உள்ளியும் அறிதிரோ?' என்ற தோழிக்குச் சொல்லியது.)

பரிமேலழகர்: ஒள் அமர் கண்ணாள் குணம் யான் மறப்பின் உள்ளுவன் - ஒள்ளியவாய் அமரைச் செய்யும் கண்ணினை உடையாள் குணங்களை யான் மறந்தேனாயின், நினைப்பேன்; மறப்பு அறியேன் - ஒரு பொழுதும் மறத்தலை அறியேன்; ஆகலான் நினைத்தலையும் அறியேன்.

மன்: ஒழியிசைக்கண் வந்தது. குணங்கள் - நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு முதலாயின. இத்துணையும் தலைமகன் கூற்று; மேல் தலைமகள் கூற்று.

உரை வேறுபாடு

பரிப்பெருமாள்: காதல் மிக்கார்க்குத் தான் ... தலிக்கப்பட்டாரை ஒழிவின்றி நினைதலும், அவர் தம்மாட்டு இல்லாத காலத்தினும் கண் முன்னுய்க் காண்டலும், உண்ணுமையும், உறங்காமையும், கோலஞ் செய்யாமையும் உளவாம் அன்றே. அவை ஐந்தும் ஈண்டுக் கூறப்படுகின்றன. (1125)

1126

கண்ணுள்ளின் போகார் இமைப்பின் பருவரார்
நுண்ணியர்எம் காத லவர். 6

(ஒருவழித் தணப்பின்கண் தலைமகனைத் தோழி இயற்பழிக்கும் என்று அஞ்சி அவள் கேட்பத் தன்னுள்ளே சொல்லியது.)

பரிமேலழகர்: (தாம் காணுமை பற்றிச் சேய்மைக்கண் போயினுர் என்று கருதுவார் கருதுக;) எம் காதலவர் கண்ணுள்ளின் போகார் - எம்முடைய காதலர் எம் கண்ணகத்து நின்றும் போகார்; இமைப்பின் பருவரார் - யாம் அறியாது இமைத்தேமாயின் அதனல் வருந்துவதும் செய்யார்; நுண்ணியர் - ஆதலால் காணப்படா நுண்ணியர்.

இடைவிடாத நினைவின் முதிர்ச்சியான் எப்பொழுதும் முன்னே தோன்றலின் கண்ணுள்ளின் போகார் என்றும், இமைத்துழியும் அது நிற்றலான் இமைப்பின் பருவரார் என்றும் கூறினள்.

உரை வேறுபாடு

மணக்குடவர்: நுண்ணியர் - நுண்ணிய அறிவை உடையார்.

பரிப்பெருமாள்: இஃது எதிர்பெய்து பரிதல்[1] என்னும் மெய்ப்பாடு.

காளிங்கர்: இவன் தான் காண்பதும் கருதுவதும் அவள் அல்லது பிறிது ஒன்றும் இல்லை என்பது பெரும்பாலும் பாங்கன் உட்கொள்வானுவது பயன். (1126)

1127

கண்உள்ளார் காத லவராகக் கண்ணும்
எழுதேம் கரப்பாக் கறிந்து. 7

(இதுவும் அது.)

பரிமேலழகர்: காதலவர் கண் உள்ளார் ஆக கண்ணும் எழுதேம் - காதலர் எப்பொழுதும் எம் கண்ணின் உள்ளார் ஆகலால் கண்ணினை அஞ்சனத்தால் எழுதுவதும் செய்யேம், கரப்பாக்கு அறிந்து - அத்துணைக் காலமும் அவர் மறைதலை அறிந்து.

இழிவு சிறப்பும்மை மாற்றப்பட்டது.[2] கரப்பாக்கு என்பது வினைப் பெயர்; வருகின்ற வேபாக்கு[3] என்பதும் அது. யான் இடையீடு இன்றிக் காண்கின்றவரைப் பிரிந்தார் என்று கருதுமாறு என்னை என்பது குறிப்பெச்சம்.

---

1. தொல். மெய்ப்பாடு. 22.
2. கண்ணும் எழுதேம் என்பதிலுள்ள உம்மையை எழுதுவதும் செய்யேம் என்று மாற்றினர்.
3. குறள், 1128.

உரை வேறுபாடு

மணக்குடவர்: எப்பொழுதும் நோக்கியிருத்தலால், கோலஞ் செய்தற்குக் காலம் பெற்றிலேன் என்றவாறாயிற்று.

பரிப்பெருமாள்: கோலம் செய்யாதது என்னை என்ற தோழிக்கு அவர் ஒளிப்பதனை அறிந்து கண்ணும் எழுதேன், என்னை உறுப்புக் கோலம் செய்யுமாறு என்னை என்று கூறியது. எப்பொழுதும் நோக்கியிருத்தலால் கோலஞ் செய்தற்குக் காலம் பெற்றிலேன் என்றவாறு ஆயிற்று. இஃது இன்பத்தை வெறுத்தல் என்னும் மெய்ப்பாடு.[1] இவை ஐந்தும் காதல் மிகுதியால் கூறியவாறு கண்டு கொள்க.

ஒப்புமை

1. காதலர் கண்ணுள்ளார்:

"கண்ணுளார் நுங்காதலர் ஒழிககாமம் ஈங்கென
உண்ணிலாய வேட்கையால் ஊடினரை." (சீவக. 72.)

2. முற்றும்:

"சிறுவா ளுகிருற் றுறுமுன்னம் சின்னப் படுங்குவளைக்
கெறிவாள் கழித்தனள் தோழி எழுதின் கரப்பதற்கே
அறிவாள் ஒழிகுவது அஞ்சனம் அம்பல வர்ப்பணியார்
குறிவாழ் நெறிசெல்வர் அன்பர்என் றம்ம கொடியவளே."
(திருச்சிற். 334.) (1127)

1128

நெஞ்சத்தார் காத லவராக வெய்துண்டல்
அஞ்சுதும் வேபாக் கறிந்து. 8

(இதுவும் அது.)

பரிமேலழகர்: காதலவர் நெஞ்சத்தார் ஆக வெய்து உண்டல் அஞ்சுதும் - காதலர் எம் நெஞ்சின் உள்ளார் ஆகலான் உண்ணுங்கால் வெய்தாக உண்டலை அஞ்சா நின்றேம், வேபாக்கு அறிந்து - அவர் அதனான் வெய்துறலை அறிந்து.

எப்பொழுதும் எம் நெஞ்சின்கண் இருக்கின்றவரைப் பிரிந்தார் என்று கருதுமாறு என்னை என்பது குறிப்பெச்சம்.

உரை வேறுபாடு

மணக்குடவர்: இது நீ உண்ணாதது என்னை என்று வினவிய தோழிக்குத் தலைமகள் உணவில் காதல் இல்லை என்று கூறியது. இது கரணத்துறவு உரைத்தல்.

பரிப்பெருமாள்: இது பசியடர நிற்றல் என்னும் மெய்ப்பாடு.[2]

ஒப்புமை

நெஞ்சத்தார் காதலவர்:

குறள், 1130, 1204, 1205, 1218.

"நெஞ்சு களனாக நீயலென்"

1. தொல். மெய்ப்பாடு. 22.
2. தொல். மெய்ப்பாடு. 22.

"...............நத்துறந்து
நெடுஞ்சேண் நாட்ட ராயினும்
நெஞ்சிற் கணியரோ தண்கடல் நாட்டே"
"அவர் இருந்தஎன் நெஞ்சே."
(குறுந். 36:3, 228:6, 340:7.) (1128)

### 1129

**இமைப்பின் கரப்பாக் கறிவல் அனைத்திற்கே
ஏதிலர் என்னும்இவ் வூர். 9**

(வரைவிடை வைத்துப் பிரிவின்கண் தலைமகள் ஆற்றுதற்
பொருட்டுத் தோழி தலைமகனை இயற்பழித்தவழி
அவள் இயற்பட மொழிந்தது.)

*பரிமேலழகர்:* இமைப்பின் கரப்பாக்கு அறிவல் - என் கண் இமைக்கு மாயின் உள் இருக்கின்ற காதலர் மறைதலை அறிந்து இமையேன்; அனைத் திற்கே ஏதிலர் என்னும் இவ்வூர் - அவ்வளவிற்கு அவரைத் துயிலா நோய் செய்தார், அன்பிலர் என்று சொல்லா நிற்கும் இவ்வூர்.

தன் கருத்து அறியாமை பற்றிப் புலந்து சொல்லுகிறாள் ஆகலின், தோழியை வேறுபடுத்து இவ்வூர் என்றாள். ஒருபொழுதும் பிரியாதவரைப் பிரிந்தார் என்று பழிக்கற்பாலை அல்லை என்பதாம்.

**உரை வேறுபாடு**

*மணக்குடவர்:* இது கண்துயில் மறுத்தல் என்னும் மெய்ப்பாடு.[1]

**ஒப்புமை**

**தோழியை ஊர்என்றல்:**

குறள், 1130.
"நொதுமல் கழறும்இவ் வழுங்கல் ஊரே" (குறுந். 12:6.)
"பொய்க்கும்இவ் வூரே." (ஐங்குறு. 154:4.) (1129)

### 1130

**உவந்துறைவர் உள்ளத்துள் என்றும் இகந்துறைவர்
ஏதிலர் என்னும்இவ் வூர். 10**

(இதுவும் அது.)

*பரிமேலழகர்:* என்றும் உள்ளத்துள் உவந்து உறைவர் - காதலர் எஞ்ஞான்றும் என் உள்ளத்துள்ளே உவந்து உறையாநிற்பர்; இகந்து உறைவர் ஏதிலர் என்னும் இவ்வூர் - அதனை அறியாது அவரைப் பிரிந் துறையா நின்றார், அன்பிலர் என்று சொல்லாநிற்கும் இவ்வூர்.[2]

உவந்துறைவர் என்றதனால் அன்புடைமை கூறினாள். பிரியாமையும் அன்பும் உடையாரை இலர் எனப் பழிக்கற்பாலையல்லை என்பதாம்.

**ஒப்புமை**

1. **உள்ளத்துள் உவந்துறைவர் தலைவர்:**

குறள், 1128, ஒப்புமை காண்க.

---

1. தொல். மெய்ப்பாடு, 22.
2. இங்கும் ஊர் என்றது தோழியை.

"பெரிய மகிழும் துறைவன் எம்
சிறிய நெஞ்சத் தகல்வறி யானே." (நற். 388:9-10.)

2. தோழியை ஊர் என்றல்:

குறள், 1129, ஒப்புமை காண்க. (1130)

---

# 114. நாணுத்துறவு உரைத்தல்

**பரிமேலழகர் :** அஃதாவது, சேட்படுக்கப்பட்டு ஆற்றுளுய தலைமகன் தோழிக்குத் தன் நாண் துறவு உரைத்தலும், அறத்தொடு நிற்பிக்கலுற்ற தலைமகள் அவட்குத் தன் நாண் துறவு உரைத்தலுமாம். இது, காதல் மிக்குழி நிகழ்வதாகலின், காதற்சிறப்பு உரைத்தலின்பின் வைக்கப் பட்டது.

**மணக்குடவர்:** நாணுத்துறவு உரைத்தலாவது தலைமகன் தனது நாணின்மையைத் தோழிக்குக் கூறுதலும், தலைமகளது நாணம் நீங்கின மையைத் தோழி தலைமகற்குக் கூறுதலுமாம். காதல் மிக்கார்க்கு நாணம் இல்லை என்பதனுல் அதன்பின் இது கூறப்பட்டது.

**1131**

காமம் உழந்து வருந்தினுர்க் கேம
மடல்அல்ல தில்லை வலி. 1

(சேட்படுக்கப்பட்டு ஆற்றுளுய தலைமகன் சொல்லியது.)

**பரிமேலழகர் :** காமம் உழந்து வருந்தினுர்க்கு - அரியராய மகளி ரோடு காமத்தை அநுபவித்துப் பின் அது பெருது துன்புற்ற ஆடவர்க்கு, ஏமம் மடல் அல்லது வலி இல்லை - பண்டும் ஏமமாய் வருகின்ற மடலல்லது இனி எனக்கு வலியாவது இல்லை.

ஏமம் ஆதல், அத் துன்பம் நீங்கும் வகை அவ்வநுபவத்தினைக் கொடுத்தல். வலி: ஆகுபெயர். பண்டும் ஆடவராயினுர் இன்பம் எய்தி வருகின்றவாறு நிற்க, நின்னை அதற்குத் துணையென்று கருதிக் கொன்னே முயன்ற யான் இதுபொழுது அல்லாமையை அறிந்தேன் ஆகலான், இனி யானும் அவ்வாற்றுன் அதனை எய்துவல் என்பது கருத்து.

**மேற்கோள் விளக்கம்**

பாங்கியை இரந்து குறைபெருது வருந்திய கிழவோன் மடலே பொருளென மதித்தல். (நம்பி. 145, உரை.)

**உரை வேறுபாடு**

**கவிராஜ பண்டிதர்:** மடல் ஊர்கிறதாவது, தலைவன் அந்த ஸ்திரீ யைப் போலே படத்தில் எழுதிக்கொண்டு அதைப் பார்த்துக் காமவருத்தம் தீருகிறது.

**ஒப்புமை**

*முற்றும்:*

"மடலே காமம் தந்து." (நற். 152:1)

"மாவென மடலும் ஊர்ப பூவெனக்
குவிமுகிழ் எருக்கங் கண்ணியும் சூடுப
மறுகின் ஆர்க்கவும் படுப
பிறிதும் ஆகுப காமம்காழ்க் கொளினே." (குறுந். 17.)

"மற்றிந்நோய்
பொறுக்கலாம் வரைத்தன்றிப் பெரிதாயிற் பொலங்குழாய்
மறுத்திவ்வூர் மன்றத்து மடலேறி
நிறுக்குவென் போல்வல்யான் நீபடு பழியே"

"ஓங்கிரும் பெண்ணை மடலூர்ந்தென் எவ்வநோய்
தாங்குதல் தேற்றா இடும்பைக் குயிர்ப்பாக
வீங்கிழை மாதர் திறத்தொன்று நீங்காது
பாடுவேன் பாய்மா நிறுத்து" (கலி. 58:20-23, 139:10-13.)

"மாவென் றுரைத்து மடலேறுப மன்று தோறும்
பூவென் றெருக்கின் இணர்சூடுப புன்மை கொண்டே
பேயென் றெழுந்து பிறர்ஆர்ப்பவும் நிற்ப காம
நோய்கன் கெழுந்து கனிகாழ்க்கொள்வ தாயி னக்கால்."
(வளையாபதி.) (1131)

## 1132

**நோனா உடம்பும் உயிரும் மடல்ஏறும்**
**நாணினை நீக்கி நிறுத்து.** **2**

(நாணுடைய நுமக்கு அது முடியாது என மடல்விலக்க லுற்றாட்குச் சொல்லியது.)

**பரிமேலழகர்:** நோனா உடம்பும் உயிரும் மடல் ஏறும் - அவ் வருத்தத்தினைப் பொறாத உடம்பும் உயிரும் அதற்கு ஏமமாய மடல் மாவினை ஊரக் கருதாநின்றன, நாணினை நீக்கி நிறுத்து - அதனை விலக்குவதாய நாணினை அகற்றி.

வருந்தினார்க்கு என மேல் வந்தமையின், செயப்படுபொருள் ஈண்டுக் கூறாராயினர்.[1] மடல்: ஆகுபெயர். 'நீக்கி நிறுத்து' என்பது ஒரு சொல் நீர்மைத்து. அறிவு நிறை ஓர்ப்புக் கடைப்பிடி முதலிய முன்னே நீங்கவும் நாண் நீங்காது நின்றது; அதுவும் இதுபொழுது நீங்கிற்று என்பான், 'உடம்பும் உயிரும்' என்றான். அவைதாம் தம்முள் நீங்காமற்பொருட்டு மடலேறும் என்றது, அவன் தன் ஆற்றாமை அறிந்து கடிதிற் குறை நேர்தல் நோக்கி.

### ஒப்புமை

**மடலேறுவார் நாணத்தை நீத்தல்:**
குறள், 1133.

"..............பனைபடு கலிமாப்
பூண்மணி கறங்க ஏறிநாண் அட்டு"

"விழுத்தலைப் பெண்ணை விளையல் மாமடல்
மணியணி பெருந்தார் மரபிற் பூட்டி
வெள்ளென் பணிந்துபிறர் எள்ளத் தோன்றி
ஒருநாள் மருங்கில் பெருநாண் நீங்கி."
(குறுந். 173:2-3, 182:1-4.)

1. நோனா - பொறாத; வருத்தத்தினைப் பொறாத என்று செயப்படு பொருளைக் கூட்டியுரைத்தார்; அச் செயப்படு பொருள் முன்னைப் பாட்டினால் அறியப் பட்டது.

"அறிவும்நம் அறிவாய்ந்த அடக்கமும் நாணொடு, வறிதாக"
(கலி. 138:3-4.)

"காமம் கைம்மிகச் சிறத்தலின் நாணிழந்து."
(அகநா. 266:8.) (1132)

## 1133

நாணொடு நல்லாண்மை பண்டுடையேன் இன்றுடையேன்
காமுற்றார் ஏறும் மடல். 3

(நாணையன்றி நல்லாண்மையும் உடைமையின் முடியாது என்றாட்குச் சொல்லியது.)

**பரிமேலழகர்:** நாணொடு நல் ஆண்மை பண்டு உடையேன் - நாணும் மிக்க ஆண்தகைமையும் யான் பண்டு உடையேன்; காமுற்றார் ஏறும் மடல் இன்று உடையேன் - அவை காமத்தால் நீங்குதலான், அக் காமம் மிக்கார் ஏறும் மடலினை இன்று உடையேன்.

நாண் - இழிவாயின செய்தற்கண் விலக்குவது.[1] ஆண்மை - ஒன்றற்கும் தளராது நிற்றல். அவை பண்டுள்ளன; இன்றுள்ளது இதுவே யாகலிற் கடிதின் முடியும் என்பதாம்.

### மேற்கோள் விளக்கம்

தோழி, 'பெரியோர்க்குத் தகாது' என்ற வழித் தலைவன் மறுத்துக் கூறியது. (தொல். களவு. 11, ந.)

### ஒப்புமை

**காமுற்றார் மடல் ஏறுதல்:**

"..............மடன்மாமேல்
மன்றம் படர்வித் தவள்." (கலி. 141:9-10.) (1133)

## 1134

காமக் கடும்புனல் உய்க்குமே நாணொடு
நல்லாண்மை என்னும் புணை. 4

(நாணும் நல்லாண்மையும் காமவெள்ளத்திற்குப் புணையாகலின் அதனால் அவை நீங்குவன அல்ல என்றாட்குச் சொல்லியது.)

**பரிமேலழகர்:** நாணொடு நல்லாண்மை என்னும் புணை - யான் தன்னைக் கடத்தற்குக் கொண்ட நாணும் நல்லாண்மையுமாகிய புணைகளை, காமக் கடும்புனல் உய்க்குமே - என்னிற் பிரித்துக் காமமாகிய கடிய புனல் கொண்டு போகாநின்றது.

அது செய்ய மாட்டாத ஏனைப் புனலின் நீக்குதற்குக் கடும்புனல் என்றார். இப் புனற்கு அவை புணையாகா; அதனான் அவை நீங்கும் என்பதாம்.

### உரை வேறுபாடு

**காளிங்கர்:** ஆண்மை - ஆண்மைப்பாடு என்னும் பெருமிதம்.

1. "கருமத்தால் நாணுதல் நாணு" (குறள், 1011) என்பதையும், 'நன் மக்கள் நாணுவது இழிந்த கருமம் காரணமாக நாணுதல்' என்னும் அதன் உரையையும் காண்க.

### மேற்கோள் விளக்கம்

இயைபுருவகம் வந்தது. *(வீர. 158, பெருந்.)*

### ஒப்புமை

*முற்றும்:*

"காணுநர் எள்ளக் கலங்கித் தலைவந்தென்
ஆணெழில் முற்றி உடைத்துள் அழித்தரு
மாணிழை மாதராள் ஏஎர்எனக் காமன
தாணையால் வந்த படை." *(கலி. 139:20-24.) (1134)*

## 1135

தொடலைக் குறுந்தொடி தந்தாள் மடலொடு
மாலை உழக்கும் துயர். 5

(இவ்வாற்றாமையும் மடலும் நமக்கு எவ்வாறு வந்தன என்றாட்குச் சொல்லியது.)

**பரிமேலழகர்:** மாலை உழக்கும் துயர் மடலொடு - மாலைப்பொழுதின் கண் அநுபவிக்கும் துயரினையும் அதற்கு மருந்தாய மடலினையும் (முன்அறியேன்); தொடலை குறுந்தொடி தந்தாள் - இது பொழுது எனக்கு மாலை போலத் தொடர்ந்த சிறு வளையினை உடையாள் தந்தாள்.

காமம் ஏனைப் பொழுதுகளினும் உளதேனும் மாலைக்கண் மலர்தல் உடைமையின்[1] மாலை உழக்கும் துயர் என்றும், மடலும் அதுபற்றி வந்தது ஆகலின் அவ்விழிவும் அவளால் தரப்பட்டது என்றும், அவள்தான் நீ கூறியதே கூறும் இளமையள் என்பது தோன்றத் தொடலைக் குறுந்தொடி என்றும் கூறினான். அப் பெயர் உவமைத்தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை.

இவை அவள் தந்தன ஆகலின் நின்னால் நீங்கும் என்பது கருத்து.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** தொடலை யென்பதற்குச் சேர்ந்த வளை யெனினும் அமையும். குறுந்தொடி - பிள்ளைப்பணி.

**பரிப்பெருமாள்:** இதனானே இளையள் என்பது சொன்னான். தலைமகன் ஆற்றாமை கண்டு, நின்னால் காதலிக்கப்பட்டாள் இவ் வாயத்துள் யாவள் என்ற தோழிக்கு, இத் தன்மையாவள் என்று தலைமகன் கூறியது. வளையுடையார் பலரும் கூட நிற்றலின், மாலை போலச் செய்த வளையினை யுடையாள் என்று விசேடித்துக் கூறப்பட்டது.

**பரிதியார்:** தொடலைக் குறுந்தொடி - விளையாடலாகிய பேதை.

**காளிங்கர்:** மாலையும் சிறு தொடியும் உடைய இம் மாதராள்.

### ஒப்புமை

*முற்றும்:*

"படரும் பனையீன்ற மாவும் சுடரிழை
நல்கியாள் நல்கி யவை." *(கலி. 138: 12-3.) (1135)*

---

1. குறள், 1227.

1136

மடல்ஊர்தல் யாமத்தும் உள்ளுவேன் மன்ற
படல்ஒல்லா பேதைக்கென் கண். 6

(மடல் ஊரும்பொழுது இற்றைக்கும் கழிந்தது
என்றாட்குச் சொல்லியது.)

பரிமேலழகர்: பேதைக்கு என் கண் படல் ஒல்லா - நின் பேதை காரணமாக என் கண்கள் ஒருகாலும் துயிறலைப் பொருந்தா; யாமத்தும் மன்ற மடல் ஊர்தல் உள்ளுவேன் - அதனால் எல்லாரும் துயிலும் இடையாமத்தும் யான் இருந்து மடல் ஊர்தலையே கருதா நிற்பேன்.

பேதை என்றது பருவம் பற்றியன்று, மடமைபற்றி. இனிக் குறை முடிப்பது நாளை என வேண்டா என்பதாம். *(1136)*

1137

கடல்அன்ன காமம் உழந்தும் மடல்ஏறாப்
பெண்ணிற் பெருந்தக்க தில். 7

(பேதைக்கு என் கண் படல் ஒல்லா என்பதுபற்றி, அறிவிலராய
மகளிரினும் அஃது உடையராய ஆடவரன்றே ஆற்றற்
பாலர் என்றாட்குச் சொல்லியது.)

பரிமேலழகர்: கடல் அன்ன காமம் உழந்தும் மடல் ஏறா பெண்ணின் - கடல் போலக் கரை அற்ற காமநோயினை அநுபவித்தும் மடல் ஊர்தலைச் செய்யாது ஆற்றியிருக்கும் பெண் பிறப்புப் போல, பெருந்தக்கது இல் - மிக்க தகுதியினை உடைய பிறப்பு உலகத்தில் இல்லை.

பிறப்பு விசேடத்தால் அவ் வடக்கம் எனக்கு இல்லையாகா நின்றது; நீ அஃது அறிகின்றிலை என்பதாம். இத்துணையும் தலைமகன் கூற்று; மேல் தலைமகள் கூற்று.

உரை வேறுபாடு

மணக்குடவர்: இது நும்மால் காதலிக்கப்பட்டாள்தனக்கும் இவ் வருத்தம் ஒக்கும்; பெண்டிர்க்கு இப் பெண்மையான் மடலேறாததே குறை என்று தலைமகன் ஆற்றாமை நீங்குதற்பொருட்டுத் தோழி கூறியது.

ஒப்புமை

1. கடலன்ன காமம்; குறள், *1164, 1167.*

"காதல் தானும் கடலினும் பெரிதே" *(நற். 166:10.)*
"காமக் கடலகப் பட்டு" *(கலி. 139:17.)*
"வேலை யன்ன மாலுள சிந்தை." *(கம்ப. உண்டாட்டு. 60.)*

2. பெண்ணிற் பெருந்தக்கது:

குறள், *54.*

3. முற்றும்:

"கண்ணும் வாளற்ற கைவளை சோருமால்
புண்ணும் போன்று புலம்புமென் நெஞ்சரோ
எண்ணில் காமம் எரிப்பினும் மேல்செலாப்
பெண்ணின் மிக்கது பெண்ணல தில்லையே." *(சீவக. 998.)*

"கண்ணிலாம் கவினெளிக் காளை மார்திறத்து
உண்ணிலா எழுதரு காம ஊழ்எரி
வெண்ணிலாச் சுடர்சுட விரிந்து நாண்விடாப்
பெண்ணலாற் பிறதுயிர் பெரிய தில்லையே."
(சூளா. குமாரகாலச். 14.) *(1137)*

### 1138

**நிறைஅரியர் மன்அளியர் என்னது காமம்**
**மறைஇறந்து மன்று படும். 8**

**(காப்புச் சிறைமிக்குக் காமம் பெருகியவழிச் சொல்லியது.)**

**பரிமேலழகர் :** நிறை அரியர் (என்னது) - இவர் நிறையால் நாம் மீதூர்தற்கு அரியர் என்று அஞ்சுதல் செய்யாது, மன் அளியர் என்னது - மிகவும் அளிக்கத் தக்கார் என்று இரங்குதல் செய்யாது, காமம் மறை இறந்து மன்று படும் - மகளிர் காமமும் அவர் மறைத்தலைக் கடந்து மன்றின் கண்ணே வெளிப்படுவதாய் இருந்தது.

என்னது என்பது முன்னும் கூட்டி மகளிர் என்பது வருவிக்கப்பட்டது. எச்சவும்மை விகாரத்தால் தொக்கது. மன்று என்பது தந்தை தன்னையரை நோக்கி. உலகத்துப் பெண்பாலார் காமத்து இயல்பு கூறுவாள் போன்று, தன் காமம் பெருகியவாறும், இனி அறத்தொடு நிற்றல் வேண்டும் என்பதும் குறிப்பால் கூறியவாறாயிற்று.

#### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** இஃது அம்பலும் அலரும் ஆகா என்று தோழி பகற்குறி மறுத்தது.

**பரிதியார்:** செங்கோல் அறியாது அரசின் கொடுமை அறியாது வங்கிஷம் அறியாது உயிர்பாரார்து இவள் கொடுத்த மடல் மன்றுபடும்.

**காளிங்கர்:** [1] தோழிக்குத் தலைமகன் சொல்லியது.

**கவிராஜ பண்டிதர்:** காமத்தை எப்படி மறைத்தாலும் வெளிப் படும்.

#### ஒப்புமை

**காமம் மறையிறந்து மன்றுபடுதல்:**

**குறள், 1254.**

"மறையல ராகி மன்றத் தஃதே" (குறுந். *97:4*,)
"அலரும் மன்றுபட் டன்றே." (அகநா. *201:10.*) *(1138)*

### 1139

**அறிகிலார் எல்லாரும் என்றேஎன் காமம்**
**மறுகின் மறுகும் மருண்டு. 9**

**(இதுவும் அது.)**

**பரிமேலழகர் :** எல்லாரும் அறிகிலார் என்று - யான் முன் அடங்கி நிற்றலான் எல்லாரும் என்னை அறிதல் இலர், இனி அவ்வாறு நில்லாது

1. 'நிறையரிது' என்று பாடம் கொண்டார்.

யானே வெளிப்பட்டு அறிவிப்பல் என்று கருதி, என் காமம் மறுகில் மருண்டு மறுகும் - என் காமம் இவ்வூர் மறுகின்கண்ணே மயங்கிச் சுழலாநின்றது.

மயங்குதல் - அம்பலாதல்; மறுகுதல் - அலராதல்.[1] அம்பலும் அலரும் ஆயிற்று, இனி அறத்தொடு நிற்றல்வேண்டும் என்பதாம். அறிவிலார் என்பதூஉம் பாடம்.

உரை வேறுபாடு

மணக்குடவர்: அறிவிலார் என்று பாடம் கொண்டார்.

பரிப்பெருமாள்: நீர் அறிவுடையீர் ஆகலான் மடலேறுதல் கூடாது. இஃது அறிவுடையார் செயலின்மையான் என்ற தோழிக்கு, என்னைப்போல மடலேறக் கருதாதாரே அறிவிலாதார், யான் அறிவுடையேன் என்று தலைமகன் கூறியது. *(1139)*

1140

யாம்கண்ணிற் காண நகுப அறிவில்லார்
யாம்பட்ட தாம்படா வாறு. 10

(செவிலிக்கு அறத்தொடு நின்று வைத்து, யான் நிற்குமாறு
என்னை என்று நகையாடிய தோழியொடு
புலந்து தன்னுள்ளே சொல்லியது.)

பரிமேலழகர்: யாம் கண்ணின் காண அறிவு இல்லார் நகுப - யாம் கேட்குமாறும் அன்றிக் கண்ணால் காணுமாறு எம்மை அறிவிலார் நகாநின்றார்; யாம் பட்ட தாம் படா ஆறு - அவர் அங்ஙனம் செய்கின்றது யாம் உற்ற நோய்கள் தாம் உறுமையான்.

கண்ணின் என்றது முன் கண்டறியாமை உணர நின்றது. அறத்தொடு நின்றமை அறியாது வரைவு மாட்சிமைப்படுகின்றிலள் எனப் புலக்கின்றாள் ஆகலின், ஏதிலாளாக்கிக் கூறினாள். இது, நகாநின்று சேட்படுக்கும் தோழிக்குத் தலைமகன் கூறியதாங்கால், அதிகாரத்திற்கு ஏலாமை அறிக.

உரை வேறுபாடு

பரிப்பெருமாள்: யாமத்து மறவேன் என்ற தலைமகனை நோக்கி நகை செய்த தோழிக்கு, எமக்கு உண்டாகிய நோய் தமக்கும் உண்டாயின ரல்லரே என்று தலைமகன் வெகுண்டு சொல்லியது.

ஒப்புமை

*1.* தோழி தலைவியின் காமம் அறியாமை:

"காமம் தாங்குமதி என்போர் தாமஃ
தறியலர் கொல்லோ." (குறுந். *290:1-2.*)

2. நகுதல்:

"எனைக்காண
நகான்மின் கூறுவேன் மாக்காள்." (கலி. 145:11-2.) *(1140)*

1. அம்பல் - அரும்புதல்; சொல் நிகழாதே முகிழ்முகிழ்த்துச் சொல்லுதல், அலர் என்பது, 'இன்னாரோடு இன்னாரிடையது போலும் பட்டது' என்று விளங்கச் சொல்லி நிற்பது. (இறை, 22, உரை.)

# 115. அலர் அறிவுறுத்தல்

**பரிமேலழகர்:** அஃதாவது, களவொழுக்கம் வேண்டிய தலைமகன் பிறர் கூறுகின்ற அலர் தனக்கு ஆகின்றவாற்றைத் தோழிக்கு அறிவுறுத்தலும், வரைவாக, உடன்போக்காக ஒன்று வேண்டிய தலைமகளும் தோழியும் அவ் வலரை அவன்தனக்கு அறிவுறுத்தலும் ஆம். இது நாணுத் துறந்த வழி நிகழ்வது ஆகலான், நாணுத் துறவுரைத்தலின்பின் வைக்கப்பட்டது.

**மணக்குடவர்:** அலர் அறிவுறுத்தலாவது, இவ்வாறு ஒழுகும் ஒழுக்கத்தினால் வந்த அலரைத் தலைமகள் தோழிக்கு அறிவித்தலும், தோழி தலைமகட்கும் தலைமகற்கும் அறிவித்தலுமாம். நாணுத் துறவுரைத்து இரவுக்குறி ஒழுகாநின்ற தலைமகனுக்குத் தோழி அம்பலும் அலரும் ஆகா நின்றன என்று அறிவித்தலான், அதன்பின் இது கூறப்பட்டது.

### 1141

அலர்எழ ஆருயிர் நிற்கும் அதனைப்
பலர்அறியார் பாக்கியத் தால். 1

*(அல்ல குறிப்பட்ட பிற்றை ஞான்று வந்த தலைமகனைத் தோழி அலர் கூறி வரைவு கடாயவழி அவன் சொல்லியது.)*

**பரிமேலழகர்:** அலர் எழ ஆருயிர் நிற்கும் - மடந்தையொடு எம்மிடை நட்பு[1] ஊரின் கண் அலராய் எழுதலான் அவளைப் பெறாது வருந்தும் என் அரிய உயிர் பெற்றது போன்று நிலைபெறும்; அதனை பாக்கியத்தால் பலர் அறியார் - அந் நிலைபேற்றைத் தெய்வத்தால் யானே அறிவதல்லது கூறுகின்ற பலரும் அறியார்.

அல்லகுறிப்பட்டுத் தலைமகளை எய்தப்பெறாத வருத்தம் எல்லாம் தோன்ற அரிய உயிர் என்றும், அங்ஙனம் அரியாளை எளியளாக்கி எடுக்கின்றமையின் அஃது அவ்வாருயிர்க்குப் பற்றுக்கோடாக நின்றது என்பான், 'அலரெழ ஆருயிர் நிற்கும்' என்றும், பற்றுக்கோடாதலை அவ்வேதிலார் அறியின் தூற்றாது ஒழிவர், ஒழியவே ஆருயிர் போம் ஆகலான் அவர் அறியாதொழிகின்றது தெய்வத்தான் என்றும் கூறினான். முற்றும்மை விகாரத்தால் தொக்கது.[2]

#### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** நமது புணர்ச்சியால் வந்த அலர் எழுதலினானே அவளது ஆருயிர் நிற்கும்; அவ்வாறு உயிர் நிற்றலை எங்கள் புண்ணியத்தாலே பலர் அறியாராயினார்; அறிவராயின், எமக்கு ஏதிலராய் அலர் தூற்றுவார்; இவள் இறந்துபட வேண்டும் என்று தூற்றார்.

**பரிப்பெருமாள்:** நொதுமலர் வரைய வந்துழி இறந்து படுவாளாயினாள்; ஆயிடை இவ்வலர் எழுதலினானே இனிப் பிறர்க்குக் கொடார் என்று அவள் உயிர் நீங்காதாயிற்று, என நொதுமலர் வரைய வந்தமை தோழி தலைமகற்குக் கூறியது.

**கவிராஜ பண்டிதர்:** இவள் வருந்துகிறாள் என்று சொல்லக் கேட்டபடியினாலே, இவள் வருத்தம் தீர்க்கவேணும் என்று தன் சீவன் இருக்கிறது; இல்லாவிடின் பிரிந்தபொழுதே போம். *(1141)*

---

1. குறள், 1122. 2. பலரும் என்ற உம்மை.

## 1142

மலர்அன்ன கண்ணாள் அருமை அறியா
அலர்எமக் கீந்ததிவ் வூர். 2

பரிமேலழகர்: மலர் அன்ன கண்ணாள் அருமை அறியாது - மலர் போலும் கண்ணை உடையாளது எய்தற்கு அருமை அறியாது, இவ்வூர் அலர் எமக்கு ஈந்தது - இவ்வூர் அவளை எளியளாக்கி அவளோடு அலர் கூறலை எமக்கு உபகரித்தது.

அருமை, அல்லகுறிப்பாட்டானும் இடையீடுகளானும் ஆயது. ஈந்தது என்றான், தனக்குப் பற்றுக்கோடாகலின். அலர் கூறுவாரை அவர் செய்த உதவி பற்றி இவ்வூர் என்றான்.

### உரை வேறுபாடு

மணக்குடவர்: அருமை – இற்பிறப்பின் அருமையை; எளியாரைச் சொல்லுமாறு போலச் சொல்லாநின்றார் என்றவாறு.

பரிப்பெருமாள்: தமது புணர்ச்சி அலராயிற்று என்று தோழி கூறியது.

பரிதியார்: மலர் அன்ன - செங்கழுநீர் மலர் போலும்.

கவிராஜபண்டிதர்: அலர் எமக்கு ஈந்தது இவ்வூர் - அலராகிய வசையைச் சொல்லி எனக்கு உபகாரத்தைச் செய்கின்றார். உபகாரம் செய்தலாவது, தன் பிராணனை நிறுத்துகிறதாம்.

### மேற்கோள் விளக்கம்

வடிவுவமை வந்தது. (வீர. 156, பெருந்.)

### ஒப்புமை

மலரன்ன கண்ணாள்: குறள், 1119. (1142)

## 1143

உறாஅதோ ஊர்அறிந்த கௌவை அதனைப்
பெறாஅது பெற்றன்ன நீர்த்து. 3

பரிமேலழகர்: ஊர் அறிந்த கௌவை உறாஅதோ - எங்கட்குக் கூட்டம் உண்மை இவ்வூர் அறிதலான் விளைந்த அலர் எனக்கு உறுவது ஒன்றன்றோ, அதனை பெறாஅது பெற்றன்ன நீர்த்து - அது கேட்ட என் மனம் அக் கூட்டத்தைப் பெறாதிருந்தே பெற்றால் போலும் நீர்மையை உடைத்தாகலான்?

பெற்றன்ன நீர்மை - பெற்றவழி உளதாம் இன்பம் போலும் இன்பம் உடைமை. நீர்த்து என்பதற்கு ஏற்ற மனம் என்னும் வினைமுதல் வருவிக்கப்பட்டது.

### உரை வேறுபாடு

மணக்குடவர்: இஃது அலர் அறிவுறுத்த தோழிக்கு அவ்வலரினான் என்றும் தமராவர் உடன்படுவார் என்று தலைமகன் கூறியது.

காளிங்கர்: நெஞ்சே, நமக்குச் சால உறுவது ஒன்று அன்றோ, ஊர் அறிந்து உரைத்த கவ்வையானது? அதனை அவர் அறியாது நம்மை நிறையழித்தற்கு முன்னம் பெறாதது ஓர் உபாயம் பெற்றாலொத்த நீர்மையை உடைத்து இவ்வூர். (1143)

### 1144

கவ்வையால் கவ்விது காமம் அதுஇன்றேல்
தவ்வென்னும் தன்மை இழந்து. 4

*(இதுவும் அது.)*

**பரிமேலழகர்:** காமம் கவ்வையால் கவ்விது – என் காமம் இவ்வூர் எடுக்கின்ற அலரானே அலர்தலை உடைத்தாயிற்று; அது இன்றேல் தன்மை இழந்து தவ்வென்னும் - அவ்வலர் இல்லையாயின் தன் இயல்பு இழந்து சுருங்கும்.

அலர்தல் - மேல்மேல் மிகுதல். செவ்வை உடையதனைச் செவ்விது என்றாற்போலக் கவ்வையுடையதனைக் கவ்விது என்றார். இயல்பு, இன்பம் பயத்தல். தவ்வென்னும் என்பது குறிப்புமொழி; "நூல்கால் யாத்த மாலை வெண்குடை, தவ்வென் றசைஇத் தாழ்துளி மறைப்ப"[1] என்புழியும் அது.

#### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** தவ்வென்னும் – பொலிவு அழியும்.

**பரிப்பெருமாள்:** அலர் அறிவுறுத்த தோழிக்கு இவள் கூறுகின்றது புணர்ந்துரையாகும் என்று நினைத்துப் பின்னும் களவொழுக்கம் வேண்டித் தலைமகன் கூறியது.

**பரிதியார்:** கவ்விது - உறுதி பெற்றது. தவ்வென்னும் - உறுதி பெறாது.

**காளிங்கர்:** கவ்விது – கவ்வுண்டது. தவ்வென்னும் - சாலத் தவறு படும்.

இதிற் கவ்வித்து என்பது கவ்வியது என்றது. தவ்வென்னும் என்பது தவறுபடும் என்றது.

#### ஒப்புமை

**தவ்வென்னல்:**

"தாதுளர் கானல் தவ்வென் றன்றே" *(நற். 319 : 2.)*

"வெவ்வெங் கலுழி தவ்வெனக் குடிக்கிய." *(குறுந். 356: 4.)*

*(1144)*

### 1145

களித்தொறும் கள்உண்டல் வேட்டற்றால் காமம்
வெளிப்படுந் தோறும் இனிது. 5

*(இதுவும் அது.)*

**பரிமேலழகர்:** களித்தொறும் கள் உண்டல் வேட்டற்று - கள் உண்பார்க்குக் களிக்குந்தோறும் கள் உண்டல் இனிதாமாறு போல, காமம் வெளிப்படுந்தோறும் இனிது - எனக்குக் காமம் அலராந்தோறும் இனிதாகா நின்றது.

1. நெடுநல். 184 - 5, பி-ம்.

வேட்கப்பட்டற்றால் என்பது வேட்டற்றால் என நின்றது. **வேட்கை மிகுதியால் அலரும் இன்பம் செய்யாநின்றது என்பதாம்.**

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** இஃது அலர் அறிவுறுத்த தோழியை நோக்கி, நுமக்குத் துன்பமாயிற்றே இவ்வலர் என்று வினவிய தலைமகற்குத் தோழி கூறியது.

**பரிதியார்:** கள் உண்டால் களிக்கும்; நினைத்தால் களியாது; காமமோ நினைக்குந்தோறும் களிக்கும்.

### ஒப்புமை

**களித்தொறுங் கள்ளுண்டல் வேட்டல்:**

"மகிழ்ந்ததன் தலையும் நறவுண் டாங்கு" *(குறுந். 165: 1.)*

"உட்கொண் டரற்றும் உறுபிணி தலைஇக்
கட்கொண் டாங்குக் களிகோய் கனற்ற"

"நறவிளை தேறல் உறுபிணி போலப்
பிறிதின் தீராப் பெற்றி நோக்கி."
*(பெருங். 1. 35: 50-51, 2. 16: 63-4.)* *(1145)*

## 1146

**கண்டது மன்னும் ஒருநாள் அலர்மன்னும்**
**திங்களைப் பாம்புகொண் டற்று.** 6

*(இடையீடுகளானும் அல்லகுறியானும் தலைமகனை எய்தப் பெறாத தலைமகள் அவன் சிறைப்புறத்தானாகத் தோழிக்குச் சொல்லு வாளாய் அலரறிவுறீஇ வரைவு கடாயது.)*

**பரிமேலழகர்;** கண்டது ஒரு நாள் - யான் காதலரைக் கண்ணுறப் பெற்றது ஒரு ஞான்றே; அலர் திங்களை பாம்பு கொண்டற்று - அதனினாய அலர் அவ்வளவிற்று அன்றித் திங்களைப் பாம்பு கொண்ட அலர் போன்று உலகு எங்கும் பரந்தது.

காரியத்தைக் காரணமாக உபசரித்துப் பாம்பு கொண்டற்று என்றாள். இருவழியும் மன்னும் உம்மையும் அசைநிலை. காட்சி யின்றியும் அலர் பரக்கின்ற இவ்வொழுக்கம் இனி ஆகாது, வரைந்து கோடல் வேண்டும் என்பதாம்.

### உரை வேறுபாடு

**பரிதியார்:** ஒரு நாள் நாயகரிடத்தில் இன்பம் கண்டது; அது சந்திரனை இராகு தீண்டினதற்கு ஒக்கும்.

**காளிங்கர்:** யாம் எம் காதலியைக் கண்டு இன்புற்றதும் ஒரு நாளே.

### ஒப்புமை

**கண்டது மன்னும் ஒரு நாள்:**

"உற்றது மன்னும் ஒருநாள்." *(குறுந். 271: 3.)* *(1146)*

### 1147

**ஊரவர் கௌவை எருவாக அன்னை சொல்**
**நீராக நீளும்இந் நோய்.** 7

*(வரைவு நீட ஆற்றுளாய தலைமகளைத் தலைமகன் சிறைப்புறத்தானாதல் அறிந்து, தோழி ஊரவர் அலரும் அன்னை சொல்லும் நோக்கி ஆற்றல் வேண்டும் எனச் சொல் எடுப்பியவழி, அவள் சொல்லியது.)*

**பரிமேலழகர் :** இந் நோய் - இக் காமநோயாகிய பயிர். **ஊரவர் கௌவை எரு ஆக அன்னை சொல் நீர்ஆக நீளும்** - இவ்வூரின் மகளிர் எடுக்கின்ற அலர் எருவாக, அது கேட்டு அன்னை வெகுண்டு சொல்லுகின்ற வெஞ்சொல் நீராக, வளராநின்றது.

ஊரவர் என்பது தொழிலான் ஆண் ஒழித்து நின்றது. ஏகதேச வுருவகம். சுருங்குதற்கு ஏதுவாவனதாமே விரிதற்கு ஏதுவாகா நின்றன என்பதாம். வரைவானுதல் பயன்.

#### ஒப்புமை

**முற்றும்:**

"ஊரவர் கவ்வை எருவிட்டு அன்னைசொல் நீர்ப்படுத்து
ஈரநெல் வித்தி முளைத்த நெஞ்சப் பெருஞ்செய்யுள்
பேரமர் காதல் கடல்புரைய விளைவித்த
காரமர் மேனிநம் கண்ணன் தோழீ கடியனே."
(திருவாய். 5.3: 4.) *(1147)*

### 1148

**நெய்யால் எரிநுதுப்பேம் என்றற்றால் கௌவையால்**
**காமம் நுதுப்பேம் எனல்.** 8

*(இதுவும் அது.)*

**பரிமேலழகர் :** கௌவையால் காமம் நுதுப்பேம் எனல் - ஏதிலார் எடுக்கின்ற அலரால் நாம் காமத்தை அவித்தும் என்று கருதுதல், **நெய்யால் எரி நுதுப்பேம் என்றற்று** - நெய்யால் எரியை அவித்தும் என்று கருதுதலோடு ஒக்கும்,

மூன்றன் உருபுகள் கருவிக்கண் வந்தன. கிளர்தற் காரணமாய அலரால் அவித்தல் கூடாது என்பதாம்.

#### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** இது தலைமகன் பின்னும் களவொழுக்கம் வேண்டினமை கண்டு தோழி கூறியது.

**காளிங்கர்:** இதில் நுதுத்தல் என்பது அமுக்குதல்; தணித்தல் என்றுமாம்.

#### மேற்கோள் விளக்கம்

அலரால் தலைவனுக்கும் தலைவிக்கும் காமம் மிகுதியாகும். (தொல். கற்பு. 22, ந.) *(1148)*

## 1149

அலர்நாண ஒல்வதோ அஞ்சலோம் பென்றார்
பலர்நாண நீத்தக் கடை. 9

(வரைவிடை வைத்துப் பிரிவின்கண் ஆற்றாளாய தலைமகள் அவன் வந்து சிறைப்புறத்தானாதல் அறிந்து, அலரஞ்சி ஆற்றல் வேண்டும் என்ற தோழிக்குச் சொல்லியது.)

**பரிமேலழகர்:** அஞ்சல் ஓம்பு என்றார் பலர் நாண நீத்தக்கடை - தம்மை எதிர்ப்பட்ட ஞான்று, நின்னிற் பிரியேன் அஞ்சலோம்பு என்றவர் தாமே இன்று கண்டார் பலரும் நாணும் வகை நம்மைத் துறந்த பின், அலர் நாண ஒல்வதோ - நாம் ஏதிலார் கூறும் அலருக்கு நாணக்கூடுமோ? கூடாது.

நாண என்னும் வினையெச்சம் 'ஒல்வது' என்னும் தொழிற் பெயருள் ஒல்லுதல் தொழிலோடு முடிந்தது. கண்டார் நாணும் நிலைமையமாய யாம் நாணுதல் யாண்டையது என்பதாம்.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** பலர் என்றது தோழியும் செவிலியும் முதலாயினாரை.

**பரிதியார்:** அலர் ஏசும் நாணத்திற்கு நோவதோ, நெஞ்சே அஞ்சாதே இரக்ஷிக்கிறோம் என்று நாயகர் துறந்த விடத்து.

**கவிராஜ பண்டிதர்:** பலரும் விசாரப்படப் பிரிந்தவரை மறத்தல் கூடாது.

### ஒப்புமை

*அஞ்சலோம்பென்றல்:*

"அஞ்சலோம் பென்னும்
நன்னர் மொழியும் நீமொழிந் தனையே"

"அஞ்சலோம் பென்றாரை"

"அஞ்சலோம் பென்றதன் பயனன்றோ"
(கலி. 21: 7-8, 41: 22, 132: 9.)

"அஞ்சலோம் பென்று நலனுண்டு நல்காதான்." (சிலப். 24:3)
(1149)

## 1150

தாம்வேண்டின் நல்குவர் காதலர் யாம்வேண்டும்
கௌவை எடுக்குமிவ் வூர். 10

(தலைமகன் சிறைப்புறத்தானாகத் தோழி தலைமகட்குச் சொல்லுவாளாய் அலர் அறிவுறீஇ, உடன் போக்கு நயப்பச் சொல்லியது.)

**பரிமேலழகர்:** யாம் வேண்டும் கௌவை இவ்வூர் எடுக்கும் - உடன் போகற்கு ஏதுவாகல் நோக்கி யாம் பண்டே விரும்புவதாய அலரை இவ்வூர் தானே எடாநின்றது; காதலர் தாம் வேண்டின் நல்குவர் - இனிக் காதலர் தாமும் யாம் வேண்டியக்கால் அதனை இனிதின் நேர்வர்; அதனால் இவ்வலர் நமக்கு நன்றாய் வந்தது.

எச்சவும்மை விகாரத்தால் தொக்கது.[1] நங்கண் காதல் உடைமையின் மரூர் என்பது தோன்றக் காதலர் என்றாள்.

இவ்விருபது பாட்டும் புணர்தல் நிமித்தம்.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** தாம் வேண்டி[2] நல்குவர் - இனித் தாங்களே விரும்பிக் கொடுப்பர் நமது காதலர்க்கு.

**பரிப்பெருமாள்:** யாம் வேண்டும் கவ்வை, இவனுக்கு நாம் பெண்டிரானது புறத்தார் அறியவேணும் என்று நினைத்திருந்தவாறும்.

**காளிங்கர்:** நெஞ்சே, நம்மால் காதலிக்கப்பட்ட காரிகையார் இன்னும் தாமே நல்க வேண்டின் நம்மை நல்குவர். ஆதலால் இவர் பெயர் நினைந்து இறந்துபடுதற்கு இயையுமிடத்து அவர் பெயர் கொண்டு யாம் கேட்க விரும்பும் கவ்வை எடுத்து உரையாநின்றது இவ்வூர். எனவே தோழியைப் பிறர் போலக் கொண்டு கூறியது பொருள். *(1150)*

## 2. கற்பியல்

**பரிமேலழகர்:** இனிக் கற்பு, பதினெட்டு அதிகாரத்தால் கூறுவான் தொடங்கி, முதற்கண் பிரிவாற்றாமை கூறுகின்றார்.

**காளிங்கர்:** தலைமகன் கூற்று முடிந்தது. இனித் தலைமகள் கூற்றுக் கிளவி வருமாறு. இங்ஙனம் இவன் நீங்கிய ஆற்றாமை அவட்கும் ஒக்கும்; ஆகலான், மற்று இதன் பின்னரே அதனை அறிவிக்கின்றது மேலை அதிகாரம்.

# 116. பிரிவாற்றாமை

**பரிமேலழகர்:** அஃதாவது, வரைந்து எய்தியபின் தலைமகன் அறம் பொருள் இன்பங்களின் பொருட்டுச் சேயிடையினும் ஆயிடையினும்[3] தலைமகளைப் பிரிந்து செல்லும்; செல்லும் ஞான்று அப்பிரிவினை அவள் ஆற்றாளாம் தன்மை. அஃது ஈண்டுப் பிரிவுணர்த்திய தலைமகற்குத் தோழி கூறலும், அவள்தனக்குத் தலைமகள்தானே அவன் குறிப்பான் உணர்ந்து கூறலும், பிரிவுணர்த்தியவழிக் கூறலும், தலைமகன் பிரிந்துழி ஆற்றுவிக்கும் தோழிக்குத் தலைமகள் மறுத்துக் கூறலும் என நால்வகையால் கூறப்படும்.

**மணக்குடவர்:** பிரிவாற்றாமையாவது அலர் அறிவுறுத்தப்பட்ட தலைமகன் தலைமகளை வரைந்துகொண்டு இன்புறுமாயினும், பிரியுங் காலத்து ஆற்றாமை கூறுதல். மேலதனோடு இயையும் இது. இது முதலாகக் கற்பு என்று கொள்ளப்படும்.

**பரிப்பெருமாள்:** பிரிவாற்றாமையாவது அலர் அறிவுறுத்தப்பட்ட தலைமகன் தலைமகளை வரைந்து கொண்டதன் பின்பாயினும் வரைவதன் முன்பாயினும் பிரியும் காலத்து ஆற்றாமை. மேலதனோடு இயையும் இது.

---

1. காதலரும் என்ற உம்மை.

2. 'தாம் வேண்டி' என்பது இவர் பாடம்.

3. ஓதற் பிரிவு, காவற் பிரிவு, பகைதணிவினைப் பிரிவு, வேந்தற் குற்றுழிப் பிரிவு, பொருட் பிரிவு என்னும் ஐந்தும் சேயிடைப் பிரிவென்றும், பரத்தையிற் பிரிவு ஆயிடைப் பிரிவென்றும் கூறப்பெறும்; **தமிழ்நெறி விளக்கம்**, 24, 25, பார்க்க.

இஃது ஈண்டு விசேடித்துக் கூறியது என்னை? காதற் சிறப்பு உரைத்தலின் தலைமகள் கூறினவும் நாணுத் துறவுரைத்தலின் தலைமகன் கூறினவும் பிரிவாற்றாமை யன்றோ எனின், இவை எல்லாம் களவுக் காலத்து ஓரிடத்து உறைவதோர் புணர்ச்சியிற் பிரிவால் வருந்தும் கூற்றெனின் அஃது அற்று அன்று. 'ஓதல், காவல், பகைதணிவினை, வேந்தற் குற்றுழி, பொருட் பிணி'[1] என்னும் ஐந்தினும் ஒன்று காரணமாக நாடிடை யிட்டுத் தலைமகன் பிரியுங் காலத்து ஆற்றாமை என்று கொள்க. இது முதலாகக் கற்பு என்று கொள்ளப்படும்.

1151

செல்லாமை உண்டேல் எனக்குரை மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க் குரை. 1

(பிரிந்து கடிதின் வருவல் என்ற தலைமகற்குத் தோழி சொல்லியது.)

**பரிமேலழகர் :** செல்லாமை உண்டேல் எனக்கு உரை — நீ எம்மைப் பிரியாமை உண்டாயின் அதனை எனக்குச் சொல்; மற்று நின் வல்வரவு வாழ்வார்க்கு உரை - அஃது ஒழியப் பிரிந்துபோய் விரைந்து வருதல் சொல்வையாயின் அதனை அப்பொழுது உயிர் வாழ்வார்க்குச் சொல்.

தலைமகளை ஒழித்து எனக்கு என்றாள், தான் அவள் என்னும் வேற்றுமை இன்மையின்.[2] அக்காலமெல்லாம் ஆற்றியிருந்து அவ்வரவு காணவல்லள் அல்லள், பிரிந்தபொழுதே இறந்துபடும் என்பதாம். அழுங்குவித்தல் பயன். இதனைத் தலைமகள் கூற்றாக்கி உரைப்பாரும் உளர்.

### உரை வேறுபாடு

**மணக்குடவர் :** இது கடிது வருவார் என்ற தோழிக்குத் தலைமகள் ஆற்றாமையால் கூறியது.

**பரிப்பெருமாள்:** பிரிவு உணர்த்தப்பட்ட தலைமகனது வரவு நீட்டிக்கக் கூடும் என்று ஆற்றாளாயது கண்டு, கடிது வருவர் என்ற தோழிக்குத் தலைமகள் ஆற்றாமை கூறியது.

**கவிராஜ பண்டிதர் :** நாயகனைப் பிரிந்தவுடனே உயிர் போகிறது உத்தமமான கற்பு; பிரிந்த பின்னும் பிராணன் இருக்கிறது மத்திமமான கற்பு.

### ஒப்புமை

**நின் வல்வரவு வாழ்வார்க் குரை:**

"வருவை யாகிய சின்னாள்
வாழா ளாதல்நற் கறிந்தனை சென்மே"

"வாழா ளாதல் சூழா தோயே" (நற். 19: 8-9, 183: 11.)

"வாழ்தலும் பழியே பிரிவுதலை வரினே" (குறுந். 32: 6.)

"......................செல்வீர்
வருவீ ராகுதல் உரைமின்......
............இருக்கிற் போர்க்கே." (அகநா. 387: 2-20.) (1151)

1. இறை. 35.

2. தொல். பொருள். 27.

## 1152

இன்கண் உடைத்தவர் பார்வல் பிரிவஞ்சும்
புன்கண் உடைத்தால் புணர்வு. 2

(பிரிவு தலைமகன் குறிப்பான் அறிந்த தலைமகள்
தோழிக்குச் சொல்லியது.)

**பரிமேலழகர்:** அவர் பார்வல் இன்கண் உடைத்து - தழையும் கண்ணியும் கொண்டு பின் நின்றஞான்று அவர் நோக்கு மாத்திரமும் புணர்ச்சி குறித்தமையான் நமக்கு இன்பம் உடைத்தா யிருக்கும்; புணர்வு பிரிவு அஞ்சும் புன்கண் உடைத்து - இன்று அப் புணர்ச்சிதான் நிகழா நிற்கவும் அது பிரிவர் என்று அஞ்சும் அச்சத்தினை உடைத்தாயிற்று; அவர் அன்பின் நிலைமை இது.

பார்வல் என்பதனால் புணர்ச்சி பெறாத பின்னிலைக்காலம் பெறப் பட்டது. புன்கண் என்னும் காரணப் பெயர் காரியத்தின்மே லாயிற்று. அவ்வச்சத்தினை உடைத்தாதலாவது, "முள்ளுறழ் முளையெயிற் றமிழ்தூறும் தீநீரைக், கள்ளினும் மகிழ்செய்யும் எனவுரைத்தும் அமையாரென், ஒள்ளிழை திருத்தும்"[1] பண்டையிற் சிறப்பால் அவன் பிரிதற்குறிப்புக் காட்டி அச்சம் செய்தல் உடைமை. அழுங்குவித்தல், பயன்.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** இன்கண் உடைத்து அவர் பார்வல்-நம் காதலரை வரவு பார்த்திருக்குமது, இன்பத்தை உடைத்து.

**பரிப்பெருமாள்:** வரவு பார்த்தல், களவு காலத்து வரவு பார்த்தல். தலைமகன் பிரியலுற்ற குறிப்புக் கண்டு வேறுபட்ட தலைமகளை இவ் வேறு பாடு எற்றினான் ஆயிற்றென்று வினவிய தோழிக்குத் தலைமகள் கூறியது.

**கவிராஜ பண்டிதர்:** இவர் இத்தனை நாளும் போலே யல்லாமல் இப்பொழுது நம்மிடத்திலே இனிதான பார்வை உடையரானபடியினாலே, அவர் பிரிவுக்குப் பயப்படுகின்றேன்.

நாம் இவரைப் பிரியவொட்டாமல் புணர்ச்சியிலே மகிழ்ச்சி செய்ய வேணும் என்பது கருத்து.

### ஒப்புமை

**பார்வல்:**

"பருந்துபறக் கல்லாப் பார்வற் பாசறை" (மதுரைக். 231)
"பார்வல் அஞ்சிய பருவரல் ஈர்ஞெண்டு" (குறுந். 117: 2.)
"பார்வல் கொக்கின் பரிவேட் பஞ்சா"
"பார்வல் பாசறைத் தரூஉம் பல்வேல்" (பதிற். 21: 27, 84: 5.)
"பார்வல் இருக்கைக் கவிகண் ணோக்கின்" (புறநா. 3: 19.)
"நாரைச் சேவல் பார்வலொடு வதிந்த." (பெருங். 3. 4: 43.) (1152)

## 1153

அரிதரோ தேற்றம் அறிவுடையார் கண்ணும்
பிரிவோ ரிடத்துண்மை யான். 3

(இதுவும் அது.)

**பரிமேலழகர்:** அறிவு உடையார் கண்ணும் - பிரியேன் என்ற தம் சொல்லும் நம் பிரிவாற்றாமையும் அறிதல் உடையராய காதலர்கண்ணும்,

---

1. கலி. 4: 13-5.

ஓர் இடத்து பிரிவு உண்மையான் – ஒரோவழிப் பிரிவு நிகழ்தலான், தேற்றம் அரிது – அவர் சொல்லும், தலையளியும் பற்றி நம்மாட்டு அன்புடையவர் எனத் தேறும் தேற்றம் அரிதாய் இருந்தது.

அரோ: அசைநிலை. உம்மை, உயர்வு சிறப்பின்கண் வந்தது.

### உரை வேறுபாடு

**பரிப்பெருமாள்:** தலைமகன் பிரிந்தான் என்று கேட்டவிடத்து நின்னிற் பிரியேன் என்ற சொல்லை உட்கொண்டு தலைமகள் கூறியது. *(1153)*

## 1154

அளித்தஞ்சல் என்றவர் நீப்பின் தெளித்தசொல்
தேறியார்க் குண்டோ தவறு. 4

(இதுவும் அது.)

**பரிமேலழகர்:** அளித்து அஞ்சல் என்றவர் நீப்பின் - எதிர்ப்பட்ட ஞான்றே தலையளி செய்து நின்னிற் பிரியேன், அஞ்சல் என்றவர் தாமே பின் பிரிவாராயின், தெளித்த சொல் தேறியார்க்கு தவறு உண்டோ - அவர்க்கன்றி அவர் தெளிவித்த சொல்லை மெய்யெனத் தெளிந்தார்க்குக் குற்றம் உண்டோ?

தேறியார் என்பது தன்னைப் பிறர்போற் கூறல். சொல்லும் செயலும் ஒவ்வாமைக்குற்றம் அவர்க்கு எய்தும், அஃது எய்தாவகை அழுங்குவி [1] என்பது கருத்து.

### உரை வேறுபாடு

**பரிப்பெருமாள்:** பிரிவு உணர்த்திய தோழிக்குப் பிரிவு உடன்படாது தலைமகள் வெகுட்சிக் குறிப்பால் கூறியது.

**பரிதியார்:** இன்பம் தந்து பிரியோம் என்று உறுதி சொன்ன நாயகர் பிரிந்தார். இனி வந்து நன்மை செய்யினும் துன்பமன்றியே இன்பம் இல்லை. *(1154)*

## 1155

ஓம்பின் அமைந்தார் பிரிவோம்பல் மற்றவர்
நீங்கின் அரிதால் புணர்வு. 5

(இதுவும் அது.)

**பரிமேலழகர்:** ஓம்பின் அமைந்தார் பிரிவு ஓம்பல் - என் உயிரைச் செல்லாமல் காத்தியாயின் அதனை ஆளுதற்கு அமைந்தாருடைய செலவினை அழுங்குவிப்பாயாக; மற்று அவர் நீங்கின் புணர்வு அரிது - அழுங்குவிப்பார் இன்றி அவர் செல்வாராயின் அவரால் ஆளப்பட்ட உயிரும் செல்லும்; சென்றால் பின் அவரைக் கூடுதல் எனக்கு அரிதாம்.

ஆளுதற்கு அமைதல்: இறைவராதற்குத் தெய்வத்தால் ஏற்புடையராதல். மற்று, வினைமாற்றின்கண் வந்தது.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** மேல் தலைமகள் கூறிய சொல் கேட்டு யாது சொல்வேன் என்ற தோழிக்குத் தலைமகள் கூறியது. *(1155)*

---

1. போகாமல் நிற்கச் செய்.

1156

பிரிவுரைக்கும் வன்கண்ணர் ஆயின் அரிதவர்
நல்குவர் என்னும் நசை. 6

(தலைமகன் பிரிவு உணர்த்தியவாறு வந்து சொல்லிய தோழிக்குச் சொல்லியது.)

**பரிமேலழகர்:** அவர் பிரிவு உரைக்கும் வன்கண்ணர் ஆயின் - நம் கவவுக் கடுமை[1] அறிந்த தலைவர் தாமே நம்முன் நின்று தம் பிரிவினை உணர்த்தும் வன்கண்மை உடையராயின், நல்குவர் என்னும் நசை அரிது - அத் தன் தன்மையார் பின்பு நம் ஆற்றாமை அறிந்துவந்து தலையளி செய்வர் என்று இருக்கும் ஆசை விடப்படும்.

அருமை—பயன்படுதல் இல்லாமை. கூடியிருந்தே அன்பின்றிப் பிரிவு எண்ணுதலும் உணர்த்தலும் வல்லராயினர், பிரிந்துபோய் அன்புடையராய் நம்மை நினைத்து வந்து நல்குதல் யாண்டையது என்பதாம். அழுங்குவித்தல் பயன்.

உரை வேறுபாடு

**மணக்குடவர்:** இது தலைமகன் பிரிந்தான் என்று கேட்டவிடத்து, நின்னிற் பிரியேன் என்ற சொல்லை உட்கொண்டு தலைமகள் கூறியது.

**பரிப்பெருமாள்:** பிரிதலும் ஆற்றுதலும் உலகியல் என்று நெருங்கிக் கூறிய தோழிக்குத் தலைமகள் கூறியது.

**கவிராஜ பண்டிதர்:** வன்கண்ணர் - கெட்டி மனதுடையவர். (1156)

1157

துறைவன் துறந்தமை தூற்றாகொல் முன்கை
இறைஇறவா நின்ற வளை. 7

(இதுவும் அது.)

**பரிமேலழகர்:** துறைவன் துறந்தமை - துறைவன் என்னைப் பிரிய லுற்றமையை, முன் கை இறை இறவா நின்ற வளை தூற்றாகொல் - அவன் உணர்த்தாமல் தாமே உணர்ந்து என் முன்கை இறையினின்றும் கழலா நின்ற வளைகள் எனக்கு அறிவியாவோ? அவன் உணர்த்த உணர்ந்து வந்து நீ அறிவித்தல் வேண்டுமோ?

முன்னே நிகழ்ந்தமையின் துறந்தமை என்றும், கேட்ட துணையான் மெலிந்து ஆற்றாமையின் இறவாநின்ற என்றும் கூறினள். அழுங்குவித்து வந்து கூறற்பாலை அல்லையாய், நீயும் இவ் வளைகள் செய்தனவே செய்தாய் எனப் புலந்து கூறியவாறு.

உரை வேறுபாடு

**பரிப்பெருமாள்:** பிரியார் என அறிவுறுக்கும் தோழிக்கு, நீ சொல்ல வேண்டா, யான் அறிந்தேன் என்று தலைமகள் கூறியது.

**பரிதியார்:** நாயகர் பிரிந்ததை ஒருவரும் அறியார்; நம்முடைய முன்கை வளை கழல எல்லாரும் அறிந்தனர்.

1. கவவுக் கடுமை—இறுகத் தழுவிக்கொள்ளும் தன்மை; "கவவுக் கடுங் குரையள்" (குறுந். 132:1.)

**கவிராஜ பண்டிதர்:** வளைகள் அறிதலாவது, கையிலே இந்தண்டைக் கந்தண்டை உழலுகிறதனாலே அறிந்தது என்றும், நாயகன் பிரிந்து போகிறான் என்று கேட்டவுடனே சரீரம் வாடிக் கைவளைகள் கழன்று தாழ விழுகிறதனாலே அறிவித்தது என்றும் ஆம்.

### ஒப்புமை

**முன்கை வளை கழலுதல் :**

"நோகோ யானே நெகிழ்ந்தன வளையே"

*(நற். 26 : 1.)*

"கோடீ ரிலங்குவளை ஞெகிழ"
"இறையிறந், திலங்குவளை நெகிழச் சாஅய்"
"இறைவளை நெகிழ்த்த எவ்வ நோய்"

*(குறுந். 11 : 1, 50 : 3-4, 289 : 2.)*

"துறைநணி ஊரனை உள்ளிஎன்
இறையே ரெல்வளை நெகிழ்போ டும்மே"

*(ஐங்குறு. 20 : 4-5.)*

"அறைபறை யானை அலங்குதார்க் கிள்ளி
முறைசெயும் என்பரால் தோழி— இறையிறந்த
அங்கோல் அணிவளையே சொல்லாதோ மற்றவன்
செங்கோன்மை செந்நின்ற வாறு."

*(முத்தொள்ளாயிரம்.) (1157)*

## 1158

இன்னா தினன்இல்லூர் வாழ்தல் அதனினும்
இன்னா தினியார்ப் பிரிவு. 8

(இதுவும் அது.)

**பரிமேலழகர் :** இனன் இல் ஊர் வாழ்தல் இன்னாது - மகளிர்க்குத் தம் குறிப்பு அறியும் தோழியர் இல்லாத வேற்றூரின்கண் வாழ்தல் இன்னாது ; இனியார் பிரிவு அதனினும் இன்னாது - அதன்மேலும் தம் காதலரைப் பிரிதல் அதனினும் இன்னாது.

தலைவன் செலவினை அழுங்குவித்து வாராது உடன்பட்டு வந்தமை பற்றிப் புலக்கின்றாளாகலின், இனன் இல்லூர் என்றாள். உலகியல் கூறுவாள் போன்று தனக்கு அவ்விரண்டும் உண்மை கூறியவாறு.

### உரை வேறுபாடு

**மணக்குடவர் :** இது பிரிவு உணர்த்திய தலைமகற்கு இவ்விரண்டு துன்பமும் எங்கட்கு உளவாம் என்று பிரிவு உடன்படாது தோழி கூறியது.

*(1158)*

## 1159

தொடிற்சுடின் அல்லது காமநோய் போல
விடிற்சுடல் ஆற்றுமோ தீ. 9

(காமம் தீயேபோன்று தான் நின்ற இடத்தைச் சுடுமாகலான்
நீ ஆற்றல் வேண்டும் என்ற தோழிக்குச் சொல்லியது.)

**பரிமேலழகர் :** தீ தொடின் சுடின் அல்லது - தீ தன்னைத் தொட்டால் சுடுமாயின் சுடுதல் அல்லது, காமநோய் போல விடின் சுடல் ஆற்றுமோ -

காமமாகிய நோய்போலத் தன்னை அகன்றால் தப்பாது சுடுதலை வற்றோ? மாட்டாது.

சுடுமாயின் என்பது மந்திர மருந்துகளால் தம்பிக்கப்படாதாயின் என்றவாறு. காமத்திற்கு அதுவும் இல்லை என்பாள் வாளா சுடல் என்றாள். அகறல், நுகராமை. சுடல் என்பது முன்னும் கூட்டப்பட்டது. தீயினும் கொடியதனை யான் ஆற்றுமாறு என்னை என்பதாம்.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** தலைமகன் பிரிந்துழித் தலைமகள் ஆற்றாமை கண்டு தோழி கூறியது.

**கவிராஜ பண்டிதர்:** காமம் எத்தனை தூரத்திலே இருந்தாலும் சுடும்.

GOVT. ORIENTAL MANUSCRIPTS LIBRARY MADRAS 1970

### ஒப்புமை

1. *காமநோய் விடின் சுடுதல்:*
குறள், 1104, ஒப்புமை பார்க்க.

2. *காமத்துக்குத் தீ:*

"கண் தர வந்த காம ஒள் எரி" (குறுந். 305 : 1.)

"காமக் கனலெரி கொளீஇ யாமும்" (பெருங். 1. 33 : 203.)

"மொழிந்த காமக் கடுங்கனல் மூண்டதால்." (கம்ப. சூர்ப்பணகை. 72.) (*1159*)

## 1160

அரிதாற்றி அல்லல்நோய் நீக்கிப் பிரிவாற்றிப்
பின்இருந்து வாழ்வார் பலர். 10

(தலைவியர் பலரும் பிரிவாற்றி இருப்பர், அது நீ செய்கின்றிலை என்ற தோழிக்குச் சொல்லியது.)

**பரிமேலழகர்:** (நீ சொல்லுகின்றது ஒக்கும்); அரிது ஆற்றி அல்லல் நோய் நீக்கி - பிரிவு உணர்த்தியவழி அதற்கு உடம்பட்டுப் பிரியுங்கால் நிகழும் அல்லல் நோயினையும் நீக்கி, பிரிவு ஆற்றி பின் இருந்து வாழ்வார் பலர் - பிரிந்தால் அப் பிரிவுதன்னையும் ஆற்றிப் பின்னும் இருந்து உயிர் வாழும் மகளிர் உலகத்துப் பலர்.

பண்டையிற் சிறப்பத் தலையளி பெற்று இன்புறுகின்ற எல்லைக் கண்ணே அஃது இழந்து துன்புறுதற்கு உடம்படுதல் அரியது ஒன்றாகலின் அரியதனைச் செய்து என்றும், செல்லும் தேயத்து அவர்க்கு யாது நிகழும் என்றும், வருந்துணையும் யாம் ஆற்றி இருக்குமாறு என் என்றும், அவ்வரவு தான் எஞ்ஞான்று வந்தெய்தும் என்றும், இவ்வாற்றால் நிகழும் கவலை மனத்து நீங்காது ஆகலான் அல்லல் நோய் நீக்கி என்றும், பிரிந்தால் வருந் துணையும் அகத்து நிகழும் காமவேதனையும் புறத்து யாழிசை, மதி, தென்றல் என்று இவை முதலாக வந்து இதனை வளர்ப்பனவும் ஆற்றல் அரியவாகலின் பிரிவாற்றி என்றும், தம் காதலரை இன்றியமையா மகளிருள் இவையெல்லாம் பொறுத்துப் பின்னும் இருந்து உயிர் வாழ்வார் ஒருவரும் இல்லை என்பது குறிப்பால் தோன்ற, "பின் இருந்து வாழ்வார் பலர்" என்றும் கூறினாள். அரிது என்பது வினைக்குறிப்புப் பெயர். பிரிவின்கண் நிகழ்வனவற்றைப் பிரிவு என்றாள். செய்து, நீக்கி, ஆற்றி என்பன ஓசைவகையான் அவ்வவற்

றது அருமை உணர நின்றன. சிறப்பும்மை விகாரத்தால் தொக்கது யானும் இறந்துபடுவன் என்பது கருத்து.

உரை வேறுபாடு

**மணக்குடவர்:** அல்லல் நோய் - காம வேதனை. பிரிவாற்றுதல் - புணர்ச்சியின்மையைப் பொறுத்தல்.

**பரிப்பெருமாள்:** தோழி தலைமகளை நெருங்கிக் கூறியது.

ஒப்புமைப் பகுதி

**பிரிவை ஆற்ற வல்லவர் :**

"ஓராங்குத் தணப்ப
உள்ளா தாற்றல் வல்லு வோர்க்கே." (குறுந். 58 : 5-6.)

(1160)

# 117. படர்மெலிந்து இரங்கல்

**பரிமேலழகர்:** அது படரால் மெலிந்து இரங்கல் என விரியும். அஃதாவது பிரிவு ஆற்றுளாய தலைமகள் தான் உறுகின்ற துன்பத்தினை எப்பொழுதும் நினைத்தலின், அந் நினைவால் மெலிந்து இரங்குதல். அதிகார முறைமையும் இதனானே விளங்கும்.

**மணக்குடவர்:** படர்மெலிந்து இரங்கலாவது, தலைமகள் தலைமகன் பிரிந்துழிக் கதுமென உற்ற துன்பத்தினால் மெலிந்து இரங்குதல். பிரிந்துழி உற்ற துன்பமாவது, போனான் என்று கேட்ட காலத்து வருவதோர் மன நிகழ்ச்சி. இது பிரியப்பட்டார்க்கு முற்பாடு தோன்றுமாதலான், அதன்பின் கூறப்பட்டது.

**1161**

மறைப்பேன்மன் யான்இஃதோ நோயை இறைப்பவர்க்
கூற்றுநீர் போல மிகும். 1

(காம நோயை வெளிப்படுத்தல் நின் நாணுக்கு ஏலாது என்ற தோழிக்குச் சொல்லியது.)

**பரிமேலழகர் :** நோயை யான் மறைப்பேன் - இந் நோயைப் பிறர் அறிதல் நாணி யான் மறையா நின்றேன்; இஃதோ இறைப்பவர்க்கு ஊற்று நீர்போல மிகும் - நிற்பவும், இஃது அந் நாண்வரை நில்லாது நீர் வேண்டும் என்று இறைப்பவர்க்கு ஊற்றுநீர் மிகுமாறு போல மிகாநின்றது.

அம் மறைத்தலால் பயன் என் என்பது பட நின்றமையின், மன் ஒழியிசைக்கண் வந்தது. "இஃதோ செல்வர்க் கொத்தனென் யான்"[1] என்புழிப்போல ஈண்டுச் சுட்டுப் பெயர் ஈறு திரிந்து நின்றது. இஃதோர் நோயை என்று பாடம் ஓதுவாரும் உளர்; அது பாடம் அன்மை யறிக. இனி அதற்கு அடுத்தது நீ செயல்வேண்டும் என்பதாம்.

உரை வேறுபாடு

**கவிராஜ பண்டிதர் :** இப்படி அதிகமாகிறதை மறைக்கிறது எப்படி? (1161)

---

1. அகநா. 26: 19-20, பி-ம்.

1162

கரத்தலும் ஆற்றேன்இந் நோயைநோய் செய்தார்க்
குரைத்தலும் நாணுத் தரும். 2

(ஈண்டையார் அறியாமல் மறைத்தல், ஆண்டையார்[1] அறியத் தூதுவிடுதல்
என்னும் இரண்டனுள் ஒன்று செயல்வேண்டும் என்ற
தோழிக்குச் சொல்லியது.)

*பரிமேலழகர்:* இந் நோயை கரத்தலும் ஆற்றேன் - இந் நோயை ஈண்டையார் அறியாமல் மறைத்தலும் வல்லேன் ஆகின்றிலேன்; நோய் செய்தார்க்கு உரைத்தலும் நாணு தரும் - ஆகாக்கால், நோய் செய்தவர்க்கு உரைக்க எனின், அதுவும் எனக்கு நாணினைத் தாராநின்றது; இனி என் செய்கோ?

ஒருகாலைக்கு ஒருகால் மிகுதலின் கரத்தலும் ஆற்றேன் என்றும், சேயிடைச் சென்றவர்க்கு இது சொல்லித் தூதுவிட்டால் இன்னும் இருந்தேன் என்பது பயக்கும் என்னும் கருத்தால் நாணுத் தரும் என்றும் கூறினள்.

உரை வேறுபாடு

*மணக்குடவர்:* இது குறிப்பறிதற்பொருட்டுக் கூறிய தோழிக்குத் தலைமகள் கூறியது.

*பரிப்பெருமாள்:* இவ்வாற்றாமையைத் தலைமகற்குச் சொல்லிவிடுவோம் என்று தலைமகள் குறிப்பு அறிதற்பொருட்டுக் கூறிய தோழிக்குத் தலைமகள் கூறியது. (*1162*)

1163

காமமும் நாணும் உயிர்காவாத் தூங்கும்என்
நோனா உடம்பின் அகத்து. 3

(இதுவும் அது.)

*பரிமேலழகர்:* காமமும் நாணும் - காமநோயும் அதனைச் செய்தவர்க்கு உரைக்கல் ஒல்லாத நாணும், நோனா என் உடம்பின் அகத்து - தம்மைப் பொறாத என் உடம்பின்கண்ணே, உயிர் காவா தூங்கும் - உயிர் காத்தண்டாக[2] அதன் இரு தலையினும் தூங்கா நின்றன.

பொறாமை, மெலிவான் ஆயது. தூங்கும் என்பது, ஒன்றின் ஒன்று மிகாது இரண்டும் ஒத்த சீர்[3] என்பது தோன்ற நின்றது. தூதுவிடவும் ஒழியவும் பண்ணுவனவாய காமநாண்கள் தம்முள் ஒத்து உயிரினை இறுவியா நின்றன; யான் அவற்றுள் ஒன்றின்கண் நிற்கமாட்டாமையின் இஃது இற்றேவிடும் என்பதாம்.

உரை வேறுபாடு

*மணக்குடவர்:* இது தலைமகள் மனநிகழ்ச்சி இது என்று கூறியது.

ஒப்புமை

1. காமமும் நாணும்: குறள், *1247*.
"கௌவை யஞ்சிற் காமம் எய்க்கும்
எள்ளற விடினே உள்ளது நாணே"

1. ஈண்டையார் - தலைவிக்கு அருகில் உள்ள நற்றாய் முதலியோர். ஆண்டையார் - தலைவன்.

2. சுமக்கும் தடியாக. 3. சீர - கனமுடையன.

"காணுக் கழிப மன்னே நாணட்டு
நல்லறி விழந்த காமம்."  (குறுந். 112: 1-2, 231: 4-5.)

2. கா: குறள், 1196.

3. உயிர்காவாத் தூங்கல்:

"மெலியப் பொறுத்தேன் களைந்தீமின் சான்றீர்
நலிதரும் காமமும் கௌவையும் என்றிவ்
வலிதின் உயிர்காவாத் தூங்கிஆங்கென்னை
நலியும் விழுமம் இரண்டு." (கலி. 142: 55-8.) (1163)

### 1164

காமக் கடல்மன்னும் உண்டே அதுநீந்தும்
ஏமப் புணைமன்னும் இல். 4

(தலைவியர் காமக்கடற் படார், படினும் அதனை ஏற்ற புணையால் நீந்திக் கடப்பர் என்ற தோழிக்குச் சொல்லியது.)

பரிமேலழகர்: உண்டு காமக் கடலே - யாவர்க்கும் உளவாய் வருகின்ற இவ்விரண்டனுள்ளும் எனக்கு உண்டாகின்றது காமக்கடலே; அது நீந்தும் ஏமப் புணை இல் - அதனை நீந்தும் அரணுகிய புணை இல்லை.

இருவழியும் மன்னும் உம்மும் அசைநிலை. தூதுவிட்டு இதற்குப் புணையாகற்பாலையாய நீயும் ஆயிற்றிலை என்பது கருத்து.

உரை வேறுபாடு

கவிராஜ பண்டிதர்: தெப்பமாவது, நாயகிக்கு நாயகனும் நாயகனுக்கு நாயகியும்.

ஒப்புமை

காமம் கடல் போன்றது:

குறள், 1137, ஒப்புமை பார்க்க. (1164)

### 1165

துப்பின் எவன்ஆவர் மற்கொல் துயர்வரவு
நட்பினுள் ஆற்று பவர். 5

(தூதுவிடாமை நோக்கித் தோழியொடு புலந்து சொல்லியது.)

பரிமேலழகர்: நட்பினுள் துயர்வரவு ஆற்றுபவர் - இன்பம் செய்தற்குரிய நட்பின்கண்ணே துன்ப வரவினைச் செய்யவல்லவர், துப்பின் எவன் ஆவர்கொல் - துன்பம் செய்தற்குரிய பகைமைக்கண் என்செய்வர் கொல்லோ?

துப்புப் பகையுமாதல், "துப்பெதிர்ந் தோர்க்கே உள்ளாச் சேய்மையன், நட்பெதிர்ந் தோர்க்கே அங்கை அண்மையன்"[1] என்பதனுனும் அறிக. அப் பகைமை ஈண்டுக் காணுமையின் அவர் செய்வதும் அறியப் பெற்றிலேம் என்பது பட நின்றமையின், மன் ஒழியிசைக்கண் வந்தது. துயர்வருதலை விலக்கலாயிருக்க, அது செய்கின்றிலை எனப் புலக்கின்றமையின், துயர்வரவு செய்தாளாக்கியும் பிறளாக்கியும்[2] கூறினள்.

1. புறநா. 380: 10-11, பி-ம்.
2. படர்க்கையாகச் சொன்னமையின் பிறளாக்கி யென்றார்.

உரை வேறுபாடு

**மணக்குடவர்:** இது பகைதணி வினையின்கண் பிரிந்த தலைமகனது கொடுமையை உட்கொண்டு தலைமகள் தோழிக்குச் சொல்லியது. *(1165)*

### 1166

**இன்பம் கடல்மற்றுக் காமம் அஃதடுங்கால்**
**துன்பம் அதனிற் பெரிது. 6**

(காமத்தான் இன்பம் உற்றார்க்கு அதனின் ஆய துன்பமும் வரும் என்ற தோழிக்குச் சொல்லியது.)

**பரிமேலழகர்:** காமம் இன்பம் கடல் – காமம் புணர்வால் இன்பம் செய்யுங்கால் அவ்வின்பம் கடல்போலப் பெரிதாம்; மற்று அஃது அடுங்கால் துன்பம் அதனின் பெரிது - இனி அதுதானே பிரிவால் துன்பம் செய்யுங் கால் அத் துன்பம் அக் கடலினும் பெரிதாம்.

மற்று. வினை மாற்றின்கண் வந்தது. அடுங்கால் என வந்தமையின், மறுதலையெச்சம் வருவிக்கப்பட்டது. பெற்ற இன்பத்தோடு ஒத்துவரின் ஆற்றலாம்; இஃது அதனது அளவன்று என்பது கருத்து.

உரை வேறுபாடு

**மணக்குடவர்:** இஃது இன்பமுற்றார் துன்பமுறுதல் உலகியல் என்று ஆற்றுவித்த தோழிக்கு, ஆற்றல் அரிது என்று தலைமகள் கூறியது.

ஒப்புமை

இன்பம் கடல்:

"காமம்வீழ் இன்பக் கடலாமே காதலரின்
ஏம இருக்கையே தூம்திரையாம்." (இன்னிலை, 27.) *(1166)*

### 1167

**காமக் கடும்புனல் நீந்திக் கரைகாணேன்**
**யாமத்தும் யானே உளேன். 7**

(காமக்கடல் நிறைபுணையாக நீந்தப்படும் என்றாட்குச் சொல்லியது.)

**பரிமேலழகர்:** காமக் கடும்புனல் நீந்தி கரை காணேன் - காமமாகிய கடலை நீந்தாதேன் அல்லேன்; நீந்தியும் அதற்குக் கரை காண்கின்றிலேன்; யாமத்தும் யானே உளேன் - அக் காணுமைக் காலந்தான் எல்லாரும் துயிலும் அரையிருள் ஆயிற்று; அவ் வரையிருட்கண்ணும் அதற்கு ஒரு துணை இன்றி யானே ஆயினேன்; ஆயும் இறந்துபட்டு உய்ந்து போகாது உளேனாகாநின்றேன்; ஈது ஒரு தீவினைப்பயன் இருந்தவாறு என்!

கடுமை ஈண்டு மிகுதிக்கண் நின்றது. உம்மை முன்னும் கூட்டப் பட்டது. யானே ஆயினேன் என்பது, நீ துணையாயிற்றிலை என்னும் குறிப்பிற்று.

உரை வேறுபாடு

**மணக்குடவர்:** இது காதலர் குறித்த நாள் வருந்துணையும் ஆற்று மாறு என்னை என்று தலைமகள் தன்னுள்ளே சொல்லியது.

**காளிங்கர்:** நெஞ்சை நோக்கிச் சொல்லியதாகக் கொள்வர்.

கவிராஜ பண்டிதர்: கரை காணுதது, ஒரு காலைக்கு ஒருகால் அதிகமாகிறது.

**ஒப்புமை**

**காமம் கடலைப் போன்றது:**
குறள், *1137*, ஒப்புமை பார்க்க. **(*1167*)**

**1168**

மன்னுயிர் எல்லாம் துயிற்றி அளித்திரா
என்அல்ல தில்லை துணை. **8**

(இரவின் கொடுமை சொல்லி இரங்கியது.)

பரிமேலழகர்: இரா அளித்து[1] - இவ்விரா அளித்தாய் இருந்தது; மன் உயிர் எல்லாம் துயிற்றி என் அல்லது துணை இல்லை - உலகத்து நிலை பெறுகின்ற உயிர்களை எல்லாம் தானே துயிலப்பண்ணுதலான் என்னை அல்லது வேறு துணை உடைத்தாயிற்றில்லை.

துயிற்றி எனத் திரிந்து நின்ற வினையெச்சம் அவாய் நிலையான் வந்த உடைத்தாதலோடு முடிந்தது. துணையோடு ஒன்றுகின்ற உயிர்களெல்லாம் விட்டு இறந்துபடும் எல்லையேனுடைய என்னையே துணையாகக் கோடலின் அறிவின்று என்பதுபற்றி அளித்து என்றாள்; இகழ்ச்சிக் குறிப்பு.

**உரை வேறுபாடு**

மணக்குடவர்: இது பிற்றை ஞான்று வினவிய தோழிக்குத் தலைமகள் கண் உறங்குகின்றதில்லை என்று சொல்லியது.

**ஒப்புமை**

**முற்றும்:**

"நள்ளென் றன்றே யாமம் சொல்லவிந்
தினிதடங் கினரே மாக்கள் முனிவின்று
நனந்தலை யுலகமும் துஞ்சும்
ஓர்யான் மன்ற துஞ்சா தேனே." (குறுந். *6*.)

"யாமத்து
ஞாலத்து உயிரெல்லாம் கண்துஞ்சும் நள்ளிருள்கூர்
காலத்தும் துஞ்சாதுன் கண்." (கைலைபாதி. *64*.) **(*1168*)**

**1169**

கொடியார் கொடுமையின் தாம்கொடிய இந்நாள்
நெடிய கழியும் இரா. **9**

(இதுவும் அது.)

பரிமேலழகர்: இந் நாள் நெடிய கழியும் இரா - காதலரோடு நாம் இன்புற்ற முன் நாட்களில் குறியவாய் அவர் பிரிவாற்றேம் ஆகின்ற இந் நாட்களிலே நெடியவாய்ச் செல்கின்ற கங்குல்கள், கொடியார் கொடுமையின் தாம் கொடிய - அக் கொடியாரது கொடுமைக்கு மேலே தாம் கொடுமை செய்யா நின்றன.

1. அளித்து - இரங்கத்தக்கது.

தன் ஆற்ருமை கருதாது பிரிதலின், கொடியார் என்ருள். கொடுமை, கடிதின் வாராது நீட்டித்தல். அவர் பிரிவானும் நீட்டிப்பானும் உளதாய ஆற்ருமைக்குக் கண்ணேடாமைமேலும் பண்டையின் நெடியவாய்க் கொடிய ஆகா நின்றன என்பதாம்.

**உரை வேறுபாடு**

**மணக்குடவர்:** இது பொழுது விடிகின்றதில்லை என்று தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

**ஒப்புமை**

**நெடிய கழியும் இரா:**

"துயிற்கண் மாக்களொடு நெட்டிரா வுடைத்தே."

(குறுந். 145: 5.) (1169)

**1170**

**உள்ளம்போன் றுள்வழிச் செல்கிற்பின் வெள்ளநீர்**
**நீந்தல மன்னேஎன் கண்.** 10

(நின் கண்கள் பேரழகு அழிகின்றனவாகலின் அழற்பாலை அல்லை என்ருட்குச் சொல்லியது.)

**பரிமேலழகர்:** உள்ளம் போன்று உள்வழி செல்கிற்பின் - மனம் போலக் காதலர் உள்ள தேயத்துக் கடிதிற் செல்லவல்லனவாயின், என் கண் வெள்ள நீர் நீந்தல - என் கண்கள் இங்ஙனம் வெள்ளமாகிய தம் நீரை நீந்தா.

அது மாட்டாமையான், இனி அவற்றிற்கு நீந்துதலே உள்ளது என்பது பட நின்றமையின், மன் ஒழியிசைக்கண் வந்தது. மனத்திற்குச் செலவாவது நினைவேயாகலின் உள்ளம்போன்று என்றும், மெய்க்கு நடந்து செல்ல வேண்டுதலின் கண்கள் அதனெடு சென்று காதலரைக் காண்டல் கூடாது என்னும் கருத்தால் செல்கிற்பின் என்றும் கூறினுள். இதனுன் வருகின்ற அதிகாரமும் தோற்றுவாய் செய்யப்பட்டது.

**உரை வேறுபாடு**

**மணக்குடவர்:** இது காண்டல் விருப்பினுல் தலைமகள் கூறியது.

**காளிங்கர்:** என் நெஞ்சு போலத் தாமும் அவரைக் கண்டு மீளப் பெருத கடுந்துயரினுல் கலுழ்கின்றன.

**ஒப்புமை**

**கண்கள் நீரிலே நீந்துதல்:**

"நீர்நீந்து கண்ணுட்கு" (கலி. 121: 10.)

"நெடும்பெருங்கண் நீந்தின நீர்."

(பு. வெ. 313.) (1170)

# 118. கண் விதுப்பழிதல்

**பரிமேலழகர்:** அஃதாவது கண்கள் தம் காட்சி விதுப்பான் வருந்துதல். காட்சி விதுப்பு - தலைமகனைக் காண்டற்கு விரைதல். இது படரான் மெலிந்த வழி நிகழ்வது ஆகலின், படர்மெலிந்திரங்கலின்பின் வைக்கப்பட்டது.

**மணக்குடவர்:** கண் விதுப்பழிதலாவது கண் தனது விரைவினால் அழிந்தமை தலைமகள் தோழிக்குக் கூறுதல். பிரிவின்கண் துன்பமுற்றார்க்குக் கண்ணீர் முற்பாடு தோன்றுமாதலின், தனது ஆற்றாமையை ஒன்றன்மேலிட்டுக் கூறுவாள் அதனை முற்பாடு கண்ணின்மேலிட்டுக் கூறுதலால், அதன்பின் இது கூறப்பட்டது.

**1171**

கண்தாம் கலுழ்வ தெவன்கொலோ தண்டாநோய்
தாம்காட்ட யாம்கண் டது. 1

(நின் கண்கள் கலுழ்ந்து தம் அழகு இழவாநின்றன; நீ ஆற்றல் வேண்டும் என்ற தோழிக்குத் தலைமகள் சொல்லியது.)

**பரிமேலழகர்:** தண்டா நோய் யாம் கண்டது தாம் காட்ட - இத் தணியா நோயை யாம் அறிந்தது தாம் எமக்குக் காதலரைக் காட்டலான் அன்றே? கண் தாம் கலுழ்வது எவன்கொல் - அன்று அத் தொழிலவாய கண்கள் இன்று எம்மைக் காட்டச் சொல்லி அழுகின்றது என் கருதி?

காட்ட என்பதற்கு ஏற்ற செயப்படு பொருள் வருவிக்கப்பட்டது. இன்றும் தாமே காட்டுதல் அல்லது யாம் காட்டுதல் யாண்டையது என்பதாம்.

உரை வேறுபாடு

**மணக்குடவர்:** இது தலைமகள் காட்டுவார் இல்லை என்று தோழியைக் குறித்துச் சொல்லியது. *(1171)*

**1172**

தெரிந்துணரா நோக்கிய உண்கண் பரிந்துணராப்
பைதல் உழப்ப தெவன். 2

(இதுவும் அது.)

**பரிமேலழகர்:** தெரிந்து உணரா நோக்கிய உண்கண் - மேல்விளைவதனை ஆராய்ந்து அறியாது அன்று காதலரை நோக்கி நின்ற உண்கண்கள், பரிந்து உணரா பைதல் உழப்பது எவன் - இன்று இது நம்மால் வந்ததாகலின் பொறுத்தல் வேண்டும் எனக் கூறுபடுத்து உணராது துன்பம் உழப்பது என் கருதி?

விளைவது: பிரிந்து போயவர் வாராமையின் காண்டற்கு அரியராய் வருத்துதல். முன்னே வருவது அறிந்து அது காவாதார்க்கு அது வந்த வழிப் பொறுத்தலன்றே உள்ளது? அதுவும் செய்யாது வருந்துதல் கழிமடச் செய்கை என்பதாம்.

உரை வேறுபாடு

**மணக்குடவர்:** தெரிந்துணரா நோக்கிய உண்கண் - முன்பு அவர் நல்லர் என்று தெரிந்து உணர்ந்து நோக்கிய உண் கண்கள்.

ஒப்புமை

**கண் பைதல் உழத்தல்:**

**குறள், 1175.**

"பைதல வாகிப் பசக்குவ மன்னோஎன்
நெய்தல் மலரன்ன கண்." (கலி. 142: 22-3.) *(1172)*

### 1173

கதுமெனத் தாம்நோக்கித் தாமே கலுழும்
இதுநகத் தக்க துடைத்து. 3

(இதுவும் அது.)

**பரிமேலழகர் :** தாம் கதுமென நோக்கி தாமே கலுழும் இது - இக் கண்கள் அன்று காதலரைத் தாமே விரைந்து நோக்கி இன்றும் தாமே விரைந்து அழுகின்ற இது, நக தக்கது உடைத்து - நம்மால் சிரிக்கத்தக்க இயல்பினை உடைத்து.

கண்கள் என்பது அதிகாரத்தான் வந்தது. இது என்றது மேற் கூறிய கழிமடச் செய்கையை. அது வருமுன்னர்க் காப்பார்க்கு நகை விளைக்கும் ஆகலான், நகத்தக்கதுடைத்து என்றாள்.

**உரை வேறுபாடு**

**மணக்குடவர்:** இஃது ஆற்றாமை மிகுதியால் நகுதல் மிக்க தலைமகளை இந் நகுதற்குக் காரணம் என்னை என்று வினவிய தோழிக்கு அவள் கூறியது. *(1173)*

### 1174

பெயல்ஆற்றா நீர்உலந்த உண்கண் உயல்ஆற்றா
உய்வில்நோய் என்கண் நிறுத்து. 4

(இதுவும் அது.)

**பரிமேலழகர் :** உண் கண் - உண் கண்கள்[1], உயல் ஆற்றா உய்வு இல் நோய் என்கண் நிறுத்து - அன்று யான் உய்யமாட்டாமைக்கு ஏதுவாய ஒழிவு இல்லாத நோயை என்கண்ணே நிறுத்தி, பெயல் ஆற்றா நீர் உலந்த - தாமும் அழுதலை மாட்டாவண்ணம் நீர் வற்றிவிட்டன.

நிறுத்தல், பிரிதலும் பின் கூடாமையும் உடையாரைக் காட்டி அதனால் நிலைபெறச் செய்தல். முன் எனக்கு இன்னாதன செய்தலான் பின் தமக்கு இன்னாதன தாமே வந்தன என்பதாம்.

**உரை வேறுபாடு**

**மணக்குடவர்:** கண்கள் தாம் நினைத்தது முடித்துத் தொழில் மாறின என்று கூறியவாறு. *(1174)*

### 1175

படல்ஆற்றா பைதல் உழக்கும் கடல்ஆற்றாக்
காமநோய் செய்தஎன் கண். 5

(இதுவும் அது.)

**பரிமேலழகர் :** கடல் ஆற்றா காமநோய் செய்த என் கண் - எனக்குக் கடலும் சிறிதாம் வண்ணம் பெரிதாய காமநோயைச் செய்த என் கண்கள், படல் ஆற்றா பைதல் உழக்கும் - அத் தீவினையால் தாமும் துயில்கிலவாய்த் துன்பத்தையும் உழவாநின்றன.

காமநோய் காட்சியான் வந்தது ஆகலின், அதனைக் கண்களே செய்த தாக்கிக் கூறினாள். துன்பம், அழுதலானாயது.

---

1. மையுண்ட கண்கள்.

### உரை வேறுபாடு

மணக்குடவர்: இது பிறர்க்கு இன்னுமை செய்தார்க்கு இன்னுமை வந்தது என்று தோழிக்குத் தலைமகள் கூறியது.

பரிப்பெருமாள்: இவை எல்லாம் ஒன்றின் ஒன்று வந்தனவாகக் கொள்ளப்படா. இவ்வதிகாரத்துக் காம வேதனையால் கண்ணுக்கு உறுவன எல்லாம் கூறப்பட்டன.

### ஒப்புமை

கண் காமநோய் செய்தல்:

"கண்தர வந்த காம ஒள்ளெரி." (குறுந். 305: 1.) (1175)

## 1176

ஓஒ இனிதே எமக்கிந்நோய் செய்தகண்
தாஅம் இதற்பட் டது. 6

(இதுவும் அது.)

பரிமேலழகர்: எமக்கு இந் நோய் செய்த கண் தாஅம் இதன் பட்டது – எமக்கு இக் காமநோயினைச் செய்த கண்கள் தாமும் இத் துயிலாது அழுதற்கண்ணே பட்டது, ஓஒ இனிதே – மிகவும் இனிது ஆயிற்று.

ஓ என்பது மிகுதிப் பொருட்கண் வந்த குறிப்புச் சொல். தம்மால் வருத்தமுற்ற எமக்கு அது தீர்ந்தாற் போன்றது என்பதாம்.

### உரை வேறுபாடு

மணக்குடவர்: 'நின்கண் கலங்கிற்று; அஃது எனக்கு இன்னு தாயிற்று' என்ற தோழிக்கு, 'அது மிகவும் இனிது' என்று தலைமகள் கூறியது.

### மேற்கோள் விளக்கம்

ஓகாரம் சிறப்புப் பொருளில் வந்தது. (நேமி. 81, உரை.) (1176)

## 1177

உழந்துழந் துள்நீர் அறுக விழைந்திழைந்து
வேண்டி அவர்க்கண்ட கண். 7

(இதுவும் அது.)

பரிமேலழகர்: விழைந்து இழைந்து வேண்டி அவர் கண்ட கண் - விழைந்து உள் நெகிழ்ந்து விடாதே அன்று அவரைக் கண்ட கண்கள், உழந்து உழந்து உள் நீர் அறுக - இன்று இத் துயிலாது அழுங்கலாய துன்பத்தினை உழந்து உழந்து தம் அகத்திலுள்ள நீர் அற்றே போக!

அடுக்கு, இடைவிடாமைக்கண் வந்தது. அறுதலாகிய இடத்து நிகழ் பொருளின் தொழில் இடத்தின்மேல் நின்றது.

### உரை வேறுபாடு

மணக்குடவர்: இஃது இவ்வாறு அழுதல் தகாது என்ற தோழிக்குத் தலைமகள் கூறியது.

(1177)

### 1178

பேணாது பெட்டார் உளர்மன்னோ மற்றவர்க்
காணா தமைவில கண். 8

(காதலர் பிரிந்து போயினர் அல்லர்; அவர் ஈண்டுளர்; அவரைக் காணும் அளவும் நீ ஆற்றல் வேண்டும் என்ற தோழிக்குச் சொல்லியது.)

**பரிமேலழகர்:** பேணாது பெட்டார் உளர் - நெஞ்சால் விழையாது வைத்துச் சொல்மாத்திரத்தால் விழைந்தவர் இவ்விடத்தே உளர்; மற்று அவர் கண் காணாது அமைவு இல - அவ் வுண்மையால் பயன் யாது? அவரைக் கண்கள் காணாது அமைகின்றன இல்லை ஆயின.

செயலால் பிரிந்து நின்றமையின் பேணாது என்றும், முன் நலம் பாராட்டிப் பிரிவச்சமும் வன்புறையும் கூறினாராகலின் பெட்டார் என்றும் கூறினாள். மன், ஒழியிசைக்கண் வந்தது. மற்று, வினைமாற்றின்கண் வந்தது. ஓகாரம், அசைநிலை. யான் ஆற்றவும் கண்கள் அவரைக் காண்டற்கு விரும்பாநின்றன என்பதாம்.

இனிக் கொண்கனை என்று பாடமாயின், என் கண்கள் தம்மைக் காணாது அமைகின்ற கொண்கனைத் தாம் காணாது அமைகின்றன இல்லை; இவ்வாறே தம்மை ஒருவர் விழையாதிருக்கத் தாம் அவரை விழைந்தார் உலகத்து உளரோ என்றுரைக்க. இதற்கு மன், அசைநிலை.

#### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** விரும்பத் தகாததனை விரும்புவாரும் உளரோ? நம்மைக் காண்டல் விருப்பமின்றிப் போன அவரைக் காணாது அமைகின்றில என் கண்கள்; இதனை ஒழியப் பிறவும் உளவோ?

**பரிப்பெருமாள்:** சொல்லாது பிரிந்த தலைமகனது பெருமையை உட்கொண்டு வேட்கையால் கூறியது. விரும்பத் தகாது என்றமையால் சொல்லாது பிரிதலாயிற்று.

**பரிதியார்:** தம் நாயகரைக் காணுமல்.

**காளிங்கர்:** உலகத்துத் தம்மை விரும்பாதாரைத் தாம் விரும்புவாரும் உளரோ? எங்கும் கண்டது இல்லை.

#### ஒப்புமை

முற்றும்: குறள், 1283. (1178)

### 1179

வாராக்கால் துஞ்சா வரின்துஞ்சா ஆயிடை
ஆரஞர் உற்றன கண். 9

(நீயும் ஆற்றி நின் கண்களும் துயில்வனவாதல் வேண்டும் என்ற தோழிக்குச் சொல்லியது.)

**பரிமேலழகர்:** வாராக்கால் துஞ்சா - காதலர் வாராத ஞான்று அவர் வரவு பார்த்துத் துயிலா; வரின் துஞ்சா - வந்த ஞான்று அவர் பிரிவு அஞ்சித் துயிலா; ஆயிடை கண் ஆரஞர் உற்றன - ஆகலான் அவ்விரு வழியும் என் கண்கள் பொறுத்தற்கு அரிய துன்பத்தினை உடைய.

ஆயிடை எனச் சுட்டு நீண்டது. இனி அவற்றிற்குத் துயில் ஒரு ஞான்றும் இல்லை என்பதாம்.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** அவர் வாராத காலத்துப் புணர்ச்சி வேட்கையால் துஞ்சா; வந்த காலத்துப் பிரிவார் என்று அஞ்சித் துஞ்சா.

இது நீ உறங்கவேண்டும் என்ற தோழிக்கு, தலைமகள் இன்றே அல்ல, எஞ்ஞான்றும் உறக்கம் இல்லை என்றது.

**பரிதியார்:** நாயகர் வாராக்காலும் நித்திரை இல்லை; வந்தாலும் கலவியினால் நித்திரை இல்லை. (1179)

### 1180

மறைபெறல் ஊரார்க் கரிதன்றால் எம்போல்
அறைபறை கண்ணார் அகத்து. 10

(காதலரை இவ்வூர் இயற்பழியாமல் அவர் கொடுமையை மறைக்க வேண்டும் என்ற தோழிக்குச் சொல்லியது.)

**பரிமேலழகர்:** எம்போல் அறை பறை கண்ணார் அகத்து மறை பெறல் – எம்மைப் போலும் அறைபறையாகிய கண்ணினை உடையார் தம் நெஞ்சின்கண் அடக்கிய மறையை அறிதல், ஊரார்க்கு அரிது அன்று - இவ்வூரின்கண் உள்ளார்க்கு எளிது.

மறை என்றது ஈண்டு மறைக்கப்படுவதனை. அகத்து நிகழ்வதனைப் புறத்துள்ளார்க்கு அறிவித்தலாகிய தொழிலான் ஒற்றுமை புண்மையின் அறைபறையாகிய கண் என்றாள். இங்ஙனம் செய்யுள் விகாரமாக்காது[1] அறைபறைக் கண்ணார் என்று பாடமோதுவாரும் உளர். யான் மறைக்கவும் இவை வெளிப்படுத்தாநின்றன என்பதாம்.

### உரை வேறுபாடு

**பரிதியார்:** மறைப்பது அரிது; பலரும் அறியத் தட்டிச் சாற்றும் பறை போல என் கண்ணீர் பலரும் அறிய என் காமத்தை அறிவிப்பது.

### ஒப்புமை

அறைபறை: குறள், *1076.* *(1180)*

# 119. பசப்புறு பருவரல்

**பரிமேலழகர்:** அது பசப்புற்ற பருவரல் என விரியும். அஃதாவது, பசப்புறுதலான் ஆய வருத்தம். இதனை, "பங்தெறிந்த வயா"[2] என்பது போலக் கொள்க. பசப்பாவது, பிரிவாற்றாமையான் வருவதோர் நிற வேறுபாடு. இது தலைமகனைக் காணப்பெறாதவழி நிகழ்வதாகலின், கண் விதுப்பழிதலின்பின் வைக்கப்பட்டது.

**கவிராஜ பண்டிதர்:** அஃதாவது, நாயகன் பிரிந்து போனதைப் பொறுக்கமாட்டாமையினாலே, உடம்பு வேறு நிறமாய் வெளுத்துப் பசலை பூக்கிறதாம்.

1. தொடையின்பம் நோக்கி விகாரமாயிற்று.
2. கலி. 40; 22.

## 1181

நயந்தவர்க்கு நல்காமை நேர்ந்தேன் பசந்தஎன்
பண்பியார்க் குரைக்கோ பிற. 1

(முன் பிரிவு உடம்பட்ட தலைமகள் அஃது ஆற்றாது பசந்தவழித் தன்னுள்ளே சொல்லியது.)

**பரிமேலழகர்:** நயந்தவர்க்கு நல்காமை நேர்ந்தேன் - என்னை நயந்தவர்க்கு அதுபொழுது பிரிவை உடம்பட்ட நான், பசந்த என் பண்பு யார்க்கு உரைக்கோ - அதனை ஆற்றாது இதுபொழுது பசந்த என் இயல்பினை யார்க்குச் சொல்வேன்?

பிற என்பது அசைநிலை. உடம்படாவழி ஒழிதல் குறித்துப் பிரிவு உணர்த்தினர் ஆகலின் அவர் அன்புடையர் என்னும் கருத்தால் நயந்தவர் என்றார். இதுவே உடம்பாடாக மேலும் பிரிவு நிகழுமாகலின் இனி அவரைக் கூடுதல் அரிது என்னும் கருத்தால் நல்காமை என்றும், முன்னர் உடம்படுதலும் பின்னர் ஆற்றாது பசத்தலும் பிறர் செய்தன அல்ல என்பாள் பசந்த என் பண்பு என்றும், யான் செய்துகொண்ட துன்பத்தினை இனி ஒருவர்க்குச் சொல்லலும் பழி ஆம் என்னும் கருத்தால் யார்க்கு உரைக்கோ என்றும் கூறினாள்.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** நல்காமை நேர்ந்தேன் - அவர் அருளாமையை இசைந்த யான்.

இது தலைமகள் இப் பசப்பை யாவரால் நீக்குவேன் என்று வெருட்சி கொண்டு கூறியது.

**பரிப்பெருமாள்:** காதலர் பிரிந்துழி ஆற்றி இருத்தல் பெண் கடன் என்ற தோழிக்கு, யானும் ஆற்றுவேனாக இப் பசப்பை யாவரால் நீக்குவேன் என்று வெகுண்டு கூறியது.

**காளிங்கர்:** இது தோழி கேட்பக் கூறிய கொடுமைக் கூற்று என்பது பொருள்.

### ஒப்புமை

1. நயந்தவர்க்கு நல்காமை நேர்ந்தேன்:
குறள், *1190*.

2. நயப்பும் பசப்பும்:
குறள், *1189, 1190*.

"பயப்பன் மேனி யதுவே; நயப்பவர்
நார்இல் நெஞ்சத்து ஆரிடை யதுவே" (குறுந். *219: 1-2.*)

"பயப்புறு படரட வருந்திய
நயப்பின் காதலி நகைமுகம் பெறவே." (அகநா. *344: 12-3.*)

*(1181)*

## 1182

அவர்தந்தார் என்னும் தகையால் இவர்தந்தென்
மேனிமேல் ஊரும் பசப்பு. 2

(ஆற்றாள் எனக் கவன்ற தோழிக்கு ஆற்றுவல் என்பதுபடச் சொல்லியது.)

**பரிமேலழகர்:** (யான் ஆற்றியுளேனாகவும்) பசப்பு - இப் பசப்புத் தான், தந்தார் அவர் என்னும் தகையால் - என்னை உண்டாக்கினார் அவர்

என்னும் பெருமிதத்தான், என் மேனிமேல் இவர்தந்து ஊரும் - என் மேனியை மேல்கொண்டு செலுத்தாநின்றது.

"குருதிகொப் புளிக்கும் வேலான் கூந்தல்மா இவர்ந்து செல்ல"[1] என்புழியும் 'இவர்தல்' இப் பொருட்டாதல் அறிக. 'இது உரிமை பற்றி ஊர்கின்றது; இதற்கு நீ கவலல் வேண்டா' என்பதாம்.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** தகை - மிகுதி. இஃது, இப் பசலையை நீக்க வேண்டும் என்ற தோழிக்கு இஃது என் குறிப்பினாலே வந்ததல்ல, நீக்க வேண்டுவாயாயின், அவர்க்குச் சொல் என்று கூறியது.

**காளிங்கர்:** தகை - உரிமைத் தகைமை. *(1182)*

## 1183

சாயலும் நாணும் அவர்கொண்டார் கைம்மாறு
நோயும் பசலையும் தந்து. 3

*(அழகும் நாணும் அழியாமல் நீ ஆற்றல் வேண்டும் என்ற தோழிக்குச் சொல்லியது.)*

**பரிமேலழகர்:** கைம்மாறு நோயும் பசலையும் தந்து - பிரிகின்ற ஞான்றே அவ்விரண்டற்கும் தலைமாறாக இக் காம நோயினையும் பசலையையும் எனக்குத் தந்து, சாயலும் நாணும் அவர் கொண்டார் - என் மேனி அழகினையும் நாணினையும் அவர் கொண்டு போயினர்.

எதிர்நிரல்நிறை. அடக்குந்தோறும் மிகுதலான், நோய் நாணிற்குத் தலைமாறாயிற்று. இனி அவர் தந்தால் அல்லது அவை உளவாகலும் இவை இலவாகலும் கூடா என்பதாம்.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** சாயல் - மென்மை; மென்மை - பெண்மை.

**காளிங்கர்:** சாயலும் நாணும் - மயில்போலும் சாயலும் உயிர் போலும் நாணமும்.

### மேற்கோள் விளக்கம்

பரிமாற்றம் அல்லது மாறுட்டு என்ற அணி வந்தது. (வீர. 155, உரை.)

### ஒப்புமை

**நோயும் பசலையும் தருதல் :**

"பைதல் ஒருதலைச் சேக்கும் நாடன்
நோய்தந் தனனே தோழி
பசலை யார்ந்தன குவளையங் கண்ணே" (குறுந். 13: 3-5.)

"ஆய்மலர் உண்கண் பசப்பச்
சேய்மலை நாடன் செய்த நோயே" (ஐங்குறு. 242: 4-5.)

"அரிமதர் உண்கண் பசப்பநோய் செய்யும், பெருமான்"
(கலி. 82: 20-21.)

"பயப்பூரச்
சங்காட்டந் தவிர்த்தென்னைத் தவிராநோய் தந்தானே."
(சம்பந்தர். செங்காட்டங்குடி.) (1183)

1. சீவக. 1889.

### 1184

**உள்ளுவன் மன்யான் உரைப்ப தவர்திறமால்**
**கள்ளம் பிறவோ பசப்பு. 4**

(பிரிகின்றவர் தெளிவித்த சொற்களையும் அவர் நல் திறங்களையும் அறிதியாகலின் நீட்டியாது வருவர் என்றவழிச் சொல்லியது.)

*பரிமேலழகர்:* யான் உள்ளுவன் - அவர் சொற்களை யான் மனத்தால் நினையா நிற்பேன்; உரைப்பது அவர் திறம் - வாக்கால் உரைப்பதும் அவர் நல் திறங்களையே; பசப்பு கள்ளம் - அங்ஙனம் செய்யா நிற்கவும், பசப்பு வந்து நின்றது; இது வஞ்சனையாய் இருந்தது.

பிறவும் ஓவும் அசைநிலை. மெய் மற்றை மன வாக்குக்களின் வழித்தாகலின் அதன்கண்ணும் வரற்பாற்றன்றாயிருக்க வந்தமையின், இதன் செயல் கள்ளமாயிருந்தது எனத் தான் ஆற்றுகின்றமை கூறியவாறாயிற்று.

#### உரை வேறுபாடு

*பரிப்பெருமாள்:* முன்பு களவுக் காலத்து வேட்கையால் அவரது செயலைக் கூறவும் நினைக்கவும் ஆற்றாமை நீங்கும்; இப்போது அதுபோல் அன்றி ஆற்றாமை மிகாநின்றது என்று கூறியது. *(1184)*

### 1185

**உவக்காண்எம் காதலர் செல்வார் இவக்காண்என்**
**மேனி பசப்பூர் வது. 5**

(காதலர் பிரிந்து அணித்தாயிருக்கவும் ஆற்றுகின்றிலை என்ற தோழிக்கு முன் நிகழ்ந்தது கூறியது.)

*பரிமேலழகர் :* எம் காதலர் உவக்காண் செல்வார் - பண்டும் நம் காதலர் உங்கே செல்வாராக, என் மேனி பசப்பு ஊர்வது இவக்காண் - என் மேனி பசப்பு ஊர்வது இங்கே அன்றோ? அப் பெற்றியது இன்று பிறிது ஒன்றாமோ?

உவக்காண், இவக்காண் என்பன ஒட்டிநின்ற இடைச் சொற்கள். தேயஅண்மையால் காலஅண்மை கருதப்பட்டது. அவர் செலவும் பசப்பினது வரவும் பகல் இரவுகளின் செலவும் வரவும் போல்வது அறிந்து வைத்து அறியாதாய் போல நீ சொல்லுகின்றது என்னை என்பதாம்.

#### உரை வேறுபாடு

*மணக்குடவர்:* உவக்காண் - உங்கே பாராய்.

#### ஒப்புமை

1. உவக்காண்: *நற். 237: 6, 242: 6; குறுந். 367: 3; ஐங். 206: 1, 207: 2; அகநா. 4: 13.*

2. முற்றும்:

குறள், *1186.*

"இனிச்சென் றனனே இடுமணற் சேர்ப்பன்
யாங்கறிந் தன்றுகொல் தோழிஎன்
தேங்கமழ் திருநுதல் ஊர்தரும் பசப்பே."
*(குறுந். 205: 5-7.)* *(1185)*

## 1186

விளக்கற்றம் பார்க்கும் இருளேபோல் கொண்கன்
முயக்கற்றம் பார்க்கும் பசப்பு. 6

(இதுவும் அது.)

பரிமேலழகர் : விளக்கு அற்றம் பார்க்கும் இருளே போல் - விளக்கினது மெலிவு பார்த்து நெருங்கிவரும் இருளே போல, கொண்கன் முயக்கு அற்றம் பார்க்கும் பசப்பு - கொண்கன் முயக்கினது மெலிவு பார்த்து நெருங்கி வரும் இப் பசப்பு.

பார்க்கும் என்பன இலக்கணைச் சொல். முன் பிரியாதிருக்கவும் தனக்கு அவகாசம் பார்த்து வரும் பசப்பு, பிரிவு பெற்றால் என் செய்யாது என்பதாம்.

### உரை வேறுபாடு

மணக்குடவர்: அற்றம் - இறுதி.

### ஒப்புமை

கொண்கன் முயக்கற்றம் பார்க்கும் பசப்பு :
குறள், 1185, ஒப்புமை பார்க்க.

''............பசலை காதலர்
தொடுவுழித் தொடுவுழி நீங்கி
விடுவுழி விடுவுழிப் பரத்த லானே'' (குறுந். 399: 2-4.)

''அவர், தொடுவுழித் தொடுவுழி நீங்கின்றால் பசப்பே''
(கலி. 130: 20-21.)

''முயங்காக்கால் பாயும் பசலை'' (நாலடி. 391.)

''நோக்கவே தளிர்த்து நோக்கா
திமைப்பினும் நுணுகும் நல்லார்.'' (சீவக. 1880.) (1186)

## 1187

புல்லிக் கிடந்தேன் புடைபெயர்ந்தேன் அவ்வளவில்
அள்ளிக்கொள் வற்றே பசப்பு.

(இதுவும் அது.)

பரிமேலழகர்: புல்லி கிடந்தேன் புடைபெயர்ந்தேன் - முன் ஒரு ஞான்று காதலரைப் புல்லிக் கிடந்த யான் அறியாது புடைபெயர்ந்தேன்; அவ்வளவில் பசப்பு அள்ளிக்கொள்வற்று - அப் புடைபெயர்ந்த அளவிலே பசப்பு அள்ளிக்கொள்வது போல வந்து செறிந்தது.

கொள்வது என்பது குறைந்து நின்றது. அள்ளிக்கொள்வது, அள்ளிக் கொள்ளப்படும் பொருள். அப் புடைபெயர்ச்சி மாத்திரத்துக்கு அவ்வாறாயது, இப் பிரிவின்கண் ஆமாறு சொல்ல வேண்டுமோ என்பதாம்.

### ஒப்புமை

முற்றும்:
குறள், 1186, ஒப்புமை பார்க்க. (1187)

1188

பசந்தாள் இவள்என்ப தல்லால் இவளைத்
துறந்தார் அவர்என்பார் இல். 8

(நீ இங்ஙனம் பசக்கற்பாலை அல்லை என்ற தோழியோடு புலந்து சொல்லியது.)

**பரிமேலழகர்:** இவள் பசந்தாள் என்பது அல்லால் - இவள் ஆற்றியிராது பசந்தாள் என்று என்னைப் பழி கூறுவது அல்லது, இவளை அவர் துறந்தார் என்பார் இல் - இவளை அவர் துறந்து போயினர் என்று அவரைக் கூறுவார் ஒருவரும் இல்லை.

என்பார் என வேறுபடுத்துக் கூறினள், தன்னையே நெருங்குதல் பற்றிப் புலக்கின்றமையின். *(1188)*

1189

பசக்கமற் பட்டாங்கென் மேனி நயப்பித்தார்
நன்னிலையர் ஆவர் எனின். 9

(இதுவும் அது.)

**பரிமேலழகர்:** நயப்பித்தார் நல் நிலையர் ஆவர் எனின் - இப் பிரிவை யானே உடம்படும் வகை சொல்லியவர் இன்று நின் கருத்தால் நல்ல நிலையினர் ஆவராயின், என் மேனி பட்டாங்கு பசக்க - என் மேனி பட்டது படப் பசப்பதாக.

நன்னிலையராதல் - நன்மைக் கண்ணே நிற்றலை உடையராதல். பட்டாங்காக வென ஆக்கம் விரித்து உரைக்க. முன் இப் பிரிவின் கொடுமை அறியாத என்னை இதற்கு உடம்படுத்திப் பிரிந்தவர் தவறு இலராகவே வேண்டுவது; என் மேனியும் பசப்பும் யாது செய்யின் என் என்பது பட நின்றமையின், மன் ஒழியிசைக்கண் வந்தது.

உரை வேறுபாடு

**மணக்குடவர்:** என் உடம்பு நிலையாக என்றும் பசப்பதாக, நம்மைக் காதலித்தவரும் நம்மைப் போலத் துன்பமுறுவராயின். *(1189)*

1190

பசப்பெனப் பேர்பெறுதல் நன்றே நயப்பித்தார்
நல்காமை தூற்றார் எனின். 10

(தலைமகள் ஆற்றுதற் பொருட்டுத் தோழி தலைமகனை இயற்பழித்தவழி அவள் இயற்பட மொழிந்தது.)

**பரிமேலழகர்:** நயப்பித்தார் நல்காமை தூற்றார் எனின் - அன்று தாம் குறைநயப்பித்துக் கூடினவர்க்கு இன்று நல்காமையை நட்டார் தூற்றாராயின், பசப்பு என பேர்பெறுதல் நன்றே - பசப்புற்றாள் என வேற்றுமை யான் அன்றிப் பசப்புத்தான் ஆயினள் என ஒற்றுமையால் தாம் சொல்ல அப் பெயரைப் பெறுதல் எனக்கு நன்று.

நட்டார் என்பது அவாய்நிலையான் வந்தது. இயற்பழித்தல் பொறாது புலக்கின்றாள் ஆகலின், இகழ்ச்சிக் குறிப்பால் கூறினாள். அவரை அருளிலர் என்னாது இன்னும் பசந்தாள் இவள் என்கையே யான் ஆற்றும் நெறியாவது என்பதாம்.

உரை வேறுபாடு

**மணக்குடவர் :** இது நின் மேனி பசந்தது என்ற தோழிக்கு அவ்வளவாக் குற்றம் இல்லை என்று தலைமகள் கூறியது.

**பரிதியார் :** பசப்பென்று பெயர் பெறுதல் நன்று; நாயகரை நாம் பொல்லாதவர் என்று சொல்லாமல் என் பசலையே சொல்லியது. (*1190*)

# 120. தனிப்படர் மிகுதி

**பரிமேலழகர்:** அது தனியாகிய படர் மிகுதி என விரியும். அஃதாவது படர் மிகுதி தலைவன்கண் இன்றித் தன்கண்ணே ஆதல் கூறுதல். அறமும் பொருளும் நோக்கிப் பிரிதலின்[1] அவன்கண் இல்லை ஆயிற்று. இது, பசப்புற்று வருந்தியாட்கு உரியதாகலின், பசப்புறு பருவரலின்பின் வைக்கப்பட்டது.

**மணக்குடவர்:** தனிப்படர் மிகுதியாவது தனிமையால் வந்த துன்ப மிகுதி கூறுதல். யாம் பசப்பால் வருந்துகின்றமை போல அவரும் வருந்துவார் என்றும், புணர்ச்சி இடையறுமல் இனிது நடக்கும் என்றும் நினைத்துத் தலைமகள் தனது துன்பத்தினைக் கூறுதலான், அதன்பின் இது கூறப்பட்டது.

### 1191

தாம்வீழ்வார் தம்வீழப் பெற்றவர் பெற்றாரே
காமத்துக் காழ்இல் கனி. 1

(காதலரும் நின்னினும் ஆற்றாராய்க் கடிதின் வருவர்; நீ அவரோடு பேரின்பம் நுகர்தி என்ற தோழிக்குச் சொல்லியது.)

**பரிமேலழகர் :** தாம் வீழ்வார் தம் வீழப்பெற்றவர் – தம்மாற் காதலிக்கப்படும் கணவர் தம்மைக் காதலிக்கப் பெற்ற மகளிர், பெற்றாரே காமத்து காழ் இல் கனி – பெற்றாரன்றே காமநுகர்ச்சி என்னும் பரல்[2] இல்லாத கனியை.

**காமம் :** ஆகுபெயர். அத்து, அல்வழிக்கண் வந்தது. முன்னை நல்வினை இல்வழிப் பெறப்படாமையின் பெற்றார் என்றும், அவரால் தடையின்றி நுகரப்படுதலின் காழில் கனி என்றும் கூறினாள். நம் காதலர் பிரிதலேயன்றிப் பின் வாராமையும் உடைமையின், அக் கனி யாம் பெற்றிலேம் என்பதாயிற்று.

உரை வேறுபாடு

**மணக்குடவர் :** இது தடையின்றி நுகரலாம் என்றது.

**பரிப்பெருமாள் :** புணர்வு வேட்ட நெஞ்சிற்கு யாம் நல்வினை செய்கிலேம், செய்தேமாயின் அவரும் காதலிப்பர்; அவர்மாட்டுக் காதல் இன்றாக வருந்த வேண்டா என்று தலைமகள் கூறியது.

**காளிங்கர் :** நெஞ்சை நோக்கிக் கூறியதாகக் கொள்வர்.

---

1. 'அறமும் பொருளும் செய்வதனால் புறத்து உறைதலின் தலைவனைத் தலைவி நீங்குங் காலம் பெரிதாகலின்.' (தொல். கற்பு. 6, ந.)

2. பரல் - விதை.

ஒப்புமை

**காமத்துக் காழில் கனி :**

"யாழ்கொன்ற கிளவி யாள்தன் அமிழ்துறழ் புலவி நீக்கிக்
காழின்றிக் கனிந்த காமக் கொழுங்கனி நுகர்ந்து."
(சீவக. 2089.) (1191)

## 1192

வாழ்வார்க்கு வானம் பயந்தற்றால் வீழ்வார்க்கு
வீழ்வார் அளிக்கும் அளி. 2

(இதுவும் அது.)

**பரிமேலழகர் :** வீழ்வார்க்கு வீழ்வார் அளிக்கும் அளி - அறமும் பொருளும் நோக்கிப் பிரிந்தால் தம்மை இன்றியமையா மகளிர்க்கு[1] அவரை இன்றியமையாக் கணவர் அளவு அறிந்து வந்து செய்யும் தலையளி, வாழ்வார்க்கு வானம் பயந்தற்று - தன்னையே நோக்கி உயிர்வாழ்வார்க்கு வானம் அளவு அறிந்து பெய்தாற்போலும்.

நம் காதலர் நம்மை விழையாமையின் அத் தலையளி இல்லையாகலான், மழை வறந்துழி அதனுன் வாழ்வார்போல இறந்து படுதலே நமக்கு உள்ளது என்பதாம்.

உரை வேறுபாடு

**மணக்குடவர் :** இது, நின் மேனி பொலிவழிந்தது என்ற தோழிக்குத் தலைமகள் கூறியது.

**காளிங்கர் :** நெஞ்சை நோக்கிக் கூறியதாகக் கொள்வர்.

ஒப்புமை

**முற்றும் :**

"........................நாடன்
வந்தனன் வாழி தோழி உலகம்
கயம்கண் அற்ற பைதறு காலைப்
பீளொடு திரங்கிய நெல்லிற்கு
நள்ளென் யாமத்து மழைபொழிந் தாங்கே."
(நற். 22: 7-11.) (1192)

## 1193

வீழுநர் வீழப் படுவார்க் கமையுமே
வாழுநம் என்னும் செருக்கு. 3

(இதுவும் அது.)

**பரிமேலழகர் :** வீழுநர் வீழப்படுவார்க்கு அமையுமே—தாம் விழையும் கணவரான் விழையப்படும் மகளிர்க்கு ஏற்புடைத்து, வாழுநம் என்னும் செருக்கு - காதலர் பிரிந்தாராயினும் நம்மை நினைந்து கடிதின் வருவர், வந்தால் நாம் இன்புற்று வாழ்தும் என்று இருக்கும் தருக்கு.[2]

நாம் அவரான் வீழப்படாமையின், நமக்கு அமைவது இறந்துபாடு என்பதாம்.

---

1. "நீரின் றமையா உலகம் போலத், தம்மின் றமையா நம்நயந் தருளி" (நற் 1: 6-7.)

2. தருக்கு - களிப்பு மிகுதி.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** செருக்கு - களிப்பு. இது தலைமகள், 'இருந்தாலும் பயனில்லை; அதில் சாதல் அமையும்' என்று வாழ்க்கையை முனிந்து தோழிக்குக் கூறியது. *(1193)*

### 1194

வீழப் படுவார் கெழீஇயிலர் தாம்வீழ்வார்
வீழப் படாஅர் எனின். 4

(காதலரை இயற்பழித்தலை அஞ்சி அவர் அருளின்மை மறைத்த நீ[1] கடவுட் கற்பினையாகலின் கற்புடை மகளிரால் நன்கு மதிக்கப்படுதி என்ற தோழிக்குச் சொல்லியது.)

**பரிமேலழகர்:** விழப்படுவார் - கற்புடை மகளிரால் நன்கு மதிக்கப் படுவாரும், தாம் விழ்வார் வீழப்படார் எனின் கெழீஇ இலர் - தாம் விரும்பும் கணவரான் விரும்பப்படாராயின் தீவினையாட்டியர்.

சிறப்பும்மை விகாரத்தால் தொக்கது. கெழீஇ யின்மை - நல்வினை இன்மை; அது அருத்தாபத்தியால் தீவினை உடைமை ஆயிற்று. தீவினை உடையேற்கு அந் நன்குமதிப்பால் பயன் இல்லை என்பதாம்.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** இது வாழ்க்கையை முனிந்து கூறிய தலைமகளுக்கு, நீ இவ்வாறு கூறுவையாயின், நின்னைப் புகழ்கின்ற உலகத்தாருள் மிக வாழ்வார் யார் என்ற தோழிக்கு அவள் கூறியது. கொண்டான் காயின் கண்டான் காயும் என்பது பழமொழி.

**காளிங்கர்:** நெஞ்சை நோக்கிக் கூறியதாகக் கொள்வர்.

### மேற்கோள் விளக்கம்

கெழீஇயிலர் என்பது அளபெழுந்து அலகு பெறுது சொல்லிசை நிறைக்க வந்தது. *(நன். 91, சங்கர.)* *(1194)*

### 1195

நாம்காதல் கொண்டார் நமக்கெவன் செய்பவோ
தாம்காதல் கொள்ளாக் கடை. 5

(அவர்மேல் காதலுடைமையின் அவர் கருத்து அறிந்து ஆற்றினுய் என்ற தோழிக்குச் சொல்லியது.)

**பரிமேலழகர்:** நாம் காதல் கொண்டார் நமக்கு எவன் செய்ப - நம்மால் காதல் செய்யப்பட்டவர் நமக்கு என்ன இன்பத்தைச் செய்வர், தாம் காதல் கொள்ளாக் கடை - அவ்வாறே தாமும் நம்கண் காதல் செய்யா வழி?

எச்சவும்மை விகாரத்தால் தொக்கது. அக் காதலுடைமையால் நாம் பெற்றது துன்பமே என்பதாம்.

---

1. "தன்னெவ்வம் கூறினும் நீசெய்த அருளின்மை, என்னையும் மறைத்தா ளென் தோழி யதுகேட்டு, நின்னையான் பிறர்முன்னர்ப் பழிகூறல் தான்நாணி." (கலி 44: 8-10.)

உரை வேறுபாடு

**பரிப்பெருமாள்:** புணர்வு வேட்ட நெஞ்சிற்கு நின் காதலினால் பயன் இல்லை என்று தலைமகன் கொடுமையை உட்கொண்டு அவன் பாங்காயினார் கேட்பத் தலைமகள் கூறியது.

**பரிதியார்:** ஒருதலைக் காமம் நன்றல்ல; இருதலைக் காமம் நன்று. (*1195*)

### 1196

ஒருதலையான் இன்னாது காமம்காப் போல
இருதலை யானும் இனிது. 6

(*இதுவும் அது.*)

**பரிமேலழகர்:** காமம் ஒருதலையான் இன்னாது – மகளிர் ஆடவர் என்னும் இருதலையினும் வேட்கை ஒருதலைக்கண்ணே ஆயின் அஃது இன்னாது; கா போல இருதலையானும் இனிது - காவினது பாரம் போல இருதலைக்கண்ணும் ஒப்பின் அஃது இனிது.

மூன்றனுருபுகள் ஏழன்பொருண்மைக்கண் வந்தன. கா: ஆகுபெயர். என்மாட்டு உண்டாய வேட்கை அவர்மாட்டும் உண்டாயின், யான் இவ்வாறு துன்பம் உழத்தல் கூடுமோ என்பதாம்.

உரை வேறுபாடு

**மணக்குடவர்:** இது மேற்கூறிய சொற் கேட்ட தலைவர் அருள் செய்வார் என்றும், தெய்வக் குறிப்பினால் கூறிய சொற் கேட்டுக் கூடினாலும் பயன் இல்லை என்றும் தலைமகள் கூறியது.

**பரிதியார்:** ஒருதலைக் காமமாகிய கைக்கிளை ஒவ்வாது; காவடியிற் பாரம் ஒத்ததுபோல் இரண்டு பேர்க்கும் ஒத்த இன்பம் நன்று. (*1196*)

### 1197

பருவரலும் பைதலும் காணான்கொல் காமன்
ஒருவர்கண் நின்றொழுகு வான். 7

(இதுவும் அது.)

**பரிமேலழகர்:** ஒருவர்கண் நின்று ஒழுகுவான் காமன்-காமம் நுகர்தற் குரிய இருவரிடத்தும் ஒப்ப நிற்றல் ஒழிந்து ஒருவரிடத்தே நின்று பொருகின்ற காமக்கடவுள், பருவரலும் பைதலும் காணான்கொல் – அவ்விடத்துப் பசப்பாலை பருவரலும் படர்மிகுதியும் அறியான் கொலோ?

விழைவும் வெறுப்பும் இன்றி எல்லார்கண்ணும் நிகழ்ந்தன அறிதற் குரிய கடவுளும் என்கண் வேறுபட்டான்; இனி யான் உய்யுமாறு என்னை என்பதாம்.

உரை வேறுபாடு

**மணக்குடவர்:** பருவரலும் பைதலும் காணான்கொல் காமன் – நமது தடுமாற்றமும், நாம் உறுகின்ற துன்பமும் காணானோ? காண்பானாயின், நம்மை வருத்தானே, தெய்வமாகலான்.

**பரிப்பெருமாள்:** சேய்மைக்கண் பிரிதலே அன்றி அணுமைக்கண் பிரியும் பிரிவும் உள. அவையாவன அவைக்களனும் அரசவையும்

அத்தாணியும் புகுதவும், நல்லிசை நயந்து வந்தோர் காணவும், பணையிலைப புரவி காணவும், வாரியுள் யானை காணவும் நாட்டகத்துப் பிரியும் பிரிவு. அவற்றுள் யாதானும் ஒன்றனுல் தலைமகன் பிரிந்துழி ஆற்றுளாகிய தலைமகள் தன் நெஞ்சிற்குச் சொல்லியது. செய்மைக்கண் பிரிந்தான் ஆயின் பருவம் காணின் அல்லது இக் கூற்றினுல் பயன் இல்லை. பரத்தையிற் பிரிவு ஆயின் புலவி தோன்றும். ஆதலான் அணுமைக்கண் பிரிந்தானைப் பற்றிக் கூறப்பட்டது என்று கொள்ளப்படும். இவ்வுரை மேல் வருவனவற்றிற்கும் ஒக்கும்.

**பரிதியார்:** பருவரலும் பைதலும் – மயலான கிலேசமும் பசலையும்.

**காலிங்கர்:** நெஞ்சை நோக்கிக் கூறியதாகக் கொள்வர்.

எனவே இதனை அவன் கண்டானுகில் ஆண்டும் சென்று அடர்ப்பன் என்பது பொருள். *(1197)*

**1198**

வீழ்வாரின் இன்சொல் பெருஅ துலகத்து
வாழ்வாரின் வன்கணர் இல். 8

(தலைமகன் தூது வரக் காணுது சொல்லியது.)

**பரிமேலழகர் :** வீழ்வாரின் இன்சொல் பெருது வாழ்வாரின்-தம்மால் விரும்பப்படும் காதலர் திறத்துநின்றும் ஓர் இன்சொல்லளவும் பெருதே பிரிவு ஆற்றி உயிர்வாழ்கின்ற மகளிர்போல, வன்கணர் உலகத்து இல் - வன்கண்மை உடையார் இவ்வுலகத்து இல்லை.

காதலர் திறத்துச் சொல் யாதானும் எனக்கு இனிது என்னும் கருத்தால், இன்சொல் என்ருள். இழிவு சிறப்பும்மை விகாரத்தால் தொக்கது. யான் வன்கண்ணேன் ஆகலின், அதுவும் பெருது உயிர் வாழா நின்றேன் என்பதாம்.

உரை வேறுபாடு

**பரிப்பெருமாள் :** தூது விடுதல் குறிப்பினுல் தோழிக்குச் சொல்லியது. *(1198)*

**1199**

நசைஇயார் நல்கார் எனினும் அவர்மாட்
டிசையும் இனிய செவிக்கு. 9

(இதுவும் அது.)

**பரிமேலழகர் :** நசைஇயார் நல்கார் எனினும் - என்னல் நச்சப்பட்ட காதலர் என்மாட்டு அன்பிலரே ஆயினும், அவர்மாட்டு இசையும் செவிக்கு இனிய - அவர் திறத்து யாதானும் ஓர்சொல்லும் என் செவிக்கு இனியவாம்.

இழிவுசிறப்பும்மை, அவர் வாரலர் என்னும் சொல்லாயினும் அமையும் என்பது பட நின்றது. அதுவும் பெற்றிலேன் என்பதாம்.

உரை வேறுபாடு

**மணக்குடவர் :** அவர்மாட்டு இசையும் - அவர் பக்கத்தனவாகிய சொற்களும்.

**பரிப்பெருமாள்:** எங்கள் பக்கத்தனவாகிய சொற்கள் அவர்க்கு இன்னுது ஆகும் என்பது குறிப்பு. தலைமகன் பாங்காயினுர் அவனைப் புகழ்ந்துழித் தனது வேட்கை மிகுதியால் தலைமகள் கூறியது. அன்றியும்

தலைமகனுழை நின்றும் வந்த தூதர் வாய்ச்சொல் கேட்ட தலைமகளது முகமலர்ச்சி கண்டு, இஃது எற்றினான் ஆயிற்று என்று வினவிய தோழிக்குத் தலைமகள் கூறியது.

**காளிங்கர்:** நெஞ்சை நோக்கிக் கூறியதாகக் கொள்வர். *(1199)*

**1200**

**உறாஅர்க் குறுநோய் உரைப்பாய் கடலைச்**
**செறாஅஅய் வாழிய நெஞ்சு. 10**

(தலைமகன் தூது வரப்பெறாது தான் தூது விடக் கருதியாள் நெஞ்சொடு சொல்லியது.)

**பரிமேலழகர்:** உறாஅர்க்கு உறுநோய் உரைப்பாய் நெஞ்சு-நின்னோடு உறாதார்க்கு நின்னுறு நோயை உரைக்கலுற்ற நெஞ்சே, கடலை செறாஅஅய் - நீ ஆற்றாயாயினும் அரிதாய அதனை ஒழிந்து நினக்குத் துயரம் செய்கின்ற கடலைத் தூர்க்க முயல்வாயாக; அஃது எளிது.

உரைக்கலுற்றது அளவிறந்த நோயாகலானும், கேட்பார் உறவிலராகலானும் அது முடிவதொன்று அன்று, முடிந்தாலும் பயன் இல்லை என்பது கருதாது, முயலாநின்றாய் என்னும் குறிப்பான், வாழிய என்றாள்.

**உரை வேறுபாடு**

**மணக்குடவர்:** இது தூதுவிடக் கருதிய நெஞ்சுக்குத் தூது விட்டாலும் பயன் இல்லை என்று தலைமகள் கூறியது.

**பரிதியார்:** நாயகருக்குக் காமநோயைச் சொல்லாய், விரகக் கடலைச் செறாய் நெஞ்சமே, என்ன காரியம் செய்தாய்? *(1200)*

---

# 121. நினைந்தவர் புலம்பல்

**பரிமேலழகர்:** அஃதாவது, முன் கூடிய ஞான்றை இன்பத்தினை நினைந்து தலைமகள் தனிமை எய்தலும், பாசறைக்கண் தலைமகன் தனிமை எய்தலும் ஆம்.[1] இவ்வாறு இருவர்க்கும் பொதுவாதல் பற்றிப் பன்மைப் பாலால் கூறப்பட்டது. இது, படர்மிகுதி தன்கண்ணதாக நினைந்த தலைமகட்கும் உரித்தாகலின், அவ்வியைபு பற்றித் தனிப்படர் மிகுதியின்பின் வைக்கப்பட்டது.

**மணக்குடவர்:** நினைந்தவர் புலம்பலாவது, சேய்மைக்கண்ணாயினும் அண்மைக்கண்ணாயினும் பிரிந்த தலைமகனை ஒழிவின்றி நினைந்த தலைமகளிர் துன்பம் உறுதல். நினைத்தவர் புலம்பல் என்று பாடமாயின், அதற்கு அவரை நினைத்துப் புலம்பல் என்று பொருள் உரைத்துக்கொள்க.

**1201**

**உள்ளினும் தீராப் பெருமகிழ் செய்தலான்**
**கள்ளினும் காமம் இனிது. 1**

(தூதாய்ச் சென்ற பாங்கனுக்குத் தலைமகன் சொல்லியது.)

**பரிமேலழகர்:** உள்ளினும் தீரா பெரு மகிழ் செய்தலான் - முன் கூடிய ஞான்றை இன்பத்தினைப் பிரிந்துழி நினைந்தாலும் அதுபொழுது பெற்றாற்

---

1. புலம்பு - தனிமை; புலம்பல் - தனிமை எய்தல்; "புலம்பே தனிமை" (தொல். உரி. 33.)

போல நீங்காத மிக்க மகிழ்ச்சியைத் தருதலால், கள்ளினும் காமம் இனிது - உண்டுழி அல்லது மகிழ்ச்சி செய்யாத கள்ளினும் காமம் இன்பம் பயத்தல் உடைத்து.

தன் தனிமையும் தலைமகனை மறவாமையும் கூறியவாறு.

உரை வேறுபாடு

**பரிப்பெருமாள்:** நினைவு மகிழ்ச்சியைத் தாராநின்றமையால் என் மனம் காதலரை ஒழிவின்றி நினையாநின்றது என்று தோழிக்குக் கூறியது.

**பரிதியார்:** நாயகர் நினைக்குந்தோறும் களிப்புக் கொடுப்போர் ஆதலால் கள்ளினும் காமம் இனிது.

**காளிங்கர்:** தோழியைப் பார்த்துக் கூறியதென்பர். (1201)

1202

எனைத்தொன் றினிதேகாண் காமந்தாம் வீழ்வார்
நினைப்ப வருவதொன் றில். 2

(இதுவும் அது.)

**பரிமேலழகர் :** தாம் வீழ்வார் நினைப்ப வருவது ஒன்று இல் - தம்மால் விரும்பப்படுவாரைப் பிரிவின்கண் நினைத்தால் அந் நினைவார்க்கு அப் பிரிவான் வருவதோர் துன்பம் இல்லையாம்; காமம் எனைத்து இனிது ஒன்றே காண் - அதனால் காமம் எத்துணையேனும் இனிது ஒன்றேகாண்.

புணர்ந்துழியும் பிரிந்துழியும் ஒப்ப இனிது என்பான், எனைத்தும் இனிது என்றான். சிறப்பும்மை விகாரத்தால் தொக்கது.[1] தான் ஆற்றிய வகை கூறியவாறு.

உரை வேறுபாடு

**மணக்குடவர்:** இது நீ இவ்வாறு ஆற்றுயாகின்றது துன்பம் பயக்கும் என்ற தோழிக்குத் தலைமகள் மறுத்துக் கூறியது.

**காளிங்கர்:** நெஞ்சுக்குக் கூறிய தென்பர். (1202)

1203

நினைப்பவர் போன்று நினையார்கொல் தும்மல்
சினைப்பது போன்று கெடும். 3

(தலைமகனை நினைந்து வருந்துகின்ற தலைமகள்
தோழிக்குச் சொல்லியது.)

**பரிமேலழகர் :** தும்மல் சினைப்பது போன்று கெடும் - எனக்குத் தும்மல் எழுவது போன்று தோன்றிக் கெடாநின்றது; நினைப்பவர் போன்று நினையார்கொல் - அதனால் காதலர் என்னை நினைப்பார் போன்று நினையாராகல் வேண்டும்.

சினைத்தல் - அரும்புதல். சேய்மைக்கண்ணராய கேளிர் நினைந்துழி அந் நினைக்கப்பட்டார்க்குத் தும்மல் தோன்றும் என்னும் உலகியல் பற்றித் தலைமகன் எடுத்துக்கொண்ட வினை முடிவது போன்று முடியாமை உணர்ந்தாள் சொல்லியதாயிற்று.

ஒப்புமை

நினைப்பினுல் தும்மல் உண்டாதல்: குறள், *1317, 1318.* (1203)

---

1. எனைத்தும் என்ற உம்மை.

## 1204

யாமும் உளேங்கொல் அவர்நெஞ்சத் தெம்நெஞ்சத்
தோஒ உளரே அவர். 4

(இதுவும் அது.)

**பரிமேலழகர் :** எம் நெஞ்சத்து அவர் ஓஒ உளரே - எம்முடைய நெஞ்சத்து அவர் எப்பொழுதும் உளரேயாய் இராநின்றார்; அவர் நெஞ்சத்து யாமும் உளேங்கொல் - அவ்வகையே அவருடைய நெஞ்சத்தும் யாமும் உளம் ஆதுமோ, ஆகேமோ?

ஓகார இடைச்சொல் ஈண்டு இடைவிடாமை உணர்த்தி நின்றது. உளமாயும் வினை முடியாமையின் வாரார் ஆயினரோ, அது முடிந்தும் இலமாகலின் வாரார் ஆயினரோ என்பது கருத்து.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** ஓஒ என்பது மிகுதிப் பொருளின்கண் வந்தது; ஆதலான், எப்பொழுதும் என்னும் பொருளதாயிற்று.

### ஒப்புமை

**1. தலைவன் நெஞ்சில் தலைவி இருத்தல்:**

"அளியளோ அளியள்என் நெஞ்சமர்ந் தோளே" (குறுந். 56: 5.)

"நெஞ்சமர் தகுவி." (அகநா. 259: 12.)

**2. தலைவி நெஞ்சில் தலைவன் இருத்தல்:**

"பெரிய மகிழும் துறைவன்எம்
சிறிய நெஞ்சத் தகல்வறி யானே." (நற். 388: 9-10.) (1204)

## 1205

தம்நெஞ்சத் தெம்மைக் கடிகொண்டார் நாணார்கொல்
எம்நெஞ்சத் தோவா வரல். 5

(இதுவும் அது.)

**பரிமேலழகர் :** தம் நெஞ்சத்து எம்மை கடிகொண்டார் - தம்முடைய நெஞ்சின்கண்ணே யாம் சொல்லாமல் எம்மைக் காவல் கொண்ட காதலர், எம் நெஞ்சத்து ஓவா வரல் நாணார்கொல் - தாம் எம்முடைய நெஞ்சின்கண் ஒழியாது வருதலை நாணார் கொல்லோ?

ஒருவரைத் தங்கண் வருவதற்கு ஒருகாலும் உடம்படாது தாம் அவர்கண் பலகாலும் சேறல் நாண்உடையார் செயல் அன்மையின் நாணார்கொல் என்றாள்.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** இது, நினையாரோ நினைப்பாரோ என்று ஐயப்பட்ட தலைமகள், நினையார் என்று தெளிந்து கூறியது.

**பரிதியார்:** தம் மனத்திலே இருக்க வொட்டாமல் முடுக்கினவர்.

**காளிங்கர்:** கடிகொண்டார் என்பது கரந்து போனார் என்பது; கடிந்து போனார் என்றும் ஆம்.

ஒப்புமை

**தலைவன் தலைவியின் நெஞ்சத்து வருதல்:**

"நெஞ்சத் தல்லது வரவறி யானே." (குறுந். 302: 8.) (1205)

1206

மற்றியான் என்உளேன் மன்னோ அவரொடுயான்
உற்றநாள் உள்ள உளேன். 6

(அவரொடு புணர்ந்தஞான்றை இன்பத்தை நினைந்து
இறந்துபாடு எய்தாநின்றாய், அது மறத்தல்
வேண்டும் என்றாட்குச் சொல்லியது.)

**பரிமேலழகர்:** யான் அவரொடு உற்ற நாள் உள்ள உளேன் - யான் அவரொடு புணர்ந்த ஞான்றை இன்பத்தை நினைதலான் இத் துன்ப வெள்ளத்தும் உயிர் வாழ்கின்றேன்; மற்று யான் என் உளேன் - அது இன்றாயின் வேறு எத்தால் உயிர் வாழ்வேன்?

நாள்: ஆகுபெயர். உயிர் வாழ்வதற்கு வேறும் உள, அவை பெற்றிலேன் என்பது பட நின்றமையின், மன் ஒழியிசைக்கண் வந்தது. அவை அவன் தூது வருதல், தன் தூது சேறல் முதலாயின. அவை யாவும் இன்மையின் இது அல்லது எனக்குப் பற்றுக்கோடு இல்லை என்பது கருத்து.

உரை வேறுபாடு

**காளிங்கர்:** எனவே இவள் தூது விடுதல் பயன். (1206)

1207

மறப்பின் எவன்ஆவன் மற்கொல் மறப்பறியேன்
உள்ளினும் உள்ளம் சுடும். 7

(இதுவும் அது.)

**பரிமேலழகர்:** மறப்பு அறியேன் உள்ளினும் உள்ளம் சுடும் - அவ்வின்பத்தை மறத்தல் அறியேனாய் இன்று உள்ளா நிற்கவும் பிரிவு என் உள்ளத்தைச் சுடாநின்றது; மறப்பின் எவன் ஆவன்- அங்ஙனம் பிரிவாற்றாத யான் மறந்தால் இறந்துபடாது உளேன் ஆவது எத்தால்?

மறக்கப்படுவது அதிகாரத்தான் வந்தது. மன், ஈண்டும் அதுபட நின்று ஒழியிசை ஆயிற்று. கொல்: அசைநிலை.

உரை வேறுபாடு

**மணக்குடவர்:** இது சிரியன உள்ளிப் பூரியன மறத்தல் வேண்டும் என்ற தோழிக்குத் தலைமகள் கூறியது.

**பரிதியார்:** காமாக்கினியானது என் நெஞ்சுக்குள்ளே பற்றி எழும்.

ஒப்புமை

**உள்ளினும் உள்ளம் சுடும்:** குறள், *799.*

"உள்ளின் உள்ளம் வேமே" (நற். *184: 6*; குறுந். *102: 1.*)

"உள்ளின் உள்நோய் மல்கும்" (குறுந். *150: 4.*)

"கவற்றி மனத்தைச் சுடுதலால் காமம்
அவற்றினும் அஞ்சப் படும்" (நாலடி. 89.)

"கருதின்வேம் உள்ளமும்"

"நினையும் நெஞ்சமும் சுடுவதோர் நெடுஞ்சுரம்."
(கம்ப. தாடகை. 5, வனம்புகு. 38.) (1207)

## 1208

எனைத்து நினைப்பினும் காயார் அனைத்தன்றோ
காதலர் செய்யும் சிறப்பு. 8

(இத் துன்பம் அறிந்து வந்து காதலர் நினக்கு இன்பம்
செய்வர் என்றாட்குச் சொல்லியது.)

**பரிமேலழகர்:** எனைத்து நினைப்பினும் காயார் - தம்மை யான் எத்துணையும் மிக நினைந்தாலும் அதற்கு வெகுளார்; காதலர் செய்யும் சிறப்பு அனைத்து அன்றோ - காதலர் எனக்குச் செய்யும் இன்பமாவது அவ்வளவன்றோ?

வெகுளாமை: அதற்கு உடன்பட்டு நெஞ்சின்கண் நிற்றல். தனக்கு அவ்வின்பத்தில் சிறந்தது இன்மையின், அதனைச் சிறப்பு என்றாள். காதலர் நம்மாட்டு அருள் என்றும்,[1] செய்யும் குணம் என்றும் பாடம் ஓதுவாரும் உளர். தோழி கூறிய அதனைக் குறிப்பான் இகழ்ந்து கூறியவாறு.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** அருள் செய்தலாவது குற்றம் கண்டாலும் வெகுளாமை.

**பரிப்பெருமாள்:** தலைமகள் ஆற்றாமை கண்டு அருள் இலன் என்று இயற்பழித்த தோழிக்கு, யாம் கொடியர் என்று நினைக்கவும் அதற்கு முனியாது நெஞ்சத்தே உறையா நின்றார், ஆதலான் அருள் உடையர் என்று கொள்ளப்படும் என்று இயற்பட மொழிந்தது.

**காளிங்கர்:** கண்டு எய்திய காலத்திலும் தமது இனிய குணங்களை நினைத்தல் அன்றிப் பின்பு நின்னிற் பிரியேன், பிரியின் ஆற்றேன் என்று இங்ஙனம் தெளித்து அளித்துப் பிரிதலும் ஆற்றலும் வல்லமையிற் படிறு உடைமையும் பண்பு இன்மையும் உடையர் ஆயினர் என்று இங்ஙனம் கொடுமை நினைப்பினும் காய்வது ஒன்று இலர்; காதலித்து உள்ளுள்ளே உறைவர். அதனால் நமக்கு நம் காதலர் செய்யும் பெருஞ்சிறப்பு அவ்வளவைத்து அன்றே? எனவே கண்ணெதிர் நிற்பர்; இன்று கருத்து எதிர் நிற்பர். இதுவன்றோ நம்மாட்டுத் தலைவர் செய்யும் தலையளி? (1208)

## 1209

விளியும்என் இன்னுயிர் வேறல்லம் என்பார்
அளிஇன்மை ஆற்ற நினைந்து. 9

(தலைமகன் தூதுவரக் காணாது வருந்துகின்றாள்,
வற்புறுத்தும் தோழிக்குச் சொல்லியது.)

**பரிமேலழகர்:** வேறு அல்லம் என்பார் அளி இன்மை ஆற்ற நினைந்து - முன்பெல்லாம் நாம் இருவரும் வேறு அல்லம் என்று சொல்லு

1. மணக்குடவர் முதலியோர் இப் பாடத்தையே கொண்டனர்.

வாரது அளியின்மையை மிகவும் நினைந்து, என் இன்னுயிர் விளியும் - எனது இனிய உயிர் கழியாநின்றது.

அளியின்மை பின் வருவராகலுமாய்ப் பிரிதலும், பிரிந்து வாராமையும், ஆண்டு நின்றுழித் தூதுவிடாமையும் முதலாயின. பிரிவாற்றல் வேண்டும் என வற்புறுத்தாட்கு, என் உயிர் கழிகின்றது பிரிவிற்கு அன்று, அவர் அன்பின்மைக்கு என எதிர் அழிந்து கூறியவாறு.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** இது தலைமகன் நினையான் என்று தெரிந்து தலைமகள் தோழிக்குக் கூறியது.

**பரிதியார்:**[1] என் விழியும் உன் உயிரும் வேறல்ல என்று இருந்தவர் பிரிந்தார். அவர் சொன்ன சொல்லை நினைந்து அழியாய் நெஞ்சே.

### ஒப்புமை

**வேறல்லம் என்பார்:**

"பண்டு நாம்
வேறல்லம் என்பதொன் றுண்டால் அவனொடு
மாறுண்டோ நெஞ்சே நமக்கு." (கலி. 62: 17-9.) (1209)

## 1210

விடாஅது சென்றாரைக் கண்ணினால் காணப்
படாஅதி வாழி மதி. 10

(வன்புறை எதிர் அழிந்தாள் காமம் மிக்க
கழிபடரால் சொல்லியது.)

**பரிமேலழகர்:** மதி - மதியே, விடாஅது சென்றாரை கண்ணினால் காண படாஅதி - என் நெஞ்சில் இடைவிடாது இருந்தே விட்டுப் போயினாரை யான் என் கண்ணளவானாயினும் எதிர்ப்படும் வகை நீ படாதொழிவாயாக.

கண்ணளவான் எதிர்ப்படுதலாவது, மதி இருவராலும் நோக்கப்படுதலின் இருவர் கண்ணும் அதன்கண்ணே சேர்தல். முதலொடு சினைக்கு ஒற்றுமை உண்மையின் சென்றாரைக் காண என்றும், குறையுறுகின்றாளாகலின் வாழி என்றும் கூறினாள். இனிப் படாது என்பது பாடமாயின்[2], கனவிடைக் கண்ணினால் காணுமாறு மதி படுகின்றதில்லை என அதனால் துயில் பெறாது வருந்துகின்றாள் கூற்றாக்குக. இப் பொருட்கு வாழி என்பது அசைநிலை.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** என் நெஞ்சை விடாது போனவரைக் கண்ணினால் காணுமாறு படுகின்றதில்லை இம் மதி.

பட்டதாயின் என்கண் உறங்கும்; உறங்கினால் அவரைக் காணலாம் என்பது கருத்து. இது மதியுடன் புலந்து கூறியது. இதனாலே நனவினால் வருத்தம் உற்றதும் கூறினாளாம்.

**பரிதியார்:** விடாமல் சென்றாரைக் கண்ணினால் காணும் அளவு அஸ்தமனம் ஆகாமல் விளங்கியிருப்பாய் மதியே. (1210)

---

1. 'விழியுமென் இன்னுயிரும் வேறல்ல என்பார்' என்பது இவர் பாடம்.
2. மணக்குடவர் கொண்ட பாடம்.

# 122. கனவுநிலை உரைத்தல்

**பரிமேலழகர்:** அஃதாவது, தலைமகள் தான் கண்ட கனவினது நிலைமையைத் தோழிக்குச் சொல்லுதல். அக்கனவு நனவின்கண் நினைவு மிகுதியால் கண்டது ஆகலின், இது நினைந்தவர் புலம்பலின்பின் வைக்கப்பட்டது.

**மணக்குடவர்:** தலைமகன் நினைத்தல், தலைமகள் நினைத்தல் என்னும் இரண்டனுள்ளும் இவட்காயின் உறக்கம் இல்லை என்று கொள்க.

### 1211

காதலர் தூதொடு வந்த கனவினுக்
கியாதுசெய் வேன்கொல் விருந்து. 1

(தலைமகன் தூது வரக் கண்டாள் சொல்லியது.)

**பரிமேலழகர்:** காதலர் தூதொடு வந்த கனவினுக்கு - யான் வருந்துகின்றது அறிந்து அது தீரக் காதலர் விடுத்த தூதினைக் கொண்டு என்மாட்டு வந்த கனவினுக்கு, விருந்து யாது செய்வேன் - யான் விருந்தாக யாதனைச் செய்வேன்?

விருந்து என்றது விருந்திற்குச் செய்யும் உபகாரத்தினை. அது கனவிற்கு ஒன்று காணாமையின், யாது செய்வேன் என்றாள்.

#### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** இது தலைமகள் ஆற்றுதற்பொருட்டுக் காதலர் வாராநின்றார் என்று தூதர் வரக் கனாக் கண்டேன் என்று தோழி சொல்லியது. *(1211)*

### 1212

கயல்உண்கண் யான்இரப்பத் துஞ்சின் கலந்தார்க்
குயல்உண்மை சாற்றுவேன் மன். 2

(தூதுவிடக் கருதியாள் சொல்லியது.)

**பரிமேலழகர்:** கயல் உண்கண் யான் இரப்ப துஞ்சின் - துஞ்சாது வருந்துகின்ற என் கயல்போலும் உண்கண்கள் யான் இரந்தால் துஞ்சுமாயின், கலந்தார்க்கு உயல் உண்மை சாற்றுவேன் - கனவிடைக் காதலரைக் காண்பேன்; கண்டால் அவர்க்கு யான் ஆற்றியுளேனாய தன்மையை யானே விரியச் சொல்வேன்.

கயலுண்கண் என்றாள், கழிந்த நலத்திற்கு இரங்கி. உயல் - காமநோய்க்குத் தப்புதல். தூதர்க்குச் சொல்லாது யாம் அடக்குவனவும் சொல்லுவனவற்றுள்ளும் சுருக்குவனவற்றின் பரப்பும் தோன்றச் சொல்வேன் என்னும் கருத்தால் சாற்றுவேன் என்றாள். இனி அவையும் துஞ்சா, சாற்றலும் கூடாது என்பது பட நின்றமையின், மன் ஒழியிசைக்கண் வந்தது. முன்னும் கண்டாள் கூற்றாகலின் கனவுநிலை உரைத்தலாயிற்று.

#### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** கயல் உண்கண் - பிறழ்ச்சியுடைய கண்.

**பரிப்பெருமாள்:** உறங்கவேணும் என்ற தோழிக்குக் கண்கள் நீயும் யானும் வேண்டிக்கொள்ள உறங்குமாயின் இத்துணை நாள் சாவாது

இருந்தோம் என்று நம் காதலர்க்கு உரைக்கலாயிற்று என்று தலைமகள் கூறியது.

பரிதியார்: கயல் உண்கண் - கயல் போன்ற கண்ணே.

காளிங்கர்: கயல் உண்கண் - நீரோடு வாழும் கயல்போல நீந்தும் எம் கலுழ் கண். (1212)

## 1213

நனவினான் நல்கா தவரைக் கனவினான்
காண்டலின் உண்டென் உயிர். 3

(ஆற்றாள் எனக் கவன்றாட்கு ஆற்றுவல் என்பது படச் சொல்லியது.)

பரிமேலழகர்: நனவினான் நல்காதவரை - நனவின்கண் வந்து தலையளி செய்யாதாரை, கனவினான் காண்டலின் என் உயிர் உண்டு - யான் கனவின் கண் கண்ட காட்சியானே என் உயிர் உண்டாகாநின்றது.

மூன்றன் உருபுகள் ஏழன் பொருண்மைக்கண் வந்தன. அக் காட்சி யானே யான் ஆற்றியுளேன் ஆகின்றேன், நீ கவலல் வேண்டா என்பதாம்.

### உரை வேறுபாடு

மணக்குடவர்: இஃது உறங்கினால் காணலாமோ என்ற தோழிக் குத் தலைமகள் கூறியது. (1213)

## 1214

கனவினான் உண்டாகும் காமம் நனவினான்
நல்காரை நாடித் தரற்கு. 4

(இதுவும் அது.)

பரிமேலழகர்: நனவினான் நல்காரை நாடி தரற்கு - நனவின்கண் வந்து தலையளி செய்யாதாரை அவர் சென்றுழி நாடிக் கொண்டுவந்து கனவு தருதலான், கனவினான் காமம் உண்டாகும் - அக் கனவின்கண்ணே எனக்கு இன்பம் உண்டாகாநின்றது.

காமம்: ஆகு பெயர். நான்காவது மூன்றன் பொருண்மைக்கண் வந்தது. இயல்பான் நல்காதவரை அவர் சென்ற தேயம் அறிந்து சென்று கொண்டுவந்து தந்து நல்குவித்த கனவால் யான் ஆற்றுவல் என்பதாம்.

### உரை வேறுபாடு

மணக்குடவர்: இது, கண்டால் பயன் என்னை, காம நுகர்ச்சி இல்லையே என்ற தோழிக்குத் தலைமகள் கூறியது.

காளிங்கர்: காமம் - ஆசை.

### ஒப்புமை

கனவினால் இன்புறல்:

"கனவினாற் கண்டேன் தோழி காண்டகக்
கனவின் வந்த கானலஞ் சேர்ப்பன்
நனவின் வருதலும் உண்டென
அனைவரை நின்றதென் அரும்பெறல் உயிரே."

(கலி. 128: 23-6.) (1214)

## 1215

நனவினான் கண்டதூஉம் ஆங்கே கனவுந்தான்
கண்ட பொழுதே இனிது. 5

(இதுவும் அது.)

**பரிமேலழகர்:** நனவினான் கண்டதூஉம் (இனிது) ஆங்கே - முன் நனவின்கண் அவரைக் கண்டு நுகர்ந்த இன்பந்தானும் இனிதாயிற்று அப்பொழுதே; கனவுந்தான் கண்ட பொழுதே இனிது - இன்று கனவின்கண் கண்டு நுகர்ந்த இன்பமும் அக் கண்ட பொழுதே இனிதாயிற்று; அதனான் எனக்கு இரண்டும் ஒத்தன.

இனிது என்பது முன்னும் கூட்டப்பட்டது. கனவு: ஆகுபெயர். முன்னும் யான் பெற்றது இவ்வளவே, இன்னும் அது கொண்டு ஆற்றுவல் என்பதாம்.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** இது கனவிற் புணர்ச்சி இன்பம் தருமோ என்ற தோழிக்குத் தலைமகள் கூறியது.

**பரிதியார்:** நனவினால் கண்டதும் இனிது; அதனினும் இனிது நாயகரைக் கனவில் காணுதல். *(1215)*

## 1216

நனவென ஒன்றில்லை ஆயின் கனவினான்
காதலர் நீங்கலர் மன். 6

(இதுவும் அது.)

**பரிமேலழகர்:** நனவு என ஒன்று இல்லை ஆயின் - நனவு என்று சொல்லப்படுகின்ற ஒரு பாவி இல்லையாயின், கனவினான் காதலர் நீங்கலர் - கனவின்கண் வந்து கூடிய காதலர் என்னைப் பிரியார்.

ஒன்று என்பது அதன் கொடுமை விளக்கி நின்றது. அஃது இடையே புகுந்து கனவைப் போக்கி அவரைப் பிரிவித்தது என்பது பட நின்றமையின், மன் ஒழியிசைக்கண் வந்தது. கனவிற் பெற்று ஆற்றுகின்றமை கூறியவாறு.

### உரை வேறுபாடு

**பரிப்பெருமாள்:** யாங்கள் எல்லாம் காணாது ஒழியவும் நீ கண்டாய் ஆயின் அவரைப் பிரியவிட்டது என்னை என்ற தோழிக்குத் தலைமகள் கூறியது.

**காளிங்கர்:** எனவே நனவின்கண் தனது பிரிவாற்றாமை தோன்றக் கூறினாள். *(1216)*

## 1217

நனவினான் நல்காக் கொடியார் கனவினான்
என்எம்மைப் பீழிப் பது. 7

(விழித்துழிக் காணாளாயினாள் கனவிற் கூட்டம் நினைந்து ஆற்றாளாய்ச் சொல்லியது.)

**பரிமேலழகர்:** நனவினான் நல்கா கொடியார் - ஒரு ஞான்றும் நனவின் கண் வந்து தலையளி செய்யாத கொடியவர், கனவினான் எம்மை பீழிப்பது

என் - நாள்தோறும் கனவின்கண் வந்து நம்மை வருத்துவது எவ்வியைபு பற்றி?

பிரிதலும் பின் நினைந்து வாராமையும் நோக்கிக் கொடியார் என்றும், கனவில் தோள்மேலராய்[1] விழித்துழிக் கரத்தலின் அதனுனும் துன்பமாகா நின்றது என்பாள் பீழிப்பது என்றும் கூறினுள். நனவின் இல்லது கன வினும் இல்லை என்பர், அது கண்டிலம் என்பதாம்.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** இது விழித்த தலைமகள் ஆற்ருமையால் தோழிக்குக் கூறியது.

**பரிப்பெருமாள்:** இது தலைமகனைக் கனவகத்துக் கண்டு முன்பு நல்காமையை நினைத்து ஊடல் உற்றுழி அதனை உணர்த்திக் கூடுவதன் முன்னம் விழித்த தலைமகள் ஆற்ருமையால் தோழிக்குக் கூறியது. பீழை என்றது அவன் கூந்தலும் அல்குலும் பற்றி நலிந்ததனை.

**காளிங்கர்:** எனவே அவ்விடத்துக் கண்ட மாத்திரமே அல்லது கலந்து இன்புருத கடுந்துயர் நினைந்து ஆற்ருளாயினுள் என்பது பொருள்.

### ஒப்புமை

**தலைவன் கனவில் வருவது துன்பமாதல்:**

"நனவெனப் புல்லுங்காற் காணுளாய்க் கண்டது
கனவென வுணர்ந்துபின் கையற்றுக் கலங்குமே."

(கலி. *126: 16-7.*) (*1217*)

## 1218

துஞ்சுங்கால் தோள்மேலர் ஆகி விழிக்குங்கால்
நெஞ்சத்தர் ஆவர் விரைந்து. 8

(தான் ஆற்றுதற்பொருட்டுத் தலைமகனை இயற்பழித்தாட்கு இயற்பட மொழிந்தது.)

**பரிமேலழகர்:** துஞ்சுங்கால் தோள்மேலர் ஆகி-என் நெஞ்சு விடாது உறைகின்ற காதலர் யான் துஞ்சும்பொழுது வந்து என் தோள்மேலராய், விழிக்குங்கால் விரைந்து நெஞ்சத்தர் ஆவர் - பின் விழிக்கும்பொழுது விரைந்து பழைய நெஞ்சின்கண்ணர் ஆவர்.

கலவி விட்டு மறையும் கடுமை பற்றி விரைந்து என்ருள். ஒருகாலும் என்னின் நீங்கி அறியாதாரை நீ நோவற்பாலை அல்லை என்பதாம்.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** இஃது உறக்கம் நீங்கினுல் யாண்டுப் போவர் என்று நகைக்குறிப்பினுல் கூறிய தோழிக்குத் தலைமகள் கூறியது.

### ஒப்புமை

**1. தலைவன் தலைவியின் கனவில் தோள்மேல னுதல்:**

"பாயல்கொண் டென்தோள் கனவுவார்"
"தோள்மேலாய் எனநின்னை மதிக்குமன், மதித்தாங்கே."

(கலி. *24:7, 126:15.*)

---

1. குறள், 1218.

2. **தலைவன் தலைவி விழிக்குங்கால் நெஞ்சத்தவனாதல்:**

"தெற்றெனக் கண்ணுள்ளே தோன்ற இமைஎடுத்துப்
பற்றுவேன் என்றுயான் விழிக்குங்கால் மற்றும்என்
நெஞ்சத்துள் ஓடி ஒளித்தாங்கே துஞ்சாநோய்
செய்யும் அறனில் லவன்." (கலி. *144: 55-8.*) (*1218*)

### 1219

**நனவினான் நல்காரை நோவர் கனவினான்**
**காதலர்க் காணா தவர்.** 9

(இதுவும் அது.)

*பரிமேலழகர்:* கனவினான் காதலர் காணாதவர் - தமக்கு ஒரு காதலர் இன்மையின் அவரைக் கனவில் கண்டறியாத மகளிர், நனவினான் நல்காரை நோவர் - தாம் அறிய நனவின்கண் வந்து நல்காத நம் காதலரை அன்பிலர் என நோவா நிற்பர்.

இயற்பழித்தது பொறுது புலக்கின்றாள் ஆகலின், அயன்மை தோன்றக் கூறினாள். தமக்கும் காதலர் உளராய் அவரைக் கனவில் கண்டு அறிவாராயின் நம் காதலர் கனவின்கண் ஆற்றி நல்குதல் அறிந்து நோவார் என்பதாம்.

#### உரை வேறுபாடு

*காளிங்கர்:* அங்ஙனம் கூறிய அயலார் கேட்பத் தன் நெஞ்சிற்குச் சொல்லுவாளாய்ச் சொல்லினாள். (*1219*)

### 1220

**நனவினான் நம்நீத்தார் என்பர் கனவினான்**
**காணார்கொல் இவ்வூ ரவர்.** 10

(இதுவும் அது.)

*பரிமேலழகர்:* இவ்வூரவர் நனவினான் நம் நீத்தார் என்பர் - இவ்வூரின் மகளிர் நனவின்கண் நம்மை நீத்தார் என்று நம் காதலரைக் கொடுமை கூறா நிற்பர்; கனவினான் காணார்கொல் - அவர் கனவின்கண் நீங்காது வருதல் கண்டு அறியாரோ?

என்னொடு தன்னிடை வேற்றுமை இன்றாயின் யான் கண்டது தானும் கண்டு அமையும்; அது காணாது அவரைக் கொடுமை கூறுகின்றமையின் அயலாளேயாம் என்னும் கருத்தால், இவ்வூரவர் என்றாள்.

#### உரை வேறுபாடு

*மணக்குடவர்:* இஃது இவ் வேறுபாடு அலராயிற்று என்ற தோழிக்குத் தலைமகள் கூறியது. (*1220*)

# 123. பொழுது கண்டு இரங்கல்

**பரிமேலழகர்:** அ∴தாவது, மாலைப்பொழுது வந்துழி அதனைக் கண்டு தலைமகள் இரங்குதல். 'கனு முந்துறுத வினையில்லை'[1] என்பது பற்றிப் பகற்பொழுது ஆற்றியிருந்தாட்கு உரியது ஆகலின், இது கனவு நிலை உரைத்தலின்பின் வைக்கப்பட்டது.

**மணக்குடவர்:** பொழுது கண்டு இரங்கலாவது மாலைப்பொழுது கண்டு தலைமகள் வருந்துதல். ஏனைப் பொழுதில் வருத்தம் இலளோ எனின், பிரியப்பட்டார்க்கு எல்லாக் காலமும் வருத்தம் உள ஆயினும், விடியலும் நண்பகலும் போலாது மாலைப்பொழுது வருத்தம் மிகுதலால் இது கூறப்பட்டது.

**பரிப்பெருமாள்:** என்னை வருத்தம் மிகுமாறு எனின், புள்ளும் மாவும் விடியலும் நண்பகலும் தத்தம் சேக்கையினின்று நீங்கி அந்திக் காலம் வந்து சேரும். அவையிற்றைக் கண்டு நம் காதலர் நம்மை உள்ளு கின்றிலர் என்றும், மைந்தரும் மகளிரும் விடியலும் நண்பகலும் அறத்தினும் பொருளினும் முயன்று அந்திக் காலத்தில் தம்மில் கூடி இன்பம் நுகர்வது கண்டு, யாம் இவ்வாறு நுகரப்பெறுகிலோம் என்றும் நினைத்தலான் வருத்தம் மிகும் என்க. நடுநாள் யாமத்தும் துன்பம் உறும் அன்றே, அதுவும் கூறவேண்டாவோ எனின், அக்காலத்து வரும் துன்பமும் இதனின் மிகுதியின்மையின் வேறு கூறுராயினர். இது நினைந்தவர் புலம்பலின்பின் கூறற்பாலது. கனவும் நிலையும் சேரச் சொல்ல வேண்டுதலின் இரண்டு சொல்லும் அவராகக் கொண்டு முன் கூறவேண்டும் என்பதனல் நினைவொடு கூடிய கனவை முன் கூறி அதன்பின் கூறினர் என்று கொள்ளப்படும்.

**1221**

மாலையோ அல்லை மணந்தார் உயிர்உண்ணும்
வேலைநீ வாழி பொழுது. 1

(பொழுதொடு புலந்து சொல்லியது.)

**பரிமேலழகர்:** பொழுது - பொழுதே, நீ மாலையோ அல்லை - நீ முன் நாள்களின் வந்த மாலையோ எனின், அல்லை; மணந்தார் உயிர் உண்ணும் வேலை - இருந்தவாற்ருன் அந் நாள் காதலரை மணந்த மகளிர் உயிரை உண்ணும் இறுதிக் காலமாய் இருந்தாய்.

முன்னுள்: கூடியிருந்த நாள். அந் நாள் மணந்தார் எனவே, பின் பிரிந்தாராதல் பெறுதும். வாழி என்பது குறிப்புச் சொல். "வாலிழை மகளிர் உயிர்பொதி அவிழ்க்கும், காலை"[2] என்ருற் போல ஈண்டுப் பொதுமையால் கூறப்பட்டது. வேலை என்பது ஆகுபெயர்; வேலை என்பதற்கு வேலாய் இருந்தாய் என்பாரும் உளர்.

**உரை வேறுபாடு**

**பரிப்பெருமாள்:** கெடுவாயாக என்னுதல் குறிப்புமொழி.

**காளிங்கர்:** உயிர் உண்ணும் வேலை நீ - உயிர் பருகுவது ஒரு கூற்று.

**ஒப்புமை**

முற்றும்:

"வாலிழை மகளிர் உயிர்பொதி அவிழ்க்கும்
காலை ஆவ தறியார்
மாலை என்மனுர் மயங்கி யோரே" (கலி. 119: 14-6.)

1. பழமொழி, 2. 2. கலி. 119:14.

''ஐதேந் தகலல்குல் ஆவித் தழலுயிராக்
கைசோர்ந் தணலூன்றிக் கண்ணீர் கவுளலைப்பக்
கண்ணீர் கவுளலைப்பக் கையற்று யாம்இனையப்
புண்ணீரும் வேலின் புகுந்ததால் மாலை.'' (சீவக. 2050.) (1221)

## 1222

**புன்கண்ணை வாழி மருள்மாலை எம்கேள்போல்**
**வன்கண்ண தோநின் துணை.** 2

(தன்னுள் கையாற்றை அதன்மே லிட்டுச் சொல்லியது.)

**பரிமேலழகர்:** மருள் மாலை - மயங்கிய மாலாய், புன்கண்ணை - நீயும் எம்போலப் புன்கண் உடையையாய் இருந்தாய்; நின் துணை எம் கேள் போல் வன்கண்ணதோ - நின் துணையும் எம் துணை போல வன்கண்மை உடையதோ? கூறுவாயாக.

மயங்குதல், பகலும் இரவும் தம்முள்ளே விரவுதல்; கலங்குதலும் தோன்ற நின்றது. புன்கண் - ஒளியிழத்தல்; அதுபற்றித் துணையும் உண்டாக்கிக் கூறினாள். எச்சவும்மை விகாரத்தால் தொக்கது.[1] எமக்குத் துன்பம் செய்தாய், நீயும் இன்பம் உற்றிலை என்னும் குறிப்பால் வாழி என்றாள்.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** இது தன்னுட் கையாறெய்திடு கிளவி.

**பரிதியார்:** புன் கண்ணை வாழி மருள் மாலை - மாலைப் பொழுதே' என்கண் பனி வருமாப்போல உன் கண்ணும் பனித்து உருகா நின்றது.

**காளிங்கர்:** புன்கண்ணை வாழி மருள் மாலை – மாலாய், நீ புன்கண் மையை உடையையாய் அறப் பொலிவு அழிந்து இராநின்றாய்.

உலகத்து மாலை என்று இங்ஙனம் பெண்மைப்பெயர் வழக்கம் உண்டாகலானும் சந்தியாதேவி என்று வடசொல் இலக்கணம் உண்டாக லானும் இதனைப் பெண் பெயர் கொடுத்துக் கூறினார்.

**கவிராஜ பண்டிதர்:** புன்கண்ணை - வாடின கண்களை உடையை யாயிருந்தாய்.

### ஒப்புமை

**புன்கண்ணை வாழி மருள்மாலை:**

''புன்கண் மாலை'' (குறுந். 46:5.)

''புல்லென் மருண்மாலைப் போழ்தின்று வந்தென்னைக்
கொல்லாது போதல் அரிதால்'' (கலி. 145: 29-30.)

''புன்கண்கூர் மாலைப் புலம்புமென் கண்ணேபோல்.''
(சிலப். 7:33.) (1222)

## 1223

**பனிஅரும்பிப் பைதல்கொள் மாலை துனிஅரும்பித்**
**துன்பம் வளர வரும்.** 3

**(ஆற்றல் வேண்டும் என்ற தோழிக்குச் சொல்லியது.)**

**பரிமேலழகர்:** பனி அரும்பி பைதல்கொள் மாலை - காதலர் கூடிய நாளெல்லாம் என்முன் நடுக்கம் எய்திப் பசந்து வந்த மாலை, துனி அரும்பி

1. துணையும் என்ற உம்மை.

துன்பம் வளர வரும் - இந் நாள் எனக்கு இறந்துபாடு வந்து தோன்றி அதற்கு உளதாம் துன்பம் ஒருகாலைக்கு ஒருகால் மிக வாரா நின்றது.

குளிர்ச்சி தோன்ற மயங்கிவரு மாலை யென்னும் செம்பொருள் இக் குறிப்பு உணர நின்றது. துனி - உயிர்வாழ்தற்கண் வெறுப்பு. அதனால் யான் ஆற்றுமாறு என்னை என்பது குறிப்பெச்சம்.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** நெருநல் எனக்கு நடுக்கத்தை உண்டாக்கித் தானும் புன்மை கொண்டிருந்த மாலைப்பொழுது, இன்றும் எனக்கு வெறுப்புத் தோற்றி வருத்தம் மிகும்படியாக வாராநின்றது.

இது முன்னை ஞான்று மாலையால் அடர்ப்புண்ட தலைமகள் பிற்றை ஞான்று மாலை வருவது கண்டு கூறியது.

**பரிதியார்:** பைதல் கொள் மாலை - செக்கர் வானம் செய்யும் மாலைப் பொழுது. (1223)

## 1224

காதலர் இல்வழி மாலை கொலைக்களத்
தேதிலர் போல வரும். 4

(இதுவும் அது.)

**பரிமேலழகர்:** மாலை – காதலர் உள்ள பொழுதெல்லாம் என் உயிர் தளிர்ப்ப வந்த மாலை, காதலர் இல்வழி - அவர் இல்லாத இப்பொழுது, கொலைக்களத்து ஏதிலர் போல வரும் - அஃது ஒழிந்து நிற்றலே அன்றிக் கொல்லும் களரியில் கொலைஞர் வருமாறு போல அவ்வுயிரைக் கோடற்கு வாராநின்றது.

ஏதிலர் - அருள் யாதும் இல்லார். முன்னெல்லாம் எனக்கு நட்பாய் இன்பம் செய்துவந்த பொழுதும் இன்று என்மேல் பகையாய்த் துன்பம் செய்து வாரா நின்றது, இனி யான் ஆற்றுமாறு என்னை என்பதாம்.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** இது மாலைக்காலத்து நோய் மிகுதற்குக் காரணம் என்னை என்ற தோழிக்குத் தலைமகள் காரணம் கூறியது.

**பரிதியார்:** ஏதிலர் - சத்துரு.

**காளிங்கர்:** ஏதிலர் - பகைவர்.

### ஒப்புமை

முற்றும்:

"கொலை குறித்தன்ன மாலை" (அகநா. 364:13.)

"ஒன்றே யெயிற்ற தொருபெரும்பேய் உலகம் விழுங்க அங்காந்து
நின்றாற் போல நிழல்உமிழ்ந்து நெடுவெண் திங்கள் எயிறிலங்க
இன்றே குருதி வானவாய் அங்காந் தென்னை விழுங்குவான்
அன்றே வந்த திம்மாலை அளியேன் ஆவி யாதாங்கொல்."

(சீவக. 1660.) (1224)

## 1225

காலைக்குச் செய்தநன் றென்கொல் எவன்கொல்யான்
மாலைக்குச் செய்த பகை. 5

(இதுவும் அது.)

**பரிமேலழகர்:** (காலையும் மாலையும் அவர் கூடியஞான்று போலாது இஞ்ஞான்று வேறுபட்டு வாராநின்றன; அவற்றுள்) யான் காலைக்கு செய்த

நன்று என் - யான் காலைக்குச் செய்த உபகாரம் யாது? மாலைக்கு செய்த பகை எவன் - மாலைக்குச் செய்த அபகாரம் யாது?

கூடியஞான்று பிரிவர் என்று அஞ்சப் பண்ணிய காலை அஃது ஒழிந்து இஞ்ஞான்று கங்குல் வெள்ளத்திற்குக்[1] கரையாய் வாராநின்றது என்னும் கருத்தால் நன்றென்கொல் என்றும், கூடிய ஞான்று இன்பம் செய்துவந்த மாலை அஃது ஒழிந்து இஞ்ஞான்று அளவில் துன்பம் செய்யாநின்றது என்னும் கருத்தாற் பகை எவன்கொல் என்றும் கூறினாள். பகை: ஆகு பெயர்.

தன்னோடொத்த காலை போலாது மாலை தன் கொடுமையால் துன்பம் செய்யா நின்றது என்பதாம். (1225)

## 1226

மாலைநோய் செய்தல் மணந்தார் அகலாத
காலை அறிந்த திலேன். 6

(இன்று இன்னையாகின்ற நீ அன்று அவர் பிரிவிற்கு உடம்பட்டது என்னை என்றாட்குச் சொல்லியது.)

பரிமேலழகர்: மாலை நோய் செய்தல் - முன்னெல்லாம் எனக்கு நட்பாய் இன்பம் செய்து போந்த மாலை இன்று பகையாய்த் துன்பம் செய்தலை, மணந்தார் அகலாத காலை அறிந்தது இலேன் - காதலர் பிரிதற்கு முன்னே அறியப் பெற்றிலேன்.

இங்ஙனம் வேறுபடுதல் அறிந்திலேன், அறிந்தேனாயின் அவர் பிரிவிற்கு உடம்படேன் என்பதாம்.

### ஒப்புமை

1. மாலை நோய் செய்தல்: குறள், 1227.

"நோயொடு புகுந்து கல்லென் மாலை நீங்க." (மதுரைக். 557-8.)

2. மாலையைத் தலைவர் உள்ள பொழுது அறியாமை:

"சிறுபுன் மாலை யுண்மை
அறிவேன் தோழியவர்க் காணா வூங்கே"
"தண்ணந் துறைவன் தணவா வூங்கே
வாலிழை மகளிர் விழவணி கூட்டும்
மாலையோ அறியேன் மன்னே மாலை."

(குறுந். 352:5-6, 386:2-4.) (1226)

## 1227

காலை அரும்பிப் பகல்எல்லாம் போதாகி
மாலை மலரும்இந் நோய். 7

(மாலைப்பொழுதின்கண் இனையையாதற்குக் காரணம் என்னை என்றாட்குச் சொல்லியது.)

பரிமேலழகர்: இந் நோய் - இக் காமநோயாகிய பூ, காலை அரும்பி- காலைப்பொழுதின்கண் அரும்பி, பகல் எல்லாம் போது ஆகி - பகற் பொழுதெல்லாம் பேரரும்பாய் முதிர்ந்து, மாலை மலரும் - மாலைப்பொழுதின்கண் மலராநிற்கும்.

1. "கங்குல் வெள்ளம் கடலினும் பெரிதே." (குறுந். 387:5.)

துயிலெழுந்த பொழுதாகலின் கனவின்கண் கூட்டம் நினைந்து ஆற்றுதல் பற்றிக் காலை அரும்பி என்றும், பின் பொழுது செலச் செல அது மறந்து பிரிவு உள்ளி ஆற்றாளாதல் பற்றிப் பகலெல்லாம் போதாகி என்றும், தத்தம் துணையை உள்ளி வந்து சேரும் விலங்குகளையும் மக்களையும் கண்டு தான் அக் காலத்தில் நுகர்ந்த இன்பம் நினைந்து ஆற்றாமை மிகுதி பற்றி மாலை மலரும் என்றும் கூறினாள். பூப்போல இந் நோய் காலவயத்தது ஆகா நின்றது[1] என்பது உருவகத்தால் பெறப்பட்டது. ஏகதேச உருவகம்.

**உரை வேறுபாடு**

**பரிப்பெருமாள்:** மாலையால் வருத்தம் உற்ற தலைமகள் வேறுபாடு கண்டு, "விடியலும் நண்பகலும் ஆற்றி இப்பொழுது வேறுபட்டாய்; இதற்குக் காரணம் என்?" என்ற தோழிக்குத் தலைமகள் காரணம் கூறியது. **(1227)**

**1228**

**அழல்போலும் மாலைக்குத் தூதாகி ஆயன்**
**குழல்போலும் கொல்லும் படை.** **8**

(இதுவும் அது.)

**பரிமேலழகர்:** ஆயன் குழல் - முன்னெல்லாம் இனியதாய்ப் போந்த ஆயன் குழல், அழல்போலும் மாலைக்கு தூது ஆகி - இது பொழுது அழல் போலச் சுடுவதாய மாலைக்குத் தூதுமாய், கொல்லும் படை - அது என்னைக் கொல்வுழிக்[2] கொல்லும் படையும் ஆயிற்று.

பின்னின்ற போலும் என்பது உரையசை. முன்னரே வரவு உணர்த்தலின் தூதாயிற்று. கோறல் கருவியாகலின் படை ஆயிற்று. தானே சுடவல்ல மாலை இத் துணையும் பெற்றால் என் செய்யாது என்பதாம்.

**உரை வேறுபாடு**

**பரிப்பெருமாள்:** அவர் பிரிவதன்முன் இன்பம் நுகர்தற்குக் காலம் பார்த்து இருந்துழி மாலை வருகின்றது என்று தூதாய் வருதலின் தூது என்றாள்.

**பழைய உரை:** கொல்லும் படை – பிரிந்தாரைக் கொல்லவேணும் என்ற ஐம்படை.

**காளிங்கர்:** அழல்போலும் - வடவைத்தீப்போலும்.

**ஒப்புமை**

*1.* **மாலையும் குழலும் சேர்ந்து வருத்துதல்:**

"கொடுங்கோற் கோவலர் குழலோ டொன்றி
ஐதுவந் திசைக்கும் அருள் இல் மாலை" **(நற். 69:8-9.)**

"கல்லாக் கோவலர் ஊதும்
வல்வாய்ச் சிறுகுழல் வருத்தாக் காலே"

"ஆபெயர் கோவலர் ஆம்பலொ டளை இப்
பையுள் நல்யாழ் செவ்வழி வகுப்ப
ஆருயிர் அணங்கும் தெள்ளிசை
மாரி மாலையும் தமியள் கேட்டே"

1. "பொழுதின் முகமலர் வுடையது பூவே." (நன். 30.)
2. (பி-ம்.) அது வந்தென்னைக் கொல்வுழி.

"பல்லான் கோவலர் கல்லாது ஊதும்
சிறுவெதிர்ந் தீங்குழல் புலம்புகொள் தெள்விளி.''
(அகநா. 74:16-7, 214:12-5, 399:11-2.)

2. மாலையும் குழலும்:

"அணிமாலைக் கேள்வற் றரூஉமார் ஆயர்
மணிமாலை ஊதும் குழல்.'' (கலித். 101:34-5.) (1228)

1229

பதிமருண்டு பைதல் உழக்கும் மதிமருண்டு
மாலை படர்தரும் போழ்து. 9

(இதுவும் அது.)

**பரிமேலழகர்:** இதற்கு முன்னெல்லாம் யானே மயங்கி நோய் உழந்தேன்; மதி மருண்டு மாலை படர்தரும் போழ்து - இனிக் கண்டாரும் மதி மருளும் வகை மாலை வரும்பொழுது, பதி மருண்டு பைதல் உழக்கும் - இப்பதி[1] யெல்லாம் மயங்கி நோய் உழக்கும்.

மதி மருள என்பது மதி மருண்டு எனத் திரிந்து நின்றது. கூற்றமாகக் கருதிக் கூறினள் ஆகலின் மாலை படர்தரும் போழ்து என்றாள். யான் இறந்துபடுவல் என்பதாம். மாலை மயங்கி வரும் போழ்து என் பதி நிலை கலங்கி நோய் உழக்கும் என்று உரைப்பாரும் உளர்.

உரை வேறுபாடு

**பரிப்பெருமாள்:** அறிவில்லாதாரைப் போல மயங்குதல் தக்கது அன்று, நமக்கு ஆற்றியிருத்தல் கடன் என்ற தோழிக்குத் தன் குறிப்பு இன்றியும் இம் மாலையைக் கண்டபொழுதே என் மனம் மயங்கும் என்று தலைமகள் கூறியது. (1229)

1230

பொருள்மாலை யாளரை உள்ளி மருள்மாலை
மாயும்என் மாயா உயிர். 10

(இதுவும் அது.)

**பரிமேலழகர்:** மாயா என் உயிர் - காதலர் பிரிவைப் பொறுத்து இறந்துபடாதிருந்த என் உயிர், பொருள் மாலையாளரை உள்ளி மருள் மாலை மாயும் - இன்று பொருளியல்பே தமக்கு இயல்பாக உடையவரை நினைந்து இம் மயங்கும் மாலைக்கண்ணே இறந்துபடாநின்றது.

குறித்த பருவம் கழியவும் பொருள் முடிவு நோக்கி வாராமையின் சொல் வேறுபடாமையாகிய தம் இயல்பு ஒழிந்தவர் அப் பொருளியல்பே தம் இயல்பாயினர். காலம் இதுவாயிற்று; இனி நீ சொல்லுகின்றவாற்றால் பயன் இல்லை என்பதாம்.

உரை வேறுபாடு

**மணக்குடவர்:** பொருள் மாலையாளரை - பொருள் தேடுதலையே தமக்கு இயல்பாக உடையவரை. (1230)

---

1. பதி - ஊர்.

# 124. உறுப்பு நலன் அழிதல்

பரிமேலழகர் : அஃதாவது, தலைமகள்தன் கண்ணும் தோளும் நுதலும் முதலாய அவயவங்கள் தம் அழகு அழிதல். இஃது இரக்கம் மிக்குழி நிகழ்வது ஆகலின், பொழுது கண்டு இரங்கலின்பின் வைக்கப் பட்டது.

மணக்குடவர்: காதல் மிக்கு இரங்குவார் அக் காதலை அயலார் அறியாமல் அடக்கின காலத்து வெம்மையுற்ற கொடிபோல அணைத்து உறுப்பும் வாடுதலான், இது பொழுது கண்டு இரங்கலின்பின் கூறப் பட்டது.

### 1231

சிறுமை நமக்கொழியச் சேட்சென்றார் உள்ளி
நறுமலர் நாணின கண். 1

(ஆற்றாமை மிகுதியான் வேறுபட்ட தலைமகட்குத் தோழி சொல்லியது.)

பரிமேலழகர் : சிறுமை நமக்கு ஒழிய சேண் சென்றார் உள்ளி - இவ் வாற்றாமை நங்கண்ணே நிற்பத் தாம் சேணிடைச் சென்ற காதலரை நீ நினைந்து அழுதலால், கண் நறுமலர் நாணின - நின் கண்கள் ஒளி இழந்து முன் தமக்கு நாணிய நறுமலர்கட்கு இன்று தாம் நாணிவிட்டன.

நமக்கு என்பது வேற்றுமை மயக்கம். உள்ள என்பது உள்ளி எனத் திரிந்து நின்றது. உள்ளுதல் என்பது காரணப்பெயர் காரியத்திற்கு ஆய ஆகுபெயர். இவை கண்டார் அவரைக் கொடுமை கூறுவர், நீ ஆற்றல் வேண்டும் என்பது கருத்து.

#### உரை வேறுபாடு

மணக்குடவர்: பல கால் அழுதலால் நிறம் கெட்டது என்ற வாறாயிற்று.

பரிப்பெருமாள்: வரைந்து கோடற்குப் பொருள் தேடி வருகின் றேன் என்று பிரிந்த தலைமகனை நினைந்து ஆற்றாளாய்த் தலைமகள் தனது கண் பொலிவு அழிந்தது என்று கூறியது.

பரிதியார்: சிறுமை தீரத்தக்க காத தூரம் பொருள்மேற் பிரிந்து போன நாயகரை.[1] (1231)

### 1232

நயந்தவர் நல்காமை சொல்லுவ போலும்
பசந்து பனிவாரும் கண். 2

(இதுவும் அது.)

பரிமேலழகர் : பசந்து பனி வாரும் கண் - பசப்பு எய்தல்மேல் நீர் வார்கின்ற நின் கண்கள், நயந்தவர் நல்காமை சொல்லுவ போலும் - நம்மால் நயக்கப்பட்டவரது நல்காமையைப் பிறர்க்குச் சொல்லுவ போலாநின்றன; இனி நீ ஆற்றல் வேண்டும்.

---

1. 'சிறுமை தமக்கொழிய' என்பது இவர் பாடம் போலும்.

சொல்லுவ போறல், அதனை அவர் உணர்தற்கு அனுமானம் ஆதல். நயந்தவர்க்கு என்று பாடம் ஓதுவாரும் உளர்.

உரை வேறுபாடு

**காளிங்கர்:** தலைவி தோழியை நோக்கிக் கூறுவதாகக் கொள்வர். (1232)

1233

தணந்தமை சால அறிவிப்ப போலும்
மணந்தநாள் வீங்கிய தோள். 3

(இதுவும் அது.)

**பரிமேலழகர்:** மணந்த நாள் வீங்கிய தோள் - காதலர் மணந்த ஞான்று இன்ப மிகுதியால் பூரித்த நின் தோள்கள், தணந்தமை சால அறிவிப்ப போலும் - இன்று அவர் பிரிந்தமையை விளங்க உணர்த்துவது போல மெலியா நின்றன; இது தகாது.

அன்றும் அவ்வாறு பூரித்து இன்றும் இவ்வாறு மெலிந்தால் இரண்டும் கண்டவர் கடிதின் அறிந்து அவரைத் தகவு இன்மை கூறுவர் என்பதாம்.

உரை வேறுபாடு

**மணக்குடவர்:** பிரிவிடை ஆற்றுளாகிய தலைமகள் தனது தோள் வாட்டமுற்றது கண்ட தோழிக்குச் சொல்லியது.

**காளிங்கர்:** தோழியை நோக்கிச் சொல்லிய தென்பர்

ஒப்புமை

முற்றும்:

"மணப்பின் மாணலம் எய்தித்
தணப்பின் ஞெகிழ்ப தடமென் தோளே."
(குறுந். 299:.7-8.) (1233.)

1234

பணைநீங்கிப் பைந்தொடி சோரும் துணைநீங்கித்
தொல்கவின் வாடிய தோள். 4

(இதுவும் அது.)

**பரிமேலழகர்:** துணை நீங்கி தொல் கவின் வாடிய தோள் - அன்றும் தம் துணைவர் நீங்குதலால் அவரால் பெற்ற செயற்கை அழகேயன்றிப் பழைய இயற்கை அழகும் இழந்த இத் தோள்கள், பணை நீங்கி பைந்தொடி சோரும் - இன்று அதற்கு மேலே தம் பெருமை இழந்து வளை கழலாநின்றன; இவை இங்ஙனம் செயற்பால அல்ல.

பெருமை இழத்தல், மெலிதல். பைந்தொடி - பசிய பொன்னாற் செய்த தொடி. சோரும் என்னும் வளைத்தொழில் தோள்மேல் நின்றது. அன்றும் பிரிந்தார் என்று அவர் அன்பின்மை உணர்த்தி இன்றும் குறித்த பருவத்து வந்திலர் என்று அவர் பொய்ம்மை உணர்த்தாநின்றன; இனி அவற்றைக் கூறுகின்றார்மேற் குறை உண்டோ என்பதாம்.

உரை வேறுபாடு

**மணக்குடவர்:** பசுத்த வளை, மரகதத்தினாற் செய்த வளை.

**பரிதியார்:** பணை நீங்கி - பச்சை மூங்கில் போன்ற அழகும் இழந்து. (1234)

## 1235

கொடியார் கொடுமை உரைக்கும் தொடியொடு
தொல்கவின் வாடிய தோள். 5

(இதுவும் அது.)

**பரிமேலழகர் :** கொடியார் கொடுமை உரைக்கும் - கவவுக்கை நெகிழினும்[1] ஆற்றுதாட்கு இக்கால நீட்டத்து என்னும் என்று நினையாத கொடியாரது கொடுமையைத் தாமே சொல்லாநின்றன, தொடியொடு தொல் கவின் வாடிய தோள் - வளைகளும் கழன்று பழைய இயற்கை அழகும் இழந்த இத் தோள்கள்; இனி அதனை யாம் மறைக்குமாறு என்னை?

உரைக்கும் என்பது பரத்தும் என்னும் பொருண்மை தோன்ற நின்ற குறிப்புச் சொல். ஒடு,வேறு வினைக்கண் வந்தது. அவரொடு கலந்ததோள்களே. சொல்லுவனவானல் அயலார் சொல்லுதல் சொல்லவேண்டுமோ என்பதாம்

### உரை வேறுபாடு

**காளிங்கர் :** தோழியை நோக்கிக் கூறியதாகக் கொள்வர். தொடியொடு தொல்கவின் வாடிய தோள் - நிலை எய்தாது ஆடும் தொடியும், தொல்லை அழகின் பொலிவு அழிய வாடிய தோளும். *(1235)*

## 1236

தொடியொடு தோள்நெகிழ நோவல் அவரைக்
கொடியர் எனக்கூறல் நொந்து. 6

(தான் ஆற்றுதற்பொருட்டு இயற்பழித்த தோழிக்குத்
தலைமகள் சொல்லியது.)

**பரிமேலழகர் :** தொடியொடு தோள் நெகிழ - யான் ஆற்றவும் என் வயத்தவன்றித் தொடிகள் கழலுமாறு தோள்கள் மெலிய, அவரை கொடியர் என கூறல் நொந்து நோவல் - அவற்றைக் கண்டு நீ அவரைக் கொடியர் எனக் கூறுதலைப் பொறுது யான் என்னுள்ளே நோவாநின்றேன்.

ஒடு, மேல் வந்த பொருண்மைத்து. யான் ஆற்றேன் ஆகின்றது அவர் வாராததற்கு அன்று, நீ கூறுகின்றதற்கு என்பதாம்.

### உரை வேறுபாடு

**காளிங்கர் :** தோழீ, இங்ஙனம் தொடியுடனே தோளும் கூட நெகிழ அதற்கு யான் உடம்பட்டிருப்பது என் எனின், என்மாட்டு அன்பு உடையவரைக் கொடியர் என்று இவை பிறர்க்கு உரைத்தலை உள்ளுள்ளே பெரிதும் நொந்து.

### ஒப்புமை

தொடியொடு தோள் நெகிழ்தல் :

"நெடுமென் பணைத்தோள் சாஅய்த் தொடிநெகிழ்ந்து"
"தொடிநெகிழ்ந் தனவே தோள்சா யினவே"

(குறுந். *185 : 2, 239 : 1.*)

"ஒண்தொடி நெகிழச் சாஅய்
மென்தோள் பசப்பது எவன்கொல் அன்னாய்"

(ஐங்குறு. *28 : 3-4.*)

---

1. "காதலர்ப் புணர்ந்தவர் கவவுக்கை நெகிழாது" (கலி. 33 : 7); "கவவுக்கை ஞெகிழ்ந்தனனாய்." (சிலப். 7 : 52.)

"திருந்திழை நெகிழ்ந்து பெருந்தோள் சாஅய்."
(அகநா. 387 : 1.) (1236)

### 1237

பாடு பெறுதியோ நெஞ்சே கொடியார்க்கென்
வாடுதோள் பூசல் உரைத்து. 7

(அவ் வியற்பழிப்புப் பொருது தன் நெஞ்சிற்குச் சொல்லியது.)

**பரிமேலழகர் :** நெஞ்சே - நெஞ்சே, கொடியார்க்கு என் வாடு தோள் பூசல் உரைத்து - இவள் கொடியார் என்கின்றவர்க்கு நீ சென்று என் மெலிகின்ற தோளினுல் விளைகின்ற ஆரவாரத்தைச் சொல்லி, பாடு பெறுதியோ - ஒரு மேம்பாடு எய்த வல்லையோ? வல்லையாயின் அதனை ஒப்பது இல்லை.

கொடியார்க்கு என்பது கொடியர் அல்லர் என்பது தோன்ற நின்ற குறிப்புச் சொல். வாடுதோள் என்பதும் அவை தாமே வாடாநின்றன என்பது தோன்ற நின்றது. பூசல் : ஆகுபெயர். அஃது அவள் தோள் நோக்கி இயற்பழித்தல்மேலும், அதனுல் தனக்கு ஆற்ருமை மிகல்மேலும் நின்றது. நின் உரை கேட்டலும் அவர் வருவர்; வந்தால் இவையெல்லாம் நீங்கும்; நீங்க அஃது எனக்குக் காலத்தினுற் செய்த நன்றியாம்; ஆகலின், அதன் பயன் எல்லாம் எய்துதி என்னும் கருத்தால் 'பாடு பெறுதியோ' என்ருள்.

#### உரை வேறுபாடு

**மணக்குடவர் :** பூசல் - ஊரில் எழுந்த அலர். பாடு - அழகு. இது நீ அவர்பால் போகல்வேண்டும் என்ற நெஞ்சிற்குத் தலைமகள் சொல்லியது. (1237)

### 1238

முயங்கிய கைகளை ஊக்கப் பசந்தது
பைந்தொடிப் பேதை நுதல். 8

(வினைமுடித்து மீடலுற்ற தலைமகன் முன் நிகழ்ந்தது நினைந்து தன்னுள்ளே சொல்லியது.)

**பரிமேலழகர் :** முயங்கிய கைகளை ஊக்க - தன்னை இறுக முயங்கிய கைகளை இவட்கு நோம் என்று கருதி ஒரு ஞான்று யான் நெகிழ்த்தேனுக, பைந்தொடி பேதை நுதல் பசந்தது - அத்துணையும் பொருது பைந்தொடிகளை அணிந்த பேதையது நுதல் பசந்தது; அப் பெற்றித்தாய நுதல் இப் பிரிவிற்கு யாது செய்யுமோ?

இனிக் கடிதிற் செல்லவேண்டும் என்பது கருத்து.

#### உரை வேறுபாடு

**மணக்குடவர் :** முயங்கிய கைகளை ஊக்க - யான் பிரிவதாக நினைத்து அவள் முயங்கிய கைகளை நீக்கினேனுக.

**காளிங்கர் :** தோழி தன் நெஞ்சிற்குச் சொல்லுவாள்.

#### ஒப்புமை

**நுதல் பசத்தல் :**

"பைபயப் பசந்தன்று நுதலும்."
(அகநா. 95 : 1.) (1238)

### 1239

முயக்கிடைத் தண்வளி போழப் பசப்புற்ற
பேதை பெருமழைக் கண். 9

(இதுவும் அது.)

**பரிமேலழகர் :** முயக்கிடை தண் வளி போழ - அங்ஙனம் கைகளை ஊக்குதலான் அம் முயக்கிடையே சிறு காற்று நுழைந்ததாக, பேதை பெரு மழை கண் பசப்பு உற்ற - அத்துணை இடையீடும் பொறுது பேதையுடைய பெரிய மழைக்கண்கள் பசப்புற்றன; அத்தன்மையவான கண்கள் மலைகளும், காடும், நாடும் ஆய இவ்விடையீடுகளையெல்லாம் யாங்ஙனம் பொறுத்தன?

தண்மை ஈண்டு மென்மைமேல் நின்றது. போழ என்றது உடம்பு இரண்டும் ஒன்றுனது தோன்ற நின்றது. மழை - குளிர்ச்சி.

#### உரை வேறுபாடு

**பரிதியார் :** முயங்கிய விடத்துத் தென்றல் ஊரப் பசலையாச்சு, கண்ணும் மழை பொழிந்தது நாயகிக்கு.

**காளிங்கர் :** தலைவி தோழிக்குக் கூறியது.

#### ஒப்புமை

1. **வளி போழ்தல் :** குறள், *1108.*
2. **கண் பசப்புறல் :** குறள், *1240.*

"காமங் கொல்லிவள் கண்பசந் ததுவே"
"நெய்தல் உண்கண் பைதல் கூர"
"கண்ணுந் தோளுந் தண்ணறுங் கதுப்பும்
பழநலம் இழந்து பசலை பாய"
(நற். *35 : 12, 113 : 7, 219 : 1 - 2.*)

"பசலை யார்ந்தன குவளையங் கண்ணே" (குறுந். *13 : 5.*)

"பூப்போல் உண்கண் பொன்போர்த் தனவே"
"உண்கண் பசப்ப தெவன்கொல் அன்னாய்"
"ஏதி லாளர்க்குப் பசந்தவென் கண்ணே"
"கயலெனக் கருதிய உண்கண்
பயலைக் கொல்கா ஆகுதல் பெறினே"
"நயந்தோ ருண்கண் பயந்துபனி மல்க"
"பசப்பணிந் தனவான் மகிழ்நவென் கண்ணே"
"என்செயப் பசக்கும் தோழியென் கண்ணே"
"பல்லிதழ் உண்கண் பசத்தல்மற் றெவனோ"
"பயந்தன மாதோநீ நயந்தோள் கண்ணே"
"பனிமலர் நெடுங்கண் பசலை பாய"
"கொன்றைப் பூவிற் பசந்த உண்கண்"
(ஐங்குறு : *16, 21, 34, 36, 37, 45, 169, 170, 264, 477, 500.*)

"பல்லிதழ் மலருண்கண் பசப்ப"
"பொன்னெனப் பசந்தகண்"
"பைதல வாகிப் பசக்குவ மன்னோஎன்
நெய்தல் மலரன்ன கண்."
(கலித். *45 : 11, 77 : 12, 142 : 22 - 3.*) (*1239*)

1240

கண்ணின் பசப்போ பருவரல் எய்தின்றே
ஒண்ணுதல் செய்தது கண்டு. 10

(இதுவும் அது.)

**பரிமேலழகர்:** கண்ணின் பசப்போ பருவரல் எய்தின்று - தண்வளி போழ வந்த கண்ணின் பசப்புத் துன்பமுற்றது, ஒள் நுதல் செய்தது கண்டு- தனக்கு அயலாய ஒண்ணுதல் விளைத்த பசப்பைக் கண்டு.

அது கைகளை ஊக்க அவ்வளவில் பசந்தது. யான் கைகளையும் ஊக்கி மெய்களும் நீங்கிச் சிறு காற்று ஊடறுக்குந்துணையும் பசந்திலன் எனத் தன் வன்மையும் அதன் மென்மையும் கருதி வெள்கிற்று என்பதாம். ஆகவே, அவள் உறுப்புக்கள் ஒன்றின் ஒன்று முற்பட்டு நலன் அழியும், யாம் கடிதிற் சேறும் என்பது கருத்தாயிற்று.

உரை வேறுபாடு

**பரிப்பெருமாள்:** யான் செல்லும் அளவும் ஆற்றுங்கொல்லோ என்று வினைமுற்றி மீண்ட தலைமகன் தேர்ப்பாகன் கேட்பச் சொல்லிய வாறு. *(1240)*

---

# 125. நெஞ்சொடு கிளத்தல்

**பரிமேலழகர்:** அஃதாவது, ஆற்றாமை மீதூரத் தனக்கோர் பற்றுக்கோடு காணாத தலைமகள் தன் நெஞ்சொடு செய்திறன் அறியாது சொல்லுதல், இஃது உறுப்புக்கள் தம் நலன் அழிந்தவழி நிகழ்வது ஆக லின், உறுப்பு நலன் அழிதலின்பின் வைக்கப்பட்டது.

**மணக்குடவர்:** காதல் அடக்கல் ஆற்றுதார் பிறர்க்குச் சொல்லு தற்கு நாணித் தம் நெஞ்சிற்குச் சொல்லி ஆற்றுதலான், இது அதன்பின் கூறப்பட்டது.

1241

நினைத்தொன்று சொல்லாயோ நெஞ்சே எனைத்தொன்றும்
எவ்வநோய் தீர்க்கும் மருந்து. 1

(தன் ஆற்றாமை தீரும் திறன் நாடியது.)

**பரிமேலழகர்:** நெஞ்சே - நெஞ்சே, எவ்வநோய் தீர்க்கும் மருந்து ஒன்று - இவ் வெவ்வநோயினைத் தீர்க்கும் மருந்தாவது ஒன்றனை, எனைத்து ஒன்றும் நினைத்து சொல்லாய் - (யான் அறியும் ஆற்றல் இலன்) எத்தன் மையது யாதொன்றாயினும் நீ அறிந்து எனக்குச் சொல்.

எவ்வம் - ஒன்றானும் தீராமை. உயிரினும் சிறந்த நாணினை[1] விட்டுச் செய்வது யாதொன்றாயினும் என்பாள், எனைத்தொன்றும் என்றாள்.

உரை வேறுபாடு

**மணக்குடவர்:** இஃது ஆற்றுதல் அரிது என்று கூறியது. இவை யெல்லாம் தனித் தனி சில கூற்று என்று கொள்ளப்படும். *(1241)*

---

1. தொல். களவு. 23.

### 1242

காதல் அவர்இலர் ஆகநீ நோவது
பேதைமை வாழிஎன் நெஞ்சு. 2

(தலைமகனைக் காண்டற்கண் வேட்கை மிகுதியால் சொல்லியது.)

பரிமேலழகர்: என் நெஞ்சு வாழி - என் நெஞ்சே வாழ்வாயாக; அவர் காதல் இலர்ஆக நீ நோவது - அவர் நங்கண் காதல் இலராகவும் நீ அவர் வரவு நோக்கி வருந்துதற்கு ஏது, பேதைமை - நின் பேதைமையே; பிறிது இல்லை.

நம்மை நினையாமையின் நங்கண் காதல் இலர் என்பது அறியலாம். அஃது அறியாமைமேலும் அவர்பால் செல்லக் கருதாது அவர் வரவு பார்த்து வருந்தாநின்றாய்; இது நீ செய்துகொள்கின்றது என்னும் கருத்தால், பேதைமை என்றாள். வாழி: இகழ்ச்சிக்குறிப்பு. யாம் அவர்பால் சேறலே அறிவாவது என்பதாம்.

#### உரை வேறுபாடு

மணக்குடவர்: நீ நோவது - நீ கூட்டத்தைக் கருதி வருந்துகின்றது. இஃது அன்பிலார்மாட்டு வருந்தினாலும் பயன் இல்லை என்றது.

பரிதியார்: ஆசை அவரிடத்திலே இல்லாதபோது நாயகரை நோவது மிகவும் பேதைமை.

காளிங்கர்: வாழி என்பது அசைச்சொல். (1242)

### 1243

இருந்துள்ளி என்பரிதல் நெஞ்சே பரிந்துள்ளல்
பைதல்நோய் செய்தார்கண் இல். 3

(இதுவும் அது.)

பரிமேலழகர்: நெஞ்சே இருந்து உள்ளி பரிதல் என் - நெஞ்சே, அவர் பால் செல்வதும் செய்யாது ஈண்டு இறந்துபடுவதும் செய்யாது இருந்து அவர் வரவு நினைந்து நீ வருந்துகின்றது என்னை? பைதல் நோய் செய்தார்கண் பரிந்து உள்ளல் இல் - இப் பையுள் நோய் செய்தார்மாட்டு நமக்கு இரங்கி வரக் கருதுதல் உண்டாகாது.

நம்மாட்டு அருளுடையர் அன்மையின் தாமாக வாரார், நாம் சேறலே இனித் தகுவது என்பதாம்.

#### உரை வேறுபாடு

மணக்குடவர்: பைதல் நோய் - சிறுமை செய்யும் நோயை.

பரிதியார்: பரிதி - பரிகிறாய்[1]. பைதல் நோய் - பசலை.

காளிங்கர்: என்பு அரிதி - என் என்பினை ஈர்தி என்றும் ஆம்.[1]

(1243)

### 1244

கண்ணும் கொளச்சேறி நெஞ்சே இவைஎன்னைத்
தின்னும் அவர்க்காணல் உற்று. 4

1. 'என்பரிதி' என்பது இவர்கள் பாடம்.

(இதுவும் அது.)

**பரிமேலழகர்:** நெஞ்சே கண்ணும் கொள சேறி - நெஞ்சே, நீ அவர்பால் சேறலுற்ருயாயின் இக் கண்களையும் உடன்கொண்டு செல்வாயாக; இவை அவர் காணல் உற்று என்னை தின்னும் - அன்றி நீயே சேறியாயின், இவைதாம் காட்சி விதுப்பினல் அவரைக் காண்டல் வேண்டி நீ காட்டு என்று என்னைத் தின்பன போன்று நலியா நிற்கும்.

கொண்டு என்பது கொள எனத் திரிந்து நின்றது. தின்னும் என்பது இலக்கணைக்குறிப்பு. அந் நலிவு தீர்க்க வேண்டும் என்பதாம்; என்றது தான் சேறல் குறித்து.

உரை வேறுபாடு

**மணக்குடவர்:** கொள - பார்க்க.

**பரிப்பெருமாள்:** இது காண்டல் வேட்கையால் கூறியது.

**பரிதியார்:** என்னைத் தின்னும் - என்னை நித்திரை கொள்ள விடுகின்றதில்லை. *(1244)*

**1245**

**செற்ருர் எனக்கை விடல்உண்டோ நெஞ்சேயாம்**
**உற்ருல் உருஅ தவர்.** 5

(இதுவும் அது.)

**பரிமேலழகர்:** நெஞ்சே - நெஞ்சே, யாம் உற்ருல் உருஅதவர் - யாம் தம்மை உறத் தாம் உருத நம் காதலரை, செற்ருர்என கைவிடல் உண்டோ- வெறுத்தார் என்று கருதிப் புலந்து கைவிட்டிருக்கும் வலி நமக்கு உண்டோ? இல்லை.

உறுதல் - அன்புபடுதல். அவ் வலி இன்மையின் அவர்பால் செல்வதே நமக்குத் தகுவது என்பதாம்.

உரை வேறுபாடு

**மணக்குடவர்:** உறுதல் - விரைந்துறுதல். தலைமகள் தலைமகன் கொடுமையை உட்கொண்ட நெஞ்சிற்குச் சொல்லியது.

**காளிங்கர்:** உற்ருல் உருஅதவர் - நாம் இங்ஙனம் பிரிவுத்துயர் உற்ற விடத்துத் தாமும் அஃது உருதவர். எனவே, கணவர் பிரிவின் கற்புடையாட்டியர் கடுந்துயர் உறினும் கருத்து ஒழியார் என்பது பொருள். *(1245)*

**1246**

**கலந்துணர்த்தும் காதலர்க் கண்டால் புலந்துணராய்**
**பொய்க்காய்வு காய்திஎன் நெஞ்சு.** 6

(தலைமகன் கொடுமை நினைந்து செலவு உடன்
படாத நெஞ்சினைக் கழறியது.)

**பரிமேலழகர்:** என் நெஞ்சு - என் நெஞ்சே, கலந்து உணர்த்தும் காதலர் கண்டால் புலந்து உணராய் - யான் தம்மொடு புலந்தால் அப் புலவியைக் கலவிதன்னனே நீக்கவல்ல காதலரைக் கண்டால் பொய்யே யாயினும் ஒருகால் புலந்து பின் அதனை நீங்கமாட்டாய்; பொய்காய்வு காய்தி- அதுவும் மாட்டாத நீ இப்பொழுது அவர் கொடியர் எனப் பொய்க்காய்வு காயாநின்ருய்; இனி இதனை ஒழிந்து அவர்பால் செல்லத் துணிவாயாக.

கலத்தலான் என்னும் பொருட்டாய கலக்க என்பது திரிந்து நின்றது. அதனன் உணர்த்தலாவது கலவி இன்பத்தைக் காட்டி அதனன் மயக்கிப் புலவிக்குறிப்பினை ஒழித்தல். பொய்க்காய்வு-நிலை இல் வெறுப்பு. கண்டால் மாட்டாத நீ காணுதவழி வெறுக்கின்றதனுல் பயன் இல்லை என்பதாம். (1246)

## 1247

காமம் விடுஒன்ரே நாண்விடு நன்னெஞ்சே
யானே பொறேன்இவ் விரண்டு. 7

(நாண் தடுத்தலின் அச் செலவு ஒழிவாள் சொல்லியது.)

**பரிமேலழகர்:** நல் நெஞ்சே - நல்ல நெஞ்சே, ஒன்று காமம் விடு - ஒன்றின் நாண் விடமாட்டாய் ஆயின் காமவேட்கையை விடு; (ஒன்று) நாண் விடு - ஒன்றின் அது விடமாட்டாயாயின் நாணினை விடு; இவ்விரண்டு யானே பொறேன் - அன்றியே இரண்டும் விடாமை நின் கருத்தாயின் ஒன்றற்கு ஒன்று மறுதலையாய இவ்விரண்டனையும் உடன் தாங்கும் மதுகை யான் இலன்.

யானே என்னும் பிரிநிலை நீ பொறுப்பினும் என்பது பட நின்றது. நன்னெஞ்சே என்றது, இரண்டையும் விடாது பெண்மையை நிலைபெறுத்தலின், நல்லை என்னும் குறிப்பிற்று. அது நன்றே எனினும் என்னுயிர் உண்டாதல் சாலாமையின், அதற்கு ஆகின்றிலேன் என்பதாம். முற்றும்மை[1] விகாரத்தால் தொக்கது.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** இது பிரிவிடை ஆற்ருளாய்த் தலைமகன் இருந்துழிச் செல்லக் கருதிய தலைமகள் நாணம் தடுத்தமை கண்டு கூறியது.

**காளிங்கர்:** நல்வழி அறியும் நெஞ்சமே.

### ஒப்புமை

1. காமமும் நாணும்:

குறள், 1163, ஒப்புமை பார்க்க.

2. முற்றும்:

"காமம் எய்க்கும், எள்ள ற விடினே உள்ளது நாணே"

"அளிதோ தானே நாணே நம்மொடு
நனிநீ டுழந்தன்று மன்னே இனியே
வான்பூங் கரும்பின் ஓங்குமணல் சிறுசிறை
தீம்புனல் நெரிதர வீந்துக் கா அங்குத்
தாங்கும் அளவைத் தாங்கிக்
காமம் நெரிதரக் கைநில் லாதே."

(குறுந். 112 : 1-2, 149.) (1247)

## 1248

பரிந்தவர் நல்கார்என் றேங்கிப் பிரிந்தவர்
பின்செல்வாய் பேதைஎன் நெஞ்சு. 8

(இதுவும் அது.)

**பரிமேலழகர்:** என் நெஞ்சு - என் நெஞ்சே, அவர் பரிந்து நல்கார் என்று - அவர் இவ்வாற்ருமையை அறியாமையின் நொந்து வந்து தலையளி செய்யார் ஆயினர் என்று கருதி, பிரிந்தவர்பின் ஏங்கி செல்வாய் பேதை -

1. இரண்டும் என்னும் முற்றும்மை.

அஃது அறிவித்தற்பொருட்டு நம்மைப் பிரிந்து போயவர்பின் ஏங்கிச் செலல் உற்ற நீ யாதும் அறியாய்.

ஆற்றாமை கண்டுவைத்தும் நல்காது போயினாரைக் காணாதவழிச் சென்று அறிவித்த துணையானே நல்க வருவர் என்று கருதினமையின் பேதை என்றாள்.

### உரை வேறுபாடு

மணக்குடவர்: இது தலைமகள் தலைமகன் இருந்த தேயத்தை நினைத்துக் கவன்ற நெஞ்சிற்குச் சொல்லியது.

### ஒப்புமை

நெஞ்சு தலைவன்பின் செல்லல்:

"ஆந்தை குறுங்கலி கொள்ளநம் மாடவர்
காய்ந்து கதிர்தெறூஉங் கானங் கடந்தார்பின்
ஏந்தல் இளமுலை ஈரெயிற்றாய் என்னெஞ்சு
நீந்தும் நெடுவிடைச் சென்று." (கைந்நிலை, 21.)

"ஒருசிறை இருந்து போன உள்ளத்தோ டூடு வாரும்."

(கம்ப. ஊர்தேடு. 180.) (1248)

## 1249

உள்ளத்தார் காத லவராக உள்ளிநீ
யாருழைச் சேறிஎன் நெஞ்சு. 9

(இதுவும் அது.)

பரிமேலழகர்: என் நெஞ்சு - என் நெஞ்சே, காதலவர் உள்ளத்தார் ஆக - காதலர் நின் அகத்தாராக, நீ உள்ளி யாருழை சேறி - முன்பெல்லாம் கண்டுவைத்து இப்பொழுது நீ புறத்துத் தேடிச் செல்கின்றது யாரிடத்து?

உள்ளம் என்புழி அம் பகுதிப்பொருள் விகுதி.[1] நின் அகத்து இருக்கின்றவரை அஃது அறியாது புறத்துத் தேடிச் சேறல் நகையுடைத்து, அதனை ஒழி என்பதாம்.

### உரை வேறுபாடு

காளிங்கர்: உள்ளத்தார் - என் அகத்தவராய் இருப்பர். (1249)

## 1250

துன்னாத் துறந்தாரை நெஞ்சத் துடையேமா
இன்னும் இழத்தும் கவின். 10

(அவரை மறந்து ஆற்றல் வேண்டும்
என்பது படச் சொல்லியது.)

பரிமேலழகர்: துன்னா துறந்தாரை நெஞ்சத்து உடையேமா - நம்மைக் கூடாவண்ணம் துறந்து போயினாரை நாம் நம்மகத்து உடையேமாக, இன்னும் கவின் இழத்தும் - முன் இழந்த புறக்கவினே அன்றி நின்ற அகக் கவினும் இழப்பேம்.

"குன்றின், நெஞ்சுபக எறிந்த அஞ்சுடர் நெடுவேல்"[2] என்புழிப்போல நெஞ்சு என்பது ஈண்டும் அகப்பொருட்டாய் நின்றது. அவர் நம்மைத்

---

1. நெஞ்சை நோக்கிக் கூறுதலின் உள்ளம் என்பதற்கு இவ்வாறு பொருளுரைத்தார்.

2. குறுந். கடவுள் வாழ்த்து, 3 - 4.

துன்னுமல் துறந்தாராகவும், நாம் அவரை மறத்தல் மாட்டேமாகவும், போன மெய்க்கவினேயன்றி நின்ற நிறையும் இழப்பேம் என்பதாம்.

உரை வேறுபாடு

**மணக்குடவர்:** ஈண்டு நெஞ்சு என்றது மனத்துடைய தானத்தை. இது நினைக்கின்றதனுல் பயன் இல்லை என்று கூறியது.

**காளிங்கர்:** எனவே, இறந்துபாடும் இயையும் என்பது பொருள். *(1250)*

---

# 126. நிறை அழிதல்

**பரிமேலழகர்:** அஃதாவது, தலைமகள் மனத்து அடக்கற்பாலன வற்றை வேட்கை மிகுதியான் அடக்கமாட்டாது வாய்விடுதல். "நிறையெனப் படுவது மறைபிற ரறியாமை"[1] என்ருர் பிறரும். அஃது அழிதற்காரணம் நெஞ்சொடு கிளந்தமையின், இது நெஞ்சொடு கிளத்தலின்பின் வைக்கப் பட்டது.

**மணக்குடவர்:** நெஞ்சின் மிக்கது புலப்படும் ஆதலான், அதன்பின் இது கூறப்பட்டது.

**1251**

**காமக் கணிச்சி உடைக்கும் நிறைஎன்னும்**
**நாணுத்தாழ் வீழ்த்த கதவு.** 1

(நாணும் நிறையும் அழியாமை நீ ஆற்றல் வேண்டும் என்ற தோழிக்குத் தலைமகள் சொல்லியது.)

**பரிமேலழகர்:** நாணு தாழ் வீழ்த்த நிறை என்னும் கதவு – நாணுகிய தாழினைக் கோத்த நிறை என்னும் கதவினை, காமக் கணிச்சி உடைக்கும் - காமவேட்கையாகிய கணிச்சி முறியாநின்றது; இனி அவை நிற்றலும் இல்லை; யான் ஆற்றலும் இல்லை.

கணிச்சி-குந்தாலி. நாண் உள்ள துணையும் நிறை அழியாது ஆகலின் அதனைத் தாழாக்கியும், அகத்துக் கிடந்தன பிறர் கொள்ளாமல் காத்தலின் நிறையைக் கதவாக்கியும், வலியவாய்த் தாமாக நீங்காத அவ்விரண்டனையும் ஒருங்கு நீக்கலின் தன் காமவேட்கையைக் கணிச்சியாக்கியும் கூறினுள்.

உரை வேறுபாடு

**மணக்குடவர்:** கணிச்சி - மழு.

இஃது அறிவும் நாணமும் உடையார் இவ்வாறு செய்யார் என்ற தோழிக்குத் தலைமகள் கூறியது.

**பரிதியார்:** பயிர்ப்பாகிய வீட்டில், அச்சம் என்னும் நிலையில், மடம் என்னும் கதவில் இட்ட, நாணம் என்னும் தாழை வெட்டும் காம மாகிய மழு.

**காளிங்கர்:** கணிச்சி – கோடாலி. நிறை – அறிவு.

1. கலி. 133 ; 12.

**ஒப்புமை**

முற்றும்:

"முலையும் மார்பும் முயங்கணி மயங்க
விருப்பொன்று பட்டவர் உளம்நிறை உடைத்தென"
"காமக் கணிச்சியால் கையறவு வட்டித்து"
(பரி. 6; 20-21, 10 : 33.)

"கட்டழு கமைந்த கண்ணுள் நிறையெனும் சிறையைக் கைபோய்
இட்டநாண் வேலி யுந்திக் கடலென வெழுந்த வேட்கை
விட்டெரி கொளுவ நின்றாள் எரியுறு மெழுகில் நின்றாள்"
"யாவனே யானு மாக அருநிறைக் கதவம் நீக்கிக்
காவலென் னெஞ்ச மென்னும் கன்னிமா டம்பு குந்து
நோவவென் உள்ளம் யாத்தாய்" (சீவக. 710, 714.)

"பிறையெனும் நுதலவள் பெண்மை யென்படும்
நறைகமழ் அலங்கலான் நயன கோசரம்
மறைதலும் மனமெனும் மத்த யானையின்
நிறையெனும் அங்குசம் நிமிர்ந்து போயதே."
"பிறந்துடை நலநிறை பிணித்த வெந்திரம்
கறங்குபு திரியுமென் கன்னி மாமதில்
எறிந்தவக் குமரனை."
(கம்ப. மிதிலைக்காட்சி. 40, 59.) (1251)

## 1252

காமம் எனஒன்றோ கண்இன்றென் நெஞ்சத்தை
யாமத்தும் ஆளும் தொழில். 2

(நெஞ்சின்கண் தோன்றிய காமம் நெஞ்சால் அடக்கப்படும் என்றாட்குச் சொல்லியது.)

*பரிமேலழகர்:* யாமத்தும் என் நெஞ்சத்தை தொழில் ஆளும் - எல்லாரும் தொழில் ஒழியும் இடையாமத்தும் என் நெஞ்சத்தை ஒறுத்துத் தொழில் கொள்ளாநின்றது; காமம் என ஒன்று கண் இன்று – ஆகலான் காமம் என்று சொல்லப்பட்ட ஒன்று கண்ணோட்டம் இன்றாய் இருந்தது.

ஓ என்பது இரக்கக்குறிப்பு. தொழிலின்கண்ணே ஆடல், தலைமகன் பாற் செல விடுத்தல். தாயைப் பணிகோடல்[1] உலகியல் அன்மையின் காமம் என ஒன்று என்றும், அது தன்னைக் கொள்கின்றது அளவறியாது கோடலின் கண்ணின்று என்றும் கூறினாள். அடக்கப்படாமை கூறியவாறு.

**உரை வேறுபாடு**

*மணக்குடவர்:* இது நெஞ்சின் மிக்கது வாய்சோர்ந்து ஆற்றாமையால் தலைமகள் தோழிக்குக் கூறியது.

*காளிங்கர்:* தன் தொழிலாவது அரற்றலும் உலற்றலும் அலமரலும் பிறவும்.

*கவிராஜ பண்டிதர்:* கண் - தயை. (1252)

## 1253

மறைப்பேன்மன் காமத்தை யானோ குறிப்பின்றித்
தும்மல்போல் தோன்றி விடும். 3

---

1. (பி - ம்.) தாதையைத் தொழில் கோடல்.

(மகளிர் காமம் மறைக்கப்படும் என்றாட்குச் சொல்லியது.)

பரிமேலழகர்: காமத்தை யான் மறைப்பேன்[1] - இக் காமத்தை யான் என்னுள்ளே மறைக்கக் கருதுவேன்; குறிப்பு இன்றி தும்மல் போல் தோன்றிவிடும் - அதனால் என்? இஃது என் கருத்தின் வாராது தும்மல்போல வெளிப்பட்டே நின்றது.

மன் ஒழியிசைக்கண் வந்தது. ஒகாரம் இரங்கற்கண் வந்தது. தும்மல் அடங்காதாற்போல அடங்குகின்றது இல்லை என்பதாம். (1253)

## 1254

நிறைஉடையேன் என்பேன்மன் யானோஎன் காமம்
மறைஇறந்து மன்று படும். 4

(இதுவும் அது.)

பரிமேலழகர்: யான் நிறை உடையேன் என்பேன் - இன்றினாங் கெல்லாம் யான் என்னை நிறை உடையேன் என்று கருதியிருந்தேன்; என் காமம் மறை இறந்து மன்று படும் - அதனால் என்? இன்று என் காமம் மறைத் தலைக் கடந்து மன்றின்கண் வெளிப்படாநின்றது.

மன்னும், ஓவும் மேலவற்றின்கண் வந்தன. மன்றுபடுதல் - பலரும் அறிதல். இனி என்வரைத்து அன்று என்பதாம்.

### உரை வேறுபாடு

பரிதியார்: மறை இறந்து - அடக்கம் அற்று.

### ஒப்புமை

காமம் மறை இறந்து மன்று படுதல்:
குறள், 1138, ஒப்புமை பார்க்க. (1254)

## 1255

செற்றார்பின் செல்லாப் பெருந்தகைமை காமநோய்
உற்றார் அறிவதொன் றன்று. 5

(நம்மை மறந்தாரை நாமும் மறக்கற்பாலம் என்றாட்குச் சொல்லியது.)

பரிமேலழகர்: செற்றார்பின் செல்லா பெருந்தகைமை - தம்மை அகன்று சென்றார்பின் செல்லாது தாமும் அகன்று நிற்கும் நிறையுடைமை, காமநோய் உற்றார் அறிவது ஒன்று அன்று - காம நோயினை உறுதார் அறிவது ஒன்று அன்றி உற்றார் அறிவது ஒன்று அன்று.

இன்பத்தோடு கழியும் காலத்தைத் துன்பத்தோடு கழியுமாறு செய்த லின் செற்றார் என்றாள். பின்சேறல் - மனத்தால் இடைவிடாது நினைத்தல். பெருந்தகைமை: ஈண்டு ஆகுபெயர். காமநோய் உறுதார் மானம் உடையார். 'நன்று என உணரார் மாட்டும் சென்றே நிற்கும்' [2], யான் அறிவது ஒன்று அன்று என்பதாம்.

### உரை வேறுபாடு

மணக்குடவர்: செற்றார் - தம்மை இகழ்ந்து போனவர். இது தம்மை இகழ்ந்து போனவர்பின் சென்று இரங்குதல் பெரியார்க்குத் தகாது என்ற தோழிக்குத் தலைமகள் கூறியது.

---

1. (பி—ம்.) நிறுப்பேன்மன்.

2. "காமம் யாவதும், நன்றென உணரார் மாட்டும், சென்றே நிற்கும் பெரும்பே தைமைத்தே" (குறுந். 78 : 4-6.)

**பரிதியார் :** செற்ருர் - மாற்ருர், பெருந்தகைமை - மேம்பாடு, (1255)

1256

செற்றவர் பின்சேறல் வேண்டி அளித்தரோ
எற்றென்னை உற்ற துயர். 6

(இதுவும் அது.)

**பரிமேலழகர் :** செற்றவர்பின் சேறல் வேண்டி - என்னை அகன்று சென்ருர்பின்னே யான் சேறலை வேண்டுதலான், என்னை உற்ற துயர் எற்று அளித்து - என்னை உற்ற துயர் எத்தன்மையது? சால நன்று!

செற்றவர் என்றது ஈண்டும் அப்பொருட்டு. வேண்ட என்பது வேண்டி எனத் திரிந்துநின்றது. அளித்து என்பது இகழ்ச்சிக் குறிப்பு. இக் காம நோய் யான் சொல்லவும் கேட்கவும் ஆவது ஒன்று அன்று, சாலக் கொடிது என்பதாம்.

உரை வேறுபாடு

**பரிதியார் :** சத்துருக்களை யான் பின்செல்லவேண்டியும், என் பலத்தையும் அறிவையும் கெடுக்க வேண்டியும் காமத்துயர் உண்டாயிற்று.

**காளிங்கர் :** அளித்து - தணிக்கத்தக்கது. (1256)

1257

நாண்என ஒன்ருே அறியலம் காமத்தால்
பேணியார் பெட்ப செயின். 7

(பரத்தையிற் பிரிந்துவந்த தலைமகனேடு நிறை அழிவால் கூடிய தலைமகள் நீ புலவாமைக்குக் காரணம் யாது என்ற தோழிக்குச் சொல்லியது.)

**பரிமேலழகர் :** பேணியார் காமத்தால் பெட்ப செயின் - நம்மால் விரும்பப்பட்டவர் வந்து காமத்தால் நாம் விரும்பியவற்றைச் செய்யுமளவின், நாண் என ஒன்ருே அறியலம் - நாண் என்று ஒன்றையும் அறிய மாட்டேமாய் இருந்தோம்.

பேணியார் எனச் செயப்படுபொருள் வினைமுதல் போலக் கூறப்பட்டது. விரும்பியன, வேட்கை மிகவினுல் கருதியிருந்த கலவிகள். நாண்- பரத்தையர் தோய்ந்த மார்பைத் தோய்தற்கு நாணுதல். ஒன்று என்பது ஈண்டுச் சிறிதென்னும் பொருட்டு. இழிவுசிறப்பும்மை விகாரத்தால் தொக்கது. நிறை அழிவான் அறியாது கூடிய தன் குற்றம் நோக்கி, அவனையும் உளப்படுத்தாள்.

உரை வேறுபாடு

**பரிதியார் :** நாணம் உடைமை உண்டாகில் காமம் வெளிப்படாது. ஆகவே காமம் உடையார்க்கு நாணம் இல்லை. (1257)

1258

பன்மாயக் கள்வன் பணிமொழி அன்ருேநம்
பெண்மை உடைக்கும் படை. 8

(இதுவும் அது.)

**பரிமேலழகர் :** நம் பெண்மை உடைக்கும் படை - நம் நிறையாகிய அரணை அழிக்கும் தானை, பல் மாயக் கள்வன் பணிமொழி அன்ருே - பல

பொய்களை வல்ல கள்வனுடைய தாழ்ந்த சொற்கள் அன்றே? ஆனபின் அது நிற்குமாறு என்னை?

பெண்மை, ஈண்டுத் தலைமைபற்றி நிறைமேல் நின்றது. வந்தால் புலக்கக் கடவேம் என்றும், புலந்தால் அவன் சொற்களானும் செயல்களானும் நீங்கேம் என்றும் இவை முதலாக எண்ணிக்கொண்டிருந்தன யாவும் காணாது, கலவிக்கண் தன்னினும் முற்படும் வகை வந்து தோன்றினன் என்பாள், பன்மாயக் கள்வன் என்றாள். பணிமொழி-நம்மினும் தான் அன்பு மிகுதி உடையனாகச் சொல்லும் சொற்கள். அவன் அத்தன்மையனாக, சொற்கள் அவையாக, நம் நிறை அழியாதொழியுமோ என்பதாம்.

### உரை வேறுபாடு

**மணக்குடவர் :** இது பெண்மை அல்ல என்ற தோழிக்கு அவன் என்னோடு கலந்த நாளில் சொன்ன சொற்கள்காண் நம் பெண்மையைக் கெடுக்கின்றன; அல்லது கெடாது என்று தலைமகள் கூறியது.

**பரிதியார் :** பணி மொழி - மெத்தென்ற வார்த்தை.

### ஒப்புமை

**தலைவனைக் கள்வன் என்றல் ;**

"கள்வர் போலக் கொடியன் மாதோ" (நற். 28 : 4.)
"யாரும் இல்லைத் தானே கள்வன்"
"கள்வனும் கடவனும் புணைவனும் தானே"
(குறுந். 25 : 1, 318 : 8.)
"இவன்எனது, நெஞ்ச நிறையழித்த கள்வன்" (முத்தொள். 102.)
"என் உள்ளங் கவர் கள்வன்" (சம்பந்தர், சீகாழி, 1.)
"கண்வழி நுழையுமோர் கள்வ னேகொலாம்."
(கம்ப. மிதிலைக்காட்சி. 55.) (1258)

## 1259

புலப்பல் எனச்சென்றேன் புல்லினேன் நெஞ்சம்
கலத்தல் உறுவது கண்டு. 9

(இதுவும் அது.)

**பரிமேலழகர் :** புலப்பல் என சென்றேன் - அவர் வந்தபொழுது புலக்கக்கடவேன் என்று கருதி முன் நில்லாது பிறிதோர் இடத்துப் போயினேன்; நெஞ்சம் கலத்தல்[1] உறுவது கண்டு புல்லினேன் - போயும், என் நெஞ்சம் நிறையில் நில்லாது அறைபோய் அவரோடு கலத்தல் தொடங்குதலை அறிந்து, இனி அது வாயாது என்று புல்லினேன்.

வாயாமை, புலத்தற் கருவியாய நெஞ்சு தானே கலத்தற் கருவியாய் நிற்றலின் அது முடியாமை.

### உரை வேறுபாடு

**மணக்குடவர் :** இது ஊடுதல் அருமை என்ற தோழிக்கு, முன் ஒருகால் அவனைப் பிரிந்து கூடிய என் மனம் செய்தது இது என்று தலைமகள் கூறியது.

### ஒப்புமை

முற்றும் :

"புலப்பென்யான் என்பேன்மன் அந்நிலையே அவர்க்காணிற்
கலப்பென்." (கலித். 67 : 8-9.) (1259)

1. (பி - ம்.) கலக்கல்.

1260

நிணம்தீயில் இட்டன்ன நெஞ்சினார்க் குண்டோ
புணர்ந்தூடி நிற்பேம் எனல். 10

(இதுவும் அது.)

**பரிமேலழகர் :** நிணம் தீயில் இட்டன்ன நெஞ்சினார்க்கு - நிணத்தைத் தீயின்கண்ணே இட்டால் அஃது உருகுமாறு போலத் தம் காதலரைக் கண்டால் நிறை அழிந்து உருகும் நெஞ்சினை உடைய மகளிர்க்கு, புணர்ந்து ஊடி நிற்பேம் எனல் உண்டோ - அவர் புணர யாம் ஊடிப் பின்பு உணராது அந் நிலையே நிற்கக் கடவேம் என்று கருதுதல் உளதாகுமோ? ஆகாது.

புணர்தல், ஈண்டு மிக நணுகுதல்; எதிர்ப்படலும் ஆம். புணர என்பது புணர்ந்து எனத் திரிந்து நின்றது. யான் அத் தன்மையேன் ஆகலின் எனக்கு அஃது இல்லையாயிற்று என்பதாம்.

உரை வேறுபாடு

**பரிப்பெருமாள் :** இது நிறை அழிந்து கூடிய தலைமகள் ஆற்றுதற் பொருட்டு நம் காதலர் வந்தால் ஊடுவையோ என்று நகைக் குறிப்பினால் கூறிய தோழிக்கு, ஊடுதல் அரிது என்று தலைமகள் கூறியது. *(1260)*

# 127. அவர்வயின் விதும்பல்

**பரிமேலழகர்:** அஃதாவது, சேயிடைப் பிரிவின்கண் தலைமகனும் தலைமகளும் வேட்கை மிகவினான் ஒருவரை ஒருவர் காண்டற்கு விரைதல். தலைமகன் பிரிவும் தலைமகள் ஆற்றாமையும் அதிகாரப்பட்டு வருகின்றமையின், இருவரையும் சுட்டிப் பொதுவாகிய பன்மைப்பாலால் கூறினார். பிறரெல்லாம் இதனைத் தலைமகனை நினைந்து தலைமகள் விதுப்புறல் என்றார். சுட்டுப் பெயர் சொல்லுவான் குறிப்பொடு கூடிய பொருள் உணர்த்துவதல்லது தான் ஒன்றற்குப் பெயராகாமையானும், கவி கூற்றாய அதிகாரத்துத்[1] தலைமகன் உயர்த்தற்பன்மையால் கூறப்படாமையானும் அஃது உரையன்மை அறிக. இதனுள் தலைமகள் கூற்று நிறையழிவால் நிகழ்ந்தது ஆகலின், அவ்வியைபு பற்றி நிறை அழிதலின்பின் வைக்கப்பட்டது.

**மணக்குடவர்:** அவர்வயின் விதும்பலாவது அவர் வரவின்கண்ணே துக்கம் உறுதல்; காதலர் வரவு கேட்டு இருத்தல் என்றவாறு. இவையெல்லாம் தோழிக்குக் கூறியனவாகக் கொள்ளப்படும். நிறை அழிந்தார் எப்பொழுதும் காதலர் வரவிற்கு ஆசையுற்றிருப்பார் ஆதலான் அதன்பின் இது கூறப்பட்டது.

1261

வாள்அற்றுப் புற்கென்ற கண்ணும் அவர்சென்ற
நாள்ஒற்றித் தேய்ந்த விரல். 1

(தலைமகள் காண்டல் விதுப்பினால்[2] சொல்லியது.)

**பரிமேலழகர் :** அவர் சென்ற நாள் ஒற்றி விரல் தேய்ந்த - அவர் நம்மைப் பிரிந்துபோய நாள்கள் சுவரின்கண் இழைத்தவற்றைத் தொட்டு

---

1. அதிகாரத்தில் உள்ள செய்யுட்கள் தலைவன் முதலியோர் கூற்றாக வரினும், அதிகாரப் பெயர் நூலாசிரியரால் அமைக்கப் பெற்றது; அதனையே இங்கே கவி கூற்றென்றார்.

2. விதுப்பு - விரைவு.

எண்ணுதலான் என் விரல்கள் தேய்ந்தன; கண்ணும் வாள் அற்று புற்கென்ற - அதுவே அன்றி, அவர் வரும் வழி பார்த்து என் கண்களும் ஒளி இழந்து புல்லிய ஆயின; இவ்வாறு ஆயும் அவர் வரவு உண்டாயிற்றில்லை.

நாள்: ஆகுபெயர். புல்லியவாதல், நுண்ணிய காணமாட்டாமை. ஒற்ற என்பது ஒற்றி எனத் திரிந்துநின்றது. இனி யான் காணுமாறு என்னை என்பதாம். நாள் எண்ணலும் வழி பார்த்தலும் ஒருகால் செய்தொழியாது இடையின்றிச் செய்தலான், விதுப்பாயிற்று.

உரை வேறுபாடு

**மணக்குடவர்:** அவர் சென்ற நாள் ஒற்றித் தேய்ந்த விரல் - விரல்களும் அவர் போன நாட்களை எண்ணி முடக்குதலாய்த் தேய்ந்தன.

**பரிதியார்:** நாயகர் சென்ற நாளெண்ணித் தேய்ந்தது விரல் நகமும்.

ஒப்புமை

1. **கண் வாள் அறுதல்:**

"நீளிடை யத்தம் நோக்கிவா ளற்றுக்
கண்ணுங் காட்சி தௌவின" (நற். 397 : 2-3.)

"கண்ணே, நோக்கி நோக்கி வாளிழந் தனவே"
(குறுந். 44 : 1-2.)

"வெளிறுகண் போகப் பன்னாட் டிரங்கி" (புறநா. 177 : 2.)

"கண்ணும் வாளற்ற." (சீவக. 998.)

2. **நாள் ஒற்றி விரல் தேய்தல்:**

"ஆய்கோ டிட்டுச், சுவர்வாய் பற்றுநின் படர்"
(குறுந். 358 : 2-3.)

"நாளிழை நெடுஞ்சுவர் நோக்கி நோயுழந்
தாழல் வாழி தோழி"

"சேணுறை புலம்பின் நாண்முறை இழைத்த
திண்சுவர் நோக்கி நினைந்து"
(அகநா. 61 : 4-5, 289 : 9-10.)

"மெல்விரலின்
நாள்வைத்து நம்குற்றம் எண்ணும்கொல்."
(நாலடி. 394.) (1261)

1262

இலங்கிழாய் இன்று மறப்பின்என் தோள்மேல்
கலம்கழியும் காரிகை நீத்து. 2

(ஆற்றுமை மிகுதலின் இடையின்றி நினைக்கற்பாலே அல்லை, சிறிது மறக்கல் வேண்டும் என்ற தோழிக்குச் சொல்லியது.)

**பரிமேலழகர்:** இலங்கு இழாய்-விளங்கா நின்ற இழையினை உடையாய், இன்று மறப்பின் - காதலரை இன்று யான் மறப்பேனாயின், மேல் காரிகை நீத்து என் தோள் கலம் கழியும் - மேலும் காரிகை என்னை நீப்ப, என் தோள்கள் வளை கழல்வனவாம்.

இலங்கிழாய் என்பது இதற்கு நீ யாதும் பரியலை என்னும் குறிப்பிற்று. இன்று - யான் இறந்துபடுகின்ற இன்று. மேலும் - மறு பிறப்பினும். எச்சவும்மை விகாரத்தால் தொக்கது. நீப்ப என்பது நீத்து எனத் திரிந்து நின்றது. கழியும் என்னும் இடத்து நிகழ் பொருளின் தொழில் இடத்தின்

மேல் நின்றது. இவ்வெல்லைக்கண் நினைந்தால் மறுமைக்கண் அவரை எய்தி இன்புறலாம்; அதனால் மறக்கற்பாலேன் அல்லேன் என்பதாம்.

உரை வேறுபாடு

**மணக்குடவர்:** காரிகை - அழகு. இலங்கிழாய் என்ற அதனால் வருத்தமில்லாதவளே என்று விளித்தாள் என்பது கொள்ளப்படும்.

**பரிப்பெருமாள்:** தன் அணிகலங்கள் விலங்காமையிருப்பச் சிறிய உள்ளிப் பெரிய மறக்க வேண்டும் என்று வற்புறுத்திய தோழிக்கு, வன்புறை எதிரழிந்து கூறியது. (*1262*)

1263

உரன்நசைஇ உள்ளம் துணையாகச் சென்றார்
வரல்நசைஇ இன்னும் உளேன். 3

(இதுவும் அது.)

**பரிமேலழகர்:** உரன் நசைஇ உள்ளம் துணையாக சென்றார் - இன்பம் நுகர்தலை நச்சாது வேறலை நச்சி நாம் துணையாதலை இகழ்ந்து தம் ஊக்கம் துணையாகப் போயினர், வரல் நசைஇ இன்னும் உளேன்-அவற்றை இகழ்ந்து ஈண்டு வருதலை நச்சுதலான் யான் இவ்வெல்லையினும் உளேன் ஆயினேன்.

உரன் என்பது ஆகுபெயர். அந் நசையான் உயிர்வாழாநின்றேன், அஃது இல்லையாயின் இறந்துபடுவல் என்பதாம்.

உரை வேறுபாடு

**பரிதியார்:** நாயகர் தனியே போகாமல் என் நெஞ்சைத் துணைக் கூட்டிப் போனவர் என் அருமையும் பெருமையும் உள்ள நெஞ்சைத் தனியே விடார்; தாமும் கூட வருவார்.

**காளிங்கர்:** அருங்கலை கற்றவர் அருகு சென்று பெருங் கலை ஞானம் பெறுதல் வேண்டித் தம் பண்பு அறிவுதான் ஒரு பருவம் செய்து எழுந்த உள்ளமே அதற்கு உறுதுணையாகக் கொண்டு ஓதற்குப் போனவரது வரவை நச்சி. உரன் என்பது அறிவு.

ஒப்புமை

**தலைவன் வருவதை விரும்பி உயிர் வாழ்தல்:**

"நவையறு குணங்க ளென்னும்
பூணெலாம் பொறுத்த மேனிப் புண்ணிய மூர்த்தி தன்னைக்
காணலா மின்னு மென்னும் காதலா லிருந்தேன் கண்டாய்."

(கம்ப, மாயாசனகப். 22.) (*1263*)

1264

கூடிய காமம் பிரிந்தார் வரவுள்ளிக்
கோடுகொ டேறும்என் நெஞ்சு. 4

(இதுவும் அது.)

**பரிமேலழகர்:** பிரிந்தார் கூடிய காமம் வரவு உள்ளி-நீங்கிய காமத்தராய் நம்மைப் பிரிந்து போயவர்மேற் கூடிய காமத்துடனே நங்கண் வருதலை நினைந்து, என் நெஞ்சு கோடு கொடு ஏறும் - என் நெஞ்சு வருத்தம் ஒழிந்து மேன்மேல் பணைத்து எழாநின்றது.

வினைவயிற் பிரிவுழிக் காமவின்பம் நோக்காமையும் அது முடிந்துழி அதுவே நோக்கலும் தலைமகற்கு இயல்பு ஆகலின், கூடிய காமமொடு என்றாள் ; ஒடு உருபு விகாரத்தால் தொக்கது. கோடு கொண்டேறலாகிய மரத்தது தொழில்[1] நெஞ்சின்மேல் ஏற்றப்பட்டது. கொண்டு என்பது குறைந்து நின்றது. அஃது உள்ளிற்றிலேனாயின் இறந்து படுவல் என்பதாம்.

உரை வேறுபாடு

மணக்குடவர் : கோடு கொடு ஏறும் - மரத்தின் மேலேறிப் பாரா நின்றது.

உயர்ந்த மரத்தின்மேல் ஏறினால் சேய்த்தாக வருவாரைக் காணலாம் என்று நினைத்து அதனை ஏறிற்றாகக் கூறினாள்.

பரிதியார் : கோடுகொடு ஏறும் என் நெஞ்சு - ஆசை என்னும் மலையில் என் நெஞ்சு ஏறிப் பார்க்கும். (1264)

1265

காண்கமன் கொண்கனைக் கண்ணாரக் கண்டபின்
நீங்கும்என் மென்றோட் பசப்பு. 5

(தலைமகன் வரவு கூறி, ஆற்றாயாய்ப் பசக்கற்பாலை அல்லை என்ற தோழிக்குச் சொல்லியது.)

பரிமேலழகர் : கண் ஆர கொண்கனை காண்க - என் கண்கள் ஆரும் வகை என் கொண்கனை யான் காண்பேனாக; கண்ட பின் என் மெல் தோள் பசப்பு நீங்கும் - அங்ஙனம் கண்டபின் என் மெல்லிய தோளின்கண் பசப்புத் தானே நீங்கும்.

காண்க என்பது ஈண்டு வேண்டிக்கோடற்பொருட்டு. அது வேண்டும் என்பது பட நின்றமையின் மன் ஒழியிசைக்கண் வந்தது. கேட்ட துணையான் நீங்காது என்பதாம்.

உரை வேறுபாடு

காளிங்கர் : நெஞ்சை நோக்கிக் கூறியதென்பர். (1265)

1266

வருகமன் கொண்கன் ஒருநாள் பருகுவன்
பைதல்நோய் எல்லாம் கெட. 6

(இதுவும் அது.)

பரிமேலழகர் : கொண்கன் ஒரு நாள் வருக - இத்துணை நாளும் வாராக் கொண்கன் ஒரு நாள் வருவானாக; பைதல் நோய் எல்லாம் கெட பருகுவன் - வந்தால் பையுளைச் செய்கின்ற இந்நோய் எல்லாம் கெட அவ் வமிழ்தத்தை வாயில்கள் ஐந்தானும் பருகக் கடவேன்.

வருக என்பதற்கும், மன் என்பதற்கும் மேல் உரைத்தவாறே கொள்க. அக் குறிப்பு, அவ் வொரு நாளைக்குள்ளே இனி வரக்கடவ நோய்களும் கெடுப்பல் என்பதாம்.

உரை வேறுபாடு

மணக்குடவர் : பைதல் நோய் – பசலை நோய்.

1. கொம்பும் வளாருமாய்ப் படர்ந்து வளர்வது மரத்தின் தொழில்.

ஒப்புமை

ஒருநாள் வருக :

"கூரா ராழி வெண்சங் கேந்திக் கொடியேன்பால்
வாராய் ஒருநாள் மண்ணும் விண்ணும் மகிழவே."

(திருவாய். 6. 9: 1.) (1266)

## 1267

புலப்பேன்கொல் புல்லுவேன் கொல்லோ கலப்பேன்கொல்
கண்அன்ன கேளிர் வரின். 7

(இதுவும் அது.)

**பரிமேலழகர் :** கண் அன்ன கேளிர் வரின் - கண்போல் சிறந்த கேளிர் வருவாராயின், புலப்பேன்கொல் - அவர் வரவு நீட்டித்தமை நோக்கி யான் புலக்கக்கடவேனோ? புல்லுவேன்கொல் - அன்றி என் ஆற்றாமை நோக்கிப் புல்லக்கடவேனோ? கலப்பேன்கொல் - அவ்விரண்டும் வேண்டுதலான் அவ்விரு செயல்களையும் விரவக்கடவேனோ? யாது செய்யக்கடவேன்?

புலவியும் புல்லலும் ஒரு பொழுதின்கண் விரவாமையின் கலப்பேன் கொல் என்றாள். மூன்றனையும் செய்தல் கருத்தாகலின், விதுப்பாயிற்று. இனிக் கலப்பேன்கொல் என்பதற்கு ஒரு புதுமை செய்யாது பிரியாத நாள் போலக் கலந்து ஒழுகுவேனோ என்று உரைப்பாரும் உளர்.

உரை வேறுபாடு

**பரிப்பெருமாள் :** கலப்பேன்கொல் - இவை இரண்டும் செய்யாதே வேட்கை தீரக் கலப்பேனோ?

**பரிதியார் :** கலப்பேன்கொல் - கலவி நலம் கட்டுரைப்பேமோ? (1267)

## 1268

வினைகலந்து வென்றீக வேந்தன் மனைகலந்து
மாலை அயர்கம் விருந்து. 8

(வேந்தற்கு உற்றுழிப் பிரிந்த தலைமகன், வினைமுடிவு நீட்டித்துழித் தலைமகளை நினைந்து தன்னுள்ளே சொல்லியது.)

**பரிமேலழகர் :** வேந்தன் வினை கலந்து வென்றீக - வேந்தன் வினை செய்தலைப் புரிந்து வெல்வானாக; மனை கலந்து மாலை விருந்து அயர்கம் - யாமும் மனைவியைச் சென்று கூடி ஆண்டை மாலைப்பொழுதிற்கு விருந்து அயர்வேமாக.

மனை என்பது ஈண்டு ஆகுபெயர், "மங்கலம் என்ப மனைமாட்சி"[1] என்புழிப்போல. வினை செய்தற்கண் வந்த மாலைப்பொழுதிற்கு எதிர் கோடல் அலங்கரித்தல் முதலிய இன்மையின், 'மனை கலந்து மாலைக்கு விருந்தயர்கம்' என்றான். நான்கன் உருபு விகாரத்தால் தொக்கது. இது வினை முடியாமுன் கூறலான் விதுப்பாயிற்று. பிறர் எல்லாம் இதனைத் தலைமகள் கூற்றாக்கி உரைத்தார். தலைமகனைக் கூறுது வேந்தன் வெல்க என்றும், மனை கலந்து என்றும், மாலைப் பொழுதின்கண் விருந்தயர்கம் என்றும் வந்த அவ்வுரைதானே அது கூடாமைக்குக் கரி ஆயிற்று.

1. குறள், 60.

உரை வேறுபாடு

மணக்குடவர் : மனை கலந்து மாலை அயர்கம் விருந்து - யாமும் மனையிலே பொருந்தி இம் மாலைப் பொழுதிலே நம் காதலர்க்கு விருந்து செய்வேமாக.

மனை - அட்டில்.

பரிதியார் : வினை வென்று வரும் நாயகனது மால் என்னும் பசிக்கு என் ஆகம் விருந்திடுவேன்.

காளிங்கர் : யாமும் இற்றை மாலை எல்லைக்கு இம் மனைக்கண் விருந்து இயற்றுவம் ஆக, அவரோடு வருஉம் விருந்தினர் அனைவர்க்கும்.

ஒப்புமை

மாலை விருந்து அயர்தல் :

"பூண்கதில் பாகநின் தேரே......
அரிவை
விருந்தயர் விருப்பொடு வருந்தினள் அசைஇய
முறுவல் இன்னகை காண்கம்"

"நெடுநா ஒண்மணி பாடுசிறந் திசைப்ப
மாலை மான்ற மணல்மலி வியனகர்த்
தந்தன நெடுந்தகை தேரே என்றும்
அரும்படர் அகல நீக்கி
விருந்தயர் விருப்பினள் திருந்திழை யோளே"

(நற். 81: 5-9, 361: 5-9.)

"மாலை நனிவிருந் தயர்மார்
தேர்வரும் என்னும் உரைவா ராதே" (குறுந். 155: 6-7.)

"விருந்தும் பெறுகுநள் போலும் திருந்திழைத்
தடமென் பணைத்தோள் மடமொழி யரிவை...
செல்லு நெடுந்தகை தேரே
முல்லை மாலை நகர்புக லாய்ந்தே"

"மனைக்கொண்டு புக்கனன் நெடுந்தகை
விருந்தோ பெற்றனள் திருந்திழை யோளே."

(அகநா. 324: 1-15, 384: 13-4.) (1268)

1269

ஒருநாள் எழுநாள்போல் செல்லும்சேட் சென்றார்
வருநாள்வைத் தேங்கு பவர்க்கு. 9

(இதுவும் அது.)

பரிமேலழகர் : சேண் சென்றார் வரு நாள் வைத்து ஏங்குபவர்க்கு - சேணிடைச் சென்ற தம் காதலர் மீண்டு வரக் குறித்த நாளை உட்கொண்டு அது வருந்துணையும் உயிர்தாங்கி வருந்தும் மகளிர்க்கு, ஒருநாள் எழுநாள் போல் செல்லும் - ஒருநாள் பலநாள் போல நெடிதாகக் காட்டும்.

ஏழென்பது அதற்கு மேலாய மிக்க பன்மை குறித்து நின்றது;[1] "ஒருவர் கூறை எழுவர் உடுத்து" என்றாற்போல. தலைமகள் வருத்தம் பிறர் மேல் இட்டுக் கூறியவாறு. இதனான் இதுவும் தலைமகள் கூற்று ஆகாமை அறிக. இரு நாள் என்று பாடம் ஓதுவாரும் உளர்.

1. இதனை அனந்த வாசி என்பர்.

### உரை வேறுபாடு

**பரிப்பெருமாள் :** இது தலைமகன் குறித்த நாள் வருவதன் முன்னம் வருந்துகின்றது என்னை என்ற தோழிக்கு, அது தானும் கடிது வருகின்றது இல்லை என்று தலைமகள் சொல்லியது.

### ஒப்புமை

ஒன்றுக்கு ஏழு :
குறள், *1278.*
"எழுகுளிறு மிதித்த ஒருபழம் போல"
"ஏழூர்ப் பொதுவினைக் கோரூர்" (குறுந். *24: 4, 172: 5.*)
"ஒருநாள் நம்மில் வந்ததற் கெழுநாள்
அழுப என்ப" (ஐங்குறு. *32.*)
"ஓவா தெழுமடங் குட்குவரத் தோன்றி" (பெருங். *1. 43: 122.*)
"பூசுசாந் தொருவர் பூசிற் றெழுவர்தம் மகலம் பூசி"
(சீவக. *116.*)
"தெய்வங்காள் என்செய்கேன் ஓரிரவே ழூழியாய்."
(திருவாய். 5. *4: 8.*) *(1269)*

## 1270

**பெறின்என் ஆம் பெற்றக்கால் என் ஆம் உறின்என் ஆம்**
**உள்ளம் உடைந்துக்கக் கால்.** 10

*(இதுவும் அது.)*

**பரிமேலழகர் :** உள்ளம் உடைந்து உக்கக்கால் - காதலி நம் பிரிவினை ஆற்றாது உள்ளம் உடைந்து பட்டவழி,[1] பெறின் என் - நம்மைப் பெறக் கடவள் ஆனால் என்? பெற்றக்கால் என் - அது அன்றியே பெற்றால் என்? உறின் என் - அதுவன்றியே மெய்யுறக் கலந்தால்தான் என்? இவை ஒன்றானும் பயன் இல்லை.

இம் மூன்றும் உடம்பொடு புணர்த்திக் கூறப்பட்டன. அதன்மேலும் முன்னை வழக்கு உண்மையின், அதற்கு முன்னே யான் செல்ல வேண்டும் என்பது கருத்தாகலின், விதுப்பாயிற்று. இது தலைமகள் கூற்றாயவழி இரங்கலாவது அல்லது விதுப்பாகாமை அறிக.

### உரை வேறுபாடு

**மணக்குடவர் :** எனது உள்ளம் உடைந்துபோயின பின்பு அவரைப் பெறுவேம் என்று இருந்ததனாற் பயன் என் உண்டாம்? முன்பே பெற்றே மானேம், அதனால் பயன் என்னுண்டாம்? இப்பொழுது உற்றேமாயின் அதனால் பயன் என்னுண்டாம்?

இது வருவார் என்ற தோழிக்குத் தலைமகள் கூறியது.

**பரிதியார் :** நாயகர் வந்தால் என்ன? காதலின்பம் விளைந்தால் என்ன பயன்? பக்குவம் தப்பி உள்ளம் உடைந்து உக்கிப்போனதின்மேல்.

**காளிங்கர் :** தோழியை நோக்கித் தலைவி கூறியது என்பர். *(1270)*

---

1. (பி-ம்.) உள்ளம் உடைந்து இறந்துபட்ட வழி.

# 128. குறிப்பு அறிவுறுத்தல்

பரிமேலழகர் : அஃதாவது, தலைமகன், தலைமகள், தோழி என்று இவர் ஒருவர் குறிப்பினை ஒருவர்க்கு அறிவுறுத்தல். இது, பிரிந்து போய தலைமகன் வந்து கூடியவழி நிகழ்வது ஆகலின், அவர்வயின் விதும்பலின்பின் வைக்கப்பட்டது.

பரிப்பெருமாள் : மேல் தலைமகள் குறிப்புத் தலைமகன் அறிந்தான் என்றது அல்லது இயற்கைப் புணர்ச்சி புணர்ந்து நீங்கின தலைமகன் குறிப்புத் தோழி அறிதலும், இரந்துபின் நின்ற தலைமகன் தோழி குறிப்பு அறிதலும், குறை நயப்பித்த வழித் தலைமகள் குறிப்புத்தோழி அறிதலும், நொதுமலர் வரைய வந்துழி வேறுபட்ட தலைமகள் குறிப்புச் செவிலி அறிதலும், பிரிதல் உற்ற தலைமகன் குறிப்புத் தலைமகள் அறிதலும், பிரிவு உணர்த்தச் சென்ற தோழி குறிப்புத் தலைமகன் அறிதலும், அவ்வழித் தலைமகள் குறிப்புத் தோழி அறிதலும் இவை எல்லாம் இயற்கைப் புணர்ச்சிக்குப் பின்பு இத்துணையும் பிரிந்துழி நிகழ்பவை கூறினார் ஆதலானும், இனிப் புணர்ச்சி விதும்பல் கூறுகின்றார் ஆதலானும் ஈண்டுக் கூறப்பட்டது.

### 1271

கரப்பினுங் கையிகந் தொல்லாநின் உண்கண்
உரைக்கல் உறுவதொன் றுண்டு. 1

(பிரிந்து கூடிய தலைமகன் வேட்கை மிகவினாற் புதுவது பன்னாளும் பாராட்டத் தலைமகள் இது ஒன்று உடைத்து என அஞ்சியவழி அதனை அவள் குறிப்பான் அறிந்து அவன் அவட்குச் சொல்லியது.)

பரிமேலழகர் : கரப்பினும் - நீ சொல்லாது மறைத்தாய் ஆயினும், ஒல்லா கை இகந்து - அதற்கு உடம்படாதே நின்னைக் கைகடந்து, நின் உண் கண்[1] உரைக்கல் உறுவது ஒன்று உண்டு - நின் உண்கண்களே எமக்குச் சொல்லல் உறுவது ஒரு காரியம் உண்டாயிராநின்றது; இனி அதனை நீயே தெளியச் சொல்வாயாக.

கரத்தல்-நாணான் அடக்குதல். தன்கண் பிரிதற் குறிப்பு உளதாகக் கருதி வேறுபட்டாளது வேறுபாடு குறிப்பான் அறிந்து அவட்குத் தன் பிரியாமைக் குறிப்பு அறிவுறுத்தவாறு.

#### உரை வேறுபாடு

பரிப்பெருமாள் : உண்கண் உரைக்கல் உறுவது ஒன்று உண்டு - நின் கண்கள் சொல்லுவது ஓர் அருள் உண்டு.

இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த தலைமகளை இவ் வேறுபாடு எற்றினான் ஆயிற்று என்று வினவிய தோழிக்குச் சுனை ஆடினேன் என்று தலைமகள் மறைத்த இடத்து அவள் நாணம் நீங்குதற் பொருட்டுப் புணர்ச்சி உண்மை அறிந்தமை குறிப்பினால் தோழி சொல்லியது. இவ்வாறு ஒரு புறம் தோன்றச் சொல்லாக்கால் நாணத்தாலே இறந்து படும்.

பரிதியார் : உண்கண் உரைக்கல் உறுவது ஒன்றுண்டு - விரக மகிழ்ச்சி கண் பார்வையில் காட்டும்.

---

1. (பி-ம்.) ஒண்கண்.

### ஒப்புமை

*தலைவி தன் அச்சத்தை மறைத்தல் :*

"இன்றிவ்வூர் அலர்தூற்ற வெய்யாய்நீ துறத்தலின்
நின்றதன் எவ்வநோய் என்னையும் மறைத்தாள்மன்
வென்றவேல் நுதியேய்க்கும் விறல்நலன் இழந்தினி
நின்றுநீர் உகக்கலுழும் நெடும்பெருங்கண் அல்லாக்கால்."

(கலித். *124: 13-6.*) (*1271*)

## 1272

**கண்நிறைந்த காரிகைக் காம்பேர்தோள் பேதைக்குப்
பெண்நிறைந்த நீர்மை பெரிது.** 2

(*நாணல் அவள் அது சொல்லாளாயவழி அவன் தோழிக்குச் சொல்லியது.*)

**பரிமேலழகர் :** கண் நிறைந்த காரிகை காம்பு ஏர் தோள் பேதைக்கு - என் கண்நிறைந்த அழகினையும் வேயை ஒத்த தோளினையும் உடைய நின் பேதைக்கு, பெண் நிறைந்த நீர்மை பெரிது - பெண்பாலாரிடத்து நிறைந்த மடமை அவ்வளவு அன்றி மிகுந்தது.

இலதாய பிரிவினைத் தன்கண் ஏற்றி அதற்கு அஞ்சுதலான், இவ்வாறு கூறினன்.

### உரை வேறுபாடு

**மணக்குடவர் :** காண்பார் கண் நிறைந்த.

**பரிப்பெருமாள் :** இஃது இவள் வேறுபாடு எற்றினன் ஆயிற்று என்று வினவிய செவிலிக்கு, இவள் வடிவுக்குத் தக்க பெண்மை நிரப்பம் உடையவள், ஆனமையான் வந்தது போலும் என்று தலைமகள் குறிப்பைக் கூறியது.

பெண்மை நிரப்பம், கற்பு. பூத்தரு புணர்ச்சியானும் புனல்தரு புணர்ச்சியானும் ஒன்றைச் சொல்வதாகக் குறித்துக் கூறினள். இத்துணையும் களவு.

**பரிதியார் :** பெண் நிறைந்த நீர்மை - பெண்ணுக்குள்ள பக்குவம்.

**காளிங்கர் :** கண் நிறைந்த காரிகை என்பது பண்டை நலன் ஒழியத் தன்னிடம் எங்கும் புகுந்து நிறைந்து நிற்கின்ற புத்தழகு என்பது.

### மேற்கோள் விளக்கம்

'பெதும்பைப் பருவத்தாளாகிய தலைவி புணர்ச்சியால் கதிர்த்து வீங்குகிற முலையும் புதிதுற்ற கவினும் கண்டவிடத்துச் செவிலி தோழியை வினவும்' என்பதற்கு மேற்கோள். (தொல். களவு. 25, இளம்.) (*1272*

## 1273

**மணியில் திகழ்தரு நூல்போல் மடந்தை
அணியில் திகழ்வதொன் றுண்டு.** 3

(*இதுவும் அது.*)

**பரிமேலழகர் :** மணியில்[1] திகழ் தரும் நூல்போல் - கோக்கப்பட்ட பளிக்கு மணியகத்துக் கிடந்து புறத்துப் புலனும் நூல்போல, மடந்தை அணியில் திகழ்வது ஒன்று உண்டு - இம் மடந்தையது அணியகத்துக் கிடந்து புறத்துப் புலனுகின்றது ஒரு குறிப்பு உண்டு.

---

1. (பி-ம்.) மணியுள்.

அணி–புணர்ச்சியான் ஆய அழகு. அதன் அகத்துக் கிடத்தலாவது, அதனோடு உடன்நிகழ்தற் பாலதன்றி வைத்து உடன் நிகழ்தல். அதனை யான் அறிகின்றிலேன்; நீ அறிந்து கூறல் வேண்டும் என்பது கருத்து.

உரை வேறுபாடு

**மணக்குடவர் :** மணி – நீலமணி. அழகு – புணர்ச்சியால் வந்த அழகுபோலும் என்னும் குறிப்பு.

**பரிப்பெருமாள் :** நொதுமலர் வரைய வந்துழி வேறுபட்ட தலைமகள் குறிப்புக் கண்டு அதற்குக் காரணம் என்னை என்று தோழியைச் செவிலி வினவியது.

**பரிதியார் ;** மணி – முத்து.

**காளிங்கர் :** திகழ்வது ஒன்று - வந்து தோன்றுவது ஒரு மயக்கம்.

மேற்கோள் விளக்கம்

தலைவிமாட்டு உளதாகிய வேட்கை அளவிறப்பினும் செவிலி தோழியை வினவுதலுக்கு மேற்கோள். (தொல். களவு. 25, இளம்.)

காமத்தால் திகழ்ந்த பொலிவினைச் செவிலி கூறியதற்கு மேற்கோள். (தொல். களவு. 24, ந.) *(1273)*

## 1274

முகைமொக்குள் உள்ளது நாற்றம்போல் பேதை
நகைமொக்குள் உள்ளதொன் றுண்டு. 4

(இதுவும் அது.)

**பரிமேலழகர் :** முகைமொக்குள் உள்ளது நாற்றம்போல் - முகையது முகிழ்ப்பின் உளதாய்ப் புறத்துப் புலனாகாத நாற்றம்போல, பேதை நகை மொக்குள் உள்ளது ஒன்று உண்டு - நின் பேதை என்னொடு நகக் கருதும் நகையது முகிழ்ப்பின் உளதாய்ப் புறத்துப் புலனாகாதது ஓர் குறிப்பு உண்டு.

முகிழ்ப்பு, முதிர்ச்சியாற் புடைபடுதல். நகை-புணர்ச்சி இன்பத்தால் நிகழ்வது.

உரை வேறுபாடு

**மணக்குடவர் :** ஒன்று உண்டு - ஓர் இன்பம் உண்டு.

இஃது இரந்து பின்னின்ற தலைமகனைத் தோழி நகைசெய்து சேட்படுத்தியபோது இவள் குறிப்பு நமக்கு இன்பம் பயக்கும் என்று அவன் தன் நெஞ்சிற்குச் சொல்லியது.

**பரிதியார் :** அரும்புக்கு நாற்றம் போலே நாயகி சிரிப்பிலே அன்பு உண்டு அல்லது இல்லை என்று காட்டும்.

மேற்கோள் விளக்கம்

நகுநயம் மறைத்தல் என்னும் மெய்ப்பாடு வந்தது. (தொல். மெய்ப்பாட். 13, பேர்.)

ஒப்புமை

**நகை மொக்குள் :**

"முள் நுனை தோன்றாமை முறுவல்கொண் டடக்கித்தன்
கண்ணினும் முகத்தினும் நகுபவள்."

(கலித். 142:7–8.) (1274.)

## 1275

செறிதொடி செய்திறந்த கள்ளம் உறுதுயர்
தீர்க்கும் மருந்தொன் றுடைத்து. 5

(இதுவும் அது.)

*பரிமேலழகர் :* செறி தொடி செய்து இறந்த கள்ளம் - நெருங்கிய வளைகளை உடையாள் என்கண் இல்லாதது ஒன்றனை உட்கொண்டு அது காரணமாக என்னை மறைத்துப்போன குறிப்பு, உறு துயர் தீர்க்கும் மருந்து ஒன்று உடைத்து - என் மிக்க துயரைத் தீர்க்கும் மருந்தாவது ஒன்றனை உடைத்து.

உட்கொண்டது, பிரிவு. கள்ளம்: ஆகுபெயர். மறைத்தற் குறிப்புத் தானும் உடன்போக்கு உட்கொண்டது. உறுதுயர், நன்று செய்யத் தீங்கு விளைதலானும் அதுதான் தீர்திறம் பெருமையானும் உளதாயது. மருந்து, அப்பிரிவின்மை தோழியால் தெளிவித்தல். நீ அது செய்தல் வேண்டும் என்பதாம்.

### உரை வேறுபாடு

*மணக்குடவர் :* தோழி மெலிதாகச் சொல்லிக் குறை நயப்பித்த வழி, கேளாரைப் போலத் தலைமகள் அகன்ற செவ்வியுள் எதிர்ப்பட்ட தலைமகற்கு, நின் குறை முடியும்; நீ இவ்விடைச் செல் என்று தோழி கூறியது.

*பரிதியார் :* செறியப்பட்ட வளையுடையாள் செய்த குறி வளையின் ஒலிகாட்டி அடக்கியது. வருவதற்கும் இடமாக்கி ஆசை நோய்க்கு ஒரு மருந்தாயிற்று.

### ஒப்புமை

**உறுதுயர் தீர்க்கும் மருந்து :**

"..................நாண்விட்
டருந்துயர் உழந்த காலை
மருந்தெனப் படூஉம் மடவோ ளையே";

*(நற், 384: 9-11.)* *(1275)*

## 1276

பெரிதாற்றிப் பெட்பக் கலத்தல் அரிதாற்றி
அன்பின்மை சூழ்வ துடைத்து. 6

*(தலைமகன் குறிப்பு அறிந்து தலைமகள் அதனை அது தெளிவிக்கச் சென்ற தோழிக்கு அறிவுறுத்தது.)*

*பரிமேலழகர் :* பெரிது ஆற்றி பெட்ப கலத்தல் - காதலர் வந்து தம் பிரிவினான் ஆய துன்பத்தினை மிகவும் ஆற்றி நாம் மகிழும் வண்ணம் கலக்கின்ற கலவி, அரிது ஆற்றி அன்பு இன்மை சூழ்வது உடைத்து[1] - இருந்த வாற்றான் மேலும் அத் துன்பத்தினை அரிதாக ஆற்றியிருந்து அவர் அன்பின்மையை நினையும் தன்மை உடைத்து.

பிரிதற்குறிப்பினால் செய்கின்றது ஆகலான், முடிவில் இன்னாதாகா நின்றது என்பதாம். *(1276)*

---

1. (பி-ம்.) சூழ்வதொன் றுண்டு.

## 1277

தண்ணந் துறைவன் தணந்தமை நம்மினும்
முன்னம் உணர்ந்த வளை. 7

(இதுவும் அது.)

**பரிமேலழகர் :** தண் அம் துறைவன் தணந்தமை[1] - குளிர்ந்த துறையை உடையவன் நம்மை மெய்யால் கூடியிருந்தே மனத்தால் பிரிந்தமையை, நம்மினும் வளை முன்னம் உணர்ந்த - அவன் குறிப்பான் அறிதற்குரிய நம்மினும் இவ் வளைகள் முன்னே அறிந்தன.

கருத்து நிகழ்ந்ததாகலின் தணந்தமை என்றும், யான் தெளிய உணர்தற்கு முன்னே தோள்கள் மெலிந்தன என்பாள் அதனை வளைமேல் ஏற்றி அதுதன்னை உணர்வுடைத்தாக்கியும் கூறினள்.

### உரை வேறுபாடு

**பரிப்பெருமாள் :** தலைமகன் சொல்லாது பிரிந்துழி அதனை அறிந்த தோழி இதனை அறிவித்தால் இவள் ஆற்றுங்கொல்லோ, ஆற்றாள் கொல்லோ என்று உட்கொண்டு பிரிவு உணர்த்தச் சென்ற குறிப்பு நோக்கி, இதனை இப்பொழுது சொல்லுமாறு என்னை என்று பரியல் வேண்டா, யான் முன்பே அறிந்தேன் என்று தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

**காளிங்கர் :** யான் அவர் குணம் அயிர்க்க, அன்றுதொட்டு மெலிந்தன என் தோளிணை என்பது பொருள். (1277)

## 1278

நெருநற்றுச் சென்றார்எம் காதலர் யாமும்
எழுநாளேம் மேனி பசந்து. 8

(இதுவும் அது.)

**பரிமேலழகர் :** எம் காதலர் சென்றார் நெருநற்று - எம் காதலர் பிரிந்து போயினார் நெருநற்றே; யாமும் மேனி பசந்து எழுநாளேம் - அப் பிரிவிற்கு யாமும் மேனி பசந்து ஏழு நாள் உடையம் ஆயினேம்.

நெருநற்றுச் செய்த தலையளியால் பிரிவு துணியப்பட்டது என்பாள் நெருநற்றுச் சென்றார் என்றும், அதனை ஐயுற்றுச் செல்கின்றது ஏழு நாள் உண்டாகலின் அன்றே மேனி பசந்தது என்பாள் மேனி பசந்து எழுநாளேம் என்றும் கூறினள். இவ்வாற்றால் தலைமகனது பிரிதற்குறிப்பினை உணர்த்தி நின்றது.

### உரை வேறுபாடு

**பரிப்பெருமாள் :** இது தலைமகனை இத்துணைக் காலமும் இன்பம் துய்த்தாட்கு இன்றே இவ்வேறுபாடு வந்தது என்று தோழி நோக்கிய குறிப்புக் கண்டு, அவர் பிரிவதன் முன்னும் பிரிவர் என்று ஏங்கி இன்புற்றிலேம் என்று தலைமகள் கூறியது.

### ஒப்புமை

**ஒன்றுக்கு ஏழு :**

குறள்,[1] *269*, ஒப்புமை பார்க்க. (1278)

---

1. (பி-ம்.) துறந்தமை.

## 1279

தொடிநோக்கி மென்தோளும் நோக்கி அடிநோக்கி
அஃதாண் டவள்செய் தது. 9

(தலைமகள் குறிப்பு அறிந்த தோழி அதனைத்
தலைமகற்கு அறிவித்தது.)

**பரிமேலழகர்:** (யான் அது தெளிவித்தவழித் தெளியாது) தொடி நோக்கி - அவர் பிரிய யான் ஈண்டு இருப்பின் இவை நில்லா எனத் தன் தொடியை நோக்கி, மெல் தோளும் நோக்கி - அதற்கு ஏதுவாக இவை மெலியும் எனத் தன் மென்றோள்களையும் நோக்கி, அடி நோக்கி - பின் இவ் விரண்டும் நிகழாமல் நீர் நடந்து காத்தல் வேண்டும் எனத் தன் அடியையும் நோக்கி, ஆண்டு அவள் செய்தது அஃது - அங்ஙனம் அவள் செய்த குறிப்பு உடன்போக்காய் இருந்தது.

செய்த குறிப்பு, செய்தற்கேதுவாய குறிப்பு. அஃது என்றாள், "செறிதொடி செய்திறந்த கள்ளம்"[1] என்றான் ஆகலின். பிரிதற் குறிப்பு உண்டாயின் அஃது அழுங்குதல் பயன்.

### உரை வேறுபாடு

**பரிதியார்:** பாலையில் பரல் கடக்க வேண்டும் என்னும் குறிப்பு.

### மேற்கோள் விளக்கம்

'இதனுள் இப்பூப் பறிப்போமாயின் வளைகழன்று தோள் மெலிய நடத்தல் வல்லையாக வேண்டும் என ஒரு பொருள் சுட்டித்தந்தமை காண்க.' (தொல். பொருள், 45, இளம்.) (*1279*)

## 1280

பெண்ணினால் பெண்மை உடைத்தென்ப கண்ணினால்
காமநோய் சொல்லி இரவு. 10

(தலைமகன் பிரியாமைக் குறிப்பினைத் தோழிக்கு அறிவுறுத்தது.)

**பரிமேலழகர்:** காம நோய் கண்ணினால் சொல்லி இரவு - மகளிர் தம் காம நோயினைத் தோழியர்க்கும் வாயாற் சொல்லாது கண்ணினாற் சொல்லி அது தீர்க்க வேண்டும் என்று அவரை இரவாது உடன் போதல் குறித்துத் தம் அடியினை இரத்தல், பெண்ணினால் பெண்மை உடைத்து என்ப - தமக்கு இயல்பாகிய பெண்மைமேலும் ஒரு பெண்மை உடைத்து என்று சொல்லுவர் அறிந்தோர்.

தலைமகளது உடன்போதல் துணிபு தோழியால் தெளிந்தான் ஆகலின், தன் பிரிவின்மைக் குறிப்பினை அறிவுறுப்பான், அவள் பெண்மையினைப் பிறர்மேல் இட்டு வியந்து கூறியவாறு.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** இது பிரிவுணர்த்திய தலைமகள் குறிப்புக் கண்டு தலைமகற்குத் தோழி சொல்லியது.

**காளிங்கர்:** தோழியை நோக்கிக் கூறியதென்பர். (*1280*)

---

1. குறள், 1275.

# 129. புணர்ச்சி விதும்பல்

பரிமேலழகர்: அஃதாவது, தலைமகனும் தலைமகளும் புணர்ச்சிக் கண்ணே விரைதல். மேல் புணர்ச்சி மிகுதி பற்றித் தலைமகன் பிரிதல் குறிப்பு அறிவுறுத்த தலைமகள் அவன்மாட்டே நிகழாது வேட்கைமிகவினால் பின்னும் தன்கண்ணே நிகழ்தலான், இது குறிப்பறிவுறுத்தலின்பின் வைக்கப்பட்டது.

மணக்குடவர்: புணர்ச்சி விதும்பலாவது பிரிந்து கூடின தலைமகனும் தலைமகளும் புணர்தல் வேண்டி ஒருவரின் ஒருவர் முந்து முந்து விரைதல்.

கவிராச பண்டிதர்: மருத நிலம் என்று இவ்வதிகாரத்தை வகுப்பர்.

### 1281

உள்ளக் களித்தலும் காண மகிழ்தலும்
கள்ளுக்கில் காமத்திற் குண்டு. 1

(பிரிதற்குறிப்பினளாகியாளோடு நீ புலவாமைக்குக் காரணம் யாது என நகையாடிய தோழிக்குத் தலைமகள் சொல்லியது.)

பரிமேலழகர்: உள்ள களித்தலும் - நினைந்த துணையானே களிப் பெய்தலும், காண மகிழ்தலும் - கண்ட துணையானே மகிழ்வு எய்தலும், கள்ளுக்கு இல் காமத்திற்கு உண்டு – கள்ளுண்டார்க்கு இல்லை ; காமம் உடையார்க்கு உண்டு.

களித்தல், உணர்வு அழியாதது. மகிழ்தல்; அஃது அழிந்தது. இவ்விரண்டும் உண்டுழியல்லது இன்மையின் கள்ளுக்கில் என்றாள். உண்டு என்பது இறுதி விளக்கு. அப்பெற்றித்தாய காமம் உடைய யான் புலத்தல் யாண்டையது என்பதாம்.

#### உரை வேறுபாடு

பரிப்பெருமாள்: இது தலைமகனைக் கண்ணுற்ற இடத்துப் புலவியைக் கருதின தலைமகள் புணர்வு வேட்கையால் சென்ற நெஞ்சினைக் கண்டு தன்னுள்ளே வியந்து கூறியது. (1281)

### 1282

தினைத்துணையும் ஊடாமை வேண்டும் பனைத்துணையும்
காமம் நிறைய வரின். 2

(இதுவும் அது.)

பரிமேலழகர்: காமம் பனைத்துணையும் நிறைய வரின் - மகளிர்க்குக் காமம் பனையளவினும் மிக உண்டாமாயின், தினைத்துணையும் ஊடாமை வேண்டும் - அவரால் தம் காதலரோடு தினையளவும் ஊடுதல் செய்யாமை வேண்டப்படும்.

பனைத்துணையும் என்புழி ஐந்தன் உருபு விகாரத்தால் தொக்கது. ஊடின் வருத்தம் மிகும் எனப் பிறர்க்கு உறுதி கூறுவாள் போன்று, தன் விதுப்புக் கூறியவாறு.

#### உரை வேறுபாடு

மணக்குடவர்: இஃது ஊட நினைந்த நெஞ்சிற்குத் தலைமகள் கூறியது. (1282)

## 1283

பேணது பெட்பவே செய்யினும் கொண்கனைக்
காணு தமையல கண். 3

(இதுவும் அது.)

**பரிமேலழகர் :** பேணது பெட்பவே செய்யினும் - நம்மை அவமதித்துத் தான் வேண்டியனவே செய்யும் ஆயினும், கொண்கனை கண் காணது அமையல - கொண்கனை என் கண்கள் காணது அமைகின்றன இல்லை.

தன் விதுப்புக் கண்கள்மேல் ஏற்றப்பட்டது. அத் தன்மையேன் அவனேடு புலக்குமாறு என்னை என்பதாம்.

### ஒப்புமை

1. பேணது பெட்பச் செயல் :
"பேணய்நீ பெட்பச் செயல்." (கலித். 91 : 24.)

2. முற்றும் :
"துனிதீர் கூட்டமொடு துன்ன ராயினும்
இனிதே காணுநர்க் காண்புழி வாழ்தல்" (நற். 216 : 1-2.)

"காதலர், நல்கார் நயவா ராயினும்
பல்காற் காண்டலும் உள்ளத்துக் கினிதே" (குறுந். 60 : 4-6.)

"கடியன் கொடியன் நெடியமால் உலகங் கொண்ட
அடியன் அறிவரு மேனி மாயத்த னாகிலும்
கொடியவென் னெஞ்சம் அவனென்றே கிடக்கும்."
(திருவாய். 5. 3 : 5.) (1283)

## 1284

ஊடற்கண் சென்றேன்மன் தோழி அதுமறந்து
கூடற்கண் சென்றதென் நெஞ்சு. 4

(இதுவும் அது.)

**பரிமேலழகர் :** தோழி - தோழி, ஊடற்கண் சென்றேன் - காதலரைக் காணுமுன் அவர் செய்த தவற்றைத் தன்னேடு நினைந்து யான் அவரோடு ஊடுதற்கண்ணே சென்றேன்; என் நெஞ்சு அது மறந்து கூடற்கண் சென்றது - கண்டபின் என் நெஞ்சு அதனை மறந்து கூடுதற்கண்ணே சென்றது.

சேறல் நிகழ்தல் நினைத்த நெஞ்சிற்கும் ஒத்தலின், அது மறந்து என்றாள். அச் செலவால் பயன் என் என்பது பட நின்றமையின், மன் ஒழியிசைக்கண் வந்தது. அவ்வெல்லையிலே நெஞ்சு அறைபோகலான், அது முடிந்தது இல்லை என்பதாம். (1284)

## 1285

எழுதுங்கால் கோல்காணக் கண்ணேபோல் கொண்கன்
பழிகாணேன் கண்ட இடத்து. 5

(இதுவும் அது.)

**பரிமேலழகர் :** எழுதும் கால் கோல் காண கண்ணே போல் - முன் எல்லாம் கண்டிருந்தும் எழுதுங் காலத்து அஞ்சனக் கோலின் இயல்பு காண

மாட்டாத கண்ணே போல, கொண்கன் பழி கண்ட இடத்து காணேன் - கொண்கனது தவறு காணாத இடத்தெல்லாம் கண்டிருந்து அவனைக் கண்ட இடத்துக் காணமாட்டேன்.

கோல்: ஆகுபெயர். இயல்பு, கருமை, என் இயல்பு இதுவாகலின் மேலும் அது முடியாது என்பதாம். (1285)

**1286**

காணுங்கால் காணேன் தவறாய காணாக்கால்
காணேன் தவறல் லவை. 6

(இதுவும் அது.)

**பரிமேலழகர்:** காணும் கால் தவறு ஆய காணேன் - கொண்கனை யான் காணும்பொழுது அவன் தவறாயவற்றைக் காண்கின்றிலேன்; காணா கால் தவறு அல்லவை காணேன் - காணாத பொழுது அவையே அல்லது பிறவற்றைக் காண்கின்றிலேன்.

செயப்படுபொருள் அதிகாரத்தான் வந்தது. முன்பு நான் நின்னொடு சொல்லிய தவறுகள் இதுபொழுது காணாமையிற் புலந்திலேன் என்பதாம்.

**உரை வேறுபாடு**

**காளிங்கர்:** நாள்தோறும் காணாக்கால் ஆற்றாமையின் கண்ட இடத்து வழிபாடும் கற்புடை மகளிர்தம் கடன் என்பது பொருள்.

**ஒப்புமை**

முற்றும்:

"மாணார்க் கடந்த மறவெம்போர் மாறனைக்
காணாக்கால் ஆயிரமும் சொல்லுவேன் கண்டக்கால்
பூணாகம் தாவென்று புல்லப் பெறுவேனோ
நாணோ டுடன்பிறந்த நான்." (முத்தொள்ளாயிரம்.)

"பேணும் கொழுநர் பிழைகள்எல்லாம்
பிரிந்த பொழுது நினைந்தவரைக்
காணும் பொழுது மறந்திருப்பீர்
கனபொற் கபாடம் திறமினோ."
(கலிங். 65.) (1286)

**1287**

உய்த்தல் அறிந்து புனல்பாய் பவரேபோல்
பொய்த்தல் அறிந்தென் புலந்து. 7

(இதுவும் அது.)

**பரிமேலழகர்:** உய்த்தல் அறிந்து புனல் பாய்பவரேபோல் - தம்மை ஈர்த்துக்கொண்டு போதல் அறிந்துவைத்து ஒழுகுகின்ற புனலுட் பாய்வார் செயல்போல, பொய்த்தல் அறிந்து புலந்து என் - புலவி முடிவு போகாமை அறிந்துவைத்துக் கொண்கனோடு புலந்து பெறுவது என்?

பாய்பவர் என்பது ஆகுபெயர். பொய்த்தல் – புரைபடுதல். புலந்தாலும் பயன் இல்லை என்பதாம். பொய்த்தல் அறிந்தேன் என்பது பாடமாயின், உய்த்தல் அறிய ஓடு நீருட் பாய்வார்போல முடிவு அறியப் பண்டு ஒருகால் புலந்து முடியாமை அறிந்தேன்; இனி அது செயற்பாற்று அன்று என உரைக்க.

உரை வேறுபாடு

**பரிதியார்:** பொய்த்தல் - நாயகர் பொய்யாசை. *(1287)*

### 1288

**இளித்தக்க இன்ன செயினும் களித்தார்க்குக்**
**கள்அற்றே கள்வநின் மார்பு.** 8

(தலைமகள் புணர்ச்சி விதுப்பு அறிந்த தோழி
தலைமகற்குச் சொல்லியது.)

**பரிமேலழகர்:** கள்வ - வஞ்சகா, களித்தார்க்கு இளித்தக்க இன்ன செயினும் கள்அற்றே - தன்னை உண்டு களித்தார்க்கு இளிவரத்தக்க இன்னதை வற்றைச் செய்யினும் அவரால் மேன்மேல் விரும்பப்படுவதாய கள்ளுப் போலும், நின் மார்பு – எங்கட்கு நின் மார்பு.

அவ் வின்னதன: நாண் இன்மை, நிறை இன்மை, ஒழுக்கம் இன்மை, உணர்வு இன்மை என்று இவை முதலாயின. எங்கட்கு நாண் இன்மை முதலியவற்றைச் செய்யுமாயினும் எங்களால் மேன்மேல் விரும்பப் படா நின்றது என்பதாம். கள்வ என்றதும் அது நோக்கி.

உரை வேறுபாடு

**மணக்குடவர்:** இது புலவிக்குறிப்பு நீங்கின தலைமகள் தலைமகற்குச் சொல்லியது.

ஒப்புமை

1. **களித்தார்க்குக் கள்:**
"மகிழ்ந்ததன் தலையும் நறவுண் டாங்கு." *(குறுந். 165: 1.)*

2. **முற்றும்:**
"நோயும் இன்பமும் ஆகின்றது மாதோ
..............................................
இலங்குமலை நாடன் மலர்ந்த மார்பே." (*நற். 294: 2 - 9.*) *(1288)*

### 1289

**மலரினும் மெல்லிது காமம் சிலர்அதன்**
**செவ்வி தலைப்படு வார்.** 9

(உணர்ப்புவயின் வாரா ஊடற்கண் தலைமகன்
சொல்லியது.)

**பரிமேலழகர்:** காமம் மலரினும் மெல்லிது - காம இன்பம் மலரினும் மெல்லியதாயிருக்கும்; அதன் செவ்வி தலைப்படுவார் சிலர் - அங்ஙனம் மெல்லிதாதலை அறிந்து அதன் செவ்வியைப் பெறுவார் உலகத்துச் சிலர்.

தொட்ட துணையானே மணச்செவ்வி அழிவதாய மலர் எல்லாவற்றினும் மெல்லிது என்பது விளக்கலின், உம்மை சிறப்பின்கண் வந்தது. குறிப்பும், வேட்கையும், நுகர்ச்சியும், இன்பமும் ஒரு காலத்தின்கண்ணே ஒத்து நுகர்தற்குரியார் இருவர் அதற்கேற்ற இடனும் காலமும் உபகரணங்களும் பெற்றுக் கூடி நுகரவேண்டுதலின் அதன் செவ்வி தலைப்படுவார் சிலர் என்றும், அவற்றுள் யாதானும் ஒன்றனல் சிறிது வேறுபடினும் வாடுதலின் மலரினும் மெல்லிது என்றும் கூறினன். குறிப்பு, ஒவ்வாமையின் யான் அது பெறுகின்றிலேன் என்பதாம். தலைமகள் ஊடல் தீர்வது பயன்.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** இது தலைமகன் புணர்ச்சிக் குறிப்புக் கண்டு, பின்பு ஊடிக்கொள்ளலாம், இப்பொழுது ஊடுவையாயின் இக் காமம் செவ்வி தப்பும் என்று புணர்ச்சி வேட்கையால் தலைமகள் நெஞ்சொடு கூறியது.

**பரிப்பெருமாள்:** புணர்ச்சி வேட்கையால் தலைமகன் கூறியது.

**காளிங்கர்:** கேளாய் தோழீ என்று தோழியை முன்னிலைப் படுத்திக் கூறியது என்பர்.

### ஒப்புமை

**காமம் மெல்லிது:**

"ஐதே காமம்." *(குறுந். 217: 6.) (1289)*

### 1290

கண்ணின் துனித்தே கலங்கினாள் புல்லுதல்
என்னினும் தான்விதுப் புற்று. 10

(இதுவும் அது.)

**பரிமேலழகர்:** கண்ணின் துனித்தே - காதலி முன்னொரு ஞான்று புல்லல் விதுப்பினால் சென்ற என்னோடு தன் கண்மாத்திரத்தான் ஊடி, புல்லுதல் என்னினும் தான் விதுப்புற்று கலங்கினாள் - புல்லுதலை என்னினும் தான் விதும்பலால் அது தன்னையும் அப்பொழுதே மறந்து கூடிவிட்டாள்; அதனான் யான் இத்தன்மையேனாகவும் விதுப்பின்றி ஊடி நிற்கின்ற இவள் அவள் அல்லள்.

கண்மாத்திரத்தான் ஊடல், சொல் நிகழ்ச்சி இன்றி அது சிவந்த துணையே ஆதல். அவளாயின் இங்ஙனம் ஊடற்கண் நீடாள் என்பது பயன்.

### ஒப்புமை

**தலைவி புணர்தலை விரைந்து விரும்பல்:**

"கவவுக் கடுங்குரையள்." *(குறுந். 132: 1.) (1290)*

# 130. நெஞ்சொடு புலத்தல்

**பரிமேலழகர்:** அஃதாவது, காரணம் உண்டாயவழியும் புலக்கக் கருதாது புணர்ச்சி விதும்புகின்ற நெஞ்சுடனே தலைமகள் புலத்தலும் தலைமகன் புலத்தலும் ஆம். அதிகார முறைமையும் இதனானே விளங்கும்.

**மணக்குடவர்:** நெஞ்சொடு புலத்தலாவது தலைமகன் பரத்தையிற் பிரிந்துழி அவனோடு புலக்கக் கருதிய தலைமகள் முற்பட அவனோடு கூட்டம் வேண்டிய நெஞ்சொடு புலந்து கூறுதல். இனி ஊடிக் கூடல் கூறுகின்றாராகலின், அவ்வூடுதலின் முற்பட இது தோற்றுமாதலின், முற்கூறப்பட்டது.

### 1291

அவர்நெஞ் சவர்க்காதல் கண்டும் எவன்நெஞ்சே
நீஎமக் காகா தது. 1

(தலைமகன்கண் தவறு உண்டாயவழியும் புலவி கருதாத நெஞ்சிற்குத் தலைமகள் சொல்லியது.)

*பரிமேலழகர்:* நெஞ்சே – நெஞ்சே, அவர் நெஞ்சு அவர்க்கு ஆதல் கண்டும் – அவருடைய நெஞ்சு நம்மை நினையாது அவர்க்காய் நிற்றல் கண்டு வைத்தும், நீ எமக்கு ஆகாதது எவன் - நீ எமக்காய் நில்லாது அவரை நினைத்தற்காரணம் யாது?

அவர்க்காதல்–அவர் கருதியதற்கு உடம்படுதல். எமக்கு ஆகாதது என்றது, புலவிக்கு உடம்படாமையை. ஒரு கருத்தைத் தாமாக அறிந்து செய்யமாட்டாதார் செய்வாரைக் கண்டாயினும் செய்வார்; நீ அதுவும் செய்கின்றிலை என்பதாம்.

**ஒப்புமை**

*முற்றும்:*

"புலப்பென்யான் என்பேன்மன் அந்நிலையே அவற்காணின்
கலப்பென் என்னுமிக் கையறு நெஞ்சே"

"ஊடுவென் என்பேன்மன் அந்நிலையே அவற்காணின்
கூடுவென் என்னுமிக் கொள்கையில் நெஞ்சே"

"துனிப்பென்யான் என்பேன்மன் அந்நிலையே அவற்காணின்
தனித்தே தாழும்இத் தனியில் நெஞ்சே"

"நிற்காணின்
கடவுபு கைத்தங்கா நெஞ்சென்னும் தம்மோ
டுடன்வாழ் பகையுடை யார்க்கு."

(*கலித்.* 67: 8-9, 12-3, 16-7, 77: 22-4.) *(1291)*

**1292**

உறாஅ தவர்க்கண்ட கண்ணும் அவரைச்
செறாஅர்எனச் சேறியென் நெஞ்சு. 2

(இதுவும் அது.)

*பரிமேலழகர்.* என் நெஞ்சு - என் நெஞ்சே, உறாஅதவர் கண்ட கண்ணும் - மேலும் நம்மாட்டு அன்புடையராகாதவரை உள்ளவாறு அறிந்த இடத்தும், செறாஅர் என அவரை சேறி - நாம் சென்றால் வெகுளார் என்பது பற்றி நீ அவர்மாட்டுச் செல்லாநின்றாய்; இப் பெற்றியது மேலும் ஓர் அறியாமை உண்டோ?

அவரை என்பது வேற்றுமை மயக்கம். பழங்கண்ணோட்டம் பற்றி வெகுளார் என்பது கந்தாகச் சென்றாய்; நீ கருதியது முடியுமோ என்பதாம்.

**உரை வேறுபாடு**

*பரிப்பெருமாள் :* இஃது உணர்ப்புவயின் வாரா ஊடற்கண் தலைமகன் புலந்தவழி, இன்னும் ஒருகால் உணர்த்துவோம் என்று கருதின நெஞ்சொடு புலந்து கூறியது. *(1292)*

**1293**

கெட்டார்க்கு நட்டார்இல் என்பதோ நெஞ்சேநீ
பெட்டாங் கவர்பின் செலல். 3

(இதுவும் அது.)

*பரிமேலழகர் :* நெஞ்சே - நெஞ்சே, நீ பெட்டாங்கு அவர்பின் செலல்– என்மாட்டு நில்லாது நீ விரும்பியவாறே அவர்மாட்டுச் செல்லுதற்குக் காரணம், கெட்டார்க்கு நட்டார் இல் என்பதோ - கெட்டார்க்கு நட்டார் உலகத்து இல்லை என்னும் நினைவோ, நின் இயல்போ கூறுவாயாக.

என்னை விட்டு அவர்மாட்டுச் சேறல் நீ பண்டே பயின்றது என்பாள் பெட்டாங்கு என்றும், தான் இதுபொழுது மானம் இலள் ஆகலின் கெட்டார்க்கு என்றும் கூறினாள். பின் என்பது ஈண்டு இடப்பொருட்டு. செலல் என்பது ஆகுபெயர். "ஒல்கிடத் துலப்பிலா உணர்விலார் தொடர்பு"[1] ஆயிற்று நின் தொடர்பு என்பதாம்.

### உரை வேறுபாடு

காளிங்கர்: கெட்டார்க்கு நட்டார் இல் என்னும் முதுசொல் வழக்கோதான்.

கவிராஜ பண்டிதர்: நட்டார் - உறவின் முறையார்.

### ஒப்புமை

கெட்டார்க்கு நட்டார் இல்:
குறள், 752, 812, 1047, ஒப்புமை பார்க்க.

"செல்வத்துட் சேர்ந்தவர் வள னுண்டு மற்றவர்
ஒல்கிடத் துலப்பிலா வுணர்விலார் தொடர்பு"
(கலித். 25: 19 - 20.)

"குறைந்தோர்
பயனின் மையிற் பற்றுவிட் டொரூஉம்
நயனின் மாக்கள் போல" (அகநா. 71: 1-3.)

"விழுமிய ரேனும் வெறுக்கை யுலந்தாற்
பழுமரம் வீழ்ந்த பறவையிற் போவ."
(வளையாபதி.) (1293)

### 1294

இனிஅன்ன நின்னொடு சூழ்வார்யார் நெஞ்சே
துனிசெய்து துவ்வாய்காண் மற்று. 4

(இதுவும் அது.)

பரிமேலழகர்: நெஞ்சே - நெஞ்சே, துனி செய்து மற்று துவ்வாய் - நீ அவரைக் கண்டபொழுதே இன்பம் நுகரக் கருதுவதல்லது அவர் தவறு நோக்கி முன் புலவியை உண்டாக்கி அதனை அளவறிந்து பின் நுகரக் கருதாய்; இனி அன்ன நின்னொடு சூழ்வார் யார் – ஆகலான் இனி அப் பெற்றிப்பட்டவற்றை நின்னோடு எண்ணுவார் யார்? யான் அது செய்யேன்.

அப் பெற்றிப்பட்டன, புலக்கும் திறங்கள். காண் என்பது உரையசை. மற்று, வினைமாற்றின்கண் வந்தது. முன்னெல்லாம் புலப்பதாக எண்ணியிருந்து பின் புணர்ச்சி விதும்பலின், இவ்வாறு கூறினாள்.

### உரை வேறுபாடு

பரிப்பெருமாள்: தலைமகனோடு புலக்க நினைத்த நெஞ்சினை, "முன்பும் ஒருநாள் புலந்து முடிய நில்லாயாயினாய்; இன்னும் புலப்பேனாயின் அறை போகுவை; ஆகலான் தனியே எண்ணிக்கொள்கிறேன்; நின்னோடும் எண்ணேன்" என்று அதனோடு தலைமகள் புலந்து கூறியது. (1294)

### 1295

பெறாஅமை அஞ்சும் பெறின்பிரி வஞ்சும்
அறாஅ இடும்பைத்தென் நெஞ்சு. 5

(வாயிலாகச் சென்ற தோழி கேட்பத் தலைமகள் சொல்லியது.)

1 கலித். 25: 20.

**பரிமேலழகர் :** பெறுஅமை அஞ்சும் - காதலரைப் பெறுத ஞான்று அப் பெறுமைக்கு அஞ்சா நின்றது; பெறின் பிரிவு அஞ்சும் - பெற்றக்கால் வரக்கடவ பிரிவினை உட்கொண்டு அதற்கு அஞ்சா நின்றது; என் நெஞ்சு அறாஅ இடும்பைத்து - ஆகலான், என் நெஞ்சம் எஞ்ஞான்றும் நீங்காத இடும்பையை உடைத்தாயிற்று.

காதலரைப் பெற்றுவைத்துக் கலவி இழத்தல் உறுதி அன்று என்னும் கருத்தான் வாயில் நேர்கின்றாள் ஆகலின் பெறுஅமை அஞ்சும் என்றும், கலவி ஆராமையின் இன்னும் இவர் பிரிவராயின் யாது செய்தும் என்பது நிகழ்தலின் பெறின் பிரிவு அஞ்சும் என்றும், இவ்விரண்டும் அல்லது பிறிது இன்மையின் எஞ்ஞான்றும் அறு இடும்பைத்து என்றும் கூறினாள்.

### உரை வேறுபாடு

**மணக்குடவர் :** இது தலைமகள் ஆற்றாமை கண்டு தூதுவிடக் கருதிய தோழிக்கு, அவர் வந்தாலும் இதற்கு உள்ளது துன்பமே என்று அதனோடு புலந்து கூறியது. (*1295*)

### 1296

தனியே இருந்து நினைத்தக்கால் என்னைத்
தினிய இருந்ததென் நெஞ்சு. 6

(இதுவும் அது.)

**பரிமேலழகர் :** என் நெஞ்சு இருந்தது-என் நெஞ்சு ஈண்டு இருந்தது, தனியே இருந்து நினைத்தக்கால் - காதலரைப் பிரிந்திருந்து அவர் கொடுமைகளை யான் தன்னொடு நினைத்தக்கால், என்னை தினிய - அவ்வளவு அறிந்து என்னைத் தின்பது போன்று துன்பம் செய்தற்கே.

என்மாட்டிருந்தது, அன்று அவர் கொடுமைகளை உட்கொண்டு எனக்கு ஆற்றாமை செய்தற்கே; இன்று அவை நோக்கி அவரோடு புலத்தற்கு அன்று என்பதாம்.

### உரை வேறுபாடு

**மணக்குடவர் :** இது தலைமகள் நெஞ்சு அவர் செய்கின்ற கொடுமையை உட்கொண்டு உள்ளாதே, யான் தனிப்பட்டால் நலிவதாக இருந்தது; நீ வருதலானே இப்பொழுது தப்பினேன் என்று அதனோடு புலந்து தோழிக்குக் கூறியது. (*1296*)

### 1297

நாணும் மறந்தேன் அவர்மறக் கல்லாஎன்
மாணா மடநெஞ்சில் பட்டு. 7

(இதுவும் அது.)

**பரிமேலழகர் :** அவர் மறக்கல்லா என் மாணா மடநெஞ்சில் பட்டு - தன்னை மறந்த காதலரைத் தான் மறக்கமாட்டாத என் மாட்சிமை இல்லாத மட நெஞ்சுடனே கூடி, நாணும் மறந்தேன் - என் உயிரினும் சிறந்த நாண் தன்னையும் மறந்துவிட்டேன்.

மாணாமை - ஒரு நிலையில் நில்லாமை. மடமை - கண்டவழி நினைந்து காணாதவழி மறக்குந் தவற்றைக் காணாவழி நினைந்து கண்டவழி மறத்தல். நாண் - எஞ்ஞான்றும் கூடியொழுகினும் அஞ்ஞான்று கண்டார் போன்று ஒடுங்குதல். கண்டபொழுதே புணர்ச்சி விதும்பலின், அதனையும் மறந்தேன் என்றாள்.

உரை வேறுபாடு

**மணக்குடவர்:** மாணா - நன்மை இல்லாத. இது தலைமகள் யான் நாணாது தூதுவிட்டது, பின் நெஞ்சு மறவாமையாலே என்று அதனோடு புலந்து கூறியது.

**காளிங்கர்:** மாணா - தீய. (1297)

1298

எள்ளின் இளிவாம்என் றெண்ணி அவர்திறம்
உள்ளும் உயிர்க்காதல் நெஞ்சு. 8

(இதுவும் அது.)

**பரிமேலழகர்:** உயிர் காதல் நெஞ்சு - உயிர்மேற் காதலையுடைய என் நெஞ்சு, எள்ளின் இளிவு ஆம் என்று எண்ணி - நம்மை எள்ளிச் சென்றார் என்று நாமும் எள்ளுவோமாயின் பின் நமக்கு இளிவாம் என்று கருதி, அவர் திறம் உள்ளும் - அவர் திறத்தினையே நினையாநின்றது.

எள்ளுதல் - வாயில் மறுத்தல். இளிவு - வழிபடாமையானும் பிரிவாற்றாமையானும் நாணும் நிறையும் முதலிய இழத்தலானும் உளதாவது. திறம்: வாயில் நேர்தலும், வருதலும், கூடலும் முதலாயின. இளிவிற்கு அஞ்சுதலானும் இறந்துபட மாட்டாமையானும் கூடக் கருதாநின்றது என்பதாம்.

உரை வேறுபாடு

**மணக்குடவர்:** உயிர்க் காதல் நெஞ்சு - சாவமாட்டாத நெஞ்சு. இது தலைமகள், நெஞ்சு அவரைப்போலத் தானும் இகழலாயிருக்க இகழாநின்றதும் இல்லை; அவர் செயலைக் கேளாது சாவவும் வல்லுகின்றதில்லை என்று அதனோடு புலந்து கூறியது. (1298)

1299

துன்பத்திற் கியாரே துணைஆவார் தாமுடைய
நெஞ்சம் துணையல் வழி. 9

(உணர்ப்புவயின் வாரா ஊடற்கண் தலைமகன் சொல்லியது.)

**பரிமேலழகர்:** துன்பத்திற்கு - ஒருவருக்குத் துன்பம் வந்துழி அது நீக்குதற்கு, தாம் உடைய நெஞ்சம் துணை அல்வழி - தாம் உரித்தாகப் பெற்ற தம்முடைய நெஞ்சம் துணையாகாவழி, துணை ஆவார் யாரே - வேறு துணையாவார் ஒருவரும் இல்லை.

ஈண்டுத் துன்பமாவது, ஊடல் உணர்ப்புவயின் வாராமை. அதற்கு நெஞ்சம் துணையாகாமையாவது, அவளை அன்பிலள் என்று ஒழியாது கூடற்கண்ணே விதும்பல். ஒரு துணையும் இன்மையின் இஃது உற்று விடுதலே உள்ளது என்பதாம்.

உரை வேறுபாடு

**மணக்குடவர்:** இது தலைமகள் துணையாவார் யார் என்ற தோழிக்குக் கூறியது.

**பரிப்பெருமாள்:** துணையாவார் யார் என்றது தோழியைக் குறித்து. தலைமகள் வாயில் மறுத்த இடத்து நெருங்கிக் கூறிய வழி உடன்பட்ட நெஞ்சொடு புலந்து வாயில் நேர்வாள் சொல்லியது.

**காளிங்கர்:** தலைவி தோழியை நோக்கிக் கூறியது. (1299)

**1300**

தஞ்சம் தமர்அல்லர் ஏதிலார் தாமுடைய
நெஞ்சம் தமர்அல் வழி. 10

(இதுவும் அது.)

**பரிமேலழகர் :** தாம் உடைய நெஞ்சம் தமர் அல்வழி - தாம் உரித்தாக உடைய நெஞ்சம் ஒருவர்க்குத் தமர் அல்லாவழி, ஏதிலார் தமர் அல்லர் தஞ்சம் – அயலார் தமர் அல்லராதல் சொல்லவேண்டுமோ ?

பிறள் ஒருத்தியைக் காதலி என்று கருதி என் நெஞ்சே, என்னை வருத்தாநின்றபின் அப் பிறள் புலக்கின்றது எளிது என்பதாம்.

**உரை வேறுபாடு**

**பரிப்பெருமாள் :** தலைமகன் யாண்டு உளன் என்று குற்றேவல் மகளிரை அறியவிட, அவர் பரத்தையர் சேரி உளான் என்று கூறியவழி, அவர் வந்த காலத்தில் நெஞ்சு நம் வழி ஒழுகாது அவர் வழி ஒழுகினால் அவர் ஏதிலர் ஆகுவது எளிதன்றோ என்று நெஞ்சொடு புலந்து கூறியது. ஏதிலார் என்றாள், பிறர் மனையில் செல்லுதலான்.

**காளிங்கர் :** தோழியை நோக்கிக் கூறியது என்பர். தஞ்சம் என்பது எளிமைப்பொருட்டு. (*1300*)

# 131. புலவி

**பரிமேலழகர் :** அஃதாவது இருவர் நெஞ்சும் புணர்ச்சி விதும்பாது புலக்கக் கருதியவழி ஒருவரோடு ஒருவர் புலத்தல். அதிகார முறைமையும் இதனானே விளங்கும்.

**மணக்குடவர் :** புலவியாவது தலைமகனோடு தலைமகள் புலந்து கூறுதல்.

**1301**

புல்லா திராஅப் புலத்தை அவர்உறும்
அல்லல்நோய் காண்கம் சிறிது. 1

(வாயிலாகச் சென்ற தோழி தலைமகன் வாயில் சேர்தற்
பொருட்டு அவளொடு நகையாடிச் சொல்லியது.)

**பரிமேலழகர் :** அவர் உறும் அல்லல் நோய்[1] சிறிது காண்கம் - அங்ஙனம் புலந்தால் காதலர் எய்தும் அல்லல் நோயினை யாம் சிறிது காணக் கடவேம்; புல்லாது இரா புலத்தை[2] - நீ அவரை விரைந்துசென்று புல்லாதே இத் தொழிலை மேலிட்டுக் கொண்டிருந்து புலப்பாயாக.

அல்லல் நோய் - துன்பத்தைச் செய்யும் காமநோய். சிறிது என்றாள், புலவியை நீளவிடலாகாது என்பதுபற்றி. புலத்தை என்புழி ஐகாரம், "கடம்பூண் டொருகால்நீ வந்தை"[3] என்புழிப்போல முன்னிலைவினை விகுதி. புலத்தி என்பதூஉம் பாடம். புலவிக் குறிப்புக் கண்டு அவள் வழியளாய் நின்று நாம் உற்ற வருத்தம் அவரும் சிறிது உற்று அறிதல் வேண்டும் என நகையாடி நேர்வித்தவாறு.

---

1. (பி - ம்.) அல்லல் யாம். 2. (பி - ம்.) புலத்தல், புலத்தி.
3. கலித். 63: 12.

### உரை வேறுபாடு

**பரிதியார் :** இராக்காலம் இன்று சற்று நேரம் புலக்காமல் இருந்து நாயகர் வருத்தம் காணவேணும். *(1301)*

### 1302

உப்பமைந் தற்றால் புலவி அதுசிறிது
மிக்கற்றால் நீள விடல். 2

(புலவி ஒழிந்து வாயில் நேரும்வகை அவள் சொல்லியது.)

**பரிமேலழகர் :** புலவி உப்பு அமைந்தற்று – புலவி கலவி இன்பம் செய்தற்கு வேண்டும் அளவிற்றாதல் உப்புத் துய்ப்பனவற்றை இன்சுவைய வாக்கற்கு வேண்டும் அளவிற்றாதல் போலும்; சிறிது நீள விடல் அது மிக்கற்று – இனி அதனை அவ்வளவில் சிறிது மிகவிடுதல் அவ்வுப்பு அளவின் மிக்காற் போலும்.

நீளவிடல் – அளவறிந்து உணராது கலவிமேல் எழுந்த குறிப்பு அழுங்குமளவும் செய்தல். சிறிது நீள விடலாகாது என்றாள், நேர்விக்கின்றாள் ஆகலின். உப்பு மிக்கவழித் துய்ப்பது சுவையின்றானாற் போலப் புலவி மிக்கவழிக் கலவி இன்பம் இன்றாம் என்றமையின் இது பண்பு உவமை.

### உரை வேறுபாடு

**பரிதியார் :** கறி காய் அளவு அறிந்து உப்பிட்டுச் சமைத்ததற்கு ஒக்கும். புலவியும் கலவியும் ஏறாமல் குறையாமல் சமனாயிருக்கவேணும். *(1302)*

### 1303

அலந்தாரை அல்லல்நோய் செய்தற்றால் தம்மைப்
புலந்தாரைப் புல்லா விடல். 3

(பரத்தையர் இடத்துநின்றும் வந்த தலைமகனொடு தலைமகள் புலந்து சொல்லியது.)

**பரிமேலழகர் :** தம்மை புலந்தாரை [1] புல்லாவிடல் – தம்மைப் பெறாது புலந்த மகளிரைப் புலவி நீக்கிக் கலவாது ஆடவர் சேறல், அலந்தாரை அல்லல்நோய் செய்தற்று – பண்டே துன்பமுற்று அழிந்தாரை அதன்மேலும் மிக்க துன்பத்தினைச் செய்தல் போலும்.

பிறர்பால் சேறலின் நும்மைப் பெறாது புலந்து ஊடியிருக்கின்ற பரத்தையரைப் போய்ப் புலவி நீக்கிப் புல்லீராயின், அவர் ஆற்றார் என்பதாம்.

### உரை வேறுபாடு

**பரிப்பெருமாள் :** இஃது உணர்ப்புவயின் வாரா ஊடற்கண் தலைமகன் புலந்துழி அதனை அறிந்து அகம் புக்க தோழி தலைமகற்குச் சொல்லியது.

### மேற்கோள் விளக்கம்

புலத்தலும் ஊடலும் ஆகிய இடத்தும் சொலத்தகு கிளவி தோழிக்குரிய என்பதற்கு மேற்கோள். (தொல். கற்பு. 16, ந.) **(1303)**

---

1. (பி - ம்.) தாமும் புலந்தாரை.

1304

ஊடி யவரை உணராமை வாடிய
வள்ளி முதல்அரிந் தற்று. 4

(இதுவும் அது.)

பரிமேலழகர் : ஊடியவரை உணராமை – நும்மோடு ஊடிய பரத்தையரை ஊடல் உணர்த்திக் கூடாது ஒழிதல், வாடிய வள்ளி முதல் அரிந்தற்று– பண்டே நீர்பெறாது வாடிய கொடியை அடியிலே அறுத்தாற்போலும்.

நீர் பரத்தையரிடத்திர் ஆயவழி எம் புதல்வரைக் கண்டு ஆற்றியிருக்கற் பாலமாய யாம் நும்மோடு ஊடுதற்கு உரியம் அல்லம். அன்மையின், எம்மை உணர்த்தல் வேண்டா. உரியராய் ஊடிய பரத்தையரையே உணர்த்தல் வேண்டுவது. அதனால் ஆண்டுச் சென்மின் என்பதாம்.

உரை வேறுபாடு

பரிதியார் : ஊடிய நாயகரை உறவு செய்யாமல் இருந்த நெஞ்சே, உன்னாலே நாயகர் பிரிந்தார். இனி வாடிய கொடிக்கு வேரற்றது ஒக்கும், அழகு அழியும். *(1304)*

1305

நலத்தகை நல்லவர்க் கேஎர் புலத்தகை
பூவன்ன கண்ணார் அகத்து. 5

(தலைமகளைப் புலவி நீக்கிக் கூடிய தலைமகன் தன்னுள்ளே சொல்லியது.)

பரிமேலழகர் : நலத்தகை நல்லவர்க்கு ஏர் – நற்குணங்களால் தகுதியுடையராய தலைவர்க்கும் அழகாவது, பூ அன்ன கண்ணார் அகத்து புலத்தகை – தம் பூவன்ன கண்ணார் நெஞ்சின்கண் நிகழும் புலவி மிகுதியன்றே.

சிறப்பும்மை விகாரத்தால் தொக்கது. தவறு இல்லார்க்கும் புலவி இனிது என்பான், நலத்தகை நல்லவர்க்கும் என்றான். அழகு, இன்பப் பயனைத் தலைப்படுதல். தான் நுகர்ந்த இன்பத்திற்கு ஏதுவாகிய புலவியை வியந்து கூறியவாறு.

உரை வேறுபாடு

மணக்குடவர் : நலத்தகையினானே நல்லாரான பரத்தையர்க்கு ஓர் அழகாம், பூஅன்ன கண்ணார்மாட்டுப் புலத்தல்.

நமக்கு ஆகார்மாட்டுப் புலத்தல் தீது என்றவாறு. இது பரத்தையோடு புலந்து கூறிய தலைமகட்குத் தோழி கூறியது. *(1305)*

1306

துனியும் புலவியும் இல்லாயின் காமம்
கனியும் கருக்காயும் அற்று. 6

(இதுவும் அது.)

பரிமேலழகர் : துனியும் புலவியும் இல் ஆயின் – முதிர்ந்த கலாம் ஆகிய துனியும் இளைய கலாம் ஆகிய புலவியும் இல்லையாயின், காமம் கனியும் கருக்காயும் அற்று – காமம் செவ்வி முதிர்ந்த பழமும் இளங்காயும் போலும்.

மிக முதிர்ந்து இறும் எல்லைத்தாய கனி நுகர்வார்க்கு மிகவும் இனிமை செய்யாதாகலின் துனி இல்லையாயின் கனியற்று என்றும், கட்டிளமைத்தாய காய் நுகரும் செவ்வித்து அன்று ஆகலின் புலவி இல்லையாயின் கருக்காயற்று என்றும் கூறினன். இவ்விரண்டும் வேண்டும் என்று வியந்து கூறியவாறு.

### உரை வேறுபாடு

*மணக்குடவர் :* உணராது நீட்டிக்கின்ற துனியும் உணர மீள்கின்ற புலவியும் இல்லையாயின், காமம் அழுகிய பழம்போலப் புளிக்கும்; காய் போலத் துவர்க்கும்; ஆதலால், இவை உணர்தற்கு நல்லது உளது என்று தலைமகள் கூறியவாறு.

*பரிப்பெருமாள் :* தலைமகள் புலவி நீட்டித்தவழி துனி இல்லையாயின் பழம்போல இனிமை தரும்.

*பரிதியார் :* துனியும் புலவியும் இல்லாத காமம் பழத்தைப் போட்டுக் காயைத் தின்றதற்கு ஒக்கும்.

### ஒப்புமை

1. **துனியும் புலவியும் :**

"இன்ன துனியும் புலவியும் ஏற்பிக்கும்." *(பரி. 20: 96.)*

2. **கனியும் கருக்காயும் :**

"திருவே யனையாள் முகமே தெரியின்
கருவே கனியே விளைகா மவிதைக்
கெருவே." *(கம்ப. கடிமணப். 14.)*

3. **முற்றும் :**

"முயங்காக்கால் பாயும் பசலைமற் றூடி
உயங்காக்கால் உப்பின்றும் காமம் – வயங்கோதம்
நில்லாத் திரையலைக்கும் நீள்கழித் தண்சேர்ப்ப
புல்லாப் புலப்ப தோர் ஆறு." *(நாலடி. 391.)* *(1306)*

## 1307

ஊடலின் உண்டாங்கோர் துன்பம் புணர்வது
நீடுவ தன்றுகொல் என்று. 7

*(இதுவும் அது.)*

*பரிமேலழகர் :* புணர்வது நீடுவது (கொல்) அன்றுகொல் என்று – இனிப் புணர்ச்சி நீட்டிக்குமோ நீட்டியாதோ என்று கருதலான், ஊடலின் ஓர் துன்பம் உண்டு – இன்பத்திற்கு இன்றியமையாத ஊடலின்கண்ணேயும் ஒரு துன்பம் நிகழும்.

என்று என்னும் எச்சத்திற்குக் கருதலான் என்பது வருவிக்கப்பட்டது. சிறப்பும்மை விகாரத்தால் தொக்கது. கொல் என்பதனை நீடுவது என்பதுடனும் கூட்டுக. ஆங்கு என்பது அசைநிலை. ஊடல் கூடற்கண் விரைவித்தல் கூறியவாறு. *(1307)*

## 1308

நோதல் எவன்மற்று நொந்தாரென் றஃதறியும்
காதலர் இல்லா வழி. 8

(உணர்ப்புவயின் வாரா ஊடற்கண் தலைமகன் தலைமகளொடு புலந்து சொல்லியது)

**பரிமேலழகர்:** நொந்தார் என்று அஃது அறியும் காதலர் இல்லா வழி[1] - இவர் நம் பொருட்டாக நொந்தார் என்று அந் நோவினை அறியும் அன்புடையாரைப் பெறுவழி, நோதல் மற்று எவன் - ஒருவர் நோகின்றதனற் பயன் என்?

அறிதல் - ஈண்டு, ஊடலை இனிது உணர்தல். மற்று, வினைமாற்றின்கண் வந்தது. இவள் நம் காதலியல்லள்: அன்மையின் இந்நோய் அறியாள்; அறியாமையின், நாம் புலக்கின்றதனுல் பயன் இல்லை எனத் தன் ஆற்ருமை உணர்த்தியவாறு.

உரை வேறுபாடு

**மணக்குடவர்:** இஃது உணர்ப்புவயின் வாரா ஊடற்கண் தலைமகன் புலந்துழி, அதனை அறிந்து அகம் புக்க தோழி அவனுக்குச் சொல்லியது.

**பரிதியார்:** காதலர் இல்லாவிடத்து நெஞ்சே, மயல் நோய் கொள்ளாதே. அவர் இருந்தால் அல்லவோ உன் மயல் வருத்தம் அறிந்து விசாரிப்பார்? *(1308)*

**1309**

நீரும் நிழல தினிதே புலவியும்
வீழுநர் கண்ணே இனிது. 9

(இதுவும் அது.)

**பரிமேலழகர்:** நீரும் நிழலதே இனிது - உயிர்க்கு இன்றியமையாத நீரும் நிழலின்கண்ணதே[2] இனிதாவது; ஏனை வெயிலின்கண்ணது ஆகாது. புலவியும் வீழுநர்கண்ணே இனிது - அதுபோலக் கலவிக்கு இன்றியமையாத புலவியும் அன்புடையார்கண்ணே இனிதாவது; ஏனை அன்பிலார்கண் ஆகாது.

நிழற்கண் இருந்த நீர் குளிர்ச்சிமிக்குத் தாகம் தணித்தலின் இனிதாயிற்று. வீழுநர் - ஆற்ருமைக்கு நோதலும் கூடுதற்கண் வேட்கையும் உடையராவார். இவள் நம்மாட்டு அவ் விரண்டும் இன்மையின் இப்புலவி தானும் இன்னுதாகாநின்றது என்பதாம்.

உரை வேறுபாடு

**பரிப்பெருமாள்:** மேல் புலவியின்கண் ஒரு துன்பம் உண்டு என்று தலைமகன் கூறிய சொற்கேட்டு, அஃது இன்பமாவது அன்பு உடையார்க்கு; நுமக்கு அன்பு இன்மையால் துன்பம் உண்டாயிற்று என்று தலைமகள் கூறியது.

**பரிதியார்:** புலவியும் வீழுநர்கண்ணே இனிது - நாயகர் நல்லராகில் புலவி நன்று.

ஒப்புமை

**புலவியும் வீழுநர்கண்ணே இனிது:**
"புலவிஃ தெவனே அன்பிலங் கடையே." *(குறுந். 93: 4.)*
*(1309)*

1. (பி - ம்.) காதல் அவரில் வழி.
2. ஏகாரத்தைப் பிரித்துக் கூட்டினர்.

**1310**

ஊடல் உணங்க விடுவாரோ டென்நெஞ்சம்
கூடுவேம் என்ப தவா. 10

(இதுவும் அது.)

**பரிமேலழகர் :** ஊடல் உணங்க - தான் ஊடற்கண்ணே மெலியா நிற்கவும், விடுவாரோடு கூடுவேம் என்பது என் நெஞ்சம் அவா - விட்டிருக்க வல்லாரோடு கூடக் கடவேம் என்று என் நெஞ்சம் முயறற்கு ஏது தன் அவாவே; பிறிது இல்லை.

அன்பும் அருளும் இல்லாதாரை உடையார் என்றும் அவரோடு யாம் கூடுவம் என்றும் கருதி அதற்கு முயறல் அவாவுற்றார் செயலாகலின், கூடுவேம் என்பது அவா என்றான். காரியம் காரணமாக உபசரிக்கப்பட்டது. இக் கூட்டம் முடியாது என்பதாம்.

உரை வேறுபாடு

**மணக்குடவர்:** இது புலவி நீங்கவேண்டும் என்ற தோழிக்குத் தலைமகள் புலவி தீர்வாளாய்ச் சொல்லியது. *(1310)*

---

# 132. புலவி நுணுக்கம்

**பரிமேலழகர்.** அது புலவியது நுணுக்கம் என விரியும். அஃதாவது தலைமகனும் தலைமகளும் ஓர் அமளிக்கண் கூடியிருந்துழி அவர்மாட்டுப் புலத்தற்காரணம் இல்லையாகவும் காதல் கைம்மிகுதலான் நுண்ணியதோர் காரணம் உளதாக உட்கொண்டு அதனை அவன்மேல் ஏற்றி அவள் புலத்தல். காரணத்தின் நுணுக்கம் காரியத்தின்மேல் நின்றது அதிகார முறைமையும் இதனானே விளங்கும்.

**மணக்குடவர்:** புலவி நுணுக்கமாவது, தலைமகன்மாட்டுத் தவறிலவாயினும், தன் காதல் மிகுதியால் சொல்லெச்சத்தினாலும் குறிப்பெச்சத்தினாலும் வேறுபடப் பொருள்கொண்டு, தலைமகள் புலந்து கூறுதல். இது செவ்வயின் தோன்றாது ஆதலின் நுணுக்கமாயிற்று.

**1311**

பெண்ணியலார் எல்லாரும் கண்ணிற் பொதுஉண்பர்
நண்ணேன் பரத்தநின் மார்பு. 1

(உலாப்போய் வந்த தலைமகன் பள்ளியிடத்
தானாகத் தலைமகள் சொல்லியது.)

**பரிமேலழகர்:** பரத்த - பரத்தைமையுடையாய், பெண் இயலார் எல்லாரும் கண்ணின் பொது உண்பர் - நின்னைப் பெண்இயல்பினை உடையார் யாவரும் தம் கண்ணான் பொதுவாக உண்பர்; நின் மார்பு நண்ணேன் - அதனான் அவர் மிச்சிலாய நின் மார்பினைப் பொருந்தேன்.

கற்பு நாண் முதலிய நற்குணங்கள் இன்மையின் பரத்தையர்க்கு உள்ளது பெண்இயற்கைமாத்திரமே என்னும் கருத்தால் பெண்இயலார் என்றாள். பொதுவாக உண்டல், தம் சேரிச்செலவின் முறையான் அன்றி ஒருகாலத்து ஒருங்கு நோக்குதல். அதுவும் ஓர் குற்றம். தான் நோக்கி இன்புற்றவாறே அவரும் நோக்கி இன்புறுவர் என ஆசங்கித்து அவர்பால் பாராமை எய்துதலின், நுணுக்கம் ஆயிற்று.

**ஒப்புமை**

**முற்றும்:**

"கருங்கொள்ளும் செங்கொள்ளும் தூணிப் பதக்கென்
றொருங்கொப்பக் கொண்டானும் ஊரன் - ஒருங்கொவ்வா
நன்னுதலார்த் தோய்ந்த வரைமார்பன் நீராடா
தென்னையும் தோய வரும்". (நாலடி. 387.)

"பரத்தையர் தோய்ந்த மார்பம்
பத்தினி மகளிர் தீண்டார்" (சீவக. 2722.) (1311)

## 1312

**ஊடி இருந்தேமாத் தும்மினர் யாம்தம்மை**
**நீடுவாழ் கெ ்பாக் கறிந்து.** 2

(தலைமகன் நீக்கத்துச் சென்ற தோழிக்குத் தலைமகள்
பள்ளியிடத்து நிகழ்ந்தது கூறியது.)

**பரிமேலழகர்:** ஊடி இருந்தேமா தும்மினர் – யாம் தம்மோடு ஊடி உரையாடாது இருந்தேமாகக் காதலர் தும்மினர், யாம் தம்மை நீடு வாழ்க என்பாக்கு அறிந்து - அதுநீங்கித் தம்மை நீடுவாழ்க என்று உரையாடுவேமாகக் கருதி.

தும்மியக்கால் வாழ்த்துதல் மரபு ஆகலான், உரையாடல் வேண்டிற்று என்பதாம். இயல்பான் நிகழ்ந்த தும்மலைக் குறிப்பான் நிகழ்ந்ததாகக் கோடலின், நுணுக்கமாயிற்று.

**உரை வேறுபாடு**

**பரிதியார்:** ஊடியிருக்கையில் நாயகர் தும்மினர், நாயகி வாழ்த்தினல் ஊடல் தீரலாம் என்று. அதுவறிந்து நாயகி தன் மங்கல நாணைத் தொட்டு மனத்திலே வாழ்த்தினள். (1312)

## 1313

**கோட்டுப்பூச் சூடினும் காயும் ஒருத்தியைக்**
**காட்டிய சூடினீர் என்று.** 3

(தலைமகள் புலவிக்குறிப்பினைக் கண்டு நீவிர் கூடி ஒழுகா
நிற்கவும் இது நிகழ்தற்குக் காரணம் யாது என்ற
தோழிக்குத் தலைமகன் சொல்லியது.)

**பரிமேலழகர்:** கோட்டுப்பூ சூடினும் - யான் கோடுதலைச் செய்யும் மாலையைச் சூடினேன் ஆயினும், ஒருத்தியை காட்டிய சூடினீர் என்று காயும் - நும்மால் காதலிக்கப்பட்டாள் ஒருத்திக்கு இப் பூவணி காட்டல் வேண்டிச் சூடினீர் என்று வெகுளாநிற்கும்; இத் தன்மையாட்கு ஒரு காரணம் வேண்டுமோ?

கோடு என்பது முதனிலைத் தொழிற்பெயர். பூ : ஆகுபெயர். வளையமாகச் சூடினும் என்பதாம். "கோட்டங் கண்ணியும் கொடுந்திரை யாடையும்"[1] என்றார் பிறரும். இனி, அம் மருத நிலத்துப் பூ அன்றி வேற்று நிலத்துக் கோட்டுப் பூவைச் சூடினேன் ஆயினும் ஈண்டையாள் பிறள் ஒருத்திக்கு அவ் வேற்றுப் பூவணி காட்டல்வேண்டிச் சூடினீர் என்று வெகுளும் எனினும் அமையும்.

1. புறநா. 275: 1.

### உரை வேறுபாடு

**மணக்குடவர்:** கோட்டுப்பூ - பக்கப்பூ; பக்கப்பூ - ஒப்பனைப்பூ.

**பரிப்பெருமாள்:** அன்றியும் கோட்டுப்பூச் சூடினேன் ஆயின், இப்பூ இந்நிலத்தில் உள்ளது ஒன்றல்ல, பிறர் நிலத்தில் உள்ளது என்று ஐயுற்று வெகுளும், இதனை நீர் சூடியதும் அந்நிலத்தில் உள்ளாள் ஒருத்தியை எனக்கு அறிவித்தற்பொருட்டு என்று சொல்லி என்றுமாம்.

**பரிதியார்:** செண்பகப்பூ, பாதிரிப்பூ, புன்னைப்பூச் சூடினும், குறிஞ்சி நிலத்து நாயகியை வேண்டிச் சூடினீர் என்று ஊடினாள். *(1313)*

## 1314

யாரினும் காதலம் என்றேனா ஊடினாள்
யாரினும் யாரினும் என்று. 4

(இதுவும் அது.)

**பரிமேலழகர்:** யாரினும் காதலம் என்றேனா - காமம் நுகர்தற்குரிய இருவராயினார் யாவரினும் யாம் மிக்க காதலையுடையேம் என்பது கருதி யாரினும் காதலம் என்றேனாக, யாரினும் யாரினும் என்று ஊடினாள் - நின் தோழி அது கருதாது, என்னால் காதலிக்கப்பட்ட மகளிர் பலருள்ளும் நின்கண் காதலுடையேன் என்றேனாகக் கருதி, அம் மகளிர் யாரினும் என்கண் காதலுடையர் ஆயினீர் என்று சொல்லிப் புலந்தாள்.

தலைமகள் கருத்திற்குத் தன்மைப்பன்மை உயர்ச்சிக்கண் வந்தது. யான் அன்பு மிகுதியால் சொல்லியதனைக் கருத்து வேறுபடக் கொண்டது அல்லது பிறிது காரணம் இல்லை என்பதாம்.

### உரை வேறுபாடு

**பரிப்பெருமாள்:** தலைமகன் வாயில் வேண்டின இடத்து நின் குற்றத்தினாலே ஊடல் மிக்கிருந்தாள் என்று கூறிய தோழிக்கு, அவள் ஊடுதற்கு யான் குற்றம் செய்யவேண்டா; யான் சொல்லுவனவும் செய்வனவும் எல்லாம் குற்றமாய் இருக்கும்; அவள் குற்றமாகக் கொண்டவற்றைக் கேள் என்று சொல்லுவான், முற்பட அன்புடையேன் என்று சொல்லியது குற்றமாயிற்று என்று கூறியது. *(1314)*

## 1315

இம்மைப் பிறப்பில் பிரியலம் என்றேனாக்
கண்நிறை நீர்கொண் டனள். 5

(இதுவும் அது.)

**பரிமேலழகர்:** இம்மை பிறப்பில் பிரியலம் என்றேனா - காதல் மிகுதியான் இம்மையாகிய பிறப்பின்கண் யாம் பிரியேம் என்று சொன்னேனாக, கண் நிறை நீர்கொண்டனள் - அதனால் ஏனை மறுமையாகிய பிறப்பின்கண் பிரிவல் என்னும் குறிப்பினேனாகக் கருதி அவள் தன்கண் நிறைந்த நீரினைக் கொண்டாள்.[1]

வெளிப்படு சொல்லைக் குறிப்புச் சொல்லாகக் கொள்கின்றது அல்லது என்பால் தவறில்லை என்பதாம்.

---

1. "இம்மை மாறி மறுமை யாயினும், நீயா கியரென் கணவனை, யானா கியர்நின் நெஞ்சுநேர் பவளே" (குறுந். 49 : 3-5) என்பது மகளிர் விருப்பமாகலின் ஊடினாள்.

உரை வேறுபாடு

பரிப்பெருமாள்: இது பிரியேன் எனினும் குற்றமாம் என்றது. (1315)

1316

உள்ளினேன் என்றேன்மற் றென்மறந்தீர் என்றென்னைப்
புல்லாள் புலத்தக் கனள். 6

(இதுவும் அது.)

பரிமேலழகர்: உள்ளினேன் என்றேன் - பிரிந்த காலத்து நின்னை இடையின்றி நினைந்தேன் என்னும் கருத்தால் யான் உள்ளினேன் என்றேன்; மற்று என் மறந்தீர் என்று என்னை புல்லாள் புலத்தக்கனள் – என, அதனை ஒருகால் மறந்து பின் நினைந்தேன் என்றதாகக் கருதி, என்னை இடையே மறந்தீர் என்று சொல்லி, முன் புல்லுதற்கு அமைந்தவள் அஃது ஒழிந்து புலத்தற்கு அமைந்தாள்.

மற்று, வினைமாற்றின்கண் வந்தது. அருத்தாபத்திவகையால் மறத்தலை உட்கொண்டு புலந்தாள் என்பதாம். (1316)

1317

வழுத்தினாள் தும்மினேன் ஆக அழித்தழுதாள்
யார்உள்ளித் தும்மினீர் என்று 7

(இதுவும் அது.)

பரிமேலழகர்: தும்மினேனாக வழுத்தினாள் - கூடியிருக்கின்றவள் யான் தும்மினேனாகத் தன் இயற்கைபற்றி வாழ்த்தினாள்; அழித்து யார் உள்ளி தும்மினீர் என்று அழுதாள் - அங்ஙனம் வாழ்த்திய தானே மறித்து, நும்மை நினைத்து வருந்துகின்ற மகளிருள் யாவர் நினைத்தலால் தும்மினீர் என்று சொல்லிப் புலந்து அழுதாள்.

வாழ்த்தலொடு புலத்தல் இயையாமையின், அழித்து என்றான். அன்புடையார் நினைத்தவழி அந் நினைக்கப்பட்டார்க்குத் தும்மல் தோன்றும் என்பது மகளிர் வழக்கு. இவ்வழக்கை உள்வழக்காகக் கருதிப் புலந்தாள் என்பதாம்.

உரை வேறுபாடு

மணக்குடவர்: இது தும்மினும் குற்றம் என்று கூறியது. (1317)

1318

தும்முச் செறுப்ப அழுதாள் நுமர்உள்ளல்
எம்மை மறைத்திரோ என்று. 8

(இதுவும் அது.)

பரிமேலழகர்: தும்மு செறுப்ப – எனக்குத் தும்மல் தோன்றியவழி யார் உள்ளித் தும்மினீர் என்று புலத்தலை அஞ்சி, அதனை யான் அடக்கினேன்; அங்ஙனம் அடக்கவும், நுமர் உள்ளல் எம்மை மறைத்திரோ என்று அழுதாள் – நுமர் நும்மை நினைத்தலை எம்மை மறைக்க லுற்றீரோ என்று சொல்லிப் புலந்து அழுதாள்.

தும்மு என்பது முதல்நிலைத் தொழிற்பெயர். செறுப்ப என்புழி இறந்தது தழீஇய எச்சவும்மை விகாரத்தால் தொக்கது. எம்மை என்பது, நும்மொடு யாதும் இயைபில்லாத எம்மை என்பது படநின்ற இசையெச்சம். இதனை வடநூலார் காகு என்ப. தும்மினும் குற்றம், ஒழியினும் குற்றம், ஆயக்கால் செயற்பாலது யாது என்பதாம்.

மேற்கோள் விளக்கம்

புலவியுள் அழுத மங்கலம். (தொல். உவம. 37, ந.) (1318)

1319

தன்னை உணர்த்தினும் காயும் பிறர்க்கும்நீர்
இந்நீரர் ஆகுதிர் என்று. 9

(இதுவும் அது.)

பரிமேலழகர்: தன்னை உணர்த்தினும் காயும் - இவ்வாற்றான் ஊடிய தன்னை யான் பணிந்து உணர்த்துங்காலும் வெகுளாநிற்கும், பிறர்க்கும் நீர் இந்நீரர் ஆகுதிர் என்று - பிற மகளிர்க்கும் அவர் ஊடிய வழி இவ்வாறே பணிந்து உணர்த்தும் நீர்மையை உடையீர் ஆகுதிர் என்று சொல்லி.

இவள் தெளிவித்த வழியும் தெளியாள் என்பதுபற்றி என்மேல் ஏற்றிய தவற்றை உடம்பட்டுப் பணிந்தேன்; பணிய அது தானும் புலத்தற்கு ஏதுவாய் முடிந்தது; இனி இவள்மாட்டுச் செய்யத் தகுவது யாது என்பதாம்.

உரை வேறுபாடு

மணக்குடவர்: இது தன்னைப் போற்றினும் குற்றம் என்று கூறியது. (1319)

1320

நினைத்திருந்து நோக்கினும் காயும் அனைத்தும்நீர்
யார்உள்ளி நோக்கினீர் என்று. 10

(இதுவும் அது.)

பரிமேலழகர்: நினைத்து இருந்து நோக்கினும் காயும் - என்சொற்களும் செயல்களும் பற்றித் தான் வெகுடலான், அவற்றை ஒழிந்திருந்து தன் அவயவங்களது ஒப்பின்மையை நினைந்து அவற்றையே நோக்கினும் என்னை வெகுளாநிற்கும், அனைத்தும் நீர் நோக்கினீர் யார் உள்ளி என்று - நீர் என் அவயவம் அனைத்தும் நோக்கினீர் அவற்றது ஒப்புமையான் எம் மகளிரை நினைந்து என்று சொல்லி.

யான் எல்லா அவயவங்களானும் ஒருத்தியோடு ஒத்தல் கூடாமையின் ஒன்றால் ஒருவராகப் பலரையும் நினைக்கவேண்டும்; அவர் எல்லாரையும் யான் அறியச் சொல்லுமின் என்னும் கருத்தால், அனைத்தும் நோக்கினீர், யார் உள்ளி என்றாள். வாளா இருத்தலும் குற்றம் ஆயிற்று என்பதாம்.

உரை வேறுபாடு

மணக்குடவர்: இது பார்க்கினும் குற்றம் என்று கூறியது. (1320)

# 133. ஊடல் உவகை

**பரிமேலழகர் :** அஃதாவது அப் பெற்றித்தாய ஊடலால் தமக்குக் கூடல் இன்பம் சிறந்துழி அச் சிறப்பிற்கு ஏதுவாய அவ் வூடலைத் தலைமகள் உவத்தலும் தலைமகன் உவத்தலும் ஆம். அதிகார முறைமையும் இதனானே விளங்கும்.

### 1321

இல்லை தவறவர்க் காயினும் ஊடுதல்
வல்ல தவர்அளிக்கு மாறு. 1

(தலைமகள் காரணம் இன்றிப் புலக்கின்றமை கேட்ட தோழி அங்ஙனம் நீ புலக்கின்றது என்னை என்றாட்கு அவள் சொல்லியது.)

**பரிமேலழகர் :** அவர்க்குத் தவறு இல்லை ஆயினும் - அவர் மாட்டுத் தவறு இல்லை ஆயினும், அவர் அளிக்குமாறு ஊடுதல் வல்லது - நமக்கு அவர் தலையளி செய்கின்றவாறு அவரோடு ஊடுதலை விளைக்க வற்றாகின்றது.

அவர்க்கு என்பது வேற்றுமை மயக்கம். அளவிறந்த இன்பத்தர் ஆகலின் யான் எய்தற்பாலதாய இத் தலையளி ஒழிந்தாரும் எய்துவர் எனக் கருதி அது பொறுமையான் ஊடல் நிகழாநின்றது என்பதாம்.

#### உரை வேறுபாடு

**மணக்குடவர் :** ஊடுதல் வல்லது அவர் அளிக்குமாறு - அவர் செய்யும் அருள் ஊடுதலைச் செய்யவற்று.

#### ஒப்புமை

முற்றும் :

" ......................துனிபடர்ந்து
ஊடல் உறுவேன் தோழி நீடு
புலம்புசேண் அகல நீங்கிப்
புலவி யுணர்த்தல் வன்மை யானே." (நற். 217 : 6-9.) (1321)

### 1322

ஊடலின் தோன்றும் சிறுதுனி நல்லளி
வாடினும் பாடு பெறும். 2

(புலவாக்காலும் அத் தலையளி பெறலாயிருக்க அஃது இழந்து புலவியான் வருந்துவது என்னை என்றாட்கு அவள் சொல்லியது.)

**பரிமேலழகர் :** ஊடலின் தோன்றும் சிறு துனி - ஊடல் ஏதுவாக நங்கண் தோன்றுகின்ற சிறிய துனிதன்னால், நல் அளி வாடினும் பாடு பெறும் - காதலர் செய்யும் நல்ல தலையளி வாடுமாயினும் பெருமை எய்தும்.

தவறு இன்றி நிகழ்கின்ற ஊடல் கடிதின் நீங்கலின் அத் துன்பமும் நில்லாது என்பாள் சிறு துனி என்றும், ஆராமைபற்றி நிகழ்தலின் அதனான் நல்லளி வாடாது என்பாள் வாடினும் என்றும், பின்னே பேரின்பம் பயக்கும் என்பாள் பாடு பெறும் என்றும் கூறினாள். அது வருத்தம் எனப்படாது என்பதாம்.

#### உரை வேறுபாடு

**மணக்குடவர் :** பாடு - அழகு. புணராது ஒழியினும் இன்பமாம் என்று கூறியவாறு.

காளிங்கர் : புணர்தல் இன்பம் என்றூர். இது புணராது ஒழியினு மாம் என்று கூறப்பட்டது. (1322)

## 1323

புலத்தலின் புத்தேள்நாடு உண்டோ நிலத்தொடு
நீர்இயைந் தன்னார் அகத்து. 3

(இதுவும் அது.)

பரிமேலழகர் : நிலத்தொடு நீர் இயைந்து அன்னார் அகத்து புலத்தலின் - நிலத்தோடு நீர் கலந்தாற்போல ஒற்றுமை உடைய காதலர் மாட்டுப் புலத்தல்போல, புத்தேள் நாடு உண்டோ - நமக்கு இன்பம் தருவதொரு புத்தேள் உலகம் உண்டோ? இல்லை.

நீர் தான் நின்ற நிலத்து இயல்பிற்று ஆமாறுபோலக்[1] காதலரும் தாம் கூடிய மகளிர் இயல்பினர் ஆதலான் அதுபற்றி அவரோடு புலவி நிகழும் என்பாள் நிலத்தொடு நீர் இயைந்தன்னரகத்து என்றும், அவர் நமக்கும் அன்னராகலின் அப்புலவி பின்னே பேரின்பம் பயவா நின்றது என்பாள் புலத்தலின் புத்தேள் நாடு உண்டோ என்றும் கூறினாள். உவமம் பயன் பற்றி வந்தது.

### உரை வேறுபாடு

மணக்குடவர் : நிலத்தொடு நீர் இயைதலால் அவை வெப்பமும் தட்பமும் கூடி இருக்குமாறுபோல, இன்பமும் துன்பமும் கூட அநுபவிப் பார்மாட்டு என்றவாறு.

### ஒப்புமை

1. புலத்தல் புத்தேள் நாட்டினும் இனிது :

" .......................இனத்தின் இயன்ற
இன்னு மையினும் இனிதோ
இனிதெனப் படூஉம் புத்தேள் நாடே." (குறுந். 288 : 3-5.)

2. நிலத்தொடு நீரியைந் தன்னர் :

" செம்புலப் பெயல்நீர் போல
அன்புடை நெஞ்சம் தாம்கலந் தனவே." (குறுந். 40 : 4-5.)

(1323)

## 1324

புல்லி விடாஅப் புலவியுள் தோன்றும்என்
உள்ளம் உடைக்கும் படை. 4

(அப் புலவி இனி யாதான் நீங்கும் என்றாட்குச் சொல்லியது.)

பரிமேலழகர் : புல்லி விடாஅ புலவியுள் தோன்றும் - காதலரைப் புல்லிக்கொண்டு பின் விடாமைக்கு ஏதுவாகிய அப் புலவிக்கண்ணே உளதாம், என் உள்ளம் உடைக்கும் படை - அதன்மேற் சென்ற என் உள்ளத்தைக் கெடுக்கும் படைக்கலம்.

புலவியுள் என்னும் ஏழாவது வினை நிகழ்ச்சிக்கண் வந்தது. என் உள்ளம் உடைக்கும் படைக்கலம் என்றது வணக்கத்தையும் பணிமொழியை யும். படைக்கலம் என்றாள், அவற்றான் அப் புலவி உள்ளம் அழிதலின். புலவி நீங்கும் திறம் கூறியவாறு.

1. குறள், 452.

உரை வேறுபாடு

பரிப்பெருமாள் : அஃதாவது தலைமகள் புலவியால் கூறும் சொற்கள். அது புணர்ந்த பின்பு தோற்றுமையால் அதனைக் கேட்டால் இன்பம் உடைத்து என்று கூறியது. *(1324)*

**1325**

தவறிலர் ஆயினும் தாம்வீழ்வார் மென்றோள்
அகறலின் ஆங்கொன் றுடைத்து. 5

(தலைமகளை ஊடல்நீக்கிக் கூடிய தலைமகன் கழிஉவகையனுய்த் தன்னுள்ளே சொல்லியது.)

பரிமேலழகர் : தவறு இலர் ஆயினும் தாம் வீழ்வார் மென் தோள் அகறலின் - ஆடவர் தங்கண் தவறு இலர் ஆயினும் உடையார்போல ஊடப் பட்டுத் தாம் விரும்பும் மகளிருடைய மெல்லிய தோள்களைக் கூடப்பெறாத எல்லைக்கண், ஆங்கு ஒன்று உடைத்து - அவர்க்கு அப் பெற்றியதோர் இன்பம் பயத்தல் உடைத்து.

உடையராயக்கால் இறந்த இன்பத்தோடு வரும் இன்பமும் எய்துவர் ஆகலின், அது மிக நன்று; மற்றை இலராயக்காலும் வரும் இன்பத்தை இகழ்ந்ததில்லை என்னும் கருத்தால், தவறிலராயினும் ஆங்கு ஒன்று உடைத்து என்றான். ஊடலின் ஆய இன்பம் அளவிறத்தலின் கூறற்கு அரிது என்பான், அப் பெற்றியதொன்று[1] என்றான்.

தவறு இன்றி ஊடியதூஉம் எனக்கு இன்பம் ஆயிற்று என்பதாம்.

உரை வேறுபாடு

மணக்குடவர் : இத் குற்றம் உண்டாயினும் இல்லையாயினும், ஊடலில் கூடல் நன்று என்றது.

பரிதியார் : நாயகர்பேரில் தவறில்லை ஆயினும் குற்றம் உண்டாக்கி ஊடுதல் காமத்துக்கு இன்பம். *(1325)*

**1326**

உணலினும் உண்ட தறல்இனிது காமம்
புணர்தலின் ஊடல் இனிது. 6

(இதுவும் அது.)

பரிமேலழகர் : உணலினும் உண்டது அறல் இனிது - உயிர்க்கு மேல் உண்பதனினும் முன் உண்டது அறுதல் இன்பம் தரும்; காமம் புணர் தலின் ஊடல் இனிது - அதுபோலக் காமத்திற்கு மேல் புணர்தலினும் முன்னைத் தவறுபற்றி ஊடுதல் இன்பம் தரும்.

காமத்திற்கு என்புழிச் சாரியையும் நான்கன் உருபும் விகாரத்தால் தொக்கன். பசித்து உண்ணும் வழி மிக உண்ணலுமாய் இன்சுவைத்தும் ஆம்; அதுபோல, அகன்று கூடும்வழி ஆராததுமாய்ப் பேரின்பத்ததும் ஆம் எனத் தன் அநுபவம் பற்றிக் கூறியவாறு. *(1326)*

**1327**

ஊடலில் தோற்றவர் வென்றார் அதுமன்னும்
கூடலில் காணப் படும். 7

---

1. நெஞ்சறி சுட்டு.

(இதுவும் அது.)

**பரிமேலழகர் :** ஊடலில் தோற்றவர் வென்றார்-காமம் நுகர்தற்குரிய இருவருள் ஊடலின்கண் தோற்றவர் வென்றாராவர்; அது கூடலில் காணப் படும் - அஃது அப்பொழுது அறியப்படாது ஆயினும் பின்னைப் புணர்ச்சி யின்கண் அவரால் அறியப்படும்.

தோற்றவர் - எதிர்தல் ஆற்றாது சாய்ந்தவர். அவர் புணர்ச்சிக்கண் பேரின்பம் எய்தலின் வென்றாராயினர். மன்னும் உம்மும் அசைநிலை. யான் அதுபொழுது சாய்தலின் இதுபொழுது பேரின்பம் பெற்றேன் என்பதாம்.

உரை வேறுபாடு

**பரிப்பெருமாள்:** இது தலைமகள் ஆராமை கண்டு கூறியது.

**பரிதியார்:** ஊடலிலே தோற்றவரையும் வென்றவரையும் கூடலில் காணப்படும்.

ஒப்புமை

முற்றும்:

"தோற்றாரே வெல்வர் துணைமிசையார் கோட்டியானை
ஏற்றுக் கழல்தொடியார் மிக்காரை யாவரைவர்
போற்றளி கூடல் கரி." (இன்னிலை, 29.) (1327)

1328

ஊடிப் பெறுகுவம் கொல்லோ நுதல்வெயர்ப்பக்
கூடலில் தோன்றிய உப்பு. 8

(இதுவும் அது.)

**பரிமேலழகர் :** நுதல் வெயர்ப்ப கூடலில் தோன்றிய உப்பு - இது பொழுது இவள் நுதல் வெயர்க்கும் வகை கலவியின்கண் உளதாய இனி மையை, ஊடி பெறுகுவம்கொல்லோ - இன்னும் ஒருகால் இவள் ஊடி யாம் பெற வல்லேமோ?

கலவியது விசேடம்பற்றி நுதல் வெயர்ப்ப என்றான். இனிமை : கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று அறிதலான் ஆய இன்பம்.[1] இனி அப் பேறு கூடாது எனப் பெற்றதன் சிறப்புக் கூறியவாறு.

உரை வேறுபாடு

**மணக்குடவர் :** ஊடுதல் இருவர்க்கும் உண்டாம் ஆதலால், பொதுப் படக் கூறினார். இஃது ஊடினார்க்கு அல்லது இன்பம் பெறுதல் அரிது என்றது.

**பரிப்பெருமாள் :** நுதல் வெயர்ப்ப என்றான் புணர்ச்சிக் காலத்து வேகம் மிகுதலை.

ஒப்புமை

1. கூடலில் தோன்றிய உப்பு :

"..........அமைத் தோளாய்நின்
மெய்வாழ் உப்பின் விலைஎய் யாம்என." (அகநா. 390: 10-11.)

2. முற்றும் :

"ஊடினும் புணர்ந்ததொத் தினியவள்." (சீவக. 1996.) (1328)

---

1. குறள், 1101.

1329

ஊடுக மன்னோ ஒளியிழை யாம்இரப்ப
நீடுக மன்னோ இரா. 9

(இதுவும் அது.)

பரிமேலழகர் : ஒளி இழை ஊடுக மன் - ஒளிஇழையினை உடையாள் இன்னும் எம்மோடு ஊடுவாளாக; யாம் இரப்ப இரா நீடுக மன் – அங்ஙனம் அவள் ஊடி நிற்றற்கும் அதனை உணர்த்துதற்பொருட்டு யாம் இரந்து நிற்றற்கும் காலம் பெறும் வகை இவ்விரவு விடியாது நீட்டித்தல் வேண்டுக.

ஊடுக, நீடுக என்பன வேண்டிக்கோடற் பொருள். மன் இரண்டும் ஆக்கத்தின்கண் வந்தன. ஒகாரங்கள் அசைநிலை. கூடலின் ஊடலே அமையும் என்பதாம். *(1329)*

1330

ஊடுதல் காமத்திற் கின்பம் அதற்கின்பம்
கூடி முயங்கப் பெறின். 10

(இதுவும் அது.)

பரிமேலழகர் : காமத்திற்கு இன்பம் ஊடுதல் – காமநுகர்ச்சிக்கு இன்பமாவது அதனை நுகர்தற்குரியராவார் ஆராமைபற்றித் தம்முள் ஊடுதல்; அதற்கு இன்பம் கூடி முயங்க பெறின் - அவ்வூடுதற்கு இன்ப மாவது அதனை அளவறிந்து நீங்கித் தம்முட் கூடி முயங்குதல் கூடுமாயின், அம் முயக்கம்.

கூடுதல் - ஒத்த அளவினராதல். முதிர்ந்த துனியாயவழித் துன்பம் பயத்தலானும், முதிராத புலவியாயவழிக் கலவியின்பம் பயவாமையானும் இரண்டற்கும் இடையாகிய அளவறிந்து நீங்குதல் அரிது என்பது பற்றி, 'கூடி முயங்கப்பெறின்' என்றான். அவ்விரண்டின்பமும் யான் பெற்றேன் என்பதாம்.

ஈண்டுப் பிரிவினை வடநூல் மதம் பற்றிச் செலவு ஆற்றாமை விதுப்புப் புலவி என நால்வகைத்தாக்கிக் கூறினர். அவற்றுட் செலவு பிரிவாற்றாமை யுள்ளும், ஆற்றாமை படர்மெலிந்திரங்கல் முதல் நிறையழிதல் ஈறாயவற் றுள்ளும், விதுப்பு அவர்வயின் விதும்பல் முதல் புணர்ச்சி விதும்பல் ஈறாய வற்றுள்ளும், புலவி நெஞ்சொடு புலத்தல் முதல் ஊடல் உவகை ஈறாய வற்றுள்ளும் கண்டுகொள்க. அஃதேல் வடநூலார் இவற்றுடனே சாபத்தி னான் ஆய நீக்கத்தினையும் கூட்டிப் பிரிவினை ஐவகைத்து என்றாரால் எனின், அஃது அறம் பொருள் இன்பம் என்னும் பயன்களுள் ஒன்று பற்றிய பிரிவன்மையானும், முனிவர் ஆணையான் ஒருகாலத்து ஓர் குற்றத்து உளதாவது அல்லது உலகியல்பாய் வாராமையானும் ஈண்டு ஒழிக்கப்பட்டது என்க.

ஒப்புமை

முற்றும் :

"வல்லவர் ஊடல் உணர்த்தர நல்லாய்
களிப்பர் குளிப்பர் காமம் கொடிவிட
அளிப்ப துனிப்ப ஆங்காங் காடுப" *(பரிபா. 6: 102 - 4.)*

"வீழ்வார்ப்
பிரிதலும் ஆங்கே புணர்தலும் தம்மில்
தருதல் தகையாதான் மற்று" *(கலி. 92: 7 - 9.)*

"ஊடல் கூடல் உணர்தல் புணர்தலை
நீடு நின்ற நிறைபுக ழாய்ச்சியர்
கூட லைக்குழற் கோதைமுன் கூறிய"
(நாச்சியார் திருமொழி, 4: 11.)

"ஊடல் ஊடுறக் கூடுவார்"

"ஊடவும் கூடவும் உயிரின் இன்னிசை"

"ஊடல் வந்து கூட"

"ஊடல்,

கூறன் மாந்தினர் அணையவர்த் தொழுதவர் கோபத்து
ஆறன் மாந்தினர் அரக்கியர்க் குயிரன்ன அரக்கர்."
(கம்ப. நகரப். 56, 66, விராதன். 65, ஊர்தேடு. 31.) (1330)

# திருவள்ளுவ மாலை

### அசரீரி

திருத்தகு தெய்வத் திருவள் ளுவரோ
டுருத்தகு நற்பலகை ஒக்க—இருக்க
உருத்திர சன்மர் எனஉரைத்து வானில்
ஒருக்கவோ என்றதோர் சொல். 1

(இதன் பொருள்.) [1] திருத்தகு தெய்வத் திருவள்ளுவரோடு – அருட் செல்வத்தையும் அதற்குத் தக்க தெய்வத் தன்மையையும் உடைய திருவள்ளுவரோடு, உருத்தகு நல் பலகை உருத்திர சன்மர் ஒக்க இருக்க என உரைத்து – அவர் இருத்தற்குத் தனது உருவத்தினலே தக்க நல்ல சங்கப் பலகை யிடத்து உருத்திர சன்மர் ஒருவரே ஒப்ப ஏறி இருக்க என்று கூறி, வானில் ஒருக்க ஓர் சொல் ஓ என்றது – ஆகாசத்திலிருந்து அவ்விடத்துள்ள புலவர் கருத்தையெல்லாம் ஒற்றுமை செய்யும்படி ஒரு வாக்கியம் ஓ என்று இரைந்து எழுந்தது. (என்றவாறு.)

"அருட்செல்வம் செல்வத்துட் செல்வம்'' [2] என்ப ஆகலின், திரு என்றதற்கு அப்பொருள் உரைக்கப்பட்டது. தெய்வத்தன்மை, தெய்வத்தின் அவதாரமாய் விளங்குகை. தெய்வத் தன்மை இல்லார்க்கு அருள் உளதாயினும் அதனலே பெரும்பயன் விளையாமையின், தகுதி சொல்லப் பட்டது. திருவள்ளுவர் என்னும் பெயருள், திரு என்பது உயர்வையும், வள்ளுவர் என்பது வண்மையை உடையர் என்பதையும் விளக்கி நின்றன ஆகலின், அது வேதத்தில் இலைமறை காய்கள் போல் பல இடங்களிலும் மறைந்து, வெளிப்படாதிருந்த மெய்ப்பொருள்களை யெல்லாம் தொகுத்து உலகத்தாருக்குக் கொடுத்தருள் செய்தவர் என்னும் காரணம் பற்றி வந்த பெயர் ஆயிற்று. வள் : முதனிலை; அர் : இறுதி நிலை; உ : சாரியை. அம் முதனிலைக்குப் பொருள், ஈகை.

உருத்திர சன்மர் : உருத்திரனல் அடைந்த சன்மத்தை உடையர் என விரியும். அவர் முருகக்கடவுளது திருவவதாரமாய் வணிகர் மரபில் தோன்றிய மூங்கைப் பிள்ளையார்.

அசரீரி, அருவமாய் எங்கும் நிறைந்துள்ள முதல் தெய்வம். அரங்கேற்றத் தொடங்கிய காலத்துத் தெய்வப் புலவரோடு ஒப்ப இருந்து கேட்டற்குத் தகுதி உடையோர் யார் என யாவரும் எண்ணமுற்று நின்றவழி, இவ்வசரீரி வாக்கியம் பிறந்தது. என்றது எனப் படர்க்கை வினையாகக் கூறலின், ஆண்டு நின்று கேட்ட புலவர்களுள் ஒருவர் அதனை இங்ஙனம் பாடலாகச் செய்தனர் என்று அறிக. 1

### நாமகள்

நாடா முதல்நான் மறைநான் முகன்நாவில்
பாடா இடைப்பா ரதம்பகர்ந்தேன்—கூடாரை
எள்ளிய வென்றி இலங்கிலைவேல் மாறபின்
வள்ளுவன் வாயதென் வாக்கு. 2

1. இவ்வுரை திருத்தணிகைச் சரவணப் பெருமாளையரால் எழுதப்பெற்றது.
2. திருக்குறள், 241.

(இ – ள்.) கூடாரை எள்ளிய வென்றி இலங்கு இலை வேல் மாற – பகைவரைப் புறங்கொடுக்கச் செய்து இகழ்ந்த வெற்றியை உண்டாக்கி விளங்கா நின்ற இலைபோலும் வேற்படையை உடைய பாண்டியராசனே, நாடா - உலகத்தார் விதிவிலக்குகளை அறிந்து உய்யும் வழியை நாடி, முதல் நான்முகன் நாவில் நால்மறை பாடா - படைப்புக் காலத்திலே பிரமனது நாவில் இருந்து இருக்கு முதலாகிய நான்கு வேதங்களையும் பாடி, இடை பாரதம் பகர்ந்தேன் - நடுவான காலத்திலே பாரதமாகிய வேதத்தைக் கூறினேன்; பின் என் வாக்கு வள்ளுவன் வாயது – அதற்குப் பிற்பட்ட இக் காலத்திலே என் வாக்குத் திருக்குறளாகிய வேதத்தைச் சொல்லி வள்ளுவன் வாயின்கண்ணதாயிற்று. (எ - று.)

தன் கணவனாகலின் நான்முகன் நாவில் இருந்து என்றும், அவன் அவதாரமாகலின் வள்ளுவன் வாயதென் வாக்கு என்றும் கூறினாள். பாரதம் வியாசரைக் கொண்டு சொல்லப்பட்டது. இதனால் நான்மறை பூர்வ வேதமும், பாரதம் மத்திய வேதமும், திருக்குறள் உத்தர வேதமும் என்றதாயிற்று.

வேதம் மூவகைத்து என்பதூஉம், இவற்றது தோற்ற முறையால் இது வாக்கியப் பிரமாணத்தில் சிறப்புடைத்து என்பதூஉம் சொல்லியபடி. 2

### இறையனார்

என்றும் புலரா தியாணர்நாள் செல்லுகினும்
நின்றலர்ந்து தேன்பிலிற்றும் நீர்மையதாய்க்—குன்றாத
செந்தளிர்க் கற்பகத்தின் தெய்வத் திருமலர்போன்ம்
மன்புலவன் வள்ளுவன்வாய்ச் சொல். 3

(இ – ள்.) மன் புலவன் வள்ளுவன் வாய் சொல் – புலவர்க்கு அரசனாகிய வள்ளுவன் வாயில் பிறந்த திருக்குறளானது, என்றும் யாணர் புலராது நாள் செல்லுகினும் நின்று அலர்ந்து தேன் பிலிற்றும் நீர்மையதாய் - எக்காலத்தும் தன் அழகு கெடாது நெடுங்காலம் கழியினும் நிலைபெற்று மலர்ந்து தேனைச் சொரிகின்ற குணம் உடையதாய் விளங்குமாதலால், குன்றாத செந்தளிர் கற்பகத்தின் தெய்வத் திருமலர் போன்ம் – குறைவுபடாத செய்ய தளிர்களை உடைய கற்பகத்தினது தெய்வத் தன்மை பொருந்திய உயர்வாகிய மலர் போலும். (எ – று.)

திருக்குறளுக்கு அழகு சொல்முடிபு பொருள்முடிபின் குணங்களும், அலர்தல் எங்கும் பரவுதலும், தேன் பிலிற்றல் இருமை இன்பங்களும் விளைத்தலும் ஆம். சொல் : ஆகுபெயர். இறையனார் கடவுளாதலினால், இனி இதிற் சிறப்பது ஒன்று உளதாவது இன்று என்னும் துணிவு தோன்ற 'என்றும்' என்றும், பின்னும் அதனை வலியுறுத்தற்கு 'நாள் செல்லுகினும் நின்று' என்றும் வாழ்த்துப் பொருள்பட இவ்வாறு கூறினார்.

இஃது அழியாது நின்று பெருகிப் பயன்படுமாறு சொல்லியபடி. 3

### உக்கிரப் பெருவழுதியார்

நான்மறையின் மெய்ப்பொருளை முப்பொருளா நான்முகத்தோன்
தான்மறைந்து வள்ளுவனாய்த் தந்துரைத்த—நூல்முறையை
வந்திக்க சென்னிவாய் வாழ்த்துக நன்னெஞ்சம்
சிந்திக்க கேட்க செவி. 4

(இ – ள்.) நான்முகத்தோன் தான் மறைந்து வள்ளுவனாய் நான் மறையின் மெய்பொருளை முப்பொருளா தந்து உரைத்த நூல் முறையை - நான்முகன் தான் தன் உரு மறைந்து திருவள்ளுவனாய் அவதரித்து நான்கு

வேதங்களின் உண்மைப் பொருளை அறம் பொருள் இன்பம் என்னும் முப்பால் பொருளாகத் தமிழில் தந்து கூறிய திருக்குறள் எழுதிய திருமுறையை, சென்னி வந்திக்க – என் தலை வணங்குக; வாய் வாழ்த்துக – வாய் துதிக்க; நல் நெஞ்சம் சிந்திக்க – நல்ல மனம் தியானிக்க; செவி கேட்க – காது கேட்க. (எ – று.)

முப்பொருள்: ஆகுபெயர். இவ்வேதப் பொருள் ஆதியிலே வேதம் சொல்லியோனாலேயே சொல்லப்பட்டமையான் உலகத்துச் சமயாசாரியர்களாலும் பிறராலும் ஒன்றற்கொன்று மாறாகக் கொள்ளப்பட்ட பொருள்கள் போல்வது அன்று என்பது தோன்ற மெய்ப்பொருள் என்றார். கலை உணர் புலமையின் தலைமையோன் ஆகி விதிமுறை வழாது முது நிலம் புரக்கும் பெருந்தகை உக்கிரப் பெருவழுதி என்னும் தன்னிகரில்லா மன்னர் பெருமான் தான் மேற்கொண்ட சிறப்பைப் பலரும் அறிந்து மேற்கொள்ள இவ்வாறு வழிபாடு கூறினன், ''மன்னன் எப்படி மன்னுயிர் அப்படி'' ஆகலின்.

இப் புத்தகத்தை முன்னே பூசித்து மெய்மொழி மனங்களால் வணக்கம் செய்து பின் கேட்கவேண்டும் என்று சொல்லியபடி. 4

### கபிலர்

தினையளவு போதாச் சிறுபுல்நீர் நீண்ட
பனையளவு காட்டும் படித்தால்—மனைஅளகு
வள்ளைக் குறங்கும் வளநாட வள்ளுவனார்
வெள்ளைக் குறட்பா விரி. 5

(இ – ள்.) மனை அளகு வள்ளைக்கு உறங்கும் வளநாட – மனையில் வளர்க்கப்படுகின்ற பறவைப் பேடுகள் உலக்கைப்பாட்டால் கண் உறங்குகின்ற வளம் பொருந்திய நாட்டை உடைய அரசனே, வள்ளுவனார் வெள்ளை குறள் பா விரி – திருவள்ளுவரால் அருளிச் செய்யப்பட்ட குறள்வெண்பா மிகப் பெரிய பொருளைத் தன்னுட் கொண்டு காட்டுதல், தினை அளவு போதா சிறு புல் நீர் நீண்ட பனை அளவு காட்டும் படித்து – தினையரிசியின் அளவுக்கும் போதாத சிறிய புல்லினது நுனியின்கண் உள்ள பனிநீர் உயர்ந்தபனையின் அளவான அதன் சாயையைத் தன்னுள் கொண்டு காட்டும் குணம் போலும் குணத்தை உடைத்து. (எ – று.)

பனை: ஆகுபெயர். ஆல்: அசை. பறவை-கிளி முதலியவை. உலக்கைப் பாட்டு, மகளிர் பரிமளப் பொடி இடிக்கின்றபோது பாடும் பாட்டு. விரி – விரித்தல். எப்படி மிகச் சிறிய பனித் துளியிலே மிகப் பெரிய பனை மரத்தின் சாயை அடங்கி விளங்குகின்றதோ அப்படியே மிகச் சிறிய இக் குறள் வெண்பாவில் மிகப் பெரிய பொருள் அடங்கி விளங்குகின்றது என்பதாம்.

இது சுருங்கி இருந்தும் விரிவான பொருளை விளக்குமாறு சொல்லியபடி. இது முதலியன சங்கத்துப் புலவராலே பாடப்பட்டன. 5

### பரணர்

மாலும் குறளாய் வளர்ந்திரண்டு மாண்அடியான்
ஞாலம் முழுதும் நயந்தளந்தான்—வால்அறிவின்
வள்ளுவரும் தம்குறள்வெண் பாஅடியால் வையத்தார்
உள்ளுவஎல் லாம்அளந்தார் ஓர்ந்து. 6

(இ - ள்.) மாலும் குறளாய் வளர்ந்து இரண்டு மாண் அடியால் ஞாலம் முழுதும் நயந்து அளந்தான் – திருமாலும் குறளாய்ப் பிறந்து வளர்ந்து இரண்டு பெரிய அடிகளால் உலகம் அனைத்தையும் விரும்பி

அளந்தான்; வால் அறிவின் வள்ளுவரும் தம் குறள் வெண்பா அடியால் வையத்தார் உள்ளுவ எல்லாம் ஓர்ந்து அளந்தார் – மெய்யறிவினை உடைய திருவள்ளுவரும் தம்மினின்றும் தோன்றி அந்நிலை நிற்கின்ற வெண்பாக் குறளின் இரண்டு சிறிய அடிகளால் அவ் வுலகம் அனைத்தினும் உள்ளோரால் நினைக்கப்பட்டவற்றை எல்லாம் ஆராய்ந்து அளந்தார். (எ - று.)

உம்மை இரண்டும் முறையே தேவரில் பெரியோன் ஆகிய என்றும், மனிதரில் சிறியராய்க் காணப்பட்ட என்றும் பொருள்பட நின்றன. உவமானத்திலே வளர்தலும் பெருமையும் சொல்லுதலால், உவமேயத்திலே அவற்றுக்கு முரண் ஆகிய நிலை நிற்றலும் சிறுமையும் வருவிக்கப்பட்டன. மாலுக்குத் தானே குறள் ஆதலும் பின்பு அந்நிலை நில்லாது வளர்தலும் பேரடிகளால் அளவுபட்ட உலகத்தை அளத்தலும், திருவள்ளுவருக்குத் தம்மினின்றும் குறளை உண்டாக்குதலும் அது தன்னிலை நிற்றலும் அதன் சிற்றடிகளால் அளவுபடாத நினைப்பின் விடயங்களை அளத்தலும் சொல்லப்படுதலாலும் வேற்றுமை அறிக.

நினைக்கப்பட்டன எல்லாம் இதனகத்து அளவு செய்யப்பட்டமை சொல்லியபடி. 6

**நக்கீரர்**

தானே முழுதுணர்ந்து தண்தமிழின் வெண்குறளால்
ஆனு அறம்முதலா அந்நான்கும்—ஏனோருக்
கூழின் உரைத்தாற்கும் ஒண்ணீர் முகிலுக்கும்
வாழிஉல கென்ஆற்றும் மற்று. 7

(இ – ள்.) தானே முழுது உணர்ந்து – தானே வேதப் பொருள் அனைத்தையும் அறிந்து, தண் தமிழின் வெண் குறளால் ஆனு அறம் முதலா அந்நான்கும் ஏனோருக்கு ஊழின் உரைத்தாற்கும் – தண்ணிய தமிழின்கண் குறள் வெண்பாக்களால் விட்டு நீங்குதல் கூடாத அறம் முதலாகிய அந்நான்கு பொருள்களையும் அவற்றை அறியாதவர்களுக்கு அவர் எளிதின் அறிய முறையால் சொல்லி அருளிய திருவள்ளுவருக்கும், ஒள் நீர் முகிலுக்கும் – ஒள்ளிய நீரைத் தந்த மேகத்துக்கும், உலகு மற்று என் ஆற்றும் – இவ்வுலகம் எதிர் நன்றி யாது செய்யும்? செயக் கிடந்தது ஒன்றும் இல்லை; வாழி - அவரும் அதுவும் வாழ்க! (எ – று.)

ஆனுமை - நீங்காமை. தானே முழுதுணர்ந்து எனவே, ஆசாரியராய் இருந்து பிறர் அறிவிக்க அறிந்திலர் என்றதாயிற்று. முழுதும் என்னும் உம்மை தொக்கது. ஒண்மை இனிமைமேல் நின்றது. முறை – நூலின் முப்பொருள்களின் கிடக்கை ஒழுங்கு.

நாயனர் கொடைச் சிறப்புச் சொல்லியபடி. 7

**மாமூலனர்**

அறம்பொருள் இன்பம்வீ டென்னும்அந் நான்கின்
திறம்தெரிந்து செப்பிய தேவை—மறந்தேயும்
வள்ளுவன் என்பான்ஓர் பேதை அவன்வாய்ச்சொல்
கொள்ளார் அறிவுடை யார். 8

(இ - ள்.) அறம் பொருள் இன்பம் வீடு என்னும் அந் நான்கின் திறம் தெரிந்து செப்பிய தேவை – அறம் முதலாகச் சொல்லப்பட்ட அவ்வேதப் பொருள்களாகிய நான்கனது கூறுபாட்டையும் தெரிந்து உலகத்தார்க்குச் சொல்லிய தேவனை, மறந்தேயும் வள்ளுவன் என்பான் ஓர் பேதை – மறந்தாயினும் ஒரு மனிதனுக உட்கொண்டு வள்ளுவன் என்று சொல்லுதற்கு

ஒருவன் உளன் ஆயின், அவன் அறிவில்லாதவன் ஆவன்; அவன் வாய் சொல் அறிவு உடையார் கொள்ளார் – அவனது வாயில் பிறந்த அச் சொல்லை அறிவுடையார் கொள்ளார். (எ – று.)

அறம் முதலியவற்றின் கூறுபாடு, அவற்றினது தொகை வகை விரிகள். மறந்தேயும் என்றதனால், நினைப்புடன் சொல்லுவோன் பேதையிற் பேதை ஆம் என்பதாயிற்று. முன்னும் பின்னும் உள்ள பாட்டுக்களில் இப் பெயர் தெய்வத்தன்மையைக் குறிப்பிக்கும்படி நன்கு மதித்து உயர்த்திச் சொல்லப்படுதலால், ஒரு மனிதனை உட்கொண்டு என்பது வருவிக்கப் பட்டது; அன்றி ஒலிக்குறிப்பினாலே சாதி இழிவு தோன்ற வள்ளுவன் என்பான் எனினும் அமையும். இக் குறிப்பொலியை வடநூலார் காகுசுரம் என்பர்.

தெய்வப் புலவரை அவமதிப்பான் இழிவு சொல்லியபடி. 8

கல்லாடர்

**ஒன்றே பொருள்எனின் வேறென்ப வேறெனின்**
**அன்றென்ப ஆறு சமயத்தார்— நன்றென**
**எப்பா லவரும் இயைபவே வள்ளுவனார்**
**முப்பால் மொழிந்த மொழி.** 9

(இ - ள்.) ஆறு சமயத்தார் ஒன்றே பொருள் எனின் வேறு என்ப – அறுவகை மதத்தோரும் ஒரு மதத்தார் தமது நூலிலே உலகமும் உயிரும் கடவுளும் ஆகிய பொருள்கள் ஒன்றே என்று நாட்டுவராயின், மற்றொரு மதத்தார் தமது நூலிலே அதனை மறுத்து அவை வேறும் என்று நாட்டுவர்; வேறு எனின் அன்று என்ப – அப்படி வேறு என்று நாட்டின் பின் ஒரு மதத்தார் அதனை அன்று என்று மறுப்பர்; ஆதலால், சமய நூல்கள் எல்லாம் இவ்வாறு மறுக்கப்படுகின்றன; வள்ளுவனார் முப்பால் மொழிந்த மொழி நன்று என எப்பாலவரும் இயைப - திருவள்ளுவராலே முப்பாலாகச் சொல்லப்பட்ட நூலை நன்று என்று கொள்ளுதற்கு எவ்வகைப்பட்ட பகுதியோரும் உடன்படுவர். (எ - று.)

மொழி: ஆகுபெயர். ஆறு மதம் ஆவன வியாச மதம், சைமினி மதம், பதஞ்சலி மதம், கபில மதம், கணாத மதம், அக்ஷபாத மதம்; அன்றிச் சைவம் வைணவம் முதலியவற்றைக் கூறினும் ஆம். எச்சமயத்தாரும் என்னாது எப் பாலவரும் என்றதனால், வேதத்துக்கு உட்பட்ட சமயத்தாரே அன்றிப் புறப்பட்ட சைனம், பௌத்தம் முதலிய மதத்தாரும், பலவகைப்பட்ட சாதியாரும், தேசத்தாரும், காலத்தாரும், பிறரும் தழுவப் படுதல் அறிக.

இதுவே பொதுவேதம் என்றபடி. 9

சீத்தலைச் சாத்தனார்

**மும்மலையும் முந்நாடும் முந்நதியும் முப்பதியும்**
**மும்முரசும் முத்தமிழும் முக்கொடியும்—மும்மாவும்**
**தாம்உடைய மன்னர் தடமுடிமேல் தார்அன்றே**
**பாமுறைதேர் வள்ளுவர்முப் பால்.** 10

(இ – ள்.) வள்ளுவர் பா முறை தேர் முப்பால் - திருவள்ளுவரது பாக்களின் முன் பின் முறை தெரிதற்கு இடன் ஆகிய திருக்குறளானது, மும் மலையும் - கொல்லிமலை நேரிமலை பொதியமலை எனப்படுகின்ற மூன்று மலைகளையும், முந்நாடும் – குடநாடு புனல்நாடு தென்னாடு எனப்படுகின்ற மூன்று நாடுகளையும், முந்நதியும் - பொருநை நதி காவிரி நதி வைகை நதி எனப்படுகின்ற மூன்று நதிகளையும், முப்பதியும் – கருவூர், உறையூர், மதுரை

எனப்படுகின்ற மூன்று பதிகளையும், மும்முரசும் – மங்கல முரசு வெற்றி முரசு கொடை முரசு எனப்படுகின்ற மூன்று முரசுகளையும், முத்தமிழும் - இயற்றமிழ் இசைத்தமிழ் நாடகத் தமிழ் எனப்படுகின்ற மூன்று தமிழ் களையும், முக்கொடியும் - விற்கொடி புலிக்கொடி மீனக்கொடி எனப்படுகின்ற மூன்று கொடிகளையும், மும்மாவும் - கனவட்டம் பாடலம் கோரம் எனப்படு கின்ற மூன்று குதிரைகளையும், தாம் உடைய மன்னர் தடமுடிமேல் தார் அன்றோ – தாம் முறையே உடைய சேர சோழ பாண்டியர் எனப்படுகின்ற மூவரசருடைய பெரிய முடிகளின் மேலும் கொள்ளப்பட்ட மாலையன்றோ? (எ – று.)

அன்றோ என்றது பலர் அறி தேற்றம். முப்பால்: ஆகுபெயர். மும் முரசும் முத்தமிழும் அம் மூவரசர்க்கும் பொதுமையவாயினும் இம்முறை யுரிமை அவர் குடிமரபிற்கு இயைந்தன போலும்.

அரசர் மூவரும் மேற்கொண்ட சிறப்புச் சொல்லியபடி. 10

### மருத்துவன் தாமோதரனார்

சிந்தி நீர்க் கண்டம் தெறிசுக்குத் தேன்அளாய்
மோந்தபின் யார்க்கும் தலைக்குத்தில்—காந்தி
மலைக்குத்து மால்யானை வள்ளுவர்முப் பாலால்
தலைக்குத்துத் தீர்வுசாத் தற்கு. 11

(இ – ள்.) காந்தி மலை குத்தும் மால் யானை - தன் பகை என வெகுண்டு மலையைக் குத்துகின்ற பெரிய களிறுபோல் உள்ள அரசனே, சிந்தி நீர் கண்டம் தெறி சுக்கு தேன் அளாய் மோந்த பின் யார்க்கும் தலை குத்து இல் - சிந்தி நீர்ச் சருக்கரையையும் சிதைக்கப்பட்ட சுக்கையும் தேனோடு கலந்து மோந்தபின் அதனால் தலைக்குத்து உடையோர் யாவர்க்கும் தலைக்குத்து இல்லையாகும்; வள்ளுவர் முப்பாலால் சாத்தற்கு தலை குத்து தீர்வு - திருவள்ளுவர் அருளிச் செய்த முப்பாலினாலோ சீத்தலைச் சாத்த னார்க்குத் தலைக்குத்து இல்லை ஆயிற்று. (எ - று.)

யானை போல்பவனை யானை எனலால் ஆகுபெயர். முன் கேட்கப் பட்ட நூல்களில் எல்லாம் பல சொற் குற்றங்களும், பொருட் குற்றங்களும் கண்டு பொறுது தலையில் அறைந்து கொண்டு வந்தமையால், புண்பட்டுக் குத்தல் உண்டாயிருந்தது; இதன்கண் ஒரு குற்றமும் காணப்பெறாமையால் அது நீங்கிற்று என்க. எப்படி அம்மூன்று சரக்கும் அதற்கு மருந்தாமோ அப்படியே இதற்கும் இம்மூன்று பாலும் மருந்தாயின என்பதாம். தீர்வு என்னும் தொழிற் பெயர் முற்றுப் பொருளில் வந்தது.

இதன் குற்றம் அற்று விளங்குகை சொல்லியபடி. 11

### நாகன் தேவனார்

தாள்ஆர் மலர்ப்பொய்கை தாம்குடைவார் தண்ணீரை
வேளா தொழிதல் வியப்பன்று—வாளாதாம்
அப்பால் ஒருபாவை ஆய்பவோ வள்ளுவனார்
முப்பால் மொழிமூழ்கு வார். 12

(இ - ள்.) தாள் ஆர் மலர் பொய்கை குடைவார் தண்ணீரை வேளாது ஒழிதல் வியப்பு அன்று - நாளத்தோடு பொருந்திய தாமரை மலர்களை உடைய ஒரு குளத்து நீரின்கண்ணே மூழ்குவோர் வேறு தண்ணீரை விரும்பாது ஒழிதல் வியப்பைச் செய்வது அன்று; வள்ளுவனார் முப்பால் மொழி மூழ்குவார் தாம் வாளா அப்பால் ஒரு பாவை ஆய்பவோ - திருவள்ளு

வரது முப்பால்களை உடைய நூலின்கண்ணே மூழ்குவார் தாம் வீணுக அப்பால் ஒரு நூலை விரும்புவரோ? விரும்பார்; ஆகலின், இதுவே வியப்பைச் செய்வதாம். (எ – று.)

தாள்ஆர் மலர் எனலால், தாமரை மலர் எனப்பட்டது. வியப்பைச் செய்வதை வியப்பு என்றார். மூழ்குதல், இங்கே கருத்து முழுதும் அழுந்தி நிற்றல்மேல் நின்றது. மொழி: ஆகுபெயர். ஓகாரம், எதிர்மறை. விரும்புதலாகிய காரணத்தை ஆய்பவோ எனக் காரியமாக உபசரித்தார். அது வியப்பு அன்று என்றமையால், இது வியப்பு என்றதாயிற்று. உயர்வான பொருள் பெற்றோர்க்கு அதனின் இழிவான பொருளையும் பெற விரும்புதல் இயல்பாய் இருக்க, குளிர்ச்சி இன்சுவை நறுமணம் முதலிய குணங்களாலே சிறந்த ஒரு தாமரைக் குளத்து நீரைப் பெற்றோர்க்கு அதனுல்தானே அமைதி பெற்று வேறு தண்ணீரைப் பெற விரும்பாமை வியப்புச் செய்வதன்று ஆயிற்று; ஆயினும் இதுகாறும் ஒரு நூலைக் கற்றோர்க்கு வேறு நூலைக் கற்க விரும்புதல் அன்றி விரும்பாமை இல்லாதிருக்க, இப்போது உளதாகலின் இதுவே பெரு வியப்பைச் செய்வது என்றதாயிற்று. இதனுல், இந் நூலகத்து எந்நூற் பொருளும் அடங்கி இருக்கின்றமை குறிப்பிக்கப்பட்டது.

பல நூல்களையும் கற்க விரும்புவோர்க்கு இஃது ஒன்றே அமைதல் சொல்லியபடி. 12

### அரிசில்கிழார்

பரந்த பொருள்எல்லாம் பார்அறிய வேறு
தெரிந்து திறந்தொறும் சேரச்—சுருங்கிய
சொல்லால் விரித்துப் பொருள்விளங்கச் சொல்லுதல்
வல்லார்ஆர் வள்ளுவர்அல் லால். 13

(இ – ள்.) பரந்த பொருள் எல்லாம் பார் அறிய வேறு தெரிந்து – வேதத்திலே ஒன்றோடு ஒன்று மயங்கி நின்ற நால்வகைப் பொருள்களையும் இப் பூமியில் உள்ளோர் அறிதற்பொருட்டு வேருகப் பிரித்து, திறந்தொறும் சேர சுருங்கிய சொல்லால் பொருள் விளங்க விரித்து சொல்லுதல் வல்லார் – அது அது தனது தனது வகையோடு சேரும்படி சுருங்கிய சொல்லால் பொருள் விளங்க விரியும்படி வைத்துச் சொல்லுதல் வல்லார், வள்ளுவர் அல்லால் ஆர் – வள்ளுவர் அல்லது ஒருவரும் இல்லை. (எ – று.)

பார்: ஆகுபெயர். திறம் – அறம் முதலியவற்றின் கூறுபாடு. சுருங்கச் சொல்லல் விளங்க வைத்தல் முதலிய அழகுகள் எப்படி இவரால் அமைக்கப் பட்டனவோ அப்படிப் பிறரால் அமைக்கப்படுதல் கூடாமை காட்டியதாயிற்று.

நூலுக்கும் நாயனுர்க்கும் தகுதி சொல்லியபடி. 13

### பொன்முடியார்

கான்நின்ற தொங்கலாய் காசிபனுர் தந்ததுமுன்
கூநின் றளந்த குறள்என்ப—நான்முறையான்
வான்நின்று மண்நின் றளந்ததே வள்ளுவனுர்
தாம்நின் றளந்த குறள். 14

(இ – ள்.) கான் நின்ற தொங்கலாய் - மணம் தங்கப்பெற்ற மாலையை உடைய பாண்டியராசனே, முன் காசிபனுர் தந்தது கூ நின்று அளந்த குறள் என்ப – முன் காசிபராலே தரப்பட்ட குறளை மண்ணின்கண்ணே நின்று உலகத்தை அளந்த குறள் என்று சொல்லுவர்; தாம் நின்று வள்ளுவனுர் அளந்த குறள் நூல்முறையான் வான்நின்று மண்நின்று அளந்தது – தாம்

இங்கே எழுந்தருளித் திருவள்ளுவராலே தரப்பட்ட குறள், நூலின் முறையோடு கூடி விண்ணின்கண்ணே நின்றும் மண்ணின்கண்ணே நின்றும் உலகத்தை அளந்தது. (எ – று.)

கு கூ என நீண்டது. ஆன் உருபு ஒடு உருபின் பொருளில் வந்தது. அக் குறள் வஞ்சித்துப் பெற்று அளத்தலால் நூன்முறையோடு கூடாதாயிற்று. இக் குறளுக்கு ஒலி வடிவும் வரி வடிவும் என இரண்டு வடிவு உண்மையால், ஒலி வடிவுக்கு இடம் வான் ஆகலின் வான் நின்று என்றும், வரி வடிவுக்கு இடம் மண் ஆகலின் மண் நின்று என்றும் கூறினர். இக் குறளுக்கு நூன் முறையோடு கூடலும் வான் நிற்றலும் மிகுத்துச் சொல்லி வேற்றுமை செய்யப்பட்டது. முன் 'மாலும்' என்ற பாட்டிலே நாயனுர்க்கும் மாலுக்கும், இப் பாட்டிலே திருக்குறளுக்கும் மால் அவதாரக் குறளுக்கும் ஒப்புமை குறித்துச் சொல்லலால் வேறுபாடாம்.

உலகத்துப் பொருள் எல்லாம் இஃது அளத்தல் சிறப்புச் சொல்லியபடி. 14

**கோதமனுர்**

**ஆற்றல் அழியும்என் றந்தணர்கள் நான்மறையைப்**
**போற்றிஉரைத் தேட்டின் புறத்தெழுதார்—ஏட்டெழுதி**
**வல்லுநரும் வல்லாரும் வள்ளுவனுர் முப்பாலைச்**
**சொல்லிடினும் ஆற்றல்சோர் வின்று.** 15

(இ – ள்.) அந்தணர்கள் நான்மறையை உரைத்து போற்றி ஆற்றல் அழியும் என்று ஏட்டின் புறத்து எழுதார் – அந்தணர்கள் நான்கு வேதங்களையும் வாய்ப்பாடமாகக் காப்பாற்றி ஏட்டின்கண் எழுதிவைத்தால் வலி இல்லாரும் ஓதுவர் ஆகலின் அவற்றின் வலிமை குறையும் என்று ஏட்டின்கண் எழுதார்; வள்ளுவனுர் முப்பாலை ஏட்டு எழுதி வல்லுநரும் வல்லாரும் சொல்லிடினும் ஆற்றல் சோர்வின்று – திருவள்ளுவரது திருக்குறளை ஏட்டின்கண் எழுதிவைத்து வலி உடையவரும் வலி இல்லாரும் ஓதினுலும் வலிமை குறைதல் இல்லை. (எ – று.)

அவ் வேதத்துக்கு உதாத்தம் அநுதாத்தம் சுவரிதம் என்னும் சுரங்களின் வழுவாமல் ஓதல்வேண்டும் என்னும் விதி உளது ஆகலின், அதற்குத் தகுதி உடைய அந்தணரே அதிகாரிகள் ஆயினர்; இதற்கு அஃது இல்லாமையால் யாவரும் அதிகாரிகள் ஆவர் என்று அறிக. சொல்லிடினும் என்றதனுல் பொருள் உணர்ச்சிக்கு இதற்கும் வலிமை வேண்டும் என்பது பெறப்பட்டது. ஆற்றல் - சொற் செறிவின் திட்பம். இங்ஙனம் கூறவே, அவ்வேதம் சொல்லின்கண்ணே தலைமை உடைத்து என்பதூஉம், இவ்வேதம் பொருளின்கண்ணே தலைமை உடைத்து என்பதூஉம் பெறப்பட்டன.

ஓதப்படுதலின் அவ் வேதத்தினும் இது சிறப்புடைமை சொல்லியபடி. 15

**நத்தத்தனுர்**

**ஆயிரத்து முந்நூற்று முப்ப தருங்குறளும்**
**பாயிரத்தி னேடு பகர்ந்ததற்பின்—போய்ஒருத்தர்**
**வாய்க்கேட்க நூல்உளவோ மன்னு தமிழ்ப்புலவ**
**ராய்க்கேட்க வீற்றிருக்க லாம்.** 16

(இ – ள்.) பாயிரத்தினேடு ஆயிரத்து முந்நூற்று முப்பது அருங் குறளும் பகர்ந்ததன்பின் போய் ஒருத்தர் வாய் கேட்க நூல் உளவோ – பாயிரம் நான்கு அதிகாரங்களோடு சேர்ந்து தொகையாகிய அரிய ஆயிரத்து முந்நூற்று முப்பது குறள் வெண்பாக்களையும் ஓதி உணர்ந்த

பின்பு, போய் ஒருவரது வாயாலே கேட்டு அறிதற்கு நூல் உளவோ? இல்லை; மன்னு தமிழ் புலவராய் கேட்க வீற்றிருக்கலாம் – நிலைபெற்ற தமிழிலே புலமை நிரம்பியோர் ஆகிப் பிறர் தம்மிடத்து வந்து கேட்க வீற்றிருக்கலாம். (எ – று.)

வீற்றிருத்தல் - ஒரு சபை நடுவிலே உயர்வாகிய ஆதனத்தில் ஏறி யிருத்தல். இவற்றுள் பலவகைப்பட்ட நூல்களின் கருத்துக்கள் எல்லாம் விளங்கி நிற்றலின், கேட்க நூல் உளவோ என்றார். புலவராய் எனவே, புலமை நிரம்புதற்கு இவை ஆயிரத்து முந்நூற்று முப்பது குறள்களும் போதும் என்பது பெறப்பட்டது.

ஓதியோர்க்கு வரும் இம்மைப்பயன் சொல்லியபடி. 16

**முகையலூர்ச் சிறுகருந்தும்பியார்**

**உள்ளுதல் உள்ளி உரைத்தல் உரைத்ததனைத்**
**தெள்ளுதல் அன்றே செயற்பால—வள்ளுவனார்**
**முப்பாலின் மிக்க மொழிஉண் டெனப்பகர்வார்**
**எப்பா வலரினும் இல்.** 17

(இ – ள்.) வள்ளுவனார் முப்பாலின் மிக்க மொழி உண்டு என பகர்வார் எப் பாவலரினும் இல் - திருவள்ளுவரது திருக்குறளின் மேற் பட்ட நூல் ஒன்று உளது என்று சொல்ல வல்லவர் எவ்வகைப்பட்ட புலவருள்ளும் இல்லை; செயல் பால உள்ளுதல் உள்ளி உரைத்தல் உரைத்ததனை தெள்ளுதல் அன்றே - ஆதலால், நாம் இந் நூலைக் குறித்துச் செயக்கடவன நாம் இதன் பொருளைச் சிந்தித்துக் கொள்ளுதலும், சிந்தித்துப் பிறர்க்கு அதனைச் சொல்லுதலும், பிறராலே சொல்லப்பட்ட அதனைத் தெளிதலும் அன்றே! (எ – று.)

மொழி: ஆகுபெயர். ஒப்பது வடமொழி வேதம் இருத்தலின் மிக்க மொழி என்றும், தமிழின் மாத்திரம் அன்றி வடமொழி முதலியவற்றின் உள்ள புலவரையும் தழுவுதற்கு எப்பாவலரினும் என்றும், அறிவு ஒப்புக் காண்டற்கு உரைத்ததனைத் தெள்ளுதல் என்றும் கூறினர். உள்ளுதல் எனவே கேட்டலும், தெளிதல் எனவே அவ்வாறு ஒழுகலும் அடங்கின.

இது பயிற்சி செய்து ஒழுகுமாறு சொல்லியபடி. 17

**ஆசிரியர் நல்லந்துவனார்**

**சாற்றிய பல்கலையும் தப்பா அருமறையும்**
**போற்றி உரைத்த பொருள்எல்லாம்—தோற்றவே**
**முப்பால் மொழிந்த முதற்பா வலர்ஒப்பார்**
**எப்பா வலரினும் இல்.** 18

(இ – ள்.) சாற்றிய பல் கலையும் தப்பா அருமறையும் போற்றி உரைத்த பொருள் எல்லாம் தோற்ற – அறிவுடையோரால் சொல்லப்பட்ட பல நூல்களாலும் தப்பாத அரிய வேதத்தினும் காப்பாற்றி வைத்திருந்து உலகத்தார்க்குச் சொல்லப்பட்ட விடயங்கள் எல்லாம் தன்னிடத்தே காட்டும் படி, முப்பால் மொழிந்த முதல் பாவலர் ஒப்பார் எப் பாவலரினும் இல் - திருக் குறளைச் சொல்லிய திருவள்ளுவரை ஒப்பவர் எவ் வகைப்பட்ட பாவலருள்ளும் இல்லை. (எ - று.)

தம்மாலே சொல்லப்பட்டவற்றில் வழு உறுமையால் தப்பா என்றும், பொருள் உணர்தற்கே அன்றி ஓதுதற்கும் எளிது அன்று ஆகலின் அரு என்றும் விசேடணம் செய்யப்பட்டன. எப்பாவலரினும் இல்: இதற்கு முன்

உரைக்கப்பட்டபடியே கொள்க. முதல் பாவலர் - முதன்மையை உடைய பாவலர்; நால்வகைப் பாக்களில் வெண்பாக்களும் அவற்றுள்ளும் குறள் வெண்பாவும் தலைமை பெற்று நிற்றலின், அக் குறள் வெண்பாவால் நூல் செய்த வல்லமை உடையர் என்றும் ஆம்.

புலமையிலே நாயனருக்கு ஒப்பின்மை சொல்லியபடி. 18

### கீரந்தையார்

தப்பா முதற்பாவால் தாம்மாண்ட பாடலினல்
முப்பாலின் நாற்பால் மொழிந்தவர்—எப்பாலும்
வைவைத்த கூர்வேல் வழுதி மனம்மகிழத்
தெய்வத் திருவள்ளு வர். 19

(இ – ள்.) எப்பாலும் வை வைத்த கூர் வேல் வழுதி மனம் மகிழ - எவ்விடத்திலும் கூர்மை வைத்த சிறப்புப் பொருந்திய வேலை உடைய பாண்டியராசன் மனம் மகிழ, தப்பா முதல் பாவால் தாம் மாண்ட பாடலினல் முப்பாலின் நாற்பால் மொழிந்தவர் – சொல்லப்பட்ட பொருள் வழுவாமல் முதன்மை உடைய பாவாகிய குறள் வெண்பாக்களாலே தாம் மாட்சி பெற்ற பாடல் தொழிலினலே மூன்று பால்களிலே அறம் முதலிய நான்கு பகுதிப் பொருளையும் திருவாய் மலர்ந்தவர், தெய்வ திருவள்ளுவர் – தெய்வத் தன்மையை உடைய திருவள்ளுவ நாயனர். (எ - று.)

கூர் - சிறப்பு. நான்கனுள் மூன்று அடங்குவது அன்றி மூன்றனுள் நான்கு அடங்காமையின் வியந்து கூறப்பட்டது ஆயிற்று.

நூல் செய்த சிறப்பும், அதனல் அரசனை மகிழ்வித்தமையும் சொல்லியபடி. 19

### சிறுமேதாவியார்

வீடொன்று பாயிரம் நான்கு விளங்கறம்
நாடிய முப்பத்து மூன்றென் றூழ்—கூடுபொருள்
எள்ளில் எழுப திருபதிற் றைந்தின்பம்
வள்ளுவர் சொன்ன வகை. 20

(இ – ள்.) வள்ளுவர் சொன்ன வகை - திருவள்ளுவராலே சொல்லப்பட்ட திருக்குறளின் அதிகார வகை, பாயிரம் நான்கு - பாயிரம் நான்கு அதிகாரத்தை உடைத்து; அறம் முப்பத்து மூன்று – அறம் முப்பத்து மூன்று அதிகாரத்தை உடைத்து; ஊழ் ஒன்று - ஊழ் ஓர் அதிகாரத்தை உடைத்து; பொருள் எழுபது - பொருள் எழுபது அதிகாரத்தை உடைத்து; இன்பம் இருபதிற்றைந்து – காமம் இருபத்தைந்து அதிகாரத்தை உடைத்து. (எ-று.)

அறத்துப்பாலுள் அடங்காது அதனை விட்டு நூற்கெல்லாம் பொதுவாய் நிற்றலின் வீடு ஒன்று பாயிரம் என்றும், இம்மை மறுமை வீடு மூன்றும் பயத்தற் சிறப்பிற்றாய மூன்றனுள் முதல் நிற்றலின் விளங்கு அறம் என்றும், யாவர்க்கும் பொதுப்பட நாடித் தொகுக்கப்பட்ட அறத்தின் கூறுபாடு இவையே ஆகலின் நாடிய முப்பத்து மூன்று என்றும், முன் நின்ற அறமும் பின் நின்ற இன்பமும் கை கூடுதற்குத் துணையாய் நிற்றலின் கூடு பொருள் என்றும், அப் பொருளின் பாகுபாடுகள் எல்லாம் இவற்றின் அடங்குதலின் எள்ளில் எழுபது என்றும் கூறினர். எள்ளல் - இகழ்தல். சில பழைய நூல்களிலே சிலவற்றைச் சாதியாரும் சமயத்தாரும் மிகுத்தும் குறைத்தும் வேறுபடுத்தலால் அப்படிப்பட்ட வேறுபாடு இதற்கும் வரினும் வரும் என்று ஆசங்கித்து இதன் அதிகாரங்களுக்கு இங்ஙனம் தொகை செய்தார். பின் இவ்வாறு தொகை செய்யப்பட்டு வருவனவற்றிற்கும் இதுவே கருத்தாகக் கொள்க.

முப்பால்களுக்கும் அதிகாரத் தொகை சொல்லியபடி. 20

நல்கூர் வேள்வியார்

உப்பக்கம் நோக்கி உபகேசி தோள்மணந்தான்
உத்தர மாமதுரைக் கச்சென்ப—இப்பக்கம்
மாதானு பங்கி மறுவில் புலச்செந்நாப்
போதார் புனற்கூடற் கச்சு. 21

(இ – ள்.) உப்பக்கம் நோக்கி உபகேசி தோள் மணந்தான் உத்தர மா மதுரைக்கு அச்சு என்ப[1] - அப் பக்கத்தைக் குறித்துச் சென்றோனாகிய உமாதேவியினது தோளை மணந்த கடவுளை வட மதுரைக்கு ஆதாரம் என்று சொல்லுவர்; இப் பக்கம் மாதானுபங்கி மறு இல் புல செந்நா போதார் புனல் கூடற்கு அச்சு - இப் பக்கம் மாதானுபங்கி எனப்படுகின்ற குற்றம் அற்ற புலமையாகிய தேனைச் சொரிகின்ற செவ்விய நாவாகிய மலரை உடையவர் நீர் வளத்தை உடைய தென் மதுரைக்கு ஆதாரம் ஆவர். (எ - று.)

உப்பக்கம் - இடைக்காடர் அரசன் தன் பாடலை அவமதித்தமை பற்றிப் பிணங்கிச் சென்ற பக்கம். உப்பக்கம் நோக்கி என்றது வினையால் அணையும் பெயர். கேசி - திருமால்; இது அக்கடவுள் சகசிரநாமத்திற் கண்டது; கேசிக்குப் பின்னே பிறந்தவள் உபகேசி என்றாயது, உபேந்திரன் என்பது போல. மாதா அனுபங்கி - மாதாவை நிகராகக் கொண்டு நடக்கின்ற ஒழுங்கினன் எனப்படுதலின், அவள் பிள்ளைமேலே போல் இவர் உலகத்தார்மேல் அருள் செய்தல் சொல்லப்பட்டது ஆயிற்று. நாப்போது என்றதற்கு ஏற்பப் புலமையிலே தேன் ஆரோபிக்கப்பட்டது. அச்சுப்போல் தாங்குதலால் அச்சு என்றார்.

நாயனாராலே திங்கட் குடைஉடைச் சீர்சால்வழுதியும் சங்கப் புலவரும் தழைத்து இனிது ஓங்கிய மதுரைக்கு உண்டான சிறப்புச்சொல்லியபடி. 21

தொடித்தலை விழுத்தண்டினார்

அறம்நான் கறிபொருள் ஏழொன்று காமத்
திறம்மூன் றெனப்பகுதி செய்து—பெறல்அரிய
நாலும் மொழிந்தபெரு நாவலரே நன்குணர்வார்
போலும் ஒழிந்த பொருள். 22

(இ – ள்.) அறத்திறம் நான்கு - பாயிரம், இல்லறம், துறவறம், ஊழ் என அறப்பாலின் உட்பிரிவுகள் நான்கும், அறி பொருள் திறம் ஏழ் - அரசு, அமைச்சு, அரண், கூழ், படை, நட்பு, ஒழிபு என அறியப்பட்ட பொருட்பாலின் உட்பிரிவுகள் ஏழும், காமத்திறம் மூன்று என பகுதி செய்து - ஆண்பாற்கூற்று, பெண்பாற்கூற்று, அவ்விருபாற்கூற்று எனக் காமத்துப் பாலின் உட்பிரிவுகள் மூன்றுமாகப் பகுதி செய்து, பெறல் அரிய நாலும் மொழிந்த பெரு நாவலரே - பெறுதற்கரிய அறம், பொருள், இன்பம், வீடு எனப்படுகின்ற நான்கு பொருளையும் சொல்லிய பெருநாவலரே, ஒழிந்த பொருள் நன்கு உணர்வார் போலும் - அவற்றுள் அடங்காது ஒழிந்த பொருள் உளதாயின் அதனை நன்றாக அறிய வல்லவர் போலும்.(எ-று.)

திறம் என்றது அறம் முதலியவற்றோடும் கூட்டப்பட்டது. நாவலரே என்றமையால் பிறரால் அறியப்படுவது அன்று என்றதாயிற்று.

முப்பால் இயல் தொகையும், இவற்றின் அடங்காதது ஒன்று இல்லை என்பதும் சொல்லியபடி. 22

1. உபகேசி என்பதற்கு நப்பின்னை யென்று நேமிநாத உரையாசிரியர் உரை கொண்டார். ஆதலின் தோள்மணந்தான் என்பது கண்ணனைக் குறித்ததாகக் கொள்ளுதல் சிறப்பு.

### வெள்ளி வீதியார்

செய்யா மொழிக்கும் திருவள் ளுவர்மொழிந்த
பொய்யா மொழிக்கும் பொருள்ஒன்றே—செய்யா
அதற்குரியர் அந்தணரே ஆராயின் ஏனை
இதற்குரியர் அல்லாதார் இல். 23

(இ - ள்.) செய்யா மொழிக்கும் திருவள்ளுவர் மொழிந்த பொய்யா மொழிக்கும் பொருள் ஒன்றே - ஒருவராலே செய்யப்படாத மொழியாகிய வேதத்துக்கும் திருவள்ளுவரால் அருளிச் செய்யப்பட்ட தன்வழியின் ஒழுகுவோர்க்குப் பயன்விளைவிலே பொய்படாத மொழியாகிய திருக்குறளுக்கும் பொருள் ஒன்றே; ஆராயின் செய்யா அதற்கு உரியர் அந்தணரே - ஆராயுங்கால், செய்யப்படாத அவ் வேதம் ஓதுதற்கு உரியவர் அந்தணரே; ஏனை இதற்கு உரியர் அல்லாதார் இல் - பொய்படாத இத் திருக்குறள் ஓதுதற்கு உரியவர் அல்லாதார் உலகத்தில் இல்லை. (எ - று.)

பூர்வ வேதத்தை நித்தியம் என்பார் மதம் பற்றிச் செய்யா மொழி என்றார். அது வடமொழியும் இது தென்மொழியுமாய் நின்று சில வேறுபாடு உடையனபோல் தோன்றினும் நுண்ணுணர்வால் நோக்குவார்க்குக் கருத்து வேறுபடாமையின், பொருள் ஒன்றே எனத் தேற்றேகாரம் கொடுத்துக் கூறினர். செய்யாமொழி, பொய்யாமொழி: அன்மொழித் தொகைகள். இதற்கு உரியர் அல்லாதார் இல் என்றதனாலும் பொதுவேதம் ஆதல் அறிக.

அதற்கும் இதற்கும் பொருள் வேறே என்றும், இதனை ஓதற்கு அதிகாரிகளாவார் யாவரோ என்றும் நிகழ்கின்ற ஐயம் ஒழித்தபடி. 23

### மாங்குடி மருதனார்

ஓதற் கெளிதாய் உணர்தற் கரிதாகி
வேதப் பொருளாய் மிகவிளங்கித்—தீதற்றோர்
உள்ளுதொ றுள்ளுதொ றுள்ளம் உருக்குமே
வள்ளுவர் வாய்மொழி மாண்பு. 24

(இ – ள்.) வள்ளுவர் வாய்மொழி மாண்பு – திருவள்ளுவரது வாயினின்றும் தோன்றிய திருக்குறளினது மாட்சியைச் சொல்லின், ஓதற்கு எளிதாய் உணர்தற்கு அரிதாகி வேத பொருளாய் மிக விளங்கி - அது ஓதப்படுதற்கு எளிய சொற்களை உடையதாகியும் அறியப்படுதற்கு அரிய பொருள்களை உடையதாகியும் வேதமெனப் படுகின்ற பொருளாகியும் அவ் வேதத்தின் மிக விளங்கி, தீது அற்றோர் உள்ளுதொறு உள்ளுதொறு உள்ளம் உருக்கும் – குற்றமற்றோர்கள் நினைக்குந்தோறும் நினைக்குந்தோறும் அவர்களுடைய மனத்தைக் கரைக்கும். (எ - று.)

ஓதற்கு எளிதாய் எனவே நவின்றோர்க்கு இனிமை நன்மொழி புணர்த்தல்களும், உணர்தற்கு அரிதாகி எனவே ஆழம் உடைமையும், வேதப் பொருளாய் எனவே விழுமியது பயத்தலும் பிறவுமாகிய அழகுகளின் அமைதி சொல்லப்பட்டதாயிற்று. தீது அற்றோர் - பொருள் ஆராய்ச்சிக்கு ஏற்ற நுண்ணறிவு உடையோர். உள்ளுதொறு உள்ளுதொறு உள்ளம் உருக்கும் எனவே முன் காணப்பட்டதினும் பின் காணப்படும் பொருள் சிறந்தும் விரிந்தும் தோன்றுதல் உடைமை பெறப்பட்டது.

இதனது அற்புதமான குணம் உடைமைச் சிறப்புச் சொல்லியபடி. 24

எறிச்சலூர் மலாடனர்[1]

பாயிரம் நான்கில் அறம்இருபான் பன்மூன்றே
தூய துறவறம்ஒன் றாழாக— ஆய
அறத்துப்பால் நால்வகையா ஆய்ந்துரைத்தார் நூலின்[2]
திறத்துப்பால் வள்ளுவனர் தேர்ந்து. 25

(இ - ள்.) வள்ளுவனர் ஆய்ந்து நூலின் திறத்து பால் தேர்ந்து - திருவள்ளுவ நாயனர் அவ்வேதத்தின் கருத்துக்களை ஆராய்ந்து தம்மாலே செய்யப்பட்ட நூலினது திறத்திற்குத் தக்க நன்மை உடைமையால் இவையே உரியவை என்று தெரிந்து, பாயிரம் நான்கு-பாயிரம் நான்கு அதிகாரமும், இல்லறம் இருபான் - இல்லறவியல் இருபது அதிகாரமும், துறவறம் பன் மூன்று - துறவறவியல் பதின்மூன்று அதிகாரமும், ஊழ் ஒன்ருக – ஊழ் ஓர் அதிகாரமும் உடையனவாக, ஆய அறத்து பால் நால்வகையா உரைத்தார் - இவ்வாருய அறத்துப்பாலைப் பாயிரம் முதலிய நால்வகை உடைத்தாகக் கூறினர். (எ - று.)

முப்பாற் பொருள்களினும் முத்திக்குக் காரணமாதல் சிறப்பு உடைமையின் தூய துறவறம் என்ருர். துப்பு - நன்மை; அஃது எல்லா வருணச்சிரமங்களுக்கும் பொதுவாய் இருக்கை.

அறப்பால் இயல் அதிகாரத்தொகை சொல்லியபடி. 25

போக்கியார்

அரசியல் ஐயைந் தமைச்சியல் ஈரைந்
துருவல் அரண்இரண்டொன் ருெண்கூழ்— இருஇயல்
திண்படை நட்புப் பதினேழ் குடிபதின்மூன்
றெண்பொருள் ஏழாம் இவை.[3] 26

(இ – ள்.) அரசியல் ஐயைந்து - அரசியல் இருபத்தைந்து அதிகாரம் உடைத்து; அமைச்சியல் ஈரைந்து - அமைச்சியல் பத்ததிகாரம் உடைத்து; அரண் இரண்டு – அரணியல் இரண்டு அதிகாரம் உடைத்து; கூழ் ஒன்று – பொருளியல் ஓர் அதிகாரம் உடைத்து; படை இரு இயல் - படையியல் இரண்டு அதிகாரம் உடைத்து; நட்பு பதினேழ் - நட்பியல் பதினேழ் அதிகாரம் உடைத்து; குடி பதின்மூன்று - ஒழிபியல் பதின்மூன்று அதிகாரம் உடைத்து; எண் பொருள் இவை ஏழாம் - எண்ணப்பட்ட பொருட்பாலுக்கு இவ் வியல்கள் ஏழாம். (எ – று.)

அரணுக்கு உருத்திட்பம் சிறத்தலின் உருவல் அரண் என்றும், பொருள் உடையார்க்கே ஒளி அமைவது ஆகலின் ஒண் பொருள் என்றும், படைக்குக் கடும்போரில் பின்கொடாத திண்மை உரித்து ஆகலின் திண்படை என்றும் கூறினர். பிற்காலத்தார் அமைச்சு முதலிய ஐந்தனையும் அங்க வியல் என ஓரியல் ஆக்கியும் வழங்குப.

பொருட்பால் இயல் அதிகாரத்தொகை சொல்லியபடி. 26

1. எறிச்சிலூர் மாடலனர் என்று இருக்க வேண்டும் போலும்.

2. (பி-ம்.) அறத்துப்பால் முப்பானெட் டாமென் றுரைத்தார்.

3. இது பின்வருமாறு நுண்பொருண்மாலையில் காணப்பெறுகிறது:

அரசிய லையைந் தமைச்சிய லீரைந்
துரைநா டரண்பொருள் ஒவ்வொன்—றுரைசொல்
படைஇரண்டு நட்புப் பதினேழ்பன் மூன்று
குடிஎழுபான் தொக்கபொருட் கூறு.

### மோசிகீரனார்

ஆண்பால்ஏழ் ஆறிரண்டு பெண்பால் அடுத்தன்பு
பூண்பால் இருபால்ஓர் ஆறாக—மாண்பாய
காமத்தின் பக்கம்ஒரு மூன்றாகக் கட்டுரைத்தார்
நாமத்தின் வள்ளுவனார் நன்கு.[1] 27

(இ - ள்.) ஆண்பால் ஏழ் – ஆண்பாற்கூற்று ஏழ் அதிகாரமும் பெண்பால் ஆறு இரண்டு - பெண்பாற்கூற்றுப் பன்னிரண்டு அதிகாரமும், அடுத்து அன்பு பூண் பால் இருபால் ஓர் ஆறாக – ஒருவரை ஒருவர் அடுத்து அன்பைப் பூணுதற் பகுதி உடைய அவ் விருபாற்கூற்று ஆறு அதிகாரமும் ஆக, மாண்பு ஆய காமத்தின் பக்கம் ஒரு மூன்றாக நாமத்தின் வள்ளுவனார் நன்கு கட்டுரைத்தார் - மாட்சியான காமத்துப்பாலின் இயல்கள் மூன்றாகப் பெயர்பெற்ற திருவள்ளுவர் நன்கு கூறினார். (எ - று.)

இவையே பொருளிலக்கணத்துக்கு அமையக் களவியல், கற்பியல் என இரண்டாக்கப்பட்டன.

காமத்துப்பால் இயல் அதிகாரத்தொகை சொல்லியபடி. 27

### காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார்

ஐயாறும் நூறும் அதிகாரம் மூன்றுமா
மெய்யாய வேதப் பொருள்விளங்கப்—பொய்யாது
தந்தான் உலகிற்குத் தான்வள் ளுவனாகி
அந்தா மரைமேல் அயன். 28

(இ - ள்.) அதிகாரம் நூறும் ஐயாறும் மூன்றுமா - அதிகாரம் நூற்று முப்பத்து மூன்றாக, மெய்யாய வேத பொருள் பொய்யாது விளங்க - வட மொழியிலிருந்த மெய்யாகிய வேதப்பொருள் பொய்யுறாது விளங்கும் பொருட்டு, அம் தாமரைமேல் அயன் தான் வள்ளுவன் ஆகி தந்தான் – அழகிய தாமரை மலர்மேல் வீற்றிருக்கும் நான்முகக் கடவுள்தான் திருவள்ளுவனாகி உலகத்தார்க்குத் தமிழில் செய்து தந்தான். (எ – று.)

உலகு, இங்கே மக்களை உணர்த்தி நின்றது. மெய்யாய வேதப் பொருள் பொய்யாது விளங்க எனவே, இதற்கு முன் மெய்யாய பொருள் பொய்யாய் மறைந்தும், பொய்யாய பொருள் மெய்யாய் விளங்கியும் கிடந்தமை சொல்லப்பட்டதாயிற்று.

அதிகாரத் தொகையோடு நூற்பொருள் இயல்பு சொல்லியபடி. 28

### மதுரைத் தமிழ நாகனார்

எல்லாப் பொருளும் இதன்பால் உள இதன்பால்
இல்லாத எப்பொருளும் இல்லையால்—சொல்லால்
பரந்தபா வால்என் பயன்வள் ளுவனார்
சுரந்தபா வையத் துணை. 29

---

1. இந்த 27-ஆம் பாடலின்பின் பின்வரும் பாடல் ஒன்று நுண்பொருள் மாலையிற் காணப்பெறுகிறது.

புணர்தல் பிரிதற் பொருள்களவு கற்பென்
றுணரும்இரு கூறும் உரைக்கிற்—புணரும்
களவேழ் அறுமூன்று கற்பிவைஐ யைந்தா
அளவுறுகா மத்துப்பால் ஆம்.

(இ - ள்.) எல்லாப் பொருளும் இதன்பால் உள - பலவகை நூல்களாலும் சொல்லப்பட்ட எல்லாப் பொருளும் இந் நூலகத்து அடங்கி இருக்கின்றன; இதன்பால் இல்லாத எப்பொருளும் இல்லை - இதனிடத்து இல்லாத யாதொரு பொருளும் எந்நூலகத்தும் இல்லை; சொல்லால் பரந்த பாவால் பயன் என் – ஆதலால், சொல்லளவினுலே விரிந்த நூல்களால் பயன் யாது? வள்ளுவனர் சுரந்த பா வைய துணை – திருவள்ளுவராலே தரப்பட்ட இந் நூல் ஒன்றே மண்ணுலகத்தாருக்குத் துணையாதல் அமையும். (எ – று.)

எல்லாப் பொருள்களுமாவன, முதல் வழி சார்பு என மூவகைப்பட்ட அறநூல் பொருள்நூல் இன்பநூல் வீட்டுநூல் என்பவற்றில் செம்பொருள் ஆக்கப்பொருள் குறிப்புப்பொருள் என இம் மூவகையால் கொள்ளக் கிடந்த காட்சிப் பொருள்களும் கருத்துப் பொருள்களும் ஆம். தொழிலும் பண்பும் ஒரோவழிப் பொருள் எனற்கு ஏற்புடைமையின் அவையும் இவற்றுள் அடங்குமாறு அறிக. பின்னும் அதனை வலியுறுத்தற்கு, இதன்பால் இல்லாத எப்பொருளும் இல்லை என்றார். சொல்லால் பரந்த எனவே அவை பொருளால் பரப்பின்மை பெறப்பட்டது. பரத்தல் - பதினயிரம் நூறயிரம் முதலிய கிரந்த அளவையால் விரிதல். சொல்லால் பரந்த நூல்களை ஆய்வோர் மலை அகழ்ந்து எலி பிடித்தல் போல மிக வருந்திச் சிறுபயன் கொள்ளுதலால் என் பயன் என்றார். ஆல்: அசை. பா, வையம்: ஆகு பெயர்கள். சின்னாட் பல்பிணிச் சிற்றறிவுடையோர்க்கு விதி விலக்குகள் முற்றும் உள்ளங்கை நெல்லிக்கனி போலக் கண்டு தெளியுமாறு உணர்த்தித் தடுமாற்றம் தீர்த்தலின், வையத்துணை என்றார்.

முற்றுணர்ந்துணர விழைவார்க்கு இஃது இன்றியமையாச் சிறப்பிற்று என்றபடி. 29

### பாரதம் பாடிய பெருந்தேவனார்

எப்பொருளும் யாரும் இயல்பின் அறிவுறச்
செப்பிய வள்ளுவர்தாம் செப்பவரும்—முப்பாற்குப்
பாரதம்சீ ராம கதைமனுப் பண்டைமறை
நேர்வனமற் றில்லை நிகர். 30

(இ - ள்.) பாரதம் சீராமகதை மனு பண்டை மறை நேர்வன - பாரதம் பழைய சீராமகதையையும், மனுமிருதி பழைய வேதத்தையும் ஒப்பனவாகும்; எப்பொருளும் யாரும் இயல்பின் அறிவுற செப்பிய வள்ளுவர் செப்ப வரும் முப்பாற்கு நிகர் இல்லை – எவ்வகைப்பட்ட பொருளையும் எவ்வகையோரும் அவற்றின் தன்மையோடு அறிய அவர்க்குச் சொல்லும்படிக்குத் திருவள்ளுவர் சொல்லலால் வந்த திருக்குறளுக்கு உவமானமாகத் தக்கது ஒன்று இல்லை.[1] (எ - று.)

மற்று: அசை. அறிதற்கரிய வேதாந்தப் பொருளும் என்றற்கு எப்பொருளும் என்றும், உயர் குலத்தாரே அன்றி ஏனையோரும் என்றற்கு யாரும் என்றும், ஐயம் திரிபு இன்றி அறிய என்றற்கு இயல்பின் அறிவுற என்றும், இதுவே சுருதி குரு இரண்டும் ஆம் என்றற்குச் செப்பிய என்றும் கூறினர். பண்டை என்பது சீராமகதைக்கும் கூட்டுக. கதாரூபமாய் இருந்து பாரத ராமாயணம் எனவும், விதிரூபமாய் இருந்து சுருதி மிருதி எனவும் கூட்டிச் சொல்லப்படுதலால் உவமான உவமேயங்களாதல் அறிக.

எப்பொருளும் யாரும் இயல்பின் அறிவுறச் செப்புதல் வேதத்திற் கின்மையால், முன் முப்பாலின் மிக்க மொழி என்ற அதனுல் பெறப்பட்ட வேதத்தின் ஒப்புமையை மறுத்தபடி. 30

1. பாரதம் முதலிய நான்கும் ஒப்பனவன்றி ஏனையவை ஒப்பாகா என்று பொருள் கூறுதல் சிறப்பு.

### உருத்திர சன்ம கண்ணர்

மணற்கிளைக்க நீர்ஊறும் மைந்தர்கள் வாய்வைத்
துணச்சுரக்கும் தாய்முலை ஒண்பால்—பிணக்கிலா
வாய்மொழி வள்ளுவர் முப்பால் மதிப்புலவோர்க்
காய்தொறும் ஊறும் அறிவு. 31

(இ - ள்.) மணல் கிளைக்க நீர் ஊறும் - மணலைத் தோண்டுந்தோறும் நீர் பெருகும்; மைந்தர்கள் வாய் வைத்து உண தாய் முலை ஒண்பால் சுரக்கும்— புதல்வர்கள் வாய் வைத்து உண்ணுந்தோறும் தாயினது முலைக்கண் நல்ல பால் பெருகும்; பிணக்கு இலா வாய்மொழி வள்ளுவர் முப்பால் ஆய்தொறும் மதி புலவோர்க்கு அறிவு ஊறும் - அவை போலப் பிணங்குதற்கு ஏது இல்லாத வாய்மைச் சொல்லை உடைய திருவள்ளுவரது திருக்குறளை ஆராயுந்தோறும் அறிவுடைய புலவர்க்கு அறிவு வளரும். (எ - று.)

கற்பிதமாகிய சாதிசமயங்களின் மானம் பற்றி உள்ளதை இல்லதாகவும், இல்லதை உள்ளதாகவும், சிறிதைப் பெரிதாகவும், பெரிதைச் சிறிதாகவும், தீயதை நல்லதாகவும், நல்லதைத் தீயதாகவும் புனைந்து பிறர் பிணங்கும்படி சொல்லப்பட்டது அல்லாமையால், பிணக்கிலா வாய்மொழி என்றார். மதிப்புலவோர்க்கு அறிவு ஊறும் எனவே, அவர் அவ்வறிவைக் கொண்டு பிறர்க்கெல்லாம் விதி விலக்குகளைக் கற்பித்தல் வேண்டும் என்றதாயிற்று.

இதனைச் சிலகால் பயிறலின் அமையாது, பலகாலும் பயிற்சி செயல் வேண்டும் என்றபடி. 31

### பெருஞ்சித்திரனார்

ஏதமில் வள்ளுவர் இன்குறள்வெண் பாவினால்
ஓதிய ஒண்பொருள் எல்லாம் உரைத்ததனால்
தாதவிழ் தார்மாற தாமே தமைப்பயந்த
வேதமே மேதக் கன. 32

(இ - ள்.) தாது அவிழ் தார் மாற—பொடியொடு விரிந்த பூமாலையை உடைய பாண்டியராசனே, ஏதம் இல் வள்ளுவர் இன் குறள் வெண்பாவினால் ஓதிய ஒண்பொருள் எல்லாம் உரைத்ததனால்-குற்றம் இல்லாத திருவள்ளுவர் இனிய குறள் வெண்பாக்களாலே நான்கு வேதங்களாலும் சொல்லப்பட்ட ஒள்ளிய பொருள்களை யெல்லாம் கூறினமையால், மேதக்கன தாமே தமை பயந்த வேதமே - மேம்பாட்டுக்குத் தக்கவை அக்குறள் வெண்பாக்களோ, முதனூலாய் நின்று அவற்றைப் பயந்த வேதங்களோ, நீ சொல்வாயாக. (எ - று.)

தாம் தம்மை எனப்பட்டவை அவை அவற்றை என்னும் பொருளைத் தந்து நின்றன. ஏகாரம் இரண்டும் வினா. பிற நூலாசிரியர்க்கெல்லாம் அவர் எதிரிகளாலே மறுக்கப்பட்டு வரும் குற்றம் போல்வது இவர்க்கு இல்லை என்றற்கு, ஏதம் இல் வள்ளுவர் என்றும், தாம் குறியவாய் நின்று கற்போர்க்கு வருத்தம் விளையாமை பற்றி இன்குறள் என்றும், உணர்வு உடையோராலே விரும்பப்பட்ட நற்குணம் உடைமை பற்றி ஒண்பொருள் என்றும் கூறினார்.

நூலாசிரியர்க்கும், நூலுக்கும், நூல் நுதலிய பொருளுக்கும் தகுதி தோன்றச் சொல்லப்பட்ட விசேடண குணங்களாலே இவ்வேதம் அவ்வேதத்தினும் சிறப்புடைமை குறிப்பித்தபடி. 33

**நரிவெரூஉத்தலையார்**

இன்பம் பொருள்அறம் வீடென்னும் இந்நான்கும்
முன்பறியச் சொன்ன முதுமொழிநூல்—மன்பதைகட்
குள்ள அரிதென் றவைவள் ளுவர்உலகம்
கொள்ள மொழிந்தார் குறள். 33

(இ - ள்.) இன்பம் பொருள் அறம் வீடு என்னும் இந்நான்கும் மன்பதைகட்கு முன்பு அறிய சொன்ன முது மொழி நூல் உள்ள அரிது என்று - இன்பம் முதலிய இந் நாற்பொருள் இயல்புகளையும் மக்கட் பரப்புக்கு அக் காலத்தில் அறியும் வண்ணம் சொல்லப்பட்ட பழமொழி வேதமானது ஓதி உணரப்படுதற்கு அரிது என்று, வள்ளுவர் அவை உலகம் கொள்ள குறள் மொழிந்தார் - திருவள்ளுவர் அவற்றை உலகத்தார் எளிதில் உணரும்படி திருக்குறளைக் கூறினர். (எ - று.)

முன்பு அறிய எனவே உற்சர்ப்பிணி ஆகலின் அக் காலத்தோர்க்கு உணர்தற்கேற்ற ஆயுள் நீட்சியும் உணர்வு வலியும் இருந்தன என்பதூஉம், அவசர்ப்பிணி ஆகலின் இக் காலத்தோர்க்கு அவை இல என்பதூஉம் பெறப்பட்டன. இவ்விரண்டும் அவாவறுத்தல் முதற்பாட்டு உரையில் காண்க. தேய வழக்கில் படாததும் வருந்திக் கற்போர்க்கு மாத்திரம் புலப்படுவதுமாய் எல்லா மொழிகட்கும் முற்பட்டுக் கடவுள் மொழியாய் நிற்றலின் முதுமொழி என்றார். அறம் முதலிய நான்கும் பிரிவுபட்டுத் தோன்றாமையை உடைத்து ஆகலின் உள்ள அரிதாயிற்று.

பழைய வேதம் உளது ஆகவும் வேறு இது சொல்லுதற்குக் காரணம் உணர்த்தியபடி. 33

**மதுரைத் தமிழாசிரியர் செங்குன்றூர்கிழார்**

புலவர் திருவள் ளுவர்அன் றிப் பூமேல்
சிலவர் புலவர்எனச் செப்பல்—நிலவு
பிறங்கொளிமா லைக்கும் பெயர்மாலை மற்றும்
கறங்கிருள்மா லைக்கும் பெயர். 34

(இ - ள்.) பூமேல் புலவர் திருவள்ளுவர் அன்றி சிலவர் புலவர் என செப்பல் - பூவுலகின்கண்ணே புலவர் எனத் திருவள்ளுவரை அன்றி வேறு சிலரையும் புலவர் என்று சொல்லுதல், மாலை நிலவு பிறங்கு ஒளி மாலைக்கும் பெயர் மற்றும் கறங்கு இருள் மாலைக்கும் பெயர் (செப்பல்) - மாலை என்பது நிலவால் விளங்குகின்ற அந்திக்கும் பெயராக மற்றும் சூழ்கின்ற இருளை உடைய அந்திக்கும் பெயராகச் சொல்லுதல் போலும். (எ - று.)

செப்பல் என்றது பின்னும் கூட்டப்பட்டது. புலமையாவது பல வேறுவகைப்பட்ட நூல் உணர்ச்சிகளை எல்லாம் ஒருங்கே கொண்ட பேரறிவு உடைமையாம். உயர்வு ஒப்பு அற்ற இவரது புலமையைக் குறித்து நோக்குங்கால் ஏனையோர் புலமை புலமையன்றாய் முடிதலின் இவ்வாறு கூறினர்.

புலவர் என்பது நாயனார்க்கே காரணப் பெயராம் என்றபடி. 34

**மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார்**

இன்பமும் துன்பமும் என்னும் இவைஇரண்டும்
மன்பதைக் கெல்லாம் மனம்மகிழ—அன்பொழியா
துள்ளி உணர உரைத்தாரே ஓதுசீர்
வள்ளுவர் வாயுறை வாழ்த்து. 35

(இ - ள்.) இன்பமும் துன்பமும் என்னும் இவை இரண்டும் உள்ளி உணர - பின் வரக்கடவனவாய சுகமும் துக்கமும் என்னப்பட்ட இவற்றி னுடைய இருவகைக் காரணங்களையும் ஆராய்ந்து அறியவும், அன்பு ஒழியாது மனம் மகிழ - தம்மேல் அன்பு நீங்காமல் உள்ளம் களிகூரவும், மன்பதைக்கு எல்லாம் ஓது சீர் வள்ளுவர் வாயுறை வாழ்த்து உரைத்தார் – மக்கட் பரப்புக்கெல்லாம் புகழப்படும் சீரை உடைய திருவள்ளுவர் வாயுறை வாழ்த்தாகத் திருக்குறளைக் கூறினர். (எ - று.)

இன்பத்தின் காரணம் விதிக் குறளாலும், துன்பத்தின் காரணம் விலக்குக் குறளாலும் சொல்லப்பட்டன. முன்பு அறிதற்குப் பயன் அவற்றைச் செய்தலும் தவிர்தலும் ஆம். வேண்டுவன எல்லாம் தொகுத்து உணர்தலின் மனம் மகிழ்தல் சொல்லப்பட்டது. அவ்வேதம் போலாது பலர்க்கும் உபயோகியாகக் கூறலின், மன்பதைக் கெல்லாம் என்றார். வாயுறை வாழ்த்தின் இயல்பு, "வாயுறை வாழ்த்தே வயங்க நாடின், வேம்பும் கடுவும் போல வெஞ்சொல், தாங்குதல் இன்றி வழிநனி பயக்குமென், றோம்படைக் கிளவியின் வாயுறுத் தற்றே"[1] என்னும் தொல்காப்பியச் சூத்திரத்தால் அறிக.

எதிர்கால விளைவுணர்ச்சி பயத்தல் சொல்லியபடி. 35

### கவிசாகரப் பெருந்தேவனர்

பூவிற்குத் தாமரையே பொன்னுக்குச் சாம்புனதம்
ஆவிற் கருமுனி ஆயானைக் கமரர்உம்பல்
தேவில் திருமால் எனச்சிறந்த தென்பவே
பாவிற்கு வள்ளுவர்வெண் பா. 36

(இ - ள்.) பூவிற்கு தாமரை - மலர்களுக்குள்ளே தாமரை மலரும், பொன்னுக்கு சாம்புனதம் – பொன்களுக்குள்ளே சாம்புனதப் பொன்னும், ஆவிற்கு அரு முனி ஆ - பசுக்களுக்குள்ளே காமதேனுவும், யானைக்கு அமரர் உம்பல் - யானைகளுக்குள்ளே ஐராவதமும், தேவில் திருமால் என - தேவர் களுக்குள்ளே திருமாலும் போல, பாவிற்கு வள்ளுவர் வெண்பா சிறந்தது என்ப - நூல்களுக்குள்ளே திருவள்ளுவரது குறள் வெண்பாச் சிறந்தது என்று அறிவுடையோர் சொல்லுவர். (எ - று.)

ஏ: அசை. பா: ஆகுபெயர். பொன் ஆடகம், கிளிச்சிறை, சாதரூபம், சாம்புனதம் என நால்வகைப்படும். காமதேனு வசிட்ட முனியிடத்து உள்ள தாகலின் அருமுனி ஆ என்றார்.

உவமான முகத்தால் இஃது பல நூல்களினும் சிறந்து நிற்கின்ற மாட்சிமை சொல்லியபடி. 36

### மதுரைப் பெருமருதனர்

அறம்முப்பத் தெட்டுப் பொருள்எழுப தின்பத்
திறம்இருபத் தைந்தால் தெளிய—முறைமையால்
வேத விழுப்பொருளை வெண்குறளால் வள்ளுவனர்
ஓதவழுக் கற்ற துலகு. 37

(இ – ள்.) அறத்திறம் முப்பத்தெட்டால் - அறத்தின் கூறுபாடு முப்பத்தெட்டு அதிகாரங்களாலும், பொருள் திறம் எழுபதால் - பொருள் கூறுபாடு எழுபது அதிகாரங்களாலும், இன்பத்திறம் இருபத்தைந்தால் -

1. தொல். செய்யுளியல், 112.

காமத்தின் கூறுபாடு இருபத்தைந்து அதிகாரங்களாலும், தெளிய - தெளியும் பொருட்டு, முறைமையால் வேத விழு பொருளை வெண் குறளால் வள்ளுவனர் ஓத - காரணகாரிய ஒழுங்கால் வேதத்தின் உயர்வாகிய பொருளைக் குறள் வெண்பாக்களாலே திருவள்ளுவனர் ஓதலால், உலகு வழுக்கு அற்றது - உலகமானது வழுவுதலினின்றும் நீங்கிற்று. (எ - று.)

திறமும் ஆலும் முன்னும் கூட்டப்பட்டன. உயர்வாகிய பொருள் கருமகாண்டம் பிரமகாண்டம் இரண்டினுள்ளும் சிறந்த பொருள். வழுக்குதல்- விதியை விலக்கு என்றும், விலக்கை விதி என்றும் கோடல். உலகு, மக்களை உணர்த்தி நின்றது. துணிவு பற்றி அற்றது என இறந்த காலத்தால் கூறினர்.

முன்னதில் வேறுபட்ட முப்பால்களின் அதிகாரத் தொகைகளோடு உலகிற்கு விளையும் நன்மை சொல்லியபடி. 37

### கோவூர்கிழார்

அறம்முதல் நான்கும் அகலிடத்தோர் எல்லாம்
திறமுறத் தேர்ந்து தெளிய—குறள்வெண்பாப்
பன்னிய வள்ளுவனர் பால்முறைநேர் ஒவ்வாதே
முன்னை முதுவோர் மொழி. 38

(இ - ள்.) அறம் முதல் நான்கும் அகலிடத்தோர் எல்லாம் திறம் உற தேர்ந்து தெளிய குறள்வெண்பா பன்னிய வள்ளுவனர் பால் முறை – அறம் முதலிய நான்கு பொருள்களையும் மண்ணுலகத்து உள்ளோர் எல்லாம் வகைப்பட ஆராய்ந்து தெளியும்பொருட்டுக் குறள் வெண்பாக்க ளாலே சொல்லப்பட்ட திருவள்ளுவ நாயனரது முப்பால்களை உடைய புத்தகத்தின்கண்ணே, முன்னை முதுவோர் மொழி நேர் ஒவ்வாது – முற் காலத்துள்ள பெரியோரது நூல்களுக்கு நேர்தல் பொருந்தாது. (எ – று.)

மொழி : ஆகுபெயர். பெரியோராவார் வடமொழியிலும் தென் மொழியிலும், பிற மொழிகளிலும் நூல் செய்த முனிவரும், புலவரும், பிறரும். அந் நூல்களாவன மனு முதலியோராலே செய்யப்பட்ட அறநூல் முதலியன.

இதன் புத்தகத்தில் முன் நூல்களில் ஒன்றும் சேர்க்கப் படுவ தற்குத் தகுவது அன்று என்று சொல்லியபடி. 38

### உறையூர் முதுகூற்றனர்

தேவில் சிறந்த திருவள் ளுவர்குறள்வெண்
பாவில் சிறந்திடுமுப் பால்பகரார்—நாவிற்
குயலில்லை சொற்சுவை ஓர்வில்லை மற்றும்
செயலில்லை என்னும் திரு. 39

(இ – ள்.) தேவில் சிறந்த திருவள்ளுவர் குறள் வெண்பாவில் சிறந்திடு முப்பால் பகரார் - தெய்வத் தன்மையால் சிறந்த திருவள்ளுவரது குறள் வெண்பாக்களோடு கூடிச் சிறந்து தோன்றுநின்ற முப்பால்களையும் ஓதாரது, நாவிற்கு உயல் இல்லை – வாக்கிற்கு இன்சொல் சொல்லி வாழ்தல் உண்டாகாது, சொல் சுவை ஓர்வு இல்லை – மனத்திற்குச் சொற்களின் சுவையை அறிதல் உண்டாகாது, மற்றும் செயல் இல்லை – இவை அன்றியும் காயத்துக்கு நல்ல செயல் உண்டாகாது, என்னும் திரு என்று நினைத்துத் திருமகள் அவரிடத்துச் சேராள். (எ – று.)

சுவை ஓர்தற்கும் செயலுக்கும் உரிய மனமும், காயமும் வருவிக்கப் பட்டன. திருமகள் சேராமையாகிய காரியத்தைக் காரணமாக உபசரித்தார். ஓதார்க்கு உள ஆகாமை கூறவே, ஓதுவோர்க்கு இவை உளவாகலின், வாக்கிற்குக் கடுஞ்சொல், பொய், கோள், புறங்கூறல்களும், மனத்திற்குப் பிறனில் விழைதல், பிறன் பொருள் விழைதல், பிறன் பொருட்குக் கேடு எண்ணல், பிற உயிர்க்கு இறுதி எண்ணல்களும், காயத்திற்குப் பிறன்மனை புணர்தல், உயிர்க்கொலை செய்தல், பழிஊண் உணல், பிறர் பொருள் வௌவல்களும் ஆகிய குற்றங்கள் எல்லாம் நீங்கும் என்பது பெறப்பட்டது.

அற இன்பங்கட்குக் காரணமாதல் சிறப்புடைய பொருட்பேறு இஃது ஓதலின் உளதாம் என்றபடி. 39

### இழிகட் பெருங்கண்ணனார்

இம்மை மறுமை இரண்டும் எழுமைக்கும்
செம்மை நெறியில் தெளிவுபெற—மும்மையின்
வீடவற்றின் நான்கின் விதிவழங்க வள்ளுவனார்
பாடினார் இன்குறள்வெண் பா. 40

(இ – ள்.) இம்மை மறுமை இரண்டும் எழுமைக்கும் செம்மை நெறியின் தெளிவு பெற – இகபரங்கட்காவன இரண்டையும் வினைப்பயன் தொடர்தற்குரிய எழுபிறப்பிற்கும் ஆகச் செவ்வையான வழியால் யாவரும் தெளிதல் பெறவும், மும்மையின் அவற்றின் வீடு நான்கின் விதி வழங்க – அறம் பொருள் இன்பம் என்னும் முப்பால்களுள் அம்முப்பால் பொருள்களோடு வீடும் ஆகிய நாற்பொருள்களது விதிகளும் வழங்கவும், வள்ளுவனார் இன்குறள் வெண்பா பாடினார் - திருவள்ளுவ நாயனார் இனிய குறள் வெண் பாவைப் பாடினார். (எ - று.)

செவ்வையான வழி, விதியும் பத்தியும் ஞானமும் நோயாளிக்கு மருந்தும் அனுபானமும் பத்தியமும் போல் ஒன்றற்கொன்று முரணாது கூடி நிற்கும் வழி. வீட்டு விதி துறவறத்தில் காண்க.

இம்மை மறுமை வீடு மூன்றும் பயக்குமாறு சொல்லியபடி. 40

### செயிர்க்காவிரியார் மகனார் சாத்தனார்

ஆவனவும் ஆகா தனவும் அறிவுடையார்
யாவரும் வல்லார் எடுத்தியம்பத்—தேவர்
திருவள் ளுவர்தாமும் செப்பியவே செய்வார்
பொருவில் ஒழுக்கம்பூண் டார். 41

(இ – ள்.) ஆவனவும் ஆகாதனவும் அறிவுடையார் யாவரும் எடுத்து இயம்ப வல்லார் - மக்களுக்கு ஆவனவற்றையும் ஆகாதவற்றையும் அறிவுடையார் யாவரும் இனி இதிலிருந்து எடுத்துச் சொல்லுதற்கு வல்லவராவார்; தேவர் திருவள்ளுவர் செப்பியவே பொரு இல் ஒழுக்கம் பூண்டார் செய்வார் – ஆதலால், தேவராகிய திருவள்ளுவராலே சொல்லப்பட்டவற்றையே ஒப்பில்லாத ஒழுக்கத்தை மேற்கொண்டவர் செய்வார். (எ-று.)

இங்ஙனம் கூறவே, அவ் வேதத்திலிருந்து உள்ளவாறு எடுத்துச் சொல்லுதல் அறிவுடையார்க்கு முடியாமையால், ஒழுக்கம் பூண்டார்க்கு அதன்கண்ணே சொல்லப்பட்டபடி வழுவாமல் செய்தல் கூடாமை காட்டப் பட்டது. தாம், உம்: அசைகள். ஆவன - இன்பத்தைத் தருவன. ஆகாதன - துன்பத்தைத் தருவன. ஒப்பில்லாத ஒழுக்கம், கொல்லாமை முதலியன.

போதகாசிரியர்க்கும் கேட்டு ஒழுகுவோர்க்கும் வரும் நன்மை சொல்லியபடி. 41

### செயலூர்க் கொடுஞ்செங்கண்ணனார்

வேதப் பொருளை விரகால் விரித்துலகோர்
ஓதத் தமிழால் உரைசெய்தார்—ஆதலால்
உள்ளுநர் உள்ளும் பொருளெல்லாம் உண்டென்பர்
வள்ளுவர் வாய்மொழி மாட்டு. 42

(இ – ள்.) வேத பொருளை உலகோர் ஓத விரகால் விரித்து தமிழால் உரைசெய்தார் – வேதத்தின் பொருளை உலகத்தார் ஓதி உணரும் பொருட்டு உபாயத்தால் விரித்துத் தமிழ்மொழியிலே சொல்லியருளினர்; ஆதலால் உள்ளுநர் உள்ளும் பொருள் எல்லாம் வள்ளுவர் வாய்மொழிமாட்டு உண்டு என்ப – ஆதலால் நினைப்பவர் நினைக்கும் பொருள்கள் எல்லாம் திருவள்ளுவர் திருவாயில் பிறந்த திருக்குறளின்கண்ணே உண்டு என்று அறிவுடையோர் சொல்லுவர். (எ – று.)

உபாயத்தால் விரித்தல், சொற் சுருக்கத்தால் ஓதற்கு எளிது என மனவெழுச்சி உண்டாக்கிக் கற்போரது அறிவு அளவிற்கு ஏற்பப் பொருள் அளவு விரிய வைத்தல்.

நினைக்கப்படும் பொருள்கள் எல்லாம் இதன்கண்ணே இக் காரணத் தால் தோன்றுகின்றன என்று கூறியபடி. 42

### வண்ணக்கஞ் சாத்தனார்

ஆரியமும் செந்தமிழும் ஆராய்ந் திதனின்இது
சீரிய தென்றொன்றைச் செப்பரிதால்—ஆரியம்
வேதம் உடைத்துத் தமிழ்திரு வள்ளுவனார்
ஓது குறட்பா உடைத்து. 43

(இ – ள்.) ஆரியமும் செந்தமிழும் ஆராய்ந்து இதனின் இது சீரியது என்று ஒன்றை செப்பரிது – வடமொழியையும் தென்மொழியையும் ஆராய்ந்து இதைக்காட்டிலும் இது சிறப்புடைத்து என்று ஒன்றைத் தெரிந்து சொல்லுதல் கூடாது; ஆரியம் வேதம் உடைத்து தமிழ் திருவள்ளுவனார் ஓது குறள்பா உடைத்து – வடமொழி வேதம் உடைத்து; தமிழ்மொழி திருவள்ளுவ நாயனார் சொல்லிய குறட்பா உடைத்து, ஆதலால். (எ – று.)

ஆல் : அசை. வடமொழியும் தென்மொழியும் பிற மொழிகள் போலாது பாணினியாரும் அகத்தியனாரும் முதலாகிய முனிவர்களாலே செயப்பட்ட இலக்கண நூல்களாலே சீர்திருந்தி நிற்றல் முதலிய குணங்கள் உடைமையாலும், அது பிராகிருதம் முதலியவற்றுக்குப் போல் இது ஆந்திரம் முதலியவற்றுக்கு முதலாய் நிற்றலாலும், ஒன்றற்கொன்று குறைபாடு உடைத்தன்றேனும், வேதம் உடைமை பற்றி வடமொழிக்குச் சொல்லப்பட்ட உயர்வு தென்மொழிக்கண்ணே திருக்குறள் உண்டாதலின் இனி இல்லை என்றற்கு, இதனின் இது சீரியது என்று ஒன்றைச் செப்பரிது என்றார்.

இத் திருக்குறளாலே வடமொழியோடு தென்மொழிக்கு ஒப்புமை நிறைவு சொல்லியபடி. 43

### களத்தூர்கிழார்

ஒருவர் இருகுறளே முப்பாலின் ஓதும்
தருமம் முதல்நான்கும் சாலும்—அருமறைகள்
ஐந்தும் சமயநூல் ஆறும்நம் வள்ளுவனார்
புந்தி மொழிந்த பொருள். 44

(இ - ள்.) அருமறைகள் ஐந்தும் சமய நூல் ஆறும் நம் வள்ளுவனார் புந்தி மொழிந்த பொருள் - இருக்கு முதல் பாரதம் ஈறாகிய அரிய வேதங்கள் ஐந்தும் அவ்வேதத்தின் வழிப்பட்ட சமய நூல்கள் ஆறும் நம்முடைய திருவள்ளுவரால் உலகத்தார்க்குப் புத்தியாகச் சொல்லப்பட்ட நூலில் அடங்கும்; ஒருவர் இரு குறளே முப்பாலின் ஓதும் தருமம் முதல் நான்கும் சாலும்—ஆதலால், ஒருவர் ஒருவிகற்பமும் இருவிகற்பமும் ஆகிய இருவகைக் குறள்களையுமே முப்பால்களில் அத்தியயனம் செய்து அறியப் படுகின்ற அறம் முதலிய நாற்பொருள்களும் அவருக்குப் போதும். (எ – று.)

ஒருவனுக்கே ஐந்தும் ஓதி உணர முடிவு போகாது வேறு வேறான அதிகாரிகளுடைமை பற்றி, அருமறைகள் ஐந்தும் என்றார். சமய நூல் ஆறும் ஒன்றே பொருள் என்னும் பாட்டுரையில் காண்க. நமக்கெல்லாம் அறிவு ஒழுக்கம் கொளுத்தி நல்வழிப் படுத்த வந்த பரமாசாரியர் இவரே என்னும் உரிமை தோன்றற்கு நம் வள்ளுவனார் என்றார். மறைகள் ஐந்தும் சமய நூல் ஆறும் நம் வள்ளுவனார் புந்தி மொழிந்த பொருள் எனலால், அவை பலவற்றினும் வேறு வேறு வகைப்பட்டுச் சிறந்து நின்ற கருத்துக்கள் எல்லாம் இவ்வொரு நூற்கண்ணே அடங்கி நிற்கின்றமை சொல்லப்பட்டதாயிற்று. பொருள்: ஆகுபெயர். ஒருவர் எனப் பொதுப்படக் கூறலால், இதனை ஓதுதற்குப் பெண்பாலாருக்கும் அதிகாரம் உண்டு என்பது கொள்ளப்பட்டது.

இவ் வொரு நூல் ஓதி உணர்ந்தோர் அருமறைகள் ஐந்தும் சமய நூல் ஆறும் ஓதி உணர்ந்தோர் ஆவர் என்றபடி. 44

### நச்சுமனார்

எழுத்தசை சீரடி சொற்பொருள் யாப்பு
வழுக்கில் வனப்பணி வண்ணம்—இழுக்கின்றி
என்றெவர் செய்தன எல்லாம் இயம்பின
இன்றிவர் இன்குறள்வெண் பா. 45

(இ - ள்.) எழுத்து அசை சீர் அடி சொல் பொருள் யாப்பு வழுக்கு இல் வனப்பு அணி வண்ணம் இழுக்கு இன்றி என்று எவர் செய்தன—எழுத்து முதல் வண்ணம் ஈறாகச் சொல்லப்பட்ட இவற்றுள் வழுவுதல் இல்லாமல் எக்காலத்தில் எவரால் எவை செய்யப்பட்டன, எல்லாம் இன்று இவர் இன் குறள் வெண்பா இயம்பின—அவை யெல்லாம் இக்காலத்து இத் திருவள்ளுவராலே செய்யப்பட்ட இவ் வினிய குறள் வெண்பாக்களிற் சொல்லப் பட்டன. (எ - று.)

வனப்பு : அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன், இழைபு. அணி : சொல்லணி, பொருளணி, ஒலியணி. வண்ணம் : குறில் அகவல் தூங்கிசை வண்ணம் முதலியன. ஒவ்வொரு காலத்தில் ஒவ்வொரு பாவலர் ஒவ்வொரு குணத்தினாலே சிறந்து விளங்க நூல் செய்தனர். இவரோ எனின், எல்லாக் குணங்களாலும் நிறைந்து சிறந்து விளங்கச் செய்தமையின், இவ்வாறு கூறினார்.

இதன் பாக்களின் சிறப்புச் சொல்லியபடி. 45

### அக்காரக்கனி நச்சுமனார்

கலைநிரம்பிக் காண்டற் கினிதாகிக் கண்ணின்
நிலைநிரம்பு நீர்மைத் தெனினும்—தொலைவிலா
வானூர் மதியம் தனக்குண்டோ வள்ளுவர்முப்
பானூல் நயத்தின் பயன். 46

(இ - ள்.) கலை நிரம்பி காண்டற்கு இனிது ஆகி கண்ணின் நிலை நிரம்பும் நீர்மைத்து எனினும்—மதியமும் முப்பால் நூலும் பதினாறு கலைகளாலும் அறுபத்து நாலு கலைகளாலும் நிறைந்து, நோக்குதற்கு ஆராய்ச்சி செய்தற்கு இனிதாகி, முகக்கண்ணின் நிலையில் அகக்கண்ணின் நிலையில் நிரம்புகின்ற தண்மை உடைத்தாயினும், குணம் உடைத்தாயினும், வள்ளுவர் முப்பால் நூல் நயத்து இன் பயன் தொலைவு இலா வான் ஊர் மதியம் தனக்கு உண்டோ—திருவள்ளுவரது முப்பால் நூலினது நயத்தால் விளைவதாகிய இனிய பயனனது ஒழிவின்றி ஆகாசத்தின்கண்ணே திரிகின்ற மதியினிடத்து உண்டோ? (எ - று.)

மதியம் தனக்கு என்றது வேற்றுமை மயக்கம். ஓகாரம், எதிர்மறை. ஆதாரமாகக் கொள்ளுதற்கு ஏற்புடைத்தல்லாத வானை ஆதாரமாகக் கோடலின், இழிவு தோன்றத் தொலைவிலா வானூர் மதியம் என்றார். நயம் - மறுப்படாமை, மழுங்காமை, குறைவுறாமை முதலியன. பயன் - இம்மை, மறுமை, வீட்டு இன்பங்கள்.

ஒப்புமை சொல்லுதற்கு நூல்களில் ஒன்றும் இன்மையால், ஏனைப் பொருள் பலவற்றினும் சிறந்த மதியையாயினும் சொல்லுதும் எனப் புகின் அதுவும் இதனுல் தகுவது அன்று என்றபடி. 46

### நப்பாலத்தனார்

அறம்தகளி ஆன்ற பொருள்திரி இன்பு
சிறந்தநெய் செஞ்சொல்தீத் தண்டு—குறும்பாவா
வள்ளுவனார் ஏற்றினார் வையத்து வாழ்வார்கள்
உள்ளிருள் நீக்கும் விளக்கு. 47

(இ - ள்.) அறம் தகளி - தருமம் அகலும், பொருள் திரி - பொருள் திரியும், இன்பு நெய் - காமம் நெய்யும், செஞ்சொல் தீ - செவ்விய சொல் நெருப்பும், குறும் பா தண்டா - குறட் பாத் தண்டும் ஆக, வள்ளுவனார் வையத்து வாழ்வார்கள் உள் இருள் நீக்கும் விளக்கு ஏற்றினார் - திருவள்ளுவ நாயனார் பூமியின்கண் வாழ்வோரது அகத்து இருளை ஒழிப்பதாகிய விளக்கு ஏற்றினார். (எ - று.)

ஆன்றல் - மேம்படுதல். அகத்திருள் - அஞ்ஞானம். தீச் சுடர் தகளி முதலியவற்றோடு கூடிப் புறத்திருளை எப்படியோ அப்படி நாயனாரது திருவாயில் பிறந்த செஞ்சொல் அறம் முதலியவற்றோடு கூடி அகத் திருளைக் கெடுத்தலின், இங்ஙனம் உருவகம் செயலாயிற்று.

மனையகத்து ஏற்றப்படுகிற விளக்கு அம் மனையகத்து உள்ளார்க்கு மாத்திரமே உபயோகியாய் நிற்றலாலும், அகத்திருளைக் கெடுக்கவல்லது அன்மையாலும், இஃது உலகத்து வாழ்வோர் பலர்க்கும் உபயோகியாய் நிற்றலாலும், அகத்திருள் கெடுத்தலாலும், அதனின் இது பல கோடி மடங்கு மிக்குச் சிறந்து நிற்கின்றமை உணர்த்தியபடி. 47

### குலபதி நாயனார்

உள்ளக் கமலம் மலர்த்தி உளத்துள்ள
தள்ளற் கரியஇருள் தள்ளுதலால்—வள்ளுவனார்
வெள்ளைக் குறட்பாவும் வெங்கதிரும் ஒக்கும்எனக்
கொள்ளத் தகும்குணத்தைக் கொண்டு. 48

(இ - ள்.) உள்ள கமலம் மலர்த்தி உளத்து உள்ள தள்ளற்கு அரிய இருள் தள்ளுதலால் - நெஞ்சமாகிய தாமரை மலரை மலர்த்தி மக்களது அகத்திலுள்ள பிறிதொன்றனலே நீக்கப்படாத அஞ்ஞான இருளை நீக்குத

லால், வள்ளுவனுர் வெள்ளை குறள் பாவும் வெங்கதிரும் குணத்தை கொண்டு ஒக்கும் என கொள்ள தகும்—திருவள்ளுவரது குறள்வெண்பாவும், புறத்துத் தாமரை மலரை மலர்த்திப் புறவிருளை நீக்குகின்ற சூரியனும் அச் செய்கையைக் கொண்டு ஒக்கும் என்று கொள்ளத் தகும். (எ – று.)

செயலும் தொழிற்பண்பு எனப்படுதலின் குணம் எனப்பட்டது. அது மலர்த்தலும் தள்ளுதலும் ஆம். குணத்தைக் கொண்டு எனவே, செயப்படு பொருளைக் கொண்டு ஒக்கும் எனக் கொள்ளத் தகாது என்றதாயிற்று.

உலகுக் கெல்லாம் பேரொளியாகிய சூரியனும் இதற்கு ஒருபுடை ஒப்பாம் என்றபடி. 48

**தேனீக்குடிக் கீரனுர்**

பொய்ப்பால பொய்யேயாய்ப் போயினபொய் அல்லாத
மெய்ப்பால மெய்யாய் விளங்கினவே—முப்பாலின்
தெய்வத் திருவள் ளுவர்செப் பியகுறளால்
வையத்து வாழ்வார் மனத்து. 49

(இ – ள்.) தெய்வ திருவள்ளுவர் முப்பாலின் செப்பிய குறளால்—தெய்வத்தன்மையை உடைய திருவள்ளுவ நாயனுர் மூன்று பால்களை உடையதாகக் கூறிய குறள் நூலைக் கேட்டு அறிதலால், வையத்து வாழ்வார் மனத்து பொய்ப்பால பொய்யேயாய் போயின – உலகின்கண் வாழ்வாருடைய மனத்துப் பொய்யின் பகுதியிற் பட்டவை யெல்லாம் பொய்யேயாய்ப் போயின; பொய் அல்லாத மெய்ப்பால மெய்யாய் விளங்கின – பொய்ம்மை அல்லாத மெய்யின் பகுதியிற் பட்டவை எல்லாம் மெய்யேயாய் விளங்கின. (எ – று.)

குறளால் பொய்ப்பால பொய்யேயாய்ப் போயின மெய்ப்பால மெய்யேயாய் விளங்கினஎனவே, இதற்கு முன்னெல்லாம் உண்மை துணியப் படாமையின், பொய்ப்பால மெய்ப்பால போல் மேற்கொள்ளப்பட்டும், மெய்ப்பால பொய்ப்பால போல் கைவிடப்பட்டும் மயங்கிக் கிடந்தன என்றதாயிற்று.

இதன் மெய்யுணர்வு பயத்தற் சிறப்புச் சொல்லியபடி. 49

**கொடிஞாழல் மாணி பூதனுர்**

அறன்அறிந்தேம் ஆன்ற பொருள்அறிந்தேம் இன்பின்
திறன்அறிந்தேம் வீடு தெளிந்தேம்—மறன்எறிந்த
வாளார் நெடுமாற வள்ளுவனுர் தம்வாயால்
கேளா தனஎல்லாம் கேட்டு. 50

(இ – ள்.) மறன் எறிந்த வாள் ஆர் நெடுமாற – பகைவரை எறிந்த வாட்படை தங்கிய வீரேங்கும் பாண்டியராசனே, வள்ளுவனுர் தம் வாயால் கேளாதன எல்லாம் கேட்டு அறன் திறன் அறிந்தேம்-திருவள்ளுவ நாயனுரது வாக்கால் இதற்குமுன் கேட்கப்பட்டில்லாதவை எல்லாம் இப்போது கேட்டு அறத்தின் திறத்தை அறிந்தேம்; பொருள் திறன் அறிந்தேம் – பொருளின் திறத்தை அறிந்தேம்; இன்பின் திறன் அறிந்தேம் - இன்பத்தின் திறத்தை அறிந்தேம்; வீட்டு திறன் தெளிந்தேம் – வீட்டின் திறத்தை அறிந்தேம். (எ - று.)

திறன், அறம் முதலியவற்ருேடும் கூட்டப்பட்டது. மறன்: ஆகுபெயர். கேளாதன, பிற நூலாசிரியர்க் கெல்லாம் அறிந்து சொல்லுதற்கு எட்டாதிருந்த அறம் முதலியவற்றின் நுட்பங்கள்.

இம்மை மறுமை வீடுகளைக்குறித்து உணர்தற்குரிய உறுதிப்பொருள் நான்கும் உணர்தலின், இனி யாதொன்ருலும் குறைவு இல்லை என்றபடி. 50

### கவுணியனார்

சிந்தைக் கினிய செவிக்கினிய வாய்க்கினிய
வந்த இருவினைக்கு மாமருந்து—முந்திய
நன்னெறி நாம்அறிய நாப்புலமை வள்ளுவனார்
பன்னிய இன்குறள்வெண் பா. 51

(இ - ள்.) முந்திய நன்னெறி நாம் அறிய நா புலமை வள்ளுவனார் பன்னிய இன்குறள் வெண்பா – முற்பட்டதாகிய நல்ல வழியை நாம் அறியும் பொருட்டு நாவால் விளங்குகின்ற புலமையை உடைய திருவள்ளுவ நாயனாரால் சொல்லப்பட்ட இனிய குறள் வெண்பாக்கள், சிந்தைக்கு இனிய - நினைத்தால் மனத்திற்கு இன்பம் செய்வன; செவிக்கு இனிய– கேட்டால் காதுக்கு இன்பம் செய்வன; வாய்க்கு இனிய - ஓதினால் வாய்க்கு இன்பம் செய்வன; வந்த இரு வினைக்கு மாமருந்து – தொடர்ந்து வருகின்ற இரு வினைகளாகிய நோய்களுக்குப் பெரிய மருந்துகளாவன. (எ - று.)

குறட்பாவை மருந்து என்றமைக்கு ஏற்க வினையை நோய் என்னாமையால் ஏகதேச ரூபகம். நல்வினையும் பிறவிக்கு ஏது ஆகலால் இருவினை என்றார். முற்பட்ட நல்வழி, நன்மக்களுக்கு அநாதியாய் அமைந்துள்ளது; அது சமயத்தாரது பல வகைப்பட்ட கற்பனையினாலே மறைபட்டு நின்றமையின், நாம் அறிய என்றார்.

இந்நூலின் பாக்களைச் சிந்தித்தல் முதலியன செய்யுங்காலும் சொற்பொருள் நயங்களாலே இன்பம் விளைத்துத் தெய்வத்தன்மையால் வினைத் துயரும் ஒழிக்கும் என்றபடி. 51

### மதுரைப் பாலாசிரியனார்

வெள்ளி வியாழம் விளங்கிரவி வெண்திங்கள்
பொள்ளென நீக்கும் புறஇருளைத்—தெள்ளிய
வள்ளுவர் இன்குறள் வெண்பா அகிலத்தோர்
உள்ளிருள் நீக்கும் ஒளி. 52

(இ – ள்) வெள்ளி வியாழம் விளங்கு இரவி வெண் திங்கள் புற இருளை பொள்ளென நீக்கும் - சுக்கிரன், சுரகுரு, சூரியன், சந்திரன் என்பன புறத்திருளை விரைவிலே நீக்கும் ஒளிகளாம்; தெள்ளிய வள்ளுவர் இன் குறள் வெண்பா அகிலத்தோர் உள் இருள் நீக்கும் ஒளி—முற்றுணர்ந்த திருவள்ளுவ நாயனாரது இனிய குறள் வெண்பா உலகத்தோரது உள்ளிருளை நீக்கும் ஒளியாம். (எ - று.)

இங்ஙனம் கூறவே, புறத்திருளுக்கு அவை பல உள, அகத்திருளுக்கு இஃதொன்றே உளது என்றதாயிற்று.

அவற்றுள் ஒன்றாலும் நீக்கப்படாத அகத்திருளை நீக்க வல்லது ஆகலின், இதற்கு எவ்வாற்றானும் ஒப்பது ஒன்று இன்று என்றபடி. 52

### ஆலங்குடி வங்கனார்

வள்ளுவர் பாட்டின் வளம்உரைக்கின் வாய்மடுக்கும்
தெள்ளமுதின் தீஞ்சுவையும் ஒவ்வாதால்—தெள்ளமுதம்
உண்டறிவார் தேவர் உலகடைய உண்ணுமால்
வண்டமிழின் முப்பால் மகிழ்ந்து. 53

(இ - ள்.) வள்ளுவர் பாட்டின் வளம் உரைக்கின் வாய் மடுக்கும் தெள் அமுதின் தீஞ்சுவையும் ஒவ்வாது - திருவள்ளுவரது பாட்டினது தீஞ்சுவையைச் சொல்லுமிடத்து, உண்ணப்படுகின்ற தெள்ளிய அமுதினது

தித்திப்பாகிய சுவையும் ஒப்பாகாது; தெள்ளமுதம் உண்டு அறிவார் தேவர்- அத் தெள்ளிய அமுதை உண்டு அதன் சுவையை அறிபவர் தேவர்கள்; வண் தமிழின் முப்பால் உலகுஅடைய மகிழ்ந்து உண்ணும் - வளம் பொருந்திய தமிழின்கண்ணதாகிய முப்பாலாகிய அதின் மும்மடி சிறந்த பாலை எவ் வுலகத்தாரும் மகிழ்ந்து உண்டு தீஞ்சுவை அறிவார். (எ - று.)

வளம்: ஆகுபெயர். ஆல்: அசை. அவ் வமிர்தம் வாயுள் பெய்தவழி நாவில் பட்ட சிறிதுபொழுது அளவே தீஞ்சுவை பயப்பது; இப்பாட்டு நெஞ் சின்கண் நிலைபெற்று ஒழிவின்றித் தீஞ்சுவை பயத்தலின் ஒவ்வாது என்றார். முப்பால்: சிலிஷ்டரூபகம். இனி எவ்வுலகத்தாருக்கும் கரும பூமியாகிய இவ் வுலகத்துள் தோன்றி மெய்ப்பொருள் உணர்ந்தன்றி வீட்டின்பம் பெறுதல் கூடாமையின், உலகடைய உண்ணும் என்றார். அன்றி, அவ் வுலகத்துத் தேவர்களும் தமது மேற்பட்ட அறிவினலே இதனது உயர்வு ஒப்பு அற்ற குணத்தை அறிந்து முக்கியப் பிரமாணமாகக் கொண்டு மகிழ் கூர்வர் என்பது பற்றி, அங்ஙனம் கூறினர் எனினும் அமையும்.

இ:து இவ் வுலகத்தார்க்கே அன்றி அவ் வுலகத்தார்க்கும் பயன்படு மாறு சொல்லியபடி. 53

திருவள்ளுவ மாலை உரை

முற்றிற்று.

## இடைக்காடர் பாடல்

கடுகைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள்.

(இ - ள்.) குறள் - நாயனரது நூலின் ஆயிரத்து முந்நூற்று முப்பது குறள் வெண்பாக்களும், கடுகை துளைத்து ஏழ்கடலை புகட்டி குறுக தறித்த - கடுகை அதன் நடுவே துளை செய்து ஏழு கடல் நீரையும் அத் துளையுள் பெய்து தன்னளவில் குறுகும் வண்ணம் தறித்து வைத்தால், அதுபோல்வன ஆகும். (எ - று)

மிக்க சிற்றளவிற்கு எடுத்துச் சொல்லப்படுவதொரு நுண்பொருள் ஆகலின், கடுகு சொல்லப்பட்டது. இரண்டன் உருபு தறித்த என்ற வினை கொண்டது. துளைத்தல் - உள்ளீடு போக்குதல். புகவிடு என்பது புகட்டு என விகாரப்பட்டு முதனிலையாய் நிற்றலின் புகட்டி என்றாயது. துளையின் இடை வெளிக்கும் அதன் புற மூடிக்கும் கொள்ளப்பட்ட பங்கு சிறிதாக, ஒழிந்த பங்கு பெரிதாகலின் குறுக என்றார். தறித்தாலன்ன எனற்பாலது தறித்த என இடைக்குறைந்து நின்றது. இல்லாத பொருளை உவமானமாகக் கூறலின் இல்பொருள் உவமை. குறட்பாக்களுள் ஒவ்வொன்றும் அது போறலின் தறித்த எனப் பன்மையால் கூறலாயிற்று. குறள் பால்பகா அ:றிணைப் பெயர் ஆகலின், இங்கே பன்மைக்காயது. இங்ஙனம் கூறவே குறட்பாவின் சொற் சுருக்கமும் அதனுள் அடக்கப்பட்ட பொருள் விரிவும் நோக்கும்வழி, அக்கடுகும் ஏழ்கடல் நீரும் போலும் என்றதாயிற்று.

பொருள் விரிவின் அளவுபடாமை சொல்லியபடி.

இப்பாட்டிலே, "அணுவைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக், குறுகத் தறித்த குறள்" என முதற் சொல்லை மாற்றி ஔவையாரால் புகழ்ச்சி செய்யப்பட்டது.

# திருக்குறள்

## செய்யுள் முதற்குறிப்பகராதி

(எண் : பக்க எண்)


அஃகாமைசெல்வத்திற் 132
அஃகிஅகன்ற 131
அகடாரார்அல்லல் 565
அகப்பட்டிஆவாரைக் 639
அகரமுதல 3
அகலாதணுகாது 437
அகழ்வாரைத்தாங்கும் 118
அகன்அமர்ந்தீதலின் 80
அகன்அமர்ந்துசெய்யாள் 74
அங்கணத்துள்உக்க 451
அச்சம்உடையார்க் 352
அச்சமேகீழ்கள 640
அசையியற்குண்டாண் 658
அஞ்சாமைஅல்லால் 331
அஞ்சாமைஈகை 265
அஞ்சும்அறியான் 527
அஞ்சுவதஞ்சாமை 293
அஞ்சுவதோரும் 253
அடக்கம்அமரருள் 98
அடல்தகையும் 477
அடல்வேண்டும் 235
அடுக்கியகோடி 575
அடுக்கிவரினும் 403
அடுத்ததுகாட்டும் 444
அணங்குகொல் 646
அணிஅன்றே 609
அந்தணர்என்போர் 34
அந்தணர்நூற்கும் 358
அமரகத்தாற்றறுக்கும் 503
அமரகத்துவன் 615
அமிழ்தினும்ஆற்ற 60
அமைந்தாங் 318
அரங்கின்றி 278
அரம்பொருத 539
அரம்போலும் 600
அரிதரோதேற்றம் 695
அரிதாற்றிஅல்லல் 699
அரியஎன்றுகாத 354
அரியகற்றுசற்றுர் 334
அரியவற்றுள் 302
அருங்கேடன் 149
அருட்செல்வம் 172
அரும்செவ்வி 371
அரும்பயன் 142
அருமறைசோரும் 519
அருமைஉடைத்தென் 396
அருவினைஎன்ப 323
அருள்இல்லார்க் 176
அருள்என்னும்அன்பீன் 470
அருள்கருதி 199
அருள்சேர்ந்த 174
அருள்வெஃகி 131
அருளல்லதியாதெனின் 180
அருளொடும் 469
அல்லல்அருள் 175
அல்லவைதேய 82
அல்லற்பட்டாற்று 366
அலந்தாரைஅல்லல் 776
அலர்எழஆருயிர் 687
அலர்நாண 692
அவ்வித்தழுக்கா 127
அவ்வியநெஞ்சத்தான் 128
அவர்தந்தார் 711
அவர்நெஞ்சவர்க் 770
அவாஇல்லார்க் 254
அவாஎன்ப 250
அவாவினை 253
அவிசொரிந் 182
அவைஅறிந் 447
அவைஅறியார் 448
அழக்கொண்ட 421
அழச்சொல்லி 493
அழல்போலும் 736
அழிவதூஉம் 312
அழிவந்தசெய்யினும் 499
அழிவின்அவைநீக்கி 489
அழிவின்றறைபோகா 474
அழுக்கற்றகன்றும் 128
அழுக்காற்றின்அல்லவை 126
அழுக்காறவா 39
அழுக்காறுடையார்க் 126
அழுக்காறுடையான் 108
அழுக்காறெனஒரு 128
அளவல்லசெய்தாங்கே 201
அளவளாவில்லாதான் 345
அளவறிந்தார்நெஞ்சத் 200
அளவறிந்துவாழாதான் 321
அளவின்கண் 199
அளித்தஞ்சல்என்றவர் 696
அற்கா இயல்பிற்றுச் 227
அற்றதறிந்து 569
அற்றம்மறைக்கும் 592
அற்றம்மறைத்தலோ 519
அற்றவர்என்பார் 252
அற்றார் அழிபசி 161
அற்றார்க்கொன் 605

| | |
|---|---|
| அற்றாரைத்தேறுதல் | 337 |
| அற்றால்அளவறிந் | 568 |
| அற்றேம்என்றல்லல் | 403 |
| அறத்தாற்றின் | 47 |
| அறத்தாறிது | 40 |
| அறத்தான்வருவதே | 42 |
| அறத்திற்கேஅன்புசார் | 69 |
| அறத்தினூஉங் | 36 |
| அறம்கூறான் அல்ல | 134 |
| அறம்சாரா நல்குர | 625 |
| அறம்சொல்லும் | 136 |
| அறம்பொருள் இன்பம் | 333 |
| அறவாழி அந்தணன் | 13 |
| அறவினையாதெனின் | 219 |
| அறவினையும்ஆன்ற | 551 |
| அறன் அழீஇ அல்லவை | 134 |
| அறன் அறிந்தான்றமைந்த | 409 |
| அறன் அறிந்துமூத்த | 301 |
| அறன் அறிந்துவெஃகா | 133 |
| அறன் ஆக்கம் | 125 |
| அறன் இயலான் | 115 |
| அறன் இழுக்கா | 266 |
| அறன் ஈனும் இன்பமும் | 468 |
| அறன் எனப்பட்டதே | 49 |
| அறன்கடை நின்றாருள் | 112 |
| அறன் நோக்கி | 138 |
| அறன்வரையான் அல்ல | 117 |
| அறிகிலார்எல்லாரும் | 685 |
| அறிகொன்றறியான் | 410 |
| அறிதோறறியாமை | 667 |
| அறிந்தாற்றிச் | 341 |
| அறிவற்றம்காக்கும் | 289 |
| அறிவிலார்தாம் | 518 |
| அறிவிலான் நெஞ்சுவந் | 517 |
| அறிவின்மை இன்மையுள் | 517 |
| அறிவினான் ஆகுவ | 215 |
| அறுவினுள்எல்லாம் | 145 |
| அறிவுடையார் ஆவ | 293 |
| அறிவுடையார்எல்லாம் | 294 |
| அறிவுரு ஆராய்ந்த | 434 |
| அறுவாய் நிறைந்த | 671 |
| அறைபறை அன்னர் | 640 |
| அன்பகத்தில்லா | 70 |
| அன்பறிவாராய்ந்த | 433 |
| அன்பறிவுதேற்றம் | 341 |
| அன்பிலன் ஆன்ற | 526 |
| அன்பிலார்எல்லாம் | 66 |
| அன்பிற்கும்உண்டோ | 65 |
| அன்பின்வழிய | 72 |
| அன்பின்விழையார் | 552 |
| அன்பீனும்ஆர்வம் | 68 |
| அன்புடைமைஆன்ற...இவ் | 598 |
| அன்புடைமை ஆன்ற...வேந் | 432 |
| அன்புநாண் ஒப்புரவு | 594 |
| அன்பும்அறனும் | 47 |
| அன்புற்றமர்ந்த | 68 |
| அன்பொரீஇத் | 606 |
| அன்போடியைந்த | 67 |
| அன்றறிவாம்என்னா | 39 |
| அனிச்சப்பூக் | 671 |
| அனிச்சமும் | 673 |
| ஆக்கம்அதர்வினாய்ச் | 388 |
| ஆக்கம் இழந்தேம் | 387 |
| ஆக்கம்கருதி | 313 |
| ஆக்கமும்கேடும் | 413 |
| ஆகாறளவிட்டி | 320 |
| ஆகூழால்தோன்றும் | 256 |
| ஆங்கமை வெய்தியக் | 460 |
| ஆபயன்குன்றும் | 368 |
| ஆய்ந்தாய்ந்து | 492 |
| ஆயும் அறிவினர் | 556 |
| ஆரா இயற்கை | 255 |
| ஆவிற்குநீர் | 635 |
| ஆள்வினையும் | 613 |
| ஆற்றாரும்ஆற்றி | 329 |
| ஆற்றின் அளவறிந்தீ | 320 |
| ஆற்றின் அளவறிந்து | 453 |
| ஆற்றின்ஒழுக்கி | 48 |
| ஆற்றின் நிலைதளர்ந் | 449 |
| ஆற்றின்வருந்தா | 315 |
| ஆற்றுபவர்க்கும் | 461 |
| ஆற்றுவார் ஆற்றல்...இக | 541 |
| ஆற்றுவார் ஆற்றல்...பசி | 160 |
| ஆற்றுவார் ஆற்றல்பணி | 594 |
| இகல்எதிர் | 523 |
| இகல்என்பஎல்லா | 522 |
| இகல்என்னும் | 522 |
| இகல்காணான் | 525 |
| இகலான் ஆம் | 525 |
| இகலிற்கெதிர் சாய்தல் | 524 |
| இகலின்மிகல் | 523 |
| இகழ்ச்சியிற்கெட்டாரை | 355 |
| இகழ்ந்தெள்ளா | 630 |
| இடம்எல்லாம் | 634 |
| இடன் இல்பருவத்தும் | 154 |
| இடிக்கும்துணையாரை | 304 |
| இடிப்பாரை இல்லாத | 304 |
| இடிபுரிந்தெள்ளும் | 394 |
| இடுக்கண்கால் | 616 |
| இடுக்கண்படினும் | 419 |
| இடுக்கண்வருங்கால் | 401 |
| இடும்பைக்கிடும்பை | 402 |
| இடும்பைக்கேகொள்கலங் | 615 |
| இடைதெரிந்து | 448 |
| இணர்ஊழ்த்தும் | 417 |
| இணரெரி | 211 |
| இதனை இதனால் | 342 |
| இம்மைப்பிறப்பில் | 782 |
| இமைப்பின்கரப்பாக் | 679 |
| இமையாரின் | 550 |
| இயல்பாகும் | 236 |
| இயல்பினான் | 48 |
| இயல்புளிக்கோல் | 359 |
| இயற்றலும்ஈட்டலும் | 267 |

இரக்கஇரத்தக்கார்க் 627
இரத்தலின் இன்னாது 163
இரத்தலும்ஈதலே 629
இரந்தும் உயிர்வாழ்தல் 633
இரப்பன் இரப்பாரை 635
இரப்பாரை இல்லாயின் 630
இரப்பான் வெகுளாமை 632
இரவார் இரப்பார்க் 619
இரவுள்ள உள்ளம் 636
இரவென்னும் 636
இருந்துள்ளி 744
இருந்தோம்பி 72
இருநோக்கிவள் 653
இருபுனலும்வாய்ந்த 459
இருமனப்பெண்டிரும் 557
இருமைவகைதெரிந் 27
இருவேறுலகத் 257
இருள்சேர் 9
இருள்நீங்கி 242
இல்லதென் இல்லவள் 51
இல்லாரை எல்லாரும் 467
இல்லாள்கண் 549
இல்லாளை அஞ்சுவான் 549
இல்லைதவ 785
இல்வாழ்வான் என்பான் 43
இலக்கம்உடம் 404
இலங்கிழாய் 754
இலம்என்றசைஇ 622
இலம்என்றுவெஃகுதல் 131
இலர்பலர் ஆகிய 189
இலன் என்றுதீயவை 146
இலன்என்னும்எவ்வம் 158
இவறலும்மாண்பிறந்த 295
இழத்தொறூஉம் 567
இழிவறிந்துண்பான் 570
இழுக்கல்உடையுழி 286
இழுக்காமை 353
இழைத்ததிகவாமைச் 483
இளித்தக்கஇன்னா 769
இளிவரின்வாழாத 586
இளைதாகமுள்மரம் 534
இளையர் இனமுறையர் 441
இற்பிறந்தார் கண் அல்ல 573
இற்பிறந்தார் கண்ணேயும் 624
இறந்தமைந்த 546
இறந்தவெகுளியின் 351
இறந்தார் இறந்தார் 212
இறப்பேபுரிந்த 590
இறல்ஈனும் எண்ணாது 133
இறுதிபயப்பினும் 437
இறைகடியன் 370
இறைகாக்கும் 360
இன்கண் உடைத்தவர் 695
இன்சொல்இனிதீன்றல் 83
இன்சொலால்ஈத் 268
இன்சொலால்ஈரம் 79
இன்பத்துள் இன்பம்...பயக்கும் 523
இன்பத்துள் இன்பம்...விழை 405
இன்பம்இடையறு 254
இன்பம்ஒருவற் 628
இன்பம்கடல் 703
இன்பம்விழையான்...இடும்பை 404
இன்பம்விழையான்...வினை 398
இன்மைஇடும்பை 634
இன்மைஎனஒரு 622
இன்மை ஒருவற் 596
இன்மையின் இன்னாத 622
இன்மையின் இன்னாது 367
இன்மையுள் இன்மை 119
இன்றிஅமையா 580
இன்றும்வருவது 626
இன்னாஎனத்தான் 216
இன்னாசெய்தார்க்கும் 595
இன்னாசெய்தாரை 215
இன்னாதிரக்கப் 160
இன்னாதினன் இல்லூர் 698
இன்னாமைஇன்பம் 405
இனத்தாற்றி 372
இனம்போன் 508
இனிஅன்ன 772
இனியஉளவாக 84
இணைத்துணைத் 76
இனையர் இவர்எமக் 490
ஈட்டம்இவறி 603
ஈத்துவக்கும் 162
ஈதல்இசைபட 165
ஈர்ங்கை 641
ஈவார்கண் 631
ஈன்றபொழுதிற் 63
ஈன்றாள்பசி 420
ஈன்றாள்முகத்தேயும் 559
உட்கப்படாஅர் 558
உட்பகைஅஞ்சித் 537
உடம்பாடிலாதவர் 540
உடம்பொடுயிரிடை 675
உடுக்கைஇழந்தவன் 489
உடுப்பதூஉம் 642
உடைசெல்வம் 566
உடைத்தம்வலி 318
உடைமையுள் இன்மை 78
உடையர்எனப்படுவ 386
உடையார்முன் 274
உண்டார்கண் 652
உண்ணற்க 559
உண்ணாது 123
உண்ணாமைஉள்ள 180
உண்ணாமை வேண்டும் 181
உணர்வதுடையார் 450
உணலினும்உண்ட 787
உதவிவரைத்தன் 88
உப்பமைந்தற்றால் 776
உய்த்தல்அறிந்து 768
உயர்வகலம் 462
உயிர்உடம்பின் 224

உயிர்ப்பஉளர் 535
உரம்ஒருவற்குள்ள 391
உரன்என்னும் 28
உரன்நசைஇ 755
உருவுகண்டெள்ளாமை 425
உருள்ஆயம்ஓவாது 563
உரைப்பார்உரைப்பவை 165
உலகத்தார்உண்டென்ப 521
உலகத்தோடொட்ட 110
உலகம்தழீஇய 292
உலைவிடத்தூறஞ்சா 473
உவக்காண்எம் 713
உவந்துறைவர் 679
உவப்பத்தலைக்கூடி 274
உழந்துழந்துள்நீர் 708
உழவினார்கைம் 620
உழுதுண்டுவாழ்வாரே 618
உழுவார்உலகத்தார்க் 618
உழைப்பிரிந்து 349
உள்ஒற்றிஉள்ளூர் 561
உள்ளக்களித்தலும் 766
உள்ளத்தார்காத 747
உள்ளத்தால்உள்ளலும் 197
உள்ளத்தால்பொய்யா 204
உள்ளம்இலாதவர் 390
உள்ளம்உடைமை 387
உள்ளம்போன் 705
உள்ளற்கஉள்ளம் 494
உள்ளியதெய்தல் 356
உள்ளியதெல்லாம் 212
உள்ளினும்தீராப் 721
உள்ளினேன்என்றேன் 783
உள்ளுவதெல்லாம் 389
உள்ளுவன்மன்யான்உரைப் 713
உள்ளுவன்மன்யான்மறப் 676
உளபோல்முகத்தெவன் 376
உளர்என்னும் 281
உளர்எனினும் 455
உளவரைதூக்காத 321
உற்றநோய்நீக்கி 301
உற்றநோய்நோன்றல் 183
உற்றவன்தீர்ப்பான் 572
உற்றான்அளவும் 571
உறங்குவதுபோலும் 232
உறல்முறையான் 538
உறாஅதவர்க்கண்ட 771
உறாஅதவர்போல் 657
உறாஅதோஊர்அறிந்த 688
உறாஅர்க்குறுநோய் 721
உறின்உயிர்அஞ்சா 482
உறின்நட்டறின் 502
உறுதோறுயிர் 664
உறுப்பமைந்தூறஞ்சா 472
உறுப்பொத்தல் 598
உறுபசியும்ஓவாப் 457
உறுபொருளும் 469
உறுவதுசீர்தூக்கும் 502
உறைசிறியார் 432
ஊக்கம்உடையான் 325
ஊடல்உணங்க 780
ஊடல்உணர்தல் 666
ஊடலில்தோற்றவர் 787
ஊடலின்உண்டாங்கோர் 778
ஊடலின்தோன்றும் 785
ஊடற்கண்சென்றேன் 767
ஊடிஇருந்தேமாத் 781
ஊடிப்பெறுகுவங் 788
ஊடியவரை 777
ஊடுகமன்னோ 789
ஊடுதல்காமத்திற் 789
ஊண்உடைஎச்சம் 608
ஊதியம்என்ப 494
ஊரவர்கௌவை 691
ஊருணிநீர்நிறைந் 152
ஊழிபெயரினும் 596
ஊழிற்பெருவலி 262
ஊழையும்உப்பக்கம் 400
ஊறொரால்உற்றபின் 423
ஊனைக்குறித்த 609
எச்சம்என்றென் 604
எட்பகவன்ன 540
எண்என்பஏனை 272
எண்சேர்ந்த 552
எண்ணித்துணிக 314
எண்ணியஎண்ணியாங் 425
எண்ணியார்எண்ணம் 329
எண்பதத்தால்எய்தல் 597
எண்பதத்தான்ஓரா 361
எண்பொருள 291
எதிரதாக்காக்கும் 294
எந்நன்றிகொன்றார்க்கும் 91
எப்பொருள்எத்தன்மைத் 244
எப்பொருள்யார்யார் 290
எப்பொருளும்ஓரார் 440
எய்தற்கரிய 326
எரியாற்சுடப்படினும் 544
எல்லாப்பொருளும் 464
எல்லார்க்கும்எல்லாம் 381
எல்லார்க்கும்நன்றாம் 101
எல்லாவிளக்கும் 206
எல்லைக்கண்நின்றார் 499
எவ்வதுறைவ 292
எழுதுங்கால் 767
எழுபிறப்பும் 59
எழுமைஎழுபிறப்பும் 89
எள்ளாதஎண்ணிச் 316
எள்ளாமைவேண்டுவான் 196
எள்ளின்இளிவாம் 774
எளிதெனஇல்இறப்பான் 114
எற்றிற்குறியர் 642
எற்றென்றிரங்குவ 419
என்பிலதனை 70
என்றும்ஒருவுதல் 418
என்னைமுன்நில்லன்மின் 478

எனைத்தானும்எஞ் 216
எனைத்தானும்நல்லவை 287
எனைத்திட்பம் 427
எனைத்துணையர் 113
எனைத்துநினைப்பினும் 725
எனைத்தும்குறுகுதல் 507
எனைத்தொன் 722
எனைப்பகை 147
எனைமாட்சித் 465
எனைவகையான் 341
ஏதம்பெருஞ் 604
ஏதிலார்ஆரத் 515
ஏதிலார்குற்றம் 138
ஏதிலார்போலப் 658
ஏந்தியகொள்கையார் 545
ஏமுற்றவரினும் 532
ஏரின் உழாஅர் 20
ஏரினும்நன்றால் 620
ஏவவும்செய்கலான் 520
ஐந்தவித்தான் 29
ஐயத்தின்நீங்கித் 242
ஐயப்படாஅ 443
ஐயுணர்வெய்தியக் 243
ஒட்டார்பின் 583
ஒண்ணுதற் 651
ஒண்பொருள் 472
ஒத்ததறிவான் 152
ஒப்புரவினால் 156
ஒருதலையான் 719
ஒருநாள்எழு 758
ஒருபொழுதும் 231
ஒருமைக்கண் 276
ஒருமைச்செயல் 514
ஒருமைமகளிரே 589
ஒருமையுள் 101
ஒல்லும்கருமம் 506
ஒல்லும்வகையான் 37
ஒல்லும்வாய்எல்லாம் 428
ஒல்வதறிவ 317
ஒவித்தக்கால் 473
ஒழுக்கத்தின்எய்துவர் 109
ஒழுக்கத்தின் ஒல்கார் 108
ஒழுக்கத்துநீத்தார் 25
ஒழுக்கம்உடைமை 106
ஒழுக்கம்உடையவர்க் 110
ஒழுக்கம்விழுப்பம் 105
ஒழுக்கமும்வாய்மையும் 574
ஒழுக்காறாக்கொள்க 124
ஒளிஒருவற் 587
ஒளியார்முன் 449
ஒற்றும்உரைசான்ற 380
ஒற்றினான்ஒற்றிப் 381
ஒற்றொற்றித்தந்த 384
ஒற்றொற்றுணா 385
ஒறுத்தார்க்கொரு 121
ஒறுத்தாரைஒன்றாக 121
ஒறுத்தாற்றும் 379
ஒன்றாஉலகத் 166
ஒன்றாகநல்லது 220
ஒன்றாமை 538
ஒன்றானும் 103
ஒன்றெய்தி 563
ஒன்னார்த்தெறலும் 184
ஓஒஇனிதே 708
ஓஒதல்வேண்டும் 419
ஓதிஉணர்ந்தும் 513
ஓம்பின்அமைந்தார் 696
ஓர்த்துள்ளம் 245
ஓர்ந்துகண் 357
கடல்அன்னகாமம் 684
கடல்ஓடாகால்வல் 330
கடன்அறிந்துகாலம் 435
கடன்என்பநல்லவை 593
கடாஅஉருவொடு 382
கடாஅக்களிற்றின்மேல் 650
கடிதோச்சிமெல்ல 369
கடிந்தகடிந்தொரார் 421
கடும்சொல்லன் 371
கடுமொழியும் 372
கடைக்கொட்கச் 423
கண்உடையர் 273
கண்உள்ளார் 677
கண்களவுகொள்ளும் 654
கண்டதுமன்னும் 690
கண்டார்உயிர் 649
கண்டுகேட்டுண்டு 660
கண்ணிற்கணிகலம் 376
கண்ணின்துனித்தே 770
கண்ணின்பசப்போ 743
கண்ணும்கொளச் 744
கண்ணுள்ளின் 677
கண்ணொடுகண் இணை 659
கண்ணோட்டத்துள்ள 375
கண்ணோட்டம் இல்லவர் 378
கண்ணோட்டம்என்னும் 374
கண்தாம்கலுழ்வ 706
கண்நிறைந்தகாரிகைக் 761
கண்நின்றுகண் அறச் 135
கணைகொடி 195
கதம்காத்துக் 104
கதுமெனத்தாம் 707
கயல்உண்கண் 727
கரத்தலும்ஆற்றேன் 701
கரப்பவர்க்கியாங் 637
கரப்பிடும்பை 629
கரப்பிலாநெஞ்சிற் 628
கரப்பிலார்வையகத் 629
கரப்பினும்கைஇகந் 760
கரவாதுவந்தீயும் 632
கருமணியில்பாவாய் 675
கருமத்தான்நாணுதல் 607
கருமம்சிதையாமல் 378
கருமம்செயஒருவன் 612
கருவியும்காலமும் 406

கல்லா ஒருவன் 280
கல்லாதமேற்கொண் 518
கல்லாதவரிற் 455
கல்லாதவரும் 279
கல்லாதான் ஒட்பம் 279
கல்லாதான்சொல் 278
கல்லார்ப்பிணிக்கும் 373
கல்லான்வெகுளும் 530
கலங்காதுகண்ட 426
கலந்துணர்த்தும் 745
கவ்வையால்கவ்விது 689
கவறும்கழகமும் 564
கழாஅக்கால் 516
கள்உண்ணாப் 562
கள்வார்க்குத்தள்ளும் 201
களவின்கண் 198
களவினால்ஆகிய 197
களவென்னும் 200
களித்தறியேன் 561
களித்தானைக் 562
களித்தொறும்கள் 689
கற்ககசடறக் 271
கற்றதனால்ஆய 5
கற்றறிந்தார்கல்வி 450
கற்றார்முன்கற்ற 453
கற்றாருள்கற்றார் 452
கற்றிலன்ஆயினும் 286
கற்றீண்டு 245
கற்றுக்கண் அஞ்சான் 434
கறுத்தின்னா 214
கனவினான் உண்டாகும் 728
கனவினும் இன்னாது 506
காக்கபொருளா 99
காக்கைகரவா 347
காட்சிக்கெளியன் 268
காண்கமன் 756
காணாச்சினத்தான் 529
காணாதாற்காட்டுவான் 520
காணின்குவளை 670
காணுங்கால் 768
காதல்அவர் இலர் 744
காதலகாதல் 300
காதலர் இல்வழி 734
காதலர்தூதொடு 727
காதன்மைகந்தா 337
காமக்கடல் 702
காமக்கடும்புனல்உய்க் 682
காமக்கடும்புனல்நீந்தி 703
காமக்கணிச்சி 748
காமம்உழந்து 680
காமம் எனஒன்றோ 749
காமம்விடுஒன்றோ 746
காமம்வெகுளி 248
காமமும்நாணும் 701
கால்ஆழ்களரின் 332
காலத்தினாற்செய்த 86
காலம்கருதி 324
காலைஅரும்பிப் 735
காலைக்குச்செய்த 734
கானமுயல்எய்த 479
குடம்பைதனித் 231
குடிஆண்மை 395
குடிஎன்னும் 391
குடிசெய்வல் 613
குடிசெய்வார்க் 615
குடிதழீஇக் 359
குடிப்பிறந்தார் 577
குடிப்பிறந்துகுற்றத்தின் 334
குடிப்பிறந்துதன்கண் 493
குடிபுறம்காத்தோம்பிக் 362
குடிமடிந்துகுற்றம் 393
குணநலம்சான்றோர் 593
குணம்என்னும் 33
குணம்நாடிக் 335
குணன் இலனாய்க் 529
குணனும்குடிமையும் 492
குலம்சுடும்கொள்கை 611
குழலினிதியாழினி 61
குற்றம்இலனாய்க் 614
குற்றமேகாக்க 297
குறிக்கொண்டு 656
குறித்ததுகூறாமைக் 444
குறிப்பறிந்து 440
குறிப்பிற்குறிப்புணர் 443
குறிப்பிற்குறிப்புணரா 444
குன்றன்னார்குன்ற 545
குன்றின் அனையாரும் 583
குன்றேறியானைப் 471
கூடியகாமம் 755
கூத்தாட்டவைக் 226
கூழும்குடியும் 365
கூற்றத்தைக் 543
கூற்றம்குதித்தலும் 189
கூற்றமோகண்ணோ 649
கூற்றுடன்று 475
கூறாமைநோக்கிக் 443
கெட்டார்க்கு 771
கெடல்வேண்டிற் 542
கெடாஅவழிவந்த 501
கெடுங்காலைக் 495
கெடுப்பதூஉம் 20
கெடுவல்யான் 95
கெடுவாகவையா 95
கேட்டார்ப்பிணிக்கும் 413
கேட்டினும்உண்டோர் 493
கேட்பினும்கேளாத் 288
கேடறியாக்கெட்ட 458
கேடில்விழுச்செல்வம் 277
கேடும்பெருக்கமும் 94
கேள்இழுக்கம்கேளாக் 500
கைஅறியாமை 560
கைம்மாறுவேண்டா 150
கைவேல்களிற்றொடு 480
கொக்கொக்க 327

கொடியார்கொடுமைஉரை 740
கொடியார்கொடுமையின் 704
கொடுத்தலும் 347
கொடுத்தும்கொளல் 529
கொடுப்பதழுக்கறுப்பான் 126
கொடுப்பதூஉம் 604
கொடும்புருவம் 650
கொடைஅளி 270
கொல்லாநலத்தது 594
கொல்லாமை 222
கொல்லான் 182
கொலேமேற்கொண் 363
கொலேயிற்கொடியாரை 362
கொலேவினையர் 224
கொளப்பட்டேம் 442
கொளற்கரிதாய்க் 463
கொன்றன்ன இன்னு 91
கோட்டுப்பூச் 78
கோள்இல் 14
சமன்செய்து 96
சலத்தால்பொருள் 422
சலம்பற்றிச்சால்பில 576
சாதலின் இன்னுத 161
சாயலும்நாணும் 718
சார்புணர்ந்து 247
சால்பிற்குக்கட்டளே 595
சான்றவர்சான்ருண்மை 596
சிதைவிடத் 389
சிற்றின்பம்வெஃகி 130
சிற்றினம் அஞ்சும் 306
சிறப்பறியஒற்றின் 385
சிறப்பீனும்செல்வம் 213
சிறப்பீனும்செல்வமும் 35
சிறப்பொடுபூசனே 23
சிறியார்உணர்ச்சியுள் 590
சிறுகாப்பிற்பேரிடத்த 462
சிறுபடையான் 331
சிறுமைநமக்கொழியச் 738
சிறுமைபலசெய்து 564
சிறுமையும்செல்லாத் 477
சிறுமையுள்நீங்கிய 83
சிறைகாக்கும் 55
சிறைநலனும் 332
சினத்தைப்பொருள் 210
சினம்என்னும் 209
சீர்இடம்காணின் 507
சீர்மைசிறப்பொடு 141
சீரினும்சீர் அல்ல 581
சீருடைச்செல்வர் 607
சுடச்சுடரும் 188
சுவைஒளி 30
சுழலும்இசைவேண்டி 482
சுழன்றும்ஏர்ப்பின்ன 617
சுற்றத்தால்சுற்றப் 346
சூழ்ச்சிமுடிவு 427
சூழ்வார்கண் 303
சூழாமல்தானே 614
செப்பம்உடையவன் 93
செப்பின் 539
செய்கபொருளேச் 471
செய்தக்கஅல்ல 314
செய்தேமம்சாராச் 504
செய்யாமல்செய்த 85
செய்யாமல்செற் 214
செய்வானே நாடி 342
செய்வினைசெய்வான் 430
செயற்கரியசெய்வார் 30
செயற்கரியயாஉள 484
செயற்கைஅறிந்தக் 410
செயற்பாலசெய் 298
செயற்பாலதோரும் 42
செயிரிற்றலேப்பிரிந்த 182
செருக்கும்சினமும் 295
செருவந்தபோழ்தில் 373
செல்லாஇடத்துச் 208
செல்லாமைஉண்டேல் 694
செல்லான்கிழவன் 621
செல்விடத்துக்காப்பான் 208
செல்வத்துள்செல்வம் 284
செல்விருந்தோம்பி 75
செவிஉணவிற்கேள்வி 285
செவிக்குணவில்லாத 285
செவிகைப்பச் 270
செவிச்சொல்லும் 439
செவியிற்சுவை 289
செற்றவர்பின்சேறல் 751
செற்ருர்எனக்கை 745
செற்ருர்பின் 750
செருஅச்சிறு 657
செறிதொடிசெய்திறந்த 763
செறிவறிந்துசீர்மை 99
செறுநரைக்காணின் 326
செறுவார்க்குச் 530
சென்றஇடத்தால் 290
சொல்லப்பயன்படுவர் 641
சொல்லுகசொல்லிற் 143
சொல்லுகசொல்லேப் 415
சொல்லுதல்யார்க்கும் 424
சொல்வணக்கம் 510
சொலல்வல்லன் 416
சொற்கோட்டம் 97
ஞாலம்கருதினும் 323
தக்காங்குநாடித் 369
தக்கார் இனத்தனுய்த் 303
தக்கார்தகவிலர் 94
தகுதிஎனஒன்று 92
தஞ்சம்தமர்அல்லர் 775
தண்ணந்துறைவன் 764
தணந்தமைசால 739
தந்தைமகற்காற்றும் 62
தம்இல்இருந்து 665
தம்நலம்பாரிப்பார் 555
தம்நெஞ்சத் 723
தம்பொருள்என்ப 60

தம்மிற்பெரியார் 302
தம்மிற்றம்மக்கள் 63
தமர் ஆகித் 349
தலைப்பட்டார் 239
தலையின் இழிந்த 582
தவம்செய்வார் 187
தவம்மறைந் 192
தவமும்தவம் 184
தவறிலராயினும் 787
தள்ளாவிளையுளும் 456
தற்காத்துத் 54
தன் உயிர்க்கின்னாமை 217
தன் உயிர் தான் அறப் 188
தன் உயிர் நீப்பினும் 223
தன் ஊன் பெருக்கற்குத் 178
தன் குற்றம் நீக்கிப் 297
தன் துணை இன்றால் 532
தன்நெஞ்சறிவது 203
தன்னை உணர்த்தினும் 784
தன்னைத்தான் காக்கின் 209
தன்னைத்தான்காதல 148
தனக்குவமை 11
தனியே இருந்து 773
தாம் இன்புறுவ 276
தாம்வீழ்வார் தம்வீழப் 716
தாம்வீழ்வார் மென்றோள் 662
தாம் வேண்டின் 692
தார் தாங்கிச்செல்வது 476
தாள் ஆற்றித்தந்த 151
தாளாண்மை இல்லாதான் 397
தாளாண்மைஎன்னும் 397
தானம்தவம்இரண்டும் 23
திறன் அல்லதற்பிறர் 122
திறன் அறிந்துசொல்லுக 414
தினற்பொருட்டால் 181
தினைத்துணை நன்றி 87
தினைத்துணையாம் 296
தினைத்துணையும்ஊடாமை 766
தீ அளவன்றித் 570
தீப்பாலதான்பிறர் 146
தீயவைசெய்தார் 148
தீயவைதீய 144
தீயினால்சுட்ட 104
தீவினையார் அஞ்சார் 144
துஞ்சினார்செத்தாரின் 560
துஞ்சுங்கால் 730
துணை நலம் ஆக்கம் 418
துப்பார்க்குத்துப்பாய 18
துப்பின் எவன் ஆவர் 702
துப்புரவில்லார் 626
தும்முச்செறுப்ப 783
துளி இன்மை 367
துறந்தார்க்குத் 184
துறந்தார்க்கும் 44
துறந்தார்படிவத்தர் 383
துறந்தார்பெருமை 26
துறந்தாரிற்றூய்மை 123
துறப்பார்மன் 261
துறைவன்துறந்தமை 697
துன்பத்திற்கியாரே 774
துன்பம் உறவரினும் 426
துன்புறூஉம் 81
துன்னத்துறந்தாரை 747
துன்னியார்குற்றமும் 137
துனியும்புலவியும் 777
தூஉய்மைஎன்ப 252
தூங்காமைகல்வி 226
தூங்குகதூங்கிச் 427
தூய்மைதுணைமை 432
தெண்ணீர் அடுபுற்கை 636
தெய்வத்தான் ஆகா 404
தெய்வம்தொழா அள் 50
தெரிதலும்தேர்ந்து 402
தெரிந்த இனத்தொடு 318
தெரிந்துணராநோக்கிய 706
தெருளாதான் 177
தெளிவிலதனைத் 313
தென்புலத்தார் 45
தேரான் தெளிவும் 339
தேரான்பிறனைத் 338
தேவர் அனையர் 639
தேறற்கயாரையும் 338
தேறினும்தேரு 533
தொகச்சொல்லித் 434
தொட்டனைத்தூறும் 275
தொடங்கற்க 327
தொடலைக்குறுந்தொடி 683
தொடிநோக்கி 765
தொடிப்புழுதிகஃசா 620
தொடியொடு 740
தொடிற்சுடின் அல்லது 698
தொல்வரவும்தோலும் 623
தொழுதகையுள்ளும் 510
தோனறிற்புகழொடு 169
நகல்வல்லர் அல்லார்கு 601
நகுதற்பொருட்டன்று 487
நகைஈகை இன் சொல் 574
நகையும்உவகையும் 209
நகையுள்ளும் இன்னா 599
நகைவகையர் ஆகிய 505
நச்சப்படாதவன் 606
நசை இயார் நல்கார் 720
நட்டார்க்குநல்ல 431
நட்டார்குறை 551
நட்டார்போல் 510
நட்பிற்குறுப் 497
நட்பிற்குவீற் 490
நடுவின்றிநன்பொருள் 129
நண்பாற்றார் ஆகி 601
நத்தம்போல்கேடும் 168
நயந்தவர்க்கு 711
நயந்தவர் நல்காமை 738
நயன் இலசொல்லினும் 142
நயன் இலன்என்பது 140

| | | | |
|---|---|---|---|
| நயன்ஈன்றுநன்றி | 82 | நிலையிற்றிரியா | 100 |
| நயன்உடையான் | 155 | நிழல்நீரும் இன்னாத | 536 |
| நயன்சாரா | 140 | நிறைஅரியர்மன் | 685 |
| நயனொடுநன்றி | 598 | நிறைஉடைமை | 120 |
| நல்குரவென்னும் | 624 | நிறைஉடையேன் | 750 |
| நல்லவைஎல்லாஅம் | 258 | நிறைநீரநீரவர் | 485 |
| நல்லாண்மைஎன்ப | 614 | நிறைநெஞ்சம் | 555 |
| நல்லார்கண்பட்ட | 282 | நிறைமொழிமாந்தர் | 32 |
| நல்லாற்றான்நாடி | 173 | நினைத்திருந்து | 784 |
| நல்லாறெனப்படுவ | 221 | நினைத்தொன்று | 743 |
| நல்லாறெனினும் | 158 | நினைப்பவர்போன்று | 722 |
| நல்லினத்தினூங்கும் | 311 | நீங்கான்வெகுளி | 527 |
| நலக்குரியார்யார் | 116 | நீங்கின்தெறூஉம் | 663 |
| நலத்தகைநல்லவர்க் | 777 | நீரின்றமையா | 24 |
| நலத்தின்கண் | 578 | நீரும்நிழல | 779 |
| நலம்வேண்டின் | 579 | நுண்ணியநூல் | 257 |
| நவில்தொறும்நூல் | 486 | நுண்ணியம்என்பார் | 447 |
| நற்பொருள்நன் | 625 | நுண்மாண்நுழைபுலம் | 281 |
| நன்மையும்தீமையும் | 339 | நுணங்கியகேள்வியர் | 288 |
| நன்றறிவாரிற் | 638 | நுனிக்கொம்பர் | 319 |
| நன்றாகும் ஆக்கம் | 223 | நூலாருள்நூல் | 433 |
| நன்றாங்கால்நல்லவாக் | 261 | நெஞ்சத்தார்காத | 678 |
| நன்றாற்றலுள்ளும் | 316 | நெஞ்சிற்றுறவார் | 193 |
| நன்றிக்குவித்தாகும் | 109 | நெடுங்கடலும்தன் | 22 |
| நன்றிமறப்பது | 90 | நெடுநீர்மறவி | 393 |
| நன்றென்றவற் | 449 | நெடும்புனலுள் | 329 |
| நன்றேதரினும் | 93 | நெய்யால் | 691 |
| நன்னீரைவாழி | 668 | நெருநல்உளன் | 230 |
| நனவினான்கண்டதூஉம் | 729 | நெருநற்றுச்சென்றார் | 764 |
| நனவினான் நம்நீத்தார் | 731 | நெருப்பினுள் | 626 |
| நனவினான் நல்காக் | 729 | நோக்கினாள்நோக்கி | 655 |
| நனவினான் நல்காத | 728 | நோக்கினாள்நோக்கெதிர் | 647 |
| நனவினான் நல்காரை | 731 | நோதல்எவன்மற்று | 778 |
| நனவெனஒன்றில்லை | 729 | நோய்எல்லாம் | 218 |
| நாச்செற்றுவிக்குள் | 229 | நோய்நாடி | 571 |
| நாடாதுநட்டலிற் | 491 | நோவற்கநொந்த | 533 |
| நாடென்பநாடா | 460 | நோனாஉடம்பும் | 681 |
| நாடொறும்நாடி | 365 | பகச்சொல்லிக் | 137 |
| நாடோறும்நாடுக | 344 | பகல்கருதிப் | 522 |
| நாண்அகத்தில்லார் | 612 | பகல்வெல்லும்கூகையைக் | 322 |
| நாண்என்னும்நல்லாள் | 559 | பகுத்துண்டுபல்உயிர் | 220 |
| நாண்எனஒன்றோ | 751 | பகைஎன்னும்பண்பி | 530 |
| நாண்வேலிகொள்ளாது | 610 | பகைநட்பாக்கொண் | 532 |
| நாணாமைநாடாமை | 513 | பகைநட்பாம்காலம் | 511 |
| நாணால்உயிரைத் | 610 | பகைபாவம்அச்சம் | 114 |
| நாணும்மறந்தேன் | 773 | பகைமையும்கேண்மையும் | 446 |
| நாணொடுநல்லாண்மை | 682 | பகையகத்துச்சாவார் | 453 |
| நாநலம்என்னும் | 412 | பகையகத்துப்பேடிகை | 454 |
| நாம்காதல்கொண்டார் | 718 | பசக்கமற்பட்டாங் | 715 |
| நாள்எனஒன்றுபோற் | 228 | பசந்தாள் இவள் | 715 |
| நிணம்தீயில்இட்டன்ன | 753 | பசப்பெனப்பேர் | 715 |
| நில்லாதவற்றை | 225 | படல் ஆற்றாபைதல் | 707 |
| நிலத்தியல்பான்நீர் | 307 | படிஉடையார்பற்ற | 394 |
| நிலத்தில்கிடந்தமை | 579 | படுபயன்வெஃகிப் | 130 |
| நிலவரைநீள்புகழ் | 167 | படைகுடிகூழ் | 264 |
